[illegible]

[illegible] 3. [illegible] 1-12. [illegible] 1911

JL
Y8m211, N11
NU.3.1.12
225908

# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ, பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

ஸ்தகம் 3. Vol. 3. — ஸாதாரண௵ தைமீ—JANUARY 1911. — ஸஞ்சிகை I. No. 1.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of neral information and instruction devoted largely agriculture, trade, industry, citizenship and popular, ientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page ... | 5 0 0 | per month. |
| ½ do ... | 2 8 0 | do |
| ¼ do ... | 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be nderstood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4 Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி .. | 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி .. | 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக் கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

225708

# பிழைக்கும் வழி.
# PRACTICAL LIFE.

புஸ்தகம் 3 | Vol. 3. — ஸாதாரணஹு தைமீ—JANUARY 1911. — ஸஞ்சிகை I. | No. 1.

## பொருளடக்கம்.

பத்திராதிபர் குறிப்புகள் — பக்கம்.

பிழைக்கும் வழி-சேலத்தில் தரிசு நிலங்கள் இளைஞர் தாவர நூல்-கணக்கறி விளக்கம். 3—5

விசேஷ வியாஸங்கள்

இந்தியாவில் மெழுகு வியாபாரம் —என். ராமபத்ர தீக்ஷதர் .. 6
பனியும் மூடுபனியும் —எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ், எம். ஏ., எல். டி. .. .. 9
தக்காளி —டி. வி. வி. ரமணய்யர் .. .. 12
பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் ஜன ஸமூகத்துக்கு செய்யக்கூடிய நன்மைகள் .. 14
ஒரு நூதன மிருக எரு —வெங்கட்டராம சர்மா .. .. 17
கைத்தொழில் அபிவிருத்தி —ஆர். என். முகர்ஜி .. .. 19

விசேஷத் திரட்டு

காடுகளின் பாதுகாப்பு .. .. 25
மனுஷரின் உரோமமும் நெசவுப் பொருளாம். 26
எலுமிச்சம்பழம் .. .. 27
பட்டினங்களும் கிராமங்களும் .. 28
லூஸர்ன் என்னும் தீவனப்பயிர் .. 30
மானிடரின் ஏழு பருவங்கள் .. .. 32

பத்திரிகை ஆராய்ச்சி

நிலத்தன்மை மாற்றம்—சூரிய கிரணமும் அதன் உபயோகமும்-விதை தெரிந்தெடுத்தல்—விவஸாயியின் தொல்லை-புஞ்சை விவஸாயப் பத்து கற்பனைகள்—புகையிலைச் சாகுபடி குறிப்புகள் .. .. 33-36

சிறுவர் பகுதி .. .. .. 37-38
ஸ்திரீகள் பகுதி .. .. 39-40

பகுதிக் குறிப்புகள்

விவஸாயக் குறிப்புகள—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் 41-50

மாஸ வர்த்தமானம் 51-53
சென்னப்பட்டண மார்க்கெட் நிலவரங்கள். 54

## CONTENTS.

PAGE.

**Editorial Notes**
Practical Life-Waste Lands in Salem Beginners Botany-Guide to Calculation. 3-5

**Special Articles**
The Wax Trade in India
N. Ramabadra Dikshadar ... ... ... 6
Dew and Fog
M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T., *Assistant Professor of Physics, Presidency College, Madras* .. ... ... ... 9
The Tomato
T. C. V. Ramana Aiyar ... ... ... 12
Social Service by Students ... ... 14
A New Animal Manure
Venkatarama Sarma ... ... ... 17
Industrial Development
R. N. Mukerjee ... ... ... ... 19

**Selections**
Conservation of Forests ... ... 25
Human Hair for Weaving ... ... 26
The Lime Fruit ... ... ... ... 27
Towns and Villages ... ... ... 28
Lucerne... ... ... ... ... 30
Seven Ages of Men ... ... ... 3

**Review of the Press**
Improvement of Soil ... ... ... 33
Sunlight and Its Use ... ... ... 33
Seed Selection ... ... ... ... 34
The Troubles of the Farmer ... ... ... 35
Ten Commandments About Dry Cultivation ... 35
Hints on Tobacco Cultivation ... ... 36

**The Boys' Section** ... ... ...37-38
**The Ladies' Section** ... ... ...39-40

**Departmental Notes**
Agricultural Notes ... ... ... ... 41
Industrial Notes ... ... ... ... 43
Educational Notes ... ... ... ... 44
Scientific Notes ... ... ... ... 45
Legal Notes ... ... ... ... 46
Medical Notes ... ... ... ... 46
Personal Notes ... ... ... ... 47
Fun and Anecdote ... ... ... ... 48
Curiosities ... ... ... ... 49

**News of the Month** ... ... ...51-53
**Madras Market Reports** ... ... ...54-56

225-908



## EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புகள்.

### "Practical Life."

"பிழைக்கும் வழி."—நம்முடைய பத்திரிகைக்கு சென்ற டிஸம்பர் மாஸத்தோடு இரண்டாவது அப்தபூர்த்தியாகி மூன்றுவது வருஷம் இந்த ஸஞ்சிகையோடு ஆரம்பமாகிறது. பத்திரிகையில் வெளியாகும் விஷயங்களைப்பற்றி கொஞ்சமேனும் சிரமத்தைப் பாராமல் எவ்வளவு ஆராய்ச்சி செய்ய வேணுமோ அவ்வளவையும் செய்துதான் விஷயங்களைப் பிரசுரம் செய்கிறோம். கைத்தொழில் முறைகளைப்பற்றி எழுத வேணுமென்ற ஆசை ரொம்பவும் உண்டு. ஆனால் இந்தக் காலத்து கைத்தொழில்கள் யந்திரஸம்பந்தமாயும் இந்தியாவில் இல்லாமல் மேல் நாட்டு ஸம்பந்தப்பட்டவைகளாயும் இருப்பதால், அவைகளைக்குறிக்கும் பதங்கள் தேச பாஷையில் வழக்கத்தில் இல்லை. அவைகளைப்பற்றி தமிழில் எழுதுவது சிரமமாகவே இருக்கிறது. ஆகையால் மேல் நாட்டு சாஸ்திரம், வியாபாரம், கைத்தொழில், முதலியவைகளைப்பற்றி பத்திரிகையில் விஸ்தாரமாய் எழுதுவதற்கு முன்னால் அடிப்படை வைத்தே ஆகவேண்டியிருக்கிறது. இந்த எண்ணத்துடன்தான் அப்போதப்பது ம-௱-௱-ஸ்ரீ. எம். வி. எஸ். அநந்த பத்மநாபராவ் அவர்கள், மீனாக்ஷி ஸுந்தரமய்யர் அவர்கள் போன்ற நிபுணர்கள் மேனாட்டு சாஸ்திர ஸம்பந்தமாயும் ரஸாயன ஸம்பந்தமாயும் ஸுலபமான வியாஸங்கள் எழுதி வருகிறார்கள். இவைகளை நம்முடைய நேயர்கள் தவறாமல் படித்துவரும் பக்ஷத்தில் இங்கிலீஷ் படித்து எவ்வளவு அறிந்து கொள்ளலாமோ அதற்குக் கொஞ்சம் ஏறக்குறைய விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் ஆகிய இவைகளைப் பற்றி சாஸ்திர ஸம்பந்தமான விவரங்களை நம்முடைய தமிழ்ப்பத்திரிகை மூலமாய் போகப் போக அறிந்துகொள்ளலாம்.

நம்முடைய பத்திரிகை மேன்மேலும் விருத்தியாவதற்கு சந்தாதாரர்களுடைய உதவியை மிகவும் எதிர்பார்க்கிறோம். நம்முடைய சென்னை ராஜதானியில் தமிழ் பேசுகிறவர்களுள்ள கிராமங்களாக ஸுமார் 50,000 க்குக் குறையாமல் இருக்கின்றன. இவைகளில் எல்லாருக்கும் எழுதப்படிக்கத் தெரியாதென்றாலும், 10 க்கு ஒருவராவது படிக்கக் கூடியவர்களாயிருப்பார்கள். இவர்கள் ஒன்பது ஜில்லாக்களில் பரவி யிருப்பதால் அவர்களுக்குப் 'பிழைக்கும் வழி' என்ற பத்திரிகை ஒன்றிருக்கிறதென்று தெரியஹேது வில்லை. இவர்களுக்கு பத்திரிகை இட்டேறச் செய்வதற்கு மாதிரி காபியாவது, ஏஜெண்டுகளாவது அனுப்புவது அஸாத்தியமான காரியம். ஆகையால் நம்முடைய நேயர்கள் தாங்கள் வரவழைக்கும் ஸஞ்சிகைகளை பத்திரிகையைப் பார்த்திராதவர்களுக்குக் காண்பித்து, அதைப்பற்றி அவர்களிடத்தில் பேசி, அவரவர்களால் கூடியவரை புது சந்தாதாரர்களைச்சேர்த்துக் கொடுத்தால் "பிழைக்கும் வழி" மேன் மேலும் ஓங்கும். இந்த வேண்டுகோளை நம்முடைய நேயர்கள் மறக்கமாட்டார்களென்று நம்புகிறோம்.

இன்னொரு விஷயம். எந்த தேசத்திலும் பத்திரிகைகள் செழித்தோங்குவது முக்கியமாய் அவைகளில் பிரசுரமாகவும் விளம்பரங்களினால் கிடைக்கும் வரும்படியாலேயே வியாபாரிகள் தங்கள் சரக்கை பத்திரிகை மூலமாகப் பிரஸித்தி செய்வதால் அவைகள் விற்பனையாகி நல்ல லாபம் பெறுகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு ஒரு பத்திரிகை மூலமாய்

ஆர்டர்கள் வருகின்றன என்று தெரிந்தால் அந்தப் பத்திரிகையில் அவர்களுடையப் பிரசுரங்களை நிறுத்தாமல் போடுவார்கள். இதனால் பத்திரிகைக்குப் பண உதவி பெருத்து அதில் சந்தாதாரர்களுக்கு உபயோகமான விஷயங்களை சந்தாவை உயர்த்தாமல் அதிகமாகப் பிரசுரிக்கக்கூடும். ஆகையால் சந்தாதாரர்கள் விளம்பர விஷயமாக வியாபாரிகளுக்கு எழுதும்போது குறித்த விளம்பரத்தைப் "பிழைக்கும் வழி"யில் பார்த்ததாக எழுதவேணும். இதில் சந்தாதாரர்களுக்கு யாதொரு பணச் செலவுமில்லை. ஆனால் அதுவே "பிழைக்கும் வழி" க்குப் பெருத்த உபகாரம் செய்ததாகும்.

வெளியூர்களுக்கு வேண்டிய துணி முதலிய அனேக ஸாமான்கள் சென்னபட்டணத்திலிருந்தே அனுப்பப்படுகின்றன. ஆகையால் ஜில்லா வியாபாரிகளும் வாஸிகளும் அவைகளின் விலையைத் தெரிந்து லாபமடைவார்களென்று எண்ணி இந்த ஸஞ்சிகை முதல் சில முக்கியமான சரக்குகளின் விலை விகிதங்களைப் பிரசுரஞ் செய்திருக்கிறோம்.

**Waste Lands in Salem.**

சேலத்தில் தரிசு நிலங்கள்.—விவஸாய விஷயத்திலும் நம்முடைய தேசத்தின் முன்னேற்றத்திலும் அதிக சிரத்தையும் கவனமும் செலுத்திவரும் திருநெல்வேலி ஜில்லா இனாம் வெள்ளக்கால் வெ. ப. திருமலையப்ப முதலியார் பின்வருமாறு எழுதுகிறார்:—

நமது "பிழைக்கும் வழி" 2-ம் வருஷம் 11-ம் லக்க ஸஞ்சிகை 464-ம் பக்கத்தில் 'ஆத்தூர் விவஸாய'மென்ற நிருபம் வெளியாயிருக்கிறது. அந்த நிருபத்தில் சேலம் ஜில்லாவில் அதிகமான நிலம் தரிசாயிருப்பதாகப் பிரஸ்தாபித்திருக்கிறது. தரிசாயிருக்கிற நிலஜாப்தா எல்லாம் டிஸ்ட்ரிக்ட்டு கெஜெட்டுகளில் வெளியிடுவது கவர்ன்மெண்டாருடைய கடமையாகும். ஒரு ஜில்லாவில் பயிரிடம் பிரியக் குறைவிருந்தால், வேறு ஜில்லா விவசாயிகள் பயிரிடக்கூடும். அநேக இடங்களில் சாகுபடிக்கு நிலமின்றி நிலவிலை அதிகமாய் உயர்ந்திருக்கிறது. பயிரிட சுலபமாய் நிலங்கிடைத்தால் சாகுபடி செய்ய ஜனங்கள் பின்வாங்கார்களென்பது திண்ணம். தரிசு நிலம் சாகுபடியாவதால் தேசத்தில் உணவு தானியம் உற்பத்தியாகி பஞ்சத்தை சிறிதாவது சாந்தமடைவிக்க ஹேதுவாகும். நிருபநேயர் மிஸ்டர் எல். அனந்தராமய்யரவர்களை கீழ்வரும் வினாவுக்கு விடை பத்திரிகையில் பிரசுரமாகும்படி எழுதவேண்டுகிறோம். ஜாப்தா தெரிந்தால் அயல்ஜில்லா வாஸி வந்து குடி கொள்ள மார்க்கமாகும். 'எந்தெந்த தாலூகாவில் எந்த கிராமத்தில் தரிசு நிலம் எத்தனை ஏக்கரிருக்கிறது. 2. அதன் நஞ்சை புஞ்சை விபரம். 3. புஞ்சையாகில் மண்வயண விபரம். 4. நஞ்சையாகில்பாசன நிலைமையும் மணல்வயணமும் எப்படி? 5. நிலசாகுபடிக்கு கூலியமையுமா, சம்பள விகிதம் என்ன? 6. கூலி பிரியம் சவுதம். 7. எந்த ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கால் பாதை, வண்டி பாதை சௌகரியமெப்படி, மைல் எவ்வளவு?" இவைகளைப்பற்றி நம்முடைய நேயர்களில் தெரிந்தவர்கள் பதில் எழுதுவார்களென்று நம்புகிறோம்.

**Beginners Botany.**

இளைஞர் தாவரநூல்.—இது வேலூர் வூர்ஹீஸ் காலேஜில் ஸ்யூபர்வைஸராயிருக்கும் எம். வி. ராஜா அவர்களால் இயற்றப்பட்டது. எலிமென்டெரி, ட்ரெயினிங், ஹைஸ்கூல் முதலியப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் உபயோகமானது. விலை 6 அணா.



**Guide to Calculation.**

கணக்கறிவிளக்கம்.—இது வேளாங்கண்ணி செந்தமிழ்ச் செல்வி பத்திராதிபர் கே. அருணாசலத்தேவரால் இயற்றப்பட்டது. விலை அணா 8. இந்தக்காலத்துப்பிள்ளைகளில் அனேகருக்கு சுலபமான கணக்குக்கேள்விகள் போட்டாலும் பதில் சொல்லுவதற்கு ஸ்லேட்டும் பென்ஸிலும் தேடி அவைகளில் கணக்கைப் பார்த்துத்தான் பதில் சொல்லுவார்கள். 'மென்ட்டல் அரித்மெடிக்' என்று சொல்லப்படும் மனக்கணக்கு அநேகம் பிள்ளைகளுக்கு வருவதில்லை. இதற்கு ஒரு காரணம் நம்முடைய தேசத்தில் பலவித நிறைகளும், அளவைகளும் நாணயங்களும் வழங்குவது. ஆனாலும் இவைகளின் ஸூக்ஷ்மத்தை அறிந்து கொண்டுவிட்டால் கேட்டகேள்விகளுக்கு மனக்கணக்காகவே பதில் சொல்லிவிடலாம். உதாரணமாக, தஞ்சாவூர் ஜில்லாவில் எண்ணெய்வாங்குவது ஆடக்கணக்காய், அரை ஆடம், காலாடம், அரைக்காலாடம், வீசைக்கலயம், சேர் என்றுதான். ஒரு ஆடம் என்பது 64 சேர். வீசைக்கலயம் நாலு சேர். இவைகளுக்கு விலை ரூபாயிலும், அணாவிலும் துக்காணி (இரண்டுதம்பிடி) யிலும் சொல்லுவார்கள்.

நல்லெண்ணெய் ஆடம் 6-8-0 ரூபாயாக, வீசைக் கலயத்தின் விலை என்னவென்றால், ரூ. 6-8-0 யை அணாவாக்கி பதினாறால் வகுத்துப் பதில் சொல்லுவார்களே ஒழிய சட்டென்று ஆடம் எத்தனை ரூபாயோ அத்தனை அணா வென்று சொல்லுகிறவர்கள் மிகவும் அரிது. அதே மாதிரியாக வீசைக் கலயம் $6\frac{1}{2}$ அணாவானால் ஒரு சேர் $6\frac{1}{2}$ காலணா அதாவது $9\frac{3}{4}$ துக்காணி என்பதும் தெரியாது. இப்படிப்பட்டக் குறுக்குக் கணக்குகளின் ஸூக்ஷ்மங்கள் இந்தக் கணக்கறி விளக்கத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. நம் நாட்டில் வழங்கும், கரிசை, கலம், ஆடம், பொதி, பாரம், மணங்கு, வீசை, சேர், எடை, பலம், நெல்வாரம், வட்டிக்கணக்கு, நெடுங்குழிமாறல் வெட்டுக்குழிமாறல் முதலிய மிகவும் உபயோகமான கணக்குகள் இருக்கின்றன. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும், இன்னும் பெரியவர்களுக்கும் தினப்படி நடவடிக்கைகளில் இந்தப் புஸ்தகத்தில் அடங்கிய விஷயங்கள் மிகவும் உபயோகமாயிருக்கும் என்பதில் ஸந்தேகமில்லை.

---

BOOKS RECEIVED.

புஸ்தக வரவு.

**Lessons from Zoology.**

ஜீவவர்க்க போதினி, இரண்டாம் மூன்றாம் பாகங்கள்.—சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி காலேஜ் உபாத்தியாயராகிய வி. ஆர். துரைஸாமி ஐயர் அவர்கள் எம். ஏ. எல். டி. எழுதியது. விலை ரூ. 1-0-0. அவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Vyasaprakasika.**

வியாஸ ப்ரகாசிகை.—சக்ரவர்த்தினிப் பத்திரிகையின் பத்திராதிபராகிய பி. எஸ். அப்புஸாமி அய்யரால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணா 8. வேண்டியவர்கள் சென்னபட்டணம் திருவல்லிக்கேணி பெரிய தெருவில் பி. எஸ். அப்புஸாமி ஐயருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Calendars.**

பஞ்சாங்கங்கள்.—சென்னபட்டணத்தில் பெருத்த கெடிகார வியாபாரிகளாகிய மெஸ்ஸர்ஸ் காதர் அண்ட் யூஸப் கம்பெனியாரும் மௌண்ட் ரோட்டில் அச்சாபீஸ் வைத்திருக்கும் ஜி. வி. லோகநாதம் பிரதர்ஸ்களும் அனுப்பிய அழகான வால் காலெண்டர்களை வந்தனத்துடன் பெற்றோம்.

## THE WAX TRADE IN INDIA.

BY
N. RAMABHADRA DIKSHATAR.

## இந்தியாவில் மெழுகு வியாபாரம்.

ஒரு தேசத்தார் முன்னுக்கு வருவதற்கு அவசியமானவை கைத்தொழிலும், வியாபாரமும். நாம் எவ்விடம் போய்ப்பார்த்தாலும் ஜனங்கள் வியாபாரத்தில் முந்தி நிற்க வேண்டுமென்று ஆவலுள்ளவர்களாயிருப்பதைக் காண்கிறோம். இந்தியாவிலிருக்கும் நாம், வியாபாரத்தை உத்தேசித்து என்ன செய்து கொண்டிருக்கிறோம்? அயல் தேசத்தார்களிடத்தில் ஸாமான்களையும், வியாபாரத்தையும் விட்டு, ஏழைகளாகி அவர்கள் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வியாபாரத்தை முன்னுக்குக் கொண்டுவர தைரியமும், புத்தியும், ஊக்கமும், ஐசுவரியமும், வேண்டும். ஏராளமான ஐசுவரியத்தைக் கொடுக்கக் கூடிய காபி, தேயிலைத் தோட்டங்களுக்கு அதிபதிகள் அயலார்களாயிருக்கிறார்கள். ஏனெனில், வியாபாரத்திற்கு அவசியமான முன்சொன்ன நான்கு குணங்களும் நம்மிடம் கிடையா. கல்விமான்களும், செல்வவான்களும் ஏன் அந்த லாபங்களை அடையக் கூடாது? அனேகர், தேனீக்களின் மெழுகைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால், அவைகளால் கிடைக்கக்கூடிய லாபத்தைப் பற்றி எவ்வளவு ஜனங்கள் நினைத்திருக்கிறார்கள்? மிகவும் சொல்பமானவர்கள் தான். 1893-94ம் வருஷத்தில், பூட்டான் தேசம் முதல் பக்ஸார் நகரம் வரையில் 315 மணங்குள்ள தேன் மெழுகை மார்வாரிகளென்னும் ஜாதியார் ரூ. 13,266 க்கு வாங்கி கல்கத்தாவிற்கு அனுப்பியிருக்கிறார்களென்பது உண்மையான விஷயம்.

தேனீக்கள், தங்களுடைய சுறுசுறுப்புள்ள குணங்களாலும், அவைகள் சேகரிக்கும் பதார்த்தங்களின் மேன்மையாலும், வெகு காலங்களாக ஜனங்களின் ஊக்கத்தையும், கவனத்தையும் விருத்தியாக்கிக் கொண்டுவருகின்றன. உலகத்திலுள்ள வித்வான்கள் யாவரும் தேனீக்களின் சுறுசுறுப்பைப் பற்றி வர்ணித்திருக்கிறார்கள். காளிதாஸர், பவபூதி, முதலிய கிரந்த கர்த்தர்கள் தேனீக்களைச் சிலாகித்திருக்கிறார்கள்.

இப்படி ஜனங்களின் மனதைக் கவரக்கூடிய தேனீக்கள் இந்தியாவின் வியாபாரத்தை எப்படி விருத்தியாக்கக் கூடுமென்று சிலர் கேட்கலாம். சில்லரைக் கைத்தொழில்களுக்கு மெழுகு வெகுகாலமாக உபயோகப்பட்டு வருகிறது. இந்தியாவில் பிரயாணம் செய்த ஒரு ஆங்கிலேயப் பிரபு தேனீ மெழுகைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:—"இந்தியாவில் மெழுகு வெகு நயமாகக் கிடைக்கும். ஒவ்வொரு வைதீக வீட்டிலும், கோவிலிலும் ஏராளமான மெழுகு வர்த்திகளிருக்கின்றன. இவைகளை உத்ஸவ காலங்களில் உபயோகிக்கிறார்கள்." பம்பாய் ராஜதானி, மலையாளம், முதலிய மேற்குப் பிரதேசங்களிலிருந்து ஏராளமான தேனீ மெழுகு போர்த்துகீஸ் ஜாதியாருடைய பிரதான நகரமாகிய கோவாவிலுள்ள தேவாலயங்களுக்குப் போகின்றன. அங்கே அவைகள் மெழுகு வர்த்திகளாகச் செய்யப்படுகின்றன. பர்மாவிலுள்ள பௌத்தர்களின் கோவில்களை ஆயிரக்கணக்கான தேனீ மெழுகுவர்த்திகள் பிரகாசிக்க வைக்கின்றன.

மத்திய மாகாணங்களில், துணிகளுக்கு அச்சுப் போடுவதற்காக சிப்பர்கள் என்ற ஜாதியார் மெழுகை உபயோகிக்கிறார்கள். பர்மாவில் பட்டாடைகளுக்குச் சாயமேற்றுவதற்காக உபயோகிக்கிறார்கள். வட ஆற்காடு ஜில்லா



வில் மெழுகுச்சேலை செய்வதற்கு மெழுகு உபயோகப்படுகிறது. தட்டார்களும், செம்பு, பித்தளை, ஈயம், முதலிய லோகங்களை உருக்குகிறவர்களும், மெழுகை விக்கிரகங்கள் வார்ப்பதற்கும், இன்னும் பலவித ஸாமான்கள் செய்வதற்கும், உபயோகிக்கிறார்கள். பிளாஸ்திரி தைலங்கள் முதலியன செய்வதற்குக்கூட, வெள்ளை, மஞ்சள், நிறமுள்ள மெழுகுகள் உபயோகப்படுகின்றன.

மெழுகின் உபயோகங்களை நாம் ஒருவாறு அறிந்துகொண்டு விட்டபடியால், அதைச் செய்யும் விதத்தைப் பற்றி சற்று யோசிப்போம். தேனீ மெழுகை எடுப்பது வெகு சுலபம். இதற்கு ஸாமர்த்தியமான காரியங்களொன்றும் செய்ய வேண்டியதில்லை. மரங்களிலிருந்தும், கற்பாறைகளிலிருந்தும் காட்டில் வசிக்கும் ஜனங்கள் தேனையும், மெழுகையும், வெகு சுலபமாக எடுக்கிறார்கள். அனேகமாக மெழுகைக் கோடை காலத்தில்தான் சேகரிப்பார்கள். ஏப்ரல் மாஸம் ஆரம்பம் முதல் ஜூன் மாஸம் 15-ம் தேதி வரையில் மெழுகு சேகரிக்கும் காலம்.

தேனீக் கூட்டில் இரண்டு பாகங்களிருக்கின்றன. மேல் பாகத்தில் தேனும், கீழ்பாகத்தில் முட்டைகள் முதலிய அசுத்தங்களும் இருக்கின்றன. மேல் பாகத்திலிருந்து சுத்தமான வெள்ளை மெழுகு அகப்படுகிறது. கீழ் பாகத்திலிருந்து அசுத்தமாயும், அழுக்காயுமுள்ள ஒரு வர்ணமுள்ள பதார்த்தம் அகப்படுகிறது. வழக்கமாய், கிளைகளிலிருந்து இரண்டு பாகங்களையும் எடுத்து உருக்கும் ஸமயத்தில் தநன் பிரிப்பார்கள். முதலில், தேனீக்கூட்டை கையால் பிழிந்து தேனை வெளியிலெடுப்பார்கள். பிறகு, கரைந்திருக்கும் அசுத்தங்களைப் போக்கடிக்கக் குளிர்ந்த ஜலத்தில் அந்தக் கூட்டைக் கழுவுவார்கள். அதன்பிறகு, அதை ஒரு பித்தளை அல்லது மட்பாத்திரத்தில் போட்டு, பாத்திரத்தின் பாதியளவு தண்ணீரை ஊற்றி நெருப்பில் சுடவைப்பார்கள். சுத்த மெழுகானது உருகி சுடுதண்ணீரின்மேல் மிதக்கும். அசுத்தங்கள் பாத்திரத்தின் அடியில் தங்கிவிடும். இறந்த பூச்சிகளும், கிளைகளும், இலைகளும், புல்லுகளும், மரத்துண்டுகளுமே அசுத்தங்களாகும். பாத்திரத்தை அடுப்பிலிருந்து எடுத்து ஒரு குளிர்ச்சியான இடத்தில் வைத்து சுத்த மெழுகைப் பந்து போல் உருட்டி எடுப்பார்கள். அப்படி எடுத்த மெழுகில் வேறு ஏதாவது அசுத்தங்களிருக்கும் பட்சத்தில் அதை மறுபடியும் உருக்கி ஒரு கம்பளி அல்லது முரட்டுத்துணியில் ஊற்றி ஜலமுள்ள பாத்திரத்தில் வடிகட்டி எடுப்பார்கள்.

சில ஜில்லாக்களில், மெழுகை வேறு விதமாகவும் சுத்தம் செய்கிறார்கள். மத்திய மாகாணத்திலுள்ள பீடில் நகரத்தில் தேன் கூட்டை பசுஞ்சாணி கலந்த ஜலத்தில் ஒரு நாள் போட்டு வைத்து, பிறகு அதை நன்றாகக் கழுவி உருக்கித் துணியில் வடிகட்டுகிறார்கள். இந்தவிதம் செய்வதால்தான் மெழுகு சுத்தமடைகிறதென்கிறார்கள். சென்னை ராஜதானியிலுள்ள நெல்லூர் ஜில்லாவில் உருகின மெழுகு கொதிக்கும் தருணத்திற்கு வந்தவுடன் புளிய இலைகளைப் பாத்திரத்தில் போடுகிறார்கள். சில இடங்களில் மெழுகை இளக வைப்பதற்கு உப்பு ஜலத்தை உபயோகிக்கிறார்கள். ஆனால், போரக்ஸ் என்று சொல்லப்படும் வெங்காரம் முதலிய பதார்த்தங்களை ஒருநாளும் உபயோகிப்பதில்லை.

சில இடங்களில், மெழுகுக்கு மேனியையும், வர்ணத்தையும் கொடுக்க சில பதார்த்தங்களை உபயோகிக்கிறார்கள். மெழுகுக்குப் பொன்னிறமான வர்ணத்தைக் கொடுக்க மஞ்சள் உப

யோகப்படுகிறது. மெழுகை சூரிய வெப்பத்தில் ஒரு வாரம் வைக்கும்பட்சத்தில் அது நன்றாக வெளுத்து விடும். ஆனால், வெள்ளை மெழுகை வியாபாரிகள் அபேக்ஷிக்கிறதில்லை. ஆகையால் மஞ்சள் உபயோகப்படுகிறது.

மெழுகைச் செய்யும் விதத்தை நாம் அறிந்து கொண்டதனால் அது கிடைக்கும் சில இடங்களைப் பற்றியும், அதன் கிரயத்தைப் பற்றியும் பேசுவோம். கல்கத்தாவிலுள்ள ஸுந்தரவனத்தில் பாரஸ்ட் டிபார்ட்மெண்டார் தேனையும், மெழுகையும், எடுக்கிறார்கள். மான்லேயர்கள் என்ற தேனீக்காரர்கள் இந்த வியாபாரத்தில் கைதேர்ந்தவர்கள். கிராமத்தார்கள் பவுண்டு மெழுகை மூன்று அல்லது நான்கு அணாவுக்கு விற்கிறார்கள். கடைக்காரர்கள் ஒரு பவுண்டை எட்டணாவுக்கு விற்கிறார்கள்.

கல்கத்தாவில் ஒரு மணங்கு (80 ராத்தல்) மெழுகை 50 ரூபாய் முதல் 75 ரூபாய் வரையில் விற்கிறார்கள். மெழுகு தேவையான சில இடங்கள் :—ஜாவா, ஸுமாத்திரா, இங்கிலாந்து, ஜெர்மனி, ப்ரான்ஸ், பெல்ஜியம். இந்தியாவில் 1902-03-ம் வருஷத்தில் அயல் நாடுகளுக்கு அனுப்பின மெழுகின் கிரயம் ரூபா. 384,753.

சென்னை ராஜதானியில் தேனும், மெழுகும் கிடைக்கக் கூடிய இடங்கள் அனேகம் இருக்கின்றன. இந்தத் தொழிலை அதிகமாக விருத்தியாக்க மார்க்கங்களும் இருக்கின்றன. மலைப்பாங்கான கஞ்சம், சேலம், கோயமுத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களிலும், மேற்குக் கடற்கரை ஓரத்திலுள்ள தென்கன்னடம், மலையாளம் ஜில்லாக்களிலும், காட்டுத் தேனீக்கள் அபரிமிதமாக இருக்கின்றன. தொதவர்களும், மலை ஜனங்களும் ஒரு மணங்கு (25 ராத்தல்) மெழுகை ரூ. 3-6-0 க்கு விற்கிறார்கள். வியாபாரிகள் இவைகளை வாங்கி 12 முதல் 16 ரூபாய் வரையில் விற்கிறார்கள். பம்பாய் ராஜதானியிலுள்ள ஷோலாபூர், ஸத்தாரா, பெல்காம், ரத்னகிரி, தார்வார் முதலிய ஜில்லாக்களில்பிஷ்ஸ் என்னும் பெயர் பூண்ட காட்டு ஜாதியார் மெழுகு வியாபாரம் செய்கிறார்கள். 28 தோலாக்கள் கொண்ட ஒரு சேர் மெழுகை நான்கு அணாக்களுக்கு விற்பதாகப் பிரஸ்தாபம்.

இந்தக் கைத்தொழிலின் முக்கிய விஷயங்கள் அனேகமாக முடிந்து விட்டன. இந்தியாவில் இந்தக்கைத்தொழில் அனேகமாக நாகரிகமற்ற ஜாதியாரிடமிருக்கிறது. பார்வைக்கு நன்றாக இருக்க வேண்டுமே யென்ற கவலையில்லாமல் புராதன முறைகளோடு மெழுகு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. இந்தத் தொழிலை விருத்தி செய்ய நாம் பிரயத்தனப்படவேண்டும். காட்டுத் தேனீக்களின் ஸுபாவத்தை கற்றறிந்து, அவைகள் போகும் செடிகளையும், புஷ்பங்களையும் பரீக்ஷித்துப் பார்ப்பது நம்முடைய கடமையாகும். இந்தத் தொழிலையும் அயல் தேசத்தார்கள் இந்தியாவிற்கு வந்து கைப்பற்றிக் கொள்ளாதிருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

நா. ராமபத்திர தீக்ஷதர்.

---

**The Plantain.**

வாழை.—இது மாயவரம் வக்கீல் ஏ. நடேச பிள்ளை அவர்கள் எழுதியது. வாழைப்பயிர் செய்யத் தகுந்த நிலம், கன் புதைத்தல், எரு விடுதல், வாழைக்காய் மா, வாழைப்பட்டை நார் முதலியவைகளைப்பற்றி விவரமாய் எழுதியிருக்கிறார். விலை 2 அணா.

---



OFFICE 30 MAR 1911 MADRAS

## DEW AND FOG.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M.A., L.T.

## பனியும் மூடுபனியும்.

சித்திரை, வைகாசி முதலான கோடை மாஸங்களில் பகல் காலம் இராக்காலத்தை விட நீடித்ததாகையால், சூரிய வெப்பத்தால் பூமி நாளுக்கு நாள் சூடேறிக்கொண்டே வருகிறது. இந்த மாஸங்களில் குளம், குட்டை முதலான நீர்நிலைகளிலுள்ள ஜலம் நீராவியாக மாறி ஆகாயத்தில் பரவுகிறது. தக்ஷிணாயனம் அதாவது சூரியன் தென்திசை நோக்கிச் செல்லும் காலமாகிய ஆடி முதலான மாஸங்களில் சூரியன் தெற்கே செல்லச்செல்ல நாளுக்கு நாள் பகற்காலம் குறைந்து கொண்டும், இராக்காலம் அதிகரித்துக் கொண்டும்வருகிறது. ஆதலால் பூமியும் குளிர்ந்துகொண்டே வருகிறது. பூமி குளிர்ந்துவர, வடகிழக்குக்காற்று சமுத்திரத்தின்மேல் ஓடி பூமியில் பட்டதும், அந்தக் காற்றிலுள்ள நீராவி ஆகாயத்தில் தங்க சக்தியற்றதாகி மழையாகச் சுருங்கி பெய்து விடுகிறது. அற்பசி, கார்த்திகை மாஸங்களில் தென்னிந்தியாவில் பெய்யும் அதிகமான மழையின் காரணம் இதுவே. மாரிகாலம் கழிந்ததும் பனிகாலம் வந்துவிடுகிறது. மார்கழி, தை மாஸங்களில் பனி அதிகம். இந்த மாஸங்களில் பகல் காலம் 11 மணி நேரமும், இரவு 13 மணி நேரமுமானதால், பகலில் சூரியனிடத்திலிருந்து பூமிக்குக் கிடைக்கும் உஷ்ணத்தைவிட, இரவில் பூமியிலிருந்து வெளி வீசும் உஷ்ணம் அதிகம். ஆதலால், பூமி அதிகக் குளிர்ச்சியை அடைந்துவிடுகிறது. மேலும் இந்த மாஸங்களில் சூரியன் அதிக தெற்காகவே ஓடுவதால், சூரியக் கிரணங்கள் பூமியின்மேல் சாய்வாகவே விழுகின்றன. ஆகையால் அவைகளின் தீக்ஷண்யம் குறைவாயிருக்கின்றது. இந்த மார்கழி மாஸத்தில் இந்தச் சென்னப்பட்டணத்தில் தினம் காலை 4 மணிக்கு காற்றின் டெம்பரேசர் 65 டிக்ரீயும், ஆனி மாஸத்தில் இதே நேரத்தில் காற்றின் டெம்பரேசர் 80 டிக்ரீயும் இருக்கிறதென்று, மீடியொராலொஜிட்ஸ் என்னும் காலக் குறிப்புகளை கவனித்து எழுதும் சாஸ்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள். மார்கழி மாஸம்கடைசியில் சூரியன் தன் தெற்கு கதியை நிறுத்தி, வடக்கு நோக்கிச் செல்ல ஆரம்பிக்கிறான். வடக்கு நோக்கிச் செல்லும் 6 மாஸகாலத்திற்கு உத்தராயணம் என்று பெயர். சூரியன் அதிக தெற்கேயுள்ள காலமும், பூமி அதிக குளிர்ந்த காலமுமாகிய மார்கழி மாஸத்தில் மனிதர்களும், மிருகங்களும் குளிரால் வருந்தி, வியாதியால் பீடிக்கப்படுகிறார்கள். விருக்ஷஜாதிகளும் தங்களுக்கு வேண்டிய உஷ்ணமும், வெளிச்சமும் குறைவதால் நன்றாய்த் தழைத்துப் பலன் கொடுப்பதில்லை. சூரியன் வடக்கே திரும்பி ஓட ஆரம்பித்ததும், குளிர் நீங்கி வியாதிகள் நசித்துப் போவது நிச்சயம். பழவிருக்ஷங்கள் தழைத்து காய்கனிகளைக் கொடுக்க ஆரம்பிக்கும். இம்மாதிரியான சந்தோஷகரமான மாறுபாடுகள் உண்டாகும் என்பதை மனதில் எண்ணிக் கொண்டு ஜனங்கள் சந்தோஷப்பட வேண்டுமென்றே, உத்தராயணத்தின் ஆரம்பமாகிய தை மாஸத்தின்முதலில் பொங்கல் அல்லது சங்கராந்தி என்னும் பண்டிகை வழக்கத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சூரியன் அதிக தெற்கேயுள்ள மார்கழி, தை மாஸங்களில் இரவில் பனிபெய்வதும், புல் தரைகளில் பனித்துளிகள் தங்குவதும், சிலவேளைகளில் ஆகாயம் எல்லாம் வெண்மையாகி நெருங்கிய பனித்துளிகள் மூடிக்கொள்வதும் ஸகஜமே. இந்தப்பனியின் குணதிசயங்களைப் பற்றிக்கொஞ்சம் விவரிப்போம்:—

## பனியும் மழையும்.

ஆகாயத்தில் நீராவி எப்போதும் கலந்திருக்கிறது என்பது நன்ருய் தெரிந்த விஷயம். ஆகாயத்தின் உஷ்ணநிலை அல்லது டெம்பரேசர் குறைந்தால், நீராவியை அடக்கிவைத்துக் கொள்ளும் சக்தியும் குறையும். நீராவி அதிகமாகப் பரவியிருக்கும்போது குளிர்ந்த காற்று ஆகாயத்தின்மேல் படுமாயின், அந்த நீராவி ஜலத்துளிகளாகமாறி ஒன்ருேடொன்று சேர்ந்து, பெரிதாகி மேகமாகத்திரண்டு கீழே மழைத்துளிகளாகப் பெய்துவிடும். நீராவி குறைவாயிருக்கும்போது ஆகாயம் குளிருமாஞல், சிறுசிறு நீர்த்துளிகள் மாத்திரம் காணப்படுவதால், ஆகாயம் புகையடைந்தாற்போன்ற நிறத்துடன் காணப்படும். இதைப் பனி என்கிருேம். பூமியின் ஸமீபத்திலுள்ள ஆகாயத்தின் ஒருபாகம் மாத்திரம் குளிர்ந்து, கொஞ்சதூரம் மட்டுமே இந்தப்பனி காணப்படுவதுண்டு. பனி பெய்வதற்குக் காரணம் ஆகாயத்தில் உஷ்ண நிலைமை அதிகமாய்க் குறைவதே யாதலால், காற்று அதிகமாகக் குளிர்ந்திருப்பதாலேயே பனிபெய்கிறது என்று ஜனங்கள் சொல்லிவிடுகிருர்கள். வெயில் காலங்களில் ஆகாயத்தில் நீராவி அதிகமாய்ப் பரவியிருந்தபோதிலும், பூமி சூடாயிருப்பதால், ராத்திரியிலும் கூட பனிபெய்யும் படியான குளிர்ந்த நிலைமைக்கு ஆகாயம் வருவதில்லை. பனிநாட்களில் ஆகாயத்தில் உள்ள நீராவி அதிகக் குறைவாயிருந்தபோதிலும், பூமி குளிர்ந்து இருப்பதால், சீக்கிரம் நீராவி பனியாகப் படியும்படியான ஸ்திதிக்கு ஆகாயம் குளிர்ந்து விடுகிறது.

## பனிகாணும் காலமும் இடமும்.

ஒவ்வொரு தினமும் சூரியன் மேலே ஏற ஏற பூமியும் சூடேறுகிறது. பூமியின் மேற்பட்ட ஆகாயத்தின் டெம்பரேசரும் அதிகரிக்கிறது. சூரியன் அஸ்தமனமான பிறகு டெம்பரேசர் குறைந்துகொண்டே போவதால், விடியற்காலையில் 5 மணி சுமாருக்கு பூமி அதிகமாக குளிர்ந்து விடுகிறது. ஆதலால் விடியற்காலையில் பனி விழுவதும் சூரியன் உதயமாகி கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பனி மறைவதும் ஸகஜம். இதனுலே தான் "சூரியனைக்கண்ட பனிபோல்" என்னும் பழமொழி வழங்குகிறது. மார்கழி, தை, மாஸங்களில் ஆகாயத்தில் நீராவி அதிகமாய்ப் பரவியிருக்குமாஞல் முன்னிரவிலும் பனிமூடிக்கொள்வதுண்டு. பூமி குளிர்ந்து இருப்பதால் அதை அடுத்தகாற்று பாகமும் குளிர்ந்துபோய் நீராவியைத் தாங்க முடியாமல் பனியாக தரையில்கொட்டிவிடுகிறது. காற்று பூமியிலிருந்து கொஞ்ச உயரந்தான் ராத்திரியில் குளிர்வதால், கொஞ்ச உயரம் வரைக்குந்தான் புகைபோன்ற நிறம் காணப்படுகிறது. சில நாட்களில் பனி வயல்களில் புல் தரைகளை மூடிக்கொண்டிருப்பதையும், சிலநாட்களில் ஊரிலுள்ள மரம் முதலான உயரமான இடங்களையும் மூடிக் கொண்டிருப்பதையும் நாம் காண்பது இந்தக்காரணத்தாலேயே.

## பனியின் வகைகள்.

பனிபெய்யும் மாஸங்களில் காலையில் புல் தரைகளில் இலைகளின் மேல், அவைகளை வெண்மை நிறமுடையனவாகக் கண்ணுக்குக் காட்டும்படியான லேசான சிறுசிறு ஜலத்துளிகள் படிந்திருக்கும். இலை ஓரங்களில் பெருந்துளிகள் சேர்ந்திருக்கும். இத்தரைகளின்மேல் காலை வேளைகளில் நடக்கும்போது சூரிய வெளிச்சத்தால் பனித்துளிகள் அனேக வர்ணங்களுடன் பிரகாசிப்பதைக் காண்கிருேம். மைதானங்களில் கிடக்கும் கட்டைகளின் மேலும், கம்பளி, ஓடு முதலானவைகளின் மேலும் ஜலம் படிந்திருக்கும். இவையெல்லாம் சூரியன் உதயமாகிய கொஞ்சநேரத்திற்கெல்லாம் மறைந்து ஆகாயம் வெகு சுத்தமாகக் காணப்படும். இது ஸாதாரணமான பனி. இன்னும் சில வேளைகளில் பனி அதிகமாய் மூடிக்கொண்டு 20, 30 அடிதூரத்திலுள்ளவர்கள்கூடத் தெளிவாய்த் தெரியாதபடியும் நேரிடும். அப்போது பனித்துளிகள் தனித்தனியே ஆகாயத்தில் மெள்ள விழுந்துகொண்டிருப்பதைக் காணலாம். இத்துளிகள் மரங்களின்மேல் படிய இலைகளிலிருந்து மழை பெய்வதுபோல் ஜலம் கொட்டும். நாம் பேசும்போதும், மூச்சுவிடும்போதும், வாயிலிருந்தும், மூக்கிலிருந்தும் புகை கிளம்புவதுபோல் காணப்படும். சூரியன் உதயமாகி 5, 6 நாழிகை வரையிலும் இந்தப்பனி மூடிக்கொண்டே இருப்பதுண்டு. இந்தப்பனியை மூடுபனி என்கிருேம். மிகவும் குளிர்ச்சியான இங்கிலாந்து, இமயமலையின் உச்சி முதலான இடங்களில் இந்தப்பனித்துளிகளே இறுகித் தவிடுமாதிரியான பொடியாக பூமியில் படிந்து பனிக்கட்டியாகிறது என்று சொல்லுகிருர்கள். இவைகளின் காரணங்களைக் கவனிக்கும் போது, மழை, பனி, மூடுபனி, என்பன எல்லாம் ஒரேமாதிரியானவை என்றும், உஷ்ண நிலைமையின் வித்தியாஸத்தாலும், நீராவி அளவின் வித்தியாஸத்தாலும், இடத்தின் வேற்றுமையாலும், இத்தோற்ற வித்தியாஸங்கள் உண்டாகின்றன வென்றும் சொல்லலாம்.

## சில விஞ விடைகள்.

காற்று வீசாததால் ஆகாயம் சலனமற்ற ராக்காலங்களிலும், மேகங்கள் இல்லாத போதும் பனி அதிகமாய்ப் பெய்கிறது என்பதை நாம் அனுபவத்தில் கண்டிருக்கிருேம். காற்ருேட்டமில்லாத ஏரியின் உட்புறங்களில் மார்கழி மாஸத்தில், மூடுபனி அடுக்கு அடுக்காய் நிறைந்து இருப்பது ஸாதாரணம். இரவு மந்தாரமாயிருந்தால் குளிரும், பனியும் குறைவே. மேகம்படர்ந்திருந்தால் பனிபெய்யாமல் தடைபடுவதேன்? மேகங்கள் பூமியிலிருந்து வெளி வீசும் சூட்டைத் தடுத்து பூமியின் பக்கமே திருப்புகின்றன. மேகம் மூண்ட ராக்காலங்களில் பூமி ஸரியான அளவு குளிர்ச்சியடைவதில்லை. இந்தக்காரணம் பற்றியே வேனிற்காலங்களில் மேகஸஞ்சாரம் அதிகமான இரவுகள் அதிக புழுக்கமாயிருக்கின்றன. காற்று அடித்தால் பனி ஏன் படிவதில்லை? காற்று அடிக்கும்போது ஆகாயம் இடம் விட்டு இடம் பெயர்ந்துகொண்டே இருப்பதாலும், ஸதா தன்னுள் கலந்துகொண்டே இருப்பதாலும், பூமி மட்டத்தில் படிந்திருக்கும் காற்றுக்குளிர ஸாவகாசமில்லை. கட்டைகளின் மேலும், ஓடுகளின் மேலும் பனி அதிகமாய்ப் படிவதேன்? இந்த ஸாமான்கள் இரவில் தங்களிடத்துள்ள உஷ்ணத்தைக் கக்குகின்றனவேயன்றி, சுற்றிலுமுள்ள வஸ்துக்களிலிருந்து உஷ்ணத்தைக் கவரச்சக்தியற்றன. ஆதலால் அவை சீக்கிரம் குளிர்ச்சியடைகின்றன. அவைகளின்மேல் படியும் காற்றும், தன்னிடத்துள்ள நீராவியைப் பனியாக எளிதில் கொட்டிவிடுகிறது. கெட்டிப்படுத்தின ரஸ்தாக்களின் மேலும், பூமியின்மேல் படிந்திருக்கும் பெரிய உலோக ஸாமான்களின் மேலும் பனி அதிகமாய் படியாததற்குக் காரணம் இப்போது நன்கு விளங்குகிறதல்லவா?

ஆகாயத்திலுள்ள நீராவி பனியாகப் படிவதற்கு ஆகாயத்திலுள்ள சிறுசிறு தூசிகள் அத்தியாவசிய மென்றும், இத்தூசிகள் அதிகரித்துள்ள நாட்களில் ஆகாயத்தில் மூடுபனி காணப்படும் என்றும், அதிக குளிர்ச்சியடைந்தபோதிலும், மழை பெய்வதால் தூசிகள் ஆகாயத்தில் குறையுமாயின் நீராவி பனியாக மாருது என்றும் கண்டுபிடித்திருக்கிருர்கள். போகிபண்டிகையன்று விடியற்காலையில் வீட்டுக்கு வெளியே குப்பைகளைச் சுடுவதால் உண்டாகும் புகையும் தூசிகளுமே, அப்பண்டிகையன்று காணப்படும் மூடுபனிக்குக் காரணம் என்று ஊகிக்கலாம்.

எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ்.

# THE TOMATO.

BY

T. C. V. RAMANA AIYAR.

## தக்காளி.

இது ஒரு செடி. இதன் பழம் மட்டும் மனிதருக்கு உபயோகப்படுகிறது. இது சென்னை ராஜதானியின் பல ஜில்லாக்களில் ஏப்ரல் மாஸத்திலிருந்து நவம்பர் மாஸம் வரையில் நன்றாய் வளர்ந்து பலன் கொடுக்கும். மலை நாடுகளில் மார்ச்சு மாஸத்திலேயே விதைத்து நாற்றான பிறகு வேறு இடங்களில் நடப்படுகிறது. குறைந்தது நான்கு மாஸகாலம் விசேஷமான பலனைக் கொடுக்கிறது.

நாற்று விடுவதென்றால், பூமியில் தகுந்த இடத்தில் ஒரு அடி ஆழமும், வேண்டிய அகலமும், நீளமும் வைத்துக் கொண்டு, தோண்டி மண்ணை எடுத்து வேறிடத்தில் போட்டுக் கொண்டு, அத்துடன் ஆற்று வண்டல்மண் அல்லது சோலைமண்ணும், ஆட்டெருவும் கலந்து தோண்டப்பட்ட குழியில் போட்டு பூமியின் மட்டத்திற்கு அரை அடி அதிக உயரமாயிருக்கும்படி பாத்தி கட்டி, மேற்படி பாத்தியைச் சுற்றிச் செங்கல் அல்லது வேறு கற்களைக்கொண்டு மண்கரைந்து போகாமல் அமைத்து, பாத்தியில் நல்ல விதைகளை கூடிய வரையில் விசாலமாகத் தெளித்து, அதன் பேரில் மறுபடியும் கொஞ்சம் மேற்படி மண்ணைப்போட்டு, தினப்படி தண்ணீர் தெளித்துக் கொண்டு வரவேண்டும். அல்லது மரப்பெட்டியிலாவது, மண் தொட்டியிலாவது இளக்கமான வண்டல் மண்ணும், ஆட்டெருவும் கலந்து போட்டு முன்கூறிய விதம் விதைத்து, தினப்படி தண்ணீர் வார்த்துக் கொண்டு வரவேண்டும். விதைகள் ஏழு தினத்தில் முளைத்து, ஒரு மாஸத்தில் 6 அல்லது 8 அங்குலம் உயரம் வளரும். அதிக நெருக்கமாய் முளைத்திருக்கிற நாற்றுகளை வேர் அறுந்து போகாமல் எடுத்து வேறு இடத்தில் நட்டுக் கொள்ளவேண்டும். நாற்றுகளை பூச்சி, புழுக்கள் அரிப்பதாயிருந்தால் அவைகளின்பேரில் சாம்பலைத் தூவலாம்.

நாற்றுகள் எட்டு அங்குலம் உயரமானதும், மூன்று அடிக்கு ஒன்றாக இரண்டு அடி ஆழமும், அதே அகலமும், நீளமுமுள்ள குழிகள் தோண்டி, செவ்வையாக எருவிட்டு அந்தக் குழிகளில் ஒவ்வொன்றிற்கு மூன்று நாற்றுகள் வீதம் நட்டு, சிறிது நாள் வரையில் தினப்படியாகவும், பிறகு மூன்று தினத்திற்கு ஒரு தடவையாகவும், தண்ணீர் வார்த்துக் கொண்டு வரவேண்டும். செடிகள், குத்துச் செடியாகவும், படரும் கொடியாகவும், வளராமல் நடுத்தரமானவைகளாக வளருகிறபடியால் தகுந்த கொம்புகளால் வேலிபோலிட்டாவது, சிறிய பந்தல் போட்டாவது, படர விடுவது நல்லது. இந்தச் செடிகளுக்குப் பற்றுக் கம்பிகளில்லாதபடியால் வேலியின்பேரிலும், பந்தலின்பேரிலும் அவைகளின் கிளைகள் பற்றிக்கொள்ள ஸாதகமில்லை. ஆதலால் கிளைகள் வளர வளர தகுந்தபடி சிறு கயிறுகளைக் கொண்டு கட்டிக்கொண்டே போகவேண்டும்.

இப்படிச் செய்யாவிட்டால் செடிகள் புதர் போல் வளர்ந்து பிறகு பழங்களைப் பறிப்பதில் கஷ்டமுண்டாகும். செடிகள் அதிகமாய் வளர்ந்து கொண்டே போய் காய்கள் விடாமலிருந்தால், தலையிலுள்ள தளிர்களைக் கிள்ளி விடவேண்டும். அப்படிச் செய்வது சீக்கிரத்தில் பலன் கொடுக்கச் செய்கிற சாதனமாயிருக்கிறது. பலவிதமான தக்காளிகளிருந்த போதிலும் சிலவற்றை மட்டும் இவ்விடத்தில் எடுத்துச் சொல்லுவோம்:—

1. மிக்கேடோ.—இது அதிக சிரேஷ்டமானது. மேல் தோல் மெல்லியதாயும், உள்



சதை கனத்ததாயும், விதைகள் குறைந்து நல்ல ருசியுள்ளதாயுமிருக்கும். உருவத்தில் பெரியதாயும், தட்டையான வட்ட வடிவமுள்ளதாயுமிருக்கும். நிறம் பிரகாசமான ரத்தச் சிவப்பு. பார்வைக்கு அதிக சுந்தரமானது. சில பழங்கள் 30 ரூபாய் எடை வரையிலும் இருக்கும்.

2. ஸன்ரைஸ் என்று சொல்லப்படும் சூரியோதயம்.—இது இரண்டாம் தரமானதென்று சொல்லலாம். பார்வைக்குப் பழம் மிக்கேடோவைப்போல் அவ்வளவு சிவப்பில்லாமல், செம்மை கலந்த பொன்னிறமாயிருக்கும். இதுவும் தட்டையான வட்ட வடிவமுள்ளது. உட்பாகம் சதைப்பிடிப்புள்ளதாயினும், சிறிது பாகம் பச்சை நிறமாயும் அதிக பாகம் சிவப்பு நிறமாயும், விதைகள் சற்று அதிகமாயும் இருக்கும். இதையும் நல்ல ருசியுள்ளதென்றே சொல்லலாம்.

3. சாலேஞ்சர் என்று சொல்லப்படும் ஐராவாதம்.—இதன் நிறம் சற்று மங்கலான சிவப்பு. தோல் தடித்து கடினமாயிருக்கிறது. பழம் வடிவத்தில் நீட்டுப் போக்கான உருண்டை. இது உருவத்தில் எலுமிச்சம் பழத்தைவிடப் பெரியதாயிராது. செடியில் குலைக்கு எட்டு பத்து விகிதம் தொங்குவதைப் பார்க்க விநோதமாயிருக்கும். சற்று கையால் அழுந்தத் தேய்த்து காம்புப் புறத்தில் சிறிய துவாரம் செய்து வாயில் வைத்து உறிஞ்சினால் சதை முழுவதும் வாய்க்குள் வந்துவிட தோலை எறிந்து விடலாம். இதில் தித்திப்புடன் சற்றுப் புளிப்பும் இருக்கும்.

4. விக்டர் என்று சொல்லப்படும் விஜயன்.—இது முதலில் சொல்லப்பட்ட மிக்கேடோ இனத்தைச் சேர்ந்ததானாலும், உள்பாகத்தில் விதையை அடுத்த சதை சற்றுப் பசுமையாயிருக்கும். விதையின் பேரில் பற்றியிருக்கும் சதையும் பச்சையாயிருக்கும். விதைகளை அடுத்து சிறு பிளவுகள் காணப்படும்.

5. ஷா என்று சொல்லப்படும் நவாப்.—இது சூரியோதயம் என்ற ஜாதியைச் சேர்ந்ததாயினும், உருவம் பார்வைக்கு அவ்வளவு அழகாய்த் தோன்றாமல், இரண்டு மூன்று பழங்கள் ஒட்டப்பட்டது போல் காணப்படும். இந்தப் பழங்களில் சொத்தை, சுருங்கல் முதலிய குற்றங்கள் அதிகம். ருசி, நிறம் முதலியவைகளில் குறைந்ததன்று.

6. ரூபி என்று சொல்லப்படும் கெம்பு.—தக்காளி ஜாதியில் இதுவே சிறியது. பிள்ளைகள் விளையாடும் கோலியளவு உள்ளது. ஆனால் இது செடிகளில் அபரிமிதமாயும், குலை குலையாயும் பலன் விடும். இவைகளில் விதைகள் அதிகம். சதை அதிகமாயிராது.

இப்படியே தக்காளிகளில் வேறு பல விதங்கள் உண்டு. மேலே சொல்லப்பட்டவைகளெல்லாம் செடியிலிருந்து உண்டாகப் பட்டவை. மரத்தக்காளி என்று ஒரு விதமான மரமுண்டு. இந்த மரங்கள் அதிக உயரமாய் வளராத போதிலும், முத்துக் கொட்டையைப் போல் உயரமாய் வளர்ந்து, அநேக வருஷம் வரையில் பலன் கொடுக்கின்றன. இலைகள் எட்டு, ஒன்பது அங்குலம் நீளமுள்ளனவாய் அதற்குத் தகுந்த அகலத்தோடு நீண்ட வட்டமாயிருக்கின்றன. பழம் பாக்குப்பழம் போன்றது. தோல் கடினமானது. தித்திப்பும், புளிப்பும் கலந்த ருசியுள்ளது. இந்தப் பழங்களை தாகசாந்திக்கு சாப்பிடுவதுமன்றி, பல விதமாய்ப் பக்குவம் செய்தும், போஜனத்தில் உபயோகிப்பதுமுண்டு. முதிர்ந்த காய்களை நறுக்கிக் காயவைத்து வற்றலும் செய்து கொள்ளுகிறார்கள்.

செடித்தக்காளிகள் ஒரு வருஷமட்டும் பலன் கொடுத்து பிறகு காய்ந்துபோம். ஆயினும்

மறுவருஷம் மழை பெய்ந்தவுடன் அடிக் கட்டையிலிருந்து தளிர்த்து உபாயமான பலனைக் கொடுக்கும். ஆனாலும், பழங்கள் அவ்வளவு பெரிதாயிரா. ஆயினும் காலமறிந்து வேரைச் சுற்றியுமுள்ள மண்ணை வெட்டி எடுத்து, நன்றாய் மட்கின எருவைக் கொட்டி, மண்ணால் மூடி, தண்ணீர் பாய்ச்சி வந்தால், அந்த வருஷத்திலும் ஸமாரான பலனைக் கொடுக்கும்.

இந்தப் பழங்களை ஆரஞ்சு, கிச்சிலி, முதலிய பழங்களை தாகசாந்திக்காக சாப்பிடுவது போல் சாப்பிடலாம். தவிர பலவிதமாகப் பக்குவம் செய்தும், போஜன காலங்களில் உபயோகிக்கலாம். தாகத்தைத் தணித்து தேகத்திற்கு மிதமான குளிர்ச்சியை உண்டாக்கும் குணமுள்ளதாயிருப்பதன்றி, தேக புஷ்டியையும், மன உற்சாகத்தையும் கொடுக்கக்கூடியது. காயாக இருக்கும் பொழுதும் கத்தரிக்காய்போல் பல விதமாய்ப் பக்குவம் செய்து உபயோகிக்கலாம்.

இந்தப் பழங்களுக்கு மலை நாடுகளாகிய நீலகிரி, சேர்வராயன் மலை, பழநிமலை முதலிய இடங்களில் டஜன் 4 அணா முதல் 12 அணா வரையில் விலையுண்டு. இதை மதுரை, திருச்சினாப்பள்ளி, சென்னை, கோயமுத்தூர், சேலம் போன்ற பெரும்பட்டணங்களை அடுத்த கிராமத்தார்கள் பயிர்செய்து பட்டணங்களில் கொண்டுவந்து விற்றால் நல்ல லாபம் கிடைக்கும். இதை மலை நாடல்லாத ஸாமான்ய இடங்களில் அதிக அக்கரையுடன் பயிர் செய்வதாகத் தோற்றவில்லை. இது இந்த நாடுகளில் பயிராக மாட்டாதென்று சொல்லவும் முடியாது. எப்படியென்றால் பலவிதத் தக்காளிகள் இந்நாடுகளில் பயிராகிப் பலன் கொடுப்பதையும், அந்தக் காய்களையும், பழங்களையும், பலர் பலவித பக்குவம்செய்து சாப்பிடுவதையும், அநேகர் நேரில் கண்டிருக்கலாம். கிணற்றுத் தண்ணீர் இறைத்து, தோட்டச் சாகுபடி செய்கிறவர்கள் இதைப் பயிரிட்டால், நல்ல லாபம் கிடைக்கும் என்பதில் ஸந்தேகமில்லை. ஐரோப்பியர்கள் அதிகப் பிரியமாய் வாங்கி சாப்பிடப்பட்ட பழங்களில் இது ஒன்று. தீனி மேஜையை அலங்கரிக்கிற பழங்களில் இது சிரேஷ்டமானது. மேஜையின் பேரில் ஒரு சிறிய தட்டில் இந்தத் தக்காளிப்பழங்களில் சிலவற்றையும், அவைகளுடன் மற்ற பழங்கள் வைக்கப்பட்ட பல தட்டுகளையும் வைத்திருந்தபோதிலும், தக்காளிப் பழங்களே பார்க்கிறவர்களின் கண்களைக் கவருமேயன்றி; மற்ற பழங்களுக்கு அந்த சக்தியில்லை.

டி. வி. வி. ரமணய்யர்.

---

SOCAL SERVICE BY STUDENTS.

## பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் ஜனஸமூகத்துக்கு செய்யக்கூடிய நன்மைகள்.

---

ஒரு தேசத்தில் உள்ளவர்கள் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் ஸகாயம் செய்துகொள்ளக்கூடும். முக்கியமாய் காலேஜ்கள் போன்ற பெரிய கல்விச் சாலைகளில் படிக்கிறவர்கள், மற்றவர்களுக்கு கையை விட்டு ஒரு வித பணச்செலவும் செய்யாமல், பொது ஜனங்களுக்கு உபயோகமாகக் கூடிய விதங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இந்த விஷயமாக வடக்கே லாகூரில் போர்மன் காலேஜில் உபாத்தியாயராயிருக்கும் ப்ளெமிங்க் என்ற பாதிரி சென்னபட்டணம் ஜி. ஏ. நடேசன் அண்டு கம்பெனி மூலமாய் 12 அணாவுக்கு ஒரு புஸ்தகம் எழுதி வெளியிட்டிருக்கிறார்.



படிக்கிறவர்கள் ஒரு சங்கம் ஏற்பாடு செய்து கொண்டு முக்கியமான விஷயங்களை எழுதிப் படிக்கலாம். வேறு பாஷைகளிலுள்ள நல்ல விஷயங்களை ஜனங்கள் எளிதில் அறியும்படி எழுதலாம், பேசலாம். தாய் தகப்பன் இல்லாத அநாதப்பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் வைக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு நல்ல பாடல்களை சொல்லி களிக்கச் செய்யலாம். விடுமுறை காலங்களில் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போகும்போது, அங்கங்கேயுள்ள கிராமப் பள்ளிக்கூடங்களில் போய் உபாத்தியாயர்களுக்கும், பிள்ளைகளுக்கும், உற்சாகம் உண்டாகும்படிச் செய்யலாம். கெட்ட வஸ்துக்களைத் தின்னல், கெட்ட பானங்களை உட்கொள்ளல் கூடாதென்று எடுத்துச் சொல்லலாம். இந்த சம்பந்தமாயுள்ள சிறு புஸ்தகங்களை அநேகர்களுக்குக் கொடுக்கலாம். நாய் கடியினால் அநேகர்கள் துன்பம் அடைகிறார்கள். அவர்களுக்கு எங்கே போனால் தக்க வைத்தியம் செய்வார்கள் என்று தெரியாது. இந்தியாவுக்கெல்லாம் கஸௌலி என்ற ஒரு இடமிருக்கிறதென்றும், தென்னிந்தியாவில் நீலகிரி ஜில்லாவில் கூனூரில் நாய் கடிக்கு வைத்தியம் நடக்கிறதென்றும் சொல்லலாம். வண்டியில் கட்டும் குதிரை அல்லது மாட்டை அநியாயமாய் அடிப்பவர்களை தண்டிக்க ஒரு சட்டம் இருக்கிறது. இப்படிச் செய்கிறவர்கள் பெயர், இருப்பிடம், வண்டியின் நம்பர் முதலியவைகளைக் குறித்து இப்படிப்பட்ட கொடுமைகளைத் தடுப்பதற்காக ஏற்பட்டிருக்கும் அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டால், அவர்கள் மேல் நடவடிக்கைகள் நடத்திக்கொடுமை செய்கிறவர்களை தண்டனைக்குக் கொண்டுவருவார்கள்.

பல பேர்கள் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்பாடு செய்து ஒவ்வொருவரும் வாரத்துக்கு ஒரு மணியாவது ஏதாவது நல்ல காரியம் ஒன்று செய்யலாம். உதாரணமாக வடக்கே காஷ்மீரத்தில் ஸ்ரீநகர் பட்டணத்தில் பாதிரிச் சங்கத்தைச்சேர்ந்த மிஸ் ந்யூமன் என்ற ஒரு மாது ஸ்திரீகளுக்காக ஒரு ஆஸ்பத்திரி கட்டத் தொடங்கினாள். கட்டுவதற்கு கட்டிடத்திலிருந்து கால் மைலுக்கு அப்புறத்திலிருந்து செங்கல் வரவேண்டியதாயிருந்தது. கூலிகள் சரியாய் அகப்படவில்லை. அப்பொழுது அந்த அம்மாள் அங்கே உள்ள பள்ளிக்கூடத்துப் பையன்களை ஒத்தாசை செய்யும்படி வேண்டிக் கொண்டாள். 400 பேர்கள் சம்மதித்தார்கள். ஸ்கூல் விட்டதும் 400 பேர்களும் கட்டிடம் கட்டும் இடத்துக்கும், கல்லிருக்கும் இடத்துக்கும், ஒரு வரிசையாய் நின்று கொண்டு, ஒருவன் கையிலிருந்து செங்கலைப் பக்கத்துப் பையன் கையில் அவன் பிடிக்கும்படி எறிந்து, இந்த மாதிரி கல் எல்லாவற்றையும் அஞ்சலில் விட்டார்கள். வேலைக்கு வேண்டிய கல்லுகள் வந்து குவிந்து விட்டன. இதற்குக் கூலி கொடுத்திருந்தால் பணம் அதிகமாகச் செலவாயிருக்கும். இது ஆகாமலிருந்தது தர்மத்துக்கு அநுகூலமல்லவா?

ஜ்வரத்தினால் பீடிக்கப்படும் இடங்கள் உண்டு. அங்குள்ள ஸாதாரண ஜனங்களுக்கு க்வைனாவின் உபயோகம் தெரிவதில்லை. அவர்களுக்குத் தெரியச் செய்யலாம். புது மருந்தென்று பயப்படுகிறவர்களுக்குத் தங்களுக்கே ஜ்வரம் வரும்பொழுது சாப்பிட்டு காண்பிக்கலாம்.

தேக ஆரோக்கியத்துக்கு அவசியமான காரியங்களைத் தெரியாதவர்களுக்குச் சொல்லலாம். ஏழைப்பிள்ளைகளால் பணம்கொடுத்துப் புஸ்தகங்களை வாங்க முடிகிறதில்லை. புஸ்தகங்களுள்ளவர்களிடம் போய் ஒவ்வொருவரிடம் ஒன்று ஒன்றாய் இனமாக வாங்கி ஒரே

இடத்தில் சேர்த்து வைத்து அங்கே வந்து ஏழைப்பிள்ளைகள் படிக்கும்படி செய்து வைக்கலாம்.

வியாதி வந்தபொழுது வைத்தியம் செய்து கொள்ள வழியில்லாமல் அலைகிறவர்களுண்டு. அவர்களை ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு போய் விடலாம். வாசிக்கத் தெரியாதவர்கள் சேரும் இடங்களில் ஸாயங்காலங்களில் போய் பத்திரிகைகளைப் படித்துக் காட்டலாம்.

விடுமுறை காலத்தில் ஆசுபத்திரிக்குப் போய் எந்த வியாதிக்கு எந்த மருந்து கொடுக்கிறார்கள் என்று, கூட இருந்து பார்த்துப் பழகி தாங்களும் அப்படியே செய்யலாம். ஆனால்இதனாலேயே தொழிலாளிகளைப்போல் வைத்தியம் தெரிந்ததாக எண்ணக்கூடாது.

பகலில் போதிக்கும் பள்ளிக்கூடங்களில் படிக்கமுடியாதவர்கள் இரவில் . பள்ளிக்கூடம் வைத்தால் படிப்பார்கள். தங்களுடைய காரியங்களுக்கு விரோதமில்லாமல், சொற்ப காலம் இரவில் ஏழைப்பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லலாம்.

தங்களைப்போல் அவ்வளவு படிக்காத சிறியவர்களை காக்ஷி சாலை, யந்திரக்கூடம், முதலிய இடங்களுக்குக் கூட அழைத்துக் கொண்டு போய், சிறுவர்களைவிடத் தங்களுக்கு அதிகமாய்த் தெரிந்தவைகளை எடுத்துச் சொல்லலாம்.

எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு அதனாலும் கணக்கு தெரிவதாலும் உண்டாகும் பயனைச் சொல்லலாம்.

இதுவரையில் பணச்செலவு வேண்டாதவைகள் கூறப்பட்டன. இவைகளில் தேர்ந்தால் பணம் வேண்டியவைகளிலும் முயற்சி செய்யலாம்.

ஒரு ராத்திரிப்பள்ளிக்கூடம் வைக்க வருஷம் ஒன்றுக்கு சுமார் ரூ. 85 இருந்தால் போதும்.

சொல்ப செலவில் குருடர்களுக்குப் பள்ளிக்கூடம் வைக்கலாம். பெண்கள் பாடசாலையும் அவசியம். அநேக ஸ்திரீகள் புருஷன் காலஞ்சென்ற பிறகு மறுபடிக் கலியாணம் பண்ணிக்கொள்ளுவதில்லை. அவர்களைக் கொண்டு சிறு பெண்களை படிப்பிக்கலாம். பாம்பாயில் மலபாரி என்பவர் ஸேவஸாதனம் என்ற தர்ம மடம் வைத்து இந்த நல்ல காரியம் பயன்பட ஏற்பாடு செய்திருக்கிறார். பஞ்சமர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் வைக்கலாம். உயர் குலத்தில் பிறந்ததினால் அவர்களைத் தொடக்கூடாது என்கிறவர்கள், மகம்மதியர்களையாவது, பென்ஷன் பெற்ற கான்ஸ்டேபிள்களையாவது நியமித்து சொல்லிக் கொடுக்கச் சொல்லலாம்.

எல்லாவற்றையும் விட ஒவ்வொருவரும் தன்னுடைய வீட்டிலும், தன்னுடைய பந்துக்கள் வீட்டிலும், தனக்குத் தெரிந்தவர்கள் வீட்டிலும், பெண்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்கக் கூடுமானவரையில் முயலலாம். எந்த தேசத்தில் பெண்களும், ஸ்திரீகளும் நன்றாய்ப் படிக்கிறார்களோ, அங்கேதான் விசேஷ க்ஷேமம் உண்டு என்று இக்காலத்தில் உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதனால் தற்காலத்தில் ஜப்பான் பெருமை அடைந்திருக்கிறது. இந்தியாவுக்ும் அதற்குமுள்ள ஒரு முக்கிய பேதத்தைப் பார்க்கவேண்டும். ஆறு வயஸுக்கு மேற்பட்ட ஆண் பெண்பிள்ளைகள் 100 பேரில் 95 பேருக்கு ஜப்பானில் எழுதப் படிக்கத் தெரியும். இந்தியாவிலோ 100-ல் 95 பேருக்குத் தெரியாது. இதை அறிந்து இந்தியாவிலுள்ளவர்கள் படிப்பு விருத்தியாகக் கூடிய வழிகளைத் தேடவேண்டும்.

---



## A NEW ANIMAL MANURE.

BY

VENKATARAMA SARMA.

## ஒரு நூதன மிருக எரு

நாம் பயிர் செய்து வரும் நிலம் நாளடைவில அதன் ஸத்தை இழந்து பலன் தரும் சக்தி குறைந்து போகிறது. அதன் பொருட்டு அல்லவா நாம் அடிக்கடி நிலத்திற்குக் கொழுமை யூட்ட வருஷந் தோறும் எருப் பரப்பி வருகிறோம்? இந்த எருவை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்:—தாவர எரு, மிருகங்களின் எரு.

தழை, பூண்டு, செடி, பிண்ணாக்கு முதலியவைகள் தாவர எருவாகும். சாணம், மீன் செதிள், எலும்பு இவை போன்றவைகள் மிருகங்களின் எரு என்று சொல்லப்படும். நாம் இந்த இரண்டு வித எருக்களையும் உபயோகிக்கிறோம். ஆயினும் சாம்பலே முக்கிய எருவாக உபயோகப்படுத்தப்படுகிறது. இந்தச் சாம்பலெருவினால் நிலத்திற்கு உரம் சிறிதளவே ஏற்படுவதன்றியும், கழனிகள் நாளுக்கு நாள் மேடாகித் தண்ணீர் பாய்வது அரிதாகி விடுகிறது. ஆகையினாலே மராமத்து வேலைசெய்வதில் அதிகம் செலவாய் விடுகிறது.

இம்மாதிரி நிலம் மேடாய்ப்போகாதபடி நாம் பச்சைத் தழை, செடி, கொடிகளையும், மிருகங்களின் மலங்களையும் எருவாக உபயோகிக்கிறோம். இவைகளில் கொஞ்சம் போட்டாலே போதும். எளிதில் மண்ணோடு மண்ணாய்க் கலந்து விடுகிறது. ஆயினும் நம்மவர்கள் சாணத்தை விசேஷமாய் எருமுட்டைகளாகத் தட்டி அடுப்பெரிக்க உபயோகிக்கிறார்களேயொழிய பெரும்பாலும் எருவுக்காகச் சேர்த்து வைப்பதில்லை. இம்மாதிரியான எருக்கூட கரும்பு, அவுரி, சவுக்கு முதலியன பயிரிட்ட நிலங்களில் போடப்பட்டால் வயலுக்குப் போதுமான கொழுமையை சீக்கிரம் கொடுப்பதில்லை. அந்த நிலங்கள் சிறிதுகாலம் தரிசாய்க் கிடந்தாலொழிய அவைகளில் பயிர்கள் பலன் படுவதில்லை. இம்மாதிரியான நிலங்களுக்கு ஒரு நூதன எரு மிக்க உரத்தையும், கொழுமையையும் தரும் இயல்புள்ளது. அதென்னவென்றால் சவரிமான் வாலேயாம். வாலிலிருந்து மயிரைக் கத்தரித்தெடுத்த பின் எஞ்சியிருக்கும் சேஷமே சிறந்த எருவாகும். இந்த எருவில் பயிருக்கு வேண்டிய கொழுப்பு எண்ணெய்வடிவாகவும், எளிதில் கரைந்து போகும் உலர்ந்த மாமிச வடிவாகவும் இருக்கிறது.

நன்செய்நிலமானால் நன்றாய்ச் சேறுக்கிய கழனியில் சாணளவு தண்ணீர் கட்டி ஒரு அடிக்கு ஒரு எருத்துண்டை படுக்கையாக நன்றாய் அழுத்தி ஊன்றிய பின்பு, நீரை வடிகட்டாமல் அந்தக் கழனியிலேயே சுண்டவிடவேண்டும். இப்படிச் செய்யாத பக்ஷத்தில் எருவின் ஸத்து தண்ணீரில் ஊறி அதனுடன் வெளியாகிவிடும். நாலு, ஐந்து நாட்களானபின் அந்தத் துண்டுகள் ஊறி, அழுகி துர்க்கந்தம் வீசும்; ஒரு வாரத்திற்கெல்லாம் எரு மண்ணோடுகலந்து மடிந்து இந்த நாற்றமும் அடங்கிவிடும். பிறகு கிரமப்படி சாகுபடி செய்யலாம். மேற்படி கழனியிலிருந்து எந்த விதத்திலும் சிலவாரங்கள் வரையில் பாய்ச்சின தண்ணீரை வடிக்கட்டக் கூடாது. அதிலேயே சுவற விடவேண்டும். முழுப் பொட்டையாயிருந்து பல வருஷங்களாக எருக்கண்டிராத நிலம்கூட நல்ல பலனை அபரிமிதமாகத் தரும். கொழுமையான நிலத்தில் எருவை உபயோகித்தால் பயிர் மதாளித்துப் பயன்படாது.

புன்செய் நிலத்திற்குப் போடுவதற்கு மண் வெட்டி கொண்டு ஒரு தப்படி தூரத்திற்கு

ஒரு அடி ஆழமுள்ள ஒவ்வொரு குழியை வெட்டி அந்தக் குழியில் நாலு, ஐந்து துண்டுகளைப் போட்டு நன்றாய் மண்ணைத் தள்ளி மூடிவிடவேண்டும். நன்றாய்ப் புதைக்காத பக்ஷத்தில் நாய் நரிகள் தோண்டி யெடுத்துக்கொண்டு போய் விடும். பின்பு இரண்டு வாரம் கழித்து நிலத்தை நன்றாக உழுது புழுதி படுத்தி பலன் விதைக்கலாம்.

இந்த எருவை, தென்னம்பிள்ளை, மூங்கில் கொத்து இவைகளினடியில் போட்டால் அவைகள் செழித்து வளர்ந்து செம்மையான பலனைத்தரும். இந்தச் சவரிமான்வால் சவரிமயிர் வியாபாரிகளிடத்தில் மிகுதியாய் சொற்ப விலைக்குக்கிடைக்கும்.

இந்த எரு நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பட்டதாகையால் ஒருவராலும் அதிகமாய் உபயோகப் படுத்தப் படவில்லை. ஆயினும், உபயோகித்தவர் நன்மை அடைகிறார்களென்பதற்கு சற்றேனும் ஸந்தேகமில்லை. அதை உபயோகித்து வந்த நான்அடைந்த நன்மையை இங்கே சொல்லுதல் உதாரண தரிசனமாகும். இரண்டரை மா (அதாவது, அரையே அரைக் கால் காணி அல்லது சற்றேறக்குறைய ஒரு ஏகரா) விஸ்தீரணமுள்ள ஒரு கழனியில் இந்த எருவைப் போட்டதில் அந்த வயல் 40 கலம் (960 படி) குருவை மாசூலைத் தந்தது. மேற்கண்ட ஸ்தலம் அருந்தலாலும், வெள்ளத்தாலும் அலைக்கப் பட்டும், பயிருக்குக் கெடுதி நேரிடவில்லை. ஸாதாரணமாய் இரண்டு அடி உயரம் இருக்கும் பயிர் எரு உபயோகித்ததில் மூன்றரை அடி முதல் நாலரை அடி உயரம் வரையில் வளர்ந்தது. எருப்போடும் முன் அந்த வயல் 25 கலம் (அதாவது 580 படி) நெல்லை விளைந்து வந்தது. இந்த எரு தஞ்சாவூர் ஜில்லாவில் வேப்பத்தூரிலும், மாயவரத்துக் கடுத்த மேலப்பாதியிலும் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. சென்னைக்கு வடக்கிலுள்ள திருவள்ளூரில் முனியப்ப செட்டி (தி. முஷ்னேராமய்ய செட்டி இரும்புப் பெட்டி வியாபாரிகளின் ஏஜண்டு) இதைத் தன் உவர் நிலங்களுக்கு மிகுதியாக உபயோகித்து தக்க பலனை அடைகிறதாகத் தெரிய வருகிறது.

இந்த எருவை உபயோகிப்பதில் எச்சரிக்கையாக சில விஷயங்கள் கவனிக்க வேண்டியது அவசியம். இதைச் சேகரித்துவைப்பது மிகவும் கடினமான காரியம். ஏனெனில் சவரிமான் வால் மாமிசவகையானதால், எறும்பு, நாய், எலி முதலிய ஜெந்துக்களால் நாசம் செய்யப்படும். அதிக நாளிருந்தாலோ புழுங்கி நாற்றமெடுத்து விடும். ஆகையால் அதை நன்றாய் வெயிலில் உலர்த்தி, காற்றடக்க முள்ள குதிரில் நிரம்பப்போட்டு நன்றாய் மூடி சேமித்துவைக்கவேண்டும் இல்லாவிடில் பூமியில் ஆழமான பள்ளம் வெட்டி, கீழேயும் நாலு பக்கங்களிலும் வைக்கோலைத் தூவி, அந்தக் குழியில் இந்த எருவைக் கொட்டி மேலேயும் நன்றாய் வைக்கோலால் மூடி மூன்று அடி ஆழம் மண்ணைத் தள்ளி நன்றாய் மிதித்து மூடிவைக்கவேண்டும். பிறகு தேவையாயிருக்கும் காலத்தில் வைக்கோலுள்பட எடுத்து உபயோகிக்கலாம். வயலில் போட்ட பிறகும் நரி, நாய், காக்கைகள், பெயர்த்து எடுக்காமல் பாதுகாக்கவேண்டும். இயல்பாகவே கொழுமையுள்ள நிலத்தில் இந்த எருவைப் போட்டால் பயிர் மதாளித்து வைக்கோல் மிகுந்திடுமே யொழிய விளைச்சல் அதிக மிராது.

இந்த எரு சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை, தங்கசாலைத் தெருவுக்கடுத்த சின்ன நாயக்கர் தெரு, 7-நெ. வீட்டிலிருக்கும் சுப்பராய செட்டியிடத்திலும், மற்றுமுள்ள சவுரி வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

வெங்கட்டராம சர்மா.



## INDUSTRIAL DEVELOPMENT.

BY

MR. R. N. MUKERJEE C. I. E.

## கைத்தொழில் அபிவிர்த்தி.

சென்ற டிஸம்பர் மாஸம் 30உ யன்று ப்ரயாகை என்கிற அலஹாபாத்தில் இந்தியன் இண்டஸ்டிரியல் கான்பரன்ஸ் என்று சொல்லப்படும் கைத்தொழில் ஆலோசனை ஸபை யொன்று கூடிற்று. அதற்கு கல்கத்தாவில் மார்டின் அண்ட் கம்பெனியின் முக்கிய பாகஸ்தராகிய ஆர். என். முகர்ஜி என்பவர் அக்ராஸனம் வகித்து இந்தியாவில், வியாபாரம், கைத்தொழில், விவஸாயம் முதலியவைகளை அபிவிருத்தி செய்வதைப்பற்றி ஒரு சிறந்த உபன்னியாஸம் செய்தார்.

தற்காலத்தில் அநேகமாய் இந்தியாவில் செய்யக்கூடிய ஒவ்வொரு கைத்தொழிலைப் பற்றியும் ஸமாசார பத்திரிகைகளில் விஷயங்கள் பிரசுரமாகி வருகின்றன. தவிர, சென்ற 5-வருஷமாய் கைத்தொழில் ஆலோசனை ஸபையார்க்கென்றே ப்ரத்தியேகமாக நிபுணர்களால் எழுதப்பட்ட வியாஸங்களும் மேற்படி ஸபையார்களால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளை யெல்லாம் படித்து கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளைச் செய்து பிறர் கொண்டு போகும் லாபத்தை நாம் அடையவேண்டியது நம்முடைய கடமையாகும். வியாபாரம் செய்ய வேண்டுமென்றால் அதில் அனுபோகம் வேண்டியிருக்கிறதோடு கூட, எந்தவிஷயங்களில் பிரவேசித்தால் நல்ல லாபம் கிடைக்குமென்று அறிந்துகொள்ளவும் வேணும். அப்படிச் செய்யாவிட்டால் நஷ்டமே உண்டாகும். வியாபாரம் தொடங்கும் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய சில விஷயங்களைப்பற்றி, மிஸ்டர் முகர்ஜி தம்முடைய அனுபோகத்தில் ஏற்பட்டதைப் பேசினார்.

சில வருஷங்களாக இந்தியாவில் அநேக இடங்களில் அநேக சிறு கைத்தொழில்கள் உண்டாயிருக்கின்றன. ஆனால், அவைகளில் அநேகம் நல்ல ஸ்திதிக்கு வந்திருப்பதாகத் தெரியவில்லை. இப்படி வராததற்குக் காரணத்தை விசாரிப்போம். ஒரு கைத்தொழிலை ஏற்படுத்தி அதில் லாபம் வரவேண்டுமானால் அந்தத் தொழிலில் நல்ல ஞானமும் அனுபோகமும் உள்ள நிபுணர்கள் தேவை. வங்காளம் முதலிய இடங்களிலிருந்து சிறுவர்களைப்பொறுக்கி ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களில் போய் படித்துத் தொழில் கற்று வரும்படி செலவுக்குக் கொடுத்து அனுப்பி வருகிறார்கள். இவர்களில் சிலர் தொழில்களை யேதோ கொஞ்சம் கற்றுக்கொண்டு திரும்பி வந்திருக்கிறார்கள். ஆனால் இப்படிப் பட்டவர்களில் ஒருவருக்குக் கூட ஒரு பெரிய வியாபாரத்தை நிர்வாகம் செய்து ஸமாளிக்கக்கூடிய சக்தியிருப்பதாகத் தெரியவில்லை. தவிர, சிறுவர்களைப் பொறுக்கி அனுப்புவதற்கு முன்னால், அவர்களை எந்தத் தொழிலைக் கற்றுவரும்படி அனுப்புகிறோமோ அந்தத் தொழில் செய்ய அவர்களுக்குப் பிரியமிருக்கிறதா?, அல்லது சக்தி போதுமா?, என்றவிஷயங்களை யறிய இங்கேயே அந்தத் தொழில்களைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள ஸமயங்களும் வஸதிகளும் இல்லை. இதனால் அன்னிய தேசங்களில் போய் கற்ற தொழிலொன்று, திரும்பி இந்தியாவுக்கு வந்து அவர்கள் செய்யும் தொழில் வேறாகயிருக்கிறது. ஆகவே, அவர்களை வெளி தேசங்களுக்கனுப்பி அவர்களை படிப்பிக்கச் செய்த பணமெல்லாம் வியர்த்தமாகி விட்

டது. ஆகையால் நாம் நிஜமாகவே நம்முடைய தேசத்து கைத்தொழில்களை விருத்தி செய்ய எண்ணும் பக்ஷத்தில் இந்தியாவிலேயே மத்தியில் ஒரு நல்ல இடத்தில் ஒரு 'டெக்னிகல் காலேஜ்' அதாவது தொழில்கள் சொல்லிக்கொடுக்கும்காலேஜை ஏற்படுத்தி, அதில் ஸரியான வொர்க்ஷாப்புக்களையும், 'லாபொரெட்டரி' அதாவது வஸ்து சோதனை சாலைகளையும் அமைக்க வேண்டும். அங்கங்கே இந்தியாவில் சிறு கைத்தொழில் பள்ளிக்கூடங்களிலுள்ள பிள்ளைகள் அவைகளில் சொல்லிக்கொடுக்கும் படிப்புகளைப் படித்துவிட்டு இந்த டெக்னிகல் காலேஜில் வந்துசேரலாம். இவர்களோடு ஸர்வ கலாசாலைகளில் சாஸ்திரங்கள் படித்து பட்டங்கள் பெற்றவர்களும் மேற்சொன்ன காலேஜில் சேர்ந்து அங்கே அநுபோக பூர்வமாய் தொழில் ஞானமடையலாம். இப்படிப்பட்ட காலேஜ் ஏற்படுத்துவதற்கு அளவற்ற பணம் வேண்டும். ஆகையால் கைத்தொழில் ஆலோசனை ஸபையார் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு மனுச் செய்து இந்த விஷயத்தை வற்புறுத்தவேண்டும். இப்படிப்பட்ட காலேஜ் ஏற்படும் பட்சத்தில் தற்காலத்தில் அன்னிய தேசங்களுக்குப் போய் தொழில் கற்று வருவதற்காக கவர்ன்மெண்டார் செலவிடும் பணத்தை, அங்கங்கேயுள்ள கைத்தொழில் பள்ளிக்கூடங்களிலிருந்து தேறி புதிதாய் ஏற்படும் காலேஜில் படிப்பதற்காகவும், அந்த காலேஜில் தேறி இன்னும் அநுபோகம் பெற இதர தேசங்களுக்குப் போய் கற்று வருவதற்காகவும், கவர்ன்மென்டார் செலவு செய்தால் நலமாயிருக்கும்.

இப்படி கவர்ன்மெண்டார் செய்கிறவரையில் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாக நாம் சும்மாயிருக்கக்கூடாது. நாம் ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் முழுமையும் சுதேசியாயிருக்கவேண்டும், எல்லாம் இந்தியர்களாலேயே செய்யப்படவேண்டும், அன்னிய தேசத்தார் ஒருவரையும் அதில் வேலைக்கு அமர்த்தக்கூடாது, என்ற இப்படிப்பட்ட துற்புத்தியில்லாமல் எடுத்த தொழிலில் தேர்ந்த அன்னிய தேசத்து நிபுணர்களை நியமிக்கக் கொஞ்சமேனும் தயங்கக்கூடாது. ஒரு கைத்தொழில் ஏற்படுத்துவதாக எண்ணி அதற்கு வேண்டிய நிபுணர்களும் அகப்பட்டுவிட்டதாக வைத்துக்கொள்வோம். அடுத்தவேலை அந்தத் தொழிலுக்கு வேண்டிய முதலைச் சேகரிப்பதாகும். இதில்தான் ரொம்ப சங்கடமிருக்கிறது. இந்தியாவில் பெரும்பான்மையோர் ஏழைகளாகவே யிருக்கிறார்கள். பணமுள்ளவரிடத்தில் குறித்த வியாபாரம், கைத்தொழில்களைப்பற்றிய ஞானம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகையால் அவர்கள் நிலம் வாங்குதல், வட்டிக்குவிடுதல் முதலியவ்வழக்கமாய்ச் செய்துவரும் வழிகளில் பணத்தைப் போடுகிறார்களே ஒழிய புது வியாபாரம் கைத்தொழில் முதலியவைகளில் பணம் போட அஞ்சுகிறார்கள். ஆகையால் $3\frac{1}{2}$, 4, வட்டியாவது வருமென்று அவர்களுக்குத் தோன்றினாலொழிய அவர்கள் புதிய கைத்தொழில் வியாபார விஷயங்களில் பணம் போட மாட்டார்கள். இப்படிப்பட்ட தொழில் ஆரம்பிப்பதற்கு சொற்ப வட்டிக்காவது குறைந்த பட்சம் கவர்ன்மெண்டார் ஜாமினாயிருக்கவேண்டுமென்று சொன்னால் ஸர்க்காரில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆனால், கவர்ன்மெண்டார் ஒரு காரியம் செய்யலாம். புதிய கைத்தொழில்களுக்கு ஒத்தாசை செய்வதற்காக சொற்ப பணம் இனாமாகக் கொடுப்பதோடு அன்னிய தேசத்துச் சரக்குகள் வந்து இந்தியாவில் செய்யப்படும் சரக்குகளோடு



போட்டி போட்டு அவைகளை அமிழ்த்தி விடாதபடி காப்புவரிகள் விதிக்கலாம்.

பெரிய கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கு லிமிடெட் கம்பெனி அதாவது பங்குகளாகப் போட்டு, போட்ட பங்குகளுக்கு மேல் வியாபாரத்தில் நஷ்டம் வரும் பட்சத்தில் பங்காளிகள் நஷ்டத்துக்கு ஜவாப்தாரிகளில்லாமல், கம்பெனி ஏற்படுத்துவதே ஸரியான முறையாகும். இப்படிப்பட்ட கம்பெனிகளுக்கு நல்ல திறமை யுள்ள டைரெக்டர்களிருக்க வேண்டும். "பெத்தப்பேருக்கு" ஆசைப்பட்டு திறமை யில்லாத பிரமுகர்களை டைரெக்டர்களாக ஏற்படுத்தக்கூடாது. அந்த டைரெக்டர்களில் அநுபோகமுள்ளவர்களும் யோக்கியமானவர்களும், எடுத்த காரியத்துக்குப் பிராணனைக் கொர்டுத்து உழைப்பவர்களுமான சில பேர்கள் இருக்கவேண்டும். இதோடு ஐரோப்பியர்களில் நல்ல கைதேர்ந்த சில வியாபாரிகளையும் டைரெக்டர்களாகச் சேர்த்துக்கொள்வது நல்லது. இப்படிப் பொறுக்கி. எடுத்த டைரெக்டர்கள் வியாபாரத்தை மேல் பார்வை பார்த்து வரவேண்டும். தொழிற்சாலையைப் பார்த்து வருவது, ஆட்களைக் கட்டி மேய்ப்பது, சரக்குகளைச் செய்வது, போன்ற மற்ற விஷயங்களைக்கவனிக்க ஒரு கெட்டிக்கார மானேஜரை ஏற்படுத்தவேண்டும். இவைகளோடு கூட செய்த சரக்குகளை விற்றுக் காசு பண்ண ஒரு நல்ல வியாபாரியை மானேஜிங் ஏஜண்டாக நியமிக்கவேண்டும். இது வரையிலும் அநேக கம்பெனிகள் மேற்கண்டபடி நிர்வகிக்கக்கூடிய மனிதர்களை ஏற்படுத்தாதனால் முன்னுக்கு வராமல் போய் விட்டன.

ஒரு வியாபாரத்தில் எப்படிப்பட்ட நிபுணர்கள்தானிருக்கட்டும், தேவையான பணமும் முதலும் இருக்கட்டும், டைரெக்டர்களும் தக்க மனிதர்களாகவே இருக்கட்டும், மானேஜிங் ஏஜண்டுகளும் ஸமர்த்தர்களாகவே இருக்கட்டும், வியாபாரத்தில் இப்படிக் கெல்லாமிருந்துங்கூட செய்த சரக்கு உடனுக்குடன் அழிந்து, விற்கிற விலையில் கொஞ்சம் லாபமிருந்தாலொழிய வியாபாரம் முன்னுக்கு வராது. இப்போது ஐரோப்பாவிலிருந்து வரும் சரக்குகளை நாம் இங்கேயே செய்ய ஆரம்பித்தால் ஐரோப்பியர்கள் தங்கள் சரக்குகளை இங்கே கொண்டுவந்து தள்ளி, நாம் செய்யும் சரக்குகளின் கொள்முதலுக்குக் குறைவாக படிக்குப்பாதியாக அவர்களுடைய சரக்குகளைவிற்று, நமது வியாபாரத்தைத்தலையெடுக்க விடாமலடித்து, நம்முடைய தொழிலை ஒழித்து, பிறகு தங்களுடைய சரக்குகளின் விலையை உயர்த்தி, லாபத்தை சம்பாதித்துக் கொள்வார்கள். நம்முடைய தேசத்தில் புதிதாக ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு ஐரோப்பியர் போட்டிதான் பயமாயிருக்கிறது. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் அன்னிய தேசத்திலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளின் மேல் காப்புவரி போடும்படியாக கவர்ன்மெண்டாரோடு, விடாமல் போராடவேண்டும். இப்படி காப்புவரி போடுவதால் இங்கிலீஷ் வர்த்தகர்களுக்கே நஷ்டமுண்டாகும். ஆகையால் அவர்கள் கவர்ன்மென்டாரை அப்படிச்செய்ய லகுவில் விடமாட்டார்கள். ஆகிலும் காப்புவரியோ, அல்லது அதைப்போல் வேறு ஏதாவது ஒரு கதியோ பிறந்தாலொழிய நம்முடைய கைத்தொழில்கள் தலை யெடுக்க மாட்டா. ஆகையால் சில உத்தியோகஸ்தர்களையும் வியாபாரிகளையும் சேர்த்து, என்ன செய்தால் இந்தியாவில் கைத்தொழில் விருத்தியாகுமென்பதை யோசித்துச் சொல்ல ஒரு கமிஷனை நியமிக்கும்படி கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ளவேண்டும்.

அன்னிய தேசத்தார் போட்டியைப் பற்றிப் பேசும்போது இன்னொரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. தற்காலத்தில்வியாபாரத்துக்காக யாராவது ஒரு ஸாமானை புது முறையில் செய்வதற்காக கண்டுபிடிக்கும் பக்ஷத்தில் அதை வேறு ஒருவரும் செய்யக்கூடாதென்று தடுத்து, புதிதாய்க் கண்டுபிடித்தவன் மட்டும் சில வருஷங்களுக்குச் செய்யலாமென்று கவர்ன்மெண்டார் 'பேட்டெண்ட்' என்னும் ஒரு உரிமைப் பத்திரம் கொடுக்கிறார்கள். கண்டு பிடித்தவனுடைய பாத்தியதைக்காலம் முடிவானவுடனே உலகத்தில் அவனுடைய முறைப்படி எல்லாரும் செய்து லாப மடையலாம். பேட்டெண்ட்டை வாங்கிவைத்துக்கொண்டு உரிமைக்காரன் ஸாமானை உலகத்தில் ஒரு இடத்தில் மட்டும் செய்து எங்கும் விற்பனைக்கு அனுப்புவதுதான் ஸாதாரணவழக்கம். இதனால் இங்கிலாந்து அல்லாத மற்ற தேசத்தவர்கள் அவரவர்கள் தேசங்களில் மட்டும், புது முறைப்படி செய்து ஸாமான்களை இங்கிலாந்துக்கு அனுப்பிவந்தபடியால் கண்டு பிடித்தவனுடைய பாத்தியம் போனவுடன் இங்கிலீஷ்காரர்கள் புதுமுறை தெரியாததால், அவர்கள் அந்த முறையை அனுஷ்டிக்கக் கூடாமலிருந்தது. ஆகையால் ஸமீபத்தில் இங்கிலாந்தில் பேட்டெண்ட் பாத்தியம் ஏற்பட்ட 5 வருஷத்திற்குள் மேற்படி ஸாமானை இங்கிலாந்திலேயே செய்யாவிட்டால் 5 வருஷமானவுடன் அந்த பாத்தியதை கிடையாதென்று சட்டத்தை மாற்றி விட்டார்கள். இப்படிப்பட்ட சட்டமும் இந்தியாவில் ஏற்படவேண்டுமென்றும், அப்படி ஏற்பட்டால் கைத்தொழில் சாலைகள் ஏற்படுவதற்கு அநுகூலமாயிருக்குமென்றும் மிஸ்டர் முகர்ஜி சொன்னார்.

கவர்ன்மெண்டார் இன்னொரு உபகாரமும் செய்யவேண்டும். ஸர்க்கார்க் காரியத்திற்காக வேண்டிய ஸாமான்களை யெல்லாம் அன்னிய தேசத்து ஸாமான்களுக்குக் குறையாமல் இந்தியாதேசத்து ஸாமான்களின் விலையும் மாதிரியும் ஸமனாயிருக்கும் பக்ஷத்தில் இந்திய தேசத்து ஸாமான்களையே உபயோகிக்கும்படி கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கவேண்டும். வெறுமையானும் வாயால் சொல்லிவிட்டு காரியத்தை நழுவவிடக்கூடாது. உதாரணமாக சில வருஷங்களுக்கு முன்னால் கவர்ன்மெண்டார் ஒரு ரெயில் போட ஆரம்பித்தபோது அதற்கு வேண்டிய ஸாமான்களை இந்தியாவில் செய்யும் ஒரு பெரிய வியாபாரிகள் ஸப்ளை செய்வதாகச் சொன்னார்கள். இதற்கு சீமையிலிருந்து வரும் ஸாமான்கள் எவ்வளவு நல்லதாயிருக்குமோ அவ்வளவு நல்லதாயிராத பக்ஷத்தில் ஸாமான்களைத் தள்ளி விடுவதாக கவர்ன்மெண்டில் சொன்னார்கள். மேற்கண்ட இந்தியா வியாபாரிகள் இந்த நிபந்தனைக்கு உள் பட்டபோது சீமை விலைக்கு 100-க்கு 5 வீதம் தள்ளிக்கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் மறுபடியும் கண்டிஷன் போட்டார்கள். இம்மாதிரியாகச் செய்வது ஸரியன்று.

இங்கிலீஷ்காரர்கள் அவர்களுடைய முதலைக் கொண்டுவந்து தொழில்சாலைகள் ஏற்படுத்துவதைப்பற்றி அநேகம் பேர்கள் ஆக்ஷேபமாகப் பேசுகிறார்கள். இப்படிச் செய்வது தவறு. இதரதேசங்களிலுள்ளவர்கள் தங்களுடைய தேசாபி விருத்திக்கு எந்த அந்நிய தேசத்தார் பணம் கொடுப்பார்களென்று ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். நாமும் இங்கிலீஷ் முதலாளிகளைச் சேர்த்துக்கொண்டு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வது இந்தியாவின் க்ஷேமத்திற்கு அநுகூலமாகும். இந்தியாவில் எவ்வளவு கைத்தொழில்களோ செய்யக்கூடும். பம்பாய்ப் பக்கத்தில் சிலவற்றைத் தவிர மற்ற இந்தியா முழுவதிலும்



இங்கிலீஷ்காரர்களே கோடி கோடியாய்ப் பணத்தைப்போட்டுக் கைத்தொழில்களை நடத்திவருகிறார்கள்: அவர்களைப்பார்த்தாவது நாம் கற்றுக்கொள்ளக்கூடும். அவர்களுடைய அனுஸரணையும் ஒத்தாசையுமில்லாவிட்டால் நம்முடைய கைத்தொழில்கள் முன்னுக்கு வருவதோ அல்லது அவைகளை நிலை நிறுத்துவதற்கு வேண்டிய காப்பு வரிகளை விதிப்பதோ முடியாமல் போய்விடும்.

இப்படிக்கெல்லாம் பெரிய கைத்தொழில்களைப் பற்றி பேசி விட்டு சிறிய கைத்தொழில்களைப்பற்றி மிஸ்டர் முகர்ஜி பின் வருமாறு சொன்னார் தோல் பதனிடுதல், துணிகளுக்குச் சாயம்போடுதல், ஸோப்பு, சர்க்கரை, தீக்குச்சி முதலியவைகள் செய்தல், ஆகிய இவைகள் போன்றவைகளுக்கு ½ - லக்ஷம் முதல் 2 - லக்ஷம் வரையில் முதலிருந்தால் போதும். இவைகளைப் பற்றி சுதேசி யேற்பட்ட ஸுமார் 4-வருஷ காலமாக பெரிய முழக்கமா யிருக்கிறது. ஆனால், எல்லாரும் சுதேசியாயிருக்கவேண்டும், இந்தியாவில்கைத்தொழிலை விருத்திக்குக்கொண்டுவர வேண்டும், என்று வாயால் சொல்லுகிறதைத் தவிர, காரியத்தில் செய்து காட்டுகிறதில்லை. மேலே கண்ட தொழில்களுக்கு முதலில்லாமல் அவஸ்தையாயிருக்கிறது. நம்முடைய தேசத்தில் வக்கீல்களே பிரமுகர்களாக யிருக்கிறார்கள். அவர்கள் நன்றாய்ப் படித்தவர்கள். அவர்களே முனிஸிபாலிட்டிகளிலும், லோகல்போர்டுகளிலும், இன்னும் இதரபொதுஸ்தாபனங்களிலும் ஜனங்களுடையபிரதிநிதிகளாகயிருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவின் கைத்தொழிலின் அபிவிருத்தியைப்பற்றிப்பேசமுன்வருவது போல் ஒவ்வொருவரும் ஒரு மாஸ ஸம்பாத்தியத்தை ஒரு தொழில் செய்வதற்கு முதலாக உதவும் பக்ஷத்தில் கைத்தொழில்களுக்கு முதல் சேர்க்கவேண்டிய விஷயத்தில் அவ்வளவு கஷ்டமிராது. தனக்கு வக்கீல்களில் அநேகம் பேர்கள் அத்யந்த ஸ்நேகிதர்களென்றும், ஆகையால் மேலே சொன்னதை அவர்கள் விரோதமாய் எண்ண மாட்டார்களென்றும், தான் சொன்னது வாஸ்தவந் தானென்றே அவர்கள் ஒப்புக்கொள்வார்களென்றும், மிஸ்டர் முகர்ஜிசொன்னார்.

நம் தேசத்துத் தொழிலாளிகள் நல்லவேலைக்காரர்களென்று ஸுமார் 50-வருஷம் வரையில் உலகப் பிரசித்தமாயிருந்தது. அன்னிய தேசங்களில் நீராவியந்திரம் கண்டு பிடிக்கப்பட்டதோடு சாஸ்திர ஆராய்ச்சியும் பலத்தவுடன் அங்கே அப்படிப்பட்ட ஸஹாயங்களால் செய்யப்படும் ஸமான்களின் விலைக்கும் நம்மவர்கள் செய்யும் ஸாமான்களின் விலைக்கும் தாகலா மோகலாயில்லாமல் நம் தொழிலாளிகளுக்கு அநேகமாய் தொழில் அற்றுப் போயிற்று. நம்முடைய தொழிலாளிகளிடத்தில்முதலிருந்தபோதிலுங் கூட படிப்பில்லாமையால் யந்திர ஸகாயத்தால் ஸாமான்களை மலிவாகச் செய்யலாமென்று அறிய மாட்டாதவர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்குள் படிப்பு ஏறினாலொழிய அவர்கள் யந்திரங்களைக்கொண்டு செய்யும் ஸாமான்களோடு போட்டி போட முடியாது. தாம் தன்னுடைய 25 வருஷ அநுபவத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளிகளோடு பழகியிருப்பதாயும், ஒவ்வொருவனும் அவனவனுடைய தொழிலை இதர தேசத்துத் தொழிலாளிகளைப்போல செம்மையாயும் ஸாமர்த்தியமாயும் செய்யக்கூடியவனாயிருப்பதாயும், ஆனால்படிப்பில்லாததால் அவனவனுடைய தொழிலில் புதிதாய் யேற்பட்ட முறைகளை அறியாமல் பழைய முறைப்படியே செய்வதாயும், மிஸ்டர் முகர்ஜி சொன்னார். நம்முடைய தொழிலாளிகளுக்கு கீழ்த்தரப்

படிப்பே அவசியமென்றும், அதைப் பரவச் செய்வதற்கும், காலாகாலத்தில் கட்டாய மாக்குவதற்கும் தொழில் ஆலோசனை ஸபையார் கவர்ன் மெண்டாரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார். ஜப்பானில் 100-க்கு95-பேருக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்க, இந்தியாவில் 100-க்கு 95 பேருக்கு அப்படி எழுதப்படிக்கத்தெரியாது. இதுவே இரண்டு தேசத்து வியாபார நிலைமையின் வித்தியாஸத்துக்கு அந்தரங்க காரணம்.

மிஸ்டர் முகர்ஜி செய்தப்பிரஸங்கமானது கைத்தொழில் அபிவிருத்தியைப் பற்றியதாயிருந்த போதிலும், ரெயில்வேக்களால் வியாபாரத்துக்கு எவ்வளவோ அநுகூலமுண்டாகையால் அவைகளின் இரண்டொரு முக்கிய அம்சங்களைக்குறித்தும் பேசினார். வெகுகாலமாக கவர்ன்மெண்டார் பெரிய பட்டணங்களின் வழியாய் 'ப்ராட் கேஜ்' என்று சொல்லப்படும் பெரிய ரெயில் பாதைகளைப் போட்டுப் பராமரித்து வருகிறார்கள். இவைகளுக்கு அநுஸரணையாக சுற்றுப்பக்கத்து இடங்களிலிருந்து 'நாரோ கேஜ்' என்று சொல்லப்படும் சிறு ரெயில் பாதைகள் எவ்வளவோ போடவேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்டார், போட்ட முதலுக்கு 5 வட்டிக்காவது ஜாமீனாயிருக்கும் பக்ஷத்தில் டிஸ்ட்ரிக்ட்டு போர்டுகளும் பொது ஜனங்களும் பணம் போட ஸம்மதமாயிருப்பார்கள். தவிர, இன்னொரு விஷயம்; தற்போது ரெயில் பாதைகளை நிர்வகித்துப் பரிபாலனஞ்செய்து வரும் ரெயில்வே போர்டில் அவைகளைப் போடுவதிலும் நிர்வகிப்பதிலும், கைதேர்ந்த நிபுணர்கள் இருக்கிறார்கள். இவர்களோடு இந்த போர்டில் வியாபாரவிஷயங்களில் நிபுணரான ஒருவர் இருந்தால் அநுகூலமாயிருக்கும்.

விவஸாய விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டாரும் மாகாண கவர்ன்மெண்டாரும் அளவற்ற பணம் செலவழித்து விவஸாயகாலேஜ்களும், பண்ணைகளும், ஆராய்ச்சிசாலைகளும், ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் கவர்ன்மெண்டார் நல்ல எண்ணத்தோடு செய்கிறவைகள்தான். ஆனால் செலவாகிற பணத்துக்குத் தக்கபடி நன்மை உண்டாகுமென்பது ஸந்தேகம். ஸாதாரணமாய் இந்தியா முழுவதும் விவஸாயிகள் அவரவர்களுடைய ஸ்திதிக்கும் ஆள்கட்டுக்கும் தக்கபடி 3 முதல் 20 ஏகரா வரையில் ஸொந்தத்தில் சாகுபடி செய்து வருகிறார்கள். இவர்களுக்குக்கொஞ்சப் படிப்புக்கூட இல்லை. இவர்களுக்குப் புதிதாய் ஏதாவது ஒரு முறையைச்சொல்லி அந்த முறைப்படி விவஸாயம் செய்யச்சொன்னால் இவர்கள் செய்ய மாட்டார்கள்.

அல்லது அவர்களுடைய நிலத்தில் அவர்களுக்கு யாதொரு செலவுமில்லாமல் பரீக்ஷை செய்து பார்ப்போமென்றாலும் ஸம்மதியார்கள். விவஸாய காலேஜ்களில் படித்துத் தேறும் பிள்ளைகளுக்கோ விசேஷ நிலமாவது முதலாவது கிடையாது. ஜமீன்தார்கள் அவரவர்கள் ஸொந்தப்பண்ணையில் வைத்திருக்கும் நிலங்களும் அவ்வளவாக இல்லை. ஆகையால் 'ஒரே ஒரு விதத்தால்தான் விமோசனமுண்டாகலாம். விவஸாயிகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்து அவர்களைப் புதிய முறைகளால் உண்டாகும் நன்மைகளை அறியச்செய்யவேண்டும். இப்படிக்கு விவஸாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் படிப்பு வறினலொழிய விவஸாயமாகட்டும், கைத்தொழிலாகட்டும் முன்னுக்கு வருமென்று எண்ண ஹேதுவில்லை.



# SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### CONSERVATION OF FORESTS.

### காடுகளின் பாதுகாப்பு.

1858-ம்௵த்தில் பர்மாவின் சில பாகங்களிலும் சென்னை மாகாணத்தின் சில பாகங்களிலும் ஸர்க்கார் காடுகளைப் பாதுகாப்பதிலும், காட்டுவருமானம் உண்டாக்குவதிலும் ஆரம்ப முயற்சி செய்யப்பட்டது. இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்திலும் ஸர்க்காரைச் சேர்ந்த காடுகளாகவும் தூறுகளாகவும் கரம்புநிலமாகவும் பெருத்த விஸ்தீர்ணங்களிருந்தன. ஆனால், காடுகளை நிஷ்பிரயோஜனமாய் அழிப்பதைத் தடுப்பதற்காவது, புனருற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்காவது பின்வரும் சந்ததியாருக்கு உபயோகமாயிருக்கும் பொருட்டு வெட்டுமரங்களும் விறகும் இதர காட்டு உற்பத்தியும் ஸர்ப்பரா செய்விப்பதற்காவது சிறிதும் பிரயத்தனம் செய்யப்படவில்லை. 1858-ம்௵முதல், பெகுவிலும் டெனஸரிமிலும் ஸர். டி ப்ராண்டிஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட காட்டைப்பற்றிய ஏற்பாடானது இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்துக்காகவும் காட்டைப்பற்றிய சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன; பயிற்சி பெற்ற காட்டு உத்தியோகஸ்தர்களடங்கிய சிப்பந்தியொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; 92,000 சதுரமைலுள்ள ஸர்க்கார் காடுகள் பாதுகாக்கப்பட்ட காடுகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன; இவைகள்-பொதுவாய் தேசத்தின் பிரயோஜனத்துக்காகவும் அவைகளின் அருகாமையிலுள்ள ஜனங்களின் பிரயோஜனத்துக்காகவும் ஸர்க்கார் சொத்துகளாய் செட்டாக நிர்வஹிக்கப்படும். இந்தக் காடுகளில் நெருப்பு அணுகக்கூடாதென்று தடுக்கப்படுகிறது; வெட்டுமரத்துக்காகவும், விறகுக்காகவும், இதர காரியங்களுக்காகவும் ஒழுங்காய் வேலைசெய்யும் முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; பாதுகாக்கப்பட்ட காடுகளில் காட்டுஜாதியாருக்குள்ள சுதந்தரங்கள் அல்லது தாவாக்களும் இதர சுதந்தரங்கள் அல்லது தாவாக்களும் கிரயத்துக்கு வாங்கப்பட்டாவது சரிக்கட்டப் பட்டாவதிருக்கின்றன; வெட்டுமரங்களையும் விறகையும் பயிரிடுவதற்கும் புனருற்பத்தி செய்வதற்கும் சாஸ்திரயுக்தமான முறைகள் அநுசரிக்கப்படுகின்றன. இதனிடையில், விசேஷமான காட்டுவருமானம் ஏற்படும்படி அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. ப்ரிடிஷ் இந்தியாவில் தற்காலத்தில் கிடைக்கும் காட்டு வருமானத்தின் மொத்தம் ஸராஸரியில் சுமார் 18,00,000 பவுன் ஆகிறது; காட்டைப் பாதுகாப்பதற்கும் அதில் வேலை நடத்துவதற்கும் பிடிக்கும் ஸகல செலவுகளும்போக மிகுதியாய் நிற்கும் காட்டு வருமானமானது, ஸுமார் 8,00,000 பவுன் ஆகிறது. காடுகளை சாஸ்திரயுக்தமான முறைகளை அநுசரித்து நிர்வஹிப்பதனால் தற்காலத்திலும் இனி வரும்காலங்களிலும் உண்டாகக்கூடிய பிரயோஜனங்கள் மிகவும் தெளிவாயிருக்கின்றன; ஆகவேதான், பெருத்த சுதேச சமஸ்தானங்கள், அதிலும் முக்கியமாய் மைசூரும் திருவாங்கூரும், ப்ரிடிஷ் இந்தியாவில் அநுஷ்டிக்கப்படும் முறையை அநுசரித்துச் சொந்தமாய்க் காட்டு பரிபாலன இலாகா ஒன்று ஏற்படுத்தி நடத்தி வருவதும் தவிர, விசேஷமான காட்டுவருமானத்தையும் அடைகின்றன. சில சிறிய சமஸ்தானங்கள் அவைகளிலுள்ள காடுகளில் அதிக பெறுமானமுள்ளவைகளை சாஸ்திர யுக்தமான முறைகளின்படி வேலை நடத்தும்பொருட்டு, ப்ரிடிஷ் இந்தியா காட்டு இலாகாவுக்குக் குத்தகைக்கு விட்டிருக்கின்றன.

## HUMAN HAIR FOR WEAVING.

## மனுஷரின் உரோமமும் நெசவுப் பொருளாம்.

அழுக்கான கட்டில் மெத்தை போர்வை தலையணை முதலியவைகளைப்பற்றி அருவருக்கிறவர்களை சிலவகையான நெசவு தினிஸுகளில் மனுஷரின் ரோமம் பெருவாரியாக உபயோகப்படுகிறதென்று வெளிப்பட்டிருக்கிற ஸமாசாரம் இன்னொரு விதத்தில் பயமுறுத்துகிறது. வர்த்தக ஸ்தலங்களுக்குக் கொண்டுவரப்படுகிற மனுஷரின் ரோமத்தில் பெரும்பாகம் சீனதேசத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறதாம். இவ்வியாபாரச் சரக்கைப் கப்பலில் ஏற்றுவது ரகஸ்யமாயுமில்லையாம். வேறு ஸாமான் என்ற பேராலுமில்லையாம். எல்லாருக்குந்தெரியவே கப்பலேற்றப்படுகிறதாம். டண்ட்லின் பட்டணத்தைச்சேர்ந்த துறைமுகத்திலிருந்து குதிரை, ஆடு, மாடு ஒட்டகம் முதலியவற்றின் ரோமங்கள் எவ்வாறு ஒழுங்காயும் கிரமமாயும் அனுப்பப்படுகின்றனவோ அவ்வாறே மனுஷரின் ரோமமும் ஒழுங்காய் அனுப்பப்படுகிறது மன்றி அவ்வுரோமத்தில் எவ்வளவு அனுப்பப்படுகிறதென்று துறைமுக ஏற்றுமதி இறக்குமதி வரவுசெலவு கணக்குகளிலும் பதியப்படுகின்றனவாம். 1908-ம் வருஷம் 700 தங்கப்பவுன் பெறுமதியுள்ள 1,208 அந்தர் நிறையுள்ள மனுஷர் மயிரும், 1909-ம் வருஷத்தில் ஸுமார் 1,60,000-ம் தங்கப்பவுன் பெறுமதியுமான 3607 அந்தர் நிறையுள்ள மனுஷர் மயிரும் குறித்த துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாகியிருப்பதாக துறைமுகக்கணக்குகளில் கண்டிருக்கிறது. இக்கணக்கின்படி 1 அந்தர் மனுஷர் மயிர் ஸுமார் 4 தங்கப்பவுன் விலைபெறுமென்று தெரியவருகிறது. ஆகையால் மனுஷரின் ரோமம் குதிரைகளின் ரோமத்துக்கொத்த விலை பெறுமென்று நன்கு விளங்குகிறது. அன்றியும் மனுஷரின் ரோமம் குறித்த துறைமுகத்திலிருந்து ஏற்றப்படும். சுத்தஞ் செய்யப்பட்டதும் தினுசுபடுத்தப்பட்டதுமான ஒட்டக மயிரின் ஸராஸரி விலையென்னவோ அவ்விலை பெறுமென்றுந் தெரியவருகிறது. என்ன ஸாமான்கள் நெய்வதில் மனுஷரின் மயிர் உபயோகிக்கப்படுகிறதென்று தெளிவாயு திட்டமாயும் விளங்காவிடினும், பொய்மயிர்முடி பின்னுகிறவர்கள் உபயோகிக்கும் மயிருக்கு அல்லது இழைக்கு மெத்தவும் தகுதியும் வஸதியுமான ஒரு வஸ்துவாயிருக்கிறதென்று யூகித்துக் கொள்ளலாம். ஒருவேளை இவ்வுரோமத்தை ரோமத்தால் செய்யப்படும் புடவைகளை நெய்வார்கள் போலும். குதிரையின் ரோமத்தைப்போல் பெலனும் பருமனுமற்றதாயும் நெடுநாளைக்குப் பாவிக்கக்கூடாததாயுமிருக்கலாம். என்றாலும் மனுஷரின் ரோமம் குதிரையின் ரோமத்தைப் பார்க்கிலும் விலையில் நயமானது. உண்மையில் மனுஷரின் ரோமம் நயமான விலைக்கு கிடைக்குமாயின் யந்திரங்களின் வார் செய்பவர்கள் தாங்கள் தற்போது ஒட்டகங்களின் தாடைமயிரைப் போலொத்த முரட்டு வஸ்துக்களை வார் நெய்வதில் எவ்வாறு உபயோகித்து வருகிறார்களோ அவ்வாறே மனுஷரின் ரோமத்தையும் உபயோகப்படுத்துவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. கம்பளம், சமுக்காளம் முதலியவைகள் நெய்கிறவர்கள் இடை நூலுக்காக உபயோகிக்கும் வஸ்துக்களுக்காக இம்மயிரை உபயோகித்தாலும் உபயோகிக்கக்கூடும். அவ்விதம் அவர்கள் உபயோகிக்கும் விஷயத்தில் தாங்கள் உபயோபிக்கும் ஸாமான் மனுஷரின் ரோமம் என்று தெரியாமலே உபயோகிக்கலாம். மனுஷரின் ரோமத்தை ஒழுங்காயும் கிரமமாயும் சேகரஞ்செய்வதில் அநேகர் தலையிட்டுக்கொள்ளாததாலும் அல்லது அம்மயிரால் என்ன ஸாமான்கள் செய்யப்படுகின்றனவென்று தெளிவாய்த் தெரியாததாலும் மனுஷரின் மயிரை மற்ற ஸாமான்களோடு கலந்து உபயோகஞ் செய்கிறார்களென்று யூகிக்க இடமுண்டாகிறது.

திராவிடமித்திரன்.



## THE LIME FRUIT.

## எலுமிச்சம்பழம்.

எலுமிச்சம்பழத்தை நம் நாட்டார் தாராளமாய் உபயோகித்து வருகிறார்கள். அது பார்வைக்கு மனோகரமாயும் அழகாயும் இருப்பதுமன்றி வாஸனையாகவும் இருக்கிறது. பெரியோர்களையும் அரசர்களையும் காண நாம் அதையே பெரும்பொருளாக உபயோகிக்கின்றோம். நோய்களுக்குத் தக்க மருந்தாக அதைப் பலமருந்துகளில் உபயோகிக்கின்றோம். அன்னத்வேஷம், அரோசிகம் முதலியவைகளால் வருந்துகிறவர்கள் இதைத் தாராளமாய் உபயோகித்து நோயைத் தீர்த்துக் கொள்ளுகிறார்கள். நாம் சாப்பாட்டில் தாராளமாய் அதை உபயோகிக்கிறோம். பானத்துக்கும் அதை உபயோகப்படுத்தல் நலம். இருபங்கு ஜலத்தில் நன்றாய்ப் பிழிந்தெடுக்கப்பட்ட ஒரு பங்கு எலுமிச்சம் பழத்தின் ரஸத்தைச் சிறிது சோடா உப்பைச் சேர்த்துச் சாப்பிட்டால் வயிற்று உப்புஸம் அஜீரணம் முதலியவை நீங்குகிறதைப் பலர் அநுபவத்தில் பார்த்திருக்கலாம். இரண்டு பங்கு ஜலத்துடன் ஒருபங்கு எலுமிச்சம்பழத்தைச்சேர்த்துச் சாப்பிடுதல் தேகத்துக்கு மிகவும் ஸௌக்கியமென்று மேனாட்டு வைத்தியர்கள் பலமுறை பரிசோதித்துக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை உபயோகித்தால் ஜீரண சக்தி அதிகரிக்கிறதென்றும், தேகத்திற்குள் உள்ள விஷப்பூச்சிகளை நீக்குகிறதென்றும், மலைக்காய்ச்சல், திமிர்வாதம், தொண்டைப்புண் முதலிய வியாதிகளுக்குத் தக்க ஔஷதமாகிறதென்றும் கூறியிருக்கிறார்கள். காச் என்ற பிரஸித்திபெற்ற வைத்தியரும் மற்றும் சில பிரசித்திபெற்ற மேனாட்டு வைத்தியர்களும் பலமுறை பரிசோதனை செய்ததில் எலுமிச்சை, கிச்சிலி, ஆப்பில் என்ற சீமை இலந்தை, ஆகிய இந்தப்பழங்களின் ரஸம் வாந்திபேதிக் கிருமியையும் மற்றுமுள்ள கேட்டைத்தரும் கிருமிகளையும் ஒருங்கே ஒழித்துவிடும்படியான சக்தியுடையது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தக்கிருமிகளை இந்த ரஸத்தில் 15 நிமிஷநேரம் வைத்திருந்தால் அவை சாகும் என்று சொல்லுகிறார்கள். காய்ச்சலை உண்டாக்கும் கிருமிகள் தண்ணீருடன் கலந்த ரஸத்திலேயே மடியுமாம். இதன் பானம் கோடைக்கு மிகவும் குளிர்ச்சியாயிருக்கும். மாரிகாலத்தில் சுடவைத்துக்குடித்தால் ஆரோக்கியமான பானமாகுமென்றும் சொல்லுகிறார்கள். ஸ்நானம் பண்ணும் ஜலத்தில் 3, 4 பழங்களைப் பிழிந்து ஸ்நானம் செய்தால் நம் சருமத்தில் த்வாரங்களை அடைத்திருக்கும் அழுக்கை நீக்கித் தோலைச் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் பண்ணுவதுமன்றி தோலையும் மிருதுவாகச் செய்யுமாம். வாய் நாற்றமுள்ளவர்கள் இதை உபயோகித்துப்பல் தேய்த்து வாயைக் கொப்பளித்தால் துர்க்கந்தம் நீங்கிச்சுகந்தம் உண்டாகும். பித்த எரிச்சலுக்கு நாம் எலுமிச்சம்பழச் சாற்றைத் தேய்த்துக் கொள்ளுகிறோம். அது எரிச்சலை அடங்கச் செய்கிறது. பூச்சிக் கடிகளால் தொந்தரவுபடுங் காலத்தில் இதன் சாற்றைக்கொண்டு தேய்த்தால் வலி நீங்குமென்றும் கூறப்படுகிறது. ரஸத்தைப் பிழிந்தெடுத்துக்கொண்டு இப்பழங்களின் தோலை நாம் எறிந்து விடுகிறோம். அந்தத்தோலைக் காயவைத்து எரி துரும்புடன் சேர்த்து எரிப்போமானால் சீக்கிரம் அதைப் பற்றச் செய்யும். நம் நாட்டில் இதன் பயன் தெரியாமல் அநியாயமாய் ஜனங்கள் இதை வீணே எறிந்து விடுகிறார்கள். இனியாவது அதை வீணாக்காமல் உபயோகிப்பார்களென்று நம்பு

கிறோம். தற்காலம் நம் கடைகளிலெல்லாம் லெம்னெட் என்ற பானம் விற்பதைப் பலர் வாங்கிக் குடித்து வருகிறார்கள். இந்தப் பழங்களின் ரஸத்திலிருந்து செய்யப்படாமல் ஒருவித ரஸாயனப்பொருளினின்றும் செய்யப்படுவதால் தேகத்துக்கு ஆரோக்கியமாகாது. அதில் உபயோகப்படுத்தப்படும் ரஸாயனப் பொருள்கள் தேகஸௌக்கியத்துக்குக் கேட்டை விளைவிக்கக்கூடிய பொருள்களென்றும் விஷத்தன்மையுள்ளவைகளென்றும் மேற்கூறிய வைத்தியசாஸ்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகையால் நம் ஜனங்கள் அந்த தீங்கான பானத்தை ஒழித்துத் தாங்களே மேற்படி பழங்களின் ரஸத்தைப் பானமாகச் செய்து உபயோகப்படுத்தி வருவார்களாக.

சுதேச பரிபாலினி.

---

## TOWNS AND VILLAGES.
## பட்டினங்களும் கிராமங்களும்.

அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களென்ற பெருங் குடியரசுக்கு எட்டு வருஷம் பிரஸிடெண்டாயிருந்து, சமீபத்தில் ஐரோப்பிய ராஜஸ்தலங்களைப் பார்த்துப் பல பிரஸங்கங்கள் செய்து பொதுக்கிளர்ச்சி யுண்டாக்கி, இப்போது ஐக்கிய மாகாணங்களுக்குத் திரும்பிச் சென்றிருக்கும் மிஸ்டர் ரூஸ்வெல்ட், சிலகாலத்திற்கு முன்னால், அங்கொரு இடத்திற் பேசினபோது, தற்கால நாகரிகத்திற்கு முக்கியமான ஒரு லக்ஷணத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார். அதாவது, பட்டினங்கள் வரவரப் பெரியனவாக கிராமங்கள் சிறியனவாகி வருகின்றன; கிராமங்களில் வசித்து விவஸாயமும் விவஸாயத்துக் குரிய சில்லரைத் தொழில்களும் செய்து ஜீவிக்க வேண்டிய ஜனங்கள் கிராமங்களைவிட்டு, பட்டினங்களில் வந்து வசித்துப் பட்டினங்களைப் பெருகச் செய்கிறார்கள். இது தற்கால நாகரிகத்தின் ஒரு விசேஷ லக்ஷணமென்றும், இதனால் பல கேடுகள் விளைகின்றனவென்றும், மிஸ்டர் ரூஸ்வெல்ட் போன்ற அறிவும் அனுபோகமுமுள்ளவர்கள் நினைக்கிறார்கள். மேனாடுகளில் கைத்தொழில்களே ஜனங்களின் விசேஷ ஜீவனோபாயங்களா யிருப்பதால், அவைகளில் அமர்ந்து கூலிபெற்றுப் பிழைக்குமாறு கிராமவாசிகள் பட்டினத்திற்கு வந்து விடுகிறார்கள். கைத்தொழிற் சாலைகளிற் கிடைக்குங் கூலி கிராமங்களில் பண்ணை வேலையிற் கிடைக்குங் கூலியை விட அதிகமாயிருக்கின்றது. பட்டினங்களிற் கிடைக்கக் கூடிய சில சுகங்கள் கிராமங்களிற் கிடைப்பதில்லை. இதனால் விவஸாயத் தொழிலைவிட்டுக் கைத்தொழில்களில் ஏழை வகுப்பார் வந்து குவிகிறார்கள். தற்காலம் கோடிக்கணக்காய் முதல் வைத்துப் பெருந் தொழில்கள் நடத்தப்படும்போது, பத்தாயிரக் கணக்காய் வேலைக்காரர்கள் அமர்த்தப் படுகிறார்கள். ஒரு பட்டினத்தில் பத்துத் தொழிற் சாலைகள் ஏற்பட்டுப் போனால் வேலை செய்வோரே லக்ஷக்கணக்காகி விடுகிறார்கள். இவர்களைச் சேர்ந்த குடும்பங்களும் இவர்களின் பிரயோஜனத்திற்காக ஏற்படும் கடைகள் முதலியனவும் சேர்ந்து ஜனத்தொகை அளவுக்குமிஞ்சிப் பெருத்துப் போகின்றது. திரளான ஜனங்கள் ஓரிடத்தில் நெருங்கி வசிப்பதால் சுகாதார நிலைமைகள் கெட்டுப் போகின்றன. குடி, விபசாரம் முதலிய துன்மார்க்கங்களுக்கும் இடம் உண்டாகிறது. சரீர சுத்தி, தெய்வ பக்தி முதலிய நற்குணங்களும் உண்டாவதில்லை. பட்டினங்களில் விலை வாசிகள் உயர்ந்திருப்பதுமன்றி சரீர போஷணைக்குச் செலவாகவேண்டிய சம்பாத்தியம் வீண் சுகங்களின் பொருட்டுச் செலவாகின்றது.



இதற்கோர் உதாரணம் சொல்லுவோம். பட்டினத்தில் வசிப்பவன் ஒரு மைல் நடக்க வேண்டுமானாலும் வண்டியிற் செல்லுகிறான். இதில் வீண் பணச் செலவாவது மன்றி, சோம்பல்தனமும் அதிகரிக்கின்றது. கிராமத்திலோ மூன்றுமைலானாலும் காலால் நடந்தே செல்லுவான். இப்படி நடந்து செல்லுகிறவனுக்குநல்ல காற்றும் உடற்பயிற்சியும் கிடைத்து அளவற்ற நன்மை யுண்டாகின்றது. இதைப் போல் எத்தனையோ உதாரணங்கள் சொல்லக் கூடும். ஆகையால் பட்டினங்களைப் பல காரணங்களாற் பெருக்கச் செய்து கொண்டு போவது ஜன சமூகத்தின் மொத்த நன்மைக் குற்றதல்ல. மேலும், ஒருதேசத்தில் விவஸாயம் செழிப்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு கைத்தொழில்கள் செழிப்பது அவசியமல்ல. விவஸாயத்துக்குக் கைத்தொழில்கள் எவ்வளவு உதவி செய்யக் கூடியனவாயினும், ஒரு சமூகத்தில் இரண்டும் செழிப்பது எவ்வளவு அவசியமாயினும், ஜனவாழ்க்கைக்கு விவஸாயம் பிரதானமாவது போல் கைத்தொழில்கள் ஆகமாட்டா. ஆகையால், ரூஸ்வெல்ட்டைப் போன்ற மேதாவிகள் பட்டினங்கள் பெருப்பதும், கிராமங்கள் சிறுப்பதுமாகிய தற்கால நாகரிக லக்ஷணம் மனிதவர்க்கத்தின் ஸ்திரமான நன்மைக்கு உற்றதல்லவென்று அஞ்சுகிறார்கள். மேல்திசை நாகரிகம் அமெரிக்காவில் உயர்ந்த நிலைமையை அடைந்திருப்பதுபோல் வேறெங்கும் அடைந்திருக்கவில்லை. அப்படிப்பட்ட அமெரிக்காவில் ஜனவாழ்க்கை க்ஷீணதசை நோக்குங் குறிகள் தோன்றியிருப்பதாக மிஸ்டர் ரூஸ்வெல்ட் எச்சரித்தார். அதற்கு நிவர்த்தி, விவஸாயத்தை ஜனங்கள் பற்றுவதும், பட்டினங்களில் வந்துகுவிவது குறைவதும், என்று சொன்னார்.

இந்தியாவிலும் இம்மாதிரி பட்டினங்கள் பெருகுவதும் கிராமங்கள் மெலிந்து போவதுமான குறிகள் தோன்றுகின்றனவென்று நாம் பல முறை சொல்லியிருக்கிறோம். கிராமங்களில் வசித்து கிராமங்களின் வளப்பத்தை ஆதரிக்க வேண்டியவர்கள் பட்டினங்களில் வசிக்க வந்து விடுகிறார்கள். சமீபத்தில் மதுரை, திருச்சினாப்பள்ளி முதலிய பட்டினங்களின் ஜனத்தொகை அதிகமாகிவிட, அதனால் விளையும் தீமைகளை அனுபோகத்தில் கண்டிருக்கிறோம். கவர்ன்மெண்டு கச்சேரிகளும் காலேஜ்களும் ரயில்வே ஜங்ஷன்களும் நம் தேசத்தில் பட்டினங்கள் பெருகுவதற்குக் காரணங்களா யிருக்கின்றன. மேனாடுகளிலோ கைத்தொழில்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகளாற் பட்டினங்கள் பெருகுகின்றன. எந்த இடத்திலானாலும் ஜனத்தொகை அதிகமானால் தொழில்கள் அதிகமாவது அவசியம். ஆயினும், பத்தாயிரக்கணக்கான வேலைக்காரர்களை வைத்து நடத்தப்படும் தொழில்சாலைகள் நம் பட்டினங்களில் இல்லை. அதனால் மேனாட்டுப் பட்டினங்களில் ஏழைகளுக்கு எளிதாய் வேலை கிடைப்பதுபோல் நம் பட்டினங்களிற் கிடைப்பதில்லை. ஆயினும் பட்டினங்களில் ஜனத்தொகை அதிகப்படுவதால் விளையும் தீங்குகள் விளையாமற் போகவில்லை. கிராமங்களில் தங்கி அங்கேயே ஜீவிப்பது பட்டினங்களில் வசித்து அங்கேயே ஜீவிப்பதைவிட இளப்பமாயிருக்கக் கூடாதென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் சொன்னார். அதாவது கிராமவாசிகள் பட்டினங்களுக்கு வரவேண்டுமென்ற ஆசை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் கிராமங்களில் விவஸாயத்தைத் தவிர அதையொட்டின பல சிறு தொழில்களும் செழிக்கவேண்டும். அப்போது ஜனங்கள் கவலையின்றி ஜீவிப்பார்கள். இதைத்தான் நாம் நம் மித்திரனில் அடிக்கடி சொல்லி வருகிறோம்.

சுதேசமித்திரன்.

## LUCERNE.

## லூஸர்ன் என்னும் தீவனப்பயிர்.

தென்காசித்தாலுகாவில் சில காலமாகத் தண்ணீர்த் தட்டினால் பயிர்கள் விளையாமலும் விளைந்தாலும் அற்ப பிரயோஜனமானவைகளாயும் இருப்பது பிரசித்தமானது. இதனால் மாடுகளுக்குத் தீவனம் கிடைப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. இயல்பாகவே மேய்ச்சல் நிலங்கள் குறைவாயுள்ள இந்தப் பிராந்தங்களில் உள்ள மேய்ச்சலும் மழை காலத்திலேயே மிகக்குறைவாயும் மற்றக்காலங்களில் சற்றுக்குறைய முற்றும் சூனியமாயுமிருக்கிறது. இந்த ஸ்திதியில் என்னிடத்துள்ள சில உயர்ந்த தரமான பசுக்கள் காளைகள் கன்றுகளைக் கூடியவரை செவ்வையாகப் போஷிப்பதற்காக இந்தத் தாலுகாவில் குறுங்காவனமென்ற கிராமத்தில் ஓர் ஏக்கரா நிலத்தில் சென்ற 1909-ம் வருஷத்தில் லூஸர்ன் என்ற தீவனப்பயிர் செய்தேன். அது கண்டவர்களெல்லாம் ஆச்சரியப் படும்படி மிக அதிகமான தீவனம் கொடுத்து வருகிறது. சென்ற கோடைகாலத்தில் (அந்தக்கோடை இன்னும் கழிந்துவிடவில்லை),. இரண்டு மாதகாலம் தண்ணீர் பாய்ச்ச ஸாத்தியப்படாமற் போனபோது, அந்தப்பயிர், வளர்ச்சி தடைப்பட்டு வாடியதேயல்லாமல் பட்டுப்போகவில்லை. பின்பு ஜலம் பாய்ச்சியபோது முன்போலவே வளமாக வளர்ந்து பலன் கொடுத்து வருகிறது. இதைச் சிலர் கண்டும் கேட்டும் இந்த வருஷத்தில் தென்காசி தாலுகாவிலுள்ள மேற்படி குறுங்காவனம் வெள்ளகால் மேலப்பாவூர் என்ற கிராமங்களிலும் திருநெல்வேலியிலும் லூஸர்ன் பயிர் செய்திருக்கிறார்கள். இந்த லூஸர்ன் பயிர் வடமாகாணங்களில் விஸ்தாரமாகப் பயிரிடப்பட்டிருக்கிறது. ஆயினும் சென்னை இராஜதானியில், எனக்குத்தெரிந்தவரை, அங்கங்கே சில தோட்டங்களில் அற்ப சொற்பமாகமட்டும் பயிரிடப்பட்டு வருகிறது. இனி அது விஸ்தாரமாகப் பயிரிடப்படுமென்ற நம்பிக்கையுண்டாயிருக்கிறது. என்னுடைய அற்ப அனுபவத்தைக்கொண்டும் இந்தியா விவஸாய இன்ஸ்பெக்டர் ஜெனரலாகிய மாலிஸன்துரையவர்களின் இந்தியா விவஸாய நூல் மூன்றாம் புஸ்தகத்திலும் பூனா சாஸ்திரகலாசாலையில் தாவரசாஸ்திர போதகராயிருந்த உட்ரோ துரையவர்களின் இந்திய தோட்டப்பயிர்நூல் என்ற புஸ்தகத்திலும் ௸ லூஸர்ன் பயிர் விஷயமாக எழுதியிருப்பவைகளைக் கொண்டும் பின்வருவது எழுதப் பட்டிருக்கிறது. லூஸர்ன் பயறுவகையைச் சேர்ந்த பயிர். இந்தப் பயிர் தீவனம், புல், சோளத்தட்டை, வைக்கோல் முதலிய தானியத்தாள் தீவனங்களினும் அதிக சத்துள்ளது. இதைத்தின்னும் கன்றுகள் காளைகள் பசுக்கள் முதலிய பிராணிகள் செழிப்பாகப் புஷ்டியடைகின்றன. பால் மாடுகளுக்குப் பால் அதிகமாக ஊறுகிறது. இந்தத் தீவனத்தைப் பூரண வளர்ச்சியுள்ள பெரியமாடு ஒன்றுக்கு ஒரு தினத்துக்குப் பத்து ராத்தலும் (உத்தேசமாக நானூறுரூபா எடையும்) சிறிய மாட்டுக்கு ஏழுராத்தலும் கன்றுக்குக் குறைத்தும் கொடுக்கலாம். இதனோடு புல்லாவது சோளத்தட்டை வைக்கோல் முதலிய தானியத்தாள் தீவனங்களாவது வேண்டிய அளவு கொடுக்கலாம், ௸. லூஸர்ன் தீவனத்தை மேற்குறித்த அளவுக்கு அதிகமாகக் கொடுத்தால் பிராணிகள் வயிற்றுப் பொருமல் கண்டு சேதமடையக்கூடும். ௸ அளவுக்குக் குறைவாக ஆரம்பத்தில் கொடுத்து மாடுகளைப் படிப்படியாக ௸ தீவனத்துக்கு வழக்கப்படும்படி செய்வது நல்லது.



OFFICE OF ... REGISTERED 30 MAR 1911 MADRAS.

லூஸர்ன் பயிரில் பல வகைகளுண்டு. அவைகளில் கீலத் லூஸர்ன் நம்முடைய தேசத்துக்கு ஏற்றதாகவும் மற்றவகைகளிலும் அதிகத்தீவனம் கொடுப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கீலத் லூஸர்னைப் பூனாவில் குடியானவர்கள் பயிரிடுவதில் ஓர் ஏக்கராவுக்கு ஒரு வருஷத்துக்கு ஐம்பது டன் அல்லது நூறுவண்டி பாரம் பச்சைத் தீவனம் கிடைக்கிறதாம். அங்கே உட்ரோ துரை தக்கபடி பருவப்படுத்திப் பயிரிட்டதில் நூறு டன் கிடைத்ததாம். மேலே சொன்ன குறுங்காவனத்தில் உள்ள லூஸர்ன் பயிரிட்டிருக்கிற ஓர் ஏக்கரா நிலத்தில் தண்ணீர் குறைவில்லாமல் பாய்ந்த காலத்தில் ஒரு தினத்துக்குச் "சராசரி" கால் வண்டிப்பாரம் தீவனம் கிடைத்திருக்கிறது. லூஸர்ன் விதைத்து ஆறல்லது ஏழுவாரத்தில் பலன்தர ஆரம்பிக்கிறது. பின்பு மாதத்துக்கொரு முறை அல்லது பூக்குந்தோறும் அறுக்கலாம். பூத்த சமயத்தில் அல்லது சற்று முன் கூர்மையான அரிவாளால் தலைக்குமேல் இரண்டங்குலம் விட்டு விட்டு அறுக்கவேண்டும். பூத்தபின் வெகுநாள் அறுக்காமல் விட்டால், தாள் கடினமாகித் தீவனம் புஷ்டிகரம் குறைந்து பிராணிகள் அதிக பிரியமாகத் தின்னத் தகாததாய்விடும். பயிரும் பின்பு பலங்குறைந்து பலன் கொடுப்பது குறையும். ஒரு வருஷத்தில் பத்தறுப்பு அறுக்கலாம். செவ்வையாகக் களைபிடுங்கி உரமிட்டுத் தண்ணீர் பாய்ச்சுகிற ப்ருவத்துக்குத் தக்கபடி, இந்தப்பயிர் விதைத்து மூன்று முதல் ஐந்து வருஷம்வரை பலன் கொடுத்துக் கொண்டிருக்கும். கீலத் லூஸர்ன் விதையைப் பூனாவிலுள்ள தோட்டக்காரர் ஒரு ரூபாய் முதல் ஒன்றரை ரூபாய் வரையில் கிரயம் பெற்று விற்கிறார்கள். மழைக்காலத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பாவது மழைக்காலங்கழிந்த உடனேயாவது லூஸர்ன் விதைக்கலாம். மழைக்காலத்துக்கு முன்பு விதைப்பது நல்லது. பயிரிடும் நிலம் மிகுந்த களிமண்ணாகவாவது மணற்றரையாகவாவது இராமல் களியும் மண்ணும் கலந்ததாயிருப்பது நல்லது. அது காய்ச்சல் பாய்ச்சலுக் கேற்றதாயிருக்க வேண்டும். ௸ பயிருக்கு ஒரு வாரத்துக்கு ஒரு முறை ஜலம் பாய்வதற்கேற்ற ஜலாதார முள்ளதாயுமிருக்க வேண்டும். நிலத்தை நன்றாக உழுது புழுதியாக்கி ஒரு ஏக்கராவக்கு முப்பது வண்டி யளவாக நன்றாகச் செழித்த எருவிடவேண்டும். பின்பு ஜலம் பாயத்தக்க விதமாக நிலத்தைப் பாத்திகளாக்கி அந்தப் பாத்திகளில், உழுது புழுதியாயிருக்கும் மண்ணைக் கைமுழத்துக்கொருவரப்பும் வாய்க்காலுமாக மண்வெட்டியினால் ஒதுக்கி வரப்புகளின் உச்சிகளில் நெடுக ஒழுக்கு விதையாக விதைகளை விதைத்து லேசாகப் பக்கத்து மண்ணைப் பரப்பி மேலே போட்டு மூடி வாய்க்கால்களில் ஜலம்பாய்ச்ச வேண்டும். வாய்க்கால்களில் பாய்ந்த நீர் வரப்புகளில் ஊறி விதைகளை முளைக்கச்செய்யும். மேற்கண்டபடி விதைப்பதில் ஒரு ஏக்கருக்குப் பத்து முதல் பன்னிரண்டு ராத்தல் வரை விதை செல்லும். மூன்றறுப்புக்கு ஒரு முறை ஒரு ஏக்கராவுக்குப் பத்து வண்டி பாரம் எருப்போடலாம். நிலத்தை வரப்பு வாய்க்கால்களாகச் செய்திருப்பது மழை காலத்தில் தண்ணீர்க் கட்டினால் கெடுதி நேரிடாமலிருப்பதற்கும், களை பிடுங்கி மண் கொத்துவதற்கும் சௌகரியமாயிருக்கும் தவிர, செடிகள் ஆழமாக வேரூன்றி ஸ்திரமானபின், அதாவது விதைத்து உத்தேசமாக ஆறுமாதமானபின், கலப்பையாலேயே களையெடுத்தலையும் மண் கிளறுதலையும் செய்யச் சாதகமாயிருக்கும்.

கிருஷிகன்.—வி. பி. சுப்பிரமணிய முதலியார்.

## SEVEN AGES OF MEN.
## மானிடரின் ஏழு பருவங்கள்.

நானிலம் யாவுமோர் நாடக சாலையே
ஆண்பெண் யாவரும் அதில்நடிப் பவர்தாம்
மறைவுந் தோற்றமும் மற்றவர்க் குள்ளன
ஆயுள் நாளில் ஏயபல் வேடம்
எடுத்தவர் புவியில் நடிப்பவ ராவார்
ஒவ்வொரு வருக்கும் ஓரேழு பருவமாம்
கக்கிக் கதறக் கைப்புறத் தேந்தி
செவிலித் தாய்வளர் சவலைப் பருவமே
பருவங் களில்முதல் பருவமதாகும்
தூண்ட நிற்ப வேண்டா வெறுப்போடு
புத்தகப் பையொடு நத்தைபோல் ஊர்ந்து
மினுங்கிய வதனம் சிணுங்கிச் சிணுங்கிக்
காலைப் பொழுதிற் கல்விக் கழகம்
மெள்ளச் செல்லும் பள்ளிப் பிள்ளை—பின்
காதலித் திருக்கும் காரிகை தன்னுடைப்
புருவ மாதிய புழுங்கிய மனத்தொடு
தன்பா மாலை சாற்றித் துதித்து
மட்டிலா உலைபோல் நெட்டுயிர்ப் பெய்தும்
காதல னாகும் காளை —அதன்பின்
அதிசப சப்தமும் அடர்புலித் தாடியும்
பேர்அழி யாவகை பேணுதல் ஊக்கமும்
எதற்கும் சண்டைக் கிழுக்கும் படியாய்ச்
சடுதியிற் கோபம் சனிப்பதுங் கொண்டு
நீர்மேற் குமிழிபோல் நிலையிலாப் புகழ்பெற
பீரங்கி வாயில் சீரங்கம் போக்கவும்
சித்தமா யிருக்கும் யுத்தவீ ரன்—பின்
செழிப்புறு சேவற் கொழுப்பின லாகிய
பேரெழில் வாய்ந்த பேழைபோல் வயிறும்
நிர்த்தாட்சணிய நேத்திரம் இரண்டும்
வழங்குங் காலத் தொழுங்கின் படியே
நறுக்கிய தாடியும் முறுக்கிய மீசையும்
நல்லுப தேசமும் நாடறி வழக்கமும்
இன்ன யாவும் இனிதுரக் கொண்ட
பண்பார் நீதி பதி—அதன் பின்னர்
கச்சற் றேகமும் கால்களிற் சோடும்
மூக்கிற் றரித்து மூக்குக் கண்ணாடியும்
இருகவுள் தோலாம் இரும்பை வீழ்ச்சியும்
பாலியத் தினிது பத்திரப் படுத்திய
மேற்சோ டிரண்டும் மிகப்பெரி தாம்படி
ஒடுங்கிச் சுருங்கிய ஓரிரு பாதமும்
ஆணவப் பெருங்குரல் அனைத்தையும் இழந்து
குழவியின் குறுகிய குரலினைப் போன்று
கீச்சென வொலிக்கும் பேச்சையே கொண்டு
தேசலாம் குன்றிய மாசுலாம் குரூபியே
ஆறும் பருவமாம்—அதன் பின்னர்
பல்லும் பார்வையும் சொல்லும் சுவையும்
யாவையும் இழந்து யாவையும் மறந்து,
மறுவறும் சேய்என மதித்தனர் வெய்துவோன்
அடிக்கடி மாறும் இவ்வற்புத சரிதை
முடியும் இக்காட்சி யொடுமுடிந் திடுமே!

வைத்ய போதினி.

---

## பிழைக்கும்வழி.

சென்னை ஜார்ஜ் டவுன், சுங்குராம செட்டித் தெரு, ஸ்ரீ. ஜி. ஏ. வைத்யராமன் பி. ஏ. அவர்களை ஆசிரியராகக்கொண்ட "பிழைக்கும்வழி" என்னும் மாதாந்த சஞ்சிகை, பேரளவில் மாத்திரம் நில்லாமல், உத்யோகமோ, கைத்தொழிலோ, கிருஷிகமோ, வேறெத் தொழிலோ செய்து பிழைப்போர்க்கெல்லாம் பிழைக்கும் வழியை அண்மையிலிருந்து புகட்டும் குருவாய் விளங்குகின்றது. இதன் பொருந்திய தமிழ் நடை மிக விசேஷிக்கத் தக்கதாயிருக்கிறது. இச்சஞ்சிகைக்கு விஷயதானஞ் செய்பவர்களோ அநுபவமுதிர்ந்த பெரும் பட்டதாரிகளும் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு பாஷைகளையும் ஐயந்திரிபறக் கற்ற மேதாவிகளுமாயிருக்கின்றார்கள். திராவிடமாக்களெப்பாலாரும் தாங்கள் ஜீவிக்கும் வழியைப் புகட்டும் சத்குருவாகிய இந்தப் "பிழைக்கும் வழி"க்கு மித்திரராகி யாதரிப்பது அவசியமென்று எண்ணுகிறோம். இச்சஞ்சிகையின் வருஷ சந்தா நாலு ரூபாய் தான்.

திராவிட மித்திரன்.



## REVIEW OF THE PRESS.
## பத்திரிகை ஆராய்ச்சி.

---

### INPROVEMENT OF SOIL.
### நிலத்தன்மை மாற்றம்.

இவ்விஷயமாக கார்த்திகை மாஸத்து "கமத்தொழில் விளக்க"த்தில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

கிருஷிகன், நிலம் எப்பொழுதும் எருக்கட்டாயிருக்கும்படியும், மலட்டுத் தன்மை அடையாமலிருக்கும்படியும் பார்த்துக் கொள்ளவேண்டும். நிலத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர்களால் நிலத்தினுடைய வளம் கெட்டுப்போகிறதென்பதும், வருஷந்தோறும் புது எருக்களை நிலத்தில் போட்டுக் கொண்டுவந்தால், அந்த வளம்குறையாதென்பதும், நம் முன்னோர் கொண்டிருந்த அபிப்பிராயங்களாகும். ஆனால் தற்கால சாஸ்திரிகளின் துணிபு என்னவென்றால், நிலத்தின் செழிப்பு பெரும்பாலும், அதில் தங்கியிருக்கிற நுண்ணிய ஜீவப்பிராணிகளைப் பொறுத்ததென்பதே:

(1) நிலத்தின் கொழுப்பு மாறுதலடையாமல் காக்கத்தகும் ஹேதுக்கள் அதை அடுத்துள்ளசெடி, வாய்க்கால் முதலியன. மலைச்சாரல் அல்லது மேட்டுச் சாரலிலுள்ள நிலத்தின் கொழுப்பு, மழை, ஆற்று வெள்ளம் முதலியவைகளால் அடித்துக் கொண்டு போகப் படலாம். மலைச்சரிவுகளின் தண்ணீர் ஓடும்படி சிறுவாய்க்கால்கள் வெட்டி இவ்விதம் வெள்ளச் சேதம் அடையாமல் தடுக்கலாம். சிலநிலங்களில் பசளைமண் காற்றினால் அள்ளப்படுவதுண்டு. இதைத் தடுப்பதற்கு நெருக்கமும், சன்னல் பின்னலுமான வேர்களுள்ள பூண்டுகளைப் பயிர் பண்ணவேணும்.

(2) நிலத்தில் தண்ணீர் அல்லது நில ஊறல் கட்டுப்பட்டு நிற்பதற்கேற்ற வழிகளைக் கையாடுவது அதன் வளம் குறைவுபடாமற் காத்தற்குரிய ஹேதுவாகும். நிலத்தின் மேற்பரப்பைச் சில அங்குலத்தாழ்வுக்கு உழுது கிளறி விட்டால் கீழ்த் தரையிலுள்ள ஈரம் மேலுக்கு ஏறிவந்து நிலத்தைக் காய்ந்து போகாமல் காத்துக் கொள்ளும்.

(3) நிலத்தின் வளத்துக்கு நைட்ரொஜன் என்னும் வஸ்து அவசியம். பாக்டீரியா என்னும் நுட்பமான புழுக்களால் இந்த நைட்ரொஜன் பூமிக்குள் சேர்க்கப்படுகிறது. நெற்றுள்ள பூண்டுகள், சணல், கொள்ளு, பயறு, அவரை முதலிய பூண்டுகளின் வேர்களே இந்த ஜெந்துக்கள் ஜீவித்துப் பெருகும் விசேஷ ஸ்தானங்கள். இதனால் நெல் விளையும் நிலங்களில் இடைக்கிடை மேற்குறித்த பயிர்களைப் பயிர்செய்தால் நிலத்தின் கொழுப்பு புலப்படுமென்பது சாஸ்திரத் துணிபு.

(4) நிலத்தின் செழிப்புக்கு "பாஸ்பரஸ்" என்னும் ஒரு மாசூல் அவசியம். இது ஸத்து மூலமாயும், வெள்ளத்தாலும் நிலத்திலிருந்து எடுக்கப்பட்டு போகிறதெனப்படுகிறது. அதிக எரு இடுவதாலும் பாஸ்பரஸ் குறைந்து போகுமெனக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

(5) "பொட்டாஷ்" என்னும் சாம்பல் காரமும் நிலத்தின் கொழுப்புக்கு அவசியம். மேற்குறித்த பொட்டாஷ் குறையாமலிருப்பதற்கு அடிக்கடி சாம்பல் எருவிடவேண்டும்.

(6) நீறு என்று சொல்லப்படும் சுண்ணாம்புக் காரமும் அவசியம். நவச்சார உப்பிடுவதால் இந்தக் காரம் குறையாது, நிலத்தின் புளிப்புத்தன்மையை இது அகற்றுகிறது. இப்படிப்பட்ட விஷயங்களைக் கவனித்து நிலத்தின் வளத்தை காப்பாற்ற வேண்டும்.

---

### SUNLIGHT AND ITS USE.
### சூரியகிரணமும் அதன் உபயோகமும்.

இந்தவிஷயமாக ஜனவரி மாஸத்து "வைத்திய போதினி" யில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

ஐரோப்பாவிலுள்ள சில டாக்டர்கள் சூரியகிரணத்தைக் கொண்டு எல்லா வியாதிகளையும் சுலபமாய் சொஸ்தப்படுத்தலாமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். மேல்நாட்டில் டென்மார்க்கு தேசத்திலுள்ள "கோபன்ஹேகன்" என்னும் பட்டணத்தில் டாக்டர் ஒருவர் சூரிய கிரணத்தைக்கொண்டும், மின்சார வெளிச்சத்தைக் கொண்டும் வியாதியைச் சொஸ்தப்படுத்தும் முறையைக் கண்டுபிடித்தார். லண்டனிலுள்ள இளவரசி இந்த முறையில் பிரியம் கொண்டு "வொயிட்சாபெல்" என்னுமிடத்திலுள்ள ஆஸ்பத்திரியில் இந்தப் பிரயோகத்தைச் செய்ய 5000 பவுன் சொந்தத்தில் செலவு செய்திருக்கிறார். அந்த ஆஸ்பத்திரியில் இந்த நவீன

சிகிச்சை நடந்து வருகிறது. சூரிய கிரணத்தினால் பிணியாளிகளை சொஸ்தம் செய்வது மிகவும் ஆச்சரியகரமானது. இந்தஆஸ்பத்திரியில் பிரதிதினமும் இந்த சிகிச்சை செய்யப்பட்டுவருகிறது. பிணியாளிகளை ஒரு ஊஞ்சலாடும் நாற்காலியில் இருக்கச் செய்து அவர்களுக்கு முன்னிலையில் ஓர் மின்சார விளக்கை வைத்திருக்கிறார்கள். அங்கங்கே தூர திருஷ்டிக் கண்ணாடிகளும் வைத்திருக்கிறார்கள். இந்த தூர திருஷ்டிக் கண்ணாடிகளின் வழியாய் சூரிய கிரணம் ஊடுருவிச்சென்று நோயாளிகளைத் தாக்குகிறது. ஒவ்வொரு நோயாளி இடத்திலும் ஒவ்வொரு தாதி நின்றுகொண்டிருக்கிறாள். இவள் அந்தக்கண்ணாடிகளைப் பற்பல விதமாய்த் திருப்பிக் கிரணம் நோயாளியின்மேல்படும்படிச் செய்வாள்.

சூரியகிரணங்களும், மின்சாரவெளிச்சமும் பார்வைக்கு வெண்மையாகக் காணப்படினும் உண்மையில் அவைகள் பலவர்ணங்கள் சேர்ந்திருக்கின்றன. ஸ்படிகமணி, கண்ணாடி முதலியவைகளைக் கண்ணெதிரில் வைத்து சூரிய கிரணத்தை உற்றுப்பார்த்தால் ஒரு பக்கம் சிவப்புக் கலந்த மஞ்சள் நிறமும் மற்றொரு பக்கம் கறுப்புடன் கலந்த ஊதா நிறமும் காணப்படும். இந்த நான்கு வர்ணங்களுள் சிவப்பு, மஞ்சள், இரண்டும் உஷ்ணமென்றும், மற்ற இரண்டும் குளிர்ந்த ரஸாயனக் கிரணமென்றும் கொள்ளப்படுகிறது. அதாவது பின்சொன்ன இரண்டும் உஷ்ணமில்லாமல் நோய்களையும் பரிகரிக்கக்கூடிய சக்தியுடையவைகளாய் இருக்கின்றன. உதாரணமாக ஹைட்ரோஜன், க்ளோரீன் என்னும் இருவித வாயுவை ஒரு புட்டியில் கலந்துவைத்து அதன்பேரில் சிவப்பு கிரணம் படும்படிச் செய்தால் உள்ளிருக்கும் வாயுக்கள் எவ்விதமான மாறுதலும் அடையாது. ஆனால் நீலநிறக் கிரணம் பட்டாலோ மாறுதலடையும். இந்த விஷயம் புகைப்படம் பிடிப்பவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இந்தசூரிய கிரணத்தை மனித தேகத்துக்குள் செலுத்தக் கூடுமென்று டாக்டர்கள் அநேக பரிக்ஷை செய்து பார்த்து முடிவுசெய்தார்கள். மலேஜ்வரம், விஷபேதி முதலியவைகளால் பீடிக்கப் பட்டவர்களுடைய சரீரத்தில் நீலக்கண்ணாடியின் வழியாய் சூரிய கிரணத்தையும், மின்சார வெளிச்சத்தையும் பிரயோகித்ததில் விஷக்கிருமிகள் இரண்டு விநாடியில் மரணமடைந்து நோயாளிகள் சொஸ்தப்பட்டார்கள். இதைப்போலவே அநேக வியாதிகளை சூரிய உஷ்ணத்தினால் சொஸ்தப்படுத்தி வருகிறார்கள். இந்த முறையால் நோயாளிகளுக்கு வருத்தமாவது அபாயமாவது ஏற்படுவதில்லை. ஆனால் இந்த முறையினால் நோயாளி சொஸ்தப்பட சிகிச்சையை நீண்டகாலம் அனுஷ்டிக்க வேண்டியிருப்பதால் நோயாளிகளில் சிலர் இதை வெறுக்கிறார்கள். ஆனாலும் இந்த முறை சிகிச்சை நன்மையென்பதில் தடையில்லை.

## SEED SELECTION.

## விதை தெரிந்தெடுத்தல்.

இந்த விஷயமாய் தை மாதக் "கிருஷிகன்" பத்திரிகையில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

"விதையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா?" என்று பழமொழி வழங்குகிறது. இதன் கருத்து நல்ல விதைகளாய்த் தெரிந்தெடுத்து விதைத்தால் பயிரும் நன்றாய் இருக்குமென்பது தான். ஆனால் குடியானவர்களோ அறுப்பாகும் நாளில் வயலில் புகுந்து நன்றாய் விளைந்த பாகத்தில் சில கதிர்களையெடுத்து விதைக்கென்று பொறுக்கி மணியைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இப்படிச்செய்வதில் பிடுங்கப்பட்ட தூர்கள் நோயில்லாதவையோ விதைகள் சரியான மாதிரிவிதைகள் தானோ என்பதைப்பற்றிக் கவனிப்பதில்லை. இதுவே மாசூல் குறைவதற்குக் காரணமாகிறது. இது விஷயமாய் ஸர்க்கார்ப்பண்ணையிலும், சிவகிரி கோர்ட்-ஆப்-வார்ட்ஸ் பண்ணையிலும் சோதனைசெய்து நோயற்ற பயிராகவும், தூர்கள் அதிகமாய்க் கிளைத்திருக்கிற பயிராகவும், ஒரே ஜாதி நெல்லாகப் பயிர்களை விருத்தி பண்ணி உயர்ந்த மாசூல் கையாடி வந்திருக்கிறார்கள்.

அவர்கள் என்ன செய்வார்களென்றால்:—

(1) பயிர்கள் கிளைத்துக்கதிர்வாங்கும் தருணத்தில் நிலத்திற்குப் போவார்கள். போய், அங்கு இருக்கும் தூர்களில் புழுப் பூச்சி முதலிய நோயில் அகப்படாமலும், தூர்கள் அதிகமாய்க் கிளைத்தும் உள்ள செடிகளாகப் பார்த்துக்கொண்டு, அவைகளுக்கு வெளுப்புத்துணிகட்டி அடையாளமாக வைத்துக்கொள்ளுவார்கள்.

(2) அறுவடையாவதற்கு முன்னால் வயலுக்குப் போய் இந்தத் தூர்களில் நோயற்ற தூர்களாய்ப் பார்த்துப் பிடுங்கிக்கொண்டுபோய், தனிமையாய் அடித்து விதையைப் பத்திரப்படுத்திக் கொள்ளுவார்கள். அடுத்த வருஷம் அந்தவிதைகளை நாற்றுப் பாவி, வேறாய் நட்டுவர, பயிர் செழிப்பாய் வளர்ந்து, மாசூலையும் கொஞ்சம் அதிகமாகவே தரும். அந்த வருஷமும் முன்மாதிரியே விதை பொறுக்கிவரும் பக்ஷத்தில் பயிர்கள் கிளைக்கும் ஸ்வபாவமும், நோய் நொடியில் அடிபடாத திடமும், அதிகரித்துப் பலனையும் அதிகரிக்கச் செய்கிறது. இது விஷயத்தில் கைகண்ட அநுபவத்தை அடைந்த சிவகிரிப் பண்ணையில் விசாரித்தால் இதன் உண்மை சுலபமாய்த் தெரியும்.

(3) தவிர கதிர் அறுவடையாவதற்கு முன்னாகவே, தூர்களில் நல்ல பருமனையும், நோயற்றதாயும் உள்ள மணிகளிருக்கும் தூர்களைப் பொறுக்கி, கதிர்களிலுள்ள மணிகள் அந்த வகையைச் சேர்ந்தவைகள்தானா என்று கவனித்து, ஸரியான நெல் விதைகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு தனிமையாய் (மற்ற நெற்கதிர்களுடன் சேராமல்) அடித்து அந்த விதையை அடுத்த வருஷம் நாற்றுப் பாவி அந்த வருஷமும் முன்மாதிரியே விதை பொறுக்கி வரும் பக்ஷத்தில், கல்ப்பென்பது சிறிதுமில்லாமல் ஒரே ஜாதி நெல்லாய் மாசூல் அகப்படுவதோடு, மாசூலும் அதிகப்படுகிறது.

இதுவிஷயமாய் இந்த வருஷம் ஸர்க்கார்ப் பண்ணையில் ரொம்ப கவனமாய் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இப்படி விதை தெரிந்தெடுத்து ஒற்றை நாற்றாய் நடுவதினால் உண்டாகும் பலன் இப்போது அதிகமாய்த் தெரியாவிட்டாலும் சில வருஷங்களுக்கு ஜாக்கிரதையாய் இந்த முறையை அனுஸரித்து வந்தால் சிவகிரியில் அடைந்திருக்கும் அனுபவத்தைப்போல, அதிக மாசூலை அடையக்கூடுமென்பது நிச்சயம்.

## THE TROUBLES OF THE FARMER.

## விவஸாயியின் தொல்லை.

இந்த விஷயமாக அக்டோபர் மாஸத்துக் "கமத்தொழில்" விளக்கத்தில் ஒருசிறு வியாஸம் காணப்படுகிறது.

விவஸாய ஸங்கங்கள் (இவைகளோடு தென் இந்தியாவில் விவஸாய இலாகாவையும்சேர்க்கலாம்) அங்கங்கே விவஸாயப் பொருட்காக்ஷிகளை வைப்பதாலும், ஸாகுபடி செய்வதில் புதிய வழிகளைக் காண்பிப்பதாலும், ஸாகுபடிக்கேற்ற புதிய விதைகள், கிழங்குகள், பழவர்க்கங்கள் இவைகளை வரவழைத்துக் கொடுப்பதாலும், துண்டுப்பத்திரிகைகள், பிரஸங்கங்கள் இவைகள் மூலமாய் போதிப்பதாலும் விவஸாயிகளுக்கு தைரியத்தை உண்டுபண்ணி வருகின்றன.. ஆனால் விவஸாயிகளுடைய பெருங்குறைகள் இரண்டு. முதலாவது, அவர்களுக்கு நயமான வட்டிக்குப் பணம் கிடைப்பதில்லை. இந்தக் கஷ்டததைத்தீர்க்க ஐக்கிய நாணய ஸங்கங்களும், ஐக்கியநாணய பாங்கிகளும் ஏற்பட்டுவருகின்றனவானாலும், இன்னும் அவைகள் வேரூன்ற வெகுநாள் பிடிக்கும் அது வரையில் இந்தக் கஷ்டம் நிவர்த்தியாக முடியாது. இரண்டாவது, கிராமங்களில் திருடர்களால் உண்டாகும் தொந்தரவு ரொம்பவும் அதிகம். காய்த்த தேங்காயையும், போட்ட வாழைத்தாறையும், இரவில் திருடர்கள் வெட்டிக்கொண்டு போய்விட்டால், விவஸாயி என்னமாய் விலை உயர்ந்த பலன்களைப்போட்டுப் பயிர் செய்ய துணிவு உண்டாகும்? தென்னிந்தியாவில் கிராம முன்ஸீப்புகள் இப்படிப்பட்ட திருட்டுகளைக் கண்டித்து வருவார்களானால் இந்தக்குறை வெகு லேசாய் நிவர்த்தியாகிவிடும்.

## TEN COMMANDMENTS ABOUT DRY CULTIVATION.

## புஞ்சைவிவசாயப் பத்து கற்பனைகள்.

இந்த விஷயமாக தை மாஸம் "தென்னிந்தியா விவஸாய"த்தில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

(1) **ஆழஉழவாயாக:**—இதனால் மழை எளிதில் மண்ணுக்குட் செல்லும். மழைவெளியே போகாது. வேர் ஆழமாய்ப் போகும். பயிருக்கு ஆகாரம் அதிகப்படும்.

(2) **மண்ணின் கம்மலுடைப்பாயாக:**—இதனால் நிலத்து ஈரம் காக்கப்படுகிறது. மழைஜலம் மண்ணில் இறங்கும். ஈரம் அதிகமிருப்பதால் ஆகாரம் அதிகம் பயிருக்கு உதவுகிறது. பயிர் இரண்டு அங்குலம் உயர்ந்ததும் மண்ணைக் கலைக்கவேண்டும்.

(3) **நிலம் சமப்படுத்துவாயாக:**—சமமான நிலத்தில் காற்றுக்கு படும் மண்ணணுக்கள் குறைவு. வரப்புகட்டிய நிலத்தில் நீர் ஆவியாவது அதிகம். சமமான நிலம் மழையைச் சீக்கிரமும் அதிகமும் குடிக்கும். வரப்புகளில் மழை நிற்காது.

(4) **கோடை உழவு எடுப்பாயாக:**—இதனால் நிலத்தில் ஈரம் நிலைக்கிறது. பூண்டுகளும் நோய்களும் குறையும். கம்மல் உடைத்துப் புழுதிசெய்வது சிரேஷ்டம்.

(5) **இந்திரவஸ்து சேர்ப்பாயாக:**—இது நிலத்தில் ஈரத்தையும் உணவையும் பிடித்துவைக்கும். மண் அணுக்கள் இயற்கை மேன்மைப்படும். உணவு உதவக்கூடிய ஸ்திதியடையும். குடித்தனஎருவும் பசுந்தாள் எருவும் சிரேஷ்டம். களைப் பூண்டுகளைப் பசுமையிலேயே உழுதுவிடவேண்டும்.

(6) **களைமுளைப்பதைத் தடுப்பாயாக:**—பூண்டுகள் ஈரத்தையும் உணவையும் உண்ணும். பயிருக்கு நிழலைக்கொடுக்கும். ஆதலால் பயிர் செழிக்காது.

(7) **தருவித்து உபயோகிப்பாயாக:**—மழை காலத்தில் பயிரிடுவது சிரேஷ்டம். வசந்தகால விளைவு குறைவு.

(8) **தானியம் மூன்று நாலு வருஷத்துக்கு விளைவி:**—தானியத்துக்குச் செய்யவேண்டிய செய்நேர்த்தியால் மண் இளகி ஈரம் காக்கும். பூண்டு தொலையும். நோய்கள் குறையும் மனித மிருகங்களுக்குத் தானியங்களும் தீவனமும் கிடைக்கும்.

(9) **அப்போதைக்கப்போது கோதுக்காய் பயிரை விளைவி.**—இதனால் மண் கொழுமையடையும். பூண்டும் நோயும் தொலையும். மாட்டுத் தீவனமும் மனிதர்களுக்கு உணவும் உண்டாகும்.

(10) **கால்நடைகளைப் பாதுகாப்பாயாக:**—இவைகளால் அதிக லாபமுண்டு. இவை நிலத்துக்கு உரமேற்றும். இவைகளால் குடித்தன க்ஷேமமுண்டாகும்.

## HINTS ON TOBACCO CULTIVATION.

### புகையிலைச் சாகுபடி குறிப்புகள்.

புகையிலைச் சாகுபடி விஷயமாய் நல்ல அனுபவமுடைய ஒருவர் சொல்லும் சில குறிப்புகளை இவ்விடம் எழுதுகிறோம். இந்தக்குறிப்புகள் புகையிலையின் தன்மையை நயப்படுத்துவதில் பிரயோஜனமுடையனவாகும் :—

1. ஒரு இடத்திலே பயிர் செய்யப்பட்ட வித்திலிருந்து உண்டாக்கப்பட்ட கன்றுகளை அந்த இடத்தில் நடக்கூடாது. அதாவது, ஒரு இடத்தில் நடப்படும் புகையிலைக்கன்றுகள் வேறிடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வித்திலிருந்து உண்டாக்கப்படவேண்டும். ஒரு இடத்தில் புகையிலைச் சாகுபடி செய்கிறவர்கள் வேறொரு இடத்தில் சாகுபடி பண்ணுகிறவருடன் வித்துக்களை ஒவ்வொரு முறையும் மாற்றிக்கொள்வதினால் இதை லகுவில் நடப்பிக்கலாகும்.

2. புகையிலை நாற்றுப்போடும் இடங்கள் மிகவும் கவனமாய்த் தெரிந்தெடுக்கப் படவேண்டும். மழை காலத்தில் தண்ணீர் உடனே ஓடிப்போகாமல் கட்டுப்பட்டு நிற்கும் நிலம் புகையிலை நாற்றுப்போடுவதற்கு ஒரு போதும் உதவாது.

3. புகையிலை வித்து விதைக்கப்படுவதற்கு முந்தி சாம்பலுடன் கலக்கப்பட்டு, நாற்றை மேடை முழுவதிலும் ஸமனாய்ப்பரவவேண்டும். காலையில் பொழுது ஏறுவதற்கு முன்னும், மாலையில் 5 மணிக்குப்பின்னுமாய் ஒரு நாளுக்கு இரண்டு முறை நாற்றுமேடைக்குத் தண்ணீர் தெளிக்கவேண்டும்.

4. நாற்று மேடையிலுள்ள கன்றுகளை புழுக்கள், பூச்சிகள் கிட்டாதபடி, மிகவும் கவனமாய்ப் பார்த்து வரவேண்டும். ஒரு முறை நாற்றின் குருத்தைப் புழு குத்தினால், பின்வரும் இலைகள் முறிந்து போக ஹேதுவாகும்.

5. புகையிலைநாற்று 3 அல்லது 4 அங்குலம் உயரமானவுடன் எடுத்து நடவேண்டும். நடும்போது வேர்கள் மடங்கி அல்லது திருகிப்போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

6. புகையிலை நாற்றுகளை நட்டவுடன் அவற்றிற்கு நிழல்போடுதல் அவசியமான காரியம். குறைந்த பக்ஷம் மூன்று நாளுக்காகிலும் நிழல்போடுதல் அவசியம்.

7. நடப்பட்ட புகையிலைக்கன்றுகள் வாட்டம் தெளிந்து உயிர் கொண்டவுடன் ஒவ்வொரு கன்றின் அடிக்கும், பக்கத்திலிருக்கும் மண்ணைக் கூட்டி அணைக்கவேண்டும். இப்படிச்செய்வதினால் புகையிலைக்கன்று நிரைகளுக்கிடையில் நீர் பாய்ச்சுவதற்கு வசதியான வாய்க்கால்கள் ஏற்படுவதோடு, கன்றுகளும் பலப்பட ஹேதுவாகும்.

8. ஒரு கிழமையின்பின் இரண்டாம் முறையும் கன்றுகளின் அடிக்கு மண் கூட்டி அணைத்துக் கீழேயுள்ள இலையின் மட்டம் வரைக்கும் உயர்த்திக் குவித்தல் வேண்டும். உயரமாய் மண்ணைக் குவிப்பதினால் கன்றுகள் அதிகமாய் வேர்விட்டு உயரமாயும், பலமுள்ளவைகளாயும் வளரும். இன்னும் சில நாட்களான பிறகு மூன்றாம் முறையும் மண் கூட்டி அணைக்கவேண்டும்.

3. இலைகள் முற்றியவுடன் அடியில் தொடங்கி ஒவ்வொன்றாய் நறுக்கி எடுக்கவேண்டும். இலைகள் போதிய அளவாய் முற்றி விட்டனவோ என்பது அனுபவத்தினாலே தீர்மானிக்கப்படவேண்டும். ஒவ்வொரு இலையும் கவனமாய் நறுக்கப்பட்டு மடங்காமலும், சுருங்காமலும் விரிந்தபடியே கடகங்களில் வைத்துக்கொண்டு போகவேண்டும். இலை மடங்கினால் ஒவ்வொரு மடக்கும் கறுத்து நிறம்மாறிப் பழுதாய்ப்போய்விடும்.

10. வெட்டி எடுக்கப்பட்ட இலைகள் பந்தலின் கீழ் அல்லது வீட்டுத் தாழ்வாரத்தில், கயிற்றில் கோத்துத் தூக்கப்படவேண்டும். ஒரு இலையில் மற்ற இலை முட்டாதபடி தொங்கவிடவேண்டும்.

11. இலைகள் உலர்ந்து காய்வதற்கு 19 நாள்முதல் 22 நாள் வரைக்கும் செல்லும். நடுநரம்பைப் பிடித்து அமர்த்திப் பார்ப்பதினால் இலை உலர்ந்தது உலராததைப்பற்றி லகுவில் தீர்மானம் செய்யலாம்.

12. இலைகள் உலர்ந்தபின் அவைகளைக் கட்டுகளாய்க் கட்டிப் புகைபோடுதல்வேண்டும்.

13. புகையிலைப் பயிருக்கு மிருக எருப்போட்டால் இலை நயப்படமாட்டாது. தடிப்பான இலையைவிட நயமான புகையிலையே எந்தநாட்டிலும் செல்லக்கூடிய சரக்காகும்.

---



## THE BOYS' SECTION.

### சிறுவர் பகுதி.

---

TOUR ROUND THE WORLD.

உலகத்தைச்சுற்றி வருகை.—பைஸிக்கிள் வண்டியிலேறி இரண்டு வருஷத்திற்குள் உலகத்தைச் சுற்றி வருவதாக ஒரு லட்சம் தங்கப்பவுன் பந்தயம் வைத்துக்கொண்டு ஒரு பிரபு உலகத்தைச்சுற்றி வருகிறாராம். இதனடுத்த ஏப்ரல் மாஸம் முதல் தேதிக்குள் அவர் உலகத்தைச்சுற்றிமுடிக்க வேண்டியதாம்.

EVILS OF SMOKING.

சுருட்டுப்பிடிப்பதின் கெடுதி.—ஒரு வைத்தியர், பதினைந்து வயதிற்குக் கீழ்ப்பட்ட அநேகம் பையன்கள் சுருட்டுப் பிடிப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, அவர்களுடைய தேகஸௌக்கியத்தைப் பரிக்ஷித்துப் பார்க்க விரும்பி, 38 பையன்களைப் பொறுக்கி எடுத்து, பரிக்ஷித்துப்பார்த்தார். 22 பெயர்களுக்கு ரத்தோட்டத்திலும், ஜீரணேந்திரியத்திலும், கோளாறுகள் உண்டாகி, மார்பு படபடவென்று அடித்துக்கொண்டு, மதுபானத்தில் அதிகப்பைத்தியமுடையவர்களாய்க் காணப்பட்டார்கள். 12 பெயர்களுக்கு மூக்கிலிருந்து அடிக்கடி ரத்தம் வழிந்துகொண்டும், 10 பெயர்களுக்கு நல்ல நித்திரையில்லாமலும், 12 பெயர்களுக்கு வாயில் புண்ணாகவும் இருந்தது. இவைகளெல்லாம் புகையிலையை நிறுத்தினவுடன் நின்றுவிட்டன. இப்படிப்பட்ட கெடுதிகளை உத்தேசித்து ஸமீபத்தில் மைஸூர் சமஸ்தானத்தில் செய்து இருக்கும் சட்டமானது எல்லாரும் அங்கீகரிக்கக் கூடியதுதான். இதனுடைய நிபந்தனைகள் பின்வருவன.—16 வயதிற்குக் கீழ்ப்பட்ட பையன்கள் சுருட்டு உபயோகப்படுத்தக்கூடாது. அவர்களிடம் ஏதாவது புகையிலையிருந்தால், அதை போலீஸார் பலாத்காரமாய்ப் பிடுங்கிவிடலாம். முதல் தடவை குற்றம் செய்பவர்கள் அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்புவிக்கப்பட்டு, கண்டிக்கப்படுவார்கள். இரண்டாவது தடவை செய்தால் 1 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். மூன்றாவது தடவையும்செய்தால் சரீர தண்டனை விதிக்கப்படும்.

SWIMMING COMPETITION.

நீந்துவதில் பந்தயம்.—400 கஜம் தூரம், ஓடும் தண்ணீரில் எவர் முந்தி நீந்துகிறார்களோ அவர்களுக்கு இனாமளிக்கப்படும் என்ற போட்டிப் பந்தயத்தை அனுஸரித்து ஸிட்னி நகரத்தில் நான்கு பேர் முன் வந்தார்கள். அந்த நால்வர்களுக்குள் ஹார்ட்விக் என்பவரே 5 நிமிஷம் 35 விநாடிக்குள் நானூறு கஜம் நீந்திப்போய்ப் பந்தயத்தைக்கெலித்துவிட்டாராம். மற்ற மூவருள் இருவர் இரண்டிரண்டு கஜம் தூரத்திற்குள்ளாக முந்தி பிந்தியுமாகப் போய்ச் சேர்ந்தார்களாயினும், கடைசியானவர் நடுமத்தியில் பலஹீனமடைந்து முழுதூரமும் போக முடியவில்லையாம்,

ADVICE TO YOUNG MEN.

சிறுவர்களுக்குப் புத்திமதி :—

1. குடிப்பதைத்தவிர்.
2. முன்னுக்கு வருவதில் தைரியமாயிரு.
3. ஒரு பொழுதும் தைரியத்தை விடாதே.
4. எல்லாரிடத்தும் அமைதியாயிரு.
5. ஒரு பொழுதும் பொய் சொல்லாதே.
6. உன் காலத்தை நல்ல விஷயத்தில் செலவிடு. வீண்காலம் போக்காதே.
7. ஒவ்வொரு விஷயத்திலும் ஊக்கமுடையவனாயிரு.
8. நீ கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிடு.
9. உனக்கு நேரிடும் தொந்தரவைப் பொறுமையாகப் பொறுத்திரு.
10. அதிர்ஷ்டம் வரும் என்று நம்பியிருக்காதே.
11. பிரயோசனமற்றவர்களுடன் பழக்கம் வைத்துக்கொள்ளாதே.
12. உன்வாழ்நாளில் தொந்தரவுண்டாமாயின் அப்பொழுது தைரியத்தை விடாதே.
13. ஒழுங்கை முக்கியமானதாக நினைத்து அதைக் காப்பாற்றிக்கொள்.
14. உன் சக்திக்கு மீறின விஷயத்தில் தலையிடாதே.
15. தீரயோசித்து ஒரு காரியத்தைச்செய்.
16. உன் வேலையில் ஒவ்வொரு பாகத்தையும் வெகு ஜாக்கிரதையாய்ச் சோதித்துப்பார். பிறகு கஷ்டப்பட்டு வேலை செய். நீ சித்திபெறுவது நிச்சயம்.

## A Dog Talks.

**நாய் பேசுகிறதாம்.**—ஜர்மன்தேசத்தில் விநோதப் பிறப்பான ஒருநாய் பேசப் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறதாம். அது ஆறுமாஸக்குட்டியாக இருக்கும்போதே சிற்சில வார்த்தைகள் பேசப் பயிற்றுவிக்கப்பட்டதாம். அதற்கு அதிகம் பேசத்தெரியாவிட்டாலும், அற்பசொற்பமாய்ப் பேசத்தெரியுமாம். அந்தநாயைவைத்து வளர்க்கும் பிரபு ஒரு நாள் தமது விருந்தினருடன் விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது இந்த நாயும் அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்ததாம். அப்போது அதன் ஏஜமானன் அதைப்பார்த்து உனக்கொன்றும் வேண்டாமா என்று கேட்டபோது அந்த நாய் வேண்டும் வேண்டுமென்று தெளிவாயும், திட்டமாயும் சொன்னதாம். அப்போது அங்கே விருந்துக்கு வந்திருந்த யாவரும் நாய் பேசியதைக் கண்ணாரக்கண்டும், காதாரக்கேட்டும், ஆச்சரியப்பட்டார்கள். அதன்பின் அதன் எஜமானன் அந்த நாய் பேசுவதில் அதிகமாய்ப்பழகும்படி விரும்பி, உன் பேரென்ன என்று அந்த நாயைக்கேட்க, அந்த நாய் தன்பேர் 'டொன்' என்று சொன்னதாம். அதன்பின் உனக்கு என்ன செய்கிறதென்று கேட்க, அந்த நாய் எனக்குப் பசிக்கிறதென்று பதில்!சொல்லிற்றும். அந்த நாய் சமையல் அறைக்கு வரும்போதெல்லாம் பலகாரமென்று சொல்லப் பழக்குவிக்கப்பட்டதாம். ஆகையால் பலகாரத்தைக் காணும்போதெல்லாம் எனக்குப் பலகாரம் வேண்டுமென்று மிகவும் திட்டமாயும், தெளிவாயும், திருத்தமாயும் சொல்லுமாம். ஆகையால் எனக்குப்பசிக்கிறது பலகாரம் கொடுக்கவேண்டுமென்று கேட்கும்போது, அதற்குப் பலகாரம் கொடுக்காவிட்டால் அது பலமுறையும், மெத்தவும் வற்புறுத்தி எனக்குப் பசிக்கிறது, பலகாரம் கொடுங்களென்று உரத்த சத்தமாய்ப் பேசுமாம். இந்த நாய் பேசுவதை முதலில் காண்கிற எவரும் திகிலடைந்து ஓடுவது வழக்கமாம். ஒருநாள் அது சமையல் அறையில் உலாவித்திரியும்போது சமையல்காரி கறிவகைகள் சமைக்கும்படி, இறைச்சியை அரிந்துகொண்டிருந்தாளாம். அப்போது அந்த நாய் எனக்குப் பசிக்கிறது, ஆகையால் இவைகள் எனக்கு வேண்டுமென்று சொல்லிற்றும். உடனே அந்த வேலைக்காரி திகிலடைந்து ஸாமான்களையெல்லாம் நாய்க்குப் போட்டுவிட்டு குசினியைவிட்டு ஓடிவிட்டாளாம்.

## Ages of Animals.

**உயிர்ப்பிராணிகளின் ஆயுட்காலம்.**—ஸாதாரணமாக நம்முடைய வீடுகளிலும், வீடுகளைச் சுற்றிலும் சஞ்சரிக்கும், ஈக்கள் ஒரு வருஷகாலத்துக்குக் குறைவாயும், வெட்டுக்கிளிகள் ஸுமார் 9 மாஸமும், கொசுக்கள் இரண்டு அல்லது மூன்று மாஸம் வரையும், தேனீக்களின் ராணி ஒன்று அல்லது இரண்டு வருஷத்துக்கும், உயிரோடிருந்து மாண்டு போகின்றனவாம். லார்ட் அவிபரி என்னும் பிரபு பாராட்டிச் சீராட்டிப் பாராமரித்து வந்த எறும்புகளில் ஒரு பெட்டை எறும்பு, ஸுமார் 15 வருஷகாலமாய் உயிரோடிருந்ததாகத் தெரியவந்திருக்கிறது. அற்பப் பிராணிகள் இவ்விதம் சொற்பகாலமாய் ஜீவனோடிருப்பதாக அறியப்பட்டிருந்த போதிலும், இயல்புக்கு விரோதமாக மீன்ஜாதிகள் நீண்டகாலம் ஜீவனோடிருக்கிறதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. குளங்களில் விட்டு வளர்க்கப்படும் "லெம்பிரேயிஸ்" என்னும் ஒருவகை மீன்ஜாதி ஸுமார் 60 வருஷம் வரையும் ஜீவனோடிருப்பதாகத் தெரியவந்திருக்கிறது. அன்றியும் பைக், கார்ப் என்னும் பேருள்ள மீன்வகைகள் 150 வருஷம் வரையும் ஜீவனோடிருக்கின்றனவாம். சுவேபியன் ஏரியில் வாஸம் செய்த ஒரு பெரிய பைக்மீன் 267 வருஷம்வரையும் உயிரோடிருந்ததாக அறியப்பட்டிருக்கிறது. ஆமைகள் இருநூற்றைம்பது வருஷத்துக்கு அதிகமாய் ஜீவனோடிருக்கின்றனவாம். முதலைகளோ ஒரு நூற்றாண்டு வரையும் வளர்ந்து அதன்பின் மாண்டு போகின்றனவாம். கிளிகள் எண்பது வருஷத்துக்கும், காகம் அறுபத்தொன்பது வருஷத்துக்கும், கொக்குகள் அறுபது வருஷத்துக்கும், ஜீவனோடிருக்கிறதாக அறியப்பட்டிருக்கிறது. நீடிய ஆயுளுள்ளதாகச் சொல்லப்படும் கழுகுகள் நூறுவருஷம் வரையும் உயிரோடிருக்கின்றனவாம். அன்னங்களில் ஒன்று எழுபது வருஷம் வரையும் உயிரோடிருந்ததாகவும், வெள்ளைத் தலைக்கழுகுகளில் ஒன்று நூற்றி எண்பது வருஷம் வரையும் உயிரோடிருந்ததாகவும் அறியப்பட்டிருக்கிறது. நாய்கள் பதினைந்து முதல் இருபது வருஷம் வரையும், பூனைகள் இருபது வருஷம் வரையும், முயல்கள் பன்னிரண்டு வருஷம் வரையும், சுண்டெலிகள் ஆறுவருஷம் வரையும், மிருகேந்திரனாகிய சிங்கம் முப்பத்தைந்து வருஷம் வரையும் ஜீவிக்கின்றன.



# THE LADIES' SECTION.

# ஸ்திரீகள் பகுதி.

## Dill.

**சதகுப்பை.**—தாய்மார், தாங்கள் குழைந்தைகளுக்கு ஸ்தன்னியபானஞ்செய்விப்பதற்குப் பாலில்லாமல் கஷ்டப்பட்டால், அப்பொழுது இதை உட்கொண்டால் மார்பில் வேண்டிய அளவு பால் சுரக்கும்.

## Chinese Girls.

**சீனச் சிறுமியர்.**—சீனர் தம் பெண்குழந்தைகளுக்குப் பெயரிட நினைப்பது மிகவும் அருமை. முதலாம் புத்திரி இரண்டாம் புத்திரியென்று எண் முறையாகத் தம் மகளை அழைப்பதே வழக்கம்.

## A Famous Lady Swimmer.

**நீந்துவதில் பெயர் போன ஒரு ஸ்திரீ.**—லண்டனைச்சேர்ந்த டார்லிங்டன் என்னும் ஊரிலிருக்கும் 18 வயதுள்ள பிஸ்ப்ளாரென்ஸ்ட் ரொஸ்லர் என்னும்மாது ஸமீபத்தில் 9½ மணி நேரத்தில் 9 மைல் தூரம் நீந்திப் போனாளாம். அமைதியான தண்ணீரில் தன்னோடு கூட நீந்தக்கூடிய ஸ்திரி பூலோகத்திலுள்ள எந்த ஸ்திரீயாவது வரலாமென்று கேட்டிருக்கிறாள்.

## Women and Agriculture.

**ஸ்திரீகளும் விவஸாயமும்.**—ருஷியாவில் ஸ்திரீகளுக்கு விவஸாயம் செய்யும் கிரமத்தைக் கற்றுக்கொடுப்பதற்காகக் கவர்ன்மெண்டார் ஒரு வித்யாசாலையை ஸ்தாபித்திருக்கிறார்கள். அந்த வித்யாசாலையில் இப்போது 320 பெண்கள் விவஸாய சாஸ்திரங்களைக் கற்றுவருகிறார்கள். பரீக்ஷையில் தேர்ந்த பிறகு அந்தப் பெண்களுக்கு ஸர்க்கார் இலாக்காவில் வேலை கொடுப்பதாய் உத்தேசம்.

## Moscow Womens' Association.

**மாஸ்கோ மாதரின் ஸபை.**—இந்தச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் பெண்களே. இவர்கள் ஒவ்வொருவரும் தம் வாழ்நாள் முழுவதும் புருஷருடன் கூடி வாழ்வதாகச் சம்மதித்துக் கலியாணஞ் செய்து கொள்ளுதல் கூடாதென்றும், விவாகமான 5-வருஷகாலந்தான் சதிபதிகளாக வாழலாமென்றும், பின்பு தாமிருவரும் ஒற்றுமையுடன் வாழலாமென்னும் மனோதிடமுண்டாகுமாயின் எப்போதும் சதிபதிகளாக வாழலாமென்றும் தீர்மானித்தார்களாம். விந்தையே!

## Raising the age of Marriage.

**விவாக வயதை உயர்த்துவது.**—மிஸ்ஸஸ் கரோலேன் மாதராள் அமெரிக்கத்தேசத்து ஸ்திரீயாவாள். அந்த அம்மையார் சென்னையில் ஒரு பிரஸங்கம் செய்ததில் விவாக வயதை உயர்த்த வேண்டுமென்பதைப்பற்றி வியக்தமாய்ப் பேசி கேட்பவர்கட்கெல்லாம் அத்யந்த உற்சாகத்தை உண்டு பண்ணினர். ஹிந்து சிறுவர்கள் 25-பிராயத்துக்கப்பாலும் சிறுமிகள் 16-ஆனபின்பும் மணம் கொள்ளவேண்டுமென்றார். நம்நாட்டில் அந்தப் பருவத்தில் 2, 3 குழந்தைகட்குப் பெற்றோர்களாகி விடுகிறார்கள்.

## New Couples in Bulgaria.

**பல்கேரியாவில் புதிதாய்க் கலியாணமானவர்கள்.**—பல்கேரியாவில் பெண்கள் விவாகஞ்செய்தவுடன் ஒரு மாஸம் முடியும்வரையில் ஒருவரோடும் பேசாமல் வாயை மூடி வைத்திருக்கவேண்டும். இதற்கிடையில் அருமையாகப் புருஷன் ஏதாவது கேட்டால் சுருக்கமாக மறுமொழி சொல்வதல்லாமல் மற்றப்படி ஒருபோதும் அந்த மாஸம் முடியுமுன் பேசமாட்டார்கள். மாஸ முடிவில் புருஷன் அவளுடைய செய்கையை வியந்து ஏதாவது நன்கொடையளிப்பான். அதன் பின்புதான் அவர்கள் இஷ்டம்போல் வழக்கமாகப்பேச ஆரம்பிப்பது அந்த தேச வழக்கமாம்.

## Srimati Lakshminarasimhagaru.

**ஸ்ரீமதி லக்ஷ்மி நரசம்மாகாரு.**—நந்தியால் வாசியாகிய ஸ்ரீமதி லக்ஷ்மி நரசம்மாகாரு மசூலிப்பட்டினத்துக்கு வந்து ஹிந்து ஸ்திரீகளின் பழைய காலத்து நிலைமையைப் பற்றியும் ஸ்திரீகளின் தர்மத்தைப் பற்றியும் பிரசங்கம் பண்ணினார். இவருக்கு ஆறுபாஷை தெரியுமென்று சொல்லப்படுகிறது. மசூலிப்பட்டினத்தில் பிரசங்கம் செய்ததில் ஸ்திரீகள் ஆதிகாலத்திலிருந்த பெருமையைப் பற்றிப் புகழ்ந்து இந்தக்காலத்தில் அவர்களுக்குப் படிப்பில்லாமலிருப்பதால் நேரிடும் தீங்குகளைப்பற்றி வெகுபரிதாபமாய்ப் பேசினாராம். ஹிந்து ஸ்திரீகள் அவர்களுடைய பர்த்தாவுக்கு இவ்வுலகத்தில் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதல்லாமல் சாவித்திரியைப் போல மறு ஜன்மத்திலும் அவருடன் செல்வது கடமையென்று பேசினாராம்.

CHILD MARRIAGES AND POPULATION.

**பாலவிவாகமும் ஜனத்தோகையும்.**—பல விவாகத்தினால் இந்தியாவின் ஜனத்தொகை வரவர அதிகமாகிறதென்று பொது ஜனங்களுங்குள் ஒருவிதமான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அபிப்பிராயம் தப்பான அபிப்பிராயமென்று "மாடர்ன் ரிவ்யூ" பத்திரிகை சொல்லுகிறது. பால விவாகத்தினால் குழந்தைகள் அதிகமாய்ப் பிறந்து ஜனத்தொகை அதிகமாகுமென்பது ஒப்பக்கொள்ளக் கூடியதேயாயினும், சரியான தேகதிடமின்றி அதிபாலியத்திலேயே பெண்கள் பிரஸவிப்பதினால் பிறக்கும் குழந்தைகள் சடுதியில் மரணமடைகின்றன என்றும், இதனால் பாலவிவாகத்தினால் மரணமும் அதிகமாக நேரிடுகிறதென்றும் "மாடர்ன் ரிவ்யூ" பத்திரிகை அபிப்பிராயப்படுகிறது. இதனால் பால விவாகம் ஜனத்தொகையின் அதிகரிப்பைக் குறைப்பதற்கு ஏதுவாயிருக்கிறதே தவிர ஜனத்தொகையை அதிகப்படுத்துவதாயில்லை.

A BENGALI-LADY.

**வங்காள மாது.**—வங்காளத்திலிருந்து ஒரு மாது அமெரிக்காவுக்குப் போயிருக்கிறாள். இவள் இந்திய ஸங்கீதத்தில் மிகத்தேர்ச்சியடைந்தவள். முற்காலத்திலுள்ள ராகதாளங்கள் பெரிதும் பேதமடைந்துவிட்டதாகவும் அந்தக்காலத்தில் வழங்கிய வீணைகள் இந்தக்காலத்தில் வழங்கப்படவில்லையென்றும் நிரூபிக்கிறாள். இவளுடைய ஸங்கீதத் திறமையையும் இனிமையையும் அறிந்து அமெரிக்கர் மிகவும் பாராட்டுகிறார்கள். 104 டிக்ரீ வரையில் ஜுரத்தாற் பீடிக்கப்பட்டிருந்த ஒரு குழந்தையை ஸங்கீதம்பாடி சொஸ்தப்படுத்தினளாம். அமெரிக்கர் ஸங்கீதம் பாடிப் பசுக்களில் ஏராளமான பால் கறந்துவரும் வழியை முன்னமே சொல்லி இருக்கிறோம்.

WHAT WOMEN MAY DO?

**ஸ்திரீகளால் என்ன ஆகும்?**—ஸமீபத்தில் இந்தியாவில் நடைபெற்ற மாதர் மகாஸங்கத்தில் தலைமை வகித்த விஜயநகரம் ராணி பின்வருமாறு பேசினார்கள்:—தேசத்து நாகரீகத்தை அதன் ஸ்திரீகளின் நிலைமையைக்கொண்டு அறியவேண்டும். மனிதனுக்கு ஸகாயமான விஷயங்களில் வேலைசெய்வது ஸ்திரீகளின் கடமை. அவனுக்குப் புத்தி சொல்லுவதில் ஸ்திரீ ராஜதந்திரி போலவும், காரியத்தில் ஊழியம் செய்கிறவள் போலவும், தனித்திருக்கும்போது தாயைப் போலவும், அந்தப்புரத்தில் தாசியைப் போலவும், இருக்கவேண்டுமென்று நம் சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதைவிட வேறு அவளுக்கு ஒருவிதமாய் அவனுடைய கடமையைச் சொல்லுவது ஸாத்தியமல்ல. ஸ்திரீகள் நல்ல நிலைமைக்கு வருகிறவரையில் நமது ஆசாரங்கள் திருந்துவது ஸாத்தியமல்ல. நமது பிள்ளைகள் தேசத்தில் அபிமானம் வைப்பவர்களாகவும் பூர்வ சாஸ்திரத்தில் அன்பு பாராட்டுகிறவர்களாவும், ஈஸ்வரனிடத்தில் பக்தி வைப்பவர்களாயும் வளரவேண்டும். ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் நேச ஸம்பந்தம் ஸ்தாபிக்கும்படி செய்யவேண்டும்.

HINDU MUSIC.

**ஹிந்து சங்கீதம்.**—பம்பாயில் 'கந்தர்வ மகா வித்தியாலயா' என்ற பேருடன் ஒரு ஸங்கீதசாலை இருக்கிறது. சென்ற இரண்டு வருஷமாக அந்தச் சாலையில் 704 பிள்ளைகளும் 88 ஸ்திரீகளும் இருந்ததாகத் தெரிகிறது. இந்த ஸ்கூல் வருஷாந்த உற்சவத்தை ஸமீபத்தில் நடத்திப் பிள்ளைகளுக்குப் பரிசு கொடுத்தபோது, ஸர் என். ஜி. சந்தவர்க்கரும் ஸர் ஜார்ஜ் கிளார்க்கும் வந்திருந்தார்கள். ஸர் ஜார்ஜ் கிளார்க் அந்த ஸமயத்தில் சேர்மனாய் வீற்றிருந்தார். ஸர் என். ஜி. ஸந்தவர்க்கர், ஸங்கீதத்தினால் தெய்வபக்தி அதிகமாக வேண்டியதென்றும், ஆதியில் ஹிந்துக்களுக்குள் ஸங்கீதம் தெய்வபக்தியை உண்டாக்குவதில் உபயோகப்பட்டு வந்ததாகவும், இப்போது அது உயர்ந்த குலத்தைச் சேர்ந்த ஸ்திரீ புருஷர்களால் ஆதரிக்கப்பட்டது நின்றுபோய்க் கெட்ட வழிகளில் பிரவேசித்திருக்கும் ஸ்திரீகளாலும் புருஷர்களாலும் முக்கியமாய் ஆதரிக்கப்பட்டு வருவதாகவும் சொன்னார். ஸர் ஜார்ஜ் கிளார்க் செய்த ப்ரஸங்கத்தில் ஹிந்துக்களுக்குள் ஸங்கீதமானது உயர்ந்த வித்தையாகக் கற்கப்படுகிறதென்றும், ஆனால் மேல் நாட்டு ஸங்கீதத்துக்கும் ஹிந்து ஸங்கீதத்துக்கும் வித்யாஸமிருக்கின்றதென்றும், மேல் நாட்டில் ஸங்கீதம் விர்த்தியடைந்துகொண்டு வருகிறதென்றும், அது எழுத்து மூலமாய்க் குறிக்கப்படுவதால் ஸாதாரணக் குடும்பத்து ஸ்திரீ புருஷர்களாலும் யுத்தத்துக்குப்போகும் ஸைனியங்களாலும் கோவில்களிலும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வருகிறதென்றும் சொன்னார். ஹிந்து ஸங்கீதத்தை எழுத்து மூலமாய்க் குறிக்க தற்காலத்தில் அநேகம் பேர் முயன்று வருகிறார்கள்.



# DEPARTMENTAL NOTES.
# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்.

SALT FOR SHEEP.

**ஆட்டுக்கு உப்பு.**—உப்பு ஆடுமாடுகளுக்குக்கொடுப்பது நல்லதென்று தெரிந்தாலும், அனுஸரணையில் வரவில்லை. ரத்தத்தில் இருக்கும் கடினவஸ்துவில் பேர்பாதி உப்பாக இருப்பதாலும், ஆடு மலமூத்திரத்தில் ஒரு வாரத்துக்கு $1\frac{1}{4}$ ரூபா எடை வெளியாகிறபடியாலும், உப்பு ஆட்டுக்கு முக்கியமானது. உப்பு உணவானால் ஆட்டுக்கு வரும் சொரி, மயிர் உதிர்தல், முதலிய வியாதிகள் அநேகமாய் வராது. ஜீவியகாலம் அதிகப்படும்.

HUMAN EXCRETA.

**மனிதர் மலம்.**—ஒரு வண்டி எரு இரண்டு ரூபாயிலிருந்து பத்து ரூபாய் வரையிலும் விலை பெறும். ஒரு மனிதன் ஒரு வருஷத்தில் ஒரு வண்டி எரு உண்டுபண்ணுகிறான். சுமார் 500 பேர் கொண்ட ஒரு கிராமத்தில் 1000 ரூபாய் பெறுமான எரு உண்டாகிறது. இதை ஜனங்கள் கவனித்து மனிதர் எருவைச் சேகரித்துப் பக்குவம் செய்யாமல் வீணாக்குகிறார்கள். இவ்விதம் சென்னைராஜதானியில் எட்டுக்கோடி ரூபாய் வரையில் நஷ்டமாகிறது.

COCOANUTS.

**தேங்காய்கள்.**—ஸாதாரணமாய் தென்னம் பாளையில் மிலாறு ஒன்றுக்கு ஒரு பிஞ்சு இருப்பதுண்டு. மிலாறு ஒன்றில் 2-3 பிஞ்சும் பிடிப்பதுண்டு. மைலாப்பூர் ரோமன் காதலிக் சுதேச கன்னிகைகள் மடத்துக்கு எதிரில் ஒரு மரம் இருக்கிறது. அதன் புஷ்ப மிலாறுகள் 32 இருந்தன. ஒவ்வொன்றிலும் ஸராஸரி 7 பிஞ்சுகள் பனங்காயில் பிடித்திருப்பது போல் இருந்தன. அதாவது ஒரு குலையில் 224 பிஞ்சுகள். இவ்வளவும் காய்களாவதில்லை. குலையில் இடம் இல்லாமல் உதிர்ந்துபோகும். 2-3 காய்கள் ஒரு மிலாறில் நிலைக்கும். ஒரு குலையில் 100 காய்வரைக்கும் சில வேளைகளில் நிற்கும்.

MILK AND GHEE.

**பாலும் நெய்யும்.**—நம் தேசத்தில் ஏறக்குறைய 400 லக்ஷம் பசு மாடுகளும், எருமை மாடுகளும் இருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஏறக்குறைய ஒரு நாளைக்கு கால் காலன், அல்லது படி பால் கொடுக்குமென்று ஆனரபிள் மிஸ்டர் சாட்டர்டன் கணக்கிட்டிருக்கிறார். வடக்கே எருமை மாடுகள் பசு மாட்டைப்பார்க்கிலும் அதிகம் பால்கொடுக்கின்றன. தென்னிந்தியா பசுமாடுகளை பார்க்கிலும் மேற்கு இந்தியாவிலும், வட இந்தியாவிலும், உள்ள பசுமாடுகள் அதிகப்பால் கொடுக்கின்றன. இப்படி இருந்தும் இந்தியாவில் இறக்குமதியாகும் பால் கால் கோடி ரூபாய் மதிப்புள்ளதாயிருக்கிறது. இதல்லாமல் இந்தியாவில் அன்னியதேசங்களிலிருந்து வரும் நெய் வருஷம் 50 லக்ஷம் ரூபாய் மதிப்புடையதாம். நமது தேசத்தில் இவ்வளவு பசுமாடுகளும், எருமை மாடுகளும் இருந்தும், நம்மவர் பாலும் நெய்யும் அன்னிய தேசங்களிலிருந்து தருவிப்பது வியப்பாயிருக்கிறது.

WET SOIL.

**மண் ஈரம்.**—1. நன்றாய் உழுத நிலம் ஜலம் அதிகமாய்க் குடிக்குமே யொழிய, கட்டாந்தரையாய் புல் முளைத்த நிலமும், உழாத நிலமும், ஜலத்தைக் குடிக்காது.

2. மேல் மண்ணை அடிக்கடி உழுது, கொத்தி உடைத்தால் அந்த நிலத்தில் ஒரு அடிக்குக் கீழ் ஜலம் ஆவியாகப் போவதில்லை. மேல் மண் புழுதியாகவே இருக்கவேண்டும்.

3. பயிர் வளர்ந்தால் அதன் வளர்ச்சிக்கும், செழுமைக்கும் ஒத்த வண்ணம் ஈரம் உபயோகப்படுகிறது.

4. வெயில் காலத்தில் பயிரில்லாத ஸமயத்தில் நிலம் புழுதியாயிருந்தால் ஈரம் நிலத்தின் 10 அடி ஆழம் வரையில் அதிகப்படுகிறது. முதல் ஆறு அடியில் அதிக ஜலம் கொண்டிருக்கும்.

5. ஸாதாரணப் பயிர் 6 அடி வரையில் வேரைச் செலுத்துகிறது. அவுரி முதலியன இன்னமும் அதிகமாய் ஆழத்தில் வேரைச் செலுத்தும்.

6. வரட்சி காலத்தில் மேல் நீர் பயிரைக் காப்பதில்லை. அடி நீர் மேல் வந்து பயிரைக் காப்பாற்றும். ஆகவே நமது நாட்டில் ஆழமாக உழவெடுப்பதுடன் கோடை உழவும், மண் கம்மல் உடைத்து புழுதியாக எப்போதும் வைத்தலும், நமது விவஸாயம் முன்னுக்கு வரும் வழி.

AGRICULTURAL LABOURERS.

**விவஸாயக்கூலிகள்.**—சென்னை மாகாணத்தைச் சேர்ந்த விவஸாய இலாகா டைரெக்டர் விவஸாய வகுப்பாரின் நிலைமையைப் பற்றியும், வேலை ஆள்களின் நிலைமையைப்பற்றியும், இவ்விருவர்களுக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றியும், சில முக்கியமான அபிப்பிராயங்களை சென்ற வருஷத்து ரிபோர்ட்டில் வெளியிட்டிருக்கிறார். அவருடைய அபிப்பிராயங்களை ரிவினியூ போர்டாரும் அங்கீகரித்திருக்கிறார்கள். அவை என்னவென்றால்.—"விவஸாய வகுப்பாரின் நிலைமை எங்கும் குறையாமல் உயர்ந்தே இருக்கின்றது. அதற்குத் தற்காலம் விலைவாசிகள் ஏறியிருப்பது காரணம். கூலிவேலை செய்கிறவர்கள் விவஸாயத்தில் தக்க கூலி கிடைக்காமல் இருப்பதால், ஸிலோன், மலேயா நாடுகள் போன்ற அந்நிய தேசங்களுக்குப்போய் விடுகிறார்கள். வேலை ஆள்கள் இல்லாவிட்டால் விவஸாயம் நடப்பதற்குக் கஷ்டம் ஏற்பட்டுப்போமாகையால் மிராசுதாரர்கள் தங்கள்கீழ், வேலைசெய்யும் கூலி ஆள்களுக்கு; அவர்களுடைய ஸுகஜீவனத்திற்குப் போதுமானபடி கூலி விகிதங்களை உயர்த்திக்கொடுக்காவிட்டால் இன்னும்கொஞ்ச காலத்திற்குள் விவஸாயத்திற்கு வேண்டிய ஆள்கள் அகப்படாமல் போய்விடுவார்கள்." தவிர, வேலை ஆள்களுக்கு விவஸாயத்தில் வருஷமுழுவதும் வேலை கிடைப்பதில்லையென்றும், ஜீவனத்திற்குத்தக்கபடி கூலி அகப்படுவதில்லையென்றும், ஆகையால் வேலை ஆள்கள் காப்பி, தேயிலை, ரப்பர் முதலியவைகள் பயிர் செய்யப்படும் இடங்களுக்குப் போய் விடுகிறார்களென்றும், சென்ற வருஷம் முதல் ஆறுமாஸ காலத்தில் மட்டும் 50,000 கூலி ஆள்கள் லங்கைக்கு மட்டும் போயிருக்கிறார்களென்றும், பீனங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு 32,000 கூலி ஆள்கள் போனார்களென்றும் சொல்லுகிறார். தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களுக்கு எவ்வளவு பேர் போனார்களோ தெரியவில்லை.

RESOLUTIONS ABOUT LAND REVENUE.

**நிலத்தீர்வையைப்பற்றிய தீர்மானங்கள்.**—போன டிஸம்பர் மாஸத்தில் திருவாரூரில் நடந்த தஞ்சாவூர் ஜில்லாக் கான்பரென்ஸில் நிலத்தீர்வையைப்பற்றி அடியில் கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

(1) இது விஷயத்தைப்பற்றி யோசிக்க இதற்கு முன் கூடின கான்பரென்ஸின் அபிப்பிராயங்கள் ஆமோதிக்கப்பட்டன.

(2) கவர்ன்மெண்டார் மாகூலின் பேரில் வரி போடுவதற்கு சட்டம் ஏற்படவேண்டும்.

(3) சட்டங்களின் உத்தரவின் பேரில் நிலவரி 60 வருஷத்திற்கு ஒரு தடவை உயர்த்தப்படவேண்டும்.

(4) நில வளப்பத்தை யோசித்து நிலங்களைத் தரங்கட்டிப் பிரிப்பதற்கு ஒரு நியாய ஸபை ஏற்படவேண்டும். அந்த ஸபையில் பாதிக்குக் குறையாமல் மிராசுதாரர்களை நியமிக்கவேண்டும்.

(5) வாழைமுதலான ஊற்றுப் பாய்ச்சல் உடையதென்று சொல்லப்பட்ட நிலங்களுக்கு நீர்க் கூலி போடுவது குடிகளுக்கு அதிக கஷ்டத்தை உண்டாக்குகிறது. ஏனெனில், அவைகளுக்கு அநேகமாய் ஊற்றுப்பாய்ச்சலே கிடையாது.

(6) டிமார்க்கேஷன் கல்லுகளை நடுவதற்கு ஏற்பட்டுள்ள சட்டங்கள் மிராசுதாரர்களுக்கு அதிக கஷ்டத்தை உண்டாக்குகிறபடியால், கவர்ன்மெண்டார் அந்த சட்டங்களை மாற்றவேண்டும்.

(7) கிராமங்களுக்கு வெளியேயுள்ள கால்வாய்களில் படிந்துள்ள வண்டல்களை எடுத்துச் சுத்தம் செய்யும்படி நமது கவர்ன்மெண்டாரை வேண்டிக் கொள்ளவேண்டும்.

(8) கிராமாந்தரங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களை மேய்ச்சலுக்காக வைக்கும்படிக்கும், ஸாத்தியமான இடங்களில் பசுந்தாள் உரங்களைப் பாது காக்கும்படிக்கும், கவர்ன்மெண்டாரை வேண்டிக் கொள்ளவேண்டும்.

(9) சென்னை லாண்டு என்க்ரோச்மெண்டு ஆக்ட்டு பிறப்பதற்கு 12-வருஷத்திற்கு முன்னிருந்த என்க்ரோச்சுமெண்டுகளை கவர்ன்மெண்டார் தொந்தரவு செய்யக்கூடாதென்றும், இந்த ஜில்லாவிலுள்ள பாய்ச்சல் கால்வாய்களைச் சுத்தம் செய்யும்படிக்கும் கவர்ன்மெண்டாரை வேண்டிக் கொள்ளவேண்டும்.

(10) வஜா மனுக் கொடுத்தால்தான் வஜா செய்யப்படுமென்பது கூடாது.

(11) எப்ரல் மாஸம் 30-ந் தேதிக்குள் கிராமவாஸிகள் தங்கள் பாய்ச்சல் கால்வாய்களை மராமத்து செய்யாமல் போனால் குடி மராமத்து சட்டப்படி அதைச் செய்யும்படி அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும்.



## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

ROSE SCENT.

**ரோஜா வாஸனை.**—ஒரு பவுண்டு நிறையுள்ள ரோஜா வாஸனைக்கு 3000 பவுண்டு நிறையுள்ள ரோஜா இதழ்கள் செலவாகின்றன.

CHEMICAL INDUSTRIES LTD.,

**கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.**—இந்தக் கம்பெனியானது, கெமிகல் அதாவது ரஸாயனஸாமான்களை உண்டாக்குவதற்கு ரங்கூனில் சென்ற வருஷம் ஏற்பட்டது. இப்பொழுது இந்தக் கம்பெனியில் கந்தகத்திராவகம் இறக்கப்பட்டு வருகிறது. அவ்விடத்து வியாபாரிகள் அதை விற்பனை செய்கிறார்கள். திராவகம் நல்ல மாதிரியாயிருக்கிறதாம்.

CIGAR BOXES OF PAPER.

**காகிதத்தினால் சுருட்டுப் பெட்டிகள்**—ஒரு ப்ரெஞ்சு சுருட்டு வியாபாரி பின்வருமாறு தெரிவிக்கிறார். கூடிய சீக்கிரத்தில், ரொம்ப விலை உயர்ந்த சுருட்டுகளுக்குத் தவிர, மற்றவகை சுருட்டுப் பெட்டிகளெல்லாம் காகிதத்தினாலேயே செய்யப்படும். ஏனென்றால், அந்தப் பெட்டிக்கு வேண்டிய ஸீடர்மரமானது, வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. ஆனாலும் ஸீடர் மரத்தால் செய்யப்பட்ட பெட்டியைப்போல் காகித மசியலால் செய்யப்பட்ட பெட்டி ஆகாது. ஸீடர் பெட்டியில் போட்டால் சுருட்டின் ஈரம் போய்விடுவதில்லை. இந்த விஷயத்தில் காகித மசியல் பெட்டி அவ்வளவு ஸுகப்படவில்லை.

MILK POWDER.

**பால் பொடி.**—பாலைக் காய்ச்சிப் பொடி பண்ணுவதற்குப் பதிலாக, பாலை உறைய வைத்துப் பொடி பண்ணுகிறார்கள். பாலை வாயகன்ற பாத்திரங்களில் ஊற்றி, பனிக்கட்டி மாதிரியாகும்படி செய்கிறார்கள். இப்படி மாறிய பாலை, ஒரு யந்திரத்தில் வைத்து விரைவாய்ச் சுற்றுகிறார்கள். இப்படிச் சுற்றுவதில் கட்டிகள் உள்ளே தங்கி மிகுதி ஜலமானது தனியாகப் பிரிந்து பால், பாகுமாதிரி வெளியே வந்து விடுகிறது. இந்தப் பாகை ஒரு பாத்திரத்தில் போட்டு, சிறிது உஷ்ணப் படுத்தினால் அதுவும் உலர்ந்துபோய் விடுகிறது. மேலே சொல்லியபடி செய்த பொடியைப் பரீக்ஷித்துப் பார்த்ததில் ஜலம் இல்லையே அது ஒன்றைத் தவிர மற்ற விதமாக பாலுக்கும் இந்தப் பொடிக்கும் மூல வஸ்துக்களிலாவது குணத்திலாவது ஒரு வித்தியாஸமும் இல்லையாம்.

SNAKE-SKIN DRESS.

**பாம்புத்தோலாடைகள்.**—பருத்தி, சணல் நார், முதலிய பொருள்களிலிருந்து பட்டு வஸ்த்ரம் செய்து இது வரையில் தரித்துவந்த 'நாம்' இப்போது பாம்புத் தோலிலிருந்தும் அழகான உடைகள் செய்தும் தரிக்கும் படியான ஸ்திதியிலிருக்கிறோம். சில இங்கிலீஷ் சீமாட்டிகளின் மெல்லியதான உடுப்புக்களுக்கு உதவியாகும்படியாய் பெல்டுகளும் கைகளுக்கு உறைகளும் செய்ய பாம்புத்தோல் ரொம்ப உபயோகப்படுகிறது. பாம்புத்தோலுடைகள் ஜலத்தில் நனையவிட்டாலும், ஜலம் தங்குவதில்லையாம். இப்பேர்பட்ட தொழில் ஜாவாத்தீவில் விசேஷமாய்ச் செய்யப்படுகிறது. இதற்கென்று கம்பெனிக்காரர் சேர்ந்து பாம்புகளைப் பிடிக்கவும், அவைகளின் தோல்வீண் போகாமல் உரித்துத் தோலெடுத்துப் பதனிட்டு உபயோகப்படுத்தவும், செட்டாய் இதில் லாபம் சம்பாதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தியாவில் பாம்புக்குக் குறைச்சலில்லை, சீக்கிரத்தில் பாம்பும் வியாபாரச்சரக்காகிவிடும்.

A STAMPING MACHINE.

**ஒரு தபால் லேபிள் ஒட்டும் யந்திரம்.**—இந்த யந்திரமானது, ஒரு மணி நேரத்தில், கவர்களுக்கும், கார்டுகளுக்கும், 4000 தலைகள் ஒட்டுகிறது. இந்த யந்திரம் உருவத்தில் ஒரு டைப்படிக்கும் மெஷினைப்போல் இருக்கிறது. ஒரு மூச்சில் 50,000 தலைகள் ஒட்டக்கூடும். கவரை யந்திரத்தில் ஓரிடத்தில் வைத்து ஒரு லீவர் அதாவது பிடியைப் பிடித்து அழுத்தினால் யந்திரம் தலை யொட்டவேண்டிய இடத்தை ஈரமாக்கி, தலையை ஒட்டி கவரை வெளியில் எறிந்து விடுகிறது. இதோடு இவ்வளவு ஸ்டாம்பு ஒட்டியாயிருக்கிறதென்றும் கணக்கிட்டு விடுகிறது. தபாலில் கடிதம் போடவேண்டியவர்கள் தபால் லேபிளை வாங்கி ஒட்டவேண்டியதில்லை. கவரையோ கார்டையோ யந்திரத்தில் கொடுத்து ஒட்டவேண்டிய லேபிளின் கிரயத்தையும் யந்திரத்தில் ஒரு ஓட்டையில் போட்டுவிட்டால் உடனே யந்திரம் லேபிளை ஒட்டி கடிதத்தை வெளியே தள்ளி விடுகிறது. இந்த யந்திரம் ஒன்றை பரீக்ஷார்த்தமாக லண்டனில் த்ராக் மார்டன் அவென்யூ போஸ்டாபீஸில் வைத்திருக்கிறார்கள்.

## EDUCATIONAL NOTES.
## வித்யா விஷயக் குறிப்புகள்.

MORAL EDUCATION IN SCHOOLS.

**பள்ளிக்கூடங்களில் நல்லொழுக்கம்.**—பள்ளிக்கூடங்களில் நல்லொழுக்கங்களைப் போதிப்பதற்கான முறையைக் குறித்துத் திருப்திகரமாக வியாஸம் எழுதுபவருக்கு ஆனரபிள் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்கள் ரூபாய் 100 இனுமளிப்பாரென்றும், அப்படி செய்ய விருப்படையவர்கள் சென்னை கௌன்ஸில் ஆப் நேடிவ் எடுகேஷன் என்ற வித்யாலோசனை ஸபையின் உதவி காரியதரிசி மிஸ்டர் ச. ராஜகோபாலாசாரியார் அவர்களுக்குத் தமது வியாஸங்களை எழுதியனுப்பவேண்டுமென்றும் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

EDUCATION IN AMERICA.

**அமெரிக்காவில் கல்வி.**—அமெரிக்காவில் அத்தியாவசியமாக ஒவ்வொரு பிள்ளையும் கல்வி கற்க வேண்டுமென்னும் நிபந்தனையிருப்பதால் அங்கே சென்றவருஷத்திய கணக்கின்படி எண்பது கோடி பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் வாசித்து வந்தார்களென்றும், அந்தக்கல்வி விஷயமாக கவர்ன்மெண்டார் முந்நூற்று எழுபத்தைந்துகோடி ரூபாய் செலவு செய்தார்களென்றும் தெரியவருகிறது. முக்கியமாகப் பிள்ளைகளுக்கு பூகோளசாஸ்திரம், கணக்கு, வியாபாரமுறை முதலிய ஜீவனோபாயமான கல்வியையே கற்பிக்கிறார்கள்.

EDUCATION IN JAMNAGAR.

**ஜாம்நகரில் படிப்பு.**—நம் சுதேச அரசர்களுடைய நாடுகளில் ஜாம்நகர் என்ற ஒரு சிறு நாடு தென்மகாராஷ்டிர தேசத்திலுண்டு. அதன் பரப்பு 524 மைல். அதன் ஜனத்தொகை லட்சம். இந்தச் சிறு நாட்டில் 72 பாடசாலைகள் இருக்கின்றன. 500 ஜனங்களுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பாடசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சில பாடசாலைகளில் படிப்பு இனாமாகவே சொல்லிக் கொடுக்கப்படுகிறது. சில பாடசாலைகளில் சாப்பாடு போட்டுப் படிப்புச் சொல்லிக் கொடுக்கிறார்களாம். ஏழைகளுக்கு இப்படிச் செய்யவேண்டுவது பரம உபகாரம். வித்யாதானத்தினும் மேலான தானமிடையாதென்பது நம் பெரியோர்களின் கொள்கை.

COMMERCIAL EDUCATION.

**வியாபாரப் படிப்பு :**—கள்ளிக்கோட்டையில் வியாபார விஷயமான படிப்புகளைச் சொல்லிக் கொடுக்க ஒரு பள்ளிக்கூடம் வெகுகாலமாக நடந்து வருகிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் 12 பீ. ஏ. தேறினவர்களையும், 12 எப். ஏ. தேறினவர்களையும், ஆகமொத்தம் 24 பேர்களுக்கு மேல்படாமல் சில பேர்களைப் பொறுக்கி எடுத்து நாளது ஜனவரி மாஸம் முதல் ஒரு வருஷத்திற்கு வியாபாரப்படிப்பு சொல்லிக்கொடுத்து அவர்களை உபாத்தியாயர் வேலைக்குத் தயார் செய்யப் போகிறார்கள். பீ. ஏ. தேறினவர்களுக்கு மாஸம் ஒன்றுக்கு 25 ரூபாய் விழுக்காடும், எப். ஏ. தேறினவர்களுக்கு மாஸம் ஒன்றுக்கு 20 ரூபாய் விழுக்காடும், 'ஸ்காலர்ஷிப்' அதாவது உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். மேலே சொல்லிய ஏற்பாடுகளால் கவர்ன்மெண்டுக்கு வருஷமொன்றுக்கு 7,775 ரூபாய் செலவாகும்.

LIBRARIES IN BARODA.

**பரோடாவில் புஸ்தக சாலைகள்:**—பரோடா ராஜ்யத்தில் நாளுக்குநாள் கல்வி அபிவிருத்தியாகி வருவதைக் கேட்க ரொம்பவும் ஸந்தோஷமாயிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் அந்த நாட்டின் அரசருடைய கல்வியும், நாகரிகமும் தாராள சிந்தையுமே. கிராமந்தோறும் ஸர்க்கார் செலவில் புஸ்தகசாலைகளும், பத்திரிகைசாலைகளும் ஏற்பட்டு வருகின்றன. அந்த ராஜ்யத்தில் தற்காலம் 172 புஸ்தகசாலைகள் இருக்கின்றன. ஒவ்வொருபுத்தகசாலைகளிலும் குறைந்தபக்ஷம் 225 ரூ. பெறுமான புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. கிரந்தகர்த்தர்களிடமிருந்து புஸ்தகங்கள் இந்த வருஷத்தில் 3000 ரூபா செலவுசெய்து வாங்கிவைத்திருக்கிறார்கள். இப்புஸ்தக சாலைகளில் இந்த வருஷத்து ரிபோர்ட்டுபடி ஸுமார் 30000 ரூ. புஸ்தகங்களிருக்கின்றனவாம். இவை கிராமபுஸ்தகசாலைகள். நகரபுஸ்தகசாலைகளில் லக்ஷக்கணக்கான தொகை மதிப்புள்ள புஸ்தகங்கள் இருக்குமென்பது நிச்சயம். புஸ்தகசாலைகள் மூலமாகவே அறிவைப்பரவச் செய்தல்வேண்டும். அமெரிக்கா, ஜர்மனி, ஜப்பான், இங்கிலாந்து, பிரான்ஸ், முதலிய தேசங்களினுடைய நாகரிகத்துக்கும், அறிவுக்கும் புஸ்தகசாலைகள் ஒரு முக்கிய காரணம். நம்முடைய தேசம் முன்னேறுவதற்கு படிப்பு விருத்தியாகவேண்டும்.



## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

DO SHEEP DRINK WATER?

**ஆடு நீர் குடிக்குமா?**—"பிரிஸ்டல் அப்ஸர்வர்" பத்திரிகையின் நிருபர் ஒருவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.—"நான் பற்பல இடங்களில் ஆடுகள் நீர் குடிக்கின்றனவா என்பதைப் பற்றி சோதித்திருக்கிறேன். ஒன்றாவது நீர் குடிக்கவில்லை. ப்ரான்ஸில் அநேகம் ஆடுகளும் நீர் குடியாமலே ஜீவித்து வருகின்றனவாம். ஆப்பிரிக்கா தேசத்து ஸௌடான் ஜூலாஜிகல் தோட்டத்தில் ஒரு கிளி 50 வருஷ காலமாய் நீரின் ஸ்பரிசமே யில்லாமல் ஜீவித்து வந்ததாய்ச் சொல்லுகிறார்கள்.

NITROGEN.

**நைட்ரோஜன்.**—புல் பூண்டு செடி கொடிகள் முதலிய ஸகல தாவர வர்க்கங்களுக்கும், சாகுபடி செய்யப்பட்ட ஸகல பயிர்வகைகளுக்கும் பிராணாதாரமான உணவு நைட்ரோஜன் என்னும் வெடியுப்பு ஸத்து. இது பயிர்களுக்கு இன்றியமையாதது. இந்த வஸ்து கிடைக்கவில்லையானால் பயிர் வர்க்கங்களுக்குப் பிராணன் நிலைக்காது. எந்த நிமிஷத்தில் இந்த வெடியுப்பு ஸத்து வேண்டிய அளவுக்குக் குறைவுபடுகிறதோ அந்த நிமிஷத்தில் பயிர்களின் வளம் குறையும்; அவைகளின் வளப்பு குன்றும்; வளர்ச்சி தடைபடும்; தளிர்கள் வாடும்; தலை கருகும்; நோய்ந்து மெலியும். எந்தக்காலம் இந்த வெடியுப்பு ஸத்து நிலத்தில் சுத்தமாய் இல்லாமல் போகிறதோ அந்தக்காலம் பயிர்களுக்கு மிகவும் கேடுகாலம். அதற்குப்பின் பயிர்கள் உயிர் தரித்திரா. அவைகள் மாண்டு மடிந்துபோக வேண்டியதைத் தவிர ஒருநிமிஷமும் உயிருடனிருக்க முடியாது. இப்படியிருப்பதால் நைட்ரோஜன் என்னும் வெடியுப்பு ஸத்து பயிர்களுக்கும் அவைகளைச் சாகுபடி செய்யும் நமக்கும் எவ்வளவு முக்கியமானது பாருங்கள்.

SNAKE BITE SERUM.

**பாம்பு கடி மருந்து.**—பம்பாயிலுள்ள 'பாரெல் லாபொரெடரி'யில் பாம்பின் விஷமெடுக்க என்று பாம்புகளைப் பிடித்து வளர்த்து வருகிறார்கள். பாம்பிலிருந்து விஷமெடுக்க, ஒரு பெரிய ஸர்ப்பத்தைக் கொண்டுவந்து அதைக் கூட்டை விட்டு வெளியேற்றியதும் அது படமெடுத்து ஆடும்பொழுது அதற்காக என்று பழக்கப்பட்ட பிடாரன் ஒரு கோலினால் அதைக் கீழே அழுத்திப் பிடித்துக்கொண்டு அதன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு ரப்பர் மூடியிட்ட ஒயின் க்ளாஸ் ஒன்றை அதன் வாயில் எதிரே கொண்டு போய்த்திணிக்க, ஸர்ப்பம் சீறி அந்த ரப்பரைக் கடிக்கிறது. உடனே ஒரு உத்திரணி விஷம், பால் கறந்தாப்போல், கிளாஸில் விழுகிறது. இப்படி வேண்டிய விஷம் கறந்தபின் அதை ஒரு சீஸாவில் அடைத்து ஹிமாலயத்திலுள்ள 'காஸௌலி லாபொரெடரி'க்கு அனுப்பி விடுகிறார்கள். அங்கே அந்த விஷப்பால் பாம்பு கடிக்கு ஔஷதமாகும் ஒருவித "ஸீரம்" செய்ய உபயோகிக்கப்படுகிறது. இப்படி விஷம் கறக்கப்பட்ட பாம்பானது பின்பு இரை யெடுப்பதில்லையால் அதற்கு கோழி முட்டையைப் பாலில் கலந்து சேர அடித்துப் புகட்டுவது வழக்கம். தன் விஷமாகிய வீரியத்தை இழந்த ஸர்ப்பம் பசி தாகம் பாராட்டாது இரை யெடுப்பதில்லை.

SOIL NOT NECESSARY FOR PLANTS.

**செடிகளுக்கு மண் அவசிய மில்லை.**—பயிர்கள் உண்டாவதற்கு மண் ஸாதாரணமாகவேண்டியது தான். ஆனால் அது இன்றியமையாததல்ல. சில செடிகள் உதாரணமாக ரணக்கள்ளிச்செடி ஆகாயத்தில் வேர்விட்டு வளரும். அந்தச் செடியின் ஒரு இலையை ஒரு கம்பியில் கட்டி ஆகாயத்தில் தொங்க விட்டால் அந்த இலையோரங்களில் வேர்கள் உண்டாகி பின்பு செடிகள் முளைத்து வளர்ந்து கிளைத்து வரும். இந்தச் செடிக்குவேண்டிய ஆகாரம் ஆகாயத்திலிருக்கும் வாயுக்கள் தான். இதைப் போலவே சில செடிகள் தண்ணீரில் வேர்விட்டு வளருகின்றன. அவைகளின் வேர்கள் பூமியைத்தொடாமலே தண்ணீரில் மிதந்து அங்குள்ள ஆகாரத்தை அருந்தி அந்தச் செடிகளை வளரச் செய்கின்றன. மண்ணில்லாமலே எல்லாச் செடிகளும் ஜீவிக்கக்கூடும் என்றால் அநேகர் நம்பமாட்டார்கள். அது நகைப்புக்கிடமாகவும் இருக்கலாம், என்றாலும் மண்ணென்பது கொஞ்சமுமில்லாமல் செடிகள் ஜீவிக்கக்கூடும். அவைகளின் வேர்கள் வாயுமண்டலத்திலிருந்தும் தண்ணீரிலிருந்தும் ஆகாரத்தை அருந்தி அந்தச் செடிகளை வளர்க்கக் கூடும். அப்படி மண்ணின் உதவியின்றியே உண்டாகிய செடிகள் வளர்ந்து பெரிதாகிப் பூத்துக் காய்த்திருக்கின்றன.

## LEGAL NOTES.

## சட்டக் குறிப்புகள்.

### Unclaimed Property.

**வழியில் கிடக்கும் பொருள் யாருடையது.**—லங்கையில் மாத்தறையில் இரண்டு பெண்கள் வழிநடக்கும்போது, ஒருத்தி தெருவில் ஒரு தங்கப்பவுன் கிடக்கக் கண்டு எடுத்தாள். மற்றவள் அதை அவளிடத்தில் பலாத்காரமாகப் பிடுங்கி எடுத்தாள். இதனால் வாக்குவாதம் நேர்ந்து இருவரும் போலீஸ்தானத்துக்குச் சென்றார்கள். போலீஸ் அதிகாரி இருவர் பேரிலும் பிராது கொண்டுவந்தார். நீதிபதி பவுனை வழியிற் கண்டெடுத்தவளுக்கு ஒருமாஸமும், அதைப் பின்பு பறித்துக்கொண்டவளுக்கு ஆறு மாஸமும் சிறையிருக்க விதித்தார். வழியில் கண்டெடுக்கப்பட்ட ஸொத்தை உடையவனுக்குக்கொடுக்கவேணும். அல்லது ஸர்க்காரிடத்தில் ஒப்புவித்து விடவேணும். இப்படிச் செய்யாமல் எடுத்துக்கொண்டு விட்டால். அது தண்டிக்கத்தகுந்த குற்றமாகும்.

### Appeals to the Privy Council.

**ப்ரிவி கௌன்ஸில் அப்பீல்கள்.**—பிரிவி கவுன்ஸில் என்னும் அந்தரங்க மந்திராலோசனை ஸபையாருக்கு சட்டத்தில் அனுமதி ஏற்படுகிறபடி செய்துகொள்ளப்படும் விசேஷ அப்பீல்களின் விஷயத்தில் தவிர, இந்தியாதேசத்திலுள்ள கோர்ட்டார்களுடைய தீர்மானங்களுக்குமேல் இங்கிலாந்தில் அப்பீல் கிடையாது. மேலும், நிர்ணயிக்கப்பட்டிருக்கிறவிதிகளின் பிரகாரம் ஷை மந்திராலோசனை ஸபையாருக்கு அப்பீல் செய்துகொள்ளுகிற அப்பீல் வாதிகள் தவிர, வேறே எந்த விண்ணப்பதாரர்களாவது சொல்லிக்கொள்ளுகிற எந்த விஷயத்திற்கும் இங்கிலாந்தில் மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியாகிய மஹாராஜா அவர்கள் செவிகொடுக்கமாட்டார்கள். ஷை மந்திராலோசனை ஸபையாருக்கு அப்பீல் செய்துகொள்ளக்கூடிய விஷயங்களிலே, அவர்களுக்கு அப்பீல் செய்துகொள்வதற்காக அல்லாமல் மற்றப்படி, இங்கிலாந்துக்குப் போகிற விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பணத்தை வீணில் செலவழித்து, விசேஷ அஸௌகரியத்திற்கும், கஷ்டத்துக்கும் உள்ளாவது மாத்திரமே அல்லாமல், இந்தியாவுக்குத்திரும்பிவர அசக்தராயிருக்கும் கஷ்டத்துக்கும் உள்ளாகிறார்கள் என்று கவர்ன்மெண்டார் விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

### Chit Fund.

**கூட்டுச் சீட்டு.**—1893-ம் வருஷத்தில் வாதியின் முன்னோர்கள் ஒரு கூட்டுச்சீட்டை ஆரம்பித்தார்கள். அதில் ஒவ்வொரு சீட்டும் 500 ரூ. மேனிக்கு 14 சீட்டு, 13 வருஷத்தில் முடியவேண்டியது. பிரதிவாதிக்கு 6-வது சீட்டு விழுந்தது. அப்பொழுது வாதி கொஞ்சம் தொகையை பிரதிவாதிக்குக் கொடுத்துவிட்டு, பாக்கித்தொகையை பிரதிவாதி சீட்டுக்குக் கட்டவேண்டிய பாக்கித்தவணைகளைக் கட்டுவானென்று ஜாமீன் கொடுத்ததும் கொடுப்பதாக பிடித்து வைத்துக்கொண்டான். அப்படியே பிரதிவாதி ஜாமீன் கொடுத்தான். ஆனாலும் வாதி சீட்டுப்பணத்தைக் கொடுக்கவில்லை. சீட்டு நிபந்தனைகளில் ஒன்று என்னவென்றால் சீட்டுக்குப் பணம் கட்டுகிறவர்கள் ஒரு தவணை தவறும் பக்ஷத்தில் பாக்கி எல்லாத்தவணைகளுக்கும் செல்லவேண்டிய பணம் முழுமையையும் கட்டிவிடவேண்டியது என்பது. இருந்தபோதிலும் வாதி பிரதிவாதி கட்டவேண்டிய தவணைகளுக்குதான் பிடித்துவைத்திருந்த தொகையிலிருந்து செலுத்திக்கொண்டே வந்து கடைசியில் பணமில்லாமல் இரண்டு தவணைப்பணத்துக்கு பிரதிவாதியின் மேல் வியாஜ்யம் போட்டான். வாதி சீட்டில் விழுந்த முழுத்தொகையைக் கொடுக்காததால் தான் பாக்கித்தவணை செலுத்தக் கட்டுப்பட்டவனில்லையென்றும், 1900-ம் வருஷத்தில் தான் தவணைப்படி பணம் செலுத்தாததால் அப்பொழுதே முழுப்பணமும் செலுத்தக்கடமைப்பட்டவனென்றும், அதை அப்பொழுது வசூல் செய்யாததால் காலாவதியாகி விட்டதென்றும் பிரதிவாதி ஆக்ஷேபித்தான். சீட்டில் விழுந்த பணத்தைக் கொடுக்காததற்காக சீட்டுத்தவணைக் கட்டமாட்டேனென்றுசொல்லக்கூடாதென்றும், தவணை தவறின பொழுதே முழுத்தொகையை வாதி வசூல் செய்யாததினால் காலாவதி யாகாதென்று மதராஸ் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

9 மதராஸ் லா. டை. 36-ம் பக்கம்



## MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்.

### Is it Good to Work in the Night?

**இரவில் வேலை செய்யலாமா.**—மூளையை அதிகமாக உபயோகப்படுத்தி அரியவேலைகளைச்செய்ய எண்ணும் மனிதன் ஒவ்வொருவனும் ராத்திரியை இருபங்காக்கிக்கொள்ளவேண்டுமென்று ப்ரோபெஸர் விக்டர் ஹாலோபோ என்பவர் அபிப்பிராயப்படுகிறார். வித்வான், யந்திரீகன், கிரந்தகர்த்தா முதலியவர்கள் ஒவ்வொரு இரவிலும் 10 மணிக்கு முன்பே படுத்து நித்திரை செய்யவேண்டுமாம். ராத்திரி 2-மணிக்கு விழித்துக்கொண்டு 5-மணி வரையில் அமைதியும் நிச்சப்தமும் நிறைந்தபோதில் வேலை செய்யவேண்டுமாம். அப்படி செய்தால் மனோபாவங்கள் விருத்தியடைந்து புதிய அபிப்பிராயங்கள் பல தோன்றுமென்கிறார். 5-மணி முதல் 8 அல்லது $8\frac{1}{2}$-மணி வரையில் மறுபடி தூங்கவேண்டும். பிறகு எழுந்திருந்து தினப்படி வேலையைச் செய்வதில் சிரமம் ஒன்றுமிருக்காதாம்.

### Using Tobacco.

**புகையிலை போடுதல்.**—புகையிலையை வாயிற்போட்டு மெல்லுவதும் சுருட்டுக் குடிப்பதும் ஏதோ ஒரு நிர்ணயம் வரையில் தேகாரோக்கியத்திற்கு அடுத்ததென்று சொல்லுகிறார்கள். அவ்விரண்டையும் உபயோகித்து வருபவருக்கு அவையில்லாமற்போனால் வேலை ஓடுவதில்லை. சோம்பல் அதிகமாகிறது. அவைகளை உபயோகிக்கிறவர்களுக்கு மலச் சிக்கல் உண்டாவதில்லை. ஜீரணம் ஸரியான படியாகிவிடும் ஜீரணிக்கும் அமிசம் புகையிலைப்போட்டுக்கொள்வதிலும் சுருட்டுக் குடிப்பதிலுந்தான் இருக்கிறதேயென்று மிதமிஞ்சிக் குடித்து விட்டாலோ, உடனே அனர்த்தம் பிடித்துவிடும். நரம்புத் தளர்ச்சியேற்பட்டு மார்பு படபடவென்று அடிக்க ஆரம்பிக்கும்; கொஞ்சகாலத்திற்குப் பிறகுக் கண்ணொளியும் மழுங்கிவிடும். உதடு, நாக்கு, வாய் எங்கும் புண்ணாகி வாய்ப்புற்று ஏற்பட்டுவிடும்; ஆகவே இவ்விஷயமே கூடாது; வழக்கமாய்ப் போனதிலும் அமிதமாகாது.

### The Growth of Children.

**சிசுக்களின் வளர்ப்பு.**—குறை மாஸத்தில் பிறந்த குழந்தை திட சரீரத்தோடிராது. பூர்ண கர்ப்பத்தில் உதித்த குழந்தை பூர்ண ஆயுளோடிருப்பதுடன் ஜீவகாலத்தில் செம்மையாயும் வளர்ந்து வரும். ஆனபோதிலும் சிசுக்களின் பரா மரிப்பு விஷயத்தில் தாய்மார்களும் தாதிமார்களும் விசேஷ கவனமெடுக்கவேண்டும். குழந்தைகள் சரிவர பராமரிக்கப்பட்டு வந்தால் பிறந்த ஆறு மாஸ காலத்தில், பிறந்தபோது இருந்த நிறையை விட இரண்டு மடங்கு அதிகமாயிருக்கும். ஒரு வருஷ காலமானால் மூன்று மடங்கு நிறைகொண்டதாயிருக்கும். இவ்விதம் இருக்கும்படி அதன் இங்கிதத்தை அறிந்து வேளா வேளைகளில் அன்ன மூட்டி பால் போட்டி கூடுமான வரையில் திருப்திகரமான ஆகாரத்தைக் கொடுத்து வருவதில் குழந்தையை வளர்ப்பவர்கள் கவனத்துடன் இருக்கவேண்டும். அப்போதே சிசுவின் வளர்ச்சி செவ்வையாய்த் தெரியும்.

### Quietness in Sick Rooms.

**சீக்காளி அறையில் அமைதி.**—நோயாளிகள் இருக்குமிடங்களில் அமைதியாயிருக்கவேண்டியதென்பது மிக்க அவசியம். அமைதி என்றால், ஸாதாரண நித்திய கருமங்களையும் விட்டு எல்லா வித சத்தமும், ஒழிந்து இருக்கவேண்டுவதல்ல ஏனென்றால், இதனால் நோயாளியின் அமைதி கெடாது. அந்த அமைதி கெடக் காரணங்கள் :—(1) மிக ஜாக்கிரதையுடன் விரலையூன்றியும், பெரு விரலின் நுனியின் மேலும் நடப்பது. (2) குசு குசு என்று பேசுவது; நோயாளியின் நித்திரையறையில் மெள்ளப் பேசுவது நலம். குசு குசு எனல் நித்திரையைக் கெடுக்கும். (3) உஷ் குஷ், என்று இரைதல்; இதுவுங் கொடியது. (4) அதிக சத்தமுண்டாக்கத்தக்க உடுப்புகளைப் போட்டுக்கொண்டு, படுக்கையறையில் நடக்கவுங்கூடாது. (5) நோயாளியின் அறைக்குள் செல்லவேண்டுமானால் கூச்சமில்லாமலே செல்லலாம்; அப்படியல்லாமல், கதவைத்திறக்க ஒரு நாழியும், கதவுக்கு வெளியே மூணுநாழி மிணமிணவென்று பேசுதலும், இவை நோயாளிக்குத் துன்பமே ஒழிய வேறல்ல. ஏனென்றால் இந்த 3, 4 நாழிகையும் நோயாளி கண் மூடிக்கொண்டிருந்தபோதிலும், அது நித்திரைசெய்யாததால், தேக மெலிவினால் கண்களை மூடிக்கொண்டு மனதை கூர்மையாகச் செலுத்தி சுற்றிலும் நடக்கும் செய்கைகளைக் கவனிப்பான்.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

---

THE EMPEROR'S VISIT TO INDIA.

**சக்ரவர்த்தி இந்தியாவுக்கு வருவது.**—"இந்தியாவைப் பார்வையிட்டு வரவேண்டுமென்று சக்ரவர்த்திக்குத் தானாகவே தோன்றிற்று என்று தெரிய வருகிறது. இது விஷயமாய் லார்டு ஹார்டிஞ்சைக் கலந்து யோசித்ததில் அவர் அரசருடைய நோக்கம் மிகவும் சிலாகிக்கத் தக்கதென்று சொன்னாராம்.

OUR EMPEROR.

**நமது சக்ரவர்த்தி.**—சக்ரவர்த்தியவர்கள் வெகு வருஷங்களாக க்ஷவரம் செய்துகொண்டதில்லை. மேல் நாட்டு ஸம்பிரதாயத்தில் தினமும் க்ஷவரம் செய்துகொள்ள வேண்டிவருவதால், அதை நிறுத்திவிட்டு, அந்த மூலமாக தினம் 10-நிமிஷம்போல் ராஜகாரியங்களுக்காக மீத்துக்கொண்டார்களென்று தெரிகிறது. ஆதலால், ராஜகாரியத்தைத் தம்மாலியன்றமட்டில் நடத்திவருவதாகத் தீக்ஷை வகித்தார்கள் போலும்.

GIFT TO A HOSPITAL.

**ஒரு ஆஸ்பத்திரிக்கு நன்கொடை.**—வட ஆற்காடு ஜில்லா புங்கனூர் டிவிஷனைச் சேர்ந்த மிஸ்டர் என். மால்ரெட்டி என்ற ஒரு கனவான் ஸடம் என்ற ஊரில் ஆஸ்பத்திரி ஒன்று வைக்கத் தாம் ஒரு கட்டிடம் கட்டிவிட்டு ரூபா 10,000 மூலதனமும் வைப்பதாக வட ஆற்காடு ஜில்லா போர்ட் பிரெஸிடெண்டின் மூலமாய் கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்க, அவர்கள் அந்த ரெட்டியார் தயாளச் சிந்தை மேலிட்டுக் கட்டி விடப்போகிற கட்டிடத்தையும் அதற்கு நன்கொடையாய்க் கொடுக்கப் போகிற தொகையையும் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருப்பதாய்ச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர் கட்டிடத்தை கட்டிவிட்டப் பிறகு தான் அவர் கொடுக்க இசைந்திருக்கும் நன்கொடையானது தரும ஸ்தாபன நன்கொடைகளின் பொக்கிஷதார் வசம் ஒப்புவிக்கப் படுமென்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

THE HON. MR. V. KRISHNASAMI AIYAR.

**கனம் வி. கிருஷ்ணஸாமி அய்யர்.**—சென்னை ராஜதானி நிர்வாகஸபையில் மெம்பராயிருந்த கனம் பொப்பிலி மகாராஜா அவர்கள் அந்த வேலையை ராஜீனாமா கொடுத்துவிட்டபடியால் அவருக்குப் பதிலாக நம்முடைய பத்திரிகைக்கு நிருபரும் ஹைகோர்ட்டு ஜட்ஜியுமான கனம் வி. கிருஷ்ணஸாமி அய்யர் அவர்களை நம்முடைய சக்ரவர்த்தி மெம்பராக நியமித்து மகா-ா-ா-ஸ்ரீ. வி. கிருஷ்ணஸாமி அய்யரும் வேலையை ஒப்புக்கொண்டு பார்த்து வருகிறார். கனம். கிருஷ்ணஸாமி அய்யர் ஹைக்கோர்ட்டு வக்கீலாக இருக்கும்பொழுது ஜனங்களோடு ரொம்பவும் பழகி அவர்களுடைய குறைகளை நன்றாய் அறிந்திருந்ததோடு அவைகளை நிவர்த்தி செய்ய பலவழிகளிலும் முயன்று வந்தவர். அப்பேர்ப்பட்டவருக்கு கொஞ்ச காலத்துக்கு முன் ஹைகோர்ட்டு ஜட்ஜி வேலையானபோது ஒரு விதத்தில் ஸந்தோஷமாயிருந்த போதிலும் பொது நன்மைக்காக உழைக்கக் கூடிய பிரமுகர் இல்லாமல் போய்விட்டதே என்று இன்னொரு விதத்தில் அநேகம் பேர்களுக்கு வருத்தமாயிருந்தது. இனிமேல் ஒருவரும் வருத்தப்பட இடமில்லை. சென்னை நிர்வாக ஸபை மெம்பருக்கு அளவற்ற செல்வாக்கும் நியாயமாக பொது நன்மைக்காக எவ்வளவு செய்யலாமோ அவ்வளவும் செய்யக் கூடிய அதிகாரமும் தருணமும் உண்டு. அனுபோகம், ஸ்வயபுத்தி, ஆழ்ந்த சிந்தனை, நல்ல குணம், நினைத்தகாரியத்தை நிறைவேற்றத் திறமை, ஆகிய பெருங்குணமுள்ள வராகையால் கனம். கிருஷ்ணஸாமி அய்யர் காலத்தில் ராஜதானியிலுள்ள ஸகலருக்கும் க்ஷேமமுண்டாகுமென்று எண்ணக்காரணமுண்டு.

THE HON. MR. P. R. SUNDARA AIYAR.

**கனம். பி. ஆர். சுந்தரய்யர்.**—கனம். கிருஷ்ணஸாமி அய்யருக்கு பதிலாக கனம். பி. ஆர். சுந்தரய்யருக்கு ஹைக்கோர்ட்டு ஜட்ஜி வேலையாகியிருக்கிறது. கனம் சுந்தரய்யர் பிரபல வக்கீலாயிருந்தவர். அவருக்கு ஜட்ஜியானதைப்பற்றி எல்லாருக்கும் ஸந்தோஷம்.

---



## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

---

THE LOST PARROT.

**காணாமற் போன கிளி.**—குடித்தனக்காரி—"பையா! எங்கே வந்தாய்?"

சிறுவன்—(ஒரு பூனையைத் தூக்கிக்கொண்டு)—'தங்களுடைய பச்சைக்கிளி காணாமல் போய்விட்டதென்றும் அதைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு பரிசு கொடுப்பதாகவும் விளம்பரஞ் செய்தீர்களே.

குடித்தனக்காரி—"ஆம்; ஆனால் நீ ஒரு பூனையையல்லவோ கொண்டுவந்திருக்கிறாய்."

சிறுவன்—"ஆமாம்; ஆனாலும் காணாமற்போன பச்சைக்கிளி உள்ளேயிருக்கிறது."

COUNT HOW MANY.

**எவ்வளவு பேரென்று கணக்கிட்டுச்சொல்.**—சில சிறுவர்கள் நாடகசாலையின் உள்ளே நடப்பதை (ஜன்னல்கள்) வழியாகத் திருட்டுத்தனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். வழிப்போக்கன் ஒருவன் அவர்கள் மேல் பரிதாபப்பட்டு சீட்டுக்கொடுப்பவரைப்பார்த்து "ஐயா! இந்தப்பையன்களெல்லாரையும் உள்ளே விட்டு விட்டு எவ்வளவு பேர் போனார்களென்று கணக்கிட்டுச் சொல்லும்" என்றார். சீட்டுக் கொடுப்பவன் கணக்கிட்டுவிட்டு "இருபத்தேழு" என்று சொன்னான். "நானும் அவ்வளவு பேர்கள்தான் இருப்பார்கள் என்று நினைத்தேன்" என்று சொல்லிவிட்டு நெடுங்கம்பி நீட்டினார்.

HAD HIS FILL.

**வேண்டியமட்டும் வைதான்:**—ஒரு தம்பிரானுக்கும் அவனூர் முன்சீப்புக்கும் வெகுநாளாக விரோதம். முன்சீபு அவனை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டுமென்றிருந்தார். கடைசியில்ஏதோ ஒரு ஸந்தர்ப்பத்தில், ஒரு கேஸில் தம்பிரான் சாக்ஷியாக வந்தான். அவனுக்கு இரண்டு கண்ணுங் குருடு. ஆதலால் ஒரு பையன் கோலையொரு தலைப்பில் பிடித்துக்கொண்டு வழிகாட்டிவரத் தம்பிரான் கோர்ட்டுக்குள் வந்தான். உடனே முன்சீபு ஏதோ ஒரு சாக்கைக்கொண்டு தன் கோர்ட்டு நடக்கவொட்டாமல் சந்தடிசெய்வதாகபுகார் உண்டாக்கிக்கொண்டு தம்பிரானை வாயில்வந்தபடி திட்டினார். சற்றுநேரம் கேட்டுவிட்டுத் தம்பிரான் வழிகாட்டிவந்த பயலைக் கூப்பிட்டு "அடே முட்டாள் பயலே, அந்தப் பயலே, இந்தப்பயலே, நான் உன்னை கோர்ட்டுக்கல்லவா கூட்டிப்போகச் சொன்னேன். அந்தப்படுபாவி பார்ப்பாரப்பயல் பொல்லாதவனாச்சுதே. அவனுக்கு இரக்கமென்பது கிடையாதே. சண்டாளன், வேளைக்குப் போகாவிட்டால் பெரிய அமுல் நடத்திவிடுவானே. ஆதலால் சீக்கிரம், போவோம் வா, இங்கெங்கேயோ கடைத்தெருவில் குடிகாரப் பயல்களிருக்கு மிடத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு வேடிக்கை பார்க்கிறாய். உதைப்பேன், சீக்கிரம்வா," என்றான். இதைக்கேட்டதும் முன்சீபு ஒருவர் தவிர மற்றெல்லாருக்கும் முகத்தில் மந்தஹாசம் கண்டது. முன்சீபுக்கு மட்டும் மேல் நடவடிக்கையொன்றும் தோன்றாமல், முகம் வாடிற்றாம்.

A CLEVER WITNESS.

**ஒரு ஸாமர்த்திய சாக்ஷிக்காரன்.**—ஒரு டிஸ்டிரிக்டுக்கோர்ட்டு ஜட்ஜி ஸிவில் வியாஜ்யங்களில் தப்பு சாக்ஷியம் சொல்லி வழக்கை ஆபாஸஞ் செய்துவிடுவதையே விரதமாகக் கொண்ட ஒரு சாக்ஷிக்காரன்மேல் வெகு நாளாகக் கண்ணாயிருந்தார். ஒரு கேஸில் 'யானைக்கும் அடிச்சறுக்கி,' இந்தச் சாக்ஷிக்காரன் ஏதோ மறந்தாப்போல் ஒரு ஸங்கதி நடவாததை நடந்ததாகச் சொல்லிவந்தான். இன்றைக்கு இவன் அகப்பட்டானென்று ஜட்ஜி குதூகலத்துடனிருக்க கோர்ட்டு உத்தியோகஸ்தனொருவன் அந்தக் குறிப்பையறிந்து, சாக்ஷிக்காரனைப் பார்த்துப் பல்லைக்கடித்து, நெல்லைக் கொறித்தான். மகா நிபுணனாகிய அந்த சாக்ஷிக்காரன் உடனே இந்த ஜாடையை யறிந்துகொண்டு, தன் கதையை முடித்து விட்டு, 'இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டார்கள்," என்று பெருமூச்சுவிட்டுச் சொன்னானாம். தப்பிக்கொண்டதை ஜட்ஜி கண்டதும், கோபத்தை அடக்கமாட்டாமல், "இன்றையதினம் உன்னை ஏழுவருஷத்திற்கு நிச்சயத்திருந்தேன். நழுவிவிட்டாய். ஆனால் இனியொரு முறைமட்டும் இந்தக் கோர்ட்டு வழி வந்தாயோ, பார்த்துக்கொள்ளுகிறோம், என்றாராம். சாக்ஷிக்காரன் பதறாமல், "துரைகளே, என்மேல் கோபஞ் செய்யக்கூடாது நானா வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்? அந்த ராணி முத்திரையல்லவா என்னை 'வருத்துகின்றது', ஏதோ தெரிந்ததை உள்ளபடி சொல்லுகிறேனே யென்று அடிக்கடி என்னை இந்த வழக்குக்காரர்கள் கோர்ட்டுக்கு இழுக்கிறார்கள். அவர்களை இனிமேல் என்னைச் சாக்ஷிபோடக்கூடாதென்று துரைகள் உத்தரவளித்து விட்டால் பின்னிட்டு நானேன் வருகிறேன்," என்றானாம்.

## CURIOSITIES.
## விநோதங்கள்.

MONSTROUS BIRTH.

**விபரீத ஜெனனம்.**—மலையாளத்திலுள்ள காப்டன் வில்லக்ஸ் என்பவரிடத்தில் மூன்று கால், மூன்று கண், மூன்று அலகுகளுடைய ஒரு பறவை இருக்கிறதாம்.

ALL ONE EYED.

**எல்லாருக்கும் ஒருகண்.**—இங்கிலாந்தைச் சேர்ந்த லிவர்பூல் நகரில் ஸமீபத்தில் நடந்த குதிரைப் பந்தயத்தில் ஒற்றைக்கண் பொட்டையான குதிரையே முதல் ப்ரைஸ் பெற்றதாம். இந்தக்குதிரை ஒரு ஒற்றைக்கண் பொட்டையனுடையதாம். இதை ஓட்டிச்சென்றவனும் ஒற்றைக்கண்ணிழந்தவனும்.

THE HEAVIEST MAN IN THE WORLD.

**உலகில் கனத்த மனிதன்.**—உலகத்திலுள்ள மனிதர்களிலெல்லாம் அதிககனமானவன் டேனியல் லாம்பெர்ட் என்பவன், தனது 40-ம் வயதில் மரித்துப் போனான். ஸாதாரண ஒரு மனிதன் நிறை 150 பவுன். அவனோ 739 பவுன் கனமிருந்தான். இவன் உடம்பின் சுற்றளவு 9 அடி 6 அங்குலம், கால் சுற்றளவு 3 அடி 1 அங்குலம்.

A RARE PALACE.

**ஓர் அற்புதமான அரண்மனை.**—ஸ்பெயின் தேசத்து முக்கிய பட்டணமாகிய மாட்ரிட் நகரத்தில் ஒரு பெரிய ராஜ மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. அது இருபுறமும் 470 அடிநீளம் வெள்ளைச்சலவைக் கற்களால் தளவரிசை போடப்பட்டு, தாழ்வாரத்தில் 240 சதுர அடியுள்ள கண்ணாடியால் மேலே மூடப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவிலுள்ள கட்டிடங்களில் அது மிகவும் அருமையானதென்று பார்த்தவர்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள்.

A BIG APPLE.

**ஒரு பெரிய ஆப்பில் பழம்.**—லண்டன் கவன்ட் தோட்டத்தில் விளைந்த ஒரு ஆப்பில் பழம் அக்டோபர்௴ 19௳ 14 பவுனுக்கு ஏலத்தில் விற்கப்பட்டது. இவ்வளவு பெரிய பழம் இதுவரையில் இங்கிலாந்தில் விளைந்ததில்லையென்று சொல்லப்படுகிறது. அதன் உயரம் 5 அங்குலம்; சுற்றளவு 16 அங்குலம்; நிறை 27 அவுன்ஸ். அதன் கிரயம் ஆஸ்பத்திரிக்கு நன்கொடை செய்யப்பட்டது.

A BIG TORTOISE.

**ராக்ஷத ஆமை.**—1796-௵ ப்ரிட்டிஷார் ஸிலோனைக் கைவசஞ்செய்துக் கொண்டபோது கொழும்பில் ஒரு ராக்ஷத ஆமை பிடிபட்டது. அது 1894௵ வரையில் உயிரோடு பாதுகாக்கப்பட்டு இடமாற்றினதால் செத்துப்போனது. அதன்உடல் இன்றைக்கும் கொழும்பு பொருட்காட்சிச் சாலையிலிருக்கிறது. அதன் நீளம் தலை முதல் வால் வரையில் 5 அடி, உயரம் 2 அடி. முதுகு ஓட்டின் சுற்றளவு 10 அடி. அதேபோன்ற இன்னொரு ஆமை இப்போது ஸிலோன் மட்டாராவில் பிடிபட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

WOMEN AND EYES.

**ஸ்த்ரீகளும் கண்களும்.**—உறுதியான தேகமுடைய ஒரு பெண்ணினுடைய கண்ணின் அகலம் எவ்வளவோ அதுபோல ஐந்து பங்கு கொண்டது அவளுடைய முகத்தின் குறுக்களவென்றும், அவளுடைய வாயின் மூன்றில் இரண்டு பங்கு அகலமுடையது கண்ணின் அளவென்றும்; கண்ணின் நீட்டு எவ்வளவோ அதுபோல் இரு மடங்கு கொண்டது அவளுடைய காதின் நீட்டென்றும், இரண்டு கண்களுக்கும் இடையில் உள்ள தூரம் ஒரு கண்ணின் நீளத்தின் அளவென்றும் ஒரு கணிதர் கணக்கிடுகிறார்.

A CURIOUS SUPERSTITION.

**ஒரு விநோதக் கொள்கை.**—ஜெர்மனி தேசத்தில் வெஸ்ட்பேலியா மாகாணத்தில் குயில் முதல் முறை கூவுகிறதைக் குடியானவர்கள் கேட்டவுடன் புல்லின் மேல் படுத்துப் பல தடவை புரளுவார்கள். அப்படிச் செய்வதால் அந்த வருஷம் முழுதும் அவர்களுக்கு இடுப்புப்பிடிப்பு, இடுப்புவலி முதலான இடையைப்பற்றிய உபத்திரவங்கள் வாராவாம். மேலும் அவர்கள் தரையில் புரண்டு கொண்டிருக்கையில் இன்னும் ஒரு முறை குயில் பாடினால் அதிக சுகிர்தமாம். மூடர்கள் இல்லாத ஜனங்களுள்ள தேசம் உலகத்தில் எங்குதானிருக்கிறது? கல்வியறிவும் நாகரிகமும் மிக அடைந்திருக்கிறதாகச் சொல்லிக்கொள்ளும் தேசங்களிலேயே இப்பேர்ப்பட்ட காரியங்களின்மேல் நம்பிக்கை வைத்தால், மற்ற தேசங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா?



## NEWS OF THE MONTH.
## மாஸ வர்த்தமானம்.

### INDIAN NEWS.
### இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

THE DECEMBER CONFERENCES.

**டிஸம்பர் மாஸத்தின் ஸபைகள்.**—இந்தியாவில் சில காலமாய் டிஸம்பர் மாஸத்தில் அனேக இடங்களில் பல ஸபைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கத்தோடு கூடிவருகின்றன. போன மாஸத்தில் கூடிய ஸபைகளில் முக்கியமானவைகளாவன:

1. திரிவேணி என்ற அலஹபாத்தில் இந்தியா தேசத்தின் பொது ஜனங்களின், யோகக்ஷேமத்தையும் நலத்தையும் அபிவிருத்திசெய்யும் நோக்கமுள்ள காங்கரெஸ் மஹாநாடு கூடியது. நம்முடைய நலத்தை எப்போதும் கருதியும், அதற்காக பாடுபட்டுவரும் சில ஆங்கிலர்களில் ஒருவரான ஸர். வில்லியம் வெட்டர்பர்ன் எனபவர் இந்த ஸபையின் அக்கிராஸனம் வகித்தார்.

2. அதேபட்டணத்தில் கைத்தொழில் முயற்சி நன்றாய் அபிவிருத்தியாகவேணும் என்ற நோக்கத்துடன், ஸர்க்காரால் கண்காக்ஷி ஒன்று நடத்தப்பட்டது.

3. இந்தியா முழுவதிலும் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாகக்கூடிய இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ் ஸபை.

4. ஹிந்துக்களின் விவாகம், ஸ்திரீகளின் கல்வி, கீழானஜாதியாரை கைதூக்கிவிடுதல், நாவாயாத்திரை, மனுவால் ஏற்படுத்திய நான்கு வர்ணத்தைத் தவிர நானாவிதமான நூற்றுக்கணக்கான ஜாதிப்பிரிவுகள் இவைபோன்ற விஷயங்களின் சீர்திருத்த முறைகளைப்பற்றிய, ஸோஷல்கான்பரென்ஸ்ஸபை.

5. ஜனங்களுக்குள், கள் சாராயம் முதலிய லாகிரி உண்டு பண்ணும் பானங்களை தவிர்ப்பதற்கான உபாயங்களை ஏற்படுத்துவதற்கான டெம்பரென்ஸ் கான்பரென்ஸ் ஸபை.

6. ஸ்திரீகளின் உரிமைகளையும் உத்தரவாதங்களையும் நலப்படுத்த ஏதுவான சீர்திருத்த முறைகளைப் பற்றிய ஸபை.

7. ஹிந்துக்களும் மகமதியர்களும் இந்தியா தேசத்தினர்களாக இருப்பதில், அவர்களுக்குள் அன்னியோன்னியமும் ஸமாதானமும் இருக்க வேண்டும் என்பதைப்பற்றிய ஸபை.

8. நம் தேசத்தில் நூற்றுக்கணக்கான பல பாஷைகள் எழுத்துக்களுள்ளவைகளாக இருக்கின்றன. ஒரே லிபி நம்தேசம் எங்கும் இருக்குமாகில், பல லிபிகளை கற்கிறதினால், ஏற்படும், காலவிரயம், பொருள் விரயம், இவை நீங்கும். தேசம் ஒற்றுமை பெறுதலுக்கு அனுகூலமாக இருக்குமென்றும், ஹிந்திலிபி அங்கீகரிக்ககூடியது என்றும் அனேகர் அபிப்பிராயம். இதைப்பற்றி அலகபாத்தில் ஒரு பெரிய ஸபை கூடியது. இதன் பெயர் ஏகலிபி ஸ்தாபனஸபை. இதன் அக்கிராஸனத்தை, கனம் தங்கிய ஹைகோர்ட்டு ஜட்ஜி வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் வகித்தார்கள்.

9. சென்னப்பட்டணத்தில் நடந்த ஸபைகளின் விபரம்:—அடையாரில் கூடிய பிரஹ்மஞான மஹாஸபை. இதில் மாது ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மாள் அக்கிராஸனம் வகித்தார்கள். நம் தேசத்தில் மதத்துவேஷம் குறைய வேண்டும் என்பதும், ஜனங்களுக்குள் ஸகோதரபாவம் மேன்மேலும் அபிவிருத்தியாக வேண்டுமென்பதும், அவரவர் பிறந்திருக்கிற மதத்தின் உண்மைகளை நன்கு உணர்ந்து அந்த உண்மைகளுக்கு ஏற்ப அநுஷ்டானம் பெறவேண்டுமென்பதும், இந்த ஸபையாரின் முக்கியமான நோக்கங்கள்.

10. கல்வி அபிவிருத்தி விஷயமான உபாத்தியாயர்களின் ஸபை.

11. தென்னாட்டில் உள்ள நாடார்களின் ஸபை. கனம் தங்கிய ஹைகோர்ட்டு ஜட்ஜி சங்கர நாயர் அவர்கள் இந்த ஸபையின் அக்கிராஸனம் வகித்தார்கள்.

12. வட ஆர்க்காட்டில் வன்னிகுல க்ஷத்திரிய ஸமாஜம் ஒன்று நடந்தது.

13. தஞ்சாவூரில் அகோபிலமட சிஷ்யர்களின் ஸபை நடந்தது.

14. பம்பாயில், கிருஸ்தவ சிறுவர்கள் கூட்டம் கூடியது.

15. நாகப்பூரில், மஹமதியர்கள், அவர்கள் ஜாதியாருக்குள் கல்வி அபிவிருத்தி முறைகளைப் பற்றிய பெரிய கூட்டம் கூடினார்கள்.

16. ராமநாதபுரத்தில் சைவ ஸித்தாந்த ஸபை நடத்தப்பெற்றது.

SIR ARTHUR LAWLEY.

**ஸர் ஆர்தர் லாலி.**—நமது கவர்னர் ஸர் ஆர்தர் லாலிக்கு நாளது மார்ச்சு மாஸம் 28-ந் தேதியோடு அவருடைய கவர்னர் வேலை 5 வருஷம் முடிந்து போகவேண்டும். ஆனால் அது முதல் இன்னும் ஆறு மாஸ காலத்துக்குக் கவர்னராய் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு லண்டன் இந்தியா ஆபீசிலிருந்து ஒரு தந்தி வந்திருக்கிறது.

THE CAWNPORE WOOLLEN MILLS.

**கான்பூர் உலன் மில்ஸ்.**—கான்பூர் உலன் மில்லில் வேலைசெய்யும் வேலைக்காரர்களில் ஸுமார் 1500 பேர்களைத் தெரிந்தெடுத்து மில்லுகளின் சொந்தக்காரர்கள் தங்களுடைய செலவில் ஐக்கிய மாகாணப் பொருட்காட்சியைப் பார்வையிட்டு வருவதற்காக ஒரு ஸ்பெஷல் ரெயில் வண்டியில் அனுப்பினார்கள். ரெயில் கொடிகளாலும் புஷ்பங்களாலும் அழகாய் அலங்கரிக்கப் பட்டிருந்தது. "லாலிம்லி" என்னும் வியாபாரக்குறியை ஒவ்வொரு வேலைக்காரரும் தங்கள் உடையில் அணிந்திருந்தார்கள்.

VISITORS TO THE EXHIBITION.

**பொருட்காட்சியைப் போய்ப் பார்ப்பவர்கள்.**—அலகாபாத் பொருட்காக்ஷியைப் பார்க்கத் தங்களால் எவ்வளவு விவஸாய உத்தியோகஸ்தர்களையும், பாரஸ்ட் உத்தியோகஸ்தர்களையும் அனுப்ப முடியுமோ அவ்வளவு விவஸாய உத்தியோகஸ்தர்களையும் பாரஸ்ட் உத்தியோகஸ்தர்களையும் மாகாண கவர்ன்மெண்டுகள் அனுப்ப வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் விவஸாய காலேஜிலிருந்து 12 - பிள்ளைகளைப் பொறுக்கி மேற்படி பொருட் காட்சியைப் பார்த்துவரும்படி சென்னை கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

UNITED PROVINCE AGRICULTURAL CONFERENCE.

**ஐக்கிய மாகாண விவஸாயக் கான்பரென்ஸ்.**—அலகாபாத் பொருட்காட்சிக் கூடத்தில் விவஸாயக் கான்பரென்ஸ் ஒன்று கூடிற்று. அதில் கால் நடைகளுக்கு வியாதி வெக்கை வராமல் காப்பாற்றுவது எப்படி என்றும், ஒரு குறித்த பிரதேசத்தில் கால் நடைகளின் உற்பத்தி முறைகளில் விருத்தி யுண்டாகும்படி, அதாவது, நோய்நொடிகளில்லாத ஜாதிக்கன்றுகள் உற்பத்தியாகும்படி செய்வது எப்படியென்றும், ஐக்கியமாகாணங்களிலுள்ள நகரங்களில் நல்ல பால், தயிர், வெண்ணெய் இவைகள் கிடைக்கும்படியான சாலைகளை எப்படி ஏற்படுத்துகிறதென்றும் வாதித்துப் பேசப்பட்டது. இந்த நடவடிக்கைகளெல்லாம் ராய் பகதூர் ஆனரெபில் பண்டிட் சுந்தரலால அக்கிராஸனம் வகித்திருக்க நடந்தன. கடைசி முடிவில் அந்த விவஸாயக் கான்பரென்ஸால் விளையக்கூடிய நன்மையைப் பற்றி அவர் பேசி விட்டு அந்த கான்பரென்ஸை அக்கரை எடுத்துக்கூட்டிய அந்த மாகாண விவஸாய டைரெக்டர் மிஸ்டர் மோர்லாண்டுக்கும் மற்றவர்களுக்கும் நன்றிசெலுத்தினார்.

PUBLIC SERVANTS AND SEDITION.

**ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ராஜத்வேஷமும்.**—மதராஸ் கவர்ன்மெண்டின் ராஜாங்கப் பிரிவுகளில் அஸிஸ்டெண்டுகளா யிருப்பவர்களுக்கும், க்ளார்க்குகளா யிருப்பவர்களுக்கும் கவர்ன்மெண்டாரால் அடியிற்கண்ட ஆர்டர் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (1) ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஆக்ஷியைக் குறித்து வீணான அபிப்பிராயத்தையும் விரோதமான கொள்கையும் பரவாமலிருக்கும்படி எல்லா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் கவனிக்க வேண்டியது அவர்களின் கடமையாக நினைக்க வேண்டும். (2) கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தன் ராஜாங்கத்திற்கு விரோதமான காரியங்களிற் சார்பாயிருக்கிறதாகத் தெரிந்தால் அவனை முதலாவது எச்சரிக்க வேண்டும். அப்பொழுதும் சீர்திருத்திக் கொள்ளாவிட்டால் அவனை வேலையை விட்டு நீக்கி விடலாம். அப்பாலும் கவனிக்காவிடில், தண்டனைக்காளாவான். (3) கவர்ன்மெண்டைச் சேர்ந்த எல்லா உத்தியோகஸ்தர்களும் அவர்களைச் சேர்ந்த மனுஷர்களிடமும், குமாரர்களிடமும், ராஜத்ரோகம் பரவாமலிருக்க முயற்சியெடுக்கவேண்டும். அவர்களில் யாராவது ராஜத்ரோகமான காரியங்களில் தலையிடுவதாகத் தெரிந்தும் ஒரு பப்ளிக் உத்தியோகஸ்தன் தானே சீர் திருத்தியும், முடியா விட்டால், மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமலுமிருப்பானால், அவனே ஜவாப்தாரியா யிருப்பான்.

---



FOREIGN NEWS.

அந்நிய நாட்டு ஸமாசாரம்.

---

A GREAT EXHIBITION.

**பெருங்காட்சி சாலை.**—1915-ம் வருஷத்தில் லண்டன் நகரில் ஆங்கிலேய ராஜ்யத்திலுள்ள ஸகல பொருள்களும் அடங்கிய ஒரு பெரும் நூதன காட்சி சாலை திறக்கப்போகிறார்கள்.

PLANTAINS.

**வாழைப்பழம்.**—நமது நாடு வாழைக்குத் தாயிடம் போலிருந்து பற்பல விதமான வாழையிருந்தும் ஆஸ்திரேலியாவில் விவஸாயம் நடத்துவது வியக்கத்தக்கதாக இருக்கிறது. அங்கு விளைந்த ஒவ்வொரு சீப்பில் ஸராஸரி 32-பழங்கள் ஒன்று போல் இருக்கின்றனவாம். நாம் எக்காலத்தில் அப்படி விளைவிப்பது? சீப்புக்கு 16-பழம் நமக்கு ஸாதாரணம். தஞ்சாவூர் காட்சியில் 20-பழம் கண்டதுண்டு. 32-பழம் ஆச்சரியம்.

EMIGRATION TO SOUTH AFRICA.

**தென் ஆப்பிரிக்காவுக்கு பிழைக்க போதல்.**—தென்னாப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியர்கள் இந்தியர்களைப் படுத்துகிறபாடு நம்மெல்லாருக்கும் பழம் பாடம். இது விஷயத்தில் நமது காருண்ய இந்திய அரசாக்ஷியார் சற்றுக் கண்விழிப்பாயிருக்கத் தொடங்கி இருக்கிறார்கள். அடுத்த ஜுலை மாஸமுதல் தென்னாப்பிரிக்காவுக்கு இந்திய கூலி ஜனங்களை அனுப்புகிறதில்லை என்று இந்திய அரசாக்ஷியார் தெரிவித்திருக்கிறார்கள்.

A BARREL FACTORY.

**பீப்பாய் பாக்டேரி.**—இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த மான்சஸ்டர் என்னுமிடத்தில் நீராவியந்திரங்களால் பீப்பாய்கள் செய்யப் புதிதாக சொற்ப காலத்திற்கு முந்தி ஒரு பாக்டெரி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையானது மெஸ்ஸர்ஸ் பியர்லி அண்டு ஸன்ஸ், அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்தத்தொழிற்சாலையில் 60 மணி நேரத்திற்குள் 1000 பீப்பாய்கள் செய்யப்படுகின்றன என்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தத்தொழில் இவர்களால் புதிதாய் நடத்தப்பட்டு வருகிறபடியால் அதிகமான ஆட்களை வைத்து வேலை நடத்தாமல் சொற்ப ஆட்களை வைத்து வேலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் இந்தத்தொழிலை இதுவரையில் யாவரும் நடத்தி அனுபோகம் அடையவில்லை. மேற்சொல்லப்பட்ட பாக்டெரியில் 5 பையன்களும் போர்மென் ஒருவனும் வேலை செய்கிறார்கள். கட்டைகளை எப்படி அறுக்கிறது என்பதையும் எப்படிச்சேர்க்கின்றது என்பதையும் இந்தச் சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது மேற்படி போர்மெனின் கடமை. நம் தேசத்துத் தச்சர்கள் உபயோகமில்லை என்று எறிந்துவிடும் கட்டைகளைக் கூட இந்த பாக்டெரியில் உபயோகப்படுத்திவிடுகிறார்கள். பலகைகளை வெகு சீக்கிரமாகவும் சுத்தமாகவும் அறுத்துச் சேர்த்து பீப்பாய்கள் செய்கிறார்களாம்.

WHY REAR DOGS?

**நாய்களை வைத்து வளர்ப்பதேன்?**—பல தேசங்களில் வீடுகளில் திருடர்கள் வராமல் காபந்து பண்ணவும், வேட்டைக்குப்போகும் காலத்தில் எஜமான்களுக்கு உதவி செய்யவும், எலி, பெரிச்சாளி முதலான பிராணிகளைப் பிடித்துக் கொல்லவும் நாய்களை வைத்து வளர்க்கிறார்கள். சில பட்டாளங்களில் சண்டைக்கு உதவியாகவும் நாய்களை வளர்க்கிறார்கள். திருடர்களைப் பிடித்துக் கொடுக்கவும் சில தேசங்களில் போலீஸ் டிபார்ட்மெண்டில் நாய்கள் வைத்திருக்கிறார்கள். ஆல்ப்ஸ் மலையில் பனியில் தடுமாறிக்கொண்டிருக்கும் பிரயாணிகளைக் காப்பாற்ற ஸென்ட் பெர்னார்ட் என்ற சிறந்த நாய்களை வளர்க்கிறார்கள். இவைகளெல்லாம் அவாளவாள் பிரயோஜனத்துக்காக மாத்திரம் வளர்க்கப்படுகின்றனவே ஒழிய வேறல்ல. மன்சூரியா தேசத்திலோ வியாபாரத்திற்காகவே விசேஷமாய் நாய்கள் வளர்க்கப்படுகின்றன. வாழ்க்கைப்படுகிற ஒரு பெண்ணுக்கு அந்த தேசத்தில் பணத்திலும், நிலத்திலும், நகையிலுமல்ல ஸ்ரீதனம் கொடுக்கிறது. நாய்களைத்தான் ஸ்ரீதனமாகக்கொடுக்கிறது வழக்கமாம். ஏழை தாய் தகப்பன்மார்கள் ஆறு நாய்களுக்குக் குறையாமல் தங்கள் பெண்ணுக்குக் கொடுப்பார்கள். ஆஸ்திக்காரர்கள் தங்கள் ஐவேஜிக்குத் தக்கவண்ணம் நாய்களின் தொகையை அதிகரித்துக்கொள்ளுவார்கள். நாய்களின் இறைச்சி சாப்பாட்டுக்கு உதவுகிறது. அவைகளுடைய தோல்கள் மயிர் போக்கப்படாமல் கம்பளங்களாகச் செய்யப்படுகின்றன. அந்த தேசத்தில் வருஷமொன்றுக்கு லக்ஷம் நாய்கள் வரையில் சாப்பாட்டுக்காகக் கொல்லப்படுகின்றனவாம்.

# MADRAS MARKET REPORTS.

## சென்னப்பட்டணம் மார்க்கெட் நிலவரங்கள்.

(தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்பட்ட வர்த்தக சங்கத்தாரின் ஜனவரிமீ 18௳ ரிபோர்ட்டுப்படி.)

PIECE GOODS.

ஜவுளி ஸாமான்கள்.

பருத்தி விலை ஒரு நிலையாயில்லாததால் சீமையில் விலை ஏறும்போலிருக்கிறது. பட்டணத்தில் பொங்கல் மொகரம் பண்டிகைகள் ஆய்விட்டபடியால் வழக்கம்போல் மார்க்கெட் டல்லாயிருக்கிறது. காடாவுக்கும் ஜாக்கிநெட்டுக்கும் கிராக்கி. ஆனால் சரக்கு இல்லை. விலை விகிதங்கள் பின் வருமாறு:—

GREY SHIRTINGS—காடா.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| லேடி மார்க்கு. | | | |
| No. 1110—37×37½×46″ .. | 7 | 12 | 0 |
| கூண்டு மார்க்கு. | | | |
| No. 2500—37×37½×41″ .. | 5 | 14 | 0 |
| ,, 3500 ஷை 46″ .. | 6 | 10 | 0 |
| ,, 7500 ஷை 54″ .. | 7 | 15 | 0 |
| ,, 5000 ஷை 41″ .. | 6 | 2 | 0 |
| பறவை நாகம் மார்க்கு | | | |
| 37×37½×41″ .. .. | 5 | 8 | 6 |
| மகிழ் அடிசேர்வை—பொன்னூல் தறி. | | | |
| No. 400—41″ .. .. | 6 | 8 | 0 |
| 41″ பொன்னூல் தறி. | | | |
| No. 3552 .. .. .. | 6 | 12 | 0 |
| ,, 3553 .. .. .. | 6 | 15 | 0 |
| ,, 3554 .. .. .. | 7 | 2 | 0 |
| ,, 3555 .. .. .. | 7 | 5 | 0 |
| ,, 3556 .. .. .. | 7 | 8 | 0 |
| No. 126—46″—37/7½ .. | 9 | 4 | 0 |
| பட்டைக்தறி. | | | |
| No. 7386—46″—37×37½ .. | 8 | 0 | 0 |
| ,, 7397—ஷை .. .. | 8 | 6 | 0 |

GREY MULLS—காரிகம்பீஸ் (காஸாக்கச்சை).

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 20 கஜம் இஞ்சின் மார்க்கு. | | | |
| 20×20×46″ .. .. | 4 | 5 | 6 |
| ஷை 51″ .. .. | 4 | 13 | 0 |
| 22×22×51″ .. .. | 5 | 5 | 6 |
| ஷை 46″ .. .. | 4 | 13 | 6 |
| 20 கஜம் புறு மார்க்கு. | | | |
| 20×20×46″ .. .. | 4 | 5 | 0 |
| தங்க மீன் மார்க்கு. | | | |
| ஷை .. .. | 4 | 5 | 0 |
| நுபா மார்க்கு. | | | |
| 40″—20×20 .. .. | 4 | 5 | 0 |
| 45″—22×22 .. .. | 4 | 13 | 0 |

BOOK MUSLINS.—புக் மஸ்லின்கள்.

| சங்கு மார்க்கு 12 கஜம். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 51″—94 .. .. .. | 4 | 0 | 0 |
| ஷை—95 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை—96 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை—97 .. .. .. | 4 | 12 | 0 |
| 52″—170 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை—175 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை—180 .. .. .. | 4 | 12 | 0 |
| ஷை—185 .. .. .. | 5 | 0 | 0 |

COLOURED BOOK MUSLINS—கலர் புக் மஸ்லின்.

| | | | |
|---|---|---|---|
| ராணி மார்க்கு. .. .. | 2 | 12 | 0 |
| லக்ஷ்மி நாராயணன் மார்க்கு .. | 2 | 11 | 0 |
| பள்ளிக்கூடப் பையன் மார்க்கு .. | 2 | 10 | 0 |

JACONETS.—ஜாக்கிநேட்டுகள்

| | | | |
|---|---|---|---|
| 46″ தங்க விநாயகர் மார்க்கு. | | | |
| No. 888 .. .. .. | 5 | 8 | 0 |
| ,, 777 .. .. .. | 5 | 2 | 0 |
| ,, 5005 .. .. .. | 4 | 10 | 0 |
| ,, 6006 .. .. .. | 4 | 13 | 0 |
| ,, 333 .. .. .. | 4 | 10 | 0 |
| ,, 444 .. .. .. | 4 | 13 | 0 |
| 20 கஜம் 46″ தங்கக் குழந்தை மார்க்கு. | | | |
| No. 2552 .. .. .. | 4 | 7 | 0 |
| ,, 2662 .. .. .. | 4 | 11 | 0 |
| ,, 89 .. .. .. | 4 | 13 | 0 |
| ,, 898 .. .. .. | 4 | 14 | 0 |
| ,, 8989 .. .. .. | 5 | 1 | 0 |
| ,, 89898 .. .. .. | 5 | 3 | 0 |
| ,, 898989 .. .. .. | 5 | 5 | 0 |
| ,, 3771 .. .. .. | 4 | 6 | 6 |
| ,, 3772 .. .. .. | 4 | 8 | 6 |

WHITE MULLS—ஸலவை மல்லுகள்.

| | | | |
|---|---|---|---|
| No. 1703 .. .. .. | 7 | 4 | 0 |
| ,, 1503 .. .. .. | 7 | 0 | 0 |
| ,, 1502 .. .. .. | 6 | 2 | 6 |
| ,, 1702 .. .. .. | 6 | 6 | 0 |
| ,, 1704 .. .. .. | 7 | 8 | 0 |
| ,, 136—40″—18 கஜம் .. | 2 | 2 | 0 |
| ,, 9072—46″ 20 கஜம் .. | 4 | 10 | 0 |
| ,, 9073—51″ ஷை .. | 5 | 2 | 0 |
| ,, 5072—46″ ஷை .. | 4 | 10 | 0 |
| ,, 5073—51″ ஷை .. | 5 | 2 | 0 |
| ,, 912—46″ ஷை .. | 4 | 7 | 6 |
| ,, 913—51″ ஷை .. | 4 | 15 | 6 |
| ,, 3073 .. .. .. | 5 | 12 | 0 |
| ,, 7073 .. .. .. | 5 | 13 | 0 |
| ,, 973 .. .. .. | 5 | 13 | 0 |
| மெடல் மார்க்கு. | | | |
| ,, 7773 .. .. .. | 6 | 4 | 0 |



| ஸவரன் மார்க்கு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 273 .. .. .. | 6 | 5 | 0 |
| 72—46″ 20 கஜம் .. .. | 4 | 0 | 0 |
| 73—51″ ஷை .. .. | 4 | 8 | 0 |

WHITE SHIRTINGS—லாங் க்லாத்.

| | | | |
|---|---|---|---|
| H. K. 62 36″ 40 கஜம் .. | 9 | 0 | 0 |
| ஷை 82 ஷை .. | 9 | 4 | 0 |

RED SHIRTINGS—தோம்பு.

| | | | |
|---|---|---|---|
| ஸ்வதன்வா மார்க்கு. | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 6 | 4 | 6 |
| 7 ஷை .. .. .. | 6 | 8 | 6 |
| 8 ஷை .. .. .. | 6 | 12 | 6 |
| No. 10—41″ 40 கஜம் .. .. | 8 | 3 | 0 |
| ஒட்டை மார்க்கு. | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 7 | 3 | 0 |
| 8 ஷை .. .. | 7 | 7 | 0 |

YARN AND TWIST—நூலும் முறுக்கு நூலும்.

| | | | |
|---|---|---|---|
| ஆமதாபாத் காரம் 40—சைனு டிக்கெட்டு—செகப்பும் மஞ்சள் முடியும். | 3 | 2 | 0 |
| பம்பாய் காரம் 40 டவர் அண்ட் ஸேட் மார்க்கு .. .. | 3 | 12 | 6 |

MANCHESTER YARN—சீமை நூல்.

40 நம்பர் நூல் கேட்கிறார்கள். ஆனால் விலை கிராக்கியால் வியாபாரமில்லை.

| | | | |
|---|---|---|---|
| காரம் 40 ஜி. எம். (G.M.) ட்ரம்மர் | 4 | 0 | 0 |
| ஷை க்ளாஸ்கோ .. | 4 | 3 | 0 |
| ஷை தங்கமயில் .. .. | 4 | 0 | 0 |
| ஷை மதுராபட்டணம் ஜி.எம். | 4 | 0 | 0 |
| ஷை பாக்கு வெட்டி .. | 4 | 0 | 0 |
| ஷை ஆதிசேஷன் .. | 4 | 2 | 6 |
| ஷை ஸலவை 80 மகாராஜா | 7 | 6 | 0 |
| ஷை 30 கெடிகாரம் .. | 4 | 1 | 0 |
| ஷை ஷை தண்ணித்துரை .. | 4 | 2 | 0 |
| ,, 50 ம்யூல்-கிழவன் .. | 4 | 7 | 6 |
| ,, ஷை, ஷை 70/80 .. | 6 | 7 | 0 |
| 50 மீடியோ G. F. M. ஒட்டையும் யானையும் | 6 | 2 | 0 |
| 60 மீடியோ .. .. .. | 6 | 6 | 0 |

RED—செகப்பு.

| | | | |
|---|---|---|---|
| 60 இரட்டைமயில் .. .. | 8 | 12 | 0 |
| 40 முனிவிபாலிட்டி (புல்வெயிட்) | 11 | 0 | 0 |
| 40 ஜே. ஆர். புத்தா .. .. | 6 | 0 | 0 |
| ,, வில்லேஜ் 4 டிக்கெட்டு .. .. | 5 | 4 | 0 |
| ,, ராவணேஸ்வரன் .. .. | 11 | 0 | 0 |
| ,, அஹல்யை ராமர் .. .. | 10 | 14 | 0 |
| ,, மோட்டார்கார் .. .. | 10 | 2 | 0 |
| ,, போரா பஸார் .. .. | 6 | 1 | 0 |
| ,, பூப்ஸானி இரண்டு கட்டு .. | 10 | 15 | 0 |
| 60 ஆதிசேஷன் .. .. | 8 | 12 | 0 |

YELLOW—அரை மஞ்சள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 42/40 இஞ்சின் ... .. | 4 | 11 | 0 |
| 40 ஸ்டீமர் .. .. | 4 | 13 | 0 |
| 44/40 யானை .. .. | 4 | 8 | 0 |
| 40 கெங்கை (ஜகன்மோஹினி) புல்வெயிட் | 4 | 13 | 0 |
| காசி ராஜா .. .. | 4 | 14 | 0 |
| 44/40 கிருஷ்ணன் .. .. | 4 | 8 | 0 |

LEMON AND ORANGE—கால் மஞ்சள் முழு மஞ்சள்.

| | | | |
|---|---|---|---|
| 44/40 கால் மஞ்சள் கிருஷ்ணன் | 4 | 8 | 0 |
| ,, முழு மஞ்சள் ஷை .. | 4 | 12 | 6 |
| 40 கால் மஞ்சள் கெங்கை .. | 4 | 12 | 0 |
| ,, முழு மஞ்சள் ஷை .. | 5 | 1 | 0 |
| ,, ஷை காசி ராஜா .. .. | 4 | 15 | 0 |
| 40 கால் மஞ்சள் ஸ்டீமர் .. | 4 | 12 | 6 |
| ,, முழு மஞ்சள் ,, .. | 5 | 2 | 0 |
| 30 காரம் சிங்கம் .. .. | 3 | 12 | 0 |
| ,, ராஜா .. .. | 3 | 6 | 0 |

BLACK—கருப்பு.

| | | | |
|---|---|---|---|
| 44/40 குதிரை .. .. | 4 | 12 | 0 |
| 30 ஸரஸ்வதி .. .. | 4 | 3 | 0 |

HIDES AND SKINS—மாட்டு ஆட்டுத்தோல்கள்.

சீமையில் சரக்கு அவ்வளவாக வாராததால் விலை தாக்கலாம் போலிருக்கிறது.

| | ரூ. | அ. | பை. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| மானு (மாட்டுத்தோல்) | | | | | | | |
| ராயதுர்க்கம் .. .. | | | | | 0 | 13 | 5 |
| பல்லாரி .. .. | | | | | 0 | 13 | 5 |
| பங்களூர் கமேலா .. .. | | | | | 0 | 12 | 10 |
| ஷை உப்புத்தோல் .. .. | | | | | 0 | 12 | 1 |
| ஹைதராபாக்கம் .. .. | | | | | 0 | 12 | 7 |
| மட்வாடா .. | 0 | 11 | 9 | முதல் | 0 | 12 | 0 |
| ஏலூர் ராஜமஹேந்திரபுரம் | 0 | 12 | 0 | முதல் | 0 | 12 | 3 |
| செட்டி கடல்கரை | 0 | 11 | 9 | முதல் | 0 | 12 | 3 |
| சீவரம் .. .. | | | | | 0 | 11 | 6 |
| குடியாத்தம் .. .. | | | | | 0 | 11 | 6 |
| பல்லாவரம் .. | 0 | 10 | 9 | முதல் | 0 | 11 | 0 |
| யேனு (எருமைத்தோல்) | | | | | | | |
| ராயதுர்க்கம் .. .. | | | | | 0 | 9 | 11 |
| பல்லாரி .. .. | | | | | 0 | 9 | 10 |
| பங்களூர் | 0 | 9 | 0 | முதல் | 0 | 9 | 1 |
| வேனு (வெள்ளாடு) | | | | | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | | | | | 1 | 10 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 7 | 0 |
| சேனு (செம்மரி ஆடு) | | | | | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | | | | | 1 | 3 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 1 | 0 |
| வாணியம்பாடி .. .. | | | | | 1 | 14 | 0 |
| ஹோஸ்பேட்டை .. .. | | | | | 1 | 6 | 6 |
| சேலம் | 1 | 10 | 0 | முதல் | 1 | 14 | 0 |
| மட்வாடா | 1 | 3 | 6 | முதல் | 1 | 4 | 0 |

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு .. | 16 முதல் 26 |
| கொன்னைப்பட்டை ஷை .. | 15 முதல் 16 |
| கடப்பை கடுக்காய் ஷை .. | 11 முதல் 12 |
| சேலம் அரசகிரிஷை ஷை .. | 15 முதல் 20 |
| நல்லெண்ணெய் ஷை .. | 110முதல்114 |
| புங்கம் எண்ணெய் ஷை .. | 80 முதல் 90 |
| மணிலாக்கொட்டை பிண்ணாக்கு ஷை | $15\frac{1}{2}$ முதல் 16 |
| முத்து கொட்டை பிண்ணாகு ஷை | $12\frac{1}{2}$ |
| எள்ளு ஷை .. | $17\frac{1}{2}$ |
| எட்டிக்கொட்டை ஷை .. | 12 |
| உள்ளிப்பூண்டு ஷை .. | 40 |
| பூந்திக்கொட்டை ஷை .. | 10 |
| விளக்கெண்ணெய் ஷை .. | 94 |
| மணிலாக்கொட்டை பருப்பு பாரம் 1-க்கு | 34முதல்36 |
| உடைக்காதது 42 மணங்கு .. | 50 முதல் 52 |
| கொட்டை முத்து 165 ராத்தல் .. | $11\frac{1}{2}$முதல் 12 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ரங்கூன் அரிசி 62—63 படி .. | 11 | 8 | 9 |
| பந்தர் பச்சை அரிசி 44 படி .. | 7 | 8 | 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 | 8 | 0 |
| கோதுமை 4 படி .. | 1 | 0 | 0 |
| கொள்ளு 195 ராத்தல் 5 12 0 முதல் | 6 | 0 | 0 |
| வெங்காயம் (தாட்பத்திரி) பாரம் .. | 16 | 8 | 0 |
| ஷை (பல்லாரி) ஷை | 17 | 0 | 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு ஷை | 20 | 0 | 0 |

METALS—லோகங்கள்.

| | ரூ. |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ—ம் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் | 206 |
| செப்பு தகடுகள் பாரம .. | 248 |
| செப்புக்கட்டி ஷை .. | 214 |
| நாகம் ஷை .. | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 82 |
| ஈயம் ஷை .. | 50 |
| காரீயம் ஷை .. | 49 |
| வெள்ளீயம் ஷை .. | 183 வராகன். |

IRON—இரும்பு.

விலை ஏறும்போலிருக்கிறது. எல்லாரும் கேட்கிறார்கள்.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 நெம். பாரம் ரூ | 21 |
| சீமை .. .. .. | 40 |
| மருக்கி தகடு 6—9, 12—13, | 25—32 |
| பீப்பாய்க் கட்டு .. .. | 27 |
| 8 பட்டை எஃகு .. .. | 20—$20\frac{1}{2}$ |
| எஃகு வில்கட்டு .. .. | 27—31 |
| திராணக் கம்பி மருக்கி 2 நெம். .. | 22 |
| சீமை ஷை .. .. .. | 40—49 |

SEASON.

காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1910௵ ஏப்ரல்மீ 1-உயிலிருந்து, நாளது௵ பிப்ரவரிமீ 1-உ வரையில் பெய்தமழை அளவும், இந்தக்காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாக குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 59·58 | 46·40 |
| வால்டேர் | 54·52 | 43·06 |
| காக்கிஞடா | 38·79 | 38·00 |
| மசூலிப்பட்டணம் | 48·48 | 40·56 |
| நெல்லூர் | 32·34 | 30·55 |
| மதராஸ் | 44·27 | 49·96 |
| கூடலூர் | 43·00 | 51·58 |
| நாகப்பட்டணம் | 46·56 | 54·48 |
| பாம்பன் | 25·04 | 37·55 |
| கொழும்பு | 63·58 | 82·95 |
| திருவநந்தபுரம் | 72·21 | 60·37 |
| கொச்சி | 119·09 | 112·60 |
| கள்ளிக்கோட்டை | 106·65 | 114·38 |
| மங்களூர் | 117·78 | 123·84 |
| மெர்க்காரா | 125·99 | 124·99 |
| ஐதராபாத் | 27·63 | 30·83 |
| ரெய்ச்சூர் | 54·52 | 43·01 |
| பல்லாரி | 25·70 | 19·57 |
| கர்நூல் | 28·29 | 27·97 |
| கடப்பை | 46·23 | 32·58 |
| ஹாஸ்ஸான் | 37·43 | 34·65 |
| பெங்களூர் | 46·04 | 34·49 |
| கொடைக்கானல் | 68·87 | 55·68 |
| உதகமண்டலம் | 58·01 | .. |
| கோயம்புத்தூர் | 22·23 | 19·95 |
| வேலூர் | 61·73 | .. |
| சேலம் | 41·81 | 39·53 |
| திருச்சிறப்பள்ளி | 38·31 | 31·34 |
| புதுக்கோட்டை | 37·66 | .. |
| மதுரை | 39·29 | 32·33 |
| திருநெல்வேலி | 21·18 | 26·23 |


# இந்த புஸ்தகங்களை நீங்கள் படித்திருக்கிறீர்களா?

**ப. சம்பந்த முதலியாராலியற்றியது.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| இரண்டு நண்பர்கள் ... ... | 0 | 12 |
| இரண்டு சகோதரிகள் ... | 0 | 12 |
| வேதாள உலகம் ... ... | 0 | 8 |
| கள்வர் தலைவன் ... ... | 0 | 8 |
| சாரங்கதரன் ... ... | 0 | 8 |
| காலவரிஷி ... ... | 0 | 8 |
| யயாதி ... ... ... | 0 | 8 |
| மனோகரன் ... ... | 0 | 12 |
| சத்ருஜித் ... ... ... | 0 | 12 |
| அமலாதித்யன் ... ... | 1 | 0 |
| காதலர் கண்கள் ... ... | 0 | 12 |
| ரத்திணவளி ... ... | 0 | 12 |

**மஹா மஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள் பதிப்பித்தவை.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலப்பதிகாரம் ... ... | 5 | 8 |
| புறப்பொருள் வெண்பா மாலை... | 1 | 8 |
| திருவால வாயுடையார் திருவிளையாடர் புராணம் ... ... | 2 | 0 |
| திருக்காளத்தி நாதருலா ... | 0 | 6 |
| திருப்பூவ நாதருலா ... ... | 0 | 4 |
| சூரைமா நகர்ப்புராணம் ... | 0 | 8 |
| தியாகர்ராஜ லீலை ... ... | 0 | 12 |
| திருவாடுதுறைக்கோவை ... | 0 | 8 |
| மணிமேகலை மூலமும் பதவுரையும். | 5 | 0 |
| புறநானூறு மூலமும் உரையும். | 4 | 0 |
| திருப்பெருந்துறைப் புராணம்... | 1 | 0 |
| வீரவனப்புராணம் ... ... | 0 | 12 |
| ஐங்குறுநூறும் பழையவுரையும். | 1 | 8 |
| பதிற்றுப்பத்து மூலமும் ,, ... | 1 | 8 |
| பத்துப்பாட்டு ... ... | 3 | 0 |
| புத்த சரித்திரம் ... ... | 0 | 12 |
| சீர்காழிக்கோவை ... ... | 0 | 8 |

**பண்டிதர் நடேச சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட**

**வால்மீகராமாயண வசனம்.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| பாலகாண்டம் ... | 0 | 12 |
| அயோத்தியாகாண்டம் ... | 3 | 0 |
| ஆரண்ணியகாண்டம் ... | 1 | 12 |
| கிஷ்கிந்தாகாண்டம் ... | 1 | 12 |

**நடேச சாஸ்திரியார் கதைகள்.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| மதிகெட்ட மனைவி .. | 1 | 0 |
| ஸ்ரீ மாமி கொலுவிருக்கை ... | 0 | 8 |
| தீனதயாளு ... ... | 0 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| தலையணை மந்திரோபதேசம் ... | 0 | 3 |
| வேணீ ஸம்ஹாரம் ... | 0 | 3 |
| முத்திரா ராக்ஷஸம் ... | 0 | 4 |
| மிருச்சகடி ... ... | 0 | 4 |
| ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்... | 0 | 6 |

**டி. செல்வகேசவராய முதலியாரால் இயற்றியது.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| கற்பலங்காரம் ... | 0 | 3 |
| அறநெறிச்சாரம் ... | 0 | 4 |
| இராபின்ஸன் குருஸோ ... | 0 | 4 |
| தமிழ் உபந்நியாசங்கள் ... | 0 | 6 |
| தமிழ் பாஷையை பற்றிய உபந்நியாசங்கள் ... | 0 | 8 |

**வி. கோ சூரியநாராயண சாஸ்திரியார் இயற்றியது.**

**பாவலர் விருந்து.**—முதனூள். ஆங்காங்குச்சில புதிய கருத்துக்களடங்கிய இனிமையும், புதுமையும், வாய்ந்த பதிஞேரு சிறிய செய்யுள்கள் கொண்டது. விலை அணு 8.

**நாடகவியல்.**—இது 272 சூத்திரங்களடங்கிய நாடகத்தமிழிலக்கண நூல். விலை அணு 8.

**ஸ்ரீ மணியசிவனர் சரித்திரம்.**—சைவமதத்தின் உண்மை பல தெரிவிப்பது. அணு 2.

**நுபாவதி அல்லது காணமற்போன மகள்.**—கதையின்மூலமாய்ச் சிறந்தநீதிகள் பலகற்பிப்பது. ராப்பர் ரூபா 1. காலிகோ ரூ. 1-4-0

**தமிழ் மொழியின் வரலாறு.** பொருளடக்கம்:—

1. ஆதிவரலாறு. 2 வடமொழிக்கலப்பு. 3. மூவகைப் பாகுபாடு. 4. ஐவகை இலக்கணம். 5. பாஷையின் தோற்றமுந் தொன்மையும். 6. பாஷையின் சிறப்பியல்பு. 7. பாஷை வேறுபடுமாறு 8. நூற்பரப்பு. 9. பாஷையின் சீர்திருத்தம். 10. முடிவுரை. பேபர் பயிண்டு ரூபா 1. காலிகோ பயிண்டு ரூபா 2.

**மானவிஜயம்.**—இஃது அங்கம் என்னும் ஒருவகை நாடகம். விலை அணு 8.

**தனிப்பாசுரத்தொகை.**—அருமையும், பெருமையும் வாய்ந்த 40 தனிப்பாசுரங்களடங்கியதோர் உறுதி நூல். விலை அணு 8.

**மதிவாணன்.**—இருபத்தைந்து அத்தியாயமுள்ள செந்தமிழ்க் கதை. விலை அணு 8.

**மதுரைமாலை** விலை அணு 0-1-6.

ஜி. ஏ. நடேசன் அண்டு கோ., 3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# இந்த புஸ்தகங்களை நீங்கள் படித்திருக்கிறீர்களா ?

நாயிடுகோரு சமஸ்தான் சரித்திரம் ரூ 1 8 0

**சநாதந தர்மம்.**—3ம் பிரிவு. விலை ரூ. 1.

**போஜ சரித்திரம்.** பதினாறு சித்திரப்படங்களடங்கிய ஒரு புதிய தமிழ் நாடகம். விலை ரூபா 1—8—0.

**நீதி விவாத மஞ்சரி** என்னும் தமிஷ் சட்ட புஸ்தகம், I-ம் பாகம். விலை ரூபா 2-8.

அ. மாதவய்யரால் இயற்றப்பட்டது.

**விஜயமார்த்தாண்டம்.**—ஒரு தமிழ் நாவல். ராப்பர் அணா I2. காலிகோ பைண்டு ரூபா I-2-O.

**முத்து மீனாக்ஷி.**—ஒரு பிராமணப் பெண் சுவசரிதை அணா 8. காலிகோ பைண்டு அணா I2.

**ஒ்தல்லோ.**—ராப்பர் ரூபா I. காலிகோ பைண்டு ரூபா I-6-O.

**திருமலை சேதுபதி** —ஒரு தமிழ் நாடகம். அணா 8.

**டி. வெங்கட்டறமய்யங்காராலியற்றிய தமிழ் புஸ்தகங்கள்.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸாரார்த்ததிலகம் ... | 0 | 4 |
| வால்மீகி ராமாயண கிளைக் கதைகள். | 0 | 8 |
| வேதாந்த தேசிகர் வைபவம் ... | 0 | 8 |
| யசோதரகாவியம் ... | 0 | 8 |

## இதர தமிழ் புத்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| காமாக்ஷி ... | 0 | 8 |
| ஆனந்த மடம் ... | 0 | 8 |
| உஷா பரிணயம் ... | 0 | 6 |
| ஜோதிமாலை ... | 0 | 8 |
| மனுதர்ம சாஸ்திரம் ... | 2 | 4 |
| ஸ்ரீ கிருஷ்ண சைதன்யசரித்திரம் ... | 1 | 8 |
| சாஸரின் சரித்திரம் ... | 0 | 4 |
| திருப்போரூர் யாத்திரை ... | 2 | 8 |
| திருக்கழுக்குன்ற யாத்திரை ... | 1 | 0 |
| கனகவல்லி ... | 1 | 0 |
| மனோன் மணியம் ... | 1 | 0 |
| இராஜராஜேஸ்வரி : காதலின் வெற்றி. | 0 | 9 |
| நகைவைத்தியம் : 2 பாகம் ... | 1 | 0 |
| அத்வைத கும்மி பராபரக்கண்ணி. | 0 | 4 |
| கமலினி ... ... | 0 | 10 |
| ஆரியகுமாரி ... ... | 0 | 8 |
| ஈஸாப் இயற்றிய நீதிக் கதைகள் | | |
| ,, 1-ம் பாகம் ... | 0 | 3 |
| ,, 2-ம் பாகம். | 0 | 3 |
| சுதேச வைத்திய ரத்தினம் ... | 1 | 0 |
| சற்குணதிபன் ... | 0 | 8 |
| மங்களாம்பாள் ... | 0 | 8 |
| லலிதா ... | 0 | 10 |
| லலிதாங்கி ... | 0 | 8 |
| ஸுஜாதா ... | 0 | 8 |
| இராஜாம்பாள் ... | 0 | 12 |
| சந்திரசேகரன் ... | 0 | 8 |
| வாஸந்திகை ... | 0 | 8 |
| மஹாமகம் (அதன் மகிமை) ... | 0 | 4 |
| கடவுளை நம்புவார் கைவிடப் படாரெனும் சிறு கதை ... | 0 | 2 |
| மகாபாரதம் : சாந்திபர்வம் ... | 2 | 0 |
| பிராமணப் பெண்களின் விவாகம்... | 0 | 4 |
| வசீகரி ... | 1 | 0 |
| தனேஸ்வரி ... | 0 | 6 |
| இராமாயண வினாவிடை ... | 1 | 0 |
| ஆரியமத உபாக்கியானம் ... | 0 | 2 |
| மானிடமர்ம சாஸ்திரம் ... | 5 | 0 |
| இந்தியாக்கைத்தொழில் முயற்சி ... | 1 | 0 |
| அதிசய மருந்து ... | 1 | 0 |
| தாமரை நாண்மலர் ... | 0 | 12 |
| தசரதன்தவறு ... | 0 | 4 |
| புத்தர் சரித்திரம் ... | 1 | 0 |
| விவேக சந்திரிகை ... | 0 | 8 |
| வியாசமஞ்சரி ... | 0 | 6 |
| கமலாம்பாள் ... | 1 | 4 |
| அரிச்சந்திரன், ஒரு தமிழ் நாடகம் | 2 | 0 |
| பிரபாவதி, ஒரு இனிய தமிழ் நாவல் | 0 | 4 |
| ராஜமய்யர் சரிதை ... | 0 | 8 |
| சந்திர காந்தா ... | 0 | 12 |
| பங்கஜாட்சி ... | 0 | 8 |
| திக்கற்றவனுக்கு தெய்வமே துணை | 0 | 6 |
| கொடுந் தமிழ் ... | 1 | 0 |
| ஸ்ரீமத் பாகவத வினா விடை ... | 1 | 0 |
| துர்கேச நந்தனி ... | 1 | 0 |
| மஹாஜனமண்டலி | 0 | 10 |
| சுகுணங்கதன் | 0 | 12 |
| குணமாலிகை | 0 | 6 |
| சுப்பிரமணியர் தோத்திரகொத்து | 0 | 3 |
| குணத்திரய கமலமார்த்தாண்டம் | 0 | 2 |
| ரம்யனும் ஜொலிதையும் ... | 0 | 8 |
| ராதாராணி .. .. | 0 | 2 |
| ஹிரண்மயி .. .. | 0 | 2 |

ஜி. ஏ. நடேசன் அண்டு கோ., 3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.


## "பிழைக்கும் வழி" யைப்பற்றி சில அபிப்பிராயங்கள்.

**மாதர் மனோரஞ்சினி பத்திராதிபர் "பிழைக்கும் வழி" யைப்பற்றி எழுதுகிறர்.**—நாம் இப்பத்திரிகையை முதலிலிருந்து செவ்வனே பார்த்து வருகிறோம். இதில் முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகள் அடங்கியுள. இவ்வித தமிழ்ப் பத்திரிகை நமது நாட்டுக்கு மிக அவசியமானதே. இவ்வித பத்திரிகை இல்லாமலிருந்த குறையை இதன் பத்திராதிபர் நீக்கினர் என்றே சொல்லலாம். பத்திராதிபரும் பொது ஏழை ஜனங்களுக்கு மிக உபயோகமான விஷயங்களைச் செவ்வனே பரிசோதித்தபின் பிரசுரித்து வருவது மெச்சத்தகுந்ததே. **நாம் வெளியூருக்குச் சென்றபோது விவசாயிகளையும், கைத்தொழிலாளிகளையும் கண்டு இப்பத்திரிகையை வாங்கக் கூடாதாவெனக் கேட்டோம். அவர்களில் சிலர் வாங்கிவருவதாகவும் அதனால் தங்களுக்கு அதிக அறிவு விருத்தியாகுமென்றும் சொன்னபொழுது மிகுந்த சந்தோஷமடைந்தோம்.** ஆகையால் இப்பத்திரிகை தென்னாட்டிலுள்ள விவசாயிகளுக்கும், கைத்தொழிலாளிகளுக்கும் மிகுந்த நன்மையைத்தரும். பத்திராதிபரும் ஏழைகள் எளிதில் பிழைக்கும் வழிகளை அப்போதைக்கப்போது இன்னும் விரிவாக எழுதிவரின் அப்பேர்ப்பட்டவர்களின் ஜீவனோபாயத்திற்கு மிக அனுகூலமாயிருக்கும். அவ்வித கைத்தொழிலுக்குரிய இயந்திரங்களின் படங்களையும் விலையையும் பிரசுரித்து வந்தால் மிக நலமே. இதன் வருஷசந்தா ரூபா-4. இப்பத்திரிகையை ஒவ்வொருவரும் ஆதரிக்க முன்வருவார்களென்று நம்புகிறோம்.

**சத்தியவேத பாதுகாவலன், யாழ்ப்பாணம்.**—"**பிழைக்கும் வழி**" என்பது ஒரு மாதாந்தரப் பத்திரிகை. இதன் பெயர் காட்டுகிறபடி சீவனோபாயத்தைச்சேர்ந்த விஷயங்களையே எடுத்துப்பேசுகின்ற ஒரு பத்திரிகையாதலால் எல்லா வகுப்பாருக்கும் பிரயோசனமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இது தமிழிலே முதன் முதலாக வந்த எடுப்பு என்றெண்ணுகிறோம். இந்த நிரையிலே வேறு பத்திரிகைகள் இதுவரையிலே தோன்றியதில்லை என்பதே எமது அபிப்பிராயம்.

**கமலாலனி.**—"பிழைக்கும் வழி" இப்பெயருடன் பிரசுரமாகிற மாதாந்தரப் பத்திரிகையின் ஒன்றிரண்டு இலக்கச் சஞ்சிகைகள் கிடைத்தன. இப்பெயர் கேட்டமாத்திரமே பத்திரிகையின் நோக்கத்தை நண்பர்களறியக்கூடும். பெயர் மாத்திரத்தாலன்றி விஷயத்திலும் அங்ஙனமே காணப்படுகிறது. பிழைப்பதற்கவசியமான விவசாயம், கைத்தொழில், வாணிபம் முதலிய விஷயங்களைக் குறித்து நன்றாய் எழுதப்படுகிறது. இந்தியர் ஜீவிப்பதற்கு முக்கியமாயுள்ள விஷயங்களைப் போதிக்கும்படியான ஒரு தனி தமிழ்ப் பத்திரிகையில்லாக் குறையை அகற்றி நம்முன் வந்திருக்கும் இப்பத்திரிகையை தமிழ் நாட்டார் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். திவான் பகதூர் இராஜரெத்தின முதலியாரவர்கள், ஸி. ஐ. இ., ராவ்பகதூர் எம். ரங்காசாரியாரவர்கள் முதலிய மேதாவிகள் நிருபங்கள் எழுதிவருகிறார்கள். ஆசிரியரும் ஆங்கிலம் தமிழ் என்னும் இருபாஷா விற்பன்னராய் பி. ஏ பட்டதாரியாய் விளங்குகிறார். ஆதலின் இப்பத்திரிகை நன்கு நடைபெறுமென்பதற்கு எட்டுணையுமையமின்று.

**லோகோபகாரி.**—"பிழைக்கும் வழி" என்பது இச்சென்னையில் ஜி. ஏ. வைத்தியராமன் கம்பெனியாரால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாதாந்தரப்பத்திரிகை. இப்பத்திரிகையானது தன் பெயரளவில் நில்லாது உண்மையிலேயே மனித சமூகத்தாரின் பிழைப்புக்கு ஏதுவாகவிருக்கும் வியாபாரம், விவசாயம், கைத்தொழிற் கல்வி, உலகவிவகாரம் முதலியவைகளை ஆரம்பித்துக்கல்வி பயின்ற சிறுவர் சிறுமிகளும் படித்தறியத்தக்க எளிய தமிழ் நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. இதுவரையில் இது போன்ற பத்திரிகை வெளிவந்ததில்லையென்றே சொல்லவேண்டும். இதற்கு வருஷ சந்தா ரூபாய் நான்காக இருந்தபோதிலும், இப்பத்திரிகையில் அமைந்துள்ள விஷயங்களின் விசேஷமும் அபிவிருத்தியின் நோக்கமுமாக இதன் சொந்தக்காரர் காட்டும் அக்கறையும் பார்த்தறிபவர்களுக்கு அத்தொகை பெரிதாகமாட்டாது. இப்பத்திரிகை நம் தமிழ் நாட்டாரால் பெரும்பாலும் ஆதரித்து வரப்படும் என நம்புகிறோம்.

# பிழைக்கும் வழி.

**Practical Life.**

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான சித்திரப் படங்கள் அடங்கிய ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

இந்த ராஜதானியிலுள்ள விவஸாயப் பண்ணைகளுக்காக கவரன்மெண்டாரும், தமிழ் ஜில்லாக்களிலுள்ள உபாத்தியாயர்களுக்காகவும் மாணுக்கர்களுக்காகவும் லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் "பிழைக்கும் வழியை" வாங்கி வருகிறுர்கள். பத்திரிகை 56 பக்கங்கள் அடங்கியது. பொருளடக்கத்தை உத்தேசித்து இதுவே எல்லாப் பத்திரிகைகளையும் விட மலிவானதென்று சுலபமாய் அறிந்து கொள்ளலாம்.

## பொருளடக்கம்.


1. பத்திராதிபர் குறிப்புகள்.
2. நிபுணர்களால் எழுதப்பட்ட அடியில்கண்டவைகளைப் பற்றிய விசேஷ வியாஸங்கள் :—விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், விளை பொருள்கள், பிரஜா லக்ஷணம், வித்யா விஷயம், ஜனங்களுக்கான சாஸ்திரம், சுகாதாரம், விசேஷ ஸ்தலங்கள் (படம் போட்டது), ஒரு கதை.
3. விசேஷத்திரட்டு, அதாவது இதர பத்திரிகைகளில் வெளியாகும் சிறந்த வியாஸங்களின் பெயர்ப்பு.
4. பத்திரிகை ஆராய்ச்சி, அதாவது இதர பத்திரிகைகளில் பிரசுரமாகும் வியாஸங்களின் ஸாராம்சம்.
5. சிறுவருக்கான பகுதி.
6. ஸ்திரீகளுக்கான பகுதி.
7. பகுதிக் குறிப்புகள் :—விவஸாயக் குறிப்புகள், கைத்தொழிற் குறிப்புகள், வித்யாவிஷயக் குறிப்புகள், புஸ்தகக் குறிப்புகள், சாஸ்திரீயக் குறிப்புகள், வைத்தியக் குறிப்புகள், சட்டக் குறிப்புகள், மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.
8. மாஸத்து ஸமாசாரங்கள் :—இந்திய நாட்டு ஸமாசாரங்கள், அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.
9. மாஸத்தில் பெய்த மழை.
10. மார்க்கெட் நிலவரம்.


## முக்கிய நிருபர்கள்.

(1) திவான் பகதூர் ஆர். ரகுநாதராவ் அவர்கள், ஸி.எஸ்.ஐ.

(2) திவான் பகதூர் பி. ராஜரத்ன முதலியார், அவர்கள், ஸி.ஐ.இ., ரிஜிஸ்தரேஷன் இலாகா மாஜி தலைவர்.

(3) கனம் வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள், பி ஏ., பி.எல்., ஹைகோர்ட்டு ஜட்ஜ்.

(4) திவான் பகதூர் கனம் எல். எ. கோவிந்தராகவ ஐயர் அவர்கள், பி. ஏ., பி. எல்.

(5) ராவ் பகதூர் எம். ரங்காசாரியார் அவர்கள் எம். ஏ., ப்ரொபெஸர், ப்ரெஸிடென்ஸி காலேஜ்.

(6) ராவ் சாஹிப் டி. ராகவையா அவர்கள் பி. ஏ., ரெவினியூ உத்தியோகஸ்தர், மதராஸ் முனிஸிபாலிடி.

(7) ராவ் பகதூர் எம். ஆதிநாராயண ஐயா அவர்கள், ரெவினியூ செட்டில்மெண்டு மாஜி டிப்டி கமிஷனர்.

(8) ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் அவர்கள், பி.ஏ., ரெவினியூபோர்டு மாஜி காரியதரிசி.

(9) திவான் பகதூர் ஏ. கிருஷ்ணஸாமி ஐயங்கார், அவர்கள், பி.ஏ., உப்பளம் டிப்டி கமிஷனர், திருச்சிருப்பள்ளி.

(10) ராவ் பகதூர் ஜி. ஸ்ரீனிவாஸ ராவ் அவர்கள், பி.ஏ., சேர்மன், மதுரை முனிசிபாலிடி.

(11) மஹாமஹோபாத்தியாய பண்டித வெ. ஸ்வாமிநாதய்யர்.

(12) திவான் பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை, எம் ஏ., பி.எல்., எல்.எல்.பி., ஸெக்ரடெரி, ரெவனியூ போர்டு, மதராஸ்.

(13) ஸர். வி. ஸி. தேசிகாசாரியார், பி ஏ., பி. எல்., ஸ்மால் காஸ் கோர்ட் ஜட்ஜ், மதராஸ்.

——:o:——

## சந்தா விவரம்.

தபாற்கூலி உள்பட

| | உள் நாடு. | | | | அந்நிய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 | 0 | 0 | .. | 6 | 0 | 0 |
| தனிப்பிரதி .. | 0 | 6 | 0 | .. | 0 | 8 | 0 |
| மாதிரி காபி .. | 0 | 2 | 0 | .. | 0 | 3 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகல பணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்பட வேண்டும்.

**ஜி. ஏ. வைத்தியராமன் & கோ.,**
**3 & 4, சுங்குராம செட்டித் தெரு,**
**ஜார்ஜ் டவுன், மதராஸ்.**


MADRAS.



# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ, பத்திராதிபர். — G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. — ஸாதாரண௵ மாசி௴—FEBRUARY 1911. — ஸஞ்சிகை 2. No. 2.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. | | | | Foreign. | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Rs. | A. | P. | | Rs. | A. | P. |
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy ... | 0 | 2 | 0 | ... ... | 0 | 3 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Page ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do ... | 2 | 8 | 0 | do |
| ¼ do ... | 1 | 4 | 0 | do |
| Less than ¼ page ... | 0 | 8 | 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | | | அந்நிய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 | 0 | 0 | .. | 6 | 0 | 0 |
| தனிப்பிரதி .. | 0 | 6 | 0 | .. | 0 | 8 | 0 |
| மாதிரி காபி .. | 0 | 2 | 0 | .. | 0 | 3 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 | 4 | 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 | 8 | 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெரு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. — ஸாதாரண௵ மாசி௴—FEBRUARY 1911. — ஸஞ்சிகை 2. No. 2.


பொருளடக்கம்.


பத்திராதிபர் குறிப்புகள் — பக்கம்

நமது புதுக் கவர்னர்—கோவாபரேடிவ் கான்பரென்ஸ்—இளமையும், ஒழுக்கமும் .. 59

விசேஷ வியாஸங்கள்

விவஸாயிகளுக்கு எச்சரிக்கை .. 60

ஸ்திரீகளின் வீரச்செயல்கள் .. 63

தேனீ வளர்ப்ப தெப்படி?
—வி. நரசிம்ம அய்யங்கார், எம். ஏ., பி. எல் .. .. .. 65

அம்மியாழ சுரைமிதப்பதேன்
—எம். ஸி. எஸ். அநந்தபத்மநாப ராவ், எம். ஏ., எல். டி. .. .. 68

அரிசி
—எ. சங்கரலிங்கம் பிள்ளை, பி. ஏ. .. 73

சில விசேஷப் பள்ளிக்கூடங்கள்
—ஸி. ஆர். ஸ்ரீனிவாச ரங்காச்சாரி, பி. ஏ., எல். டி. .. .. 75

நம்முடைய பிரயாணியின் டைரி .. 77

விசேஷத் திரட்டு

மோரீஸ் தீவில் இந்தியர்கள் .. .. 81

எலும்பு .. .. .. 82

நெல் ஒற்றை நாற்று நடுகையின் அனுபவக் குறிப்பு .. .. .. 84

நெல் சாகுபடியில் ஜப்பானிய விவஸாய நிபுணர்கள் செய்துவரும் பிரயத்தனங்கள். 86

பத்திரிகை ஆராய்ச்சி

ஜப்பானோடு இந்தியா வியாபாரம்—தேயிலை—லியோ டால்ஸ்டாய்.. .. 89–92

சிறுவர் பகுதி .. .. .. 93–94

ஸ்திரீகள் பகுதி .. .. 95–96

பகுதிக் குறிப்புகள்

விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்—விநோதங்கள் .. 97-106

மாஸ வர்த்தமானம் .. .. 107–109

சென்னப்பட்டணம் மார்க்கெட் நிலைவரங்கள். 110


## CONTENTS.


| | PAGE. |
|---|---|
| **Editorial Notes** | |
| OUR NEW GOVERNOR-CO-OPERATIVE CONFERENCE-YOUTH AND CHARACTER ... | 59 |
| **Special Articles** | |
| WARNING TO AGRICULTURISTS | |
| The Editor ... ... ... ... | 60 |
| WOMEN'S BRAVE DEEDS ... ... ... | 63 |
| BEE-KEEPING: HOW TO DO IT? | |
| V. Narasimha Aiyangar, M.A., B.L. ... ... | 65 |
| SINKING AND FLOATING? | |
| M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T., *Assistant Professor of Physics, Presidency College, Madras* .. ... ... ... | 68 |
| RICE | |
| A. Sankaralingam Pillai, B.A. ... ... | 73 |
| SOME SPECIAL SCHOOLS | |
| C. R. Sreenivasarangachari, B.A., L.T. ... | 75 |
| OUR TRAVELLER'S DIARY ... ... ... | 77 |
| **Selections** | |
| INDIANS IN MAURITIUS ... ... ... | 81 |
| BONE... ... ... ... ... | 82 |
| EXPERIMENTS IN SINGLE PLANTING OF PADDY. | 84 |
| EFFORTS TO IMPROVE VARIETIES OF PADDY BY AGRICULTURAL EXPERTS IN JAPAN... ... | 86 |
| **Review of the Press** | |
| Indian Trade with Japan ... ... ... | 89 |
| Tea ... ... ... ... ... | 90 |
| Leo Tolstoy ... ... .. ... | 91 |
| **The Boys' Section** ... ... ... | ...93-94 |
| **The Ladies' Section** ... ... ... | ...95-96 |
| **Departmental Notes** | |
| Agricultural Notes ... ... ... ... | 97 |
| Industrial Notes ... ... ... ... | 99 |
| Educational Notes ... ... ... ... | 100 |
| Scientific Notes ... ... ... ... | 101 |
| Medical Notes ... ... ... ... | 102 |
| Legal Notes ... ... ... ... | 103 |
| Personal Notes ... ... ... ... | 104 |
| Fun and Anecdote ... ... ... ... | 105 |
| Curiosities ... ... ... ... | 106 |
| **News of the Month** ... ... ... | ...107-109 |
| **Madras Market Reports** ... ... ... | ... 110 |




## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### Our New Governor.

நமது புதுக் கவர்னர்.—ஸர் தாமஸ் கிப்ஸன் கார்மைக்கேல் என்பவர் சென்னை ராஜதானிக்குப் புதிய கவர்னராக நியமிக்கப் பட்டிருக்கிறார். இவர் விக்டோரியா குடியேற்ற நாட்டுக்குக் கவர்னராக இருந்தார். ஸர் தாமஸ் கார்மைக்கேல் பார்லிமெண்ட் மெம்பராயிருந்த போது, ஸ்காட்லாந்தில் விவசாயிகளின் நன்மைக்காகவும் ஜனங்களின் சுகாதாரத்துக்காகவும் வேறு சில விஷயங்களுக்காகவும் சட்டம் செய்வதில் உதவி செய்தார். பொதுவாய் இவர் கவர்னராயிருக்குங்காலத்தில் விவசாய விஷயமும் கிராமங்களில் சுகாதார விஷயமும் முனிசிபல் விஷயமும் கவனிக்கப்படுமென்று எண்ண ஹேது உண்டு.

### Co-operative Conference.

கோவாபரேட்டிவ் கான்பரேன்ஸ்.—நாளது பிப்ரவரி மாஸம் 25,26-ம் தேதிகளில் மதுராந்தகத்தில் செங்கல்பட்டு ஜில்லா மூன்றாவது கோவாபரெட்டிவ் கான்பரென்ஸ் என்று சொல்லப்படும் கூட்டுறவு சங்கத்தாரின் ஸபை ஒன்று கூடிற்று. அதில் நடவடிக்கைகளெல்லாம் முற்றிலும் தமிழிலேயே நடத்தப்பட்டன. ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கோவாப்ரெட்டிவ் சங்கங்களுக்கும் மெம்பர்களாகலா மென்று கவர்ன்மெண்ட் அனுமதி கொடுக்க வேண்டுமென்றும், கூட்டுக்காரியத்தால் உண்டாகும் நன்மைகளை சிறுவர்கள் அறியும் பொருட்டு அதன் தத்துவத்தை எல்லா எலிமென்டரி பாடசாலைகளிலும் போதிக்கவேண்டு மென்றும், அதற்காகத் தகுந்த ஒரு புஸ்தகம் எழுதுகிறவருக்கு கவர்ன்மெண்டார் ஒரு வெகுமானம் கொடுக்க வேணுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன.

### Youth and Character.

இளமையும், ஒழுக்கமும்.—இது இங்கிலீஷ் பாஷையில் உள்ள சிறந்த கதையை யனுசரித்துத் தமிழில் நூதனமாக ஸி. பி. வெங்கட்ராம அய்யர், எம். ஏ. அவர்களால் எழுதப்பட்ட ஒரு அழகான புஸ்தகம். பழைய தமிழ் நூல்களிலுள்ள சிறந்த கருத்துக்களும் நீதிகளும் இதில் சுலபமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. பிரதானமான கதையின் இடையே, பதினெட்டுச் சிறு கதைகள் இருக்கின்றன.

மஹா மஹோபாத்தியாய பிரம்ஹஸ்ரீ சாமிநாதய்யரவர்கள் இந்தப் புஸ்தகத்தைப்பற்றி எழுதுகிறார்:—“ஸி. பி. வெங்கட்ராம அய்யர் எம். ஏ. தமிழில் எழுதியுள்ள “இளமையும் ஒழுக்கமும்” என்னும் புஸ்தகத்தைப் படித்துப் பார்த்தேன். யாவரும் படித்துத்தெரிந்து கொள்ளும்படி இஃது எளிய நடையிற் பிழையின்றி எழுதப்பெற்றிருக்கிறது. குழந்தைகளுடைய தேக ஆரோக்கியத்துக்காக மருந்துகளைச் சர்க்கரை முதலியவற்றிற் கலந்து கொடுப்பதுபோல, நல்லொழுக்கங்களைக் கதைகள் வடிவமாக இப்புஸ்தகத்தில் தெரிவித்திருப்பது மிகப் பாராட்டத் தக்கது. ஒவ்வொருவருடைய நன்மை தீமைகளுக்கு அவரவர்களுடைய பால்யத்திலேற்படும் பழக்கமே முக்கிய காரணமாக இருத்தலால், பால்யர்களாகவுள்ள ஆண் பாலரும் பெண் பாலரும் படித்தறிந்து குற்றங்களை நீக்கி நல்ல வழியில் நடப்பதற்கும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நல்ல வழியிற் பழக்குவதற்கும் இது தக்க கருவியாக இருக்குமென்பது எனது கருத்து.”

இந்தப் புஸ்தகத்தின் மகிமையை நிரூபிக்க வேறு அத்தாக்ஷி அனாவசியம். மிஸ்டர் ஸி. பி. வெங்கட்ராமய்யர் நம்முடைய பத்திரிகைக்கு அனேக விஷயங்கள் எழுதியிருக்கிறார். எழுதினவைகள் முழுமையும் நாம் அங்கீகரிக்கும்படியான நல்ல சுலபமான தமிழாகவே இருந்தன. சிறுபெண்கள், பிள்ளைகள் எல்லாரும் ஒருவித சிரமமில்லாமல் இந்தப் புஸ்தகத்தைப் படித்துப்பயனடையலாம் என்பதற்கு ஸந்தேகமில்லை. நல்லொழுக்கப் பயிற்சிக்கு எல்லா ஸ்கூல்களிலும் இந்தப் புஸ்தகத்தை உபயோகிக்கலாம். விலை அணா 8. வி. பி. மூலம் அணா 10. புஸ்தகம் வேண்டியவர்கள் சென்னை, திருவல்லிக்கேணி ஹநுமந்த லாலா வீதி, 22-நெ. வீட்டில் ஸி. பி. வெங்கட்ராம அய்யருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## WARNING TO AGRICULTURISTS.

BY THE EDITOR.

## விவ்ஸாயிகளுக்கு எச்சரிக்கை.

இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில் விவ்ஸாயத்தில் விசேஷமாக யந்திரங்களை உபயோகித்து வேலைசெய்து வருகிருர்கள். இந்தியாவிலோ அப்படியல்ல, விவ்ஸாயத் தொழில் முழுவதும் மனிதர்களால், முக்கியமாய், பறையர், பள்ளர் முதலிய கீழ் ஜாதியார்களால், செய்யப்பட்டு வருகிறது. ஆகவே விவஸாயத்துக்கு வேண்டிய ஆள் கட்டு இல்லாவிட்டால் இந்தியாவில் பயிர்த் தொழில் நடப்பது கஷ்டமாகிவிடும்.

சில வருஷங்களுக்கு முன் விவஸாயத்தில் அமர்ந்திருந்த கூலியாட்களுக்குக் கொடுத்து வந்த சம்பளத்தையும் தற்காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கும் வீதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அது தற்காலத்கில் வெகுவாய் அதிகப் பட்டிருக்கிறதென்று எல்லாருக்கும் தெரியும். இப்படி அதிகப்பட வேண்டியதற்குக் காரணங்களில் வெகு முக்கியமான காரணம் என்னவென்ருல் தென்னுப்பிரிக்கா மோரீஸ், லங்கை, ஸ்ட்ரெயிட் ஸெட்டில்மெண்ட்ஸ், முதலான அனேக இடங்களில் கரும்பு முதலிய விசேஷ விளை பொருட்களைச் சாகுபடி செய்வதற்காக இந்தத் தேசத்திலிருந்து அனேக கூலியாட்களைத் தெரிந்தெடுத்து அதிகச் சம்பளம் கொடுப்பதாய் ஒப்பந்தஞ் செய்து கூட்டிக் கொண்டு போய் விடுகிருர்கள்.

சென்னை ராஜதானியிலிருந்து நெட்டாலுக்கு உடன் பாட்டின் பேரில் சென்றவர்களின் தொகையும் திரும்பி வந்தவர்களின் தொகையும் அடியில் குறிக்கப் பட்டிருக்கின்றன.

| | போனவர்கள். | | திரும்பிவந்தவர்களின் மொத்தம். |
|---|---|---|---|
| வருஷம் | ஆண் | பெண் | |
| 1898 | 2760 | 1323 | 320 |
| 1899 | 159 | 46 | 380 |
| 1900 | 3729 | 1763 | 288 |
| 1901 | 4492 | 2084 | 371 |
| 1902 | 2784 | 1310 | 857 |
| 1903 | 1772 | 772 | 1329 |
| 1904 | 4410 | 1977 | 1104 |
| 1905 | 4426 | 2072 | 1569 |
| 1906 | 5443 | 2551 | 2386 |
| 1907 | 4049 | 1914 | 2421 |

1861-ம் வருஷம் தொடங்கி 1871-ம் வருஷம் வரைக்கும் 5,34,339 கூலி ஜனங்களும், 1871-ம் வருஷம் தொடங்கி 1881-ம் வருஷம் வரைக்கும் 6,81,248 கூலி ஜனங்களும், 1881-ம் வருஷம் தொடங்கி 1891-ம் வருஷம் வரைக்கும் 7,25,853 கூலி ஜனங்களும், 1891-ம் வருஷம் தொடங்கி 1901-ம் வருஷம் வரைக்கும் 9.51,740 கூலி ஜனங்களும் இந்தியாவிலிருந்து லங்கைக்குப் போயிருக்கிருர்கள். இவர்களெல்லாரும் குறித்த காலத்தின் பின் மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்பி வரும் வழக்க முடையவர்கள்போல காணப் பட வில்லை. லங்கைக்குப் போகிறவர்களில் நூற்றுக்கு 70 பேர் வீதம் மீளவும் இந்தியாவுக்குத் திரும்பிவிட, நூற்றுக்கு 30 பேர் வீதம் அங்கேயே குடியேறி விடுகிருர்கள்.

1909-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து பர்மாவுக்கும் லங்கைக்கும் போனவர்களின் தொகை 1,56,546 ; பிஞங்கு, சிங்கப்பூர், போன்ற ஸ்ட்ரெயிட்ஸ் ஸெட்டில்மெண்டுகளுக்குப் போனவர்கள் 48,179 பேர்கள். தென்னுப்பிரிக்காவிலுள்ள நேட்டாலுக்குப் போனவர்கள் 2,520 பேர்கள். பிஜித் தீவுக்கு 215 பேர்கள் போனுர்கள். 1910-ம் வருஷம் ஜனவரி மாஸத்தில் அந்தத் தீவுக்கு 701 பேர்கள் அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. 1910-ம் வருஷம் ஏப்ரல் மாஸத்தில் நெட்டாலில் 40,000 ஒப்பந்தக் கூலிகளும், 65,000 ஒப்பந்தம் நீங்கியவர்களும், 15,000 வியாபாரிகள் முதலானவர்களும் இருந்ததாக அறிகிருேம். இப்படிக்கு வருஷா வருஷம் இந்தியாவை விட்டு இதர தேசங்களுக்குப் போகிறவர்கள் லக்ஷக்கணக்காகிறது.



இதனுல் இந்தியாவில் விவஸாயத்துக்கு குறைவே ஆகும். இதர தேசங்களுக்குப் போகிறவர்கள் அங்கே இவ்விடத்தில் பெறும் ஸுகத்தைவிட அதிக ஸுகத்தை அடைந்து க்ஷேமப்படும் பக்ஷத்தில் எல்லாரும் ஸந்தோஷப்பட வேண்டியதுதான். ஆனுல் அப்படி அவர்கள் ஸுகப்படுவதாகத் தெரியவில்லை. ஒப்பந்தத்தின் மேல் பிஞங்கு முதலிய மலேயா நாடுகளுக்கு தோட்டக்கால் வேலைக்காகப்போகிறவர்களில் அநேகர் மரணமடைகிருர்கள். இதனுல் இந்தியாவிலிருந்து கூலிகளை மலேயா நாடுகளுக்கு அனுப்புகிறதில்லை என்று இந்தியா கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் தீர்மானித்த விஷயத்தை போன ஆனி மாஸத்துப் "பிழைக்கும் வழி". யின் 223-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிருேம்.

மோரீஸ்த் தீவுக்குப்போய் அங்கே ஜனங்கள் படும் கஷ்டத்தை இந்த ஸஞ்சிகையில் விசேஷத்திரட்டு என்னும் பகுதியில் வாசித்துத் தெரிந்துகொள்ளலாம்.

தென்னுப்பிரிக்காவில் கூலி வேலைக்குப் போகும் இந்தியர்களின் கஷ்டத்தைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை.

நெட்டால் நாட்டில் இந்தியக் கூலிகளில் புருஷர்கள் நிலக்கரிச் சுரங்கங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும், கரும்புத்தோட்டங்களிலும் வேலைசெய்கிருர்கள். நெட்டால்நாட்டு 1891-ம் வருஷத்துச் சட்டப்பிரகாரம் அவர்கள் பிரதிதினமும் ஒன்பது மணிநேரம் வேலை செய்ய வேண்டியது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் நெட்டால் கவர்ன்மெண்டாரால் விடு முறையாக நியமிக்கப்பட்ட நாட்களிலும் வேலை செய்ய வேண்டியதில்லை. பெண்பிள்ளைகளுக்கும் சிறுவர்களுக்கும் அதிக கஷ்டமான வேலை கொடுக்காமல் அவர்களால் செய்யத் தகுந்த வேலையைச் செய்யச் சொல்லவேண்டுமென்பதும் சட்டம். ஆண் பிள்ளைகளின் கூலி உடன் பாட்டின் ஐந்து வருஷங்களுக்கு மாதம் ஒன்றுக்கு $7\frac{1}{2}$ ரூபா. முதல் ஆரம்பித்து $10\frac{1}{2}$ ரூபா வரையில் போகும். ஸ்திரீகளுக்கு கூலி $3\frac{3}{4}$ ரூபா. முதல் $5\frac{1}{4}$ ரூபா. வரையில் கிடைக்கும். இதைத் தவிர இவர்களுக்குச் சாப்பாடும், குடியிருக்க இடமும் இனமாகக் கொடுக்கப்படும். அவர்களுக்கு சீக்கு வந்தால் வைத்தியர்களைக் கூட்டி காண்பித்து வேண்டிய மருந்துகளை இனமாகவே கொடுக்கிறதும் உண்டு. முதலாவது உடன்பாட்டின் காலம் தீர்ந்து மறுபடியும் அங்கேயே உடன்பாடு செய்துகொண்டு இருந்தால்முதல் வருஷத்தில் மாதம் ஒன்றுக்கு 12 ரூபாய்க்கும், இரண்டாவது வருஷத்தில் $12\frac{3}{4}$ ரூபாய்க்கும், மூன்ருவது வருஷத்தில் $13\frac{1}{2}$ ரூபாய்க்கும், நான்காவது வருஷத்தில் $14\frac{1}{4}$ ரூபாய்க்கும், ஐந்தாவது வருஷத்திலும் மற்ற வருஷங்களிலும் 15 ரூபாய்க்கும் குறையாமல்கூலி கொடுக்கவேணுமென்று 1895-ம் வருஷத்து 17-வது ஆக்டில் விதிக்கப் பட்டிருக்கிறது. உடன்பாட்டின் காலம் கழிந்தவுடன் தங்கள் ஸ்வதேசங்களுக்குத்திரும்பிப்போக விரும்புகிறவர்களுக்கு கப்பல் சார்ஜில்லாமல் இனும்டிக்கட்டு கொடுத்தனுப்பப்படும் என்றும் தெரிய வருகிறது.

ஆனால் வாஸ்தவத்தில் இந்தியர்கள் அவர்கள் உடன்பாட்டின் காலம் ஐந்து வருஷமும், தினசரி சுமார் 12 மணிநேரம் வரையில் கடினமான வேலைகளைச் செய்து தீரவேண்டுமாம். கஷ்டப்பட்டு வேலை செய்தும் மாதந்தோறும் கூலியாகப் பெறுந்தொகை 10-ஷில்லிங் அல்லது ரூ. 7½, அதாவது தினம் நாலணா வீதம் கிடைக்கின்றது. உடன்பாட்டின் காலம் ஐந்துவருஷம் கழித்த பிறகு பதினாறு வயதுக்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகள் நெட்டாலில் தங்க நேரிட்டால், வருஷம் 1க்கு மூன்றுபவுன் அல்லது நாற்பத்தைந்து ரூபாய் சர்க்காருக்கு வரிகட்டித்தீரவேண்டும். தலைவரி ஒருபவுனும் சேர்ந்து வருஷம் 1க்கு நான்குபவுன் அல்லது அறுபது ரூபாய் செலுத்தவேண்டும். 13 வயதுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகள் வருஷம் 1க்கு மூன்றுபவுன் அல்லது நாற்பத்தைந்து ரூபாய் வரி கட்டவேண்டும். இவர்களுக்கு வேலை அகப்பட்டபோதிலும் அதினால் கிடைக்கும் சம்பளம் மாதந்தோறும் அவர்களுடைய சாப்பாட்டிற்கும் குடிக்கூலிக்குமே போதாது. பெண்பிள்ளைகளுக்கு வேலை கிடைப்பதே அரிது. அல்லாமல், நெட்டால் தேசத்திற்குப் போகும் இந்தியர்கள் கூலிக்குச் சேவிக்கவேண்டும் என்பதைத் தவிர உயர்ந்த பதவிக்கு வர ஒருவித சாதனங்களையும் அந்த கவர்ன்மெண்டார் செய்து கொடுப்பதில்லை. ஸர்க்கார்ப் பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு ஏற்பட்டிருக்கும் சில ரூல்களே மேலே சொல்லியதற்கு அத்தாக்ஷி. ஐரோப்பியரல்லாத நெட்டாலில் பிறந்தவர்கள், இந்தியர்கள், இன்னும் மற்ற கறுப்பு மனுஷர்கள் ஆகிய இவர்களுடைய குழந்தைகளெல்லாம் தனியாக இவர்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களில் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அந்தப்பள்ளிக்கூடங்களிலும் படிக்கிற பையனுக்கு 16வயதானதும் அவனைப் பள்ளிக்கூடத்திலிருந்து தள்ளிவிடுவார்கள். மேலே சொல்லிய பிள்ளைகளுக்கு ஸகாயச் சம்பளம் என்பதே கிடையாது. இந்தியர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டு ஐரோப்பிய உபாத்தியாயர்கள் உள்ள பள்ளிக்கூடங்களில் கீழ்த்தரப்படிப்புக்கு ஏற்பட்ட விஷயங்களைத் தவிர வேறு ஒரு விஷயமும் மாணாக்கர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாதாம்.

மேலே சொல்லியபடியும் இன்னும் அநேக விதமாயும் உள்ள கஷ்டங்களைப் பொறுக்க மாட்டாமல் அநேகம் கூலிகள் தற்கொலை செய்துகொண்டு விடுகிறார்கள். அங்கே ஒப்பந்த காலத்தில் செய்து கொள்ளும் தற்கொலைகள் ஒப்பந்தம் நீங்கிய பிறகு செய்து கொள்ளும் தற்கொலைகளை விட இரண்டு மடங்காக இருக்கின்றன. தென்னாப்பிரிக்காவுக்குப் போகிற ஜாதியார்களில் இந்தியாவில் ஒருவன் தற்கொலை செய்துகொண்டால் தென்னாப்பிரிக்காவுக்கு ஒப்பந்தத்தின்மேல் போனால் அந்த ஜனங்களில் 10ப்பேர்கள் தற்கொலை செய்துகொண்டு விடுகிறார்கள். இதைக்கொண்டு அவர்கள் அங்கே படும் கஷ்டம் இவ்வளவென்று நாம் ஸுலபமாய் ஊகித்துக்கொள்ளலாம்.

ஆப்பிரிக்காவில் ட்ரான்ஸ்வால் மாகாணத்துக்குப் பிழைப்புக்காகப்போய் அங்கே குடியேறியிருக்கும் இந்தியர்களை அந்த மாகாணத்து ராஜாங்கத்தார் அங்கே தங்கக் கூடாதென்று நிர்ப்பந்தமான சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சட்டங்கள் அநியாயமானவைகளென்றும் அவைகளை ரத்து செய்து விடவேண்டும் என்றும் இந்தியர்கள் மன்றாடி வருகிறார்கள். மேலே சொல்லிய சட்டங்களுக்கு உட்படாதவர்களை அந்த



கவர்ன்மெண்டார் தண்டித்தும் ஜெயிலில் போட்டும், பலாத்காரமாய் பிடித்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பியும் இருக்கிறார்கள்.

இப்படிக் கெல்லாம் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களை அந்த தேசத்து கவர்ன்மெண்ட் கஷ்டப்படுத்துவதைப் பற்றி இந்தியாவிலுள்ள நானா ஜாதியார்களும் இந்தியா கவர்ன்மெண்டிடத்தில் முறையிட்டு வருவதின் பேரில் அவர்கள் தென்னாப்பிரிக்கா கவர்மெண்டைப் பலவிதமாய்ச் சொல்லியும் அந்த கவர்ன்மெண்டார் இன்னும் வழிக்கு வந்தபாடில்லை. ஆகையால் தென்னாப்பிரிக்கா கவர்ன்மெண்டுக்கு உரைக்கும்படி என்ன செய்யலாமென்று யோசித்ததில் ஒன்று தோன்றிற்று. அந்த கவர்ன்மெண்டைச்சேர்ந்த நெட்டாலில் இந்தியாவிலிருந்து கூலிகள் போகாமற் போனால் அங்கே விவஸாயமே நடவாது. அநேகம் கரும்பு, காப்பி, தேயிலை தோட்டங்கள் கரிச்சுரங்கங்கள் இவைகளில் வேலை நின்று போய்விடும், ஆகவே இந்தியாவிலிருந்து நெட்டாலுக்குக் கூலிகள் போகக் கூடாதென்று தடுத்துவிட்டால் தென்னாப்பிரிக்கா கவர்ன்மெண்டாருக்கு புத்தி வருமென்று எண்ணி வருகிற ஜூலை மாஸ முதல் நெட்டாலுக்கு ஒரு கூலியையும் ஏற்றக் கூடாதென்று ஸமீபத்தில் ஒரு விளம்பரம் போட்டுவிட்டார்கள்.

இந்தவிளம்பரத்தைக் கேட்டதும் நெட்டாலிலுள்ள தோட்டக் காரர்களுக்கு இடி விழுந்தது போலாயிற்று, இவர்கள் இனிமேல் என்ன செய்யப் போகிறார்களோ தெரியாது. மேலே சொல்லியபடி இந்தியாவிலிருந்து கூலிகள் வராவிட்டால் தங்கள் நிலங்கள் பாழாகிப் போய்விடுமே என்று எண்ணி உடனே பல தோட்டக்காரர்கள் சேர்ந்து தென்னாப்பிரிக்காவிலிருந்து 90 கங்காணிகளை அனுப்பி இந்தியாவிலிருந்து வருகிற ஜூலை மாஸத்துக்குள் எத்தனை கூலிகளை ஒப்பந்தம் செய்து ஏற்றிவிடலாமோ அத்தனை பேர்களை ஏற்றிவிடும்படி அனுப்பியிருக்கிறார்களென்று ஸமாசாரம் எட்டுகிறது. ஆகையால் தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் தம் தம் கிராமத்தில் மேலே சொல்லிய கங்காணிகள் வந்து கூலிகளுக்கு ஆசை வார்த்தை காட்டி ஏமாற்றி நெட்டாலுக்கு அழைத்துக்கொண்டு போகாமல் காலதாமதமின்றி ஏற்பாடு செய்யவேணும். தவிர, நெட்டாலுக்கு போகக் கூடிய கூலிகளைக் கூப்பிட்டு அங்கேபோனால் அவர்களுக்கு நேரிடும் கஷ்டங்களை எடுத்துச் சொல்லி அவர்கள் போகாதபடி பார்த்துக் கொள்ளவேணும்.

மிராசுதாரர்களே! நிலச்சுவான்தார்களே! உங்களுடைய ஆட்களின் நன்மையை உத்தேசித்துச் செய்யாமல் போனாலும் உங்களுடைய ஸ்வய நன்மையை நாடியாவது ஆட்களை விடாதேயுங்கள். தென்னாப்பிரிக்கா தோட்டக் காரர்கள் ஒன்று சேர்ந்து உங்களுடைய ஆட்களை எப்படி இழுத்துக்கொண்டு போக முயலுகிறார்கள், பாருங்கள். அவர்களைப் பார்த்தாகிலும் நீங்களெல்லாரும் ஒன்று சேர்ந்து உங்களுடைய ஆள்களைவிடாதேயுங்கள்.

## WOMEN'S BRAVE DEEDS.

## ஸ்திரீகளின் வீரச்செயல்கள்.

ஜப்பான் ருஷியாவுடன் யுத்தம் செய்து ஜயமடைந்ததை யாரும் பேசுகிறார்கள். ஜப்பான் தேசத்துத் தாயார்கள் தங்கள் பிள்ளைகளை யுத்தத்துக்கனுப்பத் தயாராயிருந்தது மன்றி தங்கள் பிராணனையும்விடத் தயாராய் இருந்தார்கள்.

இங்கிலாந்துக்கும் ஆப்பிரிக்கா விலுள்ள போயர்களுக்கும் சண்டை நடந்தபொழுது, போயர் ஸ்திரீகள் புருஷர்கள் யுத்தம் செய்கிற ஊர்களுக்குக் கூடபோய் அங்கே உணவு முதலியவைகளைச் செய்துகொடுத்து இன்னும் பல ஸௌகரியங்களைச்செய்தார்கள். இவ்வளவு பாடுபட்டதினால் தான் கடைசியாக ஸமாதானம் செய்யும் காலத்தில், சேனாதிபதிகள் முதலில் ஸ்திரீகளை யெல்லாம் சேர்த்து, உள்ள கஷ்டங்களை அவர்களுக்குச் சொல்லி, அவர்களுடைய ஸம்மதத்தையும் அநுமதியையும்

முதலில் பெற்றுக்கொண்டார்கள். ஸமீபகாலங்களில் மாத்திரம் இப்படி நடந்தது என்று நினைக்கவேண்டாம்.

நூறு வருஷங்களுக்கு முன்பு ப்ரான்ஸ் தேசத்துப் பிரசித்திபெற்ற நெபோலியன், ஸ்பானியர்களுடன் சண்டை செய்தகாலத்தில் ஸரகோஸாவிலிருந்த ஸ்திரீகள் சாப்பிடுவதற்கு வழக்கப்படி உணவுகள் கிடைக்காமற் போனாலும் எது அகப்படுமோ அதைத்தின்று, நெபோலியனுக்கு உள்ளாகக்கூடாதென்று பாடுபட்டார்கள். அதே விதமாக வெகுகாலத்திற்கு முன்பு ஸிப்பியோ என்ற ரோமாபுரி சேனாதிபதி கார்தேஜ் என்னும் பட்டணத்தை முற்றிகைபோட்டபொழுது, அங்கும் அவ்வாறே நடந்ததாக சரித்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸுமார் நானூறு வருஷங்களுக்கு முன், ஸ்பானியர்கள் மெக்ஸிகோ ராஜ்யத்தைக் கட்டிக்கொள்ள அதற்கு முக்கிய நகரத்தை முற்றிகைபோட்ட பொழுது அந்த நகரவாஸிகள் அநேகமாஸங்கள் உணவுகள் இல்லாமல் மிகவும் வருந்தினார்கள். அப்போது ஸ்திரீகள் முதலாக எல்லாரும் மரங்களின் பட்டைகளையும் பூமிக்குள் அகப்படும் கிழங்குகளையும் புல் முதலியவைகளையும் மனம் பொறுக்காத புழு முதலியவைகளையும் தின்றாவது ஜீவித்து சத்துருக்களுக்கு இடம் கொடுக்காமலிருப்பதற்கு வேண்டிய பாடுபட்டார்கள்.

மேற் கூறியவைகளில் ஒவ்வொரு ஸ்திரீயாகச்செய்த காரியத்தைச் சொல்லவில்லை. ஒரு நகரத்திலாவது அல்லது ஒரு தேசத்திலாவது உள்ளவர்கள் ஒருவரைப் போலவே எல்லோரும் சேர்ந்து செய்தகாரியம் மட்டுமே சொல்லப்பட்டது. மெக்ஸிகோவில் செய்யப்பட்ட வீரச்செயல் ஒன்று விசேஷமாய்ப் புகழத்தக்கது. புருஷர்கள் யுத்தத்தில் களைப் படைந்தபொழுது ஸ்திரீகள் தங்கள் கணவர்களுடைய யுத்த ஆடைகளைப் போட்டுக்கொண்டு போர்க்களத்திற்குப் போனதாகவும் சரித்திரம் எழுதினவர் சொல்லி இதைப் போல் நடப்பது அரிதல்லவா என்று ஆச்சரியப்படுகிறார். ஒவ்வொருவராகத் தனியாக வீரமாயிருந்ததற்கு ப்ரான்ஸில் ஜோன் ஆவ் ஆர்க் என்பவளை உதாரணமாகக் கூறுவதுண்டு. நமது தேசத்திலும் கைகேயி தசரதனுடைய தேரை ஓட்டி யுத்த களம் போனாள் என்பதை யாவரும் கேள்விப்பட்டிருக்கலாம். இரண்டு மாதங்களுக்கு முன் இந்தியாவின் வடபாகத்தில் நேரிட்ட ஒரு காரியத்தை அநேகர்கள் பத்திரிகையில் படித்திருப்பார்கள். ஒரு கிராமத்தில் ஒரு தகப்பனுக்கு இரண்டு குமாரர்கள். இருவருக்கும் கலியாணமாய் மனைவிகள் வீட்டில் வந்திருந்தார்கள். அந்த ஊரில் சூதாடுவது முதலிய துர்நடத்தையில் ஏற்பட்ட ஒரு கூட்டத்தாரிருந்தார்கள். அவர்கள் தலைவன் அந்ய ஸ்திரீகளை மோசத்தினாலாவது பண ஆசை காண்பிப்பதினாலாவது ஸ்திரீ தர்மத்தைக் கெடுத்துவந்தான். அண்ணன் தம்பிகள் ஏதோ வியாபார காரியமாக வேறு ஊருக்குப், போயிருந்தார்கள். அவர்கள் திரும்பிவர சிலநாள் ஆகுமென்று தெரிந்து அந்தத் தலைவன் தன்னுடைய கூட்டத்தாருடன் இரவில் நாட்டுப் பெண்கள் தூங்கிக்கொண்டிருந்தபொழுது வீட்டில் புகுந்தான். ஒருவருக்கு ஒருவர் துணையாக தேக அசௌகரியம் தீர வெளியிற் போய்வர இரண்டு பெண்களும் முற்றத்துக்கு வந்தார்கள். அப்போது துர்மார்க்கர்கள் நிற்பதைப்பார்த்து மறுபடி படுக்கையுள்ளில் புகுந்து கதவைத் தாட்பாள் போட்டுக்கொண்டார்கள். ஆனால் துர்மார்க்கர் தலைவன் ஓசைப்படாமல் உள்ளே புகுந்து ஸாரளாதேவி படுக்கையில் வந்தான். உடனே அவள் ஒரு கத்தியினால் அவனைக் குத்தினாள். மற்றொருத்தியும் கத்தியினால் வெட்ட அவன் இறந்தான்.

இவ்விதமாய் ஆபத்தில் துணிவுள்ள ஸ்திரீகளினால் அன்றோ உலகுக்குப் பெருமை உண்டு.



## BEE-KEEPING: HOW TO DO IT?

BY

V. NARASIMHA AIYANGAR, M.A., B.L.

## தேனீ வளர்ப்ப தெப்படி?

தேனும் மெழுகும் வேண்டுவோர் தேனீக்களைக் கொன்று அவைகளை அடைவது பயனற்ற காரியம் என்று முன்னொரு ஸஞ்சிகையில் சொல்லப்பட்டது. அப்படிக் கொல்லாமல் தேனீக்களை நாளடைவில் விர்த்தி செய்வதோடுகூட, தேனும் மெழுகும் மேன் மேல் அடையக் கூடியவழி சுலபமாய் ஏற்பட்டிருக்கிறதென்றுஞ் சொல்லப்பட்டது. அதாவது 'ப்ரேம்ஹைவ்' என்று சொல்லப்படும் சட்டக்கூடு, 'ஸ்மோக்கர்ஸ்' என்றுசொல்லப்படும் புகையூட்டி 'ஹனிஎக்ஸ்ட்ராக்ட்டர்' என்று சொல்லப்படும்தேனிறக்கி 'க்வீன் கேஜ்' என்று சொல்லப்படும் ராணியறை எனப் பெயர் கொண்ட நவீன ஸாதனங்களைப் பழக்கத்திற் கொண்டுவருவதே. அந்தஸாதனங்கள் ருஷியா, ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, க்ரீஸ், ஸைப்ரஸ் முதலிய தேசங்களில் மிகுதியுங் கையாளப்பட்டு அவைகளால் அந்த தேசத்தவர்கள் பெரும் பயன் அடைகிறார்கள். கிரீஸ் தேசத்தில் ஸுமார் 45 சதுரமைல் விஸ்தீரணமுள்ள அட்டீகா என்னும் மிகச் சிறிய ஜில்லாவில் மட்டும் இருபதினாயிரத்துக்கு மேல் சட்டக்கூடுகள் வைத்துத் தேனீ வளர்க்கிறார்களாம். ஒவ்வொரு கூட்டிலிருந்தும் ஸராஸரி 30 பவுண்டு தேனும், 2 பவுண்டு மெழுகும் எடுக்கிறார்கள். க்ரீஸில் விட அமெரிக்காவில்தான் இந்தக் கூடுகள் அபரிமிதமாய் உபயோகப்பட்டு வருகின்றன. அங்கேதான் தேனீவளர்த்தல் மிகுதியாயும் சாஸ்திர விதிப்படியுங் கையாளப்பெற்று பெருங் கைத்தொழிலாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு தேனீப்புலத்திலும் ஸுமார் 500 கூடு வைத்து வளர்ப்பார்கள். கலிபோர்னியா என்னும் ஜில்லாவில் மட்டும் வருஷம் ஒன்றுக்கு அந்த ஜில்லாவிலேயே செலவானதுபோக, ஒரு புலத்திலிருந்து ஸுமார் 70 டன் தேன் வேறிடங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஆகவே இப்பெரும் பயன் கொடுக்கும் ஸாதனங்களைச் சற்று விவரிப்பதுடன் அவைகளை உபயோகிக்கும் விதத்தையும் பற்றிச் சிறிது சொல்லுவோம்.

நவீனமான சட்டக்கூடு உண்டாவதற்கு முன், வைக்கோலினால் செய்யப்பட்ட கூட்டை உபயோகப்படுத்தி வந்தார்கள். அது ஒரு கூடையைப் போலிருக்கும்; வைக்கோலினால் பின்னப்பட்டிருக்கும்; மேற்புறத்தில் ஒரு துவாரமும் பக்கத்தில் ஒரு துவாரமும் கொண்டிருக்கும். ஆனால் இதை உபயோகப் படுத்துவதனால் கூட்டிற்குள் என்ன நடக்கிறதென்று அறியமுடியாது. சட்டக் கூட்டை உபயோகப் படுத்துவதினாலோ, அனேகவிதப்பலனுண்டு. ஒரு கூட்டின்விலை ஸுமார் ரூ 10 இருக்கும். நாற்புறமும் திருப்பிப் பார்த்து, உள்ளே நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் கண்டறியலாம். வேண்டுமானால் தேனீக்கள் ஒவ்வொன்றையும் அது செய்யும் ஒவ்வொரு கருமத்தையும் நம் கண்ணாலேயே காணலாம். சட்டக்கூடு என்பது ஒரு மரப்பெட்டிபோலிருக்கும். பெட்டியின் மேற்புறம்மட்டும் வீட்டுக் கூரைபோல் உருக்கொண்டிருக்கும்; இந்த பாகத்தை வேண்டும்போது எளிதாய்த் தனியே எடுத்து விடலாம். பெட்டி போன்ற பாகத்தில் 8 சட்டத்துக்குக் குறையாமலிருக்கும். ஒவ்வொரு சட்டமும், மெலிந்த நான்கு சிறு சட்டங்களால் ஆக்கப்பட்டு மத்தியில் பெருந்துவாரங் கொண்டிருக்கும். ஒவ்வொரு சட்டத்தின் மேற்பாகமும் பெட்டியி இருபக்கத்துப் பலகையின் மேல் பதியுயாய்ச் செய்யப்பட்டிருக்கும். சட்டத்தி

ப்புறமோ பெட்டியின் அடிப்புறத்திற் படாமல் தளர்ந்து பெட்டிக்குள் தொங்கிக்கொண்டிருக்கும். ஆகவே, சட்டங்கள் ஒன்றின்மேல் மற்றொன்று படாமல் சற்று விலகி வரிசையாய்த் தொங்கிக் கொண்டிருக்கும். ஒவ்வொரு சட்டத்தையும் வேண்டுமானால் மேற் சட்டத்தைப் பிடித்துத் தூக்கினால் எளிதில் எடுத்துவிடலாம். இந்தச்சட்டங்களில் முதலில் தேனீயைக்கூடுகட்டத் தூண்டினால் நமக்கு வேண்டிய காரியம் முடிந்த தென்னலாம். அது எப்படிச் செய்வது? தேன் மெழுகை வாங்கி அதை ஒரு பெரும்பாத்திரத்திலிட்டு உருக்கி, அப்படி உருக்கிய மெழுகில் ஒரு அகலமான மிக மெலிந்த பலகையைத் தோய்த்தால், மெழுகானது பலகையின் மேல் காகிதம் போல் ஒட்டிக்கொள்ளும். பின்பு பலகையிலிருந்து மெழுகை உறைபோல் கழற்றிவிடலாம். இந்த உறையை அதற்காக ஏற்பட்டிருக்கும் ஒரு யந்திரத்திலிட்டால் அதன்மேல் தேனடையிலிருப்பதுபோல் பல துவாரங்கள் உண்டாகும். இவ்வளவு சிரமமான காரியத்தை தேனீவளர்ப்போர் செய்வதற்குப் பதிலாக மெழுகு உரைகள் தயாராகவே செய்து விற்கிறார்கள். ஒவ்வொருஉறை ஸுமார் 12 அணா விலையுள்ளதாக இருக்கும். இந்த உறைகள் தேனடைகள் போலவே யிருக்கும். அவைகளைத் தேனீச் சட்டம் ஒவ்வொன்றிலும் பொருந்த வைத்து, அதைக் கூட்டிலிட்டுப் பின்பு தேனீக்களை அந்தச் சட்டங்களில் புகுந்து கூடுகட்டச் செய்யவேண்டும். அஃதெப்படிச் செய்வது? மேற்கு தேசங்களில் தேனீக்கள் விலைக்கு விற்பதினால் அவைகளை வாங்கி உடனே தேனீச் சட்டத்துக்குள் நுழைத்துவிடலாம். ராணித் தேனீயுள்ள ஒரு கூட்டம் ரூ 3 அல்லது ரூ 4.க்கு விலைக்குக் கிடைக்கும். அப்படி விலைக்கு வாங்க இஷ்டமில்லாதவர்கள் வேறொரு விதமாகத் தேனீக்களைச் சட்டத்தில் புகச்செய்யலாம். ஸ்வயமாகவே மரக்கிளைகளில் கட்டப்பட்டிருக்கும் கூட்டின்கீழே தேனீச் சட்டத்தைப் பிடித்துக் கொண்டு கூட்டை அசைத்தால், அதிலிருந்து சட்டத்திற்குள் தேனீக்கள் விழும். அப்போது பெண் தேனீயுஞ் சட்டத்திற்குள் விழுகிறதா என்று கவனித்துப் பார்க்கவேண்டும். பெண் தேனீ ஒன்றாவது சட்டத்திற்குள் நுழைய வேண்டியது அவசியம். ஏனெனில் அது இல்லாவிட்டால் மற்றத் தேனீக்கள் கூடுகட்டாது. அதிருந்தால் அந்தச் சட்டமே தங்கூடு என்று கொண்டு, இவையும் தங்கி, ஏற்கனவே சட்டத்தில் தேனறைகள் பல ஏற்பட்டிருப்பதினால் மிகவுங் களிப்புண்டு தமக்கு வேண்டிய வேறு மராமத்துக்களைச் செய்யத் துவக்கி சட்டத்தையே தமது கூடாக்கிக் கொள்ளும். அம்மாதிரியே ஒவ்வொரு சட்டத்தையும் நிரப்பிக் கூட்டிற்குள்இட வேண்டும். தேனீச்சட்டத்தை உபயோகிப்பதினால் பலவகைப் பயனுண்டு. ஒவ்வொரு கூட்டையும் நமது இஷ்டம்போல் எடுத்துப்பார்க்கலாம். வேண்டுமானால் ஒருகூட்டிலிருக்கும் தேனீயை மற்றொன்றுக்கு மாற்றி இளைத்திருக்கும் கூட்டைப் பலப்படுத்தலாம். இன்னும் பெண் தேனீயை நாமே பார்த்து அது கிழமாய்ப் போயிருந்தால் அதை எடுத்தெறிந்து விட்டு சுறு சுறுப்பான இளமைப் பருவமுள்ள ராணியொன்றைக் கூட்டில் இடலாம். அது செய்வதற்கு உபயோகமான கருவியே ராணியறை என்பது. முதன் முதல் கிழத்தேனீயை எடுத்துவிடவேண்டியது. அதுபோனதும் மற்றத் தேனீக்கள் தமது ராணி காணமற்போனதைப்பற்றி வருத்தப்படும். அப்போது, சிறு கம்பியால் பின்னப்பட்ட ராணியறை என்ற கருவிக்குள் இளம் பெண் தேனீயையிட்டு



கூட்டிற்குள் வைத்துவிடவேண்டும். முதலில் அத்தேனீயைக் கொல்ல மற்றத்தேனீக்கள் எத்தனிக்கும். ஆனால் அது அறைக்குள்ளிருப்பதினால் அதைக்கொல்ல முடியாது. பின்பு பழகப்பழக புதிய ராணியின்பேரில் பிரியங்கொண்டு அதை அணுக ஆரம்பிக்கும். அப்பொழுது அறையிலிருந்து பெண்தேனீயை விடுவித்துக் கூட்டிற்குள் மற்றத் தேனீக்களோடு கலக்கும்படி விட்டுவிட, அதற்கு வந்தனமளித்து மரியாதை செய்து தமது அரசியாக்கிக்கொள்ளும்.

சட்டக்கூட்டை உபயோகிப்பதால் மேற்சொன்ன பயன்கள் தவிர வேறுமுண்டு. கூட்டில் தேன்மிகுந்து நிரம்பியிருக்கும்பொழுது வெகு சுலபமாய் அதிலிருந்து தேனீக்களுக்குத் தொந்திரவில்லாமல் தேனை எடுத்துவிடலாம். தேனிறக்கி என்னுங் கருவியை உபயோகிக்க, தேனீக்கூடு சிறிதும் கலையாமல், தேன் மட்டும் அதன்வழியே வெளியே வந்துவிடும். இன்னும், தேனீக்கூட்டம் ஒன்றைப் பல வாக்கலாம். ஒரு சட்டத்திலிருக்கும் தேனீக்கள் விருத்தி ஆக ஆக அவைகளை எடுத்து மற்றச் சட்டங்களில் விடலாம். சட்டக்கூட்டிலேயே அதிகமானால் வேறு கூடுகள் தயார்செய்து அவைகளில் விட்டுக். கூடுகளை அதிகமாக்கலாம். கூட்டில் நடப்பதை யெல்லாம் வெளியிலிருந்து பார்க்கக்கூடுமாதலால், தேனீக்கள் விரோதிகளாலாவது, வியாதியாலாவது மற்றக் காரணங்களினாலாவது தொந்திரவுபடும் பக்ஷத்தில் அவைகளை உடனே எடுத்து அப்புறப்படுத்திவிடலாம். ஆண் தேனீக்கள் மிகுதியாயிருந்தால் வேண்டிய மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றைத் துரத்திவிடலாம்.

தேனீ வளர்க்கும் கைத்தொழிலில் அதிகமாய் உபயோகிப்பது புகையூட்டி என்னும் ஸாதனமாம். அதன் விலை ரூ 4 அல்லது ரூ 5 இருக்கும். தேனீக்களை ஒரு சட்டத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்றும் போதும், புதுப் பெண் தேனீயை உள்ளே இடும் போதும், மிகுதியாயிருக்கும் ஆண் தேனீக்களைப் பிடித்து வெளியில் தள்ளும் போதும், இன்னும் பலவிதமாய்க் கூட்டுக்கு மராமத்துச் செய்யும் போதும் தேனீக்கள் நம்மைக் கொட்டிவிடலாம். அப்படிக் கொட்டவிடாமல் வேலை செய்ய வேண்டுமானால், புகையூட்டியில் சிறிது புகையிட்டு, அதை முன்னால் கூட்டுக்குள் புகையூட்டியால் செலுத்த, தேனீக்கள் சற்று மயங்கி அயர்ந்து போம். பின்பு நாம் செய்யவேண்டியதை எளிதிற் செய்துவிடலாம். கொஞ்சநேரமானதும், மயக்கந் தெளிந்து தேனீக்கள் முன் போல் சுறுசுறுப்பாய் வேலை செய்ய ஆரம்பிக்கும். சிலர் புகையூட்டியை உபயோகிக்காமல் 'கார்பாலிக் ஆஸிட்' என்றுசொல்லப்படும் ஒருவிதத் திராவகத்தை அதே காரியத்துக்குப் பயன்படுத்துகிறார்கள். ஒரு இறகினால் இந்ததிராவிகத்தில் கொஞ்சம் எடுத்து சட்டத்தின் மேல்விட, சிறிது நேரத்திற்குள் தேனீக்கள் சோர்ந்து போம்.

தேனீக்கூடுகளை அதிகரிப்பதற்குக் கோடைகாலமே தகுந்தது. ஏனெனில், அந்தக்காலத்திலேதான் தேனீக்கள் மிகுதியாய் உற்பத்தியாகும். தவிரவும் அந்தக்காலத்திலேயே மலர்களும் அபரிமிதமாயுண்டாவதினால் தேனீக்கள் தேனையும் மிகுதியாய்ச் சேகரிக்கும். ஆகவே தேனீக்களுக்குக் கூட்டிலிருக்க இடம் போதாமலும் அவற்றிற்கு வேலையில்லாமலும் போய்விடும். இந்த ஸமயமே வேறுகூடுகள்வைத்து தேனீப்பயிற்சி செய்வதற்கு ஸுலபமான தருணமாகும். ஏற்கனவே தேனீ நிறைந்திருக்கும் கூட்டில் வெறுஞ் சட்டங்களைவைக்க, அச்சட்டங்களில் தேனைவைக்கும். அவைகளை எடுத்து விட்டு வேறு சட்டங்களை வைக்கவேண்டும். இம்மாதிரி சட்டங்களை மாற்றியாவது தேனுறிஞ்சியாலாவது தேனை அடிக்கடி எடுத்து விடவேண்டும். இப்படிச் செய்யாவிடில் தேனீக்கள் வேறு இடம் ஓடிப்போம். அதைத் தடுத்து அந்த ஸமயம் வெறுஞ் சட்டங்களை வைத்துமிகுதியாகிய தேனீக்களை அவைகளில் வாஸஞ் செய்யத்தூண்ட, அச்சட்டங்களை வேறு கூட்டில் வைத்து வளர்க்கலாம்.

தேனீவளர்ப்பவன் கவலையுள்ளவனாகவும், சுறுசுறுப்பாகவும் இருப்பானானால் தக்க ஸமயத்தில்மிகுந்த தேன்சேகரிப்பான். ஒவ்வொரு கூட்டிலிருந்தும். 50 அல்லது 60 பவுண்டு தேனும், சிற்சில ஸமயங்களில் 100 பவுண்டு தேனும் எடுக்க ஸாத்தியமாகும். ஆனால் இந்த தேசத்தில் தேனீவளர்த்தல் ஒழுங்குபட்ட கைத்தொழிலாக இன்னும் ஏற்படவில்லையாதலால் அவ்வளவு லாபம் முதலில் எதிர்பார்ப்பது கூடாத காரியம்.

வெ. நரஸிம்மன்.

## SINKING & FLOATING

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M. A., L.T.,

## அம்மியாழ சுரைமிதப்பதேன்?

(All rights reserved.)

நாம் கையில் பிடித்த ஒரு கல்லை விட்டுவிட்டால், அது நேராகக் கீழே விழுந்துவிடுகிறது. அந்தக் கல்லை ஒரு கயிற்றின் நுனியில் கட்டி அந்தக் கயிற்றை மற்றொரு நுனியில் பிடித்துக் கொண்டால், கயிறு செங்குத்தாக நிற்பதையும் கல் கையின் கீழ்பக்கம் நேரே தொங்குவதையும் நாம் பார்க்கிறோம். கயிறு மெல்லியதாய் பலமற்று இருக்குமானால், கல்லின் பளுவைத் தாங்க சக்தியற்றதாகி கயிறு அற, கல் பூமியை வந்து சேருகிறது. அந்தக்கல்லை நம்கையில் தாங்கிக் கொண்டால், அதை ஏதோ ஒரு சக்தி கீழ்நோக்கி இழுப்பது போல் காணப்படுவதுமல்லாமல், கையில் அதிக நேரம் தாங்கிக் கொண்டிருப்பது கஷ்டமாகவுந்தோன்றுகிறதல்லவா? கல்லை உபயோகிப்பதற்கு பதிலாக மற்ற எந்தவஸ்துவை உபயோகப்படுத்தினாலும் மேலேசொன்ன அனுபோகங்களே நேரிடும் என்பதில் ஸந்தேகமில்லை. மூட்டை சுமக்கிறவனுக்கு அந்த மூட்டை கீழே அவனை அமிழ்த்துவது போல் காணப்படுகிறது. எல்லா வஸ்துக்களும் பூமியை நோக்கியே விழுவதால், ஏதோ ஒரு வெளிப்புறத்து சக்தி பண்டங்களையெல்லாம் பூமியின் பக்கம் தள்ளுகிறதென்றாவது அல்லது பூமியினிடத்துள்ள சக்தி எல்லாவற்றையும் தன்னிடத்திற்கு இழுத்துக் கொள்ளுகிற தென்றாவது சொல்லலாம். இந்தசக்தி பூமியினிடத்துத் தோன்றியதே என்று ஞானசிகாமணிகள் ஊகிக்கிறார்கள். இந்தசக்திக்கு "க்ராவிட்டி" என்று பெயர். இதைப் பூமியின் ஆகர்ஷண சக்தி என்றும் சொல்லலாம். இது எல்லா வஸ்துக்களிலும் எல்லாவிடத்திலும் பரவியிருத்தலாலும் சக்திகளிலெல்லாம் சிரேஷ்டமானதாலும், இதை 'குருத்வ ஆகர்ஷணம்' என்றும் சொல்லலாம். (குருஎன்பது சூரியனைச் சுற்றிஓடும் கிரஹங்களிலெல்லாம் மிகப்பெரிய கிரஹத்தின் பெயர்.) க்ராவிட்டி என்னும் இந்தசக்தியால் ஸாமான்கள் தங்கள் தன்மைக்குத் தக்கபடியும் பரிமாணத்திற்குத் தக்கபடியும் பூமியைநோக்கி இழுக்கப்படும் பலத்தை, அந்த ஸாமான்களினுடைய பளு அல்லது பாரம், அல்லது எடை, அல்லது தூக்கம் என்கிறோம். பூமியின் ஆகர்ஷணசக்தியால் வஸ்துக்கள் கீழேவிழுகின்றனவென்று விவேகரத்தினமாகிய ந்யூடன் என்னும் துரைகண்டுபிடித்தார் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

ஜலம்நிறைந்த பாத்திரத்தில் ஒரு கல்லைப் போட்டால், அது முழுகி பாத்திரத்தின் அடித்தட்டைச் சேர்ந்து விடுகிறது. அதே கல்லை 'மெர்க்குறி' என்று சொல்லப்படும் பாதரஸம் நிரம்பிய பாத்திரத்தில் போட அது மிதக்கிறது. ஜலம் இருக்கும்போது பூமி இழுக்க, பாதரஸத்தைக் கண்டதும் க்ராவிட்டி பலிக்கிறதில்லையோ? க்ராவிட்டிக்கு நேர் விரோதமான சக்தி ஏதேனும் பாதரஸத்தில் தோன்றி கல்லை மேலே தள்ளுகிறதோ? ஜலத்திற்கு இந்த சக்தி கிடையாதோ? சக்தி இருந்தாலும், இந்த சக்தி ஜலத்தில் பலிக்கும்படியான அவ்வளவு பெரிய தில்லையோ? கல்லுக்கு பதிலாய் அதே அளவுள்ள ஒரு மரக் கட்டையை ஜலத்தில்போட கட்டை மிதக்கிறதே! ஆதலால் ஜலத்திற்கும் மேல்தாக்கும் சக்தியுண்டென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால் கட்டையின் பாரத்தைவிட ஜலத்தில் தோன்றும் மிதத்தும் சக்தி பெரியதென்றும், கல்லின் பளுவைவிட குறைவானதென்றும்



எண்ணவேண்டியிருக்கிறது. இக்கேள்விகளுக்கு விடைகளையும், வாக்கியங்களின் உண்மையையும் பரிசோதித்துக் கண்டறிய முயற்சி செய்வோம்.



படம். 1.

முதல் படத்தில் கண்டபடி, தராசுத்தட்டு ஒன்றின்கீழ் ஒருகயிற்றைக்கட்டி அதில் ஒரு கல்லைத் தொங்கவிடுங்கள். மற்றத் தட்டில் எடைபோட்டுத் தடைகட்டுங்கள். இந்தக் கல்லின்கீழ் ஒரு ஜலமுள்ள பாத்திரத்தை கொண்டுவந்து கல் முழுகும்படியாக தூக்கினால், கல் கட்டியதட்டு உயர, எதிர்த்தட்டு கீழே போவதைக் காண்கிறோம். அதாவது, தடை அதிக பளுவுள்ளதாகவும், கல், தன் பளுவில் குறைந்ததாகவும் காண்கிறது. இதனால் கல்லின் பளு ஜலத்தில் இருக்கும்போது, ஆகாயத்தில் இருக்கும்போது தோன்றும் பளுவைவிடக் குறைந்த தென்றும், ஆகாயத்தில் கஷ்டப்பட்டு தள்ளக்கூடிய ஒரு கல்லை, ஜலத்தில் தள்ளினால் சுளுவில் நகற்றலாம் என்றும் தோன்றுகிறது. இது அனுபவத்தில் எல்லாருக்கும் தெரிந்ததே. கல்மாத்திரமேயன்றி மற்றெந்த வஸ்துவையும் ஜலத்தில் போட தன் எடை குறைந்ததாகவேகாணப்படுகிறது. பூமியின் சக்தி குறைகிறதோ அல்லது ஜலத்தில் வேறு எதிரிடை சக்தி தோன்றி அதைத்தடுக்கிறதோ என்பதை தீர விசாரித்து, ஸயன்டிஸ்ட்ஸ் என்னும் தத்வ விசாரணை செய்பவர்கள், ஜலத்திற்கே மேல் நோக்கித்தள்ளும் சக்தியுண்டென்று நிச்சயத்திருக்கிறார்கள். எடை செங்குத்தாக கீழ் நோக்கி இழுக்கும் தன்மை யுடையது. இதைக் குறைப்பதற்கு வேண்டிய விசை இதற்கு எதிரிடையாக மேலே நோக்கி தள்ளும் சுபாவமுடையதாயிருக்கவேண்டும். இதற்கு ஜலத்தின் 'பாயன்வஸி' அதாவது மிதத்தும் சக்தி என்று சொல்லலாம். இந்த சக்தியின் உதவியால் நாம், காற்றில் பறப்பது அசாத்தியமாயிருக்க, ஜலத்தில் எளிதில் மிதந்து நீந்துகிறோம். காற்றில் பறக்கச்சக்தியற்ற மிருகங்கள் சுபாவமாகவே ஜலத்தில் நீந்த சக்தியுள்ளனவாயிருக்கின்றன.

மிதத்தும் சக்தி ஒவ்வொரு ஸாமானின் பருமனுக்குத் தக்கபடி மாறுதல்.

ஒரு சிறு கல்லையும் ஒரு பெரிய கல்லையும் தராசுத்தட்டிலிருந்து முன்சொன்னபடி ஜலத்தில் தொங்கவிட்டு, அதனால் உண்டாகும் பளுக்குறைவு கண்டுகொண்டால், பெரியகல் அதிகபாரம் குறைகிறதென்றும், சிறு கல் கொஞ்ச பளுத்தான் குறைகிறதென்றும் தெரிய வரும். 10 பவுண்டுள்ள கல் ஜலத்தில் 7 பவுண்டுள்ளதாகக் காணப்பட்டால், 20 பவுண்டுள்ளது 14 பவுண்டுள்ளதாகக்காணப்படுகிறது. ஸாமானின் பருமனுக்குத் தக்கபடி ஜலத்தின் மிதக்கும் சக்தியும் ஏற்றத் தாழ்ச்சியடைகிறது. ஒரு இரும்புக் குண்டையும் அதே எடையுள்ள ஒரு இரும்புச் சட்டியையும் ஜலத்திலிட்டால், சட்டியின் பரிமாணம் அதிகமாதலால், அதை மிதத்தும் சக்தியும் அதிகரிக்குமல்லவா? அந்த எடையுள்ள இரும்பையே தட்டி அதன் பளுவைவிட மிதத்தும் மேலிடும்படியாகவும் செய்துவிடலாமே?

சக்தி அப்போது ஜலத்தில் விட்டால் என்ன நேரிடும்? இப்பாத்திரத்தை ஜலம் உட்புகாதபடி ஜலத்தில் ஆமிழ்த்தினால், கையை எடுத்ததும், பாத்திரம் மேலே எழும்புகிறது; கொஞ்ச பாகம் மாத்திரம் ஜலமட்டத்தின் கீழ் இருக்கும்படியாக மிதக்கிறது. பாத்திரத்தில் கொஞ்சம் மணல் போட்டால், பாத்திரம் இன்னும் கொஞ்சம் அதிகமாக அமிழும். எடை ஏற்ற ஏற்ற, பாத்திரம் முன்னிலும் அதிகமாக ஆழ்ந்து, கடைசியில் ஜலத்தின் மிதத்தும் சக்தியைவிட பளு அதிகரிக்குமானால், பாத்திரம் அமிழ்ந்துவிடும். கட்டை மிதப்பதன் காரணமும், அதை ஜலமட்டத்தின் கீழ் அழுத்தினாலும் மேலே எழும்புவதின் காரணமும் இப்போது தெளிவாகத் தெரிகிறதல்லவா? அம்மி ஆழ சுரை மிதப்பதேன்? உரித்ததேங்காய் அமிழ, மட்டைத் தேங்காய் மிதப்பதேன்? இரும்பு அமிழ, இரும்பு ஸாமான்கள் அதிகமாய் ஏற்றிய கப்பல் மிதப்பதேன்? என்னும் கேள்விகளுக்கு விடையளிப்பது இப்போது எளிதாகத் தோன்றும்.

ஆர்க்கிமீடீஸ் விதி.

மிதத்தும் சக்தியின் அளவு ஸாமானின் பரிமாணத்திற்குத் தக்கபடி மாறுபடுமென்றோம். இப்போது ஒரு ஸாமானுக்கு எவ்வளவு மிதத்தும் சக்தி ஜலத்தில் காணப்படுமென்பதை கவனிப்போம். ஒரு வஸ்துவின் ஸாதாரண எடையையும் அது ஜலத்தில் தொங்கும்போது கண்ட எடையையும் பார்த்து மிதத்தும் சக்தி இவ்வளவு என்று சொல்லலாம். ஜலத்தில் போடாமலே இதைக் கண்டுபிடிக்க ஒரு வழியுண்டு. ஒரு வஸ்துவின் கன அளவுள்ள ஜலத்தின் எடையும் அவ்வஸது ஜலத்தில் வைக்கும்போது மேலே தள்ளும் சக்தியும் ஒன்றென்று அநேக பரீக்ஷைகளைச் செய்து தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால் எந்த ஸாமானுக்கும் மிதத்தும் சக்தி கணக்கிட வேண்டுமானால், அதன் உயரம் நீளம் கனத்தை அளந்து கணக்கிட்டாவது, அது அடைத்துக்கொள்ளும் இடத்தை வேறெந்த விதத்திலாவது கணக்கிட்டாவது வந்த கன அளவுள்ள ஜலத்தின் பளுவே நாம் கண்டுபிடிக்கவேண்டிய சக்தியின் அளவாகும். ஜலத்தைத் தவிர மற்ற த்ரவப்பொருள்களிலும் பரிசோதனைகள் செய்ததில், எந்த த்ரவபதார்த்தத்திலும் ஒரு ஸாமானைத் தொங்கவிட்டால் அதன் கன அளவு கொண்ட த்ரவத்தின் பளுவுக்கு ஸமானமான சக்தியுடன் அந்த ஸாமான் மேல் நோக்கித் தள்ளப்படுகிறதென்று ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த உண்மையை முதல் முதலில் உறுதி படுத்தியவர் க்ரீஸ் தேசத்து தத்துவ சாஸ்திரியாகிய ஆர்க்கிமீடீஸ் என்பவர். ஆதலால் முற்கூறிய விதிக்கு ஆர்க்கிமீடீஸ் விதி எனப்பெயர் வழங்கலாயிற்று. ஒரு குண்டை முறையே ஜலத்திலும், எண்ணெயிலும், சாராயத்திலும் தொங்கவிட்டு நிறைகாண, எடை வித்தியாசப்படுவதும் அதனால் மிதத்தும் சக்தி வேறுபடுவதும் ஆர்க்கிமீடீஸ் விதியை அனுஸரித்ததே.

தாரதம்மிய எடை.

ஒவ்வொரு வகைப்பொருளையும் எடுத்துப்பரிசோதித்து அதன் பளுவுக்கும் அதை ஜலம் மிதத்தும் சக்திக்கும் தாமாஷாவாகிய தாராதர எடையை க்கண்டு பிடித்திருக்கிறார்கள். உதாரணம், தங்கம் 19, வெள்ளி $10\frac{1}{2}$, இரும்பு 8, கல் $2\frac{1}{2}$, ஈயம் 11. அதாவது ஒரு கெட்டி இரும்புத்துண்டு தன் அளவு ஜலத்தைவிட 8 மடங்கு பளுவுள்ளது; சுயதங்கம் 19 மடங்கு பாரமுள்ளது. இந்தத் தாராதர எடை எண்கள் அதிக உபயோகமுள்ளன. இவைகளால், சூது ஸாமான்களை எளிதில் கண்டு கொள்ளலாமே



என்று உங்கள் மனதில் படுகிறதல்லவா? வெளிப்புறத்தில் காணப்படும் பளபளப்பையும் நிறத்தையும் பார்த்தே நாம் ஏமாறவேண்டியதில்லை. தங்கக்கட்டி என்று ஒரு தட்டான் கொடுக்கும் கட்டியை கண்டுகொள்ள ஒரு தராசும் படிக் கல்லுகளும் இருந்தால் போதுமே. கொடுத்த கட்டியின் பளு, அதின் மிதத்தும்சக்தியைவிட எவ்வளவு தரம் பெரியதென்று கணக்கிட்டு, அது 19-க்கு குறைவாயிருந்தால் தங்கமல்லவென்று ஸந்தேகம் உடனே தோன்றுமல்லவா? கெட்டியில்லாத போல் நகைகளிலுள்ள சூதை இப்படிக் கண்டறிவது ஸுலபமல்லவென்றாலும் இம்மாதிரியான வேறு சில பரீக்ஷைகளைச்செய்து கண்டறியலாம். நகைகளை விற்கும் காசுக்கடைக்காரனும் தட்டானும் உபயோகிக்கும் உரைக்கல்லை விட இத்தராதர எண் எளிதில் உண்மையை நிச்சயமாய் காட்டிவிடும். ஸைரக்யூஸ் தேசத்தரசனுக்குச் செய்துகொடுத்த தங்க கிரீடத்தில் தட்டான் செய்த மோசத்தை இம்மாதிரி முதல் முதல் ஆர்க்கிமீடீஸ் என்பவர் கண்டுபிடித்ததாக ஏற்கனவே போன நவம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் 495-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மிதத்தல்.

ஒரு வஸ்துவின் பளுவைவிட அதன்அளவுள்ள ஜலத்தின் எடை அதிகமாயின், அதை ஜலத்தில் அமிழ்த்தினால் மிதத்தும் சக்தி மேலிட்டு அது மேலே தள்ளப்படும். அது எவ்வளவு தூரம் மேலே கிளம்பி யதேச்சையாய் மிதக்கும்? ஜலத்தின் மிதத்தும் சக்தி மிதக்கும் வஸ்துவின் முழுகின பாகத்தின் கன அளவுள்ள ஜலத்தின் பளுவுக்கு ஸமானமானது. ஆதலால் ஆழ்ந்த பாகத்திற்கு ஸமமான கனஅளவுள்ள ஜலத்தின் எடை, ஸாமானின் எடைக்கு ஸமமானதும் அந்த ஸாமான் அந்த நிலையிலே மிதக்கும். அதன் மேல் ஒரு கல்லை வைத்தாலும், அந்தக்கல்லை அத்துடன் சேர்த்துக்கட்டி ஜலத்தில் போட்டாலும், அந்தக்கல்லின் பளுவுக்குத் தக்கபடி அந்த ஸாமான் முன்னிலும் அதிகமாக ஆழ்ந்துபோகும். ஆதலால் ஒரு வஸ்துவை ஜலத்தில் போடுவதற்கு முன்னேயே, அது மிதக்குமா அமிழுமா என்பதைத்தெரிந்து கொள்வதற்கு, பின்வரும் பொது விதிகள் உபயோகப்படும்.

(1) ஒரு பொருளின் எடையைவிட அதன் கன அளவுள்ள ஜலத்தின் எடை அதிகமானால், அப்பொருள் ஜலத்தில் மிதக்கும்.

(2) ஜலத்தின் எடை குறையுமானால் அது மிதக்காது.

(3) ஸமமானால் கொஞ்சமேனும் ஜலமட்டத்திற்கு மேல் தெரியாமல் ஜலத்தில் மிதக்கும்.

கப்பலைக் கட்டுகிறவர்கள், ஜலத்தில் அதை இறக்குவதற்கு முன் அது மிதக்குமா, மிதக்காதா என்பதை தெரிந்து கொள்வது அவசியமல்லவா?

கப்பலில் கவனிக்கவேண்டிய சில சிறப்பு விதிகள்.

ஒரு கட்டையை ஜலத்தில் போட அது மிதக்கிறது. ஆனால் நாம் விரும்பியபடி அது மிதப்பதில்லை. ஒரு ரூலரைப்போட்டால், அது படுத்தாற் போல் மிதக்குமேயல்லது செங்குத்தாய் மிதப்பதில்லை. மிதக்கும் தெப்பக் கட்டையில் நாம் ஏறினால், சிலஸமயங்களில் அது புரண்டு மேல்வைத்த ஸாமான்களையும் கீழே தள்ளிவிடுகிறதல்லவா? சின்னபடகுகளில் ஜனங்கள் ஒழுங்காகவும் அமரிக்கையாகவும் உட்கார்ந்திராவிட்டால், அது ஆடி கவிழ்ந்து விடுகிறதல்லவா? படகுக்கு மிதக்கும் சக்தி குறைவதில்லை, ஆனால் அது பளுவில்லாத போது மிதக்கும் விதமாகவே மிதக்க சக்தியில்லாமல் தலை கீழே சாய்ந்துவிடுகிது. பெரிய கப்பல்களில் ஜனங்கள் அனேக நாள் யாத்திரை செய்யும் போது அவர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து போக வேண்டித்தான் இருக்கும். ஸாமான்களையும் நகர்த்தவேண்டித்தான் நேரிடும். இப்பேர்ப் பட்ட ஸமயங்களில் கப்பல்கள் சாய்ந்து விழாதபடி ஏற்பாடுசெய்ய வேண்டியது அவசியமே. கப்பல் இவ்வளவு பாரத்தைத்தாங்கும் என்பதை மாத்திரமன்றி, புயல் காற்று அடிப்பதால் காற்று ஒரு பக்கம் பலமாய் தள்ளுவதாலும், ஜனங்கள் உள்ளே நடமாடுவதாலும், கப்பல் சாய்ந்து ஆடிய போதிலும் தன்நேரான நிலை எப்போதும் தப்பாது என்பதையும் முன்னறிந்து கப்பலைக் கட்ட வேண்டியதல்லவா? இந்த விஷயத்தை கவனிக்காமல் கட்டிய, டாப்னி என்னும்பெரிய கப்பல் ஒன்று 1883ம் ௵த்தில் ஜலத்தில் சாய்ந்து கவிழ்ந்து விட்டது.

கப்பல்களுக்கு அநேகவிதமான உருவங்கள் அமைத்துக் கட்டி, நாளடைவில் இப்போது உபயோகிக்கும் உருவமே திடமானதென்றும் மேலானதென்றும் கண்டுகொண்டிருக்கிறார்கள். வண்டிகள் ரஸ்தாக்களில் செல்லும் போது மேடுபள்ளத்தால் ஆடினாலும் மறுபடியும் தம் ஸரியான நிலைமைக்கு வந்துவிடுவது போல், கப்பல் அலையாலும் காற்றாலும் ஆடினாலும் தன் சுயநிலைமைக்கு வந்துவிடும்படியாகவே கட்டப்பட்டிருக்கிறது.

த்ரவ பதார்த்தங்களின் தராதர எடை எண்கள்.

திட பதார்த்தங்களுக்குக் கண்டுபிடித்த மாதிரியே, ஒரே அளவுள்ள ஒரு த்ரவத்தையும் ஜலத்தையும் எடையிட்டு தாமாஷாப் போட்டு த்ரவம் ஜலத்தைவிட எவ்வளவு மடங்கு லேசு என்றும் எவ்வளவு மடங்கு பளுவென்றும் கண்டுகொள்ளலாம். அதிக பாரமான ஒரு கஷாயத்துடன் கொஞ்சம் ஜலம் சேர்த்தால், மிஸ்ரமாகிய அந்த திரவத்தின் தராதர எடை குறையவேண்டியது தானே. பாலுடன் ஜலத்தைச் சேர்க்க, பாலின் நிறம் மாறாவிட்டாலும், பாலின் தராதர எடை வேறுபடுமல்லவா? இடையன் செய்யும் சூதை இப்படிக் கணக்கிட்டு கண்டுபிடிக்கலாம். இதைவிட அதிக சுளுவான மார்க்கம் ஒன்று உண்டு.

ஹைட்ரா மிட்டர்.

பாலில் நாம் ஒரு கட்டையை மிதக்கவிட அது மிதக்கிறதென்று வைத்துக்கொள்ளுவோம். கட்டையின் கொஞ்ச பாகம் மேலே தெரியும். அந்தப் பாலுடன் கொஞ்சம் ஜலம் சேர்த்தால் பாலின் தராதர எடை குறைய மிதக்கும் கட்டை அதிகமாய் அமிழும். அப்போது மேலே தெரியும் பாகம் குறையுமல்லவா? நல்ல பாலில் மிதந்தபோது பால் மேல் மட்டத்தின் கோடு ஒன்று அந்த கட்டையின் மேல் வரைந்திருந்தால், ஜலம் சேர்த்த பாலில் மிதக்கவிட்டதும், அந்தக்கோடு மறையும்படி அது மிதக்குமே. இதனால் சூதைத் தெரிந்து கொள்ளலாம். நாமே சுயப் பாலுடன் வெவ்வேறு அளவான ஜலத்தைச் சேர்த்து அதில் அந்தக் கட்டையை மிதக்கவிட்டு அனேக கோடுகளையும் அவைகளுக்கு நேராகச்சேர்த்த ஜலத்தையும் எழுதிவைத்திருந்தால், இந்தக் கட்டையை ஒருவன் கொண்டுவந்த பாலில் போட்டதும், பாலில் ஜலமுள்ளதென்பதையும், இவ்வளவு ஜலம் என்பதையும் எளிதில் கண்டுகொள்ளலாமே. இந்த நிதர்சனத்தை அனுஸரித்து கண்ணாடிக் குழாய்களில் கோடுகள் வரைந்து, பால்பரிக்ஷைக்கென்றே திட்டப்படுத்திய 'ஹைட்ரா மிட்டா' என்று சொல்லப்படும் டிக்ரிக்குழாய்கள் வழக்கத்திற்கு வந்திருக்கின்றன. அந்தக் குழாய்கள் செங்குத்தாய் மிதக்கும்படி அவைகளின் அடி நுனியில் கொஞ்சம் பளுவுள்ள பாதரஸம் ஊற்றி நன்றாய் நாலா பக்கமும் மூடப்பட்டிருக்கும். இம்மாதிரியான டிக்ரிக் குழாயின் படம் ஒன்று இங்கே வரையப்பட்டிருக்கிறது.



படம். 2.

சாராயத்துடன் அதிக ஜலத்தைச் சேர்த்து கடைக்காரர்கள் விற்று விடுவதைக் கண்டு பிடிக்க, முன்சொன்னபடி சாராயத்துடன் இவ்வளவு ஜலம் சேர்ந்திருக்கிறதென்பதைக் காட்டும்படியான கோடுகள் இழுத்துள்ள டிக்ரிக் குழாய்களை ஆப்காரி இலாக்கா உத்தியோகஸ்தர்கள் உபயோகிக்கிறார்கள்.

எம். வி. எஸ். அநந்த பத்மநாப ராவ்,



## RICE.

BY

A. SANKARALINGAM PILLAI, B. A.

## அரிசி.

இந்தியா கவர்ன்மெண்டாரால் வெளியிடப்படும் "அக்ரிகல்சரல் லெட்ஜர்" என்ற பத்திரிகையின் ஒரு ஸஞ்சிகையில், மிஸ்டர் டேவிட் ஹூப்பர் என்பவர் இந்தியாவின் பல பாகங்களில் விளையும் அரிசிகளைப்பற்றி அருமையான வியாசமொன்று எழுதியிருக்கிறார். நம் தேசத்திலே மற்றெல்லாவிதப் பயிர்களையும் விட அரிசி மிகவும் அதிகமாக உண்டாக்கப்படுகின்றது. ஸுமார் ஏழுகோடி ஏக்கர் நிலத்தில் நெற்பயிர் வளர்க்கப்படுகிறது. நம்மவர்களில் பெரும்பான்மையோருக்கு அரிசியே உணவாயிருக்கிறது. அரிசியை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வியாபாரமும் இந்தியாவில் முக்கியமாயிருக்கிறது. ஆகையினாலே இந்தியாவிலுண்டாகும் அரிசிகளைப் பற்றியும் அவைகளின் வித்தியாஸங்கள், பலாபலன்கள், உபயோகங்கள் முதலியவைகளைப் பற்றியும் சிறிது அறிவது மிகவும் அவசியம்.

அரிசிகள் உருவத்திலும், பிரமாணத்திலும், கனத்திலும், நிறத்திலும், குணத்திலும், தன்மையிலும் ஒன்றுக்கொன்று வித்தியாஸப்படுகின்றன. சில அரிசிகள் மற்றவையைவிட லகுவில் ஜீரணமாகக் கூடியவையாயிருக்கின்றன. சில அரிசிகள் தேகத்துக்கு வலுவைக் கொடுக்கின்றன: வேறு சில அரிசிகள் உண்பதற்கு ருசியாகவும் பரிமளமாகவும் இருக்கின்றன. சில அரிசிகள் பிணியாளிகளுக்கு மட்டும் உபயோகமாகின்றன. பொதுப்படக்கூறும் போது, மெல்லியதாகவும் பொடியாயுமுள்ள அரிசிகள் பருத்த அரிசிகளைவிட அதிக விலையும் உபயோகமுள்ளவையாயும் இருக்கின்றன. கறுப்பு பழுப்பு முதலிய நிறமுடைய அரிசிகளைப் பார்க்கிலும் வெள்ளை அரிசியையே ஜனங்கள் சாப்பாட்டுக்கு விரும்புகிறார்கள். ஆனால் மெல்லியதாகவும் வெள்ளையாகவுமுள்ள அரிசிகள் சிலாக்கியமென்றும், மற்ற அரிசிகள் உபயோகமற்றவையென்றும் சொல்ல முடியாது. எந்த அரிசியில், "ப்ரோடீட்" என்று சொல்லப்படும் மாம்ஸஸத்து அதிகமாயிருக்கிறதோ அந்த அரிசியே தேகத்துக்குப் பலமும் ஆரோக்கியமும் கொடுக்கக்கூடியது. ஸுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு மிஸ்டர் பாலண்ட் என்பவர் இந்தியா, ஜாவா, ஜப்பான் முதலிய சில தேசத்து அரிசிகளை வரவழைத்துப் பரீக்ஷித்ததில், பொதுவாக அரிசியில் நூற்றுக்கு ஒன்பது பங்குக்குமேல் "ப்ரோடீட்" ஸத்து இருப்பதில்லையென்றும் எந்த அரிசியிலும் நூற்றுக்கு ஐந்து பங்குக்குக் குறைவதில்லையென்றும் கண்டுபிடித்தார். நன்றாய்க் குத்தித் தீட்டப்பட்ட அரிசிகளை விடத் தீட்டப்படாத ஸாதாரண அரிசியில் இந்த ஸத்து கொஞ்சம் அதிகமாயிருக்கிறதென்றும், அரிசியின் பிரமாணத்துக்கும் இந்த ஸத்தின் அளவுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லையென்றும் இவர்கண்டு பிடித்தார். அதாவது பருத்த அரிசியில் ஸத்து அதிகமிருக்க வேண்டுமென்றும், சிறுத்த அரிசியில் கொஞ்சமாயிருக்க வேண்டுமென்றும் நிபந்தனையில்லை. திருஷ்டாந்தமாக, கொச்சின் சீனாவில் விளையும் அரிசிகள் சிறியவையாயிருந்தாலும் "ப்ரோடீட்" ஸத்து உடையவையாயும், தேகத்துக்குப் பலந்தருபவையாயுமிருக்கின்றன. கோதுமையில் எவ்வளவு ஸத்து உண்டோ அவ்வளவு ஸத்து இந்த அரிசியிலுமுண்டென்றும், பொதுவாக அரிசி உணவு மிகவும் சிலாக்கியமானதென்றும் இவர் அபிப்பிராயப்பட்டார். உண்மையிலேயே அரிசியின் போஷிப்பையும்தேகாரோக்கியம் தரும் அதனுடைய சக்தியையும், வெகு

காலமாக அது கீழ்த்தேசங்களில் ஆகாரமாக உபயோகப்படுவதையும் பற்றி இவர் மிகவும் புகழ்ந்து பேசுகிறார். யுத்தகளத்தில் போர் வீரர்களுக்கு அரிசி உணவே போதுமானதென்றும் அபிப்பிராயப்படுகிறார். கொச்சின் சீனாவில் விளையும் அரிசிகளில் "கோகாங்" "பெய்க்ஷா" என்ற இருவகை அரிசிகள் மிகவும் சிலாக்கியமானவை. இவை இரண்டிலும் "பெயக்ஷா" அரிசியில் "ப்ரோடீட்" ஸத்து அதிகமாயிருப்பதனாலே, கொச்சின் சீனாவாசிகள் இவ்வரிசியை விரும்புகிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு நிலம் உரமும் ஸத்துமுடையதாயிருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த நிலத்தில் விளையும் அரிசியும் சிலாக்கியமாயிருக்கும்.

## அரிசி குத்துதல்.

நெல்லானது யந்திரங்களின் உதவியினாலோ, அல்லது நம் தேசத்துப் புராதன வழக்கப்படி உரல் உலக்கைகளின் ஸகாயத்தினாலோ, அரிசியாகக் குத்திப் பிரிக்கப்படுகிறது. நெல்உமி ஒரு பக்கம் பிரிக்கப்படுகிறது. பின்பு தவிடு ஒரு பக்கம் புடைக்கப்படுகிறது. உமியும் தவிடும் அரிசியிலிருந்து நீங்கியபின்பு உடைந்துபோன குருணை அரிசிகள் வேறே அலாதியாகப் புடைத்து அப்புறப்படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் ஆனபிற்பாடு அரிசி தீட்டப்பட்டு, சமையலுக்கு முன்பு தண்ணீரில் நன்றாய்க் களையப்படுகிறது. அரிசியை இவ்விதம் குத்தித் தீட்டி மினுக்குவதால் அதனுடைய "ப்ரோடீட்" ஸத்து வெகுவாய்க் குறைந்து போகிறது. திருஷ்டாந்தமாகத் தவிடு நீக்கப்படாத அரிசியில் நூற்றுக்கு ஸுமார் 13 வரையில் "ப்ரோடீட்" ஸத்து இருக்கிறது. தீட்டிக்கொழியல் நீக்கப்பட்ட அரிசியில் நூற்றுக்கு ஸுமார் 9 வீதம் இந்த ஸத்திருக்கிறது; மினுக்கிப் புடைக்கப்பட்ட அரிசியில் நூற்றுக்கு ஸுமார் 6 வீதம் இந்த ஸத்திருக்கிறது. ஆகையினாலே அரிசி எவ்வளவுக்கெவ்வளவு குத்தி மினுக்கிச் சுத்தம் செய்யப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதனுடைய ஸத்து குறைந்து போகிறதென்பது விளங்கும். உடம்புக்குப்பலமும் ஸத்தும் கொடுக்கக்கூடிய தவிடு கொழியல் முதலியவைகள் நீங்கியபின்பு அரிசியைச் சமைப்பதால் அந்த அரிசியினால் நியாயமாய்க் கிடைக்கக்கூடிய போஷிப்பும்சக்தியும் நமக்குக்கிடைப்பதில்லை.

## அரிசி சமைத்தல்.

நம்மவர்களில் அநேகர் அரிசியை வேகவைத்துக் கஞ்சியைவடித்துத் தூரக்கொட்டி விடுகிறார்கள். சிலர் மட்டும் இப்படிச் செய்யாமல் அரிசிக்குத்தக்கபடி தண்ணீர் வைத்துப் பொங்கிவிடுகிறார்கள். கஞ்சியை வடித்துவிடுவதால் அரிசியிலுள்ள ஸத்து குறைந்து போகிறதென்றும், அரிசியின் ஸத்தில் சில பாகம் கஞ்சியிலிறங்கிவிடுகிறதென்றும், நாம் லகுவில் ஊகிக்கலாம். ஸாதாரண அரிசியையும், வெந்து கஞ்சிவடிக்கப்பட்ட அரிசியையும், சோதித்து ஒத்துப்பார்த்தால், "ப்ரோடீட்" ஸத்தில் சில பாகம் கஞ்சியிலிறங்கி வெந்த அரிசியின் சக்தி குறைந்து போவது தெரிய வரும். கஞ்சி வடிப்பதால் அரிசியிலுள்ள கொழுப்பில் பாதிக்கு மேலும், "ப்ரோடீட்" ஸத்தில் நூற்றுக்கு ஸுமார் எட்டு வீதமும் குறைந்து போகின்றன.

எ. சங்கரலிங்கம்.

### Lalimli Mills.

லாலிம்லி மில்ஸ்.—வடக்கே கான்பூரில் மில் வைத்து 'லாலிம்லி' என்று பேர் பெற்ற சுத்தமான கம்பளி ஸாமான்கள் செய்துவரும் கான்பூர் வுல்லன் மில்ஸ் கம்பெனியாருக்கு அலஹாபாத் பொருட்காட்சியில் மேற்படி லாலிம்லி ஸாமான்களின் நேர்த்திக்காகவும் மேஜோடு முதலியவைகளுக்காகவும் முதல் ப்ரைஸ் கிடைத்ததோடு தங்க மெடல்களும் கிடைத்தனவென்று கேட்க ஸந்தோஷப்படுகிறோம்.



# SOME SPECIAL SCHOOLS.

BY
C. R. SREENIVASARANGACHARY, B.A., L.T.

# சில விசேஷப் பள்ளிக்கூடங்கள்.

ஜி. ஏ. நடேசன் கம்பெனியார் "இந்தியன் ரிவ்யூ" என்கிற மாதாந்தரப் பத்திரிகையில் சென்ற ஜனவரி மாஸ ஸஞ்சிகையில் படிப்பைப் பற்றிய புது ஏற்பாடுகள் நடந்து வருவதைக் குறித்த ஒரு வியாஸமிருக்கிறது. லண்டன் நகரத்துத் தென்புறத்தில் "காட்டுக் குன்று" என்று அர்த்தம் ஆகும் "பாரெஸ்ட் ஹில்" என்ற ஒரு இடம் இருக்கிறது. இதில் ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல் மாஸம் முதல் அக்டோபர் மாஸம் வரையில் 'லண்டன் கௌண்டி கௌன்ஸில்' என்று சொல்லப்படும், லண்டன் ஜில்லா போர்டார் ஒரு பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார்கள். அதில் காசம் முதலான வியாதிகளால் பீடைப்படும் மாணாக்கர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பல ஜில்லாக்களிலுமுள்ள ஸ்கூல்களிலிருந்து அந்தந்த ஜில்லா போர்டுகளாலும் வைத்தியர்களாலும் அனுப்பப்பட்டவர்கள். ஸ்கூல் மேட்டு நிலத்தில் திறந்த வெளியில் உள்ளது. முன்புறத்திலும் பின் பக்கத்திலும் தோட்டங்கள் இருக்கின்றன.

காலையில் 9 மணிமுதல் 12 மணிவரையில் பாடம் நடக்கிறது. அதற்குமுன் காலைச் சாப்பாடு ஆகிவிடுகிறது. 12 மணிக்குமேல் அரைமணி நேரம் தேகப் பயிற்சிக்குத் தகுந்த விளையாட்டுகளை பையன்கள் ஒழுங்காய் விளையாடுகிறார்கள். பிறகு இரண்டாவது வேளை போஜனம் ஆகிறது. இதற்குமேல் இரண்டு மணி இளைப்பாறுகிறார்கள். மறுபடியும் இரண்டு மணி நேரம் பாடம் நடக்கிறது. ஐந்தரை மணிக்கு பையன்களுக்கு டீ கொடுக்கிறார்கள். அவர்கள் மாலை 6 மணிக்குத் தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய் விடுகிறார்கள். இப்படித் தொண்ணூறு பேர்கள் படிக்கிறார்கள். குறித்த காலத்தில் தவறாமல் உண்பது, சுற்றிலும் சுத்தமாயிருப்பது, சுவர்களால் மறைக்கப்படாமல் திறந்திருக்கிற இடத்தில் பாடம் கேட்பது, தோட்டங்களில் உலாவி அங்குள்ளவைகளைப் பார்ப்பது முதலிய காரியங்களால் நோயாளிப் பிள்ளைகள் சௌக்கியப்படுகிறார்கள். காசம் உள்ள ஒரு வாலிபனுக்கு நாலுமாதகாலத்தில் உடம்பு ஏழு பவுண்டு அதிக நிறை ஆயிற்று. பிள்ளைகளுக்குப் பாடத்தினால் களைப்பு உண்டானால், பாட்டுப் பாடுகிறார்கள். தோட்டத்தின் வழியாக ஏதாவது ஒரு பட்சி பறந்தால் உபாத்தியாயர் உடனே அதைப்பற்றிய விவரங்களைச் சொல்லுவர். இப்படி வருத்தம் குறையும்படி பாடம் சொல்லப்படுகிறது. புத்தகத்தைப் பார்த்துப் படிப்பதில்லை. கணக்குத் தெரிவதற்கு, செடிகளை எண்ணி, மரங்களை அளவெடுத்து, வஸ்துக்களை நிறுத்துப் பார்க்கிறார்கள். பூகோளம் அறிய படங்களைப் பார்ப்பதில்லை. அந்தந்த தேசம் உள்ளபடி மேடு பள்ளம் தெரிவிக்கும்படி மண்ணினால் மாதிரி பண்ணுகிறார்கள். குகையில் வசித்த மனிதர்களைப்பற்றிச் சரித்திர பாடம் சொல்லப்பட்டால், பிள்ளைகள் அதே விதமான குகைகளைக் கட்டுகிறார்கள். ஐரோப்பா கண்ட ருஷியர்களுக்கும் ஜப்பான் தேசத்தார்களுக்கும் யுத்தம் நடந்தபோது, ஜப்பானியர்கள் போர்க்களத்தில் காயம் படுகிறவர்கள் முதலியவர்களுக்காக அங்கே ஆசுபத்திரி கட்டினார்கள். மேற்கூறிய பள்ளிக்கூடம் அதைப்போலவே மாணாக்கர்களால் கட்டப்பட்டது.

கிருஷியைப் பற்றிய பாடம் என்றால், கேட்டதை அநுபவத்தில் பரீட்சித்துப் பார்க்கப் பிள்ளைகள் நிலத்தை உழுது, விதையை

விதைத்து, செடிகளைவைத்து வளர்வதைப் பார்த்துக் கொள்ளுகிறார்கள்.

ஜன நெருக்கத்தால் உண்டாகும் தீமைகளை உண்மையாக அநுபவத்தில்தெரிந்துகொள்ளச் செய்த ஒரு முறையை இங்கே சொல்லுவோம். ஒரு இடத்தில் அதிக அடர்த்தியாய்ச் செடிகளை வைத்தார்கள். அவைகளைக் கொஞ்ச காலம் பார்த்து வந்தார்கள். நன்றாய் வளரவில்லை. அவைகளை எடுத்து வெவ்வேறு இடங்களில் நட்டார்கள். அப்பொழுது நன்றாய் வளர்ந்தன. இதைப் போலவே மனிதர்களும் அதிக நெருக்கத்தால் அசௌகரியப்படுகிறார்கள் என்றும், நெருக்கமில்லாமலிருந்தால் ஸுகப்படுகிறார்கள் என்றும் தெரிந்து கொள்ளச் செய்தார்கள். கேட்கிற பாடத்துக்கும் செய்கிற காரியத்துக்கும் சம்பந்தம் இருந்தால் பிள்ளைகள் ஏன் பள்ளிக்கூடத்துக்கு வர விரும்பமாட்டார்கள்? இப்படிக்குள்ள பள்ளிக்கூடத்துக்குள் இனி வரக்கூடாதென்று பயமுறுத்தினால் அதையே தங்களுக்குப் பெரிய அவமானமான சிக்ஷையென்று பிள்ளைகள் எண்ண மாட்டார்களா? உலகத்தில் படிப்போர் எல்லாரும் கணித சாஸ்த்ரத்திலும் சட்டங்களிலும் தேர்ச்சி அடைய முடியுமா? அப்படித் தேறக்கூடாதவர்களுக்கு இம்மாதிரிப் பள்ளிக்கூடங்களினால் எவ்வளவு உபயோகமிருக்கக்கூடு மென்று ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்கலாம்.

மேற்கூறிய இடத்தில் நோயாளிகளுக்கு அநுகூலமான காற்றோட்டமுள்ள இடத்தில் நடப்பதைத் தெரிந்ததும் நமக்கு இன்னொன்று ஞாபகத்துக்கு வருகிறது. பூகோளம், சரித்திரம், கணிதம், கிருஷி முதலிய இவைகளெல்லாம் போதிக்கப்படும் கிரமம் நோயாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் ஒன்றே. ஆனால், வியாதிகளில்லாத மாணாக்கர்களில் அநேகர் மிதமீறிய சோம்பலினாலாவது, உடம்புத் திமிரினாலாவது, படிப்பில் வணக்கமில்லை. சோம்பலை நீக்க ஏதாவது வேலை செய்யம்படி கட்டாயப்படுத்த வேண்டும். திமிரினால் ஊரில் வீணாய்ச் சிலர் திரிவார்கள். இல்லாவிட்டால் மற்றப் பிள்ளைகளுடன் சண்டை செய்வார்கள். இவர்களுடைய திமிரை அடக்கவேண்டும்.

அமேரிக்காவில் இப்படியுள்ளவர்களுக்காக ஊருக்கு வெளியில் ஒரு பெரிய காம்பவுண்டு வைத்திருக்கிறார்கள். சோம்பேறிகளானால், அவர்களை காம்பவுண்டுக்குள் விட்டதும், சவுக்கினால் அடிவேண்டுமா? இல்லாவிட்டால், வேலை செய்வீர்களா? என்று பயமுறுத்தி ஏதாவது வேலையிடுகிறார்கள். திமிரினால் திரிந்து சண்டை போடுகிறவர்களானால், அவர்களை காம்பவுண்டுக்குள் அழைத்துக் கொண்டு போய் குதிரையின்மேல் ஸவாரிசெய்யச் சொல்லுவார்கள்; அல்லது கஸர்த்து செய்ய நிர்பந்திப்பார்கள். உடம்பு நன்றாய்க் களைத்து விஷமத்துக்குப் போகும் எண்ணமில்லாதபடி செய்துதான் வெளியேவிடுவார்கள். சோம்பேறிகளுக்கும் சோம்பல்போய் சுருசுருப்பு உண்டாகும். திமிர்க்காரர்களுக்கும் வணக்கம் உண்டாகும். இப்படி நன்மை உண்டான பிறகு எங்கெந்த பாடசாலைகளில் யார் யார் படித்தார்களோ அவரவர்கள் அங்கங்கே அனுப்பப்படுவார்கள். அந்தந்த பாடசாலைகளில் பிறகு விசாரித்தால் துர்க்குணங்கள் நீங்கி நல்லொழுக்கத்துடன் பிள்ளைகள் நடப்பதாகத் தெரிகிறது.

இங்கிலாந்தில் காற்றுலாவும் திறந்த இடத்தில் படிப்பும், அமேரிக்காவில் வணங்காதவர்களை வணங்கச்செய்வதும் கவனிக்கப் படுகின்றன. முற்கூறியதில் நடப்பதுபோல், புத்தகமில்லாமல் பாடஞ்சொல்லியும், கைகளினால் வேலைசெய்தும், கண்களினால் பார்த்தும், காதினால் கேட்டும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் விதங்களை நிரூபித்துக்காட்டியும், இந்தியாவில் மாணாக்கர்கள் களிக்கும்படி எப்போது காலம்வருமோ என்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீனிவாஸரங்காசாரி.



## OUR TRAVELLER'S DIARY.

## நம்முடைய பிரயாணியின் டையிரி.

[பத்திராதிபர் குறிப்பு.—பிழைக்கும் வழியிலுள்ள முக்கியமான விஷயங்களை கிராமாந்தரங்களிலுள்ளவர்களுக்கு வாசித்துக் காண்பிக்கும்படி சிலரை ஊரூராய்ப் போகும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தந்த கிராமத்தில் விசேஷமான விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், படிப்பு, முதலியவைகளைக் குறிப்பிட்டு எழுதும்படிக்கும் செய்திருக்கிறோம். அடியில்கண்ட குறிப்புகள் கும்பகோணத்திலிருந்து ஸுமார் 20 மைலுக்குள் பட்ட சில கிராமங்களைப் பற்றிய விஷயங்கள்.]

கும்பகோணத்திலிருந்து கிழக்கே மூன்று மைல் தூரத்தில் புள்ளியாம்பேட்டை கிராமம். காலை 9 மணி முதல் 11 வரையிலும், குடியானத் தெருவில் நாட்டாண்மைக்காரர் வீட்டில் சுமார் 12 பேர்கள் வந்தார்கள். எல்லாருக்கும், காய்கறி பயிர்ச் செலவைத் தவிர வேறு தொழில் ஒன்றுமில்லை "பிழைக்கும் வழி"யின் பிரயோஜனத்தைப் பற்றி விஸ்தாரமாகச் சொன்னேன். சந்தோஷ மடைந்தார்கள். ஊரில் வாசித்தவர்கள் இல்லாமையால் வாங்கி படிக்க முடியவில்லை என அறிந்தேன். ஊரில் திண்ணை பள்ளிக்கூடமே கிடையாது. எல்லாம் படையாச்சிகளும், வலையர்களுமாக சுமார் 50 வீடுகளிருக்கின்றன.

மணஞ்சேரி.—அக்கிராகாரத்திற்குப் போய், திண்ணைப் பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயரைக் கண்டு பேசினேன். தகுந்த கல்விமான்களில்லை என்றார். பெரும்பாலும், சில்லரைக்கடை வைத்திருக்கும் லெப்பை வகுப்பு மகமதியர்களிருக்கிறார்கள். வீடுகள் சுமார் 250 இருக்கலாம். விசேஷமாய் வெற்றிலை கொடிக்கால்கள் இருக்கின்றன.

இவ்வூரில் ஒரு போர்டு ஸ்கூலிருக்கிறது. ஹெட்மாஸ்டர், மிஸ்டர் சாமாசாஸ்திரியார் நமது பத்திரிகையின் பயனை மெச்சினார். ஸ்கூல் மாணாக்கர்களின், கல்வி விருத்தியை முன்னிட்டு, கனம்பொருந்திய இன்ஸ்பெக்டர் ஆவ் ஸ்கூல்கள் உபாத்தியாயர்களின் சொந்தச் செலவிலே, பத்திரிகைகளை வரவழைத்துக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறதாகவும் சொன்னார்கள். இவ்வூரில் அனேகமாய் எல்லோரும் வேதங்களை அத்யயனம் செய்கிறவர்களாகவே யிருக்கிறார்கள். இவ்வூர் கிராம முன்சீப் கோவிந்தசாமி பிள்ளையவர்களை காணப்போனேன். பிள்ளையவர்கள் வயலுக்கு அறுப்புக்கு போயிருந்தார்கள். ஷை யார் தம்பியவர்களுடன், இன்னும் சில குடியானவர்களை வைத்துக் கொண்டு, சில விவஸாய சம்பந்தமான விஷயங்களை வாசித்து காட்டினேன். மிகவும் சந்தோஷ மடைந்தார்கள்.

அசூர்.—12 மணிக்கு ஷை ஊரிலுள்ள தமிழ் பள்ளிகூடத்திற்குப் போனேன். அங்கே ஷை கிராமத்திலுள்ள, முக்கியஸ்தர்களும் அங்கேயிருந்தபடியால், எனக்கு பிரசங்கம் செய்ய மிகவும் சாதகமாயிருந்தது. எல்லோருக்கும் மிகுந்த ஆவலுடன் "பிழைக்கும்வழியின்", "ஒத்தை நடவு", "பசுந்தாள் எரு", "காவாளை" முதலிய விஷயங்களை வியக்தமாய் படித்து பலவித உபயோகத்தையும் எடுத்து விரிவாகச் சொன்னேன். மரியாதையாக என்னை கொண்டாடி நமது பத்திரிகைக்கு ஒரு வருஷத்திற்கு சந்தா நேயர்களாக, ஷை. பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர் முத்துதேவர் அவர்கள் விலாசிற்கு தருவித்துக் கொள்ளுவதாக, ஆர்டர் கொடுத்தார்கள். முத்துத் தேவர் கல்வியில்

மிக்க ஆவலுடையவர். நாகரீகத்திற்கு அந்த கிராமத்திற்கே அவர் உபாத்தியாயராக இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

எலிமிச்சங்காபாளயம்.—சுமார் 150 வீடுகள். பெரும்பாலும் கவரை ஜாதிகளேயிருக்கிறார்கள். சில பித்தளை வேலை செய்யும் அகம்படியார்கள், வலையர்கள், இருக்கிறார்கள். படிப்புக் கிடையாது. கவரைகள் வர்த்தகம் கும்பகோணத்திலே நடத்துகிறார்கள். இந்த கிராமம், பண்டைக் காலமுதல் ஓர் வித, நல்ல மேனியுள்ள கறுப்பு சாயத்திற்கு (புடவைகளுக்கு) பேர்போனது. இப்போது ஷை சாயத்தொழில் உபாயமாய் நடந்து வருகிறது. சாமான்யமான திண்ணை பள்ளிக்கூட மிருக்கிறது. உபாத்தியாயர் தள்ளாதவர். பத்திரிகை விஷயமாய், சில நிலக்காரர்களுக்கும், தோட்டக் காரர்களுக்கும் படித்து காண்பித்தேன்.

திருவலஞ்சுழி.—கூடை முறம் பின்னும் நாயக்கர்களிருக்கிறார்கள். ஸுமார் 50 வீடுகளுண்டு. சவுக்கு மரம் பயிர் செய்கிறவர்களிருக்கிறார்கள்.

அவல் பட்டரையில்—ஆண் பெண் வேலை செய்கிறார்கள். ஸ்வாமிமலைக்கு ஒரு மையில் தூரம். புராதன பெரும் விசித்திர கருங்கல் வேலையுள்ள ஆலயமுண்டு. 30 அடி உயரம் 8 அடி அகலமுள்ள, ஒரு அடி கனமுள்ள ஓரே கருங்கல் (வெள்ளை ஸலவைக்கல்) பலகணி வேலை செய்த ஸ்க்ரீன் இருக்கிறது. நெசவுக்காரர்கள் ஸுமார் 4 வீடுகளுண்டு.

அம்மாப்பேட்டை.—ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமிருக்கிறது. எல்லாம் 80 வீடுகளிருக்கின்றன. கம்மவாரு ஜாதி கவரைகள். பெண்பாலர்களும், ஓமம், மல்லி, வெங்காயம், முதலியவைகளை மாட்டுப்பொதியில் போட்டு வெளியூர்களுக்கு கொண்டுபோய் வியாபாரம் செய்கிறார்கள். ஆண்கள் லேவாதேவி செய்து பணக்காரர்களாகவே யிருக்கிறார்கள். பித்தளை. பாத்திரம் எடுத்துத் தெருக்களுக்கு கொண்டுபோய் வியாபாரம் செய்கிறார்கள். படிக்கும் பிள்ளைகள் சுற்றுப்பக்கத்திலுள்ள குடியானவர்களே.

கடிச்சம்பாடி.—சுமார் 200 வீடுகளுண்டு. அனேகமாய் விவஸாயிகளாகவும், கூலிக்கு வண்டி ஓட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள். கிராம முன்சீப் இதற்குமுன், விவஸாய ஸங்கத்தின் பத்திரிகைகளைத் தருவித்துக்கொண்டிருக்கிறார். பள்ளிக்கூட மிருக்கிறது. உபாத்தியாயர் "பிழைக்கும் வழி"ப்பத்திரிகையின் பிரயோஜனத்தை சிலாகித்தார்.

ஏராஹூரம்.—சுமார் 15 பிராமணர்கள் வீடு மட்டுமிருக்கிறது. மிராசுதார்கள் உள்ளூர் காரர்களாக யில்லை. கர்ணடகத் திண்ணை பள்ளிக்கூடமட்டுமுண்டு. கஷ்ட நிலைமையுள்ள குடியானவர்கள் இருக்கிறார்கள்.

உத்திரை கிராமம்—இங்கே ஓர் விதமான மரம் இருக்கிறது. சென்ற வருஷம் ஆயிரக்கணக்கான ஜனங்கள், தஞ்சை ஜில்லாவின் நாலாபக்கங்களிலிருந்தும் ஷை மரத்தின் இலையை, சகலவித நோய்களுக்கும் சாப்பிட்டு சுகமடைந்தார்களாம். இப்போது ஷை மகிமை இருந்தவிடம் காணோம். சுமார் ரூ. 3,000 வரையில் காணிக்கையினால் வருமானம். எல்லாம் திருப்புரம்பியம் கிராம முன்சீப் அவர்களின் முயற்சியே.

இன்னம்பூர் கிராமம்.—இவ்வூரில் சிறந்த புராதன சிவாலயமுண்டு. சுமார் 250 வீடுகளுண்டு. வைஷ்ணவர்களின் வீடு 20-க்குக் குறையாமலிருக்கிறது. ஷை தெருவில்தான் காலஞ்சென்ற திவான் பகதூர் ஸ்ரீனிவாஸராகவ அய்யங்கார், ஸி. ஐ. ஈ. ரெஜிஸ்ட்ரார் ஜெனரல் அவர்களின் பூர்வீக பிறப்பிடம். ஷை



யாரின் பந்துக் களிருக்கிறார்கள். இங்கிலீஷ் வாசித்த மிராசுதார்களிருக்கிறார்கள். தமிழ் பாஷையில் விருப்பமற்றவர்களாக யிருக்கிறார்கள்.

திருப்புரம் பியம் கிராமம்.—கிராம முன்சீப், நாராயணசாமி நாயுடு அவர்களையும், முத்துவீர பிள்ளையவர்களையும் கண்டேன். அவர்கள், சொன்னதாவது, திவான்பகதூர், முயரவர்களின், விடாமுயற்சியினால் நடந்து வரும், சொல்ப சந்தா (As, 12) உள்ள விவஸாய பத்திரிகை வாசிக்க நேரமில்லை என்று சொல்லி விட்டார். இவ்வூரில் சுமார் 400 வீடுகளுண்டு. எல்லாம் மிராசுதார்களே. ஒரு எலிமண்டரி ப்ரைமரி பாடசாலை ஸ்தாபித்திருக்கிறார்கள். ஷை முயற்சிக்கு கனம், கிருஷ்ணசாமி படையாச்சியாரும், இவ்வூர் போஸ்டுமாஸ்டர், சாக்ஷிலிங்கம் பிள்ளையுந்தான் ஆதாரம். ஒரு ரீடிங் ரூம் ஸ்தாபித்து செந்தமிழ் சுதேசமித்திரன் தருவிக்கிறார்கள். நம் பத்திரிகையை தங்கள் ஸ்கூலுக்கு தருவிக்கிறதாகவே ஒப்புக்கொண்டு ஒருமாதிரி காப்பியை தருவித்து முழுதும் படித்துப்பார்த்து பிறகு பணம் கட்டிவிட இஷ்டமென்று சொன்னார்கள். கைத்தொழில் செய்பவர்களை கண்டு படித்துக் காண்பித்தேன். வாசித்தவர்கள் இருவருக்குமேல் இல்லை.

கோந்தை.—இங்கே சுமார் 60 வீடுகள், உடையார் ஜாதியும், ராஜவாடு ஜாதியாரும், பெரும்பாலும் விவஸாயிகளாகவே யிருக்கிறார்கள். இரவில் ஒன்றுகூடி "சாகுபடி," விஷயத்தை படித்து காண்பித்தேன்.

இவ்வூரில், நாராயணஸாமி ராஜா என்பவர், நெல் ஒற்றை அலகு நட்டிருக்கிறார். பலன் அதிகம் தராவிட்டாலும் சாதாரணப் பயிர்களுக்கு வழக்கம்போல் இடும் எருவினாலே, கதிர்கள் விட்டிருக்கிறது அதிகமென்றே சொன்னார்.

மாஞ்சேரி.—வீடுகள் 20-க்கு மேலில்லை. ஆயினும், சுமார் 4 அல்லது 5 மைல் சுற்றளவுக்குள்பட்ட சிறு கிராமங்களிலுள்ள ஏழைப் பிள்ளைகள் எல்லாரும் (80 பிள்ளைகள்) வாசிக்கும் ஒரு திறமையுள்ள, கிருஸ்தவ உபாத்தியாயரின் முயற்சியாலும், போர்டாரின் சகாயத்தின்பேரில், "மாஞ்சேரி எலிமெண்டரி ரூரல் ஸ்கூல்" இருக்கிறது. நமது சஞ்சிகையைப்பற்றி விவரித்தேன். தலைமை உபாத்தியாயர் ஒரு சந்தா நேயராக கையொப்பமிட்டு ஆர்டர் தந்தார்.

விஜயமங்கை.—இங்கே, இரண்டொரு கோவில் குருக்கள் வீடும் 50 படையாச்சிகள் வீடுகளுமிருக்கின்றன. விளைபொருள்கள் துவரை மொச்சை, சோளம், வரகு, அதிகமுண்டு. பூர்வகாலத்தில் அருச்சுனன் தபஸ் செய்த ஸ்தலமாம். விசேஷசிவாலயமிருக்கிறது.

கூணஞ்சேரி.—மகம்மதியர்களிருக்கிறார்கள். இங்கும் இரண்டொருவர், நெல் ஒற்றை நாற்று நட்டிருக்கிறார்கள்.

புள்ளபூந்தாங்குடி.—ஒரு ப்ராஞ்சு தபாலாபீஸ் உண்டு. மிராசுதார்களிருக்கிறார்கள். படிப்பு விஷயம் வெகுதூரம் என நினைக்க ஹேதுவாக யிருக்கிறது.

நரசிம்மபுரம்—மடாதிபதிகளின் மானேஜர் எனக்கு தெரிந்தவர். பிழைக்கும் வழிப் பத்திரிகையை சிலாகித்து சொன்னார். இது வைஷ்ணவ ஆசாரிய ஸ்வாமிகளின் ஆதீன ஸ்தலம். இம்மடத்திற்கு கல்வி கேள்விகளில் தேர்ந்த வைஷ்ணவ சிரோன்மணிகள்தான் நியமனம் செய்யப்படுகிறார்கள். தற்போது இருக்கும்

ஸ்வாமிகள் அதிக வயதானவரே. வைதீக வைஷ்ணவர்கள் சுமார் 100 வீடுகளிருக்கும்.

உம்பளாபாடி கிராமம்.—எல்லாம் வைஷ்ணவர்கள் நிறைந்த செழிப்பான கிராமமே. படித்தவர்கள் சென்னை முதலான பட்டணங்களிலே, வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். நமது கனம் பொருந்திய சென்னை பிரபல வக்கீல் டி. ரங்காச்சாரியின் ஜனனஸ்தலம், வைதீகர்களிருக்கிறார்கள்.

சருக்கை கிராமம்.—நீர்வளத்திலும் நிலவளத்திலும் செம்மையாக; காவிரியாறுக்கும் அரசலாறுக்கும் நடுமத்தியிலிருக்கிறது. வைஷ்ணவர்களே குடியிருப்பு. எல்லாம் ஆங்கிலம் பயின்ற கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களே வஸிக்கிறார்கள். முக்கியமாக, திவான் பகதூர் எஸ். கோபாலாச்சாரியார் பி. ஏ., பி. எல். மாஜி திருவாங்கூர் திவான் குண்டூர் செஷன்ஸ் ஜட்ஜியவர்கள் வஸிக்கிறார்கள்.

வழுத்தூர், சக்கருப்பள்ளி, துலுக்கமாங்குடி. சுமார் 20 வீடுகளில், கைதேர்ந்த கொல்லாசாரிகள் இருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவிலிருந்து இதர ஜில்லாக்களுக்கு, வேலைப்பாடான மாங்காய்ப்பூட்டுகள், தொட்டிபூட்டுகள், பாக்கு வெட்டிகள், அகத்தி பூவாட்டமான எஃகு அரிவாள்கள், செய்து, சில்லரை வியாபாரிகள் முன்பணம் கொடுத்து, வாங்கி அனுப்புகிறார்கள். அனேகமாய் மகம்மதியர்களிருக்கிறார்கள். சக்கருப்பள்ளியில், மிகவும் கட்டுப்பாடாகவே மகம்மதியர்கள் குடியரசு போல், சுகாதார முதலியவைகளை சரிவர நடத்திவருகிறார்கள். இங்கே ஏராளமாக படுகைகளில், எலுமிச்சை, நார்த்தை, பொம்பிளிமாஸ், மூங்கில் கண்கள் பயிர்செய்து, உதிரி கண்ணுகளாகவே விற்கிறார்கள். சுமார் 2 வேலி நிலத்தில், ஷெ. பயிர்கள் விர்த்தி செய்து, கண் 1 க்கு ரூ. 0-2-0 முதல் 4 அணா வரையிலும் விலை போகிறது. 3 வருஷத்தில் மூங்கில் ஓங்கிவிடுகிறது. மற்றவைகள் 2 வருஷத்தில் காய்க்க ஆரம்பிக்கின்றன. ஷெ ஸாகுபடியில், நல்ல லாபத்தோடு சுமார் 15 வருஷமாக கனம் ஜெகனாதபிள்ளை நடத்தி வருகிறார். எரு, ஆட்டுச் சாணி தவிர வேறு ஒன்றுமே இல்லை. ஆற்று வண்டல் அடிக்கிறது. மதுரை வைகை ஆற்றுப்பக்கத்தில் காலியாயிருக்கும் சப்பாத்திப் படுகைகளில், இவ்வருஷம் பயிர் விருத்திசெய்ய ஏராளமாய் ரெயில் மார்க்கமாய் மூங்கில் கண்களை கொண்டுபோகிறார்கள் என்று நேரில் கண்டேன். பாய் நெய்யும்வேலையில், நல்ல கைதேர்ந்த படிப்பில்லாத வேலைக்காரர்கள், மகம்மதிய ஆண்களும் பெண்களுமிருக்கிறார்கள். மிகவும் குறைந்த 2 அணா விலை முதல் 3 ரூபாய் வரையில் விற்கப்படுகிறது.

மானோஜியப்பா சர்வடி.—கிஷ்ணசெட்டியார் முதலானவர்களையும், நெசவுவேலையில் நிபுணர்களான பட்டு நூற்காரர்களையும் கண்டு தெரிவித்தேன். சென்ற 1907-ம் ௵த்தில் நெசவுப் பள்ளிக்கூடம், கவர்ன்மெண்டார் உதவியினால் ஸ்தாபிக்கப்பெற்று ஒரு வருஷத்திற்குள்ளாகவே வாசிப்பவரில்லாமையால் எடுக்கப்பட்டு விட்டதாக சொன்னார்கள். உயர்ந்த பல வர்ணமுள்ள குத்துணிகள் செய்கிறார்கள். வடக்கே, பம்பாய், பரோடா, கல்கத்தா முதலான இடங்களுக்கு அனுப்புகிறார்கள். ஏராளமான பரம ஏழைகளாக பட்டு நூற்காரர்களிருக்கிறார்கள்.

பசுபதி கோவில்.—ஸ்கூலில்லை. இங்கே விசேஷமாய் மண்மாரி பேய்ந்த மேடுகள் ஏராளமிருக்கின்றன. அருகாமையில் வெட்டிவேர்—வாசனையை கொடுக்கும் செடி—பயிர் செய்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில்



## SELECTIONS.
## விசேஷத்திரட்டு.

### INDIANS IN MAURITIUS.
### மோரீஸ் தீவில் இந்தியர்கள்.

மிஸ்டர் மணிலால் எம். டாக்டர் என்ற ஒரு இந்தியன் பாரிஸ்டர் மோரீஸ் தீவிலிருந்து இப்போது இந்தியாவுக்கு வந்திருக்கிறார். அவர் அந்தத் தீவில் மூன்று வருஷமாக உத்தியோகம் செய்து, அவ்விடத்தில் வசிக்கும் இந்தியர்களின் நன்மைக்காக உழைத்தும் வந்திருக்கிறார். தென்னாப்பிரிக்காவில் இந்தியருக்குத் தலைவராகப் பேர்போன மிஸ்டர் காந்தி, மிஸ்டர் மணிலால் டாக்டரை மோரிஸுக்குப் போய் அங்குள்ள இந்தியருக்கு நன்மை செய்யும்படி சொல்ல அவர் அங்கே போய் உத்தியோகம் செய்து வருகிறார். அவர் இப்போது இந்தியாவுக்கு வந்திருக்கும் உத்தேசம் என்னவென்றால், மோரிஸ் தீவுக்கு இந்தியாவிலிருந்து உடன்பாட்டுக் கூலிகள் அனுப்பப்படும் வழக்கத்தை நிறுத்திவிடும்படியாகவும், அந்தத் தீவில் வசிக்கும் இந்தியருடைய விருப்பங்கள் நிறைவேறும்படியாகவும், இந்தியாவிலுள்ள ஜனத்தலைவர்களின் அனுதாபத்தையும் இந்தியா கவர்ன்மெண்டின் அனுதாபத்தையும் பெறும்படியாகவும், மோரீஸிலுள்ள இந்தியர்களால் அனுப்பப்பட்டு வந்திருக்கிறார். மோரீஸில் வசிக்கும் ஜனத்தொகை மொத்தம் 3,80,000 த்தில் இந்தியர் 2,70,000 மென்றும், அதில் ஹிந்துக்கள் 2,25,000 என்றும், மகமதியர் 41,000 என்றும், பாக்கிப் பேர் கிறிஸ்தவரென்றும் சொல்லப்படுகிறது. அந்தத் தீவின் விஸ்தீரணமே 705 சதுரமைலென்றும், அதில் சதுரமைல் ஒன்றுக்கு 559 ஜனங்கள் வசிக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. இப்படி அந்தத் தீவில் வசிக்கும் வெள்ளைக்காரரை விட இந்தியர்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருந்தாலும், அவர்கள் மற்றக் குடியேற்ற நாடுகளிலிருப்பது போல, வெள்ளைக்காரர்களுக்குத் தாழ்ந்த நிலைமையில் இருந்து கொண்டு, பெரும்பான்மையும் சொற்ப ஸொத்துக்கள் உள்ளவர்களாயும், சில்லரை வியாபாரம் செய்கிறவர்களாயும், 40 ஆயிரம் பேர் உடன்பாட்டுக் கூலிகளாயும் இருக்கிறார்கள்.



இந்த இந்தியர்களின் குறைகளை மிஸ்டர் டாக்டர் பின் வருமாறு சொல்லுகிறார்:—

(1) உடன்பாட்டுக் கூலிகள் மோரீஸுக்கு அனுப்பப்படுவதை நிறுத்தி விடவேண்டும். மற்ற நேட்டால் முதலிய குடியேற்ற நாடுகளில் உடன்பாட்டுக் கூலிகளுக்கு அவர்களுடைய உடன்பாட்டுக் காலம் முடிந்ததும், இந்தியாவுக்கு வர கப்பல் கூலி கொடுப்பது போல் கொடுக்காமல், மோரீஸிலுள்ள தோட்டப்பயிர் செய்யும் வெள்ளைக்காரர்கள் அனுப்பி விடுகிறார்கள். மேலும் அந்தத் தீவில் ஜனத்தொகை போதுமானபடி நெருக்கமாயிருப்பதால், அங்கே புதிதான உடன்பாட்டுக் கூலிகள் இனி வேண்டியதில்லை.

(2) அங்குள்ள இந்தியர்களுக்குள் விவாக ஸம்பந்தமாயும் ஸொத்துக்கள் ஸம்பந்தமாயும் அனுஷ்டானத்திலிருக்கும் சட்டம் ப்ரான்ஸ் தேசத்துச் சட்டம். இந்தச் சட்டத்தால் ஹிந்துக்கள் விவாகம் செய்து கொண்டால் அது ஜாதி யாசாரப்படி நடந்ததாகக் கருதப்படாமல் வைப்பாகக் கருதப் படுகிறபடியால், அங்கு நடக்கும் முக்கிய தொழிலாகிய கரும்பு பயிரிடும் தொழிலானது சரியாய் அபிவிர்த்தியாகவில்லை.

(3) ஹிந்து மகமதியர்களுக்குள் சட்ட விரோதமாய்க் குற்றஞ் செய்து தண்டனை

யடைகிறவர்கள் ஜெயிலுக்கு அனுப்பப்படும்போது, ஹிந்துக்களுடைய குடுமியையும் மகமதியருடைய தாடியையும் சிரைத்து விடுதல். மேலும், அவர்கள் ஜெயில்களில் நீக்ரோ அல்லது வேறு அந்த ஊர் கிறிஸ்தவ ஜாதியார் செய்த சாப்பாட்டை உண்ணும்படி செய்தல்.

(4) ஹிந்துக்கள் இறந்து போனால் அவர்களைக் கொளுத்தும்படியான வஸதிகள் இல்லாதிருத்தல். அதைப் பற்றின சட்டமானது கடுமையாயிருத்தல்.

(5) அங்கேயுள்ள உத்தியோகஸ்தர்களும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் ஜட்ஜிகளும் இப்போது ப்ரெஞ்சுக்காரராயிருப்பது போலிராமல் ப்ரிடிஷ் ஜாதியாராயிருத்தல் அவசியம்.

(6) இந்தியர் அந்த தேசத்தில் எண்ணிக்கையில் அதிகமாயிருப்பதாலும், தொழில் வியாபாரம் முதலியவை செய்வதில் முக்கியஸ்தராயிருப்பதாலும், வருஷத்தில் சில தினங்களை விடுமுறை தினங்களாக அமைத்தல் அவசியம்.

இந்தக் குறைகளை மிஸ்டர் மணிலால் டாக்டர் இந்தியா கவர்ன்மெண்டுக்கு எடுத்துச் சொன்னபோது, அவர்கள் பொதுவாய் அனுதாபம் காட்டிப்பேசினதாகவும், அதிகத் தாமஸமில்லாமல் மேற்கண்ட இந்தியரின் இந்தக் குறைகள் நீக்கப்பட்டுப் போமென்று தாம் நம்புவதாகவும் சொன்னார்.

சுதேசமித்திரன்.

---

**சிலங்கூர் வித்யாபாஸ்கரன்:**— "பிழைக்கும்வழி' இது சென்னையிற் பிரசுரமாகும் அற்புத மாதாந்தரப்பத்திரிகை. எழுத்துக்காகிதம் முதலியனவற்றில் அதிக தெளிவாயிருப்பதனால் படிப்போர்க்கு விருப்பத்தைக்கொடுக்கும். அதன் பெயருக்குத் தக்கவான உள்ளுரைகளும் 'இந்தியர்கள் பிழைப்பதற்கன்' வழி முறைகளை எடுத்துரைக்கின்றது. 'இந்தப் பத்திராசிரியர் ஸ்ரீமத் வைத்தியராமன், B. A. அவர்கள் பல துறைகளிலும் கைபோனவர் என்பது அவருடைய வியாசங்களினால் அறியப்படும். இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்வோர் உயர்தரக்கல்வி கற்றவர்களாதலின் தமிழ் மக்கள் இதைப்பெற்றுப் படிப்பின் உண்மையில் அனுகூலமடைவார்கள் இதன் வருட சந்தா ரூபா 4—0—0.

## BONE.

## எலும்பு.

எலும்பு தொடப்படாத வஸ்துவென்று இந்து நாகரீகத்தில் நிக்ரகிக்கப் பட்டிருக்கிறது. எலும்பைத் தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டுமென்ற கொள்கை நமது தேசத்தில் குடிகொண்டிருக்கிறது. ஆனதுபற்றி கேவலம் சக்கிலியர் இதைக் கையாட விட்டிருக்கிறோம். இதன் விஷயமான ஞானம் பொதுப்படையாயும் தேசத்திலேயே குறைந்திருக்குமானால் சக்கிலியருக்கு எவ்வளவு ஞானமிருக்கும்? இவ்வாறிருக்கும் சக்கிலிகள் கேவலம் ஏழ்மை யடைந்திருப்பதால், அயல் நாட்டு வியாபாரம் செழித்தோங்கி நடந்தேறுகிறது. நம்முடைய எலும்பு நமது தேசத்துக்கு உபயோகப்படாமலிருக்க, லங்கைத் தீவு, நெட்டால், ஆஸ்ட்ரேலியா முதலிய தூர தேசங்களுக்குச்சென்று உபயோகப்படுகிறது. நமக்கு மூடத்தனம் இருக்குமளவும் அயல் நாட்டு இவ்வியாபாரம் பிரபலப்படுவதற்கு யாது தடை? வருஷத்தில் சுமார் 10 லக்ஷ மணங்குஎலும்பு வியாபாரம் நடக்கிறது. இவை என்னத்துக்குப் போகிறதென்று சில கிராமவாசிகள் கேட்க, வேறு சில அஞ்ஞானிகள் சர்க்கரை செய்வதற்கென்று தெரிவித்திருக்கிறார்கள். எலும்பு சர்க்கரையாகவே மாட்டாது. ஆனால் எலும்புக் கரி சர்க்கரை சுத்தி செய்வதற்கு சொற்பம் உபயோகப்படுகின்றது. பெரும்பான்மையாய் இது எருவுக்கென்றேகொண்டு போகப்படுகிறது: இவ்வளவு ஆயிரம் மைல் போவதினாலுண்டாகும் கப்பற் செலவு, ஏஜெண்ட் கமிஷன், வியாபாரி லாபம் இவைகள் உண்டாகியும், அவ்வூரார் தக்க விலை கொடுத்து வாங்கி லாபமடைய, நாம் கையிலிருப்பதை நழுவவிட்டுக் கதைகளும்,



காலக்ஷேபங்களும் நடத்துவது தேசத்துக்கு தகாததாயிருக்கிறது. நாம் நமது கிராமங்களில் உண்டாகும் எலும்பைச் சேகரித்து எருவாக உபயோகிப்பது அவசியம். எலும்பைச் சேகரிக்கலாமென்று பிரயத்தனப் பட்டாலும், எலும்பு கிடைக்கவில்லையென்று முறையிடுகிறார்கள். அயல் நாட்டில் இதன் வியாபாரம் அவ்வளவு வேரூன்றியிருக்கிறது. விலையையும் அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கும் விலையைவிட நாம் அதிகம் கொடுத்தாலும் சக்கிலியர் அன்றி வியாபாரிகளுக்கு ஒப்பந்தம் செய்திருப்பதால் அவர்கள் நமக்கு எலும்பு கொடுக்க மாட்டோமென்கிறார்கள். இதற்கு விமோசன மென்னவென்று சற்று யோசிக்க வேண்டும். தேசத்தில் இருக்கும் ஆடுமாடுகள் அனேகமாய்க் குடியானவர்களுடையதே யல்லாமல் சக்கிலியருடையதல்ல. அக்குடித்தனக்காரர்கள் பொருளைத் தாங்களே ஜாக்கிரதை செய்யவேண்டும். சாகும் ஆடுமாடுகளை சக்கிலியனுக்கு கொடுக்கிறோம். அவன் தோலை உரித்துப் பதம் செய்து குடியானவர்க்குத் திருப்பிக் கொடுக்கிறான். மாமிசத்தைத்தான் சாப்பிடுகின்றான். எலும்பைச் சேகரித்து வியாபாரிகளுக்கு விற்கிறான். நமக்குக் கிடைக்கும் தோலுக்காக நாம் ஏருவாகவேண்டிய மாமிசத்தையும் எலும்பையும் கொடுத்துவிடுவது யுத்தமாயிருக்கவில்லை. மற்ற வேலைகள் கூலிக்கு நடந்து வருவதுபோல தோலுரிப்பதும் பதம் செய்வதும் கூலிக்கு நடக்கவேண்டும். எலும்பும் சதையுமாய் சுண்ணாம்புடன் கலந்து புதைக்கப்பட்டால் மாகூலை அதிகப்படுத்தும். எலும்பைப் பற்றி இவ்வளவு விஸ்தாரமாய் எழுதுவதினால் அதன் குணாகுணம் என்னவென்று கேள்வி பிறக்கும். பூமியில் விளைந்த மாகூலை மிருகங்கள் புசிக்கின்றன. உணவு இரத்தமாகி சதை, கொழுப்பு, நரம்பு, எலும்பு முதலியவைகளாக மாறுகின்றது. ஆகையால் இப்பதார்த்தங்கள் மண்ணிலிருந்து கிடைத்த மாகூலின் சத்து. இச்சத்து ஆகாயத்திலிருந்தும் மண்ணிலிருந்தும் செடிகளுக்குக் கிடைத்திருக்கின்றன. ஆகாயத்திலிருந்து கிடைத்த சத்தினால் உண்டான வஸ்துக்கள் மண்ணுக்குத் திரும்பா விட்டால் அவ்வளவு கேடு இல்லை. மண்ணில் கிரகித்த உலோக சம்பந்த வஸ்துக்கள் மண்ணுக்குத் திரும்புவது அவசியம். அவ்வாறு திரும்பாவிட்டால் மண் கண்டிதமாய் இளைக்கும். எலும்பு என்பது மண்ணிற்கிரகித்த உலோகங்களின் சேர்க்கை; ஆகையால் இதை மண்ணுக்குத் திருப்புவது நியாயம். அவ்வாறு திருப்பாமல் அஞ்ஞானத்தால் அதை வெளிப்போகவிட்டால், நமது மண் சாரத்தை வெளியே போக விடுகிறோம். அதனால் மண் எலும்பு உண்டாகும் பதார்த்தங்களில் குறையும். அந்த மண்ணில் உண்டாகும் ஜனங்களும் மிருகங்களும் எலும்பு குறைந்து க்ஷீணமடைவார்கள். நாம் இப்போது க்ஷீணமடைந்திருப்பது முக்கியமாய் இக்காரணத்தினாலேயே என்று யூகிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் இன்னமும் க்ஷீணமாகாதபடி எலும்பு வியாபாரம் அயல் நாட்டுக்குச் செல்லாதபடி நிறுத்துவது தேசத்தைக் காப்பாற்றும் வழி.

சுதேசபரிபாலினி.

---

**ரங்கூன் மண்ட்கோமரி ரோட் பி. கே. இஸிம் ஸராவுத்தர் என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்.**—தங்களால் பிரசுரிக்கப்பட்டுவரும் "**பிழைக்கும் வழி**" பத்திரிகையை முதல் ஸஞ்சிகை முதல் ஏழு ஸஞ்சிகை வரையிலும் பார்வையிட்டேன். அதில் "**பிழைக்கும் வழி**" என்னும் பெயருக்குத்தக்கவாறு சர்வ ஜனங்களுக்கும், பிரயோசனமாகும்படியான விஷயங்களடங்கியிருக்கின்றன. பிழைக்கும் வழியை அறியாமல் வீண்காலம் போக்கிக் கொண்டு திரியும் பலருக்கு இப்பத்திரிகை ஒரு தீர்க்கதரிசியைப்போல் தற்போது பிரஸன்னமானது நம் அதிர்ஷ்டமென்றே சொல்லலாம். இத்தகைய பத்திரிகையைபோல், "பிழைக்கும் வழி" யை போதிக்கும் பத்தரிகைகள் மேன்மேலும் பெருகவேண்டுமென்று சதா எம்பெருமானை தோத்திரம் செய்கின்றேன்.

## EXPERIMENTS IN SINGLE PLANTING OF PADDY.

## நெல் ஒற்றை நாற்று நடுகையின் அனுபவக் குறிப்பு.

கள்ளக்குறிச்சி தாலூகா முடியனூர் குழந்தைவேலுடையாராகிய யான் சென்ற வருஷத்தில் என் பண்ணையில் ஒற்றை நாற்றுப் பயிர் செய்த அனுபவத்தின் குணங்களை சகலருந் தெரிந்து அதன் நன்மைகளை யடையும் பொருட்டு இதனால் தெரிவிக்கிறேன்.

சென்ற வருஷம் ஆவணி மாதம் 15-ந் தேதி 10 படி கெருடன் சம்பா நெல் 10 செண்டிலும், ஒருவாரங் கழித்து 10 படி பெருஞ் சம்பா நெல் 10 செண்டிலும் 2 தடவையாக நாற்று விடப்பட்டது; அந்த நாற்றங்காலுக்கு வழக்கம்போல் தழை எரு போடப்பட்டது. முதலில் நிலத்தைச் சமமாகப் பரம்படித்தேன்; இந்த நாற்றங்கால்கள் விதைப்பு நிலங்களைப் போல் ஜலம் பாய்ச்சப்பட்டு வந்தன. இந்தப் பயிருக்கு யாதொரு களை முதலிய வேலைகள் செய்யப்படவில்லை.

இந்த நாற்று 3 ஏகர் நஞ்செய் நடக்கூடும் என்று உத்தேசித்து, நடவுக்கு நிலம் தயார் செய்து வைத்திருந்தேன்; 25 நாள் கழிந்தவுடன் நாற்றுகளைப் பிடுங்கினேன்; நாற்றுப் பிடுங்குவதற்கு வழக்கமாக நாற்றின் வேர்களில் பத்தையாகப் பிடித்திருக்கும் மண்களை அடித்துக் கழுவுவதற்காகவே நாற்றைப் பிடுங்குபவர்கள் ஒவ்வொருவரும் முளைக்கழி ஒன்று ஊன்றிவைத்து அதில் அடித்து முடிகட்டுகிற வழக்கப்படி, இந்த நாற்றை முளைக்கழியில் அடிக்காமல் ஜலத்தில் வேர்களை அலம்புவதனாலேயே மண்கள் கழிந்து போய்விட்டன. இதனால் அந்த நாற்றுகள் நலுங்காமல் பசுமையோடு நடுவதற்குத் தகுந்த செழிப்பாயிருந்தன.

அந்த நாற்றை ஒரு வயல் அதாவது 33 செண்டில் ஒவ்வொரு நாற்றாக $\frac{3}{4}$ அடிக்குச் சாலை சாலையாக நடும்படிச் செய்து முடிந்தவுடன், அந்தப்பயிர் நட்ட நிலம் நடவு நட்டதைப் போலப் பார்வையில்லாமல் இருந்ததால், என் பண்ணை ஆட்கள் எல்லாரும் இந்தப் பயிர் கூடியே வராதென்று ஆக்ஷேபித்தார்கள்; அவர்களின் கட்டாயத்திற்காக இனி நடும் நாற்றுகள் 2 பயிர் சேர்த்து நடும்படித் திட்டம் செய்தேன்.

இப்படி நட்டதில் மிஞ்சிவிட்ட 10 படி நெல் நாற்று $2\frac{1}{2}$ ஏகர் நட்டுவிட்டது; அதன் மேல் மிஞ்சின நாற்றுகளுக்கு வேறு இடத்தில் 2 ஏகர் தயார் செய்து முன் தயார் செய்திருந்த 3 ஏகரும் சேர்ந்து ஆக 5 ஏகர் நடப்பட்டன. வழக்கமாகக் காணி ஒன்றுக்கு 16 ஆள் நட வேண்டியதற்கு 10 ஆட்கள் சுலபமாய் நட்டார்கள். முந்தி நடப்பட்ட நாற்றுகள் ஒரு வாரத்திற்கெல்லாம் கிளைப்பதற்குத் தொடங்கி 2, 3 வாரத்தில் 10, 15, 20 கிளைகள் கிளைத்துக் கறுத்துப்பார்வைக்கு அழகாய் வளர்ந்து வருவதைப்பார்த்து மற்றக் குடித்தனக்காரர்கள் அந்த ஒற்றை நாற்று நட்ட நிலம் நல்ல வளமுள்ளதென்றும், அந்த நிலத்தின் கொழுமையால் இப்படிச் செழித்து வருகிறதென்றும் சொல்லிக்கொண்டார்கள். அதற்காகப் மிஞ்சி நடவேண்டிய நாற்றைக் கொஞ்சம் களர் உள்ள பள்ளக்கால் நிலத்தில் நடும்படி செய்தேன்; அந்த நிலங்களிலும் யாதொரு குறைவின்றிச் செழிப்புடன் வளர்ந்தது. இந்தப்பயிர் நட்ட நாளாய் நெல் பயிருக்கு வேண்டிய அதிக மழை பெய்யாதிருந்தும் அந்தப் பயிர்கள் பால் கறக்காமல் ஊட்டி வளரும் பசுங்கன்றுகள் செழித்து வளர்வதைப் போல நாளொரு மேனியாக வளர்ந்து வந்தன. இந்தப் பயிரில் மற்ற நெல் பயிர்களில் படும் நோய் முதலியவைகளும்



உண்டாகவில்லை. கதிர்கள் வளமாகக் காணப்பட்டு முதிர்ந்துவந்தன. இந்த நெல்லுகள் வழக்கம்போல் நடப்பட்டால் எவ்வளவு வயதில் அறுவடையாகுமோ அதற்கு 20 நாளைக்கு முந்தி அறுவடைக்கு வந்தன. நெல்லறுவடை கண்டு முதல் ஏகரிலும் பட்டணம் $2\frac{1}{2}$ படி பிடித்த மரக்காலால் 225 கலம் காணப்பட்டது. வைக்கோலும் அதிகமாகவே இருந்தது. இந்த நிலங்களில் என் அனுபவத்திற்கு வந்தமட்டில் இம்மாதிரி நெல் கண்டுமுதல் எந்த வருஷத்திலும் கிடைத்ததில்லை. சராசரி இதுவரை ஒரு ஏகராவுக்கு 27 கலத்துக்குமேல் கிடைத்ததில்லை. இந்தப் பயிர் வளர்ந்து வருங்காலத்தில் செழிப்பின் அழகை பார்த்துத் திருஷ்டிபட்டுப் பயிருக்குக் கெடுதி உண்டாகும் என்று என் பண்ணை ஆட்கள் அந்த நிலங்களில் திருஷ்டி பரிகாரமாக மிரட்சி முதலிய உருவங்களை வைத்தார்கள். முதலில் 33 செண்டு ஒற்றை நாற்றுப் பயிர்களையும் மற்றப் பயிர்கள் 2 பயிர் சேர்த்து நட்டதையும் வளர்ச்சி காலத்தில் பார்த்ததில் ஒற்றை நாற்றின் வளர்ச்சியே செழிப்பாயும் கதிர்கள் வளமாயுமிருந்தன. சாலையாக நடுவதில் களை பிடுங்குவதற்கு ஆட்களுக்குத் தாராளமாய்க் கை கால்களுக்கு இடைஞ்சலில்லாமல் பயிர்கள் மிதிபடாமலும் சௌக்கியமாக இருந்ததோடுகூட, எலி வெட்டாமலிருப்பதற்கும் அனுகூலமாகவிருந்தது.

இந்த அனுபவத்தால் என்னுடைய பண்ணைக்கு வழக்கமாக விதைக்கென்று 50 கலம் காயப்போட்டு வைப்பதை நிறுத்தி நல்ல கதிர்களாகப் பொறுக்கின நெல் 5 கலம் மட்டில் நன்றாய்க் காய்ச்சல் செய்து வைக்கப்பட்டது. இந்த ஒற்றை நாற்று நட விதையை நாற்றங்காலில் தெளித்த காலத்தில் மற்றக் குடிகளையும் பரீக்ஷார்த்தமாகவாவது கொஞ்சம் நாற்றுவிட்டு நடும்படிப் போதித்தும் அவர்கள் கேளாமல் நான் நாற்று விட்டிருக்கும் பக்கத்திலேயே வழக்கம்போல் அடர்ந்த நாற்று விட்டிருந்தார்கள். அந்த நாற்றில் தற்செயலாய்ப் புழுக்கள் தோன்றி அந்த நாற்றுகளைக் கெடுதி செய்து அழித்தன. அதற்குச் சமீபத்திலிருக்கும் என்னுடைய நாற்றுப்பயிர் அடர்த்தியில்லாமல் இடைவெளியாயிருந்ததால் இந்தப் புழுக்கள் தலையிடவே இல்லை. புழுக்கள் தின்ற நாற்றுகள் வளர்ந்து வருகிற வரையில் காத்திருந்து நட்டும் காணி ஒன்றுக்கு 60 படி நெல்விட்ட நாற்றுகள் தங்கள் நிலங்களுக்குப் போதாமல் கஷ்டப்பட்டார்கள். அந்த நாற்றுகள் நடப்பட்டு 2 வாரம் வரையில் பச்சை கொள்ளாமலும் வளர்ச்சி யில்லாமலுமிருக்க ஒற்றை நாற்றுகள் நட்டதின் முதல் நாளுக்குநாள் வளருவதும் கிளைப்பதுமாகவிருக்கும் அழகைப் பார்த்து, அக்குடிகள் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டார்கள். அடர்ந்த நாற்றுவிட்டுப் புழுக்களால் கெட்டுப்போயும் இதைப் பார்த்து மிஞ்சி விட வேண்டிய நாற்றுகள் எல்லாம் என் கிராமத்தில் ஒற்றை நாற்றாகவே விடப்பட்டு அதன் பயனைத்தெரிந்து இந்த வருஷத்தில் எல்லாக் குடிகளும் ஒற்றை நாற்றே விடவேணுமென்று நிச்சயப்படுத்திக் கொண்டார்கள். ஆனதால் இந்த ஒற்றை நாற்றின் அனுபவங்களை நேரில் நான் செய்து அதனாலடைந்த பயனை மற்ற மிராசுதாரர்களு மடையும்படி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவைகளை நன்றாய் ஆலோசிக்குங்கால் எந்த வகையான மரம் செடி வகையறாப் பயிர்களுக்கு ஆரம்பத்தில் நாற்று விடும்போது போதுமான இடத்தில் விட்டு, அந்தப் பயிர்கள் நன்றாய்ச் செழித்துப் பருத்து வரும்படி பாதுகாத்து, அவைகளைப்

பிடுங்கி நடுங்காலத்தில் தடித்த பயிர்களாய்ப் பார்த்து அவைகள் நலுங்காமலும் ஒவ்வொரு பயிராகவும் நடப்படும் வழக்கம் எல்லாருக்கும் தெரிந்திருந்தும், இந்த அருமையான நெல்லுப் பயிரை மாத்திரம் நாற்றுவிட்டு வளரும்போதும் அவைகளை நடும்போதும் பட்டணங்களில் விலைக்கு விற்கும் பால்காரர்கள் பசுங்கன்றுகளுக்குப் பால் விடாமல் கறந்து அக்கன்றுகள் செழிப்பாய் வளர்வதற்கில்லாமல் கெடுத்து விடுவதைப் போல, இந்த நெல் நாற்றுகளை நாற்றங்காலில் நெருக்கி வளரவிட்டு வளர்ச்சியைக் குறைத்து நஷ்டமடைகிறார்கள். ஆனதால் இதில் கண்ட விஷயங்களை மிராசுதாரர்கள் கவனித்து இதில் சந்தேகிக்காமலும் துர்வாதங்களை மனதில் கொள்ளாமலும் இந்த நன்மையும் லாபகரமுமான ஒற்றை நாற்றுவிட்டு நடும் பழக்கத்தை ஒவ்வொருவரும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்படிக் கோருகிறேன்.

குழந்தை வேலுடையார்,
முடியனூர்.

---

## EFFORTS TO IMPROVE VARIETIES OF PADDY BY AGRICULTURAL EXPERTS IN JAPAN.

## நெல் சாகுபடியில் ஜப்பானிய விவஸாய நிபுணர்கள் செய்துவரும் பிரயத்தனங்கள்.

ஜப்பானியர்களுக்கு நெல் பிரதானமான பயிர். ஏறக்குறைய வருஷா வருஷம் 68,12,158 ஏகராவில் நெல் சாகுபடியாகிறது. அதாவது ஜப்பானிலுள்ள சாகுபடியாகும் நிலங்களில் பாதிக்கு மேல் நெல் பயிரிடப்படுகிறது. அரிசியே அவர்களுக்கு முக்கிய உணவு பொருள். இது காரணம்பற்றியே அவர்கள் இப்பயிரில் முக்கிய கவனத்தைச் செலுத்தி அனேக விஷயங்களை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஜப்பானிலும் இன்னும் சீனா முதலிய இடங்களிலும் தற்காலம் பயிர் செய்துகொண்டு வரும் அனேக நெல் தினுசுகளைத் தருவித்து, அவைகளை ஒன்று சேர்த்து, ஒவ்வொரு தினுசின் தாரதம்மியங்களையும் குணாகுணங்களையும் மேன்மைக் குறைவுகளையும், எந்தக்காலத்தில் எத்தன்மையான நிலங்களில் விளைகின்றன என்பதையும், காய்ச்சல் நாள்களில் தண்ணீர்த் தட்டை தாங்கக்கூடிய தினுசுகள் எவையென்றும், நீர்ப்பிடி நிலங்களிலும் ஜாஸ்தி மழை காலத்தில் அழுகிப் போகாமல் மேல்வரக்கூடிய தினுசுகள் எவைகளென்றும், இன்னும் இப்பேர்ப்பட்ட அனேக விஷயங்களைக் கண்டறிவதற்காக அவைகளை ஓரேஇடத்தில்சாகுபடிசெய்துபரிட்சைசெய்து வருகிறார்கள். மேல்கண்டபடி சுமார் 4000 தினுசுகளுக்குக் குறையாமல் சேகரித்து அவைகளை ஓரேமாதிரி சீதோஷ்ண பேதங்களுள்ள ஒரு குறிப்பிட்ட பண்ணையில் 6-வருஷங்களுக்குச் சாகுபடிசெய்து இன்னின்ன நெல் தினுசு இப்பேர்ப்பட்ட குணமுடையதென்பதையும், இன்னகாலத்தில் பயிரிட லாயக்கானதென்றும், இன்னது விசேஷக் கண்டுமுதல் தரக்கூடியதென்றும், நோய் நொடிகளால் பீடிக்கப்படாத தினுசுகள் இன்னவை என்றும், சாப்பாட்டுக்கு விசேஷ அனுகூலமானவைகள் இவையென்றும், அவ்வவற்றின் குணங்களையும், ரூபபேதங்களையும் பரீட்சித்துப் பார்த்திருக்கிறார்கள். இம்மாதிரி 6-வருஷக் காலம் பரீட்சை செய்து பார்த்ததில் முன் குறிப்பிட்ட 4000 தினுசுகளும் ஜாதிபேதங்களாலும் ரூப பேதங்களாலும் குணபேதங்களாலும் 660 பிரதான தினுசுகளாகப் பிரிக்கக் கூடியவையென்றும், மற்றவைகளெல்லாம் ஏறக்குறைய இந்த 660 தினுசுகளில் அடங்கக் கூடியவைகளாகவே இருப்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



இம்மாதிரி தினுசுகளைப் பிரித்தபின் ஒவ்வொரு தினுசு நெல்லையும் வெவ்வேறாய்ச் சிறு வயல்களில் சாகுபடி செய்து, அப்படிச் சாகுபடி செய்யப்பட்ட பயிர் தினுசு ஒவ்வொன்றிலும் நன்றாய் மூடு கட்டிக் கிளைத்து, நோய் நொடிகளால் பீடிக்கப்படாதவைகளாயும் நெருங்க மண் பிடித்து நீண்ட குலைத்தாக்குள்ளதாயும் ஒரு மூட்டிலுள்ள எல்லாக் குலைகளும் ஓரே காலத்தில் முற்றித் தலை பழுத்திருப்பதாயும், குலைகள் பழுத்த காலத்தில் கீழே சாய்ந்து மண்ணில் உதிர்ந்து கெட்டுப் போகாமல் தலை தூக்கி நின்றுகொண்டிருப்பதாயுமுள்ள அனேக மூடுகளை மாசூல் அறுவடை செய்யுமுன் அடையாளம் வைத்து, அப்படி அடையாளம் வைத்திருக்கும் அனேக மூடுகளில் நன்றாயிருக்கும் ஒரு மூட்டைத் தனியாய்க்கொய்து மணியுதிர்த்துப்பொறுக்கியெடுத்து எண்ணிப்பார்த்தும், அப்பால் அந்த நெல் மணிகளை நிறுத்துப் பார்த்தும் கணக்கிட்டுக்கொண்டு அந்த விதைகளைப் பத்திரப்படுத்தி வைக்கிறார்கள். ஒவ்வொரு தினுசிலும் இம்மாதிரியே பொறுக்கிவைத்து வெவ்வேறு புட்டிகளிலோ, ஜாடிகளிலோ இவ்விதைகளைப் பத்திரப்படுத்தி வைக்கிறார்கள்.

இப்படி ஒரு மூட்டிலிருந்து பொறுக்கி வைத்த விதைகளில் பாதியைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு மற்றப்பாதியை மறு வருஷத்தில் நன்றாய்ப் பண்படுத்தப்பட்ட இடத்தில் நாற்றுப் பாவி தக்க பருவத்தில் ஒவ்வொரு முதலாய் நட்டுப் பயிராக்கி அந்தப் பயிரில் சிலாக்கியமாய் மூடுகட்டி, மணி நெருங்கப் பிடித்து நோய் நொடிகளால் பீடிக்கப்படாதவும் ஓரேகாலத்தில் பழுக்கக் கூடியதுமான அனேக மூடுகளை ஒரு தினுசு நெல்லில் அடையாளம் வைத்து அப்படி அடையாளம் வைத்தவைகளில் சிலாக்கியமாயுள்ள ஒரு மூட்டிலுள்ள நெல்லைச் சேகரித்து முன் விதைக்கும் தருணத்தில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் நெல்லைப்போல் ரூபத்திலும் குணத்திலும் ஒத்திருக்கிறதாவென்று பக்கத்தில் வைத்து ஒப்பிட்டுப் பார்த்து அப்பால் அந்த ஒரு மூட்டை வேறே அறுவடை செய்து பத்திரப்படுத்தி முன் அதிலிருந்து, நெல்லின் எண்ணிக்கையையும் அதன் நிறையையும் கணக்கிட்டு அதில் பதர் எவ்வளவிருந்ததென்றும் குறித்துக் கொள்ளுகிறார்கள். இப்படிப் பொறுக்கி வைத்த ஒரு முதலிலிருந்து எடுத்த நெல்லை மறு வருஷம் ஒரு சிறு வயலில் நட்டு, அந்த வயலில் நட்ட பயிர் முழுவதும் ஓரே மாதிரி மூடுகட்டி, ஓரேமாதிரி தலைபழுத்து, ஓரேமாதிரி குணங்களைப் பெறும்வரை இம்மாதிரியே விருத்தி செய்கிறார்கள். இப்படி விருத்தி செய்வதினால் மூடுகட்டிக் கிளைக்கும் குணம் விர்த்தியாகி சிறு மணி யுடையதாயும், உமி லேசாயும், அரிசி கனத்தும் இருக்கக் கூடியதாயுமுள்ள குணமும் விர்த்தியாகிறது. மாசூலும் அதிகமாயிருக்கிறது.

சில தினுசுகள் 6-மாதத்தில் விளையக் கூடியனவும், சில இளவித்துக்களாயுமிருக்கின்றன. கொஞ்சத் தினுசுகள் தண்ணீர் தட்டுக்குத் தாங்குகின்றன. ஆனால் அவைகளின் அரிசி அவ்வளவு மெல்லியதாயிராமல் கொஞ்சம் பருமனுள்ளதாயிருக்கிறது. இப்படியே சில தினுசுகள் நோய் நொடிகள் தாங்குகின்றன. ஆனால் அவைகளிலிருந்து மாசூல் அவ்வளவு ஜாஸ்தி கிடைப்பதில்லை. நெல் தினுசுகள் இப்படிப் பற்பல குணபேதங்களுடையவைகளாயிருப்பதால், ஒரு தினுசு நெற்கதிர்களிலுள்ள மகரந்தத்தை மற்றொரு தினுசு நெற்கதிர்களிலுள்ள பெண்மலர்களுடன் கலக்கச்செய்து அப்படிக் கலப்பதி

னால் அவ்விரண்டு தினுசுகளின் குணங்களையும் ஒன்றில் அமையும்படிசெய்து வருகிறார்கள். இவ்வித பரிட்சைகள் செய்து அநேக விசேஷமான நூதன தினுசுகளையும் உண்டாக்கியிருக்கிறார்கள்.

இதுதவிர நெல்விதையின் அளவைக் குறைத்துப் பயிர் செய்வதிலும், நெல் நாற்றை எந்தெந்த நிலங்களில் எவ்வளவு தூரத்தில் நட்டால் அதிக மாசூல் தருமென்றும், நெல் பயிருக்கு வரும் அநேக விதமான நோய் நொடிகள் எப்பேர்ப்பட்டவைகளென்றும் அவைகளை எப்படித் தடுக்கலாமென்றும் அநேக பரிட்சைகள் செய்திருக்கிறதுடன் அவைகளைத் தேச பாஷையில் சுலபமாய் அர்த்தமாகும்படி அச்சிட்டு, விவஸாய சங்கங்கள் மூலியமாய் ஜனங்களுக்குக் கொடுத்து அறிவைப் பரவச் செய்திருக்கிறார்கள்.

முன் குறித்தபடி விருத்தி செய்யப்பட்ட நூதனத் தினுசு விதைகளை அங்கங்கே பரவச் செய்வதில் அதிக சிரத்தை எடுத்திருக்கிறார்கள். ஏனென்றால் ஒரு தினுசு ஒரு ஜில்லாவின் ஒரு பாகத்தில் நன்றாய் விளைகிறது. மற்றொரு பாகத்தில் அதே காலத்தில் பயிர் செய்தாலும் கெட்டுப்போயிருக்கிறது. ஆகையால் அவர்கள் தெரிந்தெடுத்த விசேஷ குணத்தைக் கொடுக்கக்கூடிய தினுசுகளைக்கேட்டவர்களுக்கு அனுப்புமுன் அந்தந்த இடத்திலிருக்கும் கிராம விவஸாய சங்கப் பண்ணைகளில் அவ்விதை சாகுபடி செய்யும்படியாவது அப்படிப் பண்ணையில்லாத விடங்களில் ஒரு பொறுப்பான மிராசுதாரரைப் பயிரிடச் செய்து அதை யடிக்கடிபோய்ப் பார்த்துவந்து அப்படிப் பயிர் செய்வதில் இரண்டு வருஷங்களுக்கு நன்றாய் பலன் கிடைத்தால் மாத்திரம் அத்தினுசை அந்தப் பிராந்தியத்தில் பரவச் செய்கிறார்கள்.

ஆகவே அந்தந்தப் பிராந்தியங்களில் சீதோஷ்ண பேதங்களுக்கும் மழையளவுக்கும் நிலவளத்துக்கும் தகுந்தபடி விதைகளின் தினுசுகளைத் தெரிந்தெடுத்து அனுப்புகிறார்கள். இப்படிப் பரவச்செய்த தினுசுகள் சரியானபடி பாதுகாக்கப்பட்டு வருகின்றனவா அல்லவா என்பதைச் சர்க்கார் உத்தியோகஸ்தர் அப்போதைக்கப்போது அவ்வவ்விடங்களுக்குச் சென்று பார்த்து வருகிறார்கள்.

இவ்விதமாக நமது ராஜதானியில் நெல் தினுசுகளை அபிவிர்த்தி செய்ய ஏதாவது முயற்சி செய்யப்படுகிறதா? நமது தேசத்திலுள்ள நூற்றுக்கணக்கான தினுசுகளைச் சேகரித்து அவற்றை யெல்லாம் ஒரே இடத்தில் பயிரிட்டுப் பரீக்ஷிக்க யாராவது பிரயத்தனப்படுகிறார்களா? நமது ராஜதானியிலுள்ள விவஸாய சங்கங்களும் சென்னையிலுள்ள வியவசாய மஹா சபையும் இந்தக் காரியத்தை முக்கியமானதென்று கவனியாமலிருக்கின்றார்கள். ஜப்பான் தேசத்தைப் பார்க்கிலும் நமது தேசத்தில் நெல் மிகவும் முக்கியமான ஆகார தானியமாயிருக்கிறது. அதினால் நமது தேசத்துக்கு நெல் பயிர் அபிவிர்த்தி மிகவும் முக்கியமானது. ஆகையால் நமது ராஜாங்கத்தார் இவ்விராஜதானியின் பற்பல ஜில்லாக்களிலுமுள்ள நூற்றுக்கணக்காள நெல் தினுசுகளை அந்தந்த ஜில்லாக்களின் ரிவினியூ உத்தியோகஸ்தரின் மூலமாய்ச் சேகரித்துப் பல தினுசு நெல்பயிர் சாகுபடிக்கு லாயக்கான ஓர் இடத்தைத் தெரிந்தெடுத்து அவ்விடத்தில் நாம் மேலே விவரித்திருக்கும் விதமான பல பரிட்சைகளை நடத்த வேண்டியதற்கான ஏற்பாடுகள் கூடிய சீக்கிரத்தில் செய்ய வேண்டுமென்று அவர்களைப் பிரார்த்திக்கிறோம்.—கிருஷிகன்.

---



OFFICE OF ... REGISTERED 30 MAR 1911 ... MADRAS.

## REVIEW OF THE PRESS.
## பத்திரிகை ஆராய்ச்சி.

### INDIAN TRADE WITH JAPAN.
### ஜப்பானோடு இந்தியா வியாபாரம்.

ஸாது ராமஸுப்பையர் என்பவர் ஜப்பானுக்குப் போய் அங்கே அநேக விஷயங்களை ஆராய்ந்து ஸ்வதேசமித்திரன் பத்திரிகைக்கு அநேக அருமையான வியாஸங்கள் எழுதிவருகிறார். அவைகளில் ஒன்று ஜப்பானோடு இந்தியர்கள் செய்யக்கூடிய வியாபாரத்தைப் பற்றி இருக்கிறது.

ஜப்பானுக்கு இந்தியாவிலிருந்து ஸாமான்களை ஏற்றுமதி செய்து லாபம் ஸம்பாதித்து விடலாமென்று எண்ணவே கூடாது. ஏனென்றால் ஜப்பானில் இறக்குமதித் தீர்வைகள் பலமாக விதிக்கப்படுவதால் அவைகளைக் கொடுத்து லாபம் அடைவது ஸாத்தியமில்லை. ஆகையால் ஜப்பானிலிருந்து ஸாமான்களைத் தருவித்து இங்கே விற்பதே லாபம் ஸம்பாதிக்கும் வழியாகும்.

ஜப்பானில் யோகோஹாமாவிலாவது கோபிப் பட்டணத்திலாவது இருந்து கொண்டு சரக்குகளை வாங்கி ஏற்றுமதி செய்தால் அபரிமிதமான லாபமுண்டு. ஜப்பான் சரக்குகளெல்லாம் நிரம்ப சகாயம். நல்லசரக்குகள். இப்பொழுது கலப்புவேலைகள் கூட ஜப்பானியர்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சென்னைவாசியாகிய ஜெ. அப்துல்காதர் என்பவர் சென்ற இருபது வருஷகாலமாய் ஜப்பானில் தோலிறக்குமதி வேலை செய்து கொண்டிருக்கிறார். இவர் எல்லாராலும் நன்கு மதிக்கப் பெற்றவர். வேறே சென்னை வியாபாரியாவது ஏஜெண்டுகளாவது கிடையாது. பம்பாய் மாகாண வாசிகள் யோகோஹாமாவில் 40 கடைகளும் கோபியில் 30 கடைகளும் வைத்திருக்கிறார்கள். எல்லாம் ஏற்றுமதி வேலைதான். ஜப்பான் பட்டுத் தினுசுகளும், ஜப்பான் ஆச்சரியக் கைத்தொழில் சாமான்களும் ஏற்றுமதி செய்கிறார்கள்.

ஜப்பானியர்களிடத்தில் வியாபார நாணயம் கொஞ்சம் குறைச்சல். இருபது வருஷத்துக்கு முன்னால் ஜப்பான் வியாபாரிகளுக்கு (வியாபார விஷயத்தில்) நாணயப் புறட்டே தெரியாதாம். அமெரிக்கா; கானடா நாட்டுக்காரர், ஐரோப்பியர்களில் சில நாணயமில்லாத வியாபாரிகள், ஜப்பானியர்களை இந்தப்படி ஆக்கி விட்டதாகவும், டோகியோ பட்டணத்தில், நிரம்ப நாணயமுள்ள பெரிய வியாபாரிகளிருக்கிறதாகவும், யோகோஹாமா,கோபி இவைகளிலிருக்கும்,இந்திய ஏஜெண்டுகள், டோகியோவிலிருக்கும், பெரிய நாணயமான வியாபாரிகளிடம் சரக்குகள் வாங்கிப் பத்து வரவு செய்யாமல், சில்லரை வியாபாரிகளிடம் பத்து வரவு செய்து இந்தப்படி சொல்லுகிறார்களென்றும் தெரியவருகிறது. ஆகையினால் இந்தியர்கள் நேருக்கு நேராய் ஜப்பான் சாமன்களைத் தருவிக்கும் பெரிய ஷாப்புகள் விலாசமும், நாணயமுள்ள ஏஜெண்டுகளின் விலாசமும் தெரிந்து கொள்ள வேணும். ஜப்பான் வியாபாரிகளின் விலாஸமும் அவர்கள் செய்யும் வியாபாரமும் தெரிய வேண்டியவர்கள், "ஸெக்ரடெரி, டிபார்ட்மெண்ட் ஆப் அக்ரிகல்சர் அண்ட் காமர்ஸ், டிரெக்டர், இம்பீரியல் ம்யூஸியம், டொக்கியோ, ஜப்பான்", என்று சொல்லப்படும் விவஸாய வர்த்தக சங்க ஸெக்ரடெரிக்கு எழுதினால் அவர் வியாபாரிகளின் விலாஸம் முதலிய விவரங்களடங்கிய டைரெக்டரி புஸ்தகம் ஒன்று அனுப்புவார். வியாபார விஷயமாய் டொக்கியோ பட்டணத்திலுள்ள இண்டோ ஜப்பானீஸ் அஸ்ஸோஸியேஷன் காரியதரிசிக்கு எழுதினாலும் அவர் வேண்டிய ஒத்தாசை செய்வார்.

இந்திய வியாபாரிகளும் நாணயமாயிருக்கவேண்டும். அதைத்தவறினால், இந்தியர்களின் வியாபார நாணயம் குறைவாகுமல்லவா? இதை யோசித்து இந்திய வியாபாரிகள் ரொக்கத்தைப் பாங்கிகளின் மூலமாய்க் கட்டி ஏஜெண்டுகளுக்கு எழுதி, சாக்கு மூட்டைகளின் கப்பல் ரசீதுகளை பாங்கியில் கட்டிப் பணம் பெற்றுக் கொள்ளச்செய்து சரக்குகளை இறக்குமதி செய்தால் நிரம்ப நாணயமாயிருக்கும்.

இந்தியாவிலிருக்கும் பெரிய பிரபு வர்த்தகர்கள் நேராய் ஜப்பானுக்குப் போய் ஜப்பானில் வியாபாரிகளை நேரில் பார்த்து, வியாபாரங்களைச் செய்யத் தொடங்கினாலொழிய, பெரிய பிரபு வர்த்தகர்களிடத்தில் வியாபாரஞ்செய்ய முடியாது. சில பெரிய பம்பாய் வியாபாரிகள் ஜப்பானுக்கு வந்து பெரிய பட்டு வியாபாரிகளையும், மற்ற வியாபாரி

களையும் பார்த்து, இங்கிலீஷ், இந்தியா பாஷைகள் தெரியாத ஜப்பானியர்களுடன் வருஷத்தில் லக்ஷக்கணக்கான பட்டு வகையராக்கள் பம்பாயில் வந்திறங்கி, பின்பு இந்தியாவில் பல இடங்களுக்கும் அதிக லாபம் வைத்து விற்கிறார்கள். ஆனால் இந்தியர்களோ ஜப்பானுக்குப் போக ஸாத்தியமில்லை. ஆகையினால் யோகோஹாமா கோபியிலிருக்கும் இந்திய வியாபாரி ஏஜெண்டுகள் மூலமாயே சரக்குகளைத் தருவித்துக் கொள்ளலாம். பெரிய பட்டணங்களிலாவது சென்னையிலாவது ஜப்பான் சாமான்கள் விற்பனை செய்யும் கடையொன்றிருந்தால் நல்ல லாபத்தைக் கொடுக்கும்.

---

## TEA.

## தேயிலை.

போன மாஸத்துச் சக்ரவர்த்தினியில் மேல்கண்ட விஷயத்தைப்பற்றி ஒரு வியாஸம் காணப்படுகிறது. தேயிலையானது முதன்முதலில் சீன தேசத்திலிருந்து தான் வந்தது. அவ்விடத்திலிருந்து உலகத்தின் பல பாகங்களுக்குக் கொண்டு போகப்பட்டது. இப்பொழுது இந்தியாவிலும் ஜப்பான் முதலிய நாடுகளிலும் ஏராளமாகப் பயிராக்கப்படுகிறது. அப்படி இருந்தாலும் சீன தேசமே இதை அதிகமாகப் பயிரிட்டு வெளித் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறது.

தேயிலை மலைப் பாகங்களில் ஓங்கிவளரும். அத்துடன் அதற்கு ஏராளமான மழையும், பெய்த மழை நிலத்தை விட்டுச் சுவரிப்போய்விடக் கூடியதாயுமிருக்கவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால், தேயிலை பயிராகாது. ஆதலால்தான் தேயிலை மலைகளில் வளர்கின்றது. தேயிலைச் செடியானது ஸுமார் 30 அல்லது 40 அடி உயரம் வளரும். ஆனால் தோட்டக்காரர்கள் அதை வளரவொட்டாமல் செடியானது சிறியதாக விருக்கும் பொழுதே நுனிகளைக் கிள்ளிவிடுவார்கள். ஆதலால் அது 4 அல்லது 5 அடி உயரத்திற்குமேல் வளருவதில்லை. இந்த விதமாக நுனிகளைக் கத்தரிப்பது சீனதேசத்திலும், மற்றுமுள்ள பிரதேசங்களிலும் கையாடி வரப்படுகிறது. சீன தேசத்தில் சீனர்கள் தங்கள் தோட்டங்களிலேயே தேயிலை பயிரிடுகிறார்கள். இலைகளைத் தாங்களே பறிப்பார்கள். அறுவடைக் காலங்களில் மலைச்சாரல்களில் சீனர்கள் தங்கள் குடும்பத்தாருடன் போய் இலைகளைக் கிள்ளுவதும், கொழுந்து பறிப்பதும் பார்ப்பதற்கு வெகு ரமணீயமாகத் தோன்றும். சிறிய குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையிலும் ஆணும் பெண்ணும் ஒவ்வொரு இலையாகக் கிள்ளினாலும் நிரம்பவும் சுறுசுறுப்பாக வேலை செய்வார்கள். இந்த விதமாக ஒவ்வொரு நாளும் சேகரித்து வைக்கும் தேயிலைக்கொழுந்து, இலை முதலியவைகளை, தேயிலை பதனிடும் இடத்திற்கு கொண்டு போவார்கள். அவ்விடங்களில் தேயிலை பதனிடப்பட்டு முதல் தரம் இரண்டாந்தரம் என்று பொறுக்கப் பட்டபின் டப்பிகளில் அடைக்கப்படுவது வழக்கம்.

தேயிலையை வருஷத்துக்கு 4 முறை கிள்ளுவார்கள். முதல் தடவை ஏப்பிரல் மாஸத்தில் கிள்ளுவார்கள். அப்பொழுது தளிர்களையும், மொட்டுகளையும் பறிப்பார்கள். இரண்டாவது தடவை மே மாஸத்திலும், மூன்றாவது ஜூன் மாஸத்திலும், நான்காவது ஆகஸ்டு மாஸக் கடைசியிலும் கிள்ளுவார்கள். முதல் தடவை பறிக்கும் இலைகள்தான் விலையிலும், மணத்திலும், குணத்திலும், உயர்ந்ததாயிருக்கும். பின் ஒவ்வொரு தடவையிலும் தேயிலையின் மணம் குறைந்து கொண்டே வரும்.

தேயிலையில் அநேக விதம் உண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயரிடப்பட்டிருக்கிறது. ஆனால் எல்லாவிதமான தேயிலைகளையும் பச்சை நிறமான தேயிலை, கறுப்பு நிறமான தேயிலை என்று இரண்டு விதங்களாகப் பிரிக்கலாம். இரண்டு விதமான தேயிலைகளும் ஒருவிதச்செடிகளின் இலைகளினின்றே எடுக்கப் படுகின்றன. ஆனால் இவைகளுக்கு வித்தியாஸம் யாதெனில், அவைகளைப் பதம் செய்வதினால் ஏற்படும் வித்தியாஸமே தவிர வேறில்லை. இலைகளைச் சீக்கிரத்தில் உலர்த்தினால் பச்சை நிறமான தேயிலை அகப்படும். அப்படிக்கில்லாமல் தேயிலையைத் தாமதமாய் உலர்விட்டால் கறுப்பு நிறமான தேயிலை உண்டாகும்.

---



## LEO TOLSTOY.

## லியோ டால்ஸ்டாய்.

ஜனவரி மாஸத்து விவேக போதினியில் ருஷியா தேசத்து ப்ரபுவாகிய லியோ டால்ஸ்டாயின் ஜீவிய சரித்திரத்தைப் பற்றி நாகை. வி. கோபாலகிருஷ்ணன் ஒரு சிறந்த வியாஸம் எழுதியிருக்கிறார்.

லியோ டால் ஸ்டாய் ப்ரபு ருஷியா தேசத்தில் மாஸ்கோ நகரத்துக்கு 130-மைல் தெற்கேயுள்ள ஒரு சிறு கிராமத்தில் 1828-ம் வருஷம் ஆகஸ்டு மாஸம் 28-ம் தேதி பிறந்தார். ஜன நெருக்கமான பெரிய பட்டினங்களில் இயற்கைக்கு மாறாக வசித்துப் பிணியையும் தேக அஸௌக்கியத்தையும் தேடிக் கொள்ளுவதை விட ஜன அடர்த்தியில்லாத கிராமங்களில் இயற்கைக்கு ஒட்டி ஜீவிப்பது பல மடங்கு மேலானதென நினைத்து, இவர் கிராமங்களில் வசித்து வந்தார்.

இவர் 1854-ம் வருஷத்தில் க்ரிமியன் சண்டை நடந்தபோது ராணுவத்தில் சேர்ந்து அப்பொழுதும் பிற்பாடும் யுத்த சம்பந்தமாயுள்ள அநேக ரஹஸ்யமான விஷயங்களையும் அறிந்து கொண்டார்.

அரசர்களும், மந்திரிகளும், பிரபுக்களும், ஸுகமாக ஊரிலிருந்துகொண்டு, கூலிக்காரர்களையும் குடியானவர்களையும் யுத்தத்துக்கு அனுப்புவதையும், அந்த ஏழை ஜனங்கள் ஒருவரோடொருவர் அடித்துக் கொண்டும் வெட்டிக் கொண்டும் உயிர் துறப்பதையும், யுத்த களத்தில் ரத்தம் ஆறாய்ப் பெருகி ஓடுவதையும், கடைசியில் ஸுகப்படுகிறவர்கள் பிரபுக்களும் கனவான்களுமே தவிர ஏழை எளியவர்கள் அல்ல வென்பதையும், ஏழைகள் எப்போதும் போல் வரிப் பளுவினாலும் ஆஹாரக் குறைவினாலும் துன்பப் படுவதையும் டால்ஸ்டாய் அறிந்து உடனே தம்முடைய ராணுவத் தொழிலை விட்டு நீங்கி எக்காரணம் பற்றியும் யுத்தமே கூடாது என்று கருதினார்.

1862-ம் வருஷத்தில் கலியாணம் செய்து கொண்டு மொத்தத்தில் 16 குழந்தைகள் பிறந்தன. டால்ஸ்டாய் கல்வியில் சிறந்தவர். ஜனஸமூகத்தைத் திருத்த வேண்டுமென்றும் ஏழைகளுடைய அறிவை விருத்தி செய்யவேண்டுமென்றும் பல புஸ்தகங்களை எழுதினார்.

தாம் எழுதுகிற புஸ்தகங்களைப் பிரசுரகர்த்தர்களுக்கு இனாமாகக் கொடுப்பதும், அவர்கள் பணம் கொடுத்தால் இவர் வாங்க மறுப்பதும், தம்முடைய செல்வங்களை ஏழை எளியவர்களுக்கு அளவின்றி விநியோகிப்பதும், இன்னும் இவைபோன்ற பல செய்கைகளும் டால்ஸ்டாய் பெருமாட்டிக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை. அதனால் அவர் தமது கணவனை அடிக்கடி நொந்து கொள்ளுவதுண்டு. ஆனாலும் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த காதல் மட்டும் குறைந்ததில்லை.

டால்ஸடாய் நம்முடைய ஜீவியத்தின் கருத்தென்ன என்று பலவிதமாய் ஆராய்ந்து பார்த்தார். "பொருள் தேடுவதுதானா வாழ்க்கையின் நோக்கம்?" என்று முதலில் ஆலோசனை செய்ய ஆரம்பித்தார். ஏற்கனவே இவர் பெரிய தனவந்தராயிருந்தார். இவர் எழுதுகிற புஸ்தகங்களுக்குப் பெருந்திரளான பணம் வலியவந்து குவிந்து கொண்டே இருந்தது. ஸமாரா கவர்ன்மெண்டார் இவருக்கு 20,000 ஏக்கர் நிலங்களை இனாமாகக் கொடுத்தார்கள். அப்படியிருந்தும் இவருக்குத் திருப்தியாவது ஸமாதானமாவது உண்டாகவில்லை. "இப்போது எனக்கு இருக்கும் செல்வத்தைப் போல் நூறுமடங்கு செல்வம் அதிகமாகக் கிடைத்த போதிலும் அந்தச் செல்வம் என்னைத் திருப்தி படுத்துமா? அப்படியே நான் அச்செல்வத்தால் திருப்தி யடைந்து விட்டபோதிலும் எனக்கு மரணம் நேரிடாதா? அப்போது இச்செல்வங்களை விட்டு நான் பிரிய வேண்டியவன் தானே! செல்வம் எவ்வளவுக்கு எவ்வளவு என்னைத் திருப்தி படுத்துகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு மரணம் எனக்குப் பயங்கரமாகவன்றோ தோன்றும்? எப்படி யிருந்தபோதிலும் ஒருநாள் நான் இறக்க வேண்டியவன் தானே?" என்று டால்ஸ்டாய் தன்னைத் தானே கேட்டுக் கொண்டு கடைசியில் ஸரியான பதில் கிடைக்காமல் பொருள் தேடுவது மனிதனுடைய வாழ்க்கையின் நோக்கமல்ல வென்று தெளிந்தார்.

"மனைவி மக்களோடு ஸுகமாய் வாழ்வதுதானா வாழ்க்கையின் நோக்கம்?" என்று இரண்டாவதாகச் சிந்திக்கலானார். அநேகர் தங்கள் புத்திரர்களுடைய முகத்தைப் பார்த்துச் சந்தோஷ மடைவதையும், சிறிது காலத்திற்குப் பிறகு புத்திரன் இறந்து

போனால் பெற்றோர் துக்கப்படுவதையும், பெற்றோர் இறந்தால் புத்திரன் துக்கப்படுவதையும், மனைவியினால் புருஷன் படுங்கஷ்டத்தையும், புருஷனால் மனைவி படுந்துன்பத்தையும், இன்னும் குடும்பங்களில் உண்டாகும் வியாதி, கஷ்டம் முதலியவைகளையும் கண்டபின்பு இந்த இடத்திலும் மரணம் வந்து நுழைகிறபடியால் குடும்ப ஸுகந்தான் வாழ்க்கையின் நோக்கம் என்று சொல்லுவதற்கு இடமில்லை என்று முடிவு செய்தார்.

“புகழுங் கீர்த்தியும் அடைவது வாழ்க்கையின் நோக்கமா யிருக்குமா?” என்று மூன்றாவதாக ஆலோசனை செய்தார். “**மண்ணுடம்பு அழிந்த போதிலும் புகழுடம்பு அழியாது**” என்பது வாஸ்தவமே யாயினும் டால்ஸ்டாய்க்கு அது சரியான ஸமாதானமாகப் படவில்லை. “நான் சிறந்த கல்விமானென்றும், நன்றாய் எழுதக் கூடியவனென்றும் பெயர் பெற்றிருப்பது வாஸ்தவமென்றே வைத்துக் கொள்ளுகிறேன். இந்தப் புகழை மரணம் அழிக்காது. ஆனாலும் நாளடைவில் புகழும் இருந்த இடந் தெரியாமல் மறைந்து போகக்கூடியதுதானே, பாஷைகள் மாறும்போது புகழ் மறையக் கேட்பானேன்? புகழ் சாஸ்வதமானது என்று வைத்துக் கொண்டாலும் அப்புகழை அனுபவித்து ஆனந்திக்க வேண்டியவன் நீங்கிப் போனபிறகு அப்புகழ் இருந்தென்ன? அழிந்தென்ன? எல்லாம் ஒன்றே!” என்று தானே யோசனை செய்து பார்த்துப் புகழ் பெறுவதும் மனித வாழ்க்கையின் நோக்கமல்லவென்று முடிவு செய்தார்.

கடைசியில் கிராமங்களிலுள்ள குடியானவர்களும் ஏழைகளும் ஸந்தோஷமாய் இருக்கக் காரணமென்ன என்று ஆலோசித்து ஒரு குடியானவனை இதைப்பற்றிக் கேட்டார். அவன் “ஐயா! நாங்கள் ஸுகம் துக்கம் எல்லாவற்றையும் கடவுளிடம் விடுத்து ஒரு பற்றுமின்றி இருக்கிறோம்” என்று பதில் சொன்னான். வாழ்க்கையின் நோக்கம் “தன்னையறிந்து பின் தன் தலைவனை யறிதல்” என்னும் உண்மை இதனால் டால்ஸ்டாய்க்குப் புலப்பட்டது.

இவர் இப்படிக்கெல்லாம் தத்துவ ஆராய்ச்சி செய்து முடிவாகச் செய்திருக்கும் நற்போதனைகளாவன:—

(1) கோபங்கொள்ளாதே. (2) காமுகனாயிராதே. (3) ஸத்யம் செய்யாதே. (4) கெடுதல் செய்கிறவனுக்கு நீயும் பதிலுக்குக் கெடுதல் செய்யாதே. (5) நியாயக்காரர், அநியாயக்காரர் இருவருக்கும் நீ நன்மையையே செய். இந்த ஐந்து விஷயங்களையே இவர் உலகத்தாருக்குப் போதித்து வந்தார். கடவுள் **அன்பே** திருவுருவமாகக் கொண்டவராதலால் அவரை அறிவதற்கும் அவரை அடைவதற்கும் மனித சமூஹத்திடம் ஒவ்வொருவரும் அன்பாய் நடக்க வேண்டுமென்பதும், எக்காரணத்தை முன்னிட்டும் பகைமை கூடாதென்பதும், மனிதர்களை அடிமை கொள்ளுவது கூடாதென்பதும், அடிமைத்தனத்திலிருந்து துன்பப்படுகிறவர்களை அத்துன்பத்திலிருந்து நீக்கவேண்டுமென்பதும் ஸ்வயாபிமானத்தைவிடத் தேசாபிமானமும் தேசாபிமானத்தைவிட உலகத்திலுள்ள எல்லா ஜனங்களிடமும் அன்பொழுகும் லோகாபிமானமும் சிறந்ததென்பதும், ஈஸ்வரனிடத்தில் உண்மை பக்தி செலுத்த வேண்டியது அவசியமென்பதுமே இவருடைய கடைசிப் போதனைகளாகும்.

டால்ஸ்டாய் போனவருஷத்தில் அவருடைய 82-ம் வயதில் இறந்தார்.

உயிர் போகும் தருணத்தில்கூட இவருடைய மனதில் தேசாபிமானமும், ஜனாபிமானமுமே முன்னின்றன என்பதற்கு இவரைச் சுற்றி நின்று வருத்தப்பட்ட மனைவி மக்களையும், உற்றார் உறவினரையும் பார்த்து “உலகத்தில் கோடிக் கணக்கான ஜனங்கள் துன்பத்தினால் வருந்தும்போது நீங்களெல்லோரும் என்னைச் சூழ்ந்துகொண்டு ஏன் நிற்கிறீர்கள்?” என்று இவர் கேட்டதே போதுமான அத்தாட்சியாகும். கடைசியாக உயிர் பிரியும் தருணத்தில் இவ்வகையாகிய மொழிகள் மஹான்களது மனத்திலன்றி வேறு எவர்களிடமிருந்து தோன்றும்? அவரே சிறந்த மஹான்!

P S

---



## THE BOYS' SECTION.

## சிறுவர் பகுதி.

---

### Eggs of Flies.

**ஈ முட்டை.**—ஒரேகாலத்தில் ஒரு ஈ இடுகிற முட்டையின் தொகை 2,080,320. இதென்ன ஆச்சரியம் பாருங்கள்.

### Many a Drop Makes an Ocean.

**பலதுளி பெருவெள்ளம்.**—பலநிமிஷம் ஒரு வருஷம்; பல செங்கல் ஒரு அரண்மனை; பலஉளி முனையின் செயல் ஒரு கல்மண்டபம். ஆலின்பழத்தின் நுண்ணிய சிறுவிதை பெரிய விரிவான ஆலாவிருக்ஷமாக உண்டாதலைப்பார்.

### The Care of Clocks.

**கடிகாரங்களைப் பாதுகாத்தல்.**—கடிகாரங்களை ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டிருந்தால் சற்றேறக்குறைய 20-அல்லது 25-வருஷம் வரையில் ஸரியாக மணி காட்டிவரும். கடிகார விஷயத்தில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய ஒழுங்குகள் சிலவுள: அவையாவன (1) கடிகாரத்திற்கு ஒழுங்காகத் தவறாமல் சாவி கொடுப்பது; (2) சாவிகொடுக்கும்பொழுது முடிவில் பலமாகச் சாவியைத் திருகாதிருப்பது. வலிவுடன் திருகினால் பெரிய எஃகுச் சுருள் முறிந்துபோம்; (3) கடிகாரத்தைக் கீழேயாவது, ஜலத்திலாவது போடாதிருத்தல்; (4) தூசி படியும்படியான இடத்தில் வைக்காதிருப்பது; (5) முள்ளுகளைப் பின்னே திருப்பாதிருப்பது ஆகிய இவைகளே.

### Ages of some Animals.

**சிலமிருகங்களின் வயது.**—காடி நாற்பது வருஷம் வரையும், ஆடு பதினைந்து வருஷம் வரையும் ஜீவனோடிருக்கின்றனவாம். கால்நடைகள் பொதுவாக முப்பது அல்லது நாற்பது வருஷம் வரையும் உயிரோடிருக்கின்றனவாம். என்றாலும், சில குதிரைகள் அறுபத்தொருவருஷம் வரையும் உயிரோடிருந்ததாகத் தெரியவந்திருக்கிறது. ஒட்டகத்துக்கு வயது எண்பதாம். யானைகள் பொதுவாக நூற்றைம்பது வயது வரையும் உயிரோடிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஆனால் ஹிந்துக்களோ அவைகள் முந்நூறு வயதுவரையும் உயிரோடிருக்கிறதாகச்சொல்லுகிறார்கள். பாலூட்டிவளர்க்கும் ஜீவப்பிராணிகளுடைய ஜீவகாலத்தைப்பற்றிச் சேகரிக்கக்கூடிய ஸகல ஸமாசாரங்களையும் கொண்டு ஸுகமும், திடகாத்திரமுமுள்ள எப்பிராணிக்கும் துன்பம் அல்லது மோசம் நேரிடாதபடி அந்தப் பிராணியைப் பக்குவமாய்ப் பரிபாலித்து வரும் பக்ஷத்தில் அந்தப்பிராணி பூரணவளர்ச்சி அடைவதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ அவ்வளவு காலத்துக்கு, எண் மடங்கு அல்லது பதின்மடங்கு காலம் அந்தப்பிராணி உயிரோடிருக்குமென்று புத்தி பூர்வமாகத் தெரிகிறது. இதுவே ஜீவபிராணிகளின் ஆயுளைப்பற்றிய பொதுவான ஸித்தாந்தமாக இருந்தபோதிலும் சில விஷயங்களில் சில பிராணிகள் முன் சொல்லப்பட்ட காலத்துக்கு இருமடங்கு காலம் உயிரோடிருக்கவும் கூடும்.

### Population by Religion.

**மதவாரியாக ஜனத்தொகை.**—ஜார்ஜசக்ரவர்த்தி ஆளுகைக்குட் பட்டவர்களில், 208,000,000, இந்துக்கள். 94,000,000 மகம்மதியர்கள். 58,000,000 கிறிஸ்துவர்கள். 12,000,000 புத்தர்கள். 23,000,000 மற்றவகுப்பினர்கள்.

### The Telephone.

**டெலிபோன்.**—டெலிபோனானது தரைமார்க்கமாகச் செல்லுமாகில் ஒரு ஸெகண்டுக்கு 16,000 மயில் வீதம் செல்லும். கடல் மார்க்கமாய் ஒரு ஸெகண்டுக்கு 6,020 மயில் வீதந்தான் செல்லும்.

### Postage Stamps.

**தபால் ஸ்டாம்புகள்.**—உலகத்தில் 13,400 விதமான தபால் ஸ்டாம்புகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

### Gold Mining Places.

**தங்கமெடுக்குமிடங்கள்.**—இந்தியாவில் விசேஷமாக, மைஸூர், கோலார், வைநாடு, அனந்தப்பூர், டார்வார் முதலிய இடங்களிலே தங்கம் எடுக்கப்படுகிறது. சென்றவருஷத்தில் 5615 அவுன்ஸ் தங்கமும் அதற்கு முந்திய வருஷத்தில் 7242 அவுன்ஸ் தங்கமும் எடுக்கப்பட்டது.

GOOD ADVICE.

ஹிதோப தேசம்.—ஒரு கை முழம் போடுமோ? ஒரு கை தட்டினால் ஓசை கிளம்புமா? ஒரு விரல் நொடியிடாது. ஒருமைப்பாடில்லாத குடி ஒருமிக்கக் கெடும். நாலுசெத்தை கூடினால் ஒரு கத்தை. எத்தால் வாழலாம். ஒத்தால் வாழலாம். இருவரும் ஒத்தால் ஒருவருக்கும் பயமில்லை.

CHAIN OF DESTRUCTION.

நாசத் தொடர்.— அமெரிக்காவில் நோவா ஸ்கோஷியா நாட்டுக்குச் சமீபத்தில் சேபிள் ஐலாண்டு என்ற ஓர் தீவுண்டு: சிலவருஷங்களுக்கு முன் அந்த மார்க்கமாய்ப் போன ஒரு கப்பலிலிருந்து எலிகள் இறங்கி வெகுசீக்கிரத்தில் அந்தத் தீவு முழுவதும் பலுகிப்போயின. அதுவரையில் எலிகளின் உபத்திரவம் இன்னதென்றறியாத அந்தத் தீவார் அவைகளை ஸம்ஹரிக்க வழி தேடினார்கள். பூனைகள் எலிகளைக் கொன்று போடுமென்று கேள்விப்பட்டுப்பிறதேசங்களிலிருந்து பூனைகளைத் தருவித்தார்கள். பிறகு கொஞ்சகாலத்திற்குள் எலிகள் ஏறக்குறைய அற்றுப்போயின. அப்போது அந்தத் தீவில் தண்ணீர் பிடிக்க நங்கூரம் போட்ட ஒரு கப்பலில் ஒரு கூண்டில் அடைபட்டிருந்த இரண்டு நரிகள் எவ்விதமாகவோ தப்பித்துக்கொண்டு தீவில் வந்திறங்கின. இவைகளும் வெகு சலுதியில் குட்டி போட்டுப் பலுகி அந்தத்தீவில் மீதியாயிருந்த எலிகளையுங்கொன்று பூனைகளையும் பட்சித்து, கூட கோழிவாத்துகளையும் விழுங்கிக்கொண்டு வருவதால் அவைகளை எப்படி ஒழிக்கிறதென்று அந்தத்தீவார் இப்போது யோசனை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

THE GREATEST BLUNDER OF MY LIFE.

என் ஜீவியத்தின் மகா பெரிய தப்பிதம்.—ஐஞ்ஞூறு மனுஷரால் எழுதி வெளிப்படுத்தப்பட்ட ஜீவியப்பிசகுகளில் சிலவற்றைக்கீழே தருகிறோம். இவைகள் விசேஷமாய் வாலிபர்களுக்குப் பலன் கொடுக்கக் கூடியவைகள். அவரவரால் எழுதப்பட்டபடியே அவைகளைத் தருகிறோம். அவையாவன: "பிரயோஜனமற்ற நூல்களை வாசித்தல்." "எடுத்த தொழிலில் உறுத்தி நில்லாமை.' "யாதொன்றிலும் உறுத்தி நில்லாமை." "பணத்தைப்பற்றிக் கவனமாயிராமை." "என் சமயாசார கடமைகளைப்பற்றிக் கவலையீனமாயிருந்தது." "என் சபையையும் தாயையும் விட்டுப் பிரிந்தது." "வாலிபனாயிருந்தபோது பணத்தைத் தேடிவையாதிருந்தது." "நல்ல சங்கமொன்றிற்குரிய நல்ல வேலையை வேண்டாமென்றது." "சூதாடத் தொடங்கினது." "பாடசாலையில் இருந்தபோது என் காலத்தை வீணே கழியவிட்டது." "முதியோரின் நற்புத்திக்குச் செவிசாய்க்க மனதில்லாதிருந்தது." "என் நிலைபரத்தைப் பேணாமல் என் வேலையில் அசாக்கிரதையாயிருந்தது." "என்னையின்றிக் காரியம் நடை பெறாதென்று நினைத்தது." "கற்றுத்தேறுமுன் கலாசாலையை விட்டு நீங்கினது." 'புகையிலைச் சுருட்டு உபயோகிக்கத் தொடங்கினது."

HAS HE A HORN IN THE HEAD.

அவனுக்கென்ன கொம்பு முளைத்திருக்கிறதோ? —இந்த வசனம் ஸாதாரணமாக உபயோகித்து வரும் பழமொழிகளில் ஒன்று. உலகத்தில் ஒவ்வொருவனிடத்திலும் ஒவ்வொரு அற்புதசக்தி அமைந்திருப்பது ஸகஜமே. அப்படியிருப்பவருட் சிலரைப் பெரும்பாலர் பொதுவாக மிகச்சிறந்தவர்கள் என்று கொண்டாடுவது வழக்கம். இதைக் கேட்கும்பொழுது பொறாமையாலாவது, அல்லது ஒன்றில் சிறந்தவன் மற்றெல்லா விஷயங்களிலும் சிறந்தவனாக இருத்தல் அவசியமல்ல என்ற நுண்ணறிவாலாவது தூண்டப்பட்டு வேறுசிலர் ஒன்றில் சிறந்தவருடைய பெருமை அவ்வளவு சிறந்ததல்ல என்பதைக்காட்ட "அவனுக்கு என்ன ஒரு கொம்போ? அவன் நெற்றியில் ஒரு கொம்பு முளைத்திருக்கிறதோ? "அவன் கொம்பு முளைத்தவனோ?" என்று இப்படிப் பலவிதமாக எடுத்துரைப்பது வழக்கம். மனிதனுக்குக் கொம்பு இல்லை. அப்படி இல்லாதவஸ்து ஒருவனிடம் இருக்குமானால் அது எல்லாருக்கும் மிகுந்த ஆச்சரியத்தையுண்டாக்கும். எல்லாரும் அவனைப் பற்றியே பேசுவார்கள். ஆகவே "அவனுக்குக் கொம்பு முளைத்திருக்கிறதா?" என்ற தொடருக்கு மனிதனிடம் இது வரையில் இல்லாத வஸ்து அவனிடம் என்ன இருக்கிறது?. அவனைப்பற்றி இவ்வளவு சிறப்பித்து வாயோயாமல் நீங்கள் எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கத் தலைப்பட்டீர்கள் என்பதுபொருள்.



## THE LADIES' SECTION.

## ஸ்திரீகள் பகுதி

WOMEN'S EYES.

ஸ்திரீகளின் கண்கள்.—உறுதியான தேகமுடைய ஒரு பெண்ணினுடைய கண்ணின் அகலம் எவ்வளவோ அதுபோல் ஐந்து பங்கு கொண்டது அவளுடைய முகத்தின் குறுக்களவென்றும், அவளுடைய வாயின் மூன்றில் இரண்டுபங்கு அகலமுடையது கண்ணின் அளவென்றும்; கண்ணின் நீட்டு எவ்வளவோ அதுபோல இரு மடங்கு கொண்டது அவளுடைய காதின் நீட்டென்றும், இரண்டு கண்களுக்கும் இடையில் உள்ள தூரம் ஒரு கண்ணின் நீளத்தின் அளவென்றும், ஒரு கணிதர் கணக்கிடுகிறார்.

THE GROWTH OF CHILDREN.

சிசுக்களின் வளர்ப்பு.—குறை மாஸத்தில் பிறந்த குழந்தை திட சரீரத்தோடிராது. பூர்ண கர்ப்பத்தில் உதித்த குழந்தை பூர்ணாயிசோடிருப்பதுடன் ஜீவ காலத்தில் செம்மையாயும் வளர்ந்து வரும். ஆனபோதிலும் சிசுக்களின் பாராமரிப்பு விஷயத்தில் தாய்மார்களும் தாதிமார்களும் விசேஷ கவனமெடுக்கவேண்டும். குழந்தைகள் சரிவர பாராமரிக்கப்பட்டு வந்தால் பிறந்த ஆறுமாதகாலத்தில், பிறந்தபோது இருந்த நிறையை விட இரண்டு மடங்கு அதிகமாயிருக்கும். இவ்வித மிருக்கும்படி அதன் இங்கிதத்தை அறிந்து வேளா வேளைகளில் அன்னமூட்டி பால்போட்டி கூடுமானவரையில் திருப்திகரமான ஆகாரத்தைக் கொடுத்து வருவதில் குழந்தையை வளர்ப்பவர்கள் கவனத்துடன் இருக்க வேண்டும். அப்போதே சிசுவின் வளர்ச்சி செவ்வையாய்த்தெரியும்.

LALITA RAY'S MARRIAGE.

லலிதா ராயின் கலியாணம்.— கல்கட்டா கனவான் டாக்டர் பி. கே. ராயின் குமாரத்தியாகிய லலிதா ராய்க்கும் வங்காள மாகாணத்து இந்திய ஸிவிலியன் மிஸ்டர் எச். ஸி. மெயிட்லண்டுக்கும் ஸமீபத்தில் டாக்டர் ராயின் வீட்டில் கலியாணம் நடந்தது. பண்டித் சிவநாத சாஸ்திரி பிராமோ விதிப்படி அந்தக் கலியாணத்தைச் செய்து வைத்து மண மகளையும், மண மகனையும் ஆசீர்வதித்தார். டாக்டர் பி. கே. ராய் தமது மகளை மனமுவந்து கொடுக்க மிஸ்டர் மெயிட்லண்ட் அவளை மனமுவந்து வாங்கிக்கொண்டார்.

### FUNNY CONVERSATION.

### கலியாணப் பாட்டு

### ஏசல் பேசல்.

"அந்தப் பெண்ணைக்கேள்."

தாயார் பெண் சம்வாதம்.

(1) தாயின் கேள்வி.

"அம்மா பெண்ணே தும்பப்பூவே!
ஆம்பான் வந்தால் என்னசெய்வை?"

பெண்ணின் பதில்.

" கட்டிவெல்லத்தைப் புட்டுவைப்பேன்
கறந்தபாலைக் காய்ச்சிவைப்பேன்
உள்ளன்பு வைத்தால் உளதெல்லாம் கொடுப்பேன்
கள்ளத்தனஞ்செய்தால் பள்ளிப்பயல்
என்பேன்."

(2) தாயின் கேள்வி.

அம்மா பெண்ணே ! தும்பப்பூவே !
ஆம்பான் அடித்தால் என்னசெய்வை?

பெண்ணின் பதில்.

1

ஊசிமேல் தபஸிருந்து
உத்தமரே வேணுமென்றேன்!
காசியாத்திரை போனவனைக்
காத்திருந்து அழைத்துவந்தார்
காசாசைப் பட்டவனைக்
காட்டிக்கொடுக் காதேயென்றேன்
காசியாத்திரை போறேனென்று
ஆசையெல்லாம் விட்டொழித்தான்!
ஆசைவிட்ட பிள்ளையென்று
அப்பா அழைத்துவந்தார்:
ராசியாக மாப்பிள்ளையும்
தேங்காயை வாங்கிக்கொண்டார்
ஆசைவிட்டு ராசியாக
மாப்பிள்ளைக் கோவங்கொண்டு
காசியாத்ரை போனபிள்ளை
திரும்பிவரக் கண்டேனம்மா!

II.

மாப்பிள்ளைக் கோலங்கண்டேன்
மையிட்ட கண்ணுங்கண்டேன்
மௌனவிரதம் பூண்டபிள்ளை
மனதுக் குகந்ததென்று
அம்மானுந் தோளெடுக்க
அவர்மே லிருந்துகொண்டு
உச்சித மாக்கிடைத்த
உயர்ந்ததோர் வரனென்று
கச்சித மாகவேநான்
கைநீட்டி மாலையிட்டேன்:
மாலைவாங்கி மாலையிட்டே
மாப்பிள்ளையை மணக்கவைத்தேன்!
மாலையிட்டு மணக்கவைத்த
மாப்பிள்ளையும் அடிப்பனோடி?
அடித்தால் அவன் கெடுவான்!
ஆண்மைகெட்டுச் சீரழிவான்!

(3) தாயின் கேள்வி.

அம்மா பெண்ணே! தும்பப்பூவே!
ஆம்பான் அழைத்தால் என்னசெய்வை?

பெண்ணின் பதில்.

காசாசைப் பட்டு வந்தால்
காறியுமிழ்வேனடி!
மாசுமறு பட்டுவந்தால்
மறுத்தவனைப் போச் சொல்வேன்!
வேசியென்று எண்ணிவந்தால்
வேலையில்லை போவென்பேன்
தாசியென்று பேசிவந்தால்
தாழ்வில்லை போவென்பேன்!
மாசுமறு வில்லாமல்
மாலையிட்ட மாப்பிள்ளையும்
காசாசை தான்விட்டு
காமேசு வரர்போலே
ராசியாய் அன்புவைத்து
ராமரும் வந்தாற்போல்
கூசாம லழைத்தாரானால்
கூடவே நான்போவேன்!

(4) தாயின் கேள்வி.

அம்மா பெண்ணே! தும்பப்பூவே
மாப்பிள்ளை வந்து மல்லுக்கு நிற்கிறான்
என்னடி சொல்ல நான் கண்மணியே,

பெண்ணின் பதில்.

மாப்பிள்ளை வந்தால்
மல்லுக்கு நிற்பானேன்!
ஊர்ப்பிள்ளை வந்தால்
உதவாது போகச்சொல்!
மாலையிட்ட பிள்ளையானால்
மரியாதையா வரச்சொல்!
மரியாதைதப்பி வந்தாலவனைத்
தெரியாதென்று போகச்சொல்!
காசாசைப் பட்டுவந்தால்
காசிக்கே போகச்சொல்!
வீணாசைப் பட்டுவந்தால்
வெறும்மனே போகச்சொல்!
பெண்ணாசைப் பட்டுவந்தால்
பரிவாகப் பேசச்சொல்!
பொன்னாசைப் பட்டுவந்தால்
போகச்சொல்வீணனையே!

(5) தாயின் கேள்வி

அம்மா பெண்ணே! தும்புப்பூவே
ஆம்பான்வந்ததோ நிற்கிறானடி!
பெண்ணைவிடச் சொல்லியவன்
பேய்க்கூத்து ஆடுறானடி!
பேய்க்கு வாழ்க்கைப் படவோ உன்னைப்
பெற்றெடுத்து வளர்த்தேனடி?

பெண்ணின் பதில்.

'ஆம்பான்' வந்தானானால்,
வீம்பேன் அவனுக்கிப்போ?
ஆண்பிள்ளையவனானால்
அடக்கம் மிகவேண்டும்!
பெண்பிள்ளையானாலும்
பொறுமை மிகவேண்டும்!
ஆணும் பெண்ணு மில்லையானால்
அலியென்றேதா னொடுங்கவேண்டும்!
பெண்ணை விடச் சொல்லியவன்
பேய்க்கூத்தே னாடவேண்டும்?
நான் மாலையிட்ட பிள்ளையானால்
நலுங்காமற் பேசவேண்டும்!
வேலையற்ற காளையானால்
வேஷம்போட்டு ஆடவேண்டும்!
என்கைபிடித்த புருஷனானால்
யசஸா யென்னை நடத்தவேண்டும்!

விவேகசிந்தாமணி.



# DEPARTMENTAL NOTES.
# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்.

### Burning the Stubbles after a Crop.

**மாசூலுக்குப் பிறகு தாள்களை எரிப்பது.**—அநேக வருஷங்களாக, ஜனங்கள், ஒரு மாசூலுக்குப் பிறகு, பயிர்களின் அடித்தாள்களை எரித்து விடுவதினாலுண்டாகும் சாம்பலினால் பூமிக்கு நல்ல உரமுண்டாகிறதென்று எண்ணியிருந்தார்கள். ஆனால், ஆஸ்ட்ரேலியாவில் மெல்போர்ன் யூனிவர்ஸிடியைச் சேர்ந்த ஆல்பர்ட் ஈவார்ட் என்பவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்:—தாள்களை எரிக்காமல் பூமியோடு சேர்த்து உழுது வருவதினால், பூமி எவ்வளவு உரத்தை அடைகிறதோ, அதைவிட, தாளை எரிப்பதினாலுண்டாகும் சாம்பலினால், பூமி ஜாஸ்தி உரப்படுகிறதில்லை. தவிர, இப்படி அடிக்கட்டைகளை எரிப்பதானது, பூமியில் சாகுபடிக்கு ஆதாரமாயுள்ள கிருமிகளுக்கு விரோதமாயிருப்பதினால், பூமிக்கு இயற்கையாக உண்டாகிற நைட்ரொஜனானது கம்மிப்படுகிறது. இதனால் நிலம் சீக்கிரத்தில் சளைத்துப்போகிறது. ஆகவே அடிக்கட்டைகளை எரிக்காமலிருப்பது நலமென்று சொல்லுகிறார்.

### To Make Hens Lay in Winter.

**மழைகாலத்தில் கோழிகளை முட்டையிடும்படி செய்வது.**—மழைகாலத்தில் கோழிகள், தீனியைத் தின்னு, தகுந்த நடமாட்டம் இல்லாமலிருக்கிறபடியால் ஸ்தூலித்துப் போகின்றன. அதனால் அவைகள் முட்டையிடுவதும் குறைந்து போகிறது. அதை நிவர்த்தி செய்வதற்கு, ஆஸ்ட்ரேலியாவில் நல்ல கோழிகளைப் பொறுக்கி எடுத்து குளிர் தாங்கும்படி செய்திருக்கிறார்கள். இப்படி வளர்க்கப்பட்ட கோழிகள், வருஷத்தில் எக்காலத்திலும் முட்டையிடுகின்றன. வருஷம் ஒன்றுக்கு 270 முட்டைகள் இடுகின்றன. கனடாதேசத்தில், கோழிக்கூண்டில், ஒரு அடி ஆழம் வைக்கோலை ஒரு பக்கத்தில் தெளித்து, அந்த வைக்கோலில் இந்தக் கோழிகளுக்கிட வேண்டிய தானியங்களைத் தெளித்து விடுகிறார்கள். இதைக் கோழிகள் மிகுந்த பிரயாசைப் பட்டு பொறுக்கிச் சாப்பிடுகின்றன. அதினால் அவைகள் ஸ்தூலிக்காமல் வருஷத்தில் 200 முட்டைகள் இடுகின்றனவாம்.

### Salt for Cows

**பசுமாடுகளுக்கு உப்பு.**—பால்கறக்கும் பசுவுக்கு உப்பு அவசியம். 20 ராத்தல் பால் கொடுத்தால், 6 அவுன்ஸ் உப்பு அவசியம். அதிகமிருந்தால் குற்றமில்லை. அமெரிக்கா தேசத்து விஸ்கான்ஸின் மாகாணத்தில் ஒரு அவுன்ஸ் கொடுப்பதுண்டு. பால் அதிகம் கொடுக்கும் பசுவுக்கு ஆகாரத்தில் உப்பில்லையானால் பசிகுறைந்து மெலிந்து கண்மயங்கி மயிர் சிலிர்த்து திடீரென்று பசுகெடும். அப்போது உப்பு கொடுப்பதுண்டு. எருது வாட்டுமாடுகளுக்கு உப்பு இல்லையானாலும் குற்றமில்லை. 1000 ராத்தல் எடையுள்ள மிருகத்துக்கு முக்கால் அவுன்ஸ் உப்பு தேக ரத்தத்தை விருத்திப்படுத்தும்.

### A new Water Lift

**ஒரு புது ஏற்றம்:**—லயால்பூர் விவஸாயக் காலேஜில் உதவிப் போதகாசிரியராயிருக்கும் மிஸ்டர் தர்க்லிங் என்பவர் தண்ணீர் இறைப்பதற்கு நவீன முறையில் ஒரு வகையான ஏற்றம் கண்டு பிடித்திருக்கிறார். ஸுமார் நூறு அடி ஆழத்திலிருந்தும் அந்த ஏற்றத்தால் தண்ணீர் இறைக்க முடியுமாம். அதற்கு அமைக்கப்பட்டிருக்கும் யந்திர முறைகள் மிகவும் ஸுலபமானவைகளாயிருக்கின்றனவாம். அந்த யந்திரத்தை மேற்படி போதகாசிரியர் உபயோகப்படுத்திப் பரிசீலனை செய்துபார்த்து வருகிறாராம்.

### Agricultural Methods.

**கிருஷி முறைகள்.**—இவை மேன்மேலும் அபிவிருத்தி யடையவேண்டுமென்ற எண்ணத்தோடு கவர்ன்மெண்டார் பல இடங்களில் விவசாயப்பண்ணைகளை, ஸர்க்கார்ச் செலவில் ஸ்தாபித்து, உரங்கள், ஆழஉழவு, பலதினுசு தான்யங்களைப் பயிரிடுதல் இவைபோன்ற விஷயமாய் பல பரீக்ஷைகள் செய்து

வருகிறார்கள். முக்கியமாக ஸாமல்கோடு, பாலூர், ஹகாரி, கோவில்பட்டி, கோயம்புத்தூர், பல்லாரி, தாலிப்பரம்பா, நந்தியால், முதலிய இடங்களில் ஸர்க்கார்ப்பண்ணைகள் இவ்விதமாக நடத்தப்பட்டு வருகின்றன. நம்மவர்கள், இந்த இடங்களுக்குப் போய் அங்கே நடக்கும் கிருஷித்தொழில் முறைகளின் உயர்நலத்தைத் தெரிந்துக்கொண்டு, தம்தம் கிராமங்களில் ஸௌகரியத்துக்குத் தக்கபடி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

MANURE DISSOLVED IN WATER.

**எருஜலம்:**—எருவை நீரில்கரைத்து செடிகளுக்கு விடுவது யுக்தம். இதைச்செடி வளரும் காலத்திலும் துளிர் பிடிக்கும் காலத்திலும் உபயோகிக்கப்படாது. செடிக்கு வயதுவந்து புஷ்பிக்கும் ஸமயத்தில் இதைக் கையாளவேண்டும். மழை ஒழிந்து நிலம் ஈரமாயிருக்கும்போது உபயோகிக்கவேண்டும். தரை உலர்ந்திருந்தால் நீர்பாய்ச்சியபின் 1-2 மணிக்குப்பின் இது உதவவேண்டும். குதிரை, மாடு, ஆடு; முதலியவைகளின் சாணம் 10 படியில் 100 படி ஜலம் கலக்கவேண்டும். கோழியின் புழுக்கை அவ்வளவு ஜலத்துக்கு 5 படி போதுமானது. இந்த எருவை கோணியிலாவது துணியிலாவது கட்டி ஜலத்தில் தொங்கவிட கரையக்கூடிய எல்லாவஸ்துவும் ஜலத்தில் வந்துவிடும். செடி முற்றிப்போகும் பக்ஷத்தில் இந்த எருவை உபயோகிக்கப்படாது.

AGRICULTURE IN BOMBAY.

**பம்பாயில் விவசாயம்.**—பம்பாய் ராஜதானியில் அநேக இடங்களில் விவசாயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகவும், இப்போது 31 - சங்கங்கள் ராஜதானி முழுமையிலும் இருப்பதாகவும், அவைகளில் புனாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கமானது முக்கியமென்றும், இந்தப் புனா சங்கமானது விவசாய விஷயமாய்க் கவர்ன்மெண்ட் அப்போதப்போது பிரசுரம் செய்யும் துண்டுப் பத்திரிகைகளோடு, தானும் தேசபாஷையில் ஒரு பத்திரிகை பிரசுரம் செய்து வருகிறதென்றும் சொல்லப்படுகிறது. கவர்ன்மெண்ட் சோதனைப் பண்ணைகளில் செய்துகாட்டும் சாஸ்திரயுக்தமான புது மாதிரிகளில் விவஸாயிகள் அக்கறை பாராட்டுகிறார்களென்றும், அந்தச் சோதனை பண்ணைகளில் செய்யப்படும் சோதனைகளும் புதிதாய்க் கண்டறியப்படும் மாதிரிகளும் விவசாயிகளுக்கு அதிகப்பிரியத்தைக் கொடுக்கின்றனவென்றும், சொல்லப்படுகிறது. 1909-ம் வருஷத்தில் புனாவில் நடந்த விவஸாயக் கான்பரென்ஸினால் சாஸ்திரவிதிகளின் பிரகாரம் புதியமாதிரிகளை யனுஷ்டித்து விவஸாயம் செய்வதில் விவஸாயிகளுக்குப் புது அக்கரையுண்டாயிருப்பதால், இந்த சாஸ்திரோபாயங்கள் அவர்களுக்கு எட்டுவது அவசியமென்றுந் தோன்றி, அதற்காகப் புனாவில் ஒரு விவசாயப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்கூலில் விவசாய வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் ஸாமானிய படிப்போடுகூட விவஸாயத்தில் அறிவுபெற வஸதியுண்டு.

NIGHT SOIL MANURE.

**மல மூத்திர எரு.**—ஜப்பான் தேசத்து விவஸாய வித்தியாசாலையில் முக்கியமாய் கவனிக்க வேண்டியது ஒன்று. பெரிய கிணறுகளைப்போல செங்கல், சிமிட்டு, இவைகளால் 6 தொட்டிகள் பூமி மட்டத்திற்குக் கட்டப்பட்டிருக்கின்றன. முனிஸிபாலிடியில் துப்புரவு பண்ணும் மனிதர்களின் ஜலமும் மலமும் ஒரு சொட்டுக்கூட வியர்த்தம் பண்ணாமல் மரத்தொட்டிகளில் வைத்து, கைவண்டிகளின் வழியாயிழுத்துக்கொண்டு வந்து இந்தத் தொட்டிக் கிணறுகளில் கொட்டியிருக்கிறார்கள். மேலே வைக்கோலால் மூடியிருக்கிறார்கள். ஏனென்றால் முக்கிய ஆகார வஸ்து வாகிய அம்மோனியா வஸ்துக்கள் ஜல்தியாய் காற்றில் பறந்துபோகாமலிருக்கவே ஒரு மாதத்திற்கெல்லாம் நீண்ட கழிக்கோலின் காம்பினாலமைக்கப்பட்ட பெரிய மரத்தொட்டி, அகப்பைபோன்றவைகளால் கலக்கியெடுத்துப் பயிர்களுக்கு விடுகிறார்கள். மூத்திரம் போக ஏற்பாடுள்ள கக்கூஸ்களின் உள்ளே நிரம்ப துப்புரவாயிருக்கின்றன. மூத்திரம் அவ்வளவும் வெளியில் ஒரு பெரிய தொட்டியில் அம்மோனியம் வாடையுடன் தென்படுகிறது. அவர்கள் கணக்கின்படி மூத்திர கண்டிராக்டர்கள் தொட்டி தொட்டியாக நிரப்பி, படகுகளிலோ, அல்லது வண்டிகளிலோ ஏற்றிச்செல்லுகிறார்கள். காய்கறி கிழங்குகள் புஷ்டியாய் வளருகின்றன.



## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

PAPER MAKING.

**காகிதம் செய்தல்.**—தஞ்சாவூர் ஜில்லா குற்றாலத்திற்கு வடமேற்கிலுள்ள பந்தநல்லூரில் வெகு காலமாக கடிதம் செய்துகொண்டிருந்த காரணத்தாலே அந்த இடத்திற்கு "கடுதாசிப் பட்டரை" என்றுபெயர் ஏற்பட்டிருக்கிறது. பழைய நாள் ஸர்க்கார் கணக்குகளான பைமாஷ், சிட்டா முதலான பலவகைக் கணக்குகளும் இந்தப் பந்தநல்லூர் கடிதாசிப் பட்டரைக் காகிதத்திலேயே எழுதப்பட்டிருப்பதை இப்பொழுதும் நேரில் பார்க்கிறோம். ஸுமார் 35 வருஷங்களுக்கு முன் இந்தப்பக்கத்திய பாடசாலைகளில் "காபி புக்" என்று சொல்லப்படும் கைபடி புஸ்தகங்களுக்கும், அரபி இந்துஸ்தான் கையெழுத்துப்பிரதி புஸ்தகங்களுக்கும் உபயோகப்பட்டுவந்ததும் இதுவே. இந்த ஊரில் செய்யப்படும் கடிதங்கள் எருக்கு நார், பழைய வலைகள், சணல், சாக்குகள், கந்தைகள் மிகுதியாகச் சேர்த்துச் செய்யப்படுகின்றன. உபாயமாக இரண்டொரு கும்பகோணத்திய வியாபாரிகள் வாணம் மத்தாப்பு செய்யும் வேலைக்காகச் சொற்பமாக வாங்கிக் கொண்டு வருகிறார்கள். அதுவும் மற்ற கடிதங்கள் இந்த வாணம் மத்தாப்பு வேலைகளுக்கு ஒத்துக் கொள்ளாத காரணத்தால்தான் வாங்கப்படுகிறதாம்.

EGGS.

**கோழி முட்டைகள்.**—உலகம் முழுவதிலும் 80 கோடி முதல் 90 கோடி வரையிலுள்ள தொகையான கோழிமுட்டைகள் பிற்கால உபயோகத்திற்காகப் பக்குவப்படுத்தப்படுகின்றனவாம். இந்தத் தொகையில் இருபதிலொரு பங்கு ப்ரித்தானிய தேசங்களில் மாத்திரம் பக்குவப்படுத்தப் படுகிறதாம். முட்டைகளைப் பக்குவப்படுத்துவதற்கு ஏப்ரல் மே மாஸங்களே மெத்தவுந் தகுதியான காலமென்றும், குளிர்ந்த ஹோதுக்களைக் கொண்டு பக்குவப்படுத்தப்படும் முட்டைகள் சீக்கிரத்தில் கெட்டுப் போகின்றனவென்றும், குளிர்ந்த ஜலம் விட்டடைக்கப்பட்ட கண்ணாடி வீதர்களில் அல்லது சிலிக்கேட் ஆவ்ஸோடா என்னும் ஒரு வகை உப்பில்வைத்துப் பக்குவப்படுத்தப்படும் முட்டைகள் நெடுங்காலத்துக்குக் கெட்டுப்போகாமலிருக்குமென்றும், முட்டைகள் ஆறு அல்லது ஏழு மாஸம் வரையும் கெட்டுப் போகாமலிருக்கும்படி பக்குவப்படுத்தி வைத்தல் கூடுமென்றும், பரீட்சையால் கண்டறியப்பட்டிருக்கிறது. முட்டைகளை மின்சார தீபத்தால் பரிசோதனை செய்து நல்லமுட்டை கெட்ட முட்டையென்று திட்டமாய்க் கண்டறிந்து கொள்கிறார்களாம். முட்டைகள் பரீட்சிப்பதில் கைதேர்ந்தவர்கள் மணியொன்றுக்கு ஆயிரத்தைந்நூறு முதல் இரண்டாயிரம் வரையிலுமுள்ள முட்டைகளைப் பரீட்சிப்பார்களாம். ப்ரித்தானிய தேசங்களில் மாத்திரம் இருபத்தொருகோடி தங்கப்பவுன் விலையுள்ள முட்டைகள் உபயோகப்படுகின்றனவாம்.

BAMBOO COTTON.

**மூங்கில் பஞ்சு.**—ஜப்பானில் டோக்கியோ தினவர்த்தமான பத்திரிகை ஒன்றின் மூலமாய் ஒரு நூதன ஸமாசாரத்தை அறிகிறோம். டோக்கியோ பட்டணத்திற்கு அருகில் வசிப்பவரும் தற்காலத்தில் 47-வயதுள்ளவருமான காஷிகின்சடின் என்பவர் மூங்கிலிலிருந்து போலிப்பஞ்சு செய்வதற்கான ஒரு மார்க்கத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். அவர் இந்தப்பஞ்சைக் குறைந்த விலைக்கு வேண்டிய மட்டும் தயார்செய்து கொடுக்கத் தீர்மானித்துப் பஞ்சு இறக்குமதி பண்ணுவதை அடியோடு நிறுத்திவிட உத்தேசித்திருக்கிறார். இவர் 1908-ம் வருஷத்துக் கடைசியில் துத்தநாகத்தைச் சுத்திசெய்ய சில பரீக்ஷைகள் செய்துகொண்டிருக்கையில் ஏதோ ஒரு ரஸாயன மிசிரத்தில் விழுந்துகிடந்த ஒரு மூங்கில் துண்டானது பஞ்சு போன்ற ஒரு வஸ்துவாய் உருமாற்றப்பட்டிருந்ததை அகஸ்மாத்தாய்க் கண்டார். பிறகு அவர்போலிப் பஞ்சுசெய்ய உத்தேசித்து ஆயிரக்கணக்கான பரீக்ஷைகளைச் செய்தபின் கடைசியில் ஒரு ரஸாயன மிசிரத்தைக் கண்டுபிடித்து அதனால் போலிப்பஞ்சு செய்ய சித்திபெற்று, அம்முறையை வேறொருவரும் கையாடக்கூடாதவிதமாய் 8 அன்னியநாடுகளில் பேடென்ட் என்று சொல்லப்படும் உரிமைப்பத்திரம் வாங்க மனுச் செய்திருக்கிறார். அவர் கண்டுபிடித்த ரஸாயன மிசிரத்தில் கட்டை, புல்முதலியவைகளைத் துண்டு செய்து 5-மணிநேரம் கொதிக்க வைத்தபின் அவரால் நிருமாணிக்கப் பட்ட சில யந்திரங்களில் அவைகளைக் கொடுத்தபின் மூன்றுதரமான பஞ்சுகள் கிடைப்பதாயும், அவைகளில் முதல்தரம் போலிப்பட்டு உடைகள் செய்ய லாயக்கானதென்றும், மற்ற இரண்டு தரங்களும் துணி, வேஷ்டி, சால்வை முதலானவைகள் செய்ய லாயக்கானதென்றும் தெரியவருகிறது. இந்தப் போலிப்பஞ்சை ஸாதாரணப் பருத்திச் செடியிலெடுக்கும் பஞ்சு விற்கும் விலைக்குப் பாதிக்கிரயத்திற்கு விற்கக்கூடுமென்றும் தெரிய வருகிறது.

## EDUCATIONAL NOTES.
## வித்யா விஷயக் குறிப்புகள்.

SCHOOL GARDENS.

**பாடசாலைத் தோட்டங்கள்.**—லங்கையில் மட்டக்குளம்புப் பகுதியிலே தற்போது 5 பாடசாலைகளோடு தோட்டப் பயிர் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படியே லங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளோடும் ஒவ்வொரு தோட்டம்அமைக்கப்பட வேண்டுமென்பது வித்யாகர்த்தரின் விருப்பம். மத்திய, மேல், தென், முதலிய சிங்களமாகாணங்களிலே பாடசாலைத் தோட்டங்கள் எங்குமுண்டு. அந்தப்பாடசாலைகளுக்கு விவஸாய ஆயுதங்களும் விதை முதல்களும் அரசாட்சியாரால் கொடுக்கப்படுகின்றன. தோட்டச் செய்கையிலே அதிக திறமையுடையவர்களாய்க் காணப்படும் மாணாக்கருக்கு வெகுமதிகளும் கொடுக்கப்படுகின்றன. தோட்ட வருமானங்களை மாணாக்கரும் உபாத்திமாரும் பங்கிட்டு எடுத்துக் கொள்ளுகிறார்கள். தோட்டங்களின் சிறப்புக்கும், ஒழுங்குக்கும், விளைவுக்கு மேற்க உதவிப்பணமுங் கொடுக்கிறார்கள். நம்தேசத்திலும் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் உண்டாகவேண்டும்.

PALAYAMPATTI EDUCATIONAL EXHIBITION.

**பாளையம் பட்டி வித்யா காட்சிச் சாலை.**—நாளது வருஷம் ஏப்ரல் மாஸம் 6, 7, 8 தேதிகளில், ராமநாதபுரம் ஜில்லா பாளையம் பட்டி பாலசுப்ரமணிய பிரதம வித்யாசாலை உபாத்திமைச் சங்கத்தின் சம்பந்தமாய் ஒரு வித்யா காட்சிச் சாலை திறக்கப்பட்டு நடத்தப்படும். ராமநாதபுரம் டிஸ்ட்ரிக்டு ஜட்ஜ் துரையவர்கள் அக்ராஸனம் வகிப்பார்கள். 7-வது ஸர்க்கில், ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஆர். ஜி. க்ரீவ் துரையவர்கள் காட்சி சாலையைத் திறப்பதற்கு முந்தி ஒரு உபந்யாஸம் செய்வார். இக்காட்சி சாலை நன்றாய் நிறைவேறும்பொருட்டு எல்லா கனவான்களுடைய உதவியும் வேண்டியிருக்கிறது. கனவான்கள் காட்சிப்பொருள்களைத் தங்களால் கூடிய அளவு 1911௵ மார்ச்சு௴ 25உக்குள்ளாக அனுப்ப வேண்டும் என்று மேற்படி உபாத்திமைச்சங்கத்தின் அக்ராஸனாதிபதியும், திருச்சுழி ரேஞ்சு ஸ்கூல் ஸப்அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டருமான ம-ா-ா-ஸ்ரீ ப. பார்த்தசாரதி நாயகரவர்கள் வேண்டுகிறார்.

RESPONSIBILITY FOR EDUCATION.

**படிப்பிக்கவேண்டிய கடமை.**—ஸ்கூல்களில் மூன்றுவிதம் இருக்கின்றன. பிரதம பள்ளிக்கூடங்கள், மத்தியப் பள்ளிக்கூடங்கள், காலேஜ்கள். இவைகளில் பிரதமப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு எழுத வாசிக்கக் கற்றுக்கொடுப்பதும், அவர்களுக்குப் பிற்காலத்தில் அனுபோகத்தில் உபயோகப்படும்படியான படிப்பைச் சொல்லி வைப்பதும் நோக்கங்களாகும். காலேஜ்களில் சிறுவர்கள் விசேஷப் படிப்புப்பெற்று வித்வான்களாகிறார்கள். ஆகையால் மத்திமப் பள்ளிக்கூடங்களில்தான் நம் சிறுவர்களில் பெரும்பான்மையோர் உலக விவகாரத்துக்கு அவசியமான அறிவைப் பெறவேண்டும். கீழ்த்தரப் படிப்பின் செலவைக் கவர்ன்மெண்டார் முற்றிலும் பொறுக்கவேண்டும். அதை இலவசமாக்குவதும் கட்டாயமாக்குவதும் கவர்ன்மெண்டாரின் கடமை. காலேஜ் படிப்பை பெற்றோர்கள் செலவில் சிறுவர்களுக்கு அமைக்கவேண்டும். மத்தியத்தரப் படிப்பிலேயே ஸ்கூல்களில் பிடிக்கும் செலவைப் பெற்றோரும் கவர்ன்மெண்டும் கலந்து செய்யவேண்டும்.

A MUSLIM UNIVERSITY.

**முஸ்லிம் யூனிவர்ஸிடி.**—அலிகர் பட்டினத்தில் ஒரு முஸ்லியம் யூனிவர்ஸிடி அதாவது ஸர்வ கலா சாலை ஸ்தாபிக்கவேண்டிய முயற்சியானது ஹிஸ் ஹைனஸ் ஆகாகானால் மேற்கொள்ளப்பட்டு வெகு தீவிரமாய் நிறைவேறி வருகிறது. மகா ஊக்கமுள்ளவரும் முஸ்லிம் மதாபிமானியும் விவேகமுள்ள வருமான ஆகாகான், இந்த விஷயத்தில் மகமதியர்களுக்குத் தலைவராயிருந்து, தாம் ஊரூராய்ப் போய்ப் பணம் சேர்க்கவும், தாமே அதற்குப் பெரும் பண உதவிசெய்யவும், முன் வந்திருப்பது அந்த முயற்சி நிறைவேறுமென்பதற்குப் பெரும் அத்தாட்சியாகும். ஆகாகானே ஆதியில் லக்ஷம் ரூபாய் கொடுக்கிறதாயிருந்து இப்போது லக்ஷத்து இருபத்தையாயிரம் ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அவரைப் பார்த்து மற்ற மகமதியப் பிரபுக்கள், இந்த விஷயத்துக்குத் தாராளமாய் உதவி செய்வார்களென்பதில் ஸந்தேகமில்லை. படித்த மகமதியர் எல்லாருக்கும் ஒரு முஸ்லிம் யூனிவர்ஸிடி வேண்டுமென்ற எண்ணம் பொதுவாயுண்டாயிருக்கிறது. நம்முடைய சக்ரவர்த்தி முடிசூட்டின் பொருட்டு டெல்லிக்கு வருமுன்னால், இந்த முயற்சியை முடிவுசெய்துவிட வேண்டுமென்னும் தீர்மானம் மகமதியர் பலருக்கு இருக்கிறது.



## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

TORTOISE.

**ஆமை.**—இதன் சிரஸைத்துணித்த பின்பு அது 24 மணி நேரத்தில் 200 கெஜவளவு நகர்ந்து போகுமாம். அதன் ஈரலை யெடுத்து வெளியில் தூக்கி வைத்தால் அது பல நாட்களுக்குத் துடித்துக் கொண்டிருக்குமாம். இதனால் மூளையே உயிருக்கு இருப்பிடம் என்று சொல்லக் கூடவில்லை.

TIME TO CUT TREES.

**மரம் வெட்டுங் காலம்.**—கிருஷ்ணபக்ஷத்திலும் சுக்ல பக்ஷத்திலும் மரத்திலுள்ள ஸாரம் இறங்கி ஏறுகிறபடியால் கிருஷ்ண பக்ஷத்தில் வெட்டின மரமானது சுக்ல பக்ஷத்தில் வெட்டின மரத்தைப் பார்க்கிலும் ஜாஸ்தி நாள் நிற்கிறதென்று அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவிலும், அங்குள்ளவேறு சில நாடுகளிலும் மரம் வெட்டுவோரின் கொள்கை. இந்தியாவில் சிலஇடங்களிலும் அதே கொள்கையுண்டு. இதன் ருஜு சுலபமானது. மூங்கில், தேக்கு, மா, பலா, முதலிய இன்னும் சிலமரங்கள் கிருஷ்ண பக்ஷத்தில் வெட்டாமல் சுக்ல பக்ஷத்தில் வெட்டினால் ஸத்து ஜாஸ்தியாயிருப்பதால் உளுத்துப்போகும்.

FINGER PRINTS.

**விரல் அடையாளம்.**—இங்கிலீஷ் இலாகாவில் அனேக ஆபீஸ்களில் பேர்வழிகளுடைய பெருவிரல் முத்திரை வாங்குகிறார்கள். இது நல்ல ஏற்பாடு. அதற்கு இதோ ஒரு திருஷ்டாந்தம். வட இந்தியாவில் ஸியால்கோட் மாகாணத்தில் சாட்ரா என்ற ஊரில் ஒரு பெரிய சத்திரத்தில் திருட்டுப்போயிற்று. திருடன் ஒரு ஜன்னல் கண்ணாடியைப் பெயர்த்துவிட்டு உட் புகுந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓட்டம் பிடித்தான். திருடன் அகப்படவில்லை. ஆயினும் அவனுடைய விரல் தழும்பு கண்ணாடித்துண்டுகளில் பதிந்திருந்தபடியால் அவைகளைப் போலீஸார் விரல் முத்திரை ஆபீசுக்கு அனுப்பினார்கள். அங்கு அவைகளை ஒப்பிட்டுப் பார்த்து மக்கிவாரா என்ற கள்ளச்சாதி மனுஷரில் குல்மால் என்ற ஒருவனுடைய முத்திரையென்று கண்டுபிடித்தார்கள். உடனே ஷை ஆளைப் போய்ப்பிடித்துக்கொண்டு வந்து வெகு கண்டிப்பாய் விசாரணை செய்ததில் உண்மை வெளியாயிற்று. அவன் ஏற்கனவே ஐந்துமுறை தண்டிக்கப்பட்டவன். இப்போது கட்டிக்கொண்ட திருட்டுக்கு இரண்டு வருஷம் கடுங்காவல் சிக்ஷை பெற்றான்.

SNAKE POISON.

**பாம்பின் விஷம்.**—ஆஸ்ட்ரேலியாவில் ஒரு நாயைப் பாம்பு கடித்து அதனால் அந்தநாய் விஷமேறி இறந்துவிட்டது. இறப்பதற்குமுன் அது ஒரு மனுஷனைக் கடித்தது. அம்மனுஷனுக்குப் பாம்பின் விஷம் தலைக்கேறி கடைசியில் சுகப்படுத்தப்பட்டான். இதனால் பாம்பு கடித்த மிருகம் கடித்தாலும் பாம்பின் விஷமுண்டு என்று ஏற்படுகிறது. இதனால் பூனை நாய் முதலிய வீட்டு மிருகங்களோடு குழந்தையை விளையாடவிடுதல் சில வேளை மரணத்துக்கு ஹேதுவாகும் போலும்.

SCIENTIFIC AGRICULTURE.

**சாஸ்திரோக்தமான விவஸாயம்.**—உஷ்ணதேசங்களில் கோடை நாள் முடிந்ததும் நிலங்களை உழ வேண்டி மழையை எதிர்பார்ப்பார்கள். வானம் வந்ததும் பலதடவை உழுது மறுபடி மழை பெய்த பிறகு விதையை நடவேண்டும். விதை முளைக்கும் முன்னமே களைகள் வளர்வது ஸகஜமானதால் வேளாண்மைக்காரன் அவைகளைப் பிடுங்கி எறிவது அவசியமாகும். விதைகள் முளைத்ததும் பூமியை அடிக்கடி தோண்டுவது நலமாகிறது. காற்று நிலத்துக்குள் செல்வதால் விளைவு நேர்த்தியாயிருக்கும். பயிருக்கு வேண்டிய ஆகாரத்தை அதன் வேர் ஜலரூப மூலமாய் உட்கொள்கிறது. ஜலம் நான்கு விதமாய்க் கிடைக்கவேண்டும். முதலாவது மழை. மழை வாராவிடில் ஏரி குளங்களிருந்து கால்வாய் மூலமாய்ப் பாயவைப்பது இரண்டாவது விதமாகும். காற்றிலுள்ள ஸத்தால் நிலத்தில் ஜலம் விழுவது மூன்றாம் விதமெனலாம்; நிலத்தில் ஆழமாயுள்ள பாகங்களிருந்து மேலே எழும்பும் தண்ணீர் நான்காம் விதமாகும். விதை போட்டதும் அடிக்கடி கிளறிக்கொண்டுவருவதால் பூமியிலுள்ள ஜலம், மற்ற விதமாய்க் கிடைக்கும் நீரைவிடப் பயிர்களுக்குப் பரம பிரயோஜனத்தை விளைவிக்குமென்பதை விவஸாயி நினைவில் வைத்துக்கொள்வது அவசியம். மழைவந்த பிறகு வெயில் அடிக்கும் காலத்தில் ஒவ்வொருநாளும் அதிக[illegible]மாய் பூமியைக் கிளறுவது உசிதமாகும்.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

**Spitting Blood.**

**ரத்தம் வீழ்வதற்கு.**— சிலபேருக்கு உஷ்ணம் அதிகமாய்ப்போனால் குடல் காய்ந்து அதனால் ரத்தாசயம் கெட்டுவிடுகிறது. ரத்தாசயம் கெட்டுப் போகும்போது அதற்கும் வாய்க்கும் சம்பந்த முள்ள உமிழ்நீர்க் குழாய்கள் வழியாக ரத்தமானது வாய்க்குள் பிரவேசிக்கிறது. காலையில் எழுந்து பல் தேய்க்கும்போதும், காரி எச்சிலை உமிழும்போதும் ரத்தம் வெளிவருவதுண்டு. இம்மாதிரி ரத்த ரத்தமாய் வருவதற்குப் பரிகாரம் என்னவென்றால் கால் சேர் எலுமிச்சம்பழச் சாற்றுடன் கால் சேர் பசுவின் நெய்யைக்கலந்து தொடர்ந்தத்தியாய் மூன்று தினங்கள் சாப்பிட்டு வந்தால் ரத்த வாந்தி தீர்ந்துவிடுமோம்.

**Measles and Small Pox.**

**சின்னம்மை பெரியம்மைகள்.**—இப்பொழுது சென்னப்பட்டணம் முதலிய இடங்களில் பெரியம்மை வார்த்து சிலபேர் மாண்டு வருகிறார்கள். தட்டம்மை, சிச்சிலிப்பை முதலியவைகளையும் வைசூரியையும் அடியிற்கண்ட வித்தியாஸங்களை கொண்டு அறிந்து கொள்ளலாம்.

தட்டம்மை வியாதி ஆரம்பிக்கும்பொழுது குளிரும் லேசான காய்ச்சலும் தலைபளுவுமிருக்கும். கண் சிவந்து நீர் வடிந்தும், தொட்டால் வலியுடையதாயும் இருக்கும். தொண்டைவலிக்கும். மேலும் தும்மல், நாசிவடிதல், இருமல், கைகால்வலி இவை உண்டாகும். காய்ச்சல் கண்ட மூன்றாம்நாள் சாயங்காலம் அல்லது நாலாநாள் அம்மைவெளியேதோன்றும். இந்த அம்மைப்புள்ளிகள் முதலில் நெற்றியிலும், பின் முகம், கழுத்திலும், அதன்பின் மார்பு வயிற்றிலும், கடைசியில் கைகால்களிலும், காணப்படும். இந்தப்புள்ளிகள் முதலில் மிருதுவான சிவந்த சிறுவட்டப்புள்ளிகளாய் தடிப்பில்லாமல் இருக்கும். இவை பெரிதாகி ஒன்றோடொன்று சேர்ந்து நல்ல சிவப்பு அல்லது இருண்டசிவப்பான சந்திரன்போன்ற அரைவட்டமாய் தோலின்மேல் தடித்துத் தோன்றும். இதைகைவைத்து அமுக்கினால் அமுங்கிவிடும். கையை எடுத்துவிட்டால் முன்போல் புடைத்துவிடும். காய்ச்சலும் இருமலுமிருக்கும். இருமலோடு கபமுமிருக்கும். அம்மை கண்ட மூன்று நாலு நாளுக்குப்பிற்பாடு புள்ளிகள் முதலாவது முகத்திலும் பிற்பாடு மற்றபாகங்களிலும் மறைய ஆரம்பிக்கும்.

சித்தம்மை அல்லது சிச்சிலுப்பை.—ஆரம்பிக்கும்போது லேசான காய்ச்சலும் உடம்பில் அஸௌகரியமும் உண்டாகும். அடுத்தநாளில் அம்மை வெளிப்படும். சிச்சிலுப்பைப்புள்ளிகள் முதலில் சிவப்பு நிறமான உருண்டைத் தடிப்புகளாய்ப் பின் 2, 3 நாட்களுக்குள் நீர்க்கோர்த்துக் கொப்புளங்களாய்விடும். அடுத்தநாள் கொப்புளத்திலுள்ள நீர்கலங்கி சுற்றிலுள்ளஇடம் சிவந்துவிடும். பின் இரண்டாம்நாளில் கொப்புளங்கள் உடைந்து காய்ந்து விட, பொருக்குகள் உண்டாகும். இவை உதிர்ந்தபின் குழிகளாவது நிறமாறுதலாவது இராது. சிச்சிலுப்பைப் புள்ளிகள் முதலாவது உடம்பிலும் பிற்பாடு முகத்திலும் மற்றப் பாகங்களிலும் உண்டாகும்.

பெரியம்மை அல்லது வைசூரி.—இந்தவியாதி வரும்போது முதலில் அடியிற்கண்ட குறிகள் காணப்படும். குளிர், கதகதப்பு, சோர்வு வயிற்றைப் புரட்டல் சில ஸமயத்தில் வாந்தி, தலைவலி, இடுப்புவலி தொண்டைவலி முதலியன. அன்றைக்கே காய்ச்சல் பலமாய்வரும். இரண்டு மூன்று நாளைக்குப்பின் தடிப்புகள் முகத்திலும் நெற்றியிலும் காணப்படும். அப்போது காய்ச்சல் கொஞ்சம் குறையும். மூன்றாவது நாலாவது நாட்களில் தடிப்புகள் உடம்பெல்லாம் பரவிவிடும். ஐந்தாம் நாளில் ஒவ்வொரு தடிப்பும் நீர் கோர்த்து வட்டமாய் உச்சியில் பள்ளம் விழுந்து சுற்றிலும் சிவப்பாய்விடும். அடுத்த மூன்று நாட்களில் நீர்கலங்கி முத்துகளாகி ஒருவிதமான துர்வாசனை உண்டாகும். ஸாதாரணமாய் பத்தாம் நாள் முத்துகள் முதலில் முகத்தலும் பின் உடம்பிலும் வாட ஆரம்பிக்கும். கடோமான வைசூரியானால் முத்துகள் பெரியதாக காய்ச்சலும் அதிகமாகும். இதுதான் அதிக வருத்தமானகாலம். பதினாலாம் நாள் முத்துகள் காய்ந்து பொருக்குகள் உண்டாகும். இருபதுநாளுக்குமேல் இருபத்துநாலு நாளுக்குள் பொருக்குகள் உதிர்ந்துவிட பலஇடங்களில் குழிகள் காணப்படும்.



## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

**Marriage Expenses of a Son.**

**ஒரு பிள்ளையின் கலியாணச்செலவு.**—ஒரு ஹிந்துக் குடும்பத்திலுள்ள பையனுக்குக் கலியாணம் செய்வதற்காக குடும்பத் தலைவன் கடன் வாங்கவேண்டியிருந்து வாங்கும் பட்சத்தில் அந்தக்கடன் குடும்பத்து அவசியச் செலவுக்கு வாங்கிய கடனாகவே எண்ணப்படும், ஆகையால் அந்தக்கடனைக் கொடுத்தவன் குடும்ப ஸொத்தைக் கட்டுப்படுத்தி கடனை வசூல் செய்யலாம். 9. மதராஸ் லா. டை. 26-ம் பக்கம்.

**Penal Interest.**

**தண்டனை வட்டி.**—ஒரு பத்திரத்தில் இரண்டு வருஷ கெடுவானதும் பணம் கொடுபடாவிட்டால் முதலுக்கு ஒன்றரை வீதம் வட்டி கொடுக்கவேணுமென்று ஒப்பந்தமாயிருந்தது. அப்படிப் பணம் செல்லாகவில்லை. ஆகவே பத்திரத்தில் கண்டபடி வட்டிக்கு வியாஜ்யம் நடந்தது. பத்திரத்தில்கண்ட வட்டி தண்டனை வட்டியென்று சொல்லி கீழ்கோர்ட்டில் வியாஜ்யம் தள்ளுபடியாயிற்று. ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததின்பேரில் மேல் சொன்ன ஷரத்து தண்டனை வட்டியாகமாட்டாதென்றும், அது அநியாய வட்டியல்லவென்றும், அந்தப்படியே வட்டி கொடுக்க வேண்டுமென்றும் மதராஸ் ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

9-மதராஸ். லா. டை16ம்-பக்கம்.

**Tender.**

**டெண்டர்.**—சில காட்டுமரங்களை வாங்கப் பிரியமுள்ளவர்களை கவர்ன்மெண்டார் 100 கன அடிக்கு இவ்வளவு விலை கொடுக்கப்படுமென்று கண்டு, டெண்டர் கொடுக்கும்படி நோட்டீஸ் போட்டார்கள். சில தினுஸு மரங்களின் ஜாப்தாவுக்கு எதிராக அந்த தினுஸு மரங்களின் 100 கன அடிக்கு இவ்வளவு நிறை என்றும், நோட்டீஸில் குறிக்கப்பட்டிருந்தது. டெண்டர் செய்த ஒருவன் நிறையைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் டெண்டர் கொடுத்தான். பிற்பாடு ஸப்ளையான மரத்தின் நிறை குறைவாயிருந்ததாக கவர்ன்மெண்டின் மேல் வியாஜ்யம் செய்தான். மதராஸ் ஹைகோர்ட்டு சீப் ஜஸ்டிஸ் மேல் கண்ட கேஸில் மரங்களை அளந்து வாங்குவதாக எண்ணவேணுமென்றும், நிறையைப்பற்றி ஒப்பந்த முண்டு என்றால் அதை ஸ்பஷ்டமாய் ஒப்பந்தத்தில் கண்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்.—8. மதராஸ் லா. டை. 181 பக்கம்.

**Marriage Law in Travancore.**

**திருவாங்கூரில் கலியாணச் சட்டம்.**—திருவாங்கூர் ஸமஸ்தானத்திலே பெண்களுக்கு 16-வயதுக்கு முன்னும் ஆண்களுக்கு 18-வயதுக்கு முன்னும் கலியாணம் செய்யக்கூடாதென்று ஒரு சட்டம் செய்து நிறைவேற்றிக் கட்டுச்செய்துவிட வேண்டுமென்ற அபிப்பிராயம் அந்த ஸமஸ்தானக் கவர்ன்மெண்டாருக்குப் பலமாயிருப்பதாய்த் தெரிகிறது. ஆசாரத்திருத்தக்காரர்கள் இது நிறைவேறுவதையே ஆவலுடன் எதிர் பார்ப்பார்கள். பூர்வகால ஆசார அனுஷ்டானங்களை மாற்றக் கூடாதென்று வைராக்கியமா யிருப்பவர்கள் இந்த முயற்சியை இகழ்ந்து பேசுவார்கள். ஆனால், தற்கால ஸ்திதியில் இம்மாதிரி ஆசாரத் திருத்தங்கள் அவசியமே யாகும்.

**Some Facts about Partnership.**

**பங்காளி வியாபாரத்தைப்பற்றிய சில அம்சங்கள்.**—வியாபாரத்துக்காக ஒருவனுக்கு மற்றொருவன் கடன்கொடுத்து வியாபாரத்தில் வரும்லாபத்தில் வட்டிக்காகக் கொஞ்சம் பாகம் கொடுக்கிறதாக இந்த இரண்டுபேரும் உடன்படிக்கை யெழுதிக்கொண்டார்கள். இதனால், கடன் கொடுத்த ஆஸாமி அந்த வியாபாரத்தில் பாகஸ்தன் ஆகமாட்டான், அதில் நஷ்டம் வந்தாலும் நஷ்டத்துக்கும் பங்காளி ஆகமாட்டான், என்று காண்ட்ராக்ட்டு ஆக்ட்டு 240 வது ஸெக்ஷனில் சொல்லி யிருக்கிறது.

ஒரு ஜாயிண்டுவியாபாரத்தில் ஒரு பாகஸ்தன் ஸம்பந்தம் நிவர்த்தி பண்ணிக் கொள்கிறான். ஆனால் அவனுடைய ஸொத்தை அந்த வியாபாரத்தில் உபயோகப்படுத்தலாம் என்று அந்த பாகஸ்தன் ஸம்மதிக்கிறான். அந்த ஸொத்து, அந்த வியாபாரத்துக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டதென்று பாவிக்க வேண்டியது.

கூட்டு வியாபாரத்தில் ஒரு பாகஸ்தன் இறந்துபோனபோது, அவனுடைய வார்ஸு இறந்தவனுடைய ஆஸ்தியை ஜாயிண்டு வியாபாரத்துக்காக உபயோகப்படுத்தலா மென்று ஒப்புக்கொண்ட பக்ஷத்தில், அப்பேர்ப்பட்ட ஸொத்து அந்தக் கூட்டு வியாபாரத்துக்கு ஸம்பந்தப்பட்டவரையில் கடனாகப் பாவிக்கவேண்டியதென்று காண்ட்ராகட்டு ஆக்ட்டு 241 வது ஸெக்ஷனில் சொல்லியிருக்கிறது.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

---

**Mr. T. R. Desai.**

மிஸ்டர். டி. ஆர். தேசே.—பம்பாய் ஹைகோர்ட் வக்கீலும் ஆமிதாபத் கனவானுமாகிய மிஸ்டர் டி.ஆர். தேசே பம்பாய் மாகாணத்தில் முதல் வகுப்பு சப் ஜட்ஜாயும், பம்பாய் ஹைகோர்ட் டிப்டி ரெஜிஸ்ட்ராராயுமிருந்து காலஞ்சென்றுவிட்ட தமது தகப்பனாரின் பேரால் பன்னியா ஜாதியின் ஒரு வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் மெட்ரிகுலேஷன் பரீட்சைவரை வாசிக்க ஸாத்தியமாகும்படி அவர்களுக்குச் சம்பளப் பணம் கொடுக்கவும், புஸ்தகங்கள் வாங்கிக்கொடுக்கவும் ஒரு நிதி ஏற்படுத்தி அதற்குத் தம்முடைய நன்கொடையாக ரூபா 2000 கொடுத்திருக்கிறார்.

**Empress Victoria.**

**விக்டோரியா சக்ரவர்த்தினி.**—விக்டோரியா மகாராணியார் தம் குழந்தைகளைக் கண்டித்தே வளர்த்து வந்திருக்கிறார்கள். ஒரு ஸந்தர்ப்பத்தில் விக்டோரியா மகாராணியார் ஷெபீல்ட் நகரிலுள்ள ஆஸ்பத்திரியைத் திறப்பதற்காகப் போக நேர்ந்த பொழுது, தமது மக்களாகிய பிரின்ஸெஸ் ராயல், பிரின்ஸ் எட்வர்ட், பிரின்ஸ் ஆல்பர்ட் ஆகிய மூவரையும் அழைத்துக்கொண்டு போயிருந்தாராம். குறிக்கப்பட்ட இடத்தில் ராணியார் நுழைந்த மாத்திரத்திலே ஜனங்களெல்லாம் வந்தித்து வாழ்த்தினார்களாம். அப்பொழுது மகாராணியார் தலையைத் தாழ்த்தி மரியாதை செய்வதைக் கண்ட நமது எட்வர்ட் அரசரான சிறு புதல்வர் தலையின் மேலுள்ள தொப்பியை எடுத்துக்கொண்டு, தலையைத் தாழத்திக்கொண்டாராம். ஆனால், அவரின் ஸகோதரரான பிரின்ஸ் ஆல்பர்ட் ஒன்றுந் தோன்றாமல் நிற்கவே, அவரைக் கடிந்துகொண்டது மல்லாமல், தொப்பியைப் பிடுங்கிக்கொண்டு காதைப்பிடித்துக் கிள்ளினாராம்.

**Sri Sankaracharya.**

**சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.**—ஸ்ரீ ஜகத்குரு கும்பகோணம் சங்கராச்சாரிய ஸ்வாமிகள் மைனராயிருப்பதால் அவருடைய பந்துக்களில் ஒருவரும் தற்காலம் கும்பகோணத்தில் வஸித்து வருபவருமாகிய கோயமுத்தூர் மிஸ்டர் வி. எஸ். வெங்கட்ராமய்யரை தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் ஸ்வாமிகளுக்கும் அவருடைய மடத்தைச் சேர்ந்த ஸொத்துகளுக்கும் கார்ட்டியனாய் நியமித்திருக்கிறார். ஆனால் மேற்படி வெங்கட்ராமய்யர் ஸொந்தத்தில் 20,000 ரூபாய்க்கு ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றும், வேறிரண்டு தக்க மனிதர்களைத் தலைக்கு ரூ. 15,000 ஜாமீன் கொடுக்கும்படி செய்யவேண்டுமென்றும், டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் சொல்லியிருக்கிறார். ஜாமீன் கொடுக்க 6-வாரம் வாய்தா கொடுக்கப்பட்டிருக்கிறது.

**Mr. Parithiyur Krishnasastriar.**

**பருத்தியூர் கிருஷ்ணசாஸ்திரியார்.**—தஞ்சை ஜில்லாவைச்சேர்ந்த பருத்தியூரில் சென்ற௴ 27௳ சாஸ்திரியாரவர்கள் காலஞ்சென்றதைக்கேட்க விசனிக்கிறோம். இவர் ஸுமார் 30 வருஷகாலமாய் ஸ்ரீமத் ராமாயண படனம் செய்துவந்தார். பின்னும் மற்ற எல்லா ஸம்ஸ்க்ருத புராணங்களிலும் வேதாந்த சாஸ்திரங்களிலும் கரைகண்ட ஞானி. மிகக் கீர்த்திவான். தம் ஜனனபூமியாகிய பருத்தியூரில் ராமஸ்வாமி கோவில்கட்டி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்திருக்கிறார். இவருடைய மரணத்தருவாயில் ஒரு புதுமை தோன்றியதாம். அதென்னவெனில், இறக்கும் தினத்தன்று விடியற்காலத்தில் அக்கிரகாரத்திலுள்ள சிலருக்கு சொற்பனம் தோன்றியதாகவும், அந்தச்சொற்பனத்தில் நெற்றியில் திருநாமம் தரித்தும் துளசிமாலை கழுத்திலணிந்தும், கிஷ்ணசாஸ்திரியள் இருக்கும் இடம் நாடி வந்ததாகவும், அவ்விதமே அவருக்கு சிஷ்யராயிருந்த ஒரு அய்யங்கார் ஸ்வாமிகளுக்கும் தோன்றியதில் திடீரென்று விழித்துக்கொண்டு சாஸ்திரியாருடைய ஜாகைக்குப்போய் அவரைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அவருடைய சிரஸிலிருந்து ஒரு சப்தம் தோன்றியதாகவும், சற்று நேரத்தில் பிராணன் போய்விட்டதாயும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இம்மகானின் பிராணன் கபாலத்தின் வழியாய்ப் போயிருக்கவேணும். இவருக்கு வயது ஸுமார் 66. இவரது குமாரர் ஸ்ரீ கலியாணராம சாஸ்திரியார் குடவாசல் சப்ரிஜிஸ்டர்.



## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்.

---

**Did Not Forget His Younger Sister.**

**தங்கையை மறக்கவில்லை.**—தாயார்.—ஏண்டா, குழந்தாய்! உன் தங்கையின் ஞாபகமேயில்லாமல் தானே நீ பக்ஷணங்களையெல்லாம் சாப்பிட்டுவிட்டாய்?

குழந்தை.— சாப்பிடும்போதெல்லாம் தங்கையின் ஞாபகந்தான். எங்கே மத்தியில் வந்துவிடப் போகிறாளோ என்று எண்ணிக் கொண்டேதானே சாப்பிட்டேன்.

**A Queer Doctor.**

**ஒரு விநோத டாக்டர்.**—ஒரு டாக்டர் தனக்கு ஏதாவது அஸௌக்கியம் நேரிட்டபோது தனது மருந்தை வாங்கிக்கொண்டு, அதற்கு பீஸ் நிமித்தமாய் தனது பெட்டியிலுள்ள ரூபாயை எடுத்துத் தன்ஜேப்பிலே போட்டுக் கொண்டு புஸ்தகத்தில் வரவு வைத்துக்கொள்வாராம்.

**Things Not in Existence 100 Years Before.**

**நூறு வருஷத்துக்கு முன் இல்லாத விஷயங்கள்.**—உபாத்தியாயர்.—நூறு வருஷங்களுக்குமுன் இல்லாததும் இப்போது புதிதாய் உண்டாயிருப்பதுமான சில விஷயங்களைச் சொல்லுங்கள் பார்ப்போம்.

பையன்களிலொருவன்.—நீங்களும் நாங்களும்.

**Secured the Things.**

**ஸாமான்களை பத்திரப்படுத்தினேன்.**

ஜட்ஜு.—அடே, நீ திருடினாயா அந்த வீட்டில்?

கைதி.—இல்லை சாமி.

ஜ.—இல்லை யென்றால் உன்னிடம் அந்த ஸாமான் எப்படி வந்தது?

கைதி.—வீட்டில் எல்லாரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஸாமான்களைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ள ஒருவருமில்லையே யென்று நான் பத்திரப்படுத்தினேன். இது தவிர நான் திருடவில்லை எஜமானே.

**Good Halva.**

**நல்ல ஹல்வா.**—ஒரு உபாத்தியாயர் தன்கீழ்ப் படிக்கும் மாணாக்கர்களில் ஒருவனைப் பார்த்து பையா, ஒருவன் கடைக்குப் போய் 2 அணாவுக்கு ரவாவும், $1\frac{1}{2}$ அணாவுக்கு நெய்யும், முக்கால் அணாவுக்கு சர்க்கரையும் ஒரு பைஸாவுக்கு ஏலக்காயும் வாங்கினால் மொத்தம் என்ன ஆகும்?

மாணாக்கன்.—நல்லருசியான ஹல்வா ஆகும்.

**Agriculture for Dullards.**

**அசடுகளுக்கு விவஸாயம்.**—பத்துப் பெரிய மனுஷியாள் சேர்ந்து சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், ஒரு வக்கீல் "எனக்கு மந்த புத்தியுள்ள புத்திரன் பிறக்கும் பக்ஷத்தில், அவனுக்கு இரண்டு வேலி நிலம் வாங்கிக்கொடுத்து விவஸாயத்தில் போடுவேன்" என்று சொன்னார். உங்களது தகப்பனாருக்கு அப்படிப்பட்ட அபிப்பிராயம் இல்லாமற் போயிற்றல்லவா? யென்று அங்கிருந்த ஒரு குடித்தனக்காரன் பரிகாஸமாய்ச் சொன்னான்.

**Oats became Cats.**

**ஓட்ஸ்தானியமும் பூனைகளும்.**—அமெரிக்காவிலுள்ள ஒமஹாஎன்னுமிடத்திலிருக்கும் ஒரு பாரி வர்த்தகர் 'ஒட்ஸ்'என்னும் தானியம் தேவை யென்று விளம்பரஞ்செய்ய ஒட்ஸ் என்னும்மொழியின் முதல் அக்ஷரமாகும் ஒ. வியாய் அச்சில் மாறிவிழ, பூனை தேவையென்னும் அர்த்தத்தைக்கொடுத்தது. ஆகவே கடைசித் தபால் வெளிப்பட்ட நாள்வரையில் 5-ஆயிரம் பூனைகள் அனுப்பப்பட்டனவாம். இன்னும் பூனைகள் வந்துகொண்டிருக்கின்றனவாம்.

**No Lack of Cakes.**

**அப்பம் வடைக்குக் குறைச்சலில்லை.**—ஒருநாள் ஸாயரக்ஷை வேளையில் செத்துப்போன ஒரு கிழவியை எடுத்துக்கொண்டு ஊர்த் தெருவழியாகப் போனார்கள். அவள் மகன் நெருப்புச் சட்டியை வழக்கப்படி எருமுட்டைபோட்டுப் புகையப்புகையக் கொண்டுபோனான். காற்று எதிர்முகமாகவே வீசியதால், புகை அவன் முகத்திலடித்தது. அடிக்கடி அவன் கண்களை மூடிக்கொண்டும், பல்லையிளித்துக்கொண்டும் போவதை அங்கு ஒரு வீட்டில் நின்று பார்த்துக்கொண்டிருந்த ஆறுவயதுப் பெண் குழந்தை அருகிலிருந்த தன் தகப்பனைப் பார்த்து, 'அப்பா, நெருப்பு கொண்டுபோகிறவன் ஏன் சிரிக்கிறான்?' என்று கேட்க, தகப்பன், 'அம்மா, அவனுக்குத் தாயார் போய்விட்டாள். இனி ஒருவருஷத்திற்கு அப்பம் வடைக்குக் குறைச்சலில்லை யென்று சிரிக்கிறான்,' என்றார்.

## CURIOSITIES.
## விநோதங்கள்.

FIVE BRANCHES.

**ஐந்துகிளைகள்.**—நன்னிலம் தாலூகா நரிமணம் கிராமத்தில் ஒரு ஈச்சமரத்தில் ஐந்து கிளைகளிருக்கின்றன.

TREASURE INSIDE A CROCODILE.

**முதலையின் பொக்ஷம்.**—எகிப்து தேசத்தின் கரையில் 28 அடி நீளமுள்ள ஒரு முதலையை ஒருவன் சுட்டுக் கொன்றான். அதின் வயிற்றில் 319 தங்கப்பவுன் அடங்கிய தோற்பை ஒன்று இருந்ததாம்!

A CURIOUS BUFFALO-CALF.

**ஒருவிநோத எருமைக் கன்று.**—திருத்தருப்பூண்டித் தாலூகா சங்கேந்தியென்னும் கிராமத்தில் ஸமீபத்தில் ஒரு வேளாளர் வீட்டில் ஒரு எருமை உடற்பக்கம் கொஞ்சம் ஒன்றாய்ப் பொருந்தி இரண்டு கன்றுக்குள்ள அவயங்கள் முற்றிலும் பொருந்தப் பிறந்தது.

A BIG SNAKE.

**ஒரு மலைபாம்பு.**—ஜோகூருக்கு மேற்கே ஒரு காட்டில் ஒருவர் வேட்டையாடப் போனபோது ஒரு மலைப்பாம்பு அவருடைய நாய்களில் ஒன்றை நசுக்கிக் கொன்றபின் ஒரு மரத்திலேறிக் கொண்டதாம். வேட்டைக்குச் சென்றவர் பாம்பைக்கண்டு கைத்துப்பாக்கியினால் சுட்டுக் கொன்றாராம்; அது 28 அடி 10 அங்குல நீளமுடையதாக இருந்ததாம்.

THREE CHILDREN.

**மூன்று குழந்தைகள்.**—திருநெல்வேலியில் விருதுப்பட்டி யென்னுமிடத்தில் ஒரு ஸ்திரீ மூன்று பிள்ளைகளை ஒரேமுறையிற் பிரசவித்தாள். இந்தக் குழந்தைகளில் ஒன்று ஆண்குழந்தை. இதற்கு கால் கைகளில் ஆறு விரல்களிருக்கின்றனவாம். மற்ற இரண்டு சிசுக்களும் பெண்சிசுக்கள். மூன்று சிசுக்களும் ஒரு பிரஸவத்திற்பிறந்தமையால் அவைகள் மிகச் சிறியனவாம்,

THE ENGLISH CROWN.

**இங்கிலாந்தின் கிரீடம்.**—காலஞ்சென்ற விக்டோரியா ராணியாரின் கிரீடம், 1838-ம் ஆண்டில், பழைய கிரீடங்களிலிருந்தெடுத்த விலையுள்ள ரத்தினக் கற்களால், லண்டன் நகரில் கீர்த்திபெற்ற நகை வியாபாரிகளாகிய "றென்டல் அண்டு ப்றிஜெஸ்" என்பவர்களால் செய்யப்பட்டது. இதில் ஒரு பெரிய நீலக்கல்லும்: ஒரு பெரிய மாணிக்கக் கல்லும், 11-மரகதக் கற்களும், 16 ஸாதாரண நீலக் கற்களும், 4 ஸாதாரண மாணிக்கக் கற்களும், 1364 பட்டந்தீர்ந்த வயிர ரத்தினங்களும், 1420 ஸாதாரண வயிரக் கற்களும், 277 திறமான முத்துகளும் அடங்கியிருக்கின்றன.

A YOUNG ZEBRA.

**ஒரு கோவேறு கழுதைக் குட்டி.**—இந்தியாவைச் சேர்ந்த காஷ்மீரத்துக்கு ஸமீபத்திலுள்ள அஜாரா ஜில்லாவில் ஷர்புத்தின் அலிகான் என்னும் ஒரு நவாப் வீட்டில் ஒரு கோவேறு கழுதை ஒரு ஆண் குட்டி ஈன்றிருக்கிறது. அது ரூபத்தில் வேட்டை நாயைப் போலும் அதின் கண் மயில் கண்ணைப் போல் பிரகாசமாயுமிருப்பதோடு மானைப்போல் அவ்வளவு வேகமாய் நடக்கிறது. அது தன் தாயின் பாலைக் குடிக்காமல் ஆட்டின் பாலைக் குடிக்கிறது. அந்தக் குட்டிக்கு நவாப் அவர்கள் ஒரு உயரமான இரும்புக் கூண்டு தயார் செய்திருக்கிறார்கள். ஜனங்கள் அதைப்பார்க்க விசேஷமாய் வந்துகொண்டிருப்பதாக ஒரு பத்திரிகையின் நிருபர் தெரிவிக்கிறார்.

A COCOANUT YIELDING PLANTAINS.

**வாழையை ஈனும் தென்னை.**—வங்காள மாகாணத்தைச் சேர்ந்த, ஹௌராசீக்லா ரெயில்வே லயனிலுள்ள, சீக்லா ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஒரு மைல் தூரத்தில் பட்டேல் என்ற ஒரு கிராமமிருக்கிறது. அந்த ஊரிலுள்ள இஸ்மெயில் ஷெயிக் என்பவரின் வீட்டுக்கு முன்பாக ஒரு தென்னைமரம் இருக்கிறது. அது 20 முழம் உயரமிருக்கும். சென்ற வருஷம் வரையில், அந்த மரத்தில் தேங்காய் காய்த்து வந்தது. ஆனால் இந்த வருஷமோ, தேங்காய்ப் பலனோடு வாழைக்குலையும், போட்டிருக்கிறது. வாழைக்குலையின், நுனியில் சிறு இளநீர் காய்த்திருக்கிறது. பழத்தைச் சாப்பிட்டுப் பார்த்தால், நேர்த்தியான கதலிப் பழத்திற்குச் சமானமாயிருக்கிறதாம். இந்த விஷயத்தை நேரில் பார்த்த ஒருவர், ஒரு வொர்னக்குலர், பத்திரிகைக்கு எழுதுகிறார். இது நிஜமானால் ஒரு கலிகால விந்தையேயாகும்..



## NEWS OF THE MONTH.
## மாஸ வர்த்தமானம்.

## INDIAN NEWS.
## இந்திய நாட்டு ஸமாசாரம்.

PAVING WITH WOOD.

**மரத்தினால் ரஸ்தா போடுதல்.**—கல்கத்தாவில் பார்க் தெருவுக்கு மரத்தினால் தளவரிசை போடுவதற்காக, கல்கத்தா முனிஸிபாலிடியார், இஞ்சினீர் போட்ட மதிப்புப்படி, ரூபா 75,348- சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

SWADESI.

**ஸ்வதேசி.**—ஸ்வதேசிய முயற்சியை விருத்திசெய்யவேண்டுமென்றும், அதற்காக கைத்தொழில் அபிவிருத்தியை இந்தியாவில் உண்டாக்க ஜனங்கள் முன் வந்து உழைக்கவேண்டுமென்றும், அந்நிய நாட்டுச் ஸாமான்களைவிட ஸ்வதேச ஸாமான்கள் சற்று விலை அதிகமாயிருந்த போதிலுங்கூட முதலில் கொஞ்சம் நஷ்டத்துக்கு உள்ளாவதைப் பார்க்கக்கூடாதென்றும் அலகாபாத்தில் போன டிசம்பர் மாஸத்தில் நடந்த காங்கிரஸில் தீர்மானிக்கப்பட்டது.

A PRIZE FOR THE SNAKE BITE CURE.

**பாம்புகடி மருந்துக்காக ரூபா 250 இனாம்.**—பாம்புகடிக்கு மருந்தாக ஏதோ ஒரு கல்லோ அல்லது ஒருவகை வேரோ இருப்பதாகவும், அதைக் கடித்த இடத்தில் உடனே தேய்த்தால் விஷம் நீங்கிப்போகுமென்றும் அடிக்கடிக் கேள்விப் படுகின்றோம். இப்போது, வைத்திய ஸஞ்சிகை யொன்று பிரசுரித்து வரும் டாக்டர் எஸ். கே. முல்லீக் என்பவர் பாம்புக்கடிக்கு அவ்விதம் மருந்து இருப்பதாக ரூபித்தால் ரூபாய் 250 இனாம் அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இதர விஷயங்களுக்கு, மானேஜர். எம். எஸ். பத்திரிகை, 190-1 கார்ன்வாலிஸ் தெரு, கல்கத்தா என்று எழுதிக் கொள்ளலாம்.

STATE SUBSIDIZED PAPER.

**கவர்ன்மெண்ட் உதவிபெறும் ஸமாசாரப் பத்திரிகை.**—கல்கத்தாவில் "இந்தியன் மிரர்" என்று சொல்லப்படும் ஆங்கிலத்தில் பிரசுரமாகும் ஒரு இந்தியப் பத்திரிகைக்கு வெகு காலமாய் ஆசிரியராயிருந்து வரும் ராய் நரேந்திர நாத்ஸேன்பகதூர், பெங்காளி பாஷையில் "ஸுலப ஸமாசார்" என்று பேருள்ள ஒரு வாராந்தப் பத்திரிகை நடத்தப் போவதாகவும், அதற்கு வெங்காளக் கவர்ன்மெண்டார் பணவுதவி செய்யப்போவதாகவும் தெரிகிறது. இந்தப் புதிய வெங்காளிப் பத்திரிகைக்குக் கையொப்பம் வருஷம் 2½ ரூபா யென்றும், அதில் 25 ஆயிரம் காப்பிகளைக் கவர்ன்மெண்ட் வாங்குவதாகவும், அதற்கு மூன்று மாஸத்திற்குள்ள 15, 625 ரூபாய் ராய் ஸேனுக்குக் கொடுத்து விட்டதாகவும் அறிகிறோம்.

THE REGISTRATION GAZETTE.

**ரெஜிஸ்ட்ரேஷன் கெஜட்.**—சென்னை மாகாணத்துப் பத்திரப் பதிவிலாகாத் தலைவர், ஆனரெபிள் மிஸ்டர் வி. எம். ஷ்மிட், அந்த இலாகா விதிகளையும், உத்திரவுகளையும் மற்றுமுள்ள முக்கிய விஷயங்களையும் அப்போதப்போது அச்சிட்ட ஸர்குலர் மூலமாய் அந்த இலாகா உத்தியோகஸ்தர்களுக்குத் தெரியப்படுத்துவது தம்முடைய ஆபீஸிலும், டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார்களின் ஆபீஸ்களிலும் அதிகப்படி வேலைக்குக் காரணமா யிருக்கிறபடியால், அம்மாதிரி ஸர்க்குலர்கள் பிறப்பிப்பதற்குப் பதிலாய் இரண்டு வாரத்துக்கொருமுறை ஒருரெஜிஸ்ட்ரேஷன் கெஜட் பிரசுரஞ்செய்து விடுவது நலமாயிருக்கு மென்று தமக்குத்தோற்றுவதாய் எடுத்துக்காட்டி அம்மாதிரி இந்தவருஷம் ஜனவரிமாஸம் முதல் செய்வதற்கு கவர்ன்மெண்ட் சாங்கஷன் வேண்டுமென்று கேட்டார். இந்த மாகாணத்தில் 500 ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்களிருக்கிறபடியால் அம்மாதிரி செய்வது உசிதமா யிருக்குமென்றும் சொல்லியிருந்தார். கவர்ன்மெண்டார் அப்படியே அனுமதி கொடுத்து விட்டார்கள்.

THE MONO PLANE.

**மானோப்ளேன்.**—மிஸ்டர் 'ப்ளெரியோ' என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட மானோபிளேன் என்னும் யந்திரத்தைக் கொண்டு அவருடைய சிஷ்யராகிய மிஸ்டர் மான்ஸ் ஜுல்ஸ்டிக் என்பவர் ஸமீபத்தில் சென்னையில் ஆகாயத்தில் பறந்து செல்வதை சென்னை வாசிகள் மிகவும் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். ரெயிலில் பிரயாணம் போவதுபோல் இனிமேல் ஆகாயமார்க்கமாயும் ஊர்களுக்குப் போகும்படியான ஸௌகரியங்கள் சீக்கிரம் ஏற்பட்டுவிடும்.

### The Sri Vaishnava Sabha.

அலகாபாத்தில் ஸ்ரீ வைஷ்ணவ மகாஸபை ஸ்ரீவைணஷ்வ மகாஸபையின் முதல் மீட்டிங் நாளது மாஸம் 4ந் தேதி பிரயாகையில் முடிவடைந்தது. 700 டெலிகேட்டுகள் வந்திருந்தார்கள். ரீவா மகாராஜவும் வேறு சில மகாராஜாக்களும் ஆனரேபிள் பண்டித மதன்மோஹன் மாலவியாவும் வந்திருந்தார்கள். 16 தீர்மானங்கள் நிறைவேறின. ஸ்ரீ ஸ்வாமி அனந்தாச்சார்ஜி அக்ராஸனம் வகித்திருந்தார்.

### The Provincial Conference.

**ப்ரோவின்ஷியல் கான்பரென்ஸ்.**—இந்த வருஷம் கூடவேண்டிய 18-வது சென்னை மாகாணக் கான்பரென்ஸைக் கூட்டுவதைப்பற்றி யோசிக்க ஸமீபத்தில் மஹாஜன ஸபைஹாலில் ஒரு மீட்டிங் நடந்தது. ஆனரேபிள் மிஸ்டர் டி. வி. சேஷகிரி ஐயர் உபசாரணைக் கமிட்டி சேர்மெனாகவும், மெஸர்ஸ் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார், பி. என். ராமன் பிள்ளை, வி. மாசிலாமணிப்பிள்ளை, டி. வி. முத்துகிருஷ்ண ஐயர், இவர்கள் காரிய தரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவ்வருஷத்திய மாகாணக் கான்பரென்ஸை வருகிற மேமாதம் 8ந்தேதி திங்கட்கிழமையும் அடுத்த இரண்டு நாள்களிலும் சென்னையில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### Cotton Mills.

**பருத்தித் தொழிற் சாலைகள்.**—பம்பாயில் பல பருத்திநூல் நெசவு யந்திரசாலைகள் மூடப்பட்டுப் போய் விட்டதாயும், அவைகளில் வேலைசெய்துவந்த ஆயிரக்கணக்கான கூலிவேலைக்காரர்கள் இப்போது பிழைக்க வழியில்லாமல் தவிக்கிறார்களென்றும் தெரிய வருகிறது. பம்பாய் பட்டணத்தில் வந்து பிழைத்துக்கொண்டிருந்த அந்தக் கூலிவேலைக்காரர்கள், நம்மூர் சென்று விவஸாயத்தொழில் செய்தாவது பிழைப்போமென்று, தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்களாம். பஞ்சாலைகள் செய்துவந்த தொழிலில் நஷ்டம் வந்தது காரணமாக மூடப்பட்டுப் போயினவென்றும், அதற்குக்காரணம் பருத்தி அகப்படாமை யென்றும் சொல்லப்படுகிறது. ஸுமார் 20, 000 ஜனங்கள் இப்போது வேலை இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கக் கூடுமென்று கணக்கிடப்படுகிறது. இப்படியே இங்கிலாந்திலும் அநேக சாலைகள் மூடப்பட்டுப் போயின.

### The Courtallam Water-fall Case.

**குத்தாலம் மலை அருவி கேஸ்.**—திருக்குத்தாலம் என்பது திருநெல்வேலி ஜில்லாவில் ஒருமகாஸ்தலம். அதில் ஒரு கோயிலும் மலைஅருவியும் இருக்கின்றன. இந்த அருவியைப்பற்றியும்அதன் சுற்று நிலங்களைப் பற்றியும் ஸமீபத்தில் ஹைகோர்ட்டில் ஒரு வியாஜ்யம் நடந்தது. கோவிலதிகாரிகள் அருவியும், அதைச் சேர்ந்த குளம், பூமிகள் எல்லாம் தங்களுடையதென்று சொல்லி இந்திய காரியதரிசியின்மேல் ஒரு வியாஜ்யம் கொண்டுவந்தார்கள். கவர்ன்மெண்டார் தங்கள் தரப்பில் சொன்னதாவது, கோவிலைச் சேர்ந்த நிலங்கள் முதலானவைகளுக்கு முன்னதாகவே டிமார்க்கேஷன் கல்லுகள் போடப்பட்டன, அவைகள் கோவிலதிகாரிகளிடம் ஒப்பிவிக்கப் பட்டபடியால், அவைகளுக்கு வெளியிலுள்ள நிலங்களில் யாதொரு பாத்தியதையுமில்லை, அப்படி ஏதாவது கொஞ்சம் பாத்தியதை யிருந்தாலும் அந்த இடங்களை பாரஸ்டு இலாகாவில் சேர்த்துவிட்டபடியால், அந்தச்சிறிய பாத்தியதைகூட அவர்களிழந்து விட்டார்கள். திருநெல்வேலி அட்டிஷனல் ஸப் ஜட்ஜி வாதிகளின் தாவாவை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குச் சிறிது அனுகூலம் செய்தார். இருதரத்தாரும் ஹைகோர்ட்டிற்கு அப்பீல் செய்தார்கள். ஹைகோர்டு ஜட்ஜிகள் தங்கள் தீர்ப்பில் எழுதியதாவது—கோயிலதிகாரிகள் சில நிலங்களை பாரஸ்டு இலாகா வருவதற்குமுன் அதிக நாளாய் அனுபவித்து வருகிறபடியால், அவைகள் கோவிலைச் சேர்ந்தவை என்றும், ஆனால் மலையருவியும், அதைச் சேர்ந்த குளமும், நீர் ஓடையும் அவர்கள் அனுபவத்தில் எப்பொழுதும் இருந்ததாகக் காணப்படவில்லை என்றும், சென்னை பாரஸ்ட்டு ஆக்டுப்படி கோவிலதிகாரிகளுக்கு அந்நிலங்களில் யாதொரு பாத்தியதையுமில்லை என்றும் சொல்லி வாதிகளின் தாவாவைக்கோர்ட்டுச் செலவோடு அடியோடு தள்ளிவிட்டார்கள். ஆனால் அந்த ஸ்தலங்களை எல்லாம் கோவில் உபயோகத்துக்குக் கவர்ன்மெண்டார் கொடுப்பார்களென்று தாங்கள் நம்புவதாய்த் தீர்ப்பில் கண்டிருக்கிறார்கள்.



## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரம்.

### A Valuable Pearl.

**ஒரு விலைபெற்ற முத்து.**—மேற்கு ஆஸ்திரேலியாவிலே முத்துக்குளிக்கும் கடலிலிருந்து மிகப் பெரிதான ஒரு முத்து எடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விலைமதிப்பு 6000 பவுனும்.

### Ostrich Feathers.

**நெருப்புக்கோழி இறகுகள்.**—தென் ஆபிரிக்காவிற்குத் தெற்கே யிருக்கும் கேப் ஆப் குட் ஹோப் என்ற துறைமுகத்திலிருந்து நெருப்புக்கோழி இறகுகள் ஒரு வருஷத்தில் ஸுமார் பத்தரை லக்ஷம் பவுனுக்குமேல் விலைபெற்று ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

### A Mahammadan Mosque in London.

**லண்டனில் மகமதிய மசூதி.**—ஹிஸ் ஹைனஸ் ஆகாகானும், அமீர் ஆலியும் யோசனை செய்து லண்டனில் ஒரு மகமதிய மசூதி கட்டவேண்டுமென்று வெகு முயற்சி செய்திருக்கிறார்கள்.

### Tax in China.

**சீனாவில் வரி.**—சீன ராஜ்யத்திலே ஒரே ஒரு வரி உண்டு. அது நிலவரி. ஒவ்வொரு ஏக்காராவுக்கு வருஷந்தோறும் ரூ. 1, அணா 4 கட்டவேண்டும். இதைத்தவிர வேறே வரி கிடையாது.

### London Newspapers.

**லண்டன் பத்திரிகைகள்.**—லண்டன் நகரிலுள்ள தினப் பத்திரிகைகளில், பத்துத் தினவர்த்தமானப் பத்திரிகைகளுக்கு வருஷமொன்றுக்கு 20 லட்சம் பவுன் விளம்பரங்களால் வருகிறது. அங்குள்ள சிரேஷ்டவர்த்தகர்கள் வர்த்தக விளம்பரங்களுக்காகப் பெருந் தொகை செலவிடுகிறார்கள். இரண்டு சவர்க்காரக் கம்பனியார் மாத்திரம் தங்கள் வர்த்தகத்தை உலகமெங்கும் பரவச்செய்வதற்கு விளம்பரங்களுக்காக இரண்டு லட்சத்து இருபதினாயிரம் பவுன் கொடுத்து வருகிறார்களாம்.

### Vegetables in Japan.

**ஜப்பானில் காய்கறிகள்.**—சீமை அத்திப்பழங்கள் ஏதேஷ்டம்; அரைக்கீரை, கீரைத்தண்டு இடையவே கிடையாது. நல்ல பால் ஏதேஷ்டமாய் அகப்படும். கண்ணாடி செய்யும் சாலைகள் ஜாஸ்தியாயிருக்கிறதினாலே ஒரே அளவுள்ள போத்தல்கள் (புட்டிகள்) செய்து அவைகளில் பாலை நிரப்பி வீடுவீடாய்க் கொடுத்துப் போகிறார்கள். பாலை வேறு பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சுகிறதில்லை. ஒரு பெரிய செம்புப் பாத்திரத்தில் வெந்நீரைக் கொதிக்க வைத்துக் கொண்டு பாலடங்கிய போத்தல்களைக் கழுத்து வரையில் வெந்நீரிலிறக்கி விடுகிறார்கள். பால் நன்றாய்க் கொதித்து ஆவி கிளம்பி விடுகிறது

### Coronation Gift.

**முடிசூட்டு வெகுமானம்.**—லார்டு கர்ஸன், ஏரல் க்ரே, லார்டு ஜார்ஜ் ஹாமில்டன், ஸர் ஜார்ஜ் ரீட் இவர்கள் நாலுபேர்களும் சேர்ந்து கையெழுத்திட்டு ஒரு பகிரங்கக் கடிதம் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். ஏகாதிபத்தியத்தில் உள்ள ஜனங்கள் அரசரின் முடிசூட்டு வைபவத்தின்போது அவருக்கு ஏதாவது நல்ல வெகுமானம் கொடுக்க வேண்டு மென்றும், அதை உத்தேசித்து நிதி சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றும், ஒரு பென்ஸ் (அணா) முதல் ஐந்து பவுண்டு வரையில் கொடுக்கப்படும் தொகைகள் சந்தோஷத்துடன் பெற்றுக் கொள்ளப்படும் என்றும், அப்படி நன்கொடை யளித்தவர்களின் பெயர்களடங்கிய ஜாபிதா அரசருக்கு வாசித்துக் காண்பிவிக்கப்படுமென்றும் அந்தக் கடிதத்தில் கண்டிருக்கிறது.

### The Port of London.

**லண்டன் துறைமுகம்.**—லண்டன் துறைமுகத்தில் சில புதியதிருத்தங்களைச் செய்து அதைப் பலப்படுத்தும் பொருட்டு துறைமுக உத்தியோகஸ்தர்கள் ஆலோசித்திருக்கிறார்கள். இந்தத் திருத்தங்கள் இருபது வருஷகாலத்திற்குள் செய்துமுடிக்கப்படுமென்றும் அதன்பொருட்டாய் ஒருகோடியே நாற்பது லட்சம் பவுன் செலவு பிடிக்குமென்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள். தெம்ஸ் நதியை முன்னிலும் அதிக ஆழமாயும் அகலமாயும் வெட்டுதல், பாரிய கப்பல்கள் யாதும் தடையின்றித் தாராளமாய் வந்து நங்கூரமிட்டுத் தங்கும்பொருட்டாய் துறைமுகத்தை விசாலப்படுத்தல், இருப்புப்பாதை விஷயமாய்ச் சில புதிய முறைகளைக் கையாடுதல் ஆகிய இவைகளே புதிய திருத்த விஷயங்களைச் சேர்ந்த முக்கியமான விஷயங்களென்றும், இவைகளன்றி இன்னும் பல திருத்தங்களும் செய்யப்படுமென்றும் தெரியவருகிறது.

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

(தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்பட்ட வர்த்தக சங்கத்தாரின் பிப்ரவரியீ 15௳ ரிபோர்ட்டுப்படி.)

PIECE GOODS.

ஜவுளி ஸாமான்கள்.

சீமையில் பஞ்சாலைகள் வேலையாரம்பித்து விட்டபடியால் நாள் கழித்து அனுப்பவேண்டிய சரக்குகளுக்கு விலை குறைச்சலாய்ச் சொல்லுகிறார்கள். விலை குறைந்திருப்பதால் பட்டணத்து வியாபாரிகள் ஒப்பந்தம் செய்ய அஞ்சுகிறார்கள். மார்கெட்டில் கிராக்கி இல்லை. தோத்திகள் உபாயமாய் செலவாகி வருகின்றன. விலை விகிதங்கள் பின் வருமாறு:—

GREY SHIRTINGS—காடா.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| லேடி மார்க்கு. | | | |
| No. 1110—37×37½×46" .. | 7 | 12 | 0 |
| கூண்டு மார்க்கு. | | | |
| No. 2500—37×37½×41" .. | 5 | 14 | 0 |
| „ 3500 ஷை 46" .. | 6 | 10 | 0 |
| „ 7500 ஷை 54" .. | 7 | 15 | 0 |
| „ 5000 ஷை 41" .. | 6 | 2 | 0 |
| பறவை நாகம் மார்க்கு | | | |
| 37×37½×41" .. .. | 5 | 8 | 6 |
| மகிழ் அடிசேர்வை—பொன்னூல் தறி. | | | |
| No. 400—41" .. .. | 6 | 10 | 0 |
| 41" பொன்னூல் தறி. | | | |
| No. 3552 .. .. .. | 6 | 12 | 0 |
| „ 3553 .. .. .. | 6 | 15 | 0 |
| „ 3554 .. .. .. | 7 | 2 | 0 |
| „ 3555 .. .. .. | 7 | 5 | 0 |
| „ 3556 .. .. .. | 7 | 8 | 0 |
| No. 126—46"—37/7½ .. | 9 | 8 | 0 |
| பட்டைக்தறி. | | | |
| No. 7386—46"—37×37½ .. | 8 | 0 | |
| „ 7397—ஷை .. .. | 8 | 6 | |

GREY MULLS—காரிகம்பீஸ் (காஸாக்கச்சை).

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 20 கஜம் இஞ்சின் மார்க்கு. | | | |
| 20×20×46" .. .. | 4 | 5 | 6 |
| ஷை 51" .. .. | 4 | 13 | 6 |
| 22×22×51" .. .. | 5 | 5 | 6 |
| ஷை 46" .. .. | 4 | 13 | 6 |
| 20 கஜம் புறு மார்க்கு. | | | |
| 20×20×46" .. .. | 4 | 5 | 0 |
| தங்க மீன் மார்க்கு. | | | |
| ஷை .. .. | 4 | 5 | 0 |
| நுபா மார்க்கு. | | | |
| 40"—20×20 .. .. | 4 | 5 | 0 |
| 45"—22×22 .. .. | 4 | 13 | 0 |

BOOK MUSLINS.—புக் மஸ்லின்கள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| சந்து மார்க்கு 12 கஜம். | | | |
| 51"—94 .. .. .. | 4 | 0 | 0 |
| ஷை—95 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை—96 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை—97 .. .. .. | 4 | 12 | 0 |
| 52"—170 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை—175 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை—180 .. .. .. | 4 | 12 | 0 |
| ஷை—185 .. .. .. | 5 | 0 | 0 |
| ஷை—887 .. .. .. | 8 | 8 | 0 |

COLOURED BOOK MUSLINS—கலர் புக் மஸ்லின்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| ராணி மார்க்கு. .. .. | 2 | 12 | 0 |
| லக்ஷ்மி நாராயணன் மார்க்கு .. | 2 | 11 | 0 |
| பள்ளிக்கூடப் பையன் மார்க்கு .. | 2 | 10 | 0 |

JACONETS.—ஜாக்கிநேட்டுகள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 46" தங்க விநாயகர் மார்க்கு. | | | |
| No. 888 .. .. .. | 5 | 9 | 0 |
| „ 777 .. .. .. | 5 | 4 | 0 |
| „ 5005 .. .. .. | 4 | 11 | 0 |
| „ 6006 .. .. .. | 4 | 14 | 0 |
| „ 333 .. .. .. | 4 | 11 | 0 |
| „ 444 .. .. .. | 4 | 14 | 0 |
| 20 கஜம் 46" தங்கக் குழந்தை மார்க்கு. | | | |
| No. 2662 .. .. .. | 4 | 11 | 0 |
| „ 89 .. .. .. | 4 | 13 | 0 |
| „ 898 .. .. .. | 4 | 14 | 0 |
| „ 8989 .. .. .. | 5 | 1 | 0 |
| „ 89898 .. .. .. | 5 | 3 | 0 |
| „ 898989 .. .. .. | 5 | 5 | 0 |
| „ 3771 .. .. .. | 4 | 6 | 6 |
| „ 3772 .. .. .. | 4 | 8 | 6 |

WHITE MULLS—ஸலவை மல்லுகள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| No. 1703 .. .. .. | 7 | 4 | 0 |
| „ 1503 .. .. .. | 7 | 0 | 0 |
| „ 1502 .. .. .. | 6 | 2 | 6 |
| „ 1702 .. .. .. | 6 | 6 | 0 |
| „ 1704 .. .. .. | 7 | 8 | 0 |
| „ 136—40"—18 கஜம் .. | 2 | 2 | 0 |
| „ 9072—46" 20 கஜம் .. | 4 | 10 | 0 |
| „ 9073—51" ஷை .. | 5 | 2 | 0 |
| „ 5072—46" ஷை .. | 4 | 10 | 0 |
| „ 5073—51" ஷை .. | 5 | 2 | 0 |
| „ 912—46" ஷை .. | 4 | 9 | 0 |
| „ 913—51" ஷை .. | 5 | 1 | 0 |
| „ 3073 .. .. .. | 5 | 12 | 0 |
| „ 7073 .. .. .. | 5 | 13 | 0 |
| „ 973 .. .. .. | 5 | 13 | 0 |
| மெடல் மார்க்கு. | | | |
| „ 7773 .. .. .. | 6 | 4 | 0 |



| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸவரன் மார்க்கு. | | | |
| No. 273 .. .. .. | 6 | 5 | 0 |
| 72—46" 20 கஜம் .. .. | 4 | 2 | 0 |
| 73—51" ஷை .. .. | 4 | 10 | 0 |

WHITE SHIRTINGS—லாங் க்லாத்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| H. K. 62 36" 40 கஜம் .. | 9 | 0 | 0 |
| ஷை 82 ஷை .. | 9 | 4 | 0 |

RED SHIRTINGS—தோம்பு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்வதன்வா மார்க்கு. | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 6 | 4 | 6 |
| 7 ஷை .. .. .. | 6 | 8 | 6 |
| 8 ஷை .. .. .. | 6 | 12 | 6 |
| No. 10—41" 40 கஜம் .. .. | 8 | 3 | 0 |
| ஒட்டை மார்க்கு. | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 7 | 3 | 0 |
| 8 ஷை .. .. | 7 | 7 | 0 |

YARN AND TWIST—நூலும் முருக்கு நூலும்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஆமதாபாத் காரம் 40—சைனு டிக்கெட்டு—செகப்பும் மஞ்சள் முடியும். | 3 | 1 | 6 |
| பம்பாய் காரம் 40 டவர் அண்ட் ஸேட் மார்க்கு .. .. .. | 3 | 12 | 6 |

MANCHESTER YARN—சீமை நூல்.

சீமை நூலுக்கு கிராக்கியில்லை.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| காரம் 40 ஜி. எம். (G.M.) ட்ரம்மர் | 4 | 0 | 0 |
| ஷை க்ளாஸ்கோ .. | 4 | 3 | 0 |
| ஷை தங்கமயில் .. .. | 4 | 0 | 0 |
| ஷை மதுராபட்டணம் ஜி.எம். | 4 | 0 | 0 |
| ஷை பாக்கு வெட்டி .. | 4 | 1 | 0 |
| ஷை ஆதிசேஷன் .. | 4 | 2 | 6 |
| ஷை ஸலவை 80 மகாராஜா | 7 | 4 | 0 |
| ஷை 30 கெடிகாரம் .. | 4 | 0 | 0 |
| ஷை ஷை தண்ணித்துறை .. | 4 | 1 | 0 |
| „ 50 ம்யூல்-கிழவன் .. | 4 | 7 | 0 |
| „ ஷை ஷை 70/80 .. | 6 | 4 | 0 |
| 50 மீடியோ G. F. M. ஒட்டையும் யானையும் | 5 | 15 | 0 |
| 60 மீடியோ .. .. .. | 6 | 2 | 0 |

RED—செகப்பு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 60 இரட்டைமயில் .. .. | 8 | 12 | 0 |
| 40 முனிஸிபாலிட்டி (புல்வெயிட்) | 11 | 2 | 0 |
| 40 ஜே. ஆர். புத்தா .. .. | 6 | 0 | 0 |
| „ வில்லேஜ் 4 டிக்கெட்டு .. .. | 5 | 4 | 0 |
| „ ராவணேஸ்வரன் .. .. | 11 | 0 | 0 |
| „ அஹல்யை ராமர் .. .. | 10 | 15 | 0 |
| „ பொம்மி செட்டி .. .. | 10 | 14 | 0 |
| „ மோட்டார்கார் .. .. | 10 | 4 | 0 |
| „ போரா பஸார் .. .. | 6 | 1 | 0 |
| „ பூப்ஸானி இரண்டு கட்டு .. | 10 | 15 | 0 |
| 60 ஆதிசேஷன் .. .. | 8 | 8 | 0 |

YELLOW—அரை மஞ்சள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 42/40 இஞ்சின் .. .. | 4 | 11 | 0 |
| 40 ஸ்டீமர் .. .. | 4 | 13 | 0 |
| 44/40 யானை .. .. | 4 | 8 | 0 |
| 40 கெங்கை (ஜகன்மோஹினி) புல்வெயிட் | 4 | 13 | 0 |
| காசி ராஜா .. .. | 4 | 14 | 0 |
| 44/40 கிருஷ்ணன் .. .. | 4 | 8 | 0 |

LEMON AND ORANGE—கால் மஞ்சள் முழு மஞ்சள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 44/40 கால் மஞ்சள் கிருஷ்ணன் | 4 | 8 | 0 |
| „ முழு மஞ்சள் ஷை .. | 4 | 12 | 6 |
| 40 கால் மஞ்சள் கெங்கை .. | 4 | 12 | 0 |
| „ முழு மஞ்சள் ஷை .. | 5 | 0 | 0 |
| „ ஷை காசி ராஜா .. .. | 4 | 15 | 0 |
| 40 கால் மஞ்சள் ஸ்டீமர் .. | 4 | 12 | 6 |
| „ முழு மஞ்சள் „ .. | 5 | 2 | 0 |
| 30 காரம் சிங்கம் .. .. | 3 | 12 | 0 |
| „ ராஜா .. .. | 3 | 6 | 0 |

BLACK—கருப்பு.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 44/40 குதிரை .. .. | 4 | 12 | 0 |
| 30 ஸரஸ்வதி .. .. | 4 | 3 | 0 |

HIDES AND SKINS—மாட்டு ஆட்டுத்தோல்கள்.

சீமையில் சரக்கு அவ்வளவாக வாராததால் விலை ஏறிக்கொண்டேவருகிறது.

| | ரூ. | அ. | பை | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| மானு (மாட்டுத்தோல்) | | | | | | | |
| பல்லாரி .. .. | | | | | 0 | 14 | 0 |
| பங்களூர் கமேலா .. .. | | | | | 0 | 13 | 5 |
| ஷை உப்புத்தோல் | 0 | 12 | 8 | முதல் | 0 | 12 | 10 |
| ஹைதராபாக்கம் | 0 | 13 | 5 | முதல் | 0 | 13 | 6 |
| மட்வாடா .. .. .. | | | | | 0 | 12 | 8½ |
| ஏலூர் ரூஜமஹேந்திரபுரம் | 0 | 12 | 6 | முதல் | 0 | 12 | 7 |
| செட்டி கடல்கரை | 0 | 12 | 0 | முதல் | 0 | 12 | 6 |
| சீவரம் .. .. | | | | | 0 | 12 | 3 |
| குடியாத்தம் .. .. | | | | | 0 | 12 | 3 |
| பல்லாவரம் .. | 0 | 11 | 8 | முதல் | 0 | 11 | 9 |
| யேனு (எருமைத்தோல்) | | | | | | | |
| ராயதுர்க்கம் .. .. | | | | | 0 | 10 | 9 |
| பல்லாரி .. .. | | | | | 0 | 10 | 9 |
| பங்களூர் | 0 | 9 | 6 | முதல் | 0 | 9 | 8 |
| வெனு (வெள்ளாடு) | | | | | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | | | | | 1 | 8 | 2 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 6 | 6 |
| சேனு (செம்மரி ஆடு) .. | | | | | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | | | | | 1 | 6 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 0 | 6 |
| சேலம் | 1 | 9 | 0 | முதல் | 1 | 12 | 0 |
| மட்வாடா | 1 | 3 | 6 | முதல் | 1 | 5 | 0 |

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | .. 19 முதல் 25 |
| கொன்னைப்பட்டை ஷை | .. 14 |
| கடப்பை கடுக்காய் ஷை | .. 10 முதல் 11 |
| சேலம் அரசகிரிஷை ஷை | .. 20 முதல் 21 |
| நல்லெண்ணெய் ஷை | .. 110 |
| புங்கம் எண்ணெய் ஷை | .. 85 முதல் 95 |
| மணிலாக்கொட்டை பிண்ணாக்கு ஷை<br>முத்து கொட்டை பிண்ணாக்கு ஷை | வியாபார மில்லை. |
| எள்ளு | .. 17½ |
| எட்டிக்கொட்டை ஷை | .. 14 |
| உள்ளிப்பூண்டு ஷை | .. 40 |
| பூந்திக்கொட்டை ஷை | .. 10 |
| விளக்கெண்ணெய் ஷை | .. 87 முதல் 88 |
| மணிலாக்கொட்டை பருப்பு பாரம் 1-க்கு | 38 முதல் 39 |
| உடைக்காதது 42 மணங்கு | .. 61 முதல் 62 |
| கொட்டை முத்து 165 ராத்தல் | .. 11 0 0 |

| | ரூ. அ. பை. |
|---|---|
| ரங்கூன் அரிசி 63 படி | .. 11 0 9 |
| பந்தர் பச்சை அரிசி 44 படி | .. 7 8 0 |
| நெல்லூர் அரிசி 31 படி | .. 6 8 0 |
| கோதுமை 4 படி | .. 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் | .. 6 0 0 |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் | 13-8-0 முதல் 14. |
| ஷை (பல்லாரி) ஷை | 17 முதல் 18 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு ஷை | 22 0 0 |

METALS—லோகங்கள்.

| | ரூ. |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் | 203 |
| செப்பு தகடுகள் பாரம் | .. 245 |
| செப்புக்கட்டி ஷை | .. 210 |
| நாகம் ஷை | .. 82 |
| ஷை (உள்ளூர்) ஷை | .. 72 |
| ஈயம் ஷை | .. 52 |
| காரீயம் ஷை | .. 49 |
| வெள்ளீயம் ஷை | .. 180 வராகன். |

IRON—இரும்பு.

விலை ஏறும்போலிருக்கிறது. எல்லாரும் கேட்கிறார்கள்.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 நெம். பாரம் ரூ. | 20½ |
| சீமை .. .. .. | 42 |
| மருக்கி தகடு 6—9, 12—13, | 25—32 |
| பீப்பாய்க் கட்டு .. .. | 27 |
| 8 பட்டை எஃகு .. .. | 20—20½ |
| எஃகு வில்கட்டு .. .. | 27—31 |
| திராணைக் கம்பி மருக்கி 2 நெம். .. | 22 |
| சீமை ஷை .. ... .. | 40—49 |

SEASON.

காலஸ்திதி.

RAINFALL.

மழை.—1910௵ ஏப்ரல்௴ 1-உயிலிருந்து, சாளது௵மார்ச்சு௴ 1-உ வரையில் பெய்தமழை அளவும், இந்தக்காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாக குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 59·98 | 46·90 |
| வால்டேர் | 54·52 | 43·22 |
| காக்கிநாடா | 38·79 | 38·37 |
| மசூலிப்பட்டணம் | 48·48 | 40·78 |
| நெல்லூர் | 32·34 | 30·65 |
| மதராஸ் | 44·27 | 50·18 |
| கூடலூர் | 43·00 | 52·28 |
| நாகப்பட்டணம் | 46·56 | 55·04 |
| பாம்பன் | 25·09 | 38·25 |
| கொழும்பு | 64·33 | 85·14 |
| திருவநந்தபுரம் | 72·21 | 60·98 |
| கொச்சி | 120·14 | 113·46 |
| கள்ளிக்கோட்டை | 106·65 | 114·53 |
| மங்களூர் | 117·78 | 123·87 |
| மெர்க்காரா | 125·99 | 125·13 |
| ஐதராபாத் | 27·63 | 30·98 |
| ரெய்ச்சூர் | 54·52 | 43·20 |
| பல்லாரி | 25·70 | 19·59 |
| கர்நூல் | 28·29 | 27·99 |
| கடப்பை | 46·23 | 32·65 |
| ஹாஸ்ஸான் | 37·43 | 34·71 |
| பெங்களூர் | 46·04 | 34·58 |
| கொடைக்கானல் | 69·11 | 57·41 |
| உதகமண்டலம் | 58·26 | .. |
| கோயம்புத்தூர் | 22·31 | 20·40 |
| வேலூர் | 61·73 | .. |
| சேலம் | 41·81 | 39·85 |
| திருச்சிநாப்பள்ளி | 38·31 | 32·13 |
| புதுக்கோட்டை | 37·85 | .. |
| மதுரை | 39·29 | 32·82 |
| திருநெல்வேலி | 21·23 | 27·70 |

OFFICE OF ... REGISTERED ... 0 APR 1911 ... MADRAS

# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ, பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. ஸாதாரண௵ பங்குனி௴—MARCH 1911. ஸஞ்சிகை 3. No. 3.

## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page ... | ... 5 0 0 | per month. |
| ½ do ... | ... 2 8 0 | do |
| ¼ do ... | ... 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு | .. 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி | .. 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி | ... 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபர்தியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.
# PRACTICAL LIFE.

புஸ்தகம் 3 Vol. 3. | ஸாதாரணஸூ பங்குனிமீ—MARCH 1911. | ஸஞ்சிகை 3. No. 3.

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| **பத்திராதிபர் குறிப்புகள்** | |
| தேங்காய்—கல்யாண காலம்—தின்னக் கூடிய தவளைகள்—தானாக நீர் ஊற்றை அறிவிக்கும் கருவி—எலிமென்டரி அதாவது மூலாதாரப் படிப்பு—சாகப்போகும் யானைகள்—விதைகள். .. .. | 115–120 |
| **விசேஷ வியாஸங்கள்** | |
| குடிகளின் ஆதார அபிவிருத்தி —ஏ. ராமநாதன் .. .. | 121 |
| மூங்கிலும் அதன் உபயோகமும் —டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி .. | 123 |
| வாழை சாகுபடி —எஸ். சாம்பசிவய்யர் .. | 124 |
| பெலூன் கூண்டுகள் —எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ், எம். ஏ., எல். டி. .. .. | 127 |
| ஸம்யுக்தா வி. குப்புஸாமி அய்யர் .. .. | 130 |
| நம்முடைய பிரயாணியின் டையிரி | 133 |
| **விசேஷத்திரட்டு** | |
| ஐக்கிய நாணயச் சங்கங்க மசோதா | 137 |
| ஆட்டுக்கிடை மறித்தல் .. .. | 138 |
| முறைக்காய்ச்சல் .. .. | 140 |
| மணிலாக் கொட்டை சாகுபடி .. | 142 |
| உதவி செய்ய நேரும் சமயங்கள் .. | 144 |
| **பத்திரிகை ஆராய்ச்சி** | |
| கூட்டுறவினால் எரு ஸப்ளை செய்தல் | 145 |
| கைத்தொழில்கள் .. .. | 145 |
| சிக்கனம் .. .. | 146 |
| களை முளைத்தல் .. .. | 146 |
| தென்னிந்தியாக் கால்நடைகள் .. | 147 |
| **புஸ்தக ஆராய்ச்சி** .. .. | 148 |
| **சிறுவர் பகுதி** .. .. .. | 149–150 |
| **ஸ்திரீகள் பகுதி** .. .. | 151–152 |
| **பகுதிக் குறிப்புகள்** | |
| விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்—விநோதங்கள் .. | 153–162 |
| **மாஸ வர்த்தமானம்** .. .. | 163-165 |
| **மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. | 166-168 |


## CONTENTS.


| | PAGE. |
|---|---|
| **Editorial Notes** | |
| COCOANUTS—MARRIAGEABLE AGE—EDIBLE FROGS—AN AUTOMATIC WATER-FINDER—ELEMENTARY EDUCATION—DYING ELEPHANTS—SEEDS ... ... ... | 115-120 |
| **Special Articles** | |
| THE DEVELOPMENT OF THE RESOURCES OF THE RYOT | |
| A. Ramanathan ... ... ... | 121 |
| THE BAMBOO AND ITS USES | |
| T. S. Krishnamoorthy ... ... ... | 123 |
| PLANTAIN CULTIVATION | |
| S. Sambasiva Aiyar ... ... ... | 124 |
| BALLOONS | |
| M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T., *Assistant Professor of Physics, Presidency College, Madras* .. ... ... ... | 127 |
| SAMYUCTA | |
| V. Kuppusami Aiyar ... ... ... | 130 |
| OUR TRAVELLER'S DIARY ... ... ... | 133 |
| **Selections** | |
| CO-OPERATIVE SOCIETY BILL ... ... | 137 |
| SHEEP PENNING ... ... ... ... | 138 |
| MALARIA ... ... ... ... | 140 |
| GROUND NUT CULTIVATION .. ... | 142 |
| OPPORTUNITIES FOR DOING GOOD ... ... | 144 |
| **Review of the Press** | |
| Co-operative Supply of Manure ... ... | 145 |
| Industries ... ... ... ... ... | 145 |
| Economy ... ... ... ... | 146 |
| Growth of Weeds ... ... ... | 146 |
| South Indian Cattle ... ... ... | 147 |
| **Reviews of Books** ... ... ... ... | 148 |
| **The Boys' Section** ... ... ... | 149-150 |
| **The Ladies' Section** ... ... ... | 151-152 |
| **Departmental Notes** | |
| Agricultural Notes ... ... ... | 153 |
| Industrial Notes ... ... ... | 155 |
| Educational Notes ... ... ... | 156 |
| Scientific Notes ... ... ... | 157 |
| Medical Notes ... ... ... | 158 |
| Legal Notes ... ... ... | 159 |
| Personal Notes ... ... ... | 160 |
| Fun and Anecdote ... ... ... | 161 |
| Curiosities ... ... ... | 162 |
| **News of the Month** ... ... | ...163-165 |
| **Madras Market Reports** ... ... | 166-168 |




## EDITORIAL NOTES.
### பத்திராதிபர் குறிப்புகள்.

**Cocoanuts.**

தேங்காய்.—1908ம் வருஷத்தில் உலகத்தில் 30 லக்ஷம் ஏக்கராவில் தென்னை பயிராக்கப்பட்டிருந்ததாம். இதில் 22 கோடி மரங்கள் இருந்தன. அவைகள் 70 கோடி காய்கள் காய்த்தன. நல்ல மரங்கள் வருஷத்துக்கு 50 தேங்காய் முதல் 120 வரையில் காய்க்கும். சில மரங்கள் 250ம் காய்க்கும். ஸராஸரியில் மரமொன்றுக்கு 100 மேனிக்கு வைத்துக்கொள்ளலாம். நல்லகாய்ப்பு எட்டாவது வருஷம் முதல் நாற்பது வருஷம் வரையில்தான். ஆனால் மரம் எழுபது வருஷம் முதல் நூறு வருஷம் வரையில் உயிரோடிருந்து காய்த்துக்கொண்டேவரும். தென்னையால் அளவற்ற பிரயோஜனமுண்டு. 1883ம் வருஷத்தில் சில பேர்கள் கப்பலுடைந்து போய் ஒரு தீவில்தங்கி தேங்காயைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்காமல் அதைக் கொண்டே ஒரு மாதம்ஜீவித்துவந்தார்களாம்.

**Marriageable Age.**

கல்யாண காலம்.—நம்முடைய தேசத்தில் சிறு வயதிலேயே பெண்களுக்குக் கல்யாணம் செய்துவிடுவதால் அந்தப் பெண்கள் சீக்கிரத்தில் குழந்தைகளைப் பெற்று 25 வயதுக்கு முன்னால் கிழவிகளாய் விடுகிறார்கள். நாம் இப்படி இளம் வயதிலேயே பெண்களுக்குக் கல்யாணஞ் செய்ய, ஐரோப்பா முதலிய தேசங்களில் அநேகம் பெண்கள் 30, 35 வயதுவரையில்கூடக் கல்யாணமாகாதவர்களாயிருக்கிறார்கள்.

இப்படி இருப்பது பிசகே. காலா காலத்தில் கல்யாணமாகாவிட்டால் பெண்கள் நல்ல திடமுள்ள குழந்தைகளைப் பெறமுடியாது. ஹன்டர் என்னும் ஒரு டாக்டர் சொல்லுகிறார்:— 24 அல்லது 25 வயதில் தான் ஒரு பெண்ணுக்கு முதல் குழந்தை பிறக்க வேண்டும். அதற்குப் பிற்பாடு முதல் குழந்தை பிறந்தால் அது அவ்வளவு திடமாயிராது. 25 வயதில் முதல் குழந்தை பிறக்குமானால் போகப் போக ஒவ்வொரு பிரஸவத்தோடும் பின்னால் 37 வயதுவரையில் திடமான குழந்தைகள் பிறக்க ஹேதுவுண்டு. 37 வயதுக்கப்புறம் பிறக்கும் குழந்தைகள் அவ்வளவு திடமாக இரா.

**Edible Frogs.**

தின்னக் கூடிய தவளைகள்:—ப்ரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களில் தவளைகளைத் தின்கிறார்களென்றும், அவைகளை இந்தியாவில் வளர்த்து அந்த தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யலாமென்றும், 1909-ம் வருஷத்து ஆகஸ்டு மாஸத்து ஸஞ்சிகையிலும், 1910-ம் வருஷத்து ஏப்ரல் மாஸத்து ஸஞ்சிகையிலும், சொல்லியிருக்கிறோம். புதிதாய்ப் பிடித்துக் கருவாடுபோல் காய வைத்த தவளைகள் பர்மா கடைத் தெருக்களில் விற்கப் படுகின்றனவாம். சென்னப்பட்டணம் ம்யூஸியத்தின் ஸூபரின்டென்டா இருந்த டாக்டர் தர்ஸ்டன், கொச்சிக் கடைத் தெருவில் தவளை, விற்பனைக்குத் தொங்க விட்டிருப்பதைப் பார்த்ததாகவும், சொல்லியிருக்கிறார். மதராஸ், திருநெல்வேலி, புதுச்சேரி ஆகிய இந்தப் பட்டணங்களில் ஜனங்கள் தவளைகளைச் சாப்பிடுவதாகத் தெரிகிறது. இங்கே உபயோகப் படும் தவளைகளாவன:—பெரிய தவளை. பச்சைத் தவளை, சொரித் தவளை, மண் அல்லது மணல் தவளை. பெரிய தவளை விசேஷமாய் புதுச்சேரி சாப்பாட்டுக் கடைகளில் உபயோகப் படுத்தப் படுகிறது. பச்சைத் தவளை தென்னிந்தியாவில் எல்லாக் குளங்களிலும் ஸாதாரண

மாய் உள்ளது. சொரித் தவளை என்பது தேரை. இதைத் தொட்டால் சிரங்கு வருமென்று ஜனங்கள் எண்ணுவதால் அதற்கு சொரித் தவளை என்ற பெயர் ஏற்பட்டது. மண் தவளை அல்லது மணல் தவளை என்பது பூமியில் ஓட்டைகளில் புகுந்து ஜீவிக்கும் தவளைகளே. இவைகள் சாப்பிடுவதற்கு வெகு மதுரமாயிருக்குமாம்.

பர்மாவில் புதிதாய்ப் பிடித்த தவளையை அதன் கழுத்தையும் குடலையும் எடுத்துவிட்டு தண்ணீரில் வேகவைத்து, பிறகு தோலை உரித்து விடுவார்களாம். சில வேளைகளில் குடலை மட்டும் எடுத்துவிட்டு, இரண்டு மூங்கில்களுக்கு நடுவில் கொடுத்து சப்பட்டையாக்கி புகையில் வாட்டுவார்களாம். சாப்பிட வேண்டிய காலத்தில் அதை எடுத்து வறுத்தோ அல்லது வேறுபக்குவம் செய்தோ தின்னுவார்கள். ஒரு புகையிட்ட தவளையின் விலை ஸுமார் ஒரு அணு வாகும்.

**An Automatic Water-Finder.**

தானாக நீர் ஊற்றை அறிவிக்கும் கருவி:—1909-ம்௵ பிப்ரவரி, மார்ச்சு ௴த்து ஸஞ்சிகைகளில் இங்கிலாந்தில் லிவர்பூல் பட்டணத்தில் மான்ஸ்பீல்ட் கம்பெனியாரால் கண்டு பிடிக்கப்பட்ட தானாகவே நீர் ஊற்றைக் காட்டும் காந்த ஊசியைப்பற்றி, விரிவாய் எழுதி, அதில் பித்தலாட்டம் ஒன்று மில்லையென்று தோன்றினபடியால், நம்முடைய மதராஸ் கவர்ன்மெண்டார், அதைப்பற்றி தீர விசாரிக்க வேண்டுமென்றும், எழுதினோம். இரண்டு வருஷ காலமாகியும் இது விஷயமாய்க் கவர்ன்மெண்டார், இன்னம் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. நம்முடைய கவர்ன்மெண்டார் இப்படித் தூங்கிக்கொண்டிருக்க, பம்பாய் கவர்ன்மெண்டார், மேற் சொன்ன காந்த ஊசி ஒன்றைத்தருவித்து அதைக் கொண்டு பல பரிசோதனைகள் செய்து, ஒரு துண்டுப் பத்திரிகையும் வெளியிட்டிருக்கிறார்கள். புனாவில் விவஸாய காலேஜில் உத்யோகமாயிருக்கும் மிஸ்டர். எச். கே. மேத்தா என்பவர், பல சோதனைகள் செய்ததில், அந்தக் காந்த ஊசிக்கு உண்டென்று சொல்லும் குணங்களெல்லாம், அதற்கு அநேகமாயிருக்கிற தென்று தெரிகிறது. கிணறு வெட்டினால் ஜலம் ஊறாத இடங்களில், காந்த ஊசி ஜலம் இராதென்றே காட்டியது. நல்ல கிணறுகள் உள்ள இடங்களில்ஜலம் உண்டென்று காட்டியது. பூமியில் கீழ் நீரோட்ட முண்டென்று யோஜிக்கக்கூடிய இடங்களில், காந்த ஊசியும் அப்படி நீரோட்டமுள்ளதென்று காட்டியது. செய்த பரிசோதனைகளைக் கொண்டு, ஊசி ஜலமுண்டென்று, காட்டு மென்பதை நிச்சயமாகச் சொல்லமுடியாத போனாலும், அது காட்டுமிடங்களில் அநேகமாய் ஜலம் அகப்படுமென்று ஊகிக்கலாம்." சுலபமாய்த் தண்ணீர் அகப்படாத இடங்களிலுள்ள விவஸாயிகளுக்கு இப்படிப்பட்ட கருவியின் உபயோகத்தைப்பற்றி நாம் அதிகமாய் விவரிக்க வேண்டியதில்லை. நம்முடைய மாகாண கவர்ன்மெண்டில், இதை கவனிக்க வேண்டிய உத்தியோகஸ்தருக்கு, இந்தக் காந்த ஊசியைப் பற்றி அவ்வளவாக இது வரையில் நம்பிக்கை இல்லாமலிருந்திருக்கக்கூடும். பம்பாய் கவர்ன்மெண்டார், அதைப்பரிசோதித்துப் பார்த்து அதில் பிரயோஜன முண்டென்று சொன்ன பிறகாவது, நம்முடைய மாகாண கவர்ன்மெண்டார், ஒரு ஊசியை வாங்கியோ அல்லது பம்பாய் கவர்ன்மெண்டாரிடமிருந்து, இரவலாகத்தருவித்தோ கால தாமதமில்லாமல் நம்முடைய ராஜதானியிலும், பரீக்ஷைசெய்வார்களென்று நம்புகிறோம்.



**Elementary Education.**

எலிமேண்டரி அதவாது மூலாதாரப்படிப்பு.—"எண்ணு மெழுத்தும் கண்ணெனத்தகும்" என்னும் பழமொழி நம்முடைய தேசத்தார்கள் படிப்பின் மகிமையை நன்றா யறிந்திருக்கிறார்களென்று காட்டுகிறது. தவிர, கிராமங்களில் உள்ள அநேகம் ஜனங்கள், நிலம், வீடு இவைகளின் பேரில் கடன் வாங்கியோ அல்லது அவைகளை விற்றோ, தத்தம் பிள்ளைகளைப் பட்டினங்களுக்குக் கொண்டுபோய் வாசிக்க வைப்பதையும் நாம் பிரதியக்ஷமாகப் பார்க்கிறோம். படிப்பினால் ஜனங்களின், புத்தி கூர்மையும், பொருள் சம்பாதிக்கும் திறமையும், சுய நன்மை, பிறர் நன்மை இவைகளைப் பகுத்தறியும் சக்தியும், அதிகமாகி, மொத்தத்தில் ஜன ஸமூகத்தின் க்ஷேம லாபங்கள் அதிகரிக்க ஹேதுவாகிறது. இப்படிப்பட்ட நன்மைகள் உண்டாவதால் தேசத்திலுள்ள ஒவ்வொருவரும் படித்தவர்களாயிருப்பது அவசிய மென்பது ராஜ்யபாரம் வகிக்கும் நிர்வாகிகளுடையவும் அரசர்களுடையவும் கொள்கைகளா யிருக்கிறது. ஆகையால் நாகரிகமுள்ள ஒவ்வொரு தேசத்திலும் படிப்பு விஷயமாக எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்ளலாமோ அவ்வளவையும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். மேல்தரப் படிப்புக்கு ஒத்தாசைசெய்து வருவதோடுகூட அநேக தேசங்களில் மூலாதாரப் படிப்பைக் கட்டாயமாயும், இலவசமாயும் செய்திருக்கிறார்கள். படிப்பு விஷயத்தில் இதரதேசங்களோடு நமது தேசத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், மலையும் மடுவும் போலிருக்கிறது.

முதலாவது, எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் கணக்கை கவனிப்போம். ஐரோப்பாவில் நாகரிகத்தில் தாழ்ந்த தேசமாகிய ருஷியாவில் நூற்றுக்கு இருபது பேர்களுக்குத்தான் எழுதப்படிக்கத்தெரியும். மற்ற தேசங்களிலும், அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளிலும், கானடாவிலும், ஆஸ்ட்ரேலியாவிலும் அநேகமா யெல்லாரும் எழுதப்படிக்கத்தெரிந்தவர்களே. இந்தியாவிலோ வென்றால் நூற்றுக்கு ஆறு பேருக்குக்கூட எழுதப்படிக்கத் தெரியாது.

படிப்பின் அபிவிருத்தியை இன்னொரு விதமாகப் பரிசோதிப்போம். அதாவது, ஒவ்வொரு தேசத்திலுள்ள ஜனங்களுக்கும் அந்த தேசத்தில் பள்ளிக்கூடங்களில் போய்ப் படிக்கும் பிள்ளைகளுக்கும், தாமாஷா எப்படியிருக்கிறதென்று விசாரிப்போம். அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் 100க்கு 21 பேரும், கானடா, ஆஸ்ட்ரேலியா, ஸ்விட்ஸர்லாண்ட், இங்கிலாந்து, அயர்லாந்து, இவைகளில் 20 முதல் 17 பேரும், ஜெர்மெனி, ஆஸ்ட்ரியா ஹங்கேரி, நார்வே, ஹாலண்ட், இவைகளில் 17 முதல் 15 பேர்களும், ப்ரான்ஸ் தேசத்தில் 14 பேர்களுக்குக் கொஞ்சம் மேலும், ஸ்வீடனில் 14 பேர்களும், டென்மார்க்கில் 13 பேர்களும், பெல்ஜியத்தில் 12 பேர்களும், ஜப்பானில் 11 பேர்களும், இட்டாலி, க்ரீஸ், ஸ்பெயின் இவைகளில் 8 முதல் 9 பேர்களும், போர்த்துகல், ருஷ்யா இவைகளில் 4 முதல் 5 பேர்களும், பள்ளிக்கூடங்களுக்குப் போய் வருகிறார்கள். நம்முடைய இந்தியாவிலோ பள்ளிக்கூடத்தில் படிக்கிறவர்கள் நூற்றுக்கு இரண்டுபேர்கள் கூட இல்லை.

சில தேசங்களில் மூலாதாரப் படிப்பு கட்டாயமாயும் இனாமாயும் இருக்கிறது. இன்னம் சில தேசங்களில் அப்படிக்கட்டாயமல்லாமல் போனாலும் இனாமாகச் சொல்லி வைக்கிறார்கள். இந்தியாவிலோ வென்றால் மூலாதாரப் படிப்பைக் கட்டாயப் படுத்தவு

மில்லை, இனாமாகச் சொல்லிவைக்கவுமில்லை. இங்கிலாந்து, ப்ரான்ஸ், ஜெர்மெனி, ஸ்விட்ஸர்லண்ட், ஆஸ்ட்ரியா-ஹங்கரி, இட்டலி, பெல்ஜியம், டென்மார்க்கு, நார்வே, ஸ்வீடன், அமெரிக்கா ஐக்கிய நாடுகள், கானடா, ஜப்பான் இந்த தேசங்களில், 6 முதல் ♃ வருஷம் வரையில் மூலாதாரப் படிப்பைக் கட்டாயப் படுத்தி இனாமாகச் சொல்லிவைக்கிறார்கள். ஹாலண்டில் மூலாதாரப்படிப்பு கட்டாயமாயிருந்த போதிலும் இலவசமில்லை. ஸ்பெயின், போர்த்துகல், க்ரீஸ், பல்கேரியா, ஸெர்வியா, ருமேனியா, இந்த தேசங்களில் இலவசமாகச் சொல்லி வைக்கிறார்கள். இவைகளில் கட்டாயமென்று பேர் மாத்திரமே தவிர வாஸ்தவத்தில் கட்டாயப் படுத்திச் சொல்லிவைப்பதில்லை. துருக்கிதேசத்திலும் இப்படியேதான். ருஷ்யா தேசத்தில் கட்டாயமாயில்லாமல் போனாலும் அநேகமாய்ப் பணம் வாங்காமலே சொல்லிவைக்கிறார்கள்.

மூலாதாரப் படிப்புவிஷயமாய்ச் செலவாவதைப்பார்த்தால் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் நபர் ஒன்றுக்கு ரூ. 12 ஆகிறது. ஸ்விட்ஸர் லண்டில் ரூ. 10-4-0வும், ஆஸ்ட்ரேலியாவில் ரூ. 8-7-0 வும், இங்கிலாந்தில் ரூ. 7-8-0 வும், கானடாவில் ரூ. 7-4-0 வும், ஸ்காட்லாந்தில் ரூ. 7-3-0வும், ஜெர்மெனியில் ரூ. 5-2-0 வும், ஐர்லெண்டில் ரூ. 4-13-0 வும், ஹாலெண்டில் ரூ. 4-12-6 வும், ஸ்வீடெனில் ரூ. 4-3-0 வும், பெல்ஜியத்தில் 4-0-0 யும், நார்வேயில் ரூ. 3-13-0 வும், ப்ரான்ஸ்தேசத்தில் ரூ. 3-10-0 வும், ஆஸ்ட்ரியாவில் ரூ. 3-5-6 யும், ஸ்பெயினில் 1-6-6 யும், இட்டலியில் ரூ. 1-3-6 யும், ஸர்வியா, ஜெப்பான் இவைகளில் ரூ. 0-14-0 வும், ருஷ்யாவில் ரூ. 0-7-6 வுமாக இருக்கிறது. நமது இந்தியாவிலோ ஒரு அணாக்கூட நபர் ஒன்றுக்குச் செலவு செய்கிறதில்லை. மேற்சொன்ன விவரங்களால் படிப்பு எவ்வளவு உபாய மாயிருக்கிற தென்று தெளிவாய் ஏற்படுகிறது. பொது ஜனங்கள் படிப்பில்லாதவர்களா யிருப்பதால் உண்டாகும்கஷ்டங்களை உத்தேசித்து இந்தியாராஜாங்க சட்டநிரூபண ஸபைமெம்பராகிய கனம் கோக்லே அவர்கள் மூலாதாரப்படிப்பைக் கூடிய வரையில், பரவச்செய்வதற்கு ஒரு மசோதாச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த மசோதாவின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

இந்தியாவிலுள்ள முனிஸிபாலிட்டிகளும் ஜில்லா போர்டுகளும், அவரவர்களுடைய மாகாண கவர்ன்மெண்டாரின் அநுமதிபெற்று மேல் சொன்ன சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டுவரும் பக்ஷத்தில் ஒவ்வொரு பையனுடைய தாயோ தகப்பனோ, அல்லது போஷகனோ, அந்தப் பையன் 6, வயதுக்குமேல்பட்டு, 10 வயதுக்கு உட்பட்டிருக்கும் பக்ஷத்தில், அவனை, கவர்ன்மெண்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு ப்ரைமரிப் பள்ளிக்கூடத்துக்கு அநுப்பவேண்டும். ஆனால், பையன் வீட்டிலிருந்து ஒருமைல் தூரத்துக்குள் பள்ளிக்கூடமில்லாமல் போனாலாவது, பையன் வியாதியாயிருந்தாலாவது, அல்லது வீட்டில் வீட்டுவேலை இருந்தாலாவது, நாற்று நடவு வேலை யிருந்தாலாவது, பையனுக்கு வேறு விதமாய்ப் படிப்பு சொல்லிவைத்தாலாவது, ஆகிய இப்படிப்பட்ட முகாந்திரங்கள் இருந்தால்தான் பள்ளிக்கூடத்துக்குப் பையனை அநுப்பாமலிருக்கலாம். பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டிய பையனை ஒருவனும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளக்கூடாது. வேண்டுமானால் படிப்புக்கென்றே, ப்ரத்யேகமாக ஒரு வரி விதித்து அந்த வரி வரும்படியைக்



கொண்டு, முனிஸிபாலிடிகளும், ஜில்லா போர்டுகளும், பள்ளிக்கூடங்கள் அமைக்கலாம். தாய் தகப்பனுக்குப் பத்து ரூபாய் மாஸ வரும்படி யில்லாமல் போனால் அவர்களுடைய பையனின் படிப்புக்காக ஒருவித சம்பளமும் வாங்கக் கூடாது.

ஒவ்வொரு முனிஸிபாலிட்டியும், ஜில்லா போர்ட்டும், "ஸ்கூல் அட்டெண்டன்ஸ் கமிட்டீ" என்பதாக சில பேர்களைக்கொண்டு அந்தந்த, முனிஸிபாலிட்டி ஜில்லாபோர்டுகளுடைய ஆதீனத்துகுள்பட்ட படிக்கவேண்டிய பையன்களெல்லோரும் பள்ளிக்கூடத்துக்குப் போய் வருகிறார்களா வென்று பார்த்து வரச்செய்யலாம். இப்படிப் படிக்கவேண்டிய பையனொருவன் பள்ளிக்கூடம் போகாதபட்சத்தில், அவனுடைய தாய் தகப்பனைக் கண்டித்து அவசியமானால், மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் புகார் செய்யலாம். அந்த மாஜிஸ்ட்ரேட் விசாரித்து பையனைப் பள்ளிக்கூடத்துக்கு அநுப்பும்படி, பெற்றோர்களுக்குக் கட்டளையிடுவார். கட்டளைப்படி நடக்கத்தவறும் பெற்றோர்களுக்கு இரண்டு ரூபாய்வரையில் அபராதம் போடலாம். மறுபடியும் உத்தரவை நிராகரிக்கும் பக்ஷத்தில் 10 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம்.

படிக்க வேண்டிய பையனை வேலையில் அமர்த்திக் கொள்ளுகிறவனுக்கும் ரூபாய் 20 வரையில் அபராதம்போடலாம். முனிஸிபாலிட்டிகளும், ஜில்லாபோர்டுகளும் மகாண கவர்ன்மெண்டாருடையவும், இந்தியா கவர்ன்மெண்டாருடையவும் உத்தரவைப் பெற்று மேற்சொன்னபடியே, பெண்கள் படிப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யலாம்.

இந்த மசோதாவை இந்தியா சட்டஸபையில் இந்தியப்ரதிநிதிகளெல்லாரும் அங்கீகரித்துப் பேசினார்கள். கவர்ன்மெண்டாரும் மூலாதாரப்படிப்புவிஷயத்தில் ரொம்ப கவனமுள்ளவர்களாயிருப்பதாகவும் சொன்னார்கள். ஒரேதடவையாய் இந்தியாமுழுவதும் எலிமெண்டெரிப்படிப்புக்கு வேண்டிய ஸ்கூல்களை அமைப்பதற்கு அளவற்ற திரவியம்வேண்டும் கவர்ன்மெண்டார் முழுமனது வைத்தாலுங்கூட அவர்களால் முடியாதகாரியம். கிராமாந்தரங்களிலுள்ள கூலியாட்களின் பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி ஸ்கூலுக்கு அநுப்பிப் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் பட்சத்தில் அந்தப் பிள்ளைகள் தத்தம் தாய்தகப்பன் மாருக்கு உதவி செய்து ஸம்பாதிக்கும் வரும்படி நின்று போய் அதனால் ஏழைக் குடும்பங்களுக்கு அவஸ்தை நேரிடும். இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படாமலிருக்கும் பொருட்டுத்தான் காலக்ரமத்தில்சிறுகச்சிறுக ஸ்கூல்களை அமைத்து ஜனங்களுக்குக் கஷ்டம்நேரிடாமல் மூலாதாரப்படிப்பை விருத்தி செய்ய உத்தேசம். மேல் சொன்ன மசோதா அமுலுக்கு வரும் பட்சத்தில்மொத்தத்தில் ஜன ஸமூகத்துக்கும் தேசத்துக்கும் க்ஷேமமுண்டாகுமே ஒழிய யாதொரு கஷ்டமும் உண்டாகாது.

**Dying Elephants.**

சாகப்போகும் யானைகள்.—காடுகளில் ஒரு யானை இறந்த இடத்திலேயே வேறு யானைகளும் சாகுங்காலத்தில் போய் செத்துப் போமாகும். இதனால் என்ன ஆகிறதென்றால் ஒரு இடத்தில் ஒரு யானை எலும்பு தும்பிக்கை முதலியவைகள் அகப்படும் பக்ஷத்தில் அங்கேயே வெட்டிப்பார்த்தால் அவைகளைப் போல அநேக எலும்புகளும் தும்பிக்கைகளும் அகப்படுமாம்.

விதைகள்.—நெல்லிக் குப்பத்துக் கடுத்த பாலூர் ஸர்க்கார் விவசாயப் பண்ணையில் விலைக்கு கொடுக்கும் விதைகளின் விவரம் பின்வருமாறு

| தொகை. | தினுசு. | விதைக்கும் காலம். | பயிரின் வயசு. | ரூபாய்க்கு எத்தனை படி வீதம். | ஷரா. |
|---|---|---|---|---|---|
| 1 | கம்போடியாப் பருத்தி ... | ஆவணி, புரட்டாசி. | 9 மாதம் | ஒரு ராத்தல் 9 பை வீதம். | விதை, ஜூலை மாதத்தில் கிடைக்கும். |
| 2 | கம்பு—நாட்டு தினுசு ... | ஆனி, ஆடி ... | 76 நாள் | 8 படி வீதம். | |
| 3 | கம்பு—நீண்ட கதிர் ... | ஷை | 95 நாள் | ஷை | |
| 4 | கம்பு—குட்டைக்கதிர் ... | ஷை | ஷை | ஷை | |
| 5 | மணிலாக்கொட்டை—இறைப்புக் கொட்டை | தை, மாசி ... | 5 மாதம் | 6 மரக்கால் (10 படி) | |
| 6 | மணிலாக்கொட்டை-மானவாரி. | ஆடி, ஆவணி ... | $4\frac{1}{2}$,5 மாதம் | ஷை | |
| 7 | முத்துச் சோளம்—ப்ரஜீல் தேசத்துச் சோளம், இறைப்புச் சோளம். | மார்கழி, தை ... | 100 நாள் | ......... | விதை கொஞ்சம் தானிருக்கிறது. |
| 8 | முத்துச்சோளம்—ப்ரஜீல் தேசத்துச் சோளம், மானவாரி. | ஆனி, ஆடி ... | ஷை | ......... | |
| 9 | முத்துச் சோளம்—ஹிக்கரிகிங்கு, இறைப்பு. | மார்கழி, தை ... | ஷை | ......... | |
| 10 | முத்துச் சோளம்—ஹிக்கரிகிங்கி, மானவாரி. | ஆனி, ஆடி ... | ஷை | ......... | |
| 11 | நெல்—ஸ்வர்னவாரி ... | சித்திரை, வைகாசி | 3 மாதம் | 10 படி | |
| 12 | நெல்—ராஸ்காடம் ... | வைகாசி, ஆனி ... | ஷை | 8 படி | |
| 13 | நெல்—பங்கு ... | ஷை | 4,$4\frac{1}{2}$ மாதம் | 10 படி | |
| 14 | நெல்—கருடன் சம்பா, விதைப்பு | ஆடி, ஆவணி ... | $5\frac{1}{2}$,6 மாதம் | ஷை | |
| | நெல்—கருடன் சம்பா, நடவு. | ஆவணி, புரட்டாசி | ஷை | ஷை | |
| 15 | நெல்—மிளகு சம்பா, நடவு ... | ஷை | ஷை | ஷை | |
| 16 | நெல்—சின்னச் சம்பா ... | ஷை | ஷை | ஷை | |
| 17 | நெல்—சிவப்புச் சிறுமணி ... | ஷை | ஷை | ஷை | |
| 18 | நெல்—வெள்ளைச் சிறுமணி ... | ஷை [கை. | ஷை | ஷை | |
| 19 | நெல்—சடைச் சம்பா ... | அற்பிசி, கார்த்தி | 5 மாதம் ... | ஷை | |
| 20 | கேழ்வரகு—60 நாள் பயிர் ... | மார்கழி, தை ... | 3 மாதம் ... | 8 படி. | |
| 21 | சணப்பு ... | உழவுக்கு 2 மாதம் முந்தி | 2 மாதம் ... | படி 3 அணா வீதம் | பசுந்தாளுக்கான பயிர்கள். |
| 22 | தக்கைப்பூண்டு—வங்காளத்துத் தக்கை. | உழவுக்கு 3 முதல் 4 மாதம் முந்தி. | 3, 4 மாதம். | படி 6 அணா வீதம் | |
| 23 | தக்கைப்பூண்டு நாட்டுத் தக்கை. | சேடை வைப்பதற்கு 4 அல்லது 6 மாதத்திற்கு முந்தி. | 4, 6 மாதம். | படி 7 அணா வீதம் | |



## THE DEVELOPMENT OF THE RESOURCES OF THE RYOT.

BY

A. RAMANATHAN.

## குடிகளின் ஆதார அபிவிருத்தி.

மேல் நாடுகளில் பயிர்த் தொழில் விசேஷ அபிவிருத்தியை அடைந்து வருகிறது. அமெரிக்கா கண்டத்தில் காடுகளைக் களைந்து சீர்படுத்தியும், மலைப் பிரதேசங்களை பயிர் செய்ய ஒழுங்கு படுத்தியும், ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மனிதர்களுக்கு உபயோகப்படும்படி செய்துவருகிறார்கள். இத்துடன், காப்பிச் செடி பயிரிடக்கூடிய இடங்களில் காப்பித் தோட்டங்களையும், ரப்பர் பயிர் செய்யக் கூடிய இடங்களில் ரப்பர்த்தோட்டங்களையும், கோகோ பயிருக்கு எடுத்த நிலங்களில் கோகோவையும் ஏராளமாய்ப் பயிர்செய்கிறார்கள். அப்போதைக்கப்போது பயிரிடுந்தொழிலுக்கு வேண்டிய ஆயுதங்களையும், எந்தெந்தப் பயிருக்கு எவ்வித எரு வேண்டுமோ அதையும், குடிகளுக்குத் தெரிவிக்க விவஸாய சங்கங்கள் அங்கங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த சங்கங்களின் கடமைகள் என்னவென்றால் :

1. பயிர்த் தொழிலுக்கு வேண்டிய உபகரணங்களைச் சுலபமான விலைக்குக் குடிகளுக்குவாங்கிக் கொடுத்தல்,

2. விலையுயர்ந்த பயிரிடுங் கருவிகளை, 8 அல்லது 10 குடிகளுக்குப் பொதுவில் வாங்கிக் கொடுத்தல்,

3. குடிகளுடன் கலந்து அவர்கள் பயிரிடும் தானியங்களை விற்றல்,

4. விவசாய பாங்கிகள் ஏற்படுத்தி அவைகள் மூலமாய்க்குடிகளுக்குக்கடன் கொடுத்து, பேராசையுள்ள லேவாதேவி செய்பவர்களின் கொடுமைகளிலிருந்து அவர்களை விலக்கல்,

5. பயிரிடுங் குடிகளின் நன்மைகளையே எப்பொழுதும் முதன்மையாக பாவித்தல்.

அவர்கள் இத்தகைய சங்கங்கள் பெரியவைகளாயிருந்தால் காரியங்களை ஸரிவர நடத்துவது கஷ்டமென்றும், ஆதலால் கிராமச்சங்கங்களை ஏற்படுத்தி அங்கங்குள்ள தேவைகளை அவரவர்களே பார்த்து சரிப்படுத்துவதே உத்தமமென்றும், கிராமச்சங்கங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இத்துடன் கிராமச்சங்கங்கள் அநேகம் சேர்ந்து ஜில்லாச்சங்கங்களாக ஏற்பட்டிருக்கின்றன. எல்லாச்சங்கங்களின் நோக்கமும் காரியமும் ஒன்றுதான்.

நம்முடைய தேசத்திலோ பயிரிடுங் குடிகளில் 100-க்கு 99 பேர் கல்வி கற்றவர்களல்லர். அறியாமையால் புராதன பயிரிடும் வழிகளையே அனுஸரித்து வருகிறார்கள். புதிதான விவஸாய மாறுபாடுகளைச் சொன்னால் அவைகளால் எள்ளளவேனும் பிரயோஜனமில்லை யென்று அவர்கள் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு வழிகாட்டும் விதம் ஒன்றுதான். அது யாதெனில், நஞ்சை, புஞ்சைநிலங்களுடைய ஒருவன் கல்வி கற்றவனாயிருப்பதுடன், உத்தியோகம் வெளியில் தேடாமல் கிராமத்திலேயே இருந்து நிலத்தை அபிவிருத்தி பொருந்திய கருவிகளைக் கொண்டு உழுது செவ்வைபாய்ப் பயிரிட்டு ஸகோதர பயிராளிகளைக் காட்டிலும் வெகுவாய் பலன் அடைந்தால் தான் மற்றவர்களும் இவன் வழியில் நடக்க முயலுவார்கள். கற்றவன் பயிரிடத் துணியாவிட்டால் கல்லாதவர்களுக்கு யார் தான் வழிகாட்டுவார்கள். பயிரிடுதலை ஸரிவரப் பார்த்து வந்தால் உத்தியோகத்தைக் காட்டிலும் பயிர்த்தொழில் அதிக

மாகவே பலன் கொடுக்குமென்பதற்கு ஸந்தேக மில்லை.

நம்மவர்கள் போலவே ஜப்பான் தேசத்தாரும் முதலில் சாஸ்திர முறைப்படி பயிர் செய்யாமலிருந்தார்கள். என்றாலும், அவர்கள் வெகு சீக்கிரத்தில் இதர தேசங்களில் செம்மையாய்ப் பயிர் செய்யும் வழிகளை கற்றுக்கொண்டு மேல் நாடுகளாகிய அமெரிக்கா ஐரோப்பா முதலியகண்டங்களில் வழங்கிவரும் வழிகளையெல்லாம் கொஞ்சமேனும் மாறுபாடில்லாமல் அனுஷ்டித்து வருகிறார்கள். ஆகையால் ஜப்பானியர் ஒருவிதப் பயிரன்றி பலவிதப் பயிர்களை எழுப்பிப் பலவித தானியங்களைப் பெறுகிறார்கள். நம்தேசத்தவர்கள் சில பயிர்கள்தான் எழுப்பக் கற்றிருக்கிறார்கள். அதையும் நன்றாய்ச்செய்ய அவர்களுக்கு நுட்பம் போதாது. இவ்வித மூடத்தன்மையிலிருந்து அவர்களை அறிவுள்ளவர்களாகச் செய்வது நம்முடைய கடமை. நாம்ஒன்று சேர்ந்து ப்ரயத்தனம் செய்தால் ஸர்க்காரும் நமக்குப் போதுமான உதவி செய்வார்கள்.

நம்முடைய தேசத்தில் குடிகளின் நன்மையை எவ்விதத்தில் தேடலாம்? இதர தேசங்களிலிருக்கும் சங்கங்களைப்போல் நம் தேசத்திலும் ஏற்படுத்த இயலுமா? பலர் இது முடியாதென்றும், குடிகளுக்குள் ஐக்கியம் இல்லையென்றும், அப்படி ஏற்படுத்த முயன்றாலும் முடிவில் அபஜெயமடைய வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அடியில் வரும் அம்சங்களைப் படித்தால் இப்படிப்பட்ட ஸந்தேகங்களுக்கு கொஞ்சமேனும் இடமில்லை யென்று நன்றாக உள்ளங்கை நெல்லிக் கனிபோல் புலப்படும்.

1. ஒவ்வொரு கிராமத்திலும் குடியாதார ஸபை இருக்கவேண்டும்.

2. இந்த ஸபையில் கிராமத்தலைவன், கௌரவஸ்தர்கள், இன்னும் சிலர் கூடியிருக்கவேண்டும். ஸபையில் குறைந்தபக்ஷம் பத்துப்பேர் இருக்கவேண்டும்.

3. ஸபையின் மெம்பர்கள் ஒவ்வொருவரும் நபருக்கு 50 ரூபாய் போட்டு பாங்கி ஒன்று ஏற்படுத்த வேண்டும். பாங்கியிலிருந்து பணம் வேண்டிய குடிகளுக்கு அப்போதைக்கப்போது கொஞ்சங் கொஞ்சம் பணம் குறைந்த வட்டிக்குக் கொடுக்க வேண்டும்.

4. கடன்வாங்கின குடிகளை அவர்கள் காட்டும் வழியில் பயிர் செய்யும்படி நிர்ப்பந்தித்தல் அவசியம்.

5. மாதமொருமுறையாவது கனத்த குடிகளையாவது சேர்த்து, மாடுகள், அவைகளைக் காப்பாற்றும் முறை, விதை, விதையைத் தேர்ந்தெடுத்தல், வேலியிடும் வகை, எருச்சேர்த்தல், நீர்பாய்ச்சுதல், முதலிய விஷயங்களைப் பற்றி சொல்லிக்கொடுத்தல் மிகவும் அவசியம்.

விவஸாயத்தை அபிவிருத்தி செய்வதில் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள டிஸ்ட்ரிக்ட் போர்ட், தாலூக்கா போர்டுகளும் கிராமச் சங்கங்களுக்கு அப்போதைக்கப்போது திரவிய ஸகாயம் செய்வதுடன் மேல்விசாரணையும் செய்து வருவது நல்லது. ஏனென்றால், கிராமச்சங்கங்களுக்கு போதுமான பணம் இல்லாவிட்டால் ஷை போர்டுகள் ஸகாயம் செய்து வந்தால் சங்கத்தார்க்கு கஷ்டம் இராது. ஆனாலும் கிராமத்தின் நன்மையைக் கோருவது கிராமத்தார்க்கே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கடன் அதிகரித்துவிடும். கடனில்லாமல் காரியங்களைப் பார்த்து வருவதுதான் சிரேஷ்டம். கவர்ன்மெண்டார் இன்னொரு விதத்திலும் உதவி செய்யலாம். யாதென்றால் அன்னிய தேசங்களில் லாபத்துடன் பயிரிடும் வழிகளைப்பற்றி சிறு சிறு உபந்யாஸங்கள் எழுதி அனேக பாஷைகளில் மொழி பெயர்த்து படிக்கக் கூடிய குடிகளுக்கெல்லாம் கொடுத்தல் வேண்டும். அப்படி கிராமச்சங்கங்களே செய்ய முடியாதோ என்றால் முடியாது, ஏனென்றால், பல தேசங்களில் செய்யும் விதங்கள் அவர்களுக்குத் தெரியாது. கவர்ன்மெண்டார் எளிதில் அந்த ஸமாசாரங்களை அறிந்துகொள்ள முடியும். குடிகளின் நன்மையை நாடியவர்கள் கவர்ன்மெண்டார். ஆகையால், நிலவரி வசூல் விஷயமாய் மணியக்காரன், ரிவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் முதலிய சிப்பந்திகளை ஏற்படுத்தி எப்படி பணம் வசூல் செய்கிறார்களோ அம்மாதிரியேதான் கவர்ன்மெண்டார் அவர்களைப் பயிரிடும் வழியைக் குடிகளுக்கு அறிவிக்கும்படி ஏற்பாடுகள் செய்வதுடன் ஷை உத்தியோகஸ்தர்கள் கிராம தணிக்கைக்குப் போகும் பொழுதெல்லாம் குடிகளை ஒன்று சேர்த்து அவர்களுக்குப் பயிரிடும் விதங்களை அடிக்கடி போதித்தலும் அவர்களுடைய கடமை என்று உத்திரவளித்தல் மிகவும் நல்லது. கிராமத்தில் சிலர் சொல்வதைக் கேட்பதைவிட ஷை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சொல்வதை குடிகள் கண்டிதமாய் கேட்பார்களென்பதற்கு ஸந்தேகமே இலலை. எல்லா ரிவின்யூ அதிகாரிகளும் தக்க முயற்சி செய்து குடிகளை முன்னுக்கு கொண்டு வருதலுடன், நாட்டுக்குடிகளில் ஒவ்வொருவனும் தன்னால் முடியும் மட்டும் ஸகோதர குடியானவனை விருத்தி யடையும்படி செய்தால் மாத்திரம் நிலம் நாளுக்கு நாள் பலன் அதிகம் கொடுக்கும்.

ஏ. ராமநாதன்.



# THE BAMBOO AND ITS USES.

BY
T. S. KRISHNAMOORTHY.

## மூங்கிலும் அதன் உபயோகமும்.

இந்தியாவைப் போன்ற உஷ்ண ப்ரதேசங்களில் மிகுதியாய்க் காணப்படும் மூங்கில், மனிதர்களுக்கு எவ்வளவு பிரயோசனமானதென்று எவரும் சொல்லாமலே அறிந்து கொள்ளலாம். அதன் ஒவ்வொருபகுதியும் ஜனங்களுக்குப் பலவிதங்களில் உபயோகப்படுகிறது. மூங்கிலை இந்தியா முதலிய தேசத்தவர்கள் கூடைகள் முடையவும், தட்டுகள் பின்னவும், வீடுகளின் கூரைகளுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். சீனா முதலிய தேசங்களிலே ஜனங்கள் மூங்கிலினால் விளக்குக் கூண்டுகளும், தேயிலை, காப்பி, இவைகள் பானம் பண்ண உபயோகமான பாத்திரங்களும், கடுமழையிலும் தாங்கக்கூடிய உரப்பான குடைகளும், உடைகளும், சிப்பம் முதலியன கட்டுங்கயிறுகளும், செருப்புகளும், செய்ய உபயோகப் படுத்துவதுடன் மற்ற வீட்டுக்கு உபயோகமான ஸாமான்களும் செய்ய மூங்கிலை உபயோகப் படுத்துகிறார்கள்.

சீனாவில் மூங்கிலின் உதிர்ந்த இலையைக் கூட விடுவதில்லையாம். அதையும் எடுத்துக் குவித்து, தேயிலை முதலியவைகளைக் கட்டிப் பிறதேசங்களுக்கனுப்ப உபயோகிக்கிறார்கள். அந்த தேசத்தில் மூங்கிலைப்பிளந்து அதனுள்ளிருக்கும் சோற்றை எடுத்துப் பக்வப்படுத்தி மெல்லியதும் வழவழப்புமான காகிதங்கள் செய்து அதை சீனிவெடிக்கட்டு முதலியவைகள் செய்வதிலும், விளக்குக் கூண்டுகள் செய்வதிலும், உபயோகப் படுத்துகிறார்கள். மூங்கிலின் இளங்குருத்துக்களை சீனர் ஜப்பானியர் தின்கிறார்கள்.

முந்நாட்களில் இந்தியாவின் காடு மலை ப்ராந்தங்களிலிருந்த ஜனங்கள் மூங்கிலையே யெல்லாவற்றிற்கும் உபயோகித்தார்கள். "மூங்கிலில் முத்துப்பிறக்கும்" என்பதும் அதன் உயர்வைக் கருதியேபோலும், மூங்கில்களிலிருந்து உதிரும் பூவைக் குத்தி எடுத்த அரிசியும், உட்குடைவுள்ள மூங்கில் துண்டும், அவர்களுக்கு முறையே உணவு பதார்த்தமாயும், போஜன பாத்திரங்களாயும் பயன்பட்டன. இதரமரங்களிலும் இம்மாதிரிக் காகிதஞ்செய்ய உபயோகமாகும் ஸத்து இருக்கிறதானாலும், மூங்கில், உஷ்ணதேசத்தில் மிகுதியாயும் செழிப்பாயும் வளருவதால் அதையே பலரும் உபயோகிக்கிறார்கள்.

அம்மாதிரி மூங்கில் காகிதம் நம்நாட்டிலும் செய்யப்படவேண்டுமென்னும் கவலை நம் இந்தியர்க் கில்லை; சிலருக்கு இருந்தாலும் இன்னும் அவர்கள் அவ்வாறு செய்ய முன்வந்தபாடில்லை என்றே நாம் வருந்துகிறோம். ஜப்பானில் வீடுகள் மூங்கிற் காகிதத்தினாலேயே கட்டப்படுகின்றன வென்றால், அந்நாட்டில் மூங்கிலின் உயர்வை என்னென்று சொல்வது? இவ்வாறு எல்லாப்பயனுக்கும் உதவும் இம்மூங்கிலை "பூவுலக கற்பகம்" என்றாலும் ஏற்காதோ? அதன் உபயோகம் தெரியாமல் மயங்குபவர்கள் அதை அலக்ஷ்யம் செய்வார்களேயன்றி மற்றெவரும் அதை அலக்ஷ்யம் செய்யமாட்டார்கள். "ஆற்று நிறையப்பாலோடினும் அத்தனையும் அருந்த எவர்க்கும் இயலுமோ" என்பதொப்ப, இம்மூங்கிலின் உயர்த்தியான உபயோகங்களை அறியாத மனிதர்கள் அதனை அலக்ஷ்யம் செய்து அதனால் வெகுநஷ்டமடைகிறார்கள். பிறதேசத்தவர் தமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் பொருள்களைக் கொண்டு கையால் உழைத்துப் பாடுபட்டு லாபம் அடைந்து மேன்மை பெற்றிருக்க, நாம் மாத்திரம் உண்டுறங்கி, இருந்தவிடம் விட்டெழாமலிருத்தல் தகுமோ? என்பதை மனதிற்கொள்ளும் இந்தியரே நாட்டின் நலங்கருதுபவராவர்.

கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி.

## PLANTAIN CULTIVATION.

BY

S. SAMBASIVA AIYAR.

## வாழை சாகுபடி.

வாழைகளின் தினுசுகளைப்பற்றிப் "பிழைக்கும் வழி"யின் இரண்டு ஸஞ்சிகைகளில் எழுதப் பட்டிருந்தது. அவைகளில் இன்னபடி சாகுபடி செய்கிறதென்று காணப்படவில்லை. தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களில் விசேஷமாயும், மஞ்சகுப்பம் ஜில்லாவில் சில தாலூக்காக்களில் அதிகமாயும் அநேகமாய் சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. மலையாளம் ஜில்லாவிலும், மதுரையைச் சேர்ந்த மலைப்பிர தேசங்களிலும், சாகுபடி செய்யப்படுகிறது. இதர ஜில்லாக்களில் அவ்வளவு இல்லையென்று தெரியவருகிறது.

நன்செய், புன்செய் இரண்டு நிலங்களிலும் சாகுபடி செய்யலாம். முன் செய்நேர்த்தி, தண்ணீர் இறைப்பு, எருவிடுதல் முதலியவைகளை நான் செய்து அனுபவித்த பலனை இப்பொழுது எல்லோரும் அடையவேணுமென்கிற எண்ணத்துடன் 'பிழைக்கும் வழி' மூலமாய் ஏழைக் குடிகள் பிழைக்கும் மார்க்கத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியதற்காக வெளிப்படுத்துகிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவில் காவேரியோரமுள்ள எல்லாக் கிராமங்களிலும் வாழை ஏராளமாய் சாகுபடியாகிறது. பூவன், மொந்தன், ரஸ்தாளி, பேயன் முதலிய தினுசுகள் நன்செயிலும் புன்செயிலும் சாகுபடி செய்யப்படுகின்றன.

செவ்வாழை, கருவாழை, தேன்வாழை, முதலியவைகள் கொடிக்காலிலும் நத்தக் கொல்லையிலும் நன்றாய்ப் பயிர்ஆகும். வாழை இரண்டு தடவை அதாவது ஆடிப் பட்டம் (சூன் சூலை மாதத்திலும்) தைப் பட்டம்



(டிசம்பர் ஜனவரி மாதத்திலும்) பயிர் செய்யப்படுகிறது. ஆடிமாதத்தில் புதைக்கிற கண்களைத் தலையரியாமல் புதைக்கிறதும், தை மாதத்தில் தலையரிந்து புதைக்கிறதும் வழக்கம். வாழைக்கண்களைப் பேர்த்தவுடன் புதைப்பது சிலாக்கியம். 10 தினம் கிடந்து புதைத்தாலும் கெடாது.

நான் சென்ற 1909 ௵ டிசம்பர் ௴ முதலில் கும்பகோணம் பாலக்கரைக்கு ஸமீபமாயுள்ள புன்செய் காவேரிப் படுகையில் சுமார் 90 குழி 30 (ஸெண்டு) நிலத்தை இரண்டு கொட்டு ஆழம் வெட்டி, 4 ஸமபட்டமாய்ப் பிரித்து, அதாவது நடுமத்தியில் கிடங்கு அறுத்து மூன்று அடி ஆழம் குழி தோண்டி சுமார் 325 வாழைக் கண்களைப் புதைத்தேன்.

அதே ஊரில் படுகையில்லாத ஒரு நல்ல அறுபது குழி புன்செயில் மேல்கண்ட விதமே குழிவாங்கி 220 கண்களைப்புதைத்தேன்.

கண்கள் புதைக்கும்போதும் வெட்டி வாங்கும்போதும் நான் கிட்டயிருந்து வேலைவாங்கினேன். வேலையாள்களெல்லாம் இரண்டாவது புன்செய் படுகையைவிட, மண் திறமென்றும் வாழை நன்றாய்ப் பயிராகுமென்றும் சொன்னார்கள்.

நான் முன்கண்ட படுகையில் ஒரு பட்டத்தில் மிளகாயும் ஒரு பட்டத்தில் கீரையும் மற்ற இரண்டு பட்டங்களில் கோடைப் பரங்கிக்காயும் வாழை புதைத்த ஒரு மாஸத்துக்குள் பயிர் செய்தேன். கீரை தெளித்த இரண்டு மாஸத்துக்குள் பிடுங்கி விடும்படி ஏற்பட்டது. மிளகாய் பரங்கி இவைகளுக்கு ஜலம் ஜாஸ்தி தேவை யானதால் முதல் இரண்டு மாஸத்துக்குத் தோண்டியில் யெடுத்துக் கொட்டி பிறகு பாத்தி கட்டி வாரம் ஒருமுறை ஜலம் இறைத்து வந்தேன். மிளகாயும் வேண்டியது கிடைத்தது. பரங்கிக்காயும் தாராளமாய் அகப்பட்டது. மிளகாயையும் பரங்கிக்காயையும் உத்தேசித்து இறைத்த தண்ணீர், வாழைக்கு உபயோகப்பட்டு அது சென்ற சித்திரை வைகாசி இந்த மாஸங்களில் முன் நாலு வருஷத்தில் ஏற்பட்ட கடுங்கோடையை லக்ஷியம் பண்ணாமல் நன்றாய்க் கிளைவிட்டது. கீரை பிடுங்கி ஜலம் விடாத இடத்தில் ஒரு வாழைக் கட்டைகூட இல்லை. மற்ற மூன்று பட்டங்களிலும் வாழை நன்றாய்க் கிளம்பி ஒவ்வொரு கண்களுக்கும் 4, 5 சிங்கங்களுக்குமேல் வெடித்து சென்ற ஜூலை மாஸம் முதல் வேண்டிய இலை அகப்பட்டு வருகிறது. அநேகமாய் ஆகஸ்டு மாஸத்துக்கு முந்தியே சில வாழைகள் நன்றாய்த் தார் வாங்கி விட்டன. டிஸம்பர் மாஸத்துக்குள் தார் வெட்டப்பட்டது. மிளகாய் பரங்கி இவைகளுக்கு ஜலம் இறைக்கும்போது பார்த்தவர்கள் வாழைக்குத் தண்ணீர் இறைத்தால் கல்லுளி தாக்கிவிடுமென்று சொல்லி என்னைத் தடுத்து பயமுறுத்தினார்கள். கல்லுளி என்றால், வாழை சூம்பிப் போய் இலை குச்சி தட்டி தார்விட கஷ்டப்பட்டு, இரண்டு அலலது மூன்று சீப்புகள் வைத்திருக்கும், அல்லது சீப்பே இல்லாமலுமிருக்கும். பரங்கியும் மிளகாயும் பயிர் செய்துவிட்டபடியால் அவர்கள் பேச்சைக் கேழ்க்காமல் தண்ணீர் இறைத்துவந்தேன்.

கல்லுளி தாக்குவதென்றால், வாழைக்குத் தண்ணீர்கட்டி அதாவது படுகை ஓரத்தில் ஜலம் ஜாஸ்தியாய்ப் பெருகி அந்த ஜலம் வடிய இடமில்லாமல் கிழங்கு முதல் பூமிக்கு மேல் 20,25 நாள் வரையில் ஜலமிருந்தால் கல்லுளிதாக்குகிறதென்கிறது நிச்சயம். அதற்காகத்தான் வாழையைச் சுற்றிலும் 6 அடி ஆழம் 3 அடி அகலம் குழி வெட்டி கிடங்கின்மேல் ஜலம் வராமல் வடிகால்

வசதியும் ஏற்படுத்துகிறது வழக்கம். இந்தக் கிடங்குகளில் ஜூன், ஜூலை மாஸங்களில் படுகையில் ஜலம் வந்தால் அது தங்கி பக்கங்களிலுள்ள வாழைகளுக்கு நைப்பு ஏற்படுகிறது.

இந்தக் கிடங்குகளில் கொல்லையில் வெட்டப்படும் சருகு மட்டை தண்டுரிக்கிற வாழை இவைகளெல்லாம் போடப்பட்டு வண்டல் ஜலம் அவைகளோடு சேருவதால் அவைகள் அழுகி மண்ணோடு மடிகின்றன.

இந்தக்கிடங்குகளிலிருந்து, தைமீ முதல் 3மீ த்துக்கு ஒரு முறை வாழை கொத்தவேண்டிய காலத்தில் வேண்டிய மண் எடுத்து அணைத்தால் எருவாகிறது. வாழைக்கொல்லையில் ஜலம் தங்காமல் கிடங்கு வழியாய் வடிகட்டி கிடங்கு மட்டத்துக்குக் கீழ் வடியாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது.

நான் அறுபது குழி புன்செய்யில் புதைத்த வாழையில் கோடையில் ஜலம் இறைக்க ஏற்படும்போதெல்லாம் என்னோடு கூட இருந்தவர்கள் தடுத்தபடியால் ஜலம் இறைக்க கூடவில்லை. இப்போது (ஆகஸ்டு) அதில் ஒரு கண்கூட காணப்படவில்லை.

ஆகையால் வாழைக்கு கோடையில் தண்ணீர் இறைக்கவேண்டியது முக்கியமென்று ஏற்படுகிறது.

இந்த ஜில்லாவில் புன்செயிலும், நன்செயிலும் கொஞ்சம் மேடு பண்ணியும், நத்தக் கொல்லையிலும் ஒருதரம் வாழை சாகுபடி செய்தால் அவைகள் அநேகமாய் முப்பது வருஷங்களுக்குமேல் இருக்கின்றன.

அதினாலேயே தான் "வாழையடி வாழை" என்ற பழமொழியும் ஏற்படுகிறது. பட்டிச் சாணமும், சாம்பலும், வாழைக் கிடங்கிலிருக்கிற மண்ணும், தகுந்த எரு. திருச்சினாப்பள்ளியில் நன்செயில் ரஸ்தாளி வாழை சாகுடி செய்யப் படுகிறது. அதை 3 வருஷத்துக்கு ஒருமுறை அழித்து வருகிறார்கள். அந்தப் பழத்தில் இந்த ஜில்லாப்பழத்தை போல ருசி இல்லை. ஆனால் பார்வைக்கு மாத்திரம் பகட்டாய் இந்தப் பழங்கள் ரெயில் மார்க்கமாய்ப்பட்டணம் முதலிய இடங்களில் ஏராளமாய் செலவாகிறதைப் பார்க்கலாம்.

மஞ்சகுப்பம் ஜில்லாவில் பச்சை வாழையென்ற ஒரு தினுசு பயிர் செய்கிறார்கள். ஒரு தரம் தார் வாங்கினால் பிறகு அழித்து விடுகிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கிற வாழை இதர ஜில்லாக்களில் வாழை இல்லையென்றாலும் தஞ்சாவூர் ஜில்லா மிராசுதாரர்களும் குடிகளும் நன்றாய் கவனித்துப் பயிர் செய்கிறதில்லை. வாழைகளின் எல்லா அம்சங்களும் ஜனங்களுக்கு இன்றியமையாதவைகள். சில காய்களை நறுக்கிக் காயவைத்து மாவரைத்து நல்ல வியாபாரம் செய்யலாம். நார் பூக்கட்டவும், இப்போது ஏற்பட்டிருக்கிறபடி வஸ்திரங்கள் நெய்யவும் உதவும். வாழையைச் சுற்றி 12 அடி உயரத்துக்கு மூங்கில் படல் கட்டி, கொடிக்காலில் எப்படி தென்னங்கீத்துகளால் மறைப்பு கட்டுகிறார்களோ அந்த மாதிரி செய்தால் கோடையில் எதிர்பாராமல் வருகிற காற்றுக்கும், மேகத்துக்கும் ஆடிக் காற்றுக்கும் சேதமில்லாமல் இருக்கும்.

இதைக் கொஞ்சம் கவனித்தால் லாபமுண்டு. வாழை சிங்கம் வெடிக்க ஆரம்பித்த உடனே சிங்கத்திலிருக்கிற இலைகளை சாண் விட்டு அறுத்து விடலாம். தார் வாங்கியவுடன் பயிர்க் கண்ணைவிட்டு இதர கண்களில் இலை அறுக்க வேணும் தைமாஸத்தில் ஒருதடவை கண்ணை தலை அரிந்து பயிர்க் கண்ணை விட்டு இதர கண்களைப் பேர்த்து வேறு இடத்தில் புதைக்கவேணும். கொல்லையை மூன்று மாஸத்துக்கொருதரம் கொத்தி வரவேணும். ஆடி மாஸத்தில் தலையரியாமல் பேர்த்துவிட வேண்டியது.

தார்வாங்கி பூரா சீப்பு விட்டவுடன் பூவை வெட்டிவிட வேண்டியது. அப்பொழுதுதான் காய் சுரக்கும். தார்வாங்கிய மரத்தை சிலர் வெட்டி யெடுத்துக்கொள்ளுகிறார்கள். அது சுத்த பிசகு. அதை அப்படியே வைத்து அழுகிய பிறகு மட்டைகளை கிடங்கில் போட்டு மடியச் செய்யவேண்டும. இது நல்ல எரு. இது தெரியாமல் கட்டைகளை வெட்டக் கூடாது.

எஸ். சாம்பசிவம்.



## BALLOONS.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAO, M. A., L.T.,

## பெலூன் கூண்டுகள்.

(All rights reserved.)

சென்ற மாசி மாதத்திய ஸஞ்சிகையில் 'அம்மியாழ சுரை மிதப்பதேன்?' என்னும் வியாஸத்தில், ஜலம் தன்னில் அமிழ்த்தின வஸ்துக்களை மேலே தள்ளுகிற தென்றும், இந்த சக்தி எல்லா த்ரவங்களுக்கும் உண்டென்றும், இது வஸ்துவின் பளுவைவிட பெரியதாயின் அவ்வஸ்து மிதக்கும் என்றும் விவரித்தோம். பூகோளத்தில் பாதிக்குமேல் ஜலம் மூடிக்கொண்டிருக்க, பூமி முழுவதையும் வாயு மண்டலம் சூழ்ந்து கொண்டிருக்கிறது. இம்மண்டலம் ஸுமார் 200 மைல் உயரம் பரவியிருக்கிற தென்று தெரியவருகிறது. வாயுவும் ஜலத்தைப்போல் பளுவுள்ளதே. ஆனால் ஜலத்தைவிட அதிக லேசானது. 12 கன அடி இடத்தை அடைத்துக் கொள்ளும் வாயுவின் பளு சற்றேறக் குறைய ஒரு பவுண்டுள்ளது. அதே அளவுள்ள ஜலம் 750 பவுண்டு நிறை யுள்ளது. ஜலம் பாத்திரத்தின் அடித்தட்டை அழுத்துவது போல், வாயுத் தட்டுகளின் எடையால் வாயு மண்டலம் பூமியை அழுத்துகிறது. ஜலத்தில் நீந்தும் மீன்களைப்போல் பக்ஷிகள் ஆகாயத்தில் பறக்கின்றன. சமுத்திரத்தின் அடியில் கிடக்கும் வஸ்துக்களைப்போல் பூமியின்மேல் படிந்திருக்கும் ஸாமான்கள் ஆகாய மண்டலத்தின் கீழ்த்தட்டில் இருக்கின்றன.

### ஆர்க்கிமீடீஸ் விதி.

ஜலத்தில் உள்ள வஸ்துக்களெல்லாம் எடை குறைவதை ஆர்க்கிமீடீஸின் பொது விதியால் கண்டுகொள்ளலாமென்று நாம் தெரிந்து கொண்டோமே. அம்மாதிரி ஆகாயத்தில் உள்ளவைகளும் தங்கள் எடையில் குறையுமோ? ஆர்க்கிமீடீஸ் விதியைப் போன்ற பொது விதி ஏதேனும் ஆகாயத்திற்கும் உண்டோ என்னலாம். இது சம்பந்தமாய் அநேக நிரூபணங்களைச் செய்து வாயுவுக்கும் மிதத்தும் சக்தி உண்டென்றும், அச்சக்தி ஸாமானின் கன அளவுள்ள வாயுவின் எடைக்கு ஸமமான தென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆதலால் 12 கன அடி பருமனுள்ள ஒரு பொருள் ஆகாயத்தில் தன் எடையில் ஒரு பவுண்டு குறையும். அப்பொருள் வாயுவில்லாத இடத்தில் 10 பவுண்டு உள்ளதென்று தோன்றினால், வாயுவுள்ள இடத்தில் 9 பவுண்டு எடையுள்ளதாகும். ஒரே எடையுள்ள கார்க் என்னும் ஒரு தக்கைத் துண்டையும், ஒரு இரும்புக் குண்டையும் நாம் ஒப்பிட்டால், கார்க் பெரியதாயும் இரும்பு சிறியதாயும் தோன்றுமல்லவா? கார்க்கை இரும்பைவிட அதிக சக்தியுடன் வாயு மேலே தள்ளவேண்டியதுதானே? இவ்விரண்டையும் வாயு இல்லாத ஓர் இடத்தில் எடைபோட, ஆகாயத்தின் மிதத்தும் சக்தி பலிக்காததால், கார்க் இரும்பைவிட பளுவுள்ளதாகக் காணும் அல்லவா? ஒரு தராசுக் கோலின் ஒரு ஓரத்தில் ஒரு கார்க் துண்டைக் கட்டி அதை இரும்புகுண்டால் தடைகட்டி, இந்தத் திராசை ஒரு கண்ணாடி ஜாடியில் வைத்து, அதிலுள்ள வாயுவை ஏர்பம்ப் என்னும் காற்றுவாங்கி யந்திரத்தால் வெளியே இழுத்துவிட, கார்க்கைத் தாங்கிய ஓரம் கீழே தாழ்ந்து போவதை நாம் காணலாம். காற்றடிக்கும்போது காகிதம் முதலான லேசான பண்டங்கள் மேலே எழும்புவது இச்சக்தியால் அல்ல; ஆற்றில் கட்டை அடித்துக்கொண்டு போதல்போல், காகிதம் காற்றின் விசையால் காற்றடித்த பக்கம் செல்லுகிறது.

விளக்குக் கூண்டு.

ஒரு வஸ்து தானாக தரையில் படியாமல் ஆகாயத்தில் மிதக்கவேண்டுமானால், ஜலத்திற்குச் சொன்னபடியே அந்த வஸ்துவின் எடையும் அதன் பரிமாணமுள்ள வாயுவின் பளுவும் ஸமமாயிருக்கவேண்டியதுதானே? அந்த வஸ்துவின் பாரம் குறையுமானால் அது மேன்மேலும் பறந்து உயரச் செல்லும் அல்லவா? இம்மாதிரியான இவ்வளவு லேசான வஸ்துக்களும் உண்டோ? சூடாகிய காற்று ஸாதாரணக் காற்றைவிட மெலிந்ததும் எடையிற் குறைந்ததுமாகையால் அடுப்புகளிலிருந்து புறப்படும் காற்று மேலே கிளம்புகிறது. அது கரித்தூள்களையும் சாம்பல் பொடிகளையும் அடித்துக்கொண்டு மேலே செல்லும். இதைப்புகை என்கிறோம். சிம்னியுள்ள விளக்குகளில் சூடுள்ள வாயு நிறமற்று இருப்பதால் மேலே செல்லுவது நமது கண்ணுக்குத் தென்படுவதில்லை. கையை சிம்னிக்கு மேலே பிடித்தால் சூடான வாயு மேலே கிளம்புவது நன்றாய்த் தெரியும். புகை வண்டிக் குழாய்களிலிருந்தும், மில் என்னும் யந்திர சாலைகளிலுள்ள உன்னதமான புகைப் போக்கிகளிலிருந்தும், வெளியேறும் கரிப் புகை மேகங்களெல்லாம் கரித்தூள் கலந்த சூடுண்ட காற்றே. இக்காற்றுக்குளிர, கரித்தூள்களெல்லாம் நாளடைவில் பூமியில் படிகின்றன. உஷ்ணமான வாயுவை உள்ளடக்கிய பெரிய மெல்லிய காகிதக் கூண்டுகள் அக்கூண்டு அடைத்துக்கொள்ளும் இடத்திலுள்ள வாயுவின் பளுவைவிட குறைவாயிருக்கும். இம்மாதிரிக் கூண்டுகள் மேலேசெல்லும். திருவிழாக்களிலும் மற்ற வேடிக்கை காலங்களிலும் இப்புகைக்கூண்டுகளை பறக்கவிட்டு ஜனங்கள் சந்தோஷப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். இக்கூண்டுகளில் உள்ள வாயு சூடாகியிருக்க விளக்குகள் வைத்திருப்பார்கள். விளக்கு அணையுமானால் உள்ளேயுள்ள காற்று குளிர்ந்துபோகும். அப்பொழுது கூண்டின் பளுவும் அதிகரித்து, மேலே ஏறச் சக்தியற்றதாகி கூண்டு கீழே விழுந்துவிடும்.

பெலூனுக்கு உதவும் வாயுக்கள்.

ஆகாயத்தைவிட லேசான வாயு பதார்த்தங்கள் அநேகம் உள. ஜலத்தின் அம்சமாகிய ஹைட்ரோஜன் என்னும் ஜலவாயு இவற்றில் ஒன்று. இது ஆகாயத்தைவிட 14 மடங்கு லேசானது. நிலக்கரியிலிருந்து தயார் செய்யும் கோல் காஸ் என்பது மற்றொன்று. நிலக்கரி அதிகமாய்க் கிடைக்கும் மேல் நாட்டுப் பட்டணங்களில் வீடு வீடாய் ஜலக்குழாய்கள் போல் குழாய்கள் போட்டு இவற்றின் வழியாய் தயார் செய்யுமிடத்திலிருந்து இந்த வாயுவைக் கொணர்ந்து விளக்குகளுக்காகவும் சமையல் அடுப்புகளுக்காகவும் உபயோகப் படுத்துகிறார்கள். இந்த வாயு ஆகாயத்து வாயுவைவிட சுமார் 3 மடங்கு லேசானது. சென்னை இருப்புப்பாதை ரெயில் வண்டிகளில் உபயோகிக்கும் விளக்குகள் காஸ் விளக்குகளே. இதில் எரியும் காற்றை கெரோஸின் எண்ணெயிலிருந்து தயார் செய்கிறார்கள். இதுவும் ஆகாயத்து வாயுவைவிட லேசானதே. ஆதலால் இக்காற்றுகள் அடங்கிய பாத்திரங்களை வாய் மேல்நோக்கும்படி பிடித்தால் மிதப்பதின் பொது விதியிற் கூறிய படியே, இவை மேலேசெல்ல பாத்திரங்களில் ஸாதாரண ஆகாய வாயுவே நிரம்புகிறது. திடபாதார்த்தங்களிலும் த்ரவ பதார்த்தங்களிலும் ஆகாய வாயுவைவிட லேசானது ஒன்றும் கிடையாது. திட பதார்த்தம் ஒன்றிருந்தால் அதை தெப்பமாகக் கட்டிக்கொண்டு ஆகாய மண்டலத்தில் உல்லாஸமாய் உலாவலாமே? ஆதலால் முன் கூறிய லேசான வாயு பதார்த்தங்களை வைத்து உள்ளடக்கி கூடுகள்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
20 APR 1911
MADRAS.



**BALLOON.**
பெலூன் கூண்டு.



**PARACHUTE.**
பாரச்சூட்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 20 APR 1911 MADRAS.

கட்டியேதான் நாம் ஆகாயத்தில் மிதக்க எத்தனிக்கவேண்டும். பெலூன் ஓட்டை கொஞ்சமேனு மில்லாத லேசான மெழுகு பூசிய பட்டுத்துணியால் பெரிய பையொன்றைத் தைத்து அதை வாயுவால் நிரப்பி வைக்க, அது உப்பி அதிக இடத்தை அடைத்துக்கொள்ளும். ஸாதாரண வாயுவாய் நிரப்பினால், பை எவ்வளவு பெரியதானாலும், அது அடைத்துக் கொள்ளும் இடத்திலுள்ள வாயுவின் எடையைவிட பளுவாக இருக்கும். லேசான வாயு நிரைந்து இருந்தால், அதன் எடை குறையும்படி செய்யலாம். அப்போது இக்கூண்டு மேலே கிளம்பிச் செல்லுமல்லவா? இம்மாதிரி கட்டிய கூண்டுகள் பெரியவையானால் எடை வித்தியாஸம் அதிகமாவதால் மனிதர்களும் அக்கூண்டுகளில் ஏறிச்செல்லலாம். மனிதர்கள் ஏறிச் செல்லும் பெலூன் கூண்டை அநேகர் பார்த்திருக்கலாம். இதிலுள்ள பை கொஞ்சங்கூட ஓட்டை யில்லாததாக இருக்கவேண்டும். மிகச்சிறிய துவாரம் இருந்தாலும், 'எரும்பு ஊரக் கல்லும் தேயும்' என்கிறபடி அதின் வழியாக லேசான காற்று இடை விடாமல் வெளியே சென்றுகொண்டிருக்குமாகையாலும் ஸாதாரண வாயு உட்புகுந்தாலும் பையின் பாரம் அதிகரித்துக்கொண்டே வரும். பையின் கன அளவுள்ள வாயுவின் எடையைவிட அதிகரிக்குமானால் பைமேலே கிளம்பாமல் கீழே இறங்கும் இக்கூண்டுகளில் நிரப்பும் காற்றுகள் எல்லாம் எளிதில் தீப்பற்றி எரியும் தன்மையுடையனவாகையால் இவைகளின் பக்கத்தில் விளக்குகளைக் கொண்டுபோக வேண்டியிருந்தால் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். பெரிய கூண்டுகளைக் கட்டி அவற்றைச் சுற்றிலும் மெல்லிய பலமான கயிறு வலை போட்டு அதிலிருந்து லேசான தொட்டில் ஒன்று கட்டித் தொங்கவிட்டால அது மனிதர்கள் உட்கார்ந்து செல்லத் தகுந்த இடமாகும். மூன்று பேரைத்தாங்கக் கூடிய பெலூன் 16 கஜம் உயரமும் 12 கஜம் குறுக்களவும் உள்ளதாய் இருக்கவேண்டும்!

பெலூன்கூண்டு மேலே ஆகாயத்தில் செல்லச் செல்ல உப்பும். இப்படி உப்பி பை கிழிந்துபோகாமல் காற்று வெளியே செல்லும்படியாக ஒரு த்வாரம் பையின் கீழ்பக்கம் இருக்கும். இந்த த்வாரம் அல்லது வாய் மேல் நோக்கும்படியாக கூண்டு திரும்பினால் உள்ளே உள்ள லேசான காற்று வெளியே செல்ல, ஆகாய வாயு நிரம்பும். ஆகையால், இக்கூண்டு காற்றடிப்பதாலும் மற்ற காரணங்களாலும் தலைகீழாகத் திரும்பாதபடி தக்க ஏற்பாடு செய்திருப்பார்கள். இக்கூண்டிற்குமேல் நோக்கி எழும்பும் சக்தி ஒன்றுதான் உண்டு. காற்றடிக்கும் திசையிலே இது மிதந்து செல்லும்.

பாரச் சூட்.—

பெலூனில் ஏறிச்செல்பவன் கீழே வருவது எப்படி? ஒரு கல்லை நாம் கைவிட்டால் அது உடனே தரையைச் சேருகிறது. ஒரு காகிதத்துண்டை விட்டால் அது தள்ளாடிக் கொண்டு கொஞ்சம் தாமதமாய் பூமியை அடைகிறது. அக்காகிதத்தைச் சுருட்டிப் போட அது சீக்கிரம் விழுந்துவிடுகிறது. ஆதலால் எந்த ஸாமானுக்கும் மேல் பரப்பு அதிகமானால், அதன்மேல் படும் வாயு அதிகரிப்பதால் அதன் வேகம் தடைபடுகிறது. பைஸிக்ளின்மேல் ஸவாரி செய்கிறவன் வேகமாய்ப் போகும்போது படுத்துக் கொண்டாற்போலப்போவது வாயுவின் ப்ரிக்ஷன் அதாவது உரஞ்சுவதால் உண்டாகும் காற்றின் எதிர்க்கும் சக்தியை குறைப்பதற்கேயல்ல

வா?. மெல்லிய துணியால்செய்த குடையுறை போன்ற பையின் விளிம்புகளிலிருந்து மெல்லிய நூல்களைக் கட்டித் தொங்கவிட்டு அக்கயிறுகளின் மற்றொரு நுனிகளைச் சேர்த்து முடியிட்டு அதிலிருந்து ஒரு சிறிய கல்லைத் தொங்கவிடுங்கள். இத்துணிப்பை கைவிட்டதும், விரிந்து காற்றடைத்துக் கொள்கிறது. ஆதலால் கல் மெதுவாய் கீழே இறங்குகிறது. இப்பை பெரியதானால் மனிதனையும் தாங்கும்படியான சக்தி யுடையதாயிருக்கும். பெலூனிலிருந்து கீழே இறங்க இம்மாதிரியான பாரச்சூட் என்னும் மெல்லிய பட்டுக்குடையொன்றை உபயோகிக்கிறார்கள். இக்குடையின் மையத்தில் காற்றுச்செல்ல ஒரு சிறு த்வாரம் இருக்கும். ஒரு மனிதனைத் தாங்கக்கூடிய பாரச்சூட் 16 அடி குறுக்களவு உள்ளதாய் இருக்கவேண்டும். பெலூனில் ஏறியவன் கீழே இறங்கவேண்டுமென்று தோன்றியவுடன் இக்குடையின் கீழ் ஓரத்தைப் பிடித்துக் கொண்டு பெலூனை விட்டுவிட காற்றால் குடை விரிந்து அவனை மெதுவாய்க் கீழே இறக்கிவிடுகிறது.

ஆகாயக் கப்பல்களையும் சூஸ்திரப் பறவைகளையும் பற்றி இன்னொரு தடவை விவரிப்போம்.

எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ்.

---

## SAMYUCTA.

BY

V. KUPPUSAMI AIYAR.

## ஸம்யுக்தா.

பதினோராம் நூற்றாண்டின் கடைசியில் வட இந்தியாவில் ஆண்டு வந்த குடும்பங்களில் ப்ரஸித்திபெற்ற குடும்பங்கள் இரண்டு: ராதர் வம்சமும், சாஹான் வம்சமும். ராதர் வம்சத்தைச் சேர்ந்த ஜயச்சந்தரர், முன்னே குஸுமபுரமென்கிற பேரோடு வழங்கிவந்த கானோஜ் பட்டணத்திலிருந்து ஆண்டு வந்தார். சாஹான் வம்சத்தைச் சேர்ந்த ப்ருதிவி ராஜர், முன்னே இந்திரப்ரஸ்தமென்ற பெயரால் வழங்கிய டில்லி நகரத்திலிருந்து ஆண்டுவந்தார். இவ்விருவரும் ராஜபுத்திர சுத்த வீரர்கள். ராஜபுத்திரர்களோ சண்டைக் கஞ்சாதவர்கள். "பழைய இந்தியாவில் இருந்த யுத்தவீரர்களினுடைய இனத்தைச் சேர்ந்தவர்கள்." அவர்களுடைய தைரியத்தையும், துணிவையும், தயையையும் அக்காலத்தில் மெச்சாதவர்கள் இல்லை. மிகவும் உயர்ந்த புத்தி உடையவர்கள். பெற்றோர் வார்த்தையை மீறி நடப்பது என்பதே அவர்களுக்குத் தெரியாது. உண்மை என்கிற விரதத்தையே கைப்பிடித்தவர்கள். அவர்களின் பெண்களோ அவர்களை விட குணசாலிகள். மானமே பெரிதாக எண்ணி உயிரை த்ரணமாக பாவிப்பவர்கள். புருஷபக்தி தவறாதவர்கள். உலகம் உள்ளளவும் ராஜபுத்திரர்களின் ப்ரக்கியாதி ஒரு போதும் குன்றாது.

ப்ருதிவி ராஜாவுக்கு பாலிய திசை. நற்குணம் வாய்ந்து நன்னெறி வழுவாமல் நடக்கும் நரேந்திரர். ஜயச்சந்திரரோ கொஞ்சம் வயது சென்றவர். ப்ருதிவி ராஜரின் கியாதி கிளம்பக் கிளம்ப அவரிடத்தில் பொறாமை கொண்



டார். நாளுக்குநாள் ப்ருதிவி ராஜரிடத்தில் இவருக்கு த்வேஷம் அதிகரித்தது. ப்ருதிவி ராஜர், 'பண்டில் கண்ட்' என்று சொல்லப்படும் சேதி தேசத்து ராஜா பெருமாளின்மீது படை யெடுத்து அவ்வரசனை யுத்தத்தில் தோற்கடித்தார். இச்சண்டையில் ப்ருதிவி ராஜரின் பராக்ரமத்தைப்பார்த்து எல்லாரும் அவரை வியந்தார்கள். ஜயச்சந்திரருக்கு உடனே இது பொறுக்க முடிய இல்லை. என்ன செய்வார்! தான் ஒரு அச்வமேத யாகம் செய்ய யத்தனித்து எல்லா ராஜாக்களையும் வரவழைத்தார். தைரியமே உருவெடுத்துவந்த ப்ருதிவி ராஜாவா இந்த அச்வமேதயாகத்துக்கு வந்து தன்னை ஒரு சிற்றரசனாக ஆக்கிக் கொள்வார்? அவர் மாத்திரம் வரவில்லை. ஜயச்சந்திரர் கோபங்கொண்டு அவரை மானபங்கம் செய்ய வேண்டுமென்று ப்ருதிவி ராஜரைப் போல் ஒரு தங்கப்பதுமை செய்து அதற்கு வேலையாளின் உடைகளை உடுத்தி இதர அரசர்கள் வீற்றிருந்த மண்டபத்தின் வாயிலில் அதை வைத்தார்.

இந்த ஜயச்சந்திரருக்கு ஒரு புத்திரியுண்டு. அவள் பெயர் ஸம்யுக்தை. அழகிலோ ரதிதான். ராஜபுத்திர ஸ்திரீகளுக்கேற்ப வீரனுக்குள்ள பராக்கிரமத்தையே வியக்கும் குணமுள்ளவள். தைரியமாகிற தனத்தையே மெச்சுபவள். இம்மாதுசிரோமணிக்கு அப்பொழுதே ஜயச்சந்திரர் ஸ்வயம்வரம் ஏற்படுத்தியிருந்தார். இம்மாதோ ப்ருதிவி ராஜரின் வீரச்செயல்களைக் கேட்டு தன் மனதை அவருக்குப் பறிகொடுத்தவள். மனதால் ப்ருதிவி ராஜருக்கு மாலையிட்டவள். தன் நாயகனை தன் பிதா அவமானப்படுத்தி வைத்திருப்பது அவளுக்குத் தெரிந்து துக்கமடைந்து ஊண் உறக்கமில்லாமல் வருந்தினாள். கலியாணமே தனக்கு வேண்டாமென்று சொன்னாலோ பிதா சொல் துறக்க நேரிடுமே என்று ஏங்கினாள். உயிரை மாய்த்துக் கொண்டாலோ பெரும்பாவம் பின்தொடருமே என்று உருகினாள். ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிடலாமென்றாலோ உலகம் பழிக்குமே என்று உதறலானாள். கடைசியில் "நான் ஒரு ராஜபுத்திர ஸ்த்ரீ அல்லவா? ஏன் இப்படி மனம் தளரவேண்டும்!" என்று மனதை தைரியப்படுத்திக்கொண்டு, பிதாவின் உத்திரவுப்படியே ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு, அரசர்கள் அமர்ந்திருக்கும் ஸ்வயம்வர மண்டபத்துக்கு தோழிமாரோடு சென்றாள். சேடிமார்கள் ஒவ்வொரு ராஜாவையும் காட்டி அவரவர்களுடைய ப்ரதாபங்களை விவரித்தார்கள். ஏற்கனவே தன்னால் மனப்பூர்ணமாய் வரிக்கப்பட்ட ப்ருதிவி ராஜாவைத் தவிர வேறொருவரையும் ஸம்யுக்தை கண்ணெடுத்தும் பார்ப்பாளா? ஒரு பொழுதும் இல்லை. மாலையைஒருவருக்கும் இடாமலே ஒரு சுற்று வந்தாகி விட்டது. எல்லா ராஜாக்களும் ஏன்இப்படி இவள் ஒருவரையும் வரிக்கவில்லை, இனி என்ன செய்யப்போகிறாள், நம்மைவிட தகுந்த புருஷன் இவளுக்கு எங்கு இருக்கிறான்,? என்று ஆவலோடு பின் நடக்கப் போவதை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். என்ன ஆச்சரியம்! கையில் மாலையோடு ஸம்யுக்தை மண்டப வாசலண்டை போய் அங்கே வைத்திருந்த ப்ருதிவியின் ப்ரதி ரூபத்தின் கழுத்தில் மாலையைச் சூட்டினாள். ஜயச்சந்திரர் தன் குமாரத்தி தான் அவமானப் படுத்துவதற்காக வாசலில் வைத்திருந்த ப்ருதிவியின் பதுமைக்கு மாலையிட்டாள் என்று கேட்டவுடன் கோபாக்கிராந்தனாய் அவளை உடனே சிறையிலிடும்படி உத்தரவிட்டான். ஸம்யுக்தையோ ஸேவகர்கள் அவளை சிறைச்சாலைக்கு அழைத்துப் போக

வந்ததும் கொஞ்சமேனும் மனந்தளராமல் நான் மனமார மாலையிட்ட என்னுதர் எப்படியும் என்னை காப்பாற்றுவார் என்று திட மனதோடு மந்தஹாஸத்துடன் சிறைச்சாலைக்குட் சென்றுள்.

இந்த ஸமாசாரங்களெல்லாம் ப்ருதிவி ராஜாவுக்கு எட்டியது. ஸாதாரணமாக அபலைகளை அபாயங்களிலிருந்து விடுவிப்பது தன் கடமை என்று கடைப்பிடித்திருந்த அக்கோமானுக்கு தன்னை ஸ்வயேச்சையாய்க் கோரி மணம் புரிய மனம் புரிந்ததினுல் ஒரு ராஜபுத்திர மாது சிறையிலடைக்கப்பட்டாள் என்று கேட்டவுடன் மனம் எப்படித் தரித்திருக்கும்? உடனே தனக்கு வேண்டியவர்களோடு புறப்பட்டு டில்லியிலிருந்து கானோஜுக்குப்போய் அங்கு நடந்த உக்ரமான யுத்தத்தில் ஜயமடைந்து, ஸம்யுக்தையை சிறையிலிருந்து விடுவித்துக்கொண்டு வந்து, டில்லியில் மகா வைபவத்துடனே அவளை விவாகம் செய்துகொண்டார். ஜயச்சந்தரர் தான் அடைந்த அவமானத்தை எப்பொழுதும் எண்ணி எண்ணி ஏக்கமடைந்தார். தன் எதிரி அப்போது தன் மருமகனுகவும் ஆய்விட்டான். ஆயினும் அவர் கோபம் குறையவே இல்லை. எப்படியாவது அவனைப் பழிவாங்கவேண்டும் என்ற தீர்மானத்துடன் ஸமயம் எப்போது வாய்க்கும் என்று எதிர் பார்த்திருந்தார். நல்லகாரியங்களுக்குஎன்றுல் தருணம்வாய்ப்பதரிது. அல்லவற்றிற்கு அதுவாய்க்காமல் போகுமா? மகம்மது கோரி என்ற ஆப்கானிய அரசர் இந்தியாவின் மேல் படையெடுத்துவர ப்ருதிவி ராஜர் அவரை எதிர்ப்பதற்கு எல்லா ராஜபுத்திர ஸேனைகளையும் திரட்டி, தானேச்வரத்தில் நடந்த யுத்தத்தில் கோரியை தோற்கடித்து துரத்திவிட்டார். ஜயசந்தரர் மாத்திரம் ஒருவரோடும் சேராமல், ப்ருதிவி ராஜர் தோல்வி அடையட்டும், பிறகு நாம் பார்த்துக்கொள்வோம் என்று எண்ணி இருந்தார். ஆனுல் ப்ருதிவி ஜயம் அடைந்ததும், இவருக்கு ஒன்றும் தோன்றுமல் மதிமயங்கி "இனி என்னுல் பொறுக்க முடியாது. என்தேசம் போனுலும் ஸரி, உயிர் போனுலும் சரி, அவனைப் பழிவாங்காமலிரேன்" என்று எண்ணி தான் செய்யப்போகும் காரியத்தின் முடிவைக் கொஞ்சமேனும் சிந்தியாமல், தோல்வி அடைந்து ஓடிப்போன கோரிக்கு அவரைத் திரும்பி வரச் சொல்லியும், திரும்பி வந்தால் தான் உதவி செய்வதுடன் ராஜ புத்திரர்களுடைய ஒற்றுமையைக் கலைத்து விடுவதாகவும் கடிதம் எழுதினுர். அபஜயத்தால் அவமானமடைந்த ஆப்கானிய அரசனுக்கு வேறு என்ன வேண்டும்? இதனுல் தைரியமடைந்து வேறு படையுடன் இந்தியாவின்மேல் கோரி படையெடுத்துவர ஜயசந்தரர் அவனோடு கூடிக்கொண்டு ப்ருதிவிக்கு வேறு எவருடைய உதவியும் இல்லாமலிருக்கும்படி கலகம் செய்தார். ப்ருதிவிராஜாவோ கொஞ்சமேனும் பின்வாங்காமல் தாம் ஒருவராகவே தம்முடைய ஸேனையைக் கூட்டிக்கொண்டு போனுர். யுத்தம்என்றுல் ராஜபுத்திரர்களுக்கு யோசனையேது? இந்த ஸமயத்தில் நடந்த ஒரு ஸமாசாரத்தைக் கேட்டு மனமுருகாதவரில்லை. தன் பிதா கோரியுடன் சேர்ந்துகொண்டு இருப்பதையும், தன் புருஷர் மாத்திரம் அப்பெரிய ஸேனையோடு தனியே சண்டைபோட நேரிட்டிருப்பதையும், ஸம்யுக்தை அறிந்து ஆண்வேஷம் தரித்துக்கொண்டு தன் பிதாவின் பாசறைக்குத் தூதாகச் சென்றுள். அங்கே ஜயசந்திரரோடு தூது ஸமாசாரத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும் தருணத்தில், தான் இன்னுளென்பதை அவருக்கு



அறிவித்தாள். மேலும் "என் பிதாவே! தாங்கள் என்ன செய்யத் துணிந்தீர்கள்! துருக்கர்கள் நம் தேசத்துக்குள் வர உதவி செய்ய உங்களுக்கு எப்படி மனம் துணிந்தது? ஐயோ, நம்தேச ஸ்வதந்தரம், நம் பூர்வகாலத்து மதாசாரம், ஸ்த்ரீகளின் மானம் இவைகளுக்கு, துருக்கர்கள் வருவதினுல் உண்டாகும் கேட்டைக் கிஞ்சித்தாகிலும் மதித்தீரா? ஐயோ, இவைகளைக் காட்டிக்கொடுத்தால் அம்மனிதனை பின்ஸந்ததியார்கள் இகழமாட்டார்களோ! அப்பா! வேண்டாம்! விட்டுவிடுங்கள் இனியாவது துருக்கர்களின் ஸகவாஸத்தை," என்று கண்ணும் கண்ணீருமாய் மண்டியிட்டுத் தன் பிதாவைக் கெஞ்சினுள். ஜயசந்திரர் இவள் பேசும்போதெல்லாம் ஒன்றும் தோன்றுதவராய் மலர விழித்துக் கொண்டிருந்தார். எவ்வளவு இழிவு நினைவோடு கூடியிருந்த போதிலும் இப்பேச்சு மனதை உருக்காமல் போகுமா? கொஞ்ச நேரம் ஆலோசனை செய்து ஒரு தீர்மானத்துக்கு வந்து "எல்லாம் தீர்ந்துவிட்டது. இனி மாற்ற முடியாது. எல்லாம் தெய்வ ஸம்மதம் போல் நடக்கும்" என்ற உத்தரத்தை அளிக்க அதைக் கேட்ட ஸம்யுக்தை கோபங்கொண்ட சிங்கம்போல் கர்ஜிக்கலானுள். "தாங்கள், குலத்தை குலைக்கவந்த கோடரிக்காம்பு. நான் தங்களுடைய புத்திரியாகப் பிறந்த தோஷத்தினுலேயே இப்பொழுதாவது தங்களை நல்ல வழியில் திருப்ப இப்பயங்கரமான ஸேனைகளின் நடுவே தனியே வர முயன்றேன். என் காரியம் ஆய்விட்டது. இனி என்னைத் தாங்கள் பார்ப்பதரிது. டில்லிக்கு ஜயம் பெற்று வருவீராயின் சாம்பலைத் தவிர ஒன்றையும் தாங்கள் பார்க்கமாட்டீர்கள். நான் போய் வருகிறேன்" என்று சொல்லி ஒரு க்ஷணமேனும் அங்கு நிற்காமல் தன்னிருப்பிடத்திற்கு வந்து தன் புருஷரை உற்சாகப்படுத்தி யுத்தத்துக்கு அனுப்பினுள். தானேச்வரத்தில் நடந்த மறு யுத்தத்தில் ப்ருதிவிராஜர் தைர்யமாக யுத்தம் செய்தும் போர்க்களத்தில் கௌரவமாக மரணம் அடைந்தார். இந்தச் செய்தி டில்லிக்கு எட்டியதும் ராணி அங்குள்ள மாதர் அனைவரோடும் மனப்பூரிப்புடன் தீக்குளித்தாள். பிறகு மஹம்மது கோரி ஜயசந்திரரையும் தோற்கடித்து அவரையும் கொன்று அவர் தேசத்தையும் கைக்கொண்டான்.

வி. குப்புஸாமி அய்யர்.

---

## OUR TRAVELLERS DIARY.

## நம்முடைய பிரயாணியின் டையிரி.

[பத்திராதிபர் குறிப்பு.—பிழைக்கும் வழியிலுள்ள முக்கியமான விஷயங்களை கிராமாந்தரங்களிலுள்ளவர்களுக்கு வாசித்துக் காண்பிக்குப்படி சிலரை ஊரூராய்ப் போகும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தந்த கிராமத்தில் விசேஷமான விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், படிப்பு, முதலியவைகளைக் குறிப்பிட்டு எழுதும்படிக்கும் செய்திருக்கிறோம் அடியில்கண்ட குறிப்புகள் கும்பகோணத்திலிருந்து ஸுமார் 20 மைலுக்குள்பட்ட சில கிராமங்களைப் பற்றிய விஷயங்கள்.]

பசுபதிகோவில்.— ஸ்கூலில்லை. இங்கே விசேஷமாய் மண்மாரி பெய்த மேடுகள் ஏராளமாயிருக்கின்றன. அருகாமையில் வெட்டிவேர் (வாஸனையைக் கொடுக்கும் செடி) பயிர் செய்கிறுர்கள். தஞ்சாவூர் ஜில்லாவில்

இவ்விடத்தைத் தவிர மற்ற இடங்களில் பயிர் உண்டாகிறதேயில்லை. 100 குழி நிலத்தில் பயிர் செய்தால், ரூ. 500 வரையில் லாபம் வருகிறதாம். மண்ணை முட்டு முட்டாகக் கட்டி வேர்த் துண்டை நட்டு ஜலம் தவறாமல் இறைத்தால், 3 மாஸமுதல் 6 மாஸத்திற்குள் வேர் இறங்கிவிடுகிறது. இது அத்தர்க் காரர்களுக்குத் தேவையானது. இதற்கு மற்றப் பயிர்ச் செலவு செய்வதைவிட அதிக முதலும் அதிக ஆளும் தேவையில்லை. 100 குழிக்கு இரண்டு ஆள் போதுமானது. "பிழைக்கும் வழி" யில் இதுவும் சிறந்தது. வேர் 1 க்கு 9 காம்பு முதல் 12 வரையிலுண்டு. விலை அணு 1 முதல் $2\frac{1}{2}$ வரையில் போகிறது. கோடை மாரி என்ற வித்தியாஸம் வேண்டியதில்லை.

மேலப் பசுபதி கோவில்.—சி. குருசாமி பிள்ளை யவர்களைகண்டேன். அவர்கள் தங்கள் நிலம் ஒரு வேலியில் ராவ் பகதூர் ஸ்ரீநிவாஸ பிள்ளை யிடமிருந்து, குங்கும ஈர்க்குச் சம்பா வாங்கி, ஒற்றை அலகு நட்டு, யாதொரு நூதன எருவிடாமல், மா 1-க்கு (ஸுமார் 33 ஸெண்டு) நிலம் 17, 18 கண்டதாகச் சொன்னார். நாற்று 25 நாளில் பறிக்கப் பட்டது. 15 கட்டு வைக்கோல் கிடைத்ததாம். இதன் அறுவடை மாதிரி நெல்லும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

ராமாபுரம்.—என்று வழங்கிவந்த, சிறுவரம்பூர் கிராமத்திற்கு போனேன். சுமார் 35 வேலி வரையில் தஞ்சை வக்கீல். ராவ்பகதூர் சீனிவாச பிள்ளை அவர்கள் சமீபத்தில் வாங்கி ஒருமாதிரிப்பண்ணையைப்போலஆக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். விவஸாய சங்கத்தார்களால் நவீனமாய் பரீக்ஷிக்கப்பட்டு வருகிற ஒவ்வொரு வகை நெல் தினுசுகளும் போட்டுப் பயிர் செய்யப்பட்டு வருகிறது. ஒரு ஏஜண்டு காரியஸ்தரை வைத்து பார்க்கப்பட்டுவருகிறது. தங்களுக்கே "பிழைக்கும் வழி" வருவதாகச் சொன்னதுடன், தஞ்சை விவஸாய சங்கத்திற்கு வருகிற எல்லாப் பத்திரிகைகளும் வாங்கி வருகிறதாகவும் தெரிவித்தார்கள். இரும்புக் கலப்பையைக் கொண்டு அடுத்த ஸாலில் பயிர் செய்யப் போகிறார்களாம். ஏராளமாக பனைமரங்கள் வைத்துப் பயிர் செய்கிறார்கள். இந்த பிராந்தியங்களுக்கு இவர்கள் ஒரு வழி காட்டி நடத்திவருவதோடு பக்கத்துக் கிராம மிராசுதார்களுக்கும் விதை முதலியவைகள் கொடுத்து வழியும் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

திருப்பயணம்.—நால்வர்களால் பாடல் பெற்ற ஓர் பழைய ஆலயமிருக்கிறது. இங்கே சுமார் 500 வீடுகளுண்டு. வாழை சாகுபடிக்கு இதுவே ஜன்ம பூமியாம். ஏனெனில், இவ்வூருக்குப் பூர்வகாலத்திலிருந்து கதலிபுரம் என்ற பேர் வழங்கி வருகிறதாம். எவ்வித செய்நேர்த்தியும் இல்லாமலே, கொழுமையான வாழைத் தார்கள் வலியவே உண்டாகின்றனவாம். புகையிலை, கத்திரிக்காய், மிளகாய் காவேரிப் படுகைகளில் ஸதாகாலமும் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. சென்னை ராஜதானிக்குள் இருக்கும் பெரிய சந்தைகளில் விற்கப்பட்டுவருகிற தாட்டு இலைகள் எல்லாம் இங்கிருந்தே அனுப்பப் படுகின்றன. நூறுகுழிக்கு 500 வாழை வீதம் வைத்தால், வருஷத்தில் ரூபா. 200 வருமானம் கிடைக்கிறதாம். மூப்ப ஜாதியார்களே பெரும்பாலும் விவஸாயிகளா யிருக்கிறார்கள்.

திங்களூர்.—இது பூர்வீகத்தில் திருநாவுக்கரசு நாயனார் பூஜைசெய்த ஸ்தலமாம். இங்கு ஸர்ப்பம் தீண்டினால் விஷம் ஏறுகிறதில்லையாம். சந்திரனுக்கு சாப விமோசனம் கிடைத்த இடம். ஊர் அழிந்தும் கோவில்



மதில்கள் இடிந்தும், ஆலயத்தின் சில பாகம் மாத்திர மிருக்கிறது. பூஜை விமரிசையாக இல்லை. கூப்பிடு தூரத்தில் படையாச்சிக் குடிகளுண்டு.

சேறும்பிலியூர்.—மூப்ப ஜாதியில் தக்கவர்களிருந்தாலும் வாசிப்பு இல்லை. மேற்படி கிராமம், திங்களூர் சேஷ அய்யங்காருக்குச் சொந்தமானது. வருஷா வருஷம், வெள்ளப்பாழ் நடந்து வருவதினால் புதியமுறைகள் நடத்திவருவது முடியாத காரியமாம். மழை காலத்திலும் ஆற்றில் ஜலம் வரும் காலத்திலும், சரியான கால்வாய்கள் இல்லாமையால், பயிர்கள் அழிந்து போகக்கூடிய ஸ்திதியாக, மிகவும் பள்ளமான நிலங்களாக இருக்கின்றன. தஞ்சாவூர் அரண்மனையைச் சேர்ந்த திருவையாற்றிலிருக்கும் கல்யாணி மஹாலுக்குச் சொந்தமான 8 வேலி நிலம் இங்கேயிருக்கிறது. எல்லாரும் குத்தகைக்குப் பயிர் செய்கிறவர்களாக இருக்கிறார்கள். பள்ளிக்கூடமுமில்லை. வந்தவர்களை அன்புடன் உபசரிக்கிற நாராயண மூப்பனார் என்னும் ஓர் கிழவரிருக்கிறார்.

பனையூர்.—இந்த கிராமம் பூர்வீகமானது ராமாயண காலத்தில் ஸ்ரீராமன் இளைப்பாறின பனைமரமிருந்ததினால் ஷை நாமம் நாளது வரையில் வழங்கி வருகிறதாகத் தெரிகிறது. இவ்வூரில், ஒருலோகல் போர்ட் எலிமெண்டரி ஸ்கூல் இருக்கிறது. மூன்று மிராசுதாரர்களிருக்கிறார்கள். சாகுபடியில் புதிய முறையில் விருப்பமில்லை. வைத்தினாதன் பேட்டைக்கும், திருமுல்லை வாழி கிராமத்துக்கும் போயிருந்ததில் சுமார் 100 வருஷங்களுக்கு முன் ஒரு ஏற்றுமதி இறக்குமதி கிராமம் போல், இருந்ததாக சொல்லுகிறார்கள். பழய காலத்துச் சிவாலயமிருக்கிறது.

சீனிவாச நல்லூர்.—சுமார் 25 குடியானவர்களும் இரண்டொரு வைஷ்ணவர்களுமிருக்கிறார்கள். அரசலாற்றுப் படுகைகளில், சவுக்கு மரம் கொஞ்சம், மாதிரிக்காகப் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. ஏராளமாக மணல்சாரி நிலங்களிருக்கின்றன. கடலை சாகுபடி செய்யப்படுகிறது. பத்திரிகையின் பலன் அறியக்கூடியவர்களாக யில்லாவிடினும், தடுத்துப்பேச சக்தியற்றவர்களாகவே யிருக்கிறார்கள். பள்ளிக்கூடம் வைக்க ஆவல் இருக்கிறதாம்.

சாக்கோட்டை.—சுமார் 60 வீடுகளுண்டு. பலவகுப்பாரும் கலந்திருக்கிறார்கள். விசேஷமாய், ஜட்காவண்டிக்காரர்களிருக்கிறார்கள். சில கைத்தொழில் பட்டறைகளிருக்கின்றன. பூர்வீக, தஞ்சை மஹாராஜாவின் இனம் தார்களாகிய சில மஹாராட்டியர்களிருக்கிறார்கள். ஒரு ஸ்கூல் உண்டு. சவுக்கு, அரளி, எலுமிச்சை, நார்த்தை, பயிர் செய்தும்பலன் தரக்கூடிய நிலைமையைக் காணோம். ஏனெனில், மணல் சாரியும், களிவாயும் கலந்திருக்கிறது. இதற்கு $\frac{1}{2}$ மைலுக்குத் தெற்கே, பழைய மஹாராட்டிய அரசரின் கோட்டை அகழிகள் அழிந்து மண்மேடுபோல் தெரிகின்றன. பூர்வீகமான ஓர் சிவாலயமுண்டு. இந்தக்கோட்டையை, கால்பாகம்வரையில் அடியோடு வெட்டி சோதனை செய்ததில், திரவியமும், ஏராளமாககருங்கல்களும், கிடைத்தன. இவை யாவும் மாயவரத்திலுள்ள ஒரு மிராசுதாருக்குச் சொந்தமானவைகள்.

கருப்பூர்.--இக்கிராமம், சாக்கோட்டைக்குத் தென்கிழக்கும், மருதாநல்லூருக்கு நேர் வடக்கேயு முள்ளது. சுமார் 12 வீடுகளுக்கு மேலில்லை. உடையார், கள்ளர் இருக்கிறார்கள். நெல் சாகுபடியும், வண்டி ஓட்டுதலும் முக்கிய ஜீவனம். தேங்காய் மட்டை அதிக விலை

போகிறது. 1000 மட்டை விலை ரூ. 0-15-0. கயிறு திரித்தற்காகவும், காளவாய்க்கு நெருப்புபிடிப்பதற்காகவும் வண்டிகளில் வாங்கிப் போகிறார்கள். பள்ளிக்கூடமில்லை. பத்திரிகையை கொண்டாடினார்கள்.

மருதாநல்லூர்.—இந்தக் கிராமம் இரண்டு பிரிவு. ஒன்று பதினோறு வேலி என்பது இதில் ரெட்டி ஜாதியார்கள், அதிக நில சுவான்தார்களாயிருக்கிறார்கள். சில வருஷங்களுக்குமுன், இத்தனிகர்கள் ஸிவில், க்ரிமினல்களினால் கஷ்டமடைந்து, தற்போது, மரியாதையாக இருந்து வருகிறார்கள். சுமார் 50 வீடுகளுண்டு. பக்கத்தில், பிராமணர்கள் வசிக்கும், மருதாநல்லூர் இருக்கிறது, இங்கே ஓர் பாடல் பெற்ற சிவாலயமுண்டு. இவ்வூர் மைனர் அவர்களின் அன்ன சத்திரமுண்டு.

மருதாநல்லூர்.—தெற்குத் தெருவுக்குப் போனேன். அகம்படியர், வன்னியர், உடையார், உள்பட 40 வீடுகளுண்டு. ரணவைத்தியம் செய்யும் சில பரிகாரிகளிருக்கிறார்கள். மிகவும் உழைப்பாளிகளே. ஆண்பாலர், பயிர் சாகுபடி, உப்பு வியாபாரம். பெண்பாலர், எல்லோரும், எருமுட்டை (விரட்டி) ஏராளமாய்த் தயார் செய்து வண்டிக் கணக்காய் வியாபாரிகள் வாங்கிப்போகிறார்கள். விலை 2 பைஸாவுக்கு 4 பொணயல் (ஜோடி) அதாவது 8 எருமுட்டை. தயிர் சொல்ப லாபத்துடனே பட்டணவாஸங்களிலுள்ள இடைச்சிகளுக்கு விற்கிறார்கள். 10 இடையர் வீடுகளுண்டு. இங்கே சுமார் 7 மாஸமாக ஒரு திண்ணைப்பள்ளிக்கூடம் கோவிந்தப் பண்டார பிள்ளையினுடையவும், ஏ. நடேசப் பத்தருடையவும் விடாமுயற்சியினால், பட்டுக்கோட்டையிலிருந்து வந்திருக்கும் முத்துதேவரை உபாத்தியாயராகக்கொண்டு சுமார் 20 குடியான பிள்ளைகளும் 5, தீண்டாத பிள்ளைகளும் வாசிக்கிறார்கள். ரஸ்தாவிற்கு அருகாமையிலே, புதியகூரைக் கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். ௸ பள்ளிக்கூட ஸ்தாபகர்களின் எண்ணம் நல்ல எண்ணமென்பதற்கு ஒரு திருஷ்டாந்தமே போதுமானது. அதாவது, தற்காலம் நம் இந்தியா முழுமையும், நம் ஜனத்தலைவர்களால் முயற்சிக்கப்பட்டு வரும், "தீண்டா வகுப்பாரை முன்னுக்கு கொண்டு வருதல்" என்னும் விஷயம், டவுன்களில் வெறும் வாய் பேச்சாக பேசிக்கொண்டு வந்தாலும், கிராமங்களில் ஜாதி த்வேஷமில்லாமல் செய்கையால் மாதிரியாக நடந்து காண்பிப்பது மிகவும் துர்லபம். இந்தக் கிராமத்தார்கள் இன்னும் சுற்று கிராமங்களிலுள்ள தாழ்ந்த வகுப்பாரைச் சேர்க்கவேண்டிய பிரயாசை யெடுக்கத் தயாராக இருக்கிறதாக ஒப்புக் கொண்டார்கள். இவர்கள் தனிகர்களாயில்லாவிடினும், மேலான செய்கையைச் செய்பவர்களாயிருக்கிறார்கள். இவ்விதமான பள்ளிக்கூடங்களை ஸ்கூல் இன்ஸ்பெக்டர்கள் கவனித்து உதவி செய்தால் எங்கும் இவ்வித நோக்கமுள்ள பாடசாலைகளை ஜனங்கள் ஸ்தாபிக்க முன்வருவார்கள். நம் "பிழைக்கும் வழிப்" பத்திரிகையை படித்து ௸ யார்களெல்லோருக்கும் காண்பித்தும், ௸ பாடசாலையை இனி ஒழுங்காய் நடத்திவர வேண்டியதையும், "தீண்டாத வகுப்பாரை உயர்த்த வேண்டியதின் அவசியத்தையும், அப்படி நாம் செய்யத் தவறுவோமானால், சமீபத்தில் நமக்கு நேரிடக்கூடிய பெரிய நஷ்டத்தையும், அதினால் தேசத்திற்கு பிராணாதாரமாகிய விவசாயம் ஒழிந்துபோய்விடு மென்பதையும், விஸ்தாரமாகச் சொன்னேன்

---



# SELECTIONS.
# விசேஷத்திரட்டு.

## CO-OPERATIVE SOCIETY BILL.
## ஐக்கிய நாணயச் சங்கங்க மசோதா.

மார்ச்சு ௴ 12ம்தேதி கூடின ராஜப்பிரதிநிதிச் சட்டசபையில் ஆனரபிள் மிஸ்டர் கார்லைல் ஐக்கிய நாணயச் சங்கங்களைப் பற்றின மசோதா வொன்று பிரேரித்தார். இந்த மசோதாவில் மூன்று திருத்தங்கள் காணப்பட்டிருக்கின்றன. முதலாவது, கிராமச் சங்கங்களுக்கும் பட்டினத்துச் சங்கங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நீக்கி, அவைகள் லிமிடெட் லயபிலிடி கம்பெனிகளா, அல்லது அன்லிமிடெட் லயபிலிடி கம்பெனிகளா, என்கிற வித்தியாச மட்டும் கவனிக்கப்படும். அன் லிமிடெட் லயபிலிடிக ளென்றால், எந்தக் கம்பெனிகளின் மெம்பர்கள் அவர்கள் வாங்கும் கடன்களுக்கு அவர்கள் மொத்த சொத்துக்களைக் கொண்டு இறுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களோ அந்தக் கம்பெனிகள். லிமிடெட் லயபிலிடி கம்பெனிக ளென்றால், மெம்பர்கள் போட்டிருக்கும் பங்குகளைக்கொண்டு வாங்கின கடன்களை இறுக்கக் கடமைப்பட்டிருக்கும் கம்பெனிகள். இரண்டாவது திருத்தமென்னவென்றால், இப்போது இந்தக் கம்பெனிகளைச் சேர்ந்த மெம்பர்கள் அந்தந்தக் கம்பெனிகளிலிருந்து தங்களுக்கு வேண்டிய கடன்களை மட்டும் வாங்கச் சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள். இந்த மசோதா நிறைவேறினால் இந்தக் கம்பெனிகள் பயிர் செய்வதற்கும் தொழில் நடத்துவதற்கும் அவர்களுடைய பணத்தை உபயோகப்படுத்தலாம். மூன்றாவது திருத்தம், சில முக்கிய நாணயச் சங்கங்களைச் சேர்த்து, யூனியன் என்கிற ஒரு பெரிய கம்பெனியாக்கி, இந்த யூனியனைக்கொண்டு அதிற் சேர்ந்த சங்கங்களுக்குப் பணம் கடனாக்கொடுக்கவும், அந்தச் சங்கங்களின் நடவடிக்கைகளை மேல் விசாரணை செய்யவும் அதிகாரம் பெறும்.

இந்தச் சட்டமானது 1904ம் வருஷத்தில் ராஜப்பிரதிநிதிசட்ட சபையில் நிறைவேறினபோது, அதைப் பிரேரித்த ஆனரபில் மிஸ்டர் இப்பெட்ஸன் என்பவர் இந்தியாவில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் நிறைவேறுமோ, நிறைவேறாவோ, என்ற சந்தேகத்தைக் கொண்டவராயிருந்தார். கவர்ன்மெண்ட் சட்டம் செய்து ஸ்தாபிக்கப்படும் சங்கங்களுக்குக் கவர்ன்மெண்ட் கொஞ்சம் பணவுதவி செய்து வேறு சில சௌகரியங்களும் செய்யக்கூடுமே தவிர அவைகள் நிறைவேறுவதும் நிறைவேறாததும் ஜனங்களைப் பொறுத்ததாயிருக்கின்றதென்றார். ஆனால், அவர் சொன்னதற்கு விரோதமாக இந்த ஏழு வருஷங்களுக்குள் இந்தச் சங்கங்கள் நாம் எதிர் பாராதபடி நிறைவேறிவிட்டன. இப்போது இந்தியாவில் 3,456 சங்கங்களும், அவைகளில் 2,26,958 மெம்பர்களும், அவைகளுக்கு 104 லக்ஷம் ரூபாய் முதலும் இருக்கின்றன. இந்த முதலில் கவர்ன்மெண்ட் கடனாகக் கொடுத்த பணம் 7 லக்ஷத்துக்கதிகமில்லை. இவ்வாறு இந்தச் சங்கங்கள் அதிகமாகி வளர்ந்திருப்பதுபோல ஐரோப்பாவில் ஜர்மெனி, ஆஸ்டிரியா, இட்லி இந்த தேசங்களிலும் இல்லை. ஐரோப்பாவில் ஆரம்பத்தில் இந்தத் தேசங்களில் தான் இந்தச் சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டன. ஆனால், அவைகள் ஏழு வருஷத்துக்குள்ளாக இவ்வளவு அபிவிர்த்தியாகவில்லை. இந்திய ஜனங்கள் ஐக்கியமில்லாதவர்களென்றும், அவர்கள் ஒன்றாய்ச்சேர்ந்து கம்பெனிகளை நடத்தச் சக்தியில்லாதவர்களென்றும், சொல்லப்பட்டது. வாங்கின கடன்களைச் சொன்னபடி கொடுக்க மாட்டார்களென்றும், கம்பெனி

கள் கொடுத்தகடனை ஸம்மெரியாய் வசூல் செய்ய அதிகாரம் பெற வேண்டுமென்றும், சொல்லப்பட்டது. செங்கற்பட்டு ஜில்லா ஸொஸைடிகளின் நடவடிக்கைகளை அறிந்த நமக்கு, இப்படிச் சொன்னதெல்லாம் உண்மை யல்லவென்று காட்ட விசேஷமான திருஷ்டாந்தங்கள் வேண்டியதில்லை.

இந்தச் சங்கங்களுக்கு முதல்கள் அதிகமாகும்போதும், கடன் வாங்குதல் எளிதாகும் போதும் அவைகளுடைய பணத்தை உபயோகப்படுத்துவதற்கு மெம்பர்களுக்குக் கடன் கொடுத்தல் மட்டும் போதாமலிருக்கும். விவசாயிகள் சேர்ந்த சங்கங்களானால் விவசாயம் செய்ததில் அவைகளின் பணம் உபயோகப்பட வேண்டும். அதாவது, விதைகள், எருக்கள், கால் நடைகள், இவைகள் வாங்கவும் புதிதான யந்திரங்களைத் தருவிப்பதற்கும் இன்னு மற்ற சௌகரியங்கள் பெறுவதற்கும் இந்தச் சங்கங்களின் பணம் உபயோகப்பட வேண்டும். விளைந்த தானியத்தைச் சமயம் பார்த்துச் சரியான மார்க்கெட்டுகளில்விற்கவும் இந்தப் பணத்தை உபயோகிக்கலாம். நெசவுக்காரர் போன்ற தொழிலாளிகள் சங்கமாகச் சேர்ந்து, தொழில் நடத்தி அந்தத்தொழிலால் உண்டாகும் பொருள்களை விற்று, லாபம் பெறுவதற்கும் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப் படக்கூடும். இப்படிச் செய்வதற்கு இப்போது சட்டத்தில் ஸ்பஷ்டமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. யூனியன் பாங்கிகள் ஸ்தாபிப்பதினால் அதில் அடங்கிய சங்கங்களுக்குப் பல நன்மைகளுண்டாகும். ஐக்கியம் பலப்படுவதோடு கூட, அவைகளின் நடவடிக்கைகளை மேல்விசாரணை செய்ய யோக்கியதை யுள்ளவர்கள் கிடைப்பார்கள். இந்த யூனியன்கள் பட்டினங்களில் ஸ்தாபிக்கிப்படு மானதால் அவைகளுக்குக் கடன் வாங்கச்சாதனங்கள் அதிகமாகக்கிடைக்கும். அவைகள் கடன் வாங்கி கிராமச் சங்கங்களுக்குக் கடனைக் கொடுக்கலாம். இவைகளெல்லாம் சென்னை இராஜதானி சில இடங்களில் நடந்தாலும், இப்போதுள்ள சட்டத்தில் அப்படிச் செய்யத் தெளிவான அதிகாரம் கொடுக்கப்படாததினால், இந்தத் திருத்த மசோதாவில் இப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது சுதேசமித்திரன்.

## PENNING.

## ஆட்டுக்கிடை மறித்தல்.

நன்செய் நிலங்களிலும், தோட்டக்கால்களிலும் ஆட்டுக்கிடை மறிப்பதின் உபயோகம் கிருஷிகர்களுக்கு அநேகமாய்த் தெரிந்தே இருக்கலாம். இதனாலேயே கிருஷிகரில் அநேகர் அங்கங்கே சில ஆடுகளைத் தங்களுக்கென்றே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சொந்த ஆடுகள் வைத்துக் கொள்ளாத மற்றவர்கள் இடையரிடம் உள்ள கிடைகளைக் கூலிக்குப்பேசித் தங்கள் நிலங்களில் கிடைபோடுகிறார்கள். இப்படிக் கிடை போடுவதில் அநேகவிதமான பிரயோஜனங்களுண்டு.

(1). ஆட்டெரு எந்தப் பயிருக்கு உபயோகிக்கப்பட்டதோ அதற்கே உணவாகிறது. மாட்டுச்சாணி முதலிய மற்ற வகை எருவைப்போல் மட்கிப் பயிருணவா யுபயோகமாக வெகு நாள் செல்லாது. ஆகையால் ஒரு பயிரில் தக்க லாபம் பெற விரும்பும் கிருஷிகர் ஆட்டெரு உபயோகிக்க வேண்டும். இதனாலேயே "ஆட்டெரு அப்போகம், மாட்டெரு மறுபோகம்" என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

(2). ஆட்டெருவில் ஈரமும் ஆவியாய்ப் போகும் ஸத்தும் மிகக்குறைவு. அதனால் அவ்வெரு நாள் பட்டாலும் அளவில் குறைவதில்லை.

3. ஆட்டுக்கிடை போடுவதால், ஆட்டெருவுடன், அவைகளின் மூத்திரமும் நிலத்தில் சேருகிறது. கால் நடைகளின் மூத்திரமானது சிலாக்கியமான எருவென்பது எல்லாருக்கும் தெரியும்.

4. ஆட்டுக்கிடை போடுவதால் அவைகளின் எருவும் மூத்திரமும் சரி ஸமானமாய்



நில முழுவதிலும் பரவி மிதிபட்டு நிலத்துடன் சேர்ந்து போகிறது. எருவைக் கையில் அள்ளிச் சிதறினால் அவ்வளவு நிதானமாக நில முழுவதும் சிதற முடியாது.

5. கிடை போடும்போது ஆடுகள் தங்கள் உடம்பை உலுக்கி, உரோமத்தை நிலத்தில் கொட்டுகின்றன. அவைகள் படுத்திருந்து எழுந்தவுடன் ஒவ்வொன்றும் தன் உடம்பை அசைத்து மயிர் சிலிர்ப்பதை ஒவ்வொருவரும் கண்டிருக்கலாம். அப்படி உதறும் போது அவைகளின் உரோமம் கழிந்து மண்ணிற்கு உரமாகிறது.

6. ஒரு நிலத்தில், ஆட்டுக்கிடை மறிக்கும் போது அவைகள் அந்த விஸ்தீரணத்தை நன்றாய் மிதித்துத் "துவைத்து" த்தூளாக்கி விடுகின்றன. இதுவன்றி, மணல் தரைகளில் ஆட்டுக்கிடை மறிக்கும்போது அந்த நிலங்களில் ஆடுகள் துவைப்பதால் அவை உரமடைந்து விர்த்தியடைகின்றன.

7. ஒரு நிலத்தில் ஆடுகள் படுத்துக் கொண்டிருக்கும்போது அவற்றின் தேகங்களிலுள்ள உஷ்ணம் மண்ணில் சேர்ந்து நிலத்தில் சில நன்மையான மாறுதல்களை உண்டாக்குகிறது.

இவ்விதம் பலவிதமான பயன்களுண்டாவதை நமது கிருஷிகர் முற்றிலும் அறிந்திருக்க மாட்டார்கள். திருநெல்வேலி முதலிய தென் ஜில்லாக்களில் அநேக இடங்களில் உழாத தரிசு நிலங்களிலும் ஆட்டுக்கிடைகள் மறித்திருப்பதை அடிக்கடி நாம் காண்கிறோம். இப்படிக் கட்டாந்தரைகளில் கிடைபோடுவதில் அதிகப் பயனில்லை யென்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. கிடைபோடு முன் ஒரு நிலத்தை ஒருதரமாவது உழுதிருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் மேலே சொன்ன பயன்கள் அந்த நிலத்துக்கு உண்டாகும். உழுத மண் கட்டிகள் உடைந்து நொறுங்கித் தூளாகி எருவுடன் மிதிபட்டுக் கலந்து சேரவேண்டுமென்பது கிடைபோடுவதின் முக்கிய நோக்கமாகையால் உழாத தரிசு நிலங்களில் கிடைபோடக் கூடாது. கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி முதலிய ஜில்லாக்களிலும், மைசூர் இராஜ்யத்தை ஒட்டியிருக்கும் வட ஆற்காடு ஜில்லாவின் சில பாகங்களிலும் தோட்டக்கால் நிலங்கள் பயிர் செய்யும் ஒவ்வொரு நபருக்கும் 50 ஆடுகள் அல்லது வெள்ளாடுகள் இருக்கக் காணலாம். அறுவடையான நிலங்களிலும் புன்செய்க் காடுகளிலும் மாடுகள் மேய்ந்த பின்பு இவ்வாடுகளைப் பகற்காலங்களில் விட்டு மேய்ப்பார்கள். "மாடுமேயாத மட்டப்புற்கட்டையை ஆடு மேய்ந்து அதிகத் திருப்தியடையும்" என்று சொல்வார்கள். சில சமயங்களில் ரஸ்தா ஓரங்களிலும், வேலிக்கரைகளிலும் மேய விடுகிறார்கள். இரவில் மூன்று நான்கு மாடுகளுடன் இவ்வாடுகளையும் கலந்து படலடைப்பார்கள். இப்படி அவ்விடத்தில் இரண்டு நாள் கிடைபோட்டு, மூன்றாம் நாள் மற்றோரிடத்திற்குக் கிடை மாற்றுவார்கள். இவ்விதமாக ஒரு வருஷகாலத்தில் சுமார் நாலு ஐந்து ஏக்கர் நிலத்துக்கு உரச்சத்து உண்டாக்கப்படுகிறது.

நிலத்தில் ஈரமதிகமாயிருக்கும்போது கிடை போடுவது நல்லதல்ல. அப்படிச் செய்தால் நிலம் மிதிபட்டு மிகவும் கடினமடையும். மேற்குறித்த சில ஜில்லாக்களைத் தவிர மற்ற இடங்களில் படலடைத்து ஆட்டுக் கிடை போடும் வழக்கம் ஏற்படவில்லை. இதனால் ஆடுகள் சுயேச்சையாய் எங்கும் போய் நின்று மேய்ந்து விட்டுப்போய்விட நேரிடும். ஆகையால் நாம் நினைத்த இடம் சரியாய் எரு விடப்படாது. சில சமயங்களில் திருடர் ஆடு

களை எளிதில் திருடிக்கொண்டு போய்விடவும் கூடும்; நரிகளும் ஓநாய்களும் சில விடங்களில் ஆடுகளைக் கொள்ளையிடும். படலுக்குள் அடைத்திருந்தால் அவ்வாடுகளை இவ்வாபத்துகளிலிருந்து காப்பது எளிதாகும். மூங்கில்முள்ளும் பருத்தி அல்லது துவரை மிலாறும் சேர்த்துப் பின்னி இப்படல்கள் செய்யப்படுகின்றன. சில இடங்களில் நொச்சி, மின்னி முதலிய மரங்களின் இளங்கிளைகளையும் உபயோகிக்கிறார்கள். இப்படல்கள் செய்யும் செலவு மிகக்குறைவே. தனவந்தர்களான மிராசுதார்கள் இரும்புக் கம்பியின் பின்னல் வலையை விலைக்கு வாங்கி உபயோகிக்கலாம். இதன் விலை ஒரு சதுர கெஜத்துக்கு மூன்றணாவுக்கதிகப்படாது. ஒருமுறை 10, அல்லது 15-ரூபாய் செலவில் இவ்வலையை வாங்கி உபயோகித்தால் அநேக வருஷங்களுக்கு அழியாமலிருக்கும்.

சில காலத்துக்குமுன் கிருஷிகர் தங்கள் நிலங்களில் ஆட்டுக்கிடை போடும்போது ஆட்டு இடையருடன் தமது வேலையாட்களுள் ஒருவனையும் அனுப்பிக் காவல்போடும் வழக்கமிருந்தது. அப்படிப்போகும் வேலைக்காரன் 5,6-முறை இரவில் எழுந்து ஒரு பானையிலுள்ள தண்ணீரை கொஞ்சம் அள்ளி அவ்வாடுகளின் தலைமேல் தெளித்துக்கொண்டிருப்பான். இதனால் அவ்வாடுகள் அடிக்கடி எழுந்து மல மூத்திரங்களைக் கழித்து உடம்பை உதறிக்கொண்டிருக்கும். இதனால் நிலத்தில் சேரும் எரு மிகவும் அதிகமாகும். இப்போது கிருஷிகர் இந்த வழக்கத்தை முற்றிலும் கைவிட்டது பரிதபிக்கத்தக்கது.

“ஆடு ஊடாக் காடு விளையாது” “ஆடு மிதியாக்கொல்லையும், ஆளனில்லாப்பெண்ணும்வீண்” என்னும் பழமொழிகளை நமது கிருஷிகர் நன்றாய் கவனிக்கவேண்டும். “ஆட்டுக்கால்பட்டால் அவ்வளவும் தங்கம்” என்று அர்த்தமாகும் ஆங்கிலப் பழமொழியொன்றும் உண்டு—கிருஷிகன்.

## MALARIA.

## முறைக்காய்ச்சல்.

1. இரத்தத்தை உறிஞ்சுகின்ற மிகவும் சிறிய க்ருமிகள் சரீரத்தில் இருப்பதால் முறைக் காய்ச்சல் உண்டாகிறது. இந்த க்ருமிகள் ரத்தத்திலிருந்துகொண்டு விர்த்தியாகின்றன. அ. க்ருமிகளின் எண்ணிக்கை அதிகமான உடனே ஜ்வரம் வருகிறது.

2. மலேரியா க்ருமிகள் இருப்பதின் முக்கியமான ஜாடை யென்னவென்றால் ஸாதாரணமாய்த் தீர்மானிக்கக்கூடிய ஒரு விதமான ஜ்வரம் வருவதுதான். இந்த ஜ்வரம் அடிக்கடி தணிந்து விடுகிறது. தேக உஷ்ணமானது ஒருவேளை ஸம ஸ்திதிக்காவது அதற்கும் கீழ் ஸ்திதிக்காவது வந்து மறுபடியும் உயரும். இந்த ஜ்வரம் வழக்கமாக ஏற்பட்ட காலக் கிரமங்களில் வரும். 24-மணிக்கு ஒருதடவையாவது, அல்லது 72-மணிக்கு ஒருதடவையாவது வரும்.

3. எந்தவிதமான ஜ்வரமாயிருந்தபோதிலும் அதற்கு மூன்று நிலைமைகளுண்டு. குளிர்ச்சியான நிலைமை, வெப்பமான நிலைமை, வேர்வை விடும்படியான நிலைமை. குளிர்ச்சியான நிலைமையில் தேகம் முழுமையும், தலைமுதல் கால்வரையில், நடுக்கமுண்டாகும். இந்தக்குளிர்ந்த நிலைமையிலிருந்தும், உஷ்ணம் மாத்திரம் அதிகமாகிக் கொண்டுவரும். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு நடுக்கம் நின்று உஷ்ணம் மாத்திரம் 103 அல்லது 104 சில வேளைகளில் 105 டிக்ரீ அல்லது அதற்கு மேலும் அதிகமாகும். ஸுமார் ஒரு மணி நேரத்தின் பிறகு உஷ்ண நிலை மறைந்து போய் நோயாளிக்கு விசேஷமாக வேர்வை விட்டு ஜ்வரமும் சீக்கிரம் குறைந்து விடுகிறது.



4. முறை ஜ்வரம் தொத்து வியாதி. அது கொசுக்கள் மூலமாய்ப் பரவுகிறது. முறை ஜ்வரம் வந்திருக்கும் ஒரு மனிதனை ஒரு கொசு கடித்தால் அம்மனிதன் உதிரத்திலிருக்கும் க்ருமிகளில் சில அக்கொசுவின் வயிற்றில் புகும். அது அனோபிலிஸ் ஜாதியில் சேர்ந்தவைபோன்ற ஒரு விதமான கொசுவாயிருந்தால் அதனுடைய வயிற்றில் அந்தக் க்ருமிகள் அபிவிருத்தியடைந்து வயிற்றிலிருந்து ரத்தம் வியாபிப்பதால் வாயின் எச்சலில் சேரும். அந்தக் கொசு ஒருவனைக் கடிக்கும்போது இந்த விஷத்தை அம்மனிதன் ரத்தத்தில் பிரவேசிக்கச் செய்கிறது. பிறகு யாருடைய ரத்தத்திலிருந்து அந்த விஷம் எடுக்கப்பட்டதோ அவனுக்கு நேர்ந்த ஜ்வரம் போலவே இவனுக்கும் உண்டாகிறது. ஆகையால் மலேரியா ஜ்வரங்கள் கொசுக் கடியினால்தான் உண்டாகின்றன.

5. முன்னொரு காலத்தில் நினைத்திருந்தபடி, நமக்கு மலேரியா ஜ்வரம் அசுத்தமான ஜலத்தைப் பானம் செய்வதினாலாவது, பூமியிலிருந்தாவது, அசுத்தமான காற்றை கிரஹிப்பதினாலாவது, உண்டாவதில்லை. ஜலமும் காற்றும் மலேரியாவுக்கு எவ்விதமாக ஸம்பந்தப்பட்டவை யென்றால் அவைகள் மலேரியாவைக்கொண்டுவரும் கொசுக்களுக்கு இருப்பிடமாயிருக்கின்றன. மலேரியா ஜ்வரங்கள் கொசுக்கள் மூலமாய்த்தான் வியாபிக்கிறதென்பதும், ஒரு மனிதனிடத்திலிருந்து மற்றொருவனுக்கு வேறே எவ்விதமாயும் ஒட்டவைக்க முடியாதென்பதும், நிச்சயமாய்த் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்.

6. நல்ல கொசுவலை யில்லாமல் ஒருபோதும் நித்திரை செய்யக் கூடாது. உடம்பில் எங்கேயும் கொசுக் கடிக்காமல் இருக்கும் பொருட்டு உடுப்புகளை போட்டுக்கொள்ளாமல் மாலை வேளைகளில் வெளியே போகவாவது, வீட்டின் தாழ்வாரத்தில் உட்காரவாவது கூடாது. வீடுகளின் வாசல்களையும் ஜன்னல்களையும் கொசுக்கள் வரவொட்டாமல் வலைகளால் மூடிவைக்க வேண்டியது.

7. பெரிய கொசுக்கள் நல்ல வெயிலைப் பொறுக்கமாட்டாது. ஆகையால் அவை வெயில் வேளையில் வீடுகள், செடிகள் இன்னும் அப்பேர்ப்பட்ட இடங்களில் பதுங்கும். ஆகையால் மத்தியான வேளையில் இந்தக் கொசுக்கள் நம்மை கடிக்கும் யென்ற பயம் இல்லை. இந்த அனோபிலிஸ் கொசுக்களின் முக்கியமான குணம் என்ன வென்றால் ஸூர்யாஸ்தமனத்திற்கும் ஸூர்யோதயத்திற்கும் மத்தியில் ராத்திரி வேளையிலேயே எப்போதும் கடிக்கும். ஆகையால் பகல் காலத்தைவிட ராத்திரியிலேயே மலேரியா ஜ்வரம் வருகிறதென்ற பயம் ஜாஸ்தியுண்டு.

8. பாய்ச்ச லில்லாத குட்டைகளை யெல்லாம் உலர்ந்த மண்ணால் நிரப்பிவிட வேண்டியது. வீட்டைச் சுற்றிலும் ஜலம் நன்றாய்ப் போகும்படியான ஜலதாரைகள் கட்டிவிட வேண்டியது. வீடு எங்கும் உலர்ந்து இருக்க வேண்டியது. வெளியே போக்க முடியாத மீதி ஜலம் இருந்தால் அதில் கொசுக்கள் உற்பத்தியாகாமலிருக்கும் பொருட்டு அந்த ஜலத்தின் மேல் கெரொஸ்னாயில் போடலாம். அந்த கெரொஸ்னாயில் ஜலத்திலிருக்கும் புழுக்களை கொன்றுவிடுவதோடு கூட ஜலத்தின் மேல் முட்டையிட வரும் பெரிய கொசுக்களையும் கொன்று விடுகிறது. மலேரியா ஜ்வரங்கள் இருப்பதாகத் தெரிந்த இடங்களில் எந்த மாதிரியான நீர்த் தாங்கலும் 10 அல்லது 14 நாள் நின்றிருக்குமாயின் ஆரோக்கியத்திற்கு அபாயமாகவே நினைக்க வேண்டும்.

9. ஜலம் தங்கும்படியான உபயோகமற்ற உடைந்த வீட்டு ஸாமான்கள் அதாவது காலியான பூந்தொட்டிகள், வெறும் தகரடப்பிகள், முதலானவைகளை ஜாக்கிரதையாய் அழித்து விடவாவது அல்லது ஒழித்துவிடவாவது வேண்டியது. வீட்டின் உபயோகத்திற்காகத் தண்ணீரைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு ஆதாரமான யெல்லாத் தொட்டிகளையும் வாய்க்கால்களையும் குறைந்த பக்ஷம் 8-நாளைக்கு ஒருதடவையாவது சுத்தி செய்யவேண்டியது. கனத்த ஒரு மழை பெய்தவுடனே தோட்டத்தின் நிலத்தைப் பரிசோதித்து அங்குமிங்கும் இருக்கும் சிறிய பள்ளங்களை யெல்லாம் நிரப்பி ஸமமாக்க வேண்டியது.

10. தும்பு சேர்ந்த உடுப்புகளையாவது திரைகளையாவது, இன்னும் அழுக்கு வஸ்தி

ரங்களையாவது ஆணிகளிலும் முளைகளிலும் தொங்கவிட்டு வைக்கக்கூடாது. இவைகளால் தான் முக்கியமாய்க் கொசுக்கள் வந்து சேருகின்றன. ஆகையால் அவைகளை நன்றாய் மூடபட்ட பெட்டிகளில் வைக்க வேண்டியது.

11. எவ்விதமான புகையும் கொசுக்களை துரத்திவிடும், இன்னும் புகை ஜாஸ்தியாயிருந்தால் அவைகளை அடக்கிவிடும் கொசுக்களைக் கொல்லவேண்டு மென்றால் வீட்டின் சந்துகள் எல்லாவற்றையும் நன்றாய் மூடிவிட்டு புகைநேராய் அந்த கொசுக்களிடத்தில் சேரும்படி செய்யவேண்டியது. ஸாதாரணமாய் ஆட்சேபனை இல்லாததும் ஹிந்துக்களின் எல்லா வீடுகளிலும் கிடைக்கக் கூடியதுமானது சாம்பிராணி. இதையும் மற்றும் கந்தகம், வேப்பிலை, புகையிலை முதலானவைகளையும் எரிக்கலாம்.

12. மலேரியா ஜ்வரத்தை வராமல் தடுப்பதற்கு எல்லாவற்றிற்கும் மேலானதும் நிச்சயமாய் நம்பக்கூடியதுமான வழி யென்னவென்றால் இந்த ஜ்வரம் கண்டிருக்குமிடத்தில் இருக்கும் வரையில் 7-நாளைக்கு ஒரு முறை இரண்டு அடுத்த நாளில் 10-க்ரேயின் கொயினா சாப்பிட வேண்டியது. மலேரியா க்ருமிகள் சேர்ந்திருக்கும் எல்லா மனிதர்களையும் கொயினாக் கொடுத்து பரிசுத்தப் படுத்தவேண்டும்.

13. மலேரியா ஜ்வரத்தை ஸ்வஸ்தப்படுத்துவதற்கு கொயினாதான் தகுந்த மூலிகை. அதை முறைப்படி போதுமான அளவில் கொடுத்த இடங்களில் அது சொஸ்தப் படுத்தத் தவறினதேயில்லை. பெரியவர்களுக்கு ஜ்வரத்தின் எந்த நிலைமையிலும் 20-க்ரெயின் கொயினாவை எலிமிச்சம்பழம் ரஸத்தில் சேர்ந்துக் கொடுத்துவிடலாம். முதல்தரம் கொடுத்த 6-மணி நேரத்திற்குப் பிறகு மறுபடியும் இன்னொரு தரம் 10-க்ரெயின் கொடுக்கவேண்டியது. அம்மாதிரி 6-முறை ஆகும் வரையில் சாப்பிடவேண்டியது. அதன் பின் ஒரு வாரம் வரையில் 1-நாளுக்கு மூன்று தரம் 5-க்ரெயின் சாப்பிட வேண்டியது. வயிற்றைத் தள்ளும் படியான மருந்து ஏதாவது சாப்பிட்டுக் காலப் பிரவர்த்தி சரியாயிருக்குப்படிச் செய்து கொள்ள வேண்டியது.

டாக்டர். யூ. ராமராவ்.

## GROUND NUT CULTIVATION.

## மணிலாக் கொட்டை சாகுபடி.

தென்னாற்காடு ஜில்லா நெல்லிக்குப்பத்துக் கடுத்த பாலூர் விவசாயப் பண்ணையில் சாகுபடி பரீட்சை செய்ததில் தெரிந்துகொண்ட மிகவும் உபயோகமுள்ள விஷயங்களாவன:—

மணிலாக்கொட்டையைக் கதிர் தானியப் பயிருடன் கலப்புப் பயிராய் சாகுபடி செய்யும்படி விவசாயிகளுக்கு ஏற்கனவே போதிக்கப் பட்டிருக்கிறது. தென்னாற்காடு ஜில்லாவில் சிரத்தையுடன் பயிரிடும்கிருஷிகர், முதலில் கம்பைத் தனியாக விதைக்கிறார்கள். கம்புப் பயிர் முளைத்து, களை வெட்ட பக்குவமானவுடன் களை வெட்டியால் களை யெடுத்து அடர்த்தியாயிருக்கும் பயிரைக் கலைக்கிறார்கள். கம்பு சுமார் ஒரு மாதப்பயிராயிருக்கும் பொழுது இரண்டாவது களை யெடுத்தவுடனே மணிலாக்கொட்டை விதையைக் களைவெட்டியால் போட்டு களைக்கொட்டினாலேயே விதையை மூடி விடுகிறார்கள். இதன் பிறகு ஆறுவாரங்களில் கம்பு அறுவடையாகிறது.

இதன் பின்னிட்டு மணிலாக்கொட்டையை (நிலக்கடலையைத்) தனிப் பயிராகச் சாகுபடி செய்கிறார்கள். சென்ற மூன்று வருஷங்களாக பாலூர் விவசாயப்பண்ணையில் செய்த பரிசோதனையில் இம்மாதிரி கலப்புப்பயிர் செய்வது அதிக லாபகரமென்று தெரியவருகிறது.

பயிர் கலப்பில்லாமல் மணிலாக்கொட்டை மாத்திரம் ஒரு நிலத்தில் மூன்று வருஷம் சாகுபடி செய்யப்பட்டது. மற்றொரு இடத்தில் மேலே விவரித்தமாதிரி சென்ற மூன்று வருஷங்களிலும் கம்பும் மணிலாக்கொட்டையும் கலப்புப் பயிராக சாகுபடி செய்யப்பட்டது.



இரண்டு பூமிகளுக்கும் ஒரேமாதிரி எருவும் செய்நேர்த்தியும் செய்யப்பட்டது. மாட்டு எருவுடன், சாம்பல், மக்கினதழைப் பூண்டு முதலியவைகள் சேர்த்து ஒரு ஏகராவுக்கு ஏழு வண்டி எரு போடப்பட்டது. இவ்விரண்டு பூமிகளிலும் கிடைத்த மாசூலின் விலை விபரம் கீழே காணலாம்:—

| நெம்பர் | பயிர்களின் விபரம் | முதல் வருஷம் | இரண்டாம் வருஷம் | மூன்றாம் வருஷம் | சராசரி |
|---|---|---|---|---|---|
| | | ரூ. அ. ப. | ரூ. அ. ப. | ரூ. அ. ப. | ரூ. அ. ப. |
| 1. புன்செய் | மணிலாக்கொட்டை மாத்திரம் | 69 11 0 | 40 12 9 | 40 15 0 | 50 7 7 |
| 2. புன்செய் | கம்பு | 40 12 9 | 34 9 6 | 53 11 10 | ... ... ... |
| | மணிலாக்கொட்டை | 33 10 3 | 47 11 0 | 48 10 3 | ... ... ... |
| | மொத்தம் | 74 7 0 | 82 4 6 | 102 5 3 | 86 5 7 |

தனிப்பயிராகச் செய்வதைவிட கலப்புப் பயிர் சாகுபடி செய்கிறதினால் ஒரு ஏகராவுக்குச் சுமார் முப்பத்தாறு ரூபாய் அதிக லாபம் கிடைத்ததென்று இதனால் நாம் அறிகிறோம். தவிரவும் பூமியானது நாளாவட்டத்தில் அபிவிருத்தியடைகிறதென்றும் அதனால் மணிலாக் கொட்டையும் கதிர் தானியப் பயிரும் அதிக மாசூலைக் கொடுக்கிறதென்றும் அறிகிறோம். கம்பல்லாமல் மணிலாக் கொட்டையுடன் தினை, கேழ்வரகு பயிர்களும் கலப்புப்பயிர்களாக பரிசோதிக்கப்பட்டன. இவைகள் கம்பைப்போல் மிக்கலாபம் கொடுக்கவில்லை. ஆனாலும் தனி மணிலாக்கொட்டை பயிரிடுவதைப் பார்க்கிலும் கலப்புப்பயிர் சாகுபடி செய்வது அதிக லாபகரமெனத் தெரியவருகிறது.

மணிலாக் கொட்டை (நிலக்கடலை) யானது எந்த ஜில்லாக்களில் நூதனமாகச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறதோ அவ்விடக்களில் மேற் கூறிய விஷயங்கள் முக்கியமாய்க் கவனிக்கத் தக்கவை. அப்பேர்பட்ட இடங்களில் மணிலாக் கொட்டை (நிலக்கடலை) முதல் வருஷத்தில் கொடுக்கும் லாபத்தினால் விவஸாயிகள் மிகவும் திருப்தி அடைந்து நாலைந்து வருஷம் வரையில் பிரதி வருஷமும் தனி மணிலாக் கொட்டையைச் சாகுபடிசெய்து வருகிறார்கள். இப்படிச் செய்வதினால் சுபாவமாக மாசூல் குறைகிறது. குடிகள் மணிலாக்கொட்டையை தூஷிக்க ஆரம்பிக்கிறார்கள். அது பூமியைக் கெடுத்து விட்டதென்றும் சொல்லுகிறார்கள் பூமியைக் கெடுத்தது மணிலாக்கொட்டையல்ல. பணம் சம்பாதிக்க வேண்டிய ஆவலினால் மணிலாக் கொட்டையை இதர கதிர்ப் பயிருடன் கலப்புப் பயிராகப் பயிரிடத் தவறின குடியானவனது பேராசையேயாகும். கணக்குமூலமாய், ருஜுப்படுத்தப் போதுமானகாலம்பரிசோதனைகள் செய்யப்படா திருந்தபோதிலும் பிரதி வருஷமும் மணிலாக்கொட்டை

யையே போட்டுவருவதினால் கிடைக்கும் லாபத்தைவிட ஒரு வருஷம் மணிலாக்கொட்டையும் மற்றொரு வருஷம் கம்போ, அல்லது வேறு கதிர்த் தானியப்பயிரோ, விதைத்துப் பயிரிட்டால், நாளாவட்டத்தில் அதிக லாபம் கிடைக்கும் என்பதற்கு சந்தேகமே இல்லை. இது முக்கியமாய் கவனிக்கப்படவேண்டிய விஷயம் ஏனெனில், ஓரேவருஷத்தில் கம்பும் அதில் மணிலாக்கொட்டையும் கலப்புப் பயிராக பயிரிடப் போதுமான செழிப்புக்குன்றிய பஞ்சை பூமிகள் அதிக விஸ்தாரமாய் இருக்கின்றன. தவிரவும் ஒரு குடியானவன் ஒரு வருஷத்தில் தன் பூமி முழுவதும் மணிலாக்கொட்டையையே சாகுபடி செய்வானாகில், இப்பயிர் ஐந்து ஆறு மாதத்தியப் பயிரானதால், காலத்திய மழை மாறி தவறிவிடும் பட்சத்தில், மகசூல் முழுவதும் கெட்டுப்போகாவிட்டாலும், அநேகமாய்க் குறையும். அப்பொழுது தனக்கு சாப்பாட்டுக்கு வேண்டிய தானியம் வாங்கப் பணம் இல்லாமல், அவன் அவஸ்தைப்படுவான். ஆகையால் மணிலாக்கொட்டை சாகுபடி செய்வதில் மேற்கூறிய விஷயங்களைச் கவனிக்க வேண்டிய தவசியம்.—விவசாய டிபார்டு மெண்டு துண்டு பத்திரிகை.

---

## OPPORTUNITIES FOR DOING GOOD.

## உதவி செய்ய நேரும் சமயங்கள்.

——:o:——

ரிக்ஷா வண்டியிழுக்கும் கூலிக்காரர்கள் வண்டிகளின் சொந்தக்காரர்களிடமிருந்து நாள் 1-க்கு 4 அணா வீதம் கொடுப்பதாக வண்டிகளை வாடகைக்குப் பெறுவதாகத் தெரிகிறது. ஒரு ரிக்ஷா வண்டியின் விலை ரூபாய் 50-க்கு மேற்பட்டது. அந்த தொகைக்குக் கொடுக்கும் லாபம் வண்டியின் தேய்வுக்குக் கழித்தது போக 100-க்கு 150 ஆகிறது. ஓரே இடத்தில் வேலை செய்பவர்களாயும் ஒருவரையொருவர் நன்றாயறிந்தவர்களாயும் இருக்கிற 12-அல்லது அதற்கு மேற்பட்ட ரிக்ஷா இழுக்கும் கூலிகள் ஒன்று சேர்ந்து இப்போது ஒரு சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்தக் கூலிகளுக்கு வண்டி வாங்கிக் கொடுப்பதில் சங்கம் ரூபாய் 60) அட்வான்ஸாக அவர்களுக்கு கொடுத்ததாகவும் அந்த தொகைக்கு வருஷம் 1-க்கு 100-க்கு $9\frac{3}{8}$ வீதம் வட்டி கணக்கிடுவதாகவும், இப்போது இந்தக் கூலிகள் வண்டியின் சொந்தக்காரர்களுக்குக் கொடுப்பது போலவே சங்கத்துக்கும் நாள் 1-க்கு 4 அணா கொடுப்பதாகவும் ஏற்பாடு செய்தால் ஒரு வருஷத்துக்குள் அந்தக்கூலிகள் அந்த வண்டிகளுக்கு சொந்தக்காரர்களாகி விடுவார்கள். அவர்கள் அதற்குப்பின் செலுத்தும் பணம் அவர்கள் கையிருப்புத் தொகையாகும். இந்தச்சங்கம் சித்தி பெற்று நிறைவேறுவதற்கு அவர்களில் ஒருவன் தவறுவானானால் எல்லாருக்கும் உண்டாகும் நஷ்டத்தைக் குறித்து அடிக்கடி எடுத்துப் புகட்டவேண்டும். எழுதப்படிக்கத் தெரிந்த ஒரு மனிதன் தினந்தோறும் சாயுங்கால வேளையில் வண்டிகளை ஏற்றுக் கொள்ளுவதோடு பிரதிகூலியினிடத்தும் தவறாமல் 4 அணா வசூலித்துக் கொள்ள வேண்டும். மேலும் அந்தக் கூலி தன் சம்பாத்தியத்திலிருந்து நாலணாவுக்கு மேல், கூடுமானால் அட்வான்ஸாகப் பணம் கொடுக்க அவர் பார்க்க வேண்டும். லாகிரி பானக்கடைக்குப் போகாமலிருக்க அவனுக்கு புத்திமதி சொல்லவேண்டும். இந்தக் காரியத்தை அந்த ஏழைக் கூலியினிமித்தம் செய்வதற்கு யாரேனும் ஒருவராவது இச்சென்னையில் இருக்கிறாரா? அப்படி இருந்தால் மிகுந்த நன்மை செய்வதற்கு இதோ ஓர் சமயம் வாய்த்திருக்கிறது.



# REVIEW OF THE PRESS.

# பத்திரிகை ஆராய்ச்சி.

---

## CO-OPERATIVE SUPPLY OF MANURE.

## கூட்டுறவினால் எரு ஸப்ளை செய்தல்.

---

மதராஸ் புல்லட்டின் ஆப்கோவாபரேஷன் என்று மூன்று மாஸத்திற்கு ஒரு முறை கூட்டுறவு விஷயங்களைப்பற்றிப் பிரசுரமாகும் பத்திரிகையின் போன ஜூன் மாஸத்து ஸஞ்சிகையில் மதுரை கே. ராமஸ்வாமி அய்யர் ஒரு சிறு வியாஸம் எழுதியிருக்கிறார்.

விதை, எரு, விவசாயக் கருவி போன்ற விவசாய முயற்சிக்கு வேண்டியவற்றை வாங்க, கூட்டுக் கடன்கள் பெறுவதற்கு ஒத்தக்கடை கிராம நாணயச் சங்கத்தின் விதிகள் இடங்கொடுக்கின்றன. சங்கம், வேலை ஆரம்பித்த சில வாரங்களுக்கெல்லாம், அதன் மெம்பர்களில் 7 பெயர் மதுரை முனிஸிபல் குப்பை டிப்போ மூன்றில ஒன்றை வாங்கும் பொருட்டு ரூ. 500 கடன் கேட்டார்கள். அந்தக் கடன் கொடுத்தால் சங்கத்தின் மெம்பர்களின் வயலுக்கு மேற்சொன்ன தெரு குப்பைகளைக் கொண்டு சேர்ப்பதாயும் ஒப்புக் கொண்டார்கள்.

அந்த டிப்போவை ரூ. 2,705 க்கு வாங்கினார்கள். இந்தத் தொகையில் ரூ. 676-8-0 உடனே டிப்பாசிட்டு செய்யும்படி நேர்ந்தது. மிகுதியை மாஸம் 1 க்கு ரூ. 225-8-0 வீதம் 9 மாதத்தில் கட்டவேண்டியிருந்தது. குப்பைகளை மெம்பர்களுக்கு விற்றதில் 2 மீத்திற்குள் சங்கத்தின் கடன் ரூ. 500-ம் திரும்பிச் செலுத்தி விடுவது அவர்களுக்கு சாத்தியமாயிற்று.

குப்பைகளை விற்றதில் வந்த விற்பனைத் தொகை ரூ. 3,700. அதில் மெம்பர்களுக்கு விற்றதில் வசூலானது ரூ. 2,000. மிகுந்த குப்பையை இதரர்களுக்குக் கொடுத்ததில் வந்தது ரூ 1,700. மற்ற இரண்டு டிப்போக்களில் ரூபாய் ஒன்றுக்கு முறையே 2 வண்டியும் $2\frac{1}{2}$ வண்டியும் விற்றன. சங்கத்தின் டிப்போவில், கொஞ்சநாள் வரையில் ரூ. 1 க்கு 3 வண்டியும், லாபம் அதிகமாய்க் கிடைக்குமென்று தெரிந்ததன் பின் $3\frac{1}{2}$ வண்டியும் விற்கப்பட்டன.

இதற்குச் சிப்பந்தி செலவு ரூ. 350 க்கு மேற்போகவில்லை. ஆகவே கிடைத்த நிகரலாபம் ரூ. 650. இந்தத் தொகையில் ரூ. 600 ஒத்தக்கடையில் சங்கத்தின் உபயோகத்திற்கு ஒரு கட்டிடம் கட்டும் பொருட்டு சங்கத்திற்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. கட்டிடத்திற்கு வேண்டிய மனை ஏற்கனவே வாங்கியாய் விட்டது. சீக்கிரத்தில் அந்த கட்டிடம் ஆரம்பித்து நடந்தேறும்.

மதுரை போன்ற பெரிய நகரங்களில் தெருக் குப்பைகள் நெல்வயல்களுக்கு நேர்த்தியான எருவாகும். இந்த எருவின் விலை படிப்படியாய் உயர்ந்து கொண்டே போவதால், கூட்டாகச் செய்யாவிட்டால் சிறு நிலச்சுவான்தாரர்களாகிய பல பெயருக்கு இந்த எரு சம்பாதித்தல் முடியாததாகும்.

---

## INDUSTRIES.

## கைத்தொழில்கள்.

கார்த்திகை மீத்து வித்யாவிஹாரிணியில் பண்டித ஸ்ரீமான். வி. டி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்கள் கைத்தொழில்களைப்பற்றி ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

"தந்திரமும் திறமையுமுள்ளவர்கள் செய்யத்தக்க அதிசயமுள்ள சில வேலைகளே கைத்தொழில்களாகும்" என்று சொல்லுகிறார்.

விவசாயம், எண்ணெய் ஆட்டுவது, கருப்பஞ்சாறு இறக்குவது முதலிய தொழில்கள் சிறப்பற்றவையாதலால் கைத்தொழில்கள் அல்ல. சித்திர வேலை கையினால் செய்யப் பட்டாலும், மனதூகத்தினால் செய்யவேண்டியிருப்பதால் அதை கைத்தொழிலாகச் சொல்லக்கூடாது. கடிகாரம் செய்வது; யந்திரங்களினாலும், கைகளினாலும் இயற்றப்பட்ட இரும்பு வேலை, தச்சுவேலை, கண்ணாடி வேலை, கலசம் முதலான மண் வேலை, பஞ்சுவேலை, தோல்வேலை கடிதவேலை, நெசவுவேலை, இவைகளும் இவைபோன்ற அதிகச்சிறப்பில்லாமலும், முழுமையும் தாழ்வில்லாமலுமுள்ள நடுத்தர வேலைகளே கைத்தொழில்களாகும்.

கைதொழில்களை, அபிவிருத்தி செய்ய சாஸ்திரப் பயிற்சியும், நடத்த, யுக்தியும் உபாயமும், வளரச்செய்ய ஒழுங்கும் ஒற்றுமையும் வேண்டும். வர்த்தகம் நடவாத தேசத்தில் கைத்தொழிலும் நடவாது. ஆகையால் விடாமுயற்சி, மனோதிடம், சோர்வின்மை முதலிய இப்படிப்பட்ட குணங்களோடுள்ள தேசத்தில்தான் கைதொழில்கள் விருத்திக்கு வரும்.

## ECONOMY.

## சிக்கனம்.

"சிக்கனம், அல்லது செட்டாய்ச் செலவிடுதல்" என்பதைப் பற்றி ஸமீபத்துச் சுதேசமித்திரன் பத்திரிகை ஸஞ்சிகை யொன்றில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

செட்டாய்ச் செலவிடுதல் என்றால் லோபத்தனமாயிருப்பதென்று அர்த்தம் அல்ல. நாம் செலவு செய்யும் ஒவ்வொரு காசும், நமக்கு ஒரு பிரதி ப்ரயோஜனத்தைக் கொடுக்கிறது. நமக்கு ஏதாவது ஒரு ப்ரதிகாரியத்தைக் குறித்து நாம் செலவு செய்கிறபடியால், நன்மை பயக்கக்கூடியவைகளில் செலவு செய்தும், தீமை உண்டு பண்ணுபவைகளில் செலவை விலக்கியும் வரவேண்டும்.

ஆனால் நன்மை தரக்கூடியவைகளில் செலவு செய்யலாமென்றால், நன்மை பயக்கக்கூடிய ஒவ்வொரு காரியங்களும் நமக்கு ஏற்றவையா, அப்படிப்பட்டவைகளில் செலவுசெய்யப்போதுமான திரவியமுண்டா என்பதையோஜித்துச் செய்யவேண்டும். இதோடுகூட ஒரு வஸ்துவை நாம் வாங்குவதற்கு முன்னே அது நமக்கு அவசியம்தானா, அது இல்லாமல் நம்முடைய காரியம் முடிவு பெறாதா, என்று கவனித்து எதெது அவசியமோ அதை மாத்திரம் குறித்து நாம் செலவுசெய்யவேண்டும். இப்படிச் செய்யும் விஷயத்திலும், நமக்குள்ள வரும்படிக்குத் தக்க செலவு செய்யலாமே தவிர கடன் வாங்கியாவது, வீண் டம்பத்துக்கு, அதாவது பிறர் மதிக்கவாவது, செலவு செய்வது கூடவே கூடாது. நமக்கு எப்போதும் செலவு இருந்து கொண்டேயிருக்கும் என்று எண்ணி, நம்மால் ஸம்பாதிக்க முடியாத காலங்களில் நம் வயிறு வளர்க்கப்போதுமான திரவியத்தை நாம் தேடிவைக்க வேண்டும்.

ஆகவே எல்லாரும் வீண் டம்பமில்லாமலும் கடன் வாங்கிச் செலவுசெய்யாமலும் செட்டாய்ச் செலவு செய்து, கொஞ்சம் கொஞ்சமாக வயது காலத்துக்கு மீத்துவைத்துச் சுகமாக இருக்கவேண்டிய வழியைத் தேடவேண்டியது அவசியம்.

## GROWTH OF WEEDS.

## களை முளைத்தல்.

தென்னிந்தியா விவஸாயம் என்னும் மாதாந்த்ரப் பத்திரிகையின் பங்குனி மீ த்து ஸஞ்சிகையில் "களை முளைத்த" லைபற்றி ஒரு வியாஸ மிருக்கிறது.

பயிர் நிலங்களில் களைப்பூண்டு முளைப்பது ஸகஜம். ஸாதாரணமாய் நிலத்தை உழுது விதை விதைத்தால் களை முளையாமலிராது. களை முளைப்பதனால் பயிருக்குக் கெடுதி யென்றறிந்து, அதைத் தொலைப்பதற்கு, நிலத்தை ஆழமாகக்கிண்டி, அடிக்கடி கிளறினால், அந்நிலத்துப் பயிர் செவ்வையாய்ப் பிடித்து அதிக பலனைக் கொடுக்கும். ஆனாலும், களை எப்படி உண்டாகி விருத்தியாகிறது. அதை எப்படி முளைக்காமல் செய்கிறது, என்பது அறிய வேண்டியது அவசியம். களைவிதைகள் சில மிகவும் சிறியனவாயிருப்பதால் காற்றினாலும், மிதக்கும்படியான சில விதைகள், ஜலத்தினாலும், சில விதைகள் ஆடு, மாடு, குதிரை முதலியவற்றின் சாணங்களில் கலக்கப்பட்டு எருவோடு நிலத்தில் சேருவதனாலும் களைப்பூண்டு முளைக்கிறது. அதனால் உண்டாகும் கெடுதி (1) மண்ணிலுள்ள ஈரத்தையும் உணவையும் உண்டு பயிரைக் கெடுத்துவிடும், (2) மண்ணிலுள்ள ஈரம் கிரகிக்கப்படுவதால் மண் உலர்ந்து பயிர் முளையாமல் போகும் (3) நிலத்தின் விலை குறையும் (4) களை முளைத்த நிலத்தை உழுவது இரட்டிப்பு வேலை. (5) களை முளைத்திருந்தால் அநேக விதப்பூச்சிகள் முட்டை யிடுவதற்கும் நோய்கள் தங்குவதற்கும் இடமுண்டு. சில களைப்பூண்டுகள் விஷச்செடிகளாயிருந்து மாட்டின் வாயைப் புண்ணாக்கி அதன் பாலைக் கெடுத்துவிடும்.

களை முளையாமலிருக்கச் செய்யவேண்டிய காரியங்கள்.

(1) ஆடு மாடு உடம்புகளில் களை விதை ஒட்டி வாராமல் பரீக்ஷிக்க வேண்டும்.

(2) முளைத்த களை, பூ வெடிக்கும்போதே அதை வெட்டி விட வேண்டும்.



(3) கிழங்குள்ள சில களைகளை வேரோடு அறுத்து விடவேண்டும்.

(4) கோரைக் களை சீக்கிரத்தில் மடியாது. அதை அடிக்கடி வெட்டிக்கொண்டு வந்து மண்ணோடு மண்ணாய் மடித்துவிட வேண்டும்.

(5) களை முளைத்திருப்பது கொஞ்சமாயிருந்தால் பாஷாணம் தெளிக்கலாம். ஆனால் ஆடு மாடு மேயக்கூடாது.

(6) சில களைகளின் வேர்களைத் தோண்டப் பன்றிகளும், ஒட்ட மேய ஆடுகளும், அடியோடு கடித்து மேயக் குதிரைகளும் உபயோகப்படும். இவைகளோடு அடிக்கடி மண்ணைப்பறித்து விடுதலும் நலம்.

## SOUTH INDIAN CATTLE.

## தென்னிந்தியாக் கால்நடைகள்.

'ஸ்ரீ மான் தாமக்கிரந்தி' அவர்கள் ஐப்பசி மீ த்து வித்யா விஹாரணிப் பத்திரிகையில் "தென்னிந்தியாக் கால்நடைகள்" என்று ஒரு வியாஸ மெழுதியிருக்கிறார்.

நமது நாட்டுக் கால் நடைகளில் மைஸூர் வர்க்கமென்று ஒரு வகை மாடுகளைப்பற்றி அநேகர் கேள்விப் பட்டிருக்கலாம். இந்த வர்க்க மாடுகள் 'நாட்டு தனம்', 'தொட்டதனம்' என்று இரண்டு வகைப்படும்:

(1) நாட்டுத் தன மாடுகள் உருவம் சிறுத்து, உடம்பு நல்ல கட்டுக்கூடுபெற்று, பல நிறங்களமைந்து, தென்னிந்தியா எங்கும் இருக்கின்றன. இவைகள் தான் நமக்குப்பலவிதத்திலும் உதவி, வேண்டிய தயிர் பால் வெண்ணெய் முதலானவைகளைக் கொடுத்து வருகின்றன.

"தொட்டத்தன" வகை மாடுகள், பருத்த சரீரமும், ஒரே சாயலும் வர்ணமுங்கூடி வேலைக்கு நன்றாய் உதவக்கூடியன வாயும், விலையுயர்ந்தனவாயும், நமது பக்கங்களில் அருமையாயும் அகப்படுகின்றன. இந்த தினுஸு மாடுகள் சவாரிக்காகவும், சரக்குகளை ஊர் விட்டு ஊர் கொண்டு போவதற்காகவும் முக்கியமாய் உபயோகப்படுகின்றன. "அமிருத மஹால்", "சித்திர துருக்கம்", "ஆலம்பாடி" என்னப்படுகிற சில்லரை வகை மாடுகளெல்லாம் மேலே சொல்லப்பட்ட தொட்ட தனத்தைச் சேர்ந்தவைகள் தான்.

பசு வர்க்கம் கெடாமல் காப்பாற்றுவதற்கு தொட்டத்தனக்கன்றுகளை வாங்கி வளர்த்து "மாப்பிள்ளைக்காளை" களாக வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் நமது குடியானவர்களும், மற்றவர்களும், அதிக விலை கொடுத்து நல்ல ஜாதிக்கன்றுகளை வாங்காமல் நாட்டுத்தனக்காளைகளையே மாப்பிள்ளைக்காளைகளாக வளர்ப்பதினால் நமது மாடுகளுக்கு அவலக்ஷணங்கள் மேலிட்டு, பால் குறைந்து, போயிருக்கிறது.

மைஸூர் ப்ராந்தியங்களில் பசுவர்க்கங்களைப் பரிபாலித்துவருவதனால் தான் "அமிருதமஹால்" என்று பேர் போன வருக்க மாடுகளை நாம் பார்க்கிறோம்.

"அமிருத மஹால்" என்றால் "பால் வகைக்கச்சேரி" என்று அர்த்தம். ஸுமார் 200 வருஷங்களுக்கு முன் மைஸூர் மகாராஜாவாயிருந்த சத்திரபதி சிக்க தேவராஜ உடையார் காலத்தில் "வெண்ணெய்ச் சாவடி" என்று பெயருள்ள பசுமாடு டிபார்ட்மெண்டு இருந்ததாகவும், பிறகு ஹைதர், திப்பு ஸுல்தான் இவர்கள் காலங்களில் மேலே சொல்லியவகை மாடுகள், பீரங்கி முதலிய சண்டை ஸாமான்களை வெகு விரைவோடு தூக்கிச் சென்றதாயும், கேள்விப்படுகிறோம். ஒரு நாளைக்கு 16 மைல் தூரம் இவைகள் நடக்கும். இந்தத்தினுஸு பசுக்கள் பால்கொஞ்சமாய்க் கொடுப்பதால் அவ்வளவு சிரேஷ்டமானவைகளல்ல. ஆனாலும் பால் புஷ்டி உள்ளதாம்.

## REVIEWS OF BOOKS.

## புஸ்தக ஆராய்ச்சி.

SMILING BENARES.

**அழகான காசி:**—இது 21 படங்களடங்கிய ஒரு சிறிய இங்கிலீஷ் பாக்கெட் புஸ்தகம். இதில், காசியில் உள்ள சில ரம்யமான கோவில்களும், ஸ்நானகட்டங்களும் மற்ற விசேஷ இடங்களும் ஹாப்டோன் படங்களால் காட்டப்பட்டு, ஒவ்வொரு படத்தையும் பற்றிச் சுருக்கமான விவரமும் எழுதப்பட்டிருக்கிறது. காசியென்றால் நமக்கெல்லாருக்கும், விச்வநாதருடைய கோவிலும் மணிகர்ணிகா கட்டமும் ஞாபகம் வரும். ஸ்வாமி விச்வேச்வரனுடைய கோவில் காசிப் பட்டணத்தின் நடுமத்தியில் கட்டப்பட்டு தங்க கோபுரமும், தங்கமண்டபமும், தங்க த்வஜஸ்தம்பமும், இன்னும் பல விநோதங்களோடு வெகு அழகாய் விளங்குகிறது. காசியிலுள்ள ஸ்நாந கட்டங்களில் எல்லாவற்றிலும் சிரேஷ்டமானது மணிகர்ணிகா கட்டம். இந்த கட்டத்தில் இந்தூர் மகாரணி அகல்யா பாயால், ஒரு பெரிய கல்ஸ்னை கட்டமும், வடக்குத் தெற்குக் கோடிகளில் இரண்டு கோவில்களும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த அகல்யா பாயின் உருவம் ஒன்று வெள்ளைச் சிலையால் செய்து, இந்த கட்டத்தின் தெற்குக் கோடியில் வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும், கேதாரி கட்டம், பஞ்ச கங்கை கட்டம், ஹரிச்சந்திர கட்டம் முதலானவைகளின் படங்களும் இந்தப் புஸ்தகத்தில் வெகு நேர்த்தியாய் இருக்கின்றன. ஷை யூர் பட்டு வியாபாரி கே. எஸ். முத்தையா கம்பெனியாரால் இச்சிறிய புத்தகம் பிரசுரிக்கபட்டிருக்கிறது. இதன் விலை 4 அணாத்தான். காசிக்குப் போகாமல் காசியிலுள்ள விநோத விசித்ரங்களைத் தெரிய விரும்புகிறவர்களுக்கு இந்தப் புத்தகம் இன்றியமையாததாக இருக்கும்.

KUMARA SAMBHAVAM.

**குமார ஸம்பவம்:**—இது காளிதாஸ மகா கவியால் வடமொழியில் செய்யப்பட்ட "குமாரஸம்பவம்" என்பதின் தமிழ் மொழி பெயர்ப்பு. கல்லிடைக்குறிச்சி, இந்து எலிமெண்டெரி பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயராகிய மகா-ௗ-ௗ-ஸ்ரீ கே. பி. ராமஸ்வாமி அய்யரவர்களால், எல்லாருக்கும் எளிதில் பொருள் விளங்கக்கூடிய பாட்டுகளாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் காளிதாஸ மகா கவியின் சரித்திரமும் அடங்கியுள்ளது. வசனரூபமாகக் கதையின் சுருக்கமும் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8. இப்புஸ்தகம் வேண்டியவர்கள் ஷை ராமஸ்வாமி அய்யரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

KANNAKI.

**கண்ணகி.**—இப்பெயர்கொண்ட ஒரு அருமையான தமிழ் நாடகம் திருவல்லிக்கேணி "லலிதா விலாஸ" புஸ்தகசாலையாரால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம் என்னும் பழைய செந்தமிழ்க் காவியத்தைப் பெரும்பாலும் தழுவி, "சுதேசமித்திரன்" உதவிப் பத்திரிகாசிரியராகிய ஸ்ரீ நாகை வி. கோபாலகிருஷ்ண பிள்ளையால் இந்த நாடக நூல் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர் நம்முடைய "பிழைக்கும் வழி" யில் அடிக்கடி எழுதிவரும் விஷயங்களைப் படித்துப் பார்த்திருக்கும் நேயர்களுக்கு இவருடைய தமிழ் வசன நடையைப்பற்றி நாம் விரித்துச் சொல்ல வேண்டியது அநாவசியம். புத்திரர்களின் சம்மதத்தைத்தெரிந்தே விவாகம் செய்யவேண்டும், முதலிற் கொள்ளும் காதலே உண்மையான காதல், வினையின் படியே எல்லாம் நடக்கும், என்பவை போன்ற பல நீதிகள் இதில் விளக்கப்பட்டிருக்கின்றன. ஸ்திரி புருஷ சமத்துவத்தைப்பற்றியும், தாசிகளின் துஷ்கிருத்தியத்தைப்பற்றியும், இந்த நூல் மிக விரிவாக எடுத்துக் கூறுவது சிலாகிக்கத் தக்கது. அநேக மேற்கோள்களும், பாட்டுக்களும் நூலின் இடையிடையே வருவது படிப்பவரின் இன்பத்தை அதிகப்படுத்துவதற்கு ஏது வாகும். சிறுவர் சிறுமியர்களுக்கு வேண்டிய அநேக நீதி போதனைகள் இதில் அடங்கியிருக்கின்றன. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இதை வாசிக்கவேண்டும். சுமார் 240 பக்கங்கள்கொண்ட இந்நூலின் விலை அணா 12. வேண்டுவோர் இந்நூலாசிரியருக்காவது, மேற்படி புஸ்தக சாலையாருக்காவது எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---



## BOYS SECTION.

## சிறுவர் பகுதி.

HABIT IS SECOND NATURE.

**குணத்தை மாற்றக் குருவில்லை.**—ஜன்மத்தோடு பிறந்தது செருப்பாலடித்தாலும் போகாது. கழுத்து வெளுத்தாலும் காகம் கருடனாகுமா? பொல்லாக் குணத்துக்கு நல்ல மருந்துண்டா?

WHERE THERE IS A WILL, THERE IS A WAY.

**மனமிருந்தால் மலையும் சாயும்.**—வேண்டுமென்று நூற்றால் வெண்ணெய்க் கட்டிபோல் நூற்கலாம். கருமத்தை முடிக்கிறவன் கடலையும் ஆராய்வான். கருமத்தை முடிக்கிறவன் அருமை ஒன்றும் பாரான். மனமிருந்தால் இடமுமுண்டு.

A MONSTROUS BOY.

**ஒரு சிறிய ராக்ஷஸன்:**—பாரிஸ் நகரத்தில் ஒரு ராக்ஷஸப் பையனிருக்கிறான். அவன் வயது 10 அவன் தலை 22-அங்குல அகலமுள்ளது. சரீரம் 150-பவுண்டு நிறையுள்ளது. கைகால்களில் 6 விரல்களிருக்கின்றனவாம்.

SWIMMING.

**நீந்துதல்**—மிஸ்டர் லாங்வொர்த் என்பவர் 65 விநாடியில் 110 மீட்டர் (ஒரு மீட்டர் ஸுமார் 39-3/8 அங்குலம்) அளவு நீந்தினாராம். உலகத்தில் ஒருவரும் இவ்விஷயத்தில் இவருக்கு இணையில்லையாம்.

A FAMOUS MOTOR CYCLIST.

**பேர்போன மோட்டார் சைக்ளிஸ்டு.**—ஸான் ப்ரான்ஸிஸ்கோவில் ஜாக் டிரொஸேரியோ என்பவர் பிரஸித்திபெற்ற ஒரு அமெரிக்கன் மோட்டார் சைக்ளிஸ்டு. அவர் ஒருமணியில் 84 மைல் 135 கெஜம் தூரம் சென்றாராம். 1909௵ செப்டம்பர் மாதம் 6 தேதியில் எப். ஹியூக் என்பவர் ஸ்பெயின் பீல்டில் ஒருமணியில் 71 மைல் 620 கெஜதூரம் சென்றாராம்.

HIGH COURT JUDGES.

**ஹைகோர்ட்டு ஜட்ஜிகள்.**—இப்போது கல்கத்தா ஹைகோர்ட்டில் 16 ஜட்ஜ்களும், சென்னையில் 8-ம், பம்பாயில் 7-ம் இருக்கிறார்கள். பஞ்சாப், பர்மா, இவைகளிலுள்ள முக்கிய நியாயஸ்தலங்களுக்கு ஹைகோர்ட்டென்று பேரிராமல் சீப் கோர்ட்டென்று பேரிருந்து, அவைகளில் முறையே 5 ஜட்ஜ்களும் 4 ஜட்ஜ்களும் இருக்கிறார்கள்.

THE CALCUTTA MINT.

**கல்கத்தா தங்கசாலை.**—உலகத்திலுள்ள நாணயச் சாலைகளி லெல்லாவற்றிலும் பெரிதாயுள்ளது கல்கத்தா தங்கசாலையாம். அதில் தினமொன்றிற்கு 1,000,000 நாணயங்கள் செய்யப்படுகின்றன. அவைகளில் 25,000 சிறிய வெள்ளி நாணயமும், மற்றவை இதர கால்அணாமுதலிய சிறிய நாணயமுமாம். இந்து தேசத்தில் காலணா அதிகமா உபயோகப்பட்டு வருகின்றன வாகையால் தினமொன்றிற்கு 7,50,000 காலணாக்கள் செய்யப்பட்டு வருகின்றன.

A DOG'S SAGACITY.

**ஒரு நாயின் விசேஷ அறிவு.**—லண்டனில் ஒரு துரையும் துரைசானியும் நித்திரை செய்து கொண்டிருக்கையில், துரைசானி நடு ராத்திரியில் ஏதோ ஒரு வருத்தத்தால் எழுந்து விரைவாய்க் கடற்கரைக்குச் சென்று தற்கொலை செய்து கொண்டாளாம். இதை அவர்கள் வீட்டில் வளர்த்து வந்த நாய் கவனித்திருந்து அப்போதே துரை தூங்குமிடத்திற்கு வந்து குலைத்ததாம். துரை நித்திரையை விட்டு எழுந்து பக்கத்திலிருந்த மனைவியைக் காணாமல் நாய் குலைத்துக்கொண்டு சென்ற வழியே போய்க் கடற்கரையில் தமது மனைவி பிணமாக இருப்பதைக் கண்டாராம். இதனால் நாய்க்குள்ள பகுத்தறிவு நன்கு விளங்கும்.

A FUND IN AID OF HORSES.

**குதிரைகளுக்கு உபகார பண்டு.**—எமி வொன் பிஸோனி என்பவர் ப்ர்மசாரி. ஒரு பிரபல ஹங்கேரிய உத்யோகஸ்தருடைய ஸகோதரர். இவர் காலவியோகமாகையில் 65 வயதுடையவராக இருந்தார். இவர் ஸ்திரீகளை வெறுத்துத் தள்ளியவர். தமது சுற்றத்தவருடன் எப்பொழுதும் பகைமையுடையவராகவே ஜீவித்து வந்தார்.

இவர் தமது ஆஸ்தியாயுள்ள 20 ஆயிரம் பவுனையும் தமது வண்டிக்குதிரைகள் 12-க்கும் உயில் எழுதி வைத்து, இந்த உயிலில் கண்டபடி நடத்து

வதற்கு பூடாபெஸ்திலுள்ள மிருகபாதுகாப்புச்சங்கத்தாரை நியமித்திருந்தார். இந்தச்சங்கத்தார் அந்த இருபதினாயிரம் பவுனிலிருந்துப் வரும் வட்டியைக்கொண்டே அந்த 12 குதிரைகளையும் பாதுகாக்க வேண்டுமென்பதாயும், அந்தப் பன்னிரண்டு குதிரைகளில் ஒன்று மரிக்குங் காலத்தில் அதற்கு பதிலாய் வயதுசென்ற குதிரையை யெடுத்துச் சேர்த்துப் பாதுகாக்கவேண்டு மென்பதாயும், இவ்விதமே ஸதாகாலமும் 12 குதிரைகள் பாதுகாக்கப்பட்டு வரவேண்டுமென்பதாயும், உயிலில் குறிக்கப்பட்டிருந்தது.

இந்த உயிலை பிஸோனியின் சுற்றத்தார்கள் வாதித்து வருகிறார்கள். வியாஜ்யம் எப்படித் தீருமோ தெரியவேணும்.

CHILDREN'S RULES OF COURTESY.

**பிள்ளைகளின் நன்னெறி.**—1. தனக்குத்தானே செய்யவேண்டிய மரியாதை: நேர்மையும் யோக்கியமும் ஹ்ருதயசுத்தமும் உள்ளவனாயிரு. அஸங்கியமானவார்த்தைகளைப் பேசாதே. உன் முகத்தையும் கை கால்களையும் எப்பொழுதும் சுத்தப்படுத்துவதுமல்லாமல் உன் உடுப்புகளையும் சுசிகரமாய் வைத்துக்கொள்.

2. வீட்டில் அனுஸரிக்க வேண்டியமரியாதை: உன்னால் இயன்றமட்டும் பெற்றோருக்கு உதவிசெய். உன் ஸகோதரர் ஸகோதரிகளிடத்தில் பட்சமாயிரு. உனக்கு ஏதாவது மிட்டாய்வ ாங்கக் காசுகிடைத்தால் அதில் உன் ஸகோதரர் ஸகோதரிகளுக்கும் கொடு. உன்னால் இயன்றமட்டும் உன்பெற்றோரிடத்தில் பிரியமுள்ளவனாய் நடந்துக்கொள்.

3. பாடசாலையில் அனுஸரிக்க வேண்டியமரியாதை: உபாத்திமாரைக் கனப்படுத்து. அவர்களுக்குத் தொந்தரவு கொடாதே. பள்ளிக்கூடச் சட்டங்களைக் கவனித்து நட. ஒருபோதும் இன்னொருவன் எழுதினதைப்பார்த்து எழுதாதே. பள்ளிக்கூடத்திலிருக்கும் நாற்காலிகள் மேசைகள் முதலியவைகளை சேதப்படுத்தாதே, எந்தப் புத்தகங்களிலும் கிறுக்காதே. நீ தப்பிதம் செய்திருக்க, உபாத்தியாயர் இன்னொருவன் அதைச்செய்தான் என்று நினைத்து அவனை தண்டிக்கத் தக்கதாய் உன் தப்பிதத்தை மறையாதே. அப்படிச் செய்வது கோழைத்தனமாகும்.

4. விளையாட்டில் அனுஸரிக்கவேண்டிய மரியாதை: விளையாட்டில் ஒருவனையும் ஏமாற்றாதே. வாயாடியாயும் உன்னைவிடச்சிறியவர்களைப்பயமுறுத்துகிறவனாயுமிராதே. சண்டைக் குணமுள்ளவனாயல்லாமல் சந்தோஷ குணமுள்ளவனாயிரு. ஒருவனையும் கேலிபண்ணாதே. உன் தோழரை வசைப் பேர்சொல்லி அழையாதே.

5. வீதியில் அனுஸரிக்கவேண்டிய மரியாதை: உன் குருமாரையும் உபாத்திமாரையும் இன்னும் பெரியோர்களையும் தெருவீதியிற் சந்திக்கும்போதெல்லாம் அவர்களுக்கு வணக்கஞ்செய். ஜனங்களை நெருக்கித்தள்ளி இடித்துக்கொண்டுபோகாதே. சுவர்களையும் தெருக்கதவுகளையும் கிறுக்கி அவைகளை அலங்கோலப் படுத்தாதே. தெருவீதிகளிலுள்ள கடை வாசல்களுக்கு முன் நின்று ஊசாட்டம் போட்டுக் கடைக்காரருக்குத் தொந்தரவு கொடாதே. ஜனங்கள், மிருகங்கள், பட்சிகள், வண்டிகள் முதலியவைகளின்மேல் கல்லெறியாதே. வேறெந்த உபாயங்களாலும் பிறர் ஸொத்துக்களைச் சேதப்படுத்தாதே. முதியோரையும் முடவரையும் பரிகாசம் பண்ணாதே. அறிமுகமற்றவர்களிடத்திலும் அன்னியரிடத்திலும் விசேஷித்த மரியாதை காட்டு.

6. எவ்விடத்திலும் அனுசரிக்கவேண்டிய மரியாதை: "தயவுசெய்து" என்று சொல்லவும் நன்றி காட்டவும் ஒருபோதும் மறவாதே. மற்றவர்கள் காரியங்களில் அநாவசியமாய்த் தலையிடாமல் உன் காரியத்தை நீயேபார். உத்தரவின்றி ஒருவர் வீட்டிலும் உட்பிரவேசியாதே. மிருகஜீவன்களிடத்திலும் பட்சிகளிடத்திலும் அனுதாபமும் பட்சமும் காட்டு. பெரியோர், சிறியோர், தனவந்தர், தரித்திரர் யாராயிருந்தாலும் ஸரி, ஒருவரோடும் முரண்டு பண்ணாதே. முதியவர்களுக்கும் முகப்பழக்கமற்றவர்களுக்கும் நீ செய்ய வேண்டிய கடமைகளை அறிந்து உன்னால் இயன்றமட்டும் அவர்களுக்கு உதவிசெய். யாரும் பேசிக்கொண்டிருக்கையில் இடையிற் பேசாதே. ஒருக்காலும் நேரம் தப்பாதே.



## LADIES SECTION.

## ஸ்திரீகள் பகுதி.

STALE BY TIME.

**பழகப் பழகப் பாலும் புளிக்கும்.**—ஆசை அறுபதுநாள். மோகம் முப்பது நாள். தொண்ணூறுநாளும் போனால் துடைப்பக் கட்டைப் பூசை

FEMALE EDUCATION IN MADRAS.

**சென்னையில் பெண்கல்வி.**—சென்னையில் பெண்கல்வி அதிக விருத்தி அடையாவிட்டாலும் முன்னை விட இப்பொழுது படித்துவரும் பெண்களின் தொகை அதிகரித்து வருகிறதென்றே சொல்லலாம். இப்பொழுது 1,78,867 பெண்கள் படித்து வருகிறார்கள். பாடசாலையில் படிக்கும் பெண்கள் 100-க்கு 6-ம், பிள்ளைகள் 100-க்கு 32-மாக இருக்கிறார்கள்.

DID HIM CASUAL SERVICE.

**தற்செயலாய் உபகாரம் செய்தான்.**

மனைவி:—கோபாலன் எதற்காக உமக்கு அடிக்கடி உபகாரம் பண்ணுகிறார்? நீர் அவருக்கு என்ன செய்தீர்?

புருஷன்.—நானாக வேண்டுமென்று அவருக்கு யாதொரு உபகாரமுஞ் செய்யவில்லை. தற்செயலாக நேர்ந்ததையும் நான் வேண்டுமென்றே செய்யதாக அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார்.

மனைவி.—அப்படித் தற்செயலாக என்ன உதவி செய்யும்படி நேரிட்டது.

புருஷன்.—வேறொன்றுமில்லை. அந்த மானி உன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்வதாக நிச்சயித்திருக்கையில் நான் உன்னைக்கலியாணம் பண்ணிக்கொண்டு விட்டேனும். இதுதான்.

PURE AIR.

**சுத்த வாயு.**— முக்கியமாய் படுக்கையறைகளில் ஸாமான்கள் மிகவும் சொற்பமாயும், காற்று லேசாய் உட்பிரவேசிக்கக் கூடியதாயும், ஜன்னல்கள் கதவுகளெல்லாம் திறந்தும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சுவாசித்த காற்றையே மேலும் மேலும் சுவாசிக்க நேரிடும். ஒரு அழுக்குள்ள ஏனத்தைக் கழுவியதண்ணீர் எவ்வளவு அசுத்தமாயிருக்கிறதோ அது போலவே நம்முடைய உடம்பிற்குட் பிரவேசித்து வெளியிலேவருங் காற்று மிருக்கும். சிற்சில அறியாத்தன்மையுள்ள ஜனங்கள் படுக்கும்பொழுது தலையையும், உடம்பையும் துணியினாலே நன்றாயிறுக்கி மூடிக்கொண்டு, சுத்தவாயுவைச் சுவாசிக்க முடியாமல் மேலும் மேலும் விட்ட மூச்சையே சுவாசிக்கிறார்கள். இப்படிச்செய்வதனால் சில வேளைகளில் மாணம் வரவுங்கூடும். உதாரணமாக, அநேக வருஷங்களுக்கு முன் கல்கத்தாவிலே ஒரு நாள் ராத்திரி 146-மனுஷரை இரண்டு சிறு வாசல்களையுடைய ப்ளாக்ஹோல் என்று சொல்லப்படும் ஒரு சுரங்கத்தில் விட்டு அடைத்தார்கள். மறுநாட்காலை திறந்து பார்த்தபொழுது 23-மனுஷர் மாத்திரம் நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி வெளியே வந்தார்கள். மிகுதியாயிருந்த அவ்வளவு பேரும் அன்றிரவே யிறந்துபோனார்கள். இவர்கள் யாது காரணத்தினால் இறந்திருக்கக்கூடும்? அசுத்தவாயுவே இதற்குக் காரணம்.

FOREIGN BODY IN THE NOSE.

**மூக்குக்குள் வஸ்து.**—சில வேளைகளில் குழந்தைகள் பயறு, மணி முதலிய ஏதாவது ஒரு வஸ்துவை மூக்குக்குள் விளையாட்டில் செலுத்தி விடும்,

அப்படிச் செலுத்தி விட்டால் பெரிய வஸ்துவாயிருந்தால் உடனே கண்ணுக்குத் தெரியும். அப்பொழுது லேசாய் எடுத்து விடலாம். ஆனால் சிறு வஸ்துவா யிருந்து ஒருவருக்கும் தெரியா விட்டால் அது நாசியினுள்ளேயே இருந்து குழந்தைக்கு சில நாட்களுக்குள், அதிக வேதனையை உண்டு பண்ணும். அந்த வஸ்து யிருக்கிற பக்கத்தில் வீக்கங்காணும். ஒரு வித துர்நாற்ற முள்ள சளி அதிலிருந்து வடியும். செலுத்தப்பட்டவஸ்து பயறு முதலியவைகளாயிருந்தால், அது நாசியினுள்ளேயே யிருந்து ஊறிப் பெரிதாகி பிள்ளைக்குத் தாங்க முடியாத வேதனையை யுண்டாக்கும். ஆதலால் அவைகளை உடனே வெளியாக்க வேண்டும். நம்மில் சிலர் செய்வதுபோல் கொண்டை ஊசி அல்லது குறடுள்ள ஏதாவது ஆயுதங்களினால் வெளியேற்றப் பிரயாசப்பட்டால், ஒரு வேளை அந்த வஸ்து வெளியேறுவதற்குப் பதிலாய் அதிகமாக உள்ளே தள்ளிப்போய்

விடலாம். ஆகையால அப்படிச் செய்யாமல் வாயினுள் விரலைச் செலுத்தி நாசியின் உள் துவாரத்தை யடைத்துக்கொண்டு அடைபட்டிராத மறு நாசித் துவாரத்தில் வாயை வைத்துப் பலமாக ஊதினால் பளிச்சென்று அடைக்கப்படிருக்கும் வஸ்து வெளியே வந்து விடும். நம் நாட்டு ஸ்திரீகளில் அநேகருக்கு இப்படிச்செய்ய நல்ல பழக்கமுண்டு. இப்படி வெளியேறாத பக்ஷத்தில் உடனே வைத்தியரிடங் காண்பித்துக் தகுந்த சிகிச்சை செய்யவேண்டும்.

FEMALE EDUCATION.

**ஸ்திரீகளின் படிப்பு.**—தர்பங்கா மகாராஜா பேஹார் நாட்டில் மாகாளி பாடசாலா என்ற ஒரு பெண்பிள்ளைகளின் பள்ளிக்கூடத்தில், பரிசளிப்பு ஸமயத்தில் ஸபாநாயகராயிருந்து, நமது ஸ்திரீகள் எவ்விதம் கல்வி கற்கவேண்டுமென்ற விஷயமாய்ப் பேசினபோது, அவர் சொன்னதாவது:—ஹிந்து ஸ்திரீகள் ஆதிகாலந்தொட்டு படித்தவர்களா யிருந்தார்களேயன்றி இப்போதைப்போல் மூடர்களா யிருந்ததில்லை. கார்கீ, மைத்ரேயி, என்ற பேர்போன இரண்டு ஸ்திரீகள் சாஸ்திர விற்பன்னர்களாயும் வேதாந்திகளாயும் இருந்தது ஹிந்துக்கள் அனைவருக்கும் பெருமையான விஷயம். அவர்களைப் போல் அக்காலத்தில் அநேக ஸ்திரீகள் இருந்திருக்க வேண்டும். பிறகு புராணங்கள் எழுதப்பட்ட காலங்களிலும் நம் ஸ்திரீகள் படித்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். யோகவாஸிஷ்டத்தில் சூடலா என்கிற ஒரு அரசி அவளே உயர்ந்த வித்திகளைப் பெற்றவளா யிருந்ததுமன்றி, தமது புருஷனை ஞானமார்க்க நுட்பங்கங்களில் தேர்ச்சி செய்தவளாயு மிருந்தாள். பிறகு ஜகத்குரு ஆதிசங்கராசாரியரும் மந்தன் மிஸ்ரா என்பவரும் வாதங்கள் செய்தபோது, அவருடைய ஸம்ஸாரம் மத்தியஸ்தமா யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்படி ஹிந்து ஸ்திரீகள் ஆதிகாலம் முதல் படித்தவர்களா யிருக்க, தற்காலம் படிப்பில்லாமல் அவர்கள் குடும்பக் காரியங்களைச் செய்வதற்கும் புருஷனுக்குற்ற துணைவியாயிருப்பதற்கும் தம் புருஷனுடன் சேர்ந்து லோகோபகாரமான காரியங்கள் செய்வதற்கும் சக்தி இல்லாம லிருக்கிறார்கள். ஸ்திரீ லக்ஷ்மியின் அம்சமென்றும், குடும்பத்துக்கு வெளிச்சம் போன்றவளென்றும், ஸந்தானத்துக்கும் ஸம்பத்துக்கும் மூலமென்றும், அவள் மரியாதைக்கு உரியவளென்றும், புருஷனுக்கும் அவன் முன்னோர்களுக்கும் க்ருத்யங்கள் செய்வதற்கு ஸ்திரீயே காரணமென்றும், இம்மாதிரி மனுசொல்லுகிறார். ஹிந்து ஸ்திரீகள் செய்துகொள்ளும் விவாகம் மேல் நாடுகளிற் போல ஸ்திரீ புருஷர் இருவருக்கும் உடன்பாடல்ல. இந்த விவாகம் இருதாரத்தாருக்கும் ஒரு யக்ஞம்போன்றது. ஸமூகத்தின் நன்மைக்காகவும் ஸொந்த நன்மைக்காகவும் செய்யப்படும் ஸம்ஸ்காரம். தரித்திரம் மேலிட்ட குடும்பத்தைக் கூட ஸ்திரீ படித்தவளா யிருந்தால், ஸந்தோஷமா யிருக்கச் செய்யக்கூடும். ஆகையால், ஒரு ஹிந்து ஸ்திரீயானவள் மனைவியாகவும் தாயாராகவும் தன்னுடைய கடமைகளை நிறைவேற்றும்படி படிப்பிக்கப் பட வேண்டும்.

LOCKS OF JAPANEES LADIES.

**ஜப்பானிய ஸ்திரீகளின் கூந்தல்.**— ஜப்பான் தேசத்துப் பெண் பிள்ளைகள் தங்கள் தலைமயிரைப் பலவிதமாய் வாரிச் சீவிக் கட்டிக்கொள்வார்கள். ஒரு ஜப்பானிய ஸ்திரீ தன் கூந்தலைக் கட்டிக் கொண்டிருக்கும் விதத்தைக் கொண்டு அவள் விவாகஞ் செய்துக்கொள்ள இச்சிக்கும் இளம் பெண்ணோவென்றும், அல்லது நாயகன் மரணத்தினால் ஆருத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும் விதவையோவென்றும் அல்லது தக்க புருஷன் அகப்படும்பட்சத்தில் அத்துயரத்தை மாற்றிக்கொள்ளத் தேடும் கைம்பெண்ணோவென்றும் பிறர் அறிந்து கொள்ளலாம். வாலிபப் பெண்கள் முன்மயிரை விசிறிபோலும் வண்ணாத்திப் பூச்சிபோலும் வாரி முடித்து, அதில் வெள்ளி ஆபரணங்களையும் அல்லது வர்ணமிட்ட வேறு நகைகளையும் சொருகிக் கொள்ளுவார்கள். மறு புருஷனை மணந்துக்கொள்ள விரும்பும் விதவைகள் தங்கள் பின்மயிரை ஆமை ஓடுகளால் செய்யப்பட்ட ஊசிகளால் குத்திக் கட்டிக் கொண்டிருப்பார்கள். காலஞ்சென்ற தங்கள் கணவர்களுக்கு எந்நாளும் பிரமாணிக்கமா யிருக்க விரும்பும் விதவைகளோ தங்கள் தலைமயிரைக் கத்தரித்துப்போட்டு அதில்யாதொரு நகையும் தரித்துக்கொள்ள மாட்டார்கள்



# DEPARTMENTAL NOTES.

## பகுதிக் குறிப்புகள்

## AGRICULTURAL NOTES.

## விவஸாயக் குறிப்புகள்

LEAVES OF TREES.

**மரங்களின் இலைகள்.**—உள் நாட்டிலேயுள்ள மர இலைகளைக் காட்டிலும் கடற்கரையோரத்திலே யுண்டாகிற மரங்களின் இலைகள் தடிப்புள்ளவை. உப்புப் பசளையே இதன் காரணம். உப்புப் பசளையிட்டுச் செய்த பயிரின் இலைகளும் தடிப்புடையவைகளாம்.

NIGHT SOIL MANURE.

**கக்கூஸ் எரு.**—தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள திருவண்ணாமலை முனிஸிபாலிட்டியார் கக்கூஸ் எருவைப் பரீக்ஷித்துப் பார்த்திருக்கிறார்கள். திருவண்ணாமலை தாலூக்கா ஸாண்டிராம் வில்லேஜ் முனிசீப்புதனக்குச் சொந்தமான 92 ஸெண்டு நிலத்தில் கக்கூஸ் எருவை உபயோகித்துப் பார்த்ததில் அந்த 92 ஸெண்ட் நிலத்தில் பெரிய கலத்தால் 12 கல நெல் விளைந்ததாம்.

FARMING.

**பண்ணைத் தொழில்.**—பண்ணையிலிறங்கிப் பாடுபடுவோர் வெகுவாய்ப் பஞ்சமரே. எவ்வளவு வெயில் காய்ந்தாலும், மழை தாரை தாரையாய்ப் பொழிந்தாலும், பஞ்சமர்கள் பயமில்லாமல் பண்ணையில் இறங்கி உழைக்கிறார்கள். தலைமுறை தத்துவமாய் சிற்சில பஞ்சமக் குடும்பங்கள் ஒரே நிலத்தில் உழைத்து வருவதை நாம் கேட்டும், பார்த்தும் இருக்கிறோம். அந்த நிலச் சொந்தக்காரரிடம் அவர்களுக்குள்ள அன்பும், பிரீதியுமே இதற்குக்காரணம். இப்படிப்பட்ட பக்தியும், விசுவாஸமும் பொருந்திய பஞ்சம ஜாதியாரை உயர்த்துவது மற்றையோரின் கடமை. அவர்களில்லாவிட்டால் விவஸாயம் லாபகரமான தொழிலெனக் கருதுவது கூடாது.

URINE AS MANURE.

**மூத்திரம் எரு.**—மூத்திரமென்பது ஒஷதிவர்க்கங்களுக்குப் பிராணாதாரமான ஆகாரம். அதில் நைட்ரோஜன் நிறைந்திருக்கிறது. எருது, மாடு, ஆடு முதலியவைகளின் மலமூத்திராதிகள் நல்ல எருவாவது இந்தியக் குடியானவனுக்குத் தெரியாத ஸங்கதி யன்று. "ஆடு மிதிக்காமல் நாடு விளைவதில்லை," என்றும், "ஆடு மிதியாத பூமியும், ஆண் பிள்ளையாளாத பெண்டீரும் உதவாக்கருவிகள்" என்றும், இவர்களுக்குள் வசன நடையுண்டு. என்றாலும், கால்நடைகளின் மூத்திரத்தைச் சேகரித்து உபயோகிக்க நாளதுவரையில் ஒரு ஏற்பாடும் தக்க வண்ணம் இவர்களுக்குள் ஏற்படவில்லை.

SEED SELECTION.

**விதை பொறுக்குதல்.**—இது விஷயமாய் சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறவர்கள் செய்யும் விதம் பின் வருமாறு.

பயிர்கள் கிளைத்துக் கதிர்வாங்குந் தருணத்தில் நிலத்திற்குப் போவார்கள். போய், அங்கே இருக்கும் தூர்களில் புழுப் பூச்சி முதலிய நோயில் அகப்படாமலும் தூர்கள் அதிகமாய்க்கிளைத்தும் உள்ள செடிகளாகப் பார்த்துக்கொண்டு, அவைகளுக்கு வெளுப்புத் துணிகட்டி அடையாளமாக வைத்துக் கொள்வார்கள்.

அறுவடையாவதற்கு முன்னால் வயலுக்குப்போய் இந்தத் தூர்களில் நோயற்ற தூர்களாய்ப் பார்த்துப் பிடுங்கிக்கொண்டுபோய், தனிமையாய் அடித்து விதையைப் பத்திரப்படுத்திக்கொள்வார்கள். அடுத்த வருஷம் அவ்விதைகளை நாற்றுப் பாவி, வேறாய் நட்டுவர, பயிர் செழிப்பாய்வளர்ந்து, மாசூலையும் கொஞ்சம் அதிகமாகவே தரும். அந்த வருஷமும் முன் மாதிரியே விதைபொறுக்கிவரும் பக்ஷத்தில் பயிர்களின் கிளைக்கும் ஸ்வபாவமும், நோய்நொடியில் அடிபடாததிடமும், அதிகரித்து பலனும் அதிகரிக்கிறது. இது விஷயத்தில் கைகண்ட அனுபவத்தை யடைந்த சிவகிரிப்பண்ணையில் விசாரித்தால் இதன் உண்மை சுலபமாய்த் தெரியும்.

தவிர, கதிர் அறுவடையாவதற்க்கு முன்னாடியே, தூர்களில் நல்ல பருமனையும், நோயற்றதாயுமுள்ள மணிகளிருக்கும் தூர்களைப் பொருக்கி, கதிர்களிலுள்ள மணிகள் அந்த வகையைச் சேர்ந்தவைகள் தானா என்று கவனித்து, சரியான நெல்விதைகளைச் சேர்த்துவைத்துக்கொண்டு, தனிமையாய் (மற்ற நெற்கதிர்களுடன் சேராமல்) அடித்து, அந்த விதையை அடுத்த வருஷம் நாற்றுப் பாவி அந்த வருஷமும் முன்மாதிரியே விதை பொறுக்கிவரும் பக்ஷத்தில், கலப்பென்பது சிறிதுமில்லாமல் ஒரே ஜாதி நெல்லாய்மாசூல் அகப்படுவதுமல்லாமல், மாசூலும் அதிகப்படுகிறது.

CAMBODIA COTTON.

**கம்போடியாப் பருத்தி.**—சென்னை விவஸாய டயரெக்டர் மிஸ்டர் கௌச்மன்னால் பின்னால் வரும் ஸமாசாரம் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் அமெரிக்காப்பருத்தி என்று சொல்லப்படும் கம்போடியாப்பருத்தி சென்ற வருஷம் திருநெல்வேலி, மதுரை, திருச்சினாப்பள்ளி முதலிய ஜில்லாக்களில் ஸுமார் 30 ஆயிரம் ஏக்காராவில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. நல்ல நிலங்களில் உரம் செவ்வையாய்ப் போட்டுப் பயிர் செய்தால் 1,250 முதல் 2,000 பவுன் வரையில் நிறையுள்ள சுளை ஒரு ஏக்காராவுக்கு விளையும். இது 145 முதல் 200 ரூபாய் வரையில் ஒரு ஏக்காராவுக்கு லாபமாகிறது. மற்றத் தோட்டப்பயிர்களை விட கம்போடியாப் பருத்திப் பயிரில் ஒரு பெரிய நன்மை இருக்கிறது. அதாவது, அதற்குக்கொஞ்சத் தண்ணீர் போதும். ஒரு கிணற்றின் கீழ் மற்றத் தோட்டப் பயிர்களைவிட அதிக விஸ்தீரணத்தில் இந்தப்பயிரைச் செய்யலாம். ஏனென்றால், ஒரு கிணற்றில் மற்றப் பயிர்களுக்குப் போதுமான தண்ணீர் இல்லாவிட்டாலும் அது கம்போடியாப் பருத்திப் பயிர் செய்யப் போதும். திருச்சினாப்பள்ளியிலுள்ள விவஸாய டிப்டி டயரக்டரால் ஒரு பவுனுக்கு 9 பைஸா விழுக்காடு, பாக்கிங் தபாற் கூலி முதலியவைகள் இல்லாமல், பருத்திக்கொட்டை வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும். ஒரு ஏக்காராவுக்கு 10 பவுன் பருத்திக்கொட்டை வேண்டும். அதை எப்படிப் பயிர்செய்வதென்று விளக்கிக் காட்டும் ஒரு துண்டுப் பத்திரிகையும் இனாமாய் அனுப்பப்படும்.

GREEN MANURE CROPS.

**பசுந்தாள் எருவுக்கான பயிர்கள்.**—பசுந்தாள் எரு விஷயமாய் பாலூர் விவசாயப் பண்ணையில் பரிசோதிக்கப்பட்ட அநேக தினுஸுப் பயிர்களில் தக்கைப் பூண்டும் சடம்புமே மிக சிரேஷ்டமானவை என்று தெரிந்தெடுக்கப்பட்டன.

தக்கைப் பூண்டு வடிகால் வஸதியில்லாத பூமிகளிலும் கொஞ்சம் களருள்ள பூமிகளிலும் பயிராகிறது.

தகுந்த ஈரத்தில் விதையை விதைத்துவிட்டால் பிறகு ஜலம் பாய்ச்சவேண்டியது அனாவசியம். தக்கைச்செடியை மூன்று மாஸத்திலேயும் உழலாம் அல்லது ஏழுமாஸம் வரையிலும் வளரவிடலாம். ஆகையால் ஜலத்தட்டுள்ள இருபோக நன்செய்களுக்கு இது அதிக உபயோகமாகிறது. முதல் போகத்திற்கு உழ ஜலம் வந்து விட்டால் இதை உடனே உழுதுவிடலாம். அப்படிக்கிடைக்காவிட்டால் ஜலம் வரும்வரையில் பூமியில் வளரவும் விடலாம். வடிகால் வஸதியில்லாத கொஞ்சம் களருள்ள ஒரு ஏக்காராவில் பாலூர்விவசாயப்பண்ணையில் தக்கைப் பூண் சாகுபடி செய்யப்பட்டது. தக்கைப் பூண்டு சாகுபடியானதற்கு முந்திய வருஷம் ஏக்காரா ஒன்றுக்கு 924 பவுன் வீதம் நெல் மாசூல் ஆயிற்று. பிப்ரவரி மாஸத்தில் நெல் அறுவடையான பிறகு பூமியை ஒருசால் உழுது ஏக்காராவுக்கு இரண்டு பட்டணம்படி வீதம் தக்கைப் பூண்டு விதையை விதைத்து விதை மறைய மற்றொரு சால் ஓட்டப்பட்டது. இந்தப்பயிர் 5 முதல் 8 அடி வரையில் வளர்ந்திருக்கும் பொழுது ஜூன் மாஸம் பூமியில் மடக்கி உழப்பட்டது. இதில் கண்ட நெல் 2086 பவுன். தக்கைப் பூண்டை ஒரு ஏக்காராவில் பயிர் செய்ய ரூபா 6-11-2 செலவாயிற்று. ஆனால் ஜாஸ்தியாகக் கண்ட நெல் மகசூலின் விலை ரூபாய்க்கு பத்து படி வீதம் ஏக்காரா ஒன்றுக்கு ரூபா 46-6-0 ஆயிற்று.

சணப்பும் (சடம்பு) மிகவும் உபயோகமான பசுந்தாள் எருவுக்கான பயிரெனத் தெரியவந்தது. இது இரண்டு மாஸத்தில் 4-5 அடி உயரம் வளருகிறது. முதல் வருஷம் சாகுபடியில் ஏக்காரா ஒன்றுக்கு 904 பவுன் வீதம் மகசூல் கொடுத்த ஒரு பஞ்சை நிலத்தில் சணப்பு விதைத்து மடக்கி உழுததில் ஏக்காரா ஒன்றுக்கு 1534 பவுன் வீதம் கிடைத்தது. ஏக்காரா ஒன்றுக்கு சணல் சாகுபடிக்கு ரூ. 7-4-8 செலவாயிற்று. சணப்பு மடக்கி உழுததினால் கிடைத்த ஜாஸ்தி நெல்லின் விலை, ரூபாய் ஒன்றுக்கு 10 பட்டணம் படி வீதம், ரூபாய் 27-4-0.

பசுந்தாள் எருக்களைப்பற்றி ஸர்க்காரில் ஒரு பிரசுரம் தனியே அச்சிடப்பட்டிருக்கிறது. வேண்டியவர்கள் திருச்சினாப்பள்ளியில் விவஸாய டிப்டி டைரெக்டருக்கு அப்ளிகேஷன் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

---



# INDUSTRIAL NOTES.

# கைத்தொழில் குறிப்புகள்.

---

BEE KEEPING.

**தேனீ வளர்த்தல்**—குடகு நாட்டில் பானைகளை துவாரமிட்டு லவங்கப்பட்டை வாஸனை மெழுகு பூசி, சந்தடியில்லாத இடத்தில் வைத்துத் தேனீக்களை அடையப் பழக்கித் தேனெடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒரு தேனீ ஒரு தேயிலைக்காண்டி கொள்ளும்படியான தேனைச் சேகரிக்கிறதாம்.

REASONS FOR FAILURE IN BUSINESS.

**கடன் தீர்க்கச் சக்தியில்லாமல் போவதற்குக் காரணங்கள்.**—1. முதலேயில்லாமல் வியாபாரத்தைத் துவக்குவது, அல்லது வியாபாரத்துக்கு வேண்டிய முதல் வைத்துக்கொள்ளாமலிருப்பது.

2. அனுபோகமில்லாமலும், ஸ்வபாவம் தெரியாமலும் நூதன வியாபாரத்திலிறங்குவது.

3. முன் யோஜனையில்லாமலும் தாறுமாறாயும் கண்டவர்களுக்குக் கடன் கொடுப்பது.

4. போட்டிக்காவது, போதுமான லாபம் வைக்காமலாவது, அஸலுக்குக் குறைந்தாவது டம்பத்துக்கு வியாபாரம் நடத்துவது.

5. ஸரியாயும் ஒழுங்காயும் வரவு செலவுக் கணக்கு வைக்காமலிருப்பது. அடிக்கடி லாபத்தைக் கணக்குப்பார்த்து, செலவுக்குச் சரியாயிருக்கிறதா என்று ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளாமல் அசிரத்தையாயிருப்பது.

6. அனுபோகமில்லாத வியாபாரத்தில் சிக்கிக்கொண்டு, தன் வேலையையும் ஸரிவரப் பார்க்காமல் இரண்டுக்கும் கேடு விளைவித்துக்கொள்வது.

7. ஆதாரமில்லாமல் பிரமாதமாய் ஏதோ செய்துவிடலாமென்று பிரமைகொண்டு வியாபாரத்தில் இறங்குவது.

HAND-LOOM WEAVING.

**கைத்தறி நேசவு.**—ஆனரபில் மிஸ்டர் ஆல்ப்ரெட் சாட்டர்டன் ஸமீபத்தில் 'ஹிந்து' ப்பத்திரிகைக்கு எழுதியிருக்கும் ஒரு நிருபத்தில், கைத்தறி நெசவில் திருத்தங்கள் செய்யும் விஷயமாய் இரண்டு ஆலோசனைகள் சொல்லுகிறார். முதலாவது, நெசவுக்காரர்களுக்குத் தற்காலமுள்ள முக்கிய கஷ்டமானது பாவு நூல்கள் தயார் செய்வதில் உண்டாகிறதாகையால், இங்கிலாந்தில் உபயோகப்படுத்தப்படும் ஒரு விதமான ட்ரெஸ்ஸிங் மெஷினை நம் நெசவுக்காரர்களும் உபயோகப்படுத்துவார்களானால் மேற்கண்ட கஷ்டம் நீங்கிவிடும். இந்த ட்ரெஸ்ஸிங் மெஷினால் தினத்துக்கு ஆயிரம் கஜம் நீளமுள்ள முதல்தரமான பாவு நூல்கள் செய்யலாமாம். ஆனால் அந்த மெஷினை உபயோகப்படுத்துவதற்கு விசேஷத் திறமையும் அனுபோகமும் அவசியம். செலவு அதிகமாயும் பிடிக்கும். ஆகையால், அதனாற் செய்யப்படும் நூல்களை உபயோகப்படுத்துகிறவர்கள் இருந்தாலன்றி அது பிரயோசனப்படமாட்டாது. நூறு அல்லது இருநூறு தறிகளை ஒரு பாக்டரியில் ஒன்று சேர்த்து, இந்த மெஷினை உபயோகப்படுத்தவேண்டும். இப்படிப்பட்ட தொழிற்சாலை அல்லது பாக்டரி ஸ்தாபிப்பதற்கு அதிகப் பணம் வேண்டுமாகையால், கவர்ன்மெண்டுடைய உதவியைப் பெற்று ஒரு தொழிற் சாலையை ஸ்தாபித்துப் பார்க்கலாமென்று மிஸ்டர் சாட்டர்டன் எழுதுகிறார். இவர் சொல்லும் இன்னொரு ஆலோசனை என்னவென்றால் கறைகள் போட்ட துணிகள் செய்வதில் நெசவுக்காரர்களோடு மான்செஸ்டர் வர்த்தகர்கள் போட்டி போடுவது ஸாத்தியமல்ல. ஆகையால், அப்படிப்பட்ட துணிகள் செய்வதில் நெசவுக்காரர்களுக்குத் தக்க உபாயங்கள் கிடைக்குமானால் அவர்கள் விசேஷ லாபம் பெறுவார்களென்கிறார். நமது நெசவுக்காரர்கள் வெகு நேர்த்தியான கறைகள் போட்டு துணிகள் செய்கிறார்களானாலும், அதைக் கையினால் செய்து அதிக நாள் பிடிப்பதால் தகுந்த லாபம் கிடைப்பதில்லை. ஜாக்கார்டு மெஷின் என்று ஒருவிதமான மெஷின் இங்கிலாந்தில் உபயோகப்படுத்தப்பட்டு வருவதாகவும், அதனால் கறைகள் வெகு எளிதாய்ப் போட்டுவிடலாமென்றும், அந்த மெஷினை இந்திய நெசவுக்காரர்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், சொல்லுகிறார். இதை உபயோகப்படுத்துவதால் இந்திய நெசவுக்காரர்களுடைய ஸாமர்த்தியமும் யுக்தியும் அழிந்துபோமானாலும் அவர்களுடைய வறுமை ஒருவாறு நீங்குமென்கிறார்.

---

## EDUCATIONAL NOTES.
## வித்யா விஷயக் குறிப்புகள்.

---

### EDUCATION OF AMERICAN STUDENTS.

**அமெரிக்கா மாணவரின் கல்வி.**—அமெரிக்காவில் அத்யாவசியமாக ஒவ்வொரு பிள்ளையும் கல்வி கற்க வேண்டுமென்ற நிபந்தனையிருப்பதால் அங்கே சென்றவருஷத்திய கணக்கின்படி 8 கோடிப்பிள்ளைகள் பள்ளியிலிருந்தார்களென்றும், கல்வி விஷயமாகக் கவர்ன்மெண்டார் 37.5 கோடி ரூபாய் செலவு செய்தார்களென்றும் தெரியவருகின்றது. முக்கியமாகப் பிள்ளைகட்குப் பூகோள சாஸ்திரம், கணக்கு, வியாபாரமுறை முதலிய ஜீவனோபாயமான கல்வியையே கற்பிக்கிறார்கள்.

### EDUCATION IN INDIA.

**இந்தியாவில் கல்வி.**—நமது இந்தியா தேசத்தில் சென்ற நாலு வருஷங்களில் படிப்பு எவ்வளவு விருத்தியாகி இருக்கிறதென்பதைப் பற்றி சில அட்டவணைகள் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றன. வித்யா விஷயத்தில் போனநாலு வருஷமாய் ஸராஸரி வருஷா வருஷம் 559 லக்ஷம் ரூபாய் செலவாகியிருக்கிறது. இப்பொழுது 686 லக்ஷம் ரூபாய் வரையிலும் ஏறியிருக்கிறது. இந்தத்தொகையில் பாதி ஜனங்களிடத்திலிருந்து வசூலித்த வரிகளும், பாதி சம்பளம் முதலானவைகளுமாம். படிப்பவர்களின் மொத்தத்தொகை 50 லக்ஷத்திலிருந்து 60 லக்ஷமாகி விட்டது. ப்ரைமரி பாடசாலைகளும் 9000 த்திலிருந்து 11000 ஆய்விட்டன.

### EDUCATION IN BARODA.

**பரோடா ஸமஸ்தானத்தில் படிப்பு.**—பரோடா மகாராஜா தமது ஸமஸ்தானத்தில் கல்வி பரவ வேண்டுமென்று ப்ரைமரிப் படிப்பைக் கட்டாயப் படிப்பாக்கியிருப்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். அவர், நாட்டின் பல பாகங்களிலும் புதிதாய்ப் புஸ்தக சாலைகள் ஸ்தாபித்து வருகிறார். தமது ஸமஸ்தானம் எங்கும் கல்வியைப் பரவச்செய்ய வேண்டுமென்றயோசனை மேலிட்டு அமெரிக்கா ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த நியூயார்க்கிலிருந்து டாக்டர் வில்லியம் போர்டன் என்ற ஒருவரை, புதிய புஸ்தக சாலைகள் ஸ்தாபிக்கும் வேலையையும் மேல் நாடுகளிலே வெகு அருமையான நூல்கள் என்று கருதப்படுகிற புஸ்தகங்களை ஹிந்துஸ்தானி பாஷையில் மொழிபெயர்த்து எழுதும் வேலையையும் பொறுத்துப்பார்க்க வரவழைக்கப் போகிறாராம். டாக்டர் போர்டன் அடுத்த செப்டம்பர்மாதம் 12-ந் தேதி இந்தியாவந்து சேருகிறாரென்று, நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது. டாக்டர் போர்டனை பரோடா மகாராஜாவின் குமாரருக்குப் படிப்புச் சொல்லி வைத்துக் கொண்டிருந்த டாக்டர் பம்பஸ் சிப்பார்சு செய்ததாகவும், டாக்டர் போர்டன் நியூயார்க்கிலுள்ள யேல் புஸ்தகசாலையில் 22 வருஷ அனுபோகமுள்ளவரென்பதாகவும் சொல்லப்படுகிறது.

### POOR BOYS IN GERMANY.

**ஜெர்மனியில் ஏழைச் சிறுவர்கள்.**—குடிகளுடைய க்ஷேமங்களை விசாரிக்க ஜெர்மனி தேசத்தில் பிரத்தியேகமாய் ஒரு ஆபீஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதன் உத்தியோகஸ்தர்கள் 125 பட்டணங்களைப் பார்வையிட்டுக்கொண்டுவந்ததில், மழைகாலத்தில் 22,000 பிள்ளைகளும், கோடைகாலத்தில் 36,000 பிள்ளைகளும், காலைப்போஜனமில்லாமல் பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்களென்றும், மழைகாலத்தில் 1,80,000 பிள்ளைகளும் கோடைகாலத்தில் 1,13,000 பிள்ளைகளும் பகல் போஜனமில்லாமல் பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்களென்றும், 22,000 பிள்ளைகள்இராச் சாப்பாடில்லாமல் படுக்கைக்குப் போகிறார்களென்றும் கணக்கெடுத்திருக்கிறார்கள். ஜனங்கள் தரித்திரர்களாயிருக்கிறபடியாலும் தாய்மார்கள் வேலைசெய்ய வீட்டைவிட்டு வெளியே போகிறபடியாலும் பிள்ளைகள் இப்படி அவதிப்படுகிறார்களென்று தெரியவருகிறது. இப்பேர்பட்ட ஏழைப் பிள்ளைகளுக்குக் கவர்ன்மெண்டாரே சாப்பாடுகொடுக்கவேண்டுமென்றும், அல்லது தனிச் சாப்பாட்டுக் கடைகள் ஏற்படுத்தி அங்கே பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுத்து, பெற்றோர்கள் நிர்வாகமுள்ளவர்களாயிருந்தால் அவர்களிடத்திலிருந்து பணத்தை வசூலித்துக்கொள்ளுகிறது, அல்லாவிடில் கவர்ன்மெண்டாரே அதைக்கொடுத்துப் போடவேண்டுமென்றும் மேற்சொல்லப்பட்ட ஆபீஸார் சொல்லுகிறார்கள்.



## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

—:o:—

### A STONE THERMOMETER.

**சீதோஷ்ணந் தெரிவிக்குங் கல்.**— பின்லண்டில் ஒருவித கல் இருப்பதாகவும் அது திட்டமாய்ச் சீதோஷ்ண நிலைமையைத் தெரிவிப்பதாகவுஞ் சொல்லப்படுகிறது. அது மழை காலத்தில் கறுப்பாய் மாறிவிடுகிறதாம். மற்ற நாட்களில் வெண்மைப் புள்ளியுள்ளதாகக் காணப்படுகிறதாம்.

### PHOTOGRAPHS OF THIEVES.

**கள்ளர்களின் பதுமை.**—லண்டன் நகரத்திலுள்ள அநேகம் ஷாப்புகளில் ஒருவிதமான அலுமாரிகள் செய்து வைத்திருக்கிறார்கள். கள்ளன் போய்க் கதவுகளைத் திறந்தால் உடனே அக்கள்ளன் சாயல் கதவுகளில் அமைந்துவிடுமாம். அந்தப் பிரதிமைப் படத்தைக் கொண்டு கள்ளனைப் பிடிக்கக் கூடுமாம்.

### EARTHQUAKES LAST YEAR.

**சென்ற வருஷத்தில் பூமியதிர்ச்சிகள்.**—சென்ற வருஷத்தில் எடின்பரோ நக்ஷத்திர பங்களாவில் மட்டும் கணக்கிடப்பட்ட பூமியதிர்ச்சிகள் 104. இவைகளில் முக்கியமானவை, ஐஸ்லண்ட், ஆல்ஜீரியா, க்ளாஸ்கோ முதலிய இடங்களிலுண்டாயின. உலகமுழுமையிலும் பெரிதும் சிறிதுமானது 250 அதிர்ச்சிகள் போனவருஷத்திலுண்டாயின.

### GILDING WOOD.

**மரத்திற்கு முலாம் பூசுதல்:**— இதுவரையில் உலோகத்தாலுண்டான ஸாமான்களுக்கே முலாம் பூசப்பட்டுவந்தது. இப்பொழுது ஸூரிச் என்னுமிடத்திலுள்ள ஒரு ரஸாயன சாஸ்திரி மரம் முதலியவைகளுக்கும் அரைக்கால் அங்குல கனம் வரையில் முலாம் பூசக்கூடுமென்று கண்டுபிடித்திருக்கிறார். முலாம் பூசவேண்டிய ஸாமானை இரும்பு, செம்பு, வெள்ளி முதலியவற்றை நீராவியாக்கி அவைகளின் ஆவிபட்டுக் குளிரும்படி செய்து முலாம் யந்திரத்தில் காட்டினால் மெல்லிதாக முலாம் எங்கும் பரவுமாம்.

### CREATING LIVING BEINGS.

**ஜெந்து உற்பத்தி.**—டிலீச் என்னும் பெயருடைய சாஸ்திரியாரொருவர் முட்டையிலிருந்து குஞ்சுகளுண்டாகும் விதத்தை மிகநுட்பமாய் ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சியை நடத்துவதற்கேற்ற ஒரு யந்திரத்தை யமைத்து, சிருஷ்டிகர் தொழிலை நடத்தத்தொடங்கி யிருக்கிறாராம். தற்போது இவர் ஆராய்ச்சியின் பலனாக நான்கு ஸமுத்திர ஜந்துக்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனவென்று சில பத்திரிகைகள் சொல்லுகின்றன. அவை மற்றப்பிராணிகளைப் போல் ஜீவனுடையவைகளாயும் நகரக் கூடியவைகளாயும் சுவாசிக்கக் கூடியவவைகளாயும் இருக்கின்றனவாம். ஆயினும் ஆகாரம் எடுக்கும் திறமில்லையாம். இதன் காரணத்தை சாஸ்திரியார் பூதக்கண்ணாடி கொண்டு ஆராய்ந்து அவைகளுக்கு ஜீரண உறுப்புகளில்லையென்று கண்டு அந்தக் குறையை நிவர்த்திக்க அதிக பிரயாஸைப்பட்டுவருகிறாராம்.

### THE AGE OF THE EARTH.

**பூமியின் வயது.**—பூமியானது ஒருகாலத்தில் தகதக என்று கொதித்துக்கொந்தளிக்கும் ஸூக்ஷ்மமான ஆவிமயமாக இருந்து, பின்பு நாளடைவில் ஆவிஸ்துவித்து, அப்பு இயல்புள்ளதாக மாறினது. பின்பு இன்னும் கெட்டியானதாக ஜலமும், நிலமுமாகப் பிரிந்து ஸ்தூலித்தது. அதன் மேற்பரப்பின் பள்ளங்களில் நீர் தங்க ஆரம்பித்தது. மலைகளும், மேகங்களும், மழையும், நீர் ஓடைகளும், அருவிகளும், நதிகளும் உண்டாயின. இந்நீர்த் திரள்கள் கெட்டியான பூமியை தேய்த்துத் தேய்த்துப் பலவாறான உப்பு திரவியங்களை நீர்ப்பரப்பு நிலையில் கொண்டு வந்தன. அந்நீர்ப்பரப்பு நிலையே சமுத்திரங்களாயின. சமுத்திரத்திலுள்ள உப்பு, நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இவ்வுப்பு திரவியம் வரவர ஏறிக்கொண்டு வரும் அளவையால், பூமி கெட்டியானதின்மேல் 6 கோடியே 50 லக்ஷம் வருஷங்களாயின என்று பூமி சாஸ்திரிகள் கணித்திருக்கிறார்கள். "மனிதன் வமிசாவளிகளின் உண்மை" என்ற புத்தகத்தில், இக்காலம் 40 கோடி வருஷங்களுக்கு மேலாயின என்று சொல்லப்படுகிறது.

---

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

A Fresh Nose.

**புதுமூக்கு.**— லண்டனிலே ஒரு அம்மாளுக்கு மூக்குமேலே புண் வந்து விட்டதாம். மேலே இருந்த சதையை அறுத்து குணப்படுத்திவிட்டு வேறொரு சதையை வைத்துத் தைத்து சரிப்படுத்தி பழயபடி மூக்கைக் கொண்டுவந்து விட்டார்களாம்.

To Induce Sleep.

**தூக்கம் வர.**—நித்திரை வராமல் கஷ்டப்படுகிறவர்கள் கை கால் முகங்களை ஜலத்தையெடுத்து சுத்திசெய்துகொண்டு வெந்நீராவது, பாலாவது குடித்துப் படுத்துக்கொண்டால் உடனே நித்திரை வருமாம்.

Meat.

**ஆட்டு மாம்ஸம்.**—எல்லா மிருக மாம்ஸங்களிலும் ஆட்டு மாம்ஸம் மனித உணவுக்கு பூலோகமெங்கும் தெரிந்தெடுக்கப்பட்டது. ஏனெனில் அதற்கு வியாதி கொஞ்சமாம். மாத்தின்மேல் உட்காரும் பறவைகளுக்கு வியாதியே கிடையாதாம்.

Chillies.

**மிளகாய்.**—காய்ந்த மிளகாயை பொன்னிறமாக வறுத்து சுத்த ஜலம் வார்த்து, 8ல் ஒரு பாகமாகக் கஷாயம் செய்துகொண்டு அதை உபயோகித்தால் அஜீரணபேதி வாந்திபேதி இவைகள் அனுகூலமாகும். அல்லது காய்ந்த மிளகாயை வறுத்துப் பொடிசெய்து. அந்தப்பொடியை கொஞ்சம் பொடிசெய்த மிளகோடும் பெருங்காயத்தோடும் சேர்த்து மாத்திரையாகச் செய்து அஜீரணபேதி, வாந்திபேதி முதலிய வியாதிகளுக்கு உபயோகித்தால் அதிக குணம் ஏற்படும்.

Dried Grass and Water as Diet.

**உலர்ந்த புல்லும் ஜலமும் ஆகாரம்.**—நியூயார்க்கில் ஒரு ரோகி எவ்வித ஆகாரமும் சாப்பிடாமல் நோயால் வருந்தி அநேக மருந்துகளைத் தின்றான் அவனுக்கு எதனாலும் குணம் காணவில்லை. கடைசியில் உலர்ந்த புல்லையும் ஜலத்தையும் ஆகாரமாக உட்கொண்டதில் நோய் பறந்தோடிற்று. இப்போது ஸுகதசையிலிருக்கிறானாம்.

The Mango Tree.

**மாமரம்.**—மாமரத்தின் மணம் காஸரோகத்தின் மூர்க்கத்தைத் தணிப்பதற்கு மருந்தாகுமென்று தென்னமேரிக்கர் கண்டு பிடித்திருக்கிறார்களாம். அதை வாசித்தறிந்தவர்கள் சிலர் கொழும்புத் தெருவோரங்களிலே மாமரத்தைப் பயிர்செய்வது நல்லதென்று நினைக்கிறார்களாம்.

Polished Rice and Beri-beri.

**நன்றாய்த் தீட்டிய அரிசியும் பேரிபேரி நோயும்.**—ரங்கூனிலிருந்து ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்படும் பளபளப்பு அரிசியைச் சாப்பிடுவதனால்தான் பெரிபெரி நோய் உண்டாகிறதென்று முன்னமே சொன்னோம். அது உண்மைதானென்று மலாய் நாடுகளிலுள்ள வைத்தியச் சோதனைச்சாலைத் தலைவர் டாக்டர் ப்ரேஸர் சொல்லுகிறார். கோழிகளுக்கு அந்த அரிசி யுணவை ரங்கூனில் வைத்துப் பார்த்ததில் அதன் உண்மை தெரிய வந்ததாம்.

Drinking Cold Water.

**குளிர்ந்த தண்ணீர் குடித்தல்.**—உடம்பு கத கதவென்று இருக்கும் பொழுதாவது, வீட்டுக் காரியங்கள் அதிகமாகச் செய்து உடம்புக்கு ஆயாஸம் அல்லது களைப்பு ஏற்பட்டிருக்கும் பொழுதாவது, குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கக் கூடாது. தேகத்தில் உஷ்ணதிகங் கொண்டிருக்கும்பொழுது குளிர்ந்த தண்ணீரை ஏராளமாக உட்கொண்டால் திடீரென்று சோர்பு,சோகம் ஏற்பட்டு மரணம் ஸம்பவிக்கும்.

Parched Rice.

**வறுத்த அவல்.**—சாப்பாடு வயிற்றில் தங்காமல் வாந்தி எடுப்பவர்களுக்கும் மூத்திர கிட்னி நோயடைந்தவர்களுக்கும் வறுத்த அவல் சீக்கிரம் ஜீரணமாகிறது. இதை நன்றாய் மென்று தின்றால் $\frac{1}{2}$ மணி நேரத்தில் ஜீரணமாகிறது. முளைக் கட்டிய நெல்லை அவலாக்கி அதை வறுத்தால் மிக ஸுலபத்தில் ஜீரணமாகும் அல்லது பசுங்காய் நெல்லை அவலாக்கினாலும் இப்படியே.

அரிசி சாதம் ஒருமணி நேரத்தில் ஜீரணமாகிறது. மரவள்ளிக்கிழங்கு வறுத்த மாவுக்கு இரண்டு மணி நேரம் வேண்டும்.



## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

Partner in Abkari Trade.

**சாறய வியாபாரத்தில் கூட்டாளி.**—சாராயம் விற்பதற்கு லைஸென்ஸ் பெறாத ஒருவன் பெற்றிருப்பவனுடன் கூட்டுவியாபாரம் செய்துவருவதை ஆப்காரி ஆக்ட் 13-வது பிரிவு தடுக்கமாட்டாது.

Debts of an Undivided Brother.

**பாகமாகாத ஸகோதரனின் கடன்.**—ஒரு மனிதன் தன்னுடைய இறந்து போனவும் பாகம் பிரியாதவுமான ஸகோதரனின் ஸொந்தக் கடன்களைக் கொடுக்கப் பாத்தியப்பட்டவனல்லன்.

Mortgage of Melvaram.

**மேல்வார அடைமானம்.**—ஒரு மேல்வார ஸொந்தக்காரர் குடிகளிடமிருந்து இனி கிடைக்க வேண்டிய தீர்வையை அடைமானம் வைத்து கடன் வாங்குவது ஸ்தாவர ஸொத்தை அடைமானம் வைப்பதாகும். ஆகையால் அடைமான ஆதாவை ரிஜிஸ்டர் செய்யவேண்டும்.

Liability of Guardian.

**கார்டியனின் பொறுப்பு.**—ஒரு மைனர் மேஜர் ஆனவுடன் கார்டியன் சில பாபத்துகளுக்குக் கணக்கு சொல்லும்படியாக கார்டியன் பேரில் ஒரு வியாஜ்யம் கொண்டுவந்தான். அந்த பாபத்துகளின் உண்மையைச்சொல்லி அவைகள் மைனரைக் கட்டுப்படுத்துமென்று ருஜுப் படுத்தவேண்டிய பொறுப்பு கார்டியனுடைய கடமை.

Partnership.

**கூட்டு வியாபாரம்.**—கூட்டு வியாபாரத்தில் ஒரு பாகஸ்தன் இறந்துபோன பிற்பாடு இறந்தவனுடைய பெண்ஜாதிக்காவது குழந்தைக்காவது வியாபாரத்தில் வரும் லாபத்தில் கொஞ்சம் வருஷா வருஷம் கொடுத்துக் கொண்டுவந்த மாத்திரத்தில் அந்தப் பெண்ஜாதியாவது, குழந்தையாவது, மேற்படி வியாபாரத்தில் பாகஸ்தர்கள் அல்லவென்றும், நஷ்டம் வந்தால் நஷ்டத்துக்கு அவர்கள் பங்காளிகள் அல்லவென்றும், காண்ட்ராக்ட் 243 வது ஸெக்ஷனில் சொல்லியிருக்கிறது.

Attestation.

**ஸாட்சி போடுதல்.**—ஒற்றிப் பத்திரத்தில் ஸாட்சி போடுகிறவர்கள் பத்திரம் எழுதிக்கொடுக்கிறவன் அதற்குக்கையெழுத்துப் போடுவதைப் பார்த்திருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் பத்திரம் எழுதிக் கொடுத்தவன் தான் கையெழுத்துப் போட்டதாக ஒப்புக்கொண்டதின் பேரில் ஸாட்சி போடும் பட்சத்தில் அந்த ஸாட்சியம் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. தான சாஸனங்களுக்கும் இதே மாதிரிதான்.

Evidence for Leasing a House.

**வீட்டைக் குடிக்கூலிக்கு விட்டதைப் பற்றி ருஜு.**—வாய்மூலமாய் ஒரு வீட்டை குடிக்கூலிக்கு விட்டதை அது ஸம்பந்தமாக ஏதேனும் எழுத்து மூலமாக ஏற்பட்டிருந்தால் அதைக்கொண்டு ருஜுப்படுத்தலாம். அந்த தஸ்தாவேஜி குடிக்கூலி எக்ரிமெண்டாக இருக்கவேண்டுமென்பதாவது அல்லது அதில் குடிக்கூலிக்கு விட்டவன் கையெழுத்திருக்க வேண்டுமென்பதாவது அனாவசியம்.

Devasthanam Committees Acts.

**தேவஸ்தானம் கமிட்டியாரின் செய்கைகள்.**—மதஸம்பந்தமான தர்மாதீனச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட கமிட்டியில் ஒரு ஸ்தானம் காலியாக இருக்கும்போது அந்தக்கமிட்டியார் செய்யும் செய்கைகள் செலாமணியாகக் கூடியவையல்ல. அந்தக்கமிட்டியில் எத்தனைபேர்களிருக்க வேண்டுமோ அவர்கள் எல்லாரும் செய்த தீர்மானந்தான் செலாமணியாகக்கூடியதாகும்.

Pleaders and Trade.

**வக்கீல்களும் வியாபாரமும்.**—வக்கீல்கள் ஹைக்கோர்ட்டார் அனுமதி இல்லாமல் ஒரு வியாபாரமும் செய்யக்கூடாது. திம்ம ரெட்டி என்னும் ஒரு ஸெகண்ட் க்ரேட் ப்ளீடர் கடன்கொடுத்து கடனுக்கு பதிலாக கடன்காரன் பஞ்சு மூட்டைகள் குறிப்பிட்ட விலைப்படி கொடுக்க வேண்டியதென்றும், அப்படிக் கொடுக்கத் தவறினால், குறிப்பிட்ட கடுமை வட்டி சேர்த்துக்கொடுக்கிறதென்றும், பல பத்திரங்கள் எழுதி வாங்கி யிருந்தார். அனுமதி யில்லாமல் இப்படிச் செய்ததற்காக ஹைகோர்ட்டார் அவரை ஒரு வருஷம் வக்கீல் அலுவலிலிருந்து ஸஸ்பெண்டு செய்து மேலேசொன்ன லேவாதேவியை எல்லாம் ஒழித்துத் தீர்க்கிற வரையில் ஸன்னதை நிறுத்தி விட்டார்கள்.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

---

### THE MAHARAJAH OF BENARES.

**காசி மகாராஜா.**—காசி மகாராஜாவை லார்ட் மிண்டோ இந்திய ராஜப்பிரதிநிதிப் பதவியை விட்டு நீங்குவதற்கு முன்னே ஒரு ஸமஸ்தானபதியாக்கி விட்டுப்போனது எல்லாருக்கும் தெரியும். அடுத்த மாதம் 4-ந்தேதி யன்று ஆனரெபிள் மிஸ்டர் எல். போர்ட்டர் அந்த மகாராஜாவுக்குப் பட்டங் கட்டி அவரை ஸிம்மாதனத்தில் ஏற்றப் போகிறார்.

### RAO SAHIB SADAGOPACHARIAR.

**ராவ் ஸாகிப் சடகோபாச்சாரியார்.**— கூடலூர் தேசாபிமானிப் பத்திராதிபர் ராவ் ஸாகிப் சடகோபாச்சாரியார் காலஞ் சென்றாரென்று தெரிந்து விசனிக்கிறோம். அவர் சென்ற 25-வருஷ காலமாய் தேசாபிமானிப் பத்திரிகையை நடத்திவந்ததைக் கருதியும் அந்த ஜில்லா பொதுவிஷயங்களில் அக்கரை யெடுத்து வந்ததைக் கருதியும் அவருக்கு ராவ்ஸாகிப் பட்டம் போன வருஷம் கொடுக்கப் பட்டதுபோலும். அவர் கூடலூரில் கோர்ட் ஐயங்கார் என்று சொல்லப்படும் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருக்கு 52 வயதிருக்கும்.

### RAO BAHADUR V. K. RAMANUJACHARIAR.

**ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார்.**—வருகிற மே மாஸம் நடக்கப்போகிற சென்னை மாகாணக் கான்பரென்ஸ் உபசாரணைக் கமிட்டியார் கும்பகோணம் வாஸியாகிய ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியாரை கான்பரென்ஸ் ப்ரெஸிடெண்டாய்த் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் ரெவினியூ போர்டு ஸெக்ரெட்ரி வேலையிலிருந்து பென்ஷன் பெற்று நீங்கினது முதல், பொதுக்காரியங்களில் கலந்து தம்முடைய அனுபோகமும் அறிவும் பொது ஜன நன்மைக்குப் பயன்படும்படி உழைத்து வருகிறார். கும்பகோணத்தில் யூனியன் பாங்கி ஏற்பட்டு வெகுவாய் நடப்பது ராமானுஜாசாரியார் முயற்சியாலேதான்.

### LATE EMPEROR EDWARD.

**காலஞ்சென்ற எட்வர்ட் அரசர்.**—பத்து வயதுள்ளவராயிருந்தபொழுது ஒரு ஸமயம் கடற்கரைக்கு உலாவப் போயிருந்தார். அப்பொழுது அங்கொரு சிறுவன் கடற்சிப்பிகளை ஒரு கூடையில் சேகரித்துக் கொண்டிருக்கக்கண்டு காலினால் கூடையைத் தள்ளவே, அந்தப்பையன் எட்வர்டை நையப் புடைத்துவிட்டானும். அவர் அழுதுகொண்டு தம் மாதா விக்டோரியாவிடம் முறையிட்ட பொழுது, அவ்வம்மணி அவருடைய செய்கைக்காகக் கடிந்து கொண்டு "உன் துஷ்டத்தனத்துக்கு அப்பையன் புத்தி கற்பித்தான்" என்றாராம்.

### LORD CREWES ILLNESS.

**லார்ட் க்ரூவின் அஸௌக்கியம்.**—லார்ட் மார்லியுடன் இம்மாதம் 3-உயன்று அவருடைய வீட்டில் லார்ட் க்ரு விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் அப்படியே திடீரென்று மயக்கங்கண்டு மூர்ச்சையாய் விழுந்தாராம். மறுநாட் காலை வரையில் லார்ட் மார்லி வீட்டிலேயே இருக்கும்படியான நிலைமையில் கிடந்தார். பிறகு லார்ட் ரோஸ்பரி வீட்டிற்கு எடுத்துக் கொண்டுபோகப்பட்டார். அஸௌக்கியத்துக்குக் காரணம் அளவுக்கு மீறி வேலை செய்ய நேரிட்டதில் அஜீரணமுண்டாகி இப்படியாயிற்றென்றும், இனி இரண்டு மாதம் வரையில் அவரை எவ்வித அலுவலும் பார்க்க விடக் கூடாதென்றும் வைத்திய நிபுணர்கள் சொன்னார்கள். அவரது காரியங்களைக் கவனித்துவர லார்ட் மார்லி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### THE MAHARAJAH OF GAIKWAR.

**கைக்குவார் மகாராஜா.**—பரோடோ தேசத்துக் கைக்குவார் மகாராஜா ஸமீபத்தில் அலகாபாத்துக்குப் போயிருந்தபோது, அங்கே அவர் பெயரால் ஒரு புஸ்தகசாலை ஸ்தாபிக்கப்பட்டு, அவருக்கு அவ்விடத்து ஜனங்கள் ஒரு உபசாரப்பத்திரம் வாசிக்க, அதற்கு அவர் பதில் சொன்னார். அவர் அடிக்கடி உலகத்து முக்கிய தேசங்களைப் போய்ப் பார்த்து வந்து பெற்ற அறிவையும் அனுபோகத்தையும் வீண் போக்காமல், அங்கே அவர் பார்த்த அநேக ஸ்தாபனங்களைப்போல் தம் தேசத்தில் ஸ்தாபிப்பதுமல்லாமல், இந்தியாவில் அவர் போன இடமெல்லாம் அவைகளின் உபயோகத்தையும் அவசியத்தையும் பற்றிப் பிரசங்கங்கள் செய்து வருகிறார். மற்றத் தேச மன்னர்களைப் போலத் தம்தேசத்துக்குத் தான் கடமைப் பட்டவரென்று நினைக்காமல், இந்தியா முழுமையும் தம் தேசமென்றும், இந்தியா ஜனங்கள் தம் தேசத்தாரென்றும் நினைத்து, தாம் புத்திமதி சொல்லுவதோடுகூடத் தம்மாலியன்ற பொருள் உதவியும் செய்துவருகிறார்.



## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்

---

### CAUGHT FOR SNEEZING.

**தும்மினதற்காகப் பிடிக்கப்பட்டான்.**—ஒரு சிறைச்சாலையில் வேடிக்கை பார்க்க வந்தவர் "நீ யேண்டா சிறையிலிருக்கிறாய்?" என்று அங்கேயுள்ள ஒருவனைப் பார்த்துக் கேட்டார். அதற்கவன் "தும்மினேன், ஐயா" என்றான்.

"என்ன? நீ தும்மினதற்காகவா, உன்னை சிறையிலடைத்தார்கள்?" என்று அவர் மறுபடியும் கேட்டார். அதற்கவன் "ஆம் ஐயா, நடுநிசியில் ஒரு ப்ரபுவின் வீட்டிற்சென்று தும்மினேன். அந்த ப்ரபு விழித்துக்கொண்டு என்னை உடனே பிடித்துக் கொண்டார்" என்றான்.

### BOTH ARE FOOLS.

**இரண்டு பேரும் முட்டாள்கள்.**—தமிழ் தெரியாத ஒரு வடக்கு தேசத்து சிப்பாய் தெற்கு தேசத்தில் உள்ள ஒரு தமிழர் பட்டாளத்தில் அமர்ந்தான். பட்டாளத்துத் தலைவன் வாரம் ஒரு முறை சிப்பாய்களை ஒழுங்காக நிறுத்தி மூன்று கேள்விகள் கேட்கிறதுண்டு. அந்த மூன்று கேள்விகளாவன :—

1 உன்வயதென்ன ?
2 நீ எத்தனை வருஷமாய் வேலை பார்க்கிறாய் ?
3 போஜனம் அளிப்பவரும் வயித்தியரும் கிரமமாக வருகிறார்களா ?

இந்த மூன்று கேள்விகளுக்கும் மூன்று விடை சிப்பாய்கள் அளிப்பார்கள். அவையாவன :

கேள்வி. 1. 25 அல்லது 26
,, 2. 5
,, 3. இரண்டு பேரும்.

பட்டாளத்துத்தலைவன் ஒவ்வொரு சிப்பாயையும் கேள்விகேட்டு வடக்கு தேசத்திலிருந்து வந்தவனைக் கேட்கிறான்.

வினா. (1) நீ எத்தனை வருஷமாய் வேலை பார்க்கிறாய்?

சிப்பாய் விடை. 25.

வினா. (2) உன் வயதென்ன ?

விடை. 5.

வினா. (3) நீ முட்டாளா ! நான் தான் முட்டாளா.

விடை. இரண்டு பேரும்.



### POSTED WITHOUT STAMP.

**ஸ்டாம்பு ஒட்டாமல் போட்டான்.**—"அடே நரசிம்மா! இந்த அரை அணா எடுத்துக்கொண்டு போய்த் தலைவாங்கி இந்தக்கடிதத்தில் ஒட்டி தபால்பெட்டியில் போட்டு வாடா" என்று தந்தை சொல்லியனுப்ப, அந்தப்பையன் போஸ்டாபீஸுக்குப்போய், அதிக சந்தோஷத்துடன் திரும்பிவந்து தகப்பனாரிடத்தில் அரையணாவைக்கொடுத்தான். "கடிதத்தை பெட்டியில் போட வில்லையா?" என்று தகப்பனார் கேட்க, "போட்டேன், அங்கே அநேகர் பெட்டியில் கடிதம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த சந்தடியில் ஒருவருக்கும் தெரியாமல் தலை ஒட்டாமலே நான் போட்டுவந்துவிட்டேன்" என்று புத்திசாலிப்பையன் பதில் சொன்னான்.

### A FOOLISH KING AND A WISE MINISTER.

**மூட அரசனும் புத்தியுள்ள மந்திரியும்:**—ஒரு அரசன் சில அந்நிய தேசத்து வர்த்தகர்களிடத்தில் சில குதிரைகளை விலைக்கு வாங்கிக்கொண்டு பின்னும் இரண்டு லக்ஷ ரூபாய் அவர்கள் கையில் அதிகமாகக் கொடுத்து அந்தப் பணத்துக்குள்ள குதிரைகளைக் கொண்டுவரும்படி சொன்னான். அந்த வியாபாரிகள் பணத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். பிறகு ஒரு நாள் அந்த ராஜா தன் மந்திரியை அழைத்துத் தன் தேசத்தில் உள்ள மூடர்களுடைய பெயர்களை யெல்லாம் எழுதிக்கொண்டு வரும்படி உத்தரவு செய்தான். மந்திரி ராஜாவைப் பார்த்து "நான் முன்னமே அந்தப்படி ஒரு அட்டவணை யெழுதி வைத்திருக்கிறேன், அதில் எல்லாருக்கும் முந்தி உங்களுடைய பெயரை யெழுதி யிருக்கிறேன், ஏனென்றால்,வந்தவர்கள்இன்ன ஊரென்று தெரிந்து கொள்ளாமலும் அவர்களிடத்தில் ஜாமீன் வாங்காமலும் இரண்டு லக்ஷ ரூபாயை அவர்கள் கையில் நீங்கள் கொடுத்துவிட்டபடியால் மூடருடைய ஜாப்தாவில் முதன்மையாக உங்களுடைய பெயரை யெழுதி யிருக்கிறேன்" என்றான். அரசன் மந்திரியைப்பார்த்து, "அவர்கள் குதிரைகளைக்கொண்டு வந்தால் அப்போது என்ன செய்வாய்" என்றான். "அவர்கள் குதிரைகளைக் கொண்டுவந்தால் உங்கள் பெயரைக் கிறுக்கிவிட்டு, அவர்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளுவேன்" என்று மந்திரி பிரதி உத்தரம் சொன்னான்.

## CURIOSITIES.

## விநோதங்கள்.

SUBJECTS OF KING GEORGE.

**ஜார்ஜ் அரசரின் பிரஜைகள்.**—உலகத்திலுள்ள குடிஜனங்களில் 1000 பேருக்கு 259 பேர் ப்ரித்தானிய ஜார்ஜ் அரசரின் பிரஜைகளாயிருக்கிறார்கள்.

GLASS THAT CANNOT BREAK.

**உடைபடாக்கண்ணாடி.**—ப்ரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த பக்காறூற் என்னுமிடத்து சாஸ்திர விற்பன்னரொருவர் உடைக்கப்படமாட்டாத கண்ணாடியொன்றைப் புதிதாயுண்டாக்கி யிருக்கிறார்.

ELEPHANT HIDE.

**யானைத் தோல்.**—யானைத்தோல் வேலைக்கு உபயோகப்படுகிறது. இது இரண்டங்குலம் கனமுள்ளது. யானையின் தோலை உரிக்க ஸாத்தியமாயென்னும் கொள்கை இதனால் மறுக்கப்படும்.

THE BUSIEST RAILWAY JUNCTION.

**ரயில் வண்டிகளுக்குக் கணக்கில்லை.**—உலகத்துக்குள் ஏற்பட்டிருக்கிற ரெயில்வே ஸ்டேஷன்களிலெல்லாம் அதிக அலுவலுள்ளது இங்கிலாந்தில் **கிளாப்ஹாம்** என்னும் ஜங்ஷன் ஸ்டேஷனும். தினமொன்றுக்கு ஆயிரத்துநானூறு ரெயில் வண்டித் தொடர்கள் வந்து போகின்றனவாம்.

A TREE THAT MAKES YOU LAUGH.

**சிரிப்புண்டாக்கும் மரம்.**—அரேபியா தேசத்தில் சிரிப்பையுண்டாக்கும் ஒரு விருட்ச மிருக்கிறது. அவ்வூரிலுள்ளார் அதன் விதையைக் காயவைத்துப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு விசேஷ தினங்களில் அந்தப் பொடியில் சிறிது சாப்பிட்டுப் பைத்தியக்காரர்கள் போல் ஒருமணி பரியந்தம் பாடுகிறதும் ஆடுகிறதுமா யிருப்பார்களாம்.

A BEE HIVE.

**ஒரு தேனீக் கூடு.**—தென் அமெரிக்காவிலுள்ள கென்டக்கி யென்னும் மாகாணத்தில் ஒரு தேனீக் கூடு இருக்கிறதாம். அதிலிருக்கும் ஒரு அறை மாத்திரம் நூற்றைம்பது அடி உயரமும் பத்து ஏக்கரா அகலமும் உள்ளதாம். அந்தத்தேன் கூடானது கற்பாறையினால் செய்யப்பட்டிருக்கிறது. கற்பாறையின் 4 பாகங்களிலும் சட்டை போட்டாற்போல் தேனீக்கள் கூடுகட்டிக்கொண்டிருக்கின்றனவாம்.

A CHILD WITH A DOG'S FACE.

**மனிதரூபமும் நாய்முகமும்.**—ஆஸ்ட்ரேலியாவின் மேற்கு மாகாணத்தில் ஒரு தனவான் ஒரு நாடகப் பெண்மேல் வெகு காலம் காதல் கொண்டிருந்து பின்பு தன் மனோரதம் முற்றுப்பெறவே, இருவருங் கூடியிருக்குங்காலத்தில் தமக்கெதிரில் தங்கள் நாய்களுங் கூடிக் களித்தன. அந்த நாய்களின் லீலையைப் பார்த்தபடி தாமுங் காமம்மீறி உற்சாகமாயிருந்தார்கள். அது தொடங்கி அப்பெண் கற்பவதியாகி உச்சி முதல் நாபிவரையில் நாய் ரூபமும், தேக முழுவதும் மயிர் அடர்ந்துமுள்ள ஒரு குழந்தையை வெகு வேதனையோடு பெற்றாள். அது இறந்து போயிற்று.

A ROAD CLEANING MACHINE.

**புழுதி பெருக்கும் யந்திரம்.**—லண்டன் நகரத்து வீதிகளில் புழுதி பெருக்கும்படி ஒரு மோட்டார் வண்டி யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த யந்திர வண்டி ஒரு மணி நேரத்திற்குள்ளே 8 மைல் தூரம் புழுதியைப் பெருக்கி வீதிக்குத் தண்ணீர் தெளித்துச் சுத்தஞ் செய்துவிடுகிறதாம். இப்படியே 500 பேர் நின்று ஒரு நாள் முழுதும் செய்யக்கூடிய வேலையை இந்த யந்திர வண்டி ஒன்றே ஒரு நாளில் செய்து முடித்துவிடுகிறதாம்.

FUNERAL CEREMONIES IN CHINA.

**சீனர்களுடைய சவச்சடங்கு.**—சீனன் ஒருவன் செத்துப்போனால்அவனுடைய பிரேதத்தை மையக்குழியில் கொண்டு வைத்து வைதீகால் செய்யப்படவேண்டிய சடங்காசாரங்களைச் செய்துமுடித்தபின், அவனுடைய இனஜனத்தார் அந்தக் குழியில் ஒரு கோழிக்குஞ்சு, இரண்டு மூன்று வகையான மாம்ஸத்துண்டங்கள், ஒரு கூடை நிறைந்த அரிசி, காய்கறி பதார்த்தங்கள் இவைகளை எறிந்து, விஸ்கி என்னும் சாராயப்புட்டி ஒன்றைத் திறந்து பிரேதப்பெட்டிமேல் ஊற்றிவிட்டு மண்ணால் மூட, இன்னும் சில இனஜனத்தார் மெழுகுவர்த்திகளையும் விளக்குக் கூண்டுகளையும் கொளுத்திப் பிடித்துக் கொள்வார்களாம். பிரேதக்குழியில் போடுகிற பண்டபலாதிகள் இறந்தவன் மறு உலகம் சேருமட்டும் அவனுக்கு ஆகாரமாய் உதவுமென்பதும், இந்தத் தீபங்களால் அவன் மறு உலகத்துக்குச் செல்லும் வழியில் இருள் நீங்கிப் பிரகாசமுண்டாகுமென்பதும் சீனர்களுடைய கொள்கைகளாம்.



## NEWS OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

——:o:——

## INDIAN NEWS.

## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

CO-OPERATIVE SOCIETIES.

**ஐக்கிய நாணயச் சங்கங்கள்.**—இப்போது இந்தியாவிலே 3456-சங்கங்களும், அவைகளில் 226,958 மெம்பர்களும், அவைகளுக்கு 104-லக்ஷரூபாய் முதலும் உண்டு.

NEW POSTAGE STAMPS.

**புதிய தபால் தலைகள்.**—ஜார்ஜ் அரசருடைய முக உருவத்தோடு கூடிய புதிய தபால் தலைகள் முடிசூட்டு ஸமயத்தில் இங்கிலண்டிலும் இந்தியாவிலும் விற்க ஆரம்பிக்குமெனப்படுகிறது.

CURRENCY NOTES.

**கரென்ஸி நோட்டுகள்.**—இப்பொழுது 10 ரூபாய் நோட்டும் 50 ரூபாய் நோட்டும் இந்தியா முழுமையும் செல்லும். பரீட்சார்த்தமாய்ச் செய்த இந்தத்திருத்தமானது ஜனங்களுக்குத் திருப்தி கொடுத்திருக்கிறபடியால், நூறு ரூபாய் நோட்டும் ஸர்க்கிள் நோட்டா யில்லாமல் இந்தியா முழுமையும் செல்லும்படியாக சீக்கிரத்தில் மாற்றப்படும்.

A CENTRAL CO-OPERATIVE BANK IN BOMBAY.

**பம்பாயில் ஒரு ஸென்ட்ரல் ஐக்கிய நாணய பாங்கி.**—ஐக்கிய நாணயநிதிச் சங்கங்கள் ஸௌகரியமாய்ப் பணங்கொடுத்து வாங்க பம்பாயில் ஐக்கிய நாணய ஸென்ட்ரல் பாங்கி யொன்று ஸ்தாபிக்க ஸர் விட்டல் தாஸ் தாமோதர தாக்கர்ஸே சிப்பார்சு செய்திருந்த பிரேரணை இந்தியாமந்திரியின் அங்கீகாரத்தை பெற்றுவிட்டதாய்ச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட பாங்கி ஒன்று சென்னப்பட்டணத்தில் ஏற்கனவே இருக்கிறது.

THE MADRAS BUDGET.

**சென்னை வரவு செலவுக் கணக்கு.**— சென்னை ராஜதானியின் வரவு செலவு, திட்டங்கள் பின் வருமாறு:— 1910-ம் வருஷத்துக் கடைசியில் இருப்பு 153,98 லக்ஷம் ரூபாய். 1911-ம் வருஷத்துத் திட்டக் கணக்குகளின்படி வரவு 649.21 லக்ஷம் ரூபாய், செலவு 686.77 லக்ஷம் ரூபாய். ஆகையால் அதிகச் செலவு 37.56 லக்ஷம் ரூபாயையும் போன வருஷத்துக் கையிருப்பிலிருந்து செலவு செய்ய வேண்டும். செலவு செய்தால் புது வருஷத்துக் கையிருப்பு 116.42 லக்ஷம் ரூபாயாகிறது. இந்த வருஷத்து அதிகச் செலவுகள், ஸிவில் கட்டிட வேலைகளுக்காகவும் மராமத்து இலாகாக் கட்டிட வேலைகளுக்காகவும் படிப்புக்காகவும் லோகல் போர்டுகளுக்கு உதவியாகவும் அதிகச் செலவு செய்வதால் ஏற்படுகின்றன. இந்த அதிகச் செலவுகளில் படிப்புக்காக 1910-ம் வருஷத்தில் 37,90,000 ரூபாய் செலவாயிருக்க, புது வருஷத்தில் 49,94,000 ரூபாய் செலவுக்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

THE DELHI DURBAR.

**டில்லி தர்பார்,**—நம்முடைய சக்ரவர்த்தியும் அவருடை மனைவியாரும் வருகிற டிசம்பர் மாதம் 2-ந்தேதி பம்பாயில் வந்து இறங்கி, 7-ந்தேதி டெல்லிக்கு போவார்கள். அங்கே அவர்களுக்கு முடிசூட்டு வைபவ தர்பார் 12-ந்தேதி நடக்கும். அது சக்ரவர்த்தியின் பெருமைக்கும் அந்தஸ்துக்கும் தக்கபடி நடத்தப்படும். அப்போது தர்பாரைப் பார்க்க லக்ஷம் ஜனங்களுக்கு இடமிருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அங்கிருந்து சக்ரவர்த்தி கல்கத்தாவுக்கு 30-ந்தேதிக்கு முன்னால் போவார்கள். இந்த வைபவத்திற்கு ஒன்றரைக்கோடி ரூபாய் செலவு திட்டம் போடப்பட்டிருக்கிறது.

THE NORTH ARCOT DISTRICT.

**வட ஆற்காட் ஜில்லா.**— வட ஆற்காட் ஜில்லாவை வேலூர் ஜில்லா வென்றும், சித்தூர் ஜில்லா வென்றும், இரண்டு ஜில்லாக்களாய் பிரித்துவிட ஏற்பாடாகி இருந்தது. அதை இரண்டு ஜில்லாக்களாய்ப் பிரிப்பதற்காக ஸ்பெஷல் ட்யூட்டியில் வைக்கப்பட்டிருந்த ஆனரெபிள் மிஸ்டர் ஜெ. ஆண்ட்ரு புதிதாய் உண்டாக்கப்படப்போகிற வேலூர் ஜில்லாவுக்கு வட ஆற்காட் ஜில்லாவென்ற பேரே கொடுக்கப்பட வேண்டுமென்று சிப்பார்சு செய்ய, கவர்ன்மெண்டார் அவர் செய்த சிப்பார்சை ஒப்புக்கொண்டு விட்டார்கள். அவர் வட ஆற்காட் என்று ஒரு ஜில்லா இல்லாதிருக்கும்போது தென் ஆற்காட் ஜில்லா

வென்று ஒரு ஜில்லா இருத்தல் ஸரியல்ல வென்றும், வேலூர் ஜில்லாவுக்கு வட ஆற்காடு ஜில்லா வென்ற பேரே வைக்கப்படுமானால் ஆபீஸ் முத்திரைகள், சேவகர்களின் வில்லைகள் இவைகளையெல்லாம் மாற்றும்படியா யிராதென்றும், அப்படி அவைகளை மாற்றாமல் வைத்துக்கொள்வதனால் ஏறக்குறைய ரூபா 400 லாபமாகுமென்றும் எடுத்துக் காட்ட, கவர்ன்மெண்டார் புதிய வேலூர் ஜில்லாவை வடஆற்காட் ஜில்லா என்ற பேராலேயே வழங்குவதாய்த் தீர்மானித்து விட்டார்கள்.

A New Marriage Bill.

**ஒரு புது விவாக மசோதா.**—ஸமீபத்தில் ராஜப்பிரதிநிதிச்சட்டசபையில் ஆனரெபிள் மிஸ்டர் பூபேத்திரநாத் பாஸு ஹிந்துக்கள் விவாகம் செய்துகொள்ளுவதைப்பற்றி ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். தற்காலம் ஹிந்துக்கள் அதே ஜாதியிலாவது அல்லது ஒரு ஜாதியின் உட்பிரிவுகளிலாவது விவாகம் செய்து கொள்ளுகிறார்கள். இப்போதுள்ள சட்டப்படி, இப்படி ஜாதிவிட்டு ஜாதி விவாகம் நடந்தால் இப்படி விவாகம் செய்துகொள்ளுகிறவர்கள் ஹிந்துக்களுக்குள்ள பாத்தியங்களை இழந்து போகிறார்கள். இந்தப்புது மசோதா நிறைவேறினால் வேறு ஜாதியிலும் ஹிந்துக்கள் விவாகம் செய்து கொண்டால் அது ஸரியான விவாகமென்று ஏற்படும். ஏற்கனவே, ஹிந்து விதவைகளின் புனர் விவாகத்தைக் கிரமமான விவாகமாக்கி ஒரு சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படியே ஹிந்துக்களிலொருவன் கிறிஸ்தவனாகிவிட்டால் அவன் ஸொத்து பாத்தியங்கள் மற்றஹிந்துக் களுக்குள்ளவை போலவே இருக்குமென்று ஒரு சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப்புது மசோதா நிறைவேறி சட்டமாகும் பட்சத்தில் ஹிந்துக்களுக்கு எவ்வித பாதகமும் நேரிடாது.

The Madras Census.

**சென்னை மாகாணத்திலெடுக்கப்பட்ட ஸென்ஸஸ்**—இந்த மாகாணமெங்கும் இந்த மாதம் 10-ந் தேதி எடுக்கப்பட்ட ஸென்ஸஸ்படி ஒவ்வொரு ஜில்லாவின் ஜனத்தொகையும் இம்மாகாணத்தைச் சேர்ந்த ஸமஸ்தானங்களின் ஜனத்தொகையும் பின் வருமாறு:—

| ஜில்லா | | ஜனத்தொகை |
|---|---|---|
| கஞ்சம் | .. | 2,2207,45 |
| விசாகப்பட்டணம் | .. | 3,190,940 |
| கோதாவரி | .. | 1,651,490 |
| கிருஷ்ணா | .. | 1,996,538 |
| குண்டூர் | .. | 16,97,786 |
| நெல்லூர் | .. | 1,328,487 |
| கடப்பை | .. | 1,158,532 |
| கர்நூல் | .. | 935,689 |
| பல்லாரி | .. | 969,267 |
| அனந்தப்பூர் | .. | 963,322 |
| சென்னை | .. | 517,335 |
| செங்கற்பட்டு | .. | 1,405,746 |
| வட ஆற்காட் | .. | 2,443,200 |
| சேலம் | .. | 1,973,323 |
| கோயம்புத்தூர் | .. | 2,116,725 |
| தென் ஆற்காட் | .. | 2,648,252 |
| தஞ்சாவூர் | .. | 2,360,435 |
| திருச்சினாப்பள்ளி | .. | 2,106,389 |
| மதுரை | .. | 1,932,680 |
| ராமநாதபுரம் | .. | 1,658,753 |
| திருநெல்வேலி | .. | 1,791,226 |
| நீலகிரி | .. | 118,638 |
| மலையாளம் | .. | 3,015,510 |
| தென்கன்னடம் | .. | 1,194,809 |
| அஞ்சுதங்கா | .. | '5,572 |
| | மொத்தம் | 41,401,830 |

| ஸமஸ்தானங்கள் | | ஜனத்தொகை |
|---|---|---|
| திருவாங்கூர் | .. | 3,430,254 |
| கொச்சி | .. | 918,639 |
| புதுக்கோட்டை | .. | 411,878 |
| பங்கனப்பள்ளி | .. | 39,336 |
| ஸாண்டூர் | .. | 13,517 |
| | மொத்தம் | 4,813,644 |
| ப்ரிட்டிஷ் ஜில்லாக்களும் தேச ஸமஸ்தானங்களும் சேர்ந்து மொத்தம். | | 46,215,483 |

மற்ற நாடுகள்

| | | |
|---|---|---|
| குடகு | .. | 175,004 |
| பங்களூர் | .. | 100,345 |



# FOREIGN NEWS.
## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்

Aluminium Paper.

**அலுமீனியக் காகிதம்.**— ஜர்மனியில் வெறுங் காகிதத்தின் பேரில் அலுமீனியத்தாள் பூசிய அலுமீனியக் காகிதங்கள் செய்யப்படுகின்றனவாம். அவைகளைத் தகரத் தகட்டிற்குபதிலாக உபயோகிக்கிறார்கள்.

Cat Slaughter.

**பூனைகளைக் கொல்வது.**—வட இத்தாலியாவில் பூனையை ஆடுமாடுபோல் வளர்த்து உண்பார்களாம். பூனையைக்கொன்ற பாவம் அவர்களை பீடிக்காது போலும்!

Neem Seed.

**வேப்பங் கொட்டை:**—பயன்படும் பொருளென்பதைக் கவனியாதிருந்த வேப்பங் கொட்டைக்கும் நல்லகாலம் பிறந்துவிட்டது. இங்கிலாந்திலுள்ள ஒரு கம்பனியார் இக்கொட்டையை எந்தமாசங்களில் நயமாக வாங்கலாமென்று ராஜாங்கத்தாரைக் கேட்டிருக்கிறார்களாம்.

A Treat to London Children.

**லண்டன் சிறுவர்களுக்கு விருந்து.**— ஜூன் மாதம் முப்பதாம் தேதியன்று க்ரிஸ்டல் பாலஸில் லண்டனிலுள்ள லட்சம் சிறுவர்களுக்கு விருந்து செய்விக்க ஜார்ஜ் சக்ரவர்த்தி ஏற்பாடு செய்திருக்கிறார் என்று ஸர் வில்லியம் காரிங்டன் அறிவித்திருக்கிறார். இதற்காக ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள்.

A Horrible Beggar.

**ஒரு கொலைபாதகப் பிச்சைக்காரன்.**—ஹங்கேரியிலே ஒரு பிச்சைக்காரன் வீட்டிலே 23 பிள்ளைகள் பிடித்தடைக்கப் பட்டிருப்பதையும், அவர்களுட் சிலரை சொஸ்திகளாக்கியும், சிலரைக் குருடாக்கியும், சிலரை அவயவமற்றவர்களாக்கியும், விட்டிருப்பதை போலிஸார் கண்டுபிடித்து அவ்விதம் செய்தவரை ஜெயிலில் வைத்திருக்கிறார்கள். இப்படி எல்லாம் இவர்களைச் செய்ததற்குக் காரணம், அந்தப் பிள்ளைகளைச் சொஸ்தி, சப்பாணிகளென்றும், குருடரென்றும் காட்டி வீட்டுக்கு வீடு போய்ப் பிச்சைவாங்கிப் பிழைப்பதற்கேயாம்.

Soda Lake.

**சோடா ஏரி.**—கீழ் ஆப்பிரிக்காவில் மகாடி யென்ற

ஏராளமான சோடா உப்பு இயற்கையாகவே யிருக்கிறதாம். இதைக் கேள்விப்பட்டு பலர் அவ்விடத்துக்குப் போய்ப் பரிசோதனை செய்து பார்த்துத் திருப்தியடைந்து, இப்போது ஒரு பெரிய வர்த்தகக் கம்பனி சேர்க்கிறார்கள். அந்தக் கூட்டுக் கம்பனிக்கு துவக்கத்தில் 13,12,500 பவுன் முதல் வைத்திருக்கிறார்கள். வால்டர் சாமுவேல் அண்டு ரேயர்ஸ்பாக் என்ற வர்த்தகக் கம்பனியின் தலைவராகிய சாமுவேல் என்பவர்தான் அந்தச் சோடாக் கம்பனிக்கும் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். உலகத்தில் எங்கேயாவது ஸம்பாதனைக்கு இடமிருக்கிறதென்று ஐரோப்பியர்கள் கண்டால் உடனே அவ்விடம் போக அஞ்சார்கள். அவர்களுடைய தைரியமும் மன ஊக்கமும்தான் அவர்கள் காரியஸித்தியடைய ஸகாயஞ் செய்கின்றன. ஆளுகை விஷயமாயாவது வியாபார விஷயமாயாவது அல்லது வேறு பிரயோஜனமான காரியத்துக்காவது ஐரோப்பியர்கள் போகாத இடம் கிடையாது. நமது தேசத்தாருக்கு எப்போது அப்பேர்ப்பட்ட துணிவும் முயற்சியும் ஏற்படப்போகின்றவோ தெரியவில்லை.

A Big Bank.

**மிகப் பெரிய பாங்கி.**—ந்யூயார்க்கிலுள்ள நாஷனல் ஸிட்டிபாங்கில் 8 கோடி தங்க டாலர் நாணயம் நாள்தோறும் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகிறது. மிகத் திராக 400 உத்தியோகஸ்தர்கள் அதில் வேலை செய்கிறார்கள். சிறுவாவிகளென்று சொல்லக்கூடிய நான்கு பெட்டிகள் நிறம்பத் தினந்தோறும் கடிதங்கள் வந்து சேருகின்றன. இவைகள் ஐக்கியநாட்டின் பல பகுதிகளிலுள்ள பாங்கிகளிலிருந்து அனுப்பப்படும் "செக்" உண்டியல் முதலானவைகளாம். விசேஷமாக 54 டிஸ்ட்ரிக்டுகளாய்க் கடிதங்கள் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பகுதிவேலையை நடத்துவோர்க்கு அவை பிரித்துக் கொடுக்கப்படும். இந்த பாங்கியின் பிரமாண்டமான இருப்புப்பெட்டியில் 9 கோடியே 90 லட்சம் தங்க நாணயங்களும் 50 கோடி பெறுமதி கொண்டதக்க சீட்டுறுதிகளும் இருக்கின்றனவாம்,

# MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

(தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்பட்ட வர்த்தக சங்கத்தாரின் மார்ச்சுமீ 15உ ரிபோர்ட்டுப்படி.)

PIECE GOODS.
ஜவுளி ஸாமான்கள்.

சீமையில் ஸுமாராக கிராக்கி இருக்கிறது. மதராஸில் காரிகத்துக்கும் ஸலவை மல்லுக்கும் கொஞ்சம் கிராக்கி இருக்கிறது. தோத்திகளுக்கும் அப்படியே. மொத்தத்தில் வியாபாரம் டல்தான். பின்னால் எப்படியாகுமோ என்று வியாபாரிகள் இண்டெண்ட் கொடுக்கவில்லை.

GREY SHIRTINGS—காடா.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| **லேடி மார்க்கு.** | | | |
| No. 1110—37 × 37½ × 46″ .. | 7 | 10 | 0 |
| **கூண்டு மார்க்கு.** | | | |
| No. 2500—37 × 37½ × 41″ .. | 5 | 14 | 0 |
| ,, 3500 ஷை 46″ .. | 6 | 10 | 0 |
| ,, 7500 ஷை 54″ .. | 7 | 15 | 0 |
| ,, 5000 ஷை 41″ .. | 6 | 2 | 0 |
| **பறவை நாகம் மார்க்கு** | | | |
| 37 × 37½ × 41″ .. .. | 5 | 9 | 0 |
| **41″ பொன்னூல் துறி.** | | | |
| No. 3552 .. .. .. | 6 | 12 | 6 |
| ,, 3553 .. .. .. | 6 | 15 | 6 |
| ,, 3554 .. .. .. | 7 | 2 | 6 |
| ,, 3555 .. .. .. | 7 | 5 | 6 |
| ,, 3556 .. .. .. | 7 | 8 | 6 |

---

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 126—46″—37/7½ .. | 9 | 9 | 0 |
| **பட்டைக்துறி.** | | | |
| No. 7386—46″—37 × 37½ .. | 8 | 0 | 0 |
| ,, 7397—ஷை .. .. | 8 | 6 | 0 |

GREY MULLS—காரிகம்பீஸ் (காலாக்கச்சை).

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| **20 கஜம் இஞ்சின் மார்க்கு.** | | | |
| 20 × 20 × 46″ .. .. | 4 | 5 | 6 |
| ஷை 51″ .. .. | 4 | 14 | 0 |
| 22 × 22 × 51″ .. .. | 5 | 5 | 6 |
| ஷை 46″ .. .. | 4 | 14 | 0 |
| **20 கஜம் புறு மார்க்கு.** | | | |
| 20 × 20 × 46″ .. .. | 4 | 5 | 0 |
| **தங்க மீன் மார்க்கு.** | | | |
| ஷை .. .. | 4 | 5 | 0 |
| **ரூபா மார்க்கு.** | | | |
| 40″—20 × 20 .. .. | 4 | 5 | 0 |
| 45″—22 × 22 .. .. | 4 | 13 | 0 |

BOOK MUSLINS.—புக் மஸ்லின்கள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| **சங்கு மார்க்கு 12 கஜம்.** | | | |
| 51″—94 .. .. .. | 4 | 0 | 0 |
| ஷை—95 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை—96 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை—97 .. .. .. | 4 | 12 | 0 |
| 52″—170 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை—175 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை—180 .. .. .. | 4 | 12 | 0 |
| ஷை—185 .. .. .. | 5 | 0 | 0 |
| ஷை—887 .. .. .. | 8 | 8 | 0 |

COLOURED BOOK MUSLINS—கலர் புக் மஸ்லின்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| ராணி மார்க்கு. .. .. | 2 | 12 | 0 |
| லக்ஷ்மி நாராயணன் மார்க்கு .. | 2 | 11 | 0 |
| பள்ளிக்கூடப் பையன் மார்க்கு .. | 2 | 10 | 0 |

JACONETS.—ஜாக்கிநெட்டுகள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| **46″ தங்க விநாயகர் மார்க்கு.** | | | |
| No. 888 .. .. .. | 5 | 9 | 6 |
| ,, 777 .. .. .. | 5 | 4 | 6 |
| ,, 555 .. .. .. | 5 | 0 | 6 |
| ,, 666 .. .. .. | 5 | 3 | 6 |
| ,, 333 .. .. .. | 4 | 11 | 6 |
| ,, 444 .. .. .. | 4 | 14 | 6 |
| **20 கஜம் 46″ தங்கக் குழந்தை மார்க்கு.** | | | |
| No. 2662 .. .. .. | 4 | 11 | 0 |
| ,, 89 .. .. .. | 4 | 14 | 0 |
| ,, 898 .. .. .. | 4 | 15 | 0 |
| ,, 8989 .. .. .. | 5 | 2 | 0 |
| ,, 89898 .. .. .. | 5 | 4 | 0 |
| ,, 898989 .. .. .. | 5 | 6 | 0 |
| ,, 3771 .. .. .. | 4 | 7 | 0 |
| ,, 3772 .. .. .. | 4 | 9 | 6 |

WHITE MULLS—ஸலவை மல்லுகள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| No 1703 .. .. .. | 7 | 4 | 0 |
| ,, 1503 .. .. .. | 7 | 0 | 0 |
| ,, 1502 .. .. .. | 6 | 2 | 6 |
| ,, 1702 .. .. .. | 6 | 6 | 0 |
| ,, 1704 .. .. .. | 7 | 8 | 0 |
| ,, 136—40″—18 கஜம் .. | 2 | 2 | 0 |
| ,, 9072—46″ 20 கஜம் .. | 4 | 10 | 0 |
| ,, 9073—51″ ஷை .. | 5 | 2 | 0 |
| ,, 5072—46″ ஷை .. | 4 | 10 | 0 |
| ,, 5073—51″ ஷை .. | 5 | 2 | 0 |
| ,, 912—46″ ஷை .. | 4 | 9 | 6 |
| ,, 913—51″ ஷை .. | 5 | 2 | 0 |
| ,, 3073 .. .. .. | 5 | 12 | 0 |
| ,, 7073 .. .. .. | 5 | 13 | 0 |
| ,, 973 .. .. .. | 5 | 13 | 0 |
| **மெடல் மார்க்கு.** | | | |
| ,, 7773 .. .. .. | 6 | 4 | 0 |



| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| **ஸவரன் மார்க்கு.** | | | |
| No. 273 .. .. .. | 6 | 5 | 0 |
| 72—46″ 20 கஜம் .. .. | 4 | 2 | 0 |
| 73—51″ ஷை .. .. | 4 | 10 | 0 |

WHITE SHIRTINGS—லாங் கிலாத்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| H. K. 62 36″ 40 கஜம் .. | 9 | 0 | 0 |
| ஷை 82 ஷை .. | 9 | 4 | 0 |

RED SHIRTINGS—தோம்பு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| **ஸ்வதன்வா மார்க்கு.** | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 6 | 4 | 6 |
| 7 ஷை .. .. .. | 6 | 8 | 6 |
| 8 ஷை .. .. .. | 6 | 12 | 6 |
| No. 10—41″ 40 கஜம் .. .. | 8 | 3 | 0 |
| **ஒட்டை மார்க்கு.** | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 7 | 3 | 0 |
| 8 ஷை .. .. | 7 | 7 | 0 |

YARN AND TWIST—நூலும் முறுக்கு நூலும்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஆமதாபாத் காரம் 40—சைனு டிக்கெட்டு—செகப்பும் மஞ்சள் முடியும். | 3 | 0 | 0 |
| பம்பாய் காரம் 40 டவர் அண்ட் ஸேட் மார்க்கு .. .. .. | 3 | 10 | 0 |

MANCHESTER YARN—சீமை நூல்.

சீமை நூலுக்கு கிராக்கியில்லை.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| காரம் 40 ஜி. எம். (G.M.) ட்ராம்மர் | 3 | 15 | 0 |
| ஷை க்ளாஸ்கோ .. | 4 | 2 | 9 |
| ஷை தங்கமயில் .. .. | 4 | 0 | 6 |
| ஷை மதுராபட்டணம் ஜி.எம். | 4 | 0 | 9 |
| ஷை பாக்கு வெட்டி .. | 4 | 0 | 0 |
| ஷை ஆதிசேஷன் .. | 4 | 2 | 6 |
| ஷை ஸலவை 80 மகாராஜா | 7 | 3 | 0 |
| ஷை 30 கெடிகாரம் .. | 4 | 1 | 6 |
| ஷை ஷை தண்ணித்துரை .. | 4 | 1 | 6 |
| ,, 50 ம்யூல்-கிழவன் .. | 4 | 7 | 0 |
| ,, ஷை ஷை 70/80 .. | 6 | 4 | 0 |
| 50 மீடியோ G. F. M. ஒட்டையும் யானையும் | 5 | 14 | 6 |
| 60 மீடியோ .. .. .. | 5 | 15 | 0 |

RED—செகப்பு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 60 இரட்டைமயில் .. .. | 8 | 11 | 6 |
| 40 முனிவிபாலிட்டி (புல்வெயிட்) | 11 | 2 | 0 |
| 40 புத்தா .. .. | 6 | 0 | 0 |
| ,, வில்லேஜ் 4 டிக்கெட்டு .. .. | 5 | 4 | 0 |
| ,, ராவணேஸ்வரன் .. .. | 11 | 1 | 0 |
| ,, அஹல்யை ராமர் .. .. | 11 | 0 | 0 |
| ,, பொம்மி செட்டி .. .. | 11 | 0 | 0 |
| ,, மோட்டார்கார் .. .. | 10 | 4 | 0 |
| ,, போரா பஸார் .. .. | 6 | 0 | 6 |
| ,, பூப்ஸாணி இரண்டு கட்டு .. | 11 | 0 | 0 |
| 60 ஆதிசேஷன் .. .. | 8 | 8 | 0 |

YELLOW—அரை மஞ்சள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 42/40 இஞ்சின் .. .. | 4 | 10 | 0 |
| 40 ஸ்டீமர் .. .. | 4 | 12 | 0 |
| 44/40 யானை .. .. | 4 | 7 | 0 |
| 40 கெங்கை (ஜகன்மோஹினி) புல்வெயிட் | 4 | 13 | 6 |
| காசி ராஜா .. .. | 4 | 13 | 6 |
| 44/40 கிருஷ்ணன் .. .. | 4 | 9 | 6 |

LEMON AND ORANGE—கால் மஞ்சள் முழு மஞ்சள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 44/40 கால் மஞ்சள் கிருஷ்ணன் | 4 | 9 | 0 |
| ,, முழு மஞ்சள் ஷை .. | 4 | 13 | 6 |
| 40 கால் மஞ்சள் கெங்கை .. | 5 | 0 | 0 |
| ,, முழு மஞ்சள் ஷை .. | 5 | 0 | 0 |
| ,, ஷை காசி ராஜா .. .. | 4 | 15 | 0 |
| 40 கால் மஞ்சள் ஸ்டீமர் .. | 4 | 12 | 6 |
| ,, முழு மஞ்சள் ,, .. | 5 | 2 | 0 |
| 30 காரம் சிங்கம் .. .. | 3 | 12 | 0 |
| ,, ராஜா .. .. | 3 | 6 | 0 |

BLACK—கறுப்பு.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 44/40 குதிரை .. .. | 4 | 11 | 0 |
| 30 ஸரஸ்வதி .. .. | 4 | 2 | 6 |

HIDES AND SKINS—மாட்டு ஆட்டுத்தோல்கள்.

சீமையில் சரக்கு அவ்வளவாக வராததால் விலை ஏறிக்கொண்டேவருகிறது.

| | ரூ. | அ. | பை | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| **மாஞு (மாட்டுத்தோல்)** | | | | | | | |
| பல்லாரி .. .. | | | | | 0 | 13 | 10 |
| பங்களூர் கமேலா .. .. | | | | | 0 | 13 | 5 |
| ஷை உப்புத்தோல் | 0 | 12 | 6 | முதல் | 0 | 12 | 9 |
| ஹைதராபாக்கம் | 0 | 13 | 5 | முதல் | 0 | 13 | 6 |
| மட்வாடா | 0 | 12 | 6 | முதல் | 0 | 12 | 9 |
| ஏலூர் ராஜமஹேந்திராபுறம் | 0 | 12 | 9 | முதல் | 0 | 12 | 11 |
| செட்டி கடல்கரை | 0 | 11 | 9 | முதல் | 0 | 12 | 6 |
| சீவரம் .. .. | | | | | 0 | 12 | 0 |
| குடியாத்தம் .. .. | | | | | 0 | 12 | 0 |
| பல்லாவரம் .. | 0 | 11 | 4 | முதல் | 0 | 11 | 6 |
| **யேஞு (எருமைத்தோல்)** | | | | | | | |
| ராயதுர்க்கம் .. .. | | | | | 0 | 10 | 9 |
| பல்லாரி .. .. | | | | | 0 | 10 | 9 |
| பங்களூர் | 0 | 9 | 7 | முதல் | 0 | 9 | 9 |
| **வேஞு (வெள்ளாடு)** | | | | | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | | | | | 1 | 8 | 2 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 5 | 6 |
| **சேஞு (செம்மறி ஆடு)** | | | | | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | | | | | 1 | 2 | 6 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 0 | 0 |
| சேலம் | 1 | 9 | 0 | முதல் | 1 | 12 | 0 |
| மட்வாடா | 1 | 3 | 6 | முதல் | 1 | 4 | 6 |

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு பழையது 26புதிது 34 | |
| கொன்னைப்பட்டை ஷை | 10-8-0 முதல் 11 |
| கடப்பை கடுக்காய் ஷை | .. 7 முதல் 11 |
| சேலம் அரசகிரிஷை ஷை | .. 20 முதல் 21 |
| நல்லெண்ணெய் ஷை | .. 110முதல்115 |
| புங்கம் எண்ணெய் ஷை | .. 85 முதல் 100 |
| மணிலாக்கொட்டை பிண்ணாக்குஷை<br>முத்து கொட்டை பிண்ணாக்கு ஷை | 11முதல்1 |
| எள்ளு | .. $17\frac{1}{2}$ |
| எட்டிக்கொட்டை ஷை | .. 13 முதல் 14 |
| உள்ளிப்பூண்டு ஷை | வியாபாரமில்லை. |
| பூந்திக்கொட்டை ஷை | .. 9 முதல் 10 |
| விளக்கெண்ணெய் ஷை | .. 80 முதல் 82 |
| மணிலாக்கொட்டைபருப்பு பாரம்1-க்கு$37\frac{1}{2}$முதல்38 | |
| உடைக்காதது 42 மணங்கு .. | 59 முதல் 60 |
| கொட்டை முத்து 165 ராத்தல் .. | $10\frac{1}{2}$ முதல் 11 |

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| ரங்கூன் அரிசி 63 படி | .. | 11 | 0 | 0 |
| பந்தர் பச்சை அரிசி 44 படி | .. | 7 | 8 | 0 |
| நெல்லூர் அரிசி 31 படி | .. | 6 | 2 | 0 |
| கோதுமை 4 படி முதல் $4\frac{1}{2}$ படி | .. | 1 | 0 | 0 |
| கொள்ளு 195 ராத்தல் | .. | 6 | 4 | 9 |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் | .. | 14 | 0 | 0 |
| ஷை (பல்லாரி) ஷை | .. | 18 | 0 | 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு ஷை | | 21 முதல் 22 | | |

METALS—லோகங்கள்.

| | | |
|---|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷுடும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் | | ரூ. 199 முதல் 200 |
| செப்பு தகடுகள் பாரம் | .. | 244 |
| செப்புக்கட்டி ஷை | .. | 210 |
| நாகம் ஷை | . | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை | .. | 74 |
| ஈயம் ஷை | .. | 54 |
| காரீயம் ஷை | .. | 49 |
| வெள்ளீயம் ஷை | .. | 185 வராகன். |

IRON—இரும்பு.

விலை ஏறும்போலிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. | பாரம் | ரூ. | $20\frac{1}{2}$ |
| சீமை | .. | .. | 42 |
| மருக்கி தகடு | 6—9, 12—13, | | 20—37 |
| பீப்பாய்க் கட்டு | .. | .. | 27 |
| 8 பட்டை எஃகு | .. | .. | 20—$20\frac{1}{2}$ |
| எஃகு வில்கட்டு | .. | .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 நெ. | | .. | 21 |
| சீமை ஷை .. | .. | .. | 40-46-49 |

SEASON.

# காலஸ்திதி

RAINFALL.

**மழை.**—1910ஹு ஏப்ரல்மீ 1-உயிலிருந்து, நாளதுஹுமார்ச்சுமீ 31-உ வரையில் பெய்த மழை அளவும், இந்தக்காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், செண்டு களாக குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 60·40 | 46·90 |
| வால்டேர் | 54·52 | 43·53 |
| காக்கிநாடா | 38·79 | 38·82 |
| மசூலிப்பட்டணம் | 48·48 | 40·90 |
| நெல்லூர் | 32·34 | 30·73 |
| மதராஸ் | 44·27 | 50·39 |
| கூடலூர் | 43·00 | 52·58 |
| நாகப்பட்டணம் | 46·86 | 55·55 |
| பாம்பன் | 25·09 | 38·96 |
| கொழும்பு | 64·65 | 89·44 |
| திருவநந்தபுரம் | 72·83 | 62·65 |
| கொச்சி | 120·79 | 113·46 |
| கள்ளிக்கோட்டை | 106·65 | 115·57 |
| மங்களூர் | 117·78 | 123·93 |
| மெர்க்காரா | 125·99 | 125·93 |
| ஐதராபாத் | 27·63 | 31·55 |
| ரெய்ச்சூர் | 54·52 | 43·69 |
| பல்லாரி | 25·70 | 19·73 |
| கர்நூல் | 28·42 | 28·39 |
| கடப்பை | 46·23 | 32·69 |
| ஹாஸ்ஸான் | 37·43 | 35·04 |
| பெங்களூர் | 48·17 | 35·04 |
| கொடைக்கானல் | 69·25 | 59·38 |
| உதகமண்டலம் | 62·64 | .. |
| கோயம்புத்தூர் | 23·38 | 20·88 |
| வேலூர் | 61·73 | .. |
| சேலம் | 43·54 | 40·51 |
| திருச்சிநாப்பள்ளி | 38·31 | 32·53 |
| புதுக்கோட்டை | 37·85 | .. |
| மதுரை | 39·29 | 33·28 |
| திருநெல்வேலி | 21·23 | 28·69 |



**RAMNAGAR FORT.**
ராம் நகரக்கோட்டை.



Photo by Bourne & Shepherd, Calcutta.

**BURNING GHAT, BENARES.**
காசி சுடுகாடு.

SUPPLEMENT TO "PRACTICAL LIFE"

"பிழைக்கும் வழி"க்கு அனுபந்தம்.



The "Hindi Punch."

THE MINTO MEMORIAL PILLAR & PARK

லார்டு மின்டோ ஞாபகச்சின்ன ஸ்தம்பமும் பார்க்கும்.



ASOKA PILLAR (Fort, Allahabad).

அசோகா ஸ்தம்பம்.


# பிழைக்கும் வழி

# PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ, பத்திராதிபர். | G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருது௵ சித்திரை௴—APRIL 1911. | ஸஞ்சிகை 4. No. 4.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | 5 0 0 | per month. |
| ½ do | 2 8 0 | do |
| ¼ do | 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | அந்நிய நாடு. |
|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 0 0 | 6 0 0 |
| தனிப்பிரதி .. | 0 6 0 | 0 8 0 |
| மாதிரி காபி .. | 0 2 0 | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெரு, மதராஸ்.


27 SEP 1911 MADRAS

பிழைக்கும் வழி.
PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஸு சித்திரைமீ—APRIL 1911. | ஸஞ்சிகை 4. No. 4.

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| **பத்திராதிபர் குறிப்புகள்** | |
| பாங்கிக்காரர்களைப் பற்றி மசோதா—பையாஸ்கோப் விநோதங்கள்—மணிலாக்கொட்டைப் பயிர்—சில நற்போதனைகள்—கிராமக்கிணறுகள்—எள்ளுப் பயிர்—எலிகளும் நெல் பயிர்களும்—பொறுக்கி எடுத்த கடலை விதைகள்—தொழில் படிப்பு .. .. | 171–176 |
| **விசேஷ வியாஸங்கள்** | |
| தென்னிந்தியாவின் மண்கள் —பு. து. ரத்தினம் பிள்ளை .. | 177 |
| குற்றங்களைக் குறைக்கும் வழி —கே. எஸ். சுப்பிரமணியன் .. | 181 |
| பூச்சிகளும் செடிகளும் —எஸ். பஞ்சாபகேச சர்மா .. | 184 |
| நம்முடைய பிரயாணியின் டையிரி | 187 |
| கவனத்தைக் கவருவது —வி. குப்புஸாமி அய்யர் .. | 190 |
| வௌவால் புழுக்கையும் அதன் உபயோகமும் .. .. .. | 192 |
| **விசேஷத்திரட்டு** | |
| தோல் ஷாப்புக்காரருக்கு அறிவிப்பு | 193 |
| விசேஷ பால் கறக்கும் பசுக்கள் .. | 195 |
| சில திருத்தங்கள் .. .. | 197 |
| சாக பக்ஷணம் .. .. | 199 |
| **பத்திரிகை ஆராய்ச்சி** | |
| இந்தியாவின் க்ஷேமம் .. | 201 |
| காப்புவரி .. .. | 201 |
| கரிகாற் சோழன் .. .. | 202 |
| பத்தொன்பதாம் நூற்றூண்டின் மகிமைகள் | 203 |
| **புஸ்தக ஆராய்ச்சி** .. .. | 204 |
| **சிறுவர் பகுதி** .. .. .. | 205–206 |
| **ஸ்திரீகள் பகுதி** .. .. | 207–208 |
| **பகுதிக் குறிப்புகள்** | |
| விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. | 209–218 |
| **மாஸ வர்த்தமானம்** .. .. | 219–221 |
| **மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. | 222–224 |


## CONTENTS.


| | PAGE. |
|---|---|
| **Editorial Notes** | |
| A BANKER'S BILL-BIOSCOPE ENTERTAINMENTS-GROUNDNUT CROP-SOME VALUABLE HINTS VILLAGE WELLS-GINGELY CROP-RATS AND RICE CROP-SELECTED GROUNDNUT SEEDS-INDUSTRIAL EDUCATION ... ... | 171-176 |
| **Special Articles** | |
| THE SOILS OF SOUTHERN INDIA P. D. Ratnam Pillai ... ... ... | 177 |
| METHODS OF LESSENING CRIME K. S. Subramanian ... ... ... | 181 |
| INSECTS AND PLANTS S. Panchapagesa Sarma, B.A. .. ... | 184 |
| OUR TRAVELLER'S DIARY ... ... ... | 187 |
| SECURING ATTENTION V. Kuppusami Aiyar ... ... ... | 190 |
| BAT GUANO AND ITS USES ... ... ... | 192 |
| **Selections** | |
| WARNING TO TANNERS ... ... ... | 193 |
| CHAMPION MILCH COWS ... ... ... | 195 |
| SOME REFORMS ... ... ... ... | 197 |
| VEGETARIANISM ... ..... ... ... | 199 |
| **Review of the Press** | |
| The Prosperity of India ... ... ... | 201 |
| Protective Tariff ... ... ... ... | 201 |
| Karikar Chola ... ... ... ... | 202 |
| The Glories of the 19th Century ... ... | 203 |
| **Reviews of Books** ... ... ... ... | 204 |
| **The Boys' Section** ... ... ... | 205-206 |
| **The Ladies' Section** ... ... ... | 207-208 |
| **Departmental Notes** | |
| Agricultural Notes ... ... ... ... | 209 |
| Industrial Notes ... ... ... ... | 211 |
| Educational Notes ... ... ... ... | 212 |
| Scientific Notes ... ... ... ... | 213 |
| Medical Notes ... ... ... ... | 214 |
| Legal Notes ... ... ... ... | 215 |
| Personal Notes ... ... ... ... | 216 |
| Fun and Anecdote ... ... ... ... | 217 |
| Curiosities ... ... ... ... | 218 |
| **News of the Month** ... .. ... | 219-221 |
| **Madras Market Reports** ... ... | 222-224 |




# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### A Banker's Bill.

பாங்கிக்காரர்களைப் பற்றிமசோதா.—1882-ம் வருஷத்து இந்தியன் கம்பெனீஸ் ஆக்ட்டுப் படி அநேகம் கம்பெனிகள் ஏற்பட்டு இந்தியாவில் பாங்கித் தொழில், அதாவது லேவாதேவி செய்து வருகின்றன. இவைகளெல்லாம் குறைந்தது வருஷத்துக்கு ஒரு முறையாவது வரவு செலவு என்ன, லாபம் என்ன, முதல் எவ்வளவு, கொடுக்க வேண்டிய தெவ்வளவு, கையில் ஐவேஜி என்ன, என்று கணக்குக் கூட்டிப் பிரசுரம் செய்யவேண்டும். இந்தக் கணக்கைப் பார்த்துக் கொண்டு அவரவர்கள் இஷ்டம்போல் பாங்கில் பணம் டிபாஸிட் செய்வதோ, பணம் வாங்குவதோ, செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட பாங்கிகளில் விசேஷமாய் மோசஞ்செய்ய இடமில்லை.

மேலே சொல்லியபடி கம்பெனி ஆக்ட்டின் படி லேவாதேவி செய்யாமல் அநேகம்பேர்கள் தனிமையாகவே லேவாதேவி செய்து வருகிறார்கள். இதற்கு உதாரணமாக, அர்பத்நட் கம்பெனியைச் சொல்லலாம். இவர்கள் இன்னாருக்கு இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று ஒருவருக்கும் தெரியாமல் வந்த பணங்களை யெல்லாம் டிபாஸிட்டு வாங்கிப் போட்டுக் கொண்டு, கடைசியில் டிபாஸிட்டர் தலையில் கையை வைத்து ஏமாற்றிவிட்டார்கள். இவர்களைப் போலவே ஸமீபத்தில் இங்கிலாந்தில் கார்பென்டர் என்னும் ஒருவன் சேரிங் க்ராஸ் பாங்கி என்பதாக ஒரு பாங்கியை ஏற்படுத்தி, அதை எவ்வளவோ பணம் செலவழித்துப் பிரபலப்படுத்தினான். அதனால் அநேகம்பேர்கள் அந்த பாங்கியில் தங்களுடைய பணத்தை டிபாஸிட்டு செய்தார்கள். கடைசியாய் கார்பென்டர் கையை விரித்து விட்டான். அதனால் அநேகம்பேர்கள் ஒட்டை ஆண்டிகளாகப் போனார்கள். இனி மேலாவது, இப்படி மோசம் ஏற்படாதபடி இங்கிலாந்தில் ஒரு சட்டம் செய்யப் போகிறார்கள். எவராவது கம்பெனி ஆக்ட்டின் பிரகாரமல்லாமல் வேறுவிதமாக பாங்கித் தொழில் செய்ய ஏற்படும் பட்சத்தில், அப்படிச் செய்யும் ஒவ்வொருவனும் தன்னுடைய பேர், ஊர், விலாஸம் முதலியவைகளை ஸர்க்காரில் பதிந்து வைக்கவேண்டும். தவிர, மூன்று லக்ஷ ரூபாயும் ஸர்க்காரில் டிபாஸிட்டு செய்ய வேணும். வருஷா வருஷம் டிசம்பர் மாஸம் 31-ம் தேதி முடியக் கணக்குக் கூட்டி வரவு இவ்வளவு, செலவு இவ்வளவு, லாபம் இவ்வளவு, பிறருக்குக் கொடுக்கவேண்டியது இவ்வளவு, இதற்கு ஐவேஜி இவ்வளவு இருக்கிறதென்று ஒரு பாலன்ஸ் ஷீட்டு தயாரிக்க வேண்டும். இந்தக் கணக்குகளை ஐந்து வருஷத்துக்கு ஒரு முறை தகுந்த ஆடிடர்களைக் கொண்டு பரிசோதிப்பார்கள். கணக்குகளுக்கு நகல் ஒன்று முக்கால் ரூபாய்க்கு மேல் சார்ஜ் செய்யாமல் அந்த பாங்கியோடு லேவாதேவி செய்கிறவர்கள் கேட்டால் கட்டாயம் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் செய்யும் வரைக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் அபராதம் போடப்படும். தப்புக் கணக்குத் தயாரித்ததாகவாவது, அல்லது தப்புக் கணக்கைக் கேட்பவர்களுக்குக் கொடுத்ததாகவாவது ஏற்பட்டால், ரூ. 1500 வரையில் அபராதம் போடப்படும். அல்லது 3-வருஷங்களுக்கு மேல்படாமல் ஜெயிலில் போடப்படுவார்கள்.

இந்தியாவிலும் அநேகம் வர்த்தகர்களும், நாட்டுக்கோட்டைச் செட்டிகளும் பொது ஜனங்களிடத்திலிருந்து உயர்ந்த

வட்டி கொடுப்பதாக டிபாஸிட்டு வாங்கிக்கொண்டு வருகிறார்கள். இப்படிச் செய்துவந்த சில கும்பகோணத்து வர்த்தகர்களும் செட்டிகளும் கையை விரித்து விட்டு, கடையை மூடிவிட்டு, புதுச்சேரி போய்ச் சேர்ந்துவிட்டார்கள். இப்படி மோசம் ஏற்படாமலிருக்கும் பொருட்டு இந்தியாவிலும் மேலே சொல்லியதுபோல் ஒரு சட்டம் செய்தால் நலமாயிருக்கும்.

## Bioscope Entertainments.

பையாஸ்கோப் விநோதங்கள்.—ஸினமட்டக்ராப் என்றும், பையாஸ்கோப் என்றும் இப்பொழுது அநேக நூதனக் கருவிகள் ஏற்பட்டு உலகத்தில் என்னென்ன விநோதங்கள், வேடிக்கைகள், நடக்கின்றனவோ அவைகளை அப்படியே நம்முடைய கண் முன்னேயே நடப்பவைபோல் காண்பித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட காட்சிகளை யெல்லாம் அநேக சிறுவர்களும் சிறுமிகளும் போய்ப்பார்த்து வருகிறார்கள். வேடிக்கைக் காட்சிகள் படியும் திரையின் கிட்டக்கவே குழந்தைகள் போய் உட்காருகின்றன. திரையில் விழும் படங்கள் முழுமையும் எப்பொழுதும் அசைந்து கொண்டே இருப்பதால் குழைந்தைகளின் கண்கள் அந்த அசைவைத் தாங்கமுடியாமல் அநேகம் குழைந்தைகளுக்குக் கண் சிவந்து மயக்கம் வந்து கடைசியில் கண்ணே போய் விடுகிறதாம். ஆகையால், பையாஸ்கோப் முதலிய வேடிக்கைகளைப் பார்க்கப் போகும் போது குழந்தைகளை முன்பக்கத்தில் உட்காரவைக்காமல் நாற்பது அல்லது ஐம்பதடிக்குப் பின்னே உட்காரவைத்து வேடிக்கையைக் காண்பிக்கவேண்டும். பெரியவர்களுடைய் கண்கள் முற்றியிருப்பதால், அவர்கள் முன்னால் உட்காருவதால் அவர்களுக்கு அவ்வளவு கெடுதி நேரிடாதாம்.

## Groundnut Crop.

மணிலாக் கோட்டைப் பயிர்.—1908-1909-ம் ௵த்தோடு முடிந்த ஐந்து வருஷங்களின் ஸராஸரியைப் பார்த்தால் ஆங்கிலேய இந்தியா முழுவதும் 100 ஏக்கர் மணிலாக் கொட்டை ஸாகுபடி யாயிருந்தால், அதில் 63.3 ஏக்கர் சென்னை ராஜதானியிலிருக்கிறது. ரயத்வாரி கிராமங்களில் 1911 ௵ ஜனவரி ௴ முடிய ஸாகுபடி செய்த விஸ்தீரணம் 6,88,300 ஏக்கராக்கள். இந்த விஸ்தீரணமானது போன வருஷம் இதே காலத்தில் ஸாகுபடி செய்த நிலத்தைவிட 5,300 ஏக்கராக் குறைச்சல். ஆனால் 5 வருஷத்தின் ஸாராஸரிக் கணக்குக்கு, 100 க்கு 13 பங்கும், 10 வருஷத்தின் ஸராஸரிக்கு 100 க்கு 31 பங்கும் ஜாஸ்தியாய் இப்போது சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. போன வருஷத்தைவிட இந்த வருஷத்தில், தென்னாற்காடு, மதுரை, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் ஜாஸ்தி ஸாகுபடியும், செங்கல்பட்டு, வடஆர்காடு ஜில்லாக்களில் குறைச்சல் ஸாகுபடியும் ஆகியிருக்கிறது. ஸாதாரண விளைச்சலுக்கு 100 க்கு, 72 வீதம் ஆகும். நவம்பர், டிஸம்பர் ஜனவரி ௴ங்களில் அறுவடையான மாசூல் சுமாரா யிருந்ததாகத் தெரிய வருகிறது. மொத்தத்தில் 2,47,800 டன் கொட்டை காணலாம். ரயத்வாரி அல்லாத கிராமங்களில் ஸாகுபடி செய்த நிலத்தின் பரப்பு 16,700 ஏக்கரா. இந்தப் பரப்பில் 6,430 டன் காணலாம்.

## Some Valuable Hints.

சில நற்போதனைகள்.—கடும் ஜலதோஷமாயிருந்தால், அகப்படும் போர்வைகளை எல்லாம் எடுத்துப் போர்த்திக்கொண்டு, தேகத்தை உஷ்ணப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஜுரமடிக்கும்பொழுது பச்சைத் தீர்த்தத்தை தாராளமாய் உபயோகப் படுத்தலாம்.



சுளுக்குகள் ஏற்பட்டால், நல்ல கொதிக்கிற வெந்நீரைக்கொண்டு ஒத்தடம் கொடுக்க வேணும்.

ஒரு நாய் நம்மைக் கடித்துவிட்டால், அதைக் கொல்லாமல், கட்டிவைத்து, அது நல்ல நாயா, அல்லது பைத்தியம் பிடித்த நாயா, என்பதை அறியவேண்டும்.

காயம் பட்டு ரத்தம் வெளிப்பட்டால், காயம் பட்ட இடத்தை நன்றாய் அழுத்திக்கொண்டிருந்தால், ரத்தம் வருவது நின்றுவிடும்.

விரல், மூக்கு, காது முதலிய உறுப்புகள் துண்டிக்கப்பட்டுப்போனால், உடனே அதை அலம்பி, அதினுடைய எதா ஸ்தானத்தில் சேர்க்கவேண்டும்.

எரிகிற வீட்டிற்குள் புகும்பொழுது வீட்டில் குளிர்ச்சியானதும், சுத்தமானதுமான பாகம் தரை யென்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு தரையில் படுத்துக்கொண்டு நகரவேண்டும்.

கடினமான ஒரு பதார்த்தத்தை விழுங்கிவிட்டால், உடனே பேதிக்கு சாப்பிடக் கூடாது.

ஸன் ஸ்ட்ரோக் என்று சொல்லப்படும் சூரிய இடிக்கும், சூட்டினால் உண்டாகும் களைப்பிற்கும் வித்யாஸம் உண்டு. சூரிய இடிக்கு உடனே உஷ்ணத்தைத் தணியச் செய்யவேண்டும். களைப்பிற்கு புஷ்டியான ஆகாரம் ஸன்னம் ஸன்னமாய்க் கொடுத்துத் தேற்ற வேண்டியது.

காக்கை வலிப்பு வரும்பொழுது தலை அடிபடாமலும், நாக்குக்கடிபடாமலும் ஜாக்கிரதையாய்க் கவனித்துக்கொள்ள வேண்டியதைத் தவிர வேறு ஒன்றும் செய்யவேண்டாம்.

விஷபதார்த்தங்கள் உட் சென்று விட்டால், வெந்நீர், சுட்டுக்கொண்டிருக்கும் பால் அல்லது டீ, முட்டைகளிலிருக்கும் வெள்ளை இவைகளை, வாந்தி ஆரம்பிக்கும் வரைக்கும் கொடுக்க வேண்டியது.

## Village Wells.

கிராமக் கிணறுகள்.—அநேக கிராமங்களில், எல்லாக் கிணறுகளும், குடிக்கத் தகுந்த ஜலமுள்ளவைகளா யிருக்கமாட்டா. வெகு கிணறுகளின் ஜலம் வாயில் விட்டால் உப்புக் கரிக்கும். ஆனால், ஒவ்வொரு கிராமத்திலும் ஏதாவது ஒரு கிணறு குடிப்பதற்கு நல்ல ஜலமுள்ளதா யிருக்கும். ஊரில் உள்ளவர்கள் எல்லாரும், இந்தக் கிணற்றிலிருந்தே ஜலத்தை எடுத்துக்கொண்டுபோய் சமையல் செய்வது, குடிப்பது முதலிய உபயோகங்களுக்கு வைத்துக் கொள்ளுவார்கள். இப்படிப்பட்ட கிணற்றின் ஜலம் தெளிவாயும், வாய்க்கு ருசியாயும் இருப்பதைக்கொண்டு அது நல்ல ஜலம் என்று ஜனங்கள் எண்ணுகிறார்கள். ஆனால் ஜலம் தெளிவாயும் வாய்க்கு ருசியாயு மிருப்பதை மட்டும் கொண்டு அது சுத்தமானதென்று சொல்லக்கூடாது. ஒரு கிணற்றின் ஜலம், சுத்தமாயிருப்பதும், இல்லாததும், அந்தக் கிணற்றைச் சுற்றியிருக்கும் நிலத்தையும் நறுவிசையும் பொறுத்தது. கிணறு இருக்கும் நிலம் பொல பொலப்பாய்த் தண்ணீரை உறிஞ்சும்படியாயிருக்கும் பக்ஷத்தில், பக்கத்துச் சாக்கடை முதலிய அசுத்தங்கள் கிணற்று ஜலத்தோடு கலக்கக்கூடும். கிணறு இருக்குமிடம், களியாயிருக்கும் பக்ஷத்தில், விட்ட ஜலம் பூமியில் லகுவா யிறங்காததலால், மேற் சொன்னதுபோல் சாக்கடை முதலிய அசுத்தங்கள், கிணற்று ஜலத்தில் கலக்க ஹேது விராது. ஒரு கிணற்று ஜலம் சுத்தமாயிருக்க வேண்டுமானால், அதன் ஆழம் எவ்வளவோ, அதைப்போல் நாலுபங்கு குறுக்களவு நிலம் கிணற்றைச் சுற்றிலும் சுத்தமாயிருக்கவேண்டும். அதாவது, கிணறு

அடி ஆழமிருந்தால் அதைச் சுற்றிலும் 40 அடி தூரத்துக்குள்பட்ட நில முழுவதும் சுத்தமாக இருக்கவேண்டும். இந்தச் சுற்று நிலத்தில் ஸ்நானம் செய்யக்கூடாது. மல ஜல பாதைகளுக்குப் போகக்கூடாது. மாடு கன்றுகளைக் கட்டக்கூடாது. பயிர் ஏதாவது அந்த நிலத்தில் செய்வதாயிருந்தால், அதற்கு எரு முதலியவைகள் போடவும் கூடாது.

இருபது அடி ஆழக்கிணற்றுக்குச் சுற்றிலும் நாற்பதடி நிலம் சுத்தமாயிருக்க வேண்டுமென்று மேலே சொன்னோம். இது குறைந்த பக்ஷம். கிணற்றைச் சுற்றிலும் உள்ள நிலம் பொல பொலப்பாயிருக்கும் பக்ஷத்தில், நாற்பதடிக்கு மேலுள்ள இடங்களிலிருந்துங் கூட, நிலத்தின் கீழ் வழியாய் ஜலம் கசிந்து வந்து கிணற்று ஜலத்தோடு கலந்து அதை அசுத்தம் செய்து விடலாம். ஆகையால், கிணற்றைச் சுற்றிலும் நிலம் எவ்வளவு தூரம் சுத்தமாயிருக்க வேண்டியதென்பது, அதைச் சுற்றிலுமுள்ள நிலத்தின் தன்மையையும் பொறுத்திருக்கிறது.

இன்னொரு விஷயம். எப்பொழுதும் ஆழமில்லாத கிணற்றின் ஜலம் கொஞ்சம் அசுத்தமுடையதென்றே சந்தேகிக்கலாம். கிணறு ஆழமாயிருந்தாலோ, சுற்றுப்பக்கத்து நிலம் பொல பொலப்பாயிருந்து, அசுத்த ஜலம் மேலே விழுந்தாலும், அது கீழே வெகு ஆழத்தில் இறங்கவேண்டியிருப்பதால், இறங்க இறங்க வடிக்கட்டப்பட்டு, கிணற்றின் தரை மட்டத்தில் சுத்தமாகவே வந்து இறங்கும். ஆகையால், ஆழமில்லாத கிணற்றின் ஜலத்தை உபயோகிப்பதைவிட நல்ல ஆழமுள்ள கிணற்று ஜலத்தை உபயோகிப்பதே நலம்.

**Gingely Crop.**

எள்ளுப் பயிர்.— ரயத்வாரி கிராமங்களில் போன வருஷத்தில் 669,300 ஏக்கரில் எள்ளு சாகுபடியாயிற்று. இந்த வருஷத்திலோ என்றால், 512,500 தான் சாகுபடியாகி இருக்கிறது. அதாவது, 100 க்கு 23 ஏக்கர் கம்மிப்பட்டிருக்கிறது. இப்படிக் குறைந்ததற்கு, காலா காலத்தில் மழை பெய்யாததும், வேறு லாபந் தரக்கூடிய பயிர்கள் போட்டதுமே காரணங்களாகும். பயிர் அநேகமாய் நன்றாயிருக்கிறதாம். ஆனால் சில இடங்களில் மட்டும் அதிக மழையால் சேதப்பட்டிருக்கிறதாம். போன வருஷத்தில் கண்ட மொத்த மாசூல் 55,100 டன். இந்த வருஷத்தில் 43,400 டன் தான் காணுமாம். ரயத்வாரி அல்லாத கிராமங்களில் போன வருஷத்தைப் போலவே ஏறக்குறைய 50,100 ஏக்கர் சாகுபடியாகி இருக்கிறதாகவும், அதில் 4,600 டன் எள்ளு கிடைக்குமென்றும் தெரிகிறது.

**Rats and Rice Crops.**

எலிகளும் நெல் பயிர்களும்.— சென்ற சம்பா அறுப்பில் தஞ்சாவூர் ஜில்லா பாபநாசம் தாலுகா தியாகசமுத்திரம் கிராமத்தில் அநேகம் வயல்களில் நெல் பயிர் நன்றாய் வளர்ந்து, எல்லாரும் நன்றாய் விளைவு கிடைத்துவிட்டதென்று எண்ணிக்கொண்டிருக்க, கடைசியில் அறுவடை காலத்தில் பயிர்களை எலிகள் வெட்டி அநேக மிராசுதார்களுக்குப் போன வருஷத்தில் கிடைத்த மாசூலுக்கு அரைத் திட்டமும், முக்கால் திட்டமுந்தான் நெல் கண்டது. வயல்களில் தண்ணீர் இருப்பதால், வரப்புகளிலுள்ள எலிகளைப் பிடிக்க முடிவதில்லை. தண்ணீர் வடிந்ததும் எலி வளைகளை வெட்டிப் பார்த்ததில் அநேக வளைகளில் 6 மரக்கால் வரைக்கும் நெல் இருந்ததாகத் தெரிகிறது. இந்த எலிகளைத் தொலைக்க ஏதாவது வழியுண்டா? அநுபோகமுள்ள நிலக்காரர்கள் பதில் எழுதுவார்களென்று நம்புகிறோம்.



**Selected Ground Nut Seeds.**

பொறுக்கி எடுத்த கடலை விதைகள்.—விதைகளைப் பொறுக்கி எடுத்து விதைப்பதால் நல்ல பலனுண்டு என்று தெரிந்தும், நம்முடைய தேசத்து விவஸாயிகள் அதற்கு வேண்டிய சிரத்தையை எடுத்துக் கொள்ளுவதில்லை. ஒவ்வொரு விவஸாயியும் தனக்கு வேண்டிய விதையைத் தானே சேகரித்துக் கொள்ளுகிறான். ஆகையால், ஒரு வயலில் எடுத்த விதையே மறு வருஷத்தில் அதே வயலுக்கு வேண்டிய நாற்றை உண்டுபண்ண உபயோகிக்கப்படுகிறது. அதனால், அந்த வயலில் உண்டாகும் மாசூல் குறைவதற்கும், நோய் நொடிகளுக்கு உள்ளாவதற்கும் ஹேதுவாகிறது. விதையை அடிக்கடி மாற்றுவது நல்லது. மாற்று விதை தூரமான இடங்களிலிருந்து வந்தால் மிகவும் நல்லது. அப்படி இல்லாத பக்ஷத்தில், ஒரு வயலிலெடுத்த விதையை அதே வயலுக்கு உபயோகப்படுத்தாமல் வேறொரு வயலுக்கு உபயோகப்படுத்துவது நலம்.

இப்படிச் செய்வதோடு வருஷா வருஷம் பொறுக்கி எடுத்த விதையையே உபயோகிக்க வேண்டும். ஒரு வருஷத்தில் பொறுக்கி எடுத்த விதையைக் கொண்டு பயிர் செய்து அதனால் உண்டாகும் மாசூலிலிருந்து மறு தடவை விதை பொறுக்கி, இப்படி இரண்டாந் தடவை பொறுக்கி எடுத்த விதையைக் கொண்டு பயிர் செய்து அதனால் உண்டாகும் மாசூலிலிருந்து மூன்றாவது தடவை விதை பொறுக்கி, இப்படி வருஷா வருஷம் பொறுக்கி எடுத்த விதையைக் கொண்டு பயிர் செய்தால், சில வருஷங்களுக்குள் பயிர், நோய் நொடிகளைத் தாங்கும்படியாயும், அதிக மாசூலைக் கொடுக்கும்படியாயும் ஆகிவிடும். இவ்விதமாக நெல் விதையைப் பொறுக்கி ஒற்றை நாற்றாக நட்டால், பயிரின் தூருகட்டும் குணம் அதிகரித்து நல்ல மாசூலும் கிடைக்குமென்று "பிழைக்கும் வழி" யின் முன் ஸஞ்சிகைகளில் சொல்லியிருக்கிறோம்.

இப்படி ஹவாயித் தீவிலுள்ள விவஸாய அதிகாரிகள் மணிலாக் கொட்டையைப் பொறுக்கி விதைத்து அதனால் நல்ல மாசூல் கிடைத்ததாகச் சொல்லுகிறார்கள். முதலில் ஸ்பெயின் தேசத்திலிருந்து விதை வரவழைத்தார்கள். அதில் ஒரு ராத்தலுக்கு 759 காய்கள் இருந்தன. மேலே சொல்லியபடி வருஷா வருஷம் மூன்று வருஷத்துக்கு விதையைப் பொறுக்கிப் பயிர் செய்து பார்த்ததில் ராத்தல் ஒன்றுக்கு 444 காய்கள்தான் இருந்தன.

இதே மாதிரியாக 'ரன்னிங் ஜம்போர்' என்னும் ஒரு தினுஸு முதலில் ராத்தலுக்கு 345 காய்கள் இருந்தன. விதைபொறுக்கி நட்டதில் மூன்று வருஷங் கழித்து ராத்தலுக்கு 232 காய்கள்தான் இருந்தன. 'பஞ்சு (கோத்து) ஜம்போ' என்னும் ஒரு தினுஸு முதலில் ராத்தலுக்கு 352 காய்கள் இருந்தன. மூன்று வருஷத்துக் கப்புறம் 226 காய்கள் இருந்தன. 'வர்ஜீனியா க்ரீபிங்' என்னும் இன்னொரு தினுஸு முதலில் ராத்தலுக்கு 325 காய்கள் இருந்து மூன்று வருஷம் விதை பொறுக்கி நட்டதில் 245 காய்கள்தான் இருந்தன. மேலே சொல்லியவைகளால் ஒவ்வொரு தினுஸு மணிலாக்கொட்டையிலும் முதலில் ஒரு ராத்தலுக்கு எத்தனை காய்கள் இருந்தனவோ அவைகளைவிட, மூன்று வருஷம் விதையைப் பொறுக்கிப் பொறுக்கிப் பயிர் செய்ததால் காய்கள் குறைந்தன. இதனால் என்ன ஏற்படுகிறது? விதையைப் பொறுக்கி நட்டால் ஒவ்வொரு காயின் எடையும் அதிகமாயிற்று. எடை அதிகமா

யிற்றென்றால், காயின் பருமன் அதிகமானதாக எண்ணக்கூடாது. காய் பருக்கவில்லை. அதன் உள்ளேயுள்ள பருப்புப் பருத்து காயின் ஓட்டுக்கு உள்ளே யிருக்கும் இடம் முழுமையும் அடைத்துக்கொண்டு கனமுள்ளதாயிற்று. விவஸாயிகள் மணிலாக்கொட்டை விதை பொறுக்கும்போது காய் பெரிதாயிருப்பதைப் பார்த்து ஏமாந்துபோகக் கூடாது. அவைகளில் நன்றாய் முதிராத பருப்பிருந்து விதைக்குப் பிரயோஜனப்படாது. ஆகையால், விதை பொறுக்குவதில் காய் பெரிதாயில்லாமல் போனாலும், உள்ளே இருக்கும் பருப்பு காய்க்குள் இடைவெளி இல்லாமல் பருத்ததாயும், முற்றினதாயும், பளுவாயுமுள்ள காயே சிறந்தது.

மேலே சொல்லியபடி பொறுக்கிப் பயிர் செய்த செடிகளில் காய்த்த காய்களின் ஸராஸரி எண்ணிக்கை பின்வருமாறு:— ஸ்பெயின் தேசத்துச் செடியின் காய், 145; 'பஞ்ச் ஜம்போ' வின் காய், 184; 'ரன்னிங் ஜம்போ' வின் காய், 208; 'வர்ஜினியா க்ரீபிங்'கின் காய், 219. 'வர்ஜினியா க்ரீபிங்'கின் சிலசெடிகளில் 250 காயும் அதற்கு மேலும் காய்த்தன.

**Industrial Education.**

தொழில் படிப்பு.—சென்ற பிப்ரவரி மாஸம் 28-ம் தேதி யன்று லண்டன் பட்டினத்தில் நாஷனல் அதாவது, தேசத்துத் தொழில் படிப்புச் சங்கம் என்று ஒரு ஸபை ஏற்படுத்த ஒரு பெரிய மீட்டிங் நடந்தது. அதற்கு 30 லக்ஷம் தொழிலாளிகளுள்ள 420 பட்டினங்களில் 365 தொழில் வகுப்பார்களின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். ஜார்ஜ சக்ரவர்த்தியும் அவருடைய மந்திரியும் கடிதம் அனுப்பி, அந்த மீட்டிங்கின் நோக்கத்தில் அனுதாபமுள்ளவர்களாய் எழுதியிருந்தார்கள்.

இங்கிலாந்தானது கைத்தொழில் பெருத்த தேசமானதால், அதன் க்ஷேமம் அதிலுள்ள தொழிலாளிகளின் திறமையையும், சாமர்த்தியத்தையும், அவர்களுடைய குடித்தன நேர்மையையும் பொறுத்திருக்கிறது. இப்படியிருக்க, வெகு பையன்களும், பெண்களும் ஸ்கூலை விட்டதும், பையன்களுக்குப் பிழைக்கும் வழி தெரியாமலும், பெண்களுக்குக் குடித்தனப் பாங்கு தெரியாமலும் இருப்பது ரொம்பவும் கவனிக்கத்தக்க விஷயமாக இருக்கிறது. ஆகையால், தேசத்திலுள்ள பள்ளிக்கூடங்களிலெல்லாம் பையன்களுக்கு கைத்தொழிற் பயிற்சியும், பெண்களுக்குக் குடித்தனம் பண்ணும் முறையும் கற்பிக்கப்படவேண்டும். இப்படிச் செய்வதற்கு ஸர்க்கார் பண உதவி செய்ய வேண்டும். பள்ளிக்கூடங்களை விட்டபிறகு 18 வயதுக்குட்பட்ட பையன்களும் பெண்களும் ராத்திரி ஸ்கூல்களில் சேர்ந்து அவரவர்களுடைய தொழிலைச் சேர்ந்த படிப்பைப் படிக்கும்படி ஏற்பாடாக வேண்டும். எஜமானர்கள் தங்களுக்குள் இருக்கும் சின்ன வேலைக்காரர்களை தாம் நடத்தும் தொழிலை ஒட்டிய விஷயங்களைக் கற்கும்படி தூண்டவேண்டும்-என்று இப்படிப் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

இந்தியாவில் நூற்றுக்கு 94 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. இவர்களுக்கு 'ஆனா,' 'ஆவன்னா' தெரியும்படியாய் உபாயப் படிப்பைக் கட்டாயமாய்ச் செய்யவேண்டுமென்று கனம் கோக்கலே, இப்பொழுதுதான் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். இது நிறைவேற இன்னும் எத்தனை காலம் பிடிக்குமோ தெரியாது இது நிற்க, இங்கிலாந்தில் ஸ்கூல் படிப்புப் போதாது, தொழில் படிப்பும் அவசியமாய் வேணுமென்று மன்றாட ஆரம்பித்து விட்டார்கள். நாம் ஒரு அடி முன்னுக்கு நகர்ந்தால், இங்கிலீஷ்க்காரர்கள் மூன்றடி முன்னுக்குப் போய்விடுவார்கள். ஆகவே எப்பொழுதும் அவர்கள் முன்னே போகநாம் பின்னே தான் செல்லவேண்டும் போலும்!



## THE SOILS OF SOUTHERN INDIA.

BY

P. T. RATNAM PILLAI.

## தென்னிந்தியாவின் மண்கள்.

நமது இந்தியாவிலே வஸிக்கும் முப்பது கோடி ஜனங்களுள் முக்கால் பங்குக்கு மேல் உள்ள ஜனங்கள் தங்கள் தங்கள் ஜீவனோபாயத்துக்கு விவசாயத்தையே நம்பி இருக்கிறார்கள். ஆனால் நல்ல மாசூல் இல்லாததினால் ஜனங்கள் ஜீவனோபாயத்திற்கு வழியின்றி துன்பப் படுகிறார்கள். ஒவ்வொரு இந்திய நண்பரும் அதின் அபிவிருத்தியை நாடியே நிற்கிறார்கள். நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் விவசாயக் கலாசாலைகள், பண்ணைகள் இவைகளை யேற்படுத்தி விருத்தியை நாடி முயற்சித்து வருகிறார்கள். ஜனங்களும் விவசாய முறைகளை நன்குணர்ந்து கையாடிக் கொண்டு வந்தால் சீக்கிரம் நமது நாடு முன்னுக்கு வந்து சுகமடையும் என்பது திண்ணம். என் சிற்றறிவுக்கு எட்டிய அளவு, தென்னிந்தியாவின் மண்களையும் அவைகளின் குணா குணங்களையும்பற்றி எழுதுகிறேன்.

இதன் மண்களை அடியிற்கண்டபடி ஒரு வாறு பிரிக்கலாம்.

(1) கரிசல் நிலம்.
(2) செம்மண் நிலம்.
(3) வெண்மண் நிலம்.
(4) வண்டல் நிலம்.
(5) சுக்கான் நிலம்.
(6) சதுப்பு நிலம்.
(7) அளர் நிலம்.

### (1.) கரிசல் நிலம்.

இது பெரிய ஆறுகளின் வண்டலால் ஏற்பட்டிருக்கிறது. ஆறுகளின் ஜலம் வண்டலோடு, இலை, சிறுகிளை, வேர், இவைகளையும் கலந்து அடித்துப் போவதனால் இந்நிலம் உண்டாகிறது. ஆற்றோரங்களிலுள்ள மரம் முதலியவைகளிலிருந்து விழும் இலை, சிறுகிளை, அடிவேர் இவைகள் ஆற்றோடு கலப்பதை எல்லாரும் அறிவார்கள். எங்கெந்த இடத்தில் பெரிய ஆறுகள் ஓடுகின்றனவோ அந்தந்த இடங்களிலெல்லாம் இந்நிலத்தைக் காணலாம். இந்த மாதிரியான கரிசல் நிலங்கள், பெண்ணையாறு, காவிரி, கடிலம், கோதாவரி, கிருஷ்ணா முதலிய நதிகள் ஓடுகிற இரு பக்கங்களில் அநேக இடங்களில் காணப்படும். இதற்குக் காரணம், வண்டல் சேற்றோடு பூ, காய், கனி, கிழங்கு, பூண்டு முதலியவைகள் கலந்து மக்குவதே. இந்த இடம் முழுவதும் கறுப்பு நிறமாகவே இருக்கும். ஸுமார் 10 அல்லது 12 அடி ஆழம் வரையில் இந்நிறமும் இப்படிப்பட்ட மண்ணும் காணப்படும். கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர், கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர், மதுரை, திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், தென்னாற்காடு, கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களிலும், மைஸூர் நாட்டிலும், ஹைதராபாத் நாட்டிலும் இந்நிலம் விசேஷமாய் இருக்கிறது. இந்த நிலத்துக்கு ஜலத்தை விரைவாய் கிரஹித்துக் கொள்ளும் குணமும் தாமதமாய் வெளியே விடும் குணமும் உண்டு. மழைகாலத்தில் இந்நிலம் ஜலக் கசிவுள்ளதாய் இருக்கும். கோடை காலத்தில் தாறுதாறாய் வெடிப்புக்கண்டுமிருக்கும். இதில் மூல திரவியங்கள் 100 க்கு 5 பாகம் முதல் 10 பாகம் வரைக்கும் இருப்பதாகத் தெரிகிறது. கரிசற்படைக்குக் கீழ் சுக்கான் படைகள் போலும் காணப்படுகின்றன. சில வெண்மையாயு மிருக்கின்றன. இந்நிலத்தை உழ பெரிய கலப்பை தேவை. ஆனால் சீமைக் கலப்பையைக்கொண்டு உழுதால் அதிக நன்மையுண்டு. லாபமும் அதிகம். சில இடங்களில் கரிசல் நிலம் பொடிப்பொடி

யாகவும் இருக்கும். இது, கடப்பை, கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களில் இருப்பதாக அறிகிறோம். இது வளப்பம் பொருந்தியது. இந்நிலத்திற்குச் சிறந்த உரம் சுண்ணாம்பு நீரே. இதில் பருத்தி, சோளம், கோதுமை, அவுரி, கடலை, கொட்டைமுத்து முதலியவைகள் பயிரிடப்படுகின்றன. ஆனால் பருத்திப் பயிரை கோடை காலத்தில் செய்வது நலம். ஏனெனில், ஈரத்தை கிரஹித்து வைத்துக் கொள்ளும் தன்மையிருப்பதினாலேதான்.

### (2) செம்மண் நிலம்.

இந்த நிலமும் நமது ராஜதானியில் கடப்பை, கர்நூல், பல்லாரி, அநந்தப்பூர், கிருஷ்ணா, கோதாவரி முதலிய இடங்களில் காணப்படுகிறது. இது சிவப்பு நிறமுள்ளது. இந்தச் சிகப்புக்குக் காரணம் இரும்பு இந்நிலத்துடன் சம்பந்தப்பட்டு மக்கி பஸ்மம் போலாவதே. இவ்வித நிறத்தை நாம் கத்தி, கரண்டி முதலிய ஸாமான்களை அதிக நாள் எடுத்து ஆளாவிட்டால் துருப்பிடித்து இருக்கும்போது காண்கிறோமல்லவா? இதுதான் நிலமும் சிவப்பு நிறம் அடைந்திருப்பதற்குக் காரணம். இந்நிலம் ஆற்றுவண்டல் படிந்து நாளடைவில் மேடாகியுமிருக்கலாம்; பாறைகளின் சிதைவினாலும் உண்டாயிருக்கலாம். கேவலம் புல் பூண்டுகள் முளைத்திராத அவ்வளவு பயனில்லாத நிலமாயுமிருக்கிறது. சில வளப்பமுள்ளவைகளாயும் இருக்கலாம். இதில் அயம் சம்பந்தப்பட்டிருப்பதினால் ஈரத்தை இழுத்துக்கொள்ளும் குணமுண்டு. சில நிலங்களில் புன்செய் தானியங்கள் நன்றாய் விளைகின்றன. ஜல வஸதி யிருந்தால் நெல்லும் பயிரிடலாம். சில விடங்களில் பருத்தி பயிரிடப்படுகிறது.

### (3) வெண்மண் நிலம்.

இந்தமாதிரியான நிலம் சமுத்திரக்கரையோரங்களில் விசேஷம். இந்த பூமி யெல்லாம் ஒன்றோடு ஒன்று ஒவ்வாது. அதாவது, தனித்தனியாய்ச் சேர்ந்து உள்ளதே. சமுத்திரமானது ஒரு இடத்தில் உள்ளே போயும் மற்றோர் இடத்தில் பூமிக்குள் வந்தும் இருக்கிறதை நாம் பார்க்கிறோமல்லவா? உதாரணமாக, காவிரிப்பூம்பட்டினம் மிக்க அழகுள்ள மாடமாளிகை, கூடகோபுரங்கள் உள்ளதாயிருந்ததென்றும், அதில் ஏழு சாயாவனங்களிருந்தனவென்றும், புராணங்களாலும், கேள்வியாலும் தெரியவருகிறது. இதில் இப்பொழுதிருப்பது ஒரு சாயாவனமே. பாக்கி யெல்லாம் கடல் கொண்டுபோய் விட்டது. இவ்விதமாக சமுத்திரத்து அலையினால் மண் கரையில் கொண்டுவந்து தாக்கப்பட்டு சேர்ந்து இந்நிலம் அமைந்திருக்கிறது. இந்நிலத்தை உழுவது அவ்வளவு கஷ்டம் இல்லை. நாட்டுக் கலப்பையைக் கொண்டே சுலபமாய் உழலாம். சீமைக் கலப்பையை உபயோகித்தால் மிக்க நலமே. இது மழை காலத்தில் தண்ணீரை இழுத்துக்கொள்ளுகிறது. வெயில் காலத்தில் மற்ற நிலங்களைப் பார்க்கிலும் அதிசீக்கிரத்தில் சூரிய வெப்பத்தால் தாக்கப்பட்டு மண் சூடு கண்டுவிடுகிறது. சித்திரை, வைகாசி மாதங்களில் காலை 9 மணிக்கு மேல் இந்நிலத்தில் நடப்பது கஷ்டசாத்தியம் இதற்கு எரு, தழை எருவும், ஆட்டு மாட்டெருவும், குளத்து வண்டலும், களிமண்ணுமே. இதில் உப்பு ஸம்பந்தமுள்ள இடத்தில் சவுக்கு பயிரிடப்படுகிறது. கடற்கரையோரத்தில் தென்னை பயிரிடப்படுகிறது. இலுப்பை, புன்னை, முந்திரி, மா முதலியவைகளும் பயிராகின்றன. சில பள்ளத்தாக்குகளிலும், மழைகாலத்தில் தண்ணீர் தங்கும் படியான நிலங்களிலும் குந்தாலி நெல் பயிரிடப்படுகிறது. உப்பு சம்பந்தமில்லாத இடங்களில், துவரை, காராமணி, எள்ளு, பச்சைப்பயறு, கம்பு, கேழ்வரகு, தினை, சோளம்,



மொச்சை, மஞ்சள், இஞ்சி, மிளகாய், கத்திரி, புகையிலை முதலியவைகள் பயிரிடப்படுகின்றன.

### (4) வண்டல் நிலம்.

இந்த நிலம் ஆறு, கால்வாய் முதலியவைகளிலுள்ள வண்டல் எக்கலடித்து நாளாவட்டத்தில் படிந்து சேர்ந்திருக்கப்பட்ட பூமி. இது நதிகளுள்ள இடங்களில் அதிகம். இது அதிக செழுமையுள்ளது. ஏனென்றால், அநேக மரம் செடி முதலிய வஸ்துக்கள் மக்கிப் போயிருப்பதினாலே. இதில் பயிரிடக்கூடாத பயிரே கிடையாது. எல்லாம் பயிரிடலாம். இதில் இரண்டு வகைகள் உள்ளன. அவையாவன:

(1) கருநிறமுள்ளது. (2) வெண்ணிறமுள்ளது. கருநிறமுள்ளது, நதி உற்பத்தி ஸ்தானத்திலும், சுற்றுப் பக்கங்களிலும் இருக்கும். இரண்டாவது சமுத்திரக் கரையோரத்திலிருக்கும்.

கருநிற வண்டல் நிலம்:—இது அதிக உரமானதல்ல. சீக்கிரத்தில் உழுதுவிடலாம். மாட்டுக்கும் அதிக கஷ்டமில்லை. அளவற்ற மூலதிரவியங்கள் மக்கியிருப்பதினால் கறுத்துக் காட்டுகிறது. எல்லாப்பயிரும் இதில் சாகுபடி செய்யலாம்.

வெண்ணிற வண்டல் நிலம்:—மேற்கூறிய வண்டல் நிலம் சமுத்திர வெண்மணலும் கலந்து வெளுத்துக்காட்டுகிறது. இதிலும் எல்லாப்பயிரும் சாகுபடி செய்யலாம். ஆனால் அதைப்போல் அவ்வளவு திறமுடையதல்ல.

### (5) சுக்கான் நிலம்.

இந்நிலம் புன்செயிலும் நன்செயிலும் இருக்கிறது. இது தோண்டத் தோண்ட கப்பிக் கல்லுகள் போல இருக்கும். கரிசல் நிலத்தோடு சம்பந்தப்பட்டிருந்தால் சிலாக்கியமே. இல்லாவிடில் இது அவ்வளவு பிரயோஜனமுள்ளதல்ல. நமது ராஜதானியில் மிக சொற்பமே.

### (6) சதுப்பு நிலம்.

இது பள்ளத்தாக்கு, ஓடை இவைகளிலுள்ள பூமி. இதில் அநேக செடிகள், புல் பூண்டு, வகையறாக்கள் மக்கியும் மக்காமலுமிருக்கும். மலை நாடுகளில் இதைப் பார்க்கலாம். இதில் மழைகாலத்தில் ஜலம் குளம்போல் தேங்கியும் தேங்காமலுமிருக்கும். பெருநெல் முதலிய தானியங்கள் விளைகின்றன.

### (7) அளர் நிலம்.

இந்த நிலம் உப்புப்பூத்திருக்கும் பூமி. இதைக் களர் நிலமென்றும், உவர் நிலமென்றும் அளர் நிலமென்றும் சொல்லுகிறார்கள். இது வெண்ணிறமாகவும், பூசினிக்காயின்மேல் இருக்கும் சாம்பல் வர்ணமாயுமிருக்கும். இதில் ஒருவிதப் பயிரும் பயிராகாது. மழை காலத்தில் இரண்டொரு கோரைப்புல் மட்டும் இங்கும் அங்கும் முளைத்திருக்கும். இது வடஇந்தியாவில் மிகுதி. நமது நாட்டிலும் அநேக இடங்கள் இருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லா சீர்காழி தாலுகாவிலுள்ள பல இடங்களில் இது மிகுதி. இது நன்செயில் அதிகம். புன்செயில் மிகச் சொற்பம். புன்செய் நன்செய்யாக சீர்திருத்தப்பட்ட சிலஇடங்களில் இதைப் பார்க்கலாம். உவர் கொஞ்சமாக இருந்தால் இரண்டு மூன்று வருஷம் சாகுபடி செய்யாமல் தரிசாகப் போட்டிருந்தால் வருஷத்துக்கு வருஷம் கோரை முதலிய புல் பூண்டுகள் அதிகமாகப் பயிராகி அந்த உவரை நீக்கிவிடுகின்றன. பிறகு நிலம் வளப்பம் பெற்றுவிடுகிறது. சில நிலத்தில் சுண்ணாம்பும் உவரும் கலந்திருக்கின்றன. இது உப்புப் பூப்பதற்குக் காரணத்தைப்பற்றிச் சிறிது விவரிப்போம். ஸாதாரணமாய் நிலம் சுமார் 9 அல்

லது 10 அங்குலந்தான் சாகுபடிக்காக உழுதோ, அல்லது கொத்தியோ செம்மை செய்யப்படுகிறது. அதற்குக் கீழுள்ள மண்களெல்லாம் இயற்கையாய் அமைந்தவாறே இருக்கின்றன. கீழுள்ள மண் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருக்கவில்லை அதாவது ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் நடுவில் சிறு இடைவெளிகள் இருக்கின்றன. மை ஒத்தும் கடுதாசியின் ஒரு நுனியில் ஜலம் படும்படியாக வைத்தால் அந்த ஜலம் அந்தக் கடுதாசியின் மேலெல்லாம் பரவுகிறதை நாம் பார்க்கிறோம். சாம்பல் கட்டியை ஜலத்தில் நனைத்தால் ஜலம் அந்த துவாரங்களின் வழியாக ஏறி அக்கட்டி முழுவதையும் நனைத்துவிடுகிறது. இவைகளைபோல பூமியிலுள்ள துவாரங்கள் வழியாக ஜலம் மேலே ஏறுகிறது. மழை காலத்தில் இந்தநிலத்தில் ஜலம் சுவறிக் கீழே நன்றாக இறங்கிவிடுகிறது. கோடை காலத்தில் நீராவியாகக் கிளம்பி வெளியே போய்விடுகிறது. கீழுள்ள இந்த மண்ணில் நானாவிதமான உப்புகள் கரைந்திருக்கின்றன. ஜலமெல்லாம் ஆவியாகப் போனபிறகு உப்பு மேல்மண்ணில் தங்கிவிடுகிறது. இதுதான் உவர் நிலம் உண்டாவதற்குக் காரணம் என்று தெரியவருகிறது. இதில் ஐந்து விதமான உப்புகள் கலந்திருக்கின்றன. அவை யாவன:—

(1) ஸாதாரண உப்பு. அதாவது நாம் சாப்பாட்டில் உபயோகிக்கும் உப்பு.

(2) பொட்டாவியம் நைட்ரேட் என்று சொல்லப்படும் வெடியுப்பு.

(3) ஸோடியம் நைட்ரேட் என்று சொல்லப்படும் பொட்டிலுப்பு.

(4) ஸோடியம் கார்பநேட் என்று சொல்லப்படும் சோடா உப்பு.

(5) ஸோடியம் ஸல்பேட் என்று சொல்லப்படும் கந்தக உப்பு.

இவைகள் அல்லாத வேறுவகை உப்புகளும் கலந்திருக்கின்றன. ஆனால், பெரும்பாலும் இவைகளே. 100 க்கு இரண்டு பங்குக்கு மேல் உப்பு இருந்தால் அந்த நிலம் உவர் நிலமே. இதில் பயிர்கள் வளரா.

இதன் சீர்த்திருத்தத்தைக் கவனிப்பார்களாக சிலர் நிலத்தை நன்றாய் உழுது கோரை முதலிய புல் பூண்டுகளை நட்டுப் பயிர் செய்து இதன் மூலமாய் உப்பைப் போக்கி சாகுபடிக்குக் கொண்டு வருகிறார்கள். இதுவும் ஒரு வழியென ஒப்புக் கொள்ளலாம். நான்கு பக்கங்களிலும் கரை போட்டு ஆற்றின் வண்டல் ஜலத்தைப் பாய்ச்சி வண்டல் படியும்படி செய்கிறார்கள். வண்டல் எவ்வளவுக்கு எவ்வளவு படிகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நிலம் கொழுமையடைந்து சாகுபடிக்கு லாயக்காகும். பூமி மட்டத்துக்குக் கீழ் வாய்க்கால் வெட்டி அந்த வாய்க்கால் வழியாக உவர் ஜலத்தை வடியவிட்டு நீக்குகிறார்கள். இது கஷ்டம். இதற்குச் சரியான வடிகால் வெட்டுவது கஷ்டம். இவைகள் யாவும் அனுபோகமாக இருந்தபோதிலும் பின்வருவனவற்றை கவனித்து அனுஷ்டித்தால் நலமே.

நிலத்தை மூன்றடி ஆழம் நன்றாய்க் கொத்திவாங்கி நில துவாரங்கள் யாவும் பொருந்தும்படிச் செய்யவேண்டும். இந்த இடைவெளிகள் மூடப்பட்டவுடன் கீழேயிருந்து ஜலம் மேலே கிளம்பாது. இதன் வழியாய் உண்டாகும் உப்பும் நின்றுவிடும் மனிதர் மலம், அவுரி, காட்டாமணக்கு, கொழிஞ்சி, காவாளை, புங்கன் முதலிய தழைகள், தோல் கிடங்குகளில் கிடைக்கும் குப்பைகள், ஆகிய எருக்கள், முத்துக்கொட்டை பிண்ணாக்கு, பின்னைக்கொட்டை பிண்ணாக்கு, புளியங்கொட்டை, வரகுவைக்கோல், குளத்து வண்டல் முதலிய எருக்களில் கிடைக்கக்கூடிய வகைளைத் தயார் செய்து போட்டால் உவர் நீங்கி நிலம் வளமடையும். சிலர், சவுக்கு, தென்னை இவைகளைச்சாகுபடி செய்தால் உவர் நீங்கும் என்கிறார்கள். உவர் நீங்குவது வாஸ்தவமானால் பிறகு நெல் விளைவிக்க நெடுநாள் செல்லும். கேழ்வரகு நடலாம். இதுவும் உவரை நீக்கும். வரப்புகளில் கருவை, தென்னை, சவுக்கு சாகுபடி செய்யலாம். வடிகால்களும் அவசியமே நிலத்திற்குப் பக்கத்தில் கிடங்குகள் வெட்டி அவைகள் வழியாக நிலத்தை நன்றாய்த் தண்ணீர் நிரப்பி உழுது குழப்பி ஜலத்தை வடியவிடவேண்டும்.

பு. து. ரத்தினம் பிள்ளை.

---



## METHODS OF LESSENING CRIME.

BY

K. S. SUBRAMANIAN.

## குற்றங்களைக் குறைக்கும் வழி.

———:o:———

பொதுவாய்த் திருட்டுத்தொழிலைக் கைக்கொண்டு அதினால் ஜீவிக்கிற சில ஜனங்கள் மகா புத்திசாலிகளாய் இருக்கவேண்டும். அநேக இடங்களில் அவர்கள் திருடின விஷயத்தைப்பற்றிக் கேட்டால், கேட்போருக்கு ஆச்சரியத்தை விளைவிக்கும் சக்தி அவர்களிடமிருக்கிறதாய்த் தெரியும். அவர்களுக்கு மற்ற ஸாமான்ய ஜனங்களைவிட தைரியமும் ரொம்ப ஜாஸ்தி. தேக பலமும் ஜாஸ்தியாகவே இருக்கும். கூர்மையான புத்தியும் இருக்கும். இப்படிப்பட்டவர்களை நல்வழிப்படுத்தினால் தேசத்துக்குப் பெருத்த க்ஷேமமும் லாபமும் உண்டாய்விடும். அவர்கள் செய்யும் அநேக கொலைகளும், காயங்களும் நிற்கும்.

கொலை செய்தவர்களைப்பற்றி மறுகொலைவாங்கவோ அல்லது தீவாந்தரம் ஏற்றவோ தண்டனை விதித்திருக்கும் சட்டத்தின் தாத்பரியம், அவர்களை தண்டித்து விட்டுவிட்டால் மறுபடியும் கொலையையே அவர்கள் செய்யத் துணிவார்கள், அவர்களுக்கு அது கசாப்புக்காரன் தொழிலாய்ப்போகும் என்று நினைத்துச் செய்கிறதாக என் அபிப்ராயம். அப்படிக்கிருக்க, திருடினவர்களை தண்டித்து உடனே விடுவதை அவர்கள் தங்களுக்கு புத்தி புகட்டுவதாக வைத்துக்கொள்ளுகிறார்கள். எந்த விதத்தில் என்றால், முந்தி அஜாக்கிறதையாய்த் திருடினாய், அதினால் அகப்பட்டுக் கொண்டாய், இனி ஜாக்கிறதையாய் அத்தொழிலைச்செய் என்று சொல்லுவதுபோல் அவர்கள் எண்ணுகிறார்கள். இப்படி நாம் நினைப்பதற்குக் காரணம் விசேஷமாய்த் திருட்டுக்கேஸ்களில் பழய குற்றவாளிகளே ஜாஸ்தியாக இருக்கிறார்கள். இதுவே திருடர்கள் தாங்கள் இனி திருடக்கூடாது, திருடினால் தண்டனை கிடைக்கும் என்று தெரிந்து கொள்ளாமல் தங்களை ஜாக்கிறதையாய்த் திருடச்சொல்லியிருப்பதாக நினைத்துக் கொள்ளுகிறார்கள் என்பதற்கு போதுமான அத்தாக்ஷி. இதைத் தடுப்பதற்கு கவர்ன்மெண்டார் அடியில்கண்ட ஏற்பாட்டைச் செய்தால், திருட்டுத்தொழில் அடியோடு கொஞ்ச காலத்திற்குள் நின்றுவிடும். அதாவது:—

ஸர்க்கார்ச் செலவில் ஜில்லாவுக்கு ஒரு பெரிய விவசாயப்பண்ணை ஏற்படுத்தி, அதில் அந்தத் திருட்டுத்தொழிலில் சம்பந்தப்பட்டவர்களை சாகுபடி முதலிய வேலைக்கு நியமித்தல். அவர்கள் காலக்ஷேபத்துக்கு போதுமான சம்பளம் ஏற்படுத்தல்.

ஜெயிலில் பலவித கைத்தொழில் வேலைகள் செய்வது போலவே அவ்விடங்களில் பெரிய தொழிற்சாலைகளும் ஏற்படுத்தி,

அவைகளில் பழகினவர்களை மேற்படி தொழிற்சாலைகளில் நியமித்துச் சம்பளம் ஏற்படுத்தல்.

பழைய குற்றவாளிகளை தண்டித்துவிடும்போது கே. டி. களாக ரிக்கார்டு செய்து அவர்கள் ஆஜர் பார்க்கப்படுவதை ஒழித்து ஜெயில் தண்டனைக்கு அப்புறம் ஸர்க்கார்ப்பண்ணை அல்லது தொழிற் சாலைகளில் இவ்வளவு காலம் வேலை செய்து வரவேண்டும் என்று விதித்தல். இதினால் அவர்களுக்கு சம்பாதிக்கக்கூடிய புதுத்தொழில்கள் பழகி திருட்டுத் தொழில்கள் மறந்துபோய் நின்றுவிடும். திருட்டுக் கேஸுக்காக தண்டிக்கும் காலத்திலேயே ஜெயிலில் இருக்கவேண்டிய காலம் ஒரு மாதமாக ஏற்பட்டால் ஸர்க்கார்ப்பண்ணை அல்லது தொழிற்சாலைகளில் கூலிவேலை செய்து தீரவேண்டியது ஒரு வருஷம் என்று ஏற்படுத்திவிடலாம். தவிரவும், அவ்விடத்தில் குறைந்த சம்பளம் இவ்வளவு என்று ஒரு ஸ்கேல் ஏற்படுத்திக்கொண்டு, பிறகு கைச்சாதுர்யம், புத்திசாலித்தனம் இவைகளுக்குத் தகுந்தபடி சம்பளம் உயர்த்திக் கொடுத்தால் அவர்கள் அங்கேயே தங்கிவிடுவார்கள். அவர்கள் குடும்பத்தில் உள்ள இதர மெம்பர்களுக்கும் அவ்விடத்திலேயே வேலைகள் உண்டாக்கி அவர்களையும் அதில் வேலைசெய்துவரச்செய்யலாம். இதினால் ஏற்படும் செலவு ஜாஸ்தி ஆகும் என்று நினைத்தாலும் அது நல்ல செலவாகவும், தேச க்ஷேமத்தின்பொருட்டு ஏற்பட்ட செலவாகவும் ஏற்படும்.

தவிர, திருட்டுத்தொழிலில் பயின்றவர்களுடைய குடும்பத்தார்களும் அப்படிப்பட்ட தொழிற்சாலைக்கு ஸமீபத்தில் குடியேறி விடுவார்கள். அவர்கள் பெண்ஜாதி பிள்ளைகளும் அதே தொழிற்சாலைகளில் அல்லது பண்ணைகளில் வேலைக்கமர்ந்து திருட்டுத் தொழில் வேரோடு தொலைந்துவிடும். புதிதாய்த் திருட எத்தனப்படுகிறவர்களும் குடியேற்றம் நேரிடும் என்கிற பயமும் கொள்ளுவார்கள்.

திருட்டுக் கேஸ்களில் சம்பந்தப்பட்ட நபரை திருட்டுத் தண்டனைக்குள்படுத்த சட்டப்படி போதுமான ருஜு இல்லாத ஸமயத்திலுங்கூட அவர்களை மேற்கண்ட ஸர்க்கார்த் தொழிற்சாலை அல்லது பண்ணைகளில் இவ்வளவு காலம் வேலை செய்ய வேண்டியதென்று ஏற்பாடு செய்துவிடலாம்.

இதற்கு அவசியமான திருத்தச் சட்டங்களை வேண்டுமானாலும் ஏற்படுத்திக்கொண்டு கவர்ன்மெண்டார் செய்வார்களானால் தேசத்தில் திருட்டுபயம் ஒழியும். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் போலீஸ் சிப்பந்திச்செலவும் குறையும். இப்படிப்பட்ட பெரிய கே. டி. லிஸ்டில் சேர்க்கப்படவேண்டிய அல்லது முரட்டுத்தனமுள்ளவர்களை பழைய நேட்டிவ் ராஜாங்கத்தார்கள் அவர்களுக்குத் தங்கள் ஆதீனத்தில் ஏதாவது ஒரு வேலையைக் கொடுத்து வேலைவாங்கி வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

அப்படிப்பட்ட திருடர்களுடைய தேகபலம், மனோபலம் முதலியவைகளும் வீணில் துர்வியாபாரத்தில் செலவாகாமல் அவர்களுக்கு ஏற்படும் தொழிலில் ஊக்கம் காட்டி அதிக விருத்தியடைந்து நல்ல ப்ரமோஷனைப் பெறுவார்கள்.

தொழிற்சாலைகளும், பண்ணைகளும் ஸர்க்காரால் ஸ்தாபிக்கப்பட்டு நல்ல மாதிரியாய் நடைபெறும். அநேகம் தொழில் கற்றுக் கொள்ள மாதிரிப்பள்ளிக்கூடங்களாகவும் ஏற்படும். கைமுதல் அதிகமில்லாமல் கஷ்டப்படும் ஏழைத்தொழிலாளிகளும் இதில் சேர்ந்து விருத்தி அடைவார்கள்.



மேலும் மேற்கண்ட திருட்டுத்தொழில் செய்தவர்கள் தினந்தோறும் பகலில் ஆஜர் கொடுத்து பூராவேலை செய்து விடுவதால் இராக்காலங்களில் வேறு யோசனை செய்ய ஸாத்தியப்படாது.

இன்னொரு முக்கியமான விஷயம். இப்பொழுது குற்றத்தொழில் ஜாதியார் விஷயமாய் செய்யப்போகிற சட்டத்திலேயே இதற்கும் விதிகள் செய்துவிடலாம்.

திருட்டுத்தொழிலை அடக்க மேற்கண்டபடி செய்வது காலதாமதத்தின்பேரில் செய்தாலும் இப்பொழுது மேற்கண்ட குற்றத்தொழில் ஜாதியார் என்று குறிப்பிடப்போகும் நபர் ஜாப்தாவில் அடியிற்கண்டவர்களையும் சேர்த்து கவனித்து வந்தால் ஒருவாறு திருட்டு அடங்கலாம். திருட எண்ணமுள்ள ப்ரதி நபரும், உளவு அறியும்பொருட்டு பகல் காலங்களில் பிச்சைக்காரர்கள் போலவும், யாத்திரைக்காரர்கள் போலவும், வியாபாரிகள் போலவும் வெளியில் பகிரங்கமாய் வந்து உலாவி ஊரினுடையவும், வீட்டினுடையவும் தந்துகளைத் தெரிந்துகொண்டு இராக்காலங்களில் ஜாக்கிரதையாய் பிறர் கண்ணுக்கு அகப்படாமல் திருட்டுத்தொழில் செய்துவிடுகிறார்கள். அவர்கள் விஷயமாய்ச் செய்ய வேண்டிய முக்கியமான விதிகள்:—

பிச்சைக்காரர்கள் விஷயத்தில், வயோதிகர்கள், அங்க ஹீனர்கள், அசக்தர்கள் இவர்களைத்தவிர வேறு யாதொரு நபரும் பிச்சைக்காரர்களாக வெளியில் திரியவிடாமல் தடுக்க வேண்டியது. பார்வைக்குத் திருடனாய்த் தோன்றும் சக்தியற்ற ஒருவன் பிச்சைக்கு வெளியில் திரியவேண்டியதாய் ஏற்பட்டால் அப்படிப்பட்டவன் தகுந்த டிஸ்ட்ரிக்டு மெடிகல் ஆபிஸர்களிடம் பிச்சை யெடுத்தாலன்றி பிழைக்கும் வழியில்லாதவன் என்று ஸர்ட்டிபிக்கேட்டு வாங்கிக்கொண்டு அதை எப்பொழுதும் ஆஜர்படுத்தவேண்டும் என்றும், பிரயாணிகள், தெருவில் திரியும் வியாபாரிகள் விஷயத்தில் அவர்கள் புறப்படும் ஊர் கிராம அதிகாரிகள், அந்த ஊருக்கு சமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட் இவர்களிடத்தில் அவர்கள் உண்மையான வியாபாரிகள், யாத்திரைவாஸிகள் யோக்கியர்கள் என்றும் ஸர்ட்டிபிகேட்டுபெற்று தெருக்களில் திரிய விடவேண்டும். சாமியார் வேஷம் போட்டுக்கொண்டும், தலைமொட்டையடித்துக் காஷாயம் பூண்டும் வெளிப்படும் திட சரீரமுடையவர்களையும் இப்படிப்பட்ட ஸர்ட்டிபிகேட்டில்லாமல் வெளியில் திரியவிடக்கூடாது.

அப்படி ஸர்ட்டிபிகேட் இல்லாமல் திரியும் பரதேசிகள், யாத்திரைவாஸிகள், பிச்சைக்காரர்கள் இவர்களையும் ஷை குற்றத்தொழில் ஜாதியாரில் சேர்த்து அவர்களையும் அந்த சட்டத்துக்கு ஒத்தபடி நடவடிக்கை நடத்த வேண்டியது.

குற்றத்தொழில் ஜாதியார், மேலே காணப்பட்டவர்கள், எல்லாரையும் மேலே குறிப்பிட்ட ஸர்க்கார் தொழிற்சாலை அல்லது பண்ணைகளில் சேர்த்து வேலை வாங்கினால் தேசத்தில் சோம்பேறிகள் குறையவும், தொழிலும், வியாபாரமும், செல்வமும் விருத்தியாக மார்க்கமும் ஏற்பட்டு, திருட்டுத்தொழிலும் தொலைந்து க்ஷேமம் உண்டாகும்.

இதை காங்கிரஸ் ப்ரமுகர்களும், சட்டஸபை ஆனரெபிள் மெம்பர்களும் கவனித்து ஏற்பாடு செய்து சீக்கிரத்தில் ஸர்க்கார்ப் பண்ணைகளும், தொழிற் சாலைகளும் ஸ்தாபித்து வைப்பார்கள் என்று ரொம்பவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

கே. எஸ். சுப்பிரமணியன்.

## INSECTS AND PLANTS.

BY

S. PANCHAPAGESA SARMA B. A.

## பூச்சிகளும் செடிகளும்.

---

நம்மைச்சுற்றிலும் வளர்கிற செடி, புல் பூண்டு முதலானவைகள் எப்பொழுதும் வளர்ந்து விருத்தியடைய பலவிதமாய் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவைகள் வளர்வதற்கு வேண்டிய ஆகாரமான எரு, வெளிச்சம், காற்று இவைகளை அடையும் வழியில் இவைகளுக்கும் பலவிதப் பூச்சிகளுக்கும் ஸதாகாலமும் ஒருவித போட்டியும் மன்றாட்டமும் இருக்கின்றன. கசகசாச்செடி ஒன்றில் ஆயிரக்கணக்கான விதைகள் ஒருதடவையில் உற்பத்தியாகின்றன. ஸாதாரணமாக இதன் பக்கத்தில் வளரும் மற்றச்செடிகள் இதன் இடத்துக்கும் ஆகாரத்திற்கும் போட்டி போட்டு இதை நசுக்காவிட்டால் இரண்டொருவருஷத்திற்குள் உலகமுழுவதும் கசகசாச்செடியே நிறைந்துவிடும்.

இவ்விதமாக உலகத்தில் ஒரேவிதமான பூண்டு நிறைந்து போகாதபடி இவைகளுக்குப் பலவிதப்பகைவர்கள் இருக்கிறார்கள். இப்படிப் போட்டியால் செடிகளில் சில அழிந்து போகின்றன. பக்ஷிகள் விதைகளையும் புஷ்பங்களையும் தின்றுவிடுவதால் சில நாசமுறுகின்றன. இன்னும் சில வருஷாவருஷம் பனியினாலும், வெள்ளத்தினாலும், மழை யில்லாமையினாலும் அழிந்துபோகின்றன. இங்கிலாந்து முதலான குளிர்ந்த தேசங்களில் பனிக்கட்டி தரையை வெகு காலம் மூடிவிடுவதனால் புல் பூண்டுகள் அடியோடே அழிந்துவிடுகின்றன.

ஆல் முதலான பெரிய விருக்ஷம் முதல் சிறு பூண்டுவரையில் உள்ள செடிகளுக்கு பகைப் பூச்சிகள் அநேகம் இருக்கின்றன எத்தனை வகைச் செடிகளோ அத்தனை வகை ஒவ்வொன்றிற்கும், பகைப்பூச்சிகள் இருக்கின்றன. முருங்க மரத்தையும், பூவரசையும் அடியோடே நாசஞ்செய்யும் கம்பிளிப் பூச்சி உருளைக்கிழங்கைத் தின்பதில்லை. உருளைக்கிழங்கைத்தின்னும் பூச்சிகள் தென்னை மரங்களைத் தொடுவதில்லை. தென்னைமரத்தை அடிக்கும் வண்டுகள் வாழைமரத் தண்டை வருவதில்லை. இவ்விதப் பூச்சிகளில் சில் ஆயிரக்கணக்கான முட்டைகள் இட்டு விருத்தியாகின்றன தவளை, கம்பிளிப்பூச்சி போன்ற இவைகளைத் தடுத்தாலன்றி இவைகள் உலகத்தை மூடிவிடும்.

சில பூச்சிகள் இலைகளிலும், சில, மொச்சை, அவரை முதலான காய்களிலும் முட்டையிடுகின்றன. எதற்காகவென்றால், குஞ்சு பொரித்தவுடன் குஞ்சுகளுக்கு வேண்டிய ஆகாரத்தையடையும்பொருட்டேயாம். இந்தியாவில் சோளம் முதலான தானியங்களுக்கு ஆயிரக்கணக்கான பகைப் பூச்சிகள் உண்டு. இவைகள் செடியின்பேரில் முட்டையிடுகிறபடியால் குஞ்சுபொரித்தவுடன் செடிகள் குஞ்சுகளுக்கு ஆகாரமாகி பயிர் அழிந்துவிடுகிறது.

கம்பிளிப் பூச்சிகளும், வெட்டுக்கிளிகளும் கதிர்களை அழிக்கின்றன. அமெரிக்காவில் கம்பிளிப்பூச்சிபோன்ற பசுமையான ஒரு பூச்சியினால் வருஷாவருஷம் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான தானியம் நாசமாகிறது. கோதுமையையும் ஒருவகைப் பூச்சிகள் ஆயிரக்கணக்காக முட்டையிட்டு அழிக்கின்றன. இம்மாதிரியே பருத்தி, ஆப்பிள் பழம், திராக்ஷை, புகையிலை முதலானவைகளும் பூச்சிகளால் அழிக்கப்படுகின்றன. அமெரிக்காவில் வருஷாவருஷம் மொத்த தானியங்



களில் பத்தில் ஒன்று இவ்விதம் அழிகிறது. புகையிலையைப் பாடஞ்செய்து வைக்கும் போதுகூட அதில் பூச்சி விழுவதுண்டு. பல மையில் நீளமும் அகலமுமுள்ள வெட்டுக்கிளிக் கூட்டம் ஆகாயத்தில் பறந்து மேகம் போல் சூரியனை மறைப்பதுமுண்டு. இவைகளால் பலதேசங்களில் பயிர்கள் அழிவதால் பஞ்சம் உண்டாவதுமுண்டு. ஆனால் இவ்விதம் பூச்சிகள் விருத்தியாகி ஹிம்ஸிக்காதபடி ஈசுவரன் சிறு பூச்சி புழுக்களைத் தின்பதற்குப் பெரும் பூச்சிகளைப் படைத்திருக்கிறார். ஜந்துக்களைத் தின்ன வெட்டுக்கிளிகளும், வெட்டுக்கிளிகளைத் தின்பதற்கு இதர ஜெந்துக்களும் இருக்கின்றன. தவளை, பல்லி, நண்டு இவைகள் பூச்சிகளைத் தின்னும் ஜெந்துக்கள். குளவிகள் சிறு புழுக்களைக் கொண்டுவந்து தன் குஞ்சுகளுக்கு ஆகாரமாகக் கொடுக்கின்றன. ஆகையால், அமெரிக்காவில் பயிர்கள் அழியாதபடி பூச்சிகளைத் தின்ன அவைகளுக்குப் பகைப்பூச்சிகளையும் பக்ஷிகளையும் வளர்க்கிறார்கள்.

பனியும் வெள்ளமும் ஆயிரக்கணக்கான பூச்சிகளையும் புழுக்களையும் கொன்று ஜனங்களுக்குப் புதிதாகப் பயிரிட இடந்தருகின்றன. இதுவுமன்றி சில செடிகளும் கொடிகளும் பூச்சிகளைக் கொன்று தமக்கு ஆகாரமாக்கிக் கொள்ளுகின்றன. எல்லாச் செடிகளுக்கும் தண்ணீர் வெயில், ஆகாயம் இவைகளைத் தவிர வளருவதற்கு வேறு எருக்கள் (ஆகாரங்கள்) வேண்டும். அவைகளுக்கு நைட்ரோஜன், பாஸ்பரஸ், கந்தகம் முதலியவை வேண்டும். இவைகளை ஸாதாரணமாக நிலத்திலிருந்து கொள்ளுகின்றன. மிகச் சேறுள்ள இடங்களில் இப்பண்டங்கள் குறைவாக இருக்கலாம். அப்பேர்ப்பட்ட ஸமயங்களில் செடிகள் அவைகளின் சமீபத்திலுள்ள புழுப் பூச்சிகளைக் கொன்று அதை எருவாக்கிக் கொள்ளுகின்றன. சில செடிகளின் இலைகளில் ஒருவித பசை யூறுகிறதுண்டு. அவைகளின்மேல் பூச்சிகள் உட்கார்ந்தால் திரும்பி எழுந்து போக முடியாதபடி ஒட்டிக்கொள்ளுகின்றன. இப்படியிருந்து இறந்ததும் அதைச்செடிகள் ஆகாரமாக்கிக் கொள்ளுகின்றன. அதாவது, இறந்துபோன ஜந்துக்களினுள்ளே இருக்கும் வஸ்துக்களை இழுத்துக்கொள்ளுகின்றன.

டீஸல் என்னும் செடியின் இலைகள் காம்பின் நடுவே ஒரு கிண்ணம் போல் இருக்கும். அதை உற்று நோக்கினால் அது நிறைய புழு, பூச்சி, ஈ, எறும்பு நிறைந்திருக்கும். அதில் இருக்கும் நீர் அப்பூச்சிகளைக் கரைத்து செடிக்கு வேண்டிய ஆகாரமாக மாற்றுகிறது. இப்படி அநேக பூச்சிகளைத் தின்னும் பயிர்கள் உண்டு. சில செடிகளின் புஷ்பங்கள் புழுக்களை உள்ளே போகவிடுமே யொழிய உள்ளேபோன புழுப்பூச்சிகளை வெளியே விடாதபடி மூடிக்கொள்ளும்.

ஆகையால், இவைகளிலிருந்து முதலில் உலகம்செடிகளினால்மூடப்பட்டுப்போகுமோ என்ற பயமும், பிறகு இச்செடிகள் ஜீவவர்க்கத்தால் அழிந்துபோகுமோ என்ற பயமும் உண்டாகிறது. ஒன்று மற்றொன்றை இடைவிடாது தடுத்துக்கொண்டேயிருக்கிறது. இதற்குத்தான் 'இயற்கைத்தடை' அதாவது "பாலன்ஸ் ஆப் நேச்சர்" என்று பெயர். பயிர்களைப் புழுக்கள் நாசம் செய்யுமேயென்று பயப்படும்பொழுது அப்பேர்ப்பட்ட புழுக்களை நாசஞ்செய்ய வேறு பூச்சிகள் இருப்பதும் இயற்கை. இது தவிர, வேறு இடங்களில் நிலங்களில் விஷங்களைப் போட்டு பயிர்களை யழிக்கும் பூச்சிகளைக் கொல்ல எத்தனிக்கிறார்கள். கவர்ன்மெண்டார் ஏராளமாக சம்பளம் கொடுத்து எந்தப்

பூச்சிகளைக் கொல்லுவதற்கு எந்த மருந்துகள் ஸரியென்று தேர்ச்சியடைந்த சாஸ்திரிகளை விட்டுப் பரிசோதிக்கிறார்கள். அமெரிக்காவில் பருத்திச் செடிகளை யழிக்கும் புழுக்களுக்கு தானியத்தில் அதிகப் பிரியம் என்று கண்டு பிடித்ததினால் அவர்கள் பருத்திச்செடியின் நடுவே தானியத்தையும் போடுகிறார்கள். புழுக்கள் யாவும் பருத்திச் செடியை விட்டு தானியத்தையழிக்க ஆரம்பித்துத் தின்கின்றன. இதற்குள் பருத்தி அறுவடை செய்து விடுகிறார்கள். இவ்விதமாக அமெரிக்காவில் வருஷந்தோறும் 60 கோடி ரூபாய் பருத்திப் பூச்சிகளால் அழிபடாதபடி காப்பாற்றுகிறார்கள்.

இவ்வளவு தூரம் செடிகளுக்கும் பூச்சிகளுக்கும் உள்ள பகையைப்பற்றிக் கூறினோம். இனி செடிகளுக்குப் பூச்சிகள் எப்படி அவசியம் என்று கூறுவோம்.

செடிகளில் காய் உண்டாவதற்குப் புஷ்பங்களின் மகரந்தங்கள் பரவவேண்டும். ஜீவராசிகள் விருத்தியாக எப்படி ஆண் பெண் சேர்க்கை அவசியமோ, அம்மாதிரியே காய்கள், விதைகள் வளர ஒரு புஷ்பத்தின் மகரந்தம் மற்ற புஷ்பத்தில் விழவேண்டும். புஷ்பங்கள் அழகான வாசனையினாலும், வர்ணங்களினாலும் வண்டுகளை அழைக்கின்றன. அவை அவற்றினுட்புகுந்து தேனைக்குடிக்கும்பொழுது மகரந்தம் காலில் ஒட்டிக்கொள்ளுகிறது. அதே மாதிரி மற்றைப் புஷ்பத்தின் உள்ளே நுழையும்பொழுது அவைகளில் அந்த மகரந்தம் பட்டு அவை விருத்தியாகின்றன. ஆகையால்தான் மத்தியான வேளையில் பூக்கும் புஷ்பங்கள் வண்டுகளை யழைக்க பல வர்ணங்களாய் இருக்கின்றன.

இரவில் பூக்கும் புஷ்பங்கள் அநேகமாக வெளுப்பாக இருப்பதோடு, நல்ல வாசனையைப் பெற்றிருப்பதால் இரவில் வண்டுகள் மணத்தினாலும், வெள்ளை வர்ணத்தாலும் அழைக்கப்படுகின்றன. இருட்டில் வெள்ளை வர்ணம் ஒன்றே கண்ணுக்கு நன்றாய்த் தெரியுமாதலால் இரவில் பூக்கும் புஷ்பங்கள் வெளுப்பாகவே இருக்கின்றன.

இவ்விதம் வர்ணம், வாசனையில்லா புஷ்பங்களையுடைய செடிகளில் விதைகள் விருத்தியாவது காற்று அசையும்பொழுது ஒரு புஷ்பத்திலிருந்து மற்றைப் புஷ்பங்களுக்கு மகரந்தம் வீசுவதினால்தான். ஆகையால், தேனீக்கள் தம்செடிகளுக்கு மிக்க உபயோகமான ஜந்துக்கள். அவைகள் ஆயிரக்கணக்கான குஞ்சுகளைப் பொரிப்பதனாலும் அவைகளுக்கு இரை தேடவேண்டியது அவசியமானதினாலும் ஸதாகாலமும் தேனுக்காக அலைந்து சுறுசுறுப்பாக வேலை செய்கின்றன. இன்னும் ஒரு விசேஷம் என்னவென்றால், ஒரு ஜாதி புஷ்பத்திலிருந்து மகரந்தத்தை மற்ற ஜாதி புஷ்பத்தில் கொண்டு வைத்தால் விருத்தியாவதில்லை. இயற்கையில் இவ்விதம் மகரந்தத்தை வீணாக்காதபடி ஈசுவரன் தேனீக்களுக்கு வேறொரு குணத்தைக் கொடுத்திருக்கிறார். அது என்னவென்றால், தேனீ ஒன்று, காலையில் முதல் முதல் எந்த புஷ்பத்திலிருந்து தேன் எடுக்கிறதோ அந்த ஜாதி புஷ்பத்திலிருந்தே அன்று முழுவதும் தேன் எடுக்கும். இது உண்மைதானென்பது பலவித ஆராய்ச்சிகளால் தெரியவருகிறது. இம்மாதிரி சில செடிகளை ஆஸ்ட்ரேலியாவில் விருத்தி செய்ய தேனீக்களை முதல் முதல் அங்கு கொண்டுவிட்டார்கள். அத்திப்பழம் விதை விருத்தியாக குளவி அவசியம் என்று தெரிந்து அவைகளை அமெரிக்காவில் கொண்டு போய் வளர்த்தார்கள். இவ்விதம் ஒவ்வொன்றையும் சொல்லுவது சாத்தியமல்ல.

பஞ்சாபகேச சர்மா.



## OUR TRAVELLER'S DIARY.

## நம்முடைய பிரயாணியின் டையிரி.

திப்புராஜபுரம்.—சுமார் !20 வைதீக மிராசுதார்களும், 200 பிராமணரல்லா வகுப்பார்களுமிருக்கிறார்கள். இவ்வூருக்கு தக்க கனவான்களிருக்கிறார்கள். கனம் முத்துஸாமி அய்யரவர்களே முதன்மையாகத் தெரிகிறது. ஷையாரின்குமாரர்கள் பொதுஜன நன்மையை நாடுபவர்களாகவும், பத்திரிகாபிமானிகளாகவுமிருக்கிறார்கள். ஒரு எலிமெண்டரி பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கனம் போஸ்டு மாஸ்டர், ஸம்ஸ்கிருதத்தில் தக்க தேர்ச்சியுள்ளவரும், தம் வேலையில் அதிக சுறுசுறுப்பும், அமைதியான குணமுடையவராகவே ஷை கிராமத்திற்கு, சாமிநாத சாஸ்திரியாரவர்கள் கிடைத்தது, கிராமத்தார்களின் அதிர்ஷ்டமே. சவுக்கு சாகுபடியாலும், ஒற்றை அலகில் அதிக முயற்சிகொண்ட வருமான வடக்குத்தெருவிலுள்ள கனம் சுந்திர சாஸ்திரிகளுடையகிருஹத்துக்குப் போனேன். அங்கே தெருவிலுள்ள சில மிராசுதார்களும் வந்திருந்தார்கள். "பிழைக்கும் வழி" யிலுள்ள நூதன எரு விஷயமாக சுமார் 2 மணி நேரம் வரையில் பிரஸ்தாபித்தேன். ரொம்ப ஆச்சரியமடைந்தார்கள். கனம் சாஸ்திரியாரவர்கள் தமக்குச் சொந்தமான, சேஷம்பாடி கிராமத்திற்கு வடக்கேயுள்ள தட்டான்படுகையில் சுமார் ஒரு ஏக்கர் படுகையில் 5000 சவுக்கு கண்கள் 3 வருஷத்திற்கு முன்னே போட்டு தக்கபடி பாதுகாத்து, இதர சில்லரையாக, கத்திரி, கொத்தவரை முதலியவைகளையும் கண்டு முதல் செய்துகொண்டதும் தவிர, ரூ. 35க்கு சவுக்கு மரங்களில் கழித்த தழைகளையும் விற்று லாபம் சம்பாதித்திருக்கிறார் தற்போது 8000 கண்கள் 7 ஆள் உயரம் வளர்ந்திருக்கின்றன. மரம் 10 அணுவுக்குப் போகலாம். இன்னும் 4 வருஷத்தில் வெட்ட உத்தேசம். பதியன்கள் வடக்கே கூடலூர்ஜில்லாவிலிருந்து வாங்கி வந்து எல்லாப் படுகையிலும் போட்டிருக்கிறார். இவ்வூரில் சாஸ்திரியாரைத் தவிர விவசாயத்தில் சிரத்தை எடுத்து செய்பவர் வேறு இல்லையென்பது திண்ணம். இதற்கு தம் 18 வயதுள்ள எஸ். நடேச சாஸ்திரியை கோயம்புத்தூர்விவசாயகாலேஜுக்கு அனுப்பத் தயாராகயிருக்கிறார் என்பதே போதுமான அத்தாட்சி. இந்த கிராமம், பூர்வ காலங்களில் ஆட்சி புரிந்த சேர, சோழ, பாண்டிய அரசர்களின் அரண்மனை சில்ப சாஸ்திரிகளுக்கு ஸன்மானமாக ஸகலவித மான்யங்களுடன் கொடுக்கப்பட்டும், சில்பிராஜபுரம் என்ற நாமதேயம் வழங்கிவந்து, நாளடைவில் சில்பிராஜபுரமென்பதற்குபதிலாக திப்பிராஜபுரம் என்று வழங்கி வருகிறது. சரித்திர ஆராய்ச்சிஉள்ளவர்க்கே ஒறுவாறு உண்மை வெளிப்படலாம். படுகைகளில் வாழை, சவுக்கு, மிளகாய் தவிர வேறு இல்லை. இங்கே குதிரை, மாடு கட்டக்கூடிய, உறுதியானவும், நேர்த்தியானவுமான வண்டி செய்து சுமார் 25 வருஷங்களாக நல்ல பெயர் பெற்ற ஒரு ஆசாரி இருக்கிறார். அவர் பெயர் கோவிந்த ஆசாரி. சாயந்திரம் கிழக்கே ஒரு மைல் துலவிலுள்ள, விசலூர் கிராமம் போய், மேல் குடியானத் தெருவில் இரவு ஒன்று கூடிய, தச்சு மேஸ்திரி விவஸாயிகள் முன்னிலையில் "பிழைக்கும் வழி" யை படித்துக் காண்பித்தேன். இவர்கள் வருமானமில்லாத கூலிக்காரர்களாகவும், தற்காலம் வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறவர்களாகவுமிருக்கிறார்கள்.

கொஞ்சகாலத்திற்கு முன் ஒரு தக்க மிராசுதார் ஒரு ஏழைப் பறையனை கடனுக்காக ஜெயிலில் கொண்டுபோய் அடைத்துவிட்டதி

விருந்து எல்லாருக்கும் ஒருவித த்வேஷ குணம் இன்னும் இருந்துகொண்டு, மிராசுதார்களை வெறுப்பாக நினைத்து வருகிறார்கள். ஏழையை தனவான்களாகிய மிராசுதார்களே கெடுத்துவிட்டால் எவரிடம் போய்ச் சொல்லுவோம் என்கிறார்கள். ஒரு எலிமென்டரி பாடசாலை எஸ். சுப்பிரமணிய அய்யர் தன் சொந்த முயற்சியிலே ஸ்தாபித்திருக்கிறார். கனம். கணபதி குருக்களும், என். சாமினாத அய்யர் அவர்களும் விவசாயத்திலும், குடிபடைகளிடத்திலும், அன்புள்ளவராகத் தெரிகிறது. வைதீகத்தில் எப்படிச்சிறந்தவர்களோ லௌகீகத்திலும் அப்படியே. "பிழைக்கும் வழி"யை சென்ற ஒருவருஷமாக, அதிகமாய் கேழ்விப்பட்டிருப்பதாகவும், இனி இவ்வருஷ முதல் ஒரு காப்பி வேண்டுமென்றும் ஆர்டர் கொடுத்தார்கள். சுமார் 50 வைதீக பிராமணர்களின் வீடுகளும், 50 அல்லது 60 இதரஜாதியார்களு மிருக்கிறார்கள்.

உமாம்பாள்புர மென்கிற கோலியகுடி.—வெள்ளாழத் தெருவில் போலீஸ் ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீஸர், மிஸ்டர் டி. ஏ. கோவிந்தசாமி பிள்ளையினுடைய திண்ணையில் ஷையாரும், தெருவிலுள்ள இதர மிராசுதாரர்களும் வந்து என்னை வலிய விசாரித்தார்கள். "எல்லோருக்கும் தற்காலம் "பிழைக்கும் வழி" நல்லபடி கிடைக்காமல் கஷ்டப்படுபவர்களுக்கு போதகர்களாய் வந்தீரோ" என்று சொன்னார்கள். ஊரிலுள்ளவர்களில் சில வயதானவர்களைத் தவிர சிறியவர்கள் சுமார் 50 பிள்ளைகளிருந்தும் ஒரு திண்ணைப்பள்ளிக்கூடமில்லையென்று கெஞ்சி ஒரு பொறுமையுள்ள உபாத்தியாயர் தேவையென்றும் கேட்டுக்கொண்டார்கள். இன்னும் 3 வருஷம் இந்த நிலைமையில் இவர்கள் இருந்தால், கெட்டவழிகளில் தலையிட ஹேதுவாகும். எல்லாம் புரக்குடிகளே. கோவிந்தசாமி பிள்ளை "பிழைக்கும் வழி" ஒரு மாதிரி புஸ்தகம் பார்த்துக்கொண்டு, சொந்தத்தில் தருவிக்கிறதாக ஒப்புக்கொண்டார். மிகவும் பட்சமுள்ள இவர்போன்ற சாதுக்களிலிருந்தால், 'போலீஸ் டிபார்டுமெண்டுக்கு நல்ல பெயர் கிடைக்கும்.

ஆத்திக்குளம் —தென்கிழக்கே சுமார் 2 மைல் துலவில், பூர்வீக சிவ ஆலயங்களுள்ளதும், தற்போது மிகவும் க்ஷீணகெதியாக காலி மைதானமாகவுள்ளதும் முடிகொண்டான் ஆற்றுக்கு வடகரையில், ஆத்திக்குளம் கிராமமுண்டு. இங்கே சுமார் 25 ஏழை பிராமணர்களும், சில மிராசுதார்களாகிய உடையார்களுமிருக்கிறார்கள். இவர்களுள், ஜனாபிமானியாக கனம் சாமினாத உடையார் ஒருவருண்டு. இவ்வூரில் ஆற்றுப் படுகைகளில் நல்ல காரமான பொடிப்புகையிலையும், சவுக்கு மரங்களும் அதிகமாக சாகுபடி நடக்கிறது. இங்கே கைதேர்ந்த ஆபரணங்களை இங்கிலீஷ் மாதிரியாக நாணயமாகவும். யூகமாயும் செய்கிற சிறந்த கைத்தொழில் செய்யும் ஒரு குடும்பத்தாருண்டு. முக்கிய நாகரீக பட்டணவாசங்களிலுள்ள தனவான்கள் இவரிடம் அதிகமாய் நாணயம் செய்துவருகிறார்கள். பத்திரிகைக்கு ஒரு சந்தாதாராக வலிய சேர்ந்துகொண்டார். இங்கே பள்ளிக்கூடமேயில்லை.

நாகரசம்பேட்டை.—இந்த ஊரில், ஒருவர் ஆப்ரிக்காவிலிருந்து வைர சுரங்கங்களுக்குப் பேர்போன கிம்பர்லியிலிருந்து வந்திருக்கிறார். ஷையார்தான் ஷை கிராமத்தில் விவசாய விஷயமாக பத்திரிகைகளை தருவித்துப் படிக்கிறார். சாகுபடி செய்து பார்த்ததில், உற்சாகம் குறைந்தவராகக் காணப்பட்டார். ஷையார் சொந்தத்தில், எலுமிச்சை, மஞ்சள், நாரத்தை முதலியவைகள் போட்டு சாகுபடி செய்கிறார்,



பள்ளிக்கூடமில்லாத குறையைப்பற்றி ஸதா கவலைகொண்டு மகஜர்கள் செய்தும் பயன்படவில்லையென்று விசனிக்கிறார். ஆனால் சுமார் 3 பர்லாங்கு துலவில், பந்தி கிராமத்தில் இருக்கும் ரூரல் ஸ்கூலில், பாலகர்கள் வயல் வாய்க்கால் கடந்துபோவது கஷ்டமென எண்ணி, தங்களூரிலேயே ஒரு தனி கூரைக் கட்டிடம் கட்டி ஸ்கூல் ஸ்தாபிக்க எத்தனித்திருக்கிறார்.

பந்தி.—திருச்சுறைக்கு மேற்கே ஒரு மைல் துலவிலிருக்கிறது. சுமார் 100 படையாச்சி வீடுகள் இருக்கின்றன. நாட்டாண்மைக்காரர்களுண்டு. படிப்பு எல்லாம் மோசம். ஆனால் ஒரு போர்டு ரூரல் பாடசாலை ஸர்க்கார் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. 1910௵ ஆகஸ்டு௴ 8௳ சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ், கனம் கே. ஏ. வைத்தினாத அய்யரவர்களுடைய இன்ஸ்பெக்ஷன் காலத்தில் பள்ளிக்கூடத்தில் 9 பிள்ளைகள்தான் இருந்தார்கள். கண்டிப்பாக பாடசாலையை எடுத்துவிடப்படுமென ரிமார்க்கு செய்துவிட்டு போனாராம். தற்போது ஷை பள்ளிக்கூடத்தில் எம். சாமினாதபிள்ளை என்னும் இளம் வயதுள்ள டிரெயினிங் உபாத்தியாயர், சுமார் 30 ஆண், 3 பெண் பிள்ளைகளைச் சுற்று கிராமங்களில் போய் சேர்த்து, தக்கபடி சங்கீதம் முதலியவைகள் பழக்கி வைத்திருக்கிறார். உள்ளூர் பிள்ளைகள் 10க்குமேல் இல்லை. ஸ்கூலுக்கு எவ்விதமான பர்னிச்சர்களாவது, கிண்டர்கார்டன் முதலியவைகளாவதுஒன்றுமேயில்லை. ஸாமான்ய கிராமத் திண்ணைப்பள்ளிக்கூடத்திற்கு ஸமமாக இருக்கிறதேயொழிய, புதிய முறையில் நடத்தப்பட்டுவரும் எலிமெண்டரி பாடசாலையாகத் தெரியவில்லை. கிராமப்பிள்ளைகளுக்கு எவ்விதமான போதனா சக்தியுடன் ஒரு உபாத்தியாயரிருந்தாலும், பிள்ளைகள் உற்றுப்பார்த்து அறியக்கூடிய ரம்மியமான ஒரு ஸாமானுமில்லாவிட்டால், உற்சாகம் எப்படி உண்டாகும்? இதை மேலதிகாரிகள் கவனித்தால் ஏழை கிராமக் குழந்தைகளுக்கு உபகாரமாகும்.

ஆத்தூர் கிராமம்.—சுமார் 50 நடுநிலைமையிலுள்ள உடையார்களும், படையாச்சிகளும், விஸ்வகர்மர்களுமுண்டு. பெரும்பாலும் சவுக்கு சாகுபடியே. மஞ்சள் விசேஷமாய் பயிர் செய்து வெளிஊர்களுக்கு அனுப்புகிறார்கள். பச்சை மஞ்சள் பாரம் 1 க்கு ரூ. 9. காய்ந்த சரக்கு ரூ. 40 முதல் 50 வரையில் குணத்திற்குத் தக்கபடியே. பள்ளிக்கூடமே கிடையாது.

குப்பசமுத்திரம்.—இது குடமுருட்டி ஆற்றின் தெற்குப் படுகையில், தென்னந்தோப்புகளடர்ந்த, வளப்பமானதும், நீர் தாழ்ந்ததுமான கிராமம். சுமார் 50 வீடுகளுண்டு. பூர்வீக ஜைன மிராசுதார் ஒருவரிருக்கிறார். உடையார் வகுப்பினரிலும் தர்மசிந்தையுள்ள ஒருவரிருக்கிறார். இக்கிராமத்திற்கு விவஸாய சம்பந்தமாக நூதன முறைகள் வேண்டியதேயில்லை. அதிக கொழுப்பான பூமி. மேற்கே படுகைகளில் மூங்கில்கண் வைத்துப் பயிர் செய்கிறார்கள்.

ஆண்டாள் கோவில்.— ரஸ்தாவுக்குத் தெற்கே இரண்டு பர்லாங்கில் பாடல் பெற்ற சிவாலயமுள்ளது. எல்லாம் உடையார் வகுப்பாராயும், சேதுராயர், மழவராயர், வாண்டையார் முதலானவர்களும், கைத்தொழிலாளிகளுமிருக்கிறார்கள். 50 வீடுகளுண்டு. இங்கேயுள்ள ஜெம்புலிங்கேஸ்வரர் ஆலயத்தை நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் திருப்பணி வேலைசெய்து வருகிறார்கள். விசேஷமாய் சவுக்கு சாகுபடி. தேங்காய் வியாபாரம் நடந்து வருகிறது. நெல் பிரதானம்.

## SECURING ATTENTION.

BY
V. KUPPUSAMI AIYAR.

## கவனத்தைக் கவருவது.

சிறுவர்களுடைய வயது எதுவானாலும், அவர்களுடைய தேர்ச்சி எப்படி இருந்தாலும், கல்வி கற்பிக்க முயலுவதற்கு முதலாக நாம் செய்யவேண்டியது அவர்களுடைய கவனத்தை இழுப்பதே. ஆகையினால், ஒரு உபாத்தியாயர் சரிவரப் போதிக்க வேண்டுமென்றால், முதல் முதல் அவர் தன் சிஷ்யர்களுடைய கவனத்தைக் கவரவேண்டும். இது ஸாதாரணமானதல்ல. அதிலும் இளம் பிள்ளைகளுடைய கவனத்தைக் கவருவது மகா கஷ்டம். எப்படியாயினும் முதல் முதல் பள்ளிக்கூடத்துக்கு வரும் விளையாட்டுச் சிறுவர்களுடைய கவனத்தை இழுக்கத்தான் வேண்டும். ஒரு உபாத்தியாயருக்கு இதுமட்டும் செய்ய வல்லமை இருக்குமானால் மற்றவையெல்லாம் எளிது.

கவனம் என்றால் என்னவெனின் நம் மனதை ஒரேகாலத்தில் பல விஷயங்களில் செல்ல விடாமல், எடுத்துக்கொண்ட ஒரு விஷயத்தில் அதைச் செலுத்துவதே. இச்சக்தி ஸாதாரணமாக இரண்டு வகைப்படும். ஏன் நாம் அதை கவனிக்கிறோம் என்று நமக்கே தெரியாமல் நாம் எவ்வளவு காரியங்களைச் செய்கிறோம். நாம் சில சில காலங்களில் ஓர் அறையில் உட்கார்ந்து மிகுந்த ஊக்கத்துடன் சில நவீனக் கதைகளைப் படிப்பதில் முழுகியிருக்கும்போது அவ்வறையிலுள்ள கடிகாரம் கணீர்கணீர் என்று மணி 12 அடித்தாலும் அது நமக்குத் தெரியாமல் இருக்கவில்லையா? சில காலங்களில் யுத்த பூமியில் ஆவேசத்துடன் சண்டையிடும் போர் வீரர்கள் சண்டை முடியும் வரையில் தங்களுக்குப் பட்ட பெரும் காயங்களையும் உணர்வதில்லை. இவ்விதமாக நமக்குத் தோன்றாமல் மீறிப்போகும் குணமுள்ள கவனம் ஒருவிதமாம். மற்றொன்றோ நாமே ப்ரயாஸைப்பட்டு மனதைச் செலுத்துவது. பெரியோர் சொல்லும் விஷயங்களிற் சில நமக்கு அப்பொழுது வெறுப்பாக இருந்தாலும், சில ஸமயங்களில் மிகுந்த ப்ரயாஸையுடன் நாம் அவைகளைக் கவனிக்கவில்லையா? இப்பேர்பட்ட கவனம் பள்ளிக்கூடத்துக்கு வரும் பிள்ளைகளிடம் இல்லை. சிறு பிள்ளைகளுடைய மனதோ கடலில் இட்ட துரும்பைப் போல் சலனமுள்ளது. ஒரு நிமிஷமாயினும் ஒரு வஸ்துவின்மேல் அவர்கள் கவனம் நிலைத்துநில்லாது. ஆகையால், சிறுவர்களிடமிருந்து அவர்களுக்குத் தெரியாமலே நாம் அவர்களுடைய கவனத்தைக் கவரவேண்டுமே தவிர நம்முடைய இஷ்டம்போல் அவர்களுடைய கவனத்தைச் செலுத்த உபத்திரவிப்பது மிகுந்த மூடத்தனம்.

‘நீங்கள் இப்படிச் செய்யவேண்டும், நீங்கள் அப்படிச் செய்யவேண்டும்’ என்று சொல்லி பயமுறுத்துவது வீணாகுமே தவிர, ஒருபோதும் அவர்களுக்கு அது பலனைத் தராது. பள்ளிக்கூடத்துக்குப் போகும் சிறுவர்கள் மன உறுதி என்பதே தெரியாதவர்கள். எப்படிச் செய்தால் அவர்கள் மனதைக் கவர்ந்து கவனத்தை இழுக்கலாமோ அப்படி நம்முடைய போதனா முறைகளைத் திருத்தவேண்டும். காலக்கிரமத்தில் நாம் சிறுவர்களுக்கு கல்வி ஊட்டுவதும்தவிர, அவர்களுடைய கவனத்தை அவர்களுக்கு மனோவசப்படும்படி செய்வதே உபாத்தியாயர்களுடைய முக்கிய நோக்கமாம்.

இச்சிறுவர்களுடைய கவனத்தைக் கவரவேண்டுமானால் அவர்களுக்கு நாம் கற்பிக்கப் போகும் விஷயத்தில் ஒரு உற்சாகத்தை ஊட்ட வேண்டும். புத்தி பிரமிக்கப் பாடும்



பாடகர்களும், மனமுருக ப்ரஸங்கம் செய்யும் பாவலர்களும் சலியாமல் வாதிக்கும் வக்கீல்மார்களும், கண் பறிக்கும்படி சித்திரம் வரைவோரும், அவரவர் தொழில்களில் மனதைக் கவரும் பாகங்களை அவரவர்கள் நன்றாக அறிந்திருக்கவேண்டுமல்லவா? அதைப்போலவே உபாத்தியாயர்களும் அவர்கள் தொழிலுக்கு ஸம்பந்தமான மட்டில் கவனத்தை ஆகர்ஷிப்பதற்காக வேண்டிய உபபலங்களைப் பற்றி அறியாமல் இருப்பதும் நியாயமாமோ? இங்கு அல்லவோ உபாத்தியாயர்களது தொழிலின் முக்கிய அம்சத்தை நாம் காண்கிறோம். ஆகையினாலே; இதர தொழில்களைவிட உபாத்தியாயர்களது தொழில் அதிக கஷ்டமானது என்று நன்கு புலப்படவில்லையா? நாம் ஒவ்வொருவரும் முதல் முதல் உபாத்திமார்கள் கையின் மூலமாய்த்தான் போகவேண்டி இருக்கிறது. தவிர உபாத்திமார்களல்லவா முதல் முதல் எல்லாரையும் கைபிடித்து இருட்டிலிருந்து வெளிச்சத்தில் கொண்டுவந்து அவரவர்களுக்கு ஏற்ற வழிகளில் நடக்க ஒத்தாசை செய்பவர்கள். சிறுவர்களுடைய கவனத்தை ஆகர்ஷிக்க அவர்கள் தாமாகவே எல்லாவற்றையும் அறிந்துகொள்வதில் உள்ள அவாவையே ஒரு கருவியாகக் கொள்ளலாம். இங்குமங்கும் ஓடி விளையாடிக் காலத்தைக் கழிக்கும் பிள்ளைகளின்முன் அவர்களுக்குத் தெரியாத சிலவற்றைக் கொண்டுவந்து காட்டி அவர்களுடைய ஆசையைத் தூண்டிவிட்டால் கையைக் கட்டிக்கொண்டும், வாயைப் பொத்திக்கொண்டும், அவர்கள் அவைகளை அறிந்துகொள்ளச் சித்தமாக இருப்பதை நாம் எத்தனை முறை பார்த்திருக்கிறோம்? உபாத்தியாயர் என்ன சொல்லப்போகிறார் என்பதைக் கேட்க ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்படி அல்லவோ பிள்ளைகளுடைய மனதைஉற்சாகப்படுத்தவேண்டும்? இவ்விடத்தில் நாம்கவனிக்க வேண்டிய சில முக்கியமான விஷயங்கள் உள. பிள்ளைகள் ஸாதாரணமாக, பார்வை, கேள்வி, ஸ்பரிசம், முதலிய புலன்களாலே அதிகமாக விஷயங்களை அறிகிறார்கள். ஆகையினால், ஒரு உபாத்தியாயர் இந்த மூன்று புலன்களையும் போதனைக் கருவிகளாகக் கொண்டு ஒரே விஷயத்தை போதிக்கத் தொடங்குவாரேயானால், மிகச் சுலபமாக பிள்ளைகளின் மனதில் கடினமான பாகங்களும் பதியும். யானையைப் பார்த்திராத ஒருபிள்ளைக்கு நாம் முழுமையும் யானையைப்பற்றி வர்ணிப்பதை விட யானையைப் போல் ஒரு சிறுபடம் வரைந்து காண்பித்தால் எவ்வளவு சீக்கிரத்தில் அவன் யானையின் முக்கியஅம்சங்களை அறிந்துகொள்வான். சாதுர்யமாகப் பேசக் கூடியவர்கள் பேசும்பொழுது நாம் அவர் முகத்தைப் பார்க்க என்ன பிரயாஸைப்படுகிறோம். நாடகங்களைப் படிப்பதை விட நாடகங்களை நேரில் பார்த்தால் எவ்வளவு ஆனந்தம் உண்டாகிறது. வயதுமுதிர்ந்தநமக்கு எப்படி த்வனி மாத்திரம் போதாமல், ஒரு சங்கீத வித்வானை நேராயும் பார்ப்பதில் அதிக ஆனந்தம் உண்டாவது இயல்பாக அமைந்திருக்கிறதோ, அதேமாதிரி சிறுவர்களுக்கும் செவியோடுகூட கண்ணையும் சேர்த்து உபயோகித்தால் அதிக உற்சாகம் என்பதற்கு ஐயமுண்டோ? ஸாதாரணமாக பிள்ளைகள் தாவரநூல், ஜீவவர்க்க நூல், ரஸாயனநூல் முதலியவைகளைக் கற்பிக்கும்போது பிள்ளைகள் அதிக பிரமையுள்ளவர்களாக ஆவேசத்துடன் உழைக்கிறார்கள். இங்கே அவர்கள் நேரே கண்ணால் பார்க்கவும், கையால் தொடவும் இடம் அதிகமாக இருக்கின்றது. ஆகவே, உபாத்தியாயர்கள் எங்கு எங்கு முடியுமோ அங்கங்கே படங்கள் வரைந்து காட்டுவதனா

லும் அல்லது வஸ்துக்களையே கொண்டுவந்து நேரில் காட்டுவதனாலும் பிள்ளைகளுக்கு அதிக உற்சாகத்தை ஊட்டுகிறவர்களாவார்கள். தவிர, ஆசிரியர் எவ்வளவுக்கெவ்வளவு உற்சாகத்துடன் போதிக்கிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு உற்சாகத்துடனே பிள்ளைகளும் கற்றுக் கொள்வார்கள். ஆசிரியர் ஒருவர் மகாவெறுப்புடனும் ஈன ஸ்வரத்துடனும் உயிரில்லாதவர்போல கண்களை இறுக மூடிக்கொண்டு வாயால் முணுமுணுத்தால் பிள்ளைகள் உற்சாகத்துடன் அதை கவனிப்பதை எப்படி நாம் எதிர் பார்க்கலாம். இப்படிப்பட்ட உபாத்தியாயர்களிடத்தில் பயிலும் பிள்ளைகள் நாளடைவில் உபாத்தியாயரைப்போலவே உயிரற்றவர்களாகி ஊண் உறக்கத்தில் கூட அமிதமானவர்களாவார்களல்லவா ?

பிள்ளைகளுக்குக் கடினமான விஷயங்கள் போதிக்கப்படும் காலங்களில் முதலில் இருந்ததைவிட உற்சாகம் கடைசியில் குறையாமலிருக்குமா ? இதற்குத் தகுந்த சிகிச்சை என்ன ? கவனத்திற்கு சிரமம் தரக்கூடிய சில பாடங்களை அவ்வளவு கஷ்டமில்லாத பாடங்களுக்கு இடையில் போதனை செய்வதே. மேலும் நாம் எப்படி வைத்துக்கொண்டால் பிள்ளைகளுக்கு சிரமம் அவ்வளவாகத் தெரியாதோ அவ்விதமாக எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளுவதே உத்தமம். தினஸரி பாடங்களை வரிசையாகவே தினம் நடத்த வேண்டுமென்று கொஞ்சமாவது பிள்ளைகளின் ஸௌகரியத்தை யோசியாமல் குருட்டுத்தனமாய் தினம் பாட அட்டவணையையே அநுசரிப்பது அநுகூலமாகாது என்பதே எமது கொள்கை. இதனால் மனம் போனபடி மாற்றிக் கொள்ளலாம் என்று நாம் அபிப்ராயப்படவில்லை. பிள்ளைகளின் ஸௌகரியத்தை அதிகமாகக் கருதியே பாடங்களை வரிசைப்படுத்த வேண்டும்.

வி. குப்புஸாமி ஐயர்,

## BAT GUANO AND ITS USES.

## வௌவால் புழுக்கையும் அதன் உபயோகமும்.

வௌவால் புழுக்கை நிலத்துக்கு எருவாக உபயோகப்படுமென்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். ஆனால் மற்ற எருக்களைப்போல, போதுமான அளவு கிடைக்கிறதில்லை. வௌவால்கள் அவைகளுக்குத் தகுதியான குகைகளில் தான் வந்தடையும்; அப்படி நல்ல குகைகள் இந்தியாவில் இல்லை. பர்மாவைச் சேர்ந்த தென்னாஸரிம் மாகாணம், தென் மேற்கு சீன தேசம், மலே நாடுகள், லங்கைத் தீவு, இவ்விடங்களில் வௌவால் வந்தடையும் குகைகள் இருக்கின்றன. அங்கங்கே சேகரிக்கப்படுகிற வௌவால் புழுக்கைகளை வேறு வேறு விதமாக உபயோகிக்கிறார்கள். சீனர்கள், வௌவால் புழுக்கையை கறிகாய்ப் பயிருக்கு உரமாக உபயோகிக்கிறார்கள். தவிர, "ஏமிங்ஷா" என்ற பெயரோடு ஒரு மருந்தாயும் இதை உபயோகிக்கிறார்கள்.

பலுசிஸ்டான் தேசத்தில் வௌவால் புழுக்கையை, வெட்டைச் சூட்டு வியாதிக்கு "காம்யாப்ட்" என்ற சொல்லப்படுகிற மருந்தாய் உபயோகிக்கிறார்கள்

இந்தியாவில் சில இடங்களில்தான் வௌவால் புழுக்கையை சிரத்தையோடு சேகரம் செய்கிறதாகத் தெரிகிறது. நமது ராஜதானியில் நெல்லூர், கர்நூல் ஜில்லாக்களில் மாத்திரம் வௌவால் புழுக்கை சேகரிக்கப்படுகிறது. கடப்பை ஜில்லா, சென்னூர் கிராமத்தில் முலாம்பழம் பயிர் செய்கிறவர்கள் வௌவால் புழுக்கயை உபயோகப்படுத்தினதாகத் தெரிகிறது. விசாகபட்டணத்துக்குக் கொஞ்சம் வடகிழக்கில் வௌவாற் குகைகளிருக்கின்றனவாம். ஆனால் அவைகள் ஏரமுடியாதனவையாயிருக்கின்றன. பெஜவாடாக் குன்றுகளில் வௌவால் புழுக்கை கொஞ்சம் அகப்படுகிறதாம் இவைகள் தவிர, பம்பாய் ராஜதானியில் கத்தியவார் என்னுமிடத்திலும், பெஷாவர் ஜில்லாவிலும் கொஞ்சம் கொஞ்சம் அகப்படுகிறது.



## SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

——:o:——

## WARNING TO TANNERS.

## தோல்ஷாப்புக்காரருக்கு அறிவிப்பு.

ஒரு அநுபோகஸ்தர் சுதேச மித்திரனில் பின்வருமாறு எழுதுகிறார்:—

தோல்களுக்குச் சுண்ணாம்புக் காரம் கட்டி, முடியச் சுத்தம் செய்த பிறகு, இளங்காரம் வேலை செய்யும்போது ஷாப்புக்காரர் சுண்ணாம்பைக் கக்க வைப்பதற்காக பலவிதமான வேலைகளைச்செய்து வருகிறார்கள். ஆனபோதிலும், அவைகளெல்லாம் சரியானவைகளல்ல. அவைகளால் நேரிடக்கூடிய கெடுதிகள் அநேகம் உண்டு. தோல்களில் மேனிப் போக்கு, நாள்பட வைத்தால் தோல்களில் தொண்டி விழுதல், வர்ணம் மாறுபாடுதல், இவைகளையெல்லாம் நாம் ஸாதாரணமாய் அநுபவத்தில் தினந்தோறும் பார்த்து வருகிறோம். இளங்காரம் செய்யும்போது சரியானபடி சுண்ணாம்பைக் கக்க வைப்பதற்கு நூதனமாய் ஒரு திராவகம் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது தோல் ஷைன்செய்யப்படும் எல்லா ஊர்களிலும் விசேஷமாய் உபயோகப்பட்டு வருகிறது. இந்தத் திராவகத்தின் பெயர் லாக்டிக் ஆஸிட். இதை உபயோகப்படுத்துவதனால், தோலின் மயிர்க்கால்களில் அடைந்திருக்கும் சுண்ணாம்புக் காரத்தைச் சுத்தமாய் வெளிப்படுத்திவிடுகிறது. சரக்குகளுக்கு நன்றாய் ஊட்டம் உண்டாகிறது. இந்தத் திராவகம் உபயோகப்படுத்தின பிறகு பட்டையும் கடுக்காயும் நன்றாய்ப் பிடிக்கின்றன. இது அழுக்கு, இரும்புக் கறை முதலானவைகளை நன்றாய்ச் சுத்தப்படுத்தி விடுகிறது. தோல்களை நன்றாய்ச் சலவை செய்து வெளுமையாக்கும் குணமுமுண்டு. இப்பேர்ப்பட்ட நல்ல குணங்களெல்லாம் இருக்கிறபடியினால்தான் அமெரிக்கா, ஜர்மெனி, இங்கிலாந்து முதலான நாகரீகமுள்ள தேசங்களில், தோல் இளங்காரம் செய்யும்போது, இந்தத் திராவகம் தவிர சுண்ணாம்பைக் கக்கவைக்க வேறே எந்த வஸ்துவையும் உபயோகப்படுத்துகிறதில்லை. இந்தத் திராவகத்தை உபயோகப்படுத்துவதனால் ஷைன்தோல் ஸாதாரணமாய் வரக்கூடிய எடைக்குக் குறைவுபடுகிறதில்லை. அதிகமும் வரக்கூடும். அது தண்ணீரினுடைய வளத்தைப் பொறுத்தது.



### உபயோகிக்கும் விதம்.

வெள்ளாடு செம்மறித் தோல்களுக்கு:— ஸாதாரணமாய் முதலில் இளங்காரம் செய்யும் போது, இரண்டு கார் வாங்கிய பிறகு தொட்டியில் தண்ணீரோடு, 100 தோலுக்கு $1\frac{1}{2}$ ராத்தல் விகிதம் கொடுத்து நன்றாய்க் கலக்கிய பிறகு அதில் கார்வாங்கிய தோல்களை விட்டு, தோல்களைக் கீழ் மேலாக 2 மணி நேரம் திருப்பிக்கொண்டு வரவேண்டும். அதன் பிறகு, தண்ணீரை வடியப்போட்டு சரக்குகளை நன்றாய் சுத்த ஜலத்தில் கழுவி, பிறகு மூன்றாவது கார் வாங்கி மறுபடியும் பழையபடி தொட்டியில் தண்ணீருடன் 100 தோலுக்கு ஒரு ராத்தல் விகிதம் கலக்கி அதில் மறுபடியும் சரக்குகளை விட்டுச் சுமார் ஒரு மணி அல்லது $1\frac{1}{2}$ மணி நேரம் ஆனபிறகு சரக்குகளையெடுத்து அப்படியே (சுத்த ஜலத்தில் கழுவாதபடிக்கு) பட்டைத் தொட்டியில் கொண்டுபோய் விடவேண்டும். பிறகு எல்லாம் மாமூல்படிக்குச் செய்கிற வேலை.

மாட்டுத் தோலுக்கு:—ஷைன் செய்தபிறகு 100 ராத்தல் வரக்கூடிய அளவுள்ள தோலு

க்கு முதலில் ஒரு கார் வாங்கியவுடன், தொட்டியில் $2\frac{1}{2}$ ராத்தல் விகிதம் திராவகம் கலந்து அதில் தோல்களை விட்டு, சுமார் 4 மணி நேரம் சரக்குகளைக் கீழ் மேலாய்த் திருப்பிக்கொடுத்த பிறகு தொட்டித் தண்ணீரை வடியப்போட்டு, தோல்களை இரண்டாவது தரம் கார்வாங்கி, மறுபடியும் பழைய படி 100 ராத்தல் வரக்கூடிய ஷைன்தோலுக்கு $1\frac{1}{2}$ ராத்தல் விகிதம் தொட்டியில் தண்ணீருடன் கலக்கிச் சரக்குகளை மறுபடியும் தொட்டியில் விட்டுச் சுமார் 2 அல்லது 3 மணி நேரம் ஆனபிறகு பட்டைத் தொட்டிக்குக் கொண்டுபோக வேண்டும். (மறுபடி சுத்த ஜலத்தில் கழுவாமல்) சில தண்ணீரினுடைய குணத்தினால் தோல்களில் புரசல் உண்டாவதுண்டு. அப்பேர்ப்பட்டவைகளுக்கு இந்தத் திராவகம் உபயோகப் படுத்தினால் புரசல் உண்டாகமாட்டாது. தோல்கள் ஊட்டமாயிருக்கும். வர்ணமும் நன்றா யிருக்கும்.

## கன்றுத் தோலுக்கு.

வெள்ளாடு செம்மறித் தோல்களுக்கு உபயோகப்படுத்துகிற மாதிரியே உபயோகப் படுத்த வேண்டும். தொட்டிகளில் ஸாதாரணமாய்ச் சரக்குகள் அமரக்கூடிய வரையில் தான் தண்ணீரில் வைக்கவேண்டும். இந்தத் திராவகத்தை திருவத்தூர், தண்டையார்ப் பேட்டை ஷாப்புக்காரர்கள் சிலரும், சேம்பர்ஸ் துரையவர்கள் ஷாப்பிலும் பெரும்பாலும் உபயோகப்படுத்தி வருகிறார்கள். இவர்களை நேரில் எழுதிக்கேட்டாலும், அதன் விபரத்தைச் சொல்லுவார்கள். இந்தத் திராவகம் ஸாதாரணமாய் சேம்பர்ஸ் அண்டு கம்பெனியில் விலைக்கு அகப்படும். விலை ஸாதாரணமாய் ராத்தல் ஒன்றுக்குச் சுமார் $4\frac{1}{2}$ அணா அல்லது 5 அணா ஆகும். இது தோல் ஷாப்புக்காரர்களுக்கு அதிக முக்கியமானபடியினால், எல்லாரும் முயற்சி எடுத்து இதை உபயோகப்படுத்தி இதன் பலனை அடைய வேண்டும். இதைப் பரிட்சித்துப் பார்த்தால் இதனுடைய பலன்கள் நன்றாய் விளங்கும். சீமையில் தோல் வாங்குகிறவர்கள் இந்தத் திராவகத்தினால் இளங்காரம் செய்யப்பட்ட தோல்களை முக்கியமாய் நல்லதென்று எண்ணி, கவனித்து இந்த சரக்குகளையே வாங்குகிறார்கள். மதராஸ் ஷாப்புகளில் சிலர் இந்த திராவகத்தை உபயோகித்து வந்தபோதிலும் வகையில்லாமல் செய்கிறார்கள். சுண்ணாம்பு நன்றாய்க் கக்கினதைச் சரியாக அறிந்து வேலை செய்கிறதில்லை. அவரவர்க்கு அனுபோகத்தில்தான் தெரிய வேண்டும். சரியானபடி செய்து பார்ப்பார்களேயானால் இந்தத் திராவகத்தை உபயோகம் செய்யாமல் இருக்கமாட்டார்கள். சிலர் சுண்ணாம்பு கக்க வைப்பதற்காகப் பலவிதமான விஷ சம்பந்தமுள்ள உப்புகளை உபயோகம் செய்கிறார்கள். அதனால் அநேகமாய்க் கெடுதிகள் இருக்கின்றன. அந்த உப்புகள் தோல்களைத் தின்றுவிடும். தோல்கள் முதலில் கொஞ்சம் வெளுமையாய்த் தென்பட்டாலும், பின்னிட்டு, வர்ணம் கொஞ்சம் சிவந்தகளையாகக் காட்டும். இந்தத் திராவகம் அப்பேர்ப்பட்டதல்ல. யாதொரு விதமான கெடுதியுமில்லை. இது ஒருவகைப் புளிப்பான காயிலிருந்து தயார் செய்த திராவகம். இதைத் தோல் வியாபாரிகள் முக்கியமாய்க் கவனித்துப் பரிட்சைசெய்து பார்க்கவேண்டும்.

---



## CHAMPION MILCH COWS.

## விசேஷ பால் கறக்கும் பசுக்கள்.

நமது தேசத்திலுள்ள பசுக்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு பட்டணம்படி பாலுக்கு அதிகமாய்க் கொடுப்பதில்லை என்பது நமது நண்பர் எல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். ஏகதேசத்தில் ஒன்றிரண்டு பசுக்கள் நாள் ஒன்றுக்கு நான்கு அல்லது ஐந்து படி பால் கொடுப்பதாகக் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால், ஐரோப்பா, அமெரிக்கா முதலான அயல் தேசங்களில் உள்ள பசுக்கள் ஏராளமான பால் கொடுப்பதாக அடிக்கடி நாம் வாசிக்கிறோம். தற்காலத்தில் கோயம்புத்தூர் ஸர்க்கார் பண்ணையில் விசேஷமான பால் பசுவென்று எண்ணப்பட்ட "பாக்யம்" என்னும் பசு ஒரு வருஷத்திற்கு 3000 பவுண்டு நிறையுள்ள பால் கொடுப்பதாகத் தெரிய வருகிறது. இது 750-பட்டணம் படியாகிறது. அதாவது சராசரியில் நாள் ஒன்றுக்கு 2-1/18 படியாகிறது. சில வருஷங்களுக்குமுன் வட அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலுள்ள மஸாசுஸட்ஸ் என்னும் ஜில்லா மாண்டில்லா நகரத்தில் டீ. டபில்யூ. பீல்ட் துரையவர்களுக்குச் சொந்தமான டீ. கோல் கிரிமெல்லி என்று பெயருள்ள ஒரு சிரேஷ்டமான பசுவானது உலகத்திலுள்ள மற்றப்பசுக்களை விட அதிகமான பால் கொடுத்துக்கொண்டு வந்ததாகத் தெரியவந்தது. ஒரு தினத்தில் அந்தப் பசு $29\frac{3}{4}$ பட்டணம்படி அதாவது 119 பவுண்டு நிறையுள்ள பால் கொடுத்ததாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனால் ஒருவாரத்தில் அந்தப்பசுவின் பாலிலிருந்து எடுக்கப்பட்ட வெண்ணெய் 28 பவுண்டுதான் ஆயிற்று.

அமெரிக்கா தேசத்தில் நியூயார்க்கு மாகாணத்தில் செனங்கோ நாட்டில் ஷேர்போன் என்னும் ஊரில் உள்ள கனேடன் வீஸாஸன் என்பவருக்குச் சொந்தமான ஹோல்ஸி டவுன் நாட்டுப் பசு ஒன்று இருக்கிறது. அதின் பெயர் டிகோல்குவீன்லா போல்கா வென்று வழங்கி வருகிறது. அதை அந்தத் துரை பக்கத்துக் கிராமத்திலுள்ள ஒருவரிடத்தில் ரூ. 525க்கு வாங்கினார். அந்தப்பசு ஒருதினத்தில் கொடுத்த அதிகமான பாலின் அளவு 124 பவுண்டு அதாவது 31 பட்டணம் படி. ஒரு வாரத்தில் அது கொடுத்த பாலின் அளவு $841\frac{3}{4}$-பவுண்டு அதாவது $210\frac{1}{2}$-பட்டணம் படி. ஒரு மாதத்தில் அது கொடுத்த பாலின் அளவு 3377-பவுண்டு அதாவது $844\frac{1}{4}$-பட்டணம் படி. ஒரு வாரத்தில் 34-பவுண்டு வெண்ணெயும் ஒரு மாதத்தில் 146-பவுண்டு வெண்ணெயும் இந்தப் பாலிலிருந்து கிடைத்தது. இந்தப் பசுவின் மேன்மையைப் பாருங்கள். கோயம்புத்தூர் பாக்யம் ஒரு வருஷத்தில் கொடுப்பதைவிட அதிகமான பாலை இந்த மேல்நாட்டுப் பசு ஒரு மாதத்தில் கொடுத்திருக்கிறது. இது மிகவும் ஆச்சர்யமான காரியமல்லவா?

சைரகியூஸிலுள்ள . எச். எஸ் மேயர் துரையவர்களுக்குச் சொந்தமான இரண்டாவது க்ரேஸ்பெயன் ஹோம்ஸ்டெட் என்னும் ஒரு பசு ஒருவாரத்தில் கொடுத்த பாலிலிருந்து $35\frac{1}{2}$-பவுண்டு வெண்ணெய் எடுக்கப்பட்டது. வெண்ணெய் சாரத்தில் இந்தப்பசு மேற்சொன்ன பசுவைவிடச் சிறந்தது. இப்படி வெண்ணெய் சாரத்தின் மேன்மையைப் பரீக்ஷித்தறிந்தவுடனே அந்தப் பசுவுக்கு 1600-பவுண்டு அதாவது 24,000 ரூபா விலை கொடுப்பதாகச் சிலர் தெரிவித்தும் அதை விற்க மேயர் துரையவர்களுக்கு மனம் வரவில்லை. இவ்விதமாய் உலகப் பிரசித்தியடைந்தபோது அதற்குண்டான திருஷ்டி தோஷத்

தாலோ, வேறு என்ன காரணத்தினுலோ ஒருவாரத்திலெல்லாம் அப்பசுவுக்கு ஸ்வாஸாய ஆழற்சி என்னும் வியாதியுண்டாகி எவ்வித சிகிச்சை செய்தும் குணமாகாமல் மரணமடைந்தது. அதன் காளைக் கன்றுக்கு 15,000 ரூபா வரை விலை மதிப்பு ஏற்படக்கூடியது என்று தெரியவருகிறது.

விஸ்கான்வலின் மாகாணத்தில் இதற்கு ஒரு விதத்தில் சரிசமானமாய்ச் சொல்லக்கூடிய நான்காவது கோலரெத்தின் ஜோஹன்னு என்று பெயர் வழங்கிய ஷெர்போர்ன் நாட்டுப் பசு ஒன்று கில்பர்ட்என்னும் ஒரு துரையிடத்திலிருந்தது. இது ஒரு மாதத்தில் சற்றுஏறக்குறைய 670 படி பால் கொடுத்தது. அதன் பாலிலிருந்து வெண்ணெய் ஒருவாரத்தில 35¼ பவுண்டும், ஒருமாதத்தில் 138½ பவுண்டும், ஒரு வருஷத்தில் 1248 பவுண்டும் கிடைத்ததாகக் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது.

இந்தப் பசுவுக்கும் அதின் காளைக் கன்றுக்கும் 45,000 ரூபா விலை கொடுப்பதாக அனேகர் பேசினுர்கள். என்ருலும் அவைகளை விற்க கில்பர்ட் துரை சம்மதிக்கவில்லை.

இப்பசுக்களை இவ்வளவு அதிகமான பால் வெண்ணெயைக் கொடுக்கும்படி செய்தவை மனுஷ சக்தியும் பிரயத்தனமும் விடாமுயற்சியுந்தான் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இதை வாசித்தவுடனே சிலர் அவைகள் மேல்நாட்டுப் பசுக்கள்! காமதேனுவுக்கு ஸமானமாய் கடவுள் அவைகளைச் சிருஷ்டித்திருக்கிருர். அவைகள் கலங்கலமாய்ப் பால் கொடுப்பதில் என்ன ஆச்சரியம்? நமது நாட்டுப் பசுக்கள் நலாயிரம் வருஷம் தபஸ் செய்தாலும் அவைகளில் நூற்றிலொருமடங்கு பால் கொடுக்கும் சக்திகூட அடையமாட்டா. இது நிச்சயமான சமாசாரம்" என்று பேசிவிட்டுப் போய்விடுவார்கள். எல்லாரும் அப்படிச் செய்யக் கூடாது. மேல்நாட்டில் பசுக்களுக்குப் பால் அபிவிர்த்தி யாக்குவதற்கு வெகு காலமாய் விடாப்பிடியாய் பலவித முயற்சிசெய்து வருகிருர்கள் என்பது அனேகருக்குத்தெரியும். அந்தக் காரியங்களை நாமும் உணர்ந்து அம்முறைகளைக் கையாடிவந்தால், நமது பசுக்களும் விசேஷ விர்த்தியடையு மென்பதில் யாதொரு தடையுமில்லை.

மைசூர் நாட்டுக் காளைகள் இப்போதும் பலத்திலென்ன; வெகு தொலைக்கும் கடும் பாரம் இழுத்துச் செல்லும்ஆற்றலில் என்ன; வெகு விரைவாய் ஓடும் சக்தியிலென்ன; இக்காரியங்களில் மற்றத்தேசத்துக் காளைகளைவிடச் சிலாக்கியமானவைகளா யிருக்கவில்லையா? நமது ஓங்கோல் நாட்டுக் காளைகளையும் பசுக்களையும் அயல் தேசங்களிலிருந்து அனேகர் வந்து வருஷா வருஷம் வாங்கிக்கொண்டுபோக வில்லையா? இவைகளையெல்லாம் நமது கிருஷிகர் அதிசிரத்தையுடன் விர்த்தி செய்ததனுலல்லவோ அவைகளுக்கு அந்தச் சிறப்பு ஏற்பட்டது? அதுபோல வெகு காலத்துக்கு விடாப்பிடியாய் முயன்று வந்தால் பசுக்களின் பால் வெண்ணெய் சாரத்தையும் விசேஷமாய் விர்த்தி செய்யலாமென்பதில் தடையில்லை. ஆனுல் நாமிப்போது செய்வதுபோல் நமது முதல் தரமான பசுக்களையும் பொலி எருதுகளையும் அயல் தேசத்தாருக்கு விற்கக்கூடாது. நம்மிடத்திலிருக்கும் அதிசிலாக்கியமான கால்நடைகளைப் பொறுக்கி யெடுத்து அவைகளைக் கொண்டு வர்க்க விர்த்தி செய்துகொண்டே வரவேண்டும். தற்காலத்தில் இதனுல் லாபம் இல்லாததுபோல் தோன்றினுலும், நாளடைவில் மிக்க லாபமடைவோம் என்பதில் சந்தேகமில்லை. அப்போது,

* * * *

"தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலை பற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்
[பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோரெம்பா
[வாய்."

என்று ஆழ்வாராசாரியர்கள் திருவாய் மலர்ந்தருளியது உண்மையென்பது உலகப் பிரசித்தமாகும்.

கிருஷிகன்-ஜே. தர்மரங்க ராஜு.



SOME REFORMS.

## சில திருத்தங்கள்.

ஒரு தேசமானது செழிப்புற்று விளங்க வேண்டுமானுல், அத்தேசத்தாரிடம், ஐக்கிய பாவம், தேசாபிமானம், பரஸ்பர நம்பிக்கை, சுயநலம் கருதாமை, (தேசத்து ஜனசமூகத்தின் க்ஷேம லாபங்களைத் தம்முடையதாகப் பாவித்து நடத்தல்) இத்தியாதி குணங்கள் இருக்க வேண்டியது அத்யாவசியகமாம். நம்மை ஆளும்மேனுட்டவரிடம் இக்குணங்கள் (கூட்டு வியாபாரம், ரகஸ்யமான விஷயங்களையும் வெளியிட்டு எல்லோரும் லாபமடையும்படிச்செய்தல், தேசத்தாரின் கட்டுப்பாட்டின் வரம்பை மீருதிருத்தல் முதலியன) குடிகொண்டிருப்பதால்தான், அத்தேசத்தின் வளப்பமும், செல்வப் பெருக்கும், கல்வி அபிவிருத்தியும், உலகத்திலுள்ள சந்து பொந்துகளிற்கூடப் பரவியிருக்கின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்குவிளங்கும். நம் தேசத்திலோ அத்தகைய ஒற்றுமையும், நம்பிக்கையும் உண்டாவது புலிப் பாலாக இருக்கிறது. ஆதலால், நம் தேசத்திற்கு முக்கியமான விஷயங்களை வெளியிடுவதற்கும், அதனுல் ஜனங்கள் நன்மையடைவதற்கும் பத்திரிகையே சாதனமென்று சொல்லவேண்டும். தற்காலம் பணப் பெருக்கும், செலவும் மிகுதி என்ருலும், விதரணை இல்லாமல் வீணுகிவிடுகிறது. தேச மாதாவுக்கு சிரோரத்தினமாய் விளங்கும் கிராம வாஸிகளான விவஸாயிகளுக்கு நிஷ்பிரயோஜனமான செலவைக் குறைப்பதும், நவீன ரீதியை யறிந்து அதன்படி செய்து லாபமடைவதும் அருமையாகும். ஆகையால், அப்படிப்பட்ட விஷயங்களைப் பரவச் செய்வதற்கு அடியிற்கண்ட சீர்திருத்தங்கள் செய்தல் அவசியம். அவை வருமாறு.

1. கிராமத்திலுள்ள பெரிய (அல்லது பொதுவாக) மிராசுதார்கள் ஒன்றுசேர்ந்து பொது நன்மையான காரியங்களுக்கென்று ஒரு கட்டிடம் கட்டல்.

2. எந்தக் காரியம் செய்யவேண்டியிருந்தாலும், மேற்படி கட்டிடத்தில் கிராமத்தார் ஒன்றுகூடி ஆலோசித்து நடத்தல்.

3. ஒவ்வொரு கிராமத்திலும் உண்டாகும் லாபம் நஷ்டம் அந்தந்த கிராமத்து ஜனங்களைச் சேருமேயொழிய வேறில்லை. ஆதலால், தண்ணீர்ச் சண்டை என்னும் யுத்தத்தில் வீணுகப் பணத்தைச் செலவுசெய்து கிராமத்தின் கௌரவத்தையும், செல்வத்தையும் குறைக்காமல் அவரவருக்கேற்றபடி பொறுமையுடன் பாய்ச்சிக்கொண்டு ஒற்றுமையோடிருத்தல்.

4. ஒவ்வொருமிராசுதாரிடமும் வேலியொன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் வசூல்செய்து, நமது தேச க்ஷேமத்தைக் கோரி நடத்தப்பட்டுவரும் பிழைக்கும் வழி, தென்னிந்தியா விவசாயம், விவேக போதினி, வித்யா விஹாரிணி முதலான மாதச் சஞ்சிகைகளையும் சுதேச மித்திரன் முதலிய வர்த்தமானப் பத்திரிகைகளையும், விவஸாய போதினி, விவஸாய விளக்கம், இத்தியாதி புஸ்தகங்களையும் வரவழைத்து மேற்சொல்லிய பொதுக் கட்டிடத்தில் வைத்து எல்லோரையும் வந்து படிக்கும்படி கட்டாயப்படுத்தல். இதில் கூறியவைகளை படிப்பதால் கைத்தொழில், ஜீவன உபாயம், விவசாய ஞானம், வியாபாரம், நன்னடக்கை, ஜீவவிவேகம், தெய்வ பக்தி, மனஸ்ஸந்துஷ்டி, காருண்யம், கால சுபாவம், லோக வர்த்தமானம், பணம் சேர்க்கும் உபாயம் முதலிய பலவித நன்மைகள் உண்டாவதால், இஹத்தில் சகல க்ஷேமத்தையும் பரத்தில் மேலான பதவியையும் அடைவார்கள்.

5. கிராமத்தலைவரான மிராசுதார் (அல்லது கிராம முன்சீப்) கிராம வாஸிகளிடம் படிப்

பின் நலத்தை எடுத்துக் கூறி அவரவர் சக்திக்குத் தக்கபடி பணம் வசூல்செய்து முன் சொல்லிய பொதுக் கட்டிடத்தில் பாடசாலையொன்றேற்படுத்தி தேசபாஷையும், ஆங்கிலமும் கற்ற ஒருவர், அல்லது இருவரை உபாத்தியாயராக நியமித்து சிறுவர் சிறுமிகள் இருபாலரையும் படிக்கும்படி வற்புறுத்தல்.

6. விவாகாதி சுபகாரியங்களில் ஊரார் மெச்சும்படி வீண் டம்பத்தைக் கருதி உள்ள நிலத்தையு மழித்துக் காசைக் கரியாக்கிக் கடன்பட்டுப் பரிதபிக்கும்படியான செலவு செய்யாமல் கூடியமட்டிலும் விதிவிலக்கை அனுசரித்துப் பணச்செலவுசெய்தல். (சாஸ்திர விதிகளை யோசித்துப் பார்த்தால், நமது நன்மையைக் கருதியே முன்னோர் செய்ததாகப் புலப்படும்.)

7. பெண்களுக்கு விவாகத்தை அதி பாலியத்தில் செய்யாமலும், தர்மசாஸ்திரத்தின் வரையறை கடவாமலும், அவரவருக்குத் தகுந்த குணம், கல்வி, ரூபம், செல்வம், இவைகளுக்குத் தகுந்தபடி அவரவர்கள் விருப்பத்தை அனுசரித்து ஆடவர்க்கு பாணிகிரஹணம் செய்வித்தல்.

8. வரதக்ஷிணை என்னும் கொடிய வழக்கத்தை நிறுத்திவிடுதல். சாஸ்திர விரோதமானதும் ஜனக்ஷேம ஹானிகரமானதுமான இந்த ஏலங்கூறும் துர்வழக்கத்தை நாகரீகம் மிகுந்த ஆரியர்கள் ஏன் கையாடவேண்டும்?

9. அந்தந்தக் கிராமத்து ஏழை ஜனங்களை வெளிதேசங்களுக்கு அனுப்பாமல் பார்த்து வருவதன்றி, அவரவருக்கு ஏற்றபடி சமீபமான இடங்களில் வேலை செய்துவைத்து ஜனவிர்த்திகரமான முயற்சியைச் செய்தல். இது மிகவும் சிறந்த தர்மமாகும்.

10. ஜனங்களுடைய நன்மையைக் கோருவதாகப் பேர் மாத்திரம் வைத்துக்கொண்டு பிரஜைகளுடைய பணத்தை உறிஞ்சும் விவாக மரண சகாய சங்கம், லாட்டேரி முதலிய மோசகரமான செய்கையில் கவர்ன்மெண்டாரைக் கவனிக்கும்படி செய்தல்.

11. கிராமத்தில் களவு போகாதிருக்க வேண்டி கேடிப் பேர்வழிகளையும், வரவுக்கு மிஞ்சி செலவு செய்வோரையும், அடிக்கடி கவனித்து மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு செய்தல். இதனால் சூதாட்டம், மாடுபிடித்தல், முதலிய தீச்செயல்கள் ஒழிந்துவிடும். இதற்கு கிராம முனிசீப்பே பாத்தியப்பட்டவர் ஆவர்.

12. குடியால் வரும் துன்பத்தை எடுத்துக் கூறி கூடுமானவரை திருத்த முயலுதல். இது விஷயத்தில் காருண்ய கவர்ன்மெண்டார் அவர்கள் அருமையானதோர் சட்டம் ஏற்படுத்தல் அத்தியாவசிகமாம். தன்னை நேசிப்பவனைக் கெடுப்பதன்றிப் பின்வரும் சந்ததியாரையும் யெரிக்கும் நெருப்புப் போன்றதான இம்மதுவை இந்து தர்மசாஸ்திரத்தில் பஞ்சமகாபாதகத்தில் ஒன்றாகக் கூறப்பட்டிருப்பதும் இக்காரணம் பற்றியே.

13. அந்தந்த பூமியின் சாரத்தை அறிந்து அதற்குத் தகுந்த விருக்ஷங்களை வைத்து விருத்தி செய்தல். இதனால் நாடுவளப்பமும் மழையும் அதிகப்படுமென்பது சிறந்த ஒரு கொள்கை.

14. சுகாதாரத்திற்குக் காரணங்களான ஏரி, குளம், முதலான ஜலாதாரங்களைச் சுத்தமாகப் பாதுகாத்தல். இதனால், காலரா முதலிய கொள்ளை நோய்கள் அணுகாதிருக்க வழியுண்டு.

15. தக்க பண்டிதரைக் கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயாதி முக்கியமான விஷயங்களைக் குறித்து உபந்யாஸிக்கச் செய்தல்.

16. கிராம தேவதைகளுக்கும் சிவ விஷ்ணுவாதி ஆலயங்களிலும் பூஜை முதலியன சரிவர நடத்தல்.

17. இரவில் ராமாயணம், பாரதம், பாகவதம், முதலிய சரித்திரங்களைப் படிப்பித்தல். இதனால் இதிஹாஸ ஞானமும், கடவுளிடத்து அன்பும், அதன் மூலமாகிய சகல நன்மைகளு முண்டாவதோடு கொடிய செய்கைகளும் நீங்கி, மனச் சுத்தி யுண்டாகும்.

19. கிராமப் பஞ்சாயத்தார் ஏற்படுத்தி சில்லரைவழக்கு விஷயங்களை தீர்த்துக்கொள்ளலாம்.

20. ஜன சமூகத்திற்கு அவசியமான காரியங்களை கிராமப் பஞ்சாயத்தார் மூலமாய் ராஜாங்கத்தாருக்குத் தெரிவித்து அவர்களுடன் ஒத்துழைத்து ராஜ விசுவாசத்தையும், பொதுஜன நன்மையையும் விரும்பல்.

சக்கரவர்த்தினி.



## VEGETARIANISM.

## சாக பக்ஷணம்.

---

சாகபக்ஷணங்களிற் சிலமுக்கிய பதார்த்தங்களைப் பற்றி கீழே குறிக்கிறோம்.

1. சாகங்கள்:—எண்ணெய் அடங்கிய பருப்புக்கள், தேங்காய், எள், நிலக்கடலை வாதுமைப் பருப்பு, முந்திரிப் பருப்பு, காட்டு மாம்பழப் பருப்பு, (காரப்பருப்பு) இவைகள் போன்ற எண்ணெய் அதாவது கொழுப்படங்கிய பருப்பு வர்க்கங்கள் மிக உயர்ந்த ஆகார திரவியங்கள். இவைகளில் ஏதாவது ஒன்றை ஆகாரத்துடன் சேர்த்தே மாம்ச பக்ஷணிகளாக இல்லாத சாக பக்ஷணிகள் அவசியம் சாப்பிட வேண்டும். நமது நாட்டார்கள் இவைகள் எல்லாம் பித்தத்தை உண்டாக்குகின்றன என்பதாயின் இவைகளுடன் சர்க்கரை அல்லது வெல்லம் கலந்து புசிப்பதால் ஒருவிதப் பித்தமும் உண்டாகிறதில்லை என்பது வைத்தியர்களுடைய கொள்கை.

2. மசால்:—மிளகு, மிளகாய், கடுகு, பெருங்காயம், இவைகளெல்லாம் இவ்வினத்தின் கீழ்ச் சொல்லலாம். சாக பக்ஷணிகளுக்கு இவை அதிகமாக வேண்டியிருப்பதால் இவைகளாலுண்டாகும் அழலை எண்ணெய் கலந்த பருப்புகளாகிய தேங்காய் முதலியவைகள் ஒருவாறு தணிக்கின்றன என்றும், ஆகையால் தான் சாக பக்ஷணிகளுக்கு தேங்காய், நிலக்கடலை, முதலிய எண்ணெய் சேர்ந்த பதார்த்தங்கள் அவசியம் உணவாக வேண்டும் என்றும் சொல்லப்படுகின்றன. மாம்ச பக்ஷணிகளும் மாம்சத்துடன்தேங்காய் மசால் முதலியவைகளைச் சேர்த்துப்புசிக்கிறார்கள். என்றாலும், அவர்களுக்கு அம்மாம்சத்திலேயே கொழுப்பிருக்கிறபடியால், தேங்காய், சாக பக்ஷணிகளாகிய சிலருக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவர்களுக்கு அவசியமன்று. வெண்காயம், உள்ளி இவைகளில் ஒருவித எண்ணெயிருக்கிறபடியால் இவைகளைக் கொழுப்புள்ள தேங்காய் வர்க்கத்திற் சேர்ந்தவைகளாகவே எடுத்துச் சொல்லவேண்டும். அழலைத் தணிப்பதில் வெண்காயம் மிகப் பிரயோஜனமானது. உள்ளிப்பூண்டு வயிற்றிலுள்ள அஜீர்ணத்தைப் போக்கிவைப்பதில் வெகு உபயோகமான திரவியமாம். ஆனால் இவ்விரண்டிற்கும் சிறிது பித்தம் பண்ணும் குணமுண்டு என்பார்கள்.

3. கறி வர்க்கம்:—உருளைக்கிழங்கு, சேமைக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, வாழைக்காய், வண்டைக்காய், இவைகளெல்லாம் தேகத்துக்குப் புஷ்டியைக் கொடுக்கும் சாகங்களாகின்றன. கொத்தவரை, அவரை, பயற்றங்காய், அகத்திக்காய், முருங்கைக்காய், தம்பட்டங்காய், இவ்வினங்களைச் சேர்ந்த மற்றைக் காய்கள், பருப்பு வகைகள், நமது தேகத்துக்கு எவ்வளவு புஷ்டியை உண்டாக்குகின்றனவோ, அவ்வளவு புஷ்டியைத் தருகின்றன.

புடலங்காய், பீர்க்கங்காய், பூசனி, பறங்கி, கக்கரி, வெள்ளரி, சுரை இவைகளும், இவ்வினத்தைச் சேர்ந்தவைகளும் ஓர்வித புஷ்டியையும் கொடுக்கமாட்டா. இவைகளெல்லாம் நீர் அதிகமாக நிற்கும் சாகங்கள். நாவுக்கு ருசியைக் கொடுக்கும். அக்காரணத்தால் நமது உணவை நமக்கு ருசியாகப் பண்ணும். புஷ்டி என்பது இவைகளில்வெகுஸ்வல்பமாக இருக்கிறது. சுண்டை, பாகல், கத்தரிக்காய், சுக்காங்காய் இவைகள் ஓர்வித ஜீரணத்தை உண்டாக்கி உடம்பிற்கு ஓர்வித ஔஷதமாக உபயோகப்படுகின்றன.

4. கீரை வர்க்கம் :—முட்டைகோஸ், முள்ளங்கி இவைகள் ஸாதாரணக் கீரை வர்க்கங்களைப்போல ஒருவித மண்ணுப்பைத் தேகத்திற்குக் கொடுத்து ஒருவித ஸௌக்கியத்தை உண்டாக்கி நமது தேகத்தில் மலக்கட்டு உண்டாகாத வண்ணம்பாதுகாக்கின்றன. எல்லாக் கீரை வர்க்கங்களுக்கும் இதேவித குணமுண்டு. தூதுவளை, வல்லாரை, புளியாரை, புதீனு இவ்விதப் பச்சை இலைகளை ஆகாரத்துடன் சேர்த்துப் புசிக்கிறவர்கள் அவைகளிடமுள்ள நமது தேசத்து வைத்தியர்கள் சொல்லியிருக்கும் உயர்ந்த குணங்களைக்கொண்டே உபயோகப் படுத்தி வருகிறார்கள். தூதுவளைக்குக் கபத்தை அறுக்கும் குணத்துடன் புத்தியைக் கூர்மையாகப் பண்ணும் குணமுண்டென்றும், வல்லாரைக்குப் புத்தியைக் கூர்மை பண்ணும் குணத்துடன் குஷ்டம் முதலாகிய பெரும் நோய்களையும் தீர்க்கும் குணமுண்டென்றும் சொல்லியிருக்கிறார்கள். வடமொழியில் தூதுவளைக்கு ஞானபிரதம் என்றும் வல்லாரைக்கு ஸரஸ்வதியென்றும் பேயர். புளியாரை, புதீனு இவைகள் பித்தம் சமனம் பண்ணும் மூலிகைகள்.

5. மலர் வர்க்கங்கள்:— அகத்திப்பூ, ஆவாரம்பூ, சோற்றுக்கத்தாழைப்பூ, வாழைப்பூ, காலிப்பூ, முருக்கம்பூ, வேப்பம்பூ, இவைகளெல்லாம் மிகருசியுள்ளனவும் மிகவும் புஷ்டிகரமுமான ஆகாரங்கள்.

6. தண்டுகள் :— வாழைத்தண்டு, கீரைத்தண்டு, சேமைத்தண்டு இவைகளை இவ்வினத்தின் கீழ் நாம் கொண்டு வரலாம். இவைகளெல்லாம் வேறு இனங்களின் உருப்புகளாக இருந்தபோதிலும் இம்மூன்றையும் மூன்று தண்டுகளாக நாம் நம்மை யறியாமல் நமது ஆகாரத்துடன் கலந்து புசிக்கும் சிறு மணல்களைக் கரைக்கின்றன வென்றும், சேமைத்தண்டு சிறிய ரோமங்கள் நமது வயிற்றிற் சென்றிருந்தால் அவைகளை அகற்றுகின்றதென்றும், கீரைத்தண்டு ஓர்வித உத்தமருசியை நாவுக் களித்து உமிழ் நீரைப் பெருக்கி ஜீரண சக்தியை அதிகமாக உண்டாக்குகிறதென்றும் நமது நாட்டிலுள்ள பெரிய வைத்தியர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. கீரை இனம் ஒரு வாரத்திற்கு ஒரு தடவையாவது நாம் அவசியம் புசிக்கவேண்டும் என்றும், தண்டு இனம் மாத மிருமுறையாவது நாம் புசித்தே தீரவேண்டும் என்பது சாக பக்ஷணிகளின் கொள்கை.

இவ்வளவு தூரம் பலசாகங்களைப்பற்றிச் சொல்லிவிட்டுச் சுருக்கமாக அச்சாகங்களைப் புசிக்கும் வகையைச் சொல்லுவோம். எல்லாவித சாகங்களையும் உப்புப்போட்டு நன்றாக வேகவைத்தெடுத்துக்கொண்டு தேங்காய் முதலிய எண்ணெய் சேர்ந்த பருப்புகள் கலந்தும், துவரை கடலை என்னும் இனத்தைச் சேர்ந்த வெந்த பருப்புகளைக் கலந்தும், நன்றாகச் சுண்டவைத்துத் துவட்டி எவ்வளவு குன்றச் செய்யவேண்டுமோ அவ்வளவும் குன்றச் செய்து புசிப்பது உத்தம போஜனம். அப்படி யில்லாமல் கூட்டாகப் பண்ணிப் புசிப்பது மத்தியமம். இவ்வாறு செய்வதிற் சிலர் சுகாதார சாஸ்திர ஞானமின்றிப் பலவாறு கலப்பார்கள். புடல், அவரை, மொச்சை, கொத்தவரை, வெள்ளரி, கக்கரி இவ்வினத்தைச் சேர்ந்த சாகங்களுக்குப் புளியிடவே கூடாது. புளி கலந்தால் அந்தச் சாகங்கள் எளிதிற் ஜெரிக்கா. புளியில்லாமற் பொரித்த கூட்டாகச் செய்து புசித்தால் வெகு சடுதியிற் ஜீரணமாகின்றன.—சுதேசபரிபாலினி.



# REVIEW OF THE PRESS.
# பத்திரிகை ஆராய்ச்சி.

## THE PROSPERITY OF INDIA
## இந்தியாவின் க்ஷேமம்.

இது விஷயமாய், பம்பாய் கவர்னராகிய கனம் தங்கிய ஸர் ஜ்யார்ஜ் கிளார்க்கு ஸமீபத்தில் வித்யார்த்திகள் கூடிய ஒரு சபையில் ஒரு ப்ரஸங்கம் செய்தார்.

நமது தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால், நமது தேசவாஸிகள் எல்லாரும் ஒருமிக்க ‘இந்தியர்கள்’ என்று பேர் பெறவேண்டுமானால், பின்வரும் விஷயங்களை ஸரிவர நடத்திவரவேண்டும்.

1. நமது தேசத்தில் 6 கோடி ஜனங்கள் கீழான ஜாதியர்களாயிருக்கிறார்கள். அவர்களைக் கைதூக்கிவிட முயற்சி செய்யவேண்டும்.

2. நமது தேசத்திலுள்ள வியாபார ஜாதியார்கள் ஒருங்கு சேர்ந்து, சிநேகபாவம் கொண்டு பொது நன்மையை முன்னிட்டு வியாபாரம் செய்துவரவேண்டும்.

3. ஜனஸமூகத்தின் அபிவிருத்திக்குரிய பொது விஷயங்களைப் பேசவும், அவைகளை அனுஷ்டானத்துக்குக்கொண்டுவரவும், சட்ட நிரூபண ஸபைகளில் நியமிக்கப்பட்டிருக்கும் ஜனங்களின் பிரதிநிதிகள் தங்கள் தங்களுடைய வேலையைச் சரியாய்ச் செய்துவரவேண்டும்.

4. ராஜாங்க முறைகளின் தந்திரங்களைப் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொண்டு, ராஜாங்கத்தாரோடு விரோதம் கொள்ளாமலும், அவர்களுடைய த்வேஷம் ஏற்படாமலும், ராஜாங்கத்தார் எப்படிக் குடிகளின் பொதுநன்மையைக் கருதக் கடமைப்பட்டிருக்கிறார்களோ அப்படியே நாமும் நம்தேசத்தவர்களுடைய பொது நன்மையை நம் தலைமேல் கொண்டு ராஜாங்கத்தாரோடு சேர்ந்து காரியங்களைச் செய்யவேண்டும்.

5. ஜாதி வர்ண பேதங்களைத் தவிர்த்து, ஐக்கியபத்தியத்தோடு ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டும், நம்மாலியன்ற மட்டும் பிறருக்கு உபயோகமாயும், உயர்ந்த ஜாதி என்று பொறாமை கொள்ளாமலும் இருக்கவேண்டும்.

## PROTECTIVE TARIFF.
## காப்பு வரி.

இது விஷய்மாய் ஸமீபத்தில் சுதேச மித்திரன் பத்திரிகை ஒன்றில் ஒரு நிருபர் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

எந்த ஸாமான் நமது நாட்டிலேயே நமக்குப் போதுமான அளவு அகப்பட்டுக் கொண்டிருக்கிறதோ அந்தஸாமானே பிறநாடுகளிலிருந்து இறக்குமதியாவதனால், நமது நாட்டு ஸாமானுக்கு விலையில்லாமல் நஷ்டமுண்டாகிறது. இப்படி நஷ்டமுண்டாகாமல் பிறநாட்டு ஸாமானுக்கு வரி ஏற்படுத்தினால், வெளிநாட்டார் தம் சரக்குகளை நம் நாட்டில் விலைசெய்ய முடியாது. இதைத்தான் வியாபாரப் பாதுகாப்பு என்பது. நம்நாட்டில் இல்லாத பொருள் ஒன்று நமக்கு அத்யாவசிய மாயிருந்தால், நாம் அதை வெளி நாட்டாரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அதாவது, வெளி நாட்டாருக்கு அதை சுயேச்சையாய் வியாபாரம் செய்யும்படி அனுமதி கொடுத்து விடலாம். இதைத்தான் சுயேச்சை வியாபாரம் என்று சொல்வது என்றார்.

மேற்கூறிய இரண்டு வித வியாபாரத்தில், எதெது நமது தேசத்துக்கு எந்த ஸமயத்தில் ஏற்றதாயிருக்கும் என்பதையறிந்து, வியாபாரம் செய்தால் தேசத்தின் வர்த்தக விருத்திக்குக் குறைவில்லை.

“பஞ்சு, எண்ணெய் எடுக்கப்படும் விதைகள் போன்ற விளை பொருள்களெல்லாம் நம் நாட்டிலேயே கைத்தொழில்களில் முழுவதும் உபயோகப் படுத்தப் படாமல் வீணுக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன வாகையால், வியாபாரப் பாதுகாப்பு வரி ஏற்றுமதிச் சரக்குகளின் பேரிலும் ஏற்படுத்தவேண்டும். ஆனால், ஏற்றுமதி செய்யப்படும் எந்த விளைபொருள்கள் நமக்குப் பிரயோஜன மில்லையோ அவைகள் பேரிலும், இறக்குமதி செய்யப்படும் பொருள்களில் எவைகள் நமக்கு அவசியமாயிருக்கின்றனவோ அவைகள் பேரிலும் வியாபாரப் பாதுகாப்பு வரி ஏற்படுத்தக்கூடாது. அதாவது இவ்விதப்பொருள்களில் சுயேச்சை வியாபாரம் செய்ய அனுமதி தந்துவிடல் வேண்டும்”. ஆனால், பாதுகாப்புவரி யேற்படுத்தினல் நம்மவர்கள் தங்கள்

சுதேசத் தொழிலையும் கவனியாமல் இருக்கவும் கூடும். இக்காரணத்தால் நம்மவர்களில் ஒவ்வொருவருக்கும் சுதேசக் கைத்தொழில்களை விருத்தியாக்க வேண்டுமென்னும் எண்ணத்தை அதிகப்படுத்தி அதற்கு வேண்டிய சாதனங்களை ஸதாகாலமும் சிந்தித்திருக்கும்படிச் செய்வதுமல்லாமல், கவர்ன்மெண்டாரையும்கொஞ்சங்கொஞ்சமாகச் சில ஸாமான்களுக்கு மாத்திரம் பாதுகாப்பு வரி ஏற்படுத்தும்படியும் செய்துவந்தால் நம் நாட்டுக் கைத்தொழில்கள் சீக்கிரம் விருத்தியடையும். வியாபாரப் பாதுகாப்பும் சுதேச உணர்ச்சியும் ஆகிய இரண்டும் கூடினால்தான் நமக்கு நலம் பிறக்கும். ஒன்றை முழுவதும் விலக்கிவிட்டு மற்றொன்றினாலேயே விருத்திக்கு வர முடியாது. ஆகையால், நம்மவர்களெல்லோரும் ராஜாங்கத்தாரோடு ஒன்று சேர்ந்து நம்மால்இயன்ற அளவு முயன்று, வளர்ச்சி செய்யாவிட்டால் இப்பொழுது இருக்கும்படியான தொழில்களும் கூடிய சீக்கிரத்தில் நசித்துப் போகுமென்பதிற் சந்தேகமில்லை.

---

## KARIKAR CHOLA.
## கரிகாற் சோழன்.

---

நாகை, வி. கோபாலகிருஷ்ண பிள்ளையால் எழுதப்பட்ட இப்பெயர் கொண்ட ஒரு வியாஸம் சென்ற மார்கழி மாதத்து "வித்யா விஹாரிணி" பத்திரிகையில் காணப்படுகிறது.

நமது தமிழ் நாடுகள் பல வருஷங்களுக்கு முன்மிகுந்த உன்னத ஸ்திதியில் இருந்தன என்பது, கரிகாற் சோழன், முதலிய சோழ மன்னர்களுடைய சரித்திரத்தால் விளங்கும்.

இந்தக் கரிகாற்சோழன் என்பவன் "சோழன் கரிகாற் பெருவளத்தான்" என்ற பட்டப்பெயர் பூண்டு, பண்டைக் காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் சேங்கோல் செலுத்திவந்த ஒரு மகாவீர மன்னவன். இவன் தகப்பன் பெயர் இளஞ்சேட் சென்னி. இந்த இளஞ்சேட் சென்னி கரிகாற் சோழன் பிறப்பதற்கு முன்னமேயே இறந்து போனான். ஆகவே, முற்கால வழக்கப்படி, வேறு மன்னர்கள் இச்சிறு குழந்தையாகிய கரிகாற் சோழனுடைய நாடு நகர்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதுவுமன்றி, இவனைக் கொல்லவும் யத்தனித்து, இவன் இருந்த மாளிகையில் நெருப்பு வைத்துவிட்டார்கள். ஆனாலும், தெய்வ கிருபை பெற்ற இவன் மனம் துணிந்து, நாலாபக்கமும் சுற்றி எரியும் தீயில் நடந்து சென்று வெளிவந்தான். நெருப்பை மிதித்துக் கொண்டு வந்ததால் இவன் கால்கள் கருகிப் போயின. ஆகவே இவனுக்குக் கரிகால் சோழன் எனக் காரண பெயர் உண்டாயிற்று.

பிறகு, சில பந்து மன்னவர்களின் உதவியாலும், இவனுடைய மாமனாகிய இரும்பிடர்த்தலைவன் என்பவனாலும், இழந்துபோன ராஜ்யங்களை மறுபடியும் பெற்றுக்கொண்டான்.

இவன் நீதி தவறாமல் நாட்டைப் பாதுகாத்து வந்தான் என்பது, ஒரு சிறிய கதையினால் விளங்கும். சன்னல் பின்னலான ஒரு வழக்கு, நேரில் இவனுடைய விசாரணைக்கு வந்தது. இவன் இளம் பிராயமாயிருந்ததுபற்றி சரியாய் நியாயம் செய்யமுடியாதென்ற அபிப்பிராயம் மந்திரிகளுக்கு உண்டாயிற்று. மந்திரிகளின் நோக்கத்தை யறிந்த இவன், நரைத்த மயிருடைய கிழவன் போல் வேஷம் பூண்டு, வழக்கை விசாரித்து, சரியான தீர்ப்பு செய்தான். மந்திரிமார்கள் தாங்கள் கொண்ட அபிப்பிராயத்தைப் பற்றி அவமானமும், ராஜ தீர்ப்பைப் பற்றி சந்தோஷமு மடைந்தார்கள்.

இவன் ராஜ்ய நிர்வாகத்தில் எவ்வளவு சாமர்த்தியமுடையவனா யிருந்தானோ, அப்படியே யுத்தத்திலும் பேர் பெற்றான். இவனுடைய ராஜ்யம் காஞ்சீபுரம் வரையில் பரவியிருந்தது.

முதலில் இவனுடைய தலைநகர், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உறையூராயிருந்து, வியாபார விருத்திக்கு உறையூர் தகுதியல்ல வென்று தெரிந்து காவிரிப்பும் பட்டினத்தைச் சீர்திருத்தி, அதைத் தலைநகராக்கிக்கொண்டு, பல சீர்திருத்தங்கள் செய்து, ஜனங்கள் சுகமாயும் சந்தோஷமாயும் ஜீவனம் செய்து வரும்படி, ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். நாட்டையும் குடிகளையும் வளம் பெறும்படி செய்தது பற்றி இவனுக்குச் "சோழன் கரிகாற் பெருவளத்தான்" என்று பெயர் உண்டாயிற்று. இவன் ஆண்டுவந்த காலம் சற்றேறக்குறைய 1900 வருஷங்களுக்கு முன் என்று தெரிகிறது.



## THE GLORIES OF THE 19TH CENTURY.
## பத்தோன்பதாம் நூற்றாண்டின் மகிமைகள்.

இது விஷயமாய், சென்ற மார்கழி மாதத்து "வித்யா விஹாரிணிப்" பத்திரிகையில், ஸ்ரீமான் சுப்பிரமணிய சாஸ்திரி யவர்களால் எழுதப்பட்ட ஒரு வியாஸம் காணப்படுகிறது.

எல்லா நன்மைகளையும்விட போக்கு வரவுக்குரிய சாதனங்களே மிக அற்புதமானவை. அவைகளில், பைஸிகிள், மோடார் கார், ரெயில் வண்டி, புகைக் கப்பல், ஸ்டீம் படகு, ஆகாயக் கப்பல், இவைகளும், இன்னும் தந்தி, டெலிபோன் இவைகளும் மனிதனுக்கு எவ்வளவு உபயோகமாயிருக்கின்றன வென்பது ஸாதாரண ஜனங்களுக்கும் தெரிந்த விஷயம்.

மேற்கூறிய சாதனங்களில் முதலில் ரெயில் வண்டியைப் பற்றிக் கவனிப்போம். ஜார்ஜ் ஸ்டீபென்ஸன் 1829-ம் வருஷத்தில் தன்னுடைய "ராக்கெட்" என்னும் புகை வண்டியை முதல் முதல் ஓட்டிக்காட்டின நிமித்தமாக, தற்காலத்தில், மணி ஒன்றுக்கு 40, 50 மைல் தூரம் வேகத்தோடு அநேக ஜனங்களையும் அவர்கள் சாமான்களையும் சுமந்துகொண்டு, சற்றும் சலிப்பில்லாமல் ஸதா ஓடுகிற ரயில் வண்டிகள் உண்டாயின.

முற்காலத்தில்கடற்பிரயாணிகள் கப்பல் மார்க்கமாய்ச் செல்ல, நல்ல காற்றை எதிர்பார்த்துத்தான் போகவேண்டும். இப்பொழுதோ, நீராவிக் கப்பல் ஏற்பட்டு, அவைகள் ஒரு சிறிய பட்டணம் என்று சொல்லும்படியாக வெகு நேர்த்தியாய் அமைக்கப்பட்டு, காற்று, மழை, இருட்டு, இவை ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் ஜலத்தைக் கிழித்துக்கொண்டு போகிறது. பம்பாயிலிருந்து இரண்டு வாரத்துக்குள் சீமைக்குப் போகும்படியான நீராவிக் கப்பல்கள், மணிக்கணக்குத் தவறாமல் போய்வருகின்றன. புகைவண்டி செல்ல எப்படி இருப்புப் பாதை இருக்கிறதோ, அப்படியே கடலில் கப்பற் பாதைகள், நிஷ்கரிஷையாகி இருக்கின்றன.

தூர தேசங்களை ஸமீபித்திருக்கும் தேசங்களைப் போலச் செய்தது, இந்தப் புகைவண்டியும், நீராவிக் கப்பலுமல்லவா ?.

ஸர்வ ஸாதாரணமாயிருக்கும் பைஸிகிள் செய்யும் உதவியும் வியக்கத்தக்கதே. மனிதன் ஓடக்கூடிய வேகத்தைப் பார்க்கிலும் வேகமாய்ப் போகிறது. மோட்டார் பைஸிகிள், மோட்டார் கார் இவைகளின் ஸௌகரியங்களைச் சொல்லவும் வேண்டுமா ?

கொஞ்சநாளைக்கு முன், அலகபாத் காக்ஷியில் ஆகாயக் கப்பல் ஆகாயத்தில் போகும் விதத்தைக் காண்பித்தார்கள் என்பதை நாமெல்லாரும் கேள்விப்பட்டிருக்கிறோம். இதுவும் இந்நூற்றாண்டின் ஆச்சரியமே. ஆகவே, நிலம், நீர், ஆகாயம், இம்மூன்றிலும், தடையில்லாமல் போகவர ஸாதனங்கள் ஏற்பட்டன என்றால், இன்னும் எவ்வளவோ விநோதங்களும் ஏற்படுமென்று நாம் எண்ணக்கூடும்.

இவை மட்டுமா ? மின்சாரத்தின் பெருமை நீராவியிலும் விசித்திரமானதே. ஸ்டீம் வண்டிகளைவிட வேகமாய்ச் செல்லக்கூடிய வண்டிகளையும் மின்சார சக்தியினால் ஓட்டலாம். ஆனால், இது இன்னும் அதிகமாய் உபயோகத்துக்கு வரவில்லை. சில நிமிஷங்களுக்குள் அநேக ஆயிரம் மைல் அப்பாலுள்ள நமது சிநேகிதனுடன் ஒரு விஷயத்தைப் பற்றி நாம் நேரில் பேசுவது போல் பேசலாம். இதற்கு உபயோகப்படும் கருவிதான் 'டெலிபோன்.' இதன் சக்தி ஒருஸெகண்டில் உலகத்தை ஐந்துபிரதக்ஷணம் செய்துகொண்டு, புறப்பட்ட இடம் வந்துவிடும்.

தவிர, சந்திர மண்டலம், சூரிய மண்டலம், நக்ஷத்திர மண்டலம், இவைகளை நமது பக்கத்தில் இருப்பவைகள் போலக் காண்பிக்கும் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளையெல்லாம் யோஜிக்கும்போது, நம்முடைய நன்மையைக் குறித்தே இவ்வளவு சாதனங்களும் ஏற்பட்டன வென்பதற்குச் சந்தேகமும் உண்டோ ? இப்படியிருக்க, நமது தேசத்தவர்கள், கிணற்றுத் தவளைகளைப் போல், தம்மூர் விட்டு அசையாமலும், அப்படி தேசயாத்திரை போய்வருகிறவர்களை ஏளனம் செய்து வருவதும், வேறு தேசத்தவர் துஷ்டர் என்றும், ம்லேச்சரென்றும், நம்மில் பலர் எண்ணிக்கொண்டும் இருப்பதை, இனியாவது தவிர்த்து, தேச யாத்திரை செய்வதினால் அறிவு மிகுந்து புத்தி விசாலமடைவதோடு வேறு தேசத்தவர்களோடு ஸ்நேகம் செய்து, வியாபார விஷயங்கள் அதிகரித்து, ஜன ஸௌக்கியத்தையும் பெறுவார்களாக.

## REVIEWS OF BOOKS.

## புஸ்தக வரவு.

MOHANASUNDARAM.

**மோகன சுந்தரம் :**—இது ஜே. ஆர். ரங்கராஜு அவர்களால் எழுதிய ஒரு இனிய தமிழ் நாவல். தற்கால நடையுடை பாவனைகளுக்கு ஏற்ப, வெகு விநோதங்களும், வேடிக்கைகளும் அடங்கியுள்ளது. இதன் விலை அணா 12. "ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள், 5. மவுண்ட் ரோட், சென்னை" என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

INDIAN PILGRIMS GUIDE.

**கங்கா யாத்ரா தீபிகை :**—இது திருவையாறு, பேரி-சிவராம சாஸ்திரியவர்களா லெழுதப்பட்ட ஒரு அருமையான புஸ்தகம். இது காசி முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போகிறவர்களுக்கு இன்றியமையாதது. இதன் விலை ரூ. 1-8-0. மேற்படி புஸ்தகாசிரியரிடமிருந்து தருவித்துக் கொள்ளலாம்.

THE TWO ORPHANS.

**திக்கற்ற இரு குழந்தைகள்:**—இது ஒரு சிறந்த தமிழ் நாவல். எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டு 350 பக்கங்களடங்கிய இந்தப் புஸ்தகம் ஒரு உத்தமியின் கதையைக் கூறுகிறது. இது பண்டிதர் ச. ம. நடேச சாஸ்திரியால் எழுதப்பட்டு சென்னை மௌண்ட் ரோட்டிலிருக்கும் கார்டியன் ப்ரெஸின் சொந்தக்காரராகிய மிஸ்டர் ஜி. ஸி. லோகநாத முதலியாரவர்களால் பிரசுரிக்கப்பட்டது. இதன் விலை 12 அணா.

PRASNOTRA RATNA MALAI.

**ப்ரச்னோத்திர ரத்ன மாலை :**—இது கல்லிடைக்குறிச்சி, வி. முத்துகிருஷ்ணய்யரவர்களால் எழுதப்பட்ட வேதாந்த விஷயங்களடங்கிய ஒரு தமிழ்ப் புஸ்தகம். இதன் விலை வி. பி. சார்ஜ் உள்பட அணா 10. வேண்டியவர்கள் ஷை முத்துகிருஷ்ணய்யரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

VIJIA SUNDARAM.

விஜயசுந்தரம்.—இப்பெயர்கொண்ட ஒரு அருமையான தமிழ்க் கதைப் புஸ்தகம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. ரங்கூன் பேபர் கரென்ஸி ஆபீஸ் பொக்கிஷதாரரும், "கமலாட்சி" என்னும் ஒரு அருமையான கதையை ஏற்கனவே வெளிப்படுத்தித் தமிழுலகுக்கு உதவி புரிந்தவருமான திரிசிரபுரம், ஸ்ரீமான் ராய் சாஹிப் ம. பொன்னுசாமிப் பிள்ளையவர்களால் இந்த "விஜய சுந்தரம்" என்னும் கதை எழுதப்பட்டிருக்கிறதென்பதே இப்புஸ்தகத்தின் மகிமையை நன்றாய்ப் புலப்படுத்தும். மங்கையர்க்கரசியின் கற்பு லக்ஷணமும், விஜயசுந்தரத்தின் நற்குண நற்செய்கைகளும், இப்புஸ்தகத்தை வாசிக்கும் ஒவ்வொரு சிறுவருக்கும் தகுந்த வழிகாட்டிகளாகும். நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் வழக்க ஒழுக்கங்களையும், விவாக முறையையும் பிள்ளையவர்கள் "கமலாட்சி" என்னும் நாவலில் இனிது விளக்கிக் காட்டியிருத்தல் போலவே, இந்தக் கதையில் அவர்களுடைய வியாபார முறையில் ஏற்பட்டிருக்கும் ஊழல்களை விளக்கிக் காட்டிக்கொண்டுபோவது மிகவும் பாராட்டத்தக்கது. இந்தப் பகுதியை செட்டிப் பிள்ளைகள் அவசியம் படித்துப் பார்த்து நலம் பெறவேண்டுமென்பது நமது விருப்பமாகும். இந்நூலின் பத்தொன்பதாவது அதிகாரத்தில் சைவசித்தாந்த நுண்பொருள்களை யெல்லாம் பிள்ளையவர்கள் வெகு எளிதில் விளக்கியிருப்பதற்காகச் சைவ சமயிகள் அவர்களுக்கு நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறார்கள் இயற்கையை ஒட்டி இலக்கிய இலக்கணக் குற்றமின்றி எளிய நடையில் சிறுவர்களும் அறிந்துகொள்ளும் விதமாய் இந்நூல் எழுதப்பட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. நன்றியறிதல், மெய்பேசுதல், தயாள முடைமை, போன்ற அநேக நீதிகள் இந்நூலில் மலிந்து காணப்படுகின்றன. கதா சந்தர்ப்பத்துக்கு ஏற்றது போல் சுமார் 20 விளக்கப் படங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 360 பக்கங்களுக்கு மேற்கொண்டதாய், அழகியகாலிகோ பயிண்டுடன் விளங்கும் இப்புத்தகத்தின் விலை 2-8-0.



## BOYS SECTION.

## சிறுவர் பகுதி.

INTOXICATING DRUGS.

**லாகிரி வஸ்துக்கள்.**—கஞ்சா, புகையிலை, கள், இவைகளைத் தவிர். இவை ஆளை உருக்கும், ஆயுளைக் குறைக்கும், மதியைக் கெடுக்கும், ஞானவித்தை வறுக்கும்.

WISDOM WITH AGE.

**அபிப்பிராயம் பிராயம் போல்.**—ஒரு குழந்தையை நோக்கி உனக்குப் பிரியமான பொருள் எது என்று ஒரு பாதிரியார் கேட்டதற்கு அது தன்னுடைய தாயாரின் ஸ்தனங்களைச் சுட்டிக்காட்டி அது தான் எனக்குப் பிரியமானது என்று பொருள்படப் பேசினதாம். அபிப்பிராயம் பிராயம் போல். அதாவது பருவத்துக்குத் தக்கபடி எண்ணங்கள்.

GOOD ADVICE.

**நல்ல புத்தி.**—யாராகிலும் தம் தொழிலில் லாபமடைந்து ஜெயமடைய வேண்டுமானால் கஷ்டஜீவியாயும், கொஞ்சம் செலவு செய்கிறவராயும் இருக்கவேண்டும். அமெரிக்காவிலுள்ள ஒரு கனவானுக்கு 25 ஸெண்டு அனுப்பினால் தனவந்தனாகும் விதத்தை கூறுவதாக விளம்பரம் செய்திருந்தார். அப்படி அனுப்பினவர்களுக்கு அவர், கஷ்டப்பட்டு வேலைசெய், ஐசுவரியத்தைச் சம்பாதி, ஒரு ஸெண்டும் வீணில் செலவு செய்யாதே, என்றாராம்.

ASOKA FOREST.

**அசோக வனம்.**—அசோக வனம் ஸிலோனில் நூரளை யென்ற இடத்தில் இப்போதுமிருக்கிறதாம். அந்த வனம் தற்போது, இருண்ட சுனையான இடமாயும், கண்களுக்குக் குளிர்மையான காட்சியைக் காட்டக்கூடிய பிரதேசமாயுமிருக்கிறது. சீதா பிராட்டியார் மஞ்சள் அரைத்த கல், குளித்த இடம், யானையின் பாதம் பட்ட இடம் இப்பொழுதும் காணலாம். இந்தச்சுனை கற்பாறையுள்ளேயிருந்து வெள்ளி, செவ்வாய்க்கிழமை யன்று மஞ்சள் கரைத்த தண்ணீருடன் பூக்களும் அப்பாறைச் சுனையிலிருந்து வருகிறதாம். இதை அனேகர் பானமாகவும், தீர்த்தமாகவும் அருந்துகிறார்களாம்.

A TRINTY TEMPLE.

**த்ருமூர்த்தி கோவில்.**—மஞ்சக்குப்பத்துக்கு 2-மைல் தூரத்தில் திருவேந்திபுரம் என்ற ஒரு க்ஷேத்திரமிருக்கிறது. இந்த ஊர்க் கோவிலிலிருக்கும் த்ருமூர்த்தி விக்கிரகத்துக்கு மூன்று தலைகளிருக்கின்றன. அவைகள் முறையே ப்ரம்மா, விஷ்ணு, சிவன் தலைகளாம். மதத்தில் வேறுபாடில்லை, ஒன்றே, என்பதற்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

HONORIFIC TITLES.

**மரியாதைப் பட்டங்கள்.**—"ஸ்ரீ, ஸ்ரீமத், ஸ்ரீமான், ம-ா-ா-ஸ்ரீ, பிரமஸ்ரீ" என்பவைகளின் பொருள் என்ன? எப்படிப்பட்டவர்களுக்கு இவைகள் இடப்பட வேண்டும்? சர்மா என்பதின் பொருள் என்ன? இவைகளுக்கு பின்வருமாறு ஒருவர் பதில் சொல்லுகிறார்.

"ஸ்ரீ" என்பது அழகு, அலங்காரம், திரவியம், கல்வி, கீர்த்தி, லக்ஷ்மி, புத்தி என்று பலபொருள்படும்.

"ஸ்ரீமத்" என்பது ஸ்ரீயையுடைய என்று பொருள்படும். "மத்" என்பது உடைய என்னும் பொருளுடைய ஒரு வடமொழி விகுதி.

"ஸ்ரீமான்" என்பது ஸ்ரீயையுடையவன் என்று பொருள்படும். இது தமிழிலே "சீமான்" என வரும். மான் என்பது உடையவன் என்னும் பொருளைக் காட்டும்.

"ம ா ா ஸ்ரீ" என்பது மண்டலாதிபதிக் குரிய "ஸ்ரீ" எனப் பொருள்படும்.

"பிரமஸ்ரீ" என்பது பிராமணனுக் குரிய ஸ்ரீ என்று பொருள் படும். இது பிற்காலத்தாருடைய வழக்கம்.

"ஸ்ரீ, ஸ்ரீமத், ஸ்ரீமான்" என்பன மூன்றும் பொருட்பேத முடையனவல்ல.

இவை கல்வி, செல்வம், அதிகாரம், அறிவு, ஒழுக்கம் முதலியவற்றிற் சிறந்த பெரியோருடைய நாமதேயங்களின் முன் அடையாய் வரற்பாலன.

"ம ா ா ஸ்ரீ" என்பது விப்பிரர் ஒழிந்த அதிகார புருஷர் முதலியோர்க்கு வழங்கற்பாலது.

'சர்மன்' என்பது பிராமணனுக் குரிய உத்தர ஸாதாரண நாமம். சுகமுடையவன் எனப் பொருள்படும்.

A MARVELLOUS BOY.

**ஒரு ஆச்சரியப் பையன்.**—ஜப்பான் தேசத்தில் யோகஹாமா என்னும் பட்டணத்தில் 16 வயதுள்ள ஒரு சிறுவன் திவ்ய திருஷ்டி பெற்றிருக்கிறான். அவன் படிக்கிற பள்ளிக்கூடத்தில் பரீக்ஷைக் காகிதங்களின் கேள்விகளை தான் பெற்றிருக்கும் அந்த சக்தியின் மூலமாய் அறிந்துகொண்டு தன்னுடைய தோழர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள் மூலமாய் இச்சமாசாரம் பள்ளிக்கூட முழுமையும் பரவியது. பரீக்ஷைக்கு வந்தவர்கள் கேள்விகளை முன்னமேயே தெரிந்துகொண்டிருந்த படியால் எல்லாரும் ஒரு பிழையில்லாமல் பூர்ணமாய் சரியான விடை யெழுதினார்கள்.

THE HUNTING DOG.

**வேட்டை நாய்.**—வேட்டை நாய் இயற்கையிலேயே மிக்க ஆக்குரோஷமும், காம்பீரமுமுள்ளது. ஒரு பிராணி கீழே விழுந்து விட்டால் அதைத் தொடுகிறதில்லையாம். ஒரு மிருகம் அல்லது மனிதன் ஓடிக்கொண்டிருக்கையிலேயே கடித்துப் பிடுங்கித் தின்ன வழக்கப்பட்டுள்ள தென்றும், கீழே விழுந்து விட்டால் அது ஒன்றும் செய்வதில்லையென்றும், அதன் சுபாவத்தை நன்கறிந்துள்ள மனிதர்களும் மிருகங்களும் அதைக் கண்டதும் பூமியில் படுத்துக் கைகால்களைச் செத்த பிணங்களைப்போல் வைத்துக்கொண்டு விடுகிறார்கள் என்றும், அவர்கள் அப்படிச்செய்யத் தவறிவிடும் பக்ஷத்தில், உயிருடன் பிடுங்கித் தின்னப்படுவது நிச்சயம் என்றும் சொல்லுகிறார்கள்.

A WHALE.

**ஒரு திமிங்கிலம்.**—உலகத்தில் வாழும் ஜீவ ஜெந்துக்களுள் அதிகப்பிரமாண்டமானது திமிங்கிலந்தானென்று பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் முதலாக அறிவார்கள். திமிங்கிலம், சரியாய்ச் சொல்லவேண்டுமானால் மீனல்ல. ஏனெனில், மீன்கள் ஜலத்தினுள்ளே சுவாசம் விட்டுக்கொண்டிருக்கும். திமிங்கிலமோ என்றால், நேரத்துக்கு நேரம் ஜலத்தின் மேல் வந்து சுவாஸம் வாங்கும். மேலும், அது மற்ற மிருகங்களைப் போலக் குட்டிகள் போட்டு அவைகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும். திமிங்கிலங்கள் மிக்க குளிரான வட தென் சமுத்திரங்களில் மாத்திரம் சஞ்சரிக்கும். உஷ்ண தேச சமுத்திரங்களில் அவைகள் அகப்படுகிறதில்லை. ஆனால், ஒரோர் காலத்தில் ஏதாவதோர் திமிங்கலம் வேறொன்றால் துரத்தப்பட்டாவது அல்லது வேறெந்தக் காரணத்தினாலாவது பூமியின் மத்திய பாகக் கடல்களில் அரிதாய் வருகிறதுண்டு. இப்போது இலங்கைத் தீவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள தலைமன்னார்க்கடலில் இரண்டு பாறைகளுக்கு மத்தியில் ஒரு திமிங்கிலம் தோன்றி யிருக்கிறதாம். அதன் நீளம் 150 அடியும், உயரம் 37 அடியும் இருக்கக் கூடுமென்று சொல்லுகிறார்கள். பாமர ஜனங்கள் அப்பிரமாண்டமான பிராணியைக் கண்டு மருண்டு அது தங்கள் கடலிலிருந்து தொலைந்துபோகும்படியாக மந்திரங்கள் ஜெபிக்கிறார்களாம். இதே கடலில் அனேக வருஷங்களுக்குமுன் ஒரு திமிங்கிலம் காணப்பட்டதென்று சொல்லுகிறார்கள்.

A MONKEY AND A DOG.

**குரங்கும் நாயும்.**—லண்டன் நகரில் மிஸ்டர் ஜான் வாட்ஸன் என்பவரின் குமாரர் ஸான்ஸிபாரிலிருந்து, ஒரு நேர்த்தியான குரங்கொன்று கொண்டு வந்தாராம். அந்த ஸந்தற்பத்தில் அவருடைய வீட்டிலிருந்த நாய் குட்டி போட்டதாம். அந்த இளங் குட்டியைக் கண்டக்ஷணமே, அந்தக் குரங்குக்கு மிகுந்த பிரமையுண்டாயிற்றாம். நாய்க்குட்டி பால் குடிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களிலெல்லாம், குரங்கு அந்தக் குட்டியைக் கைகளினால் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு விளையாடும். அதைவிட்டு எங்கும் போவதில்லை. தோட்டத்திற்கு விளையாடப் போவதாயிருந்தால், அந்த நாய்க்குட்டியையும் தூக்கிக்கொண்டுபோய்ப் பத்திரமாய் ஓரிடத்தில் வைத்து விட்டு விளையாடுமாம். பூனை, மனுஷர் முதலிய யாராவது அந்த நாய்க் குட்டியினருகே வந்தால், மரக்கிளைகளின் உயரே இருந்தபோதிலும், ஒரே தாவில் வந்து எதிர்த்துத் தாக்குமாம். படுக்கும் பொழுதும் அவ்விரண்டும் ஒன்றாகவே படுத்து நித்திரை செய்கின்றனவாம். இரண்டும் ஒரே நேரத்தில்தான் ஆகாரம் புசிக்கின்றனவாம். தனக்குக் கிடைக்கும் எந்தப் பதார்த்தத்தையும், குழந்தைக்கு ஊட்டுவதுபோல, வெகு பக்குவமாய், கையினால் எடுத்து நாய்க்கு ஊட்டிவளர்த்து வருகிறதாம். அந்தக் குட்டியின் தாய் பால் கொடுப்பதைத் தவிர, மற்ற போஷணை யெல்லாம் குரங்கைச் சேர்ந்ததாயிருக்கிறது. இது ஒரு ஆச்சரியந்தான். மிருகங்களுக்குள்ள பக்ஷத்தையும், விசுவாசத்தையும் விளக்குவதற்கு இது ஒரு நல்ல அத்தாட்சிதான்.



# LADIES' SECTION.

## ஸ்திரீகள் பகுதி

MARRIAGE AND CHILDREN.

**விவாகமும் சிசுக்களும்.**—மனிதர்களின் மூளையைப் பரிசோதனை செய்வதில் நிபுணரான ஒரு ஐரோப்பியர் பின்வருமாறு எழுதுகிறார். 50 வயதுக்கு மேற்பட்ட தந்தைக்குப் பிறக்கும் குழந்தைகள் நீதியும் ஸன்மார்க்கமுமுடையவர்களாகவும், 40 வயது முதல் 50 வயதுக்குள்ளாகப் பிறக்கும் குழந்தைகள் கலை வல்லோராகவும், விசாரணையுடையவர்களாகவும், 30 வயதுக்குட்பட்டுப் பிறக்கும் குழந்தைகள் வீரத்தனமும், தைரியமும், சண்டை யெழுப்புவோராகவுமிருப்பர்.

TRAINING CHILDREN.

**குழந்தைகளைப் பழக்குதல்.**—நாம் போடும் உரத்தின் திறத்தால், புஷ்பங்களுக்கு வேறுவர்ணங்களையும், வாசனைகளையும் உண்டுபண்ணலாம். அவ்விதமே, நம்முடைய சுற்றத்தால், நம்முடைய குணங்களை மாற்றலாம். குணக்கேடு அல்லது குணநலம் உண்டாக்கலாம். அதனால், குழந்தைகளின் பயிற்சியில் இத்தர்மத்தை நினைந்து ஏற்ற சுற்றத்தை உண்டுபண்ணுக. தீயசுபாவம் குழந்தையினிடமிருந்தால், அதைப்போக்கும்படியான தகுந்த நல்ல சுபாவமுடைய தோழர்களை அமைத்தல் வேண்டும்.

POLISHED RICE.

**தீட்டின அரிசி.**—வங்காள மாகாணத்தில் ஓர்வித சோகை நோய் தோன்றி மனிதர்களை வாட்டுகிறது. இதன் மூலோத்தாரங்களைப் பரீக்ஷிக்க ஒரு டாக்டர் பிரயத்தனப்பட்டார். இப்பொழுது அவர் கூறுவதாவது:—"கல்கத்தா முதலிய நாடுகளில் ஜனங்கள் யந்திரங்களில் தயாராகும் அரிசியை உபயோகிக்கிறார்கள். கோதுமை மாவை அதிகமாய்ச் சலித்துச் சாப்பிடுகிறார்கள். இதனால் இந்நோய் தோன்றி பரவுகிறது. மார்வாடிகள் கோதுமை மாவை உபயோகப்படுத்தினாலும், அதை அதிகமாய் வடிகட்டுகிறதில்லை. தவிடும், உமியும் மாவில் கொஞ்சம் பாகம் கலந்தேயிருக்கும். அவர்களெல்லாரும் ஸௌகமாயிருக்கிறார்கள். ஹிந்துக்கள் சலித்துத் தயாரான அரிசியையாவது, தவிடு கலவாத கோதுமை மாவையாவது ஆகாரமாய் உபயோகப்படுத்தக் கூடாது. மற்ற தானியங்களையும் சமைத்துத் தின்ன வேண்டும். இவ்விதம் செய்தால் சோகை, மூத்திர நோய்கள் வரா.

THE MADRAS GOSHA HOSPITAL.

**சென்னை கோஷா ஆஸ்பிடல்.**—சென்னப்பட்டணத்தில் ஜனங்களுக்கு உபயோகமானதும், அவர்களால் ஆதரிக்கப்படுவதுமான வைத்திய சாலைகளில் திருவல்லிக்கேணியிலுள்ள கோஷா ஆஸ்பிடல் முக்கியமானது. இதன் உபயோகம் வரவர அதிகரித்து வருகிறது. வெளி ஜில்லாக்களில் உள்ள ஸ்திரீகள் கூட இந்த ஆஸ்பிடலில் வைத்தியம் பார்த்துக்கொள்ள வருகிறார்கள். இந்த ஆஸ்பிடலில் 1910-ம் வருஷத்தில் 20 ஆயிரம் ஸ்திரீகள் வைத்தியம் பார்த்துக் கொண்டார்களென்றால், இதனாலுண்டாகும் உபயோகத்துக்கு வேறு திருஷ்டாந்தம் வேண்டியதில்லை. பிரஸவக் கேஸுகள் போன வருஷம் 50 குறைந்து விட்டனவென்று தெரிகிறது. ஆஸ்பிடலில் இடமில்லாத குறைவு பெருங் குறைவாயிருக்கிறது. இப்போது 80 படுக்கைகளிலிருந்தும், 80-க்குமேல் வியாதிஸ்தர்கள் வருகிறார்கள். இதனால் புதிதாய்ப் படுக்கைகளும் அவைகளுக்குத் தகுந்த இடமும் உண்டாக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. இந்த ஆஸ்பிடல் கவர்ன்மெண்டால் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதல்ல. ஆகையால், விசேஷமாய்த் தர்மப் பிரபுக்கள் செய்யும் ஒத்தாசையால் அதன் செலவு நடக்கவேண்டியிருக்கிறது. அதன் வரும்படி முக்கியமாய் கவர்ன்மெண்ட் ஸெக்யூரிடிகளிலிருக்கும் 10 ஆயிரம் ரூபாயும், கவர்ன்மெண்டும் மற்றவர்களும் நன்கொடைகளாகக் கொடுக்கும் தொகைகளும். கவர்ன்மெண்டும் முனிஸிபாலிடியும் தனித்தனியே வருஷம் ஆயிர ரூபாய் கொடுக்கிறார்கள். சென்ற வருஷம் பிட்டாபுரம் ராஜா 4 ஆயிரம் ரூபாயும், லேடி கஜபதிராவ் 2,000 ரூபாயும் கொடுத்தார்கள். ஒரு நோயாளியை ஆஸ்பிடலில் ஒரு வருஷம் காப்பாற்ற வேண்டுமானால் 72 ரூபாய் இருந்தால் போதும். அதுவே ஸ்திரமாய் எப்போதும் செய்யப்பட வேண்டுமானால், 2,100 ரூபாய் முதல் வேண்டும். ஆகையால், ஹிந்து மகம்மதிய ஸ்திரீகளின் க்ஷேமத்தில் கவலை வைத்தவர்கள் இந்த ஆஸ்பிடலுக்குத் தர்மம் செய்வது உத்தமமான கைங்கரியமாகும்.

WOMEN SWIMMERS.

**நீந்தும் ஸ்திரீகள்.**—மேற்கு தேசங்களில் பெண்கள் நீர்விளையாட்டில் பிரீதியுடையவராய் நீந்துவதில் அவரவர் சக்திக்குத் தக்கபடி விருதுகள் பெற்று வருகிறார்கள். முப்பது வருஷங்களுக்கு முன் ஒரு சிறுமி 6 மணி 25 நிமிஷத்தில் 20 மைல் நீந்திச் சென்றாள். ஸமீபத்தில் அமெரிக்காவில் 13 மைல் தூரமுள்ள கால்வாயைப் பந்தயத்தின் பொருட்டு நீந்திச் செல்வதற்கு அமெரிக்கருள் மிகத் தைரியசாலிகளாக 13 பேர்கள் சென்றார்கள். இரண்டு பெண்களும் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டி விருது பெறப்போயிருந்தார்களாம். இவர்களில் ஒருத்தி 17 வயதும் மற்றவள் 18 வயதுமுடையவள். இக்காட்சியில் அமெரிக்கன் ஒருவன் முதற்பரிசும், இரண்டு பெண்களும் இரண்டாம் மூன்றாம் பரிசுகளும் பெற்றார்கள். லிலி ஸ்மித் என்னும் வேறொரு பெண் டோவரிலிருந்து ரம்ஸ் கேட் வரைக்குமுள்ள 20 மைல் தூரக் கால்வாயை 8 மணி நேரத்தில் நீந்திக் கரையேறினாள். இக்கசெஸ்கு என்னும் ஒரு மாது தானூபியாற்றில் 40 மைல் நீந்திச்சென்று சிறிதும் களைப்பில்லாதவளாய்ப் பின்னும் 20 மைல் தூரம் மற்றோர் நதியில் நீந்தி விருது பெற்றாளென்று சொல்லப்பட்டிருக்கிறது.

DRESSING CHILDREN.

**குழந்தைகளுக்கு துணிகட்டுதல்.**—குழந்தைகளுக்கு உடுத்துவதில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்களாவன:—

துணி அதிக மெதுவானதாயிருக்கவேண்டும். அதிக நீளமாயிருக்கக்கூடாது. சிலர் பாதத்திற்குக் கீழே தொங்கத் தக்கதாக அவ்வளவு நீளமாய் உடுப்புச் செய்து போடுகிறார்கள். இது குழந்தைகளுக்கு அதிகத் தொந்தரவையும் உடுப்பின்மேல் வெறுப்பையும் உண்டாக்குகிறது. துணி முரடானதாயிருந்தால் குழந்தைகளின் மெல்லிய தோலில் அழுத்திக் காயப்படுத்தலாம். அதுவுமல்லாமல் சிறுகுழந்தைகள் அவ்வளவு பளுவான துணிகளைச் சுமக்கிறதும் கஷ்டமே.

கழுத்து, நெஞ்சு, வயிறு, பாதம் இவைகள் முக்கியமாய் சூடாயிருக்கவேண்டிய பாகங்களானதால், ஸாதாரணமாய்த் தரிக்கும் உடுப்பின் உள்ளே மெல்லிய கம்பளி உடுப்பும் தரிப்பது நல்லது.

குழந்தைகள் தங்கள் கைகால்களைத் தங்களுக் கிஷ்டமானபடி அசைத்து விளையாடத் தக்கதாக உடுப்புகள் அதிக தளர்ச்சியா யிருக்கவேண்டும். நெஞ்சு, இடுப்பு முதலிய பாகங்களில் இறுகலாயிருந்தால் ரத்த வோட்டம் தடைப்பட்டு குழந்தைகளின் வளர்ச்சிக்கு இடையூறுண்டாகும். வயிற்றுப் பக்கம் இறுகலாயிருந்தால் வயிற்றில் ஜீரண வேலை நடப்பதற்குத் தடையுண்டாகும். ஆகையால், எந்தப் பக்கமும் தளர்ச்சியாகவே இருக்கவேண்டும்.

உடுப்புகளில் குண்டூசி முதலியவைகள் குத்தக்கூடாது. பொத்தான் அல்லது நாடா உபயோகிப்பது நல்லது. சிறு நாடா வாங்கி இரண்டு பக்கங்களிலும் கொஞ்சங் கொஞ்சம் வைத்துத் தைத்துக் கொண்டால் இரண்டையும் சேர்த்துக் கட்டிவிடலாம்.

உடுப்புகள் கழுத்துவழியாகப் போடுகிற மாதிரியாயிராமல் வெகு லேசாய்க் கழற்றத் தக்கதாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் குழந்தைகளுக்கும் உடுப்புப் போடுவதில் வெறுப்புண்டாகாது.

குழந்தைகளின் உடுப்பை அடிக்கடி மாற்ற வேண்டும். பாரமான உடுப்புகளை உடனே கழற்றிவிட வேண்டும். அதிக உடுப்புகள் செய்து வைத்துக் கொள்ள சக்தி இல்லாதவர்கள் அழுக்கு உடுப்புகளை சோப்பு உபயோகித்துத் தண்ணீரில் கசக்கிச் சுத்தி செய்து காயப்போட்டு வைத்துக்கொள்ளலாம்.

உடுப்புகள் அழகுக்காகவும் பெருமைக்காகவும் என்று எண்ணாமல், குழந்தைகளினுடைய சுகத்தைக் காப்பாற்றுவதற்கு ஹேதுவானவைகளாயிருக்கவேண்டும். பட்டு உடுப்புப் போடுவதாயிருந்தால், உள்ளே ஒரு உடுப்புப்போட்டு அதன் மேல்பட்டு உடுப்பைப் போடுவது நல்லது. கால்கள் குளிர்ந்துபோகாதபடி கம்பளி நூலினால் செய்த மேஜோடுகள் போடுவது உத்தமம். குழந்தைகளுக்கு ஆறுமாதம் வரையில் "நாப்கின்" என்று சொல்லப்படும் துண்டுகளை அரையில் கட்டிக்கொண்டு வந்தால், மலஜலவாதைகளினால் உடுப்புகள் அடிக்கடி ஈரமாகாது. உஷ்ண காலங்களில் மஸ்லின் என்று சொல்லப்படும் மெல்லிய துணிகளினால் செய்த உடுப்புகளை உபயோகிக்கலாம்.



# DEPARTMENTAL NOTES.
# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்.

CAMBODIA COTTON CULTIVATION.

**கம்போடியா பருத்திச் சாகுபடி.**—தென் இலாகா விவசாய டிப்டி டைரக்டர் எச். ஸி. ஸாம்ப்ஸன் தெரிவிக்கிறார்:—

"கம்போடியாப் பருத்திச் சாகுபடியில் கவனமுள்ளோர் நெல்லிக்குப்பத்துக்கு அடுத்த பாலூர் விவசாயப் பண்ணையில் நேர்த்தியாய் வளர்ந்திருக்கும் கம்போடியாப் பருத்தியை இப்பொழுது போய்ப் பார்வையிடலாம். பருத்திக் காய்கள் வெடித்துப் பருத்தி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நேரில் போய்ப் பார்ப்பவர்களுக்கு கம்போடியாப் பருத்திச் சாகுபடியைக் குறித்து வேண்டிய விஷயங்களை பண்ணை மானேஜர் தெரிவிப்பார்."

RICE PESTS.

**நெற்பயிரில் வண்டுகள்.**—நெற்பயிர்களைச் சில ஸமயங்களில் வண்டுகள் சேதம் செய்வதை நாம் அறிந்திருக்கிறோம். இவைகள் இலைகளையும் சாப்பிட்டுத் தானியத்தையும் பாழ் செய்கின்றன. வண்டுகள் அடிக்கும் வயல்களில் பின்வருமாறு செய்ய வேண்டியது:—

(1) பயிர் தண்ணீரில் முழுகி இருந்தால் தற்காலத்திற்கு தண்ணீரை வெளியிலே பாய்ச்சிவிடு.

(2) வண்டுகள் ஜாஸ்தியாயிருந்தால் ஒரு சாக்கை எடுத்துப் பயிரின் மேலாகக் கொண்டுபோனால் பூச்சிகளைப் பிடித்து விடலாம்.

(3) தாரை எரித்தால், அதன் நாற்றத்தினால் பூச்சிகள் விலகிவிடும்.

(4) சுள்ளி, செத்தைகள் போட்டுக் கொளுத்தினாலுங்கூட பூச்சிகள் விலகிவிடும். சுற்றுப்புறமிருக்கும் புல் பூண்டுகளை அடியோடு பிடுங்கி எறிந்துவிட வண்டும்.

HAVANNA AND VIRGINIAN TOBACCO.

**ஹவன்னு வர்ஜீனியா புகையிலை.**—சென்ற ஜூன் மாதம் 30-ந்தேதியோடு முடிந்த வருஷத்துக்கு எழுதப்பட்டிருக்கும் பர்மா விவசாய இலாகா ரிப்போர்ட்டினால் அமெரிக்காவிலிருந்து **ஹவன்னு** புகையிலை விதையும், வர்ஜீனியா புகையிலை விதையும் ஏராளமாய்த் தருவிக்கப்பட்டு அவ்விதைகள் பர்மா நாட்டைச் சேர்ந்த எந்த ஜில்லாக்களில் நன்றாய்ப் பிடிக்கக்கூடுமென்று கருதப்பட்டதோ, அந்த ஜில்லாக்களிலுள்ள விவசாயிகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்கப்பட்டதென்றும், அவ்விதைகள் சில ஜில்லாக்களில் நன்றாய்ப் பிடித்துப் பயிராயிற்றென்றும், சில ஜில்லாக்களில் அகால மழை பெய்து வெள்ளம் புறப்பட்டபடியால் அவ்விதைகள் பிடிக்கும், பிடிக்கமாட்டா, வென்று தெரிந்து கொள்ள முடியாமற் போய்விட்டதென்றும் தெரிகிறது. பருவ நிலை மட்டும் சரியா யிருக்குமானால் ஐராவதி ஆற்றுப் போக்கில் அவ்விதைகள் பிடித்துப் பயிராகத் தடையில்லை யென்றும், அக்கரையாய்ப் பயிரிடக்கூடிய விவசாயிகள் கைக்குப் போய் எட்டினால், அவ்விதைகள் உள்நாட்டு ஜில்லாக்களில்கூடப் பயிராகுமென்றும் சொல்லப்படுகிறது.

COIMBATORE AGRICULTURAL ASSOCIATION.

**கோயம்புத்தூர் விவஸாய ஸங்கம்.**—சென்ற பிப்ரவரிமீ 24-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஆபீசில் அந்த ஜில்லா விவசாய சங்கத்தார் கூடினார்கள். பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை தாலூகா குடிகள் திருப்பூர்க் கால்நடைக்காட்சியை அடுத்த வருஷத்தில் தங்கள் தங்கள் தாலூகாக்களில் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்ட விஷயத்தில் அப்படிக் காட்சி ஸ்தலத்தை மாற்றுவதில் பயனில்லை யெனத் தீர்மானித்தார்கள். கைத்தொழில் காட்சியும், விவசாயப் பொருட் காட்சியும் அந்தக் கால்நடைக் காட்சியுடன் சேர்த்து நடத்தவேண்டுமென்றும், கொள்ளைகாலத்திலிருந்து முசுக்கட்டை இலைகளையும், பட்டுப்பூச்சிகளையும் தருவித்துக் காட்சியில் வைக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். இந்தக் காட்சிக்கு ஸர்க்காரில் பண உதவி யாதொன்றும் கொடுக்காததால் அதைப்பற்றி மறுபடியும் மனு செய்துகொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

REARING TREES.

**மரங்களை வளர்த்தல்.**—கூட்டுறவில்லாத குறைவினால் நமது தேசம் பாழாய்ப் போகிறது. இந்த நல்ல விஷயத்திற்கு ஒரு கிராமத்திலுள்ள குடிகளெல்லாம் ஏன் ஒன்று சேரக் கூடாது? மரங்கள் வைத்துண்டாக்கிக் காடானவுடன் கிராமத்தாரில் ஒவ்வொரு வீட்டுக்காரருக்கும் இத்தனை வண்டிப் பாரம் வெட்டிக்கொள்வதெனக் கணக்கிட்டு, அப்போதைக் கப்போது வெட்டிக்கொண்டே வரலாம். அப்படி யழியும் காடுகளுக்குப் பதிலாய்வேறு இடங்களில் காடுண்டாக்கிக்கொண்டு மிருக்கலாம். இப்படிச் செய்வதால் கிருஷிகருக்கு எத்தனையோ விதமான அநுகூலமுண்டு.

1. அந்தக் கிராமத்தில் வெயிலின் கொடுமை அதிகமாய்த் தோற்றாது. குளிர்ந்த காற்றுண்டாகும்.

2. மழை மேக முண்டாகி அதிக மழை பெய்யும்.

3. மழைத் தண்ணீர் சரேலென்று ஓடி வழிந்து போகாமல் மரங்களின் வேர்களில் தடுக்குண்டு மண்ணிலிறங்கி ஊற்றுகளை விருத்தி செய்யும்.

4. விறகுக் கட்டை விலை கொடுக்காமல் பெறலாம்.

5. மரங்களின் இலை தழைகளை நன்செய் நிலங்களுக்கு எருவாக்கலாம்.

6. உழவுக்கு வேண்டிய ஸாதனங்களைக் கிரயங் கொடுத்து வாங்கவேண்டியதாயிருக்காது. இவையும் இவைபோன்ற மற்ற அநுகூலங்களும் உண்டாகும்,—என்று கிருஷிகனில் ஒரு நிருபர் எழுதுகிறார்.

STATE AID TO AGRICULTURISTS.

**விவசாயிகளுக்கு ஸர்க்கார் உதவி.**—உரங்களையும் மண்ணையும் சோதித்தறிய விருப்பமுள்ளவர்கள் மண், தண்ணீர், உரம் இவைகளில் கொஞ்சத்தை மாதிரியாக கோயம்புத்தூரில் அக்ரிகல்சரல் கெமிஸ்ட் என்று சொல்லப்படும் விவசாய ரசாயன சாஸ்திரிக்கு அனுப்பவேண்டும். அவர் நிலத்துக்கு எவ்வித உரம் வேண்டுமென்பதையும், உபயோகப்படுத்திவரும் உரம் போட்ட விலை பெறுமா என்பதையும், அதே பலனைத்தரக்கூடிய வேறு மலிவான உரம் ஏதாவது அதற்குப் பதிலாகப் போடலாமா என்பதையும் குறித்துத் தெரிவிப்பார்கள், கரி நோவுபோன்ற நோய்கள் பயிர்களில் தாவியிருந்தால் விவசாய பஞ்சாங்கத்தின் 57-வது பக்கத்தில் கண்டிருக்கும் விதிப்பிரகாரம் படித்து அதிற்கண்டபடி நோய்கண்ட கதிர்களை கோயம்புத்தூரிலிருக்கும் மைக்காலஜிஸ்டுக்கு அனுப்பினால், அவர் அதைச் சோதித்துப் பார்த்து மறுவருஷம் அவ்விதநோய் வராமல் தடுக்க உபாயமிருந்தால் அதை அனுப்பியவருக்குத் தெரிவிப்பார். அதுபோலவே தென்னை, கமுகு, பனை இவைகளுள்ளவர்கள் திடீரென்று மரங்கள் அநேகம் ஒருமிக்க சாக ஆரம்பித்துவிட்டால், உடனே மேற்படி மைக்காலஜிஸ்டுக்கு உதவி கோரி மனுச்செய்துகொள்ளவேண்டும். எவருடைய வெள்ளாமைக்காவது பூச்சி புழுக்கள் விழுந்து கேடுதி நேரிடுமானால் அந்தப் பூச்சிகளில் கொஞ்சத்தை மாதிரியாக ஒரு உறுதியான சிறு பெட்டியில் அடக்கம் செய்து கோயம்புத்தூர் கவர்ன்மெண்டு பாட்டனிஸ்டுக்கு அனுப்பினால், அக்கெடுதியைக் குறைக்க ஏதாவது வழி உண்டா என்பதையும், கூடுமானால் ஒரு உத்தியோகஸ்தரையும் அனுப்பி அவைகளைத் தொலைப்பது எப்படி என்பதையும் காண்பித்துக் கொடுக்க அனுப்புவார்.

THE KUMBAKONAM AGRICULTURAL ASSOCIATION.

**கும்பகோணம் விவசாயச் சங்கம்.**—கும்பகோணம் தாலூகா திருவிடமருதூரில் ஜமாபந்தி நடக்கும் காலத்தை அனுசரித்து மேற்படி சங்கத்தின் மீட்டிங்கு ஒன்று நாளது மாதம் 5-ம் தேதி யன்று மாலை 5 மணிக்கு மேற்படி சங்கத்தின் பிரஸிடெண்டு மிஸ்டர் ஸி. ஒய். ஆஸ்டின் அக்கிராசனத்தின் கீழ் நடந்தது. திவான் பகதூர் ஆர். ரகுநாத ராயரவர்கள் முதலிய மெம்பர்கள் ஸுமார் 500 பேர் வரையில் கூடியிருந்தார்கள்.

நமது ராயர் அவர்கள் சங்கத்தின் பிரயோஜனத்தைப்பற்றிப் பேசி, விவசாயிகளாகிய நாம் அநேக புதுமாதிரியாய்ச் சாகுபடி செய்யும் முறைகளைத் தெரிந்து அதனால் பிரயோஜனப்பட வேணுமென்று இந்தச் சங்கம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதென்றும், கவர்ன்மெண்டாரவர்களின் ரிப்போர்ட்டுப்படி தஞ்சாவூர் ஜில்லா காவிரியாற்றுப் பாய்ச்சலில் மட்டும் வருஷம் ஒன்றுக்கு 14 கோடி ரூபாய் விவசாயத்திலிருந்து உற்பத்தி ஆகிறதென்றும், அதில் 5 கோடி ஸர்க்கார் கிஸ்தி யென்றும், 5 கோடி மிராசுதார்கள் வீதமென்றும், 4 கோடி மாசூல்களை உற்பத்தி செய்யச் செலவு பிடிக்கிறதென்றும் கண்டிருக்கிறதாகச் சொன்னார். கடைசியில் அவ்வளவு உற்பத்தியாகியும் எவ்வளவு ஆகவேண்டியதோ அவ்வளவில்லை யென்றும் சொன்னார்.



# INDUSTRIAL NOTES.

# கைத்தொழில் குறிப்புகள்.

INDUSTRIAL ORPHANAGE.

**அநாதைச் சிறுவர்கட் கோரு தொழிற் சாலை.**—லக்னோவில் சில தினங்கட்கு முன் அநாதைச் சிறுவர்களை ஆதரிப்பதன் பொருட்டு ஒரு தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. இம்மாதிரியான தொழிற்சாலை பல ஸ்தாபிக்கப்பட்டால் நம் தேசத்தின் வறுமை ஒருவாறு ஒழியும்.

MOCHA COFFEE.

**மோச்சா காப்பி.**—காப்பி சாப்பிடுகிறவர்கள் அரேபியா தேசத்திலிருந்து வரும் "மோச்சா" காப்பிக்கொட்டையின்மேல் அதிகப் பிரியம் வைத்திருக்கிறார்கள். இந்தியாவில் நல்ல காப்பிக் கொட்டை விளைந்தபோதிலும் அதை அருவருத்து அரேபியாவிலிருந்து வரும் கொட்டையின்மேல் பிரியப்படுகிறார்களாகையால், அநேக வர்த்தகர்கள் ஒரு யுக்தியான காரியம் செய்கிறார்கள். அவர்கள் இந்தியாவில் விளையும் கொட்டையையே அரேபியாவுக்கனுப்பி அவ்விடமிருந்து அதைத் திருப்பி வரவழைத்து அரேபியா தேசத்தில் விளையும் "மோச்சா" காப்பியென்று சொல்லி நல்ல விலைக்கு விற்றுவருகிறார்கள். இந்த மாதிரி இந்தியாவிலிருந்து சில ஸமயங்களில் அரேபியாவுக்கு மாத்திரம் 7,55,328 ராத்தல் போகிறது.

MATCH FACTORIES IN CHINA.

**சைனாவில் தீக்குச்சி பாக்டரிகள்.**—ஸமீபத்தில் சைனாவில் தீக்குச்சி பாக்டரிகள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. தற்காலம் அவைகளால் ஜப்பானுடைய வியாபாரம் குறையாது போனாலும், காலவளவில் சைனாவில் அதிக பாக்டரிகள் ஸ்தாபிக்கப்படும் பக்ஷத்தில், ஜப்பானிய வியாபாரம் குறைந்து போகும். சைனா பாக்டரிகளுக்குக் குச்சிகள் ஜப்பானிலிருந்தே வருகின்றன. அதாவது, சைனாத் தொழிலாளிகள் குச்சிகளின் நுனியில் கந்தகம் அடைப்பதும், பெட்டிகள் செய்வதும், அவைகளில் குச்சிகளைப்போட்டு நிரப்புவதும், ஆகிய வேலைகளை மட்டும் செய்து குச்சிகளை ஜப்பானிலிருந்தே தருவிக்கிறார்கள்.

OSTRICH FARMING.

**நெருப்புக் கோழி வளர்த்தல்.**—நமது தேசத்துக் கிருஷிகருக்கு நெருப்புக்கோழி ஒன்றின் விலை என்னவென்று ஸாதாரணமாய்த் தெரியாது. நெருப்புக்கோழிகளை வளர்த்து லாபம் அடையக் கூடும் என்பதும் இந்தியர்களுக்கு நூதனமான விஷயமாய்த் தானிருக்கும்.

சென்ற வருஷத்தில் தென்னாப்பிரிக்காவில் கேப் காலனி மாகாணத்திலிருந்து மட்டும் அயல் தேசத்துக்கு ஏற்றுமதியான நெருப்புக் கோழிகளின் ரோமத்தின் விலை மதிப்பு ரூ. 3,13,68,105.

இதனால் அவர்களுக்கு நெருப்புக் கோழிகளை வளர்ப்பதால் ஏராளமான லாபம் கிடைக்கிறதென்பது வெளியாகும். கொஞ்ச காலத்துக்கு முன் தென்னாப்பிரிக்காவுக்குப் போய்வந்த ஒரு ஐரோப்பிய கனவான் இவ்விஷயத்தைப்பற்றி விசாரித்து எழுதியிருக்கிறார். ஸாதாரணமாய் ஒருவருஷத்தில் ரூ. 7,500 செலவு செய்து இந்த முயற்சி நடத்தினால், தக்க லாபம் கிடைக்கிறதாம். ஸாதாரணமாய் ஒரு ஜதை (அதாவது, ஆண் பெண்) பக்ஷிகளின் விலை ரூ. 3,000 முதல் 4,500 வரையாகும். சற்று மேல்தரமான பக்ஷிகளுக்கு ஜதை யொன்றுக்கு ரூ. 7,500 விலையாகிறது. அழகிய ரோமமுள்ள மேன்மையான பக்ஷிகள் ஒரு ஜதைக்கு ரூ. 15,000 விலை கொடுக்கப்படுகிறதாம்.

நெருப்புக்கோழிகளின் ரோமத்தை இரண்டு வருஷத்தில் மூன்று முறை கத்திரித்து எடுப்பார்களாம். வருஷம் ஒன்றுக்கு ஒரு பக்ஷியில் சுமார் 20 அவுன்ஸ் நிறையுள்ள ரோமம் அகப்படுகிறது. இந்த ரோமத்தின் விலை ஒரு அவுன்ஸுக்கு ஸராஸரியில் ரூ. 2 ஆகிறதாம். ஆக ஒரு பக்ஷியிலிருந்து ஒரு வருஷத்தில் கிடைக்கும் ரோமம் ரூபா 40 விலையுள்ளதாகிறது. இந்தப் பக்ஷிகள் வருஷத்திற்கொருமுறைதான் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. ஒரு பெட்டைக் கோழி ஒருமுறையில் 16, அல்லது 17 முட்டைகள் அடைகாத்துப் பொரிக்கிறது. லூஸர்ன் பயிர் செய்யும் நிலங்களில் இந்தப் பக்ஷிகள் மேய்ந்து வளர்கின்றன. அப்பேர்ப்பட்ட இடங்களில் ஏக்கர் ஒன்றுக்கு நான்கு அல்லது ஐந்து பக்ஷிகள் வளர்க்கக்கூடுமாம். அந்த பக்ஷிகளுக்கு மாம்ஸத் துணிக்கைகளும், எலும்புத் துண்டுகளும் கூழாங்கல்லும் விசேஷ ஆகாரமாகின்றனவாம். 11 ஏக்கர் விஸ்தீரணமுள்ள லூஸர்ன் சாகுபடிப் பண்ணை யொன்றில் ஒரு கிருஷிகர் ஐந்நூறு ஜதைப் பக்ஷிகளை வளர்த்து வருஷத்துக்கு ரூ. 22,500 லாபம் ஸம்பாதிக்கிறாரும்.—கிருஷிகன்.

## EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

PRIMARY EDUCATION.

**மூலாதாரப் படிப்பு.**—சென்ற பிப்ரவரி மாதம் இந்தியா கவர்ன்மெண்டின் வித்யா விஷய மெம்பராகிய ஆனரபிள் மிஸ்டர் பட்லர் அக்கிராஸனத்தின் கீழ் அலஹாபாத்தில் கல்வி விஷயமாய் ஒரு ஆலோசனைச் சங்கம் கூடிற்று. இந்த ஆலோசனையில் தீர்மானமொன்றும் செய்யப்படவில்லை. ஆனால் ஆலோசனைக்கு வந்திருந்த மெம்பர்கள் ஒரே மனதாய்ச் சொன்ன அபிப்பிராயங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டன. இந்த ஆலோசனைச் சங்கம் நான்கு நாள் நடந்தது. முதல் நாள், மூலாதாரப் படிப்பு விஷயமாய் நடந்த ஆலோசனையில், ஜனங்களுடைய அறியாமையானது தேசத்தில்மூலாதாரப்படிப்பைப் பரவச் செய்வதால் ஒழிய வேண்டும் என்றும், அதற்காக ஸாத்தியமான இடங்களிலெல்லாம் ஸ்கூல்கள் ஸ்தாபித்துப் பல கிராமங்களுக்கு மத்தியில் ஒரு கிராமத்தில் எல்லாப் பிரிவுகளும் அடங்கி திறமாய் அமைக்கப்பட்டுள்ள ஒரு ஸ்கூலை ஸ்தாபித்து, அதைச் சுற்றின மற்ற ஸ்கூல்கள் அதற்கு பீடர் அதாவது போஷணை ஸ்கூல்களாக இருக்கவேண்டும் என்றும், ஸ்கூல்களில் கற்றுக்கொடுக்கப்படும் படிப்பு விஷயமாய் எழுதலும், படித்தலும், கணக்குப் போடுதலும், வரைதலும் வில்லேஜ் மாப்பும் போதுமென்றும், பிள்ளைகள் பார்த்தபடி கற்றுக் கொள்வதும், சிருஷ்டிப் பொருள்களை அறிந்துகொள்வது மாகிய விஷயங்கள் வாத்தியார்கள தயாராகும் பொழுது அவைகள் சொல்லிவைக்கப்படவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. தினம் நான்கு மணி நேரம் பிள்ளைகள் படிப்பிக்கப்படவேண்டும். 30, 40 பிள்ளைகளுக்கு மேல் ஒரு வாத்தியார் சொல்லி வைக்கிறவரா யிருக்கக் கூடாது. ஒரு வகுப்புக்கு ஒரே வாத்தியார் சொல்லிவைக்க வேண்டும். வாத்தியார்கள் தயார் செய்வதைப் பற்றி சிறிய ட்ரெயினிங் ஸ்கூல்கள் ஸ்தாபித்து, அவர்கள் பின்னால் சொல்லிக் கொடுக்கும் பாடங்கள் எவைகளோ அவைகள் மட்டத்திற்கு வாத்தியார்களைத் தயார் செய்யவேண்டும் என்றும், உதவி பெறும் ஸ்கூல்களைவிட டிஸ்டிரிக்ட் போர்டுகளால் நடத்தப்படும் ஸ்கூல்கள் திறமையுள்ளன. ஸ்கூல் கட்டிடங்களைப்பற்றி இவைகள் வாடகைக்கு வாங்கச் சரிப்படாவிட்டால் ஸாதாரணக் கட்டிடங்கள் கட்டவேண்டும். வாத்தியார்கள் வாசஸ்தலமும் ஸ்கூலும் ஒரே கட்டிடமாய் இப்போது இருப்பதுபோல் இருத்தல் சரியல்ல. கிராமங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்குப் பப்ளிக் வர்க்ஸ் டிபார்ட் மெண்டு இஞ்சினீர்கள் வேண்டியதில்லை. ஒவ்வொரு மாகாணத்திலும் ஸ்கூல் கட்டிடங்கள் விஷயமாய்ஒரு கன்ஸல்டிங் இஞ்சினீர் இருக்கவேண்டும். ஸ்கூல்களை மேல் விசாரணை செய்வதைப்பற்றி, இன்ஸ்பெக்டர்கள் தொழில் சம்பந்தமான விஷயங்களில் பூர்ண அதிகாரம் பெற்றிருக்கவேண்டு மென்றும், வாத்தியார்கள் நியமிக்கும் விஷயம் முதலானவைகள் போர்டுகளுக்கும் மானேஜர்களுக்கும் விடப்படலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

TECHNICAL EDUCATION.

**தொழில் படிப்பு.**—இரண்டாவது நாள் தொழில் படிப்பைப்பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. இப்போதுள்ள இஞ்சினீரிங் காலேஜ்கள் சரியான வழியில் செல்லுகிறவைகளா யிருந்தாலும், பிள்ளைகளை இன்னும் சிறு வயதில் ஸெகண்டரிப் படிப்பு முடிந்ததும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அப்படிச் சேர்த்துக்கொள்ளப்பட்டுத் தயாரான பிள்ளைகள் ரெயில்வே வொர்க்ஷாப்புகளில் அப்ரெண்டிஸ்களாகப் பயிற்சி பெற வேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. கப்பல்களில் இந்தியர் இஞ்சினீயர்களாவதைக் கருதி இந்தியன் (மரீன்) கடல் டிபார்ட்மெண்டிலும், சில ஸ்டீம்ஷிப் கம்பெனிகளிலும் இந்தியர்களை ஸர்டிபிகேட் பெறுத இஞ்சினீர்களாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டும். சுரங்க வேலைகளில் இந்தியர் திறமை பெறும்பொருட்டு, ஸிப்பூர் இஞ்சினீரிங் காலேஜில் உயர்ந்த படிப்புப் பெற வேண்டுமென்றும், அந்தந்த மாகாணங்களிலுள்ள சுரங்கப் பொருள்களுக்குத் தக்கபடி அங்கங்கே சுரங்க ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டு மென்றும் சொல்லப்பட்டது.—சுதேசமித்திரன்.

---



## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

THE BRANCHES OF A PLANT.

**செடியின் கிளைகள்.**—ஒரு செடியின் கிளைகள் அமைக்கப்பட்டிருக்கும் மாதிரியின் பிரகாரமே அது மழைத் தண்ணீரைத் தாங்கிப் பூமியில் வீழ்த்தும் செடியின் கிளைகளிலுள்ள இலைகளின்மேல் விழும் மழைத்தண்ணீரானது அக்கிளைகளிலிருந்து அந்தச் செடியின் மத்திய பாகத்துக்குப் போய்ச் சேரும்படிக்கான அமைப்பும் இருக்கலாம். அல்லது அந்தச் செடியின் மத்திய பாகத்தில் விழும் தண்ணீரானது அங்கிருந்து சுற்றுப் பக்கங்களுக்குப் போய் விழும் படிக்கான அமைப்பும் இருக்கலாம். ஒரு செடியின் வேர்கள் பூமியில் அதிகமாய்ப் பரவி நெடுந்தூரம் சென்றிருக்குமானால், அந்தச் செடியின் மத்தியிலுள்ள கிளைகளில் விழும் மழைத்தண்ணீரை வேறு சில கிளைகளும் இலைகளும் தாங்கிச் சுற்றிலும் விழும்படிச் செய்து அங்கங்கே பூமிக்குள் பாவிச் சென்றிருக்கும் வேர் முனைகளுக்கும் அந்தத் தண்ணீர் உபயோகப்படும்படி செய்தால் நன்மையாகும். அப்படிச் சுற்றிலும் பாவாமல் அந்தச் செடிக்குப் பூமியில் ஆழமாய்ச் சென்றிருக்கும் ஆணிவேர் ஒன்றுமட்டும் விசேஷமாயிருக்கும் பக்ஷத்தில், மழை பெய்யும் போது மேற்சொன்னபடி செடியைச் சுற்றிலும் மழைத்தண்ணீர் போய் விழுவதனால் அந்தச் செடிக்கு உபயோகமில்லாமல் போகும். ஆகையால் இப்படி ஒரு ஆணிவேர் மட்டும் அதிக ஆழமாய் பூமிக்குள் சென்றிருக்கும் செடிகளின் மேல் விழும் மழைத்தண்ணீர் அதன் மத்தியில் இறங்கும்படியாய் அதன் இலைகளும் கிளைகளும் அமைக்கப்பட்டிருக்கும்.

DISTANCE BETWEEN THE SUN AND THE EARTH.

**சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரம்.**—சூரியனுக்கும் நமக்கும் 9 கோடி மைல் தூரமிருக்கிறது. இவ்வளவு பெரிய எண்ணிக்கையினால் சொன்னால், அவ்வளவு பெருந்தூரத்தை நினைத்தால் புத்தி மயங்குகிறது. தெளிவாய் இவ்வளவு நீளமென்று கிரகிப்பது அசாத்தியம். சூரியனுக்கும் நமக்கும் ஒரு நேரான இருப்புப் பாதை யிருந்து, மணிக்கு 40-மைல் வீதம் புகை வண்டி யொன்று கிளம்பிச் செல்வதானால், அந்த வண்டி சூரியனிடம் போய்ச் சேர சுமார் 260 வருஷங்களுக்கு மேலாகும். ஒருவன் பிறந்த உடனே அந்த வண்டியில் தன் ஜனங்களுடன் ஏறிச் செல்ல ஆரம்பித்தால், கால்வழிப் பிரயாணம் முடிவதற்குள்ளேயே 65-வயது கிழவனாய் விடுவான். அவனைச் சேர்ந்தவர்கள் அநேகமாய் இறந்திருப்பார்கள். அவன் காலமும், அவன் குழந்தை காலமும், பாதிவழி தாண்டுவதற்கு முன் முடிந்துவிடும். அவ்வண்டி சூரியனைப்போய்ச் சேரும்போது, ஆதியில் கிளம்பின சிசுவின் "கொள்பேரன்" மார்கள்கூட கிழவர்களாய் விடுவார்கள்.

RIVER SAND.

**ஆற்று மணல்.**—ஆற்றின் தலைப் பக்கங்களிலெல்லாம், மிகப் பெரியவும், உருண்டையான மழமழப்புள்ளவுமான கற்கள் மிகுந்திருக்கும். மறுபடி ஆற்றின் கீழ் போகப்போக, கற்கள் சிறியவை யாகின்றன. பிறகு நுட்பமான மணலைப் பார்க்கிறோம். இம்மணல் சற்றேறக்குறைய உருண்டை வடிவமாயிருப்பதை, ஒரு பூதக்கண்ணாடியைக் கொண்டு நன்றாய்ப் பார்க்கலாம். நமது காவிரி நதியைப் பார்த்தால், மைஸூர் ராஜ்யப் பக்கத்திலெல்லாம் நதி நிறைய பெரும் பாறைத்துண்டுகளா யிருக்கிறது.

இன்னும் சிற்சில இடங்களில் நதி பாறைகளின் பேலேயே விழுந்து ஓடுகிறது. அக்காவிரி நதியை கோயம்புத்தூர் ஜில்லாவில் பார்த்தால், பெரிய பளிங்குக்கற்களும், கற்கள் என்றே சொல்லக்கூடிய பெரும் மணல்களும் நிறைந்திருக்கக் காணலாம். பிறகு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் பார்த்தால், கற்கள் குறைந்து மணல் வரவர அதிகரிப்பதுமல்லாமல், பொடியாகவும் காணப்படுகிறது. இம்மாறுபாடுகளைப்பற்றிச் சற்று யோசிக்கும்போது, இவைகள் நதியின் நீரால் உண்டானவையென்று தெரிகிறது. முதலில் பாறைகள் உடைவதற்கும், பெரும் கற்கள் சிறியவை யாவதற்கும், மறுபடி இவைகள் மணலாவதற்கும் இந்நதியின் நீரோட்டமே காரணம். அல்லாமலும், நீரோடும்போது, கற்களையும், பெரும் மணலையும் உருட்டி, ஒன்றோடொன்று தேய்த்துக்கொண்டே போவதால், இவைகளுக்கு ஒருருண்டை வடிவமும், மழமழப்பும் உண்டாகிறது.

## MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்.

---

### DISCHARGE FROM THE EAR.

**காதில் சீழ் வடிதலுக்கு.**—சுக்கு, திப்பிலி, கோஷ்டம், சயிந்திய லவணம், முத்தக்காசு, உள்ளி, கடுக்காய், வசம்பு, வகைக்கு ஒரு உளுந்திடை எருக்கிலைச் சாற்றால் அரைத்து வேப்பெண்ணெயிற் கலந்து காய்ச்சிக் காதில் விட்டுப் பஞ்சடைக்கத் தீரும்.

### THE AGATHI PLANT.

**அகத்தி.**—இதன் பூவுக்கு அனலாலும், புகையாலும் உண்டாகும் பித்தமும் வெப்பும் போம். இலைக்கு மந்தம் போம். பசி, பித்தசாந்தி வாதமுண்டாகும். வாய் ரணம் நீங்கும். குறி எரிவு, ஐம்பொறி எரிவு, கைகால் எரிவு, தாகம், சரீரகாந்தி, மேகம் போம்.

### LIME JUICE.

**எலுமிச்சம்பழச் சாறு.**—எலுமிச்சம்பழச் சாற்றைச் சீனி சேர்த்துக் குடிக்க இருமல் நீங்கும். அந்தச் சாற்றைச் சிறிது நேரம் தொண்டையில் வைத்து விழுங்காமற் பேணிக்கொண்டால், அதிலுள்ள எவ்வகை நோவுந் தீரும். வெட்டுக்காயத்திலிருந்து ஓடும் ரத்தத்தைத் தடுப்பதற்கும் எலுமிச்சம்பழச் சாறு சக்துடையது. சாற்றைத் துணியிற் தோய்த்துக் காயத்தின்மேற் போடலாம்.

### MILK AND TUBERCULOSIS.

**பாலும் க்ஷயரோகமும்.**—பம்பாய்ப் பட்டினத்துக் கார்போரேஷனில் ஹெல்தாபீஸராக வேலை செய்யும் டாக்டர் ஜே. ஏ. டர்னர் என்பவர் க்ஷயரோகத்துக்கு மாட்டின் பால் எவ்வளவு தூரம் காரணமாயிருக்கிறதென்று விசாரணை செய்து ஒரு ரிப்போர்ட் செய்திருக்கிறார். அந்த ரிப்போர்ட்டின்படி மாடுகளிற் சில க்ஷய ரோகத்தால் வருந்துவதாகவும், அவைகளின் பாலை உபயோகிப்பதால் க்ஷயரோகமுண்டாவதாகவும் தெரிகிறது. இப்படிச் சில மாடுகள் தான் இந்த ரோகத்தால் வருந்துவதாகச் சொல்லுவது அம்மாடுகளின் பாலைப்பருகுவோருக்கு ஒருவாறு திருப்திகரமாயினும், மாடுகளை வைத்துப் பால் வியாபாரம் செய்வோர்களின் அஜாக்கிறதையினாலும், அவர்களுடைய கெட்ட வழக்கங்களினாலும் பாலினால் இந்த க்ஷயரோகம் பரவக்கூடும். இதற்குப் பரிகாரம் பாலை உபயோகப்படுத்துவதற்கு முன்னால் அதை நன்றாய்க் காய்ச்சி உபயோகப் படுத்துவதாகும். இத்தோடு பால் கொடுக்கும் மாட்டின் நிலைமை வியாதி அற்றதாயிருந்தால் இன்னும் நலம். இதற்காக டாக்டர் டர்னர் வியாதியுள்ள மாடுகளை யுடையவர்களுக்கு ஈடு கொடுத்துவிட்டு அவைகளைக் கொன்றுவிடுவது பரிகார மென்று சொல்லுகிறார்.

### TEA DRINKING.

**தேயிலைப் பானம்.**—காப்பியில் காபின் என்ற ஸாரமிருப்பதுபோல தேயிலையில் தேயின் என்ற ஸாரம் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த ஸாரத்தின் குணம் நமது நரம்புகள் பலவீனமாகப்போயிருந்தால், அப்பலத்தை மறுபடி திருப்பிக் கொடுப்பதாகையால் இப்பானம் காப்பிப் பானத்தைவிட உத்தமமான பானம். காப்பி பானத்தைப் போல இப்பானமும் உற்சாக சக்தியையும், வேலை செய்ய அதிக ஊக்கத்தையும் காப்பி செய்வதைவிட அதிகமாகவே கொடுக்கிறது. தேயிலைகள் அதிகமாக உடைக்கப்பட்டும் பொடியாகச் செய்யப்பட்டுமிருந்தால், அவ்விதத் தேயிலைகள் பானத்திற்கு சிலாக்கியமில்லை. தேயிலை முழுமையாக இருப்பது தான் உத்தமம். இக்கஷாயம் நாமிறக்கிக்கொள்ளும்பொழுது ஓர்வித நல்ல வாஸனை இக்கஷாயத்திலிருக்கும்படியும் கசப்பென்பது இல்லாதபடியுமாக வெகு ஜாக்கிரதையாக இறக்கிக்கொள்ள வேண்டும். காப்பிப் பானம் அதிகமாகச் செய்வதால் எவ்வளவு கெடுதல் தேகத்துக் குண்டாகிறதோ அதுபோல தேயிலைப் பானம் அதிகமாகப் பண்ணுவதால் உண்டாகிறதில்லை என்று ஒருவாறு வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். என்றாலும், தேயிலைப் பானம் தூக்கத்தை முற்றிலும் அகற்றுமாகையால் அக்காரணத்தால் விளையும் நோய்கள் பல. காப்பி, தேயிலை இவைகளுடைய பானங்களைப் பகலில் மூன்றாம் ஜாமத்துக்குமேல் அருந்தக்கூடாது. அவ்வாறு செய்தால் இரவில் நமது தூக்கம் கெட்டுப் போம்.



## LEGAL NOTES.

## சட்டக் குறிப்புகள்.

---

### RIGHTS OF THE ENDORSEE OF A PRO-NOTE.

**பிராமிசரி நோட்டை மேடோவர் அல்லது எண்டார்ஸ்மெண்டு செய்து வாங்கிக்கொண்டவனுடைய பாத்தியதைகள்.**—'ஏ' என்பவன் 'பி' என்பவனுக்கு ரூ. 100 கொடுக்க வேண்டும். இதற்காக ஏ. என்பவன் பி. என்பவனுக்கு ரூ. 100-க்கு பிராமிசரி நோட்டு அல்லது ஆண்டிமாண்டு நோட்டு எழுதிக் கொடுத்திருக்கிறான். நிற்க, பி. என்பவன், ஸி. என்பவனிடமிருந்து ரூ. 100 கடன் வாங்கியிருக்கிறான். இந்தக் கடனுக்காக பி. என்பவன் தான் ஏ. என்பவனிடமிருந்து வாங்கி வைத்துக் கொண்டிருக்கும் பிராமிசரி நோட்டில் 'இந்த நோட்டில் கண்ட தொகையை ஸி. என்பவனுக்குக் கொடுத்துவிடவேண்டு' மென்று அந்த நோட்டின் பின்புறத்தில் எழுதி ஸி. என்பவனிடம் அந்த நோட்டைக் கொடுத்து விடுகிறான். ஸி. என்பவனும் அந்த நோட்டைப் பெற்றுக் கொள்ளுகிறான். இப்படி அந்த நோட்டை வாங்கினவன் மேடோவர் காரன் என்றும் அல்லது எண்டார்ஸ்மெண்டு செய்து வாங்கினவனென்றும் வழக்கத்தில் சொல்லப்பட்டு வருகிறான்.

ஒரு டிக்ரியை மேடோவர் வாங்கினவனுக்கு அந்த டிக்ரியை உள்ளபடி பெற்றவனுக்கு எவ்வளவு பாத்தியதைகளிருக்கின்றனவோ அவ்வளவு பாத்தியதைகளிருக்கின்றன. அது போலவே ஒரு பிராமிசரி நோட்டை எண்டார்ஸ் செய்து வாங்கினவனுக்கு, எவன் எண்டார்ஸ்மெண்டு செய்து கொடுத்தானோ அவனுக்கு எவ்வளவு பாத்தியதைகளிருக்கின்றனவோ, அவ்வளவு பாத்தியதைகளுமிருக்கின்றன வென்று ஸகஜமாக எண்ணப்பட்டு வருகிறது. ஆனால் ஆராய்ந்து பார்த்தால், அவ்வளவு பாத்தியதைகளுமில்லை. சென்னபட்டணம் ஸிட்டி ஸிவில் கோர்ட்டில் நடந்த ஓர் கேஸில் ஒரு பிராமிசரி நோட்டை எண்டார்ஸ் மெண்டு செய்து வாங்கினவனுடைய பாத்தியதைகள் பரிசீலனை செய்யப்பட்டன. இந்தக் கேஸில் ஒரு பாகமாகாத குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் ஒருவனுக்கு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்து கடன் வாங்கியிருந்தான். பிராமிசரி நோட்டு எழுதி வாங்கினவன் வாதிக்கு எண்டார்ஸ்மெண்டு செய்து கொடுத்தான். வாதி ஷை பிராமிசரி நோட்டில் கண்ட தொகை ஷை சேர்ந்த குடும்பக் காரியங்களுக்காக கடன் வாங்கப்பட்டபடியால், ஷை குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மெம்பர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து வியாஜ்யம் கொண்டுவந்தான். வாதி சொன்ன கக்ஷி என்னவென்றால், கடன் குடும்பக் காரியங்களுக்காக வாங்கப்பட்டபடியால், பிராமிசரி நோட் யார்பெயரில் எழுதிக கொடுக்கப்பட்டதோ அவருக்கு ஷை குடும்பத்தின் மற்ற மெம்பர்களையும் சேர்த்து வியாஜ்யம் கொண்டுவர பாத்தியமிருக்கிறதென்றும், அன்னோனிடமிருந்து நோட்டை எண்டார்ஸ்மெண்டு செய்து வாங்கிய தனக்கும் அதே பாத்தியமிருக்கிறதென்று கக்ஷி சொன்னான். பிரதிவாதிகள் சொன்ன முக்கிய கக்ஷி என்னவென்றால், கடன் குடும்பக் காரியங்களுக்காக வாங்கப்பட்டிருந்த போதிலும், பிராமிசரி நோட்டை எண்டார்ஸ் மெண்டு செய்து வாங்கிக் கொண்டவன், எவன் பிராமிசரி நோட்டை எழுதிக் கொடுத்தானோ அவன் பேரிலாவது, அல்லது அவனுடைய சட்டப்படியுள்ள பிரதிநிதிகள் பேரிலாலாவது வியாஜ்யம் கொண்டு வரலாமே தவிர, மற்றவர்கள் பேரில் கொண்டுவரக் கூடாதென்றும் கக்ஷி சொன்னார்கள். இந்தக் கேஸை விசாரணை செய்த ஜட்ஜி கனம் பொருந்திய மிஸ்டர் ஸி. ஆர். திருவேங்கிடாசாரியர் அவர்கள் பிராமிசரி நோட்டை எண்டார்ஸ்மெண்டு செய்து வாங்கினவன் அந்த நோட்டை யாரால் எழுதிக்கொடுக்கப் பட்டிருக்கிறதோ அவன்பேரில் மட்டிலும் வியாஜ்யம் கொண்டு வரலாமேயொழிய மற்றவர்கள் பேரில் கொண்டு வரக்கூடாதென்று தீர்மானித்தார்.—லாயர்.

### A CURIOUS CASE.

**ஓர் விநோதக் கேஸ்.**—சில நாள்முன்பு கல்கத்தா கோர்ட்டில் ஒரு குழந்தையின் கார்டியன் விஷயமாய் ஒரு கேஸ் விசாரிக்கப்பட்டது. குழந்தையின் தாய் பிராமண மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவினவள். குழந்தையின் மாமன் (தாயோடு பிறந்தவன்) வைதீக பிராமணன். குழந்தையை யார் போஷிப்பது, அது யாருடைய மேல்பார்வையிலிருப்பது, என்பது கேள்வி. குழந்தையோ மகா ஏழை குடும்பத்தைச் சேர்ந்தது. ஒரே குழந்தையையுடைய தாயாருக்கு தன் குழந்தையை விட்டுப் பிரிய மனமில்லை. கோர்ட்டார் கடைசியில் குழந்தையைத் தாயாரே வைத்து போஷிக்கும்படிக்கும், மற்ற உபநயனம் விவாகம் முதலிய கருமங்கள் பிராமண குலத்துக் கேற்றபடி குழந்தையின் கார்டியனை மாமனே செய்யவேண்டு மென்றும், இதற்குத் தாயார் யாதொரு அட்டியும் சொல்லக்கூடாதென்றும் தீர்மானஞ் செய்துவிட்டார்.

---

# PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்

MR. RAJAGOPALA DAS.

**மிஸ்டர் ராஜகோபால தாஸ்.**—ஜபல்பூரிலுள்ள ராஜகோபாலதாஸ் என்னும் ஒரு பிரபு ரூ 34,000 செலவு செய்து ஒரு தர்ம சாலை கட்டிமுடித்தார். அது இம்மாதம் 4-ம்தேதி மத்திய மாகாண சீப் கமிஷனரால் திறக்கப்பட்டது.

EXTEMPORE POETS.

**நிமிஷக் கவிராயர்கள்.**—கொப்பாரப்பு சகோதர கவிகள் என்று இரண்டு கவிச்சிரேஷ்டர்கள் சென்னைக்கு வந்திருந்தார்கள். அவ்விடம் பிட்டாப்பூர் ராஜாவின் விருப்பத்தின்படி நிமிஷக் கவிகளாக யாதொரு தடையுமின்றி 300 பாடல்களைத் தெலுங்கில் பாடினார்களாம். அது நளனுடைய சரித்திரமாம். அச்சமயம் எட்டையாபுரம் ராஜா, சிவகிரி ஜமீன்தார், முதலியவர்கள் பிட்டாபுரம் ராஜாவுடனிருந்தார்கள். இந்நிமிஷக் கவிகளுக்கு ஷை ராஜா ரூபா 1116 வெகுமதி யளித்தாராம்.

MISS. TOTEYKO.

**கன்னிகை டோடேய்கோ.**—இந்தப் பெயர் பூண்ட அம்மையார் பெல்ஜியம் தேசத்தில் ப்ரஸல்ஸ் ஸர்வகலாசாலையில் தேக தத்துவ சாஸ்திரத்தைப் பற்றி ப்ரஸங்கம் செய்யும் பண்டிதையா யிருக்கிறார்களாம். இந்த அம்மை மாம்ஸம் சாப்பிடுகிறவர்கள், மாம்ஸம் சாப்பிடாதவர்கள் ஆகிய இருதிறத்தவர்களில் யார் ஜாஸ்தி நாள் பட்டினியா யிருக்கக்கூடுமென்று பரீக்ஷித்து மாம்ஸம் சாப்பிடாதவர்கள் பலசாலிகளென்றும், பசி தாங்குகிறவர்களென்றும், மாம்ஸம் சாப்பிடாதிருப்பது தேகாரோக்கியமானதென்றும் நன்றாயறிந்து, இப்பொழுது மாம்ஸம் சாப்பிடாதவராக இருக்கிறார்களாம்.

MR. K. RAMASWAMI AIYANGAR.

**மிஸ்டர் கே. ராமஸ்வாமி அய்யங்கார்.**—மைஸூர் ஸமஸ்தானம் ரெவினியூ ஸர்வே டிப்டி ஸூபரின்டெண்டெண்டு மிஸ்டர் கே. ராமஸ்வாமி ஐயங்கார் அவர்கள் 1911-ம் வருஷம் ஜூலை மாஸம் 1-ந்தேதி முதல் தமது வேலையினின்றும் நீங்கிப் பென்ஷன் பெறப்போகிறார். அவர் தமது வேலையினின்றும் நீங்கிய பிறகு காலிபோர்னியா, பிளாரிடா முதலிய பழங்கள் விளையும் தேசங்களுக்குப் போய் நம்மிந்தியாவில் எவ்விதமான பழவர்க்கச் செடிகள் பயிராகும் என்வும், அவைகளை எப்படிப் பயிராக்குகிறது எனவும் கண்டுபிடித்து இந்தியாவிற்குத் திரும்பி வந்து அவைகளைப் பயிராக்கப் போகிறாராம்.

RAO BAHADUR G. SRINIVASA RAO.

**ராவ் பகதூர் ஜீ. சீனிவாச ராவ்.**—மதுரை ராவ் பகதூர் ஜி. சீனிவாசராவும், உத்தமபாளையம் மிஸ்டர் டி. சுப்பிரமணிய முதலியாரும் ஏப்பிரல் மாதம் 17-ம் தேதி கொழும்பு மார்க்கமாய் இங்கிலண்டுக்குப் பிரயாணமானார். அவர்கள் தங்களோடு பிராமண பரிசாரகன் ஒருவனை யழைத்துக்கொண்டு போகிறார்களாம். 22-ந் தேதி கொழும்பில் ஸ்டீமர் ஏறி மே மாதம் 6-ந் தேதி மார்ஸேயிலுக்குப் போய்விடுவார்கள். அங்கிருந்து லயன்ஸ்க்கும் பாரிஸூக்கும் போய்விட்டு மே மாதம் 10-ந் தேதி லண்டன் போய்ச் சேர்ந்துவிடுவார்கள். லண்டனில் அநேகர் அவர்கள் இருவருக்கும் வாசஸ்தல முதலியன சம்பாதித்துக் கொடுத்து பின்னும் வேண்டிய ஸௌகரியங்களைச் செய்து கொடுப்பதாய்ச் சொல்லி யிருக்கிறார்களாம். ஜூலை மாதத்தில் திரும்பி வந்துவிடுவார்கள்.

LORD HARDINGE.

**லார்ட் ஹார்டிஞ்சு.**—புதிய ராஜ ப்ரதிநிதியாகிய ஹார்டிஞ்சும் அவருடைய பரிவாரமும் லண்டனைவிட்டுப் புறப்படுகையில் அவர்களை வழியனுப்ப அனேகம் பெரிய மனிதர்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் உபசாரனை கூறிவிட்டு வண்டியில் அவர் ஏறப் போகையில் வண்டி நகர்ந்துவிட்டது. அதைக் கண்டதும் அவர் கும்பலைத் தள்ளிக்கொண்டு வண்டியில் குதிக்கப் பார்த்தார். அது அபாயகரமென்று கண்டு பக்கத்திலிருந்த உத்தியோகஸ்தர் ஒருவர் அவரைக்கட்டிப் பிடித்துக்கொண்டு பிகிலிட்டு வண்டியை நிறுத்திப் பிறகு அவரை யேற்றிவிட்டாராம்.



# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்.

MUST NOT BEG OF ME.

**என்னைப் பிச்சை கேட்கக் கூடாது.**—பிச்சைக்காரன் ஒருவன், ஒரு லோபியினிடத்திற்சென்று, ஏதோ, தான் கேட்பதை அனுசரிக்க வேண்டுமென்று மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொண்டான். லோபி, பிக்ஷைக்காரன் சொல்வதைக் கேட்டு, சற்று ஆலோசித்து, "ஏ! பிச்சைக்காரா, நீ சொல்வதை நான் அனுசரிக்க வேண்டுமானால், முதலில் நான் சொல்வதை நீ கேட்கவேண்டும்; அதாவது, நீ ஒருபொழுதும் என்னிடத்தில் யாசிக்கக் கூடாது. அதுவே எனது விருப்பம். அதைத்தவிர, நீ எதைச் சொல்லுகிறாயோ, அதைக் கேட்கத் தயாராயிருக்கிறேன்" என்றான்.

HE WAS NOT STOLEN WITH THE CAMEL.

**ஒட்டகத்தோடு தானும் திருட்டுப் போகவில்லை.**—ஒருவன் தன்னுடைய ஒட்டகம் களவுபோனதைக் கண்டு, அதைத் தேடாமல், ஓரிடத்தில் உட்கார்ந்து தெய்வத்தைப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான். அப்பொழுது ஒருவன் அவன் கிட்டத்தில் சென்று எதற்காக பிரார்த்தனை செய்கிறாய், என்று கேட்டான். அவன் பதில் சொன்னதாவது: ஏனென்றால், என்னுடைய ஒட்டகம் களவு போயிற்று. நான் அதின்மேல் சவாரி செய்திருந்தால் நானும் ஒட்டையின்கூட களவு போயிருப்பேனல்லவா? ஆதலால், நான் அதின்மேல் சவாரி செய்யாமலிருக்கும்படி புத்தி கொடுத்ததைப் பற்றி தெய்வத்தைப் பிரார்த்திக்கிறேன், என்றான்.

SHE KISSED HIM.

**அவள் அவனுக்கு முத்தங்கொடுத்தாள்.**—ஆஸ்ட்ரியா தேசத்திலிருக்கும் ஒரு வர்த்தகக் கம்பெனியில் பாலிய பெண் குமாஸ்தாக்களும், ஆண் குமாஸ்தாக்களும் இருக்கிறார்கள். இவர்களில் ஒருவன் ஒரு பெண்ணிற்கு ஆபீஸில் முத்தம் கொடுத்ததாகச் சொல்லி முதலாளிகள் அவனை வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள். முதலாளிகள் பேரில் இவன் கொண்டுவந்த ஒரு வியாஜ்யத்தில் இவன் பெண்ணுக்கு முத்தம் கொடுக்கவில்லையென்றும், ஆனால் ஒரு பெண் இவனுக்கு முத்தம் கொடுத்தாளென்றும் ருஜூப்பட்டு இவனை மறுபடியும் உத்தியோகத்தில் வைக்கும்படி கோர்ட்டார் உத்தரவு செய்தார்கள்.

LUST OF MONEY.

**பண ஆசையே பேராசையாய் நின்றது.**—பணத்தின்மேல் பற்றுதல் வைக்கும் இம்மாயப் பிரபஞ்சத்தில் தினந்தோறும் என்னென்னவாறு விநோதங்கள் சம்பவிக்கின்றன. தன் பிராணனைக் காட்டிலும் பணமே பெரிதென்று நினைத்த தென் அமெரிக்கா தேசத்தானொருவன் செய்ததை இங்கு விவரிக்கிறோம். அவன் தன் ஊரிலிருந்து 18-மைல் தூரத்திலிருந்த ஒரு கிராமத்திற்குப் போக நினைத்துப் பிரயாணமானான். தன் கையில் 12 ஸவரன்கள் வைத்திருந்தான். நடுவழியில் திருடர் தன்னை அடித்துப் பவுனைப் பிடுங்கிப் போய் விடுவாரோ என்னவோ என்று அப்பிரயாணி பயந்து, பணமே பெரிதென்று நினைத்து ஒவ்வொன்றாய் வாயிற்போட்டு விழுங்கிவிட்டான். இவன் நினைத்த மாதிரியே திருடர் வந்து இவனைச் சோதனை போட்டு ஒன்றுமில்லாமை கண்டு திரும்பிப்போய்விட்டார்களாம். தான்போய்ச் சேரவேண்டிய இடம் போனதும், பணம் வெளிவருவதற்காகப் பேதி மாத்திரைகள் சாப்பிட்டான். ஆனால் பணம் வயிற்றுக்குள்ளேயே அடைபட்டுவிட்டது. வயிறும் உப்பிவிட்டது. என்ன செய்வான்? பணம் வயிற்றுக்குள் இருக்கும் சமாசாரத்தை வெளியிற் சொல்லவும் வெட்கம். கடைசியில் கஷ்டம் அதிகமாகவே சங்கடத்தைப் பொறுக்கமாட்டாமல் டாக்டர்களிடம் தான் பவுனைச் சாப்பிட்டதைச் சொன்னான். என்னென்னவோ கொடுத்துப் பார்த்து பணம் விழவில்லை. கடைசியாக அந்தப் பிரயாணியிடம் அவனது உயிரின் நிமித்தம் ஓர் உறுதிமொழிச் சீட்டு வாங்கிக்கொண்டு பிறகு அந்த டாக்டர் அவனுக்கு மயக்க மருந்து கொடுத்து வயிற்றைக் கத்தியினாலறுத்து மெதுவாய்ப் பவுன்களை வெளியிலெடுத்துத் திரும்பவும் தைத்துவிட்டார்களாம். நல்லவேளையாய்ப் பிரயாணி சாகவில்லை. தன் நினைவு வந்து தெளிந்த பிறகு தன் தேக உபாதியைக்கூடக் கவனியாமல், தான் காப்பாற்ற நினைத்துவந்த பணம் கைக்கு வந்ததே யென்று சந்தோஷம் கொண்டானாம்.

## CURIOSITIES.
## விநோதங்கள்.

---

**A Three-legged Sheep.**

**மூன்று காலுடைய ஆட்டுக்குட்டி.**—இங்கிலாந்தில் ஸர்ரேயிலுள்ள சாண்டென்னும் ஊரில் மூன்று காலுடைய ஆட்டுக்குட்டி யொன்றிருக்கிறது. அது நான்கு காலுள்ள குட்டிகளைப் போலவே உலாவுகிறதாம்.

**The Price of a Hen.**

**ஒரு பெட்டைக் கோழியின் விலை.**—சில நாட்களுக்கு முன்னே பிலடெல்பியாவில் கோழிக் காட்சி யொன்று காட்டப்பட்டது. அதில் காட்டப்பட்ட ஒரு பெட்டைக்கோழியின் விலை 2400 பவுன். அதன் முட்டைகளின் விலை 5 பவுனும்.

**Tent Made of Dove's Skin.**

**புறத் தோலினால் கூடாரம்.**—புறவே ஒரு சிறிய பட்சி. அந்தப்பட்சியின் தோலினால் கூடாரமென்றால் அதை ஒரு புதுமை என்று சொல்லாமல் மற்றென்ன சொல்வது? வடஇந்தியாவில் ஒரு நூதனமான கூடாரம் செய்யப்படுகிறதாம். அது முழுவதும் புறத் தோலினாலேயே செய்யப்பட்டு வருகிறதாம். அது நீளத்தில் 60 அடியும் அகலத்தில் 40 அடியும் இருக்குமென்றும், அதற்காக மொத்தச்செலவு நாற்பதினாயிரம் ரூபாய்க்குக் குறையாதென்றும் கூறப்படுகிறது. புறத் தோலினால் கூடாரம் அமைப்பதை இதுவரையில் கேட்டதேயில்லை.

**An Unfading Flower.**

**ஒரு வாடாப் புஷ்பம்.**—தென் ஆப்பிரிக்காவில் ஸாதாரணமாய் அகப்படக்கூடிய புஷ்பம் ஒன்று செடியிலிருந்து பறித்தது முதல் இரண்டு மாதம் வரைக்கும் வாடாமலிருக்கிறதென்று தெரிகிறது. அது வெள்ளைப் புஷ்பம். 18 அங்குலம் முதல் சுமார் இரண்டு அடி வரையில் நீளமுள்ள காம்பில் ஆணி ஆணியாய் அடர்ந்து பூத்திருக்கும். அது மெல்லிய காகிதம் போன்ற இதழ் உள்ளது. அதன் உள்ளிருக்கும் பூந்தாது மஞ்சள் நிறமானது. அதைத் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இங்கே அனுப்பலாம். அதை ஜலத்தில் வைத்திருந்தால் அநேக வாரங்களுக்கு அது கெடாமலிருக்கும். இங்கிலீஷில் அதை ஸ்டார் அப் பெத்லம் என்கிறார்கள். பூக்கிளைகளை ஒடித்த விடத்தில் மெழுக்கு தடவி கப்பலில் அனுப்புவார்களாம்.

**Curious Bequests.**

**விநோத உயில்கள்.**—லிஸ்பனிலுள்ள ஒரு துரைசானி தமது உயிலில் தமது கிரிப்பிள்ளையின் உபயோகத்துக்காக வருஷமொன்றுக்கு 200 பவுன் மரண சாதனஞ் செய்தாராம். இவர் இவ்விதம் செய்தது, இந்த மாதின் 15 வருஷ ஜீவியகாலம் இந்தக் கிரிப்பிள்ளையால் நிலைத்திருந்ததினாலாம். இந்த மாது இருந்த கிரகத்தின் அதிமேலான உப்பரிகையில் நெருப்புப் பற்றியபொழுது இந்தக் கிரிப்பிள்ளை கத்தியதால் எழுந்து வெளியே வாராவிட்டால் அன்றே தீவாய்ப்பட்டிறந்திருப்பாராம். இம்மரண சாதனம் இந்த நன்றியறிதலுக்காகவே செய்யப்பட்டது.

ஒரு அமெரிக்கா துரைமகன் தனது குரங்கொன்றுக்கு 100 பவுனும், தனது நாய்க்கும் பூனைக்கும் மாதம் மாதம் 5 பவுனும் பென்ஷன் எழுதிவைத்து இறந்தாராம்.

ப்ரான்ஸ்காரர் ஒருவர் தமது சுற்றத்தவரை வெறுத்தவராய் தமக்குள்ள யாவையும் தம்மிடத்திலுள்ள ஆமைக் கெழுதிவைத்து இறந்தாராம்.

போர்த்துக்கலில் சில காலங்களின்முன் மரித்த ஒரு துரைமகன் தாம் வளர்த்த பட்சிகளைப் பாதுகாப்பதற்காக வருஷமொன்றுக்கு 1,200 பவுன் வீதம் வருமானம் வரக்கூடிய தொகையை உயில் செய்து இறந்தாராம். இந்தத் துரைமகன் பட்சி ஜாதிகளில் மிக்க விருப்பமுடையவர். இவர் கங்கா நதிக்கரையோரத்திலிருந்தும், கனரி தீவிலிருந்தும், கிழக்கு மேற்கு இந்தியாத்தீவுகளிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் பலவித பட்சிகளைத் தருவித்து வந்தார். இவர் இவ்வளவுடன் விடாமல், அவைகளை நன்கு கவனமாய்ப் பார்த்து வருவதற்காக பட்சி ஜாதிகளின் சாஸ்திர வல்லவர் ஒருவரையும் நியமித்திருந்தாராம்.



## NEWS OF THE MONTH.
## மாஸ வர்த்தமானம்.

---

## INDIAN NEWS.
## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

---

**Death Rate in India.**

**இந்தியாவில் சாகிறவர்:**—இந்தியாவில் மட்டும் ஒரு நாளில் 28 ஆயிரம் பேர் சாகிறார்கள். இது ஒரு நிமிஷத்துக்கு 300 விகிதமாகிறது.

**Viswavartha.**

**விசுவ வர்த்தா.**—வங்காளக் கவர்ன்மெண்டின் உதவியைப் பெற்று சுலப சமாசார் என்று ஒரு பத்திரிகை கல்கட்டாவில் வெளிவந்திருக்கிறது. அதைப்போல் கீழ் வங்காளக் கவர்ன்மெண்டின் உதவியைப் பெற்று விசுவ வர்த்தா என்று ஒரு பத்திரிகை டாக்காவில் வெளிவந்திருக்கிறது.

**Wild Animals and Snakes.**

**காட்டு மிருகங்களும் பாம்புகளும்.**—இந்தியாவிலே 1909-ம் வருஷத்திலே காட்டு மிருகங்களாலே கொல்லப்பட்டவர்கள் 2,607 பேர். அந்த வருஷத்திலே 5,000 சிறுத்தைப்புலிகளும், 1,473 புலிகளும், 2,850 ஓநாய்களும், 2,000 கரடிகளும் கொல்லப்பட்டன. இவைகளைக் கொன்றதற்காகக் கொடுக்கப்பட்ட வெகுமதிப் பணம் ஒன்றரை லட்சம் ரூபா. கொல்லப்பட்ட பாம்புகள் 88,503. இவைகளுக்காகக் கொடுத்த வெகுமானம் 2,499 ரூபா.

**Dogs for Police Duty.**

**போலீஸ் வேலைக்கு நாய்கள்.**—வங்காளத்தில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு நாய்களை உபயோகிக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்தியாவில் அந்த ராஜதானியில்தான் முதன் முதலில் குற்றம் கண்டுபிடிக்க நாய்கள் உபயோகிக்கப்படுகின்றன. இங்கிலாந்தில் நாய்களை இப்பேர்ப்பட்ட வேலையில் பழக்குவதற்குரிய எல்லாவித முறைகளையும் செவ்வையாய்க் கற்றுக்கொண்டிருக்கிறார்களென்றுதோற்றுகிறது. இப்போது இந்தியாவிலும் நாய்களை அவ்விதம் பழக்கப் போகிறார்கள். ஆனால் இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதி அந்த நாய்கள் வளருவதற்குச் சாதகமாயிருக்குமா என்பதுதான் இன்னும் நிச்சயமாய்த் தெரியவில்லையாம்.

**Indian Budget.**

**வரவு செலவுத் திட்டக் கணக்குகள்.**—போன வருஷத்துக் கணக்கில் வரவு செலவு மந்திரி 3,76,000 பவுன் செலவு போக, வரவில் மிகுமென்று கணக்குப் போட்டிருந்தார். அது இப்போது பிசகாகி, 34,89,300 பவுன் மிகுந்திருக்கிறது. போன வருஷத்து வரவில் 50 லட்சம் பவுன் அதிகமாகவும், செலவில் 20 லக்ஷம் பவுன் அதிகமாகவும் ஆகி இந்த மிகுதி கிடைத்திருக்கிறது. மிகுந்த பணத்தில் ஒரு பாகத்தை அந்தந்த மாகாணங்களுக்குப் படிப்புக்காகவும் சுகாதாரத்துக்காகவும் இந்தியா கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கிறார்கள். நமது ராஜதானிக்கு படிப்புக்காக 43,800 பவுனும் சுகாதாரத்துக்காக 28,300 பவுனும் கிடைத்திருக்கின்றன. இதுவுமன்றி, புது ஜில்லாக்கள் ஏற்படுத்த ஸர் வில்லியம் மேயர் செய்திருக்கும் ஏற்பாட்டுக்கு 18 லக்ஷம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1911-12-ம் வருஷத்துத் திட்டக் கணக்குகளில் 7,79,27,600 பவுனும், செலவு 7,71,83,800 பவுனும், மிகுதி 7,43,800 பவுனும் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

**Gold Coins for India.**

**இந்தியாவில் தங்க நாணயங்கள்.**—இந்தியாவில் தங்க நாணயங்கள் போட்டு அவைகளை ஜனங்கள் உபயோகப்படுத்தும்படியாக பம்பாயில் ஒரு தங்க சாலை ஸ்தாபிக்க வேண்டுமென்ற யோசனை இந்தியா கவர்ன்மெண்டுக்கு இருப்பதாகத் தெரிகிறது. இந்தியா கவர்ன்மெண்டுக்கு இந்தக் கருத்து வெகு நாளாயிருந்தபோதிலும், இங்கிலாந்திலுள்ள தங்க சாலை அதிகாரிகள் ஸம்மதிக்காததால் இது தடைப்பட்டு வந்தது. லார்ட் கர்ஸன் காலத்தில் இந்த விஷயம் பிரஸ்தாபத்துக்கு வந்தபோது, இங்கிலாந்திலுள்ள தங்க சாலை உத்தியோகஸ்தர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால், லார்ட் கர்ஸன் காலத்துக்குப் பிறகு கானடா, ஆஸ்ட்ரேலியா ஆகிய குடியேற்ற நாடுகளில் தனியான தங்க சாலைகள் ஸ்தாபித்து, அங்கே ஸவரன்கள் அச்சிட்டுக்கொள்ள

அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது. தென்னாப்பிரிக்கா குடியேற்ற நாட்டாரும் ஸமீபத்தில் இந்தச் சுதந்திரத்தைக் கேட்பார்களானதால் அவர்களுக்கும் அந்தச் சுதந்திரம் கொடுக்கப்படுமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால், இந்தியாமட்டும் இந்தச் சுதந்திரத்தைக் கேட்கும்போது இங்கிலாந்திலுள்ள தங்கசாலை அதிகாரிகள் முன்போல விரோதம் செய்யமாட்டார்கள். பம்பாயில் தங்கசாலை யொன்று ஸ்தாபித்தால், அதில் 15-ரூபாய்பெறும்படியான ஸவரன்கள் அச்சுப் போடுவதா, அல்லது 10-ரூபாய் பெறும்படியான நாணயங்கள் அச்சுப் போடுவதா, என்ற யோசனை யிருக்கிறது. ஏதேனும் ஒன்று நிச்சயமாக வேண்டும். பத்து ரூபாய் பெறும்படியான நாணயம் போட்டால், முதலாவது இங்கிலாந்திலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு விரோதமிராது. இரண்டாவது, ஜனங்களுடைய ஸௌகரியத்துக்குப் பத்து ரூபாய் தங்கக் காசுகள் ஒத்தனவாயிருந்து அவைகளை அதிகமாய் உபயோகப்படுத்துவார்கள். இந்தியாவில் ஜனங்கள் தங்க நாணயத்தை உபயோகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நமது கவர்ன்மெண்டுக்கு வெகுநாளா யிருந்துவருகிறது. குறைந்த மதிப்புள்ள தங்க நாணயங்கள் போட்டால் அதை ஜனங்கள் ஆபரணமாகவோ அல்லது நாணயமாகவோ அதிகமாய் உபயோகப்படுத்துவார்களென்ற நம்பிக்கை இருக்கிறது. ஸமீபத்தில் இந்த விஷயம் கவர்ன்மெண்ட் ஸிம்லாவிலிருக்கையிலேயே தீர்மானமாகுமாம்.

### Accident in the S. I. R.

**தென்னிந்தியா இருப்புப் பாதை விபத்து.**—தென்னிந்தியா இருப்புப் பாதையில் வைத்தீசுவரன் கோயிலுக்கும் ஆனைதாண்டாவரத்துக்கும் மத்தியில் ஸமீபத்தில் சென்னையிலிருந்து போன போட் மெயிலும் எதிர்முகமாய் வந்துகொண்டிருந்த ஒரு கூட்ஸ் வண்டியும் மோதிக்கொண்டன. அப்படி அவைகள் மோதிக்கொண்டதில் சில பிரயாணிகளுக்கு காயம் பட்டது. ரெயில் வண்டி ஒரு ஸ்டேஷனைவிட்டு இன்னொரு ஸ்டேஷனுக்குப் புறப்படுவதற்கு முன்னால் பின் சொன்ன ஸ்டேஷனிலிருந்து முன் சொன்ன ஸ்டேஷனுக்கு வண்டி ஒன்றும் புறப்படாது, பாதை காலியாகத்தான் இருக்கிறது, என்று தந்தி மூலமாய் அறிந்துகொண்டுதான் ஒவ்வொரு ஸ்டேஷன் மாஸ்டரும் தன்னுடைய ஸ்டேஷனுக்கு வந்த ரெயிலைக் கிளப்பவேணும். இப்படிப் பாதை காலியாக இருக்கிறது என்று அடிக்கும் தந்திக்கு லயன் க்ளியர் டிக்கெட்டு என்று பெயர். இப்படிப்பட்ட டிக்கெட்டை ஸ்டேஷன் மாஸ்டர்கள் ரெயில்வே கார்டுக்குக் கொடுத்தால்தான் அந்த கார்டு வண்டியைப் புறப்படுத்துவார். ஆனைதாண்டாவரம் அஸிஸ்டண்ட் ஸ்டேஷன் மாஸ்டர் முதலில் வைத்தீசுவரன் கோயில் ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தந்தி கொடுத்து, தன்னுடைய ஸ்டேஷனிலிருந்து புறப்படவிருந்த கூட்ஸ் வண்டிக்கு லயன் கிளியர் சீட்டுக் கேட்டாராம். அது கொடுக்கப்படவே, அந்தச் சீட்டை அவர் கூட்ஸ் வண்டியின் கார்டுக்குக் கொடுத்துவிட்டார். தான் லயன் கிளியர் அனுப்பிய சிறிது நேரத்துக்குள் வைத்தீசுவரன் கோயில் ஸ்டேஷன் மாஸ்டர் ஆனைதாண்டாவரம் ஸ்டேஷன் மாஸ்டருக்கு வண்டிக்குக் கொடுக்கப்பட்ட லயன் கிளியரை ரத்து செய்துவிடும்படியும், வைத்தீசுவரன் கோயிலிலிருந்து புறப்பட விருந்த போட்மெயிலுக்கு லயன் கிளியர் கொடுக்கும்படியும் கேட்டாராம். ஆனைதாண்டாவரம் ஸ்டேஷன் மாஸ்டர் தனக்கு வந்த லயன் கிளியரை ரத்துசெய்துவிட்டு மெயிலுக்கு லயன் கிளியர் கொடுத்தார். ஆனால் அவர் கூட்ஸ் வண்டி கார்டுக்குத் தாம் வைத்தீசுவரன் கோயில் ஸ்டேஷனிலிருந்து வாங்கிக் கொடுத்த லயன் கிளியரைத் திருப்பி வாங்கிக்கொள்ள மறந்து போனார். போட் மெயிலும் வைத்தீசுவரன் கோயிலை விட்டுப் புறப்பட்டது. கூட்ஸ் வண்டியும் ஆனைதாண்டாவரத்தை விட்டுப் புறப்பட்டது. ஆகவே இரண்டு வண்டிகளும் வழியில் மோதிக்கொண்டன. போட்மெயில் டிரைவர் எதிரே கூட்ஸ் வண்டி வருவதை அறிந்துகொண்டு வண்டியை ப்ரேக்போட்டு நிறுத்திப் பின்னுக்கு முடுக்கினார். அவர் என்ன எச்சரிக்கையா யிருந்தும் கூட்ஸ் வண்டி வெகு வேகமாய் வர, இரண்டும் மோதிக்கொண்டன. போட் மெயிலில் இஞ்சினை அடுத்திருந்த வண்டியிலிருந்த ஜனங்களுக்குக் காயம் பட்டது. இரண்டு வண்டி இஞ்சின்களும் சிதறுண்டு போயின. கூட்ஸ் வண்டியைச் சேர்ந்த வண்டிகளும் சில சேதமாயின. பாதை அடைபட்டுப் போயிற்று. ஆனால் ரெயில்வே அதிகாரிகள் இரவும் பகலும் வேலை செய்து வண்டிகள் தடைபடாமல் ஓடும்படிச் செய்தார்கள்.



## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

### A Clock.

**ஒரு கடிகாரம்.**—பெல்ஜியம் தேசத்தில் ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் ராஜாங்கத்தாரால் ஒரு கடிகாரம் சென்ற 1881-ம் வருஷத்தில் அமைக்கப்பட்டது. அதற்கு ஐந்து வருஷங்களுக்கொரு முறை சாவி கொடுக்கப்பட்டு சரியான காலத்தைக் காட்டி வருகிறதாம். உலகத்தின் தற்கால அதிசயங்களில் இதுவுமொன்று.

### Potatoes.

**உருளைக்கிழங்கு.**—லண்டனில் உருளைக்கிழங்கின் விலை ஒரு காலத்திலுமில்லாதபடி அதிகப்பட்டிருக்கிறது. இரண்டு வாரத்துக்குள் நூற்றுக்கு ஐம்பது வீதம் விலை அதிகமாகிவிட்டது. இப்படியானதற்குக் காரணம் 1910-ம் வருஷத்தில் ப்ரான்ஸில் உருளைக்கிழங்கு விளைவு மிகவும் குன்றிவிட்டதே என்று சொல்லப்படுகிறது.

### Cat-Eaters.

**பூனை தின்பவர்.**—இட்டலி தேசத்தின் வடபாகத்திலுள்ளவர்கள் பூனைக் கறியைப் பிரியமாய்த் தின்கிறார்களாம். பூனைக்கறி தின்பவர்களது வம்சம் ஏறக்குறைய நூறு வருஷத்துக்குள் செல்வமும் சிறப்பும் பெறுமென்பது அவர்களின் நம்பிக்கையாம். நம் தேசத்திலோ பூனையைக் கொன்ற தோஷம் போகவே மாட்டாது என்று எண்ணுகிறார்கள்.

### Aviators.

**ஆகாய விமானத்திற் செல்பவர்கள்.**—1000 அடிக்கு மேல் ஆகாய விமானத்திற் செல்பவருக்கு ஐந்து வருஷம் ஜெயிலிலிருக்கும்படி தண்டனை விதிக்க வேண்டுமென்று அமெரிக்காவைச் சேர்ந்த மிஸௌரிப் பிரதேசத்தில் ஒருமசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேலும், ஆகாய கமனஞ் செய்பவர்கள் 1000 அடிக்கு மேற் செல்வதில்லையென்று 2000 பவுனுக்கு ஜாமீன் கொடுக்க வேண்டுமாம். இந்த ஏற்பாடு செய்தது ஆகாய கமனிகளைக் காப்பாற்றும் பொருட்டேயாம்.

### Indian Coolies in Fiji.

**பிஜிதீவுகளில் இந்தியக்கூலிகள்.**—இந்தப்பெயர் கொண்ட தீவுகள் ஆஸ்ட்ரேலியாவுக்குக் கிழக்கே இருக்கின்றன. இவைகளில் அநேக இந்தியர்கள் பிழைத்து வருகிறார்கள். முக்கியமாக இவர்கள் கூலி ஜனங்கள். கரும்புப்பயிர் செய்து வருகிறார்கள். பத்து வருஷங்களுக்கு முந்தி 8500 இந்தியர்கள் தான் இந்தத் தீவுகளில் வசித்தார்கள். இப்போதோ 25,000 பேருக்கு மேலிருக்கிறார்கள். இந்தியக் கூலி ஜனங்களுக்குச் சொற்ப படிப்புக் கற்றுக்கொடுப்பதற்கு பிஜி கவர்னர் ஏற்பாடு செய்து வருகிறார். நெட்டால், மோரீஸ் முதலிய இடங்களிலுள்ள இந்தியர்களைப் பார்க்கிலும் இந்தத் தீவுகளிலுள்ளவர்கள் நல்ல நிலைமையில் இருப்பதாகத் தெரிகிறது.

### Indian Idols.

**இந்திய விக்கிரகங்கள்.**—நம் தேசங்களின் பல பாஷைகளைப் பூரணமாய்க் கற்றுணர்ந்தவரும், வெகு பாண்டித்தியம் படைத்தவரும், ஜர்மனி தேசத்திலுள்ள ம்யூனிச் என்னும் ஸர்வ கலாசாலையிலே ஸகல பாஷைகளுக்கும் ஆசிரியருமான ஸ்கூர்மன் என்பவரை ஜெர்மனி அரசர் இந்தியா தேசம் சென்று அங்குள்ள முக்கியமான சிலைகளையும், செம்பு, பித்தளை, ஐம்பொன் முதலியவைகளால் செய்யப்பட்ட புராதன விக்கிரகங்களையும், அத்தேசத்தின் பல ஊர்களுக்குச் சென்று ஒருங்கு சேர்த்து அவைகளை ம்யூனிச் நூதன சாலைக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பித்து வைக்கும்படி அனுப்பியிருக்கிறாராம்.

### London Water-Supply.

**லண்டன் தண்ணீர் ஸப்ளை.**—லண்டன் நகரத்தில் ஒரு வருஷத்துக்குச் செலவாகும் ஜலத்தையெல்லாம் ஓரிடத்தில் சேர்க்கும் பட்சத்தில் நாலு சதுரமைல் விஸ்தீரணமும் 76 அடி ஆழமுமுள்ள ஒருபெரிய ஏரியாக்கலாம். இந்தப்பிரபஞ்சத்திலுள்ள போர்க்கப்பல்களெல்லாம் அதில் உலாவலாம். இவ்வளவு ஜலத்தையும் உபயோகிக்கும் ஜனத்தொகை, 500 சதுரமைலுள்ள பூமியில் அடங்கியிருக்கிறது. பிரதிதினமும் 22,55,00,00, காலன் ஜலம் செலவாகிறது என்றால், அங்கே பிரதிமனிதனும் நாளொன்றுக்கு 32 காலன் வீதம் ஜலம் செலவு பண்ணுகிறான். இதற்காக அவன் 100 பக்கெட் ஜலத்துக்கு 19 அணா விழுக்காடு வரி செலுத்துகிறான். நீர்வஸதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு 1000 காலனுக்கு எட்டணா வீதம் செலவு பிடிக்கிறது.

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்

(தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்பட்ட வர்த்தக சங்கத்தாரின் ஏப்பிரல்மீ 12உ ரிபோர்ட்டுப்படி.)

PIECE GOODS.

ஜவுளி ஸாமான்கள்.

சீமையில் ஸுமாராக கிராக்கி இருக்கிறது. மதராஸில் மொத்தத்தில் வியாபாரம் சுரத்தாயில்லை. சிலபேர்கள் வியாபாரத்தில் மூழ்கிப்போய் விட்டபடியால் ரொக்கத்துக்குத் தவிர கடனுக்கு விற்க அஞ்சுகிறார்கள்.

GREY SHIRTINGS—காடா.

லேடி மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 1110—37 × 37½ × 46″ .. | 7 | 10 | 0 |

கூண்டு மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| No. 2500—37 × 37½ × 41″ .. | 5 | 14 | 0 |
| „ 3500 ஷை 46″ .. | 6 | 10 | 0 |
| „ 7500 ஷை 54″ .. | 7 | 15 | 0 |
| „ 5000 ஷை 41″ .. | 6 | 2 | 0 |

பறவை நாகம் மார்க்கு

| | | | |
|---|---|---|---|
| 37 × 37½ × 41″ .. .. | 5 | 9 | 0 |

41″ பொன்னூல் குறி.

| | | | |
|---|---|---|---|
| No. 3552 .. .. .. | 6 | 12 | 6 |
| „ 3553 .. .. .. | 6 | 15 | 6 |
| „ 3554 .. .. .. | 7 | 2 | 6 |
| „ 3555 .. .. .. | 7 | 5 | 6 |
| „ 3556 .. .. .. | 7 | 8 | 6 |
| No. 126—46″—37/7½ .. | 9 | 9 | 0 |

பட்டைக்குறி.

| | | | |
|---|---|---|---|
| No. 7386—46″—37 × 37½ .. | 8 | 0 | 0 |
| „ 7397—ஷை .. .. | 8 | 6 | 0 |

GREY MULLS—காரிகம்பீஸ் (காலாக்கச்சை).

20 கஜம் இஞ்சின் மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| 20 × 20 × 46″ .. .. | 4 | 5 | 6 |
| ஷை 51″ .. .. | 4 | 13 | 6 |
| 22 × 22 × 51″ .. .. | 5 | 5 | 6 |
| ஷை 46″ .. .. | 4 | 13 | 6 |

20 கஜம் புறு மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| 20 × 20 × 46″ .. .. | 4 | 5 | 0 |

தங்க மீன் மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| ஷை .. .. | 4 | 5 | 0 |

நுபா மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| 40″—20 × 20 .. .. | 4 | 5 | 0 |
| 45″—22 × 22 .. .. | 4 | 13 | 0 |

BOOK MUSLINS.—புக் மஸ்லின்கள்.

சங்கு மார்க்கு 12 கஜம்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 51″—94 .. .. .. | 4 | 0 | 0 |
| ஷை—95 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை—96 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை—97 .. .. .. | 4 | 12 | 0 |
| 52″—170 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை—175 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை—180 .. .. .. | 4 | 12 | 0 |
| ஷை—185 .. .. .. | 5 | 0 | 0 |
| ஷை—887 .. .. .. | 8 | 8 | 0 |

COLOURED BOOK MUSLINS—கலர் புக் மஸ்லின்

| | | | |
|---|---|---|---|
| ராணி மார்க்கு. .. .. | 2 | 12 | 0 |
| லக்ஷ்மி நாராயணன் மார்க்கு .. | 2 | 11 | 0 |
| பள்ளிக்கூடப் பையன் மார்க்கு .. | 2 | 10 | 0 |

JACONETS.—ஜாக்கிநெட்டுகள்.

46″ தங்க விநாயகர் மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| No. 888 .. .. .. | 5 | 9 | 6 |
| „ 777 .. .. .. | 5 | 4 | 6 |
| „ 666 .. .. .. | 5 | 3 | 6 |
| „ 555 .. .. .. | 5 | 0 | 6 |
| „ 444 .. .. .. | 4 | 13 | 6 |
| „ 333 .. .. .. | 4 | 10 | 0 |

20 கஜம் 46″ தங்கக் குழந்தை மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| No. 2662 .. .. .. | 4 | 11 | 0 |
| „ 89 .. .. .. | 4 | 14 | 0 |
| „ 898 .. .. .. | 4 | 15 | 0 |
| „ 8989 .. .. .. | 5 | 2 | 0 |
| „ 89898 .. .. .. | 5 | 4 | 0 |
| „ 898989 .. .. .. | 5 | 6 | 0 |
| „ 3771 .. .. .. | 4 | 7 | 0 |
| „ 3772 .. .. .. | 4 | 9 | 6 |

WHITE MULLS—வெள்ளை மல்லுகள்.

| | | | |
|---|---|---|---|
| No. 1703 .. .. .. | 7 | 4 | 0 |
| „ 1503 .. .. .. | 7 | 0 | 0 |
| „ 1502 .. .. .. | 6 | 2 | 6 |
| „ 1702 .. .. .. | 6 | 6 | 0 |
| „ 1704 .. .. .. | 7 | 8 | 0 |
| „ 136—40″—18 கஜம் .. | 2 | 2 | 0 |
| „ 9072—46″ 20 கஜம் .. | 4 | 10 | 0 |
| „ 9073—51″ ஷை .. | 5 | 2 | 0 |
| „ 5072—46″ ஷை .. | 4 | 10 | 0 |
| „ 5073—51″ ஷை .. | 5 | 2 | 0 |
| „ 912—46″ ஷை .. | 4 | 9 | 0 |
| „ 913—51″ ஷை .. | 5 | 1 | 0 |
| „ 3073 .. .. .. | 5 | 12 | 0 |
| „ 7073 .. .. .. | 5 | 13 | 0 |
| „ 973 .. .. .. | 5 | 13 | 0 |

மெடல் மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| „ 7773 .. .. .. | 6 | 4 | 0 |



ஸவரன் மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 273 .. .. .. | 6 | 5 | 0 |
| 72—46″ 20 கஜம் .. .. | 4 | 2 | 0 |
| 73—51″ ஷை .. .. | 4 | 10 | 0 |

WHITE SHIRTINGS—லாங் க்லாத்.

| | | | |
|---|---|---|---|
| H. K. 62 36″ 40 கஜம் .. | 9 | 0 | 0 |
| ஷை 82 ஷை .. | 9 | 4 | 0 |

RED SHIRTINGS—தோம்பு.

ஸ்வதன்வா மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| 7 டிக்கெட்டு .. .. | 6 | 4 | 6 |
| 7 ஷை .. .. .. | 6 | 8 | 6 |
| 8 ஷை .. .. .. | 6 | 12 | 6 |
| No. 10—41″ 40 கஜம் .. .. | 8 | 3 | 0 |

ஒட்டை மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| 7 டிக்கெட்டு .. .. | 7 | 3 | 0 |
| 8 ஷை .. .. | 7 | 7 | 0 |

YARN AND TWIST—நூலும் முறுக்கு நூலும்.

| | | | |
|---|---|---|---|
| ஆமதாபாத் காரம் 40—சைனு டிக்கெட்டு—செகப்பும் மஞ்சள் முடியும். | 2 | 15 | 6 |
| பம்பாய் காரம் 40 டவர் அண்ட் ஸேட் மார்க்கு .. .. .. | 3 | 11 | 0 |

MANCHESTER YARN—சீமை நூல்.

சீமை நூலுக்கு கிராக்கியிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| காரம் 40 ஜி. எம். (G.M.) ட்ரம்மர் | 4 | 0 | 0 |
| ஷை க்ளாஸ்கோ .. | 4 | 2 | 6 |
| ஷை தங்கமயில் .. .. | 4 | 0 | 6 |
| ஷை மதுராபட்டணம் ஜி.எம். | 4 | 0 | 6 |
| ஷை பாக்கு வெட்டி .. | 4 | 0 | 0 |
| ஷை ஆதிசேஷன் .. | 4 | 2 | 0 |
| ஷை வெள்ளை 80 மகாராஜா | 7 | 3 | 0 |
| ஷை 30 கெடிகாரம் .. | 4 | 0 | 0 |
| ஷை ஷை தண்ணித்துறை .. | 4 | 0 | 0 |
| „ 50 ம்யூல்-கிழவன் .. | 4 | 7 | 0 |
| „ ஷை ஷை 70/80 .. | 6 | 1 | 0 |
| 50 மீடியோ G. F. M. ஒட்டையும் யானையும் | 5 | 12 | 0 |
| 60 மீடியோ .. .. .. | 6 | 0 | 0 |

RED—செகப்பு.

| | | | |
|---|---|---|---|
| 60 இரட்டைமயில் .. .. | 8 | 6 | 0 |
| 40 முனிஸிபாலிட்டி (புல்வெயிட்) | 11 | 1 | 0 |
| 40 புத்தா .. .. | 6 | 0 | 0 |
| „ வில்லேஜ் 4 டிக்கெட்டு .. .. | 5 | 3 | 0 |
| „ ராவணேஸ்வரன் .. .. | 11 | 0 | 0 |
| „ அஹல்யை ராமர் .. .. | 11 | 0 | 0 |
| „ பொம்மி செட்டி .. .. | 11 | 0 | 0 |
| „ மோட்டார்கார் .. .. | 10 | 6 | 0 |
| „ போரா பஸார் .. .. | 6 | 0 | 6 |
| „ பூப்ஸானி இரண்டு கட்டு .. | 11 | 0 | 0 |
| 60 ஆதிசேஷன் .. .. | 8 | 4 | 0 |

YELLOW—அரை மஞ்சள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 42/40 இஞ்சின் .. .. | 4 | 10 | 0 |
| 40 ஸ்டீமர் .. .. | 4 | 12 | 0 |
| 44/40 யானை .. .. | 4 | 7 | 0 |
| 40 கெங்கை (ஜகன்மோஹினி) புல்வெயிட் | 4 | 13 | 6 |
| காசி ராஜா .. .. | 4 | 13 | 6 |
| 44/40 கிருஷ்ணன் .. .. | 4 | 9 | 6 |

LEMON AND ORANGE—கால் மஞ்சள் முழு மஞ்சள்.

| | | | |
|---|---|---|---|
| 44/40 கால் மஞ்சள் கிருஷ்ணன் | 4 | 9 | 0 |
| „ முழு மஞ்சள் ஷை .. | 4 | 13 | 6 |
| 40 முழு மஞ்சள் ஷை .. | 5 | 0 | 0 |
| „ ஷை காசி ராஜா .. .. | 4 | 15 | 0 |
| 40 கால் மஞ்சள் ஸ்டீமர் .. | 4 | 12 | 6 |
| „ முழு மஞ்சள் „ .. | 5 | 2 | 0 |

BLACK—கறுப்பு.

| | | | |
|---|---|---|---|
| 44/40 குதிரை .. .. | 4 | 11 | 0 |
| 30 ஸரஸ்வதி .. .. | 4 | 4 | 0 |

HIDES AND SKINS—மாட்டு ஆட்டுத்தோல்கள்.

மாடு (மாட்டுத்தோல்)

| | ரூ. | அ. | பை. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| பல்லாரி .. .. | | | | | 0 | 13 | 7 |
| பங்களூர் கமேலா | 0 | 12 | 8 | முதல் | 0 | 13 | 1 |
| ஷை உப்புத்தோல் | 0 | 12 | 1 | முதல் | 0 | 12 | 3 |
| ஹைதராபாக்கம் | 0 | 12 | 8 | முதல் | 0 | 12 | 9 |
| மட்வாடா | 0 | 12 | 8 | முதல் | 0 | 12 | 9 |
| ஏலூர் ஸ்ரீஜயஹோநிராபுரம் | 0 | 12 | 5 | முதல் | 0 | 12 | 6 |
| செட்டி கடல்கரை | 0 | 12 | 0 | முதல் | 0 | 12 | 9 |
| சிவரம் | 0 | 11 | 6 | முதல் | 0 | 11 | 8 |
| குடியாத்தம் | 0 | 11 | 6 | முதல் | 0 | 11 | 8 |
| பல்லாவரம் .. | 0 | 11 | 3 | முதல் | 0 | 11 | 6 |

யேனு (எருமைத்தோல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ராயதுர்க்கம் .. .. | | | | | 0 | 10 | 5 |
| பல்லாரி .. .. | | | | | 0 | 10 | 5 |
| பங்களூர் | 0 | 9 | 0 | முதல் | 0 | 9 | 3 |

வேனு (வெள்ளாடு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | | | | | 1 | 7 | 6 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 5 | 6 |

சேனு (செம்மறி ஆடு)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | | | | | 1 | 2 | 3 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | 1 | 0 | 3 | முதல் | 1 | 0 | 6 |
| சேலம் | 1 | 7 | 0 | முதல் | 1 | 12 | 0 |
| மட்வாடா | 1 | 4 | 0 | முதல் | 1 | 4 | 6 |

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | |
|---|---|
| | ரூ. |
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு பழையது 22புதிது31 | |
| கொன்னைப்பட்டை ஷை 14 0 0 முதல் | 14 8 0 |
| கடப்பை கடுக்காய் ஷை .. | 10 முதல் 11 |
| சேலம் அரசகிரிஷை ஷை .. | 18 முதல் 19 |
| நல்லெண்ணெய் ஷை .. | 105முதல்110 |
| புங்கம் எண்ணெய் ஷை .. | 95 முதல் 100 |
| எட்டிக்கொட்டை ஷை .. | 15 0 0 |
| உள்ளிப்பூண்டு ஷை .. | 45 0 0 |
| பூந்திக்கொட்டை ஷை .. | 9 8 0 |
| விளக்கெண்ணெய் ஷை .. | 70 0 0 |
| மணிலாக்கொட்டைபருப்பு பாரம்1-க்கு | 33முதல்34 |
| உடைக்காதது 42 மணங்கு .. | 57 முதல் 58 |
| கொட்டை முத்து 165 ராத்தல் .. | 10 முதல் 10½ |

| | |
|---|---|
| | ரூ. அ. பை. |
| ரங்கூன் அரிசி 63 படி .. | 11 0 9 |
| பந்தர் பச்சை அரிசி 44 படி .. | 7 4 0 |
| நெல்லூர் அரிசி 31 படி 6 4 0 முதல் | 6 12 0 |
| கோதுமை 4 படி முதல் 4½ படி .. | 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் .. | 6 4 0 |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் .. | 12 0 0 |
| ஷை (பல்லாரி) ஷை .. | 17 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு ஷை | 15 0 0 |

METALS—லோகங்கள்.

| | |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'R⁻x' ம் இங்கிலீஷும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, | ரூ. |
| பாரம் .. | 195 |
| செப்பு தகடுகள் பாரம் .. | 242 |
| செப்புக்கட்டி ஷை .. | 210 |
| நாகம் ஷை | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 74 |
| ஈயம் ஷை .. | 54 |
| காரீயம் ஷை .. | 49 |
| வெள்ளீயம் ஷை .. | 192 வராகன். |

IRON—இரும்பு.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் ரூ. | 20½ |
| சீமை .. .. .. | 42 |
| மருக்கி தகடு 6—9, 12—13, | 20—37 |
| பீப்பாய்க் கட்டு .. .. | 27 |
| 8 பட்டை எஃகு .. .. | 20—20½ |
| எஃகு வில்கட்டு .. .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 நெ. .. | 21 |
| சீமை ஷை .. .. .. | 40-46-49 |

SEASON.

## காலஸ்திதி

RAINFALL.

**மழை.**—1911ஸு ஏப்ரல்மீ 1-உயிலிருந்து, 29-உ வரையில் பெய்த மழை அளவும், இந்தக்காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாக குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 1·57 | 0·68 |
| வால்டேர் | ·0 | 0·57 |
| காக்கிஞடா | ·0 | 0·32 |
| மசூலிப்பட்டணம் | ·0 | 0·46 |
| நெல்லூர் | ·0 | 0·40 |
| மதராஸ் | ·0 | 0·40 |
| கூடலூர் | ·0 | 0·82 |
| நாகப்பட்டணம் | 0·04 | 0·54 |
| பாம்பன் | ·0 | 2·21 |
| கொழும்பு | 0·73 | 11·51 |
| திருவநந்தபுரம் | 1·17 | 4·27 |
| கொச்சி | 4·04 | 4·75 |
| கள்ளிக்கோட்டை | 0·11 | 4·12 |
| மங்களூர் | 0·02 | 1·51 |
| மெர்க்காரா | 0·38 | 2·44 |
| ஐதராபாத் | 0·20 | 0·66 |
| ரெய்ச்சூர் | ·0 | 0·60 |
| பல்லாரி | 0·60 | 0·68 |
| கர்நூல் | 0·30 | 0·88 |
| கடப்பை | 1·20 | 0·51 |
| ஹாஸ்ஸான் | 1·09 | 2·82 |
| பெங்களூர் | 1·09 | 1·11 |
| கொடைக்கானல் | 4·12 | 3·90 |
| உதகமண்டலம் | 6·50 | .. |
| கோயம்புத்தூர் | 0·20 | 1·62 |
| வேலூர் | 1·40 | .. |
| சேலம் | 0·93 | 1·83 |
| திருச்சிஞப்பள்ளி | 1·78 | 1·68 |
| புதுக்கோட்டை | 1·83 | .. |
| மதுரை | 2·01 | 2·05 |
| திருநெல்வேலி | 0·77 | 3·15 |





Photo by Bourne & Shepherd, Calcutta.

BESHESHAR NATH OR GOLDEN TEMPLE, BENARES.
காசி விச்வேச்வரர் கோயில்.



ANNAPURNA TEMPLE, BENARES.
அன்னபூரணி கோயில்.

# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ.,
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஹூ வைகாசிமீ—MAY 1911. | ஸஞ்சிகை 5. No. 5.

## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. | | Foreign. |
|---|---|---|---|
| | Rs. A. P. | | Rs. A. P. |
| Per annum | ... 4 0 0 | ... | ... 6 0 0 |
| Single copy | ... 0 6 0 | ... | ... 0 8 0 |
| Sample copy | ... 0 2 0 | ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| Less than ¼ page | ... 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தாத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு | .. 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி | .. 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி | .. 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு | அங்குலம் ஒன்றுக்கு | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்,

# பிழைக்கும் வழி.
## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஸு வைகாசிமீ—MAY 1911. | ஸஞ்சிகை 5. No. 5.

### பொருளடக்கம்.

| | பக்கம். |
|---|---|
| **பத்திராதிபர் குறிப்புகள்** | |
| பருத்திக் கொட்டை எண்ணெய்—ஸ்தூலமும் தேகப் பயிற்சியும்—ஹிந்து ஜன சமூகத்தின் ஆசாரத்திருத்தம்—கிராமப் புஸ்தக சாலைகள் | 227-232 |
| **விசேஷ வியாஸங்கள்** | |
| தஞ்சாவூர் ஜில்லாவில் நாற்றங் கால்கள் —பி. எல். தேவி ஸிங் | 233 |
| திருவாங்கூரில் கயிறு திரித்தல் | 235 |
| இங்கிலாந்தில் கிண்டர்கார்ட்டன் —பி. ஏ. கிருஷ்ணமூர்த்தி | 238 |
| அக்னி நக்ஷத்திரம் —எம். வி. எஸ். அனந்தபத்மநாப ராவ் | 241 |
| ஒரு வாடாப் புஷ்பம் —டி. வி. வி. ரமணய்யர் | 244 |
| நெல் விதை —எஸ். வைத்திலிங்கம் பிள்ளை | 245 |
| பத்மினி —டி. எஸ். வைத்தியநாதன் | 246 |
| **விசேஷத்திரட்டு** | |
| ஒற்றை நாற்று நடவு | 249 |
| சுகம் பேணும் முறைகள் | 252 |
| பால்ய விவாகம் | 255 |
| **பத்திரிகை ஆராய்ச்சி** | |
| மறவர்கள் | 257 |
| புஸ்தகமும் வாசிப்பும் | 257 |
| கொழுஞ்சிவிதை ஸரியாய் முளைத்தல் | 258 |
| விவாகம் | 258 |
| சர்க்கரை வியாபாரம் | 259 |
| நக்ஷத்திரங்களைக்கொண்டு நாழி சொல்லுதல் | 259 |
| வாழை நார் வஸ்திரம் | 260 |
| **புஸ்தக ஆராய்ச்சி** | 260 |
| **சிறுவர் பகுதி** | 261-262 |
| **ஸ்திரீகள் பகுதி** | 263-264 |
| **பகுதிக் குறிப்புகள்** | |
| விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் | 265-274 |
| **மாஸ வர்த்தமானம்** | 275-277 |
| **மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** | 278-280 |

### CONTENTS.

| | PAGE. |
|---|---|
| **Editorial Notes** | |
| Cotton Seed Oil-Fatness and Exercise-Hindu Social Progress-Village Libraries ... ... ... | 227-232 |
| **Special Articles** | |
| Seedbeds in the Tanjore District — B. L. Davey Singh ... ... ... | 233 |
| The Coir Industry in Travancore ... | 235 |
| Kindergarten in England — P. A. Krishnamoorthi ... .. ... | 238 |
| Dog Days — M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T. ... | 241 |
| A Unfading Flower — T. C. V. Ramana Aiyar ... ... ... | 244 |
| Seed Paddy — S. Vythilingam Pillai ... ... ... | 245 |
| Padmini — T. S. Vaidyanathan ... ... ... | 246 |
| **Selections** | |
| Single Planting of Paddy ... ... | 249 |
| Preserving Health ... ... ... | 252 |
| Early Marriage ... ... ... ... | 255 |
| **Review of the Press** | |
| Maravars ... ... ... | 257 |
| Books and Reading ... ... ... | 257 |
| Germination of Wild Indigo Seed ... ... | 258 |
| Marriage ... ... ... ... | 258 |
| Sugar Industry ... ... ... | 259 |
| Fixing Time by the Stars ... ... ... | 259 |
| Plantain Fibre Cloth ... ... ... | 260 |
| **Reviews of Books** ... ... ... ... | 260 |
| **The Boys' Section** ... ... ... | 261-262 |
| **The Ladies' Section** ... ... ... | 263-264 |
| **Department Notes** | |
| Agricultural Notes ... ... ... | 265 |
| Industrial Notes ... ... ... | 267 |
| Educational Notes ... ... ... | 268 |
| Scientific Notes ... ... ... | 269 |
| Medical Notes ... ... ... | 270 |
| Legal Notes ... ... ... | 271 |
| Personal Notes ... ... ... | 272 |
| Fun and Anecdote ... ... ... | 273 |
| Curiosities ... ... ... | 274 |
| **News of the Month** ... .. ... | 275-277 |
| **Madras Market Reports** ... ... | 278-280 |



## EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புகள்.

### Cotton Seed Oil.

பருத்திக் கொட்டை எண்ணெய்.—இதைப் பற்றி 1909-ம் வருஷத்து மே, ஜூலை ஆகிய இந்த இரண்டு மாஸத்து ஸஞ்சிகைகளிலும் எழுதியிருக்கிறோம். தற்காலத்தில் நல்ல நெய் என்பது குதிரைக் கொம்பாகிவிட்டது. கடையில் விற்கும் நெய்யை வாங்கிக் குத்திக் கொண்டு சாப்பிடுவிதைவிட நெய்யில்லாமலே சாப்பிடுகிறவர்களும், எண்ணெயைக் குத்திக் கொண்டு சாப்பிடுகிறவர்களும் பலர் உளர். இவர்களுக்கு நெய்க்குப் பதிலாக வேறு ஏதாவது நல்ல தைலபதார்த்தம் அகப்படும் பக்ஷத்தில், அதற்கு நல்ல கிராக்கி ஏற்படும் என்பதில் ஸந்தேக மில்லை.

அமெரிக்கா ஈஜிப்ட் இந்த இரண்டு தேசங்களிலும் பருத்தி ஏராளமாய்ச் சாகுபடி செய்யப்படுகிறது. இதனால் கிடைக்கும் பருத்திக் கொட்டையிலிருந்து ஒரு எண்ணெய் இறக்கி, அந்த எண்ணெயை ஸோப்பு செய்யவும், சமையல் செய்யவும் உபயோகிக்கிறார்கள்.

இந்தியாவில் கிடைக்கும் பருத்திக் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைச் சமையலுக்கு உபயோகிப்பதில் இதுவரையில் ஸொல்ப அஸௌகரிய மிருந்தது. அதாவது, இந்தியா எண்ணெயில் கொஞ்சம் காரல் இருந்தது. அந்தத் தொந்திரவு இப்பொழுது நீங்கிவிட்டது. இந்தியா எண்ணெயின் காரல் அந்த எண்ணெயின் செகப்புக்குக் காரணமாகிற சில ஸத்துக்களால் ஏற்பட்டது. இந்த ஸத்து நூற்றுக்கு 7·5 பாகம் முதல் 9·7 பாகம் வரையில் எண்ணெயில் இருந்தது. இந்த ஸத்தை ஒரு மாற்றால் முறித்து ஜலத்தை விட்டு எண்ணெயைக் கழுவுகிறதால், அதன் காரல் அடியோடே எடுபட்டுப் போய்விட்டது. இந்த முறையைக் கல்கத்தாவில் இந்தியன் ம்யூஸியத்துக்குத் தலைவரான டி. ஹூபர் என்பவரும், ப்யூஸாவில் விவஸாய ரஸாயன சாஸ்திரியாகிய டாக்டர் ஜே. டபள்யு. லெதர் என்பவரும் கண்டு பிடித்தார்கள்.

இதுவரையில் இந்தியாப் பருத்திக் கொட்டை எண்ணெயின் விலை ஈஜிப்ட் அமெரிக்கா ஆகிய இந்த தேசத்து எண்ணெய்களின் விலையைவிடக் குறைச்சலாகவே இருந்தது. இனிமேல் இந்தியா எண்ணெய்க்கு விலை ஏறி விவஸாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் நல்ல லாபம் வரும். அதோடுகூட நெய்யில்லாமல் நல்லெண்ணெய் தேங்காய் எண்ணெய் முதலிய எண்ணெய்களைக் குத்திக்கொண்டு சாப்பிடுகிறவர்களும் புதிய பருத்திக் கொட்டை எண்ணெயை உபயோகிக்கக்கூடும். வீரிய விர்த்தி, தாது ஸ்தம்பனம், மார்பில் உள்ள கபம் சாந்தியாதல், மலத்தை இளக்குதல், விந்துவை இறுகச் செய்தல் ஆகிய இந்த நற்குணங்களெல்லாம் இந்தப் பருத்திக் கொட்டை எண்ணெய்க்கு உண்டென்று யுனானி வைத்திய புஸ்தகமொன்றில் சொல்லப்பட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

### Fatness and Exercise.

ஸ்தூலமும் தேகப் பயிற்சியும்.— சிறுவனாயிருக்கும்பொழுது ஒல்லியாயும், ஒற்றை நாடியாயு மிருந்த ஒருவன் வயதானதும், பருத்து அவன் உடம்பு ஸ்தூலிப்பதை நாம் ஸாதாரணமாய்ப் பார்க்கிறோம். புருஷன் ஸ்திரீ இரண்டு பேர்களுக்கும் வயதாகும்பொழுது சில பேர்களுக்கு உடம்பு ஸ்தூலிப்பது ஸகஜம். ஒரு சிறு குழந்தையின் உடம்பு ஸ்தூலிக்கும், ஸ்தூலிக்காது என்பது அந்தக் குழந்தை 17 வயதாவதற்கு முன் தெரிந்து விடும். ஸ்தூலிப்பதா யிருந்தால், 24 வயது

வரையில் உடம்பு பருத்துக்கொண்டே வரும். பெண்களுக்கும் இப்படியே.

தாய் தகப்பன்மார்களுக்கு ஸ்தூல சரீரமாயிருந்தால், அவர்களுக்கு ஒரே குழந்தையாயிருக்கும் பக்ஷத்தில், அந்தக் குழந்தைக்கும் ஸ்தூல சரீரம் ஏற்படலாம். இரண்டு குழந்தைகளாயிருந்தால், இரண்டாவது குழந்தைக்கு உடம்பு அநேகமாய்ப் பருக்காது. நான்கு அல்லது ஐந்து குழந்தைகளிருந்தால், ஏதாவது இரண்டு குழந்தைகள்தான் பருத்திருக்கும். பாக்கிக் குழந்தைகள் ஸாதாரணமான பருமனைத்தான் இருக்கும். இப்படிச் சிறுவர்களுக்கு உடம்பு பருக்கும்பொழுது அவர்களைத் தக்கபடி கஸரத்து செய்யச் சொல்லவேண்டும். அப்படி கஸரத்து செய்தால், பருமனை அடக்கிவிடலாம்.

சிலபேர்களுக்கு 40 வயதாகும்பொழுது உடம்பு ஸ்தூலிக்க ஆரம்பிக்கும். 40 வயதுக்கப்புறம் உடம்பு பருக்க ஆரம்பித்தால், 50 வயதாகும் வரையில் பருத்துக்கொண்டே வரும். அப்பொழுது கஸரத்து செய்தால், பருமனை அடக்குவது கொஞ்சம் அஸாத்தியமாகும். ஆறு ஏழு வருஷத்தில் சேர்ந்த ஊழல் சதையை ஒரு மாஸம் ஒரு வருஷத்தில் கஸரத்து செய்து கரைத்துவிட முடியாது.

வயதாகும்பொழுது புருஷன் ஸ்திரீ இரண்டு பேர்களுக்கும் ஒன்று உடம்பு பருக்கும், அல்லது இளைக்கும். 55 வயதில் ஒரே எடையாயிருந்த இரண்டு இரட்டைப் பிள்ளைகள் (ஸகோதரர்கள்) 56 வயதானதும், ஒருவனுக்கு 30 ராத்தல் எடை ஜாஸ்தியாகி இன்னொருவனுக்கு 15 ராத்தல் எடை குறைந்தது. இந்த வயதில் கஸரத்து செய்து பருமனை அடக்க முடியாது. கஸரத்து செய்தால், அபாயம் நேரிடும். ஆகாரத்தை ஜாக்கிரதையாய் ஸரிப்படுத்தி வரவேண்டுமே ஒழிய வேறு ஒன்றும் செய்யக்கூடாது. வருஷத்துக்கு இரண்டு மூன்று தடவை நாம் நிறை போட்டுக்கொள்வது நலம். கொஞ்சம் நிறை ஜாஸ்தியாகி நடமாட்டத்துக்குக் கஷ்டமாயிருக்கும் பக்ஷத்தில், அதிகமாக ஊழல் சதை விழாமல் உடனே தேகப் பயிற்சி செய்ய ஆரம்பித்து, நிறை குறையாதவரையில் கஸரத்தை நிறுத்தாமல் அதைச்செய்து கொண்டே இருக்கவேணும்.

**Hindu Social Progress.**

ஹிந்து ஜன ஸமூகத்தின் ஆசாரத்திருத்தம்.—ஹிந்துக்கள் ஸுமார் பதினைந்து அல்லது இருபது வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட தற்காலத்தில் ஆசார விவகாரங்களில் சீரடைந்திருக்கிறார்களென்றே சொல்லவேண்டுமென்று ஒரு பத்திராதிபர் எழுதியிருக்கிறார். இப்படிச் சொல்வது வாஸ்தவந்தான். இருபது வருஷத்துக்கு முன்னால் ஒருவன் கப்பலேறிப்போய்த் திரும்பி வந்தாலாவது, அல்லது விதவை விவாகம் செய்தாலாவது அவனைச் சேர்ந்தவர்கள் மும்மரமாய்க் கங்கணங் கட்டிக்கொண்டு அவனை பைஷ்காரம் செய்து அவனுக்கு செய்யக்கூடிய தொந்தரவுகளையெல்லாம் செய்வதென்பது நின்றுபோய் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடிக்காதவர்களைக் கண்டனம் செய்யாமல் பூலோகத்தில் தங்களுக்குப் பிடிக்காதவர்கள் எத்தனையோ பேர்களைப்போல அவனையும் பாவித்து வருகிறார்கள். ஐரோப்பியர்களோடு பழக்கம் அதிகரித்து விட்டதாலும், பொதுவாகப் படிப்பு அபிவிருத்தியாகி விட்டதாலும், தேக சுத்தி, ஆத்ம சுத்தி, மனுஷத்தனம், உத்தியோகங்களில் லஞ்சம் வாங்காதிருத்தல், பொது நலத்தை நாடுதல், பெண்பிள்ளைகளிடத்தில் ஒரு மதிப்பு, ஆகிய இந்த நற்குணங்கள் அதிகரித்திருக்கின்றன. இருபது வருஷத்துக்குமுன் ஒருவனுக்குக் கூத்தியார் இல்லாமலிருந்தால், அகௌரவமாக எண்ணியிருந்தது போய், கேவலம் சில மூடர்கள் மட்டும் தற்காலம் தாஸி வீடுகளுக்குப் போகிறார்கள். இதுவும் முன்போல பைரங்கமாக இல்லாமல் ஒளிமறைவாகத்தான் நடக்கிறது. கல்யாணவிசேஷங்களில் ஸதிர்க்கச்சேரி வைப்பது முன்போல அவ்வளவு பிரபலமாய்க் கிடையாது. ஸ்திரீகளின் நிலைமைஉயர்ந்துவருகிறது.



மனைவி, குழந்தைகள் இவர்களிடத்தில் முன்னிருந்த விசுவாஸம் குறையாமலும் படித்தவர்கள் தங்கள் மனைவிகளைத் தங்களுடைய எச்சில் இலையில் சாப்பிட விடாமல் தனியாக இலைபோட்டுக்கூட உட்காரவைத்துச் சாப்பிடச் சொல்லுகிறார்கள். சிறுவர்களுக்குள் குடி என்பதில்லாமல் பெரியவர்களிடத்தில் மட்டும் அது இன்னும் கொஞ்சம் இருந்து வருகிறது. ஒருவன் மற்றொருவனைத் தன் பந்து, ஸ்வஜாதி, என்று அன்பு பாராட்டுவதுபோய் அவனைத் தன் ஸ்வதேசி என்று எண்ணத்தொடங்கியிருப்பது தேசத்துக்குள்ள க்ஷேம காலத்தைக் குறிக்கிறது. ஹிந்து ஸமூகத்தில் இன்னென்ன சீர்திருத்தங்கள் ஆகியிருக்கின்றனவென்று விரல்களை மடக்கி ஒன்றொன்றாக எண்ண முடியாமல் போனாலும், பொதுவாக அடியில் கண்ட விஷயங்களில் ஹிந்துக்கள் சீரடைந்திருக்கிறார்கள் என்றே சொல்லலாம். அவையாவன:—

(1) இரண்டு பெண்ஜாதி கல்யாணம் செய்து கொள்ளாதது

(2) சிறு விதவைகளைப் புனர் விவாகம் செய்வித்தல். இது பணக்காரக் குடும்பங்களில் விசேஷமாக பம்பாய் மகாராஷ்ட்ர பிராமணர்களுக்குள் அதிகம்.

(3) விதவா க்ரஹங்கள் ஏற்படுத்தி விதவைகளின் நிலைமை உயர்ந்திருத்தல். பட்டணங்களில் சில பெரிய வீடுகளில் விதவைகள் தலைமயிர் வைத்துக்கொண்டும், சில நகைகள் பூட்டிக்கொண்டுமிருக்கிறார்கள்.

(4) பெண்களை வயதானபிறகு கல்யாணம் செய்து கொடுத்தல். இதற்கு முக்கிய காரணம் ஸரியான வரன் கிடைக்காததுதான்.

(5) பெண்களுக்குச் சம்பளங் கொடுத்து அவர்களைப் படிப்புக்காக ஸ்கூல்களுக்கு அனுப்புதல்.

(6) தீண்டாதவர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர முயலுதல்.

(7) கப்பலேறி அயல் தேசங்களுக்குப் போகுதல் அப்படிப் போய்த் திரும்பி வந்தவர்களை அதிகத் தொந்தரவில்லாமல் ஜாதியில் சேர்த்துக் கொள்ளுதல்.

(8) பிராமணர்களுக்குள் ஸரியான வரன் கிடைக்காதபொழுது மனம் நொந்து ஜாதியை விட்டு வேறுஜாதியில் கல்யாணம்செய்தாலும் நல்லது என்ற எண்ணம் சில வேளைகளில் உண்டாகுதல் இதனால் பிராம்மணர்களுக்குள் ஒருவருக்கொருவர் பேதமில்லை என்ற எண்ணம் உண்டாயிருத்தல்.

உலகத்தில் நடக்கிற விஷயங்களை அறியாமல் கிராமாந்தரங்களிலேயே வஸித்து வரும் சிஷ்டர்கள் மேற்சொல்லியவைகளையெல்லாம் காலவித்தியாஸம், கலிகாலக் கூத்து, என்று எண்ணுவார்கள். ஆனால் உலகநடவடிக்கைகளைத் தெரிந்து வருகிறவர்கள் இப்பொழுது நடக்கிற விஷயங்களை இருபது வருஷத்துக்கு முன் நடந்தவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மேல் சொல்லியவைகளால் ஜனஸமூகத்துக்கு நன்மையே ஒழிய கெடுதி இல்லையென்று சொல்லுவார்கள்.

**Village Libraries.**

கிராமப் புத்தக சாலைகள்.—உலகத்தில் ஜெயிலுக்குப் போகும் குற்றவாளிகளின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால், அவர்களில் அநேகர் படிப்பில்லாத ஜனங்களும் பிழைக்கும் வழி தெரியாதவர்களுமாகவே இருப்பார்கள். அவர்கள் ஜீவனம் செய்யும்பொருட்டுத் திருடியோ, பொய் சொல்லியோ பிழைக்கலாமென்று எண்ணி, தகாத காரியங்களைச் செய்து கடைசியில் அகப்பட்டுக்கொண்டு படாத பாடுகளைப் படுகிறார்கள். படிப்புண்டானால், ஜனங்கள்

பிழைக்கும் வழிகளை யறிந்து பொருள் ஸம்பாதித்து அதனுல் திருப்தி யடைந்து பிறரிடத்தில் அன்பாகவும் ராஜாங்கத்தாரிடத்தில் விசுவாஸமாகவும் இருக்க ஹேதுவாகும். இந்த விஷயங்களை அறிந்தே உலகத்தில் அநேக தேசங்களில் எல்லா ஜனங்களையும் கட்டாயப்படுத்திப் படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிறுர்கள். சிறு ராஜ்யங்களா யிருந்தால், இப்படி எல்லா ஜனங்களையும் கட்டாயமாய்ப் படிப்பிப்பது சிரமமல்ல. அதிகச் செலவும் கொள்ளாது. ஆனுல், இந்தியா போன்ற பெரிய தேசங்களில் எல்லாரையும் ஓரே தடவையாய்க் கட்டாயமாய்ப் படிக்கச் செய்வது அஸாத்யமான காரியம். முதலில் செலவுக்கு வேண்டிய பணம் கிடைப்பது துர்லபம். அப்படிப் பணம் கிடைத்தாலும் சொல்லிக்கொடுக்கபோதுமான வாத்தியார்கள் அகப்படுவது மகா துர்லபம். இருந்தாலும் நல்ல விஷயத்தில் ஊக்கத்தைக் கைவிடாமல் ஏதோ முடிந்த வரையில் காரியத்தை ஆரம்பித்துச் செய்வதே புத்திசாலித்தனம். இந்த நோக்கத்துடன்தான் கனம் கோக்லே மூலாதாரப் படிப்பைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கூடியவரையில் முனிஸிபாலிடிகளும் லோக்கல் போர்டுகளும் கட்டாயப்படுத்த வேண்டு மென்று மசோதா கொண்டுவந்திருக்கிறுர். இது நிறைவேறினுல், தேசத்தில் வித்தை பரவி அதனுல் அநேக ஜனங்கள் நன்மை அடைவார்கள் என்பதற்கு ஸந்தேக மில்லை. ஆனுல், இந்தியா போன்ற பெரிய தேசங்களில் படிப்பைப் பரவச் செய்ய ஓரே ஒரு வழியை மட்டும் கைக்கொள்ளக்கூடாது. அதற்கு ஸாதகமான வழிகள் அனேகம் இருக்கின்றன. அவைகளில் ஒன்று கிராமங்களில் புஸ்தக சாலைகளை ஏற்படுத்துவது.

கிராமவாஸிகள் எல்லாரும் அநேகமாய் விவஸாயிகளாகவே இருப்பார்கள். அவர்களில் வெகுபேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அப்படித் தெரிந்தவர்களுக்கும் தேச பாஷைகள் தான் அநேகர்களுக்குத் தெரியும். ஆகவே, படிக்கத் தெரிந்தவர்களுக்கு உபயோகப்பட்ட கிராமப் புஸ்தக சாலைகள் முழுமையும் தேச பாஷைப் புஸ்தகங்கள் அடங்கியவைகளாய் இருக்கவேண்டும். தேசபாஷைகளில் தற்காலத்தில் உலக நடவடிக்கைக்கு அனுஸரணையான புஸ்தகங்கள் இல்லை. வங்காளம், மகராஷ்டரம் இந்த தேச பாஷைகளில் இருக்கலாம். நமக்குத் தெரிந்தவரையில் தமிழ் பாஷையில் பெரும்பான்மையாக இலக்கிய ஸம்பந்தமானவும், மத ஸம்பந்தமானவும், பக்தி மார்க்கத்தை அனுஸரித்தும் அநேக புஸ்தகங்கள் இருக்கின்றனவே ஒழிய தற்கால நாகரீகத்தை ஒட்டிய புஸ்தகங்கள் மிகவும் சொற்பம். இப்படிப்பட்ட புஸ்தகங்கள் எழுதுவது சிரமம். அவைகள் எழுதப்பட்டாலும் அவைகளைப் பணங் கொடுத்து வாங்குபவர் மிகவும் சொற்பம். இதனுல்தான் இப்படிப்பட்ட புஸ்தகங்களும் வெளி வருவதில்லை. ஆனுல், இப்படிப்பட்ட புஸ்தகங்கள் மூலமாய்த்தான் ஜனங்களின் புத்தி விசாலமாகி, விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் ப்ரஜாலக்ஷணம் முதலிய பிழைக்கும் வழிகளும் நற்குணங்களும் ஏற்பட்டு தேசம்விருத்தி அடையும். ஆகவே, எப்பாடு பட்டாவது இப்படிப்பட்ட புஸ்தகங்களைப் பிரசுரம் செய்யவேண்டியது அத்யாவசியமா யிருக்கிறது.

பெரிய பட்டணங்களில் 'ஸர்க்யுலேட்டிங் லைப்ரெரி' என்பதாக ஸொந்தத்தில் பிழைப்புக்காக நபர்களாலும், பொது நன்மைக்காக சில சங்கங்களாலும் புஸ்தகசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த சாலைகளில் பல இங்கிலீஷ் புஸ்தகங்களும் பத்திரிகைகளும் வரவழைக்கப்படுகின்றன. இவைகளை எல்லாம் ஒருவரே வரவழைப்பதா யிருந்தால், வெகு பணம் செலவழிக்கவேண்டி யிருக்கும். அப்படிச் செய்வதற்கு பதிலாக ஒரு ஸர்க்யுலேடிங் லைப்ரெரியில் சேர்ந்து மாதா மாதம் அந்த லைப்ரெரி சொந்தக்காரருக்கு சொல்ப தொகை சந்தாவாகக் கொடுத்து வந்தால், அந்தத் தொகைக்குத் தக்கபடி சில புஸ்தகங்களும் பத்திரிகைகளுமோ அல்லது பல புஸ்தகங்களும் பத்திரிகைகளுமோ கூலியாள் மூலமாய் வீட்டில் கொண்டுவந்து கொடுக்கப்படும். இவைகளை சில நாள்களுக்கு (ஒன்று முதல் 7 நாள்) வைத்துக் கொண்டு வாசித்துவிட்டு மறுபடி வரும் கூலியாளிடத்தில் திருப்பிக் கொடுத்துவிட்டால், அவன் வேறு புஸ்தகங்களும் பத்திரிகைகளும் வாசிக்கக் கொடுப்பான். இப்படி ஸொல்ப சந்தாவுக்குப் பல புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் பிரியமுள்ளவர்கள் வாசித்துவிடலாம். பெரிய பட்டணங்களில் தான் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேறும். அங்கேதான் அநேகம் பேர்கள் கிட்டக் கிட்ட வீடுகளி லிருப்பார்கள். சந்தாக் கொடுத்துப் படிப்பவர்களும் அநேகம் பேர்களிருப்பார்கள். ஆகையால், ஒரு முதலாளி ஏற்பட்டு, இப்படிப்பட்ட ஸர்க்யுலேடிங் லைப்ரெரியை நடத்தித் தானும் லாபம் ஸம்பாதித்துக்கொண்டு பிறருக்கும் லாபத்தைத் தரும்படியான அறிவைப் பரவச் செய்யலாம். நாட்டுப்புறங்களில் மேல் சொன்ன ஏற்பாடு வெல்லாது.

முதலாவது, தேச பாஷையில் ஸரியான புஸ்தகங்களில்லை. இரண்டாவது, இருந்தாலும் கிராமங்களுக்கு அவைகளைத் தபால் மூலமாய் அனுப்ப வேண்டியதால், புஸ்தகங்களின் போக்கு வரத்துக்காகும் தபால் சார்ஜ் சந்தாவை விழுங்கிவிடும் அதிக சந்தா விதித்தால் ஏழைகளாகிய கிராம வாஸிகள் சந்தா செலுத்த முடியாது. ஆகையால், கிராம புஸ்தக சாலைகளை ஏற்படுத்த கவர்ன்மெண்டாரே முன்வர வேண்டும்.

இதற்கு ஒரு பெரிய ஆக்ஷேபணை சொல்லலாம். ஊருராய்ப் புஸ்தகசாலை ஏற்படுத்துவதானுல், அபாரமான பணம் வேண்டும். அதற்கு எங்கே போகிறது என்று கவர்ன்மெண்டார் கேட்கலாம். இது பிரமையே ஒழிய வேறில்லை. இப்பொழுது செய்யும் செலவைவிட அதிகமாகச் செய்யாமல், செய்வதைத் திருந்தச் செய்து அதனுல் நல்ல பலனுண்டென்று ஏற்பட்டால், பிறகு அதிகப் பணம் செலவழிக்க வேண்டுவதா யிருந்தால், கவர்ன்மெண்டார் ஏன் பின்வாங்கவேண்டும்? ஸர்க்காருக்குச் சிப்பந்திச் செலவு ஒன்றுமில்லை. ஒவ்வொரு கிராமத்துக்கும் கிராம முன்ஸீப் இருக்கிறுர். கவர்ன்மெண்டார் கிராமப் புஸ்தக சாலைகளை அவர்கள் பொறுப்பில் விட்டுவிடவேணும். கிராமக் கணக்குகள், டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டு, வில்லேஜ் ஷீட்டுகள் இவைகளுக்கு ஜவாப்தாரியா யிருப்பதுபோல கவர்ன்மெண்டார் ஒப்புவிக்கும் புஸ்தகங்களுக்கும் கிராம முனிஸீப் ஜவாப்தாரியா யிருக்கவேண்டும். இப்பொழுது பிரசுரமாகும் டிஸ்டிரிக்ட் கெஜெட்டு, விவஸாய பஞ்சாங்கம், விவஸாயத் துண்டுப் பத்திரிகைகள் போன்றவைகளெல்லாம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் அனுப்பப்பட வேண்டும். இன்னும் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், வித்யா விஷயம், ப்ரஜாலக்ஷணம் இவைகளைப் பற்றி கவர்ன்மெண்டார் அப்போதைக் கப்போது இங்கிலீஷில் பிரசுரிக்கும் ரிப்போர்ட்டுகளிலிருந்தும், புஸ்தகங்களிலிருந்தும் ஸாராம்சங்களைப் பொறுக்கி எடுத்து, இரண்டு மூன்று பேர்

களைத் தெரிந்தெடுத்து நியமித்து, ஜனங்களுக்கு விளங்கும்படியாக தேச பாஷையில் தர்ஜிமால் செய்து அச்சிடும்படி செய்து அப்படிப்பட்ட பிரசுரங்களின் காப்பி ஒன்றை ஒவ்வொரு கிராம முனிஸீப்புக்கும் அனுப்ப வேண்டும். லார்டு கர்ஸன் ராஜப் பிரதிநிதியாயிருந்த காலத்தில் நிலத் தீர்வை விஷயமாய்ப் பிரசுரித்த ஒரு இங்கிலீஷ் புஸ்தகத்தைத் தேச பாஷைகள் எல்லாவற்றிலும் மொழி பெயர்த்து ஒவ்வொரு கிராம முன்ஸீப்புக்கும் அனுப்பப்பட்டது. அதுபோல கிராம வாஸிகளுக்கு உபயோகமான பிரசுரங்களைக கவர்ன்மெண்டாரே பிரசுரிப்பதோடு வேறு யாராவது தற்கால நாகரீக விஷயமாகப் புஸ்தகங்களை வெளியிடும் பக்ஷத்தில், அவைகளில் ஏராளமான காப்பிகளை வாங்கி கிராமந்தோறும் அனுப்பவேணும். இப்படிச் செய்வது முன்கால அரசர்கள் செய்ததுபோல வித்யார்த்திகளை ஆதரிப்பதாக ஆவதோடு ஜன ஸமூகத்தின் அபிவிருத்தியைக் கோரிய செய்கையும் ஆகும். கிராம முன்ஸீப் புஸ்தகங்களைத் தன் வீட்டிலோ, அல்லது கிராமச் சாவடியிலோ வைத்து அங்கேயே வாசிக்க வருகிறவர்களுக்கு வேண்டிய ஸௌகரியங்களைச் செய்யவேண்டும். முதலில் ஸர்க்காருக்கு வரி செலுத்துகிறவர்களையும் ஸ்கூல் உபாத்தியாயர்களையும் மட்டும் மேற்படி புஸ்தக சாலையை உபயோகிக்க விடலாம். இப்படிச் செய்வதால் வேலையற்ற வெகு பேர்கள் கூடி வீண் பொழுது போக்காமல் காப்பதோடு கவர்ன்மெண்டார் வாங்கும் வரிக்கு, ஏதோ ஒரு பரிகாரமாக வாசிக்கப் புஸ்தகங்கள் கொடுக்கிறார்கள் என்று வரி செலுத்துகிறவர்கள் எண்ணிக்கொண்டு ராஜாங்கத்தாரிடத்தில் கொஞ்சம் விசுவாஸமாய் இருக்க ஹேதுவாகும்.

இப்படிப்பட்ட கிராமப் புஸ்தக சாலைகள் பரோடா ஸமஸ்தானத்தில் ஏற்பட்டு நடந்து வருகின்றன. அங்கே ஸுமார் 232 கிராமப் புஸ்தக சாலைகளிருக்கின்றன. அவைகளுக்காக 1909 10 வருஷத்தில் 23,104 ரூபாய்க்குப் புஸ்தகங்கள் வாங்கப்பட்டன. தவிர, புதிதாய் ஏற்படும் ஒவ்வொரு கிராமப் புஸ்தக சாலைக்கும் கவர்ன்மெண்டார் தாங்களே பிரசுரித்திருக்கும் 125 ரூபாய் பெறுமானமுள்ள புஸ்தகங்களும் கொடுக்கிறார்கள். 1909-10 ம் வருஷத்தில் இப்படிக் கொடுக்கப்பட்ட பிரசுரங்களின் மதிப்பு ரூ. 11,832.

ஐரோப்பாவிலுள்ள பெல்ஜியம் தேசத்திலும்புஸ்தக சாலைகள் ஏற்படுத்த ஒரு சட்டம் செய்யப்போகிறார்கள். தற்போது அந்த தேசத்தில் 717 கிராமப் புஸ்தக சாலைகள் போன்ற புஸ்தகசாலைகள் இருக்கின்றன. இவைகளுக்கு செலவுக்கு வேண்டிய பணமில்லை. தவிரவும் உபயோகமற்ற நாவல் (கதை) புஸ்தகங்களே விசேஷமாயிருக்கின்றன. ஆகையால், நல்ல அறிவு பரவக் கூடியனவாயும் உபயோகமுள்ளனவாயும் உள்ள புஸ்தகங்களைச் சேர்த்து ஒரு பெரிய புஸ்தக சாலை ஏற்படுத்தி அதிலிருந்து அங்கங்கே புஸ்தக சாலைகளுக்குப் புஸ்தகங்கள் ஸப்ளை செய்யப் போகிறார்கள். புஸ்தகங்களை இரவலாகத் தபால் மூலமாயோ, அல்லது சங்கங்கள் மூலமாயோ அனுப்புவார்கள். இந்தக் காரியங்களெல்லாம் 'ம்யூஸ்டு லிவர்' என்னும் ஒரு பெரும் சங்கத்தால் செய்யப்படும். இதற்த கவர்ன்மெண்டார் தபாலாபீஸ் மூலமாயும், ஸேவிங்க்ஸ் பாங்கி மூலமாயும் உதவி செய்வதோடு பண உதவியும் செய்வார்கள். சில புஸ்தகங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கட்டணமுமில்லாமல் இரவலாகக் கொடுக்கப்படும். அதே மாதிரி கைத்தொழில் முதலியவைகளைப்பற்றிய புஸ்தகங்கள் தொழிலாளிகளுக்கு ஒரு கட்டணமுமில்லாமல் இரவலாகக் கொடுக்கப்படும். பணக்காரர்களுக்குக் கட்டணம் செலுத்தினால் புஸ்தகங்கள் அனுப்பப்படும். பெல்ஜியத்தில் 1485 போஸ்டாபீஸ்கள் இருக்கின்றன. இவைகள் மூலமாய் அந்த தேசம் முழுவதும் புஸ்தகங்களைப் பரப்பி ஜனங்களுக்கு அறிவை ஊட்டலாமென்று ஷை ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்தியாவிலும் இப்படிப்பட்ட புஸ்தக சாலைகள் ஏற்படுத்த கவர்ன்மெண்டாருக்கு வேண்டிய சிப்பந்திகளும் ஸௌகரியங்களும் இருக்கின்றன. மனம் உண்டா?



## SEEDBEDS IN THE TANJORE DISTRICT.

BY.

B. L. DAVEY SINGH.

## தஞ்சாவூர் ஜில்லாவில் நாற்றங் கால்கள்.

இந்த ஜில்லாவில் நெற்பயிர் நாற்றை இரண்டு விதமாய் வளர்க்கிறார்கள். அவைகள் இரண்டிற்கும் புழுதிக் கால் நாற்று என்றும், சேற்றுக் கால் நாற்று என்றும் பெயரிட்டிருக்கிறார்கள். புழுதிக் கால் நாற்றுவது, நன்றாய்க் காய்ந்த படுகை நிலங்களையோ அல்லது வயல்களையோ ஆகிய இவைகளை அப்படியே காய்ந்தபடியே உழுது அந்த இடத்தை மேடு பள்ள மில்லாமல் ஸமமாக்கி விதை விட்டு வளர்க்கப்படுவதேயாம். சேற்றுக் கால் நாற்றுவது, வயல்களில் ரொம்பத் தண்ணீர் கட்டி பிற்பாடு அவைகளை உழுது விதை விட்டு வளர்க்கப்படுவதேயாம்.

இந்த இரண்டு விதங்களில் சேற்றுக் கால் நாற்றுத்தான் எங்கும் ஜாஸ்தியாயிருந்தது. இப்போது இரண்டு மூன்று வருஷ காலமாகத்தான் புழுதிக்கால் நாற்று எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறது. விவசாயிகள் அநேகருடைய அபிப்பிராயம் என்னவென்றால், புழுதிக்கால் நாற்று பட்டை வரப்பாகிற தென்பதும், நெல் விளை முதல் ஜாஸ்திப்படுகிறதென்பதுமாம். ஆனால், இப்படி ஒரே தீர்மானமாய் அபிப்பிராயங் கொண்டிருப்பது ஸரியாகத் தோன்றவில்லை.

யோஜித்துப் பார்ப்போமாகில், சேற்று நாற்று விடவேண்டிய பக்ஷத்தில், நாற்றங்கால் தயார் செய்வதற்குத் தண்ணீர் ஜாஸ்தியாய் தேவையாயிருக்கும். மேலும், அந்த நாற்றுகளைப் பாதுகாத்து வருவதில் அடிக்கடி தண்ணீரை சீராய்ப் பாய்ச்ச வேண்டும். ஆனால் புழுதிக் கால் நாற்றுக்கு அவ்வளவு தண்ணீர் வேண்டியது அவசியமில்லை. முதலாவது நாற்றங்கால் தயார் செய்வதற்கு ஜலமே வேண்டியதில்லை. விதைவிட்ட பிற்பாடும் ஜலம் அடிக்கடி பாய்ச்ச வேண்டியது அவசியமில்லை. இதுவே இவைகள் இரண்டிற்குமுள்ள வித்யாஸம்.

புழுதிக்கால் நாற்று விடுவதில் ஒருவிதமான தெய்வா தீனமான அபாயமிருக்கிறது. புழுதிக் கால் விதை விட்டு இரண்டொரு வாரத்துக்குள் நல்ல மழையாய் ஒரு மழை பெய்தால், புழுதிக் கால் நாற்றானது சேற்றுக் கால் நாற்றுக்கு ஸமமாகவே ஆகிவிடுகிறது. எப்பொழுது சேற்றுக்காலாய்விட்டதோ அப்போது சேற்றுக் கால் நாற்றுக்கு ஜலம் கட்டும் மாதிரி இதற்கும் கட்டவேண்டும். நாற்றுகளுக் கெல்லாம் அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அப்படிப் பாய்ச்சாமல் புழுதிக் கால் நாற்றுத்தானே என்று சொல்லிவிட்டுத் தண்ணீர் அடிக்கடி பாய்ச்சாவிட்டால், நாற்று நன்றாய்க் கிளம்பாது. போன வருஷத்தில் இதே மாதிரியாக நடந்துவிட்டது. புழுதிக் கால்விட்ட கொஞ்சநாளைக் கெல்லாம் மழை பொழிந்தது. ஆகையால், புழுதிக்கால் சேற்றுக் காலாய் விட்டது.

புழுதிக் கால் நாற்று விடவேண்டுமானால், வெள்ளம் வரும் முன்னமே, கிணற்று உதவியையோ, அல்லது குளத்து உதவியையோ கொண்டு ஏற்பாடு செய்துவிட வேண்டும். புழுதிக்கால் விடும் நிலமானது கொஞ்சம் மேட்டுப் பாங்காகவே இருக்க வேண்டும். ஒருக்கால் அக்கம் பக்கத்தில் ஜலம் வந்தாலும் கசிவு இருக்கக்கூடாது.

மேலும், நதிகளில் ஜலம் வந்த பிற்பாடும் சில இடங்களில் புழுதிக் கால் விடவேண்டி

யிருக்கும். அது இடத்தையும் காலத்தையும் பொறுத்திருக்கிறது. காலத்தை எப்படிப் பொறுத்திருக்கிறதென்றால், சில ஸமயங்களில் வெள்ளம் வந்து சரேலென்று நின்றுவிடும். அப்பேர்ப்பட்ட ஸமயங்களைக் கவனிக்க வேண்டும். எப்படி இடத்தைப் பொறுத்திருக்கிறதென்று பார்ப்போம். ஜலம் நிறையவும் வந்துவிட்டது. வாய்க்காலிலும் பாய்ந்து வருகிறது இருந்தாலும் சில ஸமயங்களில் இந்தப் பாய் வாய்க்காலின் கடைத்தலைப்பிற்கு ஜலம் தட்டிருக்கும். அப்பேர்ப்பட்ட இடங்களில் புழுதிக்கால் விடுவது நன்மையா யிருக்கும்.

ஜனங்கள் புழுதி நாற்றுக்கு அதிக ஜலம் விட்டால், வேர் கீழே இறங்கி பறிக்கக் கஷ்டப்படுகிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால், இது ஸரியல்ல. மழை பெய்வதினால் ஜலம் அதிகம் தங்கி சேற்றுக்கால் நாற்றுப் போலவே ஆகும். மேலும், புழுதிக் காலுக்கு விதை குறைச்சலாய்ப் போடவேண்டுமென்றும், அதினால் நாற்றுப் பட்டை வரப்பு ஆகிறதென்றும், விதை விட்டு இருபது அல்லது முப்பது நாளைக்குள் நாற்றங்காலில் கிளைவிடுகிறதென்றும், இன்னும் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். ஆனால், இந்தக் கணக்குக்கு குறைச்சல் விதை சேற்றுக் காலில் விட்டாலும், இதே மாதிரியாய்க் கிளைகள் விட்டு நாற்றும் ஓங்கி வளரும். ஆகையால், புழுதிக் கால் நாற்றுத்தான் நெல் ஜாஸ்தி காண்கிறது என்பது ஸரியன்று. மேலும் புழுதிக் கால் நாற்று விட்டால், நாற்றங்காலைச் சின்னச் சின்னத்துண்டுகளாகப் பிரிக்க வேண்டியது அவசியமென்றும் செய்கிறார்கள். இது அவசியமே யில்லை; ஒரு ஏக்கராவுக்கு ஜாஸ்திப்பட்டால் மூன்று துண்டாக்கலாம்.

புழுதிக் கால் நாற்றங் கால்களின் செய்கைகளில் இரண்டொரு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் அறுப்பான பிறகு கோடையில் மழை பொழிந்த பிற்பாடு நாற்றங்காலை மேலாக உழவேண்டும். கல்லுக் கட்டி இருக்கக் கூடாது. புழுதிக் கால் நாற்றங்காலுக்கு இரண்டு விதமான எருவே போடலாம்:—ஆட்டு மந்தையை வைத்தலும், பிண்ணாக்கு எரு இடுதலுமேயாம். வேறே ஒரு விதமான எருப்போட்டால், போட்ட எரு அப்படியே யிருக்கும். சேற்றுக் கால் நாற்றுக்கு எல்லா எருவும் போடலாம். புழுதிக் காலுக்கு ஏன் போடக்கூடாதென்றால், அதற்கு இப்பேர்ப்பட்ட எருவை உள்ளே செலுத்தி உணவாக்கப் போதுமான ஜலமில்லை.

புழுதிக் கால் நாற்றை 30 அல்லது 35 நாளைக்குள் பிடுங்கி நடவேண்டுமென்றும், சேற்றுக் கால் நாற்றை 40 அல்லது 45 நாளைக்கு மேல் பிடுங்கி நடவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். இப்படிச் செய்வது அவசியமே யில்லை.

இரண்டுக்கும் 25 நாள்கூடப் போதுமானதேயாம். இதற்கு உதாரணமாக, இப்போது அநேக இடங்களில் "ஊடு குருவை" என்று விதை விடுகிறார்கள். ஊடு குருவை என்றால், கலந்த குருவை என்று சொல்லலாம். குருவை நெல் சுமார் மூன்று மாதத்தில் விளைந்து விடும். ஆனால், சம்பா நெல்லுக்குக் கிட்டத்தட்ட ஏழு மாதஞ் செல்லும். குருவை நெல் விளைந்த பிறகு சம்பா நாற்று நட்டு சாகுபடி செய்கிறதென்றால், ஏழும் மூன்றும் பத்து மாதம் ஆய்விடும். இதற்காக அநேகர் ஒருபோக கிராமங்களில் ஒரு யுக்தி செய்கிறார்கள். கலக்கிற விதமானது இரண்டு பங்கு குருவையும், ஒரு பங்கு சம்பா விதையுமாம். பிற்பாடு விதை விட்டு 25 நாளுக்கெல்லாம் நாற்றுப் பறித்து நட்டு விடலாம். நட்ட



மூன்றாம் மாதம் குருவை நெல் அறுத்து விடலாம். பிற்பாடு மேற்படி அறுபட்ட குருவைத்தாள் அழுகிச் சம்பாத்தாள் மட்டும் துளுத்துக்கொண்டு விதை விட்ட ஏழாவது மாதத்தில் அறுவடைக்கு வந்துவிடும். ஆகவே சம்பா நெல் விதை மாத்திரம் விட்டு நாற்றுப் பறிப்பதாயிருந்தால், குறைந்தது 45 நாள் வேணுமென்று சொல்லுகிறார்கள். ஆனால், இவர்களே ஊடு குருவை நாற்று விட்டுப் பறிக்கும்போது 25 நாளைக் கெல்லாம் பறித்து விடுகிறார்கள். அப்போது சம்பா நாற்றானது 25 நாள் பயிர்தான் ஆகிறது. சில பேர்கள் கணக்கு என்னவென்றால், பயிர் எவ்வளவு மாதங்களில் பலன் தருமோ அவ்வளவு வாரங்கள் நாற்று முற்ற வேண்டுமென்பதாம். அதாவது, மூன்று மாதக் குருவைக்கு மூன்று வாரம் நாற்றும், ஆறுமாதச் சம்பாவுக்கு ஆறுவார நாற்றும் என்ற கணக்காம். இந்தக் கணக்குப் பார்க்கவேண்டியது அவசியமேயில்லையென்று இந்த ஊடு குருவை சாகுபடியிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனபடியால், எல்லாம் நாற்று வளமையைப் பொறுத்ததேயாம். நாற்றுப் பஞ்சையானால், 35 நாளுக்கு மேல் பறிக்கலாம். நாற்பது நாளுக்கு மேல்பட்டால் சிலாக்கியமில்லை.

இன்னமொரு விஷயமுமுண்டு. விதைகளை எல்லா வயல்களுக்கும் ஒரேயடியாய் ஒரே நாளில் விடக்கூடாது. கொஞ்ச நாள்கள் விட்டு விட்டு விடவேண்டும். ஏனென்றால், இப்படிச் செய்தால்தான் நாற்றுப் பிடுங்கி நடும்போது அதிக நாள் படாதிருக்கும்.

பி. எல். தேவி ஸிங்.

---

## THE COIR INDUSTRY IN TRAVANCORE

## திருவாங்கூரில் கயிறு திரித்தல்.

"தென்னைவனம்" என்று சொல்லப்படும் திருவாங்கூர் ராஜ்யத்தில், அங்கேயே உற்பத்தியானவும், சிறியவும், ஜனங்களுக்கு வெகு உபயோகமுள்ளவுமான கைத்தொழில்கள் அநேகம் உண்டு. இவைகளில் கயிறு திரித்தல் முக்கியமானது. இந்தக் கைத்தொழிலில் வேலை செய்பவர்கள் இழவர் முதலான கீழ் ஜாதியார்கள்தான். இந்தக் கைத்தொழிலை இழவர் கைத்தொழில் என்றே சொல்லலாம்.

கொல்லத்திலிருந்து அனந்தசயனமென்னும் திருவனந்தபுரத்துக்குப் போகும் வழியில் ரோடுகளின் இருபக்கங்களிலும் தென்னை மரங்களை வரிசையாய்க் காணலாம். ஆகாயத்தில், எங்கே தலையில் விழுந்துவிடுமோ என்ற எண்ணத்தைக் கொடுக்கும்படியான தென்னங் குலைகளை ஆயிரக்கணக்காய்க் காணலாம். கீழ் நிலத்திலோ சிறுவர், சிறுமிகள், வயது சென்றவர்கள் எல்லாரும் வெகு சுறுசுறுப்பாய் வேலை செய்து கொண்டிருப்பார்கள். தென்னை மரமோ நூற்றுக்கணக்கான மனிதர்களுக்கு வேலை கொடுக்கும் சக்தியுள்ளது. கயிறு திரித்தல் வெகு ஸுலபமானது. ஸாதாரண புத்திசாலித்தனத்துடன், அதிக தேக பலமில்லா விட்டாலும், இந்தக் கைத்தொழிலை ஆரம்பித்து வெகு லாபத்துடன் வேலை செய்யலாம். திருவாங்கூரில் கயிறு திரிப்பது பெண்பிள்ளைகளே யொழிய ஆண்பிள்ளைகளில்லை. ஆனால், மலைக்குக் கிழக்குப் பக்கத்திலோ ஆண் பெண் இருவர்களும் வேலை செய்கிறார்கள்.

நல்ல நார் கிடைக்கவேண்டுமானால், தேங்காய்க் குலை போட்ட எட்டு அல்லது

ஒன்பது மாதத்திற்குப்பிறகு பறிக்கவேண்டும். அப்பொழுது தான் காய் முதிர்ந்திருக்கும். காயை இதற்கு முன்பாவது பின்பாவது பறித்தால் நல்ல நார் கிடைக்காது. காயைப் பறித்தவுடன் இழவர்கள் தேங்காய்மேல் மூடிக்கொண்டிருக்கும் மட்டையைக் கோடாலியினாலோ, மண்வெட்டியினாலோ உரித்து விடுவார்கள். உரித்தவுடன் மட்டைகளை ஒரு இடத்தில் குவித்துக்கொண்டு பெண்பிள்ளைகள் ஒரு சிறிய பருத்த மரத்துண்டினால் அடித்து நாரைவேறுபடுத்துவார்கள். ஆனால், வேறு படுத்துவதற்கு வேறு ஒரு வழி உண்டு. இந்த வழியினால் நார் கிடைப்பதற்குக் கொஞ்சம் நாள் செல்லும். அதாவது மூன்றுமாதம் ஜாஸ்தியாய் செல்லும். இந்த வழியில் சிறுவர்கள் மட்டைகளை உரித்தவுடன் கிணற்றிலோ அல்லது இதற்காக வெட்டியிருக்கும் சிறு குட்டைகளிலோ கொண்டுபோய்ப் போடுவார்கள். மட்டைகள் இந்தக் குட்டைகளில் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் ஊறிக்கொண்டு கிடக்கும். கொஞ்ச நாள் ஊறினவுடன் ஒருவித கெட்ட நாற்றம் உண்டாகும். இந்த நாற்றத்தை ரோடுகளின் வழியாய்ப் போகும் ஒவ்வொரு பிரயாணியும் முகர்ந்து பார்த்திருக்கலாம். இந்த மூன்று மாதம் சென்றவுடன் மட்டையைக் கையால் தொட்டுப் பார்த்தால், கசகச வென்று துர்நாற்றத்துடன் பார்க்கக்கூட ஒரு வெறுப்பு உண்டாகும். மட்டையின் நிறமோ முன்னிருந்த சிவந்த நிறம் போய் ஒருவித கறுப்பு நிறம் உண்டாயிருக்கும். உடனே முன்போல் சிறுவர்கள் மட்டைகளைக் குட்டையிலிருந்து எடுத்துக்கொண்டுபோய் அதற்காக ஏற்படுத்தியிருக்கும் இடத்தில் சேர்ப்பார்கள். அவ்விடத்தில் பெண்பிள்ளைகள் ஒரு பெரிய மரக்கட்டையின் முன்பாக ஒரு பருத்த குட்டையான மரக்கட்டையும் கையுமாய் உட்கார்ந்திருப்பார்கள். மட்டைகளை அவ்விடத்தில் சேர்த்த வுடன் பெண்பிள்ளைகள் அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்து எதிரிலிருக்கும் கட்டைமேல் வைத்துக் கொண்டு கையிலிருக்கும் கட்டையினால் அடித்து, மட்டையிலுள்ள சக்கையை வேறு படுத்தித் தள்ளிவிட்டு நாரை ஒரு பக்கத்தில் குவிப்பார்கள். இதற்குத்தான் "சோற்று நார்" என்று பெயர். இது சுத்தமானதல்ல. இந்த நாரை மறுபடியும் அடித்தால், அதிலிருக்கும் சக்கை முழுவதும் போய் நல்ல நார் கிடைக்கும். இந்த நாருக்கும், ஊறப் போடாமல் அடித்து எடுக்கும் நாருக்கும் வித்தியாஸமென்ன வென்றால், இந்த நார் அழுத்தமாய் வெகு காலம் தாங்கும். ஊறப் போடாமல் எடுக்கப்பட்ட நார் கெட்டியாய் இருக்காது.

உபயோகம்.—இந்த நாரைப் பலபேர் பலவிதமாய் உபயோகப்படுத்துகிறார்கள். சிலர் தலையணைக்கு பஞ்சுக்குப் பதிலாய் அடைப்பார்கள். மெத்தைகளுக்கும் உபயோகப்படுத்துவதுண்டு. ஸோபாவுக்கு அடைப்பதுமுண்டு. வேறு சிலர் ஆடு, மாடு, குதிரைகளுக்குப் படுக்கைக்காகப் போடுவார்கள். மற்றும் சிலர் காய்ந்த பிறகு அடுப்பு மூட்டுவதற்கு உபயோகப்படுத்துவார்கள். ஆனால், அநேகர் இந்த நாரைக் கயிறு திரிப்பதற்கு உபயோகப்படுத்துவார்கள்.

கயிறு.—இவ்விதம் எடுக்கும் நாரை கும்பல் கும்பலாய்க் குவித்துக்கொண்டு ஒவ்வொரு கும்பலண்டையில் ஒரு ஸ்திரீ உட்கார்ந்து கொண்டு முதலில் ஒரு சிறு துண்டுக் கயிறை கையினால் முறுக்குவாள். பிறகு ஒரு முழம் நீளமுள்ள இந்த மெல்லிதான கயிற்றின் ஒரு முனையை 'ராட்டு' என்று சொல்லப்படும் யந்திரத்தில் கட்டி விடுவாள். பிறகு சிறுவர் சிறுமிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ராட்டைப் பிடித்துக்கொண்டு அதன் சக்கரத்தைச் சுழற்றுவார்கள் சுற்றும்பொழுது கயிறு இறுகிக்கொண்டு வரும். அப்பொழுது நார்க் கும்பலண்டையிலிருக்கும் ஸ்திரீகள் கொஞ்சம் கொஞ்சமாய் நாரை முனையில் சேர்த்துக் கொண்டு வருவார்கள். அப்பொழுது கயிறு முறுக்கிக் கொண்டு நீண்டுகொண்டு வரும். எவ்வளவு நீளம் வேண்டுமோ அவ்வளவு நீளம் முறுக்கின பிறகு அக்கயிற்றை எடுத்து ஒரு கட்டையில் சுற்றிவைத்து மறுபடியும் முன்போல ஆரம்பிப்பார்கள். இவ்விதமாய் மெலிந்த கயிறுகள் முறுக்குவார்கள். ஆனால், இந்தக் கயிறு மெல்லிதா யிருப்பதினால் ஒரு வேலைக்கும் உபயோகப்படாது. எந்தெந்த வேலைக்கு வேண்டுமோ அதற்குத் தகுந்தபடி பருமனாய் முறுக்க வேண்டும்.



உபயோகம்.—ஸாதாரணமாய் பந்தல் போடுவதற்கும், குடிசைகள் கட்டுவதற்கும் கயிறு வேண்டுமானால், மேல் கிடைத்திருக்கும் கயிறுகளில் இரண்டு சேர்த்து ஒன்றாய் முறுக்கினால் போதும். ஆடு மாடுகள் கட்ட வேண்டுமானால், நாலு கயிறுகளை ஒன்றாய்ச் சேர்த்து ராட்டில் கொடுத்து சக்கரத்தைச் சுற்றினால் நல்ல கயிறு கிடைக்கும். இதற்குத்தான் "தும்பு" என்று பெயர். இந்தப் பருமனுள்ள கயிறு வீட்டில் நெய், பால் தயிர் வைக்கும் "உறி" கட்டுவதற்கு உபயோகப்படும். வண்டி எருதுகளுக்குத் "தலைக் கயிறு" வேண்டுமானால், மேல்கண்ட கயிறு ஆறு அல்லது எட்டு சேர்த்து முறுக்க வேண்டும். முறுக்கின பிறகு, "பிசிறு" என்று சொல்லப்படும் நாரைக் கத்தியினால் அறுத்துவிட்டால், நேர்த்தியான தலைக் கயிறு கிடைக்கும். கிணற்றில் குடம், தோண்டி முதலியவைகளைப் போட்டு ஜலம் எடுக்கவேண்டுமானால், பன்னிரண்டு கயிறுகள் ஒன்றுசேர்த்து முறுக்கினால் நல்ல தாம்புக் கயிறு கிடைக்கும். வயல்களுக்கும், தோட்டங்களுக்கும் தண்ணீர் இறைக்க வேண்டியதற்காக தாம்புக் கயிறை விட பருமனாய் முறுக்கி வேலையாட்கள் உபயோகப்படுத்துகிறார்கள். இம்மாதிரி எந்தெந்த வேலைகளுக்கு வேண்டுமோ அதற்குத் தகுந்தபடி முறுக்கிக் கொள்ளலாம். ஆனால், இவை எல்லாவற்றையும்விட பலமான கயிறு ஒன்றுண்டு. இது முறுக்குவது வெகு பிரயாஸம். இதுதான் "தேர்வடம்." தேர்வடம் வேண்டுமானால், தாம்புக் கயிறைப் போல் அநேகம் திரித்து வைத்துக்கொண்டு பிறகு இவைகளில் நான்கை ஒன்றாய்ச் சேர்த்து பெரிய ராட்டில் கொடுத்து முறுக்க வேண்டும். பிறகு இவ்விதமாய்க் கிடைத்த கயிறுகள் நான்கை மறுபடியும் சேர்த்து முறுக்கினால், ஒரு சிறிய தேர்வடம் கிடைக்கும். திருவாங்கூரில் தேர்வடம் முறுக்குவதில்லை. ஏனென்றால், திருவாங்கூரில் தேர் உத்ஸவமுள்ள கோவில்கள் கிடையாது. அதனால்தான் அவ்விடத்தில் தேர்வடம் முறுக்குவது அரிது.

ஒன்று மாத்திரம் ஞாபகமிருக்கவேண்டும். தேங்காய் மட்டைகளாகவே கொழும்பு முதலிய இடங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறது. அதனால் தான் அதிக ஜனங்களுக்கு கயிற்று வேலை கிடைப்பதில்லை. ஏற்றுமதி செய்யாவிட்டால், வெகு ஜனங்கள் இதனால் ஜீவித்துக் கொண்டிருப்பார்கள்.

தற்காலம் இழவர்கள்கூட இந்தக் கைத்தொழிலை விட்டு விடுவார்கள். வேறு வேலைகளில் கூலி ஜாஸ்தியாய் கிடைப்பதினால் இதைக் கவனிப்பவர்கள் சிலரே. ஆனால், ஏற்றுமதியை நிறுத்தி, சிறியதும் வெகு உபயோகமானதுமான இந்தக் கைத்தொழிலை முன்னுக்குக் கொண்டுவருவது நலம்.

---

# KINDERGARTEN IN ENGLAND.

BY

P. A. KRISHNAMOORTHI.

## இங்கிலாந்தில் கிண்டர்கார்ட்டன்.

கிண்டர்கார்ட்டன் என்னும் பதத்திற்கு, "குழந்தைகள் தோட்டம்" என்று பொருள். அதாவது, தோட்டங்களில் செடிகள் எப்படி தாங்களாகவே வளர்கின்றனவோ, அப்படியே குழந்தைகளுக்கு அவர்களுடைய சுபாவத்தைக் கொண்டே, கல்வி கற்பிக்க வேண்டும். குழந்தைகளுடைய கவனத்தை எந்தெந்த வஸ்துக்கள் இழுக்கின்றனவோ, அவைகளைப்பற்றித்தான் முதலில் நாம் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அவர்கள் எதை வெறுக்கிறார்களோ, அதைப்பற்றி நாம் முதலில் அவர்களுக்குக் கற்பிக்க முயலவே கூடாது.

இந்தமாதிரி சொல்லிக் கொடுக்கும் விதத்தை முதலில் கைக்கொண்டவர் ஜர்மனி தேசத்திலிருந்த ப்ரோபல் என்ற ஓர் உபாத்தியாயர். அவர் குழந்தைகளுக்குக் கற்பிக்க அநேக விதங்களைப் பரீக்ஷித்துப் பார்த்துவிட்டு, கடைசியில் அவர்களுடைய சுபாவத்தைக் கொண்டே அவர்களுக்குக் கற்பிப்பதுதான் சிரேஷ்டம் என்று கண்டுபிடித்தார். மாரன் ஹால்ட்ஸ்பூலோ என்ற ஒரு அம்மாள் அவர் சொல்லிக்கொடுக்கும் விதத்தைப்பற்றி ஒரு பெரிய புஸ்தகம் எழுதி இருக்கிறாள்.

1847-ம் வருஷத்தில் ஒரு ஸமயம் மாரன் ஹால்ட்ஸ்பூலோ லீபீன்ஸ்டென்ஸ்பா என்னும் ஓர் பட்டணத்திற்குப் போயிருந்தபொழுது, ஒரு நாள் அவள் தங்கியிருந்த வீட்டுக்காரி அவளிடம் வந்து, "இந்த ஊரில் சுமார் பத்து அல்லது பதினைந்து நாட்களாக ஒரு கிழவன் வந்திருக்கிறான். அவன் என்ன பண்ணுகிறானென்றால், ஊரில் உள்ள குழந்தைகளையெல்லாம் கூட்டிக்கொண்டு அவர்களோடு விளையாடுவதும், கூத்தாடுவதுமாயிருக்கிறான். அதைப் பார்த்தால் மிகவும் வேடிக்கையாய் இருக்கிறது" என்றான். இதைக் கேட்டவுடன் மாரன்ஹால்ட்ஸ்பூலோவுக்கு இப்படிக் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு விளையாடுபவன் யார், அப்படிக் கூத்தாடுவதின் காரணம் என்ன? அவனைப் பார்க்கவேண்டும், என்ற ஒரு இச்சை உண்டாயிற்று.

இப்படி இவள் எண்ணிக்கொண்டிருக்கையில், ஒரு நாள் தெருவில் ஒல்லியாய் மெலிந்த த்ரேகத்தையுடைய ஓர் கிழவன் மூன்று வயதுமுதல் எட்டு வயது வரையிலுள்ள குழந்தைகளை அழைத்துப் போவதைக் கண்டாள். அவன் அந்தக் குழந்தைகளை இரண்டு வரிசையாக ஒருவருக்குப் பின் ஒருவராக அவ்வூருக்கு அருகாமையிலுள்ள ஒரு குன்றின் உச்சிக்கு அழைத்துக் கொண்டு போனான். அங்கே போனவுடன் அவர்களை விளையாடச் சொல்லி அவ்விளையாட்டுக்குரிய ஓர் பாட்டையும் கற்பித்தான். இந்தக் கிழவன் பெயர்தான் ப்ரோபெல். இவன் செய்ததை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மாரன் ஹால்ட்ஸ்பூலோ அவைகளில் மிகுந்த ஆசைகொண்டு ப்ரோபெல் சாகும் வரையில் வாழ் நாளில் ஜாஸ்தியான காலத்தை அவனுடன் கழித்து, ப்ரோபெல் குழந்தைகளுக்கு உபதேசிக்கும் வழியைக் கற்றுக்கொண்டாள். 1853-ம் வருஷத்தில் மாரன் ஹால்ட்ஸ்பூலோவினுடைய ஒரே குழந்தை காலம் சென்றுவிட்டது. உடனே அவள் தன்மீதி வாழ் நாளை தன்னுடைய குருவாகிய ப்ரோபெல் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்கும் வழியை உலகத்தாருக்குக் கற்பிப்பதில் செலவழிக்கத் தீர்மானித்தாள்.



1851-ம் வருஷத்தில் ஜர்மனி தேசத்தில் கிண்டர்கார்ட்டன் வழியாகக் குழந்தைகளுக்கு உபதேசிப்பது கூடாது என்று கவர்ன்மெண்டார் கண்டிப்பாகத் தடுத்துவிட்டார்கள். ஆகையினால், அந்தத் தடங்கல் எடுபடும் வரையில் ஜர்மனி தேசத்தில் கிண்டர்கார்ட்டனைப் பரவச்செய்ய அவளால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. இதைப் பார்த்த உடனே மாரன் ஹால்ட்ஸ்பூலோ அம்மாள் 1854-ம் வருஷத்தில் இங்கிலாந்திற்கு வந்தாள்.

அந்த ஸமயத்தில் இங்கிலாந்தில் கிண்டர்கார்ட்டன் மூலமாக குழந்தைகளுக்கு உபதேசிக்கிற பள்ளிக்கூடம் ஒன்றுதான் இருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்தை மிஸஸ் ரான்ஜ என்ற ஒரு மாது நடத்திவந்தாள். மாரன் ஹால்ட்ஸ்பூலோ இங்கிலாந்திற்கு வந்த அதே வருஷத்தில் இங்கிலாந்தில் ஒரு கல்விக் காக்ஷி கூடினார்கள். அந்தக் காக்ஷியில் மிஸஸ் ரான்ஜும் மாரன்ஹால்ட்ஸ்பூலோவும் ப்ரோபெல் சொல்லிக்கொடுத்த வழியின் நோக்கத்தையும் உபயோகத்தையும் பற்றி வெகு நன்றாகப்பிரசங்கம் செய்தார்கள். இந்தப் பிரசங்கங்களைக் கேட்டவுடனே ஜனங்கள் கிண்டர்கார்ட்டன் வழியாக உபதேசிப்பதில் ஆசை கொண்டார்கள். இப்படி ஏற்பட்ட ஆசையானது அடுத்த வருஷத்தில் ப்ரோபெலின் மருமகனாகிய ஹென்ரிச் ஹாப்மென்லின்டனுக்கு வந்து, அங்கே செய்த பிரசங்கங்களினாலேயும், மாரன் ஹால்ட்ஸ்பூலோ எழுதிய புஸ்தகங்களினாலேயும், மேலும் மேலும் அதிகரித்தது.

மிஸஸ் ரான்ஜ் தன்னுடைய பள்ளிக்கூடத்தை இன்னோர் அம்மாளிடம் ஒப்புவித்துவிட்டு மான்செஸ்டர் என்னும் பட்டணத்திற்கு வந்து அங்கே கிண்டர்கார்ட்டனின் உபயோகத்தைப் பற்றி அநேகப் பிரசங்கங்கள் செய்தாள். அந்தப்பிரசங்கங்களினால் இரண்டு பெண் பாடசாலைகளில் கிண்டர்கார்ட்டன் மூலமாக உபதேசிப்பதைக் கைக்கொண்டார்கள். மேலும், மான்செஸ்டர் கிண்டர்கார்ட்டன் சங்கம் என்ற ஓர் சங்கமும் ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் எல்லோரும் இப்படிக் கிண்டர்கார்ட்டன் விஷயமாக பிரயாஸைப்பட்டுக் கொண்டிருக்கையில், 1857-ம் வருஷத்தில் மிஸ் டராக் என்ற ஒரு மாது ஜெர்மேனியா தேசத்திலிருந்து வந்தாள். அவள் 1866-ம் வருஷத்தில் லண்டனில் ஒரு கிண்டர்கார்ட்டன் பள்ளிக்கூடம் ஏற்படுத்தினாள்.

1861-ம் வருஷத்தில் மிஸ் ஹீலர்ட் என்பவள் லங்காஷயரில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி இருந்தாள். அவள் 1866-ம் வருஷத்தில் அயர்லாந்துக்குப் போய் அதற்குப் பிரதானப் பட்டணமாகிய டப்ளினில் ஓர் கிண்டர்கார்ட்டன் பள்ளிக்கூடம் ஸ்தாபித்தாள்.

இம்மாதிரியாக 1854-ம் வருஷத்தில் மாரன் ஹால்ட்ஸ்பூலோ இங்கிலாந்திற்கு வந்தது முதல் கிண்டர்கார்ட்டன் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் வெகு விரைவாகப் பரவிக்கொண்டிருந்தது. ஆனால், கிண்டர்கார்ட்டன் இங்கிலாந்தில் பரவ ஆரம்பித்தது முதல் இருபது வருஷங்கள் வரையில் பணக்காரப் பிள்ளைகள் வாசித்து வந்த ப்ரைவேட் பள்ளிக்கூடங்களில் தான் பரவி வந்தது. ஆகையினால், கிண்டர்கார்ட்டனால் உண்டாகிற பிரயோஜனத்தைப் பணக்காரக் குழந்தைகள் தான் அடைந்தன. ஏழைப் பிள்ளைகள் வாசித்து வந்த கவர்ன்மெண்ட் பாடசாலைகளில், இன்ஸ்பெக்டர்கள் கவர்ன்மெண்டாருக்கு கிண்டர்கார்ட்டனின் உபயோகத்தைப் பற்றி வெகு சிலாகித்து எழுதின போதிலும், கிண்டர்கார்ட்டனைக் கைக்கொள்ளவில்லை.

டாக்டர் மிட்செல் என்ற ஒரு இன்ஸ்பெக்டர் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்படும் வருஷாந்தர ரிபோர்ட்டில் பின் வருமாறு எழுதலானார். "இத்தனை வருஷங்கள் பள்ளிக்கூடங்கள் இருந்ததைப் பார்த்துவிட்டு இப்பொழுது அவைகள் இருக்கும் ஸ்திதியைப் பார்க்கும் பொழுது எனக்கு ஆனந்தமும் திருப்தியும் உண்டாகிறது. இப்பொழுது சொல்லிக் கொடுக்கப்படும் கிண்டர்கார்ட்டனானது குழந்தைகளுடைய சுபாவத்துக்கு ஒத்தே இருக்கிறது. அது குழந்தைகளுக்கு யோஜனை செய்யும் சக்தியை உண்டு பண்ணுகிறது. கிண்டர்கார்ட்டனில் குழந்தைகளின் கவனத்தைக் கவரும் பொம்மைகளினுடையவும், பாட்டுக்களினுடையவும், ஒத்தாசையைக் கொண்டே கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது. அதில் கடினமான உச்சரிப்புகளும் வார்த்தைகளும் கிடையா. கிண்டர்கார்ட்டனில் முக்கிய விஷயம் என்னவென்றால், குழந்தைகள் செய்யும்வேலை. அதில் குழந்தைகளுக்கு வாயினால் கற்றுக்கொடுக்க வேண்டியது ஒன்றுமில்லை. குழந்தைகள் தங்களுக்குக் கொடுக்கப்படும் குச்சிகளையோ, அல்லது வளையல்களையோ வைத்துக்கொண்டு கோபுரங்கள், வீடுகள் முதலியவற்றைத் தாங்களே செய்கிறார்கள். இப்படித் தாங்களே செய்வதில் வீடு கட்டுவது போலுள்ள பல விஷயங்களை அவர்கள் சுயமாகவே கற்கிறார்கள். இந்த மாதிரி செய்யப்படும் ஒவ்வொரு வேலைக்கும் தகுந்த பாட்டுக்கள் இருக்கின்றன. இவைகளினால் என்ன உபயோகமென்றால், குழந்தைகள் கல்வியை வெகு உற்சாகத்தோடு கற்கிறார்கள். அவர்களை படி, படி, என்று நாம் கட்டாயப்படுத்தவே வேண்டாம். அவர்களாகவே நம்மிடம் வந்து இதைச் செய்யட்டுமா, அதைச் செய்யட்டுமா, என்று கேட்பார்கள். கிண்டர்கார்ட்டன் உபயோகத்தைப் பற்றி இன்னும் எவ்வளவு பக்கம் எழுதினாலும் எழுதலாம். ஆனால் அதைப் பற்றி முற்றிலும் ஒருவன் அறிய வேண்டுமானால், கிண்டர்கார்ட்டன் மூலமாய் கற்றுக்கொடுக்கப்படும் ஓர் பள்ளிக்கூடத்தை நேரில் போய் பார்த்தால்தான் அதன் சிறப்பு நன்றாகத் தெரிய வரும்"

1870-ம் வருஷத்தில் லண்டனில் லண்டன் ஸ்கூல் சங்கம் என்று ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சங்கத்தார், 1871-ம் வருஷத்தில் பள்ளிக்கூடங்களில் என்னென்ன பாடங்கள் கற்பிக்கப்படவேண்டும் என்பதை நிர்ணயிக்க ஒரு கமிட்டியாரை ஏற்படுத்தினார்கள். அந்தக் கமிட்டியார், குழந்தைகள் வாசிக்கும் பள்ளிக்கூடங்களில் கிண்டர்கார்ட்டன் மூலமாய்த்தான் வித்தை கற்பிக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

1873-ம் வருஷத்தில் ஒரு இன்ஸ்பெக்டர் பின்வருமாறு ரிப்போர்ட்டு அனுப்பினார். "குழந்தைகளிடத்தில் நாம் பக்ஷமுள்ளவர்களாகவும், பொறுமை யுள்ளவர்களாகவும் இருந்தால், அவர்களுடைய விசுவாசத்தை எவ்வளவு லகுவாக கிரகிக்கக்கூடுமென்பதைப் பார்க்க எனக்கு மிகவும் ஆனந்தகரமாய் இருக்கிறது. எனக்குச் சிறிய குழந்தைகள் வாசிப்பதையும், எழுதுவதையும், எண்ணுவதையும் பார்ப்பதைவிட அவர்கள் கிண்டர்கார்ட்டனில் பாடுவதையும் ட்ரில் செய்வதையும் பார்க்க வெகு பிரியம். குழந்தைகள் வாசிப்பதினாலேயும், எழுதுவதினாலேயும் எவ்வளவு கற்கிறார்களோ, அதைவிட கிண்டர்கார்ட்டன் மூலமாய் பதின் மடங்கு அதிகமான வித்தை கற்கிறார்கள். ஆனால், சில உபாத்தியாயர்கள் தவிர








பாக்கி எல்லா உபாத்தியாயர்களும் மற்ற எல்லாப் பாடங்களைப் போலவே கிண்டர் கார்ட்டனும் ஒரு பாட மென்று நினைக்கிறார் கள். அது மிகவும் பிசகு. அவர்கள் எந்தப் பாடம்கற்றுக் கொடுத்தாலும் அதைக் கிண்டர் கார்ட்டன் மூலமாக உபதேசிக்க முயலவேண் டும். இப்பொழுது கிண்டர்கார்ட்டனுக்கு வேண்டிய சாமான்கள் கொஞ்சம் குறைவாக இருக்கின்றன. ஆனால், கவர்ன்மெண்டார் சீக்கி ரத்தில் அவைகளை வாங்கிக் கொடுத்து விடு வார்க ளென்று நான் நம்புகிறேன்."

1874-ம் வருஷத்தில் லண்டன் ஸ்கூல் போர்டார் பெண் உபாத்திமார்களுக்கு கிண்டர்கார்ட்டனைப் பற்றி பிரசங்கிக்க மிஸ் பிஷப் என்பவளை நியமித்தார்கள். அதே வருஷத்தில் க்ராயிடன் ஸ்கூல் போர்டார் மக்கேலிஸ் என்பவளை நியமித்தார்கள்.

இதே காலத்தில் ப்ரிடிஷ் அண்ட் பாரின் ஸ்கூல் சொஸைட்டிக் காரர்கள் கிண் டர்கார்ட்டன் நார்மல் பாடசாலை ஒன்று ஏற் படுத்தினார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தை நடத்த மிஸ் ஹீவர்ட் என்பவளை வரவழைத் தார்கள். இப்படியாக 1854-ம் வருஷமுதல் 1874-ம் வருஷத்திற்குள் இங்கிலாந்து முழுவ தும் கிண்டர்கார்ட்டன் பரவிவிட்டது. இப் பொழுதோ இங்கிலாந்தில் ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் ப்ரோபெலின் பாட்டுகளும் விளை யாட்டுகளும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. நம் உபாத்தியாயர்கள் இவ்வாறு வித்தியாபி விருத்தியில் மனப் பூர்வமான சிரத்தை எடுத் துக்கொண்டு கிண்டர்கார்ட்டனை மேலும் மேலும் கையாடி வருவார்களானால், இந்தியா முழுமையு முள்ளவர்கள் கல்வியில் அதிகத் தேர்ச்சி அடைவார்கள் என்பதற்கு ஸந்தேகமே கிடையாது.

பி. ஏ. கிருஷ்ணமூர்த்தி.

# DOG DAYS.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M. A., L. T.

## அக்னி நக்ஷத்திரம்.

[*All Rights Reserved.*]

---

சூரியன் தினந் தினம் கிழக்கே உதித்து மேற்கு முகமாய்ச் சென்று மேற்கில் அஸ்த மனமாகி மறுநாட் காலையில் கிழக்கே உதிக் கிறது. பகலும் இரவுங்கொண்ட இக்காலத்தை நாம் நாள் என்கிறோம். இதை 24 பாகங்களா கக் கணக்கிட்டு ஒவ்வொரு பாகத்தையும் மணி என்கிறோம். நம் தேசத்தவர்களுக்கு பகல் சுமார் 12 மணி நேரமும், இரவு 12 மணி நேர மும் உள்ளன. பகலில் சூரிய கிரணங்களால் பூமி உஷ்ணமாகிக்கொண்டே வந்து இரவிலும் பகலிலும் உஷ்ணத்தை வெளிவீசிக்கொண்டே வருகிறது. இந்த லாப நஷ்டத்தால் பூமியின் மேல்படிந்த வாயுவின் டெம்பரேசர் அதாவது சீதோஷ்ண நிலைமை, அதிகரித்துக் கொண் டும் குறைந்து கொண்டும் வருகிறது. ஒரு தாழ்வாரத்தில் உஷ்ணமானியாகிய தெர் மாமிட்டர் ஒன்றைத் தொங்கவிட்டு அதை மணிக் கொருமுறை கவனிப்போமானால், உஷ்ண தீக்ஷணியம் சூரியோதய முதல் பகல் 2 மணி வரையில் அதிகரித்துக்கொண்டும், பிறகு காலை 4 மணி வரையில் தாழ்ந்து கொண்டும், பிறகு மறுபடியும் அதி கரித்துக்கொண்டும் வருவதைக் காணலாம். தினம் தினம் இம்மாதிரியாக ஒரு வருஷ காலம் கவனித்தால், ஒரே காலத்தில் தினத் துக்கு தினம் டெம்பரேசர் வித்தியாஸப்படும். சென்னையில் பிப்ரவரி ஸ்ரீ முதல் ஜூன் ஸ்ரீ வரையில் டெம்பரேசர் அதிகரித்துக்கொண் டும், பிறகு பிப்ரவரி ஸ்ரீ வரையில் குறைந்து கொண்டும் வருவதை நக்ஷத்திர ஆபீசிலிருந்து

பிரதிதினமும் வெளியாகும் மீடியராலோஜிகல் ரிபோர்ட் என்னும் காலக்குறி அறிக்கை பத்திரிகையை கவனித்தால் தெரிந்துகொள்ளலாம். உஷ்ண தீக்ஷணியத்தை கவனித்து சித்திரை முதலான நான்கு மாதங்களை வேனிற்கால மென்றும், மற்ற மாதங்களை குளிர், மழை, பனிக்கால மென்றும் பிரித்திருக்கிறார்கள். இந்த வேனிற் காலத்திலும் உஷ்ணம் அதிகமான சித்திரைக் கடைசி வாரமும், வைகாசி முதல்வாரமும் சேர்ந்த 14 நாட்களை அக்னி நக்ஷத்திர நாட்களெனப் பெயரிட்டிருக்கிறார்கள். உஷ்ணம் தினத்திற்கு தினம் வித்தியாஸப்படுவதெவ்வாறு என்பதையும், அக்னி நக்ஷத்திரம் எனப் பெயர் வந்ததேன் என்பதையும் பற்றி விவரிக்க முயல்வோம்.

சூரியன் உதயமாகும் திக்கையும், அஸ்தமனமாகும்இடத்தையும்கவனிக்கையில், தைமுதல் ஆடிவரையில் கொஞ்சம்கொஞ்சமாக வடக்கு முகமாகவும், ஆடிமுதல் தைவரையில் தெற்கு முகமாகவும் தினந் தினம் வித்தியாஸப்பட்டுக்கொண்டே இருக்கும். நம்முடைய நிழலை சூரிய உச்சி வேளையில் பார்த்துக்கொண்டே வந்தால், அதன் திசையும் நீளமும் வேறுபட்டுக்கொண்டு வருவதைக் காணலாம். இத்தென்னிந்தியாவில் உள்ளவர்களுக்கு சுமார் சித்திரை முதல் ஆவணி மாதம்வரையில் நடுப்பகலில் நிழல் தெற்கு முகமாகவும், ஆவணி முதல் சித்திரை வரை வடக்கு முகமாகவும் தோன்றும். சித்திரை ஆவணி மாதங்களின் ஆரம்பத்தில் 12 மணி வேளையில் நிழலில்லாமலேயிருக்கும். அதாவது, இங்கிலீஷ் கணக்கில் ஏப்ரல் 22உ முதல் ஆகஸ்டு 15உ வரையில் சூரியன் ஆகாய மார்க்கத்தில் வடக்கேயும், ஆகஸ்டு 15உ முதல் ஏப்பிரல் 25உ வரையில் தெற்காகவும் ஓடுகிறான். முதல் படத்தில் குறிப்பிட்டபடி வருஷத்தில் ஒருமுறை சூரியன் 1, 2, முதலான இலக்கமிட்ட திசைகளில் போவதாகத் தோன்றி, பூமியில் 1, 2, 3, முதலான இலக்கமிட்ட இடங்களிலுள்ளவர்களுக்கு முறையே தலைக்கு நேராகச் செல்லுகிறான். சென்னப்பட்டணத்திலிருப்பவர்களுக்கு சூரியன் ஏப்பிரல் கடைசி வாரத்தில் உச்சிக்கு நேராகச் சென்றால், கல்கத்தாவில் உள்ளவர்களுக்கு ஜூன் மாதம் கடைசி வாரத்தில் தலைக்குமேல் செல்லுகிறான். அதற்கு வடக்கேஉள்ளவர்களுக்கு சூரியன் எப்போதும் தலைக்கு நேராகச் செல்லுவதில்லை. சூரிய கிரணங்கள் சித்திரை ஆவணி ஆரம்பத்தில் லம்பனமாக அதாவது செங்குத்தாகவும், மற்றக் காலங்களில் சரிவாகவும் விழுகின்றன. இக்கிரணங்களால்தானே பூமிசூடாக்கப்படுகிறது? கிரணங்களின் சரிவுக்குத் தக்கபடி சூடும் வித்தியாஸப்பட வேண்டியதுதானே. முதல் படத்தை கவனிக்க இதன் உண்மை நன்கு விளங்கும். (இப்படத்தில் காட்டியபடியல்லாமல் சூரியன் அதிக தூரத்தில் இருப்பதாக வைத்துக்கொள்ள வேண்டும்.) சென்னையையடுத்த பூபாகத்தில் விழும் சூரிய கிரணங்கள் சூரியன் தலைக்கு நேராகச் செல்லும்போது அதிகமாகவும், சாய்வாகச் செல்லுகையில் குறைவாகவும் இருக்கிறதல்லவா? ஒவ்வொரு சதுர அடிப் பரப்பிலும் விழும் வெயில் சித்திரை மாதத்தில் மார்கழி மாதத்தைவிட அதிகமல்லவா? ஆதலால், சித்திரை மாதங்களில் பூமி அதிக சூடாக இருக்க வேண்டியதுதானே? சென்னையைப் போல் பூமத்திய இரேகையிலிருந்து 13 டிக்ரீ வடக்கே யுள்ளவர்களுக் கெல்லாம் சூரிய கிரணங்களால் இதே காலத்தில் வெப்பம் அதிகமாய் இருக்க வேண்டியதுதானே? இக்கிரணங்களின் சரிவின் வித்தியாஸத்தா லல்லவோ



தினம் தினம் பகல் 12 மணிக்கு சூரிய கிரணங்கள் அதிக தீக்ஷணியமாகத் தோன்றுவது.

ஒரு தெர்மாமிட்டரை ஒரு தாழ்வாரத்தில் வைத்து மணிக் கொருமுறை ஆகாயத்தின் டெம்பரேசரை பார்த்தெழுதி வந்தால், பிரதி தினமும் சுமார் பகல் 2 மணி ஸமயத்தில் டெம்பரேசர் அதிகமாகவும், மற்றக்காலங்களில் குறைவாகவும் காணும். நடுப் பகலில் சூரிய கிரணங்களின் தீக்ஷண்யம் அதிகமானாலும், பூமியிலிருந்து வெளிப்படும் உஷ்ணத்தைவிட பூமியில் படும் உஷ்ணம் அதிகரித்துக் கொண்டே வருவதால், மழை பெய்து நின்றாலும் பிரவாகம் கொஞ்ச காலம் அதிகரித்துக் கொண்டே வருவதுபோல், 2 மணி வரையில் டெம்பரேசர் அதிகரித்துக்கொண்டேவந்து, பிறகு சூரியன் சாயச் சாய, கிடைக்கும் உஷ்ணத்தைவிட வெளிவீசும் உஷ்ணம் அதிகரிப்பதால், டிக்ரீ குறைந்துகொண்டும் வருகிறது. இதனாலே தினம்2மணிக்கு ஆகாயம்அதிகப்புழுக்கமாய்த் தோன்றுகிறது. தினசரி டெம்பரேசர் வித்யாஸத்திற்குச் சொன்னபடியே ஆலோசித்துப் பார்த்தால், ஏப்பிரல் கடைசியில் சூரியன் நம் தலைக்கு நேராகச் சென்றாலும், பூமியின் உஷ்ணம் தினந் தினம் அதிகரித்துக் கொண்டே போய் மே மாஸம் 15உ வாக்கில் உச்சநிலையை அடைகிறது. அதற்குப் பிறகு குறைந்துகொண்டே போகிறது.

முதல் படத்தில்கண்டபடி இச்சென்னையில் சூரியன் வருஷத்தில் இரண்டு முறை தலைக்கு நேராகச் செல்லுகின்றதே. ஆதலால், அதிக உஷ்ண காலம் வருஷம் இரண்டு தடவை உண்டா எனச் சந்தேகம் தோன்றுவது ஸகஜமே. ஆனால், ஆகஸ்டு மாதத்தில் மேற்குக் கடற்கரை யோரங்களில் மழைக் காற்றடிப்பதாலும், ஆறுகளில் வெள்ளம் புரண்டுவரதாலும், பூமி பயிராகி ஜலம் நிறைந்து இருப்பதாலும், தலைக்குமேல் செல்லும் சூரியனின் வெப்பத்தால் டெம்பரேசர் அதிகரிக்காமல், இரண்டாந் தடவை நேரிடவேண்டிய அதிக உஷ்ண காலம் தோன்றுவதில்லை.

அதிக உஷ்ண காலமாகிய சித்திரை கடைசி வாரமும், வைகாசி முதல் வாரமுமாகிய 14 நாட் காலத்திற்கு அக்னி நக்ஷத்திரம் எனப் பெயர் எவ்வாறு வந்தது? சூரியன் அஸ்தமனமாகும்போது உதயமாகும் நக்ஷத்திரங்களை சிலநாள் கவனித்தால், வெவ்வேறு நக்ஷத்திரக் கூட்டங்கள் தென்படுகின்றன. வருஷம் ஒருமுறை அதே காலத்தில் அதே நக்ஷத்திரம் தென்படுகிறது. இதனால் நக்ஷத்திர மண்டலத்தில் சூரியன் இடம் பெயர்ந்து கொண்டே இருக்கிற தென்பது தெரிகிறது. பூமி சூரியனைச் சுற்றிக்கொண்டிருந்தபோதிலும், சூரியன் பூமியைச்சுற்றிக்கொண்டு நக்ஷத்திரமண்டலத்தில் வருஷம் ஒருமுறை சுற்றுவதுபோல் காணப்படுகிறது. சூரியனை அடுத்துத் தோன்றும் நக்ஷத்திரங்களை நாளுக்கு நாள் கணித்து, சூரியனுடைய வருஷ கதியை அதாவது, வழியிலுள்ள நக்ஷத்திரக் கூட்டங்களை 12 மாதங்களுக்குச்சரியான மேஷம்முதலான 12 இராசிகளாகவும், இச்சுற்றையே சந்திரனின் தினசரி இடத்தைக் குறிப்பிட அசுவனி முதலான 27 நக்ஷத்திரங்களாகவும் பிரித்துப் பெயரிட்டிருக்கிறார்கள். இரண்டாம் படத்தில் காட்டியபடி பூமி 1, 2, 3, முதலான இடங்களுக்கு வரும்போது, சூரியன் மேஷம் முதலான இராசிகளில் முறையே பிரவேசிப்பதாகத் தோன்றுகிறது. முதல் படத்தில் சூரியன் 1, 5, இலக்கங்களுள்ள இடத்தில் இருக்கும்போது இரண்டாம் படத்தில் காட்டியபடி சூரியன் மேஷ ராசியில் பிரவேசிப்பதாகவும், முதல் படத்தில் 2 என்னும் இடத்தில் சூரியன் இருக்கும்போது இரண்டாவது படத்தின்படி மேஷத்தில் முக்கால் பங்கை சூரியன் தாண்டியதாகவும் காணப்படுகிறது. அதிக உஷ்ணமாகக் காணப்படும் சித்திரை மாதக் கடைசியில் சூரியன் மேஷத்தை விட்டு ரிஷபத்தில் பிரவேசிப்பதாகவும், கிருத்திகை என்னும் நக்ஷத்திரக் கூட்டத்தின் பக்கமாகச் செல்வதாகவும் தெரிகிறது. இக்கிருத்திகை நக்ஷத்திரப் பகுதியில் சூரியன் சுமார் 14 தினம்

தங்குகிறான். அதாவது இப்பாகத்தைத் தாண்ட 14 நாட்செல்லும். இக்காலமே அதிக சூடான காலமாதலால் கிருத்திகை நக்ஷத்திரத்திற்கு அக்னி நக்ஷத்திரம் என்ற பெயரும் ஒத்திருக்கிறது. இக்காலத்திற்கும் அக்னி நக்ஷத்திரம் என்று சொல்வது உண்டு. சென்னையிலிருப்பவர்களுக்கு அக்னி நக்ஷத்திர காலமும், கல்கத்தா, டெல்லியிலுள்ளவர்களுக்கு அக்னி நக்ஷத்திர காலமும், வித்தியாஸப்படும். அக்னி நக்ஷத்திரம் என்றால், சூரியன் கிருத்திகை நக்ஷத்திரத்தில் உலாவும் காலம் என்று நாம் சொல்லலாம்.

ஆங்கிலேயர்களுக்கு இங்கிலாந்தில் அதிக உஷ்ணமான காலத்தில் சூரியன் ஸிரியஸ் அல்லது டாக் ஸ்டார் என்னும் நக்ஷத்திரத்திற்கு நேராய்ச் செல்வதால், அதிக உஷ்ண காலத்திற்கு டாக் டேஸ், ( நாய் நாட்கள் ) என்று சொல்லிக்கொள்கிறார்கள். இக்காலம் ஜூலை 2-ம் வாரம் முதல் ஆகஸ்டு 2-ம் வாரம் வரையிலும் செல்லும். ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருக்கும்போதும் அதிக உஷ்ண காலத்திற்கு (அக்னி நக்ஷத்திரத்திற்கு) டாக் டேஸ் என்னும் பெயரையே வழங்குகிறார்கள். இப்படிச் சொல்லுகையில் உஷ்ண காலம் என்பதைத் தவிர டாக் ஸ்டாரைப்பற்றிய ஞாபகமே கிடையாது. தெரியாதவர்கள் அக்னி நக்ஷத்திர காலத்தில் சூரியன் ஸிரியஸுக்குப்பக்கமாகச்செல்லுகிறான் என்பதுண்டு. ஆனால், வேதங்கள் எழுதிய காலத்தில், அதாவது அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னம், கங்கைக் கரையில் பூமத்திய ரேகைக்கு சுமார் 30 டிக்ரி தூரத்தில் வேத ரிஷிகள் தங்குகையில், சூரியன் 'திவ்யஸ்வான்' (சிறந்த நாய்) என்னும் நக்ஷத்திரக் கூட்டத்தில் நாயின் பல் போன்ற, லப்தக் என்னும் பெயரையுடைய பிரகாசமான நக்ஷத்திரத்தின் பக்கமாகச் சென்றபோது முதுவேனிற் காலமாய் இருந்ததாக அதர்வண வேதத்திலிருந்து தெரியவருகிறது. இம்மாதிரியாகவே இன்னும் சில நூற்றாண்டுகளுக்குப் பின் அதிக உஷ்ணமான காலம் இப்போது இருப்பதைவிட கொஞ்சநாள் முன்னதாகவே தொடங்கிவிடுமென்று வானசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

எம். ஸி. எஸ். அனந்தபத்மநாப ராவ்.

## A UNFADING FLOWER.

BY

T. C. V. RAMANA AIYAR.

## ஒரு வாடாப் புஷ்பம்.

சென்ற எப்பிரல் மாதத்திய "பிழைக்கும் வழி" யில் "விநோதங்கள்" என்ற தலைப்பின் கீழ் ஒரு வாடாப் புஷ்பம் என்று மகுடம் புனைந்த வியாஸத்தில் தென் ஆப்பிரிக்காவில் ஸாதாரணமாய் அகப்படக் கூடிய ஒரு செடியிலிருந்து பறித்தது முதல் இரண்டு மாத காலம் வரையில் வாடாமலிருக்கிற ஒரு புஷ்பமிருக்கிறதென்றும், பின்னும் அதைப் பற்றிய வரலாறுகளும் காணப்பட்டன. புஷ்ப ஜாதிகளைச் செவ்வையாக கவனித்தவர்களுக்கு இது ஒரு ஆச்சரிய மன்று. இம்மாதிரி வாடாத புஷ்பங்கள் நமது தென்னிந்தியாவில் வாடா மல்லிகை யென்ற நாமத்தையே பெற்று அநேகம் இருக்கின்றன. ஆனால், அப்புஷ்பங்கள் கோலியைப்போல் உருண்டையான உருவமுடையனவாய் சிவப்பும் வெண்மையுமான இதழ்களோடு காணப்படும். புஷ்பங்களைப் பறித்துவைத்திருந்தால், 15 அல்லது 20 நாட்களில் அவைகளின் நிறம் மாறிவிடுகிறது. இவைகளில் மத்திய பாகத்தில் பூந்தாதுக்கள் என்ற கேசரங்கள் மேற்பார்வைக்குத் தோன்றா.

ஆனால், நீலகிரி மலையில் தென் ஆப்பிரிக்காவில் காணப்படுகிற புஷ்பங்களைப்போல் ஏராளமாய் அனேக புஷ்பங்கள் கிடைக்கின்றன. இவைகளின் காம்புகள் 18 அங்குலம் முதல் இரண்டடி வரையிலிருக்கின்றன. இந்தச் செடிகள் இரண்டு கெஜ உயரம் வரையில் வளர்கின்றன. செடிகளில் புஷ்பங்கள் அதிகமாய் உண்டாகின்றன. இந்தப் புஷ்பங்கள் வாடிப்



போவதில்லை யாதலால், வருஷம் முழுவதும் இந்தச் செடிகளில் புஷ்பங்களைப் பார்க்கலாம். புஷ்பங்கள் ஒரு ரூபாய் அகலத்தைவிடப் பெரியனவாயும், மெல்லிய காகிதம் போன்ற வரிசையான இதழ்களை யுடையனவாயும், மத்தியில் மஞ்சளான பூந்தாதுக்களை யுடையனவாயுமிருக்கின்றன. இவற்றில் மஞ்சளான இதழ்களையுடைய புஷ்பச்செடிகள் ஒருவிதம். வெண்மையான இதழ்களையுடைய புஷ்பச் செடிகள் மற்றொரு விதம். இவற்றின் புஷ்பங்களைக் காம்புடன் கொய்து வைத்திருந்தால், வெகு காலம் வரையில் வர்ணம் கெடாமலிருக்கிறது. இந்தப் புஷ்பங்கள் செடியிலிருக்கும்பொழுது ஒரு விசேஷமுண்டு. அதாவது, சாயந்திர வேளைகளில் மலர்ந்த புஷ்பங்கள் மறுபடியும் தங்களுடைய இதழ்களைக் குவியச் செய்துகொண்டு மொட்டுகள் போலக் காணப்படும். காலை வேளைகளில் அவைகள் மலர்ந்தவைகளாய்க் காணப்படும். மழையடிக்கும்பொழுது இப்புஷ்பங்கள் தங்கள் இதழ்களைக் குவியச்செய்துகொள்ளுகின்றன. பறித்துவைத்த புஷ்பங்கள் ஒரே ரீதியாய் வெகுநாட்கள் வரையிலிருக்கின்றன. புஷ்பங்களில் யாதொரு வாசனையுமில்லை. இதற்கு இவ்விடத்தில் "எவர்லாஸ்டார்" என்றும், "ஒயிட் ஸ்டார்" என்றும் ஸாதாரணமாய்ச் சொல்லுகிறார்கள். ஐரோப்பியர்கள் இந்தப் புஷ்பங்களை வெகு பிரியமாகப் பறித்துக்கொண்டு போகிறார்கள். மஞ்சள் இதழ்களோடு கூடிய இந்தப் புஷ்பங்கள் தற்காலத்தில் வெகு நாகரீகமாகப் பொன்னால் செய்யப்படுகிற ரோஜாப்பூ ஜடைவில்லையை விட அழகாயிருக்கின்றன.

டி. ஸி. வி. ரமணய்யர்.

## SEED PADDY.

BY

S. VYTHILINGAM PILLAI.

## நெல் விதை.

நமது "பிழைக்கும் வழி" யின் நேயர்களில் பெரும்பாலர் நெல் சாகுபடி விஷயத்தில் கவலைகொண்டவர்களா யிருப்பார்களாதலால், அதைப் பற்றிய சில குறிப்புகளை இங்கே குறிப்பிடுவோம்.

ஸ்தல லக்ஷணம்.—விதை நெல் சாகுபடி செய்வதற்கென்று குறிப்பிட்ட ஸ்தலமவசியம். அந்த ஸ்தலமானது கூடியவரையில் சிறியதாயும், (அதாவது, எவ்வளவு விதை வேண்டுமோ அவ்வளவு மட்டும் விளையக்கூடிய இடம்) நல்ல வடிகால், பாய்கால் உள்ளதாயும், கொஞ்சம்கூட மேடு பள்ளமில்லாததாயும், கரைக்கட்டுள்ளதாயும், இயற்கையிலேயே நல்ல பூசாரமுள்ளதாயும், கண்பார்வையிலிருக்கக்கூடியதாயும் இருக்கவேண்டும்.

செய்யும் வேலை.—ஆற்றில் ஜலம் வந்தவுடனேயே தண்ணீர் பாய்ச்சி உழவு, கொத்து முதலியவைகளால் நெகிழ வைத்து, அதில் இந்திரிய வஸ்துக்களடங்கிய எருவைப் பரப்பி, அதன்மேல் அவுரி, கொழுஞ்சி, சடம்பு, ஆடாதொடை, வாதநாராயணம், வேம்பு, புங்கு முதலிய தழைகளைக் கிடைத்த வரையில் வேண்டிய மட்டும் போட்டு மிதித்து உழுது அழுகவைத்து பழஞ்சேறாக்கி நடப்போகிற தினம் உழுது பரம்படித்து 100 குழி, அதாவது 33 ஸென்டு நாற்றங்காலில் 2 பட்டணம் படிக்குமேல் தெளிக்கப்படாத நாற்றங்காலிலுள்ளதும், நோய் நொடிக்குள்படாததும், 35 நாளைக்கு மேல் போகாததுமான நாற்றுகளால் 9 அங்குலத்துக் கொன்றாக ஒற்றை நாற்று நடவு கிரமப்படி நடவேண்டும். பிறகு

களை யெடுப்பதற்குக் கொஞ்சகாலம் முன் வேம்பு, நிலக்கடலை முதலிய பிண்ணாக்குகளை எருவாகத் தூவவேண்டும். மேற்கண்ட விதமுள்ள நாற்றுக் கிடைக்காதவர்கள் நாற்றங்கால் ஓரங்களிலும், எரு ஜாஸ்தியாய் விழப்பட்ட இடங்களிலுமுள்ள நாற்றுகள் பட்டை உரப்பாயும், தாஷ்டிகமுள்ளனவாயும், கார் மேகம் போன்றதாயுமிருக்கும். அவைகளைத் தனியே பறித்து மேற்கண்டவாறு நடுவதே போதுமானது.

கவனிப்பு.—நிலத்துக்குடையவர் தினம் ஒருதரமாவது ஒரு சாணளவுள்ள ஸ்தலமேயாயினும் நாலு கரையிலுமாக வந்து அடிக்கொருதரம் நின்று சுற்றிப் பார்க்கவேண்டும். பார்த்துவரும்போது ஏதேனும் ஒரு களையோ, அன்னிய ஜாதிப் பயிரோ தன் கண்ணில் தென்பட்டால், அந்தக்ஷணமே அதை எடுத்துவிடவேண்டும். தாம் மட்டுமே சுற்றிப் பார்ப்பதல்லாது, உள்ளூர் அயலூர் சகபாடிகளுடனும், விவசாய நிபுணர்களுடனும் அவ்வயலைச் சுற்றிப் பார்த்து "இதில் ஏன் அப்பயிர் உயரத்தில் குன்றியும், இப்பயிர் தூர்கட்டாமலும், அதோ தெரிகிற பயிர் வெளுத்துமிருக்கிறது? இதற்குக் காரணம் என்ன? இதற்கென்ன செய்யலாம்?" என்று அவர்களைப் பரிவுடன் கேட்டு அவர்கள் சொல்லுவதைக் கவனமாயறிந்து அவ்விதம் செய்தல் வேண்டும். அவ்விதம் செய்தும் மற்றதற்கு ஒத்து வராவிடில் அப்பயிரையே எடுத்துவிட வேண்டும். ஒரு நாளேனும் தண்ணீர் ஜாஸ்தியாகக் கட்டக்கூடாது. பிறகு கதிர் வெளி வந்தவுடன் உற்றுப்பார்த்து வேறு ஜாதிப்பயிர், நோயுற்றவைகள், மட்டை, மறு முதலியவைகளை எடுத்துவிடுவதில் கவனம் ஜாஸ்தி யிருத்தல் வேண்டும். இவ்விதம் பாதுகாத்த பயிரை அறுப்பதிலும், காய் வைப்பதிலும் மிக சுத்தம் வேண்டு மென்பது அனைவரும் அறிந்ததே. பிறகு நெல்லைச் சல்லடைகளால் மூன்று முறை சலித்தெடுத்தால் ஒரே பருமனுள்ள விதையாகக் கிடைக்கும். இவ்வளவுதான் இதில் கொள்ளும் வேலை. இதைப் படிக்கும் நேயர்கள் இவ்வளவு தூரம் செய்ய நம்மாலாகாதென மனந்தளரக்கூடும். நேயர்களே! மலைக்காதீர்கள். மேலே சொல்லியபடி கலம் அதாவது 24 படியாவது எடுப்பது பெரிதல்ல. இப்பெரிய காரியமல்லாத ஒரு செய்கை 12 ஏகர் நடப்போதுமான விதையாயிற்று.

விதை மாற்றல்:— ஓரிடத்து விதையை மற்றோரிடத்துக்கு மாற்றுவதே. தூர இடங்களிலிருந்து மாற்றுவதானால் கவர்ன்மெண்டாரும், விவஸாய சங்கங்களும் செய்ய வேண்டிய வேலை. அங்ஙனம் செய்து கொடுக்க வேணுமாய் நாம் அவர்களிடம் மன்றாடவேண்டும். ஒருவருக்கே இரண்டு மூன்று கிராமங்களிருக்கலாம். அவைகளில் மாற்றிக் கொள்ளலாம். அல்லது பற்பல இடங்களிலுள்ள சிநேகிதருள் மாற்றிக் கொள்ளலாம். எவ்வளவுக்கெவ்வளவு தூரமுள்ள இடங்களிலிருந்து மாற்றப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு சிலாக்கிய மென்பது அநுபவசாலிகளின் அபிப்பிராயமாகும்.

எஸ். வைத்திலிங்கம் பிள்ளை.

---

## PADMINI.

BY

T. S. VAIDYANATHAN.

## பத்மினி.

சற்றேறக்குறைய 600 வருஷங்களுக்கு முன்னே டில்லியில் அலாவுடீன் அரசனும் சித்தூரில் பீமசிங் என்னும் வீரனும் அரசு புரிந்து வந்தார்கள். பீமசிங்குக்கு, மஹா ரூபவதியும், அதி மேதாவியும், ரொம்பவும் தைரியசாலியாயுமுள்ள பத்மினி என்றொரு ராணி இருந்தாள். இவளுடைய அழகைப் பற்றி அலாவுடீன் கேள்விப்படவே, அவளை விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்று மிக்க அவாக்கொண்டவனானான்.

இவன் இப்படி அவாக்கொண்டால், ராஜபுத்திர ஸ்திரீயாகிய பத்மினி இவனுக்குக் கிடைப்ப தெப்படி? அதற்காக அலாவுடீன் பின் வருமாறு யோசிக்கலானான்.

"நமக்கோ பத்மினியை மனைவியாக்கிக் கொள்ளவேண்டு மென்ற ஆசை பெரும் அவலாசையா யிருக்கிறது. இப்பொழுது



அவளை விவாகம் செய்துகொள்ள ஸமீபத்தில் மார்க்கம் ஒன்றும் இருக்கிறதாய்க் காணோம். இருந்தபோதிலும், ஒன்று என் மனதில் படுகிறது. என்னவென்றால், நாம் நேரில் போய் பீமசிங் ராஜ்யத்துக்குப் படையெடுத்துச் சென்று யுத்தம் செய்து, யுத்தகளத்தில் பீமசிங்கைக் கொன்றுவிட்டால், பிற்பாடு பத்மினியை நமக்கு உட்படும்படி செய்வதில் ரொம்பக்கஷ்டம் இராது. இதுதான் ஸரியான யோசனை." என்று இந்தவிதம் ஆலோசித்து, ஒரு பெரிய சைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு சித்தூரை நோக்கி அலாவுடீன் சென்றான். சித்தூரில் மஹா கோரமாய் அநேகம் நாட்கள் யுத்தம் செய்தான். இவன் என்ன யுத்தம் செய்தும் ராஜபுத்திரர்கள் செய்யும், அதி புத்திசாலித்தனமான சண்டையில் அவர்கள் பேரில் இவனுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

கடைசியில், தான் என்ன யுத்தம் செய்தும் பிரயோஜன மில்லை யென்று கண்டு, பீமசிங்கிடம் வந்து "யான் பத்மினியைப் பார்ப்பதற்காக யுத்தம் புரியலானேனே யொழிய மற்றப்படி வேறு விசேஷ மில்லை. பத்மினியைக் காட்டிவிட்டால், நான் பார்த்துவிட்டு ஊர் போய்ச் சேருவேன்" என்று சொன்னான். பீமசிங் இதைக்கேட்டு "அப்படியே செய்யலாம், ஆனால், நீ அவளை நேரில் பார்க்க முடியாது. கண்ணாடியில் அவளுடைய பிரதி பிம்பத்தைப் பார்க்கலாம்," என்று சொன்னான். அலாவுடீன் அதற்கு ஸம்மதித்தான். பிற்பாடு பீமசிங் இன்னுமொரு ஸமாசாரமும் சொன்னான். என்னவென்றால், "நீவந்து பார்க்கலாம், ஆனால் உன்னுடன்கூட 2 சிப்பாய்களுக்கு மேல் வரக்கூடாது" என்றும் சொன்னான். அலாவுடீன், ராஜபுத்திரர்கள் தங்கள் வார்த்தையைக் காப்பாற்றுவார்கள் என்று எண்ணி, அதற்கும் ஸம்மதித்து, பத்மினியைப் பார்க்க, பீமசிங் அரண்மனைக்குள் போனான். அவன் ராஜபுத்திரர்கள் கோட்டைக்குள்தானிருந்தான். ராஜபுத்திரர் அப்பொழுதே அவனைக் கொன்றிருக்கக்கூடும். ஆனால், அவர்கள் அப்படிஈன ஜாதியர் அல்ல. சொல்லுகிறது ஒன்றும், செய்கிறது மற்றொன்றும் அவர்களிடத்தில் கழுத்தை வெட்டினாலும் கிடையாது. ஆகவே, அவன் கோட்டைக்குள் போனதும், பத்மினியை மறைவில் திரைபோட்டு இருக்கும்படி செய்து, அவளுடைய பிரதி பிம்பத்தைக் கண்ணாடியில் அலாவுடீன் பார்க்கும்படி பீமசிங் ஏற்பாடு செய்தான்.

அலாவுடீனும் கண்ணாடியில் பத்மினியைப் பார்த்தான்.

பிற்பாடு அலாவுடீன் பீமசிங்கைப் பார்த்து "நான் உன்பேச்சை நம்பி உள்ளே வந்தேன். நான் நினைத்த காரியத்தையும் சாதித்துக் கொண்டேன். எப்படி நான் உன்னை நம்பி உன் கோட்டைக்குள் வந்தேனோ, அதுபோல நீயும் என்னுடன் வெளியில் கொஞ்சதூரம் நடந்து பேசிவிட்டு, நாம் இரண்டுபேரும் சிநேகிதர்களாகப் பிரிந்துவிடுவோம்" என்றான். பீமசிங் அவன் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தவனாய், கோட்டைக்கு வெளியில் கொஞ்ச தூரம் செல்லவே, மறைவில் ஒளிந்துகொண்டிருந்த, அலாவுடீனுடைய சைன்யங்கள் உடனே வெளிவந்து பீமசிங்கைக் கைதியாய்ப்பிடித்து அவனைத் தங்கள் கூடாரத்துக்குக் கொண்டுபோய்விட்டார்கள். அலாவுடீன் பிற்பாடு, பீமசிங்கைப் பார்த்து, "நீ உன் பத்மினியை எனக்கு விவாகம் செய்து கொடுத்தாலொழிய உன் உயிரை வைக்க மாட்டேன்" என்று பயமுறுத்தினான். பீமசிங்குக்கோ, இதைக் கேட்டவுடன் மஹா கோபம் வந்துவிட்டது. ராஜபுத்திரர்களுக்கும் இதைக் கேட்டவுடன் ரொம்பக் கோபம் வந்து

விட்டது. ஆனால், பத்மினி மாத்திரம், தன் நாயகனை எங்கே அலாவுடீன் கொன்று விடப்போகிறானோ என்று பயந்தாள். ஆனால், அவள் புத்திசாலி யானதால், ஒரு யோசனை செய்தாள். என்னவென்றால், எப்பொழுது அலாவுடீன் நம்மை ஏமாற்றினானோ, நாமும் அவனை மோசம் செய்யவேண்டும் என்று உத்தேசம் கொண்டவளாய், அலாவுடீனுக்கு ஒரு நிருபம் எழுதி யனுப்பினாள். அதில் 'நீ என் புருஷனை விடுதலை செய்து விடுவாயானால், நான் உனக்கு அடிமையாய்விடுகிறேன்', என்று கண்டிருந்தது. பின்னும், 'நான் அலாவுடீனுக்கு ராணியாகப் போகிறதால், நான் என்னுடைய தாதிகளையும், என்னுடைய பட்டாடைகளையும், என்னுடைய நகைகளையும், மூடுபல்லக்கில் வைத்து திவ்ய ஊர்வலத்தில் வர அனுமதி கொடுக்க வேண்டும்' என்றும் எழுதியிருந்தாள். அலாவுடீன் இதைக் கேட்டவுடனே, உச்சி குளிர்ந்தவனாய், 'சரி அப்படியே வருகிறது,' என்று உத்தரவளித்து விட்டான்.

பிற்பாடு வரிசைக் கிரமமாக முன்னால் பத்மினியின் மூடுபல்லக்குப் புறப்பட்டது. எல்லாரும் பத்மினி அதிலிருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அதற்குள் அதி சூரனான 'பாதால்' என்னும் ஒரு ராஜபுத்திரன் உட்கார்ந்திருந்தான். அந்தப் பல்லக்குக்குப் பின்னால் 70 பல்லக்குகள் போயின. ஒவ்வொரு பல்லக்கிலும் ஒரு ராஜபுத்திர னிருந்தான். ஒவ்வொரு பல்லக்கையும், 6 பேர்கள் கூலிகள் போல தூக்கிக் கொண்டு போனார்கள். ஆனால், ஒவ்வொருவனும் பெரிய தலைவீரன். தங்களுடைய கத்தி, கேடயம் முதலியவற்றைத் தங்கள் தங்கள் பல்லக்குக்குள் வைத்திருந்தார்கள்.

பிற்பாடு இவர்கள் எல்லோரையும், நடத்திக்கொண்டுபோன பத்மினியின் மாமனான 'கோரே' என்பவன் அலாவுடீனிடம் போய், 'பத்மினி கடைசித் தரம் தன்னுடைய பீமசிங்குடன் பேச விரும்புகிறாள், உத்திரவுகொடுக்க வேண்டும்' என்றான். 'சரி அதோ அந்தக் கூடாரத்தில் பீமசிங் இருக்கிறான். பத்மினி போய் பார்க்கலாம். ஆனால், அரை நாழிகைக்கு மேல் அங்கே தங்கக்கூடாது,' என்று அலாவுடீன் சொல்லவே, முன்னால் பத்மினி பல்லக்கு என்று சொல்லப்பட்ட பாதாலின் பல்லக்கு பீமசிங்கின் கூடாரத்துக்குச் சென்றது. அங்கே போய், பாதால் பீமசிங்குக்குத் தான் கொண்டுவந்திருந்த கவசம், கத்தி, ஈட்டி முதலானவைகளைக் கொடுத்தான். கொடுத்தவுடன் பீமசிங் அவைகளை அணிந்து கொண்டு வெளியே வரவே ராஜபுத்திர சைன்யம் பல்லக்கிலிருந்து கிழேகுதித்து, அப்கானியர்களாகிய அலாவுடீனுடைய சைன்யத்தின் பேரில் விழுந்து, அவர்களைக் கண்டம், துண்டம், சின்னம் பின்னமாய்ச் செய்து கடூரமான யுத்தம் செய்யவே, ஆப்கானியர் ஓட்டம் எடுத்தார்கள். அலாவுடீனும், பிழைத்தேன், இனிமேல் இங்கு வரக்கூடாது என்று தன் நாடு போய்ச் சேர்ந்தான். பீமசிங்கும் அரண்மனைக்கு சௌக்கியமாய் வந்து சேர்ந்தான். பத்மினியும் தான்நினைத்த எண்ணத்தை நிறைவேற்றினாள்.

ஆகையால், ராஜபுத்திரருக்கு உண்டான மானமும், அவர்களுடைய புத்திகூர்மையும், பிராணன் போகும் போலிருந்தாலும், மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமையும் மற்றெந்த தேசத்தாருக்கும் எக்காலத்திலும் வராது என்பதற்கு இச்சிறு கதையை ஒரு திருஷ்டாந்தமாக எடுத்து எழுதலானேன். தாத்பரியம் என்ன ஆயிற்றென்றால், கேவலம் ஒரு ஸ்திரீயினுடைய தைரியத்தினாலும், புத்திகூர்மையினாலும், ராஜபுத்திரர் மானமும், ராஜ்யமும் காப்பாற்றப்பட்டது.

டி. எஸ், வைத்தியநாதன்,



## SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### SINGLE PLANTING OF PADDY.

### ஒற்றை நாற்று நடவு.

தென்னாற்காடு ஜில்லா விவஸாயத் தொழில் செய்யும் மிராசுதாரும் விவஸாய சங்க மெம்பருமாகிய ஒருவருக்கும், விவஸாயத் தொழில் செய்யும் கிராம வாஸியாகிய ரெட்டியாருக்கும் ஒற்றை நாற்றுப் பயிர் செய்யும் விஷயமாய் நடந்த சம்பாஷணை:

மெம்பர்—ஐயா ரெட்டியாரே, சாகுபடிக்காகத் தழைபோட்டுத் தயார்செய்து வைத்திருக்கும் இந்த நஞ்சை நிலம் உம்முடையதா?

ரெட்டியார் — ஆமாம், ஏன்?

மெம்பர் — இந்த நிலத்தில் என்ன செய்யப் போகிறீர்?

ரெட்டியார் — நெல் விதைக்கப் போகிறேன்.

மெம்பர் — (1) இந்த நிலம் எவ்வளவு விஸ்தீர்ணம்? (2) இதற்கு எவ்வளவு நெல் விதைக்கப் போகிறீர்? (3) நாற்று விட்டால் எவ்வளவு விடுவீர்?

ரெட்டியார் — (1) இது ஒரு காணி; (2) இதற்குக் கல நெல் அதாவது, 30 பட்டணம் படி விதைக்கப் போகிறேன்; (3) நாற்று விட்டால், 2 கல. அதாவது, 60 பட்டணம் படி செல்லும்.

மெம்பர்—ரெட்டியாரே, நான் சொல்லும் எனது அனுபவத்தை நம்பி அந்தப்படிச் செய்தீரானால், உமக்கு நல்ல லாபமும் ஸௌக்கியமு மிருக்கிறது. அந்தப்படிச் செய்கிறீரா?

ரெட்டியார்—லாப மிருந்தால் செய்கிறேன்.

மெம்பர்—இந்த நிலத்தில் நெல் விதைப்பதை நிறுத்தி ஒரு தனையில், அதாவது, 8 ஸெண்டு நிலத்தில், 8 படி நெல்மட்டில் நாற்றாக விட்டு 30 நாளைக்குள் ஒவ்வொரு பயிராக வழக்கம்போல் இடம் விட்டு நட்டுவிடும்.

ரெட்டியார்—என்ன ஐயா, நாங்கள் வழக்கமாய் 30 படி நெல் விதைகாலாக விதைத்து களை பறிக்கக் கலப்பை போட்டால், சில வருஷத்தில் பயிர் கரைந்து, காணமற்போகிறதே, அது எப்படி 7, 8 படி நெல் விதை ஒரு காணிக்குப் போதும்?

மெம்பர்—அது உண்மைதான், அதற்குக் காரணம் சொல்லுகிறேன். ஒரு காணிநிலத்தில் 30 படி நெல்லை விதைத்தால், அந்த நிலம் முழுவதையும் பரம்படித்து நாற்றுவிடும் நிலத்தைப்போலல்லாமல் மேடு பள்ளமாக இருப்பதால், பள்ள நிலத்தில் விழுந்த முளைநெல் அழுகியும், மேட்டில் விழுந்தது காய்ந்து முளையாமல் போயும், சில நெல் மிதிபடாமலிருக்குந் தழையின் மேல் விழுந்து முளையாமலும் அந்தநிலத்தில் விதைப்பதற்குத் தண்ணீர் நிறுத்தி விதைத்தபின் ஜலம் வடியவிடுங் காலத்தில் நெல் விதையை ஜலத்தோடு அடித்துக் கொண்டு போயும் இப்படிக்கு நெல் விதைக்கும்போதே நஷ்டமாகிறது. அதாவது, நாற்று விடவேண்டுமானால், அவைகள் ஒன்றோடொன்று ஸமீபத்தில் முளைத்து அதன் போஷணைகளின் அனுகூலத்தால் பயிர் கெடாமல் நாற்றுப் பலிதமாகும். அப்படிக்கில்லாமல், ஒரு காணியில் 30 படி நெல் விதைப்பதால், அந்த முளைப் பயிருக்கு இடைவெளி அதிகப்பட்டு அதில் களை முளைத்துப் பயிரையும் மூடி சாறல், காற்றிருள், நோய்கள் கண்டு பயிர் கரைந்தும் கெட்டுப்போய், இப்படிப் பலவித இடைஞ்சல்களினால் பயிர் நஷ்டம்

டைந்து போகிறதால், 30 படி ஒரு காணிக்கு நடாமலும் போகிறது.

ரெட்டியார்—இப்படி விதைத்தால் தான் பயிர் நஷ்டமாய்ப் போகிறதென்கிறீரே, நாங்கள் நாற்றுவிட்டால், கொஞ்ச நிலத்தில் அடர்த்தியாய் விட்டு வைக்கிறோமே. அந்த நாற்று ஏன் 60 படி நெல் நாற்று ஒரு காணிக்குக் காணாமலும் போகிறது?

மெம்பர் — அதற்குங் காரணம் சொல்லுகிறேன். நீங்கள் விதை நெல்லை நாற்றங்காலில் அளவிற்கு மிஞ்சி அதிக அடர்த்தியாக ஒன்றின்மேல் ஒன்றாக நெல் வறிக்கொண்டிருக்கும்படி விதைத்து, அந்த நெல் முளைகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு செழிப்பாய் வளர்வதற்கில்லாமல் நெருக்கத்தால் சிறுமை யடைந்தும், அந்தப் பயிர் சீக்கிரத்தில் வளரவொட்டாமலும், தடிக்கவொட்டாமலும், நாற்றங் காலைக் காயப்போட்டும் அந்தப் பயிர் 40, 50 நாள் வரையில் வைத்து அதைப் பிடுங்கி 10,15 பயிர் சேர்த்து நடுவதால் ஒருகாணிக்கு 60 படி நெல் பயிர் காணாமல் போகிறது.

ரெட்டியார் — நாங்கள் வழக்கமாய் 10,15 பயிருக்குமேல் பிடித்து நட்டு அந்தப் பயிரிலேயே 7, 8 கதிர் தானே காணுகிறது. ஒற்றைப் பயிராக நட்டால், ஒன்று இரண்டு கதிர் தானே காணும்.

மெம்பர் — அப்படியல்ல, ஒற்றைப் பயிர் நடும் வழக்கம் நமக்கு ஏற்கனேயாயுமிருப்பதை நாம் கவனிக்கவில்லை. விதைத்த பயிரைக் கலப்பை போடும்போது ஒன்று இரண்டு பயிர்தான் சேர்த்து நடுகிற வழக்கம். அதில் 10, 15 கதிர் காணுகிறதைப் பார்த்திருக்கிறோம்; அடர்ந்த நாற்று விடுவதில்லை. நாற்றங்காலிலேயே அந்தப் பயிர் தடித்து வளர ஆரம்பிக்கும். பருவ காலத்தை யெல்லாம் சிறுமையோடு வளர்த்து அதைப் பிடுங்கும்போது கழிகொண்டு அடித்துக் கசக்கி அதை நடும்போதும் தனித் தனியாகப் பயிர் வேறின்றி செழித்து வருவதற்கெல்லாம் 10, 15 பயிர்களைச் சேர்த்து நட்டுவிடுவதால், அதன் வேர்கள் ஒன்றோடொன்று பிடித்துக்கொண்டு மட்கியும் கெட்டுப்போய் பூமியின் கொழுமையால் 10, 15 நாள் கழித்து பசுமை கண்டு சிறுமையோடு வளர்ந்து பூமியின் உதவியாலும் பூமியின் குணத்தாலும் வளர்ந்து கதிர் காணுகிறது. இந்த ஒற்றை நாற்றுக்காகத் தயார் செய்யும் நாற்றங்கால் பயிரானது ஜாஸ்தியான அடர்த்தி யில்லாமலும், விதைகால்போல் இடைவெளியில் பயிர் நஷ்டமில்லாமலும் முளைத்து இடைஞ்ச லில்லாமல் கொழுமையோடு வளருகிறது. அந்தப் பயிர் 25 நாளைக்கெல்லாம் நடத் தகுந்த வளர்ச்சி யடைகிறது, அதைப் பிடுங்கிக் கழியில் அடித்துக் கசக்காமல் மண்ணை அலம்பிவிட்டு ஒவ்வொரு பயிராக நட்டால், அந்தப் பயிர் நட்ட தினம் முதல் வளரவும் பக்ககிளைகள் கிளைக்கவும் ஆரம்பித்து நாளுக்கு நாள் வளர்ந்து 10, 15 நாளைக்கெல்லாம் 15, 20 பயிர்கள் செழித்து வளர்கின்றன. இந்தப் பயிர் செழிப்பாய்த் துவக்கம் முதல் சிறுமை யில்லாமல் வளர்வதால், ஒவ்வொரு பயிரும் கதிர்காணுகிறது. அடர்ந்த நாற்றுப்பயிர்கள் கதிர்காணும்போது பொந்தை கட்டிவிட்டதென்று சில கதிர்கள் மாத்திரம் விட்டு மற்றப் பயிர்கள் கட்டையாக நின்றுவிடுகின்றன.

ரெட்டியார்—ஒற்றை ஒற்றையாக நடுவதற்கு ஜாஸ்தியான ஆள்கள் பிடிக்கும். அதுவும் பழக்கமில்லை, அப்படிச் செய்ய முடியாது.

மெம்பர் — அப்படியல்ல, நீர் ஒற்றை நடவு நட்டுப் பாரும். வழக்கமாய் ஒரு காணி நட



வேணுமானால், 15 ஆள்கள் செல்லும். இந்த ஒற்றை நாற்று நடுவதற்குக்கூலி ஆட்களுக்குச் சுலபமாயும் கஷ்டமில்லாமலும் இருப்பதால், 10 ஆள்களுக்குமேல் செல்லாது.

ரெட்டியார்—விதைகால் சாகுபடியும் ஒற்றை நடவுபோல்தானே இருக்கிறது. அந்தப்படியே விதைத்துவிடுகிறேன்.

மெம்பர்—அப்படி விதைப்பதால் உண்டாகும் விதைநஷ்டங்களை முன்னமேயே சொல்லியிருக்கிறேன். அதைப் பாராவிட்டாலும் அந்தப் பூரா நிலத்திலும் விதைத்தது முதல் முளைக்குங் களைகள் பிடுங்குஞ் செலவு அந்தப் பயிரைக் கலப்பை போடுவதென்று அடர்ந்த பயிரைப்பிடுங்கி இல்லாத இடத்தில் நடுவதின் செலவுகளும் நாற்று நடும் செலவைவிட 3 மடங்கு அதிகப்படுகிறது. அது தவிர அந்தப் பயிர் வளர 30 நாளைக்கு ஒருகாணி நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிப் பாதுகாப்பதைவிட 8 ஸெண்டு நிலத்தில் வேலை செய்து பாதுகாப்பது சுலபம். அந்த ஒரு காணி நிலத்தில் எருதழை போட்டு விதைத்த பயிரும் முளைத்த களைகளும் ஒரு மாதத்தில அந்த எருவின் சாரத்தை உட்கொண்டு குறைத்து விடுகிறது. இதனால் விதைத்துப் பயிர் செய்வதைவிட ஒற்றை நாற்றாக விட்டுநடுவதே குறைந்த செலவும், உயர்ந்த வருமானமும் உள்ளதாக இருப்பதைக் காணலாம்.

ரெட்டியார்—நாற்றுவிடும் 8 ஸெண்டு நிலத்திற்குக் களைபிடுங்க வேண்டாமோ?

மெம்பர்—நாற்று நிலத்தை ஸமப்படுத்திக் கொஞ்சம் விதைகாலைவிட அடர்ந்த பயிராக விடுவதால், ஜாஸ்தியாகக் களைகளும் முளையா. கொஞ்சம் முளைத்திருந்தாலும் அதை எடுக்க வேணும் என்று தோன்றினால் எடுக்கலாம். இல்லாவிட்டால் அப்படியே நாற்றுப் பிடுங்கும்போது அந்தக் களைகள் கழிந்துவிடும்.

ரெட்டியார் — அப்படியானால் அந்த விதை நெல்லைக் கொஞ்சம் காட்டினால் பார்க்கிறேன்.

மெம்பர்—வேறு நெல் கிடையாது. நாம் சாகுபடி செய்யும் கருடன் சம்பா, சடைச் சம்பா, பெருஞ் சம்பா முதலியவைகள்தான் விதைக்கிறது.

ரெட்டியார்—அது எப்படி? இத்தனை நாளாய் ஏன் இந்தமாதிரி செய்யவில்லை? அது வேறு நெல்லாகத்தான் இருக்கும்.

மெம்பர்—அப்படி வேறு நெல்லாக யிருந்தால், நான் அதைச் சொல்லுகிறேன்; இதே நெல்லுதான்.

ரெட்டியார் — இந்த நெல்லுகளை யாராவது ஒற்றை நாற்றாக விட்டு நட்டுப் பார்த்திருக்கிறார்களா?

மெம்பர் — ஆம், நான் என்னுடைய பண்ணையில் சென்ற வருஷத்தில் 5 ஏக்கருக்கு 20 படி நெல் நாற்றுவிட்டு நட 225 கலம் நெல் கிடைத்தது.

ரெட்டியார் — அப்படி யிருந்தால் உங்கள் நிலம் நல்ல கொழுமையுள்ளதா யிருக்கும். அதிமாகத் தழைபோட்டுப் பார்த்திருப்பீர்கள்.

மெம்பர்—அப்படி அவசியமே யில்லை. என் பண்ணையில் 5 ஏக்கர் நிலங்களில் நல்ல மணல்பாங்கு நிலம், தண்ணீர் அடிக்கக்கூடிய சவர்கால் நிலம், கீழ் கவிச்சல் உள்ள நிலம், எல்லாவித பூமியிலும் நடப்பட்டு மாதிரி பார்த்திருக்கிறது. எந்த நிலத்திலும் அவைகள் பின்வாங்கவில்லை. இப்படிச் செழித்து வருவதற்குக் காரணம் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

ரெட்டியார்—இந்த ஒற்றை நாற்றுப் பயிர் தண்ணீர் அடிக்கும் வெள்ளச் சாய்கால் நிலத்தில் நட்டால், இந்த ஒற்றைப் பயிரையும்

அடித்துக்கொண்டு போய்விடும். அதில் செய்ய முடியாது.

மெம்பர்—அடிபட்ட நிலத்தில்தான் அவசியம் இந்த ஒற்றை நாற்றை நடவேண்டும். அந்த நிலத்தில் அடர்ந்த நாற்று நட்டால், அவைகள் வேரூன்றி நிலைத்து நிற்க 15, 20 நாள் செல்லும். அதற்குள் வெள்ளமடித்தால், அந்த நடவுகள் சாய்ந்து நஷ்டமடைந்துவிடும். இந்த ஒற்றை நாற்றுகள் நட்டதினமுதல் நிலைத்து வேரூன்றி கிளைக்கத்தொடங்குவதால், அந்தப் பயிரை வெள்ளமடித்துக் கெடுதி செய்யாது.

ரெட்டியார் — இந்தமாதிரி செய்வதென்று உங்களுக்கு யார் சொல்லிச் செய்தது?

மெம்பர் — நான் மஞ்சகுப்பத்தில் கலெக்டர் துரையவர்கள் கச்சேரியில் கூடும் டிஸ்ட்ரிக்ட் விவஸாய சங்கத்தில்மெம்பராக யிருக்கிறேன். அந்தச் சங்கத்தில் இதன் நன்மையை பிரஸ்தாபித்ததில் தெரிந்தும், பாலூர் கவர்ன்மெட் பண்ணை மானேஜர் சுப்பிரமணிய ஐயரவர்களால் தெளிவாய்ப் போதிக்கப்பட்டும், ஷை பண்ணையில் எல்லா நஞ்சைநிலங்களும் ஒற்றையாக நட்டிருந்து அதன் உற்பத்தியைப் பார்த்தும் தெரிந்து கொண்டேன்.

செட்டியார் —ஸரி, அப்படியானல் நானும் நேரில் பாக்கவேணும். எங்கள் ஊரிலும் எல்லாரும் நட்டால்தான் நானும் நடுவேன். அப்படிக்கில்லாவிட்டால் முடியாது.

மெம்பர் — அப்படியானல் எங்கள் ஊரில் என் பண்ணையிலும் இதைப் பார்த்த குடித்தனக்காரர்களும் நட்டிருக்கிருர்கள். அதைப் பார்த்துத் தெரிந்துகொண்டு செய்யலாம்.

ரெட்டியார்—எனக்கு இப்பொழுது ஒழிவு இல்லை. யாராவது முந்திப் பார்த்துவிட்டு வந்து நடட்டும், பார்க்கிறேன்.

மெம்பர்—இதைப்போல் எல்லாரும்சொன்னல், யார்தான் தைரியமாய்ச் செய்கிறது? உம்மைப்போல் பெரிய பட்டாதார்களும் தெரிந்தவர்களுந்தானே அதைப் பார்த்துச் செய்து மற்றவர்களுக்குக் காண்பிக்கவேணும்.

ரெட்டியார்—உங்கள் ஊரில் உங்களைப் பார்த்து எல்லாரும் இந்தப்படிச் செய்கிருர்களா?

மெம்பர்—ஆம், இதைப் பார்த்து எங்கள் ஊரிலும் பக்கத்து கிராமத்திலும் இந்தப்படி ஒற்றை நாற்றுப் பயிர் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

ரெட்டியார்—இந்தப்படி நடுவதால் என்ன லாபங் கிடைக்கிறது?

மெம்பர்—விதை நெல்லில் மாத்திரம் தவருமல் நாற்ருக விடுவதில் ஏக்கர் 1-க்கு 4, 5 ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும். பிறகு விளைச்சலும் காலத்திற்குத் தகுந்தபடி கிடைக்கும். விதைகால் விதைப்பதிலும் களை பறிப்பது கலப்பைபோடுவது முதலிய கூலிச்செலவுகளினலும் 4, 5 ரூபாய்க்கு மேற்பட்டே லாபமிருக்கிறது. வழக்கமாய் நட்ட நாற்று அறுவடைக்கு 20 நாளைக்குமுன் அறுவடையாகும். தடித்த பயிரானதால் கொஞ்சம் காய்ச்சலும் தாங்கும். நோயால் பிடிக்கப்படாது.

ரெட்டியார்—நீங்கள் சொன்னது எனக்கு இன்னும் ஸந்தேகமா யிருக்கிறது. நான் யோஜனைசெய்து எங்கள் குலதெய்வ கோவில் பூசாரியைக் கணிகேட்டு, புதிதாகயிருப்பதால், அடுத்த வருஷமாவது கொஞ்சம் பார்க்கிறேன்.

---

## PRESERVING HEALTH.

## சுகம் பேணும் முறைகள்.

நமது இந்திய நாடு முன்காலங்களில் மிகச் செல்வமுடையதா யிருந்ததாகவும், அதனல் அன்னிய தேசத்து ராஜாக்கள் படையெடுத்துவரக் காரணமாயிற்றென்றும், மாரிஸ் எழுதிய இந்திய சரித்ரத்தில் முதல் பக்கம் முதல் வரியில் காணப்படுகிறது. இந்தச் செல்வத்துக்குக் காரணம் இந்துக்கள் தேகஸம்ரக்ஷணை விஷயத்தில் எடுத்துக்கொண்ட முன்கருத்துக்களே. தேக ஆரோக்கியம் இருந்தால் மட்டிலுமே பல தொழில்கள் அபிவிருத்தியாகும்; தொழிலாளிகளுக்கும் வேலை செய்து பணம் சம்பாதிக்க முடியும். ஒரு வீட்டில் கைத்தொழில் செய்து சம்பாதிக்கிற 6 பேர்



களில் 4 பேர் நோயாளிகளானல், அவர்கள் வரும்படி குறைந்துபோகும். 100 வீடுகளுள்ள ஒரு ஊரில் ஒவ்வொரு வீட்டிலும் 4 அல்லது 5 பேர்நோயாளிகளாகி சம்பாதிக்கச் சக்தியற்றவர்களானல், அந்த ஊரார் வறுமையடைவார்கள் என்பதற்குச்சந்தெகமேயில்லை. நம் முன்னோர்கள் சுகாதார விஷயத்தில் கண்ணும் கருத்துமா யிருந்தனர் என்பதற்குப் பின்வரும் வசனங்கள் அத்தாட்சியாகும்.

நோய்க்கிடம் கொடேல்.
நோயற்ற வாழ்வே வாழ்வு
கந்தை யானலும் கசக்கிக் கட்டு.
கூழானலும் குளித்துக் குடி.

அகஸ்தியர் எழுதிய ஆயுள்வேத சாஸ்திரத்தில் முதன்முதல் பிணிகளைத் தடுக்கும் முறைகளைச் சொல்லிவிட்டுத் தான் பிறகு சிகித்ஸை விவரத்தைக் கூறுகிருர். பகலுறக்கம், பகற்பொழுதைச் சிற்றின்பத்தில் கழித்தல், பசியில்லாமல் உண்ணுதல், வெயிலிலும் மழையிலும் அலைதல், மதுபானஞ் செய்து இராக்காலங்களில் திரிதல், முதலியவைகளை விலக்க வேண்டு மென்றும், இவைகளை விலக்கினல், எமன் வரமாட்டான் என்றும் சொல்லியிருக்கிருர். இவ்வாறு விலக்கப்பட்டவைகளை விட்டும், அனுஷ்டிக்கத் தக்கவைகளை அனுஷ்டித்தும் வந்ததினல் நம் முன்னோர்கள் சுகசரீரிகளா யிருந்தார்கள். இக்காலத்தவர்கள் அம்முறைகளை முற்றிலும் விட்டுவிட்டார்கள். அதற்குப் பல காரணங்களுண்டு. முக்யமானது படிப்பின்மை. ஆகையால், ஜனங்களுக்குச் சுகாதார விஷயத்தில் அறிவை உண்டாக்குவது, நல்லறிவும் தேசாபிமானமுமுடைய கற்ருேர்களது வேலையாக ஏற்படுகிறது. "சுதேச மித்திரன்" போன்ற பத்திரிகைகள் மூலமாய் ஸாமான்ய ஜனங்களுக்குச் சுகாதார விஷயத்தில் அறிவுண்டாகச்செய்யலாம். துண்டுப் பத்திரிகைகள் மூலமாகவும்,பிரஸங்கங்கள் நடத்தியும் சுகாதார முறைகளை ஜனங்களுக்குப் போதிக்கலாம். நமது கவர்ன்மெண்டார் ஜனங்களுடையதேகரக்ஷணைக்காக ஸானிடெரி டிபார்டுமெண்ட், முனிஸிபாலிடி, லோகல் போர்ட், யூனியன் மூலமாகப் பல ஏற்பாடுகள் செய்து வருகிருர்கள்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலான தேசங்களில் வருஷத்தில் 1000-த்துக்கு 20-க்குக் குறைவாகத்தான் சாகிருர்கள். இந்தியாவிலோ வருஷத்தில் 1000-த்துக்கு 40-க்கு மேல் சாகிருர்கள். ருஷியா தலை நகரமாகிய ஸென்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 1000-த்துக்கு 24 பேர் சாகிருர்கள். ஐரோப்பாவில் உள்ள பட்டணங்களைப் பார்க்கிலும் இந்த ஊரில் சுகாதார ஏற்பாடு மிகக் குறைவு. நமது இந்தியப்பட்டண பரிஷ்காரமோ ருஷியா நகரங்களைவிட மிகக்குறைவா யிருக்கிறது.

தேக ஆரோக்கியத்துக்கு முக்யமாய் வேண்டியவை நான்கு (1) நல்ல ஜலம் (2) சுத்தமான காற்று, (3) ஜீரணிக்கக்கூடிய ஆகாரம் (4) காற்ருேட்ட முடையதும் ஈரமில்லாததுமான கட்டிடங்கள். இவற்றுள் முக்கியமானது நல்ல ஜலம். குடிப்பதற்கும், சமையல்செய்வதற்கும்; அழுக்கு வேஷ்டிகள் தோய்ப்பதற்கும், வீடுகள்ஒடைகள் முதலியன சுத்தமாவதற்கும், கால்நடைகள் உபயோகத்திற்கும் தண்ணீர் மிகவும் அவசியம்.

நமது அஷ்டாங்க ஹிருதய சாஸ்திரத்தில் குடிக்கிற தண்ணீரில் குளிக்கவும், குளிக்கிற தண்ணீரில் வேஷ்டி தோய்க்கவும், கால்நடைகளைக் குளிப்பாட்டவும், அழுக்கு வஸ்திரங்களைத் தோய்க்கவும், உபயோகிக்கும் தண்ணீரைக் குடிக்கவும் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது ஜனங்கள் இவைகளையொன்றும் கவனிக்கிறதில்லை. ஆறு குளக்கரைகளில் மலமூத்திர விஸர்ஜனம் செய்கிருர்கள். ஆடுமாடுகளைக் குளிப்பாட்டும் தண்ணீரில் குளிக்கிருர்கள்; அந்நீரைக் குடிக்கிருர்கள். குஷ்டம் முதலிய தொத்துவியாதியஸ்தர்கள் குளிக்கும் தண்ணீரிலும் குளிக்கிருர்கள், குடிக்கிருர்கள். அழுக்குத் துணிகளை நனைத்தும், பாத்திரங்களைச் சுத்திசெய்தும் அசுத்தப்படுத்திய ஜலத்தையும் ஸ்நானபானதிகளுக்கு உபயோகிக்கிருர்கள். இத்தீய வழக்கங்களால் வரும் பெருங் கெடுதல்களை அவர்கள் சற்றும் கவனிக்கிறதில்லை. வயிறிளக்கம்,வாந்திபேதி, வயிற்றுளைச்சல், இரைகடி, ஜன்னிபாதஜ்வரம் சிரங்கு, புழுக்கடி முதலிய நோய்கள் உண்டாவதற்குப் பிரதான காரணம் முற்கூறிய வழக்கங்களே. இவைகளைத் தடுக்க அரசாங்கத்தார் எவ்வளவு பிரயாஸைப்பட்டும் பிரயோஜன முண்டாகிறதில்லை. தென்திருவாங்கூரிலும், திருநெல்வேலி, மதுரை முதலிய

ஜில்லாக்களிலும் உள்ள குடியானவர்கள் மேலே சொன்ன துர்வழக்கங்களைக் கைக்கொண்டிருப்பதினால் வாந்திபேதியால் இந்நாடுகளில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் வருஷந்தோறும் மரண மடைகிறார்கள். இந்நாசத்துக்கெல்லாம் காரணம் அசுத்த ஜலமே. ஆகையால், நாம் குடிக்கவும் குளிக்கவும் சுத்த ஜலத்தையே உபயோகப்படுத்தவேண்டும்.

சுத்த ஜலமானது ருசியில்லாமலும், வாஸனையில்லாமலும், மண் சேராமலும் தெளிவாயிருக்கும். அதை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் நிறைத்து அச்சடித்த காகிதத்தின்மேல் வைத்தால், எழுத்துக்கள் தெளிவாய்க் காணப்படும். நல்ல ஜலத்தை நாம் பலவிதமாகச் சேகரிக்கலாம்.

1. மழை ஜலத்தைப் பெரிய குளங்களில் சேர்த்துவைத்து வடிகட்டி ஜனங்களின் உபகாரத்துக்காகக் குழாய் வழியாய்க் கொண்டுபோகிறார்கள். ஆனால், மழை விழப்பட்ட தரை சுத்தமாயிருக்கவேண்டும். அந்தத் தரையிலும் அடுத்த ஸ்தலங்களிலும் மல மூத்திர விஸர்ஜனம் செய்யக்கூடாது. சேகரித்த மழை ஜலத்தைப் பிற்பாடு அழுக்கடையாமலும் காப்பாற்றவேண்டும்.

2. பனிக்கட்டி உருகி வரும் ஜலமும் சுவையுடையதா யிராது அதை உட்கொள்வதினால் ஜீரணசக்தி குறையும். இது விசேஷமாய்ப் பெரிய மலைகளிலிருந்து உண்டாகி வருவதால் அசுத்த மாவதற்கு இடமில்லை.

3. ஊற்று ஜலம்—இது அதிக சிரேஷ்டமானது ஆனால் ஊற்றின் நாலு பக்கங்களிலும் ஜனங்கள் மல விஸர்ஜனம் செய்யாமலும் வேறு விதமாக மலினப்படுத்தாமலும் இருக்கவேண்டும் மழைகாலத்தில் சுற்றுப்பக்கங்களிலுள்ள அழுக்குக ளெல்லாம் ஊற்றில் வந்து விழுந்து தண்ணீரைக் கெடுத்துவிடுகின்றன. அப்போர்ப்பட்ட நீரைக் குடித்தால், பலவித நோய்கள் உண்டாவது நிச்சயம்.

4. கிணற்றுஜலம்—மேடுகளில் உள்ள கிணற்று ஜலம் மிகச்சிரேஷ்டமானது. கிணற்றிலிருந்து 50 அடி சுற்றுப் பக்கங்களில் மூத்திரக் குழி, கக்கூசு, சுடுகாடு முதலியன இருத்தல் கூடாது. மழை ஜலம் விழாமல் சுற்றுச் சுவர் வளர்த்தும், பலமான தளவரிசை போட்டும் கிணற்றை ரக்ஷிக்கவேண்டும். சிந்தின ஜலம் கிணற்றுக்குள்ளே பாயாமல் சுற்றிலும் ஓடைகள் தோண்டி அதற்குப் போக்கு விடவேண்டும். கிணற்றருகில் குளிக்கவும், பல் விளக்கவும், வேஷ்டிதோய்க்கவும், பாத்திரம் தேய்க்கவும் கூடாது. குழியான ஸ்தலங்களிலுள்ள கிணற்று நீரையும் வயல் மத்தியிலுள்ள கிணற்று நீரையும் உபயோகப்படுத்தக் கூடாது. மழை காலத்தில் பூமியிலுள்ள எல்லா அசுத்தப் பொருள்களும், பள்ளமான கிணறுகளில் வந்து சேருகின்றன. கீழ்ஜாதி ஜனங்கள் ஸாதாரணமாக இம்மாதிரி குழிக் கிணற்று நீரை உபயோகித்து வருவதால் பலவித குடல் வியாதிகளால் வருந்துவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்

5 ஆற்று ஜலம்—நம் நாட்டார் ஆற்று ஜலத்தையே முக்யமாய்க் குடிப்பதற்கும் குளிப்பதற்கும்உபயோகப்படுத்துகிறார்கள். கங்கை, யமுனை, கோதாவரி, பிரம்மபுத்திரை, துங்கபத்திரை முதலான பெரிய ஆறுகள் மிக ஆழமுடையனவாகவும் விசாலமாகவும் இருப்பதாலும், இருகரையிலும் ஜலம் புரண்டு ஓடுவதாலும் அந்நதி ஜலங்களில் சேர்ந்த விஷப் பொருள்களை ஜலத்தில் உள்ள பிராணவாயுவானது எரித்துவிடுகிறது. ஆனால், சிறு நதிகளில் உள்ள ஜலமானது அப்படிச் சுத்தமாகிறதில்லை. வயல்களிலுள்ள கழிவு ஜலமும், கிராமங்களிலுள்ள ஓடை ஜலமும், சிற்றாறுகளில் வந்து சேருகின்றன. கரையின் இரு பக்கங்களும் கக்கூசாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. கரையில் ஏராளமாக சுடுகாடுகளும் உண்டு. ஆடு மாடுகளையும் குளிப்பாட்டுகிறார்கள். இம்மாதிரி பல வழிகளால் மலின மடைந்த ஆற்று ஜலத்தைக் குடிப்பவர்கள் எல்லாம் தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டு ஆயிரக் கணக்காகச் சாகிறார்கள். தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி முதலியஜில்லாக்களில் வருஷந்தோறும் வாந்திபேதியால் அனேக ஜனங்கள் மரணமடைகிறார்கள். காரணம் அசுத்தமான ஆற்று ஜலத்தை உபயோகிப்பதே.

6. குளத்து ஜலம்—குளத்து ஜலமும்பல இடங்களில் ஸ்நானபானாதிகளுக்கு உபயோகப்பட்டு வருகிறது. மழை காலத்தில் பக்கத்து மைதானங்களிலுள்ள தண்ணீரெல்லாம் குளங்களில் பாய்கின்றன. மலம், மூத்திரம் முதலிய அழுக்குகள் சேர்ந்த பொருள்களும் ஜலத்தோடு சேர்ந்து வரும். ஆகையால், குளத்து நீரைக் குடிக்கவும்குளிக்கவும் உபயோகப்படுத்துவது சிரேஷ்டமல்ல. மேடுகளிலுள்ள ஊற்று ஜலத்தையும், 50 அடிக்கு மேல் ஆழமுள்ளகிணற்று ஜலத்தையும் குடிப்பதால் ஒரு தீங்குமில்லை. பள்ளங்களிலும் வயல் மத்தியிலும் உள்ள கிணற்று ஜலத்தையும் சேகரித்துவைத்த மழை ஜலத்தையும், ஆறு குளங்களிலுள்ள ஜலத்தையும் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் உபயோகிப்பது பெரும் பிசகு.



ஆனால், ஊற்றுகளும், நல்ல கிணறுகளும் இல்லாத இடங்களில் இரும்புக் குழாய்களைப் பூமியி லிறக்கி, குழாய் வழியாகத் தண்ணீர் எடுத்து உபயோகப்படுத்தலாம். இம்மாதிரியான குழாய்க் கிணறுகளுக்கு 100 ரூபாய்க்கு மேல் செலவில்லை. வாந்திபேதி யுண்டாகும் பொழுது ஆயிரக் கணக்காகப் பணச் செலவு செய்து பேய்க் கொடை கொடுக்கும் கிராமவாஸிகளுக்கு இந்தச்செலவு பெரிதானதல்ல. இதனால் உண்டாகக் கூடிய பலனோ அளவற்றது.

குளத்து ஜலத்தை அல்லது ஆற்று ஜலத்தை உபயோகிக்க வேண்டியதாக வந்தால், அதை நல்ல சுத்தமான துணியால் வடிகட்டி சீனாக்காரப்பொடி அரைக்கால் ரூபாயெடை சேர்த்துச் சிறிது நேரம் வைக்கவேண்டும். அப்பொழுது அந்நீரிலுள்ள மலினங்க ளெல்லாம் அடியில் தங்கிவிடும். பிறகு அதை நன்றாய்க் காய்ச்சி உபயோகப்படுத்த வேண்டும்.

வடிகட்டுதல்—இதற்கு உபயோகமுள்ள பல வடிகட்டு யந்திரங்கள் உண்டு. அவைகளை ஏழைஜனங்கள் வாங்கி உபயோகப்படுத்த முடியாது ஆனால் துவாரமுள்ள இரண்டு சட்டிகளை அடுக்காய் வைத்து மேல் சட்டியில் மணலும் அதற்கடுத்ததில் கரியும் மணலும் போட்டு வைத்து இந்த இரண்டு சட்டிகளிலுமுள்ள துவாரங்களின் வழியாய் ஜலம் சொட்டுச் சொட்டாய் விழுந்து அடியில் வைக்கப்பட்ட துவாரமில்லாத சட்டியில் தங்கும்படிச் செய்து வடிக்கட்டலாம். மணலையும் கரியையும் அடிக்கடி மாற்ற வேண்டும். இது இலகுவான முறையானாலும் பழக்கம் அவசியம் வேண்டும்.—சுதேச மித்திரனில் கேசவராவ்.

## EARLY MARRIAGE.

## பால்ய விவாகம்.

——(:o:)——

விவாக மென்பது ஹிந்து மதஸ்தர்களுக்குள் ஒரு ஸம்ஸ்காரமாக சாஸ்திரங்களில் எடுக்கப்பட்டிருக்கிறது. மேல்நாடுகளிலும், இந்தியாவிலேயே மகம்மதியர், கிருஸ்தவர், முதலிய இதர மதஸ்தர்களுக்குள்ளும் விவாகம் என்பது ஸாதாரணமான ஒரு ஒப்பந்தமாக பாவிக்கப் படுகிறது. இந்த மதஸ்தர்களுக்குள் ஸாதாரணமாய் கல்யாணமான ஒரு புருஷனும் ஸ்திரீயும் தமக்கு இஷ்ட மில்லாவிட்டால், தம்முடைய கல்யாணத்தை ஒத்துமையின்பேரிலோ, கோர்ட்டு மூலமாகவோ ரத்து செய்துகொண்டு தமக்கிஷ்டமான வேறு ஒரு நபரை விவாகம் செய்துகொள்ளலாம். இந்து மதத்திலோ கல்யாணம் ஒரு முறை செய்யப்பட்டால், அக்கல்யாணம் ஒரு போதும் ரத்து செய்யக்கூடியதல்ல. மேலும், முற்கால சம்பிரதாயங்களை அநுஸரித்து ஹிந்துமத சாஸ்திரங்கள் புருஷன் சார்பாகவே பக்ஷபாதமா யிருக்கின்றன. தாரமிழந்த ஒரு புருஷன் பலமுறையும் புனர்விவாகம் செய்துகொள்ளலாம். தாரமிருக்கும் புருஷனும் தன்னிஷ்டப்படி வேண்டிய ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொள்ளலாம். ஆனால், ஸ்திரீகளோ அப்படிச் செய்யக்கூடாது. ஒரு ஸ்திரீயானவள் தன் வாழ்நாள்களில் ஒரே புருஷனைத்தான் விவாகம் செய்துகொள்ளலாம். அப்புருஷன் இறந்துவிட்டால், அவள் மறுபடியும் புனர்விவாகம் செய்துகொள்ளக் கூடாது. ஏகாங்கியாகவேதான் வாழ்நாளைக் கழிக்கவேண்டும். அதிலும் பிராமணர் முதலிய உயர்குல ஸ்திரீகள் புருஷனை இழக்க நேரிட்டால், அவர்கள் கதி மிகவும் பரிதபிக்கத் தக்கதே. இவ்விதமாக ஹிந்து சாஸ்திரங்

கள் கல்யாண விஷயத்தில் மிகக் க்ரூரமாக இருந்தும் அதுவிஷயத்தில் நாம் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்பது நம்மவர்களுக்குத் தோன்றுகிறதில்லை. புருஷன் இறந்து பரிதபிக்கும் விதவைகளைப் பார்த்திருந்தும் பெண்களைப்பெற்ற தாய் தந்தையர்கள் முன்பின் பாராமல் தம் குழந்தைகளுக்கு அதிபால்யத்தில் விவாகம் செய்துவிடுகிறார்கள். பெண்களுக்கு ஏழு வயதும் புருஷர்களுக்கு 10 வயதும் ஆகிறதற்குள்ளேயே அவர்கள் தம்பதிகளாய்விடுகிறார்கள். அந்தக்காலத்தில் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் விவாகம் என்பது இன்னதென்றும், அதன் கடமைகள் இன்னதென்றும் அறியத்தக்க யுக்த வயதில்லை. மேளம், ஆட்டம், பாட்டுக் கச்சேரி, விருந்து, ஊர்கோலம் முதலிய ஆடம்பரங்களைக் கண்டு மகிழ்ந்து இதுதான் கல்யாணமென்று எண்ணி இளங்குழந்தைகள் தம் கல்யாணத்துக்கு உட்படுகின்றன. ஆனால், இப்படித் தாய் தந்தைகள் செய்யும் முட்டாள்தனமான செய்கைகளைக் குழந்தைகள் வயது வந்தபின் அறிகிறார்கள். அப்போது அறிந்தென்ன பிரயோஜனம்? முட்டாள்தனம் மாறி நம் தேசத்தவர்களுக்கு இது விஷயத்தில் எப்போது நல்ல விவேகம் வருமோ அறியோம். கல்கத்தாவில் ஏற்பட்டிருக்கும் "பால்ய விவாக நிவர்த்தி" சங்கத்தாரால் எடுக்கப்பட்டிருக்கும் கணக்கின்படி நம் இந்தியாவிலுள்ள பால்ய விதவைகளின் சங்கியை அடியிற் குறிப்பிடப்படுகிறது.

| | |
|---|---|
| 1-வயதுக் குழந்தைகள் | 859 |
| 2-வயது முதல் 3-வயது வரையில் | 1,886 |
| 3-வயது முதல் 4-வயது வரையில் | 3,732 |
| 4-வயது முதல் 5-வயது வரையில் | 8,180 |
| 5-வயது முதல் 10-வயது வரையில் | 78,407 |
| 10-வயது முதல் 15-வயது வரையில் | 2,27,367 |

ஆகமொத்தம் 1-வயது முதல் 15-வயது வரையிலுள்ள விதவைக் குழந்தைகளின் சங்கியை 3,20,431 ஆகிறது. இந்தக் கொடூரமான கணக்கைப் பார்ப்பவர்களின் மனது உருகாமலிராது. இப்பெரிய சங்கியையான குழந்தைகளின் வாழ்நாட்கள் பாழடைவதற்கும் அவர்கள் ஆயுள் பரியந்தம் அடையும் துன்பத்திற்கும் நம் தேசத்துப் பால்ய விவாகம் என்னும் நவீனத்தில் உண்டான கொடிய வழக்கமும் அவ்வழக்கத்தைக் கையாடும் தாய் தந்தைமார்களுமே உத்தரவாதிகளல்லவா? மேலும், பால்ய விவாகத்தினால் ஸ்திரீ புருஷர்கள் பலஹீனமடைந்து அவர்கள் மூலமாய் உண்டாகும் குழந்தைகளும் தேக பலம் மனோபலத்தில் குறைவுபட்டுச் சவுரிய மில்லாத பேடிகள் போன்று பூமிக்குப் பாரமாய் இருக்கிறார்கள். பால்ய விவாகத்தினால் சில குழந்தைகள் பிறந்த வுடனே இறக்கின்றன சில அங்க ஈனமாய்ப் பிறக்கின்றன. இதன் உண்மை சாஸ்திர ரீதியாயும் அனுபோக மூலமாகவும் வெளிப்படையாய் ஏற்படுகிறது. மேலும், உலக அனுபவத்திலும் அது அநேக கெடுதலுக்கிடமாக ஏற்படுகிறது. கல்யாணமானவுடனே அநேகம் பிள்ளைகள் படிப்பு விஷயத்திலும், ஞானம் அனுபவம் முதலியவைகளைச் சம்பாதிப்பதிலும் ஊக்கமில்லாமல் டம்பாசாரிகளாய்விடுகிறார்கள். பெண்களும் அம்மாதிரியே பிஞ்சில் பழுத்து புற்றீசல் போல் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு நிர்மூடர்களாய்விடுகிறார்கள். அநேக பெண்பிள்ளைகள் படிப்பு, ஞானம் முதலியவைகள் இல்லாமல் எப்போதும் தம்புருஷனுடன் சண்டையிட்டுக்கொண்டு திரிகிறார்கள். இவையெல்லாம் பால்ய விவாகத்தினால் விளையும் கெடுதிகளே.—தேசாபிமானி

---



# REVIEW OF THE PRESS.

# பத்திரிகை ஆராய்ச்சி.

## MARAVARS.

## மறவர்கள்.

இவர்களைப்பற்றி நாளது மே மாதத்துக்கு "விவேக போதினி" யில் ஒரு வியாஸம் காணப்படுகிறது. "மறவர் என்ற ஜாதியார் பெரும்பாலும் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் வஸித்து வருகிறார்கள். முன் காலத்தில் இவர்கள் தென்னிந்தியாவில் பிரபலமாய் இருந்தார்கள்.' இந்த ஜாதியார் ஆரம்பத்தில் ராமேசுவரம் என்ற தீவில் கோயில் காவலுக்காக செம்படவர்களாய் ஏற்படுத்தப்பட்டார்களாம். மறம் என்றால், தைரியம். ஆகவே, மறவர் என்றால், தைரியமுள்ளவர்களாம். இவர்கள் வீர சைவர்கள். தெய்வபக்தி யுள்ளவர்கள். இவர்கள் வழக்கங்கள் பெரும்பாலும் மற்ற இந்துக்கள் மாதிரியேதான். ஆனால் அண்ணன் தம்பிகளுக்குள் பெண்பிள்ளை கொடுத்து வாங்குவது வழக்கமாம். இங்கிலீஷ்காரர் ஏற்பாடு மாதிரி புருஷனை விலக்கி வைத்துக் கலியாணம் நடத்துவதும் உண்டாம்.

இவர்களுக்குள் பெண்கள் உடன்கட்டை ஏறலும் இருந்ததாம். இவர்கள் நடத்தும் தொழிலைப் பார்த்தால், முன்காலத்தில் இவர்கள் யுத்த வீரர்களாய் இருந்ததாகவும், அதற்கு மான்யமாக நிலங்களை அனுபவித்ததாகவும் தெரிய வருகிறது. இப்பொழுதும் அநேக கிராமங்களில் இவர்கள் காவல் தொழில் செய்து ஜீவனம்பண்ணி வருகிறார்கள். ஆனால் இவர்களுக்குத் திருட்டுத்தொழில்தான் ஜீவனம் என்று சொல்வதுண்டு.

"இவர் நாடுகளில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டும். இவர்களுக்குப் போலீஸ் பட்டாளம் முதலியவைகளில் உத்தியோகம் ஏற்படுத்தவேண்டும். இவர்களுக்கு அநியாயமாய் ஏற்பட்ட திருட்டுத் தொழிலை யொழிக்கவேண்டும். இவர்களுக்கு ஆதிமுதல் உண்டான காவல் தொழிலை நிலை நிறுத்தவேண்டும்".

## BOOKS AND READING.

## புஸ்தகமும் வாசிப்பும்.

ஸ்ரீமான் வி. டி. ஸ்ரீனிவாஸ அய்யங்காரவர்கள் "புஸ்தகமும் வாசிப்பும்" என்பதைப்பற்றி ஐப்பசி ௴ "வித்யா விஹாரிணி" யில் ஒரு வியாஸமெழுதியிருக்கிறார்.

ஒருவனுடைய குணாகுணங்களை அறிவதற்கு அவன் படிக்கும் புஸ்தகங்கள் தகுந்த கருவியாகும். சிறந்த புஸ்தகங்களைப் படித்தால்தான் சிறந்த புகழை அடையக்கூடும். ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு புஸ்தகங்களைப் படிக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய அறிவும் ஜாஸ்தியாகும். புஸ்தகங்களில் கெட்ட புஸ்தகங்களும் படிக்கக்கூடாத புஸ்தகங்களு முண்டு. அவைகளை விலக்கி, நல்ல புஸ்தகங்களைத் தெரிந்தெடுத்து நல்லறிவை விருத்தி செய்யவேண்டும். படிப்பவர்களுக்கு அழகும் ஆபரணமும் புஸ்தகங்களே. ஒருவனுடைய கஷ்டகாலங்களில் சிநேகிதன்போல உதவுவது புஸ்தகங்களே. ஜீவனோபாயத்தைக் கொடுப்பவைகளும் அவையே.

ஆனால் புஸ்தகங்களை சேகரித்து மாத்திரம் வைத்தல்கூடாது. திருப்பித் திருப்பி வாசிக்கவேண்டும். நல்லோரிணக்கம் பழகப் பழக ஞானவிருத்தியையும் சந்தோஷத்தையும் எப்படி உண்டுபண்ணுகிறதோ, அப்படியே புஸ்தகங்களும் படிக்கப்படிக்க இன்பத்தையும், புத்தி நுட்பத்தையும் தரும். அறிவில்லாதவனை அறிவுள்ளவனாயும், பேசும்பொழுது சொற்சோர்வுள்ளவனை சொற்சோர்வு இல்லாதவனாயும், எழுத்துப் பிழையில்லாமல் எழுதும்படியாயும், நல்லது இன்னது தீயது இன்னது என்று தெளிவுறக் காட்டியும், பிறப்பினால் தாழ்மையா யிருந்தாலும், மேன்மையாய்ச் செய்வதும் வாசிப்பே. நாம் வாசிக்கும் பொழுது கெட்ட எண்ணங்கள் நமது மனதில் குடிகொள்ளாமலும், கவலைக்கு இடங் கொடாமலும், புஸ்தகங்களிலேயே கருத்தாயிருந்து வாசிக்கவேண்டும். சில புஸ்தகங்களை ருசிபார்க்க வேண்டியதா யிருக்கும். சிலவற்றைப் பாடம் பண்ண வேண்டியதாயிருக்கும். நாம்படித்த விஷயங்களை உபயோகப்படுத்துவது முக்கியம். புஸ்தகங்களைப் படித்துக் கற்றுக்கொள்வது போல உலக நடவடிக்கைகளையும் ஆராய்ந்து கற்கவேண்டும். நல்ல நடத்தை, நல்ல எண்ணம், பரோபகாரம், யாவரையும் ஸமமாய் பாவித்தல் முதலிய நற்குணங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

## GERMINATION OF WILD INDIGO SEED.

## கொழுஞ்சிவிதை ஸரியாய் முளைத்தல்.

இது விஷயமாய் "கிருஷிகன்" பத்திரிகை வைகாசி ௴ த்திய ஸஞ்சிகையில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

மாசி மாதத்தில் சம்பாநெல் அறுவடையான வுடனே நஞ்சை நிலத்தின் ஈரம் போகுமுன் கொழுஞ்சி விதையைவிதைத்து இரண்டு உழவுசெய்துவிட்டால், அந்நிலத்தில் கொழுஞ்சிப் பயிர் முளைத்து வளர்ந்து, நாலு மாதத்தில் பூத்துக்காய்க்கும். அடுத்த ஸாகுபடிக்கு முன் அந்தக் கொழுஞ்சிப் பயிரிலிருந்து விதைகள் அந்நிலத்தில் உதிர்ந்துவிடும். இப்படி ஒரு நிலத்தில் ஒருமுறை கொழுஞ்சி விதை விளைத்துப் பயிராக்கிவிட்டால் அவ்விதையின் கரு நிலத்தில் அழியாமலிருந்து வருஷா வருஷம் கொழுஞ்சிப் பயிர் உண்டாகிவேண்டியமட்டும் நிலத்துக்கு வேண்டிய தழைஎருக்கொடுத்துக்கொண்டேயிருக்கும். இது காரணம் பற்றியே கொழுஞ்சித் தழை எரு மற்ற எருவைப்பார்க்கிலும் சிலாக்கியமானது என்றாலும், எவ்வளவு விதைத்தோமோ அவற்றில் 100க்கு 15 விதைகள்தான் விதைத்த வருஷம் பயிராவதும், அந்தப் பயிரிலிருந்து விழுந்த விதையும் முன் வருஷ விதையில் சிலவும் சேர்ந்து 100க்கு ஸராஸரியில் 40 வரையில் மறு வருஷம் முளைப்பதுமா யிருக்கிறது இந்தத் தாமதம் பற்றியே அநேகர் கொழிஞ்சிப் பயிர்த் தழையை எருவாக உபயோகிக்கிறதில்லை. இதன் காரணம் அவ்விதையை மூடிக்கொண்டிருக்கும் கனமான தோல்தான். இவ்விதையை ஸரிவர முளைக்கச் செய்வதற்காகப் பரீக்ஷை பார்த்த வகைகளில்.பின் வருபவை கவனிக்கத்தக்கன :—

(1) கெந்தகத் திராவகத்தில் கொஞ்சம் தண்ணீர் கலந்து அதில் இரண்டு மூன்று நிமிஷம் கொழுஞ்சி விதையை நனைத்துப் பிறகு விதைத்தால் விதை முழுவதும் விளையும்.

(2) கொழுஞ்சி விதைகளை நிலத்தில் பரப்பி மாடுகளை நடத்தி மிதிக்கச் செய்து பிறகு எடுத்து விதைத்தாலும் சுமாராக விளையும். '

(1) கொழுஞ்சி விதைகளை உரலிலிட்டு, 10 நிமிஷம் நெல் குத்துவது போல் குத்திப் பிறகு எடுத்து விதைக்கவும் பிரயோஜன முண்டு.

(4) சுண்ணம்பு அரவையில் கொஞ்சம் கொழுஞ்சி விதையும் மணலும் கலந்து 10 நிமிஷம் அறைத்துப் பிறகு விதைத்தாலும் 100க்கு 90க்குக் குறையாமல் விதை முளைக்கும்.

ஆகவே இந்த நாலுவித உபாயங்களையும் பரீக்ஷை செய்து கொழுஞ்சி விதை விதைத்தால் மிகவும் பிரயோஜன முள்ளதாக விருக்கும்.

## MARRIAGE.

## விவாகம்.

"ஹிதகாரிணி" என்னும் தமிழ்ப் பத்திரிகையின் சென்ற நவம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் "விவாகம்" என்று ஒரு வியாஸ மிருக்கிறது. பூஸுரர்களில் ருதுவானபிறகு பெண்ணை விவாகம் செய்யமாட்டார்கள். பெற்றோர்களால், குலம், கிரகம், நடத்தை, அந்தஸ்து, முதலியவைகளை ஸரிவரப் பார்த்துத் தெரிந்தெடுக்கப்பட்ட வரனுக்குக் கன்னிகையைக் கொடுக்கப்படுகிறது. ஆதிகாலம் முதல் இந்த ஆசாரனை நடந்து வருகிறது. இந்த நாகரீககாலத்தில் புராதன ஸம்பிரதாயங்கள் பறந்தன. வரனுடைய தேச ஸம்பிரதாயங்களை விசாரிக்கும் வழக்கம் மறைந்தது. எந்த வகுப்பில் படிக்கிறான் என்று தெரிந்துகொள்வதும் அதற்கேற்பட்டுள்ள வரதக்ஷணைத் தொகையைத் தருவதாய்க் கூறி, ஒரு நாளைக் குறித்து முகூர்த்தம் நடத்துவதும் சிலபிதாக்களின் வழக்கமாயிருக்கிறது. பெண்களை ஏராளமாய்ப் பெற்றுள்ள சில புண்ணியவதிகள் தீர்க்காலோசனையின்றி முதல் பெண்ணுக்கு பலர் புகழும்படி கல்யாணம் செய்துவிடுகிறார்கள். மற்றப் பெண்களுக்குக் கல்யாணம் செய்யும் காலத்தில், செலவழிக்க வகையில்லாமல், ஏராளமாய்க் கடனை வாங்கி, கடனைத் தீர்க்கமுடியாமல், ஓலை, தாலிகளை இழந்து பரிதபிக்கிறார்கள். ஜாதியை மறந்து ஸம்பிரதாயங்களைக் கைவிட்டு வரதக்ஷணைக்காக, சண்டைபோடும் மூர்க்கப் பிராமணர்களின் மூடமதியைத் திருத்துபவர் யார். கல்யாணத்தில் பணம் சரியாய்க் கிடைக்காவிடில் ருதுசாந்தி முகூர்த்தத்தில் பெண் வீட்டாரைப் பற்பல விதமாய் ஹிம்ஸித்துப் பணம் வாங்குவதும் அந்த வழியிலும் கிடைக்காவிடில் பெண்ணைப்புருஷனிடத்தில்சேராவண்ணம் அவளை பெற்றோர்களிடமே விட்டுவிடுவதும் வழக்கமாக்கி கொண்டிருக்கிறார்கள். நாகரீக காலத்தில் துராசாரங்கள் அதிகரிக்கக் காரணமென்ன? (1) வயோதிகர்களுக்குஇளம் சிறுமியைக்கொடுத்து மனைவி யாக்குவது (2) நோயாளிக்கு ஆரோக்கியமுள்ள பெண்ணைக்கொடுப்பது (3) வதூவரர்களின் வயது ஒரே ஸமனாயிருப்பது (4)குரூபிஸுரூபிகளைச்சேர்ப்பதும் இன்னும் அநேகம் உண்டு. இக்கொடிய வழக்கங்களை நீக்கி கன்னிகையின் சரீர அமைப்பு, குணம், நடத்தை ரூபத்துக்கேற்ற புருஷனையும், வரனுடைய கல்வி, தேகாரோக்கியம் புத்தி சாதுர்யாதிகளுக்குத் தகுந்த பெண்ணையும் தேடி மணம் முடிப்பது உசிதமாகும். தர்மாசாரணையை அனுசரித்து நடக்கும் ஸ்திரீ புருஷர்களுக்கு ஸௌபாக்கிய முண்டாகும்.



## SUGAR INDUSTRY.

## சர்க்கரை வியாபாரம்.

இது விஷயமாய் ஏப்ரில் மாதத்துக் "கிருஷிக" னில் ஒரு வியாஸ மிருக்கிறது. நமது தேசத்தில் செலவாகும் சர்க்கரை முழுமையும் இங்கேயே செய்யப்படுகிறதில்லை. பிறதேசங்களிலிருந்து வருஷா வருஷம் ஸராஸரி 6,30,474 டன் நிறையுள்ள சர்க்கரை நமது தேசத்தில் இறக்குமதி யாகிறது. இருபது வருஷங்களுக்கு முன்னே இவ்வளவு சர்க்கரை இறக்குமதி யாகவில்லை. இப்போது நமது தேசத்தில் சர்க்கரை மிகவும் குறைவாய்ச் செய்யப்படுவதினால், அயல் தேசத்தவர்களுக்குப் பெருத்த லாபம் கிடைத்துக்கொண்டு வருகிறது. ஏனென்றால், பிறதேசங்களில் கரும்பு ஏராளமாய்ச்சாகுபடி செய்யப்படுகிறது. நமது தேசத்தில் வருஷா வருஷம் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பு குறைந்துகொண்டே வருகிறது. பிறதேசங்களில் சர்க்கரை காய்ச்சத் தகுதியான யந்திரங்களை உபயோகித்து வருகிறார்கள். நமது தேசத்திலே யந்திரத்துக்குப் பதிலாய் ஆலையிலிட்டுக்கருப்பஞ்சாறு பிழிந்துசர்க்கரை காய்ச்சுவது சிரமமான வேலையாயும் அதிகலாபகரமில்லாததாயுமிருக்கிறது. பிறதேசங்களில் கரும்பு சாகுபடி செய்பவர் ஒன்று சேர்ந்து, ஏராளமான இடங்களில் சாகுபடி செய்து, நிலத்துக்குச் சரியான உரம் போட்டு வருகிறதினால், கருப்பஞ்சாறு அதிகமாய்க் கிடைக்கிறது. நம்தேசத்தில் ஒற்றுமை யில்லாமல் தனித்தனியாக ஒவ்வொருவரும் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். அவைகளில்சிலவற்றைத் திருடர்கள் திருடிப்போகிறார்கள். அப்படிப்போய் மிகுதிக் கரும்பும் சாறு குன்றியிருக்கிறது இந்தக்காரணங்களினால் தான் நமது தேசத்துக்குப் போதுமான சர்க்கரை நமது தேசத்திலேயே செய்ய முடியாமல்போவது. இதை நிவர்த்தி செய்ய, அநேகர் ஒருங்கு சேர்ந்து, கரும்பு சாகுபடி நல்ல உரமிட்ட நிலங்களில் செய்து யந்திரங்களைத் தருவித்துச் சர்க்கரை செய்வார்களேயானால், பிறதேசத்தார்கள் கொண்டுபோகும் சர்க்கரை வியாபாரத்தின் லாபத்தை நம் தேசத்தவர்களே யடையலாம்.

## FIXING TIME BY THE STARS.

## நக்ஷத்திரங்களைக்கொண்டு நாழி சொல்லுதல்

இந்த விஷயமாக மே மாஸத்து "விவேகபோதினி" யில் டி. ஸ்ரீனிவாஸாசாரியார் என்பவர் சில குறிப்புகள் எழுதுகிறார்.

1. 27 நக்ஷத்திரங்களையும் திட்டமா யறிந்து கொள்ளவும். பிறகு இரவில் தனக்கு வேண்டிய நேரத்தில் தலைக்கு நேராய் உச்சத்திலிருக்கிற நக்ஷத்திரத்தைப் பார்த்துக்கொள்ளவும்.

2. அடியில்கண்ட பாட்டைப் பாடஞ்செய்து கொள்ளவும். (அதில் செய்யுள் இலக்கணம் பார்க்க வேண்டாம்.)

சித்திரைக்குப் பூசமுதல் சீர் ஆவணிக்கு அனுஷம்
உத்த தனுசுக் குத்திரட் டாதிமுதல்
ஏதுச் சமானுலுமி ரண்டேகா வில்பெருக்கி
மாதமைந்து தள்ளி மதி.

3. இப்பாடலின் கருத்து, சித்திரை 1உ முதல் ஆடி௴ முடிவுவரை என்றைக்கு நாழிகை பார்க்கிறதாயிருந்தாலும், பூச நக்ஷத்திரத்திலிருந்து உச்ச நக்ஷத்திரம் வரையில் எண்ணிக்கொள்ளவும்.

ஆவணி௴ 1உ முதல் கார்த்திகை முடிவு வரையில் என்றைக்கு நாழிகை பார்க்கிறதாக யிருந்தாலும் அனுஷநக்ஷத்திரம் முதல் உச்ச நக்ஷத்திரம் வரையில் எண்ணிக்கொள்ளவும்.

மார்கழி௴ 1உ முதல் பங்குனி முடிவு வரையில் என்றைக்கு நாழிகை பார்க்கிறதா யிருந்தாலும், உத்திரட்டாதி முதல் உச்ச நக்ஷத்திரம் வரையில் எண்ணிக்கொள்ளவும்.

அப்படி எண்ணி வந்த தொகையை $2\frac{1}{4}$-ஆல் பெருக்கி வந்த தொகையில் அந்தந்த நான்கு மாஸங்களில் சென்றுபோன ஒவ்வொரு மாஸத்துக்கு 5 நாழிகைவீதம் கழித்துவிட்டால், நாம் பார்க்கும் காலத்தின் நாழிகை திட்டமாய் ஏற்படும்.

குறிப்பு:—ஒவ்வொரு முழுமாஸத்துக்கு 5-நாழிகை வீதமும் ஒரு மாஸத்திற்குள்பட்ட நாள்களுக்கு நாள் ஒன்றுக்கு 10-விநாடி வீதமும் கழிக்கவேண்டியது. (ஒரு நாழிகை—60 விநாடி.)

உதாரணம்.

4. ஆனி ௴ 21௳ ராத்திரி ஒரு நேரத்தில் ஆகாசத்தைப் பார்ப்போம். விசாகநக்ஷத்திரம் உச்சமாயிருக்கிறது.

மேற்கூறிய விதிப்படி பூசம் முதல் விசாகம் வரையில் கூடிய நக்ஷத்திரம் 9-தை $2\frac{1}{4}$-ஆல் பெருக்கி வந்த நாழிகை $20\frac{1}{4}$

இதில் சித்திரை வைகாசியாகிய இரண்டு மாஸத்துக்கு நாழிகை 10

ஆனி௴ 21௳க்கு நாள் ஒன்றுக்கு 10-விநாடியாக 210-விநாடிக்கு நாழிகை $3\frac{1}{2}$

ஆக $13\frac{1}{2}$

பாக்கி நாழிகை 68

அஸ்தமித்து 68-நாழிகையென்று தீர்மானிக்கவும். கடிகார ரீதியாய் மணி ஒன்றுக்கு $2\frac{1}{2}$-நாழிகை வீதம் கணக்கிட்டு 8-மணி 42-மினிட்டென்றும் தீர்மானிக்கலாம்.

---

## PLANTAIN FIBRE CLOTH.

## வாழைநார் வஸ்திரம்.

சீனா தேசத்தில் சந்தைகளில் வாழைநார் வஸ்திரம் அதிக விலைக்கு விற்பதுண்டு. ஒரு கெஜ அகலம் 5 கெஜ நீளத் துணி சுமார் 17 ரூபாய்க்கு விற்கிறது. இதன் விசேஷமென்னவெனில் அனேக வருஷம் கெடாமலிருப்பதேயாம். தஞ்சாவூர் ஜில்லாவிலும் திருவாங்கூர் கைத்தொழில் வித்யா சாலையிலும் வாழைநார்த் துணி நெய்து வினோத காக்ஷிகளுக்கு அனுப்பிப் பரிசு பெற்றதுண்டு. இவர்களுக்கு நார் எடுக்கும் பக்குவம் தக்கவாறு தெரியவேண்டுமென்று சீனர் அனுபவத்தைத் தெரிவிக்கலாயிற்று. வாழைப் பட்டைகளை ஒரு வருஷமான மரங்களிலிருந்து பிரித்துக் கொதிக்கும் நீரிலிருந்து உண்டாகும் ஆவியின்பேரில் மிருதுவாகும் வரையில் வைப்பதுண்டு. மிருதுவானவுடன் பட்டையின் மேல்புறத்தைச் சீவி அதை இரண்டு மொட்டை மரக் கத்தியின் நடுவில் கிட்டி இழுக்கச் சோறு முழுவதும் அனேகமாய் வெளிப்படுகிறது. இந்த நாரைத் துணியில் மூட்டை கட்டி மாலெட்டு (கொட்டாப்புளி)களால் அடித்து நீர் முழுவதும் கசியும்படி செய்வார்கள். பிறகு நாரைப்பிரித்துச் சீவி நூலாகத்திரித்து துணி நெய்வதுண்டு.

இதில் வாழைநாரும் ரீயா நாரும் கலப்பாயிருப்பதைக் கண்டுபிடித்தார்கள்.—தென்னிந்தியா விவஸாயம்.

## REVIEWS OF BOOKS.

## புஸ்தக வரவு.

---

THE ORIENT.

**பிராசி** :—இதன் இரண்டாவது புஸ்தகம் ஏழாவது சஞ்சிகை முதல் ஒன்பதாவது சஞ்சிகை வரையில் வெளியாயிருக்கின்றன. இவைகளில் ராமாயணம் அயோத்யா காண்டம் 63-ம் சர்க்கம், முன் சஞ்சிகையில் போனதுபோக பாக்கியும், 100-ம் சர்க்கத்தில் கொஞ்சமும், தமிழ் வசன நடையில் எழுதப்பட்டிருக்கிறது. பத்திராதிபர், எல். வி. இராமச்சந்திர அய்யர், சென்னை.

HARISHCHANDRAN.

**அரிச்சந்திரன்**.—ராவ் ஸாஹிப். ச. பவாநந்தம் பிள்ளையவர்கள் இயற்றியது. அரிச்சந்திரன் என்னும் தமிழ் நாடகம் நமது பார்வைக்கு வந்தது. அரிச்சந்திரன் சரித்திரம் எல்லாருக்கும் நன்கு தெரிந்ததே. அம்மன்னன் சரிதத்தை யுணர்த்தும் வசன நூல்களும் நாடகங்களும் நமது தமிழ்ப் பாஷையில் பல உள. ஆயினும் இந்நூல் வெளிவருவதற்கு இந்நூலாசிரியர் பதினாறு அரிய ஆதரவுகள் தம்முகவுரையிற் கூறுகின்றனர். அவை யாவும் அறிஞர் நன்கு பாராட்டத்தக்கனவாம். நாடகத்துள் நடித்துக் காட்டுவதற்கு இயலாததும், கண்டோர் சந்தேகிப்பதற்கு இடமானதும் ஆகிய அம்சங்களை ஒதுக்குதல் நாடகாசிரியர் கடமை. அவ்வுண்மையை யுணர்ந்து இந்நூலாசிரியர் ஆங்காங்கு செய்துள்ள மாறுபாடுகள் மிகவும் பொருத்தமானவையே. ஸமயத்துக்கேற்ற சொற் பிரயோகமும், பாடல்களும், பாத்திரங்களின் ஏற்றத்தாழ்வுக்கேற்ற பாஷை நடையும், படிப்போர் எவர்க்கும் இன்பம் பயக்கும் என்று நம்புகிறோம். அரிச்சந்திரன் கதையால் விளங்குவது சத்யத்தின் மகிமை ஒன்றேயாயினும், அந்த சத்யத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவோர் அநுசரிக்கத்தகும் அடைவுகளும் இந்நூலில் நன்கு விளங்குவதேயன்றி அநேக அரிய விஷயங்களும் காணப்படுகின்றன. நல்லோருக்குத் தீங்கிழைப்போர் அடையும் இன்னல்கள் பலவாம் என்பதை விசுவாமித்திரன் வாயிலாகக் காட்டியது மிகவும் பாராட்டற்பாலதாம். அச்சும் காகிதமும் பைண்டும் வெகு நன்றாய் அமைந்துள்ளன. புத்தகத்தின் விலை. ரூ 2. சென்னப்பட்டணம் ஜி. ஏ நடேசன் கம்பெனியில் கிடைக்கும்.—ஒரு நிரூபர்.



## BOYS' SECTION.

## சிறுவர் பகுதி.

---

WANTED TO BE SENT BY POST.

**தன்னைத் தபாலில் அனுப்பும்படி கேட்டது**.—இட்டாலி தேசத்தில் ஒரு சிறுவன் தன் முகத்தில் தபால் முத்திரை ஒன்றை ஒட்டிக்கொண்டு தபால் ஆபீசுக்குப் போய் தன்னை வெனிஸ் நகரத்துக்கு தபால் மூலமாக அனுப்பும்படி தபால் ஆபீஸ் அதிகாரிகளைக் கேட்டானாம்.

AN EXPERT RUNNER.

**ஓட்டத்தில் இணையில்லாத ஸமர்த்தன்**.—அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரத்தில் க்ளாரென்ஸ் டெமாரென்பவன் 2-மணி 3-நிமிஷத்திற்குள் 25 மயில் தூரம் ஓடினானாம். இதற்கு முன் அமெரிக்கா இந்தியன் ஒருவன் 2-மணி 24-நிமிஷத்திற்குள் ஷை மயில் தூரம் ஓடினானாம். இவ்விருவருள் முதலில் சொன்னவனுக்கு ஓட்டத்தில் ஸமானமாயிருப்பவர் ஒருவருமில்லையாம்.

NO OSTENTATION IN THE ROYAL DRESS.

**ராஜ குடும்பத்துக்கு டம்பம் இல்லை**.—உலகத்தில் இதுவரையில் ஒருபோதுமில்லாத அவ்வளவு பெரிய ராஜ்யமாகிய ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட நாடுகளுக்கெல்லாம் ஏக சக்ரவர்த்தியாயிருக்கும் ஜார்ஜ் அரசருடைய பிள்ளைகள் சாப்பாட்டு விஷயத்திலும், உடுப்பு விஷயத்திலும், மற்ற ஸகல விஷயங்களிலுமே ஸாமான்ய மனுஷர்களின் பிள்ளைகளைப் போலவே நடத்தப்படுகிறார்கள். ராஜகுமாரத்திகளின் அங்கிகளில் தோள்பட்டையில் கிஞ்சித்தும் பொம்மல் கிடையாது. மேலும் அவைகள் செய்யப்படும் துணிகளோ ஸாதாரணமானவைகள். ராஜகுமாரர்களுடைய கால் சட்டைகளும் சட்டைகளும் மிகவும் அழுத்தமான துணிகளில் தைக்கப்பட்டிருக்கும். உடுப்பு விஷயத்தில் ராணி தம் தாயாராகிய டச்சஸ் ஆப் டெக்கைப் பின்செல்லுகின்றனள். அந்த அம்மாள் வீண் செலவும் டம்பத்துக்கான காரியங்களும் ஒருபோதுஞ் செய்கிறதில்லை. ராணியுடைய ஸகோதரர்கள் மூன்று பேர் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருக்கையில் மற்றப் பிள்ளைகள் அவர்களுடைய ஸாதாரண உடுப்புகளைப் பார்த்துப் பரிகாஸம் பண்ணுவார்கள். அதை அவர்கள் எள்ளளவேனும் கவனஞ் செய்யமாட்டார்கள். மொத்தத்தில் ஐரோப்பிய அரசர்கள் உடை விஷயத்தில் மிக ஸாதாரணமாய்த் தானிருக்கிறார்கள். ஆனால் ஆசியாவிலோ மன்னர்கள் டம்பத்தை நேசிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

THE SRÎRANGAM AND MAHABALI PURAM TEMPLES.

**ஸ்ரீரங்கம் மஹாபலிபுரம் கோவில்கள்**.—நமது நாட்டில் கோயில் குளங்கள் பல இடங்களில் பாதியாக நின்றுபோயிருப்பது அனேகருக்குத் தெரியலாம். ஸ்ரீரங்கத்தில் 'பெரியகோபுரமும்' மஹாபலிபுரத்தில் 'பல ரதங்களும்' முக்கியமானவை. இவ்விடங்களுக்குப் போகிறவர்கள், ஸ்தல வாஸிகளைக் கேட்டால், ஒரே பதில்தான் சொல்லுவார்கள். "முன்னொரு காலத்தில் தேவதைகள் இந்தக் கோவிலைக் கட்டி, பிராகாரத்தை முடித்துக் கோபுரம் கட்ட ஆரம்பித்தார்கள். கோபுரம் இவ்வளவானவுடன் கோழி கூவிற்று. பொழுதும் விடிந்தது. தேவதைகளும் மறைந்தார்கள்" என்பதாம். ஆனால், சிலா சாஸனங்களைக் கொஞ்ச காலமாகப் பரீக்ஷித்து வந்ததில், ஸ்ரீரங்கத்தில் பெரிய கோபுரம் முற்றுப்பெறாததற்குக் காரணம் தலைக்கோட்டை மஹாயுத்தத்தில் விஜயநகர ஸமஸ்தானம் மூழ்கி, மகம்மதீயர் கை வலுத்து, அதனால் பின்னிட்டு வந்த 'ராயர்கள்' அதை முடிக்கமாட்டாமல் நின்றுவிட்டதுதானென்று தெரிய வருகிறது.

மஹாபலிபுரத்தில் (மாவலிபுரமென்று ஸாதாரணமாக வழங்குவது தப்பு.) பலரதங்களில் இம்மாதிரி வேலை நின்றிருக்கின்றன. அவையெல்லாம் ஸுமார் 600 கி.பி.யில் ஆரம்பமாகி, நூறுவருஷ காலம் நடந்துவந்து, பிறகு கி. பி. 700 வாக்கில் நின்றுவிட்டதாக சில நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்குக் காரணம் காஞ்சீபுரத்தில் வெகுகாலம் ஸம்பிரமமாக துரைத்தனம் செலுத்தி வந்த பல்லவ ராயர்கள்தான் இந்தக் கோவில்களை நிர்மாணித்தார்களென்றும் அவர்கள் ஸுமார் 783-ம் வருஷத்திற்கப்புறம் மேற்குச் சாலுக்கியச் சக்ரவர்த்தியாகிய இரண்டாம் விக்கிரமாதித்தியனால் தோல்வியும் நாசமு மடையவே, இந்த வேலைகள் அப்படியே நின்றுவிட்டனவென்றும் இப்பொழுது அனேகமாய் நிச்சயமாகத்தெரிவதாகச் சொல்லலாம்

TEN COMMANDMENTS.

**பத்துக் கற்பனைகள்.**—1. ஸௌக்கியத்திற்கு முக்கிய ஆதாரமான நல்ல காற்றை இரவும் பகலும் சுவாசிப்பதே சுவாசாஸய ரோகங்களைத் தடுக்க சிரேஷ்டமான மருந்து.

2. தினந்தோறும் திறந்த வெளியில் நடந்தும் வேலை செய்தும் தேகப் பயிற்சி செய்யவேண்டும். இதுவே ஒரே இடத்திலிருந்து வேலை செய்வதற்கு மாற்று.

3. சாப்பாடும் பானமும் மிதமாய் குருத்வமில்லாமல் இருக்கவேண்டும். சாராயத்தைவிட தண்ணீரையே மேலான பானமாகக்கொண்டு, பாலையும் பழங்களையும் உபயோகிப்பவன், தன் ஸௌக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்வதோடு, வேலை செய்யும் திறமையையும்சுகத்தையும் அதிகப்படுத்திக்கொள்ளுகிறான்.

4. நாள்தோறும் குளிர்ந்த ஜலத்தால் கழுவி வாரத்திற்கு ஒரு முறை தவறாமல் வெந்நீரில் மூழ்குதல் தேக ஸௌக்கியத்தைக் கொடுப்பதோடு நீர்க்கொள்வதையும் தடுக்கும்.

5. உடுப்புகள் மிதமிஞ்சி உஷ்ணத்தைக் கொடுக்கக் கூடியவைகளாயும் இறுக்லாயும் இருக்கக்கூடாது.

6. வீடு சூரிய கிரணம் படக்கூடியதாயும், உலர்ந்ததாயும், சுத்தமாயும், வெளிச்ச முள்ளதாயும், ஸௌகரியமாயும், இன்பம் தரத்தக்கதாயும் இருக்கவேண்டும்.

7. எல்லாவற்றிலும் அதிக சுத்தம் வேண்டும். காற்று, ஆகாரம், தண்ணீர், ரொட்டி, கம்பளித்துணிகள், உடுப்புகள், வீடு முதலியன சுத்தமாயிருப்பதோடு நல்லொழுக்கமும் வேண்டும். இதனால் வாந்திபேதி, ஹஸ்தி ஜுரம் முதலிய வியாதிகள் வராமல் தடைபடும்.

8. ஒழுங்காயும் அதிகமாயும் வேலை செய்தல் தேக வியாதியையும், மனோ வியாதியையும் வரவொட்டாமல் தடுக்கும். இன்ப காலத்திலும் துன்ப காலத்திலும் இதுவே பெரிய ஆறுதலாகும்.

9. வேலை செய்த பிறகு இளைப்பாறவும், பொழுது போக்கவும், பெருவிருந்தும், விளையாட்டும் நல்லவழிகளல்ல. இரவு தூங்குவதற்கு ஏற்பட்ட காலம். வேலையில்லாத நேரத்தையும், தமாஷில் செலவழிக்கும் காலத்தையும் குடும்பத்திற்கும் ஆத்மரக்ஷணைக்கும் உபயோகிக்கவேண்டும்.

10. வேலையும், ஸத்கிருத்யங்களும், தீதற்ற களிப்பும், நிறைந்துள்ள வாழ்வுமே நல்லதேகஸௌக்கியத்திற்கு முதற் காரணம். குடும்பத்தில் நல்லவனையும், தன் தொழிலில் கெட்டிக்காரனையும், தன் தேசத்தில் அபிமானமுள்ளவனையும் இருக்கவேண்டும் என்னும் ஆசை ஒருவன் வாழ் நாளுக்கு அளவிடக்கூடாத மதிப்பை உண்டுபண்ணுகிறது.

HOW TO BE AGREEABLE TO ALL?

**நல்லவனாவதெப்படி?**—நல்லவனாவதெப்படியென்று ஒருவன் கேட்டதற்கு, பெயர்பெற்ற ஆங்கில விற்பன்னர் ஒருவர் அடியில் வருமாறு கூறினார்.— எந்த மனுஷ்யன் எந்த விஷயத்தில் விருப்பங்கொள்ளுகிறானோ அதற் கேற்றபடி பேசுவதும் நடிப்பதும் நல்லவனென்ற பெயரைக்கொண்டுவந்து கொடுப்பதற்குத் தக்க வழி என்றார். இதை இங்கிலீஷிலுள்ளபடியே மொழி பெயர்த்தோம். இதன் பொருளைச் சில உதாரணங்களால் விளக்கிக் கூறுவோம். ஒருவன் நாடகப் பிரியனாயிருந்தால், அவனிடம் நல்லவனென்றபெயரைப் பெறவேண்டி நாம் நாடகத்தைப் புகழ்ந்து பேசவேண்டும். உண்மையில் நமக்கு நாடகத்தின் மேல் வெறுப்பு உண்டாயினும் அதை யவனிடம் காட்டாமல் விருப்பமிருப்பதுபோல் பாவனை செய்யவேண்டும். மற்றொருவன் ஆலயந்தொழுவதில் ஆசைகொண்டவனாயின், நாம் அவனுடைய விசுவாசத்தை யடைவதற்காகக் கோயிலுக்குப் போகத் தயாராயிருக்கவேண்டும். எவருக்கு எதில் இஷ்டமோ அதை வெறுத்துக் கூறுவது அப்பிரியத்துக் கிடம். இதனால் இச்சகம் பேசுவோன் என்ற கெட்ட பெயரை நாம் அடைவோமென்று பயபடலாகாது. இச்சகம் பேசல் கெடுதலாயினும் இச்சகத்தில் நல்லவனென்ற பெயரைப் பெற விரும்புவோன் இச்சகம் பேசாமலிருக்க முடியாது. ஆனால், இச்சகம் பேசுவதால் நம்மையும் பிறரையும் பாபத்துக் குள்ளாக்காதபடி மாத்திரம் நாம் தடுத்துக்கொள்வ தவசியம். யாருடைய ஸகவாஸத்தால் ஜீவனுக்குத் தீங்கு விளையுமோ, அவருடைய ஸகவாஸத்தைமட்டும் ஒழித்து மற்றவருடைய நட்பைக் கொள்வதும் அவர்களுக்கு ஏற்றபடி நடப்பதும் குற்றமாகா. அதனால் நற்பெயருண்டாகும்.— பிரஜானுகூலன்,



# LADIES' SECTION.

## ஸ்திரீகள் பகுதி.

LADY LETTER CARRIERS.

**ஸ்திரீ போஸ்ட்மான்கள்.**—க்ரேட் ப்ரிட்டனில் 4000 ஸ்திரீகள் தபால் எடுத்துச் செல்லும் வேலை பார்க்கிறார்களாம். அவர்கள் வேல்ஸ், ஸ்காட்லாந்து, ஐர்லாந்து முதலிய பட்டிக்காட்டு ஜில்லாக்களில் முக்கியமாய் வேலைபார்த்து வருகிறார்களாம்.

FEMALE EDUCATION IN INDIA.

**சென்னையில் பெண் கல்வி.**—சென்னையில் பெண் கல்வி அதிக விருத்தியை யடையாவிட்டாலும், முன்னைவிட இப்பொழுது படித்துவரும் பெண்களின் தொகை யதிகரித்து வருகிறதென்றே சொல்லலாம். இப்பொழுது 178,867 பெண்கள் படித்து வருகிறார்கள். பாடசாலையில் படிக்கும் பெண்கள் 100-க்கு 6-ம், பிள்ளைகள் 100 க்கு 32 மாக யிருக்கிறார்கள்.

PUTTING CHILDREN TO SLEEP.

**குழந்தைகளைத் தூங்க வைத்தல்.**—குழந்தைகள் இரவில் விழித்துக்கொண்டு அழ ஆரம்பிக்கின்றன. ஸாதாரணமாய்த் தாய்மார்கள் பசியால் அழுவதாக நினைத்துப் பாலோ, உணவோ கொடுக்கிறார்கள். சில ஸமயங்களில் அவ்வுணவு அஜீரணத்தை உண்டாக்குகிறது. குழந்தையைப் படுக்கவைத்து, பாடிக்கொண்டு முதுகைத் தடவிக்கொண்டிருந்தால், சீக்கிரத்தில் அது தூங்கிவிடும்.

SATYA BALA DEVI.

**ஸத்திய பால தேவி.**—ஸத்தியபால தேவி என்று ஒரு இளம் பிராயமுள்ள வங்காளப் பார்ப்பினி வீணையைக் கைக்கொண்டு, ஸங்கீத சாஸ்திரத்தில் மிகத் தேர்ந்து, நமது இந்தியாவில் ஸங்கீத சாஸ்திரம் க்ஷீண தசை யடைந்திருக்கிறதென்றும், அதை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் பெரு முயற்சி யெடுத்து வருகிறதாகத் தெரிகிறது. ஸமீபத்தில் இந்த ஸத்ய பால தேவி, அமெரிக்காவில், ந்யூ யார்க் என்னும் பட்டணத்தில், வீணைச்சங்கீதத்தைப் பற்றி ஒரு பிரஸங்கம் செய்தார்களாம்.

MRS. BESANT ON FEMALE EDUCATION.

**ஸ்திரீகளின் படிப்பைப் பற்றி மிஸ்ஸெஸ் அன்னி பெஸண்ட்.**—கும்பகோணத்தில் ஸரஸ்வதி பாடசாலை என்ற ஒரு பெண் பாடசாலையில் பரிசளிக்கும் தினத்தில் மிஸ்ஸெஸ் அன்னி பெஸன்ட் ஸ்திரீகளின் கல்வியைப் பற்றி ஒரு பிரஸங்கம் செய்தார். மேல்நாட்டு ஸ்திரீகளுக்கும் இந்திய ஸ்திரீகளுக்கும் வித்தியாஸ முண்டு. மேல் நாடுகளில் ஸ்திரீகள் புருஷரைப் போல் பலதொழில்களில் பிரவேசிக்கிறார்கள். அவர்களிற் சிலர் விவாகம் செய்துகொள்ளாமலே காலந் தள்ளுகிறார்கள். ஹிந்து ஸ்திரீகளோ குடும்ப சம்ரக்ஷணையே பிரதானமாய்க் கொண்டு கிரஹணி என்று பேர் வாங்கி யிருக்கிறவர்கள். இந்திய ஸ்திரீ கையும் குழந்தையுமா யிருப்பதைவிடப் பெருமையும் கௌரவமும் இல்லை. அவளே குடும்பத்துக்கு எஜமானி. அவள் இடத்தில் ஸகலருக்கும் மரியாதையும் பக்தியும் உண்டு. புருஷன் வெளியிற் போய்ப் பொருள் தேடிவர, ஸ்திரீ குடும்பத்திலேயே இருந்து அன்ன பூரணியாய், அன்னத்தைக் குடும்பத்தாருக்குப் பங்கிட்டுப் போடுகிறாள். ஆகையால், மேல்நாட்டுஸ்திரீகளுக்குள்ள படிப்பு இந்தியஸ்திரீகளுக்கு ஒவ்வாது. இந்தியபுருஷரும்ஸ்திரீகளும் வெவ்வேறு விதமாய்ப் படிப்புப்பெறவேண்டும். பொதுக் காரியங்கள் செய்யப் பிள்ளைகள் தயாராய் வருவதுபோல, வீட்டுக் காரியங்கள் செய்யப் பெண்கள் தயாராகவேண்டும். ஆகையால், பெண்களுக்கு வீட்டுக் காரியங்கள் செய்வதும், சமையல் செய்வதும், சுகாதாரத்தைக் காப்பதும், குழந்தைகளை வளர்ப்பதும், தையல்வேலை பூவேலை செய்வதும் முக்கியமான தொழில்கள். அவைகளுக்குத்தக்க படிப்பு ஸ்திரீகளுக்குக் கிடைக்கவேண்டும். ஸ்திரீகள் இந்தியாவில் ராஜ்யபாரம் செய்து வந்தபடியாலும், அவர்களிற்பலர் உத்தம குணங்களைக் காட்டி வந்ததாலும், அவர்களுடைய சரித்திரத்தை ஸ்திரீகள் படிக்கவேண்டும் இந்திய ஸ்திரீகள் குழந்தைப் பருவத்திலேயே பிள்ளைகள் பெற்றுத் தங்களுடைய தேக ஸௌக்கியத்தையும், பிள்ளைகளுடைய ஆயுளையும் காக்க அசக்தர்களா யிருக்கிறார்கள். சிறுவர்களும் பாடசாலைகளில் படிக்கும்போதே தகப்பனாகிவிடுகிறார்கள். இதனால் தேசத்துக்குக் கேடு வருகின்றது. வயது முதிர்ந்தபிறகு விவாகம் செய்வதே இதற்கு மீட்சி.

CHEERFULNESS IN NURSING.

**பால் கொடுக்கும்பொழுது மனக் களிப்பு.**—தாய்மார்கள் பிள்ளைக்குப் பாலூட்டும்போது எவ்வித விசனம், கவலை, பயம், திகில் முதலியவை இல்லாதவர்களாய்க் கூடியவரையில் மனக் களிப்பு, திருப்தி முதலியவை யுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், மனதி லுண்டாகும் விசனம், கவலை, பயம், திடுக்கிடுதல் முதலியவைகளால் அச் சமயங்களில் ஊட்டும் பாலில் தோஷ முண்டாகி அப் பால் குழந்தைக்கு அஜீரணம், மந்தம், பேதி, ஜ்வரம், வலிப்பு முதலிய ரோகங்களை யுண்டாக்கி அபாயத்துக்கு ஹேதுவாக்கிவிடும் என்பதே காரணம்.

MISS MACLEOD.

**மிஸ் மாக்ளியாட்.**—சென்ற வருஷத்தில் லெப்டினெண்டு பாய்ட் அலெக்ஸாண்டர் என்ற ஓர் இங்கிலீஷ் ராணுவ உத்தியோகஸ்தர் மத்திய ஆப்பிரிக்காவில் தன் பட்டாளத்துடன் போயிருந்தபோது, அவ்விடத்தின் வெப்பம் தாள முடியாமல் வியாதிப்பட்டு சூஷாட் என்ற ஏரிக்கு ஸமீபத்தில் மாணமடைந்து ஸமாதியில் அடக்கம் பண்ணப்பட்டார். அவர் இங்கிலாண்டை விட்டுப் புறப்படுமுன் ஸர் ரெஜினால்ட் மாக்ளியாட் என்பவருடைய மகளை மணந்து கொள்ளுவதாக நிச்சயார்த்தம் செய்துவிட்டுப்போயிருந்தார். ஐரோப்பியருடைய சாங்கியப் பிரகாரம் அவர்களிருவரும் ஒருவரொருவரை மிக அன்புடன் நேசித்து வந்தார்கள். தன்னை விவாகஞ் செய்ய வேண்டிய காதலன் ஆப்பிரிக்காவில் மாண்டானென்று மாதானவள் கேள்விப்பட்டவுடன் துக்கத்தில் மூழ்கினாள். தனக்குப் புருஷனாக வேண்டிய அவ்வாலிபன் செத்த விடத்தைத் தரிசித்து அங்கு ஓர் ஸலவைக் கல் சிலுவை நாட்டிவிட்டு வரவேண்டுமென்று தீர்மானஞ் செய்தாள். அப்படியே அவள் சிலரைத் துணையாகக் கூட்டிக்கொண்டு கப்பலேறி ஆப்பிரிக்காவில் போயிறங்கி வனாந்தரம் வழியாய் கடும் பயணம் செய்து சூஷாட் ஏரிக்கரை போய்ச் சேர்ந்தாள். இதற்குள் அவள் பிரயாணப்பட்டுப் போய்ப் பல மாதங்க ளானபடியால், அவளும் அவள் கூட்டாளிகளும் காப்பிரிகளால் கொலை செய்யப்பட்டார்களென்று இங்கிலாண்டில் பிரஸ்தாப மாயிற்று. ஆயினும் கடைசியில் வந்த தந்தி ஸமாசாரத்தில் அம்மாது சிரோன்மணியானவள் தன் காதலன் கல்லறையில் கண்ணீர் சிந்தி, கற்சிலுவை ஸ்தாபித்துவிட்டு மீண்டும் இங்கிலாண்டுக்குத் திரும்பி வருகிறதாகத் தெரிய வருகிறது. இதுவரையில் வெள்ளைக்காரரில் பெண்பாலர் அவ்வளவு தூரம் ஒருபோதும் போனதில்லை. ஆகையால், மிஸ் மாக்ளியாட்டினுடைய தைரியமும் புருஷபக்தியும் வியக்கத் தக்கதே.

THE LACE INDUSTRY.

**ஜரிகைத் தொழில்.**—திருநெல்வேலியில் ஸாரா டக்கர் காலேஜைச் சேர்ந்த மிஸ்ஸெஸ் கேன் என்னும் ஒரு ஆங்கில ஸ்திரீ கிறிஸ்தவப் பெண்கள் நூல் ஜரிகை வேலை செய்வதைப்பற்றி எழுதின வியாஸத்தை ஒரு பாதிரிக் கூட்டத்தில் மிஸ் ஹோவர்ட் வாசித்தார். இந்த ஜரிகைத் தொழிலை இந்திய ஸ்திரீகள் வெகு காலமாய் செய்து வருகிறார்கள். அதற்கு மாதிரிகள் போட்டு அந்தத் தொழிலை விருத்திக்குக் கொண்டுவருவதை மிஸ்ஸெஸ் கேன் கடமையாய் ஏற்றிருக்கிறார். இந்தத் தொழிலைச் செய்து மாஸம் 3000-ரூபாய்வரையில் ஜரிகை விற்கப்படுகிறது. ஸராஸரி மாஸம் 6-ரூபாய் முதல் 10-ரூபாய் வரையில் ஒரு ஸ்திரீ சம்பாதிப்பாளானதால், குடும்பத்தின் வரும்படிக்கு அது உதவியாகிறது. இந்த ஸ்திரீகள் ஒரு சங்கமாய்ச் சேர்ந்து அழுக்கா யிருப்பவர்களும் சிரங்குள்ளவர்களும் ஜரிகை செய்யக்கூடாதென்று தடுத்திருக்கிறார்கள். இந்த ஜரிகைத் தொழிலை இன்னும் விருத்தி செய்யும்படி இந்த மிஷனரி ஸொஸைடியானது ஒரு ஜரிகை நிபுணரைத் தருவித்து அந்த நிபுணர் இந்திய ஸ்திரீகளுக்கு மாதிரிகள் வரைந்து காட்டியும் ஜரிகைகளை மாதிரியாகத் தருவித்தும் இந்தத் தொழிலை ராஜதானியில் பரவும்படி செய்யக் கூடாதா வென்று மிஸ் ஹோவர்ட் கேட்க, வந்திருந்தவர்களிற் பலர் அதை அங்கீகரித்து அம்மாதிரி செய்யக் கூடுமென்று சொன்னார்கள். இந்த ஜரிகைத் தொழில் நமது வீட்டுத் தொழில்களில் ஒன்றாக அமைந்து நமது ஸ்திரீகள் வீட்டி லிருந்தபடியே சம்பாதிக்க இயலுமானால், கவர்ன்மெண்டும் இதில் கவனம் செலுத்தலாம். வீட்டுத் தொழில்களில் நமது ஸ்திரீகள் செய்யக்கூடியன பல இருக்கின்றன. அவைகளைப் பற்றிப் பாதிரிகள் மட்டுமல்ல, கவர்ன்மெண்டும் ஜனத் தலைவர்களும் கவனிக்கவேண்டும்.



# DEPARTMENTAL NOTES.
# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்.

MANURE FOR ONIONS.

**வெங்காயத்துக்கு எரு.**—இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வெங்காயத்துக்கு மனிதர் மலத்தைப் பலமுறைகளிலும் போடுவார்கள். மாட்டெருப் போடுகிறதானால், ஒரு ஏக்கருக்குப் பதினைந்துவண்டி முதல் இருபது வண்டிக்குமேல் எரு அதிகமாகாது. பச்சைக் குழைப்பசளை போடுகிறதானால், பயிருக்குப் போதிய பசளை கொடுப்பதற்குப் பின்னும் எலும்புத் தூளும் சாம்பலுஞ் சேர்த்துப் போடவேண்டி வரும்.

TEN AGRICULTURAL COMMANDMENTS.

**பத்து விவஸாயக் கற்பனைகள்.**—நல்ல தானியங்களைப் பெறவேண்டுமானால், பின் வருவனவற்றைச் செய்க:—

(1) ஆழமாய் உழு (2) மேல் நிலத்தைக் கட்டி இல்லாமல் தட்டி வை (3) பூமியைச் சமமாய்த் தட்டு (4) மழையில்லாக் காலத்தில் நிலத்தைச் சும்மா விட்டுவை (5) ஸமயத்தில் நிலத்திற்கு எருவடி (6) புல் பூண்டுகளை களை யெடுத்து விடு (7) சீக்கிரம் அறுவடையாகக் கூடிய தானியங்களை நடு (8) பச்சைத் தழையை அடி (9) ஆடுமாடுகளை வைத்துக் கொள் (10) ஒரு தடவை நட்டதை அடுத்த வருஷத்தில் நடாதே. இந்தக் கட்டளைகளை ஒரு புத்திமான் இடுகிறார்.

WATER BUCKETS.

**தண்ணீர் இறைசால்கள்.**—தமிழ் ஜில்லாக்களில் பயிரிடும் குடிகள் ஜலம் இறைப்பதற்கு இதுவரையில் உபயோகித்து வந்த தோல்பறிக்குப் பதிலாக இரும்பு இறைசாலை உபயோகித்து வருகிறார்கள். ஏனெனில், தோல்பறியில் சீக்கிரம் தொண்டி விழுந்துவிடுகிறது. இதை ரிபேர் செய்ய ஒரு சக்கிலி வேண்டியிருக்கிறது. இவன் செய்யும் வேலைக்குச் சாகுபடியில் ஒரு பங்கு குடித்தனக்காரர் அவனுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இப்படி ஒரு ஆளிருந்துங்கூட தோல்பறிகள் தொண்டியுள்ளனவா யிருப்பதால், அவைகளில் மொள்ளப்படும் ஜலத்தில் பெரும் பாகம் அது ஜலத்தைவிட்டு மேலே வருவதற்குள் கிணற்றிலேயே விழுந்து விடுகிறது. இறைக்கும் எருதுகளுக்கு வீண் சிரமமே ஒழிய ஜலம் போதுமான அளவு குறித்த காலத்தில் இறைக்கப் படுவதில்லை. மேலும் தோல்பறிகளின் விலையும் இரும்பு இறைசாலைவிட அதிகமா யிருக்கிறது. இவ்விஷயங்களை அறிந்த சில பயிரிடுவோர் இரும்பு இறைசாலை உபயோகித்து வருகிறார்கள்.

ஒரு தோல்பறிக்குக் குறைந்தது 12 ரூபா விலையாகும். இரும்பு இறைசால்களின் விலை பின் வருமாறு:—

| | குறைந்த விலை | அதிக விலை |
|---|---|---|
| 30 காலன் கொள்ளும் கோண வடிவமான இறைசால் | 2-8-0 | 3-8-0 |
| 35 காலன் கொள்ளும் கோண வடிவான இறைசால் | 3-4-0 | 3-8-0 |
| 30 காலன் கொள்ளும் வட்டமான இறைசால் | 3-10-0 | 4-0-0 |
| 35 காலன் கொள்ளும் வட்டமான இறைசால் | 4-8-0 | 5-0-0 |

இரும்பு இறைசால்களுக்குத் தோல் கழுத்துகள் வேண்டும். தோல் கழுத்தொன்றுக்கு ரூபா ஆறு ஆகும். இத்துடன் உபயோகிக்கும் இறைசால் வட்டமானதா யிருந்தால், குறைந்தது 10 வருஷங்களிருக்கும். ஜாக்கிரதையாய் உபயோகித்தால், 15 வருஷங்களுமிருக்கும். கோண வடிவானதாயிருந்தால், குறைந்தது 4 வருஷங்கள் கெடாமலிருக்கும்.

REVENUE SETTLEMENT.

**ரெவினியு ஸெட்டில்மெண்டு.**—கவர்ன்மெண்ட் லாண்ட் ரெவினியூ செட்டில்மெண்ட் விதிகளில் முக்கியமானவை:—(1) செட்டில்மெண்டை 30 வருஷத்துக்கொருமுறை புதிப்பிக்கவேண்டும்; (2) விவஸாயச் செலவுகளைத் தள்ளி பாக்கி கிடைக்கும் லாபத்தில் பாதியைப் பணமாக்கி அது கவர்ன்மெண்டுக்குரிய வரி; (3) ஒருதரம் செட்டில்மெண்டாய் விட்டால், மறுபடியும் செட்டில்மெண்ட் செய்யுங் காலத்தில் விலைவாசிகளைப் பற்றி மட்டும் அஸெஸ்மெண்ட் குறிப்பிடப்பட வேண்டும்; (4) விவஸாயிகளின்

செலவில் நிலத்தில் செய்யப்பட்ட திருத்தங்களினால் விளைச்சல் அதிகமாகும் பக்ஷத்தில் அதற்கு வரி போடக்கூடாது.

இவைகள் செட்டில்மெண்டின் முக்கியமான விதிகள். சில வருஷங்களுக்கு முன்னால் செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்கெனவேயுள்ள அஸெஸ்மெண்டில் நூற்றுக்கு 15-க்கு அதிகமாக அஸெஸ்மெண்ட் விதிக்கக்கூடாதென்று கவர்ன்மெண்டார் ரூல் செய்துகொண்டிருந்தார்கள். அது பிற்பாடு கவர்ன்மெண்டுக்கு அஸௌகரியமாகக் காணப்பட்டபடியால் அந்த ரூலை விட்டுவிட்டார்கள். இம்மாதிரி கவர்ன்மெண்டே செய்திருக்கும் ரூல்கள் தங்களுக்கு அஸௌகரியமென்று இந்தியாக் கவர்ன்மெண்டினுடைய பிரேரணையாலும் மற்றெந்தக் காரணத்தினாலும் மாற்றப்படாமலும் விடுபட்டுப் போகாமலும் இருக்கும் பொருட்டு மேற்கண்ட செட்டில்மெண்ட் விதிகள் மாகாணச் சட்ட சபை செய்த விதிகளாக வேண்டும். அப்போது மறுபடியும் அந்த விதிகளைச் சட்ட சபை மாற்றினாலன்றி இந்தியாக் கவர்ன்மெண்டாவது மாகாணக் கவர்ன்மெண்ட்களாவது மாற்ற முடியாது. இப்போதிருக்கிறபடி செட்டில்மெண்ட் செய்யும்போதெல்லாம் குடிகளுக்கும் செட்டில்மெண்ட் அதிகாரிகளுக்கும் வித்தியாஸம் நேரிடும்போது இந்த வித்தியாஸம் செட்டில்மெண்ட் உத்தியோகஸ்தர்களால் ஒரு பக்கமாய்த் தீர்மானம் செய்யப்படுகிறது. குடிகள் என்ன சொன்னாலும், பிரயோஜனப்படாமற் போகிறது.

AGRICULTURAL LABOURERS.

**விவஸாயக் கூலிகள்.**— விவஸாயத்துக்குக் கூலிகள் அகப்படுவது வரவர சிரமமாகிக்கொண்டு வருகிறது. இதற்கு அநேக காரணங்கள் உண்டு. முதலாவது நேட்டால், மோரீஸ், முதலிய அயல் நாடுகளுக்குக் கூலிகள் போய்விடுவது.

இரண்டாவது நமது தேசத்திலேயே மலைகளில் காப்பி தேயிலைத் தோட்டங்களை ஏற்படுத்தி அங்கே வேலை செய்வதற்கென்று முன் கூட்டியே கங்காணிகள் மூலமாய் பணங் கொடுத்து ஒப்பந்தம் செய்து வேலையாட்களை மலைகளுக்குக் கூட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். இப்படிப் போகும் ஜனங்களை ஆயிரக்கணக்காக மதிப்பிடலாம். மூன்றாவது ரெயில்வே (இருப்புப்பாதை) ஸ்தானங்களிலும், மராமத்துகளிலும், கைத்தொழில் சாலைகளிலும் முன்னிலும் அதிகமான வேலையாட்களை வைத்து அவரவர்கள் தரத்துக்குத் தக்கதாகச் சம்பளம் ஏற்படுத்தி இருப்பது. நான்காவது சர்க்கரை ஆலைகள், நெசவு யந்திரங்கள் முதலியவைகளில் லக்ஷக்கணக்கான வேலையாட்கள் அமர்ந்துகொண்டிருப்பது—இவை போன்ற அனேக காரணங்களினால் இப்போது வரவர சில வருஷங்களாக விவஸாயக் கூலியாட்கள் அனேக இடங்களில் அகப்படுவது அரிதாயிருக்கிறது. அகப்பட்டாலும் அவர்களுக்குக் கொடுக்கும் கூலி முன்னிலும் மூன்று மடங்கு அதிகமாயிருக்கிறது. விவஸாய வேலைகளை ஸாதாரணமாய் முன்செய்து வந்த சில ஜாதியார்களுக்குப் பொதுவாகப் பாதிரிகள் கல்வி கற்பித்துவிட்டதனால், அவர்களில் அனேகர் தற்காலத்தில் மற்ற ஜாதியாரைப்போலவே ஸர்க்கார் உத்தியோகம் முதலான பல ஜீவனங்களிலும் அமர்ந்துகொள்ள ஏதுவாயிற்று.

THE MADRAS AGRICULTURAL DEPARTMENT.

**சென்னை விவஸாய இலாகா.**—சென்னை விவஸாய இலாகா அதிகாரிகள் இந்தவருஷம் கம்போடியாப்பருத்தியைப் பாலூர்ப்பண்ணையில் ஏராளமாய்ப் பயிர் செய்து பார்ப்பதோடு போர்போன் தீவுகள் அமெரிக்கா போன்ற நாடுகளில் பயிராகும் பருத்தியையும் பரீக்ஷார்த்தமாய்ப் பயிர் செய்து பார்க்கப் போகிறார்கள். பாலூரில் விவஸாயக் கருவிகள் செய்ய ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப் போகிறார்கள். கோயம்புத்தூரில் வியாபார முறையில் ஒரு பால் தயிர் வெண்ணெய்ச் சாலை வைத்து அதைக் கவர்ன்மெண்டார் நேரில் நிருவகிக்கப் போகிறார்கள். பெரியாற்றுப் போக்கிலுள்ள உவர் நிலங்களில் விவஸாய ரஸாயன சாஸ்திரி இப்போது செய்து வரும் வேலையை நிறுத்திவிடுவதாய்ச் சொல்லுகிறார். கவர்ன்மெண்ட் தாவர சாஸ்திரி கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வளரும் செடிகள் மரங்கள் இவைகளின் இயற்கையைச் சோதிப்பதில் கவலை செலுத்துவார். கம்பு சோளம் இவைகளில் விழும் நோய்களைச் சோதிப்பதோடு கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களில் புனங் குறுத்துக்கள் சம்பந்தமாய் அவர் செய்து வரும் வேலையை கவர்ன்மெண்ட் மைகாலஜிஸ்ட் கவனிப்பார். தென் கன்னடத்தில் பாக்கு மரங்களில் பூச்சிகள் விழாதிருக்க என்ன உபாயங்கள் செய்யப்படலாமென்றும் கவனிக்கப்படும்.



## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

THE INDIGO INDUSTRY.

**நீலி வியாபாரம்.**—இந்தியாவில் சில வருஷங்களுக்கு முன் பல இடங்களில் நீலிப் பயிர் செய்யப்பட்டுவந்தது. நீலிப் பயிரிலிருந்து நீலிச் சாயத்தை எடுக்க பல பாக்டரிகளும் நடைபெற்று வந்தன. 1896-ம் வருஷத்தில் நீலி வியாபாரம் அதி உன்னத நிலையிலிருந்தது. 5,35,45,112 ரூபா பெறுமான 187,337 பாரமுள்ள நீலி இந்தியாவிலிருந்து வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி யாயிற்று. இவ்வியாபாரம் மிகவும்லாபகரமாயிருந்ததால்பயிரிடுவோர்நீலிப்பயிர் இன்னும் விசேஷமாயும் அதிகமாயும் பயிராவதற்கு நூதன சாஸ்திரீயமான முயற்சிகளைச் செய்யாமலிருந்துவிட்டார்கள். இப்படியிருக்க, ஜர்மனி தேசத்தில் நீலிச்சாயத்தை சிலபொருள்களை ரஸாயனமுறையில் சேர்த்துச் செய்யலாமென்றும், இப்படிச் செய்யப்பட்ட செயற்கை நீலிச் சாயம் இயற்கை நீலிச் சாயத்தைவிட விலை குறைச்சலாயிருக்கிறதென்றும் நூதனமாய்ச் சில ரஸாயன நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக்காரணத்தால் நீலி ஏற்றுமதி இந்தியாவிலிருந்து வருஷா வருஷம் குறைந்துவரத் தொடங்கிற்று. 1909-ம் வருஷத்தில் ரூபா 35,18,154 மதிப்புள்ள 18,061 பாரம் நீலிதான் ஏற்றுமதி செய்யப்பட்டது. பாரன் ஸ்கராட்கி என்ற ஒரு ஜர்மனியப் பிரபு சென்னைக்கு வந்திருக்கிறார். இவர் செயற்கை நீலியைவிடக் குறைந்த விலைக்கு இயற்கை நீலியை விற்க, நூதன சாஸ்திரிய முறையில் நீலியைப் பயிரிட்டால், சாத்தியமாகுமென்று சொல்லுகிறார். இவர் பீஹார் ப்ளாண்டர்களிடம் தம் யோஜனையைத் தெரிவித்தார். சாஸ்திரப் பரீக்ஷைகள் செய்து பார்த்ததில் இவர் சொல்வது உண்மையென ருஜுவாயிருக்கிறது.

1. ஜாவா, நேடால் நீலி விதையை இங்கு பயிரிடுவதால், இங்கு பயிராவதைவிட $1\frac{1}{2}$ மடங்கு அதிக விளைவு உண்டாகிறது.

2. நீலிச் சாயத்தை நவீன சாஸ்திர முறைப்படி பயிரிலிருந்து எடுப்பதால், நீலிஅதிகமாய்க் கிடைக்கிறது.

இவர் சொல்லுகிறபடி இந்த ராஜதானியில் நீலி பயிரிடுவோர்கள் செய்து பார்ப்பார்களானால். க்ஷீண கதியடைந்து வரும் நீலிப் பயிரையும் நீலி வியாபாரத்தையும் அவைகள் முன்னிருந்த உன்னத ஸ்திதிக்கு உயர்த்திவிடலாமென்று தோன்றுகிறது. இவ்விஷயத்தை விவஸாயச் சங்கத்தாரும் சென்னைக் கவர்ன்மெண்டாரும் கவனிப்பார்களாக.

A LAUNDRY IN BURMA.

**பர்மாவில் ஒரு துணி சலவை செய்யும் கம்பெனி.**—இப்போது பர்மாவில் 'பர்மா மாடல் லான்டிரி லிமிடெட்' என்னும் கம்பெனியொன்று துணிகள் வெளுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டு ஷேர்கள் (பங்குகள்) சேர்க்கப்பட்டு வருகின்றன. இதற்கு மானேஜிங் டைரெக்டர் மாங்லாபூ என்பவர். இவர் இன்ஸீனில் டிஸ்டிரிக்ட் ஓவர்ஸியராக இருந்து, ரஜாவின்பேரில் சீமைக்குப் போய் இந்த வித்தையைக் கற்றுக்கொண்டு வந்ததாக அறிகிறோம். இதற்கு மூலதனம் ரூபாய் 30,000, பங்கு ஒன்று பத்து ரூபாயாக 3000 பங்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நல்ல உத்தியோகங்களைச் செய்துவரும் பர்மிய கனவான்கள் இதற்கு டைரெக்டர்களாக இருக்கிறார்கள். இன்ஸீனில் ஜயோகோன் ஸ்டேஷனுக்கருகாமையில் மெஷின்சாலை இதற்காகக் கட்டப் போகிறார்கள். இங்கிருந்து ஆடைகளைச் சுத்தம் செய்து அப்போதைக் கப்போது ரெயில் வழியாக ஜனங்களுக்கு 'சலவைகள்' அனுப்பப்படும். ரங்கூனுக்கும் இன்ஸீனுக்கும் மத்தியில் 66 வண்டிகள் பிரதிதினமும் ஓடுகிறபடியால், சலவை செய்த வேஷ்டிகள் தாமதமில்லாமல் வந்து சேரும். இது ஒரு மாதத்தில் அரை லக்ஷம் வேஷ்டிகளுக்கு மேல் வெளுக்கும். மெஷின் விலைரூபாய் 15,000. கட்டிடம் முதலிய செல்வு ரூபாய் 15,000. எல்லாச் செலவும் போக வருஷம் ஒன்றுக்குக் குறைந்தது ரூபாய் பதினாயிரம் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. உருப்படி ஒன்றுக்கு ஒரு அணா சார்ஜு செய்யப்படும். மெஷினால் சலவை செய்தால், சீக்கிரத்தில் துணி கிழிந்துவிடும் என்று அநேகர் பயப்படுகிறார்கள். இந்தப் பயத்திற்குக் காரணம் இல்லை. ஏனெனில், இப்போது இருக்கும் மெஷின்கள் 20 வருஷங்களுக்கு முன் இருந்தவைகளைப் பார்க்கிலும் நல்லவைகள். ஆகையால், வேஷ்டிகள் பழுதாகாமல் சலவை செய்துவரும். மேலும், இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் மாத்திரம் ஐயாயிரம் மெஷின்கள் வேலை செய்து வருகின்றன. துணி சீக்கிரத்தில் கிழிவதாயிருந்தால், இவ்வளவு மெஷின்களுக்குப் பிழைப்பிருக்குமா?

## EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

---

PRIMARY EDUCATION.

**கீழ்த்தரப் படிப்பு.**—ராஜப் பிரதிநிதி ஸபையில் ஆனரபிள் மிஸ்டர் கோகலே கொண்டுவந்த கீழ்த்தரப் படிப்புமசோதாவை மதராஸ் ப்ரொவின்ஷியல் கான்பரென்ஸ் முற்றிலும் அங்கீகரித்து சென்னை கவர்ன்மெண்டு அந்த மசோதாவை ஒற்றுணர்ச்சியுடன் ஸாதகமாய்க் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது.

MODEL HIGH SCHOOLS.

**மாடல் ஹைஸ்கூல்கள்.**—சென்னை மாகாணத்தில் மாடல் (மாதிரி) ஹைஸ்கூல்கள் சில ஸ்தாபிப்பதைப் பற்றி மேலதிகாரிகளுக்கு மாகாணக் கவர்ன்மெண்டார் சிபார்சுசெய்து அனுப்பியிருக்கிறார்கள். அந்த ப்ரேரணைகளை இப்போது இந்தியா மந்திரி கவனித்து வருகிறார். அம்மாதிரி ஸர்க்கார்ச் செலவில் மாடல் ஹைஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்படக் கூடாதென்று இந்தியாவிலும் இங்கிலாண்டிலுமுள்ள பாதிரிமார்கள் பலமாய் வாதிக்கப்போகிறார்களென்று காண்கிறது. அவர்கள் இப்போது தங்கள் கண்டன விண்ணப்பத்துக்குக் கையெழுத்துக்கள் சேர்த்து வருவதாய்த் தெரிகிறது.

A SANSKRIT SCHOOL.

**ஸம்ஸ்க்ருதப் பாடசாலை.**—ஜகத்குரு சிருங்கேரி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமி அவர்களால் பங்களூரில் ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலை ஸமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை நமது பூர்வீக வேதங்களையும் சாஸ்திரங்களையும் தற்காலத்து ஹிந்துக்கள் மறவாமல் அவைகளைக் கற்று நிலை நிறுத்தும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் ஸ்ரீ ஜகத்குருவுக்காகப் பேசின பிரம்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள், ஹிந்துக்கள் அனாதி காலந் தொட்டு வைதீக லௌகீக சாஸ்திரங்களில் பேர் போனவர்களென்றும், நம் பூர்வீகருடைய நல்லபேரை இக்காலத்து ஹிந்துக்கள் காக்க வேண்டுமென்றும், அதற்காக ஹிந்துக்களெல்லாரும் ஒரே மனதாய் இப்படிப்பட்ட பாடசாலைகளை ஆதரித்து உழைக்க வேண்டுமென்றும் சொன்னார்.

EDUCATION AND THE PROVINCIAL CONFERENCE.

**படிப்பும் ப்ரோவின்ஷியல் கான்பரென்ஸும்.** ஸமீபத்தில் கூடிய சென்னை மாகாணக் கான்பரென்ஸில் படிப்பு விஷயமாக அடியில்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(1) கல்வி கற்றுக்கொடுக்கும் தொழிலுக்கு, பொதுவாய்க் கல்விக்கே, நன்மை யுண்டாகும் பொருட்டு சொந்த ஸ்கூல்களில் வேலை பார்க்கும் வாத்தியார்களுக்காக ஒரு ப்ராவிடென்ட் பண்ட் ஸ்தாபிப்பது அவசியம். ஆகையால், சென்ற 1910-ம் வருஷம் ஜூலை மாஸம் 18-ந்தேதி 418-ம் நெ. உத்தரவில் கண்ட ஸ்கீமைப் புன ராலோசனை செய்து, அதிற் கண்ட கஷ்டங்களை வென்று அனுபோகத்தில் வேலை செய்யும்படி அதைச் செய்யவேண்டும். அல்லது திறமையாய் அனுஷ்டிக்கப்படக் கூடிய புதிய ஸ்கீமை ஏற்படுத்த வேண்டும்.

(2) கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களிலும், நடுத்தரப் பள்ளிக்கூடங்களிலும் இப்போதுள்ள கிராண்ட்-இன்-எய்ட் கோட் போதுமான அளவு ஒத்தாசை செய்யாதபடியினால் அதைத் திருத்த வேண்டும்; நடுத்தரப் பள்ளிக்கூடங்களைப் பற்றி அவைகளின் செலவுக்கும் வரும்படிக்கும் உள்ள வித்யாஸத்துக்குச் சரியாய் கிராண்ட்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டும். கிராண்ட்-இன்-எய்ட் கோடின் நோக்கங்களுக்காக ஒரு ஸ்கூலின் பிள்ளைகள் சம்பளத்தைக் கணக்கிடும்போது, ஸ்டான்டர்ட் ரேட்டுப்படி அவைகளில் நூற்றுக்குப் பதினைந்து குறைக்க வேண்டும்.

(3) இந்த ராஜதானியில் நடுத்தரப் படிப்பை இன்னும் விசாலப்படுத்தி விருத்தி செய்வதற்குச் சொந்த ஸ்கூல்களை இன்னும் தாராளமாய் ரெகாக்னைஸ் செய்து ஒத்தாசை செய்யவேண்டும். கவர்ன்மெண்ட் மாடல் ஸ்கூல்களுக்காகச் செலவு செய்யப்போகும் நாலு லக்ஷத்துச் சொச்சம் ரூபாயை நடுத்தர ஸ்கூல்களுக்காக கிராண்டாய்க் கொடுக்கும் பக்ஷத்தில் அதுவே நலமாகும். ஆனால் மாடல் ஸ்கூல்கள் அவசியமென்று கவர்ன்மெண்ட் நினைக்கும் பக்ஷத்தில் அவர்கள் ஏற்கனவே வைத்திருக்கும் 4 மாடல் ஸ்கூல்களைச் சேர்த்து 8 ஸ்கூல்களுக்கு அதிகப்படாமல் செய்யவேண்டும்.



## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

---

SPEED OF BIRDS.

**பக்ஷிகளின் வேகம்.**—ஜர்மனி தேசத்திலுள்ள ராஸிட்டன் என்னும் பட்டணத்தில் பக்ஷிகளின் வேகத்தைக் கண்டுபிடிக்கும் நிமித்தம் ஓரிடம் ஏற்பட்டிருக்கிறதாம். அதில் இரண்டு நாரைப் பக்ஷிகள் ஒன்பதுமாத காலத்தில 6,000 மைல் தூரம் பறந்து போயிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

SUN'S ECLIPSE.

**சூரியகிரஹணம்.**—சூரியனுடைய பிரகாசத்தைச் சந்திரன் மறைக்க அதாவது சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியில் வர ஒருவித நிழல் ஏற்படுகிறது. இந்த நிழல் பூமியின்மேல் விழுமாயின் நிழல் விழுந்த இடத்தில் சூரியன் மறைந்து காணப்படுகிறது. இதைத்தான் நாம் சூரிய கிரஹணம் என்று சொல்லுகிறோம். சூரிய கிரஹணம் கிருஷ்ண பக்ஷத்தில் தான் ஏற்படும். ஏனென்றால், சந்திரனுடைய நிழலானது பூமியின்மேல் படும்பொழுது அது சூரியனுக்கும் பூமிக்கும் நேராகத்தான் அவைகளின் நடுவில் வர ஏதுவாயிருக்கிறது. சூரிய கிரஹணம் உண்டாகும் காலத்தில் ஹிந்துக்கள் பாப தோஷநிவாரணமாக ஸ்நானம் செய்வதும், வீடுகளைச் சுத்தி செய்வதும், தான தர்மங்கள் செய்வதும் வழக்கம். கிரஹணத்திற்கு முன் பின் மூன்று நாட்கள் தோஷமென்று சொல்லுவார்கள். மாந்திரீகர்களும் மற்றும் வைதீகர்களும் அக்காலங்களில் ஜபங்கள் செய்து தங்கள் மந்திரங்களின் மகிமையை அதிகப்படுத்திக் கொள்வார்கள்.

LIGHTNING CONDUCTORS.

**மின்வாங்கி.**—மின்னலின் காரணத்தை ஊகித்தறிந்த பென்ஜமின ப்ராங்லின் என்னும் விவேகசிகாமணியே அதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நிவாரணத்தையும் கண்டுபிடித்தார். வஸ்துக்களின் கூர்மையான பாகங்களில் மின்சாரம் தங்காமல் ஆகாயத்தினுள் பாய்ந்துவிடுமாகையால், ஊசி போன்ற கூர்மையுள்ள சுமார் 9 அடி நீளம் 3 அங்குலம் பருமனுள்ள இரும்புத் தடியை கட்டிடத்தின் உச்சியில் நிறுத்தி அதற்கும் பூமிக்கும் ஸ்திரமான சம்பந்தமிருக்குமாறு அதிலிருந்து இரும்புக்கம்பியை சுவர் வழியாய் இறக்கி பக்கத்துக் கிணற்றிலாவது, கிணறில்லாவிடில், அடுப்புக்கரி நிறைந்துள்ள ஆழக் குழியிலாவது பதித்துவிட, மின்னலால் கட்டிடத்துக்கு யாதொரு சேதமும் உண்டாகாது. அளவற்ற திரவியம் செலவழித்துக் கட்டின மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் மேற்கூறிய லைட்னிங் கண்டக்டர் அல்லது மின்வாங்கி என்னும் சிறு கருவியால் மின்னலின் சடுதி நாசத்தினின்றுங் காக்கப்படுமாகையால், வானத்தை யளாவும்படியான கட்டிடம் கட்ட விரும்பும் நம் தேசத்துக்குபேரர்கள் மின்வாங்கி என்னும் அற்பக் கருவியைக் கட்டிடத்தின் அங்கமாகப் பாவிக்க வேண்டும்.

A FIRE EXTINGUISHER.

**நெருப்பை அவிக்கும் கருவி.**—ப்ரான்ஸ் தேசத்திலுள்ள சங். டானீ என்னும் ஓர் ஸ்வாமியார் அகோர தீப்பற்றியெரிகையில் உடனே அவிக்கக் கூடிய ஒரு நூதனக் கருவி கண்டுபிடித்திருக்கிறாராம். தீ எவ்வளவு மும்முரமாய்ப் பரவியிருந்தாலும் 9 வினாடியில் அவிக்கக் கூடியதாயிருக்கிறது. உலகத்துக்கே இது பேருபகாரம். நாளதுவரையில் இப்பேர்பட்ட கருவியில்லாமையால் விளைந்த நஷ்டத்துக்கு அளவில்லை. இதன் அருமையை ப்ரான்ஸ் தேசத்தின் சாஸ்திரிகளும் ஸர்க்காரும் முதலாய்ப் பரீக்ஷித்துப் பகிரங்கமாயொப்புக்கொண்டார்கள். இப்பேர்ப்பட்ட அரியலோகோபகாரம் செய்த ஸ்வாமியார் இன்னொரு வியக்கத்தக்க அருமையான தருமமுஞ் செய்திருக்கிறார். இந்தக் கருவியை ஏராளமான திரவியங்கொடுத்து வாங்குவதாய் அநேக ஐசுவரியவான்கள் அவரை மிகவும் கெஞ்சினாலும் அதற்கவர் உடன்படாமல் அக்கருவியாலுண்டாகும் பொருளில் ஒரு பெரும் பங்கை ப்ரான்ஸ் தேசத்து ஏழைக் குருக்களின் சம்ரக்ஷணைக்காகக் கொடுத்துவிட வேண்டியதென்றுமட்டும் நிபந்தனை பேசிக்கொண்டு கருவியைச்சாஸ்திரிகளிடம் கொடுத்துவிட்டார்.

---

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

PRECAUTION AGAINST PLAGUE.

**ப்ளேக் வராமல் பாதுகாப்பது.**—ப்ளேக்கால் பீடிக்கப்பட்ட ஸ்தலங்களிலிருந்து வருபவர்களை ஊரில் சேர்க்குமுன், அவர்கள் துணிகளை எல்லாம் நன்றாய் வெயிலில் காயப்போட்டால், க்ருமிகளெல்லாம் மாண்டுவிடுகின்றனவென்று பரிசோதனைகளாலும் ஆராய்ச்சிகளாலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அடியில் காணும் விதிகளைக் கட்டாயம் கவனிக்கவேண்டும்.

(1) துணிகளைக் காயப்போட வெட்ட வெளியானதும் மணலுள்ளதும் ஸமமானதுமான ஓர் இடம் வேண்டும். இதற்குச் சமீபத்தில் பச்சைகளாவது, மரங்களாவது இருக்கக் கூடாது ஏனெனில், சூரிய காந்தி முழுமையும் படுவது அவசியம்.

(2) தரை மட்டமாயிருக்கவேண்டும். கற்களாவது பசும் புல்லாவது இருக்கக்கூடாது.

(3) மணல் பாங்கான இடமில்லாவிட்டால், அந்த இடத்தில் 3 அங்குலம் வெட்டி மணலை ஸமமாய்ப் பரப்பவேண்டும்.

(4) துணிகளைச் காயப் போடுமுன் மணல் நல்ல சூடுடையதாவென்று பார்க்கவேண்டும். ஆகையால், காலை 10 மணிக்கு மேலேயே காயப்போடத் துவக்கவேண்டும்.

(5) மாலை 4 மணிக்கு மேல் துணிகளைக் காயப் போடுவதில் பயனில்லை. ஏனெனில், மணலில் சூடு குறைந்துவிட ஆரம்பிக்கிறது.

(6) துணிகளை மடித்துப் போடக்கூடாது. துணிகள் குறைந்தது ஒரு மணி அவகாசம் காயவேண்டும்.

(7) மெத்தைகள், தலையணிகள் முதலியவைகளைத் திருப்பிப் பலமுறை காயப் போடுதல் அவசியம்.

(8) துணி காயுமிடத்துக்குச் சுற்றிலும் குறைந்தது 3 அடி மணலிருக்கவேண்டும். இல்லாவிட்டால், க்ருமிகள் சூட்டுக்காக மெல்ல ஊர்ந்து சென்று பிழைத்து வியாதியைப் பரவச் செய்யும்.

(9) துணியை உலரப்போடுமுன் மணல் தரையில் கால்நடைகள் சென்று காலடி வைக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் துணிகளுக்குச் சமமாய்ச் சூடு தாக்காது. க்ருமிகள் இறவா.

OLD HORSE MADE YOUNG.

**கிழக் குதிரையை வாலிபம் ஆக்கியது.**—ரேடியம் என்ற வஸ்து மிகுந்த காந்தியுள்ளது. அதன் விலை அஸாத்தியமானது. யோக்கியதை மிகுந்தது. அது சிந்தாமணியே போலும். ஆல்போர்ட்டிலுள்ள பசு வைத்தியப் பள்ளிக்கூடத்துப் புலவரான கேப்ரீல் பெடிட் என்பவர் கிழக் குதிரை ஒன்றிற்கு இந்த ரேடியத்தை ரக்த நாம்பில் கட்டினார். அவர் புகட்டிய ரேடியம் கொஞ்சம் அதிகமென்றே தோன்றினபோதிலும் கெடுதி ஒன்றும் அதனால் உண்டாகவில்லை. குதிரை புதிதாய் உயிர்ப்பிக்கப்பட்டது போலாயிற்று. சுறுசுறுப்பு மிகுந்து துள்ளிக் குதித்ததாம். சதை பற்றியது. புஷ்டி மிகுந்து விளங்கியது. மேற்சொல்லியபடி புகட்டிய சில நாளைக்கெல்லாம் கொஞ்சம் ரேடியம் வெளி வந்துவிட்டது. ஆனபோதிலும் அதன் ரக்தத்தில் ரேடியம் சம்பந்தம் இருந்ததாகத் தெரிய வருகிறது. அதன் உடம்பில் சிவப்பு ரக்த கோளங்கள் அதிகரித்தன. அது ஆரோக்கியமான புஷ்டிக்கு அறிகுறியாகும். இந்த மாதிரி ரேடியம் புகட்டுவதனால் அதன் காந்தியும் சக்தியும் பிரபாவமும் தேகத்தில் வெகு காலம் அமைந்திருக்கக்கூடும் என்று அந்தப் புலவர் தீர்மானித்தார். ரேடியத்தை அம்மை குத்துவது போல் தேகத்திற் குத்திப் புகட்டி அதனால் யௌவனதிசை வரும்படிச் செய்யலாமென்று அந்தப் புலவர் மேற்சொல்லிய சோதனைகளின் பயனைக் கொண்டு யூகிக்கிறாராம்.

CURE FOR STY.

**கண்கட்டிக்கு சிகித்ஸை.**—கொஞ்சம் சோடாப் பவுடரை வெள்ளைத் துணியில் முடிந்து அது நனையும்படி வெந்நீர் வார்த்து அந்தச் சூட்டுடனே கண்ணில் வைத்துக் கட்டி இரவு முழுவதும் வைத்து காலையில் எடுத்துவிடவும். உடனே கண்கட்டி ஸௌக்கியமாய்விடும். இன்னும் கொஞ்சமிருந்தால், மறுபடியும் அதுபோலவே வைத்துக் கட்டவும். அல்லது கோழிமுட்டையின் வெள்ளைக் கருவை இறகினால் எடுத்து இரவு படுக்கைக்குப் போகுமுன் கண்கட்டிக்குப் போட்டுக்கொண்டாலும் குணமாகும்.



## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

VAKIL'S FEES.

**வக்கீல் பீஸ்.**—ஒரு வக்கீல் அல்லது ஸொலிஸிட்டர் தன்னுடைய கக்ஷிக்காரனுக்காக பல வியாஜ்யங்களை நடத்திவந்தால், ஒவ்வொரு வியாஜ்யத்திற்கும் பீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு வியாஜ்யத்தில் இவருக்குச் சேரவேண்டிய பீஸ் பாக்கிக்காக மற்றொரு வியாஜ்யத்தில் எதிர் கக்ஷிக்காரனிடமிருந்து வசூல்செய்த தொகையை உபயோகித்துக் கொள்ளக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

OWNERSHIP OF RIVERS.

**நதிகளில் பாத்தியதை.**—எல்லா நதிகளும், அவைகளுடைய படுகைகளும், வாய்க்கால்களும், கவர்ன்மெண்டாராலாவது, அல்லது வேறே எவ்விதமாகவாவது, ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று ருஜுப்படுத்தப்படாலொழிய 1905-ம் ௵த்திய 3-வது ஆக்டின்படி கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமானவைகள். இதில் வரும் ஜலத்தை ஒரு குறிப்பிட்ட அளவு உபயோகப்படுத்திக்கொள்ள ஒரு ஜமீன்தாருக்காவது, அல்லது இனாம்தாருக்காவது ஈஸ்மெண்டு பாத்தியதை இருந்தபோதிலும், இவர்கள் ஜலத்திற்குத் தீர்வை கொடுக்காமல் உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று கவர்ன்மெண்டாருடன் யாதேனும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தாலொழிய இவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளும் ஜலத்திற்குத் தீர்வை செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

SUBSCRIPTION TO A NEWSPAPER.

**ஒரு பத்திரிகைக்குச் சந்தா.**—சில வருஷங்களுக்கு முன் ஆஸ்ட்ரேலியாவில் மெல்போர்ன் பட்டணத்தில் வர்த்தமானப் பத்திரிகைக்குக் கொடுக்கவேண்டிய சந்தாவுக்காக ஒருவர் மேல் பிராது கொடுக்கப்பட்டது. அவனுக்குப் பத்திரிகை சரியாய் வந்து சேர்ந்திருந்தாலும் வேண்டுமென்று வரவில்லையென்று சாதித்தான். அதற்கு ஜட்ஜ், ஒரு ரொட்டி விற்போன் உனக்கு ரொட்டியை விலைக்குக் கொடுப்பானாகில், நீ அதைத் தின்றவுடன் கிரயம் கொடுப்பாயா, இல்லையா? என்று கேட்டார். பிரதிவாதி, மஹா ஸ்வாமி! கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் அது வேறு விஷயம் என்று சொன்னான். ஜட்ஜ் அது வேறு விஷயமாகாது. நீ ரொட்டியை வாயால் தின்றாய், பத்திரிகையைக் கண்கொண்டு சாப்பிட்டாய். இரண்டுக்கும் பேதம் கிடையாது என்று சொல்லி பிராது செலவுத் தொகைகளையும் கொடுக்கும்படி தீர்ப்பு அளித்தார்.

SIGNATURE TO LEASE DEEDS.

**குத்தகைப் பத்திரங்களுக்குக் கையெழுத்து.**—ஒரு குத்தகைப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டதாக இருந்தபோதிலும, அதில் குத்தகை விட்டவன் கையெழுத்தும் குத்தகை பெற்றுக்கொண்டவன் கையெழுத்தும் இருக்கவேண்டுமென்ற இ. லா. ரி. 30. சென்னை, வால்யூமில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் ஒரு கேசில் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஸமீபத்தில் விசாரணைக்கு வந்த ஒரு ஸிவில் வியாஜ்யத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்த குத்தகைப் பத்திரத்தில் குத்தகை விட்டவனுடைய கையெழுத்திருக்கவேண்டுமென்பது அவசியமல்லவென்று சீப் ஜஸ்டிஸவர்களும், மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரும், மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்கும் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

WATER CESS.

**தண்ணீர்த் தீர்வை.**—1865-ம் ௵த்திய சென்னப்பட்டணம் 7-வது ஆக்ட்டாகிய ஜலத் தீர்வை ஆக்ட் 1-வது பிரிவின்படி ஒருவனை ஷை தீர்வைக்குள்ளாக்கவேண்டுமானால், அவனுடைய நிலத்திற்கு கவர்ன்மெண்டுக்குச் சொந்தமான ஜலம் பாய்ந்திருக்கவேண்டும். அந்த ஜலம் யாருடைய நிலத்தின் வழியாகப் பாய்ந்தபோதிலும் சரி, ஜலம் கவர்ன்மெண்டாருடையதாக இருந்தால் போதுமானது. அந்த நிலத்திற்குப் பாயும் ஜலமெல்லாம் கவர்ன்மெண்டாருடையதாகத் தானிருக்கவேண்டுமென்பதில்லை. பிரிவு கூறுவதெல்லாம் கூடி இரண்டே விஷயங்கள் (1) கவர்ன்மெண்டார் மூலமான ஜலம் நிலத்திற்குப் பாயவேண்டும். (2) ஷை பாய்ச்சல் பயிருக்கு நன்மையைப் பயக்கக் கூடியதென்றும், விளைச்சலுக்கும் போதுமென்றும் கலெக்டர் அபிப்பிராயப்பட வேண்டும் கவர்ன்மெண்டாருடைய ஜலமின்றி வேறே ஜலமும் பாய்ந்து வருகிறதென்று சொல்லும் கக்ஷி ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

LORD CREWE.

**லார்ட் க்ரூ.**—உடம்பு அசௌக்கியத்தால் வேலையை விட்டிருந்த லார்ட் க்ரூ மறுபடியும் நாளது மே௴ 26-ம் தேதி முதல் இந்தியா மந்திரி ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்துவிட்டார்.

MR. MARSDEN.

**மிஸ்டர் மார்ஸ்டன்.**— டாக்டர் எப். மார்ஸ்டன் என்பவர் சென்னைக் கவர்ன்மெண்டுக்கு சாயத் தொழில் நிபுணராய்போன மார்ச்சு மாதம்25-ந்தேதி முதல் நியமிக்கப்பட்டிருப்பதாகப் பிரசுரஞ் செய்யப் பட்டிருக்கிறது.

SATYA BALA DEVI.

**ஸத்ய பால தேவி.**—ஸ்த்ய பால தேவி என்ற ஒரு இளம் பிராயமுள்ள வங்காளப் பார்ப்பினி வீணையைக் கைக்கொண்டு சங்கீத சாஸ்திரத்தில் மிகத் தேர்ந்து நமது இந்தியாவில் சங்கீத சாஸ்திரம் க்ஷீண தசை யடைந்திருக்கிற தென்றும், அதை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டு மென்றும், பெரு முயற்சி யெடுத்து வருகிறதாகத் தெரிகிறது. ஸமீபத்தில் இந்த ஸத்ய பாலதேவி, அமெரிக்காவில், ந்யூயார்க் பட்டணத்தில், வீணைச் சங்கீதத்தைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்களாம்.

MR. SANDOW.

**ஸாண்டோ.**—இவர் இந்தியாவுக்கு வந்து தம் தேகாப்பியாஸப் பயிற்சி முறைகளைப் பிரத்யக்ஷமாகக் காட்டிச் சென்றார். இவர் தேகாப்பியாஸப் பயிற்சியில் அநேகருக்குப் போதனை செய்து வருகிறார். இவர் போதனையை நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி இளவரசரா யிருக்கும்பொழுது கேட்டு அதன்படி நடந்ததால் மிக்க பயனை அடைந்தாராம். சக்ரவர்த்தி பன்முறை மிஸ்டர் ஸாண்டோவின் தேகப் பயிற்சிச் சாலைக்குச் சென்றிருக்கிறாராம். இவருக்குத் தம்முடைய பிள்ளைகளுடையவும், ஜனங்களுடையவும் தேகப் பயிற்சியில் அக்கரை மிகுதியாயிருப்பதால், மிஸ்டர் ஸாண்டோவுக்கு, ராஜாவுக்கு சாஸ்திரீயத் தேகப் பயிற்சி போதகாசிரியரென்ற புதிய உத்தியோகத்தைக் கொடுத்திருக்கிறார். மிஸ்டர் ஸாண்டோ இங்கிலாந்தில் 60 ஆயிரம் பிள்ளைகளுக்குச் சம்பள மில்லாமல் தேகப் பயிற்சி முறையைக் கற்பித்து வருகிறார்.

KING GEORGE AND HUNTING.

**ஜார்ஜ் அரசரும் வேட்டையும்.**—ஜார்ஜ் அரசரும் மேரி அரசியும் டெல்ஹி நகரில் மகுடாபிஷேகம் முடிந்தபின் எந்தெந்த ஊர்களைப் பார்வையிட்டுக் கொண்டு வருவார்களென்று இன்னும் தெரியவில்லை. ஆனால், நேபாள தேசத்தில் அரசர் வனவேட்டையாடச் சகல முஸ்திப்புகளும் செய்யப்பட்டு வருகின்றன. அரசர் வேட்டையாடிக் கொண்டிருக்கையில் அரசி சில பட்டணங்களைத் தரிசித்துக் கொண்டு வரலாம். நேபாள தேசத்தின் காடுகளில் நல்ல வேட்டை கிடைக்கும்படியாக இப்போது ஏற்பாடுகள் செய்கிறார்கள். டிசம்பர் மாதம்வரையில் எந்த வேட்டைக்காரரும் காட்டுக்குள் நுழையக் கூடா தென்று கண்டிப்பான கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். வேண்டியதானால் பலவிடங்களில் கழுக்கட்டைகள் போட்டு அடைப்பு உண்டாக்குவார். துஷ்ட மிருகங்கள் அவைகளுக்குள் காப்பாற்றப்பட்டிருக்கும். வேட்டையாடத் துவக்குகையில் காடு கலைப்பதற்காக 500 யானைகளுக்குமேல் உபயோகிக்கப்படு மெனச் சொல்லப் படுகிறது. நேபாள தேசத்தின் காடுகளில் புலிகளும் சிறுத்தைகளும் ஏதேஷ்டமாயிருக்கின்றன. ஆகையால் வேட்டைக்குக் குறைவிருக்காது.

LALA MUNSHI RAM.

**லாலா முன்ஷி ராம்.**—கங்கைநதி மலையிலிருந்து சமபூமியில் பாயும் மகா புண்ணிய ஸ்தலமாயும், ஏகாந்தமாயும்,மனஸுக்கு உத்ஸாகத்தைக்கொடுக்கக் கூடியதாயுமுள்ள ஹரித்வார் மகா க்ஷேத்திரத்தில் ஆரிய ஸமாஜத்தார் குருகுல வாஸ ஸ்தாபனம் ஸ்தாபித்து, அதை லாலா முன்ஷி ராம் என்ற தேசாபிமானி நடத்திவருகிறார். லாலா முன்ஷி ராம் ஜலந்தர் நகரத்தில் தமது வக்கீல் தொழிலை விட்டுவிட்டு அந்த க்ஷேத்திரத்தில் உள்ள குருகுல வாஸத்தை நடத்திவருகிறார். அவர் தமக்குள்ள ஸகல சொத்துக்களையும் இந்த ஸ்தாபனத்துக்காகக் கொடுத்து விட்டார். லாலா முன்ஷி ராம் தேசத்திலுள்ள லக்ஷத்தில் ஒருவராகிய தேசாபிமானி.



## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்

WILL BE SENT OUT.

**வெளியே தள்ளிவிடப்படுவார்கள்.**—நியாயாதிபதி.—நான் தீர்மானம் சொல்லும்பொழுது யாரேனும் குறுக்கே பேசினால், அவர்களைக் கோர்ட்டை விட்டு வெளிப் படுத்திவிடுவேன்.

கைதி.—ஆனால் நான் பேசுகிறேன், என்னை வெளிப்படுத்துங்கள்.

A HORSE'S AFFECTION.

**ஒரு குதிரையின் விசுவாஸம்.**—இங்கிலாந்திலுள்ள உல்வர்ஹாம்டன் என்னும் பட்டணத்தை அடுத்துள்ள ஒரு கிராமத்தில் ஒரு வண்டிக்காரன் ஸமீபத்தில் இறந்துபோனான். அவனுடைய பிணத்தைப் புதைப்பதற்காகக் கொண்டுபோனபோது அவனுடைய குதிரை பிணத்தின் பிறகே சென்று பிணத்தைப் புதைக்கும் பரியந்த மிருந்து திரும்பி வந்தது. அக்குதிரையின் பெயர் ஜானே என்பதாம்.

ONLY ONE BALL.

**ஒரே ஒருபந்துதான்.**—குழந்தையிடம் அன்புள்ள கிழவன்.—துஷ்டப் பயல்களே! இத்தனை நேரம் என் குழந்தையின் உயிரைப் போக்கி இருப்பீர்களே. என்ன நெஞ்சழுத்தத்தோடு இங்கே வந்து பந்தைக் கொடு என்று கேட்கிறீர்கள்?

விளையாட்டுப் பிள்ளைகளில் ஒருவன்.—ஐயா, உம்முடைய பிள்ளையின் உயிர் போகவில்லை. போனாலும் உமக்கு இன்னும் அரை டஜன் பிள்ளைகள் இருக்கிறார்கள். எங்களுக்கு ஒரே ஒரு பந்துதானே இருக்கிறது.

WHIPPED FOR THE GIRL'S HAND.

**பெண்ணிற்காகச் சவுக்கடி படுதல்.**—ஹங்கேரியாவிலுள்ள பஜானென்னும் ஊரில் இருவர் ஒரு குடியானவன் மகளை விரும்பி அவள் முன்னே சென்று தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்து, நாங்களிருவரும் சவுக்கா லடித்துக்கொள்ளுகிறோம். இதில் எவன் வெற்றி பெறுகிறானோ, அவனுக்கு நீ மனைவி யென்று அவள் முன்னே வீட்டின் தூண் இரண்டைப் பிடித்துக்கொண்டு சவுக்கா லடித்துக் கொண்டார்கள். இருவரும் முடிவில் ஸமமாக மூர்ச்சை யடைந்துவிட்டார்களாம். அவள் யாருக்கு மனைவி யாவளோ!

ASS OR HORSE?

**கழுதையா குதிரையா.**—ஜட்ஜவர்கள், ஒரு லாயரைப் பரிகாஸம் பண்ணவேண்டி "லாயர்வாள்! நாமிருவரும் கழுதையும் குதிரையுமாய் மாறும் பக்ஷத்தில், நீங்கள் எதுவாக வேண்டு மென்று கோருவீர்கள்?" என்று கேட்டார். அதற்கு லாயர்,"இது கேட்கவும் வேண்டுமோ! சந்தேக மில்லாமல் கழுதை ஜன்மமே கோருவேன்" என்று பதில் சொன்னார். ஏனென்று ஜட்ஜு கேட்க, "கழுதைக்கு ஒருதடவையாவது ஜட்ஜு வேலை கொடுத்திருக்கிறார்களென்று அறிவோம். ஆனால், குதிரைக்குக் கொடுத்ததாகக் கேட்டதே யில்லை" என்று மறுமொழிசொன்னார்.

PRYING INTO OTHERS SECRETS.

**இன்னொருவர் ஸங்கதியில் பிரவேசித்தல்.**—ஒரு பெரிய மனுஷியர் கடிதம் எழுதிக்கொண்டிருக்கையில் மனுஷியனென்று பெயர் வைத்துக்கொண்டு பக்கத்தில் வந்து உட்கார்ந்திருந்த ஒருவன் திருட்டுத்தனமாய் எட்டிப்பார்த்து எழுதுவதைப் படித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது பெரிய மனுஷியர் "மித்திரரத்தினமே; இப்பொழுது நான் எழுதுவது முழுவதையும் ஒரு துன்மார்க்கன் திருட்டுத்தனமாய் எட்டிப்பார்த்துக்கொண்டிருக்கிறபடியால், ரகஸியங்கள் ஒன்றும் தெரிவிக்க ஸந்தர்ப்ப மில்லை" என்று எழுதவே, மற்றவன், என்னை ஏன் தூஷிக்கிறாய்? என்று அவருடன் சண்டைபோட்டானாம்.

MUNICIPAL VOTE.

**முனிஸிபாலிட்டி வோட்.**—முனிஸிபாலிட்டி மெம்பர் ஆகவேண்டு மென்று ப்ரயத்தனித்துக் கொண்டிருந்த சுப்பிரமணியம் சுப்பராயரிடம் போய் அவரைத் தனக்கு வோட் கொடுக்கும்படி கேட்க, நிஷ்கபடியாகிய சுப்பராயர் தாம் முன்னாலேயே வேறொருவருக்கு வோட் கொடுப்பதாகத் தாம் ஒப்புக் கொண்டு பேச்சுக்கொடுத்துவிட்டஸமாதானத்தைத் தெரிவித்தார். அப்போது சுப்பிரமணியம் ஆ! ஆ! பேச்சுக் கொடுத்தால் மூழ்கிப்போன தென்ன? இப்படிப்பட்ட விஷயத்தில் பேச்சுக் கொடுத்துத் தவறுதல் ஒருபெரிய தப்பாகாது என்று ஸமாதானம் சொன்னார். அப்படியானால் என் வோட் தங்களுக்கே கொடுக்கிறேன் என்று சொல்லி சுப்பராயர் சுப்பிரமணியத்தைச் சந்தோஷப்படுத்தி அனுப்பினார்.

## CURIOSITIES.

## விநோதங்கள்.

PALMYRA WITH BRANCHES.

**கிளையுள்ள பனைமரம்.**—சென்னைக்கடுத்துள்ள எருக்கஞ்சேரியில் பதினைந்து கிளைகளுள்ள பனைமரமொன்றும், செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள ஈச்சம் பாக்கத்தில் பதின்மூன்று கிளைகளுள்ள பனைமரமொன்றும் இருக்கின்றனவாம்.

A BIRD'S NEST ON A SHEEP'S BACK.

**ஆட்டு முதுகில் பறவைக் கூடு.**—ஆஸ்திரேலியா தேசத்திலுள்ள டெலங்கா என்னும் கிராமத்திலே ஏபர்னர் என்பவருடைய மந்தையிலிருந்த ஒரு ஆட்டு முதுகின் கம்பளி ரோமத்துக்குள்ளே ஒரு பறவை கூடுகட்டி முட்டை இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாம். இது அதிசயமல்ல. கேப்காலனி நாட்டில் பிடிக்கப்பட்ட ஒரு காட்டுக் குதிரை வாலிலே ஒரு குருவிக் கூடு இருந்ததாக அத்தேசத்தில் பிரசுரமாகும் கில்டு என்னும் பத்திரிகைக்கு ஒருவர் எழுதுகிறார்.

A STRANGE SHEEP.

**ஓர் ஆட்டுக்குட்டியின் அதிசயப் பிறப்பு.**—டி. ஜீ. ஸ்ரீனிவாசய்யங்கார் என்னும் ஒரு நிருபர் 25-4-1911-ம் தேதி எழுதுகிறார்.—தஞ்சாவூர் ஜில்லா, நரசிங்கன்பேட்டையைச் சேர்ந்த கஞ்சனூர் என்னும் கிராமத்தில், ஓர் ஆடானது, இரண்டு தலைகளுடனும், நான்கு கண்களோடும், நான்கு மூக்குத் துவாரங்களோடும், ஒரு கழுத்தும், நான்கு கால்களோடும் கூடிய ஒரு குட்டியை ஈன்றது. மற்ற அவயவங்கள் எல்லாம் சரியாகவே இருக்கின்றன. இரண்டு வாய்களாலும் ஏககாலத்தில் கத்துகின்றது. தன் தாயிடத்தில் பாலுண்ண முடியவில்லை. ஒரு வாயில் பாலை வார்த்தால் குடிக்கின்றது. ஆனால், இன்னொரு வாயினால் கொஞ்சம் பால் வருகிறது. இதனால் இரண்டு வாய்களுக்கும் வழி இருக்கிறதென்று தெரிகிறது. அது தன் தலைகளைத் தூக்கவாவது அல்லது எதையேனும் தின்னவாவது முடியவில்லை. இந்தக் குட்டி பிறந்து மூன்று தினங்களாகிறது. ஆனால் பிழைப்பது துர்லபமென்று தோன்றுகிறது. இதை நான் இன்று காலை படம் எடுத்திருக்கிறேன். அனேகம் திரளான ஜனங்கள் இப்பேர்ப்பட்ட அபூர்வ ஜந்துவை வந்து பார்த்துப்போகிறார்கள். தாய் ஆடானது ஸவுக்கியமாயிருக்கிறது. அது, இக்குட்டியை ஈன்ற சில நிமிஷங்களுக்கெல்லாம் மற்றொரு குட்டியை ஈன்றது. அது ஸவுக்கியமாய் மற்ற ஸாதாரணக் குட்டிகளைப் போல் இருக்கிறது.

AN OLD TAMARIND TREE.

**ஓர் கிழட்டுப் புளிய மரம்.**—இது திருநெல்வேலி ஜில்லா, திருச்செந்தூர் தாலுகா, ஆழ்வார் திருநகரியில் சுவாமி ஆதிநாதர் ஆழ்வார் கோவிலுக்குள்ளிருக்கிறது.

இது பார்வைக்கு மூன்று மரம்போலிருந்தாலும், ஒரே மரமென்றும், கலியுகம் பிறந்து நாற்பத்தி மூன்றாம் நாள் ஜனித்த ஸகி நம்மாள்வாரானவர் ஷை மரத்தினடியி லிருந்துகொண்டு முப்பத்திரண்டு வருஷம் தபஸிலிருந்து பின்னால் முக்தியடைந்தாரென்றும் ஸ்தல புராணங்களின் மூலமாய் வெளியாகின்றன.

ஷை மரத்தினடியிலிருந்துதான் நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு முந்தி மதுரக்கவி ஆழ்வாருக்கு நான்கு வேத ரகசியங்களைத் தமிழில் மொழி பெயர்த்ததாயும் புராணக் கொள்கை.

ஷை மரமானது மற்ற மரங்களைப்போல பூப்பதும் காய்ப்பதும் தவிர நாளதுவரையில் பழுப்பதே கிடையாது. மேலும் அதிலுள்ள எந்த பாகத்தையாவது அக்னியில் படும்படி செய்தால், உடனே அந்த விருக்ஷம் பூராவும், மனிதர்களின் தேகத்தில் கொப்பளங்களுண்டாவது போல் உண்டாகி ஓர்வித துர்க்கந்த வாஸனை கலந்ததாய் சிவப்பும் வெளுப்புஞ் சேர்ந்ததான ஜலம் வடிவதுண்டு. அதற்குச் சந்தன மறைத்து அப்பினால், உடனே நின்று போவதுமுண்டு என்று சொல்லுகிறார்கள்.

ஷை மரத்தின் வயிரமாயும் உலர்ந்து போயுமிருக்கிற ஒரு துண்டைச் சுத்த மனதுடன் ஜலம் விட்டரைத்து கொட்டைப்பாக்களவு உட்கொண்டால், எவ்வித ரோகமும் குணமாகி வருகிறது.

ஷை மரமானது இன்னும் அபிஷேக ஆராதனைகள் செய்யப் பெற்றும் வருகிறது. இவ்விருக்ஷத்தை ஆதிசேஷ அவதாரம் என்றும், திரேதாயுகத்தில் லக்ஷ்மணப் பெருமாளே மரமாயிருக்கிறார் என்றும் புராணத்தின் கொள்கை என்று ஸ்ரீ வெங்கட்டநாராயண அய்யங்கார், என்ற ஒரு நிருபர் ஒரு பத்திரிகையில் எழுதுகிறார்.



## INDIAN NEWS.

## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

CO-OPERATIVE CONFERENCE.

**ஐக்கிய நாணயச் சங்கங்களின் கூட்டம்.**—தஞ்சாவூர் ஜில்லா நீடாமங்கலத்தில்சமீபத்தில் அந்த ஜில்லா ஐக்கிய நாணயச் சங்கங்களின் கூட்டமொன்று நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு அந்த ஜில்லாவைச் சேர்ந்த ஐக்கிய நாணயச் சங்கப் பிரதிநிதிகளும் சில பெரியமனுஷர்களும் வந்திருந்தார்கள். ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் வந்திருந்த டெலிகேட்டுகளை வரவேற்க, ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் டி. ரெங்காசாரியார் ப்ரஸிடெண்டாயிருந்து இருவரும் ஐக்கியத்தாலுண்டாகும் நன்மைகளைப் பற்றி விஸ்தாரமாயும் திறமையாயும் பேசினார்கள். ராவ் பகதூர் ராமானுஜாசாரியார் ஐக்கிய நாணயச் சங்கங்கள் அவைகளின் மெம்பர்களுக்குக் கடன் கொடுத்து வாங்குதல் அல்லாமல், கிராமவாஸிகள் தங்கள் தொழிலுக்கு வேண்டிய ஸாதகங்களைப் பெறவும், அவைகளினாலுண்டாகும் ஸாமான்களை விற்கவும், கிராமத்தார் சங்கங்களாகச் சேர்ந்து வேலை செய்யக்கூடுமென்று சொன்னார். விவஸாயிகளுக்குப் பல கருவிகளும் எருவும் விதையும் வேண்டியிருக்கும்போதும், நெல் முதலிய விளைபொருள்களை விற்கவேண்டியிருக்கும்போதும், அந்தச் சங்கங்கள் உதவி செய்யக்கூடும் என்று சொன்னார்.

SUBSIDIZED VERNACULAR PAPERS.

**தேசபாஷைப் பத்திரிகைகளுக்குக் கவர்ன்மெண்டுதவி.**—வங்காளக் கவர்ன்மெண்ட் ராய் நரேந்திரநாத் சென் பஹதூர் பிரசுரம் செய்யும் பத்திரிகையில் 62,500 ரூபாய் செலவு செய்து 25,000 காப்பிகள் வாங்கி, பஞ்சாயத்துகள், முனிஸிபாலிட்டிகள், ஸ்கூல்கள், கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், இவர்களுக்கு அனுப்புகிறார்கள். இது மூன்று வருஷத்துக்குச் செய்து பார்க்கப்படும். பம்பாய் கவர்ன்மெண்டார் 'ஜகத்விருத்தம்' என்கிற ஒரு மஹாராஷ்ட்ரவாராந்தரப்பத்திரிகையை வருஷத்துக்கு 5,000 ரூபாய் செலவு செய்து, 10,000 காப்பிகள் வாங்கி, 5 வருஷத்துக்கு மேற்கண்டமாதிரி உபயோகப்படுத்துவார்கள். ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டார் 'இண்டிபென்டெண்ட்' என்கிற உருது வாராந்தப் பத்திரிகையை வருஷம் ஒரு காப்பிக்கு 3 ரூபாய் விழுக்காடு 300 காப்பிகள் வாங்குவார்கள். கீழ் வங்காளக் கவர்ன்மெண்டார் காப்பி யொன்றுக்கு 2 ரூபாய் வீதம் ஒரு பத்திரிகையில் 10,000 காப்பிகள் வாங்குவார்கள். இந்தப் பத்திரிகை வங்காள பாஷையில் நடைபெறும்.

DEATH FROM PLAGUE.

**ப்ளேக்கால் நேரிட்ட மரணங்கள்.**—போன தடவை ஸென்ஸஸைச் சேர்ந்த பத்து வருஷங்களில் இந்தியாவில் பல பாகங்களில் பஞ்சம் நேரிட்டு ஜனத்தொகையின் அபிவிர்த்தி தடைப்பட்டது. இந்தப் பஞ்சத்தை யடுத்து ஜுரம் முதலிய வியாதிகள் ஜனங்களைப் பீடித்தன. இந்தக் காரணங்களால் முக்கியமாய் தேச ஸமஸ்தானங்களில் 50 லக்ஷம் ஜனங்கள் மாண்டுபோனார்கள். இந்தப் பஞ்சத்தையும் இதை யடுத்த வியாதிகளையும்விட பெரும் ரோகமொன்று கடைசி ஸென்ஸஸைச் சேர்ந்த வருஷங்களில் தேசத்தில் பயங்கரமான மரணத் தொகைக்குக் காரணமாயிற்று. பம்பாய் பட்டணத்தில் 1896-ம் வருஷத்தில் ப்ளேக் நோய் தோன்றி 1901-ம் வருஷத்துக்குள் 5 லக்ஷம் மரணங்களுக்குக் காரணமாயிற்று. இது போன ஸென்ஸஸைச் சேர்ந்ததாயிருக்க, இந்த ஸென்ஸஸைச் சேர்ந்த வருஷங்களில் இந்த ப்ளேக்கினாலுண்டான மரணங்கள் பல மாகாணங்களில் நேரிட்டு, ஜனங்களைச் சூறையாடி வருகிறது. இதனால் நேரிட்ட மரணங்கள் 1901-ம் வருஷத்தில் 2,84,000 மாயிருக்க, 1907-ம் வருஷத்தில் 13,16,000 மாயிற்று. அடுத்த 1908-ம் வருஷத்தில் 2,0,000 மாகக் குறைந்தது. 1910-ம் வருஷத்தில் இந்த வியாதியினால் நேரிட்ட மரணம் 5,09,000 மாக மறுபடியும் உயர்ந்தது. இந்த நோயால் இந்தக் கடைசி ஸென்ஸஸில் அடங்கிய 10 வருஷங்களில் நேரிட்ட மரணங்கள் 65 லக்ஷம். இந்தத் தொகையில் மூன்றில் ஒரு பாகத்துக்கு அதிகமாக பஞ்சாப் மாகாணத்திலும், ஐந்தில் இரண்டு பாகம் பம்பாய் ராஜதானியிலும், ஐக்கிய மாகாணங்களிலும் நேரிட்டன.

PROTECTIVE DUTIES.

**காப்பு வரிகள்.**—ஸமீபத்தில் மைலாப்பூரில் நடந்த ஒருமீட்டிங்கில் ஆனரபிள் மிஸ்டர் ஆல்ப்ரெட் சாட்டர்டன் இந்தியாவில் காப்பு வரிகளைப் பற்றி ஒரு வியாஸம் எழுதிப் படித்தார். எந்த இறக்குமதிச் சரக்குகளுக்கு வரி விதித்து அவைகள் நாட்டுக்குள் பிரவேசிக்காமல் தடுப்பதால் உள்நாட்டுத் தொழில்கள் காக்கப்படுமோ, அந்த இறக்குமதி வரிகளுக்குக் காப்பு வரிகள் என்று பெயர். இப்படிப்பட்ட காப்பு வரிகள் இந்தியாவில் கூடாதென்றும், அவைகளை விதிப்பதால் அன்னிய தேச முதலாளிகள் இந்தியாவுக்கு வந்து தொழில்கள் செய்து லாபம் பெறுவார்களே யல்லாமல் இந்தியாவுக்கு நன்மை யுண்டாகா தென்றும், சுதேச முயற்சியானது ஜனங்களுக்கு வியாபாரத் திறமை இல்லாமையால் கைகூடவில்லை யென்றும், இந்தியாவுக்கு நன்மை யுண்டாக வேண்டுமானல், இப்போது உள்ளபடி வரி இல்லாத அன்னிய வியாபாரமே நல்லதென்றும், காப்பு வரிகளைக் கேட்பதை விட்டு இந்தியர் தெரிந்தவர்களா யிருந்தால், விவஸாயத்தை விருத்தி பண்ணுவதில் கருத்தா யிருப்பார்களென்றும், பொருள்பட மிஸ்டர் சாட்டர்டன் ப்ரஸங்கம் செய்தார்.

WORK FOR PRISONERS SET FREE.

**விடுதலையடைந்த கைதிகளுக்கு வேலை.**—ஏதோ குற்றங்களுக்காக ஜெயிலி லிருக்கத் தண்டனை விதிக்கப்படுபவர்கள், அவர்கள் சிறைகாலத்தில் கற்றுக்கொள்ளும் கைத்தொழிலை விடுதலை யடைந்தபின் கைப்பற்ற அவர்களுக்கு ஏதாவது முதல்கொடுப்பது சிறப்பாகு மென்று ஆனரபிள் மிஸ்டர் கிருஷ்ணஸாமி அய்யர் கூடலூர் ஜெயிலைப் பார்வையிட்டபொழுது தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். பங்காளத்தில் விடுதலை யடைபவர்களுக்குப் பண உதவி செய்ய ஒரு பண்டு ஏற்பட்டிருக்கிறது. அம்மாதிரி சென்னையிலும் ஏற்படவேண்டும். இதன் மத்தியில் கோயம்புத்தூர் மால் மில்ஸ் கம்பெனியார் ஸெண்ட்ரல் ஜெயிலதிகாரிகளுடன் ஜெயிலிலிருந்து விடுதலை யடைபவர்களில் நெசவுத் தொழிலில் பயிற்சி பெற்றவர்களைத் தம் கம்பெனியில் சேர்த்துக்கொள்வதைப்பற்றிக் கடிதங்கள் எழுதிக்கொண் டிருக்கிறார்கள். கம்பெனியார் ஜெயில் ஸூபரின்டெண்டெண்டு நற்சாக்ஷிப் பத்திரம் கொடுப்பவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதாக உத்தேசித்திருக்கிறார்களாம். இம்மாதிரியே அங்கங்கே உள்ள கம்பெனிக்காரர்கள் முயற்சித்து வருவார்களாகில், விடுதலை யடைந்தவர்கள் யோக்கியமான வாழ்க்கையைப் பின்பற்ற வழி யுண்டாகும். மால் மில்ஸ் கம்பெனியார் இவ்விஷயத்தில் முதல் முதல் வழி காட்டுவது மெச்சத்தக்க விஷயமாகும்.

COOLIES FROM THE MADRAS PRESIDENCY.

**சென்னை ராஜதானியிலிருந்து கூலிகள்.**—சென்னை ராஜதானியிலிருந்து குடியேற்ற நாடுகளுக்குப் போகும் இந்தியக் கூலிகளின் கணக்கு ரெவெ.ன்யூ போர்டால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. மூன்றும் வருஷத்தைவிட போன வருஷம் அதிகக் கூலிகள் ஏற்றப்பட்டுப் போனதாகத் தெரிகிறது. நேடாலுக்கு மட்டும் மூன்றும் வருஷம் 7 தடவை கப்பல்கள் 2520 கூலிகளுடன் போக, போன வருஷம் 8த் தடவை கப்பல்கள் 3916 கூலிகளுடன் போயின. பீஜி தீவுகளுக்குப் போன வருஷம் ஜூன் மாதம் வரையில் கூலிகள் ஏற்றப்பட்டார்கள். இரண்டு முழுக் கப்பல்களும் வேறு கப்பலொன்றில் பாதியும் 1589 கூலிகளை ஏற்றிக்கொண்டு போயின. ட்ரினிடாட் என்ற தீவுக்கு 5-வருஷம் கூலிகள் ஏற்றப்படாமலிருக்க, போன வருஷத்தில் 471 கூலிகள் போனார்கள். இந்தக் கூலிகளுடன் ஸ்திரீகளும் போனார்கள். மோரிசுக்கும் ஸெஷெல்ஸுக்கும் கூலிகள் போன வருஷம் போகவில்லை. கப்பலேறிப்போன கூலிகள் நன்றாய் நடத்தப்பட்டுத் திருப்தியுடன் சென்றார்கள் என்று ரெவென்யூ போர்ட்டு ரிபோர்ட்டில் சொல்லப்படுகிறது.

நேடாலிலிருந்து திரும்பிவந்த கூலிகள் 2369பேர். இவர்கள் சேகரித்துக் கொண்டுவந்த பணம் 3,20,285 ரூபாய். மோரிஸிலிருந்து 283 கூலிகள் பணமில்லாமல் திரும்பிவந்தார்கள். 53 கூலிகள் பீஜி தீவிலிருந்து கல்கத்தா வழியாய்ச் சென்னைக்குத் திரும்பிவந்தார்கள். மலேயா நாட்டுக்குப்போன கூலிகள் 85,015 பேர். அங்கெ ரப்பர் தோட்டங்களில் அதிகக்கூலி கிடைப்பதால், அவ்வளவு பேர் போனார்களென்று சொல்லப்படுகிறது. பர்மாவுக்குப் போனவர்கள் கூலிகளையும் மற்றவர்களையும்சேர்த்து 1,33,495 பேர். ஸிலோனுக்குப் போனவர்கள் 1,77,181பேர். ஸிலோனுக்குப்போனவர்கள் அநேகமாய் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய ஜில்லாக்களிலிருந்து போனவர்கள்.



FOREIGN NEWS.

அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

SCHOOL HOLIDAYS.

**பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை.**—இங்கிலாந்தில் ஜார்ஜ் அரசருடைய விருப்பத்தின்படியே முடிசூட்டு வைபவ தினங்களில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு 10 நாள் விடுமுறை கொடுக்கப்படும்.

MAHOMEDANS.

**மகமதிய மதத்தினர்.**—உலகத்திலுள்ள மகமதிய மதத்தினரின் தொகை 222,342,599. இவர்களில் கிறிஸ்தவ ஆளுகைக்குட்பட்ட மகமதியர் 161,060,870. கிறிஸ்தவரும் மகமதியரு மல்லாத புறமதத்தினருக் குட்பட்டோர் 23,976,500. மகமதிய ஆளுகைக்குட்பட்டோர் 22,400,000. துருக்கிக்குட்பட்டோர் 15,528,800.

RAIN FORECAST.

**மழை வருஷிப்பைக் காட்டும் கருவி.**—ஜர்மனி தேசத்தில் மழை வருஷிப்பைக் காட்டுவதற்கு ஒரு நூதனமான கருவியைக் கையாடி வருகின்றார்கள். அதாவது, ஒரு பாத்திரத்தில் ஜலம் வார்த்து அதில் ஒரு தவளையைவிட்டு ஒரு சிறிய ஏணியையும் அதற்குள்ளே விட்டு வைப்பார்களாம். அந்தத் தவளை ஏறி உயரே வந்து உட்காருமானல், கட்டாயம் மழை வருஷிக்கும் என்னும் குறிப்பாகுமாம்.

CHINESE CALENDAR.

**சீன பஞ்சாங்கம்.**—உலகத்தில் புஸ்தகங்களிலெல்லாம் அதிகமாக விலையாவது சீன பஞ்சாங்கங்களாகும். எண்பது லக்ஷம் காப்பிகள் வருஷா வருஷம் அச்சடிக்கப்பட்டு ஒரு காப்பியாவது மீதி யாகாமல் எல்லாம் வாங்கப்படுகின்றனவாம். அந்தப் பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டவற்றி லெல்லாம் சீனர்களுக்கு அவ்வளவு பக்தி சிரத்தையும் நம்பிக்கையு முண்டாம்.

NEW METHOD OF SALT MANUFACTURE.

**உப்பு செய்யும் புதிய முறை.**—இங்கிலாந்தைச் சேர்ந்த லங்காஷையர் என்னும் மாகாண வாஸியாகிய மெஸ். ஜேம்ஸ் கொட்சு கிங்ஸன் என்னும் ஓர் நிபுணர் கடலுப்பு செய்வதற்கு ஓர் புதிய முறை கண்டுபிடித்திருக்கிறார். அது மிகச் சுலுவானதாம். அவர் அந்த முறையைப் பற்றித் தமக்குள்ள உரிமை முழுவதையும் 10 லக்ஷம் பவுனுக விற்றிருக்கிறார். அதைப் பெற்றுக்கொண்டோர் விரைவில் பரீக்ஷை நடத்துவார்கள். இம்முறை லகுவில் உப்புண்டாக்குவதற்கு ஏற்றதா யிருக்குமானல், வருங்காலத்தில் அதன் விலை குறைந்துவிடுமென நம்பலாம்.

A 17 YEAR OLD DEAD BODY.

**17 வருஷங்களுக்கு முன் இறந்த ஒருவரின் பிரேதம்.**—ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த இத்தலி தேசத்திலிருக்கும் சொரட்டோ சேனிடா என்ற ஊரில் பிஷப் சோடா 17 வருஷங்களுக்கு முன் இறந்துபோக, அவர் பிரேதம் புதைக்கப்பட்டது. எக்காரணத்தாலோ சமீபத்தில் அவர் கல்லறை திறக்கப்பட்டபொழுது பிஷப் சோடோவின் பிரேதம் கெடாமலும், அழிந்துபோகாமலும் இருந்ததாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. நேபிள்ஸிலுள்ள ப்ரொபஸர்கள் (பண்டிதர்கள்) பிரேதத்தைப் பரிசோதித்துப் பார்த்தார்களாம். திரள் திரளான ஜனங்கள் இது பூலோக அற்புதமென்று கருதிப் போய் தரிசனம் செய்து வருகிறார்களாம். ஸோல்ஜர்கள் பாதுகாப்பில்லாவிட்டால், பிரேதத்தின் பல பாகங்களை மூடபக்தியுள்ள பல ஜனங்கள் கத்தரித்து எடுத்துக்கொண்டு போய்விடுவார்களென்று அஞ்சப்படுகிறது.

OPENING NEW SHOPS.

**புதுக் கடை வைத்தல்.**—ஜப்பானியர்கள் பெரிய பட்டணங்களில், புதிதாய்க் கடை வைத்தால், ஒரு மாதம் வரையில் ஜப்பான் காகித விளக்குகளை ஏகமாய்த் தொங்கவிடுகிறார்கள். பத்துப் பேர்களைக் கூலிகொடுத்துப் பலவகை வர்ணமுள்ள சட்டைகள் மாட்டி, மற்றும் பலவகை வர்ணமுள்ள ஜண்டாக்களில் தன் கடைச் சரக்குகள் விலாஸம் பெரியதாய் எழுதி, பல ஆடைகள் தரித்த பாண்டு வாத்தியக்காரர்கள் ஸகிதம் மெள்ளத் தெருவழியாய் உல்லாஸ நடைநடந்துகொண்டு வாத்தியம் வாசித்துக்கொண்டு போகிறார்கள். சந்திகளில் நிறுத்தி, அதில் கெட்டிக்காரனுயுள்ளவன் நம் பாகத்து நாடக கோட்டியைப்போல் நீண்டதோர் பிரஸங்கம் செய்கிறான். இதற்குப் பெருங் கூட்டம் கூடுகிறது. இந்தப்படித் தங்கள் வியாபாரச் சரக்குகளைப் பகிரங்கப்படுத்துகிறார்கள். இந்தியாவில் அட்வர்டயிஸ்மெண்டு என்றால், இன்னதென்று தெரியாது. சில பெயர்கள் மாத்திரம் பத்திரிகைகளில் இரண்டு அல்லது மூன்று வரிகளில் இன்ன சரக்கு இன்ன விலையென்று குறிப்பிட்டுப் பகிரங்கப்படுத்துகிறார்கள்,

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

(தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் மேமீ 24ஷ ரிபோர்ட்டுப்படி.)

PIECE GOODS.

ஜவுளி ஸாமான்கள்.

மதராஸில் காடா, காஸாக் கச்சை, தோத்தி இவைகளுக்கு நல்ல கிராக்கி. ஸலவைத் துணிகளுக்கு வியாபாரம் மட்டுத்தான். பொதுவாய் மார்க்கெட்டில் சரக்குப் போதாது.

GREY SHIRTINGS—காடா.

| லேடி மார்க்து. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 1110—37 × 37½ × 46″ .. | 7 | 12 | 0 |
| கூண்டு மார்க்து. | | | |
| No. 2500—37 × 37½ × 41″ .. | 6 | 0 | 0 |
| ,, 3500 ஷை 46″ .. | 6 | 10 | 0 |
| ,, 7500 ஷை 54″ .. | 7 | 15 | 0 |
| ,, 5000 ஷை 41″ .. | 6 | 3 | 0 |
| பறவை நாகம் மார்க்து | | | |
| 37 × 37½ × 41″ .. .. | 5 | 8 | 0 |
| 41″ பொன்னூல் குறி. | | | |
| No 3552 .. .. .. | 6 | 12 | 6 |
| ,, 3553 .. .. .. | 6 | 15 | 6 |
| ,, 3554 .. .. .. | 7 | 2 | 6 |
| ,, 3555 .. .. .. | 7 | 5 | 6 |
| ,, 3556 .. .. .. | 7 | 8 | 6 |
| No. 126—46″—37/7½ .. | 9 | 9 | 0 |
| பட்டைக்குறி. | | | |
| No. 7386—46″—37 × 37½ .. | 8 | 0 | 0 |
| ,, 7397—ஷை .. .. | 8 | 6 | 0 |

GREY MULLS—காரிகம்பீஸ் (காஸாக்கச்சை).

| 20 கஜம் இஞ்சின் மார்க்து. | | | |
|---|---|---|---|
| 20 × 20 × 46″ .. .. | 4 | 6 | 6 |
| ஷை 51″ .. .. | 4 | 14 | 6 |
| 22 × 22 × 51″ .. .. | 5 | 6 | 6 |
| ஷை 46″ .. .. | 4 | 14 | 6 |
| 20 கஜம் புறு மார்க்து. | | | |
| 20 × 20 × 46″ .. .. | 4 | 5 | 0 |
| தங்க மீன் மார்க்து. | | | |
| ஷை .. .. | 4 | 5 | 0 |
| நுபா மார்க்து. | | | |
| 40″—20 × 20 .. .. | 4 | 7 | 0 |
| 45″—22 × 22 .. .. | 4 | 14 | 0 |

BOOK MUSLINS.—புக் மஸ்லின்கள்.

| சங்கு மார்க்து 12 கஜம். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 51″—94 .. .. .. | 4 | 0 | 0 |
| ஷை—95 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை—96 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை—97 .. .. .. | 4 | 12 | 0 |
| 52″–170 .. .. .. | 4 | 4 | 0 |
| ஷை–175 .. .. .. | 4 | 8 | 0 |
| ஷை–180 .. .. .. | 4 | 12 | 0 |
| ஷை–185 .. .. .. | 5 | 0 | 0 |
| ஷை–887 .. .. .. | 8 | 8 | 0 |

COLOURED BOOK MUSLINS—கலர் புக் மஸ்லின்.

| | | | |
|---|---|---|---|
| ராணி மார்க்து. .. .. | 2 | 12 | 0 |
| லக்ஷ்மி நாராயணன் மார்க்து .. | 2 | 11 | 0 |
| பள்ளிக்கூடப் பையன் மார்க்து .. | 2 | 10 | 0 |

JACONETS.—ஜாக்கிநேட்டுகள்.

| 46″ தங்க விநயகர் மார்க்து. | | | |
|---|---|---|---|
| No. 888 .. .. .. | 5 | 9 | 6 |
| ,, 777 .. .. .. | 5 | 4 | 6 |
| ,, 666 .. .. .. | 5 | 3 | 6 |
| ,, 555 .. .. .. | 5 | 0 | 6 |
| ,, 444 .. .. .. | 4 | 13 | 6 |
| ,, 333 .. .. .. | 4 | 10 | 0 |
| 20 கஜம் 46″ தங்கக் குழந்தை மார்க்து. | | | |
| No. 2662 .. .. .. | 4 | 11 | 0 |
| ,, 89 .. .. .. | 4 | 14 | 0 |
| ,, 898 .. .. .. | 4 | 15 | 0 |
| ,, 8989 .. .. .. | 5 | 2 | 0 |
| ,, 89898 .. .. .. | 5 | 4 | 0 |
| ,, 898989 .. .. .. | 5 | 6 | 0 |
| ,, 3771 .. .. .. | 4 | 7 | 0 |
| ,, 3772 .. .. .. | 4 | 9 | 6 |

WHITE MULLS—ஸலவை மல்லுகள்.

| | | | |
|---|---|---|---|
| No 1703 .. .. .. | 7 | 4 | 0 |
| ,, 1503 .. .. .. | 7 | 0 | 0 |
| ,, 1502 .. .. .. | 6 | 2 | 6 |
| ,, 1702 .. .. .. | 6 | 6 | 0 |
| ,, 1704 .. .. .. | 7 | 8 | 0 |
| ,, 136—40″—18 கஜம் .. | 2 | 2 | 0 |
| ,, 9072—46″ 20 கஜம் .. | 4 | 12 | 0 |
| ,, 9073—51″ ஷை .. | 5 | 4 | 0 |
| ,, 5072—46″ ஷை .. | 4 | 12 | 0 |
| ,, 5073—51″ ஷை .. | 5 | 4 | 0 |
| ,, 912—46″ ஷை .. | 4 | 9 | 0 |
| ,, 913—51″ ஷை .. | 5 | 1 | 0 |
| ,, 3073 .. .. .. | 5 | 12 | 0 |
| ,, 7073 .. .. .. | 5 | 13 | 0 |
| ,, 973 .. .. .. | 5 | 13 | 0 |
| மெடல் மார்க்து. | | | |
| ,, 7773 .. .. .. | 6 | 4 | 0 |



| ஸவரன் மார்க்து. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 273 .. .. .. | 6 | 5 | 0 |
| 72—46″ 20 கஜம் .. .. | 4 | 2 | 0 |
| 73—51″ ஷை .. .. | 4 | 10 | 0 |

WHITE SHIRTINGS—லாங் க்லாத்.

| | | | |
|---|---|---|---|
| H. K. 62 36″ 40 கஜம் .. | 9 | 8 | 0 |
| ஷை 82 ஷை .. | 9 | 12 | 0 |

RED SHIRTINGS—தோம்பு.

| ஸ்வதன்வா மார்க்து. | | | |
|---|---|---|---|
| 7 டிக்கெட்டு .. .. | 6 | 4 | 6 |
| 7 ஷை .. .. .. | 6 | 8 | 6 |
| 8 ஷை .. .. .. | 6 | 12 | 6 |
| No. 10—41″ 40 கஜம் .. .. | 8 | 3 | 0 |
| ஒட்டை மார்க்து. | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 7 | 3 | 0 |
| 8 ஷை .. .. | 7 | 7 | 0 |

YARN AND TWIST—நூலும் முறுக்கு நூலும்.

| | | | |
|---|---|---|---|
| ஆமதாபாத் காரம் 40—சைஞெ டிக்கெட்டு—செகப்பும் மஞ்சள் முடியும். | 3 | 0 | 0 |
| பம்பாய் காரம் 40 டவர் அண்ட் ஸேட் மார்க்கு .. .. .. | 3 | 11 | 0 |

MANCHESTER YARN—சீமை நூல்.

சீமை நூலுக்கு கிராக்கியிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| காரம் 40 ஜி. எம். (G.M.) ட்ரம்மர் | 4 | 0 | 0 |
| ஷை க்ளாஸ்கோ .. | 4 | 3 | |
| ஷை தங்கமயில் .. .. | 4 | 0 | 6 |
| ஷை மதுராபட்டணம் ஜி.எம். | 4 | 0 | 0 |
| ஷை பாக்கு வெட்டி .. | 4 | 0 | 0 |
| ஷை ஆதிசேஷன் .. | 4 | 2 | 0 |
| ஷை ஸலவை 80 மகாராஜா | 7 | 6 | 0 |
| ஷை 30 கெடிகாரம் .. | 4 | 0 | 0 |
| ஷை ஷை தண்ணித்துரை .. | 3 | 15 | 0 |
| ,, 50 ம்யூல்-கிழவன் .. | 4 | 8 | 6 |
| ,, ஷை ஷை 70/80 .. | 6 | 2 | 0 |
| 50 மீடியோ G. F. M. ஒட்டையும் யானையும் | 5 | 12 | 0 |
| 60 மீடியோ .. .. .. | 6 | 3 | 6 |

RED—செகப்பு.

| | | | |
|---|---|---|---|
| 60 இரட்டைமயில் .. .. | 8 | 7 | 0 |
| 40 முனிஸிபாலிட்டி (புல்வெயிட்) | 11 | 3 | 0 |
| 40 புத்தா .. .. | 6 | 0 | 0 |
| ,, வில்லேஜ் 4 டிக்கெட்டு .. .. | 5 | 3 | 0 |
| ,, ராவணேஸ்வரன் .. .. | 11 | 3 | 0 |
| ,, அஹல்யை ராமர் .. .. | 11 | 2 | 0 |
| ,, பொம்மி செட்டி .. .. | 11 | 2 | 0 |
| ,, மோட்டார்கார் .. .. | 10 | 6 | 0 |
| ,, போரா பஸார் .. .. | 6 | 0 | 6 |
| ,, பூப்ஸானி இரண்டு கட்டு .. | 11 | 2 | 0 |
| 60 ஆதிசேஷன் .. .. | 8 | 4 | 0 |

YELLOW—அரை மஞ்சள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 42/40 இஞ்சின் .. .. | 4 | 12 | 0 |
| 40 ஸ்டீமர் .. .. | 4 | 12 | 0 |
| 44/40 யானை .. .. | 4 | 7 | 0 |
| 40 கெங்கை (ஜகன்மோஹினி) புல்வெயிட் | 4 | 14 | 0 |
| காசி ராஜா .. .. | 4 | 13 | 6 |
| 44/40 கிருஷ்ணன் .. .. | 4 | 10 | 6 |

LEMON AND ORANGE—கால் மஞ்சள் முழு மஞ்சள்.

| | | | |
|---|---|---|---|
| 44/40 கால் மஞ்சள் கிருஷ்ணன் | 4 | 10 | 6 |
| ,, முழு மஞ்சள் ஷை .. | 5 | 0 | 0 |
| 40 முழு மஞ்சள் ஷை .. | 5 | 2 | 0 |
| ,, ஷை காசி ராஜா .. .. | 5 | 2 | 0 |
| 40 கால் மஞ்சள் ஸ்டீமர் .. | 4 | 12 | 6 |
| ,, முழு மஞ்சள் ,, .. | 5 | 3 | 0 |

BLACK—கறுப்பு.

| | | | |
|---|---|---|---|
| 44/40 குதிரை .. .. | 4 | 12 | 0 |
| 30 ஸரஸ்வதி .. .. | 4 | 5 | 0 |

HIDES AND SKINS—மாட்டு ஆட்டுத் தோல்கள்.

| | ரூ. | அ. | பை. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| மாஞு (மாட்டுத்தோல்) | | | | | | | |
| பல்லாரி .. .. | | | | | 0 | 13 | 9 |
| பங்களூர் கமேலா .. .. | | | | | 0 | 13 | 3 |
| ஷை உப்புத்தோல் | 0 | 12 | 8 | முதல் | 0 | 12 | 9 |
| ஹைதராபாக்கம் .. .. | | | | | 0 | 13 | 5 |
| மட்வாடா .. .. | | | | | 0 | 12 | 7 |
| ஏலூர் ருஜமஹேந்திரபுறம் | 0 | 12 | 8 | முதல் | 0 | 12 | 9 |
| செட்டி கடல்கரை | 0 | 12 | 3 | முதல் | 0 | 12 | 9 |
| சீவரம் | | | | | 0 | 12 | 0 |
| குடியாத்தம் | 0 | 12 | 0 | முதல் | 0 | 12 | 3 |
| பல்லாவரம் .. | 0 | 11 | 6 | முதல் | 0 | 11 | 9 |
| யேஞு (எருமைத்தோல்) | | | | | | | |
| ராயதுர்க்கம் .. .. | | | | | 0 | 10 | 6 |
| பல்லாரி .. .. | | | | | 0 | 10 | 6 |
| பங்களூர் | 0 | 9 | 3 | முதல் | 0 | 9 | 5 |
| வேஞு (வெள்ளாடு) | | | | | | | |
| ஹைதராபாக்கம். | | | | | | | |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 5 | 6 |
| சேஞு (செம்மறி ஆடு) | | | | | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | 1 | 14 | 8 | முதல் | 1 | 15 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 0 | 6 |
| சேலம் | 1 | 10 | 0 | முதல் | 1 | 13 | 0 |
| மட்வாடா | 1 | 3 | 6 | முதல் | 1 | 4 | 6 |

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 25 முதல் 32 |
| கொன்னைப்பட்டை ஷை | 14 முதல் 15 |
| கடப்பை கடுக்காய் ஷை | 7 முதல் 8 |
| சேலம் அரசகிரிஷை ஷை | 18 முதல் 19 |
| நல்லெண்ணெய் ஷை | 105 |
| புங்கம் எண்ணெய் ஷை | 65 முதல் 80 |
| எட்டிக்கொட்டை ஷை | 15 0 0 |
| பூந்திக்கொட்டை ஷை | 10 8 0 |
| விளக்கெண்ணெய் ஷை | 71 முதல் 72 |
| மணிலாக்கொட்டைபருப்பு பாரம் 1-க்கு | 34 முதல் 35 |
| உடைக்காதது 42 மணங்கு .. | 55 முதல் 56 |
| கொட்டை முத்து 165 ராத்தல் .. | 9½ முதல் 10½ |

| | ரூ. அ. பை. |
|---|---|
| ரங்கூன் அரிசி 63 படி .. | வரவில்லை |
| பந்தர் பச்சை அரிசி 44 படி .. | 7 12 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 6 6 |
| கோதுமை 4 படி முதல் 4½ படி .. | 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் .. | |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் .. | 12 8 0 |
| ஷை (பல்லாரி) ஷை .. | 13 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு ஷை | 15 முதல் 16 |

METALS—லோகங்கள்.

| | ரூ. |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ்ம் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் .. | 198 |
| செப்புத் தகடுகள் பாரம் .. | 241 |
| செப்புக்கட்டி ஷை .. | 208 |
| நாகம் ஷை .. | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 74 |
| ஈயம் ஷை .. | 54 |
| காரீயம் ஷை .. | 49 |
| வெள்ளீயம் ஷை .. | 189 வராகன். |

IRON—இரும்பு.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் ரூ. | 21—23 |
| சீமை .. .. .. | 43 |
| மருக்கி தகடு 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு .. .. | 27—28 |
| 8 பட்டை எஃகு .. .. | 23 |
| எஃகு வில்கட்டு .. .. | 27—31 |
| திராணைக் கம்பி மருக்கி 2 நெ. .. | 21 |
| சீமை .. .. | 40-46-49 |

## SEASON.

## காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1911ஹு மே மீ 1-உயிலிருந்து, 31-உ வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், லெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 1·88 | 2·75 |
| வால்டேர் | 0·37 | 1·21 |
| காக்கிநாடா | 1·44 | 1·69 |
| மசூலிப்பட்டணம் | 2·91 | 1·64 |
| நெல்லூர் | 0·32 | 0·76 |
| மதராஸ் | 0·01 | 1·37 |
| கூடலூர் | 0·14 | 1·11 |
| நாகப்பட்டணம் | 1·19 | 2·14 |
| பாம்பன் | 0·03 | 2·94 |
| கொழும்பு | 10·69 | 22·86 |
| திருவநந்தபுரம் | 3·90 | 12·73 |
| கொச்சி | 22·23 | 16·65 |
| கள்ளிக்கோட்டை | 10·58 | 11·27 |
| மங்களூர் | 2·24 | 7·19 |
| மெர்க்காரா | 8·03 | 7·72 |
| ஐதராபாத் | 1·13 | 1·54 |
| ரெய்ச்சூர் | 0·70 | 1·36 |
| பல்லாரி | 2·05 | 2·57 |
| கர்நூல் | 0·82 | 1·79 |
| கடப்பை | 5·32 | 2·14 |
| ஹாஸ்ஸான் | 5·64 | 7·97 |
| பெங்களூர் | 4·96 | 5·01 |
| கொடைக்கானல் | 14·07 | 9·72 |
| உதகமண்டலம் | 14·08 | .. |
| கோயம்புத்தூர் | 2·46 | 3·92 |
| வேலூர் | 3·39 | .. |
| சேலம் | 5·84 | 6·72 |
| திருச்சிநாப்பள்ளி | 3·95 | 4·93 |
| புதுக்கோட்டை | 6·53 | .. |
| மதுரை | 4·68 | 4·81 |
| திருநெல்வேலி | 1·35 | 4·57 |


# பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. விரோதிகிருதுஹு ஆனிமீ—JUNE 1911. ஸஞ்சிகை 6. No. 6.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி .. | 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி .. | 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3 | Vol. 3. — விரோதிகிருதுஸு ஆனிமீ—JUNE 1911. — ஸஞ்சிகை 6. | No. 6.

### பொருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| **பத்திராதிபர் குறிப்புகள்** | |
| அரசனுக்கு முடி சூட்டு-பாங்கிகளில் உன் பணத்தைப் போட்டுவை-மூக்கிலிருந்து ரத்தம் ஒழுகுதல்-தங்க வெள்ளி ஜரிகைகள்-இலவை மரம்-நெல் நாற்றுகள்-தீண்டாதவர்கள்-கைப்பழக்கம் .. | .. 283-288 |
| **விசேஷ வியாஸங்கள்** | |
| கம்போடியாப் பருத்தி ஸாகுபடி —வி. எஸ். நாராயணஸாமி அய்யர் | 289 |
| ஆகாயக் கப்பல்களும், கீல் பறவைகளும் —எம். வி. எஸ். அனந்தபத்மநாப ராவ் | 293 |
| ஸ்திரீகளுக்குற்ற சிறு தொழில்கள் —எஸ். சோமசுந்தர தேசிகர் .. | 299 |
| எலிகளைத் தொலைத்தல் —வெ. ப. திருமலையப்ப முதலியார் | 301 |
| ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவின் ஆரம்பமும் நோக்கமும் .. | 303 |
| **விசேஷத்திரட்டு** | |
| இஞ்சிவற்றல் (முற்பா) செய்தல் .. | 305 |
| ஸென்ஸஸ் கதைகள் .. | 306 |
| இந்தியாவினால் இங்கிலாந்துக்கு என்ன பிரயோசனம் .. | 307 |
| குழந்தைகளுக்குக் கைத்தீனி கொடுப்பது | 309 |
| ப்ளேக் வியாதி .. .. | 310 |
| **பத்திரிகை ஆராய்ச்சி** | |
| விவஸாயிக்கு ஒரு யோசனை .. | 313 |
| வரசுல்கம் .. .. | 313 |
| இந்திய சரித்திரத்திலிருந்து சில புத்திமதிகள் .. .. | 315 |
| **புஸ்தக ஆராய்ச்சி** .. .. | 316 |
| **சிறுவர் பகுதி** .. .. | .. 317-318 |
| **ஸ்திரீகள் பகுதி** .. | .. 319-320 |
| **பகுதிக் குறிப்புகள்** | |
| விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. | 321-330 |
| **மாஸ வர்த்தமானம்** .. | .. 331-333 |
| **மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. | 334-336 |


### CONTENTS.


| | PAGE. |
|---|---|
| **Editorial Notes** | |
| The Coronation of the King-Deposit Your Money in Banks-Nose Bleeding-Gold and Silver Yarns-Kapok-Paddy Seedlings-The Depressed Classes-Manual Training ... ... | ...283-288 |
| **Special Articles** | |
| Cultivation of Cambodia Cotton — V. S. Narayanaswami Aiyar ... ... | 289 |
| Dirigibles and Aeroplanes — M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T. ... | 293 |
| Small Industries for Women — S. Somasundara Desikar ... .. ... | 299 |
| Rat Extermination — V. P. Thirumaliappa Mudaliar ... ... | 301 |
| The Origin and Scope of the Registration Department ... ... ... ... | 303 |
| **Selections** | |
| Preparation of Green Ginger ... ... | 305 |
| Census Stories ... ... | 306 |
| The Benefits to England from India ... | 307 |
| Artifical Feeding of Chilren ... ... | 309 |
| Plague ... ... ... ... | 310 |
| **Review of the Press** | |
| A Suggestion to the Ryot ... ... ... | 313 |
| Varasulkam ... ... ... ... | 313 |
| Some Lessons from Indian History ... ... | 315 |
| **Reviews of Books** ... ... ... ... | 316 |
| **The Boys' Section** ... ... ... | ...317-318 |
| **The Ladies' Section** ... ... ... | ...319-320 |
| **Departmental Notes** | |
| Agricultural Notes ... ... ... ... | 321 |
| Industrial Notes ... ... ... ... | 323 |
| Educational Notes ... ... ... ... | 324 |
| Scientific Notes ... ... ... ... | 325 |
| Medical Notes ... ... ... ... | 326 |
| Legal Notes ... ... ... ... | 327 |
| Personal Notes ... ... ... ... | 328 |
| Fun and Anecdote ... ... ... ... | 329 |
| Curiosities ... ... ... ... | 330 |
| **News of the Month** ... .. ... | ...331-333 |
| **Madras Market Reports** ... ... | 334-336 |




# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### The Coronation of the King.

அரசனுக்கு முடிசூட்டு.—நாளது மாஸம் 22-ம் தேதியன்று இங்கிலாந்தில் லண்டன் நகரத்தில் நம்முடைய சக்ரவர்த்தி அவர்களுடைய மகுடாபிஷேகம் வெகு விமரிசையோடும் குதூஹலத்தோடும் நடந்ததாக அங்கிருந்து வந்த தந்திகள் மூலமாய் அறிகிறோம். இந்த மகோத்ஸவத்திற்கு குடியேற்ற நாடுகளிலிருந்து மந்திரிகளும், அயல்தேசத்து ராஜாக்களும், இந்தியாவிலிருந்து சிலசிற்றரசர்களும், இன்னும் பல கனவான்கள், தனவான்கள், வித்வான்கள் ஆகிய பிரமுகர்களும் வந்திருந்தார்களாம். இந்த உற்ஸவத்தைப் பார்ப்பதற்காக வந்த ஸாதாரண ஜனங்களின்எண்ணிக்கை இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. ஊர்வலம்போன ரோடுகளில் எள்ளைப்போட்டால்எள் விழாமல் அவ்வளவு ஜன நெருக்கம் இருந்ததாம். தெருக்களில் செய்திருந்த அலங்காரங்கள் விநோதம் விநோதமாக இருந்தனவாம். உலகத்திலுள்ள நாலில் ஒரு பங்கு நிலத்தையும் ஐந்திலொரு பங்கு ப்ரஜைகளையும் ஆளும் நம்முடைய ஜார்ஜ் அரசருக்கும் மேரி அரசிக்கும் உள்ள தசைக்குத் தகுந்தபடியே மகுடாபிஷேகம் நடந்தது. இவர்கள் இருவரும் நீதி நெறி தவறாது நெடுநாளும் அரசாள வேண்டுமென்பதே அவர்களுடைய அத்யந்த பக்தியுடைய ப்ரஜைகளின் கோரிக்கையாம்.

### Deposit Your Money in Banks.

பாங்கிகளில் உன் பணத்தைப்போட்டுவை.—ஒவ்வொருவனும் அவனுக்குள்ள மிகுதிப் பணத்தை பாங்கிகளிலேயே போட்டுவைக்க வேணும். ஏனென்றால்,

(1) ஒருவன் பணத்தைத் தன் ஸொந்த வீட்டில் வைத்துக்கொண்டிருந்தால், அதைக் கொண்டுபோகத் திருடன்வருவான். பணத்தை எடுக்கவந்த திருடன் உயிரையும் எடுத்து விடுவான்.

(2) வீட்டில் வைத்திருக்கிற பணத்துக்கு வட்டி யில்லை. பாங்கிகளில் போட்டிருந்தால், போட்ட பணத்துக்கு 6 மாஸத்துக்கு ஒரு தடவை வட்டி கொடுப்பார்கள்.

(3) பாங்கிகளில் போட்ட பணம் வேண்டியபோது கிடைக்கும். அதனால் தொந்தரவும் குறைச்சல். எப்படி என்றால் பணம் வேண்டுமானால், உள்ளைத் திறந்து, பெட்டியைத் திறந்து, பையை அவிழ்த்து, எண்ணியெடுத்துக்கொடுத்துவிட்டு மறுபடியும் பணத்தைப் பத்திரப்படுத்தி உள்ளே வைக்கவேண்டும். பாங்கியில் பணம் போட்டிருந்தால், ஒரு செக்கை எழுதியனுப்பினால், பணம் கொடுக்க வேண்டியவர்களுக்கு பாங்கிக்காரர் கொடுத்து விடுவார்கள். இதே மாதிரியாக பாங்கியோடு பத்து வரவு வைத்துக்கொண்டிருக்கிறவனுக்குப் பணத்துக்கு பதிலாக செக்கு கிடைக்கும்பக்ஷத்தில், கிடைத்த செக்குக்கு, தானே போய் பணத்தை வசூல் செய்ய வேண்டியதில்லை. பாங்கிக்கு அனுப்பிவிட்டால், அவர்கள் ஒரு செலவு மில்லாமல் பணத்தை வசூல் செய்து வரவு வைத்துக்கொண்டு விடுவார்கள்.

(4) பாங்கிகளில் பணம் போட்டு வைப்பதற்கு யாதொரு செலவு மில்லை. இன்னும் ஆறு மாஸத்துக் கொருதடவை வட்டி வருகிறது. வீட்டில் பணத்தை வைத்துக்கொண்டிருப்பதனால், அதற்கு பந்தோபஸ்தான இடம் தேடி கட்டிக் காப்பது ரொம்ப கஷ்டம்.

(5) இந்தியாவில் ஜனங்களெல்லாரும் வீட்டில் பணத்தை வைத்துக்கொள்ளாமல்

பாங்கிகளில் போட்டு வைப்பார்களானால், செல்வம் விர்த்தியாகும். உதாரணமாக, தலைக்கு ஒரு ரூபாய் பாங்கியில் போடுவதாகவும் அதற்கு வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு மூன்று வீதம் வட்டி கொடுக்கப்படுவதாகவும் வைத்துக்கொண்டால், இந்தியா ஒவ்வொரு வருஷமும் ஒரு கோடி ரூபாய் அதிக செல்வமுள்ளதாகும்.

**Nose Bleeding.**

மூக்கிலிருந்து ரத்தம் ஒழுகுதல்.—ஒருவன் அவனுக்கு ப்ரியமுள்ள பழத்தையோ, அல்லது வேறு பதார்த்தத்தையோ கண்டுவிட்டால், அவனுடைய நாக்கில் ஜலம் ஊறிவிட்டதாகச் சொல்லுகிறான். தின்னவேண்டுமென்று மனஸில் ப்ரியம் தோன்றிய மாத்திரத்தில் நாக்கில் ஜலம் ஊறிவிடுகிறது. அதுபோலவே மனஸின் எண்ணத்தின்படியே உடம்பிலுள்ள ரத்த ஓட்டமும், என்று லாரென்ஸ் ஹாட்ஜெஸ் என்னும் ஒருவர் பலதடவை பரிசீலனை செய்து கண்டுபிடித்திருக்கிறார். மூக்கிலிருந்து ரத்தம் வந்தால், மாடிக்குப் படிவழியாக மூட்டையைத் தூக்கிக்கொண்டு வேகமாய் ஏறுவதாக எண்ணிக்கொள்ளச் சொல்லியோ, அல்லது வேறு ஏதோ கடுமையும் தேக சிரமமுமான வேலை செய்வதாக எண்ணிக்கொள்ளச் சொல்லியோ ரத்தம் வருவதை நிறுத்திவிட்டாராம். நாம் ஓடும்பொழுது நம்முடைய கால்களில் ரத்த ஓட்டம் அதிகப்படுகிறது. இது தெரிந்த விஷயம். ஓடுவதாக மனஸில் எண்ணிக்கொண்டு விட்டால், வாஸ்தவத்தில் ஓடினால் எப்படி ரத்தம் அதிகரிக்கிறதோ, அதைப்போல் கால்களில் ரத்த ஓட்டம் அதிகரித்து விடுகிறது ஆகவே மூக்கில் ரத்த ஓட்டம் குறைந்து போய்விடுகிறது.

**Gold and Silver Yarns.**

தங்கவெள்ளி ஜரிகைகள்.—தங்கம், வெள்ளி இவைகளாலான ஜரிகை செய்வது ரொம்பவும் கஷ்டமான வேலை. ரொம்பகாலம் பிடிப்பதோடுகூட நல்ல கெட்டிக்கார வேலையாட்கள் வேண்டும். தவிர, இதற்கென்றே ஏற்பட்ட யந்திரங்களும் வேண்டும். இப்பொழுது ஜரிகை எப்படிச் செய்கிறார்களென்றால், நூலின்மேல் எந்த உலோக ஜரிகை வேண்டுமோ, அந்த உலோக இழைகளைச் சுற்றுகிறார்கள். இதனால் ஜரிகை ஒரே ஸமனாய் வழவழப்பாயிருப்பதில்லை. ரொம்ப சேதமும் நேரிடுகிறது. நூலைவிட்டு ஜரிகை பிரிந்தும்போகிறது. இந்தக் கஷ்டங்களெல்லாம் ஒருவாறு நீங்கிவிடும்போல் தோன்றுகிறது. ப்ரான்ஸ் தேசத்து ப்ரதான பட்டணமாகிய பாரிஸ் பட்டணத்தில் ஒரு புதியமுறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. முதலில் நூலை சில வஸ்துக்கள் கரைக்கப்பட்ட ஜலத்தில் நனைக்கிறார்கள். இப்படி நனைத்த நூலை எந்த உலோக ஜரிகை வேண்டுமோ, அந்த உலோகத்து ஸன்னமான பொடியில் தோய்த்து எடுக்கிறார்கள். நூலிலுள்ள ஈரத்தினால் உலோகப்பொடி நூலோடு ஒட்டிக்கொள்ளுகிறது. இப்படிப்பொடி ஒட்டிக்கொண்ட நூலை முதலில் கரைத்த ஜலத்தில் மறுபடியும் நனைக்கிறார்கள். இப்படிச் செய்வதால், உலோகப் பொடி நூலோடு கெட்டியாய் ஒட்டிக்கொள்வதோடு ஜரிகைக்கு ஒரு பளபளப்பு ஏற்பட்டு அது கறுத்துப் போகாமலும் செய்துவிடுகிறது. ஸதாரணமாய் பித்தளை ஜரிகை சிலகாலமானதும் கறுத்து விடுகிறது. புதிய முறையில் இப்படிக் கறுத்துப் போவதில்லை. தவிர, ஜரிகை செய்வதற்கு, செலவும் முன்ஆனதில் மூன்றில் இரண்டு பங்குதான் ஆகிறது. எல்லாவற்றையும் உத்தேசிக்கும்போது ஜரிகை சேர்ந்த வேலைகளின் விலை சீக்



கிரத்தில் ரொம்ப இறங்குமென்று தோன்றுகிறது.

**Kapok.**

இலவை மரம்:-இந்த மரத்தை அநேக ஊர்களிலும் கோவில்களிலும் பார்க்கலாம். இலவம் பஞ்சு தலையணைகளுக்கும், மெத்தைகளுக்கும் அடைப்பதற்கு மட்டும் இந்தியாவில் உபயோகப்படுகிறது. இப்பொழுது இந்த இலவம் பஞ்சுக்கு நல்ல தசை பிறந்திருக்கிறதுபோல் தோன்றுகிறது

இந்தப் பஞ்சை இதுவரையில் இதர தேசங்களில் அவ்வளவாக உபயோகித்ததில்லை. சிலகாலமாக ஹாலெண்ட், ஜெர்மனி, ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள், இவைகளில் மெத்தை, தலையணை, நாற்காலி முதலியவைகளுக்கு அடைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இங்கிலாந்தில் இன்னும் அவ்வளவாகமேற்சொன்னவாறு உபயோகிக்க ஆரம்பிக்கவில்லை ஆனால் இங்கே இலவம்பஞ்சை இன்னொரு புதிய விதமாக உபயோகப்படுத்தலாமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆறு, ஸமுத்திரம் முதலிய பெரும் வெள்ளங்களில் ஜனங்கள் மூழ்கிப் போகாமல் உபயோகிக்கும் தெப்பங்களுக்கு இதுவரையில் நெட்டி, மயிர் முதலியவைகளை உபயோகித்து வந்தார்கள். இப்பொழுது இலவம் பஞ்சை உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு ராத்தல் இலவம்பஞ்சு 30 அல்லது 35-ராத்தல் கனமுள்ள பளுவைத் தண்ணீரில் மிதத்தும். இதனாலும், நெட்டியைவிட மலிவானதாலும், இலவம் பஞ்சுக்கு ரொம்ப கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் தவிர மற்ற தேசங்களில் பத்து வருஷத்துக்குமுன் இதைக் கேட்பாரில்லை. இப்பொழுதோ இதில் வியாபாரம் பலத்துவிட்டது. ஐரோப்பாவில் ஹாலண்டு தேசத்தில் ராட்டர்டாம்என்னும் பட்டணத்தில்தான் இதில் கனத்த வியாபாரம். இண்டோசைனா, இந்தியா, பினாங்கு, சிங்கப்பூர், மலேதீவுகள் முதலிய இடங்களில் இலவ மரங்களிருந்தபோதிலும் முதல்தர இலவம் பஞ்சு ஜாவா தீவிலிருந்துதான் ஏற்றுமதியாகிறது. இதற்கு விலையும் ஜாஸ்தி கிடைக்கிறது இந்திய இலவம் பஞ்சுக்கு நல்ல விலை கிடைக்காதது இலவங்காயை உடைத்துப் பஞ்சை அடித்து மூட்டை கட்டி அனுப்புவதில் ஸரியான கவனமில்லாமையால்தான் என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் இந்தியாவின் இலவ மரத்தின் வாசியென்றும், இந்தியாவின் சீதோஷ்ணஸ்திதி என்றும் பலவாறாகக் காரணம் சொல்லுகிறார்கள். இலவமரத்துப்பட்டையிலிருந்து மருந்துக்கு உபயோகமான ஒருவித பிசினி அகப்படுகிறது. மரத்தைத் தோல் பதனிடுவதில் உபயோகிக்கிறார்கள். ஸாதாரணப் பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைப்போல் ஒரு எண்ணெயும் இலவம் பருத்திக்கொட்டையிலிருந்து இறக்குகிறார்கள். 100-க்கு 28-வீதம் எண்ணெய் காண்கிறது. இந்த எண்ணெயை ஹாலண்டில் சாப்பாட்டுக்கும் ஸோப்பு செய்வதற்கும் உபயோகிக்கிறார்கள். பிண்ணாக்கு மாடுகளுக்கு நல்ல தீனியாகிறது. மரம் அவ்வளவாகப் பிரயோஜனப்படுகிறதில்லை. பொம்மைகள் செய்ய உதவும். இந்த மரத்தைப் பயிர்செய்வதில் அதிக சிரமம் இல்லையாதலால், அதை வளர்க்கக்கூடிய இடங்களிலெல்லாம் வைத்து வளர்ப்பது லாபகரமாயிருக்கும். ப்ரான்ஸ், ஜெர்மனி குடியேற்ற நாடுகளிலும், ஆப்ரிக்கா, அமெரிக்கா, இந்தக் கண்டங்களிலும் இதில் ரொம்ப கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆப்ரிக்கா, அமெரிக்கா இவைகளிலிருந்து மாதிரி இலவம் பஞ்சு ஐரோப்பாவுக்கு ஸமீபத்தில் அனுப்பப்பட்டதாம். அந்தப் பஞ்சு ஜாவா

பஞ்சுக்குத் தாழ்ந்ததாக இல்லையாம். இந்த இரண்டு கண்டங்களிலும் இலவ மரம் நன்றாய் வளரக்கூடியதால், சீக்கிரத்தில் அங்கிருந்து இலவம் பஞ்சு ஏராளமாக ஏற்றுமதியாகு மென்று எண்ண வேண்டியதாயிருக்கின்றது. இந்தியர்களே! முந்துங்கள்!

**Paddy Seedlings.**

நெல் நாற்றுகள்.—சில ஸமயங்களில் நெல் நாற்றுகளை ஒரு ஊரில் வாங்கி வேறு ஊர்களுக்குக் கொண்டு போகும்படி நேரிடுகிறது. இப்படி ஊர் விட்டு ஊருக்குக் கொண்டு போகப்படும் நாற்றெல்லாம்பிழைத்துத் துளிர்க்க வேண்டுமானால், அவைகள் விஷயத்தில் கொஞ்சம் ஜாக்ரதை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த விஷயமாக வடக்கே தர்பங்காவில் டிப்டிகலெக்டராகிய மிஸ்டர் ஏ. எஸ். பால்ட்வின் என்பவர் சில ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார். நாற்றைப் பறித்து ஒரு நாள் முழுவதும் வண்டியில் ஏற்றி வைத்திருந்தார். பிறகு இந்த நாற்றை ஒரு ரெயில் ட்ரக்கில் (கூட்ஸ் வண்டியில்) போட்டு மூன்றுநாள் கதவு சாத்தியிருந்தது. இந்த ட்ரக்கிலிருந்து எடுத்து மறுபடி கட்டை வண்டியில் ஏற்றி ஒருநாள் கிடந்தது. இப்படிப் பரீக்ஷித்துப்பார்த்து முக்காலே அரைக்கால் நாற்றுகள் பிழைத்து நடக்கூடியவைகளென்று மிஸ்டர் பால்ட்வின் சொல்லுகிறார்.

நாற்றுகளை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு போவதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல உள. ரெயில்வே ட்ரக்கில் ஏற்றுவதற்கு முதல் நாள்தான் நாற்றைப் பறிக்கவேணும். அவைகளைப் பறித்து சிறு முடிச்சுகளாகக் கட்டி, நன்றாய் ஜலம் தெளித்து, பிறகு கட்டை வண்டியில் ஏற்ற வேண்டும். ஜலம் தெளிப்ப தென்றால், தண்ணீரை வாரி ஊற்றி, வேரைச் சுற்றிலுமுள்ள மண் கரைந்து போய்விடும்படிச் செய்வதல்ல. வேரில் மண் ஒட்டிக்கொண்டிருந்தால், நாற்று இன்னும் அதிக நாள் கூட நிற்கும்.

கட்டை வண்டியிலிருந்து ரெயில் ட்ரக்கில் ஏற்றும்பொழுது மறுபடியும்கொஞ்சம் ஜலம் தெளிக்க வேண்டும். ஜலத்தை அதிகமாக ஊற்றிவிட்டால், ட்ரக்கில் புழுக்கங் கண்டு நாற்று உலர்ந்து போய்விடும். ஆகையால் ஜலம் சீராய்த் தெளிப்பதற்குத் தோட்டங்களுக்குத் தண்ணீர் தெளிக்க உபயோகிக்கும் பூச்செடித் தகரங்களை உபயோகிப்பது நலம்.

இன்னொரு விஷயம். நாற்று பக்வமாயிருப்பது அதை ட்ரக்கில் அடுக்கும்விதத்தையும் பொறுத்திருக்கிறது. இது விஷயமாகச் செய்த சோதனையில் இரண்டு மூன்று தட்டு ஒன்றுக்கு மேல் ஒன்றாய் வைத்திருந்தபோதிலும், படுக்கையாய் வைத்திருந்த நாற்றைவிட செங்குத்தாய், அதாவது, வேர் கீழே இருக்கும்படி வைத்த நாற்றே காயாமலும் ஜாஸ்தி நாள் நிற்கக்கூடியதாயு மிருந்தது. செங்குத்தாய் வைத்தால், நாற்றுப் பறித்த ஐந்தாம் நாள் ஆறாவது நாள்கூட கெட்டுப்போய்விடாமல் நடக்கூடியதாகவே இருக்கும்.

ட்ரக்குகளில் செங்குத்தாய் அடுக்குவதற்கு என்ன செய்யவேண்டு மென்றால், 12 அல்லது 15 சிறு முடிச்சுகளை ஒன்றாய்ச்சேர்த்துக் கட்டவேண்டும். சிறு முடிச்சுகளை இறுக்கிக் கட்டிவிடாமல் முடிச்சைத் தளரவே விடவேண்டும். இப்படிச்செய்த பெரியமுடிச்சைக் கயிற்றைப் போட்டுக் கட்டாமல் அந்த நாற்றையே ஆக்கையாகப் போட்டுக் கட்டவேண்டும். நாற்றை ரெயில்வே ட்ரக்கைவிட்டு கீழே இறக்கினதும் கொஞ்சம் ஜலம் தெளித்துப் பிறகு கட்டை வண்டியில் ஏற்றவேண்டும்.



**The Depressed Classes.**

தீண்டாதவர்கள்:—கொஞ்ச காலமாக பஞ்சமர் முதலிய தீண்டாதவர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவந்தா லொழிய நாம் கவர்ன்மெண்டாரிடத்தில்அரசாட்சியில் ஸ்வதந்திரங்கள் பெறவும், தேசம் முன்னுக்கு வரவும் முடியாதென்று இந்தியாவில் படித்தவர்கள், ப்ரமுகர்கள் முதலிய எல்லா புத்திசாலிகளும் பலவிதமாக முயற்சி செய்து வருகிறார்கள். இவைகளில் முக்கியமானவைகள் என்னவென்றால், தீண்டாதவர்களுக்குப்படிப்புச்சொல்லிக் கொடுத்தல், அவர்கள் குடிக்காமல் பார்த்துக் கொள்ளுதல், அவர்களுக்கு கிணறு முதலிய ஜல வஸதிகள் செய்துகொடுத்தல், நிலம் வாங்க ஸௌகரியங்கள் செய்தல், இன்னும்பொதுவாக அவர்களை ஜன ஸமூகத்தில் மரியாதையாக நடத்தல் முதலியவையாம்.

போன மே மாஸத்தில் நடந்த சென்னை ப்ரொவின்ஷியல் கான்பரென்ஸில் அக்ராஸனாதிபதியா யிருந்த ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் இன்னொரு உபாயமும் சொன்னார். இப்போது தீண்டாதவர்கள் கிராமங்களில் ஒதுப்புறமாய் ஒரு பக்கத்தில் வாஸயோக்கிய மில்லாத இடங்களில் குடிசைகளில் குடியிருந்து வருகிறார்கள். இந்தக் குடிசை போட்டிருக்கும் நிலம் தீண்டாதவர்களுக்கு ஸொந்தமல்ல. அந்த நிலங்களுக்கு ஸொந்தக்காரர்கள் வேறு. குடியிருக்கும் தீண்டாதவர்களுக்கு ஒரு தகவலுமில்லாமல் கீழ்நிலத்தை ஸொந்தக்காரர்கள் அவர்கள் இஷ்டம்போல விற்று விடுகிறார்கள். இப்படிப் புதிதாய் நிலம் வாங்கினவர்கள் இஷ்டப்பட்டால், தீண்டாதவனை வைத்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால், அவனைக் குடிசையை விட்டுத் துரத்தி விடலாம். இதனால் தீண்டாதவனுக்கு ஒரு வித பாத்தியதையு மில்லாமல் அவன் பிறருக்கு உள்ளடங்கியே இருக்க வேண்டியிருக்கிறது. நிலம் தனக்கு ஸொந்தமில்லாததால், வீட்டைப் பணம்செலவுசெய்து கட்டவுங் கூடவில்லை. குடியிருக்கும் நிலங்கள் தீர்வையில்லாத கிராமநத்தங்கள். இருந்தபோதிலும் தீர்வையில்லாததனால் உண்டாகும் பலனைக் குடியிருக்கும் தீண்டாதவர்கள் அடைவதில்லை. ஆகையால், இவர்கள் குடியிருக்கும் மனைக்கட்டுகளை வாங்க ஸௌகரியங்கள்செய்து கொடுக்கவேணும். இப்படிச் செய்துகொடுக்க முடியாமற்போனால், அவர்கள் க்ரமமான நிலவாடகை கொடுக்கிற வரையில் அல்லது அதற்கு பதிலாக வேலை செய்கிறவரையில் நிலத்தின் ஸொந்தக்காரன் அவர்களை வீட்டை விட்டுத் துரத்த முடியாமல் அவர்கள் குடியிருந்து வரும்படி செய்யவேண்டு மென்று மிஸ்டர் ராமானுஜாசாரியார் சொன்னார். ராமானுஜாசாரியார் கருத்து இன்ன தென்று தெளிவாகத் தெரியவில்லை. அவர் சொல்லுகிறபடி யார் செய்யவேணும்? நிலக்காரர்களைச் செய்யும்படி கேட்டுக்கொண்டா ரென்றும், அல்லது கவர்ன்மெண்டாரைச் செய்யவேணு மென்று கேட்டுக் கொண்டாரென்றும் வ்யக்தமாக விளங்கவில்லை.

தீண்டாத பறையர் பள்ளர்கள் ஸ்திதி பரிதபிக்கத்தக்கதுதான். பொதுவாய் உயர்ந்த ஜாதியார், முக்கியமாய் ப்ராமணர்கள், கீழ் ஜாதியார்களை நிலம்வாங்கவொட்டாமல் இடைஞ்சல் செய்வதும் வாஸ்தவந்தான். ஆனால் இந்த இடைஞ்சல்களையெல்லாம் மீறி கீழ்ஜாதியார்கள் நிலங்களும் வீடுகளும் வாங்கியே வருகிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் சோழபுரம் என்னும் க்ராமத்தில் ப்ராமணர்கள் குடியிருந்த ஒரு அக்ரஹாரம் முழுமையும் துலுக்கர்கள் வாங்கிக் குடியிருந்துவருகிறார்கள். அதே ஜில்லாவில் ஸ்வாமிமலைக்கு அடுத்த கங்கா

தாபுரத்தில் ஒரு பறையன் நிலம் வாங்கி மிராசு ஆள்கிறானென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். சூத்திரக் குடிகள் அநேக க்ராமங்களில் சில காலமாக நிலங்கள் வாங்கி மிராசு ஆண்டு வருகிறது ஸர்வ ஸாதாரணமாகிவிட்டது. ஆகையால், 'துட்டுள்ள' பறையனுக்கும் பள்ளனுக்கும் நிலம் வாங்குவது சிரமமென்றாலும் அஸாத்தியமொன்றுமில்லை. தற்காலத்தில் பணமிருந்தால், கீழ் ஜாதியாரெல்லாம் உயர் ஜாதியார்களாக ஆகிவிடுவார்கள். பணமில்லாதவனுக்குப் பணங் கிடைக்க இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று உழைத்து ஸம்பாதிக்கவேண்டும். இதுதான் ஸரியானவழி. இதற்காக உலகத்தில் ஒவ்வொரு நாகரிகமுள்ளதேசத்திலும் கவர்மெண்டுகளும் ஜனஸமூகங்களும், ஸுகாதார அபிவிருத்தி, சட்டங்கள் மூலமாய் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை நீக்குதல், முதலிய சௌகரியங்களைச் செய்து ஜனங்கள் பொருள்ஸம்பாதித்துஸுகப்படும்படி செய்துவருகிறார்கள். இப்படி உழைத்துப் பணம் ஸம்பாதிப்பது அவனவனுடைய திறமையைப் பொறுத்திருப்பதால், கையாலாகாத ஏழைகளுக்கு இந்தவழி ஸரிப்படுவதில்லை. அதற்காக அவர்கள் என்ன செய்கிறார்களென்றால், கவர்ன்மெண்டார் ஸொத்துள்ளவர்களிடத்திலிருந்து ஒரு பாகத்தை சட்டபூர்வமாய்ப் பிடுங்கி அதை அவர்களைச் சார்ந்த ஏழைகளுக்கும் வேலையாட்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்று மன்றாடி வருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களில் இருக்கிறார்கள். இவர்களுக்கு 'ஸோஷயலிஸ்ட்ஸ்' என்று பெயர்.

**Manual Training.**

கைப் பழக்கம்.—குழந்தைகள் சிறுவர்களாகப் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே அவர்கள் பெரியவர்களாகும்பொழுது என்ன வேலை செய்து ஜீவனஞ் செய்வார்களென்று சொல்லுவது அஸாத்தியம். அவர்கள் பிற்காலத்தில் ஜீவனம் செய்யக்கூடிய வழிகளை சிறு வயதிலேயே சொல்லிக்கொடுக்க முடியாமல் போனாலும், எந்தத் தொழிலைச் செய்ய நேர்ந்தாலும் அதைச் செய்யக்கூடிய திறமையைத் தரும்படியான பழக்கங்களைச் செய்விப்பது நலமாகும். இப்படிப்பட்ட பழக்கங்களில் கைப்பழக்கம் ஒன்று. இதற்கு இங்கிலீஷில் 'மான்யுயல் ட்ரெயினிங்' என்று சொல்லுவார்கள். 'மான்யுயல் ட்ரெயினிங்' என்றால், குறித்ததொழிலைச் செய்வதற்கான பழக்கமல்ல. பொதுவாக எந்த ஆயுதமானாலும் அதை எடுத்து உபயோகிப்பது, மரம் முதலிய ஸாமான்களை வேண்டிய வேலைகளுக்கு உபயோகிப்பது, வேண்டிய ஸாமான்களுக்கு முதலில் டிஸைன், அதாவது படம் எழுதிக் காண்பிப்பது, முதலியவைகளைச் சொல்லிக்கொடுப்பதே 'மான்யுயல் ட்ரெயினிங்'காகும். முதலில் அதிகச் சிக்கலில்லாத வேலைகளையும் ஆயுதங்களையும் ஆரம்பித்தெடுத்து பிறகு போகப் போக சிக்கலான வேலைகளை நுட்பமான ஆயுதங்களைக்கொண்டு செய்யவேண்டும். சிறுவர்கள் படிக்கும் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயம் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தற்காலம் ஸ்கூல்களில் சொல்லிக் கொடுக்கப்படும் தச்சுவேலை, சித்திரம் வரைதல், ட்ராயிங் எழுதுதல் முதலியவைகள் மேற்கண்ட நோக்கத்துடனேதான் செய்யப்படுகின்றன.



## CULTIVATION OF CAMBODIA COTTON.

BY

V. S. NARAYANASWAMI AIYAR.

## கம்போடியாப் பருத்தி ஸாகுபடி.*

இந்தியாவில் ஸாகுபடியாகிற பயிர்களில் முக்கியமானது பருத்தி. உணவும், உடையும் மனிதர்களுக்கு இல்லாமல் தீராது. வெகு நாளாக, இந்தியாவிலும் அமெரிக்காவிலும் மட்டுமே, பருத்தி ஸாகுபடி செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய மனு தர்ம சாஸ்திரங்களை யெடுத்துப் பார்ப்போமாகில், பருத்தியானது அந்தக் காலம் முதற்கொண்டே ஸாகுபடியாய்க் கொண்டிருக்கிறதென்று தெரியவருகிறது. ஐரோப்பா முதலான இடங்களுக்கு இவ்விந்தியாவிலிருந்துதான் பருத்தி ஸாகுபடி பரவியிருக்கிறதென்றும் தெரியவருகிறது, பருத்தி ஸாகுபடி வருஷா வருஷம் அதிகப்படவே, பருத்தியைப் பஞ்சாகவும் கொட்டையாகவும் பிரிக்கிற யந்திரங்களும், அதை நூல் நூற்றுத் துணிகள் நெய்யும் யந்திரங்களும் விருத்தியாயின. பழைய காலத்தில் துப்பட்டிகள்போல் கெட்டியான துணிகளை விசேஷமாய் உடுத்திக்கொண்டு வந்தார்கள். நாகரிகம் அதிகப்படவே பழைய கெட்டித் துணிகளெல்லாம் போய் உயர்ந்த மல்லுகளுக்குக் கிராக்கி யுண்டாயிற்று. உயர்ந்த ஸன்ன இழைகளுடனுள்ள வஸ்திரங்கள் செய்ய நல்ல யந்திரங்களும், நல்ல இழைகளும், அதனால் நீளமானவும், ஸன்னமான நூல் தரக்கூடியனவுமான பஞ்சுகளும்வேண்டியிருந்தன. அமெரிக்கா கண்டத்தில் பருத்தி ஸாகுபடி விஷயமாக அநேக சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்கள். இந்தியாவிலும், முன் காலங்களில் முதல்தரமான பஞ்சு ஏற்றுமதி செய்துகொண்டிருந்தார்கள்.

உதாரணமாக, டக்காவில் நல்ல மஸ்லின் செய்கிறார்களென்று எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

சிலாக்கியமாயும் ஸன்னமாயுமுள்ள இழை நூல்களைத் தரும்படியான பருத்தியைப் பயிரிடவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் பல பிரயத்தனங்கள் செய்தார்கள். அநேக பருத்திகளைப் பல இடங்களில் பயிரிடச் செய்தார்கள். அவைகளில் ஒன்றும் நம்முடைய தேசத்து பூமிகளில் விருத்தியாகவில்லை.

இப்படிப் பல பரீக்ஷைகளும் பிரயத்தனங்களும் செய்து பார்த்ததில் நாட்டுப் பருத்திகளையே கவனத்துடன் ஸாகுபடி செய்வதும், நல்ல திடமான பருத்திச் செடிகளிலிருந்தும் நோய் நொடி யில்லாத காய்களிலிருந்தும் விதையைப் பொறுக்கி யெடுப்பதுமே அதிக சிரேஷ்ட மென்று கண்டார்கள். இது விஷயமாக விவஸாய டிபார்ட்டுமெண்டார் ஏற்படுத்தி யிருக்கிற ஸர்க்கார்ப் பண்ணைகளில் விதையை வருஷா வருஷம் பொறுக்கி யெடுத்து, பருத்தி அதிகமாக விளையும்படியாகவும், பருத்திக் காய்கள் உண்டாகும்படியாகவும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக, திருநெல்வேலியில் கருங்கண்ணிப் பருத்தியையும், கோயம்புத்தூர் விவஸாயப் பண்ணையில் உப்பம் பருத்தியையும், பல்லாரி, நந்தியால் பண்ணைகளில் அங்கே பயிரிடுகிற பருத்தி இனுசுகளையும் விருத்தி செய்து வருகிறார்கள். ஆனால் இப்படிச்செய்து விருத்தி செய்தால், கால தாமதம் செல்லும். ஆகையால், சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக அமெரிக்காவிலிருந்து இரண்டு மூன்று இனுசுப்பருத்திகளைவரவழைத்திருக்கிறார்கள். அதாவது டார்வார் அமெரிக்கன் என்னும்பருத்தியை வடதேசங்களிலும், கம்போடியாப் பருத்

* (கோயம்புத்தூர் ஜில்லா திருப்பூர்க் கால்நடைக் காக்ஷியில் செய்த பிரஸங்கம்)

தியைத் தென்பாகத்திலும் கொண்டுவந்து விருத்தி செய்திருக்கிறார்கள். இரண்டாவது சொல்லப்பட்ட கம்போடியாப்பருத்தியானது மற்ற பருத்திகளைப் போலில்லாமல் நம்முடைய நாட்டில் நன்றாய் விளையக்கூடியதாயிருக்கிறது. இது முதலில் கொச்சின் சீனாவிலிருந்து புதுச்சேரிக்குக் கொண்டுவரப்பட்டு அவ்விடமிருந்து மற்ற ஊர்களுக்குப் பரவிற்று. அமெரிக்காதேசத்து இதர பருத்தியைப்போல மாசூலை அனுபவிக்க இரண்டு மூன்று வருஷம் வேண்டியதில்லை. நாட்டுப் பருத்தியைப் போல் 6 மாத காலத்திலேயே பலன்பூராவையும் எடுத்துவிடலாம். உப்பம் பருத்தியை விதைக்கும் காலத்திலேயே இதையும் விதைக்கலாம். பருத்தி வெடிக்கிற காலமும் உப்பம் பருத்திவெடிக்குங்காலமேதான். ஸாகுபடியும் சற்றேறக்குறைய அதைப் போலவே. இதற்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தோட்டக்கால் பூமிகளில் நன்றாய்ப் பயிராகிறது. பஞ்சு நீளமாயும் உறுதியும் ஸன்னமும் உள்ள நூல் செய்யக்கூடியதாயுமிருக்கிறது. புஞ்சை நிலங்களில் (இறங் காட்டில்) நல்ல மழைகள் பெய்யும் வருஷங்களில் நாட்டுப் பருத்தியைவிட அதிகமாசூல்கொடுக்கும். 1909-ம்வருஷத்தில் திருச்சிராப்பள்ளி ஜில்லா பிரம்பலூர் தாலூக்காவில் விவஸாயடிபார்ட்டுமெண்டார்சோதனைக்காகச் சிலகுடித்தனக்காரர்களுக்கு ஸாகுபடி செய்ய இவ்விதையைக் கொடுத்து அவர்கள் பயிரிட்டார்கள். அந்தவருஷத்தில் கால அனுகூலத்தால் கால் மடங்கு அதிகம் விளைந்தபோதிலும், நிச்சயமாய் ஜாஸ்தியாகவேவிளையுமென்று சொல்லுவதற்கில்லை. ஆகையால், நாட்டுப் பருத்தியைப்போல் மழைத்தட்டான காலங்களில் கிணற்றிறவையில்லாத புன்செய் பூமிகளில் இந்த சென்னை ராஜதானியில் பயிரிடுவதற்கு ஏற்றதாக இல்லை

கூடலூர் ஜில்லா, பாலூர்விவஸாயப் பண்ணையில் விசேஷமாக மழை காலங்களில் வரகுப் பயிரை ஸாகுபடி செய்து அது அறுவடையானதும் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் நிலக்கடலையைத் தோட்ட நிலங்களில் போடுவது வழக்கம். அல்லது டிஸம்பர் மாதத்தில் ராகிப் பயிர் செய்து அந்தப்பயிரில் களைக்கொத்தால் கடலையைப் போடுவதுண்டு. மழை காலத்தில் விதைக்கிற வரகுப் பயிருக்குப் பதிலாக வேறு அதிக லாபம் தரக்கூடிய பயிர்கள் என்னவென்று பார்த்தார்கள். இப்படி இந்தப்பயிர்களிலிருந்து தகுந்த லாபம் வருகிறதாயிருந்தால், விசேஷமாகவும் கொஞ்சகாலமாக நன்றாய் விளையாததுமான அந்தஜில்லாவில் பயிரிடுகிற நிலக்கடலைக்குப் பதிலாக இந்தப் பயிர்களில் ஒன்றை ஸாகுபடிசெய்யலாமென்றுசோதனை செய்து கொண்டிருந்தார்கள். அப்படிச் சோதனை செய்த பயிர்களில் ஒன்று கம்போடியாப் பருத்தி. நல்ல எருவிட்ட தோட்டக்கால் பூமியில் அரை ஏக்கரில் விதைத்தார்கள். ஏக்கரா 1-க்கு 1,500பவுன், அதாவது 6 பொதி பருத்திகண்டது. இப்போது இருக்கிறவிலைக்கு ரூ. 200-க்கு மேலாகிறது. சாகுபடிச் செலவு ரூ. 50 போக ரூ. 150 லாபம் வந்திருக்கிறது. அதே பண்ணையில் பாய்ச்ச லில்லாத புன்செயில் 2 பொதி கிடைத்தது. இப்போது இக்கம்போடியாப் பருத்தியை திருநெல்வேலி ஜில்லாவில் ராகி, தினை, மிளகாய் முதலான தோட்டக்கால் பயிர்களுக்குப்பதிலாக ஸாகுபடி செய்து வருகிறார்கள். இப்போது மதுரை ஜில்லாவிற்கும் பரவிவிட்டது. இதனால் மேற்கூறிய தோட்டக்கால் பயிர்கள் குறைந்துவிட்டன. இவ்வருஷத்தில் இவ்விராஜதானியில் 3,30,00 பேல் பஞ்சுக்கு மேல் 52,800 பொதிப் பஞ்சு விளையுமென்று மதித்திருக்கிறார்கள்.



கோயம்புத்தூர் ஜில்லாவில் மற்ற ஜில்லாக்களைவிட கிணற்றிறவையில் தோட்டக்கால் பயிர்கள் விசேஷமாய் செய்து வருகிறார்கள். ஆகையால், இந்த ஜில்லாவிலும் இப்பருத்தியை ஸாகுபடிசெய்து விருத்திக்குக்கொண்டு வரவேண்டியது ரொம்ப அவசியம். இந்த ஜில்லாவிலும் கோடை காலத்துச் சோளமும், கோதுமையும், ராகியும், சில ஸமயங்களில் புகையிலையும், மிளகாயும் போடுவது வழக்கம். நான் பார்த்த இடங்களிலெல்லாம், மிளகாயைப் பூச்சிகள் முதலியவைகள் அதுஅடித்து விளையாமல் போகிறது. புகையிலையின் விலை முன்னிருந்தது போலில்லை. ஆகையால், குடித்தனக்காரர்களுக்கு நஷ்டம் உண்டாகிறது. இதைத் தவிர அதைப் பதம் பண்ணுவதும் சிரமம்.

கோதுமை ஸாகுபடியைப்பற்றிக் கவனிக்கும்பொழுது ஏழு தண்ணீர் பாய்ச்சவேண்டியதாயிருக்கிறது. இது போனாலும் போகட்டும். விளைவைப் பார்த்தாலோ செலவு போக ஏக்கரா 1-க்கு ரூ. 10 அல்லது 15-க்கு மேல் கிடைக்கிறதில்லை. இதுவும் தவிர, தான்யப் பயிர்களையே ஒன்றின்பின் ஒன்றாக அதே பூமியில் ஸாகுபடி செய்வதால், அப்பயிர்களுக்கு வேண்டிய ஸத்துக் குறைந்துகொண்டு வருகிறது. மேற்சொல்லிய மிளகாய், கோதுமை, புகையிலைப் பயிர்களுக்குப்பதிலாக கம்போடியாப் பருத்தியை ஸாகுபடி செய்வது அதிக சிரேஷ்டம். ஏனென்றால், பருத்தியின்வேர்கள் ஆழமாகப் பரவி, பூமிக்கு அடியில் இருக்கும் ஸத்துக்களையெல்லாம் வீண்போகாமல் உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றன. இதையும் தவிர, தானியப் பயிருக்கு வேண்டியது போல இந்தப் பருத்திக்கு அவ்வளவு தண்ணீர் வேண்டியதில்லை. ஆகையால், தண்ணீர் இறைப்பதற்கு உபயோகிக்கும் மாடுகளை இதர வேலைகளுக்கு உபயோகப்படுத்த முடியும். இதுவும் தவிர, அதிக விஸ்தீரணத்தில் பருத்தி ஸாகுபடி செய்யவும் முடியும்.

கோயம்புத்தூருக் கடுத்த பூனமேடுஎன்னும் கிராமத்தில் இந்த வருஷம் தோட்டக்கால் பூமியில் இப்பருத்தியைப் பயிரிட்டிருக்கிறார்கள். அந்த பூமியானது கொஞ்சம் களராயிருந்தபோதிலும் பயிர் நன்றாயிருந்தது. இரண்டே தண்ணீர்தான் பாய்ச்சினார்கள். விளைவு இது வரையில் 4 பொதி கிடைத்திருக்கிறது. இப்பொழுதும் அந்தப் பயிரைப் போய் பார்க்கலாம். இன்னும் சில கிராமங்களிலுங்கூடப் பயிரிடுகிறார்கள். இப்பருத்திக்கு இன்னும் ஒன்றிரண்டு தண்ணீர் இறைத்திருந்தால், இதிலும் அதிகம் விளைந்திருக்கும்.

## ஸாகுபடி செய்யும் விதம்.

இப்பருத்தி ஸாகுபடி ஏறக்குறைய நாட்டுப் பருத்தி ஸாகுபடிபோல்தான். நல்ல எருவிட்டவும் தண்ணீர் சுலபமாய் வடியக்கூடியவுமான பூமிகளிலும் நன்றாய்ப் பயிராகும். நாட்டுப் பருத்தி விதைக்கும் காலத்திலேயே இந்த விதையையும்கையால் விதைத்து விதையை மண்ணில் மறைக்க, நாட்டுக் கலப்பையைக் கொண்டு உழுதுவிடலாம். பருத்தியே பயிர் செய்யாத ஊர்களில் அக்டோபர் மாதத்தில், கனமாய்ப்பெய்யும் மழை நின்றவுடன், இதை விதைக்க வேண்டியது. 10 பவுன் விதை, அதாவது 3 வீசை விதை போதுமானது. விதைத்த பிறகு மற்ற தோட்டக்கால் பயிர்களுக்குச் செய்வது போலவே தண்ணீர் பாய்ச்சப் பாத்தி பிடிக்கவேண்டும். அல்லது லயனாக விதைக்கவேண்டுமென்றால், நிலக்கடலை விதைப்பதுபோல நாட்டுக் கலப்பையால் உழும்படைசாலில் விதையைப்போட்டு, பின்னால் இரண்டு மூன்று கலப்பைகளை விட்டு விதையை மூடலாம். இப்பருத்தி

படர்ந்தாற்போல் வளர்வதால், கை விதை விதைத்தாலுங்கூட செடிகளை அடர்த்தியாய் விடாமல் ஒரு செடிக்கும் மற்றச் செடிக்கும் இரு புறத்திலும் இரண்டு முதல் மூன்றடி வரையில் காலியிடம் விட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், செடிகளில் பருத்த காய்கள் உண்டாவதால் செடிகள் தாங்காது. அதனால் செடிகள் கீழே சாய்ந்து காய்கள் மண்ணில் விழுந்து கெட்டுப்போகும்.

பாலூர் விவஸாயப் பண்ணையில் 1909-ம் வருஷத்தில் இந்தப் பருத்தியை $1\frac{1}{2}$ அடியுள்ள சாலில் போட்டார்கள். செடிகள் நன்றாய் வளர்ந்ததும் ஒன்றை விட்டு ஒன்று சால்களிலுள்ள பயிர்களை யெல்லாம் பிடுங்கிவிட்டார்கள். அப்படிச் செய்ததால் நல்ல மாசூலைக் கொடுத்தது.

இதற்கு இரண்டு களை எடுக்க வேண்டும். முதல்தரம் கைக்கொத்தாலும், இரண்டாந்தரம் மண்வெட்டிகொண்டும் கொத்த வேண்டும். செடிகள் வாடினால்தான் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பருத்தி காய் வெடிக்க ஆரம்பித்தவுடன் தண்ணீர் பாய்ச்சக் கூடாது. கால் பருத்தியெடுத்து முடிந்தவுடன், கார்ப்பருத்தி உண்டாகும்பொருட்டு ஒரு தண்ணீர் பாய்ச்சலாம். காய்கள் பருமனாக யிருக்கிறதால், ஒரு பெண்பிள்ளை நாட்டுப் பருத்தி யெடுக்கிறதைப் போல மூன்று மடங்கு பருத்தி இந்தச் செடிகளிலிருந்து ஒரு நாளைக்கு எடுக்க முடியும். ஆகையால், கூலியும் குறைவாக இருக்கிறது. ஒரு பெண்பிள்ளை ஒரு நாளைக்கு 4 மணுப் (100 பவுன்) பருத்தி எடுக்க முடியும்.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களால் இப்பருத்தி ஸாகுபடியானது ரொம்பவும் ஸாமான்னியக் குடித்தனக்காரர்களுக்குக்கூட யாதொரு சிரமமு மில்லை என்று ஏற்படுகிறது.

பஞ்சும் நல்ல வெளுப்பு நிறமுள்ளதாயும், அதிலிருந்து நூற்கப்படும் நூல் பலமாகவும் ஸன்னமாகவும் இருக்கிறது.

நாட்டுப் பருத்தியைவிட ஒரு பொதிக்கு ரூ. 5 முதல் ரூ. 7 வரையில் அதிக விலையும் கிடைக்கும். 100 பவுன் பருத்தியைப் பருத்தி அரைக்கும் ராட்டினத்தில்கொடுத்தால், 33 பவுன் பஞ்சு, அதாவது 3-ல் ஒரு பாகம் பஞ்சு கிடைக்கிறது. நாட்டுப் பருத்தியை அரைத்தால், நான்கில் ஒரு பாகந்தான் பஞ்சு கிடைக்கும். ஆகையால், எல்லா விஷயத்தையும் உத்தேசித்து இதை ஸாகுபடி செய்வது சிலாக்கிய மென்று ஏற்படுகிறது.

### ஸாகுபடியின் செலவு விவரம்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| உழவு 4 தரம் ரூ. 1-8-0 வீதம் | 6—0—0 |
| 10 வண்டி எரு ... | 10--0—0 |
| விதையும் விதைக்கும் கூலியும் | 2—0—0 |
| முதல் களை ... ... | 1—4—0 |
| மண்வெட்டி களை ... | 2—8—0 |
| தண்ணீர் 2 ... ... | 10--0—0 |
| பார்வையும் சில்லரைச் செலவுகளும் | 6—4—0 |
| கிஸ்தி ... ... | 2—0—0 |
| ஆக மொத்தம் | 40--0—0 |
| பருத்தி 4, பொதி ரூ. 35 வீதம் | 140-0—0 |
| லாபம் ரூ. | 100-0—0 |

வி. எஸ். நாராயணஸாமி அய்யர்.

---



## DIRIGIBLES AND AEROPLANES.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M. A., L. T

## ஆகாயக் கப்பல்களும் கீல் பறவைகளும்.

ஆகாயத்தைவிட லேசான வாயுக்கள் நிறைந்த பெலூன் கூண்டில் ஏறிச் சென்று ஆகாய மண்டலத்தில் உலாவி பாரச்சூட் என்னும் குடையின் உதவியால் அபாயமின்றி கீழே இறங்கலாம் என்று மார்ச் மாதத்திய ஸஞ்சிகையில் விவரித்தோம். இதை மான்ட்கோல்பியர் என்னும் குலப் பெயரையுடைய இரண்டு ஸகோதரர்கள் 1783-ம் வருஷத்தில் நிரூபித்துக் காட்டியது, முதல் அநேகர் வேடிக்கைக்காக பெலூனில் ஏறி இறங்கி வந்தார்கள். வரவர பெலூனை வெவ்வேறு விஷயங்களுக்காக உபயோகிக்க எத்தனித்தார்கள். அநேக ஸயன்டிஸ்ட்ஸ் தத்வ விசாரணை சாஸ்திரிகள் இதன் உதவியால் ஏறிச் சென்று ஆகாய மண்டலத்தின் மேல்தட்டுகளில் தென்படும் தோற்றங்களையும் மாறுதல்களையும் பற்றி முதல் முதல் எழுதினார்கள். ஒரு பெரிய பெலூனில் க்லெஷர் என்னும் ஸயன்டிஸ்ட் ஸுமார் 30,000 அடி உயரம் வரையில் சென்று, தான் அனுபவித்த சீதோஷ்ண வித்யாஸங்களைப்பற்றி எழுதியிருக்கிறார். உயரம் அதிகரிக்க அதிகரிக்க டெம்பரேச்சர் குறைந்துகொண்டே இருந்ததாம். 29,000 அடி உயரத்தில் ஜலம் தானே குளிர்ந்து இறுகக் கூடிய டெம்பரேசரைவிட 16 டிக்ரீ குறைவாய் இருந்ததாம். ஆகாய வாயுவின் அழுத்தம் மிகவும் மெலிந்து மூச்சுவிட அதிகக் கஷ்டப்பட்டாராம். ஆகாயம் அதிக நீல நிறத்துடன் காணப்பட்டதாம். நிஸ்சப்தமாக இருந்ததாம். ஆகாயத்தில் நீராவி அதிகமாய்க் குறைந்து வரண்டு இருந்ததால், அவர் கொண்டுபோன காகிதத்துண்டுகள் பதம்தப்பி, நெருப்பின் முன் வைத்தவைபோல் சுருங்கிப் போயினவாம்.

### பெலூனில் தோன்றிய குறைகள்.

நாளடைவில், வேடிக்கைக்காக உபயோகித்துக்கொண்டிருந்த பெலூனை உபயோகித்து சண்டை இலாகாதார் எதிரிகளின் கோட்டைகளிலும்போர்க்களங்களிலும் நடப்பவைகளைக் கொடி யசைத்தல் முதலான ஸமிக்ஞைகளால் தெரிந்துகொள்ள முயன்றார்கள். 100 வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சண்டையில் பெலூனுக்கு நீண்ட கயிறு கட்டிக் கீழே பிடித்துக் கொள்ள அதன்மேல் சென்றவர்கள் பார்த்தவைகளைத் தங்கள் நண்பர்களுக்குச் சொல்லி வந்ததாக சரித்திரங்களில் எழுதியிருக்கிறார்கள். 40 வருஷங்களுக்குமுன் ஐரோப்பாவில் நடந்த யுத்தங்களில் இம்மாதிரி பெலூன்களை அநேகமாய் உபயோகித்து வந்தார்கள். ப்ரான்ஸ் தேசத்தில் சண்டை நேரிட்ட காலத்தில், பாரிஸ் என்னும் முக்கிய பட்டணத்தை எதிரிகள் சூழ்ந்துகொண்டார்கள். அக்கோட்டையில் அடைபட்டவர்கள் காகிதங்களை எழுதி பெலூனுக்குக் கட்டிப் பறக்கவிட வெளிப்பிரதேசங்களிலுள்ள அவர்களுடைய நேசர்கள் அதைப் பிடித்து ஸமாசாரம் தெரிந்துகொண்டார்கள். ஆனால், இதேமாதிரி வெளியிலிருந்து உள்ளே யிருந்தவர்களுக்கு ஸமாசாரம் அனுப்ப முடியாமற் போயிற்று. காற்றடித்த வழியே தானே பெலூன் செல்லும். இக்கஷ்டத்தை அனுபவித்தது முதல் ப்ரான்ஸ் தேசத்தார் தாங்கள் விரும்பிய இடத்திற்குக்கொண்டுபோகக்கூடிய சூத்திரங்களையுடைய பெலூனைக்கட்டி முடிக்க எவ்வளவோ விதமாய் ப்ரயத்தனம் செய்தார்கள்.

## டிரிஜிபில் பெலூன்.

கப்பல்களை ஸமுத்திரத்தில் ஓட்டுவதற்கு நீராவி யந்திரங்களை உபயோகிப்பதுபோல், பெலூன்களுக்கும் இந்த யந்திரங்களைக் கட்டி நடத்தமுதல்முதலில் எத்தனித்தார்கள். இந்த யந்திரங்களெல்லாம் அதிக பளுவுள்ளவைகளாதலால், இந்த யுக்தி பிரயோஜனப்படாமல் போயிற்று. இவ்வாறு இருக்க, மிகவும் லேசானதும் அதிக சக்தியுள்ளதுமான கெரோஸின் எண்ணெயை உபயோகித்து நடத்தும் மோட்டாரைக் கண்டுபிடித்து மோட்டார் காரைக் (ரஸ்தாக்களில் தானே செல்லும் வண்டிகளை) கட்ட ஆரம்பித்தார்கள். இதுமுதல் மோட்டாரை உபயோகித்து பெலூனை நடத்த எத்தனித்து இப்போது அநேக விதமான கூண்டுகளைக் கட்டியிருக்கிறார்கள். ஜெப்பெலின் என்னும் எஞ்சினீரால் கட்டப்பட்ட லேசான ஆகாயக் கப்பல் ஒன்று 8-ப் பேரை ஏற்றிக்கொண்டு $37\frac{1}{2}$ மணி நேரத்தில் 700 மைல் தூரம் சென்றதாம். அநேக இடங்களுக்குச் சென்று தான் புறப்பட்ட இடத்திற்கே சுலபமாய் வந்து சேர்ந்ததாம். இம்மாதிரியான ஆகாயக் கப்பல்களுக்கு டிரிஜிபில் பெலூன் என்று பெயர். இவை காற்றையும் எதிர்த்து வேகமாய்ச் செல்லும். இவைகளில் சுருட்டுப் போன்ற நீண்ட வடிவமுள்ள புகைக் கூண்டுகள் உள. இக்கூண்டுகள் உறுதியுடைய லேசான உலோகமாகிய அலூமினியக் கம்பிகளால் செய்த சட்டங்களை உள்ளே உடையன. 8-ப் பேரைத் தாங்கக்கூடிய டிரிஜிபில் ஒன்று 420 அடி நீளமும் 38 அடி உயரமும் உள்ளது. இவைகளைச் சண்டை காலத்தில் உபயோகிப்பதற்கென்றே அநேக மேல்நாட்டு ராஜாங்கத்தார் கட்டி வைத்திருக்கிறார்கள்.

## டிரிஜிபிலின் கஷ்டங்கள்.

இப்பெலூன்களை உபயோகிக்கும்போது சில ஸங்கடங்கள் நேரிடுகின்றன. இக்கூண்டுகள் பெரியன வாகையால், எதிரிகளின் கண்ணுக்குத் தெரியாதபடி பறக்க அதிக உயரம் செல்லவேண்டியிருக்கிறது. ஸாதாரண உயரத்தில் பறந்தால், பகைவர்கள் எளிதில் கண்டு குறிப்பிட்டுச் சுட்டுவிடலாம். யுத்தகாலங்களில் இவைகளில் காற்று நிரப்பியே எப்போதும் தயாராக இருக்கவேண்டும். வெயிலாலும் மற்ற ஆகாயத்தோற்றங்களாலும் கெடாதபடி இக்கூடுகளை விசாலமான பந்தோபஸ்தான இடத்தில் வைத்திருக்கவேண்டும். சண்டை காலத்தில் இவைகளைக் காப்பாற்ற கொட்டங்களையும் சேனையுடனே எடுத்துச் செல்லவேண்டும். இவைகளில் எளிதில் தீப்பற்றி எரியும் வாயு பதார்த்தங்கள் நிறைந்திருப்பதால், ஆகாய மார்க்கமாய்ச் செல்லும்போது மின்னல் பாய்ந்ததானால் கப்பல் எரிந்து போய்விடும். இக்கப்பல் பெரிய பருமனையுடையதாகையால், மின்னல் பாயும்படியாக ஆகாயத்திலுள்ள மின்சாரத்தை கிரஹிக்கவும் சக்தியுடையதாகிறது.

## பக்ஷிகளைப்போல் பறக்க எத்தனங்கள்.

அனேக ஆண்டுகளாக, பக்ஷி ஜாதிகளைப் பறக்கும்போது கவனித்து, அம்மாதிரியாகவே இறக்கைகளைக் கட்டிக்கொண்டு அவைகளை அசைப்பதால் பறக்க அநேகர் முயன்றும், பலிக்காமல் ஏமாந்துகொண்டே வந்தார்கள். வர வர பக்ஷி ஜாதிகளைக் கவனித்துத் தெரிந்துகொண்டதென்ன, செய்த யுக்திகளெல்லாம் வீணானதென்னவென்பதைப் பரிசோதிக்க எத்தனித்ததில், நம் தேகத்தின் அமைப்பு பக்ஷிகளைப்போல் பறக்க ஒவ்வாததென்றும் மனதில் பட்டது. பக்ஷி ஜாதிகள் அதிக பளுவில்லாதவை யென்றாலும், ஆகாயத்தைவிட



பளுவுள்ளவைகளே. இறக்கைகளைச் சாய்வாக விரித்து வைத்துக்கொண்டு அடித்துக்கொள்வதால், அவை மேலே கிளம்புகின்றன. பின்புறத்துள்ள அகன்ற புச்சத்தை அசைப்பதால், படகுகளில் பின்புறத்துள்ள சுக்கானைத் திருப்புவதால் படகுகள் செல்லும் நேரான திசையைவிட்டுப் பக்கமாய் திரும்புவதுபோல பக்ஷிகள் புச்சத்தின் உதவியால் வலமிடமாகவும் மேல் கீழாகவும் திரும்புகின்றன. பக்ஷிகளின் இறக்கைகள் அகன்று வழவழப்புள்ள பரப்புள்ளவைகள். அவற்றின் எலும்புகள் போலாக இருப்பதால், அதிக வலுவுள்ளனவாகவும் லேசாகவும் இருக்கின்றன. இறக்கைகளை அடித்துக்கொள்வதற்காக அவைகள் உபயோகிக்கும் தசைகள் அதிக உறுதி உடையன. நம் கைகால்களிலுள்ள தசைகளின் சக்தியையும் நம் தேகத்தின் பளுவையும் ஒப்பிட்டுப் பார்க்க, பளுவுக்குத் தக்க தசையின் வலு பக்ஷிகளுக்கு இருப்பதைவிட நமக்குக் குறைவே என்று எளிதில் கண்டுகொள்ளலாம். இக்காரணத்தாலேயே பறப்பதற்கென்று செய்த எத்தனங்களெல்லாம் நிஷ்பலனாகிவிட்டன என்று தோன்றுகிறது. நம் தேகத்தின் எடையைக் குறைக்க முடியாதே. ஆகையால், பறப்பது முடியாததென்று கைவிட வேண்டியதுதானோ? என்று ஆலோசிக்கையில், இறக்கைகளை அசைத்துக் கொண்டேதான் பறக்கவேண்டியது என்பது அவசியமோ? என்னும் சந்தேகம் தோன்றி, வேறு வழியால் பறக்க எத்தனித்தால் நல்லதென்று தோன்றிற்று. இவ்வாறு யோசித்து உடம்பில் இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறக்கவேண்டுமென்ற ஆசையை ஒழித்து, வேறு யுக்திகளைப் பரிசோதித்து வந்தார்கள்.

## புதிய யுக்தி.

ஸம பரப்புள்ள ஒரு வஸ்துவை வேகமாக ஆகாயத்தில் வீசி எறிந்தால் எவ்வளவுக்கெவ்வளவு விசையாகப் பாய்கிறதோ அதற்குத் தக்கபடி அதிக தூரம் வரையில் ஆகாயத்திலேயே சென்று பிறகு பூமியில் விழுகிறதென்று நாம் அனுபவத்தில் காண்கிறோம். ஒரு தகட்டைச் சாய்வாகப்பிடித்து வேகமாய்த் தள்ள அது ஆகாயத்தால் தாங்கப்பட்டுப் பறந்து செல்லுகிறதென்பதை லேங்லே என்னும் ஸயன்டிஸ்ட் நிரூபித்த காலம்முதல், இந்த யுக்தியை உபயோகித்துப் பறக்கும் யந்திரம் கட்ட அநேகர் எத்தனித்தார்கள். பக்ஷிகள் இறக்கைகளை அடித்துக்கொள்வதுபோலன்றி, நிலையான இரண்டு இறக்கைகளைப் பக்கத்துக்கு ஒன்றாய் சாய்வாய் வைத்துக்கொண்டும், பக்ஷிகளின் புச்சங்களைப்போல் அகன்ற துடுப்புகளைப் பின்புறமாக அசைத்துக்கொண்டும், முன் வேகமாய்ச் செல்வதற்கு மோடாரிலுள்ள விசையை உபயோகித்தும் உள்ள பறக்கும் சூஸ்திரப் பறவைகளைக் கட்ட எத்தனித்து, விதம் விதமான உருவங்களை அமைத்து இப்போது பறந்து வருகிறார்கள். இவைகளுக்கு ஏரோப்ளேன் என்று பெயர். (ஏர்-ஆகாயம், ப்ளேன்-தகடு). வெவ்வேறு விதமான யந்திரங்களை ஒப்பிட்டுச் சிறந்தது எது என்று தெரிந்தெடுக்கவென்றே ஐரோப்பாவில் அனேக ராஜாங்கத்தார் பல பறக்கும் பந்தயங்களுக்கு ஏற்பாடு செய்து ஜெயித்தவர்களுக்கு அதிக வெகுமதியும் கொடுத்து வருகிறார்கள்.



படம். 1. ப்ளேரியாட் மானேப்ளேன்.




படம். 2. மானேப்ளேனின் பாகங்கள்.

மானேப்ளேனின் பாகங்கள்.

A. A. இரு பக்கத்து இறக்கைகள்.

B. H. F. இறக்கைகளைத் தாங்கும் கம்பிகள்.

D. D. மேல் கீழ் செல்லச்செய்யும் புச்சங்கள்.

E. வலம் இடம் திரும்பச் செய்யும் புச்சம்.

H. முன்புறம் சுழலும் காற்றுடியின் ஒரு இதழ்.

M. மோட்டார் வைத்த இடம்.

R. மோட்டாருக்கு வேண்டிய எண்ணெய்க் கலயம்.

C. இரும்புக் குழாய்களாலாகிய கெட்டியான உடல் பாகம்.

| | |
|---|---|
| இதன் மொத்த அகலம். | 28 அடி. |
| மொத்த நீளம் | 30 அடி. |
| ஆள், எண்ணெய் உள்பட மொத்த பாரம். | 705 பவுண்டு. |
| காற்றடியின் குறுக்களவு. | 7 அடி. |

1250 தடவை ஒரு நிமிஷத்தில் சுற்றும்.

மையத்தில் மனிதன் உட்கார்ந்திருக்கிறான்.





படம். 3 பார்மன் பைப்ளேன்.

## ப்ளேரியாட் மானேப்ளேன்.

கீல் பறவைகளில் அநேக விதம் உள. 1,3 படங்களில் இரண்டு விதமான பறவைகள் வரையப்பட்டிருக்கின்றன. முதல் படத்தில் காட்டிய மாதிரியான ஒரு யந்திரம் சென்னை ஐலண்ட் க்ரௌவுண்டில் சென்ற பிப்ரவரிமீ 17,18 தேதிகளில் காலையில் வட்டமிட்டுப் பறந்ததை நாம் பார்த்தோம். இது 2000 அடி உயரம் பறந்ததாம். இதன் உருவம் பக்ஷியைப் போலவே இருக்கிறதல்லவா? இதில் ஏறிச்சென்றவர் ப்ரான்ஸ் தேசத்து மான்ஸியர் டிக் என்பவர். இவர் இக்கீல் பறவையை முதல் முதல் கட்டிய ப்ளெரியாட் என்பவருடன் சேர்ந்து வேலை செய்தவர். இவர் மையத்தில் உட்கார்ந்து கொண்டு தன் பக்கத்திலுள்ள சூத்திரங்களால் மோட்டாரையும், புச்சங்களையும், இறக்கைகளையும் வேண்டியபடி திருப்பிக் கொண்டு சென்றார். இந்த மாதிரி யந்திரத்திற்கு ப்ளெரியாட் மானேப்ளேன் என்று பெயர். இதில் ஒரு-தட்டுப் போலி இறக்கைகளே உண்டு இதன் கட்டிடம் தெளிவாய்த் தெரியும்பொருட்டு 2-வது படம் வரையப்பட்டிருக்கிறது. இது பூமியில் இறங்கும்போது பூமியில் பட்டு உடைந்துபோகாத வண்ணம் ரப்பர்க் குழாய்க் கட்டுகளையுடைய சக்கரங்களின் மேல் கட்டியிருக்கிறது. இது பறக்க ஆரம்பிக்கும்போதும் இறங்கும்போதும் பக்ஷிகளைப் போலவே தோன்றும். இருதட்டுப் போலி இறக்கைகளையுடைய ஹென்ரிபார்மன் என்பவரால் கட்டப்பட்ட பைப்ளேன் (இரண்டு தட்டுகள்,) என்னும் சூத்திரப் பறவையின் வடிவத்தை 3-வது படத்தில் காணலாம்.

## தட்டுகளின் உபயோகம்.

காகிதக்காற்றாடிகளைச் சாய்வாகப்பிடித்துக் காற்றடிக்கும்போது முன் இழுத்தால் மேலே கிளம்புகிறதையும், காற்றடிக்காமலிருந்த போதும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு முன்னால் வேகமாய் ஓடினால், படம் மேலே போவ

தையும் பார்த்திருக்கிறோம். பறவை யந்திரத்தில் இரண்டு இறக்கைகளும் சாய்வாகவே கட்டப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்பாகச் சுழலும் காற்றாடியைப்போல இரண்டு தட்டையானவும், கொஞ்சம் திருகலானவுமான சட்டங்கள் மோட்டாரின் உதவியால் அதிவேகமாய்ச் சுழலுகின்றன. இப்படிச் சுழலுவதால், காற்று வேகமாய் அடிக்க கீல்பறவை முழுவதும் முன்புறமாகத் தள்ளப்படுகிறது. சென்னையில் பறந்த யந்திரத்தில் காற்றாடி சுற்றினபோது 7,8 மனிதர்கள் அதைப் பின்புறமாகத் தள்ளிப் பிடித்துக்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வளவு வேகமாகச் சுற்ற ஆரம்பித்தும் அவர்கள் யந்திரத்தை விட்டுவிட, அது பறந்தது. இறக்கைகள் முன்னால் தள்ளப்பட்டவுடனே, காகிதப் படத்திற்குச் சொன்னபடி, இவ்விறக்கைகளும் மேலே கிளம்ப வேண்டியதுதானே? காற்றின் விசை அதிகமானால், பளுவுள்ள கதவு படங்களும் மேலே ஏறுவதுபோல், அதிக பளுவுள்ள கீல் பறவைகள் பறக்க, அதிலுள்ள காற்றாடி அதிக வேகமாய்ச் சுற்ற வேண்டியதுதானே? இறக்கைகளைத் தவிர பின்புறத்தில் சில ஸன்னத் தகடுகள் உள. இவற்றை முன்புறத்து உட்கார்ந்த மனிதன் சில கம்பிக் கோர்வைகளால் எளிதில் திருப்பலாம். இவற்றில் இரண்டு வலம் இடம் திருப்பவும், வேறிரண்டு மேல் கீழாகப் பாயவும் உதவும். மெல்லிய இரும்புக் குழாய்களையும் ஸன்னச்சட்டங்களையும் வேண்டியபடி கட்டி மெழுக்குத் துணியால் போர்த்து இறக்கைகளைச் செய்கிறார்கள். இத்துணி வழவழப்பாய் இருப்பதால், மேல்படும் காற்றை சுலபமாய்த் தள்ளிக்கொண்டு செல்லலாம்.

### கீல் பறவைகளின் நடு நிலைமை.

காகிதப் படங்களில் கயிறு ஸரியான இடத்தில் கட்டியிராவிட்டாலும், வால் தகுந்த பளுவில்லாவிட்டாலும், பளு வித்தியாஸத்தால் படம் தத்தளித்து தலைகீழாகச் சுழலுவதைப்போல் இந்த யந்திரம் சுழன்றால், பிரயாஸை யெல்லாம் வீணாகுமல்லவா? காற்றடிப்பதாலும், யந்திரம் வலம் இடம் திரும்புவதாலும், மைய நிலை தப்பி குடைசாயாதபடி, யந்திரத்திலுள்ள பளுவை முன்னதாகவே கணக்கிட்டு ஸரியான இடங்களில் வைத்திருப்பார்கள். திடீரென்று காற்றடித்தாலும் தள்ளாடாமல் இது செல்லவேண்டியது அத்தியாவசியமல்லவா?

### சூத்திரப் பறவைகளின் சிறப்பு.

இவை பெலூன் கூண்டைவிட அதிகச் சிறியனவாக இருப்பதுமன்றி, மேலே கொஞ்ச தூரமாகப் பறந்தாலும், எதிரிகளின் கண்ணிற் படாமலும், அவர்கள் சுட்டுவிடாமலும் எளிதில் செல்லலாம். வண்டிகளைப்போல வேண்டுமானபோது உடனே உபயோகிக்கலாம். காற்றால் நிரப்பிவைத்திருக்கவேண்டுமென்பது இல்லை. சிறிதாகையால், உபயோகப்படாதபோது வீட்டிற்குள் கொண்டு வைத்துவிடலாம். விளக்கினாலும் மின்னலாலும் அபாயம் ஒன்றும் இல்லை. மற்றெந்த விதத்திலும் இவ்வகைப் பறவை யந்திரங்கள் டிரிஜிபில்களைவிட மேலானவை யென்று சொல்லலாம். என்றாலும், இவ்விரண்டு வித வாகனங்களையும் கைவிடாமல் நாளுக்கு நாள் சீர்திருத்தங்கள் செய்துகொண்டே வருகிறார்கள்.

இப்போது வேண்டுமானபோது மேலே பறக்கும்படியான படகுகளைக் கட்ட எத்தனிக்கிறார்கள். இவற்றின் உதவியால் சமுத்திரங்களைத் தாண்டியும் மலை வனாந்தரங்களைக் கடந்தும் எளிதில் செல்லலாமல்லவா?



### கீல் குதிரை.

இதை வாசிக்கையில், நம் தேசத்தில் முன் காலத்தில் பறக்கும் சக்தியையுடைய கீல் குதிரைகள் இருந்தது தானே, அதைத்தானே இக்காலத்தில் ஐரோப்பியர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள், நாம் கதைகளில் கீல் குதிரைகளை அரசர்கள் உபயோகித்து வந்ததாகக் கேள்விப்படுகிறோமல்லவா? நம் முன்னோர்களுக்குத் தெரிந்திராதது ஒன்றும் இல்லை என்று சிலரும், வேறு சிலர் வேதங்களிலும் ஆகாயத்தில் பறப்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறதே என்றும் எண்ணலாம். கீல் குதிரை எனப் பெயர் வழங்குகிறதே தவிர, அது எவ்வாறு இருந்தது, அதை எவ்வாறு கட்டினார்கள், அது எந்த யுக்தியால் பறந்தது, அதன் உருவம் எவ்வாறு இருக்கும் என்பதைச் சொல்லுபவர்களை நாம் கண்டதில்லை. கீல் குதிரைகளைப் பற்றிய குறிப்புகள் பழய க்ரந்தங்களில் கண்டவர்கள் எவரேனும் இதை வாசிக்க நேரிட்டால், அவர்கள் அவ்விஷயத்தை இப்பத்திராதிபருக்கு உடனே தெரிவிக்கவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். இது வாஸ்தவமேயானால், நம் முன்னோர்கள் இவ்வளவு புத்திசாலிகளாக இருக்க, நாம் ஏன் இப்போது அவர்களுடைய சந்ததியார் என்பதையும் சொல்ல நாவெழாதபடி அஞ்ஞான இருளில் மூழ்கியிருக்கிறோம்? மேல் நாட்டார் தங்கள் மனதில் தோன்றியதை அடிக்கடி செய்ய எத்தனித்து, அநேக தடவைகளில் அபஜெயமானாலும், அதனாலே தோல்வியடைந்த காரணத்தைத் தெரிந்துகொண்டு மேன்மேலும் அபிவிருத்தி செய்து கடைசியில் தாங்கள் எண்ணியதைக் கைக்கொள்வது இப்போது விவரித்த கீல் குதிரையின் வரலாற்றால் தெரிகிறதல்லவா? இந்த ஐரோப்பியர்களுடைய ஊக்கத்தையும் விடாமுயற்சியையும் கண்டு நாமும் அவ்வாறே மனதில் தோன்றியதைச் செய்து பரீக்ஷித்துப் பார்த்து வருவோமானால், நம் தேசம் தானே முன்னுக்கு வரும் என்பதில் ஸந்தேகமில்லை. இவ்வழியே நாம் முன்னுக்கு வருவதற்குச் சிறந்த வழி என்னலாம்.

எம். வி. எஸ். அநந்தபத்மநாபராவ்.

---

## SMALL INDUSTRIES FOR WOMEN.

BY

S. SOMASUNDARA DESIKAR.

## ஸ்திரீகளுக்குற்ற சிறுதொழில்கள்.

---

இந்து ஸ்திரீகள் நமது தென்னாட்டில் யாதொரு தொழிலும் செய்வதை நாம் பார்த்தறியோம். இந்து ஸ்திரீகளிலும் முக்கியமாக உயர் வகுப்பாரெனக் கூறும் பிராமணர் வகுப்பிலும், இரண்டாவதென்று சொல்லிக்கொள்ளப்படும் சைவவேளாளர் வகுப்பிலும் ஸ்திரீகள் யாதொரு தொழிலும் செய்வதில்லை. ஆயினும் செய்வதே யில்லை யென்று சொல்லுவதற்கு மில்லை. இதற்கு மாறாக மகமதிய ஸ்திரீகளும் தாழ் வகுப்பு இந்து ஸ்திரீகளும் ஏதாவது ஒரு தொழில் செய்துதான் வருகிறார்கள். இந்து கீழ்வகுப்பு ஸ்திரீகள் செய்யும் தொழில் சற்று கடினமும் சிரமும் உடையனவாயினும், மகமதிய ஸ்திரீகள் செய்யும் தொழில்கள் அப்படிப்பட்டவையல்ல. தஞ்சாவூர் ஜில்லாவில் ஸமுத்திரக் கரையோரங்களிலுள்ள மகமதிய ஸ்திரீகள் மெத்தைப் பாய் என்று சொல்லும் தாழம் பாய் பின்னுகிறார்கள். இந்தப் பாய்கள் குறைந்தது 8 அணா முதல் இரண்டு ரூபாய் வரையில் விற்கப்படுகின்றன. மெத்தைக்குமேல் மெதுவாக இருப்ப

தால், இது மெத்தைப்பாய் என்றழைக்கப்படுகிறது. இதற்கு வேண்டிய ஸாமக்கிரியைகளோ தலையில் சூட்டிக்கொள்ளும் தாழம்பூ உண்டாகும் தாழை ஓலைகளே. இவற்றில் முதிர்ந்த ஓலைகளைத் தள்ளி மேலே குருத்துடன் நான்கு ஓலைகளைச் சேர்த்துக் குத்தியெடுத்துக் கொண்டுவந்து ஸன்னமாகக் கிழித்து நிழலில் உலர்த்துகிறார்கள். இவை குருத்துகளா யிருப்பதற்குத் தக்கபடி வெண்மை யுடையனவாகின்றன. இவற்றிலேயே இன்னும் இளங் குருத்துகளா யிருப்பவைகளை யெடுத்து வேண்டிய சாயங்களைச் சேர்த்து இந்த ஓலைகளையும் போட்டு வேகவைத்து எடுக்கிறார்கள். இச்சாயம் ஒருநாளும் போகிறதில்லை. பிறகு வேண்டிய மாதிரிகளை உபயோகப்படுத்திப் பாய் பின்னுகிறார்கள். பாய் முடைவதில் இரண்டு பாய்களைப் பின்னி ஒன்றுடன் ஒன்று சேர்த்து பிரப்பம்பாய்களுக்கு ஓரம் கட்டுவதுபோல் மேலே கூறிய ஓலையாலேயே பின்னிவிடுகிறார்கள். இதிலும் மேல்பாய் ஸன்னமாகக் கிழித்த ஓலையால் பின்னப்பட்டதாயும், கீழ்தட்டு சற்று பெரிய கீற்றுகளுடையதாகவும் செய்யப்படுகின்றன. இவை இரண்டும் சேர்ந்தவுடன் வெகு மிருதுவாக இருக்கின்றன. ஓய்வு நேரங்களில் மாத்திரம் ஒரு பாய் பின்னுவதாயின் ஒருவாரத்திற்குள் பின்னக்கூடும். வீணே கழிக்கும் காலத்தை இப்படி உபயோகமான வேலையில் செலவிடுதல் உள்நாடுகளிலும் உசிதமாகும். உட்கிராமங்களிலு மிருக்கும் பிராமணர் போன்ற சில வகுப்பார் தம் வீட்டிற்கு வேண்டியமட்டும் கோரையாற் செய்த பாய்களைப் பின்னுவதைப் பலரும் பார்க்கிறோம். இந்தக் கோரைப்பாய் மழைகாலத்திற்கு வெகு ஸௌக்கியமானது. ஈரத்தை மேலே செல்லவிடுகிறதில்லை உஷ்ணத்தையே கொடுத்துக் கொண்டிருக்கும். ஆயினும் இது அபரிமிதமாகச் செய்யப்பட்டும், வாங்கவும் படுவதில்லை.

இரண்டாவதாக உள்நாட்டிலிருக்கும் மகமதிய ஸ்திரீகள் பட்டு இழைத்தல் வேலையைக் கைக்கொண்டிருக்கிறார்கள். ஒரு வீசை பட்டிழைத்தால், இரண்டு ரூபாய் கிடைக்கும். ஸாதாரணமாக ஒரு மாதத்தில் இரண்டு வீசைப் பட்டிழைக்கக்கூடும். இந்தமாதிரி அநேகர் பட்டிழைக்கிறார்கள். எல்லாம் ஓய்வு நேரங்களில் செய்யப்படுகின்றனவே யொழிய மற்றப்படி வீட்டுவேலைகள் இதன் பொருட்டுத் தடைபடுவதில்லை. இப்பட்டு இழைப்பதற்கு இவர்கள் தேடவேண்டியது ஒன்றுமில்லை. பட்டுச் சாயம் போடவேண்டியவன் பட்டையும் திரிவிட்டம் என்னும் ஒரு கருவியையும் கொண்டுவந்து வீடுகளில் கொடுத்துவிடுகிறான். இவர்கள் அவற்றை சிக்க லில்லாமல் இந்தத் திரிவிட்டத்தில் சுற்றிக்கொடுத்துவிட வேண்டியதுதான். வேறொன்று மில்லை.

இப்படிச் சில சிறு நுட்பமான தொழில்களிருக்க வீட்டு ஸ்திரீகள் வீணே காலத்தைக் கழிக்கிறார்கள். எப்பொழுதும் ஒருவருக்கு வேலை யில்லையாயின் யாருடனாவது பொழுதுபோகப் பேசச் சொல்லும். பேச ஆரம்பித்தால், அவற்றைத் தடுக்க இவை உத்தமமான தொழில்களாகும்.

சோமசுந்திர தேசிகர்.



## RAT EXTERMINATION.

BY

V. P. THIRUMALIAPPA MUDALIAR.

## எலிகளைத் தொலைத்தல்.

இந்தப் பத்திரிகை 3-ம் வால்யம் 4-வதுலக்க ஸஞ்சிகை 174-ம் பக்கத்தில் தஞ்சை ஜில்லா சம்பாப் பயிர் மாசூல் எலிகளால் நஷ்டமானதாகவும், பரிகாரம் கூறும்படியும் எடிட்டோரியல் கலத்தில் வினவப்படுகின்றன.

மற்ற ஜில்லாக்களில் விளைவு தீவு ஸம்பவத்தைப் பொறுத்து நிலம் உயர்வு தாழ்வு மதிக்கப்படும். தஞ்சாவூர் ஜில்லாவிலோ பாதை ஸௌகரிய மில்லாத கிராமத்தை உயர்வாகக் கொள்வதில்லை. வருஷத்தில் 3 போகம் விளையும் நிலமானாலும் பாதை ஸௌகரியங் குறையின் பிரயோஜனமல்லாத நிலமாகவே கொள்ளப்படுகிறது. பைஸிக்ளிலில் சவாரிபோய் நிலம் பார்ப்பதாயின் பாழான களர் நிலமாயினும் மேன்மையாகக் கொள்வார். பெலூன்கூண்டு வேகம் மட்டாய் பூமியைத் தொட்டுக்கொண்டு போமாகில், பெலூன் ஏராளமாய் வாங்கி ஆனந்திப்பர். அப்போதேனும் நிலங்களைச் சுற்றிப்பார்த்துகுறைதெரிந்துபரிகாரந்தேடப்படுமோ என்பதும் ஸந்தேகப்பாடே. நிலங்களை அப்போதைக் கப்போது பார்வை செய்து வந்தால், குற்றங் குறை தெரிய ஹேதுவாகும். சம்பா அறுவடைக்கு முன் கிருஷி இலாகா ஸ்பெஷல் ட்யுடி பாரம் மானேஜர் மிஸ்டர். வி. நாரணய்யரவர்களிடம் தெரிவித்திருந்தால், பரிகாரங் கிடைத்திருக்கும். சம்பா மாசூல் நஷ்டமாயிராது. அஸ்தத்தில் ஆச்சியமிருக்க மேலும் மேலும் ஆச்சியம் தேடி யலைவார் கதை போல தஞ்சை ஜில்லா விவஸாயப்போக்கு இருக்கின்றது. அரசுரிமை, விவகாரம், இவைகளைச் செய்வதில் காட்டும், புத்தி சாதுரியத்தைத் தஞ்சை ஜில்லா விவஸாயத்தில் செலுத்தினால், எவ்வளவோ மேம்பாடாக விருக்கும். தஞ்சை ஜில்லா விவஸாயத் தாழ்வு பூராவும் தெரிவிப்பதாயின் சில அத்தியாயம் வரையவேண்டும். அப்படி எழுத சாவகாசமும் போதாது. வருகிற அக்டோபர் மாதத்துக்குள் கிருஷி இலாகா நிரூபண பண்ணை ஏற்பாடாகும். அப்போது திருந்தலாமென்று நிறுத்தி எலி பரிகார மட்டும் பேசுவோம்.

1. தஞ்சை ஜில்லா நஞ்செய் வரப்புகள் ஒரு பக்கம் ½ அடி யிருந்தால், மற்றொரு பக்கம் 5 அடி யிருக்கும். அவைகளில் பல புற்பூண்டு குழைத் தளையுண்டாய் செத்தை யடைந்திருப்பது எலிகுடிகொள்ள ஹேதுவாகும். தழைகளை அப்போதைக் கப்போது அறுவடை செய்து நிலத்துக்கு உரமாக்கலாம். பயிர் மித்தியகாலம் முளைக்குந் தளைகளை அறுத்து எருக் குழியில் சேர்த்து உரமாக்கவேண்டும். 1 அடி உயரத்துக்கு அதிகமான வரப்புகளை அப்புறப்படுத்த வேண்டியது அவசியம். சிலவு மிகு மென்றால், வருஷந்தோறும் எலி, சாரைப் பாம்புகளால் மாசூல் குறைந்து நஷ்டமே யுண்டாகும்.

2. பக்ஷிகளில் ஆந்தையைக் காணில் அபசகுனக் குறி என்று சொல்வதுண்டு. ஆந்தைக் கூண்டுகளில் ஆந்தைக்கு எலிகள் இரையாவதைப் பன்முறை சோதனை செய்யப்பட்டிருக்கிறது. எலி ஆந்தைக்குப் பிரியமான உணவு. எலிகள் ராத்திரி காலமே இரைதேடப்புறப்படும். அப்போதுதான் ஆந்தைகளும் இரைதேடப் போவதால், எலியைப் பக்ஷிக்கும் ஆந்தை பகல் இரை எடுப்பதில்லை. நெற்பயிரின் உயரத்துக்கு $\frac{1}{2}$–1 அடி உயரமாகும்படி சில கழிகள் நடவும்,

அந்தக்கழியின் உச்சியில் வைக்கோலினால் தலைப்பாகைபோல் கட்டவும், அந்தத் தலைப்பாகைமேல் ஆந்தை உட்கார்ந்து எலியைப்பக்ஷிக்கும். ஆந்தைச்சத்தங் கேட்ட சாரைப் பாம்புகளும் அகன்றுபோம். சாரைப்பாம்புகள் வாலினால் கதிரையும் நெற்பயிரையும்வெட்டும்தொல்லை ஒழுந்துபோம்.

3. வீடுகளில் கழித்த சில மட்பாண்டங்களை எடுத்து நெற் பயிரில் ஜலங் கட்டிய உயரத்துக்கு $\frac{1}{4}$,$\frac{1}{2}$ அடி உயரமாயும் பாண்டவாய் ஆகாயம் பார்த்தும் பதிக்கவும். பாண்டத்தில் காலே அரைக்கால் பாகம் உயரம் வரை சாணிப் பாலைக் கரைத்துவிட வேண்டியது. பாண்டங்கள் 2, 3, 4 காலன் (காலன் என்பது 6 புட்டி) ஜலங் கொள்ளுவது போதும். பாண்டவாயில் ஒரு சிறு கோலைப் போடவும். அதன் குருக்கே காம்பு உள்ள வாழை இலை போடவும். பாண்ட வாயவ்வளவே இலை போதும். இலையின்மேல் கொஞ்சம் வறுத்த உளுந்தும் நெற் பொரியுந் தூவ வேண்டியது. நெற் பொரி உணவுக்கு ஆசைப்பட்ட எலி தெப்பம் போலுள்ள இலையில் ஏறியவுடன் பாண்டத்தில் விழுந்துவிடுகிறது. பாண்டத்தில் விழுந்த எலி மேலே வரமுடிவதில்லை. சாணிப்பால் எலியின் ஸ்வாதீனத்தை இழக்கச் செய்கிறது. பாண்டத்தில் தினம் 7,8 எலி விழும். விழுந்த எலிகளை தினம் அப்புறப்படுத்தவேண்டும். நெற்பொரிப் பாண்டத்தில் எலிகள் விழவிழ வேறு பொரி தூவவும் வேண்டும். பல பாண்டங்களில் ஏராளமான எலி விழும். மாசூல் அழிவு மிகவுந் தீரலாம்.

4. தென்னாப்பிரிக்கா மைதான வனங்களில் சுயேச்சையாய் லிகித பக்ஷி சஞ்சரிக்கிறது. அந்தப்பக்ஷி பாம்பையும் எலியையும் தீவிரமாய் பக்ஷிக்கிறது. அதைப் பிடித்துப் பழக்கிப் பாம்பையும் எலியையும் நிர்மூலமாக்க ஆப்பிரிக்கா வாஸிகள் உபயோகிக்கிறார்கள். அவர்களுக்கு லிகித பக்ஷியில் பிரியம் ஜாஸ்தி. அங்கு புலங்களுக்கு மனிதர் செல்லும்போது கூடவே லிகித பக்ஷியும் போய் நிலங்களிலிருக்கிற எலி பாம்பு இவைகளைத் தொலைக்கிறது. வீட்டிலும் எலி பாம்பு பாதை கிடையாது. அதைக் கிருஷி இலாகா மூல்யம் தருவித்துப் பயனடையலாம்.

5. அமெரிக்காவில் பரிகாஸ பக்ஷி ஒன்றுண்டு. அது எல்லா பக்ஷிகள் குரல்போல் தவறாது பாடும். பழகிய பக்ஷி மனிதர்போல் தவறாது பாடுகிறது. பாம்பு எலிகளையும் அழிக்கும் வல்லமையும் உண்டு. ஸங்கீத ஆவல் மிகுந்த தஞ்சை ஜில்லாவுக்குப் போனகிறுப் மாதிரியான சுகம் பெறலாம். இதையுந் தருவித்துப் பயனடையலாம். இங்குள்ள மயில் கருடன்களால் எலி பாம்பழிவு மிகக் குறைவு. ஒன்று மற்றொன்றைத் தவறி சந்திக்கும்போது அழிவாகிறதே தவிர உண்மையில் மயில் முதலியவைகள் வேட்டைநாய்போல் எலி பாம்பை யழிப்பதில்லை.

6. பைஸல்பைட் ஆப் கார்பன் என்ற இங்கிலீஷ் விஷ மருந்து மதராஸ் ஸிமித் அண்டு கம்பெனி போலொத்த பெரிய மருந்து ஷாப்பில் கிடைக்கும். அந்த மருந்தைத் துணியில் நனைத்து எலி வளையில் செலுத்த மூச்சுத்திணறி எலிகள் சாகும்.

7. பேரியம் கார்பனேட் என்ற இங்கிலீஷ் மருந்து ஒரு பாகம், ஏதேனும் மா, தவிடுகளில் 3 பாகமுங் கலந்து கோலிக்காய் அளவு உருண்டை செய்து வரம்புகளில் சிதறி வைக்க எலி தின்று சாகும். இந்த 6, 7 லக்க விஷ மருந்துகள் புண்ணுள்ளவர்கள் கையாடப்படாது. மற்றோரும் மருந்தை உபயோகித்த பின் கையை ஜலம் விட்டுக் கழுவவேண்டும்.



மருந்தில் கைவிட்டு முகங் கால் முதலிய அங்கங்களைத் தடவவும் கூடாது.

8. அமெரிக்கா விவஸாய விருத்தி எவ்வளவு உயர்வோ அவ்வளவு தூரம் எலி பாதையும் ஜாஸ்தி. எலிகளால் வருஷந்தோறும் கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டமாகி மாசூல் அழிவாகிறதாம். பல ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். நிகோலா டெஸ்லா என்ற சாஸ்திரி மின்சார விசை தயாரிப்பதில் வல்லவராம். அவர் எலி பிடிக்கும் யந்திரம் தயாரித்திருக்கிறார். யந்திரத்தில் எலிக்கு உணவும் சாக ஏற்பாடு முண்டாம். விபரமாயறிய விரும்புவோர் கும்பகோணம் வைத்திய போதினி பத்திராசிரியரிடங் கேட்கலாம். வைத்திய போதினியின் முதல் வால்யும், 8-ம் லக்க ஸஞ்சிகை 169-ம் பக்கம் பார்க்கத்தெரிய வரும்.

நமது அனுபோகத்தில் அறிந்ததைப் பூராவும் கூறிவிட்டோம் தேவையானவர்கள் இஷ்டமானதை அங்கீகரிக்கட்டும்.

இந்த விடை எடிட்டோரியல் கலத்தில் வினவியதால் எழுத நேர்ந்தது.

தேனீ பல புஷ்பங்களிலிருந்து தேன் திரட்டும். அவ்வாறே நமது 'பிழைக்கும் வழி'யில் வர்த்தகாபி விர்த்தி, தொழில் அபிவிர்த்தி, வித்தியா அபிவிர்த்தி, விவஸாய அபிவிர்த்தி, பொருளபி விர்த்தி முதலிய பல விஷயங்களாராய்ச்சி செய்து தொகுக்கப்படுகின்றன. இந்தப் பத்திரிகை ஒன்றைப் பார்வை யிடுவதால், தேசாபிவிர்த்திக் குரிய ஸகல விஷயமும் தெரிந்து கொள்ளலாம். ஆகவே பத்திரிகாபிமானிகள் யாவரும் ஆதரிக்கும்படி வேண்டுகிறோம். தென்னிந்தியா வாஸிகளுக்கு சிரேஷ்டமான செவிக்குணவு 'பிழைக்கும் வழி' யொன்றேயாம்,—வெ, ப, திருமலையப்பமுதலியார்,

## THE ORIGIN AND SCOPE OF THE REGISTRATION DEPARTMENT.

## ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவின் ஆரம்பமும் நோக்கமும்.

விதிகளை ஏற்படுத்திக்கொள்வ தெல்லாம் ஏதாவது ஒரு காரியத்தை உத்தேசித்தேயாம். இப்போது நாம் பேசுவதாக எடுத்துக் கொண்ட பத்திரப் பதிவு அதாவது ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவைப் பற்றிய விதிகள் ஏற்பட்டமைக்கு அநேக காரணங்கள் உண்டு. முதலாவது, எழுதப்படும் தஸ்தாவேஜிகளின் பதார்த்தத்தைப் பற்றிப் போதுமான ருஜு ஏற்படுத்திக்கொள்வது; இரண்டாவது, அப்படிப்பட்ட தஸ்தாவேஜினால் செய்துகொண்ட நடவடிக்கை எல்லோருக்கும் தெரியும்படி பகிரங்கமாக்கப்படுவது; மூன்றாவது, அந்த நடவடிக்கையை எழுத்து மூலமாக ரிகார்டு செய்து கொள்வதினால், அதன் விபரங்கள் இன்னின்னவையென்று நிச்சயமாகத்தெரிந்து கொள்ளும்படி கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்துவது; நான்காவது, ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்ட ஸொத்தை கிரயமாகவோ, தானமாகவோ வேறொருவர் ஏமாற்றிப் பெற்றுக்கொள்ளாம லிருப்பதற்கு வேண்டிய தடங்கல்களைச் செய்வது; ஐந்தாவது, ஏற்பட்ட தஸ்தாவேஜிகள் நாசமாய்ப் போனாலும், கை சோர்ந்து போனாலும், அதனால் ஸ்தாவர ஸொத்துக்கு யாதொரு பாத்திய ஹானியும் நேராதபடி தகுந்த முன் ஜாக்கிறதை செய்துகொள்வது. பொதுப்

படக் கூறுமிடத்து, ஏதாவது ஒரு நடவடிக்கையைப்பற்றி நம்பக்கூடிய சாட்சியத்தைத் தேடிக்கொள்வதுதான் ரிஜிஸ்ட்ரேஷன் விதிகளின் பிரதான நோக்கமாம்.

ரிகார்டுகள் ஏற்படாத பூர்வ காலங்களில் சொத்து விஷயமாகச் செய்யப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் கிராமத்தார் அறியவே செய்யப்பட்டனவாதலால், அக்காரியங்கள் பகிரங்கமாகவே இருக்கும். ரோமர்களுக்குள், ஒரு சொத்து கிரயமாகவேண்டுமானால், விற்போனையும் வாங்குவோனையும் தவிர ஐந்து சாட்சிக்காரர்களும், பணத்தை நிறுத்துக் கொடுக்க ஒரு தராசுக்காரனும் அவசியம் இருக்கவேண்டும். ஐரோப்பாவில் முன்னாளில் போர்ச்சேவக மான்ய நிலங்களைக் கிரயம் செய்யும்போது, விற்போனும் வாங்குவோனும் விற்கப்படும் நிலத்தின் மீது நடந்து சென்று முன்னவன் கொடுக்கப் பின்னவன் பெற்றுக் கொள்ளவேண்டுமென்னும் வழக்கமிருந்தது. இவ்வித முறைகளின் நோக்கமெல்லாம், அக்காரியம் பலருக்கும் தெரியவேண்டுமென்பதுதான். நெடுங் கணக்கு ஏற்பட்டு, ரிகார்டுகள் தலையெடுத்த பின்பு, இவ்விதத் தொல்லைகள் வேண்டாவாயின. நாகரீகமும் வியாபாரமும் விருத்தியடைய அடைய, நடவடிக்கைகளை எழுத்து மூலமாக எழுதிவைத்துக் கொள்வதில் விசேஷ நன்மையும் அனுகூலமும் இருப்பது தெரியவந்தது. அவ்வித ரிகார்டுகளும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களால் உறுதி செய்யப்பட்டு, பின்னால் மாறாட்டத்துக்கு உட்படாதபடி முன் ஜாக்கிறதை பண்ணப்படுவதனால், கக்ஷிக்காரர்களுக்கு அதிக நன்மையும்ஸௌகரியமும்உண்டாகும்என்பதே இப்போது நாம் விவரிப்பதாக இருக்கும் பத்திரப்பதிவு இலாகா தோன்றியதற்கு முதற் காரணமாம்.

ரிஜிஸ்ட்ரேஷன் ஸம்பந்தமாக இந்தியா முழுவதிலும் செலாவணியாகும்படியான சட்டம் 1864-ம் ஆண்டில் உண்டாயிற்று. அதற்கு முன்னால் ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனியே இவ்விஷயமாக விதிகள் ஏற்பட்டிருந்தன. 1793-ம் ஆண்டில் 36-வது சட்டமாகப் பங்காள மாகாணத்தில் ஏற்பட்ட சட்டந்தான் ரிஜிஸ்ட்ரேஷன் விஷயமாக இந்தியாவில் முதன் முதல் உண்டான சட்டம். பம்பாய் ராஜதானியில் 1827-ல் இவ்விதச் சட்டம் ஏற்பட்டது. நமது சென்னை ராஜதானியில் 1802-ம் ஆண்டில் ஏற்பட்டது. பின்பு இச்சட்டம் 1831, 1843, 1845, 1856, 1859, இவ்வருஷங்களில் சிற்சில மாறுதல்களைப் பெற்று 1864-ம் வருஷம் வரையில் செலாவணியாய்க் கொண்டிருந்தது. இந்தியா முழுவதுக்கும் ஏற்பட்ட 1864-ம் வருஷத்து 16-வது ஆக்டு பழைய சட்டங்களையெல்லாம் ரத்து செய்து 1865-ம் வருஷம் முதல் அமுலுக்கு வந்தது. இச்சட்டம் 1866-ம் வருஷத்து 20-வது ஆக்டினாலும், 1871-ம் வருஷத்து 8-வது ஆக்டினாலும் ரத்தாயிற்று. பின்னர் 1877-ம் வருஷத்து 3-வது ஆக்டு 31 வருஷங்கள் வரையில் நடைமுதலில் இருந்து, 1908-ம் வருஷத்து 16-வது ஆக்டினால் ரத்தாயிற்று. 1909-ம் வருஷம் முதல் இப்புதிய 1908-ம் வருஷத்து ஆக்டே நடைமுதலில் இருந்து வருகிறது. ஐம்பது வருஷங்களுக்குள் இந்த ஆக்டு ஐந்து தரம் புதுப்பிக்கப்பட்ட விஷயம் ஒன்றே, ஜனங்களுடைய நாகரிக அபிவிருத்திக்கும் அதனாலுண்டாகும் சிக்குச் சிடுக்குகளுக்கும் ஸமமாகவே, விதிகளும் ஏற்படவேண்டிய அவசியத்தை நன்கு தெரிவிக்கிறது.



# SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### PREPARATION OF GREEN GINGER.

### இஞ்சி வற்றல் முற்பா செய்தல்.

மங்களூரிலிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ ஜே. ஐ. சல்தானா அவர்கள், விவஸாய டைரெக்டர் அவர்களுக்கு இஞ்சி வற்றலைப்பற்றி (முற்பா) எழுதிய குறிப்பு:—மங்களூரில் 'தோஷி' என்று பெயர்வழங்கும் இஞ்சிவற்றல் அல்லது முற்பா போட உத்தேசிப்பவர்கள் இஞ்சிப் பயிரை செப்டம்பர்௴ முதல் வாரத்தில் (அதாவது பயிர்நட்ட நாலாம் மாதத்தில்) வெட்டியெடுத்து அதில் இளசாயிருக்கும் அந்த வருஷம் பிடித்த இஞ்சிக்கிழங்கை மாத்திரம் வற்றல்போட உபயோகப்படுத்தி, விதையாய் நட்ட மீந்த முற்றின பாகத்தைக் கடைகளில் 'அஜ்ஜி' என்று பெயர்கொண்ட இஞ்சியாய் ஸாதாரண உபயோகங்களுக்காக விற்கிறார்கள்.

மங்களூரில் இஞ்சி வற்றல் பின்வருமாறு செய்கிறார்கள் :—

இளசாய் வெட்டியெடுத்த இஞ்சியைத் துண்டுகளாக்கி கத்திகொண்டு சீவி அந்த இஞ்சியின் கீழ்த்தோலை அப்புறப்படுத்தி அப்பால் அதைத் தலைமயிர் குத்திவைக்கும் கவர்கொண்ட ஊசிகளை ஒரு பிடியில் சொருகி வைத்த ஆயுதம் போலொத்த ஒரு கருவியால் நெருங்கக் குத்துகிறார்கள். இப்படிச் செய்துகொண்டிருக்கும்போது இஞ்சியைக் குளிர்ந்த தண்ணீர்வார்த்து வைத்திருக்கும் ஒரு அகன்ற கிண்ணம்போலொத்த பாத்திரத்தில் 4 நாளைக்குப் போட்டு, நாளொன்றுக்கு மூன்றுதரம் அந்தப் பாத்திரத்திலிருக்கும் தண்ணீரைக் கொட்டிவிட்டு, ஒவ்வொருதரமும் புதுத் தண்ணீர் கொட்டுகிறார்கள். கிண்ணியிலிருக்கும் தண்ணீரை வெளியேகொட்டும்போதெல்லாம் இஞ்சியைக் கையால் நன்றாய் அமுக்கிப் பிழிந்துவிடுகிறார்கள். ஐந்தாவதுநாள் நல்ல தண்ணீரில் நாள் ஒன்றுக்கு மூன்றுதடவை வேகவைக்கிறார்கள், ஒவ்வொருதரமும் சுமார் 3 மணி நேரத்திற்கு நல்லதண்ணீரில் வேகவைக்கிறார்கள். மூன்றாவதுதரம் வேகவைத்த பிறபாடு, அந்த இஞ்சியை ஒரு துணியில் கட்டி அதன்மேல் ஒரு கனமான வஸ்துவை வைத்து அதிலிருக்கும் தண்ணீரை அப்புறப்படுத்துகிறார்கள். இச்சமயத்தில் முன் கூட்டிய சர்க்கரையைத் தண்ணீரில் கலக்கிகோழிமுட்டையின் வெள்ளைக்கருவை அதில் ஊற்றிக்காய்ச்சி அழுக்கெடுத்து அதை லேசான பாகு பதத்தில் பதம்பார்த்து எடுத்துவைத்திருக்கவேண்டும். இப்படித் தயாரா யிருக்கும் சர்க்கரைப் பாகில் மேல்சொன்னபடி தயார்செய்த இஞ்சியை ஊறப்போட்டுவிடுகிறார்கள். அப்பால் இந்தச் சர்க்கரை பாகில் போட்ட இஞ்சியை சுமார் அரைநாளைக்காவது அல்லது இன்னும் சற்று ஜாஸ்தி நேரத்திற்காவது, பாகு கெட்டியாகிற பதம்வரை காய்ச்சி அதைப் புட்டிகளில் அடைக்குமுன் ஒரு நாளைக்கு ஆறவைக்கிறார்கள்.

இப்படி இஞ்சிவற்றல் மங்களூரில்ஸம்பத்து பெற்ற அநேக கிறிஸ்தவர்கள் வீட்டில் சொந்த உபயோகத்திற்காகவும், ஸெயிண்ட் அந்தோணி பள்ளிக்கூடத்தில் விற்பனையை உத்தேசித்தும் தயார் செய்கிறார்கள். 25 இராத்தல் நிறையுள்ள ஒரு மணங்கு வற்றலுக்கு ரூபாய் 10 முதல் 12 வரை விலை கிடைக்கிறது. இப்படி வற்றல் செய்ய லாயக்கான இளம் இஞ்சிக்கு, முற்றின இஞ்சியைவிட நல்ல கிராக்கியிருக்கிறது 1909-ம் ௵ செப்டம்பர்௴ முற்றின இஞ்சியின் விலை மணங்கு ஒன்றுக்கு ரூபாய் 2 முதல் 2½ வரை இருந்தபோது இளம் இஞ்சி 3 முதல் 4 ரூபாய் வரை விற்றது.

மேல் நாட்டாரால் விலைக்கு வாங்கப்படும் இஞ்சியைத் தயார் செய்யும் விதம் இந்த ஜில்லாக்காரர்களுக்குத்தெரியாது.

## CENSUS STORIES.

## ஸென்ஸஸ் கதைகள்.

பத்து வருஷத்துக்கு ஒரு முறை ஜனகணிதம் எடுக்கப்படுவதினால், தேசத்தின் அபிவிர்த்தியும் க்ஷீணமும் ஜனங்களின் நிலைமையும் இவை போன்ற பல விஷயங்களும் தெளிவாகின்றன. 1901-ம் வருஷத்தில் ஜனகணிதம் எடுக்கப்பட்டது. இப்போது அது நடந்து பத்து வருஷங்களாயினமையால், மறுபடியும் இவ்வருஷம் எடுப்பதற்காக போன மார்ச்சு மாதம் 10 உ நாள் குறிப்பிடப்பட்டு காரியங்கள் யாவும் திருப்திகரமாய் நடந்தேறின. ராஜதானி ஸ்தலங்களாயுள்ள சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களிலே ஜனகணிதம் எடுப்பதற்காகச் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை ஆங்கிலபாஷா பத்திரிகைகளிற் படிக்கும்போது அது ஒரு கதாஸந்தர்ப்பத்தில் வருகிற வர்ணனைபோல் வெகு சுந்தரமாய் வர்ணிக்கப்பட்டிருப்பதானது வாசிப்பதற்கு அதிகமான உற்சாகத்தைக் கொடுப்பதாகிறது.

இனி இந்த ஜனகணிதத்தில் சில மூடஜனங்கள் பற்பலவிதமான தவறு நினைவுகளைக் கொண்டார்கள். ஒரு வீட்டில் உள்ளவர்களைப் பற்றிய கணக்கை யதார்த்தமாகத் தெரிவிக்குமிடத்து பிறகு அது முனிஸிபாலிட்டிக்கு எட்டி அதிகமான வரி போடுவதற்கு இடமாகுமென்று பயந்தவர்கள் பலர். இவ்வளவு திறமையாகக் கணக்கெடுக்கிறார்களே, அதை எப்படியாவது நிறைவேற்றாது தடுக்கவேண்டுமென்று சூரத்வம் பேசி மெத்தைமேல் சயனித்து உறங்கியவர்கள் பலர். தாசிகளின் வீட்டுக்கு இன்று சென்றால், நாமும் கணக்கெடுப்பவர்களின் கண்முன் காணும்படி நேரிடுமென்று அன்று தங்கள் ஆசை நாயகிகளின் வீட்டிற்குப் போகாதிருந்துவிட்டார்கள் பலர். எங்கேயோ சென்றுவிட்டுத் திரும்பிய ஒருவன் 10 மணிக்குள் கடைகள் எல்லாம் மூடப்பட்டுப் போயிருப்பதை நோக்கி ஆச்சர்யத்துடன் தன் வழி செல்வானாயினான். கடைவீதிகளில் கடைகளை மூடிவிட்டால், ஜனசந்தடி நீங்கிவிடுமென்ற யோசனைக் குறிப்புடன் செய்த மேலதிகாரிகளை ஒருவன் மெச்சலானான். கல்கத்தாவிலே ஒருவன் ஷை இரவில் எங்கேயோ போகப் புறப்பட்டபொழுது தன்னைத் தடுத்த போலீஸ் வீரனைக் குத்திவிட்டான். ஸ்ரீரங்கத்திலே 10-ம் தேதி நடைபெறவேண்டிய தெப்ப உற்சவத்தை 9-ம் தேதியே நடத்தும்படி ஸர்க்கார் ஆக்ஞை உண்டாக ஸ்ரீ ரெங்கநாதரும் ஸமயோசிதமாகவும் கோவில்மாமூல் தவறாதபடியும் நடக்கும்படியாகத் திருவுளம் பற்றினார். 10-ம் தேதி நடக்கவேண்டிய தெப்பத்தை 9-ம் தேதி வைத்துக்கொள்ளும்படி வற்புறுத்தினாலும் மாலை 6-மணிக்கு நடக்கவேண்டிய உற்சவத்தை 9-ம் தேதி இரவு 3-மணிக்கு அதாவது 10-ம் தேதி அதிகாலை 3-மணிக்கு வைத்துக்கொண்டு கோவில் மாமூலுக்கும் இராஜாங்க உத்தரவுக்கும் பிசகில்லாமல் நிறைவேற்றப்பட்டது. பட்டு நூற்காரர்களெல்லாம் தங்களை ஸௌராஷ்டிரப் பிராமணர்களாக மாற்றிக்கொண்டார்கள். தட்டார் முதலியவர்களெல்லாம் தங்களை விசுவகுலப் பிராமணர்களாக்கிக்கொண்டார்கள் பௌத்த மதத்தார்களெல்லாம் தங்களைப் பிரத்தியேகமாகக் கணக்கெடுக்கும்படி தெரிவிக்கலானார்கள். யூரேஷியர்களெல்லாம் ஆங்கிலோ-இந்தியர்களானார்கள். மராட்டியர்களெல்லாம் மகாராஷ்டிரப் பிராமணராயினர். கீழ் வங்காளத்திலே சண்டாளர்களென்று ஒரு வகுப்பார் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சண்டாளர்கள் என்ற பெயரால் பதிவு செய்யப்படாதிருக்கும்படியும் ஏற்பாடு நடத்தப்படலானது. ஒவ்வொரு வகுப்பாரும் தங்களின் கௌரவத்தை உயர்த்திக்கொள்ள முயல்வாரானார்கள். தாசிகளெல்லாம் தங்களைத் "தேவடியாள்" என்று சொல்லிப் பழிக்கிற நிந்தையினின்றும் விலக்கிக்கொண்டு தங்களைத் "தேவபத்தினிகள்" என்ற முறையில் கணக்கெடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்குக்கூட ஆலோசித்தார்களாம். இப்படியாக எண்ணற்ற விநோதங்களுடன் ஜனகணிதக் கதை முடிவு பெறலானது.

திராவிடாபிமானி.



## THE BENEFITS TO ENGLAND FROM INDIA.

## இந்தியாவினால் இங்கிலாந்துக்கு என்ன பிரயோசனம்.

இந்தியாவிலிருந்து வரும்படி பெறும் ஆங்கிலேயருடைய உதவி யில்லாமல் ஜீவனம் செய்யும் ஒரு குடும்பமாவது இங்கிலாந்தில் இல்லையென்று பெயர்போனபம்பாய் பத்திராசிரியரான காலஞ் சென்ற மிஸ்டர் ஜே. எம். மெக்ளின் ஒரு முறை சொன்னார். இந்தியாவானது இங்கிலாந்துக்கும், இங்கிலாந்தானது இந்தியாவுக்கும் அநேக வழிகளில் பரஸ்பரம் நன்மை செய்வதாயிருந்தாலும் இந்த வியாஸத்தில் இங்கிலாந்துக்கு இந்தியாவினா லுண்டாகும் பிரயோஜனத்தைப் பற்றி மட்டும் கவனிப்போம். முதலாவது, இங்கிலாந்தைச் சேர்ந்த அநேக சிறுவர்களுக்கு இந்தியாவில் உத்தியோகம் கிடைக்கின்றது. அநேக முதலாளிகள் இங்கு வந்து வியாபாரம் தொழில் முதலியவைகள் செய்து லாபம் பெறுகிறார்கள். பெரிய உத்தியோகம் செய்யும் அநேக ஆங்கிலேயர் பென்ஷன் பெற்றுத் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போய் அங்கே இந்தப் பென்ஷன்களைச் செலவு செய்வதுமன்றி, அங்கு நடக்கும் பல பொதுக் காரியங்களில் தாங்கள் இந்தியாவில் பெற்ற அனுபோகத்தையும் அறிவையும் உபயோகித்து வருகிறார்கள். இவைகளன்றி பிரிட்டிஷ் தேசத்து ஸோல்ஜர்களுக்கும் சேனாதிபதிகளுக்கும் இந்தியாவில் பயிற்சி கிடைக்கின்றது. பிரிட்டிஷ் தேசத்தில் பேர் பெற்ற சேனாதிபதிகள் அநேகமாய் இந்தியாவில் பயிற்சி பெற்றவர்கள். இதை யுத்தேசித்து ஒருமுறை இந்தியாக் கவர்ன்மெண்டில் மிலிடெரி மெம்பராயிருந்த ஜனரல் பிராக்கன்பரி என்பவர், இங்கிலாந்து இந்தியாவுக்குப் பிரதிவருஷம் ஒரு பெரும் பணத் தொகையை உதவியாகக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார். இவைகளைத் தவிர இந்தியா இங்கிலாந்தைச் சேர்ந்திருப்பதால், இங்கிலாந்துக்கு உலகத்தில் வல்லமையும் செல்வாக்கும் உண்டாயிருக்கின்றன. இந்தியா இல்லாவிட்டால், இங்கிலாந்தானது மூன்றாந்தர தேசமாகிவிடுமென்று ஜெனரல் ராபர்ட்ஸ், லார்ட் கர்ஸன் முதலிய ராஜ தந்திரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இது இப்படியிருக்க, இன்னொரு விஷயத்தில் இத்தேசம் இங்கிலாந்துக்கு வரவரப் பெரும் பிரயோஜனத்தைக் கொடுக்கத்தக்கது. இந்தியா ஜனங்கள் இப்போது அவர்களிற் பெரும்பான்மையோரைப் பாதிக்கும் வறுமை நீங்கி, ஐரோப்பிய தேசத்தாரைப் போலச்செல்வம்பெற்றவர்களாவார்களானால், அவர்கள் இங்கிலாந்து செய்யும் சரக்குகளை மேன்மேலும் அதிகமாய் வாங்கி அவர்கள் செய்யும் சரக்குகளையும் அவர்கள் பூமியில் விளையும் இயற்கைப் பொருள்களையும் இன்னும் விசேஷமாய் இங்கிலாந்துக்கு அனுப்பக்கூடும். இப்போது இங்கிலாந்திலிருக்கும் ஹிஸ் ஹைனஸ் ஆகாகான் ஒரு பத்திரிகையின் பிரதிநிதியுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது, இந்தியாவானது இப்பொழுது நல்ல நிலைமைக்கு வந்துகொண்டிருக்கிறதென்றும், அதில் தொழில்களும் அதிகமாய்ச்செய்யப்படத்தலைப்பட்டுக்கொண்டிருக்கின்றனவென்றும், அதனால் இங்கிலாந்துக்கு விசேஷ பிரயோஜனமுண்டாகுமென்றும் சொன்னார். ஏகாதிபதியக் கட்டுகளும் ராஜீய உரிமைகளும் ஒரு பக்கமிருக்க, மற்றொரு பக்கத்தில் இந்தியாவில் அதிகப்பட்டு வரும் தொழில்களும் வியாபாரமும் பிரிட்டிஷ்

தேசத்தாருக்கு அவசியமானதால், அவைகளை இன்னும் முற்படுத்துவதில் அத்தேசத்தார் கவனம் செலுத்தவேண்டும். இந்திய ஜனங்களுடைய வாங்கும் சக்தியானது அதிகரித்து வருகின்றது. வரவர இந்த சக்தி இன்னும் அதிகரிக்குமென்பதில் சந்தேகமில்லை குடியேற்ற நாடுகளிலுள்ள ஜனங்கள் ப்ரிட்டிஷ் சரக்குகளை எவ்வளவு வாங்குகிறார்களோ அதில் பல மடங்கு குறைவாகவே இந்தியர் வாங்குகிறார்கள். இது இந்தியர் வறுமையால் இப்படி இருக்கின்றது. அவர்கள் வறுமை நீங்கிச் செல்வவான்களாகும் பக்ஷத்தில், பிரிட்டிஷ் சரக்குகளை அதிகமாய் வாங்கி அதனால் பிரிட்டிஷ் ஜனங்களுக்குச் செல்வம் பெருகக்கூடும்.

இந்தியாவில் சமீபத்தில் அமைதியின்மையுண்டாகி பிரிட்டிஷ் ஜனங்களுக்கு ஒருவாறு அச்சத்தையுண்டுபண்ணிற்று. அராஜகமும் ராஜத் துவேஷமும் தோன்றியதனால், இந்தியா பிரிட்டிஷ் தேசத்துக்குத் தொந்தரவையும் நஷ்டத்தையும் உண்டுபண்ணுவதாய்த் தோன்றிற்று. இந்த நிலைமை இப்போது மாறி, இந்தியா எப்போதும் போல் அமைதியும் ராஜ பக்தியும் கொண்டிருக்கின்றது. லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை சில தினங்களுக்கு முன்னால் இந்தியாவைப்பற்றி எழுதினபோது, இந்தியாவில் பெருங் கைத்தொழில்களுண்டாகும்படியாய்ப் பிரிட்டிஷ் தேசத்தார் உதவிசெய்துகொண்டு போகவேண்டும்; ரயில் பாதைகளையும் பாஸன வேலைகளையும் மேன்மேலும் அவசியமான அளவு கட்டிக் கொண்டுபோக வேண்டும்; ஜனங்களுக்குப் படிப்பையும் அதிகப்படுத்திக் கொண்டு போக வேண்டும்; இப்படிச் செய்துகொண்டு போமானால், அராஜகமும் ராஜத்துவேஷமும் தோன்றுவதைப்பற்றி பிரிட்டிஷ் தேசத்தார் கவனிக்க வேண்டியதில்லையென்று அந்தப் பத்திரிகை எழுதிற்று. கைத்தொழில்களை அதிகப்படுத்துவதால், அவைகளிற் சம்பந்தப்பட்டவர்கள் சொத்துள்ளவர்களாவார்கள். இதுவே திருப்திக்குக் காரணமாகும். பம்பாய் ராஜதானியில் வெங்காளத்தைவிட ஒருபொறி பட்டாலும் பெரும் நெருப்பாயெரியும் வைக்கோற்போர்போன்ற ஜனங்கள் வஸிக்கிறார்கள். வஸித்தும் ஸமீபத்தில் வெங்காளத்தில் நேரிட்ட தொந்தரவைப்போல் பம்பாயில் நேரிடவில்லை. இதற்குக் காரணம் பம்பாய் ஜனத்தலைவர்கள் தொழில்கள் செய்கிறபடியால், அத்தொழில்களுக்கு ராஜீகக் கலகங்கள் நேரிடுவது விரோதமென்று நினைத்தார்கள். கைத்தொழில்கள் அதிகமாவதற்கு ரயில் வேக்களும் பாஸன வேலைகளும் படிப்பும் பேருதவியாகும் இவைகளையெல்லாம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் முற்படுத்திக்கொண்டு போவார்களானால், இந்திய ஜனங்கள் இப்போது அவர்களைப் பாதிக்கும் வறுமையினின்று நீங்கிச் செல்வவான்களாவார்கள். இந்தியா எப்போதாவது வறுமையே இல்லாத தேசமாகுமென்று நாம் சொல்லவில்லை. மேல் நாடுகளில் கைத்தொழில்கள் எவ்வளவு அபிவிர்த்தியாயிருந்தாலும் ஜனங்களில் ஒரு பாகத்தினர் கடும் வறுமையால் வருந்துகிறார்கள். அப்படியே இந்தியாவிலும் வறுமை இருந்துகொண்டிருக்கும். ஆனாலும் மேற்சொன்ன உபாயங்களால் இந்திய ஜனங்கள் இன்னும் அதிகமான நாகரிகம் பெற்று சொத்துள்ளவர்களாய் சுகத்துக்குரிய வஸ்துக்களை நாடி அவைகளை அன்னிய தேசங்களிலிருந்து வாங்கத் தலைப்படுவார்கள். அப்போது இங்கிலாந்து நன்மை பெறுமென்பதில் என்ன சந்தேகம்.—ஸ்வதேசமித்திரன்.



## ARTIFICIAL FEEDING OF CHILDREN.

## குழந்தைகளுக்குக் கைத்தீனி கொடுப்பது.

தாய்ப் பால் கொடுத்து வளர்க்கவாவது, அல்லது தாதி ஏற்படுத்திப் பால் கொடுக்கவாவது அஸந்தர்ப்பமாயிருக்குங் காலங்களில் குழந்தைக்கு கைத்தீனி கொடுத்து வளர்க்கும் விதத்தைப் பற்றிச் சிறிது கவனிப்போம். குழந்தைகளுக்குக்கைத்தீனிகொடுத்துவளர்ப்பதைப்போல் அதிக சிரத்தையெடுக்கவேண்டிய தொழில் யாதொன்றுமில்லை. ஏனெனில், முழுவதும் கைத்தீனி கொடுத்து வளர்க்கும் குழந்தைகளில் நூற்றில் 26 தான் பிழைக்கிறதாகத் தெரியவருகிறது. ஆகையால், தாயானவள் அதிக முயற்சியெடுத்துத் தன் குழந்தைக்கு எப்படிப்பட்ட ஆகாரம் தகுந்தது என்று அனுபோகத்தில் கண்டுபிடித்து, அதிக ஜாக்கிரதையுடன் அதை வளர்த்துக் கொண்டு வருகிறதாயிருந்தால் மட்டுமே அக்குழந்தை சுகதேகியாயிருக்குமென்பதற்கு யாதொரு ஸந்தேகமுமில்லை.

குழந்தைக்கு பாலையே ஆகாரமாக இயற்கையிலேயே அமைக்கப்பட்டிருப்பதால், அதற்குப் பதிலாக உபயோகப்படுத்துகிற ஆகாரமும் பாலாகவேயிருக்க வேண்டும். தாய்ப் பாலுக்கு பதிலாக கழுதைப் பால், வெள்ளாட்டுப் பால், பசுவின் பால் ஆகிய மூன்று பால்களில் ஏதாவதொன்றை உபயோகிக்கலாம். இவைகளில் கழுதைப் பாலே கொஞ்சம் குறைய தாய்ப் பாலுக்கு நிகரானது. ஆனால் அது கிடைப்பது அருமையாயிருப்பதால், அதை ஸாதாரணமாய் உபயோகிக்கிறதில்லை. அதற்கடுத்தது வெள்ளாட்டுப் பால். இதில் ஓர்வித துர்வாஸனையிருப்பதால், சில குழைந்தைகளுக்கு வாந்தியுண்டாவதுண்டு. அதுவுமல்லாமல் வெள்ளாடு மடியில் மயிருள்ள ஜெந்துவானதால், பால் கறக்கும்போது, பாலுக்குள் அம்மயிரும் உதிரும். ஆகையால், வடிகட்டி அதிக ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும். ஒரே ஆட்டுப் பாலாயிருந்தால்தான் மிக்கநலம். கழுதைப்பாலானாலும் ஆட்டுப் பாலானாலும் எதையுந் தண்ணீர் கலந்தே உபயோகிக்க வேண்டும்.

பசுவின் பாலும் அதிக ஸத்துள்ளதாகையால், அதையும் தண்ணீரில் கலந்தே உபயோகிக்கவேண்டும். தாய்ப் பாலுக்கும் மற்றப் பால்களுக்கும் உள்ள ஓர் பெரிய வித்தியாஸம் யாதெனில், தாய்ப் பாலைக் குழந்தைகள் தாமாகவே உறிஞ்சிக் குடிக்கிறார்கள். ஆனால் மற்றப் பால்களைக் கறந்து அதன் பின் தான் அதை உபயோகப்படுத்துகிறோம். பால் கறக்கும்பொழுது அந்தப் பாத்திரத்திலும் கறப்பவன் கையிலுமுள்ள கிருமிகளும் ஆகாயத்திலுள்ள கிருமிகளும் அப்பாலுடன் கலக்கின்றன. எப்படிப்பாலானது குழந்தைகளின் வளர்ச்சிக்குக் காரணமாயிருக்கிறதோ, அதே விதமாக கிருமிகளும் பாலில் வெகு சீக்கிரத்தில் பலுகிப் பெருகிவிடுகின்றன. ஆகையால், எந்தப் பாலானாலும் நன்றாய்க் கொதிக்கக் காய்ச்சி வடிகட்டிக் கொடுப்பதனால், அதிலுள்ள கிருமிகள் நாசமடைகின்றன. தாய்ப்பாலைவிட மற்றப் பால்களில் சர்க்கரையின் அளவு சிறிது குறைவாயிருப்பதால், சிறிது சர்க்கரையும் கலந்து கொடுக்கவேண்டும். பசுவின் பால் ஸாதாரணமாகவே புளிப்புள்ளதாகையால், அத்துடன் சிறிது சுண்ணாம்பு ஜலம் கலந்து கொள்வது உத்தமம். சில குழந்தைகள் பால் குடித்துச் சிறிது நேரத்தில் பால் உறைந்து வாந்தி பண்ணுகிறார்கள். அதைத் தாய்மார் கண்டு வயிற்றில் புளிப்பேறிவிட்டது என்று

பயப்பட்டு பல மருந்துகளையும் கொடுக்கிறார்கள். ஆனால் வாந்தியல்ல, மலத்தில் பால் திரைந்து காணப்பட்டால், அதுவே அஜீரணத்தைக் காட்டுங் குறி.

அந்தந்த நேரத்திற்கு வேண்டியதை அப்போதைக்கப்போது தயார் செய்ய வேண்டுமேயன்றி, இரண்டு மூன்று தடவைகளுக்கு மொத்தமாகச் செய்து வைக்கக் கூடாது. ஒவ்வொரு தடவையும் புதிது புதிதாகக் கொடுத்தால், குழந்தையின் சுகத்திற்கு அனுகூலமாயிருக்கும். சில குழந்தைகளை எவ்வளவு கவலையாகப் பார்த்தாலும் அவர்களுக்கும் சுகவீனமுண்டாகிக் கஷ்டப்படுவதுண்டு. அப்பொழுது உடனே வைத்தியருக்குத் தெரிவித்து வேறே ஆகாரமும் மாற்றிக் கொடுக்க வேண்டும்.

தாய், பால் கொடுக்கும்போது குழந்தையைத் தூக்கி நெஞ்சோடணைத்துக் கொண்டு எப்படி கொடுப்பாளோ, அதே விதமாகக்குழந்தைக்குப் புட்டிப்பால் கொடுக்கும் போதும், அதைத் தூக்கி நெஞ்சோடணைத்துத் தலையை மாத்திரம் கொஞ்சம் நிமிர்த்தி வைத்துக்கொண்டு பால் கொடுக்வேண்டும். சில தாய்மார் குழந்தைகளுக்கு அவர்கள் படுக்கையிலே புட்டிகளை வைத்துத்தானுகவே பால் குடிக்க விடுகிறார்கள். இப்படிச் செய்வதில் குழந்தை பாலைக் குடித்த பின்னும் உறிஞ்சிக் கொண்டேயிருப்பதால் வயிற்றிலுள்ள காற்று புகுந்து அஜீரணம், வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுப்பிசம் முதலிய வியாதி கண்டு உபத்திரவப்பட இடமாகும். ஆகையால், குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு தான் பால் கொடுப்பது நல்லது. பால் குடித்து முடித்தவுடனே கொஞ்ச நேரம் தலையை நிமிர்த்தி வைத்திருந்து மெதுவாகத்தொட்டிலில் படுக்க வைக்கவேண்டும். ஏனெனில், பால் கொடுத்தவுடன் குழந்தையை அங்குமிங்கும் அசைத்தால், சில வேளை குடித்த பாலை வாந்தி பண்ணிவிடும்.

சிலர் பசுவின் பாலுக்குப் பதிலாக, ஷாப்புகளில் தகரடப்பாக்களில அடைத்து விற்கப்படும் கட்டிப் பாலை உபயோகப் படுத்துவதுண்டு இதில் அதிகம் சர்க்கரை சேர்ந்திருக்கிறது இதினால் குழந்தைகள் கொழுத்து புஷ்டியாகிறதேயன்றி, தேகத்துக்கு அத்தனை பலம் உண்டாவதில்லை. அநேக குழந்தைகளுக்கு இந்தப் பால் வயிற்றுக்கு ஒத்துக் கொள்ளாமல் வயிற்றோட்டங்கண்டு கொடிய ஆபத்துக்கிடமாகிறது ஆகையால், சுயமான பசும்பால் கிடைக்கக்கூடிய ஸமயத்தில் அதையும் உபயோகிக்க வேண்டுமேயன்றி இந்தக் கட்டிப் பாலை உபயோகிக்கிறது நல்லதல்ல.—இரஞ்சித போதினி.

---

## PLAGUE.
## ப்ளேக் வியாதி.

---

ஓர்வகைப் பூச்சி மனுஷ தேகத்திற்குள் பிரவேசிக்கிறதினால், ப்ளேக் உண்டாகிறது. இந்தப் பூச்சி கண்ணுக்குத் தெரியாது. பலமான பூதக் கண்ணாடியால் பார்க்கலாம்.

### ப்ளேக் விர்த்தியாவதற்குக் காரணம்.

சோள விதையை சும்மா வைத்திருந்தால், சிலநாள் கெடாமலிருக்கிறது. மண்ணுக்குள் போட்டுத்தண்ணீர் விட்டால், மண்ணின் சுபாவத்திற்கும் தண்ணீரின் சுபவாவத்திற்கும் சீதோஷ்ணத்திற்கும் தக்கபடி சோளம் பயிராகிறது. மண்ணில் நல்ல எரு விருந்தால், பயிர் அதிக பலத்துடன் முளைத்து வளருகிறது. அதுபோலவே ப்ளேக் பூச்சி சூரியனுடைய வெயிலில் உஷ்ணமாய்க் காயும்போது வெளியில் போட்டால், சுமார் 4 மணி நேரத்தில் செத்துப்போம். அதிக காங்கையான வெயிலாயிருந்தால், இன்னும் சீக்கிரத்திலும் செத்துப்போம். மோர் முதலாகிய புளிப்பு வஸ்துக்களில் அது செத்துப்போகிறது பாலில் புளிப்பேறும் வரையில் அது உயிருடன் இருக்கும். பட்டுவஸ்திரம், கம்பளி, துணி, நூல்வஸ்திரம், சாக்குத்துணி இவைகளில் அது ஒரு வாரம் வரையில் சாகாமல் இருக்கிறது. தானியங்களில் அது இரண்டு வாரம் வரையில் சாகிறதில்லை. உப்புத் தண்ணீரில் அது வளர்ந்து விர்த்தி அடைகிறது. கொதிக்கிற தண்ணீரில் போட்டால், அது உடனே செத்துப்போம். சீதோஷ்ணங்கள் அநுகூலமாயிருந்தால், மனுஷர் உடுத்திக்கொள்ளும் துணிகளில்ஒருமாதம் இரண்டு மாதங்கூட அது சாகாமலிருக்கிறது. காற்றோட்டமில்லாததும், இருண்டதும், ஈரமுள்ளதுமான வீடுகளில் அதுவிர்த்தியாகிறது. ஆகையால், நெருக்கமான ஜெந்துக்கள் உள்ள கிராமங்களில் ப்ளேக் வியாதி சீக்கிரமாய் பரவுகிறது. ஒரு ஊரில் ப்ளேக் வியாதி உண்டாகி நின்றுவிட்டால், மறுபடியும் அதே ஊரில் அடிக்கடி உண்டாகும்.

### ப்ளேக் வியாதி எந்தப் பிராணியை பீடிக்கிறது.

ப்ளேக் வியாதியால் மனுஷாள் மட்டும் அல்ல, மற்றும் எலிகள், சுண்டெலிகள், பெருச்சாளிகள், குரங்கு, பூனை முதலிய பிராணிகளும் சாகின்றன. எலிக்கு மட்டும் இந்த வியாதி வெகு சீக்கிரத்தில் தொத்துகிறது. ஆடு, மாடு, குதிரைகள், பக்ஷிகள் இவைகளைப் ப்ளேக் வியாதி பீடிக்கிறதில்லை.

### ப்ளேக் வியாதி தேகத்தில் வெளிப்படையாய்த் தெரிவதற்குச் செல்லுங் காலம்.

இந்த வியாதியின் அபாயகரமான குணங்களில இது ஒரு முக்கியமான குணம். என்னவென்றால், ப்ளேக் பூச்சி தேகத்தில் பிரவேசித்தவுடன் தனக்கு வியாதி உண்டாயிருப்பதாக அந்தவியாதியஸ்தனுக்கு தெரிகிறதில்லை அவன் ஸாதாரணமாய் எப்பொழுதும் போலவே சாப்பிட்டுக்கொண்டு தன் வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறான். சுமார் 5 நாள் முதல் 10 நாள் வரையில் இப்படியிருக்கிறான் ஆனால் வியாதியஸ்தன் அஸௌக்கியமாய் இருக்கிறானென்று மற்றவர்களுக்குத் தெரியாதே யல்லாமல் வியாதியஸ்தன் தான் அஸௌக்கியமாய் இருப்பதாக நினைக்கிறான். ஆனால் அது அவனுக்கு ஒரு பொருட்டாயிருக்கிறதில்லை யாகையால், அவன் அதை வெளியில் சொல்லுகிறதும் இல்லை, கவனிக்கிறதும் இல்லை. இந்தக்காலத்தில் அவனுக்கு ராத்திரிகளில் கெட்ட கனவு காணும், தூங்கும்போது பயந்து விழிப்பான், தன்னை ஒருவன் ஈட்டி கத்தி முதலிய ஆயுதங்களால் குத்துவது போல் கனவு காணுவான். இந்த காலத்தில் என்ன நடக்கிறது என்றால், இவன் தேகத்தில் புகுந்த ப்ளேக் பூச்சி வெளியில் கிடக்கும்போது அசந்துபோய் விர்த்தியாகாமலிருந்த போதிலும், தேகத்தில் புகுந்து ரத்தத்தில் சேர்ந்தவுடன் அதிக விர்த்தியாகின்றது. ஆனால் மனுஷ தேகத்துக்கு ஒரு சுபாவமுண்டு. அதாவது தேகசுகத்துக்கு விரோதமான எதையும் நீக்க முயற்சி செய்யும். உதாரணமாய் காயம் பட்டால், தானே ஆறிவிடும். இதுபோலவே தேகத்தில் 1,10,100,1000 என்று விர்த்தியாய்க் கொண்டிருக்கிற ப்ளேக் பூச்சியைக் கொல்லும் படியான ஒரு வஸ்து தேகத்தில் உண்டாய்க் கொண்டிருக்கிறது. இந்த வஸ்துவினால் கொல்ல முடியாதபடி அவ்வளவு பூச்சி உண்டானால் மட்டுந்தான் தேகத்தில் வியாதி அதிகரிக்கிறது. இப்படிவிர்த்தியாகி ப்ளேக் பூச்சி அதிகப்பட்டுவிட்டால், வியாதி வெளிப்படையாய்த் தோன்றும். இது ஸாதாரணமாய் 5 நாள் முதல் 10 நாள் வரை செல்லும். சில ஸமயங்களில் 10 நாளுக்கு மேலும், சில ஸமயங்களில் ஒரே நாளிலும் தோன்றும். இது தேகவாக்கு முதலியவைகளைப் பொறுத்திருக்கிறது. ப்ளேக் பூச்சிகள் விர்த்தியாகிக் கொண்டேயிருக்கிறது மல்லாமல் அவைகளின் மலம் செத்த பூச்சிகளின் தேகம் முதலியவைகளும் மனுஷ தேகத்தில் தங்கிவிடுகின்றன. மனுஷனுக்கு உண்டாகும் வியாதிக்கு இந்த மலமே காரணமாயிருக்கலாமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

### ப்ளேக் பூச்சி தேகத்தில் பிரவேசிக்கும் விதம்.

தேகத்தில் சிறிய காயமிருந்தால், அதன் வழியாகவும் வாய் மூக்கு இவைகளின் வழியாகவும் ப்ளேக்பூச்சி மனுஷ தேகத்தில் பிரவேசிக்கிறது. கொசு, மூட்டைப்பூச்சி முதலியவைகள் மனிதனைக் கடிக்தால், உடனே சொரிகிறான். அப்போது தேகத்தில் காயமுண்டாகிறது. இந்தக் காயத்தின் வழியாக ப்ளேக் பூச்சி தேகத்தில் பிரவேசிக்கிறது. ப்ளேக் வியாதினால் செத்துப்போன எலியின் பேரில் அநேக பூச்சிகள் இருக்கின்றன. ஆகையால், இந்த எலியைக் கையினால் தொட்டால், இந்தப் பூச்சிகள் மனிதனைக் கடிக்கின்றன. இதனால் ப்ளேக் பூச்சி மனிதனுடைய தேகத்தில் பிரவேசிக்கிறது.

### ப்ளேக் வியாதிக்குரிய குறிகள்.

கிச்சு, துடைச்சந்து, பிடறி முதலிய இடங்களில் கட்டி காணும். மனிதன் அயர்ந்துபேசாமலிருக்கிறான். பல் கொஞ்சம் வெளியில்

தெரியும். அது உலர்ந்து போயிருக்கும். உடம்பு காயும். கண் சிவந்திருக்கும். படுக்கையில் புரளுவான். வீடு ஊர் இவைகளை விட்டு அப்புறம் போகவேண்டுமென்று ஆசையுண்டாகும். புத்தி நிலையில்லாமலிருந்து பின்பு மாருட்டமாகும். குடித்து வெறிகொண்டவன் போல் உளறுவான். காய்ச்சல் 104டிக்ரி வரையில் இருக்கும். அடிக்கடி மூச்சு விடுவான். நாக்கு அழுக்குப் பிடித்து பிளந்திருக்கும், வாந்தி காணும். மலம் ஸரியாய் வெளிப்படாது. சில ஸமயத்தில் மூக்கிலும் ஆஸனத்திலும் ரத்தம் வடியும். சிலஸமயம் காலராமாதிரியாக வாந்தியும் பேதியும் கண்டு மனிதன் அயர்ந்து போவான். ஆனால் காலரா மாதிரியாக கஞ்சி கஞ்சியாய் வயிற்றில் போகிறதில்லை. சில ஸமயம் ஜன்னி காணும். ஆனால் காலரா கண்டால், உடம்பில் காய்சசல் இராது. உடம்பு குளிர்ந்திருக்கும், ப்ளேக் வியாதி கண்டால், உடம்பு காயும், சிலஸமயம் இருமல் காணும். கர்ப்பமாயிருக்கிற பெண்களுக்கு ப்ளேக் வியாதி கண்டால், கரு வெளிப்பட்டுப்போம். பின்பு அவர்கள் தவருமல் செத்துப்போகிருர்கள்.

மனுஷ தேகத்திலிருந்து ப்ளேக் பூச்சி எப்படி வெளிப்படுகிறது?

மனுஷனுடைய தோலின் வழியாக ப்ளேக் பூச்சி தேகத்துக்குள் புகுந்தால், தேகத்தில் உள்ள அவயவங்கள் அவைகளை தேகத்தில் ஓடவிடாமல் தடுக்கின்றன. அப்படித் தடுத்து நின்றுகொண்டால், கட்டிகள் உண்டாகின்றன. அப்படி நில்லாமல் ப்ளேக் பூச்சிகள் ரத்தத்தோடு கலந்து ஓடினால், அவைகளிலிருந்து உண்டாகும் மலத்தினால் ப்ளேக் வியாதி காணுகிறது. ஆகையால், கட்டி காணுகிற ப்ளேக்குகளில் மனிதனுடைய எச்சில், மலம், மூத்திரம் இவைகளில் ப்ளேக் பூச்சிகள் முதலில் காணப்படுகிறதில்லை. ஆனால் வியாதி முதிர்ந்தபின் ப்ளேக் பூச்சிகள் காணப்படுகிறது. மற்ற வியாதிகளில் ஆரம்பத்திலேயே மனிதனுடைய மலம், மூத்திரம், எச்சில் இவைகளில் ப்ளேக் பூச்சிகள் நிறைந்திருக்கின்றன.

ப்ளேக் வியாதியை எப்படி ஓட்டுகிறது?

ஒரு இடத்தில் எவ்வளவு அழுக்கு இருந்தாலும் ப்ளேக் பூச்சி வெளியிலிருந்து வந்தாலொழிய அங்கே ப்ளேக் வியாதி உண்டாகமாட்டாது. ப்ளேக் வியாதி கண்ட மனுஷாள் ப்ளேக் இல்லாத ஊரில் போனால், அங்கே ப்ளேக் பூச்சிகளைக் கொண்டுபோய் விட்டுவிடுகிருர்கள். அவர்கள் போகும்போது அவர்கள் கொண்டுபோகும் துணி தானியம் முதலியவைகளின் வழியாகவும் ப்ளேக் பூச்சிகளைக் கொண்டுபோய் விட்டுவிடுகிருர்கள் எலிகளுக்கு இந்த வியாதி சீக்கிரத்தில் ஒட்டிக்கொள்ளுகிறபடியால், வியாதி கண்ட எலிகள் வியாதி இல்லாத ஊருக்குள் போனால் அங்கே ப்ளேக் பூச்சிகளைக் கொண்டுபோய் விட்டுவிடுகின்றன. அதிலும் ஒரு எலிக்கு வியாதி கண்டால், மற்ற எலிகளெல்லாம் அதைத் தின்றுவிடும் குணம் அவைகளுக்கு உண்டு. ஆகையால், அவைகளுக்குள் வியாதி சீக்கிரத்தில் பரவுகின்றது. அல்லாமலும் ஒரு இடத்தில் எலிகள் அதிகமாய் சாகிறதைக் கண்டால், மற்ற எலிகளெல்லாம் அந்த இடத்தை விட்டு ஓடிப்போம். அப்படி அவைகள் போகும்போது வியாதியைக் கூடவே கொண்டுபோகிறபடியால், வியாதி வெகு சீக்கிரத்தில் பரவுகிறது. ஆனால் ஒரு ஜாதி எலி மற்றொரு ஜாதி எலியைப் பக்கத்தில் சேர்க்கிறதில்லை. ஒரு ஊரிலிருக்கிற வியாதியை எலிகள் பக்கங்களில் உள்ள ஊர்களுக்குக் கொண்டுபோகக் கூடுமானாலும், அநேகமாய் எலிகளின் மூலமாய் வியாதி பரவுகிறதில்லை. மனிதனே ஒரு இடத்திலிருக்கும் வியாதியை மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிருன். தானியங்களில் ப்ளேக் பூச்சி ஒட்டியிருந்தால், அந்த தானியம் எந்த ஊருக்குப் போகிறதோ, அந்த ஊரில் உள்ள எலிகள் அந்த தானியத்தைத் தின்பதினால், முதல் முதலில் ப்ளேக் பூச்சி அவ்விடத்தில் குடிகொள்ளுகிறது. ப்ளேக்வியாதி கண்ட எலிகளின் மலம், மூத்திரம், தானியங்களில் கலந்திருந்தால், அந்த மலம் மூத்திரங்களின் வழியாக ப்ளேக் பூச்சிகளும் வேறே ஊர்களுக்குப் போகக்கூடும். எப்படியானாலும் ஒரு ஊரில் எலி செத்து விழுந்தால், ப்ளேக் வியாதி ஊருக்குள் வந்திருக்கிறது என்று நிச்சயமாய்த் தீர்மானித்துக்கொள்ள வேண்டியது. இதற்கு மருந்து ப்ளேக் இருக்கும் இடத்தை விட்டு அப்புறம் போய் விடவேண்டியதுதான்.



# REVIEW OF THE PRESS.

# பத்திரிகை ஆராய்ச்சி.

---

## A SUGGESTION TO THE RYOT.

## விவஸாயிக்கு ஒரு யோசனை.

---

நிச்சயமாய் ஜல முண்டு என்று ஏற்படாத நிலங்களில் கொஞ்ச ஜலத்தையும் மழையையும் நம்பி நெல் பயிரிட்டு அடிக்கடி மோசம் போவதைவிட வேறு பயிரை ஸாகுபடி செய்வது நலம். இந்த விஷயத்தைப்பற்றி ஜூன் மாஸத்துக் 'கிருஷினில்' ஒரு நல்ல யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மேல் சொன்ன நிலங்களில் நெல்லுக்கு பதிலாக மக்காச் சோளத்தைப் பயிரிடுவது.

இந்த மக்காச் சோளம் அமெரிக்காவில் ஏராளமாய்ப் பயிரிடப்பட்டு அங்குள்ள ஜனங்கள் அதை நெல், கோதுமை, போலவே சாப்பாட்டுக்கு உபயோகித்து வருகிருர்கள். அதை மாவாக்கி ரொட்டி செய்து சாப்பிடுகிருர்கள்.

"இந்தியாவிலும் அயோத்தியா முதலிய இடங்களில் இதை ரொட்டி செய்து சாப்பிடுகிருர்கள். தற்காலத்தில் நமது கடைகளில் சிறு பொட்டணங்களாகக் கோதுமை மாவு என்று விற்கப்படும் மாவு மக்காச் சோளமாவேயொழிய கோதுமை மாவல்ல. குதிரைகளுக்கும் மாடுகளுக்கும் சென்னப்பட்டணம் முதலான பட்டணங்களில் கோதுமைத் தவிடு என்று பேர்பெற்று வழங்குந் தவிடு மக்காச் சோளத் தவிடேயொழிய கோதுமைத் தவிடல்ல. தற்காலம் நம்மில் அனேகர் பல காரங்களுக்கும் ரொட்டி பிஸ்கோத்துகளுக்கும் கோதுமை மாவென்று பாவித்து இதைத்தான் உபயோகப்படுத்தி வருகிருர்கள். ஆகையால், இதை அரிசிக்குப் பதிலாகவும், சோளம், கேழ்வரகு முதலான தானியங்களுக்குப் பதிலாகவும் உபயோகிக்கக்கூடுமென்று நமக்குத் தெரிந்திருந்தபோதிலும் நாம் அதை உபயோகத்திற்குக் கொண்டுவரவில்லை."

நெல்லுக்குப் பதிலாக மக்காச்சோளத்தைப்பயிர் செய்வதால், உண்டாகும் பலன்களாவன:—

1. சற்றேறக்குறைய நெல்லைப் போலவே ஸாதாரண நிலங்களில் லாபம் வரும்.

2. மாடுகளையும் மனிதர்களையும் நெல்லைப் போலவே போஷிக்கக்கூடிய வஸ்துவாயிருக்கிறது.

3. நெல் பயிருக்கு வேண்டியது போல அவ்வளவு ஜலம் வேண்டியதில்லை. ஆகையால், மழை இல்லாத காலங்களில் நஷ்டம் நேரிடாது.

4. நெல் பயிருக்கு ஏககாலத்தில் நோய் நொடி வந்துவிட்டால், அதனால் ராஜதானிக்குப் பஞ்சம் வந்துவிடாது.

---

## VARASULKAM.

## வரசுல்கம்.

தை, மாசி மாஸத்து 'வித்யாவிஹாரணி' ஸஞ்சிகைகளில் ஸ்ரீமான் எஸ்.கே. யக்ஞநாராயண அய்யர் வரசுல்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து அது ஏற்பட்டதற்குக் காரணங்களை பின்வருமாறு கூறுகிருர்.

1. வரதக்ஷிணை என்பது நாம் விவாக காரியத்தை ஸம்ஸ்காரமாகக் கொள்ளாமல் லௌகிகமாக்கி விட்டதனால் வந்த அனர்த்தம்.

2. நம்முடைய தாரித்திரியமே இதை இவ்வளவு தூரம் பிரபலிக்கச் செய்ததாகும்.

3. மற்ற சரக்குகளைப் போலவே இதுவும் கொள்வோர் கொடுப்போர் ஆகிய இருதிறத்தாருடையவும் 'அடியந்திரத்தை'ப் பொறுத்தது. வரசுல்கம் கிடைப்பது இங்கிலீஷ் படித்துத் தேறுவதை யனுஸரித்து மேற்படுகிறது.

4. இங்கிலீஷ் படித்துத் தேறுவது ஒரு பெரிய அசுவமேதமாகிவிட்டதால், இதற்காக முதல் போட்டிருப்பவரும், இனிப் போடப் போகிறவரும், பெண்ணைப் பெற்றவர்களைக் கொண்டு கூடிய மட்டில் பர்த்தி பண்ணிக் கொள்ள வேண்டுகிறார்கள். ஏனெனில், இந்த வியாபாரத்தினால் கிட்டும் லாபத்தைப் பிற்காலத்தில் அந்தப் பெண்ணும் அனுபவிப்பது பிரத்தியக்ஷமானது கொண்டு.

5. ஆதலால்தான் நம்முள் ஏழை, தனவான் என்கிற நியமமில்லாமல், எல்லாரும் வேகிற வீட்டில் பிடுங்கினது லாபமாகக் கொள்ளையடிக்கிறார்கள்.'

6. பணம், வித்தை, இரண்டும் அற்றவர்களும் தக்ஷிணை வேண்டுவது, 'கூடக்கிடந்த குற்றத்தின் மகிமை' யாம்.

7. பெண்ணைப் பெற்றவர் அப்பெண் ரஜஸ்வலையாகுமுன் அதை எந்தக் கழுதையின் காலிலாவது கட்டித் தீரவேண்டுமென்றும், அதிலும் வர்க்க விஷயத்தில் பத்தரை மாற்றுக் குறையாமலிருக்கும் வம்சத்திலுள்ள பிள்ளைகளைப் பார்க்கவேண்டுமென்றும் இருப்பது கொண்டு அவர்கள் படும் உபத்திரவம் வெகுவாய்க் கூடிவிட்டது.

8. இது வைசிக சம்பவமான காரியமாகிவிட்டதால், ஒருவருக்கு நஷ்டமென்றாலும், மற்றக் கக்ஷிக்கு லாபமாகக் காணுவதால், பெண்ணைப் பெற்றவர் வயிற்றெரிச்சல் படுவதில் பிரயோஜனமில்லை.

9. அழகு மாப்பிள்ளை நமக்கு வேண்டுமென்றும், அதனால் தான் நமது பெண்ணுக்கு ஸௌக்கியமென்றும் எண்ணும் வரையில் நாம் தக்ஷிணை கேட்பவருக்குக் கொடுத்துத் தான் தீரவேண்டும்.

ஸ்ரீமான் யக்ஞநாராயண அய்யர் இப்படிக் காரணங்களை எடுத்துக் காட்டிவிட்டுப் பரிகாரங்களாகச் சொல்லுவதாவது :—

1. சாஸ்திரங்களையும், மதக் கோட்பாடுகளையும் சற்று விமரிசையாகப் படித்து, அதையனுஸரித்துக் கல்யாணம் என்பது வைதிக ஸம்ஸ்காரமேயல்லாமல், வைசிக வியாபாரமல்லவென்று ஸாமான்யமாய் எல்லாரையும் அறியச் செய்வது.

2. ஸாமான்யமாய் யாரும் 'ஊருடனொத்து வாழ' வேண்டுவதால், அந்த ஊரை நல்லதாக்கி, அதிலுள்ளவர்களுடைய முரட்டுத்தனத்தைக் குறைத்து, விவேகத்தைப் பெருக்கி வருவது.

3. அங்கங்கே ஸபைகள் கூட்டி, அதில் உழைக்கும் மெம்பர்கள் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் பொறுத்த மட்டில் கூலிப் பணம் வாங்குவதில்லையென்று ப்ரமாணஞ் செய்துகொண்டு அந்தப்படித் தாங்கள் நடப்பதுடன், தங்கள் தாக்ஷண்யத்திற்குக் கட்டுப்பட்டவர்களையெல்லாம் அப்படியே நடக்கும்படி நிர்ப்பந்திப்பது.

4 பெண்குழந்தைகளுக்கு வித்தை முதலிய அழகுகளைப் பெருக்கி, அம்மூலமாக நம்மவர்கள் 'பெண்ணை' வேண்டிக் கல்லியாணம் அல்லது, 'பொன்னை' வேண்டிக் கல்லியாணத்திற்கு ஆக்கிரகப்படாமல் செய்துவருவது.

5. ப்ராம்மணர்களுக்குள் இவ்விஷயத்தில் காணும் வர்க்க பேதங்களை சீக்கிரம் ஒழித்து, இனிமேலாகிலும் 'சிஷ்டாசாரம்' பெருகும்படி செய்வது.

6. 'ரஜஸ்வலை' விஷ்யமாக ஏற்பட்டுள்ள ஸ்ம்ருதிகளை மறந்து (நம்பூதிரிமாராகிய ப்ராம்மணருக்குள் காணுவதுபோல் ஆசாரம் ப்ரபலிக்கும்படி செய்து,) பெண்ணைப் பெற்றவர் சிறிது சிறிதாகப் பெண்களுக்கு வயது கூடும்படி விட்டு, அப்படிக் கூடிய பிறகு நடக்கும் விவாகங்களுக்கு நிர்ப்பந்தங்களொன்றும் ஏற்படாமல் ஊரில் பெரியவர் உழைத்துவருவது.

7. வயது, ஞானம், சீலம் முதலிய குணங்கள் நன்றாயமைந்து, யாவராலும் பூஜிக்கப்படும் பெரியவர்களில் சிலர் ஒரு ஸ்ம்ருதிப் பரிஷத்தாக ஏற்பட்டு, ஆங்காங்கே போய் ப்ரஸங்கம், ப்ரவசனம் முதலிய ஸாதனங்களால் இவ்விஷயங்களை மகாஜனங்களுக்குள் பெரும்பாலர்க்கு விளக்கி, அவர்களுடைய ஸம்மதங்கொண்டு, அடிக்கடி இந்த நடவடிக்கைகளைப் பிரசுரித்து, இவ்விஷயத்தில் ஆசரணை நல்ல மார்க்கத்தில் திரும்பி ப்ரபலிக்கச் செய்வது.



## SOME LESSONS FROM INDIAN HISTORY.

## இந்திய சரித்திரத்திலிருந்து சில புத்திமதிகள்.

'வித்யாவிஹாரிணி'ப் பத்திரிகையில் சரித்திர ஸம்பந்தமான அநேக அரிய விஷயங்கள் பிரசுரமாகின்றன. ஸமீபத்தில் க்வாலியர் மகாராஜா மாதவராவ் ஸிந்தியா அவர்கள் இந்து தேச சரித்திரத்திலிருந்து நாம் அறியக்கூடிய ரகஸ்யங்களைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்தார். அந்த உபந்யாஸத்தின் முக்கிய அம்சங்கள் வித்யா விஹாரிணியின் மாசி மாஸத்து ஸஞ்சிகையில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியா தேசம் இங்கிலீஷ்காரர் ஆளுகைக்குள் வருவதற்கு முன் வெகு துர்தசையிலிருந்தது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அப்படிக்கு இருந்ததற்கு முக்கிய காரணங்கள் என்னவென்றால்,—

I. ராஜ்யபாரந் தாங்கி வந்தவர்கள் ஒழுங்காக ஏதேனும் நல்ல லக்ஷ்யமொன்றை முன்னிட்டு நடத்தி வரவில்லையென்பது ஒன்று.

2. ராஜ்ய நிர்வாக உத்தியோகஸ்தரிடத்தில் ராஜாக்களுக்கு விசுவாசமில்லாத தொன்று.

3. ராஜாக்கள் யோக்கியதையை விசாரிக்காமல் கண்டவர்களுக்கெல்லாம் அதிகாரங் கொடுத்த தொன்று.

4. தேசங்களில் நடப்பதை விசாரியாமலே ராஜ்யபாரம் நடத்திய தொன்று.

5. பரிஜனங்களுடைய கோள்களைக் கேட்டு அக்கிரமம் நடத்திய தொன்று.

6. விவகாரங்களைப் பாரபக்ஷமில்லாமல் தீர்க்காத தொன்று.

7. ராஜ்யமெங்கும் கலகம் அடங்கிப் பரஸ்பர ஸ்நேகம் வளரவேண்டுமென்கிற அக்கறை யாருக்குமில்லாத தொன்று.

8. அதிகாரத்தில் அமர்ந்தவர்கள் தர்மத்ரோகிகளாகி ப்ரபலித்த தொன்று.

9. மத விஷயத்தில் ஸமபக்ஷமாய் நடவாத தொன்று.

10. வைசிக முறைகளில் தேச க்ஷேமத்தை நாடாத தொன்று.

இப்படிப்பட்ட காரணங்களால் ஜனங்கள் ஒன்று சேராமலும் தேசம் முன்னுக்கு வராமலும் போயின. மேற்சொன்ன குறைகளெல்லாம் இங்கிலீஷ்காரர் வந்த பிறகு ஒழிந்துவிட்டன. ஜனங்கள் மத விஷயமாய் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளாமல் எல்லா ஜாதியாருக்கும் பகவான் ஒருவர்தானென்றும், நம்முடைய பாப புண்ணியங்களை ஏதோ ஒரு காலத்தில் அவருக்குத்தான் ஒப்புவிக்க வேண்டுமென்றும், ஞாபகம் வைத்துக் கொண்டு தேசத்து ஜனங்களுடைய க்ஷேமம் முன்னேறும்படி சில ஸாதனங்களை எல்லாரும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டும். அவைகளாவன :—

1. தகரார்களையெல்லாம் பைஸல் செய்வதற்குப் பஞ்சாயத்தார்கள் எங்கும் ஏற்படவேண்டும். ஜனங்கள் கோர்ட்டுகளுக்குப் போய்க் கோவணாண்டிகளாகக் கூடாது.

2. கல்வி எங்கும் பரவவேண்டும். அதுவும் கவைக்குதவக் கூடியதாயிருக்கவேண்டும்.

3 துரைத்தனத்தாருக்கும், ப்ரஜைகளுக்கும் பரஸ்பர ஸ்நேகம் விர்த்திக்கும்படி பார்க்கவேண்டும்.

4. நாம் பேசுவதிலும் எழுதுவதிலும் தேச க்ஷேமத்தைக் கோரி, உள்ள துக்கங்களை உள்ளபடி வர்ணித்து வரவேண்டும். மனதைப் புண் பண்ணும்படி பேசுவதில் யாருக்கும் ப்ரயோஜனமில்லை.

5. எல்லாக் கேடுகளுக்கும் மூலகாரணம் பசியேயாதலால், இத்தேசத்தாருக்குள் யாரும் பசியினால் வருந்தாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

## REVIEWS OF BOOKS.
### புஸ்தக ஆராய்ச்சி.

---

THE MYSTERY OF REVIVAL.

அக்ஞாத வாஸம் அல்லது மாண்டவன் மீண்ட மாயம்—இது ஒரு துப்பறி நாவல். ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர் பி.ஏ., பி. எல், அவர்களால் எழுதப்பட்டு மதுரை வித்தியா பானுப் பத்திராதிபர்களாகிய ம. கோபால கிருஷ்ணய்யர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

"1885-ம் வருஷம் நாடெங்கும் பிரபலமாயிருந்த 'மங்களபுரம் கொலை' விஷயமும், அதில், மங்களபுரத்தில் வஸித்துவந்த சோமுவென்பவர் இறந்ததும், அவர் பிரேத மகப்பட்டதும், அவருடைய கொடும் பகைவனை தர்மராஜு காணுமற்போனதும், அவர் மனைவி ஜானகியம்மாள் குற்றஞ் சாட்டப்பட்டு விடுதலையானதும், எவ்வளவோ நுட்ப தர்சிகளாகிய போலீஸ் நிபுணர்களாலும் கூட இம்மாயக் கொலையின் ரகஸ்யம் இதுவரை கண்டு பிடிக்கப்படாது, மற்ற மாயங்களைப் போலவே இம்மங்களபுரம் கொலையும் மனிதர் மனத்தினின்றும் மாயப் பழங்கதையாய் மறைந்ததும், அதின் ரகஸ்யம் கடைசியாக சோமுவின் புதல்வன் ராமஸ்வாமியின் முயற்சியாலும், பாலிய வக்கீல் கைலாஸத்தின் புத்தி நுட்பத்தாலும், 20 வருஷங்களுக்குப் பிறகு வெளியாகும்படி ஸம்பவித்ததும் இச்சிறு நாவலின் முக்கிய கதாம்சமாக அமைந்திருக்கின்றன."

புஸ்தகம் டிம்மி ஸைஸில் 164 பக்கமுள்ளது. விலை அணு 8.

PANDYAM.

பாண்டியம்.—போன டிஸம்பர் மாஸத்தில் ஏகலிபி கான்பரென்ஸ் என்பதாக ஒரு கூட்டம் அலஹாபாத்தில் கூடிற்று. இந்தியா தேசம் முழுவதும் ஒரே பாஷையும் ஒரே எழுத்தும் இருப்பது நலமென்றும், அதற்காக ஹிந்தி பாஷையை எல்லாரும் படித்து தேவநாகர எழுத்தையே உபயோகிக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. இந்தப்படி நிறைவேறக்கூடுமாகுல், தேசத்துக்கு நல்லதுதான். நிற்க, எல்லாப் பாஷைகளையும் எழுதும்படியாக ஒருவகை புது லிபியை செந்தமிழ்ப் பத்திராதிபராகிய திரு. நாராயணய்யங்கார் அமைத்திருக்கிறார். இந்த எழுத்துக்கள் இங்கிலீஷில் 'ஷார்ட்டு ஹாண்ட்' என்று சொல்லப்படும் அக்ஷரங்கள் போலிருக்கின்றன. பார்வைக்கு அழகாயும் தெளிவாயுமிருப்பதோடு எழுதுவதற்குச் சுலபமாகவும் இருக்கின்றன. இந்த லிபி ஸ்ரீமான் பாண்டித்துரை அவர்களுடைய உபகாரத்தால் முடிக்கப்பட்டதால், அதற்கு பாண்டியம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது புஸ்தகத்தின் விலை அணு. 4.

TAMIL ILAKKA ARAMBA VILAKKAM.

தமிழ் இலக்க ஆரம்ப விளக்கம்.—முனையாடுவார் சங்கத்தாரால் இயற்றப்பட்டது. கும்பகோணம் சோலையப்ப முதலியார் தெருவிலிருக்கும் வெ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது. விலை அணு ஒன்று.

VALMIKI RAMAYANAM.

வால்மீகி ராமாயணம்.—இதன் 10, 11 ஸஞ்சிகைகளை சென்னை, எல் வி. ராமச்சந்திரய்யர் அவர்களிடத்திலிருந்து வரப் பெற்றோம். அயோத்யா காண்டம் 100-வது ஸர்க்கத்தில் முன் சென்றது போக, பாக்கி முழுமையும் ஆரண்ய காண்டத்தில் 4-வது ஸர்க்கத்தில் கொஞ்சமும் இந்த ஸஞ்சிகைகளில் அடங்கி யிருக்கின்றன.



## BOYS' SECTION.
### சிறுவர் பகுதி.

---

A GIANT.

ஓர் ராட்சதன்.—அமெரிக்கா கண்டத்தின் உத்தரத்திலுள்ள கனடா தேசத்தில் ப்ராஞ்சு ஜாதியனுகிய எட்வர்ட் பாவா என்பவன் 11 அடி உயரமுள்ளவனுயிருக்கிறான். அவனுக்கு வயது 30. அவன் நிறை 587 ராத்தல், அவன் கை 18 இஞ்சும், பாதம் 24 இஞ்சு நீளமும் 12 இஞ்சு அகலமும் இருக்கின்றன. அவனுடைய உடுப்பு ஸாதாரண மனிதர்களில் பத்துப்பேர் அணியலாம். இவன் சிறு வயது முதல் சரீர விஷயத்தில் அதிக கவனத்தைச் செலுத்திவந்ததால், எப்போதும் உற்சாகியா யிருக்கிறான்.

THREE OLD RULES.

மூன்று பழைய விதிகள்.—"பெலனடையும் வழி" என்பதாக வில்லியம்ப்ளாக்கியென்பவர் பின்வரும் விதிகளைக் குறிக்கிறார்.

1. நிற்கும்போதும் இருக்கும்போதும் நடக்கும்போதும் தேகம் நிமிர்ந்திருக்கட்டும். அதிகமாய்ச் சுவாசி. இப்பழக்கம் சுவாசப்பை, ஜீரண உறுப்புக்களை நன்னிலப்படுத்தி வேலைகொள்ளும். ரத்தத்திலே ஆக்ஸிஜன் நிரம்பவும் அடையப் பெறுதலால், போஜனம் ஜீரணமாகிக் கழியும்.

2. நேரத்துக்கு நேரம் சுவாசப்பை நிறையக் காற்றைப் பூரித்துக் கூடியமட்டும் நெஞ்சிலடக்கி வந்தால், குழப்பமான நாடி நாளங்கள் சீரடையும்.

3. சாப்பாடு முடிந்த பிற்பாடு கொஞ்ச நேரமாவது ஆறுதலா யிருக்கப் பார். அப்பொழுது நீ உட்கொண்ட போஜனம் ஏற்ற பிரகாரம் தொழிற்பட்டு உபயோகமாகும்.

இன்னும் அவர் சொல்வது:—மெலிவான சரீரிகள் அநேகர் அமைதியாயிரார். ஆறுதலாய்க் கருமஞ் செய்யார். போதிய அளவு இளைப்பார மாட்டார். அவர்கள் விசேஷமாகத் தங்கள் ஜீரண உறுப்புகளும் பிற அவயவங்களும் சீரடையும்படி நன்றாய்ச் சுவாசிக்கவேண்டும்.

AN ELEPHANT THAT SAVED THE MAHOUT.

எஜமானனைக் காத்த யானை.—மே மாதம் 7-ந் தேதி ரங்கூன் கெஜட்டில் பின்வரும் ஸமாசாரம் வரையப்பட்டிருக்கிறது.—கூர்க்க ஜாதியைச் சேர்ந்த ஒரு மாஹுத்தன் தனது யானையை நன்றாய்க் கழுவிக் குளிப்பாட்டி நாணலடர்ந்த காட்டிற்கு மேய்க்க நடத்திக்கொண்டு போனான். அப்போது ஒரு புலி அம்மாஹுத்தன்மேல் பாய்ந்து தனது கூரிய நகங்களால் அவனைக் கிழிக்க யத்தனிக்கையில் மாஹுத்தன் "கூ கூ" என்று கத்தினான். தனது எஜமானனது பரிதாபக் குரலைக் கேட்ட யானை உடனே ஓடிவந்து புலியைத் தனது முன்னங்காலால் ஒரு உதை கொடுத்தது. யானை கொடுத்த உதையால் புலி ரத்தத்தைக் கக்கிக்கொண்டு உருண்டுருண்டு சற்று தூரத்திற் கப்பால் போய் விழுந்து செத்தது. மாஹுத்தன் இப்போது ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறான். அவன் தேக ஸ்திதி குணமடைந்தே வருகிறதென ஸமாசாரமெட்டுகிறது. என்ன ஆச்சரியம்! கேவலம் ஒரு யானைக் கிருக்கும் நுண்ணறிவைப் பாருங்கள்.

BE TRUTHFUL.

மெய்யுடையோனுதக.—1. மனிதன் அனுஸரிக்க வேண்டிய விஷயங்களில் மெய்யொன்றே முக்கியமும் முதன்மையுமானது.

2. எப்போதும் மெய் முன்வந்துநிற்கும். பொய் புறங்காட்டி யோடும்.

3. மெய்யுடையோனே மதிப்புடையோனுவான்.

4. மேன்மையான விஷயங்களுக்கெல்லாம் மேன்மையானது மெய்யே. அதை வெறுத்தவன் வீணனுவான்.

5. உண்மை விசுவாசி யுலகப் பிரஸித்தன்.

6. உலக நன்மைகளுக்கு ஏற்ற விதை உண்மையே.

7. உன் நாவின் நுனியை உண்மையின் அஸ்திபாரமாக்கு.

8. உன் மனச்சாட்சிக்கு ஒருபோதும் பொய்யனுகாதே.

9. மெய்யை நாட்டினுல் மெய்யனுகுவாய்.

10. பிசகைத் தள்ளிப் பிசாசை வெற்றிகொள்.

11. இருளானது நட்சத்திரங்களைக் காண்பிப்பதுபோல விஸனமானது உண்மையைக்காண்பிக்கும்.

12. வார்த்தையையும் செய்கையையும் மாறுபடக்காட்டாதே.

13, உண்மைப் பிரகாசம் உன்மனதில் தரித்தால், உன்னத மகிழ்ச்சி உனக்கே சுதந்தரம்.

14. மெய்யைக் கண்டால், முன்னேக்கிநட, பொய்யைக்கண்டாற் பின்வாங்கிநில்.

15. உண்மையையொத்த உறுதியான நேசர் உலகத்தில் எங்கும் ஒருவருமில்லை.

CARE OF THE EYES.

**நேத்திரஸம்ரக்ஷணம்.**—1. கண்கள் சோர்வடைந்திருக்கும்போதும் வெளிச்சம் குறைவாயும் அல்லது அதிகமாயிருக்கும்போதும் திருஷ்டித்துப் பார்ப்பது பிசகு. 2. நாம் படிக்கும்போதும் எழுதும்போதும் விளக்கு வெளிச்சம் இடது புறத்திலிருந்து வரும்படி வைக்கவேண்டும். 3. படிக்கும் அறை குளிர்ச்சியாயும், நமது கால்கள் சூடாயும் கழுத்து தாராளமாயும் இருக்கவேண்டும். 4. படிக்கும் புஸ்தகம் கண்களுக்கு 15-அங்குல தூரத்தில் நேராக இருக்கவேண்டும். வண்டியின்மேல் பிரயாணம் செய்யும்போதும் படுத்திருக்கும்போதும் படிக்கலாகாது. 15-அங்குலத்துக்கு மேற்பட்டால் தூரதிருஷ்டியும், குறைந்தால் ஸமீப திருஷ்டியும் உண்டாய் நேத்ர ரோகங்கள் ஏற்படும். 6 காலையில் சாப்பிடும் முன் எழுதுகிறதாவது படிப்பதிலாவது அல்லது வேலைசெய்வதிலாவது கண்களை உபயோகப்படுத்தக்கூடாது. 7. வியாதிக்காரனுயிருந்து ஆரோக்கிய மடைந்த வேளையில் நேத்ரங்களை உபயோகிப்பது பிசகு. 8. விநோதார்த்தம் கண்விழிகளைத் திருப்பக்கூடாது. 9. கண்களுக்கு தூரதிருஷ்டி அல்லது ஸமீபப்பார்வையுண்டாயிருந்தால், தக்க சிகிச்சை செய்துகொள்ள வேண்டும் 10. நடக்கும்போது திருஷ்டியை தூர உபயோகிப்பதும் அடிக்கடி மாற்றுவதும் நேத்ரத்துக்கு அபாயம். 11. கண்ணீர் வரும்படியான காரியங்களைச் செய்யக்கூடாது. 12. கடுமையான நோய்கள் வந்தபோது உத்தமமான நேத்ர வைத்தியனிடம் காட்டவேண்டும். 13. அஞ்சனம், கலிகம், முதலியவைகளை உபயோகிப்பது தவறு. 14. நித்திரையிலிருந்து எழுந்தவுடன் அதிக வெளிச்சத்தைப் பார்க்கக்கூடாது: ஒரு வெளிச்சத்துக்கு இன்னொரு வெளிச்சத்தைக் கிரஹித்துக்கொள்வதற்கு சக்தியுண்டு. சூரியனை நமது கண்கள் கண்டவுடன் தமது பிரகாசத்தை சூரியனிடம் பறிகொடுத்து விடுகின்றன. நமக்கு அப்பபோ பார்ப்பதெல்லாம் இருட்டாகவே தோன்றும். பிறகு கண் பழைய படி தனது பிரகாசத்தை யடைகிறது. 15. நிர்மல வாயு ஸஞ்சார மில்லாத அறைகளிலும், ஆகார மில்லாததாலும் அதிக போஜனத்தாலும் கண்களுக்கு நோயுண்டாகும். 16. மேகநீர் கண்களில் இறங்கி அது காரணமாகவும் பார்வை கெட்டுவிடும். இதற்கு சிகிச்சை:— ஒரு தோலா அபின், ஒரு வீசாடம் எள்ளெண்ணெய், புளியிலைச் சாறு ஒரு படி, எண்ணெயையும் சாற்றையும் கலந்துகொண்டு அதில் அபினைக் கறைத்துவிட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். அபின் வாஸனை யுண்டானதும் அது பக்குவமாகக் காய்ச்சினதற்கு அடையாளமென்று கண்டுகொண்டு இறக்கி ஆறவைத்து, தாம்பிர பாத்திரம் நீங்கலாக வேறெதிலேனும் பத்திரப்படுத்திக்கொள்ளவும். வாரத்துக்கு மூன்று தடவை காலைஸ்நானம் நல்லது. நன்றாக ஊறவேண்டும். ஸ்நானம் செய்த தினம் புளி மட்டும் நீக்கிப் பத்திய மிருக்கவேண்டும். இது அனுபவ முறை. 17. பிரமேக ரோகத்தில் நீர்த்தாரையிலிருந்து வெளிப்படும் ஜலம் முதலியவற்றில் கைப்பட்டிருந்தால், நன்றாகக் கழுவவேண்டும். அந்தக்கை கண்களில் பட்டால், அத்துர்நீர் கண்களில் இறங்கி கண்ணைக் கெடுத்துவிடும். 18. அன்றன்று ஸ்நானம் செய்து கொண்டபிறகுதான் வெளிப்பட வேண்டுமென்ற கட்டுப்பாடும், வாரத்திற்கு இரண்டு முறை எண்ணெய் ஸ்நானமும் நேத்திர ஸம்ரக்ஷணத்திற்கு நல்ல மார்க்கங்கள். "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு" என்று பெண்களும் சொல்லுவார்கள். ஐயோ! கண்ணில்லாதவன் வாழ்க்கை எத்தனை பரிதாபகரமானது? அவனுக்கு இவ்வுலக ஸுகம் ஏது? பால்யம், யௌவனம் இவற்றின் பலத்தால் உடனே கண்களுக்குக் கெடுதி நேரிடா திருக்கலாம். ஆனால் பிறகு வட்டியும் முதலுமாக வாங்கப்படுமென்பதை மனதிற் கொள்ளுங்கள். இராக்கண் பகற்கண் விழித்துப் படித்துத்தான் ஜான் மில்டன் இரு கண்களும் கெட்டுக் குருடானார். படித்தாயிற்று? படித்ததைக் தெரிந்து கொள்ளுங்கள்.—பிரஜானுகூலன்.



# LADIES' SECTION.

## ஸ்திரீகள் பகுதி.

HOT WATER.

**வெந்நீர்.**—ஒழுங்குப்படி சுடவைத்து ஆறின ஜலத்தைக் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கிறதற்கு இடையில் கொடுத்தால், ஜீரண சக்தியை அதிகப்படுத்தி தேகாரோக்கியத்தை யுண்டுபண்ணும்.

A PARSI LADY LAWYER.

**பார்ஸி ஸ்திரீ லாயர்.**—பம்பாய் ஸர்வகலாசாலையில் டிஸ் இஞ்சினீர் என்கிற பார்ஸி மாது எல். எல். பி. என்கிற லாயர் பரீக்ஷையில்தேறிப் பட்டம் பெற்றிருக்கிறாள். இந்தியாவில் லாயர் பரீக்ஷைக்குப் படித்துத் தேறின ஸ்திரீகளில் இவள் முதன்மையானவள். ஏற்கனவே எம். ஏ. என்கிற பட்டமும் பெற்றிருக்கிறாள். இதற்கு முந்தி மிஸ் கர்னேலியா ஸொராப்ஜி என்னும் மாதும் லாயர் பரீக்ஷை கொடுத்திருக்கிறாள். ஆனால் இந்தப் பெண்மணி இங்கிலாந்தில் படித்துத் தேறினவள்.

A NOBLE WOMAN.

**ஒரு உத்தமி.**—ஸமீபத்தில் கல்கத்தாவில் சுந்தரி யென்னும் குலமகள் நோயா யிருக்கும் தனது கணவன் பிழைக்க மாட்டானென்று நிச்சயமாக அறிந்ததனால், சமங்கலியா யிறக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கங்காதீர்த்தத்தைக் கொண்டுவந்து தனது கணவனது வாயில் விட்டு, பிறகு தன்னை ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு ஓரறைக்குட் சென்று உடல் முற்றும் எண்ணெயை யூற்றிக்கொண்டு தீயிட்டுக்கொண்டு மாண்டாள். ஜலத்தை விட்டுத் தன்னைக் காப்பாற்ற வந்தவர்களை அப்படிச் செய்யவேண்டாமென்று தடுத்துவிட்டாளாம். இவ்வுத்தமிக்கு வயது 22 இருக்குமாம், அவளுடைய கணவனுக்கு வயது 32 இருக்குமாம்.

OPINIONS ABOUT WOMEN.

**ஸ்திரீகளைப் பற்றி சில அபிப்பிராயங்கள்.**—
"பெண்ணும் திராக்ஷாரஸமும், வாலிபனையும் வயோதிகனையும் எருப்போல வசீகரப்படுத்துகின்றன."
—**மில்டன்.**

"நான் படித்த நூலெல்லாம் பெண்களின் கண்ணோட்டமே. என் பிழைகளெல்லாம் அவற்றினின்றும் கிடைத்தனவே." —**மூர்.**

"நீ உன் இஷ்டப் பிரகாரம் எல்லாப் பந்தங்களையும் நீக்கி நில்;—என்றாலும், பெண் உன்னை ஆளுகிறாள்."
—**மூர்.**

"புருஷர் அவர் இஷ்டப்படி செல்லட்டும்; செய்யட்டும்; அவரை ஆளுவது பெண்களேயாம்.'
—**பிக்கர்ஸ்டர்.**

"எந்தக் காலம் வரை பெண்கள் முகமலர்ச்சியில்லாதிருக்கின்றனரோ அந்தக் காலம் வரை உலகம் சூனியப் பிரதேசமாகவே இருக்கும். மனிதரோ, முயற்சியற்றவர்களா யிருப்பார்கள்." —**காம்பெல்.**

"பெண்மணியே, ஆடவரை நற்குணமுடையவராக்க கடவுள் உன்னைப் படைத்தார். நீ இல்லாவிட்டால், நாங்கள் முழு மூடராகவே இருப்போம்."
—**தாமஸ் வுட்வே.**

"ஆடவர் மனது எத்தகைய துன்பங்களால் வருத்தப்பட்டிருந்தாலும் மாதர்களின் கடைக்கண் பார்வை ஒன்றுக்கு அவரை அத்துன்பங்களிலிருந்து கரையேற்ற சக்தியுண்டு." —**கே.**

"பூமியில் மிகரம்மியமான பொருள் பெண்ணேயாம்."
—**லவல்.**

"நாணமில்லா மனைவி அவள் புருஷனுக்கு அநுகூல சத்துரு." —**யங்க்.**

A BRAVE WOMAN.

**மனோதிடமுள்ள மாது.**—வேல்ஸ் தேசத்து மிஸ்டர் எச். ஆர். தாமஸ் என்பவரின் மனைவியார் ரோடீஷியாவில் ஸமீபத்தில் ஒரு பெரிய சிறுத்தைப்புலியைச் சுட்டாளாம். எவ்விதமென்றால், சில விவஸாயிகள் தங்களுடைய வயல்களிலிருந்து வேலைசெய்துகொண்டிருக்கும்போது அச்சிறுத்தைவந்துவிடவும், அவர்கள் அவ்விடத்துக்கு அருகாமையில் குடியிருந்த தாமஸின் வீட்டில்போய் அடைக்கலம்புகுந்தார்கள். அந்நேரத்தில் தாமஸ் என்பவர் வீட்டிலில்லை. அவருடைய பாரியாள் மாத்திரம் வீட்டிலிருந்தாள். இவர்கள் தாங்கள் வயலிலிருந்து ஒரு சிறுத்தையால் துரத்தப்பட்டார்கள் என்று சொல்லவே, மேற்படி மாது இதைக்கேட்டு தனது நாய்களை அழைத்துக்கொண்டு ஒரு கைத்துப்பாக்கியுடன்சென்று ஷை வயலில் அச்சிறுத்தை நிற்கக்கண்டு வெகு வீரா வேசத்துடன் அம்மாது அம்மிருகத்தை அணுகித் துப்பாக்கியால் வெகு நிதானமாய்ச் சுட்

டாள். அச்சூடானது அம்மிருகத்தைப் படுகாயப்படுத்திவிட்டதினால் அது பிறிதொன்றும் செய்யவில்லை. நாய்களும் இதற்கிடையில் அம்மிருகத்தையணுகி யுத்தஞ் செய்தன வென்றும், இப்படிப்பட்ட பெண்கள் தான் எம் சேத்துக்கு வேண்டு மென்றும் ரொடீஷியாவில் பிரசுரமாகும் ஹெரல்ட் என்னும் பத்திரிகை கூறுகிறது.

A NOBLE CONFESSION.

**ஒரு பெருந்தன்மையான உறுதிமொழி.**—சென்ற ஏப்ரல் மாதத்தில் அமெரிக்காவில் ஒரு பரிதாபமான நிகழ்ச்சி நடந்தது. சிக்காக்கோ பட்டணத்தில் டாக்டர் ஆல்டென் க்ளெமின்ஸன் என்னும் பிரபல வைத்தியர் தன்னுடைய மனைவியைக் கொன்றுவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு முடிவில் உயிருள்ள பரியந்தம் சிறைச் சாலையில் இருக்க வேண்டுமென்று தண்டனை விதிக்கப்பட்டார். இந்த தண்டனையை ஸுப்ரிம் கோர்ட்டாரும் உறுதிப்படுத்தி விட்டார்கள். இந்த ஸமயத்தில் மிஸ்ஷிஸ் ஷ்மிட் என்னும் பெண்பிள்ளை அழுதுகொண்டே நியாயஸ்தலத்துக்கு முன் வந்து டாக்டர் குற்றவாளி அல்ல வென்றும், தன்னுடைய மானத்தைக் காப்பாற்ற வேண்டு மென்றே அவர் அப்படி குற்றவாளியென்று ஒப்புக்கொண்டதாகவும் சொன்னாள். பின்னும், தனக்கும் டாக்டருக்கும் கடந்த ஐந்து மாதங்களாக ஸ்நேகம் உண்டென்றும், தான் தன் புருஷனோடு அற்ப விஷயத்தில் சண்டைபோட்டுக் கொண்டு சிக்காக்கோவுக்குப் போனதாகவும், அவ்விடத்தில் டாக்டரோடு ஸ்நேகிதம் செய்ததாகவும், கொலை நடந்த இரவில் டாக்டர் இல்லினாயிலுள்ள தன் வீட்டில் இல்லாமல் வேகு தூரத்திலுள்ள சிக்காக்கோவில் தன்னோடு இருந்ததாகவும், கேஸ் ஆரம்பிப்பதற்கு முன்னமே உண்மையைச் சொல்லித் தப்பித்துக்கொள்ளும்படி தான் கேட்டுக்கொண்டும் டாக்டர் மாட்டே னென்று பிடிவாதமாய்ச் சொன்னதாகவும், இப்படிச் சொன்னதற்குத் தன் மானத்தைக் காப்பாற்ற வேண்டு மென்கிற நல்லெண்ணமே என்றும், தனக்காகப் பிராணனை விட வித்தமாயிருந்த டாக்டருக்கு விதிக்கப்பட்ட அநியாய தண்டனையை விலக்கும்படி தன் மானம் போனாலும் போகிற தென்று முன் வந்து சொன்னதாகவும், பரிதாப முண்டாக அழுது சொன்னாள். இதன் மேல் மறு விசாரணை செய்ய தீர்மானமா யிருக்கிறது. அந்தப் பெண்பிள்ளையின் கணவன் பேர்போன வர்த்தகனாகிய மிஸ்டர் ஷ்மிட் என்பவர். தன் பெண்சாதி பிசகிப் போனாலும், நல்ல எண்ணத்தால் குற்றம் செய்யாதவனைக் காப்பாற்றினதற்காக அவளைக் கல்யாண சம்பந்தத்திலிருந்து விலக்கமாட்டேனென்று பஹிரங்கமாகச் சொன்னாரென்று நியூயார்க் என்னும் பட்டணத்தில் பிரசுரமாகும் டேய்லி மெயில் என்னும் பத்திரிகை கூறுகிறது.

A PROLIFIC WOMAN.

**ஏராளமான ஸந்ததிகளுள்ள ஸ்திரீ.**—ட்ரான்ஸ்வால் பிரதேசத்தில் க்ரான்ஸ்டாட் என்னும் ஊரில் வான் ஒய்க்கென்பவள்-1832 வது வருஷம் அக்டோபர் மாதம் 20௳ பிறந்தவள். இவள் 18-வது வயதில் பீட்ரஸ் ஜேகோபஸ் லப்பீ என்பவரைக் கலியாணம் செய்து அவரோடு சுகமாயிருந்து இரண்டு வருஷத்தின்பின் ஒரு குழந்தையைப் பெற்றாள்; அவர் இறந்த பிறகு அவள் பத்துமாதம் விதவையா யிருந்து நான்கு குழந்தையுள்ள மனைவி யிழந்திருந்த நிக்கொலஸ் மார்த்தினஸ் ப்ரிடோரியஸ் என்பவனைக் கலியாணஞ் செய்து ஒருவருஷம் ஐந்து மாதம் அவனோடு சுகமாய் வாழ்ந்தாள். அவன் தனது ஐந்து குழந்தையையும் விட்டு இறந்துபோனான். பின் அவள் 5 மாதம் விதவையா யிருந்து மூன்றாவதாக ஏழு பிள்ளையுடைய டேவிட் ஸ்டீபன்ஸ்பீடர்ஸ் என்பவனைக் கலியாணஞ் செய்து அவனோடு 11 வருஷம் வாழ்ந்திருந்து 7 குழந்தைகளைப் பெற்றாள்; அவன் இறந்தபின்பு அவள் ஒரு வருஷகாலம் விதவையாயிருந்தாள். பிறகு அவள் நான்காவது முறை 8 குழந்தையுடைய டாணி லாட்பிவிகஸ் க்ரான்ஜி என்பவனைக் கலியாணஞ் செய்து அவனோடு 11 வருஷம் சுகமாய் வாழ்ந்திருந்து 4 பிள்ளைகளைப் பெற்றாள். அவன் இறந்த பின்பு அவள் 2 வருஷம் விதவையா யிருந்து 6-வது முறை 5 குழந்தையுள்ள கோன்ராட் ஹென்ரிக்லான் ஒய்க்கென்பவனைக் கலியாணஞ் செய்து அவனுடைன் 11 வருஷம் சுகமாயிருந்து 4 குழந்தைகளைப் பெற்றாள். அவன் இறந்தான். இப்படி அவளுக்கு நேரே 26 பிள்ளைகளும், தான் கலியாணஞ் செய்துகொண்ட புருஷர்களுக்கு 24 பிள்ளைகளும் ஆக 50 பிள்ளைகளும் அவர் மூலமாக அவளுக்கு 270 பௌத்திர பௌத்திரிகளுமிருக்கிறார்கள். அவளுக்குத் தற்காலம் 78 வயது.



# DEPARTMENTAL NOTES.

# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.

## விவஸாயக் குறிப்புகள்.

POTASH.

**போட்டாஷ்.**—பயிர் வளருகிறதற்கு நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ், சுண்ணாம்பு, ஆகிய இந்த இந்திரிய வஸ்துக்கள் அவசியம். களிமண் நிலங்களில் அநேகமாய்ப் பொட்டாஷ் நிறைந்திருக்கும். மணல் பாங்கான நிலங்களில் பொட்டாஷ் குறைவா யிருக்கும்.

WEEVIL.

**அந்துப்பூச்சி.**—நெல், துவரை இவைகளைப் போலுள்ள மற்ற தானியங்களைச் சேகரித்து சில காலம் ஓரிடத்திலேயே வைத்திருந்தால், அவைகளுக்கு அந்துப் பூச்சியினால் உண்டாகும் நாசம் எவ்வள வென்று எல்லோரும் அறிவார்கள். இதைத் தடுப்பதற்கு ஒரு நண்டைக் கொன்று நெல், துவரை முதலிய குவியல்களின் நேரே தொங்கவிடவும். இதைச் சிலர் செய்து வந்து பலனை அடைந்திருக்கிறார்களாம்.

AGRICULTURAL INSTRUCTION.

**விவஸாய போதனை.**—புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் ஊரூராய்ப் போய் விவஸாய விஷயமாய் ஒரு நிபுணர் ஜனங்களுக்கு போதித்து வருகிறார். தவிர, அந்தஸமஸ்தானத்து ட்ரெயினிங் ஸ்கூல்களிலுள்ள ரூரல் ஸ்கூல் வாத்தியார்களுக்கு விவஸாய விஷயமாக போதனை செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளாகி யிருக்கின்றன.

ONIONS.

**வெங்காயம்.**—இப்பயிர், நிலம் எவ்வளவுக்கெவ்வளவு நெகிழ்ந் திருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நன்றாய் வளர்கிறது. நிலம் மிகவும் இறுகும் பக்ஷத்தில் வெங்காயம் சிறுத்துவிடுவது மல்லாமல், நீர் வடியாததால் உண்டாகும் நோய்க்கும் இடமாகிறது. ஆனால் பட்டம் பட்டமாகச் செய்து, அதில் நட்டால் பயிர் மிக நன்றாய் வளருகிறது.

THE USE OF DEAD DOGS.

**செத்த நாயின் பிரயோஜனம்.**—சீமை அத்திச் செடிக்கு செத்த நாயைப் புதைத்தால் புதைத்த பக்கமே செடி உலர்ந்து விடுகிறதென்றும், புதைத்த சில வாரங்களுக்குள் மட்கிய நாயை எடுத்து நாலா பக்கத்திலும் புதைப்பது நல்லதென்றும் கர்னூல் தோட்டத்தார் தெரிவிக்கிறார்கள்.

DRIED LEAVES AS MANURE.

**சருகு செத்தை எருவாவது.**—புதுக்கோட்டை ஸமஸ்தானம் திருமயம் தாலூக்காவில் அரிம்பளம், கீழாநிலை, புதுப்பட்டி என்னும் கிராமங்களில், சாலை யோரங்களிலுள்ள மரங்களின் சருகு செத்தைகளைத் திரட்டி, நிலத்துக்கு எருவாக உபயோகப்படுத்துகிறார்களாம். அந்த ஊர்களில் நிலத்தின் மண் கடினமா யிருப்பதாலும், நிலங்களில் களர் அதிகமா யிருப்பதாலும் இப்படி சருகு செத்தைகளின் எருவை உபயோகிக்கிறார்கள். அதே மண்பாடுள்ள மற்ற இடங்களிலும் இப்படி அனுஷ்டிக்கலாம்.

A WATER LIFT.

**ஜலமிறைக்கும் யந்திரம்.**—சென்னை ப்ராட்வேயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸெல்ப் கார்டிங் ஸேப்பாக்டரியின் போர்மன் ஒரு ஜல மிறைக்கும் யந்திரத்தை, நூதனமாய்க் கண்டுபிடித்திருக்கிறா ரென்றும் அதற்கு பேடன்டு கொடுக்க கல்கத்தா பேடன்டாபீஸுக்கு அவர் மனுச்செய்து கொண்டிருக்கிறாரென்றும் அறிகிறோம்.

CAMPHOR CULTIVATION.

**கற்பூரமர ஸாதுபடி.**—பர்மாவில் கற்பூரப் பயிர் செய்வது மிகுந்த லாபம் தரும் தொழில் என்று தெரிகிறது. சின்லம்காபா என்னும் ஊரில் கற்பூரச் செடி நன்றாய் வளர்கிற தென்று பரீக்ஷித்து அறிந்திருக்கிறார்கள். சீனாவிலிருந்து வரும் "காமி" கற்பூரத்தை இறக்கும் செடியாகிய 'புளூமியா' என்னும் செடி பர்மாவில் சுலபமாக விருத்தியாகிறபடியால், சீக்கிரத்தில் பர்மாவில் ஜனங்கள் கற்பூரச் செடி விருத்தி செய்வதில் முயன்று வருவார்கள். ரப்பர், கெரோஸின் எண்ணெய், முதலியனபோல் கற்பூரமும் பர்மாவிலிருந்து சீக்கிரத்தில் ஏராளமாகவெளி நாடுகளுக்கு ஏற்றப்படும்.

MESTON PLOUGHS.

**மேஸ்டன் கலப்பைகள்.**—"பர்ன் அண்டு கம்பெனியாருடைய மெஸ்டன் இரும்புக்கலப்பையைப் பற்றிய விளம்பரமொன்றை விவஸாய நேயர்கள் கவனித்திருப்பார்கள். அதில் 10 கலப்பைகள் வரையில் வாங்கி உபயோகித்ததில் மற்ற இரும்புக் கலப்பைகளை விட சேற்றிலும் புழுதியிலும் சுலபமாக உழக்கூடியதாயும், லகுவாயுமிருக்கிறது. இரும்புக் கலப்பையென்றால், எட்டி நிற்கும் தஞ்சை விவஸாயிகளுக்கு மிகவும் ஏற்றதாயிருக்கிறது. ஆயினும், வைத்து எடுக்கும்போதும் மூலை முடுக்குகளில் திருப்பும்போதும் சற்று கெட்டியான தரையாயிருந்தால், கொழு முதலிய பாகங்கள் முறிந்து விடுகின்றன. இவைகளை உறுதியாகச் செய்விப்பார்களானால், தஞ்சை ஜில்லாவிலேயே ஏராளமாக விலையாகும்."—எஸ். வைத்தியலிங்கம் பிள்ளை.

WET CULTIVATION ON SEA COAST LANDS.

**சமுத்திரக்கரை யோரங்களிலுள்ள நஞ்சை ஸாகுபடி.**—ஸாதாரணமாக சமுத்திரக்கரையோரங்களிலுள்ள நிலங்கள் ஸாகுபடிக்கு லாயக்கில்லை என்று தள்ளிவிடப்படுகின்றன. ஏனெனில் சமுத்திர ஜலம் ஏறி உப்பு அளராயிருக்குமென்பது அநேகரது துணிபு. ஆயினும் தஞ்சாவூர் ஜில்லாவில் காரைக்கால் பிரையாறு போன்ற இடங்களில் இந்நிலங்கள் ஸாகுபடி செய்யப்பட்டு நல்ல முதல்தர நஞ்சை நிலத்தைப் போல் விளைகின்றன. இந்த நிலங்களுக்கு உழவு முதலியவை மற்ற நிலங்களைப் போலவேயாயினும் அதற்கு அடிக்கடி நல்ல தண்ணீர் பாய்ச்சி ஏற்கனவே இருக்கும் ஜலத்தை வடிக்கட்டியிருக்க வேண்டும். ஒரு ஸமயம் சமுத்திர ஜலம் உள்ளே பிரவேசித்து நஞ்சையில் சென்றாலும் குற்றமில்லை. உடனே செய்யவேண்டிய தென்னவென்றால், நல்ல தண்ணீர்விட்டு உப்பு ஸாரத்தை இரண்டு மூன்று தடவையாக எடுத்து விடவேண்டும். அப்படி எடுக்காவிட்டால், பயிர் அப்படியே ஒரு வாரத்துக்குள் காய்ந்துபோகும். ஆகையால், இந்நிலங்களுக்கு வேண்டியது நல்ல தண்ணீர் மேல்வாயில் வித்தமாயிருக்கவேண்டும். இவைகளில் விளையும் தானியங்கள் நெல், பயறு முதலியவை. அதிக ருசிகரமானவை. விளைவும் குறைவில்லை.—சோமசுந்தர தேசிகர்.

BONES.

**எலும்புகள்.**—நமது தேசத்திலிருந்து வருஷம் ஒன்றுக்கு ஸுமார் 100,000 டன் நிறையுள்ள எலும்பு அயல் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாய்க் கணக்கிடப்பட்டிருக்கிறது. தென்ஜில்லாக்களிலிருந்துமட்டும் 10,000 டன் நிறையுள்ள எலும்புகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனவாம். இவ்வெலும்புகளை இத்தேசத்துக் கிருஷிகர் வாங்கி எருவாக உபயோகித்தால், நமது நிலங்களின் ஸாரம் கெடாமல் வளம் நிறைந்திருக்கும்.

A CORRECTION.

**ஓர் பிழை திருத்தம்.**—"சென்ற வைகாசி மாத ஸஞ்சிகையில் "நெல் விதை" என்று தலைப்புள்ள எனது வியாஸத்தில், 100 குழி அதாவது 33 ஸெண்டு நாற்றங்காலில் 2 பட்டணம் படிக்குமேல் தெளிக்கப்படாத நாற்று என்று எழுதப்பட்டிருப்பது கைதவறுதலாகும். 2 படி விதை விட நிலத்தின் தன்மைக் கேற்றவாறு 3 முதல் 4 ஸெண்டு நாற்றங்கால் போதும்," என்று மிஸ்டர் எஸ். வைத்தியலிங்கம் பிள்ளை எழுதுகிறார்.

PUDDLED AND DRY SEEDBEDS.

**சேற்றுக்கால் புழுதிக்கால் நாற்றங்கால்கள்.**—பி. எல். தேவி லிங் என்பவர் "தஞ்சாவூர் ஜில்லாவில் நாற்றங்கால்கள்" என்ற வியாஸத்தில் சேற்றுக்கால் நாற்றைவிட புழுதிக்கால் நாற்று விளைமுதல் ஜாஸ்திப் படுகிறதென்று அபிப்பிராயங் கொண்டிருப்பது ஸரியாகத் தோன்றவில்லையென்று எழுதுகிறார். எனது அனுபவத்தில் சென்ற வருஷத்தில் பரீக்ஷைக்காக ஒரே ஸ்தலத்தில் இரண்டுவித நாற்றுகளையும் தனித்தனியாக நட்டதில், சேற்றுக்கால் நாற்றைவிட புழுதிக்கால் நாற்று ஏக்கருக்கு 250 படி ஜாஸ்தி கண்டது. இரண்டுவித நாற்று விட்ட இடமும், நட்ட இடமும் ஒரே செய்நேர்த்திதான். ஒரே பூஸாரமும் உடையன. பல சாஸ்திரிகளும் அனுபவஸ்தர்களும் புழுதிக்கால் நாற்று மாகூல் ஜாஸ்தி காணுமென்றே அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விதமாக மிஸ்டர் எஸ் வைத்தியலிங்கம் பிள்ளை எழுதுகிறார்.



# INDUSTRIAL NOTES.

# கைத்தொழில் குறிப்புகள்.

SILK WEAVING.

**பட்டு நெசவு.**—இந்தியாவின் வடமேற்கு எல்லையிலுள்ள காஷ்மீரத்தில் பட்டு நெசவுத் தொழில் வெகு மும்முரமாய் நடைபெறுகிறது. ஸ்ரீநகரிலுள்ள பட்டுத் தொழிற் சாலையில் சம்பந்தப்பட்டவர்கள் 70,000 பேருக்கு அதிகமுண்டு. காஷ்மீர தேசப் பட்டுத் தொழிலால் கவர்ன்மெண்டாருக்குச் சென்ற வருஷத்தில் கிடைத்த லாபம் 6 லக்ஷம் ரூபாய் என்று மதிக்கப்படுகிறது.

BUTTONS OUT OF COCOANUT SHELL.

**தேங்காய்க் கொட்டாங்கச்சியில் பொத்தான் செய்தல்.**—இது தஞ்சாவூர் ஜில்லா பின்னத்தூரில் நடைபெற்கிறது. இதில் தேங்காயின் முற்றல் தன்மைக்குத் தகுந்ததுபோல் தினுசுவாரிகள் இருக்கின்றன. இளந் தேங்காயில் செய்யப்பட்டவைகள் சிறிது வெளுப்பாயும், அதனிலும் முற்றல் சிறிது கறுப்பாயும், நல்லமுற்றல் கொட்டாங்கச்சியில் செய்தது நல்ல கறுப்பாயும் இருக்கிறது. இதைச் செய்பவர் பி. ஏ. சுப்பிரமண்ய அய்யர்.

BRONZE BELLS.

**வெண்கல மணிகள்.**—"அந்த மணி எவ்வளவு நன்றாய் சப்தம் கொடுக்கிறது", என்று அநேகர் சொல்லுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு விதமான சப்தம் உண்டு பண்ணுவது எப்படி என்று தெரியாது. ஒவ்வொரு மணியும் உருக்கி வார்த்த பிற்பாடு சப்தம் கொடுக்கும் பொருட்டு ஒரு பிரத்தியேகமான முறைப்படி அது செம்மையாக்கப்படுகிறது. ஒவ்வொரு மணியிலும் ஐந்து சப்தங்களிருக்கின்றன. இவைகளெல்லாம் சேர்ந்துதான் கடைசியில் நல்ல ஓசையுண்டாகிறது. சப்தம் உண்டாவதற்காக, மணியில் நாலா பக்கங்களிலிருந்தும் வெண்கலத்தைச் செதுக்கி எடுத்து விடுகிறார்கள். வீணையில் நல்ல ஸ்வரம் எவ்வளவு எளிதில் வாத்தியக்காரன் உண்டாக்கி விடுகிறானோ, அவ்வளவு எளிதில் வேலை தெரிந்தவன் வெண்கல மணிகளில் சப்தம் உண்டாக்கி விடுகிறான். ஐந்துவித சப்தங்களும் ஒத்து ஒலிக்கும்படி ஐந்து விதமாக உலோகத்தைச் செதுக்கி எடு[...] போது கடைசித் தடவையில் [...]மல் கொஞ்சம் அதிகமாய்ச் செதுக்கி [வி]ட்டால், மறுபடியும் முதல் நான்கு சப்தங்களையும் செம்மைப்படுத்த முதலிலிருந்து செதுக்கிக்கொண்டு வரவேண்டும்.

PAPER.

**காகிதம்.**—நம் நாட்டில் விளையும் மக்காச்சோளத் தட்டிலிருந்தும், வைக்கோலிலிருந்தும் நம் மலைகளில் விசேஷமாய் அகப்படக்கூடிய புற்களிலிருந்தும், புல்லின் வேரிலிருந்தும், காகிதம் செய்யலாம். பர்மா கவர்ன்மெண்டார் மூங்கிலிலிருந்தும் மிகவும் நேர்த்தியான பலவிதமான காகிதங்கள் செய்யலாமென்று ஒரு காகிதம் செய்யும் விற்பன்னரைக் கொண்டு வெளிப்படுத்தினார்கள். பருத்திப் பஞ்சுச் செடிகளின் அடிக்கட்டையைக் கொண்டு செய்யும் காகிதமானது மரத்திலிருந்தும் செய்யப்படும் ஒருவித கூழால் ஆகிய காகிதத்தை விடப் பலமுள்ளதாயும் அழகாயும் இருக்கிறதாம்.

TO PREVENT DECAY OF WOOD.

**மரம் உளுக்காதிருக்க.**—பெரிய கட்டிடங்களில் எல்லாரும் தேக்கு மரத்தையே உபயோகிக்க முடியாது. இதையும் கற்பூர மரத்தையும் கரையானரிக்கிறதில்லை. ஆகையால், இதர மரங்களை இதற்கிரையாகாமல் காப்பாற்ற வேண்டும். சில கட்டிடங்களின் மேல் மரங்கள் அப்படியேயிருக்கும். ஆதலால், உளு விழுவதற்குமுன் இதை அறிய வழியில்லை. கட்டிடத்துக்கு உபயோகப்படுத்துமுன் மரத்தை வெல்லத் தண்ணீரில் ஊறவைத்து உலரப் போட்டுவிட்டால், அதைக் கரையான் நாடுகிறதில்லை.

DEPARTMENT OF INDUSTRIES.

**தொழிலிலாக்கா.**—இந்த ராஜதானியில் தொழிலிலாக்கா ஸ்தாபிப்பதைப்பற்றி அது கூடாதென்று லார்டு மார்லி செய்த உத்தரவை மறுபடியும் ஆலோசனை செய்து உதகமண்டலத்தில் கூடின தொழில் கான்பரென்ஸில் செய்யப்பட்ட சிபார்சின்படி இந்த ராஜதானியில் தனியான தொழிலிலாக்கா ஸ்தாபிக்கும்படி சென்னை கவர்ன்மெண்டார் இந்தியா ஸெக்ரிடெரியைக் கேட்கவேண்டும் என்று ஸமீபத்தில் கூடிய மதராஸ் ப்ரொவின்ஷியல் கான்பரென்ஸில் தீர்மானம் செய்யப்பட்டது.

## ...NAL NOTES.

## வித்யாவ...யக் குறிப்புகள்.

THE GAEKWAR ON EDUCATION.

**கைக்குவார் படிப்பைப் பற்றி.**— கைக்குவார் மகாராஜா அவர்கள் ஒரு தடவை சொன்னதை எல்லாரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேணும். அதாவது—" இந்தியாவில் பரோடாவாகிய என் ராஜ்யம் ஒன்றில்தான் பள்ளிக்கூடங்கள் சம்பளங் கேட்காமல் படிப்புச் சொல்லிக்கொடுப்பதும், பிள்ளைகள் படித்துத்தீரவேண்டு மென்கிற நிர்பந்தமிருப்பதும். இந்தியர்களுக்குள் மூடத்தனம் கொஞ்சம் குறைந்தாலொழிய, அவர்கள் முன்னுக்கு வருவார்களென்று நம்புவது வீண். ஆதலால், நான் மேற்கண்ட நிர்ப்பந்தத்தை உண்டாக்கி, ஸௌகரியமும் செய்தேன். ஏதோ கொஞ்சம் ஆரம்பம் செய்திருக்கிறோம். எழுதப் படிக்கவும், கூட்டல் கழித்தல் தெரியவும் இப்போது கற்பித்து வருகிறோம். இனிமேல் அதிகமாகக் கற்பிக்கப் பிரயத்தனம் நடக்கலாம். தேகப்பயிற்சிக்காக, கொடி, பந்து விளையாட்டல், முதலியவைகளை வெகுதூரம் பரவச்செய்ய வேண்டுமென்பது எனக்கு மனதில் ஆழ்ந்துள்ள ஆக்கிரகம். ஏனெனில், இந்தியர்களில் யாராகிலும் சிலர் படிக்க ஆரம்பித்தால், வெகு சீக்கிரத்தில் தங்கள் உடம்பைக் கெடுத்துக்கொண்டு, இரவும் பகலும் படித்து, வியாதிஸ்தராகி விடுகிறார்கள் " என்றார்.

EDUCATION IN MYSORE.

**மைஸூரில் படிப்பு**—மைஸூர் கவர்ன்மெண்டார் தாழ்ந்த வகுப்பாருக்குள் படிப்பு விருத்தியாகும்படியாக ஏற்கனவே பல ஸாதகங்கள் செய்திருக்கிறார்கள். பஞ்சமர்கள், லம்பாணிகள், ஹோலியர்கள், போன்ற தாழ்ந்த வகுப்பினருக்குத் தனியான ஸ்கூல்கள் ஸ்தாபித்து அவர்களுக்கு மாஸம் இரண்டு ரூபாய் ஸ்காலர்ஷிப்பும் கொடுத்துவரப்படுகிறது. இராப் பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மூலாதாரப் படிப்பும் தொழிற்படிப்பும் இப்போது கலந்து நடத்தப் படுவதில்லை. ஆகையால், ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு விவஸாயிகளுக்கு அவர்கள் தொழில் ஸம்பந்தமான படிப்பையும் ஸாதாரணப் படிப்பையும் கலந்து சொல்லிவைக்க முடியுமாவென்று யோசிக்கப்பட்டு வருகிறது. இது கைகூடுமானால், படிப்பைக் கட்டாயப்படுத்துவதால் நன்மையுண்டாகக்கூடும். மூலாதார ஸ்கூல்களில் பிள்ளைகளிடத்தில் சம்பளம் வாங்குவதில்லையென்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் இந்த ஸ்கூல்களில் வாசிக்கும பிள்ளைகள் அதிகப்பட்டிருக்கிறார்கள். வாத்தியார்களுடைய சம்பளம் 10 ரூபாய்க்குக் குறையாமற் செய்யப்பட்டிருக்கிறது. ஆண் ஸ்கூல்களுக்கும் பெண் ஸ்கூல்களுக்கும் வாத்தியார்கள் தயார் செய்வதற்காக ஆறு ட்ரெய்னிங் ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

AN EDUCATIONAL CONFERENCE IN BENGAL.

**வெங்காளத்தில் ஒரு கல்விக் கான்பரென்ஸ்.**—போன ஈஸ்டர் விடுமுறையில், அதாவது, ஏப்ரல் மாஸத்தில், வெங்காள தேசத்திலுள்ள மைமென்ஸிங் என்ற ஊரில் வெங்காளக் கல்வி கான்பரென்ஸ் ஒன்று கூடிற்று. அப்போது 5,000 ஜனங்களும் சுமார் 100 ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். ப்ரொபெஸர் ஜே. ஸி. போஸ் என்ற பேர்போன சாஸ்திர விற்பன்னர் ப்ரெஸிடெண்டாயிருந்தார். இந்த ப்ரொபெஸர் தம்முடைய சாஸ்திர வன்மையாலும், ஜடபதார்த்தங்களென்று சொல்லப்படும் பதார்த்தங்களுக்கு ஜீவ உணர்ச்சியிருக்கிறதென்ற உண்மையைக் கண்டுபிடித்தும்,ஐரோப்பிய சாஸ்திர வல்லோருக்கும் ஆச்சரியத்தை யுண்டுபண்ணியிருக்கிறார். இவர் இன்னும் பல சாஸ்திர நுட்பங்களைக் கண்டுபிடித்து நம் தேசத்தாருக்குப் பெருமையையும், ஐரோப்பியருக்குத் திகைப்பையும் உண்டுபண்ணியிருக்கிறார். இவர் மைமென்ஸிங்கில் பேசினது வெங்காள பாஷையில். மிஸ்டர் போஸ் பேசினது சாஸ்திர விஷயமானதால், சாஸ்திர நுட்பங்கள் பலவற்றைத் தம் பிரஸங்கத்தில் உதஹரிக்க வேண்டியிருந்தது. அப்படியிருந்தும் கஷ்டமில்லாமல் ஸமயோசிதமான வார்த்தைகளை உபயோகப்படுத்திக் கேட்போருக்கு ஆனந்தத்தையும் எழுச்சியையும் உண்டாக்கினது அந்த வெங்காள பாஷை தற்காலம் அடைந்திருக்கும் அபிவிருத்தியைக் காட்டுகின்றது. இந்த மீட்டிங்கில் கல்வியபிவிர்த்தி விஷயமாய் அநேக தீர்மானங்கள் செய்யப்பட்டன. அன்னிய பாஷைகளிலிருந்து சிறந்த நூல்களை வெங்காள பாஷையில் மொழிபெயர்த்து எழுதுவோருக்கும் பொதுவாய் பணமின்றிக் கஷ்டப்படும் வெங்காள நூலாசிரியருக்கும் ஸாதகமாக நிதிகள் சேர்க்கவேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டன. உடனே ஒரு ஜமீன்தார் ஆயிர ரூபாய் ரொக்கமும் தம் ஜமினில் ஒரு கிராமத்தையும் கொடுத்தார்.



## SCIENTIFIC NOTES.

## சாஸ்திரீயக் குறிப்புகள்.

POWERS OF OBSERVATION OF MEN.

**ஜனங்களின் கவன சக்தி.**—ஸான் ப்ரான்ஸிஸ்கோ நகரில் ஜனங்களின் கவன சக்தியைக் சோதிக்கும்படி ஒரு காரியஞ் செய்யப்பட்டது. புதிய டாமா நாணயமொன்றை ஜனங்கள் நடக்கிற பாதையில் ஓரிடத்தில் ஆணியாலடித்து வைத்துவிட்டார்கள். அப்பாதையில் நடந்துபோன 218 பேரில் ஒருவன் தான் அதைக் கண்டுபிடித்துத் தன் காலாலுதைத்து எடுத்துகொண்டு போனான். நமது கவன சக்தி அதிகப்படவேண்டும்.

MUNGOOSE AND SNAKE BITE.

**கீரிப்பிள்ளையும் பாம்புக்கடியும்.**—பாம்புக்கடியினால் கீரிப்பிள்ளைகளுக்கு அபாயம் வராமலிருப்பது என்னத்தினாலெனில், பாம்பின் விஷத்தை ஒன்றுமில்லாமலாக்கும் ஓர் வித செடியையோ,பூண்டையோ கீரிப்பிள்ளையானது தன் இயற்கை அறிவால் தின்பதினாலாவது அல்லது அதில் விழுந்து புரளுவதினாலாவது உண்டாகிறதென்று நமது தேச ஜனங்கள் நினைக்கிறார்கள் கிப்ளிங் என்ற பிரபல நூலாசிரியர் கீரிப்பிள்ளை நாகப்பாம்புடனும் மற்ற ஸர்ப்பங்களுடனும் போர் செய்யும்போது அது காட்டும் சுறுசுறுப்பால் கடிபடாமல் தந்திரமாய்த் தப்பிக்கொள்வதால் பாம்புக் கடியை அது விலக்கிக்கொள்ளுகிறதென்று தம்முடைய புஸ்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார். ஆனால் இப்போது சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்து முன்சொன்ன இரண்டு காரணங்களையுந் தப்பெனத் தீர்த்துப் போட்டார்கள். அதாவது கீரிப்பிள்ளைக்கு பாம்பின் விஷம் ஏறுகிறதில்லையாம். கீரிப்பிள்ளையைப் போலவே தகசு என்ற ஒரு மிருகம், பூனை, முதலான சிறு மிருகங்களும் இன்னும் அநேக பெரிய மாமிச பக்ஷணவிலங்குகளும் பாம்பு விஷம் ஏறாத ஸத்துடையனவைகளாயிருக்கின்றனவாம். மனிதருக்குள் சிலருக்குத் தேள் கொட்டினால் விஷம் ஏறாமலிருக்கவில்லையா?

AN ELECTRIC PENCIL.

**மின்சாரப் பென்ஸில்.** — எழுதும்போது வெளிச்சங் கொடுத்துக் கொண்டிருக்கத் தக்கதான பென்ஸிலொன்றைத் தற்போது ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். அது இருட்டிலும் எழுத உதவுமாம். மின்சாரஸத்தைப்பென்ஸிலில் அமைத்திருக்கிறார்களாம்.

A NEW INSTRUMENT.

**ஒரு நூதன ஸூத்ரம்.**—வெகு தூரத்தில் நடக்கிற ஸங்கதிகளை இருந்த இடத்திலிருந்தே தெரிந்துகொள்வதற்காக வித்யுத் ஸம்பந்தமான ஸூத்ரமொன்றை ருஷியாவிற்குத் தலைநகரான ஸெண்ட் பீடர்ஸ்பர்க்கிலுள்ள பிரோஸிங் என்னும் புலவர் கண்டுபிடித்திருக்கிறார்.

THE SUN.

**சூரியன்.**—சூரியன் பார்வைக்குப் பிரமாணத்தில் சிறியதாகத் தோன்றினாலும், அது பூமியைவிடப் பன்னிரண்டரை லக்ஷம் மடங்கு பெரிது. சூரியனுடைய சுற்றளவு 28 லக்ஷம் மைல், குறுக்களவு 9,04,000 மைல். பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் 9 கோடியே 20 லக்ஷம் மைல். அவ்வளவு தூரத்தில் இருப்பதனால்தான் நமது கண்ணுக்கு அது சிறிதாகத் தோன்றுகிறது.

RADIUM.

**ரேடியம்.**—இந்த உலோகத்தின் விலை முன்னைக் காட்டிலும் குறைந்திருக்கிறது. இப்போது இதன் விலை ஒரு அவுன்சு கொண்டது 65 லக்ஷம் ரூபாய். மூன்று அவுன்ஸ் நிறையுள்ள ரேடியந்தான் இதுவரையிலும் உலகத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.

ரேடியத்தைக் கடன் கொடுக்கும் பொருட்டு பாரிஸ் நகரத்திலும் லண்டன் நகரத்திலும் பாங்குகள் ஸ்தாபித்திருக்கிறார்கள். ஒன்றரை க்ரேயின் அல்லது ஒரு அவுன்ஸில் 320-ல் ஒரு பாகம் கொண்ட ரேடியத்தைக் கடன்வாங்கி உபயோகிக்க நாளொன்றுக்கு ரூ. 618 மேற்படி பாங்குகள் சார்ஜ் செய்கின்றன. ஒரு வங்காள கனவான் அதில் ஒரு க்ராம் (15·43 க்ரேயின் எடைக்குச் சமம்) நிறையுள்ளதை 15,000 பவுன் அல்லது 45,000 ரூபாய்க்கு வாங்கி லண்டனிலுள்ள புண் பரிசோதனைச் சாலைக்கு இனாமாயளித்திருக்கிறார்.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

INDIGESTION AND ITS REMEDY.

**அஜீரணமும் அதைப் போக்கும் முறையும்.**—1. ஒரு நாளைக்கு இரண்டுமுறைக்கு மேற்பட ஆகாரங் கொள்வது கூடாது. பெரும் பசியா யிருக்கும்போது வேண்டுமானால், மூன்று தடவை புசிக்கலாம். மூன்று முறைக்கும் மேற்பட எவ்வித உணவையுங் கொள்வது முற்றுங் கூடாது.

2. ஒருமுறை உணவுகொண்ட காலம் தொடங்கி மற்றொரு முறை உணவு கொள்ளுங் காலம்வரையில் இடையிலே எவ்வகையான பதார்த்தத்தையும் எவ்வளவு சிறிதா யிருந்தபோதிலும் புசிப்பது கூடாது. இவ்வொழுக்கத்தை நெடுங்காலம் கவனியாமல் விட்டதே அஜீரணத்திற்குக் காரணமாகும்.

3. சுலபத்தில் ஜீரணமாகத் தகாத வஸ்துக்களைப் புசிப்பது கூடாது.

4. ஒவ்வொரு முறையும் சாப்பிடும்போது எவ்வளவு மெதுவாகவும் கால தாமதத்தோடும் சாப்பிடக் கூடுமோ அவ்வளவு மெதுவாகவும் அவகாசமாகவும் சாப்பிடவேண்டும். அதிக வேகமாய் நெடுங்காலம் சாப்பிட்டுக்கொண்டு வந்ததே இப்போது அஜீரணத்திற்குப் பெரும்பாலும் காரணமா யிருக்கக் கூடும். குறைந்தது அரைமணி நேரத்திற் குள்ளாகச் சாப்பிட்டெழுந்திருப்பது உத்தம மல்ல.

5. போஜன பதார்த்தங்கள் ஒவ்வொன்றும் கூடியவரையில் நுண்ணிய பொருள்களாகச் செய்யப்பட்டும், நன்றாய் வெந்து இளகியதாகவு மிருக்க வேண்டும். அவற்றையும் ஏனைய பதார்த்தங்களையும் உட்கொள்ளும்போது வாயில் ஊறும் எச்சில் நன்றாய்க் கலக்கும்படி மென்று மெதுவாய் விழுங்கவேண்டும்.

6. சாப்பிட்டவுடனே சோம்பலாவது தூக்கமாவது வேலை செய்ய ஒரு வகையான அஸம்மதமாவது உண்டாகும்படியாக அவ்வளவு வயிறார உண்பது கூடாது.

7. சாப்பிட்டெழுந்தது முதல் சுமார் ஒரு மணி நேரம் வரையில் தேகத்திற்குக் கஷ்டந் தரத்தக்கதான எவ்வித வேலையையும் செய்யக்கூடாது. மனதுக்குப் பிரயாஸையைத் தரத்தக்க சிந்தித்தல் முதலிய வேலையிலும் பிரவேசிக்கக்கூடாது.

8. எந்தக் காரணத்தினால் அஜீரணம் உண்டானதோ, அந்தக் காரணத்தைக் கண்டறிந்து நிறுத்த வேண்டும். இதுவே முதல் ஔஷதம்.

அஜீரணமுள்ளவர்கள் மேற்குறித்த விஷயங்களைச் சிறிது நாட்களாவது கைக்கொண்டு வருவார்களாயின், ஜீரண சக்தி அதிகரிக்குமென்பதற்கு எள்ளளவும் சந்தேக மில்லை.

SALT.

**உப்பு.**—நாம் உணவு உட்கொள்ளும் பொழுதெல்லாம், ஏராளமாக உப்பும் மோருஞ் சாதத்துடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். உப்புக் குறைந்தால் தான், குடலில் நாக்குப் பூச்சி உண்டாகின்றது. அஜீரண முண்டாவதற்கும் இதுவே காரணமாகும்.

MALARIAL FEVER.

**முறை ஜுரம்**—முறை ஜுரம், குளிர் ஜுரம், மலைக் காய்ச்சல் என்ற நானாவிதப் பெயர்களால் வழங்கும் காய்ச்சல் எவ்விதமாய் உண்டாகிறதென்று உங்களுக்குத் தெரியவருமா? கொசுக்கடியல்லவோ இவ்வியாதிக்குக் காரணம். மிகவும் அற்பமான இந்த ஜெந்து மனிதர்களுக்குப் பொறுக்க முடியாத தொந்தரவை விளைவிக்கிறது. நாம் கொசுக்களுக்கு இரையாகாம லிருக்கவேண்டுமென்றால், சக்தி யிருந்தால கொசு வலைக்குள் நித்திரை செய்ய வேண்டும், அல்லது வேறு சுகமான இடத்திற்குப் போகவேண்டும். வேறுவழி யுண்டோ?

OATHS OF TURKISH DOCTORS.

**துருக்கியில் டாக்டர்கள் பிரதிக்கினை.**—துருக்கியில் வைத்தியப் பரீக்ஷையில் தேறின வாலிபர்கள் டாக்டர்கள் சங்கத்துக்கு முன்னிலையில் பிற்கூறிய பிரதிக்கினை செய்யவேண்டுமாம் :— "என்னை ஏகஸமயத்தில் ஒரு பணக்கார நோயாளியும் ஏழை நோயாளியும் கூப்பிட்டனுப்பினால், வருமானம் இல்லாவிட்டாலும் ஏழை நோயாளியிடமே சென்று அவனுக்கு மருந்து கொடுப்பேன். தவிர, தேசத்தில் பெருவாரி நடமாடும்போது ராத்திரியானாலும் பகலானாலும் எந்நேரத்திலும் நோயாளிகளைப் போய்ப் பார்ப்பேன்." இந்தப் பிரதிக்கினை செய்த பிறகு தான் அவர்களுக்கு அதிகாரப் பத்திரம் கொடுக்கப்படும்.



## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

UNREGISTERED PARTITION DEED.

**ரிஜிஸ்டர் செய்யப்படாத பாகபத்திரங்கள்.**—சில பேருக்குள் குடும்ப ஸொத்தை என்ன விதமாகப் பாகம் பிரித்துக்கொள்ளுகிறதென்று ஒரு பாகப் பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த பாகப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. அந்தப் பத்திரத்தில் ஒரு ஷரத்து எழுதப்பட்டிருந்தது. அதாவதென்னவென்றால், அவரவர்கள் பட்ட கடன்களுக்கு அவரவர்கள் பாகத்தின் ஸொத்துகள் மட்டும் கட்டுப்படும் என்று எழுதப்பட்டிருந்தது. அவர்களுக்குள் ஒருவன் பட்ட கடனுக்கு மற்றொரு பாகஸ்தனுடைய ஸொத்தை ஜப்தி செய்தால், ஷை ரிஜிஸ்டர் செய்யப்படாத பாக ஆதாரவை சாக்ஷியாகப் போட்டு தாக்கல் செய்து ஷை ஸொத்து கட்டுப்படாது என்று கக்ஷி சொல்ல முடியாது. ஏனெனில் ஸ்தாவர ஸம்பந்தப்பட்ட ஆதாரவுகள் கட்டாயம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பது சட்டம்.

JOINT HINDU FAMILY.

**சேர்ந்த ஹிந்து குடும்பம்**—சேர்ந்த ஹிந்துக் குடும்பத் தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்காக ஷை குடும்ப ஸொத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்க, ஷை ஸொத்துக்கள் பேரில் வியாஜ்யம் கொண்டுவரப்பட்டு டிக்ரி பிறந்து ஸொத்தும் ஏலம் போடப்பட்டது. தகப்பன் சேர்ந்த ஹிந்து குடும்ப ஸொத்தைத் துர்விநியோகம் செய்திருப்பதால், ஷை டிக்ரியும் ஏல விற்பனையும் ஷை ஸொத்திலிருக்கும் தன்னுடைய பாகத்தைக் கட்டுப்படுத்த மாட்டாதென்றும், ஆதலால் ஸொத்தில் தனக்கு பாத்தியதை யிருக்கிறதென்று கூறும்படியாக புத்திரன் டெக்ளரேட்டரி வியாஜ்யம் கொண்டுவந்தான். வாதி ஷை ஸொத்திலிருக்கும் தன்னுடைய பாகத்தைப் பிரித்துக் கொடுக்கும்படியாக வியாஜ்யம் கொண்டுவர பாத்தியதை யுடையவனாகையால், அப்படிக் கேட்காமல் தனக்கு ஷை ஸொத்தில் பாத்தியதை யிருக்கிறதென்று மட்டிலும் கோர்ட்டார் கூறும்படியாக டெக்ளரேட்டரி வியாஜ்யம் கொண்டுவந்தது ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் 42-வது பிரிவிற்கு விரோதமென்று சொல்லி வியாஜ்யத்தைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

GIFT TO A WIFE.

**பெண்சாதிக்கு தானம்.**—புருஷன் பெண்சாதிக்குச் செய்யும் தான ஸம்பந்தமாக அனுஷ்டானத்திலிருக்கும் விதி என்னவென்றால், அவள் புருஷனிடமிருந்து தானமாகப் பெறும் ஸொத்தை அவள் ஜீவதசையிலுள்ள பரியந்தம் அனுபவிக்க மட்டிலும் பாத்திய மிருப்பதாக எண்ணப்பட்டு வருகிறது. ஆகையால், அவள் அந்த ஸொத்தை இஷ்டப்பட்டால், பராதீனம், தானம், விற்கிரையம் முதலியவைகளும் செய்யலாமென்று அதிகாரம் கொடுத்து தானம் செய்யும் புருஷர்கள் இந்த விபரத்தைத் தானப் பத்திரத்தில் அவசியமாக எழுதவேண்டும். இ. லா. ரி. 27 சென். 498.

RIGHT TO MAINTENANCE.

**ஜீவனாம்ச பாத்தியதை.**—புருஷன் தன்னுடைய வீட்டில் வைப்பாட்டியையுங் கூட வைத்து அவளுடன் வஸித்து வந்தானேயாகில், பெண்சாதி தனக்குப் பிரத்தியேகமாக வீடு கேட்கவும் ஜீவனாம்சம் கேட்கவும் அதுபோதுமானதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

SON'S MARRIAGE.

**புத்திரனின் விவாகம்.**—ஒரு ஹிந்து தகப்பனார் தன்னுடைய புத்திரனுக்கு விவாகம் செய்ய மத ஸம்பந்தமாகவாவது அல்லது ஸன்மார்க்க முறைப்படியாவது அல்லது சட்டப்படியாவது கட்டுப்பட்டவனல்ல. ஆகையால் தன்னுடைய புத்திரர்களில் ஒருவனுக்கு விவாகம் செய்ய பிதிரார்ஜித நிலத்தை அவன் விற்பனை செய்வானேயாகில், அந்த விற்பனைக்கு ஸம்மதிக்காத மற்ற புத்திரர்களுக்கு ஷை ஸொத்திலிருக்கும் பாகம் ஷை விற்பனைக்குக் கட்டுப்படாது என்று தீர்மானிக்கப்பட்டது.—லாயர்.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

LATE EDWARD.

**காலஞ்சென்ற எட்வர்ட்.**—சில வருஷங்களுக்கு முன் விக்டோரியா சக்ரவர்த்தினியார் காலத்தில், காலஞ்சென்ற எட்வர்ட் அரசர், இளவரசராய் (பிரின்ஸ் ஆப் வேல்ஸ்) ஸான்ட்ரிங் ஹாம் என்ற இடத்தில் வஸித்து வந்தார். அப்போது ராஜ குடும்பத்தினரும் மற்றும் சிலரும் அவ்விடம் இருந்து வந்தார்கள். அவர் தினந்தோறும் வேட்டையாடுவதற்கேற்ற உடை தரித்துக்கொண்டும், தனது சட்டையின் பைகளில் கையை நுழைத்துக்கொண்டும், ஏழை அனாதிகளைத் தேடிக்கொண்டும் சுற்றுப் பக்கங்களில் திரிவது வழக்கம். இப்படித் திரிகையில், ஒரு நாள் அவர் கண்ணுக்கு ஒரு சிறிய குடிசை புலப்பட்டது. உள்ளே நுழைந்தார். அங்கு ஒரு வயது முதிர்ந்த நோயாளிக் கிழவி படுத்திருந்தாள். அரசர் அவளுடைய படுக்கையண்டை போனவுடனே குனிந்து அவளை முத்தமிட்டார். உடனே கிழவி கண்ணைத் திறந்து பார்த்து, "என் அருமைக் குழந்தையாகிய பர்டியா", என்று சொன்னாள். அரசர் "ஆம். எப்போதும் உனக்கு பர்ட்டிதான்" என்றார். பிறகு விசாரித்ததில் இந்தக் கிழவி, விக்டோரியா அரசியின் குழந்தைகளையெல்லாம் தாதித் தொழில் செய்து காப்பாற்றியவளெனத் தெரியவந்தது. அதன் பேரில், தன்னுடைய குழந்தைப் பருவ சிநேகிதியைக் காண அவருக்கு அளவற்ற மகிழ்ச்சி யுண்டாகியது. அப்பால் அவர் அவளுடைய யோகக்ஷேமங்களையெல்லாம் விசாரித்தும் தன் குடும்ப வைத்தியரை அவளுக்குச் சிகிச்சை செய்ய அனுப்பியும், தாதிகளை ஏற்படுத்தியும், அக்கிழவிக்கு அனுகூலமாயிருக்கக்கூடிய ஒவ்வொரு ஸௌகரியத்தையும் செய்தார். அன்றியும், தமக்கு ஒழிந்த வேளைகளில் ஒவ்வொரு நாளும் அவளைப் போய்ப் பார்த்துவருவார். இது மாத்திரமோ? இச்சங்கதியைப் பற்றி அவர் தமது ஸகோதரர் ஸகோதரிகளெல்லாருக்கும் நிருபம் எழுதினார். அவர்களும் அக்கிழவியைப் போய்ப் பார்த்தார்கள். தற்கால ஜர்மானிய சக்ரவர்த்தி வில்லியமென்பவருடைய தாயாகிய தம் ஸகோதரி விக்டோரியா சக்ரவர்த்தினியாரும், அக்காலத்தில் இக்கிழவியைப் பார்த்தார். பிறகும் அக்கிழவி இறந்ததும் உத்தரக்கிரியைச் செலவுகளையும் நடத்தி டாக்டர் பில்லுக் கெல்லாம் அவர் பணம் கொடுத்தார். அப்பால் அவளைப் புதைத்த இடத்தின்மேல் அரசியின் குழந்தைகள் கூடி, ஒரு பெரிய கல்லறை எழுப்பினார்கள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டது:—"ஒரு பழைய சிநேகிதருடைய ஞாபகத்திற்காக"; விக்கி, பர்ட்டி, ஆல்பி, லௌஸங் ஆலீஸ், ஆர்ட்டி, ஹெலினா, பிரியாட்ஸ், அண்டு லியோபால்டு (இவ்வொன்பது பெயர்களும் ராஜ வம்சக் குழந்தைகளின் அருமைப் பெயராம்.) இக்கதையை நியூயார்க் 'எக்ஸாமினர்' பத்திரிகையில் ரெவரெண்ட் ஹார்வி வுட் எழுதியிருக்கிறார்.

MR. BEHRAM KHAN.

**மிஸ்டர் பைராம்கான்.**—ஜாஜார் என்னும் ஜில்லாவிலிருந்த பைராம் கான் என்னும் பெயருடைய ஒரு மகம்மதிய ஜமீன்தார் ஸமீபத்தில் இறந்து போனார். இறக்கும்போது அவருக்கு வயது 125. இவர் 1831-ம் வருஷத்தில் மகாராஜா ரஞ்சீத்சிங் ஆப்கானியரோடு யுத்தஞ்செய்தபோது, ஆப்கானியர் சார்பாக இருந்து குண்டு காயம் பட்டுத் தப்பிப் பிழைத்தவராம்.

MR. VENKATASAMI NAIDU.

**ஸ்ரீ வெங்கடசாமி நாயுடு.**—ஸ்ரீ வெங்கடஸாமி நாயுடு அவர்கள் 25-3-11ல் ரங்கூனில் ஏறக்குறைய 2000 ஜனங்களுக்கு எதிரில் 4000 ராத்தல் பாரமுள்ள பெரிய கல்லை வைத்து தமது மார்பிலே நால்வர் சம்மட்டியாலடித்து உடைக்கும்படி இருந்தார். பின்பு அதை விழுத்தி எழுந்தபின் இரு தோளிலும் பூட்டப்பட்டிருந்த இரும்புச் சங்கிலிகளை அறுத்தார். ஒன்றேகால் அங்குல கனமுள்ள இரும்பை வளைத்தார். முழுதும் ஜனங்கள் ஏறிய இரு நாட்டு வண்டிகள் மார்பின் மேலேறிப்போக நிமிர்ந்து படுத்திருந்தார். மோட்டார்வண்டியை இழுத்து நிறுத்தினார். இவர் ஸ்ரீராமமூர்த்தியின்பின் தோன்றி விளங்குபவர்.

---



## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

HOW IS COAL?

**நிலக்கரி எப்படி இருக்கிறது.**—ஒரு பிரபு நிலக்கரிச் சுரங்கத்திற்குச் சென்று என்ன விலை என்று கேட்பதற்கு ஒருவனை நோக்கி, "நிலக்கரி எப்படி இருக்கிறது" என்று கேட்க, அவன் "நிலக்கரி எப்பொழுதும் கறுப்பாய்த் தானிருக்கிறது" என்றான்.

A BLUNT SAW.

**ஒரு மொட்டை ரம்பம்.**—ஒரு ரம்பக்காரனைப் பார்த்து, அந்த ரம்பத்திற்கு பலமிடக் கூடாதா? என்று கிருஷ்ணய்யர் கேட்க, ரம்பக்காரன், (மொட்டை ரம்பத்தைக் காட்டி) "எப்போதும் எனக்கு இந்த ரம்பத்துடன் வேலையிருந்துகொண்டே இருக்கிறது. பதம் வைக்கிறதற்கு ஒழிவேது?" என்று பதில் சொன்னான்.

WHO SPEAKS FIRST?

**யார் முதலில் பேசுகிறார்?**—ரொம்ப நேரம் சண்டைபோட்டு ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளாமல் முகம் திருப்பிக்கொண்டு ஓரிடத்தில் உட்கார்ந்திருந்த தம்பதிகளின் அருகே போய், ஒரு துஷ்டப் பையன் தான் தின்றுகொண்டிருந்த பக்கவடாத்தில் இரண்டு கையில் வைத்துக்கொண்டு "உங்களில் யார் முன்னே பேசுகிறீரோ அவருக்கு இந்தப் பக்கவடாம் கொடுக்கிறேன்" என்று காட்டினான். அப்பொழுது புருஷன் கோபங்கொண்டு சீ! போ! என்று சொல்லி எழுந்து அவனை அடிக்கப் போக, நீயே கெலித்தாய், என்று சொல்லி அந்தப் பக்கவடாத்தை அவன்மேல் எறிந்துவிட்டுப் பையன் ஓடிப்போனான்.

CAUGHT A TARTAR.

**விட்டால் போதும்.**—ஒரு நாள் ஒரு நதிக் கரையில் இரண்டு காட்டாள்கள் நின்றுகொண்டிருந்தார்கள். நதியில் வெள்ளம் பூர்ணமாய்ப் போய்க் கொண்டிருந்தது. அதில் அகப்பட்ட கரடி யொன்று மேலுங் கீழுமாக உருண்டுபோய்க்கொண்டிருந்தது. அதை யேதோ கம்பளி மூட்டை யென்றும், அதற்குள் ஏதாகிலும் நல்ல ஸாமான் இருக்கவேண்டுமென்றும் இவர்கள் எண்ணியபடியால், ஒருவன் உள்ளே குதித்து நீந்திப்போய் அதைப் பிடித்தான். தனக்குப் பற்று ஏதாகிலும் கிடையாதா வென்று கரடி தபஸ் பண்ணிக் கொண்டிருந்ததால், ஆள் அகப்பட்டதும் அவனைக் கெட்டியாக இறுக்கிப் பிடித்துக் கட்டிக்கொண்டது. உடனே அவன் அதைத் தப்பித்துக்கொள்ளப் பார்த்து முடியாமல், அதுவும் தானும், மேலுங் கீழுமாய்ப் போராடுவதைக் கரையிலிருப்பவன் கண்டு, 'தம்பீ கம்பளி மூட்டை கிடக்கட்டும், நீ கரைவந்து சேர்,' என, அவன், 'அண்ணா, கம்பளி மூட்டையை நான் விட்டுவிட்டேன். ஆனால், கம்பளி மூட்டை என்னை விடமாட்டேன் என்கிறது. என்ன செய்வேன்!' என்று சொல்லி இறந்தானாம்.

MALAPROPISM.

**ஒன்றுக்கொன்று உளறுதல்.**— பிண்ணாக்குத் தின்ன விரும்பிய ஒரு வாணியன் தன் கருத்தை வெளியிட்டால், "பெண்டாட்டி யாத்தாள் பெரியாத்தாள்" ஆகிய தன் மனைவி தன் தொழிலுக்கு ஆரம்பித்து விடுவாளே யென்று பயந்து பகல் முழுதும் அதே தியானமாகவும் இரவில் பிண்ணாக்குத் தின்பதாகக் கனவும் கண்டுகொண்டே கஷ்டப்பட்டு பல நாள் கழித்துவந்தான். ஒருநாள் பகலில் அப்புண்யவதியாகிய மனைவி பிண்ணாக்கை வெளியில் உலர்த்தித் தன் தங்கக் கம்பியாகிய புருஷனைக் காவல்வைத்திருந்தாள். ஐயோ பாவம்! விரும்பிய பொருள் எதிரிலிருக்க அதை யடையக் கூடாமலிருந்தால் அதைவிட வேறுண்டோ? தன் தலைவிதியை நொந்து கொண்டு அவ்வாணியன் வாயில் பாக்கைப் போட்டுக்கொண்டிருந்தான். வெற்றிலை யிருந்தது. ஆனால் அதற்கு வேண்டிய சுண்ணாம்பு இல்லை. பிண்ணாக்கே ஸதா அவன் ஞாபகமா யிருக்கும் பொழுது தன் மனைவியைப் பார்த்துச் சிறிது சுண்ணாம்பு கொடுக்க உத்தரவளிக்கவேண்டி, அடி, அடி, உன்னைத்தானே! கொஞ்சம் எனக்கு வெற்றிலைக்குச் சுண்ணாக்குத் தாடி, சுண்ணாக்கு, என்றான். சுண்ணாக்கு என்ற புதுவார்த்தையைக் கேட்ட அவன் மனைவி என்ன உளறுகிறீர்கள், என்றாள். உடனே அவன், அதுதாண்டி, 'புண்ணாம்பு', 'புண்ணாம்பு' என்றானாம்.

## CURIOSITIES.
## விநோதங்கள்

BOAR.

**முட்பன்றி.**—கொழும்புக் கண்காட்சி சாலையில் வைக்கும்படியாக ஒரு வெண்ணிற முட்பன்றி வாங்கப்பட்டிருக்கிறதாம். இந்த வகை கிடைப்பது மிகவும் அபூர்வம்.

BIG LEAVES.

**பெரிய இலைகள்.**—அமெஸான் நதி தீரத்தில் வளரும் ஒருவித மரத்தின் இஜை என்னும் இலையே உலகத்திலுள்ள இலைகளிற் பெரிதாம். இதன் நீளம் 50 அடி, அகலம் 12 அடி.

SIGN OF MOURNING.

**துக்கக் குறி.**—சிட்கா என்னுமிடத்தில் ஒரு இந்து ஸ்திரீ தன் கணவனைச் சாகக் கொடுத்துவிட்டால், தன் முகத்தின் மேற்பாகத்தில் கனதியாய்க் கறுப்பு வர்ணம் பூசிக் கொள்வாளாம்.

THE LONGEST FENCE IN THE WORLD.

**உலகில் நீளமான வேலி.**—உலகிலுள்ள வேலிகளிலெல்லாம் நீளமானது அமெரிக்கா ஐக்கியமாகாணத்துக்கும் மெக்ஸிகோவுக்கு மிடையில் பஸிபிக் ஸமுத்திரக் கரையில் போட்டிருப்பதேயாம். அதன் நீளம் 1,100 மைல். முட்கம்பியால் போட்டிருக்கிறது.

THE OLDEST TREES.

**மிகப் பழமையானமரங்கள்.**—உலகத்திலுள்ள மரங்களில் அதிகம் முதுமையானவை இரண்டு. அவைகளில் ஒன்று கன்பூஷியஸ் என்பவராற் சீனுவிலே நடப்பட்டது. இதை அவர் கி. மு. 500-ம் ஆண்டிலே தமது ஸமய ஸ்தாபக ஞாபகமாய் நட்டார்.

இரண்டாவதானது அனுராசபுரத்திலுள்ள வெள்ளரசு. இது கி. மு. 288-ம் ஆண்டில் நடப்பட்டது.

THE WEALTH OF A BEGGAR.

**ஓர் பிச்சைக்காரனின் ஐசுவரியம்.**—ருமேனியா நாட்டைச் சேர்ந்த காசகா என்னும் பட்டினத்து வீதியிலே சிலநாட்களுக்குமுன் செத்துக்கிடந்த ஒரு பிச்சைக்காரனின் பழைய மேற்சட்டைப் பையிலே பாங்கி நோட்டுகளும் பிராமஸரி நோட்டுகளுமாய் 1,80,000 ரூபா யிருந்தது. இவன் தன் ஜீவிய காலத்தில் அதிக பாகம் பிச்சை யெடுத்தே திரிந்தானும்.

AN AUTOMATIC WHIP.

**தானுயடிக்கும் சவுக்கு.**—ஐரோப்பாவில் பல தேசங்களில் இராணுவத்தில் குற்றஞ் செய்தவர்களை ஆட்களைக்கொண்டு கசையடி அடிக்காமல் யந்திர வியக்கத்தால் தானு யடிக்கும் சவுக்கால் அடித்து வருகிறார்கள். குற்றவாளிகளை ஒரு நிலையில் நிறுத்திக் கட்டிவிட்டு ஒரு யந்திரத்தை இயக்கிவிட்டவுடன் எத்தனை அடி வேண்டுமோ, அதை அச்சவுக்கு அடித்துவிடுகிறதாம். அடி ஒரேயிடத்தில் விழுகிறது மில்லையாம்.

COW-SUCKLING SNAKES.

**பாம்புகளுக்குப் பால் கொடுத்த பசு.**—இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த கிலாஸ்றஸ் என்னும் மாகாணத்திலுள்ள ஆடிங்டன் என்னும் பட்டணத்தில் வாஸஞ் செய்யும் ஓர் துரைசானியிடம் சுகமும் திடகாத்திரமும் உள்ள இரண்டு பசுமாடுகள் இருக்கின்றனவாம். சிறிது தினங்களாக அம்மாடுகள் கொடுத்துவந்த பால் குறைந்துகொண்டே வந்ததாம். இவ்விதம் பால் குறைவதற்குக் காரணம் அம்மாதுக்குத் தெரியாமலிருந்ததாம். ஒருநாள் அம்மாதின் பால்காரன் அம்மாடுகள் மேயும் புல் மைதானத்துக்குச் சென்றபோது ஒருமாடு சுகமாய் புல்லில் படுத்துக் கிடந்ததாம். படுத்துக் கிடந்த மாட்டுக்குச் சமீபமாய் அவன் போனபோது இரண்டு பெரிய பாம்புகள் அம்மாட்டின் மடியில் பால் குடித்துக்கொண்டு கிடந்தனவாம்.

A SWAMIAR AND A SERPENT.

**ஒரு ஸ்வாமியாரும் பாம்பும்.**—பர்மாவில் பீமா என்னும் ஊரில் ஒரு காட்டு மத்தியில் ஸ்வாமியார் மடம் ஒன்றிருக்கிறது. இதில் தனியாக ஒரு ஸ்வாமியார் இருக்கிறார். இவருக்குக் காவலாக ஒரு பெரிய கிருஷ்ண ஸர்ப்பம் இருக்கிறது. இவர் கண்ணை மூடிக்கொண்டு யோகஞ் செய்யும்போதும், நித்திரை செய்யும்போதும் அது அவருடைய தலையண்டை வந்து படுத்துக் காவல் செய்கிறதாம். ஸ்வாமியாருக்கு ஸம்ஸ்கிருத பாஷை நன்றாய்த் தெரியும். காட்டில் பழுக்கும் பழங்களையே ஸ்வாமியாரும் பாம்பும் ஒன்றா யிருந்து சாப்பிட்டு வருகிறார்கள். இப்படியாக அப்பர் பர்மாவில் ஒரு ஸமாசாரப் பத்திரிகை தெரிவிக்கிறது.



# NEWS OF THE MONTH.
## மாஸ வர்த்தமானம்.

## INDIAN NEWS.
## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

A SPECIAL THIRD CLASS PASSENGER TRAIN.

**தென்னிந்தியா ரயில்வே ஸ்பெஷல் பிரயாணிகள் வண்டி.**—மேமீ 1௳ முதல் மதராஸ் பீச் ஸ்டேஷனிலிருந்து பிரதி தினமும் தஞ்சாவூருக்கு 3-வது க்ளாஸ் பிரயாணிகளுக்கு மாத்திரம் ஒரு ஸ்பெஷல் வண்டி ஓடுகிறது. இந்த வண்டி மாலை 7-55 மணிக்கு பீச்சை விட்டுப் புறப்பட்டு மறுநாட் காலை 8-2 மணிக்குத் தஞ்சாவூர் போய்ச் சேருகிறது. தஞ்சாவூரில் இரவு 10-5 மணிக்குப் புறப்பட்டு சென்னை பீச்சுக்கு மறுநாட் காலை 10-7 மணிக்கு வந்து சேருகிறது. இந்த வண்டியினால் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு ஸௌகரியம் அதிகமுண்டு என்பதற்கு ஆக்ஷேபணையில்லை.

NEW RUPEES.

**புதிய ரூபாய்கள்.**—புதிதாய் ஜார்ஜ் சக்ரவர்த்தி தலையுடன் வெளிப்படும் ரூபாய்க்கு டிஸைன்கள் (மாதிரிகள்) செய்து முடிவுபெற்றுவிட்டன. இவைகளை சக்ரவர்த்தி அங்கீகரித்துவிடுவார். ரூபாயின் ஒரு பக்கத்தில் ஜார்ஜ் சக்ரவர்த்தி முடியுடனிருக்கும் உருவமும், அடுத்தபக்கத்தில் ரோஜா, தாமரை முதலிய மலர்மாலையும் அதன் மத்தியத்தில் "ஒரு ரூபாய், இந்தியா, வருஷம்" என்பதும் போடப்பட்டிருக்கும். இம்மாதிரி புதிய ரூபாய்கள் அச்சிடப்பட்டு டெல்லி முடிசூட்டு வைபவத்தின்போது செலாமணிக்கு வரும்.

TIRUPPUR CATTLE SHOW.

**திருப்பூர் கால்நடைக் காக்ஷி.**—கோயம்புத்தூர் ஜில்லா திருப்பூரில் நாளது மாஸம் 11, 12, 13-ந் தேதிகளில் கால்நடைக் காக்ஷிநடந்தது. கடைசி நாளன்று குதிரைப் பந்தயமும் நடந்தது. மேற்படி காக்ஷிக்கு அநேக காங்கய நாட்டு மாடுகளும் காங்கயக் குதிரைகளும் கொண்டுவரப்பட்டிருந்தன. பாளையங்கோட்டை பட்டைக்கார் அநேக நல்ல மாடுகளைக் கொண்டுவந்திருந்தார். காக்ஷியில் பால் கறக்கும் மாடுகள் மூன்று நாலு மாடுகளைத் தவிர வேறு கொண்டுவரப்படவில்லை. குதிரைகளில் மாத்திரம் நல்ல நாட்டுக்குதிரைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. மாடுகளின் விலை ஜாஸ்தியாயிருந்ததே தவிர ஸாதாரண விலையென்று சொல்ல இடமில்லை. இக்காக்ஷியில் அநேகர்கள் விவஸாயத்தைக் குறித்தும், கால்நடை அபிவிர்த்தியை குறித்தும், ஆயில் இஞ்சின்களைக் குறித்தும் பிரஸங்கங்கள் செய்தார்கள். கோயம்புத்தூர் விவஸாய காலேஜிலிருந்து இரண்டொரு உத்தியோகஸ்தர்கள் பசுந்தாள் எருப் பயிர்கள் வளர்ச்சியையும், ஒற்றைநாற்றுப் பயிர் வளர்ச்சியையும் மாஜிக்லாண்டர்ன் படங்களில் காட்டி உபந்யாஸம் செய்தார்கள்.

GOLDEN BRICKS.

**தங்கக்கல்லுகள்.**— கோல்கொண்டா என்ற கிராமம் நைஸாம் அவர்களுக்குச் சேர்ந்தது. இது ஐதராபாத்திலிருக்கிறது. ஒரு கண்டிராக்டர் செங்கல் சுட பழயகோட்டைக்குச் சமீபத்தில் ஒரு இடம் பெற்று செங்கல்சுட ஏற்பாடு செய்தார். செங்கல் நன்றாக சுடப்பட்டிருக்கிறதாவென்று அறிய ஒரு செங்கல்லை எடுத்துப்பார்த்தார். அது முழுமையும் பளபளப்பாகத் தென்பட்டதாம். இதென்ன ஆச்சரியமாக யிருக்கிறதென்றெண்ணி இரண்டு மூன்று செங்கல்களை எடுத்துப்பார்க்கவே அவைகளும் அவ்வித மிருந்தன. உடனே இவைகளைப் பரிக்ஷித்தறிய ஏற்பாடு செய்தார். அவைகளின்மேல் சுவர்ணப்பொடி அதிகமாக சேர்ந்திருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டதாம். இவைகளில் சுவர்ணப்பொடி எங்கிருந்து வந்ததென்று அநேகர் எண்ணக்கூடும். முன்காலத்தில் கோல்கொண்டாவில் பொன்சுரங்கங்களிருந்தன. இந்த யிடம் சுரங்கமுள்ள யிடமா யிருந்திருக்கக்கூடுமல்லவா? நைஸாம் அவர்களுக்குத் தெரியவே, உத்தியோகஸ்தர்கள் வந்து இவைகளைப் பரிக்ஷை செய்து செங்கல்களிலுள்ள பொன் விலை எவ்வளவோ கோடி ரூபாய் இருக்குமென்று மதிப்புப் போட்டிருக்கிறார்களாம். அது போலீசாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறதாம்.

A BRAHMIN CONFERENCE.

**ஒரு பிராமண கான்பரேன்ஸ்.**—ஸமீபத்தில் பாலக்காட்டிலுள்ள பிராமணர்கள் சேர்ந்து ஒரு கான்பெரென்ஸ் நடத்திஞர்கள். விவாக காலங்களில் வரசுல்கம் வாங்கக் கூடாதென்றும், ஜாதி உட்பிரிவுக்குள் விவாகம் நடப்பது சாஸ்திர ஸம்மதமென்றும், பூர்வமீமாம்ஸம், உத்தரமீமாம்ஸம், ஜோதிஷம், ஆயுர்வேதம், இவைகளைக் கற்பிப்பதற்காகப் பாடசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், ஜயிலுக்குப் போன பிராமணன் பிராயஸ்சித்தம் செய்துகொண்டால், ஜாதியில் சேர்க்கப்படலாமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. இந்த ஸபைக்கு 'கேரளஸேயபட்ட பிராமண வைதிக யோகக்ஷேம ஸபை' யென்று பெயர்.

THE MADURA TAMIL SANGAM.

**மதுரைத் தமிழ்ச் சங்கம்.**—போன மாஸம் 26-ம் தேதி காலமே மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஜெனரல் மீட்டிங் நடந்தது. அதில் 3 வியாஸங்கள் எழுதி வாசிக்கப்பட்டன. தவிர நிருவாக மீட்டிங் ஒன்று கூட நடந்தது. அதில் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்குப் பொருளுதவி கேட்க விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அச்சமயம் காஞடு காத்தான் மிஸ்டர் பெத்தாச்சி செட்டியார் அந்தச் சங்கத்துக்குத் தாம் ரூபா 1000 நன்கொடையும், கலாசாலைக்கு மாதம் ரூபா 50 நன்கொடையும்கொடுப்பதாய்த்தெரிவித்தார். பாண்டித்துரை தேவர் அவர்கள் செட்டியார் அவர்களுக்கு நன்றி செலுத்தி, பெத்த ஆச்சி என்பதற்குப்பெரிய தாய் என்று அர்த்தமாதலால், மிஸ்டர் பெத்தாச்சி செட்டியார் தமிழ்ச் சங்கத்தின் தாயாகிவிட்டதாய்ச் சொன்ஞர்.

THE MADRAS PROVINCIAL CONFERENCE.

**மதராஸ் ப்ரோவின்ஷியல் கான்பரென்ஸ்.**—இந்தக்கூட்டம்போன மாஸத்தில் சென்னபட்டணத்தில் ராவ்பகதூர் வி. கே ராமானுஜாசாரியார் அக்ராஸனத்தின் கீழ் நடந்தது.

மிஸ்டர் ராமானுஜாசாரியார் தமது பிரஸங்கத்தின் ஆரம்பத்தில் மகாராஜா முடிசூட்டுக்கு இந்தியாவுக்கு வருவதைப்பற்றிச் சந்தோஷத்தைத் தெரிவித்துவிட்டு, இப்போது ஜனங்கள் கவனத்தைக் கவர்ந்துகொண்டிருக்கும் பல விஷயங்களைப் பற்றி பிரஸ்தாபிக்கப் புகுந்தார். மகம்மதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் உண்டாயிருக்கும் வித்தியாஸம், தாழ்ந்த வகுப்பாரை உயர்த்துதல், ஸாதாரண ஜனங்களுக்குள் படிப்பு, கவர்ன்மெண்ட் உத்தியோகங்களில் இந்தியர்கள், லாண்ட் ரெவினியூ ரெவிஷன்கள், ஐக்கிய நாணயச் சங்கங்கள், தென்ஞப்பிரிக்காவில் இந்தியர்களின் நிலைமை, கிராமப் பஞ்சாயத்து முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள், இவைகளையும் இன்னும் சில விஷயங்களையும்பற்றி விவகரித்துப்பேசி தமது அபிப்பிராயத்தைச் சொன்ஞர்.

THE ARYA VISYA CONFERENCE.

**ஆரிய வைசியரின் கான்பரேன்ஸ.**—சென்னையில் ஸமீபத்தில் ஆரியவைசியர் என்று சொல்லிக்கொள்ளும் கோமுட்டி செட்டிகள் அவர்களுடைய 5-வது கான்பரென்ஸை நடத்திஞர்கள். சென்னையில் பேர்போன வர்த்தகராகிய மிஸ்டர் அய்யண்ண செட்டியார் வந்த டெலிகேட்டுகளை வரவேற்றுப் பேசிஞர். பிறகு மைஸூர் ஸமஸ்தானத்தில் டிப்டி கமிஷனராயிருந்த மிஸ்டர் எம். செங்கய்ய செட்டியார் பிரஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டு, தெலுங்கில் நீண்ட பிரஸங்கமொன்று செய்தார். இந்தக் கான்பெரென்ஸானது வைசிய ஜாதியின் முன்னேற்றத்தை யுத்தேசித்துக் கூடினபடியால், படிப்பையும் ஆசாரத் திருத்தங்களையும் பற்றி முக்கியமான தீர்மானங்கள் செய்யப்பட்டன. விவஸாயமும் தொழில்களும் வைசியப் பிள்ளைகள் ஸ்கூல்களில் கற்கவேண்டு மென்றும், அன்னிய தேசங்களுக்குப் போய்த் தொழில்களில் பயிற்சி பெறவேண்டுமென்றும், ஆனரபில் மிஸ்டர் கோகலேயின் மசோதாவை, இந்த கான்பெரென்ஸ் ஆதரிக்கவேண்டு மென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. ஸ்திரீகளைப் படிப்பிக்க வேண்டு மென்றும், சிறு பிராயத்தில் விவாகம் செய்வதை யொழித்து, பிள்ளைகளுக்கு 16 வயசும் பெண்களுக்கு 10 வயசும் வந்த பிறகு விவாகம் செய்யவேண்டுமென்றும், கன்னியா சுல்கம், வர்சுல்கம், முதலியவைகள் விவாக காலத்தில் வாங்கக்கூடாதென்றும், அதஞல் பிள்ளைகளின் படிப்பு தடைப்பட்டுப் போகிறதென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.



## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

FROM LONDON TO INDIA.

**லண்டனிலிருந்து இந்தியாவிற்கு.**—இப்போது லண்டனிலிருந்து இந்தியாவிற்குவர ஒரு இருப்புப்பாதை போட உத்தேசமாயிருக்கிறதாம். இது காஸ்பியன் கடற்கரையிலுள்ள பேக்கலிலிருந்து ஆரம்பித்துப் பலூசிஸ்தானத்திலுள்ள துஸ்கிப் பட்டணத்தில் வந்து முடிவு பெறுமாம்; அங்கிருந்து இந்திய இருப்புப்பாதை இணைக்கப்படுமாம். இவ்விருப்புப்பாதையில் ஏறிவருபவர் 8½ நாளில் லண்டனிலிருந்து இந்தியாவிற்கு வரலாமாம். மொத்தத்தில் பிரதி மனிதருக்கும் பிரயாணச்செலவு 40 பவுஞகுமாம்.

ENGLISH BISCUITS.

**இங்கிலீஷ் பிஸ்கோத்துகள்.**—வெள்ளைக்காரர்களால் செய்தனுப்பப்பட்டு வரும் "பிஸ்கட்" என்று சொல்லும் பக்ஷணங்கள் செய்வதில் பன்றிக் கொழுப்பைக் கலக்கிருர்களாம். இதைக்கலந்தால்தான் பிஸ்கட்கள் எவ்வளவு நாளாஞலும் ஈரம்பிடிக்காமல் அப்போது தான் செய்த 'பிஸ்கட்'கள் மாதிரி முடமுடவென்றிருக்குமாம். இப்படி பர்மாவில் பிரசுமாகும்சுதேசபரிபாலினி என்னும் பத்திரிகை எழுதுகிறது. இது வாஸ்தவமோ?

A CURIOUS GUN.

**ஒரு நவீன துப்பாக்கி.**—பெரிய பட்டினங்களில் ஐந்தாறுக்கு மேற்பட்ட மாடியுள்ள வீடுகளில் தீப்பற்றிக்கொள்ளும் பொழுது அவைகளில் வசிக்கும் ஜனங்கள் இறங்க வகை யில்லாமல் நெருப்புக்கிறை யாகிருர்கள். இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்குத் தகுந்த உபாயம் இதுவரை கண்டிபிடித்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது ந்யூயார்க் பட்டினத்தில் ஒரு துப்பாக்கி செய்திருக்கிருர்களாம். மேற்கண்ட ஆபத்துக் காலத்தில் அத்துப்பாக்கியைச் சுட்டால், ஒரு மெல்லிய நூல் அதன் வழியாகச் சென்று அதன் கடைசியில் ஒரு பலமான கயிறு கட்டப்பட்டிருப்பதாயும், அதைக் கண்டு பிடித்து மாடியிலுள்ளவர்கள் உயிருடனிறங்கும்படியாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

FLOWERS IN EUROPE.

**ஐரோப்பாவில் புஷ்பங்கள்.**—ஐரோப்பா கண்டத்தில் 4,300 வகைப் புஷ்பங்கள் பயிராகின்றன. இவைகளைப் பரிசோதித்துப் பார்த்த ஜர்மன் தேசத்து ஸ்தாவர சாஸ்திரி ஒருவர் சுகந்தமுள்ள புஷ்பங்கள் 420 வகைதானிருக்கின்றன வென்றும், 4,300 வகையில் பாதிக்கு மேற்பட்ட புஷ்பங்கள் துர்க்கந்த முடையனவா யிருக்கின்றன வென்றும், பல புஷ்பங்கள் வாஸனை யில்லாம லிருக்கின்றன வென்றும் கண்டு பிடித்திருக்கிருர். மேலும் வெண்மை நிறங்களுடையன சுகந்தமலர்களா யிருக்கின்றன வென்றும், ஊதா நிறமுடையன வாஸனை குறைந்தனவென்றும் அவர் சொல்லுகிருர்.

4000 NEWSPAPERS.

**4000-வர்த்தமானப் பத்திரிகைகள்.**—ஜப்பான் ராஜ்யத்தில்ஐரோப்பியதேசத்து நாகரிகம் பரவியது முதல் அவர்கள் அநேகம் வர்த்தமானப் பத்திரிகைகளைப் பிரகடனம் செய்கிருர்கள். பத்திரிகைகளின் சங்கியை பிரதிவருஷமும் அதிகரிக்கின்றன. 1852-ம் வருஷத்தில் முதல் பத்திரிகை பிரகடனமாயிற்று. அதுமுதல் இது வரையில் 4000-வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன. ஜப்பான் தேசத்தார்கள் வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிப்பதில் விசேஷமான ப்ரீதியைக்காட்டுகிருர்கள். டோக்கியோ நகரில் மட்டும் 12-பேபர்கள் வெளியாகின்றன. இவைகளில் பிரக்யாதி பெற்ற "டிலீஸ் கிம்போ" என்னும் பத்திரிகைக்கு நான்கு லக்ஷம் சந்தாதாரர்கள் இருக்கிருர்கள். நம் நாட்டில் பத்திரிகாட்மானமோ மிக்க விசித்திரமாயிருக்கிறது.

BRITISH AID TO INDIA.

**இந்தியாவுக்கு ப்ரிட்டிஷ் உதவி.**—அன்னிய தேசங்களுக்குப் போயிருக்கும் ப்ரிட்டிஷ் மூலதனம் 350,00,00,000,(350 கோடி) பவுன். இந்த மூலதனத்துக்கு 1911-ம் வருஷத்தில் 18,00,00,000 (18 கோடி,) பவுன் வட்டியாகக் கிடைக்கும். இது நூற்றுக்கு 5-க்கு மேல் வட்டியாகிறது. இந்த மூலதனத்தில் இந்தியாவுக்கும் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கும் போயிருப்பது 65,00,00,000 (65 கோடி)பவுன். அதற்கு வட்டி நூற்றுக்கு ஒன்று குறைத்துக் கிடைப்பதால், அத்தேசங்களுக்குக் குறைந்த பட்சம் 1,00.00,000 (ஒருகோடி) பவுன் லாபமாகிறது. இப்படி அன்னிய தேசங்களுக்குப் போயிருக்கும் மூலதனங்களுக்கு வாங்கும் வட்டியைவிட இந்தியாவுக்கும் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கும் போயிருக்கும் மூலதனத்துக்குக் குறைந்தவட்டி வாங்கப்படுகிறபடியால், அது ப்ரிட்டிஷ் மூலதனக்காரர்கள் அத் தேசங்களுககுச் செய்யும் நன்மை யென்று ஒருவர் சொல்லுகிருர்.

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.

(தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் ஜூன்மீ 21உ ரிபோர்ட்டுப்படி.)

PIECE GOODS.

ஜவுளி ஸாமான்கள்.

மதராஸில் ஜாக்கிநெட் தவிர மற்ற எல்லா தினுஸுகளுக்கும் நல்ல கிராக்கி.

GREY SHIRTINGS—காடா.

லேடி மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 1110—37 × 37½ × 46″ .. | 8 | 0 | 0 |

கூண்டு மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 2500—37 × 37½ × 41″ .. | 6 | 1 | 0 |
| ,, 3500 ஷை 46″ .. | 7 | 15 | 0 |
| ,, 7500 ஷை 54″ .. | 6 | 5 | 0 |
| ,, 5000 ஷை 41″ .. | 6 | 3 | 0 |

பறவை நாகம் மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 37 × 37½ × 41″ .. .. | 5 | 8 | 6 |
| No. 126—46″—37/7½ .. | 9 | 12 | 0 |

GREY MULLS—காரிகம்பீஸ் (காஸாக்கச்சை).

20 கஜம் இஞ்சின் மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 20 × 20 × 46″ .. .. | 4 | 7 | 0 |
| ஷை 51″ .. .. | 4 | 15 | 0 |
| 22 × 22 × 51″ .. .. | 5 | 7 | 0 |
| ஷை 46″ .. .. | 4 | 15 | 0 |

20 கஜம் புறா மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 20 × 20 × 46″ .. .. | 4 | 7 | 0 |

நுபா மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 40″—20 × 20 .. .. | 4 | 7 | 0 |
| 45″—22 × 22 .. .. | 4 | 14 | 0 |

BOOK MUSLINS.—புக் மஸ்லின்கள்.

சங்கு மார்க்கு 12 கஜம்.

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 51″—94 ..<br>ஷை—95 ..<br>ஷை—96 ..<br>ஷை—97 .. | (ஸராஸரி) | 4 | 1 | 0 |
| ஷை—84 ..<br>ஷை—85 ..<br>ஷை—86 ..<br>ஷை—87 .. | (ஸராஸரி) | 4 | 5 | 0 |

JACONETS.—ஜாக்கிநேட்டுகள்.

46″ தங்க விநயகர் மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 888 .. .. .. | 5 | 9 | 6 |
| ,, 777 .. .. .. | 5 | 4 | 6 |
| ,, 666 .. .. .. | 5 | 3 | 6 |
| ,, 555 .. .. .. | 5 | 0 | 6 |
| ,, 444 .. .. .. | 4 | 13 | 6 |
| ,, 333 .. .. .. | 4 | 10 | 0 |

20 கஜம் 46″ தங்கக் குழந்தை மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 2662 .. .. .. | 4 | 11 | 0 |
| ,, 89 .. .. .. | 4 | 14 | 0 |
| ,, 898 .. .. .. | 4 | 15 | 0 |
| ,, 8989 .. .. .. | 5 | 2 | 0 |
| ,, 89898 .. .. .. | 5 | 4 | 0 |
| ,, 898989 .. .. .. | 5 | 6 | 0 |

WHITE MULLS—ஸலவை மல்லுகள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 1703 .. .. .. | 7 | 4 | 0 |
| ,, 1503 .. .. .. | 7 | 0 | 0 |
| ,, 1502 .. .. .. | 6 | 2 | 6 |
| ,, 1702 .. .. .. | 6 | 6 | 0 |
| ,, 1704 .. .. .. | 7 | 8 | 0 |
| ,, 136—40″—18 கஜம் .. | 2 | 2 | 0 |
| ,, 9072—46″ 20 கஜம் .. | 4 | 12 | 0 |
| ,, 9073—51″ ஷை .. | 5 | 4 | 0 |
| ,, 5072—46″ ஷை .. | 4 | 12 | 0 |
| ,, 5073—51″ ஷை .. | 5 | 4 | 0 |
| ,, 912—46″ ஷை .. | 4 | 9 | 0 |
| ,, 913—51″ ஷை .. | 5 | 1 | 0 |
| ,, 3073 .. .. .. | 5 | 12 | 0 |
| ,, 7073 .. .. .. | 5 | 13 | 0 |
| ,, 973 .. .. .. | 5 | 13 | 0 |

மேடல் மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ,, 7773 .. .. .. | 6 | 4 | 0 |



ஸவரன் மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 273 .. .. .. | 6 | 5 | 0 |
| 72—46″ 20 கஜம் .. .. | 4 | 2 | 0 |
| 73—51″ ஷை .. .. | 4 | 10 | 0 |

WHITE SHIRTINGS—லாங்க்லாத்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| H. K. 62 36″ 40 கஜம் .. | 9 | 8 | 0 |
| ஷை 82 ஷை .. | 9 | 12 | 0 |

RED SHIRTINGS—தோம்பு.

ஸ்வதன்வா மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 7 டிக்கெட்டு .. .. | 6 | 4 | 6 |
| 7 ஷை .. .. .. | 6 | 8 | 6 |
| 8 ஷை .. .. .. | 6 | 12 | 6 |
| No. 10—41″ 40 கஜம் .. .. | 8 | 3 | 0 |

ஒட்டை மார்க்கு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 7 டிக்கெட்டு .. .. | 7 | 3 | 0 |
| 8 ஷை .. .. | 7 | 7 | 0 |

YARN AND TWIST—நூலும் முறுக்கு நூலும்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஆமதாபாத் காரம் 40—சைனு டிக்கெட்டு—செகப்பும் மஞ்சள் முடியும். | 2 | 15 | 6 |
| பம்பாய் காரம் 40 டவர் அண்ட் ஸேட் மார்க்கு .. .. .. | 3 | 10 | 0 |

MANCHESTER YARN—சீமை நூல்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| காரம் 40 ஜி. எம். (G.M.) ட்ரம்மர் | 3 | 15 | 6 |
| ஷை க்ளாஸ்கோ .. | 4 | 3 | 0 |
| ஷை தங்கமயில் .. .. | 3 | 15 | 6 |
| ஷை மதுராபட்டணம் ஜி.எம். | 3 | 15 | 6 |
| ஷை பாக்கு வெட்டி .. | 3 | 15 | 6 |
| ஷை ஆதிசேஷன் .. | 4 | 2 | 0 |
| ஷை ஸலைவை 80 மகாராஜா | 7 | 8 | 6 |
| ஷை 30 கெடிகாரம் .. | 3 | 15 | 0 |
| ஷை ஷை தண்ணித்துறை .. | 3 | 15 | 0 |
| ,, 50 ம்யூல்-கிழவன் .. | 4 | 7 | 0 |
| ,, ஷை ஷை 70/80 .. | 6 | 2 | 0 |
| 50 மீடியோ G. F. M. ஒட்டையும் யானையும் | 5 | 12 | 0 |
| 60 மீடியோ .. .. .. | 6 | 3 | 0 |

RED—செகப்பு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 60 இரட்டைமயில் .. .. | 8 | 9 | 6 |
| 40 முனிஸிபாலிட்டி (புல்வெயிட்) | 11 | 3 | 0 |
| 40 புத்தா .. .. | 6 | 0 | 0 |
| ,, வில்லேஜ் 4 டிக்கெட்டு .. .. | 5 | 3 | 0 |
| ,, ராவணேஸ்வரன் .. .. | 11 | 3 | 0 |
| ,, அஹல்யை ராமர் .. .. | 11 | 2 | 0 |
| , பொம்மி செட்டி .. .. | 11 | 2 | 0 |
| , மோட்டார்கார் .. .. | 10 | 6 | 0 |
| , போரா பஸார் .. .. | 6 | 0 | 6 |
| , பூப்ஸாணி இரண்டு கட்டு .. | 11 | 2 | 0 |
| 60 ஆதிசேஷன் .. .. | 8 | 4 | 0 |

YELLOW—அரை மஞ்சள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 42/40 இஞ்சின் .. .. | 4 | 12 | 0 |
| 40 ஸ்டீமர் .. .. | 4 | 12 | 0 |
| 44/40 யானை .. .. | 4 | 8 | 0 |
| 40 கெங்கை (ஜகன்மோஹினி) புல்வெயிட் | 4 | 13 | 6 |
| காசி ராஜா .. .. | 4 | 13 | 0 |
| 44/40 கிருஷ்ணன் .. .. | 4 | 10 | 0 |

LEMON AND ORANGE—கால் மஞ்சள் முழு மஞ்சள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 44/40 கால் மஞ்சள் கிருஷ்ணன் | 4 | 10 | 6 |
| ,, முழு மஞ்சள் ஷை .. | 5 | 0 | 0 |
| 40 முழு மஞ்சள் ஷை .. | 5 | 2 | 0 |
| ,, ஷை காசி ராஜா .. .. | 5 | 2 | 0 |
| 40 கால் மஞ்சள் ஸ்டீமர் .. | 4 | 12 | 6 |
| ,, முழு மஞ்சள் ,, .. | 5 | 3 | 0 |

BLACK—கறுப்பு.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 44/40 குதிரை .. .. | 4 | 12 | 0 |

HIDES AND SKINS—மாட்டு ஆட்டுத் தோல்கள்.

மாநு (மாட்டுத்தோல்)

| | ரூ. | அ. | பை | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| பல்லாரி .. .. | | | | | 0 | 13 | 5½ |
| பங்களூர் கமேலா .. .. | | | | | 0 | 13 | 2 |
| ஹைதராபாக்கம் | 0 | 13 | 2½ | முதல் | 0 | 13 | 5 |
| மட்வாடா .. .. | | | | | 0 | 12 | 7 |
| ஏலூர் ராஜமஹேந்திரபுறம் | 0 | 12 | 8 | முதல் | 0 | 12 | 10 |
| செட்டி கடல்கரை | 0 | 12 | 6 | முதல் | 0 | 12 | 10 |
| சீவரம் | 0 | 12 | 0 | முதல் | 0 | 12 | 3 |
| குடியாத்தம் | 0 | 12 | 0 | முதல் | 0 | 12 | 3 |
| பல்லாவரம் .. | 0 | 11 | 3 | முதல் | 0 | 11 | 7 |
| யேநு (எருமைத்தோல்) | | | | | | | |
| ராயதுர்க்கம் .. .. | | | | | 0 | 10 | 6 |
| பல்லாரி .. .. | | | | | 0 | 10 | 6 |
| பங்களூர் | 0 | 9 | 3 | முதல் | 0 | 9 | 4 |
| வேநு (வெள்ளாடு) | | | | | | | |
| ஹைதராபாக்கம். (நல்லவர்ணம்.) .. | | | | | 1 | 8 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 5 | 6 |
| சேநு (செம்மறி ஆடு) | | | | | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | | | | | 1 | 2 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 1 | 0 |
| சேலம் | 1 | 10 | 0 | முதல் | 1 | 14 | 0 |
| மட்வாடா | 1 | 4 | 6 | முதல் | 1 | 5 | 0 |

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 20 முதல் 30 |
| கொன்னைப்பட்டை ஷை | 15 முதல் 17¾ |
| கடப்பை கடுக்காய் ஷை | 7 முதல் 10 |
| சேலம் அரசகிரிஷை ஷை | 14 முதல் 19 |
| நல்லெண்ணெய் ஷை | 100 முதல் 118 |
| புங்கம் எண்ணெய் ஷை | 65 முதல் 80 |
| எட்டிக்கொட்டை ஷை | 16 முதல் 17½ |
| பூந்திக்கொட்டை ஷை | 10 8 0 |
| விளக்கெண்ணெய் ஷை | 71 முதல் 72 |
| மணிலாக்கொட்டை வியாபாரமில்லை. | |
| கொட்டை முந்து 165 ராத்தல் .. | 9½ முதல் 111 |

| | ரூ. அ. பை. |
|---|---|
| ரங்கூன் அரிசி 63 படி .. | வரவில்லை |
| பந்தர் பச்சை அரிசி 44 படி .. | 7 8 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 6 6 |
| கோதுமை 4 படி முதல் 4½ படி .. | 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் .. | |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் .. | 12 0 0 |
| ஷை (பல்லாரி) ஷை .. | 13 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு ஷை 22 8 0 முதல் 23 | |

METALS—லோகங்கள்.

பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50,

| | ரூ. |
|---|---|
| பாரம் .. | 206 |
| செப்புத் தகடுகள் பாரம் .. | 242 |
| செப்புக்கட்டி ஷை .. | 212 |
| நாகம் ஷை .. | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 74 |
| ஈயம் ஷை .. | 54 |
| காரீயம் ஷை .. | 49 |
| வெள்ளீயம் ஷை .. | 189 வராகன். |

IRON—இரும்பு.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 செ. பாரம் ரூ. | 21—23 |
| சீமை .. .. .. | 43 |
| மருக்கி தகடு 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு .. .. | 27—28 |
| 8 பட்டை எஃகு .. .. | 23 |
| எஃகு வில்கட்டு .. .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 செ. .. | 21 |
| சீமை .. .. .. | 40-46-49 |

SEASON.

காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1911ளு ஏப்ரல் மீ 1-உயிலிருந்து, ஜூலை மீ முதல்உ வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டு களாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர | 7·97 | 8·93 |
| வால்டேர் | 4·55 | 6·89 |
| காக்கிநடா | 8.15 | 5·86 |
| மசூலிப்பட்டணம் | 4·83 | 6·42 |
| நெல்லூர் | 1·38 | 1·99 |
| மதராஸ் | 0·64 | 3·64 |
| கூடலூர் | 1·59 | 2·98 |
| நாகபட்டணம் | 2·96 | 3·59 |
| பாம்பன் | 0·10 | 3·06 |
| கொழும்பு | 16·45 | 31·27 |
| திருவநந்தபுரம் | 19·06 | 25·95 |
| கொச்சி | 52·98 | 45·03 |
| கள்ளிக்கோட்டை | 48·61 | 46·83 |
| மங்களூர் | 41·18 | 43·31 |
| மெர்க்காரா | 52·13 | 34·79 |
| ஐதராபாத் | 3·72 | 5·86 |
| ரெய்ச்சூர் | 5·19 | 4·35 |
| பல்லாரி | 2·20 | 4·44 |
| கர்நூல் | 4·09 | 5·09 |
| கடப்பை | 9·23 | 5·60 |
| ஹாஸ்ஸான் | 10·47 | 13·24 |
| பெங்களூர் | 7·47 | 8·43 |
| கொடைக்கானல் | 21·53 | 12·81 |
| உதகமண்டலம் | 27·05 | .. |
| கோயம்புத்தூர் | 8·29 | 5·58 |
| வேலூர் | 4·95 | .. |
| சேலம் | 6·91 | 9·91 |
| திருச்சினப்பள்ளி | 5·16 | 6·56 |
| புதுக்கோட்டை | 7·67 | .. |
| மதுரை | 8·77 | 6·21 |
| திருநெல்வேலி | 3·48 | 5·21 |


# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ, பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருது ஆடி மீ—JULY 1911. | ஸஞ்சிகை 7. No. 7.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | Foreign. Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page ... | 5 0 0 | per month. |
| ½ do ... | 2 8 0 | do |
| ¼ do ... | 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | அந்நிய நாடு. |
|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 0 0 .. | 6 0 0 |
| தனிப்பிரதி .. | 0 6 0 .. | 0 8 0 |
| மாதிரி காபி .. | 0 2 0 .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடிதாஸியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக சிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.
## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருது௵ ஆடிமீ—JULY 1911. | ஸஞ்சிகை 7. No. 7.


### பொருளடக்கம்.


**பத்திராதிபர் குறிப்புகள்** — பக்கம்

*மகாபெரிய ஹோட்டல்-ஸ்கூல்களுக்கு மின்ஸார விசிறிகள்-கனம் ராமஸ்வாமி செட்டியார்-புகையிலைச்செலவு பசுமாடுகள்—ட்ரெயினுமீடர்—தத்வமறிந்து விவஸாயஞ் செய்தல்-ஜெர்மெனியில் தொழில் படிப்பு-ஒடுக்கப்பட்டவர்களின் கூட்டம்* .. 339-344

**விசேஷ வியாஸங்கள்**

*கண்ணாடி ஸாமான்கள் —எம். வி. எஸ். அனந்தபத்மநாப ராவ்* 345
*பத்தி நடவு —எஸ். வைத்தியலிங்கம் பிள்ளை* 347
*குழந்தை சமத்தா, அசடா?* .. 350
*சுதேசி ஸோப்புப் பொடி. —டி. வி. வி. ரமணய்யர்* .. 353
*ரெஜிஸ்ட்ரேஷன் இலாகாவின் அமைப்பு* 354
*வெண்ணெயும் அதன் பாதுகாப்பும்* .. 356
*ஆர்கால் ராணி* .. 358

**விசேஷத்திரட்டு**

*ப்ளேக் வியாதி வாராமல் தடுத்தல்* .. 361
*பொருள் வரும் வழி* .. 362

**பத்திரிகை ஆராய்ச்சி**

*ராஜாவும் ராணியும் அவர்கள் வீட்டில்* 369
*மதுரையில் கைத்தொழில்கள்* .. 370
*கால் நடைகள்* .. 371
*இந்தியாவுக்கு அத்யாவசியமாய் வேண்டியவை* .. 372
*பசுக்களின் கறவை* .. 372

**புஸ்தக ஆராய்ச்சி** .. .. 372
**சிறுவர் பகுதி** .. .. .. 373-374
**ஸ்திரீகள் பகுதி** .. .. 375-376
**பகுதிக் குறிப்புகள்**

*விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள்* .. 377-386

**மாஸ வர்த்தமானம்** .. .. 387-389
**மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.** .. 390-392


### CONTENTS.


**Editorial Notes**

THE LARGEST HOTEL-ELECTRIC FANS FOR SCHOOLS-THE HON. MR. RAMASWAMI CHETTIAR-TOBACCO CONSUMPTION-COWS THE TRAINOMETER-SCIENTIFIC FARMING INDUSTRIAL EDUCATION IN GERMANY-THE DEPRESSED CLASSES CONFERENCE ... 339-344

**Special Articles**

GLASSWARE
M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T. ... 345
ROW PLANTING
S. Vaidyalingam Pillai ... ... ... 347
IS THE CHILD INTELLIGENT OR DULL? .. 350
SWADESHI SOAP POWDER
T. C. V. Ramana Aiyar ... ... ... 353
THE CONSTITUTION OF THE REGISTRATION DEPARTMENT ... ... ... 354
BUTTER AND ITS PRESERVATION ... ... 356
THE RANI OF ARGAL ... ... ... 358

**Selections**

THE PREVENTION OF PLAGUE ... ... 361
THE WAY TO WEALTH ... ... ... 362

**Review of the Press**

The King and Queen at Home ... ... 369
Industries in Madura ... ... ... 370
Live Stock ... ... ... .. 371
India's Pressing Needs ... ... ... 372
Yield of Cows ... ... ... .. 372

**Reviews of Books** ... ... ... ... 372
**The Boys' Section** ... ... ...373-374
**The Ladies' Section** ... ... ...375-376
**Departmental Notes**

Agricultural Notes ... ... ... ... 377
Industrial Notes ... ... ... ... 379
Educational Notes ... ... ... ... 380
Scientific Notes ... ... ... ... 381
Medical Notes ... ... ... ... 382
Legal Notes ... ... ... ... 383
Personal Notes ... ... ... ... 384
Fun and Anecdote ... ... ... ... 385
Curiosities ... ... ... ... 386

**News of the Month** .. ... ... 387-389
**Madras Market Reports** ... ... 390-392




## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### The Largest Hotel

மகா பெரிய ஹோட்டல்.—ந்யூயார்க் நகரத்தில் 450 லக்ஷ ரூபாய் செலவழித்து ஒரு ஹோட்டல் கட்டப்போகிறார்களாம். இதைப் போன்ற ஹோட்டல் உலகத்தில் வேறு ஓரிடத்திலும் இராது. நிலத்தின் க்ரயம் மட்டும் $22\frac{1}{2}$ லக்ஷம் ரூபாயாம். அந்த ஹோட்டலில் 1600 அறைகளும் 1000 ஸ்நானம் பண்ணும் இடங்களும் இருக்குமாம். 25 மாளிகைகளிருக்கும் பாருங்கள். வெள்ளைக்காரர்கள் செய்யும் வியாபாரத்தையும் அவர்கள் போடும் முதலையும்.

### Electric Fans for Schools.

ஸ்கூல்களுக்கு மின்ஸார விசிறிகள்.—இந்தியாவில் பெரிய பணக்காரர் வீடுகளில் தவிர மற்ற இடங்களில் பங்கா என்பது கிடையாது. காற்று வேண்டுமானால் கை விசிறியைக் கொண்டு ஜனங்கள் விசிறிக்கொள்ளுகிறார்கள். இந்தியாவில் வருஷம் முழுமையும், நிச்சயமாய்க் கோடையில், பல பேர்கள் ஒரு இடத்தில் கூடும் பக்ஷத்தில் இறுக்கம் ஸகிக்க முடிவதில்லை. இந்தக் கோடையில் என்னாளும் கூட்டத்திலேயே காலங் கழிக்க வேண்டிய ஸ்கூல் பிள்ளைகளின் கஷ்டத்தைச் சொல்ல வேண்டியதில்லை. கவர்ன்மெண்ட் வித்யா இலாகா அதிகாரிகள் வேண்டிய நிர்ப்பந்தங்கள் செய்தும் இன்னும் இந்தியாவில் அநேக ஸ்கூல்களில் காற்றோட்டம் போதாதென்றே சொல்லவேண்டும். அநேக பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களுக்கு மட்டும் பங்காப் போடப் பட்டிருக்கிறது. இப்படிக்கு ஏன் பையன்களுக்கும் ஸௌகரியம் செய்து கொடுக்கக் கூடாது. சென்னப்பட்டணம் போன்ற இடங்களில் மின்ஸார விசிறிகளைச் சுலபமாய் ஸ்கூல்களில் அமைக்கலாம். இந்த மாதிரி மின்சார விசிறிகளை பரோடா காலேஜில் போடப்போவதாகக் கேள்விப் படுகிறோம்.

### The Hon. Mr. Ramaswami Chettiar.

கனம் ராமஸ்வாமி செட்டியார்.—இந்தக் கனவான் சென்னை சட்ட நிர்மாண ஸபையில் மெம்பராயிருப்பதோடுகூட சிதம்பரம் முனிஸிபாலிடியின் சேர்மனுயுமிருந்து வருகிறார். சேர்மனாயிருப்பவர்கள், வசூல் செய்யும் வரிகளை செம்மையாயும் சிக்கனமாயும் செலவழிப்பார்களானால் அதுவே அவர்கள் செய்யும் பெரும் உபகாரமாகும். இதோடு நிற்காமல் கனம் ராமஸ்வாமி செட்டியார் தன் கைப்பணத்தைச் செலவழித்து முனிஸிபாலிட்டி வேலைகளை நடத்தி வருகிறாரென்று கேட்க ரொம்ப ஸந்தோஷமாக இருக்கிறது. சிதம்பரத்துக்கு ஜலம் ஸப்ளை செய்வதற்கான ஏற்பாட்டுக்கு லக்ஷம் ரூபாய் இனாமாகக் கொடுத்திருக்கிறார். சிதம்பரத்தில் பெரிய தெருவில் ரோட்டோரமாய் அணை போடவும், சில சாக்கடைகள் கட்டவும் கருங் கல்லுகள் கொடுத்திருக்கிறார். அநேக சில்லரைச் செலவுகளுக்கு முனிஸிபாலிட்டி பணத்தை எடுக்காமல் தன் ஸொந்தப்பணத்தைக் கொண்டு முனிஸிபாலிட்டி வேலையை நடத்தி வருவதாகச் சில பேர் சொல்லக் கேட்டிருக்கிறோம். சிதம்பரம் முனிஸிபாலிட்டிக்கு இப்படிப்பட்ட சேர்மன் வாய்த்தது அந்த பட்டணத்து வாஸிகளின் அதிர்ஷ்டம். கனம் செட்டியாருக்கும் சிதம்பர வாஸிகளுக்கும் நடராஜர் அநுக்ரகம் செய்வாராக,

**Tobacco Consumption.**

புகையிலைச் செலவு.—1909-ம் வருஷத்தில் உலகத்தில் விளைந்த புகையிலையின் மொத்தம் 186 கோடி 14 லக்ஷம் ராத்தலாகும். இதில் 94 கோடி $93\frac{1}{2}$ லக்ஷம் ராத்தல் அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலும், 20 கோடி 74 லக்ஷம் ருஷ்யா தேசத்திலும், 14 கோடி $34\frac{3}{4}$ லக்ஷம் ஹங்கேரியிலும், 9 கோடி $13\frac{1}{4}$ லக்ஷம் ஜப்பானிலும், 7 கோடி $65\frac{1}{2}$ லக்ஷம் துர்க்கி ராஜ்யத்திலும், 6 கோடி 21 லக்ஷம் ஜெர்மனியிலும், 5 கோடி 10 லக்ஷம் ப்ரான்ஸிலும் உண்டாயின. 1910-ம் வருஷம் ஜூன் மாஸம் 30-ம் தேதி முடிய ஒரு வருஷத்தில் 188 கோடி 34 லக்ஷம் ராத்தல் புகையிலை உலகத்தில் செலவாகியதாம். ஸராஸரியில் ஆஸாமி ஒன்றுக்கு ஹாலெண்டில் 7-5 ராத்தலும், பெல்ஜியத்தில் 6·2 ராத்தலும், அமெரிக்கா ஐக்ய நாடுகளில் 5·7 ராத்தலும், க்யூபாவில் 5·1 ராத்தலும், ஸ்விட்ஸர்லாந்தில் 4·7 ராத்தலும், டென்மார்க்கில் 4·6 ராத்தலும், ஜெர்மனியுல் 3·5 ராத்தலும், ஸ்வீடனில் 3·4 ராத்தலும், ஆஸ்ட்ரியாவில் 3 ராத்தலும், க்ரேட்ப்ரிட்டனில் 2 ராத்தலும் செலவாகின. ஜனங்கள் அதிகமாக வரிகட்டாத தேசங்களிலேயே புகையிலை ஜாஸ்தி செலவாகிறதாக ஏற்படுகிறது. உலகத்தில் இங்கிலாந்தில்தான் ஸராஸரியில் வரி ஜாஸ்தி. அங்கே பேர்வழி ஒன்றுக்கு ஸுமார் ரூ. 5-4-0 ஆகிறது. அங்கே புகையிலைச் செலவு குறைச்சல்; அதாவது பேர்வழி ஒன்றுக்கு 2 ராத்தல்தான் ஆகிறது. ஹாலெண்டில் பேர்வழி ஒன்றுக்கு வரி முக்கால் அணா வாகிறது. அங்கே புகையிலைச் செலவு அதிகம். அதாவது பேர்வழி ஒன்றுக்கு $7\frac{1}{2}$ ராத்தலாகிறது. இதனால் கையில் பணமிருந்தால் ஜனங்கள் துன்மார்க்கங்களில் செல்வழிப்பார்கள் போலும்.

**Cows.**

பசுமாடுகள்—வீட்டுக்கு வேண்டிய பாலுக்காக மாடுவாங்குகிறவர்கள் அது ஸ்வல்பகாலம் கறந்து விட்டுப் பிறகு மறுத்துப்போவதால் உண்டாகும் துக்கத்தை அனுபவித்திருப்பார்கள். ஒரு மாட்டின் கறவை காலம் அதின் வர்க்கவழியைப்பொறுத்ததாகும். சில வர்க்கங்கள் வருஷாவருஷம் கன்றுபோடும் சில இரண்டு வருஷத்துக்கு ஒரு முறை கன்றுபோடும். மற்றுஞ் சில மூன்று வருஷத்திற்கு ஒருமுறை கன்றுபோடுவதும் உண்டு. ஆகவே, கறவை மாடுகள் வாங்குவதில் கடைசியில் சொன்னவர்க்க மாடுகளைப்பார்த்துவாங்குவது நலம். இப்படிப்பட்ட மாடுகளுக்கு விலை அதிகமாகவே இருக்கும். அவைகளும், அவைகளுடைய கன்றுகளும் நல்ல காத்திரமாய் இருக்கும். வருஷாவருஷம் கன்று போடும் மாடுகளைவிட இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை கன்று போடும் மாடுகள் திடனாகவே இருக்கும். வருஷா வருஷம் கன்று போடும் மாடுகள் ஸாதாரணமாக 4 முதல் 6 மாதம் வரையில் கறக்கும். இரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை கன்று போடும் மாடுகள் 12 முதல் 16 மாதம்வரையில் கறக்கும். மூன்று வருஷத்திற்கு ஒரு முறை கன்று போடும் மாடுகளோ 21 மாதம் முதல் 27 மாதம் வரையிலும் கறக்கும்.

இப்படிப் பலவிதமாகக் கறக்கும் மாடுகளை எப்படிப்பொறுக்கி எடுக்கிறது? இதற்கு ஒரு மாடு எந்த வயதில் முதல் முதல் சினைப்பட்டதென்பதையறிந்து யூகிக்கலாம். வருஷா வருஷம் கன்றுபோடும் மாடாயிருந்தால் ஸாதாரணமாய் இரண்டு பல் முளைத்ததும் அதாவது ஒன்றரைமுதல் இரண்டு வயதிற்குள் சினைக்கு அலையும். இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை கன்று போடும் வர்க்கமாய் இருந்தால் நாலு பல் முளைத்ததும் அதாவது இரண்டரை முதல் மூன்று வயதில் சினைப்படும். மூன்று வருஷத்திற்கு ஒருமுறை கன்றுபோடும் மாடாய் இருந்தால் ஆறு பல் உண்டானதும் அதாவது மூன்றரை முதல் நான்கு வயதில் சினைப்படும்.



**The Trainometer.**

ட்ரெயினுமீடர்.—ரெயில் ப்ரயாணம் செய்கிறவர்களில் அநேகர் ரெயில் வெகுவேகமாய் ஓடும்பொழுது ஆச்சரியப்பட்டு 'இப்போது மணிக்கு எத்தனை மைல்·மேனிக்கு ஓடுகிறதென்று தோன்றுகிறது' என்று கூட ப்ரயாணஞ்செய்கிறவர்களைக் கேட்பதை நாம் பார்த்திருக்கிறோம். இந்தக் கேள்விக்கு தற்காலத்தில் உத்தேசமாய் பதில் சொல்லலாமே ஒழிய நிச்சயமாய் இவ்வளவு மைல்மேனிக்கு ரெயில் ஓடுகிறதென்று சொல்லமுடியாது. இனிமேல் இது ஸாத்யப்படும். லண்டன் நகரத்தில் அலுவலாயிருக்கும் எச். வேமத் ப்ரான்ஸ் என்னும் ஒரு இஞ்சினீர் 'ட்ரெயினுமீடர்' என்பதாக ஒரு கருவிகண்டு பிடித்திருக்கிறார். இந்தக்கருவி யடங்கிய பெட்டியை வண்டியில் ஒவ்வொரு கம்பார்ட்மெண்டிலும் சுலபமாய் அமைக்கலாம். அந்தப் பெட்டிக்கு ஒரு ஓட்டையும் ஒரு குமிழும் உண்டு. ஸாதாரணமாய்க் குமிழைப் பிடித்து அமிழ்த்தினால் அதை அமிழ்த்த முடியாது. ஆனால் பெட்டியின் ஓட்டையில் அதற்கேற்பட்டுள்ள பணத்தையோ காசையோ போட்டுவிட்டு குமிழை அமிழ்த்தினால் குமிழ் உள்ளே இறங்கிவிடும். இறங்கினதும் ரெயில் சக்ரத்தோடு ஒருவிதமாய் ஸம்பந்தமேற்பட்டு, கெடியாரத்தில் மணி காட்டும் டையல்போல் ஒன்று தோன்றி, ரெயில் அப்போது எத்தனை மைல் மேனிக்கு ஓடுகிறதென்று காண்பிக்கும். குமிழை அமிழ்த்திக் கொண்டே இருந்தால்தான் இப்படி வேகத்தைக் காண்பிக்கும். கையை விட்டு விட்டால் குமிழ் மேலே எழும்பி வந்து விடும். அப்பொழுது ஒன்றும் தெரியாது. மறுபடியும் என்ன வேகம் போகிறதென்று தெரிய வேணுமானால் மறுபடி காசை பெட்டியின் ஓட்டையில் போட்டு குமிழை அமிழ்த்தினாலொழிய வேகம் இன்னதென்று தெரிவிக்காது. இந்த ட்ரெயினு மீடரை எல்லா ரெயில் கம்பெனிகளும் தங்கள் தங்கள் வண்டிகளில் அமைக்கும்படி மிஸ்டர் ப்ரான்ஸ் ப்ரயத்னம் செய்து வருகிறார். இந்த விநோதத்தால் பொது ஜனங்களுக்கு ஒருவித லாபமுமில்லாமல் போனாலும் ரெயிலில் ப்ரயாணம் செய்கிறவர்களுக்குக் காலங்கழிக்க ஒரு நல்ல வேடிக்கையாகும்.

**Scientific Farming.**

தத்வ மறிந்து, விவஸாயஞ் செய்தல்.—மேல் நாடுகளில் விவஸாய ஸம்பந்தமான சாஸ்திரங்களைக் கற்றறிந்து பயிர் செய்கிறவர்கள் கண்டுபிடிக்கும் அற்புதங்களைக் கேட்க கேட்க ஆச்சரிய முண்டாகிறது. மின்ஸாரத்தின் உதவியால் அநேக வேலைகள் செய்திருக்கிறார்கள். நம் வீடுகளில் முற்றத்தின்மேல் காக்கை வராமல் கம்பிகள் போடுவதுபோல வயல்களின்மேல் கம்பிகளைப் போட்டு அவைகளின் வழியாய் மின்ஸாரத்தைப் பாய்ச்சி, அந்தக் கம்பிகளின் கீழ் வயலில் பயிர் செய்ததில் மாசூல் திடனும் அதிகமாயும் கண்டதோடு அது சீக்கிரத்திலும் அறுவடைக்கு வந்து விட்டது. ஒரு பூந்தோட்டத்தில் மேலே சொன்னமாதிரி மின்ஸாரத்தைப் பாய்ச்சியதில் அநேக புஷ்ப வகைகள் ஏராளமாய்ப் புஷ்பித்ததோடு அவைகளுடைய நிறமும் பார்க்க ஆச்சரியத்தை உண்டாக்கிற்று.

மின்ஸார வெளிச்சத்தைக் கொண்டு கறிகாய்கள் பயிர் செய்ததில் நல்ல லாபம் கிடைக்கிறதாம்.

ரண வைத்தியர்கள் புண் முதலியவைகளை சத்திரம் வைப்பதற்கு முன்னே நோயாளியின் ஸ்மரணையைப் போக்கடிக்கக் கொடுக்கும் "க்ளோரபாரம்" என்னும் திரவப் பொருளை சில இளஞ் செடிகளுக்கு ஏற்றி அவைகளைப் பெயர்த்து வேறு இடங்களில் வைத்ததில் அந்தச் செடிகள் நன்றாய் இலைகள் விட்டுப் புஷ்பித்தனவாம்.

மருந்துகளையே சில செடிகளுக்கு ஏற்றிப் பார்த்ததில் அந்தச் செடிகள் நன்றாய் வளர்கின்றன. சில விதைகளை விதைப்பதற்கு முன் அம்மை குத்துவது போல அவைகளுக்கு சில 'பாக்டீரியா' அதாவது சிறு பூச்சிகளைக் கொண்டு குத்தி அவைகளை விதைத்ததில் அந்த விதைகள் உப்பு வாயு என்று சொல்லப்படும் நைட்ரொஜனை எப்படியோ ஏராளமாய்ப் பருகி, செடி கொழுமையாயும் சீக்கிரமாயும் வளர்வதை கண்டு பிடித்திருக்கிறார்கள். வெந்நீரில் செடிகளை அமிழ்த்தி அதனால் அவைகள் சீக்கிரம் வளர்வதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதிகமாய்க் குளிரச் செய்து செடிகளை அகாலத்தில் புஷ்பிக்கச் செய்திருக்கிறார்கள். இதே மாதிரியாக புத்திக்கும், யுக்திக்கும், மண்ணுக்கும், சீதோஷ்ணத்துக்கும் தக்கபடி அநேகர் அநேக வித அற்புதங்களை விவஸாயத்தில் செய்து வருகிறார்கள். இதைப் படிக்கும் விவஸாயிகள் இவைகளெல்லாம் கட்டுக்கதை என்னலாம். கற்றறிய மனமிருந்தால் இன்றைக்குக் கட்டுக்கதையாயிருப்பது நாளைக்கு நிதர்சன அனுபோகத்தில் வந்து விடும்.

## Industrial Education in Germany.

ஜெர்மெனியில் தொழில் படிப்பு.—ஜெர்மனியில் ஒவ்வொருவரும் மூலப்படிப்பை கட்டாயமாய் படித்தே தீரவேண்டும். இதோடு கூட ஜெர்மனி ராஜ்யத்தில் அநேக இடங்களில் ஒவ்வொரு சிறுவனும் தான் செய்யும் தொழிலைப் பற்றிய பயிற்சியும் பெறவேண்டும். ஜெர்மெனியில் பதினாலு வயதுக்கு முந்தி ஒரு பையனும் ப்ரைமெரி ஸ்கூலை விடக் கூடாது. இப்படி விடுவதற்கு மூன்று மாஸத்துக்கு முன்னால் அந்த பையனுடைய வாத்தியார் அந்தப் பையனுடைய பெற்றோர் கார்டியன் இவர்களுக்கு சுற்றுப்பக்கத்தில் கிடைக்கக்கூடிய வேலைகளைப்பற்றி எழுதுகிறார். பையனை எந்தத் தொழிலில் அமைப்பது என்பது நிச்சயமான உடனே பையன் அந்தத் தொழிலைச் சேர்ந்த பள்ளிக்கூடத்தில் சேர்ந்து இரண்டு மூன்று வருஷத்திற்கு வாரம் ஒன்றுக்கு நாலு மணி முதல் ஆறு மணி வரையில் ஸாயந்திரப் பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டும். இந்த மாதிரியாக ஒவ்வொரு பெரியபட்டணத்திலும் நன்றாய் அமைக்கப்பட்ட ஒரு தொழில் பள்ளிக்கூடமுண்டு. இந்தப் பள்ளிக்கூடத்தினிடத்தில் சிறுவர்களில் தகப்பன்மார்களோடு பையன்களை வேலைக்குவைத்துக் கொண்டிருக்கும் எஜமான்களும் ரொம்ப சிரத்தை காட்டி வருகிறார்கள். சட்டப்படி எஜமான்களெல்லாரும் அவர்களுடைய வேலைக்காரர்கள் ஸாயந்திரம் தொழில் பள்ளிக்கூடத்துக்கு போய்ப் படிக்க ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கவேண்டும். அப்படி செய்து கொடுக்காவிட்டால் உடனே பையன்களுடைய தகப்பன்மார்கள் புகார் செய்து விடுவார்கள். மேல் சொல்லிய தொழில் பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுப்பதற்காக அங்கங்கேயுள்ள வியாபாரச்



சங்கத்தார்கள் வேண்டிய கருவிகள், யந்திரங்கள் முதலியவைகளை வாங்கிக்கொடுக்கிறார்கள். தவிர, முதலாளிகள் அவர்களுக்குள் சில பேர்களை நியமித்து ஸ்கூலை மேல்விசாரணை செய்து வருவதால் ஸ்கூல்களுக்கும் முதலாளிகளுக்கும் விசேஷ ஸம்பந்தமுண்டு.

## The Depressed Classes Conference.

ஒடுக்கப்பட்டவர்களின் கூட்டம்.—தீண்டாதவர்கள், கிறிஸ்தவர்களில் சிலர், ஆ சில பேர்கள் சேர்ந்து ஒடுக்கப்பட்டவர்களின் சங்கம் என்பதாக ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அந்தச் சங்கத்தின் மூலமாய் இரண்டு வருஷ காலமாக அவர்களுடைய ஸ்திதியை உயர்த்திக்கொள்ள முயற்சி செய்து வருகிறார்கள். இந்தச் சங்கத்தாரின் இரண்டாவது கான்பரென்ஸ் இந்த மாஸத்தில் சென்னபட்டணத்தில் இந்தியன் ரிவியூ என்னும் இங்கிலீஷ் மாதாந்தரப் பத்திரிகையின் ஆசிரியராகிய மிஸ்டர் ஜி. ஏ. நடேசன் அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் நடந்தது. அந்தக் கான்பரென்ஸில் எட்டுத் தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவைகளில் ஒன்று பின் வருமாறு.

"ஒடுக்கப்பட்டவர்களைப்பற்றின மட்டில் நிலஸாகுபடி விஷயத்தில் அவர்களுடைய எஜமான்களுக்கும் அவர்களுக்குமுள்ள ஒரு ஸம்பந்தமானது எஜமானுக்கும் ஒரு அடிமைக்குமுள்ளது போலிருக்கிறதே என்று இந்தக் கான்பிரன்ஸ் விஸனிக்கிறது. பொதுவாக விலை விகிதங்களும் கூலி விகிதங்களும் எங்கும் இப்போது ஏறியிருக்க, ஒடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும் ஐம்பது வருஷத்துக்கு முன் என்ன கூலி ஏற்பட்டதோ, கிட்டத்தட்ட அதே கூலி இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த விஷயத்தில் கொஞ்சம் கருணை காட்டி விலை ஏற்றத்துக்குத் தகுந்தாற்போல ஜாஸ்திக் கூலி கொடுக்கும்படி நிலஸ்வான்களை இந்தக் கான்பரென்ஸ் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறது."

இந்தத் தீர்மானத்தில் இரண்டு விஷயங்களைக் கவனிக்கவேண்டும். பொதுவாக விலை விகிதங்கள் எங்கும் ஏறி இருக்கின்றனவென்பது ஸரியே. ஒடுக்கப்பட்டவர்களுக்கு அதாவது முக்கியமாய் விவஸாயம் செய்யும் பறையர் முதலிய தீண்டாதவர்களுக்கு ஐம்பது வருஷங்களுக்கு, முன்னே என்ன கூலி ஏற்பட்டதோ கிட்டத்தட்ட அதே கூலி கொடுக்கப்பட்டு வருகிறதென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. இந்தக் கூலி விகிதங்கள் ஊருக்கூர் வித்தியாஸப்படும்.

இந்தத் தென்னிந்தியாவில் வழக்கங்கள் பலவாறாக இருக்கின்றன. சில இடங்களில் பண்ணையாளுக்கு தினச் சம்பளமாக கொடுக்கப்படும். நெல் கொஞ்சம்போல் தோற்றினாலும் பண்ணையாட்களுக்கு வீடும், வீட்டில் நடக்கும் பிறப்பு, இறப்பு, கலியாணம், நோய் முதலிய ஸமயங்களில் அவர்களுக்கு அவசியமான செலவுகளும், எஜமான்களாலேயே கொடுத்து நடப்பிக்கப்படுகின்றன. இப்படிக்குக் கணக்கில்லாமல் சில்லரையாய்ப் பற்றாகும் வரும்படிகளையும் தினச்சம்பளமாகக் கொடுக்கப்படும். நெல்லோடு சேர்த்துப் பார்த்தால் அன்றாடும் கூலி செய்து பிழைக்கும். இதர ஜாதிகளுடைய சம்பளத்துக்கு கிட்டத்தட்டவேயாகும்.

இதனால்தான் நிலஸ்வான்கள் வேலைக்குக் கூலிகள் அகப்படுவதில்லை என்றும் முன்னமே இருந்ததைவிட இப்பொழுது கூலி விகிதங்கள் அதிகப்பட்டுவிட்டனவென்றும் அதனால் முன்போல பண்ணைவைப்பதில் பிரயோசனமில்லை என்றும் கருதி வாரஸாகுப

டிக்குநிலங்களை விட்டுவிடுகிறார்கள். அநேக கிராமங்களில் பறையர்கள் வாரத்திற்குப்பயிர்ச் செயல் செய்கிறார்கள். அங்கங்கே கிராமங்களில் குடிபஸ்திக்குத் தக்கபடி நூற்றுக்கு 18 முதல் 50 வரையில் இதர ஜாதியாரைப் போலவே வாரம், பெறுகிறார்கள். ஆகவே, பொதுவாய் எல்லாத் தொழில்களிலும் போலவே விவஸாயத்தொழிலிலும் கூலி விகிதங்கள் முன்போலில்லாமல் ஏறியிருக்கின்றன என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. அப்போதைக்கப்போது கூலியாகக் கொடுப்பதை மட்டும் கொண்டுபறையர் முதலியவர்களுடைய கூலிவிகிதங்கள் குறைச்சல் என்றுசொல்லக்கூடாது. வழக்கம்பெரும் ப்ரமாணமாயுள்ள இந்தியாவில் கூலிவிகிதங்களோடு மாமூல் என்று கொடுக்கப்படும் கணக்கில் அகப்படாத சில்லரை வரும்படிகளையும் சேர்த்தே பார்க்கவேணும். அப்படிப் பார்த்தால் கூலி விகிதங்கள் எல்லாரையும் போல தீண்டாதவர்களுக்கும் அதிகமாகியிருப்பது நன்றாக விளங்கும்.

இன்னொன்று அநேக இடங்களில் கூலி ரொக்கமாக கொடுக்கப்படாமல் நெல் முதலிய தானியங்களாகக் கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட கேஸ்களில் முன்காலத்தைவிட கூலி ஏறினாலென்ன, இறங்கினாலென்ன? தானியத்தின் அதாவது பொதுவாய் விலை விகிதங்களின் பிரகாரம் விலை ஏறியோ இறங்கியோ விடும். ஆகையால் தானிய ரூபமாய் இன்னும் கூலி கொடுக்கப்படும் இடங்களில் கூலி ஏற்றம் குறைச்சல் என்று சொல்லுவது ஸரியாகமாட்டாது.

பொதுவாய் எந்த தேசத்திலும் எந்த ஊரிலும் கூலி விகிதங்கள் ஏறுவதும் இறங்குவதும் எஜமான்கள் கொஞ்சம் கருணை காட்டிச் செய்யும் காரியங்களல்ல. இதனால் இந்தியாவில் ப்ரதான வேதமாகிய வழக்கத்தை நாம் மறந்து விட்டுப் பேசியதாக எண்ணி விடக்கூடாது. வழக்கம் வெகுநாள் நிற்கும். இருந்தபோதிலும் தினம் பொழுது விடிந்தால் செய்யவேண்டிய விவஸாயம் முதலிய வேலைகளில் எஜமான்களுக்கும் வேலையாள்களுக்கும் பொருத்த மின்மை ஏற்படும் பட்சத்தில் வழக்கம் ஒழிந்துபோய் நிலையாய் ஏற்படவேண்டிய நிபந்தனைகள் ஏற்பட்டு விடும். ஆகையால் 'கருணைகாட்டி' ஜாஸ்திக் கூலி கொடுக்கவேண்டுமென்று சொல்லுவதானது மனித ஸ்வபாவத்துக்கு ஏற்றதல்ல. ஒரு நாள் ஒரு மாஸம் தயையாய்ப் பணம் கொடுக்கலாம். என்னாளுங் கூலி யென்று பெயரை வைத்து தயையாய் அதிகப் பணம் கொடுப்பவர்களை இந்த உலகத்தில் காணோம். ஸாதாரணமாய் குடிகள் பெருத்த கிராமமாயிருந்தால் கூலி விகிதங்கள் குறைச்சலாயும் குடிகளில்லாத கிராமங்களாயிருந்தால் கூலி விகிதங்கள் ஜாஸ்தியாகவும் இருக்கும். இதுதான் பொதுவான விதி.

இன்னும் இரண்டு தீர்மானங்களாவன:—

"அகப்படக்கூடிய இடங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் தரிசு நிலங்களைப் பெற்று அவைகளை ஸாகுபடி செய்யும்படியான ஸௌகரியங்களைச் செய்துக்கொடுக்க வேண்டுமென்று இந்தக்கான்பரென்ஸ் கவர்ன்மெண்டாரை வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது."

"ஒடுக்கப்பட்டவர்கள் வெகு ஏழைகளாதலால், அவர்கள் வெகுகாலமாய் அனுபவித்து வரும் நிலங்கள் விஷயமாகவும், வீடுகள் விஷயமாகவும், அவர்களுக்கும் மிராசுதாரர்களுக்கும் ஏற்படும் தகரார்களில் ஒடுக்கப்பட்டவர்களுக்கு கவர்ன்மெண்டார் எவ்வளவு ஸகாயம் செய்யலாமோ, அவ்வளவும் செய்யவேண்டுமென்று இந்தக் கான்பரென்ஸ் வேண்டிக் கொள்ளுகிறது."

இந்த இரண்டு தீர்மானங்களைப்பற்றி இப்பொழுது இடமில்லாமையால் இன்னொரு தடவை விசாரிப்போம்.



# GLASSWARE.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU. M. A., L. T.

# கண்ணாடி ஸாமான்கள்

—:o:—

கண்ணாடியால் செய்த அனேக ஸாமான்களும் ஆபரணங்களும் பழக்கத்தில் இருக்கின்றன. பல உருவங்கள் அமைந்த விளக்குச் சிம்னிகளும் அனேக வர்ணங்களுடன் கூடிய ரஸகுண்டுகளும், உள்ளே வர்ணக் கோடுகளையுடைய விசித்ரமான கோலிக்குண்டுகளும், வெண்மையான முலாம் உள்ளே பூசப் பெற்ற பம்பாய் முத்துக்களும் பெண்டுகள் ஸாதாரணமாய் அணியும் முறுக்கு வளையல்களும், வகைவகையான விநோதமான பம்பாய் வளையல்களும் கண்ணாடியால் ஆனவைகளே. வெயிற் காலத்தில் கண் கூசாமல் இருக்க உபயோகிக்கும் புகைவர்ணமான கண்ணாடி பில்லைகளும், வயது முதிர்ந்தவர்களுடைய நேத்ரங்களின் ஊனங்களைப் போக்குவதற்காக உபயோகிக்கும் தெளிவான மூக்குக் கண்ணாடி பில்லைகளும் கண்ணாடியால் ஆக்கப்பட்டவைகளே. ஜனங்களுக்கு மிகவும் உபயோகமான அநேகவித தட்டுமுட்டு ஸாமான்களும் கண்ணாடியால் செய்யப்படுகின்றன.

இந்த ஸாமான்களெல்லாம் சற்றேறக்குறைய அன்னிய தேசங்களிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன. இந்தியாவில் இக்காலத்திலும் செய்யப்படும் கண்ணாடி ஸாமான்கள் ஸ்வல்பமே. தென்னிந்தியாவில் சித்தூர் ஜில்லாவில் திருப்பதிக்கு அடுத்த சில கிராமங்களில் அனேக தலைமுறையாக வளையல்களுக்கு உபயோகமான ஒருவித மட்டமான நீலக் கண்ணாடியைச்செய்து வருகிறார்கள். வட இந்தியாவில் வரவர விலை யுயர்ந்த கண்ணாடி ஸாமான்களையும் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இச்சென்னை நகரில் நல்ல தெளிவான கண்ணாடிப் புட்டிகளும் கண்ணாடி ஓடுகளும் மற்றவகை ஸாமான்களும் செய்ய ஒரு கைத்தொழிற் சாலை இப்போது ஏற்பாடாகி வேலை நடந்து வருகிறது.

## கண்ணாடியின் குணங்கள்.

கண்ணாடியின் முக்கிய குணம் அதன் வழியாக ஒளியை ஊடுருவச் செய்வதே. ஒரு கண்ணாடித் துண்டை நமது கண்ணுக்கு முன் பிடித்தால், அதன் வழியாய் எதிரிலுள்ள வஸ்துக்களைப் பார்க்கலாம். பீங்கான் ஓட்டையாவது உலோகத் தகட்டையாவது இம்மாதிரி பிடித்தால், முன் தென்பட்டவையெல்லாம் மறைந்துபோகு மல்லவா? உள்ளே வைத்த மருந்து முதலான ஸாமான்கள் கண்ணுக்குத் தென்படும் பொருட்டே கண்ணாடி ஜாடிகளையும் ஸீஸாக்களையும் உபயோகிக்கிறோம். கண்ணாடி ஜலத்தில் கரைந்து போவதில்லை. புளிப்பு பதார்த்தங்கள் வைத்தால், பதார்த்தங்கள் கச்சிப் போவதில்லை. பாத்திரமும் களிம்பேறுவதில்லை. கடின பதார்த்த மாகையாலும், சுளுவில் கீறமுடியாதாகையாலும், அதன் மெருகு சீக்கிரம் அழிவதும் இல்லை. அது விலையிலும் ஸரஸம். உருக்கி வார்க்க முடியுமாதலால், அனேக வித வர்ணங்களுடனும் நானாவிதமான உருவங்களுடனும் கண்ணாடியை வார்த்து ஸாமான்கள் செய்யலாம். வீட்டுக் கூரைகளில் உபயோகிக்கும் கண்ணாடி ஓடுகளும், மேஜைகளின்மேல் அலங்காரத்திற்காகவும், காற்றடித்துக் காகிதங்கள் பறந்து போகாமல் இருப்பதற்காகவும் நாம் உபயோகிக்கும் கண்ணாடிக் கற்களும் இவ்வாறு வார்க்கப்பட்டவைகளே. மேற்கூறிய குணங்களுக்காக கண்ணாடி ஸாமான்கள் பலவிதமாய் வீடுகளில் உபயோகப்படுகின்றன.

## கண்ணாடியின் குற்றங்கள்.

ஆனால், கண்ணாடி கடின பதார்த்தமானாலும், கீழே விழுந்தால் எளிதில் உடையும் தன்மை யுடையதாதலால், கண்ணாடி ஸாமான்களை அதிகஜாக்ரதையுடன் உபயோகப்படுத்த வேண்டும். உடைந்த பாத்திரத்தின் சிறு துண்டுகள் உறுதியுடையன வாதலாலும், கூர்மையான ஓரங்களுடன் இருப்பதாலும் கைகால்களில் எளிதில் குத்திக் கொள்ளும். இவ்வாறு பட்டுக்கொண்ட துணுக்குகளை எடுத்துவிடுவதுகஷ்டமாகும். ஏனெனில், நிறமற்றவையாதலின் கண்ணுக்கு எளிதில் தெரிவதில்லை. அனேக ஸமயங்களில் வலி யிருப்பதைக் கொண்டுதான் கண்ணாடி தைத்த இடத்தைக் கண்டுகொள்ள வேண்டும். அதைப்பிடித்திழுக்கும்போதே உடைந்து போனாலும் போகும். மேலும் அஜாக்ரதையாய் நாம் கண்ணாடி தைத்த இடத்தை அமிழ்த்தினால் அத்துண்டு மேன்மேலும் சதையைக் கிழித்துக்கொண்டு உள்ளேயே செல்லும்.

## கண்ணாடிப் பாத்திரங்கள் வெடிப்பதேன்?

கண்ணாடி சூட்டை இழுத்துக் கொண்டு பரவச் செய்யும் குணமுடையதல்ல வாதலாலும், சூடான பாகம் மற்றெல்லா வஸ்துக்களைப்போல் விரியு மாதலாலும், கண்ணாடிப் பாத்திரத்தை அடுப்பின்மேல் வைத்தால், சூடுகண்ட கீழ்பாகம் விரிய, மேல்பாகம் சூடாகாமலும் விரியாமலும் இருக்கும். இதே மாதிரி சூடான ஜலம், பால், காபி முதலானவற்றைக் கண்ணாடி டம்ளரில் ஊற்ற, உட்பாகம் விரிய வெளிப் பக்கம் சுடாமல் விரியாமல் இருக்கும். களிமண்ணில் ஒருபாகம் வெயிலில் காய்ந்து சிறுக்க மற்றப் பாகம் முன்மாதிரி இருக்குமானால், காய்ந்து சுருங்கிய பாகம் பாளம் பாளமாக வெடித்துப் போவதுபோல், ஒரு பக்கம் மாத்திரம் விரிந்த பாத்திரம் வெடித்து உடைந்துபோகிறது. சூடா யிருக்கப்பட்ட கண்ணாடி சிம்ணியில் குளிர்ந்த காற்றுப்பட்டபோதாவது, ஸாதாரண டம்ளர்களில் பனிக்கட்டியைப் போட்டபோதாவது, அவை வெடித்துப் போவது இக்காரணத்தாலேயே. ஆனால் இவைகளுக்கு மெல்லிய பக்கங்களையுடைய டம்ளர்களை உபயோகித்தால் இக்கேடு உண்டாவது இல்லை. ஐஸ் டம்ளர் என்று விற்பவைகளெல்லாம் மெல்லியனவாகவே இருக்கும். சிம்ணி வாங்குகையில், மெல்லியவைகளையும் எங்கும் ஒரே சீராய்ப் பருமனுள்ளவைகளையும் தெரிந்தெடுத்தால், அவை சீக்கிரம் உடைந்து போகா. சுட வைப்பதற்காக உபயோகிக்கும் கண்ணாடிக் குப்பிகளும்டம்ளர்களும் இம்மாதிரியே இருக்கவேண்டும்.

## கண்ணாடி செய்யும் விதம்.

தெளிவான மண் ஸம்பந்தமில்லாத மணலையும் ஸோடா உப்பையும் சுண்ணாம்பு நீரையும்ஒரு தாமாஷாவின்படி சேர்த்து நன்றாய்ப் பொடி செய்து கொஞ்சம் கரித் தூளுடன் கலந்து, அதிக தீக்ஷண்யத்துடன் தீப்பரவிய அடுப்பில் இட்டு, 10, 12 மணிநேரம் காய்ச்ச, பொடி யெல்லாம் உருகி நன்றாய் ஒன்றோடொன்று கலந்து கெட்டியான தேன்பாகு போன்ற பக்குவமுள்ள த்ரவப் பொருளாகிறது. இக்குழம்பை அப்பக்குவத்திலேயே வைத்துக்கொண்டு நீண்ட இரும்புக் குழாய்களின் ஓரங்களில் கொஞ்சங் கொஞ்சமாய் வேண்டிய அளவு எடுத்து மற்றொரு நுனியால் ஊத, உருண்டையான வீஸாக்கள் செய்யலாம். இதையே அச்சில் வைத்து ஊத, ஸோடா வாடர் புட்டிகளாகவும், மருந்து வீஸாக்களாகவும் வேண்டிய உருவத்துடன் செய்யலாம். அச்சிலேயே



தகுந்த எழுத்துக்களுக்கு இடம் விட்டிருந்தால், வீஸாவில் அவ்வெழுத்துக்கள் பதித்ததுபோல் தென்படும். இக்குழம்பை நீண்ட கரண்டிகளில் எடுத்து அச்சுகளில் வார்த்து அமிழ்த்த கண்ணாடி ஓடுகள் உண்டாகும். இந்த ஸாமான்கள் செய்தவுடன் வெளியில் வைத்திருந்தால், காற்றுப் பட்டுக் குளிர்ந்து போகும்போது உட்புறத்தைவிட மேல்தட்டுகள் அதிக சீக்கிரம் குளிர்ந்து போவதால், முன்கூறியபடி உடைந்துபோகும். ஆதலால், இவைகளைச் செய்தவுடன் சூடாக்கி வைக்கப்பட்ட அறைகளில் வைத்து மூடி மெதுவாகக் குளிரச் செய்து இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு அவைகளை வெளியே எடுத்து விற்பனைக்கு அடுக்கி வைப்பார்கள். கண்ணாடி செய்வதற்குச் சேர்த்த மணல் இரும்பு ஸம்பந்தப்படாமல் இருந்ததானால், தெளிவான கண்ணாடி உண்டாகும். ஸாதாரணமாய்க் கிடைக்கும் மணலில் அதிக மஷ்டுகள் இருப்பதாலும், அதில் இரும்பு மஷ்டு கொஞ்சமேனும் கலந்தே இருக்குமானதாலும், ஸாதாரணக் கண்ணாடி ஸாமான்கள் கொஞ்சம் நீல நிறமுடையனவா யிருக்கின்றன. மூக்குக் கண்ணாடி முதலானவைகளுக்கு உபயோகிக்கும் தெளிவான கண்ணாடிகளுக்கு இரும்பு மஷ்டு போக்கிய மணல் அவசிய மாதலால், இப்பளிங்குக் கண்ணாடிகளின் விலை அதிகம். கண்ணாடி செய்யும்போது தாம்ர ஸன்னத்தைச் சேர்த்தால், சிவப்பு நிறமுள்ள கண்ணாடி உண்டாகும். மற்ற வர்ணங்களுக்கு அவற்றிற்கு ஏற்ற உலோக ஸன்னங்களை உபயோகிக்கவேண்டும்.

எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ்.

## ROW PLANTING.

BY

S. VAIDYALINGAM PILLAI.

## பத்தி நடவு.

இதைப்பற்றி ஸர்க்கார் விவசாயப்பண்ணை மானேஜராகிய, ம-ா-ா-ஸ்ரீ. வி. நாராயண சாமி அய்யர் அவர்கள் விடுத்த வ்யாஸம் பிழைக்கும்வழியின் முன் ஒரு ஸஞ்சிகையில் வெளிவந்திருப்பதை நேயர்கள் நன்கறிந்திருப்பார்களாயினும், "கெஜ நடவு" என்று சொல்லப்படும் 'பத்தி நடவு' போன்ற முன்னேற்றமுடைய நவீன விவசாய வ்யாஸங்களும், அனுபவங்களும், அபிப்ராயங்களும், ப்ரதி மாதம் ப்ரதி பக்கமும் காணப்பட்டாலும் தற்கால விருப்பத்துக்கு அவை போதுமானதாகா. ஆதலால் இதைப் பரீக்ஷித்த ஒவ்வொருவரும் தங்களது அனுபவத்தை வெளியிட்டு உபகரிப்பார்களாயின் மிக உபயோகமாகும். முதலாவதாக எனது அனுபவத்தையும், மற்றும் அதன் ஸம்பந்தமான சில முக்கிய விஷயங்களையும் இதன் கீழ் எழுதுகிறேன்.

சென்ற வருஷம் நடவு முடியும் ஸமயத்தில் ஷை மானேஜரவர்களும் இன்னும் சிலரும் கெஜ நடவு நட்டுப் பார்க்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அப்போது ஒரு சிறு துண்டு விதை விடப்பட்ட நாற்றங்காலைத் தவிர வேறு தக்க இடமில்லை.

இடம்:—தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலூகா களத்தூர்-மேல்கரை கிராமத்தில் இயற்கையாகக் கொஞ்சம் கொழுமையுள்ள (விதைவிட்டு நாற்றுப்பறிக்கப்பட்ட 50 குழி) 17 ஸெண்டு நாற்றங்காலே யாகும்.

செய்நேர்த்தி:—மண் வெட்டியால் நன்றாகக் கொத்தி மேடுபள்ள மில்லாமல் ஒத்தடி

செய்து மூன்று சால் உழுது வேண்டுமான அளவு ஆடாதொடை தழை போட்டு மிதித்து பின்பு 3. சால் உழப்பட்டது. இவ்வேலைகள் 14. நாள் அளவில் நடந்ததால் சேர் நன்றாகக் கறுத்து ஆழமாகவும் நைவாகவு மிருந்தது.

நடவு:—16-9-19-10-ல் நூல்பிடிக்கப்பட்டு ஒரு பத்தியிலிருந்து மற்றொரு பத்திக்கு $1\frac{1}{2}$ அடியும் ஒரே பத்தியில் ஒரு நாற்றுக்கும் மற்றொரு நாற்றுக்கும் 1 அடியுமாக நடப்பட்டது. ஒவ்வொரு வரிசையாக நட்டாலும் வழக்கப்பட்டால் நடவு வேலை மிக துரித மாகும்.

தண்ணீர் பாய்ச்சுதல்:—நட்ட முதல்வாரத்தில் 1. அங்குல அளவும், 2. 3-ஆம் வாரத்தில் $1\frac{1}{2}$ அங்குலமும் அதன் மேல் 2 அங்குலமும் ஜலம் நிறுத்தப்பட்டது. 2 அங்குலத்துக்கு மேல் ஜலம் நிறுத்தப்பட வில்லை. 1 அங்குல அளவு ஜலம் நிறுத்தினால் சேர் நைவாகவும் தழையும் ஸமர்த்தியாய்ப் போடப்பட்டிருந்ததால் 4. 5. நாளைக்குப் பிறகே மறு ஜலம் பாய்ச்சப்பட்டது. அவ்வருஷம் தண்ணீர்த் தட்டில்லை. ஆனாலும், தகுந்த காலத்தில் மழை இல்லாதது குறைவேயாகும்.

பின் நடந்தவை:—நட்டு 12-வது நாள் முதல் கிளை கட்ட ஆரம்பித்தது. கிளை முழுவதும் கட்டி முடிவதற்குள் ஒவ்வொரு முதலுக்குப் பிண்ணாக்குக் கலந்த எரு வைக்கவேண்டு மென்றிருந்தும் யாதொன்றும் வைக்கப்பட வில்லை. ஒவ்வொரு முதலையும் மிதித்துக் கொடுத்ததைத் தவிர வேறொன்றுஞ் செய்யப்படவில்லை. ஆனாலும், இயற்கையிலே கொஞ்சம் கொழுமையுள்ள நில மாதலால் 70 முதல் 120 வரையில் கிளை வெடித்திருந்தது. தூர் அடர்ந்து கட்டியிருந்ததைப் பார்க்க பச்சென்றும் ஆனந்தமாயும் மனோகரமாயு மிருந்தது. நடவு நட்ட முதலில் பார்த்துப் பரிகசித்த பக்கத்தவர்கள் ஆச்சர்ய முற்று அடுத்த வருஷம் தாங்களும் செய்வதாக சொல்லிக்கொண்டு அடிக்கடி பார்த்துப் போவார்கள். பின்பு, கதிர் கண்டதானது, கொத்துக் கொத்தாய் நடுவதில் முதல் ஒன்றுக்கு ஒன்றல்லது இரண்டு கதிரே வாளிப்பாயிருக்கும். இவை அவ்வித மிராமல் ஒன்றைப்போலவே மற்றெல்லாக் கதிரு மிருந்தது கவனிக்கத் தக்கது.

மாசூல்:—கொத்தாய் நட்ட முதல் வருஷத்தில் (5 கலம்) 120 பட்டணம் படி கண்டது. கெஜநடவு அறுப்பில் ($13\frac{1}{2}$ கலம்) 324. படி கண்டது. கதிர் 15 அங்குல நீளமுள்ளதாயும் அதன் நெல் $2\frac{1}{2}$ நூ இடை உள்ளதாயு மிருந்தது. பக்கத்து வயலில் நன்றாயிருந்த 15 அங்குல நீளமுள்ள கதிரிலிருந்ததைவிட இதில் கதிர் 1க்கு 95 நெல் கூடவும், ஒரு ரூபாய் நிறையில் 24 நெல் குறைவாயு மிருந்தது.

குறிப்பு:—திருக்கருகாவூரில் செய்ததாக ஷை மானேஜரவர்கள் தெரிவித்த படிக்கு நடப்படுமுன் நாற்று வைக்கு மிடத்தில் ஒரு சிரங்கை மணலுடன் ஒரு சிரங்கை தொழு எருவும் வைக்கப்படவில்லை. பிறகு எடுக்கும் ஸமயத்தில் பிண்ணாக்கு முதலிய சிகண வஸ துள்ள) எரு வைக்கப்படவில்லை. ஆயினும் முதலில் போடப்பட்ட ஆடாதொடை தழை ஒருவாறு சிறந்த எருவாகு மென்பது என தபிப்பிராயம். திருக்கருகாவூரில் கண்டதாக சொல்லப்பட்டது ஏகருக்கு 1522 பட்டணம் படி எனது பரீக்ஷையில் கண்டது 1944 படியாகும். திருக்கருகாவூரில் செய்துள்ள படி எரு முதலியவை வைக்கப்பட்டிருந்தால் இன்னம் ஜாஸ்தி மாசூலைப் பார்த்திருக்கலாம். எரு விடுவ தென்பது நிலத்தின் தன்மைக் கேற்றதாகும். ஆகவே, இதனால் பிடிப்பிடியாய் நடும் வழக்கமுடைய தஞ்சை விவஸாயிகள் முக்கியமாய் அறிய வேண்டியதாவது, ஒரே அலகுக்கு எவ்வளவு இடம் வேண்டிய தென்பதை நன்குணர வேண்டுமென்பதே.



கெஜநடவின் முறை.

1 கெஜ நடவு நடப்படும் நிலம் சிறு சிறு தாக்குகளாயும் மேடு பள்ள மில்லாததாயும் நாலு பக்கமும் சுற்றி வரத்தக்க வரப்புடையதாயு மிருத்தல் வேண்டும். தாக்கு ஒன்று அரை ஏகராவுக்கு மேற்படா திருத்தலே நலம்.

2. வயலுக்கு ஸமீபத்தில் ஏகருக்கு 25 வண்டி மணலும், 12 வண்டி தொழு எருவும் சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். வயலில் ஜலம் விட்டு கொத்தி உழுது சேடை செய்வதில் சேர் ஆழமாயும், கருப்பாயும், நைவாயு மிருத்தல் வேண்டும்.

3 ஒரு ஏகர் நட முக்கால் அல்லது ஒரு பட்டணம்படி விதை விடப்பட்ட நாற்றுப் போதுமானதாகும். 1 படி விதையை தகுந்த விதம் உரமேற்றப்பட்ட 3 ஸெண்டு நாற்றங்காலில் விட்டு 30, 32 நாளுக்குள் பறித்துவிடும் நாற்றே ஏற்றதாகும்.

4. நடும் வயலின் கீழ் வரப்பிலிருந்து மேல் வரப்புக்கு நூல் பிடிக்கப்பட்டு பத்திபத்தியாய் நடுவதில் பத்திக்கிப் பத்தி $1\frac{1}{2}$ அடி அகலமும், ஒரே பத்தியில் ஒரு நாற்றுக்கும் மற்றொன்றுக்கும் 1 அடி அகலமு மிருத்தல் வேண்டும். நடுமுன் முதல் வைக்கு மிடத்தில் (முன் சேமித்து வைக்கப்பட்டுள்ளதில்) ஒரு சிராங்கை மணலும், ஒரு சிராங்கை எருவும் வைத்து மண், எரு, மணல் மூன்றுமாகச் சேரும்படி நன்றாகக் கலந்து அதன்மேல் பட்டை உரப்புள்ள ஒரே அலகு வைத்தல் வேண்டும். மணல் வைப்பது மண்ணின் இயல்புக்குத் தக்கவாறு வைப்பதே முறையாகும்.

5. நட்ட 20-ம் நாள் இடைவெளியை மண் வெட்டியால் கைத்தாங்கலாகக் கொத்தி ஏதேனும் அகப்பட்ட தழையைப் போட்டு மிதித்தும், அதன் 20, 25 நாளில் ஒவ்வொரு முதலையும் சுற்றிப் பறித்து I ஸெண்டுக்கு 9 சேர் பிண்ணாக்கு வீதம் எருவுடன் கலந்து வைத்து பறித்த மேல் மண்ணால் மூடவேண்டும்.

6. ஜலம் பாய்ச்சுவதில் எக்காரணத்தை முன்னிட்டும் 2, 3 அங்குலத்துக்கு மேல் நிறுத்தக்கூடாது. கொஞ்சங் கொஞ்சமாக தினம் பாய்ச்சுவதே நலம்.

7. 4-வது பாராவில் சொல்லியது ஒரு போக நடவாகும். இருபோகத்துக்கு, சாலுக்கு சால் $2\frac{1}{3}$ அடி விட்டு பாங்கு, குருவை, பூங்கார், ஸ்வர்ணவாரி முதலிய இருபோகப் பயிரை நட்டு, கதிர் ஓத்தளித்தவுடன் இடைவெளி ஸரி பாதியில், வெள்ளைச் சிறுமணியன், செம்பாளை முதலியவைகளை நடவேண்டும். முதலில் நட்டது கதிர் முற்றியவுடன் மேலாக அறுத்துக்கொண்டு, அடித்தாளை இரண்டாம் போகப் பயிருக்கு பசும் எருவாக வெட்டி மடித்தல் வேண்டும். மற்ற எரு விதை தண்ணீர் பாய்ச்சுவது முதலியவைகள் முற்சொன்னவைகளேயாகும். முதலில் பாங்கு நடுவதே உத்தமமாகத் தெரிகிறது.

"நீருயர நெல்லுயரும்" என்ற தமிழ் நாட்டுப் பழமொழிக்கும், வரப்புப் பொழியும் படியான அளவு ஜலங் கட்டும் தஞ்சை ஜில்லாவழக்கத்திற்கும்இந்த கெஜ நடவு தண்ணீர் பாய்ச்சும் விஷயத்தில் நேர் விரோதமாகிறது. ஜாஸ்தியாக ஜலம் கட்டினால் கிளை கட்டாது. ஜாஸ்தியாக ஜலம் கட்டினால் மாசூல் அதிகப்படுமென அனுபவசாலிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். இதில் அறிந்தவர்களின் அபிப்பிராயம் விரும்பத் தக்கதாகும்.

6, 7வருஷத்துக்குமுன் ம—ா—ா—ஸ்ரீ ஆபரணம் பிள்ளை என்பவரால் ஒற்றை அலகுஸாகுபடி வெளிவந்து நாளடவில் எங்கும் பரவி நல்ல பலனை அளித்து வருகிறது. இப்போது திருக்கருகாவூர் ஸ்ரீமான் டி. எஸ். நாராயணசாமி அய்யரவர்கள் கெஜநடவைக் கண்டு பிடித்து நினைத்திராத அளவு மாசூலை அதிகமாக்கினார். தமிழ் நாட்டுக்கு இவ்விருவரும் உள்ளபடியே பேருபகாரம் செய்த பரோபகாரிகளாவார்கள்.

எஸ். வைத்தியலிங்கம் பிள்ளை.

## IS THE CHILD INTELLIGENT OR DULL ?

## குழந்தை சமத்தா, அசடா ?

காக்கைக்குத்தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பதுபோல ஒவ்வொரு தாயாரும் தன்னுடைய குழந்தை ஒவ்வொன்றும் சமத்தென்றே எண்ணுகிறாள். ஆனால், உலகத்தில் மற்றவர்களெல்லாரும் அப்படியே நினைக்கிறதில்லை. ஒரு குழந்தை சமத்தா அல்லது அசடா என்பதைக் கண்டு பிடிப்பது சுலபமல்ல. ஆயினும் ப்ரொபஸர் பைநெட் என்னும் ஒரு ப்ரான்ஸ் தேசத்து சாஸ்த்ர நிபுணர் பின்வருமாறு செய்து பார்த்தால், குழந்தைக்கு வயதானதற்குத் தக்கபடி புத்தி இருக்கிறதென்பதும், இல்லை என்பதும் தெரியுமென்றார். இவர் சொல்லுவதை எல்லாரும் ஒருகால் அங்கீகரிக்க மாட்டார்கள். இருந்தாலும் கூடியவரையில் பைநெட் சாஸ்திரி சொல்லும் யுக்தி ஸரி என்றே சொல்லலாம். தவிர அவர் சொல்லுவதை எல்லாரும் சிரமம் இல்லாமல் செய்து பார்க்கலாம்.

ஒரு வயது இரண்டு வயதுக் குழந்தைகள்.

1. கண்ணுக்கு எதிரே விளக்கைப் பிடித்து விளக்கை நகர்த்திக்கொண்டே போனால், குழந்தை விளக்கையே பார்க்கும்.

2. சிறு கட்டை முதலியவைகளைக் கையில் கொடுத்தால், அதைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளும். கையை விடும், மறுபடி பிடித்துக்கொள்ளும்.

3. பொம்மை போன்றதைத் தொங்கவிட்டிருப்பதைப் பார்த்தால், அதைப் பிடிக்கும்.

4. கற்கண்டையும், வேறு கட்டியையும் கலந்து வைத்திருந்தால், கற்கண்டைப்பொறுக்கிக்கொள்ளும்.

5. கற்கண்டைக் குழந்தைக்கு முன்னால் காகிதத்தில் சுற்றிக் கொடுத்தால் காகிதத்தை பிரித்து கற்கண்டை எடுத்துக்கொள்ளும்.

6, போ, வா, போன்ற ஸாதாரண ஏவல்களைச் செய்யும். ஒருவன் உட்காருவது, படுத்துக்கொள்வது போன்றவைகளையும் செய்யச் சொன்னால் செய்யும்.

மூன்று வயது.

1. ஒரு படத்திலோ, அல்லது தேகத்திலோ, மூக்கைக் காட்டு, நாக்கைக் காட்டு என்று சொன்னால், அவைகளைத் தொட்டுக் காட்டும்.

2. ஆறு அசைகளுள்ள ஸுலபமான வாக்கியத்தைச்சொல்லித் திருப்பிச் சொல்லச் சொன்னால், தவறில்லாமல் சொல்லும்.

3. இரண்டு எண்களைச் சொல்லித் திருப்பிச் சொல்லச் சொன்னால் சொல்லும்.

4. ஒரு படத்தைக் காட்டினால் நாள்தோறும் அதில் கண்ணுக்குத் தென்படும் வஸ்துக்களைச் சொல்லும்.

5. நீ யார் பிள்ளை என்று கேட்டால், பதில் சொல்லும்.

நான்கு வயது.

6. தான் புருஷன் பெண் என்பது தெரியும்.

7. திறவுகோல், பைஸா, பேனாக்கத்தி, முதலியவைகளைக் காண்பித்தால், அவைகள் இன்னவைகளென்று சொல்லும்.

8. மூன்று எண்களை ஒரு தடவை சொல்லிவிட்டு அவைகளைச் சொல்லச் சொன்னால், தவறாமல் சொல்லும்.

9. காலே அரைக்கால் அங்குலம் ஏற்றக் குறைவான இரண்டு கோடுகளில் எது பெரிது எது சிறிது என்று சொல்லும்.



ஐந்து வயது.

10. மூன்று நெல் எடை, பன்னிரண்டு நெல் எடை, ஆகிய இரண்டு எடைகளில் எது என்னவென்று சொல்லும்.

11. ஒரு சதுரக் கட்டத்தைக் காண்பித்து அதைப்போல் எழுதச் சொன்னால், ஸுமாராக எழுதிவிடும்.

12. ரெக்டாங்கிள் அதாவது தீர்க்க சதுரம் என்னும்படியான ஒரு கார்டை ஒரு மூலையிலிருந்து எதிர் மூலை முடிய வெட்டி இரண்டு முக்கோணங்களாக்கிக் கொடுத்தால், அந்த இரண்டு முக்கோணக் கார்டுகளையும் சேர்த்து முன்போல் தீர்க்க சதுரமாக்கிவிடும்.

13. நான்கு காசுகளை எண்ணும்.

ஆறு வயது.

14. வலது கை இன்னது, இடது காது இன்னதென்று காண்பிக்கும்.

15. பதினாறு அசைகளுள்ள ஸுலபமான வாக்கியங்களைச் சொன்னால், திருப்பிச் சொல்லும்.

16. படங்களைக் காண்பித்தால், இன்ன முகம் அழகென்றும், இன்ன முகம் அபஸ்மாரமென்றும் சொல்லும்.

17. நாற்காலி என்பது என்னவென்று கேட்டால், நாம் உட்காருகிறோமே அது என்றும், குதிரை என்பது என்னவென்று கேட்டால், வண்டியிலே ஓடுகிறதே அது என்றும், இந்த மாதிரியாக ஐந்து விஷயங்களைக் கேட்டால், மூன்றுக்கு ஸரியாக பதில் சொல்லும்.

18. மூன்று காரியத்தை ஒரேதடவையில் ஏவினால், அவைகளைச் செய்யும்.

19. தன்னுடைய வயது இன்னதென்று தெரியும்.

20. காலமே ஸாயந்திரம் என்பது தெரியும்

ஏழு வயது.

21. கண், மூக்கு, வாய், கை, இவைகளில்லாத படங்களைக் காண்பித்தால், ஒவ்வொன்றிலும் இன்னது இல்லை என்று சொல்லும்.

22. எண்ணாமல் வலது கையில் இத்தனை விரல், இடது கையில் இத்தனை விரல், இரண்டு கைகளிலும் இத்தனை விரலென்று சொல்லும்.

23. நாம் ஒரு வார்த்தையை எழுதி அதைப்போல் பேனாவால் எழுதச் சொன்னால், எழுதினது நாம் வாசிக்கக்கூடியதாயிருக்கும்.

24. நான்கு கோடால் அடைத்த ஒரு படத்தை எழுதிக் காட்டினால், ஸுமாராக அப்படியே எழுதும்.

25. நாம் ஒரு தடவை ஒவ்வொரு எண்ணுக்கும் அரை ஸெக்கண்டு நிறுத்தி ஐந்து எண்களைச் சொன்னால், அவைகளை ஸரியாகத் திருப்பிச் சொல்லும்.

26. மேலே நாலாவது ஐட்டத்தில் சொன்ன படங்களை விவரித்துச் சொல்லும்.

27, பதின்மூன்று காசுகளை எண்ணும்.

28, ரூபாய், அணா, பைஸா, கால் ரூபாய் இவைகளை இன்னின்னவை என்று சொல்லும்.

எட்டு வயது.

29. நெருப்புப் பிடித்ததைப் பற்றி ஏழு வரிகளை வாசித்துவிட்டு அதிலுள்ள இரண்டு விஷயங்களை ஸரியாகச் சொல்லும்.

30. ஒன்றொன்றாயுள்ள மூன்றும், இரட்டையாயுள்ள மூன்றும், ஆக மொத்த ஆறு ஸ்டாம்புகளை 15 ஸெக்கண்டில் எண்ணி மொத்த விலையைச் சொல்லும்.

31. இது சிவப்பு, இது பச்சை, இது நீலம், இது மஞ்சள் வர்ணம் என்று சொல்லும்.

32. 20 முதல் தலை கீழாக 0 வரையில் 20 ஸெக்கண்டில் எண்ணும். ஒரு பிசகுக்கு மேல் இராது.

33. ஸுலபமான வார்த்தைகளைச் சொன்னால், அவைகளை எழுதும். அவைகளை நாம் வாசிக்கலாம்.

34. காகிதத்துக்கும் துணிக்கும் என்ன வித்தியாஸம், மரத்துக்கும் கண்ணாடிக்கும் என்ன வித்தியாஸம், என்று இப்படி மூன்று கேள்விகள் கேட்டால், இரண்டுக்கு ஸரியாக இரண்டு நிமிஷத்தில் பதில் சொல்லும்.

ஒன்பது வயது.

35. ஒரு நாள் இன்ன கிழமை இன்ன தேதி என்று சொல்லும்.

36. பத்து ஸெக்கண்டில் வாரத்து ஏழு கிழமைகளையும் ஸரியாகச் சொல்லும்.

37. ஒரு அணாவுக்கு ஸாமானை வாங்கிக்கொண்டு கால் ரூபாயைக் கொடுத்தால், பாக்கி சில்லரையை ஸரியாகக் கொடுக்கும்.

38. மேலே பதினேழாவது ஐட்டத்தில் சொன்னவைகள் இன்ன வென்று விரிவாகச் சொல்லும்.

39. மேலே 29-வது ஐட்டத்தில் வாசித்த ஏழு வரியிலிருந்து ஆறு விஷயங்களைச் சொல்லும்.

40. பார்வையிலும் பருமனிலும் ஒன்று போன்ற 6, 9, 12, 15, 18 ரூபாய் எடையுள்ள ஆறு பெட்டிகளைக் கொடுத்து, மூன்று நிமிஷத்தில் எடைத் தரவாரியாய் மூன்று தடவைக்குள் வைக்கச் சொன்னால், இரண்டாம் தடவையில் ஸரியாய் வைத்துவிடும்.

பத்து வயது.

41. கிரமமாக மாஸத்தைச் சொல்லச் சொன்னால், 15 ஸெக்கண்டில் சொல்லும். ஒரு மாஸத்தை விட்டுவிடும். அல்லது முன் பின்னாகச் சொல்லும்.

42. ஒன்பது நாணயங்களைக் கொடுத்தால் இன்னின்னது இன்னின்ன தென்று 40 ஸெக்கண்டில் சொல்லும்.

43. மூன்று வார்த்தைகளைச் சொல்லி அவைகளை இரண்டு வாக்கியத்தில் உபயோகிக்கச் சொன்னால் உபயோகிக்கும்.

44. ஒருவன் ரெயிலுக்குப் போனான் ரெயில் தப்பிப்போய்விட்டது. அல்லது விளையாடும்பொழுது ஒரு பையன் இன்னொருவனை வேணுமென்றல்லாமல் இடித்து விட்டான். அல்லது ஒருவன் இன்னொருவனுடைய பொம்மையை உடைத்துவிட்டான். இப்படிப்பட்ட கேஸ்களில் என்ன செய்கிறதென்று கேட்டால், இரண்டுக்கு ஸரியான ஸமாதானம் சொல்லும்.

45. ஸ்கூலுக்கு நேரங்கழித்துப் போனால், என்ன செய்யவேணும், அல்லது ஒரு முக்கியமான காரியத்தை ஆரம்பிப்பதற்கு முன் என்ன செய்யவேணு மென்று சொல்லும்.

பதினோரு வயது.

46. ஒவ்வொன்றிலும் முன்பின் உதையும்படியாக ஐந்து விஷயங்களைச் சொன்னால், மூன்று விஷயங்கள் ஸரியல்லவென்று இரண்டு நிமிஷத்தில் சொல்லும்.

47 மூன்று வார்த்தைகளைக் கொடுத்து ஒரு வாக்கியத்தில் உபயோகிக்கச் சொன்னால், உபயோகிக்கும்.

48 மூன்று நிமிஷத்தில் எத்தனை வார்த்தைகள் தெரியுமோ, அவைகளைச்சொல் என்று கேட்டால், 60 வார்த்தைகளுக்குக் குறையாமல் சொல்லும்.

49. தர்மம், நியாயம், நல்ல ஸ்வபாவம் என்பவைகள் என்ன வென்று கேட்டால், மூன்றில் இரண்டுக்குத் திருப்தியாக பதில் சொல்லும்.

50. எட்டு வார்த்தைகளடங்கிய வாக்கியங்களிலுள்ள வார்த்தைகளைக் கலைத்து நிமிஷத்துக்கு ஒரு வார்த்தையாகச் சொன்னால், அவைகளைக் கிரம வரிசையாகச் சொல்லும்.

பன்னிரண்டு வயது

51. ஒரு தடவை சொல்லக் கேட்ட ஏழு எண்களைக் கேட்ட வரிசையாகவே திருப்பிச் சொல்லும்.

52. 'ஓபே' என்னும் வார்த்தையைப் போல் பிராஸமுள்ள மூன்று வார்த்தைகளை ஒரு நிமிஷத்தில் சொல் என்றால் சொல்லும்.

53. 26 அசைகளுள்ள வாக்கியங்களைத் தவறில்லாமல் திருப்பிச்சொல்லும்.

54. சில ஸங்கதிகளைச் சொல்லி அவைகளிலிருந்து என்ன தோன்றுகிறதென்று கேட்டால், எதை அனுமானிக்க வேண்டியதோ அதைச் சொல்லும்.



## SWADESHI SOAP POWDER.

BY

T. C. V. RAMANA AIYAR.

## சுதேசி ஸோப்புப் பொடி.

பூர்வ காலந்தொடங்கி நமது தென்னிந்தியாவில் ஜனங்கள் தங்களுடைய உடம்பு அழுக்கைப் போக்கவும், தலைக்குத் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும் ஊஞ்ச மரத்து இலை, பூச்சக்காய், சீயக்காய், இலுப்பைப் பிண்ணாக்கு முதலியவைகளையும், மலையாளத்தில் ஒருவகைக் கிழங்கையும், நீலகிரியில் தொரக்கோல் என்ற செடியின் தண்டையும், வட இந்தியாவில் பெரிய நதிகளில் படியும் மண்ணையும் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இப்படியே நமது இந்தியாவில் உடம்பு அழுக்கைப்போக்கத் தக்க பல இயற்கைப் பொருள்களிருக்கின்றன. மேற்சொன்ன பொருள்கள் ஒவ்வொன்றையும் யாமே பல தடவைகளில் தேய்த்து ஸ்நானஞ் செய்திருக்கிறோம். இவைகள் ஒவ்வொன்றிற்கும் வெண்மையான நுரையைக் கிளப்பும்படியான ஸத்தும், உடம்பு அழுக்கைப் போக்கி தோலை வரட்டாமல் காக்கத்தக்க பசையுமிருக்கிறதுடன், உடம்பு, சிரசு, கண் முதலியவைகளுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் குணமும் இருக்கிறது. ஆனால், தற்கால நாகரிகத்தில் பழகியவர்கள் ஸோப்புக் கட்டிகளை எவ்வளவு ப்ரியமாய் தகுந்த டப்பாக்களில் போட்டு வைத்துக்கொண்டு உபயோகிக்கிறார்களோ, அந்த மாதிரி மேற்கூறிய பொருள்களை உபயோகிக்கத் தகுந்த விதமாய் அவற்றை உருவ மாற்றாததே பெருங் குறைவென நினைக்கவேண்டி யிருக்கிறது. தற்காலத்தில் நம் தேசத்தில் நடமாடும் பல ஸோப்புகளில் சிரேஷ்டமானவைகளில் பலவற்றை யாம் உபயோகித்துப் பார்த்ததோடு ஸோப்புகளில் அதிக பழக்கமுள்ள பலரிடத்திலும் அபிப்ராயம் கேட்டதிலிருந்து சொல்லக் கூடிய தென்னவென்றால், ஒரு ஸோப்பாவது யாம் மேற்கூறிய இயற்கைப் பொருள்களின் சிறந்த குணங்களை யுடையதல்ல என்பதே. தவிர, பல ஸோப்புகள் தேகத்தில் தேய்த்து ஸ்நானஞ் செய்யும்பொழுது ஒரு வாஸனையையும் முறமுறப்பையும் கொடுத்தாலும், சற்று நேரம் சட்டைகளை யணிந்துகொண்டிருந்தால், ஒருவிதமான துர்வாஸனையுடன், தேகத்திற்கு அதிக சூட்டையு முண்டாக்கி நீர்க்கடுப்பு, நித்திரையில் இந்திரியத்தை வெளிப்படுத்தல் முதலிய பெருங் கேடுகளை விளைவிக்கிற தென்று பலர் கூறுகிறார்கள்.

ஆகையால், நமது தேசம் போன்ற உஷ்ண பூமியி லிருப்பவர்கள் ஸோப்புகளைத்தேய்த்து ஸ்நானஞ் செய்யவேண்டிய அவசியமில்லை. இங்கிலாந்து ஐரோப்பா போன்ற குளிர் தேசங்களி லிருப்பவர்களுக்கு தேகத்திலுண்டாகும் அசுத்தங்கள் வியர்வை நீராக வெளிப்படுதல் அதிக கஷ்டமானதால், அவர்கள் தோலுக்குச் சூட்டை யுண்டாக்கக் கூடிய ஸோப்புக் கட்டிகளைத் தேய்த்து ஸ்நானஞ் செய்ய வேண்டியது அவசியமா யிருக்கிறது.

ஆனால் உஷ்ண தேசமாகிய இத்தேசவாஸிகளுக்கோ தேகத்திற்கும், சிரஸிற்கும் கண்களுக்கும் தகுந்த விதமான குளிர்ச்சியை யுண்டாக்கத்தக்க ஒருபொடி அவசிய மென்போம். ஏனென்றால், முக்யமாய் ஜனங்கள் ஸ்நானஞ் செய்வதென்றால், கையினாலேயே தேகத்தைத் தேய்த்து, தண்ணீரையோ, வெந்நீரையோ, உபயோகித்துக் குளித்துவிடுவது வழக்கம். இப்படிச் செய்வதால், தேகத்திலுள்ள அழுக்குகள் செவ்வையாக நீங்கமாட்டா. அதற்காக ஒரு பொடி அவசியமே யாகும். அந்தப் பொடியை கடைகளிலாவது ஷாப்புகளி

லாவது விலை கொடுத்து வாங்க வேண்டியதில்லை. நாமே நமது வீடுகளில் அநேகமாய் உபயோகமில்லையென்று கழித்துவிடுகிற சில பொருள்களிலிருந்து வெகு எளிதாகச் செய்துவைத்துக்கொண்டு உபயோகித்து வரலாம். யாம் பலவித ஸோப்புகளைப் பலநாள் உபயோகப்படுத்தியும்நீடித்திருக்கும்படியான யாதொரு பிரயோஜனத்தையும் பெறாததால், கடைசியாக கீழே காணும் பொடியைத் தயாரித்து மூன்று வருஷ காலமாய் உபயோகித்து வருகிறோம். இது தேகத்திலுள்ள அழுக்கைச் செவ்வையாகப் போக்கி, தோலை மெதுவாக்கியும், பசையுள்ளதாகச் செய்தும், உடம்புக்கும், சிரஸுக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைக் கொடுத்தும், யாதொரு கெடுதியையும் விளைவிக்காமலிருக்கிறது. இந்த முறையைப் பலருக்குச் சொல்லி அவர்களையும் செய்து உபயோகிக்கும்படி கோரிக்கொண்டதில், அப்படியே தயார் செய்து உபயோகித்தவர்களும் மினுக்காகவும் தளுக்காகவும் பார்வைக்குக் காணப்படுகிற ஸோப்பையகற்றி இந்தப் பொடியைப் பற்றி சிறந்த அபிப்பிராயம் கூறுகிறார்கள்.

பொடி செய்யும் விதம்.—நமது வீடுகளில் உடைத்துப் பருப்பாகத் தயார்செய்யப்படுகிற அல்லது குத்தித் தீட்டுகிற பச்சைப்பயறு, துவரை, கடலை, அவரை, இவைகளிலிருந்து கிடைக்கப்பட்ட குருணையல்லது நொய்யை எடுத்துச் சேகரித்து, வெயிலில் உலர்த்தி, மாவாக அரைத்து வைத்துக்கொள்ள வேண்டியதே. இதில் பச்சைப்பயரின் பொட்டையும் சேர்க்கலாம், மற்ற கடலை, துவரை, அவரைப் பொட்டுகள் சேர்க்கைக்கு அவ்வளவு நலமானவைகளல்ல. இந்தப் பொடியே உடம்பு தேய்த்து ஸ்நானஞ் செய்யத் தகுந்த சுதேசி ஸோப்புப் பொடியாகும். இதோடு அரப்பு என்ற ஊஞ்சல் மரத்து இலைப் பொடியையும் சேர்த்துக்கொண்டால், தலைக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்வதில் உபயோகிக்கத்தக்க திவ்யமான பொடியாகும். கண்களுக்கு நல்ல குளிர்ச்சியையும் தெளிவையும் கூரியபார்வையையும் கொடுக்கும். ரோமத்தை மெதுவாக்கி, பளபளப்பைக் கொடுப்பதில் இதற்கு நிகர் வேறில்லை. பணச் செலவு இல்லாததும் நமது வீட்டு ஸ்திரீகளே வெகு எளிதாய் செய்துகொள்ளக் கூடியதுமான இந்தப் பொடியைச் செய்து பாருங்கள்; பிழைக்கும் வழியைத் தேடுங்கள் !

டி. வி. வி. ரமணய்யர்.

---

## THE CONSTITUTION OF THE REGISTRATION DEPARTMENT.

## ரெஜிஸ்ட்ரேஷன் இலாக்காவின் அமைப்பு.

போன ஜூன் மாஸத்து ஸஞ்சிகையில் ரெஜிஸ்ட்ரேஷன் இலாக்காவின் ஆரம்பம் நோக்கம் இவைகளைப்பற்றிச் சொன்னோம். இப்பொழுது அதன் அமைப்பை பற்றிப் பேசுவோம்.

ரெஜிஸ்ட்ரேஷனுக்காக, சென்னை ராஜதானி முழுவதும் 22 ஜில்லாக்களாகவும், 470 க்கு அதிகமான "ஸப்டிஸ்ட்ரிக்டு" எனப்படும் உள் ஜில்லாக்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஸப்டிஸ்ட்ரிக்டுக்கு ஒவ்வொரு ஸப்ரெஜிஸ்ட்ராரும், ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டுக்கு ஒவ்வொரு ஜில்லா ரெஜிஸ்ட்ராரும் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒரு ஜில்லாவுக்குள் அடங்கிய ஸப்ரெஜிஸ்ட்ரார் அனைவரும் அந்த ஜில்லா ரெஜிஸ்ட்ராருடைய மேல் விசாரணைக்கும் மேலதிகாரத்துக்கும் உட்பட்டு, தம்முடைய ஆபீஸ் அலுவல்களை நிறைவேற்ற வேண்டும். ஜில்லா ரெஜிஸ்ட்ரார் அனைவரும், ராஜதானி முழுவதுக்குமாக நியமிக்கப்பட்டிருக்கும் ரெஜிஸ்ட்ரார் ஜெனரல் என்னும் ப்ரதான உத்யோகஸ்தருக்கு அடங்கி வேலை பார்க்க வேண்டியவராவார்கள். ஆபீஸ்களை மேற்பார்வை பார்ப்பதில் உதவி செய்வதற்காக ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ் இன்ஸ்பெக்டர் என்ற ஒரு உத்யோகஸ்தர் ரெஜிஸ்ட்ரார் ஜெனரலுக்கு உதவியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஸாதாரணமாக, பீ. ஏ. பட்டப் பரீக்ஷையில் தேறியவர்களிலிருந்தே ஸப்ரெஜிஸ்ட்ரார்கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் காயம் ஸப்ரெஜிஸ்ட்ரார்களாக நியமனம் பெறுவதற்கு முன்னால், ஜில்லா ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்கள் ஏதேனுமொன்றில் சேர்ந்து வேலை கற்றுக்கொள்ள வேண்டும், இப்படிப்பட்ட ப்ரொபேஷனரி ஸப் ரெஜிஸ்ட்ரார்கள் ராஜதானி முழுவதுக்குமாக அறுபது பேரிருக்கிறார்கள். டிபார்டுமெண்டாரால் நடத்தப்படும் பரீக்ஷைகளில் தேறியபின், இவர்கள் காயம் ஸப்ரெஜிஸ்ட்ரார்களாக நியமனம் பெறுவார்கள். ஸப்ரெஜிஸ்ட்ரார்களில் எட்டு க்ரேட் உண்டு. கடைசியான எட்டாவது க்ரேட் உத்யோகஸ்தருக்கு மாதமொன்றுக்கு 50 ரூபா சம்பளம். அதற்கு மேற்பட்ட க்ரேடுகளுக்கு முறையே ரூபா 60,70,80,90, 100, 125, 150, என்று சம்பளம் ஏற்பட்டுள்ளது.

அனுபவம் முதிர்ந்த ஸப்ரெஜிஸ்ட்ரார்களிலிருந்தே ஜில்லா ரெஜிஸ்ட்ரார்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவ்வாறு நியமனம் பெறுவதற்கு முன்னால் அவர்கள் அந்த ஸ்தானத்துக்கு ஏற்பட்ட "ஸ்பெஷல்டெஸ்டு" பரீக்ஷைகளில் தேறவேண்டும். ஜில்லா ரெஜிஸ்ட்ரார்களில் ஏழு க்ரேட் உண்டு. கடைசியான



ஏழாவது க்ரேடுக்கு மாதச் சம்பளம் ரூபாய் 175. மேல் க்ரேடுகளுக்கு முறையே மாதச் சம்பளம் ரூபா 200, 250, 300, 350, 400, 500 ஆகும். டிஸ்ட்ரிக்டு ரெஜிஸ்ட்ரார்கள் காயம் இன்ஸ்பெக்டர் ஜனரலாக நியமனம் பெறுவதில்லை. அந்த ஸ்தானத்துக்கு அந்நிய இலாகாவிலிருந்தே உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூபா 1250 ஆகும். முதலில் கூறப்பட்ட ப்ரொபேஷனரி ஸப்ரெஜிஸ்ட்ரார்கள் ஆரம்பத்தில் மாதச் சம்பளம், 15 ரூபாயும் டிபார்டுமெண்டு பரீக்ஷை தேறியதின் பின்னர், 20 ரூபாயும், ஆக்டிங் ஸப்ரெஜிஸ்ட்ரார்களாக நியமிக்கப்படும்போது 30 ரூபாயும் பெறுகிறார்கள்.

ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்களில் மிகுந்த சிரமப்பட்டு உழைக்கும் குமாஸ்தாக்கள் ஆபீஸுக்குத் தக்கபடி எண்ணிக்கையில் வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள். சில ஆபீஸ்களில் ஒரே ஒரு குமாஸ்தா தானுண்டு. பெரிய ஆபீஸ்களில் ஆறு எட்டு குமாஸ்தாக்கள் இருக்கிறார்கள். ஜில்லா ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களில் வேலை மிகுதிக்குத் தக்கபடி குமாஸ்தாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில்கடைசித்தரத்தினருக்கு மாதச் சம்பளம் 14-ரூபாய் ஜில்லா ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் தலை குமாஸ்தாவுக்கு மாதச் சம்பளம் 50 ரூபாய். இந்த இரண்டுக்கு மிடையில் 15, 17½, 20, 30, 35, 40 முதலிய க்ரேடுகளில் அநேகர் இருக்கிறார்கள். வேலை கற்றுக்கொள்ளும் "அப்ரென்டிஸ்" குமாஸ்தாக்கள் ஜில்லாதோறும் இருக்கிறார்கள். அவர்களுடைய மாத நிவேதனம் 10ரூபாய், ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்களில் வேலை அதிகப்படும் காலங்களில் உதவி செய்வதற்காக "ஸெக்ஷன் ரைடர்" என்று சொல்லப்படும் "டெம்பரரி" குமாஸ்தாக்கள் நிய

மிக்கப்படுவதுண்டு. வேலைசெய்த நாள்களுக்கு அவர்களுக்கு மாதமொன்றுக்கு 12 ரூபாய் விழுக்காடு சம்பளம் கொடுக்கப்படும். ஆபீஸ்களில் 6 ரூபாய் முதற்கொண்டு 10 ரூபா வரையில் சம்பளம் பெறும் சேவகர்களைப்பற்றி நாம் இங்கு பேசவேண்டியதில்லை.

இந்த டிபார்டுமெண்டில் ஸப்ரெஜிஸ்ட்ரார்களுக்கு ரூபா 100 வரையில் சம்பளம். ப்ரமோஷன் எல்லாம் யோக்கியதையையும் ஸர்வீசையும்பொறுத்துப்போகும். அதற்குமேல் யோக்யதையினால் ப்ரமோஷன் கொடுக்கப்படும். ஸாதாரணமாகப் பதினைந்து வருஷங்கள் வேலைபார்த்த ஸப்ரொஜிஸ்ட்ரார்களுக்கு 100 ரூபாய் சம்பளம் கிடைக்க ஹேதுவுண்டு.

பெரும்பாலும் பி. எ. பட்டதாரிகளே ஸப்ரெஜிஸ்ட்ரார்களாக நியமனம் பெறுகிறார்களென்று மேலே கூறினோம் ஆதலால், அவர்கள் சிறந்த கல்விமான்களாகவும், யோக்யர்களாகவும் இருக்கிறார்கள். இதுகாரணம் பற்றியே அவர்களில் சிலர் ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்டுகளாகவும், யூனியன் சேர்மெனாகவும், தாலூகா போர்டு மெம்பர்களாகவும் அடிக்கடி நியமிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட உத்யோகங்களை வகிப்பவர் இப்போது சுமார் 70-பேரிருக்கிறார்கள் ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்குள்ள அதிகாரம் கொடுக்கப்படுகிறது. நியூஸென்ஸ், ஜனன மரணம், முதலிய சட்டங்களைப் பற்றிய குற்றங்களை இவர்கள் விசாரிப்பார்கள். இப்போது எல்லா ஸப்ரெஜிஸ்ட்ரார்களும் ஜனன மரணத்தைப் பதிவுசெய்யும் ரெஜிஸ்ட்ரார்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லாமலும், சில ஸப்ரெஜிஸ்ட்ரார்கள், மழை யளக்கும் உத்யோகஸ்தர்களாகவும், நோடரி பப்ளிக் உத்யோகஸ்தர்களாகவும் உத்யோக முறையால் நியமனம் பெறுகிறார்கள்.

## BUTTER AND ITS PRESERVATION.

## வெண்ணெயும் அதன் பாதுகாப்பும்.

வெண்ணெய் பாலிலிருந்து எடுக்கப்படுகிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம் அநேகமாய் ஸ்தன்யமுள்ள எல்லா ஜந்துக்களினுடைய பால்களிலிருந்தும் போதுமான பால் அகப்பட்டால், வெண்ணெயை எடுக்கலாம். பாலிலுள்ள அநேக ஸத்துக்களில் ஒன்றாகிய கொழுப்பு என்னும் பாகத்தையே வெண்ணெய் என்கிறோம். ஆனால் ஜனங்கள் உபயோகித்து வரும் வெண்ணெயானது விசேஷமாய் ஆடுமாடுகளின் பாலிலிருந்து எடுக்கப்படுவதே. இந்தக் கொழுப்பு என்னும் வஸ்து எல்லா மாட்டின் பாலிலும் ஒரே ஸமனாய் இராது. சில மாடுகளின் பாலில் ஜாஸ்தியாயும், வேறு சில மாடுகளின் பாலில் கம்மியாயு மிருக்கும். இப்படிக்கு அதிக வித்யாஸம் இருப்பதற்குக் காரணம் அநேகமாய் அவைகள் தின்னும் தீனியையும், தேகஸௌக்கியத்தையும், பருவ காலத்தையும் அனுஸரித்ததாகவே இருக்கும்.

நம்முடைய தேசத்தில் வெண்ணெயை விசேஷமாக வெண்ணெயாக உபயோகப்படுத்துவதில்லை. வெண்ணெயைக் காய்ச்சி நெய்யாக ஏராளமாக உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் இங்கிலாந்து முதலிய மேற்கு ப்ரதேசங்களிலேயோ வெண்ணெயை வெண்ணெயாகவே உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

மேற்குச் சீமைகளில் வெண்ணெய் மூன்று விதமாகச் செய்யப்பட்டுவருகிறது. புதிதாய்க் கறந்த பாலிலிருந்து ஆடையை மட்டும் யந்திரங்களின் ஸகாயத்தால் விலக்கி அதிலிருந்து வெண்ணெய் எடுப்பது ஒன்று. ஆடையும் பாலும் ஒன்றாக வைத்து அப்படியே கடைந்து வெண்ணெய் எடுப்பது இரண்டு. வாய் அகலமாயுள்ள பாத்திரங்களில் கறந்த பாலை ஊற்றி 12 மணி நேரம் வரையில் வைத்து அப்போது மேலே வந்திருக்கும் ஆடையைக் கரண்டியினால் எடுத்து அந்த ஆடையிலிருந்து வெண்ணெய் எடுப்பது மூன்றாவது. இந்த மூன்று விதங்களில் கறந்த பாலிலிருந்து யந்திர ஸகாயத்தினால் ஆடையை உடனே பிரித்து, அப்போதே அடித்தெடுத்த வெண்ணெய் அதிக ருசியா யிருக்கும். ஆனால் இப்படி எடுக்கப்பட்ட வெண்ணெய் நாள்பட இருக்காது. மேலும் இப்படி எடுத்தால், ஸாதாரணமாய் அகப்படவேண்டிய வெண்ணெயில் நான்கில் ஒரு பாகந்தான் அகப்படும். ஆகையால், யந்திர ஸகாயத்தால் ஆடையைப் பிரித்து அந்த ஆடையை 12 முதல் 24 மணி நேரம் வரையில் அந்தந்த இடத்தின் சீதோஷ்ண பேதங்களுக்குத் தக்கபடி வைத்திருந்து பிற்பாடு வெண்ணெய் அடித்து எடுத்தால், ருசியாயிருப்பதோடு பல மாதங்கள் வரையில் வைத்திருக்கக்கூடும். வெண்ணெயும் ஸரியாய்க் காணும். இரண்டாவது சொன்ன விதத்தில் தயிரும் வெண்ணெயும் கலந்திருப்பதால், தயிரிலுள்ள புளிப்பு வெண்ணெய்க்கும் ஏறி வெண்ணெய் நன்றாயிராது. மூன்றாவது சொன்ன விதத்தில் ஏடு பூராவாய் எடுக்க முடியாதாகையால், வெண்ணெய் ஸரியாய்க் காணாது. ஆகையால், யந்திரஸகாயத்தால் ஆடையைப்பிரித்து போதுமான நேரம் வரையில் வைத்திருந்து அப்பால் வெண்ணெயை அடிப்பதுதான் சிலாக்கியமான முறையாகும்.



நமது தேசத்தில் இம்முறை விசேஷமாய் அனுஷ்டிக்கப்படாம லிருப்பதற்கு, கூட்டுறவு இல்லாததும் அறியாமையுந்தான் காரணங்களாகலாம். இப்போது பம்பாய் ராஜதானியில் இம்முறை விசேஷமாயும் சென்னையில் சில இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இங்கே பாலைக் காய்ச்சி, பாலை உறைகுத்தி, உறைந்ததும் ஆடையை மாத்திரம் சேர்த்து எடுத்துக் கடைகிறார்கள். இல்லாமற்போனால் பாலையும் ஆடையையும் சேர்த்து வைத்தே கடைகிறார்கள். புதிதாய் எடுத்த பசுவின் வெண்ணெய் வைக்கோல் வர்ணமாகவும் எருமையின் வெண்ணெய் வெளேரென்றும் இருக்கவேண்டும். சுத்தமான வெண்ணெய்க்கு வாஸனையே கிடையாது. வெண்ணெயை ஒரு கத்தியால் வெட்டி யெடுத்தால், வெள்ளியை ஒடித்தால் எப்படி யிருக்குமோ, அப்படி நொய் நொய்யா யிருக்க வேண்டும். அதுதான் முதல்தரமான வெண்ணெய். ஸாதாரணமாய் நாம் எடுக்கும் வெண்ணெயில் நமது கையிலுள்ள அழுக்குப் படுவதாலும், தயிரின் புளிப்பு ஏறுவதாலும், இதைப் பல நாள்கள் வைத்திருக்க முடியாது. ஆனால் கை படாதபடி யந்திர ஸகாயத்தால் செய்த வெண்ணெய் பதினைந்து நாள்கள் வரையில் அப்படியே இருக்கும். வெண்ணெய் அடித்தெடுத்த வுடனே சுத்தமான உப்பைச் சேர்த்து காற்றுப் போகாதபடி டின் பாத்திரத்தில் போட்டு வைத்திருந்தால், பல மாஸங்கள் வரையில் கொடாம விருக்கும்.

ஸாதாரணமாய் தயிர் கடைவதிலும் சில விஷயங்கள் கவனிக்க வேண்டும். தயிர் கடையும்போது விசேஷமாய் தயிரின் உஷ்ணம் கொஞ்சம் அதிகப்படும். இதற்காகக் கொஞ்சம் கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தை வார்த்துக் கொண்டே கடையவேண்டும். மேலும்கொஞ்சமாய்க் கடைந்தாலும் வெண்ணெய் தயிரிலேயே தங்கிவிடும். ஜாஸ்தியாய்க் கடைந்தாலும் வெண்ணெய் எண்ணெய் போலவே அதிக வழவழப்பை அடைந்துவிடும். இந்த இரண்டு விதமும் இல்லாமல் ஸரியான ஸமயம் பார்த்துக் கடைவதை நிறுத்தவேண்டும்.

கடைசியாக, வெண்ணெய் வியாபாரங்களில் நடக்கக்கூடிய சூதுகளை கவனிப்போம். எல்லா வியாபாரங்களிலும் சூது செய்யலாம். ஆனால் வெண்ணெய் வியாபாரத்தில் சூது செய்கிறதென்று ஏற்பட்டால், வெகு லேசாய்ச் செய்யலாம். மேலும் அப்பேர்பட்ட சூதை எல்லாராலும் எளிதில் கண்டுபிடிப்பது கஷ்டமாகும். கொஞ்சம் நல்ல வெண்ணெயோடு சில உபயோகமற்ற பதார்த்தங்களைச் சேர்த்து அதிக வெண்ணெய்போல இருக்கும்படி செய்துவிடலாம். இதற்கு விசேஷமாய் பன்றியின் கொழுப்பும் மாட்டின் கொழுப்பும் எடுத்தது என்று சொல்லலாம். இப்படிக் கலந்திருந்தால், நாம் வாஸனையை அறிந்தே ஒருவாறு சொல்லிவிடலாம். இப்படிப்பட்ட வெண்ணெய் உருகுவதற்கும் ரொம்ப நாழி செல்லும்; ஸாதாரணமான வெண்ணெய்க்கு அவ்வளவு நேரம் செல்லாது.

---

## THE RANI OF ARGAL.

## ஆர்கால் ராணி.

சற்றேக்குறைய அறுநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னே, டில்லியில் நாஸருடீன் என்னும் பட்டாணிய ராஜன் அரசு புரிந்து வந்தான். அவன் மஹா பொல்லாதவன். வடக்கே ஹிந்துஸ்தானத்திலுள்ள நமது தேசத்து எல்லா சிற்றரசர்களையும் சண்டையில் ஜெயித்து அவர்களைத் தனக்குத் தவறாமல் கப்பம் கட்டிக்கொண்டு வரும்படிச் செய்து வந்தான். இப்படிக் கப்பம் கட்டவேண்டுமென்று ஆஞ்ஞை பெற்றவர்களில், பிரயாகை என்னும் அலஹாபாத்துக்கும், பக்ஸார் என்னும் நகரத்துக்கும் அருகிலுள்ள ஆர்கால் என்னும் சிறிய தேசத்தை ஆண்டுவந்த கௌதமன் என்னும் ரஜபுத்திர சிகாமணி ஒருவன். கௌதமன் அநேக யுத்தங்களில் பின்வாங்காமல் போர் புரிந்திருக்கிறான். அவனிடத்தில், அவனுடைய ப்ரஜைகளுக்கு ரொம்பவும் விசுவாஸமுண்டு. தான-தருமங்களைச் செய்பவன். ஏழைகளைக் காப்பாற்றப்பட்டவன். இவனுக்கு ஒரு துருக்கனுக்குக் கப்பம் கட்ட மனமில்லை. ஆகவே கப்பம் கட்ட மாட்டேன் என்று நாஸருடீனுடைய ஆஞ்ஞையை மறுத்துவிட்டான். இவன் இப்படிச் சொல்லிவிடவே, ஜாதியில் துருக்கனான நாஸருடீனுக்குக் கோபம் வந்து, இவனுக்கு (கௌதமனுக்கு) மேல் விசாரணை செய்து அடக்கிக் கப்பங்களையெல்லாம் வசூலித்து அனுப்பிக்கொண்டிருந்த, தனக்குக் (நாஸருடீனுக்கு) கீழ்ப்பட்ட அயோத்யா தேசத்து கவர்னரை, உடனே ஒரு பெரிய ஸைன்யம் சேர்த்துக்கொண்டு, ஆர்காலை நோக்கிச்சென்று கௌதமனிடம் யுத்தம் கொடுத்து, அவனை யுத்தகளத்தில் தோற்கடித்து, கப்பம் கட்டும்படி கட்டாயப்படுத்தி, கப்பத்தை வாங்கி அனுப்பிவிக்கும்படி, நாஸருடீன் உத்திரவு அனுப்பிவிட்டான். அவனுடைய உத்தரவு ப்ரகாரம், அயோத்யா தேசத்து கவர்னர் ஒரு பெரிய பட்டாளத்துடன் ஆர்காலுக்கு வந்து, கௌதமனிடம், 'கப்பம் கட்டுகிறாயா, அல்லது யுத்தம் செய்கிறாயா?' என்று கேட்டான். ஆனால், கௌதமனுக்கு இன்னும் கப்பம் கட்ட மனம் வரவில்லை. ஆகவே, 'யுத்தமே செய்கிறேம்', என்று சொல்லிவிட்டான். உடனே இருவருக்கும் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. கௌதமனின் ஸைன்யத்தில் இருந்த வீரர்களெல்லாரும், சண்டையில் வெகு அநுபவப்பட்டவர்கள். தேகத்தில் நல்ல பலத்தையுடையவர்கள். மேலும் தைரியசாலிகள். இப்படி எல்லாம் கௌதமனிடம் அமைந்திருந்தபடியால், கடைசியில், யுத்தத்தில் வெற்றி பெற்றவன் கௌதமனே. கவர்னருடைய ஸைன்யத்தில் 10,000 பேர்களுக்கு மேல் இறந்தார்கள். கடைசியில், கவர்னருடைய உயிருக்கே மோசம் வந்துவிடும்



போலிருந்தது. உடனே அவர்கள் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கௌதமனும் ஓட்டம்பிடித்து ஓடுபவர்களைக் கொல்லக்கூடாதென்று எண்ணி, யுத்தகளத்திலிருந்து அரண்மனைக்குத் திரும்பிவிட்டான். வயது சென்ற கௌதமனுக்குச் சண்டையில் ஜெயித்துவிடவே, ரொம்பவும் ஸந்தோஷம் வந்துவிட்டது. ஏழைகளுக் கெல்லாம் பணத்தை வாரி வாரிக் கொடுத்தான். உத்யோகஸ்தர்களுக்கு வெகுமதிகள் கொடுத்தான். போதாதற்கு எல்லாருக்கும், 7-8-நாள் சேர்ந்தாப்போல் விருந்தளித்தான். எல்லாரும் அவனை வாழ்த்தினார்கள்.

விருந்துகளும் ஆயின, வெகுமதிகளுமாயின. சதுர்தசி (அமாவாஸைக்கு முதல்நாள்) ஸமீபித்தது. அந்த காலத்தில், இப்பொழுதுங்கூட, ரஜபுத்ர ஸ்திரீகளுக்குள் வழக்கமென்னவென்றால், அமாவாஸை தினம் தவறாமல் கங்கையில் ஸ்நானம் செய்து தங்கள் பாபங்களை விமோசனம் செய்துகொள்ள வேண்டுமென்பது. அந்த வ்ரதத்தை எல்லாரும் அநுஷ்டித்தே வருவார்கள். இப்படித் தவறாமல் அனுஷ்டித்து வந்தவர்களில், கௌதமனின் மனைவியான ஆர்கால் தேசத்து ராணி ஒருத்தி. அந்த மாது தெய்வ பக்தியுடையவள். தன் பர்த்தா சொல்லுவது மறுப்பது கிடையாது. தெய்வ பூஜை செய்யாமல் புசிக்கிறதே கிடையாது. எப்பொழுதும் அமாவாஸையன்று தவறாமல் கங்கையில் ஸ்நானம் செய்யப்பட்டவள். ஆனால், இந்த அமாவாஸைக்கும் கங்கைக்குப் போய் ஸ்நானம் செய்துவிட்டு வரட்டுமேயென்றால், கவர்னருடைய ஸைன்யம் இன்னும் ஊர்போய்ச் சேரவில்லை. அருகில் தான் கூடாரம் போட்டிருந்தான். இவள் அங்கே போனால், கட்டாயம் கொன்றுவிடுவான். ஆகையால், இவள் தன் பர்த்தாவிடத்தில் கேட்டால், உத்திரவு கொடுக்கமாட்டார் என்று தெரியும். போகாமலிருந்தால் ஸ்நானம் தவறிப்போய் விடுகிறது. எல்லாவற்றையும் உத்தேசித்து, சதுர்தசியன்று முன்ராத்திரி அரண்மனையில் இருந்துவிட்டு ராணியானவள் 4,5, தாதியரை யழைத்துக்கொண்டு, தவறாமல் பொழுது விடிவதற்குள் கங்கையில் ஸ்நானம் செய்ய, ஈசுவரனை நம்பிப் புறப்பட்டு விட்டாள். அரண்மனைக்கும் கங்கைக்கும் 2,3, மைல் தூரம் இருக்கும். இவர்கள் ஒருவருக்கும் தெரியாமல், வெகு வேகமாய் நடந்து பொழுது விடிகிறதற்குள் கங்கை போய்ச்சேர்ந்துவிட்டார்கள்.

அப்பொழுதுதான் சுற்றுப் புறங்களிலிருந்து, ஸ்நான கட்டத்தில ஸ்நானம் செய்ய எல்லாரும் வந்துகொண்டிருந்தார்கள். சிலர் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்ப வீடுபோய்க்கொண்டிருந்தார்கள். சிலர் ஸ்நானம் செய்துகொண்டிருந்தார்கள், சிலர் ஸ்நானம் செய்துவிட்டுப் படிகளில் உட்கார்ந்து கொண்டு ருத்ராக்ஷமும் கையுமாக ஜெபம் செய்து கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் சூரியனை உத்தேசித்து ஸந்தியாவந்தனம் சூரிய நமஸ்காரம் முதலியவைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் தம்பதீ ஸமேதராய் ஸ்நானம் செய்துகொண்டிருந்தார்கள். இவ்வளவு வைபவங்களையும் கண்டு ஆனந்தித்தவளாய் ராணியும், தாதிமார்களுடன் ஜலத்தில் இறங்கினாள். இறங்கி எப்போதும் வழக்கம்போல் காதையும் மூக்கையும் கைவிரல்களால் மூடிக்கொண்டு அமிழ்ந்து ஸ்நானம்செய்தார்கள். இவள் இப்படித் தாதிமார்களுடன் ஸ்நானம் செய்துகொண்டிருந்ததை, சிலர், அருகில் கூடாரம் போட்டிருந்த கவர்னரிடம், போய், 'மஹாராஜ் அதோ அந்த ஸ்நான கட்டத்தில் எல்லாரும் போய் ஸ்நானம் செய்கிறார்கள். அவர்களில் ரொம்பவும் அழகான ஒரு ஸ்திரீ 4 - தாதிமார்களுடன் ஸ்நானம் செய்துகொண்டிருக்கிறாள். பார்த்தால் பெரிய

மனுஷன் வீட்டுப் பெண்ணைத் தோற்றுகிறாள். ரொம்பவும் ஸௌந்தரியமா யிருக்கிறாள். இன்னாரென்று ஒருவருக்கும் தெரியவில்லை' என்று சொன்னார்கள். இதைக் கவர்னர் கேட்டவுடனே தன்னிட மிருந்த ஸ்திரீகளைத் துப்பு விசாரித்து உளவு அறிந்துவரும்படி அனுப்பிவிட்டான். அவர்கள் வந்து, ராணியுடன் ஸாதாரணமாய்ப் பேசுவதுபோல் பேசி அவளை ஆர்கால்தேசத்து ராணி என்று அறிந்துகொண்டு கவர்னரிடம் போய் ஸமாசாரத்தைத்தெரிவித்து விட்டார்கள். ஸ்நானம் செய்ய வந்தவள் ராணி என்று அறிந்தவுடனே, இதுதான் ஸரியானஸமயம், இதைவிட வேறு ஸமயம் வாய்க்காதென்று எண்ணி, உடனே தன் பட்டாளத்தைச் சேர்த்துக்கொண்டு, ராணியைப் பிடித்துக்கொண்டுபோக கவர்னர் புறப்பட்டுவிட்டான்.

இதற்குள்ளாக ராணி ஸ்நானம் ஜெபதபாதிகளை முடித்துக்கொண்டு அரண்மனையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள். கவர்னர் அவளிடம் வந்து பயமுறுத்தினான், அதட்டினான், வழிமறித்தான். என்ன செய்வாள், இருந்தபோதிலும் ராஜபுத்ர ஸ்திரீயல்லவா ? உடனே அவள், "சீ, சீ, நேற்றய தினம் என் பர்த்தா காலால் உதைபட்டு, தோற்கடிக்கப்பட்டு, ஓட்டம் பிடித்த இவன் இன்றைய தினம் கேவலம் ஒருஸ்திரீயிடம் சண்டைசெய்ய வருகிறான். மான மில்லையா ? இதைவிட நாண்டுகொண்டு சாகலாமே. என் பர்த்தா ஒருவனுக்குக்கீழ்ப்பட்டு நடந்தவரல்ல. நானும் அப்படியே இருப்பேன். உன் பயமுறுத்தலுக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்." என்று சொன்னாள். இவள் இப்பேர்ப்பட்ட வார்த்தைகளைக் கொஞ்சமேனும்பய மில்லாமல் சொன்னதும், அவனுக்கு ரொம்பக் கோபம் வந்துவிட்டது. பற்களைக் கடித்தான். அவளைப் பிடித்துக் கயிறுகளால் கட்டும்படி பக்கத்திலிருந்தவர்களை ஏவிவிட்டான்.

அவர்கள் அப்படிச் செய்ய எத்தனிக்கவே, ராணிபொறுக்கமாட்டாமல், "யாரடா இங்கே, இவனைத் துண்டம் துண்டமாய்ச் செய்ய என்னிடத்தில் விசுவாசமுள்ள, தலைவீரன் ஒருவருமில்லையா? இப்பொழுது அருகிலிருந்தால், வந்து உதவி புரியக் கூடாதா?" என்று உரக்கச் சத்தமிட்டாள்.

இவள் இப்படிச் சொல்லி வாய் மூடுவதற்குள்ளே, இரண்டு வீரர்கள், இந்திர உபேந்திரர்போல் திடீரென்று இரண்டுகுதிரைகளில் ஸவாரி செய்தவர்களாக வந்து சேர்ந்தார்கள். அவர்கள் பெயர், உபாய்சண்டு, நீர்பாய்சண்டு என்பது. அவர்கள் கௌதமனுடைய பட்டாளத்தில் முக்ய தலைவீரர்கள். மிகவும்பராக்ரமசாலிகள். உடனே அவர்கள் ஸமாசாரத்தைத் தெரிந்துகொண்டு, கவர்னருடைய ஸைன்யத்தில் புகுந்து அவர்களில் அநேகரைக் கொன்றார்கள். ராணி ஒரு பக்கமா யிருந்து பார்த்துக்கொண்டிருந்தாள். இதற்குள்ளாக ஸமாசாரம் கௌதமனுக்கு எட்டிவிட்டது. இதைக் கேட்டவுடன் மிகக் கோபங் கொண்டவனாய், ஒரு பெரிய ஸைன்யத்தை ஒரு நிமிஷத்தில் சேர்த்துக்கொண்டு அவனும் வந்துவிட்டான். திரும்பவும் யுத்தம் அகோரமாய் நடந்தது. அதிலும் அநேகர் மாண்டார்கள். பாக்கிப் பேர் ஓட்டம் பிடித்தார்கள். கவர்னரும் ஓட்டம்பிடித்து, மெள்ள மெள்ள ஊர் போய்ச் சேர்ந்தான். ராணியும் அரண்மனைக்கு க்ஷேமமாய் வந்து சேர்ந்தாள்.

மறுபடியும் ராஜாவுக்கு ஸந்தோஷமாகி, தத்ஸமயத்தில் போய் உயிரைக் காப்பாற்றின உபாய் சண்டுக்குத் தனது குமாரத்தியை விவாகம் செய்வித்தான். அவன் தனக்கு ஸமதியில்லையென்ற போதிலும், ராணிக்கு உயிர் போய்விடும் ஸமயத்தில் போய் உதவிபுரிந்ததற்குத் தான் விசுவாஸமாய் இருக்கிறதைக் காட்டுவதற்குச் செய்தான். மேலும் ராயர் என்னும் பட்டத்தை அவனுக்கு அளித்தான்.

தேசத்தில் எல்லாரும் உபாய்சண்டு செய்ததைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள். கவர்னரோ, கேவலம் ஒரு ஸ்திரீயுடன் போய் யுத்தம்செய்து தோல்வியடைந்ததற்காக நாஸருடீனாலேயே அவமானப் படுத்தப்பட்டான். மேலும் அவனுடைய அரண்மனையில் அவன் மனைவி, புத்திராள் எல்லாரும் பரிகாஸம் செய்தார்கள்.

எல்லாரும் உயிர்போகும் தருணத்தில்கூட தைரியமா யிருந்த ராணியைப்பற்றி ரொம்பவும் ஆச்சரியப்பட்டார்கள். இப்பொழுதுங் கூட ராஜபுத்திர ஸ்திரீகள் யாதொன்றுக்கும் பயப்படுகிறவர்களல்ல. புருஷர்களைப் பார்க்கிலும் ஸ்திரீகளே தைரியசாலிகள்.



# SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

## THE PREVENTION OF PLAGUE.

## ப்ளேக் வியாதி வராமல் தடுத்தல்.

ஒரு ஊருக்குள் அன்னிய ஊர் ஜனங்கள் வராமலும் அந்த ஊர் ஜனங்கள் அன்னிய ஊர்களுக்குப் போய்த் திரும்பி வராமலும் அன்னிய ஊர்களிலிருந்து தானியங்கள் துணிகள் வராமலும், எலிகள் அடுத்த ஊரிலிருந்து வராமலும் தடுக்கக் கூடுமானால் அந்த ஊர் எவ்வளவு அசங்கியமாயிருந்தாலும் ப்ளேக் வியாதி வராது. ஆனால் இப்படி இருப்பது அசாத்தியம். இதற்காக ஸர்க்காரில் பாஸ்போர்ட்டு முதலான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். பழைய துணிகள் பழைய காகிதங்கள் படுக்கை ஸாமான்கள் இவைகளில் ப்ளேக் பூச்சி ஒட்டிக்கொண்டால் ஸாதாரணத்தில் இவைகளைச் சுத்தப்படுத்த முடிகிறதில்லை. ஆகையால் இவைகளை ப்ளேக் கண்ட ஊரிலிருந்து வேறு ஊருக்குக் கொண்டு போகக் கூடாது. பழைய சரக்குகளையும் இந்தப் பூச்சிகள் சுலபத்தில் விட்டுப் போகிறதில்லை.

### ஊரில் ப்ளேக் வந்தால் ஒவ்வொருவரும் நடந்துகொள்ள வேண்டிய விதிகள்.

(1) ஊரில் எங்கேயாவது எலி விழுந்து செத்துப்போனால் பக்கத்தில் உள்ள வீட்டுக்காரர்களும் எலி விழுந்த வீட்டி லிருப்பவர்களும் உடனே வீட்டை விட்டு வெளியில் போய்விடவேண்டும்.

(2) அந்த எலியை அந்த இடத்திலேயே கொஞ்சம் சீமை யெண்ணெய் ஊற்றி மேலே கொஞ்சம் புல்போட்டு எரித்து விட்டுப் பின்பு அந்த எலியைக் கையால் தொடாமலும் கோலால் நெடுக தள்ளிக்கொண்டு போகாமலும் ஒரு மண்வெட்டியால் எடுத்து ஊருக்கு வெளியில் கொண்டுபோய் தீப்போட்டு நன்றாய் எரித்துவிடவேண்டும்.



(3) வீட்டிலிருக்கும் அரிசி பருப்பு நெல் முதலிய சாப்பாட்டு ஸாமான்களை யெல்லாம் வெளியில் நன்றாய்க் காயவைத்து அதற்குப் பின் உபயோகிக்கவேண்டும். துணி முதலிய உடுப்புகளை நன்றாய்த் துவைத்து வெயிலில் காயவைத்து பின்பு உபயோகிக்கவேண்டும். பாத்திரங்களை கொஞ்சம் தீப்போட்டு கை சூடு பொறுக்காத மட்டும் காயவைத்து பின்பு உபயோகிக்கவேண்டும்.

(4) மனிதர்களும் வெந்நீரில் சோப் தேய்த்து முழுக வேண்டும்.

(5) மற்றொரு ஊரில் போய் இருப்பதை விட தன்னுடைய ஊருக்குப் பக்கத்திலேயே கால்மைல் தூரத்தில் ஒரு புதிய சாலைக்கட்டிக் கொண்டு குடியிருப்பது நல்லது.

(6) தனக்குத் துணையாக வேறே ஜனங்கள் இருக்கவேண்டுமானால் அவர்கள் எல்லாரும் தனித் தனியே வேறே சாலைகள் கட்டிக் கொண்டு இருக்கவேண்டும். ஒரு சாலைக்கும் மற்றொரு சாலைக்கும் மத்தியில் வெயில் நன்றாய் அடிக்கும்படியாக சுமார் 10 கெஜ தூரமாவது இருக்கவேண்டும்.

(7) கூடியமட்டிலும் கொஞ்சமாக ஸாமான்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.

(8) உயரமான கட்டில் முதலியவைகளின் பேரில் படுத்துக்கொள்வது நல்லது.

(9) தினமும் எவ்வளவு சூடு பொறுக்கக் கூடுமோ அவ்வளவு சூடான வெந்நீரில் கூடுமானால் தலை முழுகலாம், அல்லது உடம்புக்காவது சோப் தேய்த்து குளிப்பதும் அடிக்கடி எண்ணெய் தேய்த்து குளிப்பதும் நல்லது.

(10 குடியிருக்கிற சாலையில் எலி பல்லி முதலிய ஜெந்துக்கள் யாதொரு காரணமும் இல்லாமல் செத்துக்கிடக்கக் கண்டால், உடனே அந்த சாலையை விட்டு 100 கெஜ தூரத்துக்கப்பால் வேறே சாலை போட்டு அதில் இருந்து கொள்ளவேண்டும்.

(11) முந்தின சாலையில் எவ்வளவு ஸாமான்களை எரித்துவிடக் கூடுமோ அவ்வளவு ஸாமான்களை அந்த இடத்திலேயே தீப்போட்டு கொளுத்தி விடவேண்டும்.

(12) ப்ளேக் இருக்கும் ஊருக்குள் போகக் கூடாது. கட்டாயம் போகவேண்டி நேரிட்டால் காலை 10 மணிக்குமேல் மாலை 4 மணிக்குள் போய்விட்டு எவ்வளவு சீக்கிரம் வரக் கூடுமோ அவ்வளவு சீக்கிரம் வந்து விட வேண்டும்.

(13) காலுக்கு மேஜோடும் பூட்ஸும் போட்டுக் கொள்வது நல்லது.

(14) உடம்பில் காயமாவது புண்ணாவது இருக்கும்போது ஊருக்குள் போகவேகூடாது.

(15) ப்ளேக் வந்திருக்கிற மனிதனிடத்தில் போகாமலிருப்பது நல்லது.

(16) உடம்பில் வலி, மலச்சிக்கல் முதலிய அஸௌக்கியங்கள் உண்டானால் உடனே ஸரியானபடி வைத்தியம் செய்துகொள்ள வேண்டும்.

(17) அம்மை வந்த காலத்தில் வேப்பிலையை எப்படி உபயோகிக்கிறார்களோ அப்படி குப்பைமேனி, பூனைவணங்கி என்கிற தழைகளை உபயோகிப்பது நல்லது. அதாவது ப்ளேக் வியாதி கண்டவனுக்கு பக்கத்தில் அந்த இலைகளைப் போட்டு வைக்கலாம். ப்ளேக் வியாதி இருக்கிற இடத்துக்கு கட்டாயம் போகவேண்டி வந்தால் இந்த இலையைக் கையில் வைத்துக்கொண்டு போகலாம். எலி விழுந்து செத்ததற்காக வீட்டைப் பூட்டியிருக்கும்போது வெறுங்காலுடன் அந்த வீட்டுக்குள் போனால் பாதத்தை சுற்றிலும் பிக்கிறது. இந்த இலையின் சாற்றைத் தடவினால் அந்தப் பிப்பு நின்றுவிடும். கொசு, சொள்ளை, முதலியவைகள் கடித்தவுடன் அந்த இடத்தில் கொஞ்சம் கடுப்புக் காணும். இந்த இலையின் சாற்றைத் தடவினால் கடுப்பு நின்று விடும். உடம்பில் எங்கேயாகிலும் வீக்கம் அல்லது தடிப்புக் கண்டால் இந்த இலையின் சாற்றைத் தடவினால் வீக்கம் வற்றிப்போம்.

(18) ப்ளேக் அம்மை குத்திக்கொள்வது நல்லது. ஆனால் ஒரு வீட்டில் ஒரு மனிதன் மட்டும் அம்மை குத்திக்கொண்டிருந்தால் அவன் மூலியமாய் வீட்டிலிருக்கும் மற்றவர்களுக்கு வியாதி ஒட்டக் கூடும். ஆகையால் எல்லாரும் குத்திக் கொள்ள வேண்டும்.

## THE WAY TO WEALTH.

## பொருள் வரும் வழி.

---

நான் ஒரு நாள் சில சாமான் வாங்க வேண்டி குதிரையேறிச் சந்தைக் கடைக்குப் போகையில், அங்கே ஏலங் கூறி விற்கும் பொருள்கள் திரளாக நிரம்பி யிருப்பதையும், அவற்றை வாங்கும்படி பலர் கும்பு கூடி இருப்பதையுங் கண்டு குதிரையைச் சற்று நிறுத்தினேன். ஏலங் கூறுவதற்குச் சற்று நேரம்பிடிக்கிறதாயிருந்ததால் ஜனங்கள் ஒருவரோடொருவர் காலத்தின் சீர் கேட்டைப்பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிலொருவன் அருகிலிருந்த நரைத்த ஓர் விருத்தாப்பியரைக் கூவி அழைத்து, "ஐயா! இக்காலத்தைப் பார்த்தீரா, என்ன கெட்டுப் போய் இருக்கிறது; இப்படி அநீதவரிகள் போட்டுத் தேசத்தை நிர்மூலப் படுத்தலாமா? இப்படிக் கொத்த வரிகளைச் செலுத்த எங்களால் எப்படி மாளும்! இவற்றினின்று நீங்க ஏதேனும் வழியில்லையா?" என்று வினவ, அந்தப் பெரியவர் "அப்பா! நான் சொல்வதை கேட்பதாயின் இரண்டொரு வார்த்தை சொல்லுகிறேன். 'நல்லமாட்டிற் கோரடி, நல்ல மனிதனுக்கு ஓர் சொல்' என்றபடி புத்திமானுக்கு அதிகம் சொல்லவேண்டுவ தில்லை" என்னவே, அவனும் மற்ற ஜனங்களும் ஒருங்கு சேர்ந்து அவரைச் சூழ்ந்து அவரது கருத்தை வெளியிடும்படி பிரார்த்திக்க, அவரும் அடியில் வருமாறு உரைக்கப் புகுந்தார். "நண்பனே! வரிகள் கடுமையானவை யென்பது உண்மையே; துரைத்தன வரிகளன்றி நம்முடைய அஜாக்கிரதையாலும் பிசகாலும் உண்டாகும் வேறு பாரமான வரிகளுமுண்டு.



எப்படி யெனில் சோம்பலுக்காக துரைத்தன வரியைப்போல் இரட்டிப்பும், வீண் பெருமைக்காக மும்மடங்கும், அறிவீனத்திற்காக நாலு பங்கும், செலுத்தவேண்டியிருக்கிறது. இவ்வரிகளைக் குறைக்கவாவது முற்றும் விலக்கவாவது துரைத்தனத்தாருக்குச் சாத்தியப்படாது. ஆகிலும் நாம் நல்ல புத்திமதிகளைக் கேட்டுச் சீர்பட முயன்றால் மேற்கூறியவரிகளாலுண்டாகும் தொந்தரையினின்று ஒருவாறு நீங்கிச் சுகம் பெறலாம். 'தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி தன், மெய்வருந்தக் கூலிதரும்' என்ற திருக்குறளின் கருத்தை அறிந்ததில்லையா?

ஒரு ராஜ்யத்தில் குடிகளெல்லோரும் பிரதி தினமும் தங்கள் காலத்தில் பத்தில் ஒரு பங்கை ராஜ காரியத்தில் செலுத்தவேண்டும் என்கிற ஓர் நிர்ப்பந்தம் இருந்தால் அவ்வரசனைக் கொடுங்கோலன் என்று சொல்வோம் அல்லவா? அப்படியிருக்கச் சோம்பலதிபதிக்கு நமது நேரத்தில் நாள்தோறும் எத்தனை பங்கை இறைகொடுத்து வருகிறோம். யோசித்துப்பார். மேலும் சோம்பல்தனம் வியாதியையுண்டாக்கி வாழ்நாளைக் குறைக்கின்றது. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும், கையாடுகிற இரும்பு பளபளக்கும், என்றபடி உழைப்பவன் வியாதி முதலியன இன்றிச் சுகித்து வாழ்வான். அன்றியும் உனக்கு உயிர் மேல் ஆசையிருக்கும் பக்ஷத்தில் காலத்தை வீணாக்காதே. ஏனெனில் எப்படி யானை மண்ணினாலும், ஆபரணம் பொன்னினாலும், தேகம் பிரிதிவி முதலிய பஞ்ச பூதங்களாலும், செய்யப்பட்டிருக்கின்றனவோ அப்படியே நமது வாழ்நாள் நேரத்தின் அணுத்திரள்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இதிற்க, உறங்கும் நரிக்கு உணவு கிட்டாது என்பதை மறந்து எவ்வளவு நேரத்தை அனுவசியமாய்த் தூங்கித் தொலைக்கிறோம். மற்றெல்லாப் பொருளிலும் காலம் அதிக விலையுள்ள தென்றால் அதை வீண்போக்குகிறவனையும் ஆராதூரி என்றுதானே சொல்ல வேண்டும்? ஏனெனில் போனபொழுது மீண்டும் வாராது. நாம் போதும்போதும் என்கிற நேரமெல்லாம்வேலை செய்யப்புகில் போதாததாய் விடுகிறது. ஆகையால் யேதேனும் ஒன்றை உத்தேசித்துப் பிரயாசப்படுவோம். இப்படிச் செய்வதால் 'வருந்தினால் வாராத தொன்றில்லை' என்றபடி மனக்கலக்கம் நீங்கி அதிகமான வேலையைச் செய்து முடிப்போம். சோம்பேறிக்கு எல்லாம் அருமை; உழைப்பவனுக்கோ யாவும் எளிதில் கைகூடும். தூக்கத்தினின்று நேரஞ்சென்று எழுந்திருப்பவன் அன்றெல்லாம் இரவும் பகலும் ஓடி ஓடிச் செய்தாலும் அவன் வேலைமுடியாதிருப்பது மன்றி தரித்திரமும் வேகமாய்ப்பின் தொடர்ந்து அவனைப்பற்றும். வேலையை நீ அடிமைகொள். அது உன்னை அடிமை கொள்ளா திருக்கட்டும். மேலும் வெள்ளனப் படுத்து விடியுமுன் எழுதல் தெள்ளு ஞானமும் தேக சுகமும் உள்ள நற்பொருளும் உலகத்தளிக்கும். ஆகவே காலங் கெட்டிருக்கிற தென்று குறை கூறுவதில் யாது பயன். முயற்சியால் இக்காலமே நற்காலமாகலாம் கஷ்டப்படுகிறவனுக்குக் குறைவில்லை! அதை விட்டு வரும் வருமென்று காலத்தை நோக்கி நிற்பவன் பட்டினிக்கிடந்திறப்பான். 'வருத்தமின்றி வரவில்லை'. ஆகையால் கரங்களே எனக்கு உதவி செய்யுங்கள். எனக்கு நிலமில்லை, இருந்தாலும் கடுவரிசெலுத்த முடியாதே"; 'மேலும் உத்தியோகம் புருஷலட்சணம்' என்றபடி உத்தியோகம் ஒருவனுக்குப் பொருளும் புகழுங் கொடுக்கத் தகுந்த சாதனம்; ஆனாலும் மேலும் மேலும் முயன்றால் அல்லாமல்

அது பொருள்வரும் வழி காட்டாது. பிரயாஸப்பட்டால் பசித்திரோம். ஏனெனில் பசி வேலை செய்பவன் வீட்டை ஒருவேளை எட்டிப்பார்த்தாலும் உட்செல்லப் பயப்படும். அன்றியும் தண்டல்காரனெவனும் அவன் வீட்டை அணுகான். ஏனெனில் கஷ்டப்படுவோன் கடன்படான். ஏக்கமுள்ளவனது கடன் அதிகப்படும். உனது பந்துக்களில் ஒருவரும் திரண்ட ஆஸ்தி வையாவிடினும் புதையல் கிடைக்காவிடினுந்தான் என்ன? முயற்சி நற்பாக்கியத்துக்குத்தாய் என்றபடி, நீ உழைப்பாயாயின் கடவுள் உனக்குச் சகல நன்மைகளும் அளிப்பார். ஆனது கொண்டு சோம்பேறிகள் தூங்கித்தாங்கள் காலங்களை போக்க நீ நிலத்தை உழுது பண்படுத்தினுல் உண்டு உடுத்து லாப மடையலாம்.

எதையும் நாளை செய்யலாமென்று போக்குச் சொல்லாமல் உடனே செய்; ஏனெனில் நாளையதினம் என்ன தடங்கலுண்டாகுமோ தெரியாது; மேலும் 'நாளைச்சாப்பிடுகிற பலாக்காயை விட இன்று சாப்பிடும் களாக்காயேமேல்' என்னும் பழமொழிக்கிணங்க இன்று செய்யும் ஓர் வேலை நாளை செய்யும் இரண்டுவேலைக்குச்சமமென்று நினைத்து இன்று செய்யக்கூடியதை நாளை வரையிலும் நிறுத்தி வையாதே. நீ ஒருவனிடத்தில் சேவகத்துக்கு அமர்ந்திருந்தால் நீ சோம்பலாயிருக்க, எஜமானர் எங்கே கண்டுகொள்ளுகிறுரோ என்று அச்சப்படுவாயல்லவா? அப்படியிருக்க உனக்கும் உனது குடும்பத்துக்கும், உனது தேசத்துக்கும், உனது அரசனுக்கும், எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிற நீ சோம்பலாயிருக்க எவ்வளவு அச்சப்படவேண்டும். ஆதலின், "கையுறை நீக்கி ஆயுதத்தைக்கையாடு" "கையுறையிட்டப்பூனை எலி பிடிக்குமா?" ஒரு வேளை உனக்கு அதிக வேலையிருக்கலாம், அதை நீ தனியே செய்து முடிக்கச் சாத்யப்படாது, என்றுல், "மெல்லப்பாயுந் தண்ணீர் கல்லையுங் குழியச் செய்யும், சிறுகச் சிறுகத் தின்றுல் மலையையுந்தின்னலாம்." என்ற பழமொழிகளின்படி, கொஞ்சம் கொஞ்சமானுலும், நீ இடையறு துழைக்கின் பெரும் பயனடைவாய்.

"என்ன நாம் சும்மா உழைக்கிறதுதானு? கொஞ்சமும் அவகாசம் வேண்டியதில்லையா? என்று உங்களிற் சிலர் ஆக்ஷேபிக்காமல், அப்பா, தோழா! நான் சொல்லுவதைக்கேள். உனக்கு அவகாசம் வேண்டியிருக்கிறபக்ஷத்தில் உன்காலத்தைச் சரியாய் உபயோகி, ஒரு நிமஷமேனும் நிற்பது நிச்சயம். இன்மையால் அதை அவமாக்காதே. அவகாசமென்பது யாதெனில் ஏதேனும் ஒரு நற்காரியத்தைச் செய்வதற்கேற்ற நேரம்; அது சுறுசுறுப்புள்ளவனுக்கு வாய்க்குமேயன்றி, சோம்பேறிக்கு ஒரு போதும் நேரர்து. மேலும் சாவகாசம் கிடைக்கும்படி நமது வாழ்நாளைச் செலவிடுதலும் சோம்பலாய் ஜீவகாலத்தைப் பின்னிடுதலும் ஒன்றுக்கொன்று முற்றும் மாறுனது. அனேகர் மேலும் மேலும் உழைத்துத் தமது அறிவை விர்த்திபண்ணுமல் தமக்குள்ள சொற்ப யுக்தியால் ஒருவாறு ஜீவனஞ்செய்யப்பார்த்தாலும், அவர்கள் அறிவு மிதமானதால் சற்று நேரத்துக்குள் ஓய்ந்து மேலே போக இடமில்லாமல் தவறிப்போவார்கள். உழைப்பவனே சுகமும் செல்வமும் மரியாதையும் பெற்று வாழ்ந்திருப்பான். அல்லாமலும், நீ இன்பம் வேண்டாம் வேண்டாமென்று நீக்கி எவ்வளவு அதிகமாக உழைக்கிறுயோ, அவ்வளவு சீக்கிரமாய் இன்பம் உன்னை வலியத் தொடர்ந்து வரும். முயற்சியுடன் நூற்கிறவன் பெரிய வஸ்திரத்தைப் பெறுவான்.



"நாம் உழைப்பது மாத்திரம் போதாது நிலையாயும் ஸ்திரமாயும் ஜாக்கிரதையாயும் நடந்து கொள்வதுடன், நமது காரியத்தை வேறெருருவரை நம்பிவிடாமல் நேரில் செய்ய முயலவேண்டும். இடம் விட்டு அடிக்கடி பெயர்த்துப் பெயர்த்து வைக்கப்பட்ட செடியாவது, ஒரு இடமும் ஸ்திரமில்லாமல் ஊரூராய் அலைந்த ஒரு குடும்பமாவது தழைத்தோங்கினதாகக் கண்டதில்லை. "நிலையிற் பிரியேல்'' என்ற வாக்கியத்தின்படி, நீ இருந்த இடத்திலேயே இருந்து உன்கடையைப் பாது காத்து வந்தால் அது உன்னைப் பாதுகாக்கும். மேலும் உனக்கு ஒரு காரியம் ஆகவேண்டியதாயிருந்தால் நீயே போகவேண்டும். அது சரிப்படாத பக்ஷத்தில் மாத்திரம் ஒருவரை அனுப்பவேண்டும். ஏனெனில் "தான் போகிற காரியத்திற்கு ஒரு ஆள் போனுல் சொட்டு."

உழுது பயிர் செய்து லாபமடையக் கருதுவோன், தானே மேழி பிடித்து உழவாவது, அல்லது மாட்டை ஓட்டவாவது வேண்டும். "உடையவன் கண்ணேடாப்பயிர் அழியாதா" "உடையவன் கண்ணேடாப்பயிர் அழியாதா" என்பதையும், 'அறிவீனத்தால் உண்டாகும் நஷ்டத்தைக் காட்டிலும் அஜாக்கிறதையால் விளையும் கேடு அதிகம்" என்பதையும் உணரவில்லையா? அன்றியும் வேலைக்காரனைக் கண்காணியாமல் இருப்பது நமது பணப்பையை அவிழ்த்து வைத்துக்கொள்வது போலாம். உலகத்தில் அனேகர் தங்கள் காரியங்களை தாங்களே பாராமல் அன்னியரை நம்பி விடுவதால் நஷ்டமடைகிறுர்கள். ஏனெனில் லோக சம்பந்தமான காரியங்களில் கண்டவர்களை நம்புகிறவன் மோசம் போகிறதேயன்றி, எல்லாரையும் நம்பச் சந்தேகப்படுகிறவன், அவ்வளவாக சேதப்படமாட்டான். ஆகிலும் எவன் தன் காரியத்தைக் குறித்துச் சொந்தத்தில் ஜாக்கிரதைப் படுகிறுனே அவன் அதிக லாபம் பெறுவான். உன் மனதுக் கேற்ற உண்மையான வேலைக்காரன் ஒருவன் வேண்டியிருப்பின் உன்னைத்தவிர வேறெருருவரும் கிடையாது.

ஏனெனில் காணிக்குச்சோம்பல் கோடிக்கு வருத்தம் என்பது போல அற்ப அஜாக்கிரதையால் அளவற்ற கேடு விளையும்.

ஒரு சிறு ஆணி அற்றதனுல் ஒரு லாடம் விழுந்துபோக அந்த லாடம் இன்மையால் குதிரை கால் இடறி விழ இப்படி குதிரை காலொடிந்து விரைவாய் ஓடச்சக்தியற்றதனுல் அதன்மேல் இருந்த வீரன் ஓடித் தப்பித்துக் கொள்ள வழியின்றி, சத்துருக்க்ள் கையில் அகப்பட்டு மடிந்தான். இவையெல்லாம் மதுபிந்து கலகம்போல் குதிரை லாடத்தின் சிற்றுணியைப் பார்க்கப் பால்மாறினதினுல் உண்டானதல்லவா?

"பிரயாசைப் படவேண்டுமென்றும் தன் காரியத்தைத்தானே கவனிக்க வேண்டுமென்றும் இது வரையில் சொன்னேன். சினேகிதர்களே, இவைமாத்திரம் போதாது. சிக்கனமாயுமிருக்கவேண்டும். சிக்கனமாயிருந்தாலொழிய, மேற்சொன்ன பிரயாசையும், ஜாக்கிரதையும் பயன்படா. சம்பாதிப்பவன் சேர்க்க வகை அறியாமற் போனுல் "இல்லிக்குடத்தில் பெய்த நீரைப்போல" வரவுக்கும் செலவுக்கும் சரியாகி ஒரு காசுக்கும் வழியின்றிச் சாவான். "செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு'' என்பதற் கிணங்க, கொழுத்த சாப்பாட்டுக்காரன் சாகையில் குடிக்கச் செம்பும் வைத்திறவான்.

"ஆகவே, செல்வனுயிருக்க விரும்புவாயானுல், "ஈட்டுவதைப் போல கூட்டுவதையும் கவனி!! ஸ்பானியா தேசத்தாருக்கு திரவியம் பெற்ற மேற்கு இந்திய தீவுகள்

ஆதீனமாயிருந்தும், அத்தேசத்தாரின் செலவு வரும்படிக்கு மிஞ்சி யிருந்ததனால்தான் அது ஐஸ்வரிய முள்ளதாகவில்லை. ஆனது கொண்டு அறிவீனமான செலவுகளை ஒழித்தால், காலம் கெட்டதென்றும், சம்சாரத்தில் செலவு அதிகப்பட்டதென்றும், அவ்வளவாக குறை கூறமாட்டீர்கள். ஏனெனில், குடி, கூத்தி, வஞ்சம், கொடுஞ்சூது, இன்னான்கும் மிடிதரச் செல்வம் கெடும் என்பது நிச்சயமல்லவா? மேலும் ஒரு துர் அப்பியாசத்துக்காக, செலவாகும் பொருள் இரண்டு குழந்தைகளைக் காப்பாற்றும்.

கொஞ்சம் தேநீர் பருகுவதிலும், காலாகாலத்தில் கொஞ்சம் சாராயம் குடிப்பதிலும், சற்றே விலையுயர்ந்த துணி உடுப்பதிலும், எப்போதாவது சிலருக்கு விருந்திடுவதிலும் அதிகம் செலவாய் விடுமா என்று நீங்கள் ஒருவேளை நினைக்கலாம். அப்பா "பலதுளி பெருவெள்ளம்," "நாலாறு கூடினால் பாலாறு," "ஒரு காசுபேணில் இரு காசு தேறும்," என்றபடி, சிறு செலவுகளை ஜாக்கிரதையாய்ப் பார்த்தால் பெரும்பயனுண்டாகும். ஒரு சிறு துவாரம் பெருங்கப்பலை முழுத்தாதா? அன்றியும் 'அரும் பொருளை விரும்புகிறவன் பெரும்பொருள் இழப்பான்:' என்பதையும், மூடர்கள் பணச்செலவிட்டு விருந்து செய்ய புத்திமான்கள் புசிக்கிறார்கள் என்பதையும் உணர்ந்திலையா?

நீங்கள் எல்லாரும் இந்த வினோதமான பொருள்களையும் சாமான்களையும் வாங்கும் பொருட்டு வந்து கூடியிருக்கிறீர்கள். அவை நீங்கள் சொல்லுகிறபடி சரக்குகளல்ல. உங்களில் அநேகருக்குச் சறுக்குகளே. (Failings). இவை சற்றே மலிவாய்க் கிடைக்குமென்று நினைத்திருக்கலாம், அப்படியே ஒருவேளை கொள்விலைக்குக் குறைந்திருந்தால் என்ன? உனக்கு அவசியமில்லாத பொருளை நீ கிராக்கியென்றே கொள்ளவேண்டும்.

அனாவசியமான பொருளை வாங்கப் புகுந்தால் அவசியமான பொருளுக்கு அவதிப்படுவாயென்று சொல்லியிருக்கிறதே. மேலும் ஒரு காசுதானே என்று அலக்ஷியம் பண்ணாமல் காசு பெறுமானதை வாங்கும்போதும் நன்றாய் யோசித்துப்பார். ஏனெனில் வீசம் இறுத்து குடிநாசம், மேற்சொன்ன பொருள்கள் பார்வைக்கு மலிவானதாய்க் காணப்பட்டாலும் வாஸ்தவத்தில் உன் பணத்தை அவசியமான பொருள்களுக்கு உதவப்பண்ணாமல் கெடுதியை உண்டாக்கத்தக்கதே. வாங்கிவிட்டோமே யென்று பிற்பாடு மனஸ்தாபப்படும்படியான பொருளை வாங்குவது புத்தியீனம். அப்படியிருந்தும் "எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு" என்பதை கவனியாமல் பிரதிதினம் ஏலம் கூறும் இடங்களுக்குப்போய், கண்டதை வாங்குவது வழக்கமாயிருக்கிறது. 'குடிக்கிறது கூழ் கொப்பளிக்கிறது பனிநீர்' என்றது போல் அநேகர் அழகழகென்று விலையுயர்ந்த வஸ்திரங்களை வாங்கி விட்டு உண்ணச் சோறின்றித் தங்களையும் தங்களை நம்பியிருக்கிற தங்கள் குழந்தை குட்டிகளையும் பட்டினி போடுகிறார்கள்.

"உயர்ந்த உடுப்பு அயர்ந்த அடுப்பு" என்பது போல, பட்டும் பட்டாவளியும் பீதாம்பரமும் மகம்மலும் வாங்கப் பணத்தைச் செலவிட்டால் ஜீவாதாரமாகிய அன்னத்துக்கே அபாயமுண்டாம். இந்த விலையுயர்ந்த உடைகள் சுகத்தை விர்த்தி பண்ணத்தக்கதா? இல்லை. அப்படியிருந்தும் கண்ணுக்கு அழகாயிருக்கிறதே என்று மாத்திரம் எத்தனைபேர் அவைகளின்மேல் ஆசை கொள்ளுகிறார்கள். இவ்வளவு வீண்செலவுகளினால் உயர்குலத்தில் பிறந்து அநேகர் வறுமை யடைந்து "இவன் எம்மாத்திரம் வரவா செலவா" என்று முன்னொரு காலத்தில் தாங்கள் அவமதித்திருந்த வேறு தாழ்ந்த அந்தஸ்துள்ளவனிடத்தில் போய், அவன் சிக்கனத்தாலும் பிரயாசத்தாலும்சேர்த்துவைத்திருக்கிற திரவியத்தைக் கடன் கொடுக்கும்படி தன்னைப்பணிந்தாரை



தான் பணிவதுபோலக் கெஞ்சிக் கடனுக்கு நிற்க நேரிடுகிறது. ஆம், மெய்தான், "தான் தேடாப்பொன்னுக்கு மாற்றுமில்லை, உரையுமில்லை" என்றதுபோல சுவயமாய் கஷ்டப்படாமல்தன் முன்னோர் வைத்துபோன ஆஸ்தியை செலவழித்துக்கொண்டு இந்த சூரியன் இப்படியே ப்ரகாசிக்கும், அஸ்தமன மாகாது என்று நினைத்து, நமக்கு அகண்ட ஐசுவரியம் இருக்கிறது, கொஞ்சம் செலவழித்தால் என்ன குறையப் போகிறது, என்று சிலர் நினைக்கலாம். இப்படிப்பட்டவர்கள் "நின்று தின்றால் குன்று மாளும்" என்னும் பழமொழியை மறந்தார் போலும். 'நீர் அருமை கிணற்று வடிவில் தெரிவதுபோல, பணத் தருமை கடன் கேட்கையில் தெரியும். "கடன் பட்டார் துயர்க்கு உடன் பட்டார்" என்றறியோமோ? மேலும் அப்படிக் கொத்தவர்களுக்குக் கடன் கொடுத்தவனும் அதை மீண்டும் பெறும்போதும் அவ்வாறே வருந்துவான். வாங்குகையில் கொண்டாட்டமும் கொடுக்கையில் திண்டாட்டமுமல்லவா? ஆகையால் வீம்புக்கு விருது கட்டாமல் ஒன்று வாங்க நீ இச்சிக்குமுன் உனக்கு அதை வாங்க இசையுமா வென்று யோசிக்கவேண்டும். மேலும் அப்ப்டிப் பெருமைக்குப் பாடுபட புகுந்தால் அதற்கு முடிவுமில்லை. எப்படி பெருமை பொருட்டாய் ஒரு விநோதமான பொருளைச் சம்மாதிக்க அதற்கேற்ற டம்பமான தோற்ற முண்டாகும்படி வேறு ஒன்பது பொருள் வாங்கவேண்டும்.

இப்படிக்கெல்லாம் சங்கடப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றுகிற பல இஷ்டங்களை நிறைவேற்ற முயலுவதை காட்டிலும், முதலிலுண்டாகிற வீண் எண்ணத்தை அப்போதே களைந்துபோடுவது உத்தமம். இதைவிட்டு புலியைப் பார்த்து பூனை சூடிக்கொண்டது போல, செல்வரைப்பார்த்து ஏழைகள் வீண் செய்யக்கருதுவது எப்படியிருக்கிறதென்றால் "ஓடம் ஓதுக்கிலே கப்பல் கரையிலே" என்பதை எண்ணாமல், ஒரு தவளையானது எருதைப்போலப் பருக்கவேண்டி கத்திக்கத்தி வயிறு வீங்கிச் செத்ததுபோலிருக்கிறது. இவ்வித மூடத்தனத்தின் பயன் உடனே தெரியவரும். பெருமைக்காரர் காலையில் சம்பிரமமாய் உண்டபோதிலும், பகல் போஜனத்திற்குள் தரித்திர தசையடைந்து, இராபோஜனத்தில், சீ, சீ, கடன்காரர் முதலியவர்களால் நிந்திக்கப்படுவார்கள். நல்லது, இவ்வளவு பொருள் நஷ்டமடைந்து இத்தனை சிரமப்பட்டு இந்த வீண் பெருமைத் தோற்றமுடையவன் ஆவதில் என்னபயன், என்று சற்று யோஜித்துப் பார்ப்போம். ஏதேனும் பயனுண்டா?

அது சுகத்தைப் பேணுமா? நோயை நீக்குமா? நமக்குள்ள யோக்கியதையை அதிகப்படுத்துமா? இல்லை, இல்லை, பொறாமையை உண்டாக்கி சீக்கிரத்தில் தவுர்ப்பாக்கியத்திற்கு வழி காட்டுமேயன்றி, மற்றொன்றும் செய்யாது. இது நிற்க, இவ்வித உபயோகமற்ற பொருள்களுக்காகக்கடன் படுவது என்ன பைத்தியம்! இந்தச் சாமான்களை வாங்கும் விஷயத்தில் இப்போது கையில் பணங்கொடுக்கவேண்டியதில்லை. இலேசில் ஆறு மாசக் கடனுக்குக் கிடைக்கும் என்று சந்தோஷித்து வந்திருக்கிறீர்கள். ஐயோ, கடன் வாங்குவதில் எவ்வளவு கெடுதியாயிருக்கிறது. கடன் படுவதில் நீ உன் சுவாதீனத்தை யிழந்து மற்றொருவனுக்கு கை கட்டி உத்தரவு சொல்லும்படி பராதீனனாகிறாய். சொன்ன கெடுவில் கொடுக்கத் தவறினால் அந்த மனிதனைப் பார்க்க வெட்கப்படுவதன்றி, அவனுடன் பேசும் பொழுதெல்லாம், பயந்து பயந்து, இல்லாததும் பொல்லாததுமான சாக்குகள் சொல்லிக் கெஞ்சி மன்னிப்புக் கேட்க நேரிடும். இப்படிப்பட்ட நடக்கையினால் யதார்த்தமென்பதை முற்று மிழந்து பொய்யனாகி விடுவாய். முதற் குற்றம் கடனால் அதை அடுத்தது பொய்யென்றும், பொய்க்கு வாகனம் கடனென்றும், பெரியோர் சொல்வதுண்டு. சுவாதீனமுள்ள ஒரு மனிதன், மேற்சொன்ன காரணத்தால் தன்னைப்போன்ற வேறொரு மனிதனுக்குப் பயப்படுகிறது என்ன விபரீதம்! ஆம் வெற்றுப்பை நெறித்து நிற்குமா? அப்படியே தரித்திரருக்கு தீரமும் சன்மார்க்கமும் உண்டாகுமா?

ஒரு அரசன் தன் குடிகளில் எவனும் பெரிய மனிதனைப்போல் உடுக்கக்கூடாதென்றும் அப்படி உடுப்பவன் கடுஞ்சிறையில் வைத்துத் தண்டிக்கப்படுவானென்றும் ஒரு கட்டளைப் பிறப்பித்தால், அவ்வரசனை நீ என்

னென்று எண்ணுவாய்? இது என்ன கொடுமை, இது என்ன அடிமைத்தனம் என்று நிந்திக்கமாட்டாயா? அப்படியிருக்க உன் கடன்காரனுடைய கொடுங்கோன்மையைப் பற்றி மாத்திரம் ஏன் நினைக்கிறதில்லை? கடனிறுக்கச் சக்தியற்றையாயின், சுயாதீனமிழந்து, அடிமைபோல சிறைச்சாலையில் அடைக்கப்படுவாய். கடன் வாங்கும்போது அதை மறுபடி கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றி அவ்வளவாக நினைத்திருக்கமாட்டாய். ஆனால் கடன் கொடுத்தவர்களுக்குக் கடன் பட்டவர்களைப் பார்க்கிலும் நல்ல ஞாபகமாகையால், அவர்கள் கெடுவு தினத்தை மறவாமல் வைத்திருந்து, நீ எண்ணுதவண்ணமாய்த் திடீரென்று வந்து பணத்தைக் கொடு என்று கேட்க, அத்தருணத்தில், நீ இதென்ன? இவ்வளவு சீக்கிரத்தில் வாய்தா கடந்து விட்டதா? எங்கிருந்து கொடுக்கிறது என்று திகைத்துச் சங்கடப்படுவாய்.

தற்காலத்தில் நமக்கு ஒன்றும் குறைவில்லை. திரண்ட செல்வ மிருக்கிறது. சற்றே மிதமிஞ்சி செலவழித்தாலும், நஷ்டமில்லை என்றாலும், "ஓடுகிற ஆறு ஓடிக்கொண்டே யிராது," என்பதை மனதிலெண்ணி, விர்த்தாப்பியத்திற்குவேண்டியதை உன்னால் கூடுமானபொழுதேசேர்த்து வைத்துக்கொள். மேலும் வருமானம் நீடித்ததும் நிச்சயமானதல்ல, செலவோ வாழ்நாள் உள்ளளவும் நிலையும் நீச்சுமானது. ஆதலின் இரண்டடுப்புப்போடுவது எளிது, அவற்றில் ஒன்றை யேனும் விடாது எரித்தல் அரிது, என்பதை நினைத்து வீண் செலவுகளின் பொருட்டு கடன்படாமல் 'கடனில்லாச்சோறு கால்வயிறு போதும்," என்று கவுரவமாய் ஜீவனம் பண்ணக்கடவை. உன்னால் கூடியதை சம்பாதி, சம்பாதித்ததை வீண்செலவின்றிக் காப்பாற்று, என்னும் இம்மேலான விதியை நீ அனுசரித்தால் உனது செல்வம் அதிகரிப்பது மன்றி காலம் கெட்டதென்றும், வரிசெலுத்துவது கஷ்டமென்றும் குறை கூறவும் ஏதுவிராது.

இதுவரையிலும் நாம் சொன்னது எல்லாம் நம்முடைய புத்தியாலும் பகுத்தறிவாலும் செய்யவேண்டியவை. இவ்வாறாக நம்முடைய பிரயாசை, சிக்கனம், முன் ஜாக்கிறதை முதலிய நற்குணங்களால் நாம் சீரடையும்படி என்ன முயற்சிசெய்தாலும், கடவுளுடைய அனுக்கிரக மில்லாவிட்டால் ஒன்றும் ஈடேறாதாகையால், சர்வஜீவதயாபராகிய அந்த பரிசுத்தருடைய அருளுக்கு பாத்திரராகும்படி சதா அவரை நமது உள்ளத்தினின்று நீங்காமல் பிரார்த்தித்து, நம்மைசூழ்ந்திருக்கும் ஏழைகளுக்கு அன்பு பாராட்டி நம்மால் ஆன அளவு நன்மைபுரிய பார்ப்போமாக.

மேலும் அறிவீனர்கள் என்ன சொன்னாலும் கேளார். 'சொல்லுதல் யார்க்கும் எளிதாம், அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்றபடி, அவர்களுக்கு அனேக புத்திமதிகள் சொல்லலாமே யொழிய அவர்களை அதன்படி நடக்கச்செய்வது சாத்தியமா? ஆயினும், "பட்டறி, கெட்டறி, பத்தெட்டிறுத்தறி" என்றபடி அவர்கள் தங்கள் சொந்த அனுபோகத்தால் அறிவார்கள்.

இவ்வாறாக அந்தக்கிழவர் பிரஸங்கித்து முடிக்க ஜனங்களும் அதிக கவனத்துடன் உற்றுக் கேட்டு அவர்சொன்ன தெல்லாம் சரியென்று ஒப்புக்கொண்டும், 'படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன் கோயில்,' என்பதற்கேற்க அவர்களெல்லோரும் உத்தரக்ஷணத்தில் அதற்கு முற்றும் மாறாக நடக்கத்தொடங்கினார்கள். எப்படி யெனில் ஏலங்கூற ஆரம்பிக்கவே ஜனங்கள் இஷ்டமான பொருள்களை யாதொருவரையுமின்றி வேண்டியமட்டும் வாங்கிப்பொருள் விரயஞ்செய்தனர். முற்கூறியவண்ணம் அந்த விருத்தர் ஜனங்களுக்கு புத்திமதி சொல்லிக்கொண்டு இருக்கக்கண்ட நான், அவர் என்னாலே நன்றாய் படித்திருக்கிறாரென்று மிகவும் சந்தோஷமடைந்து எனது புத்திமதிகளால் ஜனங்கள் பயன்பட இஷ்டமில்லாதவர்களா யிருந்தும் நானாவது அதன்படி நடந்து காட்ட வேண்டுமென்று தீர்மானித்து முதலில் சொக்காய்க்கு கொஞ்சம் துணிவாங்கும்படி உத்தேசித்து வந்திருந்தும் வாங்க மனமில்லாமல் பழய சொக்காயை இன்னும் சில நாளைக்கு தரித்துக்கொள்ளலாமென்று எண்ணி வீட்டிற்குத் திரும்பினேன். இதை வாசிக்கும் எனது அன்பர்களாகிய நீங்களும் இவ்வாறு நடப்பீர்களாகில் என்னைப்போல லாபம் அடைவீர்கள் என்பதற்குச் சமுசயமில்லை.—ஜனவிநோதினி.



# REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### THE KING AND QUEEN AT HOME.

### ராஜாவும் ராணியும் அவர்கள் வீட்டில்.

'சேம்பர்ஸ் ஜர்னல்' என்னும் இங்கிலீஷ் மாதாந்தரப் பத்திரிகையின் ஜுலை மாஸத்து ஸஞ்சிகையில் நம்முடைய ராஜாவும் ராணியும் காலங்கழிப்பதைப் பற்றி ஒரு வ்யாஸம் காணப்படுகிறது. ராஜ குடும்பத்தில் எல்லாரும் அதிகாலையில் எழுந்துவிடுவார்கள். சக்ரவர்த்தி குதிரை ஸவாரி போய்விடுவார். திரும்பிவந்து ராணியையும் குழந்தைகளையும் கூடவைத்துக்கொண்டு காலை போஜனம் முடித்துவிட்டு ராஜாங்க விஷயமாயுள்ள கடிதங்கள் முதலியவைகளைப் பார்க்க ஆரம்பிப்பார். இது தினம் நாலு மணிநேரம் பிடிக்கும். நமது சக்ரவர்த்தியே எல்லாக் கடிதங்களையும், உடைத்துப் பார்ப்பதில்லை. வந்த கடிதங்களை எல்லாம் அவருடைய ப்ரைவேட் ஸெக்ரடெரிகள் உடைத்துப்பார்த்து அநேக கடிதங்களைக் கிழித்துப் போட்டு விடுவார்கள். இவைகளெல்லாம் பயித்தியக்காரர்கள், ஏதோ தங்களுக்குத் தீமை செய்யப்பட்டதாக எண்ணினவர்கள், சக்ரவர்த்தி பேரை உபயோகித்து லாபமடிக்க உத்தேசித்த வியாபாரிகள் ஆகிய இப்படிப்பட்டவர்களுடைய கடிதங்களே. கிழித்து விடப்படும். சக்ரவர்த்திக்கு அனுப்ப வேண்டிய கடிதங்களெல்லாம் அவருடைய ப்ரைவேட் ஸெக்ரடெரிக்கு அனுப்ப வேண்டும் என்பது விதி. ஆனால் இந்த விதியை ஜனங்கள் கவனியாமல் சக்ரவர்த்திக்கே நேரில் எழுதுவார்கள். ஆனாலும் எல்லாக் கடிதங்களும் அவருடைய ப்ரைவேட் ஸெக்ரடெரிகளே உடைத்துப்பார்த்து சக்ரவர்த்தி பார்க்க வேண்டிய கடிதங்களை மட்டும் அவருக்குக் கொடுப்பார்கள். பாக்கிக்குத் தாங்களே பதில் எழுதிவிடுவார்கள். சக்ரவர்த்தியைப் பார்க்க வேண்டுமென்றாவது, தர்ம ஸ்தாபன விஷயங்களுக்குப் பண உதவி வேண்டுமென்றாவது எழுதப்படும் கடிதங்களை சக்ரவர்த்தி தானே பார்த்துப் பைஸல் செய்வாராம்.

மேரி ராணியும் சக்ரவர்த்தியைப்போலவே காலை வேளையில்வரும் கடிதங்களுக்குப் பதில் எழுதுவார். ஆஸ்பத்திரிகள், தாய் தகப்பனற்ற குழந்தைகளுக்கான ஸ்தாபனங்கள், தையல் வேலைசெய்யும் ஸ்திரீகளின் சங்கங்கள் ஆகிய இவைகள் விஷயத்தில் சக்ரவர்த்தினி சலிக்காமல் உழைத்து வருகிறார். வருஷாவருஷம் சிக்காளிகளுக்கு தன் ஸொந்தக் கையால் உடைகள் தைத்து அளவில்லாமல் கொடுப்பார். இவைகளோடு தம்முடைய குழந்தைகளையும்பார்த்து வருவார். ஊரில்லாத குழந்தைகளுக்கு தினமும் ஒரு கடிதம் எழுதுவார்.

குழந்தைகளெல்லாம் மரியாதையாய் நடக்கும். பரம ஏழையானவன் ஸலாம் செய்தாலும் குழந்தைகள் திருப்பி ஸலாம் செய்யும்படி பழக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

மேல் சொன்னபடி வேலை முடிந்ததும் பகல் போஜனம் நடக்கும். ஸாயந்தர வேளைகளில் சக்ரவர்த்திக்கு ஏதாவது அலுவல் இருக்கும். இல்லாத நாளில் சக்ரவர்த்தினியோடு ஸவாரி போவார். சக்ரவர்த்தி இல்லாமல் போனால் மேரி ராணி மட்டும் சிலவேளை தன் பெண்ணோடு கூட ஸவாரி போவார்.

பொழுது போனதும் விருந்தாளிகள் வந்திருந்தாலொழிய சீக்கிரம் சாப்பாடாகிவிடும். சாப்பிட்டபிறகு புஸ்தகங்களை வாசித்துக் கொண்டிருந்து சீக்கிரம் படுக்கப் போய்விடுவார்கள்.

## INDUSTRIES IN MADURA.

## மதுரையில் கைத்தொழில்கள்.

சென்னைராஜதானியில் சென்னப்பட்டணத்துக்கு அடுத்த பெரிய பட்டணம் மதுரை. இதன் ஜனத்தொகை 1,32,699. தற்காலத்தில் மதுரை ஒரு வளம் பொருந்திய பட்டணமென்றும் இன்னும் வரவரப்பெரிதாகக் கூடுமென்றும் ஆனரபில் மிஸ்டர் சாட்டர்டன் ஹிந்துப் பத்திரிகையின் ஸமீப ஸஞ்சிகை ஒன்றில் எழுதியிருக்கிறார்.

மதுரையின் வளப்பத்திற்குக் காரண புருஷர்கள் இரண்டு பேர்கள். அவர்களில் ஒருவர் மிஸ்டர் பென்னிக்விக். இவர் ஸர்க்கார் பாசன இலாகாவில் இன்ஜினீராயிருந்தபோது பெரியாற்றை அணைபோட்டு மதுரையில் கொண்டு வந்து விட்டு அநேக ஆயிரம் ஏக்ரா ஸாகுபடியாகும்படி செய்தார். இதனால் வானம் பார்த்திருந்தவர்களெல்லாம் ஜலம் நிச்சயமாய்க் கிடைக்குமென்பதை நம்பி விவஸாயம் செய்யலாம். தவிர அதிக ஜலம் வேண்டிய கரும்பு முதலிய பயிர்களையும் ஸுமார் 20,000 ஏக்கராவில்பயிர் செய்யக்கூடும். பெரியாற்று ஜலத்தில் இன்னொரு நன்மையும் ஏற்படலாம்.

மதுரையில்தொழில்களின் அபிவிர்த்திக்கு விறகு அவசியமாயிருப்பதால், அதைக் காடுகளிலிருந்து கொண்டு வருவது அதிகச் செலவுள்ளதாயிருக்கிறது. பெரியாறு ஏரியில் 70 மைலுக்கு அப்பால் மின்ஸார விசையுண்டுபண்ணி அதைப் பட்டணத்துக்குக் கொண்டுவந்தால் தொழில்களுக்கு ஒத்தாசையாயிருக்கும். இப்போது கவர்ன்மெண்ட் இது பாசனத்துக்கு விரோதமாயிருக்குமென்று கவனிக்காமலிருந்தபோதிலும் சீக்கிரத்தில் இப்படிச் செய்யப்படலாம்.

வெகு காலமாக மதுரை நெசவுத்தொழிலுக்குப் பேர்போன பட்டணம். மதுரைச் சாயமும் பேர்பெற்றது. இந்தச் சாயத்தொழிலை அபிவிர்த்தி செய்தவர் எல். கே. துளஸிராம். இவர் ஸௌராஷ்டர வகுப்பைச் சேர்ந்தவர். ஹைகோர்ட்டு வக்கீலாகி இருந்தபோதிலும் தம்மினத்தாரை கைதூக்கி விடுவதில் உழைத்து வருகிறார்.

இவர்தான் மதுரையின் வளப்பத்துக்கு இரண்டாவது காரண புருஷர்.

அன்னிய தேசத்திலிருந்து 1901-02-ம் வருஷத்தில் 1,51,519 ரூபாய்க்கு அலிஸரைன் சாயம் தூக்குக் குடியில் இறக்குமதியாயிற்று. 1910-11ம் வருஷத்திலோ 5, 26, 795-க்கு இறக்குமதியாகி, இந்த அலிஸரைன் சாயமெல்லாம் மதுரையில் உபயோகப்பட்டு வருகிறது. மற்ற சாயங்களும் உபயோகப்பட்டு வருகின்றன. சாயந்தோய்ப்பதற்காக மதுரையில் உபயோகப்படும் பருத்தி மாசம் ஒன்றுக்கு 2,000 மூட்டைகளாகும். மூட்டை யொன்று 400 பவுண்டு நிறையுள்ளது. இப்படி சாயந்தோய்த்த நூல் வருஷம் 100 லக்ஷம் பவுண்டு நிறையுள்ளதாகி மாகாண முழுதும் அப்புறமுங்கூட அனுப்பப்படுகிறது. ஆனால் இந்த தொழில் முழுமையும் சில்லரையாகச் செய்யப்படுகின்றதேயொழிய பெருந்தொழிற்சாலைகள் இல்லாமலிருக்கின்றன.

ஸௌராஷ்ட்ர வகுப்பார் சில காலமாய் தொழில் ஸ்கூல் ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறபடியால் ஸமீபத்தில் கவர்ன்மெண்ட் ஒரு சாய ஆராய்ச்சிச் சாலையும் ஒரு சோதனைச் சாலையும் ஸ்தாபிக்கக்கூடுமென்று மிஸ்டர் சாட்டர்டன் சொல்லுகிறார். இந்தச் சாலைகளில் ஸௌராஷ்



டரத் தொழிலாளிகள் தங்களுக்கு வேண்டிய அறிவையும் அனுபோகத்தையும் பெறுவார்கள்.

மதுரையில் நூற்புச்சாலை யொன்று ஐரோப்பியருக்குச் சொந்தமாயிருக்கிறது. அதில் 35,000 கதிர்கள் உபயோகப்படுத்தப் படுகின்றன. புதிதாய் 75,000 கதிர்கள் உபயோகப்படும்படியாயும் 5,000 அல்லது 6,000 கூலிக்காரர்கள் அதில் வேலை செய்யும்படியாயும் அது விஸ்தரிக்கப்படும்.

மதுரை வெகு காலமாய் பட்டுத் துணிகளுக்கும் ஜரிகை வேஷ்டிகளுக்கும் பேர்போனது. ஜரிகை இப்போது ப்ரான்ஸிலிருந்து தருவிக்கப்படுகிறது. ஆனால் மதுரையில் போதுமான ஊக்கமிருந்தால் அங்கேயே அது செய்யப்படலாம்.

கரைபோட்ட அங்கவஸ்திரங்கள் யந்திரங்களிற் செய்ய முடியாதாகையால் மதுரையில் போட்டியில்லாமல் விசேஷமாய்ச் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் துணிகள் மீனாக்ஷி மில்லென்ற ஒரு தொழிற் சாலையில் 150 தறிகளைக்கொண்டு விசேஷமாய்ச் செய்யப்படுகின்றன. இம்மாதிரி நெசவும் சாயந்தோய்த்தலும் ஸௌராஷ்டிரர்கள் செய்து அதிக லாபம் பெற்று வருகிறார்கள்.

இதுவரையில் டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஒரு தொழில் ஸ்கூல் வைத்து நடத்தி வந்ததில் நெசவு [illegible] ஆனால் [illegible] செய்விக்கப்பட்டு [illegible] இப்[illegible] ஸ்கூ[illegible] தொழிலையும் கற்றுக் கொடுக்கும்படியாய் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

### LIVE STOCK.

### கால் நடைகள்.

'ஸ்ட்ராண்ட்' என்னும் இங்கிலீஷ்ப் பத்திரிகையில் இங்கிலாந்து, ப்ரான்ஸ், ஜெர்மனி, ஆகிய இந்த தேசங்களிலுள்ள கால் நடைகள் இவ்வளவென்று எழுதப் பட்டிருக்கிறது. அவைகள் பின் வருமாறு:—

| | இங்கிலாந்து. ஸ்காட்லாந்து. அயர்லாந்து. | ப்ரான்ஸ், | ஜெர்மனி. |
|---|---|---|---|
| பன்றிகள் ... | 3,530,066 | 7,202,430 | 22,146,532 |
| நாய்கள் ... | 4,000,000 | 2,800,000 | 1,100,000 |
| மான்கள் ... | 700,000 | 55,000 | 550,000 |
| வெள்ளாடுகள் ... | 600,000 | 1,424,870 | 3,533,970 |
| செம்மறி ஆடுகள் ... | 31,751,777 | 17,456,380 | 7,703,710 |
| குதிரைகள் ... | 3,400,000 | 4,600,000 | 5,500,000 |
| பூனைகள் ... | 7,850,000 | 4,600,000 | 450,000 |
| கழுதைகள் ... | 85,000 | 363,000 | 19,642 |
| கோழிகள் ... | 40,000,000 | 112000000 | 77,103,000 |
| பசுக்களும் எருதுகளும் } ... | 11,720,546 | 14,239,730 | 20,630,544 |

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து இந்தத் தேசங்களில் பூனைகளும் நாய்களும் எவ்வளவு ஜாஸ்தியாயிருக்கின்றன பாருங்கள். இந்தத் தேசங்களில் தினை [illegible] [illegible] பூனையும் [illegible] இங்கிலாந்தில் [illegible]

[illegible] பிடாமல் [illegible]

## INDIA'S PRESSING NEEDS.

### இந்தியாவுக்கு அத்யாவசியமாய் வேண்டியவை.

'ஸ்டேடிஸ்ட்' என்பது பொருளாதார விஷயங்களைக்குறித்து இங்கிலாந்தில் பிரசுரமாகும் ஒரு வாராந்தரப் பத்திரிகை. இதன் ஸமீப ஸஞ்சிகை ஒன்றில் இந்தியாவுக்கு அத்யாவசியமாய் உடனே வேண்டிய விஷயங்களைப்பற்றி ஒரு வியாஸம் காணப்படுகிறது. முதலாவது இந்தியர்கள் எல்லாரையும் அவரவர்கள் ஸ்வபாஷைகளில் நன்றாய்ப் படிப்பிக்கவேண்டும். இரண்டாவது பாசனத்துக்கு ஏராளமாக ஜலாதாரங்களை ஏற்படுத்தவேண்டும். இது விஷயமாக கவர்ன்மெண்டார் கவனம் செலுத்திவருகிறார்கள். எங்கும் ஜல ஆதாரம் ஏற்பட்டாலொழிய அடிக்கடி நேரிடும் பஞ்சம் ஒழியாது. மூன்றாவது போக்குவரத்துக்கும் ஸாமான்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக்கொண்டு போகவும் ரெயில் முதலிய ஸௌகரியங்கள் ஏற்படவேண்டும். இவை எங்கே பார்த்தாலும் இருக்கவேண்டும். சார்ஜும் சொல்பமாயிருக்கவேண்டும்.

## YIELD OF COWS.

### பசுக்களின் கறவை.

பசுக்களை ஜாஸ்தி தண்ணீர் குடிக்கச் செய்வதால் பாலின்ஸத்துக் குறைகிறதா என்று இங்கிலாந்தில் மிட்லண்ட் விவஸாயகாலேஜில் பரீக்ஷை செய்து பார்த்தார்களாம். மாடுகளுக்கு உப்பை ஜாஸ்தி போட்டும் அவைகள் ஜாஸ்தி ஜலம் குடிக்கவில்லையாம். மாடு குடிக்கும் ஜலத்தின் அளவுக்கும் அதனுடைய பாலின் ஸத்துக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லையாம்.

## REVIEWS OF BOOKS.

### புஸ்தக ஆராய்ச்சி.

VALMIKI RAMAYANAM.

**வால்மீகி ராமாயணம்** — ஸர்க்கார்த்த ஸங்க்ரஹம். இது அரியக்குடி சா. கி. அரங்கநாத செட்டியாரவர்களால் இயற்றப்பெற்று ஷெ யார் குமாரர் சா. கி. ரெ. லக்ஷ்மண செட்டியாரால் பதிப்பிக்கப்பட்டது. ராமாயணக் கதை 550 செய்யுளில் அடக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8

RAMAYANAM.

**ராமாயணம்.**—பாலகாண்டம் தமிழ் வசனம். இது வால்மீகி ராமாயணத்திற்கிணங்க ஸ்ரீ அ. வி. நரஸிம்மாசாரியாரால் இயற்றப்பெற்று சென்னப்பட்டணம் ஆர். வெங்கடேச்வர் அண்ட் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பெற்றது.

"ஸ்ரீராமாயணத்தை மஹர்ஷி மொழிந்த உரைகளையே தமிழ் தேசஸ்தர்கள் அநுபவித்து ஆனந்திக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் ஸ்த்ரீகளுக்கும் பாலர்களுக்கும் தெரியக்கூடிய தெளிவான தமிழ்ப் பாஷையில் மிருதுவான நடையில் முதல் பாலகாண்டத்தை இயற்றி வெளியிடலாயினம்.

மேலும் இதில் பெரிய வாச்சான் பிள்ளை அருளிச்செய்த அந்தந்த ஸ்லோகங்களின் விசேஷார்த்தங்களைத் தெளிவாக மொழியுந் தனிச்லோகியும், கோவிந்த ராஜர், மஹேச்வர தீர்த்தர் முதலியவர் செய்த வியாக்கியானங்களிலுள்ள விசேஷ விஷயங்களும் ரஹஸ்யார்த்த விவரணங்களும் ஆகிய இவையெல்லாம் தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன." புஸ்தகத்தின் விலை ரூ. 1.



## BOYS' SECTION.

### சிறுவர் பகுதி.

GREAT SPEED OF AEROPLANES.

**ஆகாயவிமானத்தின் அற்புத விரைவு.**—ப்ரயர் என்னும் ப்ரஞ்சுக்காரரொருவர் லண்டனிலிருந்து ஆகாய விமானத்திற் புறப்பட்டு 13 நிமிஷத்தில் இங்கிலீஷ் சானலைத்தாண்டி பாரீஸ்நகரம் போய்ச் சேர்ந்தாராம்.

SNAKES AS CAKES.

**பாம்புகள் பக்ஷணமாதல்.**—நமது நாட்டிலுள்ள கேவலம் தாழ்ந்த ஜாதியார்கூட, ஸாமான்யப் பக்ஷி, மிருகங்கள் இவைகளைக் கொன்று தின்பதே தவிர, பாம்பு வர்க்கங்களைத் தின்பதில்லை. பர்மியருள் அனேகருக்குப் பாம்பு வெகு ருசிகரமான பக்ஷணமாம். ஆதலால், பாம்புகளைக் கொன்று இதற்கென்று விற்பது அவ்விடத்தில் ஸாதாரணமாம்.

THE FIRST TAMIL AVIATOR.

**முதல் முதல் ஆகாயவிமானமேறியிறங்கிய ஒரு தமிழ் வாலிபன்.**—புதிச்சேரியிலிருந்து ப்ரான்ஸுக்குச்சென்று வாசித்து வரும் நாராயணப் பிள்ளை யென்னும் ஒரு வாலிபன் சில தினங்கட்கு முன் ஆகாய விமானத்திலேறிச் சுகமாயிறங்கினனும். அவர் ஆகாயவிமானமேறிக் கடல் மார்க்கமாகச் சென்ற புகைப் படம் புதுச்சேரியில் கிடைக்குமாம்.

FLYING FROGS AND SQUIRRELS.

**பறக்கும் தவளைகளும் அணில்களும்.**—ஜாவா தீவில் பறக்கும் தவளைகளிருக்கின்றன. அவைகளின் மேல்புறம் பச்சை நிறமுள்ளதாயும், வயிறு வெண்மையாயும், கால்களுக்கிடையிலுள்ள பறப்பதற்கேற்ற மெல்லிய தோல்கள் மஞ்சள் நிறமாயுமிருக்கின்றன. இதே மாதிரியாகப் பறக்கும் அணில்களும் இருக்கின்றனவாம்.

LION AND TIGER.

**ஸிம்மமும் புலியும்.**—புலியின் உயரம் மூன்று முதல் நான்கு அடி வரையுள்ளதாயும், அதன் நீளம் சுமார் எட்டு அடியுள்ளதாயும் கூறப்பட்டிருக்கிறது. சிங்கத்தின் உயர நீளமும் அவ்வளவேயாம். ஆனால் சிங்கத்திற்குள்ள பிடரி மயிர் புலிக்கிராததால், அதற்குப் பிரதியாக புலி சிவந்த மஞ்சள் வர்ணமுள்ள மயிரடர்ந்த தோலில் கறுத்த வரைகளுள்ளது. தவிர அதன் வயிற்றின் அடிப்புறம் துல்லிய வெண்மை நிறமுள்ளது.

THE DUTIES OF STUDENTS.

**மாணாக்கர்களுடைய வேலை.**—கனம் கோக்லே ஸமீபத்தில் சென்னப்பட்டணத்துக்கு வந்திருந்தபோது அங்கேயுள்ள ஸ்கூல்பிள்ளைகளெல்லாரும் சேர்ந்து அவருக்கு ஒரு அட்ரெஸ் அதாவது நல்வரவுப் பத்திரம் படித்தார்கள். அதைப் பெற்றுக்கொண்டு பதில் சொல்லுகையில் பொதுவாய்ஸ்கூல் பிள்ளைகளின் கடமைகளைப் பற்றியும் அவர்கள் உலகத்தில் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியைப் பற்றியும் சில வார்த்தைகள் பேசினார்.

பிள்ளைகள் வாசிக்குங் காலத்தில் அவர்களுடைய கடமை நான்கு விதமாகுமென்று சொன்னார். முதலாவது, பிள்ளைகள் தங்களுக்கே செய்து கொள்ள வேண்டிய கடமை; இரண்டாவது மற்றப்பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமை; மூன்றாவது, பெரியோர்கள், போதகர்கள், கவர்ன்மெண்டார், இவர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய மாதிரி; நான்காவது, தங்கள் தேசத்திற்குச் செய்யக் கடமைப்பட்டிருப்பன. பிள்ளைகள் தங்களுக்கே செய்து கொள்ளவேண்டியது அறிவைச் சம்பாதிப்பதும் யோக்கியதையை வளர்ப்பதும்; அறிவைவிட யோக்யதை முக்கியம். பிள்ளைகளிற் பலர் தாங்கள் காலேஜ்களிற் படிக்கும்போது திறமை காட்டிப் பரீட்சைகளில் முதலாவதாகத் தேறுகிறார்கள். பிறகு உலகத்திற் புகுந்து தொழில் செய்யுங்காலத்தில் தவறிப் போவதைக் கண்டிருக்கிறோம். இதற்குக் காரணம் யோக்கியதைக் குறைவு. ஆகையால், பிற்காலத்துக்கு அவசியமான உயர்ந்த குணங்களைப் படிக்குங் காலத்திலேயே கற்பது அவசியம். பிறகு மற்றப்பிள்ளைகளோடு ஸகவாஸம் செய்கையில் ஒத்துழைப்பும் அடக்கமும் பயிலவேண்டும். இந்த இரண்டு குணங்களும் இல்லாமையாலே நம் தேசத்திற் செய்யப்படும் பல காரியங்கள் நிறைவேறாமற் போகின்றன. பலர் சேர்ந்து ஒரு காரியத்தை நிர்வகிப்பதும தலைவருக்கு அடங்கி யிருப்ப

தும் முக்கியமென்று அனுபோகத்தில். தெரிந்து கொள்ளாதவர் யார்? இந்த இரண்டு குணங்களும் உண்டானல் முக்கியமான பொதுக் காரியங்களோ, பெரிய தொழில்கள் செய்யவேண்டிய கம்பனிகளோ, இவைகளை நிர்வகித்து நிறைவேற்றல் ஸாத்திய மாகும். மேல் நாட்டாருக்கு இந்தக் குணங்கள் இருப்பதும் நமக்கு இல்லாததுமே அவர்களை மேலாகவும் நம்மைக்கீழாகவும் வைத்திருக்கிறது.

RESPECT FOR ELDERS.

**பெரியோர்களிடத்தில் மரியாதை.**— மூன்றாவது கடமை, பிள்ளைகள் பெரியோரிடத்தில் மரியாதையும் வணக்கமும் காட்டுவதென்று மிஸ்டர் கோகலே சொன்னார் பிள்ளைகள் பெற்றோர்கள் விருப்பப்படி நடப்பதும் பொதுவாய்ப் பெரியோருக்கு மரியாதை செய்வதும் நம் தேசத்தில் வெகு காலமாய் இருந்துவரும் வழக்கம். தற்காலம் பெற்றோரை விடப் பிள்ளைகள் கற்றவர்களாயிருந்த போதிலும் பெற்றோர்களுடைய விருப்பத்துக்கு விரோதம் செய்யாமல் அவர்களைத் தங்களுடன் ஒற்றுணர்ச்சி காட்டி ஒத்துப் போகும்படிச் செய்வது எளிது. பம்பாய் ராஜதானியில் ஹைகோர்ட் ஜட்ஜ்களாயிருந்த மிஸ்டர் காசிநாத் டிலங்கும் மிஸ்டர் மகாதேவ கோவிந்த ரானடேயும் இப்படிச் செய்தார்களானல் அவர்களைப்போல் நம் சிறுவர்கள் செய்வது ஸரியென்பதற்கு வேறென்ன நியாயம் வேண்டும்? போதகர்களிடத்தில் மரியாதையும் அன்பும் வேண்டுமென்று மிஸ்டர் கோகலே சொன்னார். இது பழைய காலத்தில் சாத்தியமா யிருந்ததுபோல இக்காலத்தில் ஸாத்தியமில்லை. முதலாவது போதகர்கள் வித்தியா சாலையில் இராமல் வெவ்வேறு சாலைகளுக்கு மாறிக்கொள்கிறார்கள். ஒரு வருஷத்துக்கோ ஆறுமாசத்துக்கோ ஒரு முறை வாத்தியார்கள் மாறினால் அவர்களிடத்தில் பிள்ளைகளுக்கு மரியாதையும் அன்பும் எப்படி யுண்டாகும்? [illegible]லும் வாத்தியார்களிற் பலர் அறிவிலும் யோக்கியதையிலும் [illegible] வயதுவந்த பிள்ளைகளால் அவமதிக்கப் படுகிறார்கள். துர்க்குணியாய் இந்தியரை வெறுக்கும் ஐரோப்பியரிடத்திலும், ஒழிந்த நேரத்தைச் சீட்டாட்டத்திலும், வேசிகள் ஸகவாஸத்திலும் செலவிடும் வாத்தியார்களைப் பிள்ளைகள் வெறுப்பது அவர்கள் குற்றமல்ல. ஆயினும், இவ்வாறு தோஷங்கள் இல்லாமல் நல்ல அறிவும் யோக்கியதையும் உள்ள வாத்தியார் ஒரே இடத்தில் நீண்டகாலம் இருப்பாரானல் அவரிடத்தில் பிள்ளைகளுக்கு அன்பும் மரியாதையும் உண்டாகின்றன.

STUDENTS AND GOVERNMENT.

**மாணக்கர்களும் கவர்ன்மெண்டும்.**— கடைசியாய், மிஸ்டர் கோகலே ராஜாங்கத்தாரிடத்தில் பிள்ளைகள் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியைப்பற்றியும் ராஜீய காரிங்களில் அவர்கள் கலப்பதைப்பற்றியும் பேசினார். ராஜாங்கத்தார் செய்யும் ஒழுங்குகளுக்கும் சட்டங்களுக்கும் பிள்ளைகள் பெரியோகர்ளைப்போல அடங்கி நடக்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். ராஜீய விவகாரங்களில் பிள்ளைகள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டு அவைகளைத் திருத்தவோ, மாற்றவோ, அல்லது அவைகளை உறுதிப்படுத்தவோ முயல்வது பிசகேயாகும். சிறுவயதில் அவர்களுடைய மனதும் புத்தியும் அனுபோகத்தால் நிதானப்படாமலிருக்கையில் தேசத்துக்கு லாப நஷ்டங்களை யுண்டு பண்ணும் பெருங் காரியங்களைப் பற்றிச் சிறுவர்கள் அபிப்பிராயம் சொல்லப்புகுதல் சரியல்ல. ஆனல் சிறுவர்கள், எப்போதும் சிறுவர்களாயிராமற் பிற்காலத்தில் தேசகாரியங்களைக் கவனிக்கக் கடமைப்பட்டிருப்பார்களானதால் சிறுவயதிலேயே ராஜீய விவகாரங்களையும் விதிகளையும் கற்றுத் தயார் செய்து கொள்ளல் ஸரியே தவிர, பிசகல்ல. ஆனல் ராஜாங்கத்தாரும் ஸமூகப் பெரியோர்களும் பிள்ளைகளை நடத்துவதில் அவர்களுடைய மனப்பாங்கை யொடித்துக் குறுக்கி யடக்க முயலக்கூடாது. சிறுவர்கள் எப்போதும் [illegible]க்கிளர்ச்சியும் ஊக்கமும் பெரிய லட்சியங்களும் கொண்டவர்களாயிருப்பார்கள் இவைகளால் சில சமயங்களில் சங்கடம் நேரிட்டாலும் [illegible] உயர்ந்த குணங்கள் ஆகையால் இக்குணங்களுக்கும் சிறிது இடங்கொடுக்கவேண்டும்.—சுதேசமித்திரன்.



## LADIES' SECTION.

## ஸ்திரீகள் பகுதி.

---

LADY JUDGES.

**ஸ்திரீ நியாயாதிபதிகள்.**—ப்ரான்ஸில் இதுவரையில் ஸ்திரீகள் பாரிஸ்டர்களா யிருந்துவந்ததில் த்ருப்திபடையாமல், நியாயாதிபதிகளாக வேண்டுமென்றும் முயற்சி செய்கிறார்களாம்.

BURMESE GIRLS.

**பர்மாப் பெண்கள்.**—பர்மாவில் போய்த்தங்கும் ஐரோப்பியர் பர்மியஸ்திரீகளையேதான் நாடி விவாகம் செய்து கொள்ளுகிறார்கள். ஒரு பர்மியச் சிறுமி ஒரு ஐரோபியனை இதற்கென்ன காரணமென்று கேட்க, அவர் "ஓ ஸ்ரீமதியே பர்மியப் பெண்சாதிகள் இருக்கவேண்டிய மரியாதை தப்பி அதிகப்ரஸங்கம் செய்து உபத்திரவப்படுத்துவார்களானல், அவர்களை அடக்கியாளுவது சுலபம். தவிர அவர்கள் வரவுக்குத் தக்கபடி செலவு செய்துகொண்டு ஸம்ஸாரத்தைச் சீராக நடத்தி வருகிறார்கள். படிப்பு, அழகு முதலிய லக்ஷணங்களிலும் குறைவில்லை. ஆதலால் ஐரோப்பியர் உங்கள் மேலாசைப்படுவது அதிசயமன்று," என்றாராம்!

MONEY LOCKED IN DIAMONDS.

**வைரங்களில் போடப்பட்டிருக்கும் பணம்.**—உலகத்தில் எவ்வளவு பணம் வைரங்களில் போடப்பட்டு வேறு பிரயோசனமில்லாமல் கிடக்கிறதென்று யோசிக்கும்போது மெய்யாகவே விஸனகரமாயிருக்கிறது. அமெரிக்காவில் ராக்பெல்லர் என்ற கோடீசுவரனுடைய பெண்சாதியிடத்தில் 20 லக்ஷ வெள்ளிக்கு மேற்பட்ட வைர நகைகளிருக்கின்றன. மிஸ்ஸஸ் டப்லியு ஆஸ்டரிடத்தில் 10 லக்ஷ வெள்ளிக்கும், மிஸஸ் ஜே. ஆஸ்டரிடத்தில் 10 லக்ஷ வெள்ளிக்கும், மிஸர்ஸ் பெல்மண்டு முதலானவர்களிடத்தில் தலைக்கு 10 லக்ஷம் வெள்ளிக்கும், மிஸ்ர்ஸ் மார்ட்டினிடத்தில் 8, 50,000 வெள்ளிக்கும், பெர்ரி பெல்மண்டிடத்தில் 8,00,000 வெள்ளிக்கும், மிஸர்ஸ் ஒயேப்ரிக்ஸிடத்தில் 8,20,000 வெள்ளிக்கும், மிஸர்ஸ் வில்ஸனிடத்தில் 8,00,000 வெள்ளிக்கும், மிஸர்ஸ் பேர்டன், மிஸர்ஸ் எப் வாண்டர்பில்ட்டிடத்தில் தலைக்கு 7,50,000 வெள்ளிக்கும், மிஸர்ஸ் கூல்ட், மிஸர்ஸ் ரென்லாண்டேரிடத்தில், தலைக்கு 5,00,000 வெள்ளிக்கும் வைரங்களிருக்கின்றன. சில சீமாட்டிகளிடத்தில் மாத்திரம் 9கோடி ப்ரானுக்குமேல் வைரங்களில் அடங்கிப் போய்ச் சும்மா கிடக்கின்றன. இத்தனை பெரிய தொகைக்கு எவ்வளவு வட்டிவரும்! எத்தனை நன்மைகள் செய்யலாம்!

WET NURSES.

**பால் காரிகள்.**—பால் கொடுக்கத் தாதி ஏற்படுத்துவதில்கவனிக்கவேண்டியவிஷயங்கள் பல உள.

முதலாவதாக அவளுடைய வயதைக் கவனிக்கவேண்டும். ஏனெனில் அவள் தலைப் பிள்ளைக் காரியாயிருந்தால், இரண்டு மூன்று குழந்தைகள் பெற்றவளுடைய பாலைப்போல் அவள் பாலில் அவ்வளவு சத்திராது. பால் கொடுப்பதில் அநுபோகமுமிராது. ஆகையால் பால்கொடுக்குந் தாதி 20-வயதுக்கு மேற்பட்டவளாயும், 30-வயதுக்குக் குறைந்தவ்ளாகவு மிருக்கவேண்டும்.

பால் கொடுக்குந் தாதியின் குழந்தையும் தனது குழந்தையும் ஒரேவயதாயிருக்கிறார்களாவென்று பார்க்கவேண்டும். ஏனெனில் தாதியின் குழந்தை ஆறு ஏழு மாதத்திற்கு முந்தினதாயிருந்தால், அத்தாதியின் பாலும் ஆறு ஏழு மாதப்பிராயமுள்ள அவள் குழந்தையின் தேக வளர்ச்சிக்கு ஒத்திருக்குமேயன்றி, சிறு குழந்தைகளின் வயிற்றுக்கு ஒத்துக் கொள்ளாமல் அவர்களுக்கு அஜீரணம் முதலிய வியாதிகளையுண்டாக்கும். அப்படியன்றி தாதியின் குழந்தை அவள் பால் கொடுக்கப் போகும் குழந்தையைவிட சிறிதாயிருந்தால் அப்பாலினல் அந்தக் குழந்தைக்கு யாதொரு பிரயோஜனமிராது. ஆகையால் தாதியின் குழந்தையும் அவள் பால் கொடுக்கப்போகும் குழந்தையும் ஏறக்குறைய ஒரேவயதாயிருக்கவேண்டும்.

பால் கொடுக்கும் தாதி க்ஷயம், காசம், முதலிய எவ்வித தொத்து வியாதியுமில்லாதவளாயிருக்கவேண்டும். டாக்டரிடம் காண்பித்து அவளைப் பரீக்ஷித்துப் பார்க்கும்படி செய்யவேண்டும்.

HINDU MARRIAGE.

**இந்து விவாகம்.**—இதைப்பற்றி திவான் பகதூர் ஆர். ரெகுநாதராயரவர்கள் எழுதுவதாவது:—

" விவாக விஷயத்தைக் குறித்துப் பலர் பலவிதமான அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். விவாகமும் சாந்தி முகூர்த்தமும் வெவ்வேறு ஸமஸ்காரங்களென்று சிலர் நினைப்பதாகத் தெரிகிறது. விவாகமும் சாந்தியும் தனித்தனியான ஸம்ஸ்காரங்களல்ல. விவாகத்தை யொட்டியதாகும் சாந்தி முகூர்த்தமும். சில எஜுர் வேதிகளுக்குள்ளாக பெண்ணின் தகப்பனாராலோ கார்டியனாலோ **கன்னியாதானம்** செய்து கொடுக்கப்பட்ட நான்காவது நாள் ராத்திரியில் சாந்தியும் செய்துவிடுவது வழக்கம். அத்துடன் அந்த தம்பதிகளின் விவாகத்தை யணுகிய ஸம்ஸ்காரம் ஸம்பூரணமாய் விடுகிறது. எனவே, பெண்ணின் தகப்பனார் குடும்பத்துக் கோத்திரத்திலிருந்து அவள் பிரிக்கப்பட்டவளாவாள்—அதாவது அது வரையில் தந்தை கோத்திரத்தையே சேர்ந்தவளென்று கருதப்பட்டு வந்தவள். இனி அந்த கோத்திரத்திலிருந்து விலகியவளாகிறாள். தான் புகுந்த விடத்து, அதாவது கணவனுடைய கோத்திரம், பிண்டம், சூதகம் ஆகிய இம்மூன்றுக்கும் அவள் உரியவளாகிறாள். பிறந்த கோத்திரத்திற்கும் புகுந்த கோத்திரத்திற்கும் பிரிவுண்டாய் விட்டதற்கு அடையாளமென்னவெனில், சாந்தியானபின் பெண் இறந்து போனால், அவளுடைய தாய் தந்தையாருக்கு ஸூதகம் இல்லையென்று விஷ்ணுஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கிறது. கற்றறியா ஜனங்கள் பலர் மேலே சொன்ன இரண்டு ஸம்ஸ்காரங்களையும் தனித் தனியென்று நம்புகிறார்களே யென்று நான் ஆசங்கை யுறுகிறேன்." என்றார்.

A BRAHMIN THAT MARRIED HIS DAUGHTER.

**மகளை மனைவியாகக்கொண்ட பிராமணர்.**—பஞ்சாப்பிலுள்ள கங்கரா என்ற கிராமத்தில் சில வருஷங்களுக்குமுன் பூகம்ப முண்டானபோது ஒரு பிராமணக் குடும்பத்திலுள்ள சிறு பெண் ஒன்று தவிர மற்றவர்களெல்லாம் மாண்டுபோனார்கள். அப்பெண்ணினுடைய பிதா இந்த ஆபத்துக் காலத்தில் தேசசஞ்சாரமாக வெளியே போயிருந்தார். ஆபத்திலிருந்து தவறிய பெண்ணை அந்நகரிலுள்ள வேறொரு பிராமணன் எடுத்து வளர்த்துவந்தார். கொஞ்சகாலத்துக்குப் பிறகு பெண்ணின் தகப்பன் வந்துபார்த்துத் தன் குடும்பத்தவர்களெல்லாம் பூகம்பத்தால் இறந்துபோனதை யறிந்து வியாகூலப்பட்டுக் கொண்டிருந்தார். அவ்வூரார் பலர் கூடி இந்தப் பிராமணருக்கு அந்நியர் வீட்டில் வளர்ந்து கொண்டிருந்த இவர் மகளையே விவாகஞ் செய்வித்தார்கள். பிறகு பெண் பெரிதாகிப் புருஷன் வீட்டிற்குப்போன காலத்து, அந்த வீடு தனது தந்தையினுடைய இல்லமென் றறிந்துசொல்ல, அவ்வார்த்தையி னின்றும் விசாரிக்கக் கடைசியில் மணமகன் மணமகளிருவருக்கும் தாங்களிருவரும் தந்தையும் மகளுமென்பது நன்றாகத் தெரியவந்தது. இதையறிந்த பிராமணர் இவ்விதம் மோசடியாக மணம் புரிவித்துவைத்த ஊரார் சிலர்கள் மேல் நியாயஸ்தலத்தில் வியாஜ்யந் தொடர, விசாரித்தறிந்த ஜட்ஜி அப்பெண்ணை வளர்த்த பிராமணனுக்குத் தீபாந்தரச் சிக்ஷையும் மற்றவர்களுக்கு வருஷக் கணக்கான தண்டனையும் விதித்தார்.—பாண்டியன்.

WASHING HOUSES WITH COW DUNG.

**வீடுகளுக்கு சாணம் போட்டுமெழுகுதல்.**—இந்தக் காலத்தில் வீடுகளுக்கு அனேகமாய் **ஸிமெண்ட்** தரை அல்லது செங்கல் தரைகளுண்டு. நாட்டுப் புறங்களில் அனேகமாக வீடுகளைச் **சாண** மிட்டு மெழுகுகிறார்கள். மண்தரை ஒன்றுக்குமட்டுமே இப்படி மெழுக வாய்ந்தது. சாணம் படப்பட்ட மண் தரைகள் இறுகிவருவது வீட்டுக்கு முன்னாலே கோலமிடும் இடங்களில் சாணமிட்டுக் கடினமாயிருப்பதிலிருந்து காணலாம். மண்தரைகளே முன் காலத்திலிருந்தபடியால், அத்தரைகளுக்கு உறுதி கொடுக்கும்படி சாணமிட்டு மெழுகுதல் வேண்டுமென்று நம் முன்னோர் விதித்தார்கள். இக்காலத்தில் செங்கல் தரைகளும் அதற்குமேல் **ஸிமெண்ட்** தரையுமுள்ள இடங்களில் அப்படி மெழுகுவது சாணத்திலுள்ள குப்பையைப் பரப்புவதும், சாணத்தினது நாற்றத்தை உட்கொள்வதுமே யாகும். அந்த நாற்றம் மண் தரையிற் பட்டுச் சீக்கிரத்தில் சுத்தமாய்விடும். அதை ஸிமெண்ட்மேல் உபயோகிப்பவர் சாணத்தின் பயனை அடையாமல் அதன் கெடுதியையே அடைகிறார்கள்.



# DEPARTMENTAL NOTES.

# பகுதிக் குறிப்புகள்

## AGRICULTURAL NOTES.

## விவஸாயக் குறிப்புகள்.

BONES.

**எலும்புகள்.**—நமது தேசத்திலிருந்து வருஷம் ஒன்றுக்குச் சுமார் 100,000 டன் நிறையுள்ள எலும்பு அயல் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாய்க் கணக்கிடப்பட்டிருக்கிறது. தென்ஜில்லாக்களிலிருந்துமட்டும் 10,000 டன் நிறையுள்ள எலும்புகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனவாம். இவ்வெலும்புகளை இத்தேசத்துக் கிருஷிகர் வாங்கி எருவாக உபயோகித்தால் நமது நிலங்கள் ஸாரம் கெடாமல் வளம் நிறைந்திருக்கும்.

GATHERING MANURE IN JAPAN.

**ஜப்பானில் எருச் சேர்த்தல்.**—ஜப்பானில் மிருகங்களினின்றும், செடி கொடிகளி னின்றும், மனுஷ ஜாதியி னின்றும், ஏற்படும் ஒவ்வொரு வஸ்துவையும் ஜாக்கிரதையாய் ஒன்று சேர்த்து வயல்களில் குழி வெட்டி வைத்து விடுகிறார்கள். இப்படி ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒவ்வொரு குடியானவனிடத்திலிருந்தும் சேகரிக்கப்படுகிறது. ஒவ்வொரு தடவை குழிகளில் கொண்டுவந்து போடுவது சொற்பமாயிருப்பினும் சில காலம் கழித்து "பலதுளி பெருவெள்ளம்" போல் குழிகள் நிரம்பிப்போகின்றன. ஒரு குழி நிரம்பினவுடன், இவ்வஸ்துக்களைப் பெட்டிகளில் வைத்துப் பெருங்குழி ஒன்றில் கொட்டிவிடுகிறார்கள். இப்பெருங்குழியின் அடியில் சுண்ணாம்பு பூசப்பட்டு மேலே சாய்ப்பும் போடப்பட்டிருக்கிறது. இதனால் மழையாலும், சூரிய வெப்பத்தாலும் குழியிலிருக்கும் எரு சேதப்படாமல் காக்கப்படுகிறது. இவ்வெருக்களில் முக்கியமானது மல எருவொன்றே. இதில் ஒரு துளிகூட வீண் செய்யப் படுவதில்லை. சிறு நீரைச் சேகரம் செய்ய வழிகளிலும் ரஸ்தாக்களிலும் மண் ஜாடி கிட்டக் கிட்டப் புதைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. எருவுக்காக சேகரிக்கப்படும் வஸ்து இன்னது தான் என்று கிடையாது. எது அகப்பட்டாலும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. தெருக் குப்பைகளும், அம்பட்டன் மயிரும், கசாப்புக் கடைக் கழிவுகளும், இறக்கைகளும், எலும்புகளும், தழைகளும், வைக்கோலும், கிழங்கும் காய்கறிகளும் எல்லாம் உபயோகப்படுகின்றன. சாக்கடைத் தண்ணீரும் ஸ்நானம் செய்யும் தண்ணீருங்கூட உபயோகப்படுகின்றன. எரு முட்டையோ பொதுவாய் ஒவ்வொரு கடையிலும் ஸாதாரணமாய் அகப்படக் கூடியது.

PREPARING PADDY SEED FOR SOWING.

**விதைப்புக்கு நெல்லை ஆயத்தப்படுத்துதல்.**—விதைப்புக்கு நல்ல இனத்தில் திறமான நெல்லைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும். சேற்று விதைப்புக்கு நெல்லைப் பின்னாற் குறிக்கப்படும் மாதிரியாய் ஆயத்தப்படுத்தவேண்டும்.

நல்ல தெளிந்த தண்ணீரில் 24 மணி முதல் 36 மணிவரையில் நெல்லை நனையப் போடவேண்டும். அதன்பின்பு எடுத்து நீர்வடிந்தபின் சாணியால் மெழுகின மண் நிலத்தில் 6 அங்குல உயரத்திற் பரவி, கமுகோலை, வாழை யிலைமுதலிய பசுந்தாள்களால் மூடிப் பழம்பாய் அல்லது பழஞ்சாக்கை அதற்கு மேலே போட்டுப் பரவி நெல்லிற் சூடெழும்பத் தக்கதாய் சிறுபாரமும் வைக்கவேண்டும். இப்படிச் செய்து மூன்று நாலுநாள்களுக்குப் பின்பு மூடியிருந்த இலைகளையும் பாரத்தையும் அகற்றிப் பார்த்தால், சிறு முளைகள் காணப்படும். இந்தப் பருவத்திற் குவியலா யிருந்த நெல்லைக் கையாற்றி முழுவதையுந் தண்ணீரில் ஒரு தரங் கழுவித் திரும்ப ஒரு அடிகனத்தில் முன்போலப் பரவி மூடிவிடவேண்டும். இந்தத் தடவை மூடியபின்பு பாரம் வைக்கப்படாது. இப்படிச் செய்து இரண்டொரு ராத்திரியானபின்பு மூடியிருந்த இலைகளையகற்றிக் குவியலாய் வைத்த முளையைக் கையாலாற்றி முளையைமாத்திரம் அரித்தெடுத்துக்கொண்டு முளையாதவைகளைக் கழித்துவிடவேண்டும்.

இப்படி அரித்தெடுத்தமுளை விதைப்புக்கேற்றதாயிருக்கின்றது. இவ்வாறு ஆயத்தப்படுத்தி எடுத்த பின்பு விதைக்க இரண்டொருநாட் செல்லுமானால், முளையை ஒவ்வொருநாளும் கையாலாற்றிப் பரவிவிடவேண்டியது.

COWS IN CALF.

**சினைப் பசுக்கள்.**— சினையா யிருக்கும் பசுமாடுகளுக்கு கடலைக் கொட்டைப் பிண்ணாக்குத் தீனி வைக்கக்கூடாது. அது நல்லதல்ல.

CATTLE SHOWS.

**கால் நடைக் காட்சிகள்** —கால்நடைக் காட்சிகளைப் பற்றி சென்னை விவஸாய டைரெக்டராகிய மிஸ்டர் கௌச்மன் பின்வருமாறு எழுதுகிறார்:—

ஐரோப்பிய நாடுகளில் இந்தக் காட்சிகளால் பிரயோஜனம் உண்டாகிறபடியால் இந்தியாவிலும் இவைகள் பிரயோஜனப்படுமென்று நம்புகிறோம். இரண்டு தேசங்களிலும் நிலைமைகள் வேறு. ஐரோப்பிய நாடுகளில் கால்நடைகள் வளர்ப்பவர்கள் அதே தொழிலாய்ச் செய்கிறவர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுத் தாங்கள் வளர்க்கும் கால்நடைகள் மேலானவைகளா யிருக்கவேண்டுமென்று முயற்சி செய்கிறவர்கள். இப்படி வளர்க்கப்படும் கால்நடைகளை உயர்ந்த விலை கொடுத்து வாங்குவோர்களும் இருக்கிறார்கள். பெரிய பண்ணைகள் வைத்திருக்கும் நிலச்சுவான்கள் தங்களிடத்திலுள்ள ஆடுமாடுகள் நல்ல ஜாதியா யிருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் காட்சிகளுக்குப் போய் அங்கு காட்டப்படும் நல்ல ஆடுமாடுகளுக்கு உயர்ந்த விலை கொடுக்கிறார்கள். இங்கிலாந்தில் ஒரு எருதுக்கு ஒருவன் 45,000 ரூபாய் கொடுத்து வாங்கினான். அப்படியே ஆஸ்ட்ரேலியாவில் நல்ல மயிர் கொடுக்கும் ஒரு மெரினோ ஆட்டுக்கு ஒருவன் அதே விலை கொடுத்து தன்னிடத்திலிருந்த ஆடுகளை நல்ல ஜாதியாக்க வேண்டுமென்று முயன்றான். இப்படி ஒருவருக்கொருவர் போட்டி போட்டு ஆடு மாடுகளை வளர்க்கிறவர்களும் அவைகளை வாங்குகிறவர்களும் இந்தியாவில் இல்லை. இத்தேசத்தில் நல்ல ஜாதி மாடுகள் சில இடங்களில் இருந்தாலும் அவைகள் மற்றவைகளைவிட மேலானவைகளா யிருக்கவேண்டுமென்று போட்டி போடும் எண்ணமில்லை.

TIME FOR GERMINATION.

முளைக்குங் காலம்.—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பீன்ஸ், காபேஜி, காலிப்ளவர் | முளைக்க | 4 | முதல் | 8 | நாள் |
| காரெட் | ,, | 14 | ,, | 20 | ,, |
| முள்ளாங்கி, கடுகு, டர்னிப், லெடூஸ் | ,, | 3 | ,, | 5 | ,, |
| பிட்ரூட் | ,, | 8 | ,, | 15 | ,, |
| மக்காசோளம் | ,, | 5 | ,, | 9 | ,, |
| வெங்காயம் | ,, | 6 | ,, | 12 | ,, |
| பட்டாணி | ,, | 5 | ,, | 10 | ,, |
| டொமாட்டோ | ,, | 6 | ,, | 12 | ,, |
| வசலை | ,, | 8 | ,, | 15 | ,, |
| கத்திரி | ,, | 7 | ,, | 20 | ,, |
| மிளகாய் | ,, | 8 | ,, | 15 | ,, |
| சுரை | ,, | 6 | ,, | 9 | ,, |
| மலாம் | ,, | 5 | ,, | 10 | ,, |
| பிச்சைக்காய்விதை | ,, | 6 | ,, | 12 | ,, |

முளைப்பது விதையின் வயது, மண்ணின் தன்மை, ஈரம், முதலியவைகளைப் பெரும்பாலும் அனுசரித்திருக்கும்.

PLANTS AND SEEDS.

**செடிகளும் விதைகளும்.**—

$2\frac{1}{2}$ ரூபாயெடை கத்திரிவிதையில் 1500 செடிகள் உண்டாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | மிளகாய் | ,, | 1500 | ,, |
| ,, | லெடூஸ் | ,, | 3000 | ,, |
| ,, | காபேஜி | ,, | 2000 | ,, |

BARBED WIRE.

**இரும்பு முள் வேலி:**—

| | | | |
|---|---|---|---|
| 1 சதுர ஏகரா ஒருவரிசை போட | | $50\frac{2}{3}$ | ராத்தல் |
| 1 சதுர ஏகரா ஒருபாகம் | ,, | $12\frac{2}{3}$ | ,, |
| 1 சதுர $\frac{1}{2}$ ஏகரா | ,, | 36 | ,, |
| 1 சதுரமைல் | ,, | 1280 | ,, |
| 1 ,, | ஒருபக்கம் | 320 | ,, |
| 100 அடி நீளம் | | $6\frac{1}{4}$ | ,, |

இவ்வாறே 2, 3 வரிசைக்கு செல்லும்.

NUMBER OF PLANTS TO AN ACRE.

**ஒரு ஏகராவில் அடங்கும் செடிகள்.**—

ஒரு ஏகராவுக்கு 4840 சதுரகஜம் அல்லது 43560 சதுர அடி.

ஆகையால் ஒரு ஏகராவில் அடங்கும் செடிகள்.

12 அங்குலம் x 3 அங்குலம் — 174240
12 ,, x 22 ,, 43560

இப்படியே கணக்குப் பார்த்துக் கொள்ளவும்.



## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

TALEGON GLASS WORKS.

**தலிகான் கண்ணாடி சாலை.**—தலிகான் என்பது புனாவுக்கருகிலுள்ள ஒரு ஊர். அங்கே கண்ணாடிகள் செய்யப்பட்டு வரும் ஒரு சுதேசித் தொழிற்சாலை, 1907-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப் பட்டு நடந்து வருகிறது. இதற்கு மூலதனம் அந்தப் பக்கங்களில் பைஸாநிதி யென்று ஜனங்களிடத்தில் ஒவ்வொரு பைஸாவாக வஸூல் செய்து சேர்க்கப் பட்ட பணம். இந்தச் சாலையை கவர்னர் ஸர் ஜார்ஜ் க்ளார்க் ஸமீபத்தில் போய்ப்பார்த்தார். அப்போது கண்ணாடி வேலைகளையும் ஸ்டோர் ரூமையும் காட்டினது மன்றி நல்ல ஒரு லாபொரேடரி (ஆராய்ச்சிச் சாலை) யில் பன்னிரண்டு சிறுவர்கள் கண்ணாடி செய்வதற்கொத்தாசையான கெமிஸ்ட்ரி, பிஸிக்ஸ், ஜியாலாஜி மினராலஜி, இவைபோன்ற சாஸ்திரங்கள் கற்பதும் காட்டப்பட்டன. இந்தச் சிறுவர்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்திருக்கிறவர்கள். இந்தத் தொழிற்சாலைக்கு ஸூபரின்டெண்டண்ட் மிஸ்டர் ஈச்வரதாஸ்வார் ஷ்ணி. அவருக்கு ஒத்தாசையாக இரண்டு ஜப்பானிய நிபுணர்கள் இருக்கிறார்கள். பைஸா பைஸாவாக ஜனங்களிடத்தில் வஸூல் செய்து ஒரு கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேண்டிய பத்தாயிரக்கணக்கான நிதியைச் சேர்த்தது புனாவாஸிகளின் தேசாபிமானத்தைக் காட்டுகிறது.

THE MANUFACTURE OF CAMPHOR.

**கர்ப்பூரம் செய்தல்.**— கடையில்விற்கும் கர்ப்பூரம் கர்ப்பூர மரத்திலிருந்து உண்டாகிறது. அந்த மரம் வெகு காலம்வரையில் நீடித்திருக்கும். அது ஜப்பான் தேசத்தில் ஏராளமாகப் பயிராகி வருகிறது. கர்ப்பூர மரங்கள் அங்கே பெருங்காடுகளாகவும் தோப்புகளாகவும் இருக்கின்றன. இதுவரையில் 50 வருஷமான மரங்களை அடியோடு வெட்டி அதன் இலைகளைத் தள்ளிவிட்டு, மரக்கிளை தனை மட்டும் கர்ப்பூர ரஸமிறக்குவதற்காக உபயோகிப்பது வழக்கம். இது பண்டைக்காலம் முதற்கொண்டு வழக்கமாயிருந்து வருகிறது. இதனால் 100 முதல் 200 வருஷங்கள் வரையில் வளரக்கூடிய கர்ப்பூரமரங்கள் வெட்டிச் சேதமாக்கப் பட்டுவந்ததால், கர்ப்பூரம் விலை கிராக்கியாக நேரிட்டது. இப்பொழுது மலேயா தீவிலும், கீழாபிரிக்காவிலுள்ள அமானி என்னுமிடத்திலுள்ள பரிசோதக சாலையிலும் ஐரோப்பியர் பரிக்ஷைசெய்து பார்த்ததில் மரத்தைவெட்டாமல்தானே, அம்மரத்தின் தழைகளை யறுத்து கர்ப்பூரம் செய்யலாமென்றும், அப்படிச் செய்வதால், மரத்தைவெட்டிச் செய்யும் கர்ப்பூரத்தைவிட அதிக கற்பூரம் கிடைக்கிறதென்றும், மரத்துக்கும் சேதமில்லாமல் அது வெகு காலத்துக்கு நீடித்திருக்கத்தக்கதாகிறதென்றும் நிர்ணயமாகக்கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஜெமெய்காதீவில் ப்ரொபெஸர் ராபர்ட்கென்னடி டங்கன் அவர்கள் இந்தப்புதிய வழியை யனுசரித்துப் பரீக்ஷைகள் செய்துபார்த்து இதுவே நலமென்று தீர்மானித்திருக்கிறார். இவர் ஒரு டன் நிறையுள்ள கர்ப்பூரத்தழையை அமெரிக்காவிலுள்ள கான்ஸாஸ் யூனிவர்ஸிடிக்குக் கப்பலேற்றிக் கொண்டுபோய் தானே பரீக்ஷை செய்து பார்த்ததில், மரத்தைவெட்டி கர்ப்பூர ரஸமிறக்கினால் 100க்கு ·61 அசுத்த கர்ப்பூரம் தேறுகிறதென்றும்; கிளைகளிலிருந்து 100 க்கு 1·05 தேறுகிறதென்றும், பச்சையிலையிலிருந்து 100க்கு 2·37 தேறுகிறதென்றும், உலாவைத்த இலைகளிலிருந்து 100க்கு 2·52 தேறுகிறதென்றும், உதிர்ந்துபோன சருகுகளிலிருந்து 100க்கு 1·39 தேறுகிறதென்றும், பரீக்ஷைகள் செய்து கண்டுபிடித்திருக்கிறார்.

இந்தப் பரீக்ஷைகளினால் கர்ப்பூர மரத்தில் அதிகமாய்க் கர்ப்பூர ரஸமில்லையென்றும், அதன் தழைகளில் அதிகமான ரஸமிருக்கிறதென்றும் ஆகையினால் மரங்களை வெட்டிச் சேதமாக்காமல்தானே வருஷத்துக்கொருதரம் தழைகளை யறுத்துக் கர்ப்பூரம் செய்யலாமென்றும் நன்றாக ஏற்படுகிறது. இதனால் கர்ப்பூரச் சரக்கு விர்த்தியாகும்.

## EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

A PRIMARY SCHOOL.

**ஒரு ப்ரைமரிப் பள்ளிக்கூடம்.**—கும்பகோணத்துக் கடுத்த திருவிடைமருதூரில் அடுத்த அக்ஷய திருதியை யன்று கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் ஆதரவின் கீழ் ஒரு ப்ரைமரிப் பள்ளிக்கூடம் அவ்வூர் யூனியன் மெம்பரும் உபாத்தியாயருமாகிய மிஸ்டர் வி. ராமச்சந்திர அய்யரால் ஸ்தாபிக்கப்படப் போகிறதென்றும், அதில் சம்பளம் வாங்காமல் பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லி வைக்கப்படுமென்றும் அறிகிறோம்.

INDUSTRIAL EDUCATION.

**தொழில் படிப்பு.**—ஜர்மெனியிலும் யுனைடெட் ஸ்டேட்ஸிலும் ஜனங்கள் படிப்பும் ஊக்கமும் உள்ளவர்களா யிருப்பதுபோல் இந்தியாவிலும் ஏன் இருக்கக்கூடாது? இந்திய ஜனங்களுக்கு இப்போது தொழிலில் ஊக்கமுண்டாகி வருவதில் சந்தேகமில்லை. இந்த ஊக்கம் வரவரப் பலப்படுமென்பதிலும் சந்தேகமில்லை. படிப்புத்தான் வேண்டும். இந்தப் படிப்பு வேண்டுமென்று ஜனங்கள் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டிருக்க, கவர்ன்மெண்ட் அதற்கிசைந்து தொழிற் படிப்புக்காகப் பண உதவி செய்யத் தயாராயிருக்கிறார்கள்.

PROGRESS OF EDUCATION IN INDIA.

**இந்தியாவில் கல்வி யபிவிருத்தி.**—கல்வி யபிவிருத்தியின் பொருட்டு 5-வருஷங்களுக்கு முன்னே 559 லக்ஷம் ரூபாய் செலவு செய்யப்பட்டன. இப்போது 680 லக்ஷம் ரூபாய் செலவாகிறது. இந்தத் தொகையில் ஒரு பாதி ரெவினியூக்களிலிருந்தும், மற்றொரு பாதி சம்பளங்களிலிருந்தும் செலவு செய்யப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளின் மொத்தம் 50 லக்ஷத்திலிருந்து 60 லக்ஷத்துக்கு ஏறியிருக்கிறது. இப்போது இந்தியாக் கவர்ன்மெண்டில் வித்தையிலாகா வொன்று தனியாய் ஏற்பாடா யிருக்கிறபடியால் இனிமேல் இப்போதைவிட வித்யாபி விருத்திக்காக அதிகப்பணம் செலவு செய்யப்படும்.

A TECHNICAL SCHOOL AT COIMBATORE.

**கோயமுத்தூருக்கு ஒரு டெக்னிகல் ஸ்கூல்.**—கவர்ன்மெண்டார் மதுரையில் ஒரு டெக்னிகல் ஸ்கூலும், திருநெல்வேலியில் ஒரு டெக்னிகல் ஸ்கூலும் ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். ஸமீபத்தில் கூடிய டிஸ்டிரிக்ட் போர்ட் மீட்டிங்கில் ஆனரபிள் ராவ்பகதூர் மிஸ்டர் டி. எஸ். பாலகிருஷ்ணையர் கோயம்புத்தூரில் டெக்னிகல் ஸ்கூல் ஸ்தாபிப்பதைப் பற்றிய யோசனையைக் கூடிய சீக்கிரம் நிறைவேற்ற வேண்டுமென்று பிரேரித்தார். போர்டார் டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரியின் அபிப்பிராயத்தை இவ் விஷயத்தில் கேட்பதென்றும் மதுரை டிஸ்டிரிக்ட் போர்ட் பிரஸிடெண்டை, மதுரை ஸ்கூலின் உபயோக வேலையைப்பற்றி ரிப்போர்ட் செய்யும்படி கேட்பதென்றும் தீர்மானித்தார்கள்.

INSTRUCTION IN HYGIENE.

**சுகாதார போதனை.**—ஸ்கூல்களில் படிக்கும் பிள்ளை பெண்களில் சிறிது வயது வந்தவர்களுக்கு அவர்களுடைய சொந்த சரீர சுகத்தைக் காக்கும் பொருட்டுத் தகுந்த அறிவை ஊட்டவேண்டுமென்று பார்லிமெண்டில் இப்போது ஒரு மசோதா மிஸ்டர் க்ரிஸ்டொபர் அடிஸனால், கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்படி அறிவு ஊட்டுவதால் சிறுவர்கள் வயது வந்து வேலை செய்யவேண்டியவர்களாயாகும்போது, தங்கள் சரீர சுகத்தைக் காப்பாற்றிக்கொண்டு வேலை செய்யும் சக்தி குறையாமலிருப்பது மன்றி, சுகமாயும் ஜீவிப்பார்கள். இப்படிப் பார்லிமெண்டில் மசோதா கொண்டுவருவதற்குக் காரணம் என்னவென்றால், அத்தேசத்தில் குழந்தைகள் ஸரியாய் வளர்க்கப்படாமல் பல வியாதிகளால் மாண்டுபோகின்றன. பிரதி வருஷமும் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் இறந்துபோகும் 5-வயதுக்குட்பட்ட குழந்தைகள் $1\frac{1}{2}$ லக்ஷமென்றும், இப்படி இறந்துபோகும் குழந்தைகளால் பிழைத்திருக்கும் அவர்கள் ஸகோதரர் ஸகோதரிகளின் நிலைமையும் கெட்டுப்போகிறதென்றும், கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களிலுள்ள பிள்ளைகளின் விகாரமான தோற்றமும் புத்தியும் இதனுடைய பலனென்றும் மிஸ்டர் அடிஸன் சொல்லுகிறார். இங்கிலாந்திலுள்ள ஸ்கூல்களில் 6 லக்ஷம் பிள்ளைகள் கண் பார்வை குறையுள்ளவர்களாயும 3-லக்ஷம் குழந்தைகள் காது கேட்காதவர்களாயும், 20 லக்ஷம் குழந்தைகள் பல்லு பலமில்லாத வர்களாயும், வேறு 20 லக்ஷம் குழந்தைகள் மூளையில் பிசகுள்ளவர்களாயும், இருக்கிறார்கள்.



## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

GROWTH OF TREES.

**மரங்களின் வளர்ச்சி.**—ஆலமரம் முதலிய சில மரங்களை வெட்டினால், உட்புறம் கடினமாக இருக்கிறது; தென்னை முதலிய சில மரங்களை வெட்டினால் உட்புறம் மிருதுவாக இருக்கிறது. அதனால் சில மரங்கள் மேற்புறமாய் வளர்கின்றனவென்றும், சில மரங்கள் உட்புறமாய் வளர்கின்றனவென்றும் தெரிகிறது. ஆல், அரசு, மா, புளி முதலியவை மேற்புறமாய் வளரும் மரங்கள். தென்னை, பனை, பாக்கு முதலிய சில மரங்கள் உட்புறமாய் வளர்கின்றன.

ROOTS OF TREES.

**மரங்களின் வேர்கள்.**—விருக்ஷங்களுக்கு முக்கிய ஆதாரம் வேரே. மரத்தின் அடியில் பூமிக்குள் பரவி யிருக்கும் பாகமே வேர் எனப்படும். வேர்கள் பூமிக்குள் பல பக்கங்களிலும் பரவி ஓடி, மரத்தை நிலைக்கச் செய்கின்றன. கூத்தாடி ஆடும்போது ஸ்தம்பத்தை எப்படி நிறுத்துகிறான்? கயிற்றை ஸ்தம்பத்தின்மேலே கட்டி, நாலா பக்கத்திலும் முளை யடித்து, பிணித்து வைக்கிறான் அல்லவா? அந்தக் கயிறுகளைப் போலவே இந்த வேர்களும் மரத்தை விழாமல் காக்கின்றன. மரம் காற்றினால் விழாதபடி காக்க, பக்கங்களில் பரவும் வேர்களுக்குப் '**பக்கவேர்**' என்று பெயர். செடி முளைக்கும்போதே ஒரு வேர் நீண்டு பூமிக்குள் நேரே செல்லும். அந்த வேரும் மரத்தை விழாமல் காக்கும், அதற்கு '**ஆணிவேர்**' என்று பெயர். சில வேர்கள் பக்க வேரிலும், ஆணிவேரிலும் கிளைத்து, மயிரிழை போல் வளரும்; அந்த வேர்கள் பூமியில் உள்ள தண்ணீரையும் மர வுணவு ஸாரத்தையும் உறிஞ்சி மரத்தைப் போஷிக்கும். அதற்கு '**சல்லி வேர்**' என்று பெயர். சில மரங்களுக்கு ஆணிவேர் பூமிக்குள் நீர்மட்டம் வரையில் போகும். அப்படிப்பட்ட மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கவேண்டிய அவசியமில்லை. புளி, பனை முதலிய மரங்களுக்கு ஆணிவேர் அதிக நீளமானது. அதனால் அவை தண்ணீர் வேண்டாமலே நன்றாய் வளர்கின்றன.

SAW DUST.

**மரத்தூள்.**—எரிகிற கொள்ளிக்கட்டையின் எரியாத பாகத்தைப் பிடித்துத் தூக்கமுடியும். ஆதலால் மரம் உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடாது என்பது வெளியாகிறது. இருட்டிலிருக்கும் பெட்டியில் சாவி ஓட்டையைக் கண்டுபிடிக்கக் கையால் தடவினால்போதும். சாவி ஓட்டையைச் சுற்றியிருக்கும் உலோகபாகம் சுற்றிலும் உள்ள மரபாகத்தைவிடக் குளிர்ச்சி உடையதாக இருக்கும். உலோகம் உஷ்ணத்தைச் சீக்கிரம் ஊடுருவிப்பரவ விடுவதால் நமது தேக உஷ்ணத்தைச் சீக்கிரம் எடுத்துவிடும். மரபாகத்தால் அவ்வாறு செய்யமுடிவதில்லை. ஆதலால் உலோகத்தைத் தொட்டபாகத்தில் உஷ்ணக்குறைவு அதாவது குளிர்ச்சியும், மரத்தைத் தொட்டபாகத்தில் உஷ்ணம் குறையாமையும் காணப்படும். இதனால் முற்கூறிய உணர்ச்சி ஏற்படும். மரப்பொடியைப் பனிக்கட்டி உருகி நஷ்டமாகாதிருப்பதற்காக அதைச்சுற்றிப்போட்டு மூடிவைக்கிறார்கள். வெளி உஷ்ணத்தை இப் பொடிகள் தம்முள் ஊடுருவிப்பரவி பனிக்கட்டியைத்தாக்கவிடாது.

FLANNELS.

**கம்பளிகள்.**—கம்பளியும் மரப்பொடி போன்றதுதான். அதைப் பனிக்கட்டியின் மேல் சுற்றி வைத்து வெளி உஷ்ணத்தை உள்ளே பரவவிடாதபடி காப்பதற்கு உபயோகப்படுத்தலாம். இதே கம்பளியை நமது தேகத்தின்மேல் போர்த்துக்கொண்டு நமது உஷ்ணம் வெளியே சிதறிப்போய் குளிர் நமக்கு உண்டாகாமல் காக்கலாம். பொதுவாக உஷ்ணத்தை ஊடுருவிப்பரவவிடாத வஸ்துக்கள் வெளியிலிருந்து உஷ்ணத்தை உட்புறமாகவும் பாயவிடா. கம்பளி ப்ராணிகள் மயிரால் ஆக்கப்படும் வஸ்துவாகையால் மயிருக்கும் இந்தக்குணம் உண்டு. இதனால்தான் ஜந்துக்களுக்கு மயிரையும் அடர்ந்த ரோமத்தையும் கடவுள் போர்வையாக அமைத்திருக்கிறார். இவ்வாறு அமையாவிடில் ப்ராணிகள் குளிர் தாங்கமுடியாமல் இறக்கவேண்டியதுதான். ஒரு கம்பளிச் சொக்காய் ஓரங்குலம் கனமாகப் போட்டுக்கொள்வதைவிட இரண்டு கம்பளிச் சொக்காய் அரை அரை அங்குலத்தில் போட்டுக்கொள்வது மேல். இரண்டாவது சொக்காய்கள் விஷயத்தில் ஒரு அங்குலம் கம்பளியும், அவைகள் இடையே உள்ள ஸாதாரண வாயுவும் உள் உஷ்ணம் வெளியே சிதறாதபடி தடுக்கின்றமையால் அது மேன்மையானது என்று கூறினோம்.
—விவேகபோதினி.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

TEETH.

**பற்கள்.**—இளமைப் பருவத்திலேயே அநேகருக்கு பற்கள் தளர்ந்து விழுந்துபோய் விடுகின்றன. இதற்குக் காரணம் அவர்கள் அதிகமாக இனிப்புள்ள வஸ்துக்களை சாப்பிடுவதினால் தானென்று தெரிய வருகிறது. ஒரு பல்லை, சர்க்கரைகலந்த தண்ணீரில் போட்டுக் கொதிக்கவைத்து சிலநாள் வைத்திருந்து பிறகு அதை எடுத்து நசுக்க அது பொடியாகப் போகுமாம். இதினால்தான் நாம் சாப்பிடும் சர்க்கரையும் நமது உமிழ்நீர், நமது தேகச்சூடு, முதலியவைகளோடு சேர்ந்து சீக்கிரத்தில் கெட்டுப் போகின்றனவென்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

QUENCHING THIRST.

**தாக சாந்தி.**—அநேகர் உஷ்ணகாலத்தில் தாங்கள் தாகவிடாய் கொள்ளும் போதெல்லாம் ஒரே தடவையில் 2, 3, செம்புத்தண்ணீர் குடித்து விடுகிறார்கள். இது தகாததகாரியம். ஏனெனில் இன்னும் சிறிது நேரத்தில் திரும்பவும் தாகமுண்டாகிறதினால் திரும்பவும் அதிகத் தண்ணீர் குடிக்கவே, வயிறு விம்மி: சாப்பிட முடியாமல் வியாதிகளுக்குள்ளாகிறார்கள். ஆகையால் அடியில் வரும் உபாயத்தைக் கையாடினால், தண்ணீர் அதிகமாய்க் குடிக்காமலே தாகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம். அது என்னவெனில், தாகவிடாய் கொண்டகாலத்தில் கொஞ்சமாய்த் தண்ணீரைத் தொண்டையில் வார்த்துக்கொண்டு, முக்கியமாய் உள்நாக்கில் நன்றாய் ஈரமுண்டாகும்படி சிறிது நேரம் வைத்திருந்து மெல்ல விழுங்கினாலுஞ்சரி, உமிழ்ந்து விட்டாலுஞ்சரி தாகவிடாய் வெகுசாய்த் தணிந்துபோம். மேற்கூறியவாறு உஷ்ணகாலத்தில் தாக முண்டாகும்போது செய்து வந்தால் அதிக நலமுண்டாகும்.

REMEDY FOR SNAKE BITE.

**பாம்பு கடிக்குப்பரிகாரம்.**—(1) பாம்பு கடித்தவுடன் தாமதமின்றி ஐந்தாறு கோழிகளைக் கொண்டு வந்து கடித்தவாயில் கோழியின் கழுத்து மயிரை நீக்கி மாமிசபாகத்தை வைத்து அழுத்திப் பிடிக்க கோழியிறக்கும். இப்படியே அவ்வைந்தாறு கோழி யிறக்குமேல் விஷ முழுவதும் இறங்கிப் போகுமாம்.

(2) இன்னொரு பரிகாரம். கடித்தவுடன் கடிவாய்க்கு மேல் ஒரு கட்டு அமிழ்த்திக் கட்டிவிட வேண்டும். விஷமேறிப் பிரக்ஞைகெட்டுக் கிடக்கிறவனுக்கு அரைபுட்டி எலுமிச்சம் பழச்சாறு உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். கடிவாய் மூடப்பட்டிருந்தால் ஊசியாலாவது கத்தியாலாவது கீறி ரத்தத்தை வெளியாக்கி அதை இளக்கத்தக்க அட்டைகளை விடவேண்டும். விஷந் தலைக்கொண்டவனுக்குக் கடிவாயைவிட்டுத் தலைதொட்டுச் சரீர முழுவதும் மேற்படி சாறுவிட்டு நன்றாய்த் தேய்க்க வேண்டும். தலையில் மேற்படி சாறு உலராது ஈரப்பசையிருக்கபார்க்கவேண்டும். ஆறுமணி நேரத்திற்கொருதரம் சாறுகொடுத்துவரவேண்டும். இருகண்களிலும் கொஞ்சஞ்சாறு விடவேண்டும். விஷநீரை அட்டைகள் வாங்காவிடினும் மேற்படி சாறு, விஷத்தின் வேகத்தைக் குறைத்துவிடும். கூடுமானவரையில் போதுமான அட்டைகளைவிட்டு, விஷநீரை உரிஞ்சத் தூண்ட வேண்டும். அப்போது கடிபட்டவனுக்குத் தாங்கக்கூடாத எரிச்சலுண்டாகும். 24 மணி நேரம் கழிந்தபின் "சென்னா" (சூரத்தாவாரை) என்பதோடு (பேதி) உப்பு கலந்து கொடுக்க வேண்டும். அது குடலைச் சுத்திசெய்துவிடும். பிறகு வட்டத் துத்தியிலையைப் பொடிப்பொடியாக அரிந்து அரிசிமாவிட்டுத் தேங்காயைப் பாலூற்றிக் களியாக்கிக் கடிவாய்க்குக் கட்டவேண்டும். 6 மணி நேரங்கழித்து அதேமாதிரி செய்து கட்டவேண்டும். 2-ம் நாள் இருவேளை எலுமிச்சையிலைபோட்டுக் காய்ச்சிய வெந்நீரால் குளிக்கச்செய்ய வேண்டும். 3-ம் நாள் சுகடைமவான். சீக்கிரம் ஜீரணிக்கத் தகுந்த பதார்த்தங்களுடன் உணவு கொடுக்கவேண்டும். குடி குடியை அடியோடு கெடுக்கும். குடியையும் கொழுமையைத் தரும் பதார்த்தங்களையும் விலக்க வேண்டும். இது சையன் கோறளையிலுள்ள மேஸ்பண்டார நாயக்க முதலியார் கண்டுபிடித்ததாம்.



## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

LAND CESS.

**நில செஸ்.**—கலெக்டர் சட்டவிரோதமாக நிலசெஸ் தீர்வை விதித்தால் அவர்பேரில் நஷ்ட தாவா கொண்டுவரலாம்; அப்படி வசூல் செய்யப்பட்ட பணத்தை முடிவில் ஜில்லா போர்ட்டார் அடைந்திருந்தபோதிலும் அவர்கள்பேரில் யாதொரு தாவாவும் கொண்டுவரக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

REVERSIONER.

**அனந்தர வார்ஸ்**—அனந்தர வார்ஸ் பாத்திதையுடையவனுடைய ஸம்மதத்தின் பேரில் ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷனுடைய ஸொத்தைப்பராதீனம் செய்தால், அந்த அனந்தர வார்ஸ் இறந்துபோய் அவள் இறந்துபோகிற ஸமயத்தில் எவன் அனந்தர வார்ஸ் பாத்திதை யுடையவனாகின்றானோ, அவனை முந்திய அனந்தர வார்ஸ்கொடுத்த ஸம்மதம் கட்டுப்படுத்தமாட்டாது. பம்பாய் லா ரிப்போர்ட்டர் 2331.

PARTITION.

**பாகம்.**—சேர்ந்த ஹிந்து குடும்ப ஸொத்துகளில் சிலவற்றை ஷை குடும்பத்தைச் சேர்ந்த இரண்டொருவர் ஷை குடும்பத்தைக்கட்டுப்படுத்தாதசெலவுகளுக்காக அன்னியர்களுக்குப் பராதீனம்செய்தால் மற்றொரு பாகஸ்தனிடம் அவனுடைய பங்கை வாங்கினவன் ஷை பராதீனம் செய்யப்பட்ட ஸொத்துகளில் அவனுக்கிருக்கும் பாத்தியதையைப் பெறுவதற்கு குடும்ப ஸொத்து முழுதிலும் பாகப்பிரிவினை செய்யப்படுவதற்காக பாகவியாஜ்யம் கொண்டு வர வேண்டியதில்லை. எந்தெந்த ஸொத்து பராதீனம் செய்யப்பட்டதோ அந்த சொத்தில் தனக்கிருக்கும் பாகத்தைப் பெறுவதற்கு மட்டிலும் வியாஜ்யம் கொண்டுவரலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

PORAMBOKE.

**புறம்போக்கு.**—கிராமத்தின் தரிசு நிலத்திலும், புறம்போக்கிலுமிருந்த கத்தாழைப் புஷ்பங்களையும் பழங்களையும் விரகுகளையும் புல்களையும் தடாகத்தில் மீன் பிடிக்கும் பாத்தியதையையும் கிராமத்தார்கள் அனுபவித்துக்கொண்டு வந்ததில் கவர்ன்மெண்டார் ப்ரவேசிக்காமலிருந்ததை முன்னிட்டு அவைகள் கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமல்லவென்றாவது, அல்லது அவைகளில் கவர்ன்மெண்டாருக்கிருந்த பாத்தியதையை அவர்கள் விட்டுவிட்டார்கள் என்றாவது ஏற்படமாட்டாது. ஆனால் வாதிக்கு முந்தி அந்தப் புறம்போக்கை அனுபவித்துக்கொண்டு வந்தனர். பெருந்தொகை செலவு செய்து தடாகத்தில் சேறு எடுத்து சுத்தம் செய்து மதகும், வடிமதகுகளும் கட்டி ஜலம் வரும்படியாக வாய்க்காலும் வெட்டியிருக்கிறபடியால் அந்தப் புறம்போக்கும் அவருக்கு ஸொந்தமானதென்று யூகிக்க இட மிருக்கிறபடியால் அவருக்கு ஸொந்தமானதல்ல வென்று ருஜுப்படுத்தவேண்டிய பொறுப்பு கவர்ன்மெண்டாருடையது.—

இந்தியன் லாரிபோர்ட் 33 மதராஸ் 362 பக்கம்.

THE LAND ACQUISITION ACT.

**நிலம் சம்பாதிக்கும் ஆக்ட்.**—நிலம் கவர்ன்மெண்டாருக்குச் சொந்தம். இன்னும் சிலர்களுக்கும் அதில் பாத்தியதை இருக்கிறது. இவர்களுடைய பாத்தியதையை கவர்ன்மெண்டார் வாங்கிக்கொள்ள ப்ரயத்தினப் படுகிறார்கள். இவர்கள் ஷை நிலத்தில் கவர்ன்மெண்டாருக்கு யாதொரு பாத்தியமில்லையென்றும் தங்களுக்கே ஸொந்தமென்றும் கக்ஷி சொல்லி அந்தக் காரணத்தை முன்னிட்டு அதிகப்படியான பரிகாரத் தொகை கேட்கிறார்கள். இந்தக் கேஸில் நிலம் அவர்களுக்கே ஸொந்தமானதா அல்லது கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுவதுபோல், கவர்ன்மெண்டாருக்கும் அவர்களுக்கும் ஸொந்தமானதா வென்று கலெக்ட்டர் தீர்மானிக்க வேண்டும்.

இந்த நடவடிக்கைக்கு இந்தியா காரியதரிசியார் கக்ஷிக்காரர்களாக இருக்கவேண்டியது அவசியமல்ல. லாண்ட் அக்விஸிஷன் ஆக்ட் என்று சொல்லப்படும் நிலம் ஸம்பாதிக்கும் ஆக்டில் சொல்லப்பட்டிருக்கும் "பாத்தியக்காரன்" என்ற பதத்திற்குக் காம்பென்ஸேஷன் பணத்திற்குப் பாத்தியம் பாராட்டுகிறவன் என்பது தாத்பரியம். கவர்ன்மெண்டார், இந்த ஆக்டின்படி பாத்தியக்காரர்களல்ல. ஏன் எனில் அவர்கள் காம்பென் ஸேஷன் தொகைக்குப் பாத்தியம் பாராட்டவில்லை.

# PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

---

### PROFESSOR RAMAMURTI.

**ப்ரோபஸர் ராமமூர்த்தி.**—இந்தியன் ஸாண்டோவென்று பொதுவாய்ச் சொல்லப்படுகிற ப்ரொபஸர் ராமமூர்த்தி இங்கிலாந்தில் தாமதித்து வருகிறாரென்றும், புஜபராக்கிரமத்தைக் காட்டிவருகிறாரென்றும் அவர் ஒரு நாள் விளையாடும்போது அவருக்குக் காயம் பட்டதென்று தெரிகிறது. இன்ன சம்பவம் காரணமாக அவருக்குக் காயம் பட்டதென்று தெரியவில்லை.

### QUEEN MARY'S GOODNESS.

**மேரி ராணியாரின் தயாளகுணம்.**—ஒரு சிறு பையன் வைத்தியசாலையில் இடுப்பு வலியால் வருந்திக் கொண்டிருந்தான். அப்பொழுது ராணியார் அங்குசென்று அப்பையனுக்கு சில விளையாட்டுக் கருவிகளையும், பொம்மைகளையும் பரிசாக அளித்து தமது மாளிகைக்குச் சென்றபின், இப்பையன் பரிசுபெற்றதற்காக மகிழ்ந்து "ராணியாருக்கு வந்தனமளித்து, தாங்கள் அடிக்கடி இவ்விதம் வைத்தியசாலைக்கு வந்து வியாதியால் வருந்தும் எல்லாப் பிள்ளைகளையும் பார்ப்பீர்களென்று விரும்புகிறேன்" என்பதாக ஒரு கடிதம் எழுதியனுப்பினான். ராணியார் கடிதத்தைப்பெற்றவுடன் வைத்யசாலைக்கு வந்து அப்பையனைக்கண்டு "உன் இஷ்டப்படி வந்திருக்கிறேன்" என்றார்களாம்.

### MR. NARENDRA NATH SEN.

**நரேந்திரநாத்ஸேன்.**—கல்கத்தாவில் பேர்போன பத்திரிகாசிரியராகிய ராய்பகதூர் நரேந்திரநாத் ஸேன் சீதபேதியால் இறந்துபோனாரென்று அறிய விசனப்படுகிறோம். இவர் கல்கத்தா ஹைகோர்ட் ஸொலிஸிடராயிருந்தாலுங்கூட, அந்தத்தொழிலைச் செய்யாமல் தமது ஆயுளையெல்லாம் பத்திராசிரியராகச் செலவு செய்தார். இவர் நடந்தின பத்திரிகையாகிய "இந்தியன் மிரர்" பாபு கேஸவ சந்திர ஸேன் என்ற கீர்த்தி பெற்ற பிரம்மசமாஜ ஸ்தாபகரால் ஆரம்பிக்கப்பட்டு, 1860-ம் வரிஷத்தில் அவருடைய தமயன் மகனாகிய நரேந்திரநாத்ஸேனால் நடத்தப்பட ஆரம்பித்தது. ஆரம்பத்தில் மிஸ்டர் நரேந்திரநாத் ஸேன் மற்ற வெங்காளப் பத்திராசிரியர்களைப்போல கவர்ன்மெண்டுக்கு விரோதியெனக் கருதப்பட்டார். ஒரு முறை லார்ட் டப்ரின் கவர்னர் ஜெனரலாயிருந்தபோது அவரைப் பார்க்க வெங்காளிக் கனவான்கள் சிலர் கவர்ன்மெண்ட் ஹவுசுக்குப் போனதில், லார்ட் டப்ரின் "இந்தியன் மிரர்" பத்திரிகையைக் குறித்து அது தமது கவர்ன்மெண்டுக்கு முக்கிய விரோதிகளில் ஒன்றென்று ஆத்திரமாய்ப்பேச, அப்போது அங்கு போயிருந்த நரேந்திரநாத்ஸேன் கவர்னர் ஜெனரல் அப்படிப் பேசுவது சரியல்லவென்றும், தாமும் தம்முடன் கூடப்போனவர்களும் பொதுவிஷயங்களைப் பற்றிக் கவர்னர் ஜெனராலுடன் பேசப்போனார்களேயன்றிக் கவர்னர் ஜெனரல் தமது வீட்டுக்கு வந்தவர்களைப் பார்த்து ஆத்திரமான கண்டனவார்த்தைகள் பேச, அவைகளைக் கேட்கப்போனதில்லையென்றும் பதில் சொன்னார். அக்காலமுதல் ஸமீபகாலம் வரையில் நரேந்திரநாத்ஸேன் ஸ்வாதீன சுபாவமுள்ளவரென்றும், பயப்படாமல் தம்மபிப்பிராயங்களைச் சொல்லுகிறவரென்றும், பேர் வாங்கினார். ஆனால் லார்ட் மிண்டோ கவர்னர் ஜெனரலாய் வந்த கால முதல், அராஜகமும் ராஜத்வேஷமும் தோன்றியிருப்பதைப் பார்த்து, நமது சிறுவர்களிற் சிலர் செய்வது மடமையென்றும் தேச நன்மைக்கு விரோதமென்றும் கருதி, கவர்ன்மெண்டைத் தாங்கிப் பேசுவது இந்தச் சமயத்தில் தமது கடமையென்று நினைத்தார். இந்தநினைப்பினால் நரேந்திரநாத்ஸேன் சமீபத்தில் தெரிவித்த சில அபிப்பிராயங்களுக்கு விரோதமாயிருந்தன. "இந்தியன் மிரர்" பத்திரிகையினால் நரேந்திரநாத்ஸேன் எப்போதும் அதிக வரும்படியை அடைந்தவரல்ல. அடிக்கடி அவர் தம் பத்திரிகையை நடத்தப் பணமில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். இந்தக் காரணத்தினாலும் கவர்ன்மெண்டைத் தாங்கவேண்டுமென்ற விருப்பத்தினாலும் "சுலப சமாசார" பத்திரிகையைக் கவர்ன்மெண்டினுடைய ஒத்தாசையைப் பெற்று நடத்த ஒப்புக்கொண்டார்.



# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

---

### A BOY AND A LADY.

**ஒரு பையனும் மாதும்.**—ஒரு பையன் தெருவில் அழுவதைப் பார்த்து இரக்கமுள்ள ஒருமாது, "ஏன் அப்பா அழுகிறாய்?" என்று கேட்க, "என் காசு கெட்டுப்போச்சு" என்று அவன் சொன்னான். "அழாதே, அந்தக்காசு போகட்டும். இதை வைத்துக்கொள்" என்று ஒருகாசைக் கொடுத்து விட்டு போக, அவன் அதிகமாய்அழுவதைப்பார்த்து, "ஏன் அழுகிறாய்" என்றாள். அவன் "அந்தக்காசு கெட்டுபோகமலிருந்தால் இரண்டு காசாகுமே" என்றான்.

### THE BEST OF THE FOUR.

**நாலு பேர்களில் யோக்கியன்.**—தன் பெண்ணுக்கு வரன் பார்த்துக்கொண்டிருந்த கோபாலையர் கோவிந்தையயரைப் பார்த்து—"கோவிந்தா! உன் குமாரர் நால்வரில் யோக்கியன் எவன்?" என்று கேட்க, "அதோ அந்தக் கூரையேறிக் கொள்ளி சுற்றுகிறானே அவன் தான் எல்லாரிலும் யோக்கியன்" என்று காட்டக் கோபாலையர் மறுவார்த்தை பேசாமல் திரும்பிப்போனார்.

### MUNICIPAL VOTE.

**முனிஸிபாலிட்டி வோட்.**— முனிஸிபாலிட்டி மெம்பர் ஆகவேண்டுமென்று ப்ரயத்தனித்துக் கொண்டிருந்த சுப்பிரமணியம் சுப்பாராயரிடம் போய், அவரைத் தனக்கு வோட் கொடுக்கும்படி கேட்க, நிஷ்கபடியாகிய சுப்பாராயர் தாம் முன்னாலேயே வேறொருவருக்கு வோட்கொடுப்பதாக தாம் ஒப்புக்கொண்டு பேச்சுக் கொடுத்துவிட்ட ஸமாசாரத்தை தெரிவித்தார். அப்போது சுப்பிரமணியம் ஆ! ஆ! பேச்சுக்கொடுத்தால் மூழ்கிப்போனதென்ன? அப்படிப்பட்ட விஷயத்தில் பேச்சுக் கொடுத்துத் தவறுதல் ஒரு பெரிய தப்பாகாது என்று ஸமாதானம் சொன்னார். அப்படியானால் என் வோட் தங்களுக்கே கொடுக்கிறேன் என்று சொல்லி சுப்பாராயர் சுப்பிரமணியத்தைச் சந்தோஷப்படுத்தி அனுப்பினார்.

### AN ELEPHANT'S TRICK.

**ஒரு யானையின் தந்திரம்.**—ஒருதினம்யானைப்பாகன் யானையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு அதற்குச் சற்று தூரத்தில் அடுப்புவைத்து சமையல்செய்து அதைக் கற்காளாலும் புல்லாலும் பத்திரமாய் மூடிவிட்டு வெளியிற்போனானாம். அவன் போனவுடன் இந்த யானை தன் காலைச் சுற்றியுள்ள சங்கலியை மெதுவாக அவிழ்த்து, அடுப்புள்ள விடத்திற்குச் சென்று, கல்லையும் புல்லையும் அப்புறப்படுத்திவிட்டு, அதிலுள்ள ஆகாரத்தை எடுத்துப் புசித்தபின், அது முதலிலிருந்தமாதிரி நன்றாக மூடி தன்னிருப்பிடத்திற்கு வந்துவிட்டதாம். அதற்கு தன் காலில் சங்கலியை முன்போல் சுற்றமுடியவில்லையாம். ஆயினும், முன் சுற்றியிருந்தாற்போல் தோன்றும்படியாக அதை எடுத்துச் சுற்றிக்கொண்டு அடுப்பை நோக்கி நில்லாமல் அதற்கு பின்னால் நின்றுக்கொண்டிருந்ததாம். யானைப்பாகன் வந்து புசிக்கப் பானையைப் பார்த்தவுடன் அதில் ஒன்று மில்லாததைக் கண்டு ஆச்சரியமுற்று இங்குமங்கும் பார்த்து ஒன்றும் புலப்படாமல் ஏதோ சந்தேகத்தால் யானையினிடத்திற்குச் சென்று அதன் சங்கலி கழன்றிருப்பதைக்கண்டு அதுதான் இப்படி செய்திருக்க வேண்டுமென்று தெரிந்து கொண்டானாம்.

### AN INSANE MAN.

**ஒரு பயித்தியக்காரன்.**—ஒரு ஊரில் ஓர் அரைப் பயித்தியக்காரன் இருந்தான். அவனை யார் எதுகேட்டாலும், 'உனக்கில்லையென்று வயிற்றெரிச்சலோ?" என்பான். ஒருநாள் அவன் வெகு நேர்த்தியாக க்ஷவரம் செய்துகொண்டு ஸ்நானதிற்குப் போகையில், எதிரே ஒரு நல்ல ஸுமங்கலி ஸ்நானம் செய்துவிட்டு பளபளவென்று மஞ்சளும் குங்குமமுமாய் வந்துக்கொண்டிருந்தாள். முந்தி எப்போது பார்த்தாலும் அவள் இவனை யேதாகிலும் கேட்பதுண்டு. அவன் ஏதாகிலும் பயித்தியகார ஜவாபு சொல்லுவான். சிரித்துக்கொண்டே போவது வழக்கம். அப்படியே அஸந்தர்ப்பத்திலும் "ஏதடா, இன்றைக்குப் பட்டாபிஷேகம் வெகு சம்பிரமமாயிருக்கிறது?" என்றாள். "உனக்கில்லையென்று வயிற்றெரிச்சலாக்கும்," என்று அவன் வழக்கம் போல் ஜவாபு சொல்லிப் போனான். சுமங்கலிக்கு மட்டும் சிரிப்பு வரவில்லை.

## CURIOSITIES.

## விநோதங்கள்.

---

### LEG GRAFTING.

**காலை ஒட்டுதல்.**—பெர்லின் பட்டணத்து ப்ரெஸ்லா கலாசாலையின் ப்ரதம வைத்திய பண்டிதராகிய மிஸ்டர் கட்னர் தன் தொடையொன்றில் ஆறாத ரணமுள்ள ஒரு மனிதனுக்கு மிக்க ஸாமர்த்தியமான ஒரு சிகிச்சை செய்திருக்கிறார். அதாவது, காயமுள்ள இடத்துக்கு மேலுள்ள பூட்டிலிருந்து ஷை காலைத்துணித்து அதற்குப் பதிலாக அப்போதுதான் இறந்த ஒரு மனிதனின் காலைச் சேர்த்துக்கட்டி, ஸௌக்கியப்படுத்தி விட்டாராம். அம்மனிதன் செத்தவன் காலோடு ஸுகமாய் நடமாடித் திரிகிறானாம்.

### A BUFFALO WITH 6 TEATS.

**ஆறு முலையுள்ள ஒரு எருமை.**—வில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியமெனப் படும் நகரிலே, ஒரு எருமைக்கு 6 முலைக்காம்புகள் இருக்கின்றனவாம்.

### A WEIGHTY MAN.

**அதிக நிறையுடைய மனிதன்,**—ஆங்கிலேய நாட்டில் 504 ராத்தல் எடையுடைய மனிதனொருவனிருக்கிறானாம். அவனை அன்னோட்டார் "ஜாலி ஜம்போ" என்று விநோதார்த்தமாயழைக்கிறார்களாம். ஸாதாரணமாய் மனிதன் எடை 150 ராத்தல்.

### EATING CATS.

**பூனையைத் தின்னல்.**—இத்தாலியாவின் வடபாகத்திலுள்ள ஜனங்கள் பூனைகளைத் தின்கிறார்களாம். அவர்களுக்குப் பூனைக்கறியில் மிகவும் ப்ரியமாம். பூனை தின்றவர்களுடைய வம்சத்தார் கூடிய சீக்கிரம் அதாவது ஒரு நூறு வருஷத்துக்குள் செல்வராயும் சிற்றரசர்களாயும் வந்து விடுவார்களென்று அவர்கள் நம்புகிறார்கள். நமது நாட்டிலோ வென்றால் பூனையைக்கொல்லுதல் ப்ராமணனைக்கொன்ற தோஷத்தினும் கொடிது என்பதாக பாவிக்கப்படுகிறது.

### REMEDY FOR SNAKE BITE.

**நல்ல பாம்பு கடிக்குப் பரிகாரம்.**—கொச்சியைச் சார்ந்த இரின்ஜலக்குடாவில் ஒரு மகம்மதியனைப் பாம்பு கடித்ததாம்; விஷந் தலைக்கேற அவன் மூர்ச்சை யடைந்தான். ஒரு பாம்பாட்டி வந்து தன்னுடைய வாத்திய கோஷத்தால் பாம்பைப் புற்றிலிருந்து வெளியேவரச் செய்து முன்னர்ப் பாம்பு மகம்மதியனைக் கடித்த இடத்தில் மறுபடியும் கடித்து விஷத்தை யெடுத்து விடும்படி மந்திரோபதேசஞ் செய்தானாம்; பாம்பு அப்படியே செய்ய அம் மகம்மதியன் ஒரு மணி நேரத்திற்குள் ஸ்மரணை பெற்று உயிர்த் தெழுந்தானாம்.

### THE LONGEST BRIDGE.

**நீளமுள்ள பாலம்.**—இவ்வுலகத்திலுள்ள பாலங்களுக்குள் மிக நீளமுள்ளது சீனதேசத்திலேயேயிருக்கிறதாம். இது 23,000 அடி நீளமும், 70 அடி அகலமும், 70 அடி உயரமும், உள்ளது தனித்தனி 75 அடி விஸ்தாரத்துக்கிடையிலுள்ள 300 தூண்களால் தாங்கப்பட்டுள்ளது.

### A YOGI'S DEATH.

**ஒரு யோகி மரணம்.**—வட இந்தியாவிலுள்ள மீர்ஸாப்பூரிலிருந்து ஒரு விநோத சேதி வந்திருக்கிறது. இந்த ஊரில் சத்யகாம் என்னும் யோகி ஒருவர் தனக்கு மரணகாலம் ஸம்பவித்ததென்றறிந்து தன்னோடு அப்போதிருந்த சிஷ்யன் ஒருவனை அழைத்து "சிஷ்யா, நான் உனக்குப் போதித்துவந்த நன்னெறிகளை மறந்து விடாதே நான் இறந்துவிட்டதாக நினைத்துவிடாதே, இன்னும் அரைமணி நேரத்தில் என் ப்ராணன் போய்விட்டாலும் அதே நேரத்தில் தக்ஷிண தேசத்தில் கோதாவரி ஜில்லாவில் தோடகொண்டா என்னும் ஊரில் ஒரு கிருஷிகனுக்குப் புத்திரனாகப் பிறப்பேன். பிறந்து நீ இறப்பதற்கு முந்தியே சிறந்த பாரத புத்திரன் என்று பேரெடுப்பேன், பயப்படாதே, என்று சொல்லி சில நிமிஷங்கள் மௌனமாக விருந்து "ஜய, ஜய," என்று சொல்லிப் பிராணனை விட்டாராம். கோதாவரி ஜில்லாவில் அவருடைய சிஷ்யர்கள் போய் விசாரித்துப் பார்த்ததில் குரு சொன்ன பிரகாரம் உழுது பயிர் செய்யும் ஒரு ஏழைக் குடியானவனுக்கு ஒரு ஆண் குழந்தை நல்ல ஸௌந்தரியத்தோடு பிறந்திருக்கக் கண்டு அதை வெகு ஜாக்கிரதையாக வளர்த்து வருகிறார்களாம்,



## NEWS OF THE MONTH.

## மாஸ வர்த்தமானங்கள்.

---

## INDIAN NEWS.

## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

---

### BLUE WALLS.

**நீலச்சுவர்கள்.**—சுவருக்கு வெள்ளையடிப்பதில் நீலநிறம் வேண்டுமானால் தேங்காய் ஓட்டைப்பதமாகச்சுட்டு கரியாக்கி சுண்ணாம்பில் கலந்தால் வேண்டிய பிரகாரம் நீலநிறம் உண்டாகிறது.

### THE BARODA MAHARAJA'S DAUGHTER.

**பரோடா மகாராஜாவின் கன்னிகை.**—பரோடா மகாராஜா தமது குமாரத்தியை ஸிந்தியா மகாராஜாவிற்கு இரண்டாவது மனைவியாகக் கொடுக்க உத்தேசித்திருக்கிறார். முதல் மனைவிக்குப் புத்திரப் பேறின்மை பற்றி ஸிந்தியா மகாராஜா இரண்டாவது விவாகஞ் செய்துகொள்ள உடன்பட்டிருக்கிறாராம்.

### CALCUTTA GHEE.

**கல்கத்தா நெய்.**—கல்கத்தாவுக்கு ஒரு வருஷத்தில் 2,70,000 மணங்கு நெய் வெளியூர்களிலிருந்து கொண்டு வரப்பட்டுச் செலவாகிறது. இப்படி வரும் நெய்களில் 700 வகைகளை முனிஸிபாலிடியார் சோதித்துப் பரிக்ஷை செய்து பார்த்ததில் அப்பட்டம் நெய் 175 தானிருந்ததென்றும், மற்றவை யெல்லாம் கொழுப்பும் எண்ணெயும் கலந்திருந்ததென்றும் 'இந்தியன் டெயிலி ந்யூஸ்' பத்திரிகை எழுதுகிறது.

### VILLAGE PANCHAYATS.

**கிராமப் பஞ்சாயத்துக்கள்.**—கீழ் வங்காளத்தில் அந்த மாகாணக் கவர்ன்மெண்டார் பழைய நாளை கிராமப் பஞ்சாயத்து ஏற்பாட்டை மறுபடியும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர பலத்த முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பாரிஸால் ஜில்லாவில் அந்த வழக்கத்தை அனுஷ்டானத்துக்குப் பரீட்சார்த்தமாய்க் கொண்டுவரப்போகிறார்கள். அந்த ஜில்லாவைப் பல யூனியன்களாய்ப் பிரித்து வருகிறார்கள். ஸப் டிப்டி கலெக்டர் மிஸ்டர் எஸ். பி. குப்தா இப்போது கிராமங்கள் தோறும் சென்று ஒவ்வொரு யூனியனிலும் யார் யாரைப் பஞ்சாயத்து மெம்பர்களாய் நியமிக்கலாமென்று விசாரித்தறிந்து வருகிறார்.

### ORIENTAL STUDIES.

**கீழ்த்திசைப் படிப்புகள்.**—இந்தியாவில் கீழ்த்திசைப் பாஷைகள் என்று சொன்னால் ஸம்ஸ்க்ருதம், பர்ஷியன் ஆகிய பாஷைகள் என்பது பொருள். இந்த பாஷைகளில் கல்வியை அபிவிர்த்தி செய்யும்படியாய் யோசனை செய்ய இந்தியாக் கவர்ன்மெண்ட் ஸிம்லாவில் இந்த பாஷைகளில் பண்டிதரா யிருப்பவர்களைச் சேர்த்து ஒ( கூட்டம் கூட்டி அந்தக் கூட்டம் இந்த மாஸம் 1[?] தேதி நடந்ததில், இந்தியா கவர்ன்மெண்டி வித்தை யிலாகாத் தலைவரா யிருக்கும் ஆனரெபி மிஸ்டர் பட்லர் சேர்மனாகவும், பேர்பெற்ற ஆங்லேயே, ஹிந்து, மகமதிய, பண்டிதர்கள் மெம்பர்களாகவும் வந்திருந்தார்கள். பின் வரும் விஷயங்கள் கவனிக்கப்பட்டுத் தீர்மானங்கள் செய்யப்பட்டன. பழைய நூல்களின் படிப்பை நிலை நிறுத்தி அபிவிர்த்தி செய்தல், பண்டிதர்கள், மௌல்விகள் என்ற வகுப்பாரை உற்சாகப்படுத்திப் புஸ்தகசாலைகள் ஸ்தாபித்தல், கல்கத்தாவில் இந்தப் பாஷைகளை ஆழ்ந்து படிக்க ஒரு காலேஜ் ஸ்தாபித்தல், இந்த விஷயங்களல்லாமல் தற்காலம் இந்தப்பாஷைகளைப் படிப்பதும், படிப்பவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதும் கவனிக்கப்பட்டன.

### DAIRY SUPPLY.

**பால் தயிர் வெண்ணெய்.**—டெல்லி தர்பாருக்குப் போகிறவர்களுக்குப் பால் தயிர் வெண்ணெய் ஸப்ளை செய்ய கவர்ன்மெண்ட் பால் தயிர் வெண்ணெய்ச்சாலை யொன்று அங்கு ஸ்தாபிக்கப்படுமென்றும், ராணுவத்தார் பால் மாடுகளை வைத்து அந்தச் சாலையை நடத்துவார்களென்றும், பால் சேர் 5 அணா வீதமும், வெண்ணெய் ஒரு பவுன் ரூபா 1-4-0 வீதமும், விற்கப்படுமென்றும் தெரிகிறது. கவர்ன்மெண்ட் காம்புகளில் வசிப்போர் கவர்ன்மெண்ட் பால் வெண்ணெய்ச் சாலையிலேயே பாலும், வெண்ணெய்யும், தயிரும் வாங்குவார்களென்ற நம்பிக்கையின் மேல் அந்தப் பால் வெண்ணெய்ச் சாலையைக் கவர்ன்மெண்டார் ஸ்தாபித்திருக்கிறார்களாம். தர்பார் காம்புகளில் வேறே யாரும் பால் வெண்ணெய் விற்க விடப்படமாட்டார்கள்.

SIR GEORGE CLARKE ON AGRICULTURE.

**விவஸாயத்தைப்பற்றி ஸர் ஜார்ஜ் க்ளார்க்.**—புனாப் பட்டணத்திலுள்ள விவஸாய காலேஜுக்கு ஒரு புதிதான கட்டிடம் திறந்தபோது கவர்னர் ஸர் ஜார்ஜ் க்ளார்க் விவஸாயத்தைப்பற்றி ஒரு ப்ரஸங்கம் செய்தார். ஸர் ஜார்ஜ் க்ளார்க் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் அநேக புது ஸங்கதிகளையும் அனுபோகத்துக்குரிய உண்மைகளையும் சொல்லிப் பேசுவது வழக்கம். விவஸாயத்தைப் பற்றியும் இப்படியே பேசினார். இந்தியாவில் விவஸாயம் ஜனங்களிற் பெரும்பான்மை யோருக்குத் தொழிலாயிருக்கிறது. கைத்தொழில்களைச் செய்து விவஸாயம் செய்கிறவர்களுக்கு உதவி செய்யக்கூடுமாயினும் விவஸாயமே ஜனங்களுக்கு முக்யத் தொழிலா யிருக்கவேண்டும். கைத்தொழில்கள் இல்லாமல் ஜனங்கள் விவஸாயத்தையே நம்பியிருப்பதால் அவர்களுக்குப் போதுமான ஜீவனமில்லாமல் மழை பெய்யாமல் வரண்டுபோகுங்காலத்திலும் க்ஷாமம் உண்டாகுங் காலத்திலும் கைத்தொழில்கள் தேசத்திற் செய்யப்பட்டால் அதிக ஜனங்கள் க்ஷாமத்தால் வருந்தமாட்டார்கள். ஆயினும் இப்போது தேசத்திற் போதுமான உணவுப்பொருள்கள் இல்லாமல் க்ஷாமம் உண்டாகவில்லை. சில ஸ்தலங்களில் விளைச்சல் இல்லாமல் உணவுப் பொருள்கள் கிராக்கியாகி விளைந்த இடங்களிலிருந்து அவைகளைக் கொண்டு வருவதற்கு வியாபாரிகள் அதிக விலையும் கேட்கிறார்கள். இப்படியிருந்தும் உலகத்தில் பல தேசங்களில் விவஸாயப் பொருள்களை யுண்டு பண்ணுகிறவர்கள் குறைந்து வருகிறபடியால் இந்தியாவில் உண்டாகும் பொருள்களுக்கு அங்கே கிராக்கி அதிப்படுகிறது. இங்கிலாந்து, ஜர்மெனி, அமெரிக்கா இத்தேசங்களில் ஜனங்கள் அன்னிய தேசங்களிலிருந்து வரும் உணவுப் பொருளை எதிர்பார்த்திருக்கிறார்கள். அத்தேசங்களுக்கும் மற்றத் தேசங்களுக்கும் இந்தியாவிலுண்டாகும் விளைபொருள்கள் அனுப்பிக்கப்படுகிறபடியால் இந்தியாவிலிருக்கும் விவஸாயிகள் பெரிய லாபம் அடைகிறார்கள்.

POST OFFICE HOLIDAYS.

**போஸ்டாபீஸ்களுக்கு விடுமுறை நாட்கள்.**—இந்தியா கவர்ன்மெண்டார் போஸ்டல் இலாகாக்களுக்கு அடியில் வருமாறு இப்பொழுது இருப்பதைவிட அதிக விடுமுறை நாட்களென்றும், அவை 1912 முதல் மறு உத்தரவு வரையில் அமுலுக்குக் கொண்டுவரப்படுமென்றும் பிரசுரித்திருக்கிறார்கள்:—

சென்னை, பர்மா ஆகிய இவ்விரண்டு ஸர்க்கில்களும் தவிர மற்ற ஸர்க்கில்களுக்கு விடுமுறை: (1) இடுஜ்ஜஹா; (2) ஹோலி அல்லது தோல்ஜத்ரா; (3) கோகுலாஷ்டமி (பஞ்சாபில் பைஸாகி); (4) ரம்ஸான்; (5) தசரா (6) தீபாவளி.

சென்னை ஸர்க்கிலுக்கு (1) பொங்கல், (2) மகா சிவராத்திரி (அல்லது தெலுங்கு வருஷப் பிறப்பு); (3) ஆவணி அவிட்டம் (அல்லது தமிழ் வருஷப் பிறப்பு); (4) ஆயுதபூஜை; (5) இட-அல்-பிர் அல்லது ரம்ஸான் (6) தீபாவளி.

பர்மா ஸர்க்கிலுக்கு (1) பர்மா வருஷப் பிறப்பு; (2) புத்த உபவாஸ ஆரம்பம்; (3) புத்த உபவாஸ முடிவு.

இந்த விடுமுறை நாட்கள் போஸ்டாபீஸ் விடுமுறை நாட்களில் வந்து ஸம்பவிக்குமானாலும் அல்லது அத்தேதிகளில் விடுமுறை விடக்கூடாதிருந்தாலும் வேறு விடுமுறை நாட்களை அவ்வருஷ ஆரம்பத்திலேயே குறிப்பிட்டுப் பிரசுரித்து விடுவதோடு போஸ்டல் கைடுகளிலேயும் காணவேண்டும்.

இந்த வருஷத்தில் அடியிற் கண்டபடி போஸ்டாபீஸுக்கு அதிக விடுமுறைநாட்கள் அனுஷ்டானத்துக்கு வரும்.

பர்மா ஸர்க்கிலில்:—(1) புத்த உபவாஸ ஆரம்பம்; (2) புத்த உபவாஸ முடிவு. பர்மா தவிர மற்ற ஸர்க்கில்களில்:—(1) கோகுலாஷ்டமி அல்லது ஆவணி அவிட்டம் (சென்னை ஸர்க்கில்) (2) இட-அல்-பிடர் அல்லது ரம்ஸான்; (3) தீபாவளி அல்லது காளிபூஜை.



## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

A GIFT AT THE CORONATION.

**முடிசூட்டுவைபவ வெகுமதி.**—நமது சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தினிக்கும் நடந்த முடிசூட்டு வைபவத்தின்போது ந்யூஸீலண்டு வாசிகள் 285 அவுன்ஸ் எடையுள்ள தங்கக்கட்டி யொன்றைச் சுரங்கத்திலிருந்தெடுத்தபடியே வெகுமதியாகக் கொடுத்தார்கள். இவ்வளவு எடையுள்ள தங்கக்கட்டி இது வரையில் அங்கே சுரங்கத்தில் அகப்பட்டதில்லையாம்.

A NOTICE IN AN AFGAN ROAD.

**ஆப்கானிஸ்தான் ரோட்டில் ஒரு நோட்டீஸ்.**—ஆப்கானிஸ்தானத்தில் ரஸ்தாக்கள் அதிகமாகப்போடப்பட்டுவருகின்றன. இந்தரோட் ஒன்றில் ஒருமரத்தில் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு பலகையில் "இந்த ரோட் எனது ப்ரஜைகள் தாராளமாய்ப் போகவும் வரவும் போடப்பட்டிருக்கிறதே யன்றி, அவர்கள் கூட்டமாய்க்கூடி வீண்பேச்சுப்பேசப் போடப்படவில்லை" என்று அமீரின் கையெழுத்துப் போட்டிருந்ததை டாக்டர் ஸெய்ஸ் பார்த்தாராம். இதைப் பற்றி அமீருக்குச் சொன்னபோது அமீர் நகைத்து தமது ப்ரஜைகள் நல்ல ரஸ்தாக்களானால் அங்கே கூடி தேத்தண்ணீர் பருக விரும்புவார்கள். ஆகையால் அந்த நோட்டீஸ் அவசியம் என்று சொன்னார்.

LETTERS.

**தபால் காகிதங்கள்.**—தபால் ஆபீஸ் 38வது ஆக்ட்படிக்கு விலாஸதாரனுக்காவது அல்லது கடிதமெழுதியவனுக்காவது திருப்பக்கூடாத கடிதங்களில் தபால் கட்டணம் முழுமையும் செலுத்தப்பட்டிருக்கும் கடிதங்கள் மாத்திரம் ஆறுமாதம் காப்பற்றப்படுமாம்; மற்றவைகள் அதாவது குறைச்சலாக தலை ஒட்டி அல்லது தலையொட்டாமலே போட்ட காகிதங்கள் விலாஸதாரன் அல்லது எழுதியவன் இவர்களுக்குத் திருப்பக்கூடாமல் போகுமானால் ஒருமாதங் காப்பாற்றப்பட்டு பின்னர்த் தீயிட்டுக் கொளுத்திவிடப்படுமாம். இதனால் ஏற்படுவது:—தபால் காகிதங்களுக்குக்குரிய தபால் கட்டணம் முழுமையும் கொடுத்து விடுவதே நலம்.

A BIG DACOIT.

**ஒரு பெரிய தீவர்த்திக் கொள்ளைக்காரன்.**—பாரிஸ் நகரத்திற் கைதிசெய்யப்பட்ட சிக்காட் என்பவன் தான் கொள்ளையடிக்குந் தொழிலை மேற்கொண்டு 1500 முறை கொள்ளையடித்ததாக ஒப்புக்கொண்டானும். தான் கொள்ளையடித்த வருஷம், மாதம், தேதி, கொள்ளையடித்த பொருளின் மதிப்பு முதலியவற்றைக் குறிப்பிட்டிருக்கும் புத்தகத்தைப் போலீஸாருக்குக் காண்பித்தானும். கடைசி ஐந்து வருஷத்தில் சனிக்கிழமை தவிர ஒவ்வொரு நாளும் கொள்ளையடித்தேனென்றும், அதனால் சம்பாதித்த பொருளும் நகையும் ஏராளமாகச் சேகரித்து பந்தோபஸ்தான இடத்தில் வைத்திருக்கிறேனென்றுங் கூறினானும்.

REMINDING ABSENT MINDED PERSONS.

**மறதியுள்ளவர்களை ஞாபகப்படுத்தல்.**—நம் முன்னோர்கள் ஏதாவதோர் காரியத்தை நினைப்பூட்டிக்கொள்ள வேண்டியதாயிருந்தால் கைக்குட்டையில் ஒரு முடிச்சு போட்டுக்கொள்ளுவார்கள். நாளைக்கும் இவ்வழக்கம் அநேக தேசங்களில் நடந்துவருகிறது. ஆனால் முடிச்சு என்னத்திற்காகப் போடப்பட்டதென்று மறந்துபோனால் என்ன செய்கிறது? இக்காலத்து மனுஷர்களோவெனில் ஒரு நூதனமான நினைப்பூட்டும் வகையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது ஆஸ்ட்ரியா தேசத்தின் பிரதம பட்டணமாகிய வியன்னா பட்டணத்தில் விசேஷமாய்க் கையாளப்பட்டு வருகிறது. ஒருவனுக்கு ஜூலை மாஸம் முதல் தேதியில் ஒரு கலியாணத்துக்கு ஒரு வியாஜ்யத்துக்கு, வேறு எந்தக் காரியத்துக்கு ஆஜராகும்படி நோட்டீஸ் வந்திருக்கிறதென்று நினைத்துக்கொள்ளுவோம். அந்தப் பேர்வழி மேற்சொன்ன ஆபீஸுக்குப் போய் ஒரு கார்ட் வாங்கி, அதில் தன் விலாஸமும் கண்டு எழுதி, குமஸ்தாவிடத்தில் கொடுத்துவிடவேண்டியது. குறித்தநாள் அதிகாலையில் இந்தக் கார்ட்டு அவன் வீட்டுக்கு அனுப்பப்படும். அவன் உடனே போகவேண்டிய விசேஷத்துக்கு முஸ்த்தீப்பாக வேண்டியதுதான். இந்த வேலைக்கு என்ன செலவு என்று கேட்பீர்களோ, அந்தக் கார்டு விலையொழிய வேறொன்றுமில்லை. ஆனால் அந்தக் கார்டு ஸாதாரண கார்டைவிடச் சற்று அதிகமான விலைக்கு விற்கப்படும்.

# MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

(தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் ஜூலைமீ 19-ம்வ ரிபோர்ட்டுப்படி.)

PIECE GOODS.

ஜவுளி ஸாமான்கள்.

மதராவில் ஆடிமாஸ மாதலால் மார்க்கெட் ரொம்ப டல்லாயிருக்கிறது.

GREY SHIRTINGS—காடா.

| லேடி மார்க்கு. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| No. 1110—$37\times37\frac{1}{2}\times46''$ | .. | 8 | 0 | 0 |
| **கூண்டு மார்க்கு.** | | | | |
| No. 2500—$37\times37\frac{1}{2}\times41''$ | .. | 6 | 1 | 0 |
| ,, 3500 ஷை 46″ | .. | 7 | 15 | 0 |
| ,, 7500 ஷை 54″ | .. | 6 | 5 | 0 |
| ,, 5000 ஷை 41″ | .. | 6 | 3 | 0 |
| **பறவை நாகம் மார்க்கு.** | | | | |
| $37\times37\frac{1}{2}\times41''$ | .. .. | 5 | 8 | 6 |
| No. 126—46″—$37/7\frac{1}{2}$ | .. | 9 | 12 | 0 |

GREY MULLS—காரிகம்பீஸ் (காஸாக்கச்சை).

| 20 கஜம் இஞ்சின் மார்க்கு. | | | | |
|---|---|---|---|---|
| $20\times20\times46''$ | .. .. | 4 | 7 | 0 |
| ஷை 51″ | .. .. | 4 | 15 | 0 |
| $22\times22\times51''$ | .. .. | 5 | 7 | 0 |
| ஷை 46″ | .. .. | 4 | 15 | 0 |
| **20 கஜம் புறு மார்க்கு.** | | | | |
| $20\times20\times46''$ | .. .. | 4 | 7 | 0 |
| **நுபா மார்க்கு.** | | | | |
| 45″—$20\times20$ | .. .. | 4 | 7 | 0 |
| 45″—$22\times22$ | .. .. | 4 | 14 | 0 |

BOOK MUSLINS.—புக் மஸ்லின்கள்.

சங்கு மார்க்கு 12 கஜம்.

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 51″—94 .. <br> ஷை—95 .. <br> ஷை—96 .. <br> ஷை—97 .. | (ஸாஸரி) | 4 | 1 | 0 |
| ஷை—84 .. <br> ஷை—85 .. <br> ஷை—86 .. <br> ஷை—87 .. | (ஸாஸரி) | 4 | 5 | 0 |

JACONETS.—ஜாக்கிநெட்டுகள்.

| 46″ தங்க விநாயகர் மார்க்கு. | | | | |
|---|---|---|---|---|
| No. 888 | .. .. .. | 5 | 9 | 6 |
| ,, 777 | .. .. .. | 5 | 4 | 6 |
| ,, 666 | .. .. .. | 5 | 3 | 6 |
| ,, 555 | .. .. .. | 5 | 0 | 6 |
| ,, 444 | .. .. .. | 4 | 13 | 6 |
| ,, 333 | .. .. .. | 4 | 10 | 0 |
| **20 கஜம் 46″ தங்கக் குழந்தை மார்க்கு.** | | | | |
| No. 2662 | .. .. .. | 4 | 11 | 0 |
| ,, 89 | .. .. .. | 4 | 14 | 0 |
| ,, 898 | .. .. .. | 4 | 15 | 0 |
| ,, 8989 | .. .. .. | 5 | 2 | 0 |
| ,, 89898 | .. .. .. | 5 | 4 | 0 |
| ,, 898989 | .. .. .. | 5 | 6 | 0 |

WHITE MULLS—ஸலவை மல்லுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| No. 1703 | .. .. .. | 7 | 4 | 0 |
| ,, 1503 | .. .. .. | 7 | 0 | 0 |
| ,, 1502 | .. .. .. | 6 | 2 | 6 |
| ,, 1702 | .. .. .. | 6 | 6 | 0 |
| ,, 1704 | .. .. .. | 7 | 6 | 6 |
| ,, 136—40″—18 கஜம் | .. | 2 | 2 | 0 |
| ,, 9072—46″ 20 கஜம் | .. | 4 | 12 | 0 |
| ,, 9073—51″ ஷை | .. | 5 | 4 | 0 |
| ,, 5072—46″ ஷை | .. | 4 | 12 | 0 |
| ,, 5073—51″ ஷை | .. | 5 | 4 | 0 |
| ,, 812—46″ ஷை | .. | 4 | 12 | 0 |
| ,, 813—51″ ஷை | .. | 5 | 4 | 0 |
| ,, 3073 | .. .. .. | 5 | 12 | 0 |
| ,, 7073 | .. .. .. | 5 | 13 | 0 |
| ,, 973 | .. .. .. | 5 | 13 | 0 |
| **மேடல் மார்க்கு.** | | | | |
| ,, 7773 | .. .. .. | 6 | 4 | 0 |



| ஸவரன் மார்க்கு. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| No. 273 | .. .. .. | 6 | 5 | 0 |
| 72—46″ 20 கஜம் | .. .. | 4 | 2 | 0 |
| 73—51″ ஷை | .. .. | 4 | 10 | 0 |

WHITE SHIRTINGS—லாங்க்லாத்.

| | | | | |
|---|---|---|---|---|
| H. K. 62 36″ 40 கஜம் | .. | 9 | 8 | 0 |
| ஷை 82 ஷை | .. | 9 | 12 | 0 |

RED SHIRTINGS—தோம்பு.

| ஸ்வதன்வா மார்க்கு. | | | | |
|---|---|---|---|---|
| 7 டிக்கெட்டு | .. .. | 6 | 4 | 6 |
| 7 ஷை | .. .. .. | 6 | 8 | 6 |
| 8 ஷை | .. .. .. | 6 | 12 | 6 |
| No. 10—41″ 40 கஜம் | .. .. | 8 | 3 | 0 |
| **ஒட்டை மார்க்கு.** | | | | |
| 7 டிக்கெட்டு | .. .. | 7 | 3 | 0 |
| 8 ஷை | .. .. | 7 | 7 | 0 |

YARN AND TWIST—நூலும் முறுக்கு நூலும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆமதாபாத் காரம் 40—சைஞ டிக்கெட்டு—செகப்பும் மஞ்சள் முடியும். | | 2 | 15 | 6 |
| பம்பாய் காரம் 40 டவர் அண்ட் ஸேட் மார்க்கு | .. .. .. | 3 | 10 | 0 |

MANCHESTER YARN—சீமை நூல்.

| | | | | |
|---|---|---|---|---|
| காரம் 40 ஜி. எம். (G.M.) ட்ரம்மர் | | 3 | 15 | 6 |
| ஷை க்ளாஸ்கோ | .. | 4 | 3 | 6 |
| ஷை தங்கமயில் | .. .. | 3 | 15 | 6 |
| ஷை மதுராபட்டணம் ஜி.எம். | | 3 | 15 | 6 |
| ஷை பாக்கு வெட்டி | .. | 3 | 15 | 6 |
| ஷை ஆதிசேஷன் | .. | 4 | 1 | 0 |
| ஷை ஸலவை 80 மகாராஜா | | 7 | 8 | 6 |
| ஷை 30 கெடிகாரம் | .. | 3 | 15 | 0 |
| ஷை ஷை தண்ணித்துரை | .. | 3 | 13 | 6 |
| ,, 50 ம்யூல்-கிழவன் | .. | 4 | 7 | 0 |
| ,, ஷை ஷை 70/80 | .. | 6 | 2 | 0 |
| 50 மீடியோ G. F. M. ஒட்டையும் யானையும் | | 5 | 14 | 6 |
| 60 மீடியோ | .. .. .. | 6 | 1 | 0 |

RED—சேகப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 60 இரட்டைமயில் | .. .. | 8 | 13 | 6 |
| 40 முனிவிபாலிட்டி (புல்வெயிட்) | | 11 | 7 | 8 |
| 40 புத்தா | .. .. | 6 | 0 | 0 |
| ,, வில்லேஜ் 4 டிக்கெட்டு | .. .. | 5 | 3 | 0 |
| ,, ராவணேஸ்வரன் | .. .. | 11 | 8 | 0 |
| ,, அஹல்யை ராமர் | .. .. | 11 | 6 | 0 |
| , பொம்மி செட்டி | .. .. | 11 | 6 | 0 |
| , மோட்டார்கார் | .. .. | 10 | 6 | 0 |
| , போரா பஸார் | .. .. | 6 | 1 | 6 |
| , பூப்ஸானி இரண்டு கட்டு | .. .. | 11 | 7 | 8 |
| 60 ஆதிசேஷன் | .. .. | 8 | 11 | 0 |

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|

YELLOW—அரை மஞ்சள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 42/40 இஞ்சின் | .. .. | 4 | 13 | 0 |
| 40 ஸ்டீமர் | .. .. | 4 | 13 | 0 |
| 44/40 யானை | .. .. | 4 | 8 | 0 |
| 40 கெங்கை (ஜகன்மோஹினி) புல்வெயிட் | | 4 | 14 | 6 |
| காசி ராஜா | .. .. | 4 | 14 | 0 |
| 44/40 கிருஷ்ணன் | .. .. | 4 | 11 | 0 |

LEMON AND ORANGE—கால் மஞ்சள் முழு மஞ்சள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 44/40 கால் மஞ்சள் கிருஷ்ணன் | | 4 | 10 | 6 |
| ,, முழு மஞ்சள் ஷை | .. | 5 | 0 | 0 |
| 40 முழு மஞ்சள் ஷை | .. | 5 | 2 | 0 |
| ,, ஷை காசி ராஜா | .. .. | 5 | 2 | 0 |
| 40 கால் மஞ்சள் ஸ்டீமர் | .. | 4 | 12 | 6 |
| ,, முழு மஞ்சள் ,, | .. | 5 | 3 | 0 |

BLACK—கறுப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 44/40 குதிரை | .. .. | 4 | 12 | 0 |

HIDES AND SKINS—மாட்டு ஆட்டுத் தோல்கள்.

| மாஞ (மாட்டுத்தோல்) | | | | |
|---|---|---|---|---|
| பல்லாரி | .. .. | 0 | 13 | 7 |
| பங்களூர் கமேலா | .. .. | 0 | 13 | 3 |
| ஹைதராபாக்கம் | 0 13 4 முதல் | 0 | 13 | 7 |
| மட்வாடா | .. .. | 0 | 13 | 0 |
| ஏலூர் ஸ்ரீஜமஹேந்திரபுறம் | 0 13 1 முதல் | 0 | 13 | 5 |
| செட்டி கடல்கரை | 0 12 6 முதல் | 0 | 12 | 11 |
| சீவரம் | .. .. .. | 0 | 12 | 2 |
| குடியாத்தம் | .. .. .. | 0 | 12 | 2 |
| பல்லாவரம் .. | 0 11 3 முதல் | 0 | 11 | 7 |
| **யேஞ (எருமைத்தோல்)** | | | | |
| ராயதுர்க்கம் | .. .. | 0 | 10 | 7 |
| பல்லாரி | .. .. | 0 | 10 | 7 |
| பங்களூர் | 0 9 5 முதல் | 0 | 9 | 6 |
| **வேஞ (வெள்ளாடு)** | | | | |
| ஹைதராபாக்கம் | .. | 1 | 8 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | 1 | 5 | 9 |
| **சேஞ (செம்மறி ஆடு)** | | | | |
| ஹைதராபாக்கம் | | | | |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | 1 | 1 | 3 |
| சேலம் | 1 10 0 முதல் | 1 | 15 | 0 |
| மட்வாடா | | 1 | 5 | 0 |

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 15 முதல் 22 |
| கொன்னைப்பட்டை ஷை | 12 முதல் 13 |
| கடப்பை கடுக்காய் ஷை | 8 முதல் 10 |
| சேலம் அரசகிரிஷை ஷை | 16 முதல் 21 |
| நல்லெண்ணெய் ஷை | 105 முதல் 115 |
| புங்கம் எண்ணெய் ஷை | 70 முதல் 75 |
| எட்டிக்கொட்டை ஷை | $15\frac{1}{2}$ முதல் 17 |
| விளக்கெண்ணெய் ஷை | 70 முதல் 71 |
| கொட்டை முத்து .. | $10\frac{1}{2}$ முதல் $10\frac{5}{8}$ |

| | ரூ. அ. பை. |
|---|---|
| பந்தர் பச்சை அரிசி 44 படி | 7-8-0 முதல் 7-12-0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 6 0 |
| கோதுமை 4 படி .. | 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் | 5-14-0 முதல் 6-4-0 |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் .. | 12 8 0 |
| ஷை (பல்லாரி) ஷை .. | 10 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு | |

METALS—2 லோகங்கள்.

| | |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ—ம் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் .. | ரூ. 210—212 |
| செப்புத் தகடுகள் பாரம் .. | 250 |
| செப்புக்கட்டி ஷை .. | 225 |
| நாகம் ஷை | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 74 |
| ஈயம் ஷை .. | 54 |
| காரீயம் ஷை .. | 49 |
| வெள்ளீயம் ஷை .. | 200 வராகன். |

IRON—இரும்பு.

| | | |
|---|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் ரூ. | | 21—23 |
| சீமை .. .. .. | | 43 |
| மருக்கி தகடு | 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு .. .. | | 27—28 |
| 8 பட்டை எஃகு .. .. | | 23 |
| எஃகு வில்கட்டு .. .. | | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 நெ. .. | | 21 |
| சீமை .. .. .. | | 40-46-49 |

SEASON.

காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1911ஸு ஏப்ரல் மீ" 1-உயிலிருந்து, ஜூலைமீ" 31உ வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 8·69 | 16·68 |
| வால்டேர் | 8·78 | 11·42 |
| காக்கிநடா | 16·81 | 11·98 |
| மசூலிப்பட்டணம் | 13·99 | 12·22 |
| நெல்லூர் | 2·03 | 4·83 |
| மதராஸ் | 1·78 | 7·53 |
| கூடலூர் | 3·48 | 6·64 |
| நாகப்பட்டணம் | 3·75 | 5·55 |
| பாம்பன் | 0·13 | 3·24 |
| கொழும்பு | 19·21 | 36·22 |
| திருவநந்தபுரம் | 27·32 | 33·10 |
| கொச்சி | 74·51 | 67·09 |
| கள்ளிக்கோட்டை | 73·22 | 76·82 |
| மங்களூர் | 64·93 | 80·56 |
| மெர்க்காரா | 105·16 | 76·15 |
| ஐதராபாத் | 10·71 | 12·76 |
| ரெய்ச்சூர் | 11·52 | 10·03 |
| பல்லாரி | 3·15 | 6·18 |
| கர்நூல் | 10·08 | 10·20 |
| கடப்பை | 11·09 | 9·42 |
| ஹாஸ்ஸான் | 17·04 | 17·04 |
| பெங்களூர் | 12·92 | 12·59 |
| கொடைக்கானல் | 26·98 | 17·13 |
| உதகமண்டலம் | 36·54 | .. |
| கோயம்புத்தூர் | 12·57 | 6·79 |
| வேலூர் | 9·68 | .. |
| சேலம் | 8·54 | 13·30 |
| திருச்சிநாப்பள்ளி | 5·26 | 7·81 |
| புதுக்கோட்டை | 10·00 | .. |
| மதுரை | 9·02 | 8·21 |
| திருநெல்வேலி | 3·52 | 5·41 |


# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஸு ஆவணிமீ" — AUGUST 1911. | ஸஞ்சிகை 8. No. 8.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு | .. 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி | .. 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி | .. 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஸூ ஆவணிமீ—AUGUST 1911. | ஸஞ்சிகை 8. No. 8.


## பொருளடக்கம்.


| | |
|---|---|
| **பத்திராதிபர் குறிப்புகள்** | பக்கம் |
| காவிரி அணைக்கட்டு யோசனை-நன்செய் நிலங்களுக்குப் பசுந்தாள் உரம் பிடிப்பான காலர்-காது வியாதிகள் கால் நடைகளின் ஸாதாரண நோய்கள்—மூலாதாரப்படிப்பு—காலஞ்சென்ற நிஜாம் மகாராஜா-ஸிந்துக் கலப்பை. | 395-400 |
| **விசேஷ வியாஸங்கள்** | |
| ஐக்கிய நாணயச்சங்கங்கள் —ராவ் பகதூர் வி. கெ. ராமாநுஜாச்சாரியார் | 401 |
| கைத்தொழில் அபிவிருத்தி —மிஸ்டர் மான்டேகூவின் பேச்சு | 403 |
| ஆமணக்கு ஸாகுபடி —சோமசுந்தர தேசிகர் | 406 |
| அரக்கு | 408 |
| இந்திய மேஸ்ட்ரிட்டின் அனுபோகம் | 412 |
| ரெஜிஸ்ட்ரேஷன் இலாகா உத்தியோகஸ்தர்களின் அலுவல்கள் | 414 |
| **விசேஷத்திரட்டு** | |
| விதைகள் முளைக்கும் விதம் | 417 |
| உப்பின் உபயோகம் | 418 |
| வெள்ளாடு | 420 |
| ஆனரபில் மிஸ்டர் கோக்லே பொது வாழ்க்கையைப்பற்றி | 422 |
| **பத்திரிகை ஆராய்ச்சி** | |
| நாட்டுக்கோட்டை செட்டிகளின் கணக்கு | 425 |
| பால்கறத்தல் | 425 |
| புறம்போக்குகள் | 426 |
| ஸராஸரி லாபம் | 427 |
| காயிதம் செய்தல் | 428 |
| **சிறுவர் பகுதி** | 429-430 |
| **ஸ்திரீகள் பகுதி** | 431-432 |
| **பகுதிக் குறிப்புகள்** | |
| விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் | 433-443 |
| **மாஸ வர்த்தமானம்** | 444-447 |
| **மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** | 448 |


## CONTENTS.


| | |
|---|---|
| **Editorial Notes** | PAGE. |
| The Cauveri Reservoir Project-Green manuring for wet lands-Tight Collar Ear Diseases-Common Ailments of Cattle--Elementary Education—His Highness the late Nizam-The Sind Plough. | 395-400 |
| **Special Articles** | |
| Co-operative Credit Societies Rao Bahadur V. K. Ramanuja Chariar | 401 |
| Industrial Progress Mr. Montagu's Speech | 403 |
| Castor Cultivation Somasundara Desikar | 406 |
| Lac | 408 |
| An Indian Magistrate's Experiences | 412 |
| The Duties of Registering Officers | 414 |
| **Selections** | |
| Methods of Germination of Seeds | 417 |
| The Uses of Salt | 418 |
| The Goat | 420 |
| Mr. Gokhale on Public life | 422 |
| **Review of the Press** | |
| Nattukottai Chetti's Accounts | 425 |
| Milking | 425 |
| Porambokes | 426 |
| Average of Profits | 427 |
| Paper Making | 428 |
| **The Boys' Section** | 429-430 |
| **The Ladies' Section** | 431-432 |
| **Departmental Notes** | |
| Agricultural Notes | 433 |
| Industrial Notes | 435 |
| Educational Notes | 436 |
| Scientific Notes | 438 |
| Medical Notes | 439 |
| Legal Notes | 440 |
| Personal Notes | 441 |
| Fun and Anecdote | 442 |
| Curiosities | 443 |
| **News of the Month** | 444-447 |
| **Madras Market Reports** | 448 |




# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### The Cauveri Reservoir Project.

காவிரி அணைக்கட்டு யோசனை.—நமது ராஜதானியில் காவிரி யாற்றின் ஜலத்தைத் தேக்கி ஒரு ப்ரம்மாண்டமான அணைக்கட்டுக் கட்டுவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அந்த அணைக்கட்டு உலகத்தில் இதுவரையில் கட்டியுள்ள அணைக்கட்டுகளைவிட மிகப் பெரிதாயிருக்கும் அதன் உந்நத உயரம் 201 அடியும் ஸராஸரி உயரம் 113 அடியு மிருக்கும். அது 58 சதுர மைல் கொண்ட ஒரு பெரிய ஏரியாய் 473,000 ஏக்கராக்களுக்கு ஜலம் பாய்ச்சலாம். ஸுமார் நான்குகோடி ரூபாய் செல்லும். அதற்கு $6\frac{1}{2}$ வட்டி கட்டுமாம்.

### Green manuring for wet lands.

நன்செய் நிலங்களுக்குப் பசுந்தாள் உரம்.—ஜூன்மீ முதல்தேதியில் ஏக்கர்ஒன்றுக்கு $2\frac{1}{2}$ பட்டணம்படி வீதம் பசுந்தாள் உரத்துக்காக நெல்லிக்குப்பத்துக்குஅடுத்த பாலூர் விவஸாயப்பண்ணையில் விதைக்கப்பட்ட வங்காளத் தக்கைச்செடிகளின் வளர்ச்சியைநன்செய் நிலஸ்வான்கள் இப்போது போய்ப்பார்க்கலாம். $2\frac{1}{2}$படி விதைக்கு விலை ரூ 0-15-0 ஆகும். செடிகள் மூன்று அடிமுதல் ஐந்து அடிவரையில்வளர்ந்து மிகவும் செழிப்பாயிருக்கின்றன. இந்தச்செடிகள் சீக்கிரத்தில் சம்பாநடவுக்குப் பசுந்தாள் உரமாகமடக்கி உழுதுவிடப்படும். நன்செய் பூமிக்கு சுலபமாய் தழை உற்பத்தி செய்ய இது அல்லவோ நல்லவழி; தேவையானவர்கள் நெல்லிக் குப்பத்துக்கு அடுத்த பாலூர் விவஸாயப்பண்ணை மானேஜருக்கு எழுதி விதை தருவித்துக் கொள்ளலாம்.

### Tight Collar.

பிடிப்பான காலர்.—தற்காலத்தில் கோட்டுப் போட்டுக்கொள்ளாமல்வெளியில் கிளம்புகிறவர்கள் சிலர்தான். அழகுக்காகவோ, அல்லது கோட்டு அழுக்காகாமலோ உள்ளே போட்டுக் கொள்ளும் ஷர்ட்டுக்கு மேல் காலர் போட்டுக்கொண்டே அநேகர் கோட்டுப் போட்டுக் கொள்ளுகிறார்கள். சில காலர்கள் கழுத்து முழுமையும் மறைக்கும். இப்படிப் போட்டுக்கொள்ளும் காலர்கள் நன்றாய்த்தளர இல்லாவிட்டால், அநேக தொந்தரவுகளை உண்டாக்கும் என்று வால்டர் வால்போர்டு என்னும் ஒரு டாக்டர் எழுதுகிறார். இவருக்கு சிறுவயது முதற்கொண்டு தலைவலி அடிக்கடி வருவதுண்டாம். வயதாக வயதாக வாயுப் பிடிப்பும் கீல் பிடிப்புங்கூட வந்தனவாம். வயது 70 ஆகியும் என்ன சிகிச்சை செய்தும் ஒரு டாக்டராலும் ஒன்றும் முடியவில்லை. கடைசியில் தானாகவே யோஜித்துப் பார்த்தார். நடக்கும்போதுதான் தலைவலியும் மயக்கமும் உண்டாயின. உடுப்பு இல்லாமலிருந்தால்,கொஞ்சம் ஸௌக்யமா யிருந்தது. ஆகவே கொஞ்சம் சட்டைகளைக் கழுத்தில் தளர்த்திவிட்டார். ஸௌக்யமாயிருந்தது. பிறகு கழுத்து காலர்ப் பட்டை இவைகளை ஒரு அங்குலம் தளர்த்திவிட்டதில் தலைவலி, கீல் பிடிப்பு, வாயுப் பிடிப்பு, எல்லாம் நீங்கிவிட்டனவாம். தான் செய்ததுபோல் அநேகம் பேர்களுக்கும் சொல்லி அவர்கள் வியாதியை சொஸ்தப்படுத்தினாராம்.

கழுத்தின் மேல்புறத்தில் ரக்தக் குழாய்கள் இருக்கின்றன. அவைகள் அழுத்தப்படுவதால், அநேகதொந்தரவுகள் ஏற்படுகின்றன. ஆகவே தலைக்கு ரக்த ஓட்டம் ஸரியாக ஏற்படும்படி கழுத்துக் காலர், பட்டி முதலியவைகளைக் கட்டிக் கொள்ள வேண்டும். முக்கியமாய் காலரின் கீழ்பாகம் கழுத்தை அமிழ்த்தக்கூடாது.

**Ear Diseases.**

**காது வியாதிகள்.**— நம்முடைய சரீரத்தில் முக்கியமாயுள்ள பஞ்ச இந்திரியங்களில் காது விசேஷமானது. காது மிகவும் நுட்பமான கூச்சமுள்ள இந்திரியம். அற்ப விஷயங்களால் கூட காதின் நேர்மைகெட்டுப்போகும். காது நோவுபலகாரணங்களால் உண்டாகும். காதில் குளிர்ந்தகாற்றுப் பட்டால் காதுவலிவரும். காதில் குறும்பை ஜாஸ்தி யுண்டாகி அதோடு தூசி முதலான அழுக்குகள் படிந்து த்வாரத்தைக் கெட்டியாய் அடைத்துக் கொள்வதனால் காதில் குத்து வலி உண்டாகும். காதை சுத்தப் படுத்துவதாக எதையாவது போட்டுக் குடைவதனால் காதுவலி யுண்டாகும். காதில் ஏதாவது பூச்சி, எரும்பு, புகுவதினாலும் காதில் நோய் உண்டாவதுண்டு.

காதில் குறும்பை அதிகமாகி குத்துவலி உண்டானால் ராத்திரி படுக்கப் போகும் போதுகொஞ்சம் க்ளிஸரயினையாவது அல்லது ஸோடாபைகார்ப் உப்புக்கலந்த எண்ணெயையாவது காதுக்குள் வார்த்துக்கொண்டு மறுநாள் காலையில் கொதித்து ஆறினவெந்நீரைக் காதில் பீச்சாங்குழல் வைத்து மிருதுவாக அடித்து சுத்தம் பண்ணவேண்டும். அடிக்கடி பிராந்தியை யாவது நல்ல சாராயத்தையாவது காதில் இரண்டொரு சொட்டுஊற்றிவருவதே போதும்.

காது மடலுக்குவெளியே வெந்நீரை ஒற்றிடம் கொடுத்தாலும் விசேஷமாய் காதுவலி சாந்தமாகும். மலவிருத்தியானால் காதுவலி மட்டுப்படும். ஆகையால் காது வலியுண்டாகும் ஸமயங்களில் சிற்றாமணக்கெண்ணெய் சாப்பிடுவது நலம்.

காதில் ஏதாவது பூச்சி புகுந்திருக்கும் பக்ஷத்தில் கொஞ்சம் தண்ணீரைக் காதுக்குள் ஊற்றினால் அந்தப்பூச்சி மிதக்கும். காதைக் கீழேசாய்க்கவே அது தண்ணீரோடு கீழே விழுந்து விடும். காதில் பீச்சாங்குழல் வைத்து அடிப்பதில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் தாறுமாறாய் அடித்தால் உள் குருத்தில் பட்டு பெரும்துன்பம் உண்டாகும்.

காதிலிருந்து சீழ்வடிதல் ஆரம்பத்தில் ஊந்தண்ணீராக இருக்கும். நாளாக நாளாக சீழாகும். சில ஸமயங்களில் ரக்தமும் கலந்திருக்கும். காதில் ஏதாவது புண் வீக்கம் இருந்தால் இப்படி சீழ்வடியும். இல்லாவிட்டால் உள்ளே ஆதாரமாயுள்ள எலும்புகெட்டுப் போனாலும் சீழ் வடியலாம். இந்த விஷயத்தில் தக்கவைத்தியர்களைக் கொண்டே தாமதிக்காமல் கூடிய சீக்கிரத்தில்வைத்தியம் பார்த்துக்கொள்ள வேண்டும். தற் கால சாந்தியாக சீழ் சேர்ந்து போகாமல் பிரதி தினமும் காதை நன்றாய்க் கழுவிவரவேண்டும்.

**Common Ailments of Cattle.**

**கால் நடைகளின் ஸாதாரண நோய்கள்.**— நம்முடைய நாட்டில் விவஸாயத்தேயே பிழைக்கும்வழியாக வைத்துக்கொண்டிருப்பது சுமார் 100க்கு 80 பேர்களுக்கு ஜாஸ்தியாகவே இருக்கும். விவஸாயத்துக்கு கால் நடைகள் அவசியம். கால் நடைகளுக்கு கொடுக்கவேண்டிய ஆகாரங்கள் சுத்தமாக இருக்கும்பக்ஷத்தில் அநேக நோய்கள் வராமல் செய்யலாம். எப்படி மனிதர்களுக்கு சாப்பிடுகிற ஆகாரமும் குடிக்கிற தண்ணீரும் அசுத்தமாயிருந்தால் அநேக நோய்கள் வருகின்றனவோ அதுபோல கால் நடைகளும் ஜீவஜெந்துக்களானதினால் அநேக நோய்களினால் தொந்தரவுபடும். ஜாஸ்தியாக ஆகாரம் கொடுத்தாலும் நியாயமாகக் கொடுக்கவேண்டிய ஆகாரத்தைக் குறைத்தாலும் கால் நடைகள்நோயினால் பீடிக்கப்படும். சில நோய்கள்



தொத்து வியாதிகளென்று சொல்லப்படும். இன்னும் சில வியாதிகள் கண்ணுக்குத் தென்படாத சில நுட்ப ஜெந்துக்களால் உண்டாக்கப்படுகிறதென்றும் சொல்லப்படும். இப்படிக்கு இருந்தபோதிலும் கால்நடைகளைப் பீடிக்கிற நோய்கள் விசேஷமாய் விவஸாயிகளுடைய கவனக் குறைவினாலும் அசுத்தமான தீனிகளினாலும் ஏற்படுகின்றன.

கால் நடைகள் கட்டவேண்டிய இடங்கள் வெகு சுத்தமாக இருக்கவேண்டும். வெளியில் கட்டி மழையில் நனைகிறதினாலும் ஈரடியான நிலத்தில் கட்டுகிறதினாலும் புஷ்டியாயிருக்கப்பட்ட ஆடு மாடுகள்கூட வியாதிக்கு உள்ளாகும். மாட்டுக்கொட்டில் கொஞ்சம் உயர்ந்த பூமியாகவே இருப்பது நலம். மழைக்கும் வெயிலுக்கும் தகுந்த கூரை இருக்கவேண்டும். குளிர்ந்த ஜிலு ஜிலுத்த காற்றை தடுக்கும்படியான அடைப்பும் இருக்கவேண்டும். ஆனால் காற்றோட்டம் உள்ளதாகவும் கால் நடைகள் போக வர வழி தாராளமாகவும் இருக்கவேண்டும். மாட்டுக் கொட்டிலின் தரை ஜலந்தங்கி ஈரம் கார்க்காத இடமாகவும் இருக்கவேண்டும். அதைச் சுற்றி இருக்கப்பட்ட நிலமும் சுத்தமாக வைக்கப்படவேண்டியது. கால் நடைகள் விடும் நீர் ஒரே இடத்திலே போய்ச் சேரும்படியாய் வாட்டமான மோரி ஒவ்வொரு கொட்டிலுக்கும் கட்டி யிருக்கவேண்டும்.

நம்முடைய தேசத்தில் விவஸாயத்தையே நம்பினவர்கள் ஜாஸ்தியாய் இருந்தபோதிலும் விவஸாயத்திற்கு மிகவும் அதிக அவசியமாக இருக்கும் கால்நடைகளுக்கு மழை நாள்களிலும் மழையே இல்லாமல் வெறித்த காலங்களிலும் தீனிகளை சேர்த்து முன்னிட்டே கையிருப்பாக வைத்திருக்க வேண்டியது முக்கியமென்பது பல விவஸாயிகளுக்கு புலப்படவில்லை. ஆகையால் வெறித்த காலத்தில் மாடுகள் கண்டதை தின்பதனாலும் மழை காலங்களில் தண்ணீரினால் மூடப்பட்டிருக்கும் பச்சைகளை மேய்கிறதினாலும் நோய்களுக்கு உள்ளாகின்றன.

**Elementary Education.**

**மூலாதாரப்படிப்பு.**– போன மார்ச்சு மாஸத்து ஸஞ்சிகையில் கனம். கோக்லே அவர்களால் இந்தியா கவர்ன்மெண்டின் சட்ட நிர்மாண ஸபையில் கொண்டுவரப்பட்ட மூலாதாரப் படிப்பைப் பற்றிய மசோதாவின் விவரங்களை பிரசுரித்திருக்கிறோம். அந்த மசோதாவின் முக்கிய பாகங்களை இந்தியா முழுவதிலும் அங்கங்கேயுள்ள புத்திமான் களெல்லாம் அங்கீகரித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட பெரிய விஷயத்தில் பலபேர் பல யோஜனை சொல்வதும் இன்னும் சிலர் மசோதாவிலடங்கிய சில்லரை விவரங்களுக்கு ஆக்ஷேபனை சொல்வதும் ஸகஜமே. நல்ல யோஜனைகளைக் கேட்டு ஆக்ஷேபனைகளுக்கு ஸமாதானம் சொல்லி வருவதற்காக, கனம் கோக்லே இந்தியாவில் பெரியப் பட்டணங்களுக்கெல்லாம்போய் ப்ரஸங்கங்கள் செய்துவருகிறார். ஸமீபத்தில் சென்னப்பட்டணத்திலும் கல்கத்தாவிலும் அப்படிப்பட்ட ப்ரஸங்கங்கள் செய்தார்.

மூலாதாரப் படிப்பைப்பற்றி பேசும்போது நாலு பாகங்களை கவனிக்கவேண்டும்

முதலாவது மூலாதாரப் படிப்பை படிக்கும்படி கட்டாயம்செய்வானேன் உலகம்முழுவதும் ஆராய்ந்துபார்த்ததில் படிக்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தாலொழிய பொதுஜனங்கள் தாமாகவே படிக்கிறதில்லையென்று அனுபோகஸித்தமாய் ஏற்படுகிறது. ஜனங்களெல்லாம் படித்து என்ன புரட்டிவிடப் போகிறார்கள்?, படிப்பானேன்?, படிப்பால் நன்மை யுண்டானாலும் ஒருவனைப்படிக்கும்படி கட்டாயம்



HON'BLE MR GOKHALE.
கனம் கோக்லே.



செய்வது பிசகு, என்று இப்படிக்கெல்லாம் சிலர் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட அபிப்பிராயம்கொண்டவர்களோடு வாதம்செய்வதில் பிரயோஜனமில்லை. இன்னும் சிலர் சொல்லுகிறார்கள்-படிப்பது நல்லதுதான், அவர்களை நிர்ப்பந்தப் படுத்திப் படிக்கச் சொன்னாலொழிய படிக்க மாட்டார்கள் என்பதும் வாஸ்தவந்தான்; ஆனால் இந்தியாவில் தற்காலத்தில் மேற்சொன்னபடி செய்வது உசிதமில்லையென்றுசொல்லுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஜப்பான், பிலிப்பைன் தீவுகள், லங்கை, பரோடா, இந்த தேசங்களில் மேற் சொன்ன படிகட்டாயப் படுத்தியே நடந்து வருகிறதென்பதை கவனிக்க வேண்டும்.

இரண்டாவது, மூலாதாரப்படிப்பைக் கட்டாயமாகச் செய்கிறதானால் எப்பொழுது, எங்கே, ஆரம்பம் செய்கிறது. இந்தியாவோ ப்ரம்மாண்டமானதேசம் அதையாளும் இங்கிலீஷ் காரர்களோ அன்னியர்கள். ஆகையால் செய்யும் காரியங்களை யெல்லாம் ரொம்பவும் தீர்க்காலோசனைபண்ணி ஜாக்கிரதையாகச் செய்வதுநலம்அங்கங்கேயுள்ளமுனிஸிபாலிட்டிகளும்லோகல்போர்டுகளும்அவரவர்களுக்கு இஷ்டமிருந்தால் கவர்ன் மெண்டாரின் உத்தரவைப்பெற்று மூலாதாரப் படிப்பைக்கட்டாயமாக்கலாமென்று ஏற்படுத்துவதே உசிதமான முறை. இதுவே ஸரியென்று இந்தியாவில் எல்லாரும் அங்கீகரிப்பதாக கனம் கோக்லே சொன்னார்.

மூன்றாவது, படிக்கும்படி கட்டாயப்படுத்துவதென்றால் எப்படி? சட்டப்படி நடக்காதவர்களை மேஸ்ட்ரிட்டார் அபராதம் போடலாமென்று கனம் கோக்லே மசோதாவில் ப்ரேரித்திருக்கிறார். இந்த விஷயத்தில் ஜனங்களை மாஜிஸ்ட்ரேட் முன்பு இழுப்பது ஸரியல்லவென்றும், மாஜிஸ்ட்ரேட்டுக்கு பதிலாக உத்யோகஸ்தர்களல்லாத ப்ரமுகர்களைக் கொண்டு விசாரணைசெய்ய வேண்டுமென்றும், கல்கத்தாவில் தினந்தோறும் ப்ரசுரமாகும் அமிர்த பஜார் பத்திரிகை என்னும் இங்கிலீஷ் ந்யூஸ் பேபரின் ஆசிரியராகிய பாபு மோதிலால்கோஷ் என்பவர் சொன்னாராம். இதுநல்ல யோஜனை யென்று ஒப்புக்கொண்டதோடு கவர்ன்மெண்டாரும் அங்கீகரிக்கத்தக்க யோஜனை யென்று கோக்லே சென்னார்.

நாலாவது, இவைகளுக் கெல்லாம் பணம் எங்கே யிருந்து கிடைக்கும்? மூலாதாரப் படிப்பு மசோதா அமலுக்குவரும் பட்சத்தில் தொண்ணூறுலட்சம்பையன்கள் படிக்கவேண்டியதாய் வருமாம். ஒரு பையனுக்கு படிப்புச்சொல்லிக்கொடுக்க இப்பொழுது ரூ4 ஆகிறது. ஐந்துரூபா மேனிக்கு வைத்துக்கொள்ளும் பட்சத்தில் 9 லட்சம் பையன்களுக்கு வருஷம் ஒன்றுக்கு $4\frac{1}{2}$ கோடி ரூபாயாகிறது. இதில் 3 கோடி ரூபாயை கவர்ன்மெண்டார் கொடுக்கவேண்டும். அந்தப்பணம்இப்பொழுது விதிக்கப்படும் இறக்குமதி வரிகளை 100-க்கு இரண்டுவீதம் ஜாஸ்தியாக்கி விட்டால் கிடைத்துவிடு மென்றார் கோக்லே. பாக்கி $1\frac{1}{2}$கோடி ரூபாயை அங்கங்கேயுள்ள முனிஸிபாலிட்டிகளும் லோகல் போர்டுகளும் கொடுக்கவேண்டும். இதுகூட கொடுக்கக்கூடாது; கவர்ன் மெண்டாரே முழுச் செலவையும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சிலர்சொல்வதானது கொஞ்சமேனும் யோஜனையில்லாத பேச்சென்று, கோக்லே சொல்லுகிறார்.

இந்த மசோதா விஷயமாகச் செய்யப்பட்டிருக்கும் சிலநல்ல யோஜனைகளென்னவென்றால்

(1) டிஸ்ட்ரிக்ட் போர்டுகளில் ஜனங்களால், எலெக்ட் செய்யப்பட்ட ப்ரதி நிதிகளில்மெஜாரடியார் ஒப்புக் கொண்டாலொழிய இந்தச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது.

(2) எங்கேயாவது இந்தச்சட்டப்படி பெண்களை கட்டாயமாகப் படிக்கச்செய்ய வேண்டுமானால் அங்கயேுள்ள ஸ்கூல் அட்டெண்டென்ஸ். கமிட்டியார் ஒப்புக் கொண்டாலொழிய மசோதாவை அமுலுக்குக் கொண்டுவரக் கூடாது.

(3) ஏற்கனவே சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது, இந்தச்சட்டத்தின்கீழ் குற்றமேற்படுத்துவதனால் ஜனங்களை மாஜிஸ்ட்ரேட் முன்பு இழுக்காமல் உத்யோகஸ்தர்களல்லாத ஒரு கமிட்டியாரைக் கொண்டு விசாரணை செய்யவேண்டும்.

(4) மாஸம் 10ரூபாய் வருமானமில்லாதவர்களுடைய குழைந்தைகளுக்கு சம்பளம்வாங்குகிறதில்லை என்பதுக்கு பதிலாக 25 ரூபாய்க்குக்குறைந்த வருமான முள்ளவர்களுடைய குழந்தைகளுக்குச் சம்பளம் வாங்குவதில்லையென்று சட்ட மேற்படவேண்டும். இந்த யோஜனைகள் தமக்கு ஸம்மதந்தானென்றும் அவைகளை சட்டத்தில் போட முயலுவதாகவும் கோக்லே சொன்னார்.

மேலே சொல்லிய யோசனைகளிலும் ஸமாதானங் களிலும் ஒன்று தவிர மற்றெல்லாம் அங்கீகரிக்கத் தக்கவைகளே. செலவுக்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்கும் விஷயத்தில் கனம் கோக்லே சொல்லும் ஸமாதானத்தை எல்லாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதைப்பற்றி இன்னொரு தடவை விசாரிப்போம்.

### His Highness the late Nizam.

காலஞ்சென்ற நிஜாம் மகா ராஜா.—ஹைதராபாகத்தின் அரசனாயிருந்த நிஜாம் மகா ராஜா அவர்கள் திடீரென்று இறந்து போனதைப் பற்றி ரொம்பவும் வருத்தப் படுகிறோம். இவர் இந்தியசிற்றரசுகளில்முதன்மையானவர். இங்கலீஷ் அரசாட்சியில் விசேஷ அன்புள்ளவர்; தாம் துருக்கராயிருந்தபோதிலும் தம்முடைய ராஜ்யத்தில் ஜாதி மதபேத மில்லாமல் எல்லாரையும் ஸமனாக பாவித்து எல்லாருக்கும் மந்திரி முதலான பெரிய உத்யோகங்களைக்கொடுத்து வந்தார். இவர் தென் ஆபிரிக்காவில் இந்தியர்களை அந்த கவர்ன்மெண்டார் ரொம்பவும் தொந்தரவு செய்கிறார்களென்று கேட்டவுடனே அங்குள்ள இந்தியர்கள் செலவுக்காக 2,500 ரூபாய் கொடுத்து அவர்களை தைரியப் படுத்தினார். இவர் இறந்து போனது தேசத்துக்கு ஒரு கைமுறிந்தால் போலாகும். காலஞ்சென்ற நிஜாமினுடைய மூத்த குமாரராகிய ஊஸ்மன் ஆலிகான் பட்டத்துக்கு வந்திருக்கிறார்.

### The Sind Plough.

ஸிந்துக்கலப்பை.—இந்தக்கலப் பையைப் பற்றி சென்னை விவஸாய டைரெக்டர் பின்வருமாறு எழுதுகிறார்:—

புன்செய் நிலஸ்வான்கள், முக்கியமாய் மானவாரிப்புன்செய் உள்ளவர்கள், பாலூர்விவஸாயப்பண்ணையில் ஸாதாரண எருதுகள் உழக்கூடிய ஸிந்துக்கலப்பையால் உழப்பட்ட பூமியில் ஸாகுபடியாயிருக்கும் கம்பையும், அக்கம் பக்கத்தில் நாட்டுக் கலப்பையால் உழப்பட்ட பூமியில் ஸாகுபடியாயிருக்கும் கம்பின் வளர்ச்சியையும் இப்போது பார்வை யிடுவதால்ஸிந்துக்கலப்பையின்குணாதிசயம் இன்னதென்று தானே வெளிப்படும். ஸர்க்கார்ப்பண்ணைக்கம்பு ரொம்ப காய்ச்சலினால் வளர்ச்சி குறைந்திருந்த போதிலும் செடிகள் செழித்துக்கருத்து, தடித்த கதிர்களுடன் இருக்கின்றன. அக்கம் பக்கத்திலோ செடிகள் அனேக இடங்களில்மாய்ந்துபோய்விட்டன. இறைக்கக்கூடிய இடங்களில் கம்புக்கு தண்ணீர் இறைக்கிறார்கள். இவ்வளவு அனுகூலத்தைத் தரக்கூடிய ஆழமாய் உழும் ரூ. 3-8-0 விலையுள்ள ஸிந்துக் கலப்பையை, நெல்லிக் குப்பத்துக் கடுத்த பாலூர் ஸர்க்கார் விவஸாயப் பண்ணை மானேஜருக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.



## CO-OPERATIVE CREDIT SOCIETIES.

BY

RAO BAHADUR V. K. RAMANUJA CHARIAR.

## ஐக்கிய நாணயச் சங்கங்கள்.

---

1. நிலவரும்படியைக்கொண்டே பிழைக்கிறவர்களுக்கு கடன் வாங்காமல் இருக்கமுடியாது. ஸாகுபடி ஆரம்பிக்கும்பொழுது விதை, உழவுமாடு, எரு, முதலியவைகளை வாங்கவும், பிறகு ஸர்க்கார் கிஸ்தி செலுத்தவும் பணம் வேண்டியது. அநேகர்களுக்கு கையில் பணமில்லாமல் முன்னால் கடன் வாங்கிப் பின்னால் அறுப்புகாலத்தில் நெல்லை விற்று கடனை திருப்பிக் கொடுக்கவேண்டியதாயிருக்கும். இந்தக்கடன்கள் வெகுவாய் சில்லரைக்கடன்களாகவே யிருக்கும். அதற்கு ஸாவுகார்கள் அதிக வட்டி கேட்பார்கள். பணமும் வேண்டியபொழுது கிடைக்காது. பணத்தைத் திரும்பக் கொடுக்கும்பொழுது வட்டியையும் முதலையும் ஒரே காலத்தில் கொடுக்கவேண்டியதாயிருக்கும். இவைகளெல்லாம் குடித்தனக்காரர்களுக்கு கஷ்டம் ஒவ்வொரு கிராமத்திலுமிருக்கிறவர்கள் பத்துப் பேர்களுக்குக் குறையாமல் ஒன்றாய்ச் சேர்ந்து ஸ்வல்ப முதலை வைத்துக்கொண்டு தாங்கள் வாங்கும் எல்லாப் பொது கடன்களுக்கும் தாங்கள் எல்லாரும் கூட்டாகவும் தனியாகவும் பொருப்பு எற்றுக்கொண்டு ஒரு சங்கமாக எற்பட்டால் பணம் லகுவாய்க் கிடைக்கலாம். சங்கத்தில் சேர்ந்திருக்கும் எல்லாரும், வாங்கும் கடனுக்கு பாத்தியப்படுகிறபடியால் வெளியிலிருந்து வேண்டிய பணம் அகப்படும். வட்டியும் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு $7\frac{1}{2}$-க்கு மேற்படாமலிருக்கும். இப்படி வெளியில் வாங்கும் கடனையும் முதலையும் கொண்டு சங்கமானது தங்களுக்குள் வேண்டியவர்களுக்கு வேண்டும் பொழுது கடன் கொடுத்து அவர்களுடைய ஸௌகர்யப்படி சிறுகச்சிறுகத் திருப்பி வாங்கி கொள்ளலாம். இப்படி கிராமத்தார் ஒன்றுசேர்ந்து இருந்தால் தங்களுக்கு வேண்டிய ஸாமான்களையும் பட்டினங்களுக்குப்போய் பெரிய வியாபாரிகளிடம் மொத்தமாய் வாங்கி, தாங்கள் பிரித்து எடுத்துக்கொள்ளலாம்.

2. நமக்கு அநேக நன்மைகள் செய்திருக்கிற கவர்ன்மெண்டார் கிராமத்தார் சேர்ந்துவெளியில் கடன் வாங்கவும், தங்களுக்குள் கடனைக் கொடுத்து வாங்கவும், 1904-ம் வருஷத்தில் ஒரு சட்டம் செய்து அதை அநுஷ்டானத்துக்குக்கொண்டுவர ரெஜிஸ்ட்ரார் என்கிற கலெக்டர் ஹோதாவுள்ள ஒரு பெரிய உத்தியோகஸ்தரையும் நியமித்திருக்கிறார்கள். சங்கத்துக்காவது சங்கத்தாலேயாவது எழுதிக்கொடுக்கப்படும் எந்த தஸ்தவேஜிக்கும் ஸ்டாம்பு கிடையாது. ரெஜிஸ்டர் பீஸும் கிடையாது. சங்கத்தின் லாபத்தின்பேரில் இன்கம்டாக்ஸ் கொடுக்கவேண்டியதுமில்லை. ஸர்க்கார் உத்தியோகஸ்தர் சங்கத்தின் கணக்குகளை வருஷத்துக்கொருதடவை பரிசோதிக்கிறார்.

3. சங்கத்தின் முதல் இவ்வளவு பங்கு என்று ஏற்படவேண்டியது. பங்கு ஒன்றுக்கு ரூ. 1-முதல் ரூ. 5-வரையில் அந்தந்த கிராமத்தின் ஸௌகர்யப்படி கொடுக்கவேண்டியதாய் ஏற்பாடு செய்துகொள்ளலாம். பங்கு ஒன்றுக்கு ரூ. 1-ஆக இருந்தால் ஏழைஜனங்கள் சேருவதற்கு ஸௌகர்யம். ஒருவரும் பத்துப்பங்குகளுக்குமேல் எடுத்துக்கொள்ளக் கூடாது. பங்கு எடுத்துக்கொள்ளும்போது, பங்கின் தொகையையும் பங்கு ஒன்றுக்கு 4-அணா வீதம் பிரவேசகட்டணமும் செலுத்த வேண்டியது.

4. சங்கத்துக்கு தவணையில் கடன் கொடுக்கிறவர்களுக்குரூபாய் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ஒருபைஸா வீதம் வட்டி கொடுக்கப்படும். பெருந்தொகைகள் கொடுக்கிறவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 100-க்கு 10-அணுவுக்கு மேல் வட்டி கொடுக்கக்கூடாது.

5. மெம்பர்கள் சங்கத்திலிருந்து பங்கு ஒன்றுக்கு ரூ. 20 வரையில் கடன் வாங்கலாம். ஒருவருக்கும் 500ரூ-க்குமேல் கடன் கொடுக்கக்கூடாது. சங்கத்தில் சேராதவர்களுக்கும் கடன் கொடுக்கிறதில்லை. கடன் வாங்குகிறவர் சங்கத்துக்கு தவணைக்கடன் கொடுத்திருந்தால் அதின்பேரிலும், ஸ்தாவரஸொத்தின் பேரில் முதல் பந்தகத்தின்பேரிலும், தம்முடையவும் ஒன்று அல்லது இரண்டு மெம்பருடையவும் கையெழுத்தின்பேரிலும், கடன் வாங்கிக்கொள்ளலாம். கடனுக்குவட்டி மாதம் ஒன்றுக்கு ரூ 1-க்கு $1\frac{1}{2}$ பைசா வீதம் அநேக சங்கங்களில் வாங்குகிறார்கள்.

6. கடன் வாங்கினவர் முழுத்தொகையை கெடுவுக்கு முன்னாலேயே கொடுத்துவிடலாம். ஸௌகர்யப்படி சிறுகச்சிறுகவும் கொடுக்கலாம். சில்லரையாகக்கொடுத்தால் கொடுக்கும் தொகை முழுரூபாயாக இருக்கவேண்டும். கொடுக்கும் தொகைக்கு எதிர்வட்டி தள்ளிக் கொடுக்கப்படும்.

7. சங்கத்தில் மெம்பரைச் சேர்க்கவும், பக்கத்தில் கடன் வாங்கவும், கடன் வேண்டிய மெம்பர்களுக்கு கடன் கொடுக்கவும், கடன் கொடுத்த தொகையை வசூல்செய்யவும், இன்னும் சங்கத்தின் காரியங்களைப் பார்க்கவும் ஐந்துபேர்களடங்கிய ஒரு பஞ்சாயித்தை மெம்பர்கள் நியமிக்கவேண்டியது.

8. மேற்கண்ட விஷயங்களை அந்தந்த கிராமத்துக்குத் தகுந்தபடி மாற்றிக்கொள்ளலாம்.

9. சங்கத்தால் வாங்கும் எந்தக் கடனுக்கும் அதில் சேர்ந்திருக்கும் எல்லாரும் கூட்டாகவும் தனியாகவும் பாத்தியபடுகிறதென்று முதல் பாராவில் சொல்லியிருக்கிறது. அதாவது வெளியில்கொடுத்திருக்கும் கடன் வசூலாகாமல் நஷ்டம் வந்தால் அதை ஈடு செய்ய சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் பங்குவீதப்படி கடமைப்பட்டவர்கள். இதனால் நஷ்டம்வந்து தங்கள் ஸொத்துக்குக் கேடு நேரிடுமென்று ஒருவரும் பயப்பட வேண்டியதில்லை. முதலாவது, சங்கத்தின் வேலைகளை நடத்துவோர் அதில் மெம்பராயிருப்பவர்களாலேயே தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். ஆகையால், அவர்கள் திறமையுள்ளவர்களாயிருப்பதுமன்றி, யோக்யர்களாகவே இருப்பார்கள். இரண்டாவது, சங்கங்களை மேல்விசாரணை செய்யும் ரெஜிஸ்ட்ரார் அவர்களும் அவருடன் வேலைசெய்யும் டெப்டிகலெக்டரும் ஒவ்வொரு சங்கத்திற்கும் இவ்வளவுதான் கடன் வாங்கலாமென்று ஒரு எல்லை ஏற்படுத்துகிறார்கள். இன்ஸ்பெக்டரைக்கொண்டு அடிக்கடி சங்கங்களைப் பரிசோதிக்கிறார்கள். சங்கங்கள் வேலையை ஒழுங்காய் செய்யாவிட்டால் அவர்கள் உடனே நோட்டீஸ் கொடுத்து எச்சரிக்கை செய்கிறார்கள். இதையும் கேட்காமல் நஷ்டம் வரும்படி எந்தச்சங்கமாவது நடந்தால் அதைக்கலைத்துவிட உத்தரவு செய்கிறார்கள். இப்போது நம்முடைய கவர்னர் அதிகாரத்துக்கு உட்பட்ட இடங்களில் சுமார் அறுநூறு (600) நாணயச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் எதிலாவது இப்படி எச்சரிக்கை செய்யவாவது சங்கத்தைக் கலைத்துவிடவாவது காரணம் இதுவரையில் நேரிடவில்லை.

10. ஒவ்வொரு சங்கத்திலும் வருஷத்தில் கிடைக்கும் வட்டி முதலான வரும்படியிலிருந்து செலவைக்கழித்து மிகுந்ததை 'ரிஸர்வ் பண்டு' அதாவது கையை காப்புதனமாக வைத்து ரெஜிஸ்ட்ரார் எந்த இடத்தில் போடச்சொல்லுகிறாரோ அங்கே வட்டிக்குப் போட்டு வைக்கவேண்டியது. இது சங்கத்தில் சேர்ந்தவர்கள் ஒருக்காலும் பாகம்செய்து கொள்ளத்தக்கதல்ல. ரிஸர்வ்பண்டு எவ்வளவு விருத்தியாகிறதோ அவ்வளவு வெளியில் சங்கத்துக்கு நாணயமுண்டாகும்.

11. சங்கத்தின் வேலைகளை இனமாகவே எல்லாரும் பார்க்கவேண்டியது. நம்முடைய தேசத்தில் இப்பொழுது பொதுக்காரியங்களை நன்றாய்ப் பார்ப்பதில்லை. அஜாக்கிரதையால் நஷ்டம் வந்தால் எல்லாருக்கும் அது கெடுதலானதால் ஒவ்வொருவரும் சங்கத்தின் வேலையை தன் வேலையைபோல் பார்க்கவேண்டும். மெம்பர்கள் சேரவேண்டிய மீட்டிங்குகளுக்கு என்ன சொந்தவேலையிருந்தாலும் அதை விட்டு மீட்டிங்குக்கு வரவேண்டியது. பஞ்சாயித்தாரை நியமிக்கும் காலத்தில் தாக்ஷண்யமில்லாமல் வேலைத்திறமையாலும் நாணயத்தாலும் பொது நன்மையை கவனிக்கிற தன்மையாலும் சிறந்தவர்களைத் தெரிந்தெடுக்க வேண்டியது.

12. முதல் சங்கம் ஏற்படுங்காலத்தில் தகுந்தவர்களாய் 10 பேர்கள் மெம்பர்களிருந்தால் போதும். பிறகு மனுசெய்துகொள்ளுகிறவர்களை பஞ்சாயித்தார்கள் சேர்த்துக் கொள்ளவேண்டியது. அப்படிச் செய்யுங் காலத்தில் சேருகிறவர்கள் நல்ல நடவடிக்கையுள்ளவர்களென்றும நாணயமுள்ளவர்களென்றும் நன்றாய்த் தெரிந்தாலல்லாமல் அவர்களைச் சேர்க்கக்கூடாது இப்படி நிர்ப்பந்தம் செய்வதினால் கிராமத்தார்களில் நல்ல நடவடிக்கை இல்லாதவர்கள் நல்ல நடவடிக்கையுள்ளவர்களாயும் நாணயமில்லாதவர்கள் நாணயமுள்ளவர்களாயும் ஆகிறார்கள். இது எப்படி என்றால், ஒருவன் பிரதிதினம் கள்ளுக் கடைக்குப் போகிறவன், அவனைச் சேர்ப்பதில்லையென்று சொன்னால், செலவுக்குப்பணம் வேண்டியிருக்குமாதலால் கள்ளுக்கடைக்குப் போகிறதில்லை என்று உறுதியாய்ச்சொல்லி மறுபடியும் கேட்டால் அவனைக் கொஞ்சகாலம் பார்த்துப் பிறகு சேர்த்துக்கொள்ளலாம். இந்த வழியாய் அவன் குடியை விட்டுவிடுவான். இப்படி கிராம பாங்கி ஏற்பட்ட இடங்களில், குடி, சில்லரைத் திருட்டுகள் இவைகள் குறைந்திருப்பதாகத் தெரிகிறது. கோர்ட்டுக்குப் போவதும்குறைந்திருக்கிறது

13. சிலர் சொல்லுகிறார்கள்—இவ்விதச் சங்கங்கள் மற்ற இடங்களில் ஏற்படலாம், நம்முடைய கிராமங்களில் கக்ஷி ப்ரதிகக்ஷிகளிருப்பதால் கிராம பாங்குகள் ப்ரயோஜனப்படாவென்கிறார்கள். முதலில் எல்லாரையும் சேர்க்கவேண்டியதில்லை. சேர்ந்தவர்கள் போதும். பாங்கினால் இருக்கும்லாபம்தெரிந்தவுடன் மற்றவர்களும் வந்து சேருவார்கள். கடைசியில் கக்ஷி ப்ரதிகக்ஷியும் எடுபட்டுப் போய்விடும்.—வி. கே. ராமானுஜாச்சாரி.



# INDUSTRIAL PROGRESS
## MR. MONTAGU'S SPEECH.
# கைத்தொழில் அபிவிருத்தி.
## மிஸ்டர் மான்டேகூவின் பேச்சு.

இங்கிலாந்திலுள்ள ஜனங்களின் ப்ரதிநிதிகள் அடங்கிய பார்லிமெண்டுக்கு இந்தியமந்திரி வருஷா வருஷம் இந்தியாவின்வரவு செலவைப்பற்றி ஒரு கணக்குத்தயார் செய்து ஒப்புவிக்கவேண்டும். இந்த வழக்கப்படி போன வருஷக் கணக்கை ஒப்புவிக்கும்போது இந்திய மந்திரியின் உதவியாகிய மான்டேகூ என்பவர் இந்தியாவின் தற்கால நிலைமையைப்பற்றி ஒரு அருமையான ப்ரஸங்கம்செய்தார். அதில் இந்தியாவின் கைத்தொழில்களைப்பற்றிய விஷயங்களை இங்கேசுருக்கமாகச்சொல்லுகிறோம்:

இந்தியாவானது $17\frac{1}{2}$ லட்சம் சதுரமையில் விஸ்தீரணமுள்ளது. போன மார்ச்சு மாதத்தில் எடுத்த ஸென்ஸஸ் அதாவது ஜனகணிதப்பிரகாரம் இந்தியா மொத்தத்திற்கு 31 கோடி 50 லட்சம் ஜனங்கள் இருப்பதாகத் தெரியவருகிறது. பத்துவருஷத்திற்குமுன்னால் அதாவது 1901 வருஷத்தில் 29 கோடி 49 லட்சம் ஜனங்கள் இருந்தார்கள். சில தகவல்களை தள்ளிப்பார்த்தால், சென்றபத்துவருஷத்துக்குள் நூற்றுக்கு 6·4 வீதம் ஜனங்கள் அதிகமாகியிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள மொத்த 31கோடி 50லட்சம்ஜனங்களில் 24கோடி 40 லட்சம் ஜனங்கள் ப்ரிடிஷ் இந்தியா அதாவது நேராகவே இங்கிலீஷ்காரர் ஆளுகைக்குள்ள இந்தியாவில் இருக்கிறார்கள். மற்ற 7 கோடி 10லட்சம் ஜனங்கள் இந்தியாவின் சிற்றரசு நாடுகளில் இருப்பவர்கள்.

முன்காலத்தில் இந்தியாவில் விவஸாயமே முக்கியத்தொழிலாய் இருந்தது. சாப்பாட்டுக்கு

வேண்டிய தானியங்களையே விளைவித்துவந்தார்கள். ஒருவருக்கொருவர் ஏதாவது கொடுக்கல் வாங்கல் செய்யவேண்டியிருந்தால் பண்டங்களையேகொடுத்து வாங்கிவந்தார்கள். இப்படிச் செய்வதும் கிராமத்துக்குள்ளேயேதான். பரம்பரையாய் அங்கங்கே முன்வஸீப் முதலிய உத்யோகஸ்தர்களே விவாதங்களைத் தீர்த்தும், கலகம் இல்லாமல்பார்த்தும், வந்தார்கள். இவைகளெல்லாம் கேட்பதற்கு ஸந்தோஷமாகவே இருக்கின்றன. ஆனால் ஒரு விஷயம். மழை பெய்யாமல் போய்விட்டால் முன்காலத்தில் சாப்பிடச் சோறில்லாமல் ஜனங்கள் மந்தை மந்தையாய் மாண்டுபோவார்கள். மேல் சொல்லிய விஷயங்களெல்லாம் இப்போது மாறிவிட்டன. 20வருஷத்திற்குள் எவ்வளவோ மைல் ரெயில்போட்டாகி விட்டது. 50-வருஷகாலமாக எவ்வளவோ கப்பிரோட்டுகள் ஏற்பட்டுவிட்டன. இவைகளோடு தந்தியும் தபாலும்ஏற்பட்டு ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாதிருந்த ஊர்களுக்குள் போக்கு வரத்து ஏற்பட்டுவிட்டது. பணப்புழக்கம்உண்டாகி,போட்டியேற்பட்டு, இந்தியாவில் ஒருமூலையில் உள்ளவர்கள் இன்னொரு மூலையிலுள்ளவர்களோடும் இதர தேசத்தார்களோடும் வியாபாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஆகையால் இப்போது தானியம் பயிர்செய்யும் விவஸாயி அதைதன் சாப்பாட்டுக்கு விளைவிக்காமல் உலகத்தில்வேறு எங்கேயாவது விற்று லாபம் ஸம்பாதிக்கவேசெய்யலாம். தற்காலத்தில் பஞ்சம் என்றால் கையில் பணம் இல்லாக்கொடுமையாகுமே யொழிய சாப்பிடதானியம் கிடைக்காதகொடுமை என்றுசொல்லக்கூடாது. முன் காலத்தைப்போல்இந்தநாளில் சாப்பிடுவதற்கு தானியம் கிடைக்காமல் சாகுகிறவர்கள்சிலரே. தவிர அநேக கைதொழில்களும் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாமல் ஏற்பட்டுவருகின்றன. சில நிபுணர்களுக்குமட்டும் உட்பட்டு பாக்டெரிகளில் அநேககூலிகள் வேலைசெய்து வருகிறார்கள். ஒருகாரியத்தை அநேகம்பேர் சேர்ந்து குழப்பாமல் அவரவர்வேலையைப்பகிர்ந்து கொண்டுமொத்தத்தில் காரியத்தை சுலபமாகவும் லாபகரமாகவும் நடத்திவருகிறார்கள். அநேகதொழில்களில் கையால்வேலைசெய்வது போய் யந்திரங்கள் ஏற்பட்டு விட்டன. வியாபாரங்களுக்கு வைக்கும் முதல்களோ பெருந்தொகைகளாய் விட்டன. இவைகளையெல்லாம் பார்க்கும்போது இந்தியாவில் ஒருபெரியதொழில் புரட்சி ஆகிவருவதுபோல் தோன்றுகிறது.

இதினால் அநேகதீங்குகள் உண்டாகலாம். ஆனால் வாஸ்தவத்தில் தொழில் புரட்சி உண்டாயிருக்கும் பட்சத்தில் அதை நம்மால் தடுக்க முடியாது. கங்கைக்கு அணைபோடுவது ஸாத்தியமா? நாம் செய்யக்கூடிய தெல்லாம் தொழில் பெருத்த தேசங்களின் அநுபோகத்தைக் கொண்டு இங்கேதொழில் புரட்சியால் உண்டாகும் தீங்குகளை ஒருவாறாக சாந்தப் படுத்தலாமே ஒழியவேறு ஒன்றுமில்லை.

இந்தியாவில் தொழில் புரட்சி உண்டாயிருக்கிற தென்பதற்கு பின்வரும் விஷயங்கள் அத்தாட்சியாகும்.

இருபது வருஷங்களுக்கு முன்பு இந்தியாவில் பருத்தி நெசவுசாலைகள் 126 தான்இருந்தன. அவைகளில் 120,000 ஆட்கள்வேலைசெய்துவந்தார்கள். இப்பொழுதோ 232 நெசவுசாலைகள் இருக்கின்றன. அவைகளில்236,000 கூலியாட்கள் வேலைசெய்துவருகிறார்கள். சணலைநூற்றுக்கோணி முதலியவைகள் செய்யும் நெசவுசாலைகள் இரண்டு மடங்காகியிருக்கின்றன. இந்தத்தொழிலில் முன்பு 61,000 பேர் தான் இருந்தார்கள். இப்பொழுது 192,000 பேர்கள் இருக்கிறார்கள். எல்லாங்கூடி மொத்தமாய் 2,500 கைத்தொழிற் சாலைகள் இருக்கின்றன. இவைகளில் பத்து லக்ஷம் ஜனங்கள் தொழில்செய்துவருகிறார்கள். தேயிலைப்பக்குவஞ்செய்யும்தொழிலில்600,000பேர்கள்வேலை செய்கிறார்கள். வருஷம் 25 கோடிராத்தல் தேயிலை ஏற்றுமதியாகிறது. இதன்மதிப்பு 12 கோடிரூபாயாகிறது. தாதுவர்க்கங்களில் முக்கியமாய்வெட்டி யெடுக்கப்படுவது நிலக்கரி. சென்ற 8 வருஷகாலமாக வெட்டி யெடுக்கப்பட்ட நிலக்கரி முன்னைக்காட்டிலும் இரண்டு மடங்காகியிருக்கிறது. இப்பொழுது வெட்டி எடுக்கப்படுவது 120 லட்சம் டன் ஆகிறது. இந்தத்தொழிலில் 130,000 பேர்கள் வேலை செய்துவருகிறார்கள். பெட்ரோலியம் என்று சொல்லப்படும் கெரொஸின் எண்ணெயில் 177,000,000 காலன்எண்ணெய் எடுக்கப்படுகிறது. இது பத்துவருஷத்துக்கு முன்னிருந்ததைவிட நான்குமடங்கு அதிகம். மாங்கனீஸ் என்னும் உலோகம் உபாயமாக வெட்டியெடுக்கப்படுகிறது. எஃகுசெய்யும் கைத்தொழிற் சாலை தற்காலம் இந்தியாவில் இல்லை. டாட்டாவால் ஏற்படுத்தப்பட்ட இரும்புச் சாலை பூர்த்தியாகிக்கொண்டு வருகிறது. அதுமுடிந்ததும் எஃகும் செய்யப்படும்.

இப்பொழுது 70,000,000 பவுன் மூலதனமுள்ள 21,56 கம்பேனிகள் இருக்கின்றன. இந்த முதலில் 40,000,000 பவுன் வசூலாகியிருக்கிறது. சென்ற பத்துவருஷத்துக்குள் இந்தக்கம்பேனிகள் முன்னிருந்ததைவிட இரண்டு மடங்காய் விட்டன. வெளிப் பிரதேசங்களில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கம்பேனிகளில் அநேகம் இந்தியாவில் தேயிலை ஸாகுபடி செய்வதிலும், சணல்பயிரிடுவதிலும், நெசவுசாலைகள் நடத்துவதிலும், நெல்குத்தும் யந்திரம்ஸ்தாபிப்பதிலும், வேலைநடத்தி வருகின்றன. ரெயில்வே கம்பேனிகள் நீங்கலாக, மேற்சொன்ன கம்பேனிகள், கடன் பத்திரங்களைத் தள்ளி, 540 லக்ஷம் ரூபாய் மூலதனம் பங்குவீதமாகப் போட்டிருக்கின்றன. பத்து வருஷகாலத்தில் பாங்கிகளின் மூலதனம் 30 கோடிரூபாயிலிருந்து $64\frac{1}{2}$-கோடிரூபாயாகிவிட்டது.

இந்தியாவின் கைத்தொழில் ஊக்கத்துக்கு இன்னும் வேறு ரூஜு வேண்டுமானால், இதோ ஒன்றிருக்கிறது. இந்தியாவின் ஏற்றுமதியில் 5-ல் 4பங்கு விளைபொருள்களும் இயற்கைப் பொருள்களாகவும், இறக்குமதி செய்யப்படும் ஸாமான்களில் 5-ல் 4 பங்குசெயற்கைப் பொருள்களாகவும் இருக்கின்றன. ஆனால் நாளடைவில் இவை கொஞ்சம் மாறிவருகின்றன. ஸாதாரணமாய் விளை பொருள்களையும் இயற்கைப் பொருள்களையும் கொண்டே தொழிற்சாலைகளில் செயற்கைப் பொருள்கள் செய்யப்படுகின்றன. ஆகவே ஒருதேசத்தில் தொழில் அபிவிருத்தி யாகிறதா இல்லையா என்று கண்டுபிடிக்க வேண்டுமானால் அந்த தேசத்தில்விளைபொருள்களும் இயற்கைப்பொருள்களும் தொழில்களில் உபயோகப் படுவதற்காக அதிகமாக இறக்குமதி யாகின்றனவா, அல்லதுசெயற்கைப் பொருள்களின்ஏற்றுமதி அதிகமாயிருக்கிறதா என்பதைப் பார்த்தால் தெரியும். இப்படிப் பார்த்தால் இதர தேசங்களிலிருந்து, இந்தியாவுக்கு அதிகமாக விளைபொருள்களும் இயற்கைப்பொருள்களும் தொழில்களில் உபயோகிப்ப தற்காக வரவழைக்கப் படுகின்றன. தவிர, முன்னே ஒருரூபாய்க்கு விளைபொருள்களும், இயற்கைப்பொருள்களும், இன்னொரு ரூபாய்க்கு செயற்கைப் பொருள்களும், ஏற்றுமதி செய்தால் இப்பொழுது முன்சொன்னவைகளின் ஏற்றுமதி இரண்டு ரூபாயாகியிருக்க செயற்கைப்பொருள்களின் ஏற்றுமதி மூன்று ரூபாயாகியிருக்கிறது. இவைகளெல்லாம் இந்

தியாவில் உண்டாயிருக்கும் கைத்தொழில் ஊக்கத்துக்கு அத்தாட்சிகள்.

தற்காலம் இந்தியாவுக்குத் தேவையென்னவென்றால் நூதனமாகக் கையாளப்பட்டுவரும் முறைகளும் சாஸ்திரஞானமும் கைத்தொழில்களிற் செலுத்தப்படவேண்டியதே. கல்வித் தேர்ச்சியுள்ள மாணாக்கர்கள், ஏற்கனவே போட்டியதிகமாயிருக்கும் வக்கீல் உத்தியோகம், ஸர்க்கார்வேலை, இவைகளிற்புகாமல் கைத்தொழில் அபிவிருத்திக்கு ஸாதகமான முறைகளைக்கற்றுக் கையாளுவது உத்தமம். நிபுணர்களாயுள்ளவர்களே இத்தகைய முயற்சிக்குத்தகுதி. வியாபாரம் நடத்தக் கூடியவர்களும், வர்த்தக வித்யாப்யாஸமுள்ளவர்களும், முதலாளிகளும், வேண்டும். இவர்கள்தான் இந்தியாவைக் கடைத்தேறச் செய்யக்கூடும்.

---

## CASTOR CULTIVATION.

BY

SOMASUNDARA DESIKAR.

## ஆமணக்கு ஸாகுபடி.

---

எண்ணெய்கொடுக்கும்விதைகள் இத்தேசத்திலிருந்து அந்நியதேசங்களுக்கு அதிகமாக ஏற்றுமதியாகி தேசத்துக்கு அதிக கஷ்டமுண்டாவதாக நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். இந்த வஸ்துக்களால் நமக்கு நேரே நஷ்டமுண்டாவதுமன்றி, நமது நஞ்சை புஞ்சை நிலங்களுக்கும் எருமுதலியன குன்றி, நிலங்களின் சத்தும் குறைகின்றது. இப்படிப்பட்ட வஸ்துக்களில் ஆமணக்குக்கொட்டையுமொன்றாகையால் இதைப்பயிரிடும்விதமும், அதனால் உண்டாகக்கூடிய பிரயோஜனங்களும், அதை விட்டு மற்றதானியங்களை விதைப்பதால் உண்டாகும் நஷ்டங்களையும் சீர்தூக்கி ஆராய்ச்சி செய்வோம்.

ஆமணக்கை ஸாதாரணமான நஞ்சை அல்லதுதாழ்ந்தபூமிகளில்போடாமல், கேழ்வரகு, சோளம்முதலியனபோடக்கூடியமேட்டுப்புஞ்சை நிலங்களில் போடுவது வழக்கம். இதற்கு அதிக மணற்பாங்காயிராமல் சற்று செவ்வல் கலந்தமண், வண்டல் மண், உள்ள நிலங்களே திறமானவை. எப்பொழுதும் கேழ்வரகுபிடிக்கக்கூடிய புஞ்சை இதற்கு உற்றதுதான். அம்மண்ணில் சாண் அல்லது முக்காலடிக்கு ஒவ்வொரு கொட்டு மண்வெட்டியால்போட்டு இரண்டு விதைக்கு மேற்படாமல் போடலாம். போட்டு சுமார் ஒரு சாண கண்ணாக வளரும் வரையில் தண்ணீர் ஊற்றிவரவேண்டும். இந்தக்காலத்துக்குள், அதாவது போட்டு பதினைந்து தினத்துக்குள், களைக்கொட்டு கொண்டு ஒருகளை கொத்திவிடவேண்டும். இதற்குள் மழைபெய்தாலும்ஸரி,பெய்யாவிட்டாலும்ஸரி இன்னொரு பத்துதினம் ஜலம்விட்டுவரலாம். ஆனால் அதிகஜலம் விடக்கூடாது. இப்படி விதைபோட்ட ஒருமாதத்திற்குள் இரண்டாவதுகளை மண்வெட்டியால் கொத்திவிடவேண்டும். இதற்குள் செடியும் 3-அடிக்கு வந்துவிடும். இதன்கீழ் இனி துவரை விதைகளை ஊன்றலாம். ஆமணக்குக்கொட்டை ஒருசாணுக்கொன்றே போட்டிருப்பதாலும், செடியும் வளர்ந்துவிட்டதாலும் துவரையுண்டாவதற்கு யாதொரு கஷ்டமும் இல்லை. அன்றியும் துவரைக்கு விடும் ஜலத்தைக்கொண்டு இந்தக் கொட்டைச்செடியும் தண்ணீர்பெற்று விருத்தியாக யிடமாகிறது. கொட்டையை ஊன்றும்போதேபத்தியாக லயன் லயனாக ஊன்றியிருக்கவேண்டும்.

புஞ்சைப்பலன்களை ஸாதாரணமாக ஆடிமாதத்தில் (ஜூலை௴) பயிர்செய்ய ஆரம்பிப்பதுவழக்கம். அதற்குள் இரண்டொரு மழைபெய்து பூமிபதமாகவிருக்குமாகையால், அப்



பொழுது புஞ்சை ஸ்தலங்கள் உழுவதற்கும், மண்வெட்டியால் கொத்துவதற்கும், தகுதியாயிருக்கும். ஆடிமாசத்தில் நட்டகொட்டை புரட்டாசி முதற்பாகத்தில் பலன்தர ஆரம்பித்துவிடும். புரட்டாசி ஐப்பிசி இந்தஇரண்டு மாதங்களுக்குள் கிடைக்கும் பலன்தான் பெரிது. பிறகு மழை அதிகமாகப்பெய்து பூமி குளிர்ந்து போவதால் செடிகெட்டுக் காய ஆரம்பித்துவிடுகிறது. இந்த இரண்டுமாதத்தில் 100 குழி அல்லது 33 ஸெண்டு நிலத்தில் பட்டினம் படி 96 முதல் 144 வரையில் கிடைக்கிறது. பயிர்பிடியாத பட்சத்திலுங்கூட பக்கத்தில் போட்டவை 96 படிக்குக் குறையவில்லை. இதைத் தவிர இதனூடே போட்டதுவரை நன்றாய் வளர்ந்து பூச்சி முதலியவையில்லாவிடின் 36 படி முதல் 72 படி வரையில் கொடுக்கிறது. ஒரு நாளும் துவரையொன்றுமில்லாமல் போகவுமில்லை, போகவுமாட்டாது. இவையிரண்டும் (கொட்டையும், துவரையும்) பிடுங்கிய அடிக்கட்டை முதலியவைகள் வீட்டுக்கு விறகுக்குப் பிரயோஜனப்படும்.

இனி, இதை விட்டு இதற்குபதிலாக, எங்கும் பயிரிடப்படும், கேழ்வரகு சோளத்தைப் பற்றி கவனிப்போம். கேழ்வரகுக்கு முதலில் உழுது விதைவிட்டு நாற்றைப்பிடுங்கி நட்டு தண்ணீர் இறைத்துக்கொண்டே யிருக்கவேண்டும். சோளத்துக்கு உழுதுவிட்டு, கொட்டையைப்போல் இரண்டிரண்டுவிதையை ஊன்றி ஜலம் குடத்தால் விட்டு வரவேண்டி யிருக்கிறது. கேழ்வரகு, மாரியின்றி, வரண்டு போமானால் ஜலம் இறைத்தே தீரவேண்டும். இப்படித் தண்ணீர் இறைத்துப்பாய்ச்சுவதால் பூமி இறுகிக் கெட்டிப்பட்டு கெட்டுப்போகிறது. அடுத்த வருஷம் வேறு ஏதாவது புஞ்சைப்பலன் போடவேண்டியிருப்பதோடு பலனும் அற்பமாய்ப் போய்விடுகிறது. நான் சொல்லுவது சிலருக்கு நகைப்புக்கு இடமாயிருக்கலாம். ஆழ்ந்து யோசித்தால் உண்மைதானென்பது நிச்சயமாகும். பூமியானது, அதிக உஷ்ணத்தால் வெடித்து, சூரிய கிரணங்கள் உட்சென்று, மறுபடி புது வெள்ளம் வந்துகொள்வதற்கு வெங்காருடைப்பு என்று சொல்வது வழக்கம். இந்த பூமிகளே அதிக பலன்கொடுக்கின்றன. ஸமீபத்தில் லண்டன் மாநகரத்தில் கூடிய ப்ரிடிஷ் அஸோஸியேஷனில்பூமிகள்வெடிப்பதுவிஷேஷமென்றும், அதனால்பூமிக்குப்பிரயோஜனமிருப்பதாய் புதிதாக கண்டுபிடித்து விட்டதாக ஒரு நிபுணர்சொல்ல, சென்னை ஹிந்துப்பத்திரிகை இந்தியருக்கு இவ்விஷயம் வெகுநாளையனுபோகமென்று எழுதியிருந்தது அநேகருக்கு ஞாபகமிருக்கலாம் அதுபோல புஞ்சையும் சூரியகிரணங்களைப்பெற இடமின்றி ஈரனைப்பால் கெட்டிப்பட்டுப்போகிறது.

சோளம் போடும்போதும் பிறகுதண்ணீர் இறைக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஆனால் இதன் இடைவெளிகளில் துவரை ஊன்றலாம். ஊன்றினால் துவரைப்பலனும் ஜாஸ்தியின்றி சோளப்பயிரும் குன்றுகிறது. ஆகையால் அதை "கட்டோடு"பிரயோஜனமில்லையென்று விட்டு விடவேண்டியதுதான். 150-குழியில் சோளமும், துவரையும் போட, சோளம் 120 படியும் துவரை 36 படியுந்தான் கிடைத்தது. ஆனால் துவரை இலாறும் சோளத்தட்டையும் ஏதேஷ்டந்தான்.

கேழ்வரகு 100 குழி அல்லது 33 ஸெண்டுக்கு 120 படிமுதல் 192 படிவரையில் கிடைக்கிறது.

இவைகளை கிரயப்படுத்தினால் கேழ்வரகு 24 படிக்கு ரூ.2வீதம் 192 படிக்கு—16-0-0.

முத்துக்கொட்டை ஸராஸரி 5கலம்அல்லது 120 படிக்கு 48 படிகொண்ட மூட்டை 1.க்கு

| | |
|---|---|
| ரூ.8ஆக | 20-0-0 |
| துவரையில் குறைந்தது ரூ. | 4 8-0 |
| ஆக ரூ. | 24-8-0 |

குறைந்ததுலாபம் 8 8-0 கிடைக்கிறது. அதிக வேலையுமில்லை. காவலுமில்லை. (சென்னையில் கொட்டைமுத்து மூட்டை 9-8-0 யாக விற்கிறது.)

இப்படி பலவிதங்களிலும் பிரயோஜனப்படும் வஸ்துவான கொட்டையை நாம் விருத்தி செய்யவேண்டியது அவசியமல்லவா?

சோமஸுந்தர தேசிகர்.

---

## LAC.

## அரக்கு.

அரக்கு என்பது ஒரு சிறிய பூச்சியின் மலத்திலிருந்து உண்டாகும் ஒரு பொருள். இது ஒரு பிசின். இந்தப் பூச்சி சாதாரண மூட்டுப் பூச்சியைப்போல் இருக்கும். இந்த ஜாதிப் பூச்சிகளுக்கெல்லாம் யானையின் தும்பிக்கை போல ஒரு அவயவம் உண்டு. இந்த அவயவத்தால் இந்தப் பூச்சிகள் பச்சை மரங்களின் பட்டைகளைத் தொளைத்து அவைகளிலுள்ள பாலை உறிஞ்சும். ஆகையால் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த பூச்சிகளெல்லாம் மரம், செடி, கொடி, பயிர், முதலியவைகளுக்கு நாசத்தை உண்டாக்கும். இருந்த போதிலும் இவைகளால் ரொம்ப உபயோகம் உண்டு. சில தேசங்களில் இந்தப் பூச்சிகளின் மலத்திலிருந்து சிவப்புச் சாயம் ஒன்று செய்யப்படுகிறது. சீன தேசத்தில் அவைகளின் மலத்திலிருந்து மெழுகுவர்த்தி செய்யப்படுகிறது. நாம் முதல் முதல் இந்த அரக்குப் பூச்சிகளுடைய பிறப்பு, வளர்ப்பு முதலிய விஷயங்களைப்பற்றி கொஞ்சம் கவனிப்போம். ஒரு தோப்பில் இந்தப் பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருக்கும் மரம் ஒன்றை எடுத்துக்கொள்வோம். அதற்குப் பக்கத்தில் இந்தப் பூச்சி பிடிக்காத நல்ல மரம் ஒன்று இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். ஆடி ஆவணி மாசங்களின் முதலில் இந்தப் பூச்சிகள் புழுக்களாக இருக்கும். அவைகள் மரங்களின் கிளைகளில் கூட்டங்கூட்டமாய் ஊர்ந்துகொண்டுபோகும் அவைகள் கோழி முட்டை வடிவமாய் ஆரஞ்சுப்பழ நிறமுள்ளவைகள். ஒரு அங்குலத்தில் 40-ல் ஒரு பாக நீளந்தான் இருக்கும். பார்வைக்கு சாதாரண மூட்டுப்பூச்சியைப் போல் இருக்கும். தலை, உடம்பு முதலியவைகள் தனித்தனியாய்ப் பிரிந்து கண்ணுக்குத் தெரியாது. எல்லாம் ஒரே ரூபமாய்த்தோன்றும். அவைகளுக்கு பலமுள்ள ஆறு கால்களும், இரண்டு சிறியகண்களும், ஒன்றாய்ச் சேரும் இரண்டு கொம்புகளும் உண்டு. அவைகளுக்குப் பின்புறத்தில் வால்போல இரண்டு வெண்மையான நீண்ட மயிர்கள் உண்டு. இப்பொழுது இவைகளில் இது ஆண், இது பெண் என்று வெறுங்கண்ணால் பூதக்கண்ணாடியின் உதவியில்லாமல் சொல்ல முடியாது. இந்தமாதிரி 10, 15 நாளுக்கு இந்தப் பூச்சிகள் கிளைகளில் கூட்டங்கூட்டமாய்த் தொத்திக்கொண்டிருக்கும். இந்தப் பூச்சிகளினால் கிளைகளெல்லாம் சிவந்த நிறமாய்க் காணப்படும். இவைகளுக்கு பறப்பதற்கு இறக்கைகள் இல்லாததினால் மரத்தை விட்டு வேறு மரத்துக்கு தானாகப் போக முடியாது. மரத்தின் பாலையெல்லாம் அநேகமாய் இவைகள் உறிஞ்சிவிடுவதால் வேறு ஆகாரம் இல்லாமல்தானே கொஞ்சநாட்களில் செத்துப்போகின்றன. ஆனால் சில பூச்சிகள் காற்றால் அடிக்கப்பட்டு வேறு மரத்துக்குப்போய் விடுகின்றன. பட்சி, தேனீ, அணில், குரங்கு போன்ற பிராணிகளின்மேல் தொத்திக்கொண்டு சிலவேறு மரம் அடைகின்றன.



நாம் இப்பொழுது சில பூச்சிகள் மேற்சொன்ன காரணத்தால் அடுத்த மரத்துக்கு வந்து விட்டதாக வைத்துக்கொள்ளுவோம். முதல் முதல் மரத்தின் பட்டைகளெல்லாம் தொளைசெய்யப்படுகின்றன. பூச்சிகள் மரத்தின் பாலை உறிஞ்சுகின்றன. கொஞ்சநாளைக்குப் பிறகு அவைகளின் உடம்பில் ஒருவகைப் பிசின் உண்டாய் மஞ்சள் நிறமடைகின்றன. இன்னும் கொஞ்ச நாள்களுக்கு அப்புறம் ஆண், பெண் பூச்சிகள் நன்றாய் வளர்ச்சி யடைகின்றன. ஆகவே, இவைகள் மரத்தில் வந்து கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து இரண்டொரு மாஸத்துக்குள் அதாவது ஐப்பசி, கார்த்திகை மாஸங்களுக்குள்ளாக மரக்கிளைகளிலெல்லாம் இந்தப் பிசின் நிரம்பிவிடுகிறது. இப்பொழுது பூச்சிகளெல்லாம் கண்ணுக்குத் தெரியாமல் பிசினில் முழுவதும் மறைந்து இருக்கும். மேலெல்லாம் பஞ்சைப் போல வெண்மையான மயிர்களால் மூடப்பட்டிருக்கும். இதை நாம் உடைத்துப்பார்த்தால் உள்ளே பலதுவாரங்கள் காணப்படும். இந்த துவாரங்களில் சில உருண்டை வடிவமாயும் சில கோழிமுட்டை வடிவமாயும் இருக்கும். உருண்டை வடிவமானவையெல்லாம் பெரிதாயும் கோழிமுட்டை வடிவமானவையெல்லாம் சின்னதாயுமிருக்கும். உருண்டைத்துவாரங்கள் ரொம்ப அதிகமாகவும் கோழிமுட்டைத் துவாரங்கள் ரொம்ப சொல்பமாகவும் இருக்கும். உருண்டைத் துவாரங்களில் பெண்பூச்சிகளும் கோழிமுட்டைத் துவாரங்களில் ஆண் பூச்சிகளும் இருக்கக்காணலாம்.

பின்னால் கார்த்திகைமாச முடிவுக்குள் ஆண்பூச்சிகளெல்லாம் துவாரங்களை விட்டு வெளிக்கிளம்பி பெண்பூச்சிகளிருக்கும் துவாரங்களில் பிரவேசிக்கும். இப்படி ஒவ்வொரு ஆண்பூச்சியும் பெண்பூச்சிகளிருக்கும் பல துவாரங்களில் பிரவேசிக்கின்றன. பிறகு ஆண் பூச்சிகளெல்லாம் செத்துப்போய்விடுகின்றன. பெண்பூச்சிகளெல்லாம் கருத்தரிக்கின்றன. ஐயாயிரம்பெண்பூச்சிகளுக்கு ஒரு ஆண்பூச்சி வீதம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆண்பூச்சிகள் இறந்தபிறகு பெண்பூச்சிகள் இடம் விட்டு நகராமல் பிசினோடு பிசினாய் அவயவங்கள் தனித்தனியாய்த் தெரியாமல் எல்லாம் ஒன்றாய்ப் பழையபடி புழு ரூபம் அடைகின்றன. இப்பொழுது பெண்பூச்சிகளின் வயிறுகளிலெல்லாம் ரத்தம்போல சிவந்த நிறமான ஜலபதார்த்தம் நிரம்பி இருக்கும். இதுதான் அரக்குச்சாயம். இவ்விதமாகக் கருத்தரித்து மூன்று, மூன்றரை மாசம் வரைக்கும் பெண்பூச்சிகள் வளர்ந்துகொண்டேயிருக்கும். இதுவரைக்கும் பெண்பூச்சிகள் துதிக்கைகளினால் மரத்தின்பாலை உறிஞ்சுகின்றன. இதன் பிறகு இவைகள் ஆகாரமில்லாமல் ஒரு மாசகாலம் தூங்குகின்றன. இனிமேல் பழையபடி மார்கழி தை மாசங்களில் அரக்குப் புழுக்கள் உற்பத்தியாய் விடுகின்றன.

பெரும்பாலும் இந்தியாவில் வருஷத்துக்கு இரண்டு தரம் அரக்கு விளைகிறது. அநேகமாய் இந்த அரக்கு காடுகளுக்கு ஸமீபத்திலிருக்கும் கிராமத்தாரால் சேகரம் செய்யப்படுகிறது. ஆனால் அவர்கள் சிரத்தை இல்லாமல் வேலை செய்கிறார்கள். மறுபடியும் அரக்கு விளையவேண்டும் என்னும் கருத்து இல்லாமல் தற்கால லாபத்தையே உத்தேசித்து மரத்தின் பட்டைகளையெல்லாம் முழுவதும் உரித்து அரக்குப் பூச்சி மறுபடியும் வராமல் செய்துவிடுகிறார்கள். இந்தியாவின் சில பாகங்களிலேதான் பாரஸ்டு இலாகாக்காரர் மேல்பார்வைசெய்து வருவதைப் பார்க்

கிலும் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு சாஸ்திரீயப்படி அரக்கு விளைவிக்கிறார்கள். இந்த பாகங்களில் பாரஸ்டு இலாகாக்காரர்கள் கண்டிராக்டின்பேரில் கிராமத்தார்களுக்கு மரங்களை விட்டிருக்கிறார்கள். ஆனால் மரத்திலுள்ள அரக்கில்முக்கால் பாகத்தை எடுத்துக்கொண்டு கால்பாகத்தை மரத்திலேயே விட்டுவிடும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள். இதுவுந் தவிர அந்த கிராமத்தார் வருஷாவருஷம் புதுமரங்களிலும் இந்த் அரக்குப் பூச்சி பரவும்படி செய்யவேண்டும். அரக்கு நன்றாய் விளைந்திருக்கும் சில மரக்கிளைகளை, ஆண்பூச்சிகள் துவாரத்திலிருந்து வெளிக்கிளம்புவதற்கு முந்தி, வெட்டி, அவைகளை நீளமான புல்கட்டுகளில் மெதுவாக சுற்றி, பசுமையாயும் பால் அதிகமாயும் இருக்கப்பட்ட நல்ல மரத்தில் உயர்ந்த கொம்பிலேகட்டி விடுகிறார்கள். அரக்குப் புழுக்கள் அந்தப் புல்லின் வழியாக மரக்கிளைகளிலெல்லாம் பரவி சீக்கிரம் விருத்தியாய் விடுகின்றன.

ஆனால் அரக்குப் பூச்சிகளை விளைவிப்பது இவ்வளவு சுளுவாயிருந்தாலும் அவைகளுக்கு அநேக விரோதிகள் உண்டு. புதிய தித்திப்பான அரக்கையும், சின்ன அரக்குப் புழுக்களையும் பட்சிகளும் குரங்குகளும் தின்றுவிடுகின்றன. பலவிதமான எறும்புகளும் அவைகளைத்தின்று நாசஞ்செய்கின்றன. இதுவுந் தவிர ஒருவகை கம்பளிப் பூச்சிகளும் அரக்கின்பேரில் முட்டையிட்டு அவைகளை நிர்மூலஞ்செய்கின்றன. சில ஸமயங்களில் ஒருவித காளான் அரக்கின்மேல் முளைத்து உள்ளே இருக்கும் பூச்சிகளைக் கொன்றுவிடுகிறது. இவைகளையெல்லாந் தவிர காட்டில் நெருப்புப்பற்றி இந்தப் பூச்சிகள் வசிக்கும் மரங்களை அடியோடே எரித்துவிடுகிறது.

அநேகமாய் வெயில் காலத்தில் விளையும் அரக்கைக் காட்டிலும் குளிர்காலத்தில் விளைவது ரொம்ப அதிகமாயும் உயர்ந்ததாயும் இருக்கும். ஸாதாரணமாய் சிறு அரக்குப் புழுக்கள் கூட்டங் கூட்டமாய் வருவதற்கு முன்னமே கிளைகளை ஒடித்து அவைகளிலிருந்து அரக்கைப் பெயர்த்து எடுத்துக் கொள்வது வழக்கம். ஆனால் இப்பொழுதுதான் அரக்கை எடுக்கவேண்டுமோ அல்லது அரக்குப் புழுக்கள் கூட்டமாய் உற்பத்தியான பின்னாலே எடுக்கவேண்டுமோ என்பது இன்னும் நன்றாய் அறியப்படவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு அரக்கில் சாயம் அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அரக்கின் விலை குறைந்து போகிறது. ஆகையால் அரக்குப் புழுக்கள் அதிகமாய் உற்பத்தியான பிறகு அரக்கை எடுத்தால் அது விலையுயர்ந்ததாக இருக்குமென்று சிலர் ஊகிக்கிறார்கள். மிர்ஜாபூர், கல்கத்தா முதலான இடங்களுக்குச் சமீபத்திலேயே வியாபாரத்துக்கு வரும் அரக்கில் பெரும் பாகம் யந்திர உதவியில்லாமல் மனிதனாலேயே செய்யப்பட்டு வருகிறது. ஆனால் யந்திரசாலையிலோ, அரக்கு இருக்கும்படியான மரக்கிளைகளை யந்திரத்தால் ஒடித்து தூளாக்குகிறார்கள். இந்தத் தூளிலிருந்து மரத்துண்டுகளையெல்லாம் முதலில் பிரித்து விடுகிறார்கள். பின்னால் அவலரக்கு என்று சொல்லப்படும் நல்ல அரக்கு ஒருபக்கமும் தூசியும் மண்ணும் கலந்த அரக்குப்பொடியை ஒருபக்கமும் பிரித்து விடுகிறார்கள். இந்த அவலரக்கை ஜலத்தில் முதலில் நன்றாய்க் கழுவுகிறார்கள். இப்படி கழுவிக் கொண்டிருக்கும் பொழுதே யந்திரத்தினால் அதைப் பொடி செய்கிறார்கள். இதனால் அரக்கின் சாயமெல்லாம் ஜலத்தோடு சேர்ந்துவிடுகி



றது. சுயமான நல்ல அரக்கு தனியாய் நின்றுவிடுகிறது. ரஸாயன சாஸ்திர முறைப்படி சில மர உப்புகளையும் கூடச் சேர்த்து இந்த அரக்கை 24 மணி நேரம் கழுவுகிறார்கள். இதன் பிறகு காற்றும் வெயிலும் பட்டு உலர்ந்துவரும்படி அதை நிலத்தில் உலர வைக்கிறார்கள். இதன் மேல் இந்த அரக்கோடு மஞ்சள் பாஷாணத்தையாவது அல்லது குங்கிலியத்தையாவது அல்லது இந்த இரண்டையுமாவது சேர்க்கிறார்கள். விலையுயர்ந்த அரக்கு செய்வதற்கே இவைகளைச் சேர்ப்பது வழக்கம். இவைகளைச் சேர்ப்பதனால் கண்ணாடி போல் வெளிச்சம் ஊடுருவிப் போகும்படியிருக்கும் அரக்கானது வெளிச்சம் போகமுடியாதபடி மந்தமாய் ஆகும். மேலும் அரக்கு ரொம்ப சீக்கிரம் உருகிப் போகாதபடி உஷ்ணத்தைக் கொஞ்சம் தாங்கும்படி இவைகள் செய்கின்றன. நூறு பங்கு அரக்குக்கு 3 பங்கு குங்கிலியம் சேர்க்கப்படுகிறது.

மஞ்சள் பாஷாணம், குங்கிலியம் இவைகளை நன்றாய்ப் பொடி செய்து இந்த கழுவின அரக்கோடு சேர்த்து அகலக் கட்டையாய் நீண்ட துணிப்பைகளில் போடுகிறார்கள். துணிப்பைகள் 10, 12 அடி நீளமாயும் 7, 8 அங்குல சுற்றளவுள்ளனவாயும் இருக்கவேண்டும். இந்த மாதிரி ஒரு நுனியில் ஒருவனும் மற்றொரு நுனியில் இன்னொருவனும் பிடித்துக்கொண்டு நடுவில் இடம் விட்டு இரண்டு வரிசையாய்ப் பரப்பியிருக்கும் நெருப்புக்கு மேலாய் சூடுபடும்படி காட்டி ஒரு நுனியை ஒரு பக்கமாகவும் மற்றொருநுனியை அதற்கு எதிர்த்தபக்கமாகவும் மெதுவாகத் திருகி சுற்றுவார்கள். உஷ்ணத்தினால் அரக்கானது உருகிவிடுகிறது. திருகிச் சுற்றுவதனாலே இரண்டு வரிசை நெருப்புக்கும் மத்தியில் துணிப்பையிலிருந்து பிதுங்கிக் கொண்டு நிலத்தில் தயாராக வைத்திருக்கும் வெந்நீர் தொட்டியிலாவது உஷ்ணமான பலகைக் கற்களின்பேரிலாவது விழுந்துவிடுகிறது. நன்றாய் உருகாத அரக்கை மறுபடியும் வேறு பையில் போட்டு மேலே சொன்ன விதமாக உருக்குகிறார்கள். நன்றாய் உருகிய அரக்கை, பாகுபோல மிருதுவாயிருக்கும்போதே வெந்நீர்த்தொட்டியிலிருந்து எடுத்து இலேசான தகடாய் நீளமாக இழுத்து அதிலிருக்கும் மரத்துண்டு, குப்பை, தூசு முதலானவைகளை எடுத்துவிடுகிறார்கள். பின்பு சுத்தத்துக்கும் நிறத்துக்கும் தக்கபடி உயர்ந்த சரக்கை மட்டச் சரக்கிலிருந்து பிரித்து விடுகிறார்கள்.

அரக்கின் ஒவ்வொருபாகமும் பிரயோசனப்படுகிறது. விவசாயம், வியாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், சில்பம் முதலிய எல்லாத்தொழில்களிலும் அரக்கு உபயோகப்பட்டு வருகிறது. தட்டுமுட்டு ஸாமான்கள், விளையாட்டு ஸாமான்கள், பெட்டிகள் முதலானவைகளுக்கு வர்ணம் பூசுவதற்கும் வெண்கலம் பித்தளை முதலிய உலோகங்களில் சித்திரவேலை செய்வதற்கும் தங்கம் வெள்ளிகளால் செய்யப்பட்ட போல் நகைகள், ஸாமான்களுக்கு உள்ளே கொடுக்கவும் அரக்கு பிரயோசனப்படுகிறது. கையில் ஸ்திரீகள் அணிந்துகொள்ளும் கங்கணம் முழுவதும் அரக்காலேயே செய்யப்பட்டது. மட்பாண்டங்களுக்கு சித்திரவேலை செய்வதற்கும் பஞ்சாப் முதலிய மாகாணங்களில் அரக்கு உபயோகமாகிறது. ஐரோப்பாக் கண்டத்திலும் பலவிதத்தில் அரக்கு உபயோகப்படுகிறது. முத்திரை போடுவதற்கு உபயோகமாகும் அரக்கும் வார்னிஷும் இதிலிருந்தே செய்யப்படுகின்றன.

# AN INDIAN MAGISTRATE'S EXPERIENCES.

## இந்திய மேஜிஸ்ட்ரேட்டின் அனுபோகம்.

இந்தியா தேசத்தில் கலெக்டராயிருந்த ஒரு ஆங்கிலேயர் பின் வருமாறு ஒரு சீமைப் பத்திரிகையில் எழுதுகிறார்:—

இந்தியாவில் மாஜிஸ்ட்ரேட்டின் வேலை பெரும்பாலும் சந்தோஷத்திற்கு ஆஸ்பதமானதாயில்லை. ஏனெனில் வழக்கில் வரப்பட்ட சாக்ஷிகள் புத்தியீனர்களா யிருக்கிறார்கள். மேலும் வக்கீல்களின் உபத்திரவம் ரொம்ப ஜாஸ்தியாயிருக்கிறது. ஆனபடியால் மாஜிஸ்ட்ரேட் ஸாஹிப் தன் கடைசி கையெழுத்தை ரொம்ப நிம்மதியுடன் போட்டுவிட்டு தன் பங்களாவுக்குத் திரும்புவது ஆச்சரியமல்ல.

நான் ஜில்லா கலெக்டரா யிருந்தபொழுது கிரிமினல் விசாரணைகளை யெல்லாம் நான் நேராய் விசாரிப்பது வழக்கம். காயமென்று சொன்னால் காயத்தைப் பார்க்காமல் தீர்ப்பு சொல்வது என்வழக்கமல்ல இப்படி யிருக்க ஓரு நாள் ஒருவன் அவன் மகனை யாரோ காயமுண்டாகும்படி அடித்ததாக பிராது கொண்டு வந்தான். உடனே நான் "உன் மகனை எனக்கருகில் கொண்டுவந்து காயத்தைக் காண்பி" என்று சொன்னேன். அவன் அப்படியே மகனை எனக்கு முன்பாகக் கொணர்ந்து காயத்தைக் கண்டு பிடிக்க தலை முழுமையும் தேடினான். பிறகு தன்தலையைச் சொரிந்துகொண்டு பிள்ளையின் உடம்பில் காயத்தைத்தேட ஆரம்பித்தான். 'ஐயா, என்ன ஆச்சரியம்! காயம் ஒரு நிமிஷத்திற்கு முன் இங்கே யிருந்தது. அது எப்படிப் போயிற்றோ தெரியவில்லை' என்று அவன் சொன்னான். அதைக் கேட்டு கோர்ட்டு வக்கீல்கள், முன்ஷி, சேவகர்கள் எல்லாரும் நகைத்தார்கள். பின்னும் அம்மனிதன் பிள்ளையின் உடுப்பை வாங்கி காயத்தைத்தேட ஆரம்பித்தபோது என் சிரிப்பை யடக்கிக்கொண்டு நீ கோர்ட்டைவிட்டு உடனே வெளியில் போகாமல்போனால் உன்னை பொய்ப்பிராது கொண்டுவந்ததாக சார்ஜ் செய்வேன்' என்று நான் சொன்னதின்பேரில் மகனை யிட்டுக்கொண்டு வாதி போய்விட்டான்.

2. ஒருநாள் ஒரு வக்கீல் தன் கக்ஷிக்காரன் தலைமயிரை அவன் விரோதி அடியோடு பிடுங்கிப் போட்டதாக பிராதுகொண்டு வந்தார். அதற்கு அத்தாட்சியாக ஒருகடித மூட்டையை யவிழ்த்து அதிலிருந்த மயிர்க் கத்தையை என் மேஜையின்பேரில் வைத்தார். 'இது மிகவும் அபாயமான காரியமா யிருக்கிறது. உன் தலையில் ரொம்ப காயமிருக்கவேண்டும். தலையைக் கொண்டுவா பார்ப்போம்' என்று வாதியைக் கூப்பிட்டு தலையைப் பரிசோதித்தபோது மயிரில்லை, ஆனால் கொஞ்சங்கூட காயமேயில்லை. 'இது நம்புகிறதற்கு இடமில்லாமலிருக்கிறது. காயமுண்டாகாமல் தலையிலிருந்த மயிரை யெல்லாம் எப்படி பிடுங்கக் கூடும்' என்று கேட்டேன். அதற்குவக்கீல் 'இல்லை, ஐயா, காயம் படாமல் மயிரைப் பிடுங்கக் கூடும்' என்று சொன்னார். அப்படியானால் 'உம்முடைய தலையைக்கொண்டு வாரும். பரீக்ஷை பார்ப்போம்' என்று நான் சொன்னபொழுது வக்கீல் மிகவும் பயமடைந்தார். வழக்கும் தள்ளப் பட்டது.

3. ஒரு மனிதன் கொலைக்கேஸ் ஒன்று கொண்டுவந்தான். அதில் தவறிப்போய் கொல்லப்பட்டவனுடைய பெயருக்குப் பதிலாக



தன்னுடைய பெயரைப் போட்டுவிட்டான். 'முதலில் உன்னை யாரைக்கொண்டாவது கொல்லச்சொல்" என்றுசொன்னேன். அதற்குவாதி 'எஜமானுடைய உத்திரவு விளங்கவில்லை' என்றான். 'இந்தப் பிராதில் நீ கொல்லப்பட்டதா யிருக்கிறது. ஆகையால் நீ கொல்லப்பட்டாலொழிய இதை அங்கீகாரம்செய்யமாட்டேன்' என்று சொல்லிவிட்டு ஒரு சேவகனைக் கூப்பிட்டு 'இவனைக் கொல்வி' என்றேன். சேவகன் என் கருத்தை யறிந்து பல்லைக் காட்டிக்கொண்டு அவனை பிராது எழுதுகிறவனிடமழைத்துக் கொண்டுபோய் விட்டான். அங்கே பிராதில் சரியான பெயர் எழுதப்பட்டது.

4. ஒரு சமயம், ஒரு சாக்ஷியைப் பார்த்து எதிர் கக்ஷி வக்கீல் 'உனக்கு ஐவேஜு ஒன்றுமில்லை. ஆகையால் நீ சொல்வதில் அதிக நம்பிக்கை வைக்கிறதற்கில்லை' என்று சொன்னார். அதற்கு அச்சாக்ஷி 'ஐயா, எனக்கு வருஷம் ரூ 2000. வருமானம் வருகிறது' என்றான். அதை நான் குறித்துக்கொண்டு உடனே ஸம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அம்மனிதனுக்கு வருமான வரி போடும்படி தெரிவித்தேன். சில நாள் கழித்து வருமான வரிமேல் விசாரணைப்பிராதுகள் வந்தன. அவைகளுடன் மேல் குறித்தவனுடைய பிராதும் வந்தது. உடனே இவன் ஸம்பந்தப்பட்ட முதல் வழக்கின் ரிகார்டுகளை வரவழைத்து 'இதோ பார், நீ ஸத்தியமாய் உனக்கு வருஷம் 2000 ரூ. வருமானம் வருகிறதாகச் சொல்லி யிருக்கிறாய், என்று அவன் முன் கொடுத்த வாக்குமூலத்தை எடுத்துக்காட்டினேன். அவனுக்கு பதில் சொல்ல முடியவில்லை. அப்பீல் தள்ளப்பட்டது.

5. ஒருவன் தனக்கு கீழ் கோர்ட்டார் அநியாயமாய் அபராதம் விதித்ததாக என்னிடம் அப்பீல் கொண்டுவந்தான். நான் கீழ் கோர்ட் விசாரணையை படித்துப்பார்த்து அதனால் விதிக்கப்பட்ட அபராதம் தப்பென்றும் அவன் அப்பீல் செய்தது சரிதானென்றும் தீர்மானித்துக்கொண்டேன். பிறகு சேவகனைவிட்டு பிராது செய்தவனை கூப்பிடும்படி சொன்னேன். உடனே வக்கீலொருவர் கைகள் நிரம்ப சட்ட புஸ்தகங்களுடன் பிரவேசித்தார். அவருக்குப் பின்னால் வாதிவந்தான். வக்கீல் சட்ட புஸ்தகங்களை என் மேஜையின் பேரில் பரப்பி, சொக்காயையும் மூக்குக்கண்ணாடியையும் சரியா யிழுத்துவிட்டுக்கொண்டு, பிறகு கொஞ்சம் கனைத்து, கோர்ட்டாரைப்பார்த்துப் பேச ஆரம்பித்தார். உடனே எளிய குடித்தனக்காரனாகிய வாதியை நோக்கி 'உன்னுடைய அப்பீல் ஒத்துக் கொள்ளப்பட்டது' என்று சொன்னேன். அம்மனிதன் ஆச்சரியமடைந்து என்ன பதில் சொல்கிறதென்று தெரியாமல் வக்கீலைப் பார்த்தான். 'மகாப் பிரபுவே, நான் சொல்லவேண்டியதை தாங்கள் கேட்கக் கூட இல்லையே' என்று வக்கீல் சொன்னார். 'அப்பீல் ஒத்துக் கொள்ளப்பட்டது' என்று நான்மறுபடியும்சொல்லி 'அடுத்த கேஸ்' என்றவுடன் வக்கீல் வேறொன்றும் செய்ய முடியாதவராய் தன் புஸ்தகங்களை வாரிக் கட்டிக்கொண்டு கோர்ட்டுக்கு வெளியே போனார். குடித்தனக் காரனோ பிரமை யடைந்தவனாய் எனக்கு ஒரு சலாம் செய்துவிட்டுப் போய்விட்டான். இங்கிலீஷ் கோர்ட்டில் நியாயம் கிடைக்கவேண்டுமானால் எல்லா வழக்குகளுக்கும் வக்கீல்வைக்க வேண்டியது அவசியம் என்று அவன் தன் சிநேகிதர்களுக்குச் சொல்லுவானென்று நம்புகிறேன்.

6. வருமான வரிமேல் விசாரணைப் பிராதுகளை நினைக்குங்கால், ஒரு வேடிக்கையான அப்பீல் என் ஞாபகத்திற்கு வருகிறது.

ஒருவனுடைய பிராதை விசாரிக்கும் பொழுது வாதி மிகவும் கந்தலான துணிகளைக் கட்டிக்கொண்டு என்னெதிரில் நின்றான். அவன் வாஸ்தவமாய் ஏழை யென்று நம்பி அவனுக்கு வருமான வரி கூடாதென்று தள்ளிவிட்டேன். சில நாட்கழித்து ஜெயில்தார் என்னும் ஒரு கௌரவமான வேலைக்கு அநேகர் மனுக் கொடுத்திருந்தார்கள். இவர்களுள் ஷை வருமான வரி தள்ளப்பட்டவனும் ஒருவன். ஆனால் இப்பொழுது அவன் மிகவும் கம்பீரமான உடைகளைத் தரித்திருந்தான். அப்படியிருந்தும் அவன், வருமானவரி மேல் விசாரணையில் சம்பந்தப்பட்ட கந்தை வஸ்திரம் தரித்தவனென்று நான் அறிந்துகொண்டேன். பிறகு ஒவ்வொருவனுடைய பாத்தியதையையும் விசாரித்துக்கொண்டு இவனை விசாரிக்க ஆரம்பித்தேன். பிரார்த்திக்கப்பட்ட வேலைக்கு பணமிருக்கிறவன் தான் லாயக்கானபடியால் 'உன்னுடைய ஆஸ்தியென்ன' என்று அவனைக்கேட்டேன் உடனே அவன் தனக்கிருக்கப்பட்ட ஸ்தாவரஜங்கம சொத்துக்களை விவரிக்கத் தொடங்கினான். அவன் முடித்தவுடன் அவனுடைய வருமான வரி மேல்விசாரணைப்பிராதையும் அப்பொழுது அவன் கட்டிக்கொண்டிருந்த கந்தைவஸ்திரத்தையும் அவனுக்கு ஞாபகப்படுத்தினேன். மற்ற மனுதாரர்கள் சந்தோஷப்பட ஷை ஆஸாமி பூனையைப்போல் கோர்ட்டைவிட்டு நீங்கினான்.

---

## THE DUTIES OF REGISTERING OFFICERS.

## ரெஜிஸ்ட்ரேஷன் இலாகா உத்யோகஸ்தர்களின் அலுவல்கள்.

போன ஜூன் ஜூலை மாஸத்து ஸஞ்சிகைகளில் ரெஜிஸ்ட்ரேஷன் இலாகாவின் ஆரம்பம், நோக்கம், அமைப்பு இவைகளைப் பற்றிச் சொன்னோம். இப்போது இந்த இலாகா உத்யோகஸ்தர்களுடைய அலுவல்களை விசாரிப்போம். ரெஜிஸ்ட்ரார் ஜெனராலுக்கும் அவருடைய உதவியான ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ் இன்ஸ்பெக்டருக்கும் தஸ்தாவேஜு ரிஜிஸ்தர் செய்யும் அலுவல் இல்லை. ஆபீஸ்களை மேற்பார்வை பார்ப்பதும், ஆபீஸர்களின்மீது வரும் குற்ற வழக்குகளை விசாரிப்பதுவுமே அவர்களுடைய பிரதான வேலைகளாம். டிபார்ட்மெண்டு விஷயமாக சட்டத்துக்கு ஒத்திருக்கும் விதி விலக்குகளை ஏற்படுத்த அதிகாரம் இன்ஸ்பெக்டர்ஜெனராலுக்குமட்டுந்தானுண்டு. ஜனன மரண விஷயமான பிரிவுக்கும் அவர் ரெஜிஸ்ட்ரார் ஜெனரல் என்னும் தலைமை ஸ்தானத்தை வகித்து வருகிறார். அவருடைய ஆபீஸில், அவருக்கு உதவியாக 'பெர்ஸனல் அஸிஸ்டாண்டு" என்ற ஒரு உத்தியோகஸ்தர் இருக்கின்றனர். டிஸ்டிரிக்டு ரிஜிஸ்டரார்களுக்கு ரிஜிஸ்டர் செய்யும் அலுவலும், அவர்களுக்குக் கீழடங்கிய ஸப் ரெஜிஸ்டரார்களுடைய ஆபீஸ்களை மேற் பார்வை பார்க்கும் அலுவலுமுண்டு. இந்த ஜில்லா ரெஜிஸ்ட்ரார்களுடைய ஆபீஸ்களில் ஜாயிண்டு ஸப் ரெஜிஸ்ட்ரார்கள் நியமிக்கப்பட்டு, ஜில்லா ரெஜிஸ்ட்ரார்களுக்கு உதவி செய்கின்றனர். ஸப் ரெஜிஸ்ட்ரார்களுடைய பிரதான அலுவல், ரெஜிஸ்டரேஷனுக்கு வரும் தஸ்தாவேஜுகளைப் பார்வையிட்டுப் பதிவுசெய்து கொண்டு திரும்பக் கொடுத்துவிடுதலாம். இந்தப் பிரதான தொழிலைச்சுற்றி யெழுந்த சில்லரை வேலைகள் பல வுள்ளன.

அவசியம் ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டிய தஸ்தவேஜுகள் இன்னின்னவையென்றும் இஷ்டமிருந்தால் மட்டும் ரெஜிஸ்டர் செய்துகொள்ளும்படியான தஸ்தவேஜுகள் இன்னின்னவையென்றும் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டு 17, 18வது பிரிவுகளில் கூறப்பட்டுள்ளது. ஸ்தாவர சொத்து, அதாவது பூமி, வீடு, முதலியனவையைப்பற்றி வரும் தான



சாஸனங்கள் எல்லாம் கட்டாயமாய் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டும். நூறு ரூபாய் முதல் மேற்பட்ட தொகை பெறுமான சொத்துக்களைப்பற்றி வரும் கிரயம், அடமானம், ஒத்தி, முதலிய ஸகல தஸ்தவேஜுகளும் அவசியம் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டும். குத்தகைச் சீட்டுகளில் ஐந்து வருஷத்துக்கு மேற்பட்ட கெடுவு காலத்தை யுடையவற்றையும், வருஷவாரி குத்தகைத் தொகை ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்டவற்றையும், அவசியம் ரெஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டும். புத்திரஸ்வீகாரம் செய்து கொள்வதற்காக எழுதிக்கொடுக்கப்படும் அதிகாரப் பத்திரங்களும் அவசியம் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டும். உயில் தஸ்தவேஜுகளும் மற்றைய சில்லரை சாஸனங்களும் இஷ்டமிருந்தால் மட்டும் ரெஜிஸ்டர் செய்து கொள்ளக்கூடியவை. ரெஜிஸட்ரேஷன் ஆக்டினால் கட்டாயமாக ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று மேலே கூறப்பட்ட தஸ்தவேஜுகளைத் தவிர, வேறு சில சாஸனங்களும் வேறு ஆக்டுகளினால் கட்டாயமாகவே ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டியவையாக விருக்கின்றன. நூறு ரூபாய்க்குக் குறைந்த கிரயம், அடமானம், ஒத்தி, வருஷக் குத்தகைச்சீட்டு, பரிவர்த்தனை முதலிய தஸ்தவேஜுகள், டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டினால் கட்டாயம் ரெஜிஸ்டிர் செய்யப்படவேண்டியவையாம். சொத்து பரிபாலன விஷயமாக ஏற்படும் உயிலில்லாத தஸ்தவேஜுகள் இந்தியன் ட்ரஸ்டு ஆக்டினால் அவசியம் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டியன வாகின்றன. கம்பெனிகள் ஏற்படும் விஷயமும் அவசியம் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென இந்தியன் கம்பெனி ஆக்டு விதிக்கின்றது. இவ்வாறு ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டிய தஸ்தவேஜுகளில் விதி விலக்குகள் ஏற்பட்டிருந்தாலும், இப்போதையகால தர்மத்தை அனுசரித்து, எல்லாவிதமான தஸ்தாவேஜுகளும் ரெஜிஸ்டர் செய்யப்படுகின்றன.

உயில் தஸ்தவேஜைத் தவிர, மற்றைய தஸ்தவேஜுகள் எல்லாம் எழுதிக்கொடுக்கப்பட்ட தேதி முதற்கொண்டு நான்கு மாத காலத்துக்குள் ரெஜிஸ்டர் செய்து கொள்ளப்படவேண்டும். அப்படி ரெஜிஸ்டர் செய்து கொள்வதற்குத் தடையாக எதிர்பாராத இடையூறுவது அவசரமாவது நேரிட்டால் இன்னொரு நான்குமாதத்துக்குள் ரெஜிஸ்டர் செய்துகொள்ளலாம். ஆனால் இப்படிச் செய்துகொள்ளும் ரெஜிஸ்ட்ரேஷனுக்கு அபராத கட்டணம் செலுத்தவேண்டும்.

ஒவ்வொரு தஸ்தாவேஜும் இன்னின்ன ஆபீஸில் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்கு தாக்கல் ஆகவேண்டுமென்று விதி யேற்பட்டிருக்கிறது. பொதுவாக, எந்த ஸப் டிஸ்ட்ரிக்டுக்குள் அந்த தஸ்தாவேஜு ஸம்பந்தப்படுகிற சொத்து முழுமையுமாவது பாகமாவது இருக்கிறதோ அந்த ஸப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸிலே அதை தாக்கல் செய்யவேண்டும். ஒரு ஜில்லா ரெஜிஸ்ட்ரார் தமக்குக் கீழ்ப்பட்ட எந்த ஸப் ரெஜிஸ்ட்ராருடைய ஆபீஸிலாவது தாக்கலாக வேண்டிய தஸ்தவேஜைத் தம்முடைய ஆபீஸில் வாங்கிக் கொண்டு ரிஜிஸ்டர் செய்யலாம். இதற்கு விசேஷ கட்டணம் 5 ரூபா செலுத்தவேண்டும். ராஜதானிப் பட்டணங்களில் அலுவல் பார்க்கும் ரிஜிஸ்ட்ரார்கள், தஸ்தவேஜில்கண்டசொத்து இந்தியாவில் எந்தப் பாகத்திலிருந்த போதிலும் நிமித்த மில்லாமல், அந்த தஸ்தவேஜை வாங்கிக் கொண்டு ரெஜிஸ்டர் செய்யலாம். இதற்கு விசேஷ கட்டணம் ரூபா 10 செலுத்தப்படவேண்டும்.

தஸ்தவேஜுகளை அந்தந்த ஆபீஸ்களிலேயே தாக்கல் செய்யப்பட வேண்டியதாக விதி யிருந்தாலும், சிற்சில விசேஷ சந்தர்ப்பங்களில் அவைகளை எழுதிக்கொடுத்தவரோ, எழுதிவாங்கினவரோ இருக்கும் வாஸஸ்தலத்தில் ரெஜிஸ்ட்ரார் போய் வாங்கிக் கொள்ளலாம். தகுந்த அந்தஸ்திலுள்ளவர்கள், ஆபீஸ்களுக்கு வருவதினின்றும் ராஜாங்கத்தாராலாவது சட்டத்தினாலாவது நிவாரணை செய்யப்பட்டவர்கள், ஸிவில் அல்லது கிரிமினல் ஜெயிலில் உள்ளவர்கள், வியாதியஸ்தர்கள், தேகதிடன் இல்லாதவர்கள், கோஷா ஸ்திரீகள், ஜாதியாசாரப்படி வெளியில் வராமலிருக்கும் ஸ்திரீகள் முதலியவர்கள் விஷயத்தில் மட்டும் மேற் கண்டபடி வீட்டில் போய் தஸ்தவேஜுகளை வாங்கலாம். இதற்கு விசேஷக் கட்டணம் ரூபா 5 அல்லது 10 செலுத்தவேண்டும். காலரா முதலிய வியாதிகளால் அவஸ்தைப் படுகிறவர் வீட்டுக்கு ரெஜிஸ்ட்ரார்கள் போக மாட்டோமென்று மறுதளிக்கலாம்.

தஸ்தாவேஜினால் பாத்திய மடைந்தவராவது அல்லது அதை எழுதிக் கொடுத்தவராவது அதை ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸில் கொண்டுவந்து கொடுக்கலாம். கொடுத்ததும் ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர், அந்த தஸ்தவேஜை எழுதிக் கொடுத்ததாகப் பொருள்படும் நபர் இன்னாரென்பதையும், அவர் எழுதிக் கொடுத்த துண்டா இல்லையா என்பதையும் பற்றி விசாரணை செய்வார். விசாரணை திருப்திகரமாக இருந்தால், அந்த தஸ்தவேஜின் பின் பக்கத்தில் அவ்விஷயத்தை எழுதிக்கொண்டு அதை ரெஜிஸ்டர் செய்வதற்கு அங்கீகரிப்பார். பத்திரத்தை எழுதிக் கொடுத்தவர், ரெஜிஸ்டர் செய்து கொடுக்காமல் காலஹரணம் பண்ணும் விஷயத்தில், அவர்களைச் ஸம்மன்மூலமாக வரவழைத்து விசாரணைசெய்யச் சவுகரியம் ஏற்பட்டுள்ளது. மரணசாஸனம் ஸ்வீகாரம் செய்துகொள்ளக் கொடுக்கும் அதிகார பத்திரம் இவைகளை எழுதிக் கொடுத்தவர் இறந்துபோன பின்னரும், அவைகளினால் பாத்தியமடைந்தவர் ஆபீஸ்களில் அவைகளை தாக்கல் செய்யலாம். ஒழுங்கான விசாரணை செய்து அவைகள் ரெஜிஸ்ட்ரேஷனுக்கு அங்கீகரிக்கப்படலாம். விசாரணை திருப்திகரமாக இல்லாவிட்டால் ரிஜிஸ்ட்ரேஷன் மறுதளிக்கப்படும்.

“வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்” என்று வேதாந்தம் பேசிக்கொண்டிருப்பது ஸகஜம். அப்பேச்சுக்கு ஏற்ப காரியத்தைச் செய்வது நம்மவர்களுக்குள் வழக்கமில்லை. தமக்குப் பிற்காலம் தம்மைச் சார்ந்திருந்தோருக்கு ஏதாவது ஜீவனோபாயம் காட்டவேண்டியதற்கு, ஒவ்வொருவரும் உயில் எழுதி வைக்கலாம். எழுதிவைத்தவன் ஆயுளுக்குப் பிறகுதான் அவ்வுயில் ஊர்ஜிதத்துக்கு வரும். அவ்வுயிலை மேற்கூறியவாறு ரெஜிஸ்டர்செய்து கொள்ளலாம். அல்லது, ஒரு பைக்குள் அதைப்போட்டு, அந்தப் பையின்மேல் எழுதிக்கொடுத்தவர் தமது பெயரையும், தஸ்தவேஜு இப்படிப்பட்டதென்பதையும் எழுதி, முத்திரையிட்டு, நேராயாவது, அதிகாரம் பெற்ற ஏஜெண்டு மூலமாயாவது ஜில்லா ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் கட்டிவைக்கலாம். அங்கு அந்தப்பை வெகு பத்திரமாக இருக்கும். வேண்டுமானால் அதைத் திரும்பவும் வாப்ஸ்பெற்றுக்கொண்டுவிடலாம். இப்படிக் கட்டிவைப்பதற்கும் வாப்ஸ் வாங்குவதற்கும் 2 ரூபா கட்டணமுண்டு.

---



# SELECTIONS.

# விசேஷத்திரட்டு.

## METHODS OF GERMINATION OF SEEDS.

## விதைகள் முளைக்கும் விதம்.

கனிகள் தமது மேற்போர்வையின் அலங்காரமான நிறங்களால் நம்மையும் பக்ஷிகளையும் தங்களிடம் விருந்துக்கு அழைக்கின்றனவென அறிந்திருக்கிறோம். நாமும் பக்ஷிகளும் கனிகளின் மதுரமான தசைப்பாகத்தைச் சாப்பிட்டு அவற்றிற்குள்ளிருக்கும் கொட்டையை அல்லது வித்தை விடுவிக்காவிட்டால், கனிகள் நன்றாக முதிர்ந்து மரத்தின் கிளையினின்று பூமியில் விழுந்து தசைப்பாகமானது அழுகி வித்து வெளியாக, இப்படி மரத்தின் கனிகளெல்லாம் தாய் மரத்தின் அடியில் விழுந்து வித்து வெளியாகி அவ்வித்துக்களெல்லாம் அச்சிறு பூமியில் முளைக்க ஆரம்பித்தால், தங்களுக்கு ஆகாரம் கிடைக்காததுமன்றி, தாய் செடிக்கும் ஆகாரம் கிடையாமற் போய்விடும். ஒரேவிதமான செடிக்கு ஒரேவிதமான ஆஹாரம் தேவை. ஆனது பற்றி, ஒரேவிதமான செடிகளை நெருக்கமாக நடக்கூடாது.

செடிகளோ ஒரேயிடத்தில் தழைத்து ஓங்கிவளருகின்றன. அவைகளுக்கு நகரும் சக்தி இல்லை யென்று முன்னமே கூறப்பட்டது. அப்படியிருக்கச் செடிகள் தங்கள் வித்துக்களை நாலாப்பக்கங்களிலும் எப்படி அனுப்புகின்றனவென்பதைக் கண்டறிவோம். மா, இலந்தை முதலியவற்றின் பழங்களைச் சாப்பிட்டு அவற்றின் வித்துக்களை எறிந்து விடுகிறோம். காகம் வௌவால் முதலியவைகளின் மலத்தைப்பார்ப்போமாகில் சிற்சில



சமயங்களில் அவைகளில் வேப்பங்கொட்டை ஆலம்வித்து முதலியன காணப்படுகின்றன. இதனால் நாம் அறிவது என்னவெனில், பக்ஷிகள் சிறு பழங்களை விழுங்கி விடுகின்றன. அப்பழங்களில் தசைப்பாகமானது பக்ஷிகளின் வயிற்றுக்குள் ஜீரணமாகிப் பிறகு அவற்றின் மலத்தின் மூலமாய்வித்துக்கள் வெளியாகின்றன. வித்துக்களின் மேலோடுகள் வித்துக்களுக்குப் பக்ஷிகளின் வயிற்றில் யாதொரு தீங்கும் நேரிடாமற் காப்பாற்றுகின்றன. இம்மாதிரியாகப் பக்ஷிகள் ஓரிடத்தில் கனிகளைச் சாப்பிட்டுவிட்டு வித்துக்களைப் பலவிடங்களில் மலத்தில் வெளியாக்குகின்றன.

நாம் மாலைப்பொழுதில் மைதானம்முதலிய சுத்தமான காற்று வருமிடங்களிற் போய்க் காற்றார உட்காருவது வழக்கம். அவ்விடங்களில் நாம் உட்கார்ந்து எழுந்தால் நமது வேஷ்டிகளில் சில சமயங்களில் சிறுசிறு வித்துக்கள் ஒட்டிக்கொள்ளுகின்றன. அவைகளை நாம் எடுத்து எறிந்துவிடுகிறோம். சில வித்துக்கள் முட்களையும் கொடுக்குகளையுமுடையன. அவைகளுக்கு அலங்காரமான போர்வை யில்லாததனால், அவைகளிடம் பக்ஷிகள் போகிறதில்லை. வேடர்கள் நாய்களை வேட்டைக்கு அழைத்துப்போகும்போது வேடர்களின் உடையிலும் நாய்களின் உரோமத்திலும் வித்துக்கள் சிக்கிக்கொள்வதும் வழக்கம். இவ்வினத்தைச் சேர்ந்தவை நாயுருவிக்கனி, ஒட்டடைக்காய், தேள்கொடுக்குக்காய், பேய்ப்புற்காய் முதலியன.

எருக்கு முதலியவற்றின் வித்துக்களின் மேல் வெண்மையான மயிர்கள் போன்றவை இருக்கின்றன. இவைகள் வித்துக்கள் சிதறுவதற்கு அனுகூலம் செய்கின்றன. இத்தகைய

வித்துக்கள் பாய்மரக்கப்பலைப்போல் ஆகாயக் கடலில் உலாவிச் செல்லுகின்றன.

முருங்கை மரமல்லிகை முதலிய செடிகளின் விதைகளுக்கு இறகுகள் போன்றவை அமைந்திருக்கும். இந்த இறகுகள், வித்துக்கள் காற்றிற் பறப்பதற்கு அனுகூலமாக இருக்கின்றன.

சில செடிகளின் காய்கள் முதிர்ந்து பக்குவமானதும் அக்காய்கள் வெடிக்கின்றன. அப்படி வெடிப்பதனால் அவற்றிற்குள்ளிருக்கும் சிறு வித்துக்கள் வெகுதூரம் சிதரப்படுகின்றன. ஆமணக்கு, காசித்தும்பை முதலியவை இத்தகையன. டப்பாசுக்காய் என்று சொல்லப்படும் காய் நன்றாக முதிர்ந்தபிறகு தன் மேல் கொஞ்சம் ஜலம் பட்டால் வெடிக்கிறதையும் கண்டிருக்கிறோம்.

ஆற்றங்கரையோரத்திலிருக்கும் செடிகளின் கனிகள் ஜலத்தில் விழுந்து அடித்துக்கொண்டுபோய்ப் பற்பலவிடங்களில் ஒதுக்கப்பட்டு அங்குச் செடிகள் முளைக்கிறதைக் கண்டும் கேட்டு மிருக்கிறோம்.—ம. சி. இராஜா.

---

## THE USES OF SALT.

## உப்பின் உபயோகம்.

---

உணவிற்கு உப்பு வெகு அவசியமானதென்று அனைவருக்கும் தெரியும். எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாலு பருக்கையும் இரண்டு உப்புமாவது இருந்தால் போதும் மற்றவைகளைப்பற்றி அவசியமில்லை என்று சர்வ சாதாரணமாய்ச் சொல்லிக்கொள்வதை நாம் பலதடவைகளில் கேட்டிருக்கிறோம். உப்பில்லாத பண்டம் உளுத்துப் போவதுபோல் என்று பழமொழியாகப் பலர் உபயோகப்படுத்துவதையும் நாம் அறிந்திருக்கிறோம். அதேமாதிரி ஆங்கிலத்தில் 'உப்பில்லாத முட்டை' என்றால் உபயோகமற்றதும் ருசியற்றதும் என்று பொருள்படும். ஜனங்கள் மிருகங்களுக்குச் சமானராய் நாகரீகமென்பதேயில்லாது நடந்துவந்த காலத்தில் உப்பின் அவசியம் அவ்வளவாய்த் தோன்றியிராது.

புலி சிங்கத்தைப்போலவும் ஓநாய் சிறுத்தையைப்போலவும் பச்சை மாமிஸத்தைப் பதக்கென்று கடித்துத்தின்பதனால் அதற்கு உப்பு அவசியமிருந்திருக்காது. மாமிஸத்தை வேகவைத்துத்தின்னவும், காய்கறி பதார்த்தங்களை யரிந்து தின்னவும் நாகரீகம் ஏற்பட்ட பின்னர் உப்பினுடைய பெருமையும் உப்பினுடைய உபயோகமும் உப்பினுடைய இன்றியமையா இயற்கையும் வெகு நன்றாய் தெரியவந்தது. இதனாலல்லவா, நம்மவர்கள் உப்புக்கும் உணர்வுக்கும் ஒருவித சம்பந்தம் உண்டாக்கினார்கள்? உப்புப்போட்டு தின்னவில்லையா, உணர்ச்சிகெட்டவனே! என்று நம்மவர்கள் பலர் பேசுவதை நாம் கேட்டிருக்கிறோமல்லவா? உப்பைப் போட்டுத் தின்னாவிட்டால், உணர்ச்சியில்லாத மிருகத்தன்மை பூண்ட நிலைமையிலிருக்கிறோமென்றும், பகுத்தறிவுண்டாய் மனிதத்தன்மை மேலும் மேலும் விகசித்துக்கொண்டு வரும்போது உப்பைக் கட்டாயம் உபயோகிக்க நேரிடுகிறதென்றும் மேற்கூறிய பழமொழிகளின் பொருளாகிறது.

இந்த உப்பினுடைய உபயோகம் யாது என்று நாம் யோசிக்குங்கால் அது பலவிதமாகிறது. நாவில் ஊறுகிற ஜலத்திற்கு 'ஸலைவா' என்று ஸையன்ஸ் பெயர். இந்த 'ஸலைவா' ஜலத்தால், நாம் சாப்பிடுகிற உணவை நன்றாய் ஊறவைத்து மென்று விழுங்கச் சாத்தியப்படுகிறது. மேலும் நாம் சாப்பிடுகிற உணவு நன்றாய் ஜீரணிப்பதற்கு மிகவும் ஏற்ற கருவியாய் இந்த ஸலைவா விளங்குகிறது. உப்பு நாக்கில் படுவதினால் நாக்கு நரம்புகள் மீது தாக்கி, 'ஸலைவா' என்னும் உமிழ் நீர் அல்லது எச்சில் என்று ஸர்தாரணமாய்ச் சொல்லும் ஜலத்தைப் பெருக்குகிறது.



'உப்பில்லாத பண்டம் உளுப்பதுபோல்' என்று அடிக்கடி நாம் சொல்லுகிறோம். உப்பில்லாவிட்டால் பண்டம் கெட்டு அழிந்து கேடுண்டாய் விடும். அதைத் தின்பதினாலும் உடம்பிற்கு எவ்வளவோ கெடுதியும் சம்பவிக்கும். இதனாலேயே ஊறுகாய் முதலியவைகளுக்கும் நாம் உப்பிட்டே வைக்கிறோம். பல்லிடுக்குகளில் அகப்பட்டுக்கொண்ட சாதம் அல்லது கறித்துணுக்கைகள் கெட்டுப்போய் துர்நாற்றம் எடுக்காமலிருக்கும்படிக்கும் உணவிலிட்ட உப்பே அதைக் காக்கிறது.

இரைப்பையில் ஜீரணத்திற்கு வேண்டிய முக்கிய கருவியாயுள்ளது, 'காஸ்ட்ரிக் ஜ்யூஸ்' என்னும் ஒருவித ஜலம்போன்ற வஸ்து. இது எவ்வளவு மிகுதியாயும் நல்ல ஸ்திதியிலுமிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நம் ஆகாரம் ஜீரணமாய் நமக்குப் பசியெடுக்கும். அது எவ்வளவுக்கெவ்வளவு குறைவாயிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஜீரணமின்மையும் பசிக்குறைவும் நேரிடும். இதைத்தான் நம்மவர்கள் வயிற்றில் அக்கினியென்றும், பசி தீபனம் என்றும் சொல்லுவார்கள். வயிற்றில் என்ன போட்டாலும் பஸ்பமாய் விடுகிறதே, கல்லைத் தின்று கல்லை ஜெரித்துக் கொள்ளுகிறானே என்று நம்மவர்கள் குறிப்பாகச் சொல்வது இந்த 'பசிதீபனத்திரவம்' என்று சொல்லக்கூடிய 'காஸ்ட்ரிக்ஜ்யூஸை'யே காட்டும். உப்புக்கும் இதற்கு மிகவும் சம்பந்தம் உண்டு. உப்பினால் பசிதீபனம் அதிகமாக உண்டாகிறது.

மேலும் குடலில் உணவு நாசமடைந்து அழுகி துர்நாற்றமுண்டாகிக் கெட்டவாயுக்களாகி மாறிக் கெடுதி செய்யாதிருக்கவும் உப்பே ஒத்தாசை செய்கிறது. இரத்தத்திலுள்ளவும் தசையிலுள்ளவுமான சில வஸ்துக்கள் தக்கபடி ஜலத்தில் கரைந்து சேர்வதற்கும் உப்பே காரணமாயிருக்கிறது.

வாந்திபேதி முதலிய கொள்ளைநோய்க் காலங்களில் உப்பை அதிகமாய் உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்வது வழக்கம். இதனால் ஜீரணசக்தி மிகவும் விர்த்தியாவதோடும், வயிற்றில் கெட்ட வாயுக்கள் சேரமலும் உண்ட உணவு கெட்டுப் போகாமல் இருப்பதற்கு ஏதுவுண்டாகும். இதனால் தான் கொடிய வாந்திபேதி காலங்களில் உப்பை அதிகமாய் உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்வது. ஹாலண்டு தேசத்தில் குற்றவாளிகளுக்கு உப்பில்லாமல் தீனிபோடுவது ஒரு பெருத்த தண்டனையாயிருந்ததாம். அந்தக் குளிர் தேசத்தில் உப்பில்லாததினுடைய பலன் வெகு நன்றாய்த் தெரிந்ததென்று சொல்லப்படுகிறது. வயிற்றில் போன உணவெல்லாம் புழுவாக மாறி கணக்கு வழக்கில்லாமல் அவைகள் மிகுந்து உடம்பைத்தின்ன ஆரம்பித்து விட்டனவாம். இதனால் குற்றவாளிகள் பட்ட இம்சை இவ்வள வவ்வள வென்று சொல்ல முடியாதாம். 'உப்பில்லாப் பண்டம் உளுத்துப் போகும்' என்பதுபோல் 'உப்பில்லா உடலும் ஒன்றுக்கும் உதவாது' என்னும் உண்மை ஹாலண்டு என்கிற உலாந்து தேசத்தில் நன்றாய் வெளியாயிற்றுப் போலும். சென்ற 1870-71 இந்த வருஷங்களில் ஜெர்மன் தேசத்துப் படைகள் போராடப்போயிருந்த பொழுது பகைவர் தேசத்தில் அச்சேனைக்குச் சிறிதும் உப்பு அகப்பட வொட்டாமல் செய்து விட்டார்கள். அப்பன் மாண்டால் அப்பன் அருமை தெரியும்; உப்பில்லாவிட்டால் உப்பின் அருமை தெரியும் என்று ஒரு பழமொழியுண்டு.—பிரஜாநுகூலன்.

## THE GOAT.

## வெள்ளாடு.

"ஆடு மிதியாக்கொல்லையும் ஆளனில்லாப் பெண்ணும் வீண்" என்றும் "ஆடோக்காடு விளையாது" என்றும் ஏற்பட்டிருக்கும் பழமொழிகளின் கருத்து நமது கிருஷிகர் நன்குணர்வார்கள். இப்படிச் சொல்வதனால் நிலத்திற்கு எருச்சேர்ப்பதற்காகவே ஆடுகளை முக்கியமாய் வளர்த்துவந்தார்களென்று ஏற்படும். ஆனால் இப்போது எருக்கொடுக்கும் குணத்தைத்தவிர வேறு அனுகூலத்திற்காக ஆடுகளை விருத்திசெய்யவேண்டிய காலம் சமீபித்துவிட்டது. இது வரையில் காலையில் எழுந்தவுடனே நமது ஜனங்கள் பழைய சாதமோ அல்லது நீராகாரமோ சாப்பிட்டுவிட்டு வெளியேபோவதுவழக்கமாயிருந்தது. ஆனால் இப்போதே கிராமாந்திரங்களிலுள்ள கிருஷிகர் கூட காப்பி சாப்பிடாமல் வெளியேபோவதில்லை. காப்பிக்குப்பால் அத்தியாவசமென்று நாம் சொல்லாமலே எல்லாரும் அறிவார்கள். இவ்விடத்திலுள்ள நல்ல மாடுகள் வெளிதேசங்களுக்கு ஏராளமாய் ஏற்றுமதியாவதாலும், காலமழைகள் பெய்யாததாலும் பால் கொடுக்கும் மாடுகளின் விலை சில வருஷங்களுக்கு முன்னாலிருந்ததைவிட இப்போது மூன்று பங்கு அதிகமாயிருக்கிறது. அவ்வளவு விலைகொடுத்தும் நல்ல மாடுகள் அகப்படுவது கஷ்டமாய்ப் போய்விட்டது. மேலும் அவைகளுக்குக் கொடுக்கவேண்டிய ஆகாராதிகளின் விலையும் அதிகமாகிவிட்டதால் இப்போது பட்டணங்களில் நல்ல பால் படி ஒன்றுக்கு ஐந்து அணாவுக்குக் குறைச்சலாய் அகப்படுவதில்லை. சிலர் வீடுகளில் கொண்டுவந்து மாடுகளைக் கறப்பதாய்ச் சொல்லி கால்வாசி எருமைப்பாலும் முக்கால் வாசி தண்ணீரும் கலந்தபாலைக் கூட வைத்துக்கொண்டு வீட்டின் சமீபத்தில்வந்த உடனே தாங்கள் கொண்டுவந்திருக்கும் மேலே சொன்ன பாலோடு நான்கு பீர் சேர்த்து அப்போது கறந்த பாலாகக் கொடுத்து விடுகிறார்கள். இப்படிக் கலக்கும் தண்ணீராவது சுத்தமான தண்ணீராயிருந்தால் நலமாயிருக்கும். அவர்கள் சமீபத்தில் எவ்வளவு அசுத்தமான தண்ணீராயிருந்தாலும் அதைக் கலந்து கொடுத்துவிடுகிறார்கள். இப்படிச் செய்வதால் அந்தப் பாலைக் குடிக்கும் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் அநேகவிதமான நோய் நொடிகள் உண்டாகின்றன. பால் கொடுப்பவர்களெல்லாம் அநேகமாய் இப்படியே இருப்பதால் ஒருவரை மாற்றி இன்னொருவரை வைத்தாலும் எவ்விதமான குணமும் ஏற்படுவதில்லை. சொந்தத்தில் மாடு வைத்துக்கொள்வதற்கும் அநேக இடையூறுகள் இருக்கின்றன. இவ்வளவு கஷ்டங்களை நிவர்த்திசெய்து கொள்வதற்கும் தற்காலத்தில் ஒரே ஒரு வழிதான் சாத்யமென்று நமக்குத் தோற்றுகிறது. அதாவது பால் வேண்டிய ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளிலேயே அவரவர்களுக்குப் போதுமானபடி பால்கறக்கும் வெள்ளாடுகளை வைத்துக்கொள்வதுதான். இப்படிச்செய்வது கூடாத காரியமென்றும் வெள்ளாடுகள் பால் கொடுக்காவெதன்றும் வெள்ளாட்டின் பால் ருசியாயிருக்காதென்றும் பலர் பலவிதமாய் நினைக்கலாம். இப்படி நாம் நினைப்பது நமது அறியாமையே தவிர வேறல்ல. தற்காலத்தில் நாகரிகம் மிகுந்த தேசங்களிலெல்லாம் வெள்ளாட்டிற்கு ஏழைகுடிகளுடைய பசுவென்று பெயரிட்டிருக்கிறார்கள். வெள்ளாடுகளைச் சரியானபடி போஷித்து வந்தால் அவைகள் ஏற்குறைய ஒருநாளைக்கு முக்கால் பட்டணம் படி பால் வரையில் கொடுக்கும். பட்டணங்களில் ஒவ்வொரு வீடுகளிலும் மாடுகள் வைத்துக்கொள்ளப் போதுமான இடம் கிடையாது. ஆனால் ஆடுகள் சிறுபிராணிகளாதலால் அவைகளை ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ளக்கூடும். ஆட்டின் பால் மாட்டின் பாலைவிட இரண்டத்தனை சத்துள்ளது. வியாதியால் பீடிக்கப்படும் பசுவின்பாலைக் குடிப்பதால் க்ஷயம் முதலான வியாதிகள் மனிதர்களுக்கும் தொத்துகிறது. ஆனால் அப்பேர்பட்ட அபாயகரமான வியாதி இவ்வாடுகளுடைய பாலின் மூலமாய் உண்டாவதில்லையென்றுதெரியவருகிறது. குழந்தைகளுக்கும் பசுவின் பாலைவிட ஆட்டின்பால் அதிக ஆரோக்யத்தைக் கொடுக்கிறது. ஆட்டின் பாலுக்கு ஒருவிதமான மொச்சைநாற்றம் இருக்கிறதென்று பலர் ஆட்சேபிப்பார்கள். ஆனால் பால் கறப்பதற்கு முன் ஆட்டின் மடியைச் சுத்திசெய்து சுத்தமான பாத்திரத்தில் பாலைக் கறந்தால் இந்த நாற்றம் உண்டாவதில்லை. பால் கறப்பதற்கு முன்னால் ஆடுகளைத் தண்ணீர் குடிக்கவிடக்கூடாது. ஆடுகளை மேயவிடுவதே சிலாக்கியம். அப்படிச் செய்ய சாத்தியப்படாவிட்டால் கட்டிப்போட்டுக் கைத்தீவனம் கொடுக்கவேண்டும். ஆடுகளைக் கட்டும்போது கழுத்தில் தோல்பட்டை போட்டு அதில் நாய் சங்கிலி சுற்றிக்கொண்டு வருவதைப்போலொத்த இரும்பு வளையம் ஒன்று போட்டு அதில் கயிறு கோர்த்துக் கட்டவேண்டும். ஆடுகள் எந்தப்பக்கம் திரும்பினாலும் அந்தப்பக்கம் திரும்பிக்கொண்டிருக்க வேண்டும். புல் முதலிய தீனியைக் கீழே போட்டால் மிதித்துத் துவைத்துவிடுமாதலால் ஆட்டிற்கு எட்டக்கூடிய உயரத்தில் ஒரு பெட்டியில் தீனியை வைத்து ஆட்டின் வாய்மாத்திரம் உள்ளே போகும் படிக்குண்டானஅளவு துவாரம் செய்துவைக்கவேண்டும். மேலும் ஒரு துண்டு கல் உப்பையும் மேலே கட்டிவைத்தால் அதை ஆடுகள் அடிக்கடி நக்கி உப்பை அருந்தும். ஆடுமாடுகளுக்கு உப்பு அவசியமான ஆகாரமென்று முன்னாலேயே ஒருதரம் எழுதியிருக்கிறோம். வெள்ளாடுகள் எதையும் தின்னும். ஆனால் பால் கறக்கும் ஆடுகளுக்குக் கூடுமானவரையில் சுத்தமான ஆகாரத்தைக் கொடுக்கப் பிரயாசைப் படவேண்டும். சாதாரணமாய் ஆடுகள் உயரமாயிருக்கும் திண்ணைகள் மேலாவது பென்சுகள்மேலாவது படுத்துக்கொள்ள விரும்பும். அவைகளிஷ்டப்படி படுத்துக்கொள்ள விடுவதே சிலாக்கியம். சராசரி மூன்று ஆடுகள் வைத்திருந்தால் வருஷம் பூராவும் பால் இருக்கும். ஆடு தலைஈத்து ஈனும்போது அவ்வளவாய்ப் பால் கொடுக்காது. இரண்டாம் ஈத்துமுதல்தான் சரியானபடி பால் கொடுக்கும். குறைந்தது இரண்டு வேளையும் சேர்ந்து அரைப்படி பாலுக்குக் குறையாத ஆடாய் வைத்திருந்தால்தான் நஷ்டமிராது. விசேஷமாய் திருடர் வெள்ளாடுகளைத்தான் திருடுவது வழக்கம். ஏனென்றால் ஒரு வெள்ளாட்டின் தோல் குறைந்தது ரூ. 1-8-0-க்கு விற்கும். ஆடு இறந்துபோனாலும் அதன் தோலையும் மாமிசத்தையும் விற்பதால் ஏறக்குறைய அதன் விலையை எடுத்துவிடலாம். ஆகையால் ஆடுகளை வைத்திருப்பதால் எப்போதும் அதிக நஷ்டம் வராது. ஒரு வெள்ளாடு ஒரு ஈத்துக்கு இரண்டுகுட்டி போடும். பாலுக்காக ஆடுகள் வைத்திருப்போர் குட்டிபோட்டு உலருமுன் குட்டிகளை யாருக்காவது விற்றுவிடவேண்டும். ஏனென்றால் ஆடு குட்டியை நக்கி குட்டி பால் குடித்துவிட்டால் அப்பால் குட்டியை அப்புறப்படுத்

தினால் ஆடு அதிகமாய்க் கத்தும். அதனால் பால் குறைந்துபோகும். குட்டிகளை வைத்திருந்தால் ஆடு சரியாய்ப் பால் சுறக்காமல் அடக்கி வைத்துக்கொண்டு குட்டிகளுக்குக் கொடுக்கும். ஆகையால்தான் குட்டிகளை வைத்திருக்கக்கூடாது. ஆனால் நல்லவர்க்கங்களாயுள்ள ஆடுகள் குட்டிபோட்டால் அப்போது அக்குட்டிகளை விற்றுவிடாமல் கைத்தீனி கொடுத்து வைத்திருக்கவேண்டும். சாதாரணமாய் ஆடுகள் ஈன்று ஐந்துமாதங்களுக்குப் பால் கொடுக்கும். ஆடுகள் வாலையாட்டிக்கொண்டு புரண்டு புரண்டு எழுந்திருந்தால் பொலிப்பில் வந்திருக்கிறதென்று தெரிந்துகொண்டு கிடாவினிடம் கொண்டு போய் விடவேண்டும். ஒருதரம் பொலிப் பெடுத்தால் மூன்றுநாள்வரையில் தான் பொலிப்பிலிருக்கும். அப்போது கிடா விடாவிட்டால் மறுபடியும்பொலிப்பில் வரும்வரையில் காத்திருக்கவேண்டும். ஆடுகளைக் கறக்குமுன் அவைகளின் மடிகளை சுடுதண்ணீரால் கழுவி மடியைத் தட்டிப்பிசைந்து பால் கறக்கவேண்டும். பால் கறக்கும்போது இடைஇடையே தட்டிப் பிசைந்தால் பால் சுறக்கும். ஒரு ஆட்டிற்கு ஒருநாளைக்கு முக்காலணா பச்சைத்தீவனமும் முக்காலணா பருத்திக்கொட்டை அல்லது பிண்ணாக்காவது போதுமானது. பசுவின் பாலைவிட ஆட்டின்பால் அதிக சத்துள்ளதாகையால் ஆட்டின் பாலுக்கு விலை அதிகமாகப் போடவேண்டும். அப்படியில்லாமல் படி 4 அணா போட்டுக்கொண்டாலும், நாளொன்றுக்குப் பாலின் விலை 2 அணாவில் தீனி முதலிய செலவு $1\frac{1}{2}$-அணா போக மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று ஒரு ஆட்டில் இலாபம் வரும். ஐந்து மாதங்களில் சராசரி 5 ரூபாய் இலாபமும் குட்டிகள் விற்பதில் ரூபாய் ஒன்றும் ஆக ரூபாய் 6 இலாபம் கிடைக்கும். ஏறக்குறைய ஒரு ஈத்திலேயே ஆட்டின் கிரயம் அநேகமாய் கிடைத்துவிடும். நல்ல பால் அகப்படாமல் கஷ்டப்படுகிறவர்களெல்லாம் இதைக் கவனித்து இலாபம் அடைவதோடு தேகாரோக்யமும் அடைவார்களென நம்புகிறோம்.—கிருஷிகன்.

## MR. GOKHALE ON PUBLIC LIFE.

## ஆனரபில் மிஸ்டர் கோகலே பொதுவாழ்க்கையைப்பற்றி.

பொதுவாழ்க்கை என்பது நமது தேசத்தில் இதுவரை இல்லாத புதுக்கருத்து. பொது நலத்தில் விருப்பங்கொண்டு ஜனங்களின் நன்மைக்காக உழைப்பது பொது வாழ்க்கை. பிரிட்டிஷ் துரைத்தனம் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு வெகுகாலம் வரையிலும், பிரிட்டிஷ் துரைத்தனத்துக்கு முன்னாலும், நமது இந்திய ஜனங்கள் ஒரு ஜனமாக ஒருமைப்பட்டுப் பொதுவான நன்மை தீமைகளுக்கு பாத்தியம் பெற்று வாழ்ந்தவர்களல்ல. ஆகையால், இப்படிப்பட்ட ஜனத்தின் நன்மை தீமைகளுக்கு உழைப்பவர்களும் உழைக்கும் வழக்கமும் இல்லை. ஜனங்கள் தாங்கள் வசித்த கிராமத்திலேயே தங்கள் நன்மை தீமைகளை எதிர்பார்த்து அதில் அக்கறை கொண்டவர்களாயிருந்தார்களேயன்றி, இப்போதைப்போல தேசத்தின் பற்பல மாகாணங்களில் வசிக்கும் ஜனங்கள், வெங்காளிகள், ஹிந்துஸ்தானிகள், பஞ்சாபியர், மாராஷ்டிரர், திராவிடர் போன்ற பற்பல ஜாதியாரும் ஒரே தேசத்தில் வசித்து ஒரே விதமான நன்மை தீமைகளுக்குப் பாத்தியம் பெற்று, ஒரே கதியைப் பின்பற்றவேண்டி ஒரே ஜனமாக வாழ்ந்தவர்களல்ல. பிரிட்டிஷ் துரைத்தனம் ஸ்தாபித்து வெகு காலம் வரையிலுங்கூட இந்திய ஜனங்களுக்கு இம்மாதிரி நிலைமையுண்டாகவில்லை. சென்ற இருபது வருஷமாகத்தான் நமக்குப் பொதுநலப் பிரியமும் பொதுவாழ்க்கையென்ற கருத்தும் உண்டாயிருக்கின்றன. இப்போதுதான் வட இந்தியாவிலுள்ள நன்மை தீமைகளுக்கு இந்தியா



வின் மற்றப் பாகங்களிலுள்ள ஜனங்கள் பாத்தியப்பட்டவர்களென்றும், அப்படியே பரஸ்பரம் பாத்தியம் உண்டென்றும் நம்பப்பட்டு வருகின்றது. இந்தப் பொது வாழ்க்கையென்பது ஐரோப்பிய ஜனங்களுடையதும் ஜப்பான் முதலிய கீழ்த்திசை ஜனங்களுடையதுமான நிலைமையாம். இந்தியாவிலும் அப்படிப் பொதுவாழ்க்கையுண்டாகி அதை விருத்திபண்ணி அதனால் தேசத்து ஜனங்கள் ஒருங்கே முன்னேற்றம் பெற்று உலகத்து மற்ற ஜனங்களைப் போல் வாழ முயன்றாலன்றி இந்தியா தேசம் பிற்பட்டுப்போம். இதை யுத்தேசித்து ஆனரபில் மிஸ்டர் கோக்லே 'பொது வாழ்க்கையின் பொறுப்புகளும் தேவைகளும்' என்ற விஷயத்தைப் பற்றி அவர் இங்கே வந்திருந்தபோது விஸ்தாரமாய் ஒரு பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கத்தின் சுருக்கத்தைக் கீழே வரைகிறோம்.

பொது வாழ்க்கையென்பது மூன்று பிரிவுகள் உள்ளதாகும்: இந்திய ஜனங்களுக்கும் மற்றத் தேசங்களுக்கும் உள்ள சம்பந்தம் ஒன்று; நமது தேசத்துக்கும் நமது ராஜாங்கத்துக்கும் உள்ள சம்பந்தம் இரண்டாவது பிரிவு; மூன்றாவது, நமது தேசத்து ஜனங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் செலுத்த வேண்டிய கடமை. முதலாவது பிரிவு நமது கையில் இல்லை; பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் அன்னிய தேச சம்பந்தம் அனைத்தையும் தங்கள் வசம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அதைப்பற்றி மிஸ்டர் கோக்லே பேசவில்லை. நமது ஜனங்களுக்குள் ஒருவருக்கொருவர் செய்துகொள்ள வேண்டிய கடமையைப் பற்றியும் அவர் பேசவில்லை. ஆகையால், ராஜ்ய சம்பந்தமான விஷயங்களில் நமது பொது வாழ்க்கை எப்படியிருக்க வேண்டுமென்பதைப் பற்றியும் அது எப்படிச் செய்தால் நலம் பெறலாமென்பதைப் பற்றியும் பேசினார். பொதுவாழ்க்கைக்குப் பலர்சேர்ந்து உழைத்தல் அவசியம். ஜனங்களுக்கு ஒருவன் தனியே நன்மை செய்தால் அது பொதுவாழ்க்கையாகாது. உதாரணமாக, ஒருவன் கோவில் கட்டினாலும் அன்னசத்திரம் ஸ்தாபித்தாலும் அது பொது நன்மையானாலும் பொதுவாழ்க்கையாகாது. பொதுவாழ்க்கை மேல்நாடுகளைப்போல நமது தேசத்தில் ஜனங்களுக்குச் சுதந்திரங்கள் சம்பாதிப்பதிலும் அந்தச் சுதந்திரங்களை நன்றாய்ச் செலுத்துவதிலும் அவைகளை மேன்மேலும் அதிகப்படுத்திக் கொண்டுபோவதிலும் நோக்கமுள்ளதாயிருக்கவேண்டும். இந்தியாதேசம் அன்னியரால் ஆளப்படுவதால் நாம் இவ்விஷயத்தில் விசேஷக்கஷ்டத்தையனுபவித்து இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். நமது தேசத்தில் பொதுநலப் பிரியம் அருமையாயிருப்பதால் பொது வாழ்க்கை பலப்படவில்லை. பொதுநலப் பிரியத்துக்கு தன்னலமறுப்பு அவசியம். பொது ஜனங்களின் நன்மைக்காக ஒருவன் தன்னுடைய நன்மையையும் சௌகரியத்தையும் இழக்கத் தயாராயிருக்கவேண்டும். தன்னுடைய அபிப்பிராயத்தைத் தன்னைவிடப் பெரியோரின் அபிப்பிராயத்துக்குத் தாழ்ந்ததாய் நினைக்கவேண்டும். யார் நமக்குத் தலைவர்களோ, யார் நம்மைவிடத் தெரிந்தவர்களென்று நினைக்கிறோமோ, அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பின்பற்றி நடப்பதவசியம்.

இத்தேசத்தை ஆளுவோர் அன்னியராயிருப்பதால் அவர்களுடைய முக்கிய உரிமைகள் அந்த அன்னிய தேசத்தைப்பற்றியனவாயிருக்கின்றன. அவர்களும் ஜனங்களும் ஒத்துப்போக வேண்டும். ஜனங்களுக்குள்ளேயே ஹிந்துக்களும் மகமதியர்களும் சகோதரர் போல் வாழவேண்டும். ஆளுவோர் இந்தியரைத் தங்களுக்கு எவ்விதத்திலும் சரிசமானஸ்தர்களாக்க நோக்கங்கொண்டு அப்படியே நடத்துவார்களானால் அவர்களுடைய ஆளுகை நிறைவேறும். இந்தியர்களும்பிரிட்டிஷ் ஆட்சியில் பக்திவைத்துத் தாங்கள் சொல்லும் எந்தச் சொல்லினாலும் செய்யும் எந்தச் செய்கையினாலும் அந்தப் பக்தியில் ஆளுவோருக்குச் சந்தேகம் ஜனிக்கும்படி செய்யக்கூடாது. அவர்களுக்கு விசாலமான அதிகாரம் இருப்பதால் நாம் செய்யுங் கேடான காரியங்களை

மாத்திரமல்ல, கேடல்லாத காரியங்களையும் அடக்க வல்லவர்கள். இந்தியர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட சுதந்திரங்களை அவர்கள் திருப்திகரமாய் நிறைவேற்ற வேண்டும். ஒற்றுமை, அடக்கம், பரஸ்பர நம்பிக்கை, முதலிய நற்குணங்கள் அதிகப்படவேண்டும். ராஜீய வாழ்க்கைக்கு ஸ்தல ஸ்தாபனங்கள்—முனிஸிபாலிடி டிஸ்டிரிக்ட் போர்ட்டு முதலியவைகள்—நாற்றங் கால்கள் போலானபடியால் அவைகளில் நம்மவர்கள் சேர்ந்து பொது நலத்துக்கு உழைக்க வேண்டும். ஜனங்கள் கல்வியைப் பரவச் செய்து பொதுப் பொறுப்புகளை நிறைவேற்றச் சக்தி பெற்று சுயவாட்சிக்குத் தக்கவர்களென ஆளுவோருக்குக் காட்டவேண்டும். இந்திய ஜனங்கள் எப்போதும் அன்னியருக்கு அடங்கிய ஜனங்களாக இருக்க வேண்டுமென்பது கடவுளின் சங்கற்பமல்ல ஆகையால், உலகத்து மற்ற ஜனங்களைப்போல இந்தியருக்கும் கம்பீரமும் கௌரவமும் உள்ள உயர்ந்த வாழ்க்கை பிற்காலத்தில் அமையுமென்று நம்பக்கூடும்.

பிரதிநிதித் துரைத்தனம் பெறுவது நமது லட்சியமாயிருக்கவேண்டும். உலகத்து ஜனங்களனைவரும் அந்த லட்சியத்தையே பின்பற்றுகிறார்கள். சுவேச்சாபத்தியம் எத்தேசத்திலும் ராஜாங்கமுறையா யிராமையால் ஜன நாயகத்தை அஸ்திவாரமாகக்கொண்டு ஜனங்களின் பற்பல வகுப்பாரின் நன்மைக்காக அவர்கள் பிரதிநிதிகளால் நடத்தப்படும் ராஜாங்கமே இந்தியாவிற்குப் பிற்கால ராஜாங்க முறையாகவேண்டும். ஆங்கிலேயர் தங்கள் சொந்த நாட்டிலும் குடியேற்ற நாடுகளிலும் பிரதிநிதித் துரைத்தனம் பெற்று சுவராஜ்யம் அனுபவிப்பதால் அவர்களுக்கு நாமும் சரிசமானஸ்தர்களாய் அவர்களைப் போல் சுவராஜ்யம் பெறவேண்டும். இப்போது நாம் அவர்களுக்குச் சமானஸ்தர்களல்ல. ஏனெனில், நம்மவர்களுடைய குணத்தின் சராசரி ஆங்கிலேயருடைய குணத்தின் சராசரிபோல உயர்ந்திருக்கவில்லை. அதாவது, ஆங்கிலேயருள் சாமானியன் ஒருவன் ராஜீய நிர்வாகத்துக்கு வேண்டிய உயர்ந்த குணங்களை உடையவனாயிருப்பதுபோல நம்மவர்களில் சாமானியன் உடையவனாயிருக்கவில்லை. இந்த சாமானியரின் குணத்தை உயர்த்த நாம் முயற்சி செய்யவேண்டும். நமக்குள் ஹிந்து மகமதிய வித்தியாசம் முன்னேற்றத்துக்குப் பெருந்தடையா யிருக்கின்றது. இந்த இரு வகுப்புத் தலைவர்களும் வித்தியாசத்துக்குக் காரணங்களைக் குறுக்கிச் சகோதர பாவத்துக்குள்ள காரணங்களைப் பெருக்கியெடுத்துக் காட்டவேண்டும்.

இப்போது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சுதந்திரங்களால் ஜனாபிப்பிராயம் பலப்படும். சட்டசபைகளில் மெம்பர்களா யிருக்கிறவர்கள் தெரிந்தவர்களாயும் படித்தவர்களாயும் இருக்கவேண்டும். ஆளுவோர் வீணான உணர்ச்சிக்கு இடங்கொடுப்பவர்களல்ல. கடினமான தர்க்கங்களாலேயே அவர்கள் மனதைப் பேதித்தல் சாத்தியமாகும். இதுவரையில் நமது தலைவர்கள் பொதுவாழ்க்கைக்கு அஸ்திவாரத்தைக் கட்டியிருந்தாலும் இனித் தலைவர்களாய் வருகிறவர்கள் தங்கள் ஓழிந்த நேரத்தை மட்டும் செலவு செய்கிறவர்களா யிராமல் தங்கள் நேரத்தையெல்லாம் இதற்கே அர்ப்பணம் செய்கிறவர்களா யிருக்க வேண்டும். ஆகையால், செல்வம் பெற்ற சிறுவர்கள் முன்னுக்கு வந்து பொது வாழ்க்கைக்குத் தயார்செய்துகொள்ள வேண்டும். பொதுக் காரியங்கள் சம்பந்தமாய் அறிவும் படிப்பும் பெற்றவர்களாகவேண்டும். கஷ்டங்கள் நேரிடுகின்றனவென்று அதைரியப்படக்கூடாது. கஷ்டங்களினால் தவறுதல் நேரிட்டாலும் அந்தத் தவறுதல்களினால் பின்னால் வெற்றிகளுக்குக் காரணமாகும். இந்திய ஜனங்கள் புத்தியிலாவது திறமையிலாவது குறைந்தவர்களல்ல. அவர்களுடைய பிற்காலகதி கௌரவமுள்ளதாய் உயர்ந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் சிறுவர்களைப் பார்த்து மிஸ்டர் கோகலே, இத்தேசத்தை நாமெல்லோரும் நமக்கு அருமையான தாய்ப்பூமியாகக் கருதுவதாலும் அதனிடத்தில் அன்பு வைத்திருப்பதாலும் தாய்க்குப் பிள்ளைகள் பணிவிடை செய்வதில் தங்குதடைகள் நேரிடாதன போல, அவர்களும் தங்குதடைகளைச் சட்டை செய்யாமல் தங்களுக்கு உணவும் உடையும் நிழலும் கொடுக்கும் தேசத்துக்கு உழைக்கமுன்வரக்கடவர் என்றுசொல்லித் தம் பிரசங்கத்தை முடித்தார்.—சுதேசமித்திரன்.



# REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### NATTUKOTTAI CHETTI'S ACCOUNTS.

### நாட்டுக்கோட்டை செட்டிகளின் கணக்கு.

வித்தியாபானு என்னும் மாதாந்தரப் பத்திரிகையின் ஆடி௴த்து ஸஞ்சிகையில் 'நாட்டுக் கோட்டையாரும் மூன்று வருஷக் கணக்கும்' என்ற தலைப்பெயரின் கீழ் மு. சின்னையா செட்டியார் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். நாட்டுக்கோட்டை செட்டிகள் பல தூரதேசங்களில்கூட வியாபாரம் செய்து வருகிறார்கள். முதலாளி ஒரு ஊரிலிருந்துகொண்டு அங்கங்கே ஏஜெண்டுகளை அனுப்பி வியாபாரம் நடத்துகிறார். ஒரு ஊருக்குப் போகும் ஏஜெண்டு மூன்று வருஷம் அங்கேயே இருந்து வேலைசெய்து லாப நஷ்டத்துக்குக் கணக்குச் சொல்லவேண்டும். இந்த மூன்று வருஷகாலமும் பெண்சாதி குழந்தைகளை விட்டுப் பிரிந்தே இருக்கவேண்டியிருக்கிறது. ஏனென்றால் நாட்டுக் கோட்டைமார்களின் ஸ்திரீகள் கப்பலேறக் கூடாதாதலால் அவர்கள் தூர தேசம் போகும் தங்கள் புருஷர்களோடு கூடப்போக முடியாமல் பின் தங்கி விடுகிறார்கள். ஆகவே மூன்று வருஷம் தனிமையாக இருக்க முடியாமல் தூரதேசத்து ஏஜெண்டுகள் வேசிகளிடத்தில் போய் வியாதியைவாங்கிக் கொள்ளுகிறார்கள். தற்காலத்தில் அன்னிய நாடு சென்று வருகிற இளைஞர்கள் பெரும்பாலும் நோயுற்றவர்களாகவே திரும்பி வருவது இதற்கு ஸாக்ஷியாகும். இதனால் சந்தான விருத்தி குறைவதோடு நோயுற்று அற்ப ஆயுளாகப் போகிற குழந்தைகள் உண்டாகவும் ஹேதுவாகிறது. இது முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் தவிர, புருஷனோடு போகாமல் பின்னே தங்கிவிடும் பெண்களுடைய பரிதாப நிலைமையையும் கவனிக்கவேண்டும். இப்படிப்பட்ட கஷ்டங்களில்லாமல் மூன்று வருஷத்துக்கு ஏஜெண்டு வேலை பார்த்து கணக்குக் கட்டவேண்டுமென்னும் வழக்கத்தை நிறுத்தி ஒன்றரை அல்லது இரண்டு வருஷமாக்குவது நலமென்று சின்னையா செட்டியார் சொல்லுகிறார். இந்த விஷயத்தை நாட்டுக் கோட்டை செட்டிப்பிள்ளைகள் கவனிக்க வேண்டும்.



### MILKING.

### பால்கறத்தல்.

தென்னிந்தியா விவஸாயத்தின் ஆவணி மாஸத்து ஸஞ்சிகையில் பால் கறப்பதைப் பற்றி ஒரு விவஸாயம் காணப்படுகிறது. பால்கறப்பதினாலேயே மாட்டின் மடிவளர்ந்து அதிகப்பால் கொடுக்கும் தன்மையை அடைகிறது. ஒவ்வொரு வேளையிலும் பாலை ஒட்டப்பீச்சி விட்டால் நாளடவில் மடி அதிகமாய்ச் சுரக்குமென்பது சாஸ்திரம்.

“இப்பழக்கத்தால் சுரக்கும் குணத்தை விருத்திசெய்த டென்மார்க்குதேசத்தில் பால் அபரிமிதமாய் உண்டாகிறது. கறக்கும்போது மடியில் ஒருதுளியாவதில்லாமல் ஒட்டக்கறப்பதோடுகூட பசுவுக்கு நோய் உண்டாகாமல் கறந்து பாலை சுத்தமாக காப்பாற்றவும் வேண்டும். எப்படி பால் கறக்கவேண்டுமென்பதை பாலூட்டும் கன்றினிடத்தில் கற்றுக்கொள்ள வேண்டும். இது கும்மாளம் போட்டு குதித்துக்கொண்டு பசுவின் வயிற்றண்டை ஒருமாதிரியாய் முட்டி வாலை ஆட்டி தாயை சந்தோஷப்படுத்திக்கொண்டு மடியின் முலையை உதட்டால் பிடித்து பாலைச்சப்பும். அதுபோலவே நாமும் பால்கறப்பதற்கு முன்

னமே பசுவை தட்டிக்கொடுத்து தாஜாசெய்து வயிற்றிலும் மடியின்பேரிலும் சொரிந்து கொடுத்து ஒட்டியிருக்கும் அழுக்கு, உதிரும் மயிர் முதலியவற்றை நீக்கி, பால் கறக்கவேண்டும். முதலில் முலைக்காம்பை மிருதுவாய்ப் பிடித்து மேலே மடிவரைக்கும் கையை ஏற்றி, பிறகு கையை அமிழ்த்திஇறக்க, காம்புகளில் பால் சுரக்கும். கன்றுகள் இதேமாதிரி ஊட்ட முலைக்காம்பு எடுத்து சுரக்கிறது. காம்பு சுரந்தபின்பு முன்கண்டதுபோலவே கையை விரைவாய் ஏற்றி அமிழ்த்திப் பிழிய சர்சர் என்று பால் கம்பியைப்போல் வரும். ஒவ்வொருதரமும் கை ஏறும்போது மடியின் மேல் ஆள்காட்டிவிரலும், நடுவிரலும் அமிழ்த்த, பெருவிரலும், மோதிரவிரலும் முலைக்காம்பினடியைப் பிடித்திருக்கும். பால் கறக்கும்போது உரத்த சப்தம், சண்டை சச்சரவு முதலியன கூடா. பால் கறக்கும்போது மாட்டின்காதுக்கு இனிமையான பாட்டுப்பாடுவது நல்லது என்றும் தெறிகிறது. முன்பக்கத்து முலைகளில் பால்சுறப்பு நின்றுவிட்டால் அவற்றை விட்டு விட்டு, பின்னம் முலைகளிலிருந்து மேற்கண்டபடி பால் கறக்கவேண்டும். பசுவின்முலைக்காம்பைபிழியவேண்டுமேழிய அதை இழுக்கப்படாது. சிலர் இரண்டுவிரலால் முலைக்காம்பைப் பிடித்திழுப்பது பசுவுக்குஎறிச்சலை உண்டாக்கிறது. சாதாரணமாய் முலைக்காம்புபெருத்தில்லாதமுதகுட்டை பசுக்களில் இவ்விதமாக கறக்க வாய்க்காததினால் பீச்சவேண்டியிருக்கிறது. பின்பக்கத்து முலைகளில் பால் இல்லாவிட்டாலும் இரண்டாவது சுரப்பில் நாலுமுலைகளையும் அமிழ்த்திக்கறக்க வேண்டும். பால் ஒரு சொட்டாவது மடியில் தங்காதபடி பீச்சுவது அவசியமென்பது ஆட்டுக்குட்டிகள் ஊட்டும்போது காம்பில் பால் குறைந்தசமயத்தில் குட்டிகள் இடித்து இடித்து சப்பி பால் முழுவதையும் குடித்துவிடுவதைப் பார்க்கலாம்."

## PORAMBOKES.

## புறம்போக்குகள்.

ஆனரபில் திவான் பகதூர் ஆர். ரகுநாத ராவ் அடியிற் கண்டவாறு ஹிந்துப் பத்திரிகைக்கு எழுதுகிறார்.

(1) புறம்போக்கு என்பது சாகுபடி செய்யாததும் அல்லது செய்ய முடியாததுமான நிலங்கள்.

(2) இவைகளை ராஜாங்கத்தார் (1) பொது ஜனங்களுடைய ட்ரஸ்டியாகவோ, (2) ஒரு வகுப்பாரின் ட்ரஸ்டியாகவோ, அல்லது (3) தனி மிராசுதாரனுடைய ட்ரஸ்டியாகவோ இருந்து, காத்து வருகிறார்கள்.

மூன்றாவதாகச் சொன்ன தனி மிராசுதாரனுக்குச் சொந்தமான புறம்போக்கு யாவையெனில் (1) தீர்வைப்பட்ட நிலங்களின் கரைகள், (2) நீர்பாயும் கண்ணிகள், (3) மனைக்கட்டுகள். இவை ஸெட்டில்மெண்டு வரையில் தீர்வைப்படாமலிருந்தன.

இரண்டாவது சொன்ன வகுப்பாருக்கு ஸொந்தமான புறம்போக்கு (1) ஆலயங்கள், (2) ஸ்நாநகட்டடங்கள், (3) குடிநீர்க் கிணறுகள், (4) குளிக்கும் குளங்கள், (5) விரைவிடுங் குளங்கள், (6) விளையாட்டிடங்கள், (7) ஸமசானங்கள் அல்லது புதைக்குமிடங்கள் என்ற இவைகள். இவை நிலத்தீர்வையோடு சேர்த்துத் தீர்வைப்படக்கூடிய வல்ல.

முதலாவது சொன்ன பொதுஜன ஸொத்தான புறம்போக்கு என்றவை (1) மலைத்தொடர்கள் (2) கடற்பரப்புகள் (3) மனுஷிய ஸஞ்சாரமற்ற (இறும்பு) சிறு காடுகள் (4) வற்றாத ஊற்றுள்ள ஆறுகள் (5) ராஜபாட்டைகள் (6) பெரிய ஏரிகள் (இவை இயற்கையாக அமைந்தவானாலும் ஸரி, பப்ளிக் நிதியைக்கொண்டு செயற்கையாக அமைக்கப்



பெற்றவானாலும் ஸரி (7) பப்ளிக் நிதியைக் கொண்டு அமைத்த கிணறுகள், தோப்புக்கள் சத்திரங்கள் முதலியன.

தரிசு அல்லது தீர்வைப்படாத பண்படுத்தக் கூடிய நிலம் இது' யாதெனில் ஸாகுபடி செய்யக்கூடியதேனும் ஸாகுபடி செய்ததாக ஒரு புருஷாயுசில் அறியப்படாதது. இதற்கு அனாதித் தரிசு என்றும் பெயர்

தீர்வைத் தரிசு என்பது ஒரு காலத்தில் ஸாகுபடி செய்யப்பட்டும் தீர்வைப்பட்டும் இருந்து இப்பொழுது ஸாகுபடி செய்யப் பெறாது மிராசுதாரனால் கவர்ன்மெண்டுக்குக் கைவிடப்பட்ட நிலம். கவர்ன்மெண்டார் இதைச் சில நிபந்தனைகளின் பேரில் யதேச்சாவினியோகம் செய்யலாம்.

இத்தரிசில் வேறொருவகையுமுண்டு. அது தீர்வைப்பட்டதாகவும், சில காரணங்களால் தீர்வைப்படாததாகவும் இருக்கும். ஆனால் ஸாகுபடி செய்யப்படாதது. மிராசுதாரனுடைய பட்டாவில் மட்டும் இது கண்டிருக்கும்.

சுமார் 80 வருஷத்திற்கு முன்னே எடுத்த பைமாஷ்கணக்கில் மேற்கண்டபடி நிலங்களை வகுத்திருக்கிறது. இந்தக்கணக்கு குடியையும் கவர்ன்மெண்டையும் சேர்த்துப் பந்தப்படுத்துவதாய் ஏற்பட்டது.

இனாம் நிலங்கள்.—இவை இரண்டாவது மூன்றாவது வகுப்புப் புறம்போக்கை ஒருவாறு ஒக்கும். இந்த இனாம் நிலங்களை அனுபவிக்கும் இனாம்தாரர்கள் அவைகளைப் பெற்றுக் கொள்ளும்போது எந்த நிபந்தனைகளின் பேரில் பெற்றுக்கொண்டிருக்கிறார்களோ அந்த நிபந்தனைகளுக்கு இனாம்தாரர்களும் இராஜாங்கத்தாரும் கட்டுப்பட்டவர்களாவார்கள். கைங்கரிய இனாங்கள் (அதாவது ஊழியமான்யம்) கைங்கரியம் செய்ததற்குக் கூலியாகவோ, சிரம பரிகாரார்த்தமாகவோ விடப்பட்டவை. மற்ற இனாம் நிலங்கள் இரண்டாவது மூன்றாவது வகுப்பைச்சேர்ந்தவை. அதாவது ஒரு வகுப்பாரைச் சேர்ந்தனவும் ஒரு பட்டாதாரனைச் சேர்ந்தனவுமாக இருக்கும். பிற்கண்ட சட்டம் இனாம் நிலத்திற்குப் பொருந்தியவை.

4வது ஆக்டு சென்னை 1862.

4வது ,, சென்னை 1866.

8வது ,, சென்னை 1869.

—:o:—

## AVERAGE OF PROFITS.

## ஸராஸரி லாபம்.

ப்ரொபெஸர் ஆஷ்லி என்பவர் பொருளாதார ஆராய்ச்சிகளில் பேர் போனவர். பொருளாதார விஷயமாய் ப்ரசுரம் செய்யப்படும், 'இகனாமிக் ஜர்னல்' என்னும் இங்கிலீஷ் பத்திரிகையில் இவர் ஒரு நிரூபம் எழுதி யிருக்கிறார். ஜெர்மனி தேசத்தில் இஞ்சினீரிங் கம்பெனிகளில் பணம் போட்டிருப்பவர்களுக்கு சென்ற 40 வருஷத்தில் ஸராஸரியில் நூற்றுக்கு 5, 6 வட்டிகட்டி யிருக்கிறதென்று கணக்கிட்டுச் சொல்லுகிறார். முதலுக்கு அழிவில்லாத ஸேவிங்கஸ் பாங்கி முதலியவைகளில் போட்டால் $3\frac{1}{2}$ வட்டி கிடைக்கும். ஆகையால் என்ன ஏற்படுகிறதென்றால் நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டுவட்டி கூடக் கிடைக்கக் கூட்டியதாயிருந்தால் கொஞ்சம் முதலுக்கு ஹானிவரக் கூடியதாயிருந்த போதிலும் ஜனங்கள் பணத்தைப் போடுவார்களென்று ஏற்படுகிறது.

## PAPER MAKING.
## காயிதம் செய்தல்.

இந்த விஷயமாக சென்னையில் பிரசுரமாகும் ‘ஹிந்து’ என்னும் இங்கிலீஷ் பத்திரிகையில் சில விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. நாகரிகம் அதிகமாக ஆக காயிதமும் அதிகமாக செலவாகிக்கொண்டு வருகிறது. இப்பொழுது முக்கியமாய் மரத்தை இடித்துக் கூழாகச்செய்து அந்தக் கூழைக்கொண்டு காயிதம் செய்து வருகிறார்கள். இப்படிக்கு தினந்தோறும் ஏராளமான மரங்கள் காயிதக்கூழ் செய்வதற்காக வெட்டப்படுவதால் சீக்கிரத்தில் மரங்களே அற்றுப்போய் காயிதம் செய்வதற்கு மூலப்பொருள் இல்லாமல் போய்விடுமோ என்று முன் நோக்கியே வேறு எதையாவதுகொண்டு காயிதம் செய்யக்கூடாதா வென்று ஆராய்ச்சிசெய்து பார்த்ததில் மூங்கிலிலிருந்து நல்ல காயிதம் செய்யலாமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

“மூங்கிலினாற் கிடைக்கும் சாதகங்கள் என்னவெனில்:—அது நல்ல நாருள்ள வஸ்து; ரஸ்தாவினாலும் நதியினாலும் அதைச் சுலபமாய்க் கொண்டுவரலாம். அதைச் சேர்த்துவைப்பதும் சுளுவு; மரங்களைவிடவிலை குறைந்தது; அதைக்கையாளுவதும் கெமிகல் அதாவது ரஸாயன முறைகளை உபயோகப்படுத்துவதும் எளிது; அதனால் வெள்ளையான உறுதியுள்ள காயிதம் பலகாரியங்களுக்கு உபயோகமாகும்படி செய்யலாம். இப்படியிருக்க, தென்னிந்தியாவில் காடுகளிலுண்டாகும் மூங்கில் நெருப்புப்பற்றி யெரிந்து வீணாய்ப் போகிறது. மேற்குக் கணவாய்களிலுள்ள காடுகளில் மூங்கில் அபரிமிதமாய் உண்டாகிறது. இதைப் பயிர் செய்வதும் எளிது. சைனாக்காரர்களும் ஜப்பானியர்களும் மூங்கில்களிலிருந்து நேர்த்தியும் அலங்காரமுமான பல ஸாமான்கள் செய்கிறார்கள். இந்தியாவிலோ, மூங்கிலினால் ஒருவித முரட்டுப்பாய்களும் கூடைகளும் செய்யப்பட்டு வீடு கட்டவும் கொட்டகைகள் பந்தல்கள் போடவும் உபயோகப்படுகிறது. அலங்காரமான ஸாமான்கள் செய்வது இந்தியாவில் ஒரு தொழிலாக ஏற்படவில்லை.”

மூங்கிலைப் பயிர்செய்வதும் கையாளுவதும் வெகு சுலபமானதால் அதை உபயோகப்படுத்திக் காயிதம் செய்விக்கவேண்டும்.

புனலூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் காயிதத் தொழிற்சாலை யானது திருப்திகரமாய் நடக்கவில்லை யென்று தெரிகிறது. இந்தத் தொழிற்சாலைக்குத் திருவாங்கூர் கவர்ன்மெண்ட் பலவிதமாய் ஸகாயங்கள் செய்திருக்கிறார்கள். இயற்கையான வசதிகளும் வேண்டியனமட்டும் இருக்கின்றன. இதை நடத்தும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் தக்கமூலதனத்தைப் போட்டு அவர்கள் நியமித்திருக்கும் உத்தியோகஸ்தர்களை நம்பி நடத்துவார்களானால் இந்தத் தொழிற்சாலை நல்ல காயிதம் செய்து லாபம் பெறும்.

இது விஷயமாய் சுதேசமித்திரன் பத்திரிகை இன்னொன்று சொல்லுகிறது. அதாவது, திருவாங்கூரும் கொச்சியும் இந்தத் தொழிலை ஸ்தாபிப்பதில் கவனம் செலுத்த வேண்டுமென்பது. கைத்தொழில்கள் ஜனங்களின் ஸொந்த முயற்சியால் நடக்கவேண்டுமேயன்றி கவர்ன்மெண்ட் அவைகளிற் பிரவேசித்து நடத்துவது ஸரியல்லவென்பது ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் கொள்கை. இந்தக் கொள்கைக்கு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்ட் ஸம்பந்தமாய்ப் பல நியாயங்கள் இருந்தபோதிலும் தேச ஸமஸ்தானங்கள் இந்தக் கொள்கையை அனுஷ்டிக்க நியாயங்கள் இல்லை. இந்த ஸமஸ்தானங்கள் இந்த இரண்டு தொழில்களை ஸ்தாபிக்கும் விஷயத்தில் இன்னும் சோதனைகள் அவசியமானாற் செய்து இவைகளை ஸ்தாபிப்பது கைகூடுமென்று தோன்றும் பட்சத்தில் இயற்கையாயுள்ள இவ்வளவு வஸதிகள் வீண்போகமாட்டா.



## BOYS' SECTION.
## சிறுவர் பகுதி.

37 WHALES.

**37 திமிங்கலங்கள்.**—டாஸ்மேனியாவுக்கு வடமேற்கிலுள்ள பெர்கின்ஸ் தீவில் பிடிக்கப்பட்ட 37 திமிங்கலங்கள் கரைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு திமிங்கலமும் 50, 55 அடி நீளம் வரையிலிருக்கிறதாம்.

TOBACCO IN BURMA.

**பர்மாவில் புகையிலை.**—புகையிலையைச் சுருட்டாகவோ, சிகரெட்டாகவோ செய்து ‘வலிப்பது’ பர்மியருள் பெருத்துக்காணும் வழக்கம். ஆண், பெண் அனைவரும் சுருட்டுக் குடிப்பது ஸகஜம். குழந்தைகள் அழுது உபத்திரவித்தால், அவைகள் வாய் மூடுவதற்காக அவைகளுக்கும் சுருட்டை வாயில் வைப்பது ஸகஜம்.

GOOD ADVICE.

**ஹிதோபதேசம்.**—ஒரு நாள் ஒரு தகப்பன் புத்திரர்களை அழைத்துப் பின் வருமாறு உபதேசித்தான். புத்திரர்களே! நீங்கள் இந்த உலகத்திலே துக்கப்படாமல் ஸுகத்தோடு வாழ வேண்டுமானால் நான் சொல்லும் உபதேசத்தை ஸாவதானமாகக் கேளுங்கள்.

1. பிறர் செய்த நன்மையை மறவாதிருங்கள் பிறர் நன்றியைப் பெரியோர் மறவார்.
2. மிகப்பெரிய துன்பம் வந்தாலும் ஒழுக்கத்தை கைவிட வேண்டாம்.
3. பிறரோடு வாதஞ் செய்யாதிருங்கள்.
4. எவ்வுயிர்களிடத்திலும் இரக்கம் வைத்திருங்கள்.
5. கடவுள் பக்தியை ஒருக்காலும் விடவேண்டாம்.
6. காரணமிருந்தாலும் வலியார் பகை வேண்டாம்.
7. ஸமயத்துக்கு இசையப் பேசவேண்டும்.
8. வரவை அநுசரித்து செலவு செய்யுங்கள்.
9. பெரியோரைப் பேணுங்கள்.
10 சிறியோரை முற்றுற விடுங்கள்.
11. பேசத்தகாதவைகளைப் பேசவேண்டாம்.

MAN IS BORN FOR WORK.

**மனிதன் வேலைசெய்யப் பிறந்தான்.**—“சும்மா இருப்பது சுகம்” என்று சிலர் யாதொரு வேலையும் செய்யாமல் பிறர் சோற்றையுண்டு காலந் தள்ளுகிறார்கள். ஒருவன் சம்பாதிக்க, பத்துப் பெயர்கள்கூட இருந்து சாப்பிடுகிறார்கள். தேசவறுமைக்கு இதுவே காரணம். உழைப்பில்லாச் சோறு உப்பில்லாச் சோறல்லவோ? ஒவ்வொருவனும் உழைப்பதற்காகவே பிறந்திருக்கிறான். தனக்கும் தன் குடும்பத்துக்கும் மற்றவர்களுக்கும் உபயோகமான தொழிலைச் செய்வதே உழைப்பாகும். வேலை செய்யாமல் ஒருவனிடம் பணம் பெறுவது யாசகமேயாகும். தகப்பன் பாட்டன் சிரமப்பட்டுத் தேடிய பணத்தைத் தாராளமாய்ச் செலவு செய்யும் மனிதனுக்குப் பெருமையில்லை. தானே தேடி செலவழிப்பவனே உத்தமன். எவன் வேலையில்லாமல் தூங்குகிறானோ அவனைக் காண்பது கெடுதல்; தீண்டுதல் தீது. கடவுள்தான் வழிவிட வேண்டுமென்று அவரை நம்புகிறவன் முதல் முதலில் தன்னை நம்பியிருக்கும் மனைவி மக்களைக் காப்பாற்ற முயலட்டும். அதற்காக உழைக்கட்டும். பிறகு தெய்வமும் கண் திறக்கும். தன்னை நம்பிய பெண்டு பிள்ளைகளை அன்னத்திற்குப் பறக்க விடுத்துக் கடவுளை நம்புமொருவன், தன்னைமட்டும் கடவுள் காப்பாரென்று எண்ணுதல் மடமை. ஒவ்வொருவனும் தனக்கேற்பட்ட வேலையை உற்சாகத்துடன் செய்து முடிக்கவேண்டும். இதன்றி நமக்கேற்பட்ட வேலையை நாம் செய்யாதிருந்தால் ஸதா சலித்துக் கொண்டிருக்கும் மனது சும்மா விராது. ஏதேனும் பாபச் செயல்களைச் செய்ய யோசிக்கும், துஷ்ட காரியங்களிற் பிரவேசிக்கும். ஆதலால் ஒவ்வொருவனும் தன் கடமையைச்செய்யவேண்டியது அவசியம். மனிதன் வேலை செய்யப் பிறந்தான். **திராவிடாபிமானி.**

A DOG'S INTELLIGENCE.

**ஓர் நாயின் அறிவு.**—ஹிட்சின் என்ற பட்டணத்தில் நார்த் ஹெர்ட்ஸ் ஆஸ்பத்திரியில் வெளி வியாதிக்காரருக்குத் தரும வைத்தியஞ்செய்யும் சாலைக்கு வெள்ளையும் கறுப்புங் கலந்த ஒரு நொண்டி நாய் வந்தது. ஆஸ்பத்திரி நர்ஸ் (தாதி) உடனே அதைத் துரத்திவிட்டாள். நாயோ கட்டிடத்துக்குப் பின்

புறம்போய், சமையல்கட்டுக் கதவு வழியாய் மறுபடியும் நுழைந்து காயம்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்து அனுப்பும் சாலைக்கு வந்தது. அங்கே சிலர் அதைத் தட்டிக்கொடுத்து, "டாக்டர் ஜல்தியில் வருவார், அதுவரையில் காத்திரு" என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னது இன்னதென்று நாயானது கண்டு பிடித்தபோதிலும் அந்த விடத்திலிருந்து சமையல் கட்டுக்குப் போனது. அங்கே அது பசியாயிருந்ததாகச் சமையலாளிகள் கண்டுபிடித்து அதற்கு நல்ல சாப்பாடு கொடுத்தார்கள். கொஞ்ச நேரத்தில் டாக்டர் வந்தார். அவர் குரல் கேட்டதும் நாய் ஓடிவந்து அவர் பக்கம் நின்றது. டாக்டர் அந்த நாய் சில மணி நேரங்களுக்குமுன் தன் வீட்டுக்கு வந்து வேலைக்காரரால் துரத்தப்பட்ட நாயென்று கண்டார். நாயினுடைய பிடிவாதத்துக்காக வியந்து அதற்குச் சிகிச்சை செய்தார். காலைக் கழுவிப் போடவேண்டிய மருந்தைப் போட்டு அனுப்பினார். மெய்யாகவே நாய்களுடைய அறிவைப்பற்றி அனேக திருஷ்டாந்தங்கள் எடுத்துரைக்கலாம்.

SUCCESSION BUSINESS.

**வியாபாரத்தில் ஜெயம்.**—யாராகிலும் தம் தொழிலில் லாப மடைந்து ஜெயமடைய வேண்டுமானால், உழைப்பாளியாயும், சிக்கனச் செலவுடையராகவும் இருக்கவேண்டும். அமெரிக்காவில் ஒரு கனவான் தனக்கு 25 ஸெண்டுகள் அனுப்பினால், பணக்காரனாகும் விதத்தைச் சொல்வதாக விளம்பரம் செய்திருந்தார். பலர் பணம் கொடுத்தபின் "கஷ்டப்பட்டு வேலை செய், பணம் சம்பாதி, ஒரு ஸெண்டைக்கூட செலவு செய்யாதே" என்றாராம்.

வியாபாரத்தில் ஜெயமடைவதற்கு அத்தியாவசியமானது வியாபாரியின் நாணயம். நாணயத்தால் வாங்குபவர்களுக்கு வியாபாரியிடத்தில் நம்பிக்கையுண்டாகிறது. நாணயத்துக்கு அடுத்தது முயற்சி. எவன் நாணயமாயும், உழைப்பாளியாயு மிருக்கிறானோ அவனுக்கு எக்காலத்திலும் அபஜெயம் உண்டாகாது. எந்த வேலையாயிருந்தபோதிலும் அது மேலானது, இது தாழ்வானது, இழிவானது என்று வீண் பிரமை கொள்ளாமல் தன்னைப் பொருந்தி மட்டில் யோக்கியமாய் ஒருவனிருப்பானாகில் அவனுக்கு ஜெயம் உண்டாவது நிச்சயமே. மேலும், வியாபாரி ஸங்கோஜப் பேர்வழியா யிருக்கக் கூடாது. காரியத்துக்கு முந்தவேண்டும்.

ஆகையால் காரிய நிருவாகியினிடம் சாந்த குணமும், மரியாதையும், வாக்குச் செய்த இடத்தில் தவக்கம் செய்யாமையும் குடிகொண்டிருக்கவேண்டும். இந்த குணங்களுள்ள மனிதன் நல்ல ஸ்திதிக்கு வருவதற்கு ஸந்தேகமில்லை.

வியாபாரிக்குச் சத்துரு, கோபம். இதுள்ளவன் வியாபாரத்துக்கு லாயக்கானவனல்ல.

ஆரம்பத்தில் வியாபாரிக்கு நாணயத்தைவிட மோசமும் தந்திரமும் அதிக லாபத்தை உண்டாக்குவதாயிருந்தாலும், கடைசியில் அவைகள் அவனைக் கெடுப்பதுபோல் வேறு எதுவும் கெடுக்கிறதில்லை. ஆகையால், உன்னிடம் வாங்குபவனுக்கு உன்னிடம் அதிருப்தியை உண்டாக்கும் பேரத்தை எப்பொழுதும் மனதாறச் செய்யாதே.

சிக்கனமும், தம்பிடிச் செலவுக்கும் கணக்குப் பட்டியும் இருந்தால் அனாவசியச் செலவுகள் அனேகம் காலவரையில் நின்றுபோகும்.

மேலும் வியாபாரியிடம் விடா முயற்சியும், தன்னல மறுப்பும், ஊக்கமும் இருக்கவேண்டும். ஸாமர்த்தியமும் மரியாதையும் வியாபாரத்தை விருத்தி செய்யும்.

வியாபாரத்தில் மட்டும் அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டம் என்று சொல்வதில் எனக்கு நம்பிக்கை யில்லை. துரதிர்ஷ்டத்தால் நஷ்டம் வந்தது என்று சொல்வதை நான் நம்பமாட்டேன். அஜாக்கிரதையாலும், சோம்பேறித்தனத்தாலுமே நஷ்டமுண்டாயிற்றென்பேன். கலாசாலைப் படிப்பு வியாபாரத்தில் ஊக்கமுள்ள ஒருவனுக்கு மிக்க சாதகமா யிருக்கும். நல்ல குணாதிசய மில்லாத ஒருவனுக்குப் படிப்பு நல்ல குணத்தைக் கொடுக்கிறது. கலாசாலையில் வியாபாரத்துக்கு அனுகுணமாகக் கல்வி கற்பிக்கப்படுவதில்லை யாதலால் விசேஷ பலனில்லை யெனலாம். கலாசாலைப் படிப்புள்ளவன் அனுபோகமுள்ளவனைப் போலில்லாது ஆகாயக்கோட்டை கட்டும் சுபாவமுள்ளவனாயிருக்கிறான்.



## LADIE'S SECTION.

## ஸ்திரீகள் பகுதி.

PAPERS PUBLISHED BY WOMEN.

**பெண்களாற் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள்.** உலகத்திற் ஸ்திரீகளாற் பிரசுரிக்கப்படும் மாதாந்த பத்திரிகைகள் மாத்திரம் 200 இருக்கின்றனவாம்.

KISSING THE WIFE.

**மனையாளை முத்தமிடுதல்.**—அமெரிக்காவில், ஒரு கணவன், தன் மனையாளைத் தினமொன்றுக்கு 10 தடவைக்குமேல் முத்தமிடக்கூடாது. அப்படி முத்தமிடும்போதும் மனையாளுடைய உத்தரவு பெறவேண்டும். மனையாளுடைய உத்தரவில்லாமல் ஒருவர் முத்தமிட்டதற்கு 25 பவுன் அபராதம் விதிக்கப்பட்டார்.

MARRIAGE AND HEALTH CERTIFICATES.

**விவாகமும், தேகஸௌக்கிய ஸர்ட்டிபிக்கேட்டுகளும்.**—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த இந்தியானா ஸமஸ்தானத்தில் ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது விவாகம் செய்துக்கொள்ள லைசென்ஸ் பெறப்போகும் ஆண்மக்கள் யாவரும் ஒரு தேர்ந்த வைத்தியரிடம் தாங்கள் தேகஸௌக்கியமுடையவர்களென நற்சாட்சி பத்திரம் பெற்றுவரல் வேண்டுமாம்.

GAVE A BOTTLE OF BLOOD.

**ஒருபுட்டி ரத்தங்கொடுத்தார்.**—ஜுன்மாதம் 19ந் தேதி டென்னெஸ்ஸீயில் ஸெனடர் லீ என்பவர் தமது மனைவி மரணமடையாதிருக்கும் பொருட்டு தமது உதிர நாம்பிலிருந்து ஒருபுட்டி ரத்தம் மனைவியின் ரத்த நாம்பிற்குச் செல்லும்படி செய்வித்தாராம். இப்படிச் செய்தபிறகு அவர் மூர்ச்சையடைந்தாராம். இது அவருக்கு மனைவியின்மேலுள்ள அன்பைக்காட்டுகிறது.

LIKED FISH MOST.

**மீன்மேல் பிரியம்.**—ஒருவன் :—(தன்னை வெறுத்த ஒருத்தியைப்பார்த்து) உனக்குத்தான் என்னிடம் பிரியமில்லை. உனக்கு எதில் பிரியம் சற்றுதயைபுரிந்து சொல்லுஎன்றான்.

ஒருத்தி :—மீனைக்கடிப்பதில் அதிகபிரியம் என்று பதில் சொன்னாள்.

உடனே அவன் ஐயோ! நான்தான் மீனாய்ப் பிறந்தேனா என்று வருத்தப்பட்டானாம்.

DECEIVED HERSELF.

**மோசம்போனாள்.**—முப்பது வயதாகியும் தன்னை மணந்து கொள்வாரில்லையே யென்று கிலேசங்கொண்ட மணவாளப்பைத்தியம் பிடித்த ஓர்மாது, ஒரு தினம் பைஸிக்ளில் ஸவாரிசெய்யும்போது, தனக்கெதிராய் ஒரு யௌவன விருஷன் புருவது கண்டு மோகமாகிக்கீழே விழுந்தாள். அப்பெண் வண்டியிலிருந்து விழுந்தது கண்டு அப்புருஷோத்தமன் அவளைத் தூக்கி உபசரித்துவிட்டு 'நங்காய்! எனது மனைவி எனக்காகக் காத்திருக்கிறாள், போவதற்கு விடைகொடு, எனச் சொல்லிப்போயினான். பெண்ணோ பெருமூச்செறிந்து நின்றாள். அந்தவழியாய்ச் சென்ற பாட்டைசாரி ஒருவன், ஏன் விழுந்தாய், என்று கேட்க, என்னைத் தூக்கி உபசாரஞ்செய்த சுந்தர புருஷன் விவாகஞ்செய்தவனென்று அறிந்திருப்பனேயானால் ஒருபோதும் விழுந்திருக்கமாட்டேன் என்றாளாம்.

WEANING CHILDREN.

**குழந்தைகளுக்கு முலைப்பால் நிறுத்துவது.**—குழந்தைகளுக்கு முலைப்பாலை நிறுத்தவேண்டுமானால் திடீரென்று செய்யக்கூடாது. பால் கொடுப்பதை ஸன்னம் ஸன்னமாய் குறைத்துக்கொண்டு வந்து கைத்தீனி கொடுத்துக்கொண்டேவந்ததால் வரவர நாளா வர்த்தியில் பால் தானாகவே வற்றி தாய்க்கு யாதொரு நோவுமிராது.

ஆனால் சில தாய்மாருக்குப் பால் வற்ற வைக்கும் காலத்தில் ஸ்தன்யங்களில் பால் கட்டிக்கொண்டு, ஜுரங்கண்டு அதிக கஷ்டமாயிருக்கலாம். அதற்கு மல்லிகைப்புஷ்பத்தை அல்லது வேப்பிலையை அவைகளின்பேரில் வைத்து இறுக்கிக் கட்டிக் கொண்டால் பால் சுரப்பு நின்று பால் வற்றிப்போகும். இதிலெல்லாம் குணமில்லாவிட்டால் பெல்லடோனா ப்ளாஸ்திரி போட எல்லா உபத்திரவங்களும் நீங்கி சுகமாகும். அதிக நோவாயிருக்குமானால் அந்தக் காலங்களில் பேதிக்குச் சாப்பிடுவதும் நன்று. தண்ணீர் சத்துள்ள எந்த வஸ்துவையும் புசிப்பது உதவாது.

A WIDOW REMARRIAGE.

**ஒரு விதவா விவாகம்.**—ஸமீபத்தில் வண்ணாரப்பேட்டை, சஞ்சீவி ராயன் வீதி 104-நெம்பர் க்ருகத்தில், சேலத்திலிருக்கும் மிஸ்டர் ஸ்ரீநிவாசராகவன் பி. ஏ. க்கும் அவருடைய மாமன் பெண் ஸௌபாக்கியவதி செல்வம் ருக்மணி அம்மாளுக்கும் விவாக முகூர்த்தம் சிறப்பாக நடந்தது. பெண்ணைச்சேர்ந்தவர்கள் சேலத்தில் செட்டி புரத்தைச் சேர்ந்த வைதீக வைஷ்ணவ குடும்பத்தைச் சேர்ந்தவர். தென்னிந்தியாவில் வைஷ்ணவர்களுக்குள் இவ்விதமான விவாகம் இதுவரையில் நடக்கவில்லை.

ASYLUMS FOR THE AGED POOR.

**விருத்தாப்பியரான ஏழைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட மடங்கள்.**—உலகத்தில் இம்மடங்கள் தற்போது 307 உண்டு. அவைகளில் 47,000 வயது சென்ற தரித்திரர் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவைகள் ஏழைகளின் சிறு சகோதரிகள் என்னும் பேர்பூண்ட கன்னியாஸ்திரீகளுடைய ஆதரணையில் இருக்கின்றன. லங்கையிலும் இந்தியாவில் பெங்களூர்முதலிய இடங்களிலும் இவைகளைக்காணலாம். இவைகளில் எந்த மதஸ்தரும் எந்த ஜாதியாரும் ஆணானாலும் பெண்ணானாலும் தள்ளாமைப்பிராயமாகி தரித்திரப்பட்டு வேறு ஜீவனோபாய ஆதரவற்றுப் போன எவரும் அண்டி தஞ்சமடையலாம். இவ்வேழைகளின் ஸம்ரக்ஷணைக்காக ஷை கன்னியர்கள் வீட்டுக்குவீடு சென்றும் வேறுவகையிலும் பிச்சை எடுத்து பணம், சாப்பாடு, துணிமணிமுதலிய எவையும் பெற்று காப்பாற்றிவருகிறார்கள். இச்சபை 1840-ம் வருஷத்தில் ஓர் சிறு ஊரில் அர்ச். செர்வானந்தப்பரால் ஸ்தாபிக்கப்பட்டு 70 வருஷத்தில் இவ்வளவு பரம்பியிருக்கிறது.

EUROPEAN AND HINDU MUSIC.

**ஐரோப்பாவினுடையவும் இந்தியாவினுடையவும்ஸங்கீதம்.**—ஐரோப்பிய ஸங்கீதத்துக்கும் ஹிந்து ஸங்கீதத்துக்கும் வித்தியாஸம் உண்டு. ஐரோப்பிய மாதிரியில் பல சப்தங்கள் இணங்கி ஒலிக்கின்றன. ஹிந்து ஸங்கீதத்தில் ஒரே வாத்தியம் அல்லது ஒரே பாடகன் இன்னிசையால் கேட்போரைப் பிரியப்படுத்துகிறான். ஐரோபியர் ஸங்கீதத்தை லௌகிக ஸுகத்துக்காக உபயோகப்படுத்துகிறவர்களான படியால், அதில் பெருங்கூச்சல்கள் பல இணங்கி மனலை உற்சாகப்படுத்திக் கிளப்பி விடுகின்றன. ஹிந்து ஸங்கீதத்திலோ தெய்வ ஆராதனை முக்கியமானதால் மனதை சாந்தப்படுத்தி நிலைநிறுத்தும் ஸ்வபாவமுள்ள இன்னிசை முக்கியமாயிருக்கிறது. ஐரோப்பிய ஸங்கீதம் பல சுறுசுறுப்புகளும் கவலைகளும் ஒன்றாய்க் கலக்கும் பகல் போலவும், ஹிந்து ஸங்கீதம் இந்த சுறுசுறுப்புகளையும் கவலைகளையும் விட்டு மனதை நிச்சலப்படுத்தும் இரவு போலவும் இருக்கின்றன. நமது ஸங்கீதம் அதை அனுபவிக்கிறவனை அந்தந்த தினத்துஸுக துக்கங்களிலிருந்து விலக்கி, கண்ணுக்குப் புலப்படும்படியான ஜகத்தைத்தாண்டியுள்ள தனியான ஆத்ம லோகத்துக்குக் கொண்டு போகிறது.

A MAN WITH 35 BOYS.

**35 பிள்ளைகளைப் பெற்றவன்.**—அமெரிக்காவில் ஒட்டேவா பட்டணத்துக்கு ஸமீபத்திலுள்ள ஹல் பட்டணத்தில் குருல்ஸ என்ற ஒருவன் இறந்து போனான். க்யூபெக் மாகாணத்திலாவது, கனடா தேச முழுவதிலுமாவது அவனுடைய குடும்பந்தான் மிகப் பெரியதென நிச்சயமாய்ச் சொல்லலாம். அவனுக்கு 35 பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் இறந்துபோனவர்கள் போகத் தகப்பன் மரணத்தின்போது 24 பேர் அவன் சவச்சடங்குக்கு வந்திருந்தார்கள். அவன் ஒட்டேவா பட்டணத்துக்கு வந்தபோது அதன் பேர் பைட்டவுன் என்றிருந்தது. அங்கு அவன் முதலில் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான். அவள் ஒரு பிள்ளையை மாத்திரம் விட்டுவிட்டு வெகு சீக்கிரத்தில் காலகதியடைந்தாள். பிறகு வேறோர் பெண்ணை மணந்து கொண்டான். அவள் 21 பிள்ளைகள் பெற்றாள். 20 வருஷங்களுக்கு முன் அவள் இறந்து போகவே மூன்றாம் முறையும் அவன் ஒருத்தியை மணம்புரிந்தான். இவள் 13 பிள்ளைகள் பெற்றாள். குருல்ஸ தன்னுடைய பாரி குடும்பத்தைப் பற்றிப் பெருமையும் பாக்கியமுமுள்ளவனாயிருந்தான். அவனுடைய குமாரர்கள் அனேகர் கலியாணமாகித் தங்கள் தகப்பனைப்போல ஸந்தான விர்த்திரிள்ளவர்களாய் இருக்கிறார்கள்,



# DEPARTMENTAL NOTES.
# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்.

MANGO.

**மாம்பழம்.**—ஸிலோனிலுள்ள கொழும்புத் துறை முகத்தில் கல்கத்தாவிலிருந்து கொண்டு வந்து வைத்து வளர்த்த மாமரமொன்று 5-ராத்தல் நிறையுள்ள ஒரு கனியைத் தந்தது.

LEAVES OF THE KALYANA MURUNGAI.

**முருங்கத்தழை.**—கும்பகோணத்தில் ம-ா-ா-ஸ்ரீ கடலங்குடி சீதாராமய்யர் கலியாண முருங்கத்தழையைப் பசுமாட்டுக்குத் தீவனமாக்கி ஒரு சேர்கறந்த பசு எட்டுச்சேர் கறந்ததாம். பால் தடிப்பாயிருந்ததுடன் வெண்ணெய் அதிகம் கிடைத்தது.

TURNS IN THE CAUVERY.

**காவிரியாற்றுக்கு முறைஜலம்.**—காவிரியாற்றுக்கும் அதன் கிளைகளுக்கும் முறைஜலம் விடுவதில் மராமத்து இலாகா ஸம்பந்தப்பட்டவரையில் முறைதினத்தையும், அதன் மாறுதலையும், அதன் சம்பந்தமாய் குறைகள் ஏற்பட்டால் அவைகளை யாருக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதையும் பற்றி கவர்ன்மெண்டார் டிஸ்டிரிக்ட் கெஜட்டில் பிரசுரிப்பார்கள்.

DIRECTOR OF AGRICULTURE.

**விவஸாய டைரெக்டர்.**—விவஸாய டைரெக்டரான மிஸ்டர் கௌச்மன் துரையவர்கள் ஆகஸ்டு௴ 8௳ முதல் ரஜாவில் போயிருக்கிறார். அவருக்குப் பதில் மிஸ்டர் ஜி. ஏ. டி. ஸ்டேவர்ட் துரையவர்கள் இப்போது வேலை பார்த்து வருகிறார். அக்டோபர் மாதம் மிஸ்டர் சாட்விக் துரையவர்கள் வந்தவுடனே அவர் டைரெக்டர் வேலையை காயமாய் பார்ப்பாராம்.

MIXTURE IN CAMBODIA COTTON.

**கம்போடியாப் பருத்தியில் கலப்பு.**—கம்போடியாப் பருத்தியில் இதர பருத்திச் செடிகளிருந்தால் அதை உடனே பிடுங்கிவிட வேணும். ஏனெனில், வேறு பருத்தி கலந்திருந்தால் கம்போடியாப் பருத்தி விலை குறைந்துவிடும்.



பருத்தியை நன்றாய்க் காயவைத்து பிற்பாடு அடக்கம் செய்யவேணும். பருத்தியில் ஈரமிருந்தால் பஞ்சு கெட்டுப்போம். பருத்தியின் விலை குறையும்.

ஜுலை மாதத்திற்குள் பருத்திச் செடிகளை ஒன்றில்லாமல் பிடுங்கி அப்புறப் படுத்திவிட வேணும். இல்லாவிடில் பருத்திச் செடிகளிலிருந்தபூச்சிகள் அவைகளில்வாஸம் செய்துகொண்டிருந்துமறுவருஷம் விதைக்கும் பருத்திச் செடிகளை நாசப்படுத்தும். பருத்திச் செடியே இல்லாமல் இரண்டு மாதகாலம் செய்துவிட்டால் பூச்சிகளுக்கு தங்குமிடமில்லாமல் நாசமடையும். அதனால் அடுத்த வருஷத்திய பருத்திச் செடிகளுக்கு சேதம் வாராது.

HARVEST TIME.

**அறுவடை காலம்.**—

நல்ல செய்நேர்த்தியில் காய்க்க வேண்டிய நாள்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| குத்துபீன்ஸ் | 40 | முதல் | 50 | நாள் |
| கொடிபீன்ஸ் | 60 | ,, | 90 | ,, |
| பீட் | 60 | ,, | 75 | ,, |
| காபேஜி | 90 | ,, | 190 | ,, |
| காரெட் | 69 | ,, | 75 | ,, |
| காலிப்ளவர் | 100 | ,, | 150 | ,, |
| ஸெலரி | | | 150 | ,, |
| மக்காச்சோளம் | 70 | ,, | 90 | ,, |
| வெள்ளரி | 60 | ,, | 80 | ,, |
| கத்திரி | | | 120 | ,, |
| லெடூஸ் | 60 | ,, | 90 | ,, |
| மலாம்பழம் | 80 | ,, | 90 | ,, |
| கடுகு | | | 35 | ,, |
| வெண்டை | | | 70 | ,, |
| வெங்காயம் | 120 | ,, | 130 | ,, |
| பட்டாணி | 60 | ,, | 70 | ,, |
| மிளகாய் | 100 | ,, | 120 | ,, |
| உருளை | 85 | ,, | 100 | ,, |
| முள்ளங்கி | 25 | ,, | 35 | ,, |
| சுரை (கோடை) | | | 60 | ,, |
| சுரை (மாரி) | | | 120 | ,, |
| வசலை | 50 | ,, | 60 | ,, |
| டொமாட்டோ | 110 | ,, | 120 | ,, |
| டர்னிப் | 60 | ,, | 90 | ,, |

POTASH.

**போட்டாஷ்.**—பயிர் வளருகிறதற்கு நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ், சுண்ணும்பு ஆகிய இந்த இந்திரிய வஸ்துக்கள் அவசியம். களிமண் நிலங்களில் அநேகமாப் பொட்டாஷ் நிரைந்திருக்கும். மணல் பாங்கான நிலங்களில் பொட்டாஷ் குறைவாயிருக்கும்.

AMERICAN COTTON.

**அமெரிக்கா பருத்தி.**—பின்னுல் சொல்லும் பல காரணங்களால் நமதுதேசத்தில் அமெரிக்கா தேசத்துப் பருத்தி விருத்தி யடைவதில்லை.

1. நமது தேசத்துப் பருத்தியைப்போல் இப் பருத்திகள் அடிபாடு தாங்குவதில்லை. அதாவது கொஞ்சம் தண்ணீர்த்தட்டு உண்டாகிவிட்டாலும் அல்லது அதிக மழை பெய்துவிட்டாலும் இப் பயிர்கள் நமது தேசத்துப் பருத்தியைப்போல் ஸரியாய் மகசூல் கொடுப்பதில்லை.

2. நாளாவட்டத்தில் நமது சீதோஷ்ண பேதங்களுக்குப் பழக்கப்பட்டபின் ஸரியாய் வந்துவிடும் என்று நினைப்பதற்கும் ஹேதுவில்லை. ஏனென்றுல் வருஷத்திற்கு வருஷம் அந்தத்தினுஸின் குணங்கள் மாறி திரண்டு உருண்டிருக்கும் காய்கள் சிறுத்தும், இழையின் நீளம், இருக்க இருக்க குறைந்தும் பலஹீனம் அடைந்தும், விதைகள் சிறுத்தும், பஞ்சின் இடை குறைந்தும், வர்ணம் மாறியும் போகிறது.

3. ஸாதாரணமான நமது தேசத்துப் பருத்திகளில் புழுப்பூச்சிகளும் நோய் நொடிகளும் விழுவதைவிட இப்புது தினுஸுகளில் புழுப்பூச்சிகளும் நோய்நொடிகளும் அதிகமாய் விழுகின்றன.

4. நமது தேசத்துப் பருத்திக்கு ஸாதாரணமாய் தண்ணீர் இறைப்பு வேண்டியதில்லை. ஆனல், அமெரிக்கா தேசத்துப் பருத்திக்குத் தண்ணீர் இறைக்கவேண்டியது அவசியமாகிறது ஏனென்றுல் நமது தேசத்துப் பருத்தியைப்போல் அமெரிக்கா தேசத்துப் பருத்தியின் வேர்கள் பூமிக்குள் ஆழமாய் இறங்குவதில்லை.

5. நமது தேசத்துப் பருத்தி விதைக்கும் கரிசல் காடுகளில் அமெரிக்கா தேசத்துப் பருத்தி உண்டாவதில்லை. ஏனென்றுல் அவைகளுக்குத் "தண்ணீர் வடிந்துபோகக்கூடிய" படுகைநிலம் அவசியம்.

BONE MEAL.

**எலும்புப்பொடி.**—கோயமுத்தூர் விவசாயக் காலேஜில் கெமிஸ்ட் அதாவது ரஸாயன உத்தியோகம் செய்யும் மிஸ்டர் டப்ள்யூ. எச். ஹாரிஸன் என்பவர் எலும்புப்பொடி பயிருக்கு உரமென்பதைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிருர். எலும்புப்பொடி பல்லுகளுள்ள உருளைகளால் செய்யப்பட்ட சல்லடைகளால் சலித்து ஸன்னமாக்கப்படுகிறது. இது உரமாக மதிக்கப்படுவது அதன் ஸன்னத்தைப் பொருத்தது. எலும்பைப் பொடியாக்குவதில் அதை முன்னதாகக் கொதிக்கும் ஜலத்தில் போட்டு அதிலுள்ள மஷ்செளைப் போக்கிப் பிறகு பொடியாக்கலாம். இந்த எலும்புப்பொடி வேறு பொருள்கள் கலந்திருக்காமல் சுத்தமாயிருக்கவேண்டும். ஆனல் இந்தப் பொடியோடு மற்ற எருக்களையும் கலந்து உபயோகப்படுத்தலாம். ஒரு ஏகராவுக்கு இந்த எரு இவ்வளவு வேண்டுமென்று பூமியின் ஸாரத்தைப் பற்றியும், செய்யப்படும் பயிரைப்பற்றியும், நிச்சயம் செய்யவேண்டும். அனுபோகமுள்ளவர்களே அப்படி நிச்சயிக்கவேண்டும். இந்த எலும்புப்பொடி பூமியில் மட்கி பிறகு, பயிர்கள் போஷிக்கப்பட வேண்டுமானதால் இது மெதுவாய்த்தான் வேலை செய்யும். இது ஈரமுள்ள நன்செய் நிலத்துக்குப் பிரயோசனப் படுமே யல்லாமல் காய்ந்த புன்செய் நிலத்துக்குப் பிரயோசனப்படாது. இந்த நன்செய் நிலத்தில் எலும்புப் பொடியின் வேலை இரண்டு மூன்று வருஷத்தில் தெரியும். கிருஷ்ண ஜில்லாவில் நன்செய் நிலத்துக்கு இந்த எருவை உபயோகப் படுத்தி நல்ல பலன் கிடைத்திருப்பதாகக் கவர்ன்மெண்ட் சோதனையால் தெரிகிறது. இதைப் பற்றின விவரங்கள் வட டிவிஷனிலுள்ள விவஸாய டிப்டி டைரக்டரைக் கேட்டால் சொல்லுவார். இந்தப் பொடி செய்யும் யந்திரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் சென்னையிலுள்ள தொழில் டைரெக்டருக்குஎழுதித் தெரிந்து கொள்ளலாம். சென்னை பாரி கம்பெனியார் எலும்புப் பொடி செய்து விவசாயிகளுக்கு விற்கிருர்கள். இவர்கள் ராணிப்பேட்டையில் எலும்புப் பொடி செய்யும்ஒரு பெரும் சாலையைஸ்தாபித்திருக்கிருர்கள்.



## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

INDUSTRIES AND THE ROYAL FAMILY.

**ராஜ வம்சமும் கைத் தொழிலும்.**—காலஞ்சென்ற எட்வர்ட் சக்ரவர்த்தியாருக்குப் பூட்ஸ் திறமையாகச் செய்யத்தெரியுமாம்; அழகாகச் சித்திர மெழுதவுந் தெரியுமாம். அவருடைய ஸகோதரிகளுள் ஒருவருக்குக் கண்ணுடி செய்யத் தெரியுமாம்; மற்றொருவருக்கு விசிறிசெய்யத் தெரியுமாம்; இன்னொருவருக்குப் புக் பயிண்டு செய்யத் தெரியுமாம்.

UNBUSINESS LIKE PEOPLE.

**காரியவாதிகளல்லாதவர்கள்.**—1. வருமானத்துக்கு மேல் செலவு செய்பவர். செலவுக்காக அதிக வட்டிக்குக் கடன் வாங்குபவர்.

2. ஏதோ விசேஷ லாபம் வந்து விடுமென்று சில கம்பெனிகளில் பணத்தைப் போடுபவர்.

3. சிநேகிதர்களுக்கும் பந்துக்களுக்கும் ஜாமீன் கொடுப்பவர்.

A USEFUL INSECT.

**ஒரு உபயோகமான பூச்சி.**—இது அமெரிக்காக் கண்டத்திலுள்ள மெக்ஸிகோ தேசத்திலும் சில தீவுகளிலுமிருக்கிற சிலவிதமான கள்ளிச் செடிகளின் மேலிருக்கும் ஒரு பூச்சி. அதைக் காயவைத்துப் பொடி செய்து தண்ணீரிற் கலந்தால் நல்ல சிவப்புச் சாய மாகிறது.

DEPARTMENT OF INDUSTRIES.

**தொழில் இலாகா.**—இந்த ராஜதானியில் தொழிலிலாகா ஸ்தாபிப்பதைப் பற்றி அது கூடாதென்று லார்டு மார்லி செய்த உத்தரவை மறுபடியும் ஆலோசனை செய்து, உதகமண்டலத்தில்கூடின தொழில் கான்பரென்ஸில் செய்யப்பட்ட சிபார்சின்படி இந்த ராஜதானியில் தனியான தொழிலிலாகா ஸ்தாபிக்கும்படி சென்னை கவர்ன்மெண்டார் இந்தியா ஸெக்ரிடெரியைக் கேட்கவேண்டும் என்று ஸமீபத்தில் கூடிய மதராஸ் ப்ரொவின்ஷியல் கான்பரென்ஸில் தீர்மானம் செய்யப்பட்டது.

THE MADRAS DYEING EXPERT.

**சென்னையில் சாய நிபுணர்.**—சாயத்தில் இரண்டு விதம் உண்டு. இதுவரையில் தேசத்திலேயே உண்டாகி வரும் மரச்சாயம். ஒன்று. இரண்டாவது ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியாகும் செயற்கைச்சாயம். இந்த செயற்கைக் சாயம் பகட்டாயும் மலிவாயுமுள்ளது. மரச்சாயமோ சற்று மங்கலாயிருந்தாலும் போகப்போகப் பிரகாசமாகி வெகு நாள் அழியாமலிருக்கும். இப்போது அன்னிய தேசங்களிலிருந்து சாயத் துணிகள் அதிகமாய் இறக்குமதியாகின்றன. இவைகளின்சாயம் செயற்கைச் சாயமாயும் மலிவாயும்பகட்டாயும் இருப்பதால்அவைகளை ஏழை ஜனங்கள் அதிகமாய் வாங்கி உபயோகிக்கிருர்கள். இப்போது கவர்ன்மெண்டாரால்தருவிக்கப் பட்டிருக்கும் சாயநிபுணர் இம்மாதிரியான சாயத் துணிகளை நம்தொழிலாளிகள்செய்யக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

MANUFACTURE OF SUGAR CANDY.

**கற்கண்டு செய்யும் விதம்.**-ஸிந்து மாகாணத்தில் தங்களுக்குத் தேவையான கற்கண்டை பின் வருமாறு தயார்செய்து கொள்கிருர்கள். சர்க்கரை கிடைக்கும்தேசங்களிலெல்லாம் கற்கண்டைத்தயார் செய்வது ஸுலபமென்று தெரிகிறது. பெரிய கங்காளத்தில் 33 சேர் சர்க்கரையும் 17 சேர் ஜலமும் போட்டு நன்ருய்க் காய்ச்சவேண்டும். சர்க்கரை கரையத் தொடங்கினதும் அதில் மிதக்கும் குச்சி, தூசிகளை எடுத்தெரியவும். பாகு கொதி வருவதற்கு முன் அரைப்படி பாலையூற்றினல் சர்க்கரையிலுள்ள அழுக்கு மிதந்துவரும். அதைச் சிறுதும் விடாமலெடுத்துப் பாகு வந்ததும் எந்தப்பதம் வேண்டுமோ அந்தப் பதத்தில் இறக்கிக் கொள்ளவும். பாகுவரும் முன் அதைக்கொட்ட மண்சட்டிகளை ஸித்தமாய் வைத்திருந்து அச் சட்டிகளை 3 நாள் தண்ணீரில் ஊறப்போட்டு அவைகளை எடுத்து வரிசையாய் வைத்து மூங்கில் குச்சிகளை அவைகளின் வாயில் குறுக்கே கட்டவும். மூங்கில் குச்சியில் நூல் துண்டுகளைக்கட்டி அடியில் பசையால் நூலை ஒட்டித் தயார் செய்திருக்கவேண்டும். அவைகளில் பாகை ஊற்றி ஒரு வாரம்வரையில் வைத்திருப்பது அவசியம். பிறகு சில தினங்கள்வரையில் கற்கண்டுச்சட்டிகளை வெயிலில் வைக்கவும். இந்த வேலைகள் முடிந்த பிறகு கலயங்களை உடைத்தால் கற்கண்டு கிடைக்கும்.

## EDUCATIONAL NOTES.

## வித்யாவிஷயக் குறிப்புகள்.

EDUCATION IN JAPAN.

**ஜப்பானில் படிப்பு.**—ஒருகுடித்தனத்தில் படிக்கத் தெரியாமல் ஒருவன்கூட இருக்கக்கூடாது. ஒரு ஊரில் படிக்கத் தெரியாத குடும்பம் ஒன்றுகூட இருக்கக்கூடாது. இவைகள் ஜப்பான் தேசத்து அரசனுடைய கொள்கை.

EDUCATION IN CHINA.

**சைனாவில் படிப்பு.**— சைனாவிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு ஹைஸ்கூலும் ஒரு நார்மல் ஸ்கூலும் கட்டாயம் இருக்கவேண்டுமாம். ஒவ்வொரு மாகாணத்தலைப்பட்டணத்திலும் ஒரு முதல்தர நார்மல் ஸ்கூல் இருக்கவேணுமாம். இப்பொழுது நூற்றுக்கு ஒருவருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும். மேலே சொல்லிய ஏற்பாடுகளால் இன்னும் பத்து வருஷத்தில் நூற்றுக்கு 25 பேருக்குப்படிக்கத் தெரிந்துவிடும்.

A NEW METHOD OF EDUCATION.

**படிப்பிக்கும் புதுமுறை.**- ஸெர்வியா தேசத்து உபாத்தியாயரொருவர் சிறுவர்களுக்கு விரைவில் வாசிப்புப்பழக்குவதற்கு ஒரு புதுவகை கண்டுபிடித்துக்கையாடிவருகிறார். அதற்காக அவர் சாக்கலேட் என்னும் இனிப்புப் பதார்த்தத்திலே எழுத்துகள் செய்துவைத்திருக்கிறார். பிள்ளைகள் தம்தம் பெயருக்கு எழுத்துக்கூட்டி அவைகளைச் சேர்த்து வரிப்படுத்திப் பெயர்காட்டும்போது, அதிலமைந்த சாக்கலேட் முழுவதையும் உபாத்தியார் அவ்வப்பிள்ளைக்கு வெகுமதியாகக் கொடுத்துவிடுகிறார். இனிப்புத் தின்னும் ஆசையால், மாணாக்கர் அதிக சுறுசுறுப போடுங் கவனத்தோடும் எழுத்துக்களை விரைவிற் பழக்கிக்கொள்ளுகிறார்களாம்.

AN INDUSTRIAL SCHOOL AT KATPADI.

**காட்பாடியில் ஒரு தொழிற் பள்ளிக்கூடம்.**—ஆர்க்காட் மிஷன் அதிகாரிகள் சிறிது காலமாய் ஆரணியில் நடத்திவரும் தொழிற் பள்ளிக்கூடத்தை அடுத்த ஜனவரிமாதம் முதல் காட்பாடிக்குக் கொண்டுபோய் விடப்போகிறார்கள். ஆனரெபில் மிஸ்டர் சாட்டர்ட்டனுடைய அபிப்பிராயத்தை அவ்விஷயமாய் அவர்கள் கேட்க, அவர் ஆரணியை விட காட்பாடி ஒரு தொழிற் பள்ளிக்கூடத்துக்கு ஏற்ற நடுவிடமாகுமென்று சொல்லி மிஷன் அதிகாரிகளை தைரியப் படுத்தினதாகத் தெரிகிறது. காட்பாடியில் கட்டிடங்கள் கட்டி முடிந்து வருகின்றன. காட்பாடிக்கு அப்பள்ளிக் கூடம் கொண்டு போகப்பட்ட பிறகு அதில் விவஸாயக் கல்வியும் சிறிது சொல்லிவைக்கப்படும். மிஷன் அதிகாரிகள் அப்பள்ளிக் கூடத்தையொட்டிஒரு விவஸாயப் பண்ணையும் ஏற்படுத்தப் போகிறார்கள்.

AGRICULTURAL EDUCATION.

**விவஸாயக் கல்வி.**—விவஸாய இன்ஸ்பெக்டர் ஜெனரலாகிய மிஸ்டர் பெர்னார்ட் கவென்ட்ரி என்பவர் விவஸாயத்தைப் பற்றி அவர் எழுதியிருக்கும் ரிப்போர்ட்டில், இந்தியாவிலுள்ள பற்பல விவஸாய காலேஜ்களைப் பற்றி எழுதியிருக்கிறார். இந்தியாவில் ஆறு காலேஜ்கள் இருக்கின்றன. கோயமுத்தூர், புனா, நாகப்பூர், கான்பூர், லயால்பூர், ஸபூர் இவைகளைத் தவிரப் பூஸா என்ற இடத்தில் விவஸாய ஸம்பந்தமான உயர்ந்த படிப்புச் சொல்லி வைக்கப்படுகிறது. மற்றக் காலேஜ்களில் வாசித்துத் தேர்ந்த பிள்ளைகள் ப்பூஸாவுக்குப் போய் அங்கே உயர்ந்த படிப்புப் பெறலாம். இந்த ஆறு காலேஜ்களில் புனாக் காலேஜில் விவஸாயிகள் நல்ல படிப்புப் பெறுவதாகச் சொல்லப்படுகிறது. பம்பாய் யூனிவர்ஸிடியார் சில புதுப்படிப்புகள் சொல்லி வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாகையால், அந்தக் காலேஜில் பிள்ளைகள் அதிகமாய் படிக்க வந்து, நன்மை பெறுகிறார்கள். இப்போது 110 பிள்ளைகள் படிக்கிறார்கள். புனா காலேஜைத் தவிர அந்த ஊரில் வேறு விவஸாய ஸ்கூல் ஒன்றிருந்து விவஸாயிகளுக்குஅவசியமான கீழ்த்தரப் படிப்புச்சொல்லிவைக்கப்படுகிறது. இதுவல்லாமல்தேசபாஷையில் நடத்தப்படும் ஸ்கூல் ஒன்று ஏற்பட்டு, அதில் விவஸாயிகள் படிப்புப் பெற்று வருகிறார்கள். ஸிந்து மாகாணத்தில் ஒரு ஸ்கூல் ஸ்தாபித்து, அங்கே 18 மாஸம் படிப்புச் சொல்லிவைத்து ஜமீன்களை மேல் விசாரணை செய்யவும், சொந்தத்தில் பண்ணைகள் வைத்து நடத்தவும், சக்தியுள்ளவர்களைத் தயார் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



THE FRUITS OF EDUCATION.

**கல்வியின் பயன்.**—கல்கத்தாவில் மாணவர்கள் கூட்டமொன்றில் அங்குள்ள ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸ் ஸர் லாரென்ஸ் ஜென்கின்ஸ் பேசினபோது, கல்வியின் பயன் இன்னதென்று பின்வருமாறு சொன்னார் :—" கல்வியின் பிரயோசனம் உங்களை அகராதிகளாக்கவும் ஸர்வக்ஞானக் கோசங்களாக்கவும் அல்ல ; ஒரு பெரிய ராஜ்யத்தின் பிரஜைகளாகும்படி நீங்கள் வளர்ந்து, அதற்குற்ற உத்தமமான உணர்ச்சியை யுண்டாக்குவது—ஹ்ருதயத்திலும் சரீரத்திலும் திடனுள்ளவர்களாயும் தெய்வத்துக்குப் பயப்படுகிறர்களாயும் யோக்கியர்களாயும் நீதிசீலர்களாயும் புத்தி விசாலம் உள்ளவர்களாயும் செய்வது. எல்லாவற்றிற்கும் மேலாக, கல்வியின் முக்கியமான ப்ரயோஜனம் உங்களுடைய ஜீவியத்தைத் தாங்கும் தூண்களாக ஸத்தியமும் தைரியமும் ஆகவேண்டுமென்பது."

ELEMENTARY EDUCATION IN THE PUNJAB.

**பஞ்சாபில் கீழ்த்தரப் படிப்பு.**—பஞ்சாப் மாகாணத்தின் முக்கிய ஸ்தலமாகிய லாகூர் பட்டணத்தில் ஆனரபில் மிஸ்டர் கோகலேயின் மசோதாவைப் பற்றி மிஸ்டர் ஹரிகிருஷ்ண லாலின் அக்கிராஸனத்தின் கீழ் ஸமீபத்தில்ஒருபொதுக்கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் முக்கியமாய்ப் பேசினவர் லாலா லஜபதிராய். அவர் ஹிந்துக்கல்விச்சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று பிரேரணை செய்து பேசினார். ஹிந்துக்களுக்குத் தனியானசங்கம் ஸ்தாபிப்பது மகமதியர்களிடத்திலுள்ள விரோதத்தினால் அல்ல. இரண்டு வகுப்பினரையும் சேர்த்து நடத்துவதாலுண்டாகும் கஷ்டங்களால் என்றார். கீழ்த்தரப்படிப்புக் கட்டாயமானால் வேலைக்காரர்கள் கிடைக்கமாட்டார்களென்று ஆட்சேபிப்பவர்களைக் கேலிசெய்து எவரும் மற்றவர்களுக்குப் படிப்பில்லாமல் தடுக்க நியாயமில்லையென்றார். கோக்லேயின் மசோதா நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் கவர்ன்மெண்ட் ஸகல ஜனங்களுக்கும் படிப்புச் சொல்லி வைப்பதாகக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதன்படி நிறைவேற்றுவதில் தாமஸம் நேரிடாது. லாகூர் ஹிந்து கல்விச் சங்கத்துக்கு மிஸ்டர் ஹரிகிருஷ்ணலால் ப்ரெஸிடெண்டாயும், லாலா லஜபதிராய் ஸெக்ரிடெரியாயு மிருப்பார்கள். இந்தச் சங்கம் மூன்று வருஷம் நடைபெற்று 30,000 ரூபாய் செலவுக்கு வேண்டியிருக்கும். இந்தத் தொகையில் 15,000 ஏற்கெனவே கிடைத்துவிட்டது. பாக்கித் தொகைக்கு லாலா லஜபதிராய் ஜனங்களை வேண்டிக்கொண்டார். இவர் இன்னொன்றும் சொன்னார். கீழ்த்தரப்படிப்பை நடத்துவது நாகரி லிபிமூலமா யிருக்கவேண்டுமென்றும் அந்த லிபி மற்ற லிபிகளைவிடக் குறைவற்றதென்றும் சொன்னார்.

TECHNICAL SCHOLARSHIPS.

**தொழிற்கல்வி ஸ்காலர்ஷிப்புகள்.**—இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியச்சிறுவர்கள் ஐரோப்பாவுக்குப்போய் தொழிற்படிப்புப்படித்துவர 10 ஸ்காலர்ஷிப்புகள் உத்தரவு செய்திருக்கிறார்கள். ஸ்காலர்ஷிப்புகள் பெற்றவர்களின் பெயரும் அவர்கள் கற்கப்போகும் தொழில்களும் பின்வருமாறு :—

| ஸ்காலர்ஷிப்பு பெற்றிருப்போரின் பெயர். | தொழிலின் பெயர். |
|---|---|
| எம். வி. வீதாராமன் | நெசவுத் தொழில். |
| எச். ஸக்காராம் ராவ் | டெக்ஸ்டைல் மானுபாக்ச்சர் அதாவது துணிமுதலியன நெய்தல். |
| பி. வி. மாற்றட் | தோல் பதனிடு உபகரணங்களைச் செய்வதும் அவைகளைத் தோல் பதனிடுந் தொழிலில் உபயோகிப்பதும். |
| எச். டி. பென்னட்<br>பி. பி. ராய் | மெக்கானிகல் அண்ட் எலெக்டரிகல் இஞ்சினீரிங்கு. |
| சந்திர ஸ்ரீவஸ்தவா | சர்க்கரை செய்தல். |
| அபிநாஷ் சந்திர தத்தா | பட்டு நெய்தல், சாயமேற்றுதல் முதலியன. |
| குலாமலி மகமது | எண்ணெய் இறக்குதல், கொழுப்பு இறக்குதல் முதலியன. |
| மிஸ்டர் கே. என். மத்தண்ணா | மெக்கானிகல் எஞ்சினீரிங்க். |
| ராம்லால் | பருத்திநூல் நூற்றலும் நெய்தலும். |

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

WHITE CLOTH.

**வெள்ளைத்துணி.**—தலைக்கட்டு, கொடை உறை ஆகிய இவைகளுக்கு வெள்ளைத்துணியையே உபயோகப்படுத்தவேண்டும். இது உஷ்ணத்தை எளிதில் ஏற்று ஊடுருவிப்பரவ விடாது. கருப்புத்துணியும் வஸ்துவும் அவ்வாறல்ல. வெயிலில் அலைந்து நிழலில் வந்ததும் தலைமயிரைத் தொட்டுப்பார்த்தால் அது நன்றாகக் கொதிப்பதே இதற்கு உதாரணம். தேஹத்தின் மற்றையபாகங்கள் அவ்வளவு சூடாகவிரா.

TYPEWRITER FOR ADDING.

**தொகைகளைக்கூட்டுவதற்கு டைப்ரைட்டிங் மிஷின்.**—ரெமிங்டன் டைப்ரைட்டிங் கம்பெனியார் தொகைகளைக் கூட்டுவதற்காக ஒரு டைப்ரைட்டிங் மெஷின் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது வரையிலும் உள்ள யந்திரங்கள் தொகைகளைக் கூட்டுவதற்கு உபயோகமில்லாமல் இருந்தன. இந்த மிஷினில், தொகை கூட்டுவதும் எழுத்து அடிப்பதும் இரண்டும் கூடும். இந்த யந்திரத்திலுள்ள சில கம்பிகளை மாற்றுவதால் எவ்வளவு பெரிய தொகையானாலும் கூட்ட முடியும். இந்தக் கம்பிகளை வேறுவிதமாய் மாற்றினால் தொகைகளைக் கழிக்கவும் முடியும். வேறுவிதமாக மாற்றினால் எழுத்து அடிக்கவும் முடியும். தொகைகள் தப்பாயிருந்தால் மணியடித்துத் தப்பு என்று தெரியபடுத்துகிறது.

DISEASES OF PRECIOUS STONES.

**ரத்தினங்களின் வியாதி.**—நவ ரத்தினங்களில் வைரத்திற்கு மாத்திரம் வியாதி வருகிறதில்லையாம். மற்றவைகளுக்கெல்லாம் வியாதி அடிக்கடி வருகின்றனவென்றும், அதை குணப்படுத்ததான் வல்லவனென்றும், உலாந்தா தேசத்தில் மிகவும் கீர்த்திபெற்ற கல் வியாபாரியொருவன் சொல்லுகிறான். கெம்பு, நீதம், முத்து இவைகள் மூன்றுக்கும் வெவ்வேறு தினுசு வியாதிகளுண்டாம். விலையேறப்பெற்ற கற்கள் தங்களைச் சுற்றியிருக்கும் பொருட்களின் குணத்துக்கேற்றபடி வியாதியாகின்றனவாம். அவ்வியாதிகளைப் போக்கப் புளிப்பேறின திராவகங்களில் அவைகளைக் குளிப்பாட்டவேண்டுமாம். ஆனால் அத்திராவகங்கள் கூட்டுமுறை யாவருக்கும் தெரிந்ததல்ல. ஆகையால் அதில் பண்பட்டவர்களிடத்தில் வியாதிப்பட்ட ரத்தினங்களைக் கொடுத்து பரிகாரம் செய்துகொள்ளவேண்டுமாம். எல்லாவற்றையும் விட முத்துதான் சீக்கிரம் கெட்டுப்போகிறதாம். ஏனெனில் அதற்கு வயது மகா சொற்பமாம். அழகிய பலவித வர்ணங்கள் அதன் மேல் பிரதிபலிக்க அடிக்கடி விட்டுவிட்டால் அது ஜல்தியில் பழசாகி, விலையில் அதிகமாய்க் குறைந்து போகுமாம்.

MANGO.

**மாம்பழம்.**—நல்ல மாம்பழங்களை அறுக்கும் காலத்தில் உயிருடன் வண்டுகள் வெளிவருவதைக் காண்கிறோம். வெளிப் பார்வைக்குப் பழத்தில் யாதொரு துவாரமுமில்லாமல் இருக்கிறது. அப்படியானால் வண்டுகள் எவ்விதம் அவைகளுக்குள் நுழைந்தன?

மாமரங்கள் புஷ்பிக்கும் காலத்தில் வண்டுகள் புஷ்பங்களிலுள்ள தேனை உண்ண நாடுகின்றன. கருத்தரித்த பெண் வண்டுகள் கருவை வைக்க இடம் தேடுகையில், நல்ல ஜாதி மாங்கனியுண்டாகும் புஷ்பங்களை நாடி அவைகளில் காய் பூ (பெண் பூ) க்களில், கருவை வைத்துவிடுகின்றன; பின்பு காய் பருத்துப் பழமாகிறது. அக்காயில் உள்ள விதைக்குள் முன்வைக்கப் பெற்ற வண்டின் கரு முதன்மையில் முட்டை வடிவமாக இருந்து, பின்பு புழுவாகி, அப்புழு, மா வித்தின் சில பாகத்தை உண்டு விருத்தியடைந்து, குளவி போன்ற ஒட்டுப்புழுவாகி அந்நிலையில் கொஞ்ச காலம் தங்கி, பின்பு இறகுகள் அமைய, பறக்க சந்நத்தமாகிவிடுகிறது. மாங்காயாக இருக்குமளவில், அது பறந்து வெளியேறி வரக்கூடாமையாக இருக்கிறது; பின்பு காய் கனியாகவே அதை லகுவாய்த் துளைத்துக்கொண்டு வெளியேறுகிறது. சில ஸமயம் பழுத்தும் பழக்காமலுமிருக்கும்பொழுது மாம்பழத்தை அறுத்தோமானால், அதிலிருந்து, தன் சிரமமின்றி, இந்த வண்டுவெளியேறுகிறதைக் காணலாம். வண்டு மாம்பழம் எல்லாம் அதிக ருசியாக இருக்கும். ஆகவே, வண்டு உள்ள பழம் என்பது, அப்பழத்தின் நலத்தைக் காட்டும்.



## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

CURE FOR DRINKING.

**மதுபான விருப்பத்தை மாய்க்கும் மருந்து.**—மதுபான விருப்ப முடையவர் ஆப்பீல் என்னும் சீமை இலந்தைப் பழத்தைச் சாப்பிட்டால் அவ்விருப்பம் நீங்கிப்போகுமாம்.

COVERING THE FACE.

**முகத்தைப் போர்த்துக்கொள்ளுதல்.**—அனேகர் நித்திரை செய்யும்பொழுது, ஒரு துணியையாவது, போர்வையையாவது, முகத்தில்இழுத்துப்போர்த்திக் கொள்கிறார்கள். இது மிகவும் கெட்டவழக்கம். தாங்கள் வெளியே விடும் காற்றையே திரும்பவும் சுவாசிப்பதன்றி, மனிதர்களின் தேகத்திலிருந்து கிளம்பும், சில துர்கந்தங்களையும், உட்கொள்கிறார்கள்.

A NEW MEDICINE.

**ஒரு புதிய மருந்து.**—"606" என்னும் விசித்ர பேரையுடைய ஒரு புதிய மருந்து கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. "ஸ்லீப்பிங்க் ஸிக்னெஸ்" என்று இங்கிலீஷ் பாஷையில் வழங்கப்படும் வியாதிவந்தால் ஜனங்கள் சிலநாள் தூங்கிக்கொண்டேயிருந்து விழிக்காமல் இறந்துவிடுவார்கள். இந்த வியாதிக்கு மேற்சொன்ன "606" என்னும் மருந்து கைகண்ட ஔஷதமாம்.

WHITLOW.

**நகச்சுத்து.**—எலுமிச்சம் பழச்சாறுவிட்டு புண்ணைக் கழுவவும் (2) சீனம் வெண்காரம் காசுக்கட்டி இவைகளைத் தேனிலும் எலுமிச்சம் பழரஸத்திலும் சுத்துக்குப் போடவும். (3) மாபோல்டீஸ் வைத்துக் கட்டி ஆறும்பருவமாகிறபோது பிளாஸ்திரியை இடவும் (4) புண்ணதிகமாய்ச் சிவப்பாயிருந்தால் சுற்றித் துரிசைத்தடவவும். (5) சீனத்தண்ணீரையாவது காரத்தண்ணீரையாவதுவிட்டுக் கழுவத்தீரும்.

MOSQUITO BITES.

**கொசுக்கடி.**—கொசு கடிக்காமலிருக்க, கொசுவலைகளை உபயோகப் படுத்த வேண்டியது. அல்லது சுத்தமான இடங்களில் ஜாகை வைத்துக் கொள்ள வேண்டியது. யானைக்கால், முறை ஜுரம் முதலிய வியாதிகளுக்கு, கொசுவே காரணம். இந்தக்கொசுக்கள், மேற்படி வியாதிஸ்தர்களைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சி, அந்த ரத்தத்தில் உள்ள வியாதிக்ருமிகளை தன்னுடைய உடம்பில் விருத்தி பண்ணி, மற்றவர்களைக் கடிக்கும்போது, அவர்களுடைய ரத்தத்தில், அந்த க்ருமிகளை செலுத்திவிடுகிறது. இம்மாதிரி, கொசுக்கள் வியாதியைப் பரவச் செய்கின்றன.

THE USES OF QUININE.

**குயினாவின் உபயோகம்.**—"மலேரியா" என்ற விஷக் காய்ச்சலுக்கு குயினா கை கண்டதாயிருக்கிறது. அதன்பிரயோசனத்தைக்கருதித்தான் அதை தபாலாபீஸ்களிலும் விற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் அநுபவத்தில் குயினாவின் உபயோகம் ஜுரத்தைப்போக்குவதாயிருந்தாலும் அதனால் உண்டாகும் தீங்குகள் அபரிமிதமாயிருக்கின்றன. குயினா ஜுரமுள்ளவனுக்குஅதிகமாகக்கொடுக்கப்படும்போது அதுமிகுதியும்கெடுதியைச்செய்கிறது. மேலும் செவி மந்தத்தை யுண்டுபண்ணுவதில் இது மிகவும் பொல்லாததாயிருக்கிறது. பின்னும் ஜீரணசக்தியைக் குறைத்து விடுவதில் பிணியாளி வெகு கஷ்டப்பட்டுப் போகிறான். குயினாவை எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து கொடுப்பதில் அதன் தீயதன்மை மாறுபடுகிறதென்று சொல்லுகிறார்கள்.

MEDICINES AND ADVERTISEMENT.

**மருந்துகளும் விளம்பரங்களும்.**—ஸமாச்சாரப் பத்திரிகைகளில் அதிகப்பணம் செலவழித்து தங்களுடைய மருந்துகளின் மகத்துவங்களைப் பிரஸ்தாபித்து வருகிற கம்பெனிகள் பலவுள. ஜனங்கள் வாங்க ஆரம்பிக்கத் தொடங்கினால் பைத்தியம் பிடித்தவர்களைப் போல எல்லாவித நோய்களுக்கும் ஒரே மருந்தை உபயோகித்து மருந்து செய்தவனை அதிசீக்கிரத்திலேயே கோடீசுவரனாக்கி விடுகிறார்கள். உதாரணமாக "ஹாலோவேஸ் பில்ஸ்", 'டாக்டர் காலிஸ் ப்ரௌன்ஸ் க்ளோரடைன்', 'பீச்சாம்ஸ் பில்ஸ்', என்னும் பல இங்கிலீஷ் ஔஷதங்கள் உண்மையில் வெகு சொற்பவிலையுள்ளவைகளாயிருந்தபோதிலும் ஜனங்களுடைய அஞ்ஞானத்தால் மகிமைபெற்று செய்தவர்களைத் தனவந்தர்களாக்கிவிடுகின்றன. பீச்சாம்ஸ் பில்ஸைவிற்று மாத்திரம் வருஷம் ஒன்றுக்கு லாபம் 80,000 பவுனுக்கு மேல் சம்பாதிக்கிறார்கள். அதாவது மாதம் ஒன்றுக்கு லாபம் மாத்திரம் லக்ஷ ரூபாய்க்குமேல் சம்பாதிக்கிறார்கள்.

# LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

COMPOUND INTEREST.

**வட்டிக்கி வட்டி.**—வட்டிகட்டத் தவறினால் வட்டிக்கிவட்டி கொடுக்கவேண்டுமென்று ஒரு அடமானபத்திரத்தில் சொல்லப்பட்டிருப்பது கோர்ட்டார் ஊர்ஜிதப்படுத்தக்கூடாத ஷரத்தல்ல. அப்படி ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அடமான டிக்ரியில் பணம் செலுத்த கோர்ட்டார் எவ்வளவு காலம் வாயிதா கொடுக்கிறார்களோ அவ்வளவு காலம் வரையில் அடமான பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிற வட்டியே கொடுக்கும்படியாகச் சொல்லவேண்டும்.

ANCESTRAL DEBT.

**பூர்வீகக்கடன்.**—சேர்ந்த ஹிந்து குடும்ப மானேஜர் குடும்பத்திற்கு ஏற்கனவே யிருந்த ஒரு புராதனமான கடனைத் தீர்க்கக் கடன் வாங்கியது ஷை குடும்பத்தைச் சேர்ந்த மைனரைக் கட்டுப்படுத்துமென்கிற காரணத்தை மட்டிலும் முன்னிட்டு மைனர் கட்டுப்பட்டவனாகமாட்டான். கடன் கொடுத்தவன் ஷை மானேஜர் கடன் வாங்குவதற்கு அவசிய மேற்பட்டிருந்ததென்று ருஜுப்படுத்தவேண்டும். கடன் கேட்டபோது தான் விசாரணைசெய்து பார்த்ததாகவும், புராதனக் கடன் ஒன்று இருந்ததாக தான் கேள்விப்பட்டதாகவும் சொல்லுவது போதுமானதல்ல.

CUTTING OFF THE EAR.

**காதை அறுத்தல்.**—கொள்ளே காலத்தைச் சேர்ந்த ஒரு கிராமக்கர்ணத்திற்குச் சொந்தமான ஒரு மட்டக் குதிரையின் காதை வேறு ஒருவன் அறுத்து விட்டானென்று அவன் மேல் பிராது தொடரப்பட்டது. கொள்ளே காலம் ஸப் மாஜிஸ்ட்ரேட்டு இதை விசாரித்து, இந்தக்குற்றம் அங்கஹீனம் செய்ததாகும் என்று இந்தியன் பினல்கோடு 429-வது பிரிவின்படி குற்றவாளிக்கு அபராதம் போட்டார். அந்தக்கேஸ் டிப்டி மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் அப்பீலுக்குவந்தது. அங்கும் கீழ்க் கோர்ட்டு தீர்ப்பு உறுதி செயய்ப்பட்டது. பிறகு ஹைகோர்ட்டுக்கும் இது 2-வது அப்பீலாக வந்தது. அப்பொழுது வாதி கக்ஷிக்கு வக்கீல் அங்கஹீனம் செய்வதென்றால், சண்டையில் எதிர்ப்பதற்காகவாவது, அதிலிருந்து காத்துக்கொள்வதற்காகவாவது உபயோகப்படுத்தப்படும் ஏதாவது ஒரு உறுப்புக்கு ஊனத்தை விளைத்தாலும் ஸரி, அல்லது அது முழுமையையும் சிதைத்தாலும் ஸரி, அதுகுற்றமாகுமே ஒழிய காதை அறுத்ததினால் அந்த குற்றமாகா தென்றும் இது அழகைக் குறைத்தல் (விரூபமாக்குதல்) என்ற குற்றமே யாகும் என்றும் வாதித்தார். மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் இந்தக்கேஸில், காதை அறுத்ததானது கேட்கும் புலனுக்கு ஊனம் விளைவித்ததாவதால் அங்கஹீனம் செய்த குற்றமே என்று அபராதத்தை உறுதி செய்துவிட்டார்.

SALE DEED AND AGREEMENT.

**கிரயசாஸனமும் எக்ரிமெண்டும் :**—ஒருவன் இன்னொருவனுக்கு ஒரு ஸொத்தைக் கிரையம் செய்து கொடுத்து கிரயசாஸனம் எழுதிக் கொடுத்தான். இந்தக் கிரயசாஸனத்தில் ஸொத்து ஸர்வ வில்லங்க சுத்தியாகக் கிரையம் செய்யப்பட்டதென்றும். வாங்கினவனாவது விற்றவனாவது கிரையத்தை ரத்து செய்து கிரயத்தொகையை முறையே கொடுத்து விடவாவது வாங்கிக்கொள்ளவாவது பாத்தியமில்லை என்றும், கிரயம்செய்து கொடுத்தவனுக்கு கிரைய ஸொத்தில் யாதொரு பாத்தியமுமில்லை என்றும் பொருள் படும்படியாக எழுதப்பட்டிருந்தது. இது நிற்க, இந்த கிரய ஆதரவுபிறந்த தேதியிலேயே கிரயம் பெற்றவன் கிரையம் செய்தவனுக்கு ஒரு எக்ரிமெண்டு எழுதிக் கொடுத்திருக்கிறான். அதில் கிரயம் செய்தவன் 5 வருஷத்திற்குள் கிரயத் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் தான் கிரய ஸொத்தை விட்டு விடுவதாய் ஸம்மதித்து எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கிறது. கிரய ஆதரவு ஆக்ஷேபிக்கப்படக் கூடாத பூர்த்தியானகிரய ஆதரவென்றும் அதனுடன் ஒரு எக்ரிமெண்டுகூடப் பிறந்திருப்பது இந்தக் கிரயத்தை, கிரய ரூபமான அடமான மாக்கிவிடமாட்டாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிரய ஆதரவுடன், திருப்பிக் கிரயம் செய்து கொடுத்து விடுவதாய் ஒரு எக்ரிமெண்டும் ஏற்பட்டிருந்தால் இது உண்மையான கிரையமா அல்லது கிரைய ரூபமான அடமானமா என்று நிச்சயிக்க வேண்டியது. ஒவ்வொரு கேஸிலும், ஏற்பட்டிருக்கும் ஆதரவுகளின் தாற்பரியத்தையும் அது விஷயமாக ஏற்பாடும் சாக்ஷி வாய்மொழி வாக்கு மூலத்தையும் ஆராய்ந்து பார்த்துச் தீர்மானிக்கவேண்டும்.



# PERSONAL NOTES.
## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

THE MAHARAJAH OF BENARES.

**காசிமகாராஜா.**—காசிஸெண்ட்ரல் ஹிந்து காலேஜுக்கு அவ்வூர் மகாராஜா ஒரு பெரிய கட்டிடத்தை நன்கொடையாய்க் கொடுத்திருக்கிறார். அதற்கு குர்ட்மகால் என்று பேராம். அது அந்த காலேஜை யொட்டியிருக்கிறதென்றும் ரூபா 60,000 விலை மதிப்புள்ளதென்றும் தெரிகிறது.

THE MAHARAJAH OF BOBBILI.

**பொப்பிலி மகாராஜா.**—பொப்பிலி மகாராஜா தாம் கௌன்ஸில் மெம்பரா யிருந்து வாங்கின சம்பளத்தை உதகமண்டலத்தில் 'லாலி இன்ஸ்டிடேட்' என்று பேர்கொண்ட ஒரு ஸ்தாபனத்திற்காகச் செலவிடுவதாக நிச்சயித்திருக்கிறார். இந்த ஸ்தாபனம் ஒரு காஸ்மபாலிடன் கிளப்பாயிருக்கும். அதாவது ஜாதி மத வித்யாஸமில்லாமல் எல்லா வகுப்பாரும் கூடிக்குலாவும்படியான ஒரு ஸபையாயிருக்கும்.

THE MAHARAJAH OF COSSIMBAZAAR.

**காஸிம்பஸார் மகாராஜா.**—வெங்காளத்து லாண்ட்ஹோல்டர்ஸ் அஸோஸியேஷன் என்கிற ஜமீன்தார்களின் ஸபை ஸமீபத்திற்கூடி அதில் கஸீம்பஸார் மகாராஜா ப்ரஸிடெண்டாயிருந்து பேசினபோது, நமது சட்ட ஸபைகள் விசாலிக்கப்பட்டு ஜனப்பிரதிநிதிகள் ராஜீய ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றிப்பேச பூர்ண இடம் பெற்றிருப்பதால் நமது ஸபைகள் இனி அந்த விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லை யென்றும், ஜமீன்தார்கள் விவஸாயிகளினுடைய நிலைமையை உயர்த்தவேண்டிய சில முக்கியமான விஷயங்களைப் பற்றி கவனம் செலுத்த வேண்டுமென்றும், பேசினார். சட்டஸபைகளில் ஸ்தானம் பெற்றிருக்கும் வெங்காளத்து ஜமீன்தார்கள் தங்கள் கடமைகளைத் திருப்தியாய்ச் செலுத்துகிறார்கள். ஆனதால் இனி விவசாயிகளுக்குக் கல்வி புகட்டுவதிலும் அவர்களுக்குள் ஒற்றுமை யுண்டாகும்படியாய் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிப்பதிலும் முயற்சிசெய்து வரவேண்டுமென்றார்.

THE CORONATION OF GEORGE V.

**ஐந்தாவது ஜார்ஜின் மகுடாபிஷேகம்.**— நமது இந்தியா தேசத்தை யேகச்சக்ராதிபத்தியம் செலுத்திய பிரிட்டிஷ் அரசுகளாகிய மாக்ஷிமைதங்கிய விக்டோரியா பெருமாட்டி, எட்வர்ட் சக்ரவர்த்தி, ஜார்ஜ் சக்ரவர்த்தி, ஆகிய மூவருள் ஜார்ஜ் சக்ரவர்த்தியே இந்தியாவுக்குப் பட்டாபிஷேகம் செய்துகொள்ள முதல் முதல் வருகிறவரென்பது உலகமறிந்த விஷயம். அல்லாமலும் நமது இந்தியாதேசத்தில் அநேகம் நூற்றாண்டுகளாய்ச் சக்ரவர்த்தியொருவர் ஸிம்மாசனம் ஏறி மகுடாபிஷேகம் செய்துகொள்ள வில்லை. முகம்மதியச் சக்ரவர்த்திகள் இந்தியாவின் ஒருபாகத்தை மட்டும் ஆட்சிசெய்து வந்தார்களே தவிர இந்தியாமுழுதும் ஏகச்சக்ராதிபத்தியம்செலுத்தவில்லை. அவர்களுக்குள் முன்னால் அசோகன் விக்கிரமாதித்யன் போலொத்த இந்து அரசர்கள் சக்ரவர்த்திகளாய் மகுடாபிஷேகம் செய்து கொண்டாலும் அவர்கள் காலத்தில் இந்தியா ஏகாதிபத்யம் இக்காலத்தைப்போல் விசாலமும் ஜனத்தொகையும் கொண்டதாயிருக்கவில்லை. சார்லிமேன் என்ற அரசனும் முதல் நேப்போலியனும் செய்துக்கொண்ட மகுடாபிஷேகங்கள் கூட நமது இந்தியாவில் ஜார்ஜ் சக்ரவர்த்தி செய்துகொள்ளப்போகும் மகுடாபிஷேகத்தைப்போல் அவ்வளவு சிறந்தனவாகா. ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாகங்களை ஜெயித்துக்கிறிஸ்தவமதத்தை ஸ்தாபித்து மகாபெரிய ராஜ்யத்தையாண்ட சார்லிமென் என்பவர் 814-௵ காலஞ்சென்றார். முதல் நேப்போலியனும் ப்ரான்ஸ் தேசத்துக்குத் தலைவராய் ஐரோப்பாவின் தென்பாகத்தையும் மத்யபாகத்தையும் ஜெயித்து ப்ரான்ஸதேசத்துச் சக்ரவர்த்தியாக மகுடம் சூட்டிக்கொண்டார். இவ்விருவரும் ஐரோப்பிய சரித்திரத்தில் பேர்போன மகா கீர்த்திவான்களான சக்ரவர்த்திகளானாலும் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி இந்தியாஏகாதிபத்தியத்துக்கு மன்னராய் க்ரீடதாரணஞ்செய்துகொள்ளும் சிறப்பும் பெருமையும் அவர்களுக்கில்லை. ஸுமார் நாலாயிர லக்ஷம் ஜனங்களடங்கிய ஒரே தேசத்தைத் தமது ராஜ்யமாகச் சேர்த்த பெருமையும் சிறப்பும் நமது ராஜாராஜேஸ்வார் ஜார்ஜ் சக்ரவர்த்திக்கே தவிர உலகத்தில் வேறெந்தச் சக்ரவர்த்திகளுக்குமில்லை.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

---

AN OFFICER'S TACT.

**ஒரு அதிகாரியின் ஸாமர்த்தியம்.**—கானிஷ்மாரிக் கணக்கெடுக்கப்படுவதின் காரணத்தை அறியாத ஜனங்கள் அதிகாரிகளுக்கு கஷ்ட நிஷ்டூரங்களை விளைவிப்பது ஸகஜம். இப்படி முன்னொரு காலத்தில் வட இந்தியாவில் கணக்கெடுத்தபோது, நாகரிகமற்ற ஒரு வகுப்பார் சண்டைசெய்ய ஆரம்பித்தார்கள். அப்போது அதிகாரியொருவர் கூட்டத் தலைவர்களைப் பார்த்து "இப்போது நாங்கள் உங்களை அடிமையாய்க் கொள்ள இங்கு வரவில்லை. ருஷிய சக்ரவர்த்தியாகிய ஸாருக்கு பிரஜைகளதிகமா? மாட்சிமை தங்கிய விக்டோரியா மகா ராணியார்க்கு குடிகளதிகமா? என்ற வாக்குவாதமுண்டாயிருக்கிறதென்றவுடன் அவர்கள் மூலை முடுக்குகளிலுள்ளவர்களையும் தேடியழைத்துக் கொண்டு அதிகாரிகள் முன்வந்து நின்றார்களாம்.

MEMORIAL TO A ROBBER.

**கள்ளனுக்குக்கோரி.**—இத்தாலியா தேசத்தில் பொலோனா பட்டணத்துக்கடுத்த பொர்லிம் பொம்போலி யென்ற ஊரில் முனிஸிபல் கூத்துமேடையில் பாஸ்ஸாத்தோர் என்ற ஒரு பேர்பெற்ற கள்ளனுக்கு ஓர் ஞாபகச்சின்னம் கட்டியிருக்கிறார்கள். நாடகமேடையில் அவனுக்காக ஞாபகச்சின்னம் எழுப்பினதற்குக் காரணமென்னவென்றால் அங்கே தான் அவன் தன் ஸாமார்த்தியத்தை விசேஷவிதமாய்க் காட்டினான்.

1854-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் பிரபல வித்வானாகிய ரொஸ்ஸீனியால் எழுதப்பட்ட ஒரு நாடகத்தை மேடையில் ஆடிக்கொண்டிருக்கையில் 5,000 ஜனங்களுக்குமேல் அந்தக் கட்டிடத்தில் கூடியிருந்தார்கள். பாஸ்ஸாத்தோர் சில கூட்டாளிகளுடன் தைரியமாய் நாடகக் கொட்டகையில் நுழைந்து அங்கிருந்த யாவரும் தங்கள் தங்கள் ஆபரணங்களைக் கழற்றி வைக்கும்படியாய்க் கட்டளைகொடுத்தான். அவன் விஷயத்தில் யாவருக்கும் அதிக அச்சம் இருந்தபடியால் போலீசுக்குக் காரியத்தைத் தெரிவிக்கவும் அல்லது தாங்களாகிலும் ஏதாவது ஒரு முயற்சிசெய்யவும் துணிந்தார்களில்லை. நாடகத்துக்கு வந்திருந்த சில போலீஸ்காரர்களும் ராணுவவீரர்களும் ஒன்றுஞ் செய்யவில்லை. கள்ளத்தலைவன் நகைகளையும், பணங்களையும் பறித்துக்கொண்டு குதிரைகளில் தன் கூட்டாளிகளுடன் ஏறிக் காடுபோய்ச்சேர்ந்தான். அவனுடைய தைரியச் செய்கைக்காகத்தான் ஞாபகக் கோரியை எழுப்பியிருக்கிறார்கள்.

FUN UPON LAW.

**சட்ட சம்பந்தமாய் வேடிக்கை ஸமாசாரம்.**—

**உபாத்தியாயர்** :—மாணாக்கர்களா! நேற்றையத் தினம் நான் உங்களுக்கு டிக்ரியை மேடோவர் வாங்குகிறவனுடைய பாத்திதையைப் பற்றி பிரசங்கம் செய்தேனே, அது உங்களுக்கு நன்றாய் விளங்கி யிருக்குமென்று நம்புகிறேன்.

**ராமச்சந்திரன்**:—ஸார்! அதில் என்ன ஸந்தேகம் கிளிப் பிள்ளைகள்கூட அறிந்து கொள்ளும்படியாக அல்லவோ பிரசங்கம் செய்தீர்கள். எனக்கு செவ்வையாக விளங்கிவிட்டது.

**அம்பலவாணன்** :—ஸார்! தாங்கள் எடுத்துச் சொன்னதெல்லாம் கூடி ஒரு டிக்கிரி ஹோல்டருக்கு என்ன பாத்தியமிருக்கிறதோ, அவ்வளவு பாத்தியமும் டிக்ரியை மேடோவர் வாங்கினவனுக்கிருக்கிற தென்பதே.

**உபாத்தியாயர்** :—ஆம், அதுதான் நேற்று செய்த பிரசங்கத்தின் முக்கிய தாற்பரியம்!

**ஞானமுத்து** :—ஸார்! தாங்கள் பிரசங்கம் செய்ததை நானும் கவனித்து வந்தேன். அதனால் எனக்கு மட்டிலும் ஒரு ஸந்தேகம் தட்டுப்படுகிறது.

**உபாத்தியாயர்** :—அதென்ன?

**ஞானமுத்து** :—சொல்லுகிறேன் கேளுங்கள் :—டிக்ரி பெற்றவனுக்கு எவ்வளவு பாத்தியமிருக்கிறதோ, அவ்வளவு பாத்தியதையும் டிக்ரியை மேடோவர் வாங்கினவனுக்கிருக்கிறதென்றால், ஒரு ஹிந்து பெண்சாதி புருஷனுடன் கூடிவாழும்படியாக ஹிந்து புருஷனுக்கு கோர்ட்டார் டிக்ரி கொடுக்கிறார்கள். அந்த டிக்ரியை மேடோவர் வாங்கினால் ஷை பெண்சாதி மேடோவர் வாங்கினவனுடன் கூடிவாழும்படியாக மேடோவர் வாங்கினவன் டிக்ரியை நிறைவேற்றி அவளைக் கட்டாயப்படுத்தக் கூடுமல்லவா?

**உபாத்தியாயர்** :—பையன் பள்ளியில் பயலும் மாணாக்கனாக இருந்தபோதிலும் கேட்கிற கேள்வி மட்டிலும் பெரிய கேள்வியாயிருக்கிறது. ஞானமுத்து! அந்த டிக்ரியை மேடோவர் செய்வதும் சட்ட விரோதம். வாங்குவதும் சட்ட விரோதம். ஏனென்றால் அது பொது நன்மைக்கு விரோதமான காரியம். சட்டக் கோட்பாடுகள் பொது நன்மைக்காக ஏற்பட்டிருக்கின்றனவே யொழிய பொது நன்மையை பாதிக்கவல்ல. ஒருவனுடைய மனைவி மற்றொருவனுடன் கூடிவாழும்படி கோர்ட்டார் அனுமதி கொடுத்தால், பிறகு ஜனசமூக மேது, கோர்ட் எதற்கு, நியாயமேது, நீதி ஏது?



# CURIOSITIES.

## விநோதங்கள்.

---

A COSTLY FOOT-WEAR.

**விலையுயர்ந்த பாதரக்ஷை.**—லண்டன் பட்டணத்துக் கடையொன்றில் பக்ஷிகளின் இறகுகளால் வெகு நேர்த்தியான பாதரக்ஷைகள் செய்து விற்கப்படுகின்றன. அவைகளில் ஒரு ஜதை 500-பவனுக்கு விற்கப்பட்டது.

PHOTOGRAPHING.

**படமெடுத்தல்.**—ஒரு நகரத்தின் தூரப்பார்வையை எடுப்பதற்கு ஒருவிநோதவழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதென்னவெனில் ஒரு புறாவின் கழுத்தில் புகைப்படமெடுக்கும் காமிராவை தானே படமெடுத்துக் கொள்ளும்படிச் சீர்படுத்திக் கட்டிவிட்டால் புறா உயரப்பறக்கும்போது அக்காமிராதானே வெகு அழகாய் ஊர்த்தோற்றத்தை எடுத்துக்கொள்ளுமாம். இது பிறான்ஸில் ஒரு கனவான் கண்டுபிடித்திருக்கிறார். இன்னும் செவ்வையாய் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

A COW'S FOOD.

**ஒரு பசுவின் உணவு.**—கௌன்டிமேயோ என்னுமிடத்திலிருக்கும் ஒரு குடியானவன் பல பசுமாடுகளை விலைக்குக் கொண்டபோது, அவைகளிலொன்று இரண்டு வாரத்தின்பின் இறந்துவிட்டது. ஒரு மாட்டுவைத்தியன் அக்கிழட்டுப் பசுவை வெட்டிச்சோதித்தபோது அதன் வயிற்றுக்குள் ஒரு தோற்காசுப்பை இருந்ததாகவும், அதற்குள் 4 பவுன்களும், 1 அரைப்பவுனும், 1 அரைக்கிறவுனும், 3 பென்ஸ் செப்புக்காசும், முலிங்கார்என்னுமிடத்திற்கு ஒரு ரெயில் டிக்கெட்டும், பின்னும் பித்தளைக்கைபிடியும், 3தோட்டாக்களும், கொஞ்சங் கறுத்த கண்ணாடித்துண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டதென்று ஒரு பத்திரிகை சொல்லுகிறது.

FLOWER HATS.

**புஷ்பத் தொப்பிகள்.**—ஐரோப்பிய மாதர்கள், பலவிதமான செயற்கைப் புஷ்பங்களால் தங்களுடைய தொப்பிகளைச் சிங்காரித்துக்கொள்வதைநாம் ஸாதாரணமாய்ப் பார்க்கலாம். ஸமீபத்தில் மார்செய்பட்டணத்தில் பலஅழகான புஷ்பங்களால் சிங்காரிக்கப்பட்ட தொப்பியுடன் ஒரு பெண்ணானவள் தெருவில் நடந்துகொண்டு போகையில் தேனீக்கள் கூட்டம் ஒன்று அத்தொப்பியினண்டை பறந்துவந்து ரீங்காரம் செய்துகொண்டிருந்தன. தொப்பிக்குடையவள் கையைத்தூக்கினால் கொட்டிவிடுமென்று பயந்து, பித்துபிடித்தவள்போல் தலையை ஆட்டிக்கொண்டிருந்தாள். தேனீக்கள் அப்புறம் போனபாடில்லை. அந்த நிர்ப்பாக்கியவதி படும் அவஸ்தையைக் கண்ணுற்ற ஒரு துரை கிட்டவந்து, தன்வாயிலிருந்து மனில்லா சுருட்டைப் பலமாயிழுத்து அந்தப்புகையைத் தொப்பிமேல் விட்டார். தேனீக்கள் மயக்கங்கொண்டு விழுந்து பிறகு பறந்துபோயின. ஆனால் அதற்குமுன் ஸுகந்த வாஸனை வீசிக்கொண்டிருந்த அந்தப் பூத்தொப்பி பிறகு சுருட்டுநாற்றம் அடித்துக்கொண்டிருந்தது. என்னபரிதாபம்!

STREET LIGHTS.

**தெரு விளக்குகள்.**—இரவில் ஜனங்கள் திரிந்து கொண்டு நேரங்கழித்து திரும்பி வருகிறதற்காக தெருவில் விளக்குகள் இரவு முழுவதும் எரிக்க வேண்டியிருக்கிறதென்று ஐரோப்பாவில் சில பட்டணங்கள் முறையிடுகின்றன. இந்த அநாவசியமான செலவை நீக்கும்பொருட்டு ஒருவழி கண்டுபிடித்திருக்கிறார்கள். இரவில் நேரங்கழித்து வருகிறவர்கள் தாங்களே தங்களுக்கு வேண்டும்பொழுது விளக்கை ஏற்றிக்கொண்டு அதற்குண்டான செலவை ஏற்றுக்கொள்ள ஒரு யுக்திசெய்திருக்கிறார்கள். ஜர்மன் தேசத்திலே ஒரு பட்டணத்தில் இந்தப் புதிய ஏற்பாட்டின்படி வேலைசெய்து வருகிறதாகத் தெரிகிறது. அவ்வூரில் அரை மைல் நீளமுள்ள ஒரு தெருவில் ஒன்பது விளக்குகள் இருக்கின்றன. அந்தத்தெருவின் இரண்டுகோடியிலும் "ஒரு அணா காசு யந்திரம்" வைக்கப்பட்டிருக்கிறது. எவரேனும் ஒருவர் இரவில் அந்தத்தெருவழியாய்ப் போகவேண்டி விளக்கு வெளிச்சம் தேவை என்று நினைத்தால், ஒரு அணா காசை அந்த யந்திரத்துக்குள் போடவேண்டும்; காசு விழுந்த உடன் மின்சாரம் வேலைசெய்ய ஆரம்பித்து பன்னிரண்டு நிமிஷங்கள் விளக்குகளை எரியச்செய்யும். அதற்குள்ளாக அந்தத் தெருவைக்கடந்து விடலாம். சாதாரணமாக அந்தத்தெருவில் இரவு பத்துமணி வரைக்கும் விளக்குகள் எரியும். பிறகு தான் அந்த நூதன யந்திரங்கள் வைக்கப்படும்.

# NEWS OF THE MONTH.

## மாஸ வர்த்தமானங்கள்.

## INDIAN NEWS.

## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்

MUDDY RAIN.

**பரத்வானில் சேற்றுமழை.**—ஸமீபத்தில் வங்காள நாட்டைச் சேர்ந்த பரத்வானில் மண்மாரி பெய்ததாம். அந்தப் பக்கத்திலுள்ள தாமோதர் ஆற்றங்கரையில பெரிய ஒரு நீர்க்குமிழி யுண்டாயிற்றென்றும், அந்த நீர்க்கும்ழியால் உயரச் செலுத்தப்பட்ட அந்த ஆற்றின் கலங்கல் ஜலம் மண்மாரி ரூபமாக தரைவந்து சேர்ந்த தென்றும் சொல்லப்படுகிறது. மரங்களின் இலைகளில் மண் நன்ருய்ப் படிந்திருந்ததாம்.

ELECTION TO TALUK BOARDS.

**தாலூக்கா போர்ட் எலெக்ஷன்.**—இரண்டு வருஷங்களுக்கு முன்னே தாலூக்கா போர்ட் மெம்பர்களிற் சிலர் தெரிந்தெடுத்துநியமிக்கப்பட்ட மெம்பர்களா யிருக்கலா மென்றும், ஒரு தாலூக்கா போர்டுக்கு ஏற்பட்ட மொத்தம் மெம்பர்களில் மூன்றில் ஒருபங்கு மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாயிருக்கலாமென்றும் உத்தரவு செய்திருந்தார்கள். இப்போது தாலூக்கா போர்ட் மெம்பர்களில் ஸரி பாதிப்போர் தெரிந்தெடுக்கப்பட்டவர்களா யிருக்கலாமென்று உத்தரவு செய்திருக்கிருர்கள். இது அடுத்த ஜனவரி மாதம் அனுஷ்டானத்துக்கு வரும்.

THE SENTAMIL SANGAM AND THE RAMNAD RAJA.

**செந்தமிழ்ச்சங்கமும் ராமநாதபுர ராஜாவும்.**—மதுரைச் செந்தமிழ் சங்கத்திற்குக் காலஞ்சென்ற ராமநாதபுரம் பாஸ்கரஸேதுபதி அவர்கள் தர்ம மகிமை பண்டிலிருந்து 300 ரூபாயும் தேவஸ்தான பண்டிலிருந்து 250 ரூபாயும் உதவும்படி யுத்தரவு செய்திருந்தார்; அவரிறந்தபின்பு ஸமஸ்தான பரிபாலகர்கள் மேற்படி தொகை கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். பாலவநத்தம் ஜமின்தார் ஸ்ரீமத் பாண்டித்துரைதேவர் ஸப்கோர்ட்டில் மனுசெய்து ஈடுபத்திர மெழுதித்தந்து மேற்படி தொகையைப் பெற்றுவந்தார். இப்போதுள்ள ராமநாதபுரம் ராஜா அவர்கள் இதுவரையில் ஷை யார் 30,000 ரூபாய் வாங்கியிருக்கின்ருரென்றும் அத்தொகை முழுதும் தமக்குக் கிடைக்க வேண்டுமென்றும் ஸப்கோர்ட்டில் வியாஜ்யங் கொடுத்திருக்கிருர்.

VILLAGE PANCHAYETS.

**கிராமப் பஞ்சாயத்துக்கள்.**—கீழ்வங்காளத்தில் அந்த மாகாணக் கவர்ன்மெண்டார் பழைய நாளை கிராமப் பஞ்சாயத்து ஏற்பாட்டை மறுபடியும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர பலத்த முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிருர்கள். பாரிஸால் ஜில்லாவில் அந்த வழக்கத்தை அனுஷ்டானத்துக்குப் பரீட்சார்த்தமாய்க் கொண்டுவரப் போகிருர்கள். அந்த ஜில்லாவைப் பல யூனியன்களாய்ப் பிரித்து வருகிருர்கள். ஸப் டிப்டி கலெக்டர் மிஸ்டர் எஸ். பி. குப்தா இப்போது கிராமங்கள் தோறும் சென்று ஒவ்வொரு யூனியனிலும் யார் யாரைப் பஞ்சாயத்து மெம்பர்களாய் நியமிக்கலாமென்று விசாரித்தறிந்து வருகிருர்.

THE PANDARA SANNIDHI OF DHARMA PURAM.

**தர்மபுரம் பண்டார சந்நிதி.**—வேளூர்தேவஸ்தானத்தைச்சேர்ந்த வைத்தீசுவரன் கோயில் முதலிய பலபெருங்கோயில்களின் ட்ரஸ்டியான இந்த மடத்துப் பண்டாரஸந்நிதி அத்தேவாலயங்களுக்கு ஸரியானபடி ஒன்றும் நடத்தவில்லை என்றும், இவருடைய நிர்வாகம் சிறிதும் ஒழுங்காயில்லையென்றும், பல உதாரணங்களைக் காட்டி ஆனரபில் மிஸ்டர் அட்வகேட் ஜெனரல் மாயவரம் ஸப் கோர்ட்டில் ஒரு பிராது தொடர்ந்து, இந்தத் தேவஸ்தானத்தின் நல்லநிர்வாகத்தின் பொருட்டு ஒரு தக்க ஏற்பாட்டையும் குறித்துச்சொன்னுர். அட்வகேட்ஜெனரலுக்கு எந்த தேவஸ்தானத்தில் ஒழுங்கீனம் தோன்றுகிறதோ அந்த தேவஸ்தானத்தின் தர்ம கர்த்தாக்களின் மேல் வழக்குத் தொடரலாமென்று சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தால்தான் இவர் மேற்கண்டவாறு பிராது தொடர்ந்திருக்கிருர்.

THE ASHE MURDER CASE.

**ஆஷி கொலைக் கேஸ்.**—இந்தக் கேஸின் முதல் விசாரணை திருநெல்வேலி ஹெட்க்வார்டர் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ஏ. தம்பூ முன்பாக திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டரான மிஸ்டர் ஆஷியைக் கொலைசெய்ததைப்பற்றிய முடிவுபெற்று குற்றவாளிகளாயுள்ள பதினலு பேர்களும் ஹைக்கோர்ட்டில் ஆகப்போகிற ஸ்பெஷல் டிரிபுனலுக்கு கமிட்டாயிருக்கிருர்கள்.



குற்றஞ் சாட்டப்பட்டிருப்பவர்களின் ஜாபிதா.—

1. தஞ்சாவூர் நீலகண்ட பிரஹ்மசாரி பிராமணன்.
2. செங்கோட்டை ஜகந்நாதய்யங்கார், பிராமணன்.
3. புனலூர் தேசிகாசாரி, பிராமணன்.
4. கடையநல்லூர் சங்கரகிருஷ்ணய்யர், பிராமணன்.
5. எட்டயாபுரத்திலிருக்கும் வந்தேமாதரம் சுப்பிரமணியய்யர், பிராமணன்.
6. செங்கோட்டை பிச்சுமணி ஐயர், பிராமணன்.
7. ஆலப்புழை ஜவுளி வியாபாரி ஹரிஹரய்யர் பிராமணன்.
8. செங்கோட்டை வேம்பு ஐயர், பிராமணன்
9. புனலூர் பாபுபிள்ளை, சூத்ரன்.
10. செங்கோட்டை அருணசலம்பிள்ளை, வைத்திய மாணவன் சூத்ரன்.
11. செங்கோட்டை அழகப்பபிள்ளை, சூத்ரன்.
12. தூத்துக்குடி முத்துக்குமாரசாமி பிள்ளை சூத்ரன்.
13. தூத்துக்குடி சுப்பய்யபிள்ளை, சூத்ரன்.
14. தென்காசி சிதம்பரம்பிள்ளை, சூத்ரன்.

குற்றவாளிகள் இந்தியன் பினல் கோட் 121-A, 302, 107, 117, 114-வது பிரிவுகளின் பிரகாரம் சார்ஜூ செய்யப்பட்டிருக்கிருர்கள். ஹைக்கோர்ட்டில் விசாரணையாகும்போது அவர்கள் தம் டிபென்ஸுக்கு ஆகவேண்டிய ஸௌகரியங்களைச் செய்துகொள்வதற்கு அனுகுணமாக அவரவர் மேல் ஏற்பட்டிருக்கும் சார்ஜுகளும் வாக்கு மூலங்களும் கொண்ட நகல்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படும். ஹைக்கோர்ட்டில் இந்தக்கேஸ் அநேகமாய் ஸெப்டம்பர் மாதம் 11-ந் தேதி திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். ப்ராஸிக்யூஷன் தரப்பில் மட்டும் 85 சாட்சிகள் இருக்கிருர்கள். இந்த விசாரணை முடிவதற்கு ஒரு மாதத்துக்கு மேல் 6 வாரம் வரைக்கும் ஆகலாம். இந்தக் கேஸில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் இருவர் தற்கொலை செய்து கொண்டார்களாம். அவர்கள் யார் யார் என்ருல் 1. புனலூர் ப்ரைவேட் வக்கீல் வெங்கடேசுவரய்யர், 2. செங்கோட்டை தர்மராஜய்யர். இவ்விருவரும் பிராமணர்கள். இக்கேஸின் ஆரம்ப விசாரணை தொடங்குமுன்னமே வெங்கடேசுவரய்யர் தம் கழுத்தை யறுத்துக்கொண்டு பிராணனை விட்டார். அவரைப் புனலூர் ஸர்க்கார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனபோது அவர் அங்கே மரண வாக்குமூலங்கொடுத்தார். சதியாலோசனைக்காரரின் அந்தரங்க மீடிங்கு ஒன்றுக்கு தாம் சென்றிருந்ததாகவும், பீதியினலே தாம் தம்முயிரை மாய்த்துக்கொள்ள முயன்றதாகவும் அவர் அவருடைய வாக்குமூலத்திற் குறிப்பிட்டார். தர்மராஜய்யர் விஷத்தைச் சாப்பிட்டு இறந்துபோனதாகச் சொல்லப்படுகிறது.

THE NELLORE DISTRICT CONFERENCE.

**நெல்லூர் டிஸ்டிரிக்ட் கான்பரென்ஸ்.**—நெல்லூர் டிஸ்டிரிக்ட் கான்புரென்ஸ் காவலி என்றஊரில் ஸமீபத்தில் நடந்தது. ஆனரபில் திவான் பகதூர் எல். ஏ. கோவிந்த ராகவய்யர் கான்பரென்ஸுக்குப் ப்ரஸிடென்டாயிருந்தார். அவர்செய்த ப்ரஸங்கத்தில் முக்கியமானவைகள் பின்வருமாறு:—

1. .—ராஜப் பிரதிநிதி சட்டஸபையில் ஆனரபில் கோபாலகிருஷ்ண கோகலே யவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் கீழ்த்தரக் கட்டாயப் படிப்பு விஷயத்தில் நாமெல்லோரும் ஊக்கமாயிருந்து அது முற்றுப்பெறும்படி ஒத்தாசை செய்யவேண்டு மென்றும் அதனலுண்டாகும் நன்மைகளையும் அதற்கு கவர்ன்மெண்டார் சொல்லும் சில ஆக்ஷேபனைகளுக்கு ஸரியான பதிலும் சொன்னுர்.

2. ஐக்கிய நாணயச் சங்கங்களைப்பற்றிச் சவிஸ்தாரமாய்ச் சொல்லி அவைகளாலுண்டாகும் நன்மைகளையும் ஒற்றுமை முதலியவைகளையும் எடுத்துக்காட்டினுர்.

3. விவசாயச் சங்கங்களைப்பற்றி விரிவாய்ச் சொல்லி ஒற்றை நாற்று நடுதல், இருப்புக்கலப்பை, கொர்ரு

கலப்பை, முதலியவைகளாலுண்டாகும் நன்மைகளையும் விவரமாய்க்கூறினர்.

4. தர்ம ஸ்தாபன விஷயமாய் அதாவது தேவஸ்தானங்கள், சத்திரங்கள், மடங்கள் முதலிய தர்மநிதிகள் ஸரியான வழிகளில் செலவாவதில்லையென்றும், அவைகளை சீர்திருத்தவேண்டுமென்றும், தேவஸ்தான கமிட்டி மெம்பர்கள் இப்பொழுது ஆயுள்வரையில் இருப்பது கூடாதென்றும், அதற்கொரு வரையளவு வேண்டுமென்றும், அச்சட்டத்தில் சில பாகம் மாற்றும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

5. பாலக்காட்டு முனிஸிபல் ஸ்தல கவுன்ஸிலர்களைக் கவர்ன்மெண்டார் மரியாதையாய் நடத்தாத விஷயங்களைக் கண்டித்துப் பேசினர்.

6. தாலூக்கா போர்டு முதலான ஸ்தல நிர்வாக ஸபைகளில் ஜனங்களால் தெரிந்தெடுக்கும் மெம்பர்களை அதிகப்படுத்தியதற்காகக் கவர்ன்மெண்டாருக்கு நாம் நன்றியறிதலுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றுங் கூறினர்.

7. நெல்லூர், காவலி முதலான இடங்களில் முன் ஸெகெண்டரி பாடசாலைகளாக விருந்ததை எலிமெண்டரி பாடசாலைகளாக மாற்றியிருப்பது யுக்தமல்லவென்றும், அதை மறுபடியும் பழைய படியே உயர்ந்த பாடசாலையாக்கவேணுமென்று கவர்ன்மெண்டாரைக்கேட்டுக்கொள்ள வேண்டுமென்றுங் கூறினர்.

8. நெல்லூர் ஜில்லாவில் விவஸாயம் அதிகமானபடியால் ஜலாதாரத்தை இன்னும் அதிகப்படுத்தும்படியாய்க்கேட்டுக்கொள்ள வேண்டுமென்றுங் கூறினர்.

9. ஜில்லாக்கள் தோறும் ரெயில்வேக்கள் போடவேண்டுமென்றும், நெல்லூர் ஜில்லாவிலும் அநேக வியாபார ஸ்தானங்களுக்கு ரெயிலில்லாமலிருப்பதால் ரெயில் போடும்படி கேட்டுக்கொள்ள வேண்டுமென்றுங் கூறினர்.

10. கவர்னர் சட்ட ஸபையிலும் கவர்னர் ஜனரல் சட்ட ஸபையிலும் நமக்கு ஸ்வதந்தரங்கள் கொடுத்திருப்பதற்கு நாம் நன்றி பாராட்ட வேண்டுமென்றுங் கூறினர்.

11. ராஜீய ஸங்கங்கள் இந்தியாவில் இருப்பதாக சிலர் நம்புவது பிசகென்றும், ஆனல் திருநெல்வேலி கலெக்டர் மிஸ்டர் ஆஷைக்கொன்ற விஷயத்தில் நமக்கெல்லாம் மிகவும் வெறுப்பும் அனுதாபமுமிருக்க வேண்டுமென்றுங் கூறினர்.

12. கிராமப் பஞ்சாயத்துகள் விஷயமாயும் ஜில்லா காங்கிரெஸ் கமிட்டி முதலிய விஷயங்களைப்பற்றியும் பேசி தமது ப்ரஸங்கத்தை முடித்தார்.

பிறகு கான்பரென்ஸில் சில முக்கியமான தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவைகளாவன.— ஆனரபில் மிஸ்டர் கோகலேயின் மசோதாவைப்பற்றி அதை அங்கீகரித்தும், நெல்லூர் ஜில்லாவில் ஒரு விவசாயப் பண்ணையும், ஒரு இன்ஸபெக்டரும், கால்நடைகளுக்குச் சிகிச்சைசெய்ய வெடிரினெரி ஆஸ்பிடலும், ஒருவெடிரினெரி இன்ஸ்பெக்டரும், கவர்ன்மெண்ட் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், கால்நடைகளின் திருட்டுகளை யடக்க முயற்சி செய்யவேண்டுமென்றும், கீழ்த்தரக்கல்வி, ஐக்கியநாணயச் சங்கங்கள், தாலூக்கா போர்ட்களில் மெம்பர்களை எலெக்ஷன் செய்தல், கிராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபித்தல், தேவாலய ஸொத்துக்களை நிர்வகித்தல், இவைகளைப் பற்றியும், நெல்லூர் முனிஸிபாலிடியில் முக்கால்வாசி மெம்பர்கள் எலெக்ட் செய்யப்படவேண்டுமென்றும், அப்படியே சேர்மனும் முனிஸிபல் கௌன்ஸிலால் எலெக்ட் செய்யப்பட வேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன. விபசாரம் செய்யும் ஸ்திரீகள் சிறுபெண்களை தத்தெடுத்துக்கொள்வது சட்ட விரோதமென்றும், சிறு பெண் ஒருவள் விபசாரம் செய்கிறவளுக்குக் கிரமமான பெண்ணுயிராமல் அவளுடைய போஷணையிலிருந்தால் அந்தக் காரணத்தைக் கொண்டே அந்தப் பெண்ணை அவளை விட்டு நீக்கி வேறுயார் அந்தப் பெண்ணை ஸரியானமதத்தில் தயார்செய்து வளர்ப்பதாயொப்புக்கொள்கிறாரோ அவர் வசம் ஒப்புவிக்க வேண்டுமென்று சட்டம் செய்யப்பட வேண்டுமென ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதைச் சில டெலிக்கேட்டுகள் ஆட்சேபித்தபோதிலும் மெஜாரிடியால் நிறைவேற்றப்பட்டது. பிறகு பாலக்காட் முனிஸிபாலிடி விஷயமாய்க் கவர்ன்மெண்ட்செய்த உத்தரவைக் கண்டித்து ஒரு தீர்மானமும், ஜில்லாவில் பற்பல பாசனவேலைகள் செய்தல், காடுகளில் விவசாயிகளுக்கு ஸௌகரியங்கள் அமைத்தல், ரெவினியூவஜா செய்தல், இன்னும் ஸ்தலக் குறைகள் பல அடங்கிய ஒரு தீர்மானமும் செய்யப்பட்டன.



## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

---

JEWELS OF INDIAN PRINCES.

**இந்தியதேச மன்னர்களின் ஆபரணங்கள்.**— முடிசூட்டு வைபவத்துக்காக லண்டனுக்குப்போன தேச மன்னர்கள் அணிந்துக் கொள்ளும் ஆபரணங்களெல்லாம் இன்ஷூர் செய்யப்பட்டனவாம். 85000 பவுனுக்கு ஒரு இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. இன்னொரு இன்ஷூரன்ஸில் சொத்தின் பெறுமானம் 200,000 பவுனுக்கு மேல் 300,000 பவுனுக்குள் இருக்குமாம். இந்தியாவிலிருந்து செல்லும்போதும், இங்கிலாந்திலிருந்து திரும்பும்போதும் நகைகள் காணமற் போனலும் அல்லது தேச மன்னர்கள் இங்கிலாந்திலே தங்கியிருக்கும்போது களவு முதலியவைகளால் நஷ்டமேற் பட்டாலும் கட்டிக் கொடுப்பதற்காக இந்த இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டது.

A CHARITY ORGANISATION IN JAPAN.

**ஜப்பானில் ஒரு தருமம்.**—ஜப்பான் தேசத்தில் தேகசௌக்கிய மில்லாமலும் வறுமையுடனும் உள்ள ஜனங்களுக்கு நிவர்த்தி செய்யும் எண்ணத்துடன் 25 லட்சம் பவுன் கொண்ட நிதியொன்று சேர்த்து அதன் வட்டியைக் கொண்டு இந்த தர்மத்தை நடத்துவதாக முயற்சி நடந்துக்கொண்டிருக்கிறது. இந்த நிதிக்கு ஜப்பான் சக்ரவர்த்தி தம் ஸொந்த ஐவேஜிலிருந்து ஒரு லக்ஷம்பவுன் வயிரல் உதவிசெய்திருக்கிறார். இந்த நிதிக்குக் சாமானியமான ஜனங்கள் எதேஷ்டமான பணத்தைக் கொடுக்க, வெகுநாளாய்ப்பட்டம் பெற்றுப் பென்ஷன் வாங்கித்தின்னும் உயர் குலத்தார் உதவி செய்யாமலிருக்கிறார்களென்று புகார் செய்யப்படுகிறது.

LABOUR STRIKE IN GREAT BRITAIN.

**ப்ரிட்டனில் வேலைக்காரர்களின் கலகம்**—ஸமீபத்தில் இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் வேலைக்காரர்கள் கலகம் செய்து முதலாளிகளுக்கு நஷ்டம் உண்டுபண்ணினதைத்தவிர போலீஸாரையும் துருப்புகளையும் எதிர்த்துச் சேதப்படுத்தினர்கள். அந்த தேசங்களில் விவஸாய மில்லாமல் ஜனங்களிற்பெரும்பான்மையோர் பட்டணங்களில் திரண்டு வஸித்து கூலி வேலை செய்வோராயிருப்பதால் இந்தத் தீங்கு அடிக்கடி நேரிடுகின்றது. அத்தேசங்களில் கூலி வேலை செய்வோர் செய்துகொண்டிருக்கும் கட்டுப்பாடே இதற்குக் காரணம். நம்தேசத்துக் கூலிக்காரர்களைப் போல, கிரேட் பிரிட்டனில் வேலை செய்யும்கூலி வேலைக்காரர்கள் அறியாத மூடர்களல்ல. அவர்களிற் பலர் படித்தவர்களாயும் உலக விவகாரம் நன்றாய்த் தெரிந்தவர்களாயுமிருந்து பார்லிமெண்ட் மெம்பர்களாயுமிருக்கிறார்கள். மேலும், இவர்கள் சுரங்கவேலைசெய்வோர்களென்றும், ரயில்வேக்களில் வேலை செய்வோர்களென்றும், துறைமுகங்களில் வேலை செய்வோர்களென்றும், இவ்வாறு தனித்தனி வகுப்புகளாகப் பிரிந்து ஒவ்வொரு வகுப்பாரும், தேசத்தின் பலபாகங்களில் வசித்த போதிலும், கட்டுப்பாடு செய்துகொண்டும், அவர்கள் சமாட்சணைக்காக ஐவேஜுகள் சேர்த்துஸொஸைடிகள் ஸ்தாபித்துக் கொண்டுமிருக்கிறார்கள். இவைகளைத்தவிர லேபர் யூனியன் என்ற ஒருபெரிய பொதுவான ஸொஸைடியுமிருக்கின்றது. இந்த ஸொஸைடிகளில் லட்சக்கணக்கான மெம்பர்கள் இருக்கிறார்கள். லட்சக்கணக்காக ஐவேஜியும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இப்படி கட்டுப்பாடு செய்துகொண்டிருப்பதாற் கூலிவேலை செய்வோர் மற்ற உயர்ந்தவகுப்பு ஜனங்களால் அலக்ஷியம் செய்யப்படுதல் சாத்தியமல்ல. வேலை நிறுத்தல் செய்து விட்டு கூலிக்காரர்கள் வேலை யில்லாதிருக்கும் போது, மேற்குறித்த ஸொஸைடிகளால் அவைகள் வசமிருக்கும் ஐவேஜியைக் கொண்டு போஷிக்கப்படுகிறார்கள். அவர்கள் கட்சியை எடுத்துப் பலர் பலவிடங்களில் பேசுவதுமன்றி பார்லிமெண்டிலும் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனல் ஸமீபத்தில் நடந்த கலகங்களில் வேலைக்காரர்கள் தங்கள் தலைவர்களை அவமதித்து மனம் போனபடி செய்தார்களாம். உள்நாட்டு மந்திரியாகிய மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் ஸபையில் கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லுகையில், போலீஸாரும் துருப்புகளும் செய்ததைத் தாங்கிப் பேசினர். இவர்களிற் பலர் காயம்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இப்படி கூலிக்காரர்கள் நியாயமில்லாமல் கலகம் செய்தால் முதலாளிகள் தொழில்களிற் கிடைக்கும் லாபம் குறைவதையும் வேலைக்காரர்களின் தொந்தரவையும் நினைத்துத் தங்கள் முதல்களை அன்னிய தேசங்களுக்குக் கொண்டுபோய் ஆங்கே தொழில்கள் நடத்துவார்களென்பதை வேலைக்காரர்கள் மறக்கக்கூடாது. வேலைக்காரர்களுக்கும் முதலாளிகளுக்குமுள்ள மனஸ்தாபத்தைத் தீர்க்க ஒரு பஞ்சாயத்து ஏற்பட்டு விசாரணை யாகி வருகிறது.

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் ஆகஸ்டு மாஸம் 30௳ ரிப்போர்ட்டுப்படி.

PRODUCE MARKET.—விளை பொருள்கள்.

| | ரூ. அ. பை |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 15 முதல் 20 |
| கொன்னைப்பட்டை ஷை | 13 முதல் 13½ |
| கடப்பை கடுக்காய் ஷை | 9 முதல் 10 |
| சேலம் அரசகிரிஷை ஷை | 18 முதல் 19 |
| நல்லெண்ணெய் ஷை | 110 முதல் 115 |
| புங்கம் எண்ணெய் ஷை | 65 முதல் 82 |
| எட்டிக்கொட்டை ஷை | 16½ முதல் 17 |
| விளக்கெண்ணெய் ஷை | 77 |
| கொட்டை முத்து .. | 11¼ |

| | ரூ. அ. பை. |
|---|---|
| பந்தர் பச்சை அரிசி 44 படி | 8 0 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6¼ முதல் 6½ |
| கோதுமை 4 படி .. | 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் | 5¾ முதல் 6 |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் .. | 18 0 0 |
| ஷை (பல்லாரி) ஷை .. | 15 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு | 14 0 0 |

METALS—உலோகங்கள்.

| | ரூ. |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷு—ம் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் .. | 200 |
| செப்புத் தகடுகள் பாரம் .. | 248 |
| செப்புக்கட்டி ஷை .. | 223 |
| நாகம் ஷை | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 75 |
| ஈயம் ஷை .. | 54 |
| காரீயம் ஷை .. | 49 |
| வெள்ளீயம் ஷை .. | 193 வராகன். |

IRON—இரும்பு.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் ரூ. | 19¾—20 |
| சீமை .. .. .. | 42 |
| மருக்கி தகடு 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு .. .. | 27—28 |
| 8 பட்டை எஃகு .. .. | 23 |
| எஃகு வில்கட்டு .. .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 நெ. .. | 21 |
| சீமை .. .. .. | 40-46-49 |

## SEASON.

## காலஸ்திதி

RAINFALL.

**மழை.**—1911௵ ஏப்ரல் மீ 1-உயிலிருந்து ஆகஸ்டுமீ 31௳ வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 20.39 | 24·90 |
| வால்டேர் | 11·99 | 16·97 |
| காக்கிஞடா | 18·30 | 17·59 |
| மசூலிப்பட்டணம் | 17·35 | 19·30 |
| நெல்லூர் | 3·67 | 8·93 |
| மதராஸ் | 3·94 | 13·05 |
| கூடலூர் | 6·26 | 12·10 |
| நாகப்பட்டணம் | 5·09 | 9·35 |
| பாம்பன் | 0·15 | 4·07 |
| கொழும்பு | 20·56 | 40·23 |
| திருவநந்தபுரம் | 28·92 | 37·34 |
| கொச்சி | 84·16 | 80·80 |
| கள்ளிக்கோட்டை | 81·54 | 92·78 |
| மங்களூர் | 86·18 | 103·29 |
| மெர்க்காரா | 122·10 | 102·05 |
| ஐதராபாத் | 17·37 | 20·61 |
| ரெய்ச்சூர் | 13·73 | 16·80 |
| பல்லாரி | 5·03 | 8·60 |
| கர்நூல் | 13·61 | 16·23 |
| கடப்பை | 12·80 | 15·75 |
| ஹாஸ்ஸான் | 19·17 | 20·53 |
| பெங்களூர் | 14·79 | 18·08 |
| கொடைக்கானல் | 59.06 | 24·58 |
| உதகமண்டலம் | 37·51 | .. |
| கோயம்புத்தூர் | 12·59 | 7·95 |
| வேலூர் | 11·74 | .. |
| சேலம் | 16·69 | 20·95 |
| திருச்சிராப்பள்ளி | 5·87 | 12·32 |
| புதுக்கோட்டை | 10·97 | .. |
| மதுரை | 10·59 | 12·10 |
| திருநெல்வேலி | 3·52 | 5·97 |


# பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. } விரோதிகிருதுஹு புரட்டாசிமீ—SEPTEMBER 1911. { ஸஞ்சிகை 9. No. 9.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page ... | 5 0 0 | per month. |
| ½ do ... | 2 8 0 | do |
| ¼ do ... | 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி .. | 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி .. | 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.
## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஸு புரட்டாசிமீ—SEPTEMBER 1911. | ஸஞ்சிகை 9. No. 9.

### பொருளடக்கம்.

**பத்திராதிபர் குறிப்புகள்** பக்கம்
கரென்ஸி நோட்டுகள்-ஸ்ரீ மார்த்தாண்டப் பொருள்காட்சி-பாலங்கள்-மதுரையில் சாயங்கள்—நீதிப்படிப்பு-காகித கைகுட்டைகள்—பெருத்த லாபம்—ப்ராவி டெண்ட் பண்டு மசோதா-இந்தியாவிலுள்ள இருப்புப் பாதைகள்—பிஸ்கோத்துக்குப் பேர்பெற்ற பால்மர்ஸ் கம்பெனியார்-இன்ஷு-ரென்ஸ் மசோதா .. 451-456
**விசேஷ வியாஸங்கள்**
தீண்டாத ஜாதியார்
—ஸர் வி. வி. தேசிகாசாரியார் நைட் 457
ஊத்தங்கரை கோ ஆபரேடிவ் கான்பரென்ஸ் .. .. .. 459
படிக்காரம் அல்லது சீனக்காரம்
—எஸ். முத்துஸாமி பிள்ளை .. 462
இந்திய விவஸாயத்தை சீர்படுத்துவதிலுள்ள கஷ்டங்கள்
—மிஸ்டர் கௌச்மனுடைய ப்ரஸங்கம் 464
தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதின் பயன்கள் .. .. .. 466
தாராபாய் ராணி
—டி. எஸ். வைத்யநாதன் .. 468
**விசேஷத்திரட்டு**
சாதம் சமைத்தல் .. .. 473
இளங்கைம் பெண்கள் .. .. 473
இடிமின்னலாயிருக்கும்பொழுது செய்ய வேண்டியவைகள் .. .. 475
தென்னந்தோப்பு வைத்தல் .. 477
**பத்திரிகை ஆராய்ச்சி**
இந்தியாவின் ஊழியக்காரர்கள் .. 481
இந்தியாவில் பருத்தி ஆலைத்தொழில் 481
ஜப்பானின் கைத்தொழில் அபிவிருத்தி 482
**புஸ்தக ஆராய்ச்சி** .. .. 483
**சிறுவர் பகுதி** .. .. .. 485-486
**ஸ்திரீகள் பகுதி** .. .. 487-488
**பகுதிக் குறிப்புகள்**
விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. 489-498
**மாஸ வர்த்தமானம்** .. .. 499-503
**மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. 504

### CONTENTS.

PAGE
**Editorial Notes**
CURRENCY NOTES-THE SRI MARTHANDA EXHIBITION-BRIDGES-DYES IN MADURA-MORAL INSTRUCTION-PAPER TOWELS BIG PROFITS-THE PROVIDENT SOCIETY'S BILL-INDIAN RAILWAYS-MESSRS. PALMERS OF BISCUIT FAME-THE INSURANCE BILL ... 451-456
**Special Articles**
THE DEPRESSED CLASSES
Sir V. C. Desika Chariar, *Knight* ... ... 457
THE UTTANKARAI CO-OPERATIVE CONFERENCE 459
ALUM
Pandit S. Muthusami Pillai .. ... 462
DIFFICULTIES IN THE IMPROVEMENT OF INDIAN AGRICULTURE
Mr. Couchman's Lecture ... ... ... 464
ADVANTAGES OF REGISTRATION ... ... 466
RANI TARABAI
T. S. Vaidyanathan ... ... ... 468
**Selections**
COOKING RICE ... ... ... ... 473
VIRGIN WIDOWS ... ... ... ... 473
PRECAUTIONS AGAINST THUNDER AND LIGHTNING ... ... ... ... 475
COCOANUT PLANTING ... ... ... 477
**Review of the Press**
The Servants of India ... ... ... 481
The Cotton Mill Industry in India ... ... 481
The Industrial Progress of Japan ... ... 482
**Reviews of Books** ... ... ... ... 483
**The Boys' Section** ... ... ... ...485-486
**The Ladies' Section** ... ... ... ...487-488
**Departmental Notes**
Agricultural Notes ... ... ... ... 489
Industrial Notes ... ... ... ... 491
Educational Notes ... ... ... ... 492
Scientific Notes ... ... ... ... 493
Medical Notes ... ... ... ... 494
Legal Notes ... ... ... ... 495
Personal Notes ... ... ... ... 496
Fun and Anecdote ... ... ... ... 497
Curiosities ... ... ... ... 498
**News of the Month** ... .. ... ... 499-503
**Madras Market Reports** ... ... ... 504



## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### Currency Notes.

கரென்ஸி நோட்டுகள்.—வருகிற அக்டோபர் மாஸம் முதல்தேதி முதல் கரென்ஸி நோட்டுகளை முழுசாகவோ பாதியாகவோ இன்ஷ்யூர் செய்யாமல் தபால் மூலமாய் அனுப்பக்கூடாது.

### The Sri Marthanda Exhibition.

ஸ்ரீ மார்த்தாண்டப் பொருள்காட்சி.—டில்லியில் தர்பார் நடக்கும் தினமாகிய வருகிற டிஸம்பர் மாஸம் 12-ம் தேதி செவ்வாய்க்கிழமையன்று புதுக்கோட்டையில் மகாராஜா டவுன் ஹாலில் விவஸாயம், கைத்தொழில், வித்யாவிஷயம் முதலியவைகளைப் பற்றிய பொருள்காட்சி ஒன்று வைக்கப்படும். அதை டிஸம்பர் மாஸம் முடிய எல்லாரும் போய்ப் பார்க்கலாம். அப்பொழுது இங்கிலீஷிலும் தமிழிலும் ப்ரஸங்கங்கள் செய்யப்படும். இவைகளோடு ப்ரஸங்கங்களைச்சேர்ந்த விஷயங்கள் நிதர்சனமாயும் காண்பிக்கப்படும்.

### Bridges.

பாலங்கள்.—ஏற்கனவேயுள்ள பாலங்களைப் பழுது பார்க்கவாவது அல்லது புதுப்பாலங்கள் அவசியமான இடங்களில் கட்டவாவது கையில் பணமில்லாமலிருக்கும் டிஸ்ட்ரிக்டு போர்டுகளுக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே, எந்தெந்த ஜில்லாக்களில் எங்கெங்கே அப்படிப்பட்ட வேலைகள் செய்யவேணுமோ அவைகளுக்கு என்ன செலவாகும், வேலை எத்தனை நாள் பிடிக்கும், டிஸ்ட்ரிக்டு போர்டார் எவ்வளவு பணம் கொடுக்கக்கூடும், என்று எல்லா விஷயங்களையும் எழுதியனுப்பும்படி கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்திருக்கிறார்கள்.

### Dyes in Madura.

மதுரையில் சாயங்கள்.—மதுரையில் துணிக்கு சாயம்போடுவது ஒரு பெருத்த தொழில். இந்தத்தொழிலுக்கு வேண்டிய சாயமெல்லாம் இதர தேசங்களிலிருந்து வருகிறது. முக்கியமாய் இங்கிலாந்தில் ஒரு கம்பெனியும் ஜெர்மனியில் இரண்டு கம்பெனிகளும் வேண்டிய சாயங்களை ஸப்ளைசெய்து வருகின்றன. இந்த மூன்று கம்பெனிகளும் சில வருஷங்களுக்கு முன்வரையிலும் ஒன்றுக்கொன்று போட்டிபோட்டு விற்றதினால் சாயத்தின்விலை மலிவாக இருந்தது. ஸமீபத்தில் இந்த மூன்று கம்பெனிகளும் கட்டுப்பாடு செய்துகொண்டு விற்பனைசெய்வதால் சாயத்தின்விலை ஏறிவிட்டது. இப்பொழுது ஜெர்மெனியிலிருந்து வேறொரு கம்பெனி இந்தக் கட்டுப்பாட்டில் சேராமல் வியாபாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறதாம். ஆகையால் சாயத்தின் விலை இறங்கலாமென்று தோன்றுகிறது.

### Moral Instruction.

நீதிப்படிப்பு.—தற்காலத்து பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள், பெரியோர்கள், ராஜாங்கத்தார் முதலியவர்கள்முன் நடந்துக்கொள்ளவேண்டிய வழிப்படி நடப்பதில்லையென்றும், அதற்குக்காரணங்களை கண்டுபிடித்து அவர்களுக்கு நீதிமார்க்க போதனைகள் செய்ய ஏற்பாடாக வேண்டுமென்றும், கவர்ன்மெண்டாரும், பல ப்ரமுகர்களும், சங்கங்களும், முயற்சிசெய்து வருகிறார்கள். தற்காலச் சிறுவர்கள் முன்காலத்துச் சிறுவர்களைப்போல படிந்து நடக்காததற்கு ஒரு காரணம் என்னவென்றால் முன்காலத்தில் சிறுவர்களுக்கு போதித்து வந்த சிறந்த நூல்களை விலக்கிவிட்டு புது முறைப்படி எழுதிய புஸ்தகங்களென்று சிபார்சு செய்யப்பட்ட புஸ்தகங்களை பள்ளிக்கூடங்களில் போதித்து வருவதே. தமிழ்ப்

பாஷையைப்பற்றியமட்டில் பக்தி ரஸம், நீதி நெறி முதலிய சிறந்த போதனைகள் அடங்கிய புஸ்தகங்கள் எவ்வளவோ முன்காலத்தில் சிறுவர்களுக்குப் பாடமாயிருந்தன. உதாரணமாக,

1. ஆத்திச்சூடி.
2. கொன்றைவேந்தன்.
3. வெற்றிவேற்கை.
4. முதுமொழிக்காஞ்சி.
5. உலகநீதி.
6. மூதுரை.
7. நல்வழி.
8. நன்னெறி.
9. இன்னாநாற்பது.
10. இனியவை நாற்பது.
11. நீதிவெண்பா.
12. நீதிநெறி விளக்கம்.
13. திரிகடுகம்.
14. நான்மணிக்கடிகை.
15. சிறுபஞ்சமூலம்.
16. ஏலாதி.
17. அறநெறிச்சாரம்.
18. ஆசாரக்கோவை.
19. பழமொழி.
20. நாலடியார்.
21. திருக்குறள்.

ஆகிய இவைகளையெல்லாம் தற்காலத்தில் எத்தனை ஸ்கூல்களில் சிறுவர் வாசித்து வருகிறார்கள். இவைகளைப் பழையபடி வழக்கத்தில் கொண்டுவந்தால் ராஜாங்கத்தாருக்கும் ஜனஸமூகத்துக்கும் குறைவுண்டாகாது.

**Paper Towels.**

காகித கைகுட்டைகள்.—நம்முடைய தேசத்தில் ஸ்திரீகளானாலும் ஸரி, புருஷர்களானாலும் ஸரி, சாப்பிட்டுவிட்டு கையை அலம்பினால் அலம்பின கையை உடுத்திக் கொண்டிருக்கும் புடவையிலும் ஸோமனிலும் துடைத்துக்கொள்வது ஸதாரண வழக்கம். இங்கிலீஷ் தோரணையில் இருக்கிறவர்கள் சிறு கைகுட்டைகளை வைத்துக்கொண்டு டிபன் முதலியவைகளைச் சாப்பிட்டுவிட்டு கையை துடைப்பார்கள். இவர்களிலேயே சிலர் கைகுட்டை வைத்துக் கொள்ளாமல் டிபனைச் சாப்பிட்டுவிட்டு டிபன் கட்டிக் கொண்டுவந்த காகிதத்திலோ, டேபில் மேல் போட்டிருக்கும் கம்பளியிலோ, அல்லது தலைக்குமேல் ஆடும் பங்காத் துணிகளிலோ கையைத்துடைத்துவிடுவார்கள். இவைகளெல்லாம் அநாசார வழக்கங்களே. ஆகையால் சாப்பிடும் பொழுதும் இன்னும் கைகால் கழுவும் பொழுதும் ஈரத்தைத் துடைக்க ஒரு சிறு கைகுட்டை வைத்துக்கொள்வது நலம். இப்படிப்பட்ட கைகுட்டைகள் சீக்கிரத்தில் அழுக்காகிவிடுவதால் அவைகளை அடிக்கடி வண்ணானுக்குப் போடவேண்டியிருக்கும். இது வாஸ்தவத்தில் கொஞ்சம் தொந்தரவோடு பணச்செலவுங்கூடத்தான். ஆகையால் இந்தத் தொந்தரவுகளை நிவர்த்திக்க அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் துணி கைகுட்டைகளை உபயோகிக்காமல் காகித கைகுட்டைகளை ஸாதாரண துணி கைகுட்டைகளைப் போலவே உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவைகள் சிறியனவாயும் மிருதுவாயும் ஈரத்தை இழுக்கும்படியாயும் ஈரம்பட்டால் கிழியாதனவாயும் இருக்கின்றன; இவைகள் தனித் தனியாய் வேணுமானாலும், கிடைக்கும் அல்லது நீளமாக வாங்கி அப்பப்போ ஒருகுட்டையைக் கிழித்து கொள்ளலாம். ஒருதடவை ஒரு குட்டையை உபயோகித்ததும் அதை எறிந்து விடலாம். வண்ணானுக்குப்போட்டால் என்ன கூலி கொடுக்கவேணுமோ அதைவிட இந்தக்காகித கைகுட்டையின் கிரயம் வெகு குறைச்சலாகவே



இருக்கிறதாம். ஆகலால் அதை எறிந்து விடுவதே செட்டான காரியம். இந்த கைகுட்டைகள் 250, அல்லது 500 சேர்ந்த கட்டுகளாக விற்கப்படுகின்றன. இந்த கைகுட்டைகளை முகத்திலும் கைகளிலும் துடைத்துக் கொள்வதால் யாதொரு கெடுதலும் நேரிடாது. சில கைகுட்டைகள் வாஸனையாகவே இருக்கின்றன. நாகரிகம் அதிகமாகி வருகிற இந்தியாவில் இது செலவாகுமென்று தோன்றுகிறது. ஊக்கமுள்ள வியாபாரிகள் இதைப் பற்றிவிசாரித்து வரவழைத்தால் முந்துகிறவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்குமென்று தோன்றுகிறது.

**Big Profits.**

பெருத்த லாபம்.—மேலே எழுதிய குறிப்பில் காகித கைகுட்டையை வாங்கி விற்றால் அந்த வியாபாரத்தில் முந்துகிறவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்குமென்று சொன்னோம். இந்நாளில் வேறு விதத்தில் பெருத்தலாபம் கிடைக்கும் வியாபாரங்கள் இல்லையா என்பதைப் பொதுவாக விசாரிப்போம். பெரும் லாபம் ஸம்பாதிக்க வேணுமானால் தற்போது இரண்டுவழிகள் தான் தோன்றுகின்றன. ஒன்று பெரும் முதல் போட்டு பலவிதச்சரக்குகளையும் வைத்துக்கொண்டு, வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல், விற்று வருவது. இந்த வியாபாரத்தில் கடைவாடகை, சிப்பந்திச்செலவு, கணக்குச்செலவு, இவைகள் குறைவாக அடங்குவதோடு சரக்குகளை ஏராளமாக வியாபாரத்துக்கு வாங்குவதில் கொள்முதலும் குறைவாகவே இருந்து, மொத்தத்தில் நல்ல லாபம் கிடைக்கிறது. இரண்டாவது புதிய தினுஸான வியாபாரங்களைச் செய்தல். நூதனமான சரக்குகள் விற்பனைக்கு வரும்பொழுது அதை சில வர்த்தகர்கள் மட்டுமே முதலில் விற்பார்கள். அதன்விலை விகிதங்களும்வியாபாரிக்கு மட்டும் தெரியுமே ஒழிய வாங்குகிறவர்களுக்குத் தெரிய ஹேதுவில்லை. ஆகையால் இப்படிப்பட்ட சரக்குகளின் மேல் வைக்கும் லாபமெல்லாம் பெறுத்த லாபமாகவே இருக்கும். நாளாக நாளாக விலை விகிதங்கள் வெளிப்பட்டு, போட்டியும் ஏற்பட்டு, விலை இறங்கவே, லாபமும் இறங்கும். முன்காலத்தில் இஸ்பானியர்கள் அமெரிக்காவை கண்டுபிடித்தபோது அங்கே நல்ல பகட்ட துணிகளைக் கொண்டுபோய்க் காட்டினர் அப்போது அவ்விடத்து ஜனங்கள் துணிகளுக்குத் தங்கத்தை கட்டி யாகத் தூக்கிக் கொடுத்தார்களாம். லாபமென்று சொல்லாமல் கொள்ளை சொல்லவேண்டும். இதை அற வியாபாரிகள் போய் விழவே, விலை 'குட்டு' வெளிப்பட்டு, அங் ஜனங்கள் முதலில் ஒரு துணிக்குக் தங்கத்துக்கு ஒரு மூட்டை துணி வேணுமென்று பேரம் செய்ய ஆர விட்டார்கள். அவ்வளவு தூரம் போவா பைஸிகிள் வியாபாரத்தைப் பார்க்கிறதா முதல் முதல் பைஸிகிள் வந்தவுடனே என்ன விலையாய் விற்றது? இப்பொழுது என்னவிலையாய் விற்கிறது? பைஸிகிள் வியாபாரிகள் முன்னே அடித்த லாபத்தில் இப்பொழுது பாதிகிடைக்கிறதோ ஸந்தேகம். வரவர பைஸிகிள் கடைகள் அதிகமாகவே விலையும் குறைந்து லாபமும் குறைந்துவிட்டது. ஆகவே, இந்தக் காலத்தில் ஏதோ வாரிக்கொட்டிவிடலாமென்று எண்ணி வியாபாரம் தொடங்குவது அநேகமாய் கைகூடாமலே போகும். அதனால் வியாபாரத்தில் லாபம் கிடையாதென்று சொல்வதாக எண்ணக்கூடாது. ஸ்வல்பலாபத்துக்குவிற்று முதலை எவ்வளவு புரட்டலாமோ அவ்வளவும் புரட்டினால்

கூடியமட்டில் நல்ல லாபம் ஸம்பாதிக்கலாம். கோடீசுவரனாய் ஆகாவிட்டாலும் பணக்காரனாகலாம்.

## The Provident Society's Bill.

ப்ராவிடெண்ட் பண்டு மசோதா.—**மரண பண்டென்றும், கலியாண பண்டென்றும், பல விதமான பண்டுகள் தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் கொஞ்ச காலமாக நடந்து வருவதை நேயர்கள் அறிவார்கள். இந்த பண்டுகளுக்கு மாஸம் ஒன்றுக்கு ஒரு ரூபாயோ அல்லது வேறு கட்டணமோ கட்டிக்கொண்டு வந்தால், எதற்காகக் கட்டணம் கட்டிவரப் பட்டதோ, அந்தக் கலியாணமோ, சாவோ, எந்த வருஷத்தில் ஏற்படுகிறதோ, அந்த வருஷத்தில் சேர்ந்தபணத்தில் செலவு போக பாக்கியை, விதப்படிப்பிரித்துக் கொடுக்கிறார்கள். இப்படிப் பிரித்துக்கொடுப்பதில் கட்டணத் தொகைகூடக் கிடைப்பதில்லை. சில பண்டாபீஸ்க் காரர்கள் பணங்களை எடுத்துக் கொண்டு ஓடியே போய்விடுகிறார்கள். இப்படிப்பட்ட ப்ராவிடெண்ட் பண்டுகளை அடக்குவதற்கு, இந்தியாசட்ட நிர்மாண ஸபையில் ஒரு மசோதாக் கொண்டுவரப் பட்டிருக்கி**றது. அதுசட்டமாகி நடவடிக்கைக்கு வரும் பட்சத்தில் மேற்சொன்ன ப்ராவிடெண்ட் பண்டுகளெல்லாம் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டும். பண்டுகளின் ரூல்களையும் ரிஜிஸ்ட்ராரிடத்தில் தாக்கல் செய்யவேண்டும். தவிர, காலாகாலங்களில் ரிஜிஸ்ட்ரார்களுக்குக் கணக்குகளையும் ஒப்புவிக்க வேண்டும். இவைகளையெல்லாம் பார்த்து ரிஜிஸ்ட்ராருக்கு ஸரியான பண்டு அல்லவென்று தோன்றினாலும் ஸரி, ரூல்படி நடத்தப் படவில்லை யென்று தோன்றினாலும் ஸரி, அல்லது மோசம் நடக்கிறதென்று தோன்றினாலும் ஸரி, அவர் ஒரு "ஆக்சுயெரி" என்று சொல்லப்படும் நிபுணக் கணக்கரை ஏற்படுத்தி, பண்டு விஷயங்களை பரிசோதிக்க செய்யலாம். அந்த "ஆக்சுயெரி" நல்ல அபிப்பிராயம் கொடுத்தாலொழிய பண்டையே ரிஜிஸ்ட்ரார் கலைத்துவிடலாம். இது ஏழைகள் பணத்தைப் பாதுகாக்கும் நல்ல சட்டமாகும்.

## Indian Railways.

இந்தியாவிலுள்ள இருப்புப்பாதைகள்.— 1910-௵த்தில் 602 மைல் தூரம் இருப்புப் பாதைகள் போடப்பட்டன. அதைத்தவிர ௸ ௵த்தில் 350மைல் புதிதாக பாதைபோடும் படியாகவும் உத்தரவாயிருக்கிறது. ஆகவே இது வரையிலும் இந்தியா முழுவதிலும் ஸுமார் 32,399 மைல் ஏற்கனவே போடப்பட்டும் 2,765 மைல் புதிதாகப் போடும்படியும்உத்தரவாகி யிருக்கிறது.

இந்தியா முழுவதிலும் போடப்பட்டுள்ள இருப்புப் பாதைகளுக்காக ஏறக்குறைய 447 கோடி 49 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள்.

இந்தியாவில் இருப்புப்பாதைகளினால் உண்டான மொத்த வருமானம் 1909ம் வருஷத்தில் 4706 லக்ஷம் ரூபாய். 1910 ௵த்தில் 5,114 லக்ஷம் ரூபாய். அதாவது முன் வருஷத்தைவிட 408 லக்ஷம்ரூபாய் ஜாஸ்தி. செலவு எல்லாம் போக மீதியாயுள்ள வருமானம் ரூ 2398 லக்ஷம்.

1909 ௵த்தில் ரெயில் மார்க்கமாய் பிரயாணம் செய்த ஜனங்களின் மொத்தம் 3,290 லக்ஷம். 1910 ௵த்தில் 3,720 லக்ஷம். அப்படிப் பிரயாணம் செய்ததனால் உண்டானவருமானம் 1909௵த்தில்ரூ 1566 லக்ஷம். 1910 ௵த்தில் ரூ. 1,712 லக்ஷம். 1909 ௵த்தைவிட 1910 ௵த்தில் 3 வது வகுப்பில் 410 லக்ஷம் ஜனங்கள் அதிகமாய்ப் பிரயாணம் செய்திருக்கிறார்கள்.



பிரயாணிகளுக்காக ஏற்படுத்தப் பட்ட சார்ஜு மனிதன் ஒருவனுக்கு மைல் ஒன்றுக்கு **ஸராஸரி** $2\frac{3}{4}$ பைஸா வாகிறது.

1910௵ல் ரயில் மார்க்கமாய் 660 லக்ஷம் டன் ஸாமான்கள் அனுப்பப்பட்டன. அதனால் வருமானம் 3043 லக்ஷம் ரூபாய். அதாவது முந்திய வருஷத்தை விட 50 லக்ஷம் டன் ஸாமானும் 231 லக்ஷம் ரூபாயும் அதிகம்.

௸ ௵த்தில் இந்தியாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களி லிருந்து ஸுமார் 110 லக்ஷம் டன் கரி எடுத்து இந்தியாவிலுள்ள துறைமுகங்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அப்படி அனுப்பியதால் இங்கிலாந்திலிருந்தும் இதர தேசங்களிலிருந்தும் இந்தியாவுக்கு அனுப்பப்படும் நிலக்கரி 174,000 டன்வரையில் குறைந்திருக்கிறது.

ஸாமான்களை ரெயில் மார்க்கமாய்க்கொண்டு போவதற்காக ஏற்படுத்தப்பட்ட சார்ஜு மைலுக்கு ஸுமார் 5 பைஸா வாகிறது.

1910 ௵த்தில் இந்தியா ரயில்வே உத்யோகஸ்தர்களைக் கணக்கிட்டுப் பார்த்ததில் மொத்தமாய் 543,493 மனிதர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். இதில் 7411பேர்கள்ஐரோப்பியர், 9583 பேர்கள் ஆங்கிலேய-இந்தியர்கள்; மற்றவர்கள் இந்தியர்கள்.

1910 ௵ டிசம்பர் ௴ 21௳ தென் இந்தியா ரெயில்வே கம்பெனியார் 1945 ௵ டிசம்பர் ௴ 31௳ வரையில் தாங்களே கம்பெனியை நடத்தும்படி புதிதாக ஒரு எக்ரீமெண்டு இந்தியமந்திரியோடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் பிரகாரமாக இப்போது வேலைநடத்திவருகிறார்கள்.

## Messrs. Palmers of Biscuit fame.

பிஸ்கோத்துக்குப்பேர்பெற்ற பால்மர்ஸ் கம்பெனியார்.—இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பிஸ்கோத்துக்குப் பேர்பெற்ற வியாபாரிகளாகிய மெஸர்ஸ் பால்மர் கம்பெனியார் தாங்கள் பிஸ்கோத்து செய்யும் ரீடிங்க் பட்டணத்தில் ஒரு ஸர்வகலாசாலை ஸ்தாபிப்பதற்காக இரண்டு லக்ஷம் பவுன் அதாவது 30லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுத் திருக்கிறார்களாம். வியாபாரத்தில் பணம் ஸம்பாதிப்பது பெரிதல்ல. ஸம்பாதித்த பணத்தை நல்ல வழியில் உபயோகப்படுத்தத் தெரியவேணுமே! நம்முடைய தேசத்தில் இதுவரையில் இப்படிப்பட்ட தருமம் செய்தவர் மிஸ்டர் ஜெ.என் டாட்டா ஒருவர்தான். அவருடைய 30லக்ஷம் ரூபாய் நன்கொடையால் பங்களூரில் அமைக்கப்பட்ட டாட்டா சாஸ்திர ஆராய்ச்சிசாலை ஸமீபத்தில்தான் கட்டி முடிந்து திறக்கப்பட்டது.

## The Insurance Bill.

இன்ஷூரென்ஸ் மசோதா.—இங்கிலீஷ் படித்தவர்கள் 'இன்ஷூரென்ஸ்' என்றால் இன்னதென்று நன்றாய் அறிவார்கள். இது பணம்சேர்ப்பதற்கான ஒரு உபாயம். அனேக குடும்பஸ்தர்கள் ஸம்பாதிப்பதெல்லாம் செலவழிந்துபோய் பிற்காலத்தில் வயதான பிறகு உழைத்து ஸம்பாதிக்க சக்தியில்லாமல் தரித்திரத்தால் வருந்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஸம்பாதிக்கும் காலத்தில் வருஷம் ஒன்றுக்கு சில வருஷங்களுக்கு ஸ்வல்பக் கட்டணம் கட்டிவந்தால் ஒரு குறிப்பிட்டவயதில் கட்டணம் கட்டி வந்தவனுக்கோ அல்லது அவனுக்குப் பின்பு அவனுடைய வார்ஸுகளுக்கோ கட்டணத்துக்குத் தகுந்தபடி குறிப்பிட்ட தொகை கொடுப்பதற்காக சில வியாபாரக் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு உதாரணத்தை எடுத்துக்காட்டினால் இந்த விஷயம் நன்றாய் விளங்கும். ஒருவன் ஸுமாராய் ஸம்பாதிக்கிறான். வந்ததெல்லாம் செலவழிந்துபோகிறது. வயது காலத்தில் தன

க்கோ அல்லது தனக்குப்பிற்பட்டு தன்னுடைய குழந்தைகளுக்கோ ஆஸ்தி ஏற்படும் என்று எண்ணஹேதுவில்லை. அல்லது அப்படி ஏற்பட்டாலும் அது ஸ்வல்பமாகவே தான்இருக்குமென்று தோன்றுகிறது. குழந்தைகளுககு 1000 ரூபா ஆஸ்தியாவது வைக்க வேணுமென்ற ஆஸ்தையிருக்கிறது. இவனுக்கு தற்போது 45 என்று வைத்துக்கொள்வோம். 55 வயது வரையில் சரீரம் திடமாயிருந்து ஸம்பாதிக்கலாமென்று தோன்றுகிறது. இவன் என்னசெய்யக் கூடுமென்றால், ஒருகம்பெனியில் இன்ஷூர் செய்தால் 1000 ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்குரூ72 முதல் 84 வரையில், கம்பெனிக்குத் தக்கபடி, கட்டணம் செலுத்தும் பட்சத்தில், இவன் செத்த பிறகு இவனுடைய வார்ஸுகளுக்கு 1000 ரூபாய் அந்தக் கம்பெனியார் கொடுப்பார்கள். கட்டணம் கட்டிய மறுவருஷத்தில் செத்துப் போனாலும் 1000 ரூபாய் கொடுத்துவிடுவார்கள். மொத்தத்தில் 10 வருஷத்துக்குமேல் கட்டணம் கொடுக்கவேண்டியதில்லை.

இன்ஷூரென்ஸ் கம்பெனிகள் என்ன விதமாய் கட்டணத்தை நிர்மாணம் செய்கிறார்களென்றால், அவர்கள் அந்தந்த தேசங்களில் பொதுவாக ஜனங்களுடைய ஆயுள் காலமென்ன என்று கணக்கிட்டு பார்த்து ஒரு ஸராஸரி ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். கட்டணமாகக் கிடைக்கும் பணங்களுக்கு ஸாதாரணமாக வட்டி என்ன கிடைக்கும், இன்ஷூரென்ஸ் தொழிலை செய்வதற்கு செலவு என்ன ஆகும், என்று இப்படிக்கெல்லாம் கணக்குப் போட்டுக் கொள்கிறார்கள். ஒருவன் 1000 ரூபாய்க்கு இன்ஷூர் செய்யவேண்டுமென்றால், அவன் கேட்கும் காலத்தில் அவனுக்கு என்னவயதோ அதை மேலேசொன்ன ஸராஸரி வயதிலிருந்து கழித்து, பாக்கிவருஷங்களில் எத்தனை ரூபாய் மேனிக்கு வருஷாவருஷம் கட்டணம் கட்டினால் அவையெல்லாம்சேர்ந்து 1000ம் ரூபாயாகுமென்று பார்த்து, கட்டணத்தை நிர்மாணம் செய்கிறார்கள்.

இன்ஷூரென்ஸ் வியாபாரம் நல்ல லாபம் தரக்கூடியதாகையால் அநேகம் பேர்கள் தங்களுடைய ஸ்வய நலத்தையே நாடிகட்டணம் கட்டுவோர்களுடைய பணங்களெல்லாம் மூழ்கிப்போகும்படியாக கம்பெனிகளை ஏற்படுத்தி நடத்தி வருவதால் அப்படிப்பட்ட போலிக் கம்பெனிகளை அடக்க இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய சட்ட நிர்மாண ஸபையில் ஒரு மசோதாக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன் முக்கிய அம்சங்கள் என்னவென்றால், இந்தியாவில் வியாபாரம் செய்யும் இன்ஷூரன்ஸ் கம்மெனிகள் கவர்ன்மெண்டாருக்கு கணக்கு ஒப்புவிக்கவேணும். ஐந்து வருஷத்துக்கு ஒருதடவை "ஆக்சுயெரி" என்று சொல்லப்படும் ஒரு தக்க கணக்கரைக்கொண்டு கணக்குகளை ப்பரிசோதித்து கவர்ன்மெண்டுக்கு ஒரு கணக்கு அனுப்பவேண்டும். இன்ஷூரென்ஸ் கம்பெனி, வியாபாரம் தொடங்குவதற்கு முன்னால், கவர்ன்மெண்டாரிடத்தில் லக்ஷ ரூபாய் டிபாஸிட் செய்யவேண்டும். இங்கிலாந்தில் ஏற்பட்டு இந்தியாவில் வியாபாரம் செய்யும் இன்ஷூரென்ஸ் கம்பெனிகளுக்கு மேற்சொன்ன நிபந்தனைகள் ப்ரயோகிக்கப்படமாட்டா. ஏனென்றால் அவைகள் இங்கிலாந்தில் கவர்ன்மெண்டுக்கு தங்கள் கணக்குகளை ஒப்பிவிக்கிறார்கள். தவிர, அங்கே மூன்று லக்ஷ ரூபாய் டிபாஸிட்டும் செய்திருக்கிறார்கள்.

மேற்சொன்ன மசோதா சட்டமாகி அமுலுக்கு வரும் பட்சத்தில் ஏழை ஜனங்கள், நெற்றிவேர்வை நிலத்தில் விழுந்து கஷ்டப்பட்டு ஸம்பாதித்த பணங்களை இழக்காமல், அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும், ஜீவனம் செய்ய ஹேதுவாகும்.



## THE DEPRESSED CLASSES.

BY

SIR V. C. DESIKA CHARIAR, *KNIGHT*.

## தீண்டாத ஜாதியார்.

இப்பொழுது கொஞ்சகாலமாய், தீண்டாத வகுப்பினரைப்பற்றி உயர்ந்த ஜாதியில் சிலரும் பாதிரியார்களில் சிலரும் கூட்டங்கள் கூடி ப்ரஸங்கங்கள் செய்து வருகிறார்கள். தவிர, பத்திராதிபர்களும் பத்திரிகைகளில் எழுதிவருகிறார்கள். நமது தேசத்தில்பிறந்து வளர்ந்து, ஜாதிவித்யாஸத்தால் உண்டாகும் கொடுமைகளுக்குக் கீழ்ப்பட்டு நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து அவிவேகத்தாலும் அசுத்த நடைவடிக்கைகளாலும் அவமதிக்கப்பட்டு கஷ்டஜீவனம் செய்துகொண்டு மிருகங்களுக்கு ஒரு படி மாத்திரம் மேலான ஸ்தானத்திலிருப்பது போல நமது மாகாணத்தில் ஒவ்வொரு ஜில்லாக்களிலும், பறையரென்றும், பள்ளரென்றும், மாலரென்றும், மாதிகளென்றும், ஏனாதியென்றும் இப்படிப்பட்ட இழிவான பெயர்களால் கூப்பிடப்பட்ட ஜனங்களை எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்கிற ஆவலும் எண்ணமும் நமது ராஜாங்கத்தாருக்கும் உண்டாயிருக்கிறது. ஆனால் நமது முன்னோர்கள் செய்த தவத்தின் பயனாலோ அல்லது நம்முடைய விசேஷ அதிர்ஷ்டத்தாலோ இந்தியா தேசத்துக்கு அதிபதிகளாக இருக்கும் ஆங்கிலேயதுரைத்தனத்தார் இந்த தேசத்திலுள்ள பலஜாதி பல வகுப்பினர்களையும், விசேஷ வித்யாஸமில்லாமலும், நிஷ்பக்ஷபாதமாகவும் நடத்திவருகிறார்களென்பதில் ஸந்தேகமில்லை. ராஜாங்கத்தாரால் ஏற்பட்டிருக்கும் சட்டத்திட்டங்கள் எல்லாருக்கும் பொதுத்தான். இன்னும் யோசிக்குமளவில் சில சட்டங்கள் பல சாலிகளிடமிருந்தும், தனாட்டியர்களிடமிருந்தும், பல ஹீனர்களையும், பொருள் இல்லாத கீழ்மை தசையில் உள்ளவர்களையும், காப்பாற்றும் பொருட்டு அந்தந்த நிலைமைக்குத் தக்கப்படியான ஸாதாரணம் போலல்லாமல் ப்ரத்யேக சட்டங்களையும் செய்திருக்கிறார்கள். அதாவது, ஒருவன் கொலைக் குற்றமோ, களவுக் குற்றமோ, செய்தால் அப்படிக்குற்றம் செய்தவன் என்ன ஜாதியானென்று ராஜாங்கத்தில் விசாரிக்கிறதில்லை. அவன் உயர்ந்த ப்ராம்மண ஜாதியில் பிறந்தவனாயிருந்தாலும் ஸரி, அதிகீழ்மையாய் நினைக்கப்பட்ட ஹீனஜாதியனாயிருந்தாலும் ஸரி, தண்டனை ஒன்றுதான். மேலும் பப்ளிக் ரோட்டுகளில் ஜாதிவித்யாஸமில்லாமல் எல்லாரும் நடக்கலாம். பப்ளிக் குளங்கள், நதிகள், இவைகளில் எல்லாரும் ஸ்னானபானங்கள் செய்யலாம். கவர்ன்மெண்ட்டு பாடசாலைகளில் எல்லாஜாதி சிறுவர்களும் சேர்ந்து படிக்கலாம். ராஜாங்கத்தில் எந்த உத்யோகத்துக்கும் ஜாதிவர்ண சிரமமில்லாமல் வேலை பார்க்கத் திறமையுள்ள யாரையும் ஏற்படுத்தலாம்.

சில மாஸங்களுக்கு முன் இந்நகரத்தில் கூடிய ஒரு மகா ஸபையில் அனேகர் ப்ரஸங்கம் செய்ததில் தீண்டாத ஜாதியாரை அபிவிருத்திக்குக் கொண்டுவர வேணுமானால் அவர்களைப் படிப்பிக்கவேணுமென்று ஒருவிதமான தீர்மானமானதாகத் தோன்றுகிறது. படிப்பு என்பதை அனேக வகையாகப்பிரிக்கலாம்.

1. எழுதப்படிக்கவும், கூட்டவும், கழிக்கவும் தெரிந்துகொள்ளுதல். இது ஸகல ஜனங்களும் ஆண்பெண் வித்யாஸமில்லாமல் தெரிந்துகொள்ளவேண்டியது. இதைத்தான் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று ஔவையார் சொன்னது. மனுஷ்

யாளுக்கு இரண்டு கண்கள் எவ்வளவு உபயோகமோ அதேமாதிரி எழுதப்படிக்கவும், கூட்டவும், கழிக்கவும் தெரிந்துகொள்ளுதல் மூலாதாரமான படிப்பு. இது ஸாதாரணமாய் 2 அல்லது மூன்று வருஷங்களில் செம்மையாய்த் தெரிந்துகொள்ளக் கூடியது. இதுதான் மற்ற எவ்விதமான விசேஷப்படிப்புகளுக்கும் அஸ்திவாரமாயிருக்கும். யோசித்துப்பார்த்தால் இத்தேசத்தில் தீண்டக்கூடிய உயர்ந்த ஜாதியென்று சொல்லிக்கொள்வோரில் 100ல் 80 பேர், மேலே சொல்லிய எண் எழுத்து என்கிற இரண்டுகண்ணுமில்லாத குருடர்களாகத் தானிருக்கிறார்கள். இது விஷயத்தில் தான் ராஜாங்கத்தார் முக்யமாயும் அந்தந்த ஜில்லாக்களிலுள்ள தனிகர்களும், ப்ரமுகர்களும், கூடியவரையில் எல்லா தானங்களைவிட வித்யாதானம் சிறந்ததென்று நினைத்து அங்கங்குள்ள சிறுவர்களுக்கு மூலாதாரமானபடிப்பை கட்டாய மாகவும், ஏழைகளிடத்தில் சம்பளம் வாங்காமலும் பரவும்படி செய்யவேண்டியது. இது விஷயத்தில் ராஜாங்கத்தார்

"சொல்வது யாருக்கும் அறிது,
"சொல்லியவண்ணம் செய்தலரிது,"

என்கிற நியாயப்படி, இதற்கு வேண்டிய திரவியம் தற்காலத்தில் இல்லையென்றும், உபாத்தியாயர்கள் கிடைப்பதரிது என்றும் சொல்லுகிறதாகத் தெரிகிறது.

2. மேலே சொன்ன மூலாதாரமான படிப்புக்குமேல் இரண்டாவதுபடி என்று சொல்லும் படிப்பு ஸெகண்டரிப்படிப்பு. அது ஆவசியத்தில் கொஞ்சம் கீழ்ப்பட்டதேனும் ஜீவனார்த்தமானப் படிப்பா யிருக்கிறது. மனுஷ்யாளுக்கு முக்யமாய் வேண்டிய ஆறு ஸுகங்களில் ஒன்று (அர்த்தகரீச வித்யா) பொருள் ஸம்பாதிக்கக்கூடிய வித்தை. இதைப் பலவிதமாகப் பிரிக்கலாம். முதலில் இலக்கிய இலக்ஷண விஷயங்களில் விசேஷப்பயிற்சியடைந்து ஒருவிதமான சாஸ்திரமும் படியாமல் வெகு திறமையோடு எழுதவும் பேசவும் தெரிந்துகொள்ளுதல் இது ராஜாங்கத்தில் ஆரம்பம் முதல் நடுத்தரமான உத்யோகங்களை திறமையுடன் பார்க்கவேண்டிய யோக்யதையைக் கொடுக்கும். மேலும், தர்க்கம், நியாயம் கணிதம், வைத்தியம், ரஸாயனம், முதலான சாஸ்திரங்களைக் கற்க வேண்டுபவர்க்கும் அவசியமானப் படிப்பா யிருக்கிறது. இதல்லாமல், டெக்னிகல் படிப்பு என்று சொல்லப்படும் ஸகலகலைகளும், கைத்தொழில்களும் தெரிந்துக் கொள்வதும் ஜீவனார்த்தந்தான். இதில் தச்சுவேலை முதலான கைத்தொழில்களும், படமெழுதுதல், சூக்ஷமலிகிதம், ஸங்கீதம், இன்னும் இதர சித்திர வேலைகள் ஆகிய படிப்புகளை அவனவன் திறமைக்கும் தகுதிக்கும் தக்கப்படி கற்பிக்கலாம்.

மேலே சொன்ன மூலாதாரமான படிப்பு கற்றவர்களில்பலர் அந்தப்படிப்போடு த்ருப்தியடைந்து முன்னோர்தேடிய பொருளைக்கொண்டோ, பூமிகளைப்பயிர்செய்தோ, ஜீவிக்கக்கூடும். ஆனாலும் வெகுசாய் இரண்டாவதானபடிப்பை முக்யமாய் பெரும்பான்மை யோருக்குச் சொல்லிக்கொடுக்கவேணும். இந்த இரண்டுக்கு மேல்தான் விசேஷப்படிப்பு வேண்டியவர்கள் முதல் க்ரேட் காலேஜ்களில் சேர்ந்து சாஸ்திரங்களைப்படித்து, விசேஷ அபிவிர்த்தி யடைந்து, செல் வாக்குள்ளவர்களாகவும், ராஜாங்கத்திலுள்ள பெரிய வேலைகளைப் பெற்றும், லாயர்களாகவும், டாக்டர்களாகவும் ஆகக் கூடும்.

நாம் ப்ரக்ருதத்தில் எழுத ஆரம்பித்த அடிமை வகுப்பினரை அபிவிருத்திக்குக் கொண்டுவரும் விஷயத்தில் அவர்களை இரண்டு



தரமாகப் பிரிக்கலாம். அதாவது, 15 வயதுக்குள்பட்ட சிறுவர்களும் அதற்கு மேற்பட்டவர்களுமாகப் பிரித்தால், பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர் 100-ல் சுமார் 60 அல்லது 70-பேர் தேறலாம். இவர்களுக்கு எண்ணும் எழுத்தும் கூட சொல்லிக்கொடுப்பது அஸாத்தியமில்லாவிட்டாலும் வெகு கஷ்டஸாத்யமாகும். அவர்கள் இப்பொழுதுள்ள ஜீவனத்தைவிட்டு வேறே தொழில்களைத் தெரிந்துக் கொள்ளவும் இஷ்டப்படமாட்டார்கள். இவர்கள் பெரும்பான்மையா யிருக்கும்போது எவ்விதமான அபிவிருத்திசெய்யமுடியும்? எனக்குத்தோன்று மளவில் இவர்களுக்கு இப்போது கிடைக்கும் சம்பளத்தைவிட கொஞ்சம் அதிகமான சம்பளங்கள் கிடைக்கும்படியாய் ப்ரதான பட்டணங்களிலாவது இங்கிலீஷில் 'எம்ப்ளாய்மெண்ட் பீரோ' என்று சொல்லப்படும் ஒருவிதமான நிர்வாக ஸபைகள் எற்படுத்தி அவைகள் மூலம் அவர்களுடைய தற்கால நிலைமையை விருத்திசெய்யலாம். அதேமாதிரியாக கீழ் ஜாதியாருக்கு வீடுகள் கட்டிக்கொள்ள நிலங்கள் இனமாக ராஜாங்கத்தாரும், முனிஸிபாலிடியாரும் கொடுக்கலாம். சென்னைப்பட்டணம் முனிஸிபாலிடியார் கொஞ்ச வருஷங்களாக பறச்சேரிகளில் சிலவற்றை அடியோடு எடுத்துவிட்டு சுகாதாரமானவும் வாஸயோக்யமானவுமான புதுக்கட்டிடங்களைக்கட்டி சுலபமான குடிக்கூலிக்கிவிட்டு வருகிறார்கள். இதேமாதிரி வெளி ஜில்லாக்களிலும், முனிஸிபாலிடியார் செய்யத் தொடங்கினால் பெரிய க்ராமங்களிலுள்ள மிராசுதார்களும் தங்கள் ஸ்வய ப்ரயோஜனத்தை யனுஸரித்தாவது, தங்கள் நிலங்களைப் பயிரிட்டும், தங்கள் மாடு கன்றுகளை மேய்த்துப் பாதுகாத்துவரும்படி ஆள்களுக்காவது சுமாரான குடியிருப்புகளை கட்டிக்கொடுப்பார்கள். இது விஷயத்தில் ஜமீன்தாரர்கள் ரொம்பவும் செய்யக்கூடும். 15-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இவ்வளவுதான் செய்யமுடியும். அவர்களை அடியோடு குடிக்காமலிருக்கும்படி செய்யவும் முடியாது. ஆனால் அவர்கள் புத்தி வேறு விதத்தில் ப்ரவேசிக்கும்படியாக பாதிரிகள் செய்வதுபோல இதராளும் அவர்களை கூட்டம் கூட்டி புத்திமதிசொல்லி கதைகள் மூலமாயும் ஸங்கீதம் முதலான விநோதங்களினாலும் பறச்சேரிகள் ஸமீபத்தில் கள்ளு சாராயக்கடைகள் வைக்க ராஜாங்கத்தாரை லைஸென்ஸ் கொடுக்க வொட்டாமலும் தடுத்து அவர்களை சீர்திருத்த எத்தனிக்கலாம். 15 வயதுக்குள்பட்டவர்களுடைய சீர்திருத்தலைப்பற்றி விவரமாக பின்னாடி எழுதுகிறேன்.

வி. ஸி. தேசிகாசாரி.

---

## THE UTTANKARAI CO-OPERATIVE CONFERENCE.

## ஊத்தங்கரை கோஆபரேடிவ் கான்பரென்ஸ்

[சேலம் ஜில்லா ஊத்தங்கரை தாலூக்கா பைர் நத்தத்தில் நடந்த கோஆபரேடிவ் கான்பரென்ஸில் கம்பெநெல்லூர் ஜமீன்தாரும் கான்பரென்ஸின் உபசரணைக் கமிட்டி சேர்மேனுமான ம-ா-ா-ஸ்ரீ க. சேஷகிரி ராயர் அவர்கள் செய்த உபந்யாஸத்தின் ஸாரம்.]

* * * * *

கான்பரென்ஸ் கூடுவதின் பிரயோஜனம் என்னவென்றால் :—

வெகு தூரங்களிலிருக்கும் நாம் எல்லோரும் ஒரு பொதுவான இடத்தில் சேர்ந்து குடிகள் ஏழ்மை அடைய, க்ஷாமம் முதலா

னவை வர காரணம் இன்னதென்று அவாளவாள் பேசிக்கொள்ளவும், ஒருவருக்கொருவர் தங்களுடைய அனுபவத்தை எடுத்துச் சொல்லவும், குடிகளுக்காக கவரன்மெண்டாரால் ஏற்படுத்தப் பட்ட கோ ஆபரேடிவ் பாங்கிகளின் பிரயோசனத்தைப் பற்றிக் கூடி பேசவும், அவாளவாள் புத்திக்குத் தோணுகிறபடி அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஆலோசிக்கவும் ஒரு ஹேதுவாய் இருக்கும்.

எரும்பு முதல் அரசுவரையில் எல்லாருக்கும் தேவையானது உணவு. அந்த உணவுக்கு கிருஷி அவசியமானது. போதுமான வரையில் கிருஷி இல்லாவிட்டால் க்ஷாமங்கள் ஸம்பவிக்கும். கிருஷிகளுக்கு திரவிய ஸகாயம் அதிக அவசியமானது. இவைகளுக்கெல்லாம் முதன்மையானது குடிகளில் ஐக்கியமும் சிக்கனமும் இருக்கவேண்டியது. அப்பேர்ப்பட்ட ஐக்கியம் மனு மாந்தாதாக்களுக்குப் பிந்தி ஆண்டுவந்த சில ஹிந்து ராஜாக்கள் காலத்தில் கூட, கூட்டுறவு, ஐக்கியம், லேவாதேவி, கிருஷிகர்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்தல், விவஸாயத்துக்காக ஸகல ஸௌக்கியமும் செய்துக் கொள்ளுதல், கிராமப் பஞ்சாயத்து, கூட்டுச் சீட்டு, பொதுச் செலவுக்காக திரவியம் சேர்த்தல், முதலானவைகள் இருந்து இப்பொழுது வட மாகாணங்களில் பஞ்சாப் முதலான இடங்களிலும் சென்னைராஜதானியில் செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் சிலவைகளிலும் தொன்றுதொட்டு நடந்து வருகிறதே நிதரிசனம்.

ஏதோ ஹிந்து ஜனங்களுடைய கஷ்டவசத்தால் அந்தவழக்கங்கள் நின்றுபோய்விட்டன. அதனால் கிராமங்களில் கிருஷிகர்களின் ஐக்கியமில்லாமல் ஒருவருக்கொருவர் ஸகாயம் செய்துக்கொள்வது நின்றுபோய் விளைவு குறைந்து, தேசத்தில் க்ஷாமங்கள் வரநேர்ந்து, நாளடைவில் கிருஷியும் குறைந்துவிட்டது.

சுமார் 35 வருஷத்துக்கு முந்தி ஸம்பவித்த க்ஷாமத்துக்குப் பிறகு அதன் காரணத்தை அறிந்து இந்துதேசத்தின் குடிகளுடைய நல்ல அதிர்ஷ்டவசத்தால் கிடைத்திருக்கும் இந்த கவர்ன்மெண்டார் அதைத் தடுக்க நன்றாய் முயற்சி எடுத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். இச்சபையில் வந்திருக்கும் சரித்திரம் படித்த அநேகர்களுக்கு மற்ற எல்லா கவரென்மெண்டுகளை விட நம்ம ப்ரிடிஷ் கவரென்மெண்டு ஸர்வ உத்தமமானதென்றும் இதனால் நாம் சொல்ல முடியாத நன்மைகள் அடைந்திருக்கிறோமென்றும் தெரிந்திருக்கலாம். அவைகளில் எல்லாவற்றிலும் ஒன்றாகிய கோ ஆபரேடிவ் ஆக்டு ஏற்படுத்தினது ஒரு நிதரிசனம்.

இந்தியா தேசத்தின் வறுமைக்குக்காரணம் இன்னதென்றும், அது எவ்விதம் நீங்குமென்றும், நம்தேசத்திற்கு மாதா, பிதாக்களைப் போலிருந்த காலம் சென்ற மாட்சிமை தங்கிய விக்டோரியா சக்ரவர்த்தினி அவர்களும், அவருடைய மூத்த குமாரரான ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்தி அவர்களும், யோசித்துக் கொண்டிருக்கையில், ஸர். வில்லியம் வெட்டர்பர்ன் துரை அவர்கள் இப்பொழுது ஈஜிப்டு தேசத்தில் அனுஷ்டானத்திலிருக்கும் முறைப்படி கோ ஆபரேடிவ் பாங்கிகளை இத்தேசத்தில் ஸ்தாபிக்கும்படிக்கு பிரேரேபித்தார். அம்மாதிரியான முறைகள் இத்தேசத்துக்கு ஒத்துவரா என்பதாக இந்தியா ஸ்டேட் ஸெக்ரிடெரி, அனுமதி கொடுக்கவில்லை. பிறகு, இப்பொழுது நம்ம கவர்னராயிருக்கும் மகாகனம் பொருந்திய ஸர் ஆர்தர்லாலி அவர்களுடைய ஜேஷ்ட ப்ராதா லார்டு வென்லாக் பிரபு அவர்கள் இந்த ராஜதானியில் கவர்னராய் இருக்கும்பொழுது அனந்தபூர் ஜில்லா கலெக்டராயிருந்த ஸர் ப்ரெடெரிக் நிக்கல்ஸன் துரை அவர்கள் அன்னிய தேசங்களின் மாதிரியைக் கற்றுவர கமிஷன் கொடுத்து அனுப்பினார்கள். அவர் ஜெர்மனி தேசத்தில் ஸ்தாபித்திருக்கப்பட்ட ரெய்பீஸன் பாங்கிகள் இந்த தேசத்துக்கு ஏற்றவையென்று தெரிவித்ததின் பேரில் இந்தியா கவரென்மெண்டார் 1904௵த்து 10-வது ஆக்டாகிய கோ ஆபரேடிவ் ஆக்டை ஜாரிசெய்தார்கள்.



இந்த ஆக்டுக்கு, ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் ராஜகோபாலாசாரியார் அவர்கள் மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டு, உயிர் கொடுத்தார். பிறகு ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் ராமசந்திர ராயர் அவர்கள் இதை பால்யதிசைக்குக் கொண்டுவந்தார். இப்பொழுது இந்த ஸபையில் நடுநாயகம்போல் விளங்காநின்ற ம-ா-ா-ஸ்ரீ திவான்பஹதூர் ஸ்வாமிகண்ணு பிள்ளை அவர்கள் யௌவனதிசைக்கு அதாவது விவஹார திசைக்கு கொண்டு வருவார்களென்று நம்புகிறேன்.

இந்த பாங்கிகளை அபிவிருத்திக்குக் கொண்டு வரவேணுமென்று கேவலம் கவர்ன்மெண்டார்மட்டும் பாடுபட்டால் போதாது. அவர்களுடன், அதனால் நன்மை பெறப்பட்ட நாமும் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு அதை அபிவிருத்தி செய்யமுயலவேண்டியது. அப்படிச் செய்ய சென்னைராஜதானி முழுவதிலும் வெகு ஸ்வல்பமான ஜனங்கள் மட்டும் பிரயாசை எடுத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். நம்முடைய ஜில்லாவில், இந்தக் கான்பரென்ஸுக்கு அக்ராஸ்தானதிபதியாய் இருக்க ஒத்துக்கொண்ட ம-ா-ா-ஸ்ரீ ஆதிநாராயண செட்டியார் இந்த விஷயத்தில் ரொம்பவும் பாடுபடுகிறாரென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இம்மாதிரி ஒவ்வொருவரும்தன்னால் கூடிய மட்டும் பொதுஜன ஸௌக்கியத்திற்கு பாடு படவேண்டுமென்பது என்னுடைய பிரார்த்தனை.

ரூரல் பாங்கிகள் அபிவிருத்தி ஆகவேணுமாய் இருந்தால் அதற்கு திரவியம் தேவை. நம் நாட்டில் திரவியவான்கள் அனேகம் பேர் தம்முடைய திரவியத்தை எல்லாம் ஆர்பத்நட் போல பாங்கிகளிலும் இன்னும் இதர நிதிகளிலும் டிபாஸிட்டு செய்து வட்டி முதல் உள்பட 8-ல் ஒருபங்குகூட வாப்ஸ் அடையாமல் நஷ்டப்படுகிறார்கள். அப்படிச் செய்யாமல் அந்த திரவியங்களை இம்மாதிரி ஜனோபகாரமாய் இருப்பதோடுங்கூட, நஷ்டத்துக்கு ஹேது இல்லாமல், கவர்ன்மெண்டார் பார்வைக்குட்பட்ட இந்த பாங்கிகளில் போட்டுவைத்தால் மேல் கண்ட நஷ்டங்கள் ஸம்பவிக்கா. ஆகையால் இனிமேலாவது கோ ஆப்ரேடிவ் பாங்கிகளில் பணம் போட்டு வைத்தால் போடுகிறவர்கள் அதிகப் பிரயோசனம் அடைவதுடன் புண்ணியத்திற்கும் ஆளாவார்கள்.

இந்த பாங்கிகளின் முக்கிய பிரயோசனம் யாதெனில் இத்தேசத்து ஏழை ஜனங்கள் வர்த்தகர்களிடம் அதிகவட்டிக்குக் கடன் வாங்கி கிருஷித்தொழில் முதலானவைகள் செய்து, ஸம்பாதித்த திரவியம் அறைவயிறு ஆகாரம் சாப்பிடுவதற்கு கூடப்போதாமல், யாவற்றையும் இழந்து பாபராய்விடுகிறார்கள்; அப்படிக் காகாமல் ஜனங்களை விருத்திக்குக் கொண்டு வரும்படிசெய்ய ஹேது வாயிருக்குமென்று கவர்ன்மெண்டார் இந்த பாங்கிகளை பிரபலப்படுத்த முயலுகிறார்கள்.

ஆனால் கூட்டுறவை இம்மாதிரியான கான்பரென்ஸ்களினாலும் பிரஸங்கங்களினாலும் மட்டுமே உண்டாக்க முயன்று உண்டாக்கினாலும் அது ஸ்திரப்படாது, அது ஸ்திரப்பட

வேண்டுமானால் விவசாயிகளுக்கு, போதித்தவைகளை கிரஹிக்க போதுமான படிப்பு கற்பிப்பதுடன் கைத்தொழிலும் வேண்டும். பிறகு நூதன முறைப்படிக்கு விவசாயம் செய்ய, கருத்துடன் பாடுபட்டு பயனடைய முயலவேண்டும். அப்படி அடைந்தவைகளை வீண்போக்கி வர்த்தகர்களிடம் கடன் வாங்கச் செல்லாமல், செட்டாய் அவசியமான செலவு மட்டும் செய்யப்பாடுபடவேண்டும். மேல் கண்டபடி செய்யவேண்டுமானால் அண்டை அயலார்களுடன் ஸ்நேகம், ஒருவருக்கொருவர் நன்றிசெய்தல், கிராமஸ்தர்களுக்குள் நடத்த வேண்டிய நல்ல தருமத்தைப் பாராட்டுதல், ஆகிய இம்மூன்றும் ஒவ்வொரு கிருஷிகனுக்கும் இருக்கவேண்டும். இவைகளுக்கெல்லாம் அதி அவசியமானது கிராம பஞ்சாயத்து.

குடி உயர முடி உயரும், ஆகையால் அதற்கு கிருஷி ஆதரவு, அக்கிருஷிக்கு மூலதனம், உழைப்பு ; ஜலாதாரங்கள் தேவை, நம்முடைய இப்போதைக் கிருக்கும் சக்ரவர்த்தி காலத்தில் மேல் கூறிய கிருஷிகர்களுடைய குறைகள் நீங்கி குடிகளும் சக்ரவர்த்தியும் க்ஷேமமடைவார்களென்பதற்கு ஸந்தேகமில்லை. எப்படி யெனில் மாட்சிமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜு சக்ரவர்த்தி இளவரசாய் இருக்கும்பொழுது இந்த தேசத்தாருடைய நற்குணங்களையும், ராஜபக்தியையும், ஏழ்மையையும் நன்றாய் அறிந்திருக்கிறார் என்னும் விஷயம் அவர் சீமைக்குத் திரும்பிப்போன போது கில்ட்ஹால் விருந்தில் இங்கிலாந்து தேசத்து ப்ரபுக்களுக்கும் பாதிரிகளுக்கும் ப்ரஜைகளுக்கும் போதித்த சொல்களினால் நன்றாய்விளங்கும். தவிரவும்அந்தஅபிமானத்தை ஹிருதயத்தில் உட்கொண்டு நம்மதேசத்து பூர்வீக ராஜர்களைப்போல தன்னுடைய மகுடாபிஷேக மகோத்ஸவத்தை டில்லியில் நடத்திக்கொள்ள ஸங்கல்பித்துவிட்டார். இப்பேரானந்தத்தைப் பார்க்கவும், கேழ்க்கவும், அவர், சக்ரவர்த்தினி மக்களுடன் நன்றாய் நீடூழி வாழவேணுமாய் நாம் கடவுளை பிரார்த்திக்க ஜன்மாந்திரத்தில் ஏதோ புண்ணியங்களைச் செய்தவர்கள் ஆகவேணும்.

## ALUM.

BY

PANDIT S. MUTHUSAMI PILLAI.

## படிக்காரம் அல்லது சீனக்காரம்.

நமது உடம்பை அணுகும் பிணிகள் பல. அவைகளை வருமுன் காப்பது சிறப்பேயானாலும் அது யாவருக்கும் ஸாத்யமன்று. ஆதலால் வந்தபின் நீக்கும் முறைகளையும் நாம் அறிந்திருத்தல் நலமேயாகும். நமது நாட்டில் தற்காலம் ஆங்கில வயித்திய பண்டிதர்களும் ஆயுள்வேத விற்பன்னர்களும் அவ்வளவு அபூர்வரல்ல, என்றாலும் ஸாமான்ய ஜனங்களுக்கு அவர்கள் உதவி கிடைப்பது அரிதாக இருக்கின்றது. ஆகையால் யாவருக்கும் எளிதாய்க் கிடைக்கக்கூடிய மருந்துகளின் குணங்களை நம்மவர் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் இன்றியமையாததாகும்.

படிக்காரம் அல்லது சீனக்காரம் எல்லாக் கடைகளிலும் கிடைக்கக்கூடிய ஒரு மருந்து. அது அநேக நோய்களைக் கண்டிக்கும் சக்தியுடையது.

(1) சிறுவர்களுக்கு உண்டாகும் கண்ணோவுக்கு இது நிகரற்ற ஔஷதம். இரண்டு மேஜைக்கரண்டி தண்ணீரில் 3 க்ரேயின் சீனக்காரத்தைப் பொடித்துப் போட்டுக் கரைத்து தினம் நாலைந்து தரம் கண்ணைக் கழுவவேண்டும். பிராயமானவர்களுக்கு சீனக்காரத்தின் அளவை இரட்டித்துக் கொள்ளலாம். அந்தத் தண்ணீரில் ஒரு வெள்ளைச் சீலைத் துண்டை நனைத்து அடிக்கடி கண்களில் துடைத்துக் கொள்வதும் நலம். இமைகள் அதிகமாய் வீங்கி யிருந்தால் காலையில் சூடான பாலை விட்டுக் கழுவி இமைகளை மெல்லத்திறந்து பின் மேற்சொன்ன சீனக்கார ஜலத்தை சொட்டுச் சொட்டாய்விடவும்.



(2) மூக்கிலிருந்து ரத்தம் வந்தால் கொஞ்சம் சீனக்காரத்தை 6 அவுன்ஸ் தண்ணீரில் கலக்கி பீச்சாங்குழலிலாவது, மெல்லிய சீலையை நனைத்தாவது மூக்கினுள் செலுத்தினால் நிற்கும். அட்டைகடித்த காயத்திலிருந்து ரத்தம் பாயும்பொழுதும் சீனக்காரப் பொடியை வைத்து விரலால் கெட்டியாய் அமிழ்த்தினால் நிற்கும்,

(3) ஜுரமில்லாமல் மூலத்திலிருந்து மிகுதியாய் ரத்தம் போனால் 120. க்ரெயின் சீனக்காரத்தை 8 அவுன்ஸ் தண்ணீரில் கலக்கி அதில் ஒருதுண்டுச் சீலையை நனைத்து மூலத்தில் வைத்திருந்தால் ஸுகப்படும்.

(4) குழந்தைகளின் மலத்வார வழியாய் குடல் தள்ளினால் 60 க்ரெயின் சீனக்காரத்தை 8 அவுன்ஸ் கடுக்காய்க் கஷாயத்தில் கரைத்து தள்ளின குடலை மறுபடியும் உள்ளுக்குச் செலுத்தி அதன்மேல் இந்தக் கஷாயத்தை நாளொன்றுக்கு இரண்டு மூன்றுதரம் நன்றாய்த் தொட்டுப்போடவும். மலத்வாரம் சுருங்கி குடல் இறங்காது.

(5) தொண்டையில் புண்ணாய் அல்லது சிவப்பாயிருக்கிற தொண்டை நோய்க்கு கடுக்காய்க்கஷாயம் அரைப்புட்டியில் 120க்ரெயின் படிக்காரத்தைச் சேர்த்து கொஞ்சந்தேனும் கூட்டி தினம் மூன்று நான்கு வேளை வாயை அலம்பவும். ரஸத்தில் ஔஷதம் சாப்பிட்டதினாலுண்டான ரணம், பல்லீறிலுண்டாகும் ரணம்முதலிய வியாதிகளுக்கு படிக்காரத்தை கடுக்காய்க் கஷாயத்தில் கலக்கி வாயைக் கழுவினால் குணமுண்டாகும். சிறு குழந்தைகளுடைய வாயிலுண்டாகிற வெண்ணிறமான புண்களுக்கு 20 க்ரெயின் படிக்காரத்தை பொடிசெய்து ஒரு அவுன்ஸதேனில் சேர்த்து விரலால் தொட்டு வாயினுள் தடவவும்.

(6) குழந்தைகளுக்கு கக்கிருமல் உண்டானால் 3. க்ரெயின் படிக்காரத்தை நுணிக்கி தேனில் கலக்கி நாளொன்றுக்கு இரண்டு மூன்றுதரம் கொடுக்கவும். குணங்காணாவிட்டால் படிக்காரத்தின் இடையேகூட்டி அதோடு கொஞ்சம் நல்ல காயமும் சேர்த்துக்கொண்டால் மிகுந்த குணத்தைக் கொடுக்கும்.

(7) நெடு நாட்பட்ட நாற்றமுள்ள படரும் புண்களுக்கு ஸன்னமாய்த்தூள் செய்த படிக்காரம் 8. ட்ராம், காசுக்கட்டி 2. ட்ராம், அபின் 1. ட்ராம், தேங்காய் எண்ணெயில் காய்ச்சி யெடுத்து தேன் மெழுகுக் குழம்பு 2 அவுன்ஸ், இவைகளை யெல்லாங் கூட்டியரைத்து ஒரு துண்டுச் சீலையில் தடவி காலை மாலை புண்ணிலிடவேண்டும். வேதனை யுண்டானால் தேன்மெழுகுக் குழம்பை அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ளலாம்.

(8) மூட்டு வீக்கங்களுக்கும், சுளுக்கு முதலிய காரணங்களால் உண்டாகிற வீக்கங்களுக்கும், அரைப்புட்டிக் காடியையும் அவ்வளவு சாராயத்தையும் ஒன்றாய்க் கலந்து அதில் 4 ட்ராம் படிக்காரத்தைக் கரைத்து அதில் சீலையை நனைத்து மேற்படி வீக்கங்களில் இடவேண்டும்.

(9) நீரழிவுள்ளவர்களுக்கு, ஒரு புட்டிப்பசுவின் பாலைக்கொதிக்கவைத்து அதில் 2 ட்ராம் படிக்காரத்தூளைப் போட்டு கொஞ்சநேரம் கலக்கினபின் இறக்கி வடிகட்டி, வேளைக்கு 4 அவுன்ஸ் வீதம் நாளொன்றுக்கு மூன்று தரங்கொடுக்கவும். இதனால் நோய் தீராவிட்டாலும் மிகுதியான நீர்ப்போக்கு நிற்கும்.

மேலே சொன்னபடி உபயோகிக்கும் படிக்காரம் அல்லது சீனக்காரம் சுத்தமானதாகவும் பெருந்துண்டுகளாகவும் இருக்கவேண்டும். சீனக்காரப்பொடியானால் அதோடு பலவித அழுக்குப்பொருள்கள் சேர்ந்திருக்கக்கூடும்.

எஸ். முத்துஸாமி பிள்ளை.

## DIFFICULTIES IN THE IMPROVEMENT OF INDIAN AGRICULTURE.

### MR. COUCHMAN'S LECTURE.

## இந்திய விவஸாயத்தை சீர்படுத்துவதிலுள்ள கஷ்டங்கள்.

### மிஸ்டர் கௌச்மனுடைய ப்ரஸங்கம்.

---

'பிழைக்கும் வழி'யின் 1909-வருஷத்து ஜூலை ஆகஸ்டுமாஸத்து ஸஞ்சிகைகளிலும் இன்னும் இதர ஸஞ்சிகைகளிலும் கவர்ன்மெண்டார் விவஸாய விஷயமாய்ச்செய்து வரும் காரியங்களைப்பற்றியும் உதவிகளைப் பற்றியும் விஸ்தாரமாய் எழுதியிருக்கிறோம். ஆயிரம், ஐநூறு என்று பெரிய சம்பளம் கொடுத்து ஐரோப்பாவிலிருந்து விவஸாய நிபுணர்களை வரவழைத்தும், கோயம்பத்தூரில் ஸுமார் ஐந்து லக்ஷம் ரூபாய் போட்டு பெரியகட்டிடம்கட்டி வருஷாவருஷம் 20பேர் படித்துத் தேறும்படியான ஒரு விவஸாய காலேஜ் ஏற்படுத்தியும், சென்னை ராஜதானியில் பலபாகங்களில் பண்ணைகளை ஏற்படுத்தி சோதனைகள் செய்தும், விவஸாயிகளுக்கு உதவிசெய்ய சிலவருஷங்களாக ஸர்க்காரில் முயன்று வருகிறார்கள். இப்படி ஏராளமாக பணச்செலவுசெய்து கவர்ன்மெண்டார் என்ன மலையைக் கெல்லிவிட்டார்கள்?, குருணி நெல் கூட விளைந்திருக்கிறதா?, என்று இங்க்லீஷ் படிக்கிறவர்களில் அநேகம் பேர்கள் கேட்கிறார்கள். இவர்கள் ஏன் இப்படிக்கேட்கிறார்கள் என்றால் அவர்கள் இதரதேசக் கவர்ன்மெண்டுகள் ஏராளமாகப்பணச்செலவுசெய்து தம்தம் குடிகளுக்கு ஸாகுபடி விஷயத்தில் பலவித போதனைகளைச்செய்து வருகிறார்கள். இவைகளை எல்லாம் இங்க்லீஷ் படித்தவர்கள் நியூஸ் பேபர்களில் படிப்பதால் நம்முடைய தேசத்தில் அப்படி ஒன்றும் விசேஷமாய்ச் செய்யாததைப்பற்றி நம்முடைய கவர்ன்மெண்டின் மேல் குற்றஞ் சொல்லுகிறார்கள்.

இப்படிக்குற்றங் கண்டு பிடிப்பது நியாயமல்லவென்று வாதித்து விவஸாய இலாகா டைரெக்டராகிய மிஸ்டர் கௌச்மன் ஸமீபத்தில் மைலாப்பூரில் ஒரு ப்ரஸங்கம் செய்தார். உலகத்தில் எங்கேயும் விவஸாயிகள் என்ன சொன்னாலும் தங்கள் தொழிலைப்புதுவிதமாய் செய்ய ஸம்மதிக்கிறதில்லை. வருஷாவருஷம் உழுது நட்டுப்பயிர்செய்து அறுப்பறுத்து, ஜீவித்துப்பலனடைந்தவர்களானதால் அவர்களை அத்தொழிலை வேறுவிதமாய்ச் செய்யென்றால் அவர்களுக்கு அந்தவார்த்தை ஏறுவதில்லை. தவிர விவஸாயஞ்செய்து ஆயிரம் ஐநூறு ஸம்பாதிக்கவேண்டுமென்ற ஆசையுமில்லை. அகப்பட்டதைக் கொண்டு கௌரவமாய்ஜீவனம் செய்யவேணுமென்பதே முக்கிய எண்ணமானதால் விவஸாயத்தில் புதிய முறைகளை அனுஷ்டிக்க இஷ்டமிருப்பதில்லை. ஆகையால் வாஸ்தவத்தில் நல்ல லாபமுள்ள முறை ஒன்றைச் சொன்னாலுங்கூட விவஸாயிகள் அதை அசட்டைசெய்து விடுகிறார்கள். அவர்கள் செய்யும் முறையைப்பற்றி ஏன் அப்படிச்செய்யவேணு மென்று கேட்டால் விவஸாயிகள் ஸரியானபதில் சொல்லாமல் தப்புக்காரணங்களை ஒருக்கால் சொல்லலாம். அதனால் அவர்களுடைய முறை தப்பானதென்று நாம் சொல்லமுடியாது.

இப்படிப் பட்டவர்களுக்கு படித்தவர்களைக் கொண்டு சொல்லச்சொல்லுவோ மென்றால் படித்தவர்களுக்கும் விவஸாயத்துக்கும் வெகு தூரமாயிருக்கிறது. படித்தவர்களுக்கு விவஸாய விஷயங்கள் தெரியாது. விவஸாயிகளுக்குப்படிப்புத் தெரியாது. ஆகவே விவஸாய உத்தியோகஸ்தர்கள் இரண்டுவகுப்பாருக்கும் பதில் சொல்ல வேண்டியதாயிருக்கிறது.



இரண்டாவது, ஸர்க்கார் விவஸாய இலாகாதாரர்கள் இந்திய விவஸாயிகளுக்கு "இது நிச்சயமாய் லாபந்தரக்கூடிய முறை, ஆகையால் நீங்கள் இப்படியே செய்யுங்கள்" என்று சொல்லக்கூடிய நல்லமுறைகளும் விசேஷமாய் இல்லை. ஆனால் இதரதேசங்களில் விவஸாய நிபுணர்கள் ஜனங்களுக்கு எவ்வளவோ புதுமுறைகளைச் சொல்லிவருகிறார்களே, அவர்கள் செய்யக்கூடியது ஏன் இந்தியாவில் முடியவில்லை.? என்று கேட்கலாம். அமெரிக்கா போன்ற தேசங்களுக்கும் இந்தியாவுக்கும் ரொம்ப வித்யாஸமுண்டு. அமெரிக்கா, ஆபிரிக்காவில் காடாயிருந்து இப்பொழுதுதான் ஸாகுபடி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அங்கேபோய்குடி ஏறி ஸாகுபடி செய்கிறவர்களும், பணம் ஸம்பாதிக்கவேண்டுமென்று போனவர்களே ஒழிய பரம்பரையாய் ஸாகுபடி செய்து தேர்ச்சி அடைந்தவர்களல்ல. ஆகையால் அவர்களுக்கு ஸாகுபடி என்றால் இன்னதென்றும், பயிர் எப்படிச்செய்கிறதென்றும், அங்கேயுள்ள விவஸாய நிபுணர்கள் சொல்லிவருகிறார்கள். ஆதலால் அந்த தேசங்களில் ஏதோ நிபுணர்கள் ப்ரமாதமாய்ச்செய்து வருவதாகத் தோன்றுகிறது. இந்தியாவிலோ ஜனங்கள் பரம்பரை விவஸாயிகள். அவர்கள் அநேக ஸமாசாரங்களை அனுபோக ஸித்தமாய் அறிந்தவர்கள். ஆகையால் இவர்களுக்குப்புதிதாக ஏதாவது சொல்வதென்றால் கஷ்டந்தான். ஆனால் இந்தியாவில் அனுபோக ஸித்தமாய் அறிந்த விஷயங்கள் எல்லாருக்கும் தெரியவில்லை. ஆகையால் நல்ல முறை என்று ஏற்பட்டவைகளை தெரியாதவர்களுக்கு ஸர்க்கார் விவஸாய இலாகாக்காரர்கள் போதித்து வருகிறார்கள். தவிர இப்பொழுது விவஸாயத்தைப் பற்றி சாஸ்திர ஆராய்ச்சி செய்து அறிந்த விஷயங்களெல்லாம், சீதோஷ்ணம் மிதமாயிருக்கிற தேசங்களில் கண்டறிந்தவைகள். அவைகளை உஷ்ணதேசமாகிய இந்தியாவில் ப்ரயோகிக்க ஸாத்யப்படாது, இந்தியாவில் வெகுகாலம் உழைக்க வேண்டும், அப்படி உழைத்து ஏதாவது ஒரு புது முறை ஏற்படும்பட்சத்தில் அது அதிர்ஷ்ட வசமே ஒழிய யுக்தி புத்தியால் கண்டு பிடிக்கப்பட்டதாக மாட்டாது. மிஸ்டர் கௌச்மன் இன்னொன்றுஞ் சொன்னார். அதாவது, திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை இந்த இடங்களில் கம்பொடியாப் பருத்தி பரவியிருக்கிறதைப்பார்த்தால், நல்ல லாபந்தரக்கூடிய பயிர் இருக்கும் பட்சத்தில் அதை இந்தியவிவஸாயிகள் உடனேகைப்பற்றுவார்களென்பதற்கு ஸந்தேகமில்லை. ஆனால் இப்படிப்பட்ட அம்சங்களை அவர்களுக்கு எடுத்து போதிக்க மனுஷ்யர்களை ஊரூராய் அனுப்பி ப்ரஸங்கம் செய்யச்சொல்ல வேண்டுமென்று அநேகம்பேர்கள் சொல்லுகிறார்கள். ப்ரஸங்கங்கள் செய்ய முதலாவது நிபுணர்கள் இல்லை. தவிர ப்ரஸங்கங்களால் விவஸாயம் முன்னேறிவிடாது. அங்கங்கே நிலத்துக்குத் தக்கபடி மாறுபாடுகள் செய்ய வேண்டியிருக்கும். ஆகவே இன்ன நிலத்தில் பயிரிடவேண்டும், இன்ன காலத்தில் இன்னமாதிரி பயிரிட வேண்டும், என்று வ்யக்தமாய் சொன்னாலொழிய விவஸாயிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படி ஏற்றுப் புதுமுறைகளில் இறங்கவும் அவர்களுக்குக் கட்டாது. ஆகையால் விவஸாயிகளுடைய நிலைமை, நிலத்தின் தன்மை, முதலிய விஷயங்களை அறியாமல் ப்ரஸங்கங்கள் செய்வதில் ப்ரயோசனமில்லை.

கடைசியாக மிஸ்டர் கௌச்மன் சொன்னதாவது: இந்தியாவில் விவஸாயத்தை முன்னேற்ற முயலுகிறவர்கள் முதலில் விவஸாயிகளுடைய ஸங்கதிகளை முழுமையும் அறிந்து கொள்ளவேணும். அவஸரப்படாமலிருந்தால் நாளாவட்டத்தில் விவஸாயிகளே அறிந்து கொள்ளுவார்கள் அவஸரப்பட்டு தப்பும் தவறுமாய் அவர்களுக்கு எதையாவது நல்ல முறையென்று சொல்லி அது சொன்னபடி ஆகாவிட்டால் பிற்பாடு அவர்களை திருத்துவது வெகு கஷ்டம்.

## ADVANTAGES OF REGISTRATION.

# தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதின் பயன்கள்.

தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்துகொள்வதினாலும் செய்து கொள்ளாததினாலும் உண்டாகும் பயன்களைப் பற்றி இந்த வியாஸத்தில் பேசுவோம். ரெஜிஸ்டரான தஸ்தவேஜு, ரெஜிஸ்டரான தேதி முதற்கொண்டல்லாமல் எழுதப்பட்ட தேதி முதற்கொண்டே செலாவணியாகிவரும். ஸ்தாவர ஸொத்தைப் பொறுத்த தஸ்தவேஜுகள் எல்லாம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டால் தான் பயனுள்ளவையாகும். இல்லாவிட்டால் அவைகளில் காணப்படும் ஸொத்தைப் பாதிக்கமாட்டா. கோர்ட்டுகளில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டா. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தவேஜுகளில் பின்னால் மோசடியாக ஏதேனும் மாறுதல் செய்வதற்கு முடியாது. தஸ்தவேஜுகள் காணாமல் போனாலும், நாசமாய்ப் போனாலும் அவைகளுக்கு ஸரியான நகல்களை ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அந்த நகல்கள், அஸல் தஸ்தவேஜுகளைப்போலவே, கோர்ட்டுகளில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு ஸொத்தைப்பற்றி ஏற்பட்டிருக்கும் வில்லங்கங்கள் இன்னின்னவை யென்று தெரிந்துகொள்ளலாம். இதனால் மோசமான விநியோகம் தெரிந்து விடுவதினால் வாங்குகிறவர்கள் ஜாக்கிரதையாக இருக்கலாம்.

ரெஜிஸ்டர் செய்துகொள்ளும்பொருட்டு வரும் கக்ஷிக்காரர்கள் தஸ்தவேஜுகளை நேராக ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தரிடமே கொடுக்கவேண்டும். அவருடைய குமஸ்தாவினிடமாவது ஸேவகனிடமாவது கொடுக்கக்கூடாது. ஸ்டாம்புத் தீர்வை, பத்திரத்தேதி, இவைகள் ஸரியானபடி யிருந்தால், ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் அந்த தஸ்தவேஜின் மேல் அது தாக்கல் செய்யப்பட்ட தேதி, மணி, இடம் முதலியவைகளை எழுதிக்கொண்டு தாக்கல் செய்தவருடைய கையெழுத்தையும் வாங்குவார் பின்பு எழுதிக்கொடுப்பவரை விசாரணை செய்வார். அவருடைய கையெழுத்தும், சாக்ஷிகளுடைய கையெழுத்தும் பத்திரத்தில் வாங்கப்படும். எழுதிக்கொடுப்பவருடைய கையெழுத்தோடு அவருடைய இடது பெருவிரல் குறியும் பத்திரத்தில் வாங்கப்படும். ஒருவருடைய விரல் மற்றவர்களுடைய விரல் அடையாளங்களோடு ஒத்திருப்பதில்லை. ஆதலால் பொய்க் கையெழுத்து, ஆள் மாறாட்டம் முதலிய குற்றங்களைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் இந்தப் பெருவிரல் குறி பயன்படுகிறது. ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு நேரில் தெரிந்தவர்கள், குஷ்டரோகிகள், முதலியவர்களிடமிருந்து பெருவிரல் குறி எடுக்கவேண்டியதில்லை.

தஸ்தவேஜு எழுதிக் கொடுப்பவருக்கு, ரெஜிஸ்ட்ரார் முன்பு பணமாவது, வேறு பொருளாவது கொடுப்பதாக இருந்தால் அவ்விஷயமும் தஸ்தவேஜில் எழுதப்படும். ரெஜிஸ்ட்ராருக்கு வரும் தஸ்தவேஜுகள் வாஸ்தவத்தில் செல்லக்கூடியவையா என்பதைப் பற்றி விசாரிக்க ரெஜிஸ்ட்ராருக்கு அதிகாரமில்லை. அவருடைய வேலையெல்லாம், பத்திரத்தை எழுதிக் கொடுத்ததுண்டா என்னும் விஷயத்தை மட்டும் தெரிந்து கொள்ள வேண்டியது. எழுதிக்கொடுத்ததுண்டானால் பத்திரத்தை ரெஜிஸ்டருக்கு அங்கீகரிக்க வேண்டும். ரெஜிஸ்டருக்கு வரும் தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்யமாட்டோமென்று ரெஜிஸ்ட்ரார் மறுதளிப்பதற்குப் போதுமான காரணங்கள் இருக்கவேண்டும். அத்தாக்ஷி செய்யப்படாத வரிபிளப்பு, அடித்தல், திருத்தல், முதலியவை பத்திரத்தில் இருந்தாலும், தஸ்தவேஜில் குறிக்கப்பட்ட ஸொத்து ஸரியானபடி விவரிக்கப்படாமலிருந்தாலும், ரெஜிஸ்ட்ராருக்குத் தெரியாத பாஷையொன்றில் தஸ்தவேஜு எழுதப்பட்டிருந்தாலும், தஸ்தவேஜுடன் வரும் படங்களுக்கு நகல் ஆஜராகாமலிருந்தாலும், தஸ்தவேஜு குறித்த காலம் கடந்தபின் ஆஜர் செய்யப்பட்டாலும், எழுதிக்கொடுப்பவர்கள் குறித்தகாலம் ஆனதன் பின் ஆஜர் ஆனாலும், எழுதிக்கொடுப்பவர் இன்னார் தான் என்று ரெஜிஸ்ட்ராருக்குத்திருப்திகரமாகத் தெரியாவிட்டாலும், ஏஜெண்டு மூலமாய் வருபவர்களுக்கு அப்படி வரும் பாத்தியதை திருப்திகரமாய் விளங்காவிட்டாலும், பத்திரத்தை எழுதிக் கொடுத்ததாகப் பொருள்படும் ஒருவன், தான் அதை எழுதிக்கொடுத்ததில்லை என்று சொன்னாலும், எழுதிக்கொடுத்தவன் மைனராகவாவது, உன்மத்தனாகவாவது, பைத்தியம் பிடித்தவனாகவாவது இருந்தாலும், பத்திரம் எழுதிக்கொடுத்தவன் இறந்து போனபின் அவனுடைய பிரதிநிதியாக வருபவன் பத்திரம் எழுதிக்கொடுக்கப் படவில்லையென்று மறுதளித்தாலும், எழுதி வைத்தவன் இறந்துபோனபின்வரும், உயில், ஸ்வீகார அதிகாரம், இவைகள் உண்மையாக எழுதி வைக்கப்படவில்லை யென்று விசாரணையால் ரெஜிஸ்ட்ராருக்குத் தோன்றினாலும், உயிலை அடக்கம் செய்திருக்கும் பை முத்திரையிடப்படாமல் இருந்தாலும், செலுத்தப்படவேண்டிய கட்டணம் செலுத்தாமலிருந்தாலும், அந்தந்தக் காரணங்களைக் கண்டெழுதி ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் அந்தத் தஸ்தவேஜுகளின் மேல் ரெஜிஸ்ட்ரேஷன் நிக்கிரகிக்கப்பட்டது என்று எழுதிக்கொடுத்துவிடவேண்டும். இப்படி ஸப்ரெஜிஸ்ட்ரார்கள் செய்யும் உத்தரவுக்கு மேல்ஜில்லா ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் அப்பீல்செய்து கொள்ளலாம். அங்கு ரெஜிஸ்ட்ரேஷன் நிக்கிரகிக்கப்பட்டால் ஸிவில கோர்ட்டில் பத்திரத்தைத் தாக்கல் செய்து ரெஜிஸ்டர் செய்யச் சொல்லும்படி கேட்கலாம்.

இனி, ரெஜிஸ்ட்ரேஷன் இலாகாவினால் உண்டாகக்கூடிய வேறு சில பயன்களைக்கூறிவிட்டு இவ்வியாஸத்தை முடிவு செய்வோம். பொதுவாக எல்லாவித தஸ்தவேஜுகளும் ரெஜிஸ்டர்செய்யப்படுவதால், ஜனங்களுடைய செல்வ ஸ்திதி இன்னபடி யிருக்கிறதென்பது தெரியவரும். அதிகக் கடன் பட்டுவிட்டபடியால் நிலத்தை விற்றாவது கடனைக்கொடுக்க முந்துபவர் சிலர்; கல்யாணம் முதலியவைகளில் வீண் செலவுக்காகப் பணம் வாங்குபவர் சிலர், விவஸாயச்செலவு, வியாபாரம், ஸர்க்கார் கிஸ்தி, முதலியவைகளுக்காகப் பணம் தேடுபவர் சிலர்; இவர்களுடைய செல்வ நிலையெல்லாம் அவர்கள் எழுதிக்கொடுக்கும் தஸ்தவேஜினால் வெளியாகும். ஷைலாக்கைப்போல அநியாய வட்டி வாங்குவோரும், வெகு அற்பமான வட்டிக்குக்கடன் கொடுப்போரும் இன்னின்னாரென்று விளங்கும். பூமிகளின் விலை வரவர அதிகரிக்கிறதா, குறைகிறதா, என்பதைத்தெரிந்து கொள்ளலாம்; விவஸாயிகளிடமிருந்த பூமி அவர்களுடைய கையை விட்டுக்கடன் காரணமாக வேறு வகுப்பாரிடத்துக்குப் போகிறதா என்பதைக்கவனிக்கலாம். உண்மையில் மேற்கூறிய விவரங்களை ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்களில் வெகு சிரமப்பட்டுத் தேடி வருஷாவருஷம் கணக்குகள் கொடுக்கப்படுகின்றன. தேசக்ஷேமத்தைக்கவனிக்கும் மகான்களுக்கு இவ்விஷயம் வெகுஉபயோகமுள்ளதாக விருக்கும்.

இவ்வளவு பெரிய இலாகாவின் வரவு செலவைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லுவது மிகையாகாது. ரெஜிஸ்டருக்கு வரும் தஸ்தவேஜின்மேல்செலுத்தப்படும்கட்டணம், நகல்கள் எடுப்பதற்காகச்செலுத்தப்படும் தேடுகூலி, நகல் கூலி, வில்லங்க ஸர்டிபிகேட் வாங்கக்கொடுக்கும் கட்டணம், விசேஷ காரணங்களை முன்னிட்டுச்செய்து கொள்ளும் ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணங்கள், ஆகிய இவைகளிலிருந்து தான் இந்த டிபார்ட்டுமெண்டின் வரும்படி வருகிறது. உத்தியோகஸ்தர்கள் ஆபீஸ் சிப்பந்திகள் சம்பளம், புஸ்தகம், கடுதாசி, மசி, அச்சுக்கூலி, ஆபீஸ் கட்டிடங்கள் முதலிய செலவுகள், ஆகிய இவைகள் பற்றுக்கலத்தில் சேருகின்றன. நாளுக்கு நாள் தஸ்தவேஜுகள் அதிகமாக ரெஜிஸ்டர் செய்யப்படுவதால் இந்த டிபார்டுமெண்டுக்கு ஏராளமான லாபமுண்டாகிறது. 1909-ம் வருஷத்தில்வருமானம் ரூ19,29,095ஆகவும், செலவு ரூபா 13,71,558 ஆகவும் இருந்து ரூ5,57,537 லாபம்கிடைத்தது.

---

## RANI TARABAI.

BY

T. S. VAIDYANATHAN.

## தாராபாய் ராணி.

---

சற்றேறக்குறைய எண்ணூறு வருஷங்களுக்கு முன்னே டில்லியில் அலாவுடீன் என்னும் கில்ஜி வம்சத்தைச் சேர்ந்த அரசன் அரசாண்டுவந்தான். அதேகாலத்தில் மீவாருக்கருகிலிருக்கிற தோடாவென்னும் பட்டணத்தை சூரசேனன் என்னும் ரஜபுத்ரன் ஆண்டுவந்தான். அலாவுடீன் இருந்தகாலத்தில் சுதேச அரசர்கள் எல்லாருக்கும் அவனைக்கண்டால் ரொம்பவும் பயமுண்டு. திடீரென்று அர்த்த ராத்திரியில்போய் சூதுவாது தெரியாத இந்தியர்களை பயமுறுத்துவான், ரஜபுத்ர ஸ்திரிகளின்பேரில் அடிக்கடி ஆசைகொண்டு அந்த ஸ்திரீகளைத் தான் அடையவேண்டி யுத்தம் பண்ணுவான். இப்படிக்கெல்லாம் இவன் அநியாயம் செய்துகொண்டிருந்தபொழுது மேற்சொன்ன தோடாதேசத்து சூரசேனனும் இவனிடம் ரொம்ப அவஸ்தைகளைப்பட்டான். அடிக்கடி அலாவுடீன் கையினால் அபஜெயப்பட்டான். கடைசியாக தன்னுடைய ஸைன்யமெல்லாம் யுத்தகளத்தில் மாண்டுபோய் தன்னுடைய தோடாப்பட்டணமே எதிரி கைவசமாய்ப் போய்விட்டபிற்பாடு தன் உயிருக்கே மோசம் வந்துவிடும் போலிருக்க, தனது பெண்சாதியையும், அருமைப் புதல்வியான தாராபாய் என்னும் புத்ரியையும் அழைத்துக்கொண்டு மீவார் தேசத்தை ஆண்டுவந்த ராணா ரெய்மாலிடம் போய் அடைக்கலம் புகவே, ரெய்மால் சூரசேனை, தன்னுடைய ராஜ்யத்தைச்சேர்ந்த பிஜ்னூர் என்னும் பட்டணத்தில் பயமில்லாமல் இருக்கும்படி ஆக்ஞாபித்தான். அப்படியே சூரசேனனும் பிஜ்னூருக்குப் போய்தன் கதி இப்படியானதைப்பற்றி ஸர்வதா வ்யாகுலப்பட்டுக் கொண்டு, திரும்பவும்தன் கையைவிட்டுப்போன தோடதேசத்தை அடையப்போகிற காலத்தை எதிர்பார்த்தவண்ணமாயிருந்தான்.

மேலேசொன்ன சூரசேனனின் புத்ரியான தாராபாய் என்பவள் பால்யமாயிருந்தபோதிலும் தீரப் படித்தவள். அவள் அழகுக்கு ஈடுகிடையாது. தனது தகப்பனாருடைய ராஜ்யத்தில் துளிகூட, அன்னியன், அதிலும் பட்டாணியன், கையில் இருப்பதில் அவளுக்கு மஹா ஆத்திரமாயிருந்தது. எப்பொழுது திரும்பவும் கையை விட்டுப்போனதை அடையப் போகிறோம் என்கிற கவலையே மேல் கொண்டிருந்தது. தான் ஏன் புருஷனாகப்பிறக்க வில்லை என்று தன்னையே அடிக்கடி நொந்து கொள்ளுவாள். அநேகயோசனைகள் செய்துபார்த்தாள், ஒன்றிலும் பயனிராது போலிருந்தது.



கடைசியாக ஒரு தீர்மானம் செய்தாள், அதாவது :"நாம் புருஷனாகப் பிறந்திருப்பதாகவே எண்ணிக் கொள்வோம். நாம் மாத்திரம் அப்படியிருந்திருந்தோமேயானால் கட்டாயம் நம் தகப்பனார் நமக்கு வில்வித்தை, குதிரைசவாரி முதலிய வித்தைகளையெல்லாம் கற்றுக்கொடுப்பாரல்லவோ. இப்பொழுதுதான் என்னமோசமாய்ப் போய்விட்டது. ரஜபுத்ர ஸ்திரீகளில் எத்தனைபேர் சண்டைகளில் யுத்தம்செய்து வெற்றி பெறவில்லை! நாமும் ஏன் அப்படி செய்யக்கூடாது? கொஞ்சநாளில் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு விட்டோமேயானால் பிற்பாடு ஒரு பெரிய ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு நமது தேசத்தைக்கைப்பற்றியிருக்கும் அலாவுடீன்பேரில் படையெடுத்து யுத்தம்செய்து ஜெயித்து, ராஜ்யத்தை அடைந்து ரஜபுத்ர வல்லமையை நிலை நிறுத்துவோம். நமக்கும் ஒருநல்லபேர் உண்டாகும்," என்று இவ்வண்ணம் யோசித்து தன் தந்தையிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். சூரசேனனும் ஸம்மதித்தான். ஆகவே தாராபாய் தான் அணிந்திருந்த பட்டு வஸ்திரங்களையெல்லாம் களைந்துவிட்டு, ராஜாக்கள் மாதிரி உடுப்பணிந்து அதிசீக்கிரத்தில் ஸகல வித்தைகளையும் கற்றுக்கொண்டாள். எப்பேர்கொத்த முரட்டுக் குதிரைகளையும் பழக்கிவிடுவாள். குதிரை சவாரியில் அவளுக்கு ஸமானம் ஒருவருமில்லை என்று ஏற்பட்டுவிட்டது. வெயிலை கவனிக்கமாட்டாள். தன் தேகத்தில் பலம் அதிகமாய் இருக்கவேண்டுமென்று அநேக விதமான கஸரத்து வேலைகளைச்செய்து தன்னை நல்ல பலசாலியாக்கிக்கொண்டாள். அநேக யுத்த வீரர்களுக்கு தானே யுத்தம் செய்ய வேண்டிய விதங்களைப்பற்றி போதிப்பாள். அலாவுடீனுடைய ஸைன்யத்துடன் இன்ன விதமாய் போர்புரிந்தால் வெற்றிபெறலாம் என்பதையும் தெரிந்து கொண்டாள்.

ஆகவே சூரசேனனும் கொஞ்சநாளைக்கெல்லாம் ஒருசிறிய ஸைன்யத்தைச் சேர்த்து, தனது பெண் தாராபாய்க்கு ஆண் உடுப்புப்போட்டு, தான் ஒரு குதிரையிலும் அவள் ஒரு குதிரையிலுமாக ஏறி, தனது ஸைன்யத்தைச்சேர்த்துக்கொண்டு பிஜ்னூரைவிட்டு தோடாவை நோக்கிப்புறப்பட்டான். தாராபாய் கொஞ்சங்கூட அதைரியப்படவில்லை. மேலும் போகும் வழியெல்லாம் தன் தகப்பனாருக்கு தைரிய வார்த்தையே சொல்லிவந்தாள். கடைசியாக தோடாநகரம் சேர்ந்தார்கள். ஆனால் அலாவுடீனுக்கு இவர்கள் வருகிறது முன்னதாகவே தெரிந்து ஒருபெரிய ஸைன்யத்தைச்சேர்த்து யுத்தத்துக்குத் தயாராயிருந்தான். ஒருகோரமான யுத்தம் நடந்தது. தாராபாய் தன்னால் ஆனமட்டும்பார்த்தாள், மாளவில்லை. முதலில் தோல்வியடையவே திரும்பவும் பிஜ்னூருக்கு வந்துவிட்டார்கள், எல்லாரும் கவலைப்பட்டார்கள். ஆனால் தாராபாய் மாத்திரம் ஒன்றும் பேசவில்லை. தனது தைரியத்தை விட்டுவிடவில்லை, இன்னொரு தரமானும் போய் யுத்தம் செய்து வெற்றி பெறலாம் என்றே எண்ணிக் கொண்டிருந்தாள்.

நிற்க, தாராபாய் நல்ல ரூபவதி என்று முன்னமேயேசொன்னோம். அவளுடைய அழகும், தேகபலமும், தைரியமும், சாஸ்திர வித்தையில் அவளுடைய ஞானமும், அநேகதேசத்து ராஜாகளுக்குத்தெரிந்தது. அநேகர் அவள்மேல் மோகம் கொண்டார்கள். அநேகர் தன்னைக் கல்யாணம் செய்துகொள்வாள் என்று எண்ணி வணக்கமாய் கடிதங்களும் நல்ல கொடைகளும் அனுப்பினார்கள். சூரசேனன் தனது பெண்ணைப்பார்த்து, என்னயோசனை பண்ணுகிறாய், இவ்வளவு ராஜாக்கள் உன்னைவிவாஹம் செய்ய வலுவிலே வரும்பொழுது நீ சும்மாவிருப்பது அழகாயில்லை. ஆகையினால் நீ யாரைக்கல்யாணம் செய்ய நிச்சயித்திருக்கிறா

யோ என்னிடம்சொல். நான் முடித்துவைக்கிறேன் என்றுசொன்னான். அதற்கு அவள்பதில் சொன்னது ஒன்றுதான். அதாவது: "யார் என்தகப்பனாருடைய ராஜ்யத்தை அலாவுடீன் கையிலிருந்து மீட்டிக்கொடுக்கிறாரோ, அவருக்கே நான் மாலையிடுவேன்" என்றாள். இந்த ஸமாசாரம் எல்லா ராஜாக்களுக்கும் தெரிந்தது. ஆனால்ஒருவருக்கும் அலாவுடீனிடம் சண்டைசெய்து ஜெயிக்கலாம் என்ற நம்பிக்கை கிடையாது. கடைசியாக எல்லாரும் விட்டுவிடவே முந்திச்சொல்லிய ராணா ரெய்மாலின் புத்ரன் ஜெய்மால் என்பவன், தான் யுத்தம் செய்து ராஜ்யத்தைத் திரும்பவும் மீட்டிக் கொடுக்கிறதாகப் பொய்சொன்னான். ஆனால் அதைப்பொய் என்று முதலில் ஒருவரும் நினைக்கவில்லை. தாராபாயும் நினைக்கவில்லை. ஆகவே ஜெய்மால் சொல்லுகிறதை நம்பி சந்தோஷித்தவளாய் தன் தகப்பனாரிடம் ஜெய்மாலை வரவழைக்கச் சொல்லவே அப்படியே அவனும் தாராபாயைப்பார்க்கவந்தான். மூடன் தான் முன்னால் சொன்னது பொய் என்று தன் வாயாலேயே வந்துவிட்டது. உடனே சூரசேனனுக்குக் கோபம் வந்துவிட்டது. கோபத்தில் தன்இடுப்பில்இருந்த கத்தியை உருவிஉடனே ஜெயமாலைக்கொன்றுவிட்டான். மற்றெல்லா ராஜாக்களும் சூரசேனன் செய்ததைப்பற்றிக் கோபித்தார்கள். பிற்பாடு ரெய்மால் சூரசேனனை தண்டிப்பதற்காக அழைத்துக்கேட்டபொழுது, சூரசேனன் சொன்னதாவது: "எப்பொழுது ரஜபுத்ரனாக ஒருவன் பிறந்துவிட்டானோ, பொய் சொல்லுவதும் துரோகம் செய்வதும் அவனிடத்தில் துளிக்கூட வாஸம் செய்யக்கூடாது. ஆகையினால் அப்பேர்கொத்த ரஜபுத்ரன் இறந்ததற்கு நீ சந்தோஷப்படவேண்டியது." பிற்பாடு ரெய்மால் தன் முதல்புத்ரன் செய்தது தப்பிதந்தான் என்று அறிந்து ஒன்றும்பதில் பேசாமலிருந்துவிட்டான்.

ரெய்மாலுக்கு 2-வது புத்ரன் ஒருவன்இருந்தான். அவன்பெயர் ப்ருத்விராஜன். அவனுக்கு தாரா கைக்கொண்டிருக்கிற விரதம் எட்டியது. அவனுக்கு காடுகளில் வேட்டையாடுவதில் ஸமானமாய் ஒருவரும் கிடையாது. அவனுக்கு வெகுகாலமாக அலாவுடீனிடம் சண்டைசெய்ய வேணுமென்ற ஆசை வாஸ்தவத்திலேயே இருந்தது. இது நல்லஸமயம் என்று எண்ணினவனாய் பிஜ்னாருக்கு வந்து தனது அபிப்பிராயத்தை சூரசேனனிடமும் தாராபாயிடமும் வெளியிடவே, தாராபாய் அவளுடைய கூர்மையானகண்ணாலே அவனைப்பார்த்த வண்ணமாகவே, "வாஸ்தவத்திலே தாங்கள் அலாவுடீனிடம் சண்டை செய்து ராஜ்யத்தை மீட்டி என் தகப்பனாரிடம் கொடுப்பீரா!? என்றுகேட்டாள். உடனே ப்ருத்விராஜன் தயங்காமல், "நான் அலாவுடீனிடம் சண்டைசெய்து யுத்தத்தில் ஜெயித்து ராஜ்யத்தை உனது தகப்பனாருக்குச்சேர்த்து வைப்பேன் என்பதற்கு ரஜபுத்ர மதத்தின் பேரில் சத்தியம்" என்று உறுதியாய்ச் சொன்னான். ஆகவே தாராபாய் அவன்பேரில் நம்பிக்கை வைத்து சீக்கிரத்திலேயே கல்யாணத்தையும் செய்துகொண்டாள். ஏன் சீக்கிரம் கல்யாணம் செய்துகொண்டாள் என்றால், அலாவுடீனிடம் சீக்கிரத்தில் சண்டைசெய்து ராஜ்யத்தை தகப்பனார் அடையவேண்டும் என்றஆத்திரம் அவளுக்கு ரொம்ப இருந்ததினால் தான்.

ப்ருத்விராஜன் யுத்தத்தில் ஸமர்த்தன் என்பது பின்னால் சொல்லப்போகிறதினால் விளங்கும். சண்டைக்குப் புறப்படவும் நாள்பார்த்தான். அப்பொழுது துலுக்கர் மொஹரம்பண்டிகை வந்திருந்தது. எல்லாரும் மொஹரம் நாள்களில் பட்டினியாய் இருந்துகொண்டு மசுதிக்குப்போய் ஜெபம் செய்துகொண்டிருப்பார்கள். அப்பொழுது ஆயுதபாணிகளாயிருக்கமாட்டார்கள். அப்பொழுது போனால் வெற்றி சுலபத்தில் பெறலாம் என்று ப்ருத்விராஜனுக்குத் தோன்றி ஒரு ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு, தோடாப் பட்டணத்துக்கு வந்து, வெளியில் மறைவான ஓர் இடத்தில் ஸைன்யத்தை இருக்கச்சொல்லி, தானும் தாராவை ஆண்வேஷம் போட்டுக் கொள்ளச் சொல்லி, அவளையும், கூடத்துணைக்கு ஒரு நம்பிக்கையுள்ள போர்வீரனையும் அழைத்துக்கொண்டு, எல்லாரும் கூட்டத்தோடு கூட்டமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். மசுதியைச்சுற்றிக் கூட்டமாயிருந்தது. அலாவுடீனும் ஒருபெரிய வீட்டில் ஜன்னல் வழியாக எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தவனாய் இவர்கள் மூவரையும் கவனித்து அவர்கள் மூவரும், யார், எந்ததேசம், என்று விசாரிக்கும்படி மந்திரியிடம் சொன்னான் உடனே அவன், எங்கே, என்றுகேட்டான், 'அதோ' என்று அலாவுடீன் காட்டுவதற்குள்ளாக, அவன்தேகத்தில் ஒருஅம்பும் ஈட்டியும் அதிவேகமாய் வந்துபாயவே அப்படியே கீழே விழுந்து விட்டான். எல்லாரும் அழ ஆரம்பித்து விட்டார்கள். அவரவர்கள் மசுதியை விட்டு வெளியே ஓட ஆரம்பித்து விட்டார்கள். சிலர் இந்த மூன்றுபேர்களையும் பிடிப்பதற்காக ஓட்டமாய் வந்தார்கள். ஆனால் இவர்களா அவர்கள் கையில் அகப்படுகிறவர்கள்? காற்றுப்போல் ஓடிவந்தார்கள், வரும் வழியில் அநேகரைக் கொன்றார்கள், கோட்டைவாசலுக்கு வந்துவிட்டார்கள், கோட்டைவாசலில் பெரிய யானை ஒன்று கட்டியிருந்தது,' முன்னால் போனால் யானை வழிமறிக்கிறது, பின்னாலேயோ கற்களும் கழிகளும், மேலே விழுந்த வண்ணமாகவே இருக்கின்றன. உடனே ப்ருத்விராஜன், தாராபாயைப்பார்த்து " தயங்காதே, தைரியமாயிரு, யானையின் தும்பிக்கையில் உன்கையில் இருக்கிற ஈட்டியால் குத்து" என்று உரக்கச் சொல்லவே, நல்லபலத்தையுடைய தாராபாய் ஒரு நிமிஷங்கூட நிற்காமல் யானையின் தும்பிக்கையில் ஈட்டியால் ஓங்கிக்குத்தவே அது அப்படியே அலறிக்கொண்டு கீழேவிழுந்தது. வெளியில் வந்துவிட்டார்கள். ஸைன்யம் தயாராயிருந்தது. தங்கள் குதிரைகளில் ஏறிக்கொண்டார்கள். துலுக்கரோடு சண்டை செய்தார்கள். எல்லாரும்பட்டினி. ஓட்டமெடுத்தார்கள். அநேகர் மாண்டார்கள். தோடாப்பட்டணம் காலியாய் விட்டது. தாராபாயும் ப்ருத்விராஜனும் ஜெயித்து விட்டார்கள் உடனே பிஜ்னாரிலிருந்த தனது தகப்பனாருக்கு செய்திசொல்லியனுப்ப ஆள்களை அனுப்பி அவரை வரவழைத்தாள். திரும்பவும் தோடாதேசத்துக்கு சூரசேனன் ராஜாவானான். அவன்தன் பெண் பேரிலும் மாப்பிள்ளை பேரிலும் வைத்திருந்த விசுவாஸத்துக்கு ஒரு கணக்குக்கிடையாது. இப்படி கொஞ்சகாலம் இருந்து வந்தார்கள். மகமதியர்கள் தாங்கள் தோல்வியடைந்ததை மறந்துவிடவில்லை. ஆஜ்மீர்தேசத்தை ஆண்டுவந்த துலுக்க ராஜா ப்ருத்வியை தண்டிக்க வேண்டுமென்று கருதிக் கொண்டிருந்தான். அவன் எண்ணத்தை யறிந்துகொண்ட ப்ருத்விராஜன் ஒரு ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு ஆஜ்மீரை நோக்கிச்சென்று துலுக்கனைத்தோற்கடித்து, ஆஜ்மீரைத் தன்னுடைய தாக்கிக்கொண்டான். பிற்பாடு ஒருவனும் தன்னிடம் யுத்தம் செய்ய வரமாட்டான் என்று தெரிந்ததும் ப்ருத்விராஜன் தனது ராணி தாராபாயை அழைத்துக்கொண்டு கோமல்மீர் என்னும் பட்டணத்திற்குப்போய் அங்கே ஒருகோட்டை கட்டிக்கொண்டு வெகுகாலம் இருவரும் ஸௌக்யமாயிருந்தார்கள்.

ஒரு நாள் ஒரு ஸேவகன் ஒரு கடிதம் கொண்டுவந்து ப்ருத்வியிடம் கொடுத்தான். அது ப்ருத்வியின் தமக்கையாரிடமிருந்து வந்திருந்தது. அந்த தமக்கையார் ஸிரோஹி தேசத்து ராஜாவைக் கல்யாணம் செய்திருந்தாள். ஆனால் அவனுக்கு ராஜ குணங்கள் என்பதே கிடையாது. பெரிய குடிகாரனாய் இருந்துகொண்டிருந்தான். அபின் தின்பதுக்கு எல்லை கிடையாது. இப்படியிருந்ததினால், அவனிடமிருக்கவேண்டிய தயை, தாக்ஷிண்யம், அன்பு யென்பவை போய், கோபம் மூர்க்கத்தனம், கொடூரத்தனம் அவனிடம் குடிகொண்டன. எப்பொழுதும் தனது ராணியை அடிப்பான். லஜ்ஜையின்றிப் பேசுவான். அவள் பொறுக்க மாட்டாமல் தன் தமயனை ப்ருத்விக்குக் கடிதமெழுதியிருந்தாள். அதில் "அண்ணாவுக்கு கோடி நமஸ்காரம். இந்தமனுஷனிடமிருந்து காப்பாற்றவேண்டியது உன் கடமை. என்னால் பொறுக்கமுடியவில்லை. என் தகப்பனார் வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு" என்று கண்டிருந்தது. அதற்கு ப்ருத்வி "நான் வருகிறேன்" என்றுமாத்திரம் பதில் எழுதிக் கொடுத்தனுப்பிவிட்டான்.

ஒருநாள் ராத்திரி ஸிரோஸி ராஜா, படுக்கையில் குடித்துவிட்டுப் படுத்துக்கொண்டிருந்தான். அவனுடைய ராணி தனது நிலைமையை நினைத்து வருந்தினவளாய் தரையில் படுத்துக்கொண்டிருந்தாள். திடீரென்று ஈட்டியும் கையுமாக ஸிரோஹிராஜாவுக்கருகில் ப்ருத்விராஜன் நின்றான். அதற்குள்ளாக தமக்கை அவனைப்பார்த்து "கொன்றுபோடாதே. கொன்றுவிட்டால் என் கெதி என்னமாயிருக்கும் என்று யோசித்துப்பார். வேறு ஏதாகிலும் வழிபண்ணு," என்றாள். உடனே ப்ருத்வி ஓங்கின கையை நிறுத்திவிட்டு ஸிரோஹிராஜனைப்பார்த்து "இவளைப் பிரதக்ஷணம்செய்து, நமஸ்காரம் பண்ணி, இவள் காலிலிருக்கும் பாதரக்ஷையை உன் தலையில் வைத்துக்கொள், செய்யாவிட்டால் குத்திவிடுவேன்" என்றுபயமுறுத்தினான். உடனே ஸிரோஹிராஜா பயந்து எல்லாவற்றையும் செய்தான். கொஞ்சநாள் ஸரியாய் நடந்துவந்தான். ப்ருத்வி ராஜனும் விருந்தாளிபோல 7,8 நாள் அவ்விடமிருந்தான். ஸிரோஹிபட்டணம் பக்ஷணங்களுக்குப்பேர்போனது. பிருத்விராஜன் ஊரைவிட்டுப் போகும்பொழுது ஸிரோஹிராஜா விஷம்கலந்த பக்ஷணங்களை நிறையப்ருத்வியிடம் கொடுத்தனுப்பினான். ப்ருத்விக்கு விஷமென்றுதெரியாது. வரும் வழியில் பசியாயிருந்தது. அந்த பக்ஷணங்களில் கொஞ்சம் தின்றான் தின்றுவிட்டு மெதுவாக கோமல்மீர்வந்து சேருகிறதற்குள், தலை கிறுகிறுத்து கீழேவிழுந்துவிட்டான். அருகிலிருந்த ஸேவகர்களைப்பார்த்து "சீக்கிரத்தில் போய் தாராபாயை இவ்விடம் நான் வரச் சொன்னதாகச் சொல்லு. இப்பொழுது தவறினால் இனிமேல் பார்க்கமுடியாது என்றும் சொல்லு" என்று சொன்னான். அவர்கள் ஓட்டமாய் ஓடி தாராபாயிடம் ஸமாசாரம் தெரிவிக்க அவளும் விரைவாக வந்தாள். ஆனால் அவள் வருவதற்குள் ப்ருத்வியின் ஜீவனை யமன் அபகரித்துவிட்டான். உடனே அவள் மனம் வெடித்து அருகிலிருந்தவர்களைப் பார்த்து 'என் பர்த்தாபோனபிற்பாடு எனக்கு உயிர் எதற்காக இருக்கிறது. ஜதையை அடுக்குங்கள், நானும் அவர் போகிறலோகத்துக்குப் போகிறேன்" என்று சொல்லவே, அப்படியே மூட்டப்பட்ட ஜதையில் தன்பர்த்தாவுக்கருகில் தானும் விழுந்து வேறு லோகம் சேர்ந்தாள். லோகத்தில் தைர்யத்தை தாராபாயிடம் எல்லாரும் கற்றுக்கொள்ள வேண்டும். பர்த்தாவிடத்தில் விசுவாஸம் இருப்பதற்கும் அப்படியே.

டி. எஸ். வைத்யநாதன்.



# SELECTIONS.

# விசேஷத்திரட்டு.

## COOKING RICE.

## சாதம் சமைத்தல்.

நாம் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் சாதம் சமைத்து வருகிறோம். சாதம் வடித்துக் கஞ்சியைக்கொட்டுவதினால் என்ன நஷ்டமுண்டாகிறதென்று சாஸ்திரயுக்தமாய் அறியாமலிருக்கிறோம். மகம்மதியர் சாதம் சமைப்பது வேறுவிதமாயிருந்தும் அவர்கள் பழக்கத்தை நாம் கற்கவில்லை. அவர்கள் சாதம் வேகும்போது ஒரு கல் உப்புப்போட்டு சாதம் வடித்து, அதை அனலில்போட்டு, நீர் சுண்டி சாதம் மலர்ந்த பிறகு ஒரு கரண்டி நெய் வார்த்து வைப்பதுண்டு. உப்புப்போடுவதினால் அரிசியில் உள்ள சிகணம் கஞ்சியில் நஷ்டமாகாமல் இருக்கும். உப்புப்போடுவது சாதம் பிளக்காததற்கு முன்னமே நடக்க வேண்டும். அரிசியைக் கொட்டையாக வேவித்தே பிள்ளைப் பெற்றவர்களுக்குப் பத்தியச்சோறு சமைப்பது, அரிசியின் ஸத்து குறையாமலிருக்கவேண்டுமென்ற எண்ணமே. கஞ்சி வடிக்காமலே சீனரும் மற்றவரும் சாதத்தைப் பொங்கிச் சாப்பிடுவதுண்டு. ஆகவே மகம்மதியர் சாதம் சமைப்பது போலவேநாம்அனுஸரிப்பது விசேஷம். அரிசிக்கும் சாதத்துக்கும் உள்ள வித்தியாசம்.

| | அரிசி. | சாதம். |
|---|---|---|
| நீர் | 14·6 | 52·7 |
| சிகணம் | 7·5 | 5·0 |
| மாவு முதலியன | 76·9 | 41·9 |
| தைலம் | ·5 | ·1 |
| உலோகவர்க்கங்கள் | ·5 | ·3 |
| மொத்தம் | 100·0 | 100·0 |



ஆக சாதத்தில் 38 பாகம் ஜலம் அதிகமிருக்கிறது. $2\frac{1}{2}$ பாகம் சிகணமும், 35 பாகம் மாவும், பத்தில் நாலுபாகம் தைலமும் இரண்டு பாகம் உலோகவர்க்கங்களும் கஞ்சியில் நஷ்டமாகின்றன.

அளிய சமைத்தசாதம் ஜீர்ணமாகாததற்குக் காரணமென்ன வெனில் ரத்தத்தில் சேரவேண்டிய சிகணவஸ்து, உலோகப்பொருள்கள்முதலியன கஞ்சியில் வெளிப்பட்டு சாதத்தில் வெறும் மாவு இருந்து அஜீர்ணமுண்டாகிறது. மாவு ஜீரணமாதல் கஷ்டம். சாதம் விறைப்பாக இருப்பதே நல்லது. சாதம் உடையாமலும் வெடிக்காமலும் இருந்தால் தான் அதன் ஸத்து வெளியேறாமல் நிற்கும். இவ்விஷயத்தை நம்மவர்கள் கவனித்து அனுஸரிப்பார்களானால் அரிசியின் முழுப்பலன் தேகத்துக்கு உபயோகப்படும். தற்காலம் அரிசி உணவே எல்லாவற்றிலும் சிரேஷ்டமென்று அமெரிக்காவில் விசேஷமாகச் சாதம் சாப்பிடுகிறார்கள்.—தென்னிந்திய விவஸாயம்.

## VIRGIN WIDOWS.

## இளங்கைம்பெண்கள்.

கைம்பெண்கள் எவ்வளவு பாலியமாயிருந்தாலும், நகையணியக்கூடாதென்றும், வளையல் போடலாகாதென்றும், அலங்காரஞ் செய்துக்கொள்ளத் தகாதென்றும், சுபகாரியங்களில் அவர்கள் வருதல் நல்லதல்லவென்றும், வெள்ளை வஸ்திரந்தவிர மற்ற வஸ்திரங்கள் தரிக்கக்கூடாதென்றும், பிராமணப்பெண்கள் கூந்தலை நீக்கிவிடவேண்டுமென்றும், இவ்வித கொடூரமான ஏற்பாடுகள் பலவற்றை நமது

தேசத்திற் செய்துவருகிறார்கள். இவ்வேற்பாடுகளுக்கெல்லாம் அவர்கள் இணங்கி நடக்கும் போது இவ்வுலகத்திலுள்ள சுகானுபவம் யாதொன்றும் அவர்களுக் கில்லாமையால் அவர்கள் உயிர்நீங்கிய சரீரத்திற் கொப்பாயிருக்கின்றார்கள். தங்களது அதிர்ஷ்டவீனத்தை யாருடன் முறையிடுவார்கள், அந்தோ! பரிதாபம்! புருஷர்களுடன் கூடி வாழ்ந்து சொற்பகாலமேனும் சுகத்தை யனுபவித்த கைம்பெண்களின் பரிதாபமே இவ்வாறாகில், இரண்டு மூன்று வயதுள்ள பெண் குழந்தைகளைக் கலியாணஞ்செய்து கொடுக்க அவர்கள் பருவமடைவதற்கு முந்தியே அவர்களின் கணவர்கள் பரலோகமடைய, அக்காரணத்தால் அவர்கள் அறியாத பருவத்தில் ஸௌமங்கலிகளென்னும் பெயர் பிறராற் கூறப் பெற்றிருந்து, தங்கள் அறிவு தோன்றியது முதல் ஆயுள் முடிவு வரையில் அமங்கலிகளென்னும் பெயரையே யாவருஞ் சொல்லக் கேட்டு, சுகமிழந்து, துக்கக்கடலில் ஆழ்ந்து, ஒன்றுந் தோன்றாத துன்பமுறுகின்ற பேதையர்களின் பெருந்துக்கம் எவ்வளவு பரிதாபமானது? அன்றியும், 30, 40-வயதுடையவர்களுக்கு 3, 4, 5, வயதுடைய பெண்களை மணம்முடிக்கின்றார்கள். அப்பெண்கள் பக்குவ வயதிற்கு வருவதற்குள்ளாக அவர்களின் புருஷர்கள் சரீர தத்துவங்கள் குறைந்து, தடியூன்றி நடக்கும்படியாகவும், பரலோக பாக்கியமடையப் பக்குவமுள்ளவர்களாகவும் ஆகி விடுகிறார்கள். அப்போது அவ்வளவு பாலியத்திலேயே கைம்பெண்கள் என்னும் பட்டத்தைப் பூண்டுகொள்ளுகின்ற பாவையரின் பரிதாப நிலைமை பார்க்கத்தக்கதோ? இப்படி பலவிதங்களிலும் பரிதபிக்கத்தக்க இக்கைம்பெண்களின் கதி எவ்வாறாகின்றதென்று சற்று சிந்திப்போம். கைம்பெண்களுள்ளே பதிவிரதா சிரோன்மணிகளா யுள்ளவர்கள் தங்கள் கதி இவ்வாறாயிற்றே என்று மனமுருகிக் கஷ்டங்களை யெல்லாம் நாம் அனுபவித்தால் மாத்திரமே நமது கற்புக்குலை யாதெனத் தீர்மானித்துக்கொண்டு ஸதா கடவுளைத் தியானித்துக் கற்பழியாமற் காலங் கழிக்கின்றார்கள். வேறு சிலர் இவ்வளவு துன்பங்களை யனுபவித்து இப்புவியிலிருப்பதைவிட இறப்பது நன்மையென்று தற்கொலை புரிந்து கொள்ளுகிறார்கள். மற்றும் சிலர் தங்களது காம இச்சைக்காசைப்பட்டு கள்ளக்கணவருடன் கலவிசெய்து கற்பழிந்து, கருவளர்ந்து, பிறக்கும் குழந்தைகளைக் கொலை செய்து சிசுஹத்தி தேடிக்கொள்ளுகிறார்கள். இவ்வித துன்பங்கள் நேராவண்ணம் மணவாளன் இறந்த மனைவிமார்களுக்கு ஏன் மறுமணம் புரியலாகாதென்பதைப் பற்றிச்சற்று யோசிப்போம். இந்துக்கள் தவிர மற்ற வகுப்பார்களெல்லாம் மறுமணம் செய்துவர இந்துக்கள் மாத்திரம் செய்யக்கூடாதென்று தடுப்பது அறியாமையே. புருஷர்கள் தங்கள் பெண்சாதி யிறந்து பிரேதம் வெளிப்படுவதற்கு முன்பே பெண்ணை நிச்சயித்துக்கொள்வதை சாம்பிரதாயமாய் வைத்துக்கொண்டு, தங்களைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாக காம இச்சையுடைய பேதமை பெண்பிள்ளைகளுக்கு மாத்திரம் இவ்வித நிர்ப்பந்தம் ஏற்படுத்தியது எவ்வளவு அக்கிரமமென்று நம்மவர்கள் கவனிக்கவேண்டும். நாம் சொல்லி வந்ததெல்லாம் சிறு பிராயத்தில் மணம்புரியப்பட்டவர்கள் பருவமடைவதற்கு முன் கணவனை யிழந்து புருஷ சுகமறியாத பாலிய கைப்பெண்களுக்கே.



## PRECAUTIONS AGAINST THUNDER AND LIGHTNING.

## இடிமின்னலாயிருக்கும்பொழுது செய்யவேண்டியவைகள்.

மேகத்தில் இடி முழங்கும்பொழுது அநேகம் சிறுவர்களும் பெரியோர்களும் நடுநடுங்கி ஒருவர்மேல் ஒருவர் விழுந்து கொண்டு ஓடி வீட்டிற்குள் புகுந்துக்கொள்வதை நாம் அடிக்கடி காண்கிறோமல்லவா? ஆனால் இடி முழக்கத்தில் சிறிதேனும் பயமில்லை. ஏனென்றால், அது ஒரு சப்தமே தவிர நம்மைக் கொல்லும்படியான காரியம் அதில் யாதொன்றுமில்லை. ஆனால் மின்னல் தான் அபாயகரமானது.

அது எப்படி உண்டாகிறது என்பதைப் பற்றிச் சற்று கவனிப்போம் ஆகாயத்தில் மிதந்துகொண்டிருக்கும். மேகங்களில் சிலவற்றில் ஒருவிதமான மின்சாரமும், மற்றும் சிலவற்றில் வேறொரு விதமான மின்சாரமும் உண்டாகின்றன. காந்தமானது இரும்பை இழுப்பதுபோல் இவ்விரண்டுவித மின்சாரங்களும் ஒன்றையொன்று ஆகர்ஷிக்கின்றது. அவை ஒன்றாய்க் கலக்கும்பொழுது மின்சாரப் பொறிகள் உண்டாகின்றன. அப்பொறிகளில் உண்டாகும் வெளிச்சத்தைத் தான் நாம் மின்னல் என்கிறோம். அவைகள் உறையும் வேகத்தினால் சப்தமுண்டாகிறது. அதற்குத்தான் இடி யென்று பெயர். மேகத்திலிருக்கும் மின்சாரமானது பூமியினால் இழுக்கப்பட்டு அதன் மூலமாய்ச் செல்லும்.

மின்னலில் மூன்று விதமுண்டு. முதலாவது, படலம்போன்றது. இது உண்டாகும் போது மேகமுழுவதும் பிரகாசிக்கும். இது உஷ்ண தினங்களில் சாயந்திர வேளையில் உண்டாகிறது. இதனால் யாதொரு அபாயமுமில்லை. இரண்டாவது, அதிக பலமும் பிரகாசமுமானது. இது பாம்பைப்போல வளைந்து வளைந்து செல்லும். இது சுமார் 10மைல் தூரத்திலுள்ள மேகங்களின் இடையிலும் செல்லுகின்றது. மூன்றாவது, மின்னல் பந்தைப்போன்றது. இது நெருப்புப் பந்தைப் போல் ஆகாயத்தில் மெதுவாய் நகர்ந்து கொண்டு பூமியின்மேல் பட உடனே மிகுந்த பயங்கரமான வெடி ஓசையை உண்டாக்குகிறது. இது மிகவும் அபாயகரமானது. ஆனால் இது எப்பொழுதாவது ஒரு ஸமயந்தான் உண்டாகிறது. இதைத்தான் ஜனங்கள் இடிவிழுந்ததென்று சொல்லுகிறார்கள். ஸாதாரணமாய் ஜனங்கள் சொல்லுவது போல் அதில் இரும்பு முதலான யாதொரு வஸ்துவும் பூமியில் விழுகிறதில்லை.

மேற்கூறிய மின்னல்களும் இடியும் உண்டாகும்போது நாம் கவனிக்கவேண்டிய அம்சங்கள் அநேகமுண்டு. சிலர் மிக்க தைரியசாலிகள் என்று ஜம்பம் பேசிக்கொண்டு அப்பேர்ப்பட்ட ஸமயங்களில் வெளியே திரிகிறார்கள். அவர்கள் காஞ்சி ஏகாம்பர ஈசுவரன் கோபுரத்தின் சிகரத்திலிருந்து தைரியத்துடன் கீழே குதிக்கிறேன், பாருங்கள், என்று சொல்லுகிறவர்கள் எவ்வளவு புத்திசாலிகளோ அவ்வளவு புத்திசாலிகள் தான். பூர்வகாலம் முதல் நம்மவர்கள் இடியுண்டாகும் பொழுது "அர்ச்சுனா அர்ச்சுனா" என்று சொன்னால் யாதொரு தீங்கும் உண்டாகாதென்று நினைத்து தியானம் செய்து வருகிறார்கள். நம்மவர் தான் இம்மாதிரி செய்கிறார்களோவென்றால், மேல் நாட்டாரும் அப்பேர்ப்பட்ட ஸமயங்களில் இடியால் உண்டாகும் அபாயத்தை நிவாரணம் செய்யவேண்டு மென்று மாதா கோவிலில் மணி யடித்தும் பல பூஜைகள் செய்தும் ஸ்வாமியைத். தியானித்தும் வருகிறார்கள்.

அது மூடபக்தி யென்பதற்கு யாதொரு ஆட்சேபமுமில்லை. இதைக்காட்டிலும் முக்கியமாய் நாம் செய்யவேண்டிய தென்னென்னவென்று ஆராய்வது அவசியம்.

முதலில் நாம் வீட்டிற்குள் இருந்தால் எந்தவஸ்துக்களின் மூலமாய் மின்சாரம் செல்லுமோ அவைகளினின்றும் நாம் விலகி இருக்கவேண்டும். உஷ்ணவாயு, புகை, ஓட்டை, உலோகங்கள், ஆகிய இவைகளின் மூலமாய் மின்சாரம் வெகு சுலபமாய்ச்செல்லும். ஆகையினால் நெருப்பு எரியுமிடத்தில் நாம் நிற்கலாகாது. ஜன்னல் களிலிருந்தும் நாம் விலகி இருக்கவேண்டும். ஏனென்றால், ஜன்னல்களில் இரும்புக்கம்பிகளிருக்கின்றன. நிர்ப்பயமாய் நாம் இருக்கக்கூடிய இடம் அறையின் நடுப்பாகந்தான். சுவற்றோரத்தில் நிற்கக்கூடாது. கனமான கோணி, கம்பளம் முதலியவைகளின் மேல் பயமில்லால் நிற்கலாம் ஆனால் அவைகள் ஈரமாய் இருக்கக்கூடாது'. மெத்தை வீட்டின் உச்சியிலும் கோபுரங்களின் நுனிகளிலும் இருப்பது மிகவும் மூடத்தனம். ஏனென்றால், மின்சாரத்தை வகிக்கும் மேகங்கள் அப்பொழுது நமக்கு ஸமீபத்தில் இருக்கின்றன.

நாம் வீட்டைவிட்டு வெளியே இருக்கும் பொழுதும் கவனிக்கவேண்டிய அம்சங்கள் உண்டு. நாம் வண்டியில் போகும்பொழுது பின்னால் சாயாமல் நேராய் உட்காருவது நல்லது. ஏனென்றால் அப்பொழுது மின்சாரமானது வண்டியின் பின்புறத்திலும் பக்கத்திலும் சென்றுவிடும். வண்டியில்லாமல் நடந்து செல்லும்போது, மரத்தினடியில் போய் நிற்பது மிகவும் அபாயகரமானது. மின்சாரம் நம்தேகத்தின் மூலமாய் எளிதிற் செல்வதுபோல் விருக்ஷத்தின் மூலமாய்ச் செல்லாது. ஆனதால் நாம் மரத்தின்கீழ் நிற்கும்போது நம் தேகத்தின் மூலம் பாயுமே தவிர, விருக்ஷத்தை ஒன்றும் செய்யாது. அநேகம் மாதா கோவில்களின் உச்சியின் மேலும் பெரிய கட்டிடத்தின் சிகரங்களின் மேலும் கூரான காந்தம் வைத்திருப்பதை நாம் இன்றும் காணலாம். ஆனால் அது சிகரத்தின் உச்சியில் மாத்திரம் வைக்கப்பட்டில்லை. அதிலிருந்து உலோகத்தினாலாகிய கம்பி, கட்டிடத்தின் மூலமாய்ச் சென்று பூமிக்குள் புதைக்கப்பட்டிருக்கிறது. உண்டான மின்சாரம் காந்தத்தினால் இழுக்கப்பட்டு கட்டிடத்திற்கு தீங்கு இல்லாமலே கம்பியின் மூலமாய்ப் பூமிக்குள் சென்றுவிடுகிறது.

மேலும் அப்பேர்ப்பட்ட காலங்களில் நாம் வெளியே இருந்தோமானால் ஜனங்களின் கூட்டத்திலும் மிருகங்களின் கூட்டத்திலும் இருப்பது தப்பு. காரணம் ஏனென்றால், ஜீவஜந்துக்கள் சுவாசிக்கும்பொழுது உஷ்ணமான ஆவி மேலே கிளம்புகிறது. அதன் மூலமாய் மின்சாரம் சென்று அவைகளைத் தாக்கலாம். குளம், குட்டை, முதலானவைகளின் ஸமீபத்தில் இருப்பதும் தப்புத்தான். மின்சாரம் ஜலத்தைக்கர்ட்டிலும் உலர்ந்த நிலையில் நாம் இருப்பதால் அது நம் மூலமாய்ச் செல்லும்.

கடைசியாய் நாம் கவனிக்க வேண்டியதென்னவென்றால், நாம் வெளியே போகும்பொழுது இரும்புக்கம்பி போட்ட குடையைப் பிடித்துக்கொண்டு செல்லலாகாது. ஏனென்றால், அந்தக்கம்பி மின்சாரத்தை இழுக்கும். இடியும் மின்னலும் விசேஷமாயிருந்தால் உலோக சம்பந்தமான வஸ்துக்கள் நம்மிடத்தில் இருக்கக்கூடாது. அப்போது கெடியாரம் ரூபாய், முதலானவைகளை எடுத்துத் தூரத்தில் வைத்துவிட வேண்டியது.—சுதேசமித்திரனில் ஒரு நிருபர்.



## COCOANUT PLANTING.

## தென்னந்தோப்பு வைத்தல்.

சில வருஷங்களுக்கு முன்னால் தேங்காய் ஒன்று 4-பை முதல் 6-பை வரையில் தேங்காயின் பருமனுக்குத் தக்கப்படி விற்றுக்கொண்டிருந்தது. இப்பொழுதோ சென்னையில் தேங்காய் ஒன்று ஒரு அணா முதல் ஒன்றரை அணா வரையில் விற்று வருகிறது. அதாவது ஏறக்குறைய மூன்றுபங்கு விலையாகி யிருக்கிறது. சரியானபடி மழை பெய்யாததால் உணவுப் பொருட்களுக்கெல்லாம் விலையேறி யிருப்பதைப்போல தேங்காய்க்கும் விலை யதிகரித்திருக்கிறதென்பது பொது ஜன அபிப்பிராயம். இப்படி அபிப்பிராயப்படுவது சரியன்று. ஏனென்றால் விசேஷமாய் தென்னந்தோப்புகள் வைத்திருப்பது நீர்வளம் நிலவளம் நிறைந்த இடங்களிலானதாலும், மழையின் உதவியை எதிர்பாராமல் எப்போதும் தண்ணீர் பாய்ச்சக்கூடிய இடங்களிலானதாலும், மானாவாரியை நம்பி ஒருவரும் தென்னந்தோப்பு வைக்கமாட்டார்கள். எவ்வளவு தண்ணீர் பாய்ச்சினாலும் மழைக்குச் சமானமாகுமென்று நாம் சொல்லவில்லை. என்றாலும் தென்னம்பிள்ளைகளுக்குப் போதுமானபடி தண்ணீர் இறைத்து வந்தால் மழையில்லாமற் போனபோதிலும் அதன் மகசூலில் விசேஷமாய் வித்யாசப்படாது. முன் விளைவடைந்ததைப்போல் இப்போதும் விளைந்து வந்தால் விலை யதிக்கப்படவேண்டிய காரணமென்ன வென்னும் கேள்வி பிறக்கலாம். பொதுவாக இதற்குப் பல காரணங் கூறுகிறார்கள். அதாவது முன்னாலிருந்த கூலியை விட இப்போது அதிகக்கூலி கொடுக்கவேண்டி யிருக்கிறதென்றும், எருவின் கிரயம் அதிகரித்திருக்கிறதென்றும், ஆர்பத்நட் கம்பெனி அழிந்துபோன பிற்பாடு நிலக்கிரயம் அதிகரித்திருக்கிறதென்றும், நாகரீகம் அதிகமாக அதிகமாகக் காலையில் ஜனங்கள் பழையசாதம் சாப்பிடுவதை விட்டு இடியாப்பம், ஆப்பம், பிட்டு, முதலிய தேங்காய் சேரும் பலகாரங்களைச் சாப்பிடுவதால் தேங்காய்கள் அதிகமாய் செலவாகின்றனவென்றும் அதனால் விலை அதிகரித்திருக்கிறதென்றும் நினைக்கிறார்கள்.

விலை அதிகமானதற்கு இவைகள் மட்டும் முக்கியமான காரணங்களல்ல. பின் என்னதான் முக்கிய காரணங்களென்றால் ஐரோப்பியர்கள் கொப்பரைத்தேங்காயிலிருந்தும், தேங்காயெண்ணெயிலிருந்தும் அநேக உபயோகமான பதார்த்தங்கள் செய்வதற்காக இந்தியாவிலிருந்து தேங்காய்களையும் தேங்காயெண்ணெயையும் ஏற்றுமதி யாக்கிக்கொண்டு போவதுதான். இப்போது மேல் நாட்டாருக்கு எவ்வளவு எண்ணெய் வேண்டியதா யிருக்கிறதோ அவ்வளவு எண்ணெய் நமது தேசத்தில் அகப்படவில்லை. ஆகையால் விலைகளை நாளுக்கு நாள் உயர்த்திக்கொண்டே போகிறார்கள். தேங்காய்களாய் விற்பதைவிட தேங்காய் யெண்ணெய் செய்து விற்பதில் இவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதால் விசேஷமாய்த் தேங்காய்களை அனுப்புவதில்லை. நம்மிற் சிலர் தேங்காயெண்ணெயை அப்பளம் வறுப்பதற்கும், வடை முதலிய பலகாரங்கள் செய்வதற்கும், கறிகள் தாளிப்பதற்கும், மருந்துகள் செய்வதற்கும்மட்டும் உபயோகிக்கிறோம். ஐரோப்பியர்களோ தேங்காயெண்ணெயிலிருந்து நானாவிதமான சோப்புகளும், தேங்காய் சிரட்டைகளிலிருந்து விதம் விதமான பொத்தான்களும் தேங்காய் நாரிலிருந்து புருஷ்களும் தேங்காயிலிருந்து நெய்யும் செய்து விசேஷ லாபம் பெறுகிறார்கள். தேங்

காயிலிருந்து செய்யப்படும் நெய்க்கும் வெண்ணெய் உருக்கி யெடுத்த அப்பட்டமான நெய்க்கும் கொஞ்சமாவது வித்யாசமில்லையாம். குழந்தை முதல் நல்ல நெய் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்களால் கூட தேங்காயிலிருந்து செய்யப்படும் நெய்க்கும் அப்பட்டமான நெய்க்கும் வித்யாசம் கண்டு பிடிக்க முடியாதாம். இப்போது இவ்வியாபாரம் செய்வதற்காக கொழும்பிலும் சீமையிலும் பெருத்த விடுமுதலோடு ஒரு வியாபாரஸ்தலம் ஏற்பட்டிருக்கிறது. இதில் நாளொன்றுக்குத் தற்காலம் லட்சம் தேங்காய்கள் வாங்கிவருகிறார்கள்.

சீமையிலோ தேங்காயெண்ணெய் வீசை ஒன்றுக்கு ஒரு ரூபாய் வரையில் கொடுத்து வாங்குகிறார்கள். இவ்வியாபாரம் சீமையோடு மட்டும் நிற்கவில்லை. இப்போது அமெரிக்கா தேசத்து வியாபாரிகளும் இதில் ஊக்கங்காட்டி வருகிறார்கள். எல்லா ஜாதியாரிலும் ஜெர்மனி தேசத்தார்தான் அதிக வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் நாளொன்றுக்குப் பதினாயிரம் மணங்கு தேங்காய் நெய் செய்து விற்கிறார்கள். பிரான்ஸ்தேசத்தாரோ அதிகமாய்க் கொப்பரைத் தேங்காய் வாங்கிவருகிறார்கள். புதுச்சேரியில் தேங்காய் நெய் செய்வதற்காகச் சுற்றுப்பக்கங்களிலுள்ள தேங்காய்களையெல்லாம் வாங்குவதோடு வெளியிலிருந்தும் தேங்காய்கள் வரவழைக்கிறார்கள். இன்னும் இருக்க இருக்க தேங்காய்களுக்கு கிராக்கி அதிகமாய் ஏற்பட்டு விடுமே தவிர விலை இறங்காது. ஆகையால் ஒவ்வொரு கிருஷிகரும் தங்களால் எவ்வளவு நிலத்தில் தென்னந்தோப்புகள் வைத்து சரியாய்ப் பாதுகாத்துவர முடியுமோ அவ்வளவு செடிகள்வைத்து உண்டாக்கினால் நல்லலாபம் பெறுவார்கள். தென்னை பயிர் செய்வதைக் குறித்து இனி சுருக்கமாய்ச் சொல்வோம்.

தென்னமரத்தை நீர்வளம் மிகுந்த எல்லா இடங்களிலும் பயிர் செய்யலாம் இருந்தாலும் மணல் பாங்காயுள்ள சமுத்திரக் கரையோரங்களில்தான் இது விசேஷப் பலனைத்தருகிறது. சவுக்கு மரத்தைத்தவிர விசேஷமாய் வேறு பயிர் செய்யக்கூடாத அநேகமாயிரம் ஏக்ரா மணல் பாங்கான நிலம் சமுத்திரக்கரையோரமாய் நமது இராஜதானியிலிருக்கின்றன. அந்நிலங்கள் வெகுவாய் தரிசாய்த்தான் கிடக்கின்றன. இந்நிலங்களைத் தர்க்காஸ்து கொடுத்தாவது அல்லது சொற்பமாய் விலைகொடுத்தாவது பெற்று அந்நிலங்களில் தென்னம் பிள்ளைகளை வைத்து உண்டாக்கினால் விசேஷ லாபந்தரும். சமுத்திரகரையோரமாயில்லாதவர்கள் மணற்பாங்கான ஆற்றோரத்து நிலங்களிலும் வைத்து உண்டாக்கலாம். இப்படியும் செய்யச் சாத்யப்படாதவர்கள் தங்களிடமிருக்கும் மணற்பாங்கான நன்செய் அல்லது புன்செய் நிலங்களில் வைத்தும் உண்டாக்கலாம். இதற்கு முக்கியமாய் அத்யாவசியமானது என்னவென்றால் இதன் வேர்கள் சுலபமாய் பூமிக்குள் புகும்படியான மண்ணும் ஜலாதாரமுந்தான். எங்கெங்கே இவ்விரண்டும் அபிரிமிதமாயிருக்கின்றனவோ அங்கெல்லாம் தென்னை பயிராகும். வெகு ஆழம்வரையில் வண்டல்சேர்ந்த கொழுத்த மண்ணாயிருக்கும் நன்செய்களில் இது சரியாய்க் காய்ப்பதில்லை. ஏனென்றால் செடிகள் வளத்தினால் கொழுத்துப்போகின்றன. சமுத்திரக் கரையோரமாயில்லாத இடங்களில் ஒருசெடிக்கு ஒருபடிஉப்பு வீதம் வைப்பது அதிசிலாக்யமாகும். தேங்காய்களில் அநேகவிதங்கள் இருந்தபோதிலும் (1) பச்சைக்காய்ச்சி, (2) கவுளிபாத்ரம், (3) நக்குவாரி. (4: செவ்விள



நீர், (5) யாழ்ப்பாணம், (6) கோவா என்னும் ஜாதிகளே முக்கியம்.

1. பச்சைக்காய்ச்சி.—காம்பு, காய்கள் முதலியன பச்சை நிறமாயிருக்கும். காய்கள் உருண்டையாயும் குலைகனத்துமிருக்கும். இந்தஜாதி ஆறாவது வருஷம் முதல் காய்க்கும்.

2. கவளிபாத்ரம்.—காய்கள் மஞ்சள் நிறமாயாவது ஊதா நிறமாயாவது இருக்கும். காய்கள் அவ்வளவு பருமனாயிராமற் போனாலும் நடுத்தரமாயிருக்கும். ஆனால் கொட்டாங்கச்சியும் அதற்குள்ளிருக்கும் பருப்பும் அதிக கனமாயிருக்கும். இதுவும் ஏறக்குறைய பச்சைக்காய்ச்சியைப்போலவே காய்க்கும்.

3. நக்குவாரி.—இது மூன்றுமுதல் ஐந்து வருஷத்திற்குள்ளாக காய்க்க ஆரம்பித்து விடுகிறது. ஆனால் செடி நீடித்து நிற்பதில்லை.

4. செவ்விளநீர்.—காய், பூ, காம்பு, இவைகள் சிகப்பாயிருக்கும், காய் சிறியதாயும் உருண்டையாயுமிருக்கும். இதற்குள்ளிருக்கும் தண்ணீர் (இளநீர்) வைசூரிகண்டிருக்கிற காலங்களில்கூட ஔஷதமாகக் கொடுக்கலாம். இது ஏழாவது வருஷத்தில் காய்க்கிறது.

5. யாழ்ப்பாணம்.—இதுவும் பச்சைநிறம் சம்பந்தப்பட்ட காய்தான். ஆனால் இகன் காய்கள் பெரியதாயிருக்கும். உள்ளிருக்கும் பருப்பு அவ்வளவு கனமாயிருப்பதில்லை.

6. கோவா.—அலங்காரத்திற்காகவும், காக்ஷி சாலைகளுக்குக் கொண்டுபோகக்கூடிய அவ்வளவு பருமனும் உள்ளது. இது குலைக்கு சுமார் இரண்டு காய்களுக்கு அதிகமாய்க்காய்க்காதாகையால் வியாபாரத்திற்கு லாயக்கில்லாதது.

வித்து தெரிந்தெடுத்தல்.— இளமரமும்கிழமரமுமில்லாத நடுத்தரமான மரத்தில் நன்றாய் முற்றின நெற்றுகளாய்ப்பார்த்து காய்களை அறுத்து அங்கிருந்து கீழேபோட்டால் உடைந்து போகுமாதலால் அப்படிப்போடாமல் குலைகளைக் கயிறுகொண்டு கட்டி மெதுவாக இறக்கிக்கொண்டுவந்து வைக்கவேண்டும். காய்கள் இறக்கிய ஒருமாதத்திற்குப்பின் நடுவது வழக்கம். மூன்று அடி ஆழத்திற்கு நன்றாய்த்தோண்டி எருக்கொட்டி காய்களைப் பூச்சி கரையான் முதலானவைகள் அரிக்காதபடி போதுமான அளவு சாம்பலும் உப்பும் போட்டு ஒரு அடி தூரத்திற்கு ஒருதேங்காய் வீதம் தேங்காய் சற்று மேலே தெரியும்படி நடுகிறார்கள். அப்பால் அப்பாத்திகளில் ஈரம் காய்ந்து போகாதபடிக்குத் தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள். இப்படிச் செய்தால் சுமார் மூன்று மாதத்தில் குருத்து வரும். நெற்றுகளை நடுவதற்குமுன் ஒன்று அல்லது ஒன்றரை மாதத்திற்குத் தண்ணீரிலே நெற்றுகளை போட்டு வைத்திருந்து அப்பால் நட்டால் ஒன்றரை அல்லது இரண்டு மாதத்திற்குள் குருத்துவருகிறதாம். இப்படிச்செய்வதில் தண்ணீர் இறைப்பு குறைவதுடன் ஜல்தியில் முளைவருவதால் கரையான் முதலிய பூச்சிகளால் நஷ்டமடைவது குறையும். இம்முறையனுசரிப்பதே நலம். நெற்று நடுவதில் முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் நெற்றுக்குள்ளிருக்கும் இளநீர் பூராவாய் சுண்டிப்போகக் கூடாதென்பதுதான். குருத்துவந்த ஆறுமாதத்தில் செடிகள் நடலாம்.

செடிகள் வைத்தல்.—தென்னம் பிள்ளைகள் வைக்க உத்தேசத்திருக்கும் நிலத்தை நன்றாய் அலர உழுது நீர் நிலவளங்களுக்குத்தக்கதாகப் பதினைந்து அடி முதல் இருபது அடி சதுரத்திற்கு ஒரு குழிவீதம் தோண்டவேண்டும். அப்படித்தோண்டும் ஒவ்வோர்குழியும் ஒவ்வொரு சதுரகெஜத்திற்குக் குறையாமலிருக்கவேண்டும். அதாவது மூன்றடி நீளம் மூன்றடி அகலம் மூன்றடி ஆழம் இப்படிக் குழிதோண்டி நன்றாய்க் காயப்போடவேண்டும். குழி நன்றாய்க் காய்ந்தபின் சப்பாத்துக்கள்ளி, அதன் வேர், வேர்பக்கத்திலுள்ள மண் முதலானவை கொண்டுவந்து போடுவதுடன் கொஞ்சம் மக்கிய சாணியும்போட்டுக் குழியின் பாதிபாகத்தை நிரப்புவதுடன் ஒவ்வோர் குழிக்கும் ஒருபடி உப்புவீதம் போடவேண்டும். இப்படிப்போட்டு குழிகள் நன்றாய் ஆறியபின் தென்னம் பிள்ளையைக் கறையான் அரிக்காமல் இருப்பதற்காக அகப்படுமானால் போதுமானபடி மரச்சாம்பலும்,

இல்லாவிட்டால் சாதாரண சாம்பலாவது போட்டுத் தென்னம்பிள்ளைகளை நட்டு வெயில் படாதபடி அதற்கு மூடாப்புப் போடவேண்டும். தென்னம்பிள்ளைகளை மழைகாலத்தில் நடுவதுதான் சிலாக்கியம். இருபது அடிக்கு ஒரு பிள்ளையாக வைப்பதுதான் சிலாக்யம். குறைத்துவைத்தால் இடம் போதாததால் மரங்கள் கோணிக்கொண்டே போவதோடு சரியாயும் காய்க்காதென்று முன்னொருதரம் கிருஷிகனில் தெரிவித்திருக்கிறோமல்லவா? 15 அடிக்கு ஒன்றாக நட்டால் சுமார் 210, பிள்ளைகளும் 20, அடிக்கு ஒன்றாக நட்டால் சுமார் 120, பிள்ளைகளும் ஏக்கருக்குச்செல்லும். செடிகள் வாங்குவதை விட நாமே நாற்றுவிட்டு வைப்பதே நல்லது.

பின்பருவம்.—தென்னம்பிள்ளைகள் வைத்து வேர் நன்றாய் ஊன்றும் வரையில் இரண்டு நாளைக்கு ஒரு தண்ணீரும் வேர் ஊன்றியபின் ஈரம் காப்பதற்குப் போதுமானபடி அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி வாரத்திற்கு இரண்டு தண்ணீரோ அல்லது ஒருதண்ணீரோ இறைத்து வரவேண்டும். இப்படி ஐந்து வருஷங்கள் வரையில் இவைகளை அதிஜாக்ரதையாய்க் காப்பாற்றவேண்டும். அதற்குபின் தண்ணீர் பாய்ச்சவேண்டியதும் வேண்டாததும் அந்தந்த இடத்தைப்பொறுத்தது. கேவலம் வெறும் மணலாயில்லாத மற்றநிலங்களில் பிள்ளைகள் நட்ட இரண்டு அல்லது மூன்றுவருஷம் வரையில் காய்கறி, இஞ்சி, மஞ்சள், வெங்காயம் அல்லது சொற்பதானியங்களை ஸாகுபடி செய்யலாம். இப்படிச்செய்வதால் பிள்ளைகளுக்குத் தண்ணீர் இறைக்கும் செலவு தள்ளிப் போவதோடு நிலமும் அடிக்கடிக் கிளறப்பட்டும் எருப்போடப்பட்டும் வருவதால் நிலம் மிகுந்த வளமாயிருக்கும். இப்படிப் பயிர் செய்யப்படாத இடங்களில் வருஷத்திற்கு இரணடொரு முறையாவது நன்றாய்க்கொத்தி செடிகளுக்கு எருவிடவேண்டும். ஐந்து வருஷங்களுக்குப்பின்னால் ஒவ்வொரு வருஷத்திலும் மழைகாலத்தில் செடிகளைச்சுற்றி ஒவ்வொரு பக்கத்திலும் 4 அடி தூரத்திற்கு நன்றாய் ஆழக்கொத்தி வேர்களை அப்புறப்படுத்திவிட்டு தொழு எரு, சாம்பல், இலைச்சருகுகள் சப்பாத்துக்கள்ளி, தோல்எரு, எலும்புத்தூள், உப்பு இவைகளில் எவை சுலபமாய் அகப்படுமோ அவைகளைப்போட்டு மழைஜலம் வெளியே போகாதபடி பெரிய பாத்திகளாய்க் கட்டவேண்டும்.

சாதாரண ஜாதிதென்னைமரங்கள் நன்றாய் போஷிக்கப்பட்டு வந்தால் ஆறாவது வருஷம் முதல், காய்க்க ஆரம்பிக்கும். சரியானபடி பின்பருவம் செய்யாவிட்டால் பத்து பதினைந்து வருஷங்கள்வரையில் கூட காய்க்காது. பின்பருவங்களெல்லாம் சரியானபடி செய்து மரங்கள் கட்டையும் இலையுமாய் நின்றால், செடிகளுக்குக் கொழுப்பு அதிகமாயேறியிருக்கிறதென்று தெரிந்துகொண்டு மரங்களைச் சுற்றி ஆழமாய் குழிகள் தோண்டி அவைகளில் சரல் கொண்டுவந்து கொட்டி மண் போட்டு மூடிவிடவேண்டும். இப்படிச் செய்தால் கொழுப்பேறியே செடிகள் காய்க்கும்.

வயது.—தென்னைமரமானது 70 வருஷம் முதல் 100 வருஷம் வரையில் ஜீவித்திருக்கும். இருந்தாலும் 70 வருஷத்திற்குமேல் அது காய்ப்பது அபூர்வம். தென்னைமரத்தைச் சுற்றிலும் மட்டைகள் விழுந்த அடையாளங்கள் நன்றாய்த் தெரியும். ஆறுமாதத்திற்கொருமட்டை விழுவதால் அவ்வடுக்களை எண்ணிப் பார்த்தால் மரத்தின் வயது தெரிந்து கொள்ளலாம்.

மகசூல்.—ஒருவருஷத்தில் ஒருமரமானது 10 குலை தள்ளும். குலை யொன்றிற்குப் பத்துக்காய் முதல் 20 காய்கள்வரை காய்க்கும். 20 அடி தூரத்திற்கு ஒரு மரமாக நட்ட கணக்கையும் குறைந்தது குலைக்குப் பத்துக் காய்கள் அகப்பட்டதாயும் வைத்துக்கொண்டாலும், ஏக்கர் ஒன்றுக்கு 120 செடிக்கு செடி ஒன்றுக்கு நூறு காய்களாக வருஷத்திற்கு 12,000 காய்கள் அகப்படும். காய் ஒன்று 9 பை வீதம் குறைந்த விலையாகப் போட்டுக் கொண்டாலும் ஏக்கர் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு அதிகம் அகப்படும். செலவு ரூபாய் இருநூறு போனாலும் ஏக்கர் ஒன்றுக்கு முன்னூறு ரூபாய் லாபம் அகப்படும். நாம் மேலே சொல்லியபடி இதைவாசித்தவுடன் மறந்து போகாமல் சற்று இவ்விஷயத்தில் கவனம செலுத்தி விவஸாயிகள் லாபம் அடைவார்களென நம்புகிறோம்.

கிருஷிகன்.



# REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### THE SERVANTS OF INDIA.

### இந்தியாவின் ஊழியக்காரர்கள்.

"இந்தியன் ரிவ்யூ" என்னும் இங்கிலீஷ் மாதாந்தரப் பத்திரிகையின் ஜூலை மாஸத்து ஸஞ்சிகையில் கனம் கோக்லே அவர்களால் ஏற்படுத்தப்பட்ட "இந்தியா ஊழியக்காரர்கள்" சங்கத்தைப்பற்றி ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கமானது 1905-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது மூன்று பேர்கள் இருந்தார்கள். தற்காலத்தில் 26 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இந்தச் சங்கத்தின் நோக்கங்களாவன:—ஸ்வதேசமாகிய இந்தியாவை ஜனங்களெல்லாரும் நேசித்து ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேணுமென்பதை போதிப்பதும் அப்படியே நடந்து காட்டுவதும்.

2 ராஜாங்கத்துக்கும் ப்ரஜைகளுக்கும் ஸம்பந்தமான விஷயங்களை ஆராய்ச்சி செய்து பொது வாழ்க்கையை விருத்திசெய்தல்.

3 ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரோடு சர்ச்சை செய்யாமல் அந்யோந்யமாய்க்கூடி ஒத்துழைக்கச் செய்தல்.

4. பெண்கல்வி, கீழ் ஜாதியாரின்படிப்பு, கைத்தொழில், சாஸ்திரம், முதலியவைகளை யொட்டியப்படிப்பு, இவைகளை விருத்தி செய்தல்.

5 இந்தியாவின் கைத்தொழில்களை விருத்திக்குக்கொண்டு வருதல்.

6 தீண்டாதவர்களின் ஸ்திதியை உயர்த்தல்.

பி. ஏ. பாஸ் செய்தவர்களும் இன்னும் தேச நன்மைக்காக உழைத்தவர்களும் இந்தச் சங்கத்தின் மெம்பர்களாகக்கூடும். ஆனால் இவர்களை மெம்பர்களாகச் சேர்ப்பதற்கு முன்னால் அவர்கள் கொஞ்ச காலத்துக்கு சிஷ்யர்களாயிருந்து விஷயங்களைக் கற்கவேணும். மெம்பராக ஆகும்பொழுது ஒவ்வொருவரும் ஸ்வய நலத்தை நாடாமல் தேசத்துக்கு உழைப்பதாகவும், பணம்ஸம்பாதிக்கிறதில்லை என்றும், பரிசுத்தமாகவே நடந்துகொள்வதாகவும், சங்கத்துக்குக் கீழ்படிந்தே நடப்பதாகவும், இப்படிக்கெல்லாம் ஸத்யம் செய்து கொடுக்கவேண்டும். சங்கத்தின் மெம்பர்கள் டம்பமாய்ச் செலவு செய்யக்கூடாது. அவர்களுடைய ஸொந்தச் செலவுக்கும், குடித்தனச்செலவுக்கும், குழந்தைகளின் படிப்பு, பெண்களின் கலியாணம் முதலிய செலவுகளுக்கும், மெம்பர் இறந்துபோனால் அவர்களுடைய வார்ஸுகள் கஷ்டப்படாமல் ஜீவனஞ் செய்வதற்கும், தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

---

### THE COTTON MILL INDUSTRY IN INDIA.

### இந்தியாவில் பருத்திஆலைத்தொழில்.

'டான்' என்னும் இங்கிலீஷ் மாஸாந்தரப் பத்திரிகையின் ஸமீபத்து ஸஞ்சிகை ஒன்றில் மேற்கண்ட விஷயத்தைப்பற்றி ஒரு வியாஸம் காணப்படுகிறது. இந்தியாவில் இதுவரையில் தற்கால வியாபார முறைப்படி அமைக்கப்பட்ட தொழில்களில் இதுதான் முக்கியமானதும் இந்தியர்களால் ஏற்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருவதுமானது. ஸுமார் 60 வருஷங்களுக்குமுன் முதல் முதலான நூல் நூற்று துணி நெய்யும் மில் அதாவது யந்திர சாலை ஏற்பட்டது. 1910-ம் வருஷம் ஜூன்மாஸம் முப்பதாந்தேதி முடிய 243 மில்

கள் இருந்தன. அவைகளில் 62 லக்ஷம் கதிர்களும் 82,700 தறிகளும் 234,000 கூலிகளும் வேலை செய்தனர். இதற்கு 20 லக்ஷம் மூட்டை பருத்தி செலவாகிறது. மனிதர்கள் சொந்தமாகவும் கம்பெனிகளாகச் சேர்ந்தும் ஸுமார் 18 கோடி ரூபாய் இந்தத்தொழிலில் முதலிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் செலவாகும் துணிகளில் பாதி அந்நிய தேசங்களிலிருந்து வருகிறது. கால்பங்கு இந்தியாவில் மில்களில் உற்பத்தியாகிறது. பாக்கி கால் பங்கு கைத்தறிகளில் நெய்யப்படுகிறது. ஆகையால் தற்காலத்தில் இந்தியாவிலுள்ள மில்கள் இந்தியர்களுக்கு வேண்டிய மில் துணிகளில் மூன்றில் ஒருபாகத்தைத் தான் ஸப்ளை செய்யக்கூடும்.

---

## THE INDUSTRIAL PROGRESS OF JAPAN.

## ஜப்பானின் கைத்தொழில் அபிவிருத்தி.

---

இதைப்பற்றி "பர்க்யூஸன் காலேஜ் மாகஸின்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையில் வி. ஜி. கோக்லே என்பவர் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். ஜப்பான் தேசமானது தற்காலத்தில் கைத்தொழில்களில் விருத்தி அடைந்திருப்பதற்குக் காரணம் என்னவென்றால், அந்த தேசத்து கவர்ன்மெண்டார் கைத்தொழில் விஷயத்தில் தாம் ஜனங்களுக்கு வழிகாட்டவேணுமென்று ஸங்கல்பம் செய்துகொண்டு செய்த காரியங்களேயாகும். அவர்கள் அதற்காக சிறுவர்களை இதர தேசங்களுக்கு அனுப்பி தொழில்களைக் கற்றுவரச்செய்தார்கள். ஜப்பானிலும் தொழில்களையும், தொழில் பள்ளிக்கூடங்களையும் காலேஜ்களையும் ஸ்தாபித்தார்கள். தாங்கள் ஏற்படுத்திய தொழிற்சாலைகளை ஒன்றன்பின் ஒன்றாக இதர தேசங்களுக்குப் போய் தொழிலைக்கற்றுவந்தவர்களும் தேசீயகாலேஜ்களில் படித்துத் தேறியவர்களும் கிடைத்தவுடனே அவர்களைக் கொண்டு வேலை நடத்தும்படி ஸ்வதேசக் கம்பெனிகளுக்கு விற்றார்கள். உதாரணமாக நாகஸகி என்னும் துறைமுகப் பட்டணத்தில் கப்பல் செய்யும்தொழிலானது மிட்ஸுபிஸ்டு கம்பெனிக்குவிற்கப்பட்டது. இந்தக்கம்பெனியார் சில காலமானதும் அந்நிய தேசத்து நிபுணர்களைபோகச்சொல்லி விட்டு ஸ்வதேச இஞ்சினீர்களைக்கொண்டே வேலை நடத்திவருகிறார்கள். இப்பொழுது அந்த சாலையில் 18,000 டன்னுக்குமேல் ஏற்றக்கூடிய யாத்திரைக்கப்பல்களும், விசைக்கப்பல்களும், பீரங்கிக்கப்பல்களும் செய்யப்படுகின்றன.

மேற்சொன்னபடி ஜனங்களுக்கு கவர்ன்மெண்டார் வழிகாட்டவே, ஜனங்கள் கைத்தொழில்களில் ரொம்ப இறங்கிவிட்டார்கள். தற்போது ஜப்பானில் 32,000 பிள்ளைகள் படிக்கும் 630 சிறுகைத்தொழிற் பள்ளிக்கூடங்களும், 23,000 பிள்ளைகள் படிக்கும் 140 உயர்தரக்கைத்தொழிற் பள்ளிக்கூடங்களும், 600 பேர்கள் இஞ்சினீர் விஷயமாய்ப் படிக்கும் இரண்டு ஸர்வகலாசாலைகளும் இருக்கின்றன. இவைகளைக்கொண்டு ஜப்பான் தேசத்தின் கைத்தொழில்கள் எவ்வளவு ஏறியிருக்கின்றனவென்று நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

---

சென்னப்பட்டணம் திருவல்லிக்கேணி ஹைரோட் 63 நே வீட்டில் இருந்துவருகிற சிவாநந்தம் பிள்ளை நமக்கு அனுப்பிய பல்பொடி, சந்தனாதித்தைலம், இவைகளை உபயோகித்துப் பார்த்ததில் அவைகள் ஆரோக்யமாயும் வாஸனையுள்ளனவாயும் இருக்கின்றன.



## REVIEWS OF BOOKS

## புஸ்தக ஆராய்ச்சி.

---

BLACK BOARD DRAWING.

கரும்பலகைச் சித்திரம்.—இது சைதாப்பேட்டை கவர்ன்மெண்ட் ட்ரெயினிங் ஸ்கூலில் ட்ராயிங் மாஸ்டராயிருக்கும் ஏ. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் எழுதப்பட்டது.

"குழந்தைகளின் செயல்களை நாம் கவனிப்போமானால் அவர்கள் கையில் எது கிடைத்தபோதிலும் அதைப் பிடித்துக்கொண்டு தரையில் தேய்ப்பதும், சுண்ணும்புக் கட்டியினாலும், கரியினாலும் மாக்கல்லினாலும், தரையிலும் சுவரிலும், கோடு கிழித்துப் பல உருவங்களைக் காண்பிக்க முயல்வதும் நன்கு புலப்படும். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்ன? பாலர்களின் கைகள் துறு துறு என்று அசையவும், ஏதோ ஒரு தொழிலைச் செய்யவும் விரும்பும் சுபாவமுடையன என்பதாம். அவரது விரல்களும் யாதாயினும் ஒரு பொருளைப் பிடித்துக்கொள்ளும் தன்மையுடையன. அவரது புத்தியும் பொருள்களின் வடிவங்களை கவனித்து அவற்றை வரையும் சுபாவமுடையது. குழந்தைப் பருவத்திற்குரிய இவ்வித சுபாவங்களையும் செயல்களையும் சீர்திருத்தம் செய்யச்சரியான மார்க்கம் அவர்களைச் சித்திரம் வரையச் செய்வதேயாம்.

சித்திரம் வரைதல், குழந்தைகளுக்குக் கண்பழக்கம், கைப்பழக்கம் கற்பனாசக்தி, ஞாபகசக்தி, இவற்றில் விருத்தியை உண்டாக்கி, கரும்பலகைக்கு எதிரில் நின்று கைகளை நீட்டி வீசி வரைவதால் கைகால்களுக்கு பலத்தையும் கொடுத்து, பிள்ளைகளிடத்தில் ஒழுங்குபாடு, சுத்தம், முதலிய நல்ல குணங்களை விளைவிக்கிறது."

மேலும், மனிதர்கள் செய்யப்புகும் பலவிதத் தொழில்களுக்கும் சித்திரஞானம் அவசியமாயிருத்தலை அநுபவத்தில் காணலாம். முக்கியமாக, உபாத்தியாயர்களுக்குச் சித்திரம் வரைதல் இன்றியமையாத தாயிருக்கிறது.

பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும்பொழுது சில வேளைகளில் உபாத்தியாயர்கள் சொல்லுவது விளங்குவதில்லை. அப்படிப்பட்ட ஸமயங்களில் அனேகமாய் சொல்லும் விஷயங்களை ப்ளாக்போர்ட் அதாவது ஸ்கூல்களில் உபயோகிக்கப்படும் கருப்புப் பலகைகளில் எழுதிக்காண்பித்தால் பிள்ளைகள் எளிதில் அறிந்து கொள்வார்கள். தற்காலத்துப் படிப்பிக்கும் முறைகளில் விஷயங்களை எவ்வளவுக் கெவ்வளவு எழுதிக் காண்பிக்கலாமோ அவ்வளவுக்கவ்வளவு எழுதிக்காண்பித்து போதிப்பதே சிறந்தமுறை என்பது கொள்கை. சித்திர ரூபமாக எழுதி போதிப்பது ரொம்ப சிரேஷ்டமான முறை என்று இருந்தபோதிலும் சித்திரம் வரையும் விஷயத்தைப் பற்றிய விவரங்களை போதிக்கும் புஸ்தகங்கள் இது வரையில் தமிழில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆகவே முதல் முதலாக வழி காட்டிய மிஸ்டர் ஏ. சுப்பிரமணிய அய்யருக்கு பொதுவாய் எல்லாரும் நன்றி பாராட்டக் கடவோம். இப்படிப்பட்ட புஸ்தகங்களை எழுதுவது சுலபமல்ல. அவைகளுக்கு வேண்டிய சித்திரங்களைத் தயாரிப்பது மிகவும் சிரமம். இருந்தபோதிலும் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் முழுபக்கமும் கொள்ளும் படங்கள் 26-க்குக்குறையாமல் கொடுத்திருக்கிறார். அவைகளில் ஒன்றை அடுத்தப்பக்கத்தில் பார்க்கலாம். இது சிறந்த புஸ்தகமாதலால் எல்லாப்பள்ளிக் கூடங்களிலும் வீடுகளிலும் இதைவாங்கி நூலாசிரியரை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். விலை அணா 12. நூலாசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.




ANIMALS.— பிராணிகள்.



# BOYS' SECTION.
## சிறுவர் பகுதி.

---

THE TALLEST TREE.

**அதிக உயரமுள்ள விருக்ஷம்.**—உலகிலுள்ள விருக்ஷங்களில் அதிக உயரமான விருக்ஷம் காலிபோர்னியாவிலிருக்கிறது. அது 340 அடி உயரமுள்ளது.

A MONKEY AND A SHEEP.

**ஒரு குரங்கும் ஆடும்.**—ஒரு குரங்கும் ஆடும் வளர்த்து வந்த ஒரு குடித்தனக்காரன் அவைகளைத் தன்னுடன் இட்டுக்கொண்டு, தயிர் சாத மூட்டையும் கையுமாய் கிராமாந்திரத்திற்குப் போகையில், நடுவழியில் ஒரு குளக்கரையின் மேல் மரத்தில் அந்த ஜெந்துக்களைக் கட்டிப்போட்டு ஸமீபத்தில் சாத மூட்டையை வைத்து கால் கை கழுவிக் கொள்ளும் பொருட்டு தான் குளத்திற்குப் போனான். அவன் வருவதற்குள் அக்குரங்கு தயிர் சாதம் அத்தனையும் தின்று, கொஞ்சம் தயிரை ஆட்டின் முகத்தில் தடவிவிட்டு, தான் எப்போதும் போல் தன்னிடத்தில் உட்கார்ந்திருந்தது. குடித்தனக்காரன் வந்து மூட்டையைப் பார்த்துவிட்டு ஆட்டைப்பிடித்துச் சாக அடித்தான். இந்த உலகத்தில் நியாய அநியாயங்களின் நிர்ணயம் அடிக்கடி இப்படியே நேரிடுகிறது.

A CURIOUS FISH.

**ஒரு விநோதமீன்.**—பல்லாரி ப்ரூஸ் பேட்டைக்கு நேராய் வடக்கே போனால் அங்கே வயல்களுக்கு மத்தியில் ஒரு பெரிய கிணறு இருக்கிறது. அதில் ஸமீபத்தில் ஒரு வலைஞன் மீன் பிடித்துக்கொண்டிருக்கையில், ஒருவிசை தன் தூண்டியால் இழுக்க முடியாதபடி அவ்வளவு கனமாய் இருந்தது கண்டு, இது பெரும் மீனாயிருக்கவேண்டுமென்று கருதி தூண்டிலையிழுத்தான். தூண்டில் ஒடிந்து விட்டது. மிகுந்த விசனத்தோடு வீடு திரும்பி, வலைஞன் மறுநாள் தூண்டிலுக்கு ஐவேஜில்லாமல் தன் சிநேகிதன் ஒருவனுடைய வலையை வாங்கிக்கொண்டு அதே கிணற்றுக்குச் சென்று வலைபோடவும், முதலிரண்டு தடவையில் எதுவுங்கிடைக்கவில்லை; மூன்றுந்தடவையில், கொஞ்சம் கனங்கண்டவுடன் மிகுந்த சிரமத்தோடு கரையிலிழுத்தானாம். பிறகு அவனுக்குண்டான ஆச்சர்யமென்ன? பஞ்சவர்ணங்களோடு கூடின பெரும் மீனென்று, அதன்வாயில் முன் தூண்டில் குத்துண்டிருக்கக் காணப்பட்டது. நாலரையடி நீளமும் இரண்டரையடி அகலமுங் கொண்டிருந்த அந்த மீனை நான்கு பேராய்த் தூக்கி வந்து ரூபா 20-க்கு விற்று விட்டார்களாம்.

PESTERING CANDIDATES.

**உபத்திரவிக்கும் அபேக்ஷகர்கள்.**—சென்ற வருடக் கடைசியில் ஆங்கிலேய தீவுகளில் பார்லிமெண்டு மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதற்காக நடந்த எலெக்ஷன்போது ஒரு அபேக்ஷகன் (அதாவது தனக்கு மெம்பர் ஆகவேண்டுமென்று ப்ரயாஸைப்பட்டவன்) நாட்டுப்புறங்களையெல்லாம் வீடுவீடாய் நுழைந்து தரிசித்துத் தனக்கு வோட்டுக்கொடுக்கும்படியாய்க் கேட்டுக்கொண்டான். கடைசியாய் ஆடு மாடு, கோழி, வாத்து, வைத்து வளர்க்கும் ஒரு தோட்டத்தின் வாசல்படிக்கு வந்தபோது அங்கே வயதான ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருக்கக் கண்டான். உடனே அந்த ராஜ தந்திரி வெகு வணக்கமாய்த் தன் தொப்பியைக் கழற்றி மிகுந்த மரியாதையுடன் "பிரியமுள்ள அம்மா! உன் கணவன் வீட்டில் தான் இருக்கிறாரல்லவா?" என்றுகேட்டான். ஆம் என்று கிழவி பதிலுரைத்தாள். "அப்படியானால் நான் அவரைப் பார்க்கக்கூடுமோ?" என்று அபேக்ஷகன் கேட்டான். 'அவர் நாயைக் குழியில் போட்டுப் புதைக்க போயிருக்கிறார்' என்று கிழவி சொன்னாள். அப்போது அந்த மனிதன் உங்களுடைய நாய் செத்துப் போனதைப்பற்றி நான் மிகவும் விசனப்படுகிறேன்' என்று பரிதாபத்துடன் சொல்லி அம்மா அந்த நாய் என்னத்தினால் செத்ததென்று, எனக்குச் சொல்லுவீர்களா?' என்று ராஜ தந்திரி கேட்டான். அதற்குக் கிழவி 'பார்லிமெண்டு மெம்பர்களாகத் தங்களை நியமிக்கும்படியாக எங்கள் வோட்டுகளுக்காக இங்குவந்த கணக்கற்ற வீணர்களைக்கண்டு குலைத்துக் குலைத்துத் தொண்டை வரண்டு வியாதியாகிச் செத்தது' என்றாள். அபேக்ஷகன் மறுவார்த்தை பேசாமல் அப்புறம் போனான்.

THE BURMANS.

**பர்மியர்கள்.**—பர்மன்மாருடைய தருமங்களில் வெகு முக்கியமானது அஹிம்ஸையாம். எந்தக்காரணம் கொண்டும் ஜீவ ஹிம்ஸை கூடாது. இந்தத்தருமத்தை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளுவதில் தடையில்லை. ஆனால் அனுஷ்டானத்தில் பல ஜனங்களுக்குள் பலவிபரீதங்கள் தோன்றுகின்றன. நமது நாட்டில் ஜெயினர்கள் கிருஷித் தொழில் விசேஷமாய்த் தொடங்குவதில்லை. ஏன்? உழும்போதும், அறுக்கும்போதும் லக்ஷக்கணக்கான புழுப்பூச்சிகளை நாம் தெரிந்தும் தெரியாமலும் கொன்று விடுகிறோம். ஆனால் ஜீவனம் செய்யவேண்டுமே, எப்படி? புழுப் பூச்சிகளை, இந்து மகம்மதிய ஜனங்கள் கொன்று கிருஷி செய்து விளைச்சலை உண்டாக்கினால் அதையும், வேறு சரக்குகளையும் வாங்கி, விற்று லாபமடையலாம். "கொன்றவன் பாபம் தின்றவனோடு," என்று ஒரு பழமொழி யுண்டு. ஆனால் அது தப்பு. கொன்றவன் பாபம் கொன்றவனோடே போவதாகையால், சரக்கை வாங்கி விற்பதில் பாபமில்லை, ஹிம்ஸையுமில்லை, என்பது ஜெயினர் கொள்கை போலும்! அப்படியே பர்மன்மாரும். தாங்களாகவே மீன் முதலியவற்றைப் பிடிப்பதோ, ஆடு முதலியவற்றைக் கொல்லுவதோ கிடையாது. ஆனால் பிறர் பிடித்து உலரவைத்த மீனையும், பிறர் கொன்ற மிருகங்களின் இறைச்சியையும் இவர்கள் வாங்கித்தின்பதற்கு ஆக்ஷேபமில்லை! பகவானே! மனிதருடைய யுக்தி எந்த விதமெல்லாம் பாய்கிறது!—வித்யா விஹாரிணி.

HEALTH IS WEALTH.

**நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம்.**—உலகம் நாளுக்கு நாள் விருத்தியடைகின்றது. நூதனமாய் பற்பல விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன; சஞ்சலமென்பது இல்லாமல் சந்துஷ்டியே எங்கும் காணப்படவேண்டுமென்று அறிவோர் அல்லும் பகலும் அதே சிந்தையோடு உழைக்கிறார்கள். இப்படி ஆன்றோர் இறங்கியுழைக்கும் பல வேறு துறைகளில், நோய்வராமல் தடுப்பதற்கான உபாயங்களும், வந்தபின் காப்பதற்கான பரிகாரங்களுமே சிரேஷ்டமானவை. ஸகலபோக பாக்கியங்களையும் அனுபவிப்பதற்கு தேகாரோக்கியமே அத்யாவசியம். நோயாளி யொருவன் ஏராளமான ஸம்பத்துடையவனானாலும் ஸரி, ரூபவதியான இளம் மனைவியுடையவனானாலும் ஸரி, ஸகல சாஸ்திர பண்டிதனானாலும் ஸரி, அவனுக்கு ஆனந்தமில்லை. ஆகவே நோயற்ற வாழ்வை விலையற்ற வரப்ரஸாதமென்று சொல்லலாம். வியாதிவராமல் தடுப்பதற்கான சில உபாயங்களாவன:—

1. சூரிய வெளிச்சம் படக்கூடியதும் நல்ல காற்று உலாவுவதும் தரை மட்டத்திற்குமேல் குறைந்தது 3 அடி உயரமுள்ளதுமான வீடுகளில் வாசம் செய்யவேண்டும்.—

2. வஸ்திரங்களை நன்றாய்த் தோய்த்து வெயிலில் உலர்த்தி உடுப்பதுடன் பாய் படுக்கைகளை அடிக்கடி வெயிலில் போட்டு வரவேண்டும்.

3. பிரதிதினமும் தேகப்பயிற்சி செய்யவேண்டும் ஸாதாரணமாய் இரண்டொரு மைல் நடப்பதே போதும்.

4. அழுகின பதார்த்தங்களையும் எளிதில் ஜீரணமாகாதவைகளையும் தின்னாமல், மிதமாகவே ஒவ்வொன்றையும் நன்றாய் மென்று மன உற்சாகத்துடன் புசிக்கவேண்டும். காலரா காலத்தில் பழைய சாதத்தை தவிர்ப்பதுடன் நீரை நன்றாய்க் காய்ச்சிய பின்பு குடிக்கவேண்டும்.

5. தினம் ஒரு தடவை யாகிலும் மல பாதைக்குப் போகவேண்டும். வாரத்திற்கொருமுறை இரண்டு முட்டை ஆமணக்கெண்ணெய் சாப்பிடுதல் நலம்.

6. சீக்கிரத்தில் படுக்கைக்குச் சென்று அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும். நன்றாய்க் காற்றுலாவக் கூடிய சப்தமற்ற அறையில் உறங்கவேண்டும். ஸாதாரணமாய், ஆண்மக்கள் 6½ மணிக்குக் குறைந்தும், 7½ க்கு மேலிட்டும், நித்திரை செய்யக் கூடாது. ஸ்திரீகளுக்கு 8, 8-30 மணி நித்திரை வேண்டியது.

(7) மனதில் வீண் எண்ணங்களையும், கவலைகளையும் கொள்ளாமல், எப்போதும் உற்சாகமாயும் நற்சிந்தனைகளுடனும், கூடியிருக்கவேண்டும்.

(8) விஷயாதிகளை அபேட்சிக்காது, கிரமமாய் ஏகபத்னி விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். இவ்விதிகளின்படி நடந்தால் நம்மைநோயணுகுவதற்கிடமில்லை. நோயுண்டாமிடத்து, வைத்ய சாஸ்திரத்தில் தேர்ந்து உடற்கூறையறிந்து சிகிச்சை செய்யும் விருத்த வைத்யர்களை நாடவேண்டும்.—இந்துநேசனில் ஒரு நிருபர்.



## LADIES' SECTION.
## ஸ்திரீகள் பகுதி.

LADY EDITOR.

**பெண் எடிட்டர்கள்.**—இங்கிலாந்தில் பெண் எடிட்டர்கள் (பத்திராசிரியர்) இருப்பது அருமை. இல்லை என்றே சொல்லலாம். அமெரிக்காவிலோ 12-வயதுள்ள பெண் எடிட்டர்களைக் காண்பது ஸகஜமாய் இருக்கிறது. மிஸ் ரோஸ் பட் என்னும் 12-வயதுள்ள அழகிய சிறுமி அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு வந்திருக்கிறாள். இவள் "வில்லோதி விஸப்" என்னும் நான்கு பக்கங்களுள்ள ஒரு பத்திரிகையை நடத்துகிறாள். 'டெயிலி ந்யூஸ்' பத்திரிகையின் நிருபரொருவரைக்கண்டு அப்பெண் தன்னுடைய தந்தை அமெரிக்காவிலிருந்து வியாபாரார்த்தமாய் இங்கிலாந்துக்கு வந்திருப்பதால் தான் தன்னுடைய பத்திரிகையை இங்கிலாந்தில் ப்ரசுரிக்க நேர்ந்ததென்றும், தனக்கு எடிட் செய்வது மனோரம்யத்தைக்கொடுக்கிறதென்றும், கூறினாள். "எனது முதல் நெம்பர் பத்திரிகை சிகாகோ நகரத்தில் ப்ரசுரமானது. அதில் முதல் ஒரு பக்கத்தில் இரண்டே காலம் வகுக்கப்பட்டிருந்தது. பிறகு பத்திரிகையைப் பெரிதாக்கினேன்" என்றாள். இப்பத்திரிகையால் வரும்படி யுண்டா என்று கேட்க, அப்பெண் "தடை என்ன? அட்வர்டைஸ்மெண்டுகள் ஒரு பக்கம் நிறைந்துள்ளன. ஒரு தடவைக்கு 70-ஸெண்டுகள் சார்ஜு செய்கிறேன். ஆயினும் ஒரு வருஷம் போடுவதானால் சார்ஜைக்குறைப்பேன் என் பத்திரிகைக்கு நானே மானேஜர், மூன்று பாங்கிகளில் பணம் போட்டிருக்கிறேன். ப்ரின்டருக்கு நான்தான் கையெழுத்துப் போட்டு செக் அனுப்புகிறேன். எடிட்டோரியல்களெல்லாம் நானே எழுதுவேன்" என்று பதில் சொன்னாள். "விஷயம் அகப்படுவது கஷ்டமோ? இல்லை யில்லை. வேண்டிய விஷயங்கள் என் மனதில் தோன்றும். சென்ற முறை 'அட்லாண்டிக் ஸமுத்திரத்தைக் கடந்து வருவது' என்று தலைப்பெயரிட்டு எடிட்டோரியல் எழுதினேன்' என்றாள். அமெரிக்காவுக்குப் பத்திரிகை அனுப்புகிறாள். ஒரு இங்கிலீஷ் சிறுமியை உதவிக்கு வைத்துக்கொண்டிருக்கிறாள்.

நிற்க, நம்முடைய சென்னப்பட்டணத்தில் 'பெண் கல்வி' என்ற பெயருடன் ஒரு சிறு மாதாந்தரப் பத்திரிகை வெளிவந்திருக்கிறது. அதன் பத்திராதிபர் மிஸ். ஆர். தாயாரம்மாள் அதற்கு வியாஸம் எழுதுகிறவர்களெல்லாம் பெண் மணிகளே. முதல் இரண்டு ஸஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. பத்திரிகையின் சந்தா ரூ. 2-8-0

ABORTION.

**அகால ப்ரஸவம்.**—கஷ்டமானவேலை, ஓட்டம், அதிர்ச்சியுண்டாகும்படியான முயற்சிகள், அலறி சப்தமிடுதல், கைகளை தலைக்குமேல் உயர்த்துதல், பாரமான சுமைகளைச் சுமத்தல், மாடிப்படிகளில் அடிக்கடி ஏறி இறங்குதல், ராக்காலங்களில் அதிக நேரம் விழித்திருத்தல், பகலில் நித்திரை செய்தல், சுத்தமான காற்றோட்டமில்லாத இடங்களில் வஸித்தல், வண்டி முதலிய வாகனங்களில் ஏறி வழிப்பிரயாணஞ் செய்தல், தையல் தைக்கும் யந்திரத்தில் கைகால் ஆட்டங்கொடுக்கும்படி வேலை செய்தல், துர்புலம், கர்ப்பப்பை வியாதி, மேகரோகம், பயம், திடுக்கம், மனக்கவலை, கோபம் அதிகஸந்தோஷம், அதிகப்புணர்ச்சி, விசனம், வாளம், கரிய போளம் முதலிய உஷ்ணமான விரோசன மருந்துகளை உட்கொள்ளுதல், ஜ்வரம், பேதி, சீதபேதி முதலிய காரணங்களால் கருவழிவு உண்டாகும். இவ்வகைக் காரணங்களால் ஏற்படும் கர்ப்பவிச்சித்தியை, பேய் பிசாசுகள் அறைந்துவிட்டதாக நம் நாட்டிற் சொல்வதுண்டு.

ரத்த ப்ரவாகத்தோடு கூடிய கருவழிவிற்கு காடியை சுத்த ஜலத்தில் கூட்டி கந்தைத் துணியை நனைத்து ஓயாமல் மர்ம ஸ்தானத்தின் மேல் விடுவதினால் ரத்தம் நிற்கும். குணம் காணாவிட்டால் 2 அவுன்ஸ் காடியுடன் 1 பைண்ட் சுத்த ஜலம் கூட்டிக் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து, வேளை ஒன்றுக்கு 1½-முதல் 2 அவுன்ஸ் வீதம் தினம் ஒன்றுக்கு 3—4 தரமாகிலும் அல்லது பலதடவையாகிலும் கொடுக்கலாம்.

CHEERS FOR MURDERESS.

**பர்த்தாவைக் கொன்ற பாரியைக் கொண்டாடினது.**—சென்ற ஆகஸ்டு-௴ 4உ ஸான்ப்ரான்ஸிஸ்கோ என்றவிடத்தில் 19 வயதான அதிக

அழகுள்ள அன்னா லாங்கே என்ற ஸ்திரீ தன் புருஷனைத் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றுவிட்டு தானாகவே போலீஸாரிடம் போய் தன் புருஷனைக் கொன்றதாக ஒப்புக்கொண்டாள். ஒருமணி நேரத்துக்குள் அவள் கொலைக் குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டாள். ஸகல ரூபலாவண்யமும் பொருந்தியிருந்த இந்த ஸ்திரீ தன் புருஷன் செய்த குரூரச் செயல்களையும், அதற்காகத் தான் செய்த பாதகத்தையும் சொல்லி ப்ரலாப ஒப்பாரி வைத்தாள். அப்பரிதாபக் காட்சியைக் கண்ணுற்ற ஜூரிகளும், லாயர்களும், போலீஸ் காரர்களும், பத்திரிகாசிரியர்களும், தாரை தாரையாய்க் ,கண்ணீர் சொரிந்தார்கள். அவள் சொல்லியதாவது, "என் புருஷன் நல்லவனாகமட்டும் இருந்திருப் பனேயாகில் என் கைவிரல்கள் தேய்ந்து எலும்பாகும்வரையில் அவனுக்காகப் பாடுபட்டு உழைத்திருப்பேன்," என்றாள். அவளை விசாரித்த ஜூரார்கள், தன் புருஷனின் குரூரச் செயல்களின் நிமித்தம் பைத்தியங்கொண்டு கொலை செய்தாளாதலால் அவள் குற்றவாளியல்லவென்று தீர்த்தார்கள். உடனே அவள் 20 பவுன் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டாள். அவளைச்சுற்றிலுமிருந்த லாயர்களும், பத்திரிகாசிரியர்களும், தத்தம் சட்டைப்பையில் கைவிட்டு கைநிறைந்த பணங்களை அள்ளி ஜட்ஜ் முன்பாக குவித்தார்கள். நீதியதிபரோ அவளுடைய ஜாமீனுக்கான 20 பவுனை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றப் பணம் தமக்கு வேண்டாமென்று தள்ளிவிட்டார். ஒரு விநோதக் காட்சியைப்பார்க்க பள்ளிக்கூடத்துச் சிறுவர் கூடியிருக்கும் வண்ணமாக அவளைக்குற்றம் விசாரித்த ஜூரர்கள் தத்தம் அனுதாபத்தைக் கூறும்படிக்கு அவளைச் சுற்றிக்கூடினார்கள். அங்கே வந்துகூடியிருந்த எல்லாரும் சந்தோஷமிகுதியால் கை கொட்டிச் சிரித்தார்கள். சிலர் புஷ்பமாரி பொழிந்தார்கள். போலீஸ் கமிஷனர் அவளை ஒரு மோட்டார் வண்டியில் ஏற்றி அவளைப்பெற்ற மாதா வண்டை கொண்டுபோய்ச் சேர்த்தார். அங்குள்ள ஸ்திரீகள் அனைவரும் அவளை மார்புறத் தழுவி முத்தமிட்டு ஆனந்த பாஷ்பம் சொரிந்தார்கள்.

AN OLD WOMAN.

**ஒரு கிழவி.**—காக்கஸ் மலைப்பாகத்தில் ஒரு வயது சென்ற மாது இருக்கிறாள். அவள் சில நாட்களுக்கு முன் தன் 165-ம் ஜனனநாள் கொண்டாடினாள். சரீரத்தில் அதிக பல ஹீனமாயிருந்த போதிலும் மனபலத்தில் திடமாயிருக்கிறாளாம்.

THE MAHARANI OF BHOPAL.

**போபால் மஹாராணி.**—போபால் மஹாராணி அவர்களுக்கு நமது மாகஷிமை தங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்களது மகுடாபிஷேக தினத்தன்று ஜி. ஸி. ஐ. இ. பட்டம் கொடுக்கப்பட்டது. இந்தியாவிலுள்ள ஸ்திரீக்கு இப்பட்டம் கொடுபட்டது இதுவே முதல் தடவை யாகும்.

A HINDU WIFE'S QUIET DEVOTION.

**ஒரு ஹிந்து மனைவியின் பக்தி.**—உனோவா யென்னுமூரில், வைத்திய நாத் பிரஸாத் என்பவர் தன் அலுவலிலிருந்து ராத்திரிவெகுநேரம் கழித்து வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு களைப்பினால் சீக்கிரம் தூங்கிவிட்டார். 16 வயதுள்ள அவர் மனைவி கைவிளக்கை எடுத்துக்கொண்டு வாசக்கதவை சாத்தும் ஸமயத்தில் விளக்கு நின்று அம்மாதை ஒரு பாம்புகடித்தது. தன் பர்த்தாவை அயர்ந்த நித்திரையிலிருந்து எழுப்ப மனமில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். விஷம் அதிகமாயேறி தான் பிழைக்க இனி ஹேது வில்லையென்று எண்ணி, கடைசியாக இரண்டொரு வார்த்தைகளை தன் பர்த்தாவினிடத்தில் சொல்லக் கருதி, எழுப்பினாள். ஆனால் பாம்பு கடித்ததென்று சொன்னால் தன் பர்த்தா மனதுக்கு கிலேசமுண்டாகுமென்று நினைத்து மறுபடியும் திடசித்தமாய் சொல்லாமலிருந்தாள். அவர் ரொம்பவும் வற்புறுத்தி ஆணையிட்டுக் கேட்டதின் பேரில் விஷயத்தை சொல்லி, சோகம்போட்டு கீழே விழுந்தாள். கடைசியாக தெய்வாதீனமாய் அனுகூலமாய் விட்டது.

ஹிந்து மனைவிகளின் பக்தி, விசுவாஸம் மனோதைரியம் இவைகளைக் காண்பிக்கிற அநேக உதாரணங்களில் இது ஒன்று.



# DEPARTMENTAL NOTES.
# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்.

GREEN CROP SEEDS.

**பசுந்தாள் பயிர் விதைகள்**—சணப்பு விதை இரண்டு மாதத்திலும், வங்காளத்தக்கவிதை இரண்டரை மாதம் முதல் 3 மாதத்திலும், நாட்டுத்தக்கை 3 முதல் 4 மாதத்திலும், பூமியில் மடக்கிப் பசுந்தாள் உரமாக உழ தயாராகும்.

சணப்பு விதை 1 ஏக்கருக்கு 12 பட்டணம் படியும், வங்காளத்தக்கை 1 ஏக்கருக்கு $2\frac{1}{2}$ படி விதையும், நாட்டுத்தக்கை 2 படியும் போதுமானது. சணப்பு பட்டணம்படி 1-க்கு 0-3-0, வங்காளத் தக்க விதை படி 1-க்கு 0-6-0, நாட்டுத்தக்கை 0-7-0 ஆகும். வேண்டியதை பாலூர்ப் பண்ணையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

CAMBODIA COTTON IN COIMBATORE.

**கோயமுத்தூரில் கம்போடியா பருத்தி.**—இந்த ஜில்லாவில் பருத்தி ஸாகுபடி செய்வோர் கம்போடியாப் பருத்தியை ஸாகுபடி செய்து வருகிறார்கள். திருப்பூரிலுள்ள மெஸஸர்ஸ் பின்னி அண்டு கம்பெனியாரின் ஏஜெண்டுகள் கொட்டை எடுத்த பருத்தியில் 100 பேல் வாங்கி விட்டார்களாம். இந்த வருஷம் பின்னும் பல ஏகராக்களில் இந்தப்பருத்தி ஸாகுபடி செய்யப்படும். இந்த ஜில்லாவிலுள்ள விட்டல்தாஸ் சைத் என்ற பிரபல வியாபாரி பருத்திப் பயிரின் அபிவிருத்தியை உத்தேசித்துப் பருத்திக் கொட்டைகளை ஏராளமாக வாங்கி பயிர்செய்யும் ரயத்துகளுக்குக் கொள் முதல் பிரகாரம் விற்கிறாராம்.

THE CATTLE OF SOUTHERN INDIA.

**தென் இந்தியா கால்நடைகள்.**—தென் இந்தியாவில் ஸாதாரணமாய் தெரியப்பட்ட மாட்டு வர்க்கங்களில் ப்ரத்யேகமாய்க் காணப்படும் வகுப்பு **மைஸூர்**, **நெல்லூர்** மாடுகளே. இவைகளைத்தவிர இந்த ஜில்லாவில், பர்கூர், ஆலம்பாடி, காங்கேயம் என மூன்று வருக்கங்களுண்டு.



**மைஸூர்** மாடுகள் வண்டிமுதலியவைகள் இழுப்பதற்கு சிலாக்கியமானவை. நிரம்பவும் சுறுசுறுப்பாயும் வேகமாயும் செல்லக்கூடியவை. நெல்லூர் மாடுகளைப்பார்க்கிலும் சிறியவை. நீண்ட கூர்மையான கொம்பும், குறியகால்களும், உருட்டியெடுத்த தேகக்கட்டுமுடையவை. இவை பாரவண்டி யிழுக்கவும், கடின நிலங்களில் வேலைசெய்யவும் லாயக்கானவை. **நெல்லூர்** மாடுகளோ நீண்ட காலும் சளித்த தேகமும் நீண்ட கோசமும் உள்ளவை. உயரமாயும் மிகப்பெரியதாயும் சாந்தகுணமுள்ளதாயுமிருக்கும். கரிசல் நிலங்களை உழ லாயக்கானவை. இந்த ஜாதிப் பசுக்கள் இந்த மாகாணத்தில் சிறந்த கறவையுள்ளவை. **பர்கூர்** பார்க்க நிரம்ப வேகாட்டமும் சுறுசுறுப்புமுள்ளவை. தலை சிறுத்தும், கண்கள் துலக்கமாயும், மத்தியமான வளர்த்தியும், திரட்டி எடுத்த தேகமும், நல்ல பார்வையுமுள்ளவை. இவை பவானித் தாலூகா பர்கூர் மலைகளிலும் ஸத்யமங்கலந் தாலூகா குதிபாலத்தூர் மலைகளிலும் வளர்க்கப்படுகின்றன. **ஆலம்பாடி** நீண்ட தேகமும் கூர்மையான கொம்பும் உடையவை. சாந்தமானதாயும் இழுவைக்கு லாயக்கானதாயுமிருக்கும். இவை இந்த ஜில்லா காவேரி ஆற்றோரம் காவேரிபுரம் மலைச்சார்வில் வளர்க்கப்படுகின்றன. **காங்கேய** மாடு என்று வழங்கப்படுகின்ற கீழ்நாட்டுப் பிறவி நல்ல கறவையும் இழுவையும் உள்ளவை. சிறிய தேகமும் அழகான பார்வையும் சாந்தமான குணமும் சுறுசுறுப்பும் பலமான தேகக்கூறுமுள்ளவை. இந்த வருக்கங்களில் இது நிரம்பவும் சிலாக்கியமானது. இந்த வர்க்கம் **காங்கேயம்** பிராந்தியத்திற்கு எங்கும் உரித்தானவை அல்ல. பழயகோட்டை பட்டகாரரைப்போன்றவர்களுள் விருத்தியாக்கப்படுகின்ற பிறவிகளே.—குருஷிகன்

COCOANUT BEETLES.

**தென்னைமரத்து வண்டுகள்.**—இரண்டு தினுசு வண்டுகள் தென்னைமரங்களையும் மற்ற பனை தினுசுகளையும் பீடித்து அச்செடிகளுக்கு மிக நஷ்டத்தை யுண்டாக்குகின்றன. அவைகளில் ஒன்று தமிழில் தென்னம் வண்டென்றும் மலையாளத்தில் செள்ளு என்றும் சொல்லப்படும். அது தலையில் ஒரு கொம்பையுடைய கருப்பு வர்ணமுள்ள ஒரு பெரிய வண்டு. இது குறுத்து ஓலைகளையும் மாத்தின்

மண்டையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளம் தென்னைமரங்களை இவ்வண்டுகள் துளைத்து ஜாஸ்தி நாசமாக்குவதைப்போல் முற்றின மரங்களைக் கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிலாவது முட்டைகளிட்டு அவைகளிலிருந்து புழுக்களைப்போல வெளிவந்து, அழுகும் வஸ்துக்களைத் தின்று பெரிதாகின்றன. இப்புழுக்கள் நாளாவட்டத்தில் மேல்சொன்ன வண்டாய் உருமாறுகின்றன.

இன்னொன்று தமிழில் செவ்வண்டென்று சொல்லப்பட்டது. இது முன் சொன்ன கருப்பு வண்டைவிட சின்னது. இதை அதினுடைய நீண்ட வளைவுள்ள மூக்கால் கண்டறிந்துகொள்ளலாம். இது பனைகளின் உச்சிகளில் ஸாதாரணமாய் தென்னம் வண்டுகளாவது அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாவது செய்த காயங்கள்பட்ட இடங்களில் முட்டை வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் புழுக்கள் உச்சிமரத்தைத் துளைத்து செடிகளைக் கொன்றுவிடும். இப்புழுக்கள் நார் இழைகளைக் கொண்டு ஒரு கூடுகட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டு வாரங்களில் உருமாறி வண்டுகளாகின்றன.

தென்னம் வண்டு செடிகளுக்கு தான் ஜாஸ்தி கெடுதி செய்யாவிட்டாலும், செவ்வண்டினால் உண்டாகும் நஷ்டத்துக்கு காரணபூதமாயிருக்கிறது. இந்தத் தென்னம் வண்டை அநேக இடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப்போல வெகு சுலபமாய் ஒரு வண்டெடுக்கும் இருப்பு முள் ஊசி கொண்டு எடுத்துவிடலாம்.

இவ்வண்டுகளை அப்புறப்படுத்தியபின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளை தாரினால் தடவி மண் கொண்டு மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் காயங்களிலும் மேல்சொன்ன தாரைத் தடவவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளை வைத்து நாசமாக்கிவிடும். இவ்வண்டுகள் முட்டை வைத்தபின் மரங்களை இவைகளின் தொந்தரையிலிருந்து ஸுலபமாய் நிவர்த்திக்க முடியாது.

பொடிமணலும் உப்பும் ஸரிபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டு தடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக்கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னம் வண்டைத் துரத்திவிட ஹேதுவுண்டு.

செவ்வண்டினால் பீடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டா. ஆகையால் அவைகளை தாமதமின்றி வெட்டிவிடவேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூலமாக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னால் வண்டுகளாகமாறி புதுமரங்களை நாசமாக்கும்.

ஒரு தோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கீறி யுடைத்துக் காயப்போடவேண்டும். அப்படிக்கில்லாமல் அவைகளை அழுகவிடவேகூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம் வண்டு பல்கி பெருகும். தோட்டத்துக்குள் எந்த விதமான வஸ்துவும் அழுகிக் குவிய இடங்கொடுக்கக்கூடாது.

சில இடங்களில் தென்னமரத்து செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளேசென்று மரத்தைக்கெடுக்கிறதென்ற அபிப்பிராயமிருக்கிறது. ஆகையால் மேல்தரையிலிருந்து சில அடிகளுக்கு மேல் மரத்தை துளைக்கும் வழக்கமிருக்கிறது. இவ்வித அபிப்பிராயம் தப்பானது. மேல்சொன்ன பிரகாரம் மரங்களைத் துளைப்பது அதிக நஷ்டத்தை யுண்டுபண்ண ஹேதுவாகும். ஆகையால் அப்படிச் செய்யவேகூடாது.

மேல்சொன்ன இரண்டு வண்டுகளின் நாசம் ஒன்றை ஒன்று பொருத்ததாயிருக்கிறது. தென்னம் வண்டு நன்றாயிருக்கும் உச்சிமரங்களில் துளைகளை யுண்டாக்கி செவ்வண்டு அதில் வந்துசேர இடத்தை யுண்டாக்குகிறது. செவ்வண்டினால் செத்துப்போன மரங்கள் தென்னம் வண்டுகள் பல்கிபெருக நல்ல வாஸஸ்தானமாகின்றன. ஆகையால் மேல்சொன்ன முன்ஜாக்கிரதையோடு கவனம் செலுத்தாவிட்டால், இவ்வண்டுகளால் பீடிக்கப்பட்ட தென்னம் தோப்பில் மரங்கள் நாளாவட்டத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் நாசமாவதை தடுக்கமுடியாது.



## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

INDIAN LABOUR.

**இந்தியக் கூலி ஆட்கள்.**—இந்தியா கவர்ன்மெண்டின் வியாபார மெம்பராகிய மிஸ்டர் டப்ளியூ எச். கிளார்க் ஸமீபத்தில்நிலக்கரி எடுக்கப்படும் ஜெர்ரியா என்றஇடத்துக்கு போயிருந்தபோது, அங்கே ‘இந்தியக்கூலி வேலை’ யைப்பற்றிப் பேசினார். இங்கிலாந்திலிருப்பவர்கள், இந்தியாவில் கூலிவேலை ஏதேஷ்டமாய் நினைத்தபடி கிடைக்குமென்றும், எந்தப் பெரிய தொழிலானாலும் கூலிவேலை சொற்ப கூலிக்குக்கிடைப்பது கஷ்டமல்லவென்றும் நினைக்கிறார்கள். ஆனால், இந்தியாவுக்கு வரும் ஒவ்வொரு ஆங்கிலேயனும் இது ஸரியல்லவென்று கொஞ்சதினத்தில் அறிந்துகொள்கிறான். லார்ட் ஹார்டிஞ்ச் வந்தபோது, பம்பாய் சேம்பர் ஆப் காமர்ஸ் கூலி ஆட்கள் கிடைப்பது கஷ்டமா யிருக்கிறதென்று அது வாசித்த உபசாரப் பத்திரிகையில் சொல்லிற்று. மிஸ்டர் க்ளார்க்பம்பாய்க்குவந்தபோதும், இதைப்பற்றிப் பிரஸ்தாபம் நடந்தது பம்பாயிலுள்ள பஞ்சாலைகளிலிருந்தும் வெங்காளத்திலுள்ள சணல் ஆலைகளிலிருந்தும், ஆஸாமிலுள்ள தேயிலைத் தோட்டங்களி லிருந்தும், முதலாளிகளிடத்திலிருந்தும் கூலிக்காரர்வேலைக்கு அகப்படுவதில்லை என்ற கூச்சலே பெரிதாயிருந்தது. இந்தியக் கூலிகள் தாங்கள் வஸிக்குமிடத்திலேயே சுலபமாய் வாழவேண்டுமென்ற விருப்பத்தினாலோ, அல்லது, அதிகக் கூலியை வேண்டி கண்மூடித்தனமாய் உயர்ந்த ஸ்திதியைப் பெறவேண்டுமென்ற விருப்பத்தினாலோ இப்படி அசம்மதமா யிருக்கிறார்கள்.

THE MAHUE TREE.

**இலுப்பை.**—தென்னிந்தியாவில் அபரிமிதமாய் உற்பத்தியாகும் விருட்சங்களில் இலுப்பையு மொன்றாகும். இம்மரம் உயரத்திலும், உருவத்திலும், உபயோகத்திலும், பருமனிலும், நாம் பிரயாசைப்படாமல் தானாய்வளருவதிலும், மாமரத்தை ரொம்ப ஒத்திருக்கின்றது. ஆற்றோரங்களில் இம்மரம் நெடுந்தூரம் கிளை பரப்பிக்காய் குலுங்க நிற்கக்காணலாம். இம்மரத்தால் நாம் அடையும் உபயோகங்களை எண்ணுமிடத்து, நமது புஞ்சை நிலங்களில் நன்றாய்ப் பயிர் செய்வதற்கேற்ற சிரேஷ்டமான விருட்சமென்றே தெரியவரும்.

இம்மரத்திலிருந்து செய்யப்படும் பலகைகள் சட்டங்கள், தூண்கள், உத்திரங்கள் முதலியன மிகவும் உறுதியாயும் நேர்மையாயு மிருக்கின்றன. இவற்றைத் தவிர்த்து இலுப்பைக் கொட்டைகளிலிருந்து இறக்கப்படும் எண்ணெய் மெத்தவும் உபயோகமானதாகும். மரத்திலிருந்து கீழே உதிரும் பழங்களைச் சேர்த்து கொட்டையை வெளிப்படுத்தி வெயிலில் உலர்த்தி, உடைத்து உள்ளிருக்கும் பருப்பை எடுத்துக் காயவைத்து செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கிறார்கள். இதன் பின் தங்கியிருக்கும் சக்கை வெயிலில் உலர்த்தி அரப்பு என்று வழங்கபடுகிறது.

இலுப்பெண்ணெய் விளக்கெறிப்பதற்கும் ஸாமான்ய ஜனங்கள் வீட்டில் பணியாரங்கள் செய்வதற்கும் உபயோகப்படுகிறது. இத்துடன் கடையில் விற்கப்படும் நெய்யிலும் கலக்கப்படுகிறதாம். மேலும் இந்த எண்ணெய் நாட்டுப்புறங்களிலுள்ளவர்களால் மாத்திரம் உபயோகிக்கப் படுகிறதேயல்லாமல், நகரவாஸிகள் அபேட்சிக்கிறதில்லை, அவர்களுக்கு அகப்படுகிறது மில்லை. இந்த எண்ணெயைத் தலையில் தேய்த்து ஸ்தானம் செய்யலாம். மூளையைக்குளிரச் செய்வதிலும், தேகத்தில் தடவி ஸ்நானஞ்செய்தால் சீதளத்தை யுண்டாக்குவதிலும் மேலானது. பதார்த்தங்களுடன் உபயோகித்தால் பித்த நீரை வெளிப்படுத்திக்குடலைச் சீர்படுத்தி தேகாரோக்கிய முண்டாக்கும். இந்த எண்ணெய் சோப் செய்வதற்கும் ஏற்றது.

கிராமங்களில் கவனிப்பாரற்றுக் கீழே உதிர்ந்து கிடக்கும் கொட்டைகளைச் சேகரித்து நவீன யந்திரங்களைக்கொண்டு எண்ணெய் இறக்கி நகரங்களில் விற்க ஆரம்பித்தால் பிரதி தினமும் பெருகிவரும் மற்ற எண்ணெய்களின் விலை ஸரஸமாவதுடன் இம்முயற்சியைக் கொள்ளும் சிலருக்கும் பொருள் சம்பாதிக்க ஏற்றதோர் உபாயமாகும்.

இவ்விஷயத்தை நம்மவர்கள் கவனிக்காவிடில் மணிலாக்கொட்டை வியாபாரத்தைப்போல், இதிலும் அன்னியர்கள் பிரவேசிக்க இடமுண்டாகுமென்று ஒரு நிருபர் ஒரு பத்திரிகையில் எழுதுகிறார்.

# EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

---

TOLSTOY ON EDUCATION.

**டால்ஸ்டாய் படிப்பிப்பதைப்பற்றி.**—டால்ஸ்டாய் என்னும் ஞானி ஜெர்மனி, ப்ரான்ஸ், இங்கிலாந்து முதலான தேசங்களை சுற்றிப்பார்க்கச் சென்றிருந்தபோது அத்தேசங்களில் மாணாக்கர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் கல்வி முறையில் திருப்தி யடையாதவராய் "காப்பிக்கொட்டை, கடலை, மொச்சைபோன்ற பலவகைப்பட்ட தானியங்களை ஒரே யந்திரத்தில்போட்டு அரைப்பதுபோல பலவகைப்பட்ட மனோபாவமும், நானாவகையான அறிவும் உடைய மாணாக்கர் எல்லாருக்கும் ஒரேவிதமான கல்வியைக் கட்டாயத்தினால் போதிக்கிறார்களே! இப்படிப்பட்ட கல்வி போதனை மாணாக்கர்களின் நன்மைக்காக ஏற்பட்டதல்ல; உபாத்தியார்களின் வேலை ஸுலபமாகும்படி ஏற்பட்டது!" என்று பரிதபித்திருக்கிறார்.

THE MADURA EDUCATIONAL EXHIBITION.

**மதுரைக் கல்விப் பொருட்காட்சி.**—ஸமீபத்தில் மதுரை காலேஜ் ஹாலில் அவ்வூர் எலிமெண்டரி உபாத்தியாயர்கள் சங்கத்தின் ஆதரவில் ஒரு கல்விப் பொருட்காட்சி 7-வது ஸர்க்கில் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் டி. ஒ. ஹாட்ஜஸால் திறந்து வைக்கப்பட்டது. அக்காட்சியைத் திறந்து வைத்துச் செய்த பிரசங்கத்தில், அவர் எலிமெண்டரி பள்ளிக்கூடங்களை மூன்று பிரிவாய்ப் பிரித்தார். (1) கிண்டர் கார்ட்டன் பள்ளிக்கூடங்கள்—அதாவது விளையாட்டுகள் மூலமாகவே சிறு குழந்தைகளைப் படிப்பிப்பன. (2) கிராமந்தரப் பள்ளிக்கூடங்கள்—அதாவது விவஸாயிகளின் குழந்தைகளும் தொழிலாளிகளின் குழந்தைகளும் தங்கள் பேரை யெழுதும்படியாயும் தங்களுக்கு வேண்டிய கணக்கு வழக்குகளைப் பார்த்துக்கொள்ளும்படியாயும் அதிகாரிகளுக்குத் தங்கள் குறைகளைக் கண்டு ஒரு விண்ணப்பம் எழுதத்தெரிந்து கொள்ளும்படியாயும் படிப்பிக்கும் பள்ளிக்கூடங்கள். (3) உயர்தரப் படிப்புக்குத் தயார் செய்யும் எலிமெண்டரி ஸ்கூல்—இந்தப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் தினந்தோறும் நீண்ட நேரம் வாசிப்பதோடு புத்திப் பயிற்சியும் மனப்பயிற்சியும் பெறுகிறார்கள். மிஸ்டர் ஹாட்ஜஸ் திறந்து வைத்தக் கல்விப் பொருட்காட்சிக்குப் பலவகைப்பட்ட காட்சிப் பொருள்கள் வந்திருந்தன. பெரியகுளம் ப்ரைமரி ஸ்கூல் ஒன்றிலிருந்து டாஜ்மஹால் கட்டடத்தின் பிரதிமை ஒரு சீமைச் சுண்ணாம்புத் துண்டில் செய்தனுப்பப்பட்டிருந்தது. திருநெல்வேலி ஜில்லா இடையன் குடிபோர்ட் ஸ்கூலிலிருந்து கத்திகளும், குறடுகளும், மனித உருவச்சிலைகளும் ஒரு சீமைச் சுண்ணாம்புத்துண்டில் செய்யப்பட்டு காட்சிப் பொருள்களாய் அனுப்பப்பட்டிருந்தன.

SANSKRIT AND THE VERNACULARS.

**ஸம்ஸ்க்ருதமும் தேசபாஷைகளும்.**—இப்பொழுது ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட்டுப் பரீக்ஷைக்குப் படிக்கும் மாணவர்களுக்கு ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலிய பாஷைகள் கட்டாயப் பாடமாக இராமல் இஷ்டபாடமா யிருக்கின்றன. ஆகையால் அந்த பாஷைகளை மாணாக்கர்கள் படிக்காமல் விடுகிறார்கள். அதனால் அப்பாஷைகளுக்கு அனாதரவு உண்டாய் விடுகிறதென்றும் ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட்டுப் பரீக்ஷையின் கட்டாயப் பாடத்தில் இப்பாஷைகளின் பாடமும் ஒரு கட்டாயப் பாடமாயிருக்கவேண்டுமென்றும் ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னருக்கு மனுச் செய்துகொள்ள ஸமீபத்தில் சென்னபட்டணத்தில் பச்சையப்பன் மண்டபத்தில் பலஸ்கூல்களின் உபாத்தியாயர்களும் மாணவர்களும், அவர்களுடைய பெற்றோர்களும் சேர்ந்து ஒரு பொதுக் கூட்டங்கூடினார்கள்.

திவான் பகதூர் கே. கிருஷ்ணஸாமிராவ் அக்ராஸனம் வகித்தார். ஸம்ஸ்கிருதமும் தேசபாஷைகளும் கற்பதால் அளவற்ற நன்மைகள் உண்டாகுமென்றும், அந்த பாஷைகளில் வல்லோராயிருந்த பூர்வகாலத்திய பல மகான்களின் சரிதைகளைக் கேட்டு நாம் மனம் பூரிக்க அவகாசம் உண்டாகிறதென்றும், பழையகால நடையுடை பாவனைகளையும் அவைகள் ஏற்படுத்தப்பட்ட காரணங்களையும் நாம் அறிவதற்கு ஸுலபமா யிருக்குமென்றும் அவர் பேசினார். கடைசியில் எல்லாரும் ஒருமனமாக கவர்ன்மெண்டுக்கு ஒரு மனுசெய்து கொள்ளப்பட்டது.



# SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

---

MALARIA INVESTIGATION.

**முறைக்காய்ச்சல் சோதனை.**—சென்னை மாகாணத்தில் மலேரியா என்று சொல்லப்படும் முறை காய்ச்சலை சோதனை செய்வதற்காக வைத்திய இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் சிலரை ஸ்பெஷலாய் நியமிப்பதற்கு இந்தியா மந்திரியின் உத்தரவு கிடைத்திருக்கிறது.

HOLES IN FLOWERPOTS.

**பூந்தொட்டிகளில் த்வாரங்கள்.**—பூந்தொட்டிகளுக்கு அடியில் த்வாரம் அமைத்திருக்கிறதற்குக் காரணம் அநேகருக்குத் தெரியாமலிருக்கலாம். பூந்தொட்டிகளில் செடிகளைவைத்து வளர்க்கும் பொழுது அச்செடிகளுக்கு வேண்டிய ஆகாரமாகிய ஜலத்தை வார்க்கிறோமல்லவா? மேலும் மழை ஜலமும் அத்தொட்டிகளில் விழுகிறதல்லவா? பூந்தொட்டிக்கு த்வாரமில்லாவிட்டால் இப்படி அதற்குக்கிடைக்கும் ஜலமானது அதிகப்பட்டுவிட்டால் அந்த ஜலம் எப்படி வெளியாகும்? பூஞ்செடிகளுக்கு வார்க்கப்பட்ட ஜலமானது அதிகப்பட்டால் அந்த ஜலம் வெளிப்படுவதற்காகவே தொட்டிகளுக்கு த்வாரம் வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி த்வாரம் இல்லாவிட்டால் அதிகப்பட்ட ஜலமானது வெளியே செல்லாமல் தொட்டிகளுள்ளேயே இருந்து நீர் ஊசிப்போய் தொட்டியின் அடியில் தங்கிச் செடியின்வேரை அழுகச்செய்து செடி பட்டுப்போம்.

SINGING SANDS.

**பாடும் மணல்கள்.**—இம்மணல்கள் ஹாவாயி தீவுகளில்தான் விசேஷம். மேற்படி மணலை நமது இரண்டு கைகளுக்கும் நடுவில் வைத்துக்கொண்டு தட்டினால் அம்மணல்கள் ஆந்தை அலறுவதுபோல் ஒரு கீச்சுக்குரலை உண்டுபண்ணுகின்றன. ஒரு பையில் அம்மணலைப்போட்டுக் குலுக்கினால் நாய் குலைப்பதுபோல் சத்தமிடுகின்றன. அம்மாதிரியான மணல்கள் கோலராடோ வனாந்தரங்களிலும் மற்ற அபூர்வமான களிமண் நிலங்களிலும் அகப்படுகின்றனவாம். அவ்வனாந்தரங்களில் காற்றடித்தால் மேற்கூறிய மணல்கள் பட்சி பாடுவதுபோல "கீச் கீச்" என்று சத்தமிடுகின்றன.

ஸூக்ஷ்மக்கண்ணாடியில் இம்மணலைப் பரிசோதித்துப்பார்த்தால் உருண்டை வடிவமா யிருக்கிறது. இம்மணலைப்பற்றி சில சாஸ்திர அனுபோகஸ்தர்களது அபிப்பிராயம் யாதெனில், இம்மணல்மேல் ஒரு விதவாயு மூடிக்கொண்டிருக்கிறதென்பதும் காற்றடிப்பதனால் மேற்படி வாயு சத்தம் செய்கிறதென்பதுமாம்.

BACTERIA.

**பாக்டீரியா.**—இவைகள் சிற்றுயிர்கள். இச்சிற்றுயிர்களில் அநேகாயிரம் ஜாதிகள் இருக்கின்றன. ஒரு ஜாதி சர்க்கரையுள்ள ரஸங்களை சாராயமாக மாற்றுகிறது. மற்றொரு ஜாதி அதே நீரைக் காடியாக மாற்றுகிறது. வேறொன்று பாலைத் தயிராக மாற்றிப் புளிக்கவைக்கிறது. நமது தோசைமாப் புளிப்பதும் அவைகளின் ஒரு ஜாதியினாலேயே. இன்னும் சில ஜாதிகள், தரையில் போடப்படும் பிராணிகளின் கழிவு பதார்த்தங்களான மலமூத்திரங்களிலுள்ள உப்பு வாயுக்கலந்த பதார்த்தங்களைப் பிரித்து வெடியுப்பாக மாற்றுகின்றன. இவைகளில் சில, புண்களில் ஒட்டிக்கொண்டு புண் சீழ்ப் பிடிக்கும்படியாகச் செய்கின்றன. வேறு சில பலவிதமான ரணஜன்னிகளை விளைவிக்கின்றன. இன்னும் சில உயிருள்ள தேகங்களிலும் விளைய சக்தி பெற்றனவாய், காலரா, ஸன்னிபாத ஜுரம், க்ஷயம், குஷ்டம், முதலிய பல ரோகங்களையும் விளைவிக்கின்றன.

இச்சிற்றுயிர்கள் அதிநுட்பமானவை 1/10,000 முதல் 1/50,000 அங்குலப் பிரமாணமுள்ளவை. ஆயிரமடங்கு பெரிதாகக் காட்டும் பூதக்கண்ணாடிகளாலேயே பார்க்கத்தக்கவை. இவ்வளவு நுட்பமாயிருப்பதால் ஒரு சொட்டில் லக்ஷக்கணக்காகத் தங்கக்கூடும். உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. எங்கெங்கு தமக்கு ஆகாரம் கிடைக்குமோ அங்கு விழுந்தும் அதி விரைவாய் விருத்தியாகின்றன. நாம் அசுத்தமென்று மனதினால் கருதும் மலமூத்திராதிகளில் அபரிமிதமா யிருக்கின்றன. அப்படியே, நமது எச்சிலிலும், வியர்வையிலும், வியாதியஸ்தர்களுடைய மலம், மூத்திரம், வியர்வை எச்சில் முதலிய கழிவுகளிலும் அந்தந்த வியாதிக்குக் காரணமான சிற்றுயிர்கள் அவைகளின் தன்மைப்படி நிறைந்து கிடக்கின்றன.

## MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்.

A REMEDY FOR PLAGUE.

**ப்ளேக் வியாதிக்கோரு மருந்து.**—ப்ளேக் நோய்க்கு மண்ணெண்ணெய் தக்க மருந்தாகுமென்று பர்மியர் கண்டுபிடித்திருக்கிறார்கள். ப்ளேக் நோய் கண்டவுடனே நோயாளிக்கு 3 அல்லது 4 ஸ்பூன் மண்ணெண்ணெய் உள்ளுக்குக்கொடுக்கவேண்டுமாம்; அதன் பிறகு அதை நக்கிக்கொண்டேயிருத்தல் நலமாம்.

SALT WATER BATHS.

**உப்பு ஜலஸ்நானம்.**—ஸமுத்ரஸ்நானம் இயலாதபோது உப்பு ஜலஸ்நானம் வேறுவித ஸ்நானங்களெல்லாவற்றிலும் விசேஷமானதென்று "குடும்ப வைத்தியன்" என்ற நூல் கூறுகின்றது. லகுவாகவும் செலவுச்சுருக்கமாகவுஞ் செய்யக்கூடியது. வீட்டில்தானே மேற்படி ஸ்நான ஸுகத்தை யடைவதற்கேற்றவழியும் இதுவேயாம். ஒரு மட்சாடியிலே உப்பையிட்டு போதுமான தண்ணீர் விட்டு உப்பைக் கரைத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்துகொள்ளலாம். கைநிறைய அந்த ஜலத்தை மொண்டு தேகத்தை நன்றாய்த் தேய்த்துக்கழுவவும், அப்பால் சுத்த ஜலத்திலே மூழ்கி உலர்ந்த வஸ்திரத்தினாலே, சூடுபிறக்கும்படி துடைத்துக் கொள்ளவும், உடனே ஸுகம் உண்டாகும். உப்பு ஜலஸ்நானம் தேகவளர்ச்சிக்கும் காந்திக்கும் ஹேதுவாகும்.

SOLANUM TRILOBATUM.

**தூதுவளை.**—தூதுவளையானது கபத்தை நீக்குந் தன்மையுள்ளது. இதைக் கஷாயமிட்டு சுவாச காசம், இருமல் முதலிய ரோகங்களுக்குக் கொடுக்கலாம். இலையைத் துவயல்செய்து கொடுப்பதுமுண்டு. இதனால் தாதுப்பலமுண்டாம். கபம்,மந்தம் இருமல் இளைப்பு, தீரும். இதன் இலையால் சிலேஷ்மம், கர்ணசூலைஅக்கினி மாந்தம், உட்குத்து, சொறிவு, மேலுளைவு தீரும். பூவினால் தேகபுஷ்டி, தாதுவிருத்தி, சரீரபலம் அழகு உண்டாம். காயினால் கபரோகம், அரோசகம், பைத்தியம், மலபந்தம், ரத்தாசயவாயு பித்தவாதம் தீரும். பழத்தினால் க்ஷயம், ஜலதோஷம், மார்புச்சளி தீரும். தூதுவளம்பழநெய் க்ஷய ரோகங்களுக்கு தக்க ஔஷதம். ?வரும் கொடியும் சுவாசமுதலிய ரோகங்கள், பல்நோய் இவைகளைப் போக்கும்.

THE CARE OF THE TEETH.

**பற்களின் பாதுகாப்பு.**—பற்களின் விஷயமாய் கவனிக்கவேண்டிய சுகாதார முறைகளாவன:—

1. பற்களை நன்றாய்ப் போஷிக்கத்தக்க எலும்பையுண்டாக்கும் ஸத்துள்ள போஜனத்தைப் போதுமான அளவு பிரதிதினமும் புசித்துவரவேண்டும். பலவகையான காய்கறிகள், பழவர்க்கங்கள், கொட்டைத்தினுசுகள் தினசரி ஆகாரத்தில் கலந்திருந்தால் பல் வளர்ச்சிக்கும் உறுதிக்கும் ஆதாரமாகும்.

2. பற்கள் பலப்பட்டு உறுதியடையும் பொருட்டு அவைகளுக்குப் போதுமான வேலைகொடுத்து வரவேண்டும். அவைகள் நன்றாய்க் கடித்து, மென்று அரைக்கத் தக்கதான கடினமான பதார்த்தங்கள் ஆகாரத்தில் கலந்திருக்கவேண்டும். லேசாக விழுங்கிவிடக்கூடிய மிருதுவான பதார்த்தங்களை மட்டில் உட்கொண்டுவரும் பக்ஷத்தில் பற்களுக்குப் போதுமான வேலையில்லாமல், அவைகள் பலங்குறைந்து பழுதடைந்து சீக்கிரத்தில் க்ஷீணித்துப்போக இடமுண்டாகும். மென்று சாப்பிடக்கூடிய ரொட்டி முதலிய பதார்த்தங்களையும், காபி, பால், முதலிய திரவபதார்த்தங்களுடன் விழுங்கிவிடும் தூர்வழக்கம் சிலருக்குண்டு. அப்படிப்பட்டவர்களுக்குப் பற்கள் இருந்தும் பிரயோசனமென்ன? அவர்களைப் போல செய்யாமல் எந்தபதார்த்தத்தையும் பற்களைக் கொண்டு நன்றாக மென்று உமிழ் நீருடன் கலந்து உட்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதினால் பற்களும் உறுதியடைந்து போஜனமும் எளிதில் ஜீரணமாகக்கூடும். மிட்டாய் முதலிய இனிப்புப் பதார்த்தங்கள் பற்களுக்குக்கெடுதியுண்டாக்கு மாதலால் அவைகளை மிதமாய் உபயோகித்து வரவேண்டும்.

3. பற்களை அடிக்கடி நன்றாய்ச் சுத்தி செய்துவரவேண்டும். பிரதிதினமும் காலைதோறும் மெதுவான பற்பொடியைக் கொண்டும் மிருதுவான பற்குச்சியைக்கொண்டும் பற்களை உள்ளும், புறமும் சுத்தி செய்து, கூடுமானால் வெந்நீரைக்கொண்டு பலதடவை வாயைக் கொப்புளிக்க வேண்டும். பற்களின் மேலுள்ள வைரமும் ஈறும் தேய்ந்து போகும்படி கல்லினாலும், மண்ணினாலும், சாம்பலினாலும், முரட்டுக்குச்சிகளினாலும், வெகு நேரம் பற்களைத் தேய்க்கக்கூடாது.



## LEGAL NOTES.

## சட்டக் குறிப்புகள்.

—:o:—

NT ON A PRO-NOTE.

**நோட்டு எண்டார்ஸ்மெண்டு.**—ஹிந்து
ச் சேர்ந்த மானேஜர் பெயரால் ஒரு
நோட்டு எழுதிக்கொடுக்கப் பட்டிருந்தது.
மெம்பர்கள் பாகம் பிரிவினை செய்து
து அந்த நோட் ஒருவன் பாகத்திற்கு
வன் வியாஜ்யம் கொண்டுவந்தான்.
னஜிங் மெம்பர் நோட்டை எண்டார்ஸ்
து கொடுக்க வேண்டிய தவசியமல்ல.
ன ஜாப்தாவில் சொல்லப்பட்டிருப்
ானதென்று தீர்மானிக்கப்பட்டது.

பா 300 கடன் வாங்கப்பட்டது. இந்த
வணை தவணையாக 20-மாதங்களில்
தென்றும் அப்படிச் செலுத்தத் தவறி
தவறினதுமுதல் தவணையிலிருந்து
கயின் மேலும், வருஷத்திற்கு 100-க்கு
; வட்டி போட்டுச் செலுத்தவேண்டு
திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது. இந்
ன்பேரில் வியாஜ்ய முண்டானபோது
போடுவது இந்தியன் காண்ட்ராக்ட்
பிரிவின்படி சட்ட விரோத மென்
ல் தடுக்கப்பட்ட வட்டி என்றும் பிரதி
ன்றான். கடன்வாங்கின தொகையை
-மாதத்தவணையில் செலுத்தவேண்டு
ண தவறினால் மேலே சொல்லப்பட்ட
செலுத்த வேண்டுமென்றும் ஏற்பாடு
ண்டிருக்கிறார்கள். ஆகையால் இது
டுக்கபபட்ட வட்டியாக மாட்டா
னிக்கப்பட்டது.

ம்.—இதைப்பற்றி ஸமீபத்தில் சென்
ஹைகோர்ட்டில் ஒரு தீர்மானம்
. ஒரு மிராசுதார் குடியினுடத்தி
ற்கு மனைகட்டுக் கிடைக்கவேண்டு
யம் போட்டான். முதல் கோர்ட்டில்
வாதிக்கு அனுகூலமாயிற்று. அதன்மேல் அப்பீல் செய்ததும் வியாஜ்யம் வருவதற்கு பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னமேயே குடியானவன் மிராசுதாருக்கு வேலைசெய்வதை நிறுத்திவிட்டபடியால் காலாவதியாய்ப்போய்விட்டதென்று சொல்லி கீழ் கோர்ட்டுத் தீர்ப்பைமாற்றி குடியின் பக்கமாக டிஸ்ட்ரிக்ட்ஜட்ஜி தீர்ப்புசெய்தார். அதன்மேல் கேஸ் ஹைக்கோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீலுக்கு வந்தது. ஜட்ஜிகள் மிஸ்டர் பென்ஸனும், மிஸ்டர் வி. கிருஷ்ணஸாமி அய்யரும் வெறுமையாய் குடி வேலை செய்யவில்லை என்று சொல்வது போதாதென்றும், காசாவர்க்கம் என்றால் என்னவேலை, அதைப்பற்றிய விவரங்கள் என்ன, என்று தெரிந்தாலொழிய கேஸைத் தீர்மானிக்க முடியாதென்றும், ஆகையால் அந்த விஷயங்களைப்பற்றி தீர விசாரணை செய்து பைண்டிங் ஏற்படுத்தும்படி உத்தரவு செய்தார்கள். இந்த உத்தரவின்படி தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்டு ஜட்ஜி அந்த ஜில்லா முழுமையும் காசாவர்க்கமென்றால் என்ன என்பதை விசாரித்து பின்வருமாறு பைண்டிங்கொடுத்தார்.

(1) மனைக்கட்டு மிராசுதாருக்கு ஸொந்தம். காசாவர்க்கக் குடிக்கு அதன்மேல் ஸ்வான்பாத்யம் இல்லை. ஆனால் ஸாதாரணமாய் மேன்கூரை அவனுக்கு ஸொந்தம்.

(2) காசாவர்க்கக்குடி மிராசுதாருக்கு வாடகை கொடுக்காமலோ அல்லது ஸ்வல்ப வாடகை கொடுத்தோ மிராசுதார் இட்டவேலையைச்செய்துகொண்டு மனையில் குடியிருக்கிறவன்.

(3) காசாவர்க்கக்குடி மனைக்கட்டை இன்னொருவனுக்குக்கொடுக்க பாத்யமில்லை. ஆனால் அவன் இறந்துபோனால் அவனுடைய வார்ஸுகள் அவன் எந்த நிபந்தனைகளுக்கு உள்பட்டுக் குடியிருந்தானோ அப்படியே குடியிருக்கலாம்.

(4) வழக்கப்படி சொன்ன வேலையைச் செய்யாமல் போனால் காசாவர்க்கக்குடியை வீட்டைவிட்டு அப்புறப்படுத்த மிராசுதாருக்கு பாத்யமுண்டு.

(5) அப்படி அப்புறப்படுத்தும்போது காசாவர்க்கக்குடியினுடைய மேன்கூரைக்குள்ள கிரயத்தை மிராசுதார் கொடுக்கவேணும்.

மேற்சொன்ன பைண்டிங்குகளை ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் ஒப்புக்கொண்டு வாதி மிராசுதார்பக்கம் தீர்மானம் செய்து விட்டார்கள். இது மிராசுதார்களுக்கு வெகு அனுகுணமான தீர்ப்பு.

## PERSONAL ·NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்·

———o———

HON'BLE MR. RAMASWMI CHETTIAR.

**கனம் ராமஸ்வாமி செட்டியார்.**—ஆனரபில் மிஸ்டர் எஸ். ஆர். எம். ராமஸாமி செட்டியார் மதுரைச்செந்தமிழ்சங்கத்திற்கு 1000- ரூபாய் நன்கொடையாக அளித்து மாதந்தோறும் 5 ரூபாய் அளிப்பதாக வாக்களித்திருக்கிறாராம்

MR. GLADSTONE.

**மிஸ்டர் க்ளாட்ஸ்டன்.**—க்ளாட்ஸ்டன் மந்திரியாயிருந்தபொழுது தினம் இரண்டுமணி நேரம் நடக்காமலிருக்கமாட்டார். இவருக்கு அதிகவேலையிருந்தபொழுதும் 2-மணிநேரம் நடந்துவந்தாராம். உதாரணமாக தினம் 14-மணி அல்லது 16-மணி நேரம் வேலை செய்யவேண்டியிருந்தபோதும் தினம் 2-மணி நேரம் நடப்பதில் காலத்தைக் கழித்தாராம். காற்று இருந்தாலும்ஸரி, ஸாதாரண மழையிருந்தாலும்ஸரி, வாட்டர் ப்ரூப் என்ற ஒருவித துணியை மேல் தரித்துக்கொண்டு நடப்பாராம்; பகலில் நடக்க முடியாவிடின் இரவில் நடப்பாராம்.

RAO BAHADUR GOVINDADOSS CHATHURBHUJADOSS.

**ராவ் பகதூர் கோவிந்ததாஸ் சதுர்ப்புஜதாஸ்.**—சென்னபட்டணம் ராவ் பகதூர் கோவிந்த தாஸ் சதுர்புஜதாஸ் ஜி. ஐ. பி. ரெயில்வேயில் மன்மாட் என்ற ஊரில் ரெயில்வேப் பிரயாணிகள் வந்திறங்க ரூபா 30,000 செலவில் ஒரு தர்ம சத்திரங்கட்டிவிடப்போகிறாரென்று தெரியவருகிறது. ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஸமீபத்தில் அந்த தர்மசத்திரத்தைக் கட்டிவிடுவதற்காக ரூபா 5500-க்கு ஒரு காலி நிலம் வாங்கியிருக்கிறார். கட்டிட வேலையைத் தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவரப்படுகின்றன. அந்த சத்திரம் ரெயில்வேப் பிரயாணிகளுக்கு வெகு உபகாரமாயிருக்கும்.

OUR EMPEROR'S DRESS.

**நமது சக்ரவர்த்தியின் உடுப்பு.**—நமது சக்ரவர்த்தி உயர்ந்த ஆடைகளைத் தரிப்பதில்லை. ஆயினும் வீட்டிலிருக்குபோது தரித்துக்கொள்ள உடுப்பும், வெளியிற் வேட்டையாடச்சென்றால்
அதற்குவேண்டிய உடுப்பும், நாட்டுப் பு
செல்லுகையில் அதற்குவேண்டியஉடுப்
கின்றன.

இவரே தமது உடுப்புக்குவேண்டிய
வாங்குகிறாராம். கைத்தறியால் வீட்டி
யும் துணிகளை வாங்கி அவ்விதம் துணை
களுக்கு உதவிபுரிந்து வருகிறாராம். இ
பல் யுத்தம் முதலியவைகளில் அதிகப்
கிறமையால் இவைகளுக்கு வேண்டி
எல்லா அரசர்களைவிட அதிகமாயிருக்கி
ஆனால் ஜர்மன் சக்ரவர்த்திக்கு மா
சக்ரவர்த்திக்கு எவ்வளவு விதம் வித
களிருக்கின்றனவோ அவ்வள விருக்
மேலும் நமது சக்ரவர்த்தி கௌரவக
ஸைன்னியத்தில் இருப்பதுடன் இ
லும் இவரை அவ்விதம் நியமித்திருக்

A GENTLEMAN ENGINE DRIVER.

**என்ஜின் ஓட்டும் ப்ரபு.**—ட
கோஸ்ஸா என்பவர் இஸ்பானிய தே
க்ளில் அதிக ஐசுவரியமும் பூர்வீக வ
யும் உடைத்தானவர்களிலொருவர்.
உயர்கோத்திரத்திற்கு இவரே த
பூஸ்திதி விஸ்தாரமாயிருக்கிறது.
லும் இப்பிரபு வேலைசெய்வதில்
முடையவர். தம்முடைய ஜென்ம
காணி, பூமி, வீடுவாசல்களையெல்லா
ரிடம் ஒப்பித்துவிட்டு, ப்ராஞ்சு தே
ஒரு ரெயில்கம்பனியில் யந்திரம் ஓ
பார்த்து வருகிறார். மற்றட்ரைவர்
இவரும் சம்பளம்பெற்றுவருகிறார்.
பகற்கண் விழிக்கிறார். இரண்டுமா
ரெயில் வேலைக்காரர்களெல்லாம்
வேலை நிறுத்திப்போட்டபோது
மற்றவர்களைப்போலவே வேலைசெ
விருந்தார். அப்போது அவருடைய
லொருவரிடத்தில் தன்னைத்தான்
ளுவது கஷ்டமாயிருக்கிறதென்றும்
முடைய கைகள் வழக்கத்துக்கு வி
மையாயிருக்கின்றனவென்றும்
பேசிக்கொண்டிருந்தார். உலகத்
ஞல் அகங்காரங்கொள்ளாதவர்க
பேர்.



## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்·

———

AN OLD WOMAN'S FATE.

**ஒரு கிழவி கதி.**—ருஷியா தேசத்தைச் சார்ந்த ஓரன்பர்க் என்னும் மாகாணத்தில் பஞ்சமுண்டாகி அகவிலை குறைந்து ஜனங்களுக்குக் கஷ்டம் நேர்ந்ததாம். இதற்குக் காரணம் பிடாரிபைப்போலிருக்கும் இந்தக் கிழவிதான் என்று எல்லோருங்கூடி ஒரு கிழவியை அடித்துக் கொன்றுவிட்டார்களாம்.

AN ABSURD RULE.

**ஒரு அசட்டு ரூல்.**—ஒரு ஊரில் மிகவும் சட்டதிட்டங்களையுடைய நாடகக்கம்பெனியார் வந்து நாடகம் ஆடிக்கொண்டிருக்கும்போது, அந்த நாடக விளம்பரத்தில், "நாடகக்கொட்டைகைக்குள் வந்து கலகம் செய்வோரை, தாக்ஷணியமின்றி அவர்கள் கொடுத்த சார்ஜைத்திருப்பிக்கொடுத்து வெளியே அனுப்பிவிடுவோம்" என்று ஒரு கண்டிப்பான சட்டம் விளக்கப்பட்டிருந்தது; இதைப்பார்த்ததும் இரண்டு சிநேகிதர்கள் நாடகத்துக்குப்போய் நாடகம் முடியும்வரையில் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு முடியப்போகுந் தருணத்தில் எழுந்து உண்மையாகவே பெருஞ்சண்டை போடுவார்போல் நடித்து ஒருவரையொருவர் குடுமியைப்பற்றிக் கீழேயிழுத்துப்போட்டு இருவரும் தரையிற்புரண்டு பெருங்கூக்குரலிட்டார்கள். உடனே ஸ்டேஜ் மானேஜர் வந்து அவர்களை விலக்கிவிட்டுக் கண்டித்தார். அப்போது நடிப்பாகச் சண்டைபோட்ட இருவரும், "ஐயா மானேஜரே! நாங்கள் நாடக சட்டத்துக்கு விரோதமாகச் சண்டைபோட்டது குற்றந்தான்; விளம்பரத்தில் கண்டபடி நாங்கள் கொடுத்த சார்ஜைக்கொடுத்துவிட்டால் வெளியே போய்விடுகிறோம்" என்றுரைத்தார்கள். மானேஜருக்கு அவ்வாறு கொடுப்பது வயிற்றெரிச்சலாயிருந்தும், "விளம்பரத்தில் கண்டபடி செய்யாவிட்டால் நிந்தையுண்டாகும்" என்று கருதி, கேட்டபடியே சார்ஜைக்கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டு, "இந்த ரூல் மதியீனமுள்ளதாகும்" என்று மறுநாளே விளம்பரத்தில் அதை எடுத்துவிட்டார்.

AN ELEPHANT'S INGENUITY.

**யானையின் புத்திகூர்மை.**—சிலோனில் ஸர் வில்லியம் க்ரிகரி என்பவர் கவர்னராயிருந்த காலத்தில் கேபர்க் அரசகுமாரி அந்தத்தீவைப் பார்க்க வந்திருந்தார்கள். அப்பொழுது க்ரிகரி அவர்கள், அரசகுமாரத்திக்கு அத்தீவிலுள்ள பற்பல விசேஷ ஸ்தலங்களைக் காட்டினாராம். யானைகள் வேலை செய்வதைப் பார்க்க விரும்பி அவரைக் கேட்கவே, அவரும் அவ்விதமே யானைகள் வேலை செய்வதைக் காண்பிப்பதாகச்சொல்லி கண்டியில் ஒரு கோயிலிலிருந்து இரண்டு யானைகளை வரவழைத்தார். அவைகளை எந்த வேலை செய்யச் சொன்னபோதிலும் சுலமாகச் செய்தனவாம். ஒன்று பெரிய கற்களை வெகு எளிதில் சங்கிலிகட்டி எடுத்துக்கொண்டுபோய் மற்றொரு இடத்தில் வைத்து அச்சலிங்கியை அவிழ்த்துக் கொண்டு வந்ததாம். பின்பு மற்றொன்று செய்ததானது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கியது என்று சொல்லுகிறார்கள். அதாவது அது பெரியதும், நீண்டதும், பளுவுள்ளதுமான ஒரு கல்லுக்கு சங்கிலியைக்கட்டி செங்குத்தான பாறையிலிருந்து இறங்கி வரும்பொழுது அந்தக்கல் அதன் முழங்காலில் பட்டுக்கொண்டே வந்ததாம். அப்பெரியகல் இவ்விதம் பட்டுக் கொண்டேவந்தால் அதற்கு நோவுண்டாகுமல்லவா? அது நின்று, அச்சங்கிலியை எடுத்து தன் தந்தத்தில் சுத்திக் கொண்டதாம். இப்படிச்செய்தவுடன் கல் தன் முழங்காலில் முன்போல் படுகிறதாவென்று பார்த்ததாம். அச்சங்கலி நீண்டிருந்தமையால் அக்கல் அதன் முழங்காலில் பட்டுக்கொண்டிருந்தது இப்பொழுது எப்படிபடும்? படாததைக்கண்டு யாதொரு அலைக்கியமுமின்றி கொண்டுபோக வேண்டிய இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்ததாம்.

NAMBUDRIS.

**நம்பூதிரிகள்.**—நம்பூதிரிகளைக் குறித்துத் தமாஷ்க்கதைகள் அநேகம் உண்டு. ஒருநாள் ஒரு நம்பூதிரி தெருவழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் இஷ்டனொருவன் வீட்டுத் திண்ணையிலிருப்பதைக் கண்டு அங்கே போய், "ஐயா, இந்த வீட்டில் சில நாளைக்கு முன் யாரோ ஒருவர் இறந்துபோனதாகக் கேள்விப்பட்டேன். அது தாங்கள் தானா, அல்லது அனுஜனோ அறிய விரும்புகிறேன்," என்று கேட்டதாக ஒரு கதை!

## CURIOSITIES.
## விநோதங்கள்.

CURIOUS CHILLI.

**நூதன மிளகாய்.**—ஒரு மிளகாய்க் கன்றின் ஒரு தண்டில் முக்கோண வடிவுடைய இரண்டு மிளகாய்கள் காய்த்திருக்கின்றன வென்று கண்டியிலிருந்து ஒருவர் எழுதுகிறார்.

A HOSPITAL FOR FISHES.

**மீன்களுக்கும் ஆஸ்பத்திரி.**—குதிரைநாய்முதலியவைகளுக்கு ஆஸ்பத்திரி ஆங்காங்கு ஏற்பட்டிருப்பது போல மீன்களுக்கும் ஆஸ்பத்திரி யொன்று அமெரிக்காவிலுள்ள நியூயார்க்பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

A CURIOUS BIRTH.

**ஒரு அதிசயப் பிறவி.**—சென்றமே மாதத்தில் பிக்கா டெல்லி என்னும் ஊரில் ஒரு ஐரோப்பிய ஸ்திரீ நாய் முகத்தோடு கூடிய ஒரு குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தை உயிரோடிருக்கின்றது. அக்குழந்தை வெகு நாளைக்கு ஜீவித்திருக்கு மென்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்; அவள் நாய் முகமுள்ள குழந்தையைப் பெற்றதற்குக் காரணம் அவள் கர்ப்பமாயிருக்கும் போது ஒரு நாய்க்குட்டியைப் பிரியமாக வளர்த்து எப்போதும் அதைவிட்டு பிரியாமலிருந்ததே யாம்.

A MACHINE TO OPEN LETTERS.

**கடிதங்களைத் திறக்க ஒரு யந்திரம்.**—பெரிய ஆபீஸ்களில், நூற்றுக் கணக்கான கடிதங்கள் வருகின்றன. அவைகளைத் திறப்பதற்கே அநேகமணி நேரம் செலவாய் விடுகிறது. இதற்காக இப்போது ஒரு புதிய யந்திரங் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இது வெகு விரைவில் கடிதங்களைத் திறந்து விடுகிறது. இதில் கால் குதிரைப் பலமுடைய மோட்டார் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது.

THE WATERLOO LAKE.

**வாட்டர்லூ ஏரி.**—பாமா தீவுகளில் வாட்டர்லூ என்கிற ஒரு விநோதமான ஏரியிருக்கிறது. 1,000 அடி நீளமுள்ள இந்த ஏரி முழுமையும் ஜ்வாலித்தெரியுந் தீ மயமாய்க் காணப்படுகிறது. ஆயினும் அதிலிறங்கி நீந்துகிற மனிதரை எரித்துப்போடுகிறதில்லை. ஆட்கள் தண்ணீரிலிறங்கும்போது அவர்கள் தேகமெல்லாம் நெருப்பாடை போர்த்தது போலிருக்கிறதாம். தெரிக்கிற நீர்த்துளிகள் நெருப்புப் பொரிகளைப்போல் காணப்படுகின்றனவாம். இந்த ஏரி முழுவதும் பாஸ்பாஸ் என்று சொல்லப்படும் நிபாக்கினிஸத் துடையதாயிருக்கவேண்டும்.

EAGLES.

**கழுகுகள்.**—மனிதரை முதுகில் தூக்கிக் கொண்டு பறக்கும் கழுகுகள் இருக்கின்றன. இவைகளை வாகனமாகச் சிலர் உபயோகப்படுத்துகிறார்கள். இவைகள் சேனைகளுக்கு முக்கிய அங்கமாவதை குறித்து பேடன் பௌவல் என்கிற ஆங்கிலேயர் எழுதுகிறார் :—'பலத்த காற்றடித்தால் ஒரு புகைக் கூண்டுபோகாது', இக்கழுகுகள் பயமில்லாமல் போகும். அவைகளைப்பறக்க விடுவதற்கு புகை வேண்டுவதில்லை. அன்றியும் பகைவர் கண்களுக்கு இவை ஐடுதியில் புலப்படா. ஒரு மையில் உயரமிருந்தால் அவை காணப்படுவதே யில்லை. அனுபவத்தில் அவைகளைக் காயப்படுத்த முடியாது."

A HORSE WITH THE LONGEST MANE.

**அதிக நீண்ட பிடரிமயிருள்ள குதிரை.**—உலகத்தில் மனிதர்களுடைய உபயோகத்திலிருக்கும் குதிரைகளின் தொகை 10 கோடி யிருக்கலாமென்று உத்தேசிக்கப்படுகிறது. இவைகளில் ஒன்றுக்கு மாத்திரம் 18 அடி நீளமுள்ள பிடரிமயிருண்டு. இது அமேரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் இங்கிள் வூட் பட்டணத்தில் வஸிக்கும் மிஸ்டர் ஜில்கிட் என்பவருக்கு ஸொந்தம். மயிர் சிக்கிக் கொண்டு போகாதபடி அதை வாரி சீவிச் சடை போட்டு வைத்திருக்கிறார்கள். சடையைஅவிழ்த்து விடும்போது மயிர் மிக நேர்த்தியாய் சமுத்திரத்தின் அலைபோல்தரையில் படர்ந்திருக்கும். மிஸ்டர் ஜில்கிட் அப்பேர்பட்ட அருமையான குதிரையின் மேல் மகா கவனமாயிருக் கிறாரென்பது ஆச்சரியமல்ல. மயிரில் கிஞ்சித்தும் அழுக்கு சேராதபடி தினமும் அதைக்கழுவி சடைபோடும்படி செய்வார். மேலும் அம்மயிர் எல்வளவு அடர்த் தியாயிருக்கிறதென்றால்சடையில் அடிப்பாகம் குறுக்குஅகலத்தில் 6 அடி அகலத்துக்கு மேலிருக்கிறது. சடையை அவிழ்க்க ஒன்றரை மணிநேரம் செலவழிக்க வேண்டியது. ஏனெனில் சிக்கு உண்டாகாதபடி சடையை வெகு பத்திரமாய்ப் போடவேண்டுமாம்.



## NEWS OF THE MONTH.
## மாஸ வர்த்தமானங்கள்.

### INDIAN NEWS.
### இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

CROPPED HEADS.

**கத்தரிக்கப்பட்ட தலைமயிருடையவர்கள்.**—கத்தரிக்கப்பட்ட தலைமுடியையுடையவர்கள் கோவிலுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்று, கொச்சிராஜா ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

MATCH FACTORY.

**நெருப்புக்குச்சி செய்தல்.**—ஜப்பான் தேசஞ் சென்று நெருப்புக்குச்சி செய்யும் முறையைக் கற்று வந்த வி. கே. ஜெகநாயகமவர்களும், வி. நடராஜா அவர்களும் யாழ்ப்பாணத்தில்நெருப்புக்குச்சிசெய்ய எண்ணி அதற்கேற்ற முயற்சிகள் செய்கிறார்கள்.

A MEMORIAL.

**ஒரு ஞாபக சின்னம்.**—இந்தியாவிலுள்ள முகம்மதியர்கள் நமது கவர்னர்ஜனரலாயிருந்த மிண்டோ தம்மவர்களுக்குச்செய்த உதவியின் ஞாபகார்த்தமாக அலிகர் பட்டணத்தில் ஒரு கைத்தொழிற்சாலை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

VIRUDUPATTI TENKASI RAILWAY.

**விருதுப்பட்டி தென்காசி ரெயில்வே.**—தென்னிந்தியா ரெயில்வேக் கம்பெனியார் விருதுப்பட்டியிலிருந்து தென்காசிக்கு ரெயில் போடுவதற்கு ஸர்வே செய்யலாமென்று ஸிம்லாவிலிருந்து உத்தரவு பிறந்திருக்கிறது. இந்த ஸர்வே லயனுக்கு விருதுப்பட்டி-தென்காசி ரெயில்வே ஸர்வே லயன் என்று பெயராகும்.

SALEM CO-OPERATIVE CONFERENCE.

**சேலம் ஜில்லா ஐக்கிய நாணய கான்பரென்ஸ்**

சேலம் ஜில்லா ஐக்கிய நாணய நிதிச் சங்கக் கான்பரென்ஸ் அடுத்த மாதம் 14-ந்தேதி சேலத்தில்கூடும். அந்தக் கான்பரென்ஸின் தலைமையை ஆனரெபில். மிஸ்டர் ஜே. என். அட்கின்ஸன் வகிக்கப்போகிறார். அந்தக் கான்பரென்ஸ் சேலம் ஜில்லாவில் கூடுகிற இரண்டாவது ஐக்கிய நாணயநிதிச் சங்கக் கான்பரென்ஸாகும்.

ADULTERATED COFFEE.

**காப்பியில் கலப்பு.**—சென்னையிலும் கும்பகோணம் தஞ்சைமுதலிய வெளியூர் களிலுமுள்ள காப்பி ஹோடல்களில் அரக்கு என்னும்பெயருடன் சுத்தக் காப்பிக் கஷாயத்தோடு கலக்கப்படும் சீயக்காய் கஷாயத்தால் காப்பிக்குப் புதிய ருசி உண்டாக காப்பி குடிக்கும் ஜனங்கள் கிளப்புக் காப்பிக்கு ஸமானமா என்று சொல்லிக் கொண்டு, வீட்டில் மாடுகறந்து, காப்பி போட்டுச்சாப்பிட ஸௌகரிய மிருக்கிறவரும், அதை அலட்சியம் செய்து விடுகிறார்கள். இந்த சீயக்காய்க் கஷாயத்திற்கு மருந்து முறையில் பல நற்குணங்களிருந்த போதிலும் காப்பியோடு கலக்கப்பட்டால் அப்பொழுது அதற்கு என்ன குணமுண்டாகுமோ தெரியவில்லை.

A TAX ON MAHOMEDAN PILGRIMS.

**மகமதிய யாத்திரிகர்களுக்கு ஒரு புதுவரி.**—அரேபியா நாட்டில் மகமதியர்களின் யாத்திரை ஸ்தலங்களாயுள்ள மெக்கா மெடினு இவைகளுக்கு யாத்திரையாய் வரும் மகமதியர்களிடத்திலிருந்து யாத்திரை மார்க்கத்தின் சுகாதார நிலையை விருத்தி செய்வதற்காக துருக்கி கவர்ன்மெண்டார் புதிதாய் ஒருவரி விதிக்கப்போகிறார்களென்பதாக கான்ஸ்டாண்டி நோபிலிலுள்ள ப்ரிடிஷ் ஸ்தானிகரிடமிருந்து இந்தியா கவர்ன்மெண்டுக்கு தந்தி வந்திருப்பதாய் கவர்ன்மெண்டார் பம்பாய் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வரி இந்தியத் துறைமுகங்களிலிருந்து மெக்காவுக்குத் துறைமுகமாகிய ஜெட்டா துறைமுகத்தில் வந்திறங்கும் கப்பல்களின் தலைவர்களிடமிருந்து அடுத்த அக்டோபர் மாதம் முதல் கட்டாயமாய் வசூல் செய்யப்படுமாம். அந்தவரி கப்பல்களின் தலைவர்களிடமிருந்து துருக்கி கவர்ன்மெண்டின் உத்தரவை யனுசரித்து வசூல் செய்யப்படப்போவதைக் கருதி கப்பற் கட்டணத்தோடு சேர்த்து அதை வாங்கிவிடலாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லி யிருக்கிறார்கள்.

A VAIDIK DHARMA SABHA.

**வைதீக தர்மப் பிரசாரம்.**—இந்தப் பெயரைக் கொண்ட ஒருஸங்கம் மைலாபூரில் ஸ்தாபிக்கப்பட்டி

ருக்கிறது. இதில் வேதவேதாங்கங்களிற் கூறியபடி வித்யாப்யாஸம் செய்விக்கவேண்டுமென்று யோசிக்கப்பட்டிருக்கிறது. இந்த சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் புஸ்தகங்கள் எழுதி வெளிப்படுத்துவதும், பூர்வகாலத்திலுள்ள நான்கு ஜாதிகளின் வருணாசிரம தர்மத்தை நிலைக்குக்கொண்டு வருவதும், ஏழைகளையும் கீழ் வகுப்பார்களையும் முன்னுக்குக்கொண்டு வருவதற்குப் பணம் சேகரிப்பதும், இலக்கியங்களாகவும், மத விஷயமாகவும், பின்னும் உபயோகப்படத் தக்கனவாகவுமுள்ள புஸ்தகங்களை சேகரிப்பதும், எழுத்துப் பிரதிகளை அச்சிடுவதும், வேத வேதாந்த ரெவ்யூ என்ற ஒரு பத்திரிகையை நடத்துவதும், வைதீக மிஷன் காலேஜ் என்ற ஒரு காலேஜ் ஸ்தாபிப்பதுமாம். இந்தக் காலேஜில் கற்பிக்கப்படும் பல விஷயங்களோடு நேபாளத்து விதுஷியான ஓமா ஸகோதரியாரினால் சிறுமிகளுக்கும் ஸ்திரீகளுக்கும், இங்கிலீஷ், தையல் வேலை ஸங்கீதம் முதலியவைகளும் கற்பிக்கப்படும்.

CENSUS OF THE HINDUS.

**ஹிந்துக்களின் ஸங்கியை.**—சென்னை மாகாணத்து ஹிந்துக்கள், மகமதியர்கள், கிறுஸ்தவர்கள், மற்றையோர் இவர்களின் தொகையைக் கணக்கிட்டுப்பார்த்ததில் 1911-ம் வருஷக்கணக்கை உத்தேசித்து 1901-ம் வருஷக்கணக்கில் ஹிந்துக்கள் 100-க்கு 8 பேரே விருத்தியாயிருக்க, மகமதியர்கள் 100-க்கு 11 பேரும், கிறிஸ்தவர்கள் 16 பேருமாக விருத்தியடைந்திருக்கிறார்கள். ஹிந்துக்களின் பிறப்பு மாத்திரம் போன ஸென்ஸஸ் கணக்குக்காகக் குறையவில்லை. ஜனனத்தின் தொகை மட்டும் விருத்தியாயிருக்க, ஆள்களின் கணக்குக்குக் குறைவு உண்டாயிருப்பதற்கு சிசுக்களின் மரணமே காரணமாகும். இச்சிசுக்கள் திடசரீர முடையனவாயிராத ஒரு காரணத்தால் இறப்பதன்றி, தாய்மார்களின் பராமரிப்புக்குறைவாலும் இறந்துவிடுகின்றன. நமது தேசத்திலுள்ள பால விவாஹத்தின் கெட்ட வழக்கத்தினால் 14 வயதுள்ள பெண்கள் பெரும்பாலும் தாய்மார்களாய் விடுகிறார்கள். அவர்களுக்குக்குழந்தையை வளர்க்கும் பொறுப்பு எப்படி யுண்டாகும்?

LAWLEY INSTITUTE.

**லாலி இன்ஸ்டிட்யூட்.**—உதக மண்டலத்தில் இப்பெயர்கொண்ட ஒரு தர்மக்கட்டிடத்தை ஸ்தாபிக்க பொப்பிலி மகாராஜா முன்வந்து, ஐௗதுமீ 15-ம் தேதி அதற்கு அஸ்திவாரக்கல் நாட்டும்படி சென்னை கவர்னரை வேண்டினார். அவர் வேண்டுகோளுக்கு இசைந்த கவர்னரும் அவ்வஸ்திவாரக்கல்லை அன்று நாட்டினார். பொப்பிலி மகாராஜா தாம் இக்கட்டிடம் கட்டவேண்டியதற்குக் காரணம் யாதென்பதைப் பின்பு விவரிக்கப் புகுந்து, தாம் கிட்டத்தட்ட ஒரு வருஷகாலமாக சென்னை மாகாண நிர்வாக ஸபையில் ஒரு மெம்பராயிருந்தபோது, பெருந்தொகையைச் சம்பளமாகப்பெற்ற தாகவும், அப்பணத்தைத் தாம் நல்ல வழியில் செலவிட உத்தேசித்த தாகவும், அதன்மேல் உதகமண்டலத்திற்கு வரும் உத்தியோகஸ்தரல்லாதவர்கள் வஸிப்பதற்குத்தக்க விடுதியின்மையைக்கருதி அக்குறையை நிவர்த்திக்க ஒரு கட்டிடம் கட்ட வேண்டுமென்று கருதினதாகவும் சொன்னார். இக்கட்டிடம் அமைப்பதில் தாம் எந்தக்கவர்னருடைய நிர்வாகஸபையில் உத்தியோகம் பெற்றாரோ, அந்தக்கவர்னருடைய பெயர் ஸம்பந்தமாயிருக்க வேண்டுமென்றும், எந்த இடத்தில் உத்தியோகஸ்தர்களல்லாத கனவான்கள் தேக அஸௌகரியத்தின் பொருட்டு வந்தால் இடங்கிடைக்கப்பெறாமல் அவதிப் படுகிறார்களோ அந்த இடத்தில் அவர்களின் ஸௌகரியத்திற்காகவும் இக்கட்டிடம் தாம் கட்ட உத்தேசித் திருக்கிறதாகச் சொன்னார். பின்னும், அவர் தம்மைப்போன்ற ஜமீன்தார்கள் தமது நடவடிக்கையின் ஒழுங்கினால் கவர்னரின் நிர்வாக ஸபையின் மெம்பர்களாய் வரும்படியான யோக்யதையைப்பெறுவார்களென்றும், பெற்றபிறகு இந்தலாலி இன்ஸ்டிட்யூட்டைப் போன்ற வேறு தர்மங்களைச் செய்வார்களென்று தாம் நம்புவதாகவும் கூறினார்.

REPRESENTATIVE GOVERNMENT IN INDIA.

**இந்தியாவில் ஜன நாயகம்.**—இப்போது உலகமெங்கும் ஜன நாயகமே லக்ஷியமாக ஜனங்கள் விருப்பங்கொண்டு அதற்காக உழைத்து வருகிறார்கள். ஜனநாயகமென்பது, ஒரு தேசத்து ஜனங்கள் தங்கள் ப்ரதிநிதிகள் மூலமாய் தேச நிர்வாகம் செய்யுமுறை. இந்த முறை அமெரிக்காவைச் சேர்ந்த யுனைடெட் ஸ்டேட்ஸில் முழுமையும் ஸ்தாபிக்கப்பட்டு ஜனங்களே தங்கள் ப்ரதிநிதிகள் மூலமாய் தேச நிர்வாகத்தைச் சேர்ந்த ஸகல விவகாரங்



களையும் நடத்தி வருகிறார்கள். ப்ரான்ஸ், இங்கிலாந்து, ஆகிய தேசங்களிலும் இந்த முறை அநேகமாய் இருந்து வருகிறது. ஜர்மெனி, ஆஸ்ட்ரியா, இடாலி, ஜப்பான், முதலிய தேசங்களில் ஜனநாயகம் முழுதும் ஸ்தாபிக்கப்படாவிட்டாலும் இப்போதிருக்கும் ஏற்பாடுகள் ஜனநாயகத்துக்கு அஸ்திவாரமாயிருந்து அந்தலக்ஷியத்தையே பின்பற்றிச் செல்லுவனவா யிருக்கின்றன. இது வரையில் ஸ்வயேச்சாபத்தியம் அதாவது ஒரு ராஜாவும் அவன் மந்திரிகளும், தேசத்தை பரிபாலனம் செய்யும் முறையாயிருந்த தேசங்களும் அந்த முறையால் தற்காலம் ஜனங்களுக்குரிய நன்மைகள் பலவும் கைகூடுவதில்லையென்று நம்பி, ஜன ப்ரதிநிதிகள் அடங்கிய பார்லிமெண்ட் ஸ்தாபித்துக்கொண்டு தேச நிர்வாகம் நடக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டிருக்கின்றன. ருஷியா, துருக்கி, பெர்ஷியா, ஈஜிப்ட், ஸயாம், இந்தியா, இத்தேசங்களிலும் இந்த எண்ணமுண்டா யிருக்கிறது. ஸ்வயேச்சாபத்தியத்தை நீக்கி ஜனங்களின் ப்ரதிநிதி அடங்கிய ஸபைகள் தேச நிர்வாகத்தில் பங்கு பெற்று அதை வகிக்க ஆரம்பிக்குமானால், பிறகு இந்தமுறை வியாபித்து ஜனங்களுக்கு வரவிர அதிகமான ஸ்வதந்திரங்கள் உண்டாகி, அந்தஸ்துப் பேதங்களில்லாமல், ஸகல ஜனங்களும் தேச நிர்வாகத்தில் அக்கறை பாராட்டி, தங்கள் ப்ரதிநிதிகள் மூலமாய் தேசத்தை யாளும் முறையுண்டாக வெகு காலம் செல்லாது. இந்தியாவும் இப்போது சட்டஸபைகள் ஏற்பட்டு ராஜ்ய நிர்வாகத்தில் ஒருவிதமாய்ப் பங்கு பெற்றிருப்பதால் இது காலக்ரமத்தில் விசாலித்து ஜன நாயகமாய் முடியுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது.

THE UTTANKARAI CO-OPERATIVE CONFERENCE.

**ஊற்றங்கரையில் ஐக்கியநாணயச் சங்கங்களின் கான்பரென்ஸ்.**—சேலம் ஜில்லாவிலுள்ள ஊற்றங்கரை என்ற ஊரில் ஊற்றங்கரைத் தாலூக்காவைச் சேர்ந்த 17 ஐக்கியநாணயச் சங்கங்களின் ப்ரதிநிதிகளும், அதைச்சேராமல் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த 18 சங்கங்களின் ப்ரதிநிதிகளும் கூடி, இந்தச்சங்கங்களின் நடவடிக்கைகளைப்பற்றிக் கவனித்துப்பல தீர்மானங்கள் செய்தார்கள். சுமார் ஆயிரம் ஜனங்கள் வந்து கூடினதுமல்லாமல் ஜில்லா கலெக்டர் ஜட்ஜ்முதலிய உத்யோகஸ்தர்களும் வந்திருந்தார்கள். சேலம் அர்பன் பாங்கின் செக்ரிடெரியாயிருந்து இந்தச் சங்கங்களின் நன்மைக்காக உழைத்து வரும் மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் அக்ராஸனம் வகித்தார். உபசரணைக் கமிட்டி ப்ரஸிடெண்ட் மிஸ்டர் கே. சேஷகிரிராவ் இவர்கள் இருவரும் வழக்கம்போல் ப்ரஸங்கங்கள் செய்தார்கள். மிஸ்டர் சேஷகிரிராவ் அவர்கள் செய்த ப்ரஸங்கத்தின் ஸாராம்சத்தைப் பிழைக்கும் வழிக்காக ப்ரத்யேகமாய் எழுதி இன்னொரு பக்கத்தில் ப்ரசுரித்திருக்கிறோம்.

இந்த கான்பரென்ஸில் செய்த சில முக்கிய தீர்மானங்களாவன; விவஸாய இலாகாவில் ப்ரசுரமாகும் தமிழ்ப் பத்திரிகைகள் இந்த ஸொஸைடிகளுக்கும் கொடுக்கப் படவேண்டும். மத்திய ஸொஸைடிகளை அதாவது ஜில்லாவிலுள்ள பல சங்கங்களுக்குப் பொதுவாய் ஸ்தாபிக்கப்படும் பெரிய ஸொஸைடிகளை ஒன்று சேர்த்து இன்னும் பெரிய பொது ஸொஸைடி சீக்கிரம் ஸ்தாபிக்கப் படும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஸொஸைடிகளின் கணக்குகளை மாஸம் ஒரு முறை ஆடிட் செய்து பல ஸ்தல ஸொஸைடிகளை யூனியனாகச்சேர்க்க வேண்டும்; ஒவ்வொரு கிராமத்திலும் பொது ஸ்தலமென்று இருந்து அதில் கிராமவாஸிகள் கூடிப்பேசவும் படிக்கவும் வேறுவிதமாய்ப் பொழுது போக்கவும் வேண்டும். ஸொஸைடி மெம்பர்களுக்குள் வழக்குகள் நேரிட்டால் அவைகளைக் கோர்ட் முன்பாகக் கொண்டு போகாமல் பஞ்சாயத்து மூலமாய்த் தீர்த்துக்கொள்ள வெண்டும்.

A HINDU MARRIAGE REFORMS LEAGUE.

**ஒரு ஹிந்து விவாகத்திருத்த சங்கம்.**—ஹிந்துக்களுக்குள் விவாகத்தைப் பற்றின சில வழக்கங்கள் சமூகத்தின் அபிவிருத்திக்கு விரோதமா யிருக்கின்றனவென்ற எண்ணம் பலருக்கு உண்டாகி வருகிறபடியால், அவ்வழக்கங்களைத்திருத்தி நல்ல வழக்கங்கள் உண்டாகும்படி பல இடங்களில் பலமுயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. சென்னையிலும் இதற்காக ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சங்கத்தின் கமிட்டி ஸமீபத்தில் ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர அய்யர் வீட்டிற் கூடி பின்வரும் விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்தது: விவாக

ஸமயத்தில் வரஸுல்கம் வாங்குதல் பிசகென்றும், பெண்களுக்குப் பதினொரு வயது ஆவதற்கு முன்னால் விவாகம் செய்வது கூடாதென்றும், பெண்கள் பெரிய மனுஷிகளான பிறகு விவாகம் செய்வதை ஆதரிக்க வேண்டுமென்றும், இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றப்பல வழிகளில் முயற்சிசெய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இம்மாதிரிச்சங்கங்கள் பல விடங்களில் ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்தத்திருத்தங்களை ஜனங்கள் அறிந்து சிந்திக்கும்படியாகத் துண்டுப் பத்திரிகைகள் முதலியவைகள் பிரசுரம் செய்யப்படவேண்டும். வயது வந்த பெண்களுக்கு விவாகம் சாஸ்திர ஸம்மதமென்றிருக்கும் ஆதாரங்களைச் சேர்த்துப் பிரசுரம் செய்யவேண்டும். ஸ்கூல் பிள்ளைகள் இந்த நோக்கங்களை யறியும்படி ப்ரஸங்கங்கள் செய்யப்படவேண்டும். சென்னையிலும் மற்ற இடங்களிலும் கூட்டங்கள் கூடிப் பிரபலமாகி வரும் வரஸுல்க வழக்கத்தைத் தடுக்க வேண்டும். இந்தச் சங்கத்தின் மெம்பர்கள் வரஸுல்கம் வாங்கப்படும் விவாகங்களிலும் ஸம்பந்தப்படக்கூடாது. வயது வந்த பெண்களுக்கு விவாகமாகும்போது அந்த விவாகத்தில் இந்தச் சங்கத்து மெம்பர்கள் போயிருந்து அப்படி விவாகம் செய்கிறவர்களுடன் ஸமபோஜனம் செய்யவேண்டும். இப்படி விவாகம் செய்தவர்கள் ஜாதி ப்ரஷ்டம் முதலிய தொந்தரவுகளை அனுபவிக்கும்போது அவர்களுக்கு உதவி செய்ய அங்கங்கே சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். இவ்வாறு மைலாபூர் மீட்டிங்கில் தீர்மானங்கள் செய்யப்பட்டனவாம்.

THE DURBAR CELEBRATIONS.

**தர்பார் மகோத்ஸவம்.**—சென்ற மே௴ 22௳யில் சிம்லாவில் கனம்பொருந்திய ராஜா பிரதிநிதியவர்களால் பிறப்பிக்கப்பட்ட ராஜவிளம்பரத்தை அனுசரித்து, பின் வருபவைகள் ஜனங்கள் அறிவிப்புக்காக பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

டெல்ஹி நகரில் மாக்ஷிமை பொருந்திய சக்ரவர்த்தி அவர்களும், சக்ரவர்த்தினி அவர்களும், ராஜதோரணையோடு பட்டண ப்ரவேசத்துக்காக குறிப்பிட்டிருக்கும் 1911-௵ டிசம்பர்௴ 7௳ வியாழக்கிழமையும், அந்நகரில் சக்ரவர்த்தி அவர்களின் மகுடாபிஷேக தர்பார் நடத்த குறிப்பிட்டிருக்கும் வருகிற டிசம்பர்௴ 12௳ செவ்வாய்க்கிழமை தினமும், பப்ளிக்கு விடுமுறை நாள்களாகஇருக்கும். பப்ளிக்கு ஆபீஸுகள் எல்லாம் டிசம்பர்௴ 7௳முதல் 12௳ வரையில் அநேகமாய் மூடப்படும். டிசம்பர்௴ 23௳ முதல் ஜனவரி 1௳ வரையில் கிறிஸ்துமஸ் விடுமுறை நாளாயிருக்கும்.

மாக்ஷிமை பொருந்திய சக்ரவர்த்தி அவர்கள் தம்முடைய முடி சூட்டுதலாகிய மங்களகரமானவைபவத்தை இந்தியாவில் இருக்கும் தமதுப்ரஜைகளுக்கு தெரியப்படுத்தும் பொருட்டு தாமேநேரில் தர்பாரை நடத்துகிறார்கள்.

இந்த வைபமானது இந்தியாவில் ஒவ்வொருகிராமத்திலும் டிசம்பர்௴ 12௳ கொண்டாடப்பட வேண்டியதென்று ராஜ பிரதிநிதி அவர்களின் விருப்பமாயிருக்கிறது.

டெல்ஹி தர்பாரில் வாசிக்கப்படும் ராஜ விளம்பரம் எல்லாஜில்லா ஹெட்க்வாட்டர்களிலும் ஒவ்வொரு டிவிஷன், தாலூகா, டிப்டி தாசில்தார்களின் ஹெட்க்வாட்டர்களிலும், ஆஜரிலிருக்கும் ஜேஷ்ட உத்யோகஸ்தர்களாலும், ஒவ்வொரு கிராமத்திலும் அந்தந்த கிராமத்தலைவராலும் அன்றைய தினமே உச்சிகால வேளையில் பயிரங்கமாய் வாசிக்கப்படும்.

ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளுக்கு விருந்து அளித்தல், ஏழைகளுக்கு அன்னமிடுதல், குஸ்தி விளையாட்டுகள், ஊர்கோலங்கள், வாண வேடிக்கைகள் செய்தல், கச்சேரி, கோவில், ஸொந்த வீடுகள், கடைகள், தொழில் சாலைகள் இவைகளை தீபங்களால் அலங்கரித்தல், தெருக்களை தோரணம் முதலியவைகளினால் அலங்கரித்தல், இவ்விதமாய் விமரிசையாய் அந்த தினத்தைக்கொண்டாட வேண்டியதற்கு தக்க ஏற்பாடுகளைச்செய்யும்படி ஸ்தல கூட்டத்தார்களையும் நகரவாசிகளையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தாம் மகுடாபிஷேகம் கொண்ட புண்ணிய விசேஷத்தின் சிறப்பை இந்தியாவிலுள்ள தமது ப்ரஜைகளுக்கு அறிவிக்கும் கருணை பூண்டு நமது சக்ரவர்த்தியாயிருப்பவர் தம்பதி ஸமேதராய் தம்முடைய இந்தியா ராஜ்யத்துக்கு நேரில் விஜயம் செய்யும் பெரும் பாக்கியம் கிடைத்தது இதுதான் முதல் தடவை. இவ்விதப்பெரும் கருணையை தம் ப்ரஜைகளில் பாலரோடு விருத்தரும், தனிகரோடு ஏழையுமான ஒவ்வொருவரும் கூடியவரையில் தெரிந்து உணரும்படிக்கான விதமாய் மஹோத்ஸவத்தைக் கொண்டாட வேண்டியது.



## FOREIGN NEWS.

## அந்நியநாட்டு ஸமாசாரங்கள்.

THE HUSBAND WHO LOST HIS LIP.

**உதடை இழந்த புருஷன்.**—"நெட்டாலில் ஒரு காப்பிரி போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு நான்கு மனைவிகளிருந்தார்கள். அவன் ஒரு மனைவியைப் பார்த்துவிட்டு மற்றொரு மனைவியைப் பார்க்கப் போனபொழுது அவள் அன்போடு முத்தங்கொடுப்பதுபோல் பாவித்து முத்தமிட்டு அவனது உதட்டைத் துண்டாய்க் கடித்துக் கீழே துப்பிவிட்டாள், ரங்கூனிலும் பத்திராதிபராக இருந்த ஒருவரை. அவர் மனைவி அரிவாள் மணையைக்கொண்டு காதை அறுத்துவிட்டாள். இதெல்லாங் கலிகாலக் கொடுமையே," என்று பாண்டியன் பத்திரிகை கூறுகிறது.

THE MEDINA.

**மேடினா.**—மகாராஜா சக்ரவர்த்தி அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்வதை யுத்தேசித்து அவர்களுக்கென ஒரு கப்பல் பி. அண்ட் ஓ. கம்பெனியாரைத் தயாரிக்கும்படி ஆக்ஞாபித்தபடி அவர்களும் மெடினா என்ற கப்பலைத்தயார் செய்திருக்கிறார்கள். இந்தக்கப்பலின் நீளம் 560 அடி, அகலம் 62½ அடி. இது 20, 000 டன் சுமை ஏற்றக்கூடியது. 13000 டன்னுக்கு ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இதன் வேகம் 16, 000குதிரை ஒட்டமுடையதாய் மணிக்கு 19 நாட் (நாட் என்பது ஸுமார் ஒன்றேஅரைக்கால் மைலுக்கு அதிகம்) ஓடக்கூடியது. இக்கப்பல் மேல் முழுவதும் வெள்ளை நிறமுடையதாய் ராஜ நீலப்பட்டை யொன்று போடப் பட்டதாயிருக்கும். ஸாதாரணமாக யிருக்கும் பாய்மரங்களைத் தவிர்த்து தனிமரமொன்று கட்டப்படும். இதில் பட்டத்துக் கொடி பறக்கும். அநேக கப்பற் படைகளால் இந்தக் கப்பல் நிறையப் பெற்று அட்மிரல் கெப்பலால் ஓட்டப்படும். இதில் கம்பியில்லாத் தந்தியும் வைக்கப்பட்டிருக்கும்.

HIGH PRICES IN EUROPE.

**ஐரோப்பாவில் அதிகவிலை**—ஐரோப்பாக்கண்டத்தில் பல தேசங்களில் உணவுப் பொருள்களின் விலை மேன்மேலும் அதிகரித்து வருவதால் அங்குள்ள ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ப்ரான்ஸ் தேசக் கவர்ன்மெண்டார் உணவுப்பொருளின் விலையதிகரித்து வருவதைப்பற்றி கலகஞ் செய்கிறவர்களைக் கண்ணோட்ட மின்றித்தண்டித்து வருகிறார்கள்; அவ்வாறு செய்தும் கலகமொழியவில்லை. அங்கு முனிஸிபாலிடியார் அதிகவிலை கொடுத்து உணவுப்பொருள்களை வாங்கிக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். ஜர்மனியிலுள்ள வியாபாரிகள் தமது கவர்ன்மெண்டாருக்கு உணவுப் பொருளுக்கும் மாட்டின் தீனிக்கும் விலை யதிகரித்து வருவதால் அவற்றிற்கு விதித்துள்ள வரியைக் குறைக்க வேண்டு மென்றும் அவற்றை யன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யாது நிறுத்தவேண்டுமென்றும் பெட்டிஷன் செய்திருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து மாமிச உணவு இறக்குமதியாக உத்தரவாக வேண்டுமென்றுங் கேட்டிருக்கிறார்கள். ஜர்மனியிலுள்ள ப்ரஷ்யா கவர்மெண்டார் மாட்டுத் தீனியை வாங்கிக்குறைந்த விலைக்கு விற்க அதிகாரிகளுக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

AMERICAN MILLIONAIRES.

**அமெரிக்கா கோடீசுவரர்கள்.**—அமெரிக்காக்கண்டம் ஐரோப்பியர்களால்கண்டுபிடித்து நானூற்றுச்சில்லரை வருஷங்களாகின்றன. ஐரோப்பாக் கண்டத்தின் பல தேசங்களிலுமிருந்து ஜனங்கள் அமெரிக்காவுக்குக் குடியேறிப்போய் திரண்ட ஆஸ்தியைக்குவித்துப் போட்டார்கள். அமெரிக்கா முழுவதும் இப்போது 3828 கோடீசுவரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 1,60,000கோடி வெள்ளியை மொத்தத்தில் உடைத்தாயிருக்கிறார்கள். அதாவது அக்கண்டத்தின் தேச ஐசுவரியத்தில் ஐந்தில் ஒருபாகம் அவர்கள் கையிலிருக்கிறது. ஐக்கிய மாகாணங்களில் 20,000 பேருக்குஒருவன் 10லக்ஷம் வெள்ளி யுடைத்தான ஆஸ்திக்காரனாயிருக்கிறான். இந்த லக்ஷாதிபிரபுக்களில் நூற்றில் 88பேர் தங்களுடைய ஸொந்த பிரயாசத்தினால் மாத்திரம் அவ்வளவு பணக்காரர்களாயிருக்கிறார்கள். நூற்றில் 12 பேர் மாத்திரம் பூர்வீக ஸொத்துள்ளவர்கள். ஆகையால் அத்தேசத்தில் சில வருஷங்களுக்கு முன் ஏழைகளாயிருந்த அநேகர் இப்போது கோடீசுவரர்களாயும், லக்ஷாதிப்பிரபுக்களாயு மிருக்கிறார்கள். நமது தேசத்தில் அவ்வளவு சீக்கிரம் பணம் சம்பாதிக்கிறதற்கு வழியுண்டோ?

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் ஸப்டம்பர் மாஸம் 27உ ரிப்போர்ட்டுப்படி.

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 14 முதல் 19 |
| கொன்னைப்பட்டை ஷை | 12 முதல் 13 |
| கடப்பை கடுக்காய் ஷை | 8 முதல் 9 |
| சேலம் அரசகிரிஷை ஷை | 18 முதல் 20 |
| நல்லெண்ணெய் ஷை | 105 முதல் 115 |
| புங்கம் எண்ணெய் ஷை | 65 முதல் 82 |
| எட்டிக்கொட்டை ஷை | 16 |
| விளக்கெண்ணெய் ஷை | 76 முதல் 77 |
| கொட்டை முத்து .. | 11 |

| | ரூ. அ. பை. |
|---|---|
| பந்தர் பச்சை அரிசி 44 படி | 8 8 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 10 0 |
| கோதுமை 4 படி .. | 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் | $6\frac{1}{4}$ |
| வெங்காயம்(கடப்பை)பாரம் .. | 14 முதல் 15 |
| ஷை (பல்லாரி) ஷை .. | 13 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு | 16 0 0 |

METALS—உலோகங்கள்.

| | ரூ. |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ—மும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் .. | 204 முதல் 205 |
| செப்புத் தகடுகள் பாரம் .. | 245 |
| செப்புக்கட்டி ஷை .. | 225 |
| நாகம் ஷை | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 75 |
| ஈயம் ஷை .. | 54 |
| காரீயம் ஷை .. | 49 |
| வெள்ளீயம் ஷை .. | 180 வராகன். |

IRON—இரும்பு.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் ரூ. | $19\frac{3}{4}$—20 |
| சீமை .. .. .. | 42 |
| மருக்கி தகடு 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு .. .. | 27—28 |
| 8 பட்டை எஃகு .. .. | 23 |
| எஃகு வில்கட்டு .. .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 நெ. .. | 21 |
| சீமை .. .. .. | 40-46-49 |

## SEASON.

## காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1911ஹு ஏப்ரல் மீ 1-உயிலிருந்து அக்டோபர் 2உம் வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 26.09 | 32·19 |
| வால்டேர் | 15·46 | 25·20 |
| காக்கினாடா | 20·28 | 23·62 |
| மசூலிப்பட்டணம் | 22·95 | 25·32 |
| நெல்லூர் | 11·18 | 13·36 |
| மதராஸ் | 11·56 | 18·34 |
| கூடலூர் | 14·24 | 18·58 |
| நாகப்பட்டணம் | 9·37 | 12·93 |
| பாம்பன் | 0·25 | 5·48 |
| கொழும்பு | 26·30 | 45·49 |
| திருவநந்தபுரம் | 32·04 | 41·15 |
| கொச்சி | 89·40 | 90·10 |
| கள்ளிக்கோட்டை | 83·09 | 99·31 |
| மங்களூர் | 91·30 | 113·08 |
| மெர்க்காரா | 128·65 | 112·51 |
| ஐதாராபாத் | 19·57 | 26·59 |
| ரெய்ச்சூர் | | |
| பல்லாரி | 11·29 | 13·56 |
| கர்நூல் | 16·75 | 22·77 |
| கடப்பை | 17·29 | 21·98 |
| ஹாஸ்ஸான் | 22·55 | 20·61 |
| பெங்களூர் | 20·30 | 24·81 |
| கொடைக்கானல் | 35·48 | 31·66 |
| உதகமண்டலம் | 43·61 | .. |
| கோயம்புத்தூர் | 13·64 | 9·40 |
| வேலூர் | 18·22 | .. |
| சேலம் | 16·76 | 27·84 |
| திருச்சினாப்பள்ளி | 13·64 | 16·54 |
| புதுக்கோட்டை | 29·91 | .. |
| மதுரை | 18·31 | 17·43 |
| திருநெல்வேலி | 3·67 | 7·53 |

# பிழைக்கும் வழி

# PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. } விரோதிகிருதுஹு அர்ப்பசிமீ—OCTOBER 1911. { ஸஞ்சிகை 10. No. 10.

## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு | .. 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி | .. 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி | .. 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.

# PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஞு அர்ப்பசிமீ—OCTOBER 1911. | ஸஞ்சிகை 10. No. 10.


பொருளடக்கம்.


**பத்திராதிபர் குறிப்புகள்** — பக்கம்

ஒரு மரம் அரக்கும் ஆலை-எள்ளு-கரும்பு—பசுக்களுக்குக் கொழுத்த ஆகாரம்-சாராயம் சேர்த்து போஷிக்கப்பட்ட கோழிகள்-பல்குச்சி நல்லதா—கிட்டின பந்துக்களுக்குள் கல்யாணம்-இந்தியாவில் கம்பெனிகள்—வௌவால்த் தொந்தரவு-மதராஸ்ஸம்ஸ்க்ருதகாலேஜ்-ஸ்நாநம் செய்தல் .. 507-512

**விசேஷ வியாஸங்கள்**

செட்டாய்க் குடித்தனம் செய்தல் —வி. கே. ராமாநுஜாசாரி .. 513

முகஜாடை. —பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார் .. 515

கொத்தவரை —என். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் 518

மூலாதாரப் படிப்பு —எஸ். வென்கோபாசாரியார் லெக்சர் 521

கோழி வளர்த்தல் —ஜோதிமணி .. .. 524

அகல்யாபாய் .. .. 525

**விசேஷத்திரட்டு**

ஸுகாதாரத்தைப்பற்றி வினுவிடைகள் 529

நான் படும்பாடு .. .. 535

**பத்திரிகை ஆராய்ச்சி**

மூங்கிலும் அதன் உபயோகமும் .. 537

எறும்புகள் .. .. .. 538

ஒரு புது தினுசு நெல் .. .. 538

கால்நடை இன்ஷ்யூரென்ஸ் ஸொஸைடிகள் .. .. .. 539

வெள்ளைப்பூ பூக்கும் இலவைமரம் .. 540

அன்னுசிப்பழ முரபா .. .. 540

**சிறுவர் பகுதி** .. .. .. 541-542

**ஸ்திரீகள் பகுதி** .. .. 543-544

**பகுதிக் குறிப்புகள்**

விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. 545-554

**மாஸ வர்த்தமானம்** .. .. 555-559

**மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. 560


## CONTENTS.


**Editorial Notes** — PAGE

A SAW MILL-SESAMUM GROUND NUT-SUGAR CANE-CONCENTRATED FEEDINGS STUFFS FOR COWS-WINE FED FOWLS-IS THE TOOTH BRUSH SANITARY-INTERMARRIAGE OF RELATIONS-COMPANIES IN INDIA-THE MADRAS SANSKRIT COLLEGE-THE BAT NUISANCE BATHING ... 507-512

**Special Articles**

LIVING WITHIN MEANS Rao Bahadur V. K. Ramanuja chariar B. A ... 513

EXPRESSION OF THE EMOTIONS P. T Srinivasa Aiyangar M. A, F. M U. ... 515

KOTHAVARAI N. V. Subramania Sastrial ... ... 518

PRIMARY EDUCATION MR. S. Venkoba Chariar's Lecture ... 521

POULTRY BREEDING, Jotimani ... ... ... ... 524

AHALYA BAI ... ... ... ... 525

**Selections**

A CATECHISM ON SANITATION C. T. H, Johnson, I. C. S. ... ... 529

THE WOES I SUFFER FROM ... ... 535

**Review of the Press**

The Bamboo and its uses ... ... 537

Ants ... ... ... ... 538

A new kind of Paddy ... ... ... 538

Cattle Insurance Societies ... ... ... 539

White Silk Cotton tree ... ... ... 540

Pineapple Jam ... ... ... ... 540

**The Boys' Section** ... ... ... 541-542

**The Ladies' Section** ... ... ... 543-544

**Departmental Notes**

Agricultural Notes ... ... ... ... 545

Industrial Notes ... ... ... ... 547

Educational Notes ... ... ... ... 548

Scientific Notes ... ... ... ... 549

Medical Notes ... ... ... ... 550

Legal Notes ... ... ... ... 551

Personal Notes ... ... ... ... 552

Fun and Anecdote ... ... ... ... 553

Curiosities ... ... ... ... 554

**News of the Month** ... ... ... 555-559

**Madras Market Reports** ... ... ... 560




## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### A Saw Mill.

ஒரு மரம் அறுக்கும் ஆலை.—மதுரையில் எஸ். ஏ. வெங்கடகிருஷ்ணய்யர் அண்ட் ஸன்ஸ் கம்பெனியார் மதுரைமேலச் சந்தைப் பேட்டையில் அவர்களுடைய மரத்தொட்டியில் ஒரு மரம் அறுக்கும் யந்திரம் ஸ்தாபித்திருக்கிறார்கள். தென் ஜில்லாக்களில் இதுதான் முதல் முதல் யந்திரத்தைக்கொண்டு மரவேலை செய்யும் சாலையாகும்.

### Sesamum.

எள்ளு.—சென்னை ராஜதானியிலுள்ள ரயத்வாரி கிராமங்களில் சென்ற ஸெப்டம்பர் மாஸம் முடிய, எள்ளு ஸாகுபடி செய்த நிலங்களின் விஸ்தீர்ணம் 3,04,300, ஏகரா. அதாவது போனவருஷம் அதே மாஸம்வரையில் ஸாகுபடியான நிலங்களில் 100-க்கு 10 பங்கு கம்மி. ரத்வாரியைத்தவிர, இதர கிராமங்களில் ஸாகுபடிசெய்த நிலங்களின் விஸ்தீரணம் 34,800 ஏகரா. இது போனவருஷத்தை விட 3400 ஏகரா கம்மி. மொத்தத்தில் பயிர் நன்றாக இருக்கிறதாம்.

### Ground nut.

மணிலாக்கொட்டை.—மதராஸ் ராஜதானி ரயத்வாரி கிராமங்களில் போன செப்டம்பர் மீ முடிய, மணிலாக்கொட்டை ஸாகுபடி செய்த நிலங்களின் விஸ்தீரணம் 561,000 ஏகரா. அதாவது போன வருஷத்தை விட இந்த வருஷம் 100க்கு, 8 பங்கு ஜாஸ்தி. ரயத்வாரியில்லாத, இதர கிராமங்களில் ஸாகுபடியான நிலங்களின் விஸ்தீரணம் 10,900 ஏகரா. பயிர் நன்றாயிருக்கிறதாம்.

### Sugar cane.

கரும்பு—சென்னை ராஜதானியிலுள்ள ரயத்வாரி கிராமங்களில் போன செப்டம்பர் மீ முடிய கரும்பு பயிராக்கப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம் 48,100 ஏகரா. இது போன வருஷத்தை விட 6,600 ஏகரா ஜாஸ்தி. ரயத்வாரியல்லாத மற்ற கிராமங்களில் ஸாகுபடியான நிலங்களின் விஸ்தீரணம் 1700. போன வருஷம் 2500 ஏகரா நிலங்கள் ஸாகுபடியாயின. ஸாகுபடியாயிருக்கும் கரும்பு நன்றாயிருக்கிறதென்று தெரியவருகிறது.

### Concentrated Feeding Stuffs for Cows.

பசுக்களுக்குக் கொழுத்த ஆகாரம்.—பசுக்கள் நன்றாய்க் கறக்க வேண்டுமென்றும் வெண்ணெய் எடுக்கவேண்டுமென்று எண்ணி விவஸாயிகள் பிண்ணாக்கு முதலிய கொழுத்த ஆகாரங்களை மாடுகளுக்குத் தீனியாகவைக்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் சிலர் இப்படிச் செய்வது பிசகென்றும் பிண்ணாக்கு முதலிய கொழுத்த தீனிபோடுவதால் பாலும் வெண்ணெயும் அதிகமாகக் காணுமானாலும் சும்மாப்போட்டுக்கொண்டே போனால் தக்கபடி பலன் கிடைக்காதென்றும் சொல்லுகிறார்கள். இது விஷயமாய் இங்கிலாந்தில் ஸஸ்ஸெக்ஸ், கென்ட், ஸர்ரே முதலிய ஜில்லாக்களில் செய்து பார்த்த பரீட்சைகளில் பிண்ணாக்கு முதலிய புஷ்டியான தீனியை மிதமிஞ்சிப் போடுவது தக்கபடி லாபம் கொடுக்காதென்று ஏற்படுகிறது.

### Wine fed fowls.

சாராயம் சேர்த்து போஷிக்கப்பட்ட கோழிகள்.—மான்ஷர் ஜுபேர் என்பவர் ப்ரான்ஸ் தேசத்தில் பான்டென்ப்ளு என்னும் ஊரில் விவஸாய காலேஜில் ப்ரொபஸர். இவர் ஒரே ஜாதியான பன்னிரண்டு கோழிகளைப் பொறுக்கி, ஆகிய ஆறு ஜோடிகளில் ஒன்றிற்கு மட்டும் ஸாதாரணமாய்ப் போடும் ஆகாரத்தோடு

சாராயத்தில் நனைத்த ரொட்டித்துண்டைகூட சேர்த்துப்போட்டார். இப்படி மழைகாலத்தில் நாலு மாஸத்தில் மட்டும் பல வருஷங்களுக்குச் செய்து பார்த்தார். இப்படி செய்து பார்த்ததில் சாராயம் சேர்ந்த ஒவ்வொரு கோழியும் மற்றவைகளைப் பார்க்கிலும் ஜாஸ்தியாகவே ஸுமார் 20 வீதம் முட்டைகளிட்டனவாம். முட்டை வியாபாரத்துக்காக கோழி வளர்ப்பவர்கள் செய்து பார்க்கலாம்.

### Is the Tooth Brush Sanitary?

பல்குச்சி நல்லதா?—பல் தேய்ப்பதில் நாகரிகமுள்ளவர்கள் குச்சிகளை விசேஷமாய் உபயோகப்படுத்துகிறார்கள். கிராமந்தரங்களில் உள்ளவர்கள் அப்பப்போ ஆலம்விழுதையோ வேப்பம் குச்சியையோ ஒடித்துத் தேய்த்துவிட்டு தேய்த்த குச்சியை எறிந்து விடுகிறார்கள். பட்டண வாஸங்களிலுள்ளவர்கள் தந்தம் முதலிய பிடிகளுள்ள குச்சிகளை வாங்கி வைத்துக்கொண்டு பல்களை விளக்கி விட்டு, குச்சியை அலம்பிவைத்து, மறுபடியும் அதையே மறுநாள் உபயோகிக்கிறார்கள். என்ன அலம்பிவைத்தாலும் குச்சியில் பாக்டீரியா அதாவது விஷக்ருமிகள் ஒட்டிக்கொண்டு வியாதிகளை உண்டாக்குமென்று டாக்டர் கார்மல் ஜோன்ஸ் என்பவர் சொல்லுகிறார். இப்படிச் சொல்வது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் காலையில் எழுந்திருந்ததும் ஒருவன் வாயில் ஸாதாரணமாய் 300 கோடி பாக்டீரியாக்கள் இருக்கின்றனவாம். ஒரு நல்ல பல் குச்சியைப் போட்டு பல்லை விளக்கினால் ஸுமார் 75 கோடி பாக்டீரியாக்கள் ஒழியும். வேறொருதடவை ஒரு பல்பொடியையும் பல்குச்சியையும் உபயோகித்து பல் தேய்த்தபோது 12 கோடி பாக்டீரியாக்கள் தான் வாயில்தங்கி இருந்தனவாம். இப்படிக்கு பல்தேய்த்தும் வாயில் ஏராளமான பாக்டீரியாக்கள் இருப்பதால், பல் குச்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் பாக்டீரியாக்கள் ஸ்வல்பந்தானென்று சொல்லவேண்டும். தவிர, பல் குச்சிகள் தினம் ஒருதடவை தான் நம்முடைய தேசத்தில் உபயோகப்படுகின்றன. நாள் முழுவதும் அவைகள் காய்ந்து உலர்ந்து போகும். அதனால் அந்தக் குச்சிகளிலுள்ள பாக்டீரியாக்களில் அனேகம் இறந்துபோகும். ஆகவே ஒரே பல்குச்சியை உபயோகித்தால் ஸுகாதாரத்துக்குக்கேடு ஒன்றுமில்லை என்று எண்ணலாம்.

### Intermarriage of Relations.

கிட்டின பந்துக்களுக்குள் கலியாணம்.—அனேகமாய் எல்லா ஜாதியார்களுக்குள்ளும் கிட்டின பந்துக்கள் ஒருவரோடு ஒருவர் கலியாணம் செய்துகொள்ளக் கூடாதென்று ஆசாரத்தில் அனுஸரித்து வருகிறார்கள். ஆனால் நம்மவர்களுக்குள் அக்காள் பெண்ணை தம்பி கலியாணம் செய்துகொள்வதும் அத்தான் அம்மாஞ்சிகள் அம்மங்காள் அத்தங்காள்களை கலியாணம் செய்துகொள்வதும் வழக்கத்தில் நடந்து வருகின்றன. இப்படிச் செய்துகொள்வது நல்லதா கெட்டதா என்பதை விசாரிப்போம்.

ஒரே வயிற்றில் பிறந்த பெண்களும் பிள்ளைகளும் அல்லது அண்ணன் தம்பி குழந்தைகளும் ஒருவரோடு ஒருவர் கலியாணம் செய்துகொள்ள நாகரிகமுள்ள ஜனங்கள் கட்டோடு ஸம்மதிப்பதில்லை. இதற்கு மனதுதான் முக்கியகாரணம். கிட்டின பந்துக்கள் கலியாணம் செய்துகொண்டால் ஸந்ததி உண்டாவதில்லை என்றும், ஊமை, செவிடு, பைத்தியம் முதலிய குறைகளுள்ள குழந்தைகள் பிறக்குமென்றும் சொல்வதுண்டு. கிட்டின பந்துக்களாய்க் கலியாணம் செய்துகொண்ட 883 தம்பதிகளுக்குப் பிறந்த 4013 குழந்தைகளில் நூற்றுக்கு 61 வீதம் ஏதாவது ஒரு குறையுள்ள குழந்தைகளாயிருந்தனவாம். ஆனால் கலியாணம் செய்துகொள்ள உத்தேசிக்கும் கிட்டின பந்துக்களின் முன்னோர்களுடைய குடும்பத்தில் தலைமுறை தத்வமாய் வரும் ஏதாவது வியாதி, முதலிய குற்றங்கள் இருந்தாலொழிய, அவர்கள் கலியாணம் செய்துகொள்வதில் ஆக்ஷேபணை இல்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். இது விஷயமாய் மோயன்காஸ் என்னும் ஒரு சாஸ்திரி ஒரு ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

பூச்சிகள் அற்ப வயதுள்ளவைகள். ஆகையால் அவைகளில் ஒரு ஆண்பெண்ணை எடுத்து ஸந்ததி உண்டாக்கி, 75 தலைமுறைகளை உண்டாக்கினார். ஒவ்வொரு தலைமுறையிலும் ஒரே வயிற்றில் பிறந்த ஆணையும் பெண்ணையும் சேர்த்தும் உண்டான ஸந்ததிகளுக்கு யாதொரு குறையும் ஏற்படவில்லையாம். ஸந்ததிகள் வலிமையிலாவது; ஸந்ததி உண்டாக்கும் திறமையிலாவது, பருமனிலாவது, வயதிலாவது, யாதொரு பேதமுமில்லாமலிருந்தனவாம். மோயன்காஸ் ஆராய்ச்சி செய்ததில் இன்னொன்றும் சொல்லுகிறார். அதாவது, ஒரு தம்பதிக்கு ஆண் பிறப்பதும் பெண் பிறப்பதும் தாயைப் பொறுத்ததென்றார். புருஷன் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் ஸரி பெண்ணின் தாய்வர்க்கத்தில் பெண்கள் ஜாஸ்தியானால் பெண்களே ஜாஸ்தி பிறக்குமாம். வேறுசிலர் இன்னொன்றும் சொல்லுகிறார்கள். பெண்களுக்கு போஷாக்கு ஜாஸ்தியானால் பெண் பிறக்குமென்றும், சாப்பாட்டுக் கில்லாத ஸ்திரீகளுக்குப்பிள்ளை பிறக்குமென்றும் சில ஆராய்ச்சிகளில் ஏற்படுகிறது.

### Companies in India.

இந்தியாவில் கம்பெனிகள்.—இந்தியன் கம்பெனி ஆக்ட்டு 1882-ம் வருஷத்தில் அமுலுக்கு வந்தது. அதுமுதல் 1909-1910 வருஷம் முடிய 5441 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. இவைகளில் 3279 கம்பெனிகள் நஷ்டமடைந்தன. இவைகளைப்பற்றிய விவரங்கள் முழுமையும் தெரியவில்லை. ஆனால் அவைகள் இன்னவைகளாக இருந்திருக்க வேண்டுமென்று 1909-1910-ம் வருஷத்தில் நின்றுபோன கம்பெனிகளின் விவரங்களைக்கொண்டு ஊகித்துக் கொள்ளலாம். இந்த வருஷத்தில் மொத்தத்தில் 148 கம்பெனிகள் நின்றுபோயின. அவைகளில் 58 கம்பெனிகள் லேவாதேவி, இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள். இவைகளில் போட்ட பணம் 15,03,834 ரூபாய். இந்த 148 கம்பெனிகளில் 54 கம்பெனிகள் நம்முடைய ராஜாதானியைச் சேர்ந்தவைகள். அவைகளில் 40 கம்பெனிகள் லேவாதேவிக் கம்பெனிகள். இவைகளில் போட்ட முதல் ரூ.14,73,636. பாக்கி 14 கம்பெனிகள் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள். இவைகளின் முதல் ரூ.16,318. 1909-1910-ம் வருஷத்தில் மூடப்பட்ட கம்பெனிகளில் பாதிக்குமேல் அதாவது 75 கம்பெனிகள் நம்முடைய ராஜாதானியைச்சேர்ந்தவைகள். வங்காளத்துக் கம்பெனிகள் 23, பம்பாய்க் கம்பெனிகள் 21, ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்தவைகள் 14, பஞ்சாபைச் சேர்ந்தவைகள் 10. நின்றுபோன 148 கம்பெனிகளின் மூலதனம் 106,04,088 ரூபாய்.

1882 முதல் 1909-1910-ம் வருஷம் முடிய 3279 கம்பெனிகள் நஷ்டப்பட்டன என்று மேலே சொன்னோம். அவைகளில் 1594 கம்பெனிகள் அடியோடு நின்றுபோயின. பாக்கி 1685 கம்பெனிகள் செத்தும் சாகாதனவாயும் இருக்கின்றன. நின்றுபோன 1594 கம்பெனிகளில், வங்காளத்தைச் சேர்ந்தவைகள் 654, மதராஸைச் சேர்ந்தவைகள் 374, பம்பாயைச் சேர்ந்தவைகள் 381. தடுமாடுகிற 1685 கம்பெனிகளில் 462 பங்காளத்

தைச் சேர்ந்தவைகள், 732 மதராஸைச் சேர்ந்தவைகள், 303 பம்பாயைச் சேர்ந்தவைகள்.

இந்தியாவில் 1909-1910-ம் வருஷத்துக் கடைசியில் வேலை செய்துவந்த கம்பெனிகளில் 544 கம்பெனிகள் பம்பாயைச் சேர்ந்தவைகள். இவைகளில் 155 கம்பெனிகள் பஞ்சாலைகள், 79பருத்தி ப்ரெஸ்கள். இவ்விரண்டிலும் இட்டிருக்கும் மொத்தப் பணம் ரூ.17, 48,019. இதில் பெரும்பாகம் இந்தியர்கள் பணமே. வியாபாரங்களை நிர்வகித்து வருகிறவர்களும் இந்தியர்கள். வங்காளத்தில் 543 கம்பெனிகள் வேலைசெய்து வந்தன. இவைகளில் 120 கம்பெனிகள் டீ ஸம்பந்தமாயும், 115 கம்பெனிகள் நிலக்கரி ஸம்பந்தமாயும், 35 கம்பெனிகள் ஜ-ஊட்(சணல்) ஸம்பந்தமாயும் உள்ளவைகள். இவைகளில் வெகுவாய் இந்தியர்கள் ஸம்பந்தமில்லை. சென்னை ராஜதானியில் 1909-1910-ம் வருஷமுடிவில் 481 கம்பெனிகள் வேலைசெய்து வந்தன. அவைகளில் 294 கம்பெனிகள் லேவாதேவி, இன்ஷ்யூரின்ஸ் கம்பெனிகள், 23 பஞ்சாலைகள், 17 பருத்தி ப்ரெஸ்கள். லேவாதேவி கம்பெனிகளில் பணம் போட்டிருப்பவர்களும் அவைகளை நிர்வகித்து வருகிறவர்களும் இந்தியர்கள்தான். ஆனால் மேலே சொல்லியபடி ஒரே வருஷத்தில் 44 கம்பெனிகள் போகுமானால் அவைகளின் நிர்வாகத்தை என்னென்று சொல்வது?

மொத்தத்தில் சென்ற 28 வருஷத்தில் வங்காளத்தில் 1659. கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. அவைகளில் 1116 நின்றுபோயின. பாக்கி இருப்பவைகள், அநேகமாய் எல்லாம் சுதேசிக் கம்பெனிகள். அவைகள் நன்றாயும் நடந்து வருகின்றன. மதராஸில் 1587 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. அவைகளில் 1106 நின்றுபோயின. பாக்கி எல்லாம் தடுமாறும் ஸ்வதேசிக் கம்பெனிகள். பம்பாயில் 1228 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. நின்று போனவைகள் 684.பாக்கி இருக்கிறவைகளில் பாதிக்குக் குறைச்சலில்லாமல் ஸ்வதேசிக் கம்பெனிகள்.

## The Bat Nuisance.

வௌவால்த் தொந்தரவு.—கோவில்களிலும் பாழடைந்த வீடுகளிலும் பங்களாக்களிலும் வௌவால்கள் அதிகமாய்க்கூடி அவைகளில் வஸிக்கிறவர்களுக்கு ரொம்பத் தொந்தரவுக் கொடுப்பதை எல்லாரும் அறிவார்கள். இந்த வௌவால்களைத்தொலைக்க ஒருவர் ஒரு உபாயம் சொல்லுகிறார். எந்த அறையில் வௌவால் ஜாஸ்தியாக இருக்கிறதோ அந்த உள்ளின் நாலு பக்கத்திலும் உள்ள எல்லா ஓட்டைகளையும் அடைத்துவிட்டு இரண்டடி சதுரமுள்ள ஒன்றை மட்டும் திறந்து வைக்க வேண்டும். இந்த ஒற்றை ஓட்டையின்வாயில் வௌவால் நுழையக்கூடாமல் நெருக்கிப் பின்னியிருக்கும் ஒரு மீன் பிடிக்கும் வலையைக் கட்டி வௌவால்களை உள்ளேயிருந்துவிரட்ட வேண்டும். அப்பொழுது அந்த வலை போட்டிருக்கும் ஒரே ஓட்டைவழியாய் எல்லா வௌவால்களும் ஓட எத்தனிப்பதால் ஒன்றன்மேல் ஒன்று விழுகிறது. அப்பொழுது அவைகளை சுலபமாய்க் கொன்றுவிடலாம். இதைத்தவிர துபாக்கிபோட்டு சுடுவது, புகை போடுவது, முள்ளைக்கட்டுவது இவைகளெல்லாம் பிரயோஜனப்படாது. மேற்கண்டபடி ஒருவர் ஒரு பாரெஸ்ட் பங்களாவில் செய்து ஒரு தடவையில் 79 வௌவால்களைக்கொன்று அவைகளை ஒழித்தாராம்.



## The Madras Sanskrit college.

மதராஸ் ஸம்ஸ்க்ருத காலேஜ்.—ஸமீபத்தில் நம்முடைய ராஜதானி மகாகனம் பொருந்திய கவர்னர் ஸர் ஆர்தர் லாலி அவர்கள் அக்ராஸனாதிபதியாயிருந்து இந்த காலேஜில் படித்துத் தேறிய மாணாக்கர்களுக்கு ஸர்டிபிகேட்டுகள் கொடுத்தார். அப்பொழுது இந்த காலேஜ் கமிட்டியின் ப்ரெஸிடெண்டாகிய கனம் பி. ஆர். ஸுந்தரய்யர் அவர்கள் அதன் வரலாற்றை எடுத்துச் சொன்னார். கல்கத்தா காசி இந்த நகரங்களில் ஸம்ஸ்க்ருத உயர்தரப்படிப்புக்குக்காக கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட காலேஜ்கள் இருக்க மதராஸில் அப்படிப்பட்ட காலேஜ் ஒன்றுமில்லை.

மதராஸ் ஸர்வகலாசாலையில் படிக்கும் மாணாக்கர்களுக்கு ஸம்ஸ்க்ருதத்தில் உபாயஞானந்தான் தேவை. அவர்கள் ஹிந்துசாஸ்திரம் முதலிய உயர்ந்த ஸம்ஸ்க்ருதப் படிப்புக்கு அக்கரைப்படும்படியான தூண்டுகோல் ஒன்றுமில்லை. ஐரோப்பியர்கள் ஹிந்துக்களின் மதங்களும் சாஸ்திரங்களும் மிகவும் சிறந்தவைகள் என்று புகழ்ந்து வரும்பொழுது அவைகளை நிலைநிறுத்தும்படியான ஒரு ஸ்தாபனங்கூட தென்னிந்தியாவில் இல்லாதிருப்பது பெருங்குறையாயிருந்தது. இந்தக் குறையை நிவர்த்திக்க ஸம்ஸ்க்ருத வித்வான்களும் இங்கிலீஷ் ஸம்ஸ்க்ருதம் இரண்டும் தெரிந்த விற்பன்னர்களும் அடங்கிய ஸம்ஸ்க்ருத காலேஜ்ஒன்றைஏற்படுத்துவதுதான் ஸரியென்றெண்ணி கனம் வி. கிருஷ்ணஸாமி அய்யர், ராவ் பகதூர் ஏ. கிருஷ்ண ஸாமி அய்யர், ஏ. எஸ். பாலஸுப்ரமணிய அய்யர் ஆகிய மூன்று பேர்களும் மதராஸ் ஸம்ஸ்க்ருத காலேஜ் என்று பெயரிட்டு இந்த காலேஜை 1906-ம் வருஷம் பிப்ரவரி ௴ 1௳ ஏற்படுத்தினார்கள். பிறகு



வி. கிருஷ்ணஸாமி அய்யர்.

காலஞ்சென்ற முனிஸீப் ஸ்வாமிநாத சாஸ்திரியின் சொத்திலிருந்து 19000 ரூபாய் இந்த காலேஜுக்குக் கொடுக்கப்பட்டதால் அதற்கு ஸ்வாமிநாத வேத பாடசாலை என்றும் பெயர் கூட்டி வைக்கப்பட்டது.

இந்த காலேஜில் ஸகல வித ஸம்ஸ்க்ருதப் படிப்புகளும்சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. சாஸ்திரம் காவ்யம் முதலிய விஷயங்களைப் பற்றி மாணாக்கர்கள் வாசித்து வாதிக்கும் பொருட்டு ஒருதார்க்கிக ஸபையும் இருக்கிறது. இதில் பையன்களால் வாசிக்கப்படும் வியாஸங்கள் ஸம்ஸ்க்ருத பத்திரிகைகளில் ப்ரசுரஞ்செய்யப்படுகின்றன. ஒரு புஸ்தகசாலையும் இருக்கிறது. இதில் 1200 ஸம்ஸ்க்ருத புஸ்தகங்கள் இருப்பதோடு பல ஸம்ஸ்க்ருத பத்திரிகைகளும் வரவழைக்கப்படுகின்றன. எந்நாளும் எல்லா ஜனங்களும் காலமே 7

மணி முதல் ஸாயந்திரம் 5 மணி வரையில் போய் புஸ்தகசாலையில் படிக்கலாம்.

இந்தக் காலேஜ் சிப்பந்திகள் முதலியவைகளுக்கு வருஷம் 3400 ரூபாயும், பையன்களின் சாப்பாடு முதலியவைகளுக்கு 3000 ரூபாயும், ஆக 6400 ரூ. வருஷம் செலவாகிறது. இந்தக் காலேஜுக்குள்ள மூலதனம் 69,000 ரூபாய். இதில் 45,000 ரூபாய் கனம் வி. கிருஷ்ண ஸாமி அய்யரால் கொடுக்கப்பட்டது. 19,000 ரூபாய் ஸ்வாமிநாத சாஸ்திரியள் சொத்திலிருந்து வந்தது. 5000 ரூபாய் காலஞ்சென்ற வி. ஆர். பட்டாபிராமய்யர் ஞாபக சின்னமாக அவருடைய குமாரர் வி. பி. ராமஸ்வாமி அய்யர் கொடுத்தது. 1907 வருஷம் முதல் கவர்ன்மெண்டார் வருஷம் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுத்து வருகிறார்கள். 1908-ம் வருஷம் முதல் இரண்டு பிள்ளைகளுக்காக மைஸூர் ஏ. அண்ணைய பண்டிதர் வருஷம் ஒன்றுக்கு 200 ரூபாய் கொடுத்து வருகிறார்.

நம்முடைய தேசத்தில் பணத்தை த்ருணமாக எண்ணி தர்மஞ் செய்கிறவர்கள் எத்தனையோ பேர்கள். ஆனால் அவர்கள் செய்யும் தர்மங்களெல்லாம் பரலோகத்தை உத்தேசித்து மோக்ஷஸாதனத்துக்காக செய்யப்படுகின்றன. அதனால், செய்யப்படும் தர்மங்களெல்லாம் கோவில்களில் பூஜைசெய்வதற்கு பெரும்பான்மையாய் உபயோகப்படுகின்றன. இப்பொழுது கொஞ்ச காலமாகத்தான் வித்யாதானமே பெருந்தர்மம் என்று ஜனங்கள் மனதில் தோன்றி வருகிறது.

**Bathing.**

**ஸ்நாநம் செய்தல்.**—ஒரு ஊரில் அம்மை, பேதி, முதலிய வியாதிகள் வந்தால் சில கீழ் ஜாதியார் மட்டும் அவைகளுக்கு இரையாகிறார்கள். இதற்கு அவர்களுடைய அசுத்த நடவடிக்கைகளே காரணமென்று எண்ண ஹேதுவாயிருக்கிறது. தினந்தோறும் ஸ்நாநம் செய்து துணிகளைத் தோய்த்துக்கட்டிக் கொள்ளுகிறவர்களுக்கு விசேஷமாய் வியாதி வராது. இது வீண் உபதேசமல்லவென்று அமெரிக்காவில் இல்லிநாய் என்னும் ஜில்லாவில் அரோரா என்னும் பட்டணத்தில்செய்த ஒரு விநோத உத்தரவால் ஏற்படுகிறது. அந்தப்பட்டணத்தில் கொஞ்சகாலமாக சாவுகள் ஜாஸ்தியாயும், வியாதிகள் அதிகமாயும் இருந்தனவாம். அங்கே உள்ள ஜனங்களில் பெரும்பான்மையோ கூலிகள். இவர்களுக்குள்ளே தான் வியாதியும் சாவும் ஜாஸ்தியாயிருந்தன. இதற்காக அந்தப்பட்டணத்து சுகாதார உத்யோகஸ்தர்களும் போலீஸாரும் ஒன்று சேர்ந்துகொண்டு ஒரு உத்தரவு போட்டார்கள், அதென்னவென்றால், அந்தப் பட்டணத்திலுள்ள ஒவ்வொரு ஜனமும் வாரத்தில் ஒரு தடவையாவது கட்டாயம் ஸ்நாநம் பண்ணித்தீரவேண்டும். அப்படிச் செய்யாதவர்களுக்கு ஜெயில் தண்டனை விதித்து விடுவதாக உத்தரவு செய்தார்கள். ஒவ்வொருவனும் ஸ்நாநம் செய்தான் செய்யவில்லை என்பதை போலீஸார் பார்த்து வரவேண்டும். இந்த உத்தரவால் எல்லாரும் தவராமல் ஸ்நாநம் செய்துவந்தார்களாம். ஒருவரைக் கூட தண்டிக்க நேரவில்லை. வியாதிகள் குறைந்திருப்பதால் சாவும் குறைந்துபோய் விடும் என்று எண்ண இடமுண்டாகி இருக்கிறதாம். தினந்தோறும் ஸ்நாநம் செய்வதின் மகிமையைப் பாருங்கள்.



## LIVING WITHIN MEANS.

BY

RAO BAHADUR V. K. RAMANUJA CHARIAR B. A.

## செட்டாய்க் குடித்தனம் செய்தல்.

கிராமவாஸிகளுக்கு ஸாகுபடிக்காகவும் ஸர்க்கார் கிஸ்தி செலுத்துவதற்காகவும் அடிக்கடி கடன்வாங்குவது அவசியமென்றும், அதற்காக ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஏற்படுத்த வேண்டியதென்றும், போன ஆகஸ்டு மாஸத்துப் "பிழைக்கும் வழி" யில் எழுதியிருந்தேன். அவர்கள் கடனே வாங்காமல் வரும்படிக்குள்பட்டே செலவு செய்யவேண்டியதென்று தெறிவிக்க இப்பொழுது எழுதுகிறேன்.

2. செட்டாக ஜீவனம் செய்யவேண்டுமென்பதும் கூடியவரையில் ஆபத்துக்காலத்துக்காகப் பணம் சேர்த்துவைக்கவேண்டுமென்பதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அப்படியிருந்தும் சாவு வாழ்வுகளில் தங்களையும் மீறி ஜனங்கள் செலவு செய்வதினால் பெரும்பாலும் கடன்கள் ஏற்படுகின்றன. இந்தச் செலவுகளை எப்படிக் குறைக்கலாம் என்று கவனிக்கவேண்டியது. பெண்பிள்ளைக்கு கல்யாணம் (விவாகம்) செய்கிற விஷயத்தில் இரண்டு விதச் செலவுகள் நேரிடுகின்றன. பெண்ணை வாங்கிக் கொள்பவனுக்குச் செய்யும் சீரினால் ஒருவிதம். கல்யாணத்தை நடப்பிப்பதால் ஒருவிதம். இப்போது நடக்கிறபடி முதலாவது செலவைக்குறைக்க வழியில்லை. எப்பொழுதும் நமக்குத் தேவையான பொருள் கொஞ்சமாயும் அதை விரும்புகிறவர்கள் அதிகமாயும் இருந்தால் அந்தப் பொருளின் விலை அதிகமாகும். நெல் நன்றாய் விளையாமலும் விளைந்ததில் பெரியபாகம் வேறு இடங்களுக்கும் போய்விடுமானால் விலை ஏறுகிறது. விளைவு நன்றாயிருந்து வெளியே போகாமலுமிருந்தால் விலை குறைகிறது. இப்படியே பெண்களின் தகப்பனார்கள் பொருளும் படிப்பும் உள்ள ஆண்பிள்ளைகளைத் தேடினால் அந்த ஆண்பிள்ளைகளின் விலை ஏறுகிறது. அவர்களின் தகப்பனார்கள் எந்தப் பெண்ணுடன் உயர்ந்த தொகைகிடைக்குமோ அந்தப் பெண்ணையே தேடுகிறார்கள். இப்படி நடப்பது ஜனங்களுக்கு ஸ்வபாவமானதால் நாம் ஆச்சரியப்படக் காரணம் ஒன்றுமில்லை. வரன்களின் விலையைக் குறைக்க வேண்டுமானால் இப்பொழுது கிடைக்கும் வரன்களைக் காட்டிலும் அதிக வரன்கள் எப்படிக் கிடைக்குமோ அப்படி நாம் தேடவேண்டும். ப்ராம்மணஜாதியில் ஸ்மார்த்தர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள், மாத்வர்கள் என்று மூன்று பெரிய வகுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் சில்லரை வகுப்புகள் உண்டு. ஸ்மார்த்தர்களில் வடமன், ப்ரகசரணம், அஷ்டஸகஸ்ரம், வாத்திமன் என்கிற பிரிவுகளும், ஸ்ரீவைஷ்ணவர்களில் வடகலை தென்கலை என்கிற பிரிவுகளும் எல்லாரும் அறிந்தவைகள். ஒவ்வொரு சில்லரைவகுப்பும் மருபடியும் வெவ்வேறு கூட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு உள்வகுப்புக்களிலேயே பெண்களைக் கொடுத்து வாங்குவதாயிருந்தால் வரன்களின் விலைகுறையக் காரணமில்லை இந்தப் பிரிவுகள் தர்ம சாஸ்திரங்களாலே ஏற்பட்டவைவல்ல. ஆகையால் இவைகளை கவனிக்காமல் ஒரே ஜாதிக்குள் பெண்களைக் கொடுத்து வாங்குவது உண்டாகுமேயானால் சீர்களை ஒவ்வொருவனும் தன்னுடைய வரவுக்குள் பட்டுச் செய்யலாம்.

3 கல்யாணத்தில் செலவாகும் இரண்டாவது விதச்செலவையும் குறைக்கலாம். ப்ராம்மணர்களுக்குள்ளே கல்யாணம் செய்யும்

முறையைச் சொல்லும் ஸூத்ரங்களைப் பார்த்தால் அது ஒரேநாளில் முடிவாகிறதாகத் தெரிகிறது. ஸாமவேதம் படிப்பவர்களுக்கு காதிர ஸூத்ரமென்று ஒன்று நடவடிக்கையில் இருக்கிறது. அதில் நாலாவது கண்டத்தில் 11-வது ஸூத்ரத்தின் பொருளை எழுதுகையில் கல்யாணத்தில் ராத்திரி லேகாஹோமத்தைமுடித்து கல்யாணம் செய்து கொண்டவன் கல்யாணப் பெண்ணை ரதத்தில் ஏற்றி அக்கினியை எடுத்துக்கொண்டு தன் வீடுபோய் அவ்விடத்தில் தானும் அந்தப் பெண்ணும் ஒரே படுக்கையில் படுத்து நித்திரை செய்ய வேண்டியதென்று எழுதியிருக்கிறது. மனைவியை ரதத்தில் ஏற்றுவதற்கும், தன் வீட்டுக்குள் நுழைவதற்கும், மனைவியுடன் படுப்பதற்கும் மந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மந்திரங்களின் பொருளை கவனித்தால் இப்படியே செய்வது உசிதமென்று விளங்குமென்று ஸூத்ர உரை செய்தவர் எழுதியிருக்கிறார். இப்படியே வேறுவேதம் படிக்கிறவர்களுக்கும் இருப்பதாக தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். கல்யாணம் ஒரே நாளில் முடிவதானால் பெண்ணைப் பெற்றவனுக்கு எவ்வளவு ஸௌகர்யம் உண்டாகும்? ஸம்பந்திகளுக்கும் வேண்டியவர்களுக்கும் ஐந்துநாள் விருந்து செய்ய வேண்டியதில்லை. விருந்துச் செலவில் ஐந்துபாகத்தில் நாலுபாகம் மிகுதியாகும். கல்யாண காலத்தில் சாப்பாட்டுவேளை போக பாக்கி காலத்தில் நடக்கும் கச்சேரிகளை நிறுத்திவிடலாம். ஊர்கோலமும் இல்லாமல் போகும் இது எப்படியானாலும் கல்யாணம் நடக்கும்போது செலவாகிற தக்ஷிணையைக் குறைப்பதில் ஒருவித தடையுமில்லை. எந்தச் சடங்கையும் பெரியோர்கள் அனுமதியின் பேரில் செய்ய வேண்டியது வாஸ்தவந்தான் பெரியோர் என்பது வேதம்படித்து அதின் பொருளைத் தெரிந்து அதில் சொன்னபடி நடப்பவர். இவர்களில் நாலுபேர் அனுமதியிருந்தாலும் போதும். அனுமதிபெற அவர்களுக்குக் கொடுப்பதுக்கு அநுக்ஞை என்று பெயர். இதை இப்பொழுது எல்லாருக்கும் கொடுப்பது வழக்கம். அதற்கு பூரிதக்ஷிணையென்றுபெயர். இதை நிறுத்திவிடுவதால் கல்யாணத்துக்கு குறைவு ஒன்றும் கிடையாது. ஒருவித பொது நன்மையும் உண்டாகும். எப்படியெனில்—கல்யாண பூரிதக்ஷிணையையும் சிராத்தத்தில் கிடைப்பதையும் நம்பி ஒவ்வொரு பெரிய ஊரிலும் அனேகர் வேறு தொழிலில்லாமல் இருந்து சில காலங்களில் வருந்துகிறார்கள். பெண்ணின் தகப்பனுக்கு பூரிதக்ஷிணையால் செலவாகிறதேயல்லாமல் அதை வாங்குகிறவர்கள் கஷ்டம் வெடிகிறதில்லை. இது இல்லாவிடில் வேறு தொழில் செய்து அவர்கள் பிழைக்கும்படி நிர்பந்தமுண்டாகும். ப்ராம்மணர்களுக்கு என்ன தொழில்கிடைக்கும் என்றுபலர் கேட்பார்கள். இதைத்தெரிந்தே பராசரர்முதலான பெரியோர்கள் தர்ம சாஸ்திரம் எழுதுகையில் விவஸாயம், வ்யாபாரம், லேவாதேவி செய்தல், இவைகளுக்கு உத்ரவு கொடுத்திருக்கிறார்கள். இவைகளையும் பலர் நடத்துகிறார்கள். சிலர் மட்டும் தொழில் செய்வது வருத்தமாயிருப்பதாலும் தக்ஷிணைவாங்குவது லகுவாயிருப்பதாலும் தொழிலில்லாமல் இருப்பதில் ருசியுள்ளவர்களாயிருக்கிறார்கள். அதற்கு நாம் இடம் கொடுப்பது பொது நன்மைக்கு விரோதம்

4 ப்ராம்மண ஆண்பிள்ளைகளுக்கு உபநயநஞ்செய்யும் காலத்திலும் அதிகச் செலவு வேண்டியதில்லை. முதல்நாள் பெரியோர்களுக்குவிருந்து செய்து அவர்களின் அனுமதி பெற்று மறுநாள் தகப்பனார் பிள்ளையைக் கூப்



பிட்டு மந்திரத்தை உபதேசம் பண்ணுவதும் அவனுக்கு வேதம் படிக்கும் காலத்தில் விரதம் விதிப்பதுந் தானே உபநயநம். இதற்கு பணச் செலவு எதற்காக? விருந்தும் இரண்டு நாளதானே. பெண்கள பெரிதாகும் காலத்திலும் இப்பொழுது செய்கிற செலவுக்கு கொஞ்சமும் ந்யாயமில்லை. பிறகு அந்தப் பெண் தன் புருஷன் வீட்டுக்குப்போய் அவனுடன் படுக்குங்காலத்திலும், கர்பமுண்டானால் செய்ய வேண்டிய ஸீமந்தகாலத்திலும் வைதிக காரியங்களை செய்ய வேண்டியதே யல்லாமல் ஊர்கூட்டம் கூட்ட வேண்டியதில்லை.

5. சாவுகளிலும் முதல் இரண்டு நாள்களில் செய்யும் சடங்குகள் தவிர இதர சடங்குகள் சிராத்தங்களானவையால் அவைகளில் சாப்பிடுகிறவர்களுக்கு உசிதமான பொருள் கொடுப்பது ஸரியானதுதான். அதில் ஸம்பந்தமில்லாதவர்களுக்கு எதற்காக தக்ஷிணைகொடுப்பது? இதனால இறந்தவர்களுக்கு த்ருப்தியென்று எண்ணுவது பிசகு. த்ருப்தியுண்டாவது சிராத்தத்தினாலேதான். பூரிதக்ஷிணையால் உண்டாவதன்று.

6. மேலே சொல்லியவைகளைக் கொண்டு ஏழைகளிடம் இறங்கவேண்டாம் என்று சொன்னதாக எண்ணக் கூடாது. ஏராளமான வரும்படியுள்ளவர்கள் வேண்டியமட்டும் சாவு வாழ்வுகளில் செலவு செய்யலாம். அப்படி வரும்படி யில்லாதவர்கள் டம்பத்தினால் அவர்களைப்போல செலவு செய்யக் கூடாது என்றும், எந்தவழியாய்ச்செலவைக் குறைக்கலாம் என்றும், தெரிந்து கொள்ளுவதற்காக இது எழுதினது. மிகுந்த வரும்படியுள்ளவர்களும் தக்ஷிணை கொடுப்பதாலும் கேட்டவர்களுக்குச் சோறுபோடுவதாலும் ஏழைத்தனத்தை குறைக்க முடியாது. ஏழைகளின் நிலைமையை விசாரித்து எவ்விதமான உதவிசெய்தால் அவர்கள் தொழில் செய்து பிழைக்கலாமோ அதைச் செய்யவேணடியது. இது ஒருவராலேயே முடியாது. எல்லாரும் சேர்ந்து செய்யவேண்டிய விஷயம்.

வி. கே. ராமாநுஜாசாரி.

## EXPRESSION OF THE EMOTIONS.

BY
P. T. SRINIVASA AIYANGAR M. A. F. M. U.

## முகஜாடை.

[எழுதியபடி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.]

"சன்னாசியாரே, சன்னாசியாரே, முன்னாலே போற கம்பொஞ்சாதி உம்பொஞ்சாதியா? இரண்டு பேர் முகஜாடை ஒன்றாய் இருக்கு.".

இந்த பேச்சை அளவற்ற முட்டாள்தனத்துக்கு உதாரணமாக சொல்லுகிறதுண்டு. ஆனாலும் இது அவ்வளவு அசட்டுத்தனமான வார்த்தை அல்லவென்று இந்த ஆர்ட்டிக்கிலில் காண்பிக்க உத்தேசிக்கிறேன்.

ஜாதி என்னவானாலும் ஒவ்வொரு தேசத்து ஜனங்கள் எல்லாருக்கும் வேறே ஒவ்வொரு முகஜாடை இருக்கிறதென்று ஸாதாரணமாய் தெரியும். முகத்தைப்பார்த்தவுடனே, இவன் மலையாளியென்றும், இவன் தெலுங்கனென்றும், இவன் பங்காளியென்றும் ஸுலபமாய் சொல்லலாம். இது கொஞ்சமட்டும் நடை உடைபாவனைகளாலும், க்ஷவரம் பண்ணிக்கொள்ளும் மாதிரியாலும் தெரியும். ஆனால் எல்லா ஜாதியாரும் ஒரே நடை உடை பாவனையுடையவர்களும் ஒரே மாதிரி க்ஷவரம் செய்துகொள்ளுகிறவர்களும் இல்லை. இவைகளில் வித்யாஸம் இருந்தாலும், இவன் பலான ப்ரெஸிடென்ஸி, பலான ஜில்லா என்று எளிதில் சொல்லலாம். இதை முகஜாடையை பிடித்துத்தான் கண்டுபிடிக்கிறோம். இதுவுமல்லாமல் வெகுகாலம் அதிக ப்ரீதியோடு ஒரே வீட்டில் ஸம்ஸாரம் செய்துவரும் கிழவயது வந்த அகம்படையான் பெண்டாட்டி முகங்களை கவனித்து பார்த்தால் அவர்கள் முகஜாடை வரவர

ஒன்று படுமென்று தெரியவரும். இதற்கெல்லாம் காரணம் என்னவென்று விசாரிப்போம்.

நாம் முழங்கையை மடக்கினால் மேல் கையில் * சதை திரண்டு உருண்டு கட்டியாய் கல்போல் ஆகிறதென்று எல்லாருக்கும் தெரியும். இந்த சதையைச் சுற்றி இருக்கும் 'எபிடர்மிஸ்' என்று இங்கிலீஷில் சொல்லும் தடித்த வெளித்தோலை கத்திரித்துப் பார்த்தால், 'டெர்மிஸ்' என்று இங்கிலீஷில் பேருள்ள சிவந்த உள் தோல் மூடியிருக்கும் இரண்டு தலையுள்ள சதை ஒன்றை பார்க்கலாம். ஆகையால் இதற்கு இருதலைச்சதை என்று பேர் வைப்போம்.† இதை இங்கிலீஷில் 'பைஸெப்ஸ்' என்று சொல்லுவார்கள்.

இந்த இருதலைச்சதையை தனியே வெட்டி எடுத்து அதின்மேலுள்ள உள்தோலை கத்திரித்தால் அந்த சதை சின்ன கற்றைகளாய்ப் பிரியும். ஒரு சதைக்கற்றையைப் பிரித்தால் அது அநேகம் நார்களாய்ப் பிரியும். இதை சதை-நார் என்று சொல்வோம். உடம்பில் இருக்கும் சதையெல்லாம் இந்த சதை நார்க்கட்டுகளே.

இந்த சதை நாருக்கு ஒரு விசேஷகுணம் உண்டு. சில ஸமயத்தில் நீளும், சில ஸமயத்தில் குறுகும். இலெக்ட்ரிஸிடியாவது, சூடாவது பட்டால் உடனே குறுகும், கொஞ்சகாலமான பிறகு நீளும். ஒவ்வொரு சிறிய சதை நாரும் சுருங்கினால் அதன் கட்டுகளாலாகிய சதை திரண்டு, உருண்டு, கட்டிப்படும். மேல் கையில் இருக்கும் இருதலைச் சதை குறுகும்போது முழங்கை மடங்கும், முழங்கை மடங்குகிறதால் இந்தசதை குறுகுகிறது, என்று நாம் ஸாதாரணமாய் நினைக்கிறோம். இது பிசகு. முழங்கை மடங்க வேணுமானால், கீழ்க்கையை மேலே ஏதாவது பிடித்து இழுக்கவேண்டும். இந்த லோகத்தில் எந்த வஸ்துவும் தானே மேலுக்கு கிளம்பாது. கல்லை விட்டால் கீழுக்கு போகுமே ஒழிய மேலுக்கு கிளம்பாது. கயிற்றைக்கட்டி இழுத்தால்தான் உயரப்போகும். முழங்கை மடங்கும்போது இருதலை சதை கீழ்க்கையைப்பிடித்து மேலுக்கு இழுக்கிறது. அதனால் தான் கீழ்க்கை மேல் நோக்கி செல்லும். உடம்பில் உள்ள சதைகள் அநேகம் குறுகி இழுப்பதால்தான் நம்மால் நிற்க முடிகிறது. ஒரு கூடாரத்தை நிறுத்த எத்தனை திக்குகளில் முளை அடித்து எத்தனை கயிற்றை இறுக்கி இழுத்துக்கட்ட வேண்டியிருக்கிறது? நாம் நிற்கும்போது, அதாவது நாம் உடலை நிறுத்திவைக்க வேணுமானால், கால் முன் பின் பக்கங்களிலும், ஆஸனத்திலும், வயிற்றின்மேலும், முதுகிலும், உள்ள மொத்தம் 16 சதைகள் குறுகி உடம்பிலுள்ள எலும்புகளை நாலு பக்கத்திலும் இழுத்துப் பிடித்துக் கொண்டால்தான் முடியும். நடக்கும்போதும் அநேகசதைகள் சுருங்கவும் நீளவும் வேண்டும். எந்த விதமாய் அசைந்தாலும், விரலை நீட்டினாலும், தலையை ஆட்டினாலும், கண்ணை மூடினாலும், மூச்சு விட்டாலும், எந்தவேலை செய்தாலும், சில சதைகள் சுருங்காமலும், நீளாமலும், முடியாது

இதுவுமல்லாமல், கோபம், பயம், சந்தோஷம் ப்ரீதி, த்வேஷம், முதலியவை நமக்கு உண்டாகும்போது, ஒன்றொன்றுக்கும் தக்க ப்ரகாரம் முகம் மாறும் என்று எல்லாருக்கும் தெரியும். முகத்தின் மேல் சின்ன சதைகள் அநேகம் உண்டு. இவைகளின் குறுகல் நீட்டலால் இந்த மாறுபாடுகள் முகத்தில் உண்டாகும்.

* முழங்கை முதல் தோள்வரைக்கும் உள்ளதை மேல்கை என்றும், முழங்கைக்கு கீழ் உள்ளதை கீழ்க்கை என்றும் வேறு பண்ணி பேர்வைக்கலாம்.



சிவந்தமுகம், வெளுத்தமுகம், மலர்ந்தமுகம், குளிர்ந்தமுகம். கறுத்தமுகம், இவையெல்லாம் மனதில் அந்தக்காலத்தில் உள்ள குணத்தைக்குறிப்பிடும். இந்த முகஜாடைகளை எல்லாம் முகத்தின் சதைகளால் உண்டாகின்றன.

முதலில் சந்தோஷம் வந்தபிறகு முகம்மலர்கிறது என்று நாம் நினைக்கிறோம். துக்கத்துக்குமொழி அழுகை என்று சொல்லுவதுண்டு. இந்தமாதிரியே குணம் முதல், முகஜாடை அப்புறம், குணம் காரணம், முகஜாடை-காரியம், என்று எல்லாரும் நம்புகிறார்கள். இது பிசகு என்று அமெரிக்கன் துரை ஜேம்ஸ் என்பவர் ரூபித்திருக்கிறார். நாம் ஊனமாய் வாசித்துக்கொண்டிருக்கும் போது ஒரு ஸ்நேகிதன் விளையாட்டுக்காக ஒரு குண்டூசியால் காலை குத்துகிறான் என்று வைத்துக்கொள்வோம். நாம் அப்போது திடீரென்று காலை மடக்குகிறோம். ஒருவேளை துள்ளிவிழுந்தாலும் விழுகிறோம். இந்தமாதிரி காலை இழுப்பதும், துள்ளி விழுவதும், யாரோ ஊசியால் குத்துகிறான், காலை இழுக்காதபோனால் காலில் ஓட்டை விழுந்துவிடும், துள்ளி தூர விழாமல் போனால் ஊசி உள்ளே போய்விடும், என்று ஆலோசித்து ஊகித்து செய்யும் காரியங்களா? அல்ல, நம்முடைய யோசனையில்லாமல் காலும் உடம்பும் தாமாக செய்யும் காரியங்களே. உடம்பை காப்பாற்ற செய்யும் காரியங்கள் எல்லாம் தாமாக நடக்கும் காரியங்களே. இல்லாமல் ஒவ்வொரு காரியமும் தீர்க்காலோசனை செய்யவேண்டியிருந்தால் "செட்டியார் சிங்காரிக்கிறதற்குள் பட்டணம் கொள்ளை போய்விடும்" என்கிற மாதிரி ஆகும். நாம் செய்கிறோம் என்று நாம் ப்ரமப்படுகிற முக்காலே மூன்றுவீசம் காரியங்கள் உடம்பு நம்மை கேட்காமல் தானே செய்கிறவையே. பாம்பை கண்டு ஓட்டம் பிடிக்கும்போது ஆலோசனைக்கு இடம் எங்கே? ஒரு குழந்தை சர்க்கரையை கண்ட உடனே தொட்டு வாயில் வைத்துக்கொள்ளும்போது, இது தித்திப்பு, ஸுகம் என்று யோசித்து செய்கிறதா? சர்க்கரையை காணுகிறதும் தொட்டு நாக்கில் தடவுகிறதும் ஒரே நிமிஷத்திலே நடக்கிறதல்லவா? காலில் தேள் கொட்டினபோது காலை உதறுகிறோம். உதறினால் வலி தெரியாது என்று ஆலோசித்தா செய்கிறோம். இதையெல்லாம் பிடித்து யோசித்தால் ஜேம்ஸ் துரை சொல்லுகிறதே ஸரி என்று தோன்றுகிறது.

நிற்க, நாம் ஒருகாரியத்தை கொஞ்சகாலம் தவறாமல்செய்தால் அது வழக்கமாகி அந்தக் காரியம் நமக்கு தெரியாமல் அதை நம்முடைய தேகம் தானே செய்யும். பொடி போடுவதை முதலில் நாம் தெரிந்து செய்கிறோம். வழக்கமான பிறகு கைதானே நமக்கு தெரியாமல் டப்பியிலிருந்து எடுத்து போடும். எதுவும் பத்து நாளைக்கு செய்தால் பிறகு நிறுத்தமுடியாத வழக்கமாகும். அப்படியே மலர்ந்த முகத்துடன் எல்லாரையும் பார்க்கிற வழக்கம் செய்தால், பிற்பாடு முகம் எப்போதும் மலர்ந்தே இருக்கும். தினம் தினம் கஸரத் செய்தால் சதையெல்லாம் என்னமாதிரியாய் வளர்ந்து திட்டப்படுகிறதோ, அதே மாதிரி, தினம் தினம் ஒரே மாதிரி எண்ணம் வந்து கொண்டிருந்தால், அதற்கு உதவியாயுள்ள முகஜாடை வழக்கமாய் எப்பவும் முகத்தில் குடிகொள்ளும். இதனால் ஒரே மாதிரி எண்ணங்களும் ஒரே மாதிரி கஷ்டஸுகமும் அனுபவிக்கிற தம்பதிகளுக்கு கொஞ்சகாலத்தில் ஒரே மாதிரி முகஜாடை உண்டாகும்.

பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

## KOTHAVARAI.

BY

N. V. SUBRAMANIA SASTRIAL.

## கொத்தவரை

அநேகம் பேர்களுக்கு இருவகைக் கொத்தவரைச் செடிதான் தெரியும். அவைகள் கிளைக் கொத்தவரை, கிளையில்லாக் கொத்தவரை என்று விவகரிக்கப்படும். கிளைக் கொத்தவரைச் செடியில் கிளைகள் நிறைய இருக்கிறதால் நமக்கு நிறையக் காய்கள் கொடுக்குமென்று நினைத்து அதையே சிலர் மிகுதியாய்ப்பயிரிடுகிறார்கள். மணலில் இட்ட நெல் பயிர்போல் அதற்குச் செய்யும் வேலையெல்லாம் வீண்தான். அதனால் உண்டாகும் கஷ்டங்களும் பல இருக்கின்றன. கிளைக் கொத்தவரையானது, முளைத்து கொஞ்ச நாளைக்கெல்லாம் நாலுபக்கங்களிலும் கிளைகளைக்கட்டிக்கொண்டு கிளம்பி, களை கொத்துவதற்குக்கூட இடங்கொடாமல் பரவி வளர்கிறது. ஓரே வேரினால் உட்கொள்ளப்படுகிற ஆகாரமானது தாயாகிய செடிக்கும் கிளைகளுக்கும் போதாமல் செடியும் நன்றாய் வளர்கிறதில்லை, கிளைகளும் புஷ்டியாய் பெருக்கிறதில்லை. செடிகளில் காய்க்கத்தகுந்த கொழுப்பில்லாததால் கிளைக்கொத்தவரை நன்றாய்க் காய்க்கிறதில்லை. நன்றாய்க் காய்க்காவிட்டாலும் அது காய்த்த காய்களைப் பறிப்பதோ மிகவும் கஷ்டம். அந்தக்கஷ்டம் அனுபவித்தவர்களுக்கேதான் தெரியும். இதரார்களறியார்கள். அந்தக்காய்களும் வாளிப்பாய் இருக்கிறதில்லை. பாத்திகளில் செடியின் கிளைகள் கீழாகப்பரவி ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு நல்ல காற்றோட்டம் இல்லாமல் செடிகள் வெளுத்து நோயுண்டு பாதிச்செடிகள் அழுகிப்போகின்றன. அப்படிப்பட்ட கொத்தவரைத் தோட்டங்களில் நாள்முழுவதும் பறித்து மடிகாய் கூட ஆகவில்லையென்று கிருஷிகர்கள் துக்கமடைகிறார்கள். இன்னும், இந்தக் கொத்தவரைப்பயிர் செய்யுமிடத்தில் வேறொன்றும் பயிர்செய்ய முடிவதில்லை. வேறு பயிரிருக்குமிடத்திலும் இதைப் பயிர் செய்ய முடிகிறதில்லை. இவ்விதக்கஷ்டங்கள் இதில் உண்டாகிறபடியால் இதை அவசியம் விலக்கிவிடவேண்டும்.

இனி கொஞ்சம் கிளையில்லாக் கொத்தவரையைப்பற்றி விசாரிப்போம்.

பூமிஸாரம் ஓரே செடியில்செல்லுகிறபடியால் இச்செடிகள் கொழுத்து ஓங்கி வளர்கின்றன. செடியில் காய்கள் ஜாஸ்தியாயுமுண்டாகின்றன. காய்களும் பெருத்து நீண்டிருக்கும், அதைப் பறிப்பதும் வெகு சுலபமாயிருக்கும். இந்தச் செடிகளில் கிளையில்லாததால் காற்று நன்றாய்ப் பிரவேசித்து செடிகளுக்கு வியாதி வருகிறதில்லை. ஆகையால் கிளையில்லாக் கொத்தவரையே சிரேஷ்டமென்று யாவருக்கும் விளங்கக்கூடியது. ஆனாலும் இதிலொரு வித கஷ்டமிருக்கிறது. அதாவது, இது முளைத்தது முதற்கொண்டு காய் மாறுகிறபர்யந்தம், ஆடுமாடுகளுக்கு இரையாகாமல் ஜாக்கிரதையாகக்காப்பாற்றவேண்டும். மாடு தின்றுவிட்டால் மறுபடியும் முளைக்காமல், காற்றினால் முறிக்கப்பட்ட தென்னை பாக்குகளைப் போலும், கன்றுவாயிலகப்பட்ட மூங்கில் முளைபோலும், பூமிஸாரத்தால் கொஞ்சகாலம் பிழைத்திருந்து பிறகு அழுகிப்போகிறது. இதன் நிலைமையை யோசித்தால் மிகவும் பரிதாபம். இன்னுஞ் சிலர் வேலிகட்டாமல் பயிரிட்டு பூவும் பிஞ்சுமாய் இருக்கும்பொழுது மாட்டுக்கு இரையாக்கிவிட்டு பறிகொடுத்தவ



னைப்போல் வரியிலும் வயிற்றிலும் போட்டுக்கொண்டு கதறுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கிற நமக்கு இதன் கஷ்டம் நன்றாய்த் தெரிகிறது. ஐயோ ! அதற்கோ கிளை வெடிக்குந்தன்மையில்லை; பின் என்னசெய்வோம்; இதைப் பிடிங்கிவிட்டு வேறு விதைபோட்டு பயிராக்குவோமென்றால் காலமோ அதிகரித்துவிட்டது. அவ்வருஷம் முழுமையுமே அப்பயிர் உபயோகப் படாமல் போகிறது. இப்படிப்பட்ட கஷ்டங்களும் உண்டாகின்றன ஆனாலும் கிளைக் கொத்தவரையைக் காட்டிலும் கிளையில்லாக் கொத்தவரை சிரேஷ்டமென்று உலகமறிந்த விஷயம்.

இப்பொழுது கிருஷிகர்கள் கொத்தவரையை நான்கு விதமாகச் சொல்லுகிறார்கள். கிளைக் கொத்தவரை, கிளையில்லாக் கொத்தவரை, புதர்க் கொத்தவரை, சீப்புக் கொத்தவரை என்று பிரிக்கப் படுகின்றன. அவைகளில் முன் இரண்டு வகையும் மேலே சொன்னவை. புதர்க் கொத்தவரையானது அடியிலேயே நாலு ஐந்து கிளைகள் வெடித்து அதிகமாய் உயராமல் புதர்போல் நின்று, காய்களை நிறையக் கொடுக்கும். அதன்காய்கள் மற்றக் காய்களைவிட கொஞ்சம் குட்டையாயும் பருமனுயுமிருக்கும். அது மற்றவைகளைப் போல் அவ்வளவு மிகுதியாய் இராது. நாலாவதாகிய சீப்புக் கொத்தவரை கிளையில்லாக் கொத்தவரையைப் போலவே இருக்கும். ஆனாலும் ஒவ்வொரு கணுவிலும் விடும் சீப்புகள் மேல் கணுவுக்கு மேலும் போய் வளர்ந்து காய்க்கும். அதன் காய்களும் கொஞ்சம் நீளமாகவே இருக்கும். இந்த நான்கு வகைக்குள் சீப்புக் கொத்தவரையில் குலைகள் ஜாஸ்தியாய் இருக்கிறபடியால் அதுதான் சிரேஷ்டம். கிளையில்லாக் கொத்தவரையை இரண்டாவதாகவும், புதர்க் கொத்தவரையை மூன்றாவதாகவும் சொல்லுகிறார்கள். கிளைக்கொத்தவரை ஒருபொழுதும் கூடாதென்று முன்னமே சொல்லிவிட்டோம். மூன்றாவதாகிய புதர்க் கொத்தவரையானது வேறுபயிரோடு கலந்து பயிர் செய்யமுடியாது. அதிக பந்தோபஸ்து இல்லாமலும் ஆடுமாடுகளின் பயமுள்ளதாயுமிருக்குமிடத்தில் மட்டுமே இதை உபயோகிப்பது நலம். ஒருவேளை ஆடுமாடுகள் தின்றுவிட்டாலும் கிளை வெடிக்கும் தன்மையுள்ளதால் மறுபடியும் வளர்ந்துவிடும்.

சீப்புக் கொத்தவரையைப் பயிரிட நல்ல அடைப்புள்ள இடம் வேண்டும். இல்லாவிட்டால் அதின் பிரயோஜனத்தை அடைய முடியாது. சிலர் நல்ல பூமியாய் இருந்தால் நன்றாய்க் காய்க்கும், ஜாதியினால் என்ன பிரயோஜனமென்று சொல்லுவார்கள். அது மிகவும் தப்பு. நல்ல நிலம் வேண்டுமென்பது உண்மைதான், நல்ல விதை இல்லாததால் கஷ்டப்படுவது சொல்லாமலே எல்லாருக்கும் தெரியும். ஓரே தோட்டத்தில் இருக்கும் தென்னைகளின் சில குலைகுலையாய்க் காய்ப்பதையும் ஒரு குலையில் 25, 30, காய்கள் இருப்பதையும், சிலதென்னைகள் குலைக்கு இரண்டு மூன்று காய்கள் காய்ப்பதையும் பார்க்கிறோமல்லவா ? இவைகளெல்லாம் ஜாதியினால்தான் என்று புத்திமான்களுக்கு நன்கு விளங்கும். ஆகையால் கொத்தவரையில் ஜாதியாகிய சீப்புக் கொத்தவரை தான் உத்தமம்.

இப்பொழுது சிலர் கொத்தவரையை கரணைக் கொல்லையிலும் மஞ்சள்க் கொல்லையிலும் பயிரிடுகிறார்கள். அப்படிச் செய்வதால் உண்டாகும் தீமைகள் பல. காய்கள் பறிக்கும் பொழுதெல்லாம் கீழ்நிலம்நன்றாய் மிதிபட்டு கீழிருக்கும் செடிகள் நன்றாய்க் கிழங்கிடுகிறதில்லை, மிளகாய்க் கொல்லைகளி

லும் சிலர் பயிரிடுகிறார்கள். அப்படிச் செய்வதால் இதன் நிழல் மிளகாய்ச் செடிகளில் தாக்கி மிளகாய் நன்றாய்க் காய்க்கிறதில்லை. இப்பொழுது இதைப் பயிரிட ஒரு நல்ல உபாயம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது, வெண்டை, முள்ளங்கி, மணிலாக் கொட்டை, முதலானவைகள் ஸாகுபடி செய்யுமிடத்தில் ஒவ்வொரு பாத்தியிலும் நான்கு வரப்புகளிலும் பயிர் செய்வதால் கீழுள்ளவைகளுக்குக் கெடுதி இல்லையென்றும் இச்செடிகள் விசாலமாய் இருக்கிறபடியால் நன்றாய் காய்க்கின்றனவென்றும் தெரியவருகிறது. மணிலாக் கொட்டைக்கு நிழல் உதவாதாகையால் பாத்தியின் நடுவிலுங்கூட செடிகளை நடலாமென்று சொல்லுகிறார்கள். புகையிலைத் தோட்டங்களிலும் பாத்தியின் வரப்புகளில் இதை விதைக்கலாமென்று தோன்றுகிறது. கொத்தவரைப் பயிர் செய்யும் வகை அநேகமாய் எல்லாருக்கும் தெரிந்திருக்கும். ஆகையால் அதைப்பற்றி இவ்விடத்தில் விவரிக்க வேண்டியதில்லை. ஆனாலும் அதில் முக்கிமாய் கவனிக்கவேண்டியவைகள் சில உள." கொத்தவரைப் பிஞ்சுகள் ருசியாயிருக்குமாதலால் இவைகளைத் தின்ன பச்சைக் கிளிகள் அதிகமாய்வரும். ஆயினும் அவைகளைப் போக்குவதற்கு ஒரு உபாயமும் பழையோர்களால் அநுஷ்டிக்கப்பட்டதாகத்தெரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் செய்யவேண்டும். மாந்தோப்பு முதலானவற்றில் கிளிகள் அதிகமாய் இருக்குமாதலால் தோப்புக்குச் சமீபத்தில் இந்தப்பயிரைச் செய்யக் கூடாது

2. இதன் விதைகளைக் காப்பாற்றுவது ரொம்பவும் கஷ்டம். இதன் விதைகளுக்கு 10 வருஷத்திற்குமுன் முளைக்கும் திறமை எவ்வளவு இருந்ததோ அவ்வளவு இப்பொழுது இல்லையென்று தெரிகிறது. முன் எடுக்கப்பட்ட விதைகள் எடுத்தது முதற்கொண்டு இரண்டு வருஷம் வரையில் உபயோகப் படுத்தப் பட்டனவாகத் தெரியவருகிறது. இப்பொழுதோ அந்த வருஷத்தில் எடுத்தவிதைகள் மறுவருஷம் போடுவதற்குக் கூட உபயோகமில்லை என்று சொல்லி, கோடையில் ஒரு தரம் பயிரிட்டு விதை சம்பாதிக்கிறார்கள். இவ்வளவு கஷ்டத்திற்கு அஜாக்கிரதைதான் காரணமொன்றுத் தெரிகிறது. ஆடி ஆவணி மாஸங்களில் பயிரிட்டு அர்ப்பசி கார்த்திகை மாஸங்களில்விதைகள் எடுக்கப்படுகிறபடியால் மழையில்அடிப்பட்டுவிதைகள் கறுத்துப்போகின்றன. அதுவுமல்லாமல் எடுத்த விதைகளை நன்றாய்க் காயவைக்காமல் சட்டியில் போட்டு வைப்பதால் விதையின் முளைகள் மக்கிப் போய் முளைக்கும் தன்மை போய் விடுகிறது. ஆகையால் இதை நன்றாய்க் காய வைத்துக் காப்பாற்றி வந்தால் கோடையில் செடிவளர்த்து விதை எடுக்க வேண்டியதில்லை. நல்ல விதைக்கு லக்ஷணம் வெளுப்பாயும் நீரோட்டமாயு மிருப்பதுதான். ஒவ்வொரு அமாவாசையிலும் விதைகளை உலர்த்துவது உத்தமமென்று விவஸாயிகள் கூறுகிறார்கள். அப்படிச் செய்தால் விதைகள் பழுது போகா.

3. இப்பயிர் செய்வதற்குத் தகுந்த பூமி செம்மணல், மணல் கலந்த களிமண் பிரதேம், இவைகளே நலமென்றுத் தெரிகிறது. இப்படிச்செய்தால் கிருஷிகர்கள் நல்ல லாபமடைவார்கள் என்று நம்புகிறேன்.

என். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.



## PRIMARY EDUCATION.

### MR. S. VENKOBA CHARIAR'S LECTURE.

## மூலாதாரப் படிப்பு.

சில தினங்களுக்கு முன்பு மதுரையில் நடந்த வித்யா காட்சி சாலை திறந்த நாள் அன்று அந்த ஊர் காலேஜ் ப்ரின்ஸிபாலான எஸ். வெங்கோபா சாரியார், பி. ஏ. எப். எம். யூ. மேற்கண்ட விஷயமாக ஒரு ப்ரஸங்கம் செய்தார். அதன் சுருக்கம் பின்வருமாறு.

அவனவன் தன் தொழிலை ஸரியாக நடத்தும் பொருட்டு அதற்கு வேண்டிய அளவு கல்வி கற்க வேண்டுமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படிக் கற்கும் வித்தை அவனவனுடைய ஸ்வபாஷையின் உதவியைக் கொண்டு ஆகவேண்டும். எல்லா ஜனங்களும் இந்தமாதிரி வித்தையை அடையவேண்டியது அவசியம். இப்படிச் செய்வதால் அளவற்ற நன்மையுண்டு. நம்முடைய நாட்டின் ஐசுவரிய விர்த்திக்கோ, ஜனஸமூக நன்மைக்கோ, மதச் சீர்திருத்தத்துக்கோ, அல்லது இன்னும் இவை போன்ற வேறே எந்தவித நன்மைக்காகிலும்ஸரி பொது ஜனங்கள் பெரும்பாலும் மூலாதாரப் படிப்புப் படித்தவர்களாக இருக்க வேண்டும்.

மூலாதாரப்படிப்பு அத்யாவசியம் என்று கவர்ன்மெண்டார் அதைப் பரவச் செய்ய அவர்களால்கூடிய அளவு பிரயாசப்பட்டு வருகிறார்கள். 1904-ம் வருஷத்தில் அவர்கள் படிப்பு விஷயமாய் அவர்களுடைய அபிப்ராயத்தை வெளியிட்டு ஒரு ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். இந்த ப்ரசுரம் மேற்தரப் படிப்புக்கு அநுகூலமாயிராதபோதிலும், மூலாதாரப் படிப்பை யொட்டினவரையில் சிலாக்கியமாகவே இருக்கிறது.

கவர்ன்மெண்டார் புதிய ஏற்பாட்டுக்கிணங்க சில முக்கியமானசீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். முதலாவது, துரைத்தனத்து வரும்படியில் முன்னைவிட அதிகமான தொகையை மூலாதாரப்படிப்பின் விருத்திக்காகசெலவிட்டு வருகிறார்கள். இந்தத்தொகைப்ரைமெரி பாடசாலைகளின் க்ராண்டுக்காகவும்ப்ரைமெரி உபாத்தியாயர்களின் சம்பளத்துக்காகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. இரண்டாவது, ஸெகண்டரி பாடசாலைகளுக்கும் ப்ரைமெரி பாடசாலைகளுக்கும் உள்ள வித்யாஸங்களை நன்றாய் விளக்கி ப்ரைமெரிப் பள்ளிக்கூடங்கள் இன்னாருக்கென்றும் ஸெகண்டரிப் பள்ளிக்கூடங்கள் இன்னாருக்கென்றும் கவர்ன்மெண்டார் வரையறுத்திருக்கிறார்கள். கொஞ்சத்துக்குமேல் படிக்க சக்தியற்ற குழந்தைகளுக்குப்ரைமெரிப் பள்ளிக்கூடங்களும், மேலே படிப்பதற்கு சக்தியுள்ளவர்களுக்காக ஸெகண்டரி பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மூன்றாவது, ப்ரைமெரி பாடசாலைகளுக்குள்ள சட்டதிட்டங்கள் ஸெகண்டரிப் பள்ளிக்கூடங்களுக்கு உள்ளவற்றைக் காட்டிலும் லகுவாயும் அவ்வளவு கடுமையில்லாதவையாயும் இருக்கின்றன. ப்ரைமெரி பாடசாலைகளின் சங்கியையும், அவைகளின் ப்ரயோஜனமும் அதிகப்படுத்தப்பட்டு வருகின்றன. ப்ரைமெரிப்படிப்பை மேல் விசாரணைசெய்து வர தகுந்த சிப்பந்திகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு கையாளப்பட்டுவந்த ரிஸல்ட் க்ராண்டுமுறையை நீக்கி இப்பொழுது ஸாலரி க்ராண்டு முறையை அநுஸரித்து வருகிறார்கள். இதனால் உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும் ஸம்மானம் முன்போல் பரீக்ஷையில் தேறின பிள்ளைகளின் எண்ணிக்கையை யொட்டியிராமல் இப்பொழுது பாடசாலையிற் படிக்கும் பிள்ளை

களின் தொகை, உபாத்தியாயர்களின் யோக்யதை, கற்றுக்கொடுக்கும் பாடங்கள் ஆகிய இவைகளுக்குத் தக்கபடி கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஏற்பாடு ஏற்கனவே நன்றாய் ஆளப்பட்டுவந்த சில ப்ரைமெரி பாடசாலைகளுக்குக் குறைந்த வரும்படியைத் தந்த போதிலும் மொத்தத்தில் நன்மையைத் தருவதாகவே இருக்கிறது.

மேலே சொன்னவை கவர்ன்மெண்டார் மூலாதாரப் படிப்பில் ஏற்படுத்திய மாறுபாடுகளிற் சிலவாகும். இவைகளைவிட முக்கியமானது ஒன்று உண்டு. அது என்னவென்றால் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடங்களின் ஸ்வபாவமும் அவைகளைக் கற்றுக்கொடுக்கும் வழியும். பழையஏற்பாட்டில் நன்றாய் உபயோகப்படக்கூடிய ஸங்கதிகளிற் பாடம் சொல்லிக்கொடுக்கவில்லை; சொல்லிக் கொடுத்த வழியும் அவ்வளவு சிலாக்கியமானதல்ல. எழுத்துக்கூட்டி வாசித்தல், வாசகமெழுதுதல், கணிதம், பூகோளசாஸ்திரம் ஆகிய இவைகளோடு இன்னும் ஏதாவது ஒரு பாடம் ப்ரைமெரி பாடசாலைகளிற் கற்றுக்கொடுக்கப் பட்டு வந்தது. இவைகளைத்தவிர வெவ்வேறு இடங்களுக்குத் தகுதியான மற்ற விஷயங்களிற் பாடம் சொல்லும் ஸ்வதந்திரம் இப்பள்ளிக்கூடங்களின் மானேஜர்களுக்கு இல்லாமலிருந்தது. சொல்லிக்கொடுத்த பாடங்களில் உள்ள விஷயங்களை பையன் அறிந்துகொண்டிருக்கிறானா, கடினமான பதங்களுக்கு அர்த்தம் அவனுக்குத் தெரிகிறதா, என்றே உபாத்தியாயர்கள் கவனித்துவந்தார்கள். விஷயங்களைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்து வந்தார்களே ஒழிய அவைகளின் உள் விசேஷங்கள் ஒன்றையும் எடுத்து விளக்குவதில்லை.

புதிய ஏற்பாட்டின்படி, முதலாவது, பல பாடங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது, உபாத்தியாயர்களும் மானேஜர்களும் தங்களுக்கு இஷ்டமுள்ள பாடங்களை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்து வரலாம். மூன்றாவது, பாடங்களெல்லாம் ப்ரயோஜனப்படக்கூடியவைகள். ஆகையால் அந்தந்த இடத்துக்குத் தக்கபடி மானேஜர்கள் பாடங்களைத் தேர்ந்தெடுத்துச் சொல்லிக்கொடுத்துவர இடம் ஏற்பட்டிருக்கிறது. குறித்த பாடங்களைத்தவிர திட்டமாய்ச் சொல்லக்கூடிய வேறு எந்தப் பாடமாயிருந்தாலும் அதையும் சொல்லிக்கொடுக்கலாம். பையன்கள் கேட்டகேள்விகளுக்குப் பதில் சொல்லுதலும், கடினமான பதங்களுக்கும் வாக்கியங்களுக்கும் அர்த்தந் தெரிந்திருப்பதும் மாத்திரம் போதாது. அவர்கள் புஸ்தகங்களிலிருந்து கற்றுக்கொண்ட விஷயங்களை ஸரியாகவும், சொற்பிழையில்லாமலும் உணர்த்தவல்லவர்களா என்று உபாத்தியாயர் பரீக்ஷித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். வாசக பாடங்களில் உள்ள விஷயங்களுக்கும் மற்ற பாடங்களில் உள்ள விஷயங்களுக்கும் பொருந்திய சம்பந்தத்தை எடுத்துக்காட்டி போதிக்க வேண்டும். இம்மாதிரி செய்தல் பிள்ளைகளுடைய புத்தி கூர்மையை அதிகரிக்கச் செய்து பொட்டை நெட்டுருச் செய்வதைத் தடுத்து விடுகிறது.

புதிய ஏற்பாட்டில் சித்திரமெழுதல் அதிகமாக அனுஸரிக்கப்பட்டு வருகிறது. இது கைக்குங் கண்களுக்கும் பெருத்த ஒரு அப்யாஸமாகிறது. பூகோள சாஸ்திரம் முன்னைவிட சிலாக்கியமான உபகருவிகளோடு கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. தேச சரித்திரமும் துரைத்தன முறைமையும் கற்றுக் கொடுக்கிறார்கள். கிராமம், அதன் அதிகாரிகளின் அலுவல்கள், தபால், தந்தி இவைகளின் அமைப்பு, உப்பளம், முதலிய இலாகாக்



களின் முறை, இவைகளனைத்தும் பிள்ளைகளுக்கு போதிக்கப்பட்டு வருகின்றன. இயற்கையிற் காணும் பொருள்களின் விசேஷங்களை எடுத்து உபாத்தியாயர் தங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து வருகிறார்கள். பள்ளிக்கூடங்களில் சிறிய தோட்டங்கள் ஏற்படுத்தி அவைகளில் செடி கொடிகள் எவ்விதம் பயிரிடப்பட்டு வருகின்றன என்பது எல்லா மாணாக்கர்களும் நன்றாய்த் தெரிந்துக்கொள்ளும்படி உபாத்தியாயர்கள் தரிசன பூர்வமாகக் கற்பித்து வருகிறார்கள்.

பாடஞ்சொல்லும் விதத்தில் ஏற்படுத்தியிருக்கிற வித்யாஸம் கவனிக்கத் தக்கது. பள்ளிக் கூடத்தின் நான்கெல்லையிற் சொல்லப்படும் விஷயங்களுக்கும், வெளியுலகத்தில் நடக்கும் பலவித செய்கைகளுக்கும், உள்ள ஸம்பந்தா ஸம்பந்தங்கள், பிள்ளைகளின் மனதில் நன்றாய்ப் பதியும்படிக்கும், அவர்கள் அதிக ஊக்கத்தோடு முயற்சி செய்யும் பொருட்டும், விவரமாய் எடுத்துக்காட்டப்படவேண்டும். பள்ளிக்கூடத்திற் கற்றுக் கொடுக்கும் விஷயங்கள் சும்மா "ஏட்டுச் சுரைக்கா" யாகப் பயனில்லாததாகக் காணக்கூடாது

இந்தமாதிரி பல பாடங்கள் கற்றுக்கொடுக்கும்ஸாமர்த்தியம் உபாத்தியாயர்கள் அடைய வேண்டுமானால் அவர்கள் எல்லாவற்றையும் படித்தவர்களாகவும் அனுபோகமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். இதை கவர்ன்மெண்டார் நன்குணர்ந்து உபாத்தியாயர்கள் ட்ரெயினிங் ஸ்கூல்களில் ஒருவருஷம் படிப்பது போதாதென்று இரண்டுவருஷங்களாக்கியிருக்கிறார்கள். இவர்களுடையும் பயிற்சியும் புதிய ஏற்பாட்டுக்குத் தக்கப்படி சீர்திருத்தப் பட்டிருக்கிறது. மேலும் ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்போன்ற உத்யோகஸ்தர்களைக் கொண்டு உபாத்தியாயர்களுக்கு அப்போதைக் கப்போது நடத்தப்படும் ப்ரஸங்கங்களினாலும் வித்யா காட்சிச்சாலைகளினாலும் போதித்து வருகிறார்கள்.

கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிற இவ்வித ஸாதனங்களுக்கு உபாத்தியாயர்கள் நன்றியறிதலுள்ளவர்களாக இருக்கவேண்டும். தங்கள் கடமைகளைக் குறைவற மனப் பூர்த்தியோடு செலுத்தவேண்டும். அரைமனதோடு செய்யும் காரியம் ஒன்றும் பயன்படாது. தங்கள் பிள்ளைகளுடைய நன்மையைக் கருதுவார்களானால் உபாத்தியாயர்கள் முழுமனதோடும் வேலை செய்யவேண்டும். புதிய விஷயங்களை எளிதில் கற்றுக்கொண்டு அவைகளை மாணாக்கர்களுக்கு நன்றாய் விளக்கிக் காட்டும் திறமை அவர்களுக்கு வேண்டும். "ஐந்திற் படியாதது ஐம்பதிற் படியாது" என்பதை நினைந்து பிள்ளைகளின் ஒழுக்க வழக்கங்களை நன்றாய் கவனித்து, தங்கள் ஸொந்த நன்னடத்தையினாலேயும் போதனையினாலேயும் அவர்கள் மனதிற்படும்படி போதிக்கவேண்டும். அவர்கள் ஸுகதுக்கங்களைத் தாங்களும் பாகித்துக்கொள்ளவேண்டும். நிஜம்பேசுதல், பெரியோருக்கு மரியாதைசெய்தல், ஜீவஹிம்ஸை செய்யாதிருத்தல், இவைகளெல்லாம் நன்றாய் அவர்களுக்குப் படிந்திருத்தல் உத்தமம்.

இப்படிக்கெல்லாம் அனுகூலம் செய்தும் இந்தியாவில் மூலாதாரப் படிப்புள்ள ஜனங்களின் தொகை மிகக்குறைந்ததாகவே இருக்கிறது. கவர்ன்மெண்டார் மூலாதாரப் படிப்பைச் சட்டத்தினால் கட்டாயமாக்கினால்தான் ஜனங்கள் எல்லாரும் படிப்பார்கள் என்று கனம் கோக்லே மசோதாக்கொண்டுவந்திருக்கிறார். ஆனால் இதனால் கவர்ன்மெண்டாருக்கு ஏற்படும் செலவுக்கு வேண்டிய ஏராளமான பணமில்லாமைதான் கவர்ன்மெண்டார் இந்தச் சட்டத்தை ஒத்துக்கொள்ள பெருந் தடையா

யிருக்கிறது. தவிர தனிகர்கள் ஸெகண்டரி பாடசாலைகளை ஸ்தாபனம் செய்கிறார்களே தவிர ப்ரைமெரிப் பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்கிறார்களில்லை. ஆகவே நம்முடைய தேசத்தில் மூலாதாரப் படிப்பு விருத்தியாக வேண்டுமானால் கவர்ன்மெண்டாரும், தனிகர்களும் பணம் செலவழிக்க முன் வரவேண்டியது அவசியம்.

---

## POULTRY BREEDING,

BY

JOTI MANI.

## கோழி வளர்த்தல்.

—:o:—

(1) உலகத்தில் மனிதராய்ப் பிறந்த யாவரும் திரவியம் தேடவேண்டுமென்று ஒரு அவாக் கொள்ளல் வேண்டும். மனிதர்கள் அவரவர்களின் சக்திக் கிசைந்தவாறு வியாபாரஞ் செய்தோ, உத்யோகஞ் செய்தோ, பயிர்த் தொழில் செய்தோ, பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். பெரிய வியாபாரஞ் செய்து பணஞ் சம்பாதிக்க வேண்டுமென்றால் அதிகத் திரவியத்தை மூலதனமாகப் போடவேண்டும். ஒரு எளியவன் அவ்விதப் பெரிய வியாபாரம் செய்வது இயலாதகாரியம். ஆனால் அவனுக்கும் பணம் சம்பாதிக்க அனேகவழிகளிருக்கின்றன. அவைகளில் கோழி வளர்த்தல் ஒன்று.

(2) இந்த வியாபாரத்திற்கு அதிகத்திரவியம் வேண்டியதில்லை. லாபமோ அதிகம். இதுபற்றியன்றோ, "கோழிப்பணம் குருணிப் பணம்" என்று நம்மில் ஒரு பழமொழி வழங்கிவருகிறது. கொஞ்சத் திரவியத்தைக் கொண்டே அதிகத்திரவியத்தைச் சம்பாதித்தவர்கள் அனேகர் உளர்.

(3) ஒரு ஏழைக் குடியானவன் ஒரு ரூபாயை முதலாக வைத்துக் கொண்டு இந்த வியாபாரத்தைத் தொடங்கி விடலாம். இவன் இந்த ஒரு ரூபாய்க்கு இரண்டு பெட்டைக் கோழிகளும் ஒரு சேவலும் வாங்கலாம். மூன்று மாதத்திற்கு ஒருதடவை ஒவ்வொரு கோழியும் தினம் ஒன்றாக 7 அல்லது 8 முட்டைகளுக்குக் குறையாமலும் 10 அல்லது 12 முட்டைகளுக்கு மேற்போகாமலும் இடும். இப்படியாக ஒரு கோழியானது ஒருவருஷத்திற்குள் ஸராஸரி 40 முட்டைகளிடும். இந்த இரண்டு கோழிகளும் வருஷத்திற்கு 80 முட்டைகள் இடுகின்றன. இவைகளை முட்டையாக விற்றால ஒரு ரூபாய்க்கு விற்கலாம். இப்படி இல்லாவிட்டால் இந்த முட்டைகள் பொரித்துக் குஞ்சுகளை ஆறுமாதகாலம் வளர்த்து விட்டால் குறைந்தது பதினைந்து ரூபாய்க்கு விற்கலாம். இவ்விதமாக இரண்டு வருஷத்திற்குள் ஒரு ஏழைக் குடியானவன் ஒரு ரூபாய் முதலைக்கொண்டு முப்பது ரூபாய அடையலாம். ஒரு குடியானவன் வீட்டில் பத்துக்கோழிகள் இருந்தால் அந்தக்குடும்பம் அதில் வரும் லாபத்தைக் கொண்டே ஸம்ரக்ஷணை செய்துக்கொள்ளக் கூடும். இதைப் போல் இவ்வளவு குறைந்தமுதல் போடக் கூடியதும் இவ்வளவு லாபம் தரக்கூடியதும் வேறொரு வியாபாரம் உளதோ? இல்லையென்றே நிச்சயமாகச் சொல்லலாம். ஆகையால் இந்த வியாபாரத்தை எளியவர்கள் செய்யலாம்.

(4). கோழிகள் ஏழைகளுக்கு ஒருஜீவனோபாயத்தைக் கொடுக்கிறது மல்லாமல் அவர்களுக்கு இன்னும் அனேக விதத்தில் நன்மையைச் செய்கின்றன. முதலாவது, குடியானவர்கள் தங்கள் வீட்டுக் கொல்லைகளில் பயிர் செய்கிற சிறிய காய் கறிச் செடிகளுக்கு நாசத்தை விளைவிக்கிற சிறிய பூச்சி புழுக்களை இவைகள் கொன்று தின்று விடுகிறபடியால் அக்கொடி செடிகள் ஒரு விதக் கெடுதலுமின்றி வளர்ந்து அவைகளைப் பயிர் செய்தோர்களுக்கு தக்கபலனை அளிக்கின்றன. இரண்டாவது, இக்கோழிகள் வெளியிடும் மலமானது அவர்கள் பயிரிடுகிற செடிகளுக்கு நல்ல எருவாகிறது.

(5) மேலும் மற்றைய வீட்டு ஜெந்துக்களுக்கு ஆகாரந் தேடுவதில் சிரமப் படுவது போல் இக்கோழிகளின் ஆகார விஷயமாக அதிகப்பணச் செலவுமில்லை, சிரமுமில்லை. கோழிகளுக்கு அனேக விதமாய் கெடுதல் உண்டாகின்றன. இவைகளைப் பருந்துகள், காட்டுப் பூனைகள், நரிகள் இவைகளிலிருந்து ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும்.

சகோதரர்களே! நீங்கள் உங்கள் பக்கத்தில் வஸிக்கும் ஏழைக் குடியானவர்கள் இக்கோழி வளர்த்தலை ஒரு தொழிலாகக் கொள்ளுமாறு உபதேசிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். டென்மார்க் தேசத்தார்கள் தங்கள் நாட்டில் உண்டாகிற முட்டைகளை அயல் நாடுகளுக்கனுப்பி எவ்வளவு லாபத்தை அடைகிறார்கள்! நாம் ஏன் அவ்விதம் செய்யக் கூடாது? நம் நாட்டிற்கு வரும் ஐரோப்பியர்களும் நம் தேசத்தில் இருக்கும் சிலவகுப்பினர்களும் முட்டைகளையும் கோழிகளையும் உண்பதினால், ஏழைக் குடியானவர் முட்டைகளையும் கோழிகளையும் அவர்களிடம் விற்று அதனால் வரும் திரவியத்தைக் கொண்டு தங்கள் வாழ்நாளைச் சந்தோஷமாய்க் கழிக்கக் கூடும். இவ்விதமாய் அனேக சிறிய தொழில்கள் இருக்கின்றன. அவைகளை நமது "பிழைக்கும்வழி"யில் ஒவ்வொன்றாய் எழுதி வெளியிடுகிறேன்.

ஜோதிமணி.



## AHALYA BAI.

## அகல்யாபாய்.

---

பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த ஆமட்நகர் ஜில்லாவில் பதார்த்தி என்னும் ஒரு கிராமம் உண்டு. அந்த கிராமத்தில் சற்றேறக் குறைய 180 வருஷங்களுக்கு முன்னே மஹாராஷ்ட்ர ஜாதியில் பயிர் செய்து ஜீவனம் செய்து கொண்டிருந்த ஆனந்தராவ் ஷந்தி என்று பெயர் பூண்ட ஒருவன் வஸித்து வந்தான். அவனுக்கு வெகுகாலமாக புத்ரஸந்தானமில்லாமல் கடைசியாக ஒரு ஸாதுவின் அனுக்கிரஹத்தால் அருகிலிருந்த கோலாப்பூரில் ஜகதாம்பாள் அம்மனை ஒரு வருஷகாலம் தரிசனம் செய்து வந்ததின்பேரில், அம்பாள் கடாக்ஷத்தால், அவன் மனைவி கர்ப்பவதியாகி, கிரமப்படி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்கு 'அகல்யாபாய்' என்று நாமகரணம செய்தார்கள். ஆனந்தராவ் குழந்தைக்கு படிப்பு முதலியவைகளுக்கு மார்க்கமுண்டாக்கி 9 வயதானவுடனே அவளுக்கு விவாஹம்செய்ய எத்தனித்தான். அநேக இடங்களில் அலைந்தும் குழந்தைக்கு ஸரியான புருஷன் அகப்படவில்லை. கடைசியாக தன்னால் முடியாமல்போகவே, ஸ்வாமியிடம் பாரத்தை ஒப்புவித்துவிட்டு வீடுவந்து சேர்ந்தான்.

இவ்விதம் இருந்துகொண்டிருக்கையில் ஒருதடவை, ராகோபாபீஷ்வாவும், மல்ஹார் ராவ் ஹோல்காரும் ஏதோ ஓரிடத்தில் கலகத்தை அடக்கிவிட்டுத் திரும்புகிறவர்களாய் பதார்த்திகிராமத்தில், ஆனந்தராவ் வீட்டுக்கு எதிரிலிருந்த மாருதி (வாயு) ஆலயத்தில் தங்கும்படி நேரிட்டது. தற்செயலாய் மல்ஹார் ராவ் ஹோல்கார் அகலயாபாயைப் பார்த்தார். அவளது பெருந்தன்மையையும், நகையையும், அழகையும் மெச்சினவனாய், அருகிலிருந்த அகல்யாபாயின் பழைய வாத்தியாரிடம் அவளது வரலாற்றை விசாரிக்கவே, அவள் இன்னாளென்று தெரிந்துகொண்டு, தனது புத்ரன் காந்திராவுக்கு அவளைக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று இச்சைப்பட்டு, ராகோபாபீஷ்வாவிடம் தனது அபிப்பிராயத்தை வெளியிடவே, அவரும் ஸம்மதித்தார். உடனே ஆனந்தராவையும் அழைத்து தனது விருப்

பத்தைத் தெரிவிக்க, அவரும் ஸம்மதித்தார். கூடவே காந்திராவும் வந்திருந்தான்: மல்ஹார்ராவ் ஹோல்காரின் இச்சைபடியே காந்திராவுக்கும் அகல்யாபாய்க்கும் விவாஹம் நடந்தது. கொஞ்ச காலத்துக்குப் பிற்பாடு அகல்யாபாய் இண்டூரில் தன் புருஷன்வீடு போய்ச் சேர்ந்தாள்.

அகல்யாபாய் தன் புருஷன் வீட்டில் இருந்த விதத்தைப்பற்றி இங்கே கொஞ்சம் எழுதுவது தகுதியாகும். மாமனாரோ வயதானவர், அடிக்கடி தனது சேனாதிபதிகளிடம் கோபித்துக்கொள்வார். அந்த ஸமயங்களிலெல்லாம் அகல்யாபாய் தனது மிருதுவான பேச்சால் அக்கோபத்தை சாந்தப்படுத்துவாள். அவருக்கு வேண்டிய பணிவிடைகளை குறைச்சலின்றி செய்வாள். எப்பொழுதும் மல்ஹார்ராவ் அகல்யாபாயைக்கண்டால் உயிராயிருப்பார். அவளிடத்தில் வெகு ப்ரியம். மாமியார்கௌதமாபாய் அஹங்காரமும்,கர்வமுமுள்ளவள். அடிக்கடி அகல்யாபாயை கோபித்துக்கொண்டாலும் அந்த ஸமயங்களிலெல்லாம் அகல்யாபாய் தணிந்து போவதே வழக்கம். தான் ஒரு பெரிய அதிபதியின் நாட்டுப்பெண் என்று கர்வங்கொண்டு அரண்மனையில் இருக்கும் வேலைக்காரர்களை கடிந்து வேலை ஏவுவதே கிடையாது. ஆகவே அரண்மனையில் இவளைக் கண்டால் எல்லாருக்கும் வெகு ப்ரியம். தான் போஜனம் செய்து ஒழிந்த வேளையில் புராணங்களையும், ராமாயணம், பாரதம் முதலான ஸத்கதைகளையும் பாராயணம் செய்து அவைகளில் சொல்லியிருக்கிற விதிப்ரகாரமே நடப்பாள்.

இப்படிக் காலம் கழித்துக்கொண்டிருக்கும்பொழுது ஒரு தடவை தேசத்தின் ஒரு மூலையில் ஜாட்ஸ் என்னும் கொடிய ஜாதியார் ஜனங்களுக்கு பொறுக்க முடியாத ஹிம்ஸையைச்செய்துகொண்டிருந்ததால் மல்ஹார்ராவ் காந்திராவைக் கூப்பிட்டு ஜாட்ஸுகளை அடக்கி விட்டு வரும்படியாக உத்தரவிட்டார். அப்படியே காந்திராவ்போய் அவர்களோடு யுத்தம் செய்ததில், கடைசியில் யுத்தத்தில் மடிந்து போய்விட்டான்.

ஸமாசாரம் அகல்யாபாய்க்கும் மல்ஹார்ராவுக்கும் எட்டியது. என்னசெய்வாள் பாவம்! கையில் மாலிராவ் என்று ஒரு பிள்ளையும் மதஸ்யாபாய் என்று ஒருபெண்ணும் இருந்தன. மஹாபதிவிரதையாதலால் தானும் உயிரை விட்டு விடுவதாகத் தீர்மானித்தாள். இதை கேட்டவுடன், ஒருநாளும் கண்ணீர் சொரியாத கண்ணில், தாரை தாரையாக நீர் ததும்பினவராய், மல்ஹார்ராவ் அகல்யாபாய் அருகில்வந்து "குழந்தாய், காந்திராவோ என்னை பிள்ளையில்லாதவனாக விருத்தியாப்யத்தில் விட்டுவிட்டுப் போய்விட்டான். அவன் போய் விட்டானென்றால் நீ இருக்கிறாய், உன் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாகிலும் உயிர் வைத்திருப்போம் என்று எண்ணினேன். ஆனால் நீயும் உயிரை மாய்த்துக்கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறபடியால், நானும் உயிரை விட்டுவிடுகிறேன்," என்று அழவே, அகல்யாபாய் அவரைப்பார்த்து இரக்கப்பட்டவளாய், தன துக்கத்தை ஒருவிதமாய் அடக்கிக்கொண்டு, மனஸை ஸ்திரப்படுத்திக் கொண்டாள்.

மல்ஹார் ராவ் கிழவரானபடியால் ராஜ்யத்தைப்பற்றி அகல்யாபாயே கவனிக்கும்படி நேர்ந்தது. அவர் அகல்யாபாயை விட்டு விட்டு அடிக்கடி யுத்தங்களுக்குப் போய்விடுவார். அந்தக் காலங்களிலெலலாம், ராஜ்யத்தின் கணக்கில் ஒன்றும் பிசகில்லாமலும், அதிகப்படி செலவு ஒன்றும் செய்யாமலும், நீதி ஸரிவர செலுத்தினவளாய், அபவாதத்துக்கு இடமில்லாமல் தானே நேரில் எல்லாக் கணக்குகளையும் பரிசோதித்து வருவாள். இந்தவிதமாக ராஜதந்திரங்களைத் தெரிந்துகொண்டாள். இப்படி ஒருதடவை மல்ஹார் ரராவ் வழக்கம்போல் எங்கேயோ போய் யுத்தம் செய்துவிட்டுத் திரும்பி வரும்பொழுது அலம்பூர் என்னும் ஊரில் தேகத்தில் யுத்தம்செய்த சிரமம் ஜாஸ்தியாயிருந்தபடியாலும், வயதாகிவிட்டபடியாலும் இறந்துபோய்விட்டார். அவர் இறந்துபோய்விடவே, ஸரியானவார்ஸான அகல்யாபாயின் புத்ரன் மாலிராவை ஸிம்மாஸனத்தில் வீற்றினார்கள். ஆனால அவன் ஸிம்மாஸனமேறின மாதமே இறந்துபோய் விட்டான். ராஜ்யத்தில் வேறு ஒருவரும் ஆளத்திறமை உடையவர்கள் கிடையாது. அகல்யபாய் ஒருத்திதான். பர்த்தாவையும் சாகக்கொடுத்தாள். பிள்ளையையும் சாகக்கொடுத்து விட்



டாள். அவளுடைய துக்கத்துக்கு ஒரு அளவில்லை. தைரியசாலியானதாலும் படித்தவளானதாலும் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு தானே ராஜ்யத்தை ஆளுவதாக ஒப்புக்கொண்டாள்.

இவள் ஆளத்துவக்கினதில் எல்லாருக்கும் த்ருப்திதான். என்றாலும், மந்திரிகளில் ஒருவனான கங்காதர் ஜஸ்வண்டுக்கு மனமில்லை. எப்பொழுது ஸிம்மாஸனத்தில் ஒருகுழந்தை உட்கார்ந்து, நாம் கார்டியனாயிருந்து நமக்கு வேண்டிய ஐசுவரியத்தைச் சேர்த்துக் கொள்ளப்போகிறோம் என்றே துர் எண்ணம் கொண்டிருந்தான். இப்பொழுது அகல்யாபாய் ஆளத்துவக்கிவிட்டபடியால், தன் விருப்பப் படியெல்லாம் அவள் இணங்கமாட்டாளென்று தெரிந்து பின் வருமாறு அவளுக்கு ஒரு நிருபம் எழுதினான்.—

"தாங்களோ பெண். பெண் சொல்லுகிற வார்த்தையை ப்ரஜைகள் மதிக்கமாட்டார்கள். தாங்கள் ராஜ்யத்தை ஆளுவதும் கஷ்டமாயிருக்கும். தங்களுடைய பூஜை முதலியவற்றிற்கு குந்தகம் ஏற்படும். ஆகையினால் தங்கள் குலத்தில் யாராவது ஒருகுழந்தையை ஸிம்மாஸனத்தில் உட்காரவைத்து, என்னை கார்டியனாகவைத்தால், ஸரிவரப் பார்த்துவருவேன். தாங்கள் இதன்படி நடக்க இஷ்டமில்லாவிட்டால் சத்துருக்கள் வந்து தங்கள் ராஜ்யத்தைக் கொள்ளையடித்து விடுவார்கள்."

இதைப் பார்த்தவுடன் அகல்யாபாய் புன்சிரிப்புக் கொண்டவளாய் பதில் எழுதினாள். "நான் ஒரு ராஜாவுக்கு பத்னி, ராஜாவுக்குத் தாயார். அப்படியிருக்க எனக்குமேலே ஒரு ராஜாவை நான் எப்படி வைப்பேன். நான் தான் ஆளுவேன். வேறொருவரும் என் உத்தரவன்றியில் ராஜாவாக முடியாது."

கங்காதர் ஜஸ்வண்டு தன் காரியம் பலிக்காததைநோக்கி பீஷ்வாவுக்கு அவஸரமாய் ஒரு கடிதம் எழுதி, "உடனே ஒருஸைன்யத்தைச் சேர்த்துக் கொண்டுவந்து இந்தூரைத் கைப்பற்றிக்கொள்ளவும். கேவலம் ஒரு ஸ்திரீதான் ஆண்டுக் கொண்டிருக்கிறாள். சிரமமேயிராது" என்று எழிதினான். பீஷ்வாவுக்கு மாமனான ராதோ என்னப்பட்டவன் இந்தக் காரியத்தை ஸாதிக்கப் புறப்பட்டான். இது விஷயம் அகல்யாபாய்க்கு எட்டவே, உடனே ராதோவுக்கு "உன்தலையில் நீயே கல்லைத்தூக்கிப்போட்டுக்கொள்கிறாய். உன்கெட்ட எண்ணமுள்ள காரியத்துக்கெல்லாம் அனர்த்தமே விளையும். இந்த ராஜ்யம் என்னுடையதுதான். நான் இருக்கும் வரையில் என்னுடையதாகவே இருக்கும்," என்று ஒருகடிதம் அனுப்பினாள். இதைப்பார்த்ததும் ராதோவானவன் "மல்ஹார் ராவ் பீஷ்வாவுக்குள்ளிருந்தான். அவன் போனவுடன் இவளுக்கு இவ்வளவு கர்வம் வந்திருக்கிறது, இவள் கர்வத்தை அடக்குகிறேன்" என்று சபதம் கூறினான். நிற்க.

அகல்யாபாயும் யுத்தத்துக்குத் தயாரானாள். ப்ரதம தளகர்த்தனை துக்காஜியை அழைத்து அவனிடம் யோசனைகேட்க அவனும் யுத்தமே கொடுப்போம் என்று சொன்னான். உடனே அகல்யாபாய், பான்ஸ்லே, கெய்க்வார், ஸிந்தியா முதலானபேர்களை உதவிபுரியும்படி வேண்டிக் கொண்டாள். அந்தப் பிரகாரமே பான்ஸ்லே தானே நேரில் ஒரு ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு இந்தூர்வந்து சேர்ந்தார். கெய்க்வார் 20.000 குதிரை வீரர்களை யனுப்பினார். ஸிந்தியாவும் ஒருபெரிய ஸைன்யத்தை யனுப்பினார். ராதோவும் வந்து சேர்ந்தான். அகல்யாபாய் தன்னிடம் சரணம் அடைவாள் என்று நினைத்திருந்தான். ஆனால் ஸைன்யத்தைப் பார்த்தவுடன் ஆச்சர்யப் பட்டும், பயப்பட்டும் ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய் நின்றான். பின்னால் போனால் அவமானம். முன்னால் போனால் தன்உயிர்ச்சேதம். ஆகவே ப்ரமித்தவனாய் பின்வருமாறு ஒருகடிதம் துக்காஜிக்கு எழுதினான்: "மாலிராவ் இறந்து போனான் என்று கேள்விப்பட்டு துக்கம் விசாரிக்க வந்தேனே ஒழிய யுத்தம் செய்யவரவில்லை. அப்படியிருக்க ஊருக்குள் பிரவேசிக்க முடியாமல் ஸைன்யத்தை முன்னால் நிறுத்தியிருக்கிறீர்களே." உடனே துக்காஜியும் "நீசொல்லுகிறது உண்மையானால காரியத்தால் ரூபித்துக் காண்பி" என்று பதில் எழுதினான். அப்படியே ராதோவும் தன்னுடன் 4, 5 பேரை மட்டும் கூட்டிக்கொண்டுவர துக்காஜி அவனை அழைத்துக் கொண்டு அகல்யாபாயிடம் கொண்டுபோய் விட்டான். ராதோ அகல்யாபாய் பேசுகிற ஸாமார்த்தியத்தையும் ராஜ்ய விவஹாரங்களில் அவளுக்கிருக்கிற புத்தியை

யும்பற்றி ஆச்சர்யப்பட்டு, அவளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வெட்கினவனாய் ஊர் போய்ச்சேர்ந்தான்.

அகல்யாபாயின் தினஸரி வேலையைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். தினம் காலை 5 மணிக்கு எழுந்துவிடுவது வழக்கம். உடனே ஸ்நானம்செய்து காலை பூஜை முதலியவைகளை முடித்துக்கொண்டு, பிற்பாடு ராமாயணம் பாரதம் முதலியவைகளைப் பாராயணம் செய்வாள். எல்லாம் முடிந்த பிற்பாடு' தன் கையினாலேயே பரிமாறி ப்ராம்மணாளுக்கு அன்னமிட்டு தான் போஜனத்துக்கு உட்காருவாள். அப்புறம் கொஞ்சம் நாழிகை சிரம பரிஹாரம் செய்துகொண்டு தர்பார் ஹாலுக்குப்போய் ஒரு ராஜாசெய்யவேண்டிய வேலையையெல்லாம் செய்வாள். யார்வந்தாலும் பேட்டிகொடுப்பாள். ஸாயங்காலமானவுடன், ஸாயங்கால பூஜையானதும், கொஞ்சம் சிற்றுண்டி செய்து விட்டு வெளியே வரும்பொழுது மந்திரிகள் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் பேசவேண்டியதைப் பேசிவிட்டு, பிற்பாடு 11 மணிக்கு நித்ரைக்குப் போவாள். இவள் ஆண்டவரையில் ராஜ்யத்தில் ஒரு கலகமாவது யுத்தமாவது கிடையாது. ஒரு ஸமயம் துக்காஜி ஜெய்பூருக்குஒரு கடன் விஷயமாகப் போகவேண்டியிருந்தது. அவ்விடத்தில் அவனை ஜெய்பூரார் அடித்துவிட்டார்கள். உடனே அகல்யாபாய்க்கு பணத்துக்கும் ஸைன்யத்துக்கும் எழுதினான். அப்பொழுது அகல்யாபாய்க்கு வயது 58 இருக்கும். பின் வருமாறு பதில் எழுதினாள். 'உனக்கு வேண்டியபணமும், ஸைன்யமும் அனுப்பியிருக்கிறேன், ஆகையினால் யுத்தம்செய்து ஜெயிக்க வேண்டும். உன்னால் முடியாவிட்டால் நான்வந்து யுத்தம் செய்து ஜெயிக்கிறேன்.' பாருங்கள் இவள் மனோதைர்யத்தை, அவ்வளவு வயதாகியும் மனோபலம் போகவில்லை.

மல்ஹார்ராவ் இறந்துபோகும் காலத்தில் கஜானாவில் 16 கோடி ரூபாயிருந்தது. ராஜ்ய வரும்படி செலவுக்குப் போதுமானது என்று கண்டதும், அந்த 16 கோடியையும் ஸ்வாமி கிருஷ்ணபகவான் பேருக்கு எழுதிவைத்துவிட்டாள். இந்த ஸமயம் ராகோவுக்கு தரித்திரசையாயிருந்த படியால் அகல்யாபாய்க்கு எழுதினான். உடனே அகல்யாபாய்: "இத்தனை நாள் வரையிலும் தொடாதபணம் ஸ்வாமி பேருக்கு எழுதிவைத்தாய் விட்டது. அதிலிருந்து ஒரு ரூபாய்கூட எடுக்கமுடியாது. ஆனால் நீ ப்ராமணன், அவ்வளவு அவசியமாயிருந்தால், உனக்கு யாசகம் கொடுக்கிறேன்" என்றுபதில் எழுதினாள். ராகோ இந்தக் கடிதத்தைப்பார்த்ததும் ரொம்பவும் கோபம் கொண்டவனாய் 'நான் யாசகம் வாங்குவதற்கு பிச்சைக்காரனல்ல, எனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ள நானே நேரில் வருகிறேன்' என்று அகல்யாபாய்க்கு எழுதினான். உடனே அகல்யாபாய் புருஷன் மாதிரி உடுப்பணிந்து தன்னுடன் கூட 500 ஸ்திரீகளையும் அழைத்துக் கொண்டுபோய் யுத்தகளத்தில் நின்றாள். ராகோவந்து பார்த்ததும் 'ஸைன்யம் எங்கே' என்றுகேட்டான். உடனே அகல்யாபாய், 'முன்காலங்களில் நாமெல்லாரும் பேஷ்வாவுக்கு அடிமையாயிருந்தவர்கள் தான். யுத்தத்தில் ஜெயித்து விட்டாயானால் என்னுடைய ராஜ்யமுழுவதும் உன்னுடையது. இல்லாவிட்டால் ஒருகாசு கூடத்தொடமுடியாது, ஏனென்றால் தர்மமே எல்லாவற்றிலும் மேலானதனம், அந்த தர்மத்தை நான் காப்பாற்றவேண்டும்,' என்று சொல்லவே, ராகோ வெட்கினவனாய் தான் வந்தவழியே திரும்பிப் போனான்.

அகல்யாபாயின் ராஜ்ய தந்திரம் ஒருவருக்கும் வராது. அவளுடைய ஸாமர்த்தியம் அபாரம். அவள் ஆண்டகாலத்தில் தேசத்தில் வியாபாரம் பலமாய் நடந்தது. குடியானவர்களெல்லாம் ஒற்று வாழ்ந்தார்கள். திருட்டு, களவு, அதிகமாய்க் கிடையாது. ஒவ்வொரு கேஸையும் தானே விசாரித்துத் தீர்ப்பு, சொல்லுவாள். ஏழைகளை ஆதரிப்பாள். அந்தியகாலத்தில் ஒரு பெரிய துக்கம் அவளுக்கு வந்துசேர்ந்தது. முன்னாலேயே சொன்ன அவள் புத்ரியான மத்ஸ்யாபாயின் பர்த்தா ஜஷ்வந் ராவ் இறந்துபோனதும் மத்ஸ்யாபாயும் அவனுடன் உடன்கட்டை யேறிவிட்டாள். இது ஒன்றுமாத்திரமே அவளுக்கு அந்திய காலத்தில் துக்கம் உண்டாக ஏற்பட்டது. அகல்யாபாய் தனது 70 வதுவயதில் பரலோகம் சேர்ந்தாள் என்பதாக சரித்ரங்கள் மூலமாய்த் தெரிகிறது. அவளை இப்பொழுதுங்கூட மஹாராஷ்ட்ரர் தெய்வமாக ஆராதித்து வருகிறார்கள்.



# SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

---

## A CATECHISM ON SANITATION.

BY

C. T. H. JOHNSON I. C. S.

## ஸௌகாதாரத்தைப்பற்றி விஞவிடைகள்.

---

வினா.—வியாதிக்கு முக்கிய காரணமென்ன?

விடை.—வியாதிக்கு முக்கிய காரணம் அழுக்கு.

வினா.—அதெப்படி?

விடை.—எப்படி எனில் வியாதிகள் பெரும்பாலும் அழுக்கைச் சாப்பிடும் மிகச் சிறிய பூச்சிகளால் உண்டாகின்றன.

வினா—பூச்சிகள் என்பவை என்ன?

விடை.—நமது கண்ணுக்குத் தெரியாத அவ்வளவு சிறிதாயிருந்தாலும் தேகத்திற்கு அதிக துன்பத்தைக் கொடுக்கக்கூடிய சிறு பூச்சிகள் என்னலாம்.

வினா.—அவைகள் எப்படித் தீங்கு செய்கின்றன?

விடை.—காலராப் பூச்சிகள் மிக வேகமாய் வயிற்றிலும் குடலிலும் பெருகி வயிற்றெரிச்சலையும் வயிற்று வலியையும் உண்டாக்குகின்றன. விஷஜ்வர் முண்டாக்குகிற பூச்சிகள் ரத்தத்துடன் சேர்ந்து ரத்தத்திலுள்ள சிவப்பு வஸ்துக்களைச் சாப்பிடுவதினால் ரத்தம் விஷ ஸம்பந்தப்பட்டு ஜ்வரமுண்டாகிறது. மற்றப் பூச்சிகள் வெவ்வேறு விதமாய்த் தீங்குசெய்கின்றன. ஆனால் எல்லாப் பூச்சிகளும் கெடுதலையும் அடிக்கடி மரணத்தையும் உண்டாக்குகின்றன.



வினா.—அப்படியானால் அழுக்கினால் எவ்விதம் வியாதியுண்டாகிறது?

விடை.—எப்படியெனில் இந்தப் பூச்சிகள் அழுக்கில் மறைந்திருந்தே அதைச் சாப்பிட்டு வருகின்றன. நமது வீட்டிலாவது தேகத்திலாவது அழுக்கிருந்தால் அதின் வழியாய் அந்தப் பூச்சிகள் சுலபமாய் நமது தேகத்தினுட்சென்று வியாதியையுண்டாக்குகின்றன.

வினா.—அழுக்கை விலக்கத்தகுந்த வழிகளென்ன?

விடை—நமது உடைகளையும் உடம்பையும் சுத்த ஜலத்தில் அடிக்கடி கழுவவேண்டும்.

வினா.—சுத்தஜலம் அகப்படாவிட்டால், என்ன செய்யவேண்டும்?

விடை.—தண்ணீரைக் கொதிக்கவைத்து பிறகு உபயோகிக்கவேண்டும்.

வினா—தண்ணீரைக் கொதிக்கவைப்பதினால் என்னபயன்?

விடை.—அதைக் கொதிக்கவைப்பதினால் அதிலுள்ள பூச்சிகள் இறந்துபோகின்றன.

வினா.—தண்ணீரை வெதுவெதுப்பாய் மட்டும் சுடவைத்தால் போதுமா?

விடை.—அது கொஞ்சமேனும் பிரயோசனமில்லை. அப்படிச் செய்வதினால் அதிகக் கெடுதியுண்டு.

வினா.—அதெப்படி?

விடை.—அப்படி தண்ணீரை வெதுவெதுப்பாய்ச் சுடவைப்பதினால் அதிலுள்ள பூச்சிகளுக்கு ஸௌகமான ஸ்நானத்தைகொடுப்பது போலாகிறது. வெதுவெதுப்பான தண்ணீரில் ஸ்நானம் செய்த ஒருவன் களைப்பு நீங்கிச் சுகம் பெறுவதுபோல் அதிலுள்ள பூச்சிகளும் உற்சாகத்தையடைகின்றன.

வினா.—அப்படியானால் தண்ணீரைக் கொதிக்கவைப்பதினால் என்ன தான் பிரயோஜனம்?

விடை.—கொதிக்கும் தண்ணீரில் முழுகிய மனிதனிறந்து போய் விடுவதுபோலவே அதிலுள்ள பூச்சிகளும் இறக்கின்றன.

வினா—வீட்டிலும் கொல்லையிலுமுள்ள அழுக்கைப் போக்கிவிட முக்கியமான வழி என்ன?

விடை.—அக்கம் பக்கத்தார்களுக்குக் கெடுதலுண்டாக்காமல் எரியக்கூடிய அசுத்தங்களை வீட்டிற்குக் கொஞ்ச தூரத்துக்கப்பால் சுட்டெரித்து விடவேண்டும்.

வினா—எரிக்கக்கூடாத அசுத்தங்களை என்னசெய்யவேண்டும்?

விடை.—வீட்டிற்கப்பால் கொஞ்ச தூரத்திலுள்ள காய்ந்த தரைக்கு அவைகளைக் கொண்டுபோய் ஒரு அடி ஆழம் பள்ளம் தோண்டி அதில் அவைகளைப் புதைத்து மண்ணால் மூடிவிடவேண்டும்.

வினா—இப்படிச்செய்வது காய்ந்த தரைக்குக்கெடுதலை யுண்டுபண்ணுதா?

விடை.—இப்படிச் செய்வதானது பூமிக்கு அதிக மாகுலைக் கொடுக்கும்படியான உரத்தைக் கொடுக்குமேயல்லாமல் கெடுதலை யுண்டுபண்ணுது.

வினா.—அப்படியானால் பூமியும் அதில் விளையும் மாகுலும் அசுத்தமாயிராதா?

விடை.—ஒருபொழுதும் அப்படியிருக்காது. ஆனால் அசுத்தம் பூமியோடு சேர்ந்து அதற்கு வளத்தைக்கொடுத்து அதை நல்ல நிலமாகச்செய்யும்.

வினா.—அது எப்படி அழுக்கு நன்மையைக் கொடுக்கும்?

விடை.—அது எப்படியென்றால் தன் இடம் விட்டு வேறு இடம் மாறிய வஸ்துவுக்குத்தான் அழுக்கு என்றுபெயர் இடம்மாறாமல் தன்னிடத்திலேயே இருந்தால் அது அழுக்கல்ல.

வினா.—தயவுசெய்து அதை விவரிக்கவேண்டும்?

விடை.— நல்லது, ஒரு பையனுடைய நகத்திலாவது தலை மயிரிலாவது மணலிருந்தால் அதை அழுக்கென்கிறோம். ஆனால் அது சுண்ணும்புச்சாந்துடன் சேர்ந்திருக்கும் பொழுது அம்மணல் நல்ல பிரயோஜனத்தைக் கொடுப்பதால் அப்போது அது அழுக்கல்ல. அதேமாதிரி பசுவின்சாணம் கொல்லையிலாவது ஒரு பையனுடைய துணிகளிலாவதிருந்தால் அது அழுக்கு. ஆனால் வயலிலிருந்தால் அது ரொம்பவும் நல்ல எரு. அப்போது அதை அழுக்கென்று சொல்லக் கூடாது.

காலரா.

வினா—காலரா உண்டாவதற்குக் காரணம் என்ன?

விடை.—காலராவானது நாம் சாப்பிடும் ஆகாரம், தண்ணீர் இவைகளுடன் சில பூச்சிகள் நமது வயிற்றுக்குட் போய் அதினால் வயிற்றெரிச்சல், வயிற்றுவலி, மரணம் இவைகளை உண்டாக்குகின்றன.

வினா.—இப்பூச்சிகள் எப்படி வருகின்றன?

விடை.—இப்பூச்சிகள் ஸாதாரணமாய்தண்ணீரிலிருந்து நமக்கு வருகின்றன. முக்கியமாய் ஆற்றில் முதலில் வரும் வெள்ளத்தினாலும் மழையினாலும் வருகின்றன.

வினா.—அதெப்படி?

விடை.—எப்படி யெனில் கோடைகாலத்தில் ஆறுகளின் கரைகளிலும் குளங்களின் கரைகளிலும் எல்லாவிதமான ஆபாஸங்களும் ஜனங்கள் செய்கிறபடியால் மழையும் வெள்ளமும் வரும்போது இவ்வாபாஸங்களை



யெல்லாம் அடித்துக்கொண்டு வருகிறது. இவ்வாபாஸங்களில் காலராப்பூச்சிகள் வஸிக்கின்றன.

வினா.—இந்த காலங்களில் நாம் எப்படி காலராவைத் தடுக்கமுடியும்?

விடை.—நாம் உபயோகப்படுத்தும் தண்ணீரை கொதிக்கவைத்து உபயோகித்தால் தடுக்கலாம். நாம் சாப்பிடும் பாலை நன்றாய்க் காய்ச்சி சாப்பிடுவதினாலும் சமைத்த சாதத்தை மாத்திரம் சாப்பிடுவதினாலும் அதைத் தடுக்கலாம்.

வினா.—இது எதற்காக?

விடை.—ஏனென்றால் நாம் சாப்பிடும் பாலிலாவது தண்ணீரிலாவது ஆகாரத்திலாவது மேற்சொல்லிய பூச்சிகளிருந்தால் சமைக்கும்போதும் நன்றாய்க் காய்ச்சும்போதும் அவைகள் செத்துப்போய்விடும்.

வினா.—நமது கிராமத்திற்கு காலரா வந்தால் அதைத் தடுக்க என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டும்?

விடை.—வீடுகளையும் கொல்லைகளையும் அதிக சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். எல்லா அசுத்தங்களையும் கொஞ்சதூரத்திற்கப்பால் கொளுத்தியாவது புதைத்தாவது விடவேண்டும். நாம் சாப்பிடும் எல்லா பதார்த்தங்களையும் சமைத்துச் சாப்பிடவேண்டும். எல்லா தண்ணீரையும் கொதிக்கவைத்து உபயோகிக்கவேண்டும். நம்மில் யாருக்காகாவது வயிறிளகினால் அதை தடுக்க ஏதேனும் மருந்து சாப்பிடலாம்.

வினா.—என்ன மருந்து?

விடை.—ஆஸ்பத்திரி மருந்தையாவது ஸர்க்காரிலிருந்து அனுப்பப்படும் மருந்தையாவது சாப்பிட்டால்தான் மிகவும் நலம்.

வினா.—அந்தமருந்து அகப்படாவிட்டால் என்ன செய்யலாம்?

விடை.—அது அகப்படாத பக்ஷத்தில் ஒருவாய்காடியை மிளகாயைத் தொட்டுக் கொண்டு சாப்பிடுவதினாலேயே தடுக்கலாம். ஆனால் சிறு குழந்தைகளுக்கும் பலவீனர்களுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் காடியைக் கொடுக்கக்கூடாது.

வினா.—ஏன் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது?

விடை.—கொடுத்தால் அவர்களை அது கொன்றுவிடும்.

வினா.—காலரா காலத்தில் வேறேதாவது செய்யவேண்டுமா?

விடை.—செய்யவேண்டும். காலராகாலத்தில் பயமன்னியில் உள்ள தைரியத்தைக்கை விடாமல் எப்போதும்போல் உற்சாகமாயிருக்கவேண்டும். ஒரு மனிதன் குதூகலத்துடன் வெளியில் போய்த்தன் வேலையைப் பார்த்து வருவானாகில், காலரா பூச்சிகள் அவனிடம் அணுகா.

விஷஜுரம்.

வினா.—விஷஜுரம் எதினாலுண்டாகிறது?

விடை.—கொசுக்கடியினாலே நம்முடைய தேகத்திற்குள் பூச்சிகள் போய் ரத்தத்துடன் சம்பந்தப்பட்டு விஷஜுரத்தை உண்டாக்குகின்றன.

வினா.—அதை எப்படித் தடுக்கக்கூடும்?

விடை.—கொசுக்களையும் அவற்றின் முட்டைகளையும் கொல்லுவதால்.

வினா.—கொசுமுட்டை என்றால் என்ன?

விடை.—ஒரு கொசு முட்டையிட்டவுடன் அம்முட்டையிலிருந்து புறப்படும் ஜந்து கொசுவாகவே ஜனிக்காது. ஆனால் ஒரு மயிர்ப் புழுமாதிரியாய் உண்டாகி அது தண்ணீரில் வஸிக்கிறது.

வினா.—அதை எப்படிக் கொல்லமுடியும்?

விடை.—நாம் குடியிருக்கும் வீடுகளின் ஸமீபத்திலிருக்கும் சேறு சகதி முதலிய ஆபாஸமுள்ள குட்டைகளையும் சாக்கடைகளையும் ஓட்டவடிக் கட்டுவதினாலும் நம்முடைய வீடுகளை சுற்றிலும் நன்றாய்க் காய வைத்து சுத்தமாயும் பார்வைக்கு மனோகரமாயும் வைத்துக் கொள்ளுவதினாலும் மேற் சொல்லிய பூச்சிகளைக் கொல்லலாம்.

வினா.—அப்படிச் செய்வதினால் என்ன நன்மையுண்டாகும்?

விடை.—மேற்சொல்லிய கொசுமுட்டைகள் மேற்படி குட்டைகளிலும் சாக்கடைகளிலும் மட்டும் வசிப்பதால் அவைகளை சுத்தமாய் வைத்துக்கொண்டால் ஷெ கொசுமுட்டைகள் வசிக்க வேறு அசுத்தமான இடங்களில்லாமல் ஓடிப்போய் விடுகின்றன.

வினா.—விஷஜுரத்திற்கு உயர்ந்த மருந்தென்ன?

விடை.—கொயினாத்தான் உயர்ந்தமருந்து. அது எல்லா தபாலாபீஸ்களிலும் 5 நெல் அளவில் விற்கப்படுகின்றது.

வினா.—அதை எப்படிச் சாப்பிடவேண்டும்?

விடை.—5 நெல்லளவு தண்ணீருடன் சேர்த்து ஜுரம் படிகிறவரையில் ஒவ்வொரு நாளும் சாப்பிடவேண்டும். பையன்களுக்குக் கொஞ்சம் குறைத்துக் கொடுக்கவேண்டும்.

வினா.—கொயினாவின் உபயோகமென்ன?

விடை.—விஷஜுரப் பூச்சி ரத்தத்தில் வசிக்காதபடி ரத்தத்திற்கு ஒருவித நெடியையுண்டுபண்ணும்.

வயிற்றுநோய், வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு முதலியன.

வினா.—குடல்களிலும் இரைப்பையிலும் நோய்கள் உண்டாகக்காரணமென்ன?

விடை.—தகாத ஆகாரம் உட்கொள்ளுவதினால்.

வினா.—அதற்கு வைத்தியமென்ன?

விடை.—உடம்பு சொஸ்தமாகிற வரையில் கஞ்சி, பால், சமைத்தசாதம் இவைகள் போன்ற ஸாமான்யமான ஆகாரம் சாப்பிடுவதுதான்.

வினா.—கறி, நெய், முதலியன சாப்பிடலாமா?

விடை.—அவைகளை சாப்பிடவே கூடாது. ஏனெனில் அக்காலங்களில் அவைகள் அநேகமாய் விஷத்திற்கு ஸமானமாகும்.

வினா.—அப்படியானால் என்னவியஞ்சனம் சாப்பிடலாம்?

விடை.—தேகம் ஸௌக்கியமாகிறவரையில் உப்பைத்தவிர வேறு ஒருவிதமான வியஞ்சனமும் சாப்பிடவே கூடாது. வெறுஞ்சாதமும் பாலும், கஞ்சியும் மாத்திரம் சாப்பிடவேண்டும்.

வினா.—வியஞ்சனமில்லாமல் சாப்பிடமுடியாமல் போனால் என்ன செய்கிறது?

விடை.—அப்படி சாப்பிட முடிகிறவரையில் பட்டினியாக விருந்தால் குணத்தைக் கொடுக்கும்.

வினா.—இப்படிப் பட்ட வியாதிகளுக்கு மருந்து வேண்டியதா?

விடை.—ஆகார விஷயமாய் மேற்சொன்ன விதிகளின்படி நடந்தால் ஒருமருந்தும் வேண்டியதில்லை.

வெட்டுகள், காயங்கள், புண்கள்.

வினா.—இவைகளை சொஸ்தம்பண்ணுவதில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயமென்ன?

விடை.—அவைகளைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளுதல்.

வினா.—அது எதற்காக?

விடை.—ஏனென்றால் அவ்விதமான காயங்கள் சுத்தமாய் வைக்கப்பட்டிருந்தால் அதி



சீக்கிரத்தில் தீர்மாகவே சொஸ்தமாய் விடுகின்றன.

வினா.—ஏன் சில காயங்கள் விருத்தியாய் விடுகின்றன?

விடை.—அவைகள் சுத்தமாய் வைக்கப்படாமலிருப்பதனால்தான். அப்படியிருப்பதால் திறந்திருக்கிற காயத்தின் வழியாய் பூச்சிகள் தேகத்திற்குள்போய் தொந்திரவை உண்டாக்குகின்றன.

வினா.—வெட்டுக் காயங்களையும் புண்களையும் சொஸ்தம் செய்யும்போது கவனிக்க வேண்டிய விஷயங்களென்ன?

விடை.—அவைகளை சுத்த ஜலத்தினால் கழுவி சுத்தமான துணிகளால் கட்டவேண்டியது.

வினா.—நாம் சுத்தமான ஜலத்தை அடைவதெப்படி?

விடை.—தண்ணீரை ஒரு சுத்தமான துணியால் வடிக்கட்டி அதை மறுபடியும் கொதிக்கவைப்பதினால் தான்.

வினா.—வடிக்கட்டுவது மட்டும் போதுமா?

விடை.—போதாது. அதைக்கொதிக்கவைக்கவும் வேண்டும்.

வினா.—ஏன் கொதிக்கவைக்கவேண்டும்?

விடை.—பூச்சிகளைக் கொல்வதற்காக.

வினா.—புண்ணைக்கட்டுவதற்கு துணிகளை நாம் சுத்தம் பண்ணுவதெப்படி?

விடை.—தண்ணீரில் அவைகளைக் கொதிக்கவைத்து வெயிலில் காய்வதற்காக அவைகளை தொங்கவிடுவதினால்.

வினா.—காய்வதற்காக அவைகளை பூமியின் பேரில் போடக்கூடாதா?

விடை.—போடவேகூடாது.

வினா.—ஏன்?

விடை.—ஏனென்றால் பூச்சிகள் அநேகம் பூமியிலிருக்கிறபடியால் அவைகள் துணிகளில் ஒட்டிக்கொண்டு அத்துணிகளின் வழியாய்ப்புண்ணில் நுழைந்து தொந்திரவை உண்டாக்குகின்றன.

வினா.—வேறே ஏதாவது அநுகூலம் செய்யும் பரிகாரம் அவசியமா?

விடை.—புண்ணின்பேரில் கட்டப்பட்டிருக்கிற துணிகள் புண்ணுக்கு வறவறப்புக் கொடுக்காமலிருக்கும்படி கொஞ்சம் நல்லெண்ணெயை அப்புண்ணுக்கு போடலாம். ஆனால் அந்த நல்லெண்ணெய் சுத்தமாய் இருக்கவேண்டும்.

வினா.—அந்த நல்லெண்ணெய் சுத்தமாயிருக்கிறதென்று நாம் நிச்சயபடுத்திக்கொள்வதெப்படி?

விடை.—நாம் ஒருபோதும் அப்படி நிச்சயப்படுத்திக்கொள்ள முடியாது. ஆனால் அந்த எண்ணெயை முதலில் வடிக்கட்டி பிறகு கொதிக்கவைத்து மறுபடியும் ஒரு சீசாவில் குளிர்ச்சியாகும்படி வைத்துவிடுவோமேயானால் அது அநேகமாய் குற்றமற்றதாயிருக்கும்.

வினா.—காயங்களையும் புண்களையும் சொஸ்தம் செய்வதில் முக்கியமான தேவைகளென்ன?

விடை.—சுத்தமான ஜலம், சுத்தமான துணிகள், சுத்தமான எண்ணெய்.

வினா.—வைத்தியனுடைய உபசரணையில் நாம் வைத்தியம் செய்து சொஸ்தம்செய்து கொள்ளக்கூடாதா?

விடை.—கூடவே கூடாது. ஏனென்றால் நாட்டு வைத்தியர்களால் கொடுத்து கட்டச் சொல்லப்படுகிற பசுவின் சாணம் புற்பூண்டுகள் புகையிலை முதலியவை மிகவும் அபாயகரமானவை. மேலும் சில ஸமயங்களில் மரணத்தையும் உண்டாக்குகின்றன.

தடுத்தல்.

வியாதிகளை சொஸ்தம் பண்ணுவதைவிட அவைகளை வரவொட்டாமல் தடுப்பது நலம்.

வினு.—எல்லா வியாதிகளையும் அணுகவொட்டாமல் தடுக்கும்படியான மாற்று மருந்தென்ன?

விடை.—சுத்தமாயிருத்தல்.

வினு.—தேகத்தை மாத்திரம் சுத்தமாய் வைத்துக்கொள்வது போதுமா?

விடை.—போதாது. நாமிருக்கும் வீட்டையும் கொல்லையையும் சுற்றுப் பக்கங்களையும் அதேமாதிரி சுத்தமாயிருக்கும்படியாய் வைத்துக்கொள்வது மிகவும் அவசியம்.

வினு.—நாம் குடியிருக்கும் வீடுகளை எப்படி சுத்தமாய் வைத்துக்கொள்ளக் கூடும்?

விடை.—நம் வீடுகளிலுள்ள அசுத்தங்களை மேற்சொல்லியபடி அப்புறப் படுத்திவிட்டு சுவர்களை சுண்ணும்பினுல் வருஷந்தோறும் ஒருதடவை வெள்ளையடிப்பதினுல் சுத்தமாய் வைத்துக்கொள்ளக் கூடும். மேலும் சூரிய வெளிச்சமும் காற்றும் வரும்படி வீடுகளை எப்பொழுதும் திறந்து வைக்கவேண்டும்.

வினு.—ஏன்?

விடை.—ஏனென்றால் சுண்ணும்பினுல் வெள்ளையடிப்பதானது பூச்சிகளை அணுகவொட்டாமல் தடுக்க ஒத்தாசை செய்யும். சுத்தமான காற்றும் சூரிய வெளிச்சமும் நம்முடைய வீடுகளையும் கொல்லைகளையும் காய்ந்ததாகவும் அழுக்குகளில்லாமலிருக்கும்படிக்கும் செய்ய ஹேதுவாகின்றன.

வினு.—நம்முடைய வீட்டையும் சுற்றுப் பக்கங்களையும் சுத்தமாய் வைத்திருந்தாலும் அதுபோதுமா?

விடை.—போதாது. இவைகளைக் காட்டிலும் முக்கியமான விஷயம் ஒன்றுண்டு.

வினு.—அதென்ன?

விடை.—நாம் குடிக்கும் தண்ணீர்.

வினு.—ஏன்?

விடை.—அநேகம் வியாதிகள் கெட்ட தண்ணீரால் உண்டாகின்றன.

வினு.—அதற்கு நாம் என்ன செய்யக் கூடும்?

விடை.—நாம் குடிக்கிற தண்ணீருக்கு உபயோகப்படுத்துகிற குளமும் கிணறும் சுத்தமாயிருக்கும்படிக்கும், அவைகளைக்குளிக்கும் பொருட்டும் வஸ்திரங்கள் துவைக்கும் பொருட்டும் உபயோகப் படுத்தாமலிருக்கும்படிக்கும், அவைகளுக்கு ஸமீபத்தில் எச்சில் துப்பாதபடிக்கும் வேறு எவ்வித அசுத்தமான காரியங்களைச் செய்யாத படிக்கும் பார்த்துக் கொள்ளக்கூடும்.

வினு.—இவ்வளவு போதுமா?

விடை.—நாமே இம்மாதிரியான காரியங்களைச் செய்யாமற்படி அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

வினு.—ஆனல் இம்மாதிரி தொந்தரவான முன் ஜாக்கிரதை எடுத்துக் கொள்வதினுல் பிரயோஜனமென்ன?

விடை.—நல்லது. 60, 70 வருஷங்களுக்கு முன், காலரா விஷஜுரம் இவைகள் இப்போது இந்தியாவில எவ்வளவு ஸகஜமாயிருக்கின்றனவோ இதேமாதிரி இங்கிலாந்திலுமிருந்தன.

வினு.—இப்போதும் அதேமாதிரிதானு இருக்கிறது?

விடை.—இல்லை, காலரா விஷஜுரம் இவைகள் இப்போது இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு அநேகமாய்த் தெரியாது.

வினு.—அதற்கென்ன காரணம்?

விடை.—இங்கிலாந்து தேசத்து ஜனங்கள் தங்கள் கிராமங்களை சுத்தமாய் வைத்துக் கொள்ளவும் அவைகளிலுள்ள அசுத்த ஜலங்களை அப்புறம் வடியவைக்கவும் தாங்கள் குடிக்கிற ஜலத்தை சுத்தம் செய்துக்கொள்ளவும் இன்னம் இவைகளைப்போன்ற சுகாதாரவிதிகளை அநுசரித்து நடக்கவுந் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள்.



வினு.—அதேமாதிரியான முடிவுக்கு வர நாமும் எண்ணலாமா?

விடை.—நிச்சயமாய் எண்ணலாம். ஆனல் அதிக தொந்தரவை எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வினுவிடையைப்பற்றி சும்மா பேசிக்கொண்டிருப்பதாலும் அடுத்தடுத்து சொல்லிக்கொண்டிருப்பதினுலும் மாத்திரம் திருப்தியடையக்கூடாது.

வினு.—ஆனல் நாம் என்ன செய்யவேண்டும்?

விடை.—மேற்சொல்லிய விதிகளை அநுசரிக்கவேண்டும், முக்கியமாய் நம்முடைய வீட்டையும் கிராமங்களையும் காய்ந்தனவாயும் சுத்தமாயும் மனேகரமாயும் இருக்கும்படி வைத்துக்கொள்வதோடுகூட நாம் குடிக்கும் தண்ணீரை சுத்தமாய் வைத்துக்கொள்ள அதிக ஜாக்கிரதைவேண்டும்.

ஸி. டி. எச். ஜான்ஸன்.

THE WOES I SUFFER FROM.

## நான் படும்பாடு.

பெண்களுக்கு வேறெவ்வித சுதந்தரங்களில்லாதபோதிலும் விவாக காலத்தில் அவர்களின் அபிப்பிராயத்தை அநுசரித்துச் செய்விதென்ற உறுதிப்பாடு மட்டும் இருக்குமேயானல் அது ஒன்றே அவர்களின் கஷ்டங்களை நிவர்த்திக்கப் போதுமானதாகும். இதற்குக் கூட இடங்கொடாத சாஸ்திரங்கள் ஏதேனும் உண்டாயின் அவைகளைச் சுட்டெரித்துப் போடுதல் மிக்க நலம். தன் நிலைமையையும் தான் இனி பிரவேசிக்கப் போகின்ற இல்வாழ்க்கையின் பொறுப்பையும், காதற் சிறப்பையும், கணவர் அன்பைக் கவரும் உபாயங்களையும், நன்கறிந்து கொள்ளத்தக்க பருவமே கல்யாண அபிப்பிராயம் கொடுப்பதற்கு ஏற்றபிராயமாகும். அதுவரையிலும் அவர்களை விவாக நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தாது இருப்பார்களேயானல் அதனிலும் உதார குணமான மகோபாகச் செய்கை வேறொன்றிருக்கப் போகிறதில்லை. ஆனல் அந்த பாக்கியம் மாதர்களுக்கு எப்போது சித்திக்கப் போகின்றதோ ஈசனே அறிவார். இறக்க இருப்பவர்களின் மனது களிக்கவும், அர்த்தாபேக்ஷையை யுத்தேசித்தும், பெற்றோர்களின் மனேதிருப்தியைக் கருதியும், நல்ல ஸம்பந்தம் தவறிப்போகிறதே யென்றும், வழக்கமென்ற பைசாசத்துக்கு அஞ்சியும் நடக்கும் விவாகங்கள் எத்தனையோ? எந்தக்காலத்தில் இந்நாட்டுப்பெண்களைப் பிடித்த பீடை விலகுமோ? எப்போது பால்ய விதவைகளின் துக்கத்திற்குப்பரிகாரம் ஏற்படப்போகின்றதோ அறியேன்.

இதை எழுதிக்கொண்டு வருகிற நான் எனது பத்தாவது பிராயத்தில் தனவானை ஒரு மிராசுதாரருக்கு மூன்றாவது தாரமாக அவருடைய அறுபதாவது வயதில் வாழ்க்கைப்பட்டேன். இந்த அநியாயமும் நம் நாட்டிலே நடக்கிறதல்லவா? இது பணப்பேய் செய்யும் கூத்தல்லவா? காதல் நயத்தைப் பற்றி மோகனங்கி முதலிய கதைகளில் எத்தனையோ அழகாகச் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. இதுபொய்யோ மெய்யோ, என்னைப் போன்றவர்கள் எப்படியறியக்கூடும்? 60 வயது பையனுக்கும் 10 வயது கிழவிக்கும் என்ன காதற் பொருத்தம் உண்டாகப்போகின்றது. மாதர்களின் யௌவனம் என்னப்பட்ட புஷ்பத்திற்கு புருஷ ஸல்லாபமாகிய வாசனை ஏற்படாவிட்டால் யாது பயனுடைத்து? மனைவி மரித்த மறுக்ஷணமே மறுமணத்திற்கு மார்க்கம் யோசிப்பதேன்? இறந்துவிட்ட காதலியின் பிரிவாற்றாமைத்துயரை புதுமணக் களிப்பின் உதவியால் மறக்கக் கருதியன்றே? புருஷர்களினும் அதிக மெல்லிய மனது படைத்த மாதர்களிடத்தில் மட்டும் ஏன் இந்தக்கருணையில்லாமற்போயிற்று? ஆடவர்க்குள்ள உணர்ச்சி மாதர்களுக்கு இல்லையென்ற எண்ணமா? அப்போதே வேண்டாமென்றேனே! அகதி சொல் அம்பலம் ஏறுமா? என்பிதா பிடிவாத புத்தி

மேலிட்டு இந்தப் படுகுழியில் தள்ளினார். எனக்காகப் பெற்றுக்கொண்ட தொகையைக் கொண்டு மாடிவீடுகட்டிக்கொண்டு வைபோக வாழ்வில் இருக்கிறார். என்னைப் பெற்றமாதா மஞ்சள் குங்குமம் அணிந்துகொண்டு நிற்கிறாள். நானோ வேறுசேலையுடுத்து வேஷமாறி மூலைவீட்டில் உட்காரலானேன். இனி எனக்கு யார் இருக்கிறார்கள்? எவருக்காக நான் ஜீவிக்கவேண்டும்? நான் படித்த படிப்பென்ன? எண்ணிய சிந்தனைகளென்ன? என்னவோ என் தலையெழுத்து இப்படியாயிற்று? ஒரு பெண்ணுக்கு மணமகன் தேடப்புகும்போது அவனுக்கு சொத்துண்டா, நிலமுண்டா, படிப்புண்டா, என்பதைக் கவனிக்கிறார்களே தவிர அந்தரங்கத்தில் அவன் என்ன நோய் பிடித்தவனோ, குடியனோ, வெறியனோ, வேசிக்கள்ளனோ இதை யார் கேட்கிறார்கள? அதை விசாரிக்கிறதேயில்லை.

என்னை மாலையிட்டவர் ஒரு பெரிய குடிகாரப் பிரபு. எற்கனவே மிராசுதாரர் என்றும் தெரிவித்திருக்கிறேன். ஆகவே குடிக்கென்ன குறைவா? குடியினால் குடி முழுகியே போயிற்று. போனதுபோக மிகுதியையேனும் கிரமப்படுத்த முயன்றேன். என் நாதர் அறிந்துகொள்ளும்படியாகப் படுக்கையறைக்கு எதிரில் பின் வருகிறபடி எழுதிவைத்தேன்.

“ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்கு சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்கு காரணமில்லாத காயங்கள்? யாருக்கு ரத்தங் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கிற இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும் கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும்போது நீர் அதை பாராதீர். அது மெதுவாய் இறங்கும்; முடிவிலே அது பாம்பைப் போலக்கடிக்கும், விரியனைப் போலத்தீண்டும்”

இதை எனது வீட்டுக்காரர் கவனமாய்ப் படித்தார். அதைப்படித்துவிட்டு ஒரு புட்டி பிராந்தி அதற்குப் பரிகாரமாகச் சாப்பிட்டார். என்னையும் சாப்பிடச்சொல்லி வற்புறுத்தினார், பிறகு நடுநிசியில் விழித்துக்கொண்டு அலறினார். சாப்பிடுவதற்காக மறுபுட்டியை எடுக்கப் போனதாகவும் அதிலிருந்து ஒரு ஸர்ப்பம் தலைநீட்டினதாகவும், சாராயம் முழுதும் ஸர்ப்பமாக மாறிவிட்டதாகவும், அது தன்னைக்கடிக்க வகை பார்ப்பதாகவும் உளறினார். நான் சுவற்றில் எழுதியிருந்ததைப் படித்த நினைவே கவனமாக வந்ததென்று சமாதானப்படுத்த முயன்றேன். கூடவில்லை. மேலும் அதிகமாகக் குடித்திருந்தாராகையால் அது விஷமித்து அவரை இந்த உலகத்திலிருந்தும் பிரித்துவிட்டது. நான் கைம்பெண்ணானேன். என்கணவன் இறந்து மூன்று வருடமாகிறது. சென்ற வருடத்திற்றான் ருதுவானேன். இந்த பாழுங்கதி எனக்கு வந்திராவிட்டால் எனது சாந்தி முகூர்த்தம் எத்தனை வைபமாக நடந்தேறியிருக்கும். நானும் மற்றப் பெண்களைப்போலக் களிப்புடன் சுகித்திருக்கக்கூடுமே! பாழும் பணத்தாசையாலல்லவா என் பிதா என்னை இந்தப் படுகுழியில் தள்ளினார். ருதுமதியாவதற்குமுன் மாங்கல்யமிழந்த பெண்கள் மறு விவாகம் செய்துகொள்ளலாமென்று “பிரஜாநுகூலன்” போன்ற பத்திரிகைகள் முறையிடுகின்றன. அவர்களின் முறையீடு நமது ‘மூடப்புரோகிதர்களின் செவிக்கு ஏறப்போகின்றதா? நமது ஸமூகத்தவரேனும் கவனிக்கப்போகின்றனரா? சென்னை சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீ ஜி. சுப்பிரமண்ய ஐயர் தமது பெண்ணுக்கு இரண்டாவது விவாகம் நடத்திப் பட்டபாடு உலகமறியுமே. அவரையொத்த தைரியசாலிகள் நம் நாட்டில் யார் இருக்கிறார்கள்? வடநாட்டுக்கு வீரேசலிங்கம் பந்துலு இருக்கிறார். தென்னாட்டுக்குத்தான் எவரையும் காணோம். இனி என்காலம் எவ்வாறுகழியுமோ எனக்கே தெரியவில்லை. இனி எனக்குப் பிள்ளையா, குட்டியா, குமாரனா, மருமகளா, பேரனா, என்னவோ என் கதி இப்படியாச்சுது. பாட்டி என்றாவது, அம்மா என்றாவது, மாமி என்றாவது, அடி என்றாவது யாரழைக்கப்போகிறார்கள்? பாழாய்ப்போன இந்தப்பக்கத்திலே நாங்கள் பெண்களாகப் பிறந்து படும் துயரம் பகவானே உன்னையன்றி வேறு யாரறிவார்? ஜெகதீசா! அநாதரட்சகா! நீ எங்கிருக்கின்றாயோ? என்று எங்கள் துயரம் விடியுமோ.

பிரஜானுகூலன்.



# REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### THE BAMBOO AND ITS USES.

### மூங்கிலும் அதன் உபயோகமும்.

நமது நாட்டில் மூங்கில் அனேகமாய் எல்லோருங் காணும் பதார்த்தமாதலால், அதன் மகிமைகளை நாம் கவனிப்பதில்லை என்றும், மூங்கில் கிரமப்படி உபயோகப் படுவதைப் பார்க்கவேண்டுபவர் சீனா, ஜப்பான் முதலிய நம்முடைய “அண்டை” நாடுகளுக்கு போய்ப் பார்த்து வரவேண்டுமென்றும் வித்யாவிஹாரிணிப் பத்திராதிபர் அவருடைய புரட்டாசி மாஸத்து ஸஞ்சிகையில் எழுதுகிறார். அப்படிப் பார்த்து வந்த மேனாட்டவர் ஒருவர் தெரிவிப்பதாவது சீனருக்கும், ஜப்பானியருக்கும் மூங்கில் இவ்வளவுதான் உபயோகப் படக்கூடிய வஸ்துவென்று நிதானிக்க முடியாது. தினசரி அவர்களுக்கு ஆகவேண்டிய சகல காரியங்களிலும் அது உபயோகப்படுகிறது. ஜம்பமாயிருக்க வேண்டினாலும், சொகுசாயிருக்கவேண்டினாலும், மூங்கில்தான் அவர்களுக்கு முக்கிய சாதனம். அவர்களுடைய வீடுகளென்னும் கூடுகளுக்குச் சுவர் முதலிய அங்கங்களுக்கும், கூரைக்கும் மூலாதாரமானது மூங்கிலாம். வெய்யில், காற்று முதலியவற்றை மறைக்கவேண்டுமாகில், மூங்கில் தட்டிதான் சாதனம். ஜன்னல்களுக்கு மறைக்கத் துணிவேண்டுமாகில், மூங்கில் காகிதம்தான் உதவவேண்டும். கட்டில், மேஜை, நாற்காலி, ‘கோரிக்காலி’ முதலிய வீட்டுத் தட்டுமுட்டுகள் அனேகமாய் எல்லாம் மூங்கிலாலாகவேண்டும். மூங்கில் சருகுகள், இழைப்புப்பொடி முதலியவற்றை அவர்கள் மெத்தை, தலையணை முதலியவற்றிற்கு உபயோகிக்கிறார்கள். சில்லரை வியாபாரிகளுக்குப் படி முதலிய அளவைகளாகவும் தச்சருக்கு, மட்டக்கோல்களாகவும், கிருஷிகருக்கு நீரிறைக்கும் சக்கரமாகவும், நீர் பாயும் குழாய்களாகவும், பக்ஷிகளுக்கு கூண்டுகளாகவும், பலவகைப் பாத்திரங்களாகவும், புஷ்பச் செண்டுகளுக்கு ‘தானிகளாகவும்,’ சமையல் வீட்டில் பதார்த்தங்களுக்குப் பெட்டிகளாகவும், மூங்கிலே உபயோகப்பட்டு வருகிறது. வஞ்சிக்காரனுக்குப் படகும் மூங்கில்தான். அதைத் தள்ளும் கோலும் மூங்கில்தான். அவனுக்கு உடையும் மூங்கில். படகை ஓட்டுவதற்குதவும் பாயும் மூங்கில், அந்தப்பாயை இறுக்கி கட்டும் குறுக்குச் சட்டமும் மூங்கில்தான். சீனப் பிரபுக்கள் ஜம்பமாகச் சவாரி போகும் பல்லக்குகள் மூங்கில் சேர்த்துண்டானவை. மணப்பெண் விவாக மஹோற்சவத்தில் ஊர்கோலம் போவதும் அதே பல்லக்குதான். ‘கடைசி ஊர்கோலமும்’ அந்தப் பல்லக்கில்தான் போவது. தண்டனையடைந்தவர் கொலையாளிகள் கையில் அகப்பட்டு அவர்களால் இம்சை யடைவதும் மூங்கில் சாதனங்களைக் கொண்டுதான். சொகுசுக்கார ஆண், பெண் இருதிறத்தாரும் வீசிக்கொள்ளும் அழகிய விசிறிகளும் மூங்கில் விசிறிகள் தாம். வீரர்களுடைய ஈட்டி மூங்கில், தூணீரம் மூங்கில், அம்புகளும் மூங்கில். எழுதுபவருக்குப் பேனா, படிக்கும் மாணாக்கருக்குப் புஸ்தகம், சித்திர மெழுதுபவருக்கு ‘புருசு,’ அச்சித்திரங்களுக்கு ‘முதனூல்’ வாத்தியங்களுக்கு ஒலிக்கருவி, ஊதுகுழல் முதலிய சகலமும் மூங்கிலைக்கொண்டே ஆகவேண்டும். பாய்கள், கூடைகள் முதலிய பின்னல் வேலைகளும் பலதினுசுகளாகப் பார்ப்பவர் பிரமிக்கச் செய்வதும் மூங்கிலைக்கொண்டேதான். வீட்டுச் சாமான்கள் சிற்பத் தொழில்கள், வஸ்திராதிகள், ஆயுதங்கள், அன்னம், ஔஷதம் முதலிய எல்லாம் மூங்கில் ஒன்றே சீனர்களுக்குப் பிரசாதிக்குமானால், என்னதான் அதலிருந்து கிடைக்கக்கூடாதது?

## ANTS.
## எறும்புகள்.

செப்டம்பர் மாஸத்துப் 'பெண்கல்வியில்' எஸ். சின்னம்மாள் சில இயற்கை அற்புதங்களைப்பற்றி எழுதுகையில் எரும்புகளைப் பற்றிப் பின் வருமாறு எழுதுகிறார்.

எறும்புகளின் அறிவு, செய்கை, வழக்கம்-- இவைகளைப்பற்றிக் கவனித்து வந்தவர் பலர். எறும்பு வர்க்கத்தில் ஆயிரத்திலதிகம் பிரிவுகளிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

இவற்றுள் ஒரு வகுப்பு 'படை' எறும்புகள் என்று சொல்லப்படும். இவை அமெரிக்காவில் சில இடங்களில் காணப்படுகின்றன. இவற்றை யடுத்துச் செல்வதரிதாம். தம் கூட்டத்தார் எங்காவது சென்று ஆகாரங்களைக் கொண்டுவரும் காலத்தில் அவைகள் பக்கமாக இப்படை எறும்புகள் பட்டாளத்து சிப்பாய்கள்போல கூட வருமாம். வேலை செய்யும் எறும்புகளும், தேனீக்களைப்போல தங்கள் இராணி நேரே எப்பொழுதும் தங்கள் பின்பாகத்தைக் காண்பிக்காமல் தலைப் பாகத்தையே காண்பித்து நடமாடும் வழக்கமுடையனவாம். இராணி எறும்பு இறந்து போனால் மற்ற எறும்புகளெல்லாம் அதன் பக்கத்தில் துக்கம் கொண்டாடுவது போல் சூழ்ந்துகொள்ளும்.

ஒரு கூட்டத்திலுள்ள எறும்புகள் ஒன்றிற்கொன்று இனம் நன்றாகத் தெரிந்துகொள்ளும். அவைகளை இரண்டாகப் பிரித்து ஒன்றிரண்டு வருஷம் வைத்திருந்து, பின் ஒரு வகுப்பிலுள்ள ஒரு எறும்பை மற்றொரு வகுப்பில் எடுத்துவிட்டால் அவை ஒன்றிற்கொன்று தெரிந்து கொண்டு சேர்ந்துக்கொள்ளும். ஒரு கூட்டத்திலுள்ள எறும்புகள் மற்றொரு கூட்டத்திலுள்ள எரும்புகளை கிட்ட வரவொட்டா.

## A NEW KIND OF PADDY.
## ஒரு புது தினுசு நெல்.

அழிந்துபோகாத ஒரு நெல்தினுசைப் பற்றி அக்டோபர் மாசத்துக் கிருஷிகனில் ஒரு சிறு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

“ தற்காலத்தில் நெல்லை ஒருதரம் விதைத்தாலோ அல்லது நாட்டிலோ அது அதிலிருந்து மாசூல் கொடுத்த பின் அழிந்து போகிறது. பயிர் அறுத்த பின் அதிலிருந்து மறுதாள் உண்டாகி அதுவும் சில சமயங்களில் அதி சொற்பமாய் பலன் தருவதுமுண்டு. இப்போதோ ஆப்பிரிக்கா தேசத்தில் ஸெனிகல் என்று சொல்லுமிடத்தில் ஒரு தினுசு நெல் கண்டு பிடித்திருப்பதாகவும், அதை அறுத்த பின்னுங்கூட அதன்வேரில் ஒரு கிழங்கு போலொத்த வேர் இருப்பதாகவும், அது சாகாமல் பூமியிலேயே இருந்து அப்பால் மறுபடி தண்ணீர் அல்லது மழையின் உதவியால் ஈரம் கண்ட மாத்திரத்தில் திரும்பவும் துளிர்த்துக் கிளைத்து மறுபடி பயிராவதாகவும், களை மாத்திரமில்லாமலிருந்தால் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டும் எருப் போட்டுக் கொண்டும் வந்தால் மறுபடி வேறுவிதை விதைக்காமலே சரியான பலன் கொடுப்பதாகவும், கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதையை ஸெனிகல் தேசத்திலிருந்து ஜெர்மனியர் கொண்டுபோய் அநேக பரிட்சைகள் செய்து வருவதாயும் தெரிகிறது. இப்பரிட்சைகளில் இது ஸரியானபடி வருவதாய் கண்டு பிடித்து விட்டால் இத்தினுசு மிக சிலாக்கியகரமாயிருக்குமென்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. ஏனென்றால் வருஷா வருஷம் விதை செலவில்லாமலே பயிர் அறுக்க முடியும்.”



## CATTLE INSURANCE SOCIETIES.
## கால்நடை இன்ஷ்யூரென்ஸ் ஸொஸைடிகள்.

தொழில் ஊக்கத்தில் இங்கிலாந்து உள்பட மற்ற ஐரோப்பிய நாடுகளைப் பார்க்கிலும் முற்பட்டு நிற்பது ஜெர்மனி தேசமே. கால்நடைகளுக்கு நோய் நொடி வராமல் காத்து அவைகள் இறந்து விட்டால் அவற்றின் விலையைக் கொடுத்துச் சொந்தக்காரர்களுக்கு ஈடு செய்யும் நோக்கங்கொண்டனவாய் பரஸ்பர ஸகாய சங்கங்கள் பல பதினெட்டாவது நூற்றாண்டு முதல் ஜெர்மனியில் நடைபெற்று வருகின்றன. 1909-ம் வருஷத்தில் இம்மாதிரி சங்கங்கள் 28 இருந்தன. இவற்றில் இன்ஷியூரான கால் நடைகளின் விலை சுமார் அறுபது கோடி மார்க்ஸ். ஒரு மார்க் முக்கால் ரூபாய் எனப்படுகிறது. இவை ஜெர்மனியில் கால் நடைகளை இன்ஷியூர் செய்வதோடு லக்ஸம்பர்க், நார்வே, ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து, பெல்ஜியம், டென்மார்க்கு, ஆஸ்டிரியா போன்ற அயல் தேசங்களிலும் வியாபித்து அங்குள்ள கால்நடைகளை இன்ஷியூர் செய்கின்றன. இவ்வாறு 1909-ம் வருஷத்தில் இன்ஷியூர் செய்யப்பட்ட அயல்நாட்டுக் கால் நடைகளின் விலை சுமார் 33லக்ஷம் மார்க் என்று தெரிகிறது. இந்தப் பெரிய சங்கங்களன்றித் தனி மனிதர்களாக முன்னின்று இன்ஷியூரென்ஸ் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்துகிறவர்களுமுண்டு. 1909-ம் வருஷத்தில் இவ்விதம் ஏழுபேர் இன்ஷ்யூரென்ஸ் நடத்தினார்களென்றும், இவர்களிடம் இன்ஷ்யூர் ஆன கால்நடைகளின் விலை $11\frac{3}{4}$ கோடி மார்க் என்றும் தெரிகிறது. இந்த இரண்டுவித இன்ஷ்யூரென்ஸுகளிலும் சேர்த்து $1\frac{1}{4}$ கோடி மார்க் ப்ரிமியம் 1909-ல் கொடுக்கப்பட்டது. கால் நடைகளின் நோயின் பொருட்டும் சாவின் பொருட்டுமாகக் கொடுக்கப்பட்ட மொத்த நஷ்ட ஈட்டுத் தொகை $1\frac{1}{4}$ கோடி மார்க்குக்கு அதிகப்பட்டது. பரஸ்பரஸகாய சங்கங்களாக வேலை செய்வதில் ஒருவர்க்கொருவர் மோசம் செய்யக்கூடாமையாவதோடு, பொதுவாக எல்லோருக்கும் கால் நடைகளைப் பராமரிப்பதில் கவலை அதிகப்படுகிறது. ஸொந்தக்காரன் அஜாக்கிரதையினாலும் கொடுமையினாலும் இறக்கும் கால் நடைகளின் பொருட்டு நஷ்ட ஈடு கொடுப்பதில்லையென்றும், வெகு அவஸரமாயிருந்தாலொழிய சங்கத்தின் அநுமதியின்றிக் கால் நடைகளை உணவின் பொருட்டுக் கொல்லக் கூடாதென்றும், கால்நடைகளுக்கு நோய் நேர்ந்தவுடன் வெடிரினரி மிருகவைத்ய ஸர்ஜனை யழைத்துச் சிகிச்சை செய்யவேண்டுமென்றும், தொற்று வியாதிகள் ஊரில் உலவும்போது அவை பரவாமல் வேண்டிய பிரயாசைப்பட்டு முன் எச்சரிக்கை யேற்பாடும் செய்யவேண்டுமென்றும், இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தத்தில் திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களின் ஊக்கத்தால் உழவோனின் செல்வமாகிய கால்நடைகள் காப்பாற்றப்பட்டு ஜெர்மனி தேசத்தின் பொருளாதார நிலை மிக உயர்ந்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இம்மாதிரி சங்கங்கள் இந்தியாவில் ஸ்தாபிக்கக் கூடுமா என்று யோசிக்க வேண்டும். இந்தியாவில் முக்கால் பங்கு ஜனங்களுக்குமேல் விவஸாயிகளானபடியால், இவ்வித சங்கங்கள் ஸ்தாபிக்கப் படுமானால் நிரம்பவும் சுகிர்த முண்டாகு மென்று எண்ணலாம்.—சுதேசமித்திரனில் ஒரு நிருபர்.

## WHITE SILK COTTON TREE.

## வெள்ளைப்பூ பூக்கும் இலவைமரம்.

இதைப்பற்றி ஐப்பசி மாஸத்துக்கிருஷிகனில் ஒரு வியாசம் காணப்படுகிறது.

"ஒரு பெரிய செடியிலிருந்து வருஷத்திற்குச் சுமார் 1000-முதல் 1500-காய்கள் அகப்படும். இது ஸாதாரணமாய் ஜனவரி பிப்ரவரி மாதத்தில் வெயில் காலம் ஆரம்பிக்கும்போது இலைகள் கொட்டி புஷ்பித்து அப்பால் மறுபடியும் இலைதளிர் உண்டாகி அநேகமாய் மே, மாதத்துக்குள் காய்த்துப் பழுக்கும். சில இடங்களில் மே மாதத்தில் பூத்து அக்டோபர் மாதத்தில் காய்த்துப் பழுக்கும் வழக்கமுண்டு. அவ்வவ்விடங்களின் சீதோஷ்ணபேதங்களையும், மழைப்பதம் முதலானவைகளையும் பொறுத்திருக்கும். காய்கள் முற்றி பழுப்புவர்ணமாகும்போது அவைகளை நீண்ட துறடுகள் கொண்டு பரித்துச் சேர்க்கவேண்டும். இல்லாவிட்டால் காய்கள் வெயிலில் வெடித்துப் பஞ்சு காற்றில் பறந்துபோகும் பறித்த காய்களை வெயிலில் காயவைத்து அவை சரியானபடி பழுத்து வெடிக்கும்வரை உலர்த்த வேண்டும். ஒரு மரத்திலிருந்து கிடைக்கும் பஞ்சு 2 முதல் 3 இராத்தல் நிறையுள்ளதாயிருக்கும். இந்த இடைகொட்டை போக்கிய பஞ்சின் இடை. இது தற்காலம் இராத்தல் ஒன்றுக்கு 7 முதல் 9 பென்ஸ் அதாவது 7 முதல் 9 அணு வரை விற்கிறது. ஒரு ஏக்கரில் 18 அடி ஒன்றுக்கு ஒருமரம் வைத்தால் சுமார் 144 மரங்கள் வைக்கலாம். இதிலிருந்து வருஷத்திற்குக் கிடைக்கும் பஞ்சின் விலை சுமார் 77 ரூபாய் பெறும். அனேகமாய் யாதொரு செலவில்லாமல் சாதாரண நிலங்களில் ஏக்ரா ஒன்றுக்கு ரூபாய் 70 கிடைப்பது நல்ல லாபமல்லவா. இதை வாசிக்கும் கிருஷிகர் ஷெ மரத்தைக் காலி நிலங்களில் வைத்துப் பயிர் செய்து லாபம் அடைவார்களென்று நம்புகிறோம்."

## PINEAPPLE JAM.

## அன்னாசிப்பழ முரபா.

இதைப்பற்றி ரங்கூனில் ப்ரசுரமாகும் "சுதேச பரிபாலினி" என்னும் தின ஸரிப்பத்திரிகையில் ஒரு வியாஸம் காணப்படுகிறது. பர்மாவில் அன்னாசிப்பழம் ஏராளமாய் விளைகின்றது. பழக்காலத்தில் இந்தப்பழம் பர்மா தேசத்தில் வீதிக்கு வீதி அதிக நயமாய் விற்கப்பட்டு வருகிறது. மொத்தத்தில் வாங்கினால் ஒருடஜன் பழம் 2 அல்லது 3 அணுவுக்குக் கிடைக்கும். இந்தப்பழம் ஐரோப்பாவில் எந்த தேசத்திலாவது விளைந்தால் இதோடு சர்க்கரையைச் சேர்த்து இங்கிலீஷில் ஜாம் என்று சொல்லும் ஒரு வித பழக்கூட்டைச் செய்து ஏராளமாகப் பணத்தைச் சம்பாதிப்பார்கள். வெள்ளைக்காரர்கள் ருசி இல்லாத பழங்களையுங்கூட சர்க்கரையைப் போட்டுப் புட்டிகளில் அடைத்து உலகமெங்கும் அனுப்பி நல்ல லாபம் சம்பாதித்து வருகிறார்கள். உதாரணமாக, கூஸ் பெரி, ஸ்ட்ரா பெரி, முதலிய உபயோகமற்ற பழங்களையும் பொன்னாக்குகிறார்கள். அன்னாசிச் சர்க்கரைக் கூட்டை அதிக சுலபமாகச் செய்யலாம். இதற்கு வேண்டிய தெல்லாம் தகரத்தால் டப்பிகள் செய்வதற்கு வேண்டிய யந்திரம் ஒன்றுதான். இதற்குப் பணச்செலவு அதிகமில்லை. சில பர்மா கனவான்கள் இந்தச் சர்க்கரைக் கூட்டைச் செய்வதற்கு வேண்டிய முயற்சி செய்து வருகிறார்களாம். சிலவர்த்தகர்கள் அன்னாசிப்பழச் சர்க்கரைக் கூட்டு அடைத்த ஒரு ஸாதாரண டப்பிக்கு ஒரு அணுவுக்கு மேல் செலவாகாதென்றும், அதை அந்நிய தேசங்களில் நாலு முதல் ஆறு அணுவுக்குச் சுலபமாய் விற்கலாமென்றும் கணக்கெடுத்துச் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி விவரமாகத் தெரிய விரும்புகிறவர்கள் ரங்கூனில் சுதேச பரிபாலினி பத்திராதிபருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.



# BOYS' SECTION.

# சிறுவர் பகுதி.

HINTS FOR READING.

**புஸ்தகங்கள் வாசிக்கும்போது கவனிக்கவேண்டிய விதிகள்.**—அமெரிக்காவிலுள்ள நியூயார்க்குப் பள்ளிக்கூடங்களிற் பின்வரும் விதிகள் அச்சிட்டு ஒட்டப்பட்டிருக்கின்றன.

"மங்கலான வெளிச்சத்தில் எப்போதும் படிக்காதே. படிக்கும்போதெல்லாம் தலையை நிமிர்த்துக்கொண்டு படி (குனிந்து படியாதே.)

உனக்கு உன் கண்கள் எல்லாப்புஸ்தகங்களைக் காட்டிலும் மேலானவைகள். நீ படிக்கும் புஸ்தகத்தை உன் முகத்திலிருந்து பதினைங்குல தூரத்திற்பிடித்துக்கொண்டு படி. வெளிச்சம் உனக்குப்பின் பக்கத்திலிருந்து புஸ்தகத்தில் விழும்படியாக இருந்து படி.

உனது பாதுகாப்பும் நீ மேலான நிலைமைக்கு வருவதும் உன்கண்ணைச் சார்ந்திருக்கின்றன; ஆகையால் நீ அவைகளைப் பேணவேண்டும். நீ வாசிக்கும்போது இடை யிடையே உன் முகத்தைச் சிறிது நேரம் புஸ்தகத்திலிருந்து திருப்பி இளைப்பாறச் செய். வெயில் நேராகப் புஸ்தகத்தில் விழும்படியாக வைத்து ஒருபொழுதும் வாசிக்காதே.

ராத்திரிப் படுக்கப் போகையிலும், விடியற்காலத்திலும் கால்களை ஜலத்தினாற்கழுவி நல்ல தெளிவான வெளிச்சத்திலே படி. படிக்கும்போது வெளிச்சத்தை யெதிர் நோக்கிக்கொண்டு படிக்காதே."

GOOD ADVICE.

**ஹிதோபதேசம்.**—1. மனிதன் அனுஸரிக்க வேண்டிய விஷயங்களில் மெய்யொன்றே முக்கியமும் முதன்மையுமானது.

2. எப்போதும் மெய் முன்வந்து நிற்கும் பொய் புறங்காட்டியோடும்.

3. மெய்யுடையோனே மதிப்புடையோனாவான்.

4. மேன்மையான விஷயங்களுக் கெல்லாம் மேன்மையானது மெய்யே. அதை வெறுத்தவன் வீணனாவான்.

5. உண்மை விசுவாசி யுலகப்பிரஸித்தன்.

6. உலக நன்மைகளுக்குதகுந்த வித்து உண்மையே.

7. உன் நாவினுனிபை உண்மையின் அஸ்திவாரமாக்கு.

8. உன் மனச்சாட்சிக் கொருபோதும் பொய்யனாகாதே:

9. மெய்யை நாட்டினால் மெய்யனாகுவாய்.

10 பிசகைத்தள்ளிப் பிசாசை வெற்றிகொள்.

11. இருளானது நட்சத்திரங்களைக் காண்பிப்பதுபோல வியசனமானது உண்மையைக்காண்பிக்கும்.

12. வார்த்தையையும் செய்கையையும் மாறுபடக் காட்டாதே.

13. உண்மைப் பிரகாசம் உன் மனதிற் தரித்தால் உன்னத மகிழ்ச்சி உனக்கே சுதந்தரம்.

14. மெய்யைக்கண்டால் முன்னேக்கிநட, பொய்யைக்கண்டால் பின்வாங்கி நில்.

15. உண்மையை யொத்த உறுதியான நேசர் உலகத்திலெங்கு மொருவருமில்லை.

MONKEYS.

**குரங்குகள்.**—வானரங்களுக்குள் அனேகமாயெல்லா ஜாதிக்கும் கைவிரல்கள் ஐந்துண்டு. அவ்விரல்களை முஷ்டியாக்கத் திறமையுமுண்டு. அவற்றுள்ளும் முதற் பகவிபெறும் 'கிஷ்கிந்தை மகாஜனங்கள்' நம்மைப் போலவே நின்று நடந்து போகுபவை. புத்தி வைபவமோ சொல்லவேண்டியதில்லை! இவற்றை யெல்லாம் பார்க்குமிடத்து, வானர வர்க்கம் மனித வர்க்கத்திற்கு அடுத்தபடி யென்று சொல்வதற்குப் பலத்த நியாயங்களேற்படுகின்றன.

இப்படி யிருப்பது வாஸ்தவமென்றாலும், வானரங்களுக்குள்ளும் தாரதம்மியம் பல வகைப்பட்டுக் காணுகின்றன. வானர வகைகளில் தென்னிந்தியாவில் இரண்டு உட்பிரிவு மட்டுமே காணுவன. மற்றைய பிரிவுகளெல்லாம் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா சமுத்திரத் தீவுகள் இவற்றில் செழித்திருப்பவை.

இவற்றுள் முதற்பதவி பெற்றிருப்பவைகளுக்கு வாலில்லை. மந்திகளென்று பெயர். மந்திகள்

நான்கு வகைப்படும். 'காட்டு மனிதன்' என்று பொருள் கொள்ளும் 'உராங்ஔடாங்' என்பது பர்மியப்பிராந்தியத்திலும், 'கொரில்லா' 'சிம்பன்ஸீ, 'இப்பன்' என்பவை இதர தேசங்களிலும் பார்க்கக் கூடியவை. தென்னிந்தியாவில் இவையொன்றும் யதேச்சையாய்த் திரியக் காணுவதில்லை. கண்காக்ஷிக்காக ஆங்காங்கு கூடுகளில் வைத்திருப்பவைகளை நீக்கினல், இப்பிரதேசத்தில் இவைகள் இல்லவேயில்லையென்னலாம். ஆதலால் மேற்கூறியபடி இரண்டு சில்லறை வர்க்கம் தான் நமது பிராந்தியத்தில் உலாவுவன. அவற்றுள் ஒன்றிற்குக் கன்னப் பிரதேசத்தில் ஒரு பையுண்டு. அதில் தனக்கு வேண்டிய ஆகாரத்தைச் சேர்த்து வைத்துக்கொள்ளும். இந்த வர்க்கத்திற்கு விசேஷமான சிறப்புப் பெயரொன்றுமில்லை. மற்றைய வர்க்கத்திற்கு 'ஹனுமான் வம்சம்' என்று பெயர். அதற்குக் கன்னப்பையில்லை. அதுதான் சாதாரணமாக நம்மவர் எங்கும் காணுவது.—வித்யாவிஹாரினி.

THE HORSE'S BLIND.

**குதிரையின் கண்பட்டை.**—குதிரையின் கண்களின் இருபக்கங்களிலும் சாதாரணமாய்க் கண்மூடி போடுகிறார்களல்லவா. ஏன்? குதிரைக்குத் தலையின் இருபக்கங்களிலும் கண்கள் பெரியவையாய் அமைந்திருக்கின்றன. மேலும் குதிரையோ மிகவும் பயந்த சுவாபமுள்ளது. இதை வண்டியில் பூட்டி ஸவாரி செய்யும்போது வண்டியின் சத்தத்தையும் பாதையிலுள்ள மரங்களையும் மனிதர்களையும் பார்த்துப் புலியோ சிங்கமோ என்று எண்ணி அதிகமாகப் பயந்து மருண்டுவிடும் என்று கண்களின் இருபக்கங்களிலும் கண்மூடிபோட்டு மறைத்திருக்கிறது. இப்படி மறைத்திருப்பதினுல் அதற்கு எதிர்ப்பார்வையேயொழியப் பக்கப் பார்வை இல்லை.

இது இப்படியிருந்தும், சிலர் இதைக் கவனிக்காமல் குதிரைகளைக் கண்மூடி யில்லாமலே சவாரி செய்கிறதையும் காண்கிறோம். ஏறு குதிரைகளுக்கும் போர்ச்சேவகரின் குதிரைகளுக்கும் கண்மூடி போடுகிறதில்லை.

BURIED JARS.

**புதைந்து கிடக்கும் ஜாடிகள்.**—சீர்காழிக்கருகில் பூமியின் கீழ் பெருஞ்சாடிகள் புதைந்து கிடந்ததாகவும் அந்த ஜாடிகள் ஒருஆள் இருக்கும் படியான அகலம் நீளம் உள்ளனவாயிருந்ததாகவும் அவைகளில் பூர்வம் வயதான கிழவன் கிழவிகள் உயிருடன் புதைக்கப்பட்டார்களெனத் தாம் கேள்விப்பட்டதாகவும், ஸமீபத்தில் "மெயில்" பத்திரிகையில் ஒரு நிருபர் எழுதுகிறார். அம்மாதிரி ஜாடிகள் அவர் பலவிடங்களில் பார்த்ததாகவும் தாம் கேள்விப்பட்டது உண்மையானல் தெரிந்தவர்கள் சொல்லவேண்டுமென்றும் எழுத, நேற்று "மெயில்" பத்திரிகையில் ஒருவர் பதில் எழுதுகிறார். தாம் 30 வருஷத்துக்கு முன்னுல் மதுரைக் காலேஜில் வாசித்துக்கொண்டிருந்தபோது இம்மாதிரி ஜாடிகள் பல விடங்களில் புதைந்து கிடந்ததைப் பார்த்ததாகவும், அவைகளில் கொத்துமல்லி விதையளவு பொன்மணிகளும் மண் விளக்கும், நெல்லுமியும் கண்டதாகவும், சொல்லுகிறார். தமக்குச் சரித்திரம் சொல்லி வைக்கும் போதகரை அதைப்பற்றிக் கேட்டபோது பூர்வம் கிழத்தனமடைந்தவர்களை அவர்கள் வேண்டுகோளின் பேரில் உயிருடன் ஜாடியில் வைத்துப் புதைப்பது வழக்கமென்றும், அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களும் ஒரு மண் விளக்கும் சிலநாளைக்கு ஆகாரங்களும் சேர்த்துப் புதைக்கப் படுவார்களென்றும், பதில் சொன்னாராம். இந்த ஜாடிகளில் எலும்புகள் இல்லாதது ஆச்சரியமல்ல; ஏனெனில் 50 வருஷத்துக்குள்ளாக இந்த எலும்புகள் மண்ணாகி விடுகின்றன. உயிருடன் புதைப்பதல்லாமல் செத்த பிணங்களையும் இப்படிப் புதைத்திருக்கலாம். பழையகாலத்தில் சாவதானம் குறைவாயிருந்தபடியால் ஜனங்கள் தங்கள் தானியங்களையும் விலைபெற்ற பொருள்களையும் இப்படிப் புதைத்திருக்கலாம்.

இம்மாதிரி இந்த நிருபர் எழுதுவதில் இவர் எழுதுவது முழுதும் கதையோ உண்மையோவென்று சந்தேகம் உண்டாகிறது. கிழவன் கிழவிகளை திராவிட ஜாதியார் மதிப்பது உண்மையானல், அவர்களை உயிருடன் புதைப்பதுதான லக்ஷணம்? மேலும், அக்காலத்தில் செத்தவர்களைப் புதைப்பது வழக்கமோ அல்லது எரிப்பது வழக்கமாயிருந்ததோ தெரியவில்லை? இந்த நிருபர் எழுதும் மூன்று சமாதானங்களில் அக்காலத்தில் சாவதானக் குறைவினுல் ஜனங்கள் தங்கள் பொருள்களை புதைத்து வைத்தார்களென்பது உண்மையாயிருக்கக் கூடும்.
—சுதேசமித்திரன்.



## LADIE'S SECTION.
## ஸ்திரீகள் பகுதி.

---

A LADY DOCTOR'

**ஒரு ஸ்திரீ டாக்டர்.**—யாழ்ப்பாணவாசி மாதுஸ்ரீ எல்லம்மாள் இங்கிலாந்திற்குப்போய் வைத்திய பரீட்சையில் தேறி எல். ஆர். ஸீ. பீ. பட்டம் பெற்றிருக்கிறார். யாழ்ப்பாணத்துப் பெண்களுள் இவரே முதன் முதல் இங்கிலாந்திற்குச் சென்று டாக்டர் பரீட்சையிற் தேறியவர்.

WIDOWHOOD.

**வைதவ்யம்.**—ஸுமாத்ரா தீவில் வஸிப்பவர்கள் ஓர் விசித்திர ஆசாரம் கொண்டாடுவார்கள். விதவையான ஸ்திரீ தன் வீட்டில் ஓர் கம்பமூன்றிப் பாவுடா ஒன்றைக்கட்டுவாள். அது கிழியும்வரையில் மறுவிவாகமில்லை. துணி நாசமானல் அன்றோடு வைதவ்யம் முடிந்து வேறு வரனை மணக்கலாம்.

GOOD MOTHER-IN-LAW.

**நல்ல மாமி.**—கற்றறிந்த மணமகளை நீராட்டி பாலூட்டி புடவை தோய்த்து மையிட்டுப்பொட்டிட்டு உட்காரவைத்து வீட்டுக்காரியம் முழுவதையும் செய்தால் மாமி நல்லவள்; இல்லாவிட்டால் நாகரிகம் தெரியாதவள். பொறுமைக்காரி, அறுவருப்புள்ளவள், இங்கிதம் அறியாதவள், பிள்ளையைப் பெற்று ஆயிரம்பாடு அரும்பாடுபட்டு வளர்த்து அந்தியகாலத்தில் ஆபத்துக்குதவுவானென்றெண்ணப்படும் மருமகள் மாமியாரை எண்ணி நடத்துவது இப்படிதான்.—ஆரண்யவாசி.

NUMBUDRI FEMALES.

**நம்பூதிரி ஸ்திரீகள்.**—மனுஸ்மிருதி 9-வது அத்தியாயம் 89-வது ஸ்லோகத்தை ஆதாரமாகக் கொண்டு நம்பூதிரிகள் தங்கள் ஸ்திரீகளுக்கு எந்த வயதில் வேண்டுமானலும் கல்யாணம் செய்து வருகிறார்கள். அந்த ஸ்லோகத்திற்குப் பொருள், "தகுந்தவரன் (அதாவது, குலம், கோத்திரம், அத்தியாயனம், ஆசாரம் முதலிய லக்ஷணங்கூடியவன்) கிடைக்காதவரையில் **தகப்பன் தன் பெண்ணைச் சாகும் வரையில் வீட்டிலாவது வைத்திருக்க வேண்டுமல்லது, வயது கூடிவிட்டதே யென்று 'கம்பக்காலுக்குக் கட்டக்கூடாது,** என்பதாம்! இந்தியாவிலுள்ள இதரப் பிராம்மணர்கள் இதைக் கவனிக்கவேண்டும்.

RICHEST WOMEN IN THE WORLD.

**உலகத்தில் பெருஞ்செல்வமுடைய ஸ்திரீகள்.**—தென்னமெரிக்காவிலுள்ள வீநோராகவின் என்னும் ஸ்திரீக்குள்ள சொத்துக்கள் 40கோடி பவுண்டு மதிப்புடையனவாம். ஜர்மனியிலுள்ள ப்ரூ என்னும் ஸ்திரீக்கு வாரமொன்றிற்கு 10,006 பவுண்டு வரும்படியுள்ள சொத்துக்களிருக்கின்றனவாம். வட அமெரிக்காவிலுள்ள மிஸ்ஹெட்டி கிரீஸ் என்னும் ஸ்திரீக்கு 12,000,000 பவுண்டு மதிப்புள்ள ஆபரணங்களிருக்கின்றனவாம். மெக்ஸிகோவிலுள்ள மிஸக்ரீஸ் என்னும் ஸ்திரீக்கு வருஷத்தில் 500,00,000 டாலர் வரும்படியுள்ள சொத்தும், 6,00,000 கால்நடைகளும் (குதிரை, பசுமுதலியனவும்) இருக்கின்றனவாம்.

PROSTITUTION OF GIRLS.

**பெண்களைக் கெட்டவழியில் உபயோகப்படுத்தல்.**—சில சிறு பெண்களைக் கெட்டவழியில் உபயோகப் படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்குக் கோவில்களில் பொட்டுக் கட்டுவதும் அவர்களைத் தத்து வாங்கிக் கொள்வதுமாகிய வழக்கத்தைப்பற்றி இந்தியருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து ரிப்போர்ட் செய்யும்படி இந்தியா மந்திரி ஓர் உத்தரவு அனுப்பியிருக்கிறார். அதைப்பற்றி அவசியமானல் சட்ட நிபந்தனைகள் செய்யப்படுவதாக யோசனை இருக்கின்றது. இப்படி இந்தியா செக்ரிடெரி செய்திருக்கும் யோசனையை ஹிந்துக்கள், முக்கியமாய்ப் படித்தவர்கள் சம்மதத்துடன் ஏற்பார்களென்பதிற் சந்தேகமில்லை.

SUIT FOR £4000 DAMAGES.

**4000 பவுனுக்கு வழக்கு.**—சான்ப்ரான்ஸிஸ்கோ பட்டணம் பூமியதிர்ச்சியால் சேதமடைந்தபோது ஓர் மாது அதிகம் பயப்பட்டதால் அவளது தலைமயிர் முழுதும் நரையாய்ப்போயிற்றாம். இதை மறுபடியும் கறுப்பாக்கவெண்ணி, மிகவும் சிலாகித்துப்பேசப்பட்ட சாயமருந்தொன்றை வாங்கிப் பூசினளாம். மயிரைக் கறுப்பாக்குவதற்குப் பதிலாய்

பச்சை நிறமாக்கிவிட்டதாம். இப்போது அவள் தலைமயிர் கிளியின் நிறம்போலிருக்கிறது, அதினிமித்தம் தனக்கு 4000 பவுன் நஷ்டங் கொடுக்கும்படி அம்மருந்து வியாபாரிகள் மேல் வழக்குத் தொடுத்திருக்கிறாளாம்.

BURMESE WOMAN.

**பர்மா ஸ்திரீகள்.**—பர்மியர்களுக்கு மதாபிமானம் கிடையாது. இந்து ஸ்திரீகளைக் காட்டிலும் பர்மிய மாதர்கள் அழகிற் சிறந்தவர். ஆனால் கற்போ நிச்சயமில்லை அந்நியர்களை ஆதரிப்பதில் அதிக ஆர்வமுள்ளவர்கள். பெரிய மட்சால்களில் மீனையும் இடையே உப்பையும் கொட்டி மூடி பூமியில் 3-மாதம் புதைத்தெடுத்து அம்மாமிசங்கள் நிறைய இருக்கிற புழுக்கள் சகிதமாக உரலிற் போட்டு இடித்து அதில் ஊறிய தண்ணீரை வேறாக எடுத்துக் கொள்வர். இதற்கு **நம்பி** என்று பெயர். இதைப் பர்மியர்கள் நெய்யைப் போலக் கருதி எல்லா பதார்த்தங்களுக்கும் உபயோகப்படுத்துவார். பாம்பைக்கண்டால் உடனே தலையை வெட்டிவிட்டு பாம்புக்கறி சமைத்து விடுவார்கள். மனித ஜீவன் ஒன்றுபோக மற்றதெல்லாம் அவர்கள் வயிற்றுக்குத்தான். பர்மிய ஸ்திரீகளைப் புருஷ அவதாரமென்றே சொல்லவேண்டும்.

AN AGED WOMAN PENSIONER.

**பென்ஷன் சம்பளம் பெருங்கிழவி.**—மெஸ்லேஷரே பெக்கா கிளராக் என்னும் 107-வயதுள்ள கிழவியே உலகத்தில் பென்ஷன் சம்பளம் பெறும் பெண்களுள் அதிக வயதுடையவள். இவ்விருத்தை தமது 106-ம் பிறந்தநாட் கொண்டாட்டத்தைச் சென்ற வருடத்திலே ஓர் மோட்டர் வண்டியிலேறிக் கொண்டாடினாள், இவள் இப்போதும் கண்ணாடியில்லாமல் ஊசியில் நூல்கோர்க்குஞ் சக்தியுடையவளாயிருக்கிறாளாம்.

CRADLES.

**தொட்டில்கள்.**—நம்முடைய தேசத்தில் சாதாரணமாய் துணியினால் தொட்டில்கட்டி அதில் குழந்தைகளைப் படுக்கவைப்பது வழக்கம். இதில் குழந்தைகள் கிடத்தின மாதிரியாய்ப் படுத்திருக்க முடியுமேயன்றி தங்களுக்கிஷ்டமானபடி திரும்பிப் படுக்கவாவது கை கால்களை ஆட்டி அசைக்கவாவது முடியாது. சுத்தமான காற்றுத் தாராளமாய் உட்செல்ல இடமிராததால் குழந்தை அடிக்கடி விழித்து அழும் சில குழந்தைகள் கால்பக்கமாயாவது தலைப்பக்கமாயாவது நழுவி கீழேவிழுந்து விடுவதுமுண்டு. அப்படி விழும்போது கால் கைகள் சிக்கிக்கொள்வதால் சில குழந்தைகள் தலைகீழாய்த் தொங்குவதுமுண்டு. ஆகையால் துணித்தொட்டிலைவிட சுற்றிலும் கிராதியுள்ள சிறு மரக்கட்டிலே நல்லது.

A GOOD LESSON.

**விவேகபோதம்.**—ஒரு அடங்காப் பிடாரிக்கு உண்டான அநர்த்தம்:—ஒரு புருஷனுக்கும் அவன் பெண்சாதிக்கும் வாக்குவாதம் உண்டாகி அவன் பெண்சாதியைப் பழிவாங்குவேனென்று சொல்ல, அவள் "என்ன பழி வாங்குவா" யென்று கேட்க "கொல்லையிலிருக்கிற குளத்தில் விழுந்துவிடுவேன் என்று புருஷன் சொன்னான். அவள் "நீ விழுகிறதை நான் கண்ணாலே பார்க்கவேண்டும், வா" என்று திட்டி, மடியைப் பிடித்து இழுக்க அவன் குளத்தில் விழுவதற்காக ஒரே ஓட்டமாக ஓடினவன் பிற்பாடு பயந்துகொண்டு, குளத்து ஓரத்தில் நின்றுவிட்டான். உடனே அவனை அவன் பெண்சாதிவாயில் வந்தபடி தூஷித்து, "வெட்கம் கெட்டவனே, ஏன் குளத்தில் விழவில்லை? என்று கேட்க, அவன் "எனக்கு மனந்துணியவில்லை. பின்னும் எனக்கு நீஞ்சத்தெரியும் ஆனதால் நான் தப்பிவந்தாலும் வந்துவிடுவேன், நான் தப்பி வாராதபடி யென்னுடைய இரண்டு கைகளையும் நீ பின் கட்டுமுறையாய்க் கட்டிவிட்டு, நீ தூரத்திலிருந்து ஓடிவந்து என்னைக் குளத்திலே தள்ளிவிடு என்று" சொல்லிக் குளத்து ஓரத்தில் நின்றான். அந்தப் ப்ரகாரம் பெண்சாதி பர்த்தாவினுடைய இரண்டு கைகளையும் பின்புறமாய்க் கட்டிவிட்டு, அவள் வெகுதூரம் பின்னிட்டுப்போய் அவனைத் தள்ளுவதற்காக அதிவேகமாக ஓடிவந்தாள். அவள் தனக்குச் சமீபத்தில் வரும்போது அவன் திடீரென்று அப்பால் விலகிவிட்டான். அவள் ஓடிவந்த விசையினால் அவளே ஒரு நிமிஷத்தில் குளத்தில் விழுந்துவிட்டாள். உடனே தன்னைத் தூக்கிவிடும்படி கத்தினாள். நீயே யென் கைகளைக்கட்டிவிட்டாயே நானென்ன செய்வேன்" என்று புருஷன் சும்மா இருந்துவிட்டான். அவள் சொந்த அபராதத்தினால் தண்ணீரில் முழுகி இந்த லோகத்தையே விட்டுப் போய்விட்டாள்.



# DEPARTMENTAL NOTES.

# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.

## விவஸாயக் குறிப்புகள்.

FRUIT TREES.

**பழ மரங்கள்.**—பழமரங்கள் காய்க்காவிட்டால் துளிர் விடும் ஸமயத்தில் பளுவுள்ள கல் இரும்பு முதலியவைகளை கிளைகளில் தொங்கவிட்டு வளைக்க, புஷ்பிக்க ஆரம்பிக்கும்.

A BIG PLANTAIN BUNCH.

**ஒரு பெரிய வாழைக்குலை.**—யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சார்ந்த சுதுமலையிலுள்ள ஒரு பள்ளனது வீட்டில் ஒரு வாழைமரம் 47-சீப்புக்களுடைய குலை தள்ளியது; இவ்வாழை கப்பல் வாழையாம்.

PALM DISEASE.

**பனை தென்னை நோய்.**—நமது கவர்ன்மெண்டார் அடுத்த வருஷம் மார்ச்சு மாத பரியந்தம் கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களிலுள்ள பனை மரங்களுக்கும் தென்னை மரங்களுக்கும் நேர்ந்துள்ள நோயை நிவிர்த்தி செய்யும் வேலையை நடத்திவர அதிகாரிகளுக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

GOOD BULLS.

**நல்ல காளை.**—குளம்புகள் கருப்பு நிறமாயும் வட்ட வடிவாயும் பலத்த நெருங்கிய இடையில்லாமலும் இருக்கவேண்டும். கண்கள் இருண்டநிறமாயும், தெளிவானவாயும், நெற்றிபரந்தும், காதுகள் சிறுத்தும் மேல்நோக்கியும், கழுத்து குறுகியும், விசாலமாயும், நெஞ்சு படர்ந்தும், ரெட்ட நாடியாயும், கோசமில்லாததாயும், பருத்த மார்கள், குறுங்கால்களாயும், அருணவிலுள்ளதாயும், மிருதுவான தோலுடையதாயுமிருக்கவேண்டும். பலத்தைக் காட்டுகிற மயிலை நிறமே சிலாக்கியம்.

SEED PADDY.

**விதைநெல்.**—ஈரந்தாவாமல் விதைநெல்லை வைத்துக்கொள்ளவேண்டும். ஈரந்தாவுமானால் முளைக்குந்தன்மை கெட்டுப்போம். விதைநெல்லை அந்துப்பூச்சி அடிக்காமல் வேப்பிலை, கடலையிலை, மரச்சாம்பல், எலுமிச்சையிலை, காய்ந்த மிளகாய் இவைகளைக் கலந்துவைப்பது வழக்கம். நாப்தலீன் என்னும் மலிவான பூச்சிமருந்து இதுகாரியத்தில் மெத்தப் பிரயோசனமானது.

GOOD COW.

**நல்ல பசு.**— முகம் ஒடுங்கியதாயும், சதையில்லாததாயும், கண்களுக்கு கீழ் நீண்டும் மான்முகம் போலும் பருமனுக்கு தக்கவயிறும் பெரிய மடியும் பால் காம்புகள் சுரப்புள்ளதாயும் (கறந்தவுடன் சுருங்கக்கூடியவை—சதையுள்ள கல்மடியல்ல) முன் காம்புகள் பின்காம்புகளைப் பார்க்கப் பருமனாகவும் காம்புகள் கலக்கவும் பால்தாரை துலாம்பரமாய்த் தெரியக்கூடியதா யிருக்கவேண்டும். கெட்டகுணமுள்ள பசு ஸரியான கறவையில்லாததென்று திட்டமாய்ச் சொல்லலாம்.

THE TINDIVANAM AGRICULTURAL ASSOCIATION.

**திண்டிவனத்தில் விவஸாய சங்கம்.**—'திண்டிவனம் விவசாய சங்கம்' என்று ஒரு சங்கம் ஸமீபத்தில் திண்டிவனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டணத்திய கனவான்களில் சிலர் அச்சங்கத்தின் அங்கத்தினராய்ச் சேர்ந்திருக்கிறார்கள்.

LEECHES AND CATTLE.

**அட்டைகளும் ஆடுமாடுகளும்.**—ஆடுமாடுகள் சகதியில் மேயும்பொழுதும், அழுக்குஜலத்தில் இருக்கும்பொழுதும், மேயும்பொழுதும், அட்டைகள் மூக்கில் ஏறுமானால் அவைகள் இடைவிடாமல் தும்பும். அப்போது உப்புக்கரைத்த ஜலத்தை மூக்கில் விட, அட்டை நகர்ந்து வரும். சிம்டாக்களினால் பிடுங்கிவிட்டு ரத்தம் பெருகாதபடி உப்புத்தூள் அடைக்க வேண்டும்.—தென்னிந்திய விவஸாயம்.

AN AGRICULTURAL AND INDUSTRIAL ASSOCIATION.

**விவஸாயக்கைத்தொழில் சங்கம்.**—ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களில், விவஸாயம் கைத்தொழில்களின் ஸபை மதுரையில் கூட்டப்பட்டு அதற்கு ராமநாதபுரம் கலெக்டர் மிஸ்டர் ஜெ எப். ப்ரையண்ட் ப்ரஸிடெண்டாகவும், மதுரை கலெக்டர் மிஸ்டர் ஜே. ஆர். ஹக்கின்ஸ் வைஸ் ப்ரஸிடெண்டாகவும் நியமிக்கப்பட்டார்கள். விவஸாயப்

போதகர் ஒருவருக்கு 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் உயரும்படியான சம்பளம் கொடுத்து இந்த ஸபை சம்பந்தமான பண்ணையை நடத்தவும் விவஸாயிகளுக்கு அங்கங்கு போய் அனுபோகத்தில் உபயோகப்படும்படியான அறிவைப் புகட்டவும் வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது.

MANURING FOR COCOANUTS.

**தென்னைக்கு எரு.**—ஆடுமாடுகளின் எரு மிக சிரேஷ்டம். ஆனால் அது போதுமான அளவு கிடைப்பதில்லை. ஆகையால் சேர்க்கை எருக்களையே உபயோகப்படுத்தவேண்டும். ஆனால் எந்த எருவும் 2 வருஷங்களுக்கு மேலாக நிற்பதில்லையாகையால், வருஷத்துக்கு பாதிதோப்பாக, தோப்பு முழுவதையும் இரண்டு வருஷத்திற்கு ஒருதடவையாக எருவிடவேண்டும். எருப்போட்டதும் பலிக்கவில்லையே என்று மனம் தளரலாகாது. எந்த எருவும் மரத்தில் பிடிக்க ஆறுமாதம் செல்லும். அதன்பின் குரும்பை பிடித்தது முதல்முதிர ஒரு வருஷம் பிடிக்கிறது. ஆகையால் ஆத்திரப்படக்கூடாது. எரு காய்ப்பை அதிகரிப்பதுடன் மரத்தின் ஆயுளையும் 20 வருஷம் முதல் 30 வருஷம் வரையில் விருத்தியாக்குகிறது.

BEST TIME FOR MANURING PADDY.

**நெல்லுக்கு எருவிடும் ஸமயம்.**—நெல் விளைச்சலில் எந்த ஸமயத்தில் எருவிடுவது யுக்தமென்று செய்த பரீக்ஷையில் நெல்லானது தன் ஆயுளில் மூன்றில் இரண்டு பங்கு காலத்துக்குள் தான் முற்றிப் பழுப்பதற்குவேண்டிய அளவு ஸத்தில் நைட்ரோஜன் பாஸ்பரெஸ் இவைகளில் ஐந்தில் நாலு பங்கையும், சாம்பல்காரத்தை பத்தில் ஒன்பது பங்கையும் அடைவதாகத் தெரிகிறது. ஆகவே நெல்லுக்கு வேண்டிய எரு ஸத்தை நடுவதற்கு முன்னதாகவே நிலத்தில் கலப்பது யுக்தம். சீக்கிரம் கரையும் தன்மையுள்ள ரஸாயன எருக்களை இளமைப்பருவத்தில் மண்ணில் கலப்பது அவசியம். ஷை மூன்றுவித எரு ஸத்துக்களில் நைட்ரோஜனே அவசியம் இருக்கவேண்டியதென்று தெரிகிறது.

வெட்லுப்பு வகைரா எருக்களை விட நவசாரவகை எரு தக்க வளர்ச்சியையும், மேனியையும் தந்தது.

INDIA AND DENMARK.

**இந்தியாவும் டென்மார்க்கும்.**— நம்தேசத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்து ஜனங்கள் எப்படி சுகமாக ஜீவிக்கலாம் என்பதற்குத் திருஷ்டாந்தமாய் ஸர் ஜார்ஜ் கிளார்க் ஸமீபத்தில் ஐரோபாவிலுள்ள டென்மார்க்கு தேசத்தைச் சொன்னார். இந்த தேசம் 1864-ம் வருஷத்தில் நடந்த யுத்தத்தால் அதன் வளப்பமான பாகங்களை இழந்துவிட பாக்கி இருந்த விஸ்தீரணம் 15,500 சதுரமைலில் வசித்த ஜனத்தொகை 25 லக்ஷம். இவர்கள் தங்களுக்கு மிஞ்சின இளப்பமான பூமியில் விவசாயம் செய்து பிழைக்க வேண்டியவர்களானார்கள். டென்மார்க்கு தேசத்தார் மனம் சலிக்காமல், விவசாய சாஸ்திரத்தை உபயோகித்து, ஐக்கியச் சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு மணற்பூமியாயும் சதுப்பு பூமியாயுமிருந்த தங்கள் நிலத்தைப் பயிரிட்டு, அவசியமான உணவுப் பொருட்களைப் பெற்றதுமன்றி விவசாயிகள் செய்யக்கூடிய வேறு தொழில்களைச் செய்து லாபம் சம்பாதித்தார்கள். வெண்ணெயும், பன்றிமாம்சமும், கோழி, வாத்து முதலியவைகளின் முட்டைகளும், ஏராளமாக உண்டுபண்ணி அன்னிய தேசங்களுக்கு அனுப்பத் தலைப்பட்டார்கள். இவைகளும் மற்ற விவசாயப் பொருள்களும் 1907-ம் வருஷம் அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்பட்ட மொத்தம் 3-கோடி 35 லக்ஷம் பவுன் (அதாவது 50கோடி ரூபாய் உள்ளது). டென்மார்க்கிலுள்ள 25 லக்ஷம் ஜனங்கள் 50 கோடிக்குமேல் அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்வார்களானால், அதாவது ஜனத்தொகையில் ஒவ்வொருவனும் ஏற்றுமதி செய்யும் சாமான்களால் வருஷத்திற்கு 200 ரூபா பெறுவானானால், அவர்களுடைய ஒற்றுமையும் ஊக்கமும் எவ்வளவு பயனை விளைவித்திருக்கிறதென்பது விளங்குகின்றது. ஜப்பானை இந்தியாவுக்கு மற்றொரு திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். அங்கு விவசாயம் செய்பவர்கள் சொற்ப பூமியை வைத்துப் பயிர் செய்பவர்கள். விவசாயம் செய்பவர்களில் நூற்றில் 55 பெயர் இரண்டு ஏகரா பூமியும், நூற்றில் 35 பெயர் 4 ஏகரா பூமியும், பயிர் செய்கிறவர்கள். இந்திய விவசாயிகளைப்போல் அவர்களும் ஏழைகள். அப்படி இருந்தும் அவர்கள் ஊக்கத்தாலும் புது மாதிரிகளை உபயோகப் படுத்தியும் ஒவ்வொருவனும் மண்வெட்டிகொண்டு வெட்டி சாகுபடி செய்கிறபடியால் அத்தேசத்தார் ஜீவிக்கிறார்கள். அவர்கள் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் கல்வியால் பூரணவாகவும், நன்மை பெறும்படியான யோக்கியதையைப் பெற்றிருக்கிறார்கள்.



# INDUSTRIAL NOTES.

# கைத்தொழில் குறிப்புகள்.

PAINT.

**வர்ணம்.**—பாலினால் செய்யும் வர்ணம் மரவேலைகளுக்கு உதவுகிறது. $2\frac{3}{4}$படி எருமைப் பாலில் ஒரு வீசை சிமிட்டியைக் கலந்துகொண்டேயிருக்க வேண்டும். அடியில் படியும் சிமிட்டியைப் புருசால் எடுத்துத் தடவ வேண்டும். ஆறுமணி நேரத்தில் கல் போல் பிடித்துக் கொள்ளுகிறது ; பிறகு இது விடுவதில்லையாம்.

FACTORIES IN THE MADRAS PRESIDENCY

**சென்னை ராஜதானியில் தொழிற்சாலைகள்.**—சென்ற வருஷத்தில் இச்சென்னை ராஜாதானியிலுள்ள தொழிற்சாலைகளின் மொத்தத்தொகை 181. தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளிகளின் ஸராஸரித்தொகை 50314. பிரஸ்தாப வருஷத்தில் நேர்ந்த தொழிற்சாலை விபத்துக்கள் 364. அவ்விபத்துக்களில் 5-விபத்துக்கள் மரணத்துக்கு ஹேதுவாயிருந்தன. 29 விபத்துக்கள் பலத்த விபத்துக்களாயிருந்தன. மற்றவைகள் ஸாதாரண விபத்துக்களாக விருந்தன. சென்னையில் மரணத்துக்குக் காரணமாயிருக்கும்படி நேர்ந்த விபத்துக்களில் சில மனிதனுக்கு நேர்ந்த விபத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. ஒரு மனிதன் ஒரு கிளிஞ்சில் சுண்ணாம்புக் காளவாயில் படுத்துத் தூங்கி தேகத்துக்கு ஒவ்வாத விஷக்காற்றை உட்கொண்டு இறந்துபோனான். ஒருவன் ஸ்டீம் எஞ்சின் பிஸ்டன் ஒன்று வெடித்து இறந்து போனான். வேறொருவன் மின்சாரம் ஓடிக்கொண்டிருந்த கம்பி யொன்றைப் பிடித்து இறந்தான். தொழிற்சாலைக் கூலிகளுக்குக்கிடைத்த கூலி விகிதங்கள் விவசாயக் கூலிகளுக்குக் கிடைத்த கூலிகளை விட அதிகமாகவே யிருந்தன.

BLACK WRITING INK.

**எழுதுகிற கறுப்பு மை.**—கடுக்காய்த்தூள் பலம் 18, அன்னபேதித்தூள் பலம்8, விளாம்பிசின் அல்லது கருவேலம்பிசின் பலம்7, சுத்தஜலம் பலம்145, ஆகிய இவைகளுள் கடுக்காய்த்தூளை முதலிலெடுத்து 130, பலம் ஜலத்திற்போட்டுக் கொதிக்கவைத்து, மிகுதி 15 பலம் ஜலத்தில் அன்னபேதியையும் பிசினையும் அரைத்துக் கரைத்துக் கொதிக்கும் ஜலத்திற் கொஞ்சம்கொஞ்சமாய்ப் போட்டு செவ்வையாய்க் கொதிக்கவைத்து இறக்கிப் பாத்திரத்தின் வாய்க்குத் துணியினால் வேடுகட்டி மூன்று நாள் வைத்திருந்து பிறகு எடுத்து வடிகட்டிப் புட்டியில் அடைத்துக்கொள்ளவும்.

**இன்னொரு முறை.**—சூரத்துக்கடுக்காய்த்தூள் பலம் 15. கோந்து அல்லது கருவேலம்பிசின் பலம் $3\frac{1}{2}$. அன்னபேதி பலம் 8, மாசக்காய் பலம் 3. சுத்த ஜலம் பலம் 135, இவற்றுள் மாசக்காயை ஒரு சட்டியிற்போட்டு வறுத்துச் செவ்வனே சிவந்து பின்கறுப்பாகும் தருணம் பார்த்து இறக்கி ஆறவிட்டுத் தூள் செய்துகொண்டு கடுக்காய்த் தூளையும் சேர்த்து 125, பலம் ஜலத்திற் போட்டுக்கொதிக்கவைத்து, பிறகு 10 பலம் ஜலத்தில் ஷை பிசினையும் அன்னபேதியையும் அரைத்துச் சிறுகச்சிறுக, கொதிக்கும் கடுக்காய் ஜலத்துடன் கலந்து கொதிக்கவைத்திறக்கித் துணி வேடு கட்டிவைத்து மூன்று நாளைக்குப் பிறகு வடிகட்டிப் புட்டியில் அடைத்துக் கொள்ளவும். இது முன் மையைவிட மிகக் கறுப்பாயிருக்கும்.

SAGO.

**சவ்வரிசி.**—மலாய்த் தீவில் சவ்வரிசி எடுக்கும் மரங்கள் ஈரம் பிடித்த சதுப்பு நிலங்களில் வளர்கின்றன. தாளிப்பனை, கூந்தல் பனை முதலிய செடிகளிலிருந்து மலையாளத்தில் சவ்வரிசி யெடுப்பதுண்டு. மரம் நன்றாய் முற்றி பூவெடுக்கும் ஸமயத்தில் அடியோடு வெட்டி 3-4 அடி நீளத்துக்கு ஒரு துண்டாக வெட்டி அனேகநாள் ஜலத்தில் ஊறவைப்பார்கள். மேல் நாரைப் பக்குவமாய்ச் செதுக்குவார்கள். மீதித் துண்டுகளை நன்றாய் யந்திரத்தில் சுரண்ட வாள் தூள் போலாகிறது. உயரமான முக்காலி அல்லது நாற்காலியில் ஒரு சாக்கைக் கட்டி அதில் ஷை தூளைப் போட்டு ஆள் ஒருவன் கோணிப்பைக்குள் ஏறி, ஜலம் விட்டு மிதித்துத்துவைத்து சுத்த ஜலத்தை அபரிமிதமாய்க் கொட்டுவார்கள். அடியில் வைத்திருக்கும் மூங்கில் தொட்டியில் மாவு இறங்கிவிட நார்மாத்திரம் சாக்கில் நிற்கும். சிலநாள் சென்றபிறகு ஜலத்தை இறுத்து மாவை உலர்த்தி பைகளில் அடைத்து சுத்திசெய்யுமிடத்துக்கு அனுப்புவார்கள்.—தென்னிந்தியா விவஸாயம்.

## EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

ELEMENTARY SCHOOL.

**எலிமண்டரி பாடசாலைகள்.**—கவர்ன்மெண்டார் அடியில்கண்ட ஜில்லாக்களில் பிள்ளைகளுக்காக 654 எலிமெண்டரி ஸ்கூலும் பெண்களுக்காக 60 எலிமெண்டரி ஸ்கூலும் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று லக்ஷம்ரூபா ஸாங்ஷன் செய்திருக்கிறார்கள். சீக்கிரத்தில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படும்.

| ஜில்லா | பாலியர் பாடசாலைகள் | பெண் பாடசாலைகள் | மொத்த அலாட்மெண்ட் |
|---|---|---|---|
| அனந்தபுரம் | 89 | 5 | 11630 |
| வடஆற்காடு | 33 | .. | 5152 |
| தென்ஆற்காடு | 19 | 4 | 3395 |
| பல்லாரி | 25 | 3 | 3791 |
| தென்கன்னடம் | 34 | 5 | 5810 |
| செங்கற்பட்டு | .. | .. | 3000 |
| சித்தூர் | 20 | .. | 2653 |
| கோய்முத்தூர் | 17 | 2 | 2530 |
| கடப்பை | 20 | 5 | 3203 |
| கஞ்சம் | 15 | 1 | 2415 |
| கோதாவரி | 18 | 4 | 3088 |
| குண்டூர் | 50 | .. | 6182 |
| கிருஷ்ணை | 86 | 8 | 12357 |
| கர்நூல் | 16 | 4 | 2972 |
| மதுரை | 21 | 1 | 3060 |
| மலையாளம் | 9 | .. | 1470 |
| நெல்லூர் | 29 | 1 | 3922 |
| நீலகிரி | 2 | .. | 315 |
| ராமநாதபுரம் | 8 | 3 | 1886 |
| சேலம் | 13 | .. | 1400 |
| தஞ்சாவூர் | 53 | 4 | 7855 |
| திருநெல்வேலி | 22 | 3 | 3493 |
| திருச்சினுப்பள்ளி | 30 | 2 | 4130 |
| விசாகப்பட்டணம் | 25 | 5 | 4291 |
| மொத்தம் | 654 | 60 | 1,00,000 |

இம்மாதிரியாக உபகரிக்கப்படும் பணவுதவியை முன்னிட்டு அனுஸரிக்கவேண்டிய விதிகள் இன்னின்னவை யென்றும் கவர்ன்மெண்டார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.—(1) தற்போது பாடசாலைகள் ஏற்படுத்தப்படாமலிருக்கும் முக்கியமான கிராமங்களில் புதிய பாடசாலைகள் ஸ்தாபிப்பதற்கே இப்பணம் செலவழிக்கப் படவேண்டும்; (2) இப்பணத்தைக்கொண்டு எய்டெட் பாடசாலைகள் எனப்படுபவைகளை போர்டு ஸ்கூல்களாக மாற்றவாவது, ஏற்கெனவே எய்டெட் ஸ்கூல்கள் இருக்கும் கிராமங்களில் இப்பாடசாலைகளை யேற்படுத்தவாவது கூடாது; (3) ஒரு பாடசாலையை யேற்படுத்தினதும், அதில் கற்பிப்பதற்காக இரண்டு உபாத்தியாயர்களுக்கு அதிகமாய் அமர்த்தலாகாது; (4) பிரஸ்தாப வருஷத்தில் செலவழியாமல் தங்கிப் போய்விடும் தொகையானது இதே விஷயத்திற்காக அடுத்த வருஷ பட்ஜெட்டிலும் அலாட்மெண்டு செய்யப்படும்.

STATE AID TO SCHOOLS.

**ஸ்கூல்களுக்கு கவர்ன்மெண்ட் உதவி.**—திருவல்லிக்கேணி ஹிந்துஹை ஸ்கூல் பரிசளிப்புக் கொண்டாட்டத்தில் ஒரு முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தியர்கள் வைத்து நடத்தும் ஸ்கூல்களுக்கு மானேஜர்களாக முன் வருகிறவர்கள் இந்த ஸ்கூல்களை நடத்தப் பணவுதவி போதாமல் ஜனங்களின் ஒத்தாசையைக் கோரியாவது, தங்கள் சொந்தப் பணத்தைச் செலவிட்டாவது நடத்தவேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்ட் கொடுக்கும் பணவுதவி போதுகிறதில்லை. ஜனங்களிடமிருந்து பணவுதவி கிடைப்பது அரிதென்று கவர்ன்மெண்டுக்குத் தெரியாததல்ல. ஐரோப்பிய தேசங்களுக்கும் இந்தியாவுக்கும் இந்த விஷயத்தில் பேதமுண்டு. இந்தியா ஏழைதேசம். ஜனங்கள் செய்யுந் தருமம் இங்கிலீஷ் ஸ்கூல்கள் விஷயத்தில் உபயோகப் படுவதில்லை. அப்படியிருந்தும் பல இந்தியர் தேசாபிமானத்தால் ஸ்கூல்கள் வைத்து நடத்துகிறார்கள். கிறிஸ்தவப் பாதிரிகள் நடத்தும் ஸ்கூல்களிற் செய்யபபடும் செலவெல்லாம் ஐரோப்பிய தேசங்களிற் சேர்க்கப்படும் நிதிகளிலிருந்து செய்யப் படுகிறபடியால் அந்தப்பாதிரிகளுக்கும் இந்திய தேசாபிமானிகளுக்கும் வித்தியாஸமுண்டு. ஆகையால், கவர்ன்மெண்ட் அதிக ஒத்தாசை செய்தாலொழிய வாத்தியார்களுக்குப்போதுமான சம்பளங்கள் கொடுக்கவும், ஏழைப் பிள்ளைகளுக்கு உதவியாக ஸ்காலர் ஷிப்புகள் கொடுக்கவும் இயலுகிறதில்லை. இப்படி முறையிட்டதற்கு அக்ராஸனம் வகித்த ஸர் மர்ரே ஹாமிக் என்ன பதில் சொன்னாரென்றால்:—கனம் சேஷகிரி அய்யர் இந்த விஷயமாய்ப் பலதடவை தம்மைப் பார்த்திருக்கிறாரென்றும், அவருக்குத் திருப்தி கொடுக்கும்படியாய்த் தாம் பதிற் சொல்லக்கூடவில்லை என்றும், திறமையாய் நடத்தப்பட்டு ஏற்கெனவே அதிகச் செலவு செய்யும் ஸ்கூல்கள் கட்டிடத்துக்காவது ஸயன்ஸ் கருவிகள் முதலிய உபகரணங்களுக்காவது உதவி கேட்டால் கவர்ன்மெண்ட் அதைப் பற்றி தாராள மனதுடன் கவனிக்கத் தயாராயிருக்கிறார்களென்றும் சொன்னார்.



## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

LIFE PICTURES.

**உயிர்ப் படங்கள்.**—க்ராமபோன் என்னும் ப்ரதியொலிக்கும் வாத்தியக்கருவியை ஸினிமேட்டகிராப் என்னும் விநோதப் படத்தோடு ஸம்பந்தப்படுத்தி, ஏககாலத்தில் அபிநயத்தோடு பேசவுஞ் செய்ய முயற்சித்து, எடிஸன் என்பவர், அநேகமாய்ச்சித்தி பெற்றுவிட்டாராம்.

INSECT PEST.

**பயிரை அழிக்கும் பூச்சிகள்.**—பயிராகும் ஒவ்வொரு செடியையும் சில பூச்சிகள் அழிப்பதுண்டு. ஸாதாரணமாய் ஒரு ஜாதிச் செடிகளை அழிக்கும் பூச்சிகள் அந்தஜாதி செடிகளையே நஷ்டப்படுத்தும். இந்தக்குணம் முக்கியமானது. ஒரு விதச்செடியில் வளரும் பூச்சிகள் தாம் வளரும் அச்செடி யில்லாமற்போனால் தாமுமில்லாமல் நசித்துபோம். ஒரு பயிர் அதிகமாயிருந்து அதில் பூச்சிகள் கொஞ்சமாக நஷ்டம் செய்தால் நாம் கவனிப்பதில்லை. பூச்சிகள் அதிகப்பட்டுப் பலன் குறைவாகக் கிடைக்கும் பக்ஷத்தில் பூச்சிகள் தான் சத்துருவென்று நினைக்கிறோம். இப்படி அதிகப்படும் பூச்சியை தக்கபடி கண்டிக்க வேண்டும்.

பூச்சிகளைக் கண்டிக்க அவைகளின் உயிர் வாழ்க்கை இன்னதென்று தெரிவது அவசியம். ஒரு பூச்சி எப்போது முட்டையிடுமென்பதையும், எங்கே இடுமென்பதையும் எப்போது குஞ்சு பொரிக்குமென்பதையும், எப்போது முழுப்பூச்சி இறகுகளுடன் வெளிப்படுமென்பதையும் அறிவதுடன் பூச்சிகள் இன்ன இடத்தில் இன்னகாலத்தில் இன்னதைச் செய்கின்றன வென்பதையும் தெரிந்தால் அப்போது அந்த ஸமயத்தில் அதைச்சுலபமாய் அழிக்கக் கூடுமென்பது தெரியும். இதுதான் பூச்சி சாஸ்திரியின் தொழில்.

NEEM SEEDS.

**வேப்பங்கொட்டைப் பரிசோதனை.**—லங்கைக் கிருஷிச்சங்கத் தலைவர் லண்டன் சாஸ்திர சங்கத்தவர்க்கு 3 அந்தர் வேப்பங்கொட்டைகள் அனுப்பியிருக்கிறார்கள். சாஸ்திரசங்கத்தார் வேப்பெண்ணெய் எதற்காவது விசேஷப்பொருளாய் உபயோகப்படுமோவென்று பரீட்சிப்பதற்கே வரவழைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தைச் சேர்ந்த டன்ஸ்டன் பண்டிதர் வேப்பெண்ணெயிலுள்ள கெட்ட மணத்தை நீக்கி அதைக்கொண்டு சவர்க்காரஞ்செய்யலாமென எண்ணுகிறார். விரைவில் அதைப் பரீட்சிப்பர். அது மாத்திரமன்றி வேறென்னென்ன வகையாய்ப் பயன்படுமெனவுஞ் சங்கத்தார் அந்த எண்ணெயைப் பரீட்சிப்பர்.

SOUTH INDIAN RIVERS.

**தென் இந்தியாவில் ஆறுகள்.**—தென்னிந்தியாவில் மேற்கிலும், கிழக்கிலும் மலைகள் இருக்கின்றன. மேற்கேயுள்ள மலைக்கு மேற்குத் தொடர்ச்சி மலை என்று பெயர். இந்தமலை மிகவும் உயரமானது. சங்கிலி கோத்தாற்போல் ஒரே தொடர்ச்சியாகவுமிருக்கிறது. கிழக்கேயுள்ள மலை கிழக்குத்தொடர்ச்சி மலை. இது மேற்குத் தொடர்ச்சி மலையைப்போல் உயரமாகவாவது அல்லது தொடர்ச்சியாகவாவது இல்லை. ஆகையால் தான் தென்னிந்தியாவின் மேல் பக்கம் மேடு, கீழ்ப் பக்கம் பள்ளம், ஆறுகள் மேற்கேயிருந்து கிழக்கே ஓடுகின்றன. அவைகளில் முக்கியமானவை கோதாவரி, கிருஷ்ணை, காவிரி முதலியவைகள்.

ORIGIN OF KEROSINE OIL

**மண்ணெண்ணெயின் உற்பத்தி.**—மண்ணெண்ணெயை இதுவரையில் பஞ்சலோகங்கள், நிலக்கரி, உப்பு முதலான தாதுவர்க்கங்களுடன் சேர்த்து வருகிறார்கள். ஆனால் ஸமீபத்தில் தென் ருஷ்யாவில் மய்க்கோப் மாகாணத்தில் கருங்கடற்கரையில் டுவாப்ஸே என்ற துறைமுகத்திற்கு 50 மைல் தூரத்தில் காக்கசன் மலையின் வடசார்பில் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது வேலைசெய்யப் பட்டுவரும் மண்ணெண்ணெய் நிலத்தில் ஏராளமான மச்சங்களினுடையவும் தாதுவர்க்கங்களினுடையவும் அடையாளங்கள் அகப்படுகின்றனவாம். வேறொரு பாறையில் மச்சங்களின் அடையாளங்களிருக்கும் இடங்கள் தவிர மற்ற இடங்களில் எண்ணெய் அகப்படவில்லையாம். ஆகையால் மண்ணெண்ணெய் தாதுவர்க்கங்களுடன் சேர்க்கப்படுவது ஸரியன்றென்றும், ஸ்தாவரவர்க்கங்கள் அல்லது காலஞ்சென்று மாறுரூபமடைந்த கடற் ஜெந்துகளுடைய இனத்தில் சேர்க்கப்படவேண்டுமென்றும் சில சாஸ்திரிகள் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள்.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

ENGLAND AND ARTIFICIAL TEETH.

**இங்கிலாந்தும் பொய்ப்பல்லும்.**—ப்ரதி வருஷமும் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு 2 கோடி பொய்ப் பற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் இங்கிலாந்தில் சுயபற்களை யுடையோர் ஒருவராவதிருக்கமாட்டார்களென்றும் க்ரேட் ப்ரிட்டனில் அரைவாசிப்பேர் பொய்ப்பல்லுடையவர்களென்றும் காணப்படுகிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஸ்திதி இதற்குக் குறைந்ததல்லவாம்.

REMEDY FOR SCORPION STING.

**தேள் கொட்டுக்கு மருந்து.**—தேள் கொட்டினால் படிகாரத்தை எலுமிச்சம்பழரஸத்தைவிட்டு அரைத்துக்கொட்டின இடத்தில் பற்றுப்போட்டு அதற்கருகில் ஒரு கரித்தணலைப் பிடித்துக்கொண்டிருந்தால் அந்தத் தணலினால்பற்று உலர உலர வலி நீங்கிப்போமென்று ஒருவர் 'மெயில்' பத்திரிகைக்கு எழுதுகிறார். தமக்குக் கால் விரலில் கொட்டினதாகவும் எலுமிச்சம்பழரஸமில்லாமல் தண்ணீரை விட்டு அரைத்துப் பற்றுப்போட்டதாகவும், வலி நின்று விட்டதாகவும் எழுதுகிறார். தேள் கொட்டுக்கு எவ்வளவோ மருந்துகள் சொல்லப்படுகின்றன. இதையும் உபயோகித்துப் பார்க்கலாம்.

BALD HEAD.

**வழுக்கைத் தலை.**—அநேகமாய்த் தலைக்குத் தொப்பியை உபயோகப்படுத்துகிறவர்களுக்கு வழுக்கை விழுந்திருப்பதைக் காணலாம். தொப்பி போட்டுக் கொள்வதனால் நல்ல காற்று தலையிற்பட வொட்டாமல் ஒரு வகையான உஷ்ணமுள்ள காற்றே அவ்விடத்தில் நிரம்பி விடுகிறது. அதில் தலைவியர்வையும் ஒரே விதமான காற்றும் சேரும்போது சிறு சிறு புழுக்கள் உண்டாகின்றன. இவைகள் மயிர் முளைப்பதற்குள்ள நுண்ணிய துவாரங்களை யடைத்து மயிர் முளையாமற் செய்துவிடுகின்றன. எப்போது மயிர் முளைப்பதற்கு மார்க்கமில்லையோ அப்போது அந்த விடத்தில் வழுக்கை விழுந்துவிடுகிறது. ஆதலால் தொப்பி யணிந்து கொள்வோர் இவ்விஷயத்தில் சிறிது கவனமாயிருப்பது நலம்.

COFFEE DRINKING.

**காப்பி குடித்தல்.**—காப்பி குடிவழக்கத்தை அனுசரித்த பெரியோர்கள் தங்கள் மக்களுக்கும் சிறு குழந்தைப் பருவத்திலேயே பழக்கிவைக்கிறார்கள். இதனால் குழந்தைகள் படுக்கையைவிட்டெழுந்திருக்கும்போதே காப்பி என்று சொல்லிக்கொண்டெழுந்திருக்கின்றன. காப்பி மாத்திரம் குடிப்பது உடம்பிற்குக்கெடுதல் என்பது பொதுவான அபிப்பிராயம்; காப்பியுடன் உப்புமாவோ அல்லது இட்டிலியோ ஏதோ ஒன்று வேண்டியிருக்கிறது. இவ்விதம் காப்பி உப்புமாவுடன் தின்று பழக்கப்பட்ட சிறுவர்கள் பெரியவர்களானால் இவ்வழக்கத்தை விட முடிகிறதில்லை. விடவேண்டுமென்றால் விட்டு விடலாம்; ஆனால் விட்டுவிட மனம் நாடுகிறதில்லை. காப்பி குடிக்கிற ஒருவனுக்குக் காலையில் காப்பி இல்லாமற்போனால் அன்று வீடு ரணகளமாகிறது. தலை வலிக்கிறதென்றும், கிறுகிறுப்பா யிருக்கிறதென்றும், அன்று முழுதும் மறுபடி காப்பி குடிக்கிறவரையில் பித்துப் பிடித்தவன்மாதிரி யவனிருக்கிறான். ஒருவேலையும் செய்யத்தோன்றுகிறதில்லை. இவை குடியால்தான் தீரவேண்டும். காப்பி சாப்பிடுவதினால் சாதம் தள்ளுபடியாகிறது; அதாவது சாதம் கொஞ்சமாகத்தான் செல்லுகிறது. நாளடைவில் இவ்விதம் சாப்பாடு குறைந்து வரவரத் தேகத்தில் வலிவுகுறைந்துகொண்டே வந்து சீக்கிரம் இறக்க நேருகிறது. இதல்லாது பழயசாதம் (நீரில்போட்டு ஊறிய அன்னம்) சாப்பிடுகிறவர்களோ குன்றாத வலியையடைந்து தங்கள் கிழவயதில் கூட எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நடக்கிறார்கள். இவ்வித மனிதர்களை 70 அல்லது 80 வயதில் கூட இப்பொழுது நாட்டுப்புறங்களில் காணலாம். காப்பி மேலே குறித்தமட்டில் நில்லாமல் நாளடைவில் அநேகருக்கு நீரிழிவு என்னும் மகாக் கொடிய வியாதியை விளைவிக்கின்றது என்பது வைத்திய சாஸ்திரிகளின் கொள்கை. திருஷ்டாந்தமாகத் தற்காலத்தில் நீரிழிவினால் அவஸ்தைப் படுபவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டே வருகின்ற தெனத்தெரிகிறது. இவ்வியாதி வந்தவனுக்குக் காப்பி சத்துரு—லோகோபகாரி.



## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

CIVIL SUITS.

**ஸிவில் வியாஜ்யங்கள்.**—1909-10 வருஷத்தில் இந்தியா மொத்தத்துக்கு 2,001,008 ஸிவில் வியாஜ்யங்கள் செய்யப்பட்டன. அவைகளின் பெறுமானம் ரூ 43,43,70,836.

DECREE.

**டிக்ரீ.**—ராமன் என்பவனும் லட்சுமணன் என்பவனும் கூட்டு வியாபாரம் செய்தார்கள். ராமன் என்பவன் கூட்டு வியாபாரத்திற்காக கிருஷ்ணன் என்பவனுக்கு ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்து கடன் வாங்கினான். கிருஷ்ணன் என்பவன் ராமன் என்பவன் பேரிலும் லட்சுமணன் என்பவன் பேரிலும் வியாஜ்யம் கொண்டுவந்தான். எவன் நோட்டு எழுதிக் கொடுத்தானோ அவன்பேரில் மட்டிலும் டிக்ரி கொடுக்கப்படவேண்டும்.

PARTNERSHIP.

**கூட்டு வியாபாரம்.**—கூட்டு வியாபாரக் கம்பெனிக்குச் சேரவேண்டிய ஒரு கடனை ஷை கம்பெனியின் ஒரு பாகஸ்தனிடம் செலுத்தினால், மற்ற பாகஸ்தர்களையும் அது கட்டுப்படுத்துமென்றும், கடனாளி தன்னுடைய கடன் தீர்ந்ததாக எண்ணலாமென்றும் இருந்தபோதிலும், கூட்டு வியாபார பாகஸ்தர் தன்னிடம் கடனாளிவாங்கியிருந்த ஸொந்தக்கடனுக்காக அந்தப்பணத்தை வரவழைத்துக்கொண்டு அதைக் கூட்டு வியாபாரக் கணக்கில் கொண்டுவாராமலிருந்தால், அப்போது கடன் செலுத்தின கடனாளி கம்பெனிக்குச் சேரவேண்டிய கடனைச் செலுத்தினவனாகமாட்டான்.

A NICE DECISION.

**ஒரு நேர்த்தியான தீர்ப்பு.**—"அண்ணனும் தம்பியும் ஜென்மப்பகை" என்ற பழமொழி அநேக ஸந்தர்ப்பங்களில் வாஸ்தவமாகவே முடிந்து விடுகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கிராமத்தில் ஒரு தமயன் தன்னுடைய தம்பியை அவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் ஆகாதபடி செய்து, அவள் மருந்து வைத்துவிட்டாள் என்று அவள் சிற்றப்பன் எழுதியதுபோல் ஒருகடிதத்தை எழுதிப் போஸ்ட் செய்து அதைத் தபால் வழியில் பெற்று தனது தம்பிக்குக் காட்டி புருஷனுக்கு மனைவிமேல் தீராதபகை யுண்டாகும்படி செய்துவிட்டான். பிறகு அந்த மருந்தை எடுத்து விடுவதாகச் சொல்லி வைத்தியத்துக்காக தூரமான இடங்களுக்கெல்லாம் அழைத்துப்போய் கண்டபடி வைத்தியம் செய்து அதனால் அவனுடைய சுகத்தைக்கெடுத்து அதிக நாள் இருக்கமாட்டோமென்று அவனை நினைத்துக் கொள்ளப் பண்ணி, இந்த ஸமயத்தில் அவன் ஸொத்துகள் ஸகலத்தையும் தன் பேருக்கு உயில் எழுதச்சொல்லிப் பெற்றுக் கொண்டான். சில நாளுக்குப் பிறகு தம்பியும் இறந்துபோக சாவுக்கு அவனுடைய மனைவி வந்தாள். உயில் ஸமாசாரம் கேட்டுத் திகைத்தாள். அவளுக்கு ஒரு 300-ரூபாய் போலக் கொடுத்துப் புருஷன் ஸொத்தில் தனக்கு யாதொரு பாத்தியதை யில்லையென்று ஒரு ராஜிநாமா எழுதி வாங்கிக் கொண்டான்.

"தர்மம் தலைகாக்கும்" என்பதாக எண்ணி மனைவி கோர்ட்டில் வியாஜ்யம் செய்தாள். அவள் சிற்றப்பன் தான் மருந்து வைத்ததாக கடிதம் எழுதவில்லையென்றான். கோர்ட்டார் மனைவி மருந்து வைத்து வசப்படுத்தப் பார்த்தாள் என்பதை நம்பாமல் தமயன்தான் தம்பியின் புத்தியைக் கலக்கினான் என்று தீர்மானித்து, சித்தம் குழம்பிய நிலைமையில் அவன் எழுதிய உயில் சாஸனம் செல்லாதென்றும் அவனுடைய ஸகல ஸொத்துக்களும் கைம்பெண்ணான அவனுடைய மனைவிக்குச் சேரவேண்டுமென்றும், தீர்ப்பு செய்துவிட்டு பிரதிவாதியின் கோர்ட்டுச் செலவில் சிறிது அந்தக் கைம்பெண் கொடுக்கிறதென்று முடிவாயிற்று. இதன்மேல் தமயன் அப்பீல் செய்ய அங்கு கீழ் கோர்ட்டுத் தீர்ப்பை உறுதிபடுத்திவிட்டு பிரதிவாதியின் கோர்ட் செலவை கைம்பெண் தரவேண்டியதில்லையென்றும் அவளுடைய ஸகல கோர்ட்டுச் செலவும் பிரதிவாதியே கொடுக்கிறதென்றும் தீர்ப்பாக தமயன் ஹைகோர்ட்டிலே அப்பீல்செய்ய ஹைகோர்ட்டார் இரண்டாவது கோர்ட்டுத் தீர்ப்பையே உறுதி செய்துவிட்டார்கள். மோசம் நாசம் என்பது கடைசில் உண்மையாக முடிந்தது.—திராவிடாபிமானி.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்

---

THE KING OF SIAM.

**சீய அரசன்.**—சீயதேசத் தரசன் பூராவாய்த் தன் ராஜ உடையைத் தரித்துக்கொள்ளும்போது அதன் மதிப்பு 2.00,000 பவுனும்.

INDIAN SANDOW.

**இந்தியன் ஸாண்டோ.**—ப்ரொபெஸர் ராமமூர்த்தி நாயடு மார்ஸெயிலிலிருந்து கொழும்பிற்குவந்திருக்கிறார். அவருடன் 13-பலவான்களிருக்கிறார்கள். இவர்கள் இங்கிலாண்டிலும் ஐரோப்பாக் கண்டத்திலும் தமது வித்தையைக் காட்டி 110-மெடல் பெற்றிருக்கிறார்கள். அவற்றுள், ஒன்று நமது சக்ரவர்த்தியா ரவர்களாற் கொடுக்கப்பட்டது.

ROCKFELLER' INCOME.

**ராக்பெல்லர் என்பவர் வருமானம்.**—அமெரிக்க கோடீசுவரனாகிய ராக்பெல்லருக்கு வருகிற வருமானம் உலகிலுள்ள எல்லா சக்ரவர்த்திகளுக்குமிருக்கிற வருமானத்துக்கு ஸமமாம். அது வருஷமொன்றுக்கு 87 பவுன் வீதம் 32 ஆயிரத்து 268 வேலையாட்கள் செய்கிற ஸம்பாத்தியத்துக்கு ஸமம். இவ்வளவு தனிகனாயிருந்தும், சமைத்த உணவு அவருக்கு ஒத்துக் கொள்ளுகிறதில்லையாம். பச்சை முட்டையும், பச்சை காய்கறியும் அவருக்கு ஆகாரமாம்.

SALEM GODAVARI.

**சேலம் கோதாவரி.**—சேலம் கோதாவரி தாஸி வகுப்பைச்சேர்ந்தவள். புதிதாய் ஏற்பட்டிருக்கும் கிராமபோன் யந்திரத்தில் இம்மாதின் பாட்டுக்களை யாரும் கேட்டு ஆனந்த மடைந்ததுண்டு இம்மாதராள் ஜாதியில் தாஸியாயிருந்தாலும் குணத்தில் பொருந்தன்மையும் தர்ம சிந்தையுங் கொண்டவள். இதற்கறியாக அம்மாதராள் செய்த தருமத்தை மட்டும் இதனடியிற் குறிக்கின்றோம். சென்ற அக்டோபர்மீ 20உ இம்மாதராள் சென்னை தம்புசெட்டித் தெருவிலுள்ள தனது கிருகத்தில் மாண்டு போனாள். ஆயினும் அவளதுபெயர் வெகுகாலம் சிறப்புற்று விளங்கும்படி அவள் தன்னுடைய உயில் பத்திரத்தில் என்ன எழுதி வைத்திருக்கிறாளென்றால் தன்னுடைய ஆஸ்தியில் சென்னை சிசுரக்ஷண சங்கத்தார்க்காக ரூ5000. பச்சையப்பன் கலாசாலைக்காக ரூ4000 சென்னை அன்னதான சமாஜத்துக்கு ரூ1000. சேலம் கலாசாலைக்கு ரூ1000. சேலம் பிரமஞான சங்கத்தை யொட்டியிருக்கும் வேதபாடசாலைக்கு ரூ 1000. சேலம் சிவன்கோவில் தேருக்காக ரூ 4000. சேலத்திலுள்ள சிவன் கோவிலில் தரிசனார்த்தம் வருவோர் தங்குவதற்காக ஒரு பெரும் விடுதியும் ரொக்கமாக 600 ரூபாயும் எழுதிவைத்திருப்பதாகத் தெரிகிறது. தாஸியாயிருந்தாலும் தர்ம சிந்தையைப் பாருங்கள்.

SIR S. SUBRAMANIA AIYER.

**ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர்.**—சென்னை ஹைகோர்ட் ஜட்ஜியா யிருந்த. ஸர் S. சுப்பிரமணிய அய்யர் "இந்தியன் ரெவியூ"வுக்கு எழுதியிருக்கும் வியாசத்தில் ஜகத்குரு ஸ்ரீ சங்கரா சாரியரைப் பற்றி நம்மவர்களுக் குள்ளிராத நூதனமான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார். கௌதமபுத்தர், ஸ்ரீசங்கராச்சாரியர், ஸ்ரீகிருஷ்ண பகவான், யேசுகிறிஸ்து, இவர்கள் முக்கியமான அவதாரங்களென்றும், முதலிற் குறித்த இரண்டு அவதாரங்களும் கர்மமார்க்கத்தைப் போதிக்க உண்டாயினவென்றும், பின் சொன்ன இரண்டும் பக்தி மார்க்கத்தைக் கற்பிக்கத் தோன்றினவென்றும், ஸ்ரீ சங்கராச்சாரி கௌதமபுத்தருக்கு நூறு வருஷத்துக்குப் பின்னால் அவதாரமானவரென்றும், சொல்லுகிறார். ஜனங்கள் நம்பும் ஆதி சங்காராச்சாரியார், சுமார் 1,200 வருஷத்துக்கு முன்னால் மலையாளத்தில் பிறந்து ஷண்மத ஸ்தாபனம் செய்து உபநிஷத்துக்கள் முதலான கிரந்தங்களுக்குப் பாஷியங்கள் எழுதினவர் வேறு சங்கராச்சாரியான உண்மையான ஆதிசங்கராச்சாரி தமது சிஷ்யர்களுக்கு வாய்மொழியாய் உபதேசம் செய்தாரேயன்றி பாஷியங்கள் எழுதவில்லையென்றும், அபிப்ராயப்படுகிறார். இரண்டாவது சங்கராச்சாரியாருக்குக்குரு கோவிந்தர். அவருக்குக் குருவான கௌடபாதாச்சாரியர் எழுதின காரிகையில் பௌத்த ஞானியாகிய நாகார்ஜனன் எழுதினதில் "ஆதிபௌபுத்த பிரகிருத்யைவ சர்வே தர்ம சுநிஸ்ச்சித:," என்ற சுலோகத்தைத் தமது வேதாந்த புஸ்தகத்தில் தம்மதுபோல் பெயர்த்து எழுதிக் கொண்டாரென்றும் சொல்லுகிறார்.—சுதேசமித்திரன்,



## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

---

KINGS ARE SCARCE.

**ராஜஸேவை கிடைப்பது அபூர்வம்.**—ஒரு தேசத்து ராஜா எங்கேயோ ஒரு தேசத்துக்குப் போய் சண்டைசெய்து ஜெயித்துவிட்டு தனது ஊரை நோக்குங்கால் ஒரு கிராமத்தில் தங்கினான். தங்கின வீட்டுக்காரனைப்பார்த்து ராஜா:—" 2, 3 முட்டைகள் கிடைத்தால் நலமாயிருக்கும், எனக்கு முட்டையின்பேரில் பிரியம் ஜாஸ்தி" என்றான்.

வீட்டுக்காரன்:—உடனேபோய் 3 முட்டைகளை வாங்கிக்கொண்டு வந்தான்.

ராஜா:—" முட்டைகளின் விலை என்ன."

வீட்டுக்காரன்:—" ஒரு முட்டையொன்று 100 பவுன்."

ராஜா:—" ஓஹோ, இந்த ஊரில் முட்டை ரொம்ப கிராக்கிபோலிருக்கிறதே"

வீட்டுக்காரன்:—"மஹாராஜா, முட்டைகள் கிராக்கியில்லை, ஏதேஷ்டமாய் அகப்படும். ஆனால் ராஜாக்கள் எளிதில் அகப்படமாட்டார்கள். ஆகவே முட்டைவிலை இப்படி" என்றான்.

THE DUMB SPEAKING.

**ஊமை பேசினது.**—ஒரு யோக்யதை கெட்ட பிச்சைக்காரன் பிழைக்க வழியொன்றும் தெரியாமல் கடைசியாக தான் ஊமைபோல் பாவித்தால் பிழைக்கலாம் என்று கருதி அநேக ஊர்களில் பிச்சையெடுத்துவிட்டு, கடைசியாக, இவன் இதற்கு முந்தி ஊமையாயில்லாமலிருந்தபொழுது போய் பிச்சையெடுத்த ஒரு ஊர் போய்ச்சேர்ந்து பிச்சையெடுத்து வந்தான். ஒரு பெரிய மனுஷனிடம் போய் பிச்சைக்கு செய்கையெல்லாம் காட்டினான். பெரிய மனுஷனுக்கு இவன் ஊமையாயில்லாமலிருந்து இப்பொழுது பாசாங்கு பண்ணுகிறது தெரிந்து, அவன்பேரில் இரக்கப்படுவது போல் "அடடா, பாவம். எத்தனை நாளாடப்பா இப்படி ஊமையாயிருக்கிறாய்" என்றார். ஊமை: "அந்தக்கஷ்டத்தை ஏன் கேட்கிறீர்கள். ஐயா, பிறந்தது முதல் ஊமை" என்று தன்னையறியாமல் பதில் பேசிவிட்டான். உதையும் சவுக்கடியும் பட்டுக்கொண்டு போய்ச்சேர்ந்தான்.

OUTWITTING A HIGHWAYMAN.

**ஒரு வழிப்பறிக்காரனை ஏமாற்றினது.**—முன் காலங்களில் ரெயில் மார்க்கம் கிடையாது. எல்லாரும் பிரயாணத்துக்கு கட்டை வண்டிகளில் போகிறது வழக்கம். ஒரு தடவை 8 பேர் ஒரு வண்டியில் காசிக்குப் போனார்கள். ஒரு நாள் ராத்திரி எல்லாருமாய்ச் சேர்ந்து வழியில் யாரேனும் வந்து கொள்ளையடித்து விடுவார்களோ என்று பேச ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவனும் பயந்தான். அவர்களில் ஒருவர் தன்னிடம் 10 ரூபாய் இருப்பதாகத் தெரிவித்தார். உடனே அருகில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு ஸ்திரீ அவரைப் பார்த்து "இடுப்பில் இருக்கிற பையில் பத்திரமாய் வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னாள். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் 2 திருடர்கள் வந்து வழிமறித்து இவர்களை அடிக்க ஆரம்பித்தார்கள். மேல் சொல்லிய ஸ்திரீ திருடர்களைப்பார்த்து "ஏன் அடிக்கிறீர்கள். அவர் இடுப்பில் 10 ரூபய் இருக்கிறது எடுத்துககொண்டுபோ" என்று காட்டிக்கொடுக்கவே திருடர்களும் அப்படியே 10 ரூபாயையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். பிற்பாடு எல்லாரும் அந்த ஸ்திரீ காட்டிக்கொடுத்ததற்காக அவளைக்கடிந்துபேச ஆரம்பித்தார்கள். அவள் அதை லக்ஷியம் செய்யாமல் நான் அப்படிச்செய்ததற்குக் காரணம் உண்டு. ஒரு பயமில்லாமல் ஊர்போய்ச் சேருவோம், அப்பொழுது சொல்லுகிறேன் என்றாள் கடைசியாக ஒரு பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அந்த ஸ்திரீ எல்லாரையும் பார்த்து "நான் ஏதோ உங்களைக்காட்டிக் கொடுத்ததாக எண்ணினீர்களே. நான் அப்படிக் கொடுக்காவிட்டில் என்னிடம் 500 பவுன் இருந்தது. அந்த 500 பவுனும் போயிருக்கும். அவர் பத்து ரூபாய் இழந்து என்னைக் காப்பாற்றினதற்கு இந்த 100 பவுன் அவருக்குக் கொடுக்கிறேன்," என்று 100 பவுனை எடுத்து 10ரூபாய் இழந்தவர்க்குக் கொடுக்கவே, எல்லாரும் ஆச்சர்யப்பட்டு அவள் புத்திசாலித்தனத்தை மெச்சலானார்கள்.

## CURIOSITIES.

## விநோதங்கள்.

---

### A Monstrous Child.

**ஒரு கோரமான குழந்தை.**—மலையாளத்தில் ஒரு ஸ்திரீ வாய்முழுதும் பற்களுடன் ஒரு சிசுவை யீன்றனள். அது நான்கு வயதானவுடன் அதன் முகம் 20 அல்லது 30 வயதுடைய வாலிபனைப்போல் தோற்றுகிறதாம். அதற்கு பசியெடுக்கும்போது மனிதர்களைப் பார்த்து சீருகிறதாம். மிருகத்தைப் போல் உருமுகிறதாம். உணவும் அபரிமிதமாய் உட்கொள்ளுகிறதாம்.

### Good Spring water in the Sea.

**நல்ல தண்ணீர் ஊற்றுகள்.**—பெர்ஷியா தேசத்திலே கடலோரத்திலிருக்கும் பேரைன் என்னுமூர் அதிக உஷ்ணமுள்ளது. அதன் உஷ்ணம் 130 டிக்ரியாம். அங்கே தாகத்துக்கு நல்ல ஜலம் கிடைக்காது. ஆனால் சமுத்திரத்தில் 1-மைல் தூரம்போய் அடியிலிறங்கி அங்கே யிருக்கிற அற்புதமான ஊற்றுகளிலிருந்து நல்ல தண்ணீர் கொண்டுவருகிறார்கள். சமுத்திரத்தின் அடியிலே இந்த நல்ல ஜலம் உண்டாகிறது மெத்த அதிசயமானது.

### A Curious Birth.

**அதிசயப் பிறவி.**—நகரியிலிருக்கும் வெஸ்லியன் மிஷன் தர்ம வைத்ய சாலைக்கு பிரசவவேதனைப்பட்டுக்கொண்டிருந்த ஒரு குறத்தி கொண்டுவரப்பட்டாள். இரண்டு தலைகளும், நான்கு கைகளும், இரண்டு கால்களுமுள்ள ஒரு பெண் சிசு அவளுக்குப் பிறந்தது. சில மணி நேரம் வரையில் அப்பிறவி ஜீவித்திருந்து அதற்குப் பின் இறந்து போய் விட்டது. ஆச்சர்யமான இச்சம்பவத்தை ஊர் ஜனங்களில் அநேகர் போய்ப்பார்த்து வந்தார்கள்.

### Wonderful News.

**அதிசயமான ஸங்கதி.**—ஆஸ்டிரேலியா தேசத்து மேற்புறத்தில் 'மண்டபுல்லாகஞ' என்னும் ஊரில் ஒரு நல்ல ஜாதி குதிரை குட்டியொன்று போட்டதாம். அதற்கு நாலு மாதமான பிறகு அதே குதிரை ஒரு கோவேறுகழுதைக் குட்டியை ஈன்றதாம். முதலாவது நல்ல ஆண் குதிரையோடு கலக்கச்செய்தார்களாம். நாலு மாதம் வரை பார்த்ததில் பலன் படவில்லை என்று எண்ணி கோவேறு கழுதையொன்றை கலக்கும்படி விட்டார்களாம். முதலாவது குதிரைக் குட்டியை ஈன்றது. அதன் பிறகு 4 மாதங் கழித்து கோவேறு கழுதைக் குட்டியை ஈன்றது. இரண்டும் பிழைத்திருக்கின்றனவாம்.

### A Child five inches high.

**5 அங்குல உயரக் குழந்தை.**—பர்மாவைச் சேர்ந்த மாபின் ஜில்லாவிலுள்ள எலக்கலையில் ஒரு பர்மியப் பெண் 6 மாதங்களுக்கு முன் 5 அங்குல நீளமும் ஒன்றே கால் அங்குல அகலமுமுள்ள ஓர் குழந்தையைப் பெற்றாள். அதற்கு இரண்டு கோப்பை நிரம்பப் பாலைக்கறந்து அருகில் வைத்துவிடுவதுண்டாம். ஒரு நாள் அப்பிள்ளை தாய் தகப்பன் கனவில் "நீங்கள் என்னைப் பால் கோப்பையோடு பெட்டியில் வைத்துப் பூட்டும் வழக்கத்தை விட்டுவிடுங்கள்" என்று சொன்னதாம். அப்படியே வெளியே வைத்து வருகின்றனர். அக்குழந்தை காய்ந்த கருவாடு போலிருக்கிறதென்று அதை நேரில் போய்ப் பார்த்த ஒருவர் நமக்குத் தெரிவிக்கிறார். கலியின் வலி, அம்மம்ம! கொஞ்சமன்று.—வைசிய மித்திரன்.

### Doing business while on the move.

**ஓடும்போழுதே, வேலை நடத்தல்.**—தென்டகோடா மாஹாணத்தில், லாம்ரோ, வின்னர் என்று இரண்டு பட்டணங்களுண்டு. இவை இரண்டுக்குள், எதில் ஆபீஸ் வைக்கிறதென்று கக்ஷி உண்டாயிற்று. லாம் ரோ பெரியபட்டணமாகையால், ஆபீஸுகள் அதிலே இருந்து வந்தன. ஷை கக்ஷியில், வின்னர் பட்டணத்தில் தான் ஆபீஸுகள் இருக்க வேண்டுமென்று தீர்மானமாயிற்று. இப்பொழுது லாம் ரோ ஆபீஸ் கட்டிடங்களை வின்னருக்கு மாற்றவேண்டியதா யிருந்தது! இரண்டு பட்டணங்களுக்கு ரெயில் மார்க்கமோ கிடையாது. பூமிமேடு பள்ளமில்லாமல் ஸம வெளியாய் யிருந்ததினால் மஹாபிரம்மாண்டமான இரண்டு இன்ஜின்கள் ஆபீஸுகளை அடியோடு பேர்த்து இழுத்துக்கொண்டுபோய் வின்னரில் சேர்த்தன. இதேமாதிரியாக லாம் ரோ ஹோட்டலும் 72 ஜோடித்திரைகளால் இழுத்துக்கொண்டு சேர்க்கப்பட்டன. ஆபீஸுகள் இப்படி ஓடும்பொழுதே ஆபீஸ் வேலைகள் தவக்க மன்னியிலும் பாங்கிகள், வழக்கம்போல் ரொக்கம் கொடுக்கல் வாங்கல் இவைகளும் நடந்தன.



## NEWS OF THE MONTH.

## மாஸ வர்த்தமானங்கள்.

## INDIAN NEWS.

## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

---

### Our new Governor.

**புதிய கவர்னர்.**—நமது புதிய கவர்னரான ஸர் தாமஸ் கிப்ஸன் கார்மிகேல் அவர்கள் நவம்பர் மாதம் 3-ந்தேதி தமது கவர்னர் ஸ்தானத்தை வகிப்பார்.

### Marriage of The Baroda Princess.

**பரோடா ராஜகுமாரியின் விவாகம்.**—பரோடா மாகாராஜாவின் ஏக புத்திரி குவாலியர் ஸமஸ்தானத்து ஷிந்தியா மகாராஜாவுக்குக் கலியாணஞ்செய்து கொடுக்கப்படப் போகிறாளென்று உத்யோக முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த கலியாணம் பரோடாவில் வருகிற டிசம்பர் மாதம் 5-ந்தேதி நடைபெறும்.

### The Tanjore District Conference.

**தஞ்சாவூர் ஜில்லாக் கான்பரேன்ஸ்.**—இக்கான்பரென்ஸின் 5-வதுமுறை நவம்பர்மாதம் 18, 19-ம் தேதிகளில் மன்னார்குடித் தாலுக்காவில் ஏற்கனவே தீர்மானமாயிருக்கிறபடி நடைபெறும், எவ்வூரில் நடைபெறுமென்பது மட்டும் பிறகு தெரிவிக்கப்படும். ஆனரபில் மிஸ்டர் திவான்பகதூர் எல். ஏ. கோவிந்தராகவ ஐயர் அக்ராஸனம் வகிப்பார்.

### The Delhi Durbar.

**டில்லி தர்பார்.**—1903-ம௵ எட்வார்ட் அரசரின் முடிசூட்டு மகோத்ஸவத்தைக் கருதி டில்லியில் தர்பார் நடத்தப்பட்டபோது லார்ட் கர்ஸன் யானைமேலேறி பவனிசென்று ராஜடாம்பீகத்தில் தமக்கிருந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொண்டார். இவ்வருஷக் கடைசியில் ஜார்ஜ் அரசரின் முடிசூட்டு மகோத்ஸவ ஸம்பந்தமாய் நடக்கும் டில்லி தர்பாரில் சக்ரவர்த்தியே நேரில் வந்திருப்பாராயினும் ஸகல ராஜரீக சின்னங்களுடன் அவர் யானைமேலேரிப் பவனி வரமாட்டாராம்.

### The Negapatam Railway Workshop.

**நாகப்பட்டணம் ரெயில்வே ஓர்க்கு ஷாப்.**—இது திருச்சிக்கு மாற்றுப்படப் போகிறதென்று நெடுநாளாய் பிரஸ்தாபம் பரவிவந்தது நமது நேயருக்குத் தெரிந்திருக்கும். அங்கேயே மாற்றப்படலாமென்று கவர்ன்மெண்டு ஸாங்ஷன் கிடைத்து விட்டதால், சீக்கிரத்தில் அது திருச்சிவந்து சேர்ந்துவிடும். இதனால் நாகப்பட்டணத்தில் அடைந்து கிடக்கும் ஜனங்களில் 100-ல் 10 பாகம் திரிச்சிக்குச் சென்று விடுவார்கள்.

### Form of Addressing His Majesty.

**சக்ரவர்த்தியை அழைக்கவேண்டிய மாதிரி.**—ஜார்ஜ அரசரையும் மேரி ராணியாரையும் பற்றி இந்நாட்டில் அவர்களிருவருக்கும் வாசித்துக் கொடுக்கப்படும் அட்ரெஸ்களில் பிரஸ்தாபிக்கும்போதும் அவர்களிருவரையும் பற்றிப் பிரகடனஞ் செய்யும்போதும் ராஜசக்ரவர்த்தியாரென்றும் ராணிசக்ரவர்த்தினியாரென்றும் விவரிக்க வேண்டுமென உத்தரவு பிறந்திருக்கிறது. அவர்களிருவருக்கும் சேர்த்துக் கொடுக்கப்படும் அட்ரெஸ்களில் மாட்சிமை பொருந்திய 5-வது ஜார்ஜ் அரசர் இந்தியச் சக்ரவர்திக்கும் மாட்சிமை பொருந்திய ராணிசக்ரவர்த்தினிக்கும் என்று விலாசங் கண்டிருக்கவேண்டுமாம்.

### Our Emperor's Crown.

**சக்ரவர்த்தியின் கிரீடம்.**—நமது மகா ராஜா சக்ரவர்த்தியவர்கள் டெல்லி தர்பாரின்போது இதற்காகவென்றே பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட ஒரு புது கிரீடத்தை அணிவார், சக்ரவர்த்தினி அவர் லண்டன் முடிசூட்டின்போது அணிந்த கிரீடத்தை அணிவதோடு கோகினோர் என்ற நமது நாட்டில் அகப்பட்ட விலையுயர்ந்த கல்லையும் அணிவார். சக்ரவர்த்தி நமது இந்திய ப்ரஜைகளுக்கு ஒரு பிரசங்கம் செய்வார். அப்பிரசங்கம் இந்தியாவில் வழங்கும் ஸகல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு துண்டுக்கடிதங்களாக இந்தியாவில் எல்லாவிடங்களிலும் கொடுக்கப்படும்.

### The Congress President.

**காங்கிரஸின் ப்ரஸிடேன்டு.**—வரும் காங்கிரஸுக்கு வடக்கே பாரிஸ்டர் அட்லாவான பண்டித விஷ்ணு நாராயணதாரைப் பிரஸிடெண்டாகத்

தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இவர் பெருங்கல்வி வாய்ந்த புத்திமான். சொல்வன்மை மிக்கவர். இவர் ஆதியில்காங்கிரஸில் மும்முரமாக வேலைசெய்து, ஊக்கங் காட்டிவந்தார். ஆனால் இடையேதேக அஸௌக்யம் பற்றி காங்கிரஸிற்கு வருவதில்லை. இப்பொழுது இவர் காங்கிரஸ் தலைமை வகித்துவிட்டால், முன்போல ஊக்கத்துடன் உழைப்பாரென்று நம்ப இடமுண்டு.

THE TANJORE CHATTRAM DEPARTMENT.

**தஞ்சாவூரில் சத்திரம் டிபார்ட்மெண்ட்.**—தஞ்சாவூர் ஜில்லா சத்திரங்கள் இப்போது மிஸ்டர் வி. கிருஷ்ணமாசார்லுவின் விசாரணையில் இருக்கின்றன. இவைகளுக்கு மொத்தவரும்படி 2,45 778, ரூபாய். மொத்தச் செலவு 1,38 560 ரூபாய். பாக்கித் தொகை கவர்ன்மெண்ட் பத்திரங்களில் போடப்பட்டிருக்கின்றன. சத்திரங்களில் சாப்பாடு பெற்றவர்கள் 10 லக்ஷம். இதற்குச் செலவு 73,377 ரூபாய், திருவையாற்றிலுள்ள ஸம்ஸ்க்ருத காலேஜ் எம். ஏ. பரீட்சை தேறின ஒருவரின் தலைமையின் கீழிருக்கின்றது. டிஸ்டிரிக்ட் போர்ட் பார்வையில் 19சத்திரங்கள் இருக்கின்றன. ராமேசுவரத்திலுள்ள சத்திரங்கள் மட்டும் ராமநாதபுரம் கலெக்டரின் விசாரணையில் இருக்கிறது.

SANSKRIT COLLAGE KUMBHAKONAM.

**கும்பகோணத்தில் ஸம்ஸ்கிருத காலேஜ்.**—கும்பகோணத்திலுள்ள ஸம்ஸ்கிருத காலேஜ் மாணாக்கர்களுக்கு ஸமீபத்தில் திவான் பகதூர் ரகுநாதராவ் 200 ரூபாய் பெறும்படியான துணிகள் வெகுமதியாகக் கொடுத்தார். வேதங்கள் படிப்பதில் அர்த்தத்துடன் படிப்பிக்க வேண்டுமென்றும், ஹிந்து தேவாலயங்களிலுள்ள அர்ச்சகர்களைப் படிப்பதில் தேவஸ்தானக் கமிட்டிகள் அக்கரை யெடுத்துக் கொள்வதில்லை யென்றும், விசனப்பட்டார். மதப்படிப்புவிஷயத்தில் பொது ஜனங்கள் பண உதவி செய்வது கடமை. கும்பகோணம் காலேஜில் நூறு பிள்ளைகள் வாசித்து இலவசமாகச் சாப்பாடு பெறுகிறார்கள்.

TALUK BOARD MEMBERS.

**தாலூக்கா போர்ட் மெம்பர்கள்.**—தாலூகா போர்ட்களில் இப்போதுள்ள மெம்பர்களில் பாதிப் பெயரை எலெக்ஷன் செய்ய வேண்டுமென்று ஜூலைமாதம் கவர்ன்மெண்ட் பிரேரித்து தாலூக் போர்ட் ப்ரஸிடெண்ட்களை ஆலோசனைகேட்க, சிலர் ஜனங்களுக்கு சிரத்தை யில்லாமையால்இந்தப் பிரேரணை நிறைவேறாதென்று சொன்னார்கள். இந்த ஆட்சேபத்துக்குச் சமாதானமாக அவசியமான வோட்டுகள் இத்தனையென்று வரை யறுக்கலாமென்றும் அப்படி வோட்டுகள் கிடைக்கா விட்டால் கவர்ன்மெண்டே நியமனம் செய்யலாமென்றும் நினைத்து இப்போது மூன்றிலொரு பாகத்து மெம்பர்கள் எலெக்ஷன்செய்யப்படும் தாலூக் போர்ட்களில் பாதி மெம்பர்களை எலெக்ஷன்செய்யும்படியாக கவர்ன்மெண்ட் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

OUR EMPEROR'S TAPPALS.

**சக்வர்த்திக்கு வரும் தபால்கள்.**—ஜார்ஜ் சக்ரவர்த்தி டெல்லி தர்பாருக்கு வந்திருக்கும்போது அவருக்கு மேல் நாட்டிலிருந்து வரும் தபால்கள் பம்பாயிலிருந்து 23 மணிநேரத்தில் பம்பாய்- பரோடா மத்தியஇந்தியா இருப்புப்பாதைகள் மார்க்கமாய் டெல்லி கொண்டுபோய்ச் சேர்க்கப்படும். எவ்வளவு மணிநேரத்தில் சக்ரவர்த்திக்கு வருகிற தபால்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கலாமென்று தெரிந்து கொள்ள பம்பாயிலிருந்து ஒரு எஞ்சினும் 2போகி வண்டிகளும் போட்டு, ஒரு ஸ்பெஷல் விட்டுப் பார்த்தார்களாம். அது 6 மணி நேரத்தில் பரோடா போயிற்றும், 6 மணி நேரத்தில் அது பரோடா போய்ச் சேர்ந்தமட்டில், அது 23 மணி நேரத்தில் டெல்லி போய்ச் சேர்ந்துவிடுமென்று ஊகித்துக் கொள்ளப்பட்டதாம். அதற்கும் குறைந்த நேரத்தில் சக்ரவர்த்திக்கு வரும் தபால்களை டெல்லி கொண்டு போய்ச் சேர்க்க சாத்தியப்படுமானால் அவைகள் அப்படியே கொண்டுபோய்ச் சேர்க்கப்படுமாம்.

SALEM CO-OPERATIVE CONFERENCE.

**சேலம் கோவாப்பரேட்டிவ் கான்பரேன்ஸ்.**—ஸமீபத்தில் நடந்த சேலம் கோவாபரெட்டிவ் கான்பரென்ஸில் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. கவர்ன்மெண்டாலும் மற்ற விவஸாய உத்தியோகஸ்தர்களாலும் பிரசுரம் செய்யப்படும் புல்லட்டீன்கள் (துண்டுப் பத்திரிகைகள்) தமிழிற் பிரசுரம் செய்யப்பட்டு இந்தசங்கங்களின் மெம்பர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்க, மிஸ்டர் அட்கின்



ஸன் கவர்ன்மெண்டுக்கு இந்த விஷயமாய்ச் சொல்லுவதாக ஒப்புக்கொண்டார். 35 ரூபாய்க்கு அதிகமாய் சம்பளம் பெறும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் ஐக்கிய நாணயச் சங்கங்களில் பணம் டிபாஸிட் செய்யலாமென்று பிரேரிக்க, அது நிறைவேறிற்று. மிஸ்டர் அட்கின்ஸன் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் சங்கங்களிற் சேர்ந்து அவைகளை நடத்துதல் ஆட்சேபத்துக்குறியதேயன்றி அவர்கள் பணத்துக்கு ஆட்சேபமில்லை என்று சொன்னார். இம்மாதிரித் தீர்மானங்கள் செய்யப்பட்ட பிறகு ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் "ஐக்கிய நாணயச் சங்கங்கள்" வேலைசெய்யும்விதத்தைப்பற்றித் தமிழில் பிரசங்கம் செய்தார்.

ARBITRATION COURTS.

**மத்தியஸ்த பஞ்சாயத்துகள்.**—வெங்காளத்தில் சப் ஜட்ஜ் வேலை செய்து பென்ஷன் பெறும் பாபு பிரமாதநாத் சாட்டர்ஜி என்பவர் அந்த மாகாணத்தில் ஆர்பிட்ரேஷன் போர்ட்ஸ் அல்லது மத்தியஸ்த பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிப்பதைப்பற்றி ஒரு ஸ்கீம் அதாவது யோசனை செய்திருக்கிறார். அதன் விபரங்கள் பின் வருமாறு :—

(1) இப்படி ஸ்தாபிக்கப்படும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு மெம்பராவது சாத்தியமானால் பென்ஷன் பெறும் ஜுடிஷல் உத்தியோகஸ்தராயிருக்க வேண்டும்; (2) ஸிவில் கோர்ட் கட்டிடத்துக்கு அருகில் இந்தப் பஞ்சாயத்து ஸ்தாபிக்கவேண்டும்; (3) திறமையுள்ள யோகியர்கள் இந்தப் பஞ்சாயத்தில் சேர்ந்து சம்பளமில்லாமல் வேலை செய்யவேண்டும்; (4) ஸிவில் ப்ரொஸீஜர் கோட் தேசத்து மற்றச் சட்டங்கள் இவைகளின்படி இந்தப் பஞ்சாயத்து நடத்தப்பட வேண்டும்; (5) வழக்கு செய்கிறவர்கள் தங்களுக்கு இஷ்டமுள்ளவர்களையாவது பஞ்சாயத்தின் மெம்பர்களையாவது வழக்குகளைத் தீர்க்கச் சொல்லலாம். மெஜாரிட்டி செய்த தீர்ப்பின் பேரில் அப்பீல் கூடாது; (6) லாயர்கள் அங்கு வந்து தாராளமாய்ப் பேச இடம் பெறவேண்டும்.

VILLAGE FORESTS.

**கிராம காடுகள்.**—கஞ்சம், கோயமுத்தூர், செங்கற்பட்டு, தென்கன்னடம், இந்த ஜில்லாக்களில் கிராமங்களை யடுத்த காடுகளைக் கிராமப் பஞ்சாயத்துகளிடத்தில் ஒப்புவித்து, அது என்னாகிறதென்று பார்க்கவேண்டுமென்று சென்னைக் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இதை யனுசரித்து செங்கற்பட்டு கலெக்டர் மிஸ்டர் எல் வைபர்ட் ஒரகடம், கரணை, குண்ணப்பட்டு, இந்தக் கிராமங்களை யடுத்தகாடுகள் இந்தக் கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தி அவர்கள் வசம் ஒப்புவிக்கலாமென்று சிபார்ஸ் செய்திருக்கிறார். ஒரகடம் கிராமத்தில் 7 பேரும் மற்ற இரண்டு கிராமங்களிலும் சேர்ந்து 10 பேரும் பஞ்சாயத்தாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பஞ்சாயத்தார்கள் மற்றக் கிராமத்தார் இந்தக் காடுகளில் பிரவேசிக்காமலிருக்கவும் தங்கள் கிராமத்தார் 140 தலைச்சுமை விறகு கொண்டுபோகவும், 700 பசு மாடுகளும் 100 எருமைகளும் 350 ஆடுகளும் மேயவும் ஒழுங்குகள் செய்திருக்கிறார். கவர்ன்மெண்ட் கலெக்டர் செய்ததை ஒப்புக்கொண்டு உத்தியோகஸ்தர்கள் கிராமத்தாருக்கு இந்த விஷயத்தில் ஸகல ஒத்தாசையும் செய்யவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். ரெவினியூ போர்டார் பஞ்சாயத்தார்களுக்குக் காடுகளின் நிர்வாகத்தில் சில சுளுவான ஒழுங்குகள் செய்து கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவு செய்திருக்கிறார்கள். பஞ்சாயத்தார் காடுகளை வைத்துக் கொண்டிருக்கும் நிலைமையைப் பார்ப்பார்களேயன்றி அனுஷ்டிக்கும் வழிகளைப் பார்க்கமாட்டார்களென்று கவர்ன்மெண்ட் சொல்லி யிருக்கிறார்கள். இம்மாதிரி ஒரு வருஷம் செய்து பார்க்கப்படும்.

ELECTION TO UNION PANCHAYETS.

**யூனியன் பஞ்சாயத்துகளில் எலெக்ஷன்.**—சென்னைச் சட்டசபையில் சென்ற மே மாசம் 15-ந் தேதி ஆனரபில் மிஸ்டர் பி. கேசவபிள்ளை யூனியன் பஞ்சாயத்துகளில் சில மெம்பர்களையாவது ஜனங்கள் எலெக்ஷன் செய்ய வேண்டுமென்று கேட்க, அதற்குக் கவர்ன்மெண்ட் சில குறித்த யூனியன் பஞ்சாயத்துகளில் அம்மாதிரி செய்து பார்க்கத் தங்களுக்குச் சம்மதந்தானென்று பதில் சொன்னார்கள். இப்போது அந்த விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்து பின்வருமாறு உத்தரவு செய்திருக்கிறார்கள். ஒரு ரெவினியூ டிவிஷனது முக்

கிய ஸ்தலத்திற்கு அருகிலுள்ள ஒரு யூனியன் பஞ்சாயத்தில் மொத்த மெம்பர்களில் நாலிலொரு பாகத்துக்கு அதிகப்படாத மெம்பர்களை ஜனங்கள் எலெக்ஷன் செய்யலாமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். ஆனால் செங்கற்பட்டு, தஞ்சாவூர், கோயமுத்தூர், சேலம் இவைகள் முற்பட்ட ஜில்லாக்களான படியால், இவைகளில் டிஸ்டிரிக்ட் போர்ட் ப்ரஸிடெண்ட் அபிப்பிராயப்பட்டால் இரண்டு யூனியன்களில் இப்படிச்செய்து பார்க்கலாம்; நீலகிரி ஜில்லாவிலும் தென் கன்னட ஜில்லாவிலும் லோக்கல் பண்டு யூனியன் இல்லை; வடக்கே கோரப்பட்டு ஜில்லாவில் ஜயப்பூர் யூனியனைத் தவிர வேறு யூனியனில்லை; ஆகையால் இந்த ஜில்லாக்களில் இந்த விஷயத்தை கவனிக்க வேண்டியதில்லை. சில ஜில்லாக்களில் மெம்பர்களில் நாலிலொருபாகத்தை எலெக்ஷன் செய்வது அதிகமாயிருக்குமானால் அதைக் குறைக்கவும், சில ஜில்லாக்களில் நாலினால் வகுக்க முடியாத மொத்த மெம்பர்கள் யூனியனில் இருக்கும்போது நாலிலொரு பாகத்தோடு ஒரு மெம்பரைச் சேர்த்து எலெக்ஷன் செய்யவும் டிஸடிரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்ட் சிபார்சு செய்தால் அதைக் கவர்ன்மெண்ட் கவனிப்பார்கள். இப்படி எலெக்ஷன் செய்வதற்காக ரூல்கள் தயார் செய்து அவைகளைப்பற்றி ஜனங்கள் அபிப்பிராயப்படவும் டிஸ்டிரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்ட்களின் பார்வைக்கும் பிரசுரம் செய்யப்படும். இந்த ரூல்களில் எலெக்ஷன் செய்வோருக்கும் எலெக்ஷன் செய்யப்படும் அபேட்சகர்களுக்கும் குறிக்கப்பட்டிருக்கும் சொத்தின் யோக்கியதையைப்பற்றி ப்ரெஸிடெண்ட்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். இந்த யோக்கியதையினால் எலெக்ஷன் செய்வோராவது அபேட்சகர்களாவது எண்ணிக்கையில் ஜாஸ்தியாகும் பட்சத்தில் அந்த யோக்கியதையை உயர்த்தலாமோவென்று அவர்களுடைய அபிப்ராயம் தெரிவிக்க வேண்டும். நவம்பர் மாசம் 30-ந் தேதிக்குள் இந்த உத்தரவுக்குப் ப்ரெஸிடெண்ட்கள் பதில் அனுப்ப வேண்டும்.

CENSUS OF INDIA.

இந்தியாவின் ஜனத்தொகை.—

| | மொத்தம். |
|---|---|
| இந்தியா .. .. | 315,132,537 |
| மாகாணங்கள் .. .. | 244,267,542 |
| ஆஜ்மீர் மீர்வாரா .. | ·501,395 |
| அந்தமான் தீவுகள் .. | 26,469 |
| பெலுசிஸ்தான் .. .. | 414,412 |
| பெங்காளம் .. .. | 52,668,269 |
| பம்பாய் இராஜானி .. | 19,672,642 |
| பம்பாய் .. .. | 16,113,042 |
| ஸிந்து .. .. | 3,513,435 |
| ஏடன் .. .. | 46,165 |
| பர்மா .. .. | 12,115,217 |
| மத்தியமாஹாணங்கள், .. | 13,916,308 |
| கூர்க் .. .. | 174,976 |
| கீழ் வங்காளமும் ஆஸாமும் .. | 34,018,527 |
| சென்னை .. .. | 41,405,404 |
| வடமேற்கு பிரண்டியர் .. | 2,196,933 |

ஜில்லாக்களும், ஆளப்படும் பிரதேசங்களும்.

| | |
|---|---|
| பஞ்சாப் .. .. | 19,971,956 |
| ஐக்கிய மாஹாணங்கள் .. | 47,182,044 |
| ஆக்ரா .. .. | 34,624,040 |
| ஔட் .. .. | 12,588,014 |
| ஸ்டேட்களும், ஏஜன்ஸிகளும் .. | 70,864,995 |
| பெலுசிஸ்தான் .. .. | 396,432 |
| பரோடா .. .. | 2,032,798 |
| பெங்கால் .. .. | 4,538,161 |
| பம்பாய் .. .. | 7,411,675 |
| மத்திய இந்தியா .. | 9,356,980 |
| மத்திய மாஹாணங்கள் .. | 2,117,002 |
| கீழ்வங்காளமும், ஆஸாமும் .. | 575,835 |
| ஹைதராபாத் .. .. | 13,374,676 |
| காஷ்மீர் .. .. | 3,158,126 |
| சென்னை .. .. | 4,811,841 |
| கொச்சி .. .. | 918,110 |
| திருவாங்கூர் .. .. | 3,428,975 |
| மைசூர் .. .. | 5,806,193 |
| தென்மேற்கு பிராண்டியர் .. | 1,622,094 |

ஏஜென்ஸிகளும், உட்பிரிவுகளும்.

| | |
|---|---|
| பஞ்சாப் .. .. | 4,212,794 |
| ராஜபுத்தான் .. .. | 10,530,432 |
| ஸிக்கிம் .. .. | 87,920 |
| ஐக்கிய மாஹாணம் .. | 882,036 |

இந்த 315,132,537 பேர்களில், 161,326,110 புருஷர்கள், 153,806,427 ஸ்திரீகள், 1901 வருஷ ஜனத்தொகையின் 294,361,056 பேர்களில் 149,951,824 பேர்கள் புருஷர்கள், 144409232 ஸ்திரீகள்.



# FOREIGN NEWS.
## அந்நியநாட்டு ஸமாசாரங்கள்.

A MILKING MACHINE.

**பால் கறக்கும் யந்திரம்.**—ஸ்வீடன் தேசத்துள்ள ஒரு இஞ்சினீர் பசுவிற்கு ஒரு தீமையுமுண்டாகாமல்படி பால் கறக்கும் யந்திர மொன்றைக்கண்டு பிடித்திருக்கிறார்.

EXPORT OF DEER HORNS.

**மான்கொம்பு ஏற்றுமதி.**—லங்கையிலிருந்து 7 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மான்கொம்புகள் அன்னிய தேசங்களுக்குச் சென்ற ஜூலை மாதத்தோடு முடிவான ஒரு வருஷத்தில் ஏற்றுமதியாயினவாம்.

AN OLD WOMAN'S FATE.

**ஒரு கிழவி கதி.**—ருஷியா தேசத்தைச் சேர்ந்த ஓரன்பர்க் என்னும் மாகாணத்தில் பஞ்சமுண்டாகி அகவிலை குறைந்து ஜனங்களுக்குக் கஷ்டம் நேர்ந்ததாம். இதற்குக்காரணம் பிடாரியைப்போலிருக்கும் இந்தக் கிழவிதான் என்று எல்லோருங்கூடி ஒரு கிழவியை அடித்துக் கொன்றுவிட்டார்களாம்.

THE BIGGEST HOTEL IN THE WORLD.

**உலகில் பெரிய போசனசாலை.**—உலகிலுள்ள போசனசாலைகளிலெல்லாம் பெரியது பெர்லின் மிருக காட்சித்தோட்டத்திலுள்ளது. ஒரே கூரையின் கீழ் ஏககாலத்தில் 10,000 பேர் அங்கே போசனஞ் செய்யக்கூடிய வஸதி ஏற்பட்டிருக்கிறது. 500 பரிசாரகரும் 1,000 உதவியாட்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

DEATH IN JAPANESE HOUSES.

**ஜப்பான் குடும்பங்களில் சாவுகள்.**—ஜப்பானியர்கள் தங்கள் குடும்பத்தில் மரணம் நேர்ந்தால் கூலிக்கு அழுபவர்களைக்கொண்டு ஸகல உத்திரக் கிரியைகளையும் செய்துகொள்வது வழக்கமாம். துக்கத்தில் சம்பந்தப்பட்ட நெருங்கிய பந்துக்கள் இறந்த தினத்திலேயே காப்பிக் கடைகளிற் போய் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு காப்பியருந்துவார்களாம்.

UNDER GROUND RAILWAYS.

**பூமிக்குள் ரெயில்.**—லண்டன் நகரில் பூமிக்குள் ரெயிலோடுகிறது. பாதாளத்திலிருந்து பிரயாணிகள் மேலே வரவேண்டுமானால் மனிதனை இழுத்துக் கொண்டுவரும் ஒருவித யந்திர சகாயத்தைக்கொண்டு மேலேறவேண்டும். இப்படி ஏறுவதில் அதிக நேரமாகிறதென்று யோசித்து இப்போது நூதன யந்திமென்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாயுள்ள ஏணி ஒன்று அந்த இடத்தில் சுற்றிக்கொண்டேஇருக்கும். பூமியை யடைய விரும்புவோன் அந்த ஏணியின்படியில் காலைவைப்பானேயானால் உடனே நிலத்தையடையலாம்.

COTTON FARM.

**பருத்திப்பண்ணை.**—இங்கிலாந்திலுள்ள மான்செஸ்டர் நகரத்தின் நெசவு வியாபாரிகள் தங்களுக்கு வேண்டிய மெல்லிய நூல்நூற்கும் நீண்ட இழையுள்ள பஞ்சு அகப்படாத காரணத்தால், தாங்களே மேன்மையான பருத்தி தினுசுகளைப் பயிரிட எண்ணி, அமெரிக்காவில் மிஸிஸிபி நதி தீரத்தில் 30,000 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள பருத்திக் கொல்லைகளை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். இனி இந்தியாவில் ஸாகுபடியாகும் பருத்திக்கு விலை குறைவாகும் என்று நினைக்க ஹேதுவுண்டாகிறது. இனி பருத்தியின் அபிவிர்த்தியில் ஆங்கிலேய வியாபாரிளுக்குச் சிரத்தை குறைந்துவிடும்.—கிருஷிகன்.

TAX COLLECTING IN HOLLAND.

**டச்சுக்காரரின் வரி வசூல் வகை.**—டச்சுக்காரர் இருக்கும் ஹாலந்துதேசத்தில் வரிவசூலிக்கும் வகை வெகு விநோதமாயிருக்கிறது. வரி கொடுக்கவேண்டியது இவ்வளவு என்று குறிப்பிட்டு வீட்டுச்சொந்தக்காரனுக்கு முதன் முதல் நோடீஸ் கொடுக்கப்படுகிறதாம். அந்தநோடீஸில் இத்தனை தினங்களுக்குள் வரியைச்செலுத்திவிட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம். அதன் பிறகு கூட சொந்தக்காரர் அதிகாரிகளுக்குக் கொடுக்கவேண்டிய வரியைச்செலுத்தாமலிருப்பாரானால் உடனே அதிகாரிகள் இரண்டொரு ராணுவஸ்தர்களை அவர்கள் வீட்டில் கொண்டுவந்து காவல் வைத்து விடுகிறார்கள். வரிப்பணம் அதிகாரிகளிடம் சேரும் பரியந்தம் அந்த ராணுவஸ்தர்களுக்கு வீட்டுச் சொந்தக்காரன் சோறு போட்டு ஸம்ரக்ஷிக்க வேண்டுமாம். இதுவும் ஒரு யுக்தமான வழிதான்.

## MADRAS MARKET REPORTS.

### மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் அக்டோபர் மாஸம் 25உ ரிப்போர்ட்டுப்படி.

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. அ. பை |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 13 முதல் 16 |
| கொன்னைப்பட்டை ஷை | 11 முதல் 12 |
| கடப்பை கடுக்காய் ஷை | 10 முதல் 11 |
| சேலம் அரசகிரிஷை ஷை | 15 முதல் 17 |
| நல்லெண்ணெய் ஷை | 105 முதல் 110 |
| புங்கம் எண்ணெய் ஷை | 65 முதல் 95 |
| எட்டிக்கொட்டை ஷை | 15 முதல் 16 |
| விளக்கெண்ணெய் ஷை | 78 முதல் 79 |
| கொட்டை முத்து .. | $10\frac{3}{4}$ முதல் 11 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பந்தர் பச்சை அரிசி 44 படி | 8 | 8 | 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 | 10 | 0 |
| கோதுமை 4 படி .. | 1 | 0 | 0 |
| கொள்ளு 195 ராத்தல் | $6\frac{3}{4}$ | | |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் .. | 16 | | |
| ஷை (பல்லாரி) ஷை .. | 11 | 0 | 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு | 20 | 0 | 0 |

METALS—உலோகங்கள்.

| | |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் | ரூ. .. 200 முதல் 202 |
| செப்புத் தகடுகள் பாரம் .. | 245 |
| செப்புக்கட்டி ஷை .. | 220 |
| நாகம் ஷை | 82 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 85 |
| ஈயம் ஷை .. | 58 |
| காரீயம் ஷை | ..60 முதல் 62 |
| வெள்ளீயம் ஷை | .. 190 வராகன். |

IRON—இரும்பு.

| | | |
|---|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. | பாரம் ரூ. | $19\frac{3}{4}$—20 |
| சீமை .. .. .. | | 40 |
| மருக்கி தகடு | 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு .. .. | | 27—28 |
| 8 பட்டை எஃகு .. .. | | 23 |
| எஃகு வில்கட்டு .. .. | | 27—31 |
| திராணைக் கம்பி மருக்கி 2 நெ. .. | | 21 |
| சீமை .. .. .. | | 40-46-49 |

## SEASON.

### காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1911ஞு ஏப்ரல் மீ 1-உயிலிருந்து நவம்பர் 1உம் வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 30.82 | 41·51 |
| வால்டேர் | 17·68 | 35·42 |
| காக்கிஞடா | 24·52 | 32·40 |
| மசூலிப்பட்டணம் | 28·38 | 33·96 |
| நெல்லூர் | 20·54 | 20·76 |
| மதராஸ் | 17·47 | 29·95 |
| கூடலூர் | 21·65 | 30·27 |
| நாகப்பட்டணம் | 16.72 | 25·09 |
| பாம்பன் | 7·04 | 14·46 |
| கொழும்பு | 40·89 | 60·39 |
| திருவநந்தபுரம் | 46·11 | 51·67 |
| கொச்சி | 100·41 | 103·87 |
| கள்ளிக்கோட்டை | 94·46 | 108·77 |
| மங்களூர் | 97·24 | 120·88 |
| மெர்க்காரா | 134·89 | 120·81 |
| ஐதராபாத் | 19·94 | 29·27 |
| ரெய்ச்சூர் | 18·69 | 29·42 |
| பல்லாரி | 12·57 | 17·52 |
| கர்நூல் | 17·53 | 26·56 |
| கடப்பை | 21·10 | 27·50 |
| ஹாஸ்ஸான் | 30·90 | 31·85 |
| பெங்களூர் | 27·20 | 30·73 |
| கொடைக்கானல் | 45·80 | 42·09 |
| உதகமண்டலம் | 50·45 | .. |
| கோயம்புத்தூர் | 19·09 | 15·34 |
| வேலூர் | 22·32 | .. |
| சேலம் | 21·91 | 34·23 |
| திருச்சிஞப்பள்ளி | 20·88 | 23·42 |
| புதுக்கோட்டை | 3·29 | .. |
| மதுரை | 19·83 | 25·86 |
| திருநெல்வேலி | 8·76 | 13·76 |


# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. } விரோதிகிருதுஸு கார்த்திகைமீ NOVEMBER, 1911. { ஸஞ்சிகை 11. No. 11.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page ... | 5 0 0 | per month. |
| ½ do ... | 2 8 0 | do |
| ¼ do ... | 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி .. | 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி .. | 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஸூ கார்த்திகைமீ —NOVEMBER 1911. | ஸஞ்சிகை 11. No. 11.


பொருளடக்கம்.


| பத்திராதிபர் குறிப்புகள் | பக்கம் |
|---|---|
| நமது புதிய கவர்னர்-டெல்லியும் அதன் காட்சிகளும் .. | 563-567 |
| **விசேஷ வியாஸங்கள்** | |
| தென்னைமர வண்டுகளை வேரறுக்கும் சுதேச முறைகள் —என். வெங்கெட்டராம ஐயர் | 568 |
| மாட்சிமை தங்கிய மகாராஜா ஜார்ஜ சக்ரவர்த்தி .. .. | 570 |
| ஜார்ஜ் சக்ரவர்த்தியின் முடிசூட்டுவைபவ வாழ்த்துப்பாட்டுகள் —சு. அ. சு. .. .. | 577 |
| தெய்வப்பிரார்த்தனை கீதம் —ம. ஏப்ரஹாம் பண்டிதர் .. | 578 |
| உயில் என்றால் என்ன —பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார் .. | 579 |
| முகம்பார்க்கும் கண்ணாடிகள் —எம். வி. எஸ். அநந்தபத்ம நாபராவ் | 580 |
| அப்ரகம் —டி. வி. வி. ரமணய்யர் .. | 583 |
| **விசேஷத்திரட்டு** | |
| போட்டியும் ஐக்கியமும் .. | 585 |
| மணியாடர் மூலமாய் நிலத்தீர்வை யனுப்புவது .. .. | 588 |
| நெல் .. .. .. | 591 |
| **பத்திரிகை ஆராய்ச்சி** | |
| பெற்றோர்களும் ஆசாரியர்களும் .. | 593 |
| பனைமரம் .. .. .. | 594 |
| டெல்லி அரண்மனை .. .. | 595 |
| மின்சாரத் தோட்டங்கள் .. | 596 |
| எறும்புகள் .. .. .. | 596 |
| **சிறுவர் பகுதி** .. .. .. | 597-598 |
| **ஸ்திரீகள் பகுதி** .. .. | 599-600 |
| **பகுதிக் குறிப்புகள்** | |
| விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. | 601-610 |
| **மாஸ வர்த்தமானம்** .. .. | 611-615 |
| **மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. | 616 |


## CONTENTS.


| Editorial Notes | Page |
|---|---|
| Our New Governor—Delhi and Its Sights ... ... ... | 563-567 |
| **Special Articles** | |
| Destruction of Cocoanut Beetles N. Venkatarama Aiyar ... ... ... | 568 |
| His Majesty Emperor George V. ... | 570 |
| Coronation Ode ... ... ... ... | 577 |
| A Song of Prayer Rao Sahib M. Abraham Pandithar ... ... | 578 |
| What is Life? P. T. Srinivasa Aiyangar, M. A. F. M. U. ... | 579 |
| Mirrors M. C. S. Anantapadmanaba Rao, M.A. L.T. | 580 |
| Mica T. C. V. Ramana Aiyar ... ... .. | 583 |
| **Selections** | |
| Competition and Combination ... ... | 585 |
| Remittance of Land Revenue by Money Order ... ... ... ... ... | 588 |
| Paddy ... ... ... ... ... | 591 |
| **Review of the Press** | |
| Parents and Gurus ... ... ... | 593 |
| Palmyra Tree ... ... ... ... | 594 |
| The Palace in Delhi ... ... ... | 595 |
| Electric Garden ... ... ... ... | 596 |
| Ants ... ... ... ... ... | 596 |
| **The Boys' Section** ... ... ... | 597-598 |
| **The Ladies' Section** ... ... ... | 599-600 |
| **Departmental Notes** | |
| Agricultural Notes ... ... ... ... | 601 |
| Industrial Notes ... ... ... ... | 603 |
| Educational Notes ... ... ... ... | 604 |
| Scientific Notes ... ... ... | 605 |
| Medical Notes ... ... ... ... | 606 |
| Legal Notes ... ... ... ... | 607 |
| Personal Notes ... ... ... ... | 608 |
| Fun and Anecdote ... ... ... ... | 609 |
| Curiosities ... ... ... ... | 610 |
| **News of the Month** ... .. ... | 611-615 |
| **Madras Market Reports** ... ... | 616 |




# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### Our New Governor.

நமது புதிய கவர்னர்.—நம்முடைய புதுகவர்னராகிய ஸர் தாமஸ் கிப்ஸன் கார்மைகேல் நாளது மாஸம் முதல் தேதியன்று சென்னப் பட்டணத்தில் வந்து இறங்கி மூன்றாந் தேதி 4—30-மணிக்கு தம்முடைய உத்யோகத்தை ஒப்புக்கொண்டார். இவர் 1859-ம் வருஷம் மார்ச்சு மாஸத்தில் பிறந்தவராகையால் இவருக்கு இப்பொழுது வயது 52. இவர் கேம்ப்ரிஜில் படித்து 1891-ம் வருஷத்தில் பி. ஏ. பட்டம்பெற்று 1894-ம் வருஷத்தில் எம். ஏ. பட்டமும் பெற்றார். ஆகையால் படிப்பு விஷயத்தில் மேதாவியென்று ஏற்படுகிறது. 1895-ம் வருஷத்தில் ஸ்காட்லாண்டில் மிட்லோதியன் என்னும் ஜில்லாவுக்கு ப்ரதி நிதியாக பேர்பெற்ற க்ளாட்ஸ்டனுக்குப் பிறகு பார்லிமெண்டில் மெம்பரானார். அப்பொழுது அவர் விவஸாயம், ஸுகாதாரம், முனிஸிபாலிட்டி முதலிய விஷயங்களைப்பற்றி அடிக்கடி கவனித்து வந்தார். இவர் லிபரெல் கட்சியைச் சேர்ந்தவர். 1908-ம் வருஷத்தில் ஆஸ்ட்ரேலியாவிலுள்ள விக்டோரியா மாகாணத்துக்கு கவர்னராகப் போனார்.

அங்கே இருந்த மூன்று வருஷத்தில் அந்த மாகாணம் முழுவதும் சுற்றிப்பார்த்து மூலே முடுக்குகளிலுள்ள விவஸாயம், பால், தயிர் வியாபாரம், கறிகாய் பயிரிடுதல், சுரங்கவேலை முதலிய பல ஜீவனோபாயங்களையும் கண்டறிந்து அவைகளைச் சீர்படுத்துவதில் வெகு தீவிரமாய் வேலைசெய்தார். விக்டோரியா மாகாணத்தின் பொருளாதார நிலைமையைத் தூக்கிவிட்டதில் இவரைவிட உழைத்தவர் வேறு ஒருவருமில்லையாம். இவர் சிற்றுயிர் லக்ஷண சாஸ்திரங்களில் மகாவல்லவர். இவருக்கு சித்திரப் படங்களிடத்திலும் அவைகளை எழுதுவதிலும் மகாப் பிரியமாம். இவர் ஒரு படம் நல்லது கெட்டது என்று சொல்லிவிட்டால் அது ஸரிதான். அதற்கு மேல் அப்பீல் கிடையாது. இப்படிப்பட்ட அநுபோகமும் நல்ல குணங்களும் பொருந்திய கவர்னர் காலத்தில் நம்முடைய ராஜதானிக்கு பல விதங்களில் க்ஷேமமுண்டாகுமென்று எண்ணுகிறோம்.

### Delhi and Its Sights.

டில்லியும் அதன் காட்சிகளும்.— டில்லி இந்தியாவில் பேர்போன நகரம். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, அது ஆதிகாலம் முதல் இந்திய அரசர்களால் ஏற்படுத்தப்பட்டு பல அரசர்கள் ஆண்டு வந்தார்கள். இரண்டாவது, இந்தியாவைப் படை எடுத்துவந்த ஒவ்வொரு சண்டைக்காரரும் டில்லியைத்தாண்டி வரவேண்டியிருந்ததால் அதை முதல் முதலாக கைப்பற்ற எத்தனித்திருக்கிறார்கள். டில்லிப் பட்டணம் நீளத்தில் 10 மயிலும் அகலத்தில் 6 மயிலும் உள்ளது. அதன் மத்தியில் 'சண்ட்னி சௌக்' என்று சொல்லப்பட்ட ஒரு மயில் நீளமுள்ள ஒரு அழகான தெரு இருக்கிறது. பட்டணத்தின் வடபாகத்துக்கு 'ஷாஜஹானபாத்' என்று பேர். இதற்குள்தான் டில்லி கோட்டையிருக்கிறது. ஷாஜஹானபாதைச் சுற்றிலும் ஒரு பெரிய மதில் இருக்கிறது. அந்த மதிலிக்கு அநேக கேட்டுகள் (வாசற்படிகள்) உண்டு. இவைகளில் முக்கியமானவை:—காஷ்மீர் கேட் வடக்கிலுள்ளது. மேற்கு மதிலில் அஜ்மீர், பரஷ்கானு, காபூல், லாகூர் ஆகிய இந்த கேட்டுகளும், தெற்கு மதிலில் டர்கோமன், டில்லி கேட்டுகளும் இருக்கின்றன. டில்லி கேட்டுக்கு இரண்டு மைலுக்கு தெற்கேயுள்ள பாகத்துக்கு பிரோஸ் பாத் என்று பேர். இதற்கு இரண்டு மைலுக்குத் தெற்கேதான் பாண்டவ ராஜ்யத்துக்கு ப்ரதான பட்டணமாகிய இந்த்ரப்ரஸ்தம்.

டில்லியைப்பற்றி மகாபாரதத்தில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது டில்லி கேட்டுக்கு இரண்டு மைலுக்குத் தெற்கேயுள்ள 'இந்த்ரபாத்' என்று சொல்லப்படுவதுதான் பாண்டவர்கள் ஏற்படுத்திய "இந்த்ர ப்ரஸ்தம்." அவர்கள் அங்கே



CHANDNI CHOWK, DELHI.
சண்ட்னி சௌக், டில்லி.



JUMMA MUSJID—EXTERIOR VIEW, DELHI.
ஜம்மா மசூதி, டில்லி. (வெளிப்பார்வை.)



THE CASHMERE GATE, DELHI.
காஷ்மீர் கேட், டில்லி.



LAHORE GATE.
லாகூர் கேட், டில்லி.



THE DEWAN-I-KHAS, FORT, DELHI.

தீவான்-இ-காஸ்.



KUTB MINAR, NEAR DELHI.

குதுப் மைனர்.



காடுகளிலிருந்தவர்களைத் துரத்தி, ஒரு பட்டணத்தைக் கட்டினார்கள். அதில் அநேக மாளிகைகள் கட்டியிருந்ததால் அதை தேவேந்திரன் பட்டணமாகிய அமராவதிக்கு ஒப்பாகச்சொல்வது வழக்கம். இங்கேதான் பாரதத்தில் சொல்லியிருக்கும் அநேக விஷயங்கள் நடந்தன.

டில்லிப்பட்டணத்தைப்பற்றி மகாபாரதம் முதல் தொடர்ந்தேத்தியாய் சரித்திரம் இல்லை. கிறிஸ்து பிறந்து பதினோராவது நூற்றாண்டில் அனங்கபால் என்னும் ஒரு ராஜபுத்ரத்தலைவன் டில்லியிலுள்ள சிகப்புக் கோட்டையைக் கட்டி அதன் அருகில் தன்னுடைய ப்ரதான பட்டணத்தை ஸ்தாபித்தான். அவனுடைய வம்சஸ்தர்கள் 100 வருஷம் ஆண்ட பிறகு விசால்தேவ் என்னும் ஒரு ஆஜ்மீர் தேசத்துத் தலைவன் ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவருடைய பேரன் தான் ப்ரித்வி ராஜன்; இவரை ரெய்பிதோரா என்றும் சொல்வதுண்டு. இவர் டில்லி, ஆஜ்மீர் இரண்டுக்கும், அரசனாயிருந்தார். 1193-ம் வருஷத்தில் மகமத் கோரி என்பவன் ப்ரித்விராஜனோடு சண்டை செய்து அவனைக் கொன்றுவிட்டான். மகமத் கோரியின் அடிமையாகிய குத்புத்தீன் என்பவன் 1194-ம் வருஷத்தில் டில்லியை கைப்பற்றி 1206-ம் வருஷத்தில் மகமதிய ராஜ்யத்தை ஸ்தாபித்தான். இந்த குத்புத்தீன்தான் டில்லியைப் பிடித்ததும் தன்பேருடைய ஒரு மசூதியையும், குதுப்மைனார் என்னும் பேர்போன ஸ்தம்பத்தையும் கட்டினான். பிறகு பலவம்சத்துப் பல அரசர்கள் தேசத்தை ஆண்டுவந்தும் மொகலாய வம்சத்தைச்சேர்ந்த ஷாஜிஹான் காலமுதல் 1638-ம் வருஷத்தில் தற்கால டில்லி ஏற்பட்டு அதற்கு ஷாஜஹானபாத் என்னும் பேர் உண்டாகி மொகலாய அரசர்களின் ப்ரதான பட்டணமாயிற்று. அவர்தான் தற்காலத்திலிருக்கும் கோட்டை, அரண்மனை, ஜம்மா மசூதி, முதலிய பேர்போன கட்டிடங்களைக் கட்டினார். பிறகு மொகலாய அரசர்களின் வலிமை குறைந்து மராட்டியத் தலைவர்களின் ப்ராபல்யம் அதிகமாயிற்று. 1803-ம் வருஷத்தில் இங்கிலீஷ்காரர்கள் டில்லியில் நடந்த சண்டையில் மராட்டியரைத் தோற்கடித்து, அந்த நகரத்தையும் அதை ஆண்டுவந்த மொகலாய சக்ரவர்த்தியையும் தம்முடைய பாதுகாப்பில் வைத்துக்கொண்டார்கள். கடைசியாக 1857-ம் வருஷத்து கலகத்தில் டில்லியை இங்கிலீஷ்க்காரர்கள் பூராவும் கைப்பற்றிக்கொண்டார்கள். அது முதல் பட்டணம் வரவர விர்த்தியாகிக்கொண்டு வருகிறது. இப்பொழுது அதில் மில்களும் ஆலைகளும் இருக்கின்றன. கடைசி ஸென்ஸஸ்ப்படிக்கு 208,575 ஜனங்கள் இருப்பதாகத் தெரிகிறது. 1876-ம் வருஷத்தில் காலஞ்சென்ற ஏழாவது எட்வர்ட் அங்கே வந்திருந்தார். 1877-ம் வருஷம் ஜனவரிமாதம் முதல் தேதியன்று அங்கேதான் விக்டோரியா மகாராணி சக்ரவர்த்தினியானதாக விளம்பரம் செய்யப்பட்டது. அதே மாதிரி 1903-ம் வருஷத்தில் லார்ட் கர்ஸன் ஒரு தர்பார் கூட்டி ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தியானதை விளம்பரம் செய்தார். டில்லி இவ்வளவு சரித்திர விசேஷமும் சிறப்புமுள்ள நகரமாகையால்தான் வருகிற டிசம்பர்மாதம் 12-ந்தேதியன்று நமது சக்ரவர்த்தி ஐந்தாவது ஜார்ஜும் அங்கே நேரில்வந்து விஜயம் செய்து தாம் சக்ரவர்த்தியானதை விளம்பரம் செய்வார்.

## DESTRUCTION OF COCOANUT BEETLES.

BY

N. VENKATRAMA AIYAR.

## தென்னைமர வண்டுகளை வேரறுக்கும் சுதேச முறைகள்.

தென்னை மரம் இப்பொழுது முன்போல் ஸம்ரக்ஷிக்கப்படுவதில்லை. சிலவருஷங்களாய் தக்கமழை யில்லாமையால் நன்ருய்க் காய்க்கிறதுமில்லை, அதவாது செழித்துப் பலிக்கும் காலம்வந்தாலும் வண்டுகள் மரத்தைக்கெடுக்கின்றன வென்று பலர் முறையிடுகிருர்கள். மழையைத் தக்க ஸமயத்தில் நம்மால் வரவழைக்க முடியாவிட்டாலும், மரங்களைக் கெடுக்கும் பூச்சிகளைத் தொலைக்க நாம் ஏற்பாடு செய்யக்கூடும். கொஞ்சகாலத்திற்கு முன்தான் கவர்ன்மெண்டு பாடனிஸ்டு ஒருவர் மரத்தைக்கெடுக்கும் புழுக்கள் இரண்டு விதம் என்றும், அவைகளில் ஒன்று வெட்டுக்கிளிகள் பயிரையழிப்பதுபோல் தோப்புத்தோப்பாய் அழிக்கக் கூடியதென்றும், அவைகளைக்கொல்லும் விதம் எப்படி யென்றும் வெளியிட்டார்.

இப்படிப்பட்ட புழுக்கள் மரத்தில் எவ்விடத்திலிருந்தாலும் அவைகளைக்கொல்வதற்கு நம்மவர்களுக்குள் வெகுகாலமாய் சிலமுறைகளுண்டு. புழுக்கள் மரத்தின் வேரிலுமிருக்கலாம், நடுமரத்திலுமிருக்கலாம், உச்சியில் மட்டைகள் கிளைக்கு மிடத்திலும் இருக்கலாம். மரத்தின்வேரில் புழுக்களிருந்தால் முத்துக்கொட்டை எண்ணெய் காய்ச்சியபின்பு மீதியுள்ள கசண்டு நீர் முதலியவற்றை மரத்தடியில் கொட்ட புழுக்கள் அவற்றையுண்டு அடியோடு மாளும். அடி மரத்திலிருந்தால் மரத்தில் தொளைச்செய்து மரப்பட்டைகளை உலக்கையால் இடித்துப் புண்செய்ய புழுக்கள் நாசமடையும். மட்டைகள் கிளைக்குமிடத்தில் புழுக்களிருந்தால் சாணுனை மரத்தில் ஏறி மட்டைகளைக் கலக்கமிதிக்கும்படி செய்து, பிறகு மட்டைகளுக்கு மத்தியிலுள்ள இடங்களில் சலங்கை மணலை தூவிக்கிடிக்கச் சொல்வது முண்டு. புழுக்களும் மட்டைகளுக்கு மத்தியில் இடவெளி கண்டவுடன் வெளியில் வந்து மணலில் சிக்கிக்கொண்டு பிராணனைவிடும்.

சாணுனுக்கும் மரத்தைப் பார்த்தவுடன் புழுவுள்ளமரம் இன்னதென்று தெரியுமாம். ஆகவே தென்னை, பனை முதலிய மரங்களின் வர்க்கத்திற்கே சாணுனை புருஷனென்று நம்மவர்கள் சொல்வதுண்டு.

நிகோபார் தீவிலிருந்து இந்நாட்டிற்குக் கொண்டுவந்து பயிரிடப்படும் தென்னம் பிள்ளைகள், பிள்ளைகள் வைத்து ஐந்து அல்லது ஆறு வருஷங்களுக்குள் பலனைக்கொடுக்கின்றன வாயினும் அதிகவருஷங்கள் காய்ப்பதில்லை. ஆனாலும் அவைகள் காய்க்கும் காலத்தையும் கொடுக்கும் பலனையும் யோஜித்துப் பார்த்தால் லாபகரமாகவே யிருக்கின்றன. ஆகவே கவர்ன்மெண்டு பாடனிஸ்டுகள் இந்த ஜாதிமரம் இந்நாட்டில் வெகுகாலம்காய்க்கும்படிக்கு தக்க முறைகளோ, உரமோ, கண்டுபிடித்து ஜனங்களுக்குப் போதித்தால் நலமாயிருக்கும்.

என். வெங்கெட்டராம ஐயர்.



H. M. QUEEN MARY.
மேரி ராணி.



H. M. KING GEORGE V.
ஐந்தாவது ஜார்ஜ்.

## HIS MAJESTY EMPEROR GEORGE V.

# மாட்சிமை தங்கிய மகாராஜா ஜார்ஜ் சக்ரவர்த்தி.

ஒவ்வொருவனும் தன்னுடைய கடமையைச் செய்து முடிக்கவேண்டுமென்று இங்கிலாந்து எதிர்பார்க்கிறதென்று லார்ட் நெல்ஸன் என்னும் பேர்போன ஆங்கிலேய கப்பல் சேனாதிபதி சொன்னார். அது போலவே ஆங்கிலேய அரசரொவ்வொருவரும் அத்தேசத்துக்காகவும் அதைச்சேர்ந்த பெருமைவாய்ந்த மஹாராஜ்யத்துக்காகவும் தம்முடைய கடமையைச் செலுத்தவேண்டுமென்று இங்கிலாந்து எதிர்பார்ப்பதாகச் சொல்வதும் பொருத்தமுள்ளதாகும், சென்ற மூன்று தலைமுறைகளாக ஆங்கிலநாட்டு முடிமன்னர்கள் இங்கிலாந்து விஷயமாகத் தங்கள் கடமையை நிறைவேற்றியிருக்கிறார்களென்பதை அவ்விராஜ்யத்தில் வாழும் குடி ஜனங்கள் நன்றியறிதலுடன் பலகாலும் மனதார ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். புகழுடம்புபெற்ற விக்டோரியா மகாராணியார் ஆங்கிலேய ராஜ்ஜியத்துக்கு ஓர் அரும்பெரும் பாக்கியமாய் விளங்கினாரென்பதை எவரும் மறுக்கத் துணியார். அந்த சக்ரவர்த்தினியின் மங்கள நாமத்தைச் சொன்னமாத்திரத்தில் ராஜ்யத்திலுள்ள சகல ஜனங்களும் மந்திரத்தால் கட்டுண்டவர்போல் பரவசமடைவர். அவ்வரசியார் நம் இந்தியாவை வந்து பாராவிட்டாலும், இந்நாட்டிலுள்ள பிரதி கிராமத்திலும் நகரத்திலும் எளிய குடிசைகளிலும் பணம் பெருத்த அரண்மனைகளிலும் அவ்வம்மையின் பெயர் சர்வசாதாரணமாய் வழங்கிவருவதைக் காணலாம். விக்டோரியா மஹாராணி அரசாண்ட காலத்தில் இங்கிலாந்து தேசத்தின் ஜனசமூகவாழ்க்கை ஓங்கி உயர்ந்தது; ராஜாங்க முறைமையும் சட்ட ஒழுங்குகளை யனுசரித்து அபிவிர்த்தியடைந்தது. கடலுக் கப்பாலுள்ள ப்ரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட இந்தியா முதலிய நாடுகளின் க்ஷேமாபிவிருத்தியில் அவ்வம்மை ஆழ்ந்த அக்கறை பாராட்டி வந்தாள். அவருடைய குமாரராகிய ஏழாம் எட்வர்ட் மன்னரும் தம் அன்னையின் மாதிரியையே பின்பற்றி, தயாளகுணமே உருவெடுத்து வந்ததுபோல் விளங்கி, கருத்திலும், சொல்லிலும், நடையிலும் கம்பீரமாயும் உள்ளக் கனிவுடனும் பிறர் மனதைக் கவரும் வண்ணமாகவும் பிரவர்த்தித்து, தனக்குப்பின் ராஜ்யபாரம் வகிக்க வருபவர்கள் பின்பற்றத் தக்க நிதர்சனமாய்ப் பிரகாசித்தார்.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த முன்னோர்களின் மரபில் உதித்த நமது ஜார்ஜ் மஹாராஜாவும் இங்கிலாந்து தேசத்துக்கும் அதைச் சார்ந்த மஹாராஜ்யத்துக்கும் உயர் நலங்கள் ஓங்கி உயரும்படி உத்தம நெறியில் ஒழுகி அரசாள்வார் 'என்பதற்கு வேண்டிய அறிகுறிகள் ஏற்கனவே பிரத்யக்ஷமாய்க் கொண்டுவருகின்றன. பால்யமுதல் இவருக்கு ஏற்பட்டிருக்கும் பயிற்சியும் இவருடைய அந்தஸ்துக்குரிய உயர்ந்த பொறுப்புகளை இவர் தாங்குவதற்குத் தகுந்த வண்ணமாகவே அமைந்திருக்கிறது. பிறர் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி அதிகாரம் செலுத்த விரும்புவோர் தாமே கீழ்ப்படியக் கற்றிருக்கவேண்டும். ஆதிமுதற்கொண்டே கடற் பிரயாணத்தில் பிரியமுள்ள இம் மன்னர் கப்பற்சைன்னிய சேவகத்தில் அமர்ந்து, தமக்கு எஜமானர்களாய் ஏற்பட்டவர்களுக்குக் கீழ்ப்படிந்து தம் கடமையைக் குறைவறச் செலுத்திப் படிப்படியாய் கப்பற் சேனாதிபதியின் பதவியை அடைந்தார். அவர் பிற்காலத்தில் ராஜ்யபாரத்தைத் தாங்



கிச் செய்ய வேண்டிய காரியங்களுக்கு இவ்வொன்றே உத்தமமான பயிற்சியாகும். அன்றியும் நம் அரசர் உலகமுழுவதும் விஸ்தாரமாய்ப் பிரயாணம் செய்து, ஆஸ்ட்ரேலியா, தென் ஆப்ரிகா, இந்தியா முதலிய தேசங்களை நேராகக் கண்டு பெற்றிருக்கும் அநுபவ ஞானமானது ப்ரிடிஷ் ஐக்கிய ராஜ்யத்தை ஆளுவதில் அவருக்குப் பெரிதும் பிரயோஜனகரமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

உலகளாவிய மஹா ப்ரிடிஷ் ராஜ்யத்தில் வாழும் பிரஜா கோடிகளின் மனதை இம் மன்னர் ஆச்சரியகரமாய்க் கவர்ந்திருக்கிறாரென்பது பின்வரும் அவரது சரித்திரத்தினால் இனிது விளங்கும்.

ஜார்ஜ் இளவரசர் 1865-ம் வருஷம் ஜூன் மாதம் 3-ந்தேதி காலையில் ஒரு மணியடித்த சிறிது நேரத்திற்குள் ஜனனமானார். சிசுப்பிராயத்திலுள்ள இளவரசருக்கு விண்ட்ஸர் மாளிகையில் ராஜாங்க வைபவத்துடன் நாமகரணச் சடங்கு நடந்தது. அப்போது வேல்ஸ் இளவரசராகவும் இளவரசியாகவுமிருந்த ஏழாம் எட்வர்ட் அரசரும் அலெக்ஸாந்த்ரா அரசியும் தம் குழந்தைகளைக் கூடிய மட்டிலும் தம்மிடத்திலேயே வைத்துக்கொண்டிருந்தார்கள். பிரயாணம் போகும்போது கூட, தம்முடனே அழைத்துச் செல்வார்கள். குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் போடும் வரையில் இவ்விதமாகவே நடந்து வந்தது. ஜார்ஜ் இளவரசரும் இவரது மூத்த சகோதரரும் ஆகிய இரண்டு சிறுவர்களும் அக்காலத்தில் தம் தாய்தந்தையர்கள் போகும் இடங்களுக்கெல்லாம் சென்று சகலருக்கும் அறிமுகமாயிருந்தார்கள். ஆனால் அரசிளங்குமரர்கள் பால்யப்பருவத்தில் வெகு சீக்கிரத்தில் கல்வி பயிலத் தொடங்குவது தொன்றுதொட்டு வரும் வழக்கமாதலால், ஜார்ஜ் இளவரசருக்கும் அவரது அண்ணனுக்கும் வேலையின்றி வீண்பொழுது போக்கும் சமயம் அநேகமாய்க் கிடைக்கவே கிடைக்காது. சகோதரர் இருவருக்குள்ளும் அதிக குசாலாயும் துணிவாயும் இருந்தது ஜார்ஜ் இளவரசரேயாகையால், அவர் சிற்சில சமயங்களில் விஷமச்சேஷ்டைகளை வேடிக்கையாகச் செய்து "ராஜ கம்பீரக் குசால்பேர்வழி" என்னும் பட்டமும்பெற்றார்.

பால்ய காலத்தில் இவர்கள் அனாவசியமான கட்டு திட்டங்களில்லாமல் சுதந்தரமாயும் ஆடம்பரமில்லாமல் சாமான்யமாயும் வளர்ந்து வரும்படியாகவே அரண்மனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 7-வது எட்வர்ட் அரசர் வேல்ஸ் தேசத்து இளவரசராக இருந்த சமயத்திலே 1875-ம் வருஷத்தில் இந்தியாவைப் பார்க்கவந்த காலத்தில், அரசிளங்குமரர் இருவரும் பால்யராயிருந்தாலும், தம் அன்னைக்கு அங்க ரக்ஷகர்களாகவும் அருங்குணம் பொருந்திய படைவீரர்களாகவும் அமர்ந்து சாத்தியமானபோதெல்லாம் அவ்வம்மையுடன் கூடவே சென்றார்கள். அவர்கள் புஸ்தகங்களைக் கையிலெடுக்கத் தொடங்குவதற்கு முன்பே பணிவிலும் வணக்கத்திலும் பிரதமோபதேசங்களைத் தம் அன்னையினிடமிருந்தே பெற்றார்கள். வேல்ஸ் இளவரசர் விஷயத்தில் புஸ்தகப்படிப்புக்கு எவ்வளவு பிராதான்யம் ஏற்பட்டிருந்ததோ அதற்கு அதிகமான பிராதான்யம் அந்த புஸ்தகப் படிப்புக்கு இந்த ராஜ குமாரர்களின் பயிற்சியில் ஏற்படவில்லை. ஜார்ஜ் மன்னருக்கு கடற்பிரயாணத்தில் இயல்பாகவே பிரியமுண்டாயிருந்தது. சார்ல்ஸ் கிங்க்ஸ்லி என்னும் ஆங்கில நூலாசிரியரும், தம்முடைய வாத்தியாராகிய கானன் டால்டன் என்பவரும் எழுதியுள்ள கதைகளைச் சொல்லக்கேட்பதனால் இந்தக்கடல் பிரயாண விருப்

பம் அவர் மனதில் குடிகொண்டிருக்கக் கூடும். இவருக்கு மூத்த சகோதரரிருந்தபடியால் இவர் பட்டத்துக்கு வருவார் என்னும் எண்ணத்துக்கிடமில்லை. தாம் கடலோடியாயிருக்கப் பிரியப்படுவதால் தமக்கு ராஜ்ய பட்ட உரிமை இல்லாததைப்பற்றி எவ்வளவோ சந்தோஷப்படுவதாய் அவர் அக்காலத்தில் சொல்லிக்கொள்வாராம். ஆனால் ஈசுவர சங்கல்பம் வேறு விதமாய் நிறைவேறிவிட்டது. ஆயினும் என்ன ? கடலோட்டியாக அவர்பெற்றிருக்கும் அனுபவமே மற்றப்படி அவருக்காக ஏற்பட்டிருக்கக்கூடிய எவ்விதப் பயிற்சியைக்காட்டிலும் ராஜ்யபாரம் நடத்துவதில் அவருக்கு அதிகமாகப் பயன்படுவதாய் இருக்கலாகாதா ?

வேல்ஸ் இளவரசர் தம் குமாரர்கள் உலகானுபவத்தில் முதிர்ந்த பழக்கம் பெறும் பொருட்டும் சகல விஷயங்களையும் அவர்கள் தாமாகவே நேரில் கண்டு நிதானித்து தம் தம் அபிப்பிராயங்களை அமைத்துக்கொள்ளவேண்டியும், பற்பல சந்தர்ப்பங்களில் இன்ன விதமாய் நடந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ளும்பொருட்டும் தக்க ஏற்பாடுகள் செய்யத் தீர்மானித்தார். இந்தத் தீர்மானத்தை அனுசரித்து எட்வர்ட் இளவரசரும் ஜார்ஜ் இளவரசரும் 1877-ம் வருஷத்தில் ப்ரித்தானியா என்னும் பயிற்சிக் கப்பலில் உத்தியோகமாய் அமர்ந்தார்கள். இந்தக் கப்பலில் இருக்கும்போது இவர்கள் ராஜ ஆடம்பரங்களை யொழித்து மற்ற ஜனங்களுடன் சமத்துவமாகப் பழகக் கற்றுக்கொண்டார்கள். பிறகு 1879-ம் வருஷத்தில் புக்காண்டீ என்னும் கப்பலில் சேர்ந்து ஏறக்குறைய மூன்று வருஷகாலம் வேறு வீடு வாசலொன்றும் அறியாதவர்களாய் அதிலேயே காலங் கழித்தார்கள். இந்த காலத்தில் அவர்களுக்குண்டான உலகானுபவம் எக்காலத்தும் மறக்கக்கூடியதல்ல. எவ்வித குணமும் மனதில் அழுந்திப் பதியும்படியான அந்த வயதிலேயே ராஜகுமாரர்களின் நடத்தை நேரான வழியில் அமையலாயிற்று. சிறுவர்களாய்க் கப்பலிற் சேரப்போனவர்கள் அதிலிருந்து திரும்பி வந்தபோது ஆண்மக்களுக்குரிய உத்தம குணங்கள் வாய்ந்து விளங்கினார்கள். இந்தக் கப்பலிலிருக்கும்போது இவர்கள் ஜிப்ரால்டர் மார்க்கமாக கனேரி தீவுகளையும் மேற்கு இந்தியத் தீவுகளையும் போய் பார்த்தார்கள். சிலகாலங்கழித்து தென் அமெரிக்காவுக்கும் ஆப்ரிக்காவுக்கும் சென்றார்கள். அங்கிருந்து ஆஸ்த்ரேலியாவுக்குச் சென்று அந்த ராஜ்யத்தில் தாம் போனவிடங்களிலெல்லாம் சந்தோஷமாய் வரவேற்கப்பெற்று அங்குள்ள சகலமான விசேஷ காட்சிகளையும் கண்டுகளிப்புற்று, அவ்விடத்திலிருந்து புறப்பட்டு பிஜி தீவையும் ஜப்பான் தேசத்தையும் தரிசித்தார்கள்.

அரசிளங்குமரர் ஜப்பான் நாட்டில் விசேஷ காலம் தங்கியிருந்து அங்குள்ள பற்பல விநோதக் காட்சிகளைக் கண்ணுற்று, ப்ரஸித்தமான ஆலயங்களுக்குச் சென்று பௌத்தமத விஷயமாயும் ஷிந்தோமத விஷயமாயும் பற்பல சங்கதிகளை விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள். ஜப்பானியர்களைப் பற்றி ராஜகுமாரர்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடும்போது “நாங்கள் பார்த்துள்ள ஜனங்களுக்குள்ளே அவர்கள் மிகுந்த அமெரிக்கையும், மரியாதையும், நல்லிணக்கமும், உற்சாகமும் வாய்ந்தவர்கள்” என்று சொன்னார்கள். சீன தேசமும் இவர்களுக்குப் பற்பல விதங்களில் மனோஹரமாய்த் தென்பட்டது. இலங்கையில் இவர்கள் பார்த்ததெல்லாம் பூரண சந்தோஷமளித்தது. பிறகு ஈஜிப்ட் தேசம் போனார்கள். அங்கிருந்து புறப்பட்டு கிறிஸ்துமதத்தாருக்குப் புண்ய பூமியாகிய பலஸ்தீனாவில் விஸ்தாரமாய்ப் பிரயாணம் செய்



தார்கள். பிறகு ஸிரியா தேசத்தில் சிறிது காலம் தங்கியிருந்து, க்ரீஸ்தேசத்துத் தலைநகராகிய ஆதன்ஸுக்கு வந்தார்கள். இப்படி பிரயாணத்தில் இரண்டு வருஷம் கழித்து இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தார்கள்

ஜார்ஜ் இளவரசர் இங்கிலாந்தில் சிலகாலம் ஒழிவடைந்திருந்து மறுபடியும் மூன்றுவருஷ காலம் கப்பலுத்தியோகத்தில் அமர்ந்து தம் அலுவல்களைப் பார்த்துவந்தார். 1891-ம் வருஷத்தில் இவர் தம் ஜன்மதேசத்துக்குத் திரும்பியபோது இவருக்குக் கமாண்டர் (சேனைத்தலைவர்) உத்தியோகம் அளிக்கப்பட்டது. இந்த உத்தியோகத்தைப் பெற்ற சில மாதத்துக்குள்ளாக இவருடைய தமையனார் எட்வர்ட் இளவரசர் தேகவியோகமடையவே, இவருடைய அந்தஸ்தானது எதிர்பாராத விதமாய் மாறியது. அது காரணமாக இவர் பட்டத்துக்குரியவராகவே, தாம் இனி ராஜாவாக வரவேண்டியதற்குரிய காரியங்களையே முக்கியமாகக் கவனிக்கவேண்டியவரானார். இதனால் கப்பற்சைனிய விஷயத்தில் இவர் முன்போல் அதிகமாய் உழைப்பதற்கு அவகாசம் குறைந்துபோய் விட்டது. ஆயினும் 1901-ம் வருஷத்தில் இவர் ரியர் ஆட்மிரல் என்னும் கப்பற்சேனைப் பின்னணியத்தலைமை உத்தியோகத்தையும், 1903-ம் வருஷத்தில் வைஸ் ஆட்மிரல் என்னும் உத்தியோகத்தையும், 1907-ம் வருஷத்தில் அட்மிரல் அந்தஸ்தையும் வகிக்கலானார். கடைசியாக 1908-ம் வருஷத்தில் கனடாவுக்குச் சென்றபோது, இண்டாமிடபில் என்னும் போர்க்கப்பலில் தலைமைவகித்துக் கொடிவிரித்துக் கடற்சைனியத்தை நடத்திச் சென்றார்-

ஜார்ஜ இளவரசர் தம் தமையனார் மரித்தது முதல் ராஜாங்க காரியங்களில் பழகத்தொடங்கினார். சமயம் வாய்த்தபோதெல்லாம் பார்லிமெண்ட் சபைக்குப்போய் அங்கு நடக்கும் நடவடிக்கைகளை கவனித்து வந்தார். பிறகு ராஜகுமாரருக்கும் மேரி ராஜகுமாரத்திக்கும் கல்யாணம் நடந்தேறிற்று.

கல்யாணமானது முதல் வருஷத்தில் ராஜகுமார தம்பதிகள் ப்ரிடிஷ் ராஜ்யத்துக்குள்ளிருக்கும் வெவ்வேறு பிரதான நகரங்களுக்கு விஜயம் செய்து கல்யாணச் சீர்களும் வந்தனோபசாரப் பத்திரங்களும் பிரஜைகளால் சமர்ப்பிக்கப் பெற்றார்கள். 1884-ம் வருஷத்தில் இவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. விக்டோரியா மஹாராணியின் வைர ஜூபிலி மஹோத்ஸவம் கொண்டாடபட்ட 1897-ம் வருஷத்திலே இவர்களுக்கு மூன்றாவது குழந்தையாகிய பெண் பிறந்தது.

இவர்கள் தம்மக்களுக்கு வித்தியாப்யாஸம்செய்வித்து அவர்களை நன்னெறியில் பழக்குவதில் தங்கள் குடும்பமே தேசத்து ப்ரஜைகளுக்கெல்லாம் உத்தமமான திருஷ்டாந்தமாய் இருக்கவேண்டுமென்று கருதி அதற்குத் தக்கபடி நடந்தார்கள்.

ப்ரிடிஷ் ஜனங்கள் குடியேறி அரசு செலுத்தும் வெளி நாடுகளுக்கு இந்த ராஜகுமார தம்பதிகள் தரிசனம் அளித்து வரவேண்டுமென்று இவர்கள் கல்யாணத்திலேயே தீர்மானிக்கப் பட்டபோதிலும் அநேக சந்தர்ப்பங்களை உத்தேசித்து அந்தப்படிசெய்யமுடியாமற் போயிற்று. பிறகு 1900-ம் வருஷத்திலே ஆஸ்திரேலியா ராஜ்யத்தில் பார்லிமெண்ட் சபை ஸ்தாபிக்க வேண்டுமென்று நிச்சயிக்கப்படவே, அந்தச்சடங்கை விக்டோரியா மஹாராணியார் தமக்கு ப்ரதிநிதியாக ஜார்ஜ் இளவரசரே நேரில் போய் நிறைவேற்றிவர வேண்டுமென்று விரும்பினார். பிறகு நடந்த தென் ஆப்பிரிக்கா யுத்தத்தில் குடியேற்ற நாடுகளெல்லாம் தாய் நாடாகிய இங்கிலாந்துக்குச் செய்த பரமோபகாரத்துக்காக ப்ரிடிஷ் ஜனங்கள் தங்கள் நன்றியறிதலை மஹாராணியின் பேரனைக்கொண்டு வெளியிடுவதே பொருத்தமுடையதாகுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். ஆகவே ஜார்ஜ் இளவரசரும் இளவரசியும் குடியேற்ற நாடுகளில் விஸ்தாரமாய்ப் பிரயாணம்செய்துவரவேண்டுமென்று சர்வாங்கீகாரமாகத் தீர்மானிக்கப் பட்டது. இந்த பிரயாணத்துக்கு வேண்டிய ஸகலஸந்நாஹமும்ஸித்தமாயிருக்கையில் விக்டோரியா மகாராணியாருக்கு உடம்பு ஸௌக்கியமாயில்லை யென்ற விசனகரமான ஸங்கதி தெரியவந்தது. அந்த தேகஅசௌக்கியமானது பலப்பட்டு மகாராணி இறந்துபோகவே, அதனால் ராஜகுமார தம்பதிகளின் பிரயாணம் நின்றுபோய்விடும்போலிருந்தது. ஆனால் எட்வர்ட் மஹாராஜா அந்த பிரயாணம் நடந்தேற

வதுதான் காலஞ்சென்ற மகாராணியின் மனதுக்கு திருப்திகரமா யிருக்குமென்று ஒரேபிடியாய் நின்று, அதுநிறைவேறவேண்டுமென்று உத்தரவு செய்தார். இப்படி ராஜகுடும்பத்தில் பெருந்துக்கம் நேர்ந்தகாலத்திலும் பிரஜைகளுக்குத் தாம் செலுத்தவேண்டிய கடமையையே பெரிதாக எண்ணிய மகாராஜாவின் பெருந்தகைமையையும் தன்மறுப்பு உணர்ச்சியையும் ஜனங்கள் வியந்து கொண்டாடினார்கள்.

1901-ம் வருஷாரம்பத்தில் எட்வர்ட் மகாராஜா வழியனுப்ப, ஜார்ஜ் இளவரசரும் மேரி இளவரசியும் தங்கள் நீண்ட பிரயாணத்தைத் தொடங்கினார்கள். அவர்கள் ஜிப்ரால்டர் மார்க்கமாகச்சென்று ஏடன் துறைமுகத்தை அடைந்து இந்தியா ராஜ்யத்தை அணுகி லங்கையைப் பார்த்துக்கொண்டு சிங்கப்பூரில் சிறிது தங்கி அங்குள்ள பிரஜைகள் மனப்பூர்வமாய் அளித்த வந்தனோபசாரங்களை சந்தோஷத்துடன் ஏற்றுக் கடைசியாக ஆஸ்திரேலியாவின் ராஜதானிப்பட்டணமாகிய மெல்போர்ன் நகரம் வந்து சேர்ந்தார்கள். இங்கே ராஜகுமார தம்பதிகளை நகரவாசிகளும் துரைத்தன அதிகாரிகளும் சகல ராஜோபசாரத்துடனும் வரவேற்றார்கள். 1901-ம் வருஷம் மேமாதம் 9-ந்தேதியில் ஜார்ஜ் இளவரசர் ஆஸ்திரேலியா ராஜ்யத்தின் பார்லிமெண்ட் சபா ஸ்தாபனச்சடங்கை நடத்தினார். அப்போது “மகாராஜாவின் உபந்யாச”த்தைப் படித்தபிறகு, ஜார்ஜ் இளவரசர் செய்த உருக்கமான பிரஸங்கத்திலே, இந்தச் சடங்கை நடத்தும்படி தமக்கு ஆக்ஞை யளிக்கும் விசேஷ அதிகார பத்திரத்திற்கு விக்டோரியா மகாராணி மரிப்பதற்கு முன்னதாகவே கையெழுத்துப் போடப்பட்டதென்றும், தென் ஆப்பிரிக்கா யுத்தத்தில் ஆஸ்திரேலியர் தடையின்றிச் செய்த பேருபகாரத்துக்காகவும் விக்டோரியா மகாராணியாரின் மரணத்தைக்குறித்து அவர்கள் காட்டிய அனுதாபத்துக்காகவும் எட்வர்ட் மகாராஜா அவர்களிடம் நன்றிபாராட்ட விரும்புகிறாரென்றும் புது பார்லிமெண்ட் ஸ்தாபனத்தால் வெளியாகும் ஆஸ்திரேலிய ராஜ்ய ஒற்றுமையைக் குறித்து சந்தோஷிப்பதாயும், கடவுளின் கிருபையால் அந்த ஒற்றுமை காரணமாக ஆஸ்திரேலிய பிரஜைகளின் க்ஷேமாபிவிருத்தி உயர்ந்தோங்கி ப்ரிடிஷ் மஹா ராஜ்யம் பலப்பட்டு உரங்கொண்டு நிற்குமென்று உறுதியாய் நம்பி யிருப்பதாகவும் சொன்னார். பார்லிமெண்ட் சபை ஸ்தாபனச் சடங்கு முடிந்தவுடன் ராஜகுமார தம்பதிகள் ஆஸ்திரேலியாவிலுள்ள இதர முக்கிய நகரங்களுக்குச் சென்று, சென்ற விடமெல்லாம் சந்தோஷமாய் உபசரிக்கப் பெற்று, பிறகு அந்நாட்டை விட்டுப் புறப்பட்டு, அமெரிக்காவிலுள்ள ப்ரிடிஷ் குடியேற்ற நாடுகளாகிய கனடா, ந்யுபௌண்ட்லாந்து முதலிய தேசங்களையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு கடைசியாகத் தம் ஜன்மதேசம் வந்து சேர்ந்தார்கள். அப்போது லண்டன் ப்ரஜைகள் அவர்களை வேல்ஸ் இளவரசரும் இளவரசியுமாக வரவேற்றார்கள்.

ஐந்தாவது ஜார்ஜ் அரசர் வேல்ஸ் இளவரசு பட்டத்திலிருக்கையில், தாம் பின்னர் மஹாராஜாவாக வர வேண்டியதற்கேற்ற காரியங்களில் அப்பொழுது முதற்கொண்டே பழகிவரலானார். எட்வர்ட் மஹாராஜாவும் அதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் ஸித்தமாய்ச் செய்துவந்தார். ஜார்ஜ் அரசருக்கு ஸயன்ஸ் என்னப்படும் 'நூதன சாஸ்திரத்தை அனுஸரித்துக் குடி ஜனங்களின் க்ஷேமத்தை அபிவிருத்தி செய்வதில் அதிக சிரத்தையுண்டு. மேரி அரசியும் ஜனங்கள் முன்னுக்கு வருவதற்கேற்ற பல காரியங்களைச் செய்து வருகிறார். ஏழை, நொண்டி, முடம், சித்தஸ்வாதீனமற்றவர், பிணியாளர், அகதிகள் முதலியவர்களை விசேஷமாக ஆதரித்து வருகிறார். லண்டனில் ஏழைகள் வசிக்கும் சுகக்குறைவான குடிசைகளுக்குத் தாமே நேரில் சென்று அவர்களின் நிலைமையை அக்கரையாய் விசாரித்தறிந்து, வேண்டிய உதவி செய்து வருகிறார். புராதன நாகரிகத்தை விளக்கும் வஸ்துக்களைச் சேகரித்து வைப்பதில் அரசிக்கு அதிக விருப்பம். அவர் விருந்தினரை உபசரிப்பதில் மிக்க அன்புகாட்டும் சுபாவமுள்ள வாரனபடியால், அவ்வம்மையினிடம் பிரீதி பாராட்டும் சிநேகிதர் விசேஷமாய் ஏற்பட்டிருக்கிறார்கள்.

எட்வர்ட் மஹாராஜாவின் பட்டாபிஷேக காலத்தில், வேல்ஸ் இளவரசர் அநேக கடமைகளைச் செலுத்தவேண்டியிருந்தது; அவைகளை யெல்லாம் அவர் திருப்திகரமாகவே நிறைவேற்றினார்.



பிறகு வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் இந்தியாவை வந்து பார்த்து இந்தியபிரஜைகளிடம் தமக்குள்ள அன்பை இன்னும் அதிகமாய்ப் பலப்படுத்திக்காட்டினார்.

ஜார்ஜ் இளவரசர் இந்தியாவுக்குவந்து செய்த முதற் பிரசங்கத்திலேயே பின்வருமாறு பேசினார்:—“பாலியம் முதற்கொண்டே நான் இந்தியா தேசத்தில் தயை, ராஜபக்தி, உபசாரம், மரியாதை, தைரியம் முதலிய உயர்ந்த குணங்கள் குடிகொண்டிருக்கின்றனவென்று நினைத்து வந்தேன். இப்போது அந்த தேசத்துக்கே நான் நேராக வந்திருக்கிறபடியால், என்னுடைய பாலியகாலத்து எண்ணங்கள் ஸ்திரப்பட்டு வன்மையுறுமென்று இன்னும் சிலமாதத்தில் எனக்கு அனுபவசித்தமாய் ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை”.

இளவரசர் கோரியபடியே அவர் இந்தியாவில் பார்த்து அனுபவ பூர்வமாய்த் தெரிந்துகொண்ட சகல சங்கதிகளும் அவருக்கு மகிழ்ச்சியை யுண்டாக்கினவென்று இந்தியர்களாகிய நாம் நம்புகிறோம்.

இப்படி இந்த ராஜகுமார தம்பதிகள் இந்தியாவிலும் பர்மாவிலும் நெடுக விஜய கோலாஹலவைபத்துடன் பிரயாணம் செய்து கடைசியாக காராச்சிபட்டணத்தில் இந்தியராஜ்யத்தினின்று புறப்பட்டுக் கப்பலேறித் தம் ஜன்ம பூமிக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இங்கிலாந்துக்கு அவர்கள் போய்ச் சேர்ந்ததும், லண்டன் நகரத்து முனிசிபல் சங்கத்தார் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். அப்பொழுது இளவரசர் செய்த பிரசங்கம் மஹா விசேஷமானது. அந்த பிரசங்கத்தினால், இந்தியா முழுவதும் துரைத்தனதாருக்கும் குடி ஜனங்களுக்கும் முன்னிலும் அதிகமான ஒற்றுமையுண்டாகு மென்று லார்ட் மார்லி நம்புவதாகச்சொல்லி அந்த பிரசங்கத்தைக்கொண்டாடினார். அந்த பிரசங்கத்தில் இளவரசர் சொன்னதாவது:—

“இந்து தேசத்து ஜனங்களின் பொறுமையையும், ஆடம்பரமற்ற வாழ்க்கையையும், ராஜபக்தியையும், தெய்வபக்தியையும் நான் பிரத்தியக்ஷமாய்க் கண்டேன். இந்தியாவை நாம் மாத்திரம் இன்னும் அதிகமான ஒற்றுணர்ச்சியுடன் ஆளும் பட்சத்தில், அத்தேசத்தை ஆளும் காரியம் இன்னும் சுலபமாயிருக்குமென்று, நான் கண்டு கேட்டிருந்த விஷயங்களால், என் மனதில் படுகிறது. இந்தியா துரைத்தன விஷயத்தில் அக்கரை கொண்டிருக்கிற ப்ரிட்டிஷ் ஜனங்கள் அவ்விடத்துக்கு நேராகச்சென்று பார்த்து வருவது அவசியமானது. அப்படி செய்வதனால், துரபிமானம் நீங்குவதற்கும், தவறான உணர்ச்சிகள் நிவர்த்தியாவதற்கும, ஒற்றுணர்ச்சியும் சகோதரத்துவமும் பெருகுவதற்கும் அவர்கள் பேருபகாரம் செய்தவராவார்கள். மேலும் நம் தாய்நாடாகிய இங்கிலாந்துக்கும் நாம் ஆளும் நாடாகிய இந்தியாவுக்குமுள்ள ஐக்கியம் பலப்பட்டு பரஸ்பர நம்பிக்கையும்விருத்தியாகும்.”

இளவரசருக்கு வர்த்தமானப் பத்திரிகைகளின் விஷயத்தில் விசேஷ மதிப்புண்டு. அதை அவர் பலதடவைகளிலும் தம் பிரசங்கங்களில் உதாரசுபாவத்துடன் வெளியிட்டிருக்கிறார்.

எட்வர்ட் மகாராஜா திடீரென்று இறந்துபோகவே வேல்ஸ் இளவரசர் ஐந்தாம் ஜார்ஜ் என்னும் பெயருடன் சிங்காசனமேறினார். தம் பிதாவின் உத்தரக்கிரியைகள் நடப்பதற்காகச் செய்யவேண்டிய ஸந்நாஹங்களிலும், தாம் புதிய அரசனாகச் செய்யவேண்டிய கடமைகளிலும் அவருக்கு ஒரு நிமிஷமாவது விராமமில்லாமலிருந்தது. அப்போது ப்ரிவி கௌன்ஸிலென்னும் அந்தரங்க ஆலோசனை சபையில் அவர் மஹாராஜாவாக வீற்றிருந்து புரிந்த பிரசங்கம் விசேஷமானது. அந்த பிரசங்கத்தின் முடிவுரையில் அவர் பின்வருமாறு பேசினார்:

“என் பிதா அனுசரித்த வழிகளைப் பின்பற்றி நடக்கவும், இந்த ராஜ்யங்களை ஆளச் சட்ட முறைப்படி அமைந்துள்ள துரைத்தனத்தை ஆதரித்து நடக்கவும் முயல்வதையே நான் சிரத்தையுடன் என் வாழ்நாளில் நான் நிறைவேற்றவேண்டிய உத்தேசமாகக் கொண்டிருக்கிறேன். பார்லிமெண்ட் சபையாரும் இத்தேசங்களின் பிரஜைகளும் என்னுடைய கஷ்டமான கடமைகளை நிறைவேற்றுவதில் எனக்குத்துணை நிற்பதுமல்லாமல், எனக்கு தேகவலிமையும் ஆரோக்யமும் அளிக்கும்படியும் என்னை நலவழியில் நடத்தி வரும்

படியும் கடவுளைப் பிரார்த்திப்பார்களென்றும் நான் நம்பியிருப்பது வீண்போகாதென்பது நிச்சயம். பிரஜைகளின் க்ஷேமத்துக்காக செய்யப்படும் ஒவ்வொரு காரியத்திலும் என் பிரியமுள்ள மனைவி எனக்கு சதாகாலமும் வாழ்க்கைத் துணைவியா யிருப்பாளென்பதை நினைக்கும்போது எனக்கு விசேஷ உத்ஸாஹம் உண்டாகின்றது.''

இந்து தேசத்து மன்னர்களுக்கும் பிரஜைகளுக்கும் அனுப்பிய செய்தியில் அவர் இதே விஷயத்தைப் இன்னும் தொடர்ந்து சொன்னதென்னவென்ருல் :—

"எனது காலஞ்சென்ற பிதாவின் அபீஷ்டப்பிரகாரமும் அவர் செய்ததையே பின் பற்றியும், நான் என் ராஜமஹிஷி சஹிதமாய் ஐந்து வருஷங்களுக்குமுன் இந்தியாவை வந்து பார்த்தேன். அந்த பிரயாணத்திலே அந்நாடு முழுவதிலுமுள்ள பிரசித்தமான பெருத்த ராஜ்யங்களையும், எங்கள் நாகரிகத்தைவிட பழமையான நாகரிகத்தைக் காட்டும் ஞாபகச்சின்னங்களையும், ஜனங்களின் புராதன வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும், சுதேச ராஜாக்களையும், ஜனங்களையும், பட்டணங்களையும், நகரங்களையும், கிராமங்களையும் எங்கள் கண்ணாரக்கண்டு பழக்கம் பெற்ருேம். அந்த அற்புதமான யாத்திரையில் எங்கள் மனதில் தீவிரமாய்ப் பதிந்த எண்ணங்களையும், அன்புடன் கூடிய தொடர்புகளையும் ஒருகாலும் மறக்க வொண்ணுது. நான் இனி செய்ய வேண்டிய கஷ்டமான காரியங்களிலே நீங்கள் எனக்கு விதேயதையோடு உடனிருந்து உழைப்பீர்களென்று நம்புகிறேன். என்னுடைய ஆளுகைக்கு உற்சாகத்தை யூட்டுவது இந்தியாவின் க்ஷேமத்தில் எனக்குள்ள அபிமானமேயாகையால் அதற்குத் தக்கப்படி நீங்கள் மனந்தளராமல் நடப்பீர்களென்று நம்புகிறேன்."

இப்படி யனுப்பப்பட்ட செய்தியைப் பெற்று, இந்தியா முழுவதிலுமுள்ள ஜனங்கள் அபரிமிதமான உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தது சகஜந்தானே.

"கடலுக்கப்பாலுள்ள என் ஜனங்களுக்கு அனுப்பும்" செய்தியில் அவர் கூறியதாவது :—

"என் ராஜ்யங்களெல்லாவற்றிலும் வாழும் குடிஜனங்கள் அனுபவித்து வரும் சுதந்தரங்களைப் பூர்த்தியாய்ப் பாதுகாத்து, துரைத்தனத்தைச் சட்ட ஒழுங்குகளின்படி நடத்தி வருவதற்கே நான் சிரத்தையுடன் முயல்வேன். சுதந்தரத்தையும், நியாயத்தையும், ஸமாதானத்தையும், ஆதாரமாகக்கொண்டு ஸர்வஜன நியந்தாவாகிய கடவுளின் திருவருள் பெற்று ப்ரிடிஷ் ராஜ்யத்தின் பாக்கியத்தை ரக்ஷித்து வரக்கடவேன்."

இப்போது ஜார்ஜ் மஹாராஜா ராஜாங்கமென்னும் கப்பலின் முன்னணியத்தில நின்றுகொண்டிருக்கிருர்- இவர் காலத்தில் இனி பெருத்த பிரதாபம் பொருந்திப செயல்கள் நடக்கவேண்டியிருக்கின்றன.

இவருடைய குணதிசயங்களைப் பற்றி மிஸ்டர் ஸ்டெட் என்னும் பத்திராதிபர் பின் வருமாறு கூறுகிருர்:—

"மஹாராஜா யோக்கியர். மற்றவர்களுடன் தாம் நடத்தும் சகல விவகாரங்களிலும் நேர்மையாய் நடந்து கொள்பவர். அவருக்கு அபாரமான தீக்ஷ்ண புத்தியாவது கண்டோர் பிரமிக்கும்படியான அபூர்வஞான விசேஷமாவது இருப்பதாக நான் சொல்ல வரவில்லை. ஆனல் தாம் பொதுஜனங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சரியாய் உணர்ந்திருப்பதிலும், தம்மைப்படைத்த ஈசனை வினயபூர்வமாய்ச் சார்ந்திருப்பதிலும் இவரைவிட சிறந்த அரசன் இங்கிலாந்து தேசத்து சிம்மாசனத்தில் இதற்கு முன் எப்போதும் ஏறியது கிடையாதென்று நான் உறுதியாகச் சொல்வேன்."

இத்தகைய குணவிசேஷம் வாய்ந்த புருஷனையே நாம் இந்த சமயம் நமது மஹாராஜ சக்ரவர்த்தியென்று இறுமாப்புடன் போற்றும் பாக்கியம் பெற்றிருக்கிறோம்.

ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் மத்தியில் அதிக ஒற்றுணர்ச்சி இருக்கவேண்டுமென்று நமது மஹாராஜா மிக்க வாக்சாதுரியத்துடன் பரிந்து பேசியிருக்கிறபடியால், இவர் அரசாட்சியில் அந்த உணர்ச்சி முதிர்ந்து இந்தியா தேசம் மற்ற தேசங்களினிடையில் உன்னத பதவியடையுமென்று இந்தியர்கள் ஆவலாய் எதிர்பார்த்திருக்கிருர்கள்.



# CORONATION ODE.

மாட்சிமை தங்கிய

## ஜார்ஜ் சக்கரவர்த்தியின்

## முடிசூட்டுவைபவ வாழ்த்துப்பாட்டுகள்,

———(:o:)———

இராகம் :—" மார்கழிமாதந் திருவாதிரைநாள் " என்றமெட்டு.

**ஜய ஜய ஜார்ஜ் மகராஜ்,**

(1) தந்தையா யுயிர்க்குத் தரணியை யாண்டிடுந் தண்ணருள் எங்கள் ராஜ்
சிந்தைம கிழ்ந்திடச் செப்பிடு வோம்யாம் ஜயஜய ஜார்ஜ் மகராஜ்.

(2) தெள்ளமுதனையத் தித்திக்கும் நற்சுகம் தெவிட்டாதளிக்கும் ராஜ்
உள்ளம கிழ்ந்திட உரைத்திடுவோம் யாம் ஜயஜய ஜார்ஜ் மகராஜ்.

(3) இரவியைப் போலெங்கும் புகழொளி நிலவிடும் இன்னருள் செங்கோல் ராஜ்
பரவசம் பொங்கிடப் பகர்ந்திடுவோம்யாம் ஜயஜய ஜார்ஜ் மகராஜ்.

(4) துஷ்டரை நிக்ரஹி சிஷ்டரை ரட்சக தொல்சீர்ச் செங்கோல் ராஜ்
இஷ்டத்துடனே இயம்பிடுவோம்யாம் ஜயஜய ஜார்ஜ் மகராஜ்.

(5) முப்பது கோடியா மிந்திய உயிர்க்கு முதல்வன் ஆயிடும் ராஜ்
ஒப்பரும் ஒண்முடி உயர்டில் லியிற்தரி ஜயஜய ஜார்ஜ் மகராஜ்.

(6) சூரிய ஜோதி சோர்வடை யாதிரு மகிதலம்ஆண்டிடும் ராஜ்
நாரியர் திலகமாம் மேரியரசியோ டிலங்கிடும் ஜார்ஜ் மகராஜ்.

(7) வருஷிக்க மும்மழை வளநிலஞ் செழித்திட ஆண்டிடும் எங்கள் ராஜ்
கிருஷியுமோங்கிடக் கிளைத்திடக்குடிகளும் ஜயஜய ஜார்ஜ் மகராஜ்.

(8) எழுந்திடு மெங்களதிளநாகரிகம் என்றுந்தழைத்திட ராஜ்
ஒழுக்கமுங் கல்வியும் உயர்ந்து வளர்ந்திட ஜயஜய ஜார்ஜ் மகராஜ்.

(9) கனவர்த்தகமுங் கைத்தொழில்விர்த்தியுங் கடுகிவ்ளர்ந்திட ராஜ்
ஜனத்திரளிந்தியர் ஸர்வசுகம்பெற ஜயஜய ஜார்ஜ் மகராஜ்.

(10) இழையிடை நங்கையர் எழிலுங்கற்பு மினிதாயிலங்கிட ராஜ்
"பிழைக்கும் வழி"யும் பெருமையாயோங்கிட ஜயஜய ஜார்ஜ மகராஜ்.

சு. அ. சு.

# A SONG OF PRAYER.

## தெய்வப்பிரார்த்தனை கீதம்.

BY Rao Sahib M. ABRAHAM PANDITHAR.

———(:o:)———

சிறப்புற்றோங்கும் பிரிட்டிஷ் இராஜ்யபாரந்தாங்கும் மாட்சிமைதங்கிய ஜியார்ஜ் ஐந்தாவது மன்னனும் அவரது பட்டமகிஷி மேரி இராணியவர்களும் இந்தியாவில் டில்லிமாநகரம் வந்து ஏகசக்ராதிபத்திய கிரீடதாரணம் பெறும் சமயத்தில் தமது திருவருள் கடாட்சிக்கத் தெய்வத்தைப் பிரார்த்திக்கும் இராஜகீதம்.

தீரசங்கராபரணம். ஏகதாளம்.

பல்லவி.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ | மா | தே | வா |
| திருவருள் | புரியஇத் | தருணமிங்கு | நீயும்வா. |

சரணங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சிங்கக்கொடி | பெற்றிலங்கும் | எங்கள் ராஜ்ஜி | யம் |
| | சங்கைஜியார்ஜி | மன்னன்மகிஷி | மேரி அன்னை | யும் |
| | மங்களமாய் | மாலைசூடிச் | செங்கோல்கைக்கொண் | டு |
| | பங்கமின்றி | ஆண்டுவரப் | பட்டம்சூட்ட | வா. |
| 2 | வெற்றிவேந்த | னாகிவேந்தர் | வேந்தனுன்த | யை |
| | பெற்றுநீதி | இரக்கம்அன்பு | பொறுமைஉரி | மை |
| | உற்றுச்செங்கோல் | பெற்றுலகில் | ஒன்றுபோலெம் | மை |
| | முற்றுங்காக்கக் | கிருபைசெய்ய | வேண்டிக்கொள்கி | றோம். |
| 3 | மண்ணிற்செல்வம் | மேன்மைஆயுள் | மக்கட்பேறு | டன் |
| | விண்ணின்மணியைப் | போலிலங்கி | விளங்கும்பேரு | டன் |
| | கண்ணின்கரு | மணியைப்போல | காத்துச்சீரு | டன் |
| | எண்ணும்நன்மை | யாவுந்தர | இரங்கவேண்டி | னோம். |
| 4 | காரணனும் | கர்த்தனுந்தன் | கருணைபொங்க | வே |
| | மாரணஞ்செய் | சத்துருக்கள் | வர்மம்நீங்க | வே |
| | தோரணமோ | டெங்கும்வெற்றிக் | கொடியும்ஓங்க | வே |
| | பூரணசீர் | வாதந்தந்து | புவியில்தாங்க | வா. |
| 5 | ராஜாஎன்றும் | வாழ்கவே! நீ | டூழிவாழ்க | வே! |
| | ராஜவிசு | வாசிகளும் | மற்றும்யாவ | ரும் |
| | பாசமோடு | ராஜகீதம் | பாடிவாழ்க | வே! |
| | தாசர்வேண்டும் | தருணம்அருள் | தந்துகாக்க | வா. |

ம. ஏப்ரஹாம் பண்டிதர்.



# WHAT IS LIFE?

BY

P. T. SRINIVASA AIYANGAR, M. A. F. M. U.

## உயிர் என்றால் என்ன?

(எழுதியபடி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது).

---

உலகத்தில் இருக்கும் பொருள்கள் உயிருள்ளவை சிலவும் உயிரில்லாதவை சிலவும் என்று எல்லாருக்கும் தெரியும். உயிர் என்றால் என்ன? அதற்கு அடையாளம் என்ன? அது செய்யும் வேலை என்ன? என்று தீர விசாரிப்போம்.

வஸ்துக்கள் ஸ்தாவரம், ஜங்கமம், இந்த இருவகை என்று சாதாரணமாய் சொல்வது உண்டு. ஸ்தாவரம் என்றால் அசையாப் பொருள். ஜங்கமம் என்றால் அசையும் பொருள். அசையாப் பொருள் உயிரில்லாதது என்றும் அசையும் பொருள் உயிருள்ளது என்றும் இதன் அர்த்தம். அதாவது உயிருள்ள பொருள் தானாய் அசையும் என்றும், உயிரில்லாதது வேறொரு பொருள் அதை தள்ளினால்தான் அசையும், ஓடும், என்றும், ஆகையால் தானாய் அசைதலே உயிருக்கு அடையாளம் என்றும் நினைத்து இந்த வார்த்தைகளை உபயோகப்படுத்துகிறோம். ஆனால் காற்று அடிக்கும்போது தானாகவே ஓடுகிறதே ஒழிய வேறே ஒரு பொருள் அதை ஓட்டவில்லை. காற்று உயிருள்ள வஸ்து அல்ல. ஆகையால் தானாய் அசைதல் உயிர் இருக்கிற வஸ்துவின் குணம் என்று நினைக்கிறது சரியல்ல.

உயிர் என்கிற சொல்லுக்கு முதலில் மூச்சு என்பது அர்த்தம். இன்னமும் நெட்டுயிர்ப்பு என்றால் நீண்ட மூச்சு என்னும் அர்த்தத்தில் உபயோகிக்கிறோம். ஆகையால் மூச்சு விடுதல் உயிரிருக்கிற வஸ்துக்களுக்கு அடையாளமாய் வைத்துக்கொள்ளலாம். மூச்சு என்றால் மூக்கு வழியாய் காற்று உள்ளே போவதும், திரும்பி வருவதுமேயாம். ஆனால் உயிருள்ள பொருள்கள் எல்லாம் மூக்கு வழியாய் மூச்சு விடுகிறதில்லை. காற்றையே உள் இழுத்து வெளிவிடுகிறது மில்லை. மீன்கள் நீரை உள் கொண்டு, வெளிவிடும். அந்த நீரில் காற்று கரைந்து, கலந்து இருக்கும். புழுக்களும் மரவகைகளும் * உடலெல்லாம், காற்றை உள் கொண்டு, வெளிவிடும். ஆகையால் மூச்சு விடுகிறது என்கிறதை மூக்கினால் ஸ்வாஸம் விடுகிறது என்று அர்த்தம் பண்ணிக்கொள்ளாமல், எந்தவிதமாயாலும் காற்றை உண்டு, வெளிவிடுகிறது என்று அர்த்தம் பண்ணிக்கொண்டால், மூச்சு விடுதல் ப்ராணிகள் எல்லாவற்றுக்கும் உண்டானகுணம் என்று ஒப்புக்கொள்ளலாம்.

ம்ருகவகையில் முலையுள்ளவை, பறவை, முதலியவையின் உடல் உயிருள்ளவரையில் சுட்டுக்கொண்டு இருக்கும். இவை மூக்கோட்டை வழியாய் காற்றை உள்ளிழுக்கும். உள்ளே போகும் காற்று மூச்சுப்பையில் நிரம்பி, திரும்பி வெளியில் வரும். உள்ளே போகிறதும் காற்று, வெளியில் வருகிறதும் காற்று, ஆனாலும், இரண்டும் ஒன்றல்ல. உள்ளே போகும் காற்றில் ஆக்ஸிஜன் என்

---

* ஸமஸ்க்கிருதத்தில் உயிர் என்பதுக்கு ப்ராணம் என்று பேர். ப்ராணம் என்றாலும் மூச்சே, ப்ராணி என்றால் மூச்சு விடும் பொருள். ஆனால் வழக்கத்தில் உயிருள்ளவை எல்லாவற்றுக்கும். இந்த வார்த்தை உபயோகப்படுகிறது. ப்ராணிகள் இரண்டு ஜாதி. மரம், செடி, புல, பூண்டு, முதலியவை ஒரு ஜாதி. மனிதன், மற்றைய முலையுள்ள ஜந்துக்கள், பறவை, ஊர்வன, மீன்கள், புழு, முதலியன இன்னொரு ஜாதி. முதல் ஜாதியை மாவகை என்றும் இரண்டாவதை ம்ருகவகை என்றும் பேர்வைத்திருக்கிறேன். இவைகளை இங்கிலீஷில் வெஜிடபில், அநிமல் என்று சொல்வார்கள்.

னும் காற்றுவகை * ஜாஸ்தியாகவும் வெளியில் வருவதில் கார்பானிக் ஆஸித் என்னும் காற்றுவகை ஜாஸ்தியாகவும் இருக்கும். ஆக்ஸிஜன், கார்பானிக் ஆஸித், இந்த காற்றுவகைகளின் குணங்களை பற்றி வேறே ஆர்ட்டிக்கிளில் சொல்லுகிறேன். மூச்சுப்பையில் போகும் ஆக்ஸிஜன் மூச்சுப்பை பக்கத்தில் ஓடும் ரக்தத்தோடு கலக்கும். அந்த ரக்தத்திலிருந்து கார்பானிக் ஆஸித் மூச்சுப்பைக்குள் வந்து வெளியில வரும் காற்றுடன் கலந்து வந்து விடும்.

மீன்களுக்கு உடல் குளிர்ந்திருக்கும். மீன் காற்றை உள் கொள்ளாது. வாயால் தண்ணீரை உண்டு, கழுத்திலிருக்கும் ஓட்டைகளால் வெளிவிடும். கழுத்தில், மனிதன் மூச்சுப்பையிலில் போலவே, மீன் ரக்தத்திலிருந்து கார்பானிக் ஆஸித் தண்ணீருக்கும், தண்ணீரில் கரைந்திருக்கும் ஆக்ஸிஜன் ரக்தத்துக்கும் போகும். ஆக்ஸிஜன் கரைந்திருக்காத தண்ணீரில் மீன் உயிருடன் இருக்காது. கிணற்று தண்ணீரைகாய்ச்சிணல் அதிலிருக்கும் ஆக்ஸிஜன் ஓடிப்போம். அப்படிப்பட்ட நீரில் மீனை போட்டுவைத்திருந்தால் அது உடனே செத்துப்போம். சமுத்திரத்தில் இருக்கும் ம்ருகவகைகள் எல்லாம் மீன் அல்ல. திமிங்கிலம் மீன் அல்ல, மீனைப்போல் தண்ணீர்குடித்து ஆக்ஸிஜன் சம்பாதிக்காது. அப்போதைக்கப்போது, நீரின் வெளியில் வந்து மூச்சுவிட்டுப் போகும்.

* காற்றுவகை என்னும் வார்த்தையை காற்றைப் போல் கண்ணுக்குத் தெரியாமல் அடித்தால் உடம்புக்குத் தெரியும் வஸ்துக்குபோக வைத்திருக்கிறேன்.

* புழுக்களுக்கு உடம்பு எல்லாம் மூக்கே, அவைதோல் நம்முடைய தோலைவிட மெலியது. ஆகையால் தோல் வழியாய் காற்றிலிருந்து ஆக்ஸிஜன் உள்ளே போகும். தோல் வழியாயே கார்பானிக் ஆஸித் வெளியில் வரும். மரவகைகளுக்கு இது மாதிரியே பட்டைகளிலும் இலைகளிலும் இருக்கும் ஓட்டைகள் வழியாய் ஆக்ஸிஜன் உள்ளே போய் கார்பானிக் ஆசித் வெளியில் வரும். இந்த மாதிரி ஆக்ஸிஜன் உள் கொண்டு கார்பானிக் ஆஸீத் வெளிவிடுவது உயிருக்கு குணம். ஆக்ஸிஜன் உயிருள்ள பொருள்களுக்கு உள்ளே போய் என்ன வேலை செய்யும், கார்பானிக் ஆஸித் என்னத்துக்கு வெளிக்குவரவேண்டும், மூச்சுவிடுவதை விட முக்கியமான வேறு வேலைகள் உயிரினல் ஆகுமா என்ற கேள்விகளுக்கு இன்னொரு ஆர்ட்டிகிலில் பதில் சொல்லுகிறேன்,

பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

* சாதாரணமாய் பூச்சிகள் அதாவது 6 காலும் ரக்கைகளும் உண்டானவை காற்றையே உள்கொள்ளும். புழுக்கள் என்றால் ம்ருதுவான தோலுண்டானவை. பூமிமேல் ஊரும், பாம்புவகைகள் பூச்சியும் அல்ல; புழுவுமல்ல; மூக்காலேயே மூச்சுவிடும்.

---

## MIRRORS.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAO M. A. L.T.

## முகம்பார்க்கும் கண்ணாடிகள்.

ஸாதாரணமாய்ப் புழங்கும் கண்ணாடி ஸாமான்களிளெல்லாம் ஒவ்வொருவராலும் உபயோகிக்கப்படுவது முகம்பார்க்கும் கண்ணாடி. இவ்வகைக் கண்ணாடிகளுக்கு தமிழ் பாஷையில் புழக்கத்தில் தனிப்பெயர் ஒன்று இல்லாதபோதிலும் வழக்கத்திலுள்ள " கண்



ணாடி' என்னும் 'பதத்தையே இவைகளுக்கு உபயோகித்து, 'க்ளாஸ்' என்பதை பொதுப் பெயராக இந்த வியாஸத்தில் உபயோகிக்கிறோம். 'தர்ப்பணம்' 'ஆதர்சனம்' என்னும் வார்த்தைகள் இவைகளைக் குறிக்குமாயினும் அவ்வார்த்தைகள் வழக்கத்தில் இல்லை. புதிதாக வழக்கத்திற்கு கொண்டுவர வேண்டியிருக்கிறது. கண்ணாடிகளின் வகைகளையும், அவைகளை எப்படிச் செய்கிறார்களென்பதையும், அவைகளை எப்படிக் காப்பாற்றிவைத்துக் கொள்ளலாம் என்பதையும் அவைகளில் விகார உருவங்களைக் காட்டுகிறவைகளை எப்படி தெரிந்தெடுத்து நீக்கிவிடலாம் என்பதையும் பற்றி விவரிப்போம்.

கண்ணாடிகளுக்கு முக்கியமாய் வேண்டியது மிகவும் வழுவழுப்பான ஸம பரப்பேயாம். ஒரு டம்ளரில் வைத்த ஜலத்தைப் பார்த்தால் நம்முடைய பிம்பம் தெரியும். ஜலத்தை அசைக்க மேற் பரப்பு மேடு பள்ளமாய் உருவத்தை காட்டுகிறது. நம் வீடுகளில் நன்றாய்த் தேய்த்து வைத்த பாத்திரங்களை எடுத்துப் பார்த்தால், அவைகளில் நம்முடைய உருவத்தைக் காண்கிறோம். அப்பாத்திரங்களை மிருதுவான மணல் சம்பந்தமில்லாத மண்ணினால் தேய்த்தால், மேற்பரப்பு அதிக ஸமமாயும் பளபளப்பாயும் வர நம் பிம்பம் அதிகத்தெளிவாக காணப்படுகிறதல்லவா? அவைகளை ஸாதாரண மண் சாம்பல் முதலியவற்றால் தேய்த்துக் கழுவினல் வெளிப்புறம் சொரசொரப்பாய் நம்முடைய உருவமும் தெளிவாய்த் தெரிகிறதில்லையே? இம்மாதிரியான பிரதிபிம்பிக்கும் குணத்தை எந்த உலோகப்பாத்திரத்திலும் எளிதில் உண்டாக்கலாம். ஆதலால் உலோகத்தகடுகளால் கண்ணாடிகள் செய்யலாமே என்பீர்கள். க்ளாஸாலாகிய கண்ணாடிகள் அந்நிய தேசங்களிலிருந்து இத்தேசத்திற்கு தாராளமாய் வருவதற்குமுன் உலோக கண்ணாடிகள் இத்தென்னிந்தியாவில் செய்து வந்தார்கள். இப்போதும் திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் சில இடங்களில் இக்கைத்தொழிலை பயிற்சி செய்து வருகிறார்கள். இக்காலத்தும் சில ஆசார சீலர்கள் வீட்டில் ஸ்னானம் பண்ணினபிறகு க்ளாஸால் செய்த கண்ணாடிகளை உபயோகிக்காமல், உலோகத்தால் செய்த கண்ணாடிகளைத்தான் உபயோகிக்கிறார்கள். இக்கண்ணாடிகளின் மேற்பரப்பை அஜாக்கிரதையினால் தேய்த்து விடுவதால் இவைகள் கெட்டுப்போவதாலும், க்ளாஸ் கண்ணாடிகள் அனேக விசித்திரமான வேலைப்பாடுடனும் விலை ஸரஸத்துடனும் ஏராளமாய் கிடைப்பதாலும், இக்கைத்தொழில் அதிசீக்கிரத்தில் க்ஷீணித்து விட்டது. க்ளாஸ் கண்ணாடிகளைப்போல இரட்டை பிம்பம் காட்டாமல், உலோகக் கண்ணாடிகள் ஒரே பிம்பத்தைக் காட்டுவதால், இதையே இக்காலத்திலும் நக்ஷத்திரங்களை கவனித்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சில விதமான தூரத்ருஷ்டி கண்ணாடிகளில் உபயோகித்துவருகிறார்கள்.

ஸாதாரணக் கண்ணாடிகள் ஸமமாக மெருகுவைத்த பக்கங்களையுடைய தகடுபோன்ற எங்கும் ஒரே பருமனான கண்ணாடி பில்லைகளால் செய்யப்படுகின்றன. இப்பில்லைக்கு ஒரு பக்கத்தில் மிகவும் மெல்லிய ஒரு உலோகத்தகடு ஒட்டியிருக்கும். இப்படை மிகவும் மெல்லியதாதலால் நகத்தாலும் கீறிவிடலாம். கண்ணாடி வழிச் செல்லும் ரேகைகளெல்லாம் இப்படையின் மேல்பட்டு திரும்புகின்றன. இப்படையும் ஸமபரப்புள்ளதாகையால் நம் பிம்பம் தெளிவாய்த் தெரிகின்றது. பழைய மிரர்களில் இப்படை ஆங்காங்கு கெட்டுப் போவதால் நம் உருவம் ஒரே சீராய் எங்கும் தோன்றுவதில்லை. இம்மெல்லிய உலோகப்

படையை ஜாக்கிரதையாய் காப்பாற்றவேண்டியது அவசியமாதலால், அதன்மேல் சிவப்பு நிறமுள்ள ஒரு வர்ணப்பொடி மொத்தமாக பூசப்பட்டிருக்கிறது. கொஞ்சம் விலை அதிகமான பில்லைகளிலெல்லாம் இப்படை வெள்ளியாலானது. இப்படை அதிக நாள்பட நிற்கும். இன்னொரு விதமான விலை ஸரஸமான கண்ணாடிகளில் பாதரசமும் வெள்ளியும் சேர்ந்த படை க்ளாஸின்மேல் படிந்திருக்கிறது. இக்கண்ணாடிகள் அதிசீக்கிரத்தில் கெட்டுப்போகின்றன. நமக்கு வேண்டிய கண்ணாடித்துண்டை எண்ணெய்ச்சிக்கும் அழுக்கும்போக நன்றாய்க் கழுவி வெள்ளி திராவகம் ஸம்பந்தமான ஜலத்தில் வைக்க, மிகவும் மெல்லிய வெள்ளிப்படை க்ளாஸ் தகட்டின் மேல்படியும். இதை உடனே தொடாமல் சுத்த ஜலத்தில் கழுவிக் காயவைத்து அதன்மேல் சிவப்பு வர்ணம் தடவுகிறார்கள். நாம் எடுத்த கண்ணாடி ஸமமான பக்கங்களையுடையதல்லவானால் நம் முகம் விகாரமாயும் பூதாகாரமாயும் காணப்படும். க்ளாஸின் வழியாய்ச் செல்லும் வெளிச்சந்தான் பிரதிபிம்பித்து நமக்கு வருவதால், கண்ணாடியின் மேற்பரப்பும் களங்கமற்றதாயும் இருக்கவேண்டியது அவசியமல்லவா? ஆதலால் கண்ணாடிகளில் மூலாத்தை மாத்திரமேயன்றி மேல்பரப்பையும் அதிக ஜாக்கிரதையுடன் காப்பாற்றவேண்டும். மேல் பக்கத்தை சொரசொரப்பான வேஷ்டி முதலிய வற்றால் தேய்த்தால் தெளிவான தோற்றம் நீங்கிகோடுகள் உள்ளதாகக்காணப்படும். உருவமும் மங்கலாகத் தோன்றும், ஆதலால் கண்ணாடியின்மேல்பாகத்தை அடிக்கடி தொடக்கூடாது. துடைக்கவும் கூடாது. துடைக்கவேண்டி நேரிடும்போது மிகவும் மிருதுவான மஸ்லின் முதலான துண்டுகளாலே மாத்திரம் தூசிகளைப்போக்க வேண்டுமேயொழிய ஸ்னானம் செய்வதற்கு உபயோகிக்கும் முண்டுகளால் துடைக்கவேகூடாது. ஈரத்துணியால் அடிக்கடி துடைக்கக்கூடாது. மேலும் கையில் வியர்வை எப்போதும் இருப்பதாலும், கண்ணாடியின்மேல் வியர்வை பட அவ்வியர்வை கண்ணாடியைமெல்ல தின்றுவிடுவதாலும், கண்ணாடியின் மேற்பரப்பு மங்கலாகி உபயோகப்படாமல் போகிறது. பெண்டுகள் கண்ணாடியின்மேல் நகை முதலானவைகளை ஸாதாரணமாய் வைப்பது வழக்கம். இதனாலும் கண்ணாடியின் மேற்பரப்புக் கெட்டுப்போகின்றது.

முகத்தை விகாரமாகவும் பூதாகாரமாகவும் காட்டும் குணம், ஸன்னத் தகடுகளால் செய்த கண்ணாடிகளில் உண்டு. ஆகையால், வாங்கும்போதே மொத்தமான பில்லைகளாலாகியவைகளைத் தெரிந்து எடுப்பது நல்லது. ஸன்னக் கண்ணாடிகளுக்குப் பின்புறம் அனேக ஸன்னக் கண்ணாடித்துண்டுகளை வைத்து மொத்தமான சட்டம் கட்டி, நல்ல கண்ணாடியென்று ஏமாற்றி விற்றுவிடுகிறார்கள். இச்சூதை சுலபமாய்க் கண்டறியலாம். கண்ணாடியைக் கையில் எடுத்து நம்முடைய முகத்தை மாத்திரமன்றி கொஞ்சம் தூரத்திலுள்ள வீட்டுக் கூரைகள், வாயிற் படிகள் முதலானவைகளின் பிம்பத்தை கவனித்தால், அவைகளில் தோன்றும் கோடுகள் வளைந்திருப்பதாக காணப்பட்டால் கண்ணாடி உபயோகமில்லாததென்று தள்ளி விடவேண்டியதுதான். மேலும் நம் கைவிரலை பில்லையின்மேல் வைத்து அதன் பிம்பத்திற்கும் அதற்கும் இடையுள்ள தூரத்தை கவனிக்க, அது கால் அங்குலத்திற்குக் குறையாமல் காணப்பட்டால், நல்ல கண்ணாடி என்றே ஊகிக்கலாம். நல்ல கண்ணாடிகளில் கவனிக்கும்போது இரண்டு பிம்பங்கள் தோன்றும். ஒன்று தெளிவாகவும்



மற்றொன்று அதன் பக்கத்தில் மங்கலாகவும் தென்படும். மங்கலானது கண்ணாடியின் முன்புறத்தால் உண்டாகிறது. தெளிவானதுதான் பின்புறத்துள்ள உலோகப் படையினால் உண்டாவது.

இக்கண்ணாடியின் முன் பக்கமாக ஒரு விளக்கை வைத்து கண்ணாடியின் மேற்பரப்பின் பக்கத்தில் கண்ணை வைத்து விளக்கின் பிம்பங்களைப் பார்க்க, 5,6 உருவங்கள் தோன்றும். இவற்றின் காரணத்தை யோசித்துக் கண்டுகொள்ளுங்கள். கேலீடாஸ்கோப் என்று வெகு உருவதரிசனி என்றும் சொல்லப்பட்ட திருப்பிக்கொண்டே பார்க்கப்பார்க்க விதம் விதமான உருவங்களைக் காட்டும் அரை அணாவிலையுள்ள குழாயை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதில் மூன்று கண்ணாடிச் சட்டங்கள் முக்கோண உருவமாக கட்டி உள்ளே வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ஓரத்தில் உடைந்த வர்ணக் கண்ணாடித் துண்டுகள் கிடக்கின்றன. இந்த முக்கோணத்தின் மையம் வழியாய் இந்த வர்ணத்துண்டுகளைப் பார்க்க, அவைகளும் அவற்றின் பிம்பங்களும் பலவித உருவங்களுடன் காணப்படுகின்றன. இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் குழந்தைகள் அளவில்லாச் சந்தோஷமடைகிறார்கள். வண்டி விளக்குகளுக்கு பின்புறம் அடுத்து உபயோகிக்கும் வட்டமான உருவமுடைய கண்ணாடிகள் ஸமபரப்புள்ளவையல்ல, குவிந்த பக்கங்களையுடையன. இதனால் விளக்கிலிருந்து கண்ணாடியின் மேல்படும் கிரணங்களெல்லாம் விளக்கின் பக்கமாகவே திரும்பி விளக்கின் முன்புறம் படும் வெளிச்சத்தை அதிகரிக்கின்றன. இவைகளில் பிம்பத்தைப் பார்த்தால், நம் முகம் பூதாகாரமாகவும், தூரத்திலுள்ளவைகளின் பிம்பம் சிறுத்தும் தலை கீழாகவும் வலமிடம் மாறியும் காணப்படும், அவைகளில் சூரிய கிரணங்கள் நேராய்ப் படும்படி பிடித்தால் மேல்படும் கிரணங்கள் குவிந்து ஓரிடத்தில் சூரிய பிம்பம் சிறுத்தும் அதிக உஷ்ண தீக்ஷண்யத்துடனும் காணப்படும். அவ்விடத்தில் கருப்பான காகிதத் துண்டுகளை பிடிக்க அவை சீக்கிரம் தீப்பற்றும். மெழுகுவத்தி ஸ்தம்பங்களில், எரியும்போது ஜ்வாலையின் மேல் தலை கீழாக மற்றொரு ஜ்வாலை காணப்படுவதின் காரணமென்ன?

எம். வி. எஸ். அநந்தபத்மநாபராவ்

---

## MICA.

BY

T. C. V. RAMANA AIYAR.

## அப்ரகம்

---

இது பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்ட தாதுப் பொருள்களில் ஒன்று. இது பார்வைக்கு பளப்பளப்புள்ளதும், அதிக மெல்லிய தகடுபோல் பிளந்து எடுக்கக்கூடியதுமான பொருள். இது அந்நிய தேசங்களில் பல விடங்களில் பூமியிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டு லாந்தர்களுக்கு கண்ணாடியாக உபயோகிக்கப்பட்டு ஏராளமாய் இந்தியாவிற்கு வருகிறது. ஒரு அங்குலம் கனதியுள்ள துண்டை யெடுத்து தண்ணீரில் ஊறவைத்துப் பிளந்தால் சுமார் 100 தகடுகளாகப் பிரிக்கலாம். இது நீலகிரிமலையின் மேல் கூடலூருக்கு சமீபத்தில் ஏராளமாக எடுக்கப்பட்டு இங்கிலாண்டுக்கு அனுப்பப்படுகிறது.

ஸமீபத்தில் நான் கோயமுத்தூர் ஜில்லா பவானி தாலூக்காவில் பிரயாணம் செய்ய நேர்ந்த ஸமயத்தில் நேரில் கண்ட அனுபோகத்தில் கீழ்வருவனவற்றை "பிழைக்கும்,

வழி" யைப்படிக்கும் நேயர்களுக்கு தெரிவிக்க எண்ணங்கொண்டு எழுதலானேன்.

ஈரோடு ரயில்ஸ்டேஷனை விட்டு ஒன்பது மைல் தூரத்திலுள்ள பவானி என்ற ஊரையடைந்து, அங்கிருந்து அத்தாணி என்று அழைக்கப்படுகிற கிராமத்திற்குச்செல்லுகிற பாதையில் ஆப்பக்கூடல் என்ற ஒரு சிறிய கிராமமும் அதற்கு ஸமீபத்தில் பாதையின் பேரில் ஒரு சிறிய ஏரியுமிருக்கின்றன. இந்த ஏரிக்கு ஸமீபத்தில் அப்ரகம் விளையும்படியான பூமிகள் அதிகமாயிருக்கின்றன. நான் இப்பாதையில் செல்லும்பொழுது அதிக மழையாகஇருந்தபடியால் பாதைகளில் அநேக இடங்களில், தண்ணீர், பாதையை அறுத்தும் அடித்துக்கொண்டு போயுமிருந்தது. மேற்சொன்ன ஏரிக்கு ஸமீபத்தில் பாதை அதிகமாக சேதப்பட்டிருந்தபடியால் சில ஆட்கள் பாதையின் இருபுறத்திலுமுள்ள கால்வாய்களைத் தோண்டி பாதையின் பேரில் மண்போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படி போடப்பட்ட மண்ணில் ஏராளமான அப்ரக துணுக்குகள் இருப்பதைக்கண்டு அவைகளில் சிலவற்றை எடுத்துப் பார்த்தேன். சில துண்டுகள் அரையங்குலம் முதல் ஒரு அங்குலம் வரை கனமுள்ளனவாயும் ஐந்து ஆறு அங்குலம் நீளமும் அகலமு முள்ளனவாயுமிருந்தன. சிலவற்றை விரல் நகத்தால் கீறிப்பிளக்கும்பொழுது பல மெல்லிய தகடுகளாக பிரிக்கக் கூடியவைகளாயுமிருந்தன. இவைகளைப்பற்றி விசாரிக்கையில் இந்த ஏரியின் உட்பாகத்தில் பல இடங்களிலும், ஏரியின் வெளிப்புறத்திலுள்ள சிற்சில பூமிகளிலும் இம்மாதிரி அப்ரகச் சுரங்கங்கள் ஏராளமாயிருப்பதாகவும், ஜாக்கிரதையாக வெட்டியெடுத்தால் அதிக நீளமும் அகலமும் கொண்ட பலகைகளாகத்தோண்டியெடுக்கலாமென்றும் சொன்னார்கள். தொழில் முயற்சியில் அக்கரையுள்ள அபிமானிகள் உடனே இந்த இடத்தை பார்வையிட்டு இந்த தாதுப்பொருளை யெடுத்து பிறதேசங்களுக்கு அனுப்பியாவது அல்லது இவ்விடத்திலேயே வேண்டிய வேலைகளுக்கு உபயோகப் படுத்தியாவது நல்ல லாபத்தையடையலாம். கண்ணாடி செய்கிறவர்களுக்கு இந்த தாதுப்பொருளும் கூட்டுப் பொருளாக உபயோகப்படுகிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். அது எவ்வளவு உண்மையோ எனக்குத் தெரியாது.

தவிர இந்த தாலூக்காவில் பூமியானது பல இடங்களில் பலவிதமான கற்களையுடையதாயிருக்கிறது. சில இடத்தில் வெங்கற் செங்கல் என்ற கற்கள் ஏராளமாயிருக்கின்றன. சில கற்களை எடுத்துப்பார்த்தால் வயிரமோ, புஷ்பராகமோ, ஸ்படிகமோ என்று கருதும்படியாக அவ்வளவு ப்ரகாசமும், பள பளப்பும் நயமுமுள்ளதாய் இருக்கின்றன. சில இடங்களில் இருப்புக்கற்கள் கருத்த நிறமுள்ளனவாயும், ஸாதாரண கற்களைவிட இருமடங்கு கனமுள்ளனவாயுமிருக்கின்றன. சிறிது காலத்திற்குமுந்தி இத்தாலூக்காவில் துருஞ்சிக்கல் என்ற ஒருவகைக்கற்களை ஒருசேட் தோண்டியெடுத்து பம்பாய்க்கு அனுப்பிக்கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டேன். இம்மாதிரி பூமிக்கடியில் புதைந்து கிடக்கிற தாதுப்பொருள்கள் பல இடங்களில் அநேகமிருந்தபோதிலும், கோயமுத்தூர் ஜில்லா பவானி, சத்திய மங்கலம் தாலூக்காக்களிலிருப்பது போல் அவ்வளவு அதிகமாயிராதென்று நினைக்கின்றேன்.

டி. வி. வி. ரமணய்யர்,



## SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### COMPETITION AND COMBINATION.

### போட்டியும்,ஐக்கியமும்.

ஒரு வேலையில் அல்லது தொழிலில் அமர்ந்திருக்கும் எல்லோரும் சமமாக இருக்கலாம் என்பது அசாத்தியம். ஏனென்றால் இரண்டு வேலைக்காரர்கள் ஒரே நேரத்தில் புறப்பட்டு ஒரேவிதமான ஆயுதங்களை எடுத்துக்கொண்டு ஒரே வேலை செய்யத் தொடங்கினாலும் மறுநாள் பார்த்தால் கொஞ்சம் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். ஒவ்வொருவனும் மற்றவனைவிட நேர்த்தியாகச் செய்ய யத்தனிக்கிறான். பந்தயத்தில் ஒரே இடத்திலிருந்து புறப்பட்ட எல்லோரும் எப்படி ஒவ்வொருவராய் முந்திக்கொள்ளுகிறார்களோ அவ்விதமாகச் சுறுசுறுப்புள்ளவன் சோம்பேறியை முந்துகிறான். கஷ்டப்படுகிறவன் சுகத்தை அபேக்ஷிக்கிறவனை முந்துகிறான். புத்தியைக் கொண்டு வேலை செய்கிறவன் கையால் வேலை செய்கிறவனைத் தோற்கடிக்கிறான்.

அற்பமான வேலை முதற்கொண்டு, பெரிய வேலைவரைக்கும் போட்டியில்லாமல் இராது. ஒரே தொழிலில் ஏற்பட்டிருக்கிறவர்களுக்குள்தான் அது ஜாஸ்தியாயிருக்கும். முதல் இரண்டு மூன்று பேர்களுக்குள்ளும் கடைசி இரண்டு மூன்று பேர்களுக்குள்ளும் போட்டி மிகவும் ஜாஸ்தியாயிருக்கும். மருந்துக்கடைக்காரனுக்கும் காசாப்புக்கடைக்காரனுக்கும் எவ்விதமான போட்டியிருப்பதற்கும் காரணமில்லை. ஏற்கனவே சொன்னமாதிரி ஒரே தொழில் செய்கிறவர்களுக்குள்தான் போட்டியிருக்கும்.



விறகு வெட்டி விறகைக் கொடுத்து அப்பம் சுடுகிறவர்களிடமிருந்து அப்பம் வாங்குகிறவரையில் போட்டியில்லை. விறகு வெட்டுகிறவர்கள் இரண்டுபேர்கள் ஏற்பட்டவுடனே, போட்டி ஆரம்பிக்கிறது ஒருவிதத்திலல்ல; பல விதங்களிலும் ஏற்படுகிறது. ஒருவன் மற்றவனைவிட ஜாஸ்தி கட்டையைக் கொடுக்கச் சம்மதிக்கிறான், அல்லது கட்டையை எவ்விடத்தில் கொண்டுவந்து சேர்ப்பிக்கச் சொல்லுகிறோமோ அவ்விடத்தில் கொண்டுவந்து சேர்ப்பிக்க ஒப்புக்கொள்ளுகிறான், அல்லது கட்டைகளை மெல்லிய துண்டுகளாக வெட்டிக்கொடுக்க ஒப்புக்கொள்ளுகிறான், இவ்விதமாக ஒருவன் மற்றவனைவிடத் தன்னுடைய வயிற்றுக்கு வேண்டிய ஆகாராதிகளை வாங்கத்தன்னால் கூடிய புத்திச் சாதுரியத்தை உபயோகிக்கிறான்.

ஆதியில் கைத்தொழிலில் போட்டியாக ஆரம்பித்து புத்தியின் போட்டியாக வந்து முடிகிறது. நாகரிகம் அதிகரிக்க, அதிகரிக்க ஆசையினால் செய்கிற வேலையைவிடப் புத்தி, சரீரப்பிரயத்தினத்தினால் செய்கிற வேலைக்கு மதிப்பு ஜாஸ்தியாகிறது. தொழில்களெல்லாம் புத்தியின் போட்டியாக முடிகிறது. விருத்தியடைவதற்குப் போட்டி அத்தியாவசியம். போட்டியில்லாமல் போனால் வியாபாரம் விருத்தியடைகிறதில்லை. போட்டிக்குத் தடங்கல்செய்கிறது இயற்கைக்கு விரோதமாயிருக்கிறது. டச்சுக்காரர்கள் வாசனை சாமான்களைத் தங்களுடைய தீவுகளில் தவிர மற்ற இடங்களில் பயிராக்கப்படாது என்று யத்தனம் செய்தார்கள். மற்றவர்கள் போட்டிக்கு வரக்கூடாது என்ற எண்ணத்தை இவர்கள் அடைந்தார்கள். இது இயற்கைக்கு ஏற்குமா? ஏற்காது. ஆகையினால் பட்சிகள் இந்த வாசனைச் சாமான்களைச் சாப்பிட்டு மற்றத் தேசங்

களில் போய்க் கொட்டைகளைப் போடுவதினால் அந்தத் தேசங்களில் வாசனைத் திரவியங்கள் பயிராவதற்கு ஆரம்பித்தன.

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு ஜாதியார் உயர்ந்த பதவியில் இருந்தார்களென்று நாம் சரித்திரத்தில் வாசித்திருக்கிறோம். இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன ஜாதியார் க்ஷீணதசையை அடைந்தார்களென்றும் இன்ன இன்ன ஜாதியார் உயர்ந்து விட்டார்களென்றும் சொல்லுகிறோம். பின்னால் சொன்னது நிஜமா யிருந்தாலும் இருக்கலாம். முதலில் சொன்னது நிஜமா யிருக்க வேண்டியது அவசியமில்லை. ஒரு வியாபாரத்தில் ஒரு ஜாதியார் முந்தியிருக்கிறார்கள் என்பது மற்றவர்களை முந்துவதற்குப் பிரயத்தினம் செய்யும்படிச் செய்கிறது. இதனால் முதல் ஜாதியார் க்ஷீணித்து விட்டார்கள் என்று அர்த்தமல்ல. அவர்கள் ஒரு காலத்தில் உன்னதமான பதவியில் இருந்தார்கள். பிறகு விருத்தியடைய யத்தனிக்கவில்லை யாகையால் மற்றவர்கள் அவர்களை முந்தி விட்டார்கள். இதுவரையில் போட்டி அவசியமென்றும் ஒரே வியாபாரம் அல்லது தொழில் செய்கிறவர்களுக்குள் போட்டி ஜாஸ்தியாக இருக்குமென்றும் சொன்னோம்.

இனி, பல தேசத்தார்களுக்குள் ஏற்படும் போட்டியைப் பற்றிப் பேசுவோம். எப்படி ஒரே தொழிலில் அமர்ந்திருக்கும் ஜனங்களுக்குள் போட்டி ஏற்படுகிறதோ, அதே மாதிரியாக ஒரே தொழில் செய்கிற பல ஜாதியார்களுக்குள்ளும் போட்டி ஏற்படுகிறது. உதாரணமாக, பருத்திவிளைவிக்கும் ஜாதியார்களுக்குள் போட்டி ஏற்படும். சுரங்கங்களிலிருந்து உலோகங்களை வெட்டியெடுக்கிற ஜாதியார்களுக்குள் போட்டி ஏற்படும். உள்ளூரில் ஒருவர்க்கொருவர்போட்டி செய்தபோதிலும் வெளித்தேசத்தாரோடு போட்டி போடும் போது எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கொள்ளுகிறோம். எப்படி ஒரு பட்டாளத்திலுள்ள சிப்பாயிக்கு அவன் பிரதிதினம் செய்கிற தேகப்பயிற்சியும் ஆயுதப்பயிற்சியும் வெளியூராரோடு சண்டை போட உதவுகின்றனவோ, அதேமாதிரியாக உள்ளூர் வர்த்தகம் வெளி வர்த்தகத்திற்குத் தயார் செய்கின்றது.

சில சமயங்களில் எதிர் பாராத சில சம்பவங்கள் ஒரு ஜாதியாரை முன்னுக்குக் கொண்டு வருகின்றன. பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாக் கண்ட முழுவதும் சண்டையும் சச்சரவுமாக இருந்தது. இங்கிலாந்து மாத்திரம் இந்த சச்சரவில் அகப்படாமலிருந்ததினால், மற்ற தேசத்தார்கள் தங்களுக்கு வேண்டிய சாமான்களை இங்கிலாந்தினிடத்திலிருந்து வாங்கும்படி நேர்ந்தது. இவ்விதமாக இங்கிலாந்து முன்னுக்கு வந்து விட்டது. தேவை அதிகரிக்க அதிகரிக்க வாட், ஸ்டீபென்ஸன், பெஸ்மர் ஆர்க்ரைட், போன்ற பல புத்திமான்கள் உற்பவித்தார்கள். புதிதுபுதிதான யுக்திகள் கண்டு பிடித்தார்கள். கடைசியாக ரயிலும் நீராவிக்கப்பலும் அனேக விதமான யந்திரங்களும் காந்த தந்தியும் கண்டு பிடித்தார்கள். இதனால் இங்கிலாந்து இவ்விதமான மேலான பதவியில் இருந்து கொண்டிருந்தது. இதர தேசத்தார்கள் இங்கிலாந்து சாப்பிட்டு மிகுந்ததைச்சாப்பிடச் சம்மதப்பட்டுச் சும்மா இருந்திருக்கும் பட்சத்தில் இங்கிலாந்து மேலான பதவியிலேயே இருந்திருக்கும். இங்கிலாந்து கொஞ்சம் ஜயமடையவே, யத்தனம் செய்வதை நிறுத்திவிட்டது. வியாபாரிகளைத் தேடி வியாபாரம் செய்கிறதுபோக இங்கிலீஷ்காரர்கள் உட்கார்ந்த இடத்தில் வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.



மற்ற ஜாதியார்கள் கண்ணை மூடிக்கொண்டு இங்கிலாந்து கொஞ்சங்கூட வாங்க ஒப்புக்கொள்ளவில்லை. தங்களுடைய சண்டைகள் முடிந்தவுடனே முயற்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இங்கிலாந்தினுடைய உன்னதமான பதவியைப் பார்த்தார்கள். கப்பல் வியாபாரத்தில் இங்கிலாந்தோடு போட்டி போட முடியாதென்றும் தெரிந்து கொண்டார்கள். ஆனால் அவர்கள் உபயோகிக்கும் யந்திரங்களை வாங்கி வேலை செய்ய ஆரம்பித்தார்கள். தங்களுடைய யுக்திபுத்தியினால் மேலான யந்திரங்களையும் கண்டு பிடித்தார்கள். ஒரு பிரஞ்சுக்காரர் ஜாக்கார்ட் லூம் என்னும் நெசவு யந்திரத்தைக் கண்டு பிடித்தார். ஆப்பர்ட் என்பவர் இறைச்சி கெடாமலிருக்கும் யுக்தியைக் கண்டுபிடித்தார். ஜெர்மனியர்கள் ரசாயன சாஸ்திரத்தின் உபயோகத்தால் அநேகவிதமான தொழில்களைக் கண்டு பிடித்தார்கள். ஆகையால் இங்கிலீஷ்காரர்கள் தங்களுடைய புத்தியைக்கொண்டு மேலுக்குமேல் யுக்தி கண்டுபிடித்தாலொழிய மற்ற ஜாதியாருக்குப் பின்னடங்க வேண்டியதாய் விடும். இங்கிலீஷ்காரர்களுக்கு தைரியம் அதிகமாக இருக்கிறதென்றாலும் அவர்கள் பிரயாணம் செய்வதினால் அநேக பிரயோசனங்கள் இருக்கின்றனவென்றாலும் வேலைசெய்யவேண்டும். மேலுக்குமேல் கற்றுக்கொள்ள முயலவேண்டும். இதுவரையில் கைகளினால் செய்துகொண்டிருந்த வேலைகளெல்லாம் இப்பொழுது யந்திரங்களினால் செய்யப்பட்டு வருவதை பார்த்தால், இன்னும் இருக்க இருக்க என்ன என்ன விநோதங்கள் ஏற்படுமோ வென்று ஆச்சரியப்படத்தக்கதா யிருக்கிறது. காற்றினால் செலுத்தப்பட்டுப்போய்க் கொண்டிருந்த கப்பல்களுக்குப் பதிலாக இப்பொழுது மணிக்கணக்காய்ப் போகக்கூடிய நீராவிக் கப்பல்கள் உபயோகப்பட்டு வருகின்றன. நீராவிக் கப்பல்களுக்குக் கட்டையும் முன் போல ஜாஸ்தி தேவையில்லை. கொஞ்ச காலத்திற்கு முன் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து 700 அல்லது 800 டன் சாமான்களைக் கொண்டுபோக 1400 அல்லது 1500 டன் கரி தேவையாயிருந்தது. இப்பொழுதோ வென்றால், மூவாயிரம் டன் சாமான் கொண்டுபோக முந்நூறு டன் கரியிருந்தால் போதும். கட்டை குறைவாகக் குறைவாக வேலைக்காரர்களும் குறைவாயிருந்தால் போதும். இவ்விதமாகச் செலவு குறைகிறது. ஆனால் மொத்தத்தில் கப்பல்கள் அதிகமாகி விட்டதினால் அனேகம் ஜனங்களுக்கு வேலை கிடைக்கிறது.

புத்தி சாதுரியத்தினால் கரியோடு கிடைக்கிற கோல்டார் (தார்) என்னும் ஒரு உபயோகமில்லாத வஸ்துவுக்கு ஏராளமான மதிப்பு உண்டாகி விட்டது. உலோக சாஸ்திரம் படித்தவர்கள் இதிலிருந்து ஒருவிதமான விலையுயர்ந்த வர்ணத்தை எடுக்கிறார்கள். சாஸ்திர வித்தையில் தேர்ந்தவர்களென்றும் மிகவும் புத்திசாலிகளென்றும் பேரெடுக்க ஒவ்வொரு இங்கிலீஷ்காரனும் முயல வேண்டும். அப்படிப் பேர் பெற்றிருக்கிறவர்களுடைய புத்தியையும் ஊக்கத்தையும் கைக்கொள்ளவேண்டும் ஒவ்வொருவரும் ஏதாகிலும் ஒரு வியாபாரம் அல்லது தொழில் செய்யக் கூடும். ஆனால் ஏற்ற வியாபாரத்தைக் கண்டு பிடிப்பது தான் கஷ்டம். பயிர்ச்செலவில் கூட முன்னிருந்ததை விட அனேக விதமான சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குடியானவன் தன் கையாலேயே உழுகிறதை விட்டு விட்டு யந்திர சாதனங்களை உபயோகிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்விதமாக ஒரு ஆங்கிலேயர், பிரிடிஷ்காரருக்கே புத்திமதி கூறுகிறாரென்றால், நம் இந்தியா விஷயத்திலும் இந்தியர் விஷயத்திலும் எவ்வளவு புத்திமதி கூறினாலும் அப்படிக் கூறுவது மிகையாகுமோ?

சுதேசமித்திரனில் வைசியன்.

## REMITTANCE OF LAND REVENUE BY MONEY ORDER.

## மணியாடர் மூலமாய் நிலத்தீர்வை யனுப்புவது.

[1905-ஷு ஜூலைமீ 28உயுள்ள போர்டு புரொசீடிங்ஸ் ந. 164—லா. ரி.]

இதனால் அறிவிப்பது யாதெனில், இனிமேல் கிராமாதிகாரிகளிடம் ரொக்கமாய் செலுத்துவதற்குப் பதிலாக போஸ்டாபீஸ் மணியாடர் மூலமாய் கிஸ்தி செலுத்த கவர்ன்மெண்டார் ரயத்துகளுக்கு அனுமதி கொடுக்கிறார்கள்.

2. ரெவினியூ மணியார்டர்கள் முக்கியமாய் கிராமத்தில் குடியில்லாத பட்டாதார்களும் மற்றவர்களும் தங்களுக்குச் சொந்தமான அல்லது பாத்தியமுள்ள நிலங்களின் கிஸ்தியை சரியான காலத்தில் செலுத்தும்படி அவர்களுடைய நன்மைக்கென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தீர்வை, செஸ், நில சம்பந்தமாய் செல்லாகவேண்டிய, அல்லது வழக்கமாய் நிலத்தீர்வையோடு செலுத்தவேண்டிய மற்ற பாபத்துகள் இவைகளுக்கு மட்டும் அவைகளை உபயோகிக்கலாமே யொழிய வேறெந்த காரியத்திற்கும் உபயோகிக்கக்கூடாது.

3. ஒரே கிராமத்தில் ஒரு ரயத்துக்குச் சொந்தமான அல்லது பாத்தியமுள்ள நிலங்களுக்கு வெவ்வேறு பட்டா ஏற்பட்டிருந்தால் அவன் எல்லா பட்டாவுக்குமாகச் சேர்த்து ஒரே மணி ஆர்டரில் கிஸ்தித் துகையை அனுப்பிவிடலாம். ஆனால் ஒவ்வொரு பட்டாவுக்கும் இவ்வளவிவ்வளவென்பதாக தனித் தனியே குறிக்கவேண்டியது.

4. இம்முறையை அனுசரிப்பது ரயத்தினுடைய இஷ்டத்தைப் பொறுத்ததென்றும் அவனுக்கு இஷ்டமிருந்தாலல்லது இம்மாதிரி தான் பணம் செலுத்த வேண்டுமென்பதாக யாதொரு கட்டாயமுமில்லை யென்றும் செவ்வையாய் அறியவேண்டியது.

5. ரெவினியூ மணியார்டர் பாரம் (Form) வெள்ளைக் காகிதத்தில் கறுப்பு மசியால் அச்சிடப்பட்டிருக்கிறது. அது வழக்கத்திலுள்ள உள்நாட்டு மணி ஆர்டர் பாரத்திற்கு ஏறக்குறைய இருமடங்கு பெரிது. அது மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

A. மணி ஆர்டர்.

B. இருசால் விபரமடங்கிய மிமோரண்டம் (Memorandum).

C. வரவு ரசீது (Acknowledgment).

A. பாகம் வழக்கத்திலுள்ள உள்நாட்டு மணி ஆர்டர் பாரத்தை அநேகமாய் ஒத்திருப்பதால் அதைப்பற்றி விவரமாய் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. மேல்பாகத்தை போஸ்டாபீசுக்காரரும் கீழ்பாகத்தை பணம் அனுப்புகிறவரும் பூர்த்தி செய்யவேண்டியது.

பணமனுப்பு விவரங்களை பதிவு செய்வதற்காக B. பாகத்தில் தலைப்பெயர்கள் (Headings) அமைக்கப்பட்டிருக்கின்றன. கிராம மணியக்காரன், தாசில்தார் இவர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவைகளை பணமனுப்புகிறவர் பூர்த்திசெய்யவேண்டியது.

C. பாகம் ரெவினியூ மணி ஆர்டர் வந்து சேர்ந்ததற்கு ரசீது.

அது கிராம மணியக்காரனால் கையெழுத்து செய்யப்பட்டுபோஸ்டாபீசு மூலமாய் பணம் அனுப்பினவருக்கு திருப்பி அனுப்பப்படும். இதையும் பணம் அனுப்புகிறவரே பூர்த்தி செய்யவேண்டியது. ஒரு ரெவினியூ மணி ஆர்டரில் யாதொரு திருத்தமும் செய்யக்கூடாது. அப்படிக்கு திருத்தங்களோடு கூடிய ஒரு பாரத்தை பணம் அனுப்புகிறவர் கொடுத்தால் அவரை புதிதாய் வேறொரு பாரம் பூர்த்திசெய்யும்படி கேட்கவேண்டியது.



6. ரெவினூயூ மணி ஆர்டர் பாரங்களை ரயத்துகளுக்குள் தாராளமாய் பரவச்செய்யவேண்டியது. இந்த பாரங்கள் ரயத்துக்களுக்கு கிடைக்கிற விஷயத்தில் யாதொரு விதமான தடையுமிருக்கக்கூடாது. ரெவினியூ மணி ஆர்டர் பாரங்களில் போதுமான சப்ளை ஒவ்வொரு போஸ்டாபீசுலும் எப்போதுமிருக்கும்.

7. ஒரு மணி ஆர்டர் துகையில் பைசாக்களை (அணுவினுடைய பின்னங்களை) சேர்க்கக்கூடாது என்கிற ஒழுங்கு ரெவினியூ மணி ஆர்டர்களுக்கு ஒப்பிதமில்லை. இவைகளில் (ரெவினியூ மணி ஆர்டர்களில், ஒரு பைசாவிற்கு குறையாத எந்த அணுவினுடைய பின்னத்தையும் சேர்க்கலாம்.

8. மணி ஆர்டர் எந்த போஸ்டாபீசிலிருந்து புறப்படுகிறதோ அந்த போஸ்டாபீஸ் உத்தியோகஸ்தர் பணம் அனுப்புகிறவருக்கு பதிவு செய்யும் விஷயத்தில் வேண்டிய ஒத்தாசை செய்யவேண்டியது. அவசியமேற்பட்டால் அவருக்காகத்தானே தன் கையினால் ரெவினியூ மணி ஆர்டர் பாரத்தில் பதிவுகள் செய்யவேண்டியது. ஆனால் இந்த உபகாரத்திற்காக எந்த போஸ்டல் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தனும் பணமாவது அல்லது வேறு எவ்வித வெகுமானமாவது நேராயாவது வேறெந்த மார்க்கமாயாவது கேட்கக்கூடாது. கொடுத்தாலும் வாங்கக்கூடாது. இந்த கட்டளையை உல்லங்கனம் செய்கிற உத்தியோகஸ்தன் தன் வேலையிலிருந்து நீக்கப்படுவதுடன் சட்டப்படிக்கு ஏற்படும் இன்னும் மற்ற தண்டனைகளுக்கும் அவன் பாத்திரனாவான்.

9. ரெவினியூ மணி ஆர்டர்கள் அந்தந்த இடத்து அனுஷ்டானத்திற்குத் தக்கபடி போஸ்டுமாஸ்டரினாலோ, போஸ்டுமானினாலோ, அல்லது கிராம போஸ்டுமானினாலோ, பணமில்லாமற்படிக்கு கிராம மணியக்காரனுக்கு கொடுக்கப்படும். மணியகாரன் ஒவ்வொரு மணி ஆர்டரிலும் மணி ஆர்டர் A-பாகத்தில் குறிக்கப்பட்ட துகையானது பணமனுப்பு விவரமடங்கிய மிமோரண்டத்திலும் (B-பாகத்திலும்) வரவு ரசீதிலும் (C-பாகத்திலும்) குறிக்கப்பட்ட துகையோடு ஒத்திருக்கிறதாவென்பதாக சரிபார்த்துக்கொள்ள வேண்டும். வித்தியாசம் ஒன்றும் இல்லாமலிருந்தால் அவன் ஒவ்வொரு ரெவினியூ மணி ஆர்டரின் வரவு ரசீது பாகத்தில் (சி-பாகத்தில்) கையெழுத்து செய்து அதை மாத்திரம் கிழித்து மணி ஆர்டரைக்கொடுத்த போஸ்டாபீஸ் உத்தியோகஸ்தனிடத்தில் கொடுத்துவிடவேண்டியது. பிறகு மணியகாரன் தான் பெற்றுக்கொண்ட ஒவ்வொருரெவினியூ மணி ஆர்டருக்கும் போஸ்டாபீஸ் உத்தியோகஸ்தனால் தன்னிடத்தில் ரெவினியூ மணி ஆர்டர்களோடு சேர்த்துக்கொடுக்கப்பட்ட போஸ்டுமான் புஸ்தகத்திலாவது, அல்லது வில்லேஜ் போஸ்டுமான் ரிஜிஸ்டரிலாவது வரவு வைத்துக்கொடுக்கவேண்டியது. மணியகாரன் ஒவ்வொரு ரெவினியூ மணி ஆர்டரின் வரவு ரசீது பாகத்தைக்கிழித்து போஸ்டாபீஸ் உத்தியோகஸ்தனிடத்தில் கொடுத்துவிட்டு அவனுடைய புஸ்தகத்தில் வரவுவைத்து கொடுத்தான பிறகு, ஷை உத்தியோகஸ்தனை உடனே அனுப்பிவைக்கவேண்டியது. மணியக்காரன் போஸ்டாபீஸ் உத்தியோகஸ்தனை எந்த முகாந்திரத்தைக்கொண்டும் காக்கவைக்கக்கூடாது.

10. ஒரு ரெவினியூ மணி ஆர்டரின் பணமனுப்பு விவரமடங்கிய மிமோரண்டமாவது (B-பாகமாவது) அல்லது வரவு ரசீது பாகமாவது (C-பாகமாவது) பணமனுப்புபவரால் முழுவதும் பூர்த்திசெய்யப் படாமலிருந்தாலும், அல்லது பணமனுப்பு விவரமடங்கிய மிமோரண்டத்தில் (B-பாகத்தில்) பணமனுப்புபவர் கையெழுத்து செய்யாமல் விட்டிருந்த போதிலும் மணியகாரன் அந்த ரெவினியூ மணி ஆர்டரை வரவு வைக்காமல் போஸ்டாபீஸ் உத்தியோகஸ்தனிடத்தில் திரும்ப கொடுத்து விடவேண்டியது. இப்போர்க்கொத்த மணி ஆர்டர்களில் விட்டுப் போனவைகளை பதிவு செய்து திரும்ப அனுப்பும்படியாய் அவைகளை ஒரு போஸ்டல் செர்விஸ் ரிஜிஸ்டர்டு கவரில் போட்டு முதல் முதல் எந்த ஆபீசிலிருந்து அவைகள் அனுப்பப்பட்டனவோ அதே ஆபீசுக்கு திரும்பி அனுப்பி விடவேண்டியது.

11. மணியகாரன் பிறகு ஒவ்வொரு ரெவினியூ மணி ஆர்டர் தொகையையும் (அத்தொகை கடுதாசியில்தானிருக்கிறது. அதற்காக அவன் போஸ்டாபீஸ் உத்தியோகஸ்தனுக்கு ரசீதும் கொடுத்திருக்கிறான்.) எல்லா விஷயத்திலும் ரொக்க பணமாகவாவது, அல்லது கரன்சி நோட்டுகளாகவாவது பாவித்து தன்னுடைய கணக்கில் பதிவுசெய்து கொள்ளவேண்டியது. மணியகாரன் பிறகு பணமனுப்புவிபரமடங்கிய மிமோராண்டத்தை (B-பாகத்தை) மணி ஆர்டலிருந்து கிழித்து மாசவாரி கட்டுகளாக டாப்பு செய்து வைக்கவேண்டியது.

12. ஒரு ரெவினியூ மணி ஆர்டர் தொகையானது சமமந்தப்பட்ட மிராசுதாரால் சர்க்காருக்குச் சேரவேண்டிய கிஸ்தித் தொகைக்கு குறைந்தபோதிலும், வந்ததொகையை கிராமக் கணக்குகளில் வரவு வைத்துக்கொள்ளவேண்டும். ஷை தொகையானது டிமாண்டைக்காட்டிலும் ஜாஸ்தியாக விருந்தால் அதிகத் தொகையை "அதிக வசூலில்" வரவு வைத்துக் கொள்ள வேண்டியது.

13. பெற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு ரெவினியூ மணி ஆர்டரிலும் மணியகாரனும் கிராமக்கணக்கனும் கையெழுத்து செய்ய வேண்டியது அடுத்த இருசால்தினம் வரும்போது எல்லாரெவினியூ மணி ஆர்டர்களுக்கும் ஒரு ஜாப்தா பிடித்து (ரெவினியூ மணி ஆர்டர் 4-ந. பாரம்) அவைகளை மற்ற வசூல் தொகைகளோடு தாசில்தாருக்கு அனுப்பிவிட வேண்டியது.

14. ஷை ஜாப்தா தாசில்தாராலாவது, அல்லது தாலுகாசிரஸ்தார் அல்லது தாலுகா அக்கவுண்டாண்டினாலாவது கையெழுத்து செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படும். ஷை ஜாப்தாவை கிராம மணியக்காரன் அதில் பணமனுப்பு விவரமடங்கிய மிமோரண்டத்தை (B-பாகத்தை) பதிவுசெய்து டாப்பு செய்து வைக்கவேண்டியது.

15. பணமனுப்புவதில் தேர்ந்த ஒழுங்கீனத்தினாலோ, அல்லது வேறெக்காரணத்தைக்கொண்டோ வந்து தொகையை கிராமக் கணக்கில் வரவுவைக்க முடியாமல்படிக்குப் போய் ஆனால் தன்னால் வரவுவைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரெவினியூ மணி ஆர்டர்களை ஷை ஜாப்திதாவின் பின் பக்கத்தில் விவரமாய் கண்டெழுதி மிமோரண்டம் பாகத்தை (B-பாகத்தை) கிழித்தெடுக்காமல்படிக்கு அப்படியே தாசில்தாருக்கு அனுப்பிவிட வேண்டியது. இப்போர்கொத்த ரெவினியூ மணி ஆர்டர்களின் மொத்தத்தொகையை தாசில்தாருக்கு அனுப்பும் இருசால்தொகையில் சேர்க்கப்படாது.

16 மணியகாரனுடைய கையெழுத்தாவது அல்லது கிராமக்கணக்கனுடைய கையெழுத்தாவது விட்டுப்போயிருக்கும்ரெவினியூ மணி ஆர்டரை ஷை விட்டுப்போனதை பூர்த்தி செய்து உடனே திரும்ப அனுப்பும்படியாய், மணியக்காரனுக்கு திருப்பி விடவேண்டும். இருசாலில் ஏற்பட்ட ஒழுங்கீனத்தினால் தொகையை கணக்கில் வரவுவைக்காமல் மணியக்காரனால் தாசில்தாருக்கு அனுப்பப்பட்ட ரெவினியூ மணி ஆர்டர் ஷை தாசில்தார் அவர்களால "நிராகரிக்கப்பட்டு" ("Refused") தன்னுடைய தலைமை ஸ்தானத்தில் (Headquarters) யிருக்கும் போஸ்டுமாஸ்டருக்கோ, அல்லது சப்-போஸ்டுமாஸ்டருக்கோ அனுப்பப்படும். அனுப்பினதற்கு தாசில்தார் வரவு



ரசீது (Acknowledgment) பெற்றுக்கொள்ள வேண்டியது.

17. அனுப்பிய மணி ஆர்டர் சம்மந்தப்பட்ட மணியகாரனுக்கு கிஸ்தி தினத்திற்கு பிந்திபோய்ச் சேர்ந்தால், அதினால் பணமனுப்புவர் ரெவினியூ டிபார்ட்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தண்டனைகளிலிருந்து தன்னை நீக்கிக்கொள்ள முடியாது.

18. மதராஸ் நகரத்தில் வில்லேஜ் மணியக்காரர்கள் இல்லை. அவர்களுடைய வேலைகள் கர்ணங்களினால் செய்யப்படுகின்றன. ஆகையால் மதிராஸ் தாசில்தார்பேருக்கு அனுப்பப்படும். ரெவினியூ மணிஆர்டர்களை போஸ்டாபீஸ்க்காரர்கள் மணி ஆர்டரில்கண்டிருக்கும் அந்தந்த டிவிஷன் கர்ணனுக்கு டெலிவர் பண்ணவேண்டியது.

19. இவ்விதம் ரெவினியூ மணி ஆர்டர்களை பெற்றுக்கொள்ளும் அந்தக்கர்ணன் மற்ற இடங்களில் மணியக்காரர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் விதிகளை தானும் அனுசரித்து ஷை மணிஆர்டர்களை மதிராஸ் தாசில்தாருக்கு தன்னுடைய அடுத்த இருசாலோடு அனுப்பி விட வேண்டியது.

20. போஸ்டுமாஸ்டராவது அல்லது வில்லேஜ் போஸ்டுமாஸ்டராவது வரவு ரசீதுகளை (Acknowledgments) பணமனுப்பியவருக்கோ அல்லது அவர் ஏஜண்டுக்கோ டெலிவர் பண்ணி போட்டு அதற்காக தன்னுடைய புஸ்தகத்திலாவது, ரிஜிஸ்டரிலாவது கையெழுத்து வாங்கிக்கொள்ளவேண்டியது.

21. டெலிவர் ஆகாத வரவுரசீதுகள் (Acknowledgments) முதல் முதல் மணிஆர்டர் அனுப்பின ஆபீசில் (ஹெட் ஆபீசாகவிருந்தால்) 12 மாதகாலத்திற்கு வைக்கப்பட்டிருந்து, பிறகும் அவைகள் பேவார்சாக கிடந்தால் கழிக்கப்படும்.

22. ரெவினியூ மணி ஆர்டர்களை முதல் முதலில் அனுப்பும் போஸ்டுமாஸ்டர்களோ, சப்-போஸ்டுமாஸ்டர்களோ, அல்லது பிராஞ்சு போஸ்டுமாஸ்டர்களோ வரவு ரசீதுகள் (Acknowledgments) அனாவசியமான காலதாமதமில்லாமற்படிக்கும், கட்டணமில்லாமற்படிக்கும், ஷை மணி ஆர்டர்களை அனுப்பினவருக்கு டெலிவர் பண்ணப்படுவதற்கு ஜவாப்தாரியாவார்கள்.

## PADDY.

## நெல்.

---

1. நாற்றங்காலில் நாற்றைக் கலக்கி விதைக்கவேண்டும். ஒரு செண்ட் விஸ்தீரணத்தில் ஒரு பட்டணம்படி விதையைத் தெளித்தால் போதுமானது. நாற்று வீரியமாய்ச் செழித்து வளரும்படி, நாற்றங்காலில் வேண்டும் உரம் போடவேண்டும்.

2. நாற்றை ஒவ்வொன்றாய்ப் பிடுங்கி நடவேண்டும். இந்த வேலையை செய்யும்போது தானே நேரில் மேல்பார்வை பார்க்கவேண்டும். அல்லது வேலையாரம்பத்திலாவது தான் கிட்டவிருந்து தான் சொல்லும்படி நடச்செய்யவேண்டும். இக்காரியத்தை செய்யச் சொல்வதிலாவது தான் வீட்டிலிருந்துகொண்டு தன் ஏஜெண்டுகளை அல்லது நட்வுநடத்தும் ஆட்களை அப்படி நட வெண்டுமென்று வாய்மொழி உத்தரவாய்ச் செய்யச் சொல்வதிலாவது யாதொரு பிரயோஜனமுமில்லை. ஒற்றை நாற்றுநடவு விஷயத்தைப் பற்றி விவசாய டிபார்ட்மென்டார் அச்சிட்டிருக்கும் பத்திரிகைகளை வேண்டியவர்கள் இனமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. நன்றாய்க் கிளைத்துப் பயிராயிருக்கும் செடிகளைக் குறிப்பிட்டு அவைகளிலிருந்து நல்ல கதிர்களைப் பொறுக்கி தனியாயடித்து சுத்தஞ்செய்து அடுத்த வருஷத்திய வெள்ளாமைக்கு வேண்டிய விதையாகப் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்.

4. நன்செய் நிலங்களில் நெல் அறுவடையானபின் நெல்பயிருக்கு உரமாகும்படியான் பசுந்தாள் பயிர்களை விதைத்து உண்டாக்கி நெல் நடுமுன் எருவாக உழுதுவிடவேண்டும். இப்படி பசுந்தாள் எரு பயிரிடவேண்டுமானால், அந்நிலங்களில் மாட்டழிவில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இது பின்குறிப்பிட்ட பிரகாரம் செய்துகொள்ளலாம்:—

(1) நன்செய் நிலங்கள் வைத்திருப்பவர்கள் ஒன்றுசேர்ந்து அவர்களுக்கு வேண்டிய பசுந்தாள் எருவை ஓர் அடக்கமான இடத்தில் பயிர்செய்தால் அதை எளிதில் மாட்டழிவில்லாமல் காப்பாற்றக்கூடும்.

(2) கம்புபோன்ற தண்ணீர்தட்டு தாங்கக்கூடிய புன்செய் தானியப்பயிரைப் பசுந்தாள் எருப்பயிருடன் கலந்து பயிர் செய்தால் மாடு மேய்ப்பவர்கள் அப்பேர்ப்பட்ட இடங்களில் மாடுகள் மேய்த்தல் தடைப்படும்.

(3.) மாடுகளை தொழுவில்கட்டி தீவனம் போடுவதற்கென்று தீவனப்பயிர்களைப் பயிர் செய்வதால் இது தடைப்படும். நெல் அறுவடையிருக்கிறதற்கு இரண்டு மூன்று நாளைக்கு முன் நெல்பயிரிருக்கும்போதே சடம்பு விதையை விதைத்தால் நெல் அறுவடைக்குப்பின் பயிராகி சுமார் இரண்டுமாத காலத்தில் நல்ல மாசூல் கிடைக்கும். இதை அறுத்து காயவைத்து படப்படைத்து வைத்துக்கொண்டு வைக்கோலுடன் சேர்த்து மாடுகளுக்குத் தீவனமாய் உபயோகிக்கலாம்.

பசுந்தாள் எருப்பயிர்களை ஒரு ஏக்கரா விஸ்தீரணத்திற்குக் குறையாத இடத்தில் விதைத்துப் பரீட்சிக்கவேண்டும். இப்படி செய்யாமல் கொஞ்ச விஸ்தீர்ணத்தில் பயிர் செய்தால் அது பூச்சிகளாலும் நோய் நொடிகளாலும் பீடிக்கப்படும். இந்தப்பயிர் சொல்பமாய் சென்டு கணக்கான விஸ்தீர்ணத்தில் பயிர் செய்யும்போது பூச்சிகளால் அழிமதி செய்யப் படுவதைப்போல் ஜாஸ்தி பரப்பான விஸ்தீர்ணத்தில் பயிரிடும்போது அழிமதியாவதில்லை. அந்தப் பிரதேசங்களுக்கு லாயக்கில்லாத பசுந்தாள் எருப்பயிர்களைப் பயிர் செய்தால் அவைகள் பலிதம் கொடுக்கமட்டாது. நெல்பயிர் அறுவடைசெய்த காலம் முதல் மறுபடி அதே இடத்தில் நெல்பயிர் செய்ய ஐந்துமாத சாவகாசமிருக்கும் இடங்களில் பசுந்தாள் எருவுக்காக சடம்புப்பயிர் செய்வதால் பிரயோஜனமிருக்கமாட்டாது. ஏனென்றால் சடம்புப்பயிர் சுமார் மூன்றுமாத காலத்திற்குள் முற்றிக் காய்ந்துபோகும். இதே பிரகாரம் நெல் நடுவைக்கு இரண்டுமாத சாவகாசமிருக்கும்போது அங்கே கொளுஞ்சி(காட்டவுரி)ப்பயிரை விதைப்பதிலும் பிரயோஜனமில்லை. ஏனென்றால் இந்த இரண்டுமாதத்தில் கொளுஞ்சிப் பயிர் சிறு முளைப்பயிர்களைப் போலிருக்குமே தவிர பெரிதாக வளர்ந்திராது. தஞ்சாவூர் ஜில்லாவின் காவேரிதீர நிலங்களில் நீர்வடிவுக்கிடமில்லாமல் சதுசதுப்பாயுள்ள இடங்களில் சடம்புப்பயிரை பசுந்தாளெருவுக்காகப் பயிர் செய்வதில் பிரயோஜனமில்லை. ஆனால் அப்பேர்ப்பட்ட இடங்களில் தக்கைப்பூண்டை விதைத்தால் அது அவ்விடங்களில் சரியானபடி முளைத்துப் பயிராகும்.

நெல்பயிர் நடுகை செய்வதற்குக் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன் பசுந்தாள் எருப்பயிர்களை நிலத்துக்குள் உழுது மட்கவைக்கவேண்டும். தஞ்சாவூர் ஜில்லாவிற் சில பாகங்களில் வெகுவாய் நன்செய்ப் பயிருக்கு எருவாவது அல்லது இலைத்தழைகளாவது உரமாகப் போட்டுப் பயிர்செய்யாத இடங்களிலிருக்கும் கிருஷிகருக்கு இந்த யோசனை சொல்லப்படுகிறதே தவிர மற்றவர்களுக்கு இது அநேகமாய்த் தெரிந்தவிஷயம். பசுந்தாள் எருப்பயிர் செய்யும் காலத்திற்கு முன் பெய்யும் மழைப்பதத்தை வீணாக்காமல் நிலங்களை முன்கூட்டி உழுது பண்படுத்திவைத்து பின்னால் காலமழைகள் பெய்தவுடன் பசுந்தாள் பயிர் விதைக்க நிலத்தைத் தயார் செய்துவைக்கவேண்டும். பசுந்தாள் பயிர் செய்ய முயன்றவர்கள் அநேகர் அப்பயிர் விதைக்கும் நாள்வரை அங்கே போவதில்லை. இப்படிச் செய்வதால் விதைக்கும் நிலம் போதுமானபடி முன்னமே உழுது பக்குவப்படாமல் அதில் விதைக்கும் விதை சரியானபடி பயிராக இடமிருக்கிறதில்லை. மேலும், இந்த விதை விதைக்கும் காலத்தில் மற்ற புன்செய்ப்பயிர்கள் விதைக்கவேண்டிய காலமாகியபடியாலும் இந்தப்பசுந்தாள் எருப்பயிருக்குத் தக்க பருவம் செய்ய இடமில்லாமலும் பயிர் ஓங்கி வளர்கிறதற்கு இடமில்லாமலும் போகிறது.

விவசாய டிபார்ட்மெண்டார் பசுந்தாள் எருப்பயிர்களைக் குறித்து ஒரு பத்திரிகை பிரசுரித்திருக்கிறார்கள். விவசாயப் பஞ்சாங்கத்திலும் அவ்விஷயத்தைக் குறித்து வியாசங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பசுந்தாள் பயிர்களை சரியானபடி பயிரிட்டு தெரிந்துகொண்ட மெம்பர்கள், அந்தந்த விவசாயச் சங்கங்களுக்குத் தெரிவிப்பார்களாகில் அந்தச்சங்கத்துக் காரியதரிசி. விவசாய டியார்ட்மெண்டாருடனாவது மற்ற வியாபாரிகளுடனாவது ஒப்பந்தம் பேசி விதைகளைச் சேகரித்துவைக்க ஏற்பாடுகள் செய்வார்கள்.



# REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### PARENTS AND GURUS.

### பெற்றோர்களும் ஆசாரியர்களும்.

அக்டோபர் மாஸத்து மாதர் மனோரஞ்சினியில் திரட்டியிருக்கும் அடியில் கண்ட பாரத நீதிகள் எல்லாரும் படிக்க வேண்டியவை.

1. பூமியைக்காட்டிலும் தாய் பெரியவள். ஆகாசத்தைவிட தந்தை பெரியவன். மனது காற்றைக்காட்டிலும் அதிக வேகமுடையது. துக்கம் எல்லாவற்றிலும் பெரிது.—ஆரண்ய பர்வம்.

2 தாய்க்குச் சமானமான ஆதரவு வேறு இல்லை. அவளுக்குச் சமானமான கதி வேறு இல்லை. அவளைப்போலக் காப்பாற்றக்கூடியவரும் இல்லை. அவளுக்கு ஒப்பாகப் பிரியமுடையவர்களும் இல்லை.—சாந்தி பர்வம்.

3. தந்தையே புண்ணியம். தந்தையே சுவர்க்கம். பிதாவே மேலான தபசு. தந்தையைச் சந்தோஷப்படுத்தினால் சகல தேவதைகளும் சந்தோஷப்படுவார்கள்.—சாந்திபர்வம்.

4. ஓ ! தர்மந்தெரிந்த மகாபுருஷா ! ஆசாரியருடைய வார்த்தைகள் தர்மத்தை அனுசரித்திருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தாயானவள் எல்லா ஆசாரியர்களுக்கும் மேலான குரு.—ஆதிபர்வம்.

5. எவனொருவன் மாதாபிதாக்களின் வாக்கியத்தின்படி நடந்து, அவர்களுக்கு நன்மையைச் செய்து, நல்ல வழியில் நடக்கிறானோ அவனே புத்திரனென்னப்படுவான்.—ஆதிபர்வம்.

6. நற்குணமுடையவனும், பெற்றோர்களுக்கு மேன்மையை எப்பொழுதும் தேடுகிறவனுமான குமாரன் மற்றவர்களைக் காட்டிலும் வயதில் சிறியவனானாலும் சகல நன்மைகளையுமடையத்தகுந்தவன். ஆகையால் அவன் மகா உத்தமனானவன்.—ஆதிபர்வம்.

7. அசட்டையின்றி உன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய். அதற்கு மேலான தர்மம் வேறில்லை.—ஆரண்யபர்வம்.

8. ஒரு பூ தன்னுடைய செடியினின்றும் விழுவதுமுண்டு. ஒரு பழம் தன் மரத்தை விட்டுக் கீழே விழுவதுமுண்டு. ஆனால் ஒரு தகப்பன் தனக்கு எவ்வளவு மனவருத்தமிருந்தாலும், தன் குமாரனிடத்திலுள்ள பிரியத்தை விட்டுவிடான்.—சாந்திபர்வம்.

9. ஆசாரியனுக்குப் பணிவிடை செய்வதனால் ஆயுளும், கீர்த்தியும், சம்பத்தும் விருத்தியாகும். ஆகையால் அவர்களுக்குத் தக்க ஆசனங்கொடுத்து, வந்தனஞ்செய்து, அவர்களை நாம் மரியாதைப்படுத்தவேண்டும்.—ஆநுசாஸநிகபர்வம்.

10. ஒரு மகாபாபி ஒரு மனிதனுக்கு மதுரமான வார்த்தைகளைச் சொல்லும்படி யகப்படுவான். ஆனால் நல்ல புத்திமதிகள் தனக்குப் பிரியமில்லாதவைகளானாலும், அவைகளைச் சொல்லுகிறவனும், கேட்கிறவனுமான ஒருவன் அகப்படுகிறது வெகு துர்லபம்.—ஸபாபர்வம்.

11. ஒருவன் நமக்குச் சத்துருவாக விருந்தாலும் அவனிடத்தில் நல்லகுணம் இருந்தால் அதை நாம் தெரிவிக்கவேண்டும். நமக்கு ஒருவன் குருவாக விருந்தாலும் அவனிடத்தில் கெட்டகுணமிருந்தால் அதை நாம் வெளியிட்டுச் சொல்லவேண்டும். ஆகையால் நாம் எப்பொழுதும் நம்முடைய புத்திரனுக்கும் சிஷ்யனுக்கும் நல்ல புத்தியை போதிக்கவேண்டும்.—விராடபர்வம்.

## PALMYRA TREE.

## பனைமரம்.

பனை மரத்தைப்பற்றிய அடியில் கண்ட விஷயங்களைக் கமத்தொழில் விளக்கத்திலிருந்து எடுத்திருக்கிறோம்.

முன்னுரை—இது நம்நாட்டு நீண்டகாலத்து பயிர். இது கடற்கரை யோரங்களில் விசேஷமாயுள்ளது. நஞ்சைவயல்களின் வரப்புக்களிலுமுண்டு. நஞ்சையைப் பார்க்கிலும் புஞ்சையில்மிகுதி. இம்மரம் தஞ்சாவூர் ஜில்லாவின் சமுத்திரக்கரை யோரத்திலும் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்திலும் அதிகம். இது வேலிக்காகப் பயிராக்கப்படுகிறது.

பூமி—இதற்கு மணற்பாங்கேயுசித்தானது. உப்பு சம்மந்தமானது விசேஷம். களிவாயிலும் வளரும். கரிசல் கப்பிக்கல் பூமி சிலாக்கியமானது.

பயிரிடல்—கொல்லையின் வேலிக் கால்களை நன்றாய்க் கொத்தி வாங்கி புற்பூண்டுகளை நீக்கி மழைகாலத்தில் அதாவது புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் இரண்டு மூன்றுஅடிக்கு ஒன்றிரண்டு கொட்டைகள் வீதம் போடுவார்கள். இவைமுளைத்து வெளிக் கிளம்ப இரண்டு மூன்றுமாதங்கள் செல்லும். இதற்கு எருப் போடல், தண்ணீர்விடல், களையெடுத்தல் முதலிய செய்நேர்த்திகள் செய்கிற வழக்கமில்லை. இவைகள் யாவும் கிரமமாகச்செய்யும் பட்சத்தில் சீக்கிரத்தில் நல்லபலனைக்கொடுக்கும்.

காய்ப்புக்குவருங்காலம்—பன்னிரண்டு வருஷத்திற்குமேல் முப்பது வருஷத்திற்குள் காய்க்கும். அது முதல் பதனிகட்ட ஆரம்பிப்பார்கள். சுண்ணும்பு தடவின கலயத்திலிறக்குவதற்குப் பதனியென்றும் அது தடவாமல் வெறுங் கலயத்தில் இறக்குவதற்கு "கள்" என்றும் பெயர் வழங்கிவருகிறது. ஒருமாதத்திற்கு ஐந்து ஆறு, கலயங்கள் போட்டு பதனி இறக்குவார்கள். நல்ல மரத்தில் பட்டணம்படி 4 வரைக்கும் பதனி கிடைக்கும். இந்தப்பதனியில் சர்க்கரை அதிகம். இதிலிருந்து சர்க்கரை வெல்லம் செய்யப்பட்டு நமதுநாட்டில் வழங்குகிறது. பனைவெல்லம் என்று வழங்குவது இதுவே. இது மருந்து செய்கிறதற்கு உபயோகப்படுகிறது. பனங்கற்கண்டும் இதிலிருந்துதான் எடுக்கிறார்கள். இது தைமாதத்தில் பூத்துக் காய்த்து ஆடிமாதம் வரையும் பழுத்து, பழங்கள் கீழே தானாகவே உதிர்ந்து கொண்டிருக்கும் தானாகவே உதிர்ந்தபழங்களாலே மரம் பயிராவதுமுண்டு.

வெல்லம்—ஒரு குவார்ட்டு கருப்பநீரிலிருந்து கால் இராத்தல் வெல்லம் கிடைக்கும்.

காய்க்கவிடுதல்—ஐம்பது வருஷம் வரையில் பதனிகட்டுகிறார்கள். இரண்டு மூன்றுவருஷத்திற்கு ஒருமுறை நிறுத்திக் காய்க்கவிடவேண்டும்.

பூ—இதைச்சுட்டுக் கார்த்திகை கிருத்திகைக்குப்பைகட்டி அதில் நெருப்புவைத்து பொறி பறக்கச் சுற்றுவார்கள். விறகுக்குபயோகம்.

காய்—இதிலிருந்து நொங்கு எடுத்து விற்கிறார்கள். இதைச் சிலர் மாத்திரமன்றி மற்றவர்களும் தின்கிறார்கள். இது குளிர்ச்சியுள்ளது. ஜீரணமாகாது. சிலமாறுதல்களுடன் மலத்துடன் வெளிப்பட்டுவிடும். இதன் ஜலம் குடிக்கிறதற்கு இனிமையாக இருக்கும். வேர்க்கூர்களுக்குத் தடவினால் அவை அமர்ந்துவிடும்.

பழம்—மாம்பழம் பித்தமானது, வாசனையுள்ளது. பசிக்குப் பனம்பழத்தைத் தின்றால் பித்தம் செய்கிறதைச்செய்யட்டும் என்னும் பழமொழி உலகத்தில் வழங்குகிறது. இதை



ஏழைச்சனங்கள் சர்க்கரையிட்டு அவித்தும் உண்கிறார்கள்.

மட்டை—ஒவ்வொரு மரத்திலும் இருபது முதல் ஐம்பது வரையிலும் இருக்கும். மாதத்திற்கு ஒரு மட்டைதான்விடும். சிலர் வருஷத்திற்கு 12 மட்டைகள் தான் வெட்டுகிறார்கள்.

ஓலை—இது கணக்குப் புத்தகம் எழுத உபயோகப்படுகிறது. முற்காலத்தில் இதுதான் காகிதம்போல் வழங்கப்பட்டது. கூரைபோடுவதற்கும் அடைப்பு அடைப்பதற்கும் உபயோகப்படுகிறது. விறகாகவும் பிரயோசனப்படுகிறது.

நார்—மட்டையிலிருந்து நார் எடுக்கப்படுகிறது. சிலர் அறிவாள்கொண்டு கிழித்து எடுக்கிறார்கள். சிலர் ஊறவைத்தும் எடுக்கிறார்கள். நார் எடுப்பதற்கு இளமரத்தின் மட்டையே பிரயோசனமுள்ளது. 10 இராத்தல் நார் 1 ரூபாய். இந்நாரைக்கொண்டு ப்ரஷ் செய்யலாம்

## THE PALACE IN DELHI.

## டில்லி அரண்மனை.

டில்லியைப் பற்றி எழுதும்பொழுது சுதேசமித்திரன் சொல்லுகிறது:—

"ஷாஜிஹான் சக்ரவர்த்தியால் கட்டப்பட்ட அரண்மனையானது 1600 அடி கிழக்கு மேற்கிலும் 3202 அடி தெற்கு வடக்கிலும் சதுரமாயுள்ள கட்டிடம். இதற்குள் நுழையும் வழியில் 375 அடி நீளமும் இரண்டுமெத்தையுமுள்ள ஒரு ஹாலும், அதற்குப் பின்புறத்தில் நௌபத்கானு அல்லது ஸங்கீதமண்டபமும், பிறகு ஒரு பெரிய ஹாலின் மத்தியில் திவான், இ-ஆம் அல்லது பேட்டி மண்டபமும், இதற்குப்பின்னால் ரங் மகால் அல்லது பலவர்ண மண்டபமும், இதற்கு வட பக்கம் திவான்-இ-காஸ் அல்லது ப்ரைவேட் பேட்டி மண்டபமும், இருக்கின்றன. இந்த ப்ரைவேட் பேட்டி ஹாலைப்போல உயர்ந்த நேர்த்தியான அலங்காரங்கள் உள்ள கட்டிடம் உலகத்தில் வேறெங்குமில்லை. இந்த மண்டபத்து அடியில் யமுனைநதி ஓடுகிறது. இதன் சுவர்கள் ஒன்றில் "பூலோககைலாஸம் ஒன்று இருப்பதானால் அது இது தான்! இதுதான்!" என்று எழுதியிருக்கிறதென்றால், இதனுடைய சிறப்பான அலங்காரத்தை யூகித்துக்கொள்ளலாம். இதற்குத் தென்பாகத்தில் ஆயிரம் அடி சதுரமுள்ள, ராஜஸ்திரீகள் வஸித்தஹால் இருக்கிறது. திவான்-இ-ஆமில் பேர்போன பீகாக் த்ரோன் என்று ஷாஜிஹான் சக்ரவர்த்தி செய்து அவரும் அவருக்குப் பின்னால் வந்தவர்களும் கொலுவிலிருந்த மைலாஸனம் இருந்தது. இந்த மைலாஸனம் 30 லக்ஷ ரூபாய் பிடித்ததென்றால் இதில் பொன்னும் அநேக அருமையான ரத்தினங்களும் மனம் மயங்கும்படியாய் சிறந்த வேலைப்பாடுடன் அமைக்கப்பட்டிருந்ததைச் சொல்லவேண்டுமோ? இந்த ஆஸனத்தை பகதூர்ஷா சக்ரவர்த்தியாயிருந்தபோது டெல்லியின்மேல் படையெடுத்து கொள்ளை கொண்டுபோன நாதர்ஷா கொண்டுபோய்விட்டான். இப்போது அது டெகிரானில் இருக்கிறது. இந்த அரண்மனையிலிருந்த அநேக விலைபெற்ற சாமான்களும் மாணிக்கங்களும் இரத்தினங்களும் தகுந்த பந்தோபஸ்தில்லாமல் பிற்காலத்தில் திருட்டுப் போய்விட்டன. இப்போதுங்கூட உலகத்தில் எங்கும் நிகரற்றதாயும், பல விநோதமும் நிலைபெற்ற அலங்காரமுள்ளதாயும், வெள்ளைச் சலவைக்கற்களால் கட்டப்பட்ட பலபாகங்களுள்ளதாயும், நவரத்தினங்களிழைத்த விசேஷக்கொலு மண்டபங்கள் உள்ளதாயும், பார்த்தோர் வியந்து பிரமிக்கும்படியான விஸ்தீரணமும் உயரமும் அகலமுள்ள கட்டிடமாயிருக்கிறது. இப்போது கவர்ன்மெண்டார் தக்கபடி காவல் செய்திருக்கிறார்கள்.

## ELECTRIC GARDENS.

### மின்சாரத் தோட்டங்கள்.

இந்த விஷயமாக "இந்துநேச"னில் ஒருசிறு வியாஸம் காணப்படுகிறது.

நமது நாட்டில் தெருக்களில் கூத்தாடிகள் விளையாடும்போது, மாஞ்செடி உண்டாக்கி, அதினின்றும் காய்கள் பறித்துக்கொடுப்பதை அபிமானிகள் கண்டும் கேட்டுமிருக்கலாம். மந்திரத்தினால் அது சாத்தியமென்பார் சிலர். இன்னும் சிலர் "மந்திரமுமில்லை மாயமுமில்லை நமக்குத் தெரியாமல் செடியை மறைத்து வைத்திருக்கிறான்" என்பர். அது எப்படியிருக்கினுமிருக்க, அதைக்காட்டிலும் அதிசயமான விஷயம் மேற்றிசையிலிருந்து நமக்கு எட்டுகிறது, ஸ்விட்ஜர்லாந்து வாசியான ஒருவர் ஒரு யந்திரம் கண்டுபிடித்திருக்கிறதாயும், அது மின்சார சம்பந்தமுள்ளதாகவும், அதனால் விதைகள் வெகு சீக்கிரத்தில் அங்குரிக்கின்றதாகவும், தோட்டம் காடுகளில் பயிர்களுக்கு நேரிடும் வியாதிகள் அதனால் அற்றுபோவதாகவும், பட்டுப் போனதாகத் தோற்றும் செடிகள் மறுபடியும் அதனால் உயிர் பெறுவதாகவும் கூறப்படுகிறது.

அவ்யந்திரம் ஒரு டன் கனமுள்ளதாம். அதிலிருந்து மின்சாரங்கள் விதைகளுக்குப் பாயும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கீழே தாமிரத்தகடு வைத்து இதனிடையில் கம்பளத்தின் மேல் விதைகளை வைத்து, யந்திரத்தைத் திருப்பினால், மின்சார கிரணங்கள் விதைகளுக்குப் பாய்கின்றன. ஒரு விதமான திராவகத்தினால் நிலத்துக்கு ஜலம் பாய்கிறதாம். அதன் ரகசியத்தை மட்டும் யந்திரத்தைக்கண்டு பிடித்தவர், ஒருவருக்கும் சொல்வதில்லையாம். இதைப் பற்றிய பரிசீலனைகள் லண்டன் நகரத்தில் நடந்துவருகின்றன. விதைகள் சீக்கிரத்தில் அங்குரிப்பது சீதோஷ்ண ஸ்திதியினாலோ அல்லது வேறு காரணத்தினாலோ என்பது இன்னும் தெரிந்தபாடில்லை. மின்சாரத்தினால் விவசாயத்துக்கு மேற்கூறியபடி உதவி ஏற்படும் விஷயத்தில், அநேக விதமான நன்மைகள் உண்டாகக்கூடுமென்று நாம் நிச்சயமாகச் சொல்லலாம்.

---

## ANTS.

### எறும்புகள்

இவைகளை கவனித்த ஒருவர் சொல்லுகிறார்:—"நான் வைத்திருந்த எறும்புகளில் வேலைசெய்கிற எறும்புகள் ஏழுவயது வரையும், இராணி எறும்புகள் 15 வயதுவரையும் உயிர் வாழ்ந்திருக்கின்றன. எறும்பினங்கள் ஒவ்வொன்றிலும் சிறு எறும்புகள் தவிர, வேலை செய்யாத ஆண் எறும்புகளும், இறக்கையற்ற வேலை செய்கிற எறும்புகளும், ஒன்று அல்லது ஒன்றிலதிகம் இராணி எறும்புகளுக்கு முதலில் இறக்கை இருக்கும். ஆனால் கல்யாணத்திற்காக அவைகள் ஒரு சமயம் வெளியில் பறந்து சென்று மீளும். மீண்டதும் இறக்கைகளைத் தூர எறிந்துவிடும். ஏனென்றால், அதற்கப்புறம் அவைகள் கூட்டைவிட்டு எக்காலத்தும் வெளியில் போவதின்று. வேலை செய்யும் எறும்புகள் சாதாரணமாக முட்டையிடுவது வழக்கமன்று. ஆனால், தம்கூட்டத்திற்கு வேண்டிய ஸகல காரியங்களையும் அவைகளே பொறுப்பாகச் செய்யும். சிறு எறும்புகள் கூட்டிலிருந்துக்கொண்டு அறைகளும், டன்னல்களும் செய்துகொண்டிருக்கும். தவிரவும், அவற்றிலும் சிறு எறும்புகளை வயதுக்கிரமமாகப் பிரித்து வைத்துப் போஷிக்கவும் பாதுக்காக்கவும் செய்து வரும். பள்ளிக்கூடங்களில் பல வகுப்புகளில் பிள்ளைகள் ஒழுங்காகவைக்கப்பட்டிருப்பதுபோல் என் கூடுகளில் பலசமயம் இச்சிறு எறும்புகள் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன்."



## BOYS' SECTION.

### சிறுவர் பகுதி.

---

BURMAN CHARITIES.

**பர்மிய தர்மம்.**—பர்மன்மார் தரும காரியங்களில் யாரையும் கூட்டுச் சேர்ப்பதில்லை. அவனவன் சக்தியானுஸாரம் ஏதாகிலும் செய்வதொழிய, 'நாலுபெயர்' சேர்ந்து பரஸ்பரம் உபகரித்து ஏதாகிலும் தரும காரியம் நடத்துவதென்பதில்லை. ஏனெனில் தருமங்களில் கூட்டுக்காரரிருந்தால் அவர்களுக்குப் புண்ணியத்திலும் பாகம் சேர்ந்துவிடுமென்கிற பயம் அவர்களுக்கு அதிகம் ஆதலால் நமது நாட்டில் 'தம்படி' வசூலித்துக் கோபுரம் கட்டுவது முதலிய வழக்கங்கள் பர்மாவில் காணுவதில்லை.

STOPPING CIGARETTE SMOKING.

**ஸிகரெட்டுப் பிடித்தலைத்தடுத்தல்.**—சீனதேசத்தில் பாதிரிகள் ஸிகரெட்டுப் பிடிப்பதால் உண்டாகும் கெடுதியைப் பற்றியும், அதை முற்றும் விட்டொழிக்க வேண்டுமென்பதைப் பற்றியும், வீதிகள் தோறும் உபந்யாஸஞ் செய்து வருகிறார்களாம். நம்முடைய தேசத்தில் ஸிகரெட்டுப் பிடிக்காத பிள்ளைகள் பெரும்பான்மையாக இல்லையென்றே சொல்லலாம். பரோடாவில் பூரணவயது வராதவர்களுக்குச் ஸிகரெட்டு விற்றால், விற்பவருக்குத் தண்டனையுண்டாம். அம்மாதிரி தண்டனையெங்கும் ஏற்படுமாயின் நலம். சிறு பிள்ளைகள் ஸிகரெட்டுப் பிடிக்கும்போது பார்த்தாலும் தண்டிக்கப்படுவார்களென்னும் சட்டமொன்று ஏற்படுதலும் நலமாம்.—வைசியமித்திரன்.

PUNISHMENT FOR IDLERS.

**சோம்பேறிகளுக்கு தண்டனை.**—உலாந்தாக்காரர் மிக்க முயற்சியுள்ளவர்கள். சோம்பேறிகளுக்கு இடங்கொடுக்கமாட்டார்கள். வேலைசெய்ய மறுத்து சோம்பேறித் தடியன்களாயிருப்பவர்களை ஒரு உயர்ந்த ஆழமான தொட்டிக் குள்ளே இருத்துவார்கள். அந்தத்தொட்டிக்குள்ளே ஒரு யந்திரத்தை வைப்பார்கள். அந்த யந்திரத்தை இயக்குவதாலே தொட்டிக்குள்ளேயுள்ள ஜலம் வெளியேபோகும். வேறொரு யந்திரம் தொட்டிக்குள்ளே தண்ணீர் இறைத்துக்கொண்டுநிற்கும். அந்ததொட்டிக்குள்ளே இருத்தப்படும் சோம்பேறி யந்திரத்தை அதிவேகமாய் இயக்கி அதற்குள்ளேயிருக்குந் தண்ணீரை வெளியே போக்கிக்கொண்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் தண்ணீர் அவனுடைய தலைக்குமேலெழும்ப அவன் சாகவேண்டிவரும். இதனாலே அவன் சோம்பல் நீங்கி வேலைசெய்யக் கற்றுக்கொள்ளுகிறான்.

SOME BAD HABITS.

**சில கெட்ட வழக்கங்கள்.**—ஒரு சங்கத்தில் போய் உட்காரும்பொழுது நமக்குள்ளேயே பாடிக்கொள்ளுதல், கைவிரல்களாலும், கால்களாலும், தாளம் போடுதல், துடை ஆட்டுதல் இவைகளெல்லாம்கெட்டவழக்கங்களில் சேர்ந்தவைகள். விருந்து முதலியவை நடக்கும் இடங்களில் நாம் போய் உட்கார்ந்தால் எல்லாரையும்விட வேகமாயாவது மெதுவாயாவது சாப்பிடவே கூடாது. இலையில் போட்டிருக்கும் பதார்த்தத்தை முகர்ந்து பார்த்தல் மிகவும் அவலக்ஷணமான குணம். காறுதல், இலையோரங்களில் கோழை உமிழ்தல், வாயுப்பறிதல் இவை போன்றவைகளெல்லாம் மிகவும் அவலக்ஷணமான குணங்கள்.

KARIKKAL CHOLA.

**கரிக்கால் சோழர்.**—முன்காலத்தில் காவிரி நதியானது உடைப்பெடுத்துத் தேசத்தைப் பாழாக்குவது வழக்கம். ஏனென்றால் இந்தக் காலத்திலிருக்கிறது போல அந்தக் காலத்தில் காவிரியின் இரு பக்கங்களிலும் கரைகளே கிடையாது. வெள்ளத்தைத் தடுப்பதற்காக முதல் முதல் காவிரிக்குக் கரை கட்டினவா கரிக்கால் சோழர். இவர் வெகு காலத்திற்கு முன் அரசராக இருந்தார். இவரை ஆதி சோழர் என்று சொல்லலாம். இவருடைய கால், கரியைப் போல் கறுப்பாக இருந்தபடியால் இவருக்கு 'கரிக்கால் சோழர்' என்ற பெயருண்டாயிற்று. இவர் பிறப்பதற்கு முன்னமே இவருடைய தகப்பன் இறந்துபோய்விட்டார். இவர் குழந்தையாக இருக்கையில் பட்டத்திற்கு வாரதபடி இவரைக் கொல்வதற்காக இவருடைய சத்துருக்கள் இவர் குடியிருந்த வீட்டில் கொள்ளிவைத்தார்கள். இவர் உயிர் தப்பி ஓடுகையில் ஒருகால் நெருப்பில் பட்டுக்

கருகிப்போயிற்று. ஆகையால்தான் இவருக்கு மேலே சொன்ன பெயருண்டாயிற்று.

A DOG STORY.

**ஒரு நாயைப்பற்றிய கதை.**—பல்லாரி கலெக்டர் ஜே ஏ. கம்மிங்கு பல்லாரியிலுள்ள மிருகவைத்திய சாலையின் விஸிடர்ஸ் புஸ்தகத்தின் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

"நான் பல்லாரியில் கலெக்டராக இருந்துவந்த 2½-வருஷங்களுள், அடிக்கடி மிருக வைத்தியசாலையைப் பார்வையிட்டு வந்தேன். மிருகங்களின் வியாதிகளை சௌக்கியப்படுத்தி வருவதில் கவலை அதிகம் எடுத்துக்கொள்ளப் படுவதை நேரில் பார்த்து வந்திருக்கிறேன். ஒருநாள் நடு ராத்திரியில் என்னுடைய நாயை குச்சுநாய் கடித்து காயப்படுத்திவிட்டது. இதற்குமுந்தி என்நாய், மிருக வைத்திய சாலைக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கு அதன் வியாதிசௌக்கியப் படுத்தப்பட்டிருந்ததை அறிந்திருந்தமையால், அது உடனே காயத்துடன் பட்டணத்தின் வழியாக வைத்தியசாலைக்குச் சென்று, மிஸ்டர் ஸஹஸ்ரபுத்தியின் படுக்கை அறையில்நின்று தன் காயத்திற்கு சிகிச்சை செய்யும்படி அவரை எழுப்பிற்று. அதன் பிறகு அவர் அதன் காயத்தைச் சௌக்கியப் படுத்துவதில் கவலையெடுத்து கூடிய சீக்கிரம் சௌக்கியப்படுத்தினார் என்பது சொல்லாமலே விளங்கும்."

COAL.

**நிலக்கரி.**—அநேகம் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே பூமியின் மேலிருந்து மரஞ்செடிகள் சில காரணங்களால் பூமிக்குள் புதைக்கப்பட்டு பூமிக்குள் மட்கி சில வேறுபாடுகளுண்டானதின் மூலமாக நிலக்கரியாகிய வஸ்து பூமியின் கீழ் ஏற்பட்டது. நிலக்கரியானது மரஞ்செடிகளின் சேஷமென்பதை வெகு எளிதாய் ரூபிக்கலாம். நிலக்கரி வெட்டியெடுக்கப்படும் சுரங்கங்களுட் சென்று சுரங்கங்களைச் சுற்றியும் சுரங்கங்களின் முகட்டையும் சற்று கவனித்துப் பார்த்தால் அங்கே மரங்களின் கொப்புகிளை, கொடி, தழை, முதலானவை ஒடியிருப்பதைத் தெளிவாய்ப் பார்க்கலாம். அல்லது ஒரு துண்டு நிலக்கரியையெடுத்து அதில் லேசான தகடு ஒன்று சீவி அதை உற்றுப் பார்த்தால் அதில்கூட இலைகளையும் இலைகளின் நரம்புகளையும் தெளிவாய்க் காணலாம். நிலக்கரியிலிருந்துண்டாகும் வஸ்துக்களிலெல்லாம் முக்கியமானது நிலக்கரிவாயுத்தான். இந்த வாயுவைக் கொளுத்தினால் வெகு பிரகாசமாக எரியும். கொளும்பு, லண்டன் முதலான பெரிய பட்டணங்களில் தெருலாந்தர்களிலும் வீட்டு விளக்குகளிலும் இந்த வாயுவைத்தான் எரிக்கிறார்கள். இந்த வாயுவை நிலக்கரியிலிருந்துண்டாக்குவது வெகு ஸுலபம்.

இந்தியாவிற்கு இயற்கையாயேற்பட்டுள்ள செல்வங்கள் ஏராளமானவை. இவைகளில் நிலக்கரியுமொன்று. இங்கிலாந்து தேசமொன்று தவிர, ப்ரிட்டிஷ் ராஜ்யமுழுவதிலும் நிலக்கரி உற்பத்தியில் முதன்மையாய் நிற்பது இந்தியாவே.

ANTS.

**எறும்புகள்.**—எறும்புகளில் அனேக வகைகள் உண்டு. வீட்டில் ஸாதாரணமாய்ப்பார்ப்பது சிற்றெறும்பு. சில வேளைகளில் கடிக்கத்தெரியாமல் விரைவாய் ஓடும் பிள்ளையாரெறும்பு பார்க்கிறோம். கட்டெறும்பு சில வேளைகளில் காண்கிறோம். மா முதலிய மரங்களின்மேல் தேள், கொட்டினாற்போல் கடிக்கும் சிகப்பெரும்பு இருக்கிறது. வீட்டிலிருக்கப்பட்ட எறும்பு சுவரிலும் தரையடியிலும் கூண்டு கட்டி இருக்கும். இவை வீட்டு ஸாமான்களை நாசப்படுத்துகிறதாகையால் அனேகர் எறும்பு வாராதவிதம் பலவித பக்குவங்கள் செய்கிறார்கள். அவைகளில் சிலவற்றை இங்கு வரைகிறோம்.

சில இடங்களில் சாம்பல் போட்டு கரைகட்டுவதுண்டு. கட்டில் கால்களுக்கு சிறு தட்டுகளில் ஜலம் வார்த்து வைப்பதுண்டு. சர்க்கரைப்பூனைகளை நீர்விட்ட தட்டுகளிலும் பானைகளின் கழுத்தில் எண்ணெய்ச்சீலை சுற்றிவைப்பதுமுண்டு. எறும்புகளை எவ்வளவுதான் கொன்றாலும் பூண்டு அறாது. எறும்புப் புத்துகளைக்கண்டு அவைகளில் கொஞ்சம் கெரஸின் எண்ணெயை ஊற்றிவாய்மூடி வைப்பது மிகவுத்தமம்.



# LADIES' SECTION.

## ஸ்திரீகள் பகுதி.

ONION.

**வெங்காயம்.**—வெங்காயத்தை அறுத்து, நெடுநேரத்துக்கு வெளியே வைப்பது கெடுதி. அதன் மணம் அசுத்தவாயுவை ஆக்ருஷிக்கு மியல்பினதாயிருப்பதே அதற்குக் காரணம். இப்படியிருப்பதால் நெடுநேரம் வெட்டிவைக்கப்பட்ட வெங்காயத்தைக் கறிவகைக்கு உபயோகிக்கும்போது அது கெட்டுப் போகும். ஈரவெங்காயம் வைக்கப்பட்டிருக்கும் அறை எப்போதுஞ் சுத்தமானதாயிருக்கும்.

A CURIOUS MARRIAGE ADVERTISEMENT.

**ஒரு விநோத விவாகம் விளம்பரம்.**—ப்ரான்ஸ் தேசத்துள்ள பாரிஸ்நகரத்தில் பிரசுரமாகும் பத்திரிகையொன்றில் பன்னீராயிரத்துஐந்நூற்று நாற்பத்து நான்கு வகைத்தபால் தலைகள் சேர்த்து வைத்திருக்கும் ஒருவன் அவ்வாறு பல வகையான தபால் தலைகளைச் சேர்த்து வைத்திருக்கும் பெண்ணைக் கலியாணஞ்செய்து கொள்ளப் போவதாக விளம்பரம் செய்திருக்கின்றான். அப்பெண் சேர்த்து வைத்திருக்கும் தபால் தலைகள் 1847-ம்வருஷத்தில் பிரசுரமாய் மோரிஸ் நகரத்து நீலவர்ண தபால் தலைகளாயிருக்க வேண்டுமோம்.

A FAITHFUL WIFE.

**பர்த்தாவைக் காத்த பத்தினி.**—கீழிந்தியரெயில் வேட்டைவருள் ஒருவரானபார்ட்டர் என்பவருடைய துடையை ஒரு சர்ப்பம் கௌவிக் கொண்டதாம். அவர், வலி பொறுக்கமாட்டாது பயத்தால், உள்ளே படுத்திருந்த தன் பத்தினியை உதவிக்குக்கூப்பிட, அவள் பரபரப்புடனோடி, துணிகரத்துடன் நாகத்தைத் துணித்து, உடனே தனது நாயகன் துடையில் எந்த விடத்தில் பாம்பு தீண்டிற்றோ அவ்விடத்தில் தன்வாயை வைத்து விஷத்தை யுறிந்து உமிழ்ந்தாளாம். பிறகு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்ட பார்ட்டரும் சுகமடைந்தாராம். நற்காலத்திற்கு அடையாளமாக மிஸ் பார்ட்டருடைய வாயில் புண்ணில்லாததால் அவள் தப்பித்தாள். இதுவல்லவோ பத்தினித்தனம்?

CARE OF CHILDREN.

**குழந்தைகளை பரிபாலித்தல்.**—சிசுக்களைப் பரிபாலிப்பதில் வெவ்வேறு நாட்டார் பலவித வழக்கங்கள் அனுசரிக்கப்பட்டுவருகின்றன. ஸ்பெயின் தேசத்திலே சிறு சிசுக்களுக்கு அதிர்ஷ்டம் பெருகும் என்று நினைத்து ஒருவித மாக்கிளைகளை யொடித்து அவைகளால் அவைகளின் முகத்தில் தடவுகிறார்களாம். ஐர்லாந்தில் சில பாகங்களில் குழந்தைகளுக்கு ஆபத்துவராவொட்டாதிருக்க பெண்கள் மயிரை அவைகளைச் சுற்றி கட்டிவைக்கிறார்களாம். ஹாலந்து தேசத்தில் புதிதாய்ப் பிறந்த குழந்தை படுத்துறங்கும் தொட்டிலில் வெள்ளுள்ளி, உப்பு, அப்பம், முதலியவற்றை வைத்து வைக்கிறார்களாம். க்ரீக் ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளை தொட்டிலில் வளர்த்தும்போது நெருப்பின் முன்னே மூன்று தரம் சுற்றுகிறார்களாம். இதனால் அவர்கள் கெட்ட காற்று கிட்டவொட்டமாட்டாதென எண்ணுகிறார்களெனத் தெரியவருகிறது.

A REFORM MARRIAGE.

**ஒருஆசார சீர்திருத்தமான கலியாணம்.**—திருவல்லிக்கேணியில் வஸித்துப் பேர் பெற்ற ஹைகோர்ட் வக்கீலாகிய காலஞ்சென்ற ராஜா ராமராவின் பௌத்திரியும் 19 வயதானவளுமாகிய ருக்மணி அம்மாளை டாக்டர் ஏ. லக்ஷ்மிபதி அமஞ்சிக்கரையில் ஸமீபத்தில் விவாஹம் செய்துக்கொண்டாரென்று சந்தோஷப்படுகிறோம். டாக்டர் லக்ஷ்மிபதி வயித்தியத்தில் நல்ல பேர் வாங்கியிருக்கிறவர். ஹிந்து விவாகத்திருத்த சபையின் ஸெக்ரிடரிகளில் ஒருவர். தெலுங்கு பாஷையில் ஸாமார்த்திய முள்ளவராய் அதன் அபிவிருத்திக்காக பாடுபடுகிறவர். ருக்மணியம்மாள் மதராஸ் பிரஸிடென்ஸி காலேஜில் ஜூனியர் இன்டர்மீடியேட் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறார்.

SHAVING WIDOWS.

**விதவைகளை அவலக்ஷணமாக்குதல்.**—நமது நாட்டில் நடக்கும் துராசாரங்களில் இதுவுமொன்று. புருஷன் இறந்தபிறகு பெண்கள் மொட்டையடித்துக்கொண்டுவெள்ளைப்புடவையுடுத்துநிற்க வேண்டுமென்று எந்த சாஸ்திரம் சொல்லுகிறதோ அறியோம். இந்தியாவின் புராதன சரித்திரத்தை

ஆராய்ச்சி செய்யும்போது ஆதியில் பிராம்மண மதம் தலைதூக்கி நின்று, பிறகு பௌத்தமதத்தில் அதன் பெருமை குன்றிப்போய், பிறகு பல நூற்றாண்டுகளுக் கப்பால் மீண்டும் பிராம்மண மதம் தலைதூக்கி உலகத்திற் பரவ நேரிட்டதென்று அறிகிறோம். அப்படிப் பரவிய காலத்தில் பௌத்தமதத்தில் ஸ்திரீகளும் மொட்டையடித்துக்கொண்டு சந்நியாசினிகளாய் இருந்தார்களானதால், அந்த வழக்கத்தைத் தழுவி விதவைகளான மாதர்களையும் அப்படி மொட்டையடித்துக் கொள்ளும்படி பழக்கப்படுத்தி சந்நியாஸ ஆசிரமத்தின் நிலையில் இருக்கும்படி செய்திருக்கக் கூடுமோவென்று சந்தேகிக்க நேரிடுகின்றது. இவ்வாறு மொட்டையடித்து அவலக்ஷணப்படுத்தல் விசேஷமாகப்பிராமணர்கள், கோமுட்டிகள் முதலியவர்களிடத்துக் காணப்படுகின்றது. பிராமணர்களிலேயே தென்கலை வைஷ்ணவ வகுப்பார் மொட்டையடிக்கிற வழக்க முள்ளவர்களாக இருக்கவில்லை. அப்படி அவலக்ஷணப்படுத்தாத காரணத்தால் அவ்வகுப்பு மாதர்கள் குல ஒழுக்கம் தவறிப்போகவுமில்லை. உலகத்தாரும் அவர்களைத் தாழ்வாக மதித்துவிடவில்லை. இது நிற்க, இப்போது பட்டு நூற்காரர்களெல்லோரும் ஸௌராஷ்டிரப் பிராமணர்களென்று சொல்லிக்கொண்டு தங்களின் 'செட்டியார்" என்ற பட்டத்தை "ஐயங்கார், ஐயர், ஆசார்லு" என்று மாற்றிக்கொண்டு வருவதில் அவ்வகுப்பாரிலும் சிலர் பிராம்மண வழக்கத்தைத் தழுவி விதவைகளை அலங்கோலப்படுத்த முயல்வதைக்காண்கிறோம். இந்ததுர்வழக்கத்தை எப்படியேனும் அடக்கிவிடவேண்டுமென்று ஆனரபில் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்கள் போன்ற மேதாவிகள் கவலைப்பட்டும், எழுதிக்கொண்டும், பேசியும் வருகையில் ஸௌராஷ்டிரப் பிராமணர்களான பட்டு நூற்காரர்கள் தங்களில் இதுகாறுமில்லாத இந்த வழக்கத்தை அநுசரிக்கப் பார்ப்பது விவேக பக்ஷமாகமாட்டாது. இந்தியாவைப் பரிசுத்தப் பூமியென்கிறோம். அது புராதனகாலத்தில் பெற்ற கௌரமான இந்தப்பெயரை எந்தக்காலத்தில் அடைவதற்குரித்தானதாக நிற்குமோ ஈசனே அறிவார்.—**திராவிடாபிமானி.**

THEIR MAJESTIE'S JEWELS.

**ராஜதம்பதிகளின் நகைகள்.**—டெல்லி தர்பார் ஸமயத்தில் சக்ரவர்த்தியாலும் சக்ரவர்த்தினியாலும் தரித்துக் கொள்ளப்படும் க்ரீடங்கள் ராஜதம்பதிகளின் மற்ற அரண்மனை ஆபரணங்களோடு ஆபரணப்பாதுகாவலர் வசம் இருக்கின்றன. மெடீனு ஸ்டீமரில் அப்பாதுகாவலருக்கு ஒரு தனி அறை கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தியாவில் சூட்டிக்கொள்வதற்கென்று தனியாக க்ரீடம் எதுவும் ராஜதம்பதிகளால் கொண்டுவரப்பட வில்லை. ஆதலால் இந்திய மகுடாபிஷேகத்துக்காக வேண்டிய தனி முடி இந்தியாவிலேயே செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென ஊகிக்கப்படுகிறது. மேரி சக்ரவர்த்தினி வைரக்கற்கள் பதித்திருக்கும் தம்முடைய க்ரீடத்தையே இந்தியாவிலும் தரித்துக்கொள்ளுவாராம். இந்த க்ரீடம் மிக விசித்திரமான வேலைப்பாடுடையதும், ஸமீபத்தில் லண்டனில் மன்னருக்கு முடி சூட்டப்பட்டபோது மேரி அரசிக்கென்று தனியாகச் செய்யப்பட்டதுமான ஒப்புயர்வற்ற க்ரீடமாகும். இந்த மகுடத்தின் நடுவில் எத்தேசத்தாராலும் வியந்து பாராட்டப்படுவதும், இந்தியாவிலிருந்து கொண்டுபோகப்பட்டதுமான "கோஹினூர்" என்னும் பெயருடைய வைரக்கல் கோடிசூரியப் பிரகாசம்போல் ஜொலித்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து கொண்டுபோகப்பட்ட இவ்வுயர்ந்த வைரம்பதித்த க்ரீடத்தை இந்தியாவில் அரசி சூட்டிக்கொள்வது இந்தியாவுக்கு ஒரு விசேஷமென்றே சொல்லவேண்டும் இந்த க்ரீடம் அரசருடைய அரண்மனை ஆபரணங்களுடன் சேர்த்து வைக்கப்படுவதில்லை. ஏனெனில் இந்த வைரத்தைப் பெண்கள் அணிந்துக்கொண்டால் அதிர்ஷ்டம் பெருகுமென்றும், ஆண்கள் அணிந்துகொண்டால் துரதிர்ஷ்டமும் கஷ்டமும் நேருமென்றும் பாரம்பரியமாய் ஒரு கதை இந்தியாவில் வழங்கிவருகிறது. தர்பாரின்போது சக்ரவர்த்தினியார் உடுத்துக்கொள்ளும் மகுடாபிஷேக உடை, லண்டன் மகுடாபிஷேகத்தின்போது அவர்களால் தரித்துக்கொள்ளப்பட்ட உடையேயாகும். ஆனால், அதில் சிற்சில மாறுதல்கள் இருக்குமாம். ராஜாங்க ஆபரணங்களைத்தவிர அரசியாருக்கே ஸொந்தமான வேறு சில நகைகளும் "மெடினு" ஸ்டீமரில் வருகின்றன. அவைகளுள் முக்கியமானவை வைரத்திலிழைக்கப்பட்ட ஒருதாமரைப் புஷ்பமும், ஆணி முத்துக் கழுத்தணியுமாம்.



# DEPARTMENTAL NOTES.
# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்.

MILK.

**பால்.**—கடைசி பால் மிக இனிப்பும்ருசியுமுள்ளது. இதில் வெண்ணெய் அதிகம். இது ஸாதாரணமாய் ஒவ்வொரு இடையனுக்கும் தெரிந்த விஷயம். முதலில் கறந்தபால் ஒரு கிளாசிலும் கடைசியாக கறந்தபால் ஒரு கிளாசிலும் வைத்துப்பார்த்தால், எதில் அதிக ஏடும் மேனியும் கட்டுவதென்பதை சுலபமாய் அறியலாம்.

GERMINATION OF SEEDS.

**விதைகள் முளைத்தல்.**—ஸ்விட்ஸர்லாந்து தேசத்திய சாஸ்திரி பொருவர், விதைகளை விரைவில் முளைக்கும்படி செய்து ஏராளமான பலனைத் தரும்படி செய்யவும், கெட்டுப்போன விதைகளை மின்சாரத்து உதவியால் முளைக்கச் செய்யவும் கூடிய ஒரு விதயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறாம். இதன் சோதனை லண்டனில் நடக்கிறது.

PERIOD OF GESTATION.

**சினைப்பருவம்.**—அடியில்கண்ட மிருகங்களுக்கு புணரும் தேதிமுதல் ஈனும் தேதிவரையிலுள்ள காலம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| குதிரை | .. | 340 நாள்கள் |
| பசு | .. | 283 ,, |
| ஆடு | .. | 150 ,, |
| பன்றி | .. | 112 ,, |
| நாய் | .. | 63 ,, |
| கோழி | .. | 21 ,, |

BREEDING BULLS.

**பொலிகாளைகள்.**—சில வருஷங்களுக்கு முன் பொலிஎருது விடவேண்டிய வயது விஷயமாக நிபுணர்களுக்குள் தர்க்கம் நடந்தது. கர்னல் மார் துரையவர்கள் 3, 3½ வயதுள்ள காளைகள்தான் லாயக்கென்றும் கர்னல் கன்துரையவர்கள் 2 வயதானவுடன் பொலிய விடலாமென்றும், 4 வயது வரையில் பொலியவிடாமலிருந்தால் கெட்டுப்போகுமென்றும் வாதித்தார்கள். கர்னல் கன்துரையவர்கள் அபிப்பிராயப்படி 2வயதானகாளைகளெல்லாம்பொலியிட லாயக்காகாது. இது சாதாரணமாய் வளர்க்கப்பட்ட மாடுகளில் எடுக்கமுடியாது. குடிப்பல் விழுந்து 2 பல் போட்டவுடன் பொலியப்பருவமென்று திட்டமாய் அறிந்துகொள்ளலாம். பொலிஎருதை நல்ல ஸ்திதியில் வைத்திருக்கவேண்டும். 50, 60 பசுக்களுக்கு ஒரு காளை போதும். ஒரு பொலிஎருதை 5, 6 வருஷங்களுக்கு அதிகமாய் பொலியவிடக்கூடாது. இதை கட்டிவைக்கக்கூடாது. பசுக்கிடையில் விட்டுவிடவேண்டும். எருமைக்கிடாக்கள் 3½ வயதானால் பொலிக்கிடாவாக லாயக்காகிறது.

COCOANUT SEEDLINGS.

**தென்னம் பிள்ளைகள்.**—கரையான் தென்னம் பிள்ளையை அறித்துவிடாமல் தடுக்கக் குழியில் உப்புப்போட்டு அதன்மேல் தேங்காயை வைத்து குழியில் ஒரு முளைஇறுக்கி, தேங்காயை புரளாதபடி அம்முளையில் சேர்த்துக்கட்டவேண்டும். மண்ணுக்கும் தேங்காய்க்கும் சம்பந்தமிருக்கக்கூடாது. தென்னம்பிள்ளை வேர் செவ்வையாய்விட்டபிறகுமண்ணைக் குழியில் கொஞ்சம்கொஞ்சமாய் தள்ளிக்கொள்ளலாம். இந்த வேலையை தூரல தூறிக்கொண்டிருக்கும்பொழுது செய்ய வேண்டியது. வேறொரு முறை :—பசுவின் சாணத்தில் ரொம்ப உப்புப்போட்டு குழம்பாக்கி, அதில் கொஞ்சம் வீரத்தையும் பொடிசெய்துபோட்டு அதில்தேங்காயை நனைப்பது.

RANIPET MANURES.

**ராணிப்பேட்டை உரங்கள்.**—ஷண்முக முதலியார் வாலாஜா தாலூகா குடிமல்லூர் கிராமம் பின்வருமாறு எழுதுகிறார்.

சென்ற 1910௵ ஸெப்டம்பர்மீ நான் என் நிலத்தின் மாதிரி மண்ணை ராணிப்பேட்டை பாரி கம்பெனியாரிடம் காண்பித்து 4 ஏகருக்கு நெல் உரம்வாங்கி, 6 ஏகருக்குப்போட்டு பயிர் செய்தேன். பயிர் நன்றாய் வந்தது. பயிர் நோக்கத்தில் காணி 1-க்கு சுமார் 70 கலத்துக்குக் குறையாதென்று நினைத்தேன். பின்பாகத்தில் தண்ணீர் தட்டினால் பயிர் காய்ந்துவிட்டது. ஆனாலும் அக்கம் பக்கங்களில் எருப்போட்ட நிலங்களில் 20 மேனிக்கும், கம்பெனி

உரம்போட்ட கழனிகளில் 30 மேனிக்கும் கண்டுமுதலாயிற்று. அதே நிலங்களில் இந்த௵ கண்டுமுதலும் ரொம்ப சிலாக்கியமாகவே யிருந்தது. இந்த என் அனுபோகத்தை மற்ற மிராசுதார்களும் தெரிந்து கொள்ளும் பொருட்டு தங்கள் அருமையான பத்திரிகையில் பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

INDIA AND COTTON CULTIVATION.

**இந்தியாவும் பருத்தி விவசாயமும்.**—இங்கிலாந்தில் லங்காஷயருக்கு முன்னைப்போல் இப்போ பருத்தி கிடைப்பதில்லையென்று அதன் நண்பர்கள் விசனப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். லங்காஷயர் மாகாணத்தில் மான்செஸ்டர்பட்டணம் இருக்கின்றது. சில வருஷங்களுக்கு முன்னால் இந்த லங்காஷயர் உலகத்திற் செலவாகும் துணி நூல் முதலிய பஞ்சு ஸாமான்களைப் பெரும்பாலும் விற்று வந்தது. லங்காஷயரில் பருத்தி உண்டாவதேயில்லையாயினும் அதற்கு வேண்டிய பருத்திகளெல்லாம் இந்தியா முதலான அந்நிய தேசங்களிலிருந்து போய்க்கொண்டிருந்தன. இப்போது அன்னிய தேசத்தாரும் நூல்கள் துணிகள் முதலியவற்றைச்செய்து விற்கத் தொடங்கி விட்டபடியால் லங்காஷயருக்கு வியாபாரம் குறைந்துபோனதுமன்றி, போதுமான பருத்தியும் கிடைப்பதில்லை. இதற்கு உபாயம் என்ன சொல்லப்படுகிறதென்றால் இந்தியாவில் பருத்திப்பயிருக்குக் கவர்ன்மெண்ட் பொருளுதவி செய்து அப்பருத்தி அதிகமாய் விளையும்படி செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது. பருத்திப் பயிர் செய்யப்படும் பூமியிலிருந்து அதிகமான பருத்தி விளையும்படியாயும், புதிதான பூமியில் பருத்திப் பயிர் செய்யும்படியாயும், கவர்ன்மெண்ட் உதவி செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இந்தியாவில் அதிகப் பருத்தி யுண்டானால் இந்தப் பருத்தியை லங்காஷயருக்கு அனுப்பலாமெனப்படுகிறது. ஆனால் இதற்கு இரண்டு ஆட்சேபங்கள் நமக்குத் தோன்றுகின்றன. முதலாவது பருத்திஅதிக முண்டானால் அது இந்தியாவிலேயே செலவாகும். இரண்டாவது புதிதான நிலங்களில் பருத்திப் பயிர் செய்வதனால் இந்திய ஜனங்களுக்கு வேண்டிய தான்யாதிகளின் பயிர்குறைந்துபோகும்; லங்காஷயருக்கு வேண்டி இந்தியா பட்டினி கிடக்குமா?—சுதேசமித்திரன்

SUGAR CANE.

**கரும்பு.**—விவசாயச் சங்கங்களின் மெம்பர்களும் மற்றும் அநேகரும் அடிக்கடி விவசாய டிபார்ட்மெண்டாருக்கு விதைக்கணுக்கள் அனுப்பும்படி மனுச்செய்துகொள்ளும் பயிர்களில் இது ஒன்று. இப்படி அவர்கள் மனுசெய்துகொள்ளும்போதே அதன் செலவு என்னவாகுமென்று அவர்களுக்கு நிதானம் தெரிகிறதில்லை. கரும்புப் பயிர்செய்ய ஜாஸ்தி விடுமுதல் வேண்டும். அதாவது ஜாஸ்தி செலவு பிடிக்கும். கரும்புப்பயிர் பூசாரத்தை ரொம்பவும் கிரகிக்கிற குணமுடையதாகையால் அதற்கு ஜாஸ்தி எருசேவை. இந்தப்பயிரை சரியானபடி சாகுபடி செய்யத்தெரிந்த கிருஷிகர், ஒரு ஏக்கர் கரும்புப் பயிருக்கு சுமார் ரூபாய் 50 முதல் 70 ரூபாய் கிரயமுள்ள முத்துக்கொட்டை புண்ணாக்காவது நிலக்கடலை புண்ணாக்காவது வாங்கி எருவாக உபயோகிக்கிறார்கள். இந்தப் பயிருக்கு சரியான நீர்வடிவும், கவனத்துடன் நீர்ப்பாய்ச்சலும் செய்யவேண்டியதவசியம். அநேக கிருஷிகர் கரும்புச் சாகுபடி செய்யும்போது இவ்விஷயங்களைக் கவனிக்காததால், அவர்களுடைய பயிர் ஏங்கி கறுகறுத்து வீரியமாய் வளராமல் வெளிறிப்போய் நோய்தாக்கியதுபோல் மஞ்சள் நிறமடைகிறது. அநேகமாய் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அப்பயிர் செய்திருக்குமிடத்தில் நீர் வடிவு சரியானபடி இல்லாமலிருப்பதாயும், பயிரில் கட்டியிருக்கும் தண்ணீரை வெளிப்படுத்த சாதனங்கள் சரியானபடி செய்யாமலிருக்கக் காண்பதுடன் சாதாரணமாய் அப்பேர்பட்ட பயிருக்கு அடிக்கடி ஜாஸ்தி ஜலம் பாய்ச்சுவதாயும் தெரியவரும். இப்படிப் பயிர் செய்பவர்கள் அந்தப் பயிருக்குப் போதுமானபடி ஆகாரமில்லாமலிருக்கும்படி செய்கிறார்கள். ஏனென்றால் நீர் வடிவில்லா நிலங்களில் கரும்புக்கு ஜாஸ்தி தண்ணீர் நிலத்தில் கட்டியிருப்பதால், அதன் வேர்கள் கீழே போக மார்க்கமில்லாமல், மேல் பரப்பிலேயே வந்துவிடுகிறது. நீர் வடிவுள்ள இடங்களிலோ வேர்கள் கீழ்நோக்கிச்சென்று ஜாஸ்தி இடத்திலிருக்கும் ஆகாரத்தை வேர்கள் அருந்த இடமுண்டு.

கரும்பு சாகுபடி செய்யும் நிலம் நீர்வடிவுள்ளதாயும் சரியானபடி எருப்போட்டதாயுமிருப்பதுடன் அதில் நட்டகரும்புப் பயிருக்கு வேண்டும்போது ஜலம் பாய்ச்சப்பட்டுவந்தால் அதில் தக்கபடி லாபம் கிடைக்கும்.



## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

THE MYSORE EXHIBITION.

**மைஸூரில் பொருட்காட்சி.**—போன தஸ்ராப் பண்டிகை சமயத்தில் மைஸூர்ப்பட்டணத்தில் நடந்த விவஸாயப் பொருள்களும் கைத்தொழில் பொருள்களும் அடங்கிய காட்சியானது முன் வருஷங்களின் காட்சியை விடச் சிறப்பாய் இருந்ததாம். காஷ்மீரம் முதலிய தூர தேசங்களிலிருந்தும் சென்னை மாகாணத்திலிருந்தும் பல கைத்தொழிற் பொருள்கள் காட்டப்பட்டன. விவஸாயப் பொருள் காட்டப்பட்டன. பல யந்திரங்களும் வந்திருந்தன. திரளான ஜனங்கள் வந்து பார்த்துப் போனார்கள். யுவராஜாவும் அரண்மனைக் காரியஸ்தர்களும் வந்திருந்தார்கள். கபர்த்தலா மகாராஜாவும் வந்திருந்தார்.

INDIAN INDUTRY.

**இந்தியக் கைத்தொழில்.**—இந்தியக் கைத்தொழிலின் அபிவிருத்தியை உத்தேசித்து மெஸ்ஸர்ஸ் சுரேந்திரநாத் பானாஜியும், கிருஷ்ணகுமாரமித்ராவும், ராதாசாரன்பாலும் ஒரு சுற்றுக்கடிதம் பிறப்பித்திருக்கிறார்கள். அதில் ஒரு ம்யூஸியமும் (காட்சிச்சாலை) கைத்தொழில் ஸம்பந்தமான பாங்கியும், டைரக்டரியும் அதாவது தொழிலாளிகள் வியாபாரிகள் முதலானவர்களுடைய விலாஸமடங்கிய ஒரு புஸ்தகமும் சுதேசி சேம்பர் ஆப் காமர்ஸூம் ஸ்தாபிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த முயற்சி வங்காளக் கவர்ன்மெண்டின் ஆதரணையையும் பெற்றிருக்கிறது.

THE MYSORE ECONOMIC CONFERENCE.

**மைசூர் பொருளாதாரக் கான்பரன்ஸூ.**—மைஸூர் கவர்ன்மெண்டின் ஆதரவின்கீழ் சமீபத்தில் ஒரு பொருளாதார கான்பரென்ஸ் கூடிற்று. அதில் பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(1) ஒரு கரும்பாலை ஸ்தாபிக்கவேண்டும். இதற்கு மாரிகண்ணி ஏரியிலிருந்து மின்சாரம் வழியாய் நீர் கொணர்ந்து வேலை நடத்தவேண்டும்.

(2). ஒரு ஸெண்டிரல் பாங்கியும், கல், ஓடு இவைகள் அறுக்கும் ஒரு தொழிற்சாலையும் ஸ்தாபிக்க வேண்டும். தேவநகரில் ஒரு பஞ்சுச்சாலையும் நெல்லுகுத்து மில்லும், அறுக்கும் மில்லும், பாசனத்திற்கு ஆயில் எஞ்சினும், காற்று எஞ்சினும் ஸ்தாபிக்க வேண்டும்.

(3) மைஸூர் டானரி கம்பெனி மூலமாய் ஜில்லா முழுமையும் தோல் கைத்தொழில் வேலையைப் பரவச் செய்யவேண்டும். கைத்தொழில் செய்யும் ஜனங்கள் சாப்பிடுவதற்கு சுகாதார முறையை அனுசரித்த ஹோடல்களையும் வீடுகளையும் கட்டவேண்டும்.

JACQUARD LOOM.

**ஜாக்கர்ட் தறி.**—மைஸூரில் தஸ்ராப் பண்டிகையின்போது நடந்த விவஸாயக் காட்சியில் ஜாக்கர்ட் தறி யென்று ஒரு புதுத் தறி உபயோகப்படுத்தப்பட்டு அதனால் இரண்டு அங்கவஸ்திரங்கள் ஒவ்வொன்றும் 3 கஜ நீளமுள்ளதாய் நாலு நாளில் நெய்யப்பட்டது. மைஸூர் நெசவுக்காரர்கள் தங்கள் தறியினால் ஒரு நாளுக்கு $1\frac{1}{2}$ முழத்துக்கு அதிகம் நெய்ய முடியாதென்று சொல்லுகிறார்கள். அங்கிருந்து இந்த தறி கொள்ளேகாலத்துக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கே அதனால் ஒரு நாளுக்கு $2\frac{1}{2}$ கஜம் நீளமுள்ள சேலை செய்யப்பட்டது. கொள்ளேகாலத்து நெசவுக்காரர்கள் தங்கள் பழைய தறிகளைக்கொண்டு முக்கால் கஜத்துக்கு மேல் நெய்யமுடியாது. இந்த ஜாக்கர்ட் தறி ஒன்று 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இது உயர்ந்த தறியாயிருந்தால் 300, 400 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இப்படி விலை அதிகமாயிருப்பதால் ஸாதாரண நெசவுக்காரர்கள் இதை வாங்கி உபயோகித்தல் ஸாத்தியமல்ல. “ஹிந்து” ப்பத்திரிகைக்கு இதைப்பற்றி யெழுதும் ஒரு நிருபர் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது போல, நெசவுக்காரர்களுக்கும் கடன் கொடுத்து இந்த ஜாக்கர்ட் தறியை உபயோகிக்கும்படி செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார். சென்னை மாகாணத்துத் தொழில்களுக்கு மிஸ்டர் சாட்டர்ட்டன் அதிகாரியாயிருப்பதால் இந்தத் தறியைப்பற்றி அவர் கவனிக்கவேண்டும். இதைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியவர்கள் மிஸ்டர் சாட்டர்டனுக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

# EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

SIR CHANDAVARKAR ON TEACHING.

**ஸர். என். சந்தாவர்க்கர் படிப்பிப்பதைப்பற்றி.**—சில தினங்களுக்கு முன்னே புனா மாணவர்களைப் பார்த்து ஸர். நாராயண சந்தாவர்க்கர்பேச நேர்ந்தபோது பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளுக்கு வெகுமதிகள் கொடுப்பதனால் அவர்கள் தலை திரும்பிப்போவது போலவே அவர்களைத் தட்டிக் கொடுத்துப் பேசுவதும் அவர்களைக் கர்வம் கொள்ளும்படிச் செய்கின்றது. பிரம்புதான் அவர்களை நல்வழிப்படுத்துவதாகும் என்றும், தீமைசெய்வதை விட பிரம்படி அதிக நன்மையைச் செய்கிறதென்பதே தன்னுடைய் உண்மையான கொள்கையாகுமென்றும் சொன்னார்.

SWIMMING IN SCHOOLS.

**பாடசாலைகளில் நீந்தல் பயிற்சி.**—தலைச்சேரியின் பள்ளிக்கூடத்திலிருக்கும் குளத்தில் அநேக சிறுவர்களும், பெரியவர்களும் சென்ற சில வருஷங்களாக விழுந்து இறந்திருக்கிறார்களாம். ஸமீபத்தில் பன்னிரண்டு பிராயமுள்ள சிறுவன் ஒருவன் அக்குளத்திற்கு இரையாயினனாம். இதற்குக்காரணம் சிறுவர்களுக்கு நீந்த தெரியாததே அனேகம் பிள்ளைகள் வாசிக்கும் பெரிய பள்ளிக்கூடங்களில் நீந்தக் கற்றுக் கொடுப்பதற்காகவே ஒரு குளம் வெட்டி, அதைச் செவ்வையாய் வைத்திருந்தால் தக்க ஆசிரியனைக் கொண்டு பிள்ளைகளுக்கு நீந்தல் கற்பிக்கலாம். அதல் பிள்ளைகள் அதிக நன்மையை அடைவார்களென்பதற்கு ஸந்தேகமில்லை. இதை வித்தியாதிகாரிகள் ஆலோசித்து ஆதரிப்பார்களென்று 'மெயில்' பத்திரிகைக்கு ஒரு நிருபர் எழுதுகின்றார்.

SCHOOL GARDENS.

**பாடசாலைத்தோட்டங்கள்.**—இலங்கையிலேபாடசாலைத்தோட்டங்கள் வரவர அதிகமாகின்றனவெனத்தெரிகின்றது. இப்போது இலங்கை முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 246. இத்தோட்டங்களில் மிகுதியானவை அரசாட்சிப்பாடசாலைகளோடேயே யமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் 34 தோட்டங்கள் சென்ற வருஷத்திற் புதிதாயமைக்கப்பட்டன. இப்போது அரசாட்சிப் பாடசாலையாரைப்போலவே வேறுபாடசாலையாரும் இத்தோட்டங்களின் அவசியத்தைப்பற்றி நன்கு உணருகிறார்கள். அதனால் இவ்வருஷத்திலே வடமாகாணத்திலும் புதிதாய் சிலபாடசாலைகளோடு தோட்டங்கள் அமைக்கப்படலாயின. கிருஷிசங்கத்தவர் கிருஷித்தொழில் ஸம்பந்தமாய் தற்போது நடப்பித்துவரும் விசேஷபயிற்சிகளும், அவைகளாலுண்டாகும் பெரிய அனுகூலங்களுமே எங்கும் இவ்விஷயத்தில் அதிக அவாவையுண்டாக்கிவருகின்றன.

PACHIAPPA'S COLLEGE.

**பச்சையப்பா காலேஜ்.**—சென்னப்பட்டணம் பச்சையப்பன் மண்டபத்தில் ஸமீபத்தில் சென்னை கவர்னர் ஸர் தாமஸ கிப்ஸன் கார்மிகேல் வந்திருந்து அக்கிராசனம் வகித்து வெற்றிப்பட்ட மாணவருக்குப் பரிசளித்தார்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர ஐயர் 69-ம் வருஷோத்ஸவப்பத்திரிகையைப் படித்தார். அதன் முடிவில் பச்சையப்ப முதலியாரின் கீர்த்திவாழ்கவென்று வாழ்த்துக் கூறி முடித்தார்.

பிறகு அக்காலேஜுக்கு நன்கொடை யளித்தவரின் பெயரையும் தொகையையும் குறிப்பிட்டார்.

| | |
|---|---|
| மிஸ்டர் பாலகிருஷ்ண மேட்டா | 30,000 |
| மிஸ்டர் வி. பி. ராமஸ்வாமி ஐயர் | 15,000 |
| ஆனரபில் மிஸ்டர் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் | 5000 |
| சேலம் கோதாவரி | 4000 |
| மிஸ்டர் எஸ். சீனிவாஸ ஐயங்கார் | 2000 |
| ,, கே. ,, | 1000 |
| குளும்பேட்டை ஜமீன்தார் | 1000 |
| திருவாவடுதுறைத் தம்பிரான் | 1000 |
| வெங்கடாஜலம் செட்டி அண்டு கம்பெனி | 1000 |
| காலவ அபரஞ்சி அம்மாள் செங்கல்வராய நாயகரின் பெற்றோரிழந்த பாலர்களின் ஸம்ரக்ஷணை ஆசிரமத்துக்கு | 10,000 |

பச்சையப்பா ஹோஸ்டலுக்கு மெஸ்ஸர்ஸ் கிங் அண்டு கம்பெனியார் நாற்காலி முதலிய சாமான்கள் கொடுப்பதாகச் சொன்னார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர ஐயர் தமது பெயரை விட்டு விட்டபடியால் அவர் இதற்கு 5000 ரூபாய் கொடுத்திருக்கிறதாக திவான்பகதூர் பி. ராஜரத்ன முதலியார் சொன்னார்.

பிறகு கவர்னர் பிள்ளைகளுக்குப் பரிசளித்துவிட்டு ஒரு நீண்ட ப்ரசங்கம் செய்தார்.



# SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

COPPER VESSELS.

**தாமிர பாத்திரங்கள்.**—"நம்முடைய கண்ணுக்குத் தெரியாமலும் தேகத்தில் சேர்ந்தால் விஷத்தைக் கொடுக்கக் கூடியவுமான கிருமிகள் தீர்த்தத்தில் இருக்கின்றன. அந்தத் தீர்த்தத்தைத் தாமிரப் பாத்திரத்தில் எடுத்தால் கிருமிகளெல்லாம் செத்து ஜலம் சுத்தமாய்ப் போய்விடுகிறது. மேலும் தாமிரத்தில் தீர்த்தம் அருந்தினால் காலரா, மலேரியா முதலிய வியாதிகள் அணுகா. இங்கிலாந்தில் அநேக சாஸ்திர விற்பன்னர்கள் செம்புக்கு இன்னும் என்ன சக்தியிருக்கிறதென்பதை பார்க்க வேண்டி இன்னும் அநேக விதமான வியாதிகளுக்கு கூட அதில் திராவகம்செய்து கொடுத்து அதற்குண்டான குணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு கோடி காலன் ஜலத்தை சுத்தி செய்ய இங்கிலீஷ் நாணயமாகிய $\frac{1}{4}$ கிரௌன் எடை செப்புத் திராவகத்தை ஜலத்தில் கலந்தால் சுத்தமாய்ப் போய்விடுகிறதாம். ஓர் ஊரில் காலரா அதிகமாய் நடமாடிக் கொண்டிருந்தது. அந்த ஊரின் தெருக்களில் மேற்சொல்லிய திராவகத்தைத் தெளிக்கவேகாலரா நின்றுபோய்விட்டது. சீனர்கள் என்ன அசங்கியமாய்க் குடியிருந்தபோதிலும் அவர்களைக் காலரா அணுகாததற்குக் காரணம் அவர்கள் தீர்த்தத்தைத் தாமிரப் பாத்திரங்களில் வைத்துக்கொள்வதேயாம்."

DANGER TO AIR SHIPS AND BALLOONS.

**ஆகாசக் கப்பல்களுக்கும் புகைக் கூண்டுகளுக்கும் விபத்து.**—பூர்ண சந்த்ரோதயத்தில் பா. நா. எழுதுகிறார்:—

வாயுமண்டலம் பூமியைச் சுற்றி நாற்பத்தைந்து முதல் 50மைல் வரை பரவியிருக்கின்றது. ஆனால், அதில் அமைந்துள்ள வாயு திரவியம் ஒரேமாதிரியாய்ப் பரவியுள்ளதன்று. பூமிக்குச் சமீபத்தில் நெருக்கமாகவும், உயர உயர மெலினமாகிக்கொண்டும் பரவியுள்ளது. வாயுவானது ஜலத்தை விட அதிக நெகிழ்ச்சியுள்ளதாகவும் மையானதாகவுமிருக்கிறது. வாயுமண்டலத்தில் ஓட்டைகள் சில சில இடங்களில் காணப்படுகின்றனவாம். சிற்சில மாதங்களில் அதிக வெப்பத்தினால் எவ்விதக் காற்றுமில்லாத சமயத்தில் சுழல் காற்று ஏற்பட்டு வைக்கோல், எச்சில்கலை, சில சமயத்தில் கோழி முதலியவைகளைக்கூடச் செங்குத்தாய் ஆகாயத்தில் கொண்டுபோகின்றன. இவ்விதமாகவே சமுத்திரத்திலும் திடீரென, ஜலமானது எழும்பி ஸ்தம்பம்போல் ஆகாசத்தில் கிளம்புவதையும் பார்க்கின்றோம். இதற்கு வாடர் ஸ்பௌட் என்று ஆங்கிலத்தில் பெயருள்ளது. இவ்விரண்டிற்கும் காரணம் ஒன்றே. அதாவது அதிக உஷ்ணத்தினாலாவது மற்றெந்தக் காரணத்தினாலாவது சிற்சில விடங்களில் காற்று திரவிய அணுக்கள் விலகி அகன்றுபோகவே "வாக்யுவம் என்று சொல்லப்படும் காற்று திரவியங்கள் சூந்நியமான பிரதேசங்கள் உண்டாகின்றன. அப்பிரதேசங்களைச் சுற்றிச் சலித்துக்கொண்டிருக்கும் வாயு திரவியங்கள் லேசான வஸ்துக்களைப் பூமியினின்று கிளப்பி மேற்கண்ட சூந்நியப் பிரதேசங்களின் வழியாய் மேலே கிளம்பும்படி செய்கின்றன.

இத்தன்மையான சூந்நியப்பிரதேசங்கள் வாயு மண்டலத்தில் உயர்ந்த இடங்களிற் சம்பவிக்கின்றன. ஆகாசக்கப்பல்கள் அல்லது புகைக்கூண்டுகள் அப்பிரதேசங்களைச் சமீபிக்கவே, உயரத்தில் மிதக்கிறதற்கு ஆதாரமாயுள்ள ஆகாசத்திரவியம் பொய்த்துப்போகவே, அக்கப்பல்கள் சூந்நியப் பிரதேசங்களாகிய ஓட்டைகளின் வழியாய் பூமியின் அகர்ஷண சக்தியின் கதி நோக்காய் மகாவேகமாய்ப் பூமியில் தாக்கிச் சின்னாபின்னமாகும்படி விழுகின்றன. எவ்வளவுக் கெவ்வளவு இக்கப்பல்கள் அதிக பாரமுள்ளதாகவும் கனமுள்ளதாகவுமிருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு பூமியில் விழும் வேகமும் அபாயமும் அதிகம். இச்சூந்நியப் பிரதேசங்களைச் சமீபிக்கிற ஆகாசக் கப்பல்களின் கண்ணுள்ள சாமான்களின் பளுவைக் குறைத்தல் நலம். இச்சூந்நியப் பிரதேசங்களை யணுகுங்காலத்தில் வாயுவின் பாரத்தை யளக்கும் கருவியில் உள்ள பாதரஸ ஊசியானது திடீரென்று முன்னிருந்த உயர்ந்த நிலையை விட்டுக் கீழிறங்கிச் சமநிலையைப் பெறுவதாகும்.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

---

PULSE.

**கைநாடி.**—நல்ல ஸுகசாலியின் கைநாடி நிமிஷமொன்றுக்கு 2 முறையடிக்குமாம்.

RED TURBANS.

**சிவப்பு தலைதுட்டைகள்.**—வெயிலில் அலைகிறவர்களுக்கு சூரிய ரஸ்மியால் காய்ப்புண்டு மூளை மயங்கியும் சிற்சில ஸமயங்களில் அவர்களுக்குப் பிராண ஹாநியும் ஸம்பவிக்கக்கூடியதா யிருக்கிறது. நல்ல குதிரைகள் சூரிய வெப்பம் தாங்காமல் சுருண்டு விழுந்து மாய்கிறது முண்டு. இதை தடுக்கச் சிவப்பு உருமால் கட்டுதலும், சிவப்புத் தொப்பி போடுதலும், நலமென்று ஒரு அறிஞர் கண்டுபிடித்து அநுபவஸித்தமாய் ருசுப்படுத்தி யிருக்கிறார்.

SLEEP.

**நித்திரை.**—நாம் ஸாதாரணமாக இரவில் 10-மணிக்கு நித்திரை செய்ய ஆரம்பித்து காலையில் 5-மணிக்கோ அல்லது 6-மணிக்கோ எழுந்திருக்கிறோம். நாம் தேக ஸௌக்யத்துடனும், பலத்துடனுமிருக்கவேண்டுமானால் மேற்சொல்லியபடி நித்திரை செய்யக்கூடாதாம். 10-மணிக்கு நித்திரைக்குச் சென்று 6-மணிக்கு எழுந்திருக்கிறதற்குப் பதிலாக, பின்வருமாறு இதை இரண்டு பாகங்களாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். அதாவது 6-மணியிலிருந்து $8\frac{1}{2}$-மணி வரைக்கும் ஒருபாகம். இரவு 2-மணியிலிருந்து காலையில் $6\frac{1}{2}$-மணி வரைக்கும் மற்றொரு பாகம். இவ்விதம் நித்திரை செய்துவந்தால் மூளை ஸம்பந்தமாக உழைப்பவர்களுக்கு உற்சாகமும், பலமும், அதிகரிக்குமாம். இவ்விஷயத்தில் அநுபமுள்ள ஒரு வைத்தியர் இவ்வித அபிப்பிராயப்படுகிறார். இவ்விதம் மூளை ஸம்பந்தமாக யோசனை செய்பவர்கள் நித்திரை செய்யும் காலத்தை இரண்டு பாகமாகப்பிரித்து நித்திரை செய்துவந்தால் அவர்களுக்கு இவ்விதம் செய்வதின் பிரயோசனம் புலப்படுமென்றும் சொல்லுகிறார். ஒரே தடவையில் 8-மணி காலம் அல்லது 9-மணி காலம் தூங்குவது தேகாரோக்யத்திற்கு மிகவும் கெடுதலாம்.

EPIDEMIC DIARRHOEA AND FLIES.

**பெருவாரியான வயிற்றுப் போக்கும் ஈக்களும்.**—குளிர்காலத்தைக் காட்டிலும், வெயில் காலத்தில் பெரும்பாலும் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு உண்டாகிறது. பட்டண வாசங்களில் வெயில் காலத்தில் ஈக்கள் பாலில் கூட்டம் கூடி, பாலை விஷமாக்கி விடுகிறது. நமது தேசத்துப் பெண்கள் பாலில் ஈக்கள் விழுந்திருந்தாலும் அவைகளை எடுத்தெரிந்து விட்டு அப்பாலை குழந்தைகளுக்கு போட்டுகிறார்கள். இச்சின்ன ஜெந்துக்களுக்கிருக்கிற விஷம் அவர்களுக்கு தெரிகிறதில்லை. குதிரைகள் ஜாஸ்தியாயிருக்கிற ஊர்களில் ஈக்கள் பாதை ஜாஸ்தி.

பாலை ஒருக்காலும் திறந்து வைக்கக்கூடாது அப்படி வைத்தால் தூசிபடுவதுமல்லாமல் ஈக்களினால் நேரிடும் கெடுதியும் உண்டாகும். குழந்தைகளை செங்காயான அல்லது அழுகின பழங்களை தின்க விடக்கூடாது.

EATING AFTER FASTING.

**பட்டினிகிடந்து சாப்பிடுதல்.**—நமக்குள் சில தினங்களில் பட்டினி யிருப்பது வழக்கமல்லவா? அந்நாட்களில் பட்டினி யிருந்து பின்பு பலகாரமாவது அல்லது வேறு எந்த ஆகாரமாவது சாப்பிடும்பொழுது வயிறு நிறைய பூரண ஆகாரம் செய்யக்கூடாது. ஸாதாரணமாக பட்டினி யிருந்தால் ஆகாரத்தில் ஒருவித ஆசை ஏற்படுகிறது. அநேகர்கள், காய்ந்த மாடு கம்பில் பாய்ந்ததுபோல், பட்டினியிருந்து பிறகு விழுந்து, விழுந்து தின்றார்களே? அவ்விதம் செய்வது பெருங்கேட்டை விளைவிக்கும் தன்மையுள்ளது. திடீரென்று மரணம் சம்பவிக்கும். இதற்கு அத்தாக்ஷியாக, வெல்லிங்டன் என்ற பிரபு, வெகு நேரமாக பட்டினி யிருந்து, பிறகு நிரம்பவும் ஆசையோடு, நேர்த்தியான ஆகாராதிகளை மிதமிஞ்சி சாப்பிட்ட உடன் இறந்து போனார். ஆகையால் விரதாதி நாட்களில், பட்டினி யிருந்தால், பிறகு அதிகமாக, புஷ்டியான ஆகாரங்களை உட்கொள்ளாமல், மிகவும் இலேசான ஆகாரங்களைக் கொஞ்சமாக உட்கொள்ளவேண்டும்.



## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

---

PARTNER SHIP.

**கூட்டுவியாபாரம்.**—ஒரு ஹிந்து தகப்பனும் அவருடைய புத்திரர்களும் சேர்ந்து நீலி வியாபாரம் செய்து வந்தார்கள். தகப்பனார் மானேஜிங் மெம்பர் ஸ்தானத்தில், நீலி மருந்து அனுப்புவதில் ஏதேனும் குறைவு பட்டால் தாம் ஈடு படுத்துவதாக வாதியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தத்திற்கு பிறகு புத்திரர்களிலும் ஒருவன் விபக்தம் செய்து கொண்டு தனியே வந்துவிட்டான். வாதி இந்த புத்திரனையும் சேர்த்து நஷ்டத்திற்கு வியாஜ்யம் கொண்டு வந்தபோது, புத்திரன் குடும்ப ஸொத்தில் எவ்வளவு பெற்றுக் கொண்டானோ, அதற்குத் தகுந்தபடி பிரஸ்தாப நஷ்டத்திற்கும் வீதாச்சாரம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

REMISSION OF COURT FEES.

**கோர்ட்டு பீஸ் தள்ளுபடி.**—1889௵த்து சென்னை வில்லேஜ் கோர்ட்டு ஆக்ட்டுக்கு (1889-ம் வருஷத்து 1-வது ஆக்ட்டு) உள்ளடங்கிய சென்னை இராஜதானியிலுள்ள வில்லேஜ்கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்டு, அல்லது எச்ஸிபிட்டாக பதிவு செய்யப்பட்டு, அல்லது ரெக்கார்டு செய்யப்பட்டு அல்லது அவ்விதம் கோர்ட்டுகளால் பெற்றுக்கொள்ளப்பட்டு அல்லது ஷை கோர்ட்டுகளால் கொடுக்கப்பட்டுள்ள அப்ளிகேஷன்களுக்கும், மனுக்களுக்கும், நகல்களுக்கும் 1870௵த்து கோர்ட்டு பீஸ் ஆக்ட்டின் பிரகாரம் செலுத்தியாகவேண்டிய கோர்ட்டு பீசுகளை ஷை 1870௵த்து 7-வது ஆக்ட்டு 35-வது பிரிவுப்பிரகாரம் தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி ஷை கோர்ட்டு பீசுகளை கவர்ன்மெண்டார் வாபஸ் செய்திருக்கிறார்கள்.

A CONTEMPT OF COURT CASE.

**கோர்ட்டாரை அவமானம் செய்ததாககேஸ்.**—சேலம் ஜில்லாவில் ஒரு அஸிஸ்டண்டு கலெக்டர் ஒரு கேஸ் விசாரித்துக்கொண்டிருக்கையில், கக்ஷிக்காரனொருவன் தன் வக்கீல் மறந்துவைத்துப்போன சட்டப் புஸ்தகங்களை எடுத்துப்போக உள்ளே நுழைந்ததாகவும், சாக்ஷியாகவாக்குமூலம் கொடுத்து நின்ற தன்னிஷ்டனைச் சைகைசெய்து அப்புஸ்தகங்கள் எங்கே என்று கேட்டதாகவும்; இது சரியல்லவென்று மாஜிஸ்திரேட்டுக்குத் தோன்றினதால், அவர் இவனைப் பிடித்து பிரமாண வாக்குமூலம் வாங்கி, சாக்ஷியுடன் பேசியதும், மாஜிஸ்திரேட்டை ஸலாம் செய்யாமலிருந்ததும் இந்த கோர்ட்டை அவமானித்ததாகுமென்று 3 ரூபா அபராதம் விதித்தார். இதன்மேல் அப்பீல் செய்ததில் இப்போது அது முடிவாகி, அபராதம் வாப்ஸானதாகவும், மாஜிஸ்ட்ரேட்டின் நோக்கம் தப்பென்று மேலதிகாரிகள் அபிப்பிராயம் கொண்டதாகவும் கேள்விப்படுகிறோம்.

AN ADOPTION AGREEMENT.

**ஒரு ஸ்வீகார உடன்படிக்கை.**—ஒரு ஸ்வீகாரத் தாயார், தன்னுடைய புருஷனின் ஸகல ஸொத்துகளையும் ஸ்வீகாரப்புத்திரனுக்குக் கொடுத்து விடுவதாகவும், ஆனால் சில ஸொத்துகளைமட்டிலும் தான் வைத்துக்கொள்வதாகவும், ஸ்வீகாரப் புத்திரனுக்கும் தனக்கும் பிடித்த மில்லாவிடில் தான் அந்த ஸொத்துகளைக்கொண்டு காலக்ஷேபம் செய்துவர உத்தேசித்திருப்பதாகவும்; தன்னுடைய ஜீவதிசைக்குப்பிறகு இந்த ஸொத்துகளை தன்னுடைய ஸ்வீகாரப்புத்திரன் அடையவேண்டுமென்றும் ஷை ஸ்வீகாரப்புத்திரனின் ஸொந்த தகப்பனாருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டாள். இந்த உடன்படிக்கை நியாயமானதாகவும் மனதிற்குப் பொருந்தினதாகவு மிருப்பதால் செல்லும்படியுள்ளதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 27 சென். 577. (புல் பெஞ்ச்)

RIGHTS OF ILLEGITIMATE SON.

**வைப்பாட்டி பிள்ளையின் பாத்தியம்.**—தகப்பன், சேர்ந்த குடும்பத்திலிருந்து விபக்தம் செய்து கொண்டு தனியே குடித்தனம் செய்து இறந்து போயிருந்தால், அவனுடைய வைப்பாட்டி மகன் அவனுடைய சொத்துக்கு வார்சு பாத்தியதை பாராட்டி அடையலாம். ஆனால் விபக்தம் செய்து கொள்ளாமற் மற்ற சகோதரர்களுடனாவது அல்லது தகப்பனாருடனாவது சேர்ந்து வஸித்து குடும்பம் சேர்ந்த குடும்பம் என்று சொல்லும்படியானதாகவிருந்தால், அந்த குடும்ப ஸொத்திற்கும் வைப்பாட்டி மகனுக்கும் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. விபக்தமாகாத தகப்பனுக்கு ஸொந்த புத்திரனிருந்தபோதிலும் ஸரி அல்லது அவன் வேறொரு புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டிருந்தபோதிலும் ஸரி, சேர்ந்த ஹிந்து குடும்பத்தில் வைப்பாட்டிக்கு பிறந்த மகனுக்கு பாத்தியமில்லை என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

THE LATE BRAHMA SRI NARASIMHA BAGAVATHAR.

**காலஞ்சென்ற ப்ரம்மஸ்ரீ நரசிம்ம பர்கவதர்:—** ப்ரம்மஸ்ரீ நரசிம்ம பாகவதர் பரகதி யடைந்தாரென்று கேட்டு விஸனிக்கிறோம். ஸம்ஸ்க்ருதம், தமிழ் தெலுங்கு இந்தப் பாஷைகளில் பாண்டித்தியம் அடைந்திருந்தார். நற்குண சீலர். பிரசித்தி பெற்ற தியாகைய்யரின் சிஷ்யர்களுள் கடைசியானவர். இவர் மரணத்தால் ஸங்கீத உலகத்திற்கே ஒரு குறை ஏற்பட்டதென்று சொல்லலாம்.

MR. V. S. SWAMINADA DIKSHITAR.

**மிஸ்டர். வி. எஸ் ஸ்வாமிநாத தீக்ஷிதர்.**—புதுச்சேரி கலோனியல் காலேஜில் இங்கிலீஷ் புரொபஸராக இருக்கும் மிஸ்டர் வி. எஸ். ஸ்வாமிநாத தீக்ஷிதருக்கு "ஆபீஸர் டி. அகாடமி" என்ற பட்டத்தைக் கொடுத்து ஒரு அபிஷியல் கெஜட்டு பிரசுரமாயிருக்கிறது. இம்மாதிரி ஹிந்து கனவானுக்குக் கௌரவப்பட்டம் அளித்தது இதுதான் முதல் தடவை. மிஸ்டர் தீக்ஷிதர் சென்னை சர்வ கலாசாலை பட்டதாரி.

A GENEROUS GIFT.

**ஒரு நன் கொடை.**—பம்பாய்க் கவர்னர் ஸர் ஜார்ஜ் க்ளார்க்கின் பிரேரேபணையால் பம்பாயில் ஸ்தாபிக்கப்படப் போகிற சாஸ்திர ஆராய்ச்சிச் சாலைக்கு உதவியாகப் புஸ்தகசாலை யொன்று ஸ்தாபிக்க ராவ் ஸாஹிப் திரிகம் ஜி என்னும் பிரபு இரண்டரை லக்ஷம் ரூபாய் மேற்படி கவர்னர் வசமாய் நன்கொடையாகத் தந்திருக்கிறார். அப்புஸ்தக சாலையைத் தமது பேர்வைத்து வழங்கவேண்டுமென்றும், அதில் தமது உருவச்சிலை முதலியன இருக்கவேண்டுமென்றும், மேற்படி கவர்னரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

A DECCAN SANDOW.

**ஹைதராபாத்து தக்கனம் ஸாண்டோ**—ஹைதராபாத்து ஸாண்டோ என்று பிரசித்திபெற்ற ப்ரொப்பஸர் புல்லு ராம ஜோகராவ், ஹைதராபாத்து நவாப், பித்தாபுரம் ராஜா, முனகாலா ராஜா, முதலியவர்களின் முன்னால், தன் விசித்திர பலத்தைக் காட்டி அனேக தங்கப் பதக்கங்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் கொடுக்கப் பெற்றார். இவர் அதிக வேகத்துடன் சென்றுகொண்டிருந்த 20 குதிரை சக்தியுடைய மோடார் வண்டி யொன்றை நிறுத்திவிட்டாராம். இவர் பிரம்ம குலத்தவர். வயது 25.

RAO SAHIB VASAMJI TRIKAMJI.

**ராவ் ஸாஹிப் வஸஞ்ஜி திருகஞ்ஜீ.**—பம்பாய் கவர்னர் ஸர் ஜார்ஜ் க்ளார்க்கின் பிரேரணையின் மேல் பம்பாயில் ஸ்தாபிக்கப்படப்போகிற சாஸ்திர ஆராய்ச்சி சாலையையொட்டி சாஸ்திர ஆராய்ச்சியில் உதவக்கூடிய புஸ்தகசாலை யொன்றை ஸ்தாபிக்க ராவ் ஸாஹிப் வசம்ஜி திரிகம்ஜியென்பவர், $2\frac{3}{4}$ லட்சம் ரூபாய் கவர்னர் வசம் ஒப்பிவித்திருக்கிறார். அந்த புஸ்தகசாலையைத் தன் பேரிட்டு அழைக்கவேண்டுமென்றும், தமது உருவச்சிலை யொன்று அந்த புஸ்தக சாலையில் யாரும் பார்க்கக்கூடிய ஓரிடத்தில் வைக்கப்படவேண்டுமென்றும், அதன் அடியில் இன்ன காரியத்தைக்கருதி ராவ் சாகிப் வசம்ஜி திரிகம்ஜி பெரிய நன்கொடை கொடுத்து அந்த புஸ்தகசாலையை ஸ்தாபித்தாரென் வரைந்திருக்கவேண்டுமென்றும், சொல்லியிருக்கிறார். அந்த நன்கொடையை வரப்பெற்று பம்பாய்க் கவர்ன்மெண்டார் அவருக்கு நன்று செலுத்தி யிருக்கின்றார்கள்.

KHAN BAHADUR NAOROJI PESTONJI.

**கான் பகதூர் நௌரோஜி பெஸ்டன்ஜி.**—ஆமதபாத்தில் பார்ஸி ஸ்திரீகளும் ஐரோப்பிய ஸ்திரீகளும் பிரசவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிரசவ வைத்திய சாலையை யொட்டி இன்ன ஜாதியாருக்குத்தான் என்றில்லாமல் சகல வகுப்பு மாதர்களுக்கும் பொதுவாயிருக்கும்படியான ஓர் அறை கட்டிவிட ஆனரபில் கான்பகதூர் நௌரோஜி பெஸ்டோன்ஜி யென்ற பார்ஸி கனவான் ரூபா 40,000 உபகரித்திருக்கிறாரென்று தெரிந்து சந்தோஷிக்கிறோம். பம்பாய்க் கவர்ன்மெண்டார் அவர் உதாரகுணத்தை மெச்சி ஒரு கவர்ன்மெண்ட் உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாய் அவருக்கு நன்றி செலுத்தி யிருக்கிறார்கள்.



## FUN. AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

NOT SO FOOLISH.

**அவ்வளவு பைத்திய காரனல்ல :—**

**கைதி.**—ஐயா! இந்தக் கேசுக்கு 1000 ரூபா அநியாயமாய்த்தோன்றுகிறது.

**வக்கீல்.**—நான் உன்னைப் பைத்தியக்காரனாக ரூபித்து, விடுதலை கிடைக்கப் பண்ணவில்லையா ?

**கைதி.**—ஆம். சரிதான். ஆனால் தங்களுக்கு 1000 ரூபா பீஸ் கொடுக்கத் தக்க அவ்வளவு பைத்தியகாரனாகி விட்டதாக ரூபிக்கவில்லையே.

WHOM AM I TO WED?

**யாரைக் கட்டிக் கொள்ளுகிறது.**—இருபத்தெட்டுப் பிராயமாகிறது, இன்னும் ஏதோ வொரு பெண்டாட்டியைக் கட்டிக்கொள்ளாமல் இப்படி எத்தனை நாள் துன்பப் படுவாய் என்று கங்கம்மாள் தன் மகனை கண்டித்துப் பேசினாள். "யார் பெண்டாட்டியை கட்டிக் கொள்ளச் சொல்லுகிறாய்?" என்று பெண்ணாசைகொண்ட பிள்ளை பளிச்சென்று சொன்னான்.

SANNYASAM.

**ஸந்நியாஸம்.**—சாகும்தருணத்திலிருந்த ஒரு வைதிகப்பிராமணனண்டை பந்துக்கள் எல்லாரும் வந்து "சாஸ்திரிகளே தாங்கள் பெரியவாள், இந்தவியாதி வெகுநாளாய் உங்களை உபாதித்துக்கொண்டிருக்கிறது, ஸுகதுக்கங்கள் எல்லாவற்றையும் அனுபவித்த தங்களுக்கு ஒன்றும் குறைவில்லை, தாங்கள் ஸந்யாஸம் வாங்கிக்கொண்டால் நன்றாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்" என்று சொல்ல அந்த ரோகி "ஆகா! அதற்கென்ன வாங்கிக்கொள்ளுகிறேன், பத்தியமென்ன" என்று கேட்டார்.

CUT OFF THE HEAD.

**தலையை வெட்டிவிட்டான்.**—ரோமா சக்ரவர்த்திகளில் வெகு குரூர சிந்தையுள்ள ஒருவர் ஒருநாள் இரவில் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தார். மேடையின்மீது பல வேஷக்காரர்களிருந்தார்கள். அதில் முந்தி நின்றிருந்த ஒருவன் நெட்டையாயிருந்தபடியால், அவனுக்குப்பின் நின்றிருந்த குள்ளனொருவனை மறைத்தான். அதனால் சக்ரவர்த்திக்கு அவன் தெரியவில்லை. உடனே அவர் தன் பக்கத்தில் நின்றிருந்த சிப்பாயைக்கூவி மெதுவாய் மேடைமேல் போய், நெடியோனுடைய தலையைச் சீவி விட்டு வரும்படி உத்தரவளிக்க, அவனும்போய், அப்படியே செய்துவிட்டு வந்தான். பிறகு சக்கரவர்த்தி வெட்டுண்டு நின்றவனைக்கூவி, "அடே இனி நீ பதையாமல் ஆடு. இப்பொழுது உனக்குச் சரியான உயரமிருப்பதால், நீ யாரையும் மறைப்பது ஸாத்தியமன்று," என்று சொன்னாராம். கொடுங்கோன் மன்னருடைய சித்த விருத்தி இப்படிப் போகுமென்பதற்கில்லை.

A DOG'S SAGACITY.

**ஓர் நாயின் அறிவு.**—ஒரு நாள் ஈடன் என்னும் துரையொருவர் குதிரை ஸவாரி போனபோது தன்னுடன் கொண்டுபோயிருந்த கம்பளியை எங்கேயோ இழந்து விட்டார். அதை அவர் வீட்டுக்குத் திரும்பி வருவதற்குமுன் கவனிக்க வில்லை. இது இப்படியிருக்க, அன்று காலையில் அவருடைய நாய் எங்கெங்கோ திரிந்துவிட்டு அதிஷ்டவசமாய் அந்தக் கம்பளி விழுந்துகிடந்த வீதியில் நுழைந்தது. அது அந்தக் கம்பளியைப் பார்த்தவுடன் தன் எஜமானனுடைய தென்று அறிந்து, அதனருகிலேயே உட்கார்ந்து கொண்டு எஜமானனுடைய வரவை எதிர்பார்த்து கொண்டிருந்தது. அது அன்றெல்லாங் காத்திருந்தும் எஜமானன் வரவில்லை. அதனிடத்திலிருந்து கம்பளியைப் பறித்துக் கொள்ளும் பொருட்டு, அதற்கு இறைச்சித் துண்டுகள் முதலிய தின்பண்டங்களைக் கொடுப்பது முதலான வழிப் போக்கர் செய்த தந்திரங்களுக் கெல்லாம் அது இடங்கொடுக்காமல் வெகு நேரம்வரையில் காத்திருந்தது. பிறகு அவ்வழியாய்ச் சென்ற ஈடன் துரையின் சிநேகிதரொருவர் அந்த நாய் தம் சிநேகிதருடையது என்றறிந்து, துரை ஈடன்அவரிடம் போய்ச் சொல்ல தாம் வந்து கம்பளியை எடுத்துக் கொண்டு நாயையுமழைத்துக்கொண்டு போனார்.

## CURIOSITIES.

## விநோதங்கள்.

BORE THREE CHILDREN.

**மூன்று குழந்தைகளைப் பெற்றாள்.**—தஞ்சாவூருக்கும் திட்டைக்கும் நடுவிலுள்ள கோடமங்கலம் என்னும் கிராமத்தில் ஒரு சூத்ர ஸ்திரீ நாளது நவம்பர் மாஸம் 15-தேதி ராத்திரி மூன்று குழந்தைகளைப் பெற்றதாக நம்முடைய நேயர் திட்டை டி. எஸ். சேஷாத்திரி ஐயங்கார் அவர்கள் தெரிவிக்கிறார். இரண்டு குழந்தைகள் பெண்ணும், ஒன்று ஆணும், தாயாரும் குழந்தைகளும் ஸௌக்யமாயிருக்கிறார்கள்.

CAMELS THAT SMOKE.

**சுருட்டுப் பிடிக்கும் ஒட்டகங்கள்.**—ஆப்பிரிக்காவிலுள்ள மொரோகோ தேசத்தில் ஒட்டகங்களை வேலையில் பழக்க ஒரு தந்திரம் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒரு முக்கோண வடிவமுள்ள துண்டுக் கட்டையில் ஒரு துளையிட்டு, அதில் ஒரு சுருட்டைக் கொளுத்தி வைத்து, ஒட்டகத்தின் வாயில் கொடுக்கிறார்களாம். அது புகையை மூக்கினால் விட்டுக்கொண்டே ஸாதுவாய்ப் போகும். சுருட்டு ஆய்விட்டால் திடீரென்று கோபத்தோடு நிற்கிறதாம். ஆகையால் சுருட்டு ஆக ஆக புதிதாய் வைத்துக் கொண்டே வருகிறார்களாம்.

INTOXICATED FISH.

**குடிமயக்கங் கொண்ட மீன்கள்.**—பிராஞ்சு தேசத்தில் ஹெரோ என்ற மாகாணத்தில் பரோத்திஞ் என்ற ஊரில் தீர்வைச் சாவடி உத்தியோகஸ்தர்கள் 700 காலன் திராக்ஷ இரசத்தைப் பறிமுதல் செய்து ஒரு வாய்க்காலில் எறிந்துவிட்டார்கள். இதனால் மீன்கள் போதைகொண்டு ஜலத்தின்மேல் மிதந்து கொண்டிருந்தன வென்றும், ஜனங்கள் மிகச் சுலபமாய் அவைகளைப் பிடிக்கக்கூடுமா யிருந்ததென்றும் பாரீஸ்பட்டணத்துப் பத்திரிகைகள் கூறுகின்றன. வீட்டுஸ்திரீகள் இவ்வளவு சுலபமாய் மீன் கிடைத்தபடியால் கடைக்குப் போகாமலே மச்சம் சம்பாதித்துக் கொண்டார்கள். அதனால் மீன் வியாபாரிகள் தீர்வைச் சாவடி உத்தியோகஸ்தர்களால் தங்களுக்கு நேர்ந்த நஷ்டத்தைக் கவர்ன்மெண்டு ஒத்துக்கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணியிருக்கிறார்களாம்.

A VALUABLE APPLE TREE.

**விலை யுயர்ந்த ஆப்பிள் மரம்.**—வாஷிங்டன் என்னும் பட்டணத்திலுள்ள சிலான் ஏரிக்குச் சமீபத்தில் ஒரு ஆப்பிள் மரம் ஆறுயிரம் பவுன் விலைக்குக் கேட்கப்பட்டது. அம்மாச் சொந்தக்காரர் அம்மரம் பெரியதாய் அதன் பழங்களை சந்தையில் விற்றாலே அதிகப்பணம் வருமென்று நினைத்து, விலைக்குக் கொடுக்க சம்மதிக்கவில்லை. அந்த மரம் இருபது வருஷத்துக்கு முந்தி ஒரு இந்தியனால் பயிரிடப்பட்டு விர்த்திக்குக் கொண்டு வரப்பட்டதாம். இதன் பழம் மஞ்சள் நிறமாம். அநேக நாட்கள் கெடாமலிருக்கின்றதாம். ஸ்போகேன் என்னுமிடத்தில் ஆப்பிள்பழக் காட்சியில் இம்மாத்தின் ஆப்பிளுக்கு முதன்மையான பரிசுகிடைத்ததாம்.

THE BURMAN.

**பர்மியன்.**—சட்டி மாதிரியான ஒருவகைத் தொப்பியைத் தலையில்தரிக்கிறார்கள். அத்தொப்பிகளில் அவர்களுடைய ஆகாரத்திற்கேற்ற சோறு, மீன், ஊறுகாய் முதலிய பண்டங்கள் வைக்கப்பட்டிருக்கும். அவர்கள் வெளியே எவ்விடம் போனபோதிலும் போஜனத்திற்கு திண்டாடவேண்டுவதில்லை. பசித்தபோது ஒருமா நிழலிற் போய்த் தொப்பியைக் கழற்றிய மாத்திரத்தில் பசி தீர்ந்துவிடும். அவர்களுக்கு ஒருவகை எரும்புத்துவையல் மிகவும் பிரீதி. அப்பிராணிகளை அவர்கள் ஏராளமாய்ப் பிடித்து மசால் முதலியவை கலந்து அரைத்துத் தின்பார்கள். மீன்களைப்பிடித்து நெடுநாள் வரையில் பாண்களிலடைத்து அழுகவைத்தபின் ஓர்வகைப் புழுக்கள் தோன்றிக் கொழுத்து வளர்வதன்மேல் அப்புழுக்களையும் அழுகிய மீன்களையும் நன்றாய் இடித்து மற்ற பதார்த்தங்களுக்கு மசாலாவாக உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் பால், தயிர், வெண்ணெய் ஆகிய இவற்றைப் பிரீதியுடன் உட்கொண்டபோதிலும் நெய் முகத்தில் விழிப்பதேயில்லை. வேப்பிலை கிடைப்பது அத்தேசங்களில் மிகவும் அரிது. ஒரு வேப்பிலைக் கொத்து நாலைந்து அணு வரையில் விலையேறும். வேப்பிலைச் சுமையை யாராவது கடைவீதிகளில் கொண்டுவருவார்களாகில் அதைக் கண்டமாத்திரத்தில் ஜனங்கள் திரள்திரளாகக்கூடி உயர்ந்த விலை கொடுத்து ஒரு நிமிஷத்தில் வாங்கிக்கொண்டு போய் விடுவார்கள். அவர்கள் அதை கொதிக்கும் ஜலத்தில் நாலைந்து நிமிஷம் தோய்த்து வைத்துப் பின்பு அதனுடன் ஒன்றுங் கலவாமலே மிக்க விருப்புடன் தின்றுவிடுவார்கள். இப்படி பர்மியர் வழக்கத்தைப்பற்றி ஒரு நிருபர் தேசாபிமானி என்னும் பத்திரிகையில் எழுதுகிறார்.



## NEWS OF THE MONTH.

## மாஸ வர்த்தமானங்கள்.

### INDIAN NEWS.

### இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

THE INDIAN NATIONAL CONGRESS.

**இந்தியன் நாஷனல் காங்கிரேஸ்.**—வரும் டிஸம்பர் மாஸம் 26, 27, 28-தேதிகளில் கல்கத்தாவில் நடை பெறும். 29-தேதியில் ஆசார சீர்திருத்த கான்பரென்ஸ் காங்கிரஸ் பந்தலில் நடைபெறும்.

WANDERING MAHOMADAN TRADERS.

**ஊநூராய்த்திரியும் முகம்மதிய வியாபாரிகள்.**—அலைந்து திரியும் வடக்கத்திய முகம்மதியர்களில் சிலர் ஸமயத்தில் மோசடி நாணயத்தையும் தங்கம், வெள்ளி முலாம் பூசின ஸாமான்களையும் நல்லதாக பாவிக்க கொடுப்பதால், அவர்களிடம் தங்கள் ஊரார்கள் யாதொரு வியாபாரமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்பதை எல்லாரும் அறியவும்.

A BALANCE.

**ஒரு தராசு.**—பஞ்சாபி கற்பிக்கிறவராகிய அமிரிட்ஸார் ஷிம்பநாதர், சமீபத்தில் ஒரு தராசு உண்டு பண்ணியிருக்கிறார். அத்தராசானது உண்மையான தங்கத்துக்கும் சூது தங்கத்துக்குமுள்ள வித்தியாஸத்தை எடுத்துக் காட்டுகிறதாம். இத்தராசு வெகு புகழ் பெற்றபடியால் க்வாலியர் மகாராஜா இதன் உரிமையை ரூபா 9000-க்கு வாங்கிவிட்டாராம்.

A SCHOLARSHIP.

**ஒரு ஸ்காலர்ஷிப்பு.**—திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் 5-வது பாரமில் படிக்கும் எந்தப் பிள்ளை கடைசிப்பரிக்ஷையில் ஸம்ஸ்கிருதத்தில் அதிக மார்க்கு வாங்குகிறானோ அவனுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கும்படியாய் ஆனரபில் மிஸ்டர். வி. கிருஷ்ணஸாமி அய்யர் ஆயிர ரூபாய் நன்கொடையாக கொடுத்திருக்கிறார். இந்த ஸ்காலர்ஷிப் காலஞ்சென்ற அவர் தமையன் வி. ஸ்வாமிநாத அய்யர் பேரால் கொடுக்கப்படும்.

THE BANK OF BURMA.

**பர்மா பாங்கி.**—நமது சென்னையில் பீச்சு இரண்டாவது லயனிலுள்ள பர்மா பாங்கி நாளது மீ 14-தேதி மூடப்பட்டது. இதன் தலைபாங்கி ரங்கூனிலிருக்கிறது. அதுவும் சாத்தப்பட்டுப் போயிற்று. கல்கத்தா பம்பாய் இவைகளிலுள்ள இதன் கிளைகளும் அன்றைக்குச் சாத்தப்பட்டுப் போயிற்றும். சென்னையில் இப்பாங்கியின் கிளையில் இந்தியர்களானவர் சிலரே பணம் போட்டிருந்தார்கள். அதனால் இங்கு அதிகக் குழப்பமில்லை.

WANDERING PHYSICIANS.

**ஊநூராய் அலையும் வைத்தியர்கள்.**—கண், பல், இவைகளின் வியாதியை சொஸ்தம் செய்துவிடுவதாகச்சொல்லிக்கொண்டு இதர தேசங்களிலிருந்து வரும் அன்னியர்களிடம் வைத்தியம் செய்துக்கொள்ளுவதில் வெகு ஜாக்கிரதையோடு இருக்கவேணுமென்பதை தங்கள் ஊர்ஜனங்களுக்கு கிராம முனிசீபுகள் எச்சரித்துவைக்கவேணும். யாருக்கு வைத்தியம் செய்வதாக சொல்லப்படுகிறதோ அவர்களுக்கு இவர்களால் பெரிய அபாயங்கூட உண்டாகிவிடுகிறதென்று தஞ்சாவூர் கலெக்டர் டிஸ்ட்ரிக்டு கெஜட்டில் ஒரு விளம்பரம் செய்திருக்கிறார்.

BANGALORE TRAMWAY.

**பங்களூர் டிராம்வே.**—இவ்வூரில் காவேரி நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்திசெய்து டிராம் போடுவதாக உத்தேசித்திருக்கிறார்கள். மைஸூர் கவர்ன்மெண்டார் இந்தப் பிரேரணையை ஆலோசனை செய்து வருகிறார்கள். இதற்கு 7 லக்ஷ ரூபாய் பிடிக்குமாம். அடுத்த வருஷம் வேலை ஆரம்பித்து ஒரு வருஷ சாவகாசத்தில் முடித்து விடத் தீர்மானித்திருக்கிறார்கள். 10 டிராம் வண்டிகள் இங்கிலாந்திலிருந்து செய்யப்பட்டுவரும். தலைக்கு மேல் கம்பிபோட்டு அதன் வழியாய் மின்சாரப் பவர் கொடுப்பதாய் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

A FREE READING ROOM IN HOWRAH.

**ஹௌராவில் ஒரு இலவச ரீடிங் ரூம்.**—இவ்வூரில் ஒரு இலவச ரீடிங்ரூம் ஸ்தாபிக்க வேண்டுமென்று அவ்வூர் கனவான்கள் கூடிப் பிரயத்தனப்பட்டார்கள். அவ்வூர் கலெக்டர் கவர்ன்மெண்டுக்காக 6 கோட்டா நிலம் இலவசமாய் அளிப்பதாய் வாக்களித்

தார். பாபுஜயத்குமார் முகர்ஜி அந்நிலத்தின்மேல் 9000 ரூபாயில் ஒரு கட்டிடம் கட்டித் தருவதாகவும், புஸ்தகாலயத்திற்குப் புஸ்தகங்களும், நாற்காலி மேஜை முதலிய ஸாமான்களும் பிறவும் வாங்கியளிப்பதாகவும் வாக்களித்தார். லெப்டினெண்ட் கவர்னர் இக்கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல்லை நாட்டுவதாக வாக்களித்தார். லைப்ரெரி அவர் பேராலே டியூக் லைப்ரெரி என்று பேரிடப்படும்.

CASTRATED A MAN.

**மனுஷனுக்கு விதையடித்தார்கள்.**—மாடுகளுக்கும் சேவல்களுக்குந்தான் விதை யடித்தலுண்டு. அப்படி விதையடித்து விடுவதால் அவைகள் பெண் சேர்க்கையில் நாட்டமில்லாமலாகிவிட அதனால் அவைகள் பலமும் புஷ்டியும் கொள்ளுகின்றன. ஆனால் கான்கிஞா என்ற இடத்தில் பக்கீரொருவர் விதையடித்துக்கொள்வதில் பிரியம் கொண்டு விட அப்படியே இருவர் கூடி யவனது விதையை அறுத்தெடுத்து விட்டனர். சாயங்காலத்திற்குள் பக்கீர் மரணப் பிராப்தியாகிவிடவும் இருவரும் பிடிக்கப்பட்டு அலிப்பூர் செஷனில் விசாரிக்கப் படுகின்றனர். இந்த மனிதர்கள் விதை யடித்த பலனை தந்திருக்குமானால் அநேக பிரம்மச் சாரிகள் விதை யடித்துக்கொண்டு நல்ல பிரயோஜன மடையக் கூடியவர்களா யிருப்பார்களன்றோ?—பாண்டியன்.

THRONES IN THE DURBAR.

**தர்பாரில் சிங்காதனங்கள்.**—நான்கு சிங்காதனங்கள் டெல்லி தர்பார் சுபகாரியத்தின் போது உபயோகமாகும். இந்நான்கும் கல்கத்தாவிலே செய்யப்பட்டன. 1875-ம் வருஷம் மெஸ்ஸர்ஸ் ஹாமில்டன் அண்டு கம்பெனியாரால் செய்யப்பட்ட சிங்காதனத்தைப் போன்றதாம். இவற்றுள் 2 முக்கியமாய் முடிசூட்டின்போது உபயோகப்படுமாகையால், அவைகெட்டி வெள்ளியில் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டிற்கும் 80,000 ரூபாய்கள் உருக்கிவிடப் பட்டனவாம். மற்ற 2-ம் வெள்ளி முலாம் பூசியுள்ளவை. அவைகளின்மேல் பல சித்திரவேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வேலைகள் சக்ரவர்த்தினியின் முடிசூட்டுத் தாவணியிலுள்ள சித்திர வேலைகளைப் போன்றனவாம். ரோஜா, தாமரை, சண்பகம் முதலிய பூவலங்காரமும் காணப்படும்.

THE TANJORE DISTRICT CONFERENCE.

**தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்டு கான்பரன்ஸ்.**—இக்கான்பரன்ஸ் இந்த மாதம் 18, 19ம் தேதிகளில் நடைபெறுமென்று நாம் முன்னம் குறிப்பிட்டிருந்தபடி நடப்பதில்லையென்று அறிகிறோம். மதுரவில் நடந்துவரும் திருநெல்வேலி கலெக்டரின் கொலைக் கேஸ் ஸம்பந்தமாய் ஆனரபில் மிஸ்டர் எல். ஏ. கோவிந்தராகவ ஐயர் சென்னையில் தங்கி யிருக்கவேண்டி யிருப்பதால் அக்கான்பரன்ஸில் அக்கிராசனம் வகிக்க முடியாதென்று தெரிவித்திருக்கிறார். இது டிஸம்பர் மாசம் இரண்டு மூன்று தேதிகளில் நடக்கும்.

FEEDING FAMISHED COWS.

**பட்டினி கிடக்கும் பசுக்களுக்கு ஆகாரம்.**—சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு காயனதாஸ் பகவான்தாஸ் என்னும் சந்நியாசி யொருவர் பம்பாய்க்கு வந்து தன் தேசத்தில் (கட்ச்புஜ்) பட்டினி கிடக்கும் பசுக்களுக்கு புல் வாங்கிப்போட திரவிய சகாயம் வேண்டுமென்று ஹிந்துக்கள் அநேகரிடம் முறையிட்டுக்கொண்டும் ஒருவரும் உதவி செய்யாததால் மும்பாதேவி ஆலயத்திற்குள்ளிருந்த வேப்ப மரமொன்றில் 25 அடி உயரத்தில் தலை கீழாக சுமார் 10 நிமிஷம் தொங்கிவிட்டார். அதனைப்பார்த்த சிலர் அவர் கோரிய தொகை 300 ரூபாயையும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டபிறகு அவர் கீழே இறங்கினாராம்.

A MATCH FACTORY IN BURMA.

**பர்மாவில் ஒரு நெருப்புப் பெட்டித் தொழிற்சாலை.**—பர்மாவில் ரங்கூனுக்கு 5 மைல் தூரத்திலுள்ள கானுங்கில் ஒரு நெருப்புப்பெட்டித் தொழிற்சாலை ஏற்பட்டுப் போமென்று ஸ்மாசார மெட்டுகிறது. அத்தொழிற் சாலை பர்மா சட்டசபை மெம்பராகிய ஆனரெபில் சின்ஸாங்கால் ஸ்தாபிக்கப்படும். இந்தியாவில் சில இடங்களில் அம்மாதிரி தொழிற் சாலைகளை ஸ்தாபித்துக் கொடுத்திருக்கும் மிஸ்டர் இ. வி. இவான்ஸைக்கொண்டு ஆனரெபில் சின்ஸாங்க் அத்தொழிற் சாலையை ஸ்தாபிக்கப் போகிறார். மிஸ்டர். இவான்ஸ் சில தீக்குச்சித்



தொழிற் சாலைகளை இந்தியாவில் ஸ்தாபித்துக்கொடுத்திருப்பதுமன்றி, இந்தியா கவர்ன்மெண்டாருக்கு இன்ன மரங்கள் நெருப்புக் குச்சிகள் செய்வற்கு ஏற்ற மரங்களாகுமென்று கூட, ரிபோர்ட் செய்திருக்கிறார். அந்தத் தொழிலில் வெகு நாளைய அனுபோகமுள்ள மிஸ்டர் ஸெஸநார் என்ற இஞ்சினீர் ஒருவரைக்கூட ஆனரெபில் சின்ஸாங்க் வேலைக்கு அமர்த்திக் கொண்டிருக்கிறாரென்று காண்கிறது.

SANITARY CONFERENCE.

**சுகாதார கான்பெரென்ஸ்.**—நம்தேசத்து சுகாதார நிலைமையில் அக்கரைப்பட்ட நிபுணர்கள் சிலர் பம்பாயின் ஸமீபத்தில் கான்பெரன்ஸ்கூட, அப்போது ஆனரபில் மிஸ்டர் பட்லர் வந்திருந்து, ஆரம்பப் பிரசங்கம் செய்தார். அதில் சுகாதார நிலைமையை எப்படி விர்த்தி செய்வதென்பதையும், என்னென்ன வியாதிகள் இந்தியரைப் பாதிக்கின்றன வென்பதையும், அவைகளைக்குறைக்க இந்தியாக் கவர்ன்மெண்ட் என்ன முயற்சிகள் செய்து வருகிறார்களென்பதையும், அவைகளை இனி கூடிய வரையில் எப்படித் தடுக்கலாமென்பதையும், மாகாணக் கவர்ன்மெண்டுகள் இந்த வழியில் என்ன செய்து வருகிறார்களென்பதையும் பற்றிப்பேசினார். சுகாதார நிலைமையை விர்த்திபண்ணுவது ஜனங்களின் கூட்டுறவால் ஸாத்தியமாகையால், ஆரம்பத்தில் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் பொருளாதார நிலைமையையும் ஸமுக வாழ்க்கையையும் அறிவது அவசியம். இந்தக் கான்பரென்ஸில் கிராமங்களிலும் பட்டணங்களிலும் சுகாதார முறைகளையும் விசேஷ வியாதிகளைத் தடுப்பதையும்பற்றி கவனிக்கப்படும். இம்மாதிரிக் கான்பெரென்ஸ்கள் வருஷா வருஷம் ஸௌகரியமான இடத்தில் கூட்டப்படும்.

FERRY BOATS.

**ஆறுகளில் படகுகள்.**—திரிச்சினுப்பள்ளி ஜில்லாவில் கொள்ளிடத்தில் படகு செலுத்திப்போகும் சில தோணித் துறைகளில் அபாயங்கள் நேரிட்டு, உயிர்ச் சேதம் பல உண்டானதால், கவர்ன்மெண்டார் தோணிக் கண்ட்ராக்டர்களின் காரியத்தைக் கவனிக்க வேண்டுமென்று தீர்மானித்து உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாக் கலெக்டரும், தத்தமது எல்லைக்குள் தோணி செலுத்தும் கண்ட்ராக்டர்களின் வேலையை அடிக்கடி கவனித்து வர வேண்டுமென்று இவ்வுத்தரவில் கண்டிருக்கிறது. தோணிகள் ரிப்பேர் செய்யப்பட்டு ஒழுங்காயிருக்கின்றனவா வென்றும், அவற்றில் அதிகமான ஜனங்கள் ஏற்றப்படாம லிருக்கின்றார்களா வென்றும், தக்க ஆட்களைக் கொண்டு அத்தோணிகள் தள்ளப்பட்டு வருகின்றனவா வென்றும் கவனிக்கவேண்டியது கலெக்டர்களின் பொறுப்பாகும். கண்ட்ராக்டர்களின் அஜாக்கிரதையினால் உயிர்ச் சேதம் உண்டாயிற்றென்று தெரிகிற பக்ஷத்தில் அவர்கள் பிராஸிகூஷனுக் குள்ளாவார்களென்றும் இவ்வுத்தரவு கூறுகிறது. ரெவினியூ போர்டார் ஒவ்வொரு ஜில்லாக் கலெக்டரும் அப்போதப்போது தோணிகளைப் பரீக்ஷை செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டதை கவர்ன்மெண்டார் அங்கீகரித்து விட்டார்கள்.

ELECTION OF TALUK BOARD PRESIDENTS.

**தாலூகா போர்ட் ப்ரஸிடெண்டுகளின் எலெக்ஷன்.**—தாலூகா போர்ட் ப்ரஸிடெண்டை மெம்பர்கள் எலெக்ஷன்செய்யும்விஷயமாய் கவர்ன்மெண்ட் ஒழுங்குகள் செய்து ப்ரசுரித்திருக்கிறார்கள். முன்னதாக 20 நாள் இருக்கையில் எலெக்ஷன் செய்யுந் தினத்தைக் குறிப்பிட்டு டிஸ்டிரிக்ட் போர்ட் ப்ரஸிடெண்ட் டிவிஷனல் ஆபீஸருக்கெழுதி அவர் 10 நாள் முன்னதாக மெம்பர்களைக் கூட்டவேண்டும். அப்படிக் கூட்டும் ஸமயத்தில் மாத்த மெம்பர்களில் பாதிப்பேரும் டிவிஷனல் ஆபீஸரும் வந்திருக்கவேண்டும். பிறகு எலெக்ஷன் ஸாதாரண ஒழுங்குகளின்படி செய்யப்பட்டு டிவிஷனல் ஆபீஸர் எலெக்ஷனானவர் இன்னாரென்று அப்போதே சொல்லி தாமஸமில்லாமல் ப்ரஸிடெண்டுக்கும் எழுதியனுப்பவேண்டும். யாருக்காவது எலெக்ஷனில் ஆட்சேபமுண்டானால் மூன்று மெம்பர்கள் சேர்ந்து ஏழு நாளுக்குள் ப்ரஸிடெண்டுக்கு எழுதிக்கொள்ளவேண்டும். ப்ரஸிடெண்டின் உத்தரவுக்கு மேல் அப்பீல் இல்லை. எலெக்ஷனுக்குக் குறித்த தேதியில் எலெக்ஷன் நடக்காமற்போனால் வேறு எலெக்ஷன் நடக்கும்படி ப்ரஸிடெண்ட் உத்தரவு பண்ணலாம். அப்போதும் எலெக்ஷன் நடக்கா

மற்போனல், கவர்ன்மெண்டுக்கு அறிவிக்க, கவர்ன்மெண்ட் செய்யும் உத்தரவு முடிவான உத்தரவாகும். இப்படி எலெக்ஷன் விஷயமாய் கவர்ன்மெண்ட் செய்திருக்கும் உத்தரவு இந்த வருஷம் டிசம்பர் மாசம் முதல் தேதி முதல் அனுஷ்டானத்துக்கு வரும்.

DURBAR CELEBRATIONS IN MADRAS.

**சென்னையில் தர்பார்க் கொண்டாட்டம்.**—சென்னையில் டிஸம்பர் மாசம் 12-ந்தேதி தர்பார் கொண்டாட்டத்துக்கு வேண்டிய ப்ரோகிராம் பிரசுரமாயிருக்கிறது. பல இடங்களில் ஏழைகளுக்குச் சாப்பாடு போடப்படும். இதைப் பல பெரிய மனுஷர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஏழைகளுக்குக் காலை 9-மணி முதல் 11-மனி வரையில் துணிகள் கொடுக்கப்பட்டு சாப்பாடும் போடப்படும். கவர்ன்மெண்ட் விருந்து மண்டபத்தின் படிகளிலிருந்து ராஜ விளம்பரம் பகல் 12-மணிக்கு படிக்கப்படும். அப்போது காலேஜ் சிறுவர்கள் 3000-பேர் அங்கு கூட்டப்பட்டிருப்பார்கள். சிலர் ஸம்ஸ்கிருதத்திலும் தேசபாஷைகளிலும் தேசகீதம் பாடுவார்கள். காலேஜ் சிறுவர்களுக்கு சக்ரவர்த்தி தம்பதிகளுடைய படம் அமைத்த பதக்கங்கள் கொடுக்கப்படும். பீபில்ஸ் பார்க்கில் கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களிலும் ஹைஸ்கூல்களிலுமுள்ள 10,000 பிள்ளைகள் வரையில் கூட்டப்பட்டு, சிற்றுண்டிகள் பெறுவார்கள். பீபில்ஸ்பார்க்குக்குப் போகக்கூடாத குழந்தைகள் சென்னையில்பற் பல இடங்களில் கூட்டப்பட்டுச் சிற்றுண்டிகள் பெறுவார்கள். பழைய ஹைகோர்ட்டிலிருந்து மவுண்ட் ரோட் மைதானம்வரையில் ஒரு ஊர்வலம் தயார்செய்யப்படும். மைதானத்தில் நடக்கும் வேடிக்கைக்கு வெஸ்ட் அண்ட் கம்பெனியிலிருந்து ஒரு ரூபாய்க்கும் அரை ரூபாய்க்கும் டிக்கெட்கள் பெறலாம். பட்டணத்திலுள்ள கோவில்களிலும் மசூதிகளிலும் தீபாலங்காரங்களும் ஆராதனைகளும் செய்யும்படியாக டிரஸ்டிசள் ஏற்பாடுகள் செய்வார்கள். தேசகீதங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தேசபாஷைகளிலும் துண்டுப் பத்திரிகைகளில் அச்சிடப்பட்டு லக்ஷக்கணக்காய் ஸ்கூல் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும். பட்டணத்து ஜனங்கள் தங்கள் வீடுகளையும் மற்ற இடங்களையும் தீபாலங்காரங்கள் செய்யும்படியாகவும் அன்று தினத்தை ஒரு திருவிழாப்போல் கொண்டாடும்படியாகவும் துண்டுப்பத்திரிகைகள் அச்சிடப்பட்டு எல்லோருக்கும் கொடுக்கப்படும்.

THE DURBAR PROGRAMME.

**தர்பார் ப்ரோக்ராம்.**—டிஸம்பர் மாதம் 7-ந்தேதி வியாழக்கிழமை பகல் 10-மணிக்கு ராஜ ப்ரவேசம்; 3-மணி முதல் 5-மணிவரையில் அரசர்களை வரவேற்றல்.

8-ந்தேதி வெள்ளிக்கிழமை பகல் 11-30-மணி முதல் 1-30-மணி வரையில் மன்னர்களை வரவேற்றல். 3-40-மணிக்குக் காலஞ் சென்ற எட்வர்ட் சக்ரவர்த்தியின் ஞாபகார்த்தச் சடங்குகள். இரவு 8-மணிக்கு ராஜ தம்பதிகளுக்கு விருந்து.

9-ந்தேதி சனிக்கிழமை தேச மன்னர்களை பகல் 11-30-மணி முதல் 1-30-வரையிலும் வரவேற்றல். போலோ விளையாட்டும், புட்பாலும் 3-30-மணிக்கு நடை பெறும்.

10-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10-30-மணிக்கு மிலிடேரி காம்பில் சர்ச்சு சர்விஸ் அதாவது தெய்வத்தைத் தொழுதல் நடை பெறும்.

11-ந்தேதி திங்கட்கிழமை பகல் 11-மணிக்குப் போலோ கிரவுண்டில் பல நிறமுள்ள கொடிகள் கொடுக்கப்படும். போலோ முடிவு ஆட்டம் 3-30-மணிக்குத் தொடங்கும்.

12-ந்தேதி செவ்வாய்க் கிழமை பகல் 12-மணிக்கு தர்பார் நடை பெறும். ராஜ விருந்தும், வரவேற்பும் இரவு 8-மணிக்கு நடை பெறும்.

13-ந்தேதி புதன்கிழமை பகல் 10-45-மணிக்கு ராஜ சக்கரவர்த்தியவர்களின் காம்பில் வாலண்டியர் ஆபீஸர்களையும் இந்திய ஆபீஸர்களையும் வரவேற்றல். 3-30-மணிக்கு ராஜத் தோட்டக் கச்சேரியும் ஜனங்களுக்கு விருந்தும் நடை பெறும். இரவு 8-மணிக்கு ராஜ தம்பதிகளுக்கு விருந்து நடைபெறும்.

14-ந்தேதி வியாழக்கிழமை பகல் 10-30-மணிக்கு ரிவ்யூவும், பிற்பகல் 3-30-மணிக்கு ஹாக்கி விளையாட்டும், இரவு 9-30-மணிக்குப் பட்டமளிக்கும் காரியங்களும் நடை பெறும்.

15-ந்தேதி வெள்ளிக்கிழமை பகல் 11-மணிக்குப் போலோ கிரவுண்டில் போலீஸ் படைகளைப் பார்வையிடல், 3-மணிக்கு மிலிடெரி விளையாட்டுக்கள் பலநடை பெறும். இரவு 9-மணிக்கு மேல் யுத்தம் அல்லது குஸ்தி நடை பெறும்.

16-ந்தேதி சனிக்கிழமை பகல் 1-மணிக்கு ராஜா சக்ரவர்த்தியும் பரிவாரங்களும் புறப்படுதல்.



## FOREIGN NEWS.

## அந்நியநாட்டு ஸமாசாரங்கள்.

FALSE TEETH.

**பொய்ப்பல்.**—வருஷாவருஷம் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு 2 கோடி பொய்ப்பற்கள் அனுப்பப்படுகின்றன.

THE EMPEROR'S EXPENSES.

**சக்ரவர்த்தியின் செலவு.**—நமது சக்ரவர்த்தி டெல்லி தர்பாருக்கு வருவது பற்றி பிரத்தியேகமாக இவருக்கு 120,000 பவுன் கொடுக்கும்படி பார்லிமெண்டில் உத்தரவாயிருக்கிறது.

INDIAN STUDENTS IN ENGLAND.

**இங்கிலாந்தில் வாசிக்கும் இந்தியமாணவர்கள்.**—இங்கிலாந்திலிப்போது 128–இந்தியமாணவர்கள் வாசிக்கின்றார்கள். இவர்களுள், இந்துக்கள் 72, மகமதியர்கள் 23, சீக் ஜாதியார் 33.

A WONDERFUL HOUSE.

**ஒரு அற்புத வீடு.**—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த நியுயார்க் பட்டணத்தில் 750 அடி உயரமுள்ள வீடொன்றிருக்கின்றது. அதில் 40-அடுக்கு மெத்தைகளிருக்கின்றன. இன்னும் 25–மெத்தைகள் அவ்வீட்டின் மேல்சட்ட உத்தேசித்துக் கட்டி வருகிறார்கள்.

A WONDERFUL STATUE.

**அற்புதப்பதுமை.**—ஜப்பான் தேசத்து டோக்யோ நகரிலுள்ள ஹானன் உமாமாஸசிச்சி யென்னும் ஒருவர் தம்மைப் போன்றொரு பதுமை செய்திருக்கிறார். அப்பதுமையின் பக்கத்தில் அவரிருந்து சேஷ்டை செய்யாதிருந்தால், இன்னது பதுமை, இன்னான் மனிதன் என்றறிதல் முடியாத விதமாயிருக்கிறதாம்.

PENSIONERS IN THE UNITED KINGDOM.

**பென்ஷன் பெற்றவர்கள்.**—1911-ஹு மார்ச்சுமீ கடைசி வெள்ளிக்கிழமை வரையில் ஐக்கிய நாட்டில் அதாவது இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐயர்லாந்து ஆகிய இந்த மூன்று நாடுகளிலும் 3,33,050-புருஷர்களும், 574, 411, ஸ்திரீகளும் பென்ஷன் பெற்றிருக்கிறார்களாம்.

DEATH SENTENCE IN CHINA.

**சீனதேசத்து மரணதண்டனையின் வழக்கம்.**—சீனாவில் மரணதண்டனை விதிக்கப் பட்டவர்களைப் பலகையின்மீது படுக்கவைத்துக் கண்டங்கண்டமாக வெட்டுவது வழக்கமாம். இப்போது நான்கு கண்டங்களாக வெட்டவென்று உத்தரவாயிருக்கின்றதாம்.

மரண தண்டனையே விதிக்கப்படாதென்னும் கட்சியொருவாறிருக்க, நாகரீகம் பெற்றுள்ள இக்காலத்தில் கொரோமாக மரண தண்டனையை நிறைவேற்றுவது அறியாமையே யன்றோ!

RAINLESS REGION.

**மழை பெய்யாத இடம்.**—தென் அமெரிக்காவைச் சேர்ந்த பீரு என்னும் பாகத்தில், 100 சதுர மைல் அளவுள்ள ஓர் இடமிருக்கிறது. இதில் நூற்றாண்டுக் கணக்காய் மழைகிடையாது என்றாலும், சில பாகங்கள் செழிப்பாயிருக்கின்றன. இதற்குக் காரணம் அங்கேபெய்யும் பனியேயாம்.

A LADY WITH TEETH SET WITH DIAMOND.

**வைரமிழைத்த பல்லுடையவள்.**—அமெரிக்காவிலுள்ள நியுயார்க் பட்டணத்தில் மிஸ் பிளாரென்ஸ் வார்ட் என்பவள் முக்கால் காரெட் நிறையுள்ள வைரக்கல்லொன்றை தனது முன்னம் பல்லிலிழைத்திருக்கின்றாள், அவள் வாயைத் திறக்கும்போதெல்லாம் அது வெட்டிப் பிரகாசிக்கிறதாம்.

LEATHERED STREET.

**தோற்றெரு.**—பெர் மிங்கம் நகரிலே பதனிடப்படுந்தோலிலிருந்து கழிக்கப்படுந்தோல்களைத்தாரெண்ணெயோடு சேர்த்துத் தெருப்போடுகிறார்கள். இத்தெரு சவாரிக்குதிரைகளுக்கு மிதமிஞ்சிய விரைவையுஞ் சொகுசையுங் கொடுக்கிறதாம். போடப்பட்டு 12 மாஸங்களாகியும் அதில் யாதொரு பழுதுங்காணப்படவில்லையாம்.

HOT WATER SUPPLY.

**வென்னீர் சப்ளை.**—லண்டன் வீடுகளில் வென்னீர் காய்ச்சாமல் குழாய்களின் வழியாக மின்ஸார மூலமாய் ஜலம் வீடுகள் தோறும் ஸப்ளை செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்களாம். 30 வருஷங்களாக உஷ்ண ஜலத்தில் ஸ்நானம்செய்வது அநேக வியாதிகளுக்கும் பரிகாரமென்று ஜனங்கள் வென்னீரையே உபயோகிக்கிறார்களாம். வென்னீர் ஸப்ளையினால் அநேக பதார்த்தங்களும் சமைக்க உதவும், வீடுகளின் புகையும் ஒழியும்.

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் நவம்பர் மாஸம் 22உ ரிப்போர்ட்டுப்படி.

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. அ. பை |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 15 முதல் 22 |
| கொன்னைப்பட்டை ஷை | 11 முதல் 12 |
| கடப்பை கடுக்காய் ஷை | 8 முதல் 9 |
| சேலம் அரசகிரிஷை ஷை | 17 முதல் 18 |
| நல்லெண்ணெய் ஷை | 105 முதல் 110 |
| புங்கம் எண்ணெய் ஷை | 65 முதல் 92 |
| எட்டிக்கொட்டை ஷை | 17 |
| விளக்கெண்ணெய் ஷை | 72 |
| கொட்டை முத்து .. | 10 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பந்தர் பச்சை அரிசி 44 படி | 8 | 8 | 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 | 10 | 0 |
| கோதுமை 4 படி .. | 1 | 0 | 0 |
| கொள்ளு 195 ராத்தல் | 5 | 14 | 0 |
| வெங்காயம் (தாட்பத்திரி) பாரம் .. | 12 | 0 | 0 |
| ஷை (பல்லாரி) ஷை .. | 11 | 8 | 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு | 25 | 0 | 0 |

METALS—உலோகங்கள்.

| | | ரூ. |
|---|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ்-ம் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் | .. | 200 |
| செப்புத் தகடுகள் பாரம் | .. | 242முதல்243 |
| செப்புக்கட்டி ஷை | .. | 217 |
| நாகம் ஷை | .. | 83½ |
| ஷை (உள்ளூர்) ஷை | .. | 80 |
| ஈயம் ஷை | .. | 58 |
| காரீயம் ஷை | .. | 64 |
| வெள்ளீயம் ஷை | .. | 193 வராகன். |

IRON—இரும்பு.

| | | |
|---|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் ரூ. | | 20½ |
| சீமை .. .. | .. | 40 |
| மருக்கி தகடு | 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு .. | .. | 27—28 |
| 8 பட்டை எஃகு .. | .. | 22 |
| எஃகு வில்கட்டு .. | .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 நெ. | .. | 22—35 |
| சீமை .. | .. | 40-46-49 |

## SEASON.

## காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1911ஹு ஏப்ரல் மீ 1-உயிலிருந்து டிஸம்பர் 1உம் வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரி பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாக குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 33.88 | 45.53 |
| வால்டேர் | 21.13 | 41.09 |
| காக்கிநடா | 30.31 | 38.09 |
| மசூலிப்பட்டணம் | 35.26 | 39.71 |
| நெல்லூர் | 33.77 | 28.36 |
| மதராஸ் | 30.16 | 43.72 |
| கூடலூர் | 34.74 | 42.58 |
| நாகப்பட்டணம் | 35.81 | 40.30 |
| பாம்பன் | 17.59 | 25.88 |
| கொழும்பு | 55.06 | 72.87 |
| திருவநந்தபுரம் | 54.99 | 57.47 |
| கொச்சி | 106.36 | 109.71 |
| கள்ளிக்கோட்டை | 98.94 | 113.22 |
| மங்களூர் | 100.35 | 123.34 |
| மெர்க்காரா | 138.20 | 123.46 |
| ஐதராபாத் | 20.86 | 30.70 |
| ரெய்ச்சூர் | 18.93 | 30.06 |
| பல்லாரி | 12.79 | 19.37 |
| கர்நூல் | 17.71 | 27.48 |
| கடப்பை | 22.92 | 31.29 |
| ஹாஸ்ஸான் | 32.43 | 34.38 |
| பெங்களூர் | 28.42 | 33.87 |
| கொடைக்கானல் | 56.97 | 47.94 |
| உதகமண்டலம் | 57.85 | .. |
| கோயம்புத்தூர் | 22.29 | 18.59 |
| வேலூர் | 28.68 | .. |
| சேலம் | 24.03 | 37.97 |
| திருச்சிநாப்பள்ளி | 28.75 | 28.31 |
| புதுக்கோட்டை | 29.18 | .. |
| மதுரை | 23.83 | 30.21 |
| திருநெல்வேலி | 18.14 | 21.35 |


# பிழைக்கும் வழி

# PRACTICAL LIFE.

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஹு மார்கழிமீ DECEMBER, 1911. | ஸஞ்சிகை 12. No. 12.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு | .. 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி | .. 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி | .. 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | " | " | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | " | " | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஸு மார்கழிமீ—DECEMBER 1911. | ஸஞ்சிகை 12. No. 12.


போருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| **பத்திராதிபர் குறிப்புகள்** | |
| சக்ரவர்த்தியின் விஜயம்-ராஜா நன்கொடைகள்-டெல்லி ராஜஸ்தலமானது வங்காளாப் பிரிவினை மாற்றப்பட்டது .. .. .. | 619-624 |
| **விசேஷ வியாஸங்கள்** | |
| நிலக்கடலை ஸாகுபடி —விவஸாயி .. .. | 625 |
| மாட்சிமை தங்கிய மஹாராணி மேரி சக்ரவர்த்தினி .. .. | 629 |
| வியாதி வாராமல் தடுத்தல் —வி. ஏ. வெங்கடாசாரியார் .. | 634 |
| கூட்டுச் சீட்டுகள் .. .. | 638 |
| **விசேஷத்திரட்டு** | |
| மழைக்குறிகள் .. .. | 641 |
| புங்கமரம் .. .. | 643 |
| விதவைகளின் வேதனை .. | 646 |
| கோகினூர் ரத்னம் .. .. | 648 |
| **பத்திரிகை ஆராய்ச்சி** | |
| தஞ்சாவூர் ஜில்லா கிருஷிகருக்கு ஒரு யோசனை .. .. | 649 |
| மதுராபட்டணம் .. .. | 650 |
| இந்தியாவில் யந்திர இறக்குமதி .. | 651 |
| **புஸ்தக ஆராய்ச்சி** .. .. | 652 |
| **சிறுவர் பகுதி** .. .. .. | 653–654 |
| **ஸ்திரீகள் பகுதி** .. .. | 655–656 |
| **பகுதிக் குறிப்புகள்** | |
| விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. | 657–666 |
| **மாஸ வர்த்தமானம்** .. .. | 667–671 |
| **மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. | 672 |


CONTENTS.


| | PAGE |
|---|---|
| **Editorial Notes** | |
| THE ROYAL VISIT-THE ROYAL BOONS TRANSFER OF CAPITAL TO DELHI AND MODIFICATION OF BENGAL PARTITION ... | 619-624 |
| **Special Articles** | |
| THE CULTIVATION OF GROUNDNUTS An Agriculturist ... ... ... | 625 |
| HER MAJESTY QUEEN MARY ... ... | 629 |
| THE PREVENTION OF DISEASE V. A. Venkata Chariar ... ... ... | 634 |
| CHIT FUNDS ... ... ... ... | 638 |
| **Selections** | |
| SIGNS OF RAIN ... ... ... ... | 641 |
| THE PUNGAM TREE ... ... ... | 643 |
| THE WOES OF THE WIDOW.. ... ... | 646 |
| THE KOHINOOR DIAMOND ... ... ... | 648 |
| **Review of the Press** | |
| A SUGGESTION TO TANJORE RYOTS ... ... | 649 |
| MUTTRA ... ... ... ... ... | 650 |
| IMPORTS OF MACHINERY INTO INDIA ... | 651 |
| **Reviews of Books** ... ... ... ... | 652 |
| **The Boys' Section** ... ... ... | 653-654 |
| **The Ladies' Section** ... ... ... | 655-656 |
| **Departmental Notes** | |
| Agricultural Notes ... ... ... | 657 |
| Industrial Notes ... ... ... | 659 |
| Educational Notes ... ... ... | 660 |
| Scientific Notes ... ... ... | 661 |
| Medical Notes ... ... ... | 662 |
| Legal Notes ... ... ... | 663 |
| Personal Notes ... ... ... | 664 |
| Fun and Anecdote ... ... ... | 665 |
| Curiosities ... ... ... | 666 |
| **News of the Month** ... ... ... | 667-671 |
| **Madras Market Reports** ... ... ... | 672 |




# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### The Royal Visit.

சக்ரவர்த்தியின் விஜயம்.—ஆறுமாஸ காலமாய், ராஜா வரப்போகிறாராமே, ராஜா வரப்போகிறாராமே, என்று வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருந்த ஜனங்கள் மகாராஜா சக்ரவர்த்தியும் மகாராணி சக்ரவர்த்தினியும் சீமையிலிருந்து இந்தியாவுக்கு ஸௌக்கியமாய் வந்து சேர்ந்து, டெல்லியில் நாளது மாஸம் 12-ந் தேதியன்று தங்களுக்கு மகுடாபிஷேகமான செய்தியை விளம்பரப்படுத்தினதை இந்தியாவில் மூலைமுடுக்குகளிலுள்ள ஒவ்வொருவரும் கொண்டாடின குதூஹலத்தையும் உத்ஸாகத்தையும் பார்த்தவர்கள் ஒருநாளும் மறக்கமாட்டார்கள். ஸுமார் 800 வருஷங்களுக்குமுன் ஏசுகிறிஸ்து பிறந்த இடமாகிய பாலஸ்டீனைக் கைப்பற்றிக்கொண்ட துருக்கரோடு சண்டை செய்யப் போன முதலாவது ரிச்சர்ட் அரசரைத் தவிர, வேறு ஒரு இங்கிலீஷ் அரசரும் தாம் ஆண்டுவந்த காலத்தில் ஐரோப்பாவைத் தாண்டி வேறுதேசத்துக்குப் போனதில்லை. ஆகையால் மகாராஜா சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் இந்தியாவுக்கு நேரில் வந்ததே இந்தியர்களின் பெரும்பாக்கியம். இது ஒருபக்கமிருக்க, சக்ரவர்த்தி,போன ஜூன் மாதத்தில் தன்னுடைய தலை நகராகிய லண்டனில் மகுடாபிஷேகம் செய்துகொண்ட பிறகு அந்தச் செய்தியை தம்முடைய ஜாதியாரும் பந்துக்களும் குடியேறி இருப்பதான கானடா, ந்யூபௌண்டலண்ட், ஆஸ்ட்ரேலியா முதலிய தேசங்களுக்கு நேரில் போய் தெரிவிக்காமல் இந்தியாவுக்கு மட்டும் நேரில் வந்து தெரிவித்ததானது அவருக்கு இந்திய ப்ரஜைகளிடத்திலும், இந்தியாவின் மேலும் உள்ள அன்பை நன்றாய் எடுத்துக் காட்டுகிறது. தென் ஆப்ரிக்காபோன்ற குடியேற்ற நாடுகளில் இந்தியர்களை தொந்தரவு செய்யும் கவர்ன்மெண்டுகளுக்கு அப்படிச்செய்வது சக்ரவர்த்தியின் மனதுக்கு திருப்தி கொடுப்பதல்ல என்று எச்சரிப்பதுபோலிருக்கிறது. ராஜாக்கள் விஜயம் செய்யும்பொழுது ஜனங்களுக்கு பல நன்கொடைகளும் நன்மைகளும் செய்வது ஸகஜம். அப்படியே நம்முடைய சக்ரவர்த்தியும் செய்திருக்கிறார். இது மட்டுமல்ல. அவர் செய்ததில் ஒருகாரியத்தால் இந்தியர்களை மதிப்பாக எண்ணி அவர்களை அந்தஸ்தில் ஒரு படி ஏற்றி விட்டார். அதென்னவென்றால், வங்காளப் பிரிவினையை மாற்றி அதை ஒரு கவர்னரின் ஆளுகைக்குள் வைத்தது. லார்டகர்ஸன் கவர்னர் ஜெனரலாயிருந்த காலத்தில் அவர் வெங்காளிகளைப் பிரித்து, இரண்டு கவர்ன்மெண்டுகளுக்குள் அடைத்து, அதனால் அவர்களுடைய ஒற்றுமையையும் உணர்ச்சியையும் அழித்தார். இப்படிச் செய்ததானது 400 லட்சம் ஜனங்களுக்கு அதிருப்தியை உண்டுபண்ணி, அவர்களுடைய கூச்சல் இந்தியா முழுவதும் பரவி, ஜனங்களை மதிக்காமல் ராஜாங்கம் நடுத்துவதுதான் இங்கிலீஷ்க்காரர் முறைபோலும், என்று ஸகல ஜனங்களுக்கும் ஒருவித அதிருப்தியும் அவநம்பிக்கையும் உண்டாயிற்று. இது பொது ஜனங்களின் அபிப்ராயமென்று அறிந்ததும் அதை மாற்றி வெங்காளத்தை ஒன்று சேர்த்ததானது, ராஜ்ய நிர்வாகத்தில் இந்தியர்களின் அபிப்ராயத்தையும் கலந்துகொள்ளவேண்டும் என்றகோட்பாட்டை அங்கீகரித்து இந்தியர்களை கௌரவப்படுத்தினதாகிறது. இப்படிச்செய்த ஏற்பாடுகள் ஸ்வஜாதியான கல்கத்தாவிலுள்ள சில ஐரோப்பிய வர்த்தர்களுக்கு நஷ்டமுண்டாக்கும். இருந்தபோதிலும் இந்

திய பொது ஜனங்களுக்கு வருத்தம் நீங்க வேண்டுமென்று செய்ததானது இங்கிலீஷ் ராஜ்யத்தில் ஜனங்கள் கேட்டவுடனே இல்லாவிட்டாலும் ஒருகாலத்தில் நியாயம் கிடைக்கும் என்பதைக் காட்டுகிறது.

சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் இந்தியாவுக்கு வந்தது முதல் அவர்கள் செய்ததை நம்முடைய நேயர்கள் கேட்கப்பிரியப்படுவார்கள் என்று ஒவ்வொரு நாளும் நடந்த ஸங்கதிகளை இடத்துக்குத் தக்கபடி சுருக்கமாய் எழுதுகிறோம். இவர்களுக்கு நடந்த மரியாதைகளையும் ஊர்கோலச் சிறப்புகளையும், ஜனங்கள் காட்டிய சந்தோஷத்தையும் ஒவ்வொரு தடவையும் சொல்ல இடமில்லாமல் விட்டிருக்கிறோம்.

சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் வந்தமெடீனா கப்பல் நாளது ஸ்ரீ 2ம் தேதி பகல் ஸரியாய் 10 மணிக்கு பம்பாய் துறை முகத்தில் வந்து சேர்ந்தது. உடனே இந்தியா கவர்னர் ஜெனராலாகிய லார்டு ஹார்டிஞ்ஜ், பம்பாய் கவர்னராகிய ஸர் ஜார்ஜ் க்ளார்க், அவரவர்களுடைய பரிவாரங்களுடன் சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் மெடீனா கப்பலிலேயே போய்ப் பார்த்தார்கள். 3 மணிக்கு சக்ரவர்த்தி கப்பலை விட்டு இறங்கினதும் 101 மரியாதை குண்டுகள் போடப்பட்டன. சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் வரவேற்பதற்காக ஜோடிக்கப்பட்ட ஒரு மண்டபத்தில் தங்க ஸிம்மாஸனத்தில் அவர்கள் உட்கார்ந்ததும், பம்பாய் முனிஸிபாலிடிக்கு ப்ரெஸிடெண்டாகிய ஸர் பிரோஸ்ஷா மேட்டா, ராஜ தம்பதிகளுக்கு ஒரு நல்வரவு அட்ரெஸ் (பத்திரம்)படித்தார். அதற்கு சக்ரவர்த்தி,தாம் 1905-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு வந்தபொழுது நடந்த உபசாரத்தை ஒருநாளும் மறக்கவில்லை என்றும், தம்முடைய தகப்பனார் இறந்து தாம் பட்டத்துக்கு வந்ததும் தமக்கு இந்தியாவைப்போய்ப்பார்க்க வேண்டுமென்ற ஆசை உண்டானதால் அப்படியே செய்யமுடிந்ததைப்பற்றித் தமக்கு ரொம்பசந்தோஷமாயிருக்கிறதென்றும், பதில் சொன்னார். பிறகு அங்கே வந்திருந்த பெரிய உத்தியோகஸ்தர்கள், பிரமுகர்கள் எல்லாருக்கும் ராஜ பேட்டி நடந்தது. உடனே எல்லாரும் பம்பாயைச் சுற்றி ஊர்கோலமாகப் போய். கடையிசில் ஸாயந்திரம் $5\frac{1}{2}$ மணிக்கு சக்ரவர்த்தி தம்முடைய கப்பலுக்குப் போய்விட்டார். அன்றை ராத்திரி லார்டு ஹார்டிஞ்ஜும் இன்னும் சில பொறுக்கி எடுத்த பேர்களும் மட்டும் சக்ரவர்த்தியோடு மெடீனா கப்பலிலேயே சாப்பிட்டார்கள்.

3ம் தேதி ஞாயிற்றுக்கிழமை யாதலால் சக்ரவர்த்தி கோவிலுக்குப் போனதைத்தவிர வேறுவிசேஷமொன்றுமில்லை. அன்றுராத்திரி பல பெரிய கனவான்கள் சக்ரவர்த்தியோடு மெடீனாவிலேயே சாப்பிட்டார்கள்.

4ம் தேதியன்று காலமே 30,000 ஸ்கூல் பிள்ளைகளுக்கு வேடிக்கை முதலியவைகள் காட்டப்பட்டன. அந்தச் சிறுவர்களை சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் பார்த்து ஆனந்தப்பட்டுவிட்டு, பம்பாயில் நடந்த பொருட்காட்சியைப் போய்ப்பார்த்தார்கள். பிறகு தங்களுடைய கப்பலுக்குப்போய்விட்டார்கள். அன்று பட்டணம் முழுவதும் தீபாலங்காரம் செய்யப்பட்டிருந்ததோடு பெரிய வாண வேடிக்கையும் நடந்தது.

5ம் தேதி காலமே சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஆடம்பரம் ஒன்றுமில்லாமல் பம்பாய்க்குப் பக்கத்திலுள்ள எலிபென்டா குகைகளைப் போய்ப்பார்த்தார்கள். பிறகு ராத்திரி $10\frac{3}{4}$ மணிக்கு டெல்லிக்கு பிரயாணமானார்கள். கப்பலிலிருந்து ரெயில் ஸ்டேஷனுக்குப் போகும் வீதிகளிளெல்லாம் வெகு அழகாய் விளக்குகள் போடப்பட்டிருந்தன.



7ம் தேதி 10 மணிக்கு டெல்லியில் வந்து இறங்கினார்கள். ஸ்டேஷனில் கவர்னர் ஜெனரல் லார்டு ஹார்டிஞ்ஜு, இன்னும்பல பெரிய உத்தியோகஸ்தர்கள், கனவான்கள், எல்லாரும் வந்திருந்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு டெல்லி கோட்டைக்குப் போகும்பொழுது வழியில் சக்ரவர்த்தியை ரொம்பகீர்த்திபெற்ற 900 போர் வீரர்கள் வரவேற்றார்கள். அவர்களில் 100 பேர்கள் 1857ம்வருஷத்தில் அந்த டெல்லியில் நடந்த கலகத்தில் இங்கிலீஷ்க்காரருக்காக சண்டைசெய்து ஜெயித்தவர்கள். பிறகு 150 சிற்றரசர்கள் கூடி எதிர்கொண்டு அழைத்தார்கள். பிறகு அங்கேயுள்ள பெரிய மசூதியைச் சுற்றியும் வீதிகளைச் சுற்றியும் இங்லீஷ் இந்திய ஸைன்யங்களுடனே ஊர்கோலம் வந்தார்கள். அப்பொழுது சுமார் மூவாயிரம் நாலாயிரம் இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அவர்களை வரவேற்று அவர்களுக்காக ஜென்கின்ஸ்என்பவர் ஒரு உபசார அட்ரெஸ் படித்தார். அதற்கு சக்ரவர்த்திபதில் சொல்லுவதில் இந்தியா அமைதியாயும் திருப்தியாயும் க்ஷேமமாயும் இருக்கவேண்டுமென்பதைத் தவிர தமக்கு வேறு ஆசையில்லையென்று சொன்னார். ஊர்கோலம் முடிந்தபிறகு ஸாயந்திரம் சிற்றரசர்கள் ஒவ்வொருவராய் சக்ரவர்த்தியைப்போய்ப் பார்த்தார்கள்.

8-ம் தேதியன்று காலமே சிற்றரசர்களைப் பார்த்துவிட்டு, ஸாயந்திரம் காலஞ்சென்ற எட்வர்டு சக்ரவர்த்தியின் ஞாபக சின்னமாய் இந்தியாவிலுள்ள ஜனங்கள் யாவருங் கூடி ஏற்படுத்தும் சிலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். அப்பொழுது “இந்தச்சிலையானது டெல்லியில் இனிமேல் பிறப்பவர்களுக்கு அவரிடத்தில் எட்வர்டு உங்களுக்குள்ள பக்தியையும் விசுவாஸத்தையும், அவருக்கு உங்களிடத்திலுள்ள அனுதாபத்தையும் நம்பிக்கையையும் ஞாபகப்படுத்தும். ஈசுவரகிருபையால் இந்த அந்யோந்யம் இந்தியாவுக்கும் என்னுடைய குடும்பத்தாருக்கும் ஒரு பொழுதும் விட்டுப் போகாமலிருக்கவேண்டும்” என்று சொன்னார்.

9-ம் தேதியன்று இன்னுமுள்ள சிற்றரசுகளுக்கு பேட்டிகொடுத்து, ஸைன்யங்கள் புட்பால் (காலால் பந்தடித்தல்) போலோ (குதிரை மேலிருந்தபடி பந்தடித்தல்) விளையாடுவதைப் பார்த்தார்.

10-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை யானதால் கோவிலுக்குப் போய் அங்கே நடந்த உபன்யாஸங்களைக் கேட்டதைத் தவிர வேறுவேலை ஒன்றும் செய்யவில்லை.

11-ம் தேதியன்று இந்திய ஸைன்யங்களுக்கும் ஐரோப்பிய ஸைன்யங்களுக்கும் புதுக் கொடிகள் கொடுத்தார்.

12-ம் தேதி தர்பார் நடந்தது. அந்த வைபவத்தைப்பார்த்தவர்கள் அது ஒரு கண் கொள்ளாச் சேர்வையென்று சொல்லுகிறார்கள். அதற்கு 12,000 பேர்கள் விருந்தாளிகளாக அழைக்கப்பட்டார்கள். தர்பார் நடக்கும் போது மேற் சொன்ன 12,000 விருந்தாளிகளுக்கும், 20,000 ஸைன்யங்களுக்கும் 50,000 வேடிக்கை பார்ப்பவர்களுக்கும், ஆக மொத்தம் சுமார் லட்சம் ஜனங்களுக்கு போதுமான இடம் தயாராயிருந்தது. ஸரியாக 12 மணிக்கு தர்பார் ஆரம்பமாயிற்று. அப்பொழுது சக்ரவர்த்தி பேசியதை இந்திய நாட்டு ஸமாசாரங்கள் என்னும் பகுதியில் அச்சிட்டிருக்கிறோம்.

சக்ரவர்த்தி பேசியானதும் அங்கேயுள்ள கவர்னர் ஜெனரல், ஸேனாதிபதி, கவர்னர்கள், சிற்றரசர்கள் முதலியவர்களெல்லாரும் ஸிம்மாஸனத்தண்டைபோய் வணக்கமாய் ஸேவா

ஞ்சலிசெய்து ராஜபக்தியைக்காட்டினார்கள். இது முடிய ஒரு மணிநேரம் ஆயிற்று, பிறகு ராணுவத்தில் பெரிய உத்யோகஸ்தராகிய ப்ரிகேடியர் ஜெனரல் பேட்டன் என்பவர் சக்ரவர்த்திக்கு மகுடாபிஷேகமானதை விளம்பரப்படுத்தினார். இந்த விளம்பரத்தை இந்திய நாட்டு ஸமாசாப் பகுதியில் பார்க்கலாம்.

விளம்பரமானதும் சக்ரவர்த்தியின் ஆக்ஞைப்படி லார்டு ஹார்டிஞ்ஜ் எழுந்து சக்ரவர்த்தியின் நன்கொடைகளையும் நன்மைகளையும் தெரிவித்தார். அவைபின்மருமாறு:—

**The Royal Boons.**

ராஜ நன்கோடைகள்.—

"வெகு ஜனக் கல்விக்காக ரூபாய் 50 லட்சம்.—பெருமை தங்கிய அரசரின் இஷ்டத்துக்குக் கீழ்ப்படிந்தும், அவருடைய ஸெக்ரிடெரி ஆப் ஸ்டேட்டின் ஸம்மதத்தைப் பெற்றும், கல்வி விருத்தியின் ஆவசியகத்தை யுணர்ந்தும், இவ்விஷயத்தில் பொதுவாயுள்ள உணர்ச்சியை அங்கீகரித்தும், இந்தியாவில் கல்வி லகுவாயும் விசாலமாயும் கிடைக்கும்படி செய்ய இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த நோக்கத்தை யனுஸரித்து,வெகுஜனக்கல்வியைவிருத்திப்படுத்த உடனே 50 லக்ஷம் ரூபாய் செலவழிப்பதாக யோசனை செய்திருக்கிறார்கள். இந்தத்தொகையுடன் இனி வருஷா வருஷம் தாராளமாய் மேலும் தொகைகள் கொடுப்பதாக கவர்ன்மெண்டின் உத்தேசம்.

கடற்படை தரைப்படை யாட்களுக்கு அரை மாதச் சம்பளம் இனாம்.—ராஜ சக்ரவர்த்தி தம் கடற்படை தரைப்படை யாட்களின் நன்றியுள்ள அரிய ஸேவகத்தைக் கொண்டாடி, 'நான்கம்மிஷன்ட்' ஆபீஸராயும், இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் சேனையையும் இந்தியா சேனையையும் சேர்ந்த ரிஸர்வ் (கையிருப்பு) ஆட்களாயும், இன்னும் ராணுவ இலாகாவிலிருந்து சம்பளம் வாங்குபவர்களாயும், இருக்கும் மாதம் ரூபா 50 சம்பளத்துக்கு மேற்படாதவர்களுக்கெல்லாம் அந்தந்த அந்தஸ்துக்குள்ள சம்பளத்தில் $\frac{1}{2}$ மாதச் சம்பளம் இனாம் கொடுப்பதாக விளம்பரப்படுத்தும்படி எனக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார்.

இந்தியர்களுக்கு "விக்டோரியா க்ராஸ்".—மேலும், இது முதல் தம் இந்திய ஸைனியத்தில் ஆட்களாயும் ரிஸர்வ்களாயும் உள்ளவர்களும் நேடிவ் ஆபீஸர்களும் சௌரியத்தின் பொருட்டு "விக்டோரியா க்ராஸ்" என்ற அந்தஸ்து பெற உரியவர்களாவார்கள் என்றும், ராஜ சக்ரவர்த்தியின் முடிசூட்டு தர்பாராகிய இது முதல் 10 வருஷத்தில், "ஆர்டர் ஆப் ப்ரிடிஷ் இந்தியா" மெம்பர்கள் முதல் வகுப்பில் 52 பேர் அதிகமாகும்படி செய்வதோடு, இக்கொண்டாட்டங்களின் அறிகுறியாக புதியதாய் முதல் வகுப்பில் 15 ஸ்தானங்களும், இரண்டாவது வகுப்பில் 19 ஸ்தானங்களும் உடனே ஏற்படுத்தப்படுமென்றும், இது முதல் எல்லைப்புற மிலிஷியா படையையும் மிலிடெரி போலீஸையும் சேர்ந்த இந்திய ஆபீஸர்கள் மேற்சொன்ன அந்தஸ்தைப்பெற அருகர்களாவார்களென்றும், நெடுங்காலம் கௌரதைக்குரிய விதமாய் ஸேவகம் செய்து, ராஜ சக்ரவர்த்தியின் இந்திய சேனையில் நேடிவ் ஆபீஸர்களாயுள்ளவர்களுக்கு, அவரவர்களுக்குத் தக்கபடி, ஸ்பெஷலாக நிலமோ, நிலவரி வருமானமோ, இனாம் கொடுத்து, அல்லது நிலவரி தள்ளுபடி செய்து, சன்மானம் செய்யப்படுமென்றும், இந்தியன்-ஆர்டர்-ஆப்-மெரிட்டில் உள்ளவர்களில் மரணம் நேர்ந்தால், மரித்தவரின் மனைவிக்கு மூன்று வருஷங்களுக்கு ஸ்பெஷல் அலவென்ஸ் கொடுப்பதாக இப்போதிருப்பதைமாற்றி, இந்த தர்பார் முதற்கொண்டு, அப்படி புருஷனையிழந்த ஸ்திரீகளுக்கு, அவர்கள் இறக்கும் வரையில், அல்லது அவர்கள் மறுவிவாகம் செய்துகொள்ளும்வரையில் அந்த அலவென்ஸ் கொடுக்கப்படுமென்றும் ராஜ சக்ரவர்த்தி நியமித்திருக்கிறார்.



ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கு இனாம்.—தம் ஸிவில் ஸர்விஸிலுள்ளவர்கள் பக்தியுடன் தத்தம் வேலைகளை நிறைவேற்றிவருவதை நன்கு மதித்து, கவர்ன்மெண்ட் ஸிவில் உத்தியோகத்தில் மாதம் ரூபா 50 க்கு மேற்படாதிருக்கும் காயமான உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் $\frac{1}{2}$ மாதச் சம்பளம் இனாம் கொடுப்பதாக விளம்பரப்படுத்தும்படி எனக்கு சக்ரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார்.

பட்டம் பெற்றோர்களுக்கு அடையாளக்குறிகளும், கலைவல்லோருக்குப் பேன்ஷனும்.—திவான் பகதூர், ஸர்தார் பகதூர், கான் பகதூர், ராய் பகதூர், கான் ஸாகிப், ராய் ஸாகிப், ராவ் ஸாகிப் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளவர்களுக்கும் இனிப் பெறப்போகிறவர்களுக்கும் கௌரவத்துக்கும் மதிப்புக்கும் அறிகுறியாக அவரவர்களுக்குத் தக்கவாறு, அடையாளக்குறிகள் கொடுபடவேண்டும் என்றும், மகாமகோபாத்தியாயர், ஷாம்ஸ் உல்-உல்மா என்னும் பூஜிக்கத்தக்க பட்டங்களை இப்போது பெற்றவர்களெல்லாருக்கும் இனி பெறுவோர்களுக்கும் இந்தியாவின் புராதன கலையின் புகழை உத்தேசித்து, வருஷவாரி பென்ஷன் கொடுக்கப்படவேண்டுமென்றும் ராஜ சக்ரவர்த்தி கருணையுடன் ஆக்ஞாபிக்கிறார்.

வடமேற்கெல்லைப்புறத்தில் நிலம் இனாம்.—தம் தர்பார் ஞாபகார்த்தமாகவும், பொது ஸேவகத்தில் சிறந்திருப்பதை யுத்தேசித்தும், வடமேற்கெல்லை மாகாணத்திலும் பலுசிஸ்டானிலும் நிலங்கள் வரியில்லாமல்,கொடுக்கப்பெற்றவர் தம் ஜீவ்யகாலமுழுதுமோ அவர் ஜீவ்யகாலத்துக்கப்புறமும் இன்னொருவர் ஜீவ்யகால முழுமையுமோ, லோகல் கவர்ன்மெண்ட் இஷ்டப்படுகிறபடி, கொடுக்கப்படும், அல்லது கவர்ன்மெண்ட் இப்போது கைப்பற்றியிருக்கும் நிலங்கள் திருப்பி கொடுத்துவிடப்படும்.

"நாஜரானா" இனி செலுத்தவேண்டாம்.—தம்முடைய இந்திய சிற்றரசுகளின் க்ஷேமத்தைப் பெருமனதுடன் கோரி, அவர்களின் தேச ஆதிக்கத்துக்குப் புதிதாய் ஒருவர் வரும்தோறும் செலுத்தவேண்டிய 'நாஜரானா' தொகை இனிசெலுத்தப்பட வேண்டியதில்லையென்றும், நியாயாதிகாரம் பெறாத கத்தியவார் குஜராத் ஆகிய பிரதேசங்களிலுள்ள சிறு ராஜ்யங்களும், மீவாரில் பூமியாசீப்களும் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கவேண்டிய சில்லரைக் கடன்கள், இந்தியா கவர்ன்மெண்டின்உத்தரவுப்படி முழுமையுமோ ஒரு பாகமோ, தள்ளுபடி செய்யப்படுமென்றும், இம்பிரியல் ஸர்விஸ் துருப்புகளைக் கௌரவிக்கும் பொருட்டு ப்ரிட்டிஷ் இந்தியா ஆரடரில் (அந்தஸ்தில்) சில அதிக ஸ்தானங்கள் ஏற்படுத்தப்படுமென்றும், விளம்பரப்படுத்தும்படி ராஜசக்ரவர்த்தி எனக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார்.

கைதிகள் விடுதலை.—ராஜ சக்ரவர்த்தி கிருபையையும் இரக்கத்தையும் மேற்கொண்டு, இப்போது குற்றங்கள் செய்து சட்டப்படியுள்ள தண்டனையை அனுபவிக்கும் சில கைதிகளைச் சிறையிலிருந்து விடுவிக்கும்படியும், சிறுதொகை கடன்பட்டவராயும்மோசம் செய்யாமல் தரித்திரத்தால் சிறைப்பட்டவராயும் உள்ள ஸிவில் கடனாளிகளெல்லாரையும் விடுவித்து, அவர்கள் பட்டகடன்களை (கவர்ன்மெண்ட்) கொடுத்து விடும்படியும் உத்தரவிடத் திருவுள்ளம் கொண்டிருக்கிறார்.

மேற்சொன்ன இனாங்களும் நன்கொடைகளும் தருமங்களும் யார்யாருக்கு எந்தெந்த நிபந்தனைக்குட்பட்டுச் செய்யப்படுமென்பது இனி வெளிப்படுத்தப்படும்.

ராஜ சக்ரவர்த்தியை கடவுள் காப்பாராக.'

## Transfer of Capital to Delhi and Modification of Bengal Partition.

டெல்லி ராஜஸ்தலமானது, வங்காளப் பிரிவினை மாற்றப்பட்டது.—சக்ரவர்த்தி யவர்கள் தர்பார் முடிவில் சில முக்கியமான நிர்வாகத் திருத்தங்களுக்குத் தாம் அனுமதி கொடுத்திருப்பதாக விளம்பரப்படுத்தினர். இந்தத் திருத்தங்கள் பின்வருமாறு. அவைகள் சக்ரவர்த்தியினால் வெளியிடப்பட்டன :—

"தர்பார் முடிவில் நமது ஜனங்களுக்கு நாம் வெளியிட விரும்புவதாவது :—ஆலோசனை ஸபையிலுள்ள நமது கவர்னர் ஜெனரலோடு ஆலோசனை செய்து நம் மந்திரிகள் நமக்குச் சொன்னபடி இந்தியா கவர்ன்மெண்டின் ராஜஸ்தலம் கல்கத்தாவிலிருந்து பழய ராஜஸ்தலமாகிய டெல்லிக்கு மாற்றுவதாக நிச்சபம் பண்ணி விட்டோம். அதே காலத்தில் இந்த மாறுதலின் பயனாக, வெங்காளமானது ஒரு ப்ரஸிடென்ஸியாக்கப்பட்டு அதற்கு ஒரு கவர்னர் நியமிக்கப்படுவார். பேஹார், ஓரிஸ்ஸா, சோட்டா நாக்பூர், இந்த மூன்று மாகாணங்களையும் சேர்த்து ஒரு லெப்டினெண்ட் கவர்னரும் நிர்வாக ஸபையும் நியமிக்கப்படுவார்கள் ; ஆஸாம் மாகாணம் ஒரு சீப் கமிஷனருக்குள் இருக்கும். இப்படி புதிதாய் சிருஷ்டிக்கப்பட்ட மாகாணங்களையும் எல்லைகளும் நிர்வாகத்தையும் ஆலோசனை ஸபையிலுள்ள நமது இந்தியா ஸெக்ரிடெரியின் ஸம்மதத்தின்பேரில் ஆலோசனை ஸபையிலுள்ள நமது கவர்னர் ஜெனரல் அவசியமானபடி அமைப்பார். இந்தத்திருத்தங்களால் இந்தியா இப்போதைவிட நன்றாய் நிர்வகிக்கப்பட்டு நமது அன்புள்ள ப்ரஜைகளின் அதிகமான வளப்பத்துக்கும் சந்தோஷத்துக்கும் அவைகள் ஹேதுவாக வேண்டுமென்று நாம் மனப்பூர்வமாய் விரும்புகிறோம்."

இது சொன்னதும் தர்பார் முடிந்து கலைந்தது.

அன்றை தினம் ராத்திரி சக்ரவர்த்தியின் இருப்பிடத்தில் வெகுபேர்களுக்கு விருந்து நடந்தது. சாப்பாடானபிறகு சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் 4000 விருந்தாளிகளை வரவேற்றார்கள். இவைகளெல்லாம் 12-ம் தேதி வைபவங்கள்.

13-ம் தேதி யன்று காலமே ராணுவ உத்தியோகஸ்தர்களை வரவேற்றார். பகல் $12\frac{1}{2}$ மணிக்கு டெல்லி முனிஸிபாலிட்டியாலும் சென்னை ராஜதானி ஜனங்களாலும் உபசார அட்ரெஸ்கள் வாசிக்கப்பட்டன. அவைகளுக்கு சக்ரவர்த்தி சொல்லிய பதில்களை இன்னொரு பகுதியில் அச்சிட்டிருக்கிறோம், ஸாயந்திரம் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் கோட்டையின் பக்கத்தில் நடத்திய தோட்டக்கச்சேரிக்கு போனார்கள். அங்கே நடந்த வேடிக்கைகளையும் விநோதங்களையும் பார்ப்பதற்காக திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். ஜனங்களும் பார்க்கும் படியாக பழைய காலத்து மொகலாய சக்ரவர்த்திகள் செய்தது போல் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஒரு உயர்ந்த கொத்தளத்தின் மேல் வீற்றிருந்தார்கள்.

14-ந்தேதியன்று சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஸைன்யங்களைப் பார்த்தார்கள். அன்று இரவில் சக்ரவர்த்தி கௌரவப்பட்டம் கொடுத்தவர்களுக்கு அவரவர்களுக்குள்ள பதக்கங்களைக்கொடுத்தார்.

15-ம் தேதி காலையில் புதிதாய் தலை நகரமாக ஆக்கப்பட்ட புது டெல்லி நகரத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். அப்பொழுது லார்டு ஹார்டிஞ்ஜ் பேசினதையும் சக்ரவர்த்தி பேசினதையும் 'இந்திய நாட்டு ஸமாசார' ப்பகுதியில் காணலாம். பிறகு போலீஸ்படைகளைப்போய்ப்பார்த்தார்கள். ஸாயந்திரம் ஸைன்யங்களின் வேடிக்கைகளையும் விளையாட்டுகளையும் போய்ப்பார்த்தார்கள்.

16-ம் தேதி யன்று சக்ரவர்த்தி டெல்லியை விட்டுப் புறப்பட்டு நேப்பாளத்தில் வேட்டையாடப்போனார். சக்ரவர்த்தினி புறப்பட்டு ஆக்ராவுக்குப் போய் அங்கிருந்து ராஜபுடானாவில் சில ஸமஸ்தானங்களை பார்த்துவருகிறார். இருவரும் 30-ம் தேதி யன்று கல்கத்தாவுக்கு வந்து சேர்வார்கள்,



## THE CULTIVATION OF GROUNDNUTS.

BY

AN AGRICULTURIST.

## நிலக்கடலை ஸாகுபடி.

நிலக் கடலையில் நாட்டுக் கடலை என்றும் மோரீஸ் கடலை என்றும் இரண்டுவகையுண்டு. இப்பொழுது அதிகமாக ஸாகுபடி செய்யப்பட்டு வருகிறது மோரீஸ் கடலைதான்.

### Season-Rainfall.

காலஸ்திதி—மழை.

மானவாரி ஸாகுபடி.—நிலக்கடலை 5, 6 மாதத்திய பயிர். விதை போட்டது முதல் இரண்டு மாதங்களுக்கு கொஞ்சம் ஈரம் இருந்தால் போதும். பூத்து கொட்டை இறங்க ஆரம்பிக்கும் வரையில் அதிக ஈரம் வேண்டியதில்லை. ஆகையால் பிந்தின 2, 3 மாதங்களில் ஈரக்குறைவில்லாமல் நல்ல மழை பெய்யக் கூடிய காலத்தை உத்தேசித்து, விதை விதைக்கவேண்டும். சில ஜில்லாக்களில் அக்டோபர் மாதம் முதல் டிஸம்பர் மாதம் வரையில் நல்ல மழை பெய்யக்கூடும். இப்படிப்பட்ட இடங்களில் ஜூலை அல்லது ஆகஸ்டு மாதத்தில் விதைப்பது நலம். சில ஜில்லாக்களில் ஜூன்மாதம் முதல் ஸெப்டம்பர் மாதம் வரையிலும் நல்ல மழைபெய்கிறதுண்டு. இவ்விடங்களில் ஏப்ரல், மே மாதங்களில் முதல் மழை பெய்த உடனே விதையை விதைத்து விடவேண்டும், ஆகையால் அனுபோகத்துக்குத்தக்கபடி கிருஷிகர்களே விதை விதைக்கும் காலத்தை நிதானித்துக்கொள்ளவேண்டும்.

### Soil.

பூமி.—அதிக களிப்புள்ள பூமி மணிலாக் கொட்டை ஸாகுபடிக்குத் தகுந்ததல்ல. இதில் பயிர் பார்வைக்கு செழிப்பாக வந்தாலும், அதிக மாசூல் கிடைப்பதில்லை. அறுவடைக்கு மண்பொல பொலப்பில்லாமல் கெட்டியாயிருப்பதால் கடலையைக் கொத்தி சேகரிக்க அதிக செலவு பிடிக்கும். ஆகையால் லாபம் குறையும். மணல் சாரி நிலந்தான் ஸர்வ சிலாக்கியம். பூமி நல்ல வடிகாலுள்ளதாயிருந்தால் நலம். ஏனென்றால் நிலக்கடலைப் பயிருக்கு நீர்ப்பிடிப்பு கூடாது. இளம்பயிராக இருக்கும்போது பெரும் மழை அடித்தால் பயிர்கெட்டு வளராமல் போகிறது.

### Preparatory Cultivation.

செய் நேர்த்தி.—விதை விதைப்பதற்கு முந்தியே பூமியிலுள்ள புல் பூண்டுகளை எடுத்து விடவேண்டும். இல்லாவிட்டால் பயிர் வளர்ந்து நல்ல மழை அடிக்கும்போது இப்புல் பூண்டுகள் அதிகப்பட்டு மாசூலைக் கெடுத்துவிடும். ஆகையால் கோடைகாலத்தில் வேறு பயிர் செய்தாவது கோரை முதலிய புல் பூண்டுகளை அகற்றிவிடவேண்டும். நிலம் புல் பூண்டுகள் இல்லாமல் சுத்தமாயிருக்குமானால் அதிக உழவு வேண்டியதில்லை. மூன்று மடக்கே போதும்.

### Manuring.

எருவிடுதல்.—விதைப்பதற்கு கடைசி உழவு உழுவதற்கு முன் நிலத்துக்கு எருவிடவேண்டும். ஆடுமாடுகளின் சாணியையாவது ஊர்க்குப்பைகளையாவது எருவாகப் போடும் பக்ஷத்தில் அதை ஒரு மூலையில் குவித்து சாயவிடாமல் சீராக நிலம்முழுவதும் போடவேண்டும். கட்டியாயிருக்கும் எருவை உடைத்து விட்டு நன்றாய்ப் பரவின உடனே நிலத்தையும் உழுதுவிடவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு எருவிடுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு லாபமுண்டு. ஆடுமாடுகளின் சாணி, ஊர்க்குப்பை சாம்பல், இவைகள் சிலாக்கியமான எரு. ஒரு ஏகர் நிலத்துக்கு 15, 20, வண்டி எரு அடிப்பது நல்லது.

## Seed.

விதை.—விதைக்காக நல்ல விதைக் கடலையை முந்தி மாசூலிலிருந்து பொறுக்கி எடுத்து வைத்திருக்கவேண்டும். இந்தக் கடலையை கையால் உடைத்து விதையை எடுத்துக் கொண்டு அவைகளிலிருந்து நல்லவிதைகளை மாத்திரம் பொறுக்கி விதையாக உபயோகப்படுத்தவேண்டும். கெட்டுப்போன விதைகளை நீக்கி விடவேண்டும்.

## Sowing as a pure Crop,

நிலக்கடலையை தனியே ஸாகுபடி செய்தல்.—உழுதுகொண்டு போகும் பொழுதே உழவு சாலில் விதைகளை கையால் போட்டுக் கொண்டு போவது வழக்கம். இதனால் விதை அதிகம் செலவாகிறது. விதைகளும் நெருக்கமாய் முளைத்து படர்ந்து வளராமல் நெருங்கிப்போய் விடுகிறது. தவிரவும் பிற்பாடு களை வெட்ட அதிக சிரமமுண்டாகிறது. அதிக மழை பெய்தால், தண்ணீர் தேங்கி நிற்க ஹேதுவாகிறது. ஒரு படைச்சால் விட்டு ஒரு படைச்சாலில் பூமி வளத்தைப் பொறுத்து, அரை அடி முக்கால் அடிக்கு ஒரு விதையாக விதைப்பது நலம். இதில் விதை லாபமுமுண்டு. இப்பொழுது, ஒரு ஏகர் நிலத்தில் 32 பட்டணம்படி விதைப்பதற்கு 10, 12 படி விதைத்தால் போதும். பயிர்கள் ஒன்றோடொன்று படாமல் விரிந்து வளரவும் ஹேதுவாகும். இப்படி விதைப்பதால் கைக்களை வெட்டுவதற்கு பதிலாக ஒரு ஜதை மாடுகட்டி சுலபமாய் களைவெட்டலாம். விதைத்து முதல் மூன்று மாதம்வரையில் நிலக்கடலையுடன் மற்றொரு பயிர் ஸாகுபடி செய்வதற்கு அனுகூலமாகும். இந்த விதம் களை வெட்டுவதனால் நிலத்தில் தண்ணீர் தேங்காமல் வடியவும் ஹேதுவாகிறது.

## Sowing as mixed crops.

நிலக்கடலையை கலப்புப்பயிராக விதைத்தல்.—நிலக்கடலை 5,6 மாதப் பயிரா யிருப்பதால் இந்தப் பலனை விதைப்பதற்கு முந்தியே வேறு ஒரு பலன் பூமியிலிருந்து எடுக்க வேண்டி, தென்னார்காட் ஜில்லாக் குடிகள் 2 அல்லது 3 மாதத்துப் பயிரான, சோளம் கம்பு போன்ற தானியப் பயிரை முதலில் நிலத்தில் தெளிக்கிறார்கள். பிறகு விதைகள் மறையும்படி மேலாக ஒரு சால் உழுது விட்டு பூமியை நிரவுவதற்கு மரத்தின்கிளைகளை படல் கட்டி இழுக்கிறதுண்டு. விதை முளைத்து அரையடி உயரமானதும் அடுத்த மழையில் பயிரடிப்பார்கள். அதாவது பூமியைக்கொத்தி களை எடுப்பார்கள். பூமி இறுகிப்போகுமானால் இரண்டு மூன்று தடவை இப்படிக் கொத்திக் களை எடுப்பதுண்டு. தானியப் பயிர் புஷ்பிக்க ஆரம்பிக்கும்பொழுது, நிலக்கடலை விதையை முக்கால் அடிக்கு ஒன்றாக களைவெட்டிகொண்டு தானியபயிரின் இடையில் போடுவார்கள். இப்படி பூமியில் பாடுபடுவதினால் தானியப்பயிரும் நன்றாய் வளர்கிறது. பிற்பாடு ஸாகுபடி செய்யப்படும் நிலக்கடலைக்கும் சிலாக்கியமாகிறது. கிணற்று ஆதாரமுள்ள நிலத்தில் புன்செய்ப்பயிரான சோளம், கம்பு இவைகளை ஸாகுபடி செய்வதில்லை. ராகி, தினை, இவைகளை ஸாகுபடி செய்கிறார்கள்.

கேழ்வரகு ஸாகுபடிக்கு பாத்தி கட்டி தண்ணீர் இறைத்து, இந்தப் பாத்தியில் அந்த நாற்றை நடுவார்கள். கேழ்வரகு கதிர் வாங்கும் ஸமயத்தில் ½ அடிக்கு ஒன்றாக நிலக்கடலையையும் ஊன்றுவார்கள். சோளம், கம்பு இவைகளைப்போலவே தினையையும் விதைத்து அவசியமானால் பின்பு ஜலம் இறைப்புக்காக பாத்திகட்டுவார்கள், தினைப்பயிர் லேசாய்



முடியக்கூடியது. ஆகையால் தினை அறுவடையானபிறகு நிலக்கடலை விதையை ஊன்றுவது வழக்கம். விதைக்கலப்பை முதலான உழவுக்கருவிகள் உபயோகப்பட்டு வருமிடங்களில் கலப்புப் பயிர் நன்றாய் ஸாகுபடி செய்யலாம். தானியப்பயிரை 1½ அடிக்கு ஒன்றாயுள்ள உழவு சாலில் விதைத்து மத்தியிலுள்ள இடத்தை தன்துளுவினால் களை வெட்டி இந்த இடை வெளியில் ஸரியான பட்டத்தில் நிலக்கடலை விதையை ஊன்றலாம். தானியப்பயிர் அறுவடையானதும் நிலக்கடலைக்கு மத்தியில் தந்துளு என்னும் கலப்பையை ஓட்டி களைவெட்டலாம். இந்த மாதிரி பாலூர் விவஸாயப் பண்ணையில் ஸாகுபடி செய்து பார்த்ததில் நல்ல லாபமாகத் தெரியவந்தது.

## After Cultivation.

பின்சாகுபடி.—நிலக்கடலைக்கு களைவெட்ட செடிகளுக்கு இடையே களை வெட்டியால் கொத்துகிறார்கள். இதற்கு கூலியாட்கள் அதிகமாகவேண்டும். கூலியாட்கள் கிடைக்காத அனேக இடங்களில் களைவெட்டி பூமியை தளரச் செய்யாத காரணத்தினால், நிலக்கடலை விருத்தியாகிறதில்லை. ஆகையால் விதைக் கலப்பையால் விதைவிதைத்து பிறகு தந்துளு என்னும் களைவெட்டியால் ஒரு ஜதை எருதுகொண்டு களைவெட்டுவது சுலபம். இதுவே சிலாக்கியமென வற்புறுத்துகிறோம். எப்படியாவது அடிக்கடி நிலத்தைக்கொத்திக் கொடுக்கவேண்டியது அவசியம். இவ்வளவு தடவைதான் கொத்திக் கொடுக்கிறதென்று நிர்ணயமில்லை.

நிலக்கடலை விதைத்து மூன்றுமாதம் வரையில் மழைபெய்து பூமி காயும்பொழுதெல்லாம் பூமியை நெகிழச்செய்வது அவசியம். இதனால் பூமி ஈரம் காத்து, கன்னிகள் பூமியுள் சென்று கடலையைப் பெருக்க செய்யும், களைகளும் மண்டாது.

## Harvesting.

அறுவடை.—ஸுமார் 5-மாதத்தில் நிலக்கடலை வெட்டத்தயாராகும். செடிகாய்ந்து, மேல் கட்டை முத்தி கடலையின் மேல் தோல் சற்று சிவந்த நிறமாகும்பொழுது அறுவடை செய்துவிடலாம். ஒவ்வொரு செடியிலும் முற்றாத இளம் கொட்டைகளுமிருக்கக்கூடும். மணல்சாரி நிலங்களில், ஒவ்வொரு செடியாய்ப்பிடுங்கி கடலையை பறித்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட பூமிகளில்தென் ஆர்க்காடு ஜில்லாவில் மண்வெட்டிக் கலப்பையால் உழுது கடலையை சேகரம் செய்கிறார்கள். கடினமான தரைகளில் செடிகளை முதலில் பிடுங்கி விட்டு அவைகளிலிருக்கப்பட்ட நிலக்கடலைகளையும் எடுத்துக்கொண்ட பிறகு பூமியை மண்வெட்டியால் ஸுமார் 4 அங்குலம் ஆழம் கொத்தி கடலையை பெண்களைக் கொண்டு ஒவ்வொன்றாய்ப் பொறுக்குகிறார்கள். இப்படிச் சேகரிக்கப்பட்ட கடலையை வெயிலில் நன்றாய்க் காயப்போடவேண்டும். ஸாயங்காலம் குவியல் செய்து மூடிவைக்கவேண்டும். மறுதினம் காயவைத்து, நன்றாய் இப்படி சாய்ந்த பிறகு எடுத்துவைக்கவேண்டும்.

## Yield.

கண்டுமுதல்.—இது செய் நேர்த்தியைப் பொறுத்தது. நன்றாய் உழுது, எருவிட்டு பக்குவமாய் ஸாகுபடியாகி காலமும் ஸரியாக ஒத்துக்கொண்டால், மானவாரியாக செய்யப்படும் ஸாகுபடியில் ஏகர் 1-க்கு 700 முதல் 1200 பட்டணம் படிவரையில் கடலை கிடைக்கும். அநேகர் எருவிடாமலே தங்கள் நிலத்தில் முதல் முதல் கடலை ஸாகுபடி செய்கிறார்கள். ஸரியான மாசூல் கிடைக்கிறது. மறுவரு

ஷம் அப்படியே எருவிடாமல் ஸாகுபடி செய்கிறார்கள். முன்போல் அவ்வளவு மாகூல் கிடைப்பதில்லை. இதனால் அதைரியப்பட்டு கடலை ஸாகுபடியை விட்டுவிடுகிறார்கள். மேலே சொல்லியிருக்கிறபடி எருவிட்டால் தான் மணிலாக்கொட்டை ஸாகுபடியில் பலனுண்டு.

The Disposal of the Crops.

விற்பனை.—நிலக்கடலை உடனே விலையாகி விடுகிறது. புதிதாக ஸாகுபடி செய்யப்படும் ஜில்லாக்களில் விலையாவது கஷ்டம். ஆனால் பயிரை எடுத்து எண்ணெய் ஆட்டலாம். எண்ணெய் நன்றாய் விலையாகிறது. 100 ராத்தல் பருப்பில் ஸுமார் 40 ராத்தல் எண்ணெய் எடுக்கலாம். கடலைப் பிண்ணாக்கை கால் நடைகளுக்கு தீனியாக வைக்கலாம். அல்லது நிலத்திற்கு எருவாகப்போடலாம். தென்னார் காடு ஜில்லாவில் நன்செய்களுக்கு ஏகர் 1-க்கு ஒரு பாரம் வீதம் கடலைப் பிண்ணாக்கை எருவாகப் போடுகிறார்கள். இதினால் கிராமத்திலுள்ள ஊர்வாரிக்குப்பை வகையரா நிலக்கடலை ஸாகுபடிக்கு எருவாக உதவுகிறது. கடலைப் பிண்ணாக்கையே கடலை ஸாகுபடிக்கு உரமாக உபயோகிக்கக்கூடாதா என்பதை பாலூர் விவசாய பண்ணையில் பரிக்ஷித்து வருகிறார்கள். காய்ந்துபோன நிலக்கடலைச் செடி கொடிகள் ஆடுமாடுகளுக்கு நல்ல தீனி, நன்றாய் வைத்து வைக்கோலுடன் கலந்து போடவேண்டும்.

Irrigated groundnut.

இறைப்பு நிலக்கடலை.—தென்னார்காடு ஜில்லாவில் நிலக்கடலையை இறைப்புப் பயிராகவும் ஸாகுபடி செய்கிறார்கள். மானவாரிப் பயிராக ஸாகுபடி செய்வதற்கும் இறைப்புப் பயிராக ஸாகுபடி செய்வதற்கும் ஒன்றும் வித்தியாஸம் இல்லை. இறைப்புப் பயிராக ஸாகுபடி செய்வதில் அதிகமாக எருவிடவேண்டும். அதற்குத்தக்கபடி அதிக மாகூலும் கிடைக்கும். மேலே சொன்னபடி (ராகியை) கேழ்வரகை பூமியில் தெளித்து சிறு பாத்திகளாகக் கட்டி ஜலம் இறைத்து வருகிறார்கள். கேழ்வரகு கதிர்வாங்கும் ஸமயத்தில் நிலக்கடலை விதையை கேழ்வரகில் களைவெட்டியால் போடுவார்கள். அப்படி நிலத்தை பண்படுத்தி ஸரியானபடி மழை இல்லாவிட்டால் கேழ்வரகு நாற்று விட்டு பிற்பாடு நடுவார்கள். சில ஸமயங்களில் நிலக்கடலையையே தனிப்பயிராகவும் ஸாகுபடி செய்வார்கள். நிலத்தைப்புழுதியாக உழுது பாத்தி பிடித்து அதில் நிலக்கடலையை ஸுமார் முக்கால் அடிக்கு ஒன்றாக களைவெட்டியால் போட்டு பிறகு தண்ணீர் பாய்ச்சுவார்கள். விதையை நெருக்கமாய் ஊன்றவேகூடாது. நாட்டுக் கடலையை ஊன்றி வந்தபடியே மோரிஸுக் கடலையையும் ஜனங்கள் நெருக்கமாய் ஊன்றி வருகிறார்கள். நாட்டுக்கடலைச் செடியின்மேல் வரிகள் கிட்டவே மணி பிடிக்கும். மோரீஸ் கடலை அப்படியல்ல. இதன் செடி நாலாபக்கமும் கிளை விட்டுப் பரவிப்படரும். ஒவ்வொரு கிளையிலும் மணி ஜாஸ்தியாகப் பிடிக்கும். நெருக்கமாய்ப்பயிரிடுவதில் கிளைகளுக்குபரவிப்படரஇடமில்லாமல் போகிறது. கொத்தி கிளை எடுக்கவும் ஸாத்தியப்படுகிறதில்லை. பூமி கெட்டிப்பட்டு களைமண்டிவிடுகிறது. பூமி கெட்டியாய்ப் போவதால் பாய்ச்சும் ஜலம் சேதமாய்ப் போய் உள் ஈரமில்லாமல் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சவேண்டியதாகிறது.

Cultivation and Sowing.

விதைத்தல்.—எப்படி விதைப்பது சிலாக்கியம் என்று பாலூர் விவசாயப்பண்ணையில் பரிக்ஷித்து வருகிறார்கள். இப்போது தெரிந்த வரையில் ஒரு சால்விட்டு ஒரு சாலில்விதை



நடுவது சிலாக்கியம். விதைப்புக்கு முந்திநிலத்தில் தண்ணீரைப் பாய்ச்சி, கொஞ்சம் காய்ந்ததும் உழுதுபூமியை மட்டப் படுத்த வேண்டும். பூமியிலுள்ள ஈரமே விதைமுளைக்கப்போது மானதாகும்.

Irrigation and After Cultivation.

நீர்பாய்ச்சலும் பின் சாகுபடியும்.—விதைகள் நடப்பட்டிருக்கும் படைச்சால்களுக்கு மத்தியில் நாட்டுக்கலப்பையால் ஒரு சால் உழுது அதன் வழியாக தண்ணீர்பாய்ச்சிவர வேண்டும். அப்படித் தண்ணீர் பாய்ச்சுவதில் தண்ணீர் சேதமுண்டாகாது. பூமி ஸமமாக இல்லாவிட்டால் இதிலிருந்து சிறுவாய்க்கால்கள் இழுத்துப்பாய்ச்சவும் நேரிடும். உழுவுசால் கொஞ்சம் காய்ந்ததும், மறுபடி முன்போல் உழுதுவிடவேண்டும். இப்படி செய்வதால் அதிக ஈரம் கொள்ளும். மறு தண்ணீர் பாய்ச்சுவது பூமியின் தன்மையைப் பொறுத்தது. காலை வேளையில் பயிர் கண்ணுக்குச் செழிப்பாகத் தோன்றினால் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. கடைசி இரண்டு மாதங்களில் அதிகமாக தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கும். 5-வது மாதக்கடைசியில் கொட்டை முற்றிவிடும். இனிதண்ணீர் பாய்ச்சக்கூடாது.

மானவாரி பூமியிலிருந்து கடலையைவெட்டி எடுப்பதுபோலவே இறைப்பு நிலத்திலிருந்தும் கடலையை வெட்டி எடுக்கலாம். ஆனால் கடைசியில் ஒரு தண்ணீரைப்பாய்ச்சி நிலத்தைகொஞ்சம் பதப்படுத்திக் கொண்டு வெட்டவேணும். இறைப்பு பூமியிலிருந்து ஒரு ஏகராவில் 1000 படி முதல் 3000 படி வரையில் மாகூல் கிடைக்கிறது.

விவஸாயி.

HER MAJESTY QUEEN MARY.

## மாட்சிமை தங்கிய மஹாராணி மேரி சக்ரவர்த்தினி.

மேரி அடி லேய்ட் ராஜகுமாரிக்கும் டெக் ராஜகுமாரருக்கும் 1867-௵ மேµத்தில் ஜனனமான ஸந்தானமே நமது சக்ரவர்த்தினியாகிய மேரி மஹாராணி. இரண்டு மாதம் கழிந்தபிறகு இந்தக் குழந்தைக்கு "விக்டோரியா மேரி அகஸ்டா லூயிஸா ஓல்கா பாலைன் க்லாடைன் அக்னிஸ்" என்று நாமகரணம் செய்யப்பட்டது.

இந்த ராஜகுமாரிக்கு நாலுவயதானபோது தாய் தந்தைகள் அவளை ரம்பன்ஹீம் என்னும் ஊருக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்போது வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் தங்கள் குழந்தைகளுடன் அவ்விடம் வந்து இந்தக்குடும்பத்துடன் கலந்து கொண்டார்கள். இவ்விரு குடும்பத்தாரும் ஒன்றாய்ப் பழகிப் பொதுவான ஒரே மண்டபத்தில் போஜனம் பண்ணிவந்தார்கள். இந்தப்பழக்கம் முதிர முதிர இவர்களுக்குள் ஸ்நேகம் விருத்தியானதோடு சிலஸமயம் விவாக ஸம்பந்தங்களும் நிச்சயிக்கப்பட்டன.

டெக் பிரபுவும் அவருடைய மனைவியும் தங்கள் குழந்தைகளை வெகு ஜாக்ரதையாய் வளர்த்துவந்தார்கள்; எல்லாரிடத்திலும் மரியாதையாயும் பட்சமாயும் நடந்துகொள்ளும்படி சொல்லிக்கொடுத்தார்கள். குழந்தைகள் குசாலாய் குதித்து விளையாடுவதில் இவர்கள் சந்தோஷங்கொண்டபோதிலும் அந்த விளையாட்டுப் புத்தியினால் அவர்களுடைய படிப்புக்குக்குறைவுவராமல் பார்த்துவந்தார்கள்.

மேரி ராஜகுமாரியும் அவளுடைய ஸகோதரர்களும் பிறத்தியாருடைய கஷ்ட ஸுகங்களை நன்றாய் உணரவேண்டுமென்று அவர்

களுடைய தாயாருக்கு அதிக ஆவல் இருந்தபடியால் அப்பெருமாட்டி அவர்களை ஏழை ஜனங்களுடைய வீடுகளுக்கு அடிக்கடி கூட்டிக்கொண்டு போகும்படி ஏற்பாடு செய்தாள். இந்த விதமாக மேரி ராஜகுமாரி இளம் வயதிலேயே ஏழை ஜனங்களுடைய ஸுகதுக்கங்களைப்பற்றியும் கஷ்ட நிஷ்டூரங்களைப்பற்றியும் சிறிது தெரிந்துகொள்ள நேர்ந்தது. இப்படி ஏழைகளுடைய வீடுகளுக்குப்போய் வந்தது நம் ராஜகுமாரியின் மனதைவிட்டு எப்போதும் அகலாமல் ஸ்திரமாய் ஊன்றிவிட்டபடியால் அந்த ஞாபகம் பிற்காலத்தில் அந்த அம்மைக்கு அதிக பிரயோஜனகரமாயிருந்தது.

ராஜகுமாரி தன் ஸகோதரருடன் சேர்ந்து உபாத்தியாயரிடத்தில் ஒன்றாகவே வாசிப்பாள். இவள் அதிக தீவிர புத்தியும் ஸாமர்த்தியமுமுள்ளவளென்றும், ஸங்கீத த்வனியைப்போன்ற இனிய சாரீர ஸம்பத்துடையவளென்றும் சொல்லுகிறார்கள். பிரபஞ்சத்திலுள்ள இயற்கைப்பொருள்களைக் குறித்து ஆராய்ந்தறிய இவளுக்கு தக்க ஸந்தர்ப்பங்கள் நிறைய இருந்தபடியால் அந்த விஷயத்தில் விசேஷ தேர்ச்சி பெற்றிருக்கிறாள். ராஜகுமாரி தன் தாயாருடன்கூட கோவிலுக்குத் தப்பாமல் போய்வருவதுண்டு. மேரி ராஜகுமாரி 1883-ம் ௵த்தில் தன் தாய் தகப்பன்மாருடன் இடலி தேசத்திலுள்ள ப்ளாரென்ஸ் நகரத்துக்குப்போனாள். அங்கே தங்கியிருந்த காலத்தில் ராஜகுமாரி ஸாதாரணமாய் தன் வாத்தியார்களிடம் கல்வி கற்று வந்ததுடன். சித்திரம், ஸங்கீதம்முதலிய கலைகளிலும் அனுபவ ரீதியாய்ப் பழகிவந்தாள்.

இப்படி இரண்டு வருஷகாலம் வெளிநாட்டில் சஞ்சாரஞ்செய்த பிறகு, இந்த குடும்பத்தார் இங்கிலாந்துக்குத் திரும்பிவந்தார்கள். இப்படி ஸஞ்சாரம்செய்தது ராஜகுமாரியின் அபிப்பிராயங்கள் விசாலமாவதற்கு விசேஷ உதவியாயிருந்தது. அவளுக்கு இயற்கையாயிருந்த அரிய குணங்களெல்லாம் தினந்தோறும் அவள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் வெளிப்படத்தொடங்கின. மேரி ராஜகுமாரி நாடகத்தில் பிரியம் கொண்டவள்; லண்டன் நகரத்தில் நடக்கும் நாடகங்களுக்கு விசேஷமாய் போவதுண்டு. கிராமத்தில் போய் வசிப்பதிலும் இந்த ராஜ குமாரிக்கு அதிக ஆசை. இவள் கிராமங்களுக்குப் போகும்போதெல்லாம் அங்குள்ளவர்கள் இவளை மெத்தப் பிரியமாய் எதிர்கொண்டழைத்து உபசரிப்பார்கள்.

ராஜ குமாரிக்கு வயதாக ஆக அவள் தன் அந்தஸ்துக்குத்தக்கபடி செய்ய வேண்டிய காரியங்கள் அதிகரித்து வந்தபோதிலும் அவள் படிப்பை மாத்திரம் விட்டுவிடாமல் தான் தினமும் 'இவ்வளவு படிக்க வேண்டுமென்று நிர்ணயித்துக்கொண்டு அந்தப்படியே தனக்குக் கல்யாணம் ஆகும் வரையில் வாசித்துவந்தாள்.

டென்னிஸன், கார்லைல், எமர்ஸன், ஜார்ஜ் எலியட் என்னும் ஆங்கில நூலாசிரியர்கள் எழுதிய புஸ்தகங்களை நமது மஹாராணியார் வெகு பிரியமாய் வாசித்து வருவார், அவர் எந்த காரியத்தையும் சீராயும் ஒழுங்காயும் செய்வதையே முக்கியமாகக் கருதுவார். ஸங்கீத வித்தையில் இவர் தாயாருக்கிருந்த அத்தியந்தமான வேட்கை இந்தம்மாளிடத்தில் காணாவிட்டாலும், பாடுவதில் ஆசைகொண்டவராகவேயிருக்கிறார். ஈசுவர விஷயமான ஞான கீர்த்தனைகளே எப்போதும் இவர் மனதுக்கு ரம்யமானவை.



நகர வாசிகள் உல்லாஸமாய்ப் பொழுதுபோக்கக்கூடும் கோஷ்டிகளுக்கும் கச்சேரிகளுக்கும் மேரி ராஜகுமாரி தவறாவல் போவார். அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்களின் க்ஷேமாபிவிர்த்திக்காக செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியிலும் இவர் சேர்ந்து சிரத்தையுடன் வேலை செய்வார். இவ்விராஜகுமாரி தம் செலவுக்காகக் கொடுக்கப்படும் பணத்தில் ஒரு பாகத்தை ஏழை ஜனங்களின் குழந்தைகளுக்காகச் செலவிடும்பொருட்டு பிரத்தியேகமாய் எடுத்துவைத்து விடுவார். வறுமையாலும் வியாதியாலும் வருந்தும் ஜீவகோடிகளின் துன்பத்தைக் கொஞ்சமாவது நீக்கும்பொருட்டு இவர் லண்டன் நகரத்தில் ஏழைகள் நிறைந்திருக்கும் ஈஸ்ட் எண்ட் என்னும் இடத்துக்கு தன் தாயாருடன் அடிக்கடிபோவதுண்டு.

இவ்விதமாக ராஜ குமாரிக்கும் ஜனங்களுக்கும் ஸ்நேஹ ஸம்பந்தம் விருத்தியாகிவந்தது. இவர் தம் தாயாரின் உதவியைக்கொண்டு ஏழை ஜனங்களின் கஷ்டமான நிலைமையை நன்றாய்த் தெரிந்துகொண்டு லண்டன் நகரத்தில் பணக்காரருக்கும் ஏழைகளுக்கும் அதிக ஒற்றுமை யுண்டாகும்பொருட்டுக் கவலையுடன் முயற்சி செய்து வந்தார்.

விக்டோரியா மஹாராணியார் ஸிம்மாஸனமேறின ஐம்பதாவது வருஷோத்ஸவக் கொண்டாட்டம் ஸம்பந்தமாக 1887-ம் ௵த்தில் நடந்த வைபவங்களிலெல்லாம் மேரி ராஜகுமாரியைப்போல் அவ்வளவு சுறுசுறுப்பாயும் ஸந்தோஷமாயும் சேர்ந்து வேறு எவரும் சிரத்தை பாராட்டி நடக்கவில்லை.

1893-ம் ௵ மே ௴ 3 தேதி ராஜ குமாரியை வேல்ஸ் இளவரசரின் குமாரராகிய ஜார்ஜ் ராஜ குமாரருக்கு விவாகம் செய்து கொடுப்பதாய் நிச்சயித்திருக்கும் ஸமாசாரம் வெளிப்படுத்தப் படவே ஸகல ஜனங்களும் அகமகிழ்ச்சியடைந்தார்கள். மேரிக்குத்தகுந்த மணவாளன் ஜார்ஜே என்றும், ஜார்ஜுக்கு தகுந்த மணமகள் மேரியே யென்றும், ராஜ்யமெங்கும் பிரஜைகள் கொண்டாடி மனம் பூரித்தார்கள்.

மேரி என்ற மங்கள நாமம் ஜனங்களுக்குக் களிப்பை உண்டு பண்ணிற்று. ஆனால் இவளுடைய மங்கைப் பருவம் கழிந்துபோனபடியால் அந்த பெயர் மாறி, யார்க் பெருமாட்டி விக்டோரியா மேரி என்னும் பெயர் ஏற்பட்டது.

இப்போது நமக்கு மஹாராணியாராய் விளங்கும் ராஜ குமாரியைப்பற்றி ஸகல விஷயங்களும் ஆதிமுதல் சுபஸூசகங்களாகவே ஏற்பட்டிருக்கின்றன. விக்டோரியா மஹாராணியார் எந்த அரண்மனையில் எந்த அரையில் எந்த மாதத்தில்பிறந்தாரோ அதே அரண்மனையிலும், அதே அறையிலும் அதே மாதத்திலும் நம் மேரி மஹாராணி பிறந்தாரென்பதும், இவர் தமது இயற்கைபெயருடன் விக்டோரியா என்னும் பெயரையும் பூண்டிருக்கிறாரென்பதும் மங்கள ஸூசகமென்று எண்ணப்பட்டது. ஜார்ஜ் ராஜகுமாரருக்கும் மேரி ராஜகுமாரிக்கும் விவாகம் நடப்பதாய் நிச்சிதார்த்தம் செய்யப்பட்டது முதல் அவர்கள் முன்னிலும் அதிக அந்யோந்யமாய் அன்பு பாராட்டிப் பழகிவரலானார்கள். கல்யாணத்துக்கு வேண்டிய ஸகல ஸந்நாஹங்களும் உடனே செய்யப்பட்டு 1893-ம் ௵ ஜூலை ௴ 6ந்தேதி திருக்கல்யாண மஹோத்ஸவம் மகா வைபவத்துடன் நடந்தேறிற்று.

1894-ம் ௵த்திலே இந்த தம்பதிகளின் முதற் குமாரரான எட்வர்ட் ட்யூக் ஆப் காரன்வால் என்பவர் பிறந்தார். விக்டோரியா மகாராணியாரின் வைர ஜூபிலி மகோத்ஸவ ஸம்பந்தமாய் நடந்த ஸகல வைபவ சடங்குகளி

லும் மேரி இளவரசி பிரஸன்னமாயிருந்தார். இந்தக் கொண்டாட்டங்கள் முடிந்த பிறகு இந்த தம்பதிகள் ஐயர்லாந்துக்கு விஜயமாகி அங்கே ப்ரஜைகளால் பக்தி சிரத்தையுடன் வரவேற்கப்பட்டார்கள். அவர்கள் அங்கே தங்கியிருந்த காலத்தில் அந்த நாட்டாரின் அழகிய பூத்தையல் வேலையையும், ஒப்பற்ற சரிகைத்தொழிலையும், ஜனங்களின் உல்லாஸப்ரியத்தையும், விருந்தினரை உபசரிக்கும் விமரிசையையும், கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்.

இதற்குப் பிறகு மேரி மஹாராணியின் தாய் தகப்பன் இருவரும் இறந்துபோகவே அவர்களுடைய ஸமஸ்தானத்து விவகாரங்களை மேரி ராணி பிறருதவியில்லாமல் தாம் ஒருவராகவே கவனித்து வந்து, தாம் மேற்கொண்ட வேலையை மிக்க திறமையாயும் ஸாமர்த்தியமாயும் செய்து முடித்தார்.

1901-ம் வருஷத்தில் இந்த தம்பதிகள் கனடா ஆஸ்த்ரேலியா முதலிய குடியேற்ற நாடுகளுக்குப் பிரயாணப்பட்டுப் போனதைக் குறித்து சென்றமாதம் இந்தப் பத்திரிகையில் வெளியான ஜார்ஜ் மஹாராஜா சரித்திரத்தில் சொல்லியிருக்கிறோம்.

இந்தப் பிரயாணத்திலிருந்து திரும்பி வந்தவுடனே இவர்களுக்கு வேல்ஸ் இளவரசர்-இளவரசியென்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

1902-ம் வருஷத்தில் எட்வர்ட் மாஹாராஜாவின் முடிசூட்டுவைபவம் நடந்த பிறகு வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் இந்தியாவுக்கு விஜயம் செய்தார்கள். இந்தியாவுக்குப் பிரயாணமாவதற்குமுன் அந்த தேசத்தைப் பற்றிய ஸகல விஷயங்களையும் படித்தறிந்துகொண்டார். இந்தியாவில் தமக்கு விருந்தளிக்கும் சீமான்களுக்கும் சீமாட்டிகளுக்கும் எந்த விதமான பரிசுகள் கொடுக்கலாமென்று யோசிப்பதில் அதிக காலம் கழித்தார் இந்தியாவுக்கு ராஜகுமார தம்பதிகள் விஜயமானதை முன்னிட்டு இத்தேசமெங்கும் அற்புதமான உற்சாகம் மேலிட்டது. இளவரசி பம்பாயில் அடிவைத்தது முதல் மறுபடியும் 5 மாதம்கழித்து கராச்சியில் இந்தியாவைவிட்டு புறப்படும் வரையிலும் இளவரசியார் வெறும் காட்சிகாணவந்தவரில்லை யென்றும் இந்த தேசத்தில் ஒவ்வொரு ஸங்கதியையும் கவனமாயும், பிரீதியோடும், பொறுமையோடும் பார்த்தறிந்து அனுபவம் பெறுகிறாள் என்றும் ஸகல ஜனங்களும் கருதினார்கள். ஹிந்துக்கள் அவரைப்பலமக்களை ஈன்ற பாக்கியவதியென பாவித்தார்கள். ஸமயம் கிடைக்கும் போதெல்லாம் இவர் ஒரு கிராமத்துக்கோ அல்லது கடைத் தெருவுக்கோ சென்று அங்கே ஜனங்களின் ஆடம்பரமற்ற சுத்தமான வாழ்க்கையைப் பார்த்துவந்தார். மற்ற ஸமயங்களில் தெரிந்துகொள்ள முடியாத பல அருமையான விஷயங்களை இவர் இவ்விதமாகத் தெரிந்துகொண்டார். இவர் ஏதாவது நல்ல காரிய மொன்றேனும் செய்யாதநாளே கிடையாது. இதனால் இந்திய ஜனங்களுக்கு இவரிடத்தில் அதிக பிரிய முண்டாயிற்று.

இவர் அடிக்கடி ஸ்திரீகளின் ஆஸ்பத்திரிகளைப் போய்ப்பார்த்து வந்தார். இந்தியாவின் சித்திர சிற்ப கலைகளை இளவரசியார் மகிழ்ந்து கொண்டாடினார். கராச்சியிலிருந்து ஜன்மதேசத்துக்குப் புறப்படுகிற வரையில் இளவரசியார் ஒரு நொடிப்போதேனும் வீண்போக்காமல் இந்திய விஷயங்களை சிரத்தையாய் கவனித்து வந்தார்.

ஐந்துமாதகாலம் தங்கியிருந்தபிறகு இத்தேசத்தைவிட்டு பிரிந்துபோவது தம்பதிகளுக்கு மிக்க விசனகரமாயிருந்தது. உதயபுர ராஜ்யத்துக்குப் போய்த் திரும்பிவருகையில், இளவரசியார் தம்முடன் வந்த உத்தியோகஸ்தரைப் பார்த்து “நீர் அதிஷ்டசாலி; நீர் உதயபுரத்தை மறுபடியும் பார்க்கக்கூடும்; எனக்கோ அந்த பாக்கியம் எப்போதும் கிடைக்காது” என்று சொன்னாராம். அப்படி சொல்லும் போதே இவரது கண்களில் நீர்ததும்பிற்றாம்.



இந்நாட்டைவிட்டுப் புறப்படுவதற்குமுன் இளவரசி எழுதிய ஒருகடிதத்தில் பின் வருமாறு கூறுகிறார்:—

“நாலரைமாதகாலம் இந்தியாவில் கழித்துவிட்டு இப்போது பிரிந்து போகிறதென்றால் மகா விசனமாயிருக்கிறது. ஆனால் ஊருக்குப் போய் என் குழந்தைகளைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் அதிகமாயிருக்கிறது. இந்தப் பிரயாணம் எங்களுக்கு அத்யற்புதமாயிருந்தது. எங்களுக்குண்டான பலவகைப்பட்ட அனுபவங்களால் அநேக ஸங்கதிகள் தெரிந்துகொண்டோம். இந்துதேசத்து மதங்களால் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று.”

இந்தியாவிலிருந்து இவர்கள் திரும்பிப் போனபோது லண்டன் நகரத்தார் இந்த தம்பதிகளை கில்ட்ஹால்மண்டபத்தில் வரவேற்று உபசரித்தார்கள். 1910-ம் வருஷத்தில் எட்வர்ட் மஹாராஜா இறந்துபோகவே, ஐந்தாம் ஜார்ஜ் மஹாராஜா ஸிம்மாஸனமேறினார். மேரி மஹாராணி மஹாராஜாவுக்கேற்ற கற்புடைய மனைவியாகவும் பிரஜைகளின் க்ஷேமத்தில் அக்கரைகொண்ட ராணியாகவும் விளங்குகிறாள். இந்த மஹாராணியார் மகளாகவும், மனைவியாகவும், தாயாகவும், பட்டமஹிஷியாகவும் பயிற்சியடைந்து தேர்ச்சி பெற்று இப்போது இந்த மஹாராஜ்யத்தில் மண்டலேசுவரனது பாரிசத்தில் ஸரிஸமானமாக வீற்றிருக்கும் உந்நத பதவியை அடைந்திருக்கிறார்.

மஹாராணியின் ஸந்நிதானம் மிக்க ராஜகம்பீரமானது. இவர் அதிக தெய்வபக்தியும் பாரமார்த்திகபுத்தியும் உடையவர். தம் குழந்தைகளிடத்தில் இவருக்குள்ள வாஞ்சை பல விதத்திலும் வெளிப்படுகிறது. குழந்தைகளுக்காக உல்லாசக் கச்சேரிகள் வைப்பதில் இவருக்கு விசேஷபிரியமுண்டு. இவர் தாம் செய்யும் காரியங்களையெல்லாம் கிரமந்தவறாமலும் ஒழுங்காயும் செய்யும் ஸ்வபாவமுள்ளவர். தமது தேசத்தின் புராதன சரித்திரச்சிறப்பில் அதிக பற்று கொண்டவர். சித்திர படங்களின் குணாகுணங்களை நிதானிப்பதில் நல்லநிபுணர். எவ்விதமான நாடகவித்தையிலும் இவருக்கு அதிக பிரீதி. அப்பப்போது நடக்கும் ஸம்பவங்களை ஸரியாய் கவனித்து, ஸமாசாரப் பத்திரிகைகளைத் தவறாமல் படித்து வருகிறார். மஹாராணியார் விஸ்தாரமாய்ப்படித்து விவேகிகளான பலருடன் சம்பாஷித்திருப்பதனால், ஆழ்ந்த அறிவுடையவராயிருக்கிறார். இவருக்கு ஞாபக சக்தி அதிகம். தம்பிரஜைகளின் மத்தியில் இருக்கவேண்டுமென்று அதிக ஆசைகொள்ளுகிறார். வஸ்திராலங்காரத்தில் அதிக அபிருசி கொண்டவர். இங்கிலாந்து தேசம், அதுஸம்பந்தமான ஸகல விஷயங்களிலும் அதிக நேசம் கொண்டவர். தர்மவிஷயமாய் பணத்தைச்செலவிடுவதில் இவரது பெயர் எங்கும் பிரசித்தி பெற்றிருக்கிறது. கஷ்டத்தையும் துக்கத்தையும் நிவர்த்திசெய்வதில் தமக்குள்ள அவகாசத்தாலும், பொருளாலும், செல்வாக்காலும் தம்மால் கூடியதையெல்லாம் தாராளமாய்ச் செய்துவருகிறார். மனோ விஷயத்திலாவது தேகவிஷயத்திலாவது துன்பப்படும் ஸகலருக்கும் மனங்கசிந்து இரங்குகிறார். இத்தகைய அருங்குணங்கள் வாய்ந்த நமது மஹாராணியருக்கும் மஹாராஜாவுக்கும் இந்தமாதம் 12உ டில்லியில் நடந்த மகுடாபிஷேக தர்ப்பார் மஹோத்ஸவத்தை முன்னிட்டு நாம் மனப்பூர்வமாய் வாழ்த்துக் கூறுகிறோம்.

# THE PREVENTION OF DISEASE.

BY
V. A. VENKATA CHARIAR.

## வியாதி வராமல் தடுத்தல்.

—:o:—

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழி எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. மனிதருக்கு வியாதிகள் வருவது ஸகஜமானாலும் நாம் ஈஸ்வரனால் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தியறிவைக்கொண்டு அவ்வியாதிகளைத்தடுத்தல் வேண்டும். "வெள்ளம் வருமுன் அணைபோடவேண்டும்", அதாவது வியாதிகண்டபின் அதற்காக மருந்துண்டு ஸௌக்கியப்படுத்திக் கொள்வதைக்காட்டிலும் வியாதி வரவொட்டாமல் தடுப்பதே புத்திக்கழகு.

நமது தேசத்தில் ப்ரதிவருஷமும் ஸுமார் இருபது லக்ஷம் ஜனங்களுக்கதிகமாகவே புத்தியைக்கொண்டு தடுக்கக்கூடிய வியாதிகளால் மரணமடைகிறார்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நமது தேசத்தார் தங்கள் புத்தியை ஸுகாதார விஷயங்களில் செலுத்துவார்களானால் அந்த இருபதுலக்ஷம் ஜனங்களும் நோய்க்கு அகப்படாமல் ஸுகித்திருப்பார்கள் என்பதற்கு ஸந்தேகமில்லை. நமது புத்தியால் நாம் தடுக்கக்கூடிய வியாதிகளாவன:—1. காலராவென்னும் விஷபேதி. 2. டிஸன்டரி என்னும் சீதபேதி 3 டைமீரியா என்னும் அஜீர்ணபேதி. 4. ப்ளேக் என்னும் மஹாமாரி. 5. டைபாய்டு என்னும் விஷஜுரம். 6. மலேரியா என்னும் குளிர் முறை ஜுரம். 7. காலிக் என்னும் வயிற்றுநோவு. 8. ரூமாடிஸம் என்னும் கை கால் பிடிப்பு. 9. எலிபன்டியாஸிஸ் என்னும் ஆனைக்கால். 10. ரிங்வோர்ம் என்னும் படர்கடி வியாதி. 11. கினிவோர்ம் என்னும் நரம்புச்சிலந்தி. 12. இட்ச் என்னும் சொறி சிரங்கு. 13. ஹைட்ரோபோபியா என்னும் வெறிநாய்க்கடித்தல். இன்னும் பாம்பு வண்டு முதலிய விஷப்பூச்சிகளை தீண்டுதலால் உண்டாகும் வியாதிகள். இத்தியாதி வியாதிகளைத் தடுப்பது புத்திமான்களுக்கு ஸர்வ ஸுலபமெனத் தைரியமாய்ச் சொல்லலாம்.

மேற்கூறிய வியாதிகள் ஒவ்வொன்றையும் தடுப்பதைப்பற்றி நாம் செய்யவேண்டிய விஷயத்தை அந்தந்த வியாதிகளுக்கு பிரத்தியேகமாகச் சொல்ல அவகாசம் போதாததினால் முக்கியமான அம்சங்களை மாத்திரம் இங்கு கவனிப்போம்.

காலரா என்னும் விஷபேதி ஸாதாரணமாய் அழுக்கிலேயே உயர்ந்தோங்கி வளரும் சில விஷப்பூச்சிகளால் உண்டாகிறது. இந்தவிஷப்பூச்சிகளுக்கு முக்கிய ஆகாரம் அழுக்கே. அழுக்கில்லாவிட்டால் இந்த விஷப்பூச்சிகள் ஆகாரமின்றி நசித்துவிடும். இந்த விஷப்பூச்சிகள் ஜலத்தில் ஸம்பந்தப்பட்டால் அந்த ஜலத்தை உபயோகிப்போர் எல்லாருக்கும் காலரா உண்டாகக்கூடும். அதனால்தான் ஆற்றங்கரை யோரத்திலிருக்கும் ஒரு ஊரில் அவ்வியாதிகண்டால் அந்த ஆற்றோரத்திலிருக்கும் ஒவ்வொரு ஊரிலும் அவ்வியாதிகாண்கிறது. அப்படியே ஒரு வியாதிக்காரனுக்கு உபயோகப்படுத்தின பாத்திரத்தைக்கொண்டு ஊர்ப்பொதுக்கிணற்றில் ஜலம் மொள்ளப்பட்டால் அக்கிணற்றில் விஷப்பூச்சிகள் ஸம்மந்தப்பட்டு அந்த ஜலத்தை உபயோகப்படுத்துகிற ஒவ்வொருவருக்கும் அவ்வியாதி காண நேரிடும்.

மஹாமாரி, விஷஜுரம், மலேரியா, முதலிய ஸகல தொத்து வியாதிகளும் அவ்வாறே உண்டாகின்றன. ஆனால் நாம் நமது புத்தியை உபயோகப்படுத்தி நம்முடைய இருப்பிடத்திற்கு அருகாமையிலும் நாம் உபயோகிக்கும் ஜலத்திற்கருகாமையிலும் மலம் முதலிய அழுக்குகளில்லாமல் பார்த்துக்கொள்வோமானால் ஒருக்கால் அவ்விஷப்பூச்சிகள் வேறு ஒரு இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டாலும் இங்கே ஆகாரமின்றி நசித்துவிடுமென்பதற்கு ஸந்தேகமில்லை. நம் உபயோகத்திற்காக ஏற்பட்டிருக்கும் ஜலாதாரத்தையும் செவ்வனே பாதுகாத்துக்கொள்ள வேண்டியது நமது கடமை. நமது ஜனங்கள் புத்தியீனத்தால் அப்படிப்பட்ட வியாதிக்காரனுடைய துணிகளையும் பாத்திரங்களையும் பொதுக்கிணற்றில் அல்லது குளத்தில் சுத்தி செய்வதனாலும், மலங்களை 'டிஸின்பெக்டெண்ட்' என்று சொல்லப்படுகிற விஷத்தைக்கொல்லும் மருந்துகளைக் கலந்து ஒன்றுசேர்த்து கொளுத்திவிட அல்லது ஆழமாய் புதைத்துவிடவேண்டியிருக்க, அப்படி செய்யாமல் அஸ்வாரஸ்யமாய் இருந்துவிடுகிறதினாலும், தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இன்னும் மற்று முள்ளோர்யாவருக்கும் அவ்வியாதி உண்டாகச் செய்கிறார்கள்.

விஷபேதியும் மஹாமாரியும் ஏறக்குறைய ஒரேமாதிரியான தொத்து வியாதி என்றாலும் அவையிரண்டிற்கும் ஒரு முக்கிய வித்யாஸமுண்டு. விஷபேதி முக்கியமாய் ஜல ஸம்பந்தத்தினாலும் மஹாமாரி பூமிஸம்பந்தத்தினாலும் பரவுகிறது. அதனால் ஒரு ஊரில் விஷபேதி உண்டானால் இன்றைக்கு ஊர் வடக்குக்கோடியில் ஒருவனுக்கு வியாதிகாண்கிறதும், நாளைக்கு தென்கோடியில் ஒருவனுக்கு காண்கிறதுமாயிருக்கும். அதாவது அந்த ஜலத்தை யாருட்கொள்ளுகிறார்களோ அவர்கள் இவ்வியாதிக்கு உள்ளாகக்கூடும். ஆனால் மஹாமாரிஅப்படியல்ல. அவ்விஷப்பூச்சிகள் முக்கியமாய் தரையிலும் ஸாமான்களிலும் தங்குவதால் அவ்விடத்திலிருந்து தினேதினே நாலாப்பக்கங்களிலும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவி அவ்விடத்தில் வஸிப்பவர்களுக்கே காணும். ஆகையால் விஷபேதியைக் காட்டிலும் மஹாமாரி குரூரமானதானாலும் ஸுலபமாய் அடக்கக்கூடியதே.

விஷப்பூச்சி ஸம்மந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் வியாதிகாணவேண்டியிருக்க ஏன் அப்படிக்காண்கிறதில்லை என்று சிலர் கேட்கக்கூடும். விஷப்பூச்சி ஸம்மந்தப்பட்ட ஒவ்வொருவருடைய தேகத்திலும் அவ்விஷப்பூச்சிகள் விருத்தியாகி ஓர் விஷத்தை உண்டாக்குகிறது. உடனே ஸ்வாமிகிருபையால் நமது உடலில் ஓர் மாறு விஷம் உண்டாய் விஷத்துக்கும் மாறுவிஷத்துக்கும் ஓர் தக்க யுத்தம் நமது உடலில் நடக்கிறது. விஷம் அதிகரித்தால் நாம் வியாதிக்குள்ளாகி மரணமடைகிறோம். மாறுவிஷம் அதிகரித்தால் வியாதியற்று போகிறது. ஆகையால் தான் விஷப்பூச்சி ஸம்பந்தப்பட்டவர்களில் சிலர் அவ்வியாதியால் வருந்துகிறதில்லை.

விஷ ஜுரம், நரம்புச்சிலந்தி, படர்கடி முதலியவைகளும் ஸாதாரண ஜுரமும் அனேகமாய் ஜல ஸம்பத்தத்தினாலேயே உண்டாகிறபடியால் விஷபேதிக்குச் சொன்னதே அவைகட்கும் தக்கனவையென்று பாவிக்கலாம்.

சொரி, சிரங்கு, கண்ணோவு, ஜலதோஷம் முதலிய ஸாதாரண தொத்து வியாதிகளும், காலரா, மஹாமாரி, முதலிய குரூர தொத்து வியாதிகளும் ஒருவனுக்குக் காணுமானால் அவனை பிரத்தியேகமாக தூரத்தில் வைத்து அவனை பாதுகாக்கும் பொருட்டு ஒருவர்; இருவருக்குமேல் அவனோடு ஸம்பந்தப்படாமலும், மற்ற எவரும் அப்பாதுகாப்பாரோடு ஸம்பந்தப்படாமலும் இருத்தலே உத்தமம்.

மேற்சொல்லிய தொத்து வியாதிகளை பரவச்செய்யும் கருவிகள் காற்று, ஜலம், தரை, வியாதியஸ்தன் உபயோகித்த பாத்திரம், துணி, படுக்கை இத்தியாதிகளாதலால், வியாதியஸ்தனிருக்கும் அறையில் புதிய காற்று நுழையும்படிக்கும், பழைய காற்று வெளிப்படும்படிக்கும் கதவு பலகணிகளைத்திறந்து வைத்துக்கொண்டிருக்கவேண்டும். அறையில் காற்று அசுத்தமாகும்படிக்கு அனேகர் வியாதிக்காரனை சுற்றிக்கொண்டிருத்தல் கூடாது. வியாதிகண்ட வீடுகளிலுள்ள கிணறுகளையும், ஊரிலுள்ள பொதுக் கிணறுகளையும் ஒரு டாக்டர் அல்லது ஒரு ஸானிடெரி உத்தியோகஸ்தரைக்கொண்டு பெர்மாங்கனேட் ஆப் பொட்டாஷ் அல்லது படிக்காரம் போட்டு சுத்தி செய்விக்கவேண்டியது. பெர்மாங்கனேட் ஆப் பொட்டாஷ் போட்டு சுத்தி செய்யப்பட்ட கிணற்றின் ஜலத்தை ஸுமார் 24 மணிநேரம் உபயோகிக்கலாகாது. நாம் குடிக்கும் ஜலத்தை நன்றாய்க் கொதிக்கவைத்து ஆற்றி அருந்தவேண்டும். கொதிக்கிற ஜலத்தில் குளிர்ந்த ஜலம் விட்டு ஆற்றுவது ஒருபோதும் கூடாது. தரையையும் சுவர்களையும் சுத்தி செய்வதற்கென்று ஆஸ்பத்திரியில் கொடுக்கப்படும் பெர்க்ளோரைட் ஆப் மெர்க்குறி லோஷன் என்று சொல்லப்படும் ஓர் பாஷாண திராவகஜலத்தை வாங்கி வீடு, சுவர், கூரை முதலிய எல்லாவற்றையும் நன்றாய் நனையும்படி கழுவவேண்டும். அப்படிக்கழுவி ஆறின பிறகு சுண்ணாம்படித்தல் நலம். ஸாதாரணமாய் நம்மவர்கள் ஒரு வீட்டுக்கு சுண்ணாம்பு அடிக்கவேண்டுமானால் சுண்ணாம்பை முதல் நாள் ஜலத்தில்போட்டு மறுநாள் சுண்ணாம்பு அடிக்கிறது வழக்கம். அப்படிச் செய்வதினால் சுண்ணாம்பு அடித்தலின் குணமற்றுப்போய்விடுகிறது. ஆகையால் சுண்ணாம்பை ஜலத்தில்போட்டுக் கரைத்த உடனே உபயோகித்தால் அதின் காரம் வீணாகாமல் கொஞ்சநெஞ்சமிருக்கிற விஷப்பூச்சிகளும் அழுக்கும் அற்றுப்போம். பாத்திரங்களை உலையில் காச்சி சுத்திசெய்யவேண்டும். துணிகளையும் படுக்கையையும் ஸாதாரணமாய் கொளுத்திவிடுகிறதே உத்தமம். அப்படிக்கொளுத்திவிடக்கூடாதவைகளை கொதிக்கிற ஜலத்தில் அல்லது வெள்ளாவியில் நன்றாய் வேகவைத்து தோய்த்து வெயிலில் உலர்த்தி உபயோகிக்கலாம். தானியம் முதலியவைகளையும் ஜலத்தில் நனைக்கக்கூடாத விலையுயர்ந்த ஆடைகளையும் வெயிலில் குறைந்த பக்ஷம் 8 மணிநேரமாவது (தானியங்களை பரப்பியும் துணிகளை விரித்தும் வைத்துவிட்டு போட்டு) உபயோகிக்கலாம்.

பள்ளிக்கூடப்பிள்ளைகளில் யாருக்காவது சிரங்கு, சொறி, கண்ணோவு, ஜலதோஷம், கக்குவான், தட்டம்மை, பயரம்மை, மென்கட்டுமாரி, அல்லது வைசூரி காணுமானால் அப்பிள்ளையை பள்ளிக்கூடத்தில் சேர்க்காமல் விடை கொடுத்து வீட்டுக்கனுப்பி விடுகிறதினால் மற்றப்பிள்ளைகளை அக்காலம் அவ்வியாதிகளினின்றும் காப்பாற்றியதாகும். வீட்டிலும் அப்பிள்ளைகளை மற்றப் பிள்ளைகளோடு சேராமல் தனியே வைக்கும்படி பெற்றோருக்கும் அறிவித்தல் உத்தமம். ஜலதோஷமும் தொத்துவியாதி என்பதில் ஸந்தேகம் வேண்டுவதில்லை.

மஹாமாரி வியாதியையும் வைசூரியையும் தடுக்கும் பொருட்டு இத்தேசத்தில் அம்மை குத்தி வருகிறார்கள். அவ்வாறு அம்மை குத்திக்கொள்வதினால் அவ்வியாதிகள் வருகிறதில்லை யென்பதும், ஒருவேளை அவ்வியாதிகள் கண்டாலும் குரூரமில்லாமல் ஸுலபமாயிருந்து அல்பசிகிச்சையினால் குணமாய்



விடுகின்றனவென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நமக்கு விளங்குகிறபடியால் அவ்வாறு அம்மை குத்திக்கொள்வது அவசியமே. வைசூரிக்காக குழந்தை பிறந்த ஆறு மாதத்திற்கெல்லாம் முதலில் அம்மை குத்திவிடவேண்டும். அம்மை குத்தின சில தினங்களுக்கெல்லாம் குத்தின இடத்தில் புண்ணாகிறது. அப்புண்ணை நம்மில் சிலர் மூடத்தனத்தினால் வேப்பிலை முதலியவைகளை அறைத்துத் தடவி ஆற்றிவிடுகிறார்கள். அப்படி ஆற்றுவதினால் அம்மை குத்தினதின் பலன் அற்றுப்போகிறது. தவிர, நமது தேகமானது ஏழுவருஷத்திற்கொருதரம் பூர்த்தியாக ரத்தம் உள்பட மாறுகிறதினால் அம்மைகுத்திக்கொண்டதின் பிரயோஜனமும் மாறிவிடுகிறது. ஆகையால் ஏழுவருஷத்திற் கொருதரம் அம்மை குத்திக்கொள்வது அவசியமென்று மேனாட்டு மேதாவிகள் சொல்லுகிறார்கள். ஆனால் மஹாமாரி வியாதிக்கு ஒரு தரம் அம்மை குத்திக்கொண்டால் அதன் பலன் ஒரு வருஷத்திற்குள்ளாக மாறிவிடுகிறபடியால் பக்க ஊர்களில் அவ்வியாதி கண்டாலொழிய இனாக்யுலேஷன் செய்துக்கொள்வது அவசியமில்லை. பிளேக் வியாதி ஸமீபித்திருக்குமானால் உடனே இனாக்யுலேஷன் செய்துகொள்வதே யுக்தம். அவ்வியாதி பயம் அருகாமையிலுள்ள பரியந்தம் அடிக்கடி இனாக்யுலேஷன் செய்துகொள்வது நலமென்று அனுபோகத்தால் அறிவித்திருக்கிறார்கள்.

நமது கிராமாந்தரங்களில் பாம்புக் கடியினால்மரணம் அதிகமாகவேயிருக்கிறது. அனேகமாய் கிராமங்களில் குடியிருக்குமிடத்துக்கருகாமையிலும் வீட்டு புறக்கடைகளிலும் வீடுகளுக்கிடையிலும் அனேகவித உபயோகமற்ற புதருகளும் ஏராளமான நாகதாளிப் புதருகளும் இருக்கிறபடியால் பாம்புகள் நம்மோடு வஸிக்க நாமே அவைகளுக்கு இடம் சம்பாதித்துக் கொடுத்ததாகிறது. கிராமத்தில் புதருகளில்லாமல் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்று யாராகிலும் கிராமத்தாருக்குச் சொல்வார்களானால் அதற்கு மறுமொழியாக பாம்பில்லாத இடம் எதுவென்றும், விதியிருந்தால் தப்பாமல் கடிக்குமென்றும் அனேகர் சொல்லுகிறது வழக்கமாயிருக்கிறது. இது புத்தியீனமே. ஏனெனில் நமது கொள்கைப்படி விதி அதிக பலமுள்ளதானாலும் விதியை வெல்லும் மதி என்பதற்கு நமது மார்க்கண்டேயர் புராணமே ஒரு பெரிய அத்தாக்ஷியாயிருக்கிறது. ஆகையால் விதிப்படிதான் நடக்குமென்று நம்பி பாம்புள்ளக் குடத்தில் கையிடுதல் புத்தியீனம் அல்லவா? ரோட்டுகருகில் சாலைச்செடிகளுக்கு நாகதாளி வேலி போடுகிறதினால் அந்நாகதாளி துஷ்டரைப்போல் ஓங்கி வளர்ந்து புதராகி பாம்புகளுக்கு இருப்பிடமாகிறது. அப்பாம்புகள் அருகாமையிலுள்ள பாதைகளில் நடமாடும் ஜனங்களைத் தீண்டி அவர்களை மரணத்துக்காளாக்கியிருக்கிறதுபற்றி, அம்மாதிரி வேலிகளுக்கு நாகதாளியை உபயோகிக்கிறதைவிட வேறே முட்களை உபயோகப்படுத்துவது உத்தமம்.

ஒரு வேளை தெய்வ ஸங்கல்பத்தால் யாரையாகிலும் ஒரு பாம்பு தீண்டுமானால் அதற்குத் தக்க சிகிச்சை செய்கிறதற்குமுன் தீண்டின உடனே தீண்டின பாகத்திற்கு கொஞ்சம் மேலாக ரத்தத்தைப்பரவ வொட்டாமல் கெட்டியாக ஒரு கயற்றினால் கட்டி கடித்த இடத்தை ஒரு கத்தியால் நன்றாய்க் கீறி ரத்தத்தை பிதுக்கிவிடல் நலம்.

வெறி நாய் ஊரிலிருக்குமானால் அதைக் கொன்று விடல்வேண்டும். யாரையாகிலும்

வெறி நாய் கடித்தால் கடித்த காயம் ஆராமலிருக்கும்படிக்கு கடித்த இடத்தை சுட்டுப் புண்ணுக்கி உடனே நீலகிரி ஜில்லா கூனூரில் இதற்கென்று கருணையுள்ள நமது ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தர்ம வைத்தியசாலைக்கு அவர்களை அனுப்பவேண்டும். கடிபட்டவன் ஏழையாயிருந்தால் அவனுக்கும் அவனோடு ஸகாயமாய்ப் போகிறவருக்கும் ரெயில் சார்ஜ் முதலானதும் இனாமாய் ராஜாங்கத்தார் கொடுக்கிறார்கள். கடிபட்டவன் ஸர்க்கார் உத்தியோகஸ்தனாயிருந்தால் அவனுக்கு சம்பளத்தோடு லீவும் கொடுக்கப்படுகிறது.

டையீரியா என்னும் ஸாதாரண அஜீர்ணபேதியானது அளவுக்கு மிஞ்சின சாப்பாட்டினாலும், நன்றாய் பக்குவமாகாத போஜனத்தினாலும், நன்றாய் பழுக்காத அல்லது அதிகமாய்ப் பழுத்து அழுகிப்போன கனிகளை அருந்துவதினாலும் உண்டாகிறபடியால் நாம் நன்றாய் சமைக்கப்படாத யாதொரு வஸ்துவையாவது கெட்டுப்போன கனிகளையாவது சாப்பிடவேகூடாது. "அளவுக்கு மிஞ்சினால் அமிருதமும் விஷம்" என்பதற்கேற்க அளவுக்குமிஞ்சி சாப்பிடுகிறதைக் காட்டிலும் கொஞ்சமாய் சாப்பிடுகிறதே நலம்.

வி. ஏ. வெங்கடாசாரியார்.

---

## CHIT FUNDS.
## கூட்டுச் சீட்டுகள்.

---

மனுஷ்யர்களாய்ப் பிறந்தவர்க் கெல்லாம் பணம் சேர்த்து வைப்பதில் ரொம்ப ஆசையுண்டு. பணத்தில் ஆசையற்றவர் மிகவும் சிலர். இவ்விஷயத்தை வற்புறுத்து வதற்காகவே "பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்" என்று இல்லாத காரியத்தையும் இருப்பதாக ஸாதிக்கும் பழமொழியும் நம் நாட்டில் வழங்குகிறது. இறந்தவரைப்பிழைப்பிக்க முடியாத ஒரு காரியத்தைத் தவிர, மற்றெல்லாக் காரியங்களையும் பணத்தைக் கொண்டு இவ்வுலகத்தில் ஸாதித்து விடலாம். ஆகவே இவ்வளவு உபயோகமும் உபகாரமுள்ள பொருளைத் தேடி வைத்துக்கொள்வதில் ஆசையிருப்பது மனுஷ்ய இயற்கைதான். இந்த ஆசை வேண்டாத அளவுக்கு முற்றி, அதனால் தூண்டப்படும் கொலை, கொள்ளை, களவு முதலிய விஷயங்களைப் பற்றி நாம் இங்கே பேசுவதாகவில்லை. பணம் சேர்க்கும் வழிகளில் நியாயமானதும் பிறர்க்குக் கெடுதலில்லாததுமான ஒரு வழியைப் பற்றியே இங்கே பேசுவோம்.

இவ்வழிக்கு "கூட்டுச் சீட்டு" என்று பேர் வழங்குகிறது. ஸாதாரணமாக மாஸம் இருமுறையும் மாஸமொருமுறையும் வழங்கி வரும் சிறு கூட்டுச் சீட்டுகளை நமது நாட்டு ஸ்திரீகள் கூட நடத்தி வருகிறார்கள். இதற்கு அதிக ஸாமார்த்தியம் வேண்டியதில்லை. வேண்டியவையெல்லாம் நாணயமும் சொற்செலுகையுந்தான். இவ்விதச் சீட்டுகள் நாடெங்கும் நடந்து வந்தாலும், திருநெல்வேலி ஜில்லாவில் மட்டும் அபரிமிதமாகத் தோன்றி, மூன்று மாதங்களுக்கொரு முறையும், ஆறு மாதங்களுக்கொரு முறையும் சில இடங்களில் வருஷத்தில் ஒரு முறையும் நடந்து வருகின்றன. ஆறுமாதங்களுக்கொரு முறை நடக்கும் சீட்டுகளுக்கு "பூச்சீட்டு" என்று பேர் வழங்குகிறது.

சீட்டு விஷயத்தில் பொறுப்பை யேற்றுக் காரியத்தை நடத்துபவருக்கு கரைஸ்வான் என்று பேர். அவருக்கு அந்தஸ்தும் செல்வாக்கும் இருந்தால் சீட்டுப் புள்ளிகளாகச் சேர விரும்புவோர்களுக்கு அவனிடம் நம்



பிக்கையுண்டாகும். இவ்விரண்டும் இல்லாத ரைஸ்வான் சீட்டை ஸரிவர நடத்திக் கடைசிவரையில் கொண்டு போவதற்கு சக்தியுள்ளவனாகமாட்டான். இரண்டு மூன்று கரைஸ்வான்கள் சேர்ந்து நடத்தும் சீட்டுகளும் உண்டு. ஆரம்பத்தில் கரைஸ்வான் தான் சீட்டுச்சேர்க்கப் போகும் விஷயத்தைப் பலபேர்களுக்குச் சொல்வான். சீட்டில் சேர விருப்பமுள்ளவர்களான புள்ளிக்காரர்கள் தங்களுக்கு முழுச் சீட்டோ அல்லது அதற்குக் குறைந்த முக்கால், அரை, கால், அரைக்கால், வீசம் முதலிய பின்னச் சீட்டோ பங்கிட்டுக்கொடுக்க வேண்டுமென்று கேட்பார்கள். சீட்டுத் தொகை அதிகமாக இருந்தால், முழுச் சீட்டுகள் போடும் புள்ளிகள் குறைவாயும், சில்லறைச் சீட்டுப் புள்ளிகள் அதிகமாயும் இருப்பார்கள். சீட்டு வாயிதாக்களுக்கு ஏற்றபடி சீட்டு முடிவான ஆகையர் ஏற்படும் ஆயினும் பத்து வருஷங்களுக்கு மேற்போகும்ஆகையர் ஏற்படுத்திக்கொள்வதில்லை. சீட்டின் விவரத்தையும் நிபந்தனைகளையும் கடிதாசில் எழுதி அக்கடிதாசில் கரைஸ்வானும் புள்ளிக்காரர்களும்கையெழுத்துப் போட்டுவைத்துக் கொள்வார்கள். அந்தத்தஸ்தவேஜுக்கு "கரார் நாமா" என்றுபேர்.

சீட்டுகள் பல விதப்படும். முக்கியமாக ஏலச் சீட்டும், ப்ரைஸ்ச் சீட்டுமே அதிகமாக வழங்கி வருகின்றன. மேற் கூறிய கரார்நாமா ஏற்பட்டதும் சீட்டு ஆரம்ப மாவதற்கு ஒரு நாள் குறிக்கப்படும் அந்நாள் ஸாதாரணமாக ஒரு மாஸத் துவக்கமாகவேயிருக்கும். அன்றைய தினத்தில் புள்ளிக்காரர்கள் கரைஸ்வான் வீட்டுக்கோ அல்லது அவனால் குறிப்பிடப்பட்ட வேறு இடத்துக்கோ. தங்களுடைய முதல் வாயிதாப் பணத்துடன் வருவார்கள். பணத்தைப் பெற்றுக்கொண்ட கரைஸ்வான் சீட்டின் நிபந்தனைப்படி மேல் காரியங்களை நடத்துவான். அதாவது சீட்டு ஏலச் சீட்டாக இருக்குமானால், சீட்டு மொத்தத் தொகையில் கொஞ்சம் குறைத்துக்கொண்டு, பாக்கித் தொகை ஏலத்துக்கு விடப்படும். யார் குறைந்த தொகையைக் கடைசியாகக் கேட்கிறார்களோ அவர்களுக்கே ஏலம் ஜாரி செய்யப்படும். சேர்ந்த மொத்தத்தொகையில், ஏலத்தொகையை ஏலம் கேட்டவனுக்குக் கொடுத்துவிட்டு, பாக்கியுள்ளதில், (இன்கம் டாக்ஸ்) வருமானவரி, தர்ம பண்டு முதலியவைகளுக்கென்று ஏற்பட்டவைபோக, மீதியுள்ளதை, ஏலம் எடுத்தவனும் கரைஸ்வானும் தவிர மற்றைப் புள்ளிக்காரர்களுக்கு சீட்டுவீதப்படி பிரித்துக்கொடுத்து விடுவார்கள். இவ்விஷயத்தில் கரைஸ்வான் எடுத்துக்கொள்ளும் சிரமத்துக்காக, அவனுக்கு ஏலகழிவு அன்னியில் பூராத் தொகையையும், இரண்டாவது சீட்டிலோ, நிபந்தனைப்படி ஏற்பட்டதவணையிலோ கொடுத்துவிடுவதுண்டு. நூற்றுக்கு ஒருவட்டி மேனிக்கு, குறித்த தொகையொன்று ஆறு வருஷத்தில் இருமடங்காகிவிடும். இந்த லாபத்துக்காகத்தான் கரைஸ்வான் பாடுபடுகிறான், ஏலக்காரர்களுடைய அவஸரத்துக்கும் அவசியத்துக்கும் தக்கபடி ஏலக்கழிவு ஏற்படும். வெகு அவஸரமான செலவு நேர்ந்தால், மொத்தத்தொகையில் ஜாஸ்தியாகக்குறைத்து ஏலங்கேட்பதுண்டு. இவர்களுக்குக் கடைசியில் அதிகலாபமிராது. இப்படி ஏலமெடுத்தவர்கள், பின்வாயிதாக்களுக்கு குறித்த தாரணைப்படி பணம் செலுத்திவரவேண்டியதற்காக, கரைஸ்வானுக்கு அடமான பத்திரமோ, வெண்கடன் பத்திரமோ எழுதிக்கொடுப்பார்கள். அப்படி எழுதுவதில், அவர்கள் சீட்டுத் தொகை முழுவதையும் பெற்றுக் கொண்டதாகவும், ஏற்

கனவே செலுத்திய தொகைகளை வேறு ரசீது மூலமாகப் பற்றிக்கொண்டு, பாக்கி செலுத்த வேண்டிய தொகைக்கே பத்திரம் எழுதிக் கொடுப்பதாகவும் குறிப்பிப்பதுமுண்டு. பணப்பற்று விவரத்தில், ஏலமெடாத புள்ளிகளுக்கு விதித்துக் கொடுத்த தொகையையும் தாங்கள் பெற்றுக் கொண்டதாகவே எழுதுவது பதிவு. தவணைப்படி பணம் செலுத்தாது போனால், தவறின தேதி முதல் நாள் ஒன்றுக்கு ரூபா ஒன்றுக்கு குறித்த வட்டித் தொகை போட்டுக்கொடுப்பதாக நிபந்தனை செய்வதுண்டு. குறித்த தவணையில் பணம் செலுத்தாது போனால், அந்தத் தொகையை கரைஸ்வான் தன் கையிலிருந்தே போட்டு மற்றப் புள்ளிக்காரர்களுக்கு ஈடுசெய்யவேண்டியவனுகையால் மேற்குறித்த நிபந்தனை வெகு அவசியமாகும். இவ்வித வட்டித்தொகை, சட்டத்தால் தடுக்கப்பட்ட வட்டியாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற விஷயக் குறிப்பை "பிழைக்கும் வழி" 3-வது புஸ்தகம் 495-ம் பக்கத்தில் காணலாம்.

இவ்விதம் நடத்தப்படும் ஏலச்சீட்டில், கடைசி இரண்டு சீட்டு மட்டுமே ஏலம் போடப்படாமல், பாக்கிப் புள்ளிக்காரர்களுக்கு ஸமபாகமாகப் பிரித்துக் கொடுத்துவிடப்படும்.

இன்னொரு வகையான ப்ரைஸ் சீட்டிலும், ஏலச் சீட்டில் போலவே, மொத்தத்தொகையில் கொஞ்சம் குறைத்துக்கொண்டு, பாக்கித் தொகையை மட்டும் திருவுளச் சீட்டுப்போட்டுக் குலுக்கி மாருக்கு ப்ரைஸ் விழுகிறதோ அவருக்குக் கொடுத்துவிடுவார்கள். சீட்டு எடுத்தவன் தஸ்தவேஜு எழுதிக்கொடுக்க வேண்டும். ஏலச்சீட்டிலும், ப்ரைஸ் சீட்டிலும் மொத்தத் தொகையில் கொஞ்சம் குறைத்துக் கொள்வதாகவும், பாக்கியுள்ளதையே ஏலமாகவோ, ப்ரைஸாகவோ விடுவதாகவும் சொன்னேமல்லவா? அப்படிக் குறைக்கும் தொகை, மொத்தத் தொகைக்கு ஸுமார் முக்கால் வட்டி போட்டால் எவ்வளவு கிடைக்குமோ, அவ்வளவுக்கு மேற்படாது. இது புள்ளிக்காரர்களுக்கு பகுத்துக் கொடுக்கப்படும்.

இரண்டாவதாக விவரித்த ப்ரைஸ்ச்சீட்டில் முதலில் சீட்டு விழுகிற புள்ளிக்கு அதிகலாபம் கிடைக்கும், அதாவது, அவனுக்குக் கிடைக்கும் ப்ரைஸ்த் தொகையை வட்டிக்கு விட்டு, அந்த வட்டியிலிருந்தே அவன் மேல் செலுத்த வேண்டிய சீட்டுப் பணத்தைக் கட்டிவிடலாம். கடைசியாகச் சீட்டுவிழுகிறவனுக்கு லாபமேயில்லையென்று சொல்ல வேண்டும். சீட்டுகள்தோறும் பகுத்துக் கொடுக்கப்படும் தொகை தான் இவனுக்கு லாபமாகும். ஆனல் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்ட பணம் மொத்தமாக ஒரே தேதியில் வரும்.

இனி, இவ்விதச் சீட்டுகளினல் ஏற்படும் நன்மைகள் என்னவென்று பார்ப்போம். முதலாவதாக, ஜனங்களிடம் ஒற்றுமை ஏற்பட்டு பரஸ்பர நம்பிக்கை உண்டாகிறது. அதிக வட்டி வாங்குகிற ஷைலாக்குகள் வலையில் அகப்பட்டு, கடனுக்காக பூமிகளை விற்றுவிட வேண்டிய அவசியம் நேராது. வாங்கிய கடனைச் சிறுகச்சிறுக சுலபமாகவே அடைத்துவிடலாம். கரைஸ்வானுக்கும் புள்ளிக்காரர்களுக்கும் ஒருங்கே லாபகரமான இவ்விதச் சீட்டுகள் திருநெல்வேலி ஜில்லாவிலும், திருவாங்கூர் ஸமஸ்தானத்திலும் மட்டும் அதிகமாகவும், மற்றைய இடங்களில் பிரபலமில்லாமலும் இருப்பதற்குக் காரணம் எதுவாக இருக்கலாம்? அவ்விடங்களில் உள்ள ஐக்கிய மத்தியமும் ஸௌகர்யங்களும் மற்றைய இடங்களில் இல்லையா? இச்சிறு வியாசத்தைப் படிக்கும் அபிமானிகள் தங்கள் தங்களுடைய இடங்களில் இவ்விதச் சீட்டுகளை நடத்த ஏற்பாடு செய்து, ஏழை எளியவர்களுக்கு நன்மைசெய்வார்களென்பதே எமது நோக்கம்.



# SELECTIONS.
## விசேஷத்திரட்டு.

---

### SIGNS OF RAIN.
### மழைக்குறிகள்.

---

பூத பௌதிக சாஸ்திரங்களில் மிகத்தேர்ச்சியடைந்து வரும் தற்காலத்திய ஆங்கிலேயர்கள் (பாராமிட்டர்) வாயுவின் கனத்தை யளக்குங் கருவி, (தர்மாமிட்டர்) சீதோஷ்ண நிலைமையைக் காட்டுங் கருவி, முதலிய சூத்திரங்களினலே இன்னின்ன காலங்களில் மழை வருமென்று தெரிந்துகொள்ளுகின்றனர். இவைப்போன்ற கருவிகள் ஏற்பட்டிராத முற்காலத்தார் சில மிருகங்களும், பக்ஷிகள் முதலிய ஜீவராசிகளும், சில செடிவர்க்கங்களும் மழை வருவதற்கு முன்னே யடையும் மாறுதல்களை நெடுநாளாகக் கவனித்து அவற்றின் செய்கைகளையே மழைக்கு அறி குறியாக பாவித்துக்கொண்டு வந்தார்கள். இங்கு அப்படிப்பட்ட சகுனங்கள் யாவற்றையும் பூர்த்தியாய்த் தொகுத்துக் காட்டுகிறோம்.

சாதாரணமாய் மணத்தை வீசத்தக்க புஷ்பங்கள் சில சமயங்களில் அதிக நறுமணத்தை வீசிக்கொண்டிருக்குமாயின் மிகவும் சீக்கிரத்திலேயே மழை வருமென்று நாம் நிர்ணயித்துக் கொள்ளலாம். ஏனெனில், நம்மை நாற்புறமுஞ் சூழ்ந்துள்ள நிச்சலவாயு அணுத்திரள்களால் நிறையப்பெற்றுக் குளிர்ச்சியடையுந் தருணத்தில் புஷ்பங்களின் மணம் அதிகப்பட்டு நாற்புறமும் நன்ருய்ப் பரவுவது இயல்பு. நிச்சலவாயு மேற்கண்ட தன்மையடைவது மழை வருவதற்குச் சிறிது முன்புதான்.



தூக்கணுன் முதலிய பக்ஷிகள் மிகவும் மேலெழும்பாமல் நிலத்திற்கு அதிசமீபமாகப் பறந்து போய்க்கொண்டிருக்குமாயின் கூடிய சீக்கிரம் மழைவருமென்று நாம் அறிந்து கொள்ளலாம். ஏனெனில், மழைபெய்வதற்கு முன்னே நிச்சலவாயு ஆகாயத்தில ஜல அணுத்திரள்களால் நிறையப்பெற்றுக்குளிர்ந்திருக்கிறபடியால் மிகவும் மேலே இயங்க அப்பறவைகளுக் கிசையாமல் அவை பூமிக்குச் சமீபத்திலேயே பறந்துகொண்டிருக்கின்றன. அன்றியும் அப்பறவைகள் தமக்கு ஆகாரமாகத் தேடிச்செல்லும் சிறு கிருமிகள் அதே காரணத்தினலே நிலத்திற்குச் சமீபமாகவே அப்படிப்பட்ட சமயங்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன.

ஆண்வாத்து, பெட்டைவாத்து முதலிய பறவைகள் மழை வருவதற்குமுன் தாமே வலியத் தண்ணீரிருக்கு மிடத்திற்குச் சென்று தம்முடைய இறகுகளை நன்ருய் நனைத்துக் கொள்ளுகின்றன. ஏனெனில், அப்படிச் செய்வதனலே உடனே மழை பெய்யும்போது மழைத்தாரைகள் அவைகளின் இறகுகளுக்குள்ளே பிரவேசித்து அவற்றிற்குக் கெடுதி செய்யாமல் மேற்புறமாகவே வழிந்து விழுந்துவிடும். மழைபெய்யும்போது அவைகளின் இறகுகள் உலர்ந்து மயிர்களுக்கு மத்தியில் இடைவெளி யிருக்குமாயின் மழைத்தாரைகள் உள்ளே பிரவேசிப்பதற்கிடமிருக்கும்.

மழை வருவதற்கு முன்னே குதிரை, மாடு முதலிய கால்நடைகள் அடிக்கடி கழுத்தை நீட்டி மேலே தூக்கிக் காற்றை உள்ளுக்கு வாங்கி முகர்ந்துகொண்டேயிருக்கும். ஏனெனில், நெடுந்தூரத்திலுள்ள புஷ்பச்செடிகளில் நறுமணம் அப்படிப்பட்ட ஸமயங்களில் நாற்புறமும் வீசுகின்றபடியால் அம்

மணத்தை உட்கொள்வதற்காக அவைகள் அவ்வாறு செய்கின்றன.

சிலந்திகள் தாமே வலியத் தம்முடைய வலைகளை யழிக்கும்போது மழைவருமென்று நாமறிந்துகொள்ளலாம். ஏனெனில் மழை பெய்யும்போது ஈ, கொசு முதலிய சிறு ஜந்துக்கள் வெளி வருவதும் தம்முடைய வலைகளிலகப்படுவதுமில்லை யாதலின் அவ்வலைகளை அனுவசியமென்று கருதி சிலந்திகளழித்துத் தமக்கு மழைகாலத்தில் படுத்துக்கொள்ளவும், வெப்பமாயிருக்கவும், உதவும்படி தன்னிருப்பிடத்தில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுகின்றன.

நிலத்தின் அடிப்புறத்தில் உயிர்வாழும் பிள்ளைப் பூச்சி, நாகப்பூச்சி, முதலிய சிறு ஜந்துக்கள், மழைபெய்ய சற்று நேரத்திற்கு முன்பே நிலத்தில் இங்குமங்குமாக ஏராளமாய்ச் சிறு சிறு துவாரங்கள் செய்து வைக்கின்றன. ஏனெனில், அந்த ஜந்துக்களுக்காகாரமாயுள்ள அனேக சிறியப்பிராணிகள் இனிவரப்போகும் மழைக்குத் தப்பிப்பிழைப்பதற்காக இத்துவாரங்களுக்குள் நுழையுமென்றெண்ணி அவைகள் அவ்வாறு செய்கின்றன.

நன்ருய்ப் பாடுமியல்புடைய குயில் முதலிய பக்ஷிகள் பாடாமல் வியசனமுடையனவாய்த் தோன்றில் மழை வருமென்று யூகித்துக்கொள்ளலாம். ஏனெனில், நிச்சலவாயு ஜல அணுத்திரள்களால் நிறைந்துகனத்திருக்கிறபடியால் அப்பறவைகளுக்குப் பாட அச்சமயங்களிற் கூடாமற் போய்விடுகின்றது.

ஆடு, மாடு முதலிய கால்நடைகள் தாம் மேய்ந்துக்கொண்டிருக்கும் மைதானங்களில் நிர்நிமித்தமாய் நாற்புறமும் ஓடி ஒன்ருேடொன்றுமோதி ஆரவாரஞ் செய்யுமானல் அதிசீக்கிரத்தில் நன்ருய் அடியிடித்து, மின்னல் மின்னி, மழைபெய்யுமென்று நாம் நிச்சயிக்கலாம். ஏனெனில் இடியிடித்து மழை பெய்வதற்கு முன்னே நிச்சலவாயுவில் மின்சாரம் நாற்புறமும் பாய்ந்து பரவிக்கொண்டிருக்கிறபடியால் அந்தப் பிராணிகளுக்கு அப்போது ஒருவகை எரிச்சலுண்டாகிற காரணத்தாலே அதைப் போக்கிக்கொள்வதற்காக அவைகள் அவ்வாறு செய்கின்றன.

மலர்ந்திருக்கும் நாநாவித புஷ்பங்கள் திடீரென்று குவிந்துவிடுமேயாகில் அதி சீக்கிரம் மழைவருமென்று நாம் ஊகிக்கலாம். ஏனெனில், புஷ்பங்களுக்கு ஜீவாதாரமாய் அடிப்புறத்திலுள்ள பொகுட்டு மழைத்தண்ணீரால் அழுகிக் கெட்டுப்போகாதபடி இதழ்கள் முன்னெச்சரிக்கையாகக் குவிந்து மூடிக்கொள்ளுகின்றன. இப்படிப்பட்ட உணர்ச்சி தெய்வமே அவைகளுக்குக் கொடுத்திருக்கிறது.

சாதாரணமாய் நம்முடைய கண்களுக்கு நன்ருய்ப் புலப்படாமல் நெடுந்தூரத்திலுள்ள பொருள்கள் அதிக சமீபத்திலிருப்பதுபோல் தெளிவாய் விளங்குமாகில் சீக்கிரம் மழையை எதிர்பார்க்கலாம். ஏனெனில், மழை பெய்வதற்கு முன்னே நிச்சலவாயு அணுத்திரள்களால் நிறைந்து கனத்துவிடுகிறபடியாலும், பூமியிலுள்ள பற்பல நீர்நிலைகளின்றும், நுண்ணிய ஜலத்திரள்கள் ஆவியாய் மேல்நோக்கிச் செல்வது அத்தருணத்தில் நின்றுவிடுகிறபடியாலும், தூரத்திலுள்ள பொருள்கள் நம் கண்களுக்குத் தெளிவாய் விளங்குகின்றன.

மழை பெய்யச் சிறிதுநேர மிருக்கையில் நெடுந்தூரத்திலுள்ள நக்ஷத்திரங்கள் சமீபமாயிருப்பவைபோல் காணப்படுவதுமன்றி மிகத் தெளிவாயுமிருக்கின்றனவென்று ஸர் ஐஸக் ந்யூட்டன் தெரிவித்திருக்கிருர். மேற்கூறிய விஷயங்களே அதற்குக் காரணம். ஒரு பொருள்



நம்முடைய கண்களுக்குச் சாதாரண நிச்சலவாயு மூலமாகப் புலப்படும்போது அருபதடி தூரத்திலிருப்பதாகத் தோன்றுவதாய் வைத்துக்கொள்வோம். அப்பொருளே ஜலத்தின் மூலமாக நமக்குத் தோன்றுமானல் பத்தடி தூரத்திலிருப்பதுபோலவே நமக்குத்தோன்றுவதியற்கை. அடியில் நெடுந்தூரத்திலுள்ள கூழாங்கற்கள் முதலியவை அதிக சமீபத்திலிருப்பவை போல காணப்படுகின்றனவல்லவா? அத்தோற்றத்தினுல் நாம் மதிமயங்கிச் சில சமயங்களில் காலை வைத்துக் குளம் முதலியவைகளில் விழுந்துவிடவும்நேரிடுகின்றதல்லவா? மேலே காட்டிய சித்தாந்தத்தைவிளக்குவதற்கு இவ்வொரு திருஷ்டாந்தமே சாலும். நிச்சலவாயு ஜலஅணுத்திரள்களால்நிறைந்து கனத்திருக்கும்போது (மழைபெய்ய சிறிது நேரத்திற்குமுன்) தூரத்திலுள்ள பொருள்கள் நமக்குச் சமீபத்திலிருப்பனபோற் புலப்படுவது மேற்படி சித்தாந்தத்தின்படி நியாயந்தானே?

நெடுந்தூரத்திலுள்ள தேவாலயங்களின் மணி முதலியவற்றின் சப்தங்கள் நம்முடைய செவிக்கு மற்ற காலங்களைவிட தெளிவாகவும், உரத்தும், கேட்குமாயின் சீக்கிரம் மழைபெய்யுமென்று நிர்ணயித்துக்கொள்ளலாம். ஏனெனில், சாதாரண நிச்சலவாயுவை விட ஜலம் சப்தத்தை ஒரு புறத்தினின்றும், மற்ருெரு புறத்திற்கு அதிவிரைவாகவும், மிகத்தெளிவாகவும், கொண்டுபோகத் தக்கது. மழைக்கு முன்னே நிச்சலவாயு ஜல அணுத்திரள்களால் நிறையப் போற்றிருக்கிறபடியால் நெடுந்தூரத்து ஓசைகள் சமீபத்திலிருப்பன போல் நமக்குக்கேட்பது இயல்புதானே.

எறும்புகள் ஏராளமாய் தம் முட்டைகளைத் தூக்கிக்கொண்டு தம்முடைய புற்றை நோக்கிச் செல்லுமானல் மழை வருமென்று எதிர்பார்க்கலாம். ஏனெனில், மழைத்தண்ணீர் தம்முடைய முட்டைகளுக்குக் கெடுதியையுண்டாக்கா வண்ணம் அவைகள் அவற்றை எடுத்துக்கொண்டு போகின்றன. அப்படிப்பட்ட உணர்ச்சி அவைகளுக்கு இயற்கையாகவே தெய்வத்தாலமைக்கப்பட்டிருக்கின்றது.

மேலே சொல்லிக்கொண்டுவந்த விஷயங்களையெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து மழை இன்னின்னகாலத்தில் வருமென்று வாயுமானி யென்னும் கருவி முதலிய உபகரணங்களைக்கொண்டு அறிந்துக்கொள்ளக்கூடாதவர்களாயிருந்த ஜனங்கள் முற்காலத்திற் பலவகை ஜீவராசிகளின் செய்கைகளைக் கொண்டே நிர்ணயத்து வந்ததாகத் தோன்றுகின்றது. அப்படிப்பட்ட அளவுக்கருவிகளை உற்பத்தி செய்துகொள்வதற்கு வேண்டிய பகுத்தறிவு முதலிய குணங்களமையப்பெருத எறும்பு, சிலந்தி முதலிய ஜீவராசிகளும், செடிவர்க்கங்களும் தப்பிப்பிழைப்பதற்காக அவைகளுக்கியற்கையிலேயே பரமதயாநிதியாகிய பகவான் இவ்வித உணர்ச்சியைத் தந்தது சாலவியப்புடைத்தே!— தேசாபிமானியில்

ஏ. தி. ல. கோ. ஸ்ரீராஜகோபால தாதாசாரி.

---

## THE PUNGAM TREE.

## புங்கமரம்.

---

புங்கமரம் குடித்தனக்காரருக்கு இன்றியமையாத மரங்களிலொன்று. இது ஒரு அழகிய மரம். பார்க்கப் பார்க்க மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். இதில் மணிப்புங்கு என்றும் காய்ப்புங்கு என்றும் இருவகையுண்டு. மணிப்புங்கு என்பது சென்னையில் சீயக்காய்க்குப் பதிலாகப் பறைச்சிகள் குளிப்பதற்கு உபயோகிக்கும்வஸ்து. இதைச்

சலத்திற் தேய்க்க நுரைத்து வருமாதலால் அழுக்குப் போக்குவதற்குத் திறமானது. பட்டுவஸ்திரங்களிலிருந்து அழுக்கைத் துலைப்பதற்கு இந்தக்காய் மிகவும் மேன்மைப்பட்டிருக்கின்றது.

காய்ப்புங்கு என்பதை விவரித்துத் தெரிவிப்பது கஷ்டமல்ல. குக்கலினால் அல்லது இருமலினால் அவதிப்படும் குழந்தைகளுக்கு இதன் காயைக் கழுத்திலாவது இடுப்பிலாவது கட்டுவது உண்மை. இவ்வாறு கட்டுவதினால் விளையும் பிரயோசனமின்னதென்று இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. இது மனுஷஜாதிக்குப் பலவிதத்திலும் உபயோகப்படுவதல்லாமல் இதன்கண்கவரும் பளபளத்த கறுப்பு நிறமும் மனதை ஆனந்திப்பிக்கும் உருவமும் வரையமுடியாது. இத்தகைய குணங்கள் பொருந்திய இம்மரத்தின் நிறத்தை ஸ்ரீ கிருஷ்ணனுடைய நிறத்துக்கு ஒப்பிட்டு அதற்கு "சதமால் விருட்சம்" என்று சம்ஸ்கிருதத்தில் வழங்கப்படுகின்றது.

இது சாதாரணமாய் ஆற்றோரங்களிலும் கடற்கரையோரங்களிலும் தானாய் வளர்ந்திருக்கும். மைசூர் ராஜ்ய முழுவதிலும் இம்மரத்தின் முழுப்பலனையு மனுபவிக்கிறார்கள். இதன்காய் பாதாங் கொட்டையைப்போலிருக்கும். இதை வளர்க்க விரும்புகிறவர்கள் மரத்திலேயே முற்றிக் காய்க்குங் காய்களை விதைத்துப் பயிரிடுவார்கள். மணல் நிலம் சிரேஷ்டம். ஜலங் கிடைக்கக்கூடிய ஆற்றோரங்கள், நீர் வாய்க்கால்கள், சமுத்திரங்கள் முதலியவிடங்களில் ஏராளமாய் வளரும். இதன் விதையைச் சாதாரணமாய் 20, 25 அடி தூரச் சதுரக்கலப்பைச்சாலில், ஆடி, ஆவணிமாதங்களில் விதைப்பார்கள். இந்தக் காயை ஒரு இராத்திரியாவது ஜலத்தில் நனைத்து மழை பெய்தவுடனே விதைப்பது இன்னும் விசேஷமாகவிருக்கும். ஏன் முழுக்காயைப் போடவேண்டும். நிலக்கடலைக்குத் தோலை உரித்து விதைப்பதுபோல ஏன் விதைக்கப்படாதென்று சிலர் தெண்டித்ததில் செடி நன்றாய் வளர்ந்தது. நீராதாரமுள்ள இடங்களில் இவ்வாறு வளர்ந்துவந்தாலும் புஞ்சைக்காடுகளில் இவ்வாறு பருப்பு விதைப்பது உசிதமல்ல. மண்ணின் கொழுமைக்குத் தக்கபடி ஏறக்குறைய 10 வருடத்தில் மரம் மதத்து வளர்கின்றது.

இவ்வாறு வளர்ந்த மரங்கள் கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் முண்டமாகத்தறிக்கப்படும். ஒரு அங்குலக் கனமுள்ள கிளைகள் தறிக்கப்பட்டு நெல்வயலுக்கு உபயோகப்படுகின்றன. கிளைகள் தறிக்கப்படுவது உசிதமா? மரங்கள் பட்டுப்போகாதா? என்று சிலர் சந்தேகிக்கிறார்கள். முற்குறித்த மாதங்கள் தவிர மழைக்கு முந்தி வெட்டப்படுகிற மரங்கள் பட்டுப்போகின்றன. மரங்கள் தறிக்கப்பட்டு மனிதனுக்குப் பிரயோசனப்படுவதற்குக் குளிர் காலமே யேற்றகாலம்போலத் தெரிகிறது. ஏனெனில் அச்சமயத்தில் மரங்களுக்கு இலை செய்யவேண்டிய கடமையைச் செய்து முடித்துவிடும். பின்பு சிலநாளில் இலை உதிர்ந்தேவிடும். வீட்டோரத்தில் இருக்கும் மரங்கள் இம்மாதங்களில் நிழல்தருவது அவசரமற்றதாயிருக்கின்றது. குளிர் மாதங்களிற் சூரிய கிரணமே முக்கியம். நிழலோ அருவருப்பு. இப்பேர்ப்பட்ட நாட்களில் மரத்தைத் தறிப்பது மனிதனுக்கு உபயோகத்தைத் தருவதுடன் ஆரோக்கியத்தையும் தருகிறது. பின்னும் தறிக்கப்பட்ட மரங்களே பெலத்து ஆயுசு விருத்தியடைகின்றன. தறிக்கப்படாதவைகள் சில வருஷங்களிற் புழுப்பட்டுக் கெடுதியடைகின்றன. ஆகையால் மரந்தறிக்கப்படுவது பிரயோசனமாய்



முடிகின்றது. இவ்வசந்த காலங்களில் இளந்தென்றல் இம்மரத்தின்மேலே வீச கிளைகள் ஊஞ்சலாடுவது மனதுக்கு அதிக சந்தோஷமாயிருக்கின்றது. சாலை ஓரத்தில் இச்சரங்கள் தொங்கி ஆடுவது பிரயாணிகளை அழைத்து அவர்களுக்கு வெண்சாமரை வீசுவதுபோலிருக்கின்றது. இவ்வாறு புதிய கிளைகளும் தளிர்களும் ஒன்றின்பின்னொன்றாக அடுத்தடுத்துப் புற்றில் ஈசல் புறப்படுகிறதுபோல வந்துகொண்டிருக்கும். மரம் மொட்டையானபோது பட்ட வருத்தத்தை இப்போ அனுபவிக்கும் சந்தோஷத்துடனொத்துப் பார்த்தால் அக்கஷ்டம் அற்பமாயும், இச்சந்தோஷம் அபிரிமிதமாயும்காணும். இதனாற் சிறியவஸ்துக்கள் பெரியவஸ்துக்களுக்கும், சிற்றின்பம் பேரின்பத்துக்கும் அடக்கமுள்ளவைகளாயிருப்பதின் தர்மம் வெளிப்படுகின்றது. இம்மாதிரிக் குளிர்ந்த மரங்களையும், வெட்டுப்படாமல் வளரும் மரங்களையும் ஒத்துப்பார்த்தால் கஷ்டப்பட்டுச் சுகத்தை அனுபவிக்கும் கொள்கையே எத்தனையோ மடங்கு மேலானதென்று விளங்குகின்றது.

இம்மரத்து நிழல் இந்தியாவின் குளிர்ந்த நாடுகளில் மிக ஆரோக்கியங் கொடுக்கின்றது. இதன் நிழல் பெற்றதாயுடைய ஆதரவுக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டில் இதன் சமீபத்தினும் போகப்படாதென்கிறார்கள். இவ்வாறுகொள்கையுடைய இரு கட்சியாருக்கும் நியாயமுண்டு. இது சூடுண்டாக்குகிறது என்பதில் சந்தேகமில்லை. குளிர் நாடாகிய மைசூர் ராஜ்யத்தில் இதுபெருமை அடைகிறது. உஷ்ணமதிகமுள்ள தமிழ் நாட்டில் அவ்வளவாக மதிக்கப்படுவதில்லை. குடித்தனகாரருக்கு இந்தச்சூடும் இந்தக்குளிர்மையும் பயன் தருவதில்லை. பலனை அனுசரித்தே இவர்கள் பாடுபடவேண்டும்.

இவ்வாறு வெட்டப்பட்ட கிளைகள் 8 வண்டி ஒரு ஏக்கருக்கு எருவாகிறது. ஒருவண்டி 12 ஆள் சுமை. கட்டைகள் மிதிக்கப்பட மண் இளகுகிறது. மறுவருஷம் உழும்போது இக்கட்டைகள் வெளிப்படுகின்றன. அவை அப்போது அடுப்புக்கு உதவுகின்றன. ஒரு ஏக்கர் நிலத்துக்குச் சாதாரணமாய் நன்றாய் வளர்ந்த மரம் 100 போதும். கல்லுகளில் சிறுத்திருக்கும் மரங்கள் ஆயிரமானாலும் போதாது. இம்மரங்களை வருஷாவருஷம் வெட்டுவது யுக்தமல்ல. ஒரு வருஷம் விட்டு ஒரு வருஷம் வெட்ட மரங்கெடுவதில்லை. வெட்டும் வருஷம் தழைகிடைக்க, வெட்டாத வருஷம் காயும் பூவும் உதவுகின்றன. அங்கமெல்லாம் முத்துக்கோத்தாற்போற் புஷ்பிக்குமிம்மரத்தைப் பார்த்தவர்கள் இதன் அழகை மறக்கவே மாட்டார்கள். புஷ்பம் உதிரும் சமயத்தில் மரத்தடியில் முத்துக்களால் அமைத்த பாய் விரித்தாற்போல இருக்கும். இவ்வுதிர்ந்த புஷ்பத்தைச் சேர்த்துச் சில விடங்களிற் கரும்புக்கு எருவாக்குகிறார்கள். இது சீக்கிரத்தில் உக்கிக் கரும்புக்கு உதவும் காய்ந்தபின் இவைகளை உலர்த்திப் பயறு எடுப்பார்கள். தோல் குளிர் காய்வதற்குத் திறமானது. இதில் நெருப்பு நெடுநேரம் அவியாமலிருக்கும், தேகச்சூடு கொள்ளும். பயற்றை ஆலையிலிட்டு பிழிவார்கள். எண்ணெய் அதிகம் பிரகாசங்கொடுக்கும். புகையுண்டாகாது. பிண்ணாக்கு எருவாகக் கரும்புக்கும்நெல்லுக்கும் உதவுகிறது. மரம் கலப்பை செய்வதற்கும் ஏழைகள் வீடு கட்டுவதற்கும் உபயோகப்படுகிறது. இம்மாதிரி ஒவ்வொரு பாகமும் எருவுக்கு உபயோகமாகும். இவ்வண்ணமே இம்மரமானது பலவகையாய் மனுஷருக்குப் பிரயோசனப்படுகின்றது.—கமத்தொழில் விளக்கம்.

## THE WOES OF THE WIDOW.

## விதவைகளின் வேதனை.

—:o:—

மாதர்களின் மனக்குறையை மானவர்கள் அறிந்திலார்போலும். புருஷர்களின் பணிவிடைகளைச் செய்யவே பெண்மக்கள் பிறந்திருக்கிறார்களென்று ஸாமான்ய ஜனங்கள் கூறுவதுவழக்கம். அவர் சொல்வதுபோலவே ஒப்புக்கொண்டாலும், பதியில்லாத பரதேசிகள் யாருக்காக ஜீவித்திருக்கவேண்டும். அவர்களுக்கு நித்யகருமங்கள் தேவையில்லையா? உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் மானிடர்களின் வழக்கமாயிருக்கின்றன. ஆடிப்பாடி, ஓடி, நாடிச் செல்வதெல்லாம் பொருளைதேடி வைக்கவே என்றுசிலர் கூறுவார்கள். பெருளைச் சேகரித்தவர்களெல்லாம் அதை விநியோகப்படுத்தும் வழியைத் தெரிந்துகொள்ளாதிருக்க நியாயமென்ன? அறிந்திருந்தும் மௌனமாயிருப்பவர் அனேகர். ஆண்மக்களுக்கே ஸுகசந்தோஷாதிகள் சொந்தமாய் விட்டன புருஷனில்லாப் பெண்கள் ஆநந்த விநோதாதிகளை அகத்திலும் ஸ்மரிக்கலாகாதென்று ஜாதிப்பிரியர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். விப்ரகுல வநிதையர் விதவைகளானால் முண்டனம் செய்துகொண்டு "சிவ, சிவ' சிவ'" "ராம், ராம்," "கிருஷ்ண கிருஷ்ண, கிருஷ்ண" என்ற தெய்வ நாமங்களை எந்நேரமும் சொல்லிக்கொண்டலறவேண்டும். அவைகளை உச்சரிப்பதால் உண்டாகும் நன்மையென்னவென்று வினவினாலோ "வால்மீகி, கபீர், துளசிதாஸ், கிராதகன், குஷ்டரோகி,' முதலியவர்கள் நாமோச்சாரணைகளாலடைந்த நன்மைகளை உதாரணமாய்க் காட்டுகிறார்கள். மேற்கண்டவர்களைத் தவிர வேறு மனிதர் பகவந்நாம ஸ்மரணைகளால் புனிதராகவில்லை போலும். இருந்திருந்தால் அவர்களின் பெயர்களும், மேற்படியாரின் பட்டியில் சேர்ந்திருக்குமல்லவா? ஈச்வரநாமத்தை சொல்வதால் தப்பொன்றுமில்லை. சாகப்போகும் கிழவர்கள் தம்பதிகளாயிருப்பாராயின் அவர்கள் தெய்வத்தியானம், ஸ்நானாதிகளைச் செய்ய வேண்டிய அவசியமில்லையாம். தேக ஸுகத்தைத்தரும் மருந்து, லேக்யம், ஷரபத், முரபாக்களை யுண்டு உலகத்தில் வாழ அபேக்ஷிக்கலாம். மூன்றுவயதில் மணவாளனை இழந்த மூடப்பெண்களை அவகோலம் செய்து முண்டையென்ற பட்டத்தையும்கொடுத்து வெள்ளையுடுத்த உத்தரவிட்டு, வெண்ணீறு பூசும்படிக் கூறி விதியே, விதியே, என்று முக்காடணியச் செய்து உலகத்தைக் கண் திறந்து பாரா வண்ணம் திட்ட மேற்படுத்தி அந்தகாரத்தில் அடைப்பார்கள். இதுஎன்ன தர்மமோ? இது யாரிட்ட கட்டளையோ! அறியோம். பெண்பாவத்தைக் கட்டிக்கொண்ட புண்யவானின் பெயரைக்கேட்டால் சொல்வோர் கிடையாது. எதற்காக மாதர்களை இவ்விதம் செய்கிறீர்களென்று வாதித்தால் நாங்களென்ன செய்வோம், ஜாதிக்காரர்களின் ஸம்பிரதாயமென்கிறார்கள். ஸம்பிரதாய விரோதம் செய்தால் தெய்வதண்டனை ஏற்படுமாம். தெய்வத்தின் தலையில் இல்லாத பழிகளைச் சுமற்றும் சில ஸாமார்த்திய சாலிகள் ஆங்காங்குளர். ஒருமுறை தென்னாட்டிலுள்ள நகரம், கிராமங்களைச் சுற்றிவந்தால் மாதர்களின் பரிதாப நிலைமை தெரியும். காவேரி, ஏறி, ஆறு, குளங்களுக்கு வரும் விதவைகளைக் கணக்கிட்டு முடியாது. 13-வயதுள்ள பெண்கள் முண்டனம் செய்துக்கொண்டு அலங்கோல உடையுடுத்தித் திரிகிறார்கள். அந்தோ! என்ன பரிதாபம். இவர்களைத் தொட்டுத் தாலிக்கட்டின பாபிகள் எமனுலகடைந்தார்கள். இறந்தவர்களின் பாடு சுகமாய் முடிந்தது. இந்தப் பரதேசிகளின் கெதியை யார் விவரிப்பது? எங்கே சென்றாலும் மொட்டை, கைம்பெண், அமங்கலி, அறுதலி என்ற சொற்களைக் கேட்கவேண்டும். இன்றையதினம்வாழ்பவரெல்லாம் நாளையதினம் தங்களுக்கு வரும் நிலைமையை ஆலோசியாமல் விதவைகளைப் பற்பல விதமாய் ஹௌனம் செய்து ஆநந்திக்



கின்றனர். உலகத்தில் பிறந்த ஆண் பெண்கள் அனைவரும் இறப்பவர்களே. "இருப்பது பொய் இறப்பது மெய்" என்பதை யாரும் மறக்கலாகாது. பசி, வியாதி, துன்பம், துக்கம் முதலியவைகள் எல்லோருக்கு முண்டு. பரதேசி படுக்க பாய் கிடையாதே என்றழுதால் பணக்காரன் சயனிக்க பஞ்சணை மஞ்சங்களில்லையே என்று பரிதபிக்கிறான். இதிலென்ன வி, திபாஸம். வார்த்தை பேதமேயொழிய துக்க வித்யாஸமில்லை. இதை விவேகிகள் நன்றாய் யோசிப்பார்களாகில் விதவைகளின் கெதி வெளியாகும். பால்ய விவாகம் ஒரு புறம் விதவைகளை அதிகரிக்கச் செய்கிறது, 'விருத்தஸ்யதருணீவிஷம்' என்ற வாக்கியத்தைப் பொய்யாக்கிக் கடையேறவிருக்கும் சில கிழங்கள் காமத்தால் காமினிகளிடம் ஆசைகொண்டு காசைக்கொடுத்துக் கல்யாணம் செய்து அனுபவிக்கச் சக்தியில்லாமல் உயிருடனிழந்தோ அல்லது உயிர் துறந்தோ பிரிந்து செல்கின்றனர் எல்லா விளையாடல்களும் நமது நாட்டில் நடந்து வருகின்றன. நமது தேசாபிமானிகளும், விவேக, வித்யா, விசார ஸகோதரர்களும் இத்தகைய காரியாதிகளைப் பார்த்தும் கேட்டும் வருகிறார்கள். ஆனால் எதற்காக மௌனவிரதம் பூண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. தங்கள் ஸ்வானுபோகத்தில் அறியாமையால் பிறருடைய கஷ்டநஷ்டங்கள் மனதில் பதியவில்லை என்றெண்ணலாமோ! அவ்விதம் நினைப்பதும் தவறாகும். பிரபஞ்ச வர்த்தமானங்களை க்ஷணத்தில கிரகிக்கும் மதியூகிகள் தங்கள் ஸகோதர ஸகோதரிகளின் ஸுகதுக்க விஷயங்களைத் தெரிந்துகொள்வது கடினமா? முற்காலத்து முதியோர்கள் செய்த வழக்கமென்று முணு முணுப்பார்களாகில் தற்காலத்து ஸ்திரீ புருஷர்கள் பெரியோர்கள் விதித்துள்ளபடி நித்யகர்மாதிகளைச் செய்து வருகின்றனரா என்பதை யோசிக்கவேண்டும். அக்நிஹோத்திரம், ஔபாசனம், வானப்பிரஸ்தம், தர்மம், தானம்,ஈச்வராராதனைகள் எங்கே சென்றன? முன் உடுத்தியிருந்த உடைகள் எங்கேபறந்தன? முகக்ஷவரம்,முழங்கால்கட்டு, சட்டை, பட்டைகளெல்லாம் நமது முதியோர்கள் நம்மை யணிந்துக்கொள்ளுமாறு வாழ்த்திக் கொடுத்தார்களா? இவைகளெல்லாம் புதிதாய்த் தோன்றி நமது வீட்டில் உறவாடுகையில் நமது விதவா ஸகோதரிகளுக்கு நூதன ஸகாயம் செய்வது தவறாகுமா? ஒருநாளுமில்லை. மறுமணம் செய்யும் வார்த்தையைப்பற்றிபிறகுபேசலாம். ஐந்தில் முண்டையானாலும், ஐம்பதில் விதவையானாலும், அம்பட்டனிடம் ஒப்புக்கொடுக்காதிருக்கும் மார்க்கத்தைக் கையாளும்படி விவேகிகள் போதிப்பார்களாக. இந்த துர்வழக்கத்தை அடியோடு தொலைத்தாலன்றி நாட்டுக்கும், வீட்டுக்கும் க்ஷேமமேற்படாது. விதவைகளின் மனத்துயரத்தை அகற்றும் மேதாவிகள் நமது நாட்டில் அனேகரிருக்கின்றனர். விவேகிகள் ஒன்றுகூடி நன்மை செய்தாலல்லவோ ஏழை விதவைகளின் கஷ்டம் நீங்கும். விளையாடும் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் மணம் செய்து வைப்பதும் தெய்வீகமாய் மணமகன் மாண்டால் மகளைத்தூறி சீரதண்டனை, சிரமுண்டனங்களைச் செய்து நீசர்களைப்போல் நடத்துவதும் வழக்கமாயிருக்கின்றன அறிவில்லாத பாலிகைகளை என்ன குற்றத்துக்காகத் தண்டிக்கவேண்டும்? சுபகாரியங்களுக்கு அருகரில்லையென்று அவமதிப்பாய் பேசுவானேன்? திருட்டு, துரோகம், விபசாரம், களவு முதலிய பாதகச்செய்கைகளைச் செய்தவர்களுக்குக்கூட சில தினங்கள்வரை தண்டனை விதிக்கப்படுகிறது. ஒரு குற்றமும் செய்யாத கன்யாமணிகளை உயிருள்ளவரையில் ஸந்தோஷத்தில் சேராவண்ணம் விலக்குவது நியாயமா? கீழ் அதிகாரிகள் தண்டனை விதித்தால் மேல் அதிகாரியிடம் நியாயம் கோருகிறார்கள். கவர்ன்மெண்டார் ஜனோபகாரமான நன்மைகளைச் செய்திருக்கின்றனர். நமது ஸகோதர ஸகோதரிகள். தாங்கள் பெற்ற பாலிகைகளின் விஷயத்தில் மனம் உருகாமலும், அவர்களின் துயரம், துன்பங்களை அகற்றாமலும் இருக்க நியாயமென்ன? இனியாவது சிரத்தை கொள்வார்களென்று நம்புகிறோம் நாகரீகமறிந்த ஸ்ரீமான், ஸ்ரீமதிகள் நன்றாய் ஆலோசிக்கவேண்டுகிறோம். சாஸ்திரத்தைப் பரிசோதித்துப் பார்க்கட்டும். எத்தனை ரிஷிகள் விதவைகளின் விஷயத்தில் இரக்கம், தண்டனைகளைக் காட்டியிருக்கிறார்களென்பது விளங்கும்.

ஹிதகாரிணி.

## THE KOHINOOR DIAMOND.

## கோகினூர் ரத்னம்.

கோகினூர் என்று இப்போது வழங்கிவருகிற ஒரு ரத்னத்தைப்பற்றி ஒரு மாதாந்தரப் பத்திரிகை பின் வருமாறு எழுதுகிறது :—

5011 வருஷங்களுக்குமுன் அதாவது கலியுகமாரம்பமாகுமுன் அசுவத்தாமாவிடம் முக்தாமணி என்று ஒரு ரத்ன மிருந்தது. பாரதக்கதையில் சிரஞ்சீவி பட்டம்பெற்ற அசுவத்தாமாவைப்பற்றித் தெரிவிக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். திரௌபதியின் புத்திரர்களாகிய உப பாண்டவர்களை (பட்டத்துக்குரியவர்களை) நித்திரை செய்யும்போது அசுவத்தாமா கொன்ற குற்றத்திற்கு தண்டனையாக தன்னிடம் இருந்த இந்த உயர்ந்த ரத்னத்தை இழக்கும்படி நேர்ந்தது. அதை திரௌபதி அடைந்து யுதிஷ்டிருருடைய பட்டாபிஷேகத்தின்போது அம்மன்னருக்கு கொடுத்தனள். அது முதல் இந்த உயர்ந்த மணி அவருடைய வம்சத்தாரிடமே இருந்துவந்தது. 1193-ம் வருஷம் இராஜபுத்திரர்களின் ராஜ்யம் முழுமையும் நீங்கியவுடன் இந்த மணியும் அத்தோடு நீங்கி மகம்மதியர்களுள் எவரெவர் ஆண்டு வந்தார்களோ அவரவர்களிடம் மாறிமாறி வந்துகொண்டேயிருந்தது.

1732-ம் வருஷம் பர்ஷியாதேசத்திலிருந்து நாதர்ஷா என்ற வீரன் வந்து இந்தியாவைக் கொள்ளை யடித்துக் கொண்டுபோகையில் டெல்லிமாநகரத்திலிருந்து இந்த மணியையும் கொண்டுபோய்விட்டான். அப்போது முதற்கொண்டு மொஹலாயர்களுடைய ராஜ்யமும் சீரழிந்துவிட்டது. அப்போது இருந்த மொகலாய சக்கரவர்த்திக்கு இந்த முக்தாமணியின் மகத்துவம் தெரியுமாதலால் அதை ஒளித்துக்கொள்ளப் பிரயத்தனப்பட்டும் பலிக்காமற் போயிற்று. பின்வருமாறு நடந்த விபரமாவது:

நாதர்ஷா கொள்ளை யடித்துக்கொண்டுபோகும்போது மொகலாய சக்கரவர்த்தியிடம் மரியாதையாக விடைபெற்றுக்கொள்ள வந்தான். சக்கரவர்த்தி இந்த மணியைத் தன் தலைப்பாகைக்குள் மறைத்து வைத்திருந்தான். பர்ஷியன்ஷா மகம்மதிய வழக்கப்படி தலைப்பாகையை மாற்றிக்கொள்ள விரும்பியபோது சக்கரவர்த்திக்கு வேறுகதியில்லை. தன் தலைப்பாகைக்குள் இருந்த மணியும் நாதர்ஷா வசமாகிவிட்டது. பர்ஷியாவுக்குச் சென்றதும் நாதர்ஷாவின் கஜானிஜி ஷாவின் சொத்துக்களுடன் இந்தமணியையும் எடுத்துக்கொண்டு மோசம் செய்துவிட்டான். அதனால் தான் நாதர்ஷா மறுபடியும் இந்தியாவிற்கு வரச் சக்தியில்லாமற் போய்விட்டது. திருடிக் கொண்டு ஓடிய கஜானிஜி பிறகு இந்தியாவில் வந்து வியாபகமடைந்தாராம். இப்படி யிருக்கையில் இந்த முக்தாமணி பஞ்சவடி தீரத்து சிம்மமாகிய ரஞ்சிட்சிங் மகாராஜனுடைய கையில் வந்து சேர்ந்தது. இந்த மகாராஜனுடைய வல்லமையைப்பற்றி அனேக மாணவர்கள் படித்திருப்பார்கள். கடைசியில் இந்த மகாராஜனுடைய புத்திரன் காலத்தில் இதைவிக்டோரியா மஹாராணிக்குகொடுத்துவிட்டான். இந்த முக்தாமணிக்கே கோகினூர் என்றும் வேறு பெயருண்டு. அநேகருக்கு கோகினூர் என்ற பெயரே நன்கு தெரியும். இந்த முக்தாமணி எவருடைய கையில் சேருகிறதோ அவரே இந்த பரதகண்டத்தை ஆளுதற்கு பகவானால் தெரிந்தெடுக்கப்பட்டவர்போலும். மேலே சொல்லப்பட்ட விஷயங்கள் விநோதமாகத் தோன்றினாலும், அவ்விஷயங்கள் மட்டிலும் அப்படியே முழுமையும் உண்மை என்பது மாத்திரம்தான் நமக்கு நிச்சயம் தெரியும்.



## REVEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### A SUGGESTION TO TANJORE RYOTS.

### தஞ்சாவூர் ஜில்லா கிருஷிகருக்கு ஒரு யோசனை.

நவம்பர் மாஸத்துக் கிருஷிகளில் இந்தத் தலைப்பெயரின் கீழ் ஒரு சிறு வியாஸம் காணப்படுகிறது.

" தஞ்சாவூர் ஜில்லாவில் காவேரி, கொள்ளடம் நதிக்கரையிலுள்ள படுகை நிலங்கள் குடியானவர்களுக்கு மார்கழி மாதம் முதல் 6-மாதங்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அவைகளில் மக்காச்சோளம் என்று சொல்லும் முத்துச்சோளம், புகையிலை முதலிய பயிர்கள் சாகுபடி செய்வது வழக்கம். இப்பயிர்கள் அனேகமாய் மேமீ முன் அறுவடைக்கு வந்துவிடும். இப்பயிர்கள் அறுவடை செய்தபின் அந்நிலங்களில் சாகுபடி செய்யும் குத்தகைதாரன் இன்னம் ஏதாவது ஒரு பயிரை இரண்டரை மாதத்துக்குள் சாகுபடி செய்து கொள்ளும்படியாய் நிலச்சுவான்கள் அனுமதி கொடுப்பதுண்டு. இப்படிச் சொற்ப நாளைக்குள் சாகுபடி செய்யக்கூடிய பயிர் சாதாரணமாய் கம்பு ஒன்றுதான் தற்காலம் வழக்கத்தின் கீழிருக்கிறது. குடியானவர்கள் தற்காலம் சாதாரண கம்புவிதையை விதைத்தே பயிர் செய்கிறார்கள். இது 60 நாள் கம்பு என்று சாதாரணமாய்ச் சொல்லப்பட்டபோதிலும் வாஸ்தவமாய் 90 நாளைக்கு மேல்தான் அறுவடைக்கு லாயக்காகிறது.

மே மாதத்தில் புகையிலை முதலிய பயிர்கள் அறுவடையான உடன் நிலத்தை உழுது கம்பு விதைத்தாலும் ஆகஸ்டுமாதத்து முதலில்தான் அறுவடைக்கு லாயக்காகும். ஸாதாரணமாய் காவேரியில் ஜுன் மாதத்தில் வெள்ளம் ஜாஸ்தியாய் வந்து கரை புரளுகிறது. ஸாதாரணமாய் இப்படி வெள்ளம் ஜாஸ்தி வரும் ஸமயங்களில் கம்புப் பயிர் கதிராயிருக்கும் தருணமாய் தற்காலம் நேரிடுகிறது. ஆகையால் கம்புப்பயிர் கெட்டு வெள்ளத்தால் அடிபட்டு மாசூல் யாதொன்றும் கிட்டாமல் குடியானவன் நஷ்டமடைவதுண்டு. இதுகாரணம் பற்றி அனேகர் இக்காலத்தில் நிலத்தில் பயிரேற்றுமல் தரிசு போட்டுவைக்கும் வழக்கமும் உண்டு. ஆகையால் இந்தக் கம்புப்பயிரை வெள்ளம் வரும் காலத்திற்கு முன் அறுவடைக்குக் கொண்டுவரக்கூடிய சாதனங்கள் ஏதாவது உண்டாவென்று சற்று கிருஷிகர் யோசிக்கவேண்டும். கம்புப்பயிர் திருநெல்வேலி முதலிய சில ஜில்லாக்களில் நாற்றுவிட்டு நடப்படுகிறது. சுமார் 25 நாள் முதல் 30 நாள்வரை நாற்றங்காலில் நாற்றுயிருந்து அப்பால் பயிர் செய்யப்பட்ட இடத்தில் நட்டால் அதின் வயதில் 30 நாள் வேறு இடத்தில் (நாற்றங்காலில்) சென்று விடுவதாலும், நாற்றுவிடும் நாள் விதைப்பதைவிட 30 நாள் முந்துவதாலும், பயிர் அறுவடைக்கு முந்தியே வந்துவிடுமென்பதில் யாதொரு ஆக்ஷேபனையு மில்லை. விவஸாய டிபார்டுமென்டாரால் ஆப்ரிக்கா தேசத்திலிருந்து சில வருஷங்களுக்கு முன் கொண்டுவரப்பட்டு தற்காலம் விஸ்தாரமாய் பயிராகிவரும் ட்ரான்ஸ்வால் கம்பு என்னும் தினுஸு நம்முடைய ராஜதானியில் பயிராகிவரும் குறைந்த வயசு கம்புத் தினுஸுகளைவிட 10 நாளைக்கு முன்னதாகவே அறுவடைக்கு லாயக்காகும் குணம் அமையப்பெற்றிருக்கிறது. இக்கம்புத்தினுஸு அனேக இடங்களில் நாற்றுவிட்டு நட்டு நன்றாய் பலன் தந்

திருக்கிறது. இக்கம்பு விதைப்பதைவிட நடும் போது நல்ல மாசூல் தருகிறது. ஏகர் ஒன்றுக்கு ஸாதாரணமாய் விதைத்தால் 300 பட்டணம் படியும் நட்டால் 400 பட்டணம் படியும் தாழ்ந்த தரிசு நிலங்களிலுங் கூட கொடுத்திருக்கிறது. இத்துடன் இதில் இன்னும் ஒரு அனுகூலமுண்டு. தட்டை ஜாஸ்தியாய் வளராமல் குள்ளமாகவே யிருக்கிறது. கம்பின் தானியத்தின்மேல் பொட்டு ஜாஸ்தி மூடிக்கொண்டிராமலிருப்பதால் இதில் அரிசி ஜாஸ்திகிடைக்கிறது. சாப்பாட்டிற்கும் ருசியாயிருப்பதால் கோயம்பத்தூரிலிருக்கும் விவஸாயிகள் இந்தக் கம்புக்கு ஜாஸ்தி விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போகிறார்கள். ஆகையால் தஞ்சாவூர் ஜில்லாவில் படுகை நிலங்களை ஸாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள் தாங்கள் புகையிலை ஸாகுபடி செய்யும் நிலத்தின் ஒரு மூலையில் சுமார் ஒருசெண்டு நிலத்தில் 2 பட்டணம் படி இந்த தினுஸு கம்பு விதையை ஏப்ரல்௴ மத்தியிலேயே நாற்றுவிட்டுப் பாதுகாத்துவந்தால் மே௴ முதலில் புகையிலை அறுவடை செய்தவுடன் நிலத்தை உழுது ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் இந்த நாற்றை உடனே நட்டுவிடலாம். இப்படிச் செய்வதால் குடியானவர்களுடைய கம்புப்பயிர் ஆற்று வெள்ளத்தினால் நஷ்டமடையாமலிருப்பதுடன் நல்ல பலனுமடைவார்களென்பதில் சந்தேகமில்லை. இந்த தினுஸு விதை வேண்டியவர்கள் விவஸாய டிபார்டுமெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு எழுதி வருத்திக்கொள்ளலாம்.

## MUTTRA.

## மதுராபட்டணம்.

இதன் அருமைப் பொருள்களைப் பற்றி எம். ராகவேந்திராசார் சுதேசமித்திரனில் எழுதியிருக்கிறார்.

இது ஒரு புராதன பட்டணம் ஹிந்துக்களின் யாத்திரை ஸ்தலங்களுள் இதுவும் ஒன்று. கி. பி. 400-ல் சீனா யாத்திரிகனான பா-ஹி-யான் இவ்விடம் வந்து, இது பௌத்த மதத்தாரின் மத்தியஸ்தானம் என்றும் கிருஷ்ணன், பலராமன் என்ற இரண்டு சகோதரர்களின் ஜனன பூமி என்றும், மதுரா ஜில்லாவைச்சேர்ந்த ஸ்ரஜு மண்டலம் என்ற பாகம் ஹிந்துக்களின் மிகச்சிறந்த யாத்திரை ஸ்தலம்என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்தப் பட்டணம் யமுனா நதியின் வடகரையில் இருக்கிறது. ஜனத்தொகை 60,040. 1017ம் வருஷத்தில், கஜனி மகம்மது இப்பட்டணத்தின் மீது படையெடுத்து பட்டணத்தையும், கோவில்களையும் நாசப்படுத்தினான். 1500-ல் சுல்தான் சிக்கந்தர் லோடி மதுராபட்டணத்தின் கோவில், விக்கிரகங்கள், அனைத்தையும் இடித்துத் தரைமட்டம் ஆக்கினான். ஆனாலும், இப்பட்டணத்தின் சிறப்புக்கு ஹானி வரவில்லை. இன்னும் ஹிந்துக்களால் இது யாத்திரை ஸ்தலமாகக் கொண்டாடப்படுகிறது. மதுராபட்டணத்திற்குக் கீழ்பாகம் 6-வது மைலில் மஹாபன் என்ற ஓர் புராதன பட்டணம் இருக்கிறது. இந்தஇடத்தில்தான் யசோதைக்குப் பிறந்த பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு அதற்கு பதில் ஸ்ரீ கிருஷ்ணன் என்ற சிசுவை வைத்துவிட்டுச் சென்றதாகவும் இங்குதான் அன்றுமுதல் ஸ்ரீ கிருஷ்ணன் வளர்ந்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ணன் வளர்ந்து வந்த இந்த குறிப்பிட்ட இடத்தையும், குழந்தை கிருஷ்ணன் படுத்த தொட்டிலையும், நந்தனுடைய அரண்மனை இருந்தஸ்தலத்தையும், எசோதை தயிர் கடைந்த மத்தையும், கிருஷ்ணனுடைய வேணுவை கோபிகள் ஒளித்து வைத்த சுவரின் பாகத்தையும், காட்டுகிறார்கள். மதுராபட்டணத்திற்கு வடக்கே ஐந்தாவது மைலில் யமுனா நதிக்கரையில் பிருந்தாவனம் என்ற ஓர் திவ்யஸ்தலம் இருக்கிறது இதில் அநேக தேவாலயங்கள் இருக்கின்றன. 1580 வருஷத்தில் கோபினாதனால் கட்டப்பட்ட ஓர் கோவிலும், 1590-ல் கோவிந்த தேவனால் கட்டப்பட்ட மற்றொரு கோவிலும், 1851-ல் 40,000 பவுன் செலவழித்துக் கட்டிய சிறந்த கோவிலும் இருக்கின்றன. கடைசியாகச்சொன்ன கோவில் பூரி, தானேஸ்வரம், ஹரித்துவாரம், இவ்விடங்களில் கட்டியிருக்கும் கோவில்களுக்குச்சமதியாகவே இருக்கிறது. மஹாபனத்திற்கு ஒருமைல் தூரத்தில் யமுனாநதியின் கீழ்க்கரையில் இருக்கும், கோகுலம் என்ற ஓர் சிறு கிராமம், ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணபகவானால் பூமண்டலத்தில் முதல் முதல் காலடிவைக்கப்பட்ட சிறந்த ஸ்தலமாகும். இந்த இடத்திற்கு குஜராத்திலிருந்தும் பம்பாயிலிருந்தும் பல்லாயிரம் ஜனங்கள் யாத்திரை செய்துவருகிறார்கள். புராதன கோவிலையும், மானஸ கங்கை யென்னும் சரோவரத்தை யுடையதுமான கோவர்த்தனம் என்ற க்ஷேத்திரத்திற்கு பல யாத்திரைக்காரர்கள் மழைகாலங் கழித்தபிறகு சென்று வருகிறார்கள். மதுராபட்டணத்தில் வியாபாரம் அதிகம் இல்லை. யமுனாநதியில் வருஷத்தில் 8-மாதம் வரையிலும் ஜலம் வற்றிப்போகிறபடியால், ஜனங்கள் ஜலக்கஷ்டத்திற்கும், பஞ்சத்திற்கும் உள்ளாகிறார்கள். இதன் பக்கத்தில் ஓர் கண்டோன்மெண்டு ஸ்டேஷன் உண்டு. அதில் படைகள் இருக்கின்றன.

இவ்வூர் கலெக்டர் கச்சேரிக்குச் சமீபத்தில் முனிஸிபல் ம்யூஸியம் (கண்காட்சி சாலை) ஒன்று உளது.



## IMPORTS OF MACHINERY INTO INDIA.

## இந்தியாவில் யந்திர இறக்குமதி.

ப்ரிட்டிஷார்களால் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் யந்திரவகையராச் சாமான்களைப் பற்றிய விவர மொன்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் சென்ற மாதத்தில் வெளியாகி யிருக்கிறது. அதில் ப்ரிட்டிஷார்களால் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் யந்திர சமான்களைப் பற்றி மாத்திரம் நாம் தற்சமயம் கவனிப்போம். 1910-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியோடு முடிவான ஒரு வருஷத்தில் அந்நிய நாடுகளிலிருந்து யந்திர சாமான்கள் இந்தியாவுக்குள் எவ்வளவு வந்திருக்கின்றன வென்பது கீழே குறிக்கப்படும் கணக்கினால் விளங்கும். இந்த ஒரு வருஷத்தில் இந்தியாவுக்குள் வந்திருக்கும் யந்திர சாமான்களின் மொத்தக் கிரயம் ஐம்பதாறு லட்சத்து முப்பத்தேழாயிரத்து எண்ணூற்றிருபத்தைந்து பவுன்களாகும். அதாவது, எட்டு கோடியே நாற்பத்தைந்து லட்சத்து அறுபத்தேழாயிரத்து முன்னூற்றெழுபத்தைந்து ரூபாய்கள், இந்தியர்களால் யந்திர சாமான்களுக்காக வெளி நாட்டினர்க்குப் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மொத்தத் தொகையில் 5, 351, 166 பவுன்கள் பெறுமான சாமான் இங்கிலாந்திலிருந்தும், 286, 659 பவுன்கள் பெறுமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், இத்தலி போன்ற வேறு அந்நிய நாடுகளிலிருந்தும் இந்தியாவுக்கு வந்திருக்கின்றன. இங்கிலாந்து சாதாரண மெஷீன்களும், பஞ்சாலைபோன்ற பெரிய யந்திர சாலைகளுக்கு வேண்டிய மெஷீன்களும், இன்னும் வேறு வேலைகளுக்கான மெஷீன்களுமாக

அனுப்பி யிருக்கும் யந்திர சாமான்களின் மதிப்பு பின்வருமாறு :—

| சாமான்விவரம் | பவுன்கள் |
| --- | --- |
| பெரிய யந்திர சாலைகளுக்கு. | 3,247,684 |
| தண்டவாளங்களை நீக்கி மற்றை ரயில்வே சாமான்கள் | 2,103,482 |
| தையல் மெஷீன்கள் | 74,203 |
| டைப்ரைட்டிங் மெஷீன்கள் | 14,994 |

மற்ற அந்நிய நாடுகளிலிருந்து இதே காரியங்களுக்கு வந்த சாமான்கள் விவரம் பின்வருமாறு :...

| சாமான் விவரம் | பவுன்கள் |
| --- | --- |
| பெரிய யந்திர சாலைகளுக்கு | 21,433 |
| தண்டவாளங்களை நீக்கி மற்றை ரயில்வே சாமான்கள் | 14,902 |
| தையல் மெஷீன்கள் | 28,575 |
| டைப்ரைட்டிங் மெஷீன்கள் | 28,839 |

PROCEEDINGS OF THE UTTANKARAI CO-OPERATIVE CONFERENCE.

ஊத்தங்கரை தாலூக்கா, கோ-ஆபரேடிவ் கான்பரேன்ஸின் நடவடிக்கைகள்.— இந்த கான்பரென்ஸில் அக்ராசனாதிபதியா யிருந்த மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் அவர்கள்செய்த பிரசங்கமும் தீர்மானங்களும் மட்டும் பிரசுரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கான்பரென்ஸில் செய்யப்பட்ட உபந்யாஸங்களும் பிரசுரமாயிருந்தால் நலமாயிருக்கும்.

SRIMAT RAMAYANAM.

ஸ்ரீமத் ராமாயணம்.—சென்னை எ. வி. ராமசந்திர அய்யரால் ப்ரசுரிக்கப் பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தின் தமிழ்வசன காவியம் ஆரண்யகாண்டம் நாலாவது ஸர்க்கம் பின்பாதியும் அதற்குமேல் 27-வது ஸர்க்கத்தில் முன்பாதியும் அடங்கிய 17, 18, ஸஞ்சிகைகளை வரப்பெற்றோம்.

## REVIEWS OF BOOKS.
## புஸ்தக ஆராய்ச்சி

REPORT OF THE FIRST CO-OPERATORS' DISTRICT CONFERENCE, TANJORE DISTRICT.

தஞ்சாவூர் ஜில்லா ஐக்கிய நாணயச் சங்கங்களின் முதல் கான்பரேன்ஸ் ரிபோர்ட்.—1911-௵ மே௴ 28, 29-ம் தேதிகளில் நீடாமங்கலத்தில் அ. சேதுராமய்யர் முயற்சியால் இந்தக் கான்பரென்ஸ் நடந்தது. இதில் செய்யப்பட்ட பிரசங்கங்கள், உபந்யாஸங்கள், தீர்மானங்கள் முதலிய ஸகலமும் இந்த புஸ்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இதில் பிராவிடென்டு பண்டுகளும் அவைகளால் விளையும் தீமைகளும், நிதிகளும், அவைகளின் வேலையும், விவஸாய ஐக்கிய முயற்சி, ஐக்கியச் சங்க சட்டம், நெசவுக்காரர்களும், கூட்டு முயற்சியும், கூட்டு முயற்சி பரவுதல், ஆகிய இந்த வியாஸங்கள் கவனிக்கத்தக்கவை.

கூட்டு முயற்சி விஷயமாய் அநேக இடங்களில் கான்பரென்ஸ்கள் நடந்து வருகின்றன. ஆனால் முதல் முதலாக இந்த நீடாமங்கலம் கான்பரென்ஸில் நடந்த விஷயங்கள்தான் அந்தக் கான்பரென்ஸுக்கு வராதவர்களுக்கு உபயோக மாகும்படி தமிழில் பூராவாக அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இந்த சென்னை ராஜதானியிலுள்ள ஸகல ஐக்கியச் சங்கங்களுக்கும் இந்த ரிப்போர்ட் அனுப்பப் படுமென்று அறிகிறோம். இப்படி ஒவ்வொரு சங்கமும் செய்யும் பக்ஷத்தில் அனுபவபூர்வமாய் ஏற்பட்ட நல்ல முறைகளைக் கைப்பற்றி குற்றங்குறைகளை நீக்குவதற்கு ஸௌகர்யமாகும்.

THE INDIAN READY RECKONER BY B. A. RAO, BRITISH BURMA PRESS, RANGOON.

மடவார் தோழி.—இது புதுவை சு. அ. சுப்பராயப் பிள்ளை எழுதியது. விலை அணா 4.



## BOYS' SECTION.
## சிறுவர் பகுதி.

SOME PROVERBS.

**சில பழமொழிகள்.**—தன் கை தான் தலையணைக்குதவும், சார்ந்து நிற்பவன் சேர்ந்து நிற்பான், சோறில்லாதவர்களுக்கு வீறில்லை, வீறில்லாதவர்களுக்குச் சோறில்லை, நாடு வாழ வீடு வாழும் என்னும் பழமொழிகளை சிறுவர் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருப்பது நலம்.

THE ROOT.

**வேர்.**—வேர்கள் மரத்தைத் தாங்கிக்கொண்டு, அது கீழே விழாமல் காக்கின்றன; மரத்திற்கு உணவைத் தேடிக் கொடுக்கின்றன. நுட்பமான தொளைவேரின் முனையில் இருக்கிறது. வேர் அதன்வழியாய் நாம் ஊற்றும் நீரையும், பூமியிலுள்ள ஸாரத்தையும் கிரகித்து மரமெங்குப் பாவச்செய்கிறது. இதுதான் வேரின் முக்கியமான வேலை.

GREATNESS.

**பெருமை.**—ஒரு சக்கிறத்தின் மேல்பாகம் கீழே வரவும், கீழ்பாகம் மேலேபோகவும் அதிகநேரம் ஆகமாட்டாது "உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா" என்று கொன்றை வேந்தனில் ஒருவசனமும் இருக்கிறது. ஒற்றுமை, பொறுமை, பொருமை, வறுமை, சிறுமை, தனிமை என்னப்பட்ட இந்த ஆறுவித—மைகளையும் பாத்திரமறிந்து பயன்படுத்திக்கொள்பவர்கள் ஏழாவது—மையாகிய பெருமையைப் பெற்றுக்கொள்ளவும் அருகராவார்.

MR. BURGESS.

**மிஸ்டர் பர்ஜெஸ்.**—இங்கிலாந்துக்கும் ப்ரான்ஸுக்கும் நடுவிலுள்ள 30 மைல் விஸ்திரணமுள்ள சமுத்திரத்தை பர்ஜெஸ் என்பவன் ஸமீபத்தில்நீந்தினான். சென்ற 36 வருஷங்களாக எத்தனையோ நூற்றுக்கணக்கான நீச்சல்காரர்கள் பிரயத்தனப்பட்டும் சாதிக்க முடியாத விஷயத்தை பர்ஜெஸ் சாதித்தான். சென்ற 7 வருஷங்களாகப் பர்ஜெஸ் என்பவன் 15 தடவை பிரயத்தனப்பட்டு முடியாமற்போயும் விடா முயற்சினால் 16 வது தடவையாக கடைசியில் இந்த 30 மைல் தூரத்தையும் நீந்திக் கரையேறித்திரும்பினான்.

BOYS WHO SAT ON THE THRONE.

**ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்த பையன்கள்.**—இங்கிலாந்து அரசரின் ஸிம்மாஸனம் வெஸ்ட்மினிஸ்டர் மடாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸிம்மாஸனத்தில் உட்காரவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு வெஸ்ட்மினிஸ்டர் ஸ்கூல் பையன் 1800 வருஷத்தில் ஒருநாள் ராத்திரி மடாலயத்தில் ஒளிந்திருந்து, இரவெல்லாம் ஸிம்மாஸனத்தில் இருந்தபடியே தூங்கினான். மேலும் அவன் ஸிம்மாஸனத்தில் "பி. ஆபட் இந்த ஸிம்மாஸனத்தில் தூங்கினான். 1800" என்று எழுதி வைத்தானும். இம்மாதிரியே வேறு இரண்டு பள்ளிக்கூடப்பிள்ளைகள் மடாலயத்தில் ஒளிந்திருந்ததாகவும், இருவரும் ஸிம்மாஸனத்தில் உட்காந்திருந்ததாகவும், உண்மையை வெளியிட்டார்களாம்.

WORLD'S OPINION

**உலக அபிப்பிராயம்.**—உன்னைப்பற்றி உலகம் என்ன நினைக்கிறது அல்லது என்ன சொல்கிறது, என்று ஏன் கவலைப்படுகிறாய்? ஏனென்றால் உலகமானது ஸரியாக நிதானிக்கும் நியாயாதிபதி அல்ல; அது எப்பொழுதும் அப்படித்தானிருக்கும் உன் மனச்சாட்சியே உலகத்தைப்பார்க்கிலும் பெரியதும் உண்மையுள்ளதும் ஸரியானதுமான நியாயாதிபதியாகும்.—இ. டப்ள்யு. மெக்கவென்.

ELEPHANT.

**யானைகள்.**—யானையின் உற்பத்தியும் வளர்ச்சியும் மிகவும் தாமதமானது. ஸாதாரணமாய் ஒரு பெண் யானையானது பக்குவப் பிராயம் அடைய பதினைந்து வருஷம் செல்லும். அது குட்டியை இருபத்திரண்டு மாதகாலம் வயிற்றில் வைத்திருந்து தான் ஈனும். ஆகையால் முதல் குட்டி போடுவதற்குள் பெண் யானைக்கு வயது 17 ஆகிவிடும். ஒவ்வொரு தடவையிலும் ஒரு குட்டிதான் போடும். அதற்கு இரண்டு வருஷகாலம் பால் கொடுத்து வளர்க்கும். அவைகளுக்கு இரண்டே முலைக்காம்புகள் தான் உண்டு. அவைகள் முன்னிரண்டு கால்களுக்கும் மத்தியில் இருக்கின்றன. யானைக்குட்டிகள் வாயினால்தான் பால் குடிக்கும், தும்பிக்கையினால் குடிக்காது. ஆண் யானைகள் ஸரியான வயதுக்குவர

இருபது வருஷமாகும். ஆனால் பிடித்து வளர்க்கும் யானைகளுக்கு 25 வருஷமாகும்.

பழகின யானைகளை இலங்கைத்தீவில் காடுகளை யழிப்பதிலும், மரங்களை யிழுப்பதிலும், பாதைகள் போடுவதிலும், கற்பாலங்கள் கட்டுவதற்குப் பெருங் கற்களைக் கொண்டுவந்து சேர்ப்பதிலும் உபயோகப் படுத்துகிறார்கள். யானையின் தலையில் எலும்பும் தசையும் சேர்ந்து சுமார் 8 அங்குல கனமுள்ளதாயிருக்கிறது. அப்படி இருக்கும்போது அதைக் கொண்டு எவ்வளவு பலமாயும் வேகமாயும் தள்ளும் என்பதைப்பற்றி சொல்லவேண்டியதில்லை. யானையின் மத்தகம் அவ்வளவு பெரிதாயும், கெட்டியாயும், கனமுள்ளதாயிருந்தபோதிலும் அதற்குள்ளிருக்கும் மூளையானது மண்டையின் அரைக்கால் பாகத்தில் தான் இருக்கிறது. இக்காரணத்தினால்தான் யானையைச் சரியான இடத்தில் எய்து இறக்கச் செய்வது கடினம். அப்படி இடங்கண்டுபிடித்து எய்து கொல்லக்கூடியவன் மிகத்திறமையுள்ளவனும் தேர்ச்சியுள்ளவனாயு மிருக்கவேண்டும்.

The Nambudri.

**நம்பூதிரி.**—ஒரு பெரிய இல்லத்தில் நம்பூதிரிக்குக் கறவைமாடுகள், காளைகள் முதலியவைகள் நிறைந்து கோகுலமாக இருந்தன. யஜமானுக்கு பிசகாத நியமம் முதலிய பல சுபலக்ஷணங்களுண்டு. சம்பத்தக்காரியுடன் லோலாப்தியிலிருக்கும்போதும் விடியற்காலமாகிவிட்டால், கடிகாரத்தை எடுத்துக் கொண்டு, (இப்பொழுது இவர்களுக்குள்ளும் கைக் கடிக்காரம் ஸாமான்யமாய்க் காணக்கூடியதே!) ஸ்நானத்திற்கு இறங்கிவிடுவதே வழக்கம். ஆபத்துகள் எம்மாதிரி வந்தாலும் ஸாமான்யத்தில் தைரியத்தை யிழப்பதில்லை. எல்லாம் ஈசுவர சங்கற்பமென்று மனதைத் திடப்படுத்திக்கொள்வது நம்பூதிரிக்கு வெகு ஸகஜம். இதற்கு உதாரணமாக ஒரு கதை — "ஒரு நம்பூதிரியின் பிதுரார்ஜித வீடு நெருப்புப்பற்றி யெரிந்தது. அதே க்ஷணத்தில் அவனுடைய ஏகபுத்திரன் பாழுங் கிணற்றில் விழுந்துவிட்டான். ஸம்ஸாரமும் கர்பமாகிப் பிரசவ வேதனை ஸகிக்கமுடியாமல் பிராணனை விடுவதாக இருந்தாள். இப்படிக் கதையில் சொல்லுவது போல் பல ஆபத்துகள் ஒன்றுசேர்ந்தும், நம்பூதிரி சிறிதாவது பதறாமல், "கேசவா, செல்லப்பெட்டியைக் கொண்டுவா," என்று கூவி ஸாவதானமாய் வெற்றிலை மென்று பிறகு காரியம் ஆரம்பித்தானாம்."

The Leeches Feast.

**அட்டைகளின் விருந்து**—மணிப்பூருக்கு அருகில் நிக்ஷகார்ட் என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் காவற்காரருக்குள் ஒருவன் தன்னுடைய சேவைத்தவணை முடிந்து இங்கிலாந்துக்குத் திரும்பிப்போகப் புறப்பட்டான். பயணத்துக்கு முன் மண்ணெண்ணெய் டின் நிறையப் பட்டைச் சாராயம் வாங்கிக்கொண்டு மகா சந்தோஷத்துடன் பறப்பட்டான். அடிக்கடி குடித்துக்கொண்டு கடைசியாய் கொயிமாபட்டணத்துக்கு 40 மைல் தூரத்திலுள்ள ஒரு காட்டில் வந்துசேர்ந்தான். அங்கு அவன் தன்னோடுகூட வந்தவர்களை விட்டுப்பிரிந்து கொஞ்சதூரஞ்சென்று நிழலடர்ந்த ஒருபெரியமரத்தனடியில் உட்கார்ந்து மண்ணெண்ணெய் டின்னிலிருந்த சாக்கில் அளவுக்குமிஞ்சி உட்கொண்டு உறக்கமாய்ப் படுத்துவிட்டான். அருகாமையில் ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலில் அட்டைகள் ஏதேஷ்டமாயிருந்தன. அவைகள் மோப்பம் பிடித்துக்கொண்டு அந்த நிர்பாக்கியனுடைய தேகமெல்லாம் பரவி ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டிருந்தன. அவனுடைய கூட்டாளிகள் அவனைத்தேடிக் கொண்டு ஒருநாள் முழுவதும் அலைந்து கடைசியாய் அந்தப்பரிதாப நிலையில் அவனைக்கண்டார்கள். இன்னும் ஒன்று இரண்டு மணிநேரம் அவர்கள் தாமதித்து வந்திருந்தால் அவன் செத்திருக்கவேண்டியது. அவ்வட்டைகளைப் பிடுங்குகிறது மிகுந்த பிரயாசையாயிருந்தது. இப்போது அந்தக்குடியன் மிகுந்த ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் கிடக்கிறானாம்.



# LADIES' SECTION.

## ஸ்திரீகள் பகுதி.

Our Empress and Vaikasi.

**நம்முடைய ராஜாத்தியும் வைகாசியும்**—நம்முடைய ராஜாத்திக்கும் வைகாசி மாதத்துக்கும் ஒரு பொருத்தம் தொடர்ந்துவருகிறது. இந்த ராஜாத்தி பிறந்தமாஸம் வைகாசி, விவாகம் செய்துகொண்ட மாஸம் வைகாசி, ராஜாத்தியான மாஸம் வைகாசி.

Dresses of Royal ladies.

**ராஜ ஸ்திரீகளின் உடை.**—நம் சக்ரவர்த்தினியாகிய மேரி ராணியாருக்கு வருஷம் ஒன்றுக்கு உடைக்கு மாத்திரம் 2000 பவுன் செலவாகிறதாம்.

நம் சக்ரவர்த்தியின் அன்னைக்கு வருஷம் ஒன்றுக்கு உடைமாத்திரம் சற்றேறக்குறைய 2000 பவுன் செலவாகிவிடுகிறதாம்.

ஐரோப்பாவைச் சேர்ந்த ஹாலந்து தேசத்தின் ராணிக்கு வருஷம் ஒன்றுக்கு உடைக்குமாத்திரம் 4000 பவுனாகிறதாம்.

ருஷியா தேசத்தின் சக்ரவர்த்தினியானவள் உடைக்கு மாத்திரம் செலவழிக்கிற செல்வமானது உலகத்தில் சக்ரவர்த்தினிகள் உடைக்கு மாத்திரம் வாரி இறைக்கிற பணத்தை ஒன்றாய் குவித்தாலும் இவள் உடையின் பணத்திற்கு நிகராகாதாம்.

ஜர்மனி தேசத்தின் சக்ரவர்த்தினியின் உடைக்கு வருஷம் ஒன்றுக்கு 2500 பவுன் செலவாகிறதாம்.

இத்தாலியாவின் சக்ரவர்த்தினிக்கு வருஷம் ஒன்றுக்கு உடைக்கு மாத்திரம் 3000 பவுன் பிடிக்குமாம்.

Miss Patel.

**மிஸ் பெட்டேல்.**—பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த பார்ஸி மாதாகிய மிஸ். தாசிபாய் ரஸ்டம்ஜி. கோவாஸ்ஜி பெட்டேல் பம்பாய் கிராண்ட் மெடிகல் காலேஜில் வாசித்து, எல். எம். எஸ். பட்டம்பெற்று உயர்ந்த வைத்தியப் பரீக்ஷைகளில் தேர்ச்சிபெற இங்கிலாந்துக்குச் சென்று, சென்ற வருஷம் மே௴ 'ராயல் காலேஜ் ஆப்ஸர்ஜன்ஸ்' என்னும் கலாசாலையில் சேர்ந்தார். இக்கலாசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாதர்களில் மிஸ்பெட்டேல் முதன்மையானவர். இம்மாது லண்டன் எம். பி. பரீக்ஷை முதலிய பரீக்ஷைகளில் தேறி பட்டம் பெற்றிருக்கிறாரென்று அறிந்து சந்தோஷப்படுகிறோம்.

Putting Children to Sleep.

**குழந்தைகளை தூங்கச்செய்தல்.**—குழந்தைகளைத் தாயின் பக்கத்திலேயே தூங்க விடுவதால் குழந்தைக்குத் தாயின் சூடு பட்டு நல்ல நித்திரைசெய்யுமென்பது சிலரின் அபிப்பிராயம். ஆனால் இதற்கு மாறாக, குழந்தைபெரியவர்களின் பக்கத்தில் படுத்து அவர்கள் வெளிவிடும் கெட்ட ஆகாயத்தைச் சுவாசிப்பதாம். அதற்கு சுகயீனம் நேரிடுமென்றும், தாய்மாரின் கைமுதலிய உறுப்புகள் குழந்தைகளின் மேல் படுவதால் அவர்கள் நித்திரைக்குப் பங்கமுண்டாகலாமென்றும், சில தாய்மார் படுத்துக்கொண்டு குழந்தைக்கு பால் கொடுக்க, குழந்தை தூங்குமுன் தாம் தூங்கி விடுவதால் குழந்தை அளவுக்குமிஞ்சிப் பால் குடித்து அஜீரணத்திற் கிடமாகலாமென்றும், சில குழந்தைகள் பால் குடித்துக்கொண்டே தூங்கி விடுவதால் பால் நாசியிலேறுவதினால், அல்லது குழந்தை தாயின் துணிகளினால் தன் வாயையும் நாசியையும் மூடிக்கொண்டு மூச்சுவிட கஷ்டப்படுவதினால் ஒரு ஸமயம் உயிர்ச்சேதமுண்டாகலாமென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இது வாஸ்தவமே. ஆகையால் இவ்வித விபத்துகளுக்கு இடமுண்டாகாதபடி குழந்தைகளைத் தனிமையாகத் தாயின் படுக்கை ஓரத்தில் வேறு படுக்கையிற் போட்டு நித்திரை செய்யவிடவேண்டும். படுக்கை சூடாயிருக்கும்பொருட்டுக் கம்பளித் துணியை விரித்து அதின்மேல் மெல்லிய போர்வையை விரித்து குழந்தையைப் படுக்கவைக்கவேண்டும். நித்திரை செய்யும்போது தலைக்குல்லா முதலானவைகள் போட்டு முகத்தை மூடாமல் காற்று நன்றாய்ப் படும்படி முகத்தைத் திறந்து வைக்கவேண்டும். கொசு, மூட்டை, எறும்பு முதலியவை படுக்கைக்குச்செல்லாமல், கட்டிலின் கால்களில் கெரோஸின் எண்ணெயில் அல்லது கற்பூரத்திராவகத்தில் நனைத்த துணிகளைக் கட்டிவைக்கலாம். கொசு அதிகமாயிருந்தால் கொசு வலையால் கட்டிலை மூடலாம், அடிக்கடி குழந்தையின் படுக்கை முதலியவைகளை வெயிலில் காயப்போட்டெடுத்து உபயோகிக்க வேண்டும்,

THE EMPRESS AND THE INDIAN LADIES.

**சக்ரவர்த்தினியும் இந்திய ஸ்திரீகளும்.**—டிஸம்பர்௴ 13௳ புதன்கிழமை யன்று ஜார்ஜ் சக்ரவர்த்தி வாலண்டியர் படையைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ராணுவத்தைச் சேர்ந்த இந்திய உத்தியோகஸ்தர்களுக்கும் சென்னை டில்லிடெபுடேஷன்களுக்கும் பேட்டிகொடுத்துக் கொண்டிருந்தபோது மேரி சக்ரவர்த்தினி பெருமாட்டி டில்லி ஸர்க்கிட் ஹவுஸில் தேச மன்னர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 120 ராஜ ஸ்திரீகளுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது லேடிஹார்டிஞ்சும், டெவன்ஷையர் டச்சஸ்ஸும், லேடி மாக்மோகனும் சக்ரவர்த்தினி பெருமாட்டியோடு கூடவே யிருந்தார்கள். அந்த 120 ராஜஸ்திரீகளில் விஜயநகரம் ராணி ஒருவர். அச்சீமாட்டி தமது குழந்தைகள் இரண்டை தமது கூடவே அழைத்துக்கொண்டு போயிருந்தார்கள். சக்ரவர்த்தினி பெருமாட்டி அக்குழந்தைகளிரண்டையும் தம்முடைய ஸிம்மாஸனத்தின் கீழேயே உட்கார்ந்து கொள்ளச் சொன்னார்கள். சிறிதுநேரம் பரஸ்பரம் குசலப் பிரஸ்னம்செய்து கொள்வதில் கழிந்தது அப்பால் விஜய நகரம் ராணி சக்ரவர்த்தினியைப் பார்த்து. 'சக்ரவர்த்தினி பெருமாட்டியின் இப்போதைய விஜயத்தை இந்திய மாதர்கள் வெகு மங்களகரமான நற்சகுன நிகழ்ச்சியாய்க் கருதுகிறார்கள். அவர்கள் சக்கிரவர்த்தினி பெருமாட்டி இந்நாட்டுக்கு இரண்டாந்தடவை விஜயஞ்செய்ய கிருபை கூர்ந்ததற்கு அப்பெருமாட்டிக்குப் போதுமானபடி நன்றிசெலுத்த முடியாதவர்களாயிருக்கிறார்கள். சக்ரவர்த்தினி பெருமாட்டி இவ்விஜயத்தால் இந்தியா முழுமையையும் கௌரவப்படுத்தியிருப்பதோடு, இன்றைக்கும் அப்பெருமாட்டியின் முதல் விஜயத்தை மிகுதியும் பேணி ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிற இந்திய மாதர் கூட்டத்தை கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். நேற்றுசக்ரவர்த்தி பெருமானும் சக்ரவர்த்தினி பெருமாட்டியும்நடத்திய தர்பாரைவிட வேறெதுவும் இந்திய ஜனங்கள் மனதில் நன்றாய்ப் பதியும்படி அவ்வளவு ராஜ கம்பீரத்தோடு கூடியதாயிருக்கவில்லை. தங்களுக்கு ஒரு அரசனும் அரசியும் இருக்கிறார்களென்று இந்திய ஜனங்களுக்கு இப்போது நன்றாய்த் தெரியவருகிறது. டில்லி தர்பார் தலைமுறைக் கணக்காய் ஜனங்கள் ஞாபகத்திலிருக்கும். அது இந்திய ஜனங்கள் பிரிடிஷ் அரசரிடம் வைத்திருக்கும் மதிப்பால் ஏற்படக்கூடிய ராஜ விசுவாசத்தைக் கயிறுகட்டி இழுத்து நெருங்கி வரும்படி செய்யும். போனவருஷம் இந்த மாதவாக்கில் நான் லேடி ஹார்டிஞ்சினிடம் சக்ரவர்த்தினியின் பணி மாதர்களில் ஒருத்தியாய் இன்னும் சில இந்திய மாதர்களுடன் சேவிக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கிருப்பதாய் அப்பெருமாட்டிக்குத் தெரியப்படுத்தும் படியாய்க் கேட்டுக்கொண்டேன். ஆனால் என்பிரேரணை ஒப்புக்கொள்ளப்படவில்லை. இந்தியமாதர்கள் தங்களுக்கு சக்ரவர்த்தினியிடமிருக்கும் பக்தி விசுவாசத்தைத் தெரியப்படுத்திக் கொள்ள ஏதேனும் ஒரு ஸமயம் கிடைத்தால், அம்மாதிரி ஸமயம் கிடைத்ததைப் பற்றி அவர்கள் கர்வங் கொள்வார்களென்று இச். சமயம் நான் உறுதிகூறத் துணிகிறேன்"—என்று வெகு சாதுரியமாயும் ஸமயோசிதமாயும் பேசினார். அப்படி விஜயநகரம் ராணி பேசியதைக்கேட்டுக் கொண்டிருந்த சக்ரவர்த்தினி பெருமாட்டி அந்த ராணியைப்பார்த்து டில்லி தர்பாரால் நன்மைகள் விளையுமெனி உங்கள் வாய்ப்படக்கேட்க எனக்குச் சந்தோஷமாயிருக்கிறதென்று சொல்லி, அந்த ராணிக்கு நன்றி செலுத்திவிட்டு அச்சீமாட்டியின் மூத்த பிள்ளையைப்பற்றி விசாரித்தார்கள். அப்போது விஜயநகரம் ராணி தமது மூத்தபையன் ஆஜ்மீர் மேயோ காலேஜில் வாசித்துக்கொண்டிருப்பதாயும் சக்ரவர்த்தினி பெருமாட்டி அந்த காலேஜுக்குப் போகும்போது அவன் அப்பெருமாட்டியை வந்து சேவாஞ்சலிசெய்து கண்டுகொள்வானென்றும் தெரிவித்தார்கள். விஜயநகரம் ராணி சக்ரவர்த்தினி பெருமாட்டியை அச்சமயம் ரூபா 2000 காணிக்கை வைத்துக்கொண்டார்கள். அதனை அப்பெருமாட்டி ஏற்றுக்கொண்ட பாவனையாய் கையால் தொட்டுத் திருப்பினார்கள். அதன்மேல் அந்த ராணி, "சக்ரவர்த்தினி பெருமாட்டியை நேரிற்கண்டு சம்பாஷிக்கும்படியாய் இன்று நான் அடைந்துள்ள மகோன்னத பதவியையும் பெருமையையும் குறிக்கும் ஞாபகார்த்தமாய் இத்தொகையை தருமத்துக்குக் கொடுத்துவிடப் பிரியப்படுகிறேன்" என்று சொன்னார்கள்.—சுதேசமித்திரன்.



# DEPARTMENTAL NOTES.

# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.

## விவஸாயக் குறிப்புகள்.

CATTLE SHOW.

**மாடுகளைச் சேகரித்தல்.**—மைசூர் நாட்டைச் சார்ந்த ஹாஸன் டிஸ்ட்ரிக்ட்டில் வருகிற ஜனவரி௴ 4,5-ந்தேதிகளில் அநேக வலுவுள்ளமாடுகள் சேகரிக்கப்படும் காட்சி யேற்பாடாயிருக்கிறது.

URINE AS MANURE.

**மூத்திர எரு.**—எருது, மாடு, ஆடுமுதலியவைகளின் மூத்திரம் பயிர்பூண்டுகளுக்கு பிராணதாரமான ஆகாரம். அதில் நைட்ரோஜன் நிறைந்திருக்கிறது. "ஆடுமிதிக்காமல் நாடுவிளைவதில்லை," என்றும், "ஆடுமிதியாத பூமியும், ஆண்பிள்ளையாளாத பெண்டிரும் உதவாக்கருவிகள்" என்று சொல்லுவார்கள்.

A COW'S RATION.

**ஒரு பசுவின் ஆகாரம்.**—1000 ராத்தல் எடையுள்ள பசு ஒன்று நாள் ஒன்றுக்கு 100 ராத்தல் தீவனம் தின்று ஜலம் குடிக்கும். பசுந்தீவனமானால் ஜலம் வேண்டியதில்லை. அதன் தீவனத்தில் 75 ராத்தல் ஜலமும் 25 ராத்தல் உலர்ந்த உணவும் இருக்கும். இதில் 10 ராத்தல் ஜீரணிக்கமுடியாத நார் இருக்கும். 12 ராத்தல் மாவு சர்க்கரை முதலியன இருக்கும். $2\frac{1}{2}$ ராத்தல் சினம், $\frac{1}{2}$ ராத்தல் தைலமிருக்கும்.

GROWTH OF WEEDS.

**களை முளைத்தல்.**—களைமுளையாமலிருக்கச் செய்யவேண்டிய காரியங்கள்.

1. ஆடுமாடு உடம்புகளில் களைவிதை ஒட்டிவாராமல் பரீட்சிக்க வேண்டும்.
2. முளைத்த களை, பூக்கொள்ளும்போதே அதை வெட்டிவிடவேண்டும்.
3. கிழங்குள்ள சிலகளைகளை வேரோடு அறுத்துவிடவேண்டும்.
4. கோரைக்களை சீக்கிரத்தில் மடியாது. அதை அடிக்கடி வெட்டிக்கொண்டுவந்து மண்ணோடு மண்ணாய் மடித்து விடவேண்டும்.
5. களை முளைத்திருப்பது கொஞ்சமாயிருந்தால் பாஷாணம் தெளிக்கலாம். ஆனால் ஆடுமாடு மேயக்கூடாது.

RICE PESTS.

**நெற்பயிரில் வண்டுகள்.**—நெற்பயிர்களை சில ஸமயங்களில் வண்டுகள் சேதம்செய்வதை நாம் அறிந்திருக்கிறோம். இவைகள் இலைகளையும் சாப்பிட்டுத் தானியத்தையும் பாழ்செய்கின்றன. வண்டுகள் அடிக்கும் வயல்களில் பின்வருமாறு செய்ய வேண்டும்.

1. பயிர் தண்ணீரில் முழுகியிருந்தால் தண்ணீரை வெளியிலே பாய்ச்சிவிடு.
2. வண்டுகள் அதிகமாயிருந்தால் ஒரு சாக்கை எடுத்துப் பயிரின்மேலாகக் கொண்டுபோனால் பூச்சிகளைப் பிடித்துவிடலாம்.
3. தாரை எரித்தால் அதன் நாற்றத்தினால் பூச்சிகள் விலகிவிடும்.
4. குப்பை கூளங்களைப் போட்டுக் கொளுத்தினாலும் பூச்சிகள் விலகிவிடும். சுற்றுப்புறத்திலிருக்கும் புல்பூண்டுகளை அடியோடு பிடுங்கி எறிந்துவிடவேண்டும்.

CATTLE REARING.

**மாடுகளை வளர்த்தல்.**—பசுக்கள், காளைகள், எருமைகள், இவைகளை வெவ்வேறாய் மேய்க்கவேண்டும். கன்றுகளை ஸமீபமாயுள்ள காடுகளில் விட்டு மேய்க்க வேண்டும். சினைப்பசுக்களை மேய்ச்சல் காடுகளில் மேய்த்துவந்த பின் மேற்கூறையுள்ள தொழுவில் ராக்காலங்களில் விட்டுவைக்க வேண்டும். காளைக் கன்றுகளைக்கட்டியே வைத்து வளர்த்து வரவேணும். சிறு வயசு முதல் இவ்விதம் கையாடி அன்பாய் வளர்க்கப்பட்டு வந்தால் அவைகள் ரொம்பவும் ஸாதுவாய்ப் போகும். காளைகளைக்கட்டாமல் விட்டுவிடுகிறதினால் துர்க்குணமுள்ளவை யாகின்றன. லம்பாடி மாடுகளை மேய்ந்து வந்ததின்பின் கட்டி வைத்து வளர்த்து வருகிறதினால் அவைகள் சாந்தமாயிருக்கின்றன. சாந்தமாகிறதற்காகக் காளைகளை விதையடிக்கிறார்கள்.

THE MANGO TREE.

**மாமரம்.**—"கொட்டைபோட்டு வளர்த்த மரங்கள் ஐந்து வருஷமானாலும் பெயர்த்து வைக்கலாமென்று பரீக்ஷையில் தெரிகிறது. துளிர் விடாததற்கு முன்னமே மரங்களின் கிளைப்பிரிவுக்கு 2½ அடி அப்பால் வெட்டி நட்டார்கள். சில மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டு நடப்பட்டன. சில மரங்கள் வேறின் மண்ணோடு கட்டியாய்ப் பெயர்த்து உடனே நடப்பட்டன. சில மரங்கள் 15 நாளைக்கு முன்னதாகவே பக்கங்களில் சுற்றிலும தோண்டி வேரின் காயங்களை ஆற்றி பிடுங்கி நடப்பட்டன. வேறு சில மரங்கள் மூன்றாவ்து மாதிரியே செய்து பிடுங்குகிற அடி வேர்களை ஒன்று இரண்டு மணி நேரம் காற்றுறவிட்டு நடப்பட்டன. எல்லா மரங்களும் வேர்பிடித்துத் தழைத்தன.

மிஸ்டர் இ. வி. ஸ்மித் என்பவர் காய்க்கும் மாத்தையும் இவ்வாறே ஒட்ட தறித்து துளிர் பிடியாததற்கு முன்னமே நட்டதில் வேர் பிடித்து அவ்வருஷம் பழம் நஷ்டமில்லாமல் கிடைத்ததென்று தெரிவிக்கிறார்."—தென்னிந்தியா விவஸாயம்.

SEED SELECTION.

**விதை பொருக்குதல்.**—சுதேசமித்திரனில் ஒரு நிரூபர் அடியில் கண்டபடி செய்து விதைபொறுக்கச் சொல்லுகிறார் :—

மாசூல் அறுவடை யாகுமுன்னே, செழுமையாக வளர்ந்து கதிர் வாங்கியிருக்கும் 4, அல்லது 5 வயல்களைக் குறிப்பிட்டு, அந்த நாலைந்து வயல்களில் இருக்கிற கதிர்களுக்குள்ளெல்லாம் கொழுமையாய்ச் செழித்திருக்கும் 4, அல்லது 5 கதிர்களை அறுத்துக்கொண்டுவா. இக்கதிர்களைத் தேர்ந்தெடுப்பது எப்படியெனில் கதிர்கள் நீண்டவையாயும் அகலமாயும், நெற்கள் மணி மணியாயும் உள்ளனவாயிருக்கவேண்டும். 4 அல்லது 5 சிறிய ஓலைப்பெட்டிகள் தயார் செய்து ஒவ்வொரு பெட்டியில் போட்டுக் குறிப்பிட்டு ஒன்றோடு ஒன்று கலக்காமல் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். எந்த வயல்களில் நடப்போகிறாமோ அந்த வயல்களிலேயே கொஞ்சபாகம் ஒரு மூலையில் ஒதுக்கி, அதில் தனித் தனியாய்ப் பிரித்து ஓலைப் பெட்டியி லிருக்கும் கதிர்களை (5 கதிர்கள்) தெளி; எந்த எருவை வயல்களுக்கு உபயோகிக்கபோகிறாயோ அதையே இம்மூலைகளிலும் பரப்பு; ஜலத்தைவிட்டுக் கட்டி பின்பு வெளியே பாய்ச்சிவிடு. விதையை இம்மாதிரி தெளித்து 5 நாள் முதல் 7 நாள் வரையிலும் சும்மா இருந்துவிடு. ஆனால் மாடு முதலியன விதைப்பாத்தியை அழிக்காமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். ஒரு வாரத்திற்குப் பிறகு வளர்ந்திருக்கும் நாற்றுகளைத் தனித்தனியாய்ப் பிடுங்கி மண்ணில்லாமல் நன்றாய்க்கழுவிவிடவேண்டும். இப்பொழுது எந்த நாற்று செழுமையாய் வளர்ந்து நிரம்ப வேரோடியிருக்கிறதோ அந்த நாற்றின் கதிரைக் குறிப்பிட்டு அக்கதிர் எந்த வயலிலிருந்துகொண்டு வரப்பட்டதோ அவ்வயலின் நெல்லையே இவ்வயலுக்கு விதையாக உபயோகப்படுத்தவேண்டும். ஒவ்வொரு வருஷமும் இம்மாதிரி செய்யவேண்டியதில்லை. ஒரு வருஷம் செய்தால், இம்மாசூலிலிருந்து அடுத்த வருஷத்துக்கு நல்ல விதை எடுக்கலாம்.

MILKING.

**பால் கறத்தல்**—தலையீத்து மாடுகளுக்கு முலைக்காம்பில் கூச்சம் அதிகமுண்டு. அப்போது சில வேளை பசுவை தட்டிக்கொடுக்கவேண்டுமே யொழிய அடிக்கக்கூடாது.

பால் கறக்கும்போது பாலில் விரலை நனைத்து முலைக்காம்பை உருவுவது பெரிய பிசகு. பால் கறப்பவனும் பாத்திரங்களும் வெகு சுத்தமாயிருப்பதே பால் கெடாமல் இருப்பதற்கு ஓர் முக்கிய காரணம்.

பால் கறக்குமிடத்தில் யாதொரு துர்வாஸனையும் இருக்கப்படாது. பாலுக்கு வாஸனை கிரகிக்கும் குணம் விசேஷம். ஆகையால் பசுமாடுகளை கொட்டாய்களில் கறக்கப்படாதென்று பால் கறப்பதற்கு சுத்தமான வேறே இடங்களை ஏற்படுத்துகிறார்கள். வெளிச்சத்தில் கறப்பது பாலுக்கு நல்லது. குளிர் நாளில் இருட்டறைகளில் கறக்கவேண்டுமானால் விளக்குவைத்துக் கறக்கும்படி ஐரோப்பியர் தெரிவிக்கிறார்கள். ஸாதாரணமாய் காலை மாலை இரண்டு வேளைகளிலும் பால் கறப்பதுண்டு. தினந்தோறும் ஒரேநேரத்தில் கறக்கவேண்டும். காலம் மாறிக் கறக்கக்கூடாது. பால் கறப்பவன் ஒருவனாகவே இருப்பது உத்தமம். கை மாறுவதால்பால் குறைவது மாடுவைத்திருப்பவருக்கு தெரிந்தவிஷயம். மேலே கூறப்பட்ட விதிகளையனுசரிப்பதினால் மாடுகள் அதிக பால் கொடுப்பதுடன் அவைகளுக்கு நாளடைவில் பால் சுரக்கும் குணம் விருத்தியடையுமென்றும் தேகத்திற்கு ஆரோக்கியமான பால் உண்டாகுமென்றும் தெரிகிறது.



## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

GERMAN SILVER.

**ஜெர்மன் வெள்ளி.**—நல்லசெம்பு 50 ராத்தல், துத்த நாகம் 20 ராத்தல், சுத்திசெய்த வெள்ளிப் பித்தளை 10 ராத்தல் இம்மூன்றையுஞ்சேர்த்து உருக்கினால் ஜெர்மன் வெள்ளியாகும்.

A NEW PAPER INDUSTRY IN RANGOON.

**ரங்கூனில் புதிதாக ஓர் காகிதத் தொழில்.**—கல்கத்தாவிலுள்ள டபள்யூ ஹீல்ஜாஸ் அண்டு கம்பெனியார் ரங்கூனில் மூங்கிலிலிருந்து காகிதம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். கவர்ன்மெண்டாரும் உதவி புரிவார்கள். கூடிய சீக்கிரத்தில் ஒருபெரிய காகிதசாலைபாய் விடுமாம்.

ESSENCE OF MAHUA FLOWER.

**இலுப்பைபூ தைலம்.**—"நமது நாட்டில் இலுப்பை மரங்கள் ஏராளமாய் இருக்கின்றன. அதன் புஷ்பம் இனிப்பாயும் தலைநோயுண்டாக்கும் வாஸனையுமுள்ளது. புஷ்பம் அநேகமாய் உதவாமல் பாழாய்ப் போவதுண்டு. பன்றிகளும் கோழிகளும் ஆடுகளும் இதைத்தின்பதுண்டு. இப்புஷ்பத்தில் தைலமிருப்பதாகத் தெரிகிறது.

புஷ்பத்தை மூன்று நாள் உலர்த்தினால் அதிலிருக்கும் நாற்றம் ஒழிந்துபோய் வற்றல் நல்ல வாஸனையாயிருக்கும். புஷ்பம் உலர்ந்ததும் மூன்றிலொரு பாகம் ஆகிறது. 3 ராத்தல் உலர்ந்த புஷ்பத்திலிருந்து ½ ராத்தல் தைலம் கிடைக்கிறது. இப்புஷ்பத்தை வாலியில்போட்டு நீரால் மூடி காய்ச்ச பட்டியில் (பாத்திரத்தில் நீரும் தைலமும் கலந்து இருக்கும். தைலம் லேசானதால் மிதக்கும். தைலம் அதிக வாசனையாயிருக்கும். இத்தைலம் தலைக்கு பூச உதவும். மயிர் நன்றாய் வளர்கிறது. ஆரோக்கியமுண்டாக்குகிறது, தலைக்குத்தேய்த்து முழுக ஆரோக்கியமாய் இருக்கிறது. இவ்வெண்ணெய் ஸோப்செய்யவும் உதவும். எண்ணெய் கிராக்கியாகும் இக்காலத்தில் இது உபயோகிக்கத்தக்கதே. இதனால் கெடுதி ஒன்றுமில்லை. இந்த வியாபாரம்செய்வதில் தேசத்துக்கும் உழைக்கிறவனுக்கும் லாபமே. சிறு முதல் வைத்தே மண் பட்டியில் காய்ச்சி தைலமெடுக்கலாம். புஷ்பங்களை ஒன்று சேர்த்து வேலை ஆரம்பிப்பது லாபகரம். இது தென்னிந்தியாமுழுவதும் செய்யக்கூடிய தொழில்."—தென்னிந்தியா விவஸாயம்.

PEARL PRODUCTION.

**முத்துவளர்த்தல்.**—பூர்ண சந்திரோதயத்தில் ப. நா. எழுதுகிறார்.

மிகிமோடாவென்ற ஜப்பானியார் ஒருவர் முத்துக்களை உண்டுபண்ணும் முயற்சியில் பலன் பெற்றிருக்கிறார். முத்துச்சிப்பியின் முட்டைகள் ஏராளமாய் அகப்படக்கூடிய விடங்களில் சிறு கற்களைப் போடுவதால் முட்டையிடும் பூச்சிகள் அக்கற்களின் மேல் கருக்களை வைக்கின்றன. பெரும்பாலும் இவ்விதம் முட்டை வைக்கின்றதானது ஆழமில்லாத சமுத்திரத்தில் அதேயிடத்திலிருக்கும் பக்ஷத்தில் குளிர்காலம் வரும்போது அக்கருக்கள் மரணமாக ஹேதுவாகின்றன. இச்சம்பவத்தை நீக்கும்பொருட்டு கருக்களமைந்த கற்களை எடுத்து ஏற்கனவே ஆயத்தம்செய்யப்பட்டிருக்கின்றசமுத்திரத்தில் ஆழமான இடத்தில் அவைகள் வைக்கப்படுகின்றன. அவ்விடத்தில் அவைகள் தங்கிக்கருமலர்ந்து பூச்சிப் பருவத்தையடைந்து அபிவிருத்தியாகும்படி அவைகள் அவ்விதம் வைக்கப்படுகின்றன. பின்புஅவைகள் எடுக்கப்பட்டு அந்த ஒவ்வொரு பூச்சிக்குள் முத்துச்சிப்பியின் ஒரோர் சிறுதுண்டு புகட்டப்படுகின்றது. பின்பு அந்தச்சிறு துண்டைச்சுற்றி இனி முத்தாகக்கூடிய திரவியம் அமைகிறது. இதுவே பின்பு முத்தாகஆகிறது. இம்முத்து உண்டுபண்ணும் தொழிலை ஜப்பான் தேசத்தில் ஸ்திரீகள் நடத்துகின்றார்கள். அவர்கள் சமுத்திரத்தில் குளித்துக் கருக்களமைந்த கற்களை எடுத்தும் அவைகளுக்குவேண்டிய சிகிச்சைகளை முத்தாகப் பரிணமிக்கிறவரையில் செய்தும் வருகிறார்கள். புருஷரை விட ஸ்திரீகள் சுவாஸ பந்தம் அதிககாலம் செய்ய சாமர்த்தியம் உள்ளவர்களாகத்தெரிகிறது. அதனால் ஜலத்தில் அதிககாலம் மூச்சைப்பிடித்துத் தங்குகிறார்கள். இதற்குக்காரணத்தை அடியில் வருமாறு விநோதமாக ஒருவர் வினவுகிறார். ஸ்திரீகள் அதிகப் பேச்சுக்காரிகளானதால் கும்பகம் செய்யும் சக்தி அதிகமாக உண்டாகின்றதோ ? அல்லது புருஷர்கள் பலவாறாக மநம் நோகும்படி ஸ்திரீகளை வைதலும் ஹிம்ஸித்தலும் காரணமாக ஸ்திரீகள் மனச்சாந்தமும், பொறுமையும் பெற்று அதனால் கும்பகம் செய்யும் சக்தி அதிகரிக்கின்றதோ? எவ்விதமாயினும் ஸரி, ஸ்திரீகளின் சக்தி முத்துக்கள் அதிகமாயுண்டுபண்ணுவதில் உதவுகின்றது.

## EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

THE UNIVERSITY CONVOCATION.

**யூனிவர்ஸிடி கான்வோகேஷன்.**—சென்னை ஸர்வகலாசாலை பரீட்சைகளில் தேறினவர்களுக்குப் பட்டமளிக்கும் சடங்காகிய கான்வோகேஷன் போன மாஸத்தில் நடந்தது. பட்டம்பெற்றவர்களில் 818 பேர்கள் இருந்தார்கள்; இவர்களில் எட்டு ஸ்திரீகள் இருந்தார்கள். இந்த எட்டு ஸ்திரீகளில் சுப்ப லக்ஷ்மி என்ற ஒரு பிராமண ஸ்திரீயும் இருந்தார். இந்த ஸ்திரீகளில், 2 பேர் எல். டி. அதாவது உபாத்தியாயர் தொழிலுக்கான பட்டமும், ஒருவர் எல். எம். எஸ். அதாவது வைத்தியத்துக்கான பட்டமும், 5 பேர் பி. ஏ. பட்டமும் பெற்றார்கள். பாக்கிப் பேர்களில் எம். எல். பட்டம் பெற்றவர் ஒருவர். பி.எல். பட்டம் பெற்றவர் 81; எல்.டி. II; எம்.டி. I; எம். பி. அண்ட் ஸி. எம். 2; எல். எம். எஸ். II, பி. இ. 7. அதாவது இஞ்சினீர் உத்தியோகத்துக்கான பட்டம் பெற்றவர் 75 எம். ஏ. 22; பி. ஏ. 639; பாக்கிப்பேர்கள் வரவில்லை. பட்டங் கொடுத்த பிறகு, ஆனரபில் வி. கிருஷ்ணசாமி அய்யர், யூனிவர்ஸிடி வழக்கப்படி, பட்டம் பெற்றவர்களைப் பார்த்து அவர்களுடைய ஒழுக்க விஷயமாயும், பொதுக்கல்வி விஷயமாயும் ப்ரஸங்கம் செய்தார்.

EDUCATION OF CONVICTS.

**கைதிகளுக்குப் படிப்பு**—நீண்ட காலம் தண்டிக்கப்பட்ட கைதிகளுக்கு, தஞ்சாவூரில் சிறு குற்றவாளிகளுக்கு படிப்புச் சொல்லிவைக்கிறமாதிரி, மற்ற ஜெயில்களிலும் சொல்லி வைக்க, கவர்ன்மெண்டார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதை முதலில் பரீக்ஷார்த்தமாக சென்னை, ராஜமஹேந்திரம், கண்ணனூர் ஸெண்ட்ரல் ஜெயில்களில் சொல்லிவைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 30 வயதுக்கு மேற்படாத கைதிகளில் யார்படிக்க இஷ்டப்படுகிறார்களோ அவர்கள் படிக்கலாம். படிக்கிறவர்களுக்கு இரண்டு வகுப்புகள் உண்டு. ஏற்கனவே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு ஒரு வகுப்பும் தெரியாதவர்களுக்கு ஒரு வகுப்புமாம். எல்லாருக்கும் எழுதப் படிக்கவும் கணக்குப் போடவும் மட்டும் சொல்லிக்கொடுக்கப்படுமே. இதற்கு வேலைசெய்யவேண்டிய காலத்தில் ஒரு மணிநேரம் ஒழிவுகொடுக்கப்படும். படிப்புவராதென்று தோன்றும் பட்சத்தில் அந்தக்கைதிக்கு இப்படிப்பட்ட வஸதி கொடுக்கப்படமாட்டாது. உபாத்தியாயர்கள் படித்த கைதிகளிலிருந்து தெரிந்தெடுக்கப்படுவார்கள். வேண்டுமானால் ரூ 20ல் ஒரு ஹெட்மாஸ்டரும் நியமிக்கப்படுவார். லைப்ரெரியில், கொரான், கீதை, பைபில் முதலிய ஸத் விஷயங்களடங்கிய புஸ்தகங்கள் வைக்கப்படும். அவைகளைக் கைதிகள் படிக்கவும் வஸதிகள் கொடுக்கப்படும்.

THE RESPONSIBILITY OF THE TEACHER.

**வாத்தியார் ஜவாப்தாரி.**—இங்கிலாந்தில் சிறுவர் பள்ளிக்கூட மொன்றை ரிபேர் செய்வதற்காகப் பள்ளிக்கூடக் கட்டிடத்தின் வெளிப்புறத்தில் கண்ட்ராக்டர் சுண்ணாம்பும் மணலும், குவியலாகக் கொட்டியிருந்தார். இந்தக் குவியலைப் பார்த்தால் சிறு பிள்ளைகள் துஷ்டத்தனம் செய்வார்களென்று ஹெட்மாஸ்டர் நினைத்து, அதை வேறிடத்தில் கொண்டுபோய்க் கொட்டி வைக்கும்படி சொல்லியும் கண்ட்ராக்டர் பராமுகமா யிருந்துவிட்டார். ஸ்கூல் விட்டவுடன் பையன்கள் வெளியே வந்து ஒருவர் மேலொருவர் மண்ணையும் சுண்ணாம்பையும் கைகையால் அள்ளி வீசி கிர்த்தாளி செய்ததில் வழிப்போக்கர் ஒருவர் மேற்பட்டு சேதமுண்டாயிற்று. இவ் வழிப்போக்கர் வாத்தியார்மேல் நஷ்ட ஈட்டுக்காக வியாஜ்யம் செய்து, ஜயம் பெற்றதாகத் தெரிகிறது. இவ்வளவு தொகை நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்டதென்று தெரியவில்லை. இப்பள்ளிக்கூடம் ஊரார் பொதுவரித்தொகையில் நிர்வகிக்கப்படுவதாகையால் வாத்தியார் மேல் தீர்ப்பான தொகை இந்த வரித்தொகையிலிருந்தே கொடுக்கப்படும். பிரஸ்தாபகேஸில் வாத்தியாரின் பொறுப்பு இன்னதாகுமென்று வியக்தமாக எடுத்துச் சொல்லப்பட்டது. தகப்பன் குழந்தைகளை எவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பார்ப்பானோ, அவ்வளவு ஜாக்கிரதையாய் வாத்தியார் பிள்ளைகளைப் பார்க்கவேண்டும். பிள்ளைகளின் ஸாதாரண ஸ்பாவத்தை யறிந்து, துஷ்டச்செயல்கள் செய்வது அவர்களுக்கு இயற்கை யென்றும், அவர்கள் எது கண்ணிற்பட்டாலும் அதைத் தீண்டி விஷமம் செய்வார்களென்றும் மனதிற் கொண்டு, அதற்கொத்தபடி முன் எச்சரிக்கையுடன் வாத்தியார்கள் நடக்கவேண்டும். சுண்ணாம்பு மணலை எடுக்கச் சொன்ன மாத்திரத்தில் வாத்தியார் பொறுப்பு தீர்ந்துவிடவில்லை. அதை அவர் எடுப்பித்தேயிருக்கவேண்டும்.



## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

A WATER FINDER.

**ஒரு ஜலம் கண்டுபிடிக்கும் கருவி.**—ஓர் குறித்த இடத்தில் பூமிக்குள்ஜலம் இருக்கிறதா இல்லையா என்று சாஸ்திர யுக்தமாய்த் தெரிந்துகொள்ள டீனர்ட்டு என்னும் ப்ரான்ஸ் சாஸ்திரி யொருவர் ஓர் நூதன கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார். சிறிய பொருளைப் பெரிதாய்க் காட்டுகிற பூதக் கண்ணாடி போல, சிறுசப்தத்தை உரத்த சப்தமாய்க் கேட்கச்செய்யும் 'மைக்ரோபோன்' என்னும் கருவியிலிருந்து வரும் ஒரு சிறு ரப்பர் குழாயைப் பூமிக்குள் நுழைத்தால் அதன் மூலமாய் பூமிக்குள் மிக ஆழத்தில் ஓடும் தண்ணீரின் சத்தம் கேட்கிறது. கிணறு, குளம், 'ஆர்ட்டிசீயன் வெல்' என்னும் பாதாளசுனை யூற்றுக் கிணறு முதலியவைகளைத் தோண்டுபவர் களுக்கு இந்தக் கருவி மெத்தப் பிரயோசனமானதே.

EARTH WORMS.

**மண்ணுண்ணிப் பூச்சிகள்**—மண்புழுக்கள் மண்ணையே தின்று ஜீவிக்கிற விசேஷத்தை நம்மவர்கள் முன்னமேயே கண்டறிந்திருக்கிறார்கள் என்பதற்கு மண் உண்பூச்சியென்ற பெயரே அத்தாட்சியாக இருக்கிறது. மண்ணைப் பிராணி எப்படி உண்ணும் என்று நாம் ஸந்தேகிக்கலாம். மண்ணோடு கலந்து அநேக செடிவஸ்துவும் பிராணிவஸ்துவும் அழுகி நிலை குலைந்து ஒருவித ரஸபதார்த்த நிலைமையிலிருக்கின்றன. அவ்வித ரஸபதார்த்தத்தை உட்கொள்ளும் பொருட்டு மண்ணை இப்புழுக்கள் உட்கொள்ளுகின்றன. உபயோகமுள்ள பதார்த்தத்தை தேகத்துக்கு உணவாக எடுத்துக்கொண்டு தங்களுக்கு உபயோகமில்லாத மண்ணைக் கழிவு பதார்த்தத்துடன் மலமாகவிலக்குகின்றன. இப்படி மண்புழுக்கள் செய்யும் செய்கை நிலத்துக்கு உழுது உரம் வைத்ததுபோல் ஆகிறது. மேல்மண் கீழ்மண்ணாகப் புரளவும், இப்பிராணிகளின் கழிவு பதார்த்தங்களோடு சேர்ந்தமண்ணே உரமாகவும் ஏற்படுகிறது. இவ்விஷயத்தைடார்வின் என்ற உயிர் நூல் நிபுணர் விஸ்தாரமாக ஒரு புஸ்தகத்தில் கண்டு பிடித்தெழுதியிருக்கிறார்.

WORMS AND DISEASE.

**புழுக்களும் வியாதியும்.**—விவேக போதினியில் ஒரு நிருபர் எழுதுகிறார்.—புழுக்கள் கருத்தரித்தால் முட்டையிடுகின்றனவா, குட்டி போடுகின்றனவா என்ற விபரம் நமக்குத் தெரியவேண்டியது அவசியம். பெரும்பாலும் இவைகள் முட்டைகள்தானிடுகின்றன. நாக்குப் பூச்சி இனத்தைச்சேர்ந்த சிலபுழுக்களை வயிறு நிறைய குஞ்சுகள் நெளியநிற்கும் நிலைமையில் நான் பரிசோதித்திருக்கிறேன். அவைகளே குட்டிபோடும் இனம். வியாதிகளுக்குக் காரணபூதமாக இருக்கும் நரம்புச்சிலந்தியோ, நாடாப்புழுவோ, இவைகள் மலத்தின் மூலமாகத் தம் முட்டைகளைக் கடத்திவிட அவைகள் ஜலத்தின் மூலமாகவோ, அஜ்ஜலத்தைப் பருகும் ஆடு, கோழி போன்ற பிராணிகள் மாமிசத்தின் மூலமாகவோ, மறுபடி மனுஷ தேகத்தையே அடைகின்றன. ஆகையால் நாம் குடிக்கும் ஜலமும் சாப்பிடும் உணவும் சுத்தமாக இருப்பதுடன் நன்றாகச் காய்ச்சிக் கொதிக்க வைத்ததாக இருக்கவேண்டுமென்பது அவசியமாக இருக்கிறது.

THE SIZE OF THE BODY AND THE INTESTINES.

**உடலளவும் குடலளவும்.**—மனிதர்கள் ஒவ்வொருவரும் அவரவர் கையால் எண்சாணுயரம் உடையவர். உடற்பருமன் எவ்வளவென்றால், தத்தங்கையால் நாலுசாணேயாம், இனி, குடலளவு என்னவென்றால் உடலளவால் வந்த உயரச்சாண் எட்டுக்கும் பருமச்சாண் நாலுக்குமாகப் பெருக்கினால் வந்த முப்பத்திரண்டு சாணேயாம். இம்முப்பத்திரண்டும் அவரவர் கைச்சாணளவே. இக்குடலளவை "முப்பானிரண்டு முழக்குடல்" என்னும் 'மனோபோதை' 32-வது செய்யுளாலறிக. இனி, குடலளவு எவ்வளவோ அவ்வளவே உண்டியளவும் கொள்ளவேண்டும். வயிற்றில் முப்பத்திரண்டு முழக்குடல் அமையப்பெற்றிருப்பதால் ஆகாரமும் 32 பிடியாகும். அப்படிக்கொள்ளும் ஆகாரமும் சாதம், கறி, நீர், ஆக மூன்றும் உட்படவேயாம். பிடியளவும் அவரவருடைய கையினளவே. இப்படி எவனொருவன் தன் கரத்தால் 32-பிடி ஆகாரம் உட்கொள்ளுகிறானோ அவன் ஒரு நாளும் பிணிக்கு ஆளாகமாட்டான். அமுதங்கிடைத்தாலும் 32-பிடிக்குமேல் அணுவளவும் புசிக்கலாகாது.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

CHIRETTA.

நில வேப்பு.—இதை கஷாயம்போட்டு சாப்பிட்டால் ஸகல வித பித்தம், ஊது காமாலை, மஞ்சட் காமாலை முதலிய ஈரலைப்பற்றிய வியாதிகளும் குணமாகும். நல்ல பசி உண்டாகும்.

GUINEA WORM.

நரம்புச் சிலந்தி.—திண்டிவனம் உலக்கூர் முதலிய ஊர்களில் நரம்புச்சிலந்தி நோய் மிகுதியாக இருக்கிறது. திண்டிவனத்தில் மாத்திரம் 500-பேருக்கு மேற்பட்டவர்கள் ஷை நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அசுத்த ஜலத்தை உபயோகப்படுத்துவதே யாம்.

BEE STING FOR RHEUMATISM.

வாதக்கட்டுக்கு தேனீக்கொட்டு.—வாதக்கட்டுக்கு தேனீக்கொட்டு கைகண்ட வைத்தியம் என்று பரீக்ஷித்துக் கண்டிருக்கிறார்கள். 10 வருஷம் 15-வருஷங்கள் வாதக்கட்டினால் வருந்தினவர்களெல்லாம் தேனீக்கொட்டினால் குணப்பட்டுத் தேறியிருக்கிறார்களென்றும், அதற்காகச் சில வைத்தியர்கள் தேனீக்களை வளர்த்து வருகிறார்களென்றும் தெரிகிறது.

THE MOSQUITO TROUBLE.

கொசுவின் தொந்தரவு.—முறைஜுரம் வருவதற்கும் ராத்தூக்கம் கெடுவதற்கும் கொசுவே முக்கிய காரணம். கொசு கடிக்காதபடி வலைத்துணிகளை ஜன்னல்களிலும் கதவுகளிலும் கட்டிலைச் சுற்றியும் கட்டுவது ஸாதாரணம். திண்டுக்கல்லுக்கு அடுத்த ஸ்டேஷனில் தும்பையிலையைக் கசக்கி ரஸம் பிழிந்து தேகத்தின்மேல் பூச கொசு கடிப்பதில்லையாம். வீட்டுக்கூரையில் ஒட்டியிருக்கும் கொசுக்களை சில ஐரோப்பியர் கிண்ணத்தில் கிரோஸின் எண்ணெய்விட்டு அதற்கடியில் தூக்க அவைகள் விழுந்து மடிகின்றனவாம். பாழுங்குளம் முதலிய இடங்களில் 15 சதுர அடிக்கு ஒரு அவுன்ஸ் கிரோஸின் ஊற்ற அது பரவி அனேக கொசு புழுக்களைக் கொல்லும். கொசுவும் முட்டை இடுவதில்லை. மீனில்லாத குளமாயிருந்தால் அதில் மீனை வளர்த்தால் இப்புழு வெகு சீக்கிரத்தில் அற்றுப்போகிறது. ஷை குளங்களில் கிரோஸின் எண்ணெய்யைப் பரவலாய் தெளிப்பது உத்தமம்.

DOGS AS PLAGUE PREVENTERS.

நாய்களால் பிளேக்நோய் பரவுதலைத் தடுக்கலாம்.—மைசூர் நிருபர் ஒருவர் இவ்விஷயமாய்த் தம்முடைய அனுபவத்தை "டெயிலி கிரானிகல்" என்ற பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்.—

"பிளேக் அம்மை குத்திக்கொள்வதானது சில காலம் பிளேக்நோய் பீடிக்காமல் ஒருவரைப்பாதுகாக்கும். கவர்ன்மெண்டார் ஒரு வீட்டில் திடீரென எலிகள் மாண்டு போனால் அவ்வீட்டைக் காலி செய்ய உத்தரவு செய்து கூரையைப் பிரித்து விடுகிறார்கள். இப்படிச் செய்வதால் பிளேக் ஈக்கள் சூரிய உஷ்ணத்தில் இறந்துபோகுமென்பது அவர்களின் கருத்து. பிளேக் வியாதி பீடித்த எலிகள் காலி செய்யப்பட்ட வீட்டில் உணவு அகப்படாமல் அயல் வீட்டுக்குச் சென்று அதைத் தொத்துள்ள இடமாக்கி விடுகின்றன. பிளேக் ஈக்களைக் கொல்ல நாம் உபயோகிக்கும் விஷங்கள் மிக்கப் பயனுடையவையாயில்லை. ஈக்கள் இறக்க சிலமாதங்கள் ஆகின்றன.

"என்னுடைய பங்களாவிலும் வேறு வீடுகளிலும் 6 முறை எலிகள் இறந்துவீழ்ந்தன. நான் இறந்த எலிகள்மேல் மண்ணெண்ணெயை நிறைய ஊற்றி அவைகளை குறடுகொண்டு எடுத்துச்சென்று எரித்துவிட்டேன். 3, 4 நாய்களை அந்த வீடுகளுக்குள் துரத்திச் சாயங்காலம்வரை அடைத்துவைத்தேன். பிறகு நாய்களின் மேல் பிளேக் ஈக்கள் ஒட்டிக்கொள்ளுகிறதால், இவைகளுக்குச் சதும்ப விளக்கெண்ணெய் பூசி கார்பாலிக் சோப்பு கொண்டு கழுவி விட்டேன். நாய்களுக்கு பிளேக் வியாதியுண்டாகவில்லை. ஈக்களின் சுவாஸக் குழாய் விளக்கெண்ணெயால் அடைபடுவதால் அவைகள் இறந்து போகின்றன. மேலும் நான் அந்த வீடுகளில் எலிக்காக உணவுகளைப் பல இடங்களில் போட்டு கூண்டுகளை வைத்து அவைகளைப் பிடித்துக் கொன்று வந்தேன். நாய் பூனையை விட அதிக எலிகளைப் பிடிக்கிறது. இப்படி எலலாரும் செய்து பார்க்கலாம். எப்படியாவது பிளேக் வியாதியைத் தடுக்கவேண்டும்.

---



## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

JUNIOR MEMBER OF A JOINT FAMILY

அவிபக்த குடும்பத்தில் சின்னவர்.—சேர்ந்த குடும்ப ஸொத்தை மானேஜிங் மெம்பர்போல கையாடும்படி விடப்பட்ட ஷை குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைய மெம்பர், குடும்ப அவசியச் செலவுகளுக்காகச் செய்த பராதீனம் மற்ற மெம்பர்களைக் கட்டுப்படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 29 கல். 797.

ARBITRATOR'S AWARD.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பு. — மத்தியஸ்தர்கள் செய்த தீர்ப்பில் வெளிப்படையாகக் காணப்படும் பிசகுகளை கோர்ட்டார் ஸரிப்படுத்த மட்டிலும் கூடும் இப்படி பிசகுகளிருக்கிற தென்கிற காரணத்தை முன்னிட்டு அந்தத் தீர்ப்பையே ரத்துசெய்து, கேஸை விசாரணைசெய்து அந்த தீர்ப்பிற்கு பதிலாக தங்களுடைய தீர்ப்பையும், டிக்கிரியையும், ஏற்படுத்தக்கூடாது. கக்ஷிக்காரர்களுக்குள்ளிருக்கும் எல்லா கக்ஷி வாதத்தையும் கோர்ட்டார் மத்தியஸ்தர்களுக்கு ரிபர் செய்யவேண்டுமேயொழிய சிற்சில கக்ஷிவாதங்களை மட்டிலும் ரிபர் செய்யக்கூடாது.

DEDICATION OF A MINOR.

மைனருக்குப் பொட்டுக்கட்டி விட்டது — சென்னையில் வஸித்து வரும் ராஜம் என்னும் பெயருடைய ஒரு கோவில் தாசி 1905-ம் வருஷம் தன் சகோதரன் புத்திரியை ஸ்வீகாரமாய் எடுத்து வளர்த்து வந்தாள். அந்தப் பெண்ணுக்கு வயது பத்து என்று ஸ்வீகாரபத்திரத்தில் கண்டு இருவரும் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்துகொண்டார்கள். 1910ம் வருஷத்தில் சென்னையிலுள்ள அருணாசலேஸ்வரர் கோவிலுக்குப்பொட்டு கட்டிவிட எண்ணி மேற்படி ஆலயத்தின் டிரஸ்டிகளிடம் ராஜம் என்பவள் ஒரு மெடிகல் ஸர்ட்டிபிகேட்டை தாக்கல் செய்தாள். அந்த ஸர்ட்டிபிகேட்டில் மேற்படி பெண்ணுக்குப் பதினேழு வயது என்று கண்டிருந்தது. ஆனால் 1905-ம் வருஷத்தில் மேற்படி பெண்ணுக்கு வயது பத்து என்று ஸ்வீகாரப்பத்திரத்தில் கண்டிருந்தபடியால் 1910-ம் வருஷத்தில் அவளுக்குப் பதினேழு வயது எவ்விதம் ஆகுமென்று ட்ரஸ்டிகள் ஸந்தேகித்து, ராஜம் தாக்கல் செய்த மெடிகல் ஸர்ட்டிபிகேட்டை அங்கீகரிக்காமல், சென்னையிலுள்ள சிறுவர் ஸம்ரட்சணை சங்கத்தின் கௌரவ காரியதரிசியான டாக்டர் விஜயராகவலுடன் கலந்து யோசித்தார்கள். மிஸ்டர் விஜயராகவலு இப்போது அப்பெண்ணுக்குப் பொட்டு கட்டுவதை ஒப்புக்கொள்ள முடியாதென்றும், இன்னும் ஒரு வருஷங்கழித்துக் கட்டலாமென்றும் நயமாக மேற்படி தாசிக்குக்கூறி, அவள் காட்டிய மெடிகல் ஸர்டிபிகேட்டையும் அவளிடமே கொடுத்து அவளை அனுப்பிவிட்டார். ராஜம் அத்துடன் சும்மா இராமல் மறுபடியும் ஒரு வைத்தியரிடம் சென்று மேற்படி பெண்ணுக்குப் பதினாறு வயது என்று ஒரு மெடிகல் ஸர்ட்டிபிகேட் வாங்கி 1910-ம் ௵ ஆகஸ்டு ௴ ஷை பெண்ணைக் காஞ்சிபுரத்திலுள்ள ஒரு சிறு கோவிலுக்குப் பொட்டுக்கட்டிக் கொடுத்துவிட்டாள். இந்தச்செய்தியை அறிந்த சிறுவர் ஸம்ரட்சணை சங்கத்தார் உண்மையைக் கண்டு பிடிக்க விரும்பி முனிஸிபல் ரிகார்டுகளைத் தேடிப்பார்த்தார்கள். அவ்விதம் பார்த்ததில் மேற்படி பெண் 1895-ல் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி பிறந்ததாகத் தெரியவந்தது. பெண்ணுக்கு மைனர் வயது நீங்குவதற்கு முன்பு ராஜம் அப்பெண்ணைக் காஞ்சிபுரத்தில் பொட்டுக் கட்டிவிட்டது குற்றமென்று மேற்படி சங்கத்தார் கண்டு விஷயத்தை அதிகாரிகளுக்கு அறிவிக்கலானார்கள். இந்தியன் பினல் கோட் 372, 373-வது ஸெக்ஷன்படி ராஜத்தை ப்ராஸிகியூட்செய்து முதலில் செங்கற்பட்டு ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டால் கேஸ் விசாரிக்கப்பட்டது. அவர் அவளை விடுதலை செய்துவிட்டார். மேற்படி ஸங்கத்தார் பழையபடியும் கேஸை ஹைகோர்ட்டுக்குக் கொண்டு போனார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் கேஸை விசாரித்து ராஜத்துக்கு ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார். பொருளுக்கு ஆசைப்பட்டு தாசிகள் சிறுபெண்களை மைனர் நீங்குவதற்கு முன்பே கோவில்களில் பொட்டுக்கட்டி விடுகிற வழக்கம் தென்ஜில்லாக்களில் அதிகமாக இருந்துவருகிறது. இப்படிப்பட்ட தாசிகளுக்கு இந்தக் கேஸ் ஒரு சற்போதனையாகும்.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

THE NEW NIZAM.

**புதிய நிஜாம்.**—புதிய நிஜாம் அரசர் தமது ஸமஸ்தானத்து மந்திரி மகாராஜா ஸர். கிருஷ்ண பிரசாத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் பெறுமான நகைகளை வெகுமதியாய்க் கொடுத்தார். அவைகளில் ஒரு முத்து ஆரம், வைரக்கல்வைத்து இழைத்த ஒரு சங்கிலி, இவையிரண்டும் மிகவும் விலையுயர்ந்த ஆபரணங்களாம்.

THE LATE MR PANDITHURAI THEVAR.

**ஸ்ரீமத்-பாண்டித்துரைத்தேவர் காலமாயினர்.**-பல்லவநத்தம் ஜமீன்தாரும் மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்து அதிபருபமாகிய ஸ்ரீமத் பாண்டித்துரைத் தேவர் இம்மாதம் 2ந் தேதி தேகவியோகமாயினர். இவர் தமிழ்க்கல்வியின் அபிவிர்த்தியின் பொருட்டுப் பேருக்கங்கொண்டு உழைத்து வந்தவர். தமிழ்க் கல்விக்கும் மாணவர்களுக்கும், தமிழ்ப்பண்டிதர்களுக்கும் பேருபகாரஞ் செய்து வந்தவர். இவருக்கு வயது 45. இவர் இறந்தது தமிழ்ப் பாஷாபிவிர்த்திக்கும் பெருங்குறைவே. இவருடைய ஜீவிய சரித்திரத்தை அடுத்த ஸஞ்சிகையில் பிரசுரிப்போம்.

SIR SASSOON DAVID.

**ஸர் ஸாஸூன் டேவிட்.**—பம்பாயிலிருக்கும் இந்த யூத கனவான் பெரிய கோடீசுவரர். இவர், செய்த தர்மங்கள் பல. இவர் ஸமீபத்தில் 8,01,000 ரூபா கவர்ன்மெண்டார் வசம்விட்டு, அதைக்கொண்டு பம்பாய் மாகாணத்திலும் ஸிந்து மாகாணத்திலுமுள்ள விவஸாயிகளை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லி யிருக்கிறார். இந்தத் தொகை சில ட்ரஸ்டிகளால் செலவழிக்கப்படும். அந்த ட்ரஸ்டிகளில் ரெவினியூ இலாகா கவர்ன்மெண்ட் ஸெக்ரிடெரியும், வித்தை இலாகா கவர்ன்மெண்டு ஸெக்ரிடெரியும், கவர்னரால் நியமிக்கப்பட்ட ஒரு மெம்பரும், ஸர் ஸாஸூன் டேவிட்டாலாவது, அவர் வம்சஸ்தர் அல்லது பிரதிநிதியாலாவது, நியமிக்கப்பட்ட ஒரு மெம்பரும் இருப்பார்கள்.

இந்த திரவியத்தில் முழுமையுமாவது ஏக தேசமாவது விவஸாய விஷயமாகவும், கேவலமாயிருக்கிற விவஸாயிகளை முன்னுக்குக் கொண்டு வருவதற்காகவும், விவஸாயப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதற்காகவும், நூதனமான விவஸாய முறைகளைக் கண்டுபிடிப்பதற்கு பிரயத்தனம் செய்யும் ஸங்கந்தாருக்கு உதவி செய்வதற்காகவும், செலவழிக்கப்படலாம். கவர்ன்மெண்டுப் பாடசாலைகளுக்கு ஹாஸ்டல்கள் கட்டுவதற்கும் இத்திரவியம் உபயோகப்படுத்தப்படலாம்.

எவ்வழியில் இது உபயோகப்பட்டாலும், ஸர் ஸாஸூன் டேவிட்டின் பெயர் அவற்றிற்கு கொடுக்கப்படும்.

MESSRS. VENKATASAMI NAIDU & SONS.

**மெஸர்ஸ் வெங்கடசாமி நாயுடு அண்ட் ஸன்ஸ்.**—மெஸர்ஸ் வெங்கடசாமி நாயுடு அண்ட் ஸன்ஸ் செய்துவந்த அலுவலில் அவர்கள் விழுந்துபோனபடியால், அவர்களுடைய ஸொலிஸிடர்களாகிய மெஸர்ஸ் ஷார்ட் அண்டு ப்யூஸ் அந்தக் கம்பெனியின் வீட்டு வாசலில் பின்வரும் வருகிறபடி நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். "மெஸர்ஸ் வெங்கடஸாமி நாயுடு அண்ட் ஸன்ஸைச் சேர்ந்த அனைவரும் இன்ஸால்வெண்ட் என்று மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர அய்யர் இன்று தீர்மானித்துவிட்டபடியால், அவருடைய சொத்துக்கள் அபிஷல் அஸைனி வசம் ஒப்புவிக்கப்பட்டுப்போயின."

இந்தக் கம்பெனியில் திவான் பகதூர் எம். வெங்கடசாமி நாயுடு முக்கியமான ப்ரொப்ரைட்டர். இவர் இன்ஸால்வெண்டாய்ப்போனது சென்னையில் அவரையறிந்த ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் விசனத்தைக் கொடுக்கும். ஆதியில் இவர் மதுரையில் விசேஷக் கீர்த்தியில்லாமல் வசித்து பிறகு சென்னைக்கு வந்தார். சென்னையில் தேறல் ஏற்றுமதி வியாபாரத்தை விசேஷமாய்ச் செய்துவந்து அவருடைய தந்திரத்தாலும் ஸாமர்த்தியத்தாலும் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களின் நன்கு மதிப்பைப் பெற்று ஸர் ஆர்தர் லாலி கவர்னராயிருந்த காலத்தில் கவர்ன்மெண்டிடம் பல நன்மைகளை யடைந்தார். ராய்பகதூர்ப் பட்டமும் திவான்பகதூர்பட்டமும் இவருக்கு வரிசையாய்க் கிடைத்தன. பிறகு ஒரு வருஷம் சென்னை ஷெரிப்பாயு மிருந்தார். இவர் செய்துவந்த செலவே இவரை இன்ஸால்வெண்டாக்கியதுபோலும்.



## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

THE KING SPOKE TO HIM.

**அவனிடத்தில் ராஜா பேசினர்.**—தன்னுடன் ராஜா பேசினரென்று ஒருவன் எல்லாரிடத்திலும் சொல்லிக்கொண்டு வந்தான். "ராஜா உன்னோடு என்ன பேசினர்?" என்று அவர்களில் ஒருவன் அவனைக் கேட்க, அவன் "ஒன்றுமில்லை. அவர் வரும்பொழுது வழியில் குறுக்கே நின்றுகொண்டிருந்தேன். 'வழியிலிராதே' என்று அவர் என்னைக் கோபித்துக்கொண்டார், என்று பதில் சொன்னன்.

THE WAY TO THE SWEETMEAT SHOP.

**மிட்டாய்க் கடைக்கு வழி.**—ஸகோதரி :—தம்பீ! நாம் புதிய வீட்டுக்குக் குடி வந்திருக்கிறோம். மிட்டாய்க் கடைக்குப் போகும் வழி தெரியுமா?

ஸகோதரன் :—அக்கா! நன்றாயறிவேன். நம்முடைய. வீட்டிலிருந்து மேற்கே சென்று அங்கிருந்து வடக்கே திரும்பி மறுபடி கிழக்கே வந்து தெற்கே நடந்தால் கடை யிருக்கும். பக்ஷணம் வாங்கி வருகிறேன்.

ஸகோதரி :—மூடா! பக்கத்திலுள்ள கடைக்கு இத்தனை தூரம் சுற்றுவானேன்?

ஸகோதரன் :—அக்கா! கடையைப் பிரதக்ஷிணம் செய்தால் கைலாஸம் கிட்டும். நாம் சாப்பிடும் அன்னத்தை எத்தனை முறை ஜலத்தால் சுற்றி உண்கிறோம். கோவிலை வலம் வருகிறோம். அவ்விதமே உணவு பொருளான மிட்டாய்க் கடையைச் சுற்ற வேண்டும்.

A DOG'S ACT.

**ஒரு நாயின் செய்கை.**—ஒரு ஊரில் இடையனொருவன் தன்னுடைய ஆடுகளுக்குக் காவலாயிருக்கும்படி ஒரு நாயை வளர்த்துவந்தான். ஒரு நாள் அவன் ஆட்டுமந்தையை மேய ஓட்டிக்கொண்டு போயிருந்தபோது ஒரு பாறையிலிருந்து மற்றொரு பாறைக்குத் தாண்ட, கால் தவறிப்பாறையின்மேல் விழுந்தான். அதனால் அவனுக்குஅதிக நோயுண்டாகி எழுந்து நடக்க முடியாமற் போயிற்று. அவன் உடனே தன்னுடைய அரைச் சொக்காயைக் கழற்றி அதை அந்த நாயின் கழுத்தில் கட்டிவிட்டு வீட்டுக்குச் செல்லும்படி சொன்னன். அது வீட்டுக்குச் சென்றபோது வீட்டிலிருந்தவர்கள் அதன் கழுத்தில் தம்முடைய குமாரனுடைய அரைச் சொக்காயிருக்கக்கண்டு, அவனுக்கு ஏதோ அபாயம் நேரிட்டிருக்கவேண்டுமென்று எண்ணி, உடனே அவனைத் தேடுவதற்குப் புறப்பட்டார்கள். அந்த நாய் அவர்களை வெகு சீக்கிரத்தில் அவ்விடையன் விழுந்திருந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோயிற்று. பிறகு அவர்கள் அவனை வீட்டுக்குக் கொண்டு போய்ப் பலவிதமான சிகிச்சோபசாரங்கள் செய்தார்கள்.

A THIEF'S BAD BARGAIN.

**ஒரு திருடனின் நஷ்டவியாபாரம்.**—சீமையில் ஒரு நாள் கூட்டமாயிருந்த ட்ராம்வண்டி ஒன்றில் ஒரு ஸ்திரீ ஏறினள். அங்கிருந்தவர்களில் ஒருவன் பெரிய மனுஷன்போல் உடுப்பணிந்துகொண்டும், கையில் ஒருநல்ல வைர மோதிரம் போட்டுக்கொண்டும் இருந்தான். அவனையே எல்லாரும் கவனித்தார்கள். கடைசியாக மேற்சொல்லிய ஸ்திரீ ஒரு இடத்தில் வண்டியைநிறுத்தச் சொன்னள். மெதுவாக இறங்கும் பொழுது மேற்சொல்லிய திருட்டுப்பெரியமனுஷன் அருகில் இருந்துகொண்டு அவள் கீழே விழுந்துவிடாமலிருப்பதற்கு ஒத்தாசை செய்வதுபோல் அவளைப்பிடித்து இறக்கிவிட்டான். அப்படி இறக்கிவிடும்பொழுது ஸ்திரீயின் சட்டைப் பையிலிருந்த மணிப்பையை மெதுவாக எடுத்துக்கொண்டு விட்டான். அந்த ஸ்திரீக்கு அது தெரியாமல் நேரே நகைக்கடைக்கு ஏதோ மோதிரம் வாங்கப்போய், ஒரு மோதிரமும் வாங்கி, பணம்கொடுப்பதற்கு சட்டைப் பையில் பணப்பையைப் பார்த்தால், பையைக்காணோம்! நன்றாய்த்தேடினள் பணப்பைக்கு பதிலாக ஒரு வைர மோதிரம் அகப்பட்டது. அதை நகை வியாபாரியிடம் என்னபெறும் என்று கேட்கவே, "30 பவுன் பெறும்" என்றான். அவள் பணப்பையில் 1 பவுன்தான் வைத்திருந்தாள். 29 பவுன் லாபமாய்ப் போய்விட்டது. திருடனுக்கு 1-க்கு 30 நஷ்டம்.

## CURIOSITIES.

## விநோதங்கள்.

---

BORN THREE CHILDREN.

**ஒரே முறையில் மூன்று பிரஸவம்.**—அழகாபுரியில் ஒரு செட்டியார் வீட்டில் ஒரு ஸ்திரீ சில தினங்களுக்கு முன் ஒரே முறையில் மூன்று ஆண் குழந்தைகளை யீன்றாள். அக்குழந்தைகளுக்குப் பிறந்த முறைப்படி ராமன், லட்சுமணன், பாதனெனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

HUSBAND AND WIFE RECONCILED.

**புருஷனும் பெண்சாதியும் ஸமாதானமானார்கள்.**—அயோவா என்கிற இடத்தில் ஒரு புருஷனுக்கும் அவனுடைய பெண்சாதிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்ததாம். அதற்கு பெயரிடுங்காலத்தில் இருவருக்கும், அதற்கு தகப்பன்பெயரை வைப்பதா அல்லது தாயின் பெயரை வைப்பதா என்கிறதைப்பற்றி தர்க்கம் உண்டாகி விட்டது. இந்தர்க்கத்தில் கணவன் தன் பெண்சாதியைத்துறந்தான். இருபது வருஷங்களுக்குப் பிறகு பிள்ளை பெரியவனானதும் அவனாலேயே பிரிந்த தலைவனும் தலைவியும் பழையபடி கூடிக்கொள்ள நேர்ந்ததாம்.

A SNAKE IN A HAT.

**டொப்பிக்குள்ளிருந்த பாம்பு.**—பீஹார் நாட்டைச் சேர்ந்த பாலா என்னுமிடத்தில் வசித்திருந்த ஐரோப்பியன் ஒருவன் தான் வெளியே போனபோது, அதற்குமுன் தன் படுக்கையின்மேல் வைத்திருந்த தனது டொப்பியை எடுத்து தன் தலையில் போட்டுக்கொண்டு சென்றானும். செல்லும் வழியில் தலையில் ஏதோ நிண்டுவதைப்போல் இருப்பதாக அறிந்த அவன் டொப்பியை எடுத்துப்பார்க்கையில் அதற்குள் ஒரு விஷநாகமிருந்ததாம். அது அவனைத் தீண்டாமலிருந்தது அதிசயமேயாகும்.

SLEPT FOR SIX MONTHS.

**ஆறுமாதம் நித்திரை செய்தான்.**—பாரீஸ் பட்டணத்தில் மோம்பெல்லியே ஆஸ்பத்திரியில் எமீல கோத்ராங் என்றகொடி முந்திரிகைத் தோட்டக்காரன் ஒருவன் ஆறுமாதகாலமாய் நித்திரையிலிருந்து சென்ற மாதம் 10-ந்தேதி சவுக்கியமாய் விழித்தெழுந்தானும். அவனுடைய நீண்ட நித்திரையில் அவனுக்குத் தினந்தோறும் 5 பைண்ட் பால் குழாய் வழியாய் உள்ளுக்கு ஆகாரமாக இறக்கப் பட்டது. ஆப்ரிக்காவில் வியாபித்திருக்கும் நித்திரை ரோகம் என்ற வியாதியல்லவென்றும், ப்ராஞ்சு தேசத்தில் அவ்வியாதி கிடையாதென்றும், அந்தத் தோட்டக்காரனுக்கு ஸ்வபாத்திலேயே தூக்கத்தைப் போன்ற ஓர் அசமந்தம் உண்டாயிருக்க வேண்டுமென்றும் வைத்தியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

WHITE CROW.

**வெள்ளைக் காகம்.**—காம்பக்குடி (புதுக்கோட்டை) என்ற ஊருக்குச் சமீபமாயுள்ள இருங்களன் விடுதிகிராமத்திற்குப் போயிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரவர்கள் நாளது மாதம் இரண்டாம் தேதி ஒரு மரத்திலிருந்து தவறிக் கீழேவிழுந்த ஒரு வெள்ளைக் காகத்தின் குஞ்சை எடுத்து ஒரு கூண்டிலடைத்துக் கொணர்ந்திருக்கிறார். அதற்கு இன்னும் ஆகாரங்களைத் தானே தின்னத்தெரியவில்லை. சப்தம் மட்டில் ஜாதிக்கு விரோதமில்லாமலிருக்கிறது. அதன் சரீரம் முழுதும் வெளுப்பு, மூக்கும் வெளுப்பு, கண் உயர்ந்த சோமேதக ரத்தினத்தின் வர்ணம்போலிருக்கிறது. இது ஆச்சரியமென்றே ஸகலரும் வந்து பார்த்துப்போகிறார்கள். இதை சமஸ்தான பிராணிகளின் காட்சிச் சாலையில் வைக்கக் கொண்டுபோகிறார்.—ஜனானுகூலன்.

A CURIOUS GOAT.

**ஒரு விநோத வெள்ளாடு.**—ஆகஸ்டு மாதம் 23ந் தேதி பகல் 12 மணிக்கு ஹிந்துப்பூரில் ஒரு வெள்ளாடு முன்புறத்தில் ஒரு தலையும் இரண்டு முகமும் பின்புறத்தில் நான்கு கண்களும் காதுகளுமுடைய ஒரு குட்டிபோட்டது. இது இரட்டைகுட்டிபோலிருக்கிறது. இரண்டு குட்டிகளின் கழுத்தும் மார்பும் ஒன்று சேர்ந்து இரண்டு மார்பிலும் முன்கால்கள் இரண்டிருக்கின்றன. வயிறும் இடுப்பும் இரண்டு பின்கால்களாலும் வாலினாலும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நாபிக்கொடி ஒன்றுதானிருக்கிறது. இக்குட்டிகள் உயிருடன் பிறந்து சில நிமிஷத்தில் இறந்துபோயின. இரண்டும் பெண் குட்டிகளே.



## NEWS OF THE MONTH.

## மாஸ வர்த்தமானங்கள்.

### INDIAN NEWS.

### இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

HIS MAJESTY'S DARBAR SPEECH.

**மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியின் தர்ப்பார் பேச்சு.**—"இன்றையதினம் நான் உங்களோடிருப்பதானது எனக்கு மனப்பூர்வமான ஆநந்தத்தைக் கொடுக்கிறது. இந்தவருஷம் முழுவதும் மஹாராணிக்கும் எனக்கும் பல பெரிய சடங்குகள் இருந்ததோடு எப்பொழுது மில்லாத அலுவல்களும் இருந்தன. ஆனால் அந்த அலுவல்களெல்லாம் சந்தோஷகரமானவைகளே. நான் உங்களை முன்தடவை பார்த்து நாளாகி என்னுடைய வெகுதூரமுள்ள தேசத்துக்குப் போனபோதிலும், நாங்கள் உங்களிடத்தில் கொண்ட ஆசையும் ஆநந்தமான ஞாபகமும் உங்களை மறுபடியம் வந்துபார்க்கவேண்டுமென்று எங்களைத் தூண்டின. ஆகையால் எங்கள் வீடுபோலவே நடத்திவந்த உங்களுடைய தேசத்தைப்பார்க்க இந்த நீண்டயாத்திரை செய்யத்தொடங்கினோம். இப்படிச் செய்ததால் நான் ஜூன் மீ 22 தேதி வெஸ்ட்மினிஸ்டர் ஆபீயில் ஈசுவரகிருபையால் மகுடாபிஷேகமானதை இந்தியாவிற்கு நேரில் வந்து விளம்பரம் செய்வதாக சொன்னதை நிறைவேற்ற முடிந்ததாயிற்று. மஹாராணி சக்ரவர்த்தினியுடன் நான் இங்கேவந்து இந்தியாவிலுள்ள பக்தியுள்ள மன்னர்களுக்கும் விசுவாஸமுள்ள ஜனங்களுக்கும் எங்களுடைய அன்பைக்காட்ட ஆவலுள்ளவனாயிருப்பதோடு, இந்தியாவின் க்ஷேமமும் சந்தோஷமும் எங்கள் ஹ்ருதயத்திற்கு எவ்வளவு அருமையாய் இருக்கிறதென்பதையும் காட்ட ஆவலுள்ளவனாயிருக்கிறேன். என்னுடைய மகுடாபிஷேகக் கொண்டாட்டத்தை பார்க்காதவர்கள் டெல்லியில் நடக்கும்வைபத்தைப் பார்க்க வேண்டுமென்பது என்கருத்து.

"இந்தப் பெருங்கூட்டத்தைப் பார்க்க எனக்கும்சக்ரவர்த்தினிக்கும் உண்மையான சந்தோஷமும் திருப்தியும் உண்டாகின்றன. என்னுடைய கவர்னர்களையும், நம்பிக்கை பெற்ற உத்தியோகஸ்தர்களையும், என்னுடைய மேலான மன்னர்களையும், ஜனப்ரதிநிதிகளையும், என் இந்திய ஸமஸ்தானங்களைச்சேர்ந்த ராணுவங்களின் டெபுடேஷன்களையும், இந்தக் கூட்டத்தில் பார்த்துச் சந்தோஷமும் திருப்தியும் அடைகிறேன். அவர்கள் எனக்கு பக்தியுடன் செலுத்த விரும்பும் சேவாஞ்சலியையும் ராஜ பக்தியையும் மனப்பூர்வமான திருப்தியுடன் நான் நேராகப் பெறுவேன். சரித்திரத்தில் நிலைபெறக்கூடிய இந்த ஸமயத்தில் மன்னர்களும் ஜனங்களும் ஒற்றுணர்ச்சியையும் அன்பு வாய்ந்த நல்லெண்ணத்தையும் பாராட்டி என்னோடு ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்ற எண்ணம் என்மனதில் ஆழப்பதிகிறது. இந்த உணர்ச்சிகளுக்கு அறிகுறியாக என்னுடைய விசேஷ தயவையும் மதிப்பையும் காட்டும் குறிகளால் என்னுடைய மகுடாபிஷேகஸம்பவம் ஞாபகத்திலிருக்கும்படி செய்ய விரும்புகிறேன். இன்று இன்னும் சில நேரம் பொறுத்து இவைகள் இன்னவையென்றும் இந்தக் கூட்டத்துக்கு என் கவர்னர் ஜெனரலைக்கொண்டு சொல்லிவிப்பேன். முடிவில், என்னுடைய பூஜியர்களான மூதாதைகளால் உங்களுடைய சுதந்திர பாத்தியங்களைக் காப்பதாகச் செய்த உறுதிகளை புதிப்பிக்க இந்த ஸமயம் வாய்த்ததென்று நான் சந்தோஷப்படுகிறேன். உங்களுடைய க்ஷேமம், அமைதி, திருப்தி, இவைகளைப்பற்றி நான் கொள்ளும் கவலையைத் தெரிவிக்க ஸமயம் நேரிட்டதென்றும்சந்தோஷப்படுகிறேன். என்னுடைய ப்ரஜைகளுக்குக் காவலாய் கடவுள் அருள் இருந்து அவர்களுடைய ஸந்தோஷத்தையும் வளப்பதையும்முற்படுத்த என்னாலியன்ற முயற்சியில் உதவி புரிவாராக. இங்கிருக்கும் சாமந்த மன்னர்களுக்கும் பிரஜைகளுக்கும் என்னுடைய அன்புவாய்ந்த வாழ்த்துக்களைச் செய்கிறேன்."

TLE PROCLAMATION.

**விளம்பரம்.**—நாளதுமாஸம் 12-ம்தேதி டெல்லி தர்பாரில் சக்ரவர்த்தி அவர்களுக்கு மகுடாபிஷேகமானதாக வாசித்தவிளம்பரம் பின் வருமாறு:—"நமது அரசாட்சியின் முதல் வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தாம் வருஷம் ஜூலைமாதம் பத்தொன்பதாம் தேதியும் நவம்பர் மாதம் ஏழாம் தேதியுமுள்ள நம்முடைய ராஜ விளம்பரங்களினாலே, ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் ஜூன்

மாதம் இருபத்திரண்டாம் தேதியில் நமது ராஜ முகுடாபிஷேக மஹோற்சவத்தை ஸர்வ சக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் கொண்டாடவேண்டுமென்னும் நமது ராஜ உத்தேசத்தை நாம்பிரசித்தப்படுத்தி அறிவித்தபடியாலும்!

"ஸர்வசக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் சென்ற ஜூன்மாதம் இருபத்திரண்டாம் தேதி வியாழக்கிழமை மேற்படி மஹோற்சவத்தை நாம் கொண்டாடக் கூடியவர்களாயிருந்தபடியாலும்;

"நமது அரசாட்சியின் முதல் வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் மார்ச்சுமாதம் இருபத்திரண்டாம் தேதியுள்ள நம்முடைய ராஜவிளம்பரத்தினாலே மேற்படி மஹோற்சவமானது அந்தப்படி கொண்டாடப்பட்டதென்று நம்முடைய இந்திய ராஜ்யங்களுக்குள் நம்மிடத்தில் அன்புபாராட்டும் எல்லா ப்ரஜைகளுக்கும் நாமே நேரில் பிரசித்தப்படுத்துவதும், நம்முடைய கவர்னர்களையும், லெப்டினெண்ட் கவர்னர்களையும், நம்முடைய மற்ற உத்தியோகஸ்தர்களையும், நமது சம்ரக்ஷணையிலிருக்கும் சுதேச ராஜ்யங்களின் அரசர்களையும், அதிபதிகளையும், பிரபுக்களையும், நமது இந்திய ராஜ்யத்தைச் சேர்ந்த ஸகல மாகாணங்களின் பிரதிநிதிகளையும் நமது ஸந்நிதானத்துக்கு வரவழைப்பதும் நம்முடைய கோரிக்கையென்றும் விருப்பமென்றும் நாம் தெரிவித்தபடியாலும்:

"நமது இந்த ராஜ விளம்பரத்தினால் நாம் இப்போது அதைப் பிரசித்தஞ்செய்து, நம்முடைய ஸகல உத்தியோகஸ்தர்களுக்கும் இப்போது டெல்லியில் கூடியிருக்கும் ஸகல அரசர்களுக்கும் அதிபதிகளுக்கும் பலவகையான ஜனங்களுக்கும் நாம் மகாராஜாவாகவும் சக்ரவர்த்தியாகவும் வாழ்த்துகூறி, நமது இந்திய ராஜ்யத்தில் நாம் ஆழ்ந்த அன்பு வைத்திருப்பதையும் அதன் க்ஷேமத்திலும் அபிவிருத்தியிலும் நாம் இடைவிடாமல் அக்கறை கொண்டவர்களாயிருப்பதையும் இனி எப்போதும் அப்படியே இருந்து வருவதையும் அவர்களுக்கு உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

"டெல்லியில் நமது ராஜ ஸபையிலே நமது அரசாட்சியின் இரண்டாவது வருஷமாகிய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் டிஸம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதியில் கொடுக்கப்பட்டது. மகாராஜ சக்ரவர்த்தி அவர்களைக் கடவுள் ரக்ஷிப்பாராக"

LAYING THE FOUNDATION STONE FOR NEW DELHI.

**புது டெல்லிக்கு சக்ரவர்த்தி அஸ்திவாரம் போட்டது.**—இந்த மாஸம் 15-ந்தேதி காலமே சக்ரவர்த்தி இந்தியாவுக்கு இப்போது தலை நகராய்விட்ட டெல்லியில் புதுப்பட்டணம் ஒன்று நிர்மாணிக்கும் நோக்கத்தோடு தர்பார் நடந்த இடத்தில் அஸ்திவாரக்கல் நட்டார். இந்த ஸமயத்தில் லார்ட் ஹார்டிஞ்ஜ் பேசினதை சுதேசமித்திரன் மொழிபெயர்ப்பைத் தொடர்ந்து எழுதுகிறோம்.

"காரொனேஷன் தர்பாரின்போது இந்தியாவுக்கு டெல்லி இனி தலைநகராகுமென்று விளம்பரப்படுத்தினதற்கு இப்போது மாட்சிமை தங்கிய தாங்கள் இந்தத்தலை நகரத்தில் புதிதாய் நிர்மாணிக்கப்படப்போகும் புதுப்பட்டணத்துக்கு அஸ்திவாரக்கல் நட்டு இசைந்தது முத்திரை வைத்தது போலாகிறது. அந்த ஸமயம் ஒப்புயர்வற்ற சிறப்புடன் நிறைவேறினதைவிட அதனால் கிளப்பப்பட்ட ராஜபக்தியினால் எப்போதும் அது ஞாபகத்திலிருக்கும். டெல்லியைச் சுற்றிப்பல தலைநகர்கள் அப்போதப்போதுண்டாகி அவைகள் ஆதிகாலத்துச் சரித்திரத்தில் மறைந்திருக்கின்றன ஆயினும், இவைகளில் எதுவும் மாட்சிமை தங்கிய தாங்கள் இப்போது செய்யப்போகிற சடங்குகளைவிடப் பிரகாசமான சடங்குகளுடன் உண்டானதில்லை. எதுவும் பிற்காலத்து வளப்பமும் மகிமையும் நிலைக்கும்படியான ஸந்தர்ப்பங்களுடன் உண்டானதில்லை யென்பது நிச்சயம்.

"கல்கத்தாவிலிருந்து தலை நகரத்தை டெல்லிக்கு மாற்றுவது பூரணமான தீர்க்காலோசனையின்றி செய்யப்படவில்லை. இது போன்ற யோசனைகள் 1868-ம் வருஷம் முதல் கடந்து போன பல தடவைகளில் செய்யப்பட்டிருக்கின்றன. விவாதத்துக்குரிய அம்சங்கள் பலவற்றைப் பற்றிச் சரியான அபிப்பிராயங்கள் செய்ய ஏற்கெனவே ஸாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எந்தப் பெரிய மாறுதலும் அது எவ்வளவு நலந்தரத் தக்கதாயிருந்த போதிலும் சிலருக்கு நஷ்டமில்லாமலாவது ஸ்தல உணர்ச்சிகளுக்கு விரோதமில்லாமலாவது செய்யப்படுதல் கஷ்டம். ஆனாலும் என் ஆலோசனை ஸபையிலுள்ள மெம்பர்கள் பேராலும் என் பேராலும் மாட்சிமை தங்கிய தங்களுடைய பிரதிநிதியாக நான் பேசக்கூடுமானால், எந்த மாறுதலும் இதைப்போல பலருக்கு நன்மை செய்வதாய் இருந்ததில்லை; சிலருக்கு நேரிடுமென்று நினைக்கக்கூடிய தீங்குகள் சில காலத்துக்கு மட்டும் நேரிட்டு பின்னால் கிடைக்கக் கூடிய நன்மைகளில் மறைந்துவிடும். மாட்சிமை தங்கிய தங்களுடைய மந்திரிகளுடைய ஆலோசனையின் பேரில் கான்ஸ்டிட்யூஷன் (ராஜாங்கமுறை)படி செய்த தீர்மானம். அதனால் அவசியமாயுண்டாகக் கூடிய மாறுதல்களோடு இந்த ஏகாதிபத்தியத்தின் கவர்ன்மெண்ட் முறைகளில் விசாலமான முற்போக்குள்ள திருத்தமாய்முடியும்; போட்டியையும் விரோதத்தையும் இல்லாமற் செய்து, பொதுவாய் அமரிக்கையும் திருப்தியும் குடிகொண்ட சகாப்தத்தை யுண்டு பண்ணும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானம் செய்த விதத்தைத் தவிர, அபிப்பிராயபேதமாவது விவாதமாவது இல்லாமலும் மாட்சிமை தங்கிய தங்களுடைய பக்தியுள்ள பிரஜைகளிற் பல வகுப்பாரும் உற்சாகத்துடனும் விசுவாசத்துடனும் ஆதரிக்கக் கூடியபடியும் வேறு விதமாய்ச் செய்தல் ஸாத்தியமல்ல. இந்தக் கல்லுகள் நடப்படும் ஸ்தலத்தைச் சுற்றி நாம் நிர்மாணிக்கக் கருதியிருக்கும் மகா பட்டணமானது அதன் உற்பத்தியான சமயத்துக்கு உற்றதாயிருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். இந்தப் பழைய நாகரீகத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் ஸ்தானமாயுள்ள இடத்தில் மாட்சிமை தங்கிய தாங்கள் நடும் கல்லுகளே தங்கள் அருளுள்ள பிரசன்னத்திற்கும், தங்களுடைய பிரஜைகளுக்கு விளம்பரஞ்செய்து பிரசுரிக்கப்பட்ட மகாமுக்கியமான தீர்மானத்திற்கும், அடையாளமாயிருக்கும்."



சக்ரவர்த்தியின் பேச்சாவது :— "சக்ரவர்த்தினிக்கும் எனக்கும் டெல்லியை விட்டுப் போவதற்கு முன்னால் நாம் நிற்கும் இடத்தில் நிர்மாணமாகப் போகிற பட்டணத்துக்கு அஸ்திவாரக்கல் நடக்கூடியதாயிருப்பது பெருந்திருப்தியாயிருக்கிறது. மூன்று தினங்களுக்கு முன்னால் என்னுடைய காரொனேஷன் தர்பார் சிறப்பாயும் எங்கள் மனதில் படியும்படியாயும் இருந்த ஸமயத்தில் நான் செய்த முக்கியமான பிரசித்தமானது பூர்த்திபெற இது முதலெடுப்பாகும். இப்போது செய்யப்படப்போகும் பெரும் மாறுதல்களால் எதிர்பார்க்கக் கூடிய நலந்தரத்தக்கனவாய் நெடுந்தூரம் செல்லத்தக்க பலன்கள் பூர்த்தி பெறுமென்றும் இந்தியாவுக்கு திருத்தம் பெற்ற நிர்வாகத்தை ஜனங்களுக்கு அதிகமான சுகத்தையும் வளப்பத்தையும் கொடுக்குமென்றும் நான் மனப்பூர்வமாய்க் கோருகிறேன். இங்கு கட்டப்படும் பட்டணத்து ப்ளானும் டிஸைனும் தக்கபடி யோசனையுடனும் ஜாக்கிரதையாயும் செய்யப்படுமென்றும் அந்தப் புது சிருஷ்டியானது இந்த அழகான நகரத்துக்குப் பொருந்தியதா யிருக்குமென்றும் கோருகிறேன். இன்று இவ்வளவு மங்களகரமாய் ஆரம்பிக்கும் வேலைக்கு ஈஸ்வரக் கடாக்ஷம் பூரணமாயிருக்க வேண்டுகிறேன்."

REPLY TO THE DELHI ADDRESS.

**டெல்லி அட்ரெஸுக்குச் சொன்ன பதில்.**—சக்ரவர்த்தி டெல்லி அட்டிரெஸுக்குச் சொன்ன பதிலாவது:—

"உங்களுடைய விக்ஞாபனப் பத்திரத்தில் கண்ட வரவேற்புக்கும் நற்சிந்தனைக்கும் நானும் சக்ரவர்த்தினியும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். சிலமாசங்களுக்கு முன்னால் இந்தியாவில் தோன்றும் போலிருந்த எப்போதுமில்லாத வரட்சியால் நாங்கள் இத்தேசத்துக்கு வரும் சமயம் சந்தோஷமற்றுப் போமென்று பயப்பட்டோம். ஜனங்களுடைய க்ஷேமமானது பருவமழையினாலும் பூமியின் நல்ல விளைச்சலாலும் பாதிக்கப்படுகிறபடியால் நம்பிரஜைகளின் பெரும்பான்மையோருக்கு இந்த வரட்சி துக்ககரமான ஆபத்தாய் முடியுமென்று பயந்தோம். இப்போது இந்த வரட்சியானது விஸ்தீரணத்தில் குறைந்து போயிற்றென்றும், போக்கு வரத்து வசதிகளும் பாசனவேலைகளும் அதிகப்பட்டிருப்பதால் பூர்வம் பஞ்சத்தால் ஜனங்கள் வருந்தி மாண்டது போல இப்போது வருந்தி மாளமாட்டார்களென்றும் சந்தோஷப்படுகிறோம். மற்றவழிகளிலும் இந்தியாவின் விவசாய நிலைமை திருந்தியிருக்கின்றது விவசாயிகளின் அனுஷ்டானங்கள் பழய வழக்கத்தைப் பற்றினவாயிருந்தாலும் பொறுமையும் உழைப்பும் சாமார்த்தியமும் உள்ளவர்கள். சமீபத்தில் சாஸ்திரத்தின் சாதனங்களால் விவஸாயம் நன்மை பெற்றிருக்கின்றது. பூமி வளப்பத்தை அதிகப் படுத்துவதிலும் கால்நடைகளின் வியாதிகளுக்குச் சிகிச்சை செய்வதிலும், பூமியைப் பயிரிடுவோருக்குப் பயங்கரமான விரோதியாயிருக்கும் பூச்சிகளைக் கொல்லுவதிலும், சாஸ்திரப் பிரயோகத்தினால் பெரும் பலன்கள் பெறக்கூடுமென்று சில தினங்களாக நிரூபணமாயிருக்கின்றது. ஜனங்களுக்குள் ஐக்கிய முறையை யுண்டுபண்ணி முழுமையும் உபயோகப்படுத்தக் கூடுமானால் இத்தேசத்து விவஸாய உரிமைகள் இனி பெருமையும் மகிமையும் பெறுமென்று நினைக்கிறேன்.

"எங்கள் வரவை நோக்கி உங்கள் நகரத்தை அலங்காரங்களால் தயார்செய்ய நீங்கள் செய்த முயற்சிகள் பயன்பட்டதை நாங்கள் உணர்கிறோம் சென்ற இருபது வருஷகாலமாக சுகாதார நிலைமையைச் சீர்படுத்துவதில் நீங்கள் அசிரத்தையாயிருக்கவில்லை, உங்களுடைய வடிகால்களைச் செப்பனிட்டு நல்ல பயனைப் பெற்றிருக்கிறீர்கள். சுத்தஜலத்தைப் பெற்று காலராமுதலிய தொற்றுவியாதிகள் தோன்றாமற் செய்ததால் அதற்கான செலவுகள் நல்ல செலவுகளாகவே ஆயின. டெல்லியில் காடும் சதுப்பமாயிருந்த பூமியை விலாசமான தோட்டமாக்கி மேலாவைச் சுத்தபடுத்தினபடியால் விஷஜுரம் எப்போதும் காணுவதுபோல் இந்தவருஷம் காணவில்லையென்று அறிகிறேன். என்னுடைய இந்தியப் பிரஜைகளுக்கு நல்ல சரீரசுகமும் பத்திரமும் உண்டாகும்படி இங்கு செய்த மாதிரி எங்கும் செய்யப்படுமென்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன். இந்த பயங்கரமான வியாதிகளாகிய ப்ளேக், விஷஜுரம், காலரா இவைகள் வராமலிருக்கும் உபாயம் ஜனங்களாலும் அவர்களுடைய தலைவர்களாலுமே செய்யப்படவேண்டும். அதிகாரிகள் செய்யும் சாஸ்திர பூர்வமான முயற்சிகளோடு இவர்கள் மனமொப்பி ஒத்துழைக்கவேண்டும். இந்தக் கொடும் வியாதிகளின் காரணங்கள் ஸ்தல நிலைமைகளைக் கற்பதாலும் ஆராய்ச்சியினாலும் வெகுவாய் அறியப்பட்டிருக்கின்றன; ஆனாலும் இன்னும் செய்யவேண்டியதுண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக, சாமானிய ஜனங்களுக்கு அறிவை யூட்டி அவர்களுடைய சாவதானத்துக்கும் க்ஷேமத்துக்கும் தகுந்த முன் ஜாக்கிரதைகளை அறிந்து அனுசரிக்க ஆரோக்கியசாஸ்திரத்திலும் வீட்டு சுகாதாரத்திலும் மூலாதாரங்களை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

"உங்களுடைய பழய கீர்த்திபெற்ற நகரத்துக்கு

மறுபடியும் வரப்போவதைப்பற்றி சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தோம். இத்தேசத்தில் ஞாபகமிருக்கக்கூடிய சம்பவங்களுக்கு அது ஸ்தலமாயிருந்தது. இவைகளிற் சில என்னுடைய வமிசத்தோடும் சிம்மாசனத்தோடும் நெருங்கி சம்பந்தப்பட்டவைகள். இனி எங்களுக்குள்ள சம்பந்தம் இன்னும் நெருங்கியதாகும். உங்கள் நகரத்தின் பூர்வ சரித்திரத்தால் அதற்கு விநோதமான கவர்ச்சியுண்டாயிருக்கிறது. பூர்வ காலத்து ராஜ வமிசங்களின் சின்னங்கள் எங்கு பார்த்தாலும் கண்ணில் விழுகின்றன. சிறப்பான மாளிகைகளும் ஆலயங்களும் காலத்தாலுண்டாகும் நாசத்துக்குத்தப்பி யிருகின்றன. இவைகளெல்லாம் பூர்வகாலத்துப் பெருமைக்கு நிதர்சனங்கள். இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஒரு மத்திய ஸ்தலமான ராஜ நகரத்தை நிச்சயம் செய்ததில் இந்த பழய நிலைமைகளும் லக்ஷணங்களும் நான் சமீபத்தில் வெளியிட்ட தீர்மானத்துக்கு முக்கிய காரணங்கள். இன்று முதல் ஏகாதிபத்தியத்துக்கு டெல்லி ராஜஸ்தலமாயிருக்கும். இந்த அழகான நகரம் பஞ்சாப் மாகாணத்தில் சேர்க்கப்பட்ட 50 வருஷ காலத்தில் அதை பிரபலப்படுத்திச் செய்த முயற்சிகளை நான் ஒப்புக்கொள்கிறேன். அதனுடைய பூர்வீக சரித்திரச் சின்னங்களை காப்பாற்றி டெல்லி இந்திய ஏகாதிபத்தியத்துக்கு ராஜஸ்தலமாகி அதனுடைய பூர்வீக கௌரவமான நிலைமைக்கு இப்போது அதை உயர்த்த உங்கள் கவர்ன்மெண்ட் கவலைப்பட்டிருக்கின்றதையும் அறிவேன். இந்த மாறுதலால் ராஜாங்க நிர்வாகத்தில் பல புதுமைகள் செய்யும்படி நேரிடும். ஆயினும் டெல்லி மாகாணக் கவர்ன்மெண்டின் முக்கியஸ்தலமாகயிருந்து அதனுடைய பழய பெருமையையும் ஜனங்களின் க்ஷேமத்தையும் பற்றி ஜாக்கிறதை பெற்றதுபோல இம்பீரியல் ராஜஸ்தலமாக அதே ஜாக்கிறதையைப் பெறுமென்பதில் சந்தேகமில்லை. டெல்லி இப்போது எந்த ஏகாதிபத்தியத்துக்கு ராஜஸ்தலமாயிற்றோ அதில் அமைதியும் முற்போக்கும் நீதியும் வளப்பமும் நிலை நின்று, அது உங்கள் நகரத்தின் பூர்வீகப் பேருடன் இன்னும் அதிகப் பெருமையும் மகிமையும் தங்கிய சரித்திரத்தையும் உண்டாக்குமென்று நான் பிரார்த்திக்கிறேன்."

REPLY TO THE MADRAS ADDRESS.

சென்னை அட்ரெஸுக்கு சொன்னபதில்.—"சென்னை ராஜதானியின் ஜனங்கள் பேரால் நீங்கள் செய்திருக்கும் பக்தியும் அடக்கமுமுள்ள விக்ஞாபனப் பத்திரத்துக்கு நானும் சக்ரவர்த்தினியும் சந்தோஷப்படுகிறோம். நமது இந்திய சமஸ்தானங்களில் பழய ராஜதானியாகிய சென்னையில் வசிக்கும் ஜனங்களுடைய பக்தியால் எங்கள் மனம் நெகிழ்கின்றது. இதில் வசிக்கும் 4 கோடி ஜனங்கள் எங்களிடத்தில் நேரான பிடிப்பிருப்பதைக்காட்ட ஒன்று சேர்ந்ததற்காக நன்றி கொள்கிறோம். தென்னிந்தியாவில் பல ஜாதி மத ஜன வேற்றுமைகளைக்காட்டி கையெழுத்திட்டிருப்பது நீங்கள் எங்களை வரவேற்றதற்குவிலைபெற்ற அத்தாட்சியாகச் சேமிக்கப்படும். இந்தியாவுக்கு இப்போது வந்த சமயத்தைப்பற்றி நீங்கள் சொல்லியிருக்கும் வார்த்தைகளையும் 1906-ம் வருஷத்தில் சென்னையில் நாங்கள் இருந்ததை நீங்கள் பட்சமாய் நினைத்திருப்பதையும் நாங்கள் பூராவாய் அறிகிறோம். எங்களுக்கு அப்போது நீங்கள் செய்த உபசாரத்தை நாங்கள் மறக்கவில்லை. உங்களுடைய பேர்பெற்ற நகரத்தை நாங்கள் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்குமாறு எங்களுக்கு அவகாசமில்லாததைப் பற்றி நாங்கள் விசனப்படுகிறோம். இந்திய ஏகாதிபத்தியத்தில் எனக்குப் பிரியமான பாட்டியாரும் பிதாவும் காட்டின உணர்ச்சியையும் கரிசனத்தையும் பற்றி நீங்கள் சொல்லுவதைக் கேட்க எனக்கு ஆழ்ந்த திருப்தி யுண்டாகின்றது. அவர்களுடைய உணர்ச்சிபோல என்னுடையதும் இருக்கிறதென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. என் இந்தியப் பிரஜைகளின் க்ஷேமமும் வளப்பமும் என்னுடைய மனப்பூர்வமான கவலைக்கு விஷயங்களாயிருக்குமென்று நான் சொல்லவேண்டியதில்லை."—சுதேசமித்திரன்.

THE LATE HON. MR. V. KRISHNASAMI AIYER.

**காலஞ்சென்ற கனம் வி. கிருஷ்ணஸாமி அய்யர்.**—நாளது மீ 28-ம் தேதி காலமே 5 மணிக்கு கனம் வி. கிருஷ்ணஸாமி அய்யர் இறந்துபோய் விட்டாரென்று கேட்க ரொம்பவும் துக்கமாயிருக்கிறது. இவர் டெல்லியில் சக்ரவர்த்தியின் மகுடாபிஷேகத்துக்காகப் போயிருந்தார். அங்கே மகுடாபிஷேகத்தன்றைக்கு ஒரு சிரங்கு புறப்பட்டு கொஞ்சம் ஜுரமும் வந்தது. அதனால் டாக்டர்கள் அவர் மகுடாபிஷேகத்துக்குப் போகாமல் சென்னப்பட்டணத்துச்குப் போய்விடுவதே நல்லதென்று சொன்னதால் அப்படியே வந்துவிட்டார். இங்கே வந்து நல்ல வைத்தியர்கள் பார்த்தும் கடைசியாக அறுத்தசிரங்கு புரையோடி இறந்துபோனார். இவர் போனது இந்தியாவுக்கு, முக்கியமாய் சென்னை ராஜதானிக்கு ஒரு பெரிய நஷ்டம். படிப்பிலும், யுக்தியிலும், புத்தியிலும், பேசும் சாதுர்யத்திலும், பிடித்த காரியத்தை நிறைவேற்றுவதிலும், பணம் ஸம்பாதித்து அதை தர்மங்களில் செலவிட்டதிலும், பொதுக்காரியங்களில் சலிப்பில்லாமலும் மனம் தளராமல் உழைப்பதிலும், இவருக்கு நிகர் ஒருவருமில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இவருடைய ஜீவிய சரித்திரத்தை விரித்து எழுத இடமில்லாமையால் இவ்வளவோடு நிறுத்துகிறோம். வி. கிருஷ்ணஸாமி அய்யரைப்போல காலத்தையும் ஸம்பாத்தியத்தையும், திறமையையும் ஜனங்களுடைய க்ஷேமாபிவிருத்திக்காக அர்ப்பணம் பண்ணக்கூடிய மகான் ஸமீபத்தில் உதிப்பாரென்று நமக்குத் தோன்றவில்லை.



FOREIGN NEWS.

அந்நியநாட்டு ஸமாசாரங்கள்.

——: o :——

AN AFGHAN NEWSPAPER.

**ஆப்கானிஸ்தான் ஸமாசாரப் பத்திரிகை.**—ஆப்கானிஸ்தானத்தில் முதன் முதலில் பிரசுரமாகிய பத்திரிகையின் பிரதி யொன்று பிஷாவருக்கு எட்டியதாகத் தெரிகிறது. அதற்கு ஸுராஜால் ஆக்பர் என்றுபெயர். அது இந்த வருஷம் அக்டோபர் மாதம் 9-ம் தேதி வெளியானதாகத்தெரிகிறது. அது 15 அங்குலம் நீளமும் 10 அங்குலம் அகலமுள்ள காகிதத்தில் லெத்தக்ராப் செய்திருக்கிறது, இதிலடங்கியவிஷயங்கள்கெஜட்டு ஸமாசாரங்களும். கோர்ட்டு ஸமாசாரங்களுமாம். இதன் முதல் பிரதி எல்லாருக்கும் இனமாக அனுப்பப்பட்டது. அடுத்த பிரதிகள் 1 அணா விலையுள்ளனவாம்.

RICE CULTURE.

**நெல் ஸாகுபடி.**—இட்டிலி தேசத்துக்கு ஸமீபத்திலுள்ள வெர்ஸில்லி என்னும் இடத்தில் 1912-௵ அக்டோபர்மீ௳த்தில் நெல்ஸாகுபடியைக் குறித்து எல்லா தேசத்தாரும் கூடிப்பேசும் நாலாவது மகா சங்கம் நடக்கப்போகிறது. இதில் நெல் ஸாகுபடியைப்பற்றிய முக்கியவிஷயங்களைக்குறித்துப்பேசுவதுடன் நெல் ஸாகுபடி வியாபாரத்தில் எந்த ஸ்திதியிலிருக்கிறதென்றும், ஸுகாதார விஷயத்தில்நெல் ஸாகுபடி ஜனங்களுக்குண்டாக்கும் லாபநஷ்டத்தை குறித்தும், நெல் ஸாகுபடியில் இதுவரையில் செய்திருக்கும் சாஸ்திர ஆராய்ச்சியைக் குறித்தும், பயிருக்குஎவ்வளவு தண்ணீர் அவசியமாய்த்தேவை என்பதையும், இன்னும் இதைப்போலொத்த அனேக முக்கிய விஷயங்கள் பேசப்படுமாம். தவிர. அந்த தேசங்களில் உபயோகிக்கும் கருவிகளும் அரிசி செய்யும் யந்திரங்களும், அநேகவித அரிசி நெல் தினுஸுகளும் அவைகளின் பேதா பேதங்களும் விவரிக்கப்படுவதுடன், முக்கியமாய் விதைபொறுக்கி எடுத்துப் பயிர் செய்வதாலுண்டாகும் விருத்திகளையும் குறித்துப் பேசுவார்களாம். இத்துடன் நடக்கும் காட்சிசாலையில் நெல் பயிருக்கு வெவ்வேறு விதமாய் நீர்ப்பாய்ச்சும் விதங்களையும், திருஷ்டாந்த பூர்வமாய் காட்டப்போகிறார்களாம்.

THE THEATRE.

**நாடகசாலை,**—சென்ற வருஷத்தில் மட்டும்ப்ரிட்டிஷ் ஜனங்கள் நாடகங்கள் பார்ப்பதில் $2\frac{1}{2}$ கோடி பவுன் செலவு செய்திருக்கிறார்களாம். சில வருஷங்களுக்கு முன் லண்டனில் 12-நாடகசாலைகளும் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் 80 நாடகசாலைகளுமே யிருந்தன. தற்காலம் லண்டனில் மாத்திரம் 67-ம், சுற்று மாகாணங்களில் 738-ம் இருக்கின்றன. 40,000 ஜனங்கள் நாடகத்தை ஜீவனமாகக்கொண்டிருக்கிறார்கள். உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் அமெரிக்காவில் தான் நாடகத்தை ஜீவனமாகக் கொண்டவர்கள் அதிகம். அமெரிக்காவுக்கு அடுத்த படியில் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தைத்தான் சொல்ல வேண்டும்.

WHITE ELEPHANT.

**வெள்ளை யானை.**—ஸயாம் புது அரசர் ஆளுகைக்கு வந்த பிறகு முதல் முதல் பிடிக்கப்பட்ட வெள்ளையானையை பாங்காங் என்னும் பிரதான நகரத்திற்கு சிறிதுநாட்களுக்கு முன்பு வழக்கப் பிரகாரம் சடங்குகளுடனும் பழகின யானைக் கூட்டங்களுடனும் சோல்ஜர்களும் பின்தொடர, பாண்ட் வாத்தியங்களுடன் கொண்டு வந்தார்கள். வேடிக்கை பார்க்க பெருங்கும்பு கூடினது. பிறகு ராஜாவானவர் அந்த யானையைக் கட்டும் மண்டபத்திற்கு வந்து யானைக்கு நாமகரண மஹோற்சவகாலத்தில் ராஜ்ய ஆடம்பரங்களும் சடங்குகளும் அநேகமாய் ராஜாவே ஸொந்தமாக நடத்தி 'பிரா-ஸ்வேத்-வாச்சிரபாஹா' என்னும் நாமதேயம் வைத்தாராம்.

JAPANESE WOMEN.

**ஜபானிய ஸ்திரீகள்.**—இரண்டொரு வருஷங்களுக்கு முன் முதல் முதலாக ஜப்பானிய ஸ்திரீகள் கம்பெனிகளிலும், வர்த்தக சாலைகளிலும் குமஸ்தாக்களாக நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் புருஷர்களை விட ஸாமார்த்தியமுள்ளவர்களாயிருக்கிறபடியால், வியாபாரிகள் உத்தியோகங்களுக்கு அவர்களையே வைத்துக்கொள்ளுகிறார்களாம். முக்கிய பட்டணங்களாகிய டோக்கியோவிலும் யோகஹாமாவிலும் ஸ்திரீகள் ஸகலவித உத்தியோகங்களிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

## MADRAS MARKET REPORTS.

### மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் டிஸம்பர் மாஸம் 20-ம்வ ரிப்போர்ட்டுப்படி.

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு .. | 13 முதல் 22 |
| கொன்னைப்பட்டை ஷை .. | $13\frac{1}{2}$ |
| கடப்பை கடுக்காய் ஷை .. | 8 முதல் 10 |
| சேலம் ஷை ஷை .. | 17 முதல் 18 |
| நல்லெண்ணெய் ஷை .. | 105 முதல் 112 |
| புங்கம் எண்ணெய் ஷை .. | 70 முதல் 90 |
| எட்டிக்கொட்டை ஷை .. | 17 |
| விளக்கெண்ணெய் ஷை .. | 76 முதல் 77 |
| கொட்டை முத்து .. | 10 முதல் $10\frac{1}{4}$ |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பந்தர் பச்சை அரிசி 44 படி | 8 | 8 | 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 | 10 | 0 |
| கோதுமை 4 படி .. | 1 | 0 | 0 |
| கொள்ளு 195 ராத்தல் | 6 | 0 | 0 |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் .. | 10 | 0 | 0 |
| ஷை (பல்லாரி) ஷை .. | 9 | 8 | 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு | 15 | 0 | 0 |

METALS—உலோகங்கள்.

| | ரூ. |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50; பாரம் .. | 206 |
| செப்புத் தகடுகள் பாரம் .. | 250 |
| செப்புக்கட்டி ஷை .. | 220 |
| நாகம் ஷை .. | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 80 |
| ஈயம் ஷை .. | 60 |
| காரீயம் ஷை .. | 70 |
| வெள்ளீயம் ஷை .. | 196 வராகன். |

IRON—இரும்பு.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் ரூ. | $20\frac{1}{2}$ |
| சீமை .. .. .. | 40 |
| மருக்கி தகடு 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு .. .. | 27—28 |
| 8 பட்டை எஃகு .. .. | 22 |
| எஃகு வில்கட்டு .. .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 நெ. .. | 22—25 |
| சீமை .. .. .. | 40-46-49 |

## SEASON.

### காலஸ்திதி

RAINFALL.

**மழை.**—1911௵ ஏப்ரல் மீ 1-உயிலிருந்து டிஸம்பர் 31-ம் உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரி பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாக குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 33·88 | 46·25 |
| வால்டேர் | 21·95 | 42·89 |
| காக்கினடா | 31·32 | 38·90 |
| மசூலிப்பட்டணம் | 36·13 | 40·49 |
| நெல்லூர் | 37·61 | 30·10 |
| மதராஸ் | 36·53 | 49·49 |
| கூடலூர் | 45·81 | 50·92 |
| நாகப்பட்டணம் | 67·37 | 53·22 |
| பாம்பன் | 29·02 | 36·35 |
| கொழும்பு | 61·99 | 79·78 |
| திருவநந்தபுரம் | 61·42 | 59·74 |
| கொச்சி | 110·49 | 111·42 |
| கள்ளிக்கோட்டை | 99·55 | 114·29 |
| மங்களூர் | 100·98 | 123·79 |
| மெர்க்காரா | 138·34 | 123·97 |
| ஐதராபாத் | 20·86 | 30·87 |
| ரெய்ச்சூர் | 18·97 | 30·06 |
| பல்லாரி | 12·85 | 19·48 |
| கர்நூல் | 17·94 | 27·60 |
| கடப்பை | 23·30 | 32·48 |
| ஹாஸ்ஸான் | 32·80 | 35·55 |
| பெங்களூர் | 29·04 | 34·36 |
| கொடைக்கானல் | 63.64 | 52·71 |
| உதகமண்டலம் | 61·21 | .. |
| கோயம்புத்தூர் | 25·04 | 19·74 |
| வேலூர் | 34.03 | .. |
| சேலம் | 24·72 | 39·25 |
| திருச்சினப்பள்ளி | 32·95 | 31·12 |
| புதுக்கோட்டை | 35·86 | .. |
| மதுரை | 28·23 | 32·09 |
| திருநெல்வேலி | | |


# King George's Speeches in India.

A COMPLETE COLLECTION OF ALL THE SPEECHES DELIVERED IN INDIA DURING HIS TOUR AS PRINCE OF WALES AND IN CONNECTION WITH THE RECENT CORONATION DURBAR.

THIS is a complete and up-to-date collection of all the speeches delivered by His Majesty the King-Emperor during his first tour in India as Prince of Wales and his second tour in connection with the Coronation Durbar. No speech of any importance relating to India has been omitted; and to make this handy collection of His Majesty's Indian Speeches doubly valuable, a useful Appendix has been added, containing among others, the text of the announcement relating to the Coronation Durbar Boons; the Proclamations of H. M. King George, Queen Victoria and King Edward the Seventh on their accession to the throne and the messages of Queen Victoria and King Edward to the Durbars of 1877 and 1903. The book contains a fine portrait of Their Majesties as frontispiece and seven other illustrations. We hope that this handy volume will be welcomed by the millions of His Majesty's subjects not only in India but all over the Empire.

With eight Illustrations.

Re. One. To Subscribers of the "Indian Review," As. 2.

G. A. Natesan & Co., Sunkurama Chetty Street, Madras.







# Sawmi Vivekananda

AN EXHAUSTIVE & COMPREHENSIVE COLLECTION OF HIS SPEECHES AND WRITINGS.

THIRD EDITION.

This publication is the first of its kind. It is the most exhaustive and comprehensive collection of the works of Swami Vivekananda hitherto published. It contains, among others, his eloquent character sketch of "My Master"; his celebrated lecture at the great Parliament of Religions at Chicago; all the important and valuable speeches delivered in England, America and India on GnanaYoga, Bhakti Yoga, Karma Yoga, Vedanta, and Hinduism; selections from the inspiring speeches he gave, in reply to addresses of welcome that were presented to him at different towns and cities in India, during his historic journey from Colombo to Almora, on his return from America; a choice collection of the contributions of the Swami to various papers and periodicals hitherto not available in book form; some of his private letters to friends; and a selection from his poems.

PRICE RS. TWO.

To Subscribers of the "Indian Review," Rs. 1-8.

SWAMI VIVEKANANDA. This is a lenghty and interesting sketch of the life and teaching of this eminent Indian saint, with copious extracts from his speeches and writings. *With a portrait.* As. 4.

G. A. Natesan & Co., Sunkurama Chetty Street, Madras.


225908

# LIFT-IRRIGATION.

BY ALFRED CHATTERTON.

*Second Edition. Revised and Enlarged.*

Some years ago, Messrs. G. A. Natesan & Co., reprinted a number of papers and articles which I had written at various times on the improvement of the methods of lifting water for irrigation. The little volume apparently served a useful purpose as it met with a ready sale and has been out of print for sometime. Moreover quite recently considerable progress has been made with mechanically driven water lifts specially designed to deal with smaller quantities of water than can be conveniently and economically handled by centrifugal pumps. The demand for information, as to the methods to be pursued and as to the results which have been achieved, still continues and in the absence of any formal treatise on the subject, a fresh compilation of papers has been made which it is hoped will to some extent supply what is needed.

CONTENTS.—Introduction ; Water Lifts ; Underground Water-Supply ; Well Irrigation ; Irrigation with Oil Engines ; Irrigation from Artesian Wells ; The Value of Wind-Mills in India ; Experiment with Wind-Mills ; Wind-Mill Irrigation in America ; The cost of Power ; Cost of Lifting Water ; Flow of Water in Sand ; Well-Boring ; Steam Pumps in the Kistna Delta ; Development of Lift-Irrigation ; Lift-Irrigation ; Irrigation by Pumping ; Progress in Irrigation by Pumping in Madras ; Irrigation by Pumping in the United States.

Price Rs. 2.

To Subscribers of the "Indian Review" Re. 1-8.

G. A. Natesan & Co., Sunkurama Chetty Street, Madras.







## ANNIE BESANT'S WORKS

| | | Rs. | A. |
|---|---|---|---|
| The Bhagavad-Gita or the Lord's Songs with the text in Devanagari and an English Translation by Mrs. Annie Besant. Second Edition. | | 0 | 2 |
| Nation-Building: A stirring appeal to Indians.—Suggestions for the building of the Indian Nation, Education as the basis of National Life, National Universities for India by Mrs. Annie Besant | .. | | |
| Annie Besant: An Autobiography | .. .. | 0 | 2 |
| A Study in Consciousness | .. .. .. | 4 | 1 |
| Four Great Religions | .. .. .. | 4 | 8 |
| Theosophy in Relation to Human Life | .. .. | 0 | 15 |
| The Story of the Great War: Mahabharata | .. | 0 | 15 |
| In Defence of Hinduism: | .. .. | 1 | 6 |
| The Wisdom of the Upanishads | .. .. | 0 | 12 |
| The Religious Problem in India | .. .. | 1 | 0 |
| Avatars | .. .. .. | 0 | 15 |
| Shri Ramachandra | .. .. .. | 0 | 15 |
| Ancient Ideals in Modern Life: | .. .. | 1 | 9 |
| Buddhist Popular Lectures. | .. .. .. | 0 | 15 |
| Hindu Ideals | .. .. .. | 1 | 0 |
| The Ancient Wisdom: | .. .. | 1 | 6 |
| Theosophy and the new Psychology | .. .. | 3 | 12 |
| Thought-Power: Its Control and Culture | .. | 1 | 8 |
| Dharma. Three lectures | .. .. .. | 1 | 2 |
| The Laws of Higher Life | .. .. .. | 0 | 9 |
| Some Problems of Life | .. .. .. | 0 | 15 |
| An Introduction to Yoga | .. .. .. | 1 | 6 |
| Evolution of Life and Form | .. .. .. | 1 | 0 |
| The Doctrine of the Heart | .. .. .. | 0 | 15 |

G. A. Natesan & Co., Sunkurama Chetty Street, Madras.

**MRS. ANNIE BESANT.** A sketch of her Life and her Services to India. With copious extracts from her speeches and writings. With a portrait, 64 pages. Price As. 4.